ஸ்ரீ மஹாபாரதம்

உத்தியோக, சேனை, துரோண, கர்ண,
சல்லிய, ஸௌப்திக, பாலங்கள்

வசனகாவியம்

கவிஞர் ராமஸ்வாமி சாஸ்த்ரிகள்

ஸ்ரீரங்கம்

கலைக்கதிரோன் நிலையம்

கடவுள் துணை

ஸ்ரீ மஹா பாரதம்

உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண, சல்லிய, சவுத்திக பர்வங்கள் வசன காவியம்

இவை

த. சண்முகக் கவிராயரவர்கள்

வசன ரூபமாகச் செய்தருளிய பிரதிக்கிணங்க

வரகவி திரு. அ. சுப்ரமண்ய பாரதியாரால்

சுத்தப் பிரதியாகப் பரிசோதிக்கப்பட்டு

சென்னை 292, எஸ்பிளனேட்

வாவில்ள ராமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட் ஸன்ஸ்

அவர்களால்

வாவில்ள அச்சியந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டன.

1932.

All Rights Reserved.

PRINTED BY
V. RAMASWAMY SASTRULU & SONS,
AT THE 'VAVILLA' PRESS,
Madras—1932.

ஸ்ரீமஹா பாரத வசனம்

5-உத்தியோக பர்வம்

விஷய அட்டவணை

	பக்கம்.
1. உலூகன் தூதுச் சருக்கம் ...	2
இந்திரனைப் பிரமஹத்தி தோஷந் தீண்டல்	15
வியாக்கிர யுத்தி கதை	34
2. சஞ்சயன் தூதுச் சருக்கம்	39
தேவரகஸ்ய வாக்கியம்	68
3. ஸ்ரீகிருஷ்ணன் தூதுச் சருக்கம்	100
கண்ணன் அத்தினபுரிக் கெழுந்தருளல்	118
கண்ணன் துரியோதனன் சபைக் கெழுந்தருளல் ...	139
ஜமதக்னி முனிவர் நாராயணர் சரித்திர முரைத்தல் ...	157
கண்ணுவமுனிவர் கருடன் சரித்திர முரைத்தல் ...	159
நாரதமுனி காலவமுனி சரித்திர முரைத்தல் ...	162
கிருஷ்ணன் கையேந்தி இரத்தல்	169
விதுரன் வில்லை யொடித்தல்	177
கண்ணன் குந்திதேவியிடம் செல்லுதல்	186
துரியோதனன் கண்ணனுக்குப் படிகுழி சமைத்தல்	190
கண்ணன் விசுவரூபம் கொள்ளுதல்	194
கண்ணன் கர்ணனோடு சம்பாஷித்தல்	201
கண்ணன் அசுவத்தாமனோடு சம்பாஷித்தல்	204
குந்திதேவி கர்ணனிடம் செல்லுதல்	206
4. அணிவகுப்புச் சருக்கம்	220
பாண்டவருக்கு வந்த படைத்துணைகளின் விவரம் ...	224
கௌரவர்களுக்கு வந்த படைத்துணைகளின் விவரம்	228

துரியோதனன் சகாதேவனுல் யுத்தத்திற்கு நாள் வைத்துக் கொள்ளுதல் 231
துரியோதனன் இராவானைக் களபலிக்கு உடன் படுத்திக் கொள்ளுதல் 233
சகாதேவன் துரியோதனனுக்கு நாள்வைத்துக் கொடுத் ததைக் கண்ணன் வெளிப்படுத்துதல் 235
இராவான் துரியோதனனுக்குக் களப்பலிக் குடன் பட்டதைக் கண்ணன் வெளிப்படுத்துதல் 241
கண்ணன் களப்பலி விதி யுரைத்தல் 244
கண்ணன் திதியைப் புரட்டல் 247
பாண்டவர் குருக்ஷேத்திரம் சென்று வீரமாகாளியைப் பூசித்தல் 249
பீஷ்மருக்கும் கர்ணனுக்கும் வாது 252
கௌரவர் குருக்ஷேத்திர மடைதல் 256
பலராமரும் விதுரரும் தீர்த்தயாத்திரை போதல் ... 259
துரியோதனன் பாண்டவர்களுக்குத் தூதனுப்புதல் ... 261
கிருஷ்ணன் துரியோதனனுக்குச் சொல்லி யனுப்புதல் ... 266

6-பீஷ்ம பர்வம்

1. முதற்போர்ச் சுருக்கம் 2
வேதவியாசர் திருதராஷ்டிரனைக் கண்டு சில தேறுதல் சொல்லுதல் 3
சஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு அண்டகோசவடிக் குரைத்தல் 5
சஞ்சயன் குருக்ஷேத்திரபூமி யடைதல் 18
கிருஷ்ணன் அர்ச்சுனன் சோக நீக்கிப் பகவத்கீதை யுரைத்தல் 21
அர்ச்சுனன் விசுவரூபங்கண்டு தரிசித்தல் 35
பாண்டவர் கண்ணன் முன்னிலையில் பீஷ்மரையுந் துரோணரையுங் கண்டு பேசுதல் 39
யுத்த வாரம்பம் 44
பாண்டவர் சேனையில் விராடராஜ குமாரருள் உத்தரன் வதை 50
கௌரவர் சேனையில் ஜயவிஜயரென்னும் பஞ்ச சேனுதிபர் வதை 55
விராடராஜ குமாரருள் சுவேதன சேனுபதி வதை ... 58

2. இரண்டாம்போர்ச் சருக்கம் 61

கலிங்க தேசாதிபதிகள் வதை 64

3. மூன்றும்போர்ச் சருக்கம் 72

கடோற்கஜனுல் துரியோதனன் மூர்ச்சையடையப்
பீஷ்மர் தெளிவித்தல் 73

கிருஷ்ணன் அர்ச்சுனனை வெறுத்துக்கொண்டு
சக்கர மேந்துதல் 77

பீஷ்மர் சக்ராயுதத்தோ டெதிர்க்கவருங் கண்ணனை
வந்தித்தல் 79

4. நான்காம்போர்ச் சருக்கம் 87

பீமசேனன் யானைப்போர் விளைத்தல் 88

பீமசேனன் துரியோதனனை மூர்ச்சிக்கச் செய்தல் ... 91

துரியோதனன் சகோதரரில் ஐவர்வதை 93

பகதத்தனோடு கடோற்கஜன் மாயப்போர் விளைத்தல் 95

5. ஐந்தாம்போர்ச் சருக்கம் 105

பூரிசிரவனுக்குஞ் சாத்தகிக்கு முண்டான போரில்
இருதிறச் சேனைகளிலு மிருபத்தையாயிர
மன்னர் மூடிதல் 109

6. ஆறும்போர்ச் சருக்கம் 114

பீமனைத் தேடிவந்த விகர்ணனுதியர் அபிமன்னனு
லடிப்பட்டோடுதல் 119

7. ஏழாம்போர்ச் சருக்கம் 124

பீஷ்மருக்கும் விஜயனுக்கும் நடந்த விபரீதப்போர் ... 126

8. எட்டாம்போர்ச் சருக்கம் 132

துரியோதனன் சகோதரரில் எண்மர்வதை 133

இராவான் வதை 139

துரியோதனனுடைய சகோதரில் எழுவர் வதை 142

9. ஒன்பதாம்போர்ச் சருக்கம் 151

அலம்புதன் வதை 153

பீஷ்மரோடெதிர்த்து நின்ற சிகண்டியைத்
துச்சாதனன் மூடுக்கி யோட்டுதல் 156
சதானீகன் முதலிய எண்ணுயிர ராஜகுமாரர் வதை 158

10. பத்தாம்போர்ச் சருக்கம் 162

கிருஷ்ணுர்ச்சுனர் பீஷ்மருக் கெதிரிற் சிகண்டியை
விடுத்துச் சமர்செய்வித்தல் 173
பீஷ்மர் பூப்பரிசமாய்க் சயனித்து அருகிருந்த
பௌத்திரருக் கறிவுறுத்தல் 175
கௌரவர் பாண்டவர் முதலாயினேர் பீஷ்மரைக் கண்டு
துக்கிக்க, அதற்கவர் சமாதானங் கூறித் தேற்றுதல் 177
அர்ச்சுனன் காங்கேயருக்குச் சரசயனஞ் சமைத்தல் ... 180
காங்கேயர் கலங்கிவந்த கர்ணனே ஆதரித்துச் சுயோத
னனே அவன் கையி லொப்புவித்தல் 183
துரோணராதிய மூவாசிரியரையும் பீஷ்மர் தேற்றுதல் ... 184
திரிதராட்டிரனும் காந்தாரியும் பீஷ்மர் பட்டதைக்
கேட்டுப் பிரலாபித்தல் 186

7-துரோண பர்வம்

11. பதினேராம்போர்ச் சருக்கம் 192

கர்ணமகாராஜன் தனக்குத் தானே சேனுபதிக் கோலங்
கொள்ளுதல் 194
சேனுபதித்வங்கொண்ட துரோணுசாரியரைத்
துரியோதனன் வரங்கேட்டல் 197
அபிமன்னன் இலக்கண குமாரனை வளைத்துச் சிகையைப்
பிடித்துக்கொள்ளுதல் 207
அபிமன்னன் தன் போர் கடவிற் புகுந்த பீமசேனனைச்
சினந்துகொள்ளுதல் 210
தருமராஜனைப் பிடிக்க எண்ணிய துரியோதனனைத்
திரிகர்த்தரும், சஞ்சத்தகரும் சபதங்கூறித்
தேற்றுதல் 212

12. பன்னிரண்டாம்போர்ச் சருக்கம் 216

திரிகர்த்த சஞ்சத்தகர் முதலாயினேர் அர்ச்சுனனை
வளைத்துக்கொள்ளுதல் 218

தருமராஜனுல் துரோணசாரியார் முறிபட்டோடுதல் 222
பகதத்தன் பீமசேனனைத் தேடி வலைத்துக்
கொள்ளுதல் 227
தருமராஜன் ஸ்ரீகிருஷ்ணபகவானை நினைத்து வந்தித்தல் 231
திரிகர்த்தராதியரிற் பதினெண்ணுயிரவரை வதைத்த
அர்ச்சுனன் தருமராஜனிடம் வருதல் 233
அர்ச்சுனன் தன்மேலெதிரி விடுத்த வேலைத் தடுத்துத்
தாங்கிய கண்ணனை வெறுத்துக்கொள்ளுதல் ... 235
பகதத்தன் வதை 237
சகுனியின் பிள்ளைகளரி விருவர் சஞ்சத்தகரிற் பலர்
வதை 238
துரியோதனன் துரோணராதியரோடு பீமனுலபஜயப்
பட்டு முறிந்தோடுதல் 241

13. பதின்மூன்றும்போர்ச் சுருக்கம் 249

திஷ்டத்தூய்மன் துரோணசாரியாரால் முறிபட்
டோடுதல் 254
தருமராஜன் அபிமன்னனை யுத்தத்திற்குச் செல்லும்படி
ஆசீர்வதித்தல் 255
அபிமன்னன் தேரூர்ந்து சாரதியை எச்சரித்தலும்
அப்போதச் சாரதிகொண்ட கவலையை
அபிமன்னன் தேற்றி யாற்றுதலும் 258
அபிமன்னன் யுத்தகளம் புகுந்து துரோணசாரியர்
வகுத்த வியூகங்களை உடைத்து அவரையு மடித்துத்
துரத்துதல் 261
சகுனி குமாரனுகிய உலூகன் வதை 266
சல்லிய ராஜனுடைய சகோதரன் வதை 268
அபிமன்னனுக்குப் புறந்தந்து வந்த துரோணரைத்
துரியோதனன் வெறுத்து மற்றையரைத் தேற்றி
மீட்டும் போர்க்கனுப்புதல் 270
பீமசேனன் தருமராஜனிடத்தில் நின்றும் விடைபெற்று
அபிமன்னனுக்குத் துணைபோதல் 274
அபிமன்னனேடு பீமசேனனைச் சேரவொட்டாதபடி
துரியோதனன் சயிந்தவனை அனுப்புதல் 277
தனித்துநின்ற அபிமன்னனுடன் துரியோதனனுதியர் ...
ஒன்றுபடச் சென்றெதிர்த்தல் 282

துன்முகன் ஆதிபராசன் இவர்கள் வதை 283
விடசேனன் பதாதிமன்னன் அவன் குமாரன்
இவர்கள் வதை 287
இலக்கண குமாரன் வதை 289
துரியோதனனோடு சபதஞ்செய்து வந்தெதிர்த்த ...
அனேக அரசர்களும் அரச குமாரர்களும்
அபிமன்னுவினால் நாசமடைதல் 292
கர்ணன் அபிமன்னனுற் பன்முறை முறிபட்டு
துரோணாசாரியரோடுங் கூடி மோசப்போர்
விளைத்தல் 294
அபிமன்னன் வாள்யுத்தம் புரிதல் 297
அபிமன்னன் எரிச்சக்கர மந்திர முச்சரித்துப் போர்
விளைத்தல் 299
அபிமன்னன் கதாயுதங்கொண்டு போர் புரிதல் 300
துச்சாதனன் குமாரனுகிய துச்சனி வதை ... 302
அபிமன்னன் நிர்யாணச் சிறப்பு 306
தருமராஜன் புலம்பல் 310
பீமன் நகுலன் சகாதேவன் இவர்கள் புலம்பல் 313
வேதவியாசமுனிவ ரெழுந்தருளிவந்து தருமராஜனைத்
தேற்றுதல் 316
யுதிஷ்டிரருக்கு வேதவியாசர் மிர்த்தியு தேவதை
யின் வரலாறுரைத்தல் 318
யுதிஷ்டிரருக்கு வேதவியாசர் சுவர்னடீயெனும் இராஜ
குமாரன் சரித்திர முரைத்தல் 322
அருச்சுனன் பாசறைக்குத் திரும்பும்போது
கண்ணன் சூழலால் அக்கினிப்பிரவேசமாக விருந்த
ஆகண்டலனை அவன் தேற்றி விடுத்தல் 332
அர்ச்சுனன் தனது ராஜமண்டபத்திற்கு வரும்போது
தீயசகுனங்கண் டையுறல் 336
அபிமன்ன னிறந்த தறிந்துகொண்ட அர்ச்சுனன்
இராஜ மண்டபத்துள்ள அரசரைச் சினத்தல் ... 338
தருமராஜன் அர்ச்சுனனுக்கு நடந்தவாறு கூறி
கவிவுறல் 340
அர்ச்சுனனைக் கண்ணனுந் தருமராஜனுந் தேற்றி
யாற்றுதல் 343

அர்ச்சுனன் புலம்பல் 344
வியாஸபகவான் மீண்டும் வந்து பாண்டவரைத்
தேற்றல் 348
அருச்சுனன் அக்னி மூழ்க எத்தனித்தபோது
இந்திரனுகிய அந்தணன் தடுக்கப் பின்பவன்
சபதஞ் செய்தல் 350
அர்ச்சுனன் சபதத்திற் கஞ்சிய சயிந்தவனைத்
துரியோதனன் தேற்றுதல் 356
துரியோதனன் துரோணராதியரோடு தனித்துத்
தன் குறைகூறி வணங்க அவர்களவனை யெடுத்து
ஆதரங் கூறுதல் 358
கண்ணன் துரியோதனனுதியாலோசனையைக் கேட்டு
வருந்திய தருமன் கருத்தைத் தனஞ்செயனுலே
தேற்றுதல் 363
பாண்டவர்கள் கண்ணனுடு யுத்தகளஞ் சென்று
அபிமன்னனைப் பார்த்துத் திரும்புதல் 365
சுபத்திரை புலம்பல் 366
திரௌபதி புலம்பல் 370
உத்தரை புலம்பல் 371
கிருஷ்ணபகவான் திரௌபதை சுபத்திரை உத்தரை
இவர்களைத் தேற்றுதல் 372
இங்குலிக கீர்வித 375
அருச்சுனனைக் கண்ணன் ஓராரண்யத்தி லழைத்துப்
போய்த் தன்னைச் சிவமாகப் பாவித்துப் பூஜை
செய்யும்படி செய்தல் 375
கண்ணன் அருச்சுனனுடு உண்டு அவனுக்கு
நித்திரை செய்வித்தல் 379
கண்ணன் இந்திராதி தேவர்கட் கினிமைகூறித்
தாருக னென்னுந் தமது சாரதிக்குத் திட்டஞ்
சொல்லி யனுப்புதல் 380
அர்ச்சுனன் சொப்பனத்திலே கண்ணனெழுந்தருளி
ஆதரங்கூறுதல் 381
கண்ணனும் அர்ச்சுனனும் கருடவாகனமூர்ந்து
கைலாயத்திற்குச் செல்லுதல் 282
கைலாயகிரிச் சிறப்பு 384

கண்ணன் அர்ச்சுனனுக்குப் பீமசேனனுடைய
மானதசிவார்ச்சனைத் திறங்காட்டுதல் 386
கராகாராயணர் கைலாசபதியைத் துதித்தல் 388
கைலாசபதி கராகாராயணர்க்கு அநுக்கிரகம் புரிதல் ... 390
அர்ச்சுனன் ஹரியை அரனுகப் பாவித்துப் பூசித்த
அடையாளங்களைக் கண்டு விடைபெற்றுக்
கண்ணனோடு கருடாரூடனாய்ப் பாசறை யடைதல் ... 392
தருமராஜன் கடோற்கஜனால் அர்ச்சுனன் சபதம்
செய்து கைலாசபதியைத் தரிசிக்கச்
சென்றமையைத் துரியோதனனுதியர்க் கறி
வித்தல் 393

14. பதினன்காம்போர்ச் சருக்கம் 397

கிருஷ்ணார்ச்சுனர் கவலையுற்றிருக்கும் தருமராஜனைக்
கண்டு இராத்திரி கடந்த வர்த்தமானங்கள்
அனைத்தும் சொல்லித் தேற்றுதல் 398
துரோணாசாரியார் வகுத்த வியூகச் சிறப்பு 404
அர்ச்சுனன் தருமராஜனுக்குச் சாத்தகியைக் காவலாய் ....
வைத்துத் தான் யுத்தகளம் புகுதல் 408
அர்ச்சுனனால் துரோணர் கட்டிய வியூகங்கட்கு முன்
தூசிப்படை கொண்டிருந்த துன்மருடனும்
துச்சாதனனும் முறிபட் டோடுதல் 410
அர்ச்சுனன் தனக்கு வழிவிட மாட்டேனென்ற
துரோணரை வலைத்துப் போர்செய்து மீண்டும்
விடைதரப் பெற்றுக் கொடிப்படைக்குட் புகுதல் ... 413
அர்ச்சுனன் கொடிப்படையின் முன்னணியில் நின்ற
கிருதவன்மனை முறிய அடித்தோட்டுதல் 415
அர்ச்சுனனோடு போர்செய்து சுதாயுவிடத்த
கதையைக் கண்ணன் தமது மார்பிற்ருங்கி
வதைத்து அச்சூழ்ச்சியை அவனுக் கறிவித்தல் ... 417
சுதக்கணராஜன் சுதாயு, சுயுதாயு, கிதாயு தீர்க்காயு
இவர்கள் வதை 420
கலிங்கர் முதலிய பல தேசாதிபர்க்கும் அர்ச்சுனனுக்
கும் யுத்தம் 421

விந்தரன் விந்தன் இவர்கள் வதை 424
கண்ணன் அசுவங்கள் களைத்தனவென்று
அர்ஜுனனுக் கறிவிக்க அவன் உடனே தடாக
முண்டாக்குதல் 426
அர்ச்சுனன் வலிமைகண்ட துரியோதனன் துரோண
ரிடஞ் சென்று முறையிடுதல் 428
துரோணர் தம்மிடம் முறையிட்ட துரியோதனனைப்
பலவாற்றலும் வெறுத்துக் கொள்ளுதல் 430
துரோணர் துரியோதனனுக்குச் சாலிகவசமளித்து
அர்ஜுனனோடு போர்செய்யச் செல்லும்படி
விடைத்துத் தாம் தருமனை வளைத்தல் 433
சேனாபதிகள் யுத்தம் 435
சாத்தகிக்கும் துரோணருக்கும் யுத்தம் 437
தருமராஜனுக்கும் துரோணாசாரியருக்கும் யுத்தம் ... 440
சகுலசகாதேவர், பீமசேனன், கடோற்கசன்
இவர்கள் யுத்தம்—இதில் திரிகர்த்தராஜன்
புத்திரன் வதை 443
தடாகக் கரையில் அர்ச்சுனன் செய்த கால்நடைச்
சண்டை 444
துரியோதனாதியர்க்கும் அர்ச்சுனனுக்கும் யுத்தம் ... 446
கண்ணன் செய்த பாஞ்சஜன்ய முழக்கங் கேட்ட
தருமராஜன் மதிகலங்கிச் சாத்தகியை அர்ச்சுன
னிடம் செலுத்தச் செல்லும்போது வழிமடக்கிய
துரோணரை வென்று நடத்தல் 454
தருமராஜன் சாத்தகி வராமையால் வருந்திப் பீமனையேவ
அவன் பல வாய்மைகள் கூறித் தடுக்க அதற்குச்
சமாதானங் கூறவும் பீமன் செல்லுதல் 461
துரியோதனன் சகோதரரில் எழுவர் வதை 465
பீமசேனன் தன்னைத் தடுத்தெதிர்த்த துரோணா
சாரியரைத் தேரோடு தூக்கி ஆகாயத்தி
லெறிதல் 466
பீமசேனன் சாத்தகியை வழியிற்கலந்து கூடிக்கொண்டு
போய்க் கிருஷ்ணார்ச்சுனரைக் காணுதல் 468
கர்ணனும் விடசேனனும் பீமசேனனால் முறியப்பட்டுப்
புறங்கொடுத்தோடித் துரியோதனனிடத்து
முறையிடுதல் 469

துரியோதனன் துரோணரிடம் சென்று முடையிட
அவர் சில சமாதானங்கூறி யனுப்புதல் 472
அர்ச்சுனனுக்குச் சக்கரரக்ஷகராய்ச் சென்ற
உத்தமோசா உதார்மன் இவர்களுக்குந் துரியோ
தனனுக்கும் யுத்தம் 474
கர்ணனுக்கும் பீமனுக்கும் நடந்த கடும்போரில் துரியோ
தனன் சகோதரரில் இருபதின்மர் வதை 475
பீமசேனன் தன்னோடு பொரவந்த விகர்ணனை
இரக்கத்தினாலே தடுக்க அவன் அறத்தாறன்
றென்று கூறி எதிர்த் திறத்தல் 482
கர்ணனுக்கும் பீமசேனனுக்கும் நடந்த கடும்போர் ... 486
சாத்தகி அலம்புதனைப் புறங்கண்டு பூரிசிரவனை
யெதிர்த்தல் 491
சாத்தகியோடு பூரிசிரவ னெதிர்த்து மிஞ்சி யதைக்
கண்ட கண்ணன் அர்ச்சுனனை எச்சரித்தல் 493
பூரிசிரவன் அர்ச்சுனனுல் தோளறுந்து சாத்தகியா
லிறத்தல் 495
கர்ணனிழித் துரைக்கக் கேட்டு வந்த பீமசேனனை
அர்ச்சுன னடக்கி ஆதரித்தல் 497
சாத்தகி பூரிசிரவனுக்கிளைத்த காரணத்தை அர்ச்சுனன்
கேட்க ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அறிவித்தல் 499
பீமன் அர்ச்சுனன் சாத்தகி இம்மூவரும்
சயிந்தவனை நாடிச் செல்லும்போது வழியிற்
கண்ட கர்ணனை அர்ஜுனன் வாயாலும்
கையாலும் வாட்டி யோட்டுதல் 501
துரியோதனன் கர்ணனைத் தேற்றி அளவற்ற
படையோடும் விடுக்க, அவையனைத்தையும்
அர்ச்சுனனழித்தல் 503
பீமார்ச்சுனருக்கும் துரியோதனுதியர்க்கும் பத்ம
வியூகத்தில் மூண்டுகொண்ட விபரீதப் போர் ... 506
சயிந்தவனிருக்கு கிலேயறிந்து புகுந்த அர்ச்சுனனை
யாவரும் ஒன்றுகக்கூடி மடக்குதல் 511
அர்ச்சுன னயர்வுற்ற கருத்தைக் கண்ணனறிந்து
தேறித் தமது சக்ராயுதத்தாற் சூரியனை
மறைத்தல் 512

அர்ச்சுனன் கண்ணனும் சிலமுறைமை கூறக்கேட்டுச்
சயத்திரதனையும் அவன் தந்தையாகிய
சிந்துராஜனையும் சங்கரித்தல் 514
கண்ணன் சக்கரத்தை மீட்டுக்கொள்ளச் சூரியன்
பிரகாசிக்க, துரியோதனன் மருண்டு வினவும்
கேள்விக்கு அங்கிருப்பவர் விடைதரல் 516
கதிரவன் மறைந்தது கண்ணன் செயலென்றுரைக்கக்
கேட்ட துரியோதனன் அவரைத் தூஷித்தல் ... 518
துரியோதனதியர் பாண்டவரைக் கொல்வது அவராற்
கொல்லப்படுவது என்று சபதங்கூறி வந்து
அர்ச்சுனனுல் முறிபட்டோடுதல் 520
தருமராஜன் வெற்றி பெற்றுவந்த கிருஷ்ணார்ச்சுன
ராதியோரைத் தழுவிச் சன்மானித்தல் 522
துரியோதனன் துரோணாசாரியரிடஞ் சென்று
முறையிட, அவரவனைத் தேற்றி மீண்டுஞ்
சண்டைக்காயத்தப் படுத்தல் 523
துரியோதனன் கர்ணனிடம் சென்று துரோணர்
கூறியவற்றை வெறுத்துரைக்க, அவனவனைச்
சிலவற்றுல் தேற்றி யுத்தஸன்னத்தனுதல் 524
துரியோதனதியரோடு துரோணாசாரியர் சபதங்கூறி
மீண்டும் யுத்தம் செய்யப் புகுதல் 526
தருமராஜனுல் துரியோதனனுங் கர்ணனுதியோரு
முறிபட்டு, இவர்கட்குத் துணைவந்த சிபிராஜ
குமாரன், மத்திராஜ குமாரன் இவர்கள் வதை ... 527
தருமராஜனை டெதிர்த்த துரோணரைப் பீமன்
பாஞ்சால ராஜனை டெதிர்த்துப் புறங்கண்டதில்,
துரியோதனன் சகோதரரிருவர் வதை 529
சாத்தகி தன்னுடனெதிர்க்கவந்த சோமதத்தனை
மூர்ச்சிக்கச்செய்து, இவனுக்குத் துணைவந்த
சகுனி முதலானோரையும் புறங்கண்டோட்டுதல் ... 531
அசுவத்தாமனை டெதிர்த்துநின்ற சாத்தகியைக்
கடோற்கஜனும் அஞ்சனவர்மனும் தடுத்துக்
கடும்போர் விளைத்து அஞ்சனவர்ம னிறத்தல் ... 533
சாத்தகியோடு மீண்டு மெதிர்க்கவந்த சோமதத்தன்
பீமனுல் மூர்ச்சிக்க அதுகண்டு வந்த வாகுலீகனு

மவனுறசாக, அடித்துவந்த துரியோதனன்
சகோதரருள் பதின்மர் வதை 535
குந்திபோஜன் மைந்தருள் இருவர் வதை 536

பதினென்காம்நாள் இராப்போர் 338

அர்ச்சுனனுற் கர்ணனுக் தருமராஜனுற் கிருதவன்மனு
முறிபட்டோடுதல் 539
துரோணாசாரியர் சுயோதனன் வேண்டுகோளால்
தருமராஜனை யெதிர்த்து அபஜயமடைதல் ... 540
துரியோதனன் பீமசேனனுல் முறிபட்டோடிவந்து
கர்ணனிடத்தில் முறையிட, அவன் பிரதா
பத்தைக் கூறித் தேற்றுதல் 542
தன்னைத்தான் புகழ்ந்துகொண்ட கர்ணனைக் கிருபாசாரி
பழிக்க, அவனவரைக் கடிதல் 543
கிருபாசாரியரோடு வாதித்த கர்ணனை அசுவத்தாமன்
எதிர்த்துக்கொள்ள, அதுகண்ட துரியோதனன்
அவர்களை உபசரித் தடக்குதல் 544
அர்ச்சுனனுக்குக் கர்ணன் அநேகமுறை புறங்தரக்கண்டு
மூனியவெழுஞ் சுயோதனனைக் கிருபர் சம்மதப்படி
அசுவத்தாமன் தடுத்து அமருக்கெழல் 545
அசுவத்தாமன் திஷ்டத்துய்மனைக் களைக்கவிட்டு
சகுலசகாதேவரையும் நலித்தோட்டி அர்ச்சுன
னைடு அரும்போர் விளைத்தல் 550
சோமதத்தன் பூரி இவர்கள் வதை 553
கர்ணனுக்குஞ் சகாதேவனுக்கும் யுத்தம் 554
இராப்போரிற் கர்ணன் பராக்கிரமங் கண்டஞ்சிய
தருமர் கருத்தணர்ந்தெழுந்த பற்குணனைக்
கிருஷ்ணதேவ ரடக்குதல் 556
கர்ணனுக்கும் கடோற்கசனுக்கும் போர் 559
அலம்புதன் வதை 559
அலாயுதனுக்கும் பீமனுக்கும் போர் 560
கடோற்கசனுல் அலாயுதன் வதை 563
கடோற்கசன் மாயப்போர் விளைக்கக் கண்ட கர்ணன்
துரியோதனன் வேண்டுகோளாற்றனக்கு இந்திர
னளித்த சத்திவேலை யேவிக் கொல்லுதல் 565

மச்சதேயராஜன் துருபதேயராஜன் இவர்கள் வதை ... 569
அர்ச்சுனன் யுத்த சமார்ப்பணஞ் செய்தல் 571
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய சக்கரம் பிரகாசிப்பதை விட்டு இருளானதற்குக் காரண முரைத்தல் ... 572

பதினேந்தாம்போர்ச் சருக்கம் 575

துரோணாசாரியருக்குச் சப்த ரிஷிகள் வந்து பூர்வக் யான மூணர்த்திச் செல்லுதல் 577
தருமனுக்குக் கண்ணன் துரோணர் நிலை யுணர்த்தி அசுவத்தாமனைப் பற்றி யோர் பொய் சொல்லும்படி வற்புறுத்தல் 578
கண்ணன் கருத்தின்படி தருமனுரைக்க துரோணர் திஷ்டத்தூய்மன் பகையேற்றுச் சொர்க்காரோகண மாக, அசுவத்தாம னரற்றல் 582
அசுவத்தாமன் தன் தந்தைபடச் செய்தோரை யெல்லாந் தரிபடச்செய்வேனென்றெழக்கண்ட தருமனுதியர் தர்க்கத்தைக் கண்ணன் விலக்கிப் போர்க் கெழுவித்தல் 585
அசுவத்தாமன் உக்ராராயணஸ்திரம் விடுக்கக் கண்ணன் யாவரையுந் தேர்விட்டிறக்கி நிராயுத ராய்ப் பணிவித்தல் 590
உக்ராராயணஸ் திரத்தோடெதிர்த்துநின்ற பீமனைக் கிருஷ்ணர்ச்சுனர் விலக்கித் தாழ்மைகூற அது கண்டது விலகுதல் 591
அசுவத்தாமன் அக்கினியாஸ்திரம் விடுக்க, அதுவும் பயன்படாது போகவே சமர்க்களம்விடுத் தவக் களமேக கின்றவனை வியாஸர் தேற்றிப் பாண்டவரை யும் வாழ்த்திப்போதல் 593

8-கர்ண பர்வம்

16. பதினாறும்போர்ச் சருக்கம் 602
பீமசேனனுற் காசிராஜனுகிய மேகதூர்த்தி ... ...
யென்பவன் வதை 604
இருதிறவர்களின் படைச் செருக்கு 607

கர்ணர்ஜனுக்கும் சகுலராஜனுக்கும் யுத்தம் இதில்
மகதராஜன் விடதரன் வதை 609
கௌரவாதிகட்கும் பாண்டவாதிகட்குந் தொக்க ...
யுத்தம் 611
அருச்சுனன் கண்ணனை வருத்திய சஞ்சத்தகர் நாராயண
கோபாலர்களை முறியவடித் தோட்டுதல் ... 616
துரியோதனனுக்குந் தருமராஜனுக்கும் யுத்தம் 617

17. பதினேழாம்போர்ச் சருக்கம் 624

அங்கராஜனு மரவக்கொடியோனுமமர்க் களத்துற்ற
கெம்பீரங்கண்டயுற்ற தருமராஜன் கண்ணனைத்
தூக்க, அவர்மேல் நடக்கும் நிச்சயங்கூறித்
தேற்றுதல் 626
சல்யராஜனைத் தனக்குச் சாரதியாக்குவிக்கும்படி
கர்ணராஜன் துரியோதனராஜனைக் கேட்டுக்
கொள்ளுதல் 631
கர்ணன் வேண்டுகோளின்படி துரியோதனன் சல்லியனை
வேண்ட அவன் மறுத்துப் பின்னருடன்படல் ... 634
துரியோதனன் சல்லியனுக்குத் திருபுரதகன சரித்திரங்கூறி
அவன் மனத்தளர்வை மாற்றுதல் 638
துரியோதனன் கர்ணன் பெருமையுஞ் சாரதித்
தொழிற் சிறப்பையுங் கூறிச் சல்லியனைச்
சம்மதஞ் செய்வித்தல் 647
கர்ணன் சல்லியனோடு தன்னைத்தான் புகழ்ந்து
பேச அவனதை மறுக்க இருவரும் வாதிடல் ... 651
கர்ணனுக்குச் சல்யன் வாயசக் கதை கூறிப் பழிக்க
உடனே யொருவர்மீ தொருவர் வாள்கொண்
டோங்கி நிற்றல் 657
துரியோதனன் கர்ணனுக்குஞ் சல்லியனுக்கும்
நேர்ந்த வாட்போர் விலக்கி, மீட்டும் அவ்
விருவரையும் புகழ்ந்து சமாதானஞ் செய்வித்தல் 661
கர்ணன் சல்லியனோடு தனக்கு நேர்ந்த சாபக்
குறைகள் கூறி ஆகுலித்துப் பின்னிருவருந்
தேறி மனமொத்துப் போருக்கெழல் 664

விடசேனனுக்கும் விஜயக்ஷத்திரனுக்கும் இவர்
கள் பிதாக்களாகிய கர்ணனுக்கும் பீம
சேனனுக்கும் யுத்தம் 669

காவிரி நாடனுகிய சோழனுக்கும் மகத நாடனுகிய
சகாதேவனுக்கும் யுத்தம் 672

தருமராஜனுக்குங் கர்ண ராஜனுக்கும் யுத்தம் ... 674

இருதிறச் சேனைகட்குங் கைகலந்த யுத்தம். இதில்
துரியோதனன் சகோதரரில் எழுவர் வதை 676

தருமனையும் பீமனையும் புறங்கண்டு பாஞ்சாலரில்
எழுவரை வதைத்த கர்ணனையு மவனுக்குத்
துணைவந்த அசுவத்தாமனையும் அர்ச்சுனன்
அயாவடித்து அடக்குதல் 678

அசுவத்தாமனெடு பாண்டியன் அமோகப் போர்
விளைத்திறத்தல் 687

அசுவத்தாமனுக்கும் சோழனுக்கும் யுத்தம். இதில் துன்ம
ருடன் குமாரர் கவாகு, துன்முகன், கர்ணன் குமாரன்
சங்கன் இவர்களோடு அளவற்ற வீரர்கள் வதை 690

அருச்சுனனுற் சஞ்சத்தகரிற் பதினுறுபிரவர் வதை 694

கர்ணன் தன்னெ டெதிர்த்த நகுலசகாதேவரைப்
புறங்கண்டு பாண்டவப் படையைப் பாழ்படுத்தி
நிற்க, அருச்சுனன் கௌரவப் படையை அலக்கழித்தல் 695

கர்ணனெடுர்ச்சுனன் கடும்போர் விளைக்குங்கால்
அவனைத் தருமனென்றையுற் றமர்விடுக்க,
அதுகண்ட கண்ணன் நகுல சகாதேவரால்
தருமனந்தனர் செயல்கேட்டவர் பாசறைக்கேகல் 698

தருமன் விஜயன் வரவை வெற்றிவரவென்றேற்றதைக்
கண்ணன் மறுத்துற்றதுரைக்க அது கேட்டவன்
அதுஜனச் சினக்க, அவரையவன் சபதங் கூறி
எதிர்த்தல் 702

கிருஷ்ண னர்ச்சுனனுக்குக் கௌசிக முனிவரின்
சரித்திரமுங் கடுஞ்சபத நிவாரணமுங் கூறி,
தம்பியரை வெறுத்த தருமனையுந் தேற்றி,
பீமனெடு கலந்து விளாக மடைதல் 706

பீமனுக்கும் துச்சாதனனுக்கும் யுத்தம். இதில்
துரியோதனன் சகோதரரிற் பதின்மர் வதை ... 712
பீமசேனன் துச்சாதனனைப் பிடித்து அவனை விடுவித்துக்
கொள்ளத் துரியோதனுதியரை யழைத்தல் ... 717
பீமசேனன் துரியோதனுதியருக் கெதிரில் துச்சாதன
னைச் சித்திர வதை செய்து, தன் சபதத்தை
நிறைவேற்றிக் கொள்ளுதல் 719
கர்ணனுக்குச் சல்லியன் பீமன் செயலை யோதிப் பரிக
சிக்க, அவனதற்கலட்சியம் கூறிச் சென்று
பீமனை வளைத்தல் 722
அருச்சுனனுல் ருகுலனுடைதிர்த் தடல் பெற்று
நின்ற விடசேனன் வதை 725
துரியோதனன் தனக்கறிவுறுத்திய அசுவத்தாமனுக்குத்
தன் கொள்கையைக் கூறிக் கர்ணனிடஞ் சென்று,
தேற்ற அவன் சபதங் கூறுதல் 728
கர்ணன் சல்லியன் கூறிய துர்ச்சகுனங்களையுங் கருதாது
சென்று அருச்சுனனை வளைக்க, அவனுமெதிர்த்தல் 731
ஆகாயத்திற் பிரமாதி தேவர்கள் பரமசுவரனைக் கர்ணச்
சுனர் போரிற் ஜெயாபஜெயம் யாருடையதென்று
வினுதல் 733
அருச்சுன ராஜனுக்கும் கர்ண ராஜனுக்கும் யுத்தம் ... 735
கர்ணன் பாகிரமித்து நிற்கக்கண்ட பீமன் அருச்சு
னனைத் தூண்டிப் பிரம்மாஸ்திரப் பிரயோகம்
செய்வித்தல் 742
கர்ணன் காண்டீபன் கழுத்துக்கிலக்காய் நாகாஸ்திரம்
விடுக்க, அது கண்ணன் செயலாலவன் முடியை
யிடறிச் செல்ல, பின்னதைக் கருடப்படையாற்
கிரீடியழித்தல் 744
சல்லியன் கர்ணனை வெறுத்துச் சாரதித்தொழிலை
விட்டேக, அவன் வேறு சாரதிகொண்டு
அருச்சுனனோடு போர் விளைத்தல் 749
கர்ணன் தனது தேர் புதைப்பட்டெடுக்கும்போது
கணையேவிய அருச்சுனனையுந் தருமத்தையும்
நிந்திக்கக் கண்ணன் சில நியாயங் கூறித் தேற்ற,
மீட்டுமவனோடமர் விளைத்தல் 751

தருமன் கர்ணனைத் தலைகாத்தல் கண்ட கண்ணன் ஓர்தணனுய்ச் சென்று அத் தருமப் பயனைத் தானம் வாங்குதல் 755
ஸ்ரீகிருஷ்ண பகவானைக் கர்ணன் துதி செய்தல் ... 761
கண்ணன் அர்ச்சுனனிடம் வந்து எச்சரித்துக் கர்ணன பரமபத மடைவித்தல் 763
துரியோதனதியர்க ளுழ்ச்சி 765
தருமனுதியர் மகிழ்ச்சி 767
குந்திதேவி புலம்பல் 768
பாண்டவர் கர்ணன் வரலாற்றைக் கண்ணனும் கேட்டுக் குந்திதேவியைக் கண்டு வெறுத் துக் கொள்ளுதல் 772
தருமன், பீமன், இவர்கள் புலம்பல் 774
அருச்சுனன் புலம்பல் 775
நகுல சகாதேவர்கள் புலம்பல் 777
அமர்ப்புறத்தில் துரியோதனதியரும் அஸ்தினபுரத்தில் திரிதராட்டிரனுதியரும் வருந்தல் 777

9-சல்லிய பர்வம்

1. பதினேட்டாம்போர்ச் சருக்கம் 782
கிருபாசாரி இனியேனும் யுத்தத்தை நிறுத்திப் பாண்டவரோ டொன்றுபட்டிருத்தல் நலமென்று துரியோதனனுக் குரைக்க, அவனதை மறுத்தல் ... 783
துரியோதனன் சல்லியராஜனை வேண்டிச் சேனுதிபதி யாக்குதல் 785
தருமராஜன் தன் படைக்குறைவைக் கண்ணனுக் குணர்த்த, அவரதற்குத் தக்கவிடைகூறக் கேட்டு யுத்தமுகஞ் சென்று அமர் தொடங்கல் ... 787
சல்லிய சேனுதிபதி தருமனையும் அவர்க்குச் சக்கரகூ கனுய் வந்த பீமனையு மெதிர்த்துப் புறங்காணல் ... 790
நகுலனுமேல் கர்ணன் பிள்ளைகள் சித்திரசேனன் சூரியவர்மன் இவர்களும், அர்ச்சுனனுல்

திரிகர்த்தர், சாளுவர் சஞ்சத்தகர் இவர்களும்
வதைபடல் 795

தருமராஜன் சல்லியனோடு வெற்றிப்போர் விளைக்கும்
போது பீமசேனனுமவனை முனைந்து வெற்றி
பெறுதல் 796

அசுவத்தாம னருச்சுனனோ டமராடிப் புறந்தந்
தோட, அதுகண்டு முனைந்த கிருபாச்சாரியு
மவ்வாறுதல் 798

அர்ச்சுனன் தன்னோடு எதிர்க்கவந்த கிருதவன்மனை
முறியவடித்தோட்டி, அவன் தம்பிமாரெழுவரையும்
வதைத்தல் 802

பாண்டவரோடு பராக்கரமித்து நின்ற சல்லியனைப் பருங்
கதையாற் புடைத்துச் சாய்த்த பீமனோடு
துரியோதன னெதிர்க்க, அவனையும் புடைத்துப்
புறங்காணல் 804

சல்லியசேனபதி வதை 807

துரியோதனன் சகோதரருள் இருபத்தொருவர் வதை ... 811

சகோதரர் கட்டங்கருதி வருந்திய துரியோதனனைச்
சகுனித் தேற்றி, மிகுந்துள்ள படையோடுங் கூட்டித்
தானும் போருக்கெழல் 815

சகுனிராஜன் வதை 817

10-சவுத்திக பர்வம்

1. சுயோதனன் வதைச் சுருக்கம் 822

துரியோதன னிளைத்துங் கிளைத்துப் போருக் கெழுதலை
அருச்சுனன் கண்டு வியப்பக் கண்ணனதற்குத்
தரங்கூறுதல் 823

துரியோதனன் கொணர்ந்த சேனைகளைப் பாண்டவர்
பற்றறக்கொல்ல, அதுகண்டு அவனஞ்சி ஓடி
ஒளித்தல் 826

துரியோதனன் தனித்தவிடங் தேடியிருந்துத் தன்னைத்

தாளைத்துகொண்டு மீண்டுந் தேறித் திடங்
கொள்ளுதல் 830
துரியோதனன் சஞ்சயனைக் கண்டு தன் செய்தியைத்
தாய்தந்தையர்க் கறிவிக்கச் செலுத்தி, தான்
தடாகத்துண் மூழ்கி மீர்த்தியு சஞ்சீவி மந்திர
முச்சரித்தல் 834
பாண்டவர்க்குப் பயந்தொளிந்த கிருபர் முதலிய
மூவர் துரியோதனனை நாடிச் செல்லும்போது,
வழியிற் சஞ்சயனைக் கண்டு விசாரித் துணர்தல் ... 837
சஞ்சயனும் உயுச்சனுந் தருமனுத்தரம் பெற்றுத்
துரியோதனதியரின் ஸ்தரீகளை அஸ்தினபுரம்
விடுத்துச் சேதிகூறி மீளுதல் 839
கிருபராதிய மூவரும் துரியோதன னிருக்குமிடம் சென்
றழைக்க அவனவர்க் குரைத்தல் 842
பாண்டவர் துரியோதனனைக் காணுது வருந்திப்
பின் சில வேடரா லவனிருப் புணர்ந்து பிரயாண
மாகுதல் 845
பாண்டவராதியர் துரியோதனன் மூழ்கிய மடுக்கரை
சேர்ந்து சூழப் பீமசேனனவனை அலர் தூற்றி
யழைத்தல் 847
துரியோதனன் பீமன் கொடுமொழிக் காற்றாது
வெளியாகி யாரோடு எப்படையா லெங்ஙனம்
பொருவதென, அதற்கப் பீமனுங் கிருஷ்ண
தேவரும் விடைதரல் 853
பாண்டவருந் துரியோதனனுஞ் சியமந்த பஞ்சகம்
போய்ச் சேர்தல் 857
கண்ணன் பீமசேனனுக்கு வெகுளி மூட்டி யுத்த
ஸன்னத்த னுக்குதல் 860
தீர்த்த யாத்திரை சென்ற பலராமர் மீட்சி 862
துரியோதனனுக்கும் பீமனுக்கும் கதாயுத்தம் 866
துரியோதனனும் பீமசேனனும் ஒருவர்க்கொருவர்
உயிர்கிலை கேட்டுப் போராடல் 871
அருச்சுனன் கண்ணன் கிருபையால் துரியோதனனுயிர்
கிலை யறிந்து பீமனுக்குணர்த்த, உடனே அவனை
யடித்துச் சாய்த்தல் 873

பீமன் துரியோதனன் முடியைக் காலாலுதைக்க அவனைத் தருமனும் பலராமருங் கடிய அதற்குக் கண்ணனு மவனும் சில உண்மைகள் கூறி ஆற்றுதல் 876

தருமனுக் காறுதல் கூறிய கண்ணனையும் பீமனையுந் துரியோதனன் தூஷிக்க, அதற்கு உத்தரங் கூறுதல் ... ... = ... 883

கண்ணன் பாண்டவரைப் பாசறைக் கணிருத்திச் சென்று, திரிதராஷ்டிரனையும் காந்தாரியையும் வியாசராலே தேற்றிவருதல் 887

கண்ணன், அர்ச்சுனன் தேர் எரிந்துபோகக் கண்டு ஐயுற்ற ஐவர்க்கு அந்த ஐயந்தீர்த்து உடனே அவர் களைக் காணகத் தழைத்துப் போதல் 891

கிருபாசாரியார் முதலிய மூவருந் துரியோதனனைத் தேடிச்சென்று காணுதல் 893

துரியோதனன் அசுவத்தாமனுக்குச் சேனாபதிப் பட்டங் கொடுத்தனுப்புதல் 896

2. அசுவத்தாமன் பாசறைப்போர்ச் சருக்கம் 899

அசுவத்தாமன் போர்க்கெழக்கண்ட கிருபாசாரியர் சில நீதிகளைக் கூறித் தடுக்க அதற்கு அவன் சமாதானஞ் சொல்லுதல் 900

பாண்டவர் பாசறையை நோக்கிச் செல்லும் அசுவத்தாமன் அங்கே பானைவலால் வக்கெதிர்த்த பூதத்தைதொடெதிர்த் திளைத்தல் 903

அசுவத்தாமன் அரனைநோக்கித் தவஞ்செய்ய அவர் கோடிபூதங்களை யேவிக் குணசோதனை புரிதல் 905

அசுவத்தாமனுடைய கலங்கா நிலையைக் கண்ட பரமன் அவனுக்கு அநுக்கிரகம் புரிதல் 908

பாண்டவச் சேனாபதியாகிய திஷ்டத் தூய்மன் வதை ... 910

உத்மோசா, உதார்மன், சிகண்டி இவர்கள் முதலாயி னோர் வதை 913

இளம்பஞ்ச பாண்டவர் வதை 914
அசுவத்தாமன் செய்த பராக்கிரமங்களைக் கேட்ட
துரியோதனன் அவனை வியந்து, மற்றையரை
நயந்து விண்ணுல கடைதல் 916

3. அசுவத்தாமன் சிரோமாணிக்கங் கவர்ந்த சருக்கம் 920

பாண்டவர்கள் பாசறைக்கு மீண்டு, இறந்து கிடக்கு
மெல்லோரையுங் கண்டு இரங்குதல் 920
திரௌபதி அசுவத்தாமன் தலைக்குச் சபதங் கொள்ள
தருமர் சலிக்க, கண்ணனுருவாறு தேற்றிப்
பீமசேனனை விடுதல் 922
கண்ணன் அசுவத்தாமன் அடைந்திருக்கின்ற
அஸ்திர பலங்கூறித் தருமனுதியரையும்
பிரயாணப் படுத்தல் 925
பீமசேன னறைகூவவந்த அசுவத்தாமனும் அர்ச்சுன
னும் தங்கட்குத் துரோண ரளித்த பிரமசிரக்
கணையேவிப் போர் புரிதல் 927
வியாஸர் கண்ணன் முன்னிலையில் அசுவத்தாமனையும்
அருச்சுனனையு மோரேற்பாட்டில் நிறுத்தி முடித்து
ஒருவருக்கொருவர் சாபம் விலத்து மீண்டு
பாஞ்சாலியை மகிழ்வித்தல் 928
ஐவர் அசுவத்தாமனிடங்கொண்ட ஐயத்தைக்
கண்ணன் கூறிய தகுதன் சரித்திரம் 932
அரிபிரமர் சரித்திரம் 936
சந்திரன் சரித்திரம் 938
அங்கண முனிவர் சரித்திரம் 940
ஷண்முகக்கடவுள் சரித்திரம் 942

கடவுள் துணை

ஸ்ரீ ராதாருக்மிணி ஸமேத ஸ்ரீ கிருஷ்ண பரப்பிரம்மணே நமः

ஸ்ரீ மஹா பாரதம்

5. உத்தியோக பர்வம்

கண்ணன் துதி

மீனமாகியுங் கமடமதாகியும் மேருவை யெடுக்குந்தாள்
ஏனமாகியும் ஆளரியாகியும் எண்ணருங் குறளாயும்
கூனல்வான்மழு தரித்தகோவாகியும் அரக்கரைக் கொலைசெய்த
வானகாயக னாகியும் நின்றமால் மலரடி மறவேனே.

சூதபுராணிகர் வாக்கியம்

[ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு ஆதிபஞ்சகத்தில் நான்காம்பாகமாகிய விராடபர்வத்தைக்கூறிய வைசம்பாயன முனிவரை ஜனமேஜய மகாராஜன் பணிந்தெழுந்து, "சுவாமி! பாண்டவர்களுந் திரௌபதா தேவியும் தங்களுடைய சுந்தரவுருவ மறைத்து ஒருவருடம் விராடபுரத்தி லுறைந்து, மல்லர் முதலிய கீசகனுதியரை மாய்த்து, மாடு மடக்கவந்த தென்றிசைச் சேனகளைச் சாய்த்து, திரிகர்த்தனைச் செல்லவொட்டாமற் றடுத்து, தேரிற்கட்டப்பட்ட விராடனை விடுத்து, திரிகர்த்தனையும் சேனகளையும், விரட்டி ஓட்டி, தென்றிசையில் ஜெயஸ்தம்பம் நிலை நாட்டியதையும், உத்தரகுமாரனும் பேடியும் உத்தரதிசை சென்று, உவரிபோ லொலிக்குஞ் சேனைகளைக்கண்டு கலங்கிக் காலோட்டங் கொண்ட உத்தரனைக் காண்டீபன் தடுத்து, இராஜ நீதிகளை விண்டு இசைப்பித்து, வன்னிமரத்திருந்த ஆயுதங்களைக்கொண்டு யாவரும் பயந்தோட வடித்து, வஸ்திரங்களும் மாடுகளுங் கைக்கொண்டு வந்ததையும், மன்ன ரைவருங் கொலுவீற்றிருந்ததையும், மச்ச தேசாதிபனும் சுதேஷ்ணையு மனமகிழ்ந்து, வையகத்தார் முதல் மன்னர் மண்டலீகர்களும் புகழ, வாளபிமன்னுவுக்கு வைபவத்துடன், உத்தரையை மணம் புரிந்து கொடுத்ததையும், பாண்டவர் உபலாவியத்திலிருந்து, மங்கையர் முதல் தங்குலச் சுற்றங்கள்

யாவருஞ் சூழச் சிறந்திருந்தார்கள் என்பதையும் கேட்டு மன மகிழ்ந்தேன். இப்பால் ஐந்தாம் பருவமாகிய உத்தியோக பருவத்தையும் கிருபைகூர்ந்து திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.]

அருமறை முதல்வனை யாழிமாயனை
கருமுகில் வணணனைக் கமலக்கண்ணனை
திருமக டலைவனைத் தேவதேவனை
இருபதமுளரிக ளிறைஞ்சி யேத்துவாம்.

1. உலூகன் தூதுச் சருக்கம்

ஏங்கும் விரிந்த கங்குல் அகற்றி மங்குதலில்லாப் பொங்கிய கிரணத் திங்கள் குலத்தில் தங்கமாயுதித்த சிங்கமே கேளும்! பதின்மூன்று வருட்டமும் நீங்கி, வன்னிமரத்தில் மறைத்துவைத்த ஆயுதங்களுந்தாங்கி, பலராமர் ஸ்ரீகிருஷ்ணர் சாத்தகி பாஞ்சாலன் இளம்பஞ்சபாண்டவர் பற்பல தேசபந்து ஜனங்கள் தௌமியர் சாரியர் முதலிய வேதவிப்பிரர் சமஸ்தமான பேர்களும்பொருந்த அக்ஞானம்விட்டு நீங்கிய சுக்ஞான சூரியர்களைப்போல உபலாவியத்திலிருந்த ஐவரைச் சகல அரசர்களும் நோக்கி, வனவாசத்தில் நடந்த மகத்துவங்களையுங் கேட்டு மகிழ்ந்து, "இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களுக்கு என்னயோசனை செய்திருக்கின்றீர்கள்? எங்களுக்கு உத்தரவு கொடுத்தால் இப்போதே அஸ்தினபுரத்தி லிருக்கும் துரியோதனன் முதலாகிய புத்திரமித்திர வருக்கத்தாரை முடித்துப்போட்டுத் தங்களுக்கே சகல சுப சந்தோஷங்களும் உண்டாகும்படியாகச் செய்து போடுகிறோம்" என்று சொல்லக்கேட்டு, தருமராஜன் புன்னகை செய்து, "இது ஞாயமே! தாங்களெல்லோரும் என்பேரில் வைத்திருக்கும் பக்ஷத்தினால் சொல்லுகின்றீர்கள். ஆகிலும் 'பொறுத்தார் பூமியாள்வார் பொங்கினூர் காடாள்வார்' என்னும் பழமொழி இருப்பதினால் நாம் சற்று யோசித்து ஒரு தூது போக்கி, அவன் கருத்தை அறியவேண்டியதாயிருக்கிறது. மேலும் இஷ்ட தெய்வம்போலிருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய இஷ்டப்படி நடப்பதே நமக்கு நஷ்டமில்லாத ஜெயம்" என்று சொல்லி, ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி "இனி நடக்க வேண்டியதற்குத்தாமே யோசித்துச் சொல்லவேண்டும்" என்று சொல்லவும், மீகாவர்த்தன மென்னுங் குடையினால் கல்வருஷத்தைத் தடைசெய்தருளிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் சொல்லுவதாயினர்—

கேளுங்கள் நமது முக்கிய பாக்கியங்களுக்கு உரிய மன்னர் மண்டலீகர்களே! வணங்கா முடிதாங்கிய துரியோதன மஹாராஜ

ஞனவன் ஆதியிற் சூதாடிப் பாண்டவர்களுக்கு உரித்தாகிய மண், மனை முதலிய பாக்கியங்களைப் பறித்துக்கொண்டது மல்லாமல், தரும பத்தினியாகிய பாஞ்சாலியையும் சபையில் மானபங்கஞ் செய்து பாண்டவர்களைப் பன்னிரண்டு வருடம் காடே கதியாகத் திரியச்செய்து காடேபதியாக நீதி நடாத்தி வந்தான். அவனுடன் மறுபடியும் சூதாடி, அவன் கைக்கொண்ட இராச்சியத்தை ஐவர் கைக்கொள்ளுவதே ஞாயம். அல்லாமல், சேனைகளுடன் சென்று எதிர்த்து வில் முதலிய அஸ்திர ஆயுதங்களினால் யுத்தம் புரிந்து வெற்றியடைந்து பட்டாபிஷேக பாக்கிய இராச்சியத்தைக் கைக் கொள்ளுவோம் என்று நினைப்பது இராஜ நீதியிற் கிடையாது. ஆனால் பூர்வம் சூதாடிய சபா மண்டபத்தில் பீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்களுக்கு நேராகப் பன்னிரண்டு வருடம் வனவாச மும் ஒருவருடம் அஞ்ஞாத வாசமுஞ்செய்து பாண்டவர்கள் வெளிப்படுவார்களேயானால அவர்களுடைய இராச்சியங்களை அவர் களுக்கே கொடுத்து விடுகிறேன் என்று துரியோதனன் சொல்லிய வாக்கியம் ஒன்றுண்டு. அதனால் ஒரு தூது அனுப்பி ஆதியிற் சொல்லிய உறுதியின்படி அவர் கருத்தை அறியத் தகுமே கடமை" என்று கண்ணன் சொல்லிய கட்டுரையைக் கேட்டு, அண்ணனுகிய வெள்ளைவண்ணப் பலராமர் சொல்லுகின்றார்—

மண்ணினை ஆளும் அண்ணலே கேளும்! அழகிய சமுத் திரத்தை ஆடையாகத் தரித்தருளிய பூலோகத்தில் துரியோதன மகாராஜனுடைய சாமார்த்தியங்களையும், தருமபுத்திர மகாராஜன் முதலிய தம்பிமார்களின் வல்லமைகளையும் பற்பல தேசத்தரசர் களும் மற்புய வீரத்தலைவர்களும் அறியும்படியாக விருப்பமுள்ள பெருஞ்சூதாடிச் செயித்து, சகல பாக்கியங்களையும் கைக்கொண்டு பதின்மூன்று வருடம் வீணுய்க்கடந்து போகும்படிசெய்த துரியோ தன ராஜனிடத்திற்கு மறுபடி தூது அனுப்பியும் யுத்தஞ் செய்தும் சூதினால் தோற்ற பூமியை வெட்க மிலலாமல் வாங்க மீயாசிக்கும் யுத்தி கொடிய தீய புத்தி—என்று சொல்லச் சபீபத்தில் இருந்த தம்பியாகிய சாத்தகி தமையனை யுறுகிக் கண்களுக்க நோகி, "பளா! பளா!! வெகுநோத்தி, இப்படியா நீ எண்ணங் கொண்டீர்! உமது திருநாவினிடத்திலிருந்து பிறந்த வார்த்தையானது தேவரீ ருடைய திருமேனியின் வெளுப்பைப் பார்க்கிலும் மிகவும் வெளுத் தது" என்று பலபத்திரருடைய மனம் வருந்தும்படியாகச் சொல் லவும், அது கேட்டு அபரித்த அன்பர்களுடைய இமைக்கண்களையும் புயலவண்ணனுகிய ஸ்ரீ கிருஷ்ணதேவர் கரம் அமைத்து, "யான் கூறிய வசன யுத்தியிலும் அண்ணல் அவர்கள் பலராமர் சொல்லிய மொழியிலும் பிரயோசனமில்லை. இனி எவர்களாகிலும் கட்டுரை யாகிய யுக்திகளைச் சொல்லுங்கள்" எனவும், ஆதிசேடனுடைய

சிரோரத்தினப் பிரகாசங்களினால் உலகத்திலுள்ள இருள்கெடும் படியான வளப்பங்கொண்ட பாஞ்சால தேசத்தின் இறைவனுகும் துருபதேய மகாராஜன் சொல்லுகின்றான்:—

ஓ மன்னவர்களே! தரும நீதிப் பெருமை தவறுமல் செங் கோல் செலுத்தியும், நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் கலைக்கியான முதலிய நன்னூல்களெல்லாக் தெரிந் துணர்ந்தும், உச்சமாகிய பேதா பேதங்கள் ஒன்றும் உணராத பரிசுத்த உள்ள முடையவர் பலபத்திர ராகையால் முன்பின் யோசிக்காமல் இந்த வார்த்தை யைச் சொன்னர். அதற்காகக் குரூரத்துடன் கொடிய வசனங்களி னால் கோபிக்க வேண்டாம். சபைதனில் ஒருவர் சொல்லிய வச னத்தில் சம்மதமில்லாவிட்டால் உடனே அதை மறுத்து மறந்துவிட வேண்டியதே முறைமை—என்றான். அப்போது மச்சதேசாதிபதி எழுந்து மாயோன் முதலாகிய மன்னவர்களை நோக்கி, "ஐயா! பாபத்தையும் கோபத்தையும் லோபத்தையும் ஆபத்தையும் பொருளாகக்கொண்ட அரவக்கொடியோன் மோச மாய்ச் சூதினால் கவர்ந்துகொண்ட பூமியை அபேக்ஷிக்க வில்லை. பாஞ்சாலியை வஸ்திரபங்கஞ் செய்த காலையில் அந்தச் சபையி லிருந்த பெரியோர்களுக்கு முன்பாக நாங்கள் கூறிய சபதம் முடிக்க வேண்டிய விதத்தை யோசிக்கின்றோமென்று ஐவர் மொழிந்ததால், அதைத் தீயபுத்தி என்று இந்தப் பலபத்திரர் சொல்லலாகுமா? யாவரும் பிழைக்கும்படியாகிய நன்னீதியைச் சொல்லும் துளபமாலை யணிந்த ஸ்ரீ கிருஷ்ணதேவர் ஒரு தூது போக்கி அறியலாம் என்று சொல்லியதே இராஜ முறைமை. அதுவே வேத வாக்கியத் திறமை. அந்தப்பிரகாரம் தூதுபோய் அவன் இசையாத கருத்தை அறிந்துகொண்டு இப்போதே சென்று யுத்தஞ் செய்தாலும் பெரிதன்று" என்று சொல்லவும், துருபதேய மகாராஜன் காசாம்பூவண்ணனை நோக்கி, "சுவாமி! இதோ இருக்கின்ற வேதவிப்ர சிலாக்கிய விண்மணிபோன்ற உலகமாமுனியாகிய பௌரோகிதர் சதுர்வித உபாயங்களுந் தெரிந்த பரிசுத்தர். இன்று தூது அனுப்ப நினைப்பீராகில் அதற்கு இவரே யோக்கியர். இதுவே எங்கள் பாக்கியம்" என்று உரைக்க, அந்தச் சபையிலுள்ள பற்பல மன்னவர்களின் மனப் பொருத்தத் தையும் யுதிஷ்டிரர் முதல் உயர்ந்த தோளினையுடைய பாண்டவர் களின் சிந்தை உறுதியையும் நடக்கவேண்டிய காரியங்களையும் கண்ணபிரான் நிதானித்துச் சபையை நோக்கி, களித்திருக்குந் தருமநந்தனரைப் பார்த்து, "தோஷ மோச குற்றங்களைப் பூஷண மாகக் கொண்ட சுயோதனன் தனக்குப் படைத்துணை வருமபடி யாகத் திடவீரகாத்திர பராக்கிரம ஆண்மையையுடைய அரசர்களுக் குத் தூது அனுப்பு முன்னமே, உமக்குப் படைத்துணை வரும்படி

யாக முன்னாக்கிரதையுடன் தூது அனுப்பிவிட்டு, அப்பால் உமது கருத்தைச் சொல்லி மறுமொழி கேட்டு வரும்படியாகத் திருதராட்டிரனிடத்திற்கு உலூகமாமுனியைத் தூது அனுப்பும்" என்று சொல்லி, முடிமகிபர் அடிபணியச் செலவு பெற்றுக்கொண்டு, பல பத்திரர் சாத்தகி முதலிய பேர்களுடன் துவாரகை போய்ச் சேர்ந்தார்.

இப்பால் தருமராஜனைச் சபையிலிருந்த அரசர்களெல்லோரும் எழுந்து வணங்கி "ஐயா! இந்த உலூகமாமுனியை அஸ்தினபுரத்திற்குத் தூது அனுப்பித் தங்களுக்கு இராச்சியம் வரும்படியாகிய விதங்களெல்லாம் பேசச் சொல்லி, அதற்குத் திருதராட்டிரனும் துரியோதனனுஞ் சொல்லியனுப்பும் வார்த்தைகளைக் கேட்கும் போது உங்களுக்குப் பிரதிகூலமாயிருக்குமானால் உடனே ஓலையும் தூதும் அனுப்பினால், நாங்களியாவரும் சதுரங்க சேனைகளுடன் ஆயுதபாணியாகப் படைத்தூண வருகிறோம். தேவரீருக்கு மாமனராகிய பாஞ்சால ராஜனும் விராட பூபதியும் உங்களைவிட்டு நீங்கி இருக்கமாட்டார்கள். நாங்கள் அவ்வளவு பாக்கியஞ் செய்யாமற் போனாலும் உங்களுடைய சுகதுக்கங்களை எங்களுடையவைகளாக எண்ணி இருக்கிறோம். ஆதலால் விடைதாரும்" என்று கேட்கவும், தருமராஜன் எழுந்து அவர்களைத் தழுவிக்கொண்டு சந்தோஷத்துடன் உத்தரவு கொடுக்க, அவர்கள் தங்கள் தங்கள் பட்டினம் போய்ச் சேர்ந்தார்கள்.

பின்பு முரசத்துவஜனனவன் தம்பிமார்கள் பாஞ்சாலன் விராடன் முதலிய பேர்களோடு சபையிலினிதாக விருந்து ஸ்ரீ கோபால கிருஷ்ணனுடைய உத்தரவின்படி இவ்விடத்தில் வந்திருந்து போன மன்னவர்கள் தவிர, இங்கு வராதிருந்த இறைவர்களுக்கெல்லாம் தங்களுடைய யோக க்ஷேமங்களையும படைத்தூண வந்து காக்கவேணுமென்று எழுதிய திருமுகங்களையும் தூதர்கள் மூலமாய் அனுப்பிவிட்டு, உலூகமாமுனிவரென்னும் பெரியோரை அழைத்து ஆசனத்திலிருக்கச் செய்து, "ஐயனே! நீர் அஸ்தினபுரம் போய் பீஷ்மாசாரியார் - துரோணாசாரியார் - கிருபாசாரியார்-அசுவத்தாமர் எந்தையாகிய திருதராட்டிர மகாராஜன்-விதுர மகாராஜன் இவர்களுக்கெல்லாம் எங்களுடைய வந்தனத்தை முதலிலே சொல்லி மற்றப்பேர்களிடத்தில் நீர் போகும் தூதுக்குரிய வார்த்தைகளைப் பேசிவரக் கடவீர் மெய்மையையுடைய வேதவேதியனே" என்று மொழிந்தான். அதுகாலத்தில் போதுமான தவங்களைச் செய்து பவங்களகற்றிச் சுபங்களுடன் மனவுறுதி பெற்றிருக்கும் தரணீகனன அருபதேய மகாராஜனவன் எதிரில் இளஞ் சூரியனைப் போல் பிரகாசித்திருக்கும் வேத பண்டிதனுடைய மலர்ந்த ஒளிமுகத்தைப் பார்த்து, "நீலகண்ட

னுக் கொப்பாகிய உலூகமாமுனிவரே! நீர் தூது சென்று பாண்டவர்கள் சிறப்புறும்படியாக அஸ்தினபுரிக்கு அரசராகிய திருதராட்டிர மகாராஜன், பீஷ்மர், துரோணர் - கிருபர் - அசுவத்தாமர் - விதுரர் முதலியவர்களை அவரவர் அரண்மனையில் தனித்தனியாகக் கண்டு பாண்டவர்கள் சாஷ்டாங்க நமஸ்காரம் புகன்றார்கள் என்று கவின்று, நாள்தோறும் பழகி, அவர்களிடத்தில் அதிக விசுவாச நேசமாகி, பீஷ்மர் முதலிய மற்றவர்களுக்கெல்லாம் ஐவர்மீது அன்பு வரும்படியாக நடந்துகொண்டு, வணங்காமுடியோனைக் கண்டு, உமதிஷ்டப்படி பதின்மூன்று வருடம் காட்டிலும் காட்டிலும் காலங்கழித்துவந்த காவலர்களுக்கு நீர் முன்பு இராஜ சபையில் சொன்ன வண்ணம் இனி நாடு கொடுப்பீரா இல்லையா வென்று அவனது நினைப்பின் கருத்தை நிதானித்துணர்ந்து, தாமும் தகுந்த படி தருமங்களைப் புகன்று 'பக்கச்சொல் பதிஞ்பிரம்' என்பது போல்' அங்குள்ள பெரியோர்களைக்கொண்டும பேசச் செய்து, கலங்கா மனத்தினராகிய தேவரீர் அவர்களுடைய காரியபாகங்களைக் கண்டறிந்து கொண்டு சீக்கிர மிவ்விடம் வந்து சேரவேண்டும்" என்றான். தம்மைப் பணிந்தவர்களுக் கெல்லாம் ஆசீர்வாதஞ் செய்து, வாயு வேக மனோவேகமுடைய வண்பரிபூட்டிய விண்தொடு மிரதத்தில் ஆரோகணத்துக்கொண்டு முனிவர் உபலாவியத்தை விட்டுப் புறப்பட்டார்.

பெண்களுடைய கண்களென்னும் வண்டுகள் மொய்க்காத மலர்மாலை அணிந்த உலூகமாமுனிவர் அஸ்தினபுரிக்குச் செல்லு முன்னமே, அஸ்தினபுரியில் துரியோதனன் முதலாகிய தம்பிமார் களும், பீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்களும், அசுவத்தாமா கர்ணன் முதலிய படை மன்னர்களும், வீராதிவீரர்களும், சூராதி சூரர்களும், மற்றியாவரும் விராடபுரத்தில் அர்ச்சுனன் கையில் அடி பட்டு, மடக்கிய மாடுகளையும் உடுத்திய விருது வஸ்திரங்களையும் அவர்களுக்கு ஒப்புவித்துவிட்டுப் பகலில் வர வெட்கங்கொண்டு, எல்லோரும் நித்திரை செய்யும் அர்த்த ராத்திரி வேளையில் பச்சை யுதிரம் பாயும்படியாகிய புணைகள் நோகவும் பவிஷும் பலமும் குன்றிப்போகவும், தேகஞ் சாகவும் தங்கள் தலையைத் தாங்களே தடவிக்கொண்டு தனித்தனியே அத்தினபுரத்தைச் சார்ந்து, நித்திரையிற் சோர்ந்து, அன்று இரவு விடிந்த பின்பு யாவருஞ் சென்று சபையில் நிறைந்து, தங்கள் முன்பு வந்தவர்கள் முகங்களைப்பார்த்து வந்தனை புரிந்து முகம் வியர்த்திருந்தனர், அவர்களுள் கள்ளமிருந்த உள்ளத்தினருகிய துரியோதனனுனவன் பெரியோருள்ளம் வருந்தவிளம்புவானாகி, பெரியவெள்ளம் நிறைந்த கடலென அனேகவெள்ளஞ் சேனையும் வீரரும் சூழ விராடபுரம் போனதும் அங்கே வேந்தரைவரும் பாஞ்சாலியுடனே பதுங்கி

யிருந்ததும், பேடியாய் அர்ச்சுனன் பேணியேவுந்ததும், உருவந் தெரிந்ததும் யுத்தஞ்செய்ததும், பசுக்களைத் திருப்பிக்கொண்டு போனதும், இவைகளை யெல்லாம் தங்தைக்கும் தாயார் காந்தாரிக்கும் நமஸ்கரித்துச் சொன்னன். அவ்விருவருங் கேட்டுப் பெருமூச்சுவிட்டு வெட்கப்பட்டுச் சபைக்குவராமலிருந்து, அப்பாலொருநாள் இராஜமண்டபத்திற்குவந்து உபலாவியத்திலிருக்கும் பாண்டவர்களினுடைய தினச்செய்கைகளை அக்கம்பக்கத்தில் விசாரித்து வரும்படியாசத் தூதரை அனுப்ப, அவர்கள் உடனே சென்று பாண்டவர்கள் வெளிப்பட்டதும், அபிமன்னுவுக்கு உத்தரையைச் சகலவிதசம்பிரமத்துடன் விவாகம்நடத்தியதும், அவிடத்தில் வந்திருந்த அரசர்கள் இன்னுரின்னுரென்பதும் அவரவர்கள் அஸ்தினபுரத்தின்மீது படையெடுக்கக் கருதியவிதமும், தருமராஜன்முதலியபேர்கள் செய்யும் யோசனையும், துரியோதனமகாராஜன் சகலதேயத்தரசர்களையும் படைத்துணைக்கழைக்கத் தூது அனுப்புமுன்னமே நம்முடையதூது அனுப்பவேண்டுமென்றதும் உலூகமாமுனியை அத்தினபுரத்திற்குத் தூது அனுப்பச் சொல்லிவிட்டுக் கிருஷ்ணமூர்த்தி துவாரகைக்குப்போனதும் படைத்துணைவருவதற்கு, தேசங்களில் தூதர்களையும் ஓலைகளையும் போக்கி இங்கே உலூகமகாமுனியைப்பயணப்படுத்தியதும் தெரிந்து கொண்டுவந்து, திரிதராட்டிரனுக்கும் துரியோதனனுக்குங் கூறினர். அதைக்கேட்டு ராஜன்கொலுவுக்குவந்து, துச்சாதனன் - கர்ணன் - சகுனி - பீஷ்மர் - துரோணர் - கிருபர் - முதலானபெரியவர்களுக்குத்தெரியப்படுத்தவும் "அதை யாவருங்கேட்டு ஆலோசனைசெய்து பாண்டவர்கள் படைத்துணை சேர்க்கும்போது நாம் ஆலசியமாயிருக்கலாகாது" என்று திரிதராட்டிரனுக்குச் சொல்லி, 'இப்போதே வணங்காமுடி தாங்கிய மன்னவன் துவாரகைக்குப்போய் ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய உதவியைப் படைத்துணையாகக் கொள்ளல் வேண்டும்' என்றும் 'ஆயிரங்கோடி நக்ஷத்திரமொன்றுய்ச் சேர்ந்தாலும் ஒரு சந்திரனுகமாட்டா' வென்றும் 'பன்றிபலகுட்டி ஈனுவதிலும் யானைக்கன்று ஒன்றுகிடைத்தால் பெருமையன்றோ-? என்றும் நிச்சயித்துக்கொண்டு தேசதேசமெங்கும் செங்கோலும் ஆக்கினைசக்கரமுஞ்செலுத்தும் அரசர்களுக்குத் தூது அனுப்பிவிட்டு, உடலுமுயிரும் போலும் பாலுநீருமபோலும் ஆத்மகோடிகள் தோறும் அமைந்த பகவானிடத்திற்கு, ரதகஜதுரகபதாதிகளுடன் அரவகேதனனை அனுப்பிவைத்தார்கள்.

அப்படியே புறப்பட்டுத் துரியோதனமகாராஜனும் துவாரகாபுரி போய்ச்சேர்ந்தான். அங்கே அநேகங்கோடி அகண்ட வீதிகளும் அவ்வீதிகளில் நிறைந்த மாடமாளிகைகளும் அவைகளைச்சூழ்ந்த பவளக்காடுகளும், பூங்காவனங்களென்னும் முல்லைக்காடுகளும், அக்காடு

களில்நிறைந்த மயிற்குயிற்பேடுகளும், குளங்களில் நிறைந்த அன்னப் பேடுகளும், மலையிலமைந்த யானைக்கோடுகளும், சவுக்கடி யென்னு மணிமேடைகளும் சகலவளமும் உற்பவிக்கும்கடைகளும், சங்கி னங்கள் தவழுமடைகளும், சரஞ்சரமாகத் தொங்கும் பூந்தொடை களும் ஸ்ரீமன் நாராயணன் ஸ்ரீ கிருஷ்ணரை இவ்விடத்தில் அவ தரித்திருக்குந் தன்மையைக் கேட்டு ஆதிசேடன் தனது ஆயிரம் பணமகுடமும் விரித்துச் சிரோரத்தினங்கள் பிரகாசிக்கும்படியாக மண்டலாகிருதியாய் வளைந்து கொண்டதைப்போலும் வான மளாவி யிராநின்ற மதிலும் அதின்மேற்பொருந்திய சிகர கோபுரங்களும், மதிலுறுப்புக்களும், க்ஷீராப்திநாதன் நம்மைவிட்டு நீங்கி இங்ஙனம் அவதரித்திருக்கிறானென்று உட்கொண்டு பாற்கட லானது வந்து பாதலம்வரையில் ஆழ்ந்து வட்டமாகிய மதிலைச் சூழ்ந்து கருநிறங்கொண்டு இருப்பதையொத்த பலவித புட்பங்கள் நிறைந்த அகழும், அவைகளுள் ஏறுந்துறைக்கு அமைந்திருக்கும் பளிங்குப்படிகளும், ஆகாயத்தையளாவிய அநேகங்கொடிகளும் அவற்றின்மேல் அமைந்த சிகரமுடிகளும், அரவணையுயின்ற எங் கள் பெருமான் ஐவர்க்குச் சகாயன் அவர்களுக்கே படைத்துணை யாவான் அல்லாமல் உனக்குத் துணையாகமாட்டான். நீயேன் விருதாவில் வருகின்றாய் திரும்பிப் போய்விடென்று நகரமாகிய பெண் கைகளை நீட்டி ஆடிக்காட்டுந் தன்மையைப்போல் அசைந் தாடுங் கொடிகளின் படபடப்பும் கண்டான். கிருபைக்கு உற் பத்தி ஸ்தானமாகிய தாமரைக்கண்களையுடைய மஹாவிஷ்ணு வந்து அவதரித்திருக்கின்ற வடமதுராபுரியான ஸ்ரீ வைகுந்தமா நகரம் போலிருந்தது. மெய்ஞ்ஞானச் சுடர்விரிந்து அக்ஞான இருள் அவிந்து அழகிய மாணிக்கத் தீபங்கள் மிகுந்து சோதிப் பிரகாசங் கலந்து விளங்கிய வளங்களை யுடைய துவாரகாபுரி வீதியில், சித்து அசித்துத் தெரியாத துரியோதனன் வருங் காரியங்களைத் தெரிந்துக்கொண்ட அரிபரந்தாமன் அர்ச்சுனனை வரும்படியாகத் தூது அனுப்பிவிட்டு, வாசற் காவலோரை நோக்கி, பூபதியாகிய துரியோதனராஜன் வந்தால் எனக்கு அறிவிக்க வேண்டுமென்று எண்ணுமலும் தடை பண்ணுமலும் விட்டுவிடக் கடவீர்கள்" என்று உத்தரவுசெய்து, அரணமனைக்குச் சென்று பவளத்தினாலும் பளிங்கினாலும் ஏற்படுத்திய மண்டபத்தில் மரகத வாசலில் வயிரக்கொலுசுகள் அசைந்தாடப் பிரளய காலத்தில் மிதந்தசைந்தாடும் வடபத்திரசாயி போலவும், பாற்கடலில் பரு மணிச் சிகர ஆதிசேடன் மேல் ஞான நித்திரை கொள்ளும் பதும நாபன் போலவும், அன்பருள்ளத் தமர்ந்த அருளாழி வேந்தன் போலவும் சயனித்துக்கொண்டு சந்திரகலை யொடுக்கிச் சூரியகலை யோடும் படியாகக்காட்டி அதிகநித்திரை என்பது தோன்ற அன்பெல் லாம் அர்ச்சுனனிடத்திலுன்ற அழகிய பதுமைகள் கொலுசு கைக்

கொண்டசைக்க ஐயனிருந்த அக்காலத்தில் அரவக்கொடியோன் தன்னுடன் கூடவந்த தளங்களை வெளியில் நிறுத்திக் தான் தனியாகவந்து ஒருவரையுங் கேளாமல் எதிரிலே தோன்றிய பவளக்கால் மண்டபத்தின் பளபளப்பின் பிரகாச விந்தையினால் எதிர்நோக்கினான்; மிகுந்த நித்திரை கொள்வதுபோலிருந்த மாயனைக் கண்டதும் " நாமா எழுப்புகிறது? அவனாக எழுந்த பிற்பாடு பேசிப் போகலாம் " என்று நினைத்தவனாய், திருவடியின் பக்கத்தில் ஓர் உயர்ந்த ஆசனம் இருக்கக் கண்டு, " இவன் எம்மாத்திரம் பஞ்சை! இவன் காலடிப் புறத்திலேயா நாமிருப்பது " என்று கோபங்கொண்டு, " இவ்விடத்தில் இவனுக்காக நாம் காத்திருக்கத் தகாது " என்று நினைத்து, அந்தப் பீடத்தை இழுத்துக்கொண்டு வந்து சுவாமியின் திருமுடிப் பக்கம் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். அப்போது, இவனுடைய உள்ளத்திலிருக்கும் கள்ளம் அறிந்த கடவுள் " இன்னும் வரவில்லையே பற்குனன் " என்று எண்ணங் கொண்டனர். அச்சமயம், திண்ணியனாகிய கிரீடி துவாரகைக்கு கண்ணி இரதம் விட்டு இறங்கிப் பள்ளியறைக்குட் சென்று பகவானைக் கண்டு திருவடிப் புறத்தில் மண்டியிட்டு இருந்து இருகரங்களினாலும் இதழ் விரிந்த செந்தாமரை போன்ற ஸ்ரீ பாதங்களைத் தடவிப் பிடித்தான் பகவான், அப்போது நித்திரை கலைந்து மேற் போர்வையாகிய சுவரத்தின பீதாம்பரத்தை நீக்கித் திருக்கண் மலர்ந்து நாற் புறத்திலும் பார்வையைச் செலுத்தி, அர்ச்சுனனிருக்கக் கண்டு, " எப்போது வந்தாய்? அர்ச்சுனா " என்று கேட்கவும், " இதுதான் வந்த பயணம் " என்று சொல்லி, அர்ச்சுனன் சாஷ்டாங்கமாகச் சேவித்தான். பகவான் "திக்கு விஜயங்களும் சத்துரு கண்டனமும் மனோபீஷ்டமும் உண்டாகக் கடவன்" என்று மங்கள ஆசீர்வசனஞ் சொல்லி மறுபடியும் நித்திரை மயக்கம் நீங்காதவர்போலக் கண்களை மூடிக்கொண்டு, அருட்பார்வை நிறைந்த அரவிந்தக் கண்கள் மலர்ந்து பற்குனனைப் பார்த்து "பக்கத்தில் உட்காரும்" என்று பகர்ந்தார்.

அவ்வுரையைச் சிரமேற் கொண்ட காண்டீபனெழுந்து இருகரங் குவித்து "ஓ தேவாதேவா! தேவதா சார்வபௌமா! சர்வலோக சகாயா! சுவாமி பராக்! எங்கள் அண்ணாவாகிய அரவத்துவஜ மகாராஜன் வந்திருக்கிறார்" என்று சொல்லவும், திடுக்கிட்டுத் திக்கென்றெழுந்து 'ஏதோ நான் பார்க்க இல்லையே அடடா !! இது ஆச்சரியம்! என்ன இந்தத் தூக்கம் மோசஞ் செய்தது. நானெம்மாத்திரம் பஞ்சை! பூமண்டலாதிபதி இவ்விடத்தில் வந்து காத்துக்கொண்டிருக்கும் படியாக நேரிட்டதே! இது என்ன பாவம்! இந்த வாசற்காவலாளர்களும் தெரிவிக்காமற் போனார்கள்" என்று மிகுச்சீறிக் கோபங்கொண்டு எழுந்துநின்று, கந்தியாவர்த்த மாலையனைப் பார்த்து, " ஓசந்திரகுலத் திருதிரனே! நமக்கும் உங்களுக்கும்

பேதமில்லாதிருக்க இங்குவந்த நீர் என்னை எழுப்பிவிடலாகாதா? உம்மைவிடவா எனக்கு நித்திரைபெரிது? நீர்வந்ததே என் பாக்கியம்! இந்தமா நகரஞ்செய்ததே யோக்கியம். ஆகிலும் நான் அறியாமல் நடந்தது அபசாரம்! இதைப் பொறுத்தருள வேண்டும்" என்று இறுகக் கட்டி ஆலிங்கனஞ் செய்துகொண்டு, "ஏது அபூர்வமாயிருக்கின்றது நீங்கள் இருவருஞ் சேர்ந்து வந்தது! ஆச்சரியம்! ஆச்சரியம்!! சேனை மேளவாத்திய சூத்திரசாமர முதலிய சின்னங்களெங்கே?" என்று துரியோதனன் மனதில் படும்படி அதிவிநயமாகச் சொல்லி "என்னையொரு பொருளாக நினைத்து இவ்வளவுதூரம் பிரயாசைகொண்டு வந்தது யாதுகாரணமோவதை என் னிமித்தத்தில் காத்திருந்தீரென்று கோபங்கொள்ளாமல் தெளிவில்லாத யான் தெரிந்து கொள்ளும்படியாகச் சொல்லுங்கள்" என்று கேட்டார். அப்போது துரியோதனன் அகமகிழ்ந்து முகமலர்ந்து 'இவன் நம்மிடத்தில் வெகுவித உபசாரத்தையும் பயத்தையுங் கொண்டிருக்கின்றான்' என்றெண்ணி மிகுந்த இறுமாப்புடனே, "ஐயா! நாளை நடக்கப்போகிற பாரத யுத்தத்திற்கு உம்மைப் படைத்துணையாகக் கொண்டு போக வந்தேன்" என்று சொன்னான்.

உடனே அர்ச்சுனன் வணங்கி, "ஆ தினதயாளுவாகிய தெய்வமே! ஏழையாகிய எங்களுக்குப் படைத்துணை வேண்டி இங்கு வந்தீரன்" என்ன, இருவர்மொழிகளையும் ஒரு மொழியாகக் கேட்ட என்னையன் ஆபத்பந்துவாகிய சங்குசக்கரக்கையன் சுயோதனனை நோக்கி "வையகங் காககும் ஐயனே! துய்யனுகிய தருமராஜனுந் தம்பிமார்களும் வெளிப்பட்டு விராடபுரத்தில் இருகக்கேட்டு யான் சென்றபோது, என்னை எதிர்கொண்டு கண்டு வார்த்தைகளாடி இருக்குங் காலையில் 'இனிமேல் எங்கள் சபதப்படி நடக்கப்போகின்ற பாரதயுத்தத்திற்குத் தவறீர் படைத்துணையாகவேண்டும்' என்று வினவுஞ் சமயத்தில் யாம் தடுத்து "துரியோதன மகாராஜனும் படைத்துணை கேட்பாரல்லவா? எனக்கு நீங்களிருவரும் இரண்டு புஜமும இரண்டு கண்களுமாம். ஆகையால் ஒருவரை நீக்கி ஒருவருக்குப் படைத்துணை வரமாட்டேன். என்னை நீக்கிவிடவேண்டும்' என்று மறுத்துச் சொல்லியும், பிடிவாதமாக வாதித்தபோது ஒரு யுத்தி வார்த்தை சொல்லி வந்தேன். அதென்ன வென்றால 'யான் நித்திரைசெய்து, எழுந்திருக்குங் காலத்தில் எவர்கள் என் முகத்தில் முன்னே தென்படுகின்றார்களோ அவர்களுக்கு நான் படைத்துணையாவேன்' என்று உண்மையாகச் சொலலி யிருந்தேன். அந்தப்படியே இன்று அர்ச்சுனன் வந்து முந்தி முகத்தில் தென்பட்டான். ஆகையால் அவர்களுக்கே படைத்துணையாவேன். உமக்குப் படைத்துணை யாவதற்கில்லை. இது என் தப்பிதமல்ல. உம்முடைய அஜாக்கிரதை. முன் வந்த நீர்

என்னையெழுப்பி விடாமலும் சேவகரைக்கொண்டு தெரிவிக்காமலும், கை தட்டிக் கனைத்து ஜாக்கிரதை செய்யாமலும், எனக்குப் பிரபுத் தனங்கொடுத்து வீண்பொழுது போக்கிவிட்டீர். ஐயோ இனி யான் என்ன செய்வேன். ஆனால் என்னைப் படைத்துணை விரும்புவது ஏனனம்! நானே யுத்தகளத்தில் ஆயுதம் ஒன்றும் தொடேன். நிராயுதனாக நானொரு புறமிருப்பேன். என் தமையன் முதலிய சகலரும் இன்னொரு புறம் இருப்பார்கள். இது சத்திய வசனம். உங்களிருவருக்குமிந்த இரண்டு பக்ஷத்தில யாவர் வேண்டியது. அச்சுனு! உங்களெண்ணத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்க, விஜயன் பணிந்து "தேவரீரை மாத்திரம் வேண்டினேன்" என்று விளம்பவும் கலகலவென்று நகைத்து "விளையும் பயிர் முளையிற் றெரியும்,' என்பதைக் கேட்டதில்லையோ கிரீடி!' ஆயுதமெடாத என்னைப் படைத்துணையாக அபேக்ஷித்தாயே. என்னாலனக்கு என்ன காரியம் நடக்கும்" என்று கேட்கவும், பற்குனன் இணையடி வணங்கி 'சுவாமி! அடியேனுடைய இரதத்திலிருந்து சாரத்தியஞ் செய்தாற்போதும். மண்ணுலகிலுள்ள மகாஜனங்களும் விண்ணுலகிலுள்ள வித்தியாதரரும் கருடகின்னர கந்தர்வர் யாவரும் களிக்க, அசுர இராக்கதர் அடங்கலும் வென்று ஒரு முகூர்த்தத்தில் சத்துருக்களின் மூலவேர் களைந்து வஞ்சினமுடித்து வாழ்விற் சிறப்போம், அஞ்சன மேனியாம் அண்ணலே" என்று கூறினன். அமலன், வஞ்சனையுள்ள வணங்கா முடியோனை நோக்கி, " தனஞ்செயன் என்னைச் சாரதியாகக் கொண்டபடியால் குதிரைகளை நடாத்தியிருப்பதையன்றி எவர்கள் பேரிலும் ஆயுதமெடுத்து நான் அடிப்பதில்லை. நான் சொல்லுமொழியை நம்பும். இஃதல்லாமல் எங்கள் அண்ணனார் காலகேதனமுடைய பலராமர் உமக்குச் சாக்ஷாத் மாமனாராகையால் அவரையும், எங்கள் யதுவம்சத்தார் பலரையும், உமக்குத்துணைவர இருக்கும் எமது பங்காளிகளாகிய கிருதவர்மியனையும, கிருதவன்மனையும், ஓர் அக்ரோணி சேனைகளையும், இன்னுமிருக்கும் பலரையும் படைத்துணையாகக் கொண்டுபோம " என்று இன்சொற் கூறி விடைகொடுத்தார். துரியோதனன் செலவு பெற்றுக்கொண்டு சென்றுபலபத்திரராகிய மாமனைக் கண்டு வணங்கி, படைத்துணை விரும்பிவந்ததும், பார்த்தன் கேட்டதும், ஆயுதம் எடுப்பதில்லை என்று கிருஷ்ணன் இசைத்ததும் சொன்னன்; அப்பால் அவரையும் யதுவம்சத்தார் பலரையும் பெருஞ் சேனைகளையும் தனக்குத் துணையாகப் பெறும்படி பகவான் கூறியதையும் சொல்லி, 'ஆகையால் அவ்வாறே தாங்களும், கிருதவன்மனும், கிருதவீரியனும், அளவிறந்த சேனைகளும், யாதவ குமாரரும், படைத்துணையாகவேண்டும் " என்று பகர்ந்து செலவு பெற்றுக்கொண்டு அஸ்தினபுரம் போய்ச் சேர்ந்தான்.

இவ்வண்ணந் தீர்மானித்துவந்த துரியன், அரசர் சபையிற் புகுந்து, பீஷ்மர் முதலானோர்க்குப் படைத்துணைபெற்ற விதத்தை விளம்ப, அவர்கள்கேட்டு மனம்வருந்தி "கடல்பெருகி நிற்கினுங் கலீ தீர்க்கு நீராகுமா? 'ஊற்றுஜலங் கொஞ்சமேனும் உண்ணுநீராகும்" என்கிற பழமொழி கேட்டதில்லையோ? அதுபோல் சேனைப் பெருக்கத்தில் பிரயோசனமில்லை. கண்ணனொருவன் கைவசப்படுவானுனால் "அண்ணலே! உன்னையாவர் வெல்லுவார்" என்று பேசியிருக்கும் பொழுது, நகுல சகாதேவர்களுக்கு கல்லம்மானுகிய 'மத்திரதேசாதிபதி பாண்டவர்களுக்குப் படைத்துணை வருகின்றார்' என்று தேச தேசங்களுக்குச் சென்ற துரியோதனனுடைய தூதுவர் ஓடிவந்து உரைத்தனர். அதைக்கேட்டு பீஷ்மர் முதலிய மேலோர் மன்னனேநோக்கி, "இத்தச் சல்லியராஜனையாவது வழிமடக்கிப் படைத்துணை கொண்டால் பெரிய சகாயமாகும்" என்று புத்தி விளம்ப, இறைவனும் இசைந்து நன்றுநன்றென்று கலபெற நடந்து, அஸ்தினபுரிக்கு அடுத்த மேற்புறத்தில், கல்வியறியாக் கசடர் மனம் போல், கற்றறிவில்லாக் கயவர் இனம்போல், செல்வமில்லார் சிந்தைக் கொப்பாய், சத்திய நன்னெறி தவறினோர் வாழ்வென, பெண்ணலங் கிட்டாப் பேதையர் தாமென, தானந்தவஞ்செயத் தரியார் மனமென, ஞானமில்லார் கவிலுமொழியென, தெய்வநிந்தனை செய்வோர் கதியென, முள்ளுமுரடுங் கல்லுங்கரடும், புல்லும் பூடும் பொருந்தா வழியும், நிழலிலா வெளியும் நெருப்புறும் பாலியும், மழைத்துளி யறியா மாநிலப்புழுதியும் இருக்கும் வழியைஅடைந்து "இறைவனுஞ் சேனையும், வெந்து வெதும்பி விடாய்ப்பட வருவார் - இவ்வழியே" என்று அறிந்து, இந்திரனுலகென, பந்தர் அமைத்துப் பன்னீர் தெளித்து, தென்றலுக் கெதிர் சிங்காசனம் வகுத்து, மேற் கட்டிவிட்டு விதம் விதமாக ஜாலர்கள் தூக்கிச் சாளரமமைத்து, வாழைக முகுகள் வான் கருப்புடனே, தாழை இளநீர் சரஞ்சரமாக, பற்பல கனிகளும் பாயச விதங்களுமே, வகைக்கொரு கிழங்கும் வாசனை மலர்களும், பலவிதத் தண்ணீர் பன்னீர்வகையும், வாசனைப்பண்டமும் வரிசையாயூசலும், தாதியர் சேடியர் சங்கீதம்பாட, திண்டிவாசு, சித்திரமேடை, பூசாவிதிகள் புரியுஞ்சாலை, போஜனசாலை புகழ்பெற அமைத்து, கணக்கர் காரியஸ்தர் காவலர் இறைஞ்ச, சுக்குநீர், வெண்ணீர், சுத்தநீர், பன்னீர், கச்சாயவர்க்கமும், காசாலட்டும், விதம்விதமாய விசிறிகளனேகமும், ஆலவட்டமும், அரிவையர் பிடித்த நிலைக்கண்ணுடியும், நிமிர்சாய்மரமும், படுக்கை மெத்தையும் பலவிதமலரும், அறுசுவை யன்னமும் அமுதெனச் சமைத்து, சந்தனபுட்பத் தாம்பூல விடயமும், வந்தவரெவர்க்கும் வழங்க அமைத்து, மாமனுர்வருகிற வழியிற் பாண்டவர் உபசாரஞ் செய்யும் உயர் தண்ணீர்ப் பந்தல் என்று விளம்பி எழுதியமைத்து அண்டையில் மறைந்திருந்தான்.

அவ்வேளையில் சேனைப்பெருக்குடன் சல்லியராஜனும், வெய்யிலில் மிகவும் காவறண்டு காவுமுலர்ந்து, விடாய்ப்பட்டு அவ்வழி வந்தான். அங்கே வேலையிலிருந்த காரியத்தூதருங் கணிகை மாதரும், எதிர்கொண்டோடி சல்லியனை இறைஞ்சியழைத்து, ஆலவட்டத்தால் ஆயாசமாற்றித் தண்சுகபரிமள ஸ்நானமுஞ் செய்வித்தனர். சந்தி பூசைக்குச் சந்தனம் அக்ஷதைகளுஞ் கொடுத்தனர். பொன்வாழை இலையிற் போஜனஞ்செய்வித்து, சந்தன புட்பத்தையலர்சாற்றி, தாம்பூலவிடையுங் தகுதியாய்க்கொடுத்து, ஊசலிலிருத்தி ஊசலும்பாடி, சேனையர்க்கெல்லாம் தேவாமிர்தம்போல் போஜனமிட்டனர். புளித்தவர் மகிழ்ந்து, மார்க்க ஆயாசந்தீர்ந்தனர். சங்கீதம் வீணை, தாளசுரங்கள் இங்கிதமாக இறைவனுங் கேட்டு, அகமும்முகமும் அன்புமலர்ந்து "இவ்வளவு சம்பிரமம் இன்று யான் கண்டேன், தியமாபாவிகள் சிந்தைபோல் வறண்டு, பேய்குடியிருக்கும் இக்காணகப் பெருவெளியில் இவ்விதமாக சம்பிரமம் அமைத்த தருமவானெவர்கொலோ! பொருளெலாம் நிறைத்த புண்ணியரெவர்கொலோ! அவரென் முன்வந்தென் அரசுகேட்டாலும், உயிரினை விரும்பினும் உவந்துயான் கொடுப்பேன்" என்று உளம பூரித்து இறுமாந்துரைக்க, 'இதுவே சமயம்' என்று மகிழ்ந்து வணங்காமுடியோன் வரவெதிர் கண்டு, சல்லியனைவுடித் தழுவிக் கொளலும், இருவருந் தழுவி இன்பமுற்றனர். பின் சல்லியன் இப் பெரும்வெளியில் இதம்பெற வமைத்த ஒப்பில்லாத் தண்ணீர்ப்பந்தலால யானும் யானையும் சேனையும் யாவரும் பிழைத்தோம், தேவரீர் செய்த சித்திரமியாது? சொல்லும் யான் தருவேன்; சொன்ன சொல் மறக்கேன், மன்னனே" என்று மொழியத் துரியன் அவனைக் காத்தோடு கரமும் கண்ணோடு கண்ணும், சிரத்தோடு சிரமும், சேர வணைத்து, பாண்டவர் தமக்குப் படைத்துணையாக ஆண்டகை சேரல் அறிந்து யான் இங்குப் பந்தல் அமைத்து வழிபார்த்திருந்தேன். எந்தையே! படைத்துணை எனக்காக வேண்டும்" என்று இயம்ப, சல்லியன் மகிழ்ந்து 'கன்று! கன்று!! உமதுப்புரும் நானுண்டோனதலால் இப்பொழுதே படைத்துணைக் கிசைந்தேனஞ்ஞலும பாண்டவரிருக்கும் பதிக்கு யானேகி, மீண்டுவருவேன் இது மெய்" எனச் சொல்லி விடைபெற்றுக்கொண்டு வேந்தனை விடுத்துச் சேனையுடன் சென்றனன்,

இப்பால் தருமராஜனுந் தம்பியர் யாவரும் எதிர் கொண்டு வந்து இறைஞ்சிப்பணிந்து, சகலவுபசார சம்பிரமங்களும் செய்தனர். சல்லியன், அறன் மகன் முதலிய அரசரைநோக்கி, படைத்துணை வந்த பாட்டையுந் துரியன் தருமன்பேரால் தண்ணீர்ப்பந்தல் சமைத்துபசாரம் சகலர்க்கும் உதவியதையுங்கூறி "என்னைப் படைத்துணை யாக்கிக்கொண்டான், மன்னனே! வாக்கு வழங்கியான் வந்தனன். என்மேல் மனமகிழ்ந்து உடனே விடைதாரும்"

என்று விளம்பச் சந்திரவம்சக் குலோத்துங்கனுகிய தருமராசன் சல்லியனைப் பார்த்து, 'ஓஓ!! மாமா! அஷ்டலட்சுமிகள் அடுப்பதானலும், அடுத்த பாக்கியங்கள் விடுப்பதானலும், ஆவியையொருகாற் கொடுப்பதானலும், அயலார் கம்மைக் கெடுப்பதானலும், சத்தியவசனக் தப்பலாகாது; சொன்ன சொற்சோர்வு படலாகாது; அன்னமும் பாலும் அவன் தரப் புசித்து, இன்னமும் ஒருவர்க் கிசையலாகாது; உண்ட வீட்டுக் கிரண்டகஞ்செய்தல், உத்தமர் தமக்கு ஒருகாலுக் தகாது; நீர்சொல்லிவந்த நீதிதப்பாது போவதே உமக்குப் பெரும் புகழாகும்; எங்கட்குச் சத்தியம் என்றைக்குக் துணையாம்; அவர்க்கு நீர் படைத்துணை ஆனீரென்று எமக்கொருகாலும் விசாரம் இலலை; வார்த்தைகொடுத்த வலிமைதப்பாது, பார்த்திபனுக்குப் படைத்துணை போம், போம்; எங்கட்கோர் வரம் ஈதலவேண்டும், அஃதியாதெனில் அர்ச்சுனன் மேல் கொடுங்கோபங் கொண்டு கொலைசெய்வே னென்று, சபதம் புரிந்தனன் கர்ணன். சாரதித் தொழிலில் சல்லியனும் கிருஷ்ணனும், வல்லவரென்று மானிலந் துதிக்கும். அலகிலா நூல்கள் அறிந்த வல்லவரும் இருவரே உவமை இருவரேசமமாம் என்பர். பார்த்த சாரதியாய் பகவான் அமைந்தார். வள்ளல்கண்ணனுக்கு வலவனுக உம்மை அமைப்பான் ஒருவேளோ துரியன்; அப்படிச் செய்யமேற்தால் அர்ச்சுனன் மீது தண்ணருள் வைத்துக்காப்பதுமது கடனும்" என்று தருமன் இயம்பக்கேட்டு, சல்லியன் நகைத்துச் சந்தோஷங் கொண்டு, "அஷ்டபாலரும் அபயமென்றோட, அசுரர் முதலினியார் அனைவரும் வாட, அமரர் கர்தர்வர் அன்புகொண்டாட, அட்டதிக்கிலும், அட்டகிரியிலும அட்டகஜங்கள் அணிநெற்றி தன்னிலும அட்டகண்டகன் சுவேத வாகனனெனப் பட்டமுங்கொடியும பதித்த பற்குனற்குத் துணையாம் முரசத்துவஜனே கேளும், சாரதி வளர்ப்புத் தனயன் தனக்கு நான் தேர்விட மாட்டேன். தெய்வச்செயலால் நேரிடுமாலல் நீர் சொல்லும்வண்ணம் நடப்பது சத்தியம். நம்புமென் சொல்லை; சத்தியசௌசத் தவசுந்தியில் உத்தமராகும் உங்களைச் சூதில் ஜெயித்து வஞ்சித்த சுயோதனன் வாழ்வு, இரவிமுன் பனிபோல் எரிந்துபோகும். கேடுசெய்தோர் கெட்டுப்போவார்; பாடுபட்டோர் பதத்திலிருப்பார்; ஆடவர்திலகமே! அரசுஞ் செல்வமும் பீடும்புகழும் பெறுவீர்; சொன்னேன்; ஆதியிற் சசியை அமரர்கோன் பிரிந்து நீதால் வருந்திச் செல்வமும் பெற்றான். அத்தன்மையைப் போல் அடவியில் நொந்தீர்; விக்தக யுத்தத்தில் வெற்றிபெறுவீர்" என்று சல்லியன் இதம்பெற வுரைத்தான். தருமனும் சல்லியனை நோக்கித் "தேவேந்திரனும் தேவியும் பிரிந்து வருந்திய கதையை வழங்கும்" எனக்கேட்க, மத்திர தேசாதிபதி சொல்லுகின்றார்:-

இந்திரனைப் பிரமஹத்தி தோஷந் தீண்டல்.

கேளும் பாண்டுபுத்திர சிகாமணியே! மூப்பத்து மூக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணூயிரம் ரிஷிகளும், அஷ்டவசுக்களும், கின்னரர்-கிம்புருடர்-கருடர் - கந்தர்வர்-முதலாளவர்களோடு சப்த ரிஷிகளும் கூடிநிறைந்த சபையில், தேவேந்திரன் அணிமுடிப்பணி யுடன் கற்பகமாலையிலங்க, கடவுள் மணி பிரகாசிக்கக் கந்தர் வர் தாங்கும் குடைகவிக்க, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை முதலிய அறுபத்துநான்குகோடி மாதருங் கட்டியங்கூறிக் கைலாகேந்த, அடைக்காய் கொடுக்க படிக்கம்பிடிக்க, ஆலவட்டம் வீச, சாமரைபோட, பிரிக்குஞ்சந்தாங்க, சுருட்டியெடுக்க, ஆலாத்தி சுழற்ற, மங்களம், லாலீ, சங்கீதம் பாட, இங்கிதபரதநாட்டியம் ஆடக் கொலுக் கொண்டிருக்குங் காலையில், தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் கொலுச்சபைக்கு வந்தார். ஸ்திரீகளுடைய மையலால் மயங்கி நாட்டியம் பார்த்திருந்த வஜ்ராயுதன் வந்த குரு வைப்பார்த்து மரியாதைசெய்யாமல் மறந்திருந்தான். குரு சற்று நேரம் நின்று கோபங்கொண்டு திரும்பித் தெய்வலோகத்தைவிட்டு மறைந்து போனார். " பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தா லைப் பொருளும் பேதியாதோ" என்றபடி தேவேந்திரனுக்குச் செல்வமும் கல்வியும் சீரும் சிறப்பும் முககாந்தியும் நாளுக்குநாள் குறைந்து போயின. அதனால் விசனமடைந்து, இது எதனால் விளைந்தது என்று கொந்து,குருவை மரியாதைசெய்யாத குறையென்று உணர்ந்து, இந் திரனுலகும்-சந்திரனுலகும்-இயக்கருலகும்-யக்ஷருலகும்-அளகாபுரி யும்-அமராபதியும்-பூமண்டலமும் - நாகமண்டலமும் தேடிக்காணு மல் தியங்கி மயங்கி, சத்தியலோகத்தைச் சார்ந்து, பிரமனைநோக் கிப் பெருமூச்சுவிட்டு " என் குருசுவாமியார் கோபித்துச் சென் ரூர்" என்று தன்னுல் நடந்த தாழ்ச்சியும் சொல்லி, "நித்திய ஜபம் - ஓமம்-யாகம் - அவிர்ப்பாகம் - இவைகளெல்லாம் நின்று போய்விட்டனவாதலால் எங்குந் தேடிப்பார்த்தேன்; என் குரு வைக் காணேன். இதற்கொருவழி சொல்லும் என்தையே" என்று வணங்கிப் பணிந்தான்.

அப்படிப் பணிந்த வஜ்ராயுதனைப் பிரமன் நோக்கி "அப்பா! ஆசானை இப்படி அவமதிக்கலாகாது. உனது செல்வச் செருக்கினுல் உன்னை மறந்திருந்தாய்" என்று சொல்லித் தம்மனதில் ஒருசூட்சி யை நினைத்து இந்திரனைப் பார்த்து "உனக்கு பிரகஸ்பதிபகவான் கிடைக்கிறவரைக்கும் துவஷ்டாவென்னும் ஒரு பெரியவர் தமது வெகுளி மானசத்தால் பெற்ற பிள்ளையாகிய விஸ்வரூபரென்பவ ரைக் குருவாக அடைந்திரு. சேற்றில் செந்தாமரைபிறந்ததுபோல் அரக்கர் குலத்தில பிறந்த தோஷமே அல்லது வேதம் நான்கும் சாஸ் திரம் ஆறும் கலைக்ஞான மறுபத்து நான்கும் முப்பத்திரண்டு உபநிட தங்களும் மற்ற சித்தாந்தங்களும் ஜபம்-தவம்-ஓமம்-யோகம்-இவை

யெல்லாம் தெரிந்த உத்தமர் அவர். அவரை ஆசாரியராகக்கொண்டு சகலகாரியங்களையும் நடத்திக்கொள்'' என்று சொல்ல, அந்த வார்த்தையை நம்பிப் பணிந்து விடைபெற்றுவந்து மூன்று தலையினையுடைய விஸ்வரூபனைக்கண்டு உபசாரமாகத்தொழுது "எனக்குக் குருவாக இருக்கவேண்டும்'' என்று இந்திரன் வேண்டினன். இராக்ஷசன் தேவ குருவாகிறதற்கு எத்தனை காலந்தவம் பண்ணினாலும் கிட்டாதாகையால், இந்திரன் வந்து அழைக்கவே, தேடியபொருள் காடி வந்ததைப் போல் அவன் சந்தோஷமடைந்து "இதோ வந்தேன்'' என்றுகூறி தெய்வலோகத்திற்குப் போய்ச் சிலகாலிருந்தான். அப்பால் தேவேந்திரன் ஒருயாகஞ் செய்தான். குருவாகிய விசுவரூபன் தங்கள் இனமாகிய இராக்ஷதருக்கு அந்த அவிர்ப்பாகப் பலன் சேர்ந்து திடவீரகாத்திரதையிய பலங்களுண்டாகும் படியாகவும், தேவதைகள் கசித்துப் போகும்படியாகவும் மனதில் நினைத்து, வாய்முணுமுணுப்புடன் மந்திரஞ் சொன்னன். அந்தக கள்ளக் குறிப்பைப்பங் சதமகன் அறிந்து கோபங்கொண்டு 'தன்னினைத் தன்னைக் காக்கும், வேலி பயிரைக்காக்கும்' என்னு மொழி தப்பாது செய்தானல்லவா இந்தச் சண்டாளன்'' என்று நினைந்துகொண்டு வஜ்ராயுதத்தினால் அவன் தலையை வெட்டினன்.

அப்படி வெட்டினமாத்திரத்தில் அவன் பெற்றிருந்தவரத்தின் பலத்தினால் ஒருதலை ஊர்க்குருவியாயிற்று. மற்றொருதலை சிச்சிலிப் பக்ஷியாயிற்று. இன்னொரு தலை காடையாயிற்று. மூன்றும் பறந்தோடிப் போய் விஸ்வரூபனாயிற்று. குருவைக்கொன்ற பிரமஹத்தி வந்து கோபதியைப் பிடித்து வருத்தியது. அதனால் துன்பமடைந்த தேவராஜனைக் கண்டு தேவர்களெல்லாருங் கலங்கிவாடி, பூமியிலிராகின்ற மனல்-தண்ணீர்-மரங்கள்-ஸ்திரீகள் - இவைகளைப் பார்த்து 'இந்திரன் சுமந்த தோஷத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று இரங்கிச் சொல்லக் கேட்டு, 'இந்த நான்கும் தேவராஜனால் சுமக்கக்கூடாத ஹத்தி! அவற்றை நாங்கள் எவ்விதந் தாங்குவோம்' என்று அவைகள் கேட்க, ''பூமியில் உவர்மண்ணுகவும், தண்ணீரில் நுரையாகவும், மரங்களில் பிசினுகவும், ஸ்திரீகளில் மாதவிடாயாகவும் அவை தங்கும்; அவற்றை நீங்கள் சுமந்துகொள்ளவேண்டும்'' என்று தேவர்கோன் வேண்ட, 'நல்லது, அப்படியே அழியாப் பெரும் பழியாகிய பிரமஹத்தி தோஷத்தை நாங்கள்வாங்கிக்கொண்டால் அதனால் எங்களுக்கு என்னலாபம்? எப்படி அந்தப்பழியைத் தீர்த்துக் கொள்வோம்'' என்று அவைகள் கேட்டன. அமரர்கோன் சந்தோஷித்து, பூமியில் வெட்டிய பள்ளம் தானாகத் தூர்த்து போகவும், ஜலம் இறைக்க இறைக்கச் சுரக்கவும், மரங்கள் வெட்டினால் துளிர்க்கவும், ஸ்திரீகள் கருப்பமான பின் பத்து மாதம் வரைக்கும் கணவனைக் கலந்து வாழவும் அநுக்கிரகஞ் செய்தனன். அப்படியே அந்தப்

பிரமஹத்தி தோஷத்தை நான்கு பங்காகப் போக்கி, தேவேந்திரன் இந்திரலோகத்தில் அமரர்களுடன் அரசுபுரிந்து வாழ்ந்திருந்தான்.

அப்போது விசுவரூபன் இறந்த செய்தியைத் துவஷ்டா வாகிய தூயோன் கேள்வியுற்று "கடந்துளோர்களுங் கடப் பரோ மக்கண்மேற் காதல்" என்னும் வாய்மைக்கு நேராக மனம்வருந்தி, புத்திர சோக துக்கத்திலாழ்ந்து, துன்பம் அடைந்து, நமது குமாரனைக் கொன்ற ஆகண்டலனை வென்று பழி தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று ஒரு புத்திர காமேஷ்டியாகஞ் செய்து, மந்திரலோபம் கிரியாலோபம் இல்லா மல் பூரணகுதி கொடுக்குங்காலையில், சிவந்த நெருப்புக் கம்பிகள் போன்ற தலைமயிரும், வடவாமுகாக்கினி வந்து குடியிருக்கும் கண் களும், ஏழுகடலின் ஆழமும் இதுதானென்று அளவுகாட்ட வந்த வாயும், எட்டுக்கிரியின் உயரத்தையும் பருமனையும் தெரிவிக்க வந்த தோள்களும், இருண்ட கருப்பு இதுதான் என்னும் மேனி யும், திண்ணிய யானைத் துதிக்கைகள் போலத் திரண்டுவந்த கால் களும், சூலம், வாள் முதலிய ஆயுதங்களும் சுமந்து, ஒரு மகா புரு ஷன் அந்த யாகாக்கினியிலிருந்து அண்டகடாகம் வரைக்கும் உயர்ந்து வளர்ந்தெழுந்து தன் தந்தைக்குச் சாஷ்டாங்க தண்டஞ் செய்து "என்னை ஏற்படுத்திய காரியம் யாது" என்று கேட்க, அந்த மைந்தனைத் துவஷ்டா நோக்கி, விருத்திராசுரனென்று பேரிட் டழைத்து, "உன் தமையனைக்கொன்ற இந்திரன் முதலிய தேவர் களை விழுங்கி, அந்தத் தேவேந்திரப் பட்டத்தையும் மூவுலகத்தை யும் நீயே ஆளுவாய்" என்று ஆசீர்வசனஞ்செய்து அனுப்பிவைக்க, விருத்திராசுரன் தேவராஜனுக்குச் சத்துருவாகிக் கோபங்கொண்டு இரதமேறி வந்ததை இந்திரன் கேட்டு, தேவப் படைகளுடன் வெள்ளையானையின்மேல் ஆரோகணித்துவந்து விருத்திராசுரனோடு சிற்சில அஸ்திர சஸ்திரங்களைத் தொடுத்துப் போர்புரிந்தான். அவ் வசுரன் தேவப்படைகளைத் திரணமாக எண்ணி இரதம் விட்டிறங்கி, இந்திரனையும் அவன் ஏறிவந்த வெள்ளையானையையும் மற்றச் சேனையையும் வாரி விழுங்கித் திரும்பி வந்தான். அப்போது, அவ் வசுரனுக்குச் சோம்பலும், ஏப்பமும், தும்மலும், இருமலும், கொட் டாவியும் வந்தபடியால் அவன் வாயைத் திறந்தான். அதனால் வெள்ளையானை தேவேந்திரன்தேவர் முதல் யாவரும் பூமியிலே குப் புற விழுந்தார்கள். அப்பால் கக்கின வஸ்துவைக் காறியுமிழ்ந்தவன் போல் விருத்திராசுரன் போய்விட்டான். இவர்களெல்லோருஞ் சாகாமல் சற்றுநேரம் ஆயாசந் தீர்ந்து எழுந்துபார்த்தார்கள். அது எப்படி இருந்ததென்றால், குமாரசுவாமியும் தாருகாசுரனும் யுத் தஞ் செய்கையில் கைலாயத்திலிருந்து வந்த இரண்டாயிரம் தேவ கணங்களையும் பூதகணங்களையும் அவ்வசுரன் வாரிவாரி விழுங்க, அதை ஷண்முகன் கண்டு நகைத்து வயிரக்கணையை விடுத்து

அவன் வயிற்றைக் கிழிக்க, அந்த வயிற்றிலிருந்து சாகாமல் அக் கணங்கள் குதித்து வந்ததுபோல் இருந்தது. அப்பால் இந்திரன் முதல் யாவரும் களைதெளிந்து, 'இந்த அசுரனை வெல்லக் கம்மால் ஆகாது' என்று மேருமலைச் சாரலிற்போய்ச் சேர்ந்து எக்கமுற்று, 'இனிமேல் நமது தேவதத்துவமும் இந்திர தத்துவமும் நடவா' என்று ஒடுங்கி யிருக்குங் காலத்தில், விருத்திராசுரன் தனது புஜபல பாக்கிரமத்தினால் மூன்று லோகமும் தானே அரசுபுரிந்து வந்தான். அதைக்கண்டு மகரிஷிகளெல்லாரும் விருத்திராசுரனிடத்திற்குப் போய் அவனை ஆசீர்வதிக்கவும், அவன் எழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து ஆசனங்கொடுக்கவும், அதன்மேலவர்களிருந்து "ஓ துவஷ்டாவுடைய புத்திர காமேஷ்டியாகத்தி லுதித்த சற்புத்திர தீரனே! ஓ விருத்திராசுரனே! இன்றுமுதல் இந்திரன் முதலிய தேவர்கள் பேரில் யுத்தஞ்செய்யாமல் இருப்பாயானால் உனக்கு மிகுந்த பலமும் சகல கலமும் கைகூடும். யுத்தஞ்செய்ய நினைத்தால அபலமும் சபலமும் உண்டாகி மற்றயாவுங் குறைந்துபோவதுமன்றி நீயும் அழிந்து போகுங் காலமும் நேரிடும். அந்த உளவறிந்து சொல்ல வந்தோம்" என்றனர். இதைக் கேட்டுப் பயந்து, உடனே ரிஷிகளை வணங்கி, 'இனி இந்திரன்பேரில் சண்டைக்கு வருவதில்லை. அவர்களுடைய இராஜ்யத்தை அவர்களே ஆளும்படியாகச் செலவு கொடுத்தேன். நான் கொடுத்த வரம் தப்புவதில்லை. தேவர்களின் திவ்வியாஸ்திர முதலிய ஆயுதங்களினால் நான் சாகாமலிருக்கும்படி தாங்கள் தயவுசெய்து வரம் தரவேண்டும்" என்று கேட்க, அப்படியே வரங்கொடுத்து மகரிஷிகள் விடைபெற்றுக் கொண்டுபோய் இந்திரனை அழைத்துவந்து, எப்போதும்போல் இந்திர லோகத்தில் இருத்திச் சுகம்பெற வாழ்த்தினார்கள்.

இப்படிச் சிலநாள் சென்ற பிற்பாடு நாளுக்கு நாள் விருத்திராசுரன் பலப்பட்டு மகரிஷிகளோடு சொல்லிய வார்த்தையை மறந்து மாறுபட்டு, சகல புவனமும் தானே கைக்கொண்டு ஆண்டு, யாவரையும் மதிக்காமல் எல்லோரையும் வருத்தி, இந்திரன்மேலும் பகைத்து வருவதைக் கண்டு, இந்திரன் மனம் பொறுமல் பிரமாவிடத்திற் சென்று, விசுவரூபனைக் குருவாக்கிக் கொண்டது முதல் இதுவரையிலும் நடந்த சங்கதிகளையும் இப்போது தான்படும் சங்கடங்களையும் விளம்பி வணங்கினன். பிரமதேவர் இந்திரனை அழைத்துக்கொண்டு பாற்கடற் சயனராகிய பரந்தாமனிடத்திற்குப் போய்ப் பணிந்து குறைகளைச் சொல்ல, மகாவிஷ்ணு இந்திரனைப் பார்த்து, "ஓ சுரபதி! சகல பலன்களையும் சகல வரங்களையும் உடைய விருத்திராசுரனைக் கொல்வதற்கு உன் கையிலிருக்கும் வஜ்ராயுதத்தினால் ஆகாது. அது மிகவும் பழையது; சத்துருக்களின் பிராணனை வாங்கமாட்டாது. மற்ற எந்த ஆயுதத்

தினலும் அவன் மாளான். இனி வேறொரு வஜ்ராயுதம்வேண்டும்' என்று விளம்பி, புதிதாகிய அந்த வஜ்ராயுதத்தை அடைவதற்கு ஒரு யுக்தி சொல்லுகிறேம்-கேளும்—இந்திரனே! முன்னே யாம் பாற்கடல் கடையும்போது அமரர் அசுரர் யாவரும் கொண்டுவந்த ஆயுதத் தொகுதிகளைக் கண்டு கலகம் விளையும் என்று கருதி அவைகளைத் ததீசி மகாமுனிவர் வசத்தில் ஒப்புவித்து வரும்படியாகச் சொன்னேம். அப்படியே வைத்துவந்து யாவரும் அமுதங் கடைந்தார்கள். அசுரர்களுக்கு அமுதம் அகப்படாமையால் வருந்திக் கோபங்கொண்டு ஆயுதங்களை மறந்துபோய் விட்டார்கள். தேவர்கள் அமுதம் புசித்த சந்தோஷத்தினல் அவைகளை மறந்துபோய் விட்டார்கள். அந்த ஆயுதங்களை யெல்லாம் வெகுகாலம் வைத்துக் காப்பாற்றிய ததீசி மகாமுனிவரானவர் ஒவ்வொன்றாய் எடுத்து விழுங்கிவிட்டார். அவைகளெல்லாம் அவருடைய முதுகெலும்பைப் பற்றித் திரண்டு இருக்கின்றன. அந்த முனிவரானவர் 'அன்பிலா ரெல்லாந் தமக்குரியர் அன்புடையார் - என்பும் உரியர் பிறர்க்கு' என்பதுபோல லோகோபகாரியாகையால், அவரிடத்தில் நீர் போய்க் கேட்டால் அவர் அவைகளைக் கொடுப்பார். அந்த எலும்பை வாங்கி வஜ்ராயுதம் பண்ணிக்கொண்டு விருத்திராசுரனைச் சமுத்திரக் கரையோரத்தில் வரும் இரண்டாம வேளையில் எதிர்த்து, அவ்வாயுதத்தை விடுப்பாயானல், அவன் இறப்பான்" என்று சொல்லக் கேட்டு, இந்திரன் அடிவணங்கிப் பணிந்து விடை பெற்றுக்கொண்டு, சென்று ததீசி மகாமுனிவரைக் கண்டு வணங்கி, 'எங்களையாண்டு இரக்ஷிக்கவேண்டும்" என்று தன் குறையைச் சொல்லி, இருகரத்தையும் கீட்டிக்கொண்டு இரந்தான். அந்த மகாமுனிவர் தேவேந்திரனை நோக்கி 'நாய் நமதென நரி நமதெனப் பிதா-தாய் நமதென நமன்றன தெனப் பிணி-பேய் நம தென மதிக்கும் பெற்றிபோல்-ஆய் நமதெனப்படும் யாக்கையாரதே' என்று சொல்லி, "நிலையில்லாத இந்த யாக்கை பலருக்கும் உபயோகப்படும்பொருட்டு அழிவதே உத்தமம்" என்று யோகத்திலிருந்து ஆன்மாவைப் பிரிக்கவும், உடனே தேவதுந்துபி முழக்கத்துடன் சுயம்பிரகாசச் சோதி வானுலகத்திற் கலக்கவும், இந்திரன் அந்த மகாமுனிவருடைய முதுகெலும்பை எடுத்து விசுவப் பிரமனிடத்திற் கொடுக்க, அதை அவன் வஜ்ராயுதமாகச் செய்து தந்தனன். இந்திரன் அதைப் பெற்றுக்கொண்டு வைகுந்தநாதன் சொல்லிய காலம் வருகிற வரையில் காத்திருந்து, ஒருநாள் விருத்திராசுரன் சமுத்திரக்கரை யோரத்தில் வரக்கண்டு, அமரர்களுடன் வெள்ளை வாரணமேறிவந்து அவனை எதிர்த்து, அவனுடன் யுத்தஞ் செய்து புதிதாகிய வஜ்ராயுதத்தைப் பிரயோகஞ்செய்ய, அதற்கு விருத்திரன் ஈடுபடாமல் இளைத்து ஓடி மிகவும் வாடி ஆழியில் மூழ்கி மறைந்தான் வஜ்ராயுதமும் கூடவே தொடர்ந்து

தேடிக் காணுமல் காணித் தியங்கியது. அதைக் கண்டு தேவர் கோன் மனம் வாடி மண்பொதுத் தந்தையினிடஞ் சென்று வாரிதியில் அசுரன் மறைந்துபோனதைச் சொல்ல, அதை மலரோன் கேட்டுவாசவனே நோக்கி "அதனை யேன் நீ ஸ்ரீமந்நாராயண மந்திரத்தோடு பிரயோகிக்க வில்லை" என்று கோபித்து "நல்லது, முக்குணமும் முத்தொழிலும் முப்பொருளுமாகியமூல காரணனென்னும் முதற்பொருளுக்கு அடிமையாகிய அகஸ்தியரைக் கண்டு வணங்கினால், உமது காரியங்களெல்லாம் அநுகூலமாகும்" என்று விளம்ப, இந்திரன் அக்கணமே அகஸ்தியரிடஞ் சென்று வணங்கி அடிபணிந்து நிற்க, அவர் ஆசீர்வதித்து, "ஓ தேவேந்திர மகாராஜனே! நீர் இவ்வளவு தூரம் வந்த காரணம் யாது?" என்று கேட்க, ஆழியில் விருத்திராசுரன் மறைந்து போனான். தேவர்கள் முதலிய யாவரும் யானும் மிகவும் வருத்த முறுகின்றோம். அந்த அசுரனைக் காண்பிக்க வேண்டுமே கருணைக்கடலே" என்று தொழவும், முனிவர் நன்றென்று இசைந்து கைலையங்கிரியில் எழுந்தருளிய கடவுளையும் அவரால் விளைந்த திரிபுர தகனஞ்கினி மன்மத தகனஞ்கினி, வடவாமுகாக்கினி இவைகளையும் மனதில் நிறுத்தி,கண்ணுதல் அருளினால் கடலைக் கடுகளவாகக் கரத்தினில் ஏந்தி உட்கொண்டருளினார். அக் காலத்தில் சமுத்திரம் நீர் வறண்டு அதனடிவிலுள்ள ஒரு மலைச் சிகரத்தில் விருத்திராசுரனிருந்து கண்களை மூடிக்கொண்டு யோகத்திலிருக்கக் கண்ட வஜ்ராயுதம் அவனை மாய்த்தது. தேவர்கள் பாரிஜாத மலர்மாரி தூற்ற, மாயவனை வாழ்த்தி வந்த தேவேந்திரனை விண்ணுல குள்ளோர் மண்ணுல குள்ளோர் எல்லாரும் வாழ்த்தித் துதித்தனர். அக்காலத்தில் அவனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்தது. அதனால் அவன் அழகு முதலிய செல்வமும் இழந்து, நிதியையும் பதியையும் நீங்கி, தபோபலன்களும் வரப்பிரசாதங்களுங் குறைந்து, மனத்தில் பயங்கொண்டு தன்னை அடைந்த பிரம்மஹத்தியை நோக்கமாட்டாமல், ஓட்டமெடுத்து ஈசானிய திசையிலிருக்கும் நிர்மானிட மென்னும் மலையிற் சேர்ந்து மிகுந்த துக்கத்துடன் இருந்தான். தெய்வலோகத்திற்கு அரசனில்லாமல் ரிஷிகளும் தேவர்கள் யாவரும் வருந்தி இந்திரனைக் கண்டு, "எங்களை விட்டுப் பிரிந்திருக்க எப்படி மனங்கொண்டீர்? 'அரசில்லா நாடு காடென்பது' அறிந்ததில்லையா? ஐயனே! வாரும் அரசு புரியும். அடியேங்களையாளும்" என்று அழைக்க, அந்த வார்த்தைக்கு அவன் உத்தரஞ் சொல்லாமல் ஊமைபோலிருந்து பிரம்மஹத்தியைக் கண்டு மிகவும் நடுக்க முற்றிருக்க, இந்திரனை அழைக்க வந்த ரிஷிகள் முதல் தேவர்களெல்லோரும் "ஏதிது! இனி நமக்கு இவர் உதவ மாட்டார்" என்று ஆலோசித்து, ஆவைப் பிரிந்த கன்றுபோலவும், காயைப் பிரிந்த சேயைப் போலவும், மழையைப் பிரிந்த பயி

ரைப் போலவும், உயிரைப் பிரிந்த உடலைப் போலவும் துக்க மடைந்து, 'பட்டமில்லாத அரசு பாழென் றுணர்ந்து, "கேளும் தரும பூபதியே! உங்கள் பாட்டனாகிய ஆயுமகாராஜாவின் புத்திரன் நகுஷ மகாராஜன் நூறு அசுவமேத யாகஞ் செய்து இந்திரபட்டத்துக்கு எதிர்பார்த்திருந்தார். அவரிடத்திற்கு தேவர் கள் முதலிய பேர்களெல்லோரும் வந்து உபசரித்து அவரை தேவ ராஜனாக இருக்கவேண்டு மென்றும் எங்களுடைய தபோபலன்களீ யெல்லாம் உமக்குக் கொடுத்தோமென்றும் வாக்குதத்தஞ் செய்து பிரார்த்தித்து அழைத்துவந்து, சகல நலமும் செல்வமும் அழகும் உண்டாகச் சிங்காதனத்தில் ஏற்றி, தேவக்கிரிட பட்டாபிஷேகமும் செய்துவைக்க, முப்பத்துமுக்கோடி தேவர்களும் காற்பத்தெண் ணூ யிரம் ரிஷிகளும் அமரர்-சித்தர் அசுரர்-தைத்தியர் - கருடர்-கின்ன ரர்-நிருதர் - கிம்புருடர் - கந்தர்வர் - இயக்கர் - விஞ்சையர் - பூதர்- பைசாசர் - அந்தரர் - உரகர் - முனிவர்-ஆகாயவாசிகள்-போக பூமி யோர் இவர்களெல்லோரும் வணங்க, அரம்பாஸ்திரீகள் யாவரும் பரத நாட்டியஞ்செய்ய, கற்பகப் பூங்காவனத்திலுறைந்து நகுஷன் அரசு செலுத்திவரும்காளில் பழைய தேவேந்திரனைப் பிரிந்திருக் கும் இந்திராணி, தன்னுயகன் செல்வமிழந்த தன்மையை நோக்கி துக்க மடைந்து, அசோகம் மாதர் கூட்டங்களுடன் வனங் களில் உலவி மயில்போல வருஞ் சாயலை நகுஷன் கண்டு "மோகத் திற்கோர் முடிவுமுண்டாங்கொலோ," என்பதுதோன்ற, இராவணன் அழியுங்காலம் சீதையை நாடினதுபோல், அவள்மீது ஆசை கொண்டு சந்திரனைக் கண்ட பேர்கள் தாரகைகளை நோக்காத தன்மைபோல மற்ற ஸ்திரீகளின் பேரிலிருக்கும் ஆசையை விடு த்து, தேவதூதரை நோக்கி "இந்திராணியை அழைத்து வாருங்கள்" என்று அனுப்பினன். இவர்கள் போய், புலோமிசையைப் பார்த்து வணங்கி, இந்திரன் அழைத்துவரச் சொன்னானென்று சொல்லக் கேட்டு அவள் தேவகுருவினிடத்திற் சென்று திருவடி மலரைப் பணிந்து, "ஐயா! என்னுயகன் உயிருடனிருக்க, இப்போது வந்த இந்திரன் என்னை விரும்பி அழைக்கின்றதாக இவர்கள் சொல்லுகின் றார்களே, இதற்கெப்படி" என்று கண்ணீருதிர்க்க, குருவானவர் "உன் கற்புக்குப் பழுது வராமல் காக்கிறேன். நீர் கண் கலங்க வேண்டாம், அம்மா" என்று தைரியஞ்சொல்லி, தூதரை நோக்கி, "நகுஷமகாராஜன் மிகவும் புத்திசாலி; ஆகையால் இந்திராணி யை அழைப்பது ராஜநீதியல்ல என்று நான் சொன்னதாகச் சொல் லுங்கள்" என்று சொல்லியனுபவும், அதைக் கேட்ட நகுஷன் மிகக் கோபங்கொண்டு "கூடாது. கைப்பிடியாகக் கொண்டுவர வேண்டியது" என்று தூதரை மீட்டு மனுப்பவும் இந்திராணி பார்த்து "மூடனோடு எதிர்க்கலாகாது. இதவசனத்திலுல் ஜயிப்பதே யுக்தி யானதால் ஐயா! எனக்கு விடைகொடும் நான்போய் வார்த்தை

பேசி நகுஷனை மகிழ்ச்செய்து வருகிறேன்"; என்று பிரகஸ்பதியினிடத்தில் செலவு பெற்றுக்கொண்டு அரம்பாஸ்திரீகளுடன் கூடி அரண்மனையை காடி, வேங்கைப்புலிக்கு எதிரிற் செல்லும் பெண்மானைப் போல வெருண்டு மருண்டு, நகுஷன் சபைக்குப் போனாள். இந்திராணியை என்றைக்குக் காண்பேனென்று இரவும் பகலும் ஏக்கங்கொண்டிருந்த அவன் அவளைக் கண்டதும், கல்லாதான் கற்ற கல்விபோலும், காணுதான் கண்ட செல்வம் போலும் கண்டு, சகல சாம்பிராச்சியம் பெற்றவனைப் போலாகிக் குறுகைகொண்டு, தேவர்கள் முகத்தைப் பார்க்க, அமரர்களெல்லாரும் "சுவாமி பராக்! தங்களிஷ்டப்படி சசிதேவி வந்து விட்டாள்" ளென்று சாற்ற, இந்திராணி அவன் சமீபத்தில் வந்துநின்று 'என்னுயகன் உயிருடனிருக்க என்னை அழைப்பது தருமமா? நீர் பெருமையடைந்த தேவபட்டம் பெற்றும் சிறுமையிற் சிந்தை செலுத்தப் போகுமா? இன்னமும் நன்னீதியுடன் நடப்பீராஞல் அளவிறந்த கீர்த்தியைப் பெறுவீர். தகாத போகத்தை விருமபிச் சுகாதியோகத்தை அகோகம் பேர் இழந்து தாழ்ந்து அழிந்துபோன தன்மையைக் கேட்டறியீரா? நற் குலத்தில் பிறந்தும், நற்றவங்களிழைத்தும், அற்பத்திற்கு ஆசைப்பட்டு ஆயுள் மாய்ப்பரோ? ஆயுவின் தவத்திலுதித்த அரசே! மகளும்! மலைகளின் சிறகை யரிந்த வஜ்ரபாணியானவர் விருத்திராசுரனென்னும் விரசோனைக் கொன்றார். அதனல் பிரம்மஹத்தி தோஷம் பிடித்தது. அதைத் தவிர்த்துக்கொள்ளத் தவம்பண்ணப் போயிருக்கிறார். அந்த இந்திரன் பழிதீர்த்துக்கொண்டு இவ்விடத்திற்கு வாராதிருப்பாராஞல் எங்களை யெல்லாங் காத்து இரக்ஷிக்குங் கடமை உமக்கே யல்லாது மற்றபாருக்கு உண்டாயிருக்கும். அப்படியிருக்க, உமக்கு நான் புறமபல்லவே? என்னை இந்தச் சபையில் அழைத்தது விவகாரமா? தருமமா?" என்று இந்திராணி சொல்லிய இனிய நய வசனங்களைக் கேட்டு நகுஷன் உடம்பு அடங்கா மகிழ்ச்சி கொண்டு, "ஓ பொன்னுலகிற் சிறந்த புலோமிசையே! பழைய இந்திரன் பிழைத்து வருவதும் வராமற்போவதுந் தெரிந்து கொள்ள வேண்டுமென்று உம் முடைய உள்ளம் விரும்பி இருப்பதினல், அவைகளை விசாரித்துக் கொண்டு என்பேரில் கருணைகூர்ந்து என்றைக்கு வரும்படியாக உத்திரவு செய்கின்றீரோ, அன்றைக்கு உம்மிடம் கூட வருகிறேன்" என்று சகல உபசாரமுஞ் சொல்லி மரியாதை செய்து செலவு கொடுத்தான். இந்திராணி செலவு பெற்றுக்கொண்டு இராகுவினல் விடுபட்ட சந்திரனைப்போல் சபையைவிட்டுத் திரும்பி அரம்பாஸ்திரீகளின் கூட்டத்துடன் பிரகஸ்பதி பகவானிடத்தில் வந்து வணங்கித் தான் போனதும் வசனித்ததும், அவன் சந்தோஷப்பட்டதுஞ் சொல்லி, குருவினுடைய ஆசீர்வசனமும்பெற்று, தன்

புருஷனை நீங்கி யிருக்கும் ஆறுத்துயரத்தினால் கிடதகிரிக்குப் போய் தேவேந்திரனைக் கண்டு தீர்க்க தெண்டஞ்செய்து, "தேவர் கைக் கொண்ட பாக்கிய மெல்லாம் கருஷன் கைக்கொண்டு ஆளுகின்றான்' என்றுகூறி, அவனால் தனக்குவந்த விபத்துக்க ளெல்லாந் தெரியப் படித்தி விசனப்பட்டாள். அப்போது இந்திரன் இந்திராணியை நோக்கி, "செல்வமும் சிறப்பும் அனுபவிக்க வொட்டாமல் உன்னை யும் என்னையும் பிரித்துவிட்டது பிரமஹத்திதோஷமே யன்றி வேறல்ல. அந்தத் தோஷம் ஏதோ என்னைப் பிரியாதிருக்கின்றது. இன்னும் கொஞ்சகாள் மனம் பொருப்பாயானால், நான் தெய்வ லோகம் வந்து சேருகின்றேன். நீ போ" என்று சசிதேவியை அனு ப்பி விட்டு 'தீனதயாளுவே! என்குறை யகற்றுங் கோவே! தீவினை யகற்றுந் தெய்வமே! கோவிந்தா! கோவிந்தா!' என்று கூவிக்கொண்டு வைகுந்தமா நகரஞ் சேர்ந்து, அனந்த சயனஞ்சிய ஆதிபகவானு டைய அடியிணை மலரைத் தொழுது, உலக அபகாரியாகிய விருத்தி ரனைக்கொன்று, பூலோகத்திற்கும் பொன்னுலகத்திற்கும் உபகாரஞ் செய்த உமது அடிமையாகிய எனக்கு இந்த பிரமஹத்தி நீங்கா திருக்கவும், என் செல்வம், என் பத்தினி, முதலிய அரசுயாவும் இன்னொருவன் கைக்கொள்ளவும், நான் ஒன்றியாய் தரித்திரம் அடைந்திடவும் நேரிட்டதே. தேவரீர் கடாக்ஷம் இப்படி யிருந் தால் நான் செய்வதென்ன" என்று நின்று சிந்தித்து வந்திக்குங் காலையில், தேவதேவன் திருவாய்மலர்ந்து, "மேகவாகனா! உன்னை வருத்தும் பிரமஹத்திதோஷம் நீங்குவதற்கு இந்திராணி சமேத மாக இருந்து அயமேதமென்னும் ஒரு யாகஞ் செய்வாயானால், தோஷமும் நீங்கி வாழ்வும் பெறுவாய்" என்று மகாவிஷ்ணு அருள் செய்தார். இந்திரன் அப்படியே சில தேவர்களுக்கும் ரிஷிகளுக்குந் தெரிவித்து, இமாத்பர்வதச் சாரலில் இந்திராணியுடனிருந்து அந்த யாகத்தை முடித்தான். அதனாலே அவன் பாபரகிதனாகி பயந் தீர்ந்து சகல தேவர்களுடனேயும் தெய்வலோகம் போய்ச் சேர்ந் தான். பின்பும், முன்போல் சம்பத்தும் அழகும் பலமும் இந்திர பதமும் கூடிவரவில்லை. பிரமஹத்தி பிடித்த முகமென்று சொல் லும்படியா யிருப்பதினால் கருஷனுடைய சுந்தரத் தன்மைக்கு இவன் ஈடுபடாமற் போனான். இதனால் மனவிசாரம் பிடித்து, வெகு துக்கமடைந்து ஒருவருக்குந் தெரியாமல் ஈசான திசையிலிருக்கும் ஒரு தடாகத்தில் ஒரு தாமரை நாளத்தினுட் புகுந்து தபசு செய்ய லானான். அப்படி இருக்கும் காளில் தேவேந்திரன் இறந்துபோ னென்றும், இந்திராணி முதலிய போகங்களையும் துறந்துபோ னென்றும், வெகு காளாய்ச் சுமந்த ஸ்தூல தேகத்தை மறந்து போனென்றும், கண்களிற் காணுமல் பறந்துபோ னென்றும், பற்பல விதமாக யாவரும் பேசிக்கொள்ளலானார்கள். இதை இந்திராணி தேவி கேட்டு மனந் திடுக்கிட்டு, வாயுலர்ந்து, விசனமென்

னும் வாரிதியிலாழ்ந்து, கலேவாணியின் இணேயடி போற்றி விரதம் இழைக்க, அந்தத் தேவி ஒரு ஸ்திரீ ரூபமாய் எதிரில் நின்று, "சுரேந்திரன் மனேவியே கேளும்! உன்னுயகன் பிரம்மஹத்தியின் பீடிதத்தினுல் பெருமையும் புகழும் பிரகாசமும் குறைந்து எவர்களுக்குத் தெரியாத ஈசானமூலேயில் இருக்கும் ஒரு பொய்கையுள் கிறைந்த தாமரை நாளமத்தியில் அணுரூபமாய்த் தவசு செய்கிறன். நீ படும் விசனத்தினுல் இரக்கமுற்று வந்து சொன்னேன். என் பின் வருவாயானுல் இப்போதே காண்பிப்பேன்" என்றுரைத்தாள். அதைக் கேட்டு மனங்குளிர்ந்த இந்திராணி "அம்மணி! இதோ வருகிறேன்" என்று தொடரவும், இந்திராணியை யழைத்துக்கொண்டு போய் அந்தப் பொய்கையில் மலர்ந்திருக்கும் தாமரைத் தண்டின் மத்தியில் உண்டாகிய சிறிய துவாரத்தில் புகை ரூபமாகப் புகுந்துபோய்த் தேவேந்திரனேக் காட்டி அந்தத் தேவி மறைந்து போனுள். இந்திராணி இந்திரனுடைய கால்மேல் விழுந்து கதறியழுது விசனப்படவும் அவன் ஆச்சரியமுற்று, "நானிருந்த இந்த ஸ்தானத்தை நீ எப்படி யறிந்துவந்தாய்? உனக்கு எவர் தெரிவித்தவர்" என்று வினவ, தேவரீர் இறந்துபோனதாகவும் துறந்துபோனதாகவும், வெகு ஜனங்கள் பற்பலவாறுகப் பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு மனந்தளராமல் கலேவாணியைக் கருதி விரதம் இழைக்க, அந்த அம்மன் அழைத்து வந்து காட்டி எனது துன்பத்தை நீக்கிச் சென்றுள். நான் இன்புற்று இவ்விடம் வந்தேன்" என, அதைக் கேட்டு மகிழ்ந்த நாயகனை அவள் மீண்டும் பார்த்து 'இந்திர பட்டாபிஷேகத்தை விட்டு ஏன் வந்து விட்டீர்?" என்று கேட்கச் சசிநாதன் சொல்லுகின்றுன்:-

"நாமிருவருங் கூடிச் செய்த அயமேதயாகத்தினுல் விருத்திராசுரனேக் கொன்ற பிரம்மஹத்தி தோஷம் நீங்கியதென்ற பேர் மாத்திரமே யொழிய, மயக்கமும் தியக்கமும் மனதறு கடுக்கமும் என்னை விட்டு நீங்கவில்லே. அரசும் - வாழ்வும் - அழகும் - பலமும் - ரிஷிகளுந் தேவர்களுங் கொடுத்த தபோபலமும் - நகுஷனைச் சேர்ந்து அவன் அரசு புரிகின்றுன். அவைகள் யாவும் என்னிடத்திற்கு வருமானுல் அப்போது நான் தேவேந்திரனுவேன். இல்லாவிட்டால் என்கதி இவ்வளவு தான்" என்று சொல்ல, "அவைகள் தேவரீருக்குக் கிடைக்கும் படியாகிய உபாயஞ் சொல்லும். நான் அப்படியே முடிக்கிறேன்" என்று இந்திராணி விளம்பக் கேட்டு, 'நல்லது, பெண்ணுய கமே! உன் பேரில இச்சைகொண்டு தூது அனுப்பினுனென்று மூன் சொல்லியிருக்கின்றுயே. அதை யனுசரித்து, சப்தரிஷிகள் தாங்கும் இந்திரவிமானப் பல்லக்கில் நகுஷன் ஏறிவரப் பண்ணினுல் அவனுடைய தபோபலமெல்லாங் குறையும். அவை என்னிடத்தில் வந்து நிறையும். இது உன்னுல் வரவேண்டிய செல்வம்"

என்று உரைத்து விடைகொடுத்து, எப்போதும் போல் தவஞ்செய் திருந்தான். இப்பால் இந்திராணி செலவு பெற்றுக்கொண்டு தெய்வ லோகம் போய்ச்சேர்ந்து தானே வலுவில் தூதர்களை யனுப்பி, "இந் திராணி உமக்கு ஞாபகஞ் செய்யச் சொன்னாள்' என்று சொல்லவே 'நான் பிழைத்தேன், பிழைத்தேன்' எனச் சந்தோஷித்து, 'மறவாமல் இவ்வளவு தயவு வைத்திருந்தது எனது பாக்கியமே. இதுவும் எனது நற்காலமே' என்று மகிழ்ந்தான். இச்செய்தியைத் தெரிந்துகொண்ட இந்திராணி ரகுஷன் எதிரிற்போய் நின்று, இன்பமொழியும்-நல்லொ ழுக்கமும் - நன்னீதியும் - நற்கீர்த்தியும்-பரிசுத்த வாய்மையும்-அழ கும் உடையவர் தங்களைப்போல் எங்குமில்லையென்று இப்போதறிந் தேன். நீர் அன்றழைத்தபோதே எனக்கு இச்சை யுண்டு. ஆனால் ஸ்திரீ ஜனங்களாகப் பிறந்த பேர்களுக்கு லஜ்ஜையுண்டு. அவர்கள் தங்களுக்கு எப்படிப்பட்ட மோக மிருந்தாலும் புருஷரிடத்தில் அதை வாய்விட்டு விள்ளார்கள். இவ்வுலகத்தில் எனக்குப் பணிப் பெண்ணாகிய பேர்களெல்லாரும் இன்ப சுகத்தை அநுபவிக்கும் போது, நானொருத்தி தானே துன்பத்தை அநுபவிப்பது. உம்மை வெறுக்க வேண்டியதில்லை. தானே வருஞ் சமீபமில்லை தானே காலா லுதைத்துத் தள்ளிவிட்டுப் போய்விட்டேன்; இந்திரன் வந்து விடு வானென்று எண்ணிப் பார்த்தேன். இதுவரையிலும் வரக்காணேன்; ஆகிலும் இன்னங் கொஞ்சகாலம் பார்க்கவேண்டும். அது வரையி லும் என்னுயகன் சப்தரிஷிகள் சுமக்கும் பல்லக்கிலேறிப் பவனி வரும் வழக்கப்படியே, நீரும் அந்தத் தேவ விமானத்திலேறிப் பவனி வரும்படியாகவும், நான் இதை என் கண்களால் நோக்கவும் விருப்ப முற்றிருக்கிறேன்" என்று கபடமாகச் சொல்ல, அம்மொழியானது ரகுஷனுடைய காதுகளில் தேவாமிர்தம் வார்ப்பொழிந்த தன்மை யைப்போல் இருக்க, அவன் ஆனந்தித்து, "இன்னுஞ் சில நாட்களில் நான் அப்படியே வருவேன் உமது அரண்மனைக்கு. இப்போது நீர் போம்" என்று இந்திராணியை அனுப்பிவிட்டு, மிகுந்த சந்தோஷத் துடன் புன்னகைகொண்டு சப்தரிஷிகளையும் வரவழைத்து, "யான் இந்திரலோகச் சிறப்பையும் அரண்மனை வீதிகளையும் பார்க்க வேண்டியிருப்பதால், நீங்கள் தாங்கப்பட்ட பல்லக்கு கொண்டு வாருங்கள்" என்று உத்தரவு செய்ய, அவர்கள் அப்படியே கொண்டு வந்து வைத்தார்கள். அந்தத் தேவயானத்தில் அவன் தானே ஏறிக் கொண்டான். அவன் கட்டளைப்படி சப்தரிஷிகள் அப்பல்லக்கைச் சுமந்துகொண்டு சிங்காரவீதி-தேவர்கள்வீதி-மண்டபவீதி-மலர்வாவி வீதி-தேவஸ்தலவீதி - சித்திரவீதி - கோபுரவீதி - அரம்பையர்வீதி-ஆவணவீதி-தேதோடும்வீதி-திரவியவீதி - போகமாநகரம்-புண்ணிய மாதவநகரம் - மடாலயநகரம் - வீரமாநகரம்-வெற்றிமாநகரம்-காம தேனுச்சாலை-கற்பகச்சோலை-வெள்ளை யானைச்சாலை - வெண்பரிச் சாலை-ஆயுதச்சாலை-அறஞ் செயுஞ்சாலை - இந்திராணி அரண்மனை

முதலிய இடங்களுக்குச் சென்றார்கள். அப்படி செல்கையில் நகுஷனுக்குத் தேஜோபலம் - ஊக்கம் - தைரியம் - அழகு - இவைகளெல்லாம் நாளுக்கு நாள் நசித்துப்போயின. பழைய இந்திரன் செய்யும் தவத்தினால் சகல பலமும் கலமும் அவனுக்கு விர்த்தியாயின.

இப்படி நடந்துவரும் நாளில் ஒருநாள், அகஸ்தியமுனிவர் நகுஷனை நோக்கிவர, அவன் உடனே எழுந்து சாஷ்டாங்க தண்டஞ்செய்து, அர்க்யபாத்திய ஆசமனீய சந்தனகுஷ்தை தாம்பூல தூபதீப உபசாரங்களும் புரிந்து, உயர்ந்த ஆசனத்தில் அவரை எழுந்தருளச் செய்து அவருடைய ஆசீர்வசனமும் பெற்றான். தனது அரியாசனத்திலிருந்து க்ஷத்திரியர் அறியக்கூடாத வேத ரகசிய மந்திரங்கள் சிலவற்றைப் பொருளுதவியினால் பிராமணரிடத்தில் கற்றுக் கொண்டு கர்வம் அடைந்திருந்த அந்நகுஷனவன், அகஸ்தியரை இன்னாரென்று அறிந்தும் மறந்து, எவர்களும் கேட்கும்படியாக அந்த மந்திரத்தைச் சொல்லி "இதற்குப் பொருளுரையும் குருமுனியே" என்று வினவ, அவருக்குக் கோபம் வந்து, குலுங்க நகைத்து, "உணரக் கூடாத பரம ரகசிய மந்திரத்தை நீ தெரிந்துகொண்டதல்லாமலும், பஞ்சையாகிய நீ என்னைப் பயன் சொல்லச் சொல்லிப் பயமில்லாமலும் கேட்கத் தகுமா" என்று உறுத்துப் பார்த்தனர். அப்போது நகுஷன் "ஆத்மார்த்தமாக யாவர்களும் மோக்ஷம் அடைவதற்கே விதிக்கிருக்கும் மந்திரத்தை நான் கேட்கவும் கற்கவும் கூடாதென்று கற்றுணர்ந்த நீர் ஞானமில்லாமற் கழறிய மொழிக்குக் கலகலவென்று நகைப்பதே யன்றி வேறொன்றையும் காணேன்" என்று நிந்தித்து, (சர்ப்ப சர்ப்ப) "சீக்கிரம் இவ்விடம் விட்டுப்போ" என்று கொடியராகப் பாம்புபோற் சீற, தடங்கடல் அடங்கலும் குடங்கையி லொடுங்க அருந்திய அகஸ்தியர், வடவைக்கனல் போன்ற விஷங்களைக் கக்கும் அஷ்டமா நாகத்தினும் மேற்படச் சீறி, "அடா பிரஷ்டா! முதியோ ரென்று மதியாமல் முழுமையும் அவமானம் வரப் பேசினாய். தேவயானத்தைச் சப்த முனிவர்களுந் தாங்க ஏறி நடத்தினாய். அன்னத்தின் நடைபோல் நடந்த காக்கை தன்னடையுங் கெட்டு வருந்திய தன்மையை அறியாயா? சின்னத் தனமுடைய உனக்குப் பெரியதனம் பொறுக்குமா? குரங்கின் கைப் பூமாலையைப்போல் பெரியோர்களின் மனங் குறையச் செய்தனையே! நிறையாத் தவஞ்செய்த நிஷ்டூரா" என்று உடனே எழுந்து, தமது இடக்காலினால் அவன் நெற்றியிலுதைத்து, ஆறாக்கோபத்துடன் மறுபடியும் பார்த்து "அறிவில்லாத அற்பரானவர்க்குச் செல்வமல்லது பகைவேறில்லை என்பது தேறான்ற, இனி நீ அடர்ந்த ஆரண்ய மலைச் சாரலில் உன் வாக்கில் வந்த சர்ப்பமென்னு மொழி தப்பாமல், ஒப்பில்லாத மலைப்பாம்பாய் விழுக்கடவாய்!" என்று சபித்தார். உடனே

தேவர்கள் முதலிய யாவரும் பயந்து நடுங்கும் காலையில், புதிய தேவேந்திரன் நிலத்திற் புரண்டெழுந்து, தனது உரமும், கரமும், சிரமும், திறமும், பதறி நடுங்க, விரைந்து ஓடி வந்து, பொதிகை முனியின் திருவடியைத் தனது பூமுடியிற் சூட்டிக் கொண்டு, "அடியேன் தெரியாமல் அஞ்ஞானத்திலும் வினைச் செயலாலும் வருந்தி வந்த செல்வங்களை விரித்து மலைப்பாம்பாகச் சாபம் பெற்றேன். எனக்கு நேரிட்ட அரிதாகிய இச் சாபம் விமோசனமாகும் காலம் அருள் செய்யவேண்டும். விந்தகிரியின் கர்வம் அடக்கிய விமலனே!" என்று இருகரங்களையும் கீட்டி இரக்கவும், 'எள்ளார் அறிவுடையார்' என்பதையும், 'சிறுமை கண்டவர் பெருமை கண்டல்லது தேறார்' என்பதையும் கும்பசம்பவர் நினைத்து மனம் இரங்கி, தமது தாளிற் றலைமுடிசூட்டிய நகுஷனை நோக்கி, "கானகத்திலிருக்கும் கரடி-புலி-சிங்கம்-யானை முதலாகிய மிகுந்த பலத்தினையுடைய ஜெந்துக்கள் உனக்குண்டாகும் அரிதாகிய பசிக்கு எளிதாகிய உணவாகக் கடவன" என்று இயம்பி, "இப்படி நீ மலைப்பாம்பாக வாழ்ந்திருக்கும் காலத்தில் திங்கள் குலமாகிய உங்கள் குலத்தில் உதிக்கும் தங்கம்போன்ற தருமராஜன், ஒரு காரணத்தினால வனத்தில் வந்து உன்னைப் பார்த்து வசனிக்கும் போது, நெருங்கிய சாபம் நீங்கி நீ சுவர்க்கம் அடையக் கடவாய்" என்று அநுக்கிரகமாக அருள் செய்தார். முனிவர் கூறிய சாபத்தின் வண்ணம் அவன் மலைப்பாம்பாகி மலை யடிவாரத்தில் விழுந்தான். அகஸ்தியர் பொதிகைபோய்ச் சேர்ந்தார்.

இப்பால் ரிஷிகளும் தேவர்களும் இந்திர னீங்கிய எண்டிசைப் பாலரும், பழைய இந்திரனிருக்கும் இடந் தெரியாமல் தேவ குருவினிடத்தில் வந்து பணிந்து மயங்கும் காலையில், மேலான கற்பினையுடைய இந்திராணி, தேவேந்திரன் தவஞ் செய்யும் இடத்தைக் காண்பித்தாள். யாவரும் அங்கே சென்று இந்திரனை வேத வசனங்களினற் போற்றிப் புகழ்ந்து, அவனுடைய பொன்னடியில் வணங்கி, நகுஷன் சாபம் அடைந்ததை நவின்று, 'இனிமேலாகிலும் தேவரீர் தேவபட்டத்திற்கு வரலாம்' என்று அழைக்க, இந்திரன் தன் குருவின் திருவடி பணிந்து கண்ணீர் சொரிந்து, "தேவரீரைத் தெரியாமல் அவமதித்த என் தீவினையானது செய்யவேண்டிய வேலைகளை யெல்லாஞ் சீராகச் செய்துமுடித்தது இனிமேல் நான் தாளமாட்டேன்; சரணகதியடைந்தேன். பிழைகளைப் பொறுப்பது சான்றோர் கடன்! ஆதலால் என்னை ஆண்டு, இரக்ஷியும் ஐயனே!" என்று போற்றினன். இந்திராணி முதலிய யாவரும் வாழ்த்தினர். தேவகுரு இரக்கங்கொண்டு இந்திரனுடைய இருகரத்தையும் பற்றி, அமராபுரிக்கு அழைத்துச் சென்று, மங்கள ஸ்நானம் ஆட்டி, தேவ சிங்காதனத்தில் வைத்து,

திவ்விய கிரீடந் தரித்தனர். அப்பால் இந்திரன் முன்போல் அர்ச்சு புரியத் தொடங்குகையில் அவனுக்கு ஒவ்வொரு வேளை மதி மயக்கமும் மனத் தியக்கமுந் தோன்ற, அவன் பிரகஸ்பதி பகவானுடைய பூவடி பணிந்து, 'சுவாமி! தேவரீர் கிருபை செய்யாமல் என் தியக்கமும் மயக்கமுந் தீரமாட்டா.' 'ஈசனுக் கிழைத்த குற்றந் தேசிகனெண்ணித் தீர்க்கும்-தேசிகற் கிழைத்த குற்றங் குரவனே தீர்ப்பதன்றிப் பேசுவதெவனே' என்னும் வாக்கியத்தின்படி, சர்வலோக நாயகராகிய சாம்பசிவ மூர்த்திக்கு ஒரு குற்றஞ் செய்தால் அந்த ஈசன் முதல் மற்ற யாவராலும் அதனைத் தீர்ப்பதற் காகாது. 'அவனருளாலே அவன்றாள் வணங்கி' என்பதுபோல், ஆசாரிய ராலேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். ஆகையால், என்னைக் காப்பாற்றும்'' என்று வணங்கிய இந்திரனை பிரகஸ்பதி பார்த்து, தம்மை இகழ்ந்தமையால் வந்த பழியைத் தீர்க்கும் பொருட்டுத் தாமே ஒரு வழிதேடி, சில தேவதூதருடன் பூலோகத்திற்கு இந்திரனை அழைத்துக்கொண்டுபோய், சகல புண்ணிய தீர்த்தம் திவ்விய ஸ்தலங்கள் யாவுங் கண்டு வணங்கிப் பணிந்து, தென்திசைக்கு வந்தனர். அங்கே கடம்பவனத்தில் வந்து சேர்கவும், கலக்கம்-தியக்கம்-மயக்கம் யாவுந் தணிந்து நல்ல ஞானம் தோன்றக் கண்ட இந்திரன் குருவினிடத்திற் சொல்ல, அவர் தூதரை விடுத்துத் தேடிப் பார்க்க, அங்கே ஒரு சிவலிங்கப் பெருமானும் பொய்கையும் இருக்கக் கண்டனர். உடனே இந்திரன் அவ்விடத்தில் நெருங்கி, புற்பூடு கற்காடு முதலியவைகளைக் களைந்து, திருக்குடை சாத்தி, தெய்வலோகத்திற்குத் தூதரை ஏவி, காமதேனுவின் பால்-தயிர்-நெய்-கோசலம்-கோமயம் இவைகளோடு தூபம்-தீபம்-நைவேத்தியம் - பொன்னுடை-இரத்தினபரணம் முதலான அபிஷேக திரவியங்களையும் ஆடையாபரணாதிகளையும் கொண்டுவரச் சொல்லி, விசுவப்பிரமனைப் பார்த்து, அஷ்டகஜம் தாங்கும் இந்திரமணி விமானம் அமைக்க விடுத்து, அர்ச்சனை செய்யப் புஷ்பம் வேண்டுமே யென்று இருக்கும்போது, அந்தப் பொய்கை நிரம்பப் பொற்றாமரை மலராக நிறைந்திருக்கப் பறித்து, அந்தப் பொய்கைக்குப் பொற்றாமரைப் பொய்கையென்று பேரிட்டுப் புகழ்ந்துகொண்டு இருக்கும்போது, தெய்வத் தச்சன் ஆகாயத்திலிருந்து இறக்கிய விமானம் சாந்திப் பொய்கையில் மூழ்கி, தூதர் கொண்டுவந்த திருமஞ்சனத் திரவியங்களால் அபிஷேகஞ் செய்து, ஆடையாபரணந் தரித்து, நிவேதனஞ் செய்து, பொற்றாமரை மலரால் அர்ச்சனை புரிந்து, தூபதீபங்கள்-ஆலாத்தி-குடை-கவரி - சுருட்டி-ஆலவட்டம்-பூர்ணகும்ப முதலிய உபசாரங்களுஞ் செய்து, கண்ணுங் கருத்துங் கனிந்து களிக்கத் துதிப்பானுகி 'அடியேன்வினையை யவிப்பதற்கிங் கருவா யுருவா யமைந்தெழுந்த விடையாய்போற்றி, வேதத்தின் வித்தேபோற்றி, கடம்பிழல் உடையாய்போற்றி, உயிர்க்குயிரா உரைத்தாய்போற்றி, உடுபதியார் சடையாய்போற்றி, ஐந்

தெழுத்தாய்ச் சமைந்தாய் போற்றி, தனிமுதலே" என்று துதித்து, ஏகாங்கத் திரியாங்கப் பஞ்சாங்க அஷ்டாங்கங்களாற் பணிந்து, மதி மயக்க நீங்கி, பிரகஸ்பதி முதலானவர்கள் சூழ, விருத்திரனைக் கொன்ற சமுத்திரத் தருகில் வந்து விஷ்ணுவைப் பூசித்து, "தீனதயாளுவாகிய தெய்வமே! ஆபத்பாந்தவா! அநாத ரட்சகா! அடியேன் உன்னடைக்கலம்" என்று தொழுது, இந்திர லோகம் புகுந்து சிங்காதனத்தில் இருந்து, இமையவர்களும் -எண்டிசைப்பாலரும் - வசுக்களெண்மரும்-ஏகாதச ருத்திரரும்-பதினெண் கணங்களும் தெருங்க, தேவ துந்துபி முழங்கப் பாரிஜாத மலர் மாரிமொழிய, கிரீடபட்டந் தரித்துக்கொண்டு ஐராணிசமேதனாக இமையவர் வேந்தனுயிருந்து, அயன்-ஹரி-அரன்முதலிய யாவரும் ஆசீவதிக்க கட்டியக்காரர் கட்டியங்கூற, கணிகையர் ஆட, பதியும் நிதியும் பலமும் பெற்று மதி தவறுமல் வாழ்விற் சிறந்தனன்.

கேளும் எனது மருமகனுகிய தருமகந்தனனே! அகஸ்தியர் சாபத்தால மலைப்பாம்பாய் வனத்திலுழன்ற நகுஷமகாராஜனும், உம்மைக்கண்ட கலத்தினுல் சாபந்தொலைந்து திவ்யரூபம் பெற்று சுவர்க்கலோகஞ் சார்ந்த சங்கதி உமக்குத் தெரியுமே. ஓ சந்திர குலோத்துங்கனே! மலைப் பாம்பாகிய நகுஷனைப்போன்றவன் துரியோதனன். தேவேந்திரனே கீர். இந்திராணியே இந்தத் திரௌபதாதேவி. சாக்ஷாத்காரமாகிய கடம்பவனக் கடவுள் வைகுந்த நாதர். மண்பொதுத் தந்தை தேவகுரு ஆகிய இவர்கள் தான் உமக்குத் துணையாக இருக்கும் துவாரகாபுரி வாசன். இந்திரனு மிந்திராணியு மநுபவித்த வருத்தங்க ளெல்லாம் நீங்கள் அநுபவித்தீர்கள். அவர்கள் எப்படி பழி பாவங்களையும் சத்துருவையும் வென்று அமராபதியை ஆண்டார்களோ, அப்படி இன்னுங் கொஞ்சம் நாட்களில் நீங்களுஞ் சத்துருவை ஜெயித்து, உலகமெல்லாம் ஒரு குடை நிழலில் அரசு செலுத்தப் போகின்றீர்கள். எனது வார்த்தைக்குத் தவறு வராது" என்று மங்கள வசனஞ் சொல்லிச் சகல அரசர்களும் பாண்டவர்களும் பாஞ்சாலி முதலிய யாவரும் அடங்கா மகிழ்ச்சி அடையும்படியாக விடை பெற்றுக்கொண்டு, சதுரங்க சேனைகளும் சூழ சல்லிய மகாராஜன் இரதம் ஏறும்போது, ஐவரும் பின் தொடர்ந்து வழிவிட்டுத் திரும்புங் காலையில், முரசக்கொடியோன் "மாமா, நான் கேட்டுக் கொண்ட வாக்கியத்தை மறந்துவிடப் போகிறீர்கள்" என்று கூற, "ஒருகாலும் மறவேன்! உள்ளத்திற் பதித்தேன்! உமது இஷ்டப்படி முடிப்பேன்" என்று மரியாதை செய்து நிறுத்தி விட்டு, அஸ்தினபுரம் போய்ச் சேர்ந்து, அரவக்கொடியோன் முதலாகிய யாவரையுங் கண்டு வந்தனை வழிபாடுகள் பெற்று, வணங்காமுடியோனிடத்தில் படைத் துணையாக உற்று வாழ்ந்திருந்தான் மத்திர தேசாதிபதி யாகிய

சல்லிய மகாராஜன். ஐவர் முதல்வனும் அரசர்களும் உபலாவி யத்தில் இருந்தார்கள். அந்த வேளையில் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி யும் அர்ச்சுனனும் துவாரகையி லிருந்து இரதம் ஊர்ந்து இன்ப முற்றுப் பாரத யுத்தத்திற்குத் தகுந்த யோசனை செய்ய வந்தார்கள். எல்லோரும் எழுந்து உபசரிக்க ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஓராசனத்தி லமர்ந்தார். அப்போது இவரைப் படைத்துணை கேட்கப்போன தும், துரியோதனன் படைத்துணை விரும்பி அவ்விடம் வந்ததும், அங்கே நடந்த செய்திகளும், சுவாமி மொழிந்ததும், துணையா யமைந்ததும் இவையாவையு மறக்காமல் பற்குணன் தருமராஜனுக் குச் சொல்லக் கேட்டு, உடல் பூரித்து மகிழ்ந்து, இவ்விடத்தில் சல்லியராஜன் படைத்துணை வந்த வழியில் தனது பேரால் ஒரு தண்ணீர்ப் பந்தல் அமைத்து வஞ்சனையாக வழிமடக்கிச் சுமீயா தனன் படைத்துணை கொண்டதும், அம்மத்திர ராஜன் தன்னிடத் தில் வந்து சொல்லிப்போன வசனங்க ளியாவையும் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக்குத் தருமர் சொல்ல, இப்படி ஒருவருக்கொருவர் மகிழ்ந்து பேசிக்கொண்டு மேல் நடக்கவேண்டிய காரியங்களையும் முறைமை களையும் பற்றிச் சிந்திக்கலானார்கள்.

இப்பால் உபலாவியம் விட்டுப் புறப்பட்ட உலூகமா முனிவர் மலைகள்-செடிகள்-வனங்கள்-வனந்திரங்கள்-காடுகள்-மேடுகள்-பாலை கள். சோலைகள்-சாலைகள்-நாடுகள்-நகரங்கள் யாவுங் கடந்து, அஸ்தி னபுரத்திற்கு வந்து பீஷ்மர்-துரோணர்-கிருபர்-அசுவத்தாமர்-விதுரர் முதலாகிய பெரியோர்களின் அரண்மனைக்குச் சென்று, "சத்தியந் தப்பாத பாண்டவர்கள் சாஷ்டாங்க நமஸ்காரஞ் சொன் னார்கள்!" என்று சொல்லித் தாமும் வந்தனை செய்து, அவர்கள் தந்த வந்தனமுங் கொண்டு, மரியாதையும் பெற்று, தான் கற்ற வேதசாஸ்திரம்-நீதிசாஸ்திரம்-தருமசாஸ்திரம்-ஞானசாஸ்திரம் முதலாகிய நூல்களெல்லாம் எடுத்துக் காட்ட, அந்தப் புத்தி மான்கள் கேட்டு செவி நிரம்பிய தேவாமிர்தத்திலும் இனிய சொற் களைக் கேட்ட "இதுவே புண்ணிய தின மென்றும், தேவர்களுடைய திருவடியைத் தாங்க இந்நகரம் இன்று செய்தது பாக்கியமென்றும், தம்மைத் தரிசிக்கப் பெற்றதே நாங்கள் கண்கள் படைத்ததற்கு லாபமென்றும் சொல்லி, உடல் புளகமுற்று உபசாரஞ் செய்து, யுதிட்டிரன் முதல் மற்றெல்லோரின் க்ஷேமங்களை விசாரித்து,, சிந்தை மகிழ்ந்து வந்த பௌரோகிதருக்குத் திடஞ் சொல்லியி ருந்த காலைபில ஒரு நாள் மது நிறைந்த மலர்மாலையும் முப்புரி நூலும் தழைத்திலங்கிய மார்பினராகிய உலூகமாமுனிவர் திருதரா ட்டிர மகாராஜாவின் பெரிய சபைக்குச் சென்றார். அவரைக் கண்ட யாவரும் தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவானைக் கண்ட தேவேந் திரன் முதலாகிய சபையாரைப்போல் வணங்கிப் பணிந்து அவரி

டம் மங்கள வசனம் பெற்றனர். வணங்காமுடி பொறுத்த துரியோதன மகாராஜனும் எதிர்கொண்டு கண்டு, இரு பாதங்களிலும் தீர்க்க தண்டனிட்டு, கயமிருது வசனத் துடன் நவரத்தின கஜித வீராசனத்தில் எழுந்தருளச் செய்து, கண்ணில்லாத காவலனுக்குச் சொல்ல, அவனும் இவரை இருகரத்தையுங் குவித்து வணங்கினன். முனிவர் அரசன் முதல் யாவர்க்கும் ஆசீர்வாதஞ் செய்து அக்ஷதை தூவினர். அப்போது விந்தகிரிக்கு ஒப்பாகி மேல் நிமிர்ந்த தோள்களையுடைய விரத பீஷ்மர் முதலிய மேலோர்கள் உள்ளக் களிப்புடன் அவரை உவந்து நோக்கி, "தேவரீர் வந்த காரியம் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்கவும், எட்டுக் கிரியுந் தியங்க விழித்து, வட்டக் கிரியு மயங்க மிதித்து, முட்டுக் கொடுக்க முயங்கி மதர்த்துக் கட்டுத் தறியை முறிக்கு மதங்கொண்ட பட்டத்து யானையை உடைய திட்டியற்ற திருதராட்டிரனும் அவன் குமாரர்களும், கர்ணனுப், சகுனியும் கொதிப்பு மனத்தாற் குன்றும்படியாகத் தூது வந்த உலூகமாமுனி வர் தாம் வந்த வரலாற்றை ஒழுங்காக விரித்துச் சொல்லுகின்றார்—

"கேளுங்கள் குருகுலாதிபரே! பன்னிரண்டு வருஷம் வனவாச மும் ஒரு வருஷம் அக்ஞாத வாசமும் போக்கிய பாண்டுவின் மைந் தர் ஐவரும் வெளிப்பட்டு உபலாவியத்தில் வந்திருக்கின்றார்கள். ஆதியில் அதிகம் அரசருங்காண மாயச்சூதாடி வென்ற இராஜ் யத்தைப் பதின்மூன்று வருஷங் கழித்து வந்தால் கொடுத்து விடு கிறேமென்று முன்ன மொழிந்திருக்கின்றீர்களாம். அந்த ஸத்திய வாக்கின்படி இப்போது பாண்டவர்களுக்கு நாடு கொடுக்கின்றீர்களா? கொடுக்க மாட்டீர்களா? நாங்கள் இராஜ்யங் கொடுக்க மாட் டோம்; யுத்தம் புரியவே எங்களுக்குச் சம்மத மென்று சொல்லுவீராஞல், இந்திரப்பிரஸ்தத்தி லிருந்து வாழ்ந்த ஐவரை விசுவாச வார்த்தைகள் சொல்லி அழைத்து வந்து வாய்ப்பேச்சுப் பேசவொட்டாமல் மோசச் சூதாடித் தேசத்தை கைக்கொண்ட நாசத்தைப்போல் மய யுத்தஞ் செய்ய எண்ணுமல், எதிரில் நின்று மோதி யுத்தஞ் செய்ய வெளிப்படுங்கள். அப்படியே நியாயமா யுத்தஞ் செய்தபோதிலும் நீங்கள் ஒரு காலும் ஜயம் பெறப் போகிறதில்லை. வீண் எண்ணம்வேண்டாம். எரி களிலுங் குளங்களிலும் அழகினையுடைய செங்காலன்னமுங் கருங் கான் மயில்களுங் கலந்து விளையாட, கிளைகளிங் குயில்பாடும் வள நாட்டையுடைய மன்னவர்களே! தமையன் தம்பிகள் வேற்றுமை யில்லாமல் ஆதியிலிருந்த அன்புறிமையைப்போல் கலந்து வாழ்வீர்க ளாஞல் பெருவாழ்வும் பெருந்தனமும் பெருகியும் பெரும்புகழும் பெருமையும் வரும். பொருந்தி வாழ்வு பெறுமல் விருதாவாய்ப் பாண்டவர்களுடன் எதிர்த்து யுத்தம் பண்ணினுல், உங்களால் அவர்

களை வெல்லுவ தரிது! ஏனெனில், கண்கறுத்து மனங்கறுத்து கதை யைத் தாங்கிய பலமுடைய பீமசேனனும், காண்டீப தாரியாகிய அர்ஜுனனும், நகுல சகாதேவர்களும் யுத்தகளத்திற் புகுந்து விட் டால், சத்துருவாகிய நீங்கள் புத்திர மித்திர களத்திராதிகளுடன் அழித்து அவித்து போவீர்கள். முனீசுவரர்கள் சொல்லும் வாக்கியம் மெய்யாகாமற் போமா? ஐயா! ஒருகாலும் பொய்யாக மாட்டாது'' என்று கூறினர்.

குருகுலத்தில் வருதவத்தில் அவதரித்து அரசுபெற்று வரிசை யுற்ற பெருமைபெற்ற ஜயமிகுந்த சுயோதன ராஜன் உலகமா முனி வரைப் பார்த்து "இவ்விடத்தில் இது வரையிலும் பூனைபோலிருந்து பெரும்புலிபோற் சொல்லிய உமது வாக்கியம், நாங்கள் செய்யப் போகின்ற யுத்தத்தைப் பார்க்கிலும் மிகக் கொடியதா யிருக்கின்றது. நல்லது ஐயரே! உமது வாக்கியத்தையும், எங்களிரு திறத்தாருடைய ஆண்மையின் சிலாக்யத்தையும் தருமவான்களின் யோக்கியதையை யும், தோள் வலியின் பராக்கிரமத்தையும், நாளை நடத்தப் போகிற யுத்தகளத்தில் பார்த்து அறியலாம்'' என்று சொல்ல, கல்வி முதலா கிய சகல வித்தைகளையுங் கற்றும், அதினுடைய உண்மை ஞான த்தை யறிந்து நடக்குங் கருத்தில்லாத துரியோதனன் சொல்லிய மொழிகளை யெல்லாங்கேட்ட தத்வஞானியாகிய விஜயவில் விதுர மகாராஜன் "அப்பா! சூதினற் கைக்கொண்ட நாட்டை மறுபடி யுங்கொடுத்து விடுகிறேனென்று சொல்லியபடி பாண்டவர்களுக்குக் கொடுக்காமல், புன்மை மேலிட்டு அறிவில்லாமலிருக்கும் பல மூடர் களுடைய தூர்ப்போதனையைக் கேட்பாயானால், ஸ்ரீ மகாலக்ஷ்மி உன்னைவிட்டு நீங்கிப்போய் விடுவாள். நால்வகைச் சேனைகளும் பங் துக்களும் நாசமடைந்து போகும். இது நல்லதல்ல. உடனே உன க்கு அல்லல் வரும்'' என்றான். அந்தச் சமயத்தில் துரோணாசாரி யார் நக்கியாவர்த்தத் தாமனை நோக்கி, 'அரசே!, பன்னிரண்டு வரு ஷம் காட்டிலும் ஒருவருஷ நாட்டிலு மிருந்து மீண்டு வருவீரானால் உங்கள் செல்வத்தை உங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்' என்று இராஜசபையில் ஸ்திரமாகச் சொல்லிய ஸத்தியவசனத் தைக் கைவிட்டுச் சேனைசன்யங்களைக் கொண்டு வீரப் பிரதாபத் துடன் யுத்தஞ்செய்ய நினைப்பது நியாயமல்ல. உலகம் பழிக்கும்; அது பெரும் பிழையாகும். அந்தப் பழிகளையும் ஒரு வழியாகத் தள்ளிப் பாண்டவர்கள் பேரில் போர்புரிவோமானால், விஜயனுனவன் தனது காண்டீபத்தில் இருந்து விடும் சரங்களி னுடைய மூனைவாய்களினால் இரத்த மாமிசச் சேரும் உயிரும் கக் கும்படியாகப் போக்கிவிடுவான்! பெரிய அவமானமுஞ் செய்வான். பின்பலம் வேண்டாமல் தன் பலம் வேண்டிய காண்டீபனுகிய தனஞ்ஜயனுக்கு எவரும் நிகரல்லவே'' என்று சொல்லவும், துரியோ தனன் அதனைக்கேட்டு "உத்தமராகிய இத்தனை பேரும் எத்தனை

விதமாகச் சொன்னலும் என் சித்தமிரங்கி எள்ளத்தனை காடும் கொடுப்ப தென்பதே இல்லை. மண்டைகள் கிழியச் சண்டைகள் செய்து வென்றவர்களுக்கே இந்த ராஜ்யம் சொந்தம்" என்று இயம்பிய பேரனைப் பீஷ்மர் ஏற நோக்கி, இப்படிப்பட்ட கல்மனத்தனைக் கொன்று கசகசவென்று மென்று தின்று விடலாமா வென்று பல்லைக் கடித்து, சிறந்த புத்திரனுகிய திரிதராஷ்டிரனைப் பார்த்து, "உன் குமாரனுகிய துரியோதனன் ஒருவர் சொல்லும் புத்தி வழியிலும் வாரான்; தன் சுய புத்தியையும் உன்னிப் பாரான்; சின்ன மனிதர் வார்த்தையைக் கேட்டு, நமது திங்கள் மரபின் நீதி முறைமையைக் கைவிட்டான். பதின்மூன்று வருஷம் வனவாசஞ் செய்து வாருங்களென்று சொல்லிய உறுதி வாக்கியத்தின் வண்ணம் உன் புதல்வராகிய பாண்டவர்கள் காட்டைக் கழித்து நாட்டில் வந்து ஓர் உத்தமனைத் தூதாக அனுப்பி நாட்டைக் கேட்ட விடத்திலும், ஐவருக்கு நாடுங் கொடாமல் வெவ்விய வினைக்கு மேலாகும் போர் புரிய விரும்புகிறுன், மகமேருவுக் கொப்பாகிய காண்டீபங் கரத் திலேந்தி வந்து எதிர்க்கும் விஜயனுக்கு எதிரில் வில் வலாத்துச் சமர்செய்யும வீரன் எவன் இருக்கின்றுன்? அவன் திருஷ்டிக்கு எதிர் நிற்பவர்கள் யாவருமில்லை. எவர்கள் பலத்தைக் கண்டு இவன் இப்படித் துள்ளுகின்றுன்? 'ஊமை கண்ட கனவு' போல் பேசுவதில் உபயோகமில்லை. வாக்கினல் அளப்பதில் வருவ தொன்றுமில்லை. வெளிப்பட்ட பாண்டவர் விடப்போகின்றதில்லை. ஆகையால் காது கேளாதவரைப்போற் கேட்டுக்கொண்டு இருப்பதில் காரியமில்லை. முன்னுக்கு இன்பமும் பின்னுக்குத் துன்பமும் ஆகிய காரியத்தை யுங் கைப்பற்றலாமோ? 'வாய்க்கு இனிப்பு வயிற்றுக்குக் கேடு' என் பதை அறியாயா? இதனல் உனக்கு வரும் புன்மை; கலகஞ் செய் வோர்க் கெல்லாம் நன்மை. ஆதலால் உன் புத்திரனுக்குத் தெரியப் படுத்தி ஆதியில் சொல்லிய நீதி தப்பாமல் ஐவருக்கும் நாடு கொடுப் பதே நலம்" என்று மிகுந்த கோபங்கொண்டு சொல்லி வந்தனர்.

அப்போது பக்கத்திலிருந்த அங்க தேசாதிபதி பதைபதைத்து வெகுளி மேற்கொண்டு, "ஈரேழுலகிலும் எனக்கு எதிர் இல்லை யென்று இறுமாந்திருக்கும் வீரன் யாஞருவனிருக்க, முன்பின் எண்ணிப் பாராமல் அர்ஜுனனுக்கு எதிர் யாருமில்லையென்று அவ னையே அதிக சிலாக்கியமாகப் பேசி வருகின்றீர். 'பொக்கைவாயன் பொரிமாவை மெச்சினன்' என்னுங் கதைபோல மகிழ்ந்து புகழு கின்றீர்! உமது வல்லமைக்கும் நீர் கற்ற தனுர்வேதத்திற்கும் விஜ யன் மேற்பட்டவனென்று விளம்ப வேண்டியதே யன்றி, உலகத் தில் ஒருவரும் அவனுக்கு ஈடுபட மாட்டார்கள் என்று நீர் எப்படிச் சொல்லுவீர்? அதற்கு ஒருகதை சொல்லுகிறேன் கேளும்" என்று கர்ணன் சொல்லத் தொடங்கினன்.

வியாக்கிரயுத்தி கதை

ஓ பீஷ்மரே! ஓர் ஏழைக் குடித்தனக்காரன் காடு அடர்ந்த ஏரிகரை யோரத்தில் ஏரைப்பூட்டி உழுதான். அந்தக் காட்டில் இருந்த வேங்கையொன்று உழுகின்ற மாட்டின்மேற் பாய்ந்து பிடித்துக் கொண்டது. அந்தக் குடியானவன் விசனம் அடைந்து கண்ணீர் சொரிய, அதை அந்த வேங்கை நோக்கி "ஏன் அழுகின்றாய் உழுகின்றவனே?" என்னலும், குடியானவன் "ஐயா! எனக்கொரு பெண்ணுண்டு. அந்தப் பெண் தனக்குத் திடவீர தைரியசாலியாக ஒரு நாயகன் வேண்டும் என்று சொல்லி யிருந்தது. நானும் அப்படிப் பட்டவனை எங்கள் பந்துக்களிலும் மற்ற உலகங்களிலும் தேடிக் காணுமல் வருந்தி இருந்தேன்; உம்மைக் கண்டு மகிழ்ந்தேன். ஆனல் நீர் மிருகமாயிருப்பதினல் என் குலத்துக்கும் இவ்வுலகத்துக்கும் விரோதமாக இருக்குமே யென்று விசனப்படுகிறேன்" என்றான். அந்த வார்த்தையைக் கேட்ட வேங்கையானது உள்ள மகிழ்ந்து 'பெண்ணென்றல் பேயும் இரங்கும்' என்னும் வசனப்பிரகாரம் மயங்கி, "யான் எப்படியிருந்தாலும் குறைவில்லை. மேலும் வீரனென்னுந் தைரியசாலிகள் எந்தக் குலத்திற் பிறந்தாலும் தோஷமில்லை. என்னிடத்திற் கொஞ்சத்தொழில் இல்லை! உம்முடைய குமாரத்தியைக் கொடுத்தால் வேண்டிய செல்வங் கொடுப்பேன்" என்று சொல்லக் குடியானவன் கேட்டு, "நான் வீட்டுக்குப்போய் மாட்டை விட்டுவிட்டு வருகின்றேன். இவ்விடத்தில் நீனே இரும்" என்று சொல்லிச் சற்றுதூரம் சென்று ஒரு நாழிகை மறைந்திருந்து மறுபடியும் வந்து "வியாக்கிர யுத்தியென்னும் வீரதீர மருமகனே! வீட்டுக்குப்போய் என் குமாரத்தியிடத்திலும் உனது மாமியாரிடத்திலும் இந்த வார்த்தையைச் சொன்னேன். அவர்களும் எங்கள் பந்துக்களில் சிலரும் சந்தோஷமடைந்து இப்போதே விவாக முடிக்கவேண்டும் என்றார்கள். என் பெண் மாத்திரம் தேம்பித் தேம்பி அழுதாள். ஏனம்மா அழுகின்றாய் என்று கேட்டேன். 'இந்நாட்டில் வாழும் நங்கையரைப்போல் நல்ல மானிடப் புருஷனைத் தழுவாமல் காட்டில் வாழும் மிருகராஜ புருஷனைத் தழுவி முத்தமிட்டுக் கொஞ்சிக்குலாவி விளையாடி வாழ்வதற்குப் பிறந்த பெரும் பாவியானேனே' என்றாள். என்ன காரணத்தால் என்றேன். இருநாங்களில் நகங்களும் வாயிற் கோர தந்தங்களும் இருப்பதினல் எப்படித் தழுவுவேன். இவை மாத்திரம் இல்லாவிட்டால் எனக்குக் கிடைத்த புருஷருடைய சுந்தர வீரத்திற்கு என்போன்ற பெண்கள் ஏக்கங் கொள்ளவேண்டும் அல்லது கைகால்கள் வீக்கங் கொள்ளவேண்டும்,

என்ன சிலாக்கியம் என்னுடைய பாக்கியம், என்ருள்'' என்று குடியானவன் சொல்லவும், வேங்கை வருந்தி ''அன்பிற் சிறந்த மாமா! யான் நகங்களையும் பற்களையும் அடக்கிக்கொண்டு தேகத்திற்பட வொட்டாமல் உமது குமாரத்தியுடன் கொஞ்சிக் குலாவி விளையாடுகிறேன்' 'என்று சொல்லக்கேட்டு, ''இதோ பாரும் எங்கள் நகங்களை! கூவரகன் வாங்கிப் போடுவதுபோல நீரும் வாங்கிப் போடும். அப்போது குடித்தன முறைமைக்கு உபத்திரவ மில்லாத சௌக்கிய மாம்'' என்று குடியானவன் சொல்லக்கேட்டு, அப்படியே செய்யுமென்று வேங்கை சொல்லவும், கூவரகனை அழைத்து வருவேனென்று போய் ஒரு தச்சனை அழைத்துவந்து இருகரங்களிலும் இருக்கும் கூர்மையாகிய நகங்களை அடியோடு நறுக்கிவிட்டு வாயைக் காட்டச் சொல்லிக் கோர தந்தங்களையும் குறடுகொண்டு பிடுங்கி விட்டுப் போபோவென்று முகத்தில் ஓர் அறை விட்டான். அந்த அறையைத் தாங்கிய வேங்கையானது கோபித்துப் பெரு வியாதி கொண்ட ஈயாத லோபியினது விரல் குறைந்திருக்கும் அங்கை போன்ற தன் கூழைக்கரத்தால் ஓங்கி ஓங்கி மோதும்போது, குடியானவன் தாற்றுக்கோல் வாங்கி வீசினன். அதனால் வேங்கையானது ஓட்டம் பிடித்து ஓடிப் பதுங்கி வலிப்பெடுத்து மாய்ந்தது. ஐயா பீஷ்மரே! வீரமும் வில்லும் தவமும் ஸ்ரீராமனிடத்தில் பறிகொடுத்து நகமிழந்த இவ்வேங்கைபோல் கலிவுற்ற பரசுராமனைத் தீட்டிய மரத்திற் கூர்பார்ப்பது போல அவனிடத்திற் கற்ற அற்ப வித்தையைக்கொண்டு அம்பை யென்னும் பெண்ணுக்காகப் புறமுதுகிட் டோடச் செய்த சேவகத்தை மேற்கொண்டீர். அல்லாமல் எந்த இடத்தில் எந்த வீரர்களை வென்று ஜயம் பெற்றிருக்கின்றீர்? உமது பண்டவாளம் இப்படி இருக்க, யாரையும் அலக்ஷியமாகத் தூறிச் சொல்வது அரியாயம். உமக்கு இது நியாயமல்ல'' என்று கண்கள் சிவந்து கடுகடுத்துக் கர்ணன் சொன்ன மொழியைக் காங்கேயன் கேட்டுக் கடுங்கோபங்கொண்டு சொல்லுவார்.

அடா கச்சைக் கொடியோனே! நானென்ன யுத்தஞ் செய்தேன். எங்கே வீரப் பிரதாபம் பெற்றேன். ஆளில்லாக் காலத்தில் வீண் வார்த்தைகளைப் பேசி அகப்பட்டுக்கொண்டு யாரிடத்தில் விழித்தேன். நான் எவ்வளவு அப்பா கர்ணு! நீயோ சுத்த சாமர்த்தியன்; ஒருவர் துணைவேண்டாத வீரன். சொல்லிய வீரந் தப்பாதவன். வல்லமைசாலி; மெத்தவும் நல்லவன்; வெவ்வியபுகை யெழும்பும் புத்திர காமேஷ்டியாக அக்கினியில் துருபத மகாராஜனுக்குப் புத்திரியாகப் பிறந்த தோகை மயிலைப்போன்ற திரௌபதாதேவியின் சுயம்வர காலத்தில், வில் வளைத்து மச்சேந்திரத்தை அறுத்து மாலை சூட்டுவதற்கு வந்திருந்த மன்னவர்களெல்லாரும் மதிமயங்கப் பயத்தைத் தரும்படியாகிய வில்லை யெடுத்து நிறுத்தி

இழுத்து வளைத்து நாண்பூட்டி நாணுமலிருந்தவன் நீதானே! அடர் கவச குண்டலா! சகல அரசர்களும் தலை குனியும்படியாகப் பிராமண ரூபத்துடன் வந்து வில்வளைத்து வன்மை-நுன்மை.சலம்-நிச்சலம் என்னும் நான்கு குறியாக வைத்த மச்சேந்திரம் அறுந்து விழும்படியாக அம்பினால் எய்து பாஞ்சாலி மாலைசூட்டக் கைப் பற்றிக்கொண்டு போகும் கை வன்மையையுடைய விஜயனைப் பார்த்து 'ஐயோ! பெண்ணைக் கொண்டு போகின்றானே பிராமணன்! நமது குலத்தாராகிய அரசர்களுக்கெல்லாம் மானமும் ஈனமும் வீரமும் வெட்கமும் இல்லையா?' என்று இந்தத் துரியோதனன் மனவருத்தப்படுங் காலையில் தனுர்ப் பாணங்களுடன் சென்று கிரீடியைத் தகைந்து யுத்தஞ்செய்து, திரௌபதியை மீட்டுக்கொண்டு வந்த வீராதிவீரன் நீ தானே! வனவாசஞ் செய்யும் பாண்டவர்களை அவமானஞ்செய்ய நினைத்து மன்னர் மண்டலீகரும் நால்வகைச் சேனையும் இராஜ ஸ்திரீகளும் சுவேத சுஷித்திரமுடைய வணங்கா முடியோனும் நீயும் வனஞ் சுற்றிப் பார்த்து ஜலக்கிரீடை பண்ணி வருவோம் என்று போன காலில் கந்தர்வனுக்கும் உங்களுக்குங் கலகம் நடந்து அவன் எல்லோரையும் பிடித்துப் பின் கட்டாகக் கட்டிப் பிணையலாடிக்கொண்டு போகும் பொழுது தருமராஜனுடைய சரணங்களில் விழுந்து அழுது 'சிறை நீக்கிவிட வேண்டும் தேவரீர்' என்று தூதுவர் சொல்லக்கேட்டு அவர் பீமராஜனையும் அர்ஜுனராஜனையும் விடுத்து மீட்டு விட்டபோது அந்த இடத்தில் நீயல்லவோ முன்னின்று வெற்றி பொருந்திய யுத்தஞ் செய்து மீட்டாய்! அடா தாஷ்டீகா! போனதெல்லாம் போக நேற்று விராடபுரத்தில் நாம் ஓர் அக்குரோணி சேனைகளுடனும் கோடி தேர்களுடனும் சென்று பசுக்களை ஓட்டிக்கொண்டு வரும்போது உண்டைவிற் பிடித்துக் கொண்டு திரியும் உத்தரகுமாரன் தேர் செலுத்த உத்தர திசையில் வந்து அந்த அக்குரோணி சேனைகளையும் கோடி ரதங்களையும் பாணங்களினால் மூடி, ராஜனையுந் தேடிப் பழிப்பாகப்பாடி என்னையு துரோணர் முதலாகிய பேர்களையும் நாடி யடித்து நீயும் ஓடி ஒளிக்கத் தடுத்து நானுவித பங்கஞ்செய்து நாமெல்லாம் தலைத் துணியும் பிடிங்கிக் கொள்ளக் கொடுத்து, மடக்கிய பசுக்களையும் விடுத்து வரும்படியாக மாட்டியது விஜயன் ஒருவனே யன்றி இரண்டு பேரில்லை. அப்போது அர்ஜுனனை ஜயித்து பசுக்களையுங் கொண்டு துரியோதனனையும் ஜயம்பெறச் செய்து சகல செல்வமுங் கொடுத்து அஸ்தினபுரத்திற் சேர்த்த உத்தம வீரனும் பதினன்கு லோகமும் ஒருவனென்றிருக்கும் தீரனும் நீதானே அப்பா! இப்பவும் பசுமை நிறமும் வாசனையும் தேனுமருவிய துளபமாலை அணிந்த ஸ்ரீ கிருஷ்ண தேவன் சாரத்தியஞ் செய்யக் காண்டீபமுங் கணையுங் கரத்திலேந்தி யுத்தஞ்செய்ய வரும் சவ்வியசாசியை ஜயிப்பதற்கு வேறொரு வீரர்கள்எக்காலும் இல்லை; முக்காலுஞ் சொன்னேன்; நீ

யொரு பிராணிதான் மருங்கைப்போல் வெற்றி பெறுதற்குப் பொருந்தி இருக்கின்றாய். 'கல்ல மரத்திற் பாயும் புல்லுருவி போல் கல்ல குலத்தை நாசஞ் செய்யுங் கல்லுளியாகச் சேர்ந்த கர்ணு! இவ்விடத்திலிருக்கும் நாங்கள் யாவரும் உயிருடனிருந்து உள்ளங்கைப் புண் போல் உனது வல்லபத்தைப் பார்க்கத்தான் போகின்றோம்" என்று கங்கா புத்திரர் சொல்ல, கர்ணன் மறுமொழி கூறுமலும் இருந்தான்.

அச்சமயத்தில் துரியோதனன் கையோடு கைதட்டிக் கொட்டிக் கல கல வென்று குலுங்க நகைத்து "கெட்டி கெட்டி அண்ணு கர்ணு! இப்போது பீஷ்மர் சொல்லும் வார்த்தையெல்லாம் பாண்டவர்கள் பேரிலிருக்கும் இஷ்டத்தினால் சொல்லும் வார்த்தை என்று பட்டப் பகற்போல் தெரிய வருகின்றது. துஷ்டப் பகையைப் போக்கவும் இஷ்டனுகிய என்னைக் காக்கவும் அஷ்ட திசையும் அதரித்திரனென்று பேர் பெற்ற வள்ளலே! அதைரியம் வேண்டாம்" என்று தட்டிக் கொடுத்து, தூதாக வந்து எதிரிலிருந்த பிராமணனை நோக்கி "வேஷமில்லாமல் இந்த வீண் வார்த்தையைப் பேச வந்தீர்" என்று அவமதித்து, "இங்கிருக்கும் நாடுகளெல்லாம் எங்களுடையவை! அங்கு நக்கும் காடுகளெல்லாம் அவர்களுடையவை! அரசர் முதலிய குடிப் படைகளெல்லாம் எங்களுடையவை! மிருகங்களெல்லாம் அவர்களுடையவை! தன தானிய போஜன அநுபவம் எங்களுடையன! சருகு கந்தமூல அநுபவம் அவர்களுடையவை! இந்தப்படி முன்னமே தெய்வம் முடித்திருக்கின்றது. அது தோன்றுமல், உம்மைத் தூது அனுப்பியது கொடிய வறுமை என்று தோன்றுகிறது. ஆகையால் நீர் சீக்கிரம் போய் ஐவருக்குந் தெரிவித்து ஆசையை விட்டு விடும்படியாகப் போதியும்" என்று அரவக் கொடியோன் சொல்லவும், சந்திரகுல சிகாமணியாகிய திரிதராட்டிர மகாராஜன் துரியோதனனைக் கடிந்து, சிறந்த பெரியோர்களும் நிறைந்த அரசர்களும் பொருந்திய பெரிய சபையில் அழகுந் தகுதியும் அல்லாத சொற்களை நீசொல்லியது நன்மையோ" என்று அதட்டி அடக்கிப் பாண்டவர்கள் பேரில் பக்ஷம் வைத்துப் பேசுகிறவனைப்போல் அன்பு நிறைந்த உருவமாக எதிரில் இருக்கும் உலூகமா முனிவரைப் பார்த்து, "ஐயா! நீர்வந்து சொல்லிய வார்த்தைகளெல்லாம் சத்தியமே. இருதிறத்தவர்களும் மனம் ஒத்து வாழ்வைப் பெறலாம். அமர் செய்வார்க ளானுல் அழிவது நிச்சயமே. பிழைப்பார் ஒருவரும் இல்லை. அப்படி யுத்தம் விளையாமற் செய்ய வேண்டும். எங்கள் பிள்ளைகள் இருதிறத்தாரும் நிறைந்த செல்வத்துடன் சுகப்படும் படியாகிய காரியங்களை யாங்கள் யாவரும் ஆலோசித்துக் கொண்டு விவேகமே தேகமாகப் படைத்த உண்மையானவர்களை என் பிள்ளைக ளிடத்திற்கு அனுப்பி வைக்கின்றேன். தேவரீர் உபலாவியத்திற்கு எழுந்தருளிக் குலமும்-பலமும்-நலமும்-தவமும்-வர

மும் பெற்றிருக்கும் பாண்டவர்கள் துரியோதனாதிகள் பேரில் கொண்டிருக்குங் கோபங்களும் மனஸ்தாபங்களும் சபையிற் கூறிய சபதங்களும் நீங்கும்படியாக அநேக தரும நியாயம் குலமுறைமை முதலிய நீதிகளினுற் றெரிவித்துப் புகழாகிய சகாயஞ் செய்ய வேண்டும். பெரியோராகிய தேவரீரே" என்று நமஸ்கரித்து வெகுவித உபசாரமுஞ் செய்து தேவர்களும் தாவிவந்து ஆசை கொண்டு மகிழும்படியாகச் சந்தன புஷ்பமும் கந்த கதம்பமும் பீதாம்பரங்களும் நவரத்தின கசித ஆபரணங்களும் கொடுத்துத் தீர்க்க தண்டஞ் செய்து விடை கொடுக்க, பீஷ்மர் துரோணர் விதுரர் முதலிய பேர்களும் வணங்கி, "சுவாமீ! பெரிய அரசன் சொல்லிய வண்ணமே நடத்த வேண்டும். போய்வாரும்" என்று செலவு கொடுக்க முனிவர் ஆசீர்வதித்து, அஸ்தினபுரத்தை விடுத்து, சாடமலை யெல்லாங் கடந்து உபலாவியம் வந்து, தம்மைத் தூது அனுப்பிய அரசர்களும் ஸ்ரீகிருஷ்ணதேவரும் பொருந்தியிருக்கும் இராஜ சபைக்கு நேராக வருமபோது, யாவரும் வணங்கி உபசரிக்க அவர்களுக் கெல்லாம் மங்களவசனஞ் சொல்லி உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்து, மேற் சொல்லிக் கொண்டு வந்த தூது வசனங்கள் யாவற்றையுஞ் சொன்னார். அதைக் கேட்டுப் பாண்டவர் சகாயன் முதலிய பேர்களும் "இனிமேல் நடக்க வேண்டிய காரியங்களுக்கு இப்போது யோசிக்க வேண்டியதென்ன, ஒன்று மில்லை. இனி அவர்கள் அனுப்பும் தூதினுல் நேரிடுஞ் சங்கதிகளையும் உள்ளக் குறிப்பையும் வர வரத் தெரிந்து கொள்ளுவோம்" என்று பொறுமையாயிருந்தார்கள்.

உலூகன் தூதுச்சருக்கம் முற்றிற்று.

2. சஞ்சயன் தூதுச்சருக்கம்

கண்ணன் துதி

எக்கடலு மெக்கிரியு மெவ்வுலகு முலகிற்
றக்கபல யோனிகள் சராசர மனைத்தும்
மிக்கவிதியால் விதிசெய் விதியினை விதிக்குஞ்,
செங்கமல நாபிமுகில சேவடி துதிப்பாம்.

கேளும் ஆடவர் குல திலகனுகிய ஜனமேஜய மகாராஜனே! உலகமாமுனி அஸ்தினு புரத்தை விட்டு நீங்கிய வுடனே, நஞ்ச முடைய நாகத்தைக் கொடியாகப் பிடித்த நாதிடனும், பயத்தைத் தரும் வேலாயுதக் தாங்கிய பற்பல மன்னர்களும், சற்புருஷராகிய பீஷ்மாச்சாரியர்-விற்றிறமை கொண்ட துரோணுச்சாரியார்-தவத் திற் சிறந்த விதுர மகாராஜன்-ரவி புத்திரனுகிய கர்ணன்-கிருபாச் சாரியர்-அசுவத்தாமா-முதலாகிய பேர்களும், திரிதராட்டிரனும் எதிரில் இருகரங்களையும் குவித்து வணங்கி வாழ்த்தி நிற்கும் சேனுசைன்ய மத்தியில் இந்திர சபைக்கு மேலாகிய இராஜ மண்ட பத்தில் பொருந்தி யிருந்து, யுக்தியிலும், புத்தியிலும், கல்வியிலும், ஞானத்திலும், இணையில்லாமல் உயர்ந்த சத்திய வசன உத்தம னுகிய சஞ்சயனை வரவழைத்துச் சபையினிடத்தில் இருத்தி 'என்றென்றைக்கும் சண்டை யில்லாமல் இருக்க வேண்டும்' என்று எண்ணங் கொண்ட திரிதராட்டிரன் "ஓசஞ்சயனே! குரு குலத்தரசர்களுக்கு நேரிடும் காரியா காரியங்களை அறிந்து சொல் லும் படியாகிய சுதந்தரமும் மாட்சிமையும் உடையவன் நீயாகை யால் இருதிறத்தாராகிய கௌரவர்களும் பாண்டவர்களும் உனது சொல்லாகிய நீதி வசனத்தை ஒருகாலுக் தள்ள மாட்டார்கள். ஆதலால் கருமான் உலைக் கனலுக்கு ஒப்பாகிய மிகுந்த கோபங் கொண்ட என் தம்பி பிள்ளைகள் மாறுபட்டுப் பேசுகின்ற வன் சினத்தை நீக்கி இருவரில் ஒருவர் சமுத்திரஞ் சூழ்ந்த இவ் வுலகத்தை ஆளும்படியாக உனது உள்ளத்தில் நினைக்க வேண்டும். யுக்திக்கு வித்தானவனே! அளவு சொல்லக் கூடாத கோபக் கரு த்தினராகிய என் பிள்ளைகளுக்கு எத்தனை விதத்திற் சொன்னலும் காண்டவர்களுக்கு நாடு கொடுக்கச் சம்மதியாமல் மூண்டு யுத்தஞ் செய்வதற்கு இசைந்திருக்கின்றார்கள். என் தம்பி புத்திரர் களோ அப்படியல்ல. நற்குணங்களிலும்-விற்றிறங்களிலும் - சத்தி யங்களிலும்-ஆண்மையிலும்-குளிர்ச்சியாகிய மிருதுவசனங்களிலு ம்-நீதியிலும்-தரும தானங்களிலும்-தவங்களிலும் - பொய்யில்லா

மெய் விரதங்களிலும்-புகழிலும் அருளிலும்-பொறுமையிலும்-நிறைந்த பூரண புத்திமான்கள். இப்பேர்ப் பட்டவர்களும் நமது பையல்களைப்போல இடம் அகன்ற போர்க் களத்தில் யுத்தஞ் செய்யும் படியாகக் கருத்துக்கொண்டு இருப்பது நன்மையோ? சஞ்சயனே! பிறவிப் பிணியையும் பெருந் துக்கத்தையும் அநித்திய வாழ்வையும் பாபமாகிய பொருளையும் விளையச் செய்யும் இந்தக் கர்ம பூமியின் ஆசையை விடுத்து இவை யெல்லா மறந்த மறப்பும் ஞானப் பிறப்பும் மோக்ஷ வழிச் சிறப்பும் உண்டாகும்படியாக விசாலம் பொருந்திய கானகத்தில் பாண்டவர்கள் இன்புற்றிருந்து, நித்தியமாகுந் தவத்தைச் செய்யும்படியாக அன்பு கொண்டிருக்கும் என் கருத்தையுஞ் சொல்லி நீயுந் தெரியப்படுத்தக் கடவை" என்று இருள் அடர்ந்த தனது புத்திக்கு ஒப்பாகச் சொன்னன்.

இப்படி திரிதராட்டிரன் சொல்லிய வசனம் பாரபக்ஷம் என்று தெரிக்கும், தடை சொல்லாமல் அரசனுடைய கட்டளையைச் சிரசிற் கொண்டு யாவரும் புகழப் புகழ்ந்து விடை கொடுக்கப் பெற்று, அஸ்தினபுரத்தை விடுத்துக் காடு மேடு மலைகளெல்லாங் கடந்து, ஐவர் வாழும் உபலாவியத்திற்கு வந்து, அன்றையத்தினமே ஸ்ரீகிருஷ்ணபகவான் எழுந்தருளியிருக்கும் திருமாளிகையிற் சென்று திரௌபதியும் பார்த்தனும் வார்த்தையாட, மலரணையில் வீற்றிருக்கும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியாகிய அமலனைக் கண்டு தீர்க்க தண்டமாகப் பணிந்து வணங்கித் துதித்துத் தான் வந்த சங்கதிகளில் சிற்சில காரியங்களைப் பேசி, தருமபுத்திர மகாராஜன் முதலிய தராதிபர்கள் கூடியிருக்குஞ் சபைக்கு காலையத்தினம் வந்து சகல காரியங்களையும் சொல்லுகிறேனென்று தொழுது விடை பெற்றுக் கொண்டு அவர்கள் நியமித்த ஒரு விடுதியிற் போயிருந்து சூரியன் உதயமாகு முன்னம் எழுந்து நித்தியகருமம் ஸ்நானம் ஜபம் தபம் இவைகளை முடித்துக்கொண்டு தருமராஜனுடைய பெரிய சபைக்குச் செல்லும்போது ஸ்ரீகிருஷ்ண பகவானும் சாத்தகியும் துருபதேய மகாராஜனும் விராட பூபதியும் இன்னம் பற்பல தேச மன்னவரும் சூழ்ந்துசொண்டிருக்க நடுநாயகமாக இருந்து, தஞ்சமென்போரை அஞ்சலென் றளிக்கும் வஞ்சகம் இல்லா நெஞ்சினனும் மெய்விரதனுமாகிய யுதிட்டிரனிடத்தில் விரைந்து சென்று கண்களும் மனமும் களிக்கக் கண்டு. அறிவும் அறமும் புகழும் மிகுந்த தகுந்த தம்பிமார்களாக விளங்கிய பீம அருச்சுன நகுல சகாதேவர் நால்வரோடு அக்கினியில் உற்பவித்துக் கற்புக்கு அணியென இருந்த பாஞ்சாலியும் பின் பக்கத்தில் சிறப்புடன் பொருந்த, முன் பக்கத்தில் தெறிப்புடன் இருந்த அறத்தின் மைந்தருடைய மலரடியைச் சிரத்திற் சூடி வணங்கினன். இவ்வாறு வணங்கிய சஞ்சயனைத் தருமராஜன் நோக்கிக் கருணைகூர்ந்து, "எழுந்திரும்! எழுந்

திரும்! என்று சொல்லி, இரத்தினகசிதமாகிய ஆசனங் கொடுப் பித்து, அந்த ஆசனத்தின் பேரில் உட்காருமென்று சொல்லவும், சஞ்சயன் அகமகிழ்ந்து, யாவர்களையும் வந்தித்துப் புகழ்ந்து, வண க்க ஒடுக்கமாக ஆசனத்தில் அமர்ந்து, சொல்லுகின்றான்— "பொய்யைச் சினந்து மெய்யைப் புனைந்து வையகங்காக்கும் ஐயனே, கேளும்! பாதலத்திற் பொருந்தும் ஆதிசேஷன் முதலிய பாம்புகளின் விஷ ஜ்வாலைகளை அடக்கி, இவ்வுலகத்தில் யாவர்கட்கும் இன்பம் விளையும்படியாக அமுத கிரணங்களைப் பொழியும் சந்திரன் பிரகா சித்த போதிலும், தாமரை மலரானது சூரிய கிரணங்களை விரும்பி முகமலருமல்லவா? அதுபோல உலகமெல்லாம் ஒரு குடையில் ஆளும் திருதராட்டிர பூபதியினுடைய அருளுக்கும் அன்பிற்கும் உரியவனாகி நான் இருந்த போதிலும், ஒளியும் சிறப்பும் உடைய உமது முகத்தைப் பார்த்து, உயிர்வாழும் படியாக என் சிந்தை யானது வந்த, நான் வந்தேன்" என்று சொல்லக் கேட்டு, சேறு காறும் வயல்களெல்லாம் செங்கழுநீர் மணநாறுங் குருநாட்டுக்கு அதி பதியாகிய சூர்த்தி புதல்வன், சஞ்சயன் கூறிய உபசார வார்த்தைக்குப் புன்னகைகொண்டு, அவனுடைய மனம் மகிழும்படியாக உள்ளன் புடன் இனிய வார்த்தைகள் சொல்லி, "சஞ்சயனே! பெருமை பெற்றிருக்கும் என் பெரிய தந்தையாகிய திருதராட்டிர மகாராஜ னும் ஐயா அவர்கள் பீஷ்மாச்சாரியாரும் குரு ஸ்வாமியாராகிய துரோணாச்சாரியாரும்-கிருபாச்சாரியாரும்-கைலாசபதியின் அருள் நிறைந்து பலஞ்சிறந்த அசுவத்தாமாவும், பெரிய ஞானவரம் பெற்ற சதுரனாகிய சிறியதந்தை விதுரமகாராஜனும், இன்னும் உண்டாகிய பெரியோர்கள் யாவரும் சுகமாக இருக்கின்றார்களா? குணபூஷ ணனே" என்று கேட்கவும், தூதுவந்த சஞ்சயன் கரத்தைச் சிரத் திற் குவித்து "ஐயா! அவர்களெல்லாரும் க்ஷேமமாக இருக்கின்றார் கள். உங்களுக்கு க்ஷேமம் உண்டாக வாழ்த்தி ஆசீர்வதித்தார்கள்" என்று சஞ்சயன் சொல்லத் தருமராஜன் மனமும் தேகமும் மற ந்து புளகமுற்றுச் சொல்லுகின்றான்—

"அப்பா! பூர்வம் இராஜ சபையிற் பொருந்திய மகாஜனங்களெல் லாருமே உடல் பதறி ஆச்சரியப்படும் படியாகத் தம்பியை நோக்கி, 'திரௌபதையைக் கைப்பிடியாக இழுத்துவந்து என் மடிமேல் வை' யென்று தனது சிவந்த தொடையை ஆசனமாகக் காட்டிய துரியோதன மகாராஜனும் சுகமா? நேசமாக விருந்து மோசச் சூதாடக் கற்றுணர்ந்த சகுனி மாமாவும் சுகமா? பரிசுத்தமுள்ள பாஞ்சாலி இடையிலுடுத்திய வஸ்திரத்தைத் தடையில்லாமற் பிடி த்து உரிந்து சபையில் மானபங்கஞ் செய்த தம்பி துச்சாதனனும் சுகமா? சுத்த வீரர்களை யுத்தஞ் செய்து வெல்வதற்குச் சக்தியில்லா மல் சிங்காரப்பேச்சினால் ஜெயிப்பேனென்று காலங்கழிக்கும் கர்ண

னும் சுகமா? மற்றப் புத்திர மித்திரர்களுஞ் சுகமா? பற்பல தேசத்து மன்னர்களுஞ் சுகமா? யானைத்தலைவர்-சேனைத்தலைவர்-படைத்தலைவர்-குடைத்தலைவர்-கொடித்தலைவர்-சேவகர் முதலியோர் யாவருஞ் சுகமா?" என்று கேட்கும் தருமராஜனைச் சஞ்சயன் பார்த்துப் "பொல்லாங் கென்பவை எல்லாம் நீங்கிய உள்ளமுடைய வள்ளலே! அவர்கள் இது வரையிலும் சுகம் இல்லாதிருந்தாலும், தேவரீருடைய திருநாவினல் க்ஷேமம் விசாரித்த படியால் இன்று முதல் நாளுக்கு நாள் அபிவிர்த்தி ஆவார்கள்" என்றுகூற, மூரசகேதனன் மகிழ்ந்து "சஞ்சயனே! காட்டை விடுத்துக் காட்டையடுத்து நெடு நாளாகப் பிரிந்த எங்களைப் பார்க்க எண்ணங்கொண்டு வந்ததோ? அல்லது நீங்கள் மரபில் உதித்த எங்கள் குலத்தில் கதித்த இறைவனுகும் திரிதராட்டிர மகாராஜன் சொற்படியே வந்ததோ? இவ்விடம் நீர் வந்ததற்கு யாது காரணம் விளம்பும்" என்று கேட்க, சங்கினங்கள் வயிறுளைந்து பெறும் ஆணி முத்துக்கள் நீரின் மடைகளை அடைக்கும் வயல்களால் வளப்பங்கொண்ட திருநாடென்னுங் குருநாட்டுக்கு அதிபதியாகிய கோவே! உங்கள் பெரிய தந்தையாகிய திரிதராட்டிர மகாராஜன் சொல்லி அனுப்பிய செய்தியைத் தெரிவிப்பதற்கு இவ்விடம் வந்தேன். ஆகையால் திருநாபிக் கமலமுடைய ஸ்ரீ கிருஷ்ணதேவரும் நீங்கள் ஐந்துபேரும் இந்த ராஜ சபையை நீங்கித் தனிமையிலிருந்து, சங்கதி முழுமையுங் கேட்டு யோசிப்பீர்களானல் மிகவும் நன்று" என்று சஞ்சயன் விளம்பத் தருமராஜன் நகைத்து, "வாளாயுதம் வேலாயுதம் பிடித்து இவ்விடத்தில் வந்து நிறைந்திருக்கும் இராஜ மன்னவர்கள் யாவரும் எங்கள் பிராணனும் ஊக்கமும்-உத்ஸாகமும் -ஊற்றமும்-புகழுமாக இருக்கின்றவர்களேயொழிய வேறெல்ல. இவர்கள் அறியக்கூடாத இரகசிய மொன்றுமில்லை. இவர்களை யன்றி யாதொரு எண்ணமுமில்லை. தாய்க்கு ஒளிக்கும் சூதுமில்லை. ஆதலால் ஓசத்தியத்தை நித்தியமாக நம்பும் சாமர்த்திய முடைய சஞ்சயனே! இந்தச் சபையினிடத்தில் தடையில்லாமல் சொல்லும்" என்று தருமராஜன் கூற, பாண்டவர்களின் கருத்தைத் தெரிந்துக்கொண்ட சஞ்சயனவன் நீளபமாலை அணிந்த மேகம்போன்ற திருமேனியையுடைய பகவானைப் புகழ்ந்து, சபை நிறைந்த மன்னவர்களை நோக்கி, "தங்களுக்குத் தெரியாத காரியம் ஒன்றுமில்லை. இராஜ தந்திரத்தை அநுசரித்துத் தனிமையிற் சொல்ல வேண்டுமென்று புகன்றதே யன்றி வேறல்ல. அடியேன் பேரில் கோபஞ் செய்யாதிருக்க வேண்டும்" என்று இருகரத்தையுஞ் சிரத்திற் குவித்து, வினய வந்தனத்துடன் வணங்கி, கடைந்த இடையினையுடைய புனக்கிளிபோன்ற திரௌபதா தேவியையும் பெருமையுடன் நோக்கித் தொழுது, ஐவருடைய கருத்தையும் சிரமேற்கொண்டு, "முன்னம் என் கருத்தைச் சினவாமற் கேளுங்கள்" எனச் சொல்லலுற்றான்—

"மதுகீதி தவறுத மன்னரே கேளும்! நீங்கள் இந்தப் பூமியை ஆளவேண்டு மென்னும் ஆசையை விடுத்து, ஈஷணத்திரயங்களைக் கடந்த மகரிஷிகளைப் போல் நல்ல கதி கிடைக்கும் படியாகத் தவஞ் செய்வதே நன்மை.பதின்மூன்று வருஷம் வனத்திற் கைபழகி வந்த நீங்கள் 'பழம் புண்ணுளி பரியாரி' என்பதைப்போல், மறுபடியும் காட்டுக்குப்போகப் பயப்படமாட்டீர்கள். சகல மந்திர தந்திரங்களும் தெரிந்த சுந்தரராகும் புண்ணிய சீலராகிய நீங்கள் இப்போது பாவத்தை பொழிக்கும் தவத்தைக் கருதிச் சென்றால் அதிசீக்கிரத்தில் ஆன்மலாபம் கைகூடும்; கதியும் பெறலாம். ஜன்மாந்திரத்தில் தவஞ் செய்யாப் பாவிகள் இம்மையிற் றவஞ்செய்ய விரும்பினால் தவங்கெட்டு அவமேலிட்டு நரகத்தில் விழுவார்கள். இம்மனுஷ்யமும் எல்லாப் பிறவியிலும் உத்தமமாகிய மானிடப் பிறப்பு அரிது. அதினிலும் ஊமை-செவிடு-குருடு-மூடம் - நோய் இவை நீங்கிப் பிறப்பது மிகவும் அரிது. கல்வியும்-ஞானமும்-நற்குணமும் உண்டாவது அதிலும் அரிது. தானம், தருமம், தவம் இவைகள் கிட்டுவது அதிலும் அரிது. இவைகளெல்லாம் உண்டாகிய காலத்திலும் மோக்ஷம் அடைவது மகா அரிதென்று லோக தர்மஞ் சொல்லுகின்றது. இந்தக் காரியங்களெல்லாம் ஒருருவாகத் திரண்டு, மாயா மயக்கம் அகன்று, தூஷணபூஷண திரஸ்காரங்களெல்லாம் சுத்தப் பிரமத்திற் கென்று, பேரறிவு விளங்கிய பெருந்தகையோர் தேவரீர் களல்லது வேறில்லை. அகங்காரமையும்-ஆசையும்-அகப்பற்றும்-புறப்பற்றும்-மமதாங்காரமும் உள்ள சுயோதனன் உங்களுடன் உடன்பட்டு வாழ்வதுமில்லை. நாடு கொடுப்பதுமில்லை. பெறமேவண்டு மென்னும் இச்சையும் உங்களுக்கு இல்லை. அநித்திய மாகிய ஆசாபாசத்தை விடுத்து, நித்தியமாகிய பிரமோக விசுவாசத்தைத் தொடுத்து, உண்மையாகிய ஊர்த்த கதியை யடைவதே உத்தமம். மேலும் ஓ தருமபூபதி! தேவரீர் பெரிய தந்தை சொன்னதாவது, பராசர மகரிஷியினுடைய சந்ததியிற் றோன்றிய தனக்குப் பிறந்த பிள்ளைகள் துரியோதனாதியர் நூறுபேர்கள், என் தம்பி புத்திரர் ஐவர், இந்த நூற்றைந்து பிள்ளைகளில் பொய்யும்-சூதும்-பொறாமையும் மிகுந்து, மண்ணாசை - பெண்ணாசை - பொன்னாசைகொண்டு, ஞானசூனிய ராய்க் குலத்தின் பேரையும் புகழையுங் கெடுத்து, இனிப் பிறக்கும் பற்பல பிறவிக்கும் இடங்கொடித்து, தந்தை மொழி-தாய் மொழி-குரு மொழி-வேத மொழி-இவையெல்லாந் தள்ளிப் பாபமென்னும் மூட்டையைத் தேடிப் பரதவித்து, என் வார்த்தையைக் கேளாமல் அலையும் துரியோதனாதிகள்பேரில் வைத்திருந்த பட்சத்தை விடுத்தேன். என் மூத்த பிள்ளையாகிய தருமநந்தனனை நம்பி அடுத்தேன். சராசரங்கள் தோறும் வியாபிதமிருக்கும் சுகப் பிரமத்திற்கு ஒப்பாகிய பிள்ளை அவன் ஒருவன்தான். அவன்தான் இந்த மண்ணும்-பெண்ணும்-பொன்னும் - வாழ்வும் - கிலேயில்லாதனவென்று

நிச்சயித்திருப்பவன். அவன்தான் நீதிமான். அவன்தான் கோமான். அவன்தான் பூமான். அவன்தான் சீமான். அவன்தான் புத்திமான். அவன்தான் சத்தியமே சத்தியமென்றிருக்கும் தருமஞ்ஞிய புத்திர சிகாமணி. என் உத்தரந் தள்ளமாட்டான். ஆதலால் 'சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே' என்றும், 'அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை யிகழ்வார் பொறுத்தல் தலை' என்றும், 'தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றிமற், றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை, எரிவாய் நரகத்து வீழ்வர்கொலென்று, பரிவதூஉஞ் சான்றோர் கடன்' என்றும், சொல்லிய நீதி வாக்கியங்களையும், கோபமும் பாவமும் சண்டாளமென்கிற கொள்கையையுஞ் சொல்லி, முன் நடந்த நன்மை தீமைகளை யெல்லாம் ஈச்வரார்ப்பணஞ் செய்து, அக் காலத்தில் கூறிய சபதங்களையும் இப்போது செய்ய யத்தனிக்கும் சண்டையையும் விடுத்து, திருதராட்டிரன் பழியும் பாவமும் தழைக்கப் பாராளும் ஆசை வினைக்கும் எண்ணத்தையும், அறுசுவை யுணவாதிகள் விரும்பி அனுபவிக்கும் போகத்தையும் ஆறுகப் பெருகும் சோகத்தையும் விடுத்து, இந்தத் தருமராஜனுகிய புத்திரனுல் இருபத்தொரு தலைமுறையும் கதி சேரப் பெற்றுன்' என்னும் பெரும்புகழ் எனக்கும் என் கால் வழிகட்கும் விட்டு நீங்காதிருப்பதற்கு நன்னெறி ஒங்கிய தவத்தை உறுதியாகச் செய்வது உத்தமம். இதுதான் குடும்பக் கொத்து குன்றுமல் இருக்கவேண்டுமென்னும் ஆசைகொண்ட உமது தந்தை உரைத்தது" என்று சஞ்சயன் சொல்ல, பெருமை என்பது சிறுமைப் படாமல் சத்தியத்தை அனுசரிக்கும் மெய்ஞ்ஞான சிந்தையனுகும் தருமகந்தனன், பூதபவிஷ்ய வர்த்தமானந் தெரிந்துணர்ந்த சஞ்சயன் பன்னிச் சொல்லிய வார்த்தையை உன்னி, அழகுற நகைத்து, "தெளிந்த சஞ்சயனே! இவ்வுலகத்து இராஜ ராஜர்களும் நகைக்கும்படியாகத் துரியோதனுதியரால் நாங்கள் பட்ட அவமான நிந்தைகள் சக்ரவாளகிரிபோல வளர்ந்து வளர்ந்து நிலைத்திருக்க, அதனுல் விளைந்த சபதங்கள் பெரும்புறக் கடல்போல் சூழ்ந்திருக்க, இவைகளைச் சாதியாமல் முக்தியடைய முயற்சி செய்ய வேண்டுமென்று என் பெரிய தந்தை சொல்லியதைப் பார்க்கிலும், தமப்பிரபை - இமப்பிரபை - தூமப்பிரபை - வாலுகப்பிரபை - சாகரப்பிரபை-இரத்தப்பிரபை-அழற்பிரபை என்னும் வெப்பமாகிய ஏழு நரகங்களிலும் தனித்தனி வீழ்ந்து அனுபவிப்பது மிகவும் நன்மையாம். 'சத்திய வசனந் தப்பினுல் நித்திய நோன்பு பலிக்குமா?' 'தாயைக் கொன்ற பழியிருக்கக் கோடி கோடியாய்த் தானம் பண்ணினுல் மோக்ஷம் உண்டாகுமா?' 'ஆசார ஈனமாகிய சண்டாளத்துவம் வகித்து விரதம் அனுஷ்டித்தால் தவங் கைகூடுமா? பழியையும் நிந்தையையும் சுமந்த நாங்கள் எத்தனை விதமாய்த்

தவஞ் செய்தாலும் நரகமே அன்றிச் சுவர்க்கங் கிட்டாது. ஓ சஞ்சயனே! ஒரு சிறிய கதையைச் சொல்லுகிறேன் கேளும் :—

ஆற்றின் கரைமேல் ஐந்துபேர் நின்றார்கள். நிரம்பிய வெள்ளத்தில கரடியானது தலையைக் கால் சந்தில் வைத்துக் கொண்டு மிதந்து வந்தது. அதைக் கண்டு அவர்கள் கம்பளி மூட்டையென்று கருதினார்கள். அவருள் ஒருவன் நீந்திப் போய் அதைப் பற்றினான். நிராதரவாக வந்த கரடி அந்த மனிதனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டது. இவனும் அதுவும் முழுகி யெழுந்து வருத்தப் படும்போது கரையில் நின்ற நால்வரும் "கம்பளி மூட்டையைக் கைவிடுத்து நீ வந்து விடு" என்று சொல்ல அவன் "கம்பளி மூட்டையை நான் கைவிட்டு விட்டேன். கம்பிளி மூட்டை என்னைக் கைவிட வில்லை" யென்று ஓங்கிக்கூவி உயிரை யிழந்தான். அதுபோல் சபதத்தையும் யுத்தத்தையும் கைவிட்டு நாங்கள் தவஞ் செய்தாலும், அவைகள் எங்களைக் கைவிடாது. மேலும் எக்குலத்தாருக்கும் இணையற்ற மேலாகிய நற்குணம் நற்றவம் எங்களுக்கு விளங்கச் சொல்ல வேண்டியது தந்தையின் கடமையேயாம். அந்தத் தந்தையின் தருமகுண வாக்கியத்தைத் தள்ளாமற் செய்வது எங்கள் முறைமையே ஆயினும், தருமசாம்பிரதாய மாகிய நற்குலத்திற் பிறந்த மன்னர்களான இராஜ முறைமை தவறி வேறெருரு காரியங்களைக் குறிப்பார்களா? சஞ்சயனே! வீரப் பிரதாபத்தில் சிறந்த தீரர்கள் கூறிய சபதம் நிறைவேறும் படியாகச் சத்துருக்களுடன் எதிர்த்துப் புறமுதுகு காட்டி ஓடாமல் நின்று ஜயங்கொண்டு வெற்றிமாலை சூடினால், இப்பூமியில் கல்லெழுதி நாட்டுவதும் அன்றி வீரசொர்க்கமும் பெறுவார்கள். இப்பூமியாகிய தலமும் சலமும் உள்ளவரைக்கும் அவர்களின் குலமும் குணமும் கீர்த்தியும் நிலைக்கும். இதைவிட அறமாகிய தவம் எவ்வுலகத்திலும் இல்லை. முன்கூறிய சபதமும் சத்துருக்களும் முடியாதிருக்கத் தவஞ்செய்ய மனம் வராது. இப்படிக்குச் சூரனாகிய தவம் எங்களுக் கிருக்க, காட்டிலிருந்து கந்தமூல பலாதிகளைப் புசித்துண்டு காற்றிலும், வெய்யிலிலும், பனியிலும், குளிரிலும் வருந்தி மோக்ஷம் பெறும்படியாகப் பெரிய தந்தை முதிர்ந்த வயதினால் தெரியாமற் சொன்னதுபோலும் இருக்கின்றது" என்றிவ்வாறு கணைகள் சிவக்கக் கடுங்கோபத்துடன் சொல்லிய வார்த்தையைச் சஞ்சயன் கேட்டு "ஐயா! பழைய பகையை மனதில் குடி வைத்துக்கொண்டு யுத்தம் புரிந்து சபதம் நிறைவேற்ற நினைப்பது, கற்றுணர்ந்த காவலராகும் புண்ணியம் நண்ணிய விவேகவான்களுக்கு முறைமையோ? அப்படியே யுத்தம் செய்தாலும் என்ன பலன்? அண்ணன் - தம்பிகள் - மாமன் - மைத்துனர் - புத்திரர் - மித்திரர் - சுற்றத்தார் - மற்ற தேசத்தார் யாவரையுங் கொன்று, யமன் கையில் ஒப்பி வைப்பதினும் வனங்களி

லிருந்து தவங்க ளிழைத்துப் பாவங்க ளொழிப்பது வகையோ? அதுதான் என்றும் அழியாத இசையோ? 'முள்ளாடியும் வாழைக்கே கஷ்டம் வாழையாடியும் வாழைக்கே கஷ்டம்' தெரியாத பேர்களைத் தெரியச் செய்யலாம். தெளிந்தோர்களைத் தெருட்டுவது அருமை. மேலும், திங்கள் மரபுக்கு வித்தாகியும், உங்களுக்கெல்லாம் பாட்டனுகியு மிராநின்ற பீஷ்மாசாரியார், உயர்ந்த சிலைக் குருவாகிய துரோணச்சாரியார், கிருபாச்சாரியார், ஒருசாலை மாணுக்கரில் பால்ய சிஷ்யராகிய குருபுத்திரர் அசுவத்தாமர், தந்தைக்குப் பிந்திவந்த தத்துவஞானி யாகிய விதுர மகாராஜன் முதலிய பேர்கள் இந்தக்குலந் தழைக்க வேண்டு மென்னும் உத்தம நினைப்பினை யுடைய பெரியோர்கள். இவர்க ளெல்லாரும், புவன பூபதி யாகிய திரிதராட்டிர மகாராஜனுடைய செல்வ நலத்தைக் குறித்துக் காவலாகக் கைவசப்பட் டிருக்கின்றவர்கள். மேலும் இவர்கள் திரிலோக கண்டகனென்றும் உமக்குத் தெரிந்திருக்குமே? இப்பேர்ப்பட்ட முதியோ ரெல்லாரும் அழியும்படியாகப் பழிபூண்டு, உலகம் அதிர வெற்றிகொண்ட அன்றைக்கு அல்லவோ நீங்கள் ஒருகுடை நீழலில் உலகம் அடக்கி ஆளப்போகிறது. அவர்கள் அழியப் போகிறதும் இல்லை. உலகம் நீங்கள் ஆளப்போகிறதும் இல்லை. ஜயிப்பதற்கு அருமையாகிய காரியங்களில நீங்கள் துணிவது நன்மை யன்று. இத்தன்மை யாகிய உத்தமர்களுடன் எதிர்த்து யுத்தஞ் செய்து கொல்லுவதற்கு உங்களுக்கு ஒருகாலும் மனந் துணியாது. இரக்கமும் ஜீவகாருண்யமும் உள்ள ஏந்தலே! தன் பலமும் எதிரியின் பலமும் யோசிக்க வேண்டிய தருமத்தை இங்கு நினைக்க வேண்டும். ஒருவரை நெருங்கிய கோபாக்கினி மிகுந்த கண்களை யுடைய வலிமையோ ரென்றும், மற்றொருவரைச் சாமர்த்தியம் இல்லாத துர்ப்பலரென்றும், இப்போது நினைப்பதிலும் சொல்லுவதிலும் என்ன லாபம்? அவரவர் சேவகங்களை எதிர்த்து யுத்தஞ் செய்யும் அமர்க்களத்தில தெரிந்துகொள்ள வேண்டியது. அன்றியும் சந்திர குலத்திற் பிறந்த இருதிறத்தவரும் சிறியோர்கள் புத்தி கேட்டு நிதானிக்காமல் போர்செய்ய நினைப்பீர்களானால், மெலிவாகிய துன்பக் கடலில் மூழ்கிப்போய் விடுவீர்கள். நடுவு நிலைமையும் நன்மனமும் உடைய பெரியோர்களின் புத்தியைக் கேட்கின், அதனால் இன்பக் கடலுள் மூழ்கலாம் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். அப்பால் உங்கள் சித்தம்" என்று கூறிய மாத்திரத்தில் சூரியனைக் கனிந்த பழமெனத் தாவிய கவியாகரண பாண்டித்திய முடைய ஆஞ்சநேயருக்குத் தம்பியாகிய பீமசேன மகாராஜன் இனிமையு தமையனை முரசத்துவஜ மகாராஜனுக்குப் பதிலாக நாமே நேரிற் பேச வேண்டியது கடமை. இனிச் சும்மா விருக்க லாகாது" என்று இரு விழிகளும் செவ்வரக்கினு நிறக்கச் சிவக்து, ஒப்பற்ற உகாந்த

காலத்தினில் மேகம் இடிக்குந் தன்மைபோல் முழங்கிக் கொடிய கோர மேற்கொண்டு சொல்லுவதானன்:—

"ஓ சற்குணத்திலுஞ் சாதுர்யத்திலுஞ் சிறந்தவனே! எங்களுக்கும் எங்களைப் பகைவராக்கிய எதிராளிகளுக்கும் பொதுவாகயிருக்கும் நீ, ஒருதலைப்பக்ஷமாக அன்புகொண்டு பேசுவது உனக்குத் தகுதியோ? இது நியாய மன்று. ஆனால் 'அரச னெவ்வழியோ அவ்வழி குடிகள்' என்னுந் தன்மையாய்ச் சொல்லுகின்றனை. அதுநிற்க, பெரியோர்களுடன் யோசித்து என் பிள்ளைகள் கூடிவாழும் விதத்தைச் சொல்லி அனுப்புகிறேனென்று அஸ்தினபுரத்திற்குத் தூதுவந்த உலூகமா முனிவரிடத்தில் எங்கள் பெரிய தந்தை சொல்லி அனுப்பியிருக்க, அதை மறந்து இப்போது காட்டைத் துறந்து காட்டி. விருந்து தவத்தைச் செய்து முக்தி பெறும்படியாக எங்களுக்குப் புத்திசொல்லி அனுப்பிவைத்தது என்ன காரணம்? ஆதிசேஷனைச் சுமக்கப்படும் அவனியை ஆளும் அரசர்கள் ஒன்றைச் சொல்லி, மற்றொன்றை விரும்பி, அது வேறுபட்டபின்னை ஒன்றைச் சொல்லுவார்களோ? ஆகிலும் பாண்டவர்களும் கௌரவர்களும் இடக்கண், வலக்கண் என்று எண்ணுமல், பிடரியிற் புத்தியுடைய கண்ணில்லாத அண்ணல், தகுதியும் பெருமையும் அல்லாத காரியங்களைச் சொல்லி அனுப்பினன். காவலரும் சேனைகளும் கடல்போற் கலக்கு வெப்பமாகிய யுத்தஞ் செய்யும் போர்க்களத்தில், என் கரந் தாங்கிய கதையினால் செய்யப்பட்ட அதிசயமாகிய தவங்களைச் சொல்லுகின்றேன் கேளும். ஓ ஐயனே! எங்கள் தந்தை சொல்லியவண்ணம் நீ வந்து சந்தோஷித்துச் சொல்லியது அரிய தவம் அல்லவே யல்ல. நான் செய்யப்போகின்றது பெரிய தவம். அஃதென்னவென்றால், சத்துருக்களின் தேகத்திலிருந்து மாரிபோலப் பொழியும் உதிரச் சோரியில் மூழ்கி, தலை அறுந்து ஆடும் கவந்தமாகிய காட்டில் ஸ்தம்பித்திருந்து உள்ளத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் கொடிய தீவினைகளைக் களைந்துவிட்டால், அதுதான் தவங்களுக் கெல்லாம் தலையாகிய மோக்ஷத்தைத் தருவதான தவம். இது எனக்குப் போதும். இந்தத் தவமும் அல்லாமல் பிரபலமாகமும் நடத்துகிறேன். கேளும்! கடல் சூழ்ந்த உலகத்தில் போர்க்களம் என்னும் யாகசாலையில் துரியோதனனென்னும் நூறு பசுக்களை என் கதையாகிய யூபஸ்தம்பத்தில் அணைத்து, அவர்களின் வினைக் காற்று வீச எனது கோபாக்கினி மூட்டி, திரௌபதையின் சபதமென்னும் நெய்யைச் சொரிந்து, பகையென்னும் சமித்தைச் சேர்த்து, வீரம் என்னு முளியினால் வேத மந்திர மொழிந்து பாஞ்சாலி விரித்த கூந்தல் முடிக்க அவிர்ப்பாகங் கொடித்து, எங்கள் பெரியதந்தைக்கும் சந்திரகுலத்திற்கும் குறைவில்லாப் புகழ் நிறையும்படியாக இராஜசூய யாகமும் செய்வேன். அதுவரையில் கதையினால் ஜலத்தில் அடித்து

மேல் எழும்பும் துளியை வாயினல் அருந்தித் தாகவிடாய் தீருவ தன்றிக் கரத்தினுற் ஜலம் வாரிப் பருகேன். அப்போதுதான் யான் சபதங் கூறிக் கட்டிய கங்கணத்தையும் அவிழ்த்துவிடுவேன். அக்காலைய மரியாதையும் அரசுரிமைக்குரிய முடியும் அறக் கடவு ளாகிய எங்கள் அண்ணுவுக்குத் தரிப்பேன்" என்று ஆங்காரங் கொண்டு ஓங்காரமிட்டுப் பற்பல மொழிகள் சொல்ல, மற்புய பிம னைத் தருமராஜன் சையமர்த்தி, "மலர்மாலையும் மணிமகுடமும் தரித்த மன்னர் மன்னன் தூது அனுப்பவந்த சஞ்சயனே! எனக் குத் தோன்றியது ஒன்று சொல்லுகின்றேன். உனது மனங் கொள் ளக் கடவை! அதாவது துரியோதனன் மோசமாகப் பறித்துக் கொண்ட இராஜ்யத்தை வாங்கவேண்டும் என்றும், வழியாய்க் கிடைக்கா விட்டால் யுத்தஞ் செய்து வெற்றியிற் கொள்ளுவோம் என்றும், எவ்விதத்திலும் ஜயங்கொள்ளும் வீரமுடையவர்க ளென் றும், வரங்கள் முதலியவை பெற்றோ மென்றும் மிகுந்த சிறப்புக் களைத் தாங்கியோ மென்றும், மகிழ்ச்சி யடைந்து சொல்லவில்லை. வினைவசத்தால் ஈசுவரச் செயல் எப்படி நடக்குமோ யாம் அறி யோம். மாமாவாகிய சகுனியை எங்களுக்கு இணையாகிய எதிரி யாக்கி, மாயச் சூதினல் வையக முழுமையும் கைக்கொண்ட தல் லாமல், சபையோர் கைக்கத் தம்பிமார் உடல் பதைக்க, எங்களை மதிக்காமல் தையல் திரௌபதையை அவமானப் படுத்திய தாழ்ச் சியை யோசிக்குமிடத்தில், இந்தத் தேகத்தையும் வைத்திருக்க வேண்டுமோ? சஞ்சயனே! அப்போது எங்களுக்குக் குலமும், கல மும், மானபிமானமும், தீரமும், வீரமும், செல்வமும், கல்வியும் இல் லாமல் தாங்கள் சித்திரம்போ லிருக்க வில்லை. ஓ உத்தமனே! சத்தி யமும் தருமமும் குன்றலாகாது என்று மனம் பொறுத் திருந்தோம். மன்னர்முன் கூறிய வாக்கியப்படி பதின்மூன்று வருஷ மும் கழித்தோம். நீதியின்படி தூதும் விடுத்தோம். பெரிய தந்தை சொல்லி யனுப்பிய வார்த்தையையும் கேட்டோம். இனிமேல் ராஜவீர முறைமை தப்பாமல் எங்கள் சபதங்களையும் மனத்திலுற்ற குற்றங்களையும் நீக்கிக்கொள்ளச் சித்தமா யிருக்கின்றோம். மானங் கெட்ட பிற்பாடு பிராணனிருந்தும் பிரயோஜனம் என்ன? 'குண மென்னுங் குன்றேறி நின்றூர் வெகுளி, கணமேனுங் காத்தலரிது' என்று இருக்கும் நீதிக்குச் சரியாக நாங்கள் இதுகாலும் நடந்து வந் ததும், இனி நடக்கப்போகிறதும், நன்மையோ தீமையோ யோசித் துப் பார். அழகிய மேனியிற் குணபூஷண மணிந்த ஓ சஞ்ச யனே! எந்தையாகிய பாண்டு இறந்த சிந்தைத் துயர்தீர விந்தை யாகிய வித்தைகளைக் கற்பித்துச் சொந்தமாக இரக்ஷித்த பெரிய தந்தைக்கு இவை யனைத்தையுஞ் சொல்லும். நாங்களோ வாஞ்சாய குத்திற் கைபழகிய மகா ராஜாவின் மைந்தர்களுடனேயும், அவர்க ளுடன் சிநேகமா யிருந்து தருமங்களையும் சத்தியங்களையுங் கெடுத்

துப் பாபத்தைச் சேர்க்கும் ஆபத்தைப்போன்ற சில பாவிகளுட னேயும் யுத்தஞ் செய்து வெற்றியடைந்து, எங்கள் சபதம் செலுத்துவதே யன்றி, வேத வேதியர், மூதாதையர், சிறிய தந்தை அசுவத்தாமா முதலியவர்களிடத்தில் போர்புரிய நினைக்க மாட்டோம். கல்வியின் அழகார்ந்த சஞ்சயனே! அரசர்களுக்கு இயல்பாவது சொன்ன சொற் றப்பாமல் நீதி செலுத்தித் தருமபரிபாலனஞ் செய்வதேயாம். ஆகையால் நாங்கள் எங்கள் சபதங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வேலைகளில் மிகவும்ஜாக்கிரதையாக இருக்கின்றோம். எங்கள் பெரியதந்தை உம்மிடத்திற் சொல்லியனுப்பிய வார்த்தையைத் தள்ளிவிட்டோமென்று கோபங்கொண்டு, எங்கள் பேரில் இதுவரையிலும் வைத்திருந்த கிருபையும் கடாக்ஷமும் அவரிடத்திற் பொய்த்துப் போனாலும், நாங்கள் நம்பியிருக்கும் வழிபடு கடவுள் எங்களிடத்தில் வைத்த தயையும் அன்பும் ஒருகாலும் தப்பா. இவைகளை யெல்லாம் நிச்சயமாக நீ யுணர்ந்து கொள்" என்று தரும சொரூபி சொல்லவும், ஒப்பில்லாத பைந்துளபமாலை யணிந்த திருமார்பனாகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் அந்தச் சபையிலிருந்த அரசர்க ளெல்லாரும் வெவ்வேறாகக் கொண்டிருந்த எண்ணங்களை விடித்து, சந்தோஷத்தில் மூழ்கும்படியாக ஒரு வாக்கியஞ் சொல்லுகின்றார்:—

"ஓ சஞ்சயனே! வஞ்சகச் சூதாட ஆசைகொண்டு, பாண்டவர்களிடத்திற் பறித்த பூமியைத் துரியோதனன் கைப்பற்றிக்கொள்ள வேண்டியதே யொழிய, பேதையாகிய இந்தப் பாஞ்சாலியை மயிரைப் பற்றி இழுத்துவரச் சொல்லியதேன்? வயிறூற நூறு பிள்ளைகளைப் பெற்றும், மலடியாகிய பெரும் பாவியிலுங் கொடும் பாவி போன்ற காந்தாரியிடத்தில் 'மாமி! மாமி' யென்று சென்று கண்கலங்கிய மருமகளை 'பயப்படாதே' என்று ஆதரிக்காமல், 'சொந்தமைத்துனன்மார் சபைக்குப்போக லஜ்ஜை என்னடி' என்றும், 'அடிபோடி கள்ளி, காக்கை, கற் என்றால் மூக்கை மூடிக்கொள்ளும் காதகி!' என்றும் சொல்லி, தாக்ஷண்யமில்லாமல் 'கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு போ' என்று சொன்னதும் மாமிக்குப் பெருமைதானா? அந்தப் படுபாவி அவ்வாறே சபையில் இழுத்து வந்ததும், துன்மந்திரிகளெல்லாரும் சரிப்போனபடி பேசியதும் நியாயமா? மேலும், அம்மாது 'என் புருஷராகிய ஐவரெங்கே' என்று கேட்டால், சின்ன மனிதரெல்லாரும் கலகலவென்று நகைக்க, மன்னனுக்குத் துணைவனாகிய கர்ணன் 'இனி உனக்கு அவர்கள் ஏன்' என்று சொன்னது குலமைந்தன் காதுக்குக் குளிர்ச்சிதானா? மேலும், உத்தமி புத்திரனாகிய உலகாளும் ராஜன் அந்த மகா சபையில் வஸ்திரத்தை உரிந்து மானபங்கஞ் செய்யச் சொன்னதும், 'என் துடைமேற் கொண்டு வந்து அவளை வையடா, தம்பி' என்றதும்,

ஒரு பெரிய மதிதானு? கடவுள் சகாயத்தினுலும் பதிவிரதா தர்மத்தினுலும் வளர்ந்த மாளாத வஸ்திரத்தைக் கண்டு, திரிதாட்டிரன் வணங்கி, 'என் மருமகளே! இவர்களெல்லாரும் உன் பிள்ளைகள். நீ என் குலதெய்வம்; கோபிக்க வேண்டாம்' என்று வேண்டிக் கொண்டு, சூதினுல் தோற்ற நாடு நகரங்களெல்லாங் கொடுத்த போது, அதை இந்தத் துரியன் கூடாதென்று தடுத்ததும் முறைமைதானு? மறுபடியும் பாஞ்சாலி நாணத்தோடு மிருந்து சூதாடித் தெய்வ அநுக்கிரகத்தினுல் பாண்டவர்களையும் பார் முதல் பாக்கியங்களையும் கெலித்துத் திருப்பியபோது, 'இன்னம் இவளோடு ஆடினுல் மாமா! நம்மையும் உம்மையும் கெலிப்பாள்' என்று சகுனியிடத்திலும் மற்ற பேர்களிடத்திலும் ஆலோசித்துப் பன்னிரண்டு வருஷம் வனவாசமென்றும், ஒரு வருஷம் அக்ஞாதவாசமென்றுஞ் சொல்லி அனுப்பி விட்டதும் நீதிதானு? 'இந்தப் பதின்மூன்று வருஷமுங் கழித்து அவர்கள் வந்தால் நாடு கொடுத்து விடுகிறேன்' என்று சத்திய வசனஞ் சொல்லி, இப்போது தூது விடுத்துக் கேட்டால் 'யுத்தத் திற்குச் சித்தமாயிருக்கின்றேன்' என்று சொல்வது நன்மை தானு? அதற்குத் தந்தையாகிய பெரியவர் 'பாண்டவர் காட்டுக்குப் போய்த் தவஞ்செய்வதே தனக்குக் கண்காட்சி' என்று சொல்லி யனுப்புவதும் முறைமைதானே? இவைகளெல்லாம் உத்தம குலத்திற் பிறந்த யோக்கியர்களாகிய அரசர் செய்யும் தரும நீதிக்கு மாட்சிமையாமா? ஓ சஞ்சயனே! முளையிற்றூனே கிள்ளி எறிந்தால் பிற்பாடு விளையவும் விளையாது, கிளையவுங் கிளையாது. அந்தக் காலத்தில் தன் பிள்ளைகளை வயிரமாகும்படி விட்டுவிட்டு, 'இந்தக் காலத்தில் வாய் புளிப்போ' மாங்காய் புளிப்போ என்பதுபோலும், 'கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்தால், அது உருகிக் கண்ணில் விழும், அப்போது பிடித்துக் கொள்ளலாம்' என்னும் தன்மைபோலும் இருக்கின்றது பெரிய அரசன் சொல்லி வரவிட்ட வார்த்தை. மேலும் இந்திரப்பிரஸ்தத்தி லிருந்த பரிசுத்தவான்களாகிய பாண்டவர்களை மரியாதையுடன் வரவழைத்துப் பசுவைப் புலிவாயில் தள்ளிக் கொடுக்குந் தன்மைபோலத் துரியோதனன் சகுனியிடத்தில் காட்டிக் கொடுத்தபோது, தூய்மையும் விதரணையும் உடைய பெரியோர்களும், பெரிய தந்தையாகிய அரசனும், இப்போர்ப்பட்ட இகழ்ச்சியெல்லாம் சபையில் நடக்கப் பார்த்து, ஜீவனில்லாத தேகம் போலவும், சிங்துவையில்லாத ஊளமை போலவும் இருந்தார்களே யொழிய, துரியோதனு 'உனக்கு இது புத்தியல்ல! மரியாதையல்ல! தருமம் அல்ல' என்று ஒரு வார்த்தை சொன்னதும் உண்டோ? சஞ்சயனே! சுத்தமுள்ள உத்தமர்களானுல் எவரையும் ஒரு விதமாகக் கொள்ளும் பட்சமில்லாமலும், கெடு நினைப்பு இல்லாமலும், இருதிறத்தார்களும் பொதுமை என்னும் நீதியில் வல்லவர்களுமாயிருந்து, 'இந்த அநியாயமும் அக்கிரமமும் சந்திர குலத்தில்

நடக்கக்கூடாது, என்று ஒருவார்த்தையினால் சிறுத்திவிடக் கூடுமே. அப்படி விளக்காமலிருந்து இந்தத் தீங்கு விளைந்ததற்குக் காரணம் திரிதராட்டிர மகாராஜனே யன்றி வேறொருவரை நோகத்தக்கது இல்லை. இதற்கு மூலஞ் சொல்லுகின்றேன் கேளும் சஞ்சயனே! காமம்-குரோதம்-உலோபம்-மோகம்-மதம்-மாச்சரியம்-ஆகிய உட்பகை ஆறுங் கூடிய துரியோதனனே கொடிய பெரிய விருக்ஷம்; அதற்குப் பிராணனும் வாசனையும் சூரிய குமாரனுகிய கர்ணன்; சப்திக்கும்படியாகிய கிளைகள் சகுனி; 'கல்லின்மேல் வழுதலை காய்க்குமா' வென்றால், கொத்தாலாயிரம் கொடியாலாயிரம் என்னும் மைத்துனர்கள் அக்கிளைகளுக்கு இலைகள்; தம்பிமார்களோ பூவும் பிஞ்சும் காய்களுமாம். எவர்களுக்கும் உபயோகமில்லாத கனி துச்சாதனன்; திரிதராட்டிர மகாராஜனே இந்த விருக்ஷத்திற்கு மூலமாகிய ஆணிவேர். - சத்தியம்-பொறுமை ஜீவகாருண்யம் முதலான நற்குணங்கள் வாய்ந்த திவ்ய விருக்ஷம் தருமராஜன்; அதற்குப் பிராணனும் - குணமும் - மணமும் பீமசேனனும் விஜயனும். நகுல சகாதேவர் இருவரும் கிளைகள். ஒப்பில்லாத பூவும் பிஞ்சும் காயும் உலோகோபகாரமாகிய கனியும் யான்; கொருங்கிய பிராமணர்களும் வேதங்களும் இந்த விருக்ஷத்திற்கு மூலமாகிய ஆணிவேர். ஐயா சஞ்சயனே! இத்தன்மையவாகிய இரண்டு விருக்ஷத்தில் அழிவு இல்லாதது எது? அழிவது எது? உன் சிந்தையிற் றேர்ந்து மனப்பூர்த்தியாய் நிதானித்துச் செப்பக் கடவாய்" என்று சொல்லி மேலும் விளம்புகிறார்—

"கேளும் சஞ்சயனே! சத்துருக்களைத் தொலைத்துச் சபதமுடிக்கக் கோபங்கொண்டிருக்கும் பீமசேனனும் அர்ஜுனனும் யுத்தத்திற்கு எதிர்த்த காலையில், மண்ணுசை பிடித்த வாழ்வை மனங் கொண்டிருக்கும் வஞ்சகராகிய துரியோதனாதியரின் வல்லபங்களை நாம் காண்போம் என்பதுவும் உண்டோ? 'அரசமரத்தைப் பிடித்த சனி அதன்கீழ் வசிக்கும் ஆனைமுகனையும் பிடித்தது' என்பது போல, துரியோதனாதிகள் நூறுபேரும் இவர்களுக்குச் சகாயமாகிய மன்னவர்களும் மாண்டுபோவது நிச்சயம். வையகம் முழுமையும் பாண்டவர்கள் ஆண்டு அநுபவிப்பது சத்தியம். விவேகம் நீங்கிய திரிதராட்டிரன் சொல்லி விடுத்த கொடிய தீமொழியை நீர் கேட்டுச் சம்மதித்து இவ்விடம்வந்து கூறியதை எங்கள் உயிருள்ள வரையிலும் நாங்கள் மறக்கமாட்டோம்" என்று சர்வஜீவ தயாபரனுகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லவும், இந்த வாக்கியங்களை யெல்லாங் கேட்டு மனங்கலங்கிய சஞ்சயன் வேறு தருமங்களையும் யுக்திகளையும் சொல்லுதற்குப் புத்தி தோன்றாமல், உடலயர்ந்து ஊர்த்துவ சுவாசங்கொண்டு, சற்றுநேரம் நின்று, "இத்தன்மையாகிய எண்ணங் கொண்டிருக்கும் இறைவர்களே! நான் இவ்வளவு தூரம் வந்

தும், பெரிய அரசன் மொழிந்த வார்த்தைகளைப் புதிய அலங்கார மாகச் சொல்லியும், யாதொரு பிரயோஜனமும் பெறுதவளாக இருக்கின்றேன். தாங்கள் ஆதியோடந்தமாகச் சொல்லிய வசனங்கள் யாவற்றையும் பூமண்டலாதிபதியாகிய பெரிய அரசனுக்குப் போதிக்க வேண்டியிருப்பதால், நீங்கள், கொண்டிருக்குங் கோபங்களும் மனஸ்தாபங்களும் நீக்கவேண்டும். அறமாதி புருஷார்த்தங்களை ஆபரணமாகப் பூண்ட, ஓ ஐவர்கள் முதலிய அரசர்களே! தங்கள் சமுகத்தில் இன்று யான் இயம்பிய மொழிகள் இகழ்ச்சியுடையனவாயினும், அவற்றில் சொற்சோர்வு முதலிய குற்றங்கள் இருந்தாலும், கோபமில்லாமல் க்ஷமிக்க வேண்டும்" என்று உபசாரஞ்சொல்லி "விடை கொடுங்கள்" என்று வணங்கினாள். அவளை நோக்கி, அந்த மன்னர்கள் சிற்சில வார்த்தைகள் சொல்லத் துணியுங் காலையில், மேருகிரிச் சாரல் வரைக்கும் போர்புரிந்த தீரதரஞ்சிய தானுகாரஞ்சும் பாண்டு புத்திரன் பார்த்து, "மடைகளென்னும் வாயினுல் கடகடவென்று வரும் சலங்களைக்கொண்டு மடமடவென்று வளரும் பயிர்களார்ந்த செய்கால் வளங்களையுடைய அரசர்களே! சற்று இருங்கள்" என்று கையமர்த்திச் சஞ்சயனைப் பார்த்து, "ஐயா! எங்கள் தந்தையாகிய பாண்டுபூபதி மாண்டுபோன ஏழாண்டினில் ஆதரித்து, தனுர்வேத முதலிய கல்விகளும் வருவித்து, இளவரசு முடிதரித்து, சகல சுபசந்தோஷ வாழ்வைத் தந்து, செவிப்புலனும் மதிக்கண்ணும் மகிழ்வு பெறக்கண்ட அவர், இப்போது அவைகளை யெல்லாம் விடுத்து, எங்களுக்குத் தாழ்வைக் கொடுத்து, கொடுமையாகிய பயிரைத் தழையச் செய்தார். ஆகிலும் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்றபடி, பிதாவினுடைய வார்த்தைக்கு மேலாகிய மந்திரங்கள் ஒன்றும் இல்லாமையால், அந்த மொழியைத் தப்பி நடக்கலாகாது. சில பிள்ளைகள் காடாண்டு தாழ்விற் பறக்கவும், சில பிள்ளைகள் காடாண்டு சிறக்கவும் தந்தை செய்யலா மென்று உண்மை நூலுணர்ந்த உத்தமர்கள் சொல்லி இருக்கின்றார்களோ சஞ்சயனே? இந்திரப் பிரஸ்த மென்னும் நகரையும், குருநாட்டையும், சுகுதியாகிய செல்வங்களையும், நால்வகைச் சேனைகளையும், நாங்கள் விரும்பவில்லை. பதின்மூன்று வருஷம் துக்கத்தையே சுகமாகக்கொண்டு காடு திரிந்து கலங்கி, கசங்கி வந்த எங்களிடம் ஆசையுடைய பெரிய தந்தையாகும் அத்தன் கண்டு, 'நமது புத்திரர் மிகவும் வருந்தி வந்தார்களே' என்று உட்கொண்டு, எங்களுடைய அருமை பெருமை யாவும் தெரிந்து, தமது மனத்தில் தோன்றியதைக் கொடுத்து, 'அப்பா நீங்கள் இதை வைத்துக்கொண்டு வாழ்வைப் பெறுங்கள்' என்று சொன்னால், குலமும் நலமும் கொடிகொண்டு தழைக்கும். பெருமையும் உண்டாம். உங்கள் மனத்தில் விளைந்த குறையும் நீங்கும். இப்போது ஏங்கி உம்மை வரவிடுத்தற் கேது

வாகிய பிழையும் எப்போதும் இல்லாமல் நீங்கிவிடும். இப்போதும் சிறப்பினையுடைய பெரிய தந்தையின் வார்த்தையைத் தள்ளாமல் சிரசாக வகித்துக்கொண்டு, அவருக்கே கீர்த்தியுண்டாகுப்படியாக இராஜ தருமமும் தப்பாமல் முயற்சி செய்துகொண்டு, நடந்து போன காரியங்களை யெல்லாம் கூடாமல், சில வருடங் கழித்துக் கொண்டு வருகின்றோம். இதை நிறைந்த அன்பினையுடைய என் தந்தையினிடத்தில் சொல்லக் கடவை, நீதி பிரக்யாதியுடைய சஞ்சயனே! 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது தோன்ற இருக்கும் குருதியையுடைய பெரிய தந்தைக்கும், தாயாகிய காந்தாரியம்மனுக்கும், தவ விரதத்தில் உயர்ந்த பாட்டனாராகும் பீஷ்மாசாரியாருக்கும், காமம் - வெகுளி - மயக்கம் அகற்றிய துரோணாசாரியார் - கிருபாசாரியார் - விதுரமகாராஜன் முதலிய பெரியோர்களுக்கும் திக்கு நோக்கிப் பணிந்தோம் என்று சொல்லும். மற்றவர்களுக்கு க்ஷேமம் விசாரித்தோ மென்று சொல்லும்" என்றுரைத்து, கரைதிரையை ஓட்டித்தேவாமிர்தத்தையும் தெவிட்டச் செய்யும் திவ்விய போஜனம் அளித்து, சுகந்த பரிமள சந்தனங் கொடுத்து, மலர்மாலைகளும் அளித்து, அருமையாகிய பெருமையிற் சிறந்த பொற்கலையும் இரத்தின பூஷணங்களும் புனைந்து கொள்ளும் புடைவையும் தந்து, போய்வாருஞ் சஞ்சயனே!" என்று செலவு கொடுக்கவும், மற்றவர்களிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு, வேகப் பரி பூட்டிய இரதம் ஏறி விரைவாகச் சென்று, திரைவாயிற் சூரியன் செல்லுங் காலத்தில், நோக்குவதற்குக் கண்கள் பாக்கியஞ் செய்ய வேண்டியதான சிலாக்கியமும் யோக்கியமும் உடைய அஸ்தினபுரத்திற்கு வந்து சேர்ந்தான் சஞ்சய முனிவன்.

இப்பால் சஞ்சயன் திரிதராட்டிர மகாராஜன் அரண்மனையுட் சென்று, கண்டு வணங்கித் தூது போய்வந்த சங்கதிகளைச் சுருக்கமாகச் சொல்லத் தொடங்கி "இந்திர பதத்தி லுயர்ந்த இறைவனே! கேளும்; மூவர்களுந் தேவர்களும் மற்ற யாவர்களும் கொண்டாடிப் புகழும்படியாகத் தருமபூபதி வாழும் துன்பம் நீங்கி, இன்பம் ஓங்கிய உபலாவியம் சேர்ந்து, தம்பிமார்கள் முதலிய தரணிபாலர்களும் சூழ்ந்திருக்கும் சபையிற் போய், அவர்களுடைய கருத்தெல்லாந் தெரிந்து கொண்டேன். ஆசைகொண்டு தேவரீர் சொல்லி யனுப்பிய தன்மை யாவற்றையும், இகபரத்துக் கேதுவாகிய இயற்கைகளையும், பற்பல வித உறுதியாகப் புகன்றேன். அருள் நிறைந்து சுரக்கும் முகத்தையுடைய ஐயா! திரும்பி வந்தேன். யான் தமது சமுகத்தில் என்னென்று சொல்லப் போகின்றேன். ஏகதேவ! சிறப்பினையுடைய துரியோதனன்-சகுனி-துச்சாதனன்-அங்கர்கோமான் இவர்கள் எல்லாரும் அவர்கள் நெஞ்சைவிட்டு நீங்காத பெரிய பகைவராயிருக்கும், உன் பேரிலிருக்கும் நிஷ்டூர உறுதி வசனங்கள் ஒரு யுகாந்தரம் சொன்னாலும் முடிவு

படர். பல வார்த்தையேன்! அவர்களுடைய மனவிருப்பப் பிரகாரம் இராஜமுறையிற் சொல்லிய நடுவு நிலையின்படி, அவர்களுக்கு அரசு கொடுக்காமற் போவீராஞல், அகண்ட சாம்பிராஜ்யமும் உமது மக்களும்-ஒக்கலும்-செல்வமும்-சீரும்இன்னஞ் சிலபகலில், வாயு குமாரஞகிய பீமசேனனுடைய கதையால் மாண்டுபோம். ஐயா! அவ்விடத்தில் நடந்த காரியங்கள் அநேகமுண்டு. அவைகளையெல்லாம் தேவரீருக்கு மாத்திரம் இப்போது உரைத்தால், பூரித்த தோள்களையுடைய புண்ணியர்களும், திண்ணிய கண்ணியர்களும், உன் புத்திரர்களும் மற்ற மித்திரர்களும், கேட்பதற்கு இல்லாமற் போகும். பொழுது விடிந்தவுடனே நித்தியவிதி முடித்துக்கொண்டு, தீங்கில்லாத திருச்சபைக்கு வந்து யாவருங் கேட்கச் சொல்லுகின்றேன்" என்று திரிதராட்டிரனிடத்தில் கூறிச் செலவு பெற்றுக்கொண்டு விதுரி போய்ச் சேர்ந்தான்.

இப்பால் உலகத்தை இருள்மூடிந் தன்மைபோல் தரணீசஞகிய திரிதராட்டிரனுக்கு மனச் சஞ்சலம் வந்து தோன்ற, பெரு மூச்சும் நெடு மூச்சும் உண்டாய், ஆலகால விஷத்தைப் புசித்தவர்கள் போல் நடுநடுங்கி, ஆறுத்துயரத்தில் வீழ்ந்து இரங்கி மயங்கித் தியங்கித் தாழ்ந்து ஒன்றுந் தோன்றுமல் நித்திரை யின்றி அரட்டலும் புரட்டலும் அதிகரிக்க, கண்ணீர்சோர அழுவான்! கையை யூன்றி எழுவான்! கால்நடுங்கி விழுவான்! கடவுளே என்று தொழுவான்! இப்படிக்குப் பலபல துன்பங்கள் அடைந்து சகிக்கமாட்டாமல் மந்திர யுக்தியிலும் தந்திர யுக்தியிலும் உயர்ந்த தம்பியாகிய விதுரமகாராஜனை அழைத்தோடி வாருங்களென்று உயிர்ச்சேவகரை அனுப்ப, அவர்கள் விரைந்தோடி வந்து வணங்கிச் சொல்லுமொழி கேட்டுச் செம்மலாகிய விதுரன் அர்த்த ராத்திரியில் அண்ணனிடத்திற்கு வந்து, அணிமலர் போன்ற அடியில்வீழ்ந்து ஆசீர் வசனங் கொண்டு அருகிலிருக்கும் ஆசனத்தில் இருந்து மார்பையும் தோளையும் தடவிக்கொடுத்து வறண்டகாவுக்குப் பசையுண்டாகக் கச்சாயவர்க்கங் கொடுத்துத் திடப்படுத்தி ஆலவட்டங்களால் உபசரித்துப் பல ஆறுதல்சொல்லி "என்னை அழைத்த காரணம் யாது அண்ணுவே" என்று வினவ, திரிதராஷ்டிரன் தம்பியைநோக்கி, "மாட்சிமையுடைய கல்வியிலும் கேள்வியிலும் தப்பாமல் தெரிந்து நடக்கும் அப்பனே! மேலாகிய அறிவிற் சிறந்த சஞ்சயன் ஐவரிருக்கும் உபலாவியம் புகுந்து, யான் சொல்லிய வசனங்களெல்லாம் உரைத்து மறுமொழி கொண்டு இவ்விடம் வந்து அவர்கள் கூறிய சங்கதி அநேகங்களில் சிற்சில காரியங்களைத் தெரிவித்து நாளை உதயத்தில் வந்து மற்றவைகளையுஞ் சொல்லுகின்றேன் என்று விடை பெற்றுக்கொண்டு விடுதிக்குச் சென்றான். அது முதல் கண்ணுறக்கங் கொள்ளாமல் கலங்கிய எனக்கு எரியுங் கொள்

ளியை ஏறத்தள்ளுவதுபோல் இந்த இராக்காலம் நான்கு யுகமாக நிலைபெற்றிருக்குந் தன்மை கொண்டு கலியச் செய்கின்றது. ' ஆகையால் ஏதாகிலும் தருமங்களைச் சொல்லி இந்த இராப்பொழுதைப் போக்கடிப்பாயென்று இவ்விடத்திற்கு உன்னை யான் அழைப்பித்தேன்" என்று இயம்பக் கேட்டு, இளைய தம்பியாகிய விதுரன் "என் அண்ணலே! சதுரங்க தளத்துடன் சாமர்த்தியமு முள்ள அரசன் சளையாமல் யுத்தஞ்செய்யத் துணிந்து வளைந்துகொண்டால், அவனை வெல்லுவதற்கு வல்லமை இல்லாத இராஜ தீரர்கள் எவர்களோ அவர்களும், தான் சம்பாதிக்காமலே தந்தைமுதலிய பேர்கள் எச்சிற்கையாலுங் காக்கையை ஓட்டாமல் சேகரித்து க்ஷேமத்தில் வைத்த திரண்ட திரவியங்களை பந்துஜன போஷகனான தருமம் பரோபகாரம் செய்யாமல் தங்களை பிரபுக்களென்று இறுமாந்து பொன்காத்த பூதமேபோற் பார்த்திருந்து, அந்தப் பொருள் இழந்த பிற்பாடு தலை கவிழ்ந்து வாகன மிழந்து பூரியராகித் திரியும் பேதைபோன்ற லோபிகளெவர்களோ அவர்களும், திருடவேண்டு மென்னும் ஞாபகமுடைய திருடர்களும், கலகமும் வஞ்சனையுஞ் செய்து ஜீவனஞ் செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டு திரிகின்ற கர்மிகளும், பற்பல பாஷைகளையும் சாஸ்திரங்களையும் படித்துணர வேண்டிய ஆசைகொண்டவர்களும், நித்திய தரித்திரத்தில் ஆழ்ந்து வருந்தி நிலையாகிய வாழ்வைப் பெறவேண்டு மென்னும் இச்சையை யுடையவர்களும், எந்தவேளையும் போகத்தை விரும்பிக் காமாந்தகராய்த் திரிபவர்களும், வியாதிக் காரர்களும், ஆகிய இவர்களெல்லாரும் தங்களுடைய கவலையினால் நித்திரை யற்றிருப்பார்கள். இவர்களுக்குக் கண்ணுறக்கம் வராதிருப்பது நியாயமே. பஞ்சாசத்கோடி பூமண்டலாதிபதியாகிய தேவரீர் கண்ணுறக்கங் கொள்ளாதிருப்பதற்குக் காரணமென்ன?" என்று வினவ அவனை இராஜன் நோக்கி, " நிறைந்த உயிருக்குயிராகிய தம்பியும் மதிமந்திரியும் தோழனுமாகிய தேன்றலே! கேளும்— பலமும் நலமுமுடைய பாண்டவர்கள் கடத்தப்போகின்ற யுத்தத்தில் அபலமும் சபலமுமுடைய அரவகேதனன் முதலாகிய புத்திர மித்திர வர்க்கங்கள் என்ன பாடு படுவார்களோ; எந்தக் கேடு கெடுவார்களோ வென்று நினைத்துப் பெருமூச்செறிந்து, நியங்கி மயங்கித் திடுக்கிட் டெழுந்து, நித்திரை வராமல் நெடுந்துயருழன்றேன். ஆகையால் என்னையுந் தேற்றி யுத்தம்நேரிடாமலிருப்பதற்குத் தகுதியாகிய யுக்தி உபாயங்களையும் புகன்று அபாயம் நீக்கி ஆளவேண்டும், ஐயனே!" என்று கூற", விதுரன் "ஓ அகண்ட பூமண்டலாதிபதியாகிய என்னண்ணலே! கேளும்—காசினியாளும் காவலர்களுக்கு இரண்டு காரியமுண்டு. அவைகளில், தாயாதி முதலிய பந்துக்களுடன் வித்தியாசமின்றி ஒருமை மனத்தினரால் உடன் பொருந்தி வாழ்வதொன்று. இது உலக மெச்சும் வாழ்வு. அப்படியில்

லாமல் விரோதங்கொண்டு பகைத்து வாழ நினைப்பது மற்றொன்று. மாறுத் துயரம் ஆறுகப்பெருக்கும். இது சத்திய வசனமாதலால், உமதுபுத்திரர் ஐவரைப் பகைத்துக் கொண்டபடியால் விளையப்போகின்ற சண்டையை விலக்க வல்லவர்களொருவருமில்லை. அப்பகையை முதலில் விளையும்போதே முளையிற் கிள்ளி விடவேண்டும். அப்படி கிள்ளாமற்போனதினால் இவ்வளவாய் விளைந்து விட்டது. ஆகிலும் ஐயா! சிருஷ்டிகர்த்தா வாகிய நிசைமுகன் முறைப்படி விதித்த விதியையே மதியும் அனுசரிக்கும். பாண்டுவின் புத்திரர் தங்களுக்கு நியாயமே நேரிடும் ஆபத்காலங்களிலும் தேவரீர் பேரில் வைத்திருந்த அன்பும் பக்தியும் விசுவாசமும் ஆசையும் தினையத்தனையேனும் மறந்து மாறுபட்டு வேறுக நினைக்கமாட்டார்கள். ஆனால் இந்திரப்பிரஸ்தத்திலிருந்தவர்களைச் சபா மண்டபம் பார்த்துப் போகலாமென்று பெரிய தகப்பனாகிய நீர் திருமுக மெழுதிக் கையொப்பமிட்டு வரவழைத்த காலத்தில், உமது புத்திரன் மாயச்சூதாடி அவர்களுடைய உரிமையைக் கைக்கொண்ட போதும், உமது பிள்ளைகளும் அவர்களைச் சார்ந்தவர்களும் இழிவாகிய சொற்களைச் சொல்லிய போதும், தாமரை மலர்போன்ற முகத்தையும் சரமாகிய கழுகின் பாலைபோன்ற குழலையுமுடைய திருவுக்கொப்பாகும் திரௌபதையை மயிரைப் பற்றி இழுத்து வந்த காலத்திலும், வஸ்திரத்தை யுரிந்து மானபங்கஞ்செய்த காலத்திலும், கரத்தைநீட்டித் துடையைக் காட்டி 'இத்தத்துடையின் மீது கொண்டுவந்து வையடா தம்பி' என்று கூறிய காலத்திலும், அவர்களுளமு முடலும் நொந்து வருந்தி உன் பேரில் வைத்திருந்த அன்பும் ஆசாபாசமுங் கொஞ்சங்கொஞ்சமாக நீங்கிப் போய்விட்டன. அதைக்குறித்து நீர் ஆயாசப்பட வேண்டாம். இவ்வுலகத்தில் உத்தமர் மத்திமர் அதமரென்று மூவருண்டு. அதாவது, 'கற்பிளவோடொப்பர் கயவர் கடுஞ்சினத்திற், பொற் பிளவோ டொப்பாரும் போல்வரே, விற்பிடித்து, நீர்கிழியவெய்த வடுப்போலுமாறுமே, சீரொழுகு சான்றோர் சினம்' என்றபடி, அண்ணு! அதமராகும் கயவர்களுடைய கோபம் பிளந்த கல்லைப் போலாகும். மறுபடியும் பொருந்தாது. மத்திமராகும் புத்தியீனர்களுடைய கோபம் வெட்டுப்பட்ட பொன்துண்டு போலாகும். மூசையில் வைத்து படிக்காரமிட்டுருக்கப் பொருந்துமப்பொன்போல் இன்னொரு புத்திமான் இடையிலிருந்து சமாதானஞ் செய்ய பின் அக்கோபம் நீங்கும். மேம்பாட்டினையுஞ் சிறப்பினையும் கல்வித்திறத்தினையும் குல சாம்பிரதாயத்தையுமுடைய உத்தமர்களுக்குக் கோபம் வராது. வந்தாலும் கண்ணீரின் பேரில் பாணத்தைத் தொடுத்தால் வடுவாகிய காயமும் வேறுபாடாகிய பிரிவுமில்லாமல் ஒன்றுகையிருக்குந் தன்மைபோலாகும். அதுபோல ஐவர் மேம்பாடுடைய சீரியராதலால், எப்போர்ப்பட்ட குற்றங்களையும் உடனே மறக்கத்

தக்கவர்கள். வீரவழகு நிறைந்த தோள்களையுடைய வேந்தே! ஆண்மையிலும் விவேகத்திலும் கீர்த்தியிலும் நீதியாயங்களிலும் இளையாமலுயர்ந்த பாண்டவராகிய நல்ல புத்திரர்களை இப்போது வரவழைத்து, அவர்களுக்குரிய பூமியைக்கொடுக்க மனதுளதோ சொல்லும். அப்படிச் செய்வீராகில் வீரகண்டாமணியைத் தரித்த அரசர்களாகிய ஐவரும் பெரிய தந்தையான உமது வார்த்தையைத் தள்ளமாட்டார்கள். சபையிற் சொல்லிய சபதங்களெல்லாவற்றையும் குடும்ப தோஷத்தையும் பராஜர்கள் பழித்த நிந்தையாகிய வழுச்சொல்லையும் மறந்து, உமது புத்திரர்களுடன் வித்தியாசமில்லாமல் பொருந்தி வாழ்வார்கள். அதனுலித்தச் சந்திரமரபு மேன்மேலாகத் தழைக்கும். இப்படிச் செய்யாமல் கொடிதாகிய யுத்தம் விளையும்படியாக எண்ணுவீராஞல், கடல்வளைந்த காசினியை யெல்லாம் அந்த ஐவரே ஒரு குடையில் ஆள்வார்கள். இரணகளத்திற்குப் பலியாகப் படுவோரெல்லாம் நினது புத்திரரும் பௌத்திரரும் மித்திரர்களுந்தான். இது உறுதியென்று நம்புவதற்கு ஒருகாலுஞ் சந்தேகமில்லை. ஓ சிரேஷ்டனே! உயர்ந்த தவமும் சிறந்த பெருமையும் அரசர் முதற்சேனைகளின் கூட்டமும், உரிய பெரியவர்களின் நட்பும், செல்வப் பெருக்கமும், சூதினுல் தாயத்தாரை வென்ற மமதையும், ஏகபோகமாக இராஜ்யத்தை ஆளுவதும், நூறு பிள்ளைகளென்னுந் தொகை மகிழ்ச்சியும், இவைகளெல்லாம் நித்தியமாகிய பொருளென்று நினைவுகொள்ளாதேயும். ஐயோ! தூண்டின் முள்ளில் மாட்டிய சொற்ப இரையைக்கருதி விழுங்கிய ஜலசரமாகும் மீன்களுக்கு நேரிடுந் துன்பந்தான், உனது புத்திரர்களுக்கு வரப்போகிறது. இரையைக்கருதி உண்டு இன்னும் வாழலாமென்று வந்து விழுந்து மாட்டிக்கொண்ட மீன்களைக் கரையிலிருந்தவன் இழுத்துக் கொள்ளுவான். அதுபோல் பாண்டவர்களை வஞ்சித்து வாயிற் போட்டுக்கொண்ட பூமியை, நமது சொந்தமாகக் கொண்டு வெகுகாலிருந்து ஆண்டு அனுபவிக்கலா மென்னும் ஆசை மேலிட்டிருப்பதினுல், காளை நடக்கும் யுத்தகளமென்னுங் குளத்தில், பரசொத்தபேக்ஷையாகிய இரைகளைக் கொண்ட உன் புத்திரன், பீமார்ச்சுனரின் கதையினுலும் விற்கணையினுலும் அழிவான். அண்ணலே! நீர் இதை நன்ரு யோசிக்கக்கடவது. மெய்யாகவும் ஸ்திரமாகவும் நடக்கப்போகிற இரகசியத்தை இன்று நான் சொல்லிவிட்டேன். மேலும் பீஷ்மாசாரியார் முதலிய என் போன்றவர்களெல்லாருக்கும் அழிவுண்டாகும். உன் புத்திரனுக் கெத்தனை விதத்தில் வருந்திச் சொன்னலும் 'கிழவன் பாடல் நின்னரிக்குச் சரிப்படாது' என்பது தோன்ற, அவையெல்லாம் காதுக்கு நாராசமாகவும் நாவுக்குக் காஞ் சிரங்காயாகவும் இருக்கின்றன. லாபலோபத்திற் குடன்பட்ட நண்பர்களைப் போலும் விரும்பியிருக்கும் கர்ணன் சகுனி துச்சாதனன்

இவர்கள் சொல்லும் வார்த்தைகள், தேன்பாகு மணப்பாகு கற்கண்டுப்பாகு ஜீனிச் சர்க்கரைப்பாகு இவைகளுக்கு மேலாகிய மாதுரிய மாயிருக்கின்றன. ஐயா! இது நன்மை இது தீமை என்றுணராத சிறு பிள்ளையினிடத்தில் ஏகச்சக்ராதிபத்தியத்தை விடுத்து, ஏதொரு பலனுமில்லாத யோசுவரனைப் போலிருக்கின்றாய். அவனை அவனைச் சேர்ந்தவர்களோ, அழகிய ஆயுதங்களையும் அரம்பா ஸ்திரீகளையும் வைத்துப் படைக்கும் வகையுணராத நபும் சகர்களைப்போல், வழிதுறை இல்லாமல் தங்கள் மனது வந்தபடி நடந்து, செய்தற் கரியனவற்றைச் செய்யும் பெரியோர்களையும் எடுத்தெறிந்து, பேசி 'இளங்கன்று பயமறியாது' என்பது தோன்ற, உமது உரிய வார்த்தைக்கும் உடன்படாம லிருக்கின்றார்கள். உன் புத்திரர்களைக் குறித்து நான் என்ன சொல்லுவேன். அவர்களுக்காக நீர் விசனப்படவானேன்! பெருமூச்சு விடுவானேன்! நித்திரையற்றிருப்பானேன்! கமுகம் பாளை விரித்து அதிற்பெருகிய தேன்கள் சொரிந்துபாயுங் குருநாட்டுக்கு நாயகமாகிய எங்கோவே! இன்னமுங் கேளும். நீர் கொடுத்த காண்டவப் பிரஸ்தமென்னுங் காட்டைத் தெய்வானு கூலத்தால் நாடு நகரங்களாக ஏற்படுத்தி அரசுபுரிந்து பெருமை பாராட்டிக் கொண்டிருந்த பாண்டவர்களை முன்பின் எண்ணுமலழைப்பித்து, சகுனியை எதிராக்கிச் சொக்கட்டா ஞடச் செய்ததே நகாது. அதிலும் பந்தயம் வைக்கச் சொன்னது பழுது. மேலும் ஐவரையும் திரௌபதையையும் வைத்துக் கெலித்தது ஐயையோ!! அகியாய மநியாயம்! இப்படியாகச் சூதினுற் ஜயங் கொண்ட பூமியைக் கைப்பற்றினலும் ஒரு விதத்திற் பெரிதல்ல. தேவர்கள் முதலிய யாவரும் துதிக்கும்படியாகிய பெருமையிற் சிறந்த பாண்டவர்களாகிய பிரபலரை, அற்பமாகிய துரும்பிலுந் துரும்பாக அவமதித்து, அந்தச் சபையிற் பேசிய புன்மொழிகளைப் புருஷமேருவாகிய தீர்கள் பிராண பரியந்தம் மறப்பார்களோ? சொல்லும் அண்ணு! மேலும் 'தீயினுற்சுட்ட புண்ணுள்ளாறு, மாறுதே நாவினுற் சுட்டவடு' என்று இயம்பிய நீதிக்கிணங்க, நெருப்பினுற் சுட்ட புண்ணும், பாணமுதலிய ஆயுதங்களில் தூலமாகிய புண்ணும், சல்லியகரணி முதலாகிய மருந்துகளினுல் உடனே ஆறிப்போம். சொல்லினுற்பட்ட புண் என்றைக்கும் ஆறாது. அதை எவர்கள் நீக்கத்தக்கவர்கள்? சர்வசங்க பரித்தியாகஞ் செய்த மகான்களையும் அது தூளாக்கும். அவர்களும் அதைச் சகிக்கமாட்டார்கள். பாண்டவர்கள் மேன்மைபொருந்திய அறிஞராகையினுல், அன்று அந்தச்சபையில் மனம் பொறுத்திருந்தார்கள். அவர்களல்லாமல் தேவர்கள் முதலிய மற்றெவர்களானலும், இந்தப் பாவிகள் செய்த பொல்லாங்கினுல் தயை - தருமம் - சாந்தமென்னும் பாசங்களை விடுத்து, அங்கேமே நாசப்படுத்திக் கோபந்தீருவார்களல்லவா? தேவரீரும் உரிமை-அறிவு-ஒழுக்கம்-கிருபைக்குணம்-

தெளிவு இவைகளில்லாத தீயர்களைப்போல் கண்ணை மூடிக்கொண்டிருந்த படியால், இவ்வளவு அலங்கோலத்திற்கு இடமுண்டாயிற்று. போனது போகட்டும். இப்பவும் பட்சபாதமில்லாமல் சமமாக நடத்த வேண்டுமென்னும் நடுவு நிலைமையாகிய புத்தி உம்மிடத்திலிருக்குமானால், நமது குலத்திற் பிறந்த பிள்ளைகள் பிரவேசிக்கத் தகாத பகைவழியிற் புகவொட்டாமல், பாண்டவர்களை அழைத்து, உமது புத்திக்கிசைந்த இராஜ்யத்தையும் சேனைகளையுஞ் செலவங்களையுங் கொடுத்துச் சமாதானஞ் செய்தாலொழிய, கௌரவர்கள் பிழைக்கமாட்டார்கள்" என்று பரிசுத்தவான்களிலுயர்ந்த விதுர மகாராஜன் விளம்பிய மொழிகளை யெல்லாங் காதின் வழியாக அருந்தி, "எனது அருமைத்தம்பியே! நீ சொன்னதெல்லாம் உண்மையே" என்று விசனந்தீர்ந்து சந்தோஷித்து, மனங்குளிர்ந்து, "மறைந்த சூரியன் உதயமான வுடனே என் தம்பி பிள்ளைகளுக்கு நாடு நகரமுதலிய பாக்கியம் யாவும் கொடுத்துவிடுகிறேன். இதற்கு யாதொரு தடையுமில்லை. இவ்வுலகிலிருக்கு மனிதர்களும் பற்பல தேசத்தரசர்களும் முத்தொழில் நடாத்து மூவர்களும் துரியோதனுதியருங் கூடிவந்து அவர்களுக்கு நாடு கொடுக்கக் கூடாதென்று தடை செய்தாலும், அவர்கள் வார்த்தையைத் தடை செய்து கொடுக்கிறேன். ஒருகாலும் நான் சொன்ன சொற்றவறேன். சத்துருக்கள் பத்தினிகளின் தாலியையும் அவர்கள் நகரக் காவலாகிய வேலியையும் களையவல்ல சிலையையுடைய தம்பி! நீ போய் வா" என்று விடைதரவும் குணநிதியாகிய விதுரன் அணிபலமேவுத் தனது அகம்புகுந்தான்.

ஓ ஜனமேஜய மகாராஜனே! இவ்வாறு தருமஞ் சொல்லிய தம்பி. அரண்மனைக்குப் போன பிற்பாடு, "புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயதன்றே" என்பதற்கிணங்க, கற்காத அற்ப புத்தியை யுடைய பேர்களுக்குக் கற்றுணர்ந்த மேலோர்கள் சொல்லிய ஞானப்பொருள் ஒரு காதில் நுழைந்து மற்றொரு காதின் வழியாய்ப்போய் விடுமென்பார்கள். அத்தன்மையைப்போல் கண்ணொளியற்ற குருடனுடைய கவலை மனமும் இருண்டு, தன் மகனுடைய கன்மனம் போலிருந்தது. அவன் மனத்தைப்போல் இராத்திரியு மிருண்டு வளைந்து எமனைப்போல் கிறைந்தது. அஃதெப்படி யென்றால் மேகங்களெல்லாங் கலையும், பிரகாசிக்கு மின்னலெல்லாம் சுருண்ட செம்பட்டை மயிரும், மூன்றும்பிறையே கோரதந்தமும், சிற்சில மலைகளை பற்பலபுயங்களும், நக்ஷத்திரங்களை வக்ஷஸ்தல ஆபரணங்களும், கறுத்த இருளே தேககாத்திரமுமாக உடைய இராக்காலமென்னும் யமன், வாடைக் காற்றுகிய பாசந்தாங்கி, துரியோதனுதியர்கள் இறப்பதற்கு முகூர்த்த நாள் ஏற்படுத்திக்கொள்ளத் திரிதராட்டிரனைச் செலவு கேட்க வந்தது

போலு மிருந்தது. இவ்வாறு அவனுக்கு அளவற்ற ஊழிக்காலம் போற் குழம்பி மெருங்கிய இருட்கூட்டமானது பின் ஞானவிற் றோன்றிக் கனவிற்கண்ட வாழ்க்கையைப் போலகன்றது. உடனே "ஞானி தன்னனவிற் பட்டால் கலியிருட்பிறவி நீங்கும்" என்பதற் கீடாய், கடவுளின் வலக் கண்ணுகிய சூரிய பகவான் உதயமாக நினைத்தார். அவரெப்படி நினைத்தா ரென்றால், விவேக சூனியரின் மனம் போலிருண்ட முன்னை நாள் நடுராத்திரியில் இளவலாகிய விதுரமகாராஜன் திரிதராட்டிரனுக்கு உபதேசித்த மந்திர வார்த்தைகளெல்லாம் ஏதாக முடியுமோ அதை அறிய வேண்டுமென்று நினைத்து, சப்தமாவென்னும் பரிபூட்டிய இரதமேறி, உதயகிரியின் உச்சியில் வந்து விளங்கி, வண்மையும் தண்மையும் உண்மையும் நிறைந்த மகான்களின் மனத்திற் கொப்பாகப் பிரகாசித்து, அரண்மனைச் சாளரங்களிலும், மேல்வீடு முதலாகிய சாலை சோலையாதி இடங்களிலும், பிரகாசமுள்ள கிரணங்கள் நுழைந்து காயும் படியாக உதயமானார். அந்தக்கிரணங்கள் விரிந்து நுழைந்து காய்ந்தது எப்படி யிருந்ததென்றால் 'விதுர மகாராஜனுடைய விவேகத்தைக் கேட்டுத் திரிதராட்டிரன் ஐவருக்கு நாடு கொடுக்கிறதாகச் சொல்லி இருக்கின்றான். அந்த அதிசயத்தை யாவரும் எழுந்து பாருங்கள்' என்று கிரணமாகிய கரங்களினால் கிட்டித்தட்டி எழுப்பி யதைப் போலுமிருந்தது. உடனே நகரில் வாழும் ஜனங்க ளெல்லோரும் முகமும் அகமும் மலர்ந்து மகிழ்ந்து எழுந்து விழுந்து சூரியனைத் தொழுதார்கள். பீஷ்மாசாரியர் - துரோண சாரியர் - கிருபாசாரியர்-அசுவத்தாமா - அங்கதேசாதிபதி - துரியோ தனன்-துச்சாதனன்-சகுனி-மற்றத் தம்பிமார் முதலாகிய சகலரும், இரத்தந் தோய்ந்த வேலாயுதந் தாங்கிய இராஜ போஜரும், வேத பண்டித விப்பிரர்களும், ஜோதிட நூல் வல்லவர்களும், சகுன சாஸ்திரிகளும், மாசறக் கற்ற கவிவாணரும், மற்ற தேச தேசத்திலு வரும், தங்கள் தங்களுக்குரிய அணியாசனங்களிலும் வீற்றிருந் தார்கள். அந்தச் சமயத்தில் இராத்திரி முழுமையும் நித்திரை யற்றிருந்த திரிதராட்டிர மகிபதி சுத்தியாய்ப் பத்தியாய் நித்தியக் கடனை வெற்றிபெற முடித்துக் கொண்டு குருகுலம் விளங்கக்கூடி யிருக்கும் மதிமந்திரிமார்களும்-துரந்தரிமார்களும்-பட்டவர்த் தனரும்-மகுடவர்த்தனரும்-மண்டலீகரும்-உரிய பல நாட்டரசரும் பெரிய குழுஉக் கொண்டுவர, பரதகீத நாதநட நாட்டியங்களும்-பட்டுவான்களும்-கட்டியங்களும்-சதிர் சேர்ந்திருக்குஞ் சபையில் வந்து, அவ்விடத்தி லிருப்பவர்கள் யாவரையும் விசாரித்து, விதி முறைப்படி வந்தனம் மரியாதை உபசாரம் யாவுஞ்செய்து, மேலான முனிவர்களால் அக்ஷதை முதலிய ஆசீர்வசனங்களுந் தரப்பெற்று, அரியாசனத்தி லமர்ந்தான் பெரிய அரசன்.

அந்த வேளையில் சஞ்சயனவன் உதயத்திலெழுந்து திருமஞ்சனமாடி, திவ்வியமலரால் சூரியனை அர்ச்சித்து நமஸ்காரஞ் செய்து, அணிமணிக்கலன்களணிந்து அழகிய சபைக்கு நேராக வந்து நின்று, அரண்மனைக் காவலரைக் கண்டு, கடைத்தலையில் தான் வந்து காத்திருப்பதைக் காவலனுக்கு அறிவிக்கும்படி சொன்னான். அதைக் கேட்டுத் தூதர்போய் வணங்கிச் சொல்ல, வரும்படியாக அரசன் உத்தரவு செய்ததை அறிந்து கொண்டு சபைக்குட்சென்று, துரோணாசாரியர் முதலிய பிராமணர்களுக்கும் பீஷ்மாசாரியர் முதலிய பெரிய வேந்தருக்கும் கைதொழுது, தருமசாஸ்திர முணர்ந்து வெறுப்பும் விருப்பும் வெப்பமும் தட்பமுமில்லாத சஞ்சயனுக்கும் உத்தம குணத்தோன் இராஜனுக்குச் சமீபத்திலிருந்த ஓர் ஆசனத்திலிருக்கவும், கட்புலனற்ற காவலன் சிந்தித்து, ஆசையுடன் சஞ்சயனை அணைத்து, "பாண்டவர்களிடத்தில் தூது போய் வந்த கருத்து முழுவதும் சபையில் நிறைந்த யாவருங் கேட்கப் பெரியோர்களுக்கு முன்பாகச் சொல்லும்" என்றவடனே, சஞ்சயனவன் எல்லோர்க்கும் சந்தேகப்படும்படியாகச் சொன்முடிபு பொருண்முடிபு காணுமலும் காரியகாரணந் தோன்றுமலும் மனவெறுப்பினால் பொழிப்பாகச் சொல்லவும், அதைக் கேட்டு வெற்றியையுடைய திரிதராட்டிரன் சஞ்சயனைப் பார்த்து, "ஐயா, நீர் போனது முதல் வந்த வரையில் அவர்கள் கூறிய வசனத்தில் ஒரு சொல்லாகிலும் சோர்வுபடாமல் பதம் பதமாக விரித்துச் சொல்லவேண்டு மென்னவும், சஞ்சயன் சொல்லலுற்றான்:—"அம்புலி மரபிற் கதித்து அம்பிகை சுதனென உதித்து அம்புவி அரசு செலுத்தும் அரசன் முதலிய யாவருங் கேண்மின்! அஸ்திநாபுரத்தை விடுத்து அழகிய உபலாவியத்தை யடுத்து, ஸ்ரீ கிருஷ்ணனிருந்த திருமாளிகைக்குச் சென்று 'சஞ்சயன் வந்திருக்கின்றேன்' என்று தெரிவிக்கும்படி வாசலிலிருந்த தூதரைச் செலுத்தினேன். உடனே அவர் 'வரச் சொல்' என்று கூறிய மறுமொழி கொண்டு, அந்தப்புரத்திற் சென்று, அழகு குலவிய இரத்ன மணிகளாற் செய்த மஞ்சத்தில் ஆதிசேஷனுக்கு ஒப்பாக விளங்கும் திவ்ய பீதாம்பரத்தினுலாகிய பட்டு மெத்தை மலர் மெத்தை முதலானவைகள் பரப்பிய அணையின் மீது அர்ஜுனனிருந்து அடியிணை சுமந்து வருட, ருக்மிணி தேவியார இரு கரத்தினுலு மயில் விசிறி கொண்டு உபசரிக்க, அக்கினியி லுதித்த பாஞ்சாலி கவரி வீச, இவர்கள் மூவரே யன்றி மற்றொருவருமின்றிச் சயனித்துக்கொண்டிருந்த அஞ்சன மேனியனுகிய இணையில்லாத ஏந்தலை உட்புலன்கள் ஐந்துந் தேறிய உத்தமர்களின் உள்ளத்திலாரும் உணர்வானவனை, உந்தி பூத்தோனை, உவணகேதனனை, உதிவிட் டிவண் வந்துதித்த மாயவனை, உரகசயனனை, அளவற்ற நாள் வருந்திக் தவப்பேறு பெறுவார்களைப்போல் எனது கண்ணுக்

குக் காட்சியாகக் கண்டு, இதுவே நாம் பெறவேண்டிய முக்தி வீடென்று, தேவதேவனுடைய திருவடியில் சாஷ்டாங்கமாகப் பணிந்த வென்னை, அம்மூர்த்தி மனமகிழ்ச்சியுடன் பக்கத்தி லழைத்து அணைத்தனர். நானும் கைகட்டிக்கொண்டு நின்றேன். அப்போது இளமையும் அழகையும் இயல்பாகக் கொண்ட என் தாய் மார்களின் முகத்தைத் தமது தாமரைக் கண்ணினால் நோக்கினர். உடனே அவர்களிருவரும் அக்காம்பலுக்கு ஒப்பாகிய கரங்களினால் சுவரத்தினங்க ளிழைத்து மாற்றுயர்ந்த தங்கத்தினால் செய்து எங்கும் பொங்கும் ஒளியினாலுயர்ந்த சிங்காதனங் கொண்டுவந்து போட்டார்கள். அதன்மேலில் உட்காராமல் கையை மாத்திரம் அந்த ஆசனத்தின்மேலில் வைத்துக்கொண்டு, சுவாமியின் பக்கத்தி லிருந்து, சூற்கொண்ட மேகம் போலும் காசாம்பூவைப் போலும் மரகதமணியைப் போலும் விளங்கிய அக் கண்ணன் திருமேனியின் அழகையும் அர்ஜுனனுடைய திடவீரகாத்திர சிலாக்கிய உருவத் தையும் கண் களிகூர நோக்கினன். அவர்களுடைய கிருபாகுணத் தையும் சௌரிய பராக்கிரமத் திறத்தையும் என்ன சொல்வேன்! ஆக்கலும் அழித்தலும் தோற்றுவித்தலும் மறைத்தலுமுடைய சுதந்தரரான இவர்கள் திருஷ்டிக்கு லோக லோகங்களும் கிலேயில் லாமல் அழியும். இந்தப் புண்ணியவான்கள் சினேகத்தால் மூவுலகும் ஆளலாம். மாறுபட்டுப் பகைத்தால் எதிர்த்தவர்களே யன்றி ஈரேழுலகமும் அழிந்துபோம். இப்பேர்ப்பட்ட மைத்துனனும் தம்பியும் கைகாட்டும் வேலைகளைச் செய்யும் ஏவலாளாக இருக்க தருமராஜனுக்கு வேறே படைத்துணையும் வேண்டுமோ? ஆண்மை யற்றவரென்று சொல்லப் போமோ? புவனு புவன முழுமையும் தமக்கு வேண்டுமென்று நினைப்பாராகில், அவர்கள் இப்போதே கிடைக்கும்படி செய்வார்கள். இந்த இருவரும் இப்பேர்ப்பட்ட பல சாலிகளாயிருந்தும் காட்டை விட்டுக் காட்டி லுறைவானேனென்று, பரிசுத்தமுள்ள நினைப்பும், ஒப்புவமை இல்லாதவருமாகையால் எதையும் விரும்பாமல் வெறுத்திருந்தாரென்று என்னெண்ணத்தில் பலபலவிதம் எண்ணிக்கொண்டிருக்கையில், கோவர்த்தன கிரியைக் குடையாக எடுத்துக் கல் வருஷத்தைத் தடுத்துக் கோபாலரைக் காத்தருளிய தேவாதி தேவனுகிய கண்ணன் என்னைப் பார்த்து, "இப்போது இவ்விடத்திற்கு நீர் வந்தகாரியமென்ன?" என்று கேட்க, அடியேன் ஒளிக்காமல் சிற்சில வார்த்தைகளாற் சுருக்கிச் சொன் னேன். அப்போது தேசவனுகிய ஸ்ரீ கிருஷ்ணன் ஒரு வாக்கியம் திருவாய் மலர்ந்தருளினார்—

"அப்பா சஞ்சயனே! துரியோதனுதியர்க்கும் பாண்டவர்களுக் கும் நடக்கப் போகின்ற யுத்தத்தைக் குறித்துத் திரிதராட்டிர மகா ராஜன் விசனத்துடன் பயப்படுவாராகில், ஐவர்க்கும் இனிமையாகிய

வசனங்களைச் சொல்லி, விரித்த தலைமயிரை முடிக்காமல் விசனமும் உலகப் பழிப்புங் கொண்டிருக்கும் பாஞ்சாலியின் மனத் துயரத்தைப் போக்கி, சூதாடிப் பறித்துக்கொண்ட நாடு நகரம் திரவிய முதலிய யாவையும் பாண்டவர் பெறும்படியாகக் கொடுத்து, அவர்களுக்கு இப்போது படைத் துணை வந்திருக்கும் பார்த்திபர்களையும் நன்மையுடன் சிநேகித்தால், கிரீடாதிபதியாகிய பாண்டவர்கள் தங்கள் தம்பிமாராகிய துரியோதனாதியரும் சுகப்படவேண்டுமென்றெண்ணித் தங்கள் சிந்தையிற் றோன்றிய மாத்திரம் நாடு நகரங் கொடுப்பார்கள். அதுவும் கௌரவர்கள் வஞ்சகமில்லாமல் உரிமைப் பாட்டாக மரியாதையுடன் கீழ்ப்படிந்து நடப்பார்களானால் கிடைக்கும். இல்லாவிட்டால் எப்போதுங் கலந்து வாழப்போகிற தில்லை. இது ஒருபக்ஷம். இப்படி நடத்துவதற்கு மனமொப்பாவிட்டால், யுத்த களத்தி லெதிர்த்து, அவரவர்கள் புயவன்மைக்குத் தகுந்தபடி சண்டைபண்ணிச் சத்துரு நாசஞ் செய்து, துன்ப நீங்கி இன்பத்துடன் உலகாள்வது நியாயம். இது ஒருபக்ஷம். இவ்விரண்டிலொன்றைத் தெரிந்து துணிந்து நடத்த அறியுங் குணமில்லாதவர்களைப் பெரியோரென்று சொல்வதிற் பிரயோஜனமில்லை. தெரிந்தோர்களும் தெரியவுரையாதிருப்பது என்ன காரணமோ சஞ்சயனே! நீ வந்த காரியத்தை நானறிந்துகொண்டேன். நாடு நகரம் விரும்பிப் பெருமை பெறவிருக்கும் அரசராகிய பாண்டவர்களைச் சகல செல்வத்தையும் கூறிய சபதத்தையும் நாடிய யுத்தத்தையும் விடுத்து, வீடுபெறுந் தவத்தைச் செய்யக் காட்டை யடையும் படியாகப் பெரிய தந்தை விளம்பினரென்று சொல்வதற்கு நீ ஓடிவந்தது அது எத்தன்மையொத்ததென்றால், அடர்ந்த காடு முழுமையும் தொடர்ந்து, புகையும் பொறியும் படர்ந்து, மேலோங்கியெரியும் காடாக்கினியை வாடைக்காற்றும் துணைப்பட்டு வந்து கலந்து, அதை அவிக்கத் துணிந்தது போலாகும். பாண்டவர்கள் மனம் வருந்தி அக்கினியா யெரிந்துகொண்டிருக்கும் வேளையில், 'உங்களைத் தவஞ் செய்யப் போகச் சொன்னான்' என்று நீ சொல்லப் போகிற சொல்லாகிய வாடைக் காற்றுங் கூடவே கலந்துகொண்டால், உலகம் யாவு மொன்றாய் முழுகிப்போமே. பெரிய தந்தை வார்த்தை யென்னும் பெருமையும் எதிர்ப் போமே! இந்த மொழிகளையும் மறுதெறி முறைமைகளையும் யோசிக்குமிடத்தில், தங்கள் தங்களிச்சையின்படியாகவும் வணங்கா முடியோனுக்கு மறுத்துச் சொல்லக் கூடாத முகஸ்துதியாகவும் பாரபக்ஷமாகவும நினைத்துச் சொல்லியதாக இருக்கின்றதே தவிர, காரியாகாரியந் தெரிந்து 'இப்படி போனால் இப்படி நடக்கும், இப்படி விதைத்தால் இப்படி விளையும், இது தகுந் தகாதென்ப துணர்ந்து சொல்லி யனுப்பியதாகத் தோன்றவில்லையே! இஃது பெரிய அரசன் புத்தியல்ல. அற்ப மதியையுடைய அறிவீனர் உரைத்த புத்தியைக் கேட்டுச் சொல்லி

யனுப்பி வைத்ததாக இருக்கிறது. பரிசுத்தமாகிய சாஸ்திரங்கள் முழுமையுங் கற்றுணர்ந்த புண்ணியராகும் பெரியோர்களின் புத்தியைக் கேட்டு மொழிந்த வார்த்தையா பிருக்கவில்லை. தம்பி பிள்ளைகள் காட்டில் தவஞ் செய்பவும், தன் பிள்ளைகள் நாட்டில் அரசு புரியவும் எந்த மதியைக்கொண்டு திரிதராட்டிரன் சொல்லி யனுப்பி வைத்தானோ? இது அவர் மனதுக்கே தெரியவேண்டியது. எனக்கு இது தகுந்த யோசனையா பிருக்கவில்லை சஞ்சயனே! நீ வந்த காரியத்தை நாளைய தினம் உத்தமனுகிய தருமகந்தனனுடைய சபையிற் சொல்லி யாவையும் அறிந்துகொள்" என்று முக்திக்கு வித்தாகு முதல்வனுகிய **ஸ்ரீ** கிருஷ்ணபகவான் திருவாய்மலர்ந்தருளினு ரென்று சொல்லுவதற்கு முன்னமே, பூபதியாகிய திரிதராட்டிரன் சஞ்சயனை நோக்கி, "புஜபல வலியாற் கஜடென வுயர்ந்த விருஷபவிராட்டாகிய விஜயன் ஒன்றுஞ் சொல்ல வில்லையோ" என்று கேட்டான்.

அப்போது சஞ்சயன் அரசனைப் பார்த்து, "ஐயா! தூயவனுகிய மாயவன் சொல்லியதைக் கேட்டிருந்த இந்திர குமாரனுகிய அர்ஜுனன் அஸியாத அக்கினியைப்போல் வாள்விழி சிவக்கவும், மார்புத் தோளும் வலக்கண்ணுந் துடிக்கவும், என் முகத்தை ஏறநோக்கி, 'ஆ! ஆ! சஞ்சயனே! பெரியோராகிய உத்தமர்களும் சிறியோராகிய மற்றவர்களும் கெருங்கிய இராஜசபையில் இந்த வார்த்தையை விஜயன் விளம்பினனென்று கலங்காமல் பயப்படாமல் ஒளிக்காமல் சொல்லக் கடவை' என்று சில சொன்னன். அவையாவையெனில் பாபங்களென்னும் பகைரை வினையச் செய்யும் தன் புத்திராகிய துரியோதனனியர்பேரில் வைத்த பட்சத்தினுல் அப்புத்திரர்களோடுங் கூடி, குடும்பங் குலைக்கும் அற்பர்களுடைய புத்தியைத் தானும் விரும்பிக் கேட்டு, தருமத்தினுக்கு அடாத கருமத்தை மேற்கொண்டு, ஐவர்களையும் அநாதையாக்கி, அழகிய வளஞ் செறிந்த காட்டில் ஒன்றுகிலுங் கொடுக்கமாட்டேன். பாண்டவர்கள் இராஜ்ய அபேக்ஷையை விடித்துத் தவம் புரிந்து மோக்ஷ வீட்டையடுத்துக் கரையேற வேண்டுமென்றே எங்கள் பெரிய தந்தை பக்ஷமாகப் புத்திகள் சொல்லி அனுப்பி வைத்தது. ஓ! ஓ! சஞ்சயனே! குலகோத்திரத்துக்கும் தனக்கும் நன்மையுண்டாகத் தவஞ் செய்யச் சொல்லி அனுப்பிய வார்த்தையைச் சிரசாகக்கொண்டு நாங்கள் முன்பு சபையிற் கூறிய சபதத்தை விடித்துத் தவஞ் செய்வோமானுல், திரிதராட்டிரன் தம்பி பிள்ளைகள் சொன்ன சபதஞ் சோர்வு போனர்களென்னும் பழிப்பும் பாவமும் இவரையும் எமது மரபையுஞ் சேருமென்பதைப் பெரியவயதினுல் மறந்தாரோ? சஞ்சயனே நாங்கள் வீரப்பிரதாபத்துடன் ஆபத்து வேளையில் கோபத்தினுல் சபையில் விளம்பிய சத்திய வாக்கியத்தை லோகப்பிரசித்த

மாக முடித்து, உதிரவெள்ளத்தில் மூழ்கி ஸ்நானஞ்செய்து, அரசர்கள் பழிக்கும் பழுதுகள்போக்கி, எங்கள் குலமாகிய திங்கள் குலமோங்க, சங்குசக்ரதர தேவனும் ஹரிபரந்தாமனு ஐவர் சகாயனுமாகிய அழகிய மணவாளனுடைய அடிமலரைப் பணிந்து குற்றமகற்றி கொள்ளுவோம். அன்றியும் எங்களுக்குப் பொல்லாங்கு செய்து எக்காலத்திலும் அசையாத வசையை இசையாகக்கொண்ட துரோகிகளுடைய அழகார்ந்த மேனியை, தெய்வீகமாகிய எமது விற்களில் தொடுத்து விடுங் கணையினல் சின்னபின்னமாகப் பிளந்து இரத்தவெள்ள மொழுகவும், வெப்பமாகிய மூளைகள் அற்பவாயிற் பெருகவும் செய்து அப்பொழுது எங்கள் பெரிய தகப்பனர் சொன்னசொற்படி தவஞ்செய்யக் கானகம் புகுவதன்றி, இதற்குமுன் ஒருகாலும் வனம் போகமாட்டோமென்று சொல்லும் சஞ்சயனே. கினைக்குந்தோறும் சத்துருக்களுடைய மார்பும் பெரியதோளும் காத்திர வுடலும் அவர்கள்செய்த கபட வஞ்சமும் என் கண்ணெதிர் தோன்றிக்கொண்டிருப்பதினல் அவர்களுடைய தேகத்தை ஒரு தொடிப்போதில் எனது விஜய காண்டீபத்திலிருந்துவிடும் அளவிறந்த கணைகளினல் சல்லடைக் கண்களாக்கி, சூரிய கிரணங்கள் சாளரங்கள்தோறும் பிரகாசிக்குந் தன்மைபோல் உதிரக்கம்பிகள் பீரிட்டடிக்கவும், வாய், செவி, மூக்கு, கண் இவைகளின் வழியாய்த் திரியும் இந்திரியங்கள் துந்து மந்திக்கவும், உயிர்கள் சிந்தவும், காக்கை கழுகுகள் கொந்தவும் செய்வேனல்லாமல் ஒருவரையும் உயிருடன் விடமாட்டேன். ஆ! ஆ!! சஞ்சயனே! பஞ்சபூத சிரேஷ்டனுகிய வாயுகுமாரன் தனது கரங்கொண்ட கதாயுதத்தினுல் துரியோதனுதியர் நூறுபேர்களுடைய மண்டைகளுஞ் சிதைத்துச் சிந்தி, மண்மேல்விழுந்து அழியும்படி மோதி, பூதப்பிரேத பைசாசகணங்களோடு நாய், நரி, காக்கை, கழுகு, பருந்து முதலியவைகட்கு விருந்திட்டாலொழிய எங்களுள்ளத்திற் கோபமென்று குடிகொண்டெழுந்த சிவந்த யுகாந்த காலாக்கினி தணியமாட்டாதே. தெளிவிற்சிறந்த சஞ்சயனே! தேவாமிர்தத்திலும் சிறந்த போஜனமுண்டு, அம்சதூளிகா மஞ்சத்திற் சயனங் கொண்டு, வாயுவேக மனோவேகமுடைய தெய்வப்பரிமேலும் கன்னகபோல கரட மதங்களையுடைய இராஜ குஞ்சரத்தின்மேலும் நவரத்தினப் பணியார்ந்த திவ்யமணி இரதத்தின்மேலு மாரோகணித்து உலாவிவரும் தரும சொரூபியாகிய என் தமையன் பாதசாரியாய் நடக்கவும், மாயச்சூதாடி பாக்கியங்களையெல்லாங் கைக்கொண்டு வனவாசம் பன்னிரண்டு வருடமென்று அனுப்பப் பனியிலும் வெய்யிலிலும் காற்றிலும் மழைபிலும் வருந்தி, மேடு பள்ளங் கற்பாறை முதலிய இவைகளிற் படுத்து நித்திரை செய்யவும், கந்தமூல சருகாதிகளருந்தி வாழ்நாளை வீண்நாளாகக் கழிக்கவும், தாங்கள் சுகத்தை அநுபவித்திருக்கவுஞ் செய்த கீழ்மக்களுடைய உடல்கள்

என் வில்லிலிருந்து வல்லியம்போல் வரும் காலாக்கினி ருத்ராஸ்திரத்தின் நெருப்பினால் வெந்து, புகைந்து, வருந்தி, கரிந்து, பொரிந்து, சரிந்து, மண்மேற் பொடிப்பொடியாகப் போம்படி செய்து, தமையனென்னும் வாஞ்சை தரித்தேனென்று சகலருமூணரக் காட்டுவதுமன்றி, நாளை நடத்துகின்ற யுத்தத்தில் சிகைகூடிய சிரம், கரம், கால், களம், உரம், இடை, குடல், செவி, நாக்கு, மூக்கு, கலமிலாக் கண்கள், மாமிசம், உதிரம், மயிர், தோல், என்பு, நரம்பு, நிணம், சீழ், நாற்றமாம் வெப்பு நீர், இப்படியாகக்கூடிய பகைவ ருடலத்தைக் கண்டங்கண்டமாக வெட்டிக் கோடி துண்டங்கண்டு சிரமெல்லா முருட்டி நிலமெல்லாம் பரப்பிப் பொடிப்பொடியாக்கி நாசஞ்செய்து, எங்களைப்போல் அவர்கள் மோசம்போய் அலையாமல், எல்லாமிழந்து வனத்திலுழலாமல், நாங்கள்செய்த சபதங்களையும் கருதாமல், எங்களுக்கும் இகழ்ச்சியில்லாமல் புகழ்ச்சி வரும்படியாய் அரம்பா ஸ்திரீகளைதிர்ந்து ஆசைவிசுவாசத்துடன் தமது வாசந்தங்கு மூலமேலணைந்து இராஜபோக வீரசொர்க்கத்தில் வாசமாகவைத்து உபசரிக்கும் அந்தச் சுகத்தை இவர்களநுபவிக்கும்படியாகக் கூசாமல் அனுப்பிவிட்டு, ஓசைக்கடல் சூழ்ந்த உலகமுழுமையும் வாசத்தார்புனைந்த சத்தியவாக்கியனுகிய தரும பூபதிக்குச் சம்பிரமமாக இஷ்டமுடனே யாவரும் தேவரும் போற்ற பட்டமுங் கட்டிப் பார்ப்பேனையா. எங்கள் தந்தைவார்த்தைக்கு யாங்கள் அடங்கிச் சபதமறந்து உலக ஆசையுந்துறந்து இருந்தாலும் இராஜசபையிற் பயந்து வருந்தி வயிறு எரிந்து மனங்குழைந்து திக்கற்ற வளைப்போல் தியங்கிய மின்போன்ற கண்களையுடைய பாஞ்சாலி அன்று விளம்பிய சாபம் இவர்கள் கோத்திரத்தையும் குலத்தையும் புத்திர வர்க்கத்தையும் விட்டு நீங்காதென்று அழகிய தோளினையுடைய ஐயனே! எங்கள் ஐயாவுக்குச் சொல்லும். இப்போர்ப்பட்ட மனவைராமுடைய நீங்கள் போர்புரிந்து வெற்றிகொண்டு இராஜ்யங் கை கொள்ளாமல், பழமையாகிய நாடு நகரங்களை எங்களுக்குக் கொடுவென்று யாசிப்பவர்களைப்போலே உலூகமாமுனியைத் தூதனுப்பிக் கேட்கச் சொல்லுவானேன் என்றால் யாங்கள் புத்தியில்லாமையாலும் யுத்தஞ்செய்யச் சத்தி யில்லாமையாலும் பயத்தினாலும் கேட்டனுப்பவில்லை. அவர்கள் நாடு கொடுக்கமாட்டார்களென்றும் எங்களுக்கு முன்னமேதானே நன்றாய்த் தெரியும். நாங்கள் எத்தனை காலைக்குச் சும்மாவிருந்தாலும் அவர்களும் அத்தனை காலைக்கு விசனமற்றிருப்பார்களென்று கருதி எங்களுடைய நாட்டைக் கொடுவென்று நாமே தூண்டினால் அவர்கள் தாமாட்டோமென்று தாண்டி விழுந்தெழுந்து சண்டைக்கு வருவார்கள். அப்போது நாம் பூண்டுகொண்ட சபதங்களெல்லாம் தீர்த்துக்கொண்டு புகழ் பெறலாமென்று மேலாகிய யுக்திசெய்து தூதுவிடுத்தோமேயன்றி வேறல்ல, அதற்கு எங்கள் பெரியதந்தை உம்மிடத்திற்

சொல்லி அனுப்பிய வாக்கியங்களைக் கேட்டவுடனே முன்னிலும் விசேடித்த நூதனமாகிய பூமியும் பொன்னுபரணம் முதலிய பொருள்களோடு சகலவிதசன்மையும், கோடானுகோடியான பங்குங் குறைவில்லாமல் மேலாகப் பெற்றவர்களைப் போலானேம். அந்தோ! எங்கள் கோரிக்கை நிறைவேறுங்காலம் கைகூடியபடியால் பெரிய தந்தைக்கு இந்த புத்திபிறந்து வனத்திற் றவஞ்செய்யச்சொன்னீர். இந்த விபரீத வார்த்தைகளையுங் கேட்டு மனஞ்சகித்து வழிதெரிந்து எங்களிடத்தில் நேராக வசனிக்கும்படி நாணமில் வீணைகத் தூது வந்த சஞ்சயனே! நாங்கள் சபையில்மொழிந்த சபதங்கள் முடியுங் காலம் எதுவென்றிருந்த சந்தோஷத்திற்கு இடையூறு விளையும் போலிருக்கின்ற தென்று என் மனது வருந்தும்படியாக நினைத்திருந் தேன். அதை நீ தெரிந்துகொள்ளும்படியாக இப்போது சொல்லு கின்றேன் கேளும். எங்கள் பாட்டனாராகிய பீஷ்மாசாரியார். குரு வாகிய துரோணாசாரியார், கிருபாசாரியார், சிறிய தந்தை விதுர மகாராஜன் இவர்கள் யாவரும் அந்தப்பக்ஷத்திலிருக்கிறார்களே. அவர்கள் ஒருகாலத்தில் இருதிறவர்களையும் சமாதானப்படுத்தி நாடு நகரங்களைக் கொடுத்து நீங்கள் இவ்விதமாக இருங்களென்று இயம் பினால் "மூத்தோர்சொல் வார்த்தை அமிர்தம்" என்னும் பழமொ ழிக்கு இணங்கும்படியாகப் பெரியோர்கள் சொல்லும் வார்த்தை கள்ளாமல் கேட்கவேண்மே, அவர்களுடைய வாக்கியத்தைக் கேட்டு யுத்தத்தை நிறுத்திவிட்டால் நாங்கள் சபையிற்கூறிய சப தங்களெல்லாம் பிசகிப்போய்விடுமே. சபதவசனம் பிசகினால் பழி யும் பாவமும் வந்து விளையுமே, என்று சஞ்சலங் கொண்டிருந்தேன். அந்தச் சஞ்சலவியாகூலம் இன்றளவில் நீங்கிவிட்டது. அஃதென்ன வென்றால் பீஷ்மர் முதலிய பெரியோர்கள் சமாதானஞ்செய்ய விரும்பியிருந்தால் எங்கள் பெரியதந்தை இந்த வார்த்தையைச் சொல்லி உம்மை அனுப்பிவைக்க மாட்டார். அவர் கருத்துக்குப் பெரியோர்கள் உடன்படாமையால் காட்டுக்குப் போகச்சொல்லிக் கைகாட்டினரென்றும், நாடு கொடுப்பதில்லை, சண்டை செய்யச் சித்தமாயிருக்கின்றார்க ளென்றும் ஸ்திரமாகத் தெரியவருகின்றது. எங்களுக்குச் சந்தேகநிவர்த்தி ஆச்சுது. சஞ்சயனே! துரியோதனன் முதலிய நூறு பிள்ளைகளின் உயிர்கள் தேறித்தெளிந்த பெரியோர் களுடைய உள்ளங்கையில் அடங்கியிருந்தன. அந்தப் பெரியோர் களின் வார்த்தையைக்கேட்டு வணங்கி நடந்தால் இன்னஞ் சிலநாட் களுக்குக் கூட்டங் குலையாமலிருப்பார்கள். உரியோராகிய பெரி யோர்களின் வாக்கியத்தை எப்போ திழந்தார்களோ அப்போதிவர் கள் இவ்வுலகத்தாரல்ல. யமலோகத்தில் ஒருவர்முகத்தை ஒருவர் பார்க்காமல் வருந்தி வாழ்கின்றவர்கள். இதற்கு யாதொரு தடையு மில்லை. எங்கள் பெரிய தந்தையின் எண்ணம் கைக்குவராது. 'நாமொன்று நினைத்தால் தெய்வந் தானொன்று நினைக்கும்' என்பதை

மறந்த திரிதராட்டிரனும் மற்ற யாவருங் கேட்க இவையனைத்துஞ் சொல்லக்கடவை'' என்று பராக்கிரமசாலியாகிய விஜயன் ஆக்ரமத்துடன் சொன்னன். இதுதான் அர்ச்சுனன் விளம்பியதென்று இராஜ சபையினிடத்தில் சஞ்சயன் அஞ்சாமல் விளம்பினன்.

தேவரகசிய வாக்கியம்.

இவ்வாறான வசனங்களைக் கேட்டு யாவரும் திகிலடைந்திருக்குஞ் சமயத்தில், விவேகத்திலுயர்ந்த பீஷ்மாச்சாரியார் இராஜாதிராஜனாகிய திரிதராட்டிர மகாராஜாவின் அழகிய முகத்தைப் பார்த்து, பக்கங்களிற் பொருந்திய துரோணாச்சாரி முதலிய பெரியோர்கள் யாவரும் சந்தோஷங்கொண்டு சஞ்சலம் விண்டு ஏக்கம் நீங்கி ஊக்கமோங்கும்படியாகத் தேவரகசிய வாக்கியம் ஒன்று சொல்லத் துணிந்தார்.

இந்த உலகத்தை இதுகாறும் நிந்தை இல்லாமல் விந்தையாய் அரசுபுரிந்துவந்து இப்போது மைந்தர் நூற்றுவரால் நிந்தை நொந்த அந்தகனாகிய என் மைந்தனே! கேள்! சத்தியலோகத்தில் நித்தியராகு மாதிரியவசன மகாமுனிவர்கள் சுற்றியிருக்கப் பொற்றாமரைத் தவசில் வீற்றிருக்கும் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரமதேவர் தருமபத்தினியுடன் பொருந்தியிருக்குஞ் சமயத்தில், வேதபுங்கவராகிய தேவகுருவும் தேவேந்திரனும் தேவர்களும் நான்முகனைக் கண்டு சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து அருகுற்ற ஆசனத்தில் அமர்ந்திருக்கையில், இரண்டுபேர் திவ்விய தேஜோமயப் புருஷர்கள் அந்தச்சபைக்கு நேராகவந்து சிருஷ்டிகர்த்தாவுக்கு வணங்காமல் இறுமாந்து அப்பால் நடந்துபோகும் பெருமையைக் கண்டு, பிரகஸ்பதியினுடைய மனதில் ஆச்சரியந் தோன்றப் பிரமனை நோக்கி, 'ஓ பரிசுத்தனே! நல்லவரென்பவரெல்லாரும் உருவாகத்தோன்றியதை யொத்த இந்த வல்லவர்கள் இவ்விடம் வந்து தேவரீரை மதியாமற் போகின்ற காரணம் யாதோ? இவர்கள் யாரோ? அடியேனுக்குத் தெரியச்சொல்ல வேண்டும்' என்னவும், பிரமதேவர் நகைத்துத் தேவகுருவை நோக்கி, 'இந்த மகானுபாவர்களை இதுவரையிலும் நீ றிந்ததில்லையோ? பிரகஸ்பதியே கேளும். சகல சராசரங்களும் துதிக்கும் பெரும் புகழினையுடைய நாராயணரென்பவ ரிவர்கள்தான். தேவர் சத்தியவசன ஆசார பரர்களாகிய தேவபக்தியுடைய புண்ணியவான்களுக்கும் இடையூறுகிய துன்பம் வருமாகில் தக்ஷணத்தில் வந்து அவர்கள் பட்சத்திலிருந்து துன்பம் நீக்கி இன்பம் விளையச்செய்து புண்ணிய வெண்ணமுள்ள கண்ணியவான்களுக்குப் போதுமான துணையாயிருந்து,

பாபசிந்தையுடைய பாபிகள் எண்ணிய எண்ணங்கள் கைகூட வொட்டாமல் அவர்களுடைய புத்திரமித்திரர்களைப் பாழாக்கிச் சதாகாலமும் லோகோபகாரஞ் செய்து இரக்ஷிக்கும் பழமையாகிய மூலகாரணர்கள். மேலும் இவர்கள் காமிருக்குஞ் சத்தியலோகம் விஷ்ணுலோகம் சிவலோகம் இந்த மூன்று லோகங்களுக்குந் தடையறப் போய்த் திரும்புவார்கள். தகுதியாகிய காரியங்கள் ஏதாகிலு மொன்று விளையுமாறால், அதை நீக்கும் பொருட்டுப் பொன்னுலகத்தினும் புகுந்து வருவார்கள். பூமியிலும் சத்தியவசன நித்தியவிரத பக்திமான்களாகிய புத்திமான்களிடத்தில் அவர்களுடைய விசுவாச நேச உத்தம பத்தினிமார்கள் வயிற்றின் வாயிலாக ராஜபுத்திரராகப் பிறந்து, வேதமுதலிய மதுரீதிதருமங்களை நிலைநிறுத்திச் சிஷ்டாசாரத் தன்மையும் பழகித்திரும்பி வருவார்கள். ஆதிமூலமாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்தியின் நினைப்பினால் உற்பத்தியானவர்கள். இவர்களுடைய பெருமையும் பிரதாபமும் இவ்வளவென்று எடுத்துக் சொல்லுவது என் தரமல்ல' என்று சொல்ல, தேவகுருவும் இந்திரனும் மகிழ்ந்து நமஸ்கரித்து விடை பெற்றுக்கொண்டு தெய்வலோகம் போய்ச் சேர்ந்திருக்கும் காலையில், பூமியில் சில இராக்ஷஸர் பிறந்து தவங்களிற்சிறந்த முனி புங்கவர்களோடு தேவர்கள் முதலிய யாவர்களும் வருந்தும்படியாக உபத்திரவஞ் செய்து வந்தனர். அக்காலத்தில், தேவர்களுந் தேவந்திரனுஞ் சேர்ந்து, ஆதியில் பிரமன்சொல்லிய வாக்கியத்தை நினைத்து, ஆபத்பாந்தவராய் அநாதரக்ஷகராய் விளங்கிய நரநாராயணமூர்த்திகளை 'அரக்கரால் விளைந்த துன்பஞ் சகிக்கப்படவில்லை' யென்று திக்குநோக்கித் தொழுது அடைக்கலமென்று கூவியழுதபோது, அந்த நரநாராயண மூர்த்திகளிருவரும் ஸ்ரீ கிருஷ்ணதேவராகவும் அழகிய விஜய பராக்கிரம அர்ச்சுனனுகவும் இந்தப் பூமியிலவதரித்தார்கள்.

அப்பனே! அந்தக் காரணத்தினு லல்லவா அர்ச்சுனன் வேத முந்தேடிக் காணக்கூடாத செஞ்சடைக் கடவுளென்னுஞ் சிவ பெருமானைச் சீக்கிரத்திற் றரிசிக்கத் தவஞ்செய்தான்? அவர் பிரசன்னமானதும் கட்டிப் புரண்டு விளையாடிக் கங்கையுந் திங்களும் மங்கையும் பொங்கரவும் அங்கமுங்கலங்கக் காண்டீபத்தினடியுண்டு கருணை சுரந்து பாசுபதாஸ்திரம் தந்தது. காலகேய நிவாதகவச இராக்கதரை அர்ஜுனன் வென்றது, இரணிய புரவாசிகளைக் கொன்றது, இந்திரனுக்குப் பட்டாபிஷேகம் நின்றது, சகலசுப சந்தோஷ வைபவங்களுந் தேவர்களுக்கு வரும்படியாகக் கண்டது, அமுத போஜன முண்டது. தெய்வலோக அரசு புரிந்தது, இவனே அவன் அவனே இவனுகையால்லவோ இவ்வளவு மகத்துவங்களும் நடந்தன, குழந்தாய்! தொழுந்தகையையுடைய பலமும்-குணகலமும் அழகும்-பழகிய விற்றிறமையின் விற்பன்னமும்-ஆண்மையும்-பெரு

மையும்-பிரகாசமும்-கீர்த்தியும்-நீதியும்-இராஜ முறைமையும்-உண்மையுமுடைய காண்டீபனுக்கு ஒப்பாகப் பெரும் புகழையும் பிரதாப வெற்றியையும் பெற்றவர்களெவர்களிருக்கிறார்கள்? திரிபுரதகனஞ்செய்த திரிநேத்திரதாரியை இணையாகச் சொன்னுற் சொல்லலாம். மற்றொருவரையுஞ் சமமாகச் சொல்லக்கூடாத விற்குணமேற்றும் வீராதி வீரனுகிய பற்குணனைச் சாதாரணமாகிய சத்துருவாக நினைத்து ஜயங்கொள்வோமென்றெண்ணி இருப்பது அவிவேகமேயன்றி, விவேகத்துடன் சேர்க்கத்தக்கதோ? இத்தன்மையாகிய வீர தீர சூரபார காண்டீபமுடைய விஜயனுக்கு நானே எதிரியென்று சூரியன் பெற்ற சவுரியன் காள்தோறும் அஞ்சாமற் சொல்லிவரும் வஞ்சகவார்த்தையைக் கொஞ்சமேனும் நிஜமென்று நம்பாதே.—என்று கூறித் துரியோதனனைப் பார்த்து "சுயோதனு! அர்ச்சுனனை அஸ்திரசஸ்திர வலிமையில் மேலாகச் சிறந்தவன். கர்ணனை குத்திர கூடாத்திரவார்த்தையில் காலாகப் பறந்தவன். இதை நானுணர்ந்து சொன்னதாகக் கொள்ளாதே. திரிலோகத்தாரும் அறிந்ததேயன்றி வேறல்ல. அப்பா எனது பேரனே! இந்த மொழியை நீ உட்கொண்டு யோசிப்பாயாகில் இவ்வுலகத்திற்கு முதன்மையாகும் பெருமையை நீயே பெறுவாய். ஓ இராஜச்செல்வமே! விவேக சூனியனுகிய உன் மாமன் சகுனியும், கட்டிக்கொண்டு வாவென்றால் வேறதவெட்டிக்கொண்டு வரும் உன் தம்பி துச்சாதனனும் 'என்னடா ஆண்டிதாதனுனையென்றால் இதுவுமொரு கர்தாயம்' என்பதை யொத்த அங்கதேசராஜனுகிய கர்ணனும், இந்த மூவருஞ் சொல்லிய உறுதிமொழியைத் தேனும் பாலும் போலக் கேட்டு அதற்கிணங்க நடக்கின்றாயல்லது, என்போன்றவர்கள் பொன் போல் நயமாகச் சொல்லிய நியாயவசனங்களைத் தள்ளிப் புகைந்து எரிந்து அழியச்செய்யுங் கோபாக்கினியைத் தாபாக்கினியாகக் கொண்டு, சகலராஜ்ய சம்பத்து முதலிய பந்து மித்திரரைப் போக்கடித்துக்கொள்ள ஏதுவாயிருக்கிறாய். ஒருவர் 'கட்டிக்கொடுத்த சோறுங் கற்றுக்கொடுத்த சொல்லும் நிலைநிற்குமா' என்னு முலகமொழியை மறந்து சிறந்த உன்னுல் இந்தக் குருகுலத்துக்கு கேடிடுங் கொடிய பொல்லாங்கைக் குறித்துக் கடைசி முடிவில் உரியோராகிய பெரியோர்களிருந்தும் தகும் தகாதெனச் சொல்லி அரசை நிறுத்தாமற் போனுர்களென்று யாவரும் எங்களை நொந்து ஒறுத்துக் கொள்வார்களே யல்லது, இந்த அற்பரை எவரும் நினைத்து நோவமாட்டார்கள். பெருங்காற்றுனது உயர்ந்த மரத்தை அலைத்து வருந்தி முறிப்பதன்றி தாழ்ந்த மரத்தைச் சாராது. அது போல உலகத்திற் பிறக்கும் பழிச்சொல்லானது உயர்ந்த பெரியோர்களை அடுப்பதன்றிச் சிறியோர்களைத் தொடாமாட்டாது. ஆகையால் இன்று முதற்கொண்டு எங்களுடைய விவேகத்தினுல் விளையும் நீதிவாய்ந்த தருமவசனங்களைக் கேட்டு உயிர் வாழும்படியாக ஓர்

உறுதி கொண்டு எங்களை கம்புவாயானால், இந்த பஞ்சாசத்கோடி பூமண்டல முழுதும் சுவேதகூத்திர நீழலில் ஏகசக்கிராதிபதியாகத் தம்பிமார்களுடன் நீயே அரசு செங்யும்படியாய்க் கொடுக்கமாட்டு வோம். பரிசுத்தவான்களாகிய பாண்டவர்கள் பூர்வத்தில் இராஜ சபையிற் கூறிய சபதங்களையும் திருப்பி விடுவோம். இதற்கு யாதொரு தடையுமில்லை. பால்யராஜனே! நிங்கள் குலத்திலும் உங்களிடத்திலும் எனக்கு மிகுந்த ஆசை இருப்பதினால் சொன் னேன். இந்த வாக்கியங்களை உன்னுள்ளத்திற் சிந்திக்கக் கடவை" யென்று சொன்னர். அந்த வார்த்தைகளைக் கர்ணன் கேட்டுத் தலைசாய்த்துப் பக்கத்திலிருக்கும் பெரியோர்களுடைய சந்தி பிம்ப முகத்தை நோக்கிச் சொல்லுவான்.—

அறிஞரே கேளுங்கள்! இந்த உத்தமராகிய காங்கேயரென்னும் புத்திமான் எந்த வேளையிலும் என்னை சுட்டிச்சுட்டித் திட்டித் திட்டிக் கோபிக்கின்றார். ஐயோ! நானென்ன செய்வேன். இராஜ னுள்ளம் - இராஜ தந்திரம்-காலம்-சமயம்-நோக்கம்-வீரம்-பெருமை புகழ்-கீர்த்தி-திடம்-தீரம்-இவைகளெல்லாம் தெரிந்த உத்தமராகும் இவருக்குத் தெரியாத தொன்றுமில்லை. இதழ்விரிந்த மலர்மாலை யணிந்த மார்பினராகிய மன்னர்களின் மநோபீஷ்ட மெப்படியோ அப்படியே அநுசரித்துக் குழைந்து நடக்கும் என்னைப்போன்ற வர்களுக்கு, இராஜகாரியத்தைத் தடுக்கவும் நடப்பிக்கவும் என்ன சுதந்தர முண்டாயிருக்கும்? இராஜ சபையில் சமானமாக எங்களை யிருத்தி வீரபட்டமுள்ள தீரரென்று தன்னைப்போல் பாவித்து சம்மட்சணை செய்து ஆண்டுவரும் பட்சமுடைய பட்டாபிஷேகப் பிரபுக்களின் தாமரை மலர்போன்ற பாதங்களிற் பஞ்சுபட்டாலும், சேவகத்தொழில் செய்யும் நாங்கள் இருகண்களிலும் முள்பட்டதாக அனுசரித்து நடவாமற் போவோமாகில், அவர்களை யடித்து நெடு நாளாகச் சாப்பிட்ட அரிய செஞ்சோற்றுக்கடன் எவ்விதத்திற் தீரும்? நாங்கள் எந்தக்காலத்தில் நற்கதியையடைவோம்? வணங்கா முடியோனுடைய மனதையறிந்த நாங்கள் ஏதோ கோபமாகப் பேசினால், இராஜ்யமும் செல்வமும் எங்களாலழிந்து போகிற தாகச் சொல்லுகின்றீர். ஐயா பீஷ்மாச்சாரியரே! சிந்தினலறுந்து போகிறமூக்கு சேனை காளைக்கிருக்குமோ? சீமானுக்கு ஆகிறதும் அழிகிறதும் எங்களாலிருக்கின்றனவோ ? அத்தனே! இராஜமுறை மைகளில் இது தகுங்காரியம் இது தகாத காரியமென்று சொல்லி நடத்தவேண்டிய கடமை உம்மைப் போன்ற நாதர்களுடையதாயி ருக்க, இராஜர்களுடைய அன்பையும் தயவையுஞ் சம்பாதிக்கும் எங்களைப் போன்ற சேவகவீரர்கள் சமயம் வாய்த்த போது எப்படிப் பட்ட தீரர்களையும் தீரமாக மதித்து, எங்கள் திருஷ்டிக்குத் திரி மூர்த்தியும் ஈடல்லவென்று மதித்து, அட்டகிரிகளையும் தூட்ட கஜங்

களையும் விட்டெறிந்து விளையாடி, வானத்தை வில்லாக வளைத்து மணலைக் கயிறுகத் திரித்து, சமுத்திரத்தைச் சாப்பிட்டு ஏப்பமிடும் வல்லாளரென்று சொல்லாலுரைக்குங் கடமை, எங்களுடையதா யிருக்க, பரியாரி தலைமாட்டிலிருந் தழுவது போல தனிவழிக்குப் பிடித்த கொள்ளி தலைமாட்டுக் கொள்ளியாய்ச் சமைத்ததற்கோடாய்த் தங்களைப்போல் நாங்களும் இளைத்துச் சொல்லுவது தருமமா? ஐயா! இராஜ விவகாரங்களுஞ் சேவகர் செய்கைகளுந் தெரிந்த பெரியோராகிய தேவரீர் எங்களை வெறுத்துச் சொல்லவும் நியாய முண்டோ? சாகத் துணிந்த பேர்க்குச் சமுத்திரத்தில் மூழ்கிப் போய் விடுவோமென்னுந் துன்பமுந் தோன்றுமோ? தாஷ்டிகராகிய பீஷ்மாச்சாரியரே! புண்ணிற்கோலிடுந் தன்மைபோல் எங்களை விட விடப் பேசவேண்டாம்"—என்று உண்மையாகிய கட்டுரைகளை வெளியிட்டான். உடனே, பரிசுத்த மனத்தினையுற்ற பீஷ்மாச் சாரியார் பிரகாசமற்ற ண்களைப்பெற்ற திரிதராட்டிரனுடைய முகத்தை நோக்கி இதனைச் சொல்லுவதானார்.—

அப்பா திரிதராட்டிரனே கேட்டாயா! எப்படிப்பட்ட சத் துருக்களென்றாலும் ஒரேகுணையினால் உடல் வேறு தலைவேறுகத் துண்டித்து விடுவேனென்புறுத்தஇக் கர்ணன் தன்னைத்தானே மெச்சிக்கொண்டு தானே புகழ்ந்து வாய் வளஞ் சொல் வதைக் கேட்டிருக்கின்றோ மல்லாமல், கைவளத்தினால் யுத்தஞ் செய்து வெற்றியைப்பெறக் கண்டறிந்த தில்லையே! அதற்குச் சாட்சியாக இப்போது சொல்லிய வார்த்தையை யாவருங் கேட்டீர் களா? சபை நிறைந்த கன்னியர்களே? துருபதேயமகாராஜன் சுயம் வரம் நாட்டிவைத்த பாஞ்சாலதேசத்தில் திரௌபதாதேவியின் விவாகத்திற்குப் பற்பல தேசத்தரசர்களுஞ் சென்று கூடியிருந்த காலையில், திருஷ்டத்துய்மனால் நேமித்த வில்லை வளைத்து மச்சேந்திரத்தை யறுத்துப் பிரகாசம் பெற்ற துரியோதன மகா ராஜனுக்கு வெற்றியும் பெருமையுங் கொடுத்தான். அன்றியும் சித்திரசேனனென்னுங் கந்தர்வன் துரியோதனன் முதலிய யாவ ரையுங் கட்டிக்கொண்டுபோகும்போது தான்போயெதிர்த்து அநேக யுத்தங்களைச் செய்து அவனக்கொடியோனாகிய அரசனை மீட்டு வந்தான். பின்னையும் புயவலிமையை யுடைய அர்ச்சுனன் பேடி ரூபத்துடன் இணையில்லாமல் வளர்ந்த விஜயகாண்டீபத்தைத் தாங்கி, வேகங்கொண்ட குதிரை பூட்டிய இரதத்தைக் கைபழகாத சிறு பிள்ளை உத்தரகுமாரன் செலுத்த ஆரோகணித்து, ஒருதேர் ஒருவில் தானொருவனெனவந்த அவ்விஜயன் அநேகங்கோடி இரத முதலிய அதிரதர் மகாரதர் சமரதர்களை வீழ்த்திய போது இரத கஜதுரகபதாதியர் பின்னிட்டோட முன்னிட்டோடி யொளித்த இக்கர்ணனையும் பின்னமுறத் துளைத்துப் பகுக்கூட்டங்களைத்

திருப்பிக்கொண்டு ஸ்திரமாக விடுத்த மோகனஸ்திரத்தால் யாவரையும் மயங்கச் செய்து சில வஸ்திராங்களையும் ஆபரணங்களையுங் கைக்கொண்டு, அஸ்தினபுரம் வரைக்கும் இவனைப் புறமுதுகிட்டோட அடித்து ஜயங்கொண்ட காலத்தில் அந்த அர்ச்சுனனை வெற்றிகொண்டு அவன் கைக்கொண்ட ஆவினங்களைப் மீட்டுக் கொடுத்து, வணங்காமுடியை யுடைய மன்னவனுக்கு வலிமையும் புகழும் வாச்செய்தான். அடக்கமுடையவராயிருந்து யுத்தகாலம் நேரிடுகிறவரையிலும் காத்திருக்கின்ற தீர சூர சேவகத்திறமுடைய வீராதி வீரராகிய பேர்கள் சத்துருக்கள் பேரில் படை யெடுத்துச் செல்வதும் அவர்களை வெல்வதும் உலகமெல்லாங் கொண்டாடப் புகழ்பெற்று வருவதும் இயற்கையேயாம். இத்தன்மையாகிய திட வீரத்தில் வல்லவரான பேர்கள் தங்கள் திறத்தை வாக்கினால் சொல்ல மாட்டார்கள். அப்படிச் சொல்லுவார்களானால் உடனே அவர்களுடைய வில்திறமை முதலிய சாமர்த்தியங்களும் அழிந்துபோம். 'அடக்கம் மரருளுய்க்கு மடங்காமை யாரிருளுய்த்து விடும்' என்பது நீதியன்றோ? இம்மூன்றியும் தான் பிறந்த வருஷமும் தனக்குக் கிடைத்திருக்குஞ் சம்பத்தும் குற்றமில்லாத யோககாலமும் புசிக்கும் ஔஷதமும் குருவினுபதேசமும் நேரிட்ட அவமானமும் தான் செய்த கருமமும் ஸ்திரீபோகமும் கற்ற கல்வியும் திடவீரசாமார்த்தியமும் மானமும் வயதின்முறுகையும் இவைகளை யெல்லாம் ஒருவரறியும் படியாகச் சொல்வதுகூடாது. அப்படி சொன்னார்களானால் அப்போதே அவைகளெல்லாமழிந்து போம். மேலும் ஜயிக்கத் திறமில்லாத மூடர்கள் படை முகத்தில் ஜயிப்பேனென்று வாக்கில் வந்த வண்ணம் பிதற்றுவார்கள். 'குரைக்கின்றநாய் கடிக்க வறியாது' என்னும் பழமொழி என்ன பொய்யா? 'வற்றியவோலை கலகலக்கு மெஞ்ஞான்றும், பச்சோலைக் கில்லையொலி' என்று சொல்லியபடி ஜயம் பெறுவதற்கு முன்னமே ஜயிப்பேனென்று சொல்லும் பிரதாபங்கள் மாசடையுமென்று மானமேற்கொண்ட மேலோர் சொல்லமாட்டார்கள். 'நிறைகுடங் தளும்பாது குறை குடமே தளும்பும்' என்ற வாக்கியத்தின்படி வாசாலகங் கரியஞ் சொல்லிக்கொண்டு காலங் கழிக்குங் கர்ணனுடைய ஆதரவினால் சுவேதவான் புரவிபூட்டிய தேரேறிவரும் ஆல கால விஷத்தையொத்த அழகிய அர்ச்சுனனை மதியாமல், மிகச் சொற்பத்தில் வென்று விடலாமென்று சொப்பனம் போலெண்ணி, இத்தக்குற்றமாகிய துன்பங்கள் யாவற்றையும் விளைவித்துக் கொண்டான் துரியோதனன். அவனைப்படி எண்ணங் கொண்டாலும் பொய்யில்லாத உள்ளமும்-பொறுமையும்-நற்குணமும்-பரிசுத்தமும்-நயவசனமும் உடைய ஐவர்களை, கோபமும்-அற்பகுணமும்-அசுத்தமும்-அசத்தியமும்-கடூரவசனமும்-குற்றமும் பொருந்திய அயோக்கியராகுந் துரியோதனாதியர்களை ஜெயிப்பவர்கள்?

யாவருங் கற்றுணர்ந்த சாஸ்திரமுதலிய நீதிநெறியை யுக்திபிழைலே தெரிந்து கொண்ட புத்திமானுகிய திரிதராட்டிரனென்னும் என் புத்திரனே! உனக்குச் சம்மதமாகத் தோன்றியதாட்டைப் பாண்டவர்களுக்குக் கொடுத்து, அவர்கள் மனமகிழ்ந்து அரசுபுரியும்படியாகச் செய்து மற்ற இராஜ்யமுழுமையும் அழகியவெள்ளைக் குடை நீழற்படித்தி, உனது புத்திரர்களுடன் வாழ்வைப்பெறுதல் எனது மனத்திலுக்கு மிகுந்த துணிவாயிருக்கின்றது. இதற்கு யாதொரு குறைவுமில்லை. நான் நிறைந்தமனதாகச் சொன்னேன்'' என்றார். சத்தியவிரதசிக்தையை நித்தியமாகவுடைய பீஷ்மாச்சாரியார் இப்படிசொல்லவும் பக்கத்திலிருந்தயாவரும் ''தகுந்த தருமமும் இராஜமுறைமையும் சாற்றினர் பீஷ்மர்'' என்று மகிழ்ந்தனர். தனுர் வேதபண்டிதராகிய துரோணாச்சாரியார் திரிதராட்டிரனை நோக்கிச் சொல்லுவார்.—

அரசனே! பரதமகாராஜனுடைய மரபென்னும் பிரயோசனத்தை இன்று நிலைநிறுத்தினர் விரதபூஷணராகிய காங்கேயர். ஆகையால் இந்த வசனம் எல்லா மேன்மைக்கு மேன்மையானது. இதைவிட வேறு நன்மையென்பதில்லை. குலாவியிருக்குங் கூட்டமாகிய பந்துக்களுடன் வேற்றுமையில்லாமற் பொருந்தி, பிறர் பழிக்க இடங்கொடாமல் வாழ்கின்ற வாழ்வைப்போல் சுகம் இது வரையிலும் நான் கண்ணுற் கண்டது மில்லை, கேட்டது மில்லை. இனிக்காணப் போகிறதுமில்லை. பீஷ்மாச்சாரியார் தகுதியாகிய காரியங்களை யோசித்துச் சொன்னர். இன்று முதலாக உன்னுடைய குலமுக் தழைக்கும். புத்திர மித்திராதிமுதலிய உலகத்துயிரும் பிழைக்கும். உனது செல்வஞ் செழிக்கும். ஐயா! உன்னுடைய வழிபடு கடவுள் சொன்ன வாக்கியத்தைப் போல் இந்த மகானுபாவர் சொல்லிய தருமவசனத்தை வழித்துணையாகக் காப்பாற்றுவாயாஞல், நன்மையென்பவைகள் யாவையும் பெறுவாய். இஃதன்றியும, அரசராகப் பிறந்தபேர்கள் சத்துருக்களிடத்தில் தங்களுக்குள்ள வீரியங்களையுஞ்சொல்லி, இல்லாத சௌரியங்களையும் இரவலாகக் கொண்டு எடுத்துப் பேசவேண்டியது. சகோதரர் முதலிய உள்ளிட்டாரிடத்தில் காரியங்களாகிய தொழில்களைக் குறித்துக் கலந்து பேசவேண்டும். குடும்பத்திற் பிறந்த பெரியோர்களாவது-ஆசானுவது-மந்திரியாவது-அன்பு நிறைந்தகோழனுவது-நடுவு நிலைமையாகப் பகுத்துச் சொல்லும் நீதி வாக்கியங்களைத் தரும தேவதை சொல்லிய சத்தியவாக்கியமென்று தனது விவேகத்தினுல் ஆராய்ச்சி செய்து அவ்வழி நடக்கவேண்டும். இவைகளைச் செவ்வையாக வுன்னி உன் புத்திரரை நல்லவழியில் நடத்துவாயாஞல் நுண்மையறிவிலும் நுட்பமுணர்ந்த அறிஞர்கள் கொண்டாடும்படியாக உன்னுடைய குலநலமானது வாழ்விற்சிறந்து

காழ்விலா தோங்கும்'' என்று துரோணாசாரியார் இனியவசனங் களினால் பற் பலவாகச் சொல்லினர், இவ்விதமாகச் சொல்லிய பெரியோர்களை வணங்கித் துதித்து அவர்களுடன் கலந்து ஆலோசிக்காமல், அம்மேலோருரைத்த வாக்கியங்களையெல்லாம் ஆலகால விஷம்போல் காண கடூரமாய்க் கேட்டு மனம் வருந்தி அவர்கள் பக்ஷத்தில் வைத்திருந்த குவிந்ததாமரை மலர் போன்ற முகத்தைச் சஞ்சயனுக்கு நேராகத் திருப்பிக்கொண்டு, ''ஓ சஞ் சயனே! சொல்லுதற் கரிதாகிய குருகுலத்திற் பிறந்த துரியோ தனன் முதலாகிய மன்னவர் யாவரும் பகைமேற்கொண்டு எதிர்த் துப் போர் செய்யப்புகும் யுத்தகளத்தில் கானகத்திருந்து கால்கைக ளோய்ந்து அன்னபாஞ்சாலருக்கு அவதிப்பட்டு வதங்கிய பாண்ட வர்கள் உற்சாகத்துடன் எதிர்த்து யுத்தஞ்செய்வதற்கு வல்லமை யுண்டோ? இளைத்த இவர்களுக்குச் சகாயம் எவர் வருவார்கள்? யாருடைய துணையை நம்பி அமர்செய்ய வருவார்கள்? ஐவர்க்கு நேரிட்டிருக்கும் பலாபலங்களைச் சொல்லும், சஞ்சயனே'' என்று திருதராட்டிரன் கேட்கவும், அந்த வார்த்தைகளைக் கேட்டுச் சபை யில் நிறைந்திருந்த சத்தியமுனிவர்களும் தேசதேசத் தரசர்களும் விசனமடைந்து, இராஜனுடைய ஊழ்வினைப் பயனுக்குத் தகுந்த புத்தி இதுவென்று தங்கள் பிராணன்போலில் வைத்திருந்த ஆசை யை அன்று விடுத்து, இனி மடியுங்காலம் நேரிட்டதென்று மனம் வருந்தி இருந்தார்கள்.

இப்படியிருக்க அந்தச் சமயத்தில் திரிகாலமுந்தெரிந்த சஞ்ச யன் மெலிந்து வருந்தி, ''ஐயோ!! சந்திரகுலத்திற் பிறந்த நமது அரசனுடைய தெளிவாகிய விவேகத்திற்கு என்னதாழ்ச்சியா? பீஷ்மாச்சாரியார் துரோணர் முதலிய பெரியோர்களும் சொல்லிய தருமநீதிகளை உன்னி உணராமற் போயினன். இதென்னகாலம்! ஏதேது! இனியாவரும் பிழைப்பதற்கு வழியில்லை'' என்று பெரு மூச்சுவிட்டு, 'விதையொன்று போடச் செடியொன்று முளைக்குமா?' 'வீடுபோபோவெனக் காடுவாவாவென இருக்கும்' முதிர்ந்த வயதினை யுடைய தகப்பன்; இவ்வளவு அறிவினையுடையவனுக்கு இவன் பெற்ற பிள்ளைகளைப் பழித்து மனம் வருந்தி நோவது நமக்குப் பெருமை யன்று. 'தந்தை யெவ்வழி அவ்வழி தனையர்' என்றும் 'தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்,' என்றும் உள்ள முதியோர் வாக்கின்படி இவனுடைய கெடு நினைப்பும் பாபங்களுஞ் சேர்ந்து மைந்தரென்னுமுருவாகி வந்திருக்கின்றன. இவைகளுக் கெல்லாம் மூலமானவன் இந்தக்குருடனே'' என்று ஸ்திரமாகச் சிந்தையிற்கொண்டு சபையிலுள்ள யாவரும் ஆச்சரியப்படும் படியாகத் திருதராட்டிரனை நோக்கி, சஞ்சயன் சொல்லுகின்றான்— ''குடும்பம் துலங்கச்செய்யுங் குருகுலக்கோவே கேளும்! தெய்வ

சகாயம் பெற்ற ஐவர்க்குப் பின்பலமும் வேண்டுமோ? அவர்களும் ஒருவரைப்படைத்துணை விரும்புவார்களோ? தென்திசை யமனையும் குலகிரியையும் பந்துபோலெடுத்தெறிந்து விளையாடி மடிக்கும் இடும்பாசுரனை-புகாசுரனை-கிம்மிராசுரனை சகடாசுரனை-ஜராசந்தனை இயக்கர் நடுங்கும் மணிமாலனை-கீசகனை-இறைப்போதினுக்குள் இடித்து மடித்துத் தேய்த்துக்கிழித்து மாய்த்து அழித்து ஜயங் கொண்ட. வீரகண்டை யொலிக்குங் காலினையுடைய கதாயுதனுகும் பீமசேனனிருக்க, வெற்றியையுடைய பாண்டவர்களுக்குச் சக்தியாகியதுணையும் வேண்டுமோ? சொல்லும் ஐயனே! இஃதன்றியும் உலகமெல்லாம் வருந்தக் காண்டவ வனமெரித்தும், மாட்சிமையையுடைய இராஜவர்க்கங்களை வேரறுத்தும், உத்தரகுரு கண்டத்தோரியாவரையும் வென்று உம்பர் மகிழச் செம்பொன முதலிய திரைகொண்டும், பின்பலம் வேண்டாத விரப்பிரதாபத்தையும் அதுமக்கொடியையும் அம்பொன்மகமேருவில் காட்டி கின்மல நிஷ்கள நிராமயனுகிய சங்கரசுயம்புவின் தரிசனங்கொண்டு பாசுபதாஸ்திரமும் பெற்று காலகேய நிவாதகவசர்கள் மாய்ந்திடக் காய்ந்து, வீரவாகை வேய்ந்து, இந்திரன் முதலிய தேவர்களுக்குச் சுகமீய்ந்து, தேவாமிர்தம் புசித்துக் களித்து இணையில்லாக்கணைகள் பெற்ற விரஷப விராட்டாகிய விஜயனிருக்கப் பாண்டவர்களுக்குப் பலமுண்டோவென்று நீர் நினைத்துக் கேட்டது எனக்கும் பழிப்பாக இருக்கின்றது. பார்த்திபனே! இன்னமுங்கேளுமட. பிள்ளையென்று வந்த பூதகியுயிரை முலைப்பாலுடன் பருகியும், தேவேந்திரன் வஞ்சகத்தினுல் வருஷிக்கச்செய்த கல்மாரியைக் கோவர்த்தனகிரியென்னுங் குடையினுல் தடுத்தும், ஆயர்களோடு ஆவினங்களை இரக்ஷித்தும், மாமனுகிய கம்சனைக்கொன்றும், இந்திரப்பிரஸ்தத்தில் நடந்த இராஜசூயயாகத்தில் சிசுபாலனைச் சிரச்சேதஞ் செய்தும், ஐவர்சகாயனென்று அஞ்சனமேனியையுடைய கண்ணனிருப்பது நிண்ணமாய்த் தெரிந்திருந்தும், ஐவருடைய வல்லபங்களையும் விசாரிக்கும் புத்திமான்களுண்டோ? மேலும் 'குணமென்னுங்குன்றேறி நின்ருர் வெகுளி, கணமேனுங்காத்தலரிது' என்பது போல சத்தியமும்-சாந்தமும்-பொறுமையும்-தருமும்-வழுவாத விரதசீல மெய்ஞ்ஞான நீதிபரனுகிய தருமநந்தனன் கோபித்து வில்வளைத்துப் பகைவர் மேலெதிர்க்குங் காலத்தில் திரிபுராந்தகனையும் வடவாமுகாக்கினியையும் ஒப்பாய் நிற்பான். நவரத்தினமழுத்திய அணிமுடிதரித்த அரசே! மற்றத்தம்பிமார்களுக்கு ஈடாக எதிர்த்து நேர்நின்று போர்செய்பவர்கள் யாரிருக்கின்ருர்கள் ? இவர்களெல்லா மிருக்க, இந்தச்சந்திர வம்சத்திற் பரம்பரையாகப் பிறந்து அங்காள் முதலிங்காள் வரையில் நீதி செலுத்திவந்த வேந்தர்களின் தீரவீரங்களிலும் தன்தந்தையாகிய விஜயபராக்கிரமனுடைய சேவகத்திறங்களிலும், நூறுபங்கு உயர்ந்த

திடகாத்திர ஜெயசிம்மக்குரூஉ போன்ற அபிமன்னுவென்னும் அர்ச்சுனகுமாரனை, உன்னுடைய புத்திரமித்திரகளத்திராதி முதலிய பதினொரு அக்குரோணிசேனைகளாகிய துரும்புக்குச் சூராவளிக்காற்றைப் போற்றோன்றிச் சுழற்றி மடக்கியடித்து முடிக்கத் தக்கவனென்று சத்தியமாக உன் சித்தத்திலுணர்வாய். இஃதன்றியும் நாகாதிபன் மைந்தனுகிய அர்ச்சுனனுக்கும் நாககன்னியாகிய உலூகிச்சும் பிறந்து சிறந்து திறவாளுகிய அரவானென்பவன் போர்முகத்தில் சேர்புகுவானுகில், அவனுடனெதிர்த்து அமர்செய்யமதிக்கும் அடல் வீரர்கள சுவர்க்கமத்திய பாதலத்திலுமில்லை. மேலும் எலலாத்திறங்களிலும் எதிரில்லாத பீமசேனன் இடும்பியை மணந்து பெற்ற திணிந்த தோள்களையுடையகாளையாகிய கடோற்கஜனுக்குக் கீழ்த்திசையிலுதித்த சிவந்தசூரியனைக் கனியெனத் தாவிக் கவ்விய அனுமந்தனை ஒப்பாகச் சொன்னல் ஒரு வேளை யொக்கும். அவனே மாயவிசித்திரப் போரில் மகாவலலபமுடையவன். அல்லாமலும் அக்கினியிற் பிறந்த பாஞ்சாலி பெற்ற இளம்பஞ்ச பாண்டவரென்னும் பிரதிவிந்தன்-சுருதிசன்மன்-சுதசேனன்-சதானீகன்-சுதகீர்த்தி - என்னும் ஐந்து பிள்ளைகள் தங்கள் தகப்பன்மார்களுடைய பலாபலங்களிலும் பதின்மடங்கு மேலாகிய கோலாகலபரிசுத்தரா யிருக்கின்றூர்கள். இன்னமுஞ் சொல்லுகின்றேன் இறையே கேளும்! ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினுடைய தம்பி சாத்தகியென்னும் சாமர்த்தியன் விஜயனிடத்தில் வில்வித்தை கற்றுக்கொண்ட வீராதிவீரன். போஜகுலத் தலைவரும் மத்திரதேச மித்திரருந்துணையாளுர்கள். அவரோடெதிர்த்து அமர் செய்யவினைப்பவர்கள் யாரோ அறியேன். அரசே! யாகத்திற்பிறந்த திருஷ்டத்தூய்மன், துரோணுச்சாரியாருக்கு வைரி! எதிர்த்துப் போர் செய்யும் சத்துருக்களுக்கு யமன்! பாண்டவர்களுக்குத் தோள் வலித்துணையாகிய மைத்துனனும் விற்றிறமையைக் கற்றுணர்ந்த வேந்தர்களிலும் தேர்ந்த விவேக முள்ள சத்தியகுணஞகிய துருபதேயனும், சிகண்டியும், உத்தமோசாவும், உதார்மனும், மற்றுமுள்ளாரும் தருமபுத்திரருக்குப் படைத்துணையாளுர்கள். விராடராஜனும் அவன்புத்திரராகிய சதானீகன்-சங்கன்-சுவேதன்-வராகமேகது-உத்தரன்-முதலிய மித்திர வர்க்கத்துடன் பஞ்சபலபராக்கிரமத்திற்குத் தானெருவனன்றி வேறில்லையென்றெதிர்த்து யுத்தஞ்செய்து பாண்டவர்களுக்கு வெற்றியைக் கொடுக்கச் சம்பந்தஞ்செய்து உற்ற துணையானன். பின்னும் பற்பலமகுடாதிவேந்தரும், சிற்சிலசூரு சில மாந்தரும், சேதிதேசாதிபதி சிசுபாலனுடைய குமாரன் தஷ்டகேதுவும் ஜராசந்தனுடைய குலபுத்திரனுகிய சாதேவனும் சோழராஜனும், பாண்டியனும், சேரராஜனும், இன்னமனேக மன்னர்மன்னரும், அவர்களுக்குப் படைத்துணை நெருங்கி யிருக்கின்றூர்கள். சுவேதக்

குடையினை யுடைய தோன்றலே! இத்தன்மை படைத்துணை கொண்டு நெருங்கியிருக்கும் அரசர்களும்-யானைகளும் குதிரைகளும்-தேர்களும்-பதாதிகளும் - ஏழக்குமாணியென்றும், கணக்கர்-காரியஸ்தர்-படைவீரர் - சேனைத்தலைவர்-முதலிய இவர்கள் கோடா கோடி பேர்களென்றுந் தொகைசொல்லக்கேட்டு மகிழ்ந்து சத்தியத்தை நித்தியமென்று நம்பிய பாண்டுபுத்திரர்கள் உபலாவியத்தில் வீற்றிருக்கின்றார்கள். ஆதலால் அவர்கள் வனவாசஞ்செய்து வலியற்றார்களென் றெண்ணுமல், மேல்நடக்கவேண்டிய காரியங்களைக் கட்டளையிடுங் காவலனே--என்று அஞ்சலியஸ்தனைக் சஞ்சிதவினையற்ற சஞ்சயன் சொல்லக்கேட்டு, கட்புலனில்லாதகாந்தாரிகொழுநன் நெடுமூச்சும் பெருமூச்சுமிட்டு வியர்த்து வெளிப்பட்டுப்போகிற பிராணனை விடாமலிருத்தி இராஜசபையிலிருக்கும் எல்லோரையும் பார்த்துக் கூவிச்சொல்லுகிறான்.—

ஓ அரசர்களே! கல்வியிற்றேர்ந்த வல்லவனாகிய சஞ்சயன் இப்போது சொல்லிக்கொண்டுவந்த பற்பல படைத்துணைவர்களின் பலாபலங்களெல்லாம ஒருகாலத்தில் இளைத்துப்போமென்று நினைத்தாலும் நினைக்கலாம். அப்பப்பா!! சோபாக்கினிவிளைந்து தகிக்குங் கண்களையுடைய பீமசேனனென்பவன் இருட்புக்கட்டுகளார்ந்த கீண்டகதையைக் கைக்கொண்டு ரணகளம் புகுவானாகில் யாவரும் மண்ணைக்கவ்வி மடிவார்களன்றி மாயாமற் றிரும்பி வருவாருமுண்டோ? வாகை மாலையணிந்த மன்னவர்களே! அந்தப்பீமனைப் பார்க்கக் கண்ணில்லாதவெனக்கு அவனைப்பார்த்தவர்கள் பயந்து பயந்து வந்து சொன்னதை அம்மம்மா!! என்ன சொல்லுவேன்? ஆகாயபரியந்தமுயர்ந்து திணிந்த வஜ்ரப்பொருப்புக் கிணையாகிய உச்சிதப்புயமென்றும் திருதிருவென் றெரிந்து புகையும் நெருப்புக்கண்களென்றும், போர்மன்னரையெல்லாம் பொடிப்பொடியாகப்போக்கி யமனுக்குச் சமானமாக நாசஞ்செய்யத் தக்கவனென்றும், அவனுடனெதிர்த்துப் போர் புரிபவர்கள் எவருளரென்றுஞ் சொல்லக்கேட்டிருக்கும் என்மனந்துடிக்கிறதே. நுட்பமாக வளர்த்த புஷ்பம்போன்ற தோள்களையுடைய என்மக்கள் பீமனுடனெதிர்த்துப் போர் விளைக்க மாட்டார்களே. மேலும் நாகப்பாம்பின் விஷம்போல வேகந்தாங்கி வெகுநாளாக வைரங்கொண்டிருக்கும் பீமசேனன் வெகுண்டு போர்செய்யச் சீறியெழுந்து வருவானாகில் கொழுந்து போன்ற என்குழந்தைகள் நூற்றையும் நீறுக்கிவிடுவானே. அவனினைத்துப் பேசினால் எனக்குவயிறு கலங்குகிறதே, அப்பா மைந்தர்களே! அவனுடன்பகைத்துயுத்தஞ்செய்ய யார் நினைப்பார்கள். விளக்கைப் பிடித்துக் கிணற்றில் விழும் விவேகிகளா யிருக்கின்றார்களே. அவனெண்ணுள்ளத்திலுன்னும்போது என்னுடல் நடுங்குகிறதே! என்னிரல் குறுகுகிறதே. என்னிதயம் வேகுகிறதே. என்னுயிரும் புலருகிறதே. ஐயையோ!

பிள்ளைகளே! பகையென்பதை மறந்து பிழைக்கும் விதத்தைத் தேறித் தெளிந்து சொல்லுங்களப்பா. தழைக்கும் புத்திபான்கள் சொல்லிய நீதியை உட்கொள்ளுங்களப்பா. என்றும் தருமத்தைக் கெடுக்கும் பாபத்தைத்தொடக்காதீர்கள். அருமையாகிய ஆசிரியர் பெரியோர் - அண்ணையர்-தந்தையர்- இவர்கள்சொல்லும் புத்தியை விடுக்காதீர்கள். ஓ மைந்தர்களே!—என்று இவ்வாறு புத்திர வாஞ்சையினல் யெத்தனையோ விதத்திற் சொன்னன். இப்படி அத்தனுரைத்த புத்திமதிகளைச் சித்தத்திற் சற்று நேரமாகிலும் வைத்திராமல் சுபுத்திரனுகிய துரியோதனன் தந்தையை நோக்கி, சிந்தை வருந்தி மெத்தவுங் கனன்று சீறி மனமடியாம விறுமாந்து, இராஜசபையில் நிறைந்திருக்கும் எல்லோரும் திடுக்கிடும்படியாகச் சொல்லுகின்றன்.—

ஓ மன்னவர்களே! அங்கே மாண்டவரையொத்த பாண்டவர் களின் வல்லபங்களையும் அவர்களுக்குப் படைத்துணைவந்த மன்ன வர்களின் கீர்த்தியையும இந்தச் சஞ்சயன் சொல்லக்கேட்டு, தருமன் முதலிய போர்களை சத்தியமுள்ள பிரபலரென்று தங்களுக்குத் தாங்களே கொண்டாடிச் சந்தோஷங் கொண்டீர்களல்லாமல், எங்களுடைய சாமர்த்தியமும் எந்திர-மந்திர - தந்திர-தபோபல சித்தியையும் எள்ளத்தனையு மெண்ணுமற் போனீர்கள். கள்ளத் தன மனமுடையவரானீர்கள். திடவீரசிம்மம் போன்று படை வீரராக எனக்குத் துணைவந்திருக்கும் தீரர்களுடைய திடத்தையுஞ் சிந்திக்காதவரானீர்கள். ஆகிலும் நான் சொல்லுகிறேன் கேளுங் கள். சுவர்க்க மத்திய பாதாளங் கொண்டாடா நின்ற பிரதாபசாலி யாகிய பரசுராமரைப் போலொத்தவர் புறமுதுகிட்டோடும்படி யாகப் போர் புரிந்து தண்ணிய கீர்த்தியாகிய வெற்றியைக் கொண்ட புண்ணியருகும் எங்கள் பாட்டனர் பீஷ்மாச்சாரியர் புராந்தகனை யும் ஈராந்தகனையு மொத்துப் போர் முகத்தில் வில்வளைத்து நேர் புகுந்தாராகில், அவருக்கெதிரில் ஈடாக எதிர்த்து நிற்பவர்கள் ஈரேழுலகத்தினுமில்லை. அப்பேர்ப்பட்ட வீரகேசரிக் கெதிராகக் காடு மலையுங் கசங்கித் திரிந்து இளைத்து வருந்திய பாண்டவர்களை எதிர்த்து நிற்கத்தக்கவர்கள்? சோற்றிலிருக்குங் கல்லெடுக்கமாட்டா தவன் முகவண்ணக் கல்லெடுப்பானென்ப தெவ்வண்ணம்? அன்றி யும் அழகிய தநுர்வேதத்தினுக்கும் புயவலிமைக்கும் ஒருவரும் நிகரில்லாத சதுர்வேத சம்பன்னராகிய துரோணுச்சாரியா யுத்தஞ் செய்யத் தொடங்கும் போர்முனையினிடத்தில், சர்வசங்கார கர்த் தனுகிய உருத்திரனும் யமனும் எட்டிப்பார்ப்ப தருமையென்றல், ஒரு திரௌபதையின் காமத்திலகப்பட்டுழலுகின்ற ஐவர்களோ என்னவென்று வெற்றியடைகின்றவர்கள். வேந்தர்களே! இயக்கர் முதலிய விண்டலத்திலுவரும் இராஜர்கள் முதலிய மண்டலத்திலு

யாவரும் எல்லா விதங்களிலும் வல்லாரிவரென்று புகழும்படியாகத் திகழும் கிருபாச்சாரியர், பகலிற் பிரகாசிக்குஞ் சூரியனைப் போலும் விளங்கி, உயர்ந்த தோள்கள் பரிக்கவும், ஒப்பில்லாச் சங்கம் பூரிக்கவும் விற்றொடித்து, யுத்தகளத்திலடித்து, சத்துருக்களைப் பயித்து என்பகையைக் கெடுத்து, வெற்றிக்கொடி பிடிக்கவரும் வல்லமைத்திறத்தையும் நீங்கள் மதிக்கவில்லையே. மேலும் பிறையணியுஞ் சடை முடிகொண்ட பிறப்பிலியாகும் பெம்மானுடைய தாது விக்தாகிய சிலைத்திறமும் கலைத்திறமும் சிரஞ்சீவியும் பெற்ற அசுவத்தாமர் கைக்கொண்டிருக்கும் வில்லுக்கொப்பாகிய வில்லையுடைய காவலர்கள் மூவுலகத்திலுமில்லையே. சொல்லுங்கள் அரசர்களே! அறிவு வளர்ந்தோங்கி விக்ஞானம் விளையுமுள்ளமும் வேறொருவரிணையில்லாத வீரமும் விரதவைராக்கிய முங் கொண்ட பரசுராமனிடத்தில் வில்வித்தைகளைப் பூரணமாகக் கற்றுத் தேகத்துடன் பிறந்த கவச குண்டலத்தைத் தேவேந்திரனுக்குத் தியாகமாகக் கொடித்து, திரிலோகமும் புகழ்ந்து மகிழ்ந்து கொண்ட வள்ளலாகியும், அர்ச்சுனனை விற்பரீக்ஷை காலத்தில் அவமானப்படுத்தி அப்போது நேரிட்டபகையினால் தாமரை மலர் போன்ற முகநிறைந்த தலையை அறுத்து அரங்கபூஜை செய்வேனென்று சகலவரசர்களும் நடுங்கச் சபதங் கூறியும், காண்டவவனத்திலிருந்து அர்ச்சுனனுடைய கணைபினுற் கலங்கிக் கரிந்து எரிந்து வருந்தி அபயமெனவந்த நாகாஸ்திரத்தை ஆதரித்துத் தாங்கியும், பாதாளாண்மையிலாங்கியும் பதினுன்கு லோகத்திலும் பாணவருஷங்களைப் பொழியும் என்னண்ணனுகிய கர்ணமகாராஜன் என்னிடத்திலிருக்கப் பகைவரால் நேரிடும் பயமென்பதும் எட்டிப் பார்க்குமோ? கிட்டி விழிதிறந்து நோக்குமோ? ஆ! ஆ! அரசர்களே! சத்துருக்களின் பீதகமாகிய வயலைத் தன் கரத்திற பிடித்த சிலைபிற்றொடுக்குங்கணைகளாகிய கொழுவினுலுழுது, மாமிசச் சேறு படித்தி இரத்த நீர்பாய்ச்சி, யுத்த விதைவித்தைத்துப் பூர்வம் தன் மனதில் விளைந்திருக்கும் களைகளை யகற்றி, கீர்த்திப் பயிர் தழைக்கச் செய்து அவர்களுடைய பிராணனை மேல் வாரமாக சமக்குக் கொடுத்து, வெற்றியைக் குடிவாரமாகக் கைக்கொண்டு உலாவத்தக்க என் மைத்துனன் சிந்து தேசாதிபதியும், சப்தத்வீபிலும் ஒப்பற்ற வெப்பமாகிய சுப்ரதீபத்திற் கொப்பாகிய பகதத்தனும், அந்த ஐவருக்கும் மிகுந்தவரென்று சொல்லும்படி சுகமற்று என்னிடத்திலிருப்பதை நீங்கள் கண்டதில்லையோ? இவர்களிருவரும் போர்புரிய முன்னால் இந்த அண்டமும் அயனது சொந்த அண்டமும் பகிரண்ட பேரண்டமும் சமக்கு இது ஒரு கண்டமென்று பாழாகிப் புழுதியாய்ப் போய்விடுமே. மேலும் புஜ உறுதிக்கும்-கஜமிகுதிக்கும் - போர்புரிவதற்கும் - தேர்விடுவதற்கும்-கலிவலிமைக்கும்-

நிலைவலிமைக்கும்-விண்மணியனைய கண்மணியாகும் மத்திர தேசாதிபதியாகிய என்பித்திரன், கூளிபோற்கூடிய பகைவரை யாளிபோற் சீறி யடித்துக் கண்ணே நிமை காக்குந் தன்மைபோல் என்னைக்காக்க வந்திருக்கின்றான். இந்திரனுக் கொப்பாகிய சோமதத்தனும்-பூரிசிரவனும் - காந்தாரராஜனும் - கிருதவன்மன் - கிருதவீரியன்-முதலிய யாதவகுலக்கலைவரும் எனக்குப் படைத்துணையாகிச் சூழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இம்மூதன்றியும் பீமார்ச்சுனர் முதலிய பேர்களை வில்யுத்தத்திலும் மல்யுத்தத்திலும் வென்று கொல்லுகிறேமென்று விம்பிடித்து, வெற்றிமாலை தரித்துச்சங்காரருத்திரனைப்போல் ஓங்காரமிட்டு, சப்தத்தராகிய அறுபதினாயிரம் வெண்கல ரதக்காரர்கள் பாதலத்திலிருந்து படைத்துணை வரவிருக்கின்றார்கள். அளவு சொல்லுதற்கருமையாகிய தவத்தையும் பலத்தையுமுடைய அமோகங்கோடி இராக்ஷஸர் என்னிடத்திலுண்டாகிய இஷ்டத்தினால் துஷ்டநிக்ர சிஷ்ட பரிபாலனஞ் செய்யப் படைத்துணை வரப்போகின்றார்கள். இப்போது என்னோருயிருக்குத் தங்கள் பல உயிர்களைக் கொடுக்கும்படியாகச் சிலரைத்திருக்கும் தீவுகளிலுள்ள பேர்களும் பூமியிலுள்ள பேர்களும் பாரதயுத்தந் தொடங்குங் காலங்கேட்டு, ஒரு காலைக்கு முன்னதாக இவ்விடம் வந்து சேருவார்கள். இத்தன்மையாக அளவற்ற சேனைசன்யங்களுடன் எனக்குத் துணையாக வருபவர்களெல்லாரும் என்னுயிருக்குயிராகிய பேர்கள். அவர்களிறந்தால் நானிறப்பேன். நானிறந்தால் அவர்களிறப்பார்கள். இத்தவுலக மழிந்தால் நாங்களெல்லோரும் அழிவோம். உலகம் அழியப்போகிறதுமில்லை. நாங்களியாவரும் ஒழியப்போகிறதுமில்லை. இது உண்மையே. இனி நான் பற்பலவாறுகச் சொல்லவேண்டியதில்லை. என் தந்தையாகிய பராராஜபயங்கரனே! கேளும் இதுவரையிலும் படைத்துணைக்குக்கூடிய தேர் யானை குதிரை காலாள்வீரர்கள் முதலாகிய எல்லாஞ் சேர்த்துப் பதினொரு அக்ஷோணியென்றுகணித்நூல் தெரிந்த பெரியோர்கள் தொகைசெய்தார்கள். இவ்வளவு சேனைகளும் வீராதிவீரர்களும் எனக்காகச் சேர்ந்திருப்பவர்கள். இவர்களுட னெதிர்த்துப் போர்புரியுந் தன்மையை யுடையவர்கள் ஒருவருமில்லை. அப்படிக்கு நேர்நின்று சண்டைசெய்பவர்கள் யாவரேனும்இருப்பார்களானால்சொல்லுங்கள். ஓ நீங்காத விவேகநிறைந்த நீதிமான்களே! சூற்கொண்டமேகம்போன்ற திருமேனியையுடைய கிருஷ்ணபகவான் பாண்டவர்களுக்குப் படைத்துணையானானே, அவனுக்கு ஈடாரென்றுசொல்வீர்கள். அப்படியே படைத்துணையானாலும் கிராயுதனாகித் தேர்செலுத்த வமைத்தானன்றி வேறல்ல. அவனண்ணன் பலபத்திரன் கலப்பையாயுதத்துடன் எனக்குப் படைத்துணையானான்- இவைகளெல்லாம் அந்தக் கிருஷ்ணனுக்கு முன் நிலையில்லாமலழிந்து போகுமென்று பயந்திருக்கின்றீர்களல்லவா? அப்படியே மடிந்து

போகுமானால் நாமெல்லாரும் வீரரென்றும் வேந்தரென்றும் ஏனிருக்கின்றோம்? ஐயோ! நாம் அனைவரும் கால்கை குறைந்த சப்பாணி முடம்போலெண்ணிக்கொண்டோ சஞ்சலித்து வாடுகின்றீர்கள். ஓதைரியமற்ற மன்னவர்களே! இன்னமுங்களுங்கள் கதாயுதத்தைக் கொண்டு யுத்தமுனையிற் கலந்து கின்றனரில், இவ்வுலகத்திலுள்ள தேவர்களும் மூவர்களும் ஒன்றுய்ச்சேர்ந்து வந்தெதிர்த்தாலும் ஒரு க்ஷணப்போதில் அவர்களியாவரையும் வதைத்து வீரசொர்க்கம் அனுப்பிவிடுவேன். இவ்வளவு வலிமையுடைய என்னைப் பீமசேனனை வெற்றிகொண்டு வெல்பவன். இதை நீங்கள் யோசிக்கவில்லையோ? அந்தோ! அந்தோ! நானென்ன சொல்லப்போகிறேன், மேலும் திடவீர காத்திரதிண்ணியராகிய துச்சாதனன்-துன்முகன்-விகர்னன்-சுமத்தி-சித்திரசேனன்-சித்திரபானு இவர்கள் முதலிய என்தம்பிமார்கள் மல்லர்புரியுந் தோள் வல்லமையும், சொல்லற்கரிய வாள்வல்லமையு முடையவர்கள். வடபத்திரசாயியாகிய மாயோன் பார்த்தசாரதியாக வந்தாலும் அதைக்குறித்து மெச்சிச் சந்தோஷப்படாமல் அர்ச்சுனனையும், மற்றப் பேர்களையும் பிச்சிப் பிடுங்கி இலவம்பஞ்சுபோலே காற்றிலே தூற்றி விடுவார்கள். பீமசேனனுடைய விதியை மாற்றுதற்கு நானொருவனிருக்கின்றேன், இம்மல்லாமலும் என்பேரிலும் எதிர்த்து வரப்பட்டவ ரெவரையும் இனிப்பிறவாமற் செய்வதுமன்றி, ஈட்டி-எறி வல்லயம்-குண்டு-குழல் முதலியவற்றைத் தடுக்கவும் இடித்து மின்னிவரும் ஏழு மேகங்களின் முழக்கத்தை விலக்கவும், மேதினிகிழியப் பொழியுங் கல்வருஷங்களைக் கலக்கவும், ஓங்கிவீசிய யுகாந்தகாலச் சண்டமாருதத்தை யொடுக்கவும், வேண்டியபோது விடுக்கவும் பேரிருளைப் பிரகாசிக்கச்செய்பவும் பிரகாசத்தைப் பேரிருளாக்கவும் ஆகாயகங்கையைப் பூமியில் அழைப்பிக்கவும் அதன் பேரில் யானை சேனை பரிவாரங்களெல்லாம் நடக்கவும் எதிராளிகளின் சேனைப்படைகள் முழுகிப்போகும்படியாக முடுக்கவும் வெய்யமாகிய பாலைநிலத்தில் மேகம் பொழிந்த ஜலமானது சுவறிப்போகாமல் வரும்படியாய் மடக்கவும் என்னுடைய சேனைகள் தாகவிடாய்தீர்ந்து குளித்து முழுகி இளைப்பாறி நடக்கவுஞ் செய்வதுமன்றி மண்டலமேலாகவும் விண்டலங்கீழாகவும் மாற்றுவேன். சரபம்-சார்த்தூலம்-கண்டபேரண்டம்-சிங்கம்-யானை-மலைப்பாம்புகள் முதலாகிய மிருகங்களெல்லாம் நான் கைகாட்டிய தொழில்களைச் செய்துகொண்டு இன்னமும வேலை செய்யக் கட்டளை இடவேண்டும் இறைவனே என்று இறைஞ்சிநிற்கவும் அப்போது குறுங்காற்பூதம்-குடங்கைப்பூதம்-குடவயிற்றுப்பூதம்-குழிக்கண்பூதம் முதலாகிய பைசாசகண பிரமராக்ஷசர்களெல்லாம் சிரத்திற்கரத்தைக் குவித்து என்ன உத்தரம் எந்தவேளையில் வருமோ வென்று எதிர் காத்திருக்கும்படியாகிய ஸ்தம்பனம்-மோகனம் உச்சாடன-ஆகர்ஷணம்-தொட்டியம்-சல்லியம்-இந்திர

ஜாலம்-மயேந்திரஜாலம்- கண்கட்டு-திசைக்கட்டு-தேகக்கட்டு - விண் கட்டு-மண்கட்டு-மறைவுமை-மாயாவித்தை முதலிய மந்திர எந்திர தந்திர சாகசங்களும் முனிவர் சித்தர் முதலியபோர்கள் அநுக்கிரகஞ் செய்யக்கற்றிருக்கிறேன். ஜலஸ்தம்பனம் வாயுஸ்தம்பனம் அக்கினிஸ் தம்பனம் முதலான வித்தைகளோடு இவ்வுலகத்தில் தற்செயலாய் மாய்ந்துபோன உயிரை மறுபடியும் வாவழைக்கும் அமிர்தசஞ்சீவி மந்திரங்களும் பெற்றிருக்கிறேன். இத்தன்மையவாகிய உபாயங்க ளெல்லாவற்றிலும் வல்லவனுகிய நான் படைத்துணைவந்த பேர்களை நம்பிக்கொண்டிருக்கத் தக்கதுமுண்டோ ? தேவர்கள் அடைக்கல மென்பார்களாகில் அசுரர்களை வென்று ஒருவாக்கியத்திலுல் அமரர் களைக் காக்குந் தீறத்தையுடைய என்னைத்துதித்துக் கொண்டாடிப் புகழாமல் அற்ப பலத்தையுடைய ஐவரைக்கொண்டாடி விம்மிவிம்மி வாடுவது வேந்தர்களுக்குப் புகழல்லவே. இப்போது நான் சொல்லி வந்த காரியங்களித்தனையும் உறுதியுடையவையல்லவென்று உங்கள் மனத்தில் நினைப்பீர்களாலுல் உண்மையாகிய வார்த்தைகளைச்சொல் லுகின்றேன் கேளுங்களுத்தமர்களே, 'பேறிளமையின்பம் பிணி மூப்புச் சாக்காடிவ் வாறுங் கருவிலமைப்பு' என்றபடி தாய் தந்தை யார் கூடிச் சுக்கில சுரோணிதஞ் சம்பந்தப்படுங்காலத்தில் ஐந்து கோசமாக வாயு உந்தியபோது தரித்த கருவுருவாகிய உடலுக்கு அவ்வாறுங் கருவிற்றானே அமைத்திருக்கின்றான் சிருஷ்டிகர்த்த னுகிய பிரமனென்று பெரியோர்களாலே தெரிந்துகொண்டிருக்கின் றேன். 'அன்றெழுதியதை யழித்தெழுதப் போகிறதில்லை' என்று சொல்லும் பழமொழியுங் கேட்டிருக்கின்றேன். இதைவென்று வாழ்ந்தவர்களுமில்லை யென்றுணர்ந் திருக்கின்றேன். அப்படி எவர் களாகிலும் இவ்வினையைத் தவிர்த்திருப்பவர்களுண்டாலுல் எனக்கு அதனைச் சொல்லுங்கள். ஆகையால் க்ஷத்திரியர்களுக்கு விதித்திருக் கு முறை தெறிப்படி யுத்தஞ்செய்வதேநியாயம். எங்களை வெற்றி கொண்டு பஞ்சாசதகோடி பூமண்டலமுழுதுந் தருமராஜன் ஆண் டாலும், அல்லது மாண்டாலும் நாங்கள் மிகுஜெயம் பெற்றாலும் அல்லது அபஜெயமுற்றாலும், ஆருக்கென்ன 'பள்ளமிறைத்தவன் பங்குகொண்டுபோவான்' என்பது போல் சாகிறவரையிலும் யுத்தஞ் செய்து, ஜயித்தவர்களுடைய இராஜ்யமென்று இராஜமுறைமை இருப்பதனுல் ஒருகை பார்த்துவிடுவேனல்லாமல் பாண்டிமைந்த ரைப் பணிந்து இனியவசனங் கூறித்தாழ்ந்து அவர்கள் பாதத்தைப் பிடித்துக்கொண்டு நித்திய தரிசனஞ் செய்து அற்பத்திற்கு அருமை சூலைந்து அரியபண்டத்திற் காசைகொண்டு வாழ்ந்திருக்கமாட்டேன். இதனுல் என்னுயிர்மாத்திரம் அழியுமேயன்றி என்புக ழொழியமாட் டாது. ஆகையால் என்னதன்பங்கள் வந்தாலும் எவையழிந்தாலும் எவர்கள் மொழிந்தாலும் எவர்களொழிந்தாலும் யுத்தமென்னும் வீரத்தை என்னிதயம் ஒருகாலும் விட்டு நீங்காது'' என்று இராஜா

திராஜ்ஞகிய திரிதராட்டிரனையும் மற்ற அரசர்களையுநோக்கித் துரி யோதனன் சலசலவென்று மொழிந்தான்.

அப்பால் மனத்திற்றுயரும் முகத்தில் வியர்வும் பெருமூச்சுங் கொண்ட தந்தையாகிய அரசன் மைந்தனைநோக்கி, "குழந்தாய் அப்பா கண்மணியே! நான் சொல்லுகின்ற கடைமுறை வார்த் தையாகிய கட்டுரையை உன் காதுகொடுத்துக் கேட்கக் கடவை. காதலனே! இப்போது நீ சொல்லிவந்த சகல வித பலாபலங்களையுங் கேட்டேன். ஆகிலும் இவைகளெல்லா வற்றிலு மிகச் சிறந்தவர்களாயுஞ் சொல்லுதற்கரிய பெரிய வல்லமை யுந் தவங்களையும் உடையவர்களாகிய பாண்டவர்களுடன் யுத்தஞ் செய்யக் கருதி யுடன்படுவது, நம்மாற்சாதனை செய்யக்கூடாத காரி யமென்று நீதியாய் நினைக்கக்கடவாய். ஏனெனில் தெய்வபலமும், யாகபலன்களும், திணிந்த தோள்வலிமையும் திவ்வியாஸ்திரத்திற மையும் சேனைப்பெருக்கமும் உறுதிமுதலியவாவும் ஐவர்களுக்கு அமைந்திருக்கின்றன. உனக்கென்னிலோ இவ்விடத்திலிருக்கும் அர சர்களுடைய வலிமைத் துணையல்லாமல் மற்றொரு துணையுமில்லை யே மகனே! அர்ச்சுனன் தவஞ்செய்த பலத்தினால் ஆதி பாண்ட வர்களுடைய அருள்பெற்றுத் தேவலோகம் போய்த்தேவர்கட்குப்ப கைவராகிய காலகேயகிவாதகவசரை ஜயித்து, தேவாமிர்தபோஜனங் கொண்டு தேவசிங்காதனத்திலிருந்து தேவர்சகாயனென்று பேரும் புகழும் கிரீடமும்பெற்று, பூலோகத்திற்கு வந்தவனதலால் அந்த விஜயவீரனை இந்த அரசர்களைக் கொண்டு ஜயிக்க உன்னுற்கூடுமோ? பதினாயிரங்கோடி நட்சத்திரங்கள் கூடிப் பிரகாசித்தாலும் ஒரு சூரி ய கிரணத்தினால் ஒளிமழுங்கி உலகத்தாருக்குத் தோற்றாமற் பிர காச மறைந்து போவதுபோல் விஜயனுகிற சூரியனுக்கெதிரில் இரா ஜர்களென்னும் நக்ஷத்திரங்கள் ஒளிமாறி நிலைமாறித் தலைமாறிப் பல பலவென்று உதிர்ந்து போவனவேயல்லாது நிலைத்துநின்று நில வெறிக்கமாட்டாவே. மேலும் மருதமரத்தைக் காலினுலுந்திக் குபே ரன் பிள்ளைகளின் குறையகற்றிய ஸ்ரீ கிருஷ்ணபகவான் சாரதியாகி ரதஞ் செலுத்தும்படியாக இசைந்தமையால் மகிழ்ச்சிபொருந்திய அர்ச்சுனன் யுத்தகளம் புகுவானுகில் இரத்த மாமிசக் தோய்ந்த வேலாயுதத்தைத் தாங்கிய பற்பலமன்னர் கூட்டங்களும் வெல வெலவென்றுதைத்துக் கொண்டு குலைகுலைந்து அழிந்து போவார்க ளேயன்றி வேறல்ல. அவரவருடைய வல்லபங்கள் அவரவர்களுக் குத் துணையல்லது ஒருவருடையவல்லபம் ஒருவருக்குத் துணை யென்று நம்பும் வம்பர்களுக்கு இகழ்வும் வசையும் வருவதல்லாமல் புகழுமிசையும் வராமாட்டா. ஆகையால் உன்னுடைய பெரியவல்ல பங்க ளெல்லாம் பாண்டவர்களுக்கு ஒரு லக்ஷியமாயிராது. இப் போது கூடியிருக்கும் பீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்களு

டைய உயிரிருக்கிறவரைக்கும் நீ பலசாலிதான். உனக்குப்பயமில்லை. அவர்களுக்குப் பிற்பாடு நீ துன்பப்படுவா யென்பதற்குச் சந்தேக மில்லை. ஆகையால் நீங்க ளிருதிறவரும் பகைநீங்கி இருப்பதற்காக ஒரு யுக்தி சொல்லுகிறேன் கேள். அவிர்ப்பாகங்களைப்புசிக்கும் அம ரர்களும் நமது புர ஜனங்களும் சகதோஷமடையும்படியாக இந்த ராஜ்யத்தை இருகூறுகப் பங்கிட்டுத்தருகிறேன். உன்னுடைய பாகத்தை யாவரும் புகழ்ந்து துதித்து மகிழும்படியாகவும் உன்னை யடித்தவர்கள் இருகரத்தையுங் குவித்துவாழ்த்தி வணங்கி வாழ்ந்து கொண்டிருக்கும்படியாகவும் சுவேத கூத்திர நீழலில் துரைத்தனஞ் செய்து சிறந்த சுகத்தைப் பெறக்கடவை என்று திரிதராட்டிரன் சொல்லவே, அவ்வார்த்தை செவிக்குட் புகுமுன்னமே சிக்தைவருந் தி மிகவுங் கோபங்கொண்டு துரியோதனன் சொல்லுகிறான்.—

ஐயா! பூர்வத்தில் சூதாடித் தோற்று, இனிமேல் இராஜ் யம் நமக்கு வரப்போகிறதில்லையென்று கைவிட்டுக் காடே கதியாய்க் கலந்திருந்த பாண்டவர்களைக் கருமேகத்தையொத்த திருமேனி வாய்ந்த கண்ணன் மறுபடியும் வரவழைத்து, நாட்டை நான்வாங்கித் தருகிறேனென்று உறுதிவார்த்தைகள் சொல்லிப்பந்துக்களாகிய சில படைத்துணைகளைச் சேர்த்துவிடுத்து நான்கொண்ட பூமியை மீட்டுக் கொடுக்கக்கருதிக் கலகம்செய்து இதுவே வேலையாக வேலையற்றுத் திரிகின்றான். அவன்செய்கின்ற தந்திரமருட்சியினால் நீர் மயங்கிப் பயப்படுகின்றீர். நான்பயப்படேன். அலனெண்ணிய எண்ணைத்தின் படி நான் பூமியைக்கொடுத்து விடுவேனில், எனக்கிடாகிய மன்னர் களும் என் சத்துருக்களும் குலுங்க நகைப்பார்கள். தந்தை வாக்கி யத்தைக் கேட்டுத் தருமமாய்க்கொடுத்ததல்ல ஐவருடைய பலத்தி ற்குப் பயந்து கொடுத்துவிட்டான் துரியோதனனென்று அவ மதிப்பாய் நிந்திப்பார்கள். ஆதலால் என்னுயிருள்ள வரைக்கும் அற் பத்துரும்பளவு பூமியும் அவர்களுக்குக் கொடுக்கமாட்டேன். பாண்ட வர்களுக்குப் பயந்து இவனைத்தான் துரியோதனனென்று ஏழ்மையா கிய சொற்கேட்டு உயிர்விரும்பி வாழமாட்டேன். திரிலோகத்திரன்வந்து எதிர்த்து ஜயித்தாலும் ஜயிக்கலாமேயன்றி மற்றபேர்கள் போர் முகத்திலென்னை ஜயிக்கமாட்டார்கள். இத்தன்மையவாகிய புஜ வலிமையையுடைய வென்னை உற்சாகப்படுத்தாமலும் உமது யுக்தி யில் நிதானிக்காமலும், புத்தியில்லாத பேதையர் மருட்டிய வார்த் தை மயக்கத்தால் கலங்கிச் சொல்லவந்தீரையா. அப்படி நீரொன் றுக்குங் கலங்கவேண்டாம் எந்தையே! நிடதாத்திர வீர அமோக வரங்கொண்டு உரங்கொண்டிருக்குஞ் சத்துருக்களானாலும் அவர் களை ஒருதொடிப்பொழுதில் வெல்லவல்ல வல்லமையிற் கைபழகி இருக்கின்றேன். ஆனால் நீர் கொண்டிருக்கும் நடுக்கத்தை மாற்றுகிற தற்குக் கல்லாமற்போனேன். ஆகிலும் அதுவுந்தெரியும். அஃதெப்

படியென்னில் உன்பிள்ளைகளின் புயவலிமையினால் எதிர்த்த சத்துருக்களெல்லாரு மிறந்து யமலோக மடைந்தார்களென்று எப்போது கேட்கின்றீரோ, அப்போது இந்தச்சந்தேகமும் பயமும் உம்மை விட்டு நீங்கிப்போம். அதுவரையிலும் உமதுமனந் தளமாட்டாது. ஆகிலும் கொஞ்சம் பொறுத்து இந்தக்காலத்தைத்தள்ளும் இப்போது நேரிட்டபோரைப் புரிவது தருமமேயன்றி இராஜ்யம் பகுந்து கொடுப்பதில் எனக்குங் கீர்த்தியில்லை. என்னிடத்தில் வாங்கிக்கொள்ளும் பாண்டவர்களுக்கும் பெருமையில்லை. ஆதலால் பூமியைப் பிரித்துக் கொடுக்கிறேன னென்னும் வார்த்தையை இன்னொரு தரம் என் செவியிற்போடாதிருக்கக் கோறுகிறேன். இதை முற்றிலுமறத்துவிடும், என்னையேன'' என்று துரியோதனன் படபடப்புடன் சொல்ல அவ்விடத்திலிருந்தபோர்களியாவரும்நடுநடுங்க, அந்த வேளையில் அரசன் வார்த்தைக்குக் குறுக்காகப் பாய்ந்து பக்கத்தில் இருந்த கர்ணன் சொல்லுகின்றான்—

பெரிய அரசனே கேளும்! மண்ணுசை கொண்டலையும் பாண்டவர்களுடைய படைவலிமையைப் புகழ்ந்து எங்களுடைய புஜபல பராக்கிரம விற்றிறமையை யோசிக்காமலிகழ்ந்து இழிவாகப்பேசுகின்றீர். அப்படிப்பேசவேண்டாம். போர்புரியும்படியாக நீனைப்பேனுகில் ஒரேகணையால் உலகமுழுமையும் வேர்களைந்து வெங்கீர்வார்த்து விடுவேன். என்னிலுமுயர்ந்த வில்லாளிகளுண்டென்னும் எண்ணமுமக்குண்டோ மன்னவனே! வெப்பமாகிய வடவாமுகக்கனலும், மேதினியெல்லாம் நிறைந்த வெங்கனலும், வேதகாதன் மதனெரித்த விழிக்கனலும் வேறுபடாத திரிபுரமெரித்த நகைக்கனலும் சேர்ந்து உருகிக் கலந்து மொய்த்த கூரம்பாகிய கணைகளைச்செலுத்தி ஒருகணத்திற்குள் சத்துருக்களைச் சாம்பராக்கும் வல்லபமுடைய என்முன்னே, தேறியபடை வல்லவர்களென்று போர்புரியவந்தால் அவர்களையும் மறுமன்னர்களையும் அவர்கள் சேனையையும், இரதகஜ முதலியபடைகளையும் பின்பலம் வேண்டாமல் தன்னந்தனியனுக விற்கொண்டுசாடி உதிரவெள்ளங்களோடி காளிகள்கூடி கொண்டாடிப் புசித்துக் களிக்கக் கண்டங் கண்டமாய்க் கூறுபடுத்தி மாமிச இரத்தங்களிஞற் சேறுபடுத்திக் கரமுஞ் சிரமுங்கலந்து விதைத்துக் கடல்சூழ்ந்த காசினி முழுவதும் உன்புத்திரருடைய வெள்ளைக்குடை நீழலில் விளங்கவைத்து, உன்னுடைய மன நடுக்கத்தையும் மற்றவர்களுடைய மதியொடுக்கத்தையும் பகைவரால் விளைய மடிக்கத்தையும் கொடிப்போதிலடக்கி அகற்றிவைக்கின்றேன். ஐயா! இப்போ தெனக்குச் செலவுகொடு'' என்று பற்பலவிதமாகிய சாமர்த்தியங்களைப் பகர்ந்த அங்க தேசாதிபதியினுடைய வல்லப வார்த்தை முழுமையுங் கேட்டுத் திரிதராட்டிரன் சந்தோஷமுஞ் சந்தேகமுங்கொண்டு சொல்லுகின்றான்—

அப்பா கர்ணு! முறியாதகாண்டீபமும் அழுதகாணியும் அக்ஷயத்தூணியும் இளையாத சுவேதவாம்புரவியும் அழியாத இரதமும அநுமத்வஜமும் அக்கினி தேவனுற் கொடுக்கப் பெற்றவனென்றும் கங்கையுந் திங்களுங் பொங்கரவமங்கையும் அங்கத்திலேதரித்தருளிய சங்கரசுயம்புவானவரளித்த பாசுபதாஸ்திர முடையவனென்றும் தேவேந்திரனுடன் சமமாயிருந்து புத்தமுத போஜனமுண்டானென்றும், காலகேய நிவாதகவசர் முதலியபோர்களைக் குலத்தோடழிக்குங் கொடுங்கணை கொண்டவனென்றும், சகலதந்திர சுதந்திர மாயனுகிய கிருஷ்ணன் சாரதியாகித் தேர்செலுத்தக் காண்டவவனத்திற் போர்செலுத்தினவ னென்றும் இந்த மூன்றுலோகமும் புகழப் போர்கொண்ட அர்ச்சுனனுடைய போர்முனையில் காணெதிர்த்து யுத்தஞ்செய்கிறேனென்று சொல்லத்தக்கவர்களு முண்டோ? எப்பிறப்பிலுமில்லை. சொப்பனம்போல் இப்பிறப்பில் நீ யொருவன் சொல்லுகின்றதை ஜாக்கிரத்திலிருந்து பார்க்கு மெனக்குப்பெரிய ஆச்சரியமாயிருக்கின்றது. கல்லதப்பா! விராடபுரத்தில் கேற்று நடந்த மாடுபிடி சண்டையில் நீயில்லையோ? இதுசேதி அறியமாட்டாயோ? அற்புதமற்புதம் தம்பி! அர்ச்சுனனை வெல்லுவே னென்று ஆர்சொல்ல வேண்டுமென்றால், அநேக கற்பகோடிகாலம் தவஞ்செய்து சர்வசங்கார கால ருத்திரனுக் கொப்பாக ஏற்படப் பேசுகின்றவனொருவனிருப்பானுகில் அவனுமொருவேளை ஆலோசித்துச் சொல்லவேண்டியதுதான். அதைவிட வேறொருவரையுங் காணும். நாமிருக்கிறோமென்றாலோ 'மரமிருக்குகாட்டில் வந்திறங்குங் காக்கை, ஊசென்றாலும் பறக்கும் ஆசென்றாலும் பறக்கும்' என்று சொல்லும் பழமொழியைப்போல், அர்ச்சுனன் போர்செய்ய வந்தானென்று கேட்ட உடனே யுத்தத்தையும் உடலையு மறந்து ஓடிப்போங் காக்கையைப்போன்ற நாம் வாக்கினால் வெல்லுவோ மென்பது பேதைமையாம். விஜயன் வெம்பிப்பதைத்து ஒருகணைவிடு வானுனால் அம்புவியெல்லாமழியும். என் சொல்லைப் பழுதாக்காமல் புத்தியுட்கொண்டு பெருமையுடன் வாழக்கடவீர்கள். ஓ புத்திரர்களே! மைத்தர்களும் பந்துஜன கண்பர்களும் பரிவாரச் சேனைகளும் நூறு நூறாய்க் கூறுகூறாய்ச் சிதைந்து அழிந்துவிடுப்படியாகப் பாண்டவருடனெதிர்த்து அமர்செய்ய வேண்டியதென்ன? அவர்கள் கையைக்கொண்டே அவர்கள் கண்ணைக் குத்துவதுபோல் முன்னே உங்களிடத்தில் சொக்கட்டானுடித்தோற்ற புவிமுழுமையும் முறையாகக்கொடுத்து எல்லா உயிருந் தொழும்படியாக மித்திரருடனிருந்து அரசு செய்யுங்களப்பா—என்றான். இப்படி கட்புலனிழந்த காவலன் மொழிந்த சொல்லை மகமேருவைப்போல் கேட்டிருந்த பீஷ்மாச்சாரியார் சொல்லுகின்றார்.—

"ஓ அரசர்களே! ஆதிமுதற்கொண்டு இதுவரையிலும் பாண்டவர்களை இகழ்ந்து வெற்றியடைந்துவந்த இந்த வீரனுடைய திறத்தை எல்லோரும் அறிந்திருக்கின்றீர்கள் அல்லவா?" என்று சொல்லிக் கர்ணனை நோக்கி "ஓ கைதேர்ந்தவனே! போனதெல்லாம் போகட்டும் இப்போதர்ச்சுனனுக்கு எதிரில்முனைந்து யுத்தஞ்செய்யத் துணிந்து நிலைத்துநின்று உன்னுயிர் தப்பிவரமாட்டுவையோ?" என்றுருக்கிக்கேட்டுக் கலகலவென்று நகைத்து நகைத்து போ போ பைபித்தியக்காரனே! (குறைவானவர்கள் கூவிக்கதறுவர் நிறைவானவர்கள் நிதானித்திருப்பர்) என்னுமொழிக்கொப்பாக யுத்தஞ் செய்யக் கையிலாகாதவர்கள்தான் வாக்கினற் பிதற்றிக்கொண்டிருப்பார்கள், பூரணமாக ஜயிக்கத்தெரிந்த புண்ணியவான்கள் சமயம் வந்தபோது தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுவார்களன்றி நாவினல் ஒருக்காலும் நவிலமாட்டார்கள். அதுதான் வீரதருமமென்பது நீ சொல்லுவது அதர்மம். ஆகையால் பிறந்தவீட்டின் பெருமையை உடன்பிறந்த மூத்தோனிடத்தில் புகழ்ந்து சொல்வதைப்போல் உன்பண்டவாளந் தெரிந்த எங்கள் சபையிற்சொல்லாதே. சக்தை கூடியவிடத்தில் உன்சாமர்த்தியத்தைப் பேசினல் சகலருங்கேட்டுச் சந்தோஷப்படுவார்கள். இந்தவார்த்தையைப் பேசலாம் இந்தவார்த்தையைப் பேசக்கூடாதென்று சிறிதும் உணராத நீ காலமிடமறிந்து சற்றுமியாசித்துச் சொல்லக் கடவையென்று உலகமதிக்கும் புகழினையுடைய பீஷ்மாச்சாரியர் சொல்லக் குற்றங் குறையோடுகுச்சிதமில்லாமனத்தோனுகிய அங்கதேசாதிபதி வடவாமுகாக்கினி போற் பொங்கிக்கொதித்து மீனுவியாதி கொண்டிருக்கின்ற திரிதராஷ்டிரனை நோக்கி, "அரசனே கேளும்! பாண்டவர்களுக்குந் துரியோதனுதியர்களுக்கும் யுத்தம்விளையப் போகுதென்று முன்னமே தேவதைகளெல்லாரும்கூடி வஞ்சனையாக யோசித்து நான்கற்ற மந்திரங்களையும் தேவாஸ்திரங்களையும் தருணத்திற் குதவாமற் போகும்படியாக என்னைச் சபித்திருக்கின்றார்கள். ஆகையினுலே இதுவரையிலும் அர்ச்சுனன் பிராணனுடன் பிழைத்திருக்கின்றன். அல்லாவிட்டால் அன்றே இறந்து நாமெல்லாருமறந்து அவன்செத்தவிடம் புல்முளைத்துப் போய்விடும். ஆகிலும் என்ன சாபம் நேரிட்டாலும் 'யாதொன்றுத்தால் குதிரையத்தனை உயரமிருக்கமாட்டாதா?' ஆகட்டும். ஓரிரபாணத்தினுல் காண்டீபனுடைய பிராணனை வாங்குகின்றது நிச்சயம். அபத்தமல்ல. ஒருவேளை இவனென்ன வாங்கப்போகிறதென்று உமதுமனத்தில் சந்தேகமிருந்தால் பாண்டவர்களுக்கு இந்தராஜ்யமுழுமையும் கொடுத்துவிட்டு, நூறுபிள்ளைகளையும் அவர்களையடுத்த பேர்களையும் எப்படிவிட வேண்டுமோ அப்படியே உமது மனத்துக்கு ராஜியானபடி செய்யும்—என்று கூறி, மிகுந்த கோபத்துடன் சபாமண்டபத்தை விட்டெழுந்து துரியோதனனை நோக்கி "அப்பா! கல்லுங் கரையும்படி

யான சொற்களைக்கொண்டு சிலர் உன் தந்தையின் மனதைக் கரைத் திருக்கின்றார்கள். அதனால் உன்தந்தை அஞ்சிப்பேசுகின்றார். நீர் தடுக்காமல் அவருடைய இஷ்டப்படி விடப்பட்டதே ஞாயம். அப்பால் தெய்வசகாய மெப்படி இருக்கின்றதோ பார்த் துக்கொள்ளுவோம்'' என்று இரப்போர்களுக்கு இல்லை யென்னு மற் கொடுக்கும் ஈகையாளன் தன்னுடைய அரண்மனைக்குப் போக வும், துரியோதனன் சகுனி துச்சாதனன் தவிர மற்றப்பேர்களும் திருதராட்டிரனும் கர்ணனீங்கிப்போனதற்கு விசனப்படாமல், தீங் காகிய தடை நீங்கியதைப்போல் சந்தோஷங்கொண்டு சஞ்சயனை நோக்கி, "என் தம்பி புத்திரராகிய பாண்டவர்கள் எவர்களை எவர்கள் கொல்லுகிறதென்று சபதங்கொண்டிருக்கின்றார்கள் ? அதனை நீ தெரிந்த மாத்திரஞ் சொல்லும்'' என்று கேட்கத், திருதராட்டிரனை நோக்கிச் சஞ்சயன் சொல்லுகின்றான்.

ஐயனே ! பீஷ்மரைச் சிகண்டியும், துரோணாசாரியரைத் திர்ஷ்டத்தும்மனும், சல்லியராசனைத் தருமராஜனும், துரியோ தனன் முதலாகிய நூறுபிள்ளைகளைப் பீமசேனனும், கர்ணன் சித்து பதி முதலிய இவர்களை அர்ச்சுனனும், மாமாவாகிய சகுனியை சகுலனும், சகுனிதந்தையாகிய சௌபலன் முதலிய குலத்துள் ளோரைச் சகாதேவனும், ஆயிரம்பேர்களாகிய உமதுபேரப் பிள் ளைகளுக்கும் பதினாயிரம் பேர்களாகிய இராஜ குமாரர்களுக்கும் அர்ச்சுனன் குமாரனாகிய அபிமன்யுவும், திருதவன்மனைச் சாத்தகி யும், ஆத்திமாலையைத் தரித்த அரன்வந்து தடுத்தாலும் கொல்லு வோமென்று சபதங் கூறிக்கொண் டிருக்கின்றார்கள். விராடனும் அவனுடைய புத்திரவருக்க முதலிய சேனைகளும் திருஷ்டத்தும் மனுக்குத் துணையாளர்கள். திரௌபதியினுடைய பிள்ளைகள் இளம்பஞ்ச பாண்டவரைவரும் சிகண்டிக்குத் துணையாளர்கள். தேசதேசத்து இராஜர்களெல்லாரும் தங்கள் தங்களுக்குப் பகையா கிய பேர்களுடன் போர்புரியத் துணிந்திருக்கின்றார்கள். பாண்ட வர்களுக்கும் திரௌபதைக்கும் பிறந்த இளம்பஞ்சபாண்டவர் தவிர, மற்ற உபபத்தினிமார்களுடைய புத்திரர் ஏழுபேரிருக்கின்றார்கள். அவர்களை ஏழு யுத்த சமுத்திரத்தையும் எளிதில் நீந்துகின்றவர் கள். அல்லாமலும் அரவானொருவனிருக்கின்றான். மகாமாயை வல்லபத்திற்சிறந்த கடோற்கசனென்பவன் கடலைப்போல் வரு கின்ற இராக்ஷசப் படைகளுக்குத் தடையாகத் தானொருவனே யென்றிருக்கின்றான். உத்தமோசன்-உதாரமனுவென்பவர்கள் அர்ச் சுனனுக்குச் சக்கரரக்ஷகராளர்கள். இந்தப்பிரகாரம் ஏற்படுத்திப் பிரித்துக்கொண்டிருக்கிறார்கள்—பாண்டவர்களென்று சொல்லி, "ஓ மன்னர் மன்னனே ! இனிமேல் உமதுயுத்தியிற் றோன்றிய தன்மை யைச் சொல்லும்'' என்றுகேட்க, அச்சபையில் நிறைந்திருக்கும்

பேர்களிற் சிலர் சஞ்சயனைப்பார்த்து, "நீர் சொல்லிவந்த பலவான்கள் நிச்சயித்துக்கொண்ட எதிரிகளெல்லாரும் சரிதான். ஆனல் தருமராஜன், சல்லியனைக்கொல்ல இருக்கின்றரென்றீர். அதுசரியல்ல. சல்லியபூபதிக்குத் தருமராஜ னெம்மாத்திரம்?" என்று சொல்லவே, அதைக்கேட்டிருந்த விவேகமுடைய சல்லியராஜன், "ஓ நண்பர்களே! சகலவெப்பங்களைத் தணிப்பதும், ஜீவாதாரமாயிருப்பதும், பாவவிநாச பரிசுத்தமுடையதும் கங்காசலம். அந்தக் கங்காசலத்தி னிடத்தில் நெருப்புப் பிறக்குமாகில், எதைக் கொண்டட்விக்கலாம்? அந்த ஜலத்தைப் போன்ற தருமராஜனுகிய கருணவள்ளல் என்னைக்கொல்ல வருவரானுல் அவருடனெதிர்த்துப் போர் செய்யத் தக்கவர்கள் இந்தத் திரிபுவனங்களிலுமுண்டோ? அவருடைய தந்தையாகிய யமதருமராஜனைப் போற் சாமர்த்தியங் கொண்டிருக்குந் தவத்தினராகையால், தருமராஜன் என்னைக் கடிந்து ஜெயிப்பேனென்று தாராளமாகச் சொல்லத் தகும்" என்றன். அதைக்கேட்ட தேசதேசத்தரசர்களெல்லாரும் வாயை மூடிக்கொண்டார்கள்.

பின்பு திருதராட்டிரன் சஞ்சயனை நோக்கி, "அப்பா சஞ்சயனே! உனக்குப்பிரயாசை கொடுத்து இவ்வளவு தூரம் பன்னிப் பன்னிக்கேட்ட தெல்லாம், என் பிள்ளைகள் தெரிந்து கொண்டு ஏதாகிலும் ஒருவழியாக வருவார்களென்னு மிச்சை கொண்டேயல்லாமல் வேறல்ல. நான் எவ்விதயோசனைகள் செய்த போதிலும், என் புத்திரர் வழிக்குவருகிறதாக இல்லை. யோசிக்குமிடத்தில் பாண்டவர்களுக்கு ஜயமும், துரியோதனுதியருக்கு அபஜயமும் உண்டாமென்று தோற்றுகின்றது. மேலும் என் குமாரர்களுக்கு இறக்குங்காலம் கேரிட்டபடியால், இப்போப்பட்ட துர்ப்புத்தியுந் துர்யோசனையும் சேர்ந்திருக்கின்றன. பிழைக்கும் பிள்ளைகளானுல் பெரியோர்களுடைய நீதிவாக்கியங்களையும் தந்தையாகிய என் வசனத்தையுந் தள்ளுவார்களோ? இறந்து போவதற்கு இதுவே திருஷ்டாந்தமாக இருக்கிறது" என்று மனவெறுப்புடன் சொல்லி நொந்த பெரிய மன்னனுடைய மனக்கருத்தை அறிந்துகொண்ட, இரக்க மனத்தினை யுடைய விதுரராஜனெழுந்து, "அண்ணு கேளும் உமக்குப் பக்ஷபாத மில்லாமல் இருதிறப்புத்திரர்களையுஞ் சமமாய் நடத்த வேண்டுமென்னும் இச்சையிருக்குமானுல் அடிக்கடி சபலிக்குஞ் சிந்தையை நீக்கி உறுதிப்படுத்திக்கொண்டு மறுபடியும் மாசற்ற இதயமுள்ள சஞ்சயனை உபலாவியத்திற் கனுப்பிப் பாண்டவர்களைக்கண்டு பெரிய தகப்பனர் உங்களைப் பார்க்க அழைத்துவரச் சொன்னரென்று இனியமொழிகள் சொல்லச் செய்வீரானுல், அந்த வார்த்தையைக் கேட்டவுடனே அவர்கள் அஞ்சலி அஸ்தராக வந்து உமது பாதங்களில் வணங்குவார்

கள். அப்படிக்கு வந்த பிள்ளைகளை ஆதரித்துப் பிரிய வசனங்களைப் பேசினால், மனமகிழ்ந்து, உடல் புளகமுற்று வருத்தம் நீங்கி இராஜ சபையில் பூர்வத்தில் கூறிக்கொண்ட சபதமென்னும் கோபாக்கினிக் கெல்லாம் ஆறிப்போய் உமக்குரிய அன்பராவார்கள். இவ்வளவு பக்குவம் பண்ணிக்கொள்ளும்படியாக உமது மனத்துணியுமானால் இப்போதே செய்யலாம். இதை விட வேறு விதமான கல மொன்றுங் காணும்" என்று விதுராஜனுகிய தம்பிசொல்லக் கேட்ட வேந்தன் விவேகமுள்ள சஞ்சயனுடைய முகத்தை நோக்கி, "வாசனை யார்ந்த மாலைகள் புனைந்த மார்பனே! நான் சொல்லி யனுப்பி வைத்தால் என் தம்பி பிள்ளைகள் என்வார்த்தையைத் தள்ளாமல் இவ்விடத்திற்கு வருவார்களா?" என்று ஆச்சரியத் துடன் கேட்ட அரசனைப்பார்த்து சஞ்சயன் சொல்லுகின்றான்.—

ஐயா! குபேரசம்பத்தே கூடிவருவதானாலும், குவலயமெல் லாம் ஒரு குடையிலாள அமைந்தாலும், குன்றச்செய்யும் வறுமை நோய்கள் கூடினாலும், வராத ஆபத்துகள் வந்தாலும் மடியுங்காலம் நேரிட்டாலும் இவ்விடத்திற்கவர்கள் ஒருகாலும் வரமாட்டார்கள். ஆனால் சத்திய விரதந் தப்பாத உத்தமர்களாகையால் தந்தை வார்த்தையைத் தப்பலாகாதென்னுந் தருமத்தை அனுசரித்து இப் போது வந்தாலும் வருவார்கள். இத்தன்மை வாய்ந்த புத்திசாலி களாகிய புத்திர ரைவரையும் அழைத்து வரும்படி உத்தரவானால் சித்தங்களிக்க இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன். விடை கொடும்" என்று கேட்டான். இந்த வசனமானது துரியோதனனு டைய காதுகளில் நாராசம் போலேறவும் அவன் வடவாமுகாக்கினி பொங்கி எழுந்த தன்மைபோற் கோபங்கொண்டு கண்களினால் தீப் பொறி இறைத்துச் சஞ்சயனவன் முகமாறிப் போகும்படியாய்ப் பற்பல வார்த்தைகளைச் சொல்லி, "அடா சஞ்சயனே! என்னிடத்திற் சூதாடித்தோற்றுக் காடேகுதியாகப் போய்க் காலங்கழித்திருந்த பாண்டவரென்னும் பஞ்சைகளைப் பால் வெண்ணெய் தயிர் முதலிய வைகளைத் திருடி அன்று தின்ற கண்ணனவன் ஏதேதோ ஆசை களைச் சொல்லி, இன்று அழைத்து வந்து சிலதந்திரஞ் செய்து கொண்டிருக்கிறான். நன்று! நன்று! அவனுடைய திறத்தையும் பாண்டவர்களின் திறத்தையும் பாழாக்க வேண்டுமென்று எண்ணி யிருக்கு மெனக்கு விரோதமாக நீ போய் ஐவரை அழைத்துக் கொண்டு வந்துவிடுகிறதும் இந்தத் திருதராட்டிர மகாராஜன் அவர் களுக்கு ராச்சியங்கொடுத்து விடுகிறதும் திரிலோகமுமறிந்த தீன ராகிய பாண்டவர்கள் பெற்றுக்கொள்ளுகிறதும் சிறியதந்தையாகிய விதுரன் சந்தோஷப்படுகிறதும் நான் பயித்தியக்காரனைப் போற் பார்த்திருப்பதுமாக எண்ணங் கொண்டோ இந்தயோசனை செய் தீர்கள். அடடா!! இஃதென்ன அநியாயம். உனக்கும் விதுரமகா

ராஜனுக்கும் எவ்வளவு ஏழ்மையாய்ப் போய்விட்டேன். பார்த்தாயா? நல்லது தூதத்தாலோசனை செய்யாமல் அவசரப்பட்டீர்கள். இதுவரையில் என்சோறும் என் வஸ்திராபரணமுமாகிய சகலசெல்வத்தையும் குறைவற அனுபவித்து வருகிற நீங்களும் அந்தப் பக்ஷத்திலிருக்கின்றீர்களல்லவா? ஐயோ! உங்களை ஒரு காலும் நம்பலாகாது. இப்போர்ப்பட்ட பக்ஷபாதிகளாகிய நீங்கள் என் சபையை விட்டெழுந்து இங்கிமிடம் பாண்டவர்களைச் சேர வேண்டும். இனி என்முகத் தெதிர் வரவேண்டியதில்லை. போம் போம்'' என்று புகன்று, இன்னமும் இந்தச் சபையில் பக்ஷபாதிகளாயிராகின்றபேர்கள் எப்போர்ப்பட்ட தகுதியையுடைய சுதந்தராகியிருந்தாலும் அவர்களுக்கெல்லாம் இதுவே உத்தரவென்று சொல்லி வெண்கலமென்று சொல்லுமிடத்தில் ஓட்டை ஓட்டையென்று சொல்லத்தக்க பேர்களைப்போலும் தலைமாட்டுக் கொள்ளியைப் போலும் இவ்விடத்திலிருந்து கொண்டு எந்நேரமும் தைரியமில்லாத வார்த்தைகளைப் பேசிச் சஞ்சலத்தை யுண்டாக்கிக் கொண்டிருக்கும் பேதையர் முகத்திற் பெரியவள் வாசமாக இருப்பாள். அப்பேர்ப்பட்டவர்களுடைய முகத்தில் நாம் விழிக்கலாகாது. அவர்கள் கிழலும் நமது பேரிற்படலாகாது. அவர்கள் வார்த்தைகளையும் நமது காது கேட்கலாகாது. அப்படி மருவிக்கேட்டுக் கொண்டிருப்போமானால் நமக்குண்டாகிய செல்வமும் வீரமும் குறைந்துபோகும். ஆகையால் இப்போர்ப்பட்டவர்களெல்லாரும் பலசாலிகளாகிய பாண்டவர்களிடத்திற் போய்ச்சேருவதே மிகுந்த நன்மையாக இருக்கும். நீங்கள் என்னை விட்டுப் போவதினாலெனக்கொரு குறைவுமில்லை, என்னுயிர்த்துணைவனுகிய கர்ணமகாராஜ னொருவனிருந்தாற்போதும். அவருடன் கூட மாமன் தம்பியர்கள் சேதசத்தலைவர்கள் முதலாகிய பற்பலபேர்கள் என்னிடத்தில் கண்புகொண்டிருக்கின்றார்கள் 'கூனைச்கொண்டு குழப்படி மாமி காணிக்குப்பிள்ளையுறும்' என்னும் பழமொழிபோல் இவர்களைக்கொண்டு எதிர்த்து யுத்தஞ் செய்து வெற்றி பெறுவேனேயன்றி, நான் சாகிறவரையிலுஞ் சமர்செய்யாமல் நிறுத்திப் பொறுத்துத் தரித்திருக்கமாட்டேன்; ஒருவருக்கும் வணங்கிப்பயந்து இணங்கி அடங்கி உத்தரஞ் சொல்லேன். 'தலைக்குமேலோடிய வெள்ளஞ் சாணோடியு மென்னும் முழமோடியுமென்னும்' என்னும் பழமொழிபோல் நான் பயப்பட்டேன். அவரவர்களுக்கு எந்தெந்தப்படி இஷ்டமிருக்கின்றதோ அந்தந்தப்படிக்கு நடந்துகொள்ளலாம். அதற்கு யாதொரு தடையுமில்லை. 'கெட்டமாடு தேடுவாருமில்லை, மேய்த்த கூலி கொடுப்பாருமில்லை' சம்பளமில்லாச் சேவகமும் கோபமில்லாத துரையும் ஏற்பட்டிருந்தால் வேலைகள் சாயுமா? மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்குவார் போலே நான் உங்களை நம்பியிருக்கவில்லை. 'மண் பூனையாலும் எலிபிடிப்பது லாபம்' என்பதுபோல் உருக்கிய

செம்பிலும் ஒளிமிகுந்த கோபக்கண்களையுடைய உத்தமன் அங்க தேசாதிபதியாகிய எங்களண்ணன் கர்ணமகாராஜனுடைய கரத்திற் பிடித்திருக்கும் வில்லானது, சத்துருக்கள் வந்து வளைத்துக் கொண்ட காலத்தில் அவர்களை வெதுப்பி நாசப்படுத்தி எனக்கு வெற்றியைக் கொடுக்கும் துணையாயுற்றிருக்கின்றது. அதை நான் விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை. என்பேரில் அன்புடையவர்களைப்போலிருந்து இதுவரையில் கேழ்வரகரைத்தது போதும் போதும் அகலுமின்" என்றான்.

வினையையே துணையாகக் கருதிய வித்துவ வேந்தன் இப்படியாகச்சொல்லிய வார்த்தையைக் கேட்ட திரிதராட்டிரன் மனம் புகைந்தெரிய வெம்பி, விசனமடைந்து, வெவ்வியகோபங்களையும் தாபங்களையும் அடக்கிக்கொண்டு, விதுரனையும் சஞ்சயனையும் நோக்கி மறுமொழிசொல்லாதிருக்கும்படியாகத் தனது கரத்தினுற்றடவியணைத்துக் கரமமைத்து, கண்ணீர்சொரிந்து, "ஐயா! என்னபாவம்! இத்தப்பாவி முன்பின் எண்ணுமல் வார்த்தை சொல்லுகின்றனே" என்றேங்கி எதுந்தோற்றுமற் சற்றுநேரமிருந்து பெருமூச்சுவிட்டு, "ஆ! ஆ! சிருஷ்டிகர்த்தாவாகிய தெய்வமே! இவன் இவ்வாறு அக்ரமித்திருப்பது பூமியில் மாண்டு விழவோ? அல்லது பூமியையாண்டு வாழவோ தெரியவில்லை. நீர் இவன்றலையி லெவ்விதமாயெழுதி இருக்கின்றீரோ அறிகிலேன். விதியையநுசரிக்குமதி யென்பதற்குச் சரியான அறிவும் பிறந்திருக்கின்றதே. அதைவிலக்கி நடத்தி வைப்பது என்தரத்திலில்லையே! கண்ணைக்கெடுத்த தெய்வங் கோலைக் கொடுத்ததுபோல் எனக்குமேலான புத்திரபாக்கியங் கிடைத்தும் உள்ளசரக்கைக் கப்பலிலேற்றி நடுக்கடலில் கவிழ்த்து வருந்திய ஒருவன்போல் அதைப்பகைவர்க்குப் பறிகொடுத்துத் துன்புறலாயிற்றே என்றுவாடிப் பின்னையை நாடி "ஓ துரியோதனு! பாண்டவர்கள்பேரிற் பக்ஷமாய்ப் பேசுகிறதாய்ச் சொன்னையே. அவர்களா லிவர்களுக்காக வேண்டியதென்ன இருக்கிறது. அப்பா! இப்படிக்கெல்லாம் கல்லோராகிய நமக்கினியவர்களின் மனம்நோகப்பேசாதே 'ஊருடன்பகைக்கில் வேருடன்கெடும்' என்னும் வேதவாக்கியத்தை மறந்தாயோ? 'சிறியோருடன்சேராத செம்புக்குப் புளிவாராதே' என்றுசொல்லும் என்மொழியையோசிக்க இல்லையோ 'பெரியோரைத் துணைக்கொள்' என்பதைப்போக்கிவிட்டாயோ? அப்பா! பெரியோர்கள் வருந்தப்பேசுவது புகழன்று" என்றுசொல்லி "இதுயார் செய்த பாவமோ, யாரிட்டசாபமோ?" என்று தன்னைத்தானெந்துகொண்டிருக்குஞ் சமயத்தில் பீஷ்மரெழுந்து தம்வீட்டுக்குப்போனார். அவருடனே துரோணாசாரியர் கிருபாசாரியர் - அசுவத்தாமா - விதுரர் முதலாகியபெரியோர்களும் சிந்துதேசாதிபதி - மந்திரதேசாதிபதி - சகுனியாகியமாமன் - தொண்ணூற்றொன்பது தம்பிமார்கள் தேசரா

ஜர் முதலாகியபேர்களும் சபையைவிட்டு நீங்கி இனியாவரும் எம தூதர் கைக்குள்ளடங்குங் காலஞ் சமீபித்த தென்றேங்கித் தங்கள் தங்களுடைய விடுதிகளிற் சார்ந்தார்கள். ஆலகாலத்தையொத்த துரியோதனன் அருமருந்தனைய சஞ்சயன் மூலவேராகிய திருதராட்டிரன் இவர்கள் மூவருந்தான் சபையைவிட்டு நீங்காமல் இருந்தவர்கள்.

இப்பால் குளிர்ச்சி தங்கிய ஒருவெள்ளைக்குடை நீழலில் அகில உலகங்களையாளும் திருதராட்டிரமகாராஜன் ஒப்பில்லாத பிள்ளையையும் சிறந்த சஞ்சயனையும் அழைத்துக்கொண்டு பரிசுத்தமும் பதிவிரதா குணமுங்கொண்டு பிரகாசமுற்ற பொற்பிரதிமையொத்து விளங்கும் காந்தாரியம்மனிருக்கும் உயர்ந்த அரண்மனைக்குட்சென்றான். அக்காலத்தில் காந்தாரிதேவியானவள் தன்கணவனை எதிர்கொண்டோடிப் பாதபூசைசெய்து பத்திரமஷ்டைசாத்தி வணங்கிச் சிங்காதனத்திற் சீர்பெறவமைத்துத் தீர்க்கதண்டஞ்செய்து இருக்கும்போது துரியோதனன் தன்தாயைப் பணிந்துகொள்ளவும் அவனை வாழ்த்தியெடுத்து மார்புறவணைத்துவிடச் சஞ்சயனும் துரியோதனனும் அரசனுக்குச் சமீபத்திலிருந்தார்கள். அப்போது திருதராட்டிரன் காந்தாரியைநோக்கி "பெண்ணே! இன்றையதினம் இராஜசபையிலிருந்த எல்லோருங் கூடிப் பற்பல நீதிநெறிகளையும் தருமங்களையும் அற்புதமற்புதமாக எத்தனைவிதத்திலெடுத்துச் சொல்லியும் உன் புத்திரனுகிய சர்ப்பக்கொடியோன் விற்பிடித்துப்போர்செய்வதே பொருளெனக்கொண்டு பூரிப்படைந்திருக்கிறான். விசாரிக்குங்காலத்தில் மேலாகிய தவத்திஞற்கொண்ட அஸ்திரசஸ்திரங்களின் திறத்தையும் மறத்தையும் அறத்தையும் பூரணமாகப்பெற்றிருக்கும் புகழினையுடைய பாண்டவின் புத்திரர்களுடன் யுத்தஞ்செய்த்துணிவது தகுதியல்லவென்றும் பொருந்தி வாழ்வதுவே உத்தமமென்றும் நம்மிடத்தில் பத்தியையுடைய மன்னர்பலருஞ் சொன்னார்கள். நான் துரியோதனனை நோக்கி, "அப்பா! பகைதேடிக் கொள்ளவேண்டாம். வகையில்லாமல்வைரமெனவினையும் யுத்தத்தை நிறுத்திவிடுமகனே, என்றுசொல்லியும் நமதுதந்தை நமக்கு விரோதஞ்சொல்லுவாரா என்றெண்ணுமல் கர்ணனுடையவார்த்தையைக் கனகமலையாக நம்பி, என்வாக்கியத்தைஇகழ்ந்துவிட்டான். ஆகையால் நங்கையே! உன்னைக்கொண்டாகிலும் உன் புத்திரனுக்குத் தெரியச்சொல்லச் செய்து சீர்படுத்தலாமென்றெண்ணங்கொண்டு இவ்விடத்திற்கு அழைத்துவந்தேன். இப்போதும் பாண்டவர்களுக்கு விசேஷித்த தொன்றுங் கொடுக்கவேண்டியதில்லை. முன்னேயவர்கள் சூதாடித் தோற்றுப்போன பூமியை இப்போது கொடுத்துவிட்டால் அவர்கள் கூறியசபதமும் மனஸ்தாபமும் மேற்கொண்ட கோபமும் மாறிப்போய்விடும். நமது பெரியோர்களின்

எண்ணமும் இப்படியே இருக்கின்றது. இதைவிட்டுத் தீய புத்தியையுடைய நீங்கினர் வாய்மையை ஸ்திரமென்று நினைத்துச் சமர்செய்யப் போகின்றனும். அப்படி சமர்செய்யத் தொடங்குவானால் ஜயாபஜயம் எப்படி முடியுமோ தெரியவில்லை. ஜெயமும் விவகாரமும் சேற்றில் கட்டகம்பம். ஆதலால் உன்னுடைய புத்தியிற் றெளிவாகச் சிந்தித்து, அஸ்தினபுரி ராஜனுகிய இந்தத் துரியோதனனுக்குத் தெரியப்படுத்தக் கடவாய்" என்று கூற, தேவியானவள் அந்தவார்த்தையை மந்திரம்போற் கேட்டுவணங்கி எதிரிலிருந்த மைந்தனை நோக்கி "ஓ என்னருமைச் செல்வனே! 'பெரியாரைப்பேண்' என்னும் வாக்கியத்தைக்கொண்டு சிறியோர் சினேகத்தை விடுத்துப் புகழைப் பெருமல், பெரியோர் சொல்லும் வார்த்தையை இகழ்வது சிறுமையோ அல்லது பெருமையோ; இவ்வுலக மன்றி மற்றெவ்வுலகத்தினும் இணையில்லாமற் சிறந்த என்மைந்தனே! உன்தந்தையானவர் கனிந்து மிகுந்த ஆசையுடன் சொல்லுந் தன்மைப்பிரகாரம் நடந்து பெரும் வாழ்வைப் பெறக்கடவை" என்றுரைத்து வாழ்த்திய அன்பினையுடைய தாயைப்பணிந்து, அரவக்கொடியோன் "அம்மா ஐவர் சம்மதித்துச் சூதாடி இழந்த அவனியை இப்போது நான் கொடுத்துவிடுவேனுனல், அவர்களுடைய ஆண்மைத் திறத்தினுக் கஞ்சிக் கொடுத்துவிட்டதாய் வீரராகிய வேந்தர்கள் அவமதிப்பாய் நினைத்து நிந்திப்பார்கள்: அதனுலெனக்குக் குறைவுண்டாகும். இதுவரையிலும் பத்துத்திசையிலும் வெற்றிசெலுத்திச் சுற்றத்தாருடன் சுக வாழ்வைப்பெற்ற வணங்காமுடியோனுகிய யான் இப்போது பசபச வென்று விழித்து வசைகொண்டு இசைபெற்ற பாண்டவர்களுடைய பாதங்களில் வணங்கி இச்சகஞ்சொல்லி, எண்சாணுடம்பு மொரு சாணுக்குன்றி வயிறு வளர்த்துக்கொண்டு உயிருடனிருந்து வாழேன்.' ஆறிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு' அம்மணி! அழியும் பிராணனை அவத்தில் மாய்க்காமல் அமர்புரிந்திறப்பேன். அல்ல வென்றுல் என்னுடைய வெற்றியையும் பாண்டவர்களுடைய யுத்தி சகாய சாமர்த்திய சத்தியையும் ஈரேழுலகமுங் கொண்டாடும்படியாகச் செயம்பெற்று, புவனசக்கிரேஸ்வரனென்னும் புகழ்கொண்டு இப்பூமியை யாள்வேன். அற்பபலங்கொண்ட ஐவர்கள் என்னுடனெதிர்த்துநின்று போர்புரியமாட்டார்கள். எதிர்நின்று வென்று ஜயங்கொள்ளும்படியாகிய முறைமை இதுவரையிலும் என்னிடத்தில் இருப்பதுமன்றி இன்னமு முயற்சிசெய்துகொண்டிருக்கிறேன். இம்முதன்மியும் சொக்கட்டானை யுருட்டித்தங்கள் செல்வமுழுமையுந் திரட்டிக்கொடுக்கப் பெற்றுக்கொண்ட நான் அவர்களைக் காட்டில் விரட்டிவிட்டிருக்க, மாண்டவர்போல் வனமடைந்த பாண்டவர்கள் மீண்டுவந்து என்னை மருட்டிப் பூமியைப்பெறக்கருதினுல் பேரிகைச் சத்தங்கேட்டிறந்த நரியைப்போற் பயந்து பூமியைக்கொடுக்கமாட்டு

வேனோ? ஒருகாலும் ஏமாறமாட்டேன். ஐவர்கள் பூச்சிகாட்ட வந்ததும் அவர்கள்பொருட்டில் கம்மிடத்தில் இருக்கும் பலபேர்கள் ஏச்சுக்காட்டவிருந்ததும், இவைகளையெல்லாம் யோசிக்காமல் என் தந்தை சபையினிடத்தில் என்னுடைய வல்லபத்தை இகழ்ந்துபேசியதுங்கேட்டுச் சகிக்காத கோபத்தினுற்றத்தை வார்த்தையைத்தடுத்தேன். தாயே! வச்சிராயுதன் முதலாகியபேர்கள் வந்தாலும் லக்ஷியமில்லாமல் வெல்லுந் திறத்தினுடைய என்சேனைகளை யுத்தகளத்திற் கண்டவுடனே, பாண்டவர் மெத்தவருந்தி இறப்பார்கள்" என்றிவ்வாறு பற்பலவித பராக்கிரமங்களைப் பவளம்போன்ற இதழினையுடைய காந்தாரியினிடத்திற் சொல்லிக்கொண்டு வராநின்ற மகனுடைய மனமடிவில்லாவிரகைப் பெரியமன்னவன் கேட்டு மயக்கமுற்று வாடிவருந்திப் பெருமூச்சுவிடத்து ஏதேதது இனிக்காரியமில்லையென்று இளைத்து, தெளிவினையுடைய சஞ்சயனைநோக்கி, "புத்தியிற்சிறந்த உத்தமனே! பாண்டவர்களுடைய பலங்களையும் நமது பிள்ளைகளினுடைய தோளாண்மைகளையும் ஆதியோடந்தமாகத் தெரிந்தவன் யோகையால் இந்த இருதிறவர்களுமெதிர்த்து யுத்தஞ் செய்தால் எவர்கள் வெல்லுவார்கள்? எவர்கள் தோற்று இறப்பார்கள்? இதை யான் தெரிந்துகொள்ளும்படியாக உள்ளபடி சொல்" என்று கேட்கச் சஞ்சயன் "அரசனே கேளும்! காலக்கியானந் தெரியாத மானிடனுனுகையால் இதை யறிந்து சொல்லுந்திறம் எனக்கில்லை. தேவரீர் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அளவற்றபுகழ்பெற்ற மூலகாரணனுகியும் முக்காலமுணர்ந்த தவசிரேஷ்டனுகியும் இறப்பும்பிறப்புமற்ற இறைபாகியும் வேதங்களைப்பெற்ற விமலனுகியும் விளங்காநின்ற ஸ்ரீவேதவியாசரைத் தாமசமில்லாமல் வந்தித்துச் சிந்திப்பீரானால், அவர்சிறந்துவந்து உமக்குத் தெரியிப்பார் என்று சஞ்சயன்சொல்ல, சரிதானென்றுட்கொண்டு சஞ்சலமகற்றி, அசைவற்ற தன்மையிலிருந்து வருந்தினைத்தபோது மின்னுர்ந்த பொன்போலும் புரியோடியசடையும் பூமுடியும் புலித்தோலிடையும் அசைந்தகடையும் மிதியடியும் அழகிய குடையும் கரத்திற்றடியும முப்புரிநூலிலங்குமார்பும் விபூதி தூளிதமேனியும் பிரகாசிக்க விண்ணைவிட்டிறங்கிய சூரியனைப்போல்வந்து வேத்தனுக்கெதிரில் நின்ற ஸ்ரீவேதவியாசரைத் திருதராட்டிரன் காந்தாரி துரியோதனன் சஞ்சயன் இவர்கள் காலவரும் கண்டு எதிர்கொண்டோடி சாஷ்டாங்க தண்டனிட்டு அர்க்கியபாத்திய ஆசமன்னிய அட்சதைசந்தனுதி தூபதீபங்களுங் கொடுத்து ஆசனத்திலெழுந்தருளச்செய்து கலக்கமுற்றமனத்தினையுடைய காந்தகரி காயகன் கண்ணீர்சோரவிட்டுத் தானெண்ணிய காரியங்களைக குறித்துக்கேட்கவும் பெருமையிலுயர்ந்த ஸ்ரீவேதவியாசர் கேட்டுக் கலீரென நகைத்துத் திருதராட்டிரனைப் பார்த்து, காளை கடக்கப்போகிற சமரிலெதிர்க்கும் பிள்ளைகள் நூற்றைவரில்

இறப்பவர்கள்யார் இருப்பவர்கள்யார் என்று கேட்டனை. இக்கேள்விக்கு விவேகத்திற் சிறந்த மேலானவர்கள் விளம்பியமொழியொன்றுண்டு. அஃதென்னவென்றால் சத்தியமுந்தருமமுமுள்ள விடத்தில் ஜயமும், அசத்தியமும் அதர்மமுமுள்ளவிடத்தில் அபஜயமுண்டாமென்று பழமொழி இருப்பதினால் கல்வினையை கட்பாகக்கொண்டும் கல்வினைக்குத்தக்க கல்லொழுக்கங்களுக்குத் துணையாகவிருந்தும் கடத்திய கல்லோரெவர்களோ, அவர்களுக்கு நலமும்-பலமும்-ஜயமும்-புகழ்ச்சியும் உண்டாம் இதைவிடுத்துத் தீவினையை கட்பாகப் பெற்றும், தீவினைக்குத்தக்க தீயகுணங்களுக்குத் துணைப்பட்டிருக்கும் தீயராகிய பேயர்களுக்குத் தீமையும்-துயரும்-இகழ்ச்சியும்-அபஜயமும்-எமபாசப்பந்திப்பாகிய நரகவேதனை முதலிய துன்பங்களுமுண்டாகும். மேலும் உன்பிள்ளைகள் ஏழுசமுத்திரத்திற்கொப்பாகிய சேனைசமனியங்களைக்கொண்டு யுத்தஞ்செய்து வெற்றிபெறக் கருதி யுத்தபூமியில் வந்தாலும் இவர்கள் படையினிடத்தில் தானவவைரியென்னுந் திருமாலுக்கொப்பாகிய தீரர்களிருந்தாலும் தேவர்கள் மதித்து மகிழும்படியாகப் புகழ்ந்து யமதூதர் உயிருடன் விட்டு விடுவார்களோ ? ஒருகாலும் விடார்கள்——

இன்னமுங்கேளும் அரசனே ! ஆலில் எமதுகர்த்தனுகிய கடவுளின் கருணைக்கண் எவர்களிடத்தற்றங்கி இருக்கின்றதோ; அவர்களுடைய புயத்தில் சேற்கெண்டையையொத்த கண்களையுடைய ஜயலட்சுமி சேர்ந்துவாழ்வாள். கிளைகள் தழைத்தசோலைக் கொப்பாகிய பந்துமித்ரபுத்ர சம்பத்துக்களுடன் சிறந்த செல்வத்தைப் பெற்றிருங்கிய திரிதராட்டிர மகாராஜனே ! இவைகளைச் செவ்வையா யோசிக்கக் கடவை. அஷ்டாக்ஷரப் பொருளாகிய மாதவன் - ஸ்ரீநாதன் - ஹரிவாசுதேவன் - முகில்வண்ணன் - முராஹரி - ஜகார்த்தனன் - பக்தபராதீனன் - பக்தவற்சலன் - பரமதயாளன் பரம புருஷோத்தமன் என்னுந் திருநாமங்களிற் பலநாமங்களைக்கொண்ட பகவானுடைய பாதபங்கயங்களை உள்ளத்திற்கொள்ளும் பரமபாகவதர்கள் பெறுதற்கருமையாகியபேறு பிரமாண்ட பேரகண்டங்களிலு மேலாகியது. ஆதலால் இத்தன்மைவாய்ந்த பரமரகசியத்தை நீங்கள் கைப்பற்றுமற் போனீர்கள். இதற்குத் திருஷ்டார்த்தம் சத்தியசவுச ஆசாரசற்குணங்களிற்றழைத்த அந்தப் பாண்டவர்கள் தங்களுடைய நாதனென்றும், தங்கள் கமத்தனனென்றும் தங்கள் சகாயனென்றும் ஆபத்திலுருள்புரியு மையனென்றும் திரிகரணசுத்தியாய்ச் சிந்தித்து அவர் நடந்துகாட்டி நடத்தும் நன்னெறிப்பிரகாரம் நடந்துவருகின்றார்கள். அதனுலவர்கள் எக்காரியங்களிலும் வெற்றிபெற்று வருகிறார்கள். உனதுபுத்திரர் வெற்றி பெறுவார்களென்று எவர்கள் சொல்லுவார்கள். வேங்கனே, புள்ளாங்குழலைப் பூரிக்குஞ் செம்பவள வாயனுகிய மாயன், சிந்திப்பவர்களுக்

குச் சேயினிடத்திற் பொருந்திய தாயைப்பார்க்கிலும் பரிவுள்ள நேயனெனவனென்று துணிவுகொண்டு, நீங்களும் சேவிசுவாசத்துடன் அந்தக்கடவுளே கெஞ்சில் கினைப்பீர்களானால் கினைத்த காரியங்களெல்லாம் இனிமேற் கைகூடும்" என்று வெகுவாகிய வசனங்களைச் சொல்ல திரிதராட்டிரன் முனிசிரேஷ்டனுடைய கருத்தைத் தெரிந்துகொண்டு வணங்கி "என்னிஷ்டதெய்வமே! இவ்வுலகவாழ்வென்னும் மாயை வலைக்குட்சிக்கி யுழன்று வருந்தி மாய்ந்தவியும் பெருமோசத்தைக் கண்டிருந்தும் படுகுழியில் வந்துவீழுமென்னைப் பாதுகாத்து யானுய்யும்பொருட்டு வேதவிதியாகிய தத்துவத்தை யெனக்கு விளம்பி யருளிச்செய்யவேண்டும். சுவாமிகளால் சகல காரியங்களையும் இப்போதறிந்துகொண்டேன். போனகாட்போக இன்னுள் மூதற்கொண்டேனும் மன்னுயிர்யாவையும் பெற்றளிக்கு மாதவனுடைய மலரடியை மனத்தில்கிறுத்தி, அவனுக்கடிமையாய் அரசுபுரிந்து வாழ்வேன். இதுவரையிலும் உலக அரசையே உற்றகதியென்று நம்பி அறிவழிந்தேன்" என்று சொல்லித்துதிக்க இதைக் கேட்டிருந்த மாசுணக்கொடியோனுகிய துரியோதனன் சொல்லுகின்றான்—

இப்போது ஐயா அவர்கள் எவனையோ விசுவாசித்து கடந்துகொண்டால் ஒருகுறைவுமில்லையென்று சொன்னர்களே, அவன் இவ்வுலகங்களே யெல்லாம் ஓரடியிலளந்த திருமாலானுலும், மற்றெவ்வுலகங்களையும் விழுங்கிக்கக்கின அரியானுலும், குழந்தையிற்றனே பூதகியின் பெரும்பாலுடன் அவள் பிராணனையு முறிஞ்சிவிட்டவனுனுலும், ஆத்மகோடிகளைச் சிருஷ்டித்த அயனுக்கும அப்பனுனுலும், பலவித ஆபரணங்களினுற் பிரகாசிக்கு மார்பினனுகிய அர்ச்சுனனுக்கு உறவாகி அந்த ஐவருள்ளத்திலும் பொருந்தியிருக்குந்தன்மையினுல், அவனுக்கு இவ்வுலகத்திற்கோர் திலகம்போன்றயான் எள்ளத்தனைப்போதும் என்சிந்தையால்வந்திக்கமாட்டேன்'—என்று வசையறுத்துக்கூறினன். இதைக்கேட்ட மன்னவன் எதிரிலிருந்த மாமுனியை நோக்கி, 'சுவாமி! இவனென்ன காரணத்திற்கு உற்பத்தியானுனே? எல்லாருயிரையும் போக்கவந்த யமனே? அல்லது இவன் பிள்ளையோ? பெரும்பூதமோ? என்குலகோத்திரத்தைக் கெடுக்கவந்த குறளியோ? துதிக்கும்புகழை அழிக்கவந்த துடைகாலனே? யானறியேன். இன்றுமுழுவதும் நான்சொல்லிய வார்த்தைக்கெல்லாம் எதிர்த்து மாறுபாடாக மறுத்துச்சொல்லுவதையன்றி, இப்பாவி கிஞ்சித்தும் இணங்கிவர வில்லையே. இவனுக்குச் சாவுங்காலஞ்சமீபித்ததோ கடவுளே? 'ஆங்காலம் பொய்யுமெய்யாம் போங்கால மெய்யும்பொய்யாம்' என்று புவியில் வழங்கும் பழமொழியும் என்னளவி லுண்மையாயிற்றே; ஆகிலும் அதித்தியமாகிய உடலென்னும் பொய்யை மெய்யெனப் பேர்கூறி இருக்கும்

விதம் மிகவும் கன்றுகவே இருக்கின்றது. ஐயோ! மாயா மயக்கப் பிரபஞ்சவலையி லகப்பட்டு மனம் வருந்தி மடியவேண்டிய தென்னே" என்றான். "குற்றமில்லாத என்குலந் தழைக்கப்பிறந்த உத்தமனே! உன் சிந்தையில் நினைத்த வண்ணம் நடக்கக்கடவை" என்று பற்பல விதமாகிய வெறுப்பு வார்த்தைகளே விளம்பிப் புத்திரபாசப்பெரும் பிணிப்பதனால் மறுபடியுஞ் சிரேஷ்ட புத்திரனுடைய மனத்தை எவ்விதத்திலாகிலும் ஸ்திரம்பெறத் திருத்திப் பெரும்புகழ்மாண்பில் நிலைநிறுத்தவேண்டும் என்கிற எண்ணத்தோடு வியாசபகவான் திருதராஷ்டிரனைப்பார்த்து, "நீ ஏதுக்கு வீணுப் வருந்துகின்றாய்? காம்புபற்றிப்போனமனம் இனித்திரும்பாது. இவனுக்கேற்படுத்தியிருக்குந் தலைவிதிப்பிரகாரம் இவன் சத்துருக்களுக் கெதிரில் யுத்தஞ்செய்து இறக்குங் கொள்கையை உடையவனுகவேயிருக்கின்றான். இது உண்மைதான். இன்றுமுதல் நீ உலகரட்சகனுகிய உவணமூர்த்தியின் உபயதிருவடிகளே உள்ளத்திற் சிந்தித்துக் கொண்டு, நீர்க்குமிழிபோன்ற இவ்வுடல் இருக்கின்றவரையில் காலஹேதுவாய்ப் பிறந்து வாதிக்கும் இச்சிறுவர்கள் மீதுவைத்த ஆசைப்பெருக்கினுல் ஏற்படும் விறுதாவாகிய பற்பல சிந்தையையும் பற்பல துயரங்களையும் விடுத்துச், சதாகாலமும் நிர்விகாரசித்தனுய் நன்னெறிநிலையில் நிற்கக்கடவை" என்று விளம்பிய தன்னுறுதிணுக்கொப்பாகிய மொழிகளைத் தன்செவியாரக் கேட்டு இதுவே கடைப்பிடியென்று மனங்கொண்டு, விக்கியானவந்தனுகி சுக்கியான சூரியனையொத்த வியாசருடைய பாதங்களில்வீழ்ந்து, "சுவாமி! எந்தபாசபந்த நெறியைத்தொடர்ந்து எவர்கள் கெட்டழிந்தாலும் தேவரீருபதேசித்த திருமந்திரத்தைச் சிந்தனைசெய்து என்காலகதிக்குத் தகுந்த இச்சையைப் பெறுகின்றேன். இறைவனே" என்று கரங்குவித்திறைஞ்சிய திரிதராட்டிரனுக்கு ஆசீர்வதித்துத், தட்சணம் வானத்திற்சென்றிய மின்னலைப்போல மறைமுனிவர் மறைந்துபோயினர்.

இப்படி வேதங்களை விரித்து விளம்பியருளிய ஸ்ரீ வேதவியாசர் போனபின்பு திக்குநோக்கித் தெண்டனிட்டுக்கொண்டு, தனக்குச்சமீபத்தில் நின்ற புத்திரனேநோக்கி, இதுவரையில் யாங்கள் கூறியவனைத்தும் உள்ளத்திலிருத்தி நினைத்து, உன் மனதுக்கு இஷ்டமானபடி செய்" என்று விடைகொடுத்துவிட்டுச் சிவந்த சூரியனைப்போலொத்த தேகத்தையும் விவேகத்தையுமுடைய சஞ்சயனை விடுதிக்குப்போகும்படி அனுப்பிவிட்டு பலமணிகளிறுமாந்து கலம்பெறச்செய்த மாளிகை இடத்திற் காந்தாரியுடன் ஆகுங்காரியங்களை யோசித்துக் கொண்டிருந்தான் திரிதராட்டிர மகாராஜன். இதுகால் இருளில்லா மனத்தினையுடைய சஞ்சயன் தெளிவுற்ற பாண்டவர்களிடத்தில் தூதுபோய்வந்து உரைத்த பலவாக்கியங்களையும் தெளிவில்லாத திரிதராட்டிரன் முதலாகியமேற்கள் அவை

களைத் தெரிந்துகொண்டதைக் குறித்துப் பேசிக்கொண்ட விதங்களியாவையும் விளம்பிலேம். இப்பால் மயக்கமற்ற பாண்டவர்களிடத்தில் வார்த்தையாடி விடைபெற்றுக்கொண்டு சஞ்சயன் வந்தபின்பு அந்திவண்ணனுடைய அருளைக் கவசமாகக்கொண்டு அடல்புரியத்துணிந்து, ஹரிபரந்தாமனுடைய அடியிணையைப் பணிந்துவாழும் ஐவர்கள், உபலாவியத்திலிருந்த உத்தமர்களுடன் கலந்து இன்னடத்தாகின்ற செய்கைகளுஞ் சொல்லுகின்றோம் கேளும் ஜனமேஜய மகாராஜனே என்று வைசம்பாயனர் சொல்லுவதாயினர்.

சஞ்சயன் தூதுச்சருக்கம் முற்றிற்று.

ஸ்ரீ கிருஷ்ணன் தூதுச்சருக்கம்

கண்ணன் துதி.

அரியதண் கலைவாண் மதியமுங் கொதிகொ ளாலமுந் தனதிடத் தடக்கி
யுரியவொண் கங்கா நதிக்கொரு பதியா யுயர்பெறு முயர்மகோததியிற்
பரியதிண் சிலையோ டம்பெலா முகந்து பற்குணப் பொருப்பிடை பொழியுங்
கரியபைம் புயலைக் கைதொழு மவரே கருவிலே திருவுடை யவரே.

திருநாட்டிற்சிறந்த குருநாட்டிற்பிறந்த ஜனமேஜய மகாராஜனே கேளும்! தம்பிமார் நால்வருடன் தருமபுத்திர மகாராஜன் பன்னிரண்டாண்டு வனவாசமும் ஓராண்டு அக்ஞாதவாசமுந் தொலைத்து உபலாவியமென்னும் பட்டணத்தில் வந்திருந்து, தன்னுடைய புரோகிதனுகிய உலூகமுனியைத் துரியோதனனிடத்திற்குத் தூதனுப்ப, அந்தத துரியோதனன் தன்தந்தையாகிய திருதராட்டிரன் முதலானவர்களோடுங் கலந்து பேசிக்கொண்டு இன்னுஞ் சிலதினத்தில் மேல்நடக்கவேண்டிய காரியங்கட்குச் சொல்லி யனுப்புகிறோமென்று உலூகமுனிவரை யனுப்பிவிட்டுத் தங்களுடைய புரோகிதனுகிய சஞ்சயமுனிவனை யழைத்து, "நீர் உபலாவியத்துக்குச் சென்று பாண்டவர்களைக்கண்டு ஞானப்பிரசங்கம் பேசி தருமபுத்திராதியரை இன்னமும் வனவாசம் போகத்தக்கதாக இசைத்து வாரும்" என்றனுப்ப, அந்தப்படியே சஞ்சயன் பாண்டவர்களிடத்தில் வந்து ஞானப் பிரசங்கஞ்செய்து' "ஆக்கை-செல்வம்-ஆயுள் இவை முதலியவைகள் அநித்தியமாகையால் நித்தியமாகிய தவமிழைத்து முத்திபெறுவதே உறுதியாகிய உத்தமம" என்றுரைக்க, அதைக்கேட்ட பீமசேனன் மெத்தவுங்கோபித்துச், சத்துருசங்காரஞ்செய்து நாங்கள்கூறிய பிரதிக்ஞையை முடிப்பதே தவமென்று பேசியனுப்ப, இவ்வார்த்தையைக்கேட்ட சஞ்சயமுனி திரும்பி அஸ்தினபுரம் போனபிற்பாடு பாண்டவர்கள் மற்ற மன்ன

வர்களோடு இனிநடக்கவேண்டுங் காரியங்கட்கு ஆலோசிக்கத் தலைப் பட்டவர்களாய், சமாதானத்தாற் காரியங் கைக்கொள்வதான சாம மும், பொருள் முதலியவற்றைக் கொடுத்துக் காரியானுகூலம் பண் ணிக்கொள்வதான தானமும், வேறொருவராற் பகையை விலைத் துத் தான் சிநேகமாயிருந்து காரியசித்தி செய்துகொள்வதான பேதமும் நல்வகைச் சேனைகொண்டெதிர்த்து யுத்தஞ்செய்து வெற்றியுடன் வேண்டியவைகளைப் பெறுவதான தண்டமும் ஆகிய இந்நான்கும் இராஜர்களுக்குரிய உபாயமாசையால் இவ்விதமாகிய தந்திரயுக்தி புத்திமுதலாகிய நீதிமுறைமைகளில் வழுவாமற் பேசிச் சத்துருக்களை வசப்படுத்தி, ஆகவேண்டிய காரியங்களைக் காலத்துக் கேதுவாய் அமைத்துக்கொண்டு வரத்தக்கவல்லவர் கோபாலகிருஷ்ணரே யன்றி வேறொருவரில்லை யென்றுணர்ந்து, பரிமளம் பொருந்திய பரிசுத்தமாகிய குளிர்ச்சிகொண்ட அத்துளப மாயனை மீட்டுந் துரியோதனனிடத்திற்குத் தூதுவிடுவதற் கெண் ணித் தருமபுத்திர மகாராஜன் கிருஷ்ணமூர்த்தியை நோக்கிச் சொல்லுவதானார்—

ஓ! தீனதயாளுவாய் ஜெகத்ரக்ஷகராய்த் தோன்றியதேவ! செவ்வையாகிய காரியங்களைச் சொல்லவந்தவரைப் போல்வந்து தீங்காகிய வார்த்தையைச் சொல்லிய சஞ்சயமுனிக்கு நாம் செப் பிய வசனமும், உலகமுனியை முன்னதாகத் தூதுவிடுத்த நமக் குத் துரியோதனன் அப்போது பேசியனுப்பிய வசனமும், தேவரீ ருடைய திருவுளம் அறியுமே. சுவாமி! அப்படியிருக்கக் கொடிய விஷத்தை வெகுவாகக்குடித்து அந்த விஷந் தலைக்கேறி உடம்பு மறந்து உறங்கிக்கிடக்கும் ஒருவனுக்கு சவுக்கியஞ் செய்யநினைத்து நல்லமருந்தும் மந்திரமும் கடுகவிசாரித்துக் கொடுத்து நன்மை செய்ய நினைக்காமல், சுற்றிலுமிருந்து வருந்தி வாட்டமுற்று மயங் கித் துன்பப்பட்டுக் கொண்டிராநின்ற அவனுடைய அண்ணன் தம்பி முதலிய பந்துக்களைப்போலத் தேவரீரும் அவ்விஷமுண்ட வர்களைப் போலிருக்கும் எங்களுக்குவேண்டிய பக்குவங்களைச் செய்து இரக்ஷிக்காமல் ஏனைதாமென்று சும்மா இருப்பது ஞாயமோ? ஸர்வஜ்ஞராகிகளின் மனத்திலுமிருந்து விளையாடுஞ் சோதியே! ஏதாகிலும் ஒருயுக்தியை எங்களுக்குப் போதித்தருள வேண்டும். குருக்ஷேத்திரபூமியில் அரிதாகிய யுத்தஞ்செய்யத் துரி யோதனதியர்சம்மதப்படிவார்களானால் அதுநமக்கு மிக நல்லது. அதைவிட்டு நாம் யுத்தஞ்செய்வதற்குத் தயாராக இருக்கிறோ மென்று முந்திச்சொல்லி யனுப்பிவைப்பது முறைமையல்லவே. ஆகையால் தேவரீர் பிரயாசை யெடுத்துக்கொண்டு திருவடிவருந்த அஸ்தினபுரத்திற்குப்போய்த் திரிதராட்டிரன் துரியோதனன் முத லிய பேர்களைக்கண்டு வார்த்தையாடி அவர்களுடைய கடைப்பிடிக்

கருத்தையறிந்து ஜயப்படுத்தி வரவேண்டிய கடமை உம்முடையது என்று கிருபாவெள்ளம் பெருகும்படியாகத் தருமராஜன் சொன்னார்.

இவ் வார்த்தையைக்கேட்ட வாணுசரனுடைய வாணுளையும் புஜகிரி இரண்டாயிரத்தையும் அழித்த ஹரிபரக்காமனுவர் பீமசேனன் அர்ச்சுனன் நகுல சகாதேவனென்னும் நால்வரையுங் கூடவைத்துக்கொண்டு, சாத்தகிமுதலிய பேர்களுஞ் சுற்றிலு மிருக்கவைத்து, "யுத்தகளத்தில் வெற்றிபெற நாட்டும் முரசக் கொடியினையுடைய தருமராஜனே! நாளையொருகாலத்தில் நீங்களென்னை வீணுக கிந்திக்கவேண்டாம். அவர்களுடைய மனோங்கிதத்தை வெளிவிட்டுச் சொல்லுங்கள். நான் சொல்லுவதையுங் கேளுங்கள். அஃதென்னவெனில் வயல்களிடத்தில் தாமரைமலர்களுடன் வராலினங்கள் மருவிவிளையாடும் வளப்பங்கொண்ட குருநாட்டில் பாகப்பிரகாரம் பாதிவாங்கிக்கொண்டு அரசுசெய்து வாழ்ந்திருக்க நினைவோ? அல்லது பழையபடியே துன்பமுடைய வர்களாய்த் தனமுங் கனமும்விடுத்து, அனமும்மனமும் வெறுத்து, வனமேகதியாக அடுத்து இன்னமும்வாடித் திரியநினைவோ? அஃதன்றிப் பிழைப்பாரியாரோ வென்று சங்கேதகப்படும் போர்முகத்தில் பகைமேற்கொண்டு, முன்னங்காபித்தெழுந்து சபைபிற்சொல்லிய பிரதிக்கினையின்படியே துரியோதனனுதியரைக்கொன்று ஜயம் பெறநினைவோ? ஐவராகிய உங்களில் ஒவ்வொருவருக்கு மிருக்கின்ற எண்ணமென்ன?" என்று கேட்க அப்போது தருமசொரூபியாகிய யுதிஷ்டிரர் சொல்லுகின்றார்—

கந்த கோபாலன் களிக்கும் காதனே கேளும்! வைராக்கிய மென்னுங் கொடுமாகிய நெருப்பை வாசாமகோசரமாக வளர்த்து விடுவோமானால், மூங்கில்களானது தனக்குத்தானே இழைத்து பற்றிக்கொண்டெரிந்து சுற்றிக் கொண்டிருக்குந் தன்னினத்தோடு அழிந்துபோகுந் தன்மையைப்போல், நாங்களிருதிறவரும் குற்றம் பொருந்திய யுத்தகளத்தில் ஒரேதரமாய் மாண்டுபோவோம். ஆண்டவனே! வாழையாடியும் இலைக்குச் சேதம் முள்ளாடியும் இலைக்குச் சேதம் என்னும் பழமொழிபோல் எங்களிருதிறத்தவருக்குங் கெடுதி வராமல், செவ்வல்லியுங் காமரையும் பரிமளிக்கின்ற வயல்கள் சூழ்ந்த குருநாட்டிலே நாங்கள் நூற்றைந்துபேரும் அந்தமலர்களைப் போல ஒருமித்துக்கலந்து வாழும்படியாக எங்களுயிர்க்குயிராகிய தேவரீர் தூதுபோய் க்ஷாத்திரமின்றித் தாழ்ச்சியில்லாத க்ஷத்திரஞ்சேர்ந்து வாழும்படியாய்ப் பொருந்தச்செய்ய வேண்டிய கடமை உம்முடையது" என்று தருமராஜன்சொல்லத் தாயென்று வந்த பூதகியுயிரைக்கொன்ற ஜனார்த்தனன் சொல்லுகின்றார்—

உய்த்துல காளும் மைத்துனு கேளும்; பூர்வம் சபாமண்டபத்தில் சூதாடி யாவையுங்தோற்றபிற்பாடு புண்ணியத்தைப் பொருளாகவைத்து மறுபடியுஞ் சொக்கட்டானுடித் திரௌபதையும் நீங்களாவருஞ் சுவாமி தயைபினால் மீண்டபோது, அச்சபையிலிருந்த அரசர்களுக்கும் பெரியோர்களுக்கும் எதிராக உங்களைப்பார்த்துக் கலீரென நகைத்துப் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒருவருடம் அக்ஞாத வாசமுஞ்செய்து வருவீர்களானால் உங்களுடைய பாகத்தைக்கொடுத்து விடுகிறேன்" என்று, விதுரனையும் துரோணாச்சாரியையுங் கொண்டு அப்போது சொல்லிவைத்த துரியோதனன் இப்போது சொன்னசொல் தவறிப்போவானுகில், அவனைப் போர்முகத்தில் மாய்த்து உங்கள் சொத்தமாகிய பூமியை நீங்கள் பட்டங்கட்டிக்கொண் டாள்வதற்கு யாதொருதடையுமில்லையே" என்று ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் சொல்ல, அதைக்கேட்ட தருமராஜன், "கேளும் காசாம்பூ வண்ணமுள்ள கண்ணனே! ஆசாரியர்களையும் சுற்றத்தாரையும் குருகுலத்திற்குரிய அண்ணன தம்பி பாட்டன் மாமன்மித்திரர் முதலாகிய இத்தனைபேர்களையும் கோரில் கின்றுபோர்புரிந்து கொன்று வென்று, கடலாடை பையணிந்த பூமியைப்பிணங்கின்ற பூச்சிபோல் தனியாக இருந்து அரசாட்சி செய்வதைப்பார்க்கிலும், கபடவஞ்சகங்கலந்த மனமுடைய என்பெரிய தகப்பனார் சஞ்சயனிடத்திற் சொல்லிய சஞ்சலமான சொற்படியே வனவாசஞ்செய்து, காய்கனி கிழங்கு சருகுகளைப் புசித்து, இரவும் பகலுங் காலங்கழிப்பது மிகவும் நன்றும்" என்றார்.

இவ்வார்த்தையைக்கேட்ட வேதவித்தாகிய விமலன், "கேளும் தருமராஜனே! மெய்யையே மெய்யாகக்கொண்டு வையகங்காக்குமையனே! ஒருவரோடொருவர் பகைத்து யுத்தஞ்செய்வது பாவமான காரியமென்று விடுத்துப் பலம்பொருந்திய தம்பிமார்களுடன் வனத்தையடைந்து வாசஞ்செய்யப் போவீரானால், பாண்டவர்கள் தகப்பனுரைத்த வார்த்தையைத் தட்டாமற் போனார்களென்று சிலர் சொல்லுவார்கள். பெரும்பாலார் தாயாதிகளுடன் யுத்தஞ்செய்து சபதமுடித்துக்கொள்ளக் கையிலாகாமல் பயந்தோடிப்போனார்களென்று பழிப்பார்கள்; ஏசுவார்கள். அதுபோக நீங்கள் சொல்லிய சபதமும் பொய்த்துப்போம். அதனாற் பாபமும் வரும். இதுவோநீதி? நிறைமதிகொண்ட இறையே! உன்யோசனை மிகவும் நன்றாயிருக்கின்றது" என்றார். அதற்குத் தருமராஜன் "சேணுலகத்தோர் துதிக்கும் வேணுகோபாலத் தெய்வமே! தேவரீரே எங்கள் நிமித்தமாகத் துரியோதனனிடத்தில் தூது சென்று அவனிடத்தில் எங்கள் கருத்தையுங் காட்டிப்பேசினால், மகரகுண்டலமும் யுதிவண்டுள் - பாடும் சோலைகள்சூழ்ந்த காடும் எங்கள் பாகமுங்கொடுப்பான். அப்படிக்குத் தேவரீர் போய்ப்பேசியும்

கொடாமற் போவாஞகில், அதற்குமேல் வெற்றிச்சங்கும் வலம் புரிச்சங்கும் தவளைச்சங்கும் ஜயம்பெறுசங்கும் எங்குமுழங்க, வீரகாளமும் வெற்றிமுரசமும் மொய்க்கும்படியாக, கொடிய இடியினையுடைய யமதூதர் மனங்களிக்க யுத்தஞ்செய்தாஞலும் தாயாதிபக்ஷத்திலுள்ள பூமியைப்பெற்றுக்கொள்ளலாம். அப்போது நமக்கு அபகீர்த்தியும் பழிப்புமில்லை. ஐயா துஷ்டஜனநிக்கிரக சிஷ்டஜனபரிபாலகஞகிய ஸ்ரீகிருஷ்ணபகவானே! கேட்டருளும். வெற்றிமுதலாகிய சம்பிரமத்திற்கு முந்திநாட்டிய சர்வக்கொடியினையுடைய துரியோதனமகாராசஞலும் அஸ்தினபுரத்துக்குத் தேவரி ரெழுந்தருளிச்சென்று, அவனைக்கண்டு பள்ளர்களுடைய முற்றங்களிற் சங்கினங்களுநுகின்ற ஜலவளம் பொருந்திய எங்களுக்குரிய நாட்டைக்கேளும். அதைக்கொடுப்ப தில்லையென்று மறுப்பாஞகில் எங்களைக்தூபேநக்கும் இந்திரப்பிரஸ்தம்-ஸமப்பிரஸ்தம்-அவந்தியாபுரி-வாரணபுரி-அஸ்தினபுரி என்னும் ஐந்தூரைக்கேளும். அவையுங்கொடாஞகில் ஐந்துமனையாகிலுங் கொடுமென்றுகேளும். அவையும் இல்லையென்றால், யுத்தத்துக்காவது வருகிறோமாவென்று சம்மதித்துவாரும். சித்தூரத்திலத மெழுதிய சுவலயா பீடமென்னும் யானையின் கொம்பைப்பிடுங்கிக் கம்சனைக்கொன்ற வீரம்பொருந்திய செந்தாமரைக்கண்ணனே! இதுதான் எனது அபிப்பிராயம்" என்றார். பீமசேனன் கேட்டு, முன்னமே கோபங் குழுஉக்கொண்டிருக்கு மனத்தினில் இன்னமுங் கோபாக்கினி குடங்கொண்டு சொரிய, குற்றமற்ற நாவாற் குரூரமான சொற்களை வசனித்துக் கொண்டு விரைவிலெழுந்துவந்து, ஸ்ரீகிருஷ்ணதேவரைப் பணிந்து "பூலோகமுழுதுந் திருநாபிக் கமலத்தாற் பிறக்கச்செய்தவனே! பொற்றுமரையிலுதித்த மகாலட்சுமியையுங் கௌஸ்துவாபரணத்தையும் பொருந்தவணிந்த திணிந்த வக்ஷஸ்தலனே! நம்பினோர்களுக்கு நேரிற் துன்பத்தை நீக்கும் இன்பவாரிதியே! பழிபாவமில்லாத பரிசுத்தகுணமுள்ள எங்களண்ணலாகிய தருமபூபதியானவர், தன்மானம் பிறர்மான மென்பதைச் சற்றுமுணராமற் சொல்லும் வார்த்தைகட்கு நானென்ன செய்வேன்" என்று நடுநடுங்கி, மறுபடியுஞ் சொல்லுகின்றான்—

"மதிமரபுதித்த அதிபதியாகிய அண்ணல்! மூன்று லட்சத் தறுபத்தாறுயிரம் பட்டவர்த்தனரும், ஆறுலட்சத் தறுபத்தாறு யிரம் மகுடவர்த்தனரும், பதினெண் பூமிமன்னர் மண்டலீகரும், ஐம்பத்தாறு தேசத்து அரசவர்க்கமும், பிஷ்மாச்சாரியர்-துரோணாச்சாரியர்-கிருபாச்சாரியர்-அசுவத்தாமர்-கர்ணன்-சகுனி-சல்லியன்-அதிரதர்-சமரதர் முதலிய சமஸ்தமான பேரும் நிறைத்திருந்த இராஜசபையில், விரித்த கூந்தலையும் பசிய வளையல்களையுமுடைய திரௌபதியை மானபங்கம் பண்ணுவித்தகாலில், அத்தப்பெண்

ணனவள் மெத்தவும் காணமடைந்து, 'திக்கில்லாப் பாவியானேனே தெய்வமே' யென்று தஞ்சமில்லாதவர்களைப் போல முறை யிட்ட போது, சரீரந்துடித்தெழுந்த யெங்களை, "பதறுதீர்கள்! கோபியா தீர்கள்! 'ஆக்கப்பொறுத்தபசி ஆறுகிறமட்டும் பொறுதோ' என்று சொல்லியடக்கி, குருகுலத்துக்கும் நமக்கும் பூலோகமுள்ளமட்டும் தீராப்பெரும் பழியை உண்டாக்கி வைத்தீர். அதுவுமல்லாமல்-களளக்கவறு கொண்டு சூதாடிக் கெலித்துத் தீப்படுகின்ற காட்டில் நம்மை யோட்டிவிட அதற்குஞ் சம்மதித்துப் பதின்மூன்று வருடங் கழித்துப் பிழைத்து வந்தும், இன்னமும் பகையை முடிக்க மன மில்லாதவராய்த் தூதனுப்பிப்பார்க்க வேண்டுமென்று இளைக் கின்றீர். ஆதலாலே துரியோதனன் செய்த கொடுமையைப் பார்க் கிலும் உம்முடைய கிருபைக்கு மிகவும் பயந்தேன், தருமபுத்திரரே" என்று பின்னுஞ் சொல்லுவான்—

"அண்ணா! உம்மைப்போலொத்த உண்மைப் பொருளையே வன வாசம் போகச்சொன்ன கண்ணற்ற திருதராட்டிரனுடைய காதலருகிய துரியோதனன் ஆண்டுவருகின்ற பூலோக முழு மையும், இன்றைக்கே ஒரு குடைக்கீழ் நீராளும்படியாகத் தரு வேன். அதுவுமல்லாமல் முன்னே நம்முடைய ஆட்சியான காட்டைக் கைக்கொண்டு நாம் வெறுத்துக்கொள்ளும்படியாக வனத்தில் விரட்டிவிட்ட அந்தத் துரியோதனனுனவன், ஐயோ அநியாயமே! என்னரசாட்சியைத் தருமராஜன் அடித்துப் பிடுங்கிக் கொண்டாரென்று தேவரீரை வெறுத்துக்கொள்ளாதபடி வீரசொர்க் கத்தை அவனுளும்படியாக இந்திரப்பதவியைக் கொடுக்கிறேன். என்வார்த்தையை அண்ணா நன்றுயோசியுங்கள்" என்று சொல்லிப் பின்னும் ஸ்ரீ கிருஷ்ணதேவரை நோக்கிச் சொல்லுகின்றான்—

"ஓ சுவாமி! எங்கள் அண்ணா துரியோதனனுடனே யுத்தஞ் செய்து பகையை முடித்தார். அன்றவிழ்த்து விட்ட கூந்தலையும் புலம்பிக் கூறியசபதச் சொல்லையுமுடைய திரௌபதைக்கு, அவ் விரண்டும் இன்று முடித்துக்கொள்ளும் படியாகச் சாதித்து விட் டார். தம்பிமாராகிய நாங்கள் சபையிற் பேசிய சபதங்களை யெல் லாம் தடையில்லாமல் முடிப்பித்தார். உம்முடைய மனமறியப் பூலோகத்திலே நிலைநின்றுயர்ந்த கீர்த்திமானென்னும் நாமதேயரைப் பிரசித்தமாக நிலைநாட்டி முடித்தார். இப்படி யார் முடிக்கப் போ

கின்றார்கள். இவருடனே பிறந்த நாங்களும் இவ்வாறான கீர்த்தியைப் பெற்றது போதும் போதும். இன்னம் எங்களை முடிக்கக் காத்துக்கொண்டிருக்கிறார் தருமநந்தனர்" என்று பின்னுஞ் சொல்லுகின்றான்.—

"சுவாமி! யாவரும் போர்க்கோலங்கொண்டு வருகிற பெரிய யுத்தகளத்திலே புகுந்து, துரியோதனனுடனே கூடியெதிர்க்கும் அரசர்களுடைய சரீரங்களெல்லாம் இரண்டு துண்டாகும்படி போர் செய்து, பழைய உலகமுழுவதும் கைக்கொண்டு அரசாட்சி செய்யத் துணியாமல், பொறுமை மேற்கொண்டு, தருமத்தையுங் கீளையுறவையும் பாராட்டி, இன்னமுந்தாது விடுத்துத் துரியோதனனே வணங்கிப் பூமியை யாசித்து அவன் கொடுக்கப் பெற்றுக் கொண்டு சவுக்கியமாகக் காலபோஜனந் தப்பாமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கவே யெண்ணுகின்றார் தருமபுத்திர மகாராஜர். ஐயோ!! குருகுலம் பட்டபாட்டையுங் கெட்ட கேட்டையும் நானென்ன சொல்லுவேன்" என்று விசனப்பட்டான். தருமராஜன் இவ்வாறு பரிவாகச் சொல்லிய தம்பியைச் சற்றிருவென்று மலர்போன்ற கையினுலமர்த்தி, "ஓ குருகுல சிகாமணியாகிய தம்பி! குற்றம் பார்க்குமிடத்திலே சுற்றமுண்டோ? ஒரு குலத்திலே பிறந்த அண்ணன் தம்பிமாருடனே கூடிவாழும் வாழ்வினைப் போல் வேறொரு உறுதியுண்டோ? பெரிதாகிய இப்பூமியைப் பெறுவது காரணமாகக் கருதிப் பகைத்தெதிர்ப்பது நம்மிருதிறவருக்கும் கஷ்டமல்லவோ? செத்தவன் வீட்டில் தீட்டு யாருக்கெனில் உற்றார் பெற்றார் முதலிய வருக்கன்றி மற்றவர்க்கென்ன என்பது போல், நமது கோபம் நமக்கே துன்பத்தை விளைவிக்கும். ஆகையால், ஒரு குலத்திற்பிறந்த உரிமையுள்ள நமது பெரிய தந்தையின் பிள்ளைகளாகிய தம்பிமார்கள் அறியாமையினுலே சபையிற் சொன்ன வார்த்தைகள் நமக்கு இழிவையுண்டாக்குமோ? நமக்குச் சம்பந்தமில்லாத அன்னியராற் சொல்லப்பட்டாலல்லவோ பேரிழிவாகுந் தம்பி. அதை யோசித்துப்பார். கண்களிற் கைவிரல் பட்டால் அத்தக்கையைத் துணித்து விடலாமோ? எப்போதும் 'பொறுமை கடலினும் பெரிது' என்னும் வாக்கியத்தை அனுசரித்துச் சண்டையை நிறுத்திச் சமாதானமாய்ப் போவதே கண்மை. ஆகையால் நம்மாற் கூடியமட்டு முயற்சி செய்து சந்தி சமாதான

முதலாகிய வழிகளெல்லாம் பார்த்து எதிலும் ஒவ்விவராமற் போவானுனுல், பின்னுல் யுத்தத்தைக்குறித்து யோசிக்கவேண்டியது. அதை விடுத்து ஆரம்ப சூரத்துவமாய் முதலில் யுத்தமென்று பேசுவது யுக்தமல்ல அப்பா" என்று கீர்த்தியைப் பூஷணமாகத் தரித்தருளிய தருமபுத்திரமகாராஜன் சொன்னுர். அப்படியும் பீமசேனனுக்குத் கோபந்தணியவில்லை. அவன் தருமராஜனைப் பார்த்து "எங்ஙகாவே! துரியோதனனிடத்துக்குத் தூதுவிடுத்து அவன் அபிப்பிராயத்தை அறியவேண்டுமென்று சத்தியமுள்ள தேவரீர் சித்தத்திற்கு இஷ்டமுண்டானுல், துளபமாலையணிந்த ஸ்ரீ கிருஷ்ண தேவர் தேவர்களும் முனிவர்களும் நான்குவேதங்களும் இன்னமும் தேடுகின்ற தமது திருவடிகள் சிவக்க நடந்து நாம் திருநாடு பெறுவதற்காகத் தூதுசெல்ல வேண்டாம். வாடுகின்ற திரௌபதியினுடைய பிரதிக்கினையும் என்னுடைய பிரதிக்கினையும் வழுவிப் போகாமல் நிறைவேறும்படியாக, துரியோதனனிடத்தில் நானே போய் வருகிறேன். என்னைத் தூதாக அனுப்பிவையும் அண்ணு' என்று கோபச்சிரிப்பாக நகைத்து "ஐயோ! மலையைக் கண்ட தன்மையைப் போல் என் கரத்தில் வலுவேறி யிருக்குந் தண்டாயுதத்தினுடைய பிரபலங் கண்டும், அர்ச்சுனனுடைய காண்டீபத்தின் வலிமையைக் கண்டும், நகுல சகாதேவர்களுடைய வல்லமைகண்டும், நமக்குச் சகாயமாக ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி துணைப்பட்டிருக்கும் நிலைமைகண்டும் இந்தப்பாஞ்சாலி விரித்த அளகபாரங்கண்டும் ஒரு மாத்திரைப்பொழுதில் துரியோதனுதியரைச் சர்வசங்காரம் பண்ணி மகிழ்ச்சியடையாமல் பகையாளியின் குடையின்கீ ழொதுங்கி வாழும்படியாகவோ எண்ணி யிருக்கின்றீர்? ஆ! ஆ! அண்ணுவே" என்று, வெப்பமாகிய தோள்களும் மீசையுந் துடிக்க, நுட்பமாகிய மனமுங் கண்ணுங்கறுக்க, மேலோங்கி யெழுந்து பூமியிற்குழந்து, விறுவிறெனச்சுழன்று, நறுநறெனப் பற்கடித்து, மேகநடுங்கிப்பதுங்க முழக்கி, கோபமெழுந்துற்றழுங்கக் கலக்கிக் கூ கூவெனக் கூறிய வார்த்தையைக் கோபால கிருஷ்ணதேவர் கிருபையுடன் பரிவு கூர்ந்து கேட்டு, "அப்பா பீமா! பூமியிலே முன்பிறந்த தமையன்மார் இராஜ நீதி முறைமை சொன்னுல் அதைக்கேளாமல், பின் பிறந்த தம்பியானபேர் பிழைசொல்லி மறுப்பார்களோ? அந்தோ! பெரும் பிழை வந்ததே அடடா!! கடியகோபத்தை கூமிக்கக் கடவாய்" என்று கூற, பீமராஜன் சற்றே கொதிப்பாறி, கொடிர

கடுவிஷம் பெற்ற கல்ல பாம்பைப்போல் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தான்.

அப்படி இருக்கிறபோது இந்திர குமாரனுகிய அர்ச்சுன னெழுந்து வணங்கி நின்று, இறந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னு முக்காலங்களையுமுணர்ந்த ஸ்ரீ கிருஷ்ண தேவருக்கும் தரும புத்திரருக்குஞ் சொல்லுவான்—"ஓ முற்றுமுணர்ந்த முதியோர் களே! அந்தக் காலத்திலே துரியோதனன் பண்ணிய அக்கிரமங் களையும் அவமதிப்பையும் பொறுத்த பொறுமைகளெல்லாம் போதா மல், இன்னமும் பொறுக்கச்சொல்லிப் பொழுது விடியுமட்டுங் தருமத்தையே சொல்லிக் கொண்டிருந்தால், இனி எந்தக்காலத்தில் பகையை முடித்து நாம் தலையெடுப்போம். அப்போது தலையை விரித்துக்கொண்ட திரௌபதை இனி எப்போது கூந்தலை முடித் துக் கொள்வாள். தேவர்களானுலும், பழைய இராக்கதரானுலும், இன்னமும் வலிமைபெற்ற எவர்களானுலும், எதிர்த்தவர்களுடைய ஈரலிற்பற்றிய பிராணனைத் தனக்கு இரையென்று நினைத்திருக் கின்றது என்கையிலிருக்கும் பாணம். ஓ மும்மூர்த்திக்கு முதல் வனுகிய முகுந்தனே! இத்தன்மையவாகிய என்னுடைய திறத்தை யும் திடத்தையும் தெரிந்திருக்கும் தருமராஜாவானவர் மேகந்தவ ழும் கருமகமாத்தில் வாலினம்பாயுங் கழனிகள் சூழ்ந்த குரு நாட்டை என்ன நிமித்தமாய்த் துரியோதனனிடத்தில் வேண்டிப் பெறுவது ஐயோ? பாண்டவர் சகாயனும் விஜயனும் இறந்தார் களென்று எப்போது கேட்கின்றீரோ, அப்போதல்லவோ நம் முடைய நாட்டை இரந்து பெறவேண்டும். அண்ணு தருமநந்தனு! கோபால கிருஷ்ணமூர்த்தியே! அக்கினியைப் போல் தீண்டப்படாத பதிவிரதா மகத்துவமுடைய திரௌபதியை இராஜசபையிலே துகிலுரியடா தம்பி துச்சாதனுவென்று துரியோதனன் சொன்ன போது அவள் திக்கில்லாதவரைப்போலத் தியங்கிக் கலங்கித் தாரை தாரையாய்க் கண்ணீர்சொரிந்து, 'ஓ ஜெகத்ரக்ஷகா! ஓ தீன பந்தோ! ஓ ஜகார்த்தனு! ஓ தீனதயாளுவே! ஓ நெடியோனே! ஓ நீல மேனியனே! ஓ கிரந்தரனே! ஓ கின்மலனே! ஓ நித்தியானந்தனே! நேசமுற்ற தாசருக்கு விசுவாச மந்தஹாச நிர்மல சொரூபனே! நிராதரவாகிய எளியேனைத் தற்காலத்தில் வந்திரட்சிக்கக் கடவை என்று தன்னந்தனியாய் நின்று தளர்ச்சியுற்றபோது, நாங்கள்

ஐவருஞ் ஜீவனில்லாத உடலைப்போல இராஜசபைபிற் பார்த்துக் கொண்டிருந்த குற்றம் இனியேனும் விட்டுத் தீரவேண்டாமோ? இன்னமும் இரந்து நாடுவேண்டுவது மன்னாறமாமோ? மண்ணுல கெல்லாம் வாழ்வுறவாழும் கண்ணளிசுரந்து தருமகிறைந்த புண்ணியதேகப் புகழினையுடைய அண்ணு! பொற்பிரகாசம் பொருந்திய சக்ராயுதத்தை யுடைய நமது ஸ்ரீ கிருஷ்ணதேவர் நமக்காகத் தூதுபோய் நாம் சொல்லிய வாக்கியங்களை யெல் லாம் தேவாமிர்தத்தைப் போல் கலக்கித் துரியோதனனுடைய காதுகளில் வார்த்தாலும், அவன் கேளான். அதேனெனில் அளர் நிலத்தில் முளைவீசிய விதைகளை விதைத்தாலும் முளையாது. ஒரு வேளை தப்புவிதைகள் முளைத்தாலும் விளையாது. படத்தை யுடைய பாம்புக்குப் பால்வார்த்து வளர்த்தாலும் கொடிய விஷத் தைத்தருமே யல்லாமல் குணமாகிய அமிர்தத்தைக்கொடாது. அன்றியும் சர்க்கரையை மணல்போற் பரப்பிப் பாலோரி பாய்ச்சித் தேன்மாரிபொழிந்து வேப்பம் வித்திடினும் அவ்வித்தினின்றும் முளைத்த மரமானது கசப்பேயல்லது இனிப்புருது. அதுபோல் துரியோதனனுக்கு ஊழ்வினைவயிற்றினால் கெடுமதி கண்ணுக்குத் தோற்றவில்லை. கிருபாநிதியாகிய ஸ்ரீ கிருஷ்ணசுவாமியையும் அவ மதிப்பாய்ப் பேசுவானேயல்லது அவருக்கு ஞாயமாகிய உத்தரவு சொல்லமாட்டான். ஆதலால் தூதனுப்ப நினைப்பது அநியாயம்" என்று சொல்லிய அர்ச்சுனனை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சற்றுப் பொறு வென்று கையமைத்து, நகுலனைப்பார்த்து, "நீ யென்ன சொல்லு கின்றாய்" என்று கேட்டருளினார்—

உடனே அன்புடன் நகுலனெழுந்து, அரிவாசு தேவமூர்த்தி யின் பாதங்களில் வணங்கி, தருமபுத்திரருக்குச் சாஷ்டாங்க தண்டஞ்செய்து," சூதினுழிழந்த சமுத்திரம் வளர்ந்த பூமியைப் பெருமை பொருந்திய பாண்டவர்கள் பெறுவார்களென்று சொல்லு வதுபொய்யோ? ஐயா! இதுமெய்யே. தருமபுத்திரருடைய ஒப் பற்ற சௌரிய பராக்கிரம சாமர்த்தியமே சொல்லி வெல்லாதோ- ஓகிருஷ்ணசுவாமி! தேவரீர்க்கொன்றுந் தெரியாதோ? திருவாய் மலர்ந்தருளும் தேவனே" யென்று ஆவலாய்ப் பின்னுஞ் சொல்லுகி ன்றான்—"ஓ அண்ணு! தீர்ப்பதற்கரிய பகையானது மேலிட்டிருக்க, கோவினங்களைக் காத்தருளிய கோபாலன் தூதுபோயுரைத்தாலும், குருநாட்டையும் அரசாட்சியையும் அந்தத் துரியோதனன் ஒரு

காலுங் கொடுக்க மாட்டான். சிறியேன் சொல்லும் வாக்கியத்தைச் செவ்வையா யோசிக்க வேண்டியது. ஓ தரும பூபதியே! காற்றிலும் பனியிலும் வெய்யிலிலும் மழையிலும் மலையிலும் அலைந்து திரிந்து வருந்தி வந்த பாண்டவர்கள், துரியோதனனிடத்தில் நாட்டை இழந்தார்களென்று சம்புத்தீவாகிய இந்தப் பூமியை ஆளும் அரசர் களெல்லாரும் ஒன்றுகூடி நம்மை நகைத்துக் கேலிசெய்யாதபடி துரியோதனனுடைய சேனைவலிமையையும் என்னுடைய புய வலிமையையும் தேவரீர் பார்க்கலாம். அண்ணே! முன்னம் அன்னம் போல் நடையையுடைய அரம்பாஸ்திரீயை அசுரர்கள் அபகரித்துக் கொண்டு போக, அப்போது அவள் பயந்து அலறி அபயமிட்டு அடைக்கலம் வேண்ட, அதையறிந்து அந்தரவாசியாகிய இந்திர னுக்காக அந்த அசுரருடன் அமர்புரிந்து அரம்பையை மீட்டு அபய மளித்தான் நமது குலத்திலுதித்த முப்பத்தெட்டாவது பாட்ட னுகிய புரூரவ சக்கிரவர்த்தி. அப்படிக்கிருக்க அன்னியஸ்திரீகளுக்கு வந்த ஆபத்துக்குதவும் அரசர்குலத்திற் பிறந்த நாம் குட்டிச்சுவர் போலிருந்து காணும்படி துஷ்டனுகிய துச்சாசனன் திரௌபதியை எட்டி மயிர்பிடித்திழுத்து வந்து சபையில் விட்டு மானபங்கஞ் செய்ய ஆக்யாபித்த அருளற்ற பாவியாகிய அரவக்கொடியோ னிடத்தில் நமதுபூமியை யாசித்து, அவன்கொடுக்குங் குடைநிழலி லிருந்து அங்கம் வளர்த்தால் நம்மை யுலகம் பங்கஞ் சொல்லாதோ? நீங்கள் குலத்திற் பிறந்த தேவே! தேவரீர் தருமமும் பொறுமையும் தழைக்கும்படி யோசிக்கின்றீர். அவர்களிடத்திலும் இந்த நிஜைப் பிருக்குமானுல் இதுதருமந்தான். அப்படி இல்லாதிருக்க நீர் நிஜைப் பது அதர்மந்தான். அண்ணுவே! இன்னும் கேட்டருளும், வனவா சம் பன்னிரண்டு வருடமும் அக்யாதவாசம் ஒருவருடமுஞ் சத்திய மொழி தப்பாமல் கழித்து வந்தார்களே நமது சிற்றப்பன் பிள்ளை களாகிய அண்ணன் தம்பிகளென்று கொஞ்சமேனு மிரக்கம் வையா மலும், நம்மைக் கூட்டிப்போய்த் தன் சொல்லின்படியே தாயாதி பாகச் தையைசெய்யாமலும், உலுகமாமுனி போனதூதினுலு மனம் நையாமலும் போவானுனுல், தானேயறிந்து கொள்ளாதே ஒருவ னுக்கு மற்றொருவர் போய்ச் சொன்னுலறிவானே? தனக்குத்தானே கனியாதபழச் தடிகொண்டடித்தாற் கனியுமோ?" என்று பற்பலவித மான பழமொழிகளுடன் பேசினுன். அவனை அற்புத குணமுடைய அரிவாசுதேவன் கையமைத்தருளி, சகாதேவனைப் பார்த்து, "சௌ

ரியத்தையுடைய பீமசேனன் சொன்னதும் வலிமையுடைய அர்ச்சுனன் சொன்னதும் மஹிதிடங்கொண்ட சகுலன் சொன்னதுங் கேள்விப்பட்டோம். சொல்லுதற்கரிய அறிவையுங் கீர்த்தியையும் பராக்கிரமத்தையுமுடைய தோன்றலே! உன்கருத்தையுஞ் சொல்" என்று கேட்கக் கரிய திருமேனியையுடைய கண்ணனைப் பார்த்து மனமுருகும்படி சகாதேவன் சொல்லுகின்றான்—

ஓ ஆதிகாராயணராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரே! நீர் நினைத்தபடியே தூதுபோனதென்ன? போகாமல் நின்று விட்டாலென்ன? துரியோதனன் பாண்டவர்களுக்குப் பூமிகொடுத்தாலென்ன? கொடாவிட்டாலென்ன? பூங்கொத்தையுடைய அளகபாரத்தை இந்தத் திரௌபதி முடித்தாலென்ன? முடியாமல் விரித்தாலென்ன, நீரெண்ணியிருக்குங் காரியங் கடைசியில் முடியப்போகிறவிதம் அடியேனுக்குத் தெரியுமே! வாசனையை வீசுகின்ற பசியதுளபமாலையை யணிந்த கிரீடத்தையுடைய ஸ்ரீகிருஷ்ண! அன்று பூதகியினுடைய விஷப்பாலாகிய முலைப்பாலையுண்டு, சாபம் பெற்ற மருதமரத்தை புதைத்து, உயர்ந்த ஜடாசுரன் விழும்படியாகவுந்தி, விந்தையாகிய கன்றால் விளாங்கனி யெறிந்து விளையாடி, நந்தகோபாலன் யசோதை பிராட்டியார் அகமகிழ யாதவர் மனகடோறும் புகுந்து வளர்ந்தருளிய புருஷோத்தமராகிய ஸ்ரீகபடநாடகமே இங்கே நீர்செய்கின்ற மாயமும் ஞாயமும் ஒருவருக்குந் தெரியாமற் போயினும் எனக்குத் தெரியும். ஆகையால் சத்தியமாக உம்முடைய திருவுளத்துக்கு நினைப்பு எதுவோ அதுவே எனக்குக் கருத்து—என்றான்—

தெய்வத்தை யொத்த சகாதேவன் சொன்ன அந்த மொழியைக்கேட்டு ஸ்ரீகிருஷ்ணதேவர் புன்சிரிப்புக்கொண்டு "வலிமையையும் வைரத்தையுங் கொண்டிருக்கும் தருமராஜன் முதலிய பேர்கள் சொன்ன விதந் தான் சொல்லாமல் கொஞ்சம் உபாயமாகவும் பக்குவமாகவும் சொல்லமுத்தமாகவும் பேசினான் இந்தச் சகாதேவன். இன்னமும் இவ்விடத்தில் இவனுடன் பேசினால் என்னென்ன இரகசியங்களை வெளிப்படையாக இழுத்துச் சொல்லுவானே தெரியாது. சாஸ்திர விசாரணையுள்ள புத்திமானுகையால் கலந்து பேசுவதற்குத் தனிமையிற் கொண்டுபோய் இவனது உள்ளக்கருத்தை அறியவேண்டும்" என்றெண்ணித் தருமன் முதல் நால்வரையும் நோக்கித்

தம்பியாகிய சகாதேவன் உண்டு உடுத்து விளையாடும் வயதுள்ள பாலனுகையால் மனவெறுப்பாகச் சொல்லுகின்றான். ஆதலால் அவனைத் தனிமையிற் கொண்டுபோய்த் தெரியப்படுத்தி அழைத்துக் கொண்டு வருகிறேன். சும்மாவிருந்தவெனக்குச் சுமை கொண்டுவந்து வைத்தீர்கள். அப்பா! 'கொஞ்சத்திலிருக்கிறதா குரங்கு மிளகுநீர் குடிப்பது" என்று சொல்லியெழுந்து, சகாதேவன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டுபோய், நாகரத்தினத்தாலி ழைக்கப்பட்ட ஓர் ஏகாந்த ஸ்தானத்திலே போய் அவனைப் பார்த்து "மைத்துனரே! நாலுபேரைக் கேட்ட தன்மைபோல் உம்மையுங் கேட்டால் அவர்களுடன் கலந்துகொண்டு சொல்லாமல் என்னையிழுத்து வெளியிற்போட எத்தனை காளாக எண்ணிக்கொண்டிருந்தீர். விவேகநிறைந்த புத்திமானே! இப்பவும் உம்முடைய இஷ்டப்படிக்குப் பாரதயுத்தம் நடக்காமலிருப்பதற்கும் யாவரும் பிழைப்பதற்கும் ஏதாகிலும் உபாயமுண்டானுற் சொல்லும். நாமிருவருங்கலந்து யோசித்துக் கொண்டு அந்தப்படி நிறைவேற்றி விடலாம்" என்று கேட்க, சகாதேவனெழுந்து அவருடைய பாதகமலங்களிற் பணிந்து சொல்லுவான்—

ஸ்ரீ கிருஷ்ணதேவா! குள்ளநரியின் வாலைக்கொண்டோ சமுத்திரத்திலுள்ள ஆழம் பார்க்கப் போகிறீர்? சுவாமி! நீர்வேறு நான் வேறென்றெண்ணி என்னைப் புறம்பாகவிட்டுப் பேசாதீர். தேவரீர் சர்வதேசத்து இராஜவர்க்கத்தையும் இராக்ஷதரையும் குருக்ஷேத்திரத்திலே கூட்டிச் சாம்பராக்கிக் காற்றிலே தூற்றி விட்டுப் பூமி பாரம் தீர்க்கக் கருதியன்றோ க்ஷீராப்தியை விட்டுநீங்கித் தேவகி தேவியார் கர்ப்பத்தில வந்தவதரித்திருக்கின்றீர். மேகமேனியையுடைய வேதவித்தகரே! பசுக்களைப் பரிபாலனஞ் செய்தருளிய பாக்கியரே! ஸ்ரீ ஹரிகோவிந்தா! இது வேலையாக வந்திருக்கும் உம்மையல்லாமல் இந்த மகாபாரதத்தை நீக்கவல்லவர் வேறே யாரிருக்கின்றார்கள்?—என்று சொல்லப், பாண்டவர் சகாயன் கேட்டு நகைத்து, "நாமிருவருங் கலந்து பேசுவதென்று நேமித்துக் கொண்ட பிற்பாடு நீர் இன்னமுங் கபடமாய்ப் பேசுவது ஞாயமன்று. உமதுகருத்தை வெளிப்படுத்தும். அப்பால் நான் சொல்லுகிறேன்" என்று காரியவாதியாகிய கண்ணன் அருள்கொண்டுரைக்க, கருணையே உருவாகவுடைய சகாதேவன் கண்ணீர்தும்ப

கின்று அவரது கருத்தையுன்னி, 'ஓ காசாம்பூவண்ணு! என்வாக்கி னுலேயே வெளிப்படுத்தவேண்டு மென்னும் எண்ணமிருக்குமாகில் சொல்லுகிறேன் கேளும். சுவாமி! இப்போது இந்தப்பூமியைப் பட்டங்கட்டிக்கொண்டாள வேண்டுமென்று எண்ணங்கொண்டிருக் கிற துரியோதனராஜன் தருமராஜன் இவர்களிருவரையும் காட்டை விடுத்துக் காட்டிற்போக விரட்டி, பஞ்சாசதகோடி பூமண்டலத்தை யும் கர்ணனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து, கர்ணனைக்கொல்லு கிறேனென்று சபதங்கூறிப் பகைத்திருக்கின்ற அர்ச்சுனனை முன்னே கொன்று விட்டு, பிற்பாடு பந்துமித்திரர் பெரியோர் முதலிய வெகுபேர்களுடைய தலையைவாங்கக் கூந்தலை விரித்துக் கொண்டி ருக்கும் திரௌபதியினுடைய அக்கூந்தலைக் களைந்து மொட்டை யாக்கிக் காலிலே விலங்கு பூட்டிவைத்து, எனக்கு நேரிலிருக்கும் உம்மையும் என்கையாரப் பிடித்துப் புயத்தோடுபுய நெருங்கக் கட்டுவனேயானால், இந்தமகாபாரத யுத்தம் விளையாம லிருக்கும் படி செய்யலாம்'' என்ருன்.

அந்த வார்த்தையை அரிவாசுதேவன் கேட்டுப் புன்னகை யுடையவராய், "பாம்புக்குத் தெரியும் பாம்பின் கால், என்பது போல் அறிந்துகொண்டு, "ஓ சகாதேவராஜனே! நல்லயுக்தி சொன் னீர். சந்தோஷமானேன். ஆகிலும் தருமராஜனையும் துரியோதன னையும் காட்டிலோட்டிக் கர்ணனுக்குப் பட்டங்கட்டி அர்ச்சுன னைவெட்டித் துரோபதையை மொட்டையடித்து விலங்கும் பூட்டி வைத்தால், பாரதயுத்தம் வராதென்று தீர்மூக்கியமாகச் சொல்லிய இவைகளெல்லாம் ஒருவேளை முடிந்தாலு முடியும். அதுகிற்க, என் னைக் கைப்பிடியாகப் பிடித்துக்கட்டி விடவேண்டுமென்று சொன் னீரே அது எவ்விதம்? என்னை எப்படி கட்டுவீர்'' என்று கமலக் கண்ணன் கேட்கச், சகாதேவன் சொல்லுகின்ருன்—

சுவாமி! மலையினுயரத்தை மலையறியாது மற்றவரறிந்து சொல் வதுபோல், உம்முடைய பெருமை உமக்குத்தெரியாது. உத்தம ராகியபுத்திமான்கள் தாமறிவார்கள், உந்திபூத்தோனே! உம்முடைய உருவத்தை உண்மையாகக் காட்டினுல் உமதடியார்க்குள் ஒரு வனுகிய நான் கட்டுவேன்'' என்று உறுதிச் சொன்ருன். அந்த மொழியை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கேட்டு, அவ்வன்பனுடைய பக்தி மனத்தை அறியும்படி 'நம்மைக் கட்டும்' என்று தமதிச்சை

யிஞலாகிய பதிஞயிரம் வடிவுகொண்டு, அவ்வந்தரங்க மண்டப முழுமையுஞ் சுந்தரவங்கமுடையவரா யிருந்தார். அந்தக்காலத்தில் பரிசுத்த சித்தமுடைய சகாதேவனும் அந்த ரூபங்களுக்குள் ஆதியாகிய உருவத்தை உண்மை ஞானத்தாலுணர்ந்து, உலக முழுமையுந் தாவியளந்த உபயதிருவடிகளையுந் தன் கருத்தென்னுங் கயிற்றினாலே இறுகக்கட்டினன். அப்போது 'பதிஞயிரம் வடிவிலே ஆதிமூலமாகிய வடிவை ஆற்றலாலுணர்ந்த நீதான் தேவன்' என்று சந்தோஷித்துத் தாம்கொண்டருளிய எல்லாவுருவும் ஒரே யுருவாக்கிப் பிரத்தியக்ஷமாய் நின்றார். அவராரெனில் பூலோகத்தில் யாவரும் போற்றித் தவம்புரிந்து தேடியுங் காணுத தாமரை மலர் போன்ற பாதங்களையுடைய சங்குசக்கரக் கையனாகிய வென்னையன்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மீண்டும் சகாதேவனைப்பார்த்து, "பத்தியினாலும் புத்தியினாலும் என்னை இன்னனென்றறிந்து கட்டிய உம்மைப் போன்ற உண்மை ஞானிக்கே நானரியேன். என்னுடைய பாதத்தை இனி நீர் கட்டவிழ்த்து விட்டு விடக் கடவீர், மெத்த உறுதியாகிய பாசக்கட்டையா இது" என்று சொல்ல, சகாதேவன் சஹஸ்ர நாமங்களினாலும் ஸ்தவுத்தியஞ்செய்து, "சுவாமி! வண்மை பொருந்திய பாரதயுத்தத்திலே தேவரீர் திருவடிக்கு அடைக்கலமாக வந்து சேர்ந்த எங்களை வரையும், உம்மூடைய கடாட்சத்தினாலே காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லி வணங்கி, இரண்டு செந்தாமரை மலர்போன்ற திருவடிகளில் நமஸ்கரித்தான். பகவான் ஐவரையுங் காக்கிறேனென்று நிச்சயஞ் சொல்லிக் கட்டு விடுவித்துக்கொண்டு, "இன்று நாமிரண்டுபேரும் இவ்விடத்திற்பேசி நடத்திய சங்கதிகளொன்றும் அயலாரறியச் சொல்லாதீர்" என்று மேல் நடக்கவேண்டிய காரியங்களை யெல்லாங் கலந்து பேசிக்கொண்டார். அப்பால் அறிவுடையோராகிய அவ்விரண்டுபேரும் தருமபுத்திரர் முதலானோரிருக்கிற சபைக்கு வந்தனர்.

அப்போது குற்றமற்ற குணத்தினையுடைய திரௌபதியானவள் "மற்ற நான்குபேரைப் போல் சகாதேவராஜன் ஒப்புக்கொள்ளமாட்டார். நமக்காகவே பாடுபட்டுப்பேசி அளகமுடிக்கும் விதத்தையோசித்து வருவார்" என்று மிகவு மனமகிழ்ந்து, நெடிய அளகபாரஞ்சோர எதிரில்நின்ற பாஞ்சாலியின் கருத்தை யுணர்ந்த

க்ண்ணன் அவள் முகத்தைப் பார்த்து, "ஓ திரௌபதா தேவியே! பாண்டவர்களில் இளையோனுகிய இந்தச்சகாதேவன் வேறு விதமாகச் சொல்லுவானென்றெண்ணித் தனித்துப்போய் ஆலோசித்தகாலத்தில், துரியோதனன் பால் தூதுபோகச் செய்வதே உத்தமமென்று இவர்கள் கருத்தைப்போலவே அவனுமெடுத்துச் சொன்னுன்" என்று ஸ்ரீ கிருஷ்ணதேவர் சொல்ல, பாஞ்சாலி இடியோசை கேட்ட நாகம்போலேங்கி, இரைச்சலிட்டோங்கிப் பெருமூச்சுவிட்டு, "ஓ தெய்வமே! தாயாதிகளுடன் சண்டையிட்டுச் சபதத்தை முடிக்க மனமில்லால் தூதுபோக்கி, பெருமை பொருந்திய பூமியைப் பெற்றுக்கொண்டு, அவர்களுடன் குலாவி வாழ்வதற்குத் தருமபுத்திரர் முதல் சகாதேவருக்கும் இஷ்டமிருக்கிறதென்று தேவரீர் சொல்லுவீராஞல், பூவைமறந்து புழுதியிற் புரளும் அளகபாரத்தை வாரிமுடித்து என் வஞ்சினந்தீர்க்குங் காலமெதுவோ வென்று மின்னலே யொத்த திரௌபதையானவள் மாயவனுடைய மலரடிமேல் வீழ்ந்து, மண்ணிற்புரண்டு கண்ணீர் சோரவிட்டழுது இதனைச் சொல்லுவதாயினுள்—

முன்னெருபோது இரண்யகசிபு என்பவன் ஆகாமியத்தால் ஆதிமூலப்பொருளாகிய தேவரீரையே வாயினுற் செபித்திருக்கும் தன் குமாரனைப் பார்த்து மிகவுங் கோபங்கொண்டு 'இராக்ஷஸவயிரியை காவினுற் கூவி என்குலத்தை நாசம் பண்ணவந்த மோசக்காரனுகிய அடாபாலா! பிரகலாதா! இப்போது நீ சொல்லுகின்ற பேரையுடையவன் எங்கே இருப்பான்' என்று கேட்ட தந்தையை நோக்கி, 'ஐயா! சங்காழியிற்றுயின்ற சங்குசக்கரதரனுகிய எங்கோன் எங்குமிருப்பான்' என்று சொன்னவுடனே, அனலிலும் கொடியகனல் போற்சீறி, 'அடாபாவி! இந்தத் தூணிலிருப்பானு'? என்று கேட்கக் கலீரென நகைத்து, 'துரும்பிலுமிருப்பான்' என்று சொல்ல, அவ்வாறே துரிதத்துடன் ஆங்காரங்கொண்டு ஓங்காரமிட்டு அறைய அந்தத் தூணிலிருந்து உக்கிரநரசிங்கமூர்த்தியாயுதித்து, இரணியகசிபனைச் சங்காரம்பண்ணிப் பிரகலாதனைச் சன்மானஞ் செய்தருளிய இறைவனே! மற்றெருபோது பதினுயிரம் வருடம் முதலினிடத்திலகப்பட்டு வருந்தி ஆதிமூலமே யென்று பெயரிட்டழைத்த மும்மதம் பொழியுங் கஜேந்திரனுக்குச் சம்மதமாக நீலமலைபோல நேரினின்று முதலையை அழித்து யானையைக் காத்தருளிய கஜேந்திரவரதா!

கண்ணில்லான் பெற்ற துச்சாதனன், கற்றையாகிய என் அளக பாரத்தைப் பிடித்திழுத்து வந்து சபையில் நிறுத்தி, நஞ்சைப் போன்ற பல வார்த்தைகளைக் கொஞ்சமேனு மஞ்சாமற்பேசி மானபங்கமாக வஸ்திரத்தை யுரியும்போது, என்னருமைக் காவல ராகிய பஞ்சபாண்டவரும் நெஞ்சுபொருந்திப் பார்த்திருந்தார்களே யொழிய வேறொன்றுஞ் செய்திலர். அக்கால் நான் தாதுகலங்கித் தஞ்சமென்றழ, வெற்றி பொருந்திய சக்ராயுதத்தையுடைய கோவிந்தா! அன்றைக்கும் என்மானத்தை நீர் காப்பாற்றியதல்லாமல் வேறே யார் வந்து காத்தவர்கள்? ஐயனே! இன்றைக்கும் மற்றென் றைக்கும் நீரேதுணை" என்றுபுலம்பிப்பின்னுஞ் சொல்லுகின்றாள்—

'ஓதேவே! இராஜசபையில் என்னை யழைத்து நிறுத்தி என்குல கோத்திரத்துக்கும் பழுதுண்டாகும்படியாகிய குற்றத்தைச் செய்த ஸர்ப்பக்கொடியோனிடத்தில் தூது விடுத்து, அவன் கொடுக்க ஐந்தூர் பெற்று, சுத்த வீரர்களென்று பேர்வைத்துக் கொண்டு உயிர் வாழ்ந்திருக்க இப்பாண்டவர்கள் நினைப்பார்களேயானால், தீவினைப்பாவியாகிய நான் அன்று விரித்த கூந்தலை இனியென்று முடிக்கப்போகிறேன்? தீனர்களுடைய எண்ணத்தை முடிக்கும் எமது தெய்வமே! தெய்வமே!'—என்றழுதாள். அவள் முகத்தைக் கண்ட அந்தச் சபையிலிருந்த யாவருங் கண் கலங்கிய காலை யில், சாத்தகி மூர்த்தண்யகோப முடையவராய்த் தருமராஜன் முதலியபேர்களை நோக்கி எழுந்து, "ஐயோ!! இதென்ன அகி யாயம், மூவுலகமுமதிக்கும் பீமசேனன் கையில் தண்டாயுதமிருக் கும், திசை பத்தும் இசைபெற்ற விஜயன்கையில் காண்டீப மென்னும் வில்லிருக்கும், பூவும் வண்டும் பொருந்திய அளகம் புழுதியிற்புரளும்படியாய்த் திரௌபதி புலம்பிப் பரதவித்துக் கொண்டிருக்கும், இன்னமும் நீங்களெல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களல்லவா? சத்துருக்களிடத்திலே தாழ்ந்து வருந்தி அவன் கொடுக்கும் நாட்டைப் பெற்றுக்கொண்டு குறை வில்லாமற் புசித்து உயிர்வாழ்தற்கு யோசிக்கின்ற உத்தமர்களே! க்ஷத்திரிய தருமமெறி இதுதானோ சொல்லுங்களையா? இஃதன்றியும் பிரசண்ட வேகமுடைய மேகத்தினது பிரளயகாலத்து இடியைப் போன்ற சர்வலோக ஜயசிம்மனுகிய ஜராசந்தனுடைய தண்டனைக் குப் பயந்து, தன்னைக் காப்பதற்குக் காவலாகிய துவாரகையைக் கைக்கொண்டு, சகலவளப்பமுமுடைய வடமதுராபுரியை விட்டு

விட்டோடிய திணிந்த சாமர்த்தியமுடைய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் சொற்புத்தியைக் கொண்டோ? அல்லது பிரகாசம் பொருந்திய தருமபுத்திரருடைய சுயபுத்தியைக் கொண்டோ? துரியோதனுடையருடைய தற்குண முள்ளதெல்லாம் பூர்வத்திற்றெரிந்திருந்தும் இன்னமும் அவனிடத்திலே தூதுபோக்கி நாடு கேட்கச்செய்வது? தெய்வமே! இதென்னமதியோ? இரணியகருப்பன் எழுதிய விதியோ? ஏதொன்றும் அறியேன் சிறியன்" என்று மிகுந்த ஆரூமையோடு தன்னை மறந்து சொல்லவே, சின்னபின்னலாகச் சடைபட்டிருக்குந் தலைமயிரினையுடைய பாஞ்சாலி சபையில் விழுந்து, சஞ்சலத்திலாழ்ந்து பிரலாபித்துப் புலம்பும்போது, தருமபுத்திரர் முதலாகிய ஐவரையும் அருள் நிறைந்த தாமரைக் கண்ணராகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பார்த்து கற்புக்குவித்தாகிய திரௌபதியை நோக்கிச் சொல்லுவதாயினர்—

என் றங்கையாகிய மங்கையே! நீ கண்கலங்காதே, காரிய மொன்றும் முழுகிப்போகவில்லை 'குடலறுபட்ட நரி கூப்பிடுதூர மோடுமோ?' குணவதியே! இப்போது தருமராஜன் முதலிய பேர்களின் எண்ணத்தின்படி, நான் தூதுபோய் வருகிறேன். நீ இதைக் குறித்து விசனப்படாதே, தடுக்காதே, ஓ திரௌபதையே! பாண்டவர்க்காகத் தூதுபோய் வந்தவுடனே உன்னுடைய பின்னிய கூந்தல் மயிரையும் உன்னைப் பேரவையில் அவமானஞ் செய்த பேர்களுயிரையும் நானே முடிக்கிறேன். இஃதல்லாமல் உன் கூந்தல் விரியும் போது அஸ்தினபுரியும் அரசருடைய சபையும் அறிந்ததேயன்றி மற்றியாவரும் அறியார்கள். இனிமேல் சத்துருக்களின் அந்தப்புரத்திலிருக்கும் ஸ்திரீகளுடைய கூந்தல் விரியப்போகிறதையும் அவர்கள்படும் அலங்கோலத்தையும், யாவரும் உலக முள்ள வரையிலும் அறிந்து சொல்லி நகைக்கப்போகிறதை நானே காணப்போகிறாய். கரியகூந்தலையுடைய காரிகையே இன்னமுங் கேள். சத்துருக்களுடைய தேகங்களென்னும் வயலிலே, உழுதற்குரிய கொழுவாயுதம் போன்ற வாளாயுதத்தினலுழுது, வீரவரம்பு புதுக்கி, நிணச்சேறுதிருத்தி, இரத்த நீர்பாய்ச்சிப் பிராணவிதை விதைத்து, வளர்ந்த அரசர்களுடைய குலமாகிய முதலை அறுத்து, கழுகுபருந்து காக்கை முதலானவைகளுக்குக் களப்பிச்சை தந்து, கமனுக்குக் கீர்த்தியென்னும் மேல்வாரங் கொடுத்து, குடிவாரங் குவித்து, ஐவருடைய துயரசாகரத்தையும் உன்னளகபாரத்

தையும் துரியோதனுதியராகிய பூமிபாரத்தையும் முடித்து விடுவதற்கு உன்குமாரனுகிய அபிமன்ன னொருவனிருக்கின்ரு னுகையால், அம்மா சும்மா இருவென்றுரைத்துப் பெண்தன்மையிற் சிறந்த திரௌபதியினுடைய கண்களிலிருந்து மாறிபோற் பொழியுங் கலுழிவாரியைத் தம்முடைய கரங்களினுல் துடைத்து தமது கண்களிலுங் கிருபை வெள்ளம் பெருகக்காட்டித் திரௌபதியினுடைய மனம் கம்பும்படியாகத் தேற்றி அந்தப்புரத்திற் கனுப்பினர்.

கண்ணன் அத்தினபுரிக் கெழுந்தருளல்

இப்பால்-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் பஞ்சபூத வடிவமாகிய ஸ்ரீ கிருஷ்ணதேவர் தருமபூபதியைப் பார்த்து, "ஓ அரசனே! கேளும் வியாதிக்காரர் - துறவிகள் - ஒருவருக்கும் அடங்காத துஷ்டர்கள் - கோபமுடையவர்கள் - மூடர்கள்-சிறு பிள்ளைகள் - நீதியுணராதவர்கள்-பேதமையாகிய ஸ்திரீகள்-இவர்களைச் சபையிற்கூட்டி வைத்துக் கொண்டு ஒரு ஆலோசனையுஞ் செய்யக்கூடாது. அப்படி தருமவிதியிருக்க, இந்தத் திரௌபதையைச் சபையில் வைத்துக்கொண்டு இரகசியம் பேசினதினுல் நாமேதோ சவுக்கியத்தைக் குலித்துப் பேசுகின்ரோமென்று பெண்புத்தியினுல் இவ்வளவுதூரம் விபரீத துயரத்தை விளைத்து விட்டாள். ஓ தருமநந்தனு! நான் அந்த வேளையில் அவ்வளவு உபசார வார்த்தையாகச் சொல்லாவிட்டால் அந்தமனதுக்கு மெத்தவருத்த முண்டாகும். ஆகையால் இத்தன்மையாகிய உபசாரஞ் சொன்னேன்" என்று தருமராஜன் மனவருத்தமடையாமலிருக்கும்படி சொல்லிக்கொண்டிருந்த ஸ்ரீ கிருஷ்ணசுவாமியினுடைய வசனதந்திரங்களைத் தருமராஜன் முதலிய பாண்டவரைவரும் கிறுத்தித், "தமக்குத்தாமே ஒப்பாகவிருக்கும் சுவாமி! காலதாமசம்பண்ணுமல் தேவரீர் தூதுபோக வேண்டும்" என்று வேண்ட, அவர்கள் வேண்டுகோளின்படி வணங்காமுடி பொறுத்த மன்னவனிடத்தில் தாம் தூது போகும்படியாய்ச் சர்வாபரணவலங்கார சந்தனக்ஷதைகள் தரித்துக்கொண்டு, தம்முடைய ஜனனநாளாகிய உரோகணி நக்ஷத்திரத்திற்குத் காராபலஞ் சந்திரபலமுள்ள ரேவதிநக்ஷத்திரத்தில் பிரையாண முகூர்த்தங் கொண்டு, தானதருமங்கள் செய்து, சமஸ்தமான போர்களிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு,

தெய்வவணக்கம் ஆசாரிய வணக்க முதலானவைகளைச் செய்து சற்சகுன முதலியனவும் பார்த்துத் தம்மனதின் வண்ணம் கடக்கும் படியாகிய நல்ல வேளையில் விராடர் பாஞ்சாலர் முதலிய அரசர் களோடு பாண்டவர்கள் பின்தொடர்ந்து வழிகூட்டிவிடும்படியாக, மனோவேகத்திலும் வாயுவேகத்திலு மிஞ்சிய வேகப்புரவிபூட்டி மகமேருக்கொப்பாகி யிருக்கின்ற தேரின்மேலேறிக்கொண்டு, சல் லரி - மல்லரி - சங்கு-தம்பட்டம்-பம்பை-பேரிகை-முரசு-மத்தளம்-தாரை-முதலான வாத்தியங்கள் முழங்க, வெள்ளைக்குடை முதலிய பலவன்னக்குடைகள் கவிந்து நிழல் செய்து தொடர்ந்து வரவும், இருபக்கங் களிலுஞ் சாமரைவீச, கணக்கிறந்த ரதகஜதுரகபதாதிகள்-பூமியை யாளும் அரசர்கள் - பட்டவர்த்தனர் - மகுடவர்த்தனர் - மன்னர்-மண்டலீகர்-மந்திரிகள்-சாமந்தர் - தந்திர சுதந்தரசேவகர் எண்டி-சைப்பாலர்-இவர்கள் யாவருஞ்சூழ, கட்டியர்-பட்டுவான்கள்-புகழ் வோர்-வந்திப்போர் முதலியபேர்கள் முந்திக் கூடிக்கொண்டோட, பரதநாட்டிய ஸ்திரீகள் பிந்திப் பாடிக்கொண்டாட, ஆலவட்டம்-தாலவட்டம்-பீலிக்குஞ்சம்-மயிற்பீலி - மேற்கட்டி மகரதோரணங் கள்-குடைகள் - கொடிகள் - சவளக்கழி - பாலா-பல்லயம்-ஈட்டி-எறி யீட்டி-வாள்-வேல் - முதலியவைகளெல்லாம் அளவற்றபேர் அள வற்றனவா யேந்திக்கொண்டு வீதிகளில் தொடர்ந்து வரும்படியாக ஸ்ரீ கிருஷ்ணதேவர் புறப்பட்டார்.

அதுகாலையில் தம்பியாகிய சாத்தகியும் இரதமேறிச் சேனை நாயகராகப் புறப்பட்டுச் சேனைகளை யெல்லாம் அணியணியாக நிறுத்தி, யானைத்தலைவர்-சேனைத்தலைவர்-கொடித்தலைவர் - குடைத் தலைவர்-குதிரைத்தலைவர் - இரதத்தலைவர் - அணித்தலைவர் - பணித் தலைவர்-படைத்தலைவர்-முடித்தலைவர்-வாத்தியத்தலைவர் - குசோத் தியத்தலைவர் - சேவகத் தலைவர் - பொக்கிஷத் தலைவர் - நவரத்தின பூஷணத்தலைவர்-பட்டுப்பட்டாவளி பீதாம்பர முதலிய வஸ்திரத் தலைவர் - அஸ்திரத்தலைவர் சஸ்திரத்தலைவர் - சாஸ்திரத்தலைவர்-மல்யுத்த முதலிய வாள்வீரத்தலைவர்-வில்யுத்த முதலிய வேல் வீரத்தலைவர் யாவருஞ்சூழ்ந்து வரிசை வரிசையாக வரும்படி நடத்திக்கொண்டுவர, அப்போது கார்கால் மேகம்போன்ற ஸ்ரீ கிருஷ்ணபகவான் தம்மைவழி விடும்படியாக வருகிற யாவரையும் பார்த்து நில்லுங்கள் நில்லுங்களென்று சொல்லும்போது, தரும ராஜன் சுவாமியை நோக்கி, "ஓ கருணைவாரிதியே! எல்லாந்தெரிந்த

உமக்கு நான் விஸ்தரித்துச் சொல்லவேண்டியதில்லை 'இலைக்கு மண்ணுங்கட்டி ஆதரவு மண்ணுங்கட்டிக்கிலை ஆதரவு என்றுரைக்குந் தன்மையைப்போல,ஒன்றுக்கொன்றுதரவாக முடித்துக்கொண்டு வர வேண்டும். ஆனால் காற்றுமழைபுங் கலந்தடித்தால் காற்றினால் இலை பறந்துபோமே மழையினால் மண்ணுங்கட்டி கரைந்து போமே யென்று தேவரீர் திருவாய்மலர்ந்தால், அப்பால் நாம் செய்யத்தக்க தென்ன ஒன்றுமில்லை. எல்லாம் சிவன் செயலென்று நடத்தவேண்டி யதே நன்மை யாகையால் தேவரீர் அஸ்தினபுரம்போய்ப் பேசுமிடத் தில் தருமதேவதையும், வேதப்பிராமணர்களும் நீதியையுடைய வேந் தரும் சந்தோஷமாய் ஒப்புக்கொள்ளும்படியாகப் பேசவேண்டும். எங்கள் பெரிய தந்தை பாட்டனாராகிய பீஷ்மாச்சாரியர்-துரோ ணாச்சாரியர்-கிருபாச்சாரியர்-அசுவத்தாமா-முதலிய யாவருக்கும் எங்களுடையசாஷ்டாங்கநமஸ்காரஞ் சொல்லவேண்டும்.இரக்கமும் நீதியுமுடைய சிறிய தந்தை விதுர மகாராஜனுக்கும் பணிந்ததாகச் சொல்லி, தேவரீர் எங்கள்பேரில் வைத்திருக்குங் கடாட்ச வீக்ஷண்ணியத்தையுந் தெரிவித்து, எங்கள் தாயாகிய குந்தியம் மனுக்கும் எங்களுடைய சரணஞ்சொல்லி இதுவரையிலும் உன் பிள்ளைகள் உன்னுடைய புண்ணிய வசத்தினால் பிழைத்திருக் கின்றார்களென்று தெரிவித்து, அந்த அம்மாளுடைய பேதைமனது பேதிக்காமலிருக்கும்படி தேவரீர் திருவாக்கினால் உறுதி வாக்கிய முஞ் சொல்லிப் பிற்பாடு சபையிடத்திற் பேசவேண்டிய பிர காரணங்களெல்லாம் பேசி, நன்மையான காரியங்களாக நடத்திக் கொண்டு சீக்கிரம் வரவேண்டுமென்று முரசக்கொடியினையுடைய முதல்வன் சொல்ல, பீமசேனன் வணங்கி; "சுவாமி! எங்கள் ஐயா முதலிய எல்லோர்க்கும் என் வந்தனங்கூறி, எல்லோரையும் ஏக காலத்தில் ஒரே கூட்டமாகப்பார்க்க என்றைக்குக் கிடைக்குமென்று ஏக்கங்கொண்டு தூக்கமில்லா திருக்கின்றான் பீமனென்று விளம்பும் மேகமேனியனே" என்றான். உடனே அர்ச்சுனன் வணங்கி, "சுவாமி! தேவரீரைக் கண்டவுடனே பற்பல வுபசாரங்கள் செய்து, எல்லாந் தேவரீராலேயே முடியவேண்டிய தென்றும் உமது இஷ்டப்படி நாடு நகரங்களெல்லாங் கொடுத்து விடுகிறோமென்றும் திருதராட்டிர ராஜன் முதலிய சகலருஞ் சொல்லுவார்கள். அது வாசா கமிங்கரியமேயன்றி வேறல்ல. தேவரீர் அதை நம்ப

வேண்டாம் அவர்களிடத்தில் டங்டிங்கெனத் தாக்ஷண்யமில்லாமல் ஆம் அல்லவென்று இரண்டொரு வார்த்தையாய்க் கேட்டுக் கொண்டு சீக்கிரமாய் வந்துவிடும் தீனதயாளுவே'' என்னவும், சகுல சகாதேவர்களும் வணங்கி, "ஆண்டவனே நாட்பட்டிருக்கவேண்டாம். போனதும் வந்ததுமாயிருக்கவேண்டும்'' என்று புகல, திரௌபதி, தீர்க்க தண்டஞ்செய்து வணங்கி "மேகவண்ணமுடைய அண்ணு! நான் இதுவரையிலுங் காலங்கழித்தது பெரிதல்ல. இப்போது நீர்போய் வருகிறவரையிலும் ஒரு பிர்மகல்பமாய் நாளைக் கழித்துக் கொண்டிருப்பேன்'' என்று கவிலவும், விராடன் பாஞ்சாலன் முதலியபேர்கள் அருகிற்கலந்து, "ஓ ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி! எதுவந்தாலும் எதுபோனாலும் இவர்களுடைய சபதமாத்திரங் குறைவுபடாமல் நிறைவேறும் விதத்தை யோசிக்கவேண்டும்'' என்று உரைக்க, எல்லோருடைய வார்த்தையுங்கேட்ட இறைவன் சந்தோஷமடைந்து, "நல்லதாகட்டும் உங்களிஷ்டப்படியே பேசிவருகிறேன்'' என்று யாவரையு நிறுத்தி, தேரை நடத்தும்படி உத்தரவு செய்ய, உடனே அவருக்குச் சமமாகிய தம்பி சாத்தகியானவர் தேர் முதலிய சேனைகளைச் செல்லவிடத்துத் தாமும் அடித்து முன்னும் பின்னும் பராபரி பண்ணிக்கொண்டு சேனாயகராக நடந்தனர். தேவேந்திரன் முதலாகிய தேவர்களும் நாரதாதிமகரிஷீஸ்வரர்களும் பார்த்து மனங்களித்தனர். ஆதிசேடன் பணமகுடங்கள் சுளித்தன. பூமிதேவி மகிழ்விற்குளித்து உடல் பூரித்து "நம் பொருட்டு சுவாமி! அஸ்தினபுரிக்குத் தூது போகின்றாராகையால் இனிமேல் நமது பாரநீங்கும்'' என்று பரிந்து உபசரித்தனள். பகவான், சகலவளமுங்கொண்ட உபலாவியத்தை விட்டு, அஸ்தினபுரத்தை நோக்கி, நாட்டைக்கடந்து காட்டில் வரும்போது, நாரதர்-கண்ணுவர்-ஜமதக்கினி என்னுமிந்த மூவரும் தங்களுடன் அநேக உபரிஷிக் கூட்டங்கள் தெருங்கும்படியாகவந்து, ஜகந்நாதன் தூதுபோவதைப் பார்த்தார்கள். அவர்களைக் கண்டவுடனே ஸ்ரீ கிருஷ்ணதேவர் தேரைவிட்டிறங்கி, அவர்களுக்கு சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, வந்தகாரிய மென்னவென்று கேட்டார். அதற்கு அந்தரிஷிகள் மூவரும் அவரை மனத்தினுல் வணங்கி, "தேவரீருடைய விச்வ சொரூபதரிசனம் செய்யவேண்டிய இச்சை யுடையவர்களாயுந் தேவரகசியப்பிரகாரம் அஸ்தினபுரத்துக்குத் தூதுபோய் அரவக்

கொடியோனைக் கண்டு அவனிடத்தில் பேசப்போகிற அதிசயங் களைக்கூடவிருந்து பார்க்க வேண்டுமென்னும் அவாவுடையவர்களா யும் வந்தோம்'' என்று இணங்கிச்சொல்ல, பகவான் அப்பெரியோர்க ளைப்பார்த்து நீங்கள் அஸ்தினபுரத்திற்கு வருவீர்களாஞல் உங்க ளிச்சைகளியாவும் நிறைவேறும்'' என்று பரிபூரணமாக அருள் வாக்கியம் பகர்ந்தார். பரமபதநாதனை அவர்கள் பணிந்து வாழ்த்தித், ''தேவரீர்முன்னதாகச் செல்லும். நாங்கள்பின்னலே வருகின்றோம்'' என்று விடை பெற்றுக்கொண்டு மூவரனைய அம்முனிவர்கள் மறைந்து போனர்கள்.

இவ்வகையாய் முனிவர்கள் சென்ற பிற்பாடு ஸ்ரீ கிருஷ்ண பகவான் தேரேறிக்கொண்டு, கல்லும் மலையுங் காடுமேடும், புல்லும்பூடும் புதருந்திடரும், பாலை நிலமும் பனிவரைச்சாரலும், வேலையை நிகர்த்த வெண்புனற்றடங்களும, காட்டெருமைப் பால் கட்டியாய்ப் பெருகி, ஓட்டங்கொண்டே உறையுமிடங்களும், சிங்க முதலிய செழுமிருகங்கள் தங்கியே விளையாட்டயரும் வனங்களும், ஆகாயமளாவிய வாகாய மரங்களும், மலையருவிகளும், வடியாக் கான்யாறும், நீர்வளம் நெல்வளம் நிறைந்த நிலங்களும், வாளைகள் பாயும் வயல்பெறு தலங்களும், வெண்கிளி பசுங்கிளி விளம்பு மைஞக்கள், வண்குயில் மயிலிவைவதியும் பூம்பொழில்களும், வாழை கமுகு வான்கரும்புடனே, தாழையிளநீர் தழைதரு சோலையும், வேர்ப்பலாக்கனியை வியன் மந்திபிற, வண்டாக்கு தேன்மருதவ வணியுங்கடந்து—இரண்டு நாள்வரையில் வழியில் இருந்திளைப்பாறி மூன்றுவதுநாள் குருகாட்டெல்லையில் வந்து, அண்டகடாகத்தை அளக்கப்புகுந்த தன்மைபோன்ற உயரத்தையுடைய கோபுரங்களும் நாகலோகம் வரையிலும் ஆழ்ந்து மேகலோகம் வரையிலுமுயர்ந்து வளைந்திருக்கும் மதில்களும் அம்மதில்களைச் சூழ்ந்த அகேக அகழ்களுமுடைய பெரிய செல்வமோங்கிய அத்தினபுரியைக் கண்டு நடந்தனர். அப்போது அந்த மார்க்கத்திலே வரிசையாயிரா நின்ற பசுமைபொருந்திய பாக்குமரங்களில் அதிற் பழுத்திருக்கும் பச்சைக்குலைகளும் விரிந்தபாளைகளும் தழைத்து விளங்கின. அக்காட்சி, தாவிய வேகத்தையுடைய குதிரைகட்டிய தேரின் பேரில் ஸ்ரீ கிருஷ்ணதேவர் அஸ்தினபுரத்துக்குத் தூது வருகின்ற ரென்று பவளச்சரங்களும் மரகதமணிகளின் பந்திகளும் வெண்மை யாகிய முத்துக் கோவைகளும் வரிசையாகத் தூக்கியு

அலங்கார மண்டபம் அமைந்தது போலிருந்தது. மேலும் பரிமளம் வீசும் அகில் விருட்சமும் சந்தனமரமும் பலாமரமும் மாமரமும் சண்பகமரமும் பச்சிலைமரமும் நெருங்கி விளங்கிக் கொண்டிருக்குஞ் சோலையில், தேவநாயகன் வந்திறங்கித் திருவடி பெயர்த்தருளியபோது, எதிர்கொண்டு உபசரிக்க வந்திருந்த பரதகாட்டிய மாதர்களைப் போன்ற மயில்கள் கண்ணனுடைய திருமேனியைக் கார்கால மேகமென்று கண்டு தோகையை விரித்துக் களிப்புடன் தொந்தோமென்று ஆடிக்கொண்டிருந்தன. வண்டுகள் பாடிக்கொண்டிருந்தன.

இஃதன்றியும் - சுவாமிவரும் வழியில் இருபக்கங்களிலும் நிறைந்த நீர்களையுடைய அலர்ந்த செந்தாமரைப் பொய்கைகள் பொருந்திய தன்மை எப்படியிருந்ததென்றால், அழகுக்கிடமாகிய அஸ்தினபுரியென்னும் கன்னிகையானவள் மகாலட்சுமிக்கு நாயகராகிய மகாவிஷ்ணு வருகின்றாரென்று, பற்பல நிறமுள்ள சாதகமும் மலர்ந்ததிபமும் பொற்சுண்ணமுங் கலந்தமஞ்சள் நீருடன் ஆலாத்தியெடுத்து அசைத்து நின்றதைப்போலு மிருந்தது. அப்பால் தூது வரும்படியாகிய ஸ்ரீ கிருஷ்ணதேவர் ஆதிவராகரூபியாய்ச் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியைப் பெயர்த்தகாலில், அந்த வழியாக வந்தெழுந்த பாதாளகங்கை அஸ்தினபுரத்தின் பெரியமதிலை வளைத்துகொண்டதென்று சொல்லச்சிறந்து, ஆழ்ந்து வாழ்ந்திருக்கும் அகழியும், அடியானது பாதலத்தினும் முடியானது மீதலத்தனும் பொருந்தி, அளவிடக்கூடாததாகி, ஒப்பு உவமையில்லாமலுயர்ந்து, வளர்ந்து வளைந்து, நெடிய கடல் சூழ்ந்த சக்கரவாளகிரியை இந்த மதிலுக்குப்படியா யமைத்திருக்கின்றதென்று சொல்லும்படியாய், பற்பல பொறிகளையுங்கொண்டு விளங்கியமதிலும், பகற்காலத்தில் சூரியவெப்பம் பூமியிற் படவொட்டாமல் நிழலைச்செய்து, ஓற்றைச் சக்கரமுடைய சூரியனது தேரை நடாத்தும் அருணனுக்குச் சகாயமாகப் படபடாகார சப்தத்தினுல் சப்தமாவென்னுங் குதிரைகளைத் துரிதமாயோட்டி, வெற்றிவீரப் பிரதாபத்தைத் திசைகளினிடத்திற்காட்டி, வேகங்கொண்ட காற்றின் விசையினுல் ஆகாயகங்கையில் நனைந்து அதினுடைய அலையைப் போலசைந்து, மேகமண்டலத்திற் புகுந்து, மின்னலைப்போல் பிரகாசித்து, அழகியமதில் முதலிய நகரங்களெல்லாம் நெருங்கி ஆடிக்கொண்டிருக்குங் கொடியாடைகளும் வகித்து, ஆதிசேடன் முதலாகிய பேர்களுக்கு

மோகமாகிய் நாகலோகமோ? ஐந்தரு வளர்ந்து இந்திரற்கமைந்த தெய்வலோகமோ? வளமெலாஞ் சுரந்த அளகாபுரியோ? நித்திய மகிழ்ச்சியையுடைய சத்தியலோகமோ? இந்த அஸ்தினபுரியென்று எண்ணும்படியாகிய பட்டணத்தில், மலைகளின் சிகரத்திலிருந் தெழுகின்ற கரியமேகங்களைப்போல், மாடமாளிகையிலிருந் தெழுகின்ற அகிற்புகை சந்தனப்புகையின் வாசனைகளும் அரசர்களுடைய தேர்களும் யானைகளும் குதிரைகளும் சேனைகளும் எதிரெதிர் மயங்கி, பின்னுமுன்னும் காலெடுத்து வைப்பதற்கிடமில்லாமல் நெருங்கி இடியுண்டு போமின்கள் போமின்களென்னுஞ் சொல்லினுடைய சத்தங்களே மிகுந்து புறம்போக மாட்டாமல் மயங்கிக் கொண்டிருக்கும் அணிவீதிகளும், மலைபடுதிரவியமாகிய மாணிக்கம்-யானைத் தந்தம்-மிளகு-கோஷ்டம்-அகில்-தக்கோலம்-குங்குமம்-முதலியனவும், காடுபடு திரவியமாகிய சௌரிமான் மயிர்-மெழுக்கு-மலைத்தேன்-கூண்டுத்தேன்-அரக்கு-மயிற்பீலி-கஸ்தூரி முதலியனவும், காடுபடுதிரவியமாகிய நாணயவாரிகள்-செங்கெல்-சிறுபயறு கரும்பு-வாழை-செவ்விளநீர்-முதலியனவும், கடல் படுதிரவியமாகிய பவளம்-முத்து-சங்கு-உப்பு-ஒக்கோலை-முதலாகியனவும் விதம் விதமாகக் குவித்து வரிசையாக அமைத்திருக்கின்ற கடைவீதிகளும் எங்கும் நிரைநிரையா யமைத்திருக்கின்ற படைவீடுகளும்; காட்டிலிருக்கும் பற்பலவித மலரைப்பார்க்கிலும் சிறந்து மிகுந்து கூட்டங் கொண்டிருக்கின்ற சுத்தவீரர்களும், கடற்கரையின் வெள்ளை மணற்பரப்பைப் பார்க்கிலுங் குவித்து நிறைந்த கிள்ளைக் கொப்பாகிப் பறக்கும் அச்சுத்த வீரருடைய குதிரைப்பந்திகளும்; இராக்காலத்திற்றோன்றும் நக்ஷத்திரங்களிலும் அதிகமாகிய அவர்கள் யானையினங்களும், மேகத்தின்றுளியினு மேற்பட்ட அவ்வீரர்களுந்து திரியுந் தேர்களும் குற்றமில்லாத நான்கு வேதமுமுணர்ந்த பிரம்மஞானமுடைய வேதவேதியர்களிருக்கும் அக்ரஹாரவீதிகளும்; மாசற்றமணிகளாற் செய்த கிரீடம் பொறுத்த மன்னவரிருக்கும் அரண்மனை வீதிகளும்; பழுதில்லாத புத்தி யுத்திகளையுடைய மந்திரிமார்களிருக்குஞ் சுத்தவீதிகளும், நித்தியதவமாகிய சத்தியங்களும் தருமமுஞ் சிறந்த வைசியர் வாழ்வுபெறும் மாணிக்கவீதிகளும்; மங்களசங்கமுழங்கக் கலியாணஞ் செய்கின்ற கடிமணவாசல்களும் நிலம்போசை சப்திக்க நடனஞ்செய்கின்ற தேவமாதர்களின் தெருக்களும் வெற்றிமுரசு-வீரமுரசு-தியாகமுரசு-கல்யாண

முரசு-முழங்கிக் கொண்டிருக்கும் கெடிஸ்தலாதிபதிகளின் ஆசார வாசல்களும்; மத்தளம் டோல் முதலாகிய வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருக்கும் பிர்ம்மாலய தேவாலயவீதிகளும்; தெருவாசலில் நிற்க இடம்பெறுமல் அரசர்களுடைய கிரீடங்கள் ஒன்றோடொன்று ஊடுதாக்கி உராய்ந்து உதிர்ந்த அபரஞ்சிப்பொடிகளோடு இரத்தின ராசிக ணிறைந்த ஆசார வாசலின் படிகளமைந்த மகாமேருவைப் போலிருக்கும் கொலுக்கூடமும் சித்திரமேடை மணிமாளிகை முதலான வைகள் நிறைந்த தெருக்களும்; சூரியன் வந்து இளைப் பாறுதலுக்கு ஏற்பட்டதென்று சொல்லும்படியாக வுயர்ந்த கோபுர வாயில்களும் சிங்காரத்தோப்புகள்-பளிங்கு மேடைகள் ரோழி மண்டபங்கள் - மணிவேதிகைகள் - பூரணகும்பங்கள் - மேற்கட்டிகள் பூப்பந்தல்கள் - மணிப்பந்தல்கள் - இவை முதலான எப்போது மாறுத வைபவத்தைப் பெற்ற அஸ்தினபுரத்தின் அலங்காரத்தைக் கண்டு கண்களிக்கப்பார்த்து, ஸ்ரீ கிருஷ்ணசுவாமி முதலிய யாவருந் தெற்குக் கோபுரவாசலில் திவ்யமணங் குடிகொண்டு குளிர்ச்சி பொருந்தி யிருக்கும் செண்பகச் சோலையினிடத்தி லெழுந்தருளி யிருந்தார்கள்.

அந்தச் சோலையிலும் அஸ்தினபுரத்தின் சபலையிலுங் காலையு மாலையுங் காவலாகவிருந்த தூதுவர் சுவாமியின் வரவைக்கண்டு வண ங்கி, கந்தியாவட்டமாலை யணிந்த துரியோதனன் சபையிற்சென்று பணிந்து "சுந்தரமிகுந்த சுதந்தரா பராக்! புரந்தரர்போற்று நிரந்தரா பராக்! மதிதலம்புரக்குந் திருதராட்டிரன் மனவிபா லுதித்த கண் மணியேபராக்! அகிலமுழுதும் ஆணை செலுத்தும் வணங்கா முடியரசே பராக். பாதலஞ்சுமக்குஞ் சேடனைத் துஜத்திற் சேர்த்த தீரமாமணியே பராக்! திங்கள்குலத்திற் செழிவற்றேங்கிச் செகதலம் புரக்குந் தெய்வமணியே பராக்! துரியோதன னென்னு மஹாராஜாதிராஜ சிந்தாமணியே பராக்! ஐயா! அன்று அனு மாரைத் தூதாக விடுத்து இலங்காபுரியை எரி மூட்டிவித்தவர், இன்று பஞ்சபாண்டவர்க்குத் தூதாக இசைந்து நமது சண்பகச் சோலையில் வந்திறங்கி இருக்கின்றார்" என்று சொல்லினர். அப்போது பகைகொண்ட பாவிகளாகியபோர்களுக்கு இடக்கண் இடத்தோள் துடித்தன. புண்ணியராகிய பெரியோர்களுக்கு வலக்கண் வலத் தோள் துடித்தன. அந்தவேளையில் துரியோதன னெழுந்து, திருதராட்டிரமகாராஜனுடைய அரண்மனைக்குட்சென்று, அவனைக்

கண்டு வணங்கி, "இராஜராஜேஸ்வரனே! பாண்டவர்கள் பக்ஷமாய் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தெற்குக் கோபுரவாசற் சண்பகவனத்தில் வந்து இறங்கி இருப்பதாகத் தூதுவர் சொன்னார்கள்" என்று விண்ணப்பம் பண்ணிக்கொள்ள, அந்த வார்த்தையைக்கேட்ட திருதராட்டிரன் மனமகிழ்ந்து, பீஷ்மர்-துரோணர்-விதுரன்-முதலிய பேர்களுடன் ஆலோசித்து, துதிப்பதற்குந் தொழுவதற்குந் தரிசிப்பதற்கும் அரிதாகிய வேதநாராயணனென்னுந் தேவதேவன் காமிருக்கும் பூமியை மிதித்தது, அற்புதம்! அற்புதம்! என்று கொண்டாடினன். சிலர் இஃது நாம்செய்த தவமென்றும் சிலர் நமது கலஞ்செய்த தவமென்றும், சிலர் நமது குலஞ்செய்த தவமென்றும் சிலர் நமது குணஞ்செய்த தவமென்றும் எண்ணினர். அவர்களிலே திருதராட்டிரன் அடங்கா மகிழ்ச்சி கொண்டு, அண்டரண்ட பகிரண்டங்களையுங் கர்ப்பத்தி லடக்கியருளிய அரிமுகுந்தன் நம்மிடத்திற்கு வருவாராகில், நமது பெரியோர்கள் சம்பாதித்து வைத்தகேயூரம்-மகாணி-குண்டலம் கிரீடம்-புஜகீர்த்தி-வாகுமாலை-தும்பிப்பதக்கம்-தோட்டி தழ்ப்பதக்கம் - சகோரப்பதக்கம்-தனிமுத்துமாலை-மோகனரம்-உத்தரசஞ்சம்-முதலிய ஆபரணங்களும்-குடை - கொடி-சாமரம் - இரத கஜதுரகபதாதிகளும்-வெகுமதியாகக் கொடுப்பேன். இவையன்றியும் தாமரைக்கண்ணனுடைய மனதில் நினைத்திருக்கின்ற யாவையுங் குறிப்பினுணர்ந்து கொடுத்து மனங்களிக்க வைப்பேன்" என்று, தன்னை மறந்து சந்தோஷங்கொண்டு சொல்லும் வார்த்தையை விதுரமகாராஜன் கேட்டுச் சொல்லுவான்.—

அண்ணா! கல்மழையைத் தடுத்துக் கோவினங்களையுங் கோபாலரையுங் காத்தருளிய கர்த்தனுக்கு இப்போது சொல்லிய வெகுமதி யெல்லாங் கொடுத்துப் பாண்டவர்களுக்கு ஏதாகிலுங் கொடுவென்று கேட்க வந்திருக்கும் அவர்காரியத்தைத் தடுத்துவிட நீர் நினைத்திருக்கின்றீரலலவா? ஐயா! பதின்மூன்று வருடம் காட்டிலும் நாட்டிலும் உழன்று வருந்தி வந்தமைந்தர்களை ஆதரித்து, இருக்க இடங்கொடுக்க இளகாத மனத்தினையுடைய நீர், உலகமெல்லாமுண்ட ஓருவனுக்குச் சகலவெகுமதியுங் கொடுக்கிறேனென்று துணிந்து சொல்வது ஆச்சரியந்தான்.'— என்று சஞ்சலத்துடன் சொல்ல, பீஷ்மர் நகைத்து, "விஸ்வதையாகிய மைந்தனே! அஷ்டலக்ஷ்மி வாசஞ்செய்ய ஆதிதேவன் உபலா

வியத்திலிருந்து அஸ்தினபுரிக்கு இவ்வளவு அவசரமாக வந்தது.' நீர் சிறிது வெகுமதி கொடுப்பீர் அதை என்றைக்குப் பெறுவோ மென்று ஓடிவந்ததாய்த் தோன்றுகிறது, அப்பா! பொன்னையும் பூமியையும் கவரத்தினக் குவியல்களையும் புகழையும் புத்திரமித்திராதிகளையுமுடைய உன்னையும், ஒருதவியுமில்லாத உன்னையும் என்னையும் படைத்தருளியபிரம்மாவைத்தமது உந்திக்கமலத்தில் புத்திரனாகப்பெற்ற ஒப்பில்லாத ஒருவருக்குமேயென்னகொடுக்கப்போகிறாய்? அவர் உன்னிடத்தில் கைகேட்டியென்னவாங்கப்போகிறார்? ஏக்தலே! இவைகளெல்லாம் உபயோகமில்லாத வார்த்தைகள். இந்தமட்டும் இதை நிறுத்திவிட்டு, வந்திருக்கும் கண்ணனுடைய மனதை யறிந்து அவருக்கு மரியாதை செய்து அனுப்பிவைக்கும் விதத்தை யோசிக்கக்கடவை" என்று பீஷ்மர் சொன்னார். துரோணாசாரியர் திருதராட்டிரனைப் பார்த்து, "அரசனே! ஸ்ரீ கிருஷ்ணதேவரே தூதாக வந்திருக்கின்றாரென்றபோது பாண்டவர்களுடைய கன்னடத்தையும் அவர்களினது மனதிடமும் நம் ஆலோசனைக்குரியவையேயாகும். கிருஷ்ணசுவாமி சொல்லப்போகிற இராஜநீதிமுறைமை முதலிய திறமைகளையும் தீர்க்கபுத்தியினால் நிதானித்து, புத்திராகிய நூறுபேர்களுக்கும் புத்திவிளைவித்து, உமது மனதுக்கிசைந்த காட்டைப் பாண்டவராகிய மைந்தர்களுக்குக் கொடுத்தால் வாசுதேவர் மனமகிழ்ந்து, கிருபைசுரந்து, சகல சம்பத்துடன் நீடூழிவாழும் படியாகிய காலமுங் கொடுப்பார். அவருடைய கடாக்ஷ வீக்ஷணியத்தால் தாழ்ச்சிவில்லாமல் அரசாட்சிசெய்து, நீங்களுஞ் சுகப்படுவீர்கள். தேவர்கள் முதலிய யாவரும் சந்தோஷமடைவார்கள். இதற்கு மிஞ்சிய யுக்தியும் புத்தியும் உறுதியும் வேறொன்றுமில்லை" என்று சொல்ல, பக்கத்திலிருந்த கேட்டிருந்த துரியோதனனுக்கு மிகுந்த கோபம்பிறந்தது. கண்கள்சிவந்தன. அவன் கலீரெனகைகத்து, சபையினிறைந்த காவலரெல்லாங் கலங்கும்படியாகத் தன்னிஷ்ட சிரேஷ்டராகிய சகுனியையுங் கர்ணனையும் பார்த்துச் சொல்லுகின்றான்—

"தளவமனிமாயனுகிய தூதன் பாண்டவர் பக்ஷத்திலிருந்து என் நகரத்துக்குள்ளே வருவானுனால், ஆ! ஆ! அவனுக்குதான் செய்யப்போகிற மரியாதைகள் வேணதுண்டு. அதாவது கோட்டைவாசலிற்

புகுந்தவுடனே கிங்கார்முதலிய மல்லர்களை விடுத்துப் புஜத்தோடு புஜநெரியப் பின்கட்டாய்க் கட்டிக் காராக்கிரகத்திற் சேர்த்து, பிராணன் போகவொட்டாமற் கஞ்சியும் உப்புமாகக் கலக்கிவார்த்து, அவன்கால முடிந்த பிற்பாடும் அவன்றேகத்தைச் சிறைச்சாலையில் வைப்பேன். 'துடையையுங் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டி விட்டிருக்கும்' துஷ்டர்களைப் போன்ற கலகக்காரரைத் தண்டிக்கச் சொல்லித்தரும நீதிபிற் சாற்றிபிருப்பதினால், அவனைநான் விடமாட் டேன், விட்டால் குடிகெட்டுப்போம். ஐயோ!! காட்டிலே காய் கனிகிழங்குகளைத் தின்றுக்கொண்டிருந்த பாண்டவர்களை, காட்டி விழுத்து வந்து அவர்களுக்கு இதோபதேசம்பண்ணி, நானே தூது போய் நாடுவாங்கித் தருகிறேனென்று சொல்லி வந்திருக்கின்றான். இவன். அந்தப்பேச்சைப் பாண்டவர்களாகிய பைத்தியக்காரர்கள் இவன்ஓடிவாங்கி வருவதை யுணராமல் நாடுவாங்கி வருவானென்றும், கம்பி ஐந்து வீடுவாங்கி வருவானென்றும் வழிபார்த்துக்கொண்டிருப் பார்கள். ஆகையால், இவனை இங்கேதானே மாட்டிவிட்டால், இந்தச் சேதியைப் பாண்டவர்கள் கேட்டுப்பயந்து பறந்தோடிப்போய்க் காடு சேர்வார்கள். அவர்களுக்குப் படைத்துணையாக அடைந்தோ ரெல்லாரும் கடுகடுங்கி, எனக்குப்பிரிய வசனஞ்சொல்லி, என்காலில் வந்து விழுந்து, தங்கள் தங்கள் நாடுசென்று சேர்வார்கள். என்றென்றைக்குங் கலகமென்பதில்லை. என்னுடைய நல்லகால மானது இவனை எங்கேயோ இருந்து இழுத்துக்கொண்டுவந்து விட்டது. இதுவே தகுதியாகியயோசனை. ஓ மாமா! ஓ அண்ணா!" என்று சொன்னன். அவனுடைய சொல்லானது பெரியோர்கள் செவியிற் புகுதலும், அவர்கள் இரு செவிகளையுங் கரத் தால் மூடிக்கொண்டு, "ஹரிஹரி!! இதென்ன விபரீதகாலம். கட்டுப்படாத ஒருவனைக் கட்டவும் சிறைப்படாத ஒருவனைச்சிறைப் படுத்தவும் நினைத்திருப்பதினால் நாங்கள் இனிப்பேசத்தக்க தொன்று மில்லை. புத்திமானே! உன்விதி யெப்படியோ அப்படியே மதியும் அனுசரித்து நடக்கும்: அப்பா துரியோதனா! எங்களுக்குக் கொஞ்ச நெஞ்ச மிருந்த சந்தேகத்தீரப் பேசிவிட்டாய்" என்று சொல்லி, யாவரும் தலைதுனித்து கொண்டார்கள். அந்தவேளையில் திருதராட் டிரன் தன்பிள்ளையை நோக்கிப் பதைபதைத்துச் சொல்லு கின்றான்—

"அடா புத்திரனே! வேதவிதிகளையும் தருமசாஸ்திரங்களையும் ராஜமுறைமையையும் கெடுக்கவே எனக்குப் பிள்ளையாய்ப்பிறந்தாய். அடடா! ஒருவன் சொல்லிய வார்த்தையைச் சொல்லுவதற்காகத் தூதுவந்த பேர்களைத் துன்பப்படுத்தலாகாது கொல்லப் போகாதென்று எல்லா நூல்களிலுங் கூறியிருக்க, அவைகளை வாசித்துங் கேள்வியுற்றுந் தெறியிருக்க, நீ தூதுவந்தவர்களைக் கொல்லவும் கொடுமை செய்யவும் நினைப்பாயானால், எதிராளியின் கருத்தை நீ யெப்படி யறிந்து கொள்வாய். உன்னிடத்தில் எவர்கள் தூது செல்ல வருவார்கள். குழந்தாய்! காரியவாதியாகிய நீ தூதுவரைத் தக்கவர்களை எதிர்கொண்டழைத்து வந்து உபசாரஞ்செய்து நன்னயமாகப் பேசுவாயானால், இருவருக்குங் குறைவில்லாமல் வந்த காரியங்களைப் பேசி இன்பமுறச் செய்வார்கள். ஆகையால், இப்போது தூதுவருகின்றவர் கபடநாடக சூத்திராவதாரி. அவரை நீ எதிர்கொண்டு சென்றுவணங்கி, உன் தீவினையைப் போக்கடித்துக் கொள்ளச் சிந்திக்காமல் வாயில்வந்த வண்ணம் பிதற்றுகின்றாய். என்னடா பாவி! நான்கு வேதங்களினுலேயும் காணக்கூடாத நாராயணனை மடலுடன் மடல் விரியக்கட்டிச் சிறையிற் போடவும், உலகிலுள்ள உயிர்களுக்கெல்லாம் படியளக்கும் ஒருவனுக்கு உப்புத் தண்ணீரும் வார்த்து உலரவைக்கவும் உன்னுற் கூடுமோ? மதி கேடா! உனதுர்ப்புத்தியினுலே இப்படிக்கெல்லாம் பேசினுயல்லாமல், நற்புத்தியினுல் உணர்ந்து பேசவில்லை. இப்போது அந்த துராங்கார யோசனையை விட்டுப் பெரியோர் சொல்லும் புத்தியைக் கேட்டு நடந்து நன்மைபெற விரும்பத்தக்கதே யல்லாமல், உனக்கிஷ்டமாகிய துஷ்ட நினைவின்படி நடப்பாயாகில், கஷ்டமும் கஷ்டமும் அஷ்டத் தரித்திரமும் சேரிட்டு வருத்தப்பட நேரிடும். பலவாறு கெட்டலைந்து போவாயடா துஷ்ட மகனே" என்று வெறுத்துக்கொண்டான்; மந்திரி பிரதானிகளைப் பார்த்து, பட்டணமெங்குந்திட்டவட்டமாய்ச் சிங்காரிக்கச் சொன்னுன்; "கண்ணுடிப்படமுதலிய மேற்கட்டிகளைச்சட்டமாயமைத்து. மாணிக்கத்தீபம் பிரகாசிக்கச்செய்து மகரதோரணம்-வாழைகமுகு தெங்கு-தாழைமலர்-தாமரைமலர் - பவளவடம் முத்துவடம்-ரசக் குண்டுகள் - தொங்கொளிவட்டம் - நிலையொளிவட்டம் - நிலைக்கண் ணுடிகள் - இவைகளெல்லாங் கட்டி அலங்காரஞ்செய்வித்து, மாவிலை-தருப்பை - தேங்காய் - வாழைப்பழம் - சந்தனம் - புஷ்பம்,

தாம்பூலம்-அக்ஷதையுடன் பூரணகும்ப வேதிகைக ளமைவித்து; நமது புரத்திலிருக்குஞ் ஜனங்களெல்லோரும் ஸ்நானஞ்செய்து ஆடையாபரண அலங்காரங்களணிந்து சுசியாக வந்து தொழுமின்க ளென்று முரசறைவித்து, மத்தளதாள விதத்துட னெத்துத் தத்திமிதாவென நர்த்தனமிட்டுவரும் பரதநாட்டிய மங்கையர்களாட, மிகுஞ்சுரத வீணைகளே எங்கெங்கு நிறுத்திப்பாட, வாத்திய முதலிய ஜெயமங்களபேரி முழக்கிவைத்து, பரம்பொருளாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் வந்திறங்குவதற்குத் தகுதியாகிய விடுதியேற்படுத்தி, அவ ருடன் கூடவந்த யாவருக்குங் குறைவில்லாம லிருக்கும்படி குபேர சம்பத்தைப்போல சகல சாமான் முதலிய வஸ்துக்களும் அமைவித்து, சுயம்பாகிகளை வைத்துச்சமைப்பித்து சந்தனபாளிதம் ஏற்படுத்திவைத்து, மந்திரி பிரதானிகள் முதலாகிய மன்னர்களே! நீங்கள் பயணப்பட்டு, பிரயாணபேரி முழக்கி எனக்கு அறிக்கல பண்ணுவீர்களானால், இரண்டுகண்ணுந் தெரியாத நான் எதிர்சென்று மேகவண்ணனுகிய கண்ணனை உபசரித் தழைத்துக்கொண்டு வருகிறேன்'' என்றும் தெரிவித்தான். அதைக் கேட்ட யாவரும், ''ஓ ராஜராஜேஸ்வரா! பெருமானே வைத்துக் கொண்டு திருநாள் செய்வதுபோல் தேவரீருக்காக நாங்க ளெதிர் கொண்டுபோய்க் கண்டுவணங்கி யழைத்து வருகிறோம்', என்று சொல்ல, இந்த வார்த்தைகளை யெல்லாங் கேட்டிருந்த துரியோதனன் தந்தையின் பாதத்திற் சாஷ்டாங்கமாகப் பணிந்து ''கேளும் என்னையாவே! தேவரீருடைய சித்தைபின்படி நானே எதிர் கொண்டுபோய்ச் சகல வைபவங்களுடன் ஸ்ரீ கிருஷ்ணசுவாமியை அழைத்து வருகிறேன். என்பேரில் கோபம் பண்ணவேண் டாம். எங்கோவே'' என்று கூறி, அமைச்சர் முதலிய அனைவரையும் பார்த்துத் தனது தந்தையிட்ட கட்டளைப்படி விரைவில் பட்டண அலங்காரஞ்செய்யும்படி திட்டஞ்செய்தான். துரியோதனமகாராசன் அப்படிச் சொன்னபோதே ஓட்டகத்தின் பேரில் பிரசித்த பேரிகைகட்டி, வீதி வீதியாய்க்கொட்டினார்கள். இப்படி திட்டஞ்செய்வதற்கு முன்னேதானே பட்டணத்திலுள்ள ஜனங்களெல்லாரும் ஸ்ரீ கிருஷ்ணனுகிய கர்த்தன் வந்தாரென்று தானந்தருமமுதலிய சம்பிரமங்களுடன் ஆனந்தங்கொண்டு, அலங் காரஞ்செய்து பன்னீர்தெளித்து, சாந்தால் தரைமெழுகி, சந்த னத்தாற் சோலமிட்டு, கதம்பகஸ்தூரி கர்ப்பூர சுண்ணங்களந்

திறைத்து, மகாலக்ஷ்மியை அலங்கரித்து வைத்ததுபோல் அஸ்தினபுரிவீதியை அலங்கரித்து வைத்தார்கள். அதைத் துரியோதன மகாராஜன் கேட்டு மனமகிழ்ந்து, இரதகஜ துரகபதாதிகளுடன் பற்பல மன்னர்வர்களும் அரசனது அற்புத பட்டத்துக்குரிய யானைகளுங் குதிரைகளும் ரதங்களும் அலங்காரத்துடன் அழகிய தெருக்களில் இருபக்கங்களும் நெருங்கி யிருக்க, பெரியாழ்-சகோட யாழ்-செங்கோட்டியாழ்-முகவீணை-சுரமண்டலி-முதலிய வாத்தியங் களெல்லாம் வகைவகையாய் முழங்க, பட்டுவான்கள் கட்டியம் பகர்ந்து துதிவழங்க, அரவக்கொடியோனுகிய துரியோதனன் அரவணைதுயின்ற அமலனை எதிர்கொண்டு அழைக்க எழுந்து வருங் காலையில், பொய்யுஞ் சூதும் பொருமையும் கொடுமையும் கெய்யும் பாலும் போல் நிறைந்த நெஞ்சினனுகிய வஞ்சகக் சகுனிமாமன் வயிற்றைப் பிசைந்துகொண் டோடிவந்து, வழியில் கேரிடுந் துற் சகுனம்போல் வணங்காமுடி மன்னனை வழிமறித்துத் தடுத்து, "என்னருமை மருமகனுகிய அரசர்க்கரசனே! இஃதென்ன அநியாயம்? இஃதென்ன மரியாதை? இறைவனே! இன்னமுஞ் சின்னஞ் சிறு பிள்ளைத்தனமாகச் செய்கின்றீர், ஓ யோகபோகதேவேந்திர! மூவுலகமும் மதித்துத் துதிக்க வணங்காமுடிபொறுத்த மன்னர் மண்டலேஸ்வரா! ராஜாதிராஜராஜப் பிரபுடகரா! ராஜ உத்தண்ட ராஜமார்த்தாண்ட ராஜகோபால ராஜபூபால ராஜதூர்த்தண்ய ராஜமூர்த்தண்ய ஜயவிஜய சங்கிராம சார்வபூமா! சந்திரன் முதற் கொண்டு இன்னன்மகன் இன்னனென்றறியச் சிங்காதனத்திலிருந்து செங்கோல்பிடித்து நீதிசெலுத்திய மகுடாபிஷேகதுரந்தரா! சம் பிரதாய பூமண்டலாதிபதியாகிய கோமானே! ஒரு குறுநிலமன்ன னுகக் கோகுலக்கிராமத்தி லிருந்து பட்டாபிஷேக மில்லாத ஓட்டுக் குடித்தனக்காரனுகியும், பஞ்சையாகிய பாண்டவர்கள் கெஞ்சிக் கொண்டு தூதனுப்பவந்த கொஞ்ச மனிதனுயுமிரானின்ற கிருஷ் ணனை, தேவரீர் எதிர்கொண்டு போய் அழைத்துவரக் கூடுமா? உமது சிந்தையுமிப்படி தளருமா? சிங்கமானது கரிக்கு எதிர் கொண்டுசெல்லுமா? நீங்காகிய சிறிய காரியத்தைச்சிந்தித்தீர். இது பெரிய அரசர்களுக்கு மரியாதையல்ல" என்று அன்பினுற் சொல்லி கில்லுமென்று நிறுத்தவே, துரியோதனன் தன்னுடைய எண் ணத்துக்குச்சரிப்பட்டிருந்த மாமனுடைய வார்த்தையாகிய மணி மந்திர அவுஷதத்தை உட்கொண்டு, சபாமண்டபத்துக்குத் திரும்பி

வந்து, தம்பிமார்முதலிய உரியோர்களை நோக்கி, "நீங்கள் போய்ச் சக்கரதாரனுகிய ஸ்ரீ கிருஷ்ணதேவரை அழைத்து வாருங்கள்" என்று அனுப்பிவிட்டு அவருக்கு விடுதி அரண்மனையும் வேண்டிய வஸ்துக்களும் திட்டஞ்செய்து வைக்கும்படி உத்தரவுசெய்து, யுத்த வலிமைபெற்ற ராஜவர்க்கங்களும் பந்துஜனங்களும் வணங்கிச் சூழ்ந்திருக்கச் சிங்காதனத்திலிருந்தான். புராஜனங்கள் யாவரும் இதென்ன விபரீத காலமென்று மெய்மறந்து வருந்தினர்கள்.

அந்த வேளையில் பீஷ்மாசாரியரும், துரோணசாரியரும், அசுவத்தாமாவும், விதுரமகாராஜனும், கிருபாசாரியரும், வேத பண்டிதராகிய பெரியோர்களும், அரசர்களாகிய உரியோர்களும், அறுபது நூறுயிரம் மன்னர் மண்டலீகரும், நால்வகைச் சேனைகளும், பேரி டங்காமுதலிய பஞ்சவாத்தியத் தொனிகளும், கணிகை மாதர்களாட்டமும், குடை கொடி ஆலவட்டந் தால வட்டமுதலிய கூட்டமும், அவரவர்களின் கண்கள் முதற் கரசர ணுதிகள் நெருக்கமும் நீங்காமலோங்கிய அஸ்தினுபுரத்தின் வீதியை விட்டு, ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியை இரண்டுயோசனை தூரம் எதிர்கொண்டுவந்து கண்டு, இருகண்களிக்க இறைஞ்சிப் பணிந்து, இரண்டுபக்கத்திலு மொதுங்கி நெருங்கினர்கள். அப்படி நெருங்கி நின்ற யாவரையும், துளபமாலையணிந்த சுவாமியார் கிருபையோடு பார்த்து, அவரவர்களைத் தழுவிச் சந்தோஷமுற்று, தம்முடன் கூடவந்த சேனைகளும் அஸ்தினுபுரத்திலிருந்து வந்த சேனைகளும் அரசர் முதலியயாவரும் புடைசூழ்ந்துவரச் சண்பகச் சோலையைவிட்டுப் பாதசாரியாய்ப் புறப்பட்டு, பீஷ்மர்—துரோணர் -விதுரர்-முதலிய பெரியார் கைலாகுகொடுக்க அஸ்தினுபுரத்தின் அரண்மனை வீதியில் வரும்போது, அவ்வீதி இருபக்கங்களிலுமிருக் கிற வீடுகளைப் பார்த்து, "இதுயாருடையவீடு? இதுயாருடைய மாளிகை? இதுயாருடைய மாடம்? இதுயாருடைய அரண்மனை? இதுயாருடைய மந்திரம்? இதுயாருடைய சுபக்கிரகம்?" என்று கேட்டார். பக்கங்களிலிருப்பவர்கள் பதறியோடிவந்து பகவானைப் பணிந்து, 'இது என்னுடையவீடு, இது என்னுடைய மாளிகை, இது என்னுடைய அரண்மனை, இது என்னுடைய மந்திரம், இது என்னுடைய சுபக்கிரகம்" என்றுசொல்ல அவர்களைப்பார்த்துப் புன்னகை

கொண்டு, "அப்படியா வெகுநேர்த்தி! வெகுசந்தோஷம்!" என்று, வார்த்தையாடிக்கொண்டு விதுராஜனுடைய மனைக்குநேராக வரும் போது 'இதுயாருடைய இருக்கை?" என்று பகவான் கேட்க, பக்கத்தி லிருந்த விதுரன் பாதங்களிற்பணிந்து, "ஓ தேவா தேவா! தேவதா சார்வபூமா! இது தேவரீருடைய இருக்கை" என்று சொல்லக்கேட்ட கண்ணனவர் உள்ளமகிழ்ந்து, "இவ்வளவு பெரிய நகரத்தில் எனக்கு மொரு வீடிருக்கின்ற தல்லவா?" என்று சந்தோஷித்து, ராஜாதி ராஜ னுகிய துரியோதனன் ஏற்படுத்திய விடுதிக்குப் போகாமல், பீஷ்மர் துரோணர் முதலியபேருக்கு விடைகொடுத் தனுப்பி விட்டு, விதுரன் வளவிற்புகுந்தார்.

அந்தக் காலத்தில் விதுர மகாராஜன் பகவானுடைய இரண்டு திருவடிகளையும் தன்முடிமேற் பொத்திக்கொண்டு 'முன்னமே துயின்றருளிய முதுபரியாததியோ, பன்னகாசனப் பாயலோ பச்சையாலிலையோ, சொன்னநான்மறைச் சுருதியோ கருதிரீயெய் தற், கென்னமாதவஞ் செய்ததிச் சிறுகுடிலையா' ஓ சர்வக்ஞ மூர்த்தி! தேவரீர் திருவடி பெயர்த்தருளும் படியாய் இந்தக் குடிசையானது என்ன தவஞ்செய்ததோ? எந்தவிர தமிழைத்ததோ? தேவரீர் பூர் வத்தில் திருக்கண் வளர்ந்தருளிய பழயபாற்கடலோ? சிரோரத்னம் பிரகாசிக்கும் ஆயிரம்பணமகுடப் பாயலாகிய ஆதிசேஷசயனமோ? ஆலிலையோ? வேதமோ? நான்குவேதத்தின் ஆதியோ? அந்தமோ ஐயனே! இச்சிறுகுடிலுக்கு என்னநினைத்து எழுந்தருளி பதோ?" என்று இருகண்களிலும் நீர்சொரியவணங்கித் துதிக்க, அப்படி துதித்த விதுரரைமார்போடெடுத் தணைத்து, "ஓ விதுரராஜனே! உமதுவீட் டுக்கு விருந்துண்ணவந்தோம்" என்று சகலஜீவாத்மாவோடுந் தா மொரு ஜீவாத்மாவாயிருந்து விருந்து செய்தருளுந் திருமால் திரு வாய் மலர்ந்தருளக்கேட்டு, மூன்று விதமாகிய புவனங்களையெல்லாம் உண்டருளிய முதல்வராகி, மும்மையிலும் எம்மை அடிமையாக வுடைய ஸ்ரீகிருஷ்ணபகவான் நமது விருந்துக்கு வந்தாரேயென்று ஆச்சரியப்பட்டு தம்மிடத்துள்ளவர்களல்லாமல் அயலூர்களிலு மிருந்து ஆறுநூறுயிரஞ் சமையற்காரரை யழைப்பித்து "சுவாமியார் முதலிய எல்லாச்சேனைகளுக்கும் அறுசுவை பதார்த் தத்துடன் ஒரு கொடிப்போதில் அன்னமாக வேண்டும்" என்று விதுரர் ஆக்ஞா பித்தார். அப்போது மாயவனுகிய மகாவிஷ்ணுவானவர், வீர

ஞான விதுரருடைய உள்ளன்பு யாவருக்கும் வெளிப்படத்தமது சதுர்ப்புஜகோல தரிசனங்கொடுக்க வேண்டுமென்று சந்தோஷங் கொண்டு, சமீபத்திலிருந்த விதுர மகாராஜனைப்பார்த்து, "சமைய லாகிற வரைக்கும் நான் பசி தாளமாட்டேன். உமக்குச் செய் திருக்கும் போஜனத்தை எனக்குப்போடும்" என்று கேட்க, அவர் உடனேதமக்குச்செய்திருந்த நூக்குநொய்க்கஞ்சியைக்கொண்டுவந்து வைக்கும்படி பரிசாரகர்கட்குத் திட்டஞ்செய்து, பகவானுக்குக் கர கத்தில் ஜலத்தைக் கொடுத்தார். பகவான் அந்த ஜலத்தினால் கரம்-சிரம் - கால் மேல்-சுத்திசெய்து, நித்தியவிதி முடித்துக்கொண்டு போஜனத்துக்கு வந்தகாலையில், பரிசாரகர்கள் பொன்போன்றவாழை யிலையில் அக்கஞ்சியை விடுத்தார்கள். அதைக் கண்ணன் கரத்தால் வாரிப் புசிக்கப்போகுங்காலையில், விதுரராஜன் வீழ்ந்திறைஞ்சி, "சுவாமி! திவ்விய அன்னமுதலாகிய ஷட்ருசி பதார்த்தங்களும் ஆயத்தமாய்க் கொண்டிருக்க, தேவரீர் இந்த நொய்க்கஞ்சிக்கு எத்தனை நாள் ஏக்கமுற்றிருந்தீரோ? ஓ ஐயனே! என்னை யாவரும் பழிப்பார்களே. இது நன்மையல்லவே. ஓ நாதனே" என்று அஞ்சலி யஸ்தனாக விதுரன் உபசாரஞ் சொல்லிக்கொண் டிருக்கும்போது, இலையில் விடுத்தகஞ்சியானது ஒருபக்கம்வழிய, அதுவழியவொட்டா மல் பகவான் ஒருகரத்தினால் இலையைத் தூக்கிப்பிடித்தார்; பின்பு இன்னொரு பக்கத்திலோடும் போது, மற்றொரு கரத்தால் அந்தப் பக்கத்தையுந் தூக்கிப் பிடித்துக்கொண்டார். பின்னொரு பக்கம் ஓடும்போது, இன்னொருகர மேற்படித்திக் கொண்டு பிடித்தார். இன்னொருபக்கம் கழுவும்போது, அந்தப் பக்கத்துக்கும் ஒருகர முண்டாக்கிக்கொண்டு, தலைகுனிந்து வாயினலுறுஞ்சி, நாவினற் சுவையறிந்து புசித்தார். அப்போது அவர் விதுரரைப்பார்த்து, "ஓ! ஓ! அரசனே! இதைத்தானே அற்பமானகஞ்சி என்று இழிவாகச் சொல்ல வந்தீர். அப்படனே! இன்றைக்குப் பருகும்படியாக நேரிட்ட இந்தக்கஞ்சி என் பிராணனுக்கு வந்ததே. ஓவிதுரராஜனே! பூர் வத்தில் இரணியகசிபன்-இராவணன்-கும்பகர்ணன் - தந்தவக்கிரன்-சிசுபாலன்-முதலிய பலவான்களை யெல்லாம் முடித்துக்கொன்ற போது, என்தலையை வணங்காமல் என்னிருகரத்தினலுங் கொன்று போட்டேன். உம்முடைய அன்பினல் வார்த்த நூக்கு கொய்க் கஞ்சியை அடக்கி உட்கொள்ளுவதற்கு, நான்கு கரத்தைக்கொண்டு என்சிரம் வணங்கியும் முடியவில்லையே, இதைக் குடிக்க இது பிடி

பட வில்லையே" என்று ஸ்ரீ கிருஷ்ணதேவர் பூரித்துப்புகழ்ந்து மகிழ்ந்த காலத்தில், புத்தி புத்தியென்று புளகாங்கிதமுற்றுப் பூதசம்பந்தமாகிய ஜனனமரணுவஸ்தையை விட்டு நீங்கினவனைப் போல் விதுரமகாராஜன் மெய்மறந்து பரவசத்தனனர்.

உடனே போஜன மாயிற்றென்று சமையற்காரர் சொல்லவே, பரிமளசுகந்த மிகுந்த தகுந்த குளிர்ந்த ஜலங்கொண்டு விதுரர் ஸ்நானஞ் செய்விக்க, சுவாமி ஸ்நானஞ் செய்து, கஸ்தூரி அக்ஷதை யணிந்துகொண்டு வழிபடுகடவுளை வணங்கி, தம்பியாகிய சாத்தகி யுடனிருந்து, அநேக விதமாகிய கறியமுதுகளையும் அன்னங்களை யும் விருப்பத்துடன் புசித்து, சம்ப்ரமாக இளைப்பாறி, பச்சைக் கர்ப்பூர முதலிய மணமுள்ள சந்தனுதிகள் பூசி, வாசனையுடைய மாலையணிந்து, மாணிக்காதிகளைப் பதித்த ஆபரணந்தரித்து, தாம் பூலமணித்து, இரத்தின சிங்காதனத்தில் வீற்றிருந்தார்; பார்வதி பாகராகிய பரமேசுவர மூர்த்திக்குப் பிச்சையிட்டுப் பிரம கபாலத்தை நிறைத்துப் பசியை நீக்கிய பெரியபெருமாள் இத் தன்மையாக மார்க்காயசந்தீர்ந்து மகிழ்ச்சிகொண்டிருக்க, விதுரர் அவரைச் சாஷ்டாங்கமாக வணங்கித், திருப்பாற் கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுத மளித்த நாராயண மூர்த்தியும் நமது வீட்டுக்கு விருந்தாகவந்தாரே யென்றுமனமுருகி சுவாமி யின் திருவடிகள் திருமுகமண்டலம் திருக்கரங்களென்னுஞ் செந் தாமரைக் கமலங்களில் தமது கண்களென்னுங் கருவண்டை நாட் டிக் களிப்படைந்து, இப்பிறப்பிற்கும் இனிவருவதான மறுபிறப்பிற் குஞ்சூழற்குரிய துன்பங்களனைத்தையும் போக்கினதல்லாமல், எப்பி றப்பிலும் பெற்றிராதபுகழை இப்பிறப்பிற்பெற வழிதேடிக்கொண்ட வராய் அம்மேகவண்ணனை மனதில் நினைத்து, கண்ணீர்பெருக மண்ணில் விழுந்துபணிந்து, திண்ணென எழுந்து, துள்ளிக்குதித்து அவரது துணைப்பதத்தைச் சிரத்திலே தரித்துக்கொண்டு, துன்பநீங்கி இன்பமோங்கி, தத்துவாமிர்தத்தை அள்ளிச்சாப்பிட்டவர்போல் சுவாமியினுடைய திருவழகைக் கண்களிஞற் கவர்ந்து பருகி, இரு கண்களும் இமையோடிமை மூடாமலசைவற்றிருந்து, அந்தபிர்மா னந்தத்தோடு மீண்டுமெழுந்து சென்று, சுவாமியுடன் கூடவந்த வேல் வில் வாள் முதலிய ஆயுதங்களையுடைய வீரர்களும், மன்னர் மண்டலீகர் மந்திரிமார் முதலிய பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர்

ஆகிய ஐம்பதுலக்ஷம் அரசர்களும், மற்றுமுள்ளபோர்களும், சட்சுவை யோடுங்கூடிய போஜனதிகளையும் பழவர்க்கங்களையும் புசிக்கும்படி செய்தனர். அப்போது அவர்கள் தேவர்களுக்குங் கிடைக்காத தேவாமிர்தம் புசித்தவர்களாகத் தெவிட்டவுண்டு, ஆபரணமுதலான சகல அலங்காரமுஞ் செய்துகொண்டு, கிருஷ்ணபகவானைச் சுற்றிலும் கெருங்கி இருந்தார்கள். அத்தச்சமயத்தில், உபயசாமரங்கள் வீச சந்திர வட்டக்குடை நிழற்ற, வாத்தியமுழங்க, மாணிக்கச் சிங்காசனத்தில் ஸ்ரீகிருஷ்ணதேவர் எழுந்தருளி யிருந்தார். அக்காலத்தில் மெய்ஞ்ஞானச் சட்டையணிந்த விதுரமகாராஜனுடைய வீட்டில் பரவாசுதேவர் அறுசுவையுண்டியை அன்புடன் புசித்தாரென்று அகமலர்ந்த சூரியனனவன் மேருமலைக்கப்புறத்திலிருக்கும் அமுதத்தைப் புசிக்கப் போனவனைப்போல் மேற்றிசைக் கடலில் மூழ்கினன்.

அப்போது மகரிஷிகள் முதலிய வேதப்பிராமணர்களெல்லோரும் வேதமந்திரமென்னும் வில்லினிடத்தில் அனுஷ்டிப்பதற்குக் காரத்தில்வாரிய அருக்கியஜலமென்னும் பாணத்தைத்தொடுத்து விட்டபடியால், சூரியனைச் செல்லவொட்டாமற் றடுக்கும் அரக்கராழித்து அவர்களுடைய உதிரம்பெருகி வழிந்ததைப்போற் பிரகாசிக்குஞ் செவ்வானமும், அந்த அரக்கருடைய கால்கரங்கள் துண்டமாய்வீழ்ந்து கிடப்பதையொத்த பவளக்காடுகளும், ரோமகளிருக்குப் பகற்காலத்தில் நிழலைச்செய்யச் செம்பட்டுக்குடை வெண்பட்டுக்குடையென விரிந்தும் இராக்காலத்தில் அக்குடைகளைச் சுருக்கிவிட்டதைப்போற் குவிந்துமிருக்கின்ற வெண்டாமரை செந்தாமரை மலர்களும், மங்கலபேரி முதலாகிய வாத்தியச் சங்கமும், தங்கம் போன்ற அழகினையுடைய மங்கையர்களின் மெய்யாகிய மெய்விளக்கும், மாணிக்கத் தீபமும், கடாகங்களிலிருக்கும் தாமரை மலர்கள் குவிந்ததைக்கண்டு அஸ்தினபுரி யென்னும் அணங்கு அநேகந் தாமரைக் கண்களைத் திறந்து பார்ப்பதையொத்த தீபப்பிரகாசமுமுடைய அப்பட்டணத்தில், விதுர மகாராஜனது அரண்மனையில் ஆதிசேடனுடைய சிரோரத்தினப் பிரகாசம்போலும் ஆயிரம் பதுமைகள் ஆயிரந்தீபங்களைத் தாங்கிக்கொண்டிருக்க, இரண்டாயிரஞ் சிங்களஞ்சுமந்த ஆசனத்திலெழுந்தருளி யிருந்த ஸ்ரீகிருஷ்ண பகவானைப் புண்ணிய தேகத்தையுடைய விதுரமகாராஜன் வணங்

கிப்போற்றி, ஓ பூரணனுக்குப் பெருவாழ்வுடைய புண்டரீகாக்ஷனே! திருப்பாற்கடலையுஞ் சேஷசயனத்தையும் விட்டு நீங்கி, வசுதேவர் மனைவியாகிய தேவகீதேவியார் கர்ப்பத்தி லுதித்து, ஆயர்பாடியில் வளர்ந்து, உரலுடன் தவழ்ந்து, மருதமரத்தை இடந்து, காளிங்கநர்த்தனம்புரிந்து, காலிக்கன்றுகளுடன் றிரிந்து, கங்காநதியானது பொருந்தப்பெற்ற திருவடிகள் வருந்தும்படியாய் இவ்விடத்துக்குத் தேவரீர் தனித்தெழுந்தருளிய காரணத்தைத் திருவாய்மலர்ந்தருளவேண்டும். ஓ கருணையங்கடலாகிய தேவதேவனே, என்று கேட்க, அவனை ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நோக்கி, "பூவிதழிற் பொருந்திய சிவந்தநேனை அருந்தும் வண்டுகள் இசைகொண்டு பாடும்படியாகிய பூமாலையணிந்த புயாசலபல பராக்கிரமமுடைய மகாமாதுர்யவசன விதுரனே! பூர்வத்தில் இராஜசபையி லேற்படுத்திக்கொண்ட தவணை நாளைக்கழிக்கச் சந்தோஷத்துடன் பன்னிரண்டு வருடங்காட்டிலே திரிந்து, ஓரிவருடம் அக்ஞாதவாசஞ் செய்து, இப்போது நாட்டிலே வந்திருக்கின்ற பாண்டவர்களுக்குக் குருநாட்டைக் கேட்கத் தூதுவர்தோம்" என்று சொல்ல, அந்தமொழியை விதுரராஜன் கேட்டமாத்திரத்தில் அதுவிஷயத்தில் தமக்கொரு விருப்பும் வெறுப்பும் இல்லாதவராகச் சொல்லுகின்றார்.—

ஓ! மையினு நிறத்த மெய்யனே கேளும்! வலியமனத்தினையுடைய துரியோதனன் முன்னோர் வழக்கத்தையும் முறைமைகளையும் அனுசரித்து, ஆதியிற்றான் சொல்லியிருந்த வாக்குத்தப்பாமல் தன் பிராணனுள்ளவரையில் தருமராஜனுக்கு நாடுமுதலிய பாகத்தைக் கொடுக்கப் போகிறதே இல்லை. ஆனல் ஐவருக்குரிய பாகத்தை அவ்வரவகேதனனிடத்திற் பெறுவதற்கு ஓர் உபாயமுண்டு. அஃதென்னவென்றால்—எட்டுத்திக்கும் இடிந்து சரிந்துபோகும்படியாய்ப் பேரிகை டங்கா முரசு முதலிய வாத்தியங்கள் சப்திக்க, இருதிறவரும் எதிர்த்து யுத்தகளத்திற் புகுந்து அஸ்திர சஸ்திரங்களைச் சொரிந்து வெந்து வெதும்பி விழுந்தழியும் காலத்தில், அவனது தேகந்தளைபட்டு மனம்நொந்து புத்திவந்து ஒருவேளை நாடு கொடுப்பானே—அப்போதும் கொடானே—ஞானறியேன். ஓ நாதனே! தேவரீருக்குத் தெரியாத மர்மம் என்ன இருக்கிறது. அதை அடியேன் சொல்லுத்தரமோ" என்று சொல்ல ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி மகிழ்ந்து விதுரரைப் பார்த்துச் சொல்லுகின்றார்.—

ஓ விதுரராஜனே! துரியோதனன் செய்த அநீத அக்கிரமங்களினால் வருந்தி இவ்விடத்து வந்த பாண்டவர்கள், மனத்தில் குற்றங் குறைவைக்காமல் இங்கிதவார்த்தைகளைச் சொல்லித் தூதனுப்பி நாடுகேட்டால், நல்லகாலமென்று சந்தோஷங்கொண்டு நாடுகொடுப் பதே ராஜதருமம். அதைமறுத்து நடந்தால், தாசகருமம்: ஆதலால் காளையதினம் துரியோதனனுடைய சபையிற்போயிருந்து வாளைகள்பாய இளங்கமுகின் பாளைவிரித்து தேன்பொழிந்து பெருகும் வயல்கள் சூழ்ந்த குருநாட்டைப் பாண்டவர்களுக்குக் கொடுவென்று கேட்கிறேன். அப்போது கொடாமற்போனானேயானால், உடனே அவனைச் சமரபூமியிலெதிர்த்து, அவன் தலைமுளையானது வாய்மூலமாய் வழியும்படி யுத்தஞ்செய்து முடிப்போம். உலோபிகளானபேர் 'மயிலே மயிலே ஓர் இறகு கொடுவென்றால் கொடுக்குமா? இருத்தி மிதித்துப் பிடுங்கினாலுண்டு,' என்பதுபோல் எத்தனை விதத்தில் இதமாகப் பேசிப் பதமாக வேண்டிக்கொண்டாலும் அவர்கள் சுத்தமூர்க்க சுபாவ குணமுடையோ ராதலால் ஒருகாசும் அதிலொட்டிய தூசுங்கொடுக்க மாட்டார்கள். மாறுமாறென்று தாறுமாறாக அடித்துச் சிதைத்து வதைத்துப் புதைக்குங்காலம் நேரிட்டால், அப்போது கேட்டவைகளை யெல்லாந் தடையில்லாமற் கொடுப்பார்கள். இவ்விதமாக இருக்கின்றது உலகத்தினுடைய இயற்கை—என்று சொல்லி, "நல்லது எல்லாம் பொழுதுவிடிந்தால் பார்த்துக்கொள்வோம். விடியுநேரமாயிற்று. விதுரராஜனே! நீர் சயனித்துக்கொள்ளப் போம்" என்று செலவு கொடுத்தனுப்பிவிட்டுத் தாம் மாணிக்க மரகதத்தாற் செய்த சயன வீட்டில், இரத்தினக் கொலுசுகளினால் அமைத்த ஊஞ்சலில் வாசனையுடைய அன்றலர்ந்த புஷ்பங்களினால் நிறைந்த ஹம்சதூலிகா மஞ்சத்தின்பேரில், பொன்போலப் பிரகாசிக்குந்தோள்களுந் தாள்களும் பொருந்தத் திருக்கண்வளர்ந்தருளினார்.

அதுகாலையில் விதுரர் இரவெல்லாம் நித்திரையில்லாமல் காவற்காரர்கள் பறை முழக்கிவரவும், உருவியகத்திகளுடன் உயிர்ச்சேவகர் காத்திருக்கவும், அடிக்கடி ஜாக்கிரதை செய்துகொண்டிருந்தார். அந்தகாரமாகிய இராத்திரியானது ஒரு வேசியை யொத்திருந்தது. அம்மாதெப்படி யென்றால் சந்திரனே முகமாகவும், மலர்ந்த செவ்வல்லிமலரே வாயாகவும், முல்லையரும்புகளே பற்களாகவும் சூரியன் மறைந்தபிற்பாடு முகிழ்த்த தாமரை

மொக்குகளே குவிந்த கைகளாகவும், வண்டினங்களின் ஆரவாரமே மொழிகளாகவுங் கொண்டு, துரியோதனன் மனதென்னும் அவ்விருளாகிய வேசியானவள், சர்வ வல்லமையுமுடைய லக்ஷ்மிநாயகன் பாண்டவர் தூதாகவெழுந்தருளி இருக்கிறபடியால், பொழுதுவிடிவதற்கு முன்னமே இந்தச் சுவாமியாரைத் துரியோதனனுக்கு வசப்படுத்தி விடவேண்டுமென்று வந்து வலிந்ததைப்போலு மிருந்தது. அப்படிக்கிருந்த இராத்திரியைச் சூரியன்பார்த்து, "ஓ! ஓ! மோசம்வந்தது. துரியோதனனுடைய மனமென்னும் இருட்டாகிய பெண்ணானவள் சுவாமியாரை மயக்கி வசப்படுத்திக்கொள்ளுவாளாகில், தருமமுதலிய தவமுங்கெட்டுப் பூமிபாரமும் அதிகப்பட்டுப் போம்" என்று கருதிக் கடுங்கோபத்துடன் கருத்த அந்தகாரமாகிய திரையைக் கிழித்துக்கொண்டு, அண்டம் ஓருபக்கத்தில் விண்டதென்று சொல்லவும், ஏழுசமுத்திரமும் வறண்டு அதிலிருக்கும் வடவாமுகாக்கினியானது பிரகாசித்ததென்று விள்ளவுமாக முகஞ் சிவந்து, அநேக கிரணங்களென்னுங் கரங்களை நீட்டி அவ்விருளென்னும் பொதுமகளை வெருட்ட உதயகிரியினுச்சியினின்றும் விளங்கினான். அஃதெப்படியிருந்ததெனில் சுவாமியினுடைய சக்காராயுதமானது, பாண்டவர்களிடத்தில் பகைகொண்டிருக்குஞ் சர்ப்பக்கொடியோனுகிய துரியோதனனிருந்த புராதனமாகிய அஸ்தினாபுரத்திலே, அகிலபுவன சராசரனுகிய ஸ்ரீகிருஷ்ணபகவான் தனித்தூது வந்திருப்பது தெரிந்து, மகரமச்சங்கள் முதலிய ஜெந்துக்களையுடைய சமுத்திரத்தைவிட்டுப் புறப்பட்டுக் கிழக்குத்திசையிற் பிரகாசிக்குந் தன்மையைப்போலும் இருந்தது.

கண்ணன் துரியோதனன் சபைக்கெழுந்தருளல்

அதுகாலத்தில் கங்காபுத்திரராகிய பீஷ்மாசாரியார், துரோணாசாரியார் முதலாகிய மகத்வமுடைய கனவான்களும், திடவகன்களென்னும் அரசர் முதலாகிய தனவான்களும், தருமநீதியுணர்ந்த மூன்றுலகூத்தறுபத்தோராயிரம் பிருபர்களும், குற்ற மற்ற பதினேழக்குரோணியாகிய சேனைத்தலைவர்களும் கூட்டமாகிய வெள்ளிய சாமரங்கள் மயிற்பீலி மயிற்குஞ்சம் ஆலவட்டம் தாலவட்டம் கைவாள் உடைவாள் கதிர்வேல் வளைதடி அஸ்திரசஸ்திரங்கள் வஸ்திரங்கள் காளாஞ்சிகள் முதலிய சின்னங்களைக்

கொண்டு நெருங்கி நிற்கும் பணிப்பெண்க ளனேகரும், சகலவேத சாஸ்திரபண்டித சாமர்த்தியமுடைய பிராமணக் கூட்டமும், கலிக்கியானங்களிற் கைபழகிய கருணையோர்களும், துரியோதன னுக்குத் தகுதியாகிய தம்பிமார் தொண்ணூற் றொன்பதுபேரும் வந்து நிறைந்து வளைந்து சூழ்ந்திருக்கக் கிரணக்கூட்டங்களையுடைய பொன்னினும் சுவர்செய்து நூறுலக்ஷம் மரகதத்தூணிறுத்திக், கோமேதகத்தினும் போதிகையமைத்துப் பவளமும் மாணிக்க மும் வச்சிரமு மிழைக்கப்பெற்ற உத்திரமமைத்து வைடூரியத் தாற் பலகைதைத்து, முத்துவர்க்கங்களைப் பரப்பிச் சுதைதீற்றிச் சிகரங்கள் வைத்து, வெற்றிக்கொடி நாட்டி, மேகமண்டலபரியந்தம் அளாவியிருக்கின்ற கொலுமண்டபத்தில் பவளக்கால் கிறுத்தி ஆணிமுத்துக்களினும் பர்தலிட்டு, எங்குஞ் சிங்கமுகமாய்த் தங்கத் தினும் செய்தசிங்காசனத்தில், போகதேவேந்திரனைப்போல் துரி யோதனமகாராஜன் கொலுவீற்றிருந்தான்.

அப்போது பட்டவர்த்தனர்களும் மகுடவர்த்தனர்களும் மன் னர் மண்டலீகரும் எண்டிசை வேந்தரும் தனது பாதங்களில் வணங்கிய காலில், வணங்காமுடிபொறுத்த மகாமண்டலேச்வர மன்னர் மன்னனாகிய துரியோதனன் அவர்களைப் பொன்னினும் செய்த ஆசனங்களி லிருக்கும்படி பூரணப்பார்வையாகிய அருட் கண்ணோட்டினன். அக்காலத்தில் அரசர்முதலிய யாவரும் அவரவர் களுக்குரிய ஆசனத்திற்பொருந்தி இருந்தார்கள். அந்தச்சமயத்தில் அந்தச் சபையிலிருந்த எல்லாருடைய முகங்களையும் துரியோதனன் பார்த்து, தன்னுடைய அகங்களிக்கவேர்த்து, "ஓ! மின்போலும் பிர காசிக்கும் வேலாயுதங்களை ஏந்திய வேந்தர்களே! நம்முடன் பகைத்து யுத்தஞ்செய்ய நினைத்துக் கறுவிக் கனைத்துப் படைகள் சேர்த்துக்கொண்டிருக்கிற பஞ்ச பாண்டவர்களுடைய ஏவலா ளாய்த் தூதுவருகின்ற கன்றுமேய்க்கும் கண்ணனுனவன், இன்று நம்முடைய கொலுக்கூடத்துக்கு வருகின்றனும். அப்படியே ஒரு வேளை வருவானுகில், அவனுக்கு நீங்களெதிர் சென்று வணங்கி வந்தனவழிபாடுகள் செய்து பந்துமித்திரனென்னும் பண்பிற்கலந்து உறவுகொண்டாடுவீராளுல், உடனே உங்களுடைய நாடுநகரமுதலிய வளர்களை நெருப்பிட்டுக் கொளுத்துவதல்லாமலும், உங்களையும் பிடித்து விலங்கிட்டுச் சிறையில்வைத்து வருத்துவேன்" என்று மிக வுஞ் சீறிக்கூறினன். அவனுடைய கோபமொழியைக் கேட்டு

வேந்தரியாவரும் இஃதென்ன கொடுமையாகிய காலமென்று தலை குனிந்திருந்தார்கள்.

இத்தன்மையவாகிய வார்த்தைகளைச் சொல்லி அரசர்க்கரச ஞகிய துரியோதனன் அவை நிறைந்த அரசர்களுடனிருக்குங்காலை யில், வெள்ளை மேனியராகிய பலபத்திரருக்குப் பின்பிறந்த கறுப்பு மேனியையுடைய கண்ணனுனவர், இரவிற்குவிந்த செந்தாமரை மலர் பகலில் இரவியைக்கண்டு மலர்ந்ததைப்போல் நித்திரைநீங்கிப் பிரகாசம் பொருந்திய கண்கள் மலர்ந்து உதயாதியிலெழுந்து, பன் னீர்கலந்த தண்ணீரில் ஸ்நானம்செய்து, நித்தியகருமவிதிகளை முடித்து, மணங்கொண்ட மலர்களைக்கொண்டு தேவாராதனைகளை நிறைவேற்றிச் சூரியநமஸ்காரஞ்செய்து, அலங்காரச் சாலையில் வந்து, ஆடையாபரணுதிகளோடு ஆரகேயூரமணி மகுடகுண்டலாதி களையுந் தரித்து, நெற்றியிற் கஸ்தூரித் திலகந்தீட்டிச், சாத்தகி முதலிய சகலமானபேர்களுந் தன்னைச் சூழ்ந்துவரத் தாவிகடச்சும் பரிபூட்டிய தேரேறிக்கொண்டு, கட்டுப்பாடு செய்துகொண்டிருக்கும் துரியோதனனுடைய சபைக்கு இசையையுடைய புள்ளாங்குழ லைக்கொண்ட எல்லா வல்லமையுங் கண்ட ஸ்ரீகிருஷ்ணதேவர் அடி மேலடிவைத்து எழுந்தருளிய காலத்தில் பீஷ்மாசாரியரும் துரோணுச்சாரியரும், அசுவத்தாமாவும் நீதியைப் பிரக்யாதியாய்த் தரித்த விதுரராஜனும் மற்ற அரசர்களும் எதிர்கொண்டெழுந்து வந்து, சிவந்த திருவடியில் தொழுந்தன்மையுடன் விழுந்து வணங் கினர்கள்.

அப்போது கர்ணமகாராஜன் பாராதவன்போல் தலையைக் கவிழ்ந்துகொண் டிருந்தான். சகுனி துரியோதனனுடைய கட்டளையினல் உள்ளமழன்று சுவாமியின் பாதங்களைக் கருத்திற் கருதிக்கொண்டிருந்தான். இவைகளையெல்லாந் தமதுள் ளத்திலே தெரிந்துகொண்டுவருகின்ற ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கு எதிரி லிருந்தவர்கள் பாதபூஜை முதலியனவும் பண்ணி, ஆசனமளித்தனர். அந்த ஆசனத்தின்பேரில் தளபமாலை யணிந்த ஸ்ரீ கிருஷ்ணதேவ ருஞ் சாத்தகியும் எழுந்தருளி யிருந்தார்கள். அந்தவேளையில் முன்னே வழியிற்கண்டு பேசிப் பின்னுற் சபைக்கு வருகிறேமென்று சென்ற நாரதர்-கண்ணுவர்-ஜமதக்கினி இந்த மூன்றரிஷிகளும் சுவாமியினுடைய திருஷ்டிக்கு நேராகநின்று, அவருடைய அநுக் கிரகத்தினல் இராஜசபைக்கு வந்தார்கள். அவர்களை அங்கிருந்து

கண்ட வேதப்பிராமணர்க ளெழுந்திருந்து, அர்க்கியபாத்திய ஆசமன்ய வஸ்திராபரண சந்தனாக்ஷதையோடு, புஷ்பதாம்பூலதூப தீபவேத்திய மந்திரங்களினாற் பூசித்து, வெவ்வேறு ஆசனங்களிற் பொருந்தச் செய்தார்கள். அவர்கள் மூவரும் அவ்வாறிருந்த பிற்பாடு, துரியோதனனானவன் கோவர்த்தனகிரியைக் குடையாக வெடித்துக் கன்மாரியைத் தடுத்தருளிய காசாம்பூவண்ணன் எழுந்தருளிபிருக்கும் இடத்தை நோக்காமல் வேறொருதிசையில் முகந் திருப்பிக்கொண்டு, "நேற்றையபொழுது இத்தமகாநகரத்தில் வந்திருந்தும் எனக்கெதிரில் வராமல், நான் அமைத்துவைத்த விடுதியிலும் வந்திறங்காமல் என்னை இகழ்ந்ததன்மைபோல இந்த விதுரன் வீட்டிலே போயிறங்கிய காரணமென்ன? முன்னே இதனைச் சொல்லிப் பின்னே பேசவேண்டியதைப் பேசலாம்" என்று சொல்ல, அந்த வார்த்தைகளைக் கேட்டுப் புன்னகையுடையவராய் ஸ்ரீகிருஷ்ணதேவர் அதற்கெதிருத்தாரு சொல்லுகின்றார்.—

ஓ நந்தியாவட்ட மாலையணிந்த நராதிபனே! கேளும் நீர் வேறென்றும் நான் வேறென்றும் நம்மிருவரிலொருபேதமு மில்லை. இது உமதுவீடு அது அவன்வீடு என்கிறபேதம் எள்ளத்தனையாகிலும் நானினைத்தாலல்லவோ சொல்லலாம். அப்படி நானென்றும் பேதம் நினைத்ததே இல்லை. எனது மனமகிழ்ச்சியாய் உமது அரண்மனைக்கு வரும்போது, மின்னலைப்போலப் பிரகாசிக்கும் வில்லையுடைய விதுராஜன் எதிரில்வந்து வணங்கி எனக்கு விருந்துசொன்னான். அதைத்தள்ளக் கூடவில்லை. யோசிக்குமிடத்தில் இன்னமொரு காரியமுண்டு. அதாவது பஞ்சவர்கள் சொல்லியனுப்பிய சொல்லைச் சொல்லவந்த ஒருதூதனுகிய யான் உம்முடைய வீட்டில் வந்திறங்கி, நீர்உபசரித்திடும்படியாகிய இனிமையுள்ள ஷட்ருசி கூடிய அன்னத்தைப்புசித்து, உம்மோடேதானே எதிருத்தரமாய் வ்வகாரங்களைப் பேசிவெறுக்க நினைப்பது தருமநீதியல்லவே, ஓ சர்ப்பக்கொடியைத் தரித்த துரியோதனனே விவேகத்தையுடைய மந்திரிகளாயிருந்து அரசாட்சியை அழித்தாலும், பெரியோர்கள் சொல்லும் புத்தி விசேஷங்களை மறுத்தாலும், ஒருவருடைய வாழ்மனையிலுண்டு பின்பு அவருடன் பகைத்து யுத்தஞ்செய்ய நினைத்தாலும், சூரிய சந்திரருள்ளவரைக்கும் இவர்கள்தாம் கொடிய நரகவட்டத்திற் குமுங்கிக்கொண்டிருப்பவர்கள்—என்றார். குளிர்ச்சி பொருந்திய பொற்றாமரை மலரிற் பிறந்தருளிய மகாலக்ஷ்மிக்கு

மணவாளனுகிய மாயோன். இவ்வாறு தருமங்களே யெடுத்துச்சொல்லவே,காதனுகிய அக்கிருஷ்ணமூர்த்தியின் முகத்துக்கு நேராகத் தன் முகத்தைத்திருப்பி, இருநயனங்களுங்களிக்க அவர் திருமுகமண்டலத்தை நோக்கி, மிகவுங்குலுங்க நகைத்து, "ஐயோ பாவம்! ஐவருக்குத் தூதாகவந்த அவசரத்தைச் சொல்லும்" என்று ராஜாதி ராஜனுகிய அரவக்கொடியோன் கேட்டான்.—

அப்போது வேதங்கள் மணக்குந் தாமரைமலராகிய திருநாபியையும் கீதங்களுடன் வண்டுகள்பாடுந் துளபமாலையையுமுடைய ஸ்ரீகிருஷ்ணசுவாமியார் வேணுநாதஞ் செய்யுந் தமது திருவாயினை மலர்ந்தருளி, "ஓழிருதராட்டிரமகாராஜனுடைய செல்வக்குமாரனே! உமது சகோதரராகிய பாண்டவர்கள் சூதாடியதினுலே ஐச்வரிய முதலாகிய அரசாட்சியை இழந்தும், காட்டிற்சென்று, யாதொரு ஆதரவுமற்ற அன்னியர்களென்று சொல்லும்படியாய் வருந்தி நொந்து, நீர் குறித்தனுப்பிய தவணைநாளைத் தீங்கில்லாமற் கழித்து தெய்வச்செயலால் யாதொரு குறையுமின்றித் திரும்பிவந்திருக்கின்றனர். அவர்களுக்கு, சொற்றவறுத குற்றமற்ற குருகுலத்திற்பிறந்த கோவாகிய நீர், ஆதியிற்சொன்னபடி பூமியை நன்மையாகிய நினைகத்துடன் கொடுக்கவேண்டும். அல்லாமலும் ஒருகுலத்திற் பிறந்த உரிமையை யுடையவர்களாதலின், உமக்குள்ள சொந்தம் அவர்களுக்குமுண்டு. ஆகையால் ஒருவர்க்கொருவர் மனநோக்காடில்லாமற் நினைகித்து, அவர்களுக்குரிமையாயுள்ள நாட்டில் உமக்கிஷ்டமுள்ள சிலநாடுகொடுத்து அவர்களுடன்கூடி வாழ்வீரேயானுல், நல்லசத்தியகுண நெறியுள்ள சத்பாத்திரனென்று சகல மன்னவரும் உம்மைச் நினைகித்து நாள்தோறும் புகழ்ந்து மகிழ்ந்து கொண்டாடி வாழ்த்துவார்கள். அப்படிச்செய்யாமல் மறுத்தீரேயானுல் பழியும் பாவமும் ஒழியாமல் வளரும்படியாகப் பலரும்பழிப்பதற் கிடமுண்டாகும். தருமமும் கீர்த்தியுஞ் சௌரியமும் சந்திரகுலத்தின் தன்மையும் தழைத்து விளங்கமாட்டா. அது உமக்கு நன்மையுமல்ல" என்று சொல்லவே, எதிரிலிருந்த துரியோதனமகாராஜன் படபடத்துக் கடகடத்து மிகவுஞ் சீறிச் சொல்லுகின்றான்.—

கலகத்திற்கு முனையாகிய கண்ணனே! கேளும் ஆதிகாளிற் சொக்கட்டானுடித் தங்களுரிமைகளே யெல்லாமிழந்து, எங்களைப்

புகழ்ந்து மகிழ்ந்து காட்டிற்குப்போய்விட்ட புனிதராகிய ஐவர்களுக்கு என்னிடத்திற்றோற்ற அந்நாட்டையும் நகரத்தையும் உங்கட்கு வாங்கிக்கொடுத்து ஒருபாட்டை செய்து வைக்கிறேன்" என்று, சாட்டையில்லாப் பம்பரமாட்டத்தகுந்த நீர்சொல்லிய தந்திரவார்த்தைகளை நம்பி, உபலாவியத்தில் வந்திருக்கும் அந்த வம்பர்களைப்போலே என்னையும் லேசாக நினைத்துக்கொண்டு உபாயப்பேச்சினல் ஏமாற்றலாமென்று எண்ணிவந்திருக்கின்றீர். உமது பேச்சைநம்பும் ஐவர்களைப்போலே நானும் பயித்தியக்காரனல்லன். உமது தந்திரம் என்னிடத்திற் சாயாது. ஓ மாயனே! அவர்கள் இன்னமுங் காடே கதியாய்த் திரிந்து காலங்கழிப்பதுவே நற்காரியம். அதைவிட்டு உமது பேச்சை நம்பிப்போராசை கொள்வது தூர்க்காரியம். இஃதன்றியும் சகல மன்னர்களும் பழிப்பார்களென்று எனக்கொரு பூச்சிகாட்ட வந்தீர். அடடா!! இந்தப் பூச்சிக்கு நான் பயப்படுவேனல்ல இன்னமெத்தனை பூச்சிகள் புறப்படும். ஓபேய்ச்சி மூலையுண்ட பெரும்பூச்சியே! குள்ளகரி மிரட்டாகமிரட்டவந்த கோபாலா! என்னை நீர் வெறுத்துக்கொண்டால்தானென்ன? இவ்வுலகிலுள்ள அரசர்களெல்லாருங் கருத்துக்கொண்டால்தானென்ன? பற்பலவாறுக நினைத்தால்தானென்ன? எனக்குப்பின்னுற் போய்ச் சிரித்தால்தானென்ன? சத்தியவசனந்தப்பினு னென்று சாற்றினல் தானென்ன? மாலையணிந்த மார்பினராகிய வஞ்சகநெஞ்சுடைய பஞ்சபாண்டவர்கள் ஆயுதபாணியராய் என்னுடனெதிர்த்து வெவ்விய யுத்தஞ்செய்தால்தானென்ன? இன்னும் இப்போர்ப்பட்ட காரியங்களை எவர்கள் செய்தாலும் எவர்கள்வைதாலும் என்னென்ன உபாயம்பண்ணினாலும், உன்னுடைய எண்ணமும் பாண்டவர்களினிச்சையும் இன்றுமுதலென்றென்றைக்கும் இல்லாதழியும்படியாய் எவ்விதத்திலேனுமுடித்து வெற்றிபெறுவதேயல்லது, இத்தக்குரு பூமியிலே அவர்களுக்கு ஒரு ஈ இருக்கும் அவ்வளவு இடமும் இனிக் கொடுக்கமாட்டேன். இவைகளுக் கெல்லாம் நானொருகாலுங் கலங்க மாட்டேன்—என்று சப்தமேகங்களின் முழக்கத்தைப் போலிரைத்து கடுங்கோபத்துடன் சொன்னன். அப்போது ஸ்ரீகிருஷ்ணபகவான் நகைத்து, தமது கீழ்க்கண்ணினற் சபையிலிருக்கப்பட்ட சகலரையும் பார்த்து, ஒருமொழியுஞ் சொல்லாமல் ஊமைபோலிருக்கும் பீஷ்மர் முதலிய மேலோர்களையும் நோக்கி, "உங்களெல்லோருக்கும் இந்தத் துரியோதனராஜன் சொல்லியதிற் "சம்மதந்தானு சொல்லுங்கள்.

குலமுறை தலைமுறை யறிந்த புத்திமான்களே யென்று விஞ்சி, பெரிய அரசனுகிய திருதராட்டிரனைப் பார்த்துச் சொல்லுவார்.—

ஓ மகாராஜனே! இந்தப் பூமிக்குச் சுதந்தரமாகிய பெரிய அரசன் நீரோகையால், உமது பிள்ளையின் வார்த்தையையும் என் வார்த்தையையும் கன்ருய்க் கேட்டீரே; இதற்கு மறுமொழி நீர்தான் யோசித்துச் சொல்லல்வேண்டும். வேறொருவர் சொல்லக்கூடாது. கல்லதென்று சொன்னலும் அது கடவாது. இதனல் கீர்த்திவந்தாலும் அபகீர்த்திவந்தாலும் உம்மைச்சாருமே யல்லாமல் மற்றொரு வரையுஞ்சாராது. மேலும் உமது தம்பியாகிய பாண்டுமகாராஜன் இந்த ஐந்து பிள்ளைகளையுங் குந்திதேவியையுங் காட்டிலேவிட்டு இறந்துபோனதக்ஷணம், அவர்களை யழைப்பித்துத் தனுர்வேத முதலிய யாவுங்கற்பித்து இளவரசுப்பட்டம் கொடுத்து சம்ரக்ஷணை செய்த பெரிய தந்தையாகிய நீரே மறுபடியுங் காட்டுக்குப் போகும்படி சஞ்சயனிடத்தில் மனதொப்பிச் சொல்லியனுப்பியது மகாஆச்சரியம். ஐயோ! உமது மனது இப்படி கறுக்குமென் றவர்களுக்குத் தெரியாது. இஃதன்றியும் உமதுசிரேஷ்ட குமாரனுகிய துரியோதனன் பாண்டவர்களைப் படித்தியபாடுகளை யெல்லா முற்று மறந்துவிட்டீராக்கும். ஐயோபாவம்! பெரிய வயதாகையால் உமக்கு ஞாபகம் வரும்படியாய்ச் சிலசங்கதியைச் சொல்லுகிறேன் கேளும். ஐயா! நூற்றைந்து பிள்ளைகளுஞ் சிறுபிள்ளைகளாய் மருவி விளையாடிக்கொண்டு வளர்ந்து வருங்காலத்தில் மித்திரபேத நினைப்பினல் துரியோதனன் பீமசேனனுக்கு அன்னத்தில் விஷமிட்டான்; பாம்புகளைக்கொண்டு கடிப்பிக்கச் செய்தான்; கங்கையில் வசிகாட்டி வைத்தான். இன்னும் பற்பல தீங்குகளைச் செய்தும் அவன் மடியாததினல், ஐவரென்னுஞ் செடியை அடியோடழித்துவிடவேண்டுமென்று கருதிக் கண்ணில்லாத உன்னைக்கொண்டு பாண்டவரைக் காசிப்பட்டணம் போகும்படிசெய்து, அரக்குமெழுக்கு அழிஞ்சிலினல் அரண்மனை கட்டிவைத்து அதில் தாயையும் பிள்ளைகளையுங் குடியேற்றி நெருப்பிட நினைத்தான். 'காமொன்று நினைக்கத் தெய்வந் தானொன்று நினைத்தது' என்பதைப்போல் அத்தவிடுமெரித்து இடிந்து அதிலிருந்த புரோசனனுங்கரிந்து மடிந்துபோக, இவர்கள் தப்பிப்பிழைத்து, இடிம்பாசுரனையும் பகாசுரனையுங் கொன்று, வேத்திரகீயத்தில் பிராமணரூபத்துடனின்று, பாஞ்சால தேசஞ்சென்று,

மச்சேந்திரத்தை யறுத்து வேந்தரைவென்று, பாஞ்சாலியை மணம்புரிந்துகொண்டு, உன்னுதவியினால் இந்திரப் பிரஸ்தத்திலிருந்து அரசுபுரிந்து, இராஜசூயயாகமுடித்து, உலகிலுற்றோரே யன்றி மற்றோரும் கீர்த்திபடித்து வெற்றிக்கொடிபிடித்து ஜயபேரி அடித்துப்புகழ வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.—

"அப்படிப்பட்டவர்களை மீண்டும் உமது மூத்தகுமாரனுகிய இந்தத் துரியோதனராஜன் அஸ்தினபுரத்துக்கு வரவழைத்து, மாயச் சூதினால் மாநிலத்தைப் பிடுங்கிக்கொண்டு, திரௌபதாதேவியின் துகிலையுரிந்து, பன்னிரண்டுவருடம் அவர்களைக் காட்டுக் கனுப்பி விட்டுத் தான் பந்துமித்திரர்களுடன் சீரான குடையின்கீழ் பாராண்டுவந்தான். அத்தமட்டிலும் விட்டுவிடாமல் அவர்களைக் கொல்லவேண்டுமென்று நினைத்துத் தூர்வாசருக்கு விருந்திட்டு மகிழ்வித்து, வனத்திலிருக்கும் பாண்டவர்களிடத்தில் இத்தப்படிக்கு விருந்து புசிக்கவேண்டுமென்று வரம்பெற்றுக்கொண்டு அவரை அனுப்பிவைத்தான். காளமாமுனியைக்கொண்டு மாரணயாகஞ் செய்வித்து அதிலெழுந்த மகாப்பிரசண்ட பூதத்தைக்கண்டு ஐவர்களைப் பட்சித்து வாவென்றனுப்ப, அந்தப்பூதம் பிரேதமாகிய பாண்டவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்து தன்னையனுப்பிய தவமுனிவனை வாயிற்போட்டுக்கொள்ள, அந்தப் பிரமஹத்திதோஷந் தன்னைச் சாரும்படி பண்ணிக்கொண்டான். ஆயிரம்வார்த்தை என்னத்திற்கு? உலகிலுள்ள எல்லா வஞ்சனைகளையும் எல்லா துரோகங்களையுங்கொண்டு தன்னலானமட்டும் பாண்டவர்களிறப்பார்க்கென்று பார்த்துவிட்டான். பாண்டவர்கள் எதினாலேயும் இறக்காமல், உம்மூடைய கருணையினாலும் தெய்வவல்லமையினாலும் அவர்களுடைய சத்தியசவுச ஆசாரங்களினாலும், இத்தனை பொல்லாங்குகளுக்கும் தப்பிப்பிழைத்தார்கள். மேலும் உமதுபிள்ளை கூறிய தவணைப்பிரகாரம் பன்னிரண்டு வருடங் காட்டிற் கழித்து, ஓருவருட அக்ஞாதவாசமுந் தொலைத்து, நாட்டினும்வந்து நம்மையடித்துத் தூதுவிடுத்து ஓருநாடு கேட்டனுப்பினவர்களுக்குப் பாதிநாடாவது, அத்தப்பாதிக்குப் பாதியாவது உங்கள் மனதுக்குச் சம்மதியான மற்ற ஏதாவது, ஓரூராவது கொடுத்து, அவர்களை யாதரித்துச் சந்தோஷப்படுத்தினால், நீங்கள் உங்களுடைய வம்சமும் புத்திர மித்திரகளத்திராதியரும் சுகப்பட வாழ்வீர்கள். அல்ல

வென்று வன்மைபேசினால், சத்துருக்களின் ஆயுதக்காயத்தை ஆபரணமாக வணிந்த மார்பினையுடைய பீமசேனன் விஜயராஜன் முதலிய பேர்களால் அடிபட்டுக் கண்ணீர் ததும்பிக் கால்சாய்ந்தோடி வெந்து வெதும்பி விரிந்து போவீர்கள். அவர்களுக் கீடாகிய பேர் யாருமில்லை. துரியோதனுதியர் சொன்னசொற் சோர்ந்தார்க ளாதலால் ஐவர் வந்து விழுந்து அடித்து நாசப்படுத்தி அகண்ட சாம்பிராச்சிய மெல்லாங் கைக்கொண்டார்களென்று அவர்களுக்குப் பிரதிஷ்டையும், உங்களுக்கு அப்பிரதிஷ்டையு முண்டாகும். மேலும் நான் அவர்களுக்கும் உங்களுக்கும் சமமாகிய பாத்தியஸ்த னுகையாலும் பாண்டவர்களின் வீரப்பிரதாப மெய்மை முதலிய தருமங்களை அறிந்திருக்கின்றவ னுகையாலும், உங்களைச் செவ்வைப் படுத்தும் பொருட்டு இவ்வளவு தூரம் வந்து உங்களுக்குச் சொல்லவேண்டிய உறுதிமொழிகளையுஞ் சொன்னேன். அஃதேனெனில் இருதிறத்தவர்களுடைய காரியங்கள் யாவும் பூர்த்தியாய் உமக்குத் தெரிந்திருந்தும், நடக்கப்போகிற செய்கைகளும் எண்ணங்களும் நீர் நன்றாய் உணர்ந்திருந்தும், எங்கட்கு ஒரு வார்த்தை முன்னடிச் சொல்லலாகாதா? ஒருவாறு இருவரையும் ஒருமிக்க ராஜிபண்ணி வைக்கலாகாதா? ஓ கிருஷ்ணவென்று ஒரு காலத்தில் வெறுத்துக் கொள்வீர்கள். அன்றியும் தெரிந்துந் தெரியாமலிருப்பவர்களுக்கு அந்தச் சங்கதி தெரிந்த உரியவர்கள் முன்னடி தெரிவிக்க வேண்டியது தருமநீதி. அப்படி தானறிந்த மாத்திரம் தெரிவிக்கா விட்டால், அவர்கள் கோத்திர சத்துருவென்றும் கொடிய பாவிகளென்றும் தரும சாஸ்திரங்களிற் குறித்திருக்கின்றமையால், பாபத்திற்கும் நரகத்திற்கும் பயந்து நயந்து இவ்வளவு அக்கரையாகச் சொன்னேன்.—

" ஓ சகலமு நன்குணர்ந்த சந்திரகுலோத்தாரணனே! இன்னமுங் கேளும்—உமது தம்பி பிள்ளைகள் உன் சொல்லைக் கடக்க அறியார்கள்; இத்யாதி அன்பத்திலேயும் பெரிய தந்தை மொழியென்று பேசினால் சத்திய மொழியாகத் தலைமேற் கொள்ளுகிறார்கள். உலோகா லோகமெல்லாம் வெற்றிகொண்டு இராஜசூய யாகமுஞ் செய்து, சந்திரகுலத்துக்குப் பெருமையும் புகழும் இந்திரன்போலொத்த உமக்கு அழகும் அருமையும் சம்பாதித்த சுதந்தரர்களாகிய பிள்ளைகளின்பேரில் சந்தோஷப்படாமல், பெருமையையும், புகழை

யும் போக்கடிக்கும் பிள்ளைகளின்பேரில் இச்சை வைத்து அவர்களுக்குக் கொச்சைசெய்ய உமது மனம் ஒப்பி இருந்த தல்லவா? இப்போது இந்த இருதிறப்பிள்ளைகளையும் இரண்டு கண்களாகப்பார்த்து இஷ்டமுடன் நடப்பிப்பது திட்டமாகிய உமது கடன். பட்டத்திறையே! உம்முடைய குலத்திற்கு நஷ்ட மில்லாமல் தாயாதி பாகத்தைத் தம்பி பிள்ளைகளுக்குக் கொடுத்து, தமது பாகத்தை நூறு பிள்ளைகளுக்குங் கொடுத்து, இரு வகுப்பினரும் சந்துஷ்டியாய்ப் பொருந்திவாழச் செய்வதைவிட மேலான பொருள் உமக்கு வேறொன்றுமில்லை. இப்பூமியில் இதைவிட உமக்குண்டாவதான புகழுமில்லை. இதை விடுத்து இந்த மண்ணாசைகொண்டு யுத்தம் பண்ணினால், யார் சாவார்களோ? யார் பிழைப்பார்களோ? தெரியாது. யார் செத்தாலும் யார் பிழைத்தாலும் துக்கமும் சுகமும் பெற்ற தந்தையாகிய உம்மைச் சாருமல்லாமல் மற்றொருவரைச் சாரா. உம்மிடத்தில் உற்றிருக்கும் வீராதி வீராகிய அரசர்கள் யாவரும் காலை விளையப்போகிற தீங்கை யறியாமல் ஓச்சன் கை வாளுக்குள் அகப்பட்ட ஆட்டுக்குட்டி தன்றலை போவதை யுணராமல் தழையைக் கண்டு சந்தோஷப்படுந் தன்மையைப்போல் மகிழ்ந்து, எமன் வந்தாலும் மற்றெவன் வந்தாலும் போய் விழுந்து பொருது ஜயங்கொண்டு வருகிறோமென்று, இருந்த இடத்திலிருந்துகொண்டு வாய்ச்சூளுவாய் வீரமாகப் பேசுவார்கள். அஃதெப்போது தெரியுமென்றால் மூன்றுங்கட்டி அவிழ்க்கும்போது தெரியுமென்பதுபோல், சத்துருவைச் சமீபத்திற் காணும்போது பறந்தும், தங்களைத் தாங்கள் மறந்தும் தொண்டை மண்டைகள் திறந்தும் இறந்துபோங்காலத்தில் உங்களுக்குத் தெரியும். இப்போது எவர்களுக்குந் தெரியாது. அப்பேர்ப்பட்ட வீர பராக்கிரமங்களையுடைய சூரர்கள் பேச்சைநம்பிப் பாண்டவர்களிடம் பகைகொண்டு மேதினியையும் செல்வத்தையும் விருதாவி லிழக்கப் போகிறீர்கள். வாய்ப்புஷ்டியின் வார்த்தை கைப்புஷ்டிக்கு கிற்குமோ? ஐயா! நான் சொல்லுமொழி நாராசம்போ லிருந்தாலும், இனிக் கொஞ்ச காலையிற் பஞ்சபாண்டவர்களின் மிஞ்சிய சக்தியைத் தஞ்சந்தஞ்சமென்று நீங்களே அஞ்சியறியப் போகிறீர்கள்.—

"ஓ மஞ்சினைப் பொருவு மன்னனே! உபலாவியத்தை விட்டுப் புறப்பட்டு அஸ்தினபுரத்தை நோக்கி உம்மிடத்துக்கு நான் தூது

வரும்போது, பாண்டவர்கள் பணிந்து சொல்லிய பட்சத்தைக் கேளும்—ஐயா! எங்கள் பாட்டனார் பீஷ்மாச்சாரியருக்கும் தனுர் வேத ஆசாரியர்களுக்கும் நேசமுள்ள பெரிய தந்தைக்கும் விதுரர் முதலிய பெரியோர்களுக்கும் சாஷ்டாங்க நமஸ்காரஞ் சொல்லி, சகோதரர் முதலிய உரியோர்களுக்கும் தகுந்த வந்தனை வழிபாடு களைச் சாற்றி, மிகுந்த வருத்தமடைந்த எங்களுக்கு ஆதியிற் பிரித் துக் கொடுத்த அரசைக் கொடுத்தாலுஞ் சரி, அல்லது அவர்களுக் குச் சம்மதமாகிய ஓர் நாடு கொடுத்தாலுஞ் சரி, அவர்கள் யாது கொடுக்கச் சம்மதிக்கின்றார்களோ அதனை யவர்கள் மனமொப்பிக் கொடுக்கப் பெற்றுக்கொண்டு வாரும். எப்போதும் நாங்கள் எங்கள் தந்தையினுடைய பட்சமான வார்த்தையைக் கடந்து நடவோம். ஒருவேளை இதுதான் சமயமென்று காட்டுக்குப் போகச்சொன்னால் அது மாத்திரம் ஒப்பமாட்டோம். ஆனால் எதுவுங் கொடுப்பதில்லை யுத்தத்திற்கு வருகிறோமென்று இசைவார்களானால், ஆயிரத்தெட் டண்டமும் ஆளும்படியாகிய சந்தோஷம் எங்களுக் குண்டாகும். ஆனதால் உடனே அந்த யுத்த வார்த்தைகளை ஸ்திரப்படுத்திக் கொண்டு, வீரகண்டாமணிகளைத் தரித்திருக்கும் வேந்தர்கள் முன் னிலும் சாந்தர்களாகிய மேலோர்கள் முன்னிலும் திருதராட்டிர மகாராஜனுக்குத் தெரிவித்து, அவர் சொல்லும் வாக்கியங்களையும் கேட்டுக்கொண்டு, சகலருமறிய சாக்ஷி முன்னிலையில் துரியோதன னுதியரிடத்தில் உறுதி பெற்றுக்கொண்டு, காலதாமச மில்லாமல் கடுகெனவாருங் கண்ணனே—என்று விடை கொடுத்தனுப்பவந்த தான், என்னுள்ளே யிருந்த யாவற்றையும் எடுத்துச் சொன்னேன். இனிமேல் இவைகளை யெல்லாம் யோசித்து, மேல்நடக்கவேண்டிய காரியங்களையும் நிதானித்து, தாயாதிகளுடைய பாகங் கொடுப்ப தும் கொடுக்கக் கூடாதென்று மறுப்பதும், சண்டைக்கு வருகிற தும் அந்தச் சண்டை இன்ன தினத்திற் றொடங்குவதுந் தெரியப் படுத்துவீராகில் 'பாப்பாத்தியம்மா மாடு வந்தது பார்த்துக்கொள்' என்னும் பழமொழிபோலே சிக்கிரஞ்சென்று, தான் தூது போய் வந்த செய்தி இதுவென்று பாண்டவர்களுக்குத் தெரியச் செய்து விடுவேன். வீணாக வாழ்நாளைப் போக்கடித்துக்கொண் டிருப்ப தில் லாபமென்ன சொல்லுங்கள்"—என்று சுவாமியார் கேட்டார்.

இந்த வார்த்தைகளை யெல்லாங் கேட்டிருந்த மகாராஜன் பெருமூச்சு விட்டுப் பிரலாபித்துத் தாமரை காயையுடைய சால்வ

லோக சரண்யனே நோக்கி "என்னருமை மருமகனே! நீ உரைத்த மொழிக ளெல்லாம் நிஜமே! நிஜமே! நானென்ன செய்வேன்! எறிவார் கையிற் கொடுத்த கல்லைப்போல் என்னரசாட்சியை மக்க ளிடத்திற் கொடுத்துவிட்டு, நான் பரதவித்துப் பல்லைக் காட்டிக் கொண்டிருக்கிறேன். என் வசத்தில் நாடு நகர மிருக்குமாகில் என் தம்பி பிள்ளைகளுக்குக் கொஞ்சமேனும் வஞ்சனை செய்வேனோ? ஓ அஞ்சனவண்ணா! நீ நன்றாக யோசிக்கக் கடவை. காசில்லாத வெறுங்கையை யுடையவன் முழம் போடுவதுபோல் எனக்கு ஐவ ருடன் விசுவாச நேசமா யிருக்கவேண்டுமென்று ஆசை யிருக்கிறது. அப்படிக் கிருந்தாலும் என் வார்த்தையைப் பிள்ளைகள் எடுத் தெறிந்து விடுகிறார்களே! ஓ கண்ணனே! இந்திர னுலகுக் கொப்பாகிய இந்தச் சந்திரவம்சம் தழைக்கும்படியாக யோசித்து, நீயே சந்தி செய்து வைக்கவேண்டும். ஓ தாமரைக் கண்ணா, நீ தயைசெய்து எனக்குச் சொன்ன சங்கதிகள் யாவற்றையுந் துரியோதனனுக்குத் தெரிவித்தால் உனது வார்த்தையை ஒருகாலும் அவன் தள்ளான். அவன் உன்னிடத்தில் மிகுந்த அன்புள்ளான். அவனுக்குச் சொல்ல வும் அவனைத் தண்டிக்கவும் கண்டிக்கவும் திட்டவும் வெட்டவும் பொருத்தி வைக்கவும் திருத்தி வைக்கவும் சகல சுதந்திரமும் உனக் குண்டு. நீயே இவ்விடத்துக்கு வந்தமட்டுக்கும் என் துன்பத்தை நீக்கி என்னைக் கடைத்தேறச்செய் கண்ணனே"—என்று திருதராட் டிரன் சொல்லக் கேட்டு, தேவாதி தேவனாகிய சக்கரதரன் துரியோ தனனைப் பார்த்து நீதிவசனங்கள் சொல்லத் தொடங்கினார்.—

"ஓ பேரும் பிரக்யாதியுமுடைய பூ மண்டலாதிபதியே! உத்தம ராகிய பெரியோர் முதல் உன் தந்தையும் பேசிய வாக்கியங்களை யெல்லாங் கேட்டிரல்லவா? இப்போது நான் சொல்லுவதையுங் கேளும். பிரதாபசாலியாகிய விஜயன் கயிலாசபதியாகிய பரம சிவத் தைக் குறித்துத் தவஞ்செய்து பாசுபாதாஸ்திர முதலிய வரங்களை யும் பெற்று, தேவேந்திரன் எதிர்கொண் டழைக்கத் தெய்வலோகத் திற்குப் போய் இந்திராணி யுபசரிக்கத் தெவிட்டா வமிர்தம் புசித் துக் காலகேயர் முதலிய அரக்கரைப் பாசுபதாஸ்திரத்தாற் காய்ந்து இந்திர லோகத்திற் கிரீடம்பெற்றுச் செயகீர்த்தி கொண்ட அக்கிரீடி யினுடைய கெடிவீர பராக்கிரமங்களையும் பீமசேனனுடைய திட கரத்திர பராக்கிரமத்தையும், மற்றவர்களின் மனோதிடத்தையும்

அறிந்திருக்கின்றீரல்லவா? அப்பேர்ப்பட்ட சாமர்த்தியவான்கள் இப் பேர்ப்பட்ட குலத்திற் பிறந்து, உமக்குச் சகோதரர்களுமாகி, அள வற்றகாள் காட்டிலிருந்து கண்கலக்கப்படவும், கீர் காட்டிலிருந்து சவுக்கிய கலத்தைப் பெறவும் இருப்பது ஞாயமன்று. பார்ப்பவர் கேட்பவர்களுக்கும் அழகன்று. மேலும் உங்களிருதிறவர்களில் நிறை வுங்குறைவு கேரிட்டால் ஒருவருக்கொருவர் சகித்துக் கொண்டு தரும விரோதமில்லாமற் பெரியோர்கள் சொல்லும் வாக்கியங்களைச் சிரமேற் கொண்டு, பழுதுவராமல் இருவரும் ஒருமைப்பட்டு வாழ் வீர்களாகில், உமது சகோதரர்கள் முதலிய சுற்றத்தார்களும் புத் திரமித்திரர் முதலாகிய வெகு ஜனங்களும் சுகமாகவிருந்து பிழைக் கலாம். பராஜரும் பயந்து மதிப்பினை யுடையவர்களாய்ப் புகழ்ந்து வாழ்வார்கள். இம்மைப்பயன் மறுமைப்பயன் இரண்டுக்கும் லாப மாயிருக்கும். சூரியர் சந்திரருள்ள வரைக்கும் இகழ்ச்சி யில்லாமற் புகழ்ச்சி யுண்டாகும்'' என்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்ல, அதைக் கேட்டிருந்த திரிதராட்டிரன் சிந்தைகளித்து, மைந்தனைப் பார்த்து ''அப்பா குழந்தாய்! நந்தநந்தன னுரைத்த இந்த வார்த்தை உன்னை விந்தையாகச் சுகப்படுத்தும். அதற்காகவே இந்த அஸ்தினபுரத்தில் அரசர் சபைக்கு வந்தது, அப்படி வந்தபோதிலும் தாம் வந்த காரி யத்தை ஆம் அல்லவென்று பார்த்துக்கொண்டு போகாமல், உன்னு டைய கோபதாபத்திற்கு முடன்பட்டு, இவ்வளவு புத்திமதிகளை இவ ரைப்போல் யார் சொல்லப் போகிறார்கள். ஆகையால் பிள்ளாய்! இவருடைய மொழியே வேதம் இவரே தருமஸ்வரூபி. இவரால் உன் குலமும் வாழ்வுந் தழைக்கும். குறைவில்லாப் பாக்கியமுஞ் செழிக்கும். இந்தக் கோபாலகிருஷ்ணருடைய இஷ்டப்படி உனக் குத் தோன்றிய நாட்டை ஐவர்களுக்குக் கொடுத்து, அவர்களும் நீங்களும் தாழ்வில்லாமல் வாழ்வதே வாழ்வு, அந்தப்படிச் செய்யா விட்டால் இனி வருவதெல்லாந் தாழ்வு. மேலும் தருமராஜன் உன் னிடத்தில் வைத்திருக்கும் அன்பு என்னிடத்தில்லையே. அடாசு தனே! அப்பேர்ப்பட்ட அண்ணனை இழந்து, அன்னியர்களைப் புகழ்ந்து ஆப்தர்களா யெண்ணிக் கலந்து கொண்டிருப்பது காரிய மல்லவே. 'தன்னைப்பெற்ற தாய் தவிட்டுக்கலையப் பொன்னைச் செல வழித்துப் பூரிகொடுத்தான் பிள்ளை' என்பதுபோல், பெருமை பெறும்படிபிறரைத்தழுவி அவர்களுக்குபசரிப்பதினல் ஆவதென்ன? அப்பனே, இப்பொழுது இக்கிருஷ்ணதேவரும் பெரியவர்களும் தங்

தையாகிய நானும் சொல்லும் வார்த்தைகளைச் சேர்வுபடவொட்டா மற் காத்துப் பாண்டவர்களுடன் பக்ஷமாய்க்கலந்து வாழ்வாயானால் எங்களுக்கெல்லாம் பெருமையுஞ் சிறப்புமுண்டாம். நமது சொல்லைக் கடவாமல் நடந்தான் துரியோதன னென்று நாங்களெல்லாரும் புகழ்ந்து மகிழ்ந்து பூரிப்பையடைவோம். இம்மந்திரியும் இரண்டு கண்ணுந் தெரியாத என்னை இவ்வுலகுக்கு இறையாக்கி வைத்து, என் சொல்வழி நின்று என்னைவலைச் செய்து எதிர்த்த சத்துருக்களைக் கொய்து, சகல பெருமையும் தானடையச் செய்து, ஊழிய னைப்போலடங்கி நடந்து வந்தான் என் தம்பியாகிய பாண்டுராஜன். அவனுல் கிலைத்த ராஜ்யமிது. ஆதலால் எல்லாம் அவனுடைய செல்வம். எல்லாம் அவனுடைய அரசாட்சி. எல்லாம் அவனுடைய பிள்ளைகள். எனக்கென்ன சொந்தமுண்டு மகனே! அந்தப் பாக்கிய வானுடைய பிள்ளைகளைப் பரதேசிகளைப் போல் வேறுபடுத்தி, பதி னிரு முதலிய பாக்கியங் கொடுக்காமற் பகைமேற்கொண்டு பேச லாமா? பாவம் விளையுமே! மன்னவர் நீதியுமாயுமே! நமது குல முறை குன்றுமே! நானிலமெல்லாம் நகைக்குமே! கலகமுமிகுக் குமே! அரசரிற் பகையீங்குமே! அதனுல் நமது உரிமையும் பெரு மையும் நீங்குமே! வறுமையுஞ் சிறுமையு மோங்குமே! வையகமுழு மையு மேங்குமே! மதலாய்! மேலும் இந்தக் கிருஷ்ணதேவர் நமது அர்ச்சுனனுக்கு இஷ்டமென்றும் உனக்கு அனிஷ்டமென்றும் நீ எண்ணியிருக்கின்றயல்லவா? அப்பா! இவர் உங்களிருதிறவருக்கும் இரண்டு நேத்திரங்களே யன்றி வேறல்ல. நமது உரிய சம்பந்தத்திற் கும் புறம்பல்ல. இவருடைய உறுதியும் உதவியுமே உங்களுக்குத் துணையல்லது வேறுதுணையில்லையே! இந்தப்பகவானுடைய வசனத் தின்வண்ணம் ஐவருக்குரிய அரசைக் கொடுத்து, சண்டை முதலிய சபதங்களையும் விடுத்து, சமத்துவமாகத் துரைத்தனஞ் செய்து, ஜகமெல்லாம் வாழ்த்த சுகம்பெறக்கடவீர்கள்" என்று திருதராட்டிர பூபதி சொன்னன்.

இவைகளைக் கேட்டிருந்த பீஷ்மாச்சாரியார் பட்சபாத மில்லா மல கடுவு கிலைமையாகச்சொல்லிவந்த திருதராட்டிரனைப் புகழ்ந்து உள்ளமகிழ்ந்து, பேரறிவு துரியோதன னென்னுங் குமரனைத் தமது திருவருட்கண்ணுல் நோக்கி, "உன்னுடைய மனக்களங்க நீங்கும்படியாக நானுரைக்கும் வசனத்தையும் உன்னுடைய திட

சித்தத்தோடு கேட்கக்கடவை" என்று கூறி, அடா குழந்தாய்! பரதகுலத்திற் பிறந்த ராஜாதிராஜனுகிய நீ பெரியோர் முதலிய பந்து மித்திரர்கள் சொல்லும் வார்த்தைகளைத் தள்ளலாகாது. பாபத்தை மூட்டைகட்டலாகாது. பிராணனை அலட்சியமாக வெண்ணி யுத்தஞ்செய்யநினைப்பது க்ஷத்திரியதருமமானபோதிலும், சத்துருக்கள் பேரில்லாமல் சுற்றத்தார்பேரில் விரோதம் நினைக்கக் கூடாது. தன்னுயிரைப் போலே மன்னுயிரைக் காத்துத் தரு மத்தை நிலைநிறுத்த வேண்டும். பெருமையும் புகழும் பெறவேண்டிய பதார்த்தத்தை யல்லாமற் சிறுமையும் இழிவையுந் தரத்தக்க பதார்த் தத்தைச் சேர்க்கலாகாது. தாழ்ந்த பேர்களுடன் சிநேகமாகாது. தையலார் மோகந்தாங்கலாகாது. கல்வர்கள் நடுங்கச்செய்யலாகாது. காவினுற் பதறிப்பேசலாகாது. இரக்கம்-தயை-சாந்தம்-பொறுமை இவைகளிருக்கவேண்டும். இம்மைப் பயனையும் மறுமைப்பயனையும் எண்ணி நடக்க வேண்டும். இத்தன்மையவாகிய பற்பல நீதிகளும் தருமங்களும் உன்னிடத்தில் குடிகொண்டிருக்கவேண்டும். ஐயனே நமது குலபுத்திரராகிய பாண்டவர்கள் அன்னியரல்லவே. அவர்க ளுக்கு உன்னிஷ்டத்திற் பிறன்றிய ராச்சியங் கொடுத்துக் கீர்த்தி யையுங் கௌரவத்தையும் பெறவேண்டும். இப்போது அப்பாண்டவ ருக்கு நாட்டைக் கொடுத்தாற் பயந்து கொடுத்தான் துரியோதன னென்பதாய் உலகத்தார் பழிப்பார்க ளென்று நீ நினைக்கப்போகி றாய். அந்த அவமானம் உனக்கு வேண்டாம். அதெனென்றால், அன்னியரிடத்தில் அபகரித்துக்கொண்ட அரசாட்சியை மறுபடி யுங் கொடுக்க நினைப்பாயானால், மன்னவரெல்லாம் உன்னைச் சின்னத் தனமாகச் சொல்லுவார்கள். அது மூலமாயுனக்குக் குறைவுண்டா கும். இப்போது நாங்கள் சொல்லுவதினால் உனக்கு யாதொருதாழ்ச் சியுமில்லை. மாட்சிமையுடைய மைத்தனே! அண்ணன் தம்பி தாயாதிகள் ஒருவருக்கொருவர் ஏதாகொஞ்சம் முகத்திருப்பாகவி ருந்து, (நீடித்து நீர்விலகுமா?) என்பதுபோல் மறுபடியுங் கூடிக் கொண்டார் புத்திமான்களென்று சகலருஞ் சந்தோஷப்படுவார்கள். ஓ மதலாய்! ஐவராகிய சகோதரர்களுடைய அரசைச் சூதாடி அநி யாயமாய்ப் பறித்துக்கொண்டான், துஷ்டனுகிய துரியோதன னென்று நிஷ்டூர வசனங்களினுற் பலருந் தூற்றுவதைப் பார்க்கிலும் நாங்கள் சொல்லும் நன்னெறியின்படி நீ நடப்பது குறைவோ? நிறை வாகிய குறைவற்ற கோவே! இந்தப்படி நீ நடவாவிட்டால் இந்தப் பாருள்ள வரையிலும், கடல் நீருள்ள வரையிலும் கருங்காருள்ள

வரையிலும், மகம்மேரு உள்ளவரையிலும், பழிச்சொல்லும் பாவமும் கிஞ்சிஞ்சியாய் விளையுமே யல்லது, மற்றொரு லாபமும் மில்லையே. அரவக்கொடியோனே! இத்தக் கிருஷ்ணதேவர் நமது பட்டணத்துக்கு வரவும், இராஜசபையறியுன்னிடத்தில் விருந்து பேசவும், நாமெல்லோரும் எத்தனை காலம் தபசு செய்தாலுங் கிடைக்குமா? அப்படிப்பட்டவர் நம்மிடத்திற் கலந்து, யாருடைய புண்ணிய வசத்தினாலேயோ வந்து உனக்குமிந்த தரும நீதிகளைச் சொன்னார். அவருடைய வாக்கியத்தை வேதமந்திர மாகக்கொண்டு மேன்மை புறக்கடவை இது கிடைத்தற் கருமையாகிய பொருள். இந்த மகானுபாவரை லேசாக நினைக்கவேண்டாம். இவரே புராண புருஷர். இவரே நம்மவர்களில் மகா புத்தியும் யுக்தியும் ராஜ தந்திர வெற்றியுமுடைய உத்தமராகையால், இவருடைய வாக்கிபத்தைச் சிரமேற்கொண்டு நடப்பாயானால் ஊழிமலையுங் காலம் வரைக்கும் உன் கீர்த்தி தொலையாது. இந்தப்படியின்மீது தீர்க்காயுசுடன் கெடியுடைய அரவக்கொடி யசைத்தாட வணங்காமுடி பொறுத்த மன்னனாகவே நெடுங்காலம் வாழ்ந்திருப்பாய். அப்பா பார்த்திபனே! இனி மேலும் இந்தப் பகவானுடைய பக்குவ மொழிகளைக் கேட்டக்கடவை''—என்று சொல்லப், பக்கத்திலிருந்த துரோணாசாரியார் வணங்கா முடி மன்னனை நோக்கி ''ஓ மன்னவனே! பாண்டவர் தூதனாக வந்து இவ்விடத்திற் கூடிப் பேசுகின்ற இவரை யாரென் றெண்ணியிருக்கின்றாய்? இவர்தான் பரமபதநாதன்! இவர்தான் சங்குசக்கரதாரக்ட்க கோதண்டதாரி! இவர்தான் கோவர்த்தனகிரியைக் குடையாகத் தூக்கி ஆபர்களுடைய ஆபத்தைக்காத்த அரிபரந்தாமன்! இப்படிப்பட்டவர் உங்கள் குலமாகிய திங்கள் குலஞ் செய்த தவத்தால் அல்லவா இங்கு வந்து யாங்களெல்லாந் தரிசிக்க உனது சபைக்கெழுந்தருளினர். மேலும் இந்தக் குலத்தின் முதியோரெல்லாரும் ஜன்மாந்திரத்திற் செய்த தபோபலத்தினால், உன்னுடைய கோபமொழிகளை யெல்லாங் கேட்டுச் சகித்துக்கொண்டு குணமாகிய தரும முறைமைகளையுங் கூறினர். உன்னிருவனால் உலகஞ்சுகப்படவும் நாங்கள் கணகளித்துக் காணவும் இவ்விடத்திற் திருவடி பெயர்த்தருளினரல்லது, பாண்டவர்களுக்கு காடு பெறவேண்டி முக்கியமாய் வந்தவரல்லர். இதை நீ நன்றாகயோசிக்கத்தக்கது. ஆதியிற்காண்டவப் பிரஸ்தமாக யேற்படுத்தி யெல்லாப் பாக்கியங்களும் பாண்டவர்களுக்கீந்த இறைவன், அகண்ட சாம்பிராச்சியமும் இப்போது அவர்கட்கு அளிக்கவேண்டுமென்று நினைத்

தால் அதற்கு யாதொரு அட்டியுமுண்டோ? அப்பனே! அப்படி நினைத்து வந்தவரல்லர். நீங்களொரு குலத்திற் பிறந்தவர்கள். ஆகையால் உரிமையாக இருப்பதழகென்று உரைக்கவும், நமது புத்ரமித்ரகளத்திராதிகள் முதலிய யாவுஞ் சுகப்படவும் எண்ணியெழுந்தருளியதே யன்றி வேறல்ல. இவைகளை யெல்லாம் உன் சிக்கையுட்கொண்டு, சொந்தமாக வந்த பகவான் சொல்லிய வார்த்தையின் படிக்கும் உன் தந்தை யுரைத்த தருமத்தின் படிக்கும் காடு திரிந்து வந்த பாண்டவராகிய கனவான்களுக்கு நாடு கொடுத்து, நாரணன் முதலாகிய நால்வரும் புகழ விருக்கு மவ்வையவரில் தருமராஜனும் பீமனுந்தழுவ வணங்கியும், மற்றவருன்னைப் பணிந்து வாழ்த்த இணங்கியும் காங்களியாவருங் கண்டு கண்களிக்கச் சௌபாக்கிய சம்பன்னராக வாழ்வைப் பொருந்தித் தாழ்வில்லாமல் வாழக்கடவை" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டிருந்த துரியோதனன் இடியைப் போலிரைத்து, "நீங்களளக்க வேண்டிய கல்விகளெல்லாம் இவ்வளவு தானோ? இன்னமேதாகிலுங் கொஞ்சமிருக்கின்றதோ?" என்று குலுங்க நகைத்து, குரோதமுங் கோபமுங் குடிகொண்டெழும்பக் கொதித்து மணிவண்ணனுகிய மாயனைப் பார்த்துச் சொல்லுகின்றான்.—

ஓ கபடநாடகா! உன்னுடைய கற்பனையிலுலும் உன் காந்தியிலுலும், நஞ்சனைய வஞ்ச நிறைந்த உன் நெஞ்சத்திலுலும் நீ கொஞ்சமேனும் யோசிக்காமற் சொல்லிய சாஸ்திரங்களிலுலும், இவ்விடத்திலிருப்போருடைய பக்கச்சொல்லின் பலத்திலுலும், என்னை மயக்கிமருட்டி நாடுபெற்றுக்கொண்டு போகவல்லவோ நாடி ஓடிவந்தாய்! அடடா நாரணனே!! நீ ஓடிவந்ததற்கு நான் நாடு கொடுத்தவன்றான்! நீ வாங்கியவன்றான்! ஐயோ பாவம்! பாண்டவர் நீ வரும் வழியைப் பார்த்துக்கொண்டிருப்பார்களல்லவா? 'சமுத்திரத்தின் அலை ஓயப்போகிறதுமில்லை, தம்பி தர்ப்பணஞ்செய்து கலைமுழுகப் போகிறதுமில்லை, என்றும் 'தமயனுக்குப் பெண் வாய்க்கப்போகிறதுமில்லை. தங்கச்சி கலியாணம் முடியப்போகிறதுமில்லை, என்றும் சொல்லுகிற வாக்கியங்களை நீ கேட்டதில்லையோ? இந்த மட்டும் போதும் போதும். எங்களவர்களெல்லோரும் மெத்தத் தெரிந்த பெரியோ ரென்னும் பேர் மாத்திரமே யொழியப் பின்னென்றுமில்லை. உன்னுடைய வஞ்சனையும் சூதும் மாயவித்தை

யும் எனக்குத் தெரியும். இவர்களறியமாட்டார்கள். நீ எல்லோரை யும் மயக்குவாய். நான் உன்னை மயக்கும்படியாகிய உலகுக்கொரு வன், வணங்காமுடியோன், கந்தியாவட்டமாலையன், அரவகேதனன். ராஜாதிராஜப் பிரதாபவீரன், கெடிஸ்தலாதிபதியாகிய என்னை நீ கன்கு மதித்துப்பார். நான் ஆளப்போகிறது அந்நாடாகிய விண் ணுடானுலும் ஐவர் வாழப்போகிறது இந்நாடாகிய மண்ணுடானு லும், அவர்களை வணங்கிப் பணிந்து கைகுவித்து வாழேன்! அவர் களுக்கு நான் தாழேன். அணுவத்தனை நாடும் அவர்களுக்குக் கொடேன்; என்பிராணனிருக்கிற வரையிலும் அவர்களை உயிரு டன் விடேன்! உங்களுடைய யுக்தி புத்திகளைக் கேட்டு நடவேன்! ஒன்றுங் கொடேன்! இதுதான் கடைசிவார்த்தை! நாளை நடக்கப் போகிற அமர்க்களத்தில் அவரவர்களுடைய பெருமையும் பிரதாப மும் வீரமும் தீரமும் வெளிப்படவே போகின்றன. ஆகாயத்தி லிருக்குந் தேவர்கள் வேடிக்கைப் பார்க்கவே போகிறார்கள். இதற் குள்ளாக நீங்களெல்லோரும் ஏன் மனமடிந்து போகிறீர்கள்? திங்க ளைத்தரித்த சங்கரன் வந்துரைத்தபோதிலும, நான் பஞ்சவருடைய பங்கைக் கொடுக்கமாட்டேன். இதோ இங்கு வந்திருக்கும் இந் தப் பெரியோர்களைப்போல் உம்மை மதித்து உமது வார்த்தையை நம்பிக் கேட்கமாட்டேன். என்றந்தையே முதலாகிய உரிய பெரி யோரெல்லாரும் என்னை வெறுத்தாலும், இந்தப் பிரபஞ்சமெல் லாம் என்னைப்பழித்தாலும், என்னைச் சார்ந்தவர்களெல்லாரும் மாண்டழிந்துபோனாலும், பாண்டவர்கள் மறுபடியும் நாடுபெற்ற தாய்ப் படத்திலுமெழுதவொட்டேன், இல்லையென்று என் நாக்கி னாற் சொல்லிய வாக்கியத்தை மறுத்து, மீண்டும் உண்டென்று ஒருகாலுஞ் சொல்லமாட்டேன். திடங்கொண்ட என் மனத்தி னுறுதி'—இது. கிருஷ்ணனே உன்னெண்ணத்தை இப்போதே மறந்து விடு என்றுசொல்ல, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி கேட்டு, திருமுகமண்டலத் தில் திவ்யகாந்தியுடையவராய்ப் புன்னகைகொண்டு மன்னரை நோக்க, அந்நேரத்திற் சபையில் வந்திருந்த முனிவர் மூவரில் ஜம தக்கினி முனிவர் கந்தியாவட்டத்தானின் உடைய காயகனைப் பார்த் துச் சொல்லுகின்றார்.—

ஜமதக்கினி முனிவர்

நரநாராயணர் சரித்திர முரைத்தல்

ஓ ராஜாதிராஜனே! இவ்வுலகத்தில் நரநாராயணர்களென்னு மிருவர் மண்ணுசை பெண்ணுசை பொன்னுசை யென்னும் ஈஷணாத்திரயங்களில் வீழ்ந்து மயங்கி நிலை யில்லாத தோற்பையாகிய பொய்யை மெய்யென விரும்பி விருதாவிலழிகின்ற விவேகசூனியரைப் போலலையாமல், உண்மைப்பொருளை நாடிய உத்தமரென்றுரைக்கும்படியாய் வேடம்பூண்டு, உலகுக்குச் சிஷ்டாசாரத் தன்மையைப் பழக்கிப் பாபத்தையொறுத்துப் புண்ணியத்தை நிலை நிறுத்தவேண்டி இருடிகளாகவந்து, கந்தசுவாமி விளையாடிக்கொண்டிருந்த கந்தமாதனச்சாரலில் யாகங்கள்செய்து, சகல சித்தியும் பெறும்படியாக மௌன விரதம் அநுஷ்டித்துக்கொண்டு வருநாளில் ஒருநாள் இடிகளை பொத்து இடிக்கும்படியான மொழிகளும் சக்ரவாளகிரியைச் சாய்க்கும் பலமும் தேவர்களை நிராயுதபாணியாக ஓடச்செய்யும் பிரதாபமும், வடவாமுகாக்கினியைப் புண்கள் செய்யும் பெரிய கண்களும், இத்தப் பூமியைச் சுற்றிலும் கெல்லும்படியாகிய வில்லும் அஸ்திரங்களும், தலையிற் புனைந்தமுடியும், ஜயவீரக் கொடியும், தானேறிய தேரும், பாபியென்னும் பேரும் தாங்கிய அரக்கனொருவன் வந்து, தவஞ்செய்வோர்களைக் கண்டு, "யாரடா இங்கு தவம்புரியா கின்றவர்? உங்களுக்கு வில்லேன்? பாணமேன்? வீராதிவீரரைப்போலிருக்கின்ற நீங்கள் வெளியே வாருங்களடா" என்று மேகம்போலக் கர்ச்சித்து மொழிந்து, அளவற்ற சரங்களை அவர்கள்மேற் பொழிந்தான். அவனைக் கண்ட புண்ணியசீலர்களிருவரும் இவனுடன் நாம்பொருதால் நமது தவங்கெடுமென் றெண்ணி அந்த அரக்கனுக்கு அதிக உபசார வார்த்தைகளைச் சொல்லி, "அப்பா! நாங்கள் தபசிகள். மிருக பயங்கரத்திற்காக வில்லும் பாணமும் வைத்திருக்கின்றோம். மற்ற வேறொன்றுக்குமல்ல. மேலும் எங்களை நீ ஜெயித்ததாக விஜயஸ்தம்பம் காட்டிக்கொண்டு எங்கள்பேரில் தயவுசெய்து அப்பாலே நீங்கிப்போ" என்று அவர்கள் அடங்கிச் சொல்லியும் அந்த வார்த்தைக்கு அவனெப்பாமற் குப்பல்குப்பலாகக் கணைகளைச் சொரிந்தபோது, முனுக்குக் கோபம்

வர்த்து வில்லை வளைத்து, ஆகர்ணபரியந்த மிழுத்து, அமோகமாக அஸ்திரங்களைப் பிரயோகித்து, அவனுடைய வீரப்பட்டத்தையும் கவசத்தையும் அறுத்து, வில்லை இரண்டுதுண்டாய் முறித்து, மார்பிலும் வயிற்றிலும் தோளிலும் தாளிலும் மூழ்கித் துளைக்க முனையம்புகளை யெய்விச் சின்னபின்னப்படுத்தி, தேரையும் அவன் பேரையும் அழித்துச்சிதைத்து உதிரவெள்ளம் பெருகச் செய்து, உலகுக்குபகாரஞ் செய்தருளினன். அந்த நாராயணரென்னும் இருவரும் இந்த யுத்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணதேவராகவும் அர்ச்சுனராகவும் ராஜகுலத்திலவதரித்து, உங்களிலொருவரா யிருக்கின்றார்கள். அவர்களோ ஒன்றைக்காட்டி ஒன்றை முடிப்பார்கள். அசாத்தியர்கள். அவர்களால் முடியாததொன்றுமில்லை. அவர்களைச் சிக்கித்து வர்த்துத் தாசத்துவம் புகுகின்றார்களிடம் அவர்கள் மிகுந்த நேசமாயிருப்பார்கள்; நிந்திப்பவர்களை நாசஞ்செய்வார்கள். யுகந்தோறும் அவர்கள் பிறக்காவிட்டாற் பாபம் இறக்கமாட்டாது. ஆகையாலிவர்கள் பிறந்தே தீரவேண்டும். இந்தத் துவாபரயுகத்தில் தருமத்தை நிலைநிறுத்தும்படியாய் இவர்கள் பிறந்திருக்கின்றார்கள். இனிப் பிறக்கப் போகிற கலியுகத்தில் ஜனங்கள் தெய்வமில்லையென்று நிந்தனை செய்து, தங்கள் தங்கள் சுயசமயத்தையும் சுயபூஜையையும்விட்டு, இதர மதத்தையும் இதர தேவதையையும் பூசித்து அனுஷ்டிப்பார்கள்; ஆசாரமுதலிய பூஜாவிதியாவுங் கவிர்த்துச் சுசிசுத்தமில்லாமல் வருணசங்கிரமமாகிய கடைப்பட்டோரெல்லாரும், கல்வி சாஸ்திரங்களையும், ஜோசிய நூல்களையும், சாமுத்திரிகா சாஸ்திரங்களையும், வைத்திய நூல்களையும், வேதங்களையும், வேதாந்தங்களையும் கற்றுக்கொண்டு, உயர்ந்த குலத்தோரைப்போல ஸ்தானம் பூஜை - ஆசாரம் - சுசி-சுத்தம் - வைதிகம் - மாண்பு - கௌரவம் உடையவர்களாய், மற்றவர்களுடைய வீடுகள்தோறும் சென்று, மரியாதையும் உயர்ந்த ஆசனமும் பெறுவார்கள். முதன்மைக்குலத்தோராகிய பிராமணர் முதலாகிய பேர்களும் கடைப்பட்டோரிடத்திற் கைகட்டிக்கொண்டு காத்திருந்து, வேதநூல் முதலிய கல்விக்கியான மும் குறைந்து இழிவானவன், உபதேசஞ் சொல்லக்கேட்டு இன்பமடைந்து இச்சகம்பேசி இன்னான் இன்னனென்றில்லாமல் முறைமை மாறி இரந்துண்பார்கள். நற்குலமெல்லாம் நடுங்கி யொடுங்கும். நற்குலமெல்லாந் துளிர்த்துத் துலங்கும் 'குப்பையுயருங் கோபுரந் தாழும்' என்பதைப்போலாகும். அப்படி யொருவரை யொருவர் மதியாமற் செட்டழிந்து போகுங்காலையில், இந்தப்பரம புருஷர்கள்

திருவவதாரஞ்செய்து, துஷ்டஜன நிக்கிரக சிஷ்டஜன பரிபாலனம் பண்ணி, உலகத்தை வரிசைப்படுத்தி, வருணச்சிரம தருமம் வகுப் பார்கள். ஆகையால் அரசனே! உங்கள் பாட்டனரும் ஆசாரியரிரு வரும் பெரியதகப்பனை சிறியதகப்பனை இவர்களும் எம்போலியருஞ் சொல்லும்படியாகிய வசனங்களைக் கேட்டு, ஆயர்பாடியில் சேயரா கிய கோபாலர்கள் வீடுதோறுந் தயிர் வெண்ணெய்களைத் தாவி யுண்டு தையலார் சம்பிரமங்களை யனுபவித்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யைப்பணிந்து, அவருக்குச் சந்தோஷம் வரும்படியாய்த் தருமத்தை யனுசரித்துப் பாண்டவர்கட்கு நாட்டைக் கொடுத்து அவர்களுடன் பொருந்திபிருந்து வாழ்வாயானால், பேரும் பிரதிஷ்டை புகழும் டாய்ச் சுகம் பெறலாம். சுவாமியின் அருளும் பெறலாம்—என்றார். அந்த வார்த்தையைத் துரியோதனராஜன் கேட்டுநகைத்து, "இவர்க ளெல்லாரும் இதுவரையிற் சொன்னதெல்லாம் ஒன்றுந் தெரிய வில்லை. தேவரீர் தாம் தாராளமாய் விளங்கச் சொன்னீர் சுவாமி" என்று உபசரித்தான். அந்தவேளையிற் பக்கத்திலிருந்த கண்ணுவ மகாரிஷியானவர் மன்னவனைப் பார்த்துச் சொல்லுகின்றார்:—

கண்ணுவ முனிவர் கருடன் சரித்திரமுரைத்தல்

ஓ துரியோதனராஜனே! பெரியோர்கள் சொல்லைக் கேளாமல் அவமானமடைந்தவர்களின் சரித்திரத்தைச் சொல்லுகிறேன் கேள். முன்னொருபோது தேவேந்திரனுடைய சாரதியாகிய மாதலியென் பவன் திவ்யசுந்தரமோகன வடிவினையுடைய ஒரு பெண்ணைப் பெற்றுவளர்த்து, இந்தப் பெண்ணுக்குத் தகுந்த புருஷன் வேண்டு மென்று சூரிய கிரணந்தாங்கும் இடங்களெல்லாம் தேடிப்பார்த்து வருகையில், ஒருநாள் பாதலத்திலிருந்த நாககுமாரனைக் கண்டு, அவன் சுந்தர வடிவைத் தன்சிந்தையிற்கொண்டு, "அப்பா மிகுந்த அழகினையுடைய என்பெண்ணை யுனக்குக் கலியாணம் பண்ணிக் கொடுக்கிறேன் நீ பெற்றுக்கொள்" என்று சொல்ல, அந்த வார்த் தையை நாக குமாரன்கேட்டு, "ஐயா! எங்களுக்குக் குலப்பகையாய் இருப்பவன் கருடன். அவன் என்தகப்பனையுந் தாயையுங்கொன்று தின்றுவிட்டு, என்னையுங் கொல்லுவனென்று கலங்கிக்கொண்டிருக் கின்றான். அவன் கண்ணிற்படாத காலமெல்லாம் பிழைத்திருக் கின்றேன். எப்போது அவன் கண்ணிற் படுகின்றேனோ அப்போதே காணிறந்தவன்றான். ஐயா இப்படி மகாபலமாகிய பகைகோரிட்டு 'நித்தியகண்டம் பூரணயுள்' என்னும் பழமொழிபோல் வருந்தி ஏக்

கங்கொண்டிருக்கின்ற நான், என்றைக்கிருந்தாலுங் கருடனுல் இறந்து போவோமென்று நன்முய்த் தெரிந்திருந்தும், உமது பெண்ணை விவாகஞ் செய்துகொண்டு நெடுநாள் கூடி வாழ்வதற்கில் லாமல் விட்டுவிடுவது பிரயோசனமில்லை. மேலும் நல்ல பெண் அகப்பட்டாற் போதுமென்னும் ஆசையுடன் எனக்கிருக்கும் விபத் தைச் சொல்லாமற் கலியாணம் முடித்துக் கொண்டால், எனக்குப் பழியும் பாவமும் வந்து சேரிடும். ஆகையாலுற்றது சொன்னேன்'' என்று சொல்ல, மாதலி மிகுந்த சந்தோஷமடைந்து தன்னை மறந் தவனுக உடல் பூரித்து, - ''இவன் வடிவிலும் கல்வி ஞானத்தி லுஞ் சிறந்திருப்ப தல்லாமல், உண்மை மொழியிலும் உயர்ந் திருக்கின்றன். இவனைச் சுகப்படுத்தி நமது பெண்ணை இவனுக்கே கொடுக்க வேண்டும்'' என்று மகிழ்ந்து, ''நாகபாலனே! எங் கள் தேவராஜனுக்குச் சொல்லி உனக்கிருக்கும் கருடனுடைய பகைப் பயத்தை நீக்கித் தீர்க்காயுசா யிருக்கும்படி செய்விக்கி றேன்'' வா என்று கூட அழைத்துக்கொண்டு தேவேந்திரனுடைய சபைக்கு வருகையில் இவர்களுடைய பாக்கிய வசத்தினுல் ஸ்ரீ வைகுந்த வாசனுகிய ஜகத்ரக்ஷகன் தேவேந்திரனுடைய சபையில் வந்தெழுந்தருளி யிருந்த திவ்ய கோலத்தை இந்த மாதலியும் நாக குமாரனுங் கண்டு வணங்கிக் கரத்தைக் குவித்து, நாவால் துதித்து இந்திரன் முதலாகிய தேவர்களையும் பணிந்துகொண்டு, மாதலி தான் வந்த வரலாறுகளை இந்திரனிடத்திற் சொல்ல, அதைக்கேட்ட இந் திரனெழுந்து, மாயோன் மலரடியில் வீழ்ந்து, 'சுவாமி! பக்தவத்ஸல னுகிய பரமதயாளுவே! என் ஸாரதியாகிய மாதலியின் கருத்தைக் கேளும்'' என்று மனுப் பண்ணிக்கொள்ள, அதைக்கேட்ட விஷ்ணு வானவர் சந்தோஷித்து நாக குமாரனைப் பார்த்து ''இனிமேல் நீ உயிர்ப் பயமின்றித் தீர்க்காயுசாக இருக்கக்கடவை'' என்று திருவாய் மலர்ந்தருளித் தமது திருவைகுந்தத்திற் கெழுந்தருளினர். உடனே மாதலியானவன் தேவராஜனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு போய்த் தன் குமாரத்தியை நாககுமாரனுக்குத் தக்கஞ் செய்து, சகலவித அலங்காரசம்பிரமங்களுடன் விவாகமுடித்தான். நாககுமா ரன் தன் மனைவியுடன் நாகலோகம் போய்ச் சேர்ந்து, இங்கிதகிரியிற் சுகமாக வாழ்ந்திருந்தான். இவைகளையெல்லாம் கருடன் கேள்விப் பட்டுக் கடுங் கோபங்கொண்டு, கண்கள் சிவந்து நெருப்புப் பொறிகள் சிதறும்படியாக வந்து தேவேந்திரனைக் கண்டு ''ஓ இந்திரனே! அதிதியினுடைய புத்திரன் நீ. வினதையினுடைய புத்திரன் நான்;

நம்மிருவருக்குந் தந்தையானவர் கசியபப்பிரமா. நாமிருவரும் அண்ணனுந் தம்பியுமா யிருக்கின்றோம். உனக்கு வந்த கன்மை தீமை என்னுடையவை. எனக்குவந்த கன்மை தீமை உன்னுடையவை. இவைகளையெல்லாம் பாராட்டி அநேகங்கோடி ராட்சதரைக் கொன்று உன் பகையெல்லாம் போக்கினேன். உனக்குச் சவுக்கிய முண்டாக்கினேன். அண்டரண்ட பகிரண்டங்களையும் கர்ப்பத்தில் வைத்திருக்கும் லோகநாயகராகிய தேவநாயகனை எனது தோளிற் சுமக்கும் பராக்கிரமத்தை உடையவனாக இருக்கிறேன். இப்பேர்ப் பட்ட யென்னுறவை விரும்பாமல் என்னையும் என் தாயையும் அடிமையாக்கிக்கொண்டு வருத்திய என்பகைவரினமாகிய பாம்புக்கு மிகுந்த உதவிசெய்து, தீர்க்காயுசு வாங்கிக்கொடுத்தா யென்று கேள்விப்பட்டு வந்தேன். ஆனதினால் உன்னை என் சிறகினாலடித்துப் பிடித்துப் பிலத்துவாரத்திற் கொண்டுபோய்ப் போட்டு விடுகிறேன்" என்று சீறி யெழும்பிய கருடனைப் பார்த்து, "ஐயா! நானொன்றுஞ் சகாயம் பண்ண வில்லை. தேவாதி தேவராகிய ஸ்ரீமந் நாராயணமூர்த்தி இவ்விடம் வந்திருந்தார். அவரைக் கண்டு வணங்கிக் கேட்டுக்கொண்ட காகத்திற்கு அந்த ஆதி மத்தியாந்த ரகிதனே அருள் புரிந்தார்" என்று இந்திரன் சொல்லக் கேட்டு, "அப்படியா கல்லதாகட்டும்" என்று வைகுந்தத் திற்குப் போய், லக்ஷ்மிநாராயணனைக் கண்டு வணங்காமனின்று, "இன்று தேவரீர் காகுமாரனுக்குத் தீர்க்காயுசு கொடுத்ததாய்க் கேள்விப்பட்டேன். அவன் எனக்கு நெடுநாட் பகையாயிருக்க, உமக்கு நான் அடிமையாயிருக்க, என் சத்துருவுக்கு அருள்செய்த காரணமென்ன?" என்று மூடுக்ககாகக் கேட்க, விஷ்ணு நகைத்து "ஓ கருடனே! நம்மை காகுமாரன் இரந்துவேண்டினான். ஆதலால் அவன்மீது கடாட்சம் வைத்து அநுக்கிரகஞ் செய்தோம்" என்று சாந்தமாகச் சொல்லவும் கருடன் கேளாமற் கோபித்துக்கொள்ளு வதை நோக்கி "இந்தக் கருடன் கர்வங்கொண்டிருக்கின்றானையால் அதை யடக்கவேண்டும்" என்று திருவுளங்கொண்டு, "ஓ கருட ராஜனே! நீ சொல்லுகின்றது ஞாயமே. ஆனால் அந்த காகுமா ரன் என்னை வணங்கிப்பணிந்து வருந்தியதால் நான்மனமிரக்கம் வைத்தேன். எப்போதும் எனக்குரிய பக்தனுகிய உனக்கு உதவி செய்யாமல் உன்பகையாளிக்கு வரமளித்தது தப்பிதமே. ஆனால் அவனிருக்கும் காகலோகத்திற்குப் போய், அவனுக்குக் கொடுத்த வரங்களைத் திருப்பிவிடுவோம். வருகிறாயா?" என்று அழைக்க,

வருகிறேனென்று வந்துபணிந்த கருடன்மீது கருணையுடையவர் போற்காட்டி, "என்னுடைய இரதத்தைக்கொண்டு வரச்சொல்லும்" என்று சொல்லக்கேட்டுப் பதைபதைத்து "சுவாமி! என் தோளின் பேரில் எழுந்தருளும்" என்று மண்டியிட்டுப் புயங்கொடுக்க, மகா விஷ்ணுவானவர் தமது திருவடியை ஒரு தோளினிடத்தில் காட்டவே, என்புகளெல்லாம் நெக்குவிட்டொடிந்து கீளைத்துப் பூமியில் மூர்ச்சையாய் விழுந்து சோர்ந்த புள்ளரசை நோக்கி, எனப்பா வென்று இருகரத்தாலுந் தழுவியெடுத்து நிறுத்தியபோது, கண் ணீர் சோரவிட்டு 'புண்ணியனே! தேவரீருடைய எண்ணந் தெரி யாமலிளைத்தேன். தேவரீரைத் துதிக்கத்தக்க எறும்புகடை. யானை முதலிய எல்லோரும் பரமபாகவதரென்று இன்று கண்டுகொண் டேன். விவேகசூனியத்தால் வெகுளியுற்றவென்னையும் நாகராஜ னைப்போல் இரட்சித்தருளவேண்டும்" என்று முறையிடலும், திரு வடியைச் சிரத்திலிறுத்திய பக்தவச்சலனுகிய பரந்தாமன் கருடன் மீது கடாட்சம் வைத்து, எப்போதும்போலச் சகலபலங்களு முண் டாகச் செய்து, சிறிய திருவடியென்று திவ்யநாமஞ்சூட்டி, வாகன முங்கொடியுமாகக்கொண்டு ரட்சித்தார். அந்த விஷ்ணுவே இந்தக் கிருஷ்ணமூர்த்தியாகவந்து அவதரித்தவர். கேளும் துரியோதனு! ஆணவத்தாற் பெரியோர் வார்த்தையைத் தள்ளிநடந்து அவமானம் அடைந்தவர்கள் அநேகம் பேருண்டு. ஆகையால் நண்பராகிய ஸ்ரீகிருஷ்ணதேவரும் அன்பராகிய மற்றயாவரும் நாங்களாகிய மூவ ருஞ் சொல்லும் வார்த்தையைக் கேட்டு நடத்துவாயானுல், புகழ்ச் சியும் மகிழ்ச்சியுமுண்டு. இல்லாவிட்டால் நெகிழ்ச்சியும் இகழ்ச்சியு முண்டு. கடைசியில் உயிருமிழந்து போகும்படியாகும். உத்த மனே! 'சிரிக்கச் சொல்பவர் தீயார் அழச் சொல்பவர் அன்பர்' என்னும் பழமொழி அறியாயா?' என்றார். அப்பால் நாரதமகா முனிவரானவர் சந்தியாவட்டை மாலையனைப் பார்த்துச் சொல்லுவ தானுர்.—

நாரதமுனி காலவமுனி சரித்திரமுரைத்தல்

அரசனே! இவ்வுலகத்திற் பூர்வஞ்செய்த புண்ணியபாவ பலத் தினுல் ஏதுமில்லாதவர்கள் இறைவராவார்கள். எல்லாமுடையவர் கள் புல்லராவார்கள். சகல பலமுடைய வீரர்கள் அபலரிடத்தில் அகப்பட்டழிவார்கள். அபலர்சகல பலமுடைய வீரராகின்றார்கள். கீழ்மேலாம். மேல்கீழாம், நாடுகாடாம். காடுகாடாம், ஓடம்வண்டி

யாம். வண்டி ஓடமாம் ஒருவருக்கும் ஒன்றும் சொந்தமில்லை. ஆகையால் நமக்கே பலமிருக்கின்றது. நாமே ஜயிப்போமென்று நினைத்து அகந்தைகொண்டு, பெரியோருரைத்த மொழியை அலட்சியஞ்செய்வாயானால், ஒருநாளைக்கும் உருப்படப் போகிறதில்லை. உத்தமனே! பதினாலுலகுந் துதிக்கும் பாட்டனாகிய பீஷ்மர் துரோணர் விதுரர் முதலிய பேர்களும் உன்னிடத்தில் வைத்த விசுவாசத்தால் இவ்வளவு தூரம் தழுவிச் சொல்லுகின்றார்கள். அவர்களைப் பற்றி நாங்களும் ஆசையாகச் சொல்லுகின்றோம். இவைகளெல்லாம் தள்ளி உன்னிஷ்டப்படி நடப்பாயானால் உனக்குச் சுகம் வரப்போகிறதேயில்லை. அல்லலில்முழ்கி அவஸ்தைப்படுவாய். அதற்கொரு கதை சொல்லுகிறேன் கேள்—ஓ அரவக்கொடியோனே! சூரியகுல திலகனாகிய காதிமகாராஜாவின் குமாரன் விசுவாமித்திர னிடத்தில் காலவ னென்னும் பிரமசாரியானவர் வேதபாட முதலிய வித்தையெல்லாங் கற்று, அவ்வித்தையை விற்று, மகரிஷி யென்று யாவரும் வணங்க வாழுநாளி லொருநாள் ஆசாரியரை வணங்கி விடைபெற்றுக் கொள்ள விசுவாமித்திரர் மனமகிழ்ந்து, 'குழந்தாய்! ஐயந்திரிபில்லாமல் அறியவேண்டியவைகளை யெல்லாம் அறிந்துகொண்டாயா?' என்று கேட்க "தேவரீருடைய அடியிணையருளால் யாவுமுணர்ந்தேன்" என்று காலவர் சொல்லக் கௌசிகர் கேட்டுக் களிகூர்ந்து போய்வாருமென்று விடைகொடுக்க அவர் குருவைப் பணிந்து 'சுவாமி! குருதக்ஷிணை கொடுத்துப்போவது உத்தமம். இல்லாவிட்டால் என்னுடைய மனம் மெத்த வருந்தும். ஆகையால் சுவாமிகள் தடைசொல்லாமல் தங்களுக்குச் சம்மதமானதை அடியேனுக்குக் கட்டளையிடவேண்டும்' என்று கேட்க, விசுவாமித்திரர் 'ஓ காலவ! உனது வணக்கமும்-ஒழுக்கமும்-அடக்கமும்-ஒடுக்கமும்-சாந்தமும்-அன்பும்-எனக்குப் போதுமான குருதக்ஷிணையாயிருக்க, வேறே தக்ஷிணை யென்பதுமுண்டோ? நீயும் நாமும் இரண்டோ? ஒன்றேயன்றி வேறல்லவே! நீ சும்மா தபசு செய்யப் போ" என்று சொல்ல, காலவர் கோபங்கொண்டு, 'நானென்ன எளியவனு? கையிலாகாதவனு? குருதக்ஷிணை கொடுக்காத பாவியருடைய நரகத்திற் கேதுவாகும்படியாய்ச் செய்கின்றீர்கள். அப்படிவேண்டாம். நீர் குருதக்ஷிணை கேளும்; நான் கொடுத்துவிட்டுப்போகிறேன்' என்று சொல்ல, விசுவாமித்திரர் கோபங்கொண்டு, 'நான் சொல்லுகின்ற வர்ணமும் நல்ல ஜாதியுமுள்ளதாய் எண்ணூறு குதிரைகள் குருதக்ஷிணையாகக் கொடு' என்று சொல்ல, 'நல்லதாகட்டும். அவற்றினுடைய நிற

மும் ஜாதியும் எப்போப்பட்டன, சொல்லும்' என்று காலவர் கேட்க, விசுவாமித்திரர் அவரை நோக்கி, "பாலிலுஞ் சிறந்த வெள்ளையும் நீல நிறமுடைய காதும், அசுவ சாஸ்திரத்தின்படி சுழிசுத்த சுபலட்சணமும், வாயு வேக மனோ வேகத்திலும் மேலாகிய கதியையுமுடையனவா யிருக்கவேண்டும்" என்று விளம்ப, அவர் 'அப்படியே கொண்டுவருகிறேன்' என்றுமண்டல விண்டலமெல்லாம் எண்டிசைகளுமோடித் தேடி வருகையில், எவ்விடத்திலுங் காணப்படாமையால் வாடி விசாரமடைந்து, போசனமில்லாமற் கஷ்டப்பட்டு யுற்று வருந்தி, 'ஐங்காதம் போனாலும் அதிமுகம் வேண்டும்' என்பார்களே, அதுபோல இவ்விடத்தில் யாரையுங் காணோமே. ஓ தெய்வமே யென்று கூவியபோது, ஒருமலையினிடத்திலிருந்த பூர்வசிநேகிதனாகிய கருடபகவான் வந்து, 'நீர் யாரையா இவ்விடத்தில் வருந்தியிருக்கின்றீர்' என்று கேட்க, நான் காலவனென்று சொல்லக் கேட்டு ஓடிவந்து, இளைப்பாற்றித் தழுவிக்கொண்டு 'என்னகாரியம் என்னுடைய அன்பரே,' என்று கேட்க, ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டு பழைமை பாராட்டித் தான் வந்த குருதக்ஷிணையின் சங்கதியை விளம்ப, அதை அந்தக் கருடன் கேட்டுத் தலைகுடுக்குற்று, நானும் ஒருநாள் பகவானுடைய வார்த்தையை இரட்டித்தபோது, அவர் தமது பெருமையைக் காட்டப் பயந்து வணங்கிப் புத்தி பெற்றுக்கொண்டேன். அப்படியே நீரும் வருத்தம் வைத்துக்கொண்டீர். உரியோராகிய பெரியோர்களின் வார்த்தையைக் கேளாமல் தடுத்து வந்த பாவம் இப்போது நீர் அனுபவிக்கின்றீர்' என்று கூறி, 'சமுத்திரஞ் சூழ்ந்த இவ்வுலகத்தில் அவ்விதக் குதிரைகளில்லை' என்று சொல்லி, 'தெய்வலோகம் போய்ப் பார்த்து வருவோம் வாரும்' என்று அக்காலவரைத் தன் சிறகின்மேலேற்றிக்கொண்டு கேசரி மார்க்கமாகப் போகையில், காற்றின் வலுவினாலும் சூரிய கிரண வெப்பத்தினாலும் மூர்ச்சை யடைந்து சோர்ந்து சமுத்திரத்தில் வீழவும், அதைக் கண்டகருடன் தனது காலினால் உறுப்பந்து யெடுத்துக்கொண்டுபோய்க் கந்தமாதன பர்வதத்தில் விட்டுத் திகிலையும் பயத்தையும் தெளிவிக்க, மூர்ச்சை தெளிந்தெழுந்த காலவரை நோக்கி, 'போவோம் வாரும்' என்று புள்ளினை அழைக்க, 'நான் குருவுக்குப் பொய்த்தாலும் குறைந்து இளைத்தாலும ஆகாயத்து வழி எங்களப்பாணை வரமாட்டேன்' என்று சொல்ல, அப்பால் இருவரும் பூமியிலிறங்கிவந்து குதிரையைக் குறித்துச் சகலதிவுகளிலுந் தேடித்திரிகையில், ஓ துரியோதனராஜனே! உங்கள் பிதாமகனுகிய

யயாதி மகாராஜன் இந்த அஸ்தினபுரத்தைப் பரிபாலனம் பண்ணிக்கொண்டு வருகாலில், அவரிடத்திற்கு வந்து கண்டார்கள். யயாதி அவர்களுக்கு வந்தனை வழிபாடுகள் செய்து, 'இவ்விடத்திற்கு நீங்கள் வந்த காரியம்' என்ன வென்று கேட்க 'குருதட்சணைக்காக சுப லக்ஷணமுள்ள எண்ணூறு குதிரைகள் சம்பாதிக்கும்படி வந்தோம். எங்குந்தேடி இளைத்தோம். எங்கள் களைபைத் தீர்க்கும் உத்தமகுணமுள்ள உம்மிடத்தில் வந்தோம்' என்று அவர்கள் சொல்ல, யயாதிராஜன் துடிதுடித்துப் பதை பதைத்து, 'என்னிடத்தில் லக்ஷங்குதிரைகளிருக்கின்றன. ஆனால் அவை நீங்கள் தேடி வந்த லக்ஷணமுடையவையல்ல. நானென்ன செய்வேன். ஒருவருடைய காரியங்களை நிறைவேற்றுஞ் சக்தியையுடையவனெவனோ, அவன் வந்தவர்களின் சங்கதியை விசாரிக்க வேண்டும். அதை நிறைவேற்ற மாட்டாதவன் சங்கதிகேட்காமல் உபசரித்தனுப்பிவிட வேண்டும்' என்று பெரியோர் நூல் வழிகளாற் கூறியிருந்தும், நான் பாபத்திற்குள்ளானேன். போகட்டும் ஐயா! மகமேருவைக் கேட்டவர்களுக்கு அவ்வினமான அணுவாகிலும் கொடுத்தனுப்ப வேண்டுமென்றிருப்பதால், குதிரையுங் குணமுள்ள ஸ்திரீயுஞ் சரியென்று தருமசாஸ்திரத்திற் சொல்லி யிருக்கின்றது. ஆகையால், என்னிடத்தில்வந்து உங்கள் குறையைச் சொல்லி மனக்குறைவுடன் போகாமல், நிறைவாகிய சந்தோஷமனத்துடன் என் பெண்ணாகிய மாதவி யென்னுங் கன்னிகையைத் தத்தம்பண்ணித்தருகிறேன் ; வாங்கிக்கொள்ள வேண்டும்' என்று வணங்கக் காலவர் 'கேளும் ஓ மகாராஜனே! குதிரைகளுக்காக நாடு காடு மேடெல்லாம் தேடி வாடி வரும் நான் அப்பெண்ணை எங்கே யிழுத்துக் கொண்டு திரிவேன். எனக்கு வேண்டாம்' என்று பிணங்கக் கருட பகவான் இணங்கும்படியாகப் பேசி, யயாதியின் மனதிற்குச் சந்தோஷம் வரும்படியாகச் செய்ய, உடனே அரசன் அந்த மாதவி யென்னும் பெண்ணைக் காலவருக்குக் கன்னிகாதானமாகச் செய்து, போஜனங் கொடுத்து சமஸ்கரித்து அனுப்பினான். காலவரும் கருடனும் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வையகமெல்லாம் ஐயமறத் திரிந்து தேடி வரும்போது அயோத்திமா நகரத்தை யாளும் இட்சுவாகுமகாராஜாவினிடத்தில் இருநூறு குதிரைகளிருக்கக் கண்டு, 'நாமெப்படி போய்க் கேட்கிறது? அந்த ராஜன் அவைகளைப் பிராணபதமாய் வைத்திருக்கின்றானே, அவை நமக்கு எப்படி கிடைக்கும்?' என்று ஆலோசித்து ஏங்கும்போது, காலவருடைய

ஸ்திரீயாகிய மாதவி 'மகரிஷியாகிய என் கணவரே! என்னுடைய பால்யதசையில் ஒரு பெரியவருக்குப் பணிவிடை செய்து ஒரு மந்திரம் பெற்றிருக்கின்றேன். அதனுடைய பயனென்னவென்றால் நாயகனுமதியிற் பிறரைப்புணர்ந்து பிள்ளைகளைப் பெற்று மறுபடியும் கன்னிகையாகி கிர்த்தோஷமுள்ள கற்புடைய மனைவியாய்க் கணவனைச் சேரலாகும். ஆகையால் இந்த அயோத்தியையாளும் இட்சுவாகு மகாராஜன் தனக்குப் பிள்ளையில்லாமல் வருந்துகின்றனும். அவனைத் தேவரீர் கண்டு பேசி, ஒரு பிள்ளை பிறந்தால் லக்ஷணமுள்ள அந்த இருநூறு குதிரைகளைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுறுதி பெற்றுக்கொண்டு என்னை அனுப்பி வைத்து அவ்வாறு நடந்த பின்பு, குதிரைகளை வாங்கிக்கொள்ளும்' என்று சொல்லக் கேட்டு, இருவருஞ் சிந்தை மகிழ்ந்து சம்மதித்து, இட்சுவாகுவினிடத்திற்போய்ப் பேசிக்கொண்டு, யயாதி மகளாகிய மாதவியை அனுப்பிவைத்தார்கள். அவளிடத்தில் இட்சுவாகு கூடிப் பட்டத்துக்கு ஒருபிள்ளை வசு மகாராஜனென்பவனைப் பெற்றுக்கொண்டு, இருநூறு குதிரைகளையும் மாதவியையும் கொடுத்து வணங்கினன். அப்பால் இந்த மாதவியானவள் முன்போற் கன்னிகையாய்க் காலவரிடம் வந்திருந்தாள். இதைக் கண்ட கருடனனவன் 'குதிரை தேடிக் கொடுக்குங் குளிகையுமக்குக் கிடைத்தபடியால், இந்த உபாயப்படி இன்னும் அறுநூறு குதிரைகளையுந் தேடிக்கொள்ளும்' என்று செலவு பெற்றுக்கொண்டு, தன்னுடைய இடத்திற்குப் போய்விட்டான்.

இவிடத்திற் காலவரும் மாதவியும் குதிரைகளைச் சம்பாதிக்கும்படி இராஜ்யங்களிற் திரியும்போது கங்கை மகத்துவமுள்ள காசிமாநகரத்தில் அரசு செய்யும் திவோதரனென்னும் ராஜனிடத்தில் இதே மாதிரியாக இருநூறு குதிரைகளிருப்பதாகக் கேள்விப்பட்டு அவனிடத்திற் பேசியபோது, 'எனக்கொரு பிள்ளை வேண்டும். தேவரீர் அருள் செய்தால் இருநூறு குதிரைகளையுங் கொடுத்துவிடுகிறேன். அல்லாமலும் என்னுடைய பாக்கியமெல்லாக் கருகிறேன்' என்று அவன் சொல்லக் கேட்டுக் காலவர் மகிழ்ந்து, மனைவியாகிய மாதவியை விட்டு, ஒரு புத்திரன் பிறந்தபிற்பாடு மேற்கூறிய இருநூறு குதிரைகளையும் பெற்றுக்கொண்டார். மறுபடியும் மாதவி கன்னிகைப் பருவம் பெற்று, நாயகனை யடைந்தாள். பின் இருவரும் 'நானூறு குதிரைகள் வேண்டுமே இனி எங்கே அகப்படுமென்று நாடிய

வாறே போஜ ராஜனுடைய சமூகத்திற்குப் போனார்கள். அவனிடத்தில் இருநூறு குதிரைகளிருந்தன. அவனும் பிள்ளை யில்லாமல் மன வருத்தப்பட்டான். மாதவி அவனுக்கு சிபிக்ஷீர்த்தி வர்தனென்னும் ஒரு பிள்ளையைப் பெற்றளித்துப் பழையபடி கன்னிகையாய் இருநூறு குதிரைகளையும் பெற்றுக்கொண்டாள். ஆக அறுநூறு அசுவங்களுடன் வரும்போது, 'இன்னும் இருநூறு அசுவங்கள் வேண்டுமே! மாதவி, இனி நானென்ன செய்வேன்? காலமெல்லாம் குதிரை தேடுவதிலேயே போய்விட்டது. நான் பார்க்காத லோகமில்லை. எவ்விடத்திலும் இனிமேல் இத்தன்மை வாய்ந்த குதிரைகளில்லை. மேல்நடக்க வேண்டியதென்ன?' என்று காயகன் காயகியுடன் யோசிக்கும்போது, பழைய சினேகிதனாகிய கருடபகவான் வந்து கலந்துகொண்டான். காலவர் அவனைக் கண்டு சங்கதியெல்லாம் சொல்லி, 'இன்னும் இருநூறு குதிரைகள் வேண்டும்' என்றார். அதைக் கருடன் கேட்டு,'ஓ காலவரே! நீர் பூலோகமெல்லாம் தேடித் திரிந்தீர். நான் மேல் லோகமெல்லாம் ஆராய்ந்துவிட்டேன். நாம் தேடி வந்த குதிரைகள் நாகலோகத்திலுமில்லை. ஆகையால் இப்போது அகப்பட்ட அறுநூறு குதிரைகளையும் ஓட்டிக் கொண்டுபோய் விசுவாமித்திரரிடத்தில் விட்டு நமஸ்கரித்துக்கொள்ளும். இன்னும் இருநூறு குதிரைகளெங்கேயென்று கேட்டால், அப்போது வணங்கி, சுவாமிகளே ஒவ்வொரு பிள்ளைக்கு இருநூறு குதிரை வாங்கினேனும் என்று உண்மையைச் சொல்லி, அந்தத்தன்மையின்படிக்குத் தேவரீருக்கும் பிள்ளை இல்லாமையினால் இந்த மாதவியிடம் ஒரு புத்திரனைப் பெற்றுக்கொள்ளும். உமக்கும் புத்திரனுண்டாகின்றான். எனக்கும் எண்ணூறு குதிரைகள் கணக்குக்கு வரும் என்று சொல்லி, குருதக்ஷிணையைச் சரிப்படுத்திவிட்டு, உமது மனையாளுடன் தவத்தைச்செய்து வாழும்" என்று கட்டியணைத்துக்கொண்டு சினேகனைவிட்டு நீங்கிக் கருடபகவான் போய்விட்டான்.

அப்படியே காலவரும் மாதவியும் அறுநூறு குதிரைகளையும், ஓட்டிக்கொண்டு, விசுவாமித்திரரிடத்திற் சென்று சாஷ்டாங்கதெண்டனிட்டு, நடந்த வர்த்தமானங்களை யெல்லாஞ் சொல்லி, அறுநூறு குதிரைகளையும் தந்து, மற்ற இருநூறு குதிரைகளுக்கும் வகைமானஞ் சொல்ல, அந்தப்படி விசுவாமித்திரர் ஒப்புக்கொண்டு மாதவியுடன் கலந்து ஒருபிள்ளையைப் பெற்றுக்கொண்டு அந்தப் பிள்ளைக்கு அசுவஷ்டகனென்று பெயருமிட்டு, மாதவியை

யும் காலவரையும் வாழ்த்தி ஆசீர்வதித்து, "அப்பா காலவனே! குரு தக்ஷிணை வேண்டாமென்று சொன்ன எனக்குக் கோபம் வரும்படியாய்ப்பேசி, இவ்வளவு வருத்தம் அடைந்தாய். ஆதலால், இனி மேல் பெரியோர்களின் வார்த்தைக்கு மீறிப்பேசவேண்டாம். இன்று முதற் சிவத்தைப்பேணித் தவத்திலிருந்து பவத்தை யொழித்து நலத்தைப்பெறுவாய்" என்று விடை கொடுக்க, ஆசாரியரிடத்தில் ஆசீர்வசனம் பெற்றுத் தமது பத்தினியாகிய மாதவியுடன் அருமையாகிய தவத்தில் அமர்ந்தார். ஆகையால், துரியோதனு! பெரியோர்கள் பேச்சைக் கேளாத பேதையர்கள் பேய் போல் விழித்து நாய்போற்பாடுபட்ட அனுபோகத்தைச் சொன்னேம். இவைகளையாகிலுங் தெளிந்து யோசித்துச் சுகப்படலாம். மேலும் சந்திர வம்ச திலகனுகிய உங்கள் பிதாமகன் யயாதி, தன்னிடத்துவந்த அவர்களை நோக்கி, எங்குவந்தீர்களென்று கேட்ட தோஷத்தினுல் இல்லையென்று சொல்லமாட்டாமல் தன் பெண்ணைக் கொடுத்தான். அந்தப் பெண்ணினுற் குதிரைகளும் கிடைத்தன. குமாரர்களும் உண்டாய்க் குருதக்ஷிணையுங் கூடியது. காலவனென்னும் மகாமுனியையும் உங்கள் பாட்டனையும் ஜெகமெல்லாங் கொண்டாடினுர்கள். இன்னமும் புகழ்கின்றூர்கள். பெரியோரைப் பூசிக்கும் யயாதி ராஜனுக்குப் போலுகிய நீ, இத்தனை உரிய பெரியோர் சொல்லியும் நாடு கொடுப்பதில்லையென்றல், உனக்குப் பேரும் புகழும் பெருமையும் எப்படி வரும்? பலவந்தருடன் பகைத்தால் பெருமை போம். ஜயம் வராது. பெரியோர் வார்த்தையைப் பூசித்துக் கேட்பாயாகிற் சுகப்படுவாய்!" என்றூர்.—

இப்படியாகச் சொல்லிவந்த ரிஷிகள் மூவரையுந் துரியோதனன் நோக்கி, கண்பொறி பறக்கக் கடகடத்து வெகுளி மேற்கொண்டு "பெரியவர்களே! கேளுங்கள். கிருஷ்ணன் கட்டிக்கொண்டு வந்த கட்டுகளெல்லாம் என் சமுகத்தில் சபைக்கட்டாக முடிந்தனவேயல்லதுவேறல்ல. அஃதிருக்கட்டும்; இவ்வுலகத்தில் எவரேனுந் தங்கட்கு நேரிட்ட ஊழ்வினையைத் தங்களறிவு கொண்டு தள்ளிக் கொண்டதுண்டோ? நீங்கள் கண்டிருக்கின்றீர்களோ? அப்படியுண்டானுல் ஒருவரைக் காட்டுங்கள். இப்போது இருக்கிற புத்தியை விட வேறுபுத்தி யேறப்போகிறதுமில்லை. இதுமாறப்போகிறதுமில்லை. வீணுகக் கிருஷ்ணன் பேச்சைக் கேட்டுவந்து ஏமாந்து

போனீர்கள். ஐயோ பாவம்! எங்களுக்குப் புத்தியில்லையோ? தயை செய்து புத்திசொல்ல நீங்கள் மூவரும் வாருங்களென்று உங்களை நாங்கள் வரிசைசெய்து வரவழைக்கவில்லையே! அன்றெழுதிய அயன் அழித்தெழுதப் போகிறதில்லை யென்று பெண்டுகள் சொல்லும் பழமொழியை நீங்கள் அறியாமல் வழுவித் தெரியாதவர்களானீர்களே, ஐயோ!! ஏன் இவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொண்டீர்கள்? இவையெல்லாம் வீணுகிய கொள்ளையே. நீங்கள் சொல்வது மிகவும் சள்ளையே. வீணுகப் பேசிய வெள்ளை வாய்க்கு வெற்றிலையுமில்லையே! சுவாமிகளே! எங்களை ஏமாற்றி நாட்டைப் பறித்துக் காட்டிலுழன்ற பாண்டவருக்குக் கொடுக்க ஸ்ரீ கிருஷ்ணதேவர் இருக்கின்றார். உலகத்தை ஆளுகிறதற்குப் பாண்டவர்கள் இருக்கின்றார்கள். உயிருடன் கொடுப்பதற்கு நானிருக்கின்றேன். உங்களுக்கென்ன வந்தது? 'எள்ளுதான் எண்ணெய்க் குலருகின்றது' எலிப் புழுக்கையும் ஏன் உலருகிறது?' என்னும் வசனத்தைப்போல் தாங்கள் நித்தியவிதி-சத்தியசவுசம் - ஆசாரம்-பூசை-செபம்-தபம் இவைகளை விட்டு, இவருடன் ஏன் இப்படித் திரிந்து வருந்திக் காலத்தை வீணிற்கழிக்கின்றீர்கள். வேண்டாம் பெரியோர்களே நீங்கள் தவஞ்செய்யும் இடத்திற்கு இப்பொழுதே தயவுசெய்து எழுந்தருளுங்கள். நீங்களிருக்கு மிடத்திற்கு வேறு ஆள் சம்பாதிக்கிறேன்" என்று துரியோதனன் தூறிச் சொல்ல, இதைக் கேட்ட மூன்று ரிஷிகளும் திடுக்கென்று சிங்காசனத்தை விட்டெழுந்து, மிகுந்த கோபங்கொண்டு முகஞ் சுளித்துக் கண்கள் சிவக்கப் பார்த்தார்கள்.

கிருஷ்ணன் கையேந்தி இரத்தல்

அச்சமயத்தில் பீஷ்மாச்சாரியர் திடுக்கென்றெழுந்து, தீர்க்க தண்டஞ்சமர்ப்பித்து, "ஓ மகத்துக்களே இவனே சிறுபிள்ளை; தங்களுடைய சொரூபசுபாவங்கள் இப்பேர்ப்பட்டன வென்று இதுவரையிலும் அறியாதவன். ஏதோ எங்கள் தலையிலெழுத்து காங்களது பலிக்கிறும். தங்களுக்கென்ன வந்தது? இவ்வளவு தூரம் புத்திமதி சொல்லியும் வசத்திற்கு வராத இவனால் இந்தக் குடும்பமெல்லாம் குன்றிப் போகக் காலம் வந்திருக்கின்றது. தாங்கள் கோபங் கொண்டதை விடுத்துச் சாந்த மூர்த்திகளாய் இதையொரு விஷயமாகச் சித்தத்தில் வையாமல், எங்கள் நிமித்தமாய் க்ஷமிக்க வேண்டும்" என்று நயமதுரவசன உபசாரங்கள் சொல்லிப் பணிய, சான்றோர் சினமாகையால் அவர்கள் சினம் உடனே மாறி

யது. பின் அவர்கள் ஆசனத்தில் அமர்ந்தார்கள். அப்போது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் மறுபடியும் வணங்காமுடிபெற்ற மன்னனே நோக்கி, "வாரும் துரியோதன மகாராஜனே! பூமியிலே நற்குணங்களும் நற்செய்கைகளும்-நன்னடக்கைகளும்-சத்தியவசனமும்-தருமசிந்தையும் வகித்துத் தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காக்கும் ஒரு ராஜனும், தூர்க் குணமும்-தூர்ச் செய்கையும்-துராச்சாரமும்-தூர்த்த குணமும்- அதருமமும்- அசத்தியமும் வகித்து, எமனைப் போல மன்னுயிரை வாட்டும் ஓர் அரசனும், ஒருவருக்கொருவர் சண்டைகள்நேரிட்டுப் போர்க்களத்தில் வந்து யுத்தஞ்செய்வார்களானால், தரும குணமும் நித்திய சத்திய வசனமுமுடைய அரசனுக்கு மகாவிஷ்ணுவின் சகாயமும் வீரலக்ஷ்மிகடாக்ஷமும் உண்டாம். அவன் ஜயத்தைப் பெற்றுத் தரணியை ஆளுவான்; மாளுங் காலத்தில் வீர சொர்க்கமும் பெறுவான். அதரும குணமும் அசத்திய வசனமுமுடைய அரசனே அரிவாசுதேவனுடைய அருள் கிஞ்சித்துமில்லாமல், வீரலக்ஷ்மியின் விஜயமுங் கெட்டு அவமானப்பட்டு, அபஜயமுற்று, அரசை இழந்து மாள்வான்; மீளா நரகமுமுறுவான். இது முன்னோர் மொழிந்த நீதிசாஸ்திரங்களிலும் தருமசாஸ்திரங்களிலும் சொல்லியிருப்பது. நீரும் உணர்வீர். ஆகையினால் எத்தனவித பலமும் நலமும் உமக்கிருந்தாலும் பாண்டவர்களுக்கு நீர்சமமாகப் போகிறதில்லை. உம்மைச்சார்ந்த நால்வகைச் சேனைகளையும் இராக்கதர்களையும் படைத்துணையாக வந்திருக்கும் பார்த்திபர்களையும் போர்க்களத்தில் மாளச்செய்து, பூமியைப் பெறுவோமென்னும் பூரிப்பு பாண்டவர்களிடத்திலில்லை. ஒருவேளை சபையிற் சபதங் கூறியிருக்கிறார்களென்று நினைப்பீரானால், உடனே சமாதானப் படுத்துவதற்கு நாங்களெல்லாரு மிருக்கின்றோம். சூதாடிப் பறித்துக்கொண்ட நாட்டில் அதிகங்கொடுக்க வேண்டுவதில்லை. பெரியோர்கள் சொல்லும் தரும நீதியின்படி ஐந்தூரேனுங் கொடுப்பது உத்தமம். அதுவுங் கூடாதென்றால், உம்முடைய மனத்திற் குகந்த தெவ்வளவோ அவ்வளவு கொடுத்தாலும் அதுவும் நமக்குச் சம்மதமே. அரசனே நான் தூது வந்தது பிரயோஜனமில்லை யென்று போகாமலும், பெரியோர்கள் சொல்லிய பேச்சைத் தள்ளினென் துரியோதனனென்று உமக்கொரு ஏச்சுவராமலும் உமது மனதுக்கிசைந்ததைத் தயவுசெய்யும்" என்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி இருகரத்தையும் கீட்டி இரப்போரைப்போல் கேட்க, அதற்கிசையாத துரியோதனன்—"சபையிலிருப்பவர்களே! இவ்வுலக

வழக்கம் எவர்களுக்கு எவர்களிடத்தில் இஷ்டம் பிறக்குமோ அவர் களைச் சமர்த்தரென்று தனக்குத் தானே புகழ்ந்து மகிழ்ந்துகொள் வதுண்டு. அது இப்போது தெரியவந்தது. தருமமுள்ளவன் ஜயம் பெறுவானென்றும், அதருமமுள்ளவன் அபஜெயப்படுவா னென்றும் அன்பினுற் சொல்பவர்களுடைய வாக்கியத்தைப் போர் முகத்திற் பார்க்கவேண்டும். புண்ணியர்களே! போனதெல்லாம் போகட்டும். தர்மமுள்ள பாண்டவர் ஜயித்தால் அவர்களே அரசா ளட்டும். அதர்மமுள்ள நான் ஜயித்தால் நானே ஆளுகிறேன். இதைவிட மறு மொழி வேறொன்று மில்லை'' என்று சொல்ல அதைக் கிருஷ்ணமூர்த்தி கேட்டு, ''வேந்தே, யாவரானும் வீணு கச் சண்டை செய்து விறுதாவிற் சாவானேன்'' என்று சொல்லி, மகாபலியினிடத்தில் மூன்று லோகத்தையும் வாங் குமபோது ஒரு காலத்தை நீட்டிய அவர் பாண்டவர்களுக்காக இந்தப் பூமியைப் பெறுவதற்கு இரண்டு காலத்தையும் நீட்டி இரந்து ''பெரிய மனது செய்து நாஸ்தியென் றுரையா மல், ஜாஸ்தியாபுங் கொடாமல், முன் பாத்தியமாகிய நாட்டை மாத்திரம் பாலித் தருளும்'' என, அதைத் துரியோதனன் கொடுக்க மாட்டே னென, 'ஐந்தூராகிலும் தயவுசெய்யும்' என்று எழுந்து இரு காலத்தினாலும் இரக்க, அதைத் துரியோதனன், கண்டு, 'அம்மணமானவனுக்கு அரைக்கீரை அகப்பட்டாற்போதாதா? ஐயா! நிலைகெட்டுக் காடேகுதியாகத்திரிந்த ஐவர்களுக்கு இவ்விடத்திலொரு வீடு கொடுத்தாலும் போதுமே! கண்டோங் கண்டோமென்று கண்களி லொத்திக் கொள்ளுவார்களே. அவர்களும் வேண்டா மென்று சொல்லப்போகிறதில்லையே! வேண்டுமென்கிற உமது எண்ணத்தின்படி நான் கொடுக்கப் போகிறதுமில்லையே! நீரேன் கையை நீட்டிக்கொண்டு காத்திருக்கின்றீர். அதற்கென்ன? காரிய வாதி கையையு நீட்டுவான்! காலிலும் வீழ்வான்! ஏன் வீணுய் உடம்பை ஒடித்துக்கொள்ளுகிறீர்? போம்போம்'' என்று கடிந்துரை யாடினன்.

அதை ஸ்ரீ கிருஷ்ண பகவான் கேட்டு நகைத்து, ''வேந்தே, உமது வமிசத்தில் தந்தையாகிய சந்தனுமகாராஜனுக்குப் பரிமளகந் தியைப் பாரியாளாக்க, அவளுடைய பிள்ளைகளிருவருக்கும் இராஜ் யத்தைக் கொடுத்து, காம் பீஷ்மம் பெற்றுக்கொண்ட மேலோரா கிய உமது பாட்டனுர் பீஷ்மாசாரியர் இதோ உயிருடனிருக்கின்

ரூர். இப்படிப்பட்ட தருமமுள்ள குலத்திலுதித்த சிரேஷ்டனே! சகல சொத்தமும் முள்ள சிறிய தந்தையாகிய பாண்டுவின் பிள்ளைகளுக்குப் பாதிராச்சியமும் கொடுப்பதில்லையென்று ஒரே உறுதியாகப் பேசினால் உனக்கிந்த நாடும் இந்த அரசும் நிலைக்காவே. ஒரு குலத்திற்பிறந்த பிள்ளைகளிரண்டுபேரும் ஒத்துவாழ்வதே உத்தமம். ஒவ்வாமல் பேதப்படுத்திக்கொண்டுஅனுபவிப்பது மத்திமம். ஒருவர் பங்கை ஒருவர் பறித்துக்கொண்டு துண்மார்க்க வழியில் வார்த்தை கழுவிப் பேசுவது அதர்மம். ஒரு பங்காளி சவுக்கியமடைய ஒரு பங்காளி துன்பப்படுவது அதர்மாதர்மம். இப்போர்ப்பட்ட அதிசயங்களை யெல்லாம் கண்ணிலுற் காணும்படி ஈசன் நம்மை ஏற்படுத்தியிருக்கின்றான்" என்று விசனப்பட்டு, "இது தருமத்திற் கொவ்வாத காரியமே யன்றி வேறல்ல" என்று ஸ்ரீநாதன் சொல்லிச் சலித்துக் கொள்ள, அதற்குத் துரியோதனன் "கிருஷ்ணரே! எத்தனை தரம் சொன்னாலும் உலகாளும் அரசருடைய தன்மையை அறிந்து கொள்ளுவதற்கு உமக்கு அறிவுபோதாது. நீரென்ன செய்வீர் பாவம். மாட்டுடன் பழகிய புத்திமான் மனிதருடன் பழகுவது வருத்தம். இன்னும் பழகிக்கொண்டு வாரும் போம்" என்று துரியோதனன் சொல்ல, இந்த வார்த்தையைக் கேட்ட பீஷ்மர்-துரோணர்-கிருபர்-திருதராட்டிரர்-முதலாகிய பெரியோர்க ளெல்லாரும் கடகடவென்று நடுங்கிச் சொல்லுகின்றார்கள்.—

'ஓ துரியோதனா! இந்த ஜகத்தையெல்லாம் படைக்கும் திருவுந்தியை யுடைய ஸ்ரீமன்நாராயணமூர்த்தியே ஸ்ரீ கிருஷ்ணதேவராய் வந்து நமக்குத் தரிசனந்தந்து, இருகாதாலிரந்து நாடுகேட்க, நீ கூடாதென்று கூறுவது ஞாயமன்று. முன்பின் யோசித்து விளையப்போகிற வினையையும் ஓராமல் எம்போலியர் சொல்லிய வார்த்தையும் கேளாமல் ஓரே பிடிவாதமாய் என்னண்டையிலிருக்கும் வீரர்களைக்கொண்டு சண்டைபண்ணிப் பாண்டவரை அண்டவொட்டாமல் ஜயித்து நாடாள்வேனென்று சொன்னதையே சொல்லுகின்றாய். அப்பால் உன்னிஷ்டப்படி கட" என்று எல்லோரும் மிகுந்த விசாரத்துடன் ஓவென்று கூவி இரைந்தார்கள். இவையெல்லாம் அண்டையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த துச்சாதனனவன் துரியோதனனை வணங்கி, 'அண்ணா! இந்தக் கிருஷ்ணன் இவ்விடம் வந்திருக்கும் சந்திரமும், வீணாய் நமது பெரியோர்கள் அவரைக்கண்டு திகைத்துமயங்கி யெண்ணிக்கொண்

டிருக்கிற மந்திரமும் பார்த்தால், துராக்கிர்தமாய் உமது கையைப் பிடித்துக் கிருஷ்ணன் கைமேல்வைத்து, நாடுகொடுத்தான் நாடு கொடுத்தானென்று கூவிக் கையறைந்து, பாண்டவர்களையும் அழைத்து உமது காலில் விழச்செய்து, எல்லோரும் ஒரே முகமாயிருந்து ஐவராகிய இவர்களைக் காப்பாற்றுமென்று சொல்லுதற்காக எண்ணங்கொண் டிருக்கிறார்களென்று நான் நினைக்கிறேன். ஆகையால் இந்தச் சபையைவிட்டெழுந்து அரண்மனைக்குப் போவது நன்மார்க்கமென்றெண்ணுகிறேன். ஓ அண்ணா! தேவரீர் சித்தம் என் பாக்கியம்'' என்று சொல்லவே, தட்சணத்தில் துரியோதனன் எழுந்தான். உடனே கர்ணன்-சகுனி முதலிய அரசர்களெல்லாரும் சிங்காசனத்தை விட்டிறங்கிச் சபையைவிட்டு நீங்கி அவரவர்கள் வீடுதிக்குப் போயினர்.

இப்பால் கன்றால் கனியுதிர்த்த காசாம்பூவண்ணன் திருதராட்டிரனை நோக்கி "ஜகபதியாகிய தேவே கேளும்! இந்தத் துரியோதனனால் உலகமழிந்து போம்! அவனுமழிந்து போவான்! பந்து புத்திர மித்திரர்களையும் குடும்பத்தையும் துடைக்கும் துடைகாலனை நீர் சிரேஷ்ட புத்திரனென்று பட்சம் விடாமல் எண்ணியிருப்பது மகாபாவம். பூர்வத்தில் கம்சனென்னப்பட்ட எங்கள் கல்லம்மான் எவர்கள் சொன்னாலும் கேளாமல், தன்னறிவு கொண்டும் நடவாமல் தங்கள் தாய் தகப்பனை ஓடுக்கி எங்கள் தாய் தகப்பனை விலங்கிட்டுச் சிறையில் வைத்து, வெகுவாகிய அக்கிரமங்களைச் செய்துகொண்டு வந்தான். அவனுடைய அக்கிரமச் செய்கைகளைப் பொறுக்கமாட்டாத அவனுடைய தகப்பன் என்னை யழைத்து, மனோபீஷ்டத்தை உண்மையாகச் சொன்னான். அதற்கு வேண்டிய யுக்திகளைச் செய்து அவனை முடித்துவிட்டுக் குலத்தைப் பெருமைப்படுத்தி நலத்தை விளைத்தோம். இது உலகறிந்த விஷயமாகும். அதுபோல் சொல்லுக் கடங்காத பிள்ளையைத் தக்கபடி செய்துவிட்டு, பாசகர்மங்களைப் பரிகரிக்க வேண்டியதே சரி; மேலும் தனது சரீரத்தில் ஒரு கட்டியாகிய ரணமெழுந்தபோதே அதைத்திரணமாயெண்ணி அறுத்தெறிந்தால், அது ஒருநாளுபத்திரவம் கொடுத்துப் பலகாலுஞ் சுகதோஷத்தைக் கொடுக்கும். அப்படிச் செய்யாவிட்டாற் பலகாலுந் துன்பப்படுத்தும். அதுபோல நூறுபிள்ளைகளில் இவனொருவன் குறைந்தால் உமக்குப் பெரிதல்ல. நீர் மோட்சவீடு பெறுவதற்குங் குறைவில்லை. 'பலதீட்டுக் கொருமுழுக்கு' என்பது

போலும் 'பலகாலைய துக்கம் ஒருகாலையில் விலகும்' என்பது போலும் செய்துவிடுவதே நல்ல உறுதி" என்று சொல்லி, "ஐயோ! குலத்தினலமுங் குணமுங்கெட்டனவே" என்று ஸ்ரீ கிருஷ்ண தேவர் விசனப்படுவதைப் பிறவியந்தகன் கேட்டு, மிகுந்த துக்கத் தோடு பொம்மலும்-விம்மலும்-பொருமலும்-செருமலும்-பெருமூச் சும் உடையவனுய்த் துரியோதனனே அழைத்துவா வென்று ஒரு தூதனே யனுப்ப, அப்படியே தூதுவன் போய்ச் சொல் லக்கேட்டு, நமது தந்தை அழைக்கிறபடியால் நமது கருத்துக்கு விரோதமிராதென்று அதி சீக்கிரத்தில் அரசர் கூடியிருக்குஞ் சபைக்கு அரவக்கொடியோன் வந்து சிங்காசனத்திலமர்ந்தான். உடனே திருதராட்டிரன் தெரிந்துகொண்டு துரியோதனனே நோக்கி "அப்பா துரியோதனு! பெரியோரெல்லாரும் பேசிக்கொண்டிருக் கையில் நீ பேசாமலெழுந்து போய்விட்டாயே! இதுவோ பெரிய தனம்? காரியமில்லாத கடையனுஞ் செய்யமாட்டானே இதை! என் கண்ணே! வந்தவருக்குப் பூரணமான உத்தரஞ் சொல்லி, எல் லோரும் சம்மதிக்கும்படியாய்க் காரியத்தை நடத்திப்போவது சபைக்கு நாயகனுகயிருப்பவன் செய்யும் நலம். அதனுல் நமது குலமும் வாழ்நாளுந் தழைக்கும். ஆகையால் இன்னம் உனக்கு நல்ல புத்தி என்றைக்கு வருமோ" என்று கண்ணீர் விடுத்தார். துரியோதனன் "எத்தையே தூதுவந்தவர்களின் சங்கதி தெரிந்து கொண்டு தக்க உத்தரஞ் சொன்னுல், அதைக் கேளாமல் தடுத் துப் பேசியபடியால் அதனு லெனக்குக் கோபம் வந்தது ; எழுந்து போய்விட்டேன். இனிமேலும் நான் சொல்லவேண்டிய வார்த்தை ஒன்றுமில்லை" என்று சொன்னன். மணிவண்ணன் மீண்டும் அவனே நோக்கி "அண்ணலே! பெரிய மனசு பண்ணும். சகல ஜனங்களும் ஒருவனுற் சுகப்படுவது பெருமை. ஒருவனுல் வெகு ஜனங்கள் கெட்டுப்போவது பெருமையல்ல. ஆகையால் இவை யனைத்தையும் நீர் நிதானித்து யோசித்துக் கவனித்து, வருங்காரியம் போங்காரி தெரிந்துசொல்லும்" எனறு சொல்ல மகுடாதிபதியாகிய துரியோ தனன் கேட்டு மிகுந்த கோபங் கொண்டு, கண்கள் சிவந்து கனன்று "இந்தக் கர்மபூமியை நான் கொடுக்கவும், அதைப்பாண்டவர், பெறவும், நீர் நடுவே தூது பேசவும், பெரியவர்க ளெல்லாரும் எனக் குப் புத்தி சொல்லவும், இத்தனை விபரீதம் என்னத்திற்கு? ஓரே வார்த்தை உரைக்கின்றேன். சுத்தவீரனுனவன் யுத்தம் பண்ணி வெற்றிபெற்று இராச்சிய முற்றிலும் கட்டிக்கொள்வதே காரியம்.

ஒருவனே ஒருவன் இரந்து, ஒருவன் கொடுக்க ஒருவன் பெறுவது அகாரியம். ஆகையால் நீர் பாண்டவரிடத்திற்குப் போய், இந்தச் செய்தியை நான் சொன்னதாகச் சொல்லும். அவர்கள் வெகு சந்தோஷப்படுவார்கள். வீரமென்பதும் ஜெயமென்பதும் புகழென் பதும் உமக்குத் தெரியா. அவர்கள் சந்தோஷப்படும்போது நீருங்கூடச் சந்தோஷப்படும். ஓ கிருஷ்ணா! இப்போதே எழுந்து போம்" என்று துரியோதனன் சொல்ல, ஸ்ரீ கிருஷ்ணபகவான் சற்று நிதானிப்பவர் போலிருந்து, "ஓ துரியோதனராஜனே! நீர் சொன்ன காரியமெல்லாம் சரிதான். ஆதியில் இந்தச் சபையில் நீர் சொல்லியிருந்த வார்த்தையை மறந்து, பதின்மூன்று வருடங் காலங்கழித்து வந்த பாண்டவர்களுக்கு இராச்சியங்கொடுக்க மன தில்லாமல் எப்போது சொற்சோர்வு பட்டீரோ, அப்போதே உமது பேச்சு நிதானமற்று அசைவுகொண்டுவிட்டது. ஆதலால் அரசே! யுத்தமே சரியென்று சொல்லுகின்ற வார்த்தையின் வண்ணம் அதி லாவது நீர் நிலையாக நிற்பீரென்று நானெப்படி நம்புவது? அதற்கா கிலும் சகலமானபேரும் அறியும்படியாய்க் குருக்ஷேத்திரத்திற்படை கூட்டிக்கொண்டு வந்து பாண்டவர்களுடன் யுத்தஞ் செய்வது நிச்சயமென்று கைபோட்டுக் கொடும்" என்று தமது கரத்தை நீட் டினார். கருணையங்கடலாகிய கண்ணன் அந்த வார்த்தையைச் சொல்லத் துரியோதனன் கேட்டு, செவ்வரக்கிலும் செம்புருக்கி லும் செம்முருக்கையிலும் செம்பவளத்திலும் மேலாகச் சிவந்து பொறிபறக்குங் கண்களையுடையவனுய்ச், சிங்காசனத்திலோங்கி அறைந்து, யாவரும் திடுக்கிடக் கூவியிரைந்து படபடப்புடன் விரைந்து, மனங் குலைந்து, பலவாறுன தூஷண வார்த்தைகள் சொல்லத் தொடங்கினன்.—

தூது வந்த மனிதனே! இடையர் குலம் புகுந்து தாழ்ந்த தொழிலாகிய மாடுகள் கன்றுகளை மேய்த்துக் கோபால ஸ்திரீகளை யேய்த்து, அவர்கள் வீடுகளிற்கட்டிய உரிகள்தோறும் வெண்ணெ யுந் தயிரும் வேண்டியமட்டுந் திருடியுண்டு அந்த இடைச்சியர் கண்டுபிடித்துக் கயிற்றினுற் கட்டி உரலுடன் சேர்த்தால் ஊர்ந்து உட்கார்ந்தழுது மான ஈனமில்லாமல் மதி கெட்ட நீ, எல்லாக் குலங் களிலுமுயர்ந்த மதிமரபினனுகிய என்னை உன்னைப் போல் நிந்தித் துக் கைபோடச் சொல்லிக்கேட்டாய்! உன் தைரியமேதைரியம்! ஆ! ஆ! மாடுமேய்க்குங் கோல் கொண்ட உன் மரக்கை மீது, செங்கோல்

தாங்கி இச் செகத்தை யாளும் மன்னன் மலர்க் கையோ அடிப்பது? திருட்டிற் பழகிய உன் கையில் திருட்டு நீங்கத் தெண்டிக்கும் என் கையோ அறைவது? முல்லைக்காட்டிற் பல்லைக் காட்டி புல்லைப்பிடுங் கும் உன் கையின்மீது, ஐவரைக் காட்டிற் செல்லக் கடுக வோட்டிப் பூட்டுஞ்சொல்லை காட்டுவிக்குமென்கையோ போடுவது? ஓ! ஓ! உமது குலமும் உமது கலமும் மற்றயோக்கிய முதலிய சிலாக்கியமெல்லாந் தெரிந்துகொண்டேன். அந்தமட்டும் நீர்மெத்த புத்திசாலி. நல்ல காரியஞ்செய்தீர்! சீக்கிரம் நடவும். பாண்டவர்களைக் குருக்ஷேத் திரம் வந்து சேரச்சொல்லும். நீருங்கூடவிருந்து சகலபலமுஞ் செய்யும். நான் பேச்சுதப்பிப் போவேனென்றல்லவோ கையடிக் கச் சொன்னீர்? நீர் மாத்திரம் சொல்தப்பாமல் வந்துசேரும்; சுயோ தனனுதியரென்னும் சிங்கங்கள் கர்ச்சித்துக்கொண் டிருக்கின்றன வென்று சொல்லி ஐவரென்னும் யானைகளை அழைத்தோடி வாரும், அவல மதியினை யுடையவரே! நீர் சாம்பிரதாய இராஜனுமல்ல, உமக்குப் பட்டாபிஷேக பவிஷுமில்லை. ஆகையால் இராஜமுறைமை முதலியவை தெரியாமற் பேசினீர். நல்ல ஞாயம். ஓ கிருஷ்ணா! வெகு பேர் கூடிய சபையில் யாவரும் நகைக்கத் திரௌபதையைத் துகிலுரிந்தபோது பார்த்திருந்த மானமில்லாத வீரர்களுக்கு என்ன சூரத்தனம் ஏற்படுத்தினீர்? எவ்விதச் சேவகராக்கிவிட்டீர்? திருடர் சேவகராகும்போது சேவகர் திருடராவது ஞாயமல்லவோ? ஓ சொற்சோர்வு படாதவரே! இதுவரையில் யான் சொல்லிய ஓரே உறுதியான வார்த்தையைப் பலமுறை கேட்டும் என்ன மதியைக் கொண்டு அடிக்கடி விவகாரம் பேசவருகிறீர்? மாயவரே! குந்திதேவி யானவள் ஐந்து புருஷரைச் சேர்ந்து ஐந்துபிள்ளைகளைப் பெற்றாள். அவ்வைந்து பிள்ளைகளும் தாய்கடந்த முறைமை தப்பாமல் திரௌ பதியாகிய ஒருத்தியைப் பெண்டாக வைத்துக்கொண்டு திரிகிறார்கள். அவ்வாறேனுந்திரிந்து தக்கபடி பிழைக்கமாட்டாமல் உழலுகின்ற பேயராகிய பாபிகளை, எனக்கு அண்ணன் தம்பிகளென்றும் எனது சிறிய தகப்பன் புத்திரரென்றும் என்பங்குக் குரிய பங்காளிகளென் றுங்கூறி, அவர்களுக்குப் பாதிராச்சியங் கொடுத்து அவர்களுடன் கலந்து வாழும்படியாகப் புத்திசாலிகளும் புத்திகெட்டுப் போய்ச் சொல்லுவார்களானால், இது எவர்க்கு மேலாகிய ஆச்சரியமாயிராது? இவ்விஷயத்தில் நீர் பேசுகிறவைக ளெல்லாம் விந்தையாகவே யிருக் கின்றன" என்று சொன்னான்.

விதுரன் வில்லை யொடித்தல்

அந்த மொழியைக் கேட்ட இன்சொலார்க் கினிய எந்தை யாகிய கெடியோன் புன்சிரிப்புக் கொண்டு "ஓ புயங்கமேதனு! உமக் கெப்படி சம்மதமோ அப்படியே செய்யும்" என்று இராஜ சபையை விட்டுப் பொட்டென வெழுந்து, தத்துவ ஞானியாகிய விதுர மகாராஜன் வீட்டுக் கெழுந்தருளினர். உடனே சபையிலிருந்த பெரியோர்களெல்லா முகம்வெதும்பி, மனங்கனன்று, "ஐயோ! இதென்ன விபரீதகாலம்? இவனறியாதவ ஞகையால் தெரியாமற் கோபித்துக்கொண்டான். தெரிந்த பெரியோர்கள் கோபிப்பார் களோ? எது வந்தாலுஞ் சந்தோஷமா யெண்ணவேண்டியதேயன்றி வெகுளியை மேற்கொள்ளக்கூடாதே" என்று யாவரும் விசனப்பட, அக்காலத்தில் துரியோதன மகாராஜனுக்குக் கோபம் வந்து, தான் அணிந்திருந்த சுத்தியாவட்டை மாலைகளெல்லாம் கறுகறுத்துலர்ந்து கருகவும், தேகமுழுமையும் வியர்வை பெருகவும், செம்பை யுருக்கிய தன்மைபோலுஞ் செவ்வாக்குருகிய குணம்போலும் கண்கள் சிவந்து, நெருப்புப் பொறி சிதறவும் பக்கத்திலிருப்பவர்கள் பதறவும் வாய்மடித்துப் பற்கடித்து மீசைதுடிக்கப் பெருமூச்சுவிட்டு, சபையி லிருக்கும் வெகுபேர்களையும் நோக்கி "கேட்டீர்களா அரசர்களே! இவனுடைய அயோக்கியத்தனம் அறிந்துதான் நான் எழுந்துபோய் விட்டேன். நீங்களெல்லாரும் என்னை மறுபடியும் வரவழைத்தது இந்த அவமரியாதையைப் பெறுதற்கென்று தோன்றுகிறது! ஆகி லும் பெரிதல்ல. 'கோடாலிக்காம்பு சூலத்துக்கினம்' என்பதுபோல ஒருவனுக்குத் தூதாகவந்தவனை வழிமடக்கி விருந்து செய்விக்கவும் உறவாடவும், இவனுக்கென்ன காரியம்? இவனாரவன்? இவனைப் படிச் செய்வான்?" என்று சிறிய தந்தையாகிய விதுரனைப் பார்த் துச் சொல்லுகின்றான்:...

"ஓ நன்றியற்ற விதுரனே! தன்னுண்மையினிலையும் சவுந்தரி யத்தினிலேயும் வசன சாதுரியத்தினிலேயும் மயக்கி, என் செல்வத் தைப் பிடுங்கிப் பாண்டவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று வந்த வேஷதாரி என் வீட்டிற் சாப்பிடாமல் உன் வீட்டுக்கு வந்தால், அவ்விடத்திற் சாப்பிடாமல் இவ்விடத்திற் கேன் வந்தீர் அது முறை யல்லவே என்று திருப்பிவிடாமல் அவனுக்கும் அவன் சேனைகளுக் கும் திவ்விய போஜனஞ் செய்துவைத்த காரியமென்ன?" என்று கேட்டு, அருகிலிருப்பவர்களையும் நோக்கி "என்றந்தையுடன் கூடப்

பிறந்தோ னென்றிருக்குந் தோஷத்தினுல் இவனுக்கும் இவனைச் சார்ந்த பேர்களுக்கும் அன்னவஸ்திர பூஷணாலங்கார வாகனாதிக ளெல்லாம் இவ்விடத்தில் கடந்துகொண்டு வர, அவ்விடத்திற் பட்சம் வைத்து, என்பகையாளியைத் தனக்கும் பகையாளி யென்றெண்ணுமல் 'மாமி மேற்கையும் வேலியோரத்திற் கண்ணும்' என்னும் பழமொழி போல் என்னிடத்திற் சுகமனுபவித்துப் பாண்டவர்களிடத்திற் பலனைக் கொடுக்கும் பட்சமுடையவனுய் மூடத்தெங்கைப் போலிருக்கின்ற கன்றி குன்றிய இந்தப் பாவியைப்பற்றிச் சிந்திக்குமிடத்தில், தாசியின் தன்மை நினைவுக்கு வருகிறது. ஒரு தாசியானவள் பத்துப் பணங் கொடுத்துவரும் தலைவனிடத்தி லிருக்கும்போது, மற்றொரு நாயகன் வந்து பதினைந்து பணந் தருகிறேனென்றுல், பழையவனை விடுத்துப் புதியவனைக் கூடி வாழ்வள். தன்னையநுபவித்தவன் ஊர்ப் பிரயாணம் போனுற் பிரியாவிடை நாயகிபோற் பின்றொடர்ந்து, கண்ணீர் சோர விட்டுத் தேம்பி வெம்பி வருந்தி வழி விட்டு வாடிகிற்பள்; இவ்வுக்குரியவன் தைரியஞ் சொல்லி 'என் பிராணதேசியே! இன்னும் பத்து தினத்தில் வந்து விடுகிறேன் நீ போ' வென்று சொல்லிவிட்டு அவன் போவன். இவள் அவன் போனவழியைப் பார்த்துக்கொண்டு மயங்கியிருப்பவள் போல் அவன் தலை மறைகிற வரைக்கும் நிற்பள். அதற்கு முன் வருஷத்தில் இவளை விட்டுப் பிரிந்த ஒரு நாயகன் அப்போது ஊரிலிருந்து வரக் கண்டு அவனைக் கட்டிக்கொண்டழ, அதற்கவன் அப்போது 'கண்ணே! ஏன் அழுகிறுய்' என்று கேட்பன். அப்போது, நீங்கள் ஊருக்குப் போங்காலத்தில் வழிவிட்டுப்போனேனே, அன்று முதலின்று வரையில் நித்தியம் இந்த இடத்திற்குவந்து நீங்கள் அடி வைத்து நின்ற இடத்தை முடியினுல் வணங்கித், 'தெய்வமே! எங்களிருவரையும் பிரித்த நீ என்றைக்குக் கூட்டி வைப்பா யென்று இறைஞ்சிக்கொண் டிருக்கின்றேன்!' என்பள். அந்தச் சொல்லை வந்த பேதைமகன் கேட்டு மயங்கிக் கையிலுள்ள சம்பாதித்திய மெல்லாங் கொட்டிக் கொடுப்பன். இப்படித் தந்திர உபாயங்களுடன் சமயோசிதமாய்ச் சதிசெய்யத் தக்கது காசிகளின் குல தருமம். அத்தன்மையையுடைய நமது அரண்மனைத் தாசியின் வயிற்றில் பிறந்த இந்த விதுரனுக்கு 'குலத்தளவே யாகுங்குணம்' என்பது போலச் சொந்த குணம் வருமல்லாமல் வேறுகுணம் வருமா? நாம் வெறுத்துப் பேசுவதில் தன்னவன் பிறனவனென்னுந் தாக்ஷண்யமுறுமா? மானமீன மில்லார்தபோர்க்கு

வம்சமென்ன சதமா? இனிக்காரிய மில்லை" என்று துரியோதனன் சொல்ல, சபையிலிருந்த யாவரும் வாயைமெல்ல, கொல்லத்தக்க கோபத்தோடு வில்லையுடைய விதுரனெழுந்து, சுபீரென வியர்த்து வழிய இழிந்து இரு கண்களு மெரிந்து ஜொலிக்க, அக்கினிக் கொழுந்து கபகபவென் றெரிந்து பறக்க, தன்னைத்தான் மறந்து, "அடா துரியா! இந்த ராஜசபைபிலே விசுவாச மேசர்களுக் கெதிரிலே இடக்கர் மொழியாக இகழ்ந்து பேசிய இடும்பா! இதோ உனது காக்கையும் அக்காக்கை வெளிப்படுத்திய உன் வாக்கையு மிழுத்து எனது கைவாளாற் போக்குகிறேன். உதிரம் புரளும் படி யாக்குகிறேன். உன் தலையையு முருட்டுகிறேன். துன்மார்க்கப்பாயலே! இன்னமுயிருட னிருக்கின்றாயோ? ஓ! ஓ! துஷ்டா" என்று எதிர் நோக்கி எழுந்து உறுக்கிவரும்போது, உடனே சிறிது சாந்தமுற்று 'அந்தோ அடா பாவி! இந்த வசனத்தை என்சித்தை வருந்த எப்படி சொன்னயடா துரோகி! இக்நேரம் காக்கை கழுகு களுக்கு நான் உன்னை இரையாக்கி யிருப்பேன். அடா கர்மி! சிறிய தந்தையா யிருந்தும் தெரியாதபிள்ளை சொன்ன வார்த்தையை க்ஷமிக்காமல் துரியோதனனுடைய தலையை யறுத்தான் விதுர னென்று தேவர்கள் பழிப்பார்கள். மற்றயாவரும் நகைப்பார்கள். அதனாலென்னுடைய நன்னெறி நன்னடை நன்னலமெல்லாம் கலியு மென்றெண்ணி மனம் பொறுத்தேனே யல்லது, என்னை இகழ்ந்து பேசிய உன்னை ஒருபொருட்டாக நினைத்து நின்றவனல்லன். இது வரையிலும் உயிருடன் வையேன். உன்காலம் நல்லதாயிற்று. உத்தமனே! மன்னர்க்குரிய சுற்றங்களைத் தழுவி வாழ்பவன் வேந்தன் ஆகையாலும், தூதாக எவர்கள் வந்தாலும் அவர்களை வர வழைத்து அந்த ராஜாகரியமெல்லாந் தெரிந்துகொள்ள வேண்டிய அக்கறைக்காரன் நானாகையாலும், அந்த முறைமையின்படி நான் எதிர்கொண்டுபோய்ப் பிரார்த்தித்தழைத்துவந்து விருந்துஞ் செய் தேன்; உறவாடினேன்; அவருடன் கலந்துகொண்டு பாண்டவ ருடைய எண்ணங்க ளெல்லாம் அறிந்துகொண்டேன்; தூதுவந் தவருடைய மனோபிஷ்டமும் தெரிந்துகொண்டேன். இப்போது தானென்ன? எப்படியு மென் தமையன் பிள்ளைகளாகிய பாண்டவர்களிடம் போய்ச் சேர்ந்தால் என்னைச் சம்ரக்ஷணை செய்யமாட்டார்களா அல்லது அவர்களுக்குப் படைத் துணையாய்ப் போவேனானால் உலகத்தாசரும் நீயும் வேண்டாமென்று என்னைத் தடுக்கக் கூடுமா? இல்லை, உன் கடைக்குப் பயப்படத்தக்கவனோ? இவ்வுலக முழுமை

யும் பாண்டவர்கள் வசம் ஒப்பிவைக்கச் சத்தியில்லாதவனு? அடா புத்தியில்லாதவனே! நாம் அபபடி செய்யலாகாது. நாமிருக்கும் தாயாதிகள் கலகப்படக்கூடாது. ஒருவித சமரசமாய்ப் போகட்டு மென்று உன்னினதேயன்றி வேறல்ல. அப்படியிருக்க இப்படி உன்மனம் போனபடி பேசினுயல்லவோ? நல்லதாகட்டும் உங்களிரு வருக்கும் நாளை நடக்கப்போகிற யுத்தகளத்தில் தாசியின் பிள்ளை யாகிய நான் உனக் குதவியாகவிருந்து வெற்றிபெற யுத்தம் பண்ணப் போகிறதில்லை. இந்தச் சபையறியச் சொல்லுகிறேன். இது சத்தியம்! சத்தியம்" என்று சொல்லிச் "சண்டை செய்யாத என்னண்டையில் இந்த வில்லிருக்கலாகாது. இருந்தாலோ 'பெற்றமனம் பித்து பிள்ளைமனங் கல்லு' என்னும் பழமொழி போற் சமுசாரி பிள்ளை யாகிய உனக்குபகாரஞ் செய்யச் செய்யும். ஆகையால் இதோ மகா பாவிக்குத் துணை யாகாதபடி நான் என் கை வில்லை வெட்டு கிறேன் பாருங்கள் சபையாரே" என்று கூவித் தன்னுடைய வில்லை உடைவாளினுல் இரண்டு துண்டாக வெட்டி யெறிந்து தனது அரண்மனைக்குச் சென்றுன். இப்பால் சபையில் நிறைந்திருந்த அரசர்களெல்லாரும் சஞ்சலப்பட்டுத் தளர்ந்து, "ஐயோ! தேவர்க ளிடத்தி லுள்ள விற்களிற் சிறந்தது பரமசிவனுடைய பினுக மும், விஷ்ணுவினுடைய சார்ங்கமும், ஆகிய இவ்விரண்டுமாம். இவ் விரண்டும் ராஜ வம்சத்தில் பிரபலித்திராகின்ற அர்ச்சுனனிடத்தி லொன்றும், விதுரனிடத்தில் ஒன்றும் வந்திருக்கின்றன வென்று எண்ணி மகிழ்ந்திருந்தோம். அவ் விரண்டில் இன்றைய தினத் தில் ஒன்று அறுந்தது; மற்றொரு வில்லைக் கைக்கொண் டிருக்கும் அர்ச்சுனன் தேர்மீ தேறிப் போர் புரிய வருவானுனுல், அவன் வில்லுக் கெதிர்வில் யாரிடத்திலு மில்லையே. நமக்கு யாதொரு திக்கு மில்லையே! இனி யெப்படி?" என்று அங்குனே சிலர் யேங்கித் தூங்கினுர்கள். அந்த வேளையில் பீஷ்மரானவர் துரியோ தனனை நோக்கிச் சொல்லுகின்றார்.—

"அப்பா துரியோதனு! இதென்ன விபரீதகாலம் விளைவித்துக் கொண்டாய்? தரும சாஸ்திரம்-நீதிசாஸ்திரம்-இராஜதருமம்-இவை யெல்லாம் பழுதுபடும்படி சிறிய தந்தையின் சிந்தை வருந்தத் தீங் காகிய மொழிகளைச் சொல்லித், திரிலோகமும் புகழும்படியாயிருந்த அவன் வில்லை அவனே வெட்டி யெறிந்து, தன் பிராணனிருக்கிற வரையில் உனக்குச் சகாயஞ்செய்கிறதில்லை யென்று சபதஞ்செய்து

தீராப் பெரும்பகையை மேற்கொண்டுபோம்படி செய்துகொண்டாய். நமக்கிருக்குஞ் சத்துருக்களுக்கு நீ சாதிக்கப்போகிறது தெரிந்தே யிருக்கிறது. காங்களனைவரும் வேண்டியபடி என்ன பாடுபட்டு யுத்தஞ்செய்தாலும், பள்ள முள்ள இடத்தில் தண்ணீர் சேரும்; அதுபோற் பாப ரகிதராகிய பாண்டவர்களிடத்தில் ஜயஞ் சேருமே யன்றி வேறல்ல. ஆகையால் எங்களோத்தள்ளி வேறு யாைக்கொண்டு ஜயம்பெற இருக்கின்றாய்? என்ன திட தைரியத்தைக் கண்டு இப் படி தலைகுலுங்கப் பேசினாய்?! ஐயோ பெரியோர் சிறியோரென்றெண் ணுமற் பேசினையே. அந்தப் பாவம் சத்துருக்களுக்குமுன்னே தலை கவிழ்ந்து சகல வளமுமுடைய பூமியையுமிழந்து, போர்முகத்தில் விழுந்து போங் கால கோரிட்டதாய்த் தோன்றுகிறதே. 'காலஸ்ய குடிலாகதி' என்பது போல் வினைவசத்தால் விபரீதம் விளைந்துவிட் டது'' என்று பலவாறுகச் சொல்லி வெறுத்துக்கொண்ட பிதாமக னைப் பார்த்துப் பேரனுகிய துரியோதனன் சொல்லுகின்றான்.—

ஐயா இந்த விதுரனை யல்லது வேறு வில்லாளிகள் இவ்வி டத்தி லில்லையோ? பஞ்சாங்கம் போலுல் அமாவாசையும் கூடப் போய் விடுமோ? வாழ்க்கைப்படும் பெண்ணுக்குச் சீப்பொடிந்துவிட்டால் தாலி கட்டார்களோ! ஓ பாட்டனரே! ஓரூரிற் சாவற்கோழியும் கும் படிச்சட்டியும் வைத்துக்கொண்டு ஒரு கைம்பெண் கிழவி யிருந் தாள். அவளுக்கு ஏதோ அந்த ஊரார் பேரிற் கோபம்வந்து 'ஆ! ஆ! அப்படியா! என் கோழியாற் பொழுதுவிடிகிறதும் கும்படிச்சட் டியால் கஞ்சி காய்ச்சிக் குடிக்கிறதுமாயிருக்க, என்னைப் பகைத்துக் கொள்ளுகிறீர்களா? நல்லதாகட்டும் இனிமேற் பொழுதுவிடிகிறதும் நீங்கள் போசனங்கண்டு புசிக்கிறதும் எங்கே பார்ப்போம். உங்கள் வாயில் மண்ணைப் போட்டுவிடுகிறேன்' என்று அவ்விரண்டையும் எடுத்துக்கொண்டுபோய்த் தன் துணியால் மூடிவைத்துப் படுத்துக் கொண்டாள். நெருப்பு கனிந்து பற்றிக்கொள்ளச் சாவலுந் தானு மாகத் தானே வாயில் மண்ணைப் போட்டுக்கொண் டிறந்துபோய்விட் டாள்—என்று பெரியோர் சொல்லுவார்கள். அதனைப் போல் இந்த விதுரன் வில்லை முறித்துவிட்டால், இந்த வில்லுக்கு அப்பனுகிய வில்லையுடைய வீரர் என்னிடத்தி லெத்தனை பேரிருக்கின்றனர்? அவர்களைச் சொல்லுகிறேன் கேளும். தாதாவாகிய என் சகோதரன் கர்ணமகாராஜன் விருது பெற்ற விற்பிடித்து வெளி வருவாராகில், பாண்டவ ரென்னுஞ் சாகுகளைப் பறந்தோட வடித்து என் பக்கத்தி

லிருக்கும் யாவரும் விஜயங்கள் பாடும்படி செய்வார். தேவரீரிருக்கின்றீர். துரோணர்-கிருபர்-அசுவத்தாமா முதலாகிய அநேகங்கோடி அரசர்களிருக்கவே யிருக்கின்றார்கள். உங்கள் தயவினால் இத்தனை சுத்தவீரரெல்லாருமிருக்க, வழியேபோகிற இடையனை யழைத்து வந்து உறவாடி விருந்துசெய்து மேன்மை சம்பாதித்துக்கொண்ட வேசிமகன் வில்லையறுத்தாலென்ன? அவன் வெறுத்தாலென்ன? அவன் போனாலென்ன? உயிரோடிருந்தாலென்ன? ஒருவேளை பாண்டவர்கள் பக்ஷத்திற் சேர்ந்து நமது பேரிற் சண்டைக்கு வந்தால் தானென்ன? இவைகளுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்" என்று விளம்ப அண்டையில் நின்றிருந்த அங்கதேசாதிபதியாகிய கர்ணன் சொல்லுகின்றான்.—

"கேளும் சபையிலுள்ளவர்களே! அர்ச்சுனன் தலைக்கு லக்ஷயம் வைத்திருக்கும் வீரன் நானொருவனிருக்க, விதுரன் கையில் வில்லைப் பெற்றாலென்ன? அற்றாலென்ன? அவனால் அர்ச்சுனனை ஜயிக்க முடியுமா? ஒருகாலுமில்லை. இதோ எல்லோரு மறியச் சொல்லுகிறேன். இளங்கன்றால் விளாங்கனி எறிந்த ஸ்ரீ கிருஷ்ணன் வந்து தேர்விட்டாலும் இந்திரன் முதலாகிய எண்டிசைப் பாலர் சந்திர சூரியர் முதலிய சகலரும் அவர்களுக்குப் படைத்துணை வந்து பாணம் தொட்டாலும், விஜயனை நானே வெல்வேன். என்னிடத்தில் வளர்ந்து வரும் நாகாஸ்திரத்தாற் கொல்வேன். இவ்விருநிறத்துப் படைகளிலே எனக்கு மிஞ்சிய வீரர் ஒருவரு மில்லை" என்றான். கற்பகமு நாணக்கொடுக்குங் கர்ணன் இப்படிச்சொல்ல பீஷ்மர்கேட்டு மிகுந்த கோபங்கொண்டு, "அடா கர்ணா! தேவர்களாலுஞ் ஜயிக்கப் படாத காலகேய நிவாதகவசரை ஒரு நொடியிற் பகலவன் முன் பனிபோலாக்கி, இந்திரலோகப் பட்டாபிஷேகத்தாற் சூரியனைப் போற் பிரகாசித்து மேன்மையுற்ற கிரீடிக்கு நீயோ எதிராகிறவன்? சந்திரனுக்கு முன் சுக்கிர னீடுபடுவனோ? அவன் முன் நீ ஒளி மழுங்கிப் போவாயல்லது, அவன் திருஷ்டிக் கெதிர்ப்படமாட்டாய். ஆனால் நீ வாய்ப்பேச்சில் வல்லவனேயன்றி விற்போரில் வல்லவனல்லன். நீ உன் காலமெல்லா மிப்படியே கழித்துவிட்டாய். நீ சொல்ல வந்தது போதும்! போதும்! வாயை மூடு!" என்று பீஷ்மர் சொல்ல, கர்ணன், "ஓ பீஷ்மாச்சாரியரே! இதுவரையிலும் இந்த மகாராஜனுடைய அன்னத்தையும், சொர்ணத்தையும் ஆபரணத்தையும் வஸ்திரத்தையும் அநுபவித்து, சமயம் வந்தபோது சத்துருக்

களின் தோளாண்மையைப் புகழ்ந்து பேசுகிற வீரம் தங்களைப்போல் நான் கற்கவே யில்லை. நீராகையால் இப்படி. வியந்து பேசுகிறீர்! நானப்படி வேளைக்கொரு பேச்சு விதம்விதமாய்ப் பேசமாட்டேன். தண்டிற்போனு விரண்டிலொன்றென்று சாதிப்பேன்! என்னை நம்பிய பேரை என் பிராண னிருக்கு மளவும் எருமையின் வாலைப் பற்றி ஆற்றிவிறங்கிப் பிராணனிழப்பவரைப் போலக் கைவிடமாட்டேன். ஈரேழுபதினுன்கு லோகத்துள்ள வீரர்கள் என்பேரிலெதிர்த்தாலும் வெல்லுவேன். முத்தொழிற் காரணராகிய மூவரும் வந்தாலும் என் பாணத்திற்கு இடைத்துபோகும்படியாய்க் கொல்லுவேன். காலை உமது சின்னக் கண்ணுலே பார்க்கவே போகின்றீர்!" என்று கூறக் காங்கேயர், "உன் திறமையை! ஐயோ! நாங்களே பார்க்கப்போகிறோம். அப்பா அங்கதேசாதிபதி! வீணுய் அவசரப் படாதே" என்று அதட்டிக் கூறி, "இப்போதாகவேண்டியதென்ன" என்று நாரதர்முதலான ரிஷிகள் மூவரையும் வணங்கி,விடைகொடுத் தனுப்பிவிட்டுத் தாமும் தம்முடைய அரண்மனைக்குச் சென்றூர். பின்பு துரியோதனன் தன்னைச்சார்ந்த சகலருக்குஞ் செலவு கொடுத் துச் சபையை விட்டெழுந்து அந்தப்புரத்திற்குப் போனன்.

திருத்துழாய் மாலை தரித்த தேவாதி தேவனுகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் சாத்தகியும் சேனைசனியங்களுடன் விதுரன் வீட்டுக்குச் சென்றூர்கள் என்று முன்னமே சொல்லியிருக்கின் றோமே, அவ்விடத்தில் நடந்த அதிசயங்களைக் கேளும் ஜனமே ஜய மகாராஜனே! விதுரன் வீட்டுக்குச் சென்ற வேதநாராயணன் மாணிக்கச் சிங்காதனத்திற் கொலுக்கொண்டிருக்க, நாரதர், கண்ணு வர், ஜமதக்கினி முதலாகிய பெரியோர்கள் வந்து கிருஷ்ணஸ்வாமி யைக் கண்டு, "தேவரீர் சபையை விட்டெழுந்து வந்த பிற்பாடு மிகு கோபியும், வெகு பாபியும், பிடிவாதக்கார லோபியுமாகிய துரியோ தனன் விதுரனை இழிகுறைவாகப் பேசினன். அந்த விதுரன் கோபித்துத் தன் கையிலிருந்த வில்லை வெட்டிப் போட்டு வந்துவிட் டான். அப்பால் பீஷ்மருக்குங் கர்ணனுக்கும் வெகுவாய்ப் பல வார்த்தைகள் வளர்ந்தன. அவருமவன் மேல் வெறுத் தெழுந்து அரண்மனைக்குப் போனர்" என்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு முனிவர் மூவரும் தங்கள் தங்கள் கதியை நோக்கிச் சென்றூர்கள்.

இப்பால் வில்லை வெட்டி முறித்தெறிந்த விதுர ராஜன் தனது வீட்டுக்கு வந்து, திரிலோக நாயகனுடைய சீர்பாதங்களில் வீழ்ந்து

தெண்டனிட்டுக் கை கட்டி வாய் புதைத்துக்கொண்டு நிற்க, அவனை மாயன் உட்காருமென்று உபசரித்துரைத்து, "ஓ விதுர ராஜனே! நானொரு ஆச்சரியங் கேள்விப்பட்டேன். அதாவது பூமண்டலாதிபர் புகழும்படியாகிய விற்கள் இரண்டு. அவை உமது கையிலொன்றும், அர்ச்சுனன் கையி லொன்றுமாக இருந்தன. அதில் இன்று உமது வில் குன்றிப்போனதாய்த் தெரியவந்தன. அஃதென்ன காரணம்," சொல்லுமென்று கேட்கப் பூமியாளும் விதுரன் "சேமியை யுடைய ஸ்வாமியே! பூமியை ஆளுகிறவன் காமியாயும், வாமியாயும், கோபி யாயும், லோபியாயும் இருப்பானுனுல், கடவுள் அவனைக் கெடுத்து விடுவார். காரியாகாரியந் தெரியாத ஒரு கயவனுக்கு ஆகிற காரிய மிது, அழிகிற காரியமிதுவென்று அருகிலிருக்கும் பெரியோர், உரி யோர், மந்திரிமார் முதலாகிய பேர்கள் புத்திமதி சொன்னுல், அத னைக் கேட்க வேண்டும். கேளாதவனுயிருப்பானுனுல் மீளா நரகத்திற் கிரையாவான். ஆகையால் இந்தத் துரியோதனனே சாத்தியாசாத் தியந் தெரியாத வைத்தியனைப்போற் சாகிறதும், பிழைக்கிறதும் அறியான். சாஸ்திரப்படிக்கும் கடவான். சத்திய சவுசமுந் தேறான். பெரியோர் சிறியோரென்றறிந்து பேசான். இத்தன்மை வாய்ந்த பேதையாகிய துராத்மாவுக்குப் பிணைபட்டுத் துணைபட்டு போர்க் களத்திற் போய் விழுந்து போர் புரிந்து புரவலர் முதலிய சேனை களைக் கொல்லுவதைப்பார்க்கிலும், யுத்தகளத்திற்குப் போகாமல் யாத்திரை போவது உத்தமமென்றெண்ணி வில்லை வெட்டி பெறிந் தேன். தீயவருக்குபகாரம் செய்யுஞ் செல்வருக்குத் தீங்கு வரும். அதைவிடச் செத்துப்போவது மேலென்று பெரியோர் சொல்லும் உரிய மொழி யொன் றிருப்பதனுல், மனம் வெறுத்து வந்தேன். மேலும்,

> 'செல்வம்வந் துற்ற காலத் தெய்வமுந் தவமும் பேணுர்
> சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்
> வெல்வதே கரும மல்லால் வெம்பகை வலிதென் ருேரார்
> வல்வினை வினவும் பாரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்.'

என்பது போல, ஓ கிருஷ்ணமூர்த்தியே! ஐச்வரியம் வந்தால் தெய் வத்தையும், தவத்தையும் கொஞ்சமேனும் கருதிப் பாரார்; பேசத் தக்க முறைமை யறிந்தும் பேசார்; பந்து ஜனங்களையும், தோழ மைடாகிய பேர்களையும் கண்ணே றெடுத்துப் பார்க்கமாட்டார். தாங்கள் வெல்ல வேண்டுமென்று கருதுவதே யல்லாமல் எதிரியின்

பலத்தை யெண்ணமாட்டார்கள். இதனால் விளையப்போகிற விளை மூட்டையையும் யோசியார்; அவர்கள் யாரென்றால் இவ் வுல கத்தி லுள்ள சாம்பிரதாயமற்ற மனிதர்கள். இப்பேர்ப்பட்ட மதாந்தகாரத்தை மகமேருவா யெண்ணியிருக்கு மனிதர்களில் தலை மையானவன் அந்தத் துரியோதனன். அதேனெனில் நமது குல பங் துவிற் சிறந்த நாயகனுகிய நீர் இவ்விடத்திற்கெழுந்தருளப் பாக்கியம் பெற்றும் மனங்கலந்து பேசி வணங்கி, வாடிய பயிருக்கு மழை பொழிவதுபோற் பாண்டவர்களுக்கு காட்டைக் கொடுத்து ஒத்து வாழ்வோமென்றெண்ணுமல், என்னையுஞ் சின்னச் சொல்லாலேசிக் கோபமுங் கடினமுங் காட்டி முகங் கூசப் பேசுந் துரியோதன னென்னுங் கர்மியின் முகத்தில் விழிக்கலாகாதென்று மனங் கசந்து, அவனுடைய தலையை வெட்டுதற்குப் பதிலாக என் கை வில்லை வெட்டியெறிந்து போட்டேன்" என்றார்.

அதைக் கேட்ட அரிவாசுதேவன் துடிதுடித்துப் பதை பதைத்துத் "துரியோதனனுஞ் சேனைகளும் நாளைய தினம் குரு க்ஷேத்திரத்தில் யுத்தத்திற்கு வரும்போது நீர் வரமாட்டீர்போலும்! அப்படி செய்யலாகுமா? அவன்றன் அறியாதவன் தெரியாமற் சொன்னலும் அருமையாகிய வில்லை முறிக்கலாமா? யுத்தத்திற்கு வராம விருக்கலாமா? இது தருமமல்லவே" யென்று சுவாமி சொல்ல, "நான் செத்தாலும் வரப்போகிறதில்லை" என்று விதுரராஜன் ஸ்திர மாகச் சொல்ல, அதைக் கண்ணன் கேட்டு, "அப்படியா! நீரஞ் சபத சத்திபந் தப்பாதவர்; காமென்ன செய்யலாம். துரியோதனனுடைய கால கதி இப்படி யாச்சு" என்று விசனப்பட்டு, விதுரனுடைய உள்ளத்துணிவையறிந்துகொண்டு, "ஐயோ! நெருப்பானது எவ்வளவு விறகுகள் போட்டுக் கொளுத்தினலும் நெய்யைச் சொரிந்தாலும், கர்ப்பூரங்களைக் கட்டி கட்டியாய்க் கொட்டினலும், காற்றின் சகாயமில்லாதபோது சற்றுமெரியாது. அது போல எத்தனை பலா பலங்கள் துரியோதனனுக்கிருந்தாலும், உமது சகாயமற்றபடியால் அவைகளொன்றும் உபயோகப்படமாட்டா. உமது புத்திரராகிய பாண்டவர்களுக்கு கல்லகாலமும், காடும் கிடைத்தனவென்று இன்று நம்பினேன். அது உமது வில் செய்த சகாயம் ஆகும். மேலும் பெரியோர் சொல்லிய தருமங்களில் 'அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்' என்றிருக்க உம்மை அவமதித்துப் பேசினனல்லவா? அவனுக்கே கேடு வரும். நீர் விசனப்படாதீர்! விதுரரே! நான்

இங்கு தூது வரவும், நீர் கும்மை யழைத்து உபசரிக்கவும் அவனுக்த இராஜ சபையிலே உம்மை இழிவாகப் பேசவும், நிர் வெகுளிமேற் கொண்டு வில்லை வெட்டவும், இவைகளெல்லாம் என்னல் வந்தவை யல்லவோ? நான் வராதிருந்தால் இவ்வளவு துன்பம் உமக்கு வராதே! நான் பாவியானேன் விதுரரே! என்னைப்பற்றி மனம்பொறும்" என்று உபசரிக்க, அந்த வார்த்தையைக் கேட்டவுடனே விதுர னெழுந்து விழுந்து தொழுது, "சுவாமி! தேவரீரிப்படிச் சிக்தையில் கினைக்க வேண்டியதில்லை. அவன்கெட்டான் துஷ்டன்; தமது எண்ணம் கிறை வேற வேண்டியதே என்னிஷ்டம்" என்று விதுரன் சுவாமியோடு நெடு நேரம் பேசிக்கொண்டிருந்தான்.

கண்ணன் குந்திதேவியிடம் செல்லுதல்

அப்போது சுவாமி விதுரனை நோக்கி "குந்திதேவியாகிய எங்கள் அத்தை யிருக்கும் இடத்திற் சென்று கண்டு, பாண்டவர்கள் பட்ச மாகச் சொல்ல வேண்டிய வார்த்தைகளுஞ் சொல்லி நமஸ்காரமும் பகர்ந்து வருகிறேன் விடை தாரும்" என்று புறப்பட்டுச் செந் தாமரைப் பாதங்கள் நோக நடந்து வருவதாயினர். இவ்வாறு கபட நாடக சூத்ரதாரியாகிய கண்ணன் பெரிய வரண்மனையி லிருக்கும் பாண்டு பூபதியினுடைய தரும பத்னியாகிய குந்திதேவியென்னும் அத்தையாரிருக்கும் அந்தப்புர வாயிலுக்கு நேராக வருவதைக் குளிர்ச்சி பெற்ற பூரண சந்திர பிம்ப முகத்தையுடைய குந்திதேவி யானவள் கண்டு, எதிரோடி வந்து 'கிருஷ்ணமூர்த்தி, வாரும்! வாரும், மருமகனே!' என்று வரவேற்றாள். கண்ணன் அத்தை யினது அடியிணையில் வீழ்ந்து தெண்டஞ் சமர்ப்பிக்க, குந்திதேவி அவரை வாரி யெடுத்து, மார்போ டணைத்து, உச்சி மோந்து உபச ரித்து வாழ்த்தி, நீருண்டு சூற்கொண்ட மேகத்தைக் கண்டு நீலக்கலா பம் விரித்தாடு மயிலைப் போல மயிர்க்குச்சிறிய மகிழ்ந்து, "தம்பி! நானொருத்தி இவ்விட மிருக்கின்றேன் என்னும், என்னை யொரு பொருட்செய்தும் இவ்வளவு தூரம் வருவதற்கு வழி தெரிந்ததோ? மனது வந்ததோ? மகிழ்ச்சி தந்ததோ? மறவாதிருந்ததே என் பாக் கியம்" என்று அழைத்துப்போய் மணியாசனத்திலிருத்தி "அப்பா மரு மகனே! யாவரும் க்ஷேமமா யிருக்கின்றார்களா? நீரிப்போது இந்த அஸ்தினபுரத்திற்கு வந்த காரிய மென்ன?" வென்று கேட்க, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி நகை முகமுடையவராய்ச் சொல்லுகிறார்:—

"காட்டை விட்டுக் காட்டிற் பன்னிரண்டு வருடமும் கழித்து, உருத் தெரியாமல் காட்டிலொரு வருடமும் போக்கி வெளிப்பட்ட தாஷ்டிகராகிய பாண்டவர்கள் உமக்குச் சாஷ்டாங்க நமஸ்காரங் திக்கு நோக்கிச் செய்தார்கள். இன்னங் கொஞ்ச நாட்களில் உமது கஞ்சமலரடியிணையைக் கண்டு தரிசிக்க வருவதாகவும் சொன் னர்கள். திருதராட்டிரன், காந்தாரி முதலாகிய பெரியோர்களுக்கெல் லாஞ் சரணஞ்சொல்லி, இராஜசபைக்குப் போய் விவகாரப்படி காடு கொடுப்பீர்களா யில்லையா வென் றிரு வார்த்தை கேட்டு, அவ ரவர்கள் கருத்தை யறிந்துகொண்டு வரும்படி என்னை அனுப்பி னர்கள். அடியேன் அவர் பொருட்டுத் தூதாக வந்து, துரியோ தனன் முதலாகிய அரசர்களுக்குச் சொல்லத் தக்கதுஞ் சொல்லிப் பேசத்தக்கதும் பேசினேன். உபவார்த்தைகளாகப் பெரியோர்களும் உரைத்தார்கள். அவைகள் எல்லாவற்றையுங் கேட்டு, காலனுக்குக் கூட்டாளியாகிய கண்ணில்லாதவனுடைய பாலன் 'வேலமுட் குத்து மிடமேனுங் கொடுக்கேன். கால் வகைச் சேனையுடன் சண்டைக்கு வருவேன்' என்று உறுதி மொழி கூறியிருக்கின்றான். இருதிறவரும் இப்படி வருத்தப்படுவதைத் திருத்தமாக்கிப் பொருத்த வேண்டு மென்று யோசித்தாற் சரிப்படவில்லை. ஆகிலும் இன்ன மொரு தரஞ் சொல்லிப் பார்ப்போம். அதற்குமிணங்காமற்போவா னானால் காமென்ன செய்யலாம்! மாமி! தெய்வச் செயலெப்படி முடியுமோ தெரியாது. இஃதன்றியும் 'இன்னொரு காரியம் தங்க ளோடு அந்தரங்கமாகப் பேச வேண்டியிருப்பதால், உள்ளறையில வாருங்கள்' என்றழைத்துப் போய், கள்ளத்தன மாயன் எள்ளத் தனையு மிறக்கமில்லாமல், மெள்ளத் தம் மெண்ணம் வெளிப்படுத்த லானார். "மாமி! நானொரு சமாசாரங் கேள்விப்பட்டு வந்தேன். அதைச் சொல்லச் சொன்னால் சொல்லுகிறேன்' என்று கேட்க, 'சுகமாய்ச் சொல்லப்பா' என்று குந்திதேவி சொல்லக் கோபால கிருஷ்ணன் "ஓ அத்தாய்! நான் கேள்விப்பட்டுச் சொல்லு கிறதை ஞாபகமாகவும், உறுதியாகவும் கேளும்; நீர் உங்கள் தாய் வீட்டிற் கன்னிகாமாடத்தி லிருந்த சிறு வயதில் யாரோ ஒரு ரிஷீசுவரர் வந்து விரதமிழைக்க அவருக்கு நீர் பணி விடை செய்ய, அந்தப் பெரியவர் சந்தோஷித்து ஐந்து தேவதா மந்திரம் உபதேசம் பண்ணிப் போக, அந்த ஐந்து மந்திரத்தில் ஒரு மந்திரத்தை நீர் பரீக்ஷித்ததாகவும், அப்போது சூரியபகவான் பிரசன்னமாக நீர் கலங்கிக் கண்ணீர் விட்டதாகவும், அப்பகவான்

உமக்குத் தேறுதல் சொல்லி உம்மிடத்தி லொரு சற்புத்திரன் பிறக் கும்படி கர்ப்பதானஞ் செய்ததாகவும் தக்ஷணமே குழந்தை பிறந்த தாகவும், உடனே உலகப் பழிப்புக்கஞ்சிப் பெட்டியில் வைத்துச் சிந்து நதியில் அக்குழந்தையை விட்டதாகவும் தெரியவந்தது செய்தி. இது உண்மைதானு ?" என்று கேட்டார்.

குந்திதேவி பார்த்து, "இது இருக்கட்டும் நீ வந்த மற்ற காரியங் களையுஞ் சொல்" என்று கேட்டாள். கண்ணன் 'அப்பால் அக்குழந் தையை அந்த நதியடித்துக்கொண்டுபோய்க் கங்கா நதியில் விடவும் திருதராட்டிரனுடைய சாரதியாகிய சூதனும், அவன் பத்தினி ராதையும் கண்டெடுத்து வந்து அப்பிள்ளையை வளர்க்கவும், அப் போது அசரீரி வாக்கியமாக இந்தப் பிள்ளைக்குக் கர்ணனென்று பெயரிடச் சொன்னதை அவர்கள் கேட்டு, அப்படியே பெயரிட் டழைக்க அவன் வளர்ந்து சகல சாஸ்திரமு முணர்ந்து பரசுராம ரிடத்தில் வில் வித்தையும் கற்று மேன்மையுற்றிருந்தானும். அவனைத் துரியோதனன் கண்டு சிநேகங்கொண்டு, அங்கதேசாதிபதியாக்கி, சுயம்வரத்திற்கலியாணமுஞ்செய்து வைத்துத் தனது சகலவகண்ட சாம்பிராஜ்யமும் அக்கர்ணன் வசத்திலொப்புவித்து, ஏகசக்ராதிபத் திய சேனுபதியென்று ஏற்படுத்தி யிருக்கின்றான். அந்தக் கர்ணனை வெல்பவர் மண்ணிலுமில்லை விண்ணிலுமில்லை. அவனுக்கும், நமது அருச்சுனனுக்கும் பூர்வத்திலேயே ஜன்மப் பகை ஏற்பட்டிருக்கிறது. இரு திறத்தவரும் யுத்தஞ்செய்ய யத்தனித்திருக்கின்றார்கள். ஆகை யால் சீக்கிரம் கர்ணனிடத்திற்சென்று அவனுடைய ஐயந்தீர உம்மை அவனுக்குத் தாயென்று தெரிவித்து, அவனைப் பாண்டவர்கள் சகோதரன் என்பது முணர்த்தி, நீங்களாறு பிள்ளைக ளிருக்க நானிப்படி அவதிப்படுவானேன், அப்பா! நீ இப்போதே பாண்ட வர்களிடத்தில் வந்துவிடு! அவர்களுனக்குப் பணிவிடை செய்ய நீ அரசு செய்யலாம். நாங்கள் கண் களிக்கப் பார்ப்போம் என்று இத வார்த்தைகளைப் பேசி அழைத்து வாரும் மாமி! ஒரு வேளை உமது சொல்லைத் தடுப்பானுகில் அவன் அருச்சுனன் பேரில் விடுவதற்கு அச்சுவசேன னென்னும் நாகாஸ்திரத்தை அருமையாய்ப் பூசித்து வருகின்றான். அதுவோ காண்டவ வன தகனத்தில் தன் தாயைக் கொன்ற பழியையும், தன் வாலறுப்புண்ட பகையையும் தப்பாமல் முடிப்பேனென்றிருப்பதால், அந்த நாகாஸ்திரத்தை விஜயன் பேரில் ஒரு தரம் விடுவதன்றி மறு கணை தொடுக்காதிருக்க வரம் வாங்கிக் கொண்டு வாரும்' என்று சொன்னார்.

இந்த வசனங்களை யெல்லாம் குந்திதேவி கேட்டு உயிருடன் குன்றி,' "ஐயோ! உலகமறியும்படி வந்துவிட்டதே நமது கதி! நமக்கு ஞாபகமில்லாமல் மறந்துவிட்டதே. நமது மருமகனுக்கெப்படியோ தெரிந்துவிட்டதே!' என்று மனதிலெண்ணி இளைத்து, "ஓ கோபாலா! இதை முன்னதாயறிந்தால் கர்ணனை உனது இஷ்டப்படி பாண்டவரிடத்திற் சேரப் பண்ணுவேன். இப்போது உனக்கோ எனக்கோ என்றிருக்கும் இந்த வேளையில் நான் போய்ச் சொல்லுவது ஞாயமோ? இது உன்னுடைய மாயமோ? அல்லது என்ன அபாயமோ? நீ நினைத்துக்கொண்டோடி வந்து சொல்லுங் காரியம் கல்லது, அப்படியே கர்ணனிடத்திற் சென்று, தாயென்று அவனும் சந்தோஷிக்கச் செய்து, நாகாஸ்திரத்தை இரண்டாவது தரம் விடாதே என்று வரங் கேட்டால், என் வார்த்தையைத் தட்டாமற் கொடுப்பான். அப்போது கர்ணனுடைய பிராணனுக்கானி வருமல்லவா? அஃதல்லாமல் அந்த வரத்தை நான் கேளாமற்போவேனுல், அர்ச்சுனனிறப்பானல்லவா? இந்த இரண்டு விதத்திலேயும் எனக்கு நஷ்டமே யல்லது வேறில்லையே! 'பிச்சைக்குப் பிச்சையும் போய் ஒரு காசு நாமமும் போச்சு' என்னும் பழமொழி யாச்சுதே! 'உழக்கு நெல்லுக்கு உழைக்கப் போய் பதக்கு நெல்லைப் பன்றி தின்றது' என்னும் பழமொழி வாய்த்ததே! 'கழுதை மப்பைக் கண்டு கரைத்த மாவை வட்டிக்கு விட்டான்' என்னும் கதைபோலாச்சுதே இது என்ன காரணம்' என்று வருந்தினுள். அப்படி வருந்திய குந்திதேவியின் கருத்தை மருமகனுகிய மாயவனுணர்ந்து, 'மாமி! நீர் இப்போது யோசித்துச் சொன்ன காரியா காரியங்களனைத்தும் சரியே. ஆனுல் உன் மக்களாகிய பாண்டவர்கள் பிருதிவி முதலிய பஞ்ச பூதம் போலவும், ஐந்து தலைப் பாம்பு போலவும் பொருந்தி இருக்கின்றவர்கள். அந்த ஐந்து பூதத்தில் ஒரு பூதங் குறைந்தால் உலகங் குறைந்துபோம். ஐந்து தலைப் பாம்பு தன் தலையில் ஒரு தலை இழந்தாலுடலேயுயிழக்கும்: அதுபோல் ஐவர்களிலொருவரிறந்தால் மற்ற நால்வரும் உடனே மடிவார்கள். நீர் அருமையாகப் பெற்றெடுத்து வளர்த்து, ஈ யெறும்பு கடிக்க வொட்டாமற் பாதுகாத்து, பக்ஷமுடன் இரக்ஷித்த பாண்டவரைந்து பேரும் இறந்துவிடுகிறது பெரிதா? நீர் இன்னனென் றறியாமலும் எடுத்து வளர்க்காமலுமிருந்து, இப்போது பிள்ளையென்றுணர்ந்த இந்தக் கர்ணனொருவனிறப்பது பெரிதா? செவ்வையா யோசியும். நானேதோ அவசரப்படுத்தினேனென்று நாளையொருகாலத்திற் பழி சொல்லப்போகிறீர்.

மாமி, பரிபூர்ணமான சம்மத மிருக்கு மாஞல் மஞை திடங் கொண்டு போய் வாரும். அப்பா ஞமதிஷ்டம்' என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு விதுர னரண்மஞைக் கெழுந்தருளி சித்திய விதிகளோடு போஜனாதிகளையு முடித்துக்கொண்டு திருக்கண் வளர்ந் தருளினர்.

துரியோதனன் கண்ணனுக்குப் படுகுழி சமைத்தல்

இப்பால் ஜகன் மோகனனாகிய நாதனது மாயவசன வலைக்குள் அகப்பட்ட குந்திதேவியானவள் குலைகுலைந்து கொடிய துயரி லுழன்று கலங்கிக் கண்ணுறக்கங் கொள்ளாதிருந்தாள். பகற்போதை அளக்குஞ் சூரிய பகவான் மேற்றிசைப் பெண்ணின் நெற்றிப் விடப் பட்ட செந்தூரத் திலகம் போல் பிரகாசித்து அஸ்தமனமானனன். வேத பண்டிதர் முதலிய பேர்கள் சந்தியா கால விதி முடித்துத் தொழுதார்கள். வருணன் சூரியனுக்கிட்ட மாற்றுயர்ந்த பொற் சிங்காதனம் போற் செவ்வானம் பரந்தது. தாமரைப் புஷ்ப மென் னும் கன்னியர்கள், வண்டுகளாகிய புருஷருடன் ஊடி முகங்குவியுந் தன்மை போற் குவிந்தன. நாயகர்களைக் கண்டு கடைக்கண் காட்டி யழைத்து இதழ்த் தேனருந்த லின்பங் கொடுக்குந் தாசிகளைப் போற் குமுதம், ஆம்பல் முதலிய மலர்கள் மலர்ந்தன. தாம ரைப் புட்பங்களிற் சஞ்சரித்த அவ் வண்டுகளானவை அக் குமுத மலரிடத்தும், ஆம்பலினிடத்தும் குல மாதரை விடுத்து விலைமாதரை யடுத்த வேசிக் கள்ளர் போலத் தங்கித் தேனைப் பருகி யுள்ளுடைந்து கூவித் திரிந்தன. முல்லை யரும்பு விரிந் ததைப் போல் வானத்தில் எல்லை யில்லாத நக்ஷத்திரங்கள் பிரகாசித்தன. இவ்வென்னும் யானையிப் புறப்படி மன்மதனுக்கு வெள்ளைக் குடை விரித்ததைப் போற் சந்திரனுதயமாயினன். அந்த வேளையில் தலைவருந் தலைவியரும் அமளிகளிற் கலந்து சரச சல்லாபத்தினற் சோர்வுற்று நித்திரைபோனார்கள். இவ்வாறு சந்தடி அடங்கிய நடு ராத்திரியில் இந்திரனுக் கொப்பாகும் சந்திர குலத் தோன்றலாகிய துரியோதனன் அந்தரங்க மண்டபத்திற்கு வந்து, தம்பிமார் தொண்ணூற்றொன்பது பேரோடு மாமனாகிய சகுனி, கர்ணமகாராஜன் இவர்கள் சூழ்ந்திருக்கத் தானு மிருந்து அவர்களை நோக்கி, 'காடே கதி யென்று போய்விட்ட பாண்டவர்களை நாடு வாங்கித் தருகிறேன்" என்று அழைத்து வந்து உபபிலாவியத்தி லிருத்தித் தானே தூதாக வந்து துஷ்ட கிணற்றைத் தூறு வாருவார்

போர் கலகம் விளைத்து, நமக்கெதிரியாகவும், வீரப்பாகவும் விதுரன் வீட்டில் வந்திறங்கிய அந்தக் கிருஷ்ணனை முடித்துவிட்டால், 'பல காலையச் சனி ஒரு காலையிற் போம்' என்று பாலை வார்த்துத் தலை முழுகிவிடலாம். இவனிருக்குமளவும் ஆகவுமொட்டான், அழியவுங் கிட்டான். ஆதலால் நீங்களென்ன சொல்லுகிறீர்கள் சொல்லுங்கள்' என்று கேட்கத் தம்பியாகிய துச்சாதன னெழுந்து காலில் விழுந்து "தேவரீருக்கு இந்த ஞாபகந் தெய்வங் கொடுக்குமா வென்று பிரார்த்தித்திருந்தேன். என்னெண்ணப்படி கேட்டதால் தயைசெய்து யான் சொல்வதைக் கேட்டருளும்.—

தாங்கள் யோசித்தது நன்றாக இருக்கிறது. பல காளுஞ் சிக்காமற் கலகஞ்செய்து கொல்லும் ஒரு பெரும் புலியானது வலைக்குளகப்பட்டாற் கொலைக்கஞ்சிப் பார்க்கலாமோ? என் கோவே! இந்த இராத்திரி விடியு முன்னமே நால்வகைச் சேனைகளுடன் அவனை வளைத்துகொண்டு, கல்லபாம்பின் தலையை நசுக்குவது போல் நசுக்கிப்போடுவதே காரியம். அதுவே நமது வீரியம்" என்று சொல்ல, அதுவே சரி யென்று மற்றைத் தம்பியரும் ஒப்புக் கொண்டனர். இந்த நூறு பேர்களில் கர்ம தேவதையைப் போன்ற விகர்ணனவன் பெரிய தலையசை போக்கி, 'அண்ணா! இதுவரையிலும் வாழ்ந்த மூவகைக்குல மன்னவர்களிலேயும் தூது வந்த பேரைக் கொன்றவர்களுமில்லை கொல்லென்று விண்டவர்களு மில்லை. நாம் கொல்வோமானால் அது எவ்வுலகத்திற்குமொவ்வாது. நாமும் பழி பாவங்களுக்காளாவோம். அன்றியும் கிழவர்கள் - குழந்தைகள் - வேதியர்கள் - வியாதிக்காரர்கள் - வித்துவான்கள் - ஸ்திரீகள் - தூதர்கள் இப்போர்ப்பட்டவர்கள் எவ்வளவு குற்றம் செய்தாலும் கொல்லக் கூடாதென்று இராஜ தருமமிருக்கின்றது. மீறிச் செய்தால் குடும்ப சமேதராய் நரக மென்னுங் காணியை நாமனுபவிக்க வரும். மேலும் பகைவரானாலும் நமது வீட்டுக்கு வந்தால் அவருக்கும், நமக்கு மிருக்கும் விரோதங்களை மறந்து, புதிய உறவினர் போல மரியாதை செய்வது குல முறை தவறாக் குலொத்துங்கர் குணமாம். அப்படி செய்யாமல் நெஞ்சில் வஞ்சகம் நினைப்பீரானால், அதற்கு மிஞ்சிய பாவம் வேறில்லை. அப்படியல்லவென்று பழி பாவங்களுக்கும் பயப்படாமல் தூதரைக் கொல்ல நினைப்பீர்களானால் காயாம்பூவண்ணனாகிய கண்ணன் ஒருவனிடத்திலேயுங் கட்டுப்படவுமாட்டார்; வெட்டுப்படவுமாட்டார். நீங்கள்

உங்கள் குட்டுங் கெட்டுப்போகும்படியான துஷ்ட காரியங்களை ஆலோசிக்கின்றீர்கள். வேண்டாம் இப்போது நீங்கள் நினைக்கும் காரியம் ஒரு விதத்திலு முடியாது. நான் சொல்வதை கன்று யோசனை செய்யுங்கள்" என்று சொல்ல, துச்சாதனன் எழுந்து, கல்லபாம்பைப் போற் சீறி, 'அடா விகர்ணு! உனக் கென்னடா தெரியும்? பெரியோர் பேசுஞ் சங்கதிகளில் நாமேன் பிரவேசிக்க வேண்டுமென் றிராமற் குறுக்கே தடுத்துப் பேசத் தக்க அவ்வளவு குணஞ்ஞன் ஆய்விட்டாயோ? அந்தமட்டும் வாயை மூட்டா' என்று அடக்கித் துரியோதனமகாராஜனைப் பார்த்து வெறுத்துக் கொண்டு, 'அண்ணு! யாதேனு மோர் காரியத்தை ஆலோசிக்க வேண்டியிருந்தால் அறியாத பசங்களோடுகிடப் பெரியோர்களாயிருந்து பேசவேண்டுமென்று முதியோர் சொல்லுவார்கள். அப்படி செய்யாதது தவறு. இவனென்ன மிகப் பாலியன், இராஜ தந்திர மறியான். இப்போது தாங்கள் உத்தேசித்த காரியத்தைப் பற்றி நான் சொல்லும் புத்தியை கன்றாய்க் கேளுங்கள் :—

அதாவது, அதிரதர் முதலாகிய சேனைகளை விதுரன் வீட்டைச் சுற்றிக் காவலாக வைத்து, வைக்கோல் முதலிய செத்தைகளைச் சேர்த்துக் கொளுத்திவிட்டால், நமது விரோதிகளுக்குத் தூதாக வந்த கோபாலனும், அவனுக்கு விருந்து செய்த விதுரனும் வெந்து கரிந்து எரிந்துபோவார்கள். பார்ப்பவர்களும் கேட்பவர்களும் ஐயோ! தீப்பற்றிக்கொண்டதென்று நினைப்பார்கள். நமக்கொரு நிந்தையுமில்லை. பாண்டவர்களிந்த வழியும் வாரார்கள். இது அழியாயோசனை. அண்ணு! இக் காரியத்தைப் பொழுது விடிவதற்கு முன்னே முடித்துவிட வேண்டும்' என்று துச்சாதனன் சொல்ல, கர்ணன், 'இருளை விலக்குஞ் சூரியனைப் போல அக்கினிச் சுவாலையுடைய ஒரு பாணத்தினால் அவ் விருவரையும் எரிப்பதற்கு நான் ஒருவனிருக்கும்போது, நெருப்பினாலேயா அவர்களைக் கொல்லுவது? ஜயிக்க மாட்டாத திறத்தை யுடையவன் செய்ய வேண்டிய யோசனையே யன்றி, அது நாம் நினைக்கத் தக்க தல்ல' என்று சொல்ல, அதைக் கேட்டு விகர்ணன் தவிர மற்றைத் தம்பிமார்களெல்லாரும் துரியோதனனை நோக்கி, 'அண்ணு! இப்போது நமது பட்டணத்துக்குள் வந்தகப்பட்டுக்கொண்ட இந்தக் கிருஷ்ணன் தந்திரவாதியாகையாற் பொழுது விடிந்தாற் பாண்டவர்களிடத்திற் போய்க் கூடிக்கொண்டு, யாதொரு காரியங்களும் ஆகவொட்டாமல்

நமது எண்ணத்தைக் கெடுத்துவிடுவான்! ஆகையால் எவ்விதத்திலாவது பொழுது விடிவதற்குமுன் கொன்றுவிடுகிறதே காரியம்' என்று கூவிச் சொல்ல, மாமன் சகுனி, நகைத்து, 'இவைகளெல்லாம் சிறு பிள்ளைகளின் ஆலோசனையாக இருக்கின்றதேயொழிய, காரியத்தை முடிக்கும் காரிய வாலோசனையா யிருக்க வில்லை. அப்படி ஏதாகிலும் செய்ய வேண்டுமானால், நான் சொல்லப்போகிற யுக்தியைக் கேட்டு வெல்லுங்கள்' என்றான். அந்த யுக்தி என்ன வென்று துரியோதனன் கேட்கச் சகுனி "கேளும் என்னருமை மருமகனே! விகர்ணன் சொன்ன வாக்கியப்படி தூதரைக் கொல்லலாகாது. துச்சாசனன் சொன்ன புத்தி நல்ல புத்தியானாலும் பூர்வ பூர்வமாகப் பெரியோர்கள் வாழ்ந்த வீட்டில் நெருப்பைப் போடலாகாது; போட்டாலும் அந்த நெருப்பினால் கிருஷ்ணனுக்கு ஒரு கெடுதியும் வராது. கர்ணராஜன் சொன்னபடி கணை விடுத்துக் கொல்ல நினைப்போமாகில், நாளை வரப்போகிற கலகம் இப்போதே விளைந்து, நமது நாடு சுடுகாடாய்ப் போம். ஆகையால் இவைகளெல்லாம் காரியமல்ல. ஒரு காரியஞ் செய்யும். நமது கொலுக்கூடத்தில் ஒரு படுகுழி வெட்டி அதிலே இராக்ஷதர்களையும், மல்லர்களையும், கிங்கரர்களையும் வைத்து, மூங்கிற் பத்தைகளினால் மூடி, மேலே ஒரு சிங்காதனம் அமைத்து, அதிலே கிருஷ்ணனை அழைத்து உட்காரச் செய்தால் பத்தை முறிந்து படுகுழியில் அவன் விழுவான். உடனே பிடித்து விலங்கு போட்டு, சிறைச்சாலையில் வைத்துப் பிராணன் போகவொட்டாமல் தண்ணீர் வார்த்துக்கொண்டு வந்தால் இவன் சேஷ்டை யடங்கி வழிக்கு வருவான். அப்பால் கலகம் நேர்ந்துப்போம். நம்மை உலகமும் பழிக்காது; இது தூதனைச் செய்ய வேண்டிய முறைமை' என்று மாமன் சொல்ல, மருமகன் கேட்டு ஆனந்தமடைந்து, 'ஓ மாமா உங்கள் புத்தி எவருக்காகிலும் வருமா? நீங்கள் யோசித்தால் அது வீண் போமா?' என்று மகிழ்ந்து புகழ்ந்து, அக்கோமே அகேக மல்லரை அழைப்பித்து மிகுந்த ஆழமும், அகலமு முள்ளதாய் நிலவறை வெட்டச் செய்து அதிலே கிங்கரர்-இராக்ஷதர்-மல்லர்கள் முதலிய பேர்களை வாளாயுதம்-வேலாயுதம்-சூலாயுதம்-குந்தாயுதங்களுடன் வைத்து, அநேகங் கயிறுகளுடன் பப்பரர்களையும் பதுக்கி, மூங்கிலைப் பிளந்து மேலாக மூடி நவ ரத்தின கசித சிங்காதனமமைத்துப் பக்கங்களில் முத்துமாலை-மாணிக்கமாலை - பூமாலை-பொன்மாலை இவைகளைத் தூக்கித் தம்பிமார் முதலிய யாவரும்

சந்தோஷிக்கும்படியாய்ப் பிறவிப் பெருங்குழியில் வீழ்ந்து பக்த பாசப் பிணிப்புற்றுப் பரமதயாநிதியே என்று கூவிப் பரதவிக்கும் படியான பக்த ஜனங்களை அப்படுகுழியினின்றும் கரை யேற்றி இரக்ஷிக்குங் கருணைக் கண்ணனுகிய அண்ணலுக்கும் படுகுழி அமைத்தான் துரியோதனன்.

கண்ணன் விசுவரூபம் கொள்ளுதல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இவ்வாறு கஞ்சமு தருந்திக் கஞ்சனைக் கொன்ற அஞ்சனவண்ணனுக்குச் சிறிதேனும் எண்ணிக்கை யின்றி வஞ்சனையைச் செய்தானே பஞ்சமாபாதக னென்று பதைத்துப் பாரைக் கவிந்துகொண்டிருந்த இருளானது உடனே பறந்தோடிப் போயது. இரவில் நடந்த அதிசயங்களை எல்லோரும் பாருங்க ளென்று தனது கிரணக்கரத்தால் யாவரையும் காய்ந் தெழுப்பிக்கொண்டு வருவான்போற் கிழக்குத் திசையிற் சூரிய னுதயமாயினன். பெரியோர்களும், அரசர்களும் பிராதக் காலத்தில் ஸ்நானம், பூசை முதலிய நித்திய விதிகளை முடித் துக்கொண்டு வழக்கப்படி இராஜ சபைக்கு வந்தார்கள். இராத்திரி யெல்லாந் தூக்கமற்றிருந்த துரியோதன ராஜனும், தம்பிமார்களும், சகுனி, கர்ணன், மந்திரிகள், சாமந்தர்கள் முதலிய பேர்களும் சபையில் வந்து நிறைந்தார்கள். விதுரன் வீட்டில் திருக்கண் வளர்ந் தெழுந்த ஸ்வாமியானவர் சாத்தகியுடன் நித்தியக் கடனை முடித்துக் கொண்டு சிங்காதனத்தில் வீற்றிருக்கும்போது, துரியோதன னுடைய உத்தரவின்பேரில் தூதுவ ரோடி வந்து தீர்க்க தெண்ட னிட்டு, "சுவாமி! தூது வந்த உங்களை எங்கள் இராஜாதிராஜனுகிய துரியோதனமகாராஜன் இராஜ சபைக்கு அழைத்து வரச் சொன்ன தால் அதிசீக்கிரத்தில் வரவேண்டும்" என்று சொல்ல, கண்ணன், "இதோ வருகிறேன்" என்றெழுந்து, சேனைகளையெல்லாம் நிறுத்தி விட்டுச் சாத்தகி மாத்திரம் இரத மேறி வரத் தாமும் இரத மேறிக் கொண்டு, திருதராட்டிரன்-பீஷ்மர் - துரோணர் - கிருபர்-அசுவத் தாமா முதலாகிய பெரியோர்களும், உரியோர்களும் நிறைந்திருக்கும் சபைக்கெதிரில் வந்தார். "இதோ கிருஷ்ணபகவானும். சாத்தகியும் வந்தார்கள்" என்று போக தேவேந்திரனப்போற் கொலுக்கொண் டிருக்கும் யோக பூவேந்தனுகிய துரியோதனனிடத்தில் தூதர் கூறினர். துரியோதனன் கேட்டு, 'கிருஷ்ணனை மாத்திரம் விடுங்கள்' என்று ஆக்ஞாபிக்க, அந்தப்படியே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி தூதர்

வார்த்தையைக் கேட்டு, சாத்தகியை வெளியே நிறுத்தித் தம்மை அழைப்பிக்கும் வஞ்சகச் சங்கதியைத் தமக்குள்ளே யறிந்து கொண்டு சந்தோஷ சித்தராய் 'தம்பி சாத்தகி! நான் வந்த காரியம் இன்றைக்கு நிறைவேறும்' என்று கூறி, தேவாதிதேவனுகிய சகல ஜீவாத்மாக்களுக்கும் பரமாத்மாவாகிய ஸ்ரீநாதன் கொலுக்கூடத்தில் வாவே, விஷமாகிய அரவக் கொடியோன் மிகுந்த உபசாரத்துடன் லோகநாதனைப் பார்த்து 'வாரும் ஆசனத்திலிரும்' என்று கை காட்டினன். பீஷ்மர் முதலிய பெரியோ செல்லாரும் 'ஏதடா அப்பா ஸ்வாமிக்கு இவ்வளவு மரியாதை கடந்தது. நமக்கெல்லாம் கல்ல காலம் பிறந்தது. இனி யொன்றுங் குறைவில்லை. பாண்டவர்களும் செவ்வைப்படுவார்கள். துரியோதனன் புத்தியை ஆண்டவனே மயக்கி வழிக்குக் கொண்டுவந்ததாக இருக்கின்றதே' என்று சந்தோஷப்பட்டு ஸ்ரீ கிருஷ்ணனுடைய முகத்தை யாவரும் பார்த்துக்கொண்டிருக்கையில், ஸ்ரீ கிருஷ்ணன் துரியோதன னென்னும் நாசகாலன் அமைத்த ஆசனத்தி லேறி உட்காரும்படியாய் ஒரு காலே யூன்றினர். உடனே மளமளவென்று முறிந்து சிங்காதனத்துடன் தேவாதிதேவன் நிலவறைக்குட் போகும்போது, ஸ்ரீ பாத பங்கஜ மிரண்டும் ஆதிசேடனுடைய முடிக்கப்பாலும் திருமுடி அண்டகோளகையி னடிக்கப்பாலும் பொருந்தும்படி நின்று விச்வரூபங்கொண்டார். சந்திர சூரியர், இந்திரர் முதலிய தேவர்கள், சப்தரிஷிகள் யாவருஞ் சிரத்திற் கரங்குவித்துத் தெண்டனிட்டுச் சிந்தித்துத் துள்ளினர். காக லோகத்தார் கடுங்கி காங்க ளெப்படிப் பிழைப்போமென் றெடுங்கிச் சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து வந்தித்தனர். அப்போது ஆகாயத்துக்கும், பூமிக்கும் ஒன்றாய் வளர்ந்த பகவான் அனேகக் கலைகளும், வெகுவாகிய கரங்களும், மிகுதியாகிய கால்களு முடையவராய், படுகுழியி லிருக்கு மல்லரை-கிங்கரை-இராட்சதரை-பப்பரரைத் தப்பில்லாமற் கொல்லத் தமது கெட்டைக் கால்களே கீட்டி யுதைத்தும், குட்டைத் தாள்களினல் குமுங்க மிதித்தும், மட்டப் பதத்தினல் மாள வதைத்தும், கட்டைக் காலினற் சிலரைக் குழப்பியும், சிலரைத் தூவைத்தும், சிலரை மிதித்தும், சிலரை யெடுத்துச் சிதற வீசியும், சிலரை யொடித்துப் பதற ஏசியும், சிலரை காகலோகத்தில் நசுங்கி விழ உதைத்தும், சிலரை மாகலோகத்தில் மயங்கி யெழ வெறிந்தும், உதிர வெள்ளம் சடையிலோடி வரும்படியாகப் படுகுழி நிரம்பக் கால்களே வளர்த்துப் பருக்கச்செய்து குடைந்தனர். அப்போது, சிலர் சிரமிழந்து நெரிந்த

னர், சிலர் செவி யழிந்து விரிந்தனர். சிலர் கர மறுந்து உரிந்தனர். சிலர் கால் முறிந்து சரிந்தனர். சிலர் உடல் கொறுங்கி உடைந்தனர். சிலர் ஊனழிந்து சிதைந்தனர். சிலர் படை நெரிந்து பிரிந்தனர். சிலர் பசி யெழுந்து பறந்தனர். ஸ்வாமியைக் கட்டவைத்திருந்த பாசக் கயிறுக ளறுபட்டுத் தாங்கள் கட்டிக்கொண்ட பெண்சாதி பிள்ளைகளென்னும் பாசபந்தங்களைக் கட்டக் கலங்கினவர்களாய் வருந்தி, வாளாயுதமுடைய வீரர் வாளாலும், வேலாயுதமுடைய வீரர் வேலாலும், தண்டாயுதமுடைய வீரர் தண்டாலும், தடியாயுத முடைய வீரர் தடியாலும் இறந்தனர். வாயுவினுல மகமேருவின் சிகரம் போனது போல் வானத்திற் சிற்சில வீரர் பறந்தனர். இராக்ஷதருடைய ஆயுதங் கட்டிய பாரித்த உடல்களெல்லாம் யானைக்காலிற்பட்ட சிறு தூறுகளைப்போல் நைந்தன. வச்சிராயுதத்தினுல் இரக்கை யறுபட்ட மலைகள் போலக் கிங்கரர்களெல்லாரும் ஸ்வாமியின் காலுதையால் முறிபட்டுப் பறிபட்டு வீழ்ந்தனர். இவ்விதமாகப் படுகுழியி லுள்ளோ ரெல்லாரும் பரிதவித்து மாள உழக்கி, பற்பல காலால் பப்பரருடல்களை வாரியெறிந்தும், சிற்சில தாளால் கிங்கர் குடல்களைக் கீறியணிந்தும், பற்பல காலால் இராக்கதரின் சிரத்தை வாரி யெறிந்தும், சிற்சில தாளால் மல்லர்களின் கரத்தை வாரி வீசியும் நர்த்தனம் செய்தனர்- இப்போது, கண்ணன் அங்குள்ள எலும்புகளை வாரி வாரி இந்திரலோக முதலான இடங்களில் தமது காலால் வீசி வீசி இறைத்தது எப்படி யிருந்ததென்றால் சுக்ரீவனுக்காகத் துந்துபி என்பவனுடைய எலும்பை ஸ்ரீ ராம மூர்த்தி தமது காலாலுந்திய தன்மைபோலிருந்தது. அரசர்களிருந்த சபையெல்லாம் உதிரப் பெருக்கமும்-மூளை நெருக்கமும்-கிணவருக்கமும் - கிணவருக்கமுமாய்க் குவியச் செய்தனர்; அகஸ்தியராற் பாதளத் தழுந்தும் விந்தகிரியைப் போல் எவரையும் மேலோங்க வொட்டாமல் அழுத்திப் பாற்கடலிற் சுசுன்ற மத்தாகிய மந்தரகிரியைப்போற் படுகுழியினின்று சுழன்று சுழன்று கூத்தாட வைத்தனர். அப்போது, ஆகாயத்தில்விரிந்த அனேக கரங்கள்தோறும் வேலாயுதம்-சூலாயுதம்-குந்தாயுதம்-சக்கராயுதம்-தோமராயுதம்-எறியாயுதம்-சாங்கு-வாங்கு-கத்தி-கடாரி-இருப் புலக்கை-கதை-மழு-கொழுகவண்-கண்டக் கோடாலி-வளைதடி - கொடுதடி-குண்டாந்தடி-சுக்குமாந்தடி-பாணத் தடி இவைகள் முதலிய ஆயுதங்கள் இலகின. உடுக்கை தரித்த கரங்களனந்தம், உறும்பிடித்த கரங்களனந்தம், பேரியடிக்கும் கரங்களனந்தம், தாரை பிடிக்குங் கரங்களனந்தம், தாள

மத்தள மறையுங் கரங்களனந்தம், குடமுழா பேரியறையுங் கரங்களனந்தம், சின்னம் பிடிக்குங் கரங்களனந்தம், ஜெயகாளந் தாங்குங் கரங்களனந்தம், கொத்து மணிகளாட்டுங் கரங்களனந்தம், சிட்டிகைகள் போடுங் கரங்களனந்தம், கொம்புகள் முழக்குங் கரங்களனந்தம், பம்பை, சங்கு முழக்குங் கரங்களனந்தம், புஷ்பம்-சந்தனம் - பாளிதம் - குங்குமம் - களபம்-கஸ்தூரி-கதம்பப் பொடியணியுங் கரங்களனந்தம், முத்து மாலை-மோகன மாலை-இரத்தின மாலை-வெற்றி மாலை-பதக்க முதலிய பற்பல ஆபரணங்களைத் திருத்திக்கொள்ளும் கரங்களனந்தம். கைகளைச் சேர்த்துக் கொட்டிக் கொண்டு அவர்களைக் கறுவிக் காட்டுங் கரங்களனந்தம், எட்டுத்திக்குகள் நிறைந்து இராஜசபையிலிருக்கும் துரியோதனன் முதலிய பேர்களைச் சுட்டிக் காட்டும் கரங்களனந்தம், திலகந் தீட்டி வீரபட்ட மணிந்து வாகை மாலை முதலானவைகளைச் சூடிக் கூட்டுங் கரங்களனந்தம், சமுத்திரத்தை அள்ளியிறைக்கும் பற்பல கரங்கள், மண்ணை வாரித்தூற்றுஞ் சிற்சிலகரங்கள், மரங்களைப் பிடுங்கி எறியும் பற்பல கரங்கள், மலைகளை வாரி ஒன்றோடொன்று மோதி வீசும் சிற்சில கரங்கள், கற்பகத் தருக்களின் புஷ்பங்களை யுருவி இறைக்கும் பற்பல கரங்கள், சூரிய சந்திர நக்ஷத்திரங்களை உள்ளங்கையிற் காட்டுஞ் சிற்சில கரங்கள், மேகங்களை யெல்லாம் வாரிப் பிடித்துப் பிழியும் பற்பல கரங்கள். திக்கு யானைகளைக் சேர்த்து வாரி யெடுக்கும் சிற்சில கரங்கள். திசைக் காவலரை யெல்லாம் ஒடுங்கப் பிடிக்கும் பற்பல கரங்கள், அமரர்களுக்கு அமுதமளிக்கும் சிற்சில கரங்கள், அஷ்ட குலாசலங்களைப் பறித்து நுனி விரலில் வைத்துச் சுழற்றும் பற்பல கரங்கள், மகமேருவே முதலிய அஷ்ட குலாசலங்களையும் வாரியெடுக்கத் தாவும் சிற்சில கரங்கள் பாஞ்சசன்னிய முதலிய கோடி சங்குகளைப் பவளம் போன்ற திருவாயில் வைத்து நாதம் பிடிக்கும் பற்பல கரங்கள், வில்லை வளைத்து நாணி தொடுத்துக் குணத்தொனி விளைக்கும் சிற்சில கரங்கள், வீர கண்டாமணியை விருதாகக் காலிற் றொடுக்கும் பற்பல கரங்கள், கடக கங்கணந் தோள்மணி மாலை சுழற்றியெறியும் சிற்சில கரங்கள், வீணை, புல்லாங்குழல், பேரியாழ் முதலிய நாதசுரங்களை நாதிக்கச் செய்யும் பற்பல கரங்கள், மிருதங்கம், மத்தள தாள முதலிய கருவிகளைக் கொட்டியடிக்கும் சிற்சில கரங்கள்—இவ்வாறு உலகமெல்லாம் நிறைந்த கரங்கள் இத்தன்மையான விபரீதம் விளைத்துக்கொண்டிருக்க மேலண்டத்திற்கும் மேலாகப் போன சிரங்களானவை அதற்

கப்பாலுள்ள பேரண்டத்திற்கு முட்டுக் கொடுத்ததைப் போல முட்டிக்கொண்டு, காலண்டையுங் குனிந்து பார்த்தன. அவைகளிற் சில சிரங்கள் சிரக்கம்பஞ் செய்யும். பல சிரங்கள் கலகலவென்று நகைக்கும். சில சிரங்கள் ஆகட்டு மென்று சொல்லி அதட்டும். பல சிரங்கள் கோடையிடிபோற் குமுறி மிரட்டும். சில வாய்கள் தேவ லோகங்களைப் பார்த்துப் பேசும். பல வாய்கள் துரியோதனாதிகள் செய்த சௌரியங்களைக் கண்டு ஏசும். சில வாய்கள் சத்துருக்களைத் தூறும். பல வாய்கள் அக்கினிப் பொறிகளைப் பீறும். சில கண்கள் சிவக்க விழித்து உறுக்கும். பல கண்கள் மின்னை வீசிப் பெருக்கும். சில கண்கள் அஸ்தினாபுரத்துள்ள துரியோதனன், சகுனி, துச்சாதனன், விகர்ணன் முதலானவர்களைத் தேடிப் பார்க்கும். பல கண்கள் உபபிலாவியத்திலுள்ள தருமன், பீமன், அர்ச்சுனன் முதலானவர்களை நாடிக் கோக்கும். சில கண்கள் பக்தர் பேரில் அருட் பக்ஷம் வைத்துக் காக்கும். பல கண்கள் பாவிகள் இன்னு முயிரோடிருக்கின்றார்களாவென்று நோக்கும்.

இப்படி பற்பல விதமாகிய கண்களினாலும்-கால்களினாலும்-சிரங்களினாலும் - உரங்களினாலும் - வாய்களினாலும் - தோள்களினாலும்-தாள்களினாலும் பிரளய கால நடுக்கம் போற் செய்யும் பிரமாதத்தை இந்திரன் முதலிய அண்டர்க ளெல்லாருங் கண்டு பயங் கொண்டு, கண்ணீர் சோர விட்டு மூர்ச்சை போய்த் தெளிந் தெழுந்து, நான்கு வேதங்களினாலும் ஸ்தவுத்தியஞ் செய்து, ஏகாங்கத் திரியாங்க பஞ்சாங்க சாஷ்டாங்க அஷ்டாங்க நமஸ்காரங்கள்செய்து கண்ணனைத் தோத்திரித்தார்கள். நாகலோகத் தினரெல்லாம் "ஓ ஆரணனே! ஓ காரணனே! ஓ புவனங்களனைத்தையும் பெற்ற காரணனே! ஓ கருணாகரனே! ஓ கமலாசனி காதலனே! ஓ பூரணனே! ஓ புண்ணியனே! ஓகஜேந்திர வரதனே ஓ! கருணைக் கண்ணனே! ஓ லோக நாயகனே! கோபம் வேண்டாம்! கோபம் வேண்டா மென்று ஓலமிட்டு நடுங்கினார்கள். மத்திய லோகத்துள்ள மன்னுயிர்களெல்லாம் ஓ மாதவா! ஓ மதுசூதனு! மன்னுயிரைப் பெற்று வளர்க்கு மங்கள குண சம்பன்ன! ஓ ஆபத்பாந்தவா! ஓ அநாதரக்ஷகா! ஓ உவணகேதனு! ஓ உலகளந்த நாதா! ஓ கமலக்கண்ணு! ஓ காயாம்பூவண்ணு! ஓ சங்கு சக்க ராயுதந் தரித்தருளிய கண்ணு! ஓ காளமேகத்தையுங் கடலையுங் கறுக்கச்செய்யும் வண்ணு! ஓ எங்கள் நாதனே! ஓ பீதாம்பரனே! ஓ

பெருமானே! ஓ முகுந்தனே! ஓ முராரி! ஓ வாசுதேவா! ஓ வைகுந்த நாதனே!" என்று வாழ்த்திப் பணிந்தார்கள். முன்னமே விசுவ ரூப தரிசனஞ் செய்யக் கருதி கிருஷ்ணமூர்த்தியினுடைய ஆக்ஞையினால் துரியோதனன் சபைக்கு வந்திருந்து அவனுடைய துஷ்கிர்த்திய சிக்தையை யறிந்து தக்கபடி தனித் தனி சில நீதிகளைத் திருஷ்டாந்தமாக எடுத்தோதியுங் கேளாத அவன் சபையி லிருக்கச் சகியாது கண்ணனிடத்தில் விடை பெற்று அப்பாற் சென்றிருந்த முனிவர் மூவரும், தங்கள் விழிகள் களிக்கக் கண்ணனைத் தரிசித்துப் பிரம்மானந்த சாகரத்தில் மூழ்கினவர்களாய் அளவற்ற வேத சாகைகளினால் ஸ்தவுத்தியஞ்செய்து கொண்டாடினார்கள்.

அக்காலத்தில் அந்த இராஜ சபையிலிருந்த பீஷ்மர்-துரோணர்-கிருபர் - அசுவத்தாமர் - கர்ணன் - திரிதராட்டிரன்-துரியோதனன் தவிர மற்றைப் பிள்ளைகள் சகுனி - சிந்துபதி முதலாகிய தேசத் தலைவர்கள்-பதினெண் பாஷைத் தலைவர்கள் யாவருமெழுந்து, தீர்க்க தண்டமாக விழுந்து, நடுநடுங்கி, உடல் வியர்த்து, குடல் கலங்கி, கோவென்றலறிக் கூவி, 'அடா பாவி' யென்று துரியோதனனைத் தூற்றி, ஸ்ரீ கிருஷ்ண பகவானைப் புகழ்ந்து போற்றி, தத்வ க்கியான சித்தத்துடனே கர்த்தருடைய விசுவ ரூபத்தை நோக்கவும் பயந்து, இரு கரத்தையுஞ் சிரத்திற் குவித்து, 'ஓ ஸ்வாமி! அடியேம் அக்ஞானங்களினாற் றெரியாமற் செய்த அபராதங்களைப் பொறுத்து நடக்கவேண்டும் புண்ணியா' என்று தண்டஞ் செய்து, "ஓ அருட் கண்ணே! மணிவண்ணா! மன்னியும், மன்னியும். ஓ வெண்ணெய் திருடிக் கூத்தாடிய கள்வனே! மன்னியும், மன்னியும். ஓ மேக நிற முற்ற காவலனைப் பெற்ற வாமனா! மன்னியும், மன்னியும்! ஓ வஸ்து ரூபமாகிய வாசனே! மன்னியும், மன்னியும். ஓ பதித பாமரராகிய நாங்கள் செய்த பாவத்தை மன்னியும், மன்னியும். ஓ கெடுவது தெரியாமல் விளைத்த கெடுதியை மன்னியும, மன்னியும்' என்று பல வாறுகப் புகழ்ந்து பேசியும்-பாடியும்-ஆடியும் பாதங்களையுங் கரங்களையும பார்க்க ஏக்கமுற்றவர்களாய்ப் புலம்பிக்கொண் டிருந்தனர். இந்திரன்-பிரமன் முதலாகிய முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் பாரிசாத புஷ்பங்களைக் கொண்டு சதசகஸ்ரநாமார்ச்சனை சாற்றித் தோத்திரஞ் செய்தார்கள். இம்மென்றியும் எழுவகைத் தோற்றம், நால்வகைப் பிறப்பென்னும் நுண்ணிய மன்னுயிர்த் தொகை யாவும் கண்ணீர் தளும்பக் கலங்கிக்

கலங்கி மதி மயங்கி ஏங்கும்போது, மும்மூர்த்தியும் ஒரு மூர்த்தியாய் விளங்கிய தேவதேவன் கொதிப்பாறிய அசலம்போற் கோப மாறிக் குளிர்ந்து, ஸகுணச் சரந்தமூர்த்தியாய் விளங்கும்படி சொரூபத்தையடக்கிப் பழைய வடிவினையுடையவராய்ப் பள்ளத்தினின்றும் கரையேறி, மாபலியினிடத்தில் தானம் வாங்க மண்டலத்தையும், விண்டலத்தையும் அளந்து அடங்கிய வாமனனைப் போல் நிற்கக் கண்டு, எல்லோரும் வணங்கி வாழ்த்தவும், போற்றவுமாக விளங்கினர். அப்போர்ப்பட்ட காலங்களிலேயும் துரியோதனன் சற்றுங்கலங்காமல் இறுமாந்துகொண்டு எனக்குப் பட்டமான நாள்முதல் இந்நாள் வரையிலும் அனேக இந்திர ஜாலம், மகேந்திர ஜாலங்களெல்லாம் பார்த்தேன். எனக்கிது எம்மாத்திரம், போ, போ இன்னுஞ் செவ்வையாகக் கற்றுக்கொண்டு வா, போ' என்று சொல்லி, சிங்காதனம் விட்டிறங்காமல் திடதைரியத்துடனிறுமாந்திருந்தான். அப்போர்ப்பட்டவனை ஸ்ரீ கிருஷ்ண பகவான் உறுத்துப் பார்த்து, "துரியோதன மகாராஜனே! நல்ல காரியஞ் செய்தீர்! கம்மைப் படுகுழிபிற்றள்ளிக் கொல்ல வல்லவோ நினைத்தீர்! உமது நினைப்புக்குத் தெய்வஞ் சகாயம் பண்ணுமற்போய்விட்டது. எனது பத்தினிமார்களின் மாங்கல்ய பலமானது என்னை இரட்சித்தது. இப்போது நமக்கு வெகு சந்தோஷமாய்ற்று. சக்ரவர்த்தியாகிய நீர் அக்கிரமத்துக் குடன்பட்டபடியால், விக்ரமத்துடன் உமது புத்ர மித்ர களத்ராதிகளையும் இன்றே கொன்று தென்றிசைப் பாலனிடத்தில் அனுப்பிவைப்பேன். அப்படிச் செய்யாமல் மனம்பொறுத்தேன். அதேனென்று கேட்பீராகில், பூர்வம் நீரும், அர்ச்சுனனும் துவாரகைக்கு வந்து நம்மைப் படைத் துணை கேட்டபோது ஆயுதமெடுக்கிறதில்லை யென்று வாக்குத்தத்தஞ் செய்திருந்தபடியினாலேயும், சூதாடிச் சயித்துத் துரோபதையைத் துகிலுரித்த சபையில் உங்கள் நூறு பேரையும் நானே கொல்லுகிறேனென்று பீமசேனன் சபதம் பண்ணிய வீர வசனம் தப்பிப் போகாமல், தூது வந்த நான் சகல பகையு முடித்துவிட்டால் உமது பகைவராகிய பாண்டவர்களுக்குப் பெருமை யில்லை யென்றும் இவைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து இன்று உம்மை மன்னித்துப் பிராணனுடன் விட்டு வைத்தேதை யல்லாமல் வேறில்லை. நல்லது ஓய் துரியோதன மகாராஜனே! நீர் எனக்குப் பூமியிற் பள்ளம் வெட்டிய படியால் நான் உமக்கும், உமது புத்திர மித்திரர் யாவருக்கும் ஆகாயத்திற் பள்ளம் வெட்டியிருக்கின்றேன். உமக்கு அநுகூலமா

னவர்களுடனே அந்தப் பள்ளத்தில் தடை யில்லாமல் விழப் போகி றீர். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை 'முன்னளந்த நாழி பின் னளக்கும்' என்னும் பழமொழியாகிலும் கேட்டதில்லையோ? இந்த மொழியின் தாத்பரிய மென்ன வென்றால் அரிசி முதலிய வஸ்துக் களை முன்னுலே ஒருவருக்கொருவர் அளந்து கொடுத்திருந்தால் வாங்கின பேர்கள் பின்னுலே அளந்து கொடுப்பார்க ளாதலால், உலகத்தில் ஒருவருக்கொருவர் உதவுதல் வேண்டுமென்று சொல்லு வார்கள். அப்படியல்ல; இந்த மொழிக்குப் பொருள் சொல்லுகிறேன் கேளும்: பூர்வத்தில் நல்வினை, தீவினைகளை எவ்வளவு அளந்து தொகை செய்து வைத்தார்களோ, அந்த அளவின்படி பின்னுக்கு அநுபவிக்கும்படியாய் அந்த வினைகள் அளந்திருப்பதை நடத்து மென்று பொருள் கொள்ளும். பூர்வமென்று சொல்லுவது முன் ஜனனமென்று சிலர் பேசுவார்கள். அப்படி எண்ண வேண்டாம். நடந்த தெல்லாம் ஜன்மாந்திர மென்றும், பூர்வ மென்றும், சகாப்த மென்றும் சொல்லப்படும், ஆகையால் இப்போது என்னைக் குழியிற் றள்ளப் பள்ளம் வெட்டியபடி, தெய்வம் உமக்கிதோ பின்னுலே பள்ளம் வெட்டி இருக்கிறதென்று தடையற யோசிக்கலாம்" என்று எல்லோரும் கேட்கும்படியாய்ச் சொல்லி, ஸ்ரீ கிருஷ்ண பகவான் சபையை விட்டெழுந்தருளியபோது, பீஷ்மர், துரோணாதி வெகு ஜனங்களும் வந்தனஞ் செய்து அவர் முக நாடிப் பின் றொடர்ந்து வர, அவர்க ளெல்லாரையும் அவர் பார்த்து நகைத்து 'கண்டீர்களா சற்குணவான்களே! எந்தத் தலத்தில் எந்தக் குலத்தில் இந்த மோசம் நடக்கும்? இவன் ஆகத் தக்கவ னுலல் இப்போர்ப்பட்ட அநியாயத்திற் குடன்பட மாட்டான். இவன் அழிந்து போகிறவ னுகையால் இந்தத் துன்மார்க்க புத்தியை கினைத்தான். நீங்களெல் லோரும் அறிந்திருங்கள். என் பேரிற் குற்ற மில்லை. நான் போய் வருகிறேன். நீங்க ளிவ்விடத்திற்றானே கில்லுங்கள்" என்று சொல் லிக் கர்ணனுடைய கையைப் பிடித்துக்கொண்டு சில தூரம் போய் இதனைச் சொல்லுவதானுர்:—

கண்ணன் கர்ணனோடு சம்பாஷித்தல்.

'ஓ அங்கதேசாதி பதியே! பார்த்தீரா? நானென்ன விரோ தியா? இல்லை. உனக்கும், அவர்களுக்கும் கலகமூட்டிவிட்டவனு? நீ வேறு அவர்கள் வேறென்று பார்க்கும்படியானவனு? ஒன்று மில்லையே! பாண்டவர்கள் சொல்லிய சங்கதியைக் கேட்டு உற்றது

சொல்ல வந்த தூதன் யான். என்னைப் படுகுழியிற் றள்ள நினைக் கலாமா? இந்தப் பாவம் வீண் போமா? தூதரைக் கொல்ல நினைத்த தோஷம் இந்தப் பூதல முள்ள மட்டும் நீங்கா திருப்பது மல்லாமல், அவன் செல்வமு மோங்க மாட்டாதே! அவனுடைய புத்தியை நீர்தானே யோசியும். அவனுக்கு இன்னும் தகுந்த புத்தி களைச் சொல்லும். நீர் இங்ஙனே நில்லும்" என்று சொல்லி காலடி பெயர்த்து வைத்துப் போய், மறுபடியும் ஏதோ ஒரு நினைப்பு வந்த வரைப் போற் கர்ணனை யழைத்து, "ஓ கர்ண ராஜனே! நீர் சாஸ்திர விசாரணையுடையவர். நல்ல புத்திசாலி! சாமர்த்தியம்! விவ காரமுடையவர்! மிகு கொடையாளி! அங்க தேசாதிபதி! எல்லாப் பாக்கியங்களும் உமக் கிருக்கின்றது. ஆனால் ஒரு குறைவு மாத்திர முண்டு. அதாவது நீரின்னு ரென்றும், தாய் தந்தையர் இன்னு ரென்றும் தெரிந்துகொள்ளாமலிருக்கின்றீர். உலகத்தாரெல்லாரும் உம்மைச் சூத புத்திர னென்று பச்சையாய்ச் சொல்லுகிறார்கள். நீரும் சபையினிடத்தில் யாராகிலும் இந்த இழிவான சொல்லைப் பேசினால் அப்போது குன்றிப் போகின்றீர்! அது ஞாயந்தான்! எவ்வளவு அழகும், செல்வமும், தவமு மிருந்தாலும் குல தோஷம் வரலாகாது. வந்தாலோ குண மோசம் போம். நானு மப்படியே எண்ணியிருந்தேன். அப்பால் விசாரிக்குமிடத்தில் உமது உத்தமப் பிறப்பு முதலிய நன்மைக ளெல்லாங் கேட்டு மேலாகிய பரம சந்தோஷமடைந்து, இந்தச் சந்தோஷ சமாச்சாரத்தை உமக்குச் சொல்ல வேண்டு மென்றே இவ்வளவு தூரம் வந்தேன். மேலும் நானறிந்தும் உமக்குச் சொல்லாவிட்டால் என்னத்தனை சிரேகத் துரோகி இவ் வுலகத்தி லிரான். ஆதலாற் கொஞ்சம் நிலையாய்க் கேளும். குந்திபோஜ மகாராஜாவின் குமாரத்தியாயும், பாண்டு பூபதியின் பத்தினியாயு மிராநின்ற குந்திதேவி தன் தந்தை யிடத்திற் கன்னிகையா யிருக்கும்போது, தூர்வாசர் அருள் செய்த மந்திரம் ஐந்தில் ஒரு மந்திரத்தைப் பரீக்ஷிக்க நினைத்துச் செபிக்க, அந்த மந்திரத்துக்கு அதிதேவதை யாகிய சூரிய பகவா னதிக்து வந்து குந்தி தேவிக்கு அநுக்கிரகஞ் செய்ய, உடனே உம்மைப் பெற்றாள். அந்தச் சூரியனுடைய வரத்தினாற் கன்னிகை யாகவே யிருந்து, பின்பு பாண்டு ராஜனைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு மூன்று மந்திரங்களால் தருமராஜன்-பீமசேனன்-அர்ச் சுனன் இந்த மூன்று பிள்ளைகளையும் பெற்றுக்கொண்டாள். மற்ற ஒரு மந்திரத்தையும் தன் சககளத்தியாயும், பாண்டு ராஜனுக்கு

இரண்டாவது மனைவியாயுமிருந்த மாத்திரிதேவிக்கு அநுக்கிரகஞ் செய்து, ஒரு கர்ப்பம் ஒரு பிறப்பாய் நகுல சகாதேவர் களைப் பெற்றுக்கொள்ளச் செய்தாள். கேளுங் கர்ணமகாராஜனே! கன்னிகைப் பருவத்தில் முதற்பெற்ற பிள்ளையாகிய உம்மை வளர்க் கப் பாக்கியம் பண்ணுமல், உலகம் பழிக்குமே, அரசன் பெண்ணுகிய இன்னுள் கல்யாணமில்லாமற் பிள்ளையைப் பெற்று ளென்று 'சேதை மோந்த இளநீர், என்னும் பழி போல் வருமே! என் தகப்பனுடைய நீதிக்குக் குறைவுண்டாகுமே!" என்றேங்கி, உடனே ஒரு பெட்டி யில் வைத்து ஆற்றில் விட்டுவிட்டாள்! மற்றக் காரிய மெல்லாம் உமக்குத் தெரிந்தேயிருக்கின்றன. ஞானினி விசேஷித்தொன்றுஞ் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் பாண்டவர்களுக்கு மூத்த தமையன் நீராகையால் இந்த இராஜ்யத்தைச் செயித்துக்கொண் டாலுஞ்சரியே, அல்லது விட்டாலுஞ் சரியே, இன்று முதல் உமது தம்பிமார் ஐவரும் வணங்க நீரு மிணங்கிச் சகோதர வாஞ்சை மேவிடும்படியாகப் பொருந்தி வாழ்வைப் பெற நான் கண்ணுற்கண்டு களிக்க வேண்டு மென்று ஆசை கொண்டு இந்த மொழிகளை விண்டேன். இரண்டாம் பேருக்குத் தெரிய வேண்டாம். மன துண்டானால் யோசித்து உடனே வந்து சேருகிறது உத்தமம அப்பால் உமதிஷ்டம்! என் பேரிற் கோபம் வேண்டாம்." என்று சொல்லிய ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்துக் கர்ணன் சொல்லுகிறான்:—

ஓ கிருஷ்ண தேவா! இன்றெனக்கு நல்ல காலம்! என் குல கோத்திர முதலிய யாவையுந் தேவரீர் வாக்கியத்தால் தெரிந்து கொண்டு தன்னியனானேன்! சுகமடைந்தேன்! கிருதார்த்தனானேன். கீர்த்திமானானேன்! ஆனால் ஒரு வார்த்தை கேளும். பாண்டவர்கள் என் தம்பிமார்க ளென்று இப்போ தறிந்துகொண்ட யான் அவர்க ளிடத்தில் வந்து சேர்ந்துவிட்டால், 'அடா பாவி கன்றி குன்றி னவனே' என்று நாலு பேரும் பகைத்து நகைப்பார்களே யல்லது தெரிந்த யோக்கிய னென்று என்னைச் சிந்திக்கப் போதிறதில்லை. உலகம் நிந்திக்கும். என் தம்பிமார்களுந் தேவரீரும் என்னை எவ் வளவாக மதிப்பீர்கள். அது மரியாதை யல்ல. மேலும் ஆற்றில் மிதந்து வந்த என்னை யெடுத்துச் சூதநாயகன் வளர்த்து வந்த காலத்தில், இன்னுன்-இன்ன ஊர்-இன்ன ஜாதி-இன்ன குலம்-இன்ன கோத்திரம் என்று எதுவு மறியாமல் மனதுங் கூசாமல் என்னை யாதரித்து அங்கதேசாதிபதி யாக்கி, அஸ்தினபுரத்தின்

செல்வங்களை யெல்லாம் என் வசத்தி லொப்புவித்துத் தன்னுடனேகூடச் சரியாசனத்திலுமேற்றிச் சகல அரசர்களும் பணியும் படியாகச் செய்து, சிரேஷ்ட பிராதாவைபார்க்கிலும் விசேஷ மரியாதையுடையவனுய்ப் பேதமில்லாமல் உடலிரண்டு உயி ரொன் றென்று உரைக்கும்படியாக, மலரும், மணமும் போல் வைத்திருந்த மகாராஜனுடைய துரியோதன பூபனுக்கும், பாண்டவர்களுக்கும் தற்காலம் பகை மேலிட்டு, உனக்கோ? எனக்கோ? இப்பவோ? அப்பவோ? என்றிருக்கும்போது செய்ங்ஙன்றி குன்றிய தீயர்களைப் போல் நான் என் தம்பிமார்களிடத்தில் கூடிக்கொள்வது நியாயமா? நீரே சொல்லும்" என்று கச்சைக் கொடியினனுகிய கர்ணன் சொல்ல, பச்சைத் திருமேனியையுடைய கண்ணன் "ஐயா கர்ணனே! நானறியக் கேட்டதையும். நான் சொல்ல வேண்டிய கடமையையுஞ் சொன்னேன். அப்பால் உமது இஷ்டத்திற்குச் சரியானபடி நடக்கலாம்" என்று விடை பெற்றுக்கொண்டு அசுவத்தாமன் அவ்விடத்தில் நிற்கக் கண்டு "வாருமையா அசுவத்தாமரே!" என்று கையைப் பிடித் தழைத்துக்கொண்டு நடந்து போய் இதனைச் சொல்லுவார்.—

கண்ணன் அசுவத்தாமனேடு சம்பாஷித்தல்

"ஓ குரு புத்திரரே! நான் கேட்ட காரியமும், துரியோதனன் சொல்லிய உத்தரமும், எனக்குப் பள்ளம் பறித்ததும் இவைகளெல்லாம் உமக்குச் சம்மதமாயிருக்கின்றவா? ஐயோ அநியாயமாய்ப் பதின்மூன்று வருடம் நாட்டை விட்டுக் காட்டில் வருந்தி வந்த பாண்டவர்களுக்கு அவர்களுடைய நாட்டைக் கொடாமல், ஐந்து வீடுங் கொடுப்பதில்லை யென்று சொன்னுல் அவர்க ளென்ன இவனை விடப்போகிறவர்களோ? உமக்கென்ன தெரியாதோ? நாளை நடக்கப் போகிற கெடுதியை நாமெல்லோரும் அறியவே போகின்றோம். 'பதறுத காரியம் சிதறுது' என்னும் பழமொழி பொய்யோ? அது போகட்டும், இந்தத் துரியோதனனுக்கு இவ்வளவு கர்வ மென்ன? உங்களையாவாகிய துரோணரைக்கூட ஆசாரிய ரென்னும் பாராமல், ஒவ்வொரு சமயத்தில் எடுத் தெறிந்து பேசுகிறதாய் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். உம்மிடத்தில் பயப்படுகிறனும்! நீரெப்போப் பட்டவர். இந்தத் திரிலோகத்திலும் உமக்கு மிஞ்சிய பேர்களொரு வருமில்லை. உமக்கு அர்ச்சுனன் பேரிற் பக்ஷமுண்டு. நீங்க ளிருவரும் பள்ளிக்கூடத்துக் கூட்டாளிகள். உங்களிலொருவர்க்கொருவர்

வைத்திருக்கும் பக்ஷத்தை நான் சொல்ல வேண்டியதில்லை. அதற்கு உங்கள் மனமே சாக்ஷி, இன்னொரு காரியம். துரியோதனன் உம்மை வணங்கி வழிபட்டு நாளை நடக்கப்போகிற யுத்தத்திற்குச் சேனாதிபதியா யிருக்கச் செய்வா னென்று நானினைக்கிறேன். ஒரு வேளை அப்படி நேரிடுமாகில் உங்கள் தகப்பனாருக்குச் சிஷ்யராகிய பாண்டவர்கள் உமக்குஞ் சிஷ்யர்களே. அவசியம் பிதுராசாரமென் னுந் தன்மையைப் போல் பாண்டவர்களிடத்தில் உங்கள் தகப்ப னாருக் கிருக்கும் பக்ஷம் உமக்குமிருக்க வேண்டும். நீர் பின்னோர் உதவியுஞ் செய்ய வேண்டாம். சேனாதிபதி பட்டத்திற்குமாத்திரம் ஒப்புக்கொள்ளாதீர். எவ்விதத்தில்காகிலும் விலக்கி விட்டுவிடும். பாண் டவர்களுக்கு உம்மாலாகிற உபகாரமிதுவேயாம்" என்று வாயினூற் பேசிக்கொண்டுவந்து தமது வலக் கரத்தின் விரலி லிருக்கும் முத்தி ரை மோதிரத்தைப் பெருவிரலாற்றளர்த்தி நிலத்தில் விழச்செய்தார். அப்போதே பூமியில் விழுந்த அந்த மோதிரத்தை அசுவத்தாமன் எடுத்து, "ஐயனே! இதோ மோதிரம் கீழே விழுந்தது" என்று கொடுக்க, அதை வாங்கக் கை நீட்டினவர் போல் மேல் நீட்டி ஆகாயத்தைப் பார்த்து, அசுவத்தாமரே! சூரியனைப் பரி வேடஞ் சூழ்ந்திருப்பதைப் பார்த்தீரா? உடனே மழைக்கேதுவா யிருக் கிறது. நானுஞ் சேனைகளும் பாண்டவர்க ளிருக்கும் உபலா வியம் போய்ச் சேருகிற வரைக்கும் மழையில்லாம லிருக்குமா?" என்று கேட்க, அசுவத்தாமனும் அந்த மோதிர மெடுத்த கையை நீட்டி ஆகாயத்தைக் காட்டி, "ஆம்! சூரியப் பரி வேடமே" என்று சொல்ல, அப்பாற் பூமியைப் பார்த்துக் கையைக் காட்ட, அசுவத் தாமன் அவர் கையில் அம் மோதிரத்தை வைக்க வாங்கிக்கொண்டு கல்லது போய் வாருமென்று விடை பெற்றுக்கொண்டு, "நமது எண்ணங்கள் நிறைவேறின, இன்னு மென்ன இருக்கிறது" என்று எண்ணிச் சந்தோஷ மடைந்து தேவர்க ளெல்லாரும் பூ மாரி பொழிந்து போற்றும்படியாகச் சாத்தகி முதலிய சகல ஜனங்களுட னேயும் விதுரன் வீட்டுக்கு வந்து, மத்தியான போஜனஞ் செய்து இளைப்பாறி இருந்தார்.

இப்பால் அசுவத்தாமன் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியி னிடத்தில் விடை பெற்றுக்கொண்டு இராஜ சபைக்குப் போகும்போது, அவ் விடத்திலிருந்து சகுனி முதலாகிய பேர்கள் அசுவத்தாமன் செய்த குறிப்பைக் குற்றமாகப் போதனைசெய்து, துரியோதனனுடைய

மனதைக் கலைத்துவிட்டார்கள். அப்போது வணங்காமுடியோன் மனம்பதைத்துச் சபையிலுள்ள யாவரையும்பார்த்து "கேட்டீர்களா பகையாளியின் தூத னென்று வந்த அந்தப் பஞ்சையைப் பொருட் படுத்தி இந்த அசுவத்தாமன் அவன் பின்னே போனதும், யாவருக் கும் போதிக்கும் ஆசாரிய புத்திரனுகிய இவனுக்கு அவன் போதித் ததும், அப்படியே இவன் உடன்பட்டுத் தூரியோதனன் எனக்குச் சேனுபதிப் பட்டங் கட்டினுற் பாண்டவர்கள் பக்ஷத்தி லிருந்து தூரியோதனனைக் கெடித்துவிடுகிறனென்று சொன்னதும், அந்தக் கிருஷ்ணன் இவன் சொல்லை கம்பமாட்டாமற் சத்தியம் பண்ணிக் கொடு என்று கேட்க, அப்படியே ஆகாயம் பூமியதியப் பாண்டவர்களை இரக்ஷிக்கிறே னென்று சத்தியம் செய்து கொடுத்து வந்ததும், என்ன ஆச்சரியம்! இந்த மித்ர துரோகிகளை எப்படி நம்புவது"? என்று உரக்கக் கூவி ஐயோ! என்னுடைய சொத்தைத் தின்கிறவர்க ளெல்லாரு மிப்படியா யிருக்க வேண்டும்? ஓ தெய்வமே" என்று சிந்திக்க, அப்போது அந்த வசனத்தைக் கேட்டுக்கொண்டு சபைக்கு வந்த அசுவத்தாமனைத் துரோணர் முதலிய யாவரும் நிந்திக்க, அசுவத்தாமன் சிந்தித்து, நாமொன்றும் பிரமாணம் பண்ணிக் கொடுக்கவில்லை. அவரும் பிரமாணங் கேட்கவுமில்லை. சூரியப் பரி வேடங் காட்டியதை ஆகாயத்தைக் காட்டினு னென்றும், பூமியில் விழுந்த மோதிரத்தை யெடுத்ததைப் பூமியைத் தொட்டுச் சத்தியம் செய்தானென்றும் ஸ்தாபித்துவிவிட்டார்கள். இனி நாமெத்தனை விதமாக உண்மைகளைச் சொன்னுலும் இந்த நாட்டார்கள் சற்றே கிலும் நம்பமாட்டார்கள். ஆ! ஆ! கிருஷ்ணு! உன்னெண்ணத்தில் வைத்துக்கொண்டு பண்ணிய சூதா இது? புண்ணியனே! உன் னெண்ணம் நிறைவேறிற்று? இந்த வையக மெல்லாம் என்னை வஞ்சக னென் றுரைக்கும்படியாக ஒரு பெயர் உண்டாக்கிவிட் டாயே! சபையிலிருந்த எல்லாருடைய மனத்தையும் பம்பரம்போ லாட்டிவிட்டாயே! சேந்தாமரை நாட்டமுடையவனே! நீயே இப்படி மித்ர பேதஞ் செய்யக் கங்கணங் கட்டிக்கொண்டால், பாண்டவர் களுக்குப் பகைவரு முண்டோ ஓ ஆண்டவனே!" என்று வருந்திக் கொண்டிருந்தான்.

குந்திதேவி கர்ணனிடம் செல்லுதல்.

அப்பால் விதுரன் வீட்டிற் சென்ற சதுரராகிய கிருஷ்ண மூர்த்தியானவர் பகற்கால மெல்லாம் இளைப்பாறிக்கொண்டிருந்து,

சாயங்காலம் தங்களத்தையாகிய குந்திதேவியின் அரண்மனைக்குச் சென்றார். இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களும் ஏத்திப் போற்றி நமது கர்த்தன் நமக்காகப் பொன்னடி பெயர்த்தருளி என்ன பாடு படுகின்றரென்று தோத்திரஞ்செய்து வாழ்த்தினர்கள். அக்காலத்தில் வசுதேவருடனே கூடப்பிறந்த கல்லத்தையாகிய குந்திதேவி எதிர்கொண்டு வந்து கண்டு மருமகனைத் தழுவி வாழ்த்தவும், கோபாலகிருஷ்ணன் குந்திதேவியைப் போற்றி "மாமி! கொடையாளியாகிய கர்ணனிடத்திற்குப் போய் வந்தீரா?" என்று கேட்க, இன்னம் போக வில்லை என்று சொல்லக் கேட்டு. "இது கல்ல தருணம் போய்வாரும். நடந்த காரியங்களைச் சொல்லி, இனி நடத்த வேண்டிய காரியங்களையும் பேசிக்கொண்டு வாரும்" என்று பிரயாணங் கூட்டி யனுப்பிவிட, உடனே குந்திதேவி மூத்த மகனைப் பார்த்துப் பேச வேண்டுமென்னும் ஆசை மேலிட்டு, தேச விசுவாசமுள்ள கர்ண மகாராஜனுடைய கொலு வாசலுக்குப் போனள். வாசற்காவலாளர்கள் விரைந்தோடிச் சென்று, "ஓ இராஜபூஜித மகாராஜராஜஸ்ரீயாகிய போஜனே! கேளும், வாசஞ்செய்காத மாலை யணிந்த தேசத்தரசர்கள் திறைகொண்டளக்கச் சிங்காசனத்தி லிருந்து செங்கோற் செலுத்திய எங்கோனுகிய பாண்டு பூபதியின் பட்டத்தரசி குந்திமாதேவி நமது கொலுக்கூட வாயிலில் எழுந்தருளினர்" என்று இறைஞ்சிக் கூற, அந்த வார்த்தையை அந்த தேசாதிபன் கேட்டு, எதிராகச் சென்று பிரதக்ஷிணஞ்செய்து, சாஷ்டாங்க தெண்டனிட்டுப் பாத பூசை செய்து மிகுந்த வாத்சல்லியத்துடனே அழைத்துப் போய் ஆசன மமைத்து அதன்மேலிருத்திப் பிரமானந்தம் அடைந்தனன். தாயாகிய குந்திதேவியும் குமாரனைப் பார்த்து, சந்திரனைக் கண்ட சமுத்திரம் போற் சரீரம் பொங்கச் சந்தோஷமடைந்தனள். இவ்விதமாக இருவரு மகிழ்ந்து ஒருவரை யொருவர் உற்று நோக்கினர். கர்ணமகாராஜன் கண்ணீர் சொரிந்து, "அம்மா! ஜன்மாந்திரங்களிலே நான் கல்ல தவங்களைச் செய்திருந்தபடியால் எனக்குத் தரிசனங்கொடுக்க இவ்விடத்திற்கெழுந்தருளினீர். என் பாக்கியமே பாக்கியம். தாயே! தேவீர் இவ்வளவு தூரந் திருவடி வருந்த வரவிருந்த காரிய மென்ன? அதனைக் கிருபை செய்து திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று கேட்கக் குந்திதேவி சொல்லுகின்றாள்—

கேளும் குழந்தாய்! நீ என்னுடைய பிள்ளை. நானுன்னைப் பெற்ற தாய். எப்படி யென்றால். தன்னந்தனியே கன்னிகைப்

பருவத்தில் என் வீட்டிலிருக்கும்போது, ஒரு முனிவரானவர் என்னுடைய தந்தையாகிய குந்திபோஜ மகாராஜனிடத்திற்கு வந்து, வந்தனுதி மரியாதைகளைப் பெற்று ஆசீர்வதித்து சாதுர்மாத விரதஞ் செய்ய வேண்டுமென்று சொல்ல, அதற்குடன்பட்டு, எனது தந்தையானவர் அந்தப் பெரியவருக்குச் சகல விதமான பணிவிடைகளும் செய்யும்படி எனக்குக் கட்டளை யிட்டார். அந்தப்படி முதல் நாளைப் போல் பல நாளுஞ் சகல வித உபசாரங்களுஞ் செய்துகொண்டு வந்தேன். அப்போது அந்த மகா முனிவருக்கு என்பேரிற் கிருபைவந்து மகிழ்ந்து, ஐந்து தேவதைகள் பேரால் ஐந்து மந்திரங்கள் உபதேசஞ் செய்து ஆசீர்வதித்துச் சென்றார். அப்பால் வாலியாகிய யௌவன முடையயான் ஒன்றுந்தெரியாமல் அந்த மந்திரத்தி லொன்றைப் பரீக்ஷிக்கும்படி எண்ணி யுச்சரித்தேன். அந்த க்ஷணத்திற்றானே அந்த மந்திரத்துக் கதிதேவதையாகிய சூரிய பகவான் என் முன் பிரத்தியக்ஷமாய், என்னைத் தருணி யாக்கிக் கூடி, மீட்டும் எனக்கு அக் கன்னிகைப் பருவங் குறை விலாமல் விருக்கும்படி வரங்களைப் பெருக்கி அநுக்கிரகஞ் செய்து சென்றார். உடனே எனது கர்ப்பத்தில் நீ வந்து உதயமாயினை மகனே! அந்த வேளையில் உன்னுடைய திருவுருவத்தையும், கவசகுண்டலத்தையுங் கண்டு களிகூர்ந்தயான், கன்னிகையாதலாற் கண் கலக்கமுற்று 'ஆளனில்லாமல் ஆண்பிள்ளை பெற்றாள். அரசனுடைய மகள்' என்று யாவருஞ் சொல்லிப் பழிப்பார்களே! தந்தை முதலிய பந்துக்களும் நிந்திப்பார்களே! குடிகேடி யென்றெண்ணிக் குறித்துக் கோபிப்பார்களே! குணவதி இப்படி யாளென்று கூறுவார்களே, என்று சூலைகுலைந்து, பற்பலவாறாக நினைந்து பழிக் கஞ்சி, ஒரு பெட்டகத்தி லுன்னை வைத்து ஆற்றில் விட்டு விட்டேன். அன்றுமுதலெனக்கொன்றுந் தெரியாது. அப்பனே! இன்றறிந் துன்னைப் பார்க்க ஓடி வந்தேன். என் கண்மணியே! உன்னை நானெடுக்கவும், மார்போ டணைத்துப் பால் கொடுக்கவும், சீராட்டவும், தாலாட்டவும், சந்திரனைக் காட்டவும், சப்பாணி கொட்டவும், ஆபரணம் பூட்டவும், நீ தத்தடியிட்டுநடந்து சிறு தேரோட்டவும், சக்கரை கைக்குங் குதலைமொழி பகர்ந்து தாயே அம்மாவென்று நீ அழைக்கவும், சரீரந் தழைக்கவும் பாக்கியஞ் செய்யாத பாவியானேன் அடபாலனே! நானுனக்குத் தாய் என்றும், நீ யெனக்கு ஜ்ஞேஷ்ட குமார னென்றும், பாண்டவர்க

ளுனக்குத் தம்பிகளென்றும், சந்தேகமில்லாம லுனக்குத் தெரிவிக்க வந்தேன்" என்று சிந்தை வருந்திச் சொல்லினாள்.

இந்த வார்த்தைகளையெல்லாம் குந்தியின் முதற் புத்திரனுகிய கர்ணன் கேட்டு, "அம்மா! கோபஞ் செய்யாதீர். அடியேன் ஒரு மொழி சொல்லுகிறேன். இதுவரையிலும் இல்லாத தாய் இப்போது எங்கே யிருந்து வந்தாள்? தேவரீரை ஆளாக்கி இங்கு அனுப்பி வைத்த ஆளை நானறிவேன். மேலும் உமது வாக்கியம் உண்மை தான். சந்தேகமில்லை. அப்படி இருந்தாலும் நானிப்போது நம்ப மாட்டேன். அதேனெனில் எவர்களானபோதிலுக் திரவிய சம்பன்னரா யிருப்பார்க ளானுல் அவர்களை, என் பிள்ளை-என் தம்பி-என் மாமன்-என் தந்தை-என் பந்து-என் சொந்தம் என்று சொல்லுவது இவ்வுலக மார்க்கம். துரியோதன மகாராஜனுடைய சம்பத்தெல்லாம் என் பற்றுயிருக்கின்றது. அதனுல் எனக்குத் தாயென்று வெகு பேர் வந்து, நான் பெற்றேன், நான் வளர்த்தேனென்றார்கள். அப்போது நான் விசனப்பட்டு 'அன்னையெத்தனை எத்தனையன்னையோ-அப்பனெத்தனை எத்தனையப்பனே' என்று மொழிந்த பெரியோர்களின் சொல்லுக் கிணங்க இருக்கின்றதே நமது பிறப்பென்று நானமுற்று, சூதகாயகனையும், அவரது மனைவியாராகிய இராதையம்மனையும் வணங்கி நோக்கி, என் வரலாறென்ன வென்று கேட்டேன். அவர்கள் "குழந்தாய்! பிள்ளை யில்லாமல் வருந்தியிருந்த எங்களுக்குப் பிள்ளைக் கலி தீரும்படி பெருகிய ஆற்றிற் பெட்டியில் மிதந்து வந்த பெருமான் நீ. உன்னைக் கண்டெடுத்து வந்து வளர்த்துப் பெயரிட வேண்டு மென்று யோசிக்கும் போது, கர்ணனென்று பெயரிடும்படி அசரீரி வாக்குப் பிறந்தது. அப்படியே பெயரிட்டு, எங்களாற் கூடிய சீரிட்டு வந்தோம். அப்பனே! இது நீ வந்த வரலாறு" என்று சொன்னர்கள். அதைக் கேட்டு மறுபடியும் அவர்களைப் பார்த்து 'நல்லது நான் வந்த பெட்டியில் ஏதாகிலும் எழுதி யிருந்ததா? அல்லது வேறு பொருளேதாகிலும் இருந்ததா? அந்தப் பெட்டி எங்கே?" என்று கேட்டேன். அவர்கள் 'அப்பா, அந்தப் பெட்டியில் உன்னுடைய திருவுருவ மன்றி வேறொரு பொருளு மில்லை. அந்தப் பெட்டியு மிதோ யிருக்கிறது' என்று கொண்டுவந்து வைத்து, 'மகனே! இந்தப் பெட்டியைக் காப்பாற்றிய தன்மையைப் போல் உன்னையும் கூட வைத்துக் காப்பாற்ற வில்லை' என்று சொன்னர்கள். அப்போ தெனக்குப்

பதினாறு வயதாகிக் கதுர் வேதங் கற்றுத் துரியோதன மகாராஜனுடைய சம்பத்தை யனுபவிக்குங் காலமாகையால், அந்தப் பெட்டியை எடுத்து வந்து எனது அரண்மனையிற் பூசை வீட்டில் வைத்துக்கொண்டு, நித்திய பூசை தூப தீபமும் கொடுத்து வந்த காலத்தில், ஒரு நாள் என்னை யாதரித்த அன்னையின் கர்ப்பம் போன்ற அந்தப் பெட்டியைத் திறந்து பார்த்தேன். அதனிடத்திலொரு திவ்வியமான பட்டாடை நாலாக மடித்து விரித்திருந்தது. அது என் கண்ணுக்குத் தோற்றியபடியால் நான் எடுத்துப் பூசித்து வைத்திருக்கின்றேன். அம்மா! அந்தக் காலத்தில் எனக்குத் தாயென்று வந்த ஸ்திரீகளிடத்தில் இந்தப் பட்டு வஸ்திரத்தைக் கொடுத்து உடுத்துக்கொள்ளச் சொன்னேன். அவர்கள் உடுத்துக்கொள்ள கரத்தில் வாங்கி விரித்தவுடனே உள்ளுடைந்து, உதிரம் வரண்டு அக்கினிக் கொழுந்தின் அனல் வந்து வீச, அரண்டு வெருண்டு அடித்துக்கொண்டு, மோதியும் விழுந்தும் உருண்டு புரண்டும் ஓடிப் போய்விட்டார்கள். அம்மணி! என்னிடத்தில் தாயென்று வந்து பேய் போற் கதறிப் போவாரைக் கண்டு, அன்று முதல் இன்று வரையிலும் தாயென்று வருவா ரொருவரு மில்லை என்று சொல்ல'' குந்திதேவி கேட்டுக் குலுங்க நகைத்து, அவனைப் பார்த்து ''எனது புத்திரசிகாமணியே, உன்னைப் பெற்ற அந்நாள் உடுத்துக்கொண்டிருந்த பட்டு வஸ்திரத்தை உன் னுடம்பு வருந்தாமற் பெட்டியில் வைத்துவிட்டேன். அந்தப் பட்டோ சுசி-ஆசாரம்-பக்தி இவையெல்லா முள்ளவர்க்குத் தோன்று மல்லாமல் மற்ற பேருக்குத் தோன்றாது. ஆகையால் எதோ அந்த வஸ்திரத்தை யெடுத்து வா'' என் றியம்ப, அப்படியே பரீக்ஷிக்க வேண்டுமென்று கர்ணனும் பக்ஷமுடன் தக்ஷிணங் கொண்டுவந்து கொடுத்தான். குந்தி அதை வாங்கிச் சற்று நேரம் தாங்கிச் சூரிய பகவானைச் சிந்தித்து, அரையிலுடுத்துக்கொள்ள வாடாமல், வதங்காமல், ஓடாமல், ஒதுங்காமல் வெண்டாமரை போல் விளங்கிய முகமும், பால் சுரந்து பசந்த தனமும், பக்ஷமும், இச்சையும் உடையவளா யிருந்த குந்தியைக் கர்ணன் கண்டு பிரமானந்தங் கொண்டு அமுத முண்டவனைப் போல் அன்பு நிறைந்து, அன்னையின் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து, ''என்னை இன்னனென்று தெரியச் செய்த இறைவியே சரணம்'' என்று இறைஞ்சிச் செய்த உபசாரமும், தோத்திரமும் இன்ன விதமென்று எம்போலியரால் இயம்ப வொண்ணாது. அந்தக் காலையிற் குந்திதேவி தனது வாலைப் பருவத்திற் பெற்ற பிள்

னையைக் கட்டித் தழுவிக்கொண்டு உச்சி மோந்து உடலுட னனைந்து, தேக மெல்லாந். தடவிக் கொடுத்து 'வளர்த் தெடுக் கப் பாக்கியம் பண்ணுமற்போனேனே' என்று மனம்வருந்தும்போது கர்ணன் "தேவரீர் கல்ல பூசை - நோன்பு - தவம் - பெரியோர் நேசம் இவை முதலிய பாக்கிய மெல்லாம் பெற்றவராகையி னல், ஆறு பிள்ளைகளைப் பெற்று ஐந்து பிள்ளைகளை எடுத்து வளர்த் துப் புத்திரவாஞ்சையை நீக்கிவிட்டீர். அடியேன் தேவரீருடைய கரத்தி லிருந்து வளரவும், பாண்டவ ரைவரும் எனக்குத் தம்பிக ளென்று பாரோர் மதிக்கவும், பாக்கியஞ் செய்யாத பாவி யானேன். அன்றியும் என் தாய் தந்தை-சகோதரர்-ஜாதி-குலம்-இவர்களின் தன்மை இன்னதென்று காரணியோர் சொல்லிக்கொள்ளும்படி தவஞ் செய்யாத தரித்திரனானேன். இன்றெனக்கு கல்ல கால மான தால் உம்மைக் கண்டு தரிசிக்கப் பெற்றேன்; என் மனக் குறைக ளெல்லாம் அற்றேன்; மேன்மையு முற்றேன்" என்று தாயும், பிள்ளையுஞ் சம்தோஷத்துடன் வார்த்தையாடி மகிழ்வுற்றபோது குந்திதேவி 'கர்ணனைப் பார்த்து, "அப்பனே! இது வரையிலும் உன் பிறப்பை நீ யறியாதபடியால் துரியோதனனிடத்திலிருந்தாய். இப்போது இன்னு னென் றறிந்துகொண்டமையாற் பாண்டவராகிய தம்பிமார் பணிவிடை செய்யச் சிங்காசனத்தில் வீற்றிருந்து தேச தேச ராசர்கள் வந்து விசுவாசமாகப் பணிய இனி நீ அஸ்தினபுரத்தி லிருந்து அரசாளுகிறதைப்பார்க்கிலும் வேறுகிய வைபவம் ஒன்று மில்லையே. அப்படி செய்வதே கடன்!' என்று சொல்ல, அதைக் கேட்டுக் கர்ணன் சொல்லுகிறான்.—

கேளும் மகாராஜபத்தினியே, சூரிய பகவானுடைய அநுக்கிரகத் தினால் என்னைப் பிள்ளையாகப் பெற்று, பிறர் பழிப்பார்களென் றஞ் சிப் பெட்டியிலிட்டுப் பெருக்காற்றில் விட்டுப் புத்திரப் பேறுசையை நிராசை செய்துகொண்டு, பெற்றதும் அல்ல பெறுததும் அல்ல வென்று என்னை மறந்துவிட்டீர். அம்மணி, உமது கர்ப்பத்தி னலத்தினாலே, அல்லது என்னை உற்பவித்த சூரிய பகவானுடைய வலத்தினாலேயோ ஜன்மாந்திரத்தில் நான் தேடிக்கொண்ட தபோ பலத்தினாலோ உயிர் பிழைத்து ஆற்றில் மிதந்து வரும்போது சூதநாயகனும் ராதையும் என்னை எடுத்து வளர்க்க அந்தச் செய்தி யைத் திரிதராட்டிர மகாராஜன் கேட்டுத் தன் குலத்திற் சூரிய பிள்ளையாகச் சகல செல்வத்துடன் என்னைப் போஷித்து வந்தான்;

என்னைப் பிள்ளைக்கலி தீர்த்த பெருமானென்றெண்ணி வளர்த்த சூத நாயகனும் ராதையும் தடை சொல்லாதிருந்தார்கள். நானும் தனிக் குழந்தையாதலினால் அதிக செல்வத்தில் வளர்ந்து வந்தேன். அப் பால் துரியோதனனுடையரும் பிறந்தார்கள். நான் பரசுராம ரிடத்தில் தநுர் வேத முதலானவைகளைக் கற்றேன். துரியோதனன் பாண் டவர்கள் முதலிய யாவரும் துரோணாசாரியரிடத்தில் அவ் வில் வித்தை முதலானவைகளைக் கற்றுக்கொண்டு பரீக்ஷை பார்க்கும் போது, அர்ச்சுனனுக்கும் எனக்கும் பகை கேரிட்டுச் சபதங்கள் கூறிய காலத்தில், துரியோதன ராஜன் என்னை உயிர்த் தோழனைக் கொண்டு, அங்க தேச பட்டாபிஷேகந் தரித்துப் பொன்மாலை யென் னும் பெண்ணைச் சுயம்வரத்திற் கலியாண முடித்து வைத்துத் தன் னுடன்கூடச் சரியாசனத்திலேற்றித் தம்பிமார்களும், சகல இராஜர் களும் போற்றிச் சுற்றத்தார் முதலிய யாவரும் என்னைத் தொழும் படியாகச் செய்து காணியாட்சி-அரசாட்சி-படையாட்சி முதலாகிய நிதிநிக்ஷேபங்களும் என்னிடத்திலொப்புவித்துப் பொற்பள்ளயத்தில் தன்னோடு கூடவிருந்து புசிக்கும்படியாகப் பாராட்டிப் பேரும்-பிரப லமும்-புகழும்-பெருமையும் உண்டாக்கிப் பேத மில்லாமல் என்னைப் பாதுகாத்து வந்தான்.

இவை யல்லாமலும் இன்ன மொரு விந்தையைக் கேளும். அன்னையாகிய குந்தியே! ஒரு நாள் கெடிஸ்தலாதிபதியாகிய சுயோ தன மகாராஜாவின் தர்ம பத்தினியாகிய பானுமதியும், நானும் தனிமையாய் ஏகாந்தசாலையிற் சொக்கட்டா ஞடிக்கொண் டிருந் தோம். அந்த வேளையில் அத் துரியோதன மகாராஜன் வந்தான். அவன் வருவதை நேராகப் பார்த்த பானுமதியானவள் ஆட்டத்தை விட் டெழுந்தாள். அரசன் வந்ததை நானறிந்துகொள்ளாமல், 'தோல்வி, வெற்றி இரண்டும் பார்த்துவிட் டெழுந்திரு' என்று அறையிற் கட்டியிருந்த மேகலாபரணத்தைப் பற்றினேன். அந்தப் பட்டத்தரசி அவசரப்பட்டுப் போம்போது, மேகலை யறுந்து பலபல வென்றுதிர்ந்தது. அந்த அம்மனுடைய அறை வஸ்திரமுந் தளர்ந் தது. இந்த அலங்கோலத்தைப் பார்த்துக்கொண்டு வந்த அரச னுனவன் சற்றுஞ் சிந்தையிற் பேதம் பாராட்டாமல், 'அண்ணு! மேகலாபரணத்தைப் பொறுக்கி எடுக்கவா? அல்லது கோக்கவா?' என்று கேட்டான். இறைவனுகிய அவனுக்கு இப்போது வஞ் சகஞ் செய்து உம்முடைய ஐந்து பிள்ளைகளிடத்தில் வந்து

சேரச் சொல்லி நீரழைப்பதும், உமது வார்த்தையைக் கேட்டு நான் வந்துவிடுவதும் நியாயமா? தருமமா? அம்மணி நீரே சொல்லும். இதன்றியும், க்ஷாத்திர மேலிட்டுப் பாண்டவர் சண்டை செய்யக் காத்திருக்கும் போதாகிய இன்று, ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லக் கேட்டு வந்து நீர் அழைக்கின்றீர். அன்று முதல் இன்று வரையிலும் தாய், தந்தை, தமர், குரு, தெய்வம்போ லிருந்து, ஜாதி, குலம், கோத்திரம், க்ஷேத்திரம், இவைகளெல்லாம் உண்டாக்கி, எனக்கும் ஒரு பெண்ணைப் பெண்டாக்கி, அன்னபானாதி ஆபரணங்களுங் கொடுத்து ஆதரித்த மன்னனை இந்த வேளையிற் கைவிட்டு எப்படி வரலாம் தாயே? 'தந்தைசொன்மிக்க மந்திரமில்லை, தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை' என்னும் நீதிக் கிணங்க உமது சொல்லைத் தள்ளாமல் வருவேனுனல், சந்திர சூரியருள்ள வரைக்கும் உலகம் பழிக்கும். நரகங் கிடைக்கும். கன்றி குன்றிப் பஞ்சமாபாதகரில் நான் முந்தி இருப்பேன். என்னைச் சுமந்து பெற்ற உமது கர்ப்பத்திற்கு நிந்திப்பாகிய இழிவு வந்து சேரிடும். தெய்வமும் சகியாது. இதற்கு மேலாகிய பாவமும், பழியுமில்லை. அன்னையே! என்னை முன்னமே நமபி யிருக்கும் மன்னனுக்கு அவனிடத்திலுண்ட அன்னக் கடன் கழியுமபடியாய் மன்னவருட னெதிர்த்து, அவர்களையெல்லாஞ் சின்னபின்னப்படுத்தி இங்கிலங் ஆதிக்கப் பொன்னுலகத்திற் புகுவேனுகில், கன்னிகையாகிய உமது கர்ப்பத்திற் பிறந்த யான் கர்ணன் என்கிற பெயருடையவனுவேன். மின்னலுக் கிணையாகிய இடையும், கன்னலுக் கிணையாகிய மொழியும், சொன்னத்திற்கொப்பாகிய வடிவும், அன்னத்திற் கொப்பாகிய நடையுமுடைய அன்னையே! இப்போது சொல்லவந்த சங்கதியைச் சில காட்களுக்கு முன்னே சொல்லியிருந்தால், உமது மனதுக்கு ஒப்பாக வந்துவிடுவேன். அப்போதில்லாமல் இப்போது வந்தபடியால் என் மனது ஒப்பாது. ஒரு வேளை தப்பாக வந்தாலும பாண்டவர்களுக்குத் தமையன், உண்ட வீட்டுக் கிரண்டகஞ் செய்பவனுனென்று தேவர்கள் முதல் யாவரும் தூறுவார்கள். மன்னர் முதலிய யாவரும் வசை கூறுவார்கள். அப்படி நடப்பது சற்றுஞ் சரியல்லவே—என்று சொன்னுன். அந்த வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திற் பகீரெனப் பதறி வாடி வருந்தி, மயங்கித் தியங்கிக் குலைகுலைந்து, கண் கலங்கிக் கோவென் றழுங் குந்திதேவியைப் பார்த்து, தானு மனந் தளர்ந்து, தாயைத் தழுவிப் பணிந்து தைரியஞ் சொல்லிக் கண்ணீர் துடைத்துக் கவலை யகற்றி,

"ஓ கருணை சுரந்த தாயே! இவை யெல்லாம் நமது செய லன்று. யாவும் பிரமத்தின் கட்டளையல்லது வேறில்லை. போனது போகட்டும். துஷ்ட நிணற்றைத் தூறு வாருபவரைப்போற் றுரிதப்படுத்தித் தேருக் குள்ள சிங்காரமுஞ் செய்து, தேவரீரை என்னிடத்திற்கு அனுப்பிவைத்த தேவன் கருத்தென்னவோ? அதைத் தெரியச் சொல்லுந் தாயே!" என்று கேட்ட தனயனைப் பார்த்துத் தாயாகிய குந்திதேவி சொல்லுகின்றாள் :—

"என் கான் முளையே! என் னிஷ்டப்படி உன் தம்பிமார்க ளுடன் நீ கூடி வாழ்வதை என் கண் களிக்கக் காண வேண்டுமென்று கருதி வந்தேன். அதற்குத் தரும விவகாரமும், நீதியுஞ் சொல்லி விலக்கிவிட்டாய். காண்டவ வனத்திற் பகைத்து வந்த அச்சுவ சேனனென்னும் நாகாஸ்திரத்தை அருச்சுனனுக்காக வளர்க்கின்றா யென்று கேள்விப்பட்டேன். அந்தக் கணையை அருச்சுனன் பேரில் எப்படியுந் தொடுக்கவே போகிறாய். அப்படியே அருச்சுனன்பேரிற் பிரயோகஞ் செய்து தெய்வ பலத்தினால் அவன் தப்பிப் பிழைப்பா னானால் இரண்டாந் தரம் நாகாஸ்திரம் விடுவதில்லை யென்று ஒரு வரமும், அருச்சுனனைத் தவிர மற்ற நால்வரும் போர் முகத் தில் நேரிடுவாரானால், அவர்களிடத்தில் நீ பக்ஷம் வைத்து, வீரப் பிரதாபம் காட்டாமல் இலகுவாய் யுத்தஞ் செய்து, அவர்களுயிரைக் காக்க வேண்டியது உன் கடமையாக ஒரு வரமும் ஆக இவ் விரண்டு வரமுமெனக்குக் கொடு" என்று கேட்டாள்.

கர்ணமகாராஜன் முகமலர்ந்து "அம்மா! நாளை நடக்கப்போகிற இரணகளத்தில் அருச்சுனனும், நானு மெதிர்த்துப் பற்பல யுத்தங் களும் பண்ணிப் பார்த்துக் கடைசியில் நாகாஸ்திரத்தை விடப் போகிறேன். அது எப்படியும் அவன் தலையை வாங்கிவிடும். நீர் அப்போது மனங் கூச வேண்டாம். ஒரு வேளை தலை போகாமல் உயிர் பெறுவானானால், திரும்பவும் நாகாஸ்திரம் தொடுக்கேன். அதேனெனில், நல்ல சுத்தவீரன் கரத்திலிருந்து புறப்படுங் கணை கள் சத்துருவைக் கொல்லாமல் விடா. ஒரு வேளை லக்ஷியந் தப்பிப் போனாலும், மறுபடியுந் தொடுப்பது இராஜ தர்மமும்-தநுர் வேத தர்மமும்-வீர தர்மமும்-மேலாகிய ஆண்மையு மல்ல. மேலும் மற்ற நான்கு தம்பிமார்களையும் என் கையினாற் கொல்லுகிற தில்லை. இதை ஐய மில்லாமல் உமது மனதிற் கொள்ளும்

அம்மா" என்று இரண்டு வரங்களுங் கொடுத்துப் பூமிதேவியைப் போன்ற குந்தி தேவியைப் பார்த்து "நீர் வேண்டிய வரமிவை தானு? ஆனால் நீர் எனக் கிரண்டு வரந் தாரும்" என்று தொழுது அடி வணங்கினன். குந்தி அவனை ஆதரித்தெடுத்து, "அப்பா மகனே! என் னருந் தவக் கண்மணியே! உனக்கு வேண்டிய வரம் இன்ன தென்று சொல். என் செல்வத்திற் சிறந்த செங் கரும்பே!" என்று சொல்லக் கர்ணன் புந்தி மகிழ்ந்து "என்னுயிரையும் மன்னுயிரையும் ஈன்று வளர்க்கும் இறைவியே! கேளும்! போர்க்களத்தில் அருச்சுனனும் கானும் எதிர்த்துச் சமர்புரியும்போது, அருச்சுனன் கணையினால் கானிறந்து விடுவேனானால், உடனே தேவரீரோடிவந்து என்மேல் விழுந்து, என் மகனே! என் மகனே! என்றலறி அழுது, உமது மகனென்று உலகமறியச் செய்வது ஒரு வரம். அப்போர்ப்பட்ட முடிவுகாலம் எனக்கு நேரிடுகிற வரையிலும், கானுமக்கு மூத்த பிள்ளையென்றும், தேவரீர் தாயென்றும், பாண்டவரெனக்குத் தம்பிகளென்றும், இம் மண்ணுலகி லொருவருக்குந் தெரிவிக்காமல் மனத்தில் வைக்கவேண்டியது ஒருவரம். ஒருவேளை வெளிப்படுமானாற் பாண்டவர்கள் சண்டையை நிறுத்திவிட்டுச் சபதங்களையும் விட்டு, நாட்டை யெனக்குக்கொடுத்து, தாங்கள் காட்டை யநுபவிக்கும்படியாய்ப் போய் விடுவார்கள். அப்படி யெனக்கு நாட்டைக் கொடுத்தாலும், அந்த நாட்டை என் தோழனாகிய துரியோதனனுக்குக் கொடுத்துவிடுவேன். ஆகையால் விரதமுங்கெட்டுச் சுகமும் விட்டுப் போவானேன்? அம்மா! இப்போது நாமிருவரும் பேசிய மர்மம் வெளிப்படாமலிருக்கவேண்டும். இந்த இரண்டுவரங்களு மெனக்குத் தாருந் தாயே" என்று இரு கரங்களையும் கீட்டி இரந்துகேட்டான். குந்தி கர்ணனை நோக்கிக், "கண்ணுமனமுங் கரைந்து விரைந்து, உன் னெண்ணப்படி வரந்தந்தேன்" என்றுரைத்த தாயைப் பணிய, தாயுஞ் சேயைத் தழுவிச் சிந்தைகளித்துத் தேகந்தணிய, "அடா கண்மணியே! இதுவரையிலும் பிரிந்திருந்த நம்மை இன்னுரென்று தெரிவித்துக் கூட்டியதெய்வம் மறுபடியும் பிரிக்க நினைத்தால் என் மனமெப்படி தாளுவேன்? வழி நடந்தெப்படி மீளுவேன்? ஆ! ஆ! குமாரனே" என்று அலறிய அன்னையை ஆதரித்துபசரித்து, அடி மலரிணையில் முடியுற வணங்கி விடைகொடுத்தனுப்பித் துடிதுடிப்புடன் அரண்மனைக்குட் போனான்.

இப்பால் குந்திதேவி படபடவென்று வழி நடந்து வந்து, மன்னர்பெருமான் மனையிற் புகுந்து, மருமகனுகிய கிருஷ்ணன் எதிரோடிவந்து வணங்கச் சிந்தை மகிழ்ந்து, உபசரித்து உள்ளறையிற் போயிருந்து, கர்ணனிடத்திற் சென்றதும், அவனைக் கண்டதும், சங்கதி விண்டதும், அவன் நவின்றதும், அதற்கு அங்கு நடந்ததும் ஆகிய யாவற்றையும் குறைவில்லாமற் சொன்னுள். கிருஷ்ணன் தம் தெண்ணமெல்லா மீடேறியபடியால் உவந்து "மாமி! நான் வந்து சில நாட்க ளாய்விட்டன. என்னமோ ஏதோவென்று என்னை யெதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள், உன் பிள்ளைகளாகிய பாண்டவர்கள்: ஆதலால் விரைவில் யான் அவர்க ளிடத்திற்குப் போகும்படியாய் உத்தரவுகொடும் உத்தமியாகிய அத்தையே" என்று கேட்க, குந்தி தேவி "மருமகனே! எங்கள் குடும்பத்தினுடைய காரியங்களை யறிந்த நீயிருந்தும், என் பிள்ளைகள் சகலத்தினும் நிர்வாகசாலிகளா யிருந்தும், நாட்டையும் நகரத்தையும், நலத்தையும், மானத்தையும் பங்காளிகள் கையிலொப்புவித்து, காட்டையும், கலகத்தையும், அவமானத்தையும் கைக்கொண்டு காலம்போக்குவது காரியமல்லவென்று, நான் சொன்னதாய் என் பிள்ளைகட்குச் சொல்லும். மேலும் நீர்மேலெழுத்துப் போல நிலையில்லாக் காயமென்னும் நிச்சயத்தைப்பெற்ற இந்தப் புல்லுடலைக் கல்லுடலாக நினைத்துச், சபையிற் கூறிய சபதத்தை நிறைவேற்றும விருப்பது இராஜ வீர தரும மல்லவென்று சொல்லும். இவையன்றியும் இந்தப் பாண்டவர்களைப் பெற்றுவளர்க்கத் தவம் பெற்றேனே யல்லது பாரத யுத்தத்திற் பிராணனுக் கானியில்லாமற் காக்குங்கடமை யென்னுடையதல்ல. எல்லாம் தேவரீருடைய கடமையே. திருவுந் திறனும் உம்முடைய உடைமையே. என் மருமகனுகிய கண்ணனே! என் புத்திரரை உமது அடைக்கல மாக ஒப்புவித்திருக்கின்றேன். எனக்கு வேறொரு துணையு மில்லை. நீரே துணை! உம்மையே நம்பினேன்" என்றுள். தீனதயாளுவாகிய திருமால் மாமியைப் பார்த்து, "மாமி! நீர் ஒன்றுக்குஞ் சிந்தனைப் படவேண்டாம், எல்லா மென்பொறுப்பே யல்லது வேறில்லை. நீர் கல்லசேதி கேட்கப்போகிறீர். இவ்விடத்திற்றானே நில்லும்" என்று சொல்லிப் பணிந்து விடைபெற்றுக்கொண்டு விதுரன் வீட்டுக்கு வந்து "ஓ விதுரராஜனே! நான் உபபிலாவியத்திற்குப் போய்வருகிறேன் விடைதாரும்" என்று சொல்ல, விதுர ராஜனவன் சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து இருகரங்களையுங் குவித்து அஞ்சலியஸ்

தனுய் நின்று "சுவாமி! பாண்டவர்களையும் என்னையுங் காப்பாற்ற வேண்டிய கடன் தேவரீருடையது. தமது திருவடித் துணையல்லது வேறில்லை. ஆகிலும் ராஜசபையில் மோசஞ்செய்து சூதாடி நாட்டைப் பறித்துக்கொண்டு வாதாடிக் காட்டைக்கொடுத்த துஷ்டனுகிய துரியன், இனி இஷ்ட ஜன புத்திரருடன் இராணுவத்திற் பட்டழியும்படியாகச் செய்து கெட்டியாகிய வெற்றியைப் பெற வேண்டுமென்று என் புத்திரராகிய ஐவருக்குத் தெரியச் சொல்லித் தேவரீர் கூடவிருந்து ஜயஸ்தம்பம் நாட்டித் திருமுடி சூட்டி வைக்க வேண்டிய பாரந் தங்களுடையது" என்று விதுர ராஜன் விண்ணப்பஞ் செய்துகொள்ள, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, "உமது சொற்படியே நடக்கும். அப்படியே பார்ப்பீர். இப்படியே நில்லும். துயரப்படாதீர்! தூரிதமாகச் செலவு கொடும்! விதுரராஜனே" என்று பயணம் பெற்றுக்கொள்ள, உடனே யாவரும் பயணபேரி முழக்கினர்கள். சாத்தகி முதலிய சேனைகள் சமுத்திர கோஷ்டம் போல் சப்திக்கக் குடை, கொடி முதலிய சகல விருதுகளும் வாத்தியங்களுடன் இராஜ வீதியில் நிறைந்து நெருங்கும்படியாய்க் கிருஷ்ணமூர்த்தி இரதமேறி வரும்போது, துஷ்ட சதுஷ்டாள் நான்குபேர் தவிர மற்ற யாவரும் வாகனமேறிப் புறப்பட்டு வந்து சுவாமியாருடன் தெருவாசற்படி வரையிலும் போய் வழி விட்டு வணங்க, அவ்விடத்தில் தமது ரதத்தை நிறுத்தி, யாவரையும்நோக்கி "வெகுதூரம் வந்துவிட்டீர்கள், நில்லுங்கள், நில்லுங்கள்" என்று எவரெவர்களுக்கு எத்தெத்த மரியாதை செய்ய வேண்டுமோ அத்தத்த மரியாதை உபசார வந்தனங்களைச் செய்து விடை பெற்றுக்கொண்டு சில தூரம் போகும்போது, சிற்சிலபேர் தனித்து வந்து பேசினர்கள். அவரவர்களுக்குத் தகுந்த வார்த்தைகளைச் சொல்லி அஸ்தினபுரத்திற்குப் போகும்படியாய் உபசாரத்துடனிறுத்திவிட்டு அப்பாற் போகையில், விதுரராஜன் ஓடிவந்து பணிந்து "சுவாமி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி! சபையில் துஷ்டனுகிய துரியன் அவமரியாதையாய் என்னை இகழ்ந்து பேசிய வசனத்தை என் பிள்ளைகளாகிய ஐவரிடத்தில் சொல்லவேண்டாம். அதேனெனில், இந்தச் சொல்லைக் கேட்டவுடனே என் பிள்ளைகளிப்போதே வந்து இவனைச் சேதித்துக் கத்திக் கத்தனை சதையாகக் கழித்துவிடுவார்கள். அப்போது உலகென்ன சொல்லுவாரென்றுல், ஏதோ தெரிந்து தெரியாமற் பிள்ளையானவன் ஒரு வசனத்

தைச் சொன்னபோதிலும், ஓர பொல்லாங்கைச் செய்தபோதிலும், தங்தையே முதலிய பெரியவர்கள் அப்போது தண்டித்துக் கண்டித்துவிட்டு அப்பால் மறந்துபோவார்கள். அப்படியிருக்க, இந்த விதுரன் ஒருகுடல் வேற்றுமையானதினால், வெகுண்டெழுந்து சொல்லிய பேச்சை விஷம்போல் வைத்திருந்து, பாண்டவர்களுக்குத் தெரிவித்து, துரியோதனனுடைய பிராணனை வாங்கிவிடச் செய்தான் பார்த்தீர்களா? கண்ணில் விரற்பட்டால் நாலுபேருக்குச் சொல்லிக் கலகஞ் செய்து கையைத் தறித்துவிடுவார்களோ முண்டோ ?— என்று பல வித பழிப்புவசனங்களைப் பேசுவார்கள்; என்னை யேசுவார்கள். அத்தப் பழி நமக்கு வருவானேன்? எப்படியும் நடக்கவேண்டிய கருமம் நடக்கப்போகிறது. ஆதலால் தேவரீரொன்றுஞ் சொல்லவேண்டாம்" என்று விளம்ப, அரிவாசுதேவன் மிகவும் விசனமுடையவராய் விதுரராஜனைப் பார்த்து "ஓ விதுரராஜனே! 'நனைந்தகிழவன் வந்தால் உலர்ந்தவிறகு சேதமாம்' என்பதுபோல், நானிவ்விடத்திற்கு வரவும், உள்ளன்பினை யுடைய உமது வீட்டிலிறங்கவும், உமக்கு இப்போர்ப்பட்ட சொல்விழிவு வில்லழிவுவரவும் இருந்தனவன்றோ ? கல்லது சுவாமியிருக்கின்றீர். விதுரரே! நீரொன்றுக்கும் விசனப்படாதீர். இந்தச் சங்கதியைப் பாண்டவர்களுக்கு நானேன் சொல்லுகின்றேன், சொல்லமாட்டேன். நீர் நில்லும்" என்று சொல்லி நிறுத்திவிட்டு, உபபிலாவியத்தை நோக்கிப் புறப்பட்டார்.

இவ்வாறு முல்லைமாலையையுடைய முகுந்தன் இரதகஜதுரக பதாதிகளுடன் சகல வாத்தியங்களு முழங்கிக்கொண்டுவரப் பிரயாணமாகி, சாத்தகியுந் தமது பக்கத்திற்றானே வரும்படியாகச் சென்று, மார்க்கத்திற் பல மன்னவர்களாற் போஜனாதி முதலிய சௌக்கியங்களையுங் கொண்டு, பண்டு பலாதிகளு முண்டு, உபபிலாவியம் வந்தார். தங்களைக் கண்டுபேச யத்தனித்துவரும் பகவானை எதிர்கொண்டு பார்க்கவருகின்ற பாண்டவர்கள், பற்பல அற்புறு சொற்பெறு மற்புத மற்புய விற்பெறு நற்குணவிற்பன இராஜர்களும், பிராண விசுவாசகர்களும், மிகுந்தநேசர்களும், மகாகவிராஜர்களும், சற்குல போஜர்களும், பற்பணிதாசர்களும், மந்தஹாசர்களும், நகரவாசர்களும், ஜேஜேயென்று கூடிச் சம்பிரமங்கள் பேச, இங்கித மங்கையர் தங்கள் நடனங்கள் புரிந்தடி தத்திமிகாமென, திமிதிமிதிமியென, மத்தளபேரிகை குமுகுமுகுமுவென, காரைபூரி வீரசின்ன

பேரி காகளங்க ளோசை சமுத்திரத்தோசை யென அதிர்ந்திட கண்ட அமரரனைவரும் வணங்கிக் கற்பகப் பூமாரிபொழிய, அற்புதர் பாமாலைமொழிய, கண்ணனைக் கண்ணினாற் கண்டு, வாகனம் விட்டிறங்கி மகிழ்ந்தனர். சுவாமியும் இரதம்விட்டிழிந்து எதிர்நோக்கி வர, எல்லோரும் வணங்கிப் பல்லோருமிணங்கி, நல்லோரையிற் சகல வைபவங்களுடன் நீராஞ்சனுதி கற்பூர தீபங்களினு லுபசரித்து, உபபிலாவிய ராஜவீதியைப் பிரதக்ஷணஞ் செய்துவைத்து, இராஜமண்டபத்திற் கழைத்துக்கொண்டு போய் நவரத்னகசித சிங்காசனத்தி லெழுந்தருளச்செய்து, அர்க்யபாத்ய ஆசமன்ய சந்தனு க்ஷதை தாம்பூல புஷ்ப தூபதீப நைவேத்திய உபசாரங்கள் செய்து வணங்கி நின்றனர். சர்வலோக சரண்யன் சந்தோஷமடைந்து, எல்லோரையும் வீற்றிருக்கும்படி உபசாரஞ்சொல்லி அப்படியே யாவருமிருந்தபின்பு, உபபிலாவியம் விட்டு அஸ்தினபுரத்திற்குத் தூது போனதும், அவ்விடத்தில் துஷ்ட சதுஷ்டர் தவிர மற்றவ ரெல்லாரும் எழுந்து எதிர்வந்து கண்டுகளித்து மகிழ்ந்ததும், தாம் விதுரன் மனையிலிறங்கியதும், மறுநாள் இராஜ சபைக்கெழுந்தருளியதும், நாரதர் கண்ணுவர் சமதக்கினி இவர்கள் மூவருங்கூட வந்ததும் எல்லோருக்கும் வந்தனை வழிபாடுகளை ஐவர் சொன்னதாகச் சொல்லித் துரியோதனனுடைய கொலுக்கூடத்திற் சென்றிருந்து வந்த செய்தியைப் பேசியதும், அந்த வார்த்தைக்கு அவன் உடன் படாமற் போனதும், முனிவர் மூவரும் உறுதியாகிய சில நீதி தருமங்களெல்லாம் உரைத்தும் அவனந்த வார்த்தைகளைக் கேளாமற் சண்டை செய்து ஜயித்தவர்கள் நாடாளுகிறதென்று சொன்னதும், தனக்கு விருந்து செய்த விதுரனை இகழ்ந்து வாய்க்கடாத வார்த்தை பேசி ஏசியதும் விதுரர் உடம்பு கூசி வில்லை வெட்டியெறிந்து சீ சீ என் றிகழ்ந்து எழுந்து போனதும், அன் றிராத்திரி நிலத்தைப் பறித்துப் படுகுழியாகச் சமைத்து உதயத்திற்றம்மையழைப்பித்து அந்தப் படுகுழியில் வீழச் செய்ததும், உடனே தமது விசுவரூபத்தால் அவன் கருத்தை அதமாக்கி அசுவத்தாமனுக்குச் சேனாதிபதிப் பட்டம் ஆக வொட்டாமல் தடுத்துவிட்டதும், மற்றச் சங்கதிகளியாவும் மைத்துனராகிய பாண்டவர்க்கு மனத் திருப்தி யாகும்படியாய்த் திருவாய்மலர்ந்தருள, யாவரும் அதிக ஆவலோடுங் கேட்டு ஆனந்தங் கொண்டிருந்தனர். ஆனால், ஓ ஜனமேஜய மகாராஜனே! கர்ணனின்னு னென்பதையும், குந்தி

தேவியை விட்டு அக் கர்ணனிடத்தில் வரம் வாங்கி வரச் செய்த தையும், குந்திதேவி அவனுக்கு வரங் கொடுத்ததையும், பாண்டவர் களுக்குத் தெரிவிக்க வில்லை திருமால்'' என்று வைசம்பாயனர் சொல் லவே, ஜனமேஜய மகாராஜன் கேட்டு மனமகிழ்ந்து, அவரைப் பிரம்மமாக நினைத்துப் பூசித்து, வந்தனை வழிபாடுகள் செய்து, "என்னைப் புனிதனுக்கிய புண்ணியனே! மேல் கடந்த வரித் தாந்தத்தையுஞ் சொல்ல வேண்டும்'' என்று, இரு கரங்களையுங் குவித்துக் கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

கிருஷ்ணன் தூதுச்சருக்கம் முற்றிற்று

அணி வகுப்புச் சருக்கம்

கண்ணன் துதி.

படர்ந்த கானகந் திரிந்துமீண் டன்புடன் பணிந்தபஞ் சவர்க்காகக்
கடந்தஞானியர் கடவுள்காண்கலாக் கழலினை சிவப்பேறத்
தொடர்ந்து கான்மறை பின்செலப் பன்னகத் துவஜன்மா கர்த்தூது
கடந்தநாயகன் கருமுகில் வண்ணமெ னயனம்விட் டகலாதே

கேளும் ஜனமேஜய மகாராஜனே! அப்பால் ஸ்ரீ கிருஷ்ண பகவானுனவர் பாண்டவர்களுடன் சபா மண்டபத்திலிருந்து சொல் லுகிறார்:— ஓ தருமராஜனே! கேளும்-நானிவ்விடம் விட்டுப் புறப் பட்டு அஸ்தினபுரத்திற்குச் சென்று விதுரன் வீட்டிலிறங்கிப் போஜ னங்கொண்டு திரியோதனன் சபைக்குப் போனேன். அவ்விடத்தி லிருந்த யாவரும் வந்தனை முதலிய மரியாதைசெய்ய ஆசனத்திருந் தேன். அதுகாலையில் நான் விதுரன் வீட்டி லிறங்கினே னென்று துரியோதனன் சற்றுநேரங் கோபமா யிருந்து, மறுபடியும் என்னைப் பார்த்து "நீர் வந்த காரிய மென்ன சொல்லும்?'' என்று கேட்டான். அதற்கு நான் 'பாண்டவர்கள் சூதாடித் தோற்றகாலில் பன்னிரண்டு வருடம் வனவாசமும், ஒரு வருடம் அஞ்ஞாத வாசமுங் கழித்து வந் தால் அவர்கள் பூமி முதலியவற்றைக் கொடுத்துவிடுகிறேனென்று நீர் வாக்குதத்தஞ் செய்து அனுப்பிய வண்ணம் அவர்கள் பதின்மூன்று வருடமுங் கழித்து வந்து உபபிலாவியத்திற் செழித்திருக்கின்றனர்; தங்களுடைய யோக க்ஷேமாதிசயங்களை உங்கள் யாவர்களுக்குந் தெரிவித்துத் தங்களுக்கு நீர் சொல்லியிருந்த சத்திய வசனப்படி இராஜ்யங் கொடுங்களென்று கேட்கும்படியாக என்னைத் தூதனுப்பி

வைத்தனர். நானும் உங்களைப் பார்க்க வேண்டு மென்னும் ஆசையையுடையவனாக இவ்விடத்திற்கு வந்தேன்; உங்கள் யாவரை யுங்கண்டேன்; சந்தோஷங் கொண்டேன். ஆதியிற் சொல்லிய வார்த் தையின்படி ஐவர்க்கு அரசு கொடுத்து வாழ்வதே உத்தமம்'' என்று கூறி, 'இதற்கு நீர் என்ன சொல்லுகிறீர்?' என்று கேட்டேன். என்னு டன்கூட வந்த மூன்று ரிஷிகளும்- பீஷ்மருட்- துரோணரும்- கிரு பரும்- விதுரன் முதலாகிய பேரும், ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிற தைக் கெட்டியாய் நம்பிப் பாண்டவர்களை நேசித்துப் பக்ஷமுடன் வாழ்வதே நன்மை' என்று சொல்லியும், பாபியாகிய துரியோதனன் கூடாதென்று தடுத்துப் பேசினன். மறுபடியும் அவனுக்குச் சினந் தணியச் சொல்லி, 'வீணுகிய வம்புகள் விளைவித்துக்கொள்ள வேண் டாம். இனி விளையப்போகிற விபரீதம் மெத்த வுண்டு. பாண்டவர் களோ மிகுந்த பலவான்கள். எல்லாந்தெரிந்த இறைவனுகிய நீர் ஒரே பிடிவாதமாகப் பேச வேண்டாம். அப்படி நாடு நகரங்கொடுக்க மன தில்லாவிட்டால் ஐந்தூராகிலும், ஐந்து வீடாகிலுங் கொடும். விவ கார விதிப்படி கொடுக்க மனது வராவிட்டாலும் அவர்களுக்குப் பிச் சையாகவேனுங் கொடும்' என்று என்னுடைய இரண்டு கரங்களையும் ஏந்தி இரந்து கேட்டேன். அதற்கும் மனதிரங்கிக்கொடுக்காமற்றடுத் தான். நாளை நடக்கப்போகிறதை இன்னதென்றுஞ் சொன்னேன். அதையும் யோசிக்காமல் எத்தனைபேர் எத்தனை சொன்னலுங்கேளா மல், கோபமும், லோபமும், பிடிவாதமும் அதிகரித்து, ''போம்! போம்!! உமக்கும் அவர்களுக்கும் வேலையில்லை.ஒருமொத்தை வெண் ணெய்க்குக் கோபால ஸ்திரீகளின் காலில் விழுந்து கூத்தாடுகிற நீர் இந்தப் பாண்டவர்களுக்கு நாடு வேண்டி இரப்பது பெரிதோ? இதெ ன்ன அரிதோ? இந்தத் தந்திரமெல்லாம் நானறிவேன். இத்தனை பஞ்சைப் பாட்டென்னத்திற்கு? பாண்டவர்கள் பலவான்களென்றும், தெய்வபல முடையவர்களென்றும், ஜனக்கட்டினையுடைய ஸைசி களென்றுஞ் சொல்லிய நீர் பிச்சை கொடுமென்றுங் கேட்கிறீர். இப்படி கேட்பதென்ன வீரியம்? இதென்ன வெட்கமில்லாத காரி யம்? வல்லமையுடைய பேர்கள் மானமழியப் பிராணனுடனே ஒரு வரை யாசிப்பார்களோ? யாசிக்க மாட்டார்களே. இவை யெல்லாம் உம்முடைய தீனத்துவமே யல்லது வேறில்லை. இப்பவும் நான் சொல்லுவதை நன்றுய்க்கேளும். சண்டைமுகத்தில் யுத்தஞ்செய்து வெற்றி பெறுகின்ற வீரரெவர்களோ, அவர்கள் இந்த அஸ்தினு

புரத்தை யாளுகிறதே யல்லாமல், என்னுயிருள்ள வரைக்கும் ஒரு கடுகத்தனை மண்ணும் பாண்டவர் கண்ணுக்குக் காட்டேன்' என்று ஒரே தீர்ப்பாகச் சொல்லி விட்டான்—

இவைகளை யெல்லாம் உடனிருந்து அறிந்த உங்கள் சிறிய தந்தையாகிய விதுரமகாராஜன் 'வாழ்வார்க்குச் சீதேவி வாக்கில்' என்பதுபோல இந்த மண்ணுக்கும் தன்னுயிருக்கும் சரிப்படுத்திக் கொண்டிருக்கின்றனன் இந்தத்துரியன். ஆதலால் இவனுயிர் மாள வேண்டும். அப்பாற் பாண்டவர் பாராளவேண்டும். இல்லாவிட்டால் அரசுபெறுவது அருமையே யாகும்.மேலும் அநேகம் பெரியோர்கள் மூதற் சிறியோர்களு மிறப்பார்களே உலகம் பழிக்குமே என்று யோசித்து யுத்தத்தை நிறுத்துவோமானால், அவர்கள் செய்து கொண்ட சபதத்தை எப்படி நிறைவேற்றிக்கொள்வார்கள். இது வரையிற் பட்டிருக்கும் அவமானத்தையும் பழிப்பையும்விட, இனி மேல் வரப்போகிற பழிப்பும் அவமானமும் பெரியவையல்ல. இந்தத் தருணத்தில் யுத்தம் பண்ணி வெல்லாமல் விட்டுவிடுவார்களானால் இதுதான் பெரிய அவமானம். இதுதான் லோகநிந்தை. இதுதான் இராஜநீதிக்குப் பழுதாகிய காரியம்' என்று உங்களுக்குத் தெரியப்படுத்தச்சொன்னர். உங்கள் தாயாகிய குந்திதேவியாரும் 'சத்துருக்களால் விளைந்திருக்கும் பொல்லாங்கெல்லா மிருக்க, இராஜசபையில் விளம்பிய அவர்கள் சபதத்தை முடிக்காமல் ஈரேழு பதினன்கு லோகத்தையும் ஏக சக்கராதிபதியாய் ஆண்டாலும், அதினால் யாதொரு பெருமையுமில்லை. புகழுமில்லை. இகழே எதிர்த்துக்கொண்டிருக்கும். ஆகையால் சீக்கிரம் சபத முடித்துத் திரிலோகமும் கொண்டாடும்படி முடி தரித்துக்கொண்டு வாழக்கடவர்கள்' என்று ஆசீர்வதித்ததாகச் சொல்லச் சொன்னர்கள். ஓ பாண்டவர்களே! இவர்கள் கருத்திவ்வாறிருக்க என் எண்ணத்தையும் கேளுங்கள். அவர்கள் உங்களுக்குச் செய்திருக்கிற அநியாயங்களை யோசிக்கும்போ தெல்லாம் மண்-கல்-மரம் முதலியன அழுமல்லாமல் வேறல்ல. அந்தமட்டும் நீங்கள் பொறுமையுடையவர்களே. ஆகிலும் எத்தனை யென்று பொறுப்பது. பொறுக்குமிடத்திற் பொருப்பும் மூச்சு விடுமே. ஓ கண்ணியர்களே! 'ஒரு புற்காசுக்குப் போன மானம் கோடி பொற்காசு கொடுத்தாலும் வராது' என்று பழமொழி கூறுவார்கள். அது போல் எப்படியும் அவமானம் வந்துவிட்டது. உரலிற்றலையை நுழைத்துக்கொண்டவன் உலக்கைக்குப் பயந்

தால் விடுமா? ஆகையால் துணிந்த போர்களுக்குத் தக்கமில்லை, என்பது போற் போர் புரிந்து அவர்களைப் போக்கடித்து இனியேனும் சிர் பெறும்படியாய்த் தேசத்தைக் கைக் கொள்வது இராஜதீரம். பல தேசத்து இராஜர்களும் சந்தோஷப்படுவார்கள். அல்லது தம்பி, தமையன், பாட்டன், பூட்டனென்று பாராமற் படைமுகத்திலொப்பாரியா வென்று சாடித்துப் பாக்கியம் பெற மனமில்லாவிட்டால் வனத்திற்சென்று தவத்தைக்கொண்டு சுகத்தைப் பெறுவது எல்லாவற்றிலும் மகத்துவமுடையது. இவ் விரண்டில் எதைச் செய்ய யோசித்திருக்கின்றீர்கள்? உங்களெண்ணத்தைச் சொல்லுங்கள்" என்று முகுந்தன் கேட்க அதற்குத் தகுந்தபடி தருமராஜர் நகைத்துச் சொல்லுகின்றார்.—

"ஆபத்பாந்தவனுகிய அரியே கேளும்! நாங்கள் யுத்தஞ் செய்வதற்குச் சர்வ சித்தமாயிருக்கின்றோம். இதோ கீர் பாரும்" என்று சொல்லி, விராடராஜனுடைய இராயலம் சித்திரகத னென்பவனை யழைத்துத் திருமுக மொன் றெழுதி அதனைப் படிக்கச் சொன்னர். அவன், 'சந்திர குலத்திலே தோன்றிய தாளைகரன், உயர்ந்த மூரசக் கொடியினை யுடைய மானுபரணன், சத்திய வசனன், கித்திய விரதன், உத்தம னெனத் திகழும் தருமபுத்திர மகாராஜன் எழுதி விடுத்த திருமுகப் பத்திரம் இது. இதனைப் பதினெண் பாஷைத் தேசத்து மன்னவர்களும், மகாராஜராகிய போஜ குலத் தலைவரும் ஒருங்கு சேர்ந்து சந்தோஷித்து, எதிர் கொண்டு வந்து காணக்கடவர். நாங்கள் சூதாடி கொந்து நாடு நகரத்தைவிடுத்து, காடுகரம்பை அடித்துப் பன்னிரண்டுவருஷம் வனவாசம், ஒரு வருஷம் அஞ்ஞாத வாசம், ஆகப் பதின்மூன்று வருஷமும் போக்கி, மேன்மைபெற்ற ராஜனுகிய மச்சதேசாதிபதியின் சிநேகத்தினுல் எங்கள் பிள்ளையாகிய அபிமன்னனுக்கு உத்தரையைக் கலியாணஞ் செய்வித்து, மிகு சம்பிரமத்துடன் உபபிலாவியஞ் சேர்ந்து, சங்கு சக்ராயுதமுடைய ஸ்ரீ கிருஷ்ண தேவனைத் தூதுவிடுத்து, யுத்தத்திற் குடன்பட்ட துரியோதனனுடைய மனதறிந்துகொண்டு, உங்களுக்குத் தெரிவிக்கும்படியாக ஓலையுந் தூதுமனுப்பினோம்: ஆகையால் மேல் நடக்கப்போகிற யுத்தத்திற்காக எங்களுக்குப் படைத்துணைவந்து ஜயம்பெறச் செய்து, உங்கள் நகரங்களுக்காகக் கட்டவேண்டிய பகுதி நீக்கிக் கொண்டு

தீழ்மை வாழவேண்டும்'' என்று வாசித்தான். அதில் தருமராசன் கைச்சாத்துவைத்துச் சகலதேயங்கட்கு மனுப்பினர்.

பாண்டவர்க்கு வந்த படைத் துணைகளின் விவரம்.

இத்தப்படி கஷ்டதிசையினல் விடித்த திருமுகங்களைச் சகல இராஜர்களும் பார்த்து முகம் வியர்த்து எட்டித் திசைபிலு மிருக்கும் துஷ்ட கண்டகர்களாகிய ஜயவீரப் பிரதாப சேனைத் தலைவர்களோடு அவரவர்களுடைய நால்வகைச்சேனைகளும் புடைசூழ யுத்த கோலங்கொண்டு வருவதானர்கள். அவர்களாரென்றல் பாஞ்சால ராஜனும் அவன்பிள்ளைகள் திட்டத்துய்மன் சிகண்டி-சுமித்திரன்-பிரியதரிசனன்-சித்திரகேது-சுகேது-துவசேனன்-உத்தமோசா-உதார்மனு-முதலிய இவர்களோடு நால்வகைச் சேனைகளும், விராட ராஜனும், அவன் பிள்ளைகள் சுவேதன்-சதானீகன்-சங்கன்-வராககேது-உத்தரன் முதலிய இவர்களோடு நால் வகைச் சேனைகளும், சேரன்-சோழன்-பாண்டியன் என்னு மூன்றுபேரும், அவர்களுடைய நால்வகைப் படைகளும், கேகயதேசாதிபரும், குந்திபோஜரும், பாண்டவர்கள் தனித்தனி கலியாணம் பண்ணிக் கொண்ட ஸ்திரீகளிடத்திற் பிறந்த பிள்ளைகளில், தருமராஜனுடைய பிள்ளை தேவகனும், பீமனுடைய பிள்ளை கடோற்கஜனும், அவன் பிள்ளை அஞ்சனவர்மனும், அர்க்சுனனுடைய பிள்ளை இராவானும் அபிமன்னியும், நகுலனுடைய பிள்ளை விஜயனும், நிர்மித்திரனும், சகாதேவனுடையபிள்ளை விரசுகோத்திரனும் திரௌபதையினிடத்தில் ஒவ்வொரு வருஷம் ஒவ்வொருவர் முறையிற் பெற்றுக் கொண்ட, பிரதிவிந்தன்-சுரதசோமன்-சதானீகன்-சுரதகீர்த்தி-சுருதிசன்மன் என்னும் இளம்பஞ்ச பாண்டவரும் போஜசம்பத்தத் தலைவர்களாகிய போஜர்-பாஞ்சாலர்-சோமுகர்-சிருஞ்சையர்-மார்ச்சரர்-மாகதர்-திரிகாலவாசுதேவர்-பவுண்டரவாசுதேவர்-அரிவாசுதேவர்-இவர்களும், இவர்களுடைய படைகளும், குந்திபோஜனுடைய பிள்ளைகளாகிய மந்தனும், சுமந்தனும், அவர்களின்சேனையும் கேசகன்பிள்ளை பிரிதீபனும், காசிராஜனும், அவன்பிள்ளை தூமகீர்த்தியும், மலயத்துவஜ பாண்டியனும், அவன் பிள்ளை பிரிதிவி பாண்டியனும், ஜராசந்தன்பிள்ளை சகதேவனும், சிசுபாலன் பிள்ளை துஷ்டகேதுவும், ஜயசேனர்-கிராதர்-அவுணர்-ஆந்தரர்-புண்டரீகர்-சோழபுரு மித்திரர்-இவர்களும்,

இவர்களுடைய சேனைகளும் சீனர் - சாவகர் - மத்திரர் - மாளவர் - தெலுங்கர் - கலிங்கர் - குலிங்கர் - பலிங்கர் - சோனகர் - கன்னடர் - மாகதர் - துருக்கர் - குச்சரர் - ஒட்டர் - முதலாகிய பதினெட்டுபாஷை மன்னவரும், மகுடவர்த்தனர் - பட்டவர்த்தனர் - இளவரசர் - மன்னர் - மண்டலீகர் - மந்திரியர் - தந்திரியர் - சாமந்தர் - பூமந்தர் இவர்களும், இவர்களுடைய சேனைசனிய முதலிய நாநாவித கோலாகலங்களுஞ் சேர்ந்து, சதுரங்க பலத்துடன் ஏழக்குரோணி சேனைகளும், ஆகிய சகல படைத்துணைவர்களும், சமுத்திரப் பெருக்கம்போலவும், தாரகாகண நெருக்கம்போலவும் அதிகரித்து, சப்தமேக முழக்கம் போலவும் சங்கத்தொனி முழக்கம்போலவும் பெருங் கூச்சலிட்டுத் தாரணியிடம்பெரிது தத்தளித்ததென்று சொல்லும்படியாய் உபபிலாவியம் வந்து சேர்ந்துகொண்டனர்.

அதுகாலையிற் பாண்டவரைவரும் ஸ்ரீ கிருஷ்ணதேவரும் சாத்தகியும் வருகின்றவர்களை யெல்லாம் எதிர்கொண்டுபோய்க் கண்டு, எந்தெந்த அரசர்களுக்கு எத்தன்மையதாகிய மரியாதை வந்தனங்களைச் செய்யவேண்டுமோ, அந்தப்படி மரியாதைசெய்து, அவர்களிடத்தில் தாம் பெற்றுக்கொள்ளும் உபசார மரியாதைகளைப் பெற்றுக்கொண்டு, ஒருவருக்கொருவர் தழுவிப் பற்பலவாறுக உபசரித்து, இராஜசபைக்குள் அழைத்துவந்து சிங்காசனத்திலிருக்கச்செய்து, இராஜோபசார முதலிய யாவும் நடத்தி, அவ்வவ்வரசர்களை நோக்கித் தருமராஜன் சொல்லுகின்றார்.—

"ஜகத்திலுற்ற சுகத்தைபெற்று மகத்துவமுற்ற ஓமன்னரே! கேளுங்கள்! பன்னிரண்டுவருடம் காட்டைவிட்டுக் காட்டிற்பொருந்தி, விராடராஜனுடைய வீட்டிலொருவருடமிருந்து வெளிப்பட்டுத் துரியோதனனிடத்திற்கு உலூகமுனியைத் தூதுவிட்டதற்காக, மற்றொருதூது எங்களைக்காட்டுக்குப்போகும்படி சொல்லச்சொல்லி எங்கள் பெரியதந்தை சஞ்சயனை அனுப்பிவைத்தார். அந்தச் சஞ்சயன் சொல்லிய வஞ்சனைமொழிகளை அஞ்சனவண்ணனும் யாங்களுங் கேட்டு, அதன்பின்பு எங்கள் பிராணனுக விருக்கும் கிருஷ்ணமூர்த்தியை வேண்டிக்கொண்டு தூதனுப்பி வைத்தோம். அந்த மகாநுபாவர் போய் எத்தனைவிதத்திற் சொல்லியுங் கேளாமற் சுத்த வீரனைப்போல் யுத்தமேசெய்ய யத்தனித்திருக்கின்றேன் என்றும், பாண்டவருக்கு எள்ளத்தனையாகிலும் நாடி கொடேனென்றும், அந்

தகன் புத்திரனுகிய விதத்தகன் சொன்னனும். நீங்களித்தனேபேரும் எனக்குற்றவர்களாயிருக்க, நானினிமே லெண்ணிப் பார்க்கவேண்டியதென்ன? மேலும் தம்பிமார்களுந் திரௌபதியுங் கூறிய சபதங்கள் தலைவிரித்துக்கொண்டிருக்க, அவைகளையும் பாராட்டாமல் தருமத்தை யெண்ணி, ஒரு குலத்திற் பிறந்த இருநிறவரும் பெருநலத்தைப் பெற்றுக் கலந்து வாழ்வோமென்று நான் பேசச் சொல்லியும், அதற்கு அவனெவ்வாமல் யுத்தஞ்செய்வது உத்தமமென்று சொல்லியனுப்பிய படியால், உங்களுடைய உதவியெல்லாம் பெற்ற நான் செத்தவனேப்போ லிருப்பதேனென்று யுத்தத்திற்குப் படைத்துணை வரும்படியாய் உங்களுக்கித்தனை வருத்தங் கொடுத்தேன். இந்த யுத்தம் பதினெட்டு நாளைபிற் செய்துமுடிப்பதென்று ஒரு நிர்ணயம் செய்துகொண்டோம். இவ்வளவு தைரியம் எங்களுக் குண்டாகும் படியா யேற்பட்ட நீங்களெல்லோரும், இந்தச் சங்கதியைச் சித்தத்தில்வைத்து, சத்துருவை ஜயித்து, சபதமென்னுங் குற்றத்தை யகற்றி, எனக்குவெற்றி முடி தரித்து வைக்கவேண்டிய உரிமை உங்களுடையது—என்றூர்.

சந்திரனைச்சூழ்ந்த நாரகாகணங்கள் போலச் சபையில், நிறைந்திருந்த தாஷ்டீகரெல்லோரும் தருமராஜனைநோக்கி "எங்கள் பிராணனும் எங்கள் சேனைசைன்யங்களியாவும் உங்களுடையவை யாகையால் எங்களைக்கொண்டு ஏதேது பெற்றுக்கொள்ள வேண்டுமோ அவைகளெல்லாந் தாராளமாய்ப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு யாதொரு தடையுமில்லை. வீரப்பிரதாபஜயம் உமக்கேவரப் போகிறது" என்று உபசாரவார்த்தைகள் சொல்ல, அவ்வார்த்தைகளினுற் சத்துருக்களை வென்று சபதம் நிறைவேற்றிக் கொண்டதுபோலச் சந்தோஷமடைந்து, "நமது ஏழக்குரோணி சேனைகளுக்குச் சேனுதிபதியாய் எவரை நியமிக்கலாம்" என்று தருமராஜன் கேட்க, சகல இராஜர்களும் கேசர்களும் விசுவாசமுடன் ஹரிவாசுதேவனைக் கேட்டார்கள். அந்த வார்த்தையைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி கைகாத்து, "தனுர் வேத முதலிய யுத்தத்திறந் தெரிந்த நீங்களே ஏற்படுத்துங்கள்" என்று சொல்லி மேலுஞ் சொல்லுகின்றூர்—

"ஓ இராஜர்களே! இப்போது ஆயத்தமாயிருக்கிற ஏழக்குரோணி சேனைகட்கும் யாரையேனும் ஒருவரைச் சேனுதிபதியாய் நான்

நியமிப்பேனுனல் மற்றவர்களிற் சிலர் என்னை நியமிக்க வில்லை என்னை ஏற்படுத்தவில்லை யென்று கோபங் கொள்ளுவார்கள். ஆகையால், நீங்கள் எனக்கு இந்த வேலை வைக்கவேண்டாம்" என்று சொல்லிய சுவாமியைநோக்கி, "தேவரீர் எவர்களை நிச்சயித்த போதிலும் அவர்களை யஜமானுகக்கொண்டு வழிபடுகிறேம்" என்று மன்னவரெல்லாருஞ்சொல்ல, பகவான், மனமகிழ்ந்து விராட குமாரனுகிய சுவேதனனை யழைத்து, "ஓ இராஜர்களே! இவனுடைய ஜனன விர்த்தாந்தத்தைக் கேளுங்கள். மச்சதேசாதிபதியாகிய விராடராஜன் ஒருநாள் வனவேட்டைக்குப் போனுன். அக்காலத்தில், மிகுந்த குணவதியாயும் பதிவிரதையாயும் நற்றவத்தையுற்றவளாயு மிருந்து, பிராமத்துவவினையிலுல் விராடராஜனைச் சேரவேண்டுமென்று விரதமிழைத்துக்கொண்டிருந்த ஒரு வேட கன்னிகையினிடத்தில் அவ்வரசன் இந்தப் புத்திரனைப் பெற்று எடுத்துக் கொண்டு மச்சதேசம் வந்து வளர்த்து அக்ஷராப்பியாசம் தநுர்வேத முதலியயாவுங் கற்பித்து மகிழ்ந்து வாழ்ந்து வந்தான். அப்பொழுது ஒரு நாள் இந்தச் சுவேதனன் தனிவேட்டைக்குச் சென்று தவஞ் செய்யும் முனீச்வரரைக்கண்டு, தானும் தவம்புரிய மனங்கொண்டு பெரியோர்களை வணங்கி அரியதவத்திலிருந்து, கைலாசபதியை நினைந்து கண்ணீர் சொரிந்த காலத்தில், சிவபெருமான் ரிஷபவாகனரூடராய் எழுந்தருளினர். இவன் அவரைப் பணிந்து கரத்திற்பிடித்த வில்லினுல் திரிலோகத்தையும் ஜயிக்கும்படியான அருளைப் பூரணமாகப் பெற்றுன். இவனுக்கே சேனுதிபதிப் பட்டங் கட்ட வேண்டும்" என்று சொன்னர். அதற்கு எல்லோருஞ் சம்மதித்தனர். உடனே சென்திருமணுளராகிய திருமால் அச்சுவேதனனுக்குச் சகலவித உபசார அபிஷேக ஓமாக்கினியுடனே சேனுதிபதிப் பட்டங் கட்டிப் பெரிய யானையின் பிடரியிலேற்றி, மூசவாத்தியமுழங்கச் சகலவைபவங்களுடனே பட்டணப்பிரதக்ஷணஞ் செய்வித்து, "எல்லாச் சேனைகளுக்கும் இவரே சேனுதிபதித் தலைவர்" என்று தெரிவித்தார். அப்பால் அங்கிருந்த அரசருடன் யாவரும் விருந்து அருந்தினர்; சந்தன தாம்பூலாதிகள் பெற்று விடையாகிய வீரலக்ஷ்மியைச் சிந்தித்து வணங்கியவராய்க் குருக்ஷேத்திர பூமிக்குப் பிரயாணமாயினர்.

அந்தச் சமயத்தில் அர்ச்சுனனுடைய குமாரரில் நாககன்னிகையின் பிள்ளையாகிய இராவானனவன் அவ்விடத்திற் பேசிக்கொண்டிருந்த சங்கதிகளை யெல்லாம் தெரிந்துகொண்டு, சேனாதிபதியும் சேனைகளும் தேசத்தரசர்களும் குருக்ஷேத்திர பூமிக்குப் புறப்படப் போகிற காலத்தில் இராஜசபையிற் போய்நின்று, தந்தைமார்முதலிய எல்லோரையும் நோக்கி, விந்தகிரியைப்போன்ற தோளைக் குலுக்கி, மந்திரவடிவாளைக் கரத்திற்பிடித்து "ஐயோ! இந்தத் துரியோதனனுதிக்குள்ள சேனைகளைக் கொல்லப் பதினெட்டு நாளென்னத்திற்கு? தம்தம் பட்டணத்தை விடுத்துப் பெண்சாதி பிள்ளைகளையும் விடுத்துவந்திருக்கின்றவர்கள் பதினெட்டு நாள் வரையிலும் வருத்தப்படுவானேன்? நீங்களெல்லோரும் இவ்விடத்திலிருக்க மனதிருந்தாலிருங்கள். இல்லாவிட்டால் உங்களுடைய நகரத்திற்குப் போகச் செலவு பெற்றுக்கொள்ளுங்கள். எனக்கு உத்தரவுகொடுங்கள். இன்றைக்குள்ளாகத் துரியோதனனுதிய செல்லாரையுமுடித்து இந்தப் பூமியைத் தருமராஜனுகிய என் பெரியதந்தைக்குச் சொந்தமாக்குகிறேன்" என்று சிந்தைகொண்டுரைத்தான். பரவாசுதேவன் கேட்டு நகைத்து, 'நல்லது அப்படியே யாகட்டும். நாமெல்லாருங் குருக்ஷேத்திரம்போய்ச் சேர்ந்த பிற்பாடு உன்னிஷ்டப்படியாகிலும் அல்லது என்னிஷ்டப்படியாகிலும் யோசிப்போம்" என்று இராவானத் தட்டிக்கொடுத்து முத்தமிட்டு, யாவரும் வியக்கச் சந்தோஷித்துப் புகழ்ந்து மகிழ்ந்தார். பின்பு சகலரும் எழுந்து சுவாமியை நமஸ்கரித்து சைனியங்களுடன் குருக்ஷேத்திரம் போகவேண்டிய முயற்சியிலிருந்தனர். இவர்கள் சரிதம் இவ்வாறுக, முன்பு தூதுபோன சுவாமியானவர் அஸ்தினபுரத்தை விட்டு உபபிலாவியத்திற்கு வந்த பிற்பாடு, துரியோதனனிடத்தில் நடந்த சங்கதியைச் சொல்லுகிறும் கேளும் ஜனமேஜயராஜனே யென்று வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

கௌரவர்க்குவந்த படைத்துணைகளின் விவரம்.

இப்பால் துரியோதனராஜன் தனக்குப் படைத்துணைவரும்படியாய்ச் சகலதேசத் தரசர்களுக்கும் திருமுகமெழுதினன். அதில் இப்போதெனக்குப் படைத்துணைவராய்நின் றயாவரும்சந்திரசூரியருள்ளவரையிலும் தங்கள் தங்களுடைய இராச்சியத்தில் வரியிறையில்லா

மல் வாழலாமென்றும் உத்தரவு சொல்லி இருக்கின்றேம். முத்தி சையிட்டிருக்கும் இந்தத் திருமுகத்தையே சாசனப்பத்திரிகையாய் வைத்துக்கொண்டு, மனப்பூர்வமாய்ச் சதுர்வித சேனைகள்சூழப் புத்திரமித்ராதிகளுடனே சீக்கிரம் வந்து சேரவேண்டு மென்றுங் குறித்து அதனோடு தூதுவரைப் போக்கினான். அந்த ஓலை கண்ட தக்ஷணம் சமஸ்த இராஜாக்களும் வந்தார்கள். அவர்களின் விவ ரம்:—மத்திர தேசாதிபதியாகிய சல்லியனும் அவனுடைய உடன் பங்காளி; கோத்திரப் பங்காளி தாயாதி முதலிய இவர்கள் இரதகஜ துரகபதாதிகளுடன் வந்தார்கள். காந்தாரதேசாதிபதியாகிய சௌபல னும், அவனுடைய தாயாதிவருக்கத்தாரெல்லாரும், சகலபடைகளு டனும் வந்தார்கள். மகததேசாதிபதியாகிய சர்வதேவனும், விந்த னும், விந்தனும் அவரவர்கள் சொந்தச் சேனையுடன் வந்தார்கள். அலம்புதனும், அவன் தம்பிகள் மாரிசி - கிமிதி - சூதன் என்னு மூவரும் அநேகங்கோடி இராக்ஷதப் படைகளோடும் வந்தார்கள். நரகாசுரன் பிள்ளையாகிய பகதத்தனும், கால்வகைப் படையும், கோடியானைக்கூட்டங்கள் நெருங்கவந்தார்கள். கௌசிதனும் காம்பீலி சனும், தெலுங்கதேசாதிபதியும், போஜனும், கேகயராஜனும், திரி கர்த்தனும், கவுடிசித்தனும், மாளவதேசாதிபதியும், மராடராஜ்யாதி பதியும், வளவனும், சோமனும், சோழபாண்டியரும், சூதகாயகன் பிள்ளைகளாகிய கர்ணன் பங்காளிகள் சுசேஷணன் முதல் நூறு பிள் ளைகளும் சோமதத்தனும், அவன் பிள்ளைகள் பூரி-சிரசு-சரன் பூரி என்பவர்களும், அவந்தி தேசாதிபதிகள் விந்தன், அநுவிந்தன் என்ப வரும், கலிங்கதேசாதிபதி கேதுமானனும், அவன் தம்பிகள் அசுவத் தாமா சக்கிரதேவன்-என்பவரும், மாளுவராஜன் புளிந்தன் என்பவ னும், சௌராஷ்டக தேசாதிபதிகள் சவுபதி-சாலுவன் என்பவரும், கேகயதேசாதிபதிகள் சுதர்மா சுவர்மா என்பவரும், உக்ரசேனன்- யாதவாள்- விருஷ்ணன்- அந்தாள்-போஜாள் - இவர்களும், பலரா மர்-கிருதவன்மா-கிருத வீரியன்-சாம்பன் - சாரணன் - பிரத்துமன்- சாருதக்ஷணன்-வீடிரதன் - பானுவு - சிதன்-விபுருதி-பிருது-அக்குரூ ரன்-ஆருகன் - உக்ரசேனன், உத்தவன்-இவர்களும், நவகோடி நாரா யணர், நிவாதகவசர்-காலகேயர்-பவுலமாள் - இவர்களும், விருஷ்ணி- அந்தக-சாத்துவ-மாதவ-குகுர, பப்பர-தேசாதிபதிகளாகிய உதரசித் தும், நீலனும், அங்கவங்க ஆரிய-சிங்கள-கொங்கண-குடார-கொங்க- மராட - ஓட்ட-தேச முதலிய ஐம்பத்தாறு தேசத்திலுள்ளவர்களும்

தங்கள் தங்கள் கால்வகைப்படைகளோடு மந்திரி தந்திரிமார்களும் புடைசூழும்படி வந்து நிறைந்தார்கள்; பாதலத்திலிருந்த மாதலி வருக்கத்தார் சம்சத்தகாளென்னும் அறுபதினாயிரம் வெண்கல ரதக்காரர்களும் வந்தார்கள். யாதவகுமாரர்களென்னும் இருநூறாயிரம் வெண்கலரதக்காரர்களும் வந்தார்கள். அநேகம் ராஜகுமாரர்கள் வெகுவாகிய பாலிய சேனைகளுடனே வந்து குவிந்தார்கள். துரியோதனன் பிள்ளைகள் விகதத்தன் முதலியபேர்களும், அவன் தம்பிமார் துச்சாதனன் முதலிய தொண்ணூற்றொன்பது பேர்களும், துச்சாதனன் பிள்ளை துச்சனி-இலக்கணகுமாரன் முதலியபேர்களும்; பீஷ்மாச்சாரியரும், துரோணாச்சாரியரும், கிருபாச்சாரியரும், அசுவத்தாமாவும், கர்ணனும், அவன் பிள்ளைகள் சித்திரசேனன்-சித்திரகீர்த்தி-சூரியவர்மன்-முதலிய பேர்களும், சிந்துதேசாதிபதி சைந்தவனும், சகுனியும், அவன்பிள்ளைகள் உலூகன் சயித்தன் முதலிய பேர்களும் அஷ்ட குலாசலம் போன்ற தேரிலேறி ஆயுதபாணிகளாய் அமைந்திருந்தார்கள். இத்தன்மையாகத் திரண்டசேனைகளின் மிகுதியானது லோக லோகங்களெல்லாம் புரண்டுவந்த கடலைப் போலப் பெருகிவர, தனக்காகவந்த அச்சேனைகளைச் சம்பத்திற் சிறந்த துரியோதனன் கணக்கிட்டுப் பதினொரு அக்குரோணியென்று தொகைபடக் கண்டு பேரானந்தங்கொண்டவனுயிருந்தான்.

இவையல்லாமல் பந்துக்களில் மிகுந்தவர் படை, சத்துருக்களாலிளைத்தவர் படை, சௌக்கியமாய் வாழ உபகாரஞ் செய்யப்பட்டவர்களுடைய படை, தீவுகளிற் பெருக்கமாய் விசனமற்றிருக்கும் படை, தற்காலத்திற் பொருள் கொடுத்து வைக்கும் படை, தன்னுடைய சொந்தப்படை என்னும் இவ்வாறுவிதப் படைகளுந்திரண்டு,மண்ணும்விண்ணும் ஒன்றுகக் கலக்கும்படியாய் ஆரவாரிக்கும் தன்மையைத் துரியோதனனும் மற்ற யாவருங்கண்டு கண் களிகொண்டு, இந்தச் சேனைகளுக்குச் சேனாதிபதியாய் யாரைநேமிக்கலாமென்று யோசனை செய்து, தங்கள் வம்சநாயகராய்ப் பரசுராமரிடத்திலே தனுர்வேதங்கற்று அவரையே வென்ற பெரியோராகிய பீஷ்மாசாரியரை யல்லது வேறில்லை யென்று நிதானித்து அவருடைய பாதங்களில் வணங்கி, 'ஐயா எங்கள் மூதாதையே! சேனைகளோ திரண்டுபுரண்டு வந்திருக்கின்றன. அந்தச் சேனைகளுக்குத் தேவரீரே சேனாதிபதி யாகவேண்டும்' என்று வருந்திக் கேட்டுக்கொண்டு, நல்ல முகூர்த்தத்திற் சேனாதிபதிப் பட்டமுங் கட்டிவைத்

துப் பதினெரு அக்குரோணிச் சேனைகளையும் அவர் வசத்திலொப்பு வித்து, அந்தச் சேனைகளைத் தரம்பிரிக்கும்படியாக அதற்கு வேண் டிய திட்டவட்ட சட்டமுஞ் செய்தபோது, அதிரதர் - மகாரதர்-சம ரதர் அர்த்தரதர் - முதலிய பேர்களெல்லாரும் தங்கள் சேனாதி பதியாகிய பீஷ்மரைக் கண்டு வணங்கிக்கொண்டு, மகரகுண்டல ஹாரகேயூர மணிக்கிரீட வாகுவலய வச்சிராங்கி முதலியனவுங் கொண்டுவந்து உபசரித்துக் காணிக்கையாகக் கொடுக்க, அவைகளை வாங்கித் தரித்துக் கொண்டு பிரளயகால ருத்திரனைப் போலச் சேனைகளின் மத்தியில் மகாமேருவைப்போன்ற தேரின்மீதேறி நின் ரூர். மற்றச் சேனைகளெல்லாம் ஏழு சமுத்திரமும் வளைந்து நிறைந் ததைப்போலும், சுத்தவீரர்களுடைய இரதங்களெல்லாம் அஷ்ட குலாசலம்போலும், சூழ்ந்திருக்கும் யானைகளெல்லாம் அஷ்டகஜங் களைப் போலும், வளைந்துலாவுங் குதிரைகளெல்லாஞ் சுழன்றடிக் குங் காற்றைப்போலும் பிரகாசிக்கும்படியாய், பீஷ்மாசாரியார் பாரியவில்லையும் பக்குவமாகிய வீரகோலத்தையும் உடையவராய் நிற்கக்கண்டு, எமதருமராஜனும் நடுநடுங்கி நாணமுற்றிருந்தான். சூரியபகவானும் ஆகாயத்திற்செல்ல நமக்கு வேறு கதி யில்லையே யென்று அஞ்சியிருந்தான். ஹரிஹரப்பிரமாதியரும் நடுக்கங் கொள் ளும்படியாய் துரோணாசாரியரும் கிருபாசாரியரும் மற்றுமுள்ள அரசர்களியாவரும் திடதைரியங்களுடன் சேர்ந்து மனமொத்து வார்த்தையாடிக் கொண்டிருந்தார்கள்.

துரியோதனன் சகாதேவனுல் யுத்தத்திற்கு நாள் வைத்துக்கொள்ளுதல்.

அதுகாலையில் தேவர்கள் முதலியோர் சேனைகளின் வெருக்கத் தைநோக்கி, இவ்வுலகிலுள்ள மலைகளெல்லாம் யானைகளாகவும் செடி கொடி மரங்கள் முதலிய தோப்புகளெல்லாந் தேர்களாகவும், பூமி நிறைந்த புற்பூடுகளெல்லாங் குதிரைகளாகவும், பிரமசிருஷ்டியில் வந்த உயிர்களெல்லாம் பதாதிகளாகவும், சப்தமேகம்-சப்தசமுத் திரம்-சப்தத்தீவுகள்-இவைகளின்முழக்கங்களெல்லாம் வாத்தியாதி கள் முழக்கமும் யானைசேனைகளின் முழக்கமுமாக அமைந்துவந் தனவோ? அல்லது ஆதிதேவனுல் சமைந்து வந்தனவோ?" என்று ஆச்சரியங் கொள்ளும்படியாய், தாரகாகணக் கூட்டம்போலும் சலசராதிக ளீட்டம்போலும் பதினெரு அக்குரோணி சேனைகளுந்

தங்கி இருக்கும்போது, பீஷ்மாச்சாரியர் துரியோதனனைப் பார்த்து "சேனைகளோ பதினைரு அக்ஷரோணியாய்ச் சேர்ந்திருக்கின்றன. அஸ்தினபுரமோ இடப்பெறுகிறதாயிருக்கவில்லை. ஆகையால் இந்தச் சேனைகளைக் குருக்ஷேத்திரத்திற்கு அனுப்பி விடும்படியாகிய முயற்சி செய்ய வேண்டும். காட்செய்வது கல்லுற்றூர் செய்யார் என்று பழமொழி சொல்வதுபோல், சேனைகள் குருக்ஷேத்திரம் போய்ச் சேருகிறதற்கு ஓர் கல்லகாளும், ஆயுதங் கைக்கொண்டு யுத்தவாரம்பஞ் செய்வதற்குத் தகுந்த ஒரு முகூர்த்தகாளும் பார்த்துக் கொண்டால் உத்தமம்" என்று சொல்ல, அந்தமொழிகேட்ட துரியோதனன் உடனே தனது புரோகிதனை அழைக்கும்படி உத்தரவு செய்தான். அந்த வார்த்தையை பீஷ்மர் தடுத்து, "இந்தப் புரோகிதருக்கெல்லாம் நாம் கேட்கிறகாள் வைக்கத் தெரியாது. இவர்கள் வைத்தாலுஞ் சரிப்படாது" என்று சொல்ல, துரியோதனன் "பின்னையார் காள் வைக்குந் திறத்தினையுடையவர்கள்" என்று கேட்க, பீஷ்மர், "தம்பி துரியோதனு! பாண்டவர்களிற் கடைபடு குமாரனுகிய சகாதேவன் சாஸ்திரதாரி. அவன் காள் வைத்துக் கொடுப்பானுனுற் சொன்னகுறி தப்பாமல் முடிக்கலாம்" என்று காங்கேயன் சொல்ல, துரியோதனன் கேட்டு ஆச்சரிய மடைந்து 'இப்போது அவனை எப்படி கேட்கிறது? அவனெப்படி நமக்கு அகப்படுவான்? அப்படி யல்லவென்று கண்டு கேட்டாலும் தப்பில்லாமல் உண்மையாகச் சொல்லுவானு? அதற்கெப்படி" என்று வணங்கா முடியோன் சொல்ல, பீஷ்மர் "அப்பா துரியோதனு! நீங்கள் தான் பேதா பேத நினைப்பீர்கள். அவர்கள் அப்படி ஒரு காலும் நினைக்க மாட்டார்கள். நீ மாத்திரம் நேரிற் போய்க் கேட்பாயானுல், சந்திர சூரியர் மாறி நடந்தாலும் தங்களுடைய சத்திய வாய்ச்சொல் தப்பாத அவ்வுத்தமர்களிற் சிறியனுகிய அவன் உனக்கு உண்மையைச் சொல்லுவான். அப்படியே இராவானையுங் களப்பலிக்கு ராஜிப் படுத்திக் கொண்டு வந்து விட்டால், நமக்குக் காரியங்களெல்லாம் ஜயமாகும்" என்று பீஷ்மர் சொல்ல அதற்குடன்பட்டு, ஒரு காளி ராத்திரியிற் பிரம்பிளுற் செய்திருக்கும் சூத்திர அன்னப் பறவைமீ தேறிக் கொண்டு உபபிலாவியத்திற்குச் சென்று, சகாதேவனுடைய அரண்மனையிற் போய் இறங்கி அவனைக் கண்டான். அந்தச் சகாதேவன் துரியோதனனென்னுந் தமையனைப் பார்த்துச் சந்தோஷங் கொண்டு, "ஏன் அண்ணு வாரும்! இரும்!" என்று,

வணங்கி உபசரித்து, "ஏது இவ்வளவு தூரம் வந்தது?" என்று கேட்க, துரியன் அவனைப் பார்த்து, "தம்பி சகாதேவனே! எங்களுக்கும் உங்களுக்கும் பகை நேரிட்டிருக்கின்றபடியால் யுத்தஞ் செய்வதற்குப் படைகூட்டி விட்டோம். அந்தப்படைகள் குருக்ஷேத்திரம் போய்ச்சேரவும், தருமராஜன் தலையற்று விழும்படியாய் ஆயுதமெடுக்கவும் நாள் வைத்துக் கொடுக்கும்படிக்கு உன்னை நாடிவந்தேன்" என்று சொல்ல, அதைக் கேட்டு சகாதேவன், "அப்படியே நாள் வைத்துத் தருகிறேன் அண்ணா" என்று சொல்லித் துரியோதனனுடைய காலபல முதலியனவும், திசாநாதன் புத்தி நாத - அந்தரநாதன் - இவர்களுடைய பலாபலத்தையும் ஜயாபஜயத்தையும் யோசித்து, சாஸ்திரங்களை யெல்லாம் பார்த்து, "அண்ணா! தேவரீருடைய இஷ்டப்படிக்கு வெற்றிபெற வேண்டுமானால், நாளை மறுநாள் பூரண அமாவாசையாகையால் அன்றிராத்திரி ஒன்பது நாழிகைக்குமேல் குருக்ஷேத்திரத்திற் சேனைகள் போகும்படி முகூர்த்தங்கொண்டு, அப்போதே களப்பலியுங் கொடுத்துப் பராசத்தியைப் பூசித்து ஆயுதமெடுப்பீர்களானால், தருமராஜன் தலைதப்பாது அற்றுவிழும். இதற்கு யாதொரு சந்தேகமில்லை. அப்பால் தெய்வசித்தம் எப்படியோ நானறியேன்" என்று உபசரித்து வணங்கிப் போஜனஞ்செய்து போமென்று பிரிய வசனஞ் சொல்ல, அதைத் துரியோதனன் கேட்டு மதிமயங்காமல் மனமகிழ்ந்து, "தம்பி! நல்லது நான் போய் வருகிறேன்; சாயுங்காலந்தான் சாப்பிட்டு வந்தேன்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டு வெளிப்பட்டான். இவ்வாறு சகாதேவனிடத்தினின்றும் விடை பெற்று வெளிப்பட்ட துரியோதனன் இராவானுடைய விடுதிக்குப் போனான்.

துரியோதனன் இராவானைக் களப்பலிக்கு உடன்படுத்திக் கொள்ளுதல்

அவனை அங்கிருந்த இராவான்கண்டு எதிர்கொண்டு வந்து, அவனடியில் வீழ்ந்து பணிந்து, "ஐயா! ஏது இவ்வளவுதூரம் தயை செய்தது?" என்று கேட்க, "அப்பனே! ஐவர்க்கும் எங்களுக்கும் பகை நேரிட்டுப் படைகள் சேர்ந்து யுத்தத்திற்கு ஆரம்பஞ் செய்யப் போகிறபடியால், எதிர் உரோமக்காரராகவும் பலசாலிகளாகவும் இருக்கிறபேரைப் பலிகொடுத்து ஆயுதமெடுத்தால்

ஜயம்' என்று பெரியோர் சொல்லுகின்றார்கள். அதற்காக உன்னைக் குறித்துப் பலி இரத்தலுக்கு வந்தேன்" என்று சொல்லவே, அந்த வசனத்தைக் கேட்ட இராவான் கலகலவென்று நகைத்து, "ஐயா! நீங்கள் பிறந்த நாள்முதல் இதுவரையிலும் சகலசம்பத்தையும் அநுபவித்தது போதுமென்று விடாமலும், இனி இருப்பவர்கள் குழந்தைகளாயிற்றே அவர்கள் அநுபவிக்கட்டுமென்று எண்ணுமலும் மண்ணுசை பெண்ணுசை பொன்னுசை மாறுமலும், பிள்ளைகளைக் கொன்றுலும் பின்னும் அநுபவிக்க வேண்டுமென்று எண்ணி ஆசைமேலிட்டுச் சலியாமல், தேகங்கூசாமல் வாய் சலியாமல் என்னைப் பலிக்கு வரும்படியாய் இரந்தீரல்லவா? ஐயோ! என்றைக் கிருந்தாலும் இத்தேகம் இறந்துபோகின்றதே! இதற்கு இவ்வளவு அவா மேலிட்டிருக்கலாமா? கல்லகாரியம்! அப்படியே என்னைக் கொன்று நீரே இந்த மண்ணைக் கட்டிக் கொண்டாலும், அதற்கு யாதொரு தடையில்லை. ஆனால் இந்தத் தேகம் அநித்திய தேகமாகையால் நீரெப்போது நாள் வைத்துக் கொண்டீர் சொல்லும்?" என்று இராவான் கேட்க, "நாளைக்கு மறு நாள் வைத்துக் கொண்டேன்" என்று துரியோதனன் சொல்ல, அதைக்கேட்டு இராவான் "ஐயா! அது வரையிலும் இந்தத் தேகமிருக்குமானால் உண்மையாக உமக்குக் களப்பலிக்கு வருகிறேன். இதற்கு யாதொரு சந்தேகமு மில்லை. இப்போப்பட்ட தனகனக சாம்பிராச்சியத்தை யநுபவித்த நீரே வந்து இரண்டு கையையும் நீட்டி இரந்தால், நானில்லையென்று சொல்லக்கூடுமா? ஐயனே! உமது ஆசையடங்கச் சுகமாகப் பெற்றுக் கொள்ளும்" என்று இராவான் சொல்ல, அந்தச் சொல்லுறுதியை ஸ்திரமாகப் பெற்றுக்கொண்டு மனமகிழ்ந்து, "நான் போய் வருகிறேன்" என்று விடை பெற்றுக்கொண்டு, அஸ்தினபுரத்திற்குப் போய், பீஷ்மர் முதலிய பெரியோருக்குச் சொல்ல, அவர்கள் கேட்டு அதிசயித்து, "ஆ! ஆ! அவர்களுடைய மனமும்-குணமும்- சத்தியமும்-பரிசுத்தமும் – பச்சாதாபமும் - உண்மையும் - என்னநன்மையாக விருக்கின்றன பார்த்தீர்களா? சத்தியகெறி தப்பாதிருப்பவர்களாகையால் நித்தியவெற்றியை அவர்களே பெறுவார்களென்பதற்குச் சந்தேகமில்லை" என்று, யாவரும் தங்களுக்குத் தாங்களே அகமகிழ்ந்திருந்தார்கள்.

சகாதேவன் துரியோதனனுக்கு நாள் வைத்துக் கொடுத்ததைக் கண்ணன் வெளிப்படுத்துதல்.

இவ்வாறு துரியோதனன் சகாதேவனிடத்தில் வந்து நாள் வைத்துக் கொண்டதும், இராவாணிடத்திற் களப்பலி இரந்து பெற்றுக் கொண்டு போனதும் ஒருவருக்குந் தெரியாமலிருந்தன. இப்படியிருக்க உபபிலாவியத்திலிருக்கும் பாண்டவர்களும், ஸ்ரீகிருஷ்ணபகவானும், அநேகங்கோடி அரசர்களும் ஊழித்தீயும் வடவானலமும் காலகோடி விஷமுங்கூட நேரிடமாகிற் கலங்கிக் கரிந்துபோகும்படியுத்தஞ்செய்து வெற்றி கொள்ளத்தக்க மற்ற உத்தம வீரர்களெல்லாரும், அன்று போய் மறுநாள் குருக்ஷேத்திரத்திற்குப் போகும்படியாகநிச்சயித்தனர். அக்காலையில் சேனாதிபதியாகிய சுவேதனன்-பீமசேனன்-விஜயன்-அபிமன்னு - சாத்தகி - திட்டத்துய்மன்-இவ்வாறு பேரும்அதிரதத்தலைவராயினர். சிகண்டி-விராடன்தருமராஜன்-பாஞ்சாலன் - இந்நான்குபேரும் மகாரதத்தலைவராயினர். உத்தமோசர்-உதார்மனு-நகுலன் - கடோர்க்கஜன் இந்நான்குபேரும் சமரதத்தலைவராயினர். சகாதேவன்-அஞ்சனவர்மன் இளம்பஞ்ச பாண்டவர்கள் இன்னுமுள்ள ராஜகுமாரர்களியாவரும் அர்த்தரதத்தலைவராயினர். இந்தப்படி தேவர் சேனாதிபதியாகிய குமாரஸ்வாமியார் அணிவகுத்ததுபோற் சேனைகளை அணி அணியாகவமைத்து, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினிடத்திற் சுவேதனன் வந்து சொல்ல, அதைக்கேட்டுப் "பாண்டவர்களிடத்திற் சொல்லப்பா என்னிடத்திலேன் சொல்லுகின்றாய்"? என்று சொல்லி ஸ்ரீகிருஷ்ணதேவர் சும்மாவிருந்தார். அந்த வேளையிற் பாண்டவர்கள் அந்தச் சேனைகளின் பிரிவைப் பார்த்து மிகவுஞ் சந்தோஷமுடையவர்களாய்ச் சுவேதனனைப் புகழ்ந்து, மங்களாசனஞ்சொல்லி, உபபிலாவியத்திலிருந்து நல்ல சுபகாலத்திற் குருக்ஷேத்திரத்திற்குச் சேனைகள் புறப்படும்படியாயோசிக்கும்போது, அவ்வூரிலுள்ள சகலஜனங்களும், தாங்கள் தாங்களிருக்குமிடத்திற்றானே சம்பிரமங்கள் கொண்டாடி வாழ்த்தி, ஆலத்தியெடுத்து, அன்னதான முதலிய சோடச மகாதானங்களும் செய்து, "சுபகரங்களும் மிகுஜயங்களும் ஐம்பூதம்போன்ற பாண்டவர்களுக்குவரக் கடவன" என்று இஷ்டதெய்வங்களைப் பூசித்து வாழ்த்தவும், நவரத்தினதிகளை வாரித் தூற்றவும், மங்களம், லாலி-சோபனம் இவைகளைப் பாடவும், பரதநாட்டியமாடவும், கட்டியர் கெட்டியாய்ப்

புகழ்ந்து வாழ்த்தவும், பட்டுவான்கள் துதிகூறி ஏற்றிப் போற்றவும், அநேகம்பேரி -உறுமி-குடமுழா -முரசு -காகளஞ்-சின்னங்- கொம்பு தவிலடி-தப்பட்டை-தவண்டை-மல்லரி-தாரை-பூரி- முதலிய வாத்தியங்கள் முழங்கவும், செம்பொன்பூ-வெண்பொன்பூ முதலிய சகல புஷ்பங்களையும்வாரி மாரிபோல் தேவர்க ளிறைக்கவும், கன்னிமித்தங்க ளுண்டாகும்படி கல்ல வேளையும் கல்லலக்கினமும் கைகூடிய வேளையில், தேவர்கள் முதலிய யாவருஞ் ஜயஞ்ஜயமென்று தீர்க்கமாய் வாழ்த்த, சகலசுப சந்தோஷத்துடன் குருக்ஷேத்திர பூமிக்குப் போகும்படியாக யத்தனித்துத் துவாரகாபுரிவாளுகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து "ஸ்வாமி! என்ன சும்மாவிருக்கின்றீர்? எழுந்தருளும்" என்று தருமராஜன் சொன்ன காலத்தில், முகமலர்ச்சி இல்லாதவராய், "நான் பின்னே வருகிறேன் நீங்களெல்லோரு முன்னதாகப் போங்கள்" என்றுசொல்ல, அதைக்கேட்ட முரசக் கொடியையுடைய தருமராஜன் பெருமூச்சு விட்டு "ஓ முகுந்தனே! இஃதென்ன மோசமோ? என் மனதைச் சோதிக்கும் விசுவாசமோ? அந்தமட்டும் வெகுகோத்தி! வெகுகோத்தி! எழுந்திருமெழுந்திரும்" என்று இரண்டுகரத்தையும் பற்றித் தூக்கும்போது, கண்ணிலு முகத்திலும் நயத்தைக்காட்டாமற் சுளுப்பினைக்காட்டி "ஏன் காணு மென்னைத் தொந்தரவு செய்கிறீர்? 'வீணான காரியத்தில் வாணாளழிவேனே?' என்னுந் தன்மைபோல் வீண் காரியங்களை என் தலைமேற் போட்டுக்கொண்டு, படாதபாடும் பட்டு, நோய்க்குத்தகுந்த சிட்டிகை யெல்லாம் போட்டு உலகத்திற் 'பெரிய எருமை பேர்பெற்ற கதைபோல்' பாண்டவர் சகாயனென்றும் பார்த்தசாரதி யென்றும் நாராயணனென்றும், ஐவருக்கு ஒன்றுந் தெரியாது, எல்லாக் கலகமும் இவனே செய்கிறானென்றும், குவலயமெல்லாம் என்னைக் குறைகூறிப்பேசத் தகுந்தகாதவர்களிட மெல்லாஞ் சிநேகம்செய்து, எந்தக் காரிய மெப்படிமுடங்குமோ? எந்தவேலை யெப்படி மடங்குமோ? நமது எண்ணம் என்னமாய் முடியுமோ? மற்றவர் திண்ணம் ஏதாய் விளையுமோ? என்று இரவும் பகலும் வயிற்றில் வாள்கட்டிக்கொண்டு, ஆகாரம் நித்திரையில்லாமல் அவதிப்பட்டு, ஐவர்பிழைத்தாற் போதும், அவர்கள் சபதம் நிறைவேறினாற் போதும், அணங்குவிரித்த கூந்தல் முடித்தாற் போதும் என்று காரியத் தாழ்ச்சிவாராமல் என் முழுமனதுடனே எல்லாக் காரியங்களையும் குறைவில்லாமல் நிறைவாய்ச் சீர்படுத்தக்கொண்டு வந்தால்

என்னை உங்கள் குலதெய்வமாக நினைத்து, என் சொற்படி நின்று செவ்வைப்படாமல், என்னைச் சத்துருவாக்கி, அவரவர்கள் மித்துருவாக இருந்து லாபம்பெறப் போகின்றீர்களல்லவா? போகட்டும். என்னுலே நீங்கள் விரோதப்படவேண்டாம். அவர்களும் நீங்களும் சுகமாகவிருங்கள். 'ஆயிரம்பட்டும் அபலம்- கோயிற்கட்டியுங்குறை' என்பதுபோலாயிற்று என் உழைப்பு. நான் உங்களுக்குப் பயந்தவனல்லன்; உங்கள் வேலைக்காரனல்லன; உங்கள் சேவகனல்லன். உங்களாற் கிராமம்-பூமி-நாடு-நகரம்- ஆடி-மாடு-வீடி-யானை-தேர்-பரி-ஆபரணம் அலங்காரம்-வஸ்திரம் இவைகள் பெறக்காத்திருப்பவனல்லன்; என்னை நீங்கள் தடைப்படுத்தவும், போவெனவும், வாவெனவுங்கூடாது. 'புண்ணியத்திற்குழவந்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பருவம்பார்த்தான்' என்பது போல் என்னைப் பரீக்ஷிக்கின்றீர்கள். அட போங்காணும்! நன்றியற்றவர்களே! இப்பவும் குருக்ஷேத்திரத்திற்கு வாவென்றுகூப்பிடுகிறீர்கள். அவ்விடத்திற் கொண்டுபோய்க் கழுவுக்கேற்ற கோமுட்டியகப்பட்டானென்று விட்டுவிட்டு, 'கொண்டானுங் கொடுத்தானும் ஒன்று. இக்கலியாணத்தைக் கூட்டிவைத்தவன் வாயிற் பிடிமண்ணு' என்னும் பழமொழிபோல், நீங்களுங் துரியோதனுதியரும் ஒன்றுபோய்க் கூடிக்கொண்டு, இக்கக் கிருஷ்ணன் தானடாகம் மிருவலரையும் கூடவொட்டாமற் கலகஞ்செய்துகொண்டேவந்தான். இவனைப் பிடியடா; இவனை யடியடா; சிறையில்வையடா. விரைவிற் கொல்லடாவென்றால், எனக்கார் துணை? அப்போதுங்களுக்கு எதிருமில்லை! எனக்குத் திக்கு மில்லை! தெய்வமே என்று உங்களாக்கினையினுல் நானிறந்து விட்டாலும், யுத்த முகத்திலெனது பிரைத் துறந்துவிட்டாலும் என்னை நம்பி என் காலைச் சுற்றிக் கொண்டிருக்கிற பெண்ஜாதி பிள்ளைகளை யெல்லாம் யார் காப்பாற்றுவார்கள்? ஒருவேளை அன்னம் போட்டு ரக்ஷிக்கிறவர்கள் யாரிருக்கின்றார்கள்? இவை யெல்லாம் வீண் காரியம். 'பள்ளிக்கூடத்திற்குப் போனால், வாத்தியாரடிப்பார் போகா விட்டாலேனடிப்பார்?' அதுபோல் உங்களுடன் கூட வருவானேன்? அப்படி வந்து வருத்தப்படுவானேன்? 'கருப்புக்கு இருந்துபிழை, கலகத்திற்கு ஓடிப்பிழை' என்பதுபோல் நான் எங்களூருக்குப் போய்விடுகிறது நன்மையாயிருக்கிறது. 'ஏழு ஊரிற் போய் விருந்துண்பதிலும், வாழும் ஊரிற் முழுங்கு கூழ்குடிப்பது நன்று.' அது போகட்டும்! ஒருதரம் பழகிவிட்டோமானுல் எதுவந்தாலும் அநுபவிப்போமென்றெண்

ணினுலோ, எரி மூட்டிய அடுப்பும் இல்லிப்பானை வெங்கீரு மாய் முடிகிறது.' நீங்களெப்படியும் பலவான்கள். உங்களுக்கொரு குறைவுமில்லை. எனக்கென்ன அண்ணனு? தம்பியா? பங்கும் பங்காளி களா? யாரிருக்கின்றூர்கள்? போனலும் இருந்தாலும் நானெருவன் தான். ஆகையால் 'காலம்போம் வார்த்தைநிற்கும்' என்றிருப்பதால் ஞானித்தருணத்தில் ஒன்றுஞ் சொல்லக்கூடாது. கடவுள் கிருபை யால் நீங்களிருநிறவர்களுங் கலந்து வாழ்ந்தால், நானுங் கண்குளிரப் பார்ப்பேன்" என்று பற்பலநிஷ்டூரங்கள் பேசிவரும்புண்ணியனுடைய மொழியைக் கண்பழுடைய பாண்டவர்களோடு புத்திரமித்திரர் யாவருங் கேட்டு மனங்கலங்கி மதிமயங்கி இருக்கத் தருமராஜன் நெடுநேரம் யோசித்து, "ஸ்வாமி! போகிறேனென்று சொல்லவும் தேவரீருக்கு மனந்துணிந்ததல்லவா? இது என்னுடைய விதிப் பயன்" என்று கண்ணீர் சோரவிட்டு "நாங்கள் உம்மைப் பிரிந்தும் மண்ணில் வாழ்வைப் பெறுவதா? உம்மை விலக்கி ஒரு காரியஞ் செய்வதா? எமது மனையில் யாங்களிடுந் தூபதீபம் உம்மைவிட்டு அப்பாலொருவருக்கிடுவதா? ஓ கோபாலா? என்ன சொன்னீர்? என்ன சொன்னீர்? என் மனதைப் பேதித்து விட்டீர்! 'பெருமாளில் லாமற் றிருநாள் நடக்குமா?' ஓ ஸ்வாமி! சுவரை வைத்துக்கொண் டல்லவோ சித்திரமெழுதமுடியும்? என்ன எங்களுடைய நன்றி யற்றதனம் என்ன! நாங்கள் உள்ளுக்குள்ளே உறவாடுகிற முறை என்ன! எங்களால் நேரிட்ட குறை என்ன! எதிரிகளாற்றங்களுக்கு வந்தபொல்லாங்கென்ன? தேவரீருக்கு இவ்வளவு மனஸ்தாபம் வந்த விதம் யாதினுலோ, அது இப்போர்ப்பட்டதென்று அடியேனுக்கு ஒன் றுந் தெரிய வில்லையே! அவைகளை யெல்லாந் தெரிவிக்கவேண்டும் தேவனே" என்று தீர்க்கதண்டமாய் விழுந்த தருமராஜனைக் கண்டு திடுக்கென்றெழுந்து, "ஆ! ஆ! என்ன காரியஞ் செய்தீர்? எழுந்திரு மெழுந்திரும்" என்று வாரியெடுத்து மார்போடணைத்து, உட்கார வைத்து உபசாரஞ் செய்து "இப்படியுஞ் செய்யலாமா? தரும ராஜனே? இதென்ன அநியாயம்?" என்றூர். அப்போது தருமராஜன் "இவையெல்லாமிருக்கட்டும்; என் தம்பிமார்கள் ஏதாகிலுந் தவறி நடந்தார்களா? நானேதாகிலுந் தப்பிப் போனேனு? அப்படி நாங்கள் தெரிந்துந் தெரியாமலுஞ் செய்திருந்தாலும் சீர்திருத்த வேண்டிய கடமை உம்முடையதேயாம். அப்படி வேறென்றுங் காணுமே· ஏதாகிலும் உண்டானுல் அந்தச் சங்கதியை வெளிவிடும்" என்று

தருமராஜன் சொல்ல, "காளென்ன சொல்வது? நான் கோளஞ? குண்டுணியா? 'அம்மையார் மெழுகி மொக்கிட்ட விடத்தில் அறியாதவள் மூன்தாணையால் அழித்தாள்' என்பதுபோல் பெரியோர்கள் செய்யும் பெரிதாகிய காரியங்களைச் சிறியோர்களெல்லாஞ் சிதைத்து வருகின்றார்கள். அதை நான் சொல்லுவேனுனல் என்பேரில் எல்லோருக்குங் கொல்லத்தக்க பகை வரும்" என்று கோபாலன் சொல்லத் தருமராஜன் கேட்டு, "அவ்வளவு இரகசியமான காரியத்தை நானறியப்போகாதா? அதுதா னின்னதென்று தெரியட்டுமே? யாவரும் அறியட்டுமே! 'யானையை மூறத்தால் மூடுவதுபோல்' மறைக்க வேண்டியதில்லை. நீர்திருவாய் மலர்ந்தருளும் ஐயனே" என்று வையகம்புரக்கும் தருமராஜன் கேட்க, செய்யாளுரையுந் திருமார்பர் பொய்பாமொழியாய்ப் புகல்கின்றார்—

கேளும் தருமநந்தனரே! துரியோதனன் முதலிய சத்துருக்களெல்லாரும் அடியோடழியும்படியாய் முகூர்த்தம் வைத்து ஆயுத பூசை செய்ய வேண்டுமென்று நாமெண்ணியிருக்க, நமது பகையாளியாகிய துரியோதனன் இவ்விடம் வந்து 'தருமராஜன் தலை அற்று விழும்படியாக நாள் எனக்கு வைத்துக்கொடு. நான் அந்த நாளில் ஆயுதபூசை செய்கிறேன்' என்று கேட்க, 'அப்படியே உமது தலை போகும்படியாகிய ஸ்திரநாள் வைத்துக்கொடுத்தான் இந்தச் சகாதேவன். ஒருவரை யொருவரறியாமல் உள்ளுக்குள்ளே இப்படி கடக்குமானுல், நான் ஊரைவளைத்துமென்ன? உறவு பிடித்துமென்ன? இன்னம் எந்த வேலைகளை எப்படி முடித்தும் என்ன பிரயோசனம்? 'நிழலிலிருக்கும் பொருத்தம் வெயிலிற்றெரியும்வருத்தம்' என்பதுபோல நான் பட்டபாடு எனக்குத் தெரியும்! இதனுலேதான் எனக்கு வருத்த முண்டாயிற்று" என்று சொல்லத், தருமராஜன் கேட்டு, தம்பியாகிய சகாதேவனை யழைத்து, "என்ன தம்பி ஸ்வாமி சொல்வது சத்தியமா?" என்றுகேட்க, "சத்தியந்தான்! தருமபூபதியாகிய அண்ணுவே! சந்திரகுலத் தோன்றலாகிய துரியோதன ராஜன் வேத்திர வெகினமூர்ந்து நேற்றிராத்திரி என்னிடத்திற்கு வந்தார். அவருக்கு மரியாதை செய்து ஆசனமளித்து, ஏதண்ணு! இவ்வளவு தூரம் வந்ததென்று கேட்டேன். 'பாண்டவர்களுக்கும் எனக்கும் யுத்தம் நேரிட்டுப் படை கூடியிருப்பதால், தருமராஜன் தலை போகும்படியாகிய நல்ல நாள் உன்னைக்கேட்டு வைத்துக்

கொண்டு, 'நான் ஆயுதபூசை செய்து ஆயுதமெடுக்க வேண்டும்' என்று கேட்டார். அப்படியே கலதென்று, வாரம்-திதி-நாள்-ஓரை-நக்ஷத்திரமுதலியவும் நன்மையாகக்கூடிய அமாவாசையினன்று ஆயுதமெடுத்துக் கொள்ளென்று நாள் வைத்துக் கொடுத்தேன். நாமே பகையாளிகளாயிருக்க அதனை நினைக்காமல் என்னையே நாள் வைத்துக் கொடுவென்று கேட்டபடியால், சத்தியக்கப்பலாகாதென்று நாள் வைத்துக் கொடுத்தேன்" என்றான். அதைத் தருமராஜன் கேட்டு ஆ! ஆ! வென்று நகைத்து ஆனந்தங்கொண்டு, "இதுவரையிலும் நீ எனக்குத் தம்பியல்ல! இன்று முதலாக எனக்கு நீ தல்ல தம்பி யாயினை! ஓ என் அப்பனே! சத்தியநெறிதப்பாத நித்தியனே! உன் சத்தியமே உன்னைக்காக்கக்கடவது! இனி எனக்கு இவ்வுலகம் வராவிட்டாலும் வந்தாலும் யார் போனாலும் யாரிருந்தாலும், நான் கூறிய சபதம் சரிப்பட்டாலும் தப்பிப்போனாலும் எனக்குப் பெரிதல்ல. என் தம்பியினுடைய உண்மையொன்றே போதும்" என்று பூரித்துப் புள்காங்கிதமுற்றுச் சிறியவனையிருந்தும் பெரிய பொருளைக் கைக்கொண்ட சகாதேவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டுக்கொண்டு, கண்ணைனைக் கண்ணினலுற்றுப் பார்த்து, "ஓ காசாம்பூவண்ணனே! உலகமுள்ளவரைக்கும் அழிபாப்புகழ் கொண்டான் என் தம்பி". என்று சொல்லி "என் தம்பி சகாதேவன் எனக்குச் செய்த சகாயம் மற்றத் தம்பிகள் யாவருஞ் செய்யமாட்டார்கள்" என்று வியந்து, "ஐயா! என் தம்பியினுடைய சத்தியத்தைக்குறித்து நீர்மெத்தவுஞ்சந்தோஷப்பட வேண்டும்" என்று தருமராஜன் சொல்ல அதைக்கேட்ட ஹரிமுகுந்தனவர் இரண்டு கைகளையுங்கொட்டிக் கலகலவென்று நகைத்துச் சொல்லுகின்றார்—

கேட்டீர்களா சபையிலுள்ளவர்களே! 'உளவனில்லாமல் ஊரழியாது' என்பதுபோல் இவரனுமதியில்லாமல் இந்தச் சகாதேவன் இப்படி செய்வானு? சரிதான், சரிதான் இனிப் பேச வேண்டியதில்லை. குழந்தையினுடையதுடையையுங்கிள்ளித்தொட்டிலையும்ஆட்டினல் தூங்குவதெப்படி சொல்லுங்கள். இவர் பெரியவரென்று நான் சொன்னல், ஏனடா இப்படி செய்தாய் புத்தியில்லாதவனே யென்று தண்டிக்காமல் அவனைக்கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டு மிகவும் புகழலாமா? இனி இந்த அநியாயத்தை நான் யாருடன் சொல்லியாறுவேன். அரசர்களே! இப்போது வீணுய் நானொருவன் பழிக்

காளானேன். இதுவரையிலும் பகை கலையவேண்டும், விதை விளைய வேண்டுமென்று நான் பட்டபாடு விழலுக்கிறைத்த நீராச்சே! வெய்யிலின் மஞ்சட்பூச்சாயிற்றே! விருதாவாயெனக்குப் பேச்சாயிற்றே! விவகாரங் கெட்டுப்போயிற்றே" என்று விசனப்பட்டு "ஓய் தருமகந்தனரே! 'அதிகாரி வீட்டில் திருடி தலையாரி வீட்டில் அடுக்கி வைத்தாற்போல' உம்மிடத்திற் சொல்லிக்கொண்டேன். இனி எது நடந்தாலும் வாய் பேசாம லிருக்கும்படியாகச் செய்து விட்டீர்! எனக்கென்ன கெட்டுப் போனது! எனக்கென்ன ஆண்சிறையும் பெண்சிறையுந் தலைவிரிகோலமாக அவதிப்படுவது; ஒன்றுமில்லை. 'அக்கரைக்காரருக்கில்லாத காரியம் அயலாருக்கென்ன வந்தது வீரியம்' ஓ தருமகந்தனு! உமது கருத்தை நானறிந்து கொண்டேன்! இது போகட்டும். மேல் நடக்க வேண்டிய காரியங்களுக் கென்ன சொல்லுகிறீர்?" என்று கேட்க, அந்த வார்த்தையை மூசகக்கொடியுடைய முதல்வன் கேட்டு, "இனி மேல் நடக்க வேண்டிய காரியங்கள் இன்னதென்று கட்டளையிட்டால், அடியேன் அந்தப்படி நடக்கக் காத்திருக்கிறேன்" என்று சொல்ல, "பின்னே வேறென்றுமில்லை, நாமும் சேனைகள் முதலிய யாவரும் குருக்ஷேத்திரம் போய்ச் சேர்ந்து வீரமாகாளியைக் கொலுவிறுத்தி, அபிஷேக அலங்கார தூபதீபத்துடன் பலிகொடுத்து, ஆயுதபூசையும் செய்து ஆயுதமெடுப்போமாலும், சத்துருக்களை ஜயித்து மித்துருக்களும் நாமும் வெற்றி பெறலாம். இதற்கு காலையதினம் நாள் நேமித்திருக்கின்றேன். அந்தப்படி நடத்திப் பூசியுங்கள்" என்று காரணன்சொல்ல, யாவருஞ் சந்தோஷித்து, "முக்கியமாகச் செய்யவேண்டிய ராஜதர்மமும் வீரதர்மமு மிவையே" என்று சொல்ல, உடனே மூசகேதனன் கேட்டுக் கண்ணனை நோக்கி "உமதிஷ்டப்படியே காட்டெருமை முதலிய யானை-குதிரை-ஒட்டகம்-பன்றி-கோழி-ஆடு-மான்-இவைகளெல்லாம் பலியிடுங்கள்" என்று சொல்ல, அதைக் கேட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுகின்றார்—

இராவான் துரியோதனனுக்குக் களப்பலிக் குடன்பட்டதைக் கண்ணன் வெளிப்படுத்துதல்.

"ஓ தருமகந்தனு! இவைகளையெல்லாம் உலகத்திலே சுலுவாகிய பிரார்த்தனை முதலிய காரியங்களுக்குச் சாதாரணமாய்ப் பலியிடுகிறதுண்டு. நாம் தொடங்கியிருக்கும் வேலையோ பெரிது. துரி

யோதனனே வெகுபேர் பெரியோர்களுடைய கட்புக் கொண்டு திவ்ய பலிகொடுத்து, பராசத்தி பூசைசெய்து, ஆயுதமெடுக்கும் படியாய் ஸ்திரகாள் நேமித்துக் கொண்டிருக்கின்றன். நாம் பூசை செய்து ஆயுதமெடுக்கப் போகிற ஸ்திர வேளையினால், அவனுக்கு ஜயங்குறைந்து நமக்கு ஜயம் வரவேண்டும். ஆகையினால் எனக்குத் தோன்றியதைச் சொன்னேன். உமக்குத் தோன்றியதை யோசித்துச் சொல்லும் ஐவர் முதல்வனே'' என்று சொல்ல, அதைக் கேட்ட தருமராஜன் நகைத்து, 'நரிவாலைக்கொண்டு கடலாழம் பார்ப்பதுபோலிருக்கிறதே' தேவரீரென்னைக் கேட்கிற யுக்தி! இது வெகு நன்றாயிருக்கிறது! ஸ்வாமி! இப்படி அடிக்கடி என்னைச் சோதிக்கவேண்டாம். தேவரீருடைய சிந்தையின் விளைவெப்படியோ அப்படியே முடித்துவிடும்'' என்று தருமராஜன் கூறினார். ஸ்ரீகிருஷ்ணன் ''தருமதர்தனா! நானென்ன நினைக்கிறேனென்றால், சத்திய சவுச ஆசார விவகாரமுள்ளவனாய் இருக்கும்படியான ஒருவனைப் பிடித்து, வீரமாகாளிக்கு நரபலி யூட்டிவைத்து விட்டால் எத்தனை பேர் எத்தனைசாஸ்திரம் பார்த்து நாள்வைத்துக் கொடுத்தாலும், எவ்வளவு பலியிட்டுப் பூஜைசெய்து ஆயுதமெடுத்தாலும், அந்தத் துரியோதனனுடைய புத்திமித்ராதியரை மீறவிடாமல் முடித்து நாமே வெற்றி பெறலாம். இதற்கு நானே முன்னிற்பேன். நீர் வேறுக யோசிக்க வேண்டியதில்லை'' என்று சொன்னார். தருமராஜன் அந்த வார்த்தையைக் கேட்டு, சற்றுநேரம் யோசித்து, ''சர்வக்ஞனுகிய கண்ணனே! தேவரீரிஷ்டப்படி நடத்திவையும்'' என்று சொல்ல, கிருஷ்ணன் ''யாரைக் கொண்டு நடத்துகிறது? கடையில் விற்கிற பண்டமா? காசுகொடுத்துக் கொண்டோமா? வேலை முடித்துவென்றோமா? வீரமாகாளியைப் பூசித்தோமா—என்று போகிறதற்கு. இதுவோ மானிட உயிரைச் சார்ந்த வேலை. அதிலேயுஞ் சாஸ்திரப்படி லக்ஷணம் அமைந்திருக்கின்றவர்கள் அகப்படுவதருமை. அப்படியுந் தேடிப்பார்த்தால் நம்முடைய கூட்டத்தில் சிலபேரிருக்கிறார்கள். அவர்களுக்கு மொவ்வொரு காரிய நேரிட்டிருக்கிறது. சல்லியனொருவனிருக்கிறான். அவனை துரியோதனராஜனுக்குப் படைத்துணையாய்ப் போய்விட்டான். அருச்சுனனொருவனிருக்கின்றான். அவனைப் பலியூட்டினாலோ பஞ்சபூதம்போன்ற ஐவரென்னும் பூண்டு அப்பொழுதே யற்றுப்போம். இராவானொருவனிருக்கின்றான். அவனை துரியோதன மகாராஜனுடைய களப்பலிக்கு உடன்பட்டு விட்டதாய்க் கேள்வி. இனி வேறொருவரு

மில்லை! 'செல்லுஞ் செல்லாததற்குச் செட்டியாரிருக்கிறார்' என் பதுபோல் நானொருவனிருக்கின்றேன். தருமநந்தனு! என்னைக் களப் பலியூட்டி உங்கள்சபதத்தையும் சத்துருக்களையு முடித்து வெற்றி பெற்று அரசாட்சி செய்யுங்கள்" என்று சொல்லவே, தருமராஜன் "ஹரி ஹரீ" என்று இரண்டு செவியையும் பொத்திக்கொண்டு ஏக்க முற்றவர்போல் நின்று பெருமூச்சுவிட்டு, "இப்படிப்பட்ட பெரும் பழியாகிய சொற் கேட்பதற்கோ என் காதுகளிருந்தன?" என்று மனம்வருந்திச் சபையைநோக்கி "ஓ அரசர்களே விந்தையாகிய இந்த வார்த்தையைக் கேட்டீர்களா? நந்தநந்தனனுகிய இவரைக் களப்பலிகொடுத்து நான் எழிற்கிரீடத்தை விடுத்துப்பழிக்கிரீடத்தை முடித்துக்கொண்டு ராஜாங்கஞ் செய்யவேண்டுமாம். அப்படிச் செய்து சத்துருக்களை வென்று நானெத்தனை காளிருந்து வாழப் போகிறேன்! இதைப்பார்க்கிலும் துரியோதனனே உலகத்தை யாளும்படியாய் விட்டுவிட்டு நாங்களெங்குபோருங் காட்டுக்குப் போய் விடுவது உத்தமமாய் இருக்கும். நீங்கள் எல்லோரும் உங்கள் நாட் டுக்குப் போங்கள்" என்று இருசரங்களையுங் குவித்து மரியாதை யுடன் சொல்லி "ஓ தம்பிமார்களே எழுந்திருங்கள்" என்று கூறித் தாமு மெழுந்தார்.

அந்த வேளையில் இராவானெழுந்து, அறத்தின் மகன் காலில் விழுந்து "ஐயா! அவசரப்பட வேண்டாம்! உட்காரும்" என்று சொல் லிச் சபையிலிருந்த யாவரையும் பணிந்து, ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி யைப் பார்த்து "நல்ல வலை வீச வந்தீர்! உமது சிந்தையி லெண்ணிய வண்ணம் நடக்கக் காலம் சேர்ந்திருக்கின்றபடியால் நீர் இந்தத் தந்திர மாத்திரமோ செய்வீர்? இன்னுமேதேதோ செய்யக் காத்திருக் கின்றீர்; இறைவனே என்னை முடிக்க இவ்வளவு யுக்தி செய்ய வேண் டுமோ? உமது மனத்தில் கினைத்தாற் பகைவனிருந்த இடத்தி லிறக்க மாட்டாதோ? ஈசனே! சும்மாவிருந்த ஐவர் மனத்துக்குத் துயரங் கொண்டுவந்து வைத்த தோன்றலாகிய உம்மை யாரறிவார்கள்? என் னையும் என்னை ஈன்றோரையும் அவர்க்கு முன்னோரையும் அம்முன் னோரையின்ற முன்னோரையும் நீரறிவீர்! ஓபன்னகசயனு" என்று பணிந்து பாண்டவர்களைப் பார்த்து, "என் தந்தையர்களே! நேற்றிராத் திரி துரியோதனமகாராஜன் என்னிடத்திற்கு வந்தார். அவரை எதிர் கொண்டு வணங்கி ஆசனத்திலிருத்தி 'ஏது இவ்வளவுதூரம் வந்தது?' என்று கேட்டேன்.' அதற்கு அவர் 'பாண்டவர்களுக்கும் எங் களுக்கும் பகை மேலிட்டிருப்பதனற் களப்பலிக்கு நீ வரவேண்டும்'

என்று இருகரத்தையும் நீட்டி இரந்தார். போகதேவேந்திரனையொத்த கௌரவகுல முதல்வன் இச்சைமேற்கொண்டு பிச்சைதாவென்று லச்சையின்றி என்னை இரக்கும்போது, நான் நாஸ்தியென்று சொல்லக்கூடுமோ? ஓ அரசர்களே! ஆகையால் இப்படியாக இரந்த என் பெரியதந்தையை நோக்கி, 'எப்போது களப்பலியூட்ட நினைத்திருக்கின்றீரோ அப்போது அதுவரையிலும் இந்த அநித்தியதேகம் நிலைத்திருக்குமானால் நீரே என்னை ஒப்புக்கொள்ளும்' என்று நான் ஒப்புக்கொண்டதுண்டு. இப்போதும் நான் வேறு சொல்லமாட்டேன்! ஓ குலையாபீடமென்னுந் தந்தியைக் கொன்றவனே! நீர் முந்திக்கொள்ளுவதனால் இதோ உமக்குச்சொந்தமாக இருக்கிறேன்! இப்போதுமக்குச் சித்தைக்கலி திடுக்கென்று விழுந்ததா? இனியுமக்கு நித்திரை பிடிக்குமா? ஓ நந்தகோபாலனே!" என்று சொல்லிய, நாககன்னியின் புத்திரன் வார்த்தையைக் கேட்டு, "இஃதென்ன அநியாயம்? நானொன்று சொல்லப்போய்த் தானொன்றாய் விளைந்தது! அப்படியா இராவானே! துரியோதனன் வந்து உன்னைக் களப்பலிக்குக்கேட்டானா? அடடா!! தருமநந்தனரே! கேட்டீரா சங்கதி? 'கிணறுவெட்டப்போய் பூதம் பிறந்த கதை யாயிற்று' இப்படியிருக்கிறது உலகம். நேற்று 'துரியோதனனியரைக் கொல்லப் பதினைட்டு நாளென்னத்திற்கு? நீங்களெல்லாமிங்கிருந்து என்னையனுப்பினால் இதற்குள் நானொருவனே சென்று அதமாக்கி வருகிறேன்' என்று சொன்னவன், இன்று இப்படி ஆய்விட்டானா? ஆ! ஆ! என்ன ஆச்சரியம்? அவனவன் பிழைக்கும் வகையை அவனவன் தேடிக்கொள்ளுகிறான். நாம் மாத்திரம் வீண் காலம் போக்கிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்ல, தருமர் இராவானையழைத்துத் தமதுசரீரத்தில் அணைத்திறுகப்புல்லி, "அப்பனே! என்னையனே! சாந்தமூர்த்தி, துரியோதனன் உன்னைக் களபலிக்குக் கேட்க அதற்கு ஒத்துக்கொண்ட என்னிருகண்ணே! சந்திரகுலத்தை விளக்கவந்த மணித்தீபமே! பிராணனைக் கேட்டவர்க்கும் பிறஞாமற்கொடுக்க விசைந்த தாருவே!" என்று பலவிதமாய்ப் புகழ்ந்து மகிழ்ந்தார். அருச்சுனன் முதலியோரும் அகங்களித்திருந்தார்கள்.

கண்ணன் களப்பலி விதியுரைத்தல்.

அதுகாலையில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி "ஏனையா, இவர்களெல்லாருமிப்படி ஒன்றுபட்டிருப்பார்களாயின் நான் மாத்திரம் வேலையற்றவனா? ஆற்றிற்போகிற ஜலத்தை அப்பாகுடி! ஐயாகுடி! என்பது

போலிருக்கின்றதே! இதென்ன அநியாயம்'' என்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தருமராஜனைத் தனியே அழைத்துப்போய், நடக்கவேண்டியகாரிய மர்மங்களைக்கலந்துபேசி, இராவானைக் களப்பலிக்குவைத்துவிடும்படியாய்ச்சொல்ல, 'ஐயோ! என்பிள்ளையைக்கொன்று களப்பலியூட்டிவைப்பது பெருமையோ? யுத்தவாரம்பஞ்செய்யும்போதே புத்திர சோகத்துடனே யுத்தம்செய்பலாமோ? சொல்லுங் கண்ணனே? என்தம்பி முதலிய பேர்களின் மனமெப்படி துணியும்? நான் சற்றும் உடன்படமாட்டேன்'' என்று சொல்ல, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ''தருமராஜனே! கேளும்! களப்பலியூட்டுவதென்றால் தலையறுத்து வைப்பதாயோசித்து வருந்துகின்றீர்! அப்படியல்ல! இத்தப்பிள்ளையை ஸ்நானம் செய்வித்து அவன் கையிற்றானே வாள் கொடுத்து முப்பத்திரண்டு உறுப்புக்களிலேயும் கொஞ்சம் கொஞ்சம் அறுத்து, பீரமாகாளிக்கு கைவேத்தியம் வைக்கச்செய்வது களப்பலியேயல்லது வேறில்லை! இந்த இராவானுஞ் சுத்தவீரனாகின்று யுத்தமுஞ் செய்வான்'' என்று சொல்ல, தருமராஜன் சித்தமகிழ்ந்து ''சுவாமி! எதிருரோமக்காரன் வேண்டுமென்னுஞ் சித்தாந்த மென்ன?'' வென்றுகேட்க ஸ்ரீகிருஷ்ணன் ''தருமநந்தனே! மாமிசம் அறுக்கும்போது அந்த இடத்திலுதிரம்வாராமலும் கண்ணீரொழாமலு மிருக்கவேண்டிய மர்மஸ்தானத்தைப் பற்றி எதிருரோமக்காரரைத் தேடுவது'' என்றுசொல்ல, தருமர், 'அப்படியா'வென்று அகமகிழ்ந்து அருச்சுனன் முதலாகிய தம்பிமார்களுங்குத் தெரிவிக்க, அவர்களதுகேட்டுத் 'திருமாலுடைய மனத்திற்கும் தேவரீருடைய சித்தத்திற்கு மெப்படி சம்மதமோ அப்படியே எங்களுக்குஞ் சம்மத ''மென்று புத்திரவாஞ்சையை அகத்திலடக்கிச் சொல்ல, அந்தக்குறிப்பை இராவானறிந்துகொண்டு ''ஐயா! நீங்களொன்றுக்கும் யோசிக்கவேண்டாம். 'காத்திருந்தவர் கால்வாங்க, நேற்றிருந்தவரின்றில்லை! பார்த்திருந்தவர் பாழானார்' என்னும் பழமொழி கேட்டிருப்பீர்களல்லவா? ஆகாயத்திலெறிந்த கல்லைப்போலும், காற்றையடைத்துவைத்த தோல்துருத்தியைப்போலும், நெருப்பிற்காட்டிய மெழுகைப்போலும், வெய்யிலில் வைத்த வெண்ணெயைப்போலும், பெருங்காற்றிற் றூன்றிய குமிழ்போலும் மாலுமியில்லாக் கப்பல்போலும், சூத்திரக்கயிறுடைய பொம்மைபோலும், வேகாப்பாண்டத்தினிறைந்தஜலம்போலும், நிமிஷமாத்திரமும் ஸ்திரமென்று சொல்லக்கூடாத பொய்யான தேகத்தை மெய்யென்று நிச்சயித்து வெகுபேர்மறந்து மடிந்தார்கள். ஆகையால் அநித்தியத்

தை நித்தியமென்று நினைத்து, பாம்பின் வாயிலகப்பட்ட தேரை அப்பாம்பினுடைய பல்நுனியிற் றொங்கும் விஷத்துளியைப்பார்த்து ஈயென்றுகருதி, இதைப்பிடித்து நாம்புசித்துப் பசியாறி இருப்போ மென்று எண்ணி அந்தவிஷத் துளியைத்தாவ, பாம்பு வாழைப் பழம் போல் தேரையைப்பின்புற மாகவே பிடித்து விழுங்கித் தன்பசி தணிவதுபோற்சாகிறவரையிலும், அவாநீங்காமையும் பிராணபயமும் யாவருக்குமிருக்கும். அப்படி இருந்தாலும் சமுத்திரத்தி னலை போலும், வண்டிச்சக்கரம்போலும், ஊசலின் கயிறுபோலும், கீழது மேலதாய் மேலது கீழதாய்ப்போயும் வந்துகொண்டு மிருக்கும் ஊத் தைச்சடலத்தைப் பெருமையாக நினைத்து மூடர் மயங்குவார்கள். நுண்ணறிவுடையோர் மகிழார்கள். உலூகியின் வயிற்றில்உங்களுக்கு நான் பிள்ளையாகப் பிறந்தும் என்ன பலன்? தந்தையின் துயர் போக் கித் தர்ப்பணக்கிரியை முதலிய கடனைத்தீர்ப்பவன் எவனுனலும் அவனுக்கே பிள்ளையென்னும் பெருஞ்செல்வப் பேர் தகும். இல்லா விட்டால், இருந்தும் இல்லாமையாகிய இழிவைப் பெறத்தக்கதாக இருக்கும். அதோ நமதுகுலத்தில் பீஷ்மாச்சாரியர் தந்தையாகிய சந்தனுமகாராஜன் நிமித்தம் விரதசீலராகி மேன்மை பெற்றார். ஆத லால் நானும் என்சரீரம் வருந்தி என்னுயிரன்ன உபகாரங்களைத் தந்தைமார்களின் பொருட்டுப் பராசக்திக்குத் திருப்திசெய்ய நினைக் கின்றேன். நீங்கள் தயவுசெய்து இச்சிறியேனுலாகிய உதவியை அங்கீகரிக்க வேண்டும். மேலும் எல்லாரும் உயிருடனிருந்து வாழ வும், நான்மாத்திரம் இறந்துபோகவும் நேரிட்டதே யென்னும் பயம் எனக்கில்லை. அதெனனில், இவ்வுலகத்திலுள்ள ஆத்மகோடிகளில் வெகுபேரைக் குருக்ஷேத்திர பூமியிற்கூடி வேலைமுடிப்பதற்கு தமக் குள்ள சகலவேலையும் விட்டெழுந்து இதுவே வேலையாக வந்திருக் கின்ற இந்த விமலன் என் கண் காண எல்லாரையு முடிப்பாரென் பது என்னுள்ளே தோன்றுகின்றமையால், முன்னே இறப்பது பின்னே இறப்பதென்னும் பேதமும், அதனுல் நேரிடும் பிராணபீதி யும் என்மனதை வருத்தப்படுத்தவில்லை. 'பழுத்த ஓலை முன்னேவிழுந் தால் குருத்தோலை பின்னேவிழும்' என்னும் பான்மைபோல், கடைசிக் கணக்குப் பார்க்கும்போது சகடு முழுங்காலென்னுந் தன்மையாய்ச் சரிப்பட்டுப்போகும். ஐயா! 'குதிரையுங்காதங் கிழவியுங்காதங் குல மன்னரே என்னுந் தன்மையுமாகும்' என்று சொல்லி வணங்கினன். அருச்சுனன்முதலிய யாவருங்கேட்டு மனமகிழ்ந்திருந்தார்கள். அந்

தச் சமயத்தில் இராவாணனவன் பெரியதந்தை முதலிய யாவரையும் பணிந்து, தாய்மார்களுக்குத் தீர்க்கதண்டஞ்செய்து ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியை வணங்கி, "ஸ்வாமி தேவரீருடைய எண்ணப்படி உடன் பட்ட எனக்கு ஓருவரங் கொடுக்க வேண்டும். அதாவது ஜயவீரப் பிரதாப விஜயனுடைய பிள்ளையாகிய இராவான் களப்பலியா லிறந் தானென்னும் பெயரில்லாமல், யுத்தகளத்திற் சுத்தவீரனு பிறந்தா னென்னுங் கீர்த்தியும், அப்பேர்ப்பட்ட வீரனிடத்திற் போர் புரிந்து இறக்கும்படியாகிய சத்துவமும் எனக்குக் கொடுக்கவேண் டும்" என்று கேட்க, "அப்படியே ஈசன் அநுக்கிரகஞ் செய்வார்" என்று கண்ணன் திருவாய் மலர்ந்தருள, அப்பால் யாவரும் மகிழ்ச்சி யுடன் பேசியிருந்து தாங்கள் தாங்கள் இறங்கி யிருந்த இடம் போய்ச் சேர்ந்து போஜனாதிகளைச் செய்தார்கள்.

கண்ணன் திதியைப் புரட்டல்.

அன்றுபோய் மறுநாட்காலையில் எல்லோரு மெழுந்து சபைக்கு வந்து சேர்ந்த பிற்பாடு, கண்ணனவர் நெடுநேரம் வரைக்கும் வார்த்தையாடிக் கொண்டிருந்து, அப்பால் "இன்றையதினம் அமா வாசை யாதலினால் யாவருந் திலதர்ப்பணாதிகள் முடித்துப் போஜ னஞ் செய்து, இருபதாநாழிகைக்குக் குருக்ஷேத்திரம் போய்ச் சேர வேண்டும்" என்று சேனாதிபதியாகிய சுவேதனை யழைத்து உத்தரவு சொல்ல, அதைக் கேட்ட அரசரெல்லாரும் ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் பார்த்து, "இன்றைக்குச் சதுர்த்தசி; நாளைக்கு அமாவாசையாகை யால் நாளைக்கல்லவோ, நாமெல்லாம் குருக்ஷேத்திரம் போகவேண்டிய நாள்" என்று சொல்ல, கண்ணன் நகைத்து, "ஐயோ! இன்றைக் குத்தான் அமாவாசை" யென்று ஸ்தாபித்தார். அப்போது அரசர் முதலானவர்களோடு பாண்டவர்களும் பஞ்சாங்க மெடுத்து வரச் சொல்லிப் பார்த்தபோது, அதிலு மின்றைக்கென்றே இருக்கப் பார்த்து, பௌரோகிதரைக் கேட்கும்போது, "ஐயா! இன்றைக்கே அமாவாசை" யென்று அவர்களுஞ் சொன்னார்கள். பின் யாவரும் ஸ்நான சங்கற்பங்களைச் செய்துகொண்டு, திலதர்ப்பணாதிகளை முடித் துப் பிதிர்த்தேவதைகளைப் பூசித்து கைவேத்தியம் வைத்தபோது, அந்தப் பிதிர்த்தேவதைகளெல்லாரும்வந்து சாப்பிட்டார்கள். அந்த வேளையில் தேவர்களுக்குப் பிதிர்ப்பாகம் அகப்படாமையினால் 'இது

என்ன காரணம்? பிதிர்க்களெல்லாரும் உண்டுகளித்திருக்க நமக்குப் பாக மகப்படாமற்போன காரணம் என்ன? வென்று தேவர்களெல் லோருங், கூட்டங்கூடிச் சூரியசந்திரரை அழைத்து, "இன்றைக்குப் பிதிர்தினமென்று பூலோகமெல்லாங் கொண்டாடிப் பூசிக்கின்றார்களே உங்களுக்குக் கிடைக்க வேண்டிய பிதிர்ப்பாகங் கிடைத்ததா?" என்று கேட்க, சந்திரசூரிய ரிரண்டுபேருந் திடுக்கிட்டு, "காளைக் கல்லவோ நாம் கூட வேண்டிய காலம்? நாம் ஒன்றுய்ச் சம்பந்தப் பட்ட காலமல்லவோ அமாவாசை? அதற்கல்லவோ பிதிர்த்தின மென்று பெயர்? நம்முடைய கதி இன்றுமுழுமையுஞ் சென்ற பிற்பா டல்லவோ காளைய கதியிற் கூடப்போகிறோம்? அப்போதல்லவோ பிதிர்ப்பாகம் நமக்குக் கிடைக்கும்? அப்படியிருக்க இன்று கூடிய தாய்க் கொண்டாடிய விதம் எங்களுக்குத் தெரியவில்லையே?" என்று மற்றக் கிரகங்களைக்கேட்க "அஃதென்னவோ எங்களைத்தானம் விட் டுத் தானம் புரட்டி இருக்கிறது; எங்களுக்குத் தெரியவில்லை" என்று சொல்ல, "இப்போது நம்மெல்லோருக்குஞ் சந்தேக முண்டா யிருப் பதால் நமக்காகப் பூலோகத்தில் அவதரித்திருக்கும் புண்யஞகிய கண்ணன் உபபிலாவியத்தி லிருக்கின்றார். அவர்தான் இதற்குக் காரணமா யிருப்பர். அவரைப் போய்க் கேட்டோம்" என்று அந்தரம் விடுத்து இந்திரன் முதலிய சந்திரசூரியர் யாவருஞ் சேர்ந்து வந்து ஸ்வாமியைக் கண்டு வணங்கினர். சந்திரசூரியர் "காளைய தினம் நாங்கள் கூடுவதிருக்க இன்றையதினமென்று தாங்களுத்தரவு செய்த தாய்ப் பேசிக் கொள்ளுகிறார்கள். ஆகையால் சந்தேகப்பட்டு உங்களைக் கேட்கவந்தோம்" என்று சொல்ல, ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களுடைய வசனத்தைக் கேட்டு, "கல்லது அமாவாசை எப் பொழுது?" என்று கேட்க, "நாங்களிரண்டு பேருங் கூடிய காலம் அமாவாசை பிதிர்த்தினம்' என்று சொல்ல, அதைக்கேட்ட பகவானுனவர் நகைத்து அவர்களை நோக்கி, "இப்போது நீங்கள் கூடியிருக்கிறீர்களா இல்லையா? சொல்லுங்கள்" என்று கேட்க, "தேவரீரைக் கண்டு சந்தேக நிவர்த்தி செய்து கொள்ளும்படியாக நாங்களிருவருங் கூடி வந்தோம்" என்று சொல்ல, "நீங்கள் கூடிய தினமே அமாவாசையாகையால் இப்போது கூடியிருக்கின்றீர்களே இதுவே அத்தப்பிதிர்காலந்தான்" என, "காளைய தினத்தை இன்றுக ஒப்புக்கொண்டால் எங்கள் கதி எப்படி சரிப்படும்" என்று கேட்க இன்றுமுதல் பல நாட்களிலுஞ் சேர்த்து ஒவ்வொரு தினத்திற்கு

மாத்திரைப்போது கதியாகச்சென்று சரிப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்று சக்கராயுதன் சொல்ல, அப்படியே மகாபாக்கியமென்று ஒப்புக்கொண்டு அவர்கள் போய்விட்டார்கள். ''ஓ ஜனமேஜய மகா ராஜனே! அந்தக்குறைவுதான் நாளது வரையிலும் அமாவாசை சரியாக வராமல், இன்னும் இரவும் பகலுமாகப் புரண்டுவருகிற தென்று வைசம்பாயனர் சொல்ல, அதைக்கேட்டு மகாசந்தோஷ மடைந்து, நாளையுங் கோளையும் புரட்டும் நாயகனுகிய காரணனே பாண்டவர்களுக்கு நன்மைத்தனமாக அமைந்திருக்கும்போது வேறுக கடக்குங் காரியங்களுமுண்டோ! 'முன்னவனே முன்னின் றுல் முடியாத பொருளுளதோ!' என்னும் பெரியோர் வாக்கிய மென்ன பழுதாவதோ!'' என்று சிக்தைசெய்து வந்தனபுரிந்து மேல்நடந்த மற்ற செய்கைகளைத் திருவாய்மலர்ந்தருள வேண்டு மென்று ஜனமேஜய மகாராஜன் கேட்க வைசம்பாயனர் சொல்லு கின்றார்.

பாண்டவர் குருக்ஷேத்திரம் சென்று வீரமாகாளியைப் பூசித்தல்

இப்பால் ஸ்ரீகிருஷ்ணனவர் சேனுதிபதியாகிய சுவேதனனை யழைத்து, ''நமதுசேனைகளெல்லாம் இன்றையதினம் குருக்ஷேத்திரம் போய்ச் சேர்ந்து இராத்திரி வீரமாகாளி பூசைசெய்து ஆயுத மெடுத்து, நாளைக்கு முதல் நாள் யுத்தம் ஆரம்பிக்கும்படி நாள் நிய மித்திருப்பதினால் அதிசீக்கிரத்திற் பிரயாணப்படும்'' என்று சொன்னர். அப்போதே பிரயாணபேரி முழங்கியது. அளவிறந்த முரசு பேரி - குடமுழா - துந்துமி-டங்கா-பாங்கா-உறுமி-தவிலடி-தப்பட்டை காரைபூரி-கற்ஞ-கொம்பு முதலிய வாத்தியங்களும் முழங்கின. சேனைப்பெருக்கமும், இரதகஜ துரகபதாதிகளின் நெருக் கமும், அண்டமுகடுமுதல் எண்டிசையும் அதிரும்படியாய் மண்ட லமும் புண்டரீகனுலகமும் பெருகும் படியாய்ப் புறப்பட்டன. ஒருமை என்பது சிறுமையாற்குலைந்தது. இருமையென்னும் அஸ்திர சஸ்திர ஆயுதங்களிரண்டுமிழைக்தன, மூன்றுலோகமு முழங்கிவிழித்தன. நான்குதிலமும் நடுங்கின. ஐந்துபூதங்களலறின. ஆறுசமயமடங்கின. பதினேழு உருத்திரர்போற்றனர். பன்னிரண்டு சூரியர் மாறினர்-பதினேந்து திதியுமொடுங்கின. புகழ்-வலி-வெற்றி-பெருமை-நல்லூழ் முதலிய பதினுறுபேறும் பாண்டவர் பெறவேண்டு

மென்னுங் பக்திபரவியதெங்கும். பாதலத்தி லிருக்கும் நாகங்களி னுடைய தலைகள் நசுங்கி அவைகளிலிருக்கிற ரத்னம் பிர காசித்தன. கோடிக்கணக்கான தேர்க் குதிரைகள் குரத்தாற்றூளி படலங்களை எழுப்பி மேகக்கூட்டங்களும் குமுங்கிப்போகும்படி செய்தன. அப்படி எழும்பிய தும்புகளை யானைமதங்கள் உளைச் சேறாக்கின. அந்த உளைச்சேற்றை இரதங்களி னுருளைகளார்ந்து வான்கருக்கைப் போலும் மண்வெட்டி இலையைப்போலும் காய்ந்து லரச் செய்தன. அப்படி யுலர்ந்து காய்ந்த களிமண்கட்டியைப் பரம அணுவாக்கி ஆகாயத்தில் மறுபடியும் பறக்கச்செய்து அதனால் இமையா நாட்டத்தவரைக் கண்ணிமைத்துத் தியங்கும்படியாக்கி இமைக்கு நாட்டத் தவரென்று பேரிட்டழைத்துப் பெருங் கூச்சலிட்டுச்சென்றன. பலவாறான பதாதிகளும், அப்படித் தேவர் களுடைய கண்களில் வீழ்ந்த தும்பைத் துடைத்து "விசனப்படா தீர்கள்! நீங்கள் இமையா நாட்டத் தவர்கள்தாம்" என்று பெயர் விளக்கித் தேவோபகாரஞ் செய்யும் பற்பலவித வன்னக் கொடி யாடைக ளசைந்தன. அக்கொடிகளின் வஸ்திரங்களைத்தாங்கி யிருக்குஞ் சுவர்ணக்கொடிகளும் அசைந்தன. கொம்புகளையும் பல விதக் குடைகளையும் பிடித்து வராகின்ற படியாட்களும் அந்த நிழலில் வரும்படியாகிய முடிமன்னவரும், வீரப்பிரதாபக் கொடி மன் னவரும் முடியுடன் முடிகணெருங்க, புஜத்தோடு புஜங்கணெருங்க அடியுடனடி கண்மிதிபட ஆயுதங்களுட னுதமழைப ஆக்ரமித்துப் பராக்ரமத்துடன் வியாக்ரம்போற் சீக்கிரம் வந்து பற்கடித்துச் சொற்படித்து, வாய்மடித்து, வாள் பிடித்துப் படபடவென்ன மீசை துடிக்கக் கடகடவென்ன ஓசையெடுத்து விற்பிடித்து மற்கொடுத்து வீரங்களைப் பேசுமோசையும் காரங்களைப்பேசும் ஆசையும் யானை யின் முழக்கமும், சேனைகளின் சக்கரத் தொனியும், குதிரைகளின் அணுமானிப்பும், சேனைகளின் பெருங்கூச்சலும், ஆகிய இவை களெல்லாம் உலகம் செவிடுபடும்படியாய் முழங்கவந்து, குருக்ஷேத் திரம் சேர்ந்தனர். செங்கண்மால் தாமே சிரசுஞ் சிவனுமாகவும், சேனாதிபதி சுவேதனனே அணிமுடியும் ஆபரண அலங்காரமாகவும், மற்றையவரசர்களை பலவித உறுப்புகளாகவும் பாண்டவர் களை படைத்தேகமாகவு மிருந்து அந்தக் குருபூமியில் இந்த ஏழக்குரோணி சேனைகளுந் தாங்களு மிருப்பதற்குப் பாசறை அமைக்கும்படியாக யோசித்துக் காண்டவ வனத்தில் அருச்சுன னால் உயிருதவிபெற்ற மயனென்பவனை நினைத்தனர். அவன் வந்து

ஆதிகாரணனை வணங்கி, "அடியேனை நினைத்தகாரிய மென்ன?" வென்று கேட்க, கண்ணன், "இவ்விடத்தில் யாவரும் அவரவர்களுக் தஸ்தின்படி இருப்பதற்காகிய படைவீடு வெகுதிட்டமாய் அழகிய சட்டமாய் ஏற்படுத்த வேண்டும்" என்று சொல்ல, "அப்படியே மஹா பாக்கியம்" என்று தனது மனத்தினுலுன்னிக் கரத்திலிருக் கும் மாத்திரைக் கோலினுலும் தனது கண்களினுலும் கோடுகளேற் படுத்தி, நான்கு புறமதிற்கோயிலும்- நவரத்தினக் கோட்டைவாயி லும் ஆயுதச்சாலையும்-பூந்தருச்சோலையும்-புனிதஸ்நானஞ் செய்யும் இடமும்-பூசாவிதி முடித்துக்கொள்ளும் மடமும்-தேவதார்ச்சனைக் கூடமும்-திருவாபரண மாடமும் அலங்காரம் செய்துகொள்ளும் அறையும்- அரசர்களிருக்குந் துறையும் ஆலோசனைமண்டபமுறை யும் அரிவையர்கூடும் நிறையும்-ஆனைகட்டுங் கொட்டாரமும்-ஆன் றோர் வசிக்கும் விட்டாரமும் குதிரைகள் பந்திக்குஞ்சாலையும்-தேர் கள் நிறையுஞ்சாலையும்-பதாதிகளடங்கும் இடமும்-ராஜஸ்திரீகளி ருக்கும் அந்தப்புரமடமும்-சவுக்கடிமேடையும் சந்தனவாடையும்- சித்திரக்கூடமும் - அஸ்திரமாடமும் - சாதுசங்கச்சாலையும் - வேத வேள்விச் சாலையும்-ஓமசாந்தித்திட்டும் கலியாணமண்டபக்கட்டும்- கனதனப் பெட்டிவைக்குங் கூடமும்-கவிவலோர் மிக்கிருக்கும் பீட மும்-ஆகிய இவைகளெல்லாம் ஏற்படுத்தினன் மயனுனவன். அந்த அலங்காரத்தைக் கோபாலனும் பூபாலரும் பார்த்து, நாவினுற் சொல் லத் தக்கதன்றென்று கலமுடன் அம்மயனைப் புகழ்ந்து கல்லவேளை யிற் கிரகப்பிரவேசஞ்செய்து தியாகயோக யேகபோக இந்திரனைப் போற் கொலுக்கொண்டிருந்தார்கள்.

அன்றிராத்திரி ஒன்பது நாழிகைக்குமேல் ஸ்ரீகிருஷ்ணபகவான் தமதெண்ணம் நிறைவேறும்படியாய் ஆயுதச்சாலையில் ஆவாகனஞ் செய்திருக்கும் வீரமாகாளிக்குப் பூசைபோட எல்லோருடனும் சென்றார். அபிஷேக திரவியங்களாகிய சந்தனம்-கரும்பு-இளநீர் பச்சைக்கர்ப்பூரம் குங்குமம் கதம்பம் புனுகு சவ்வாது பன்னீர் பால்—தேன்—தயிர்-முதலிய யாவுங்கொண்டு வீரமாகாளிக்குத் திருமஞ்சனமாட்டித் திவ்யவஸ்திராபரண முதலியனவையணிந்து திலகமுஞ்சூட்டி, மலர்ந்த மணமுறைந்த பராகமும் தேனுநிறைந்த புட்பமாலையுஞ் சாத்தி, கன்னல்-பயறு-காய்-கனி-கிழங்கு-வாழைக் கனி-வருக்கைக்கனி-மாங்கனி-தேங்காய்-அரிசி - துவரை - அவரை எள்-மொச்சை - கடலை - முழுவுளுந்து - பாயசம்-சுகியன்-சுண்டல்

எள்ளுண்டை-மோதகம்-வடை-பணியாரம்-அன்னம்அறுசுவைக்கறி கொழுக்கட்டை-இவைமுதலியவைகளோடு மாம்சத்தினுசும் மரக்கறிவகைகளும்-அமைத்து இடை இடை இளநீர் எலுமிச்சம்பழம்-பேரீச்சம்பழம்-வேர்ப்பலா-விளாம்பழம்-கிச்சிலிப்பழம் - இவைகளை நிவேதனஞ் செய்து யாகசாஸ்திர விதிப்படி ஓமம் வளர்த்து, யாமள சாஸ்திர விதிப்படி உயிர்ப்பலி கொடுத்துச் சுடர்மணி விளக்குத் தூண்டாவிளக்கு முதலானவைகளோடு கர்ப்பூரஜோதிகாட்டிப் பூசை போடச் செய்தனர். பின் இராவானை யழைத்து அபிஷேகஞ் செய்து சிவப்பு நிறங்கொண்ட செம்பட்டணிந்து செஞ்சந்தனமும் சிவப்புமாலையுந் தரித்து தேஜோமயமான திவ்யாபரணங்களினால் தேகமெல்லாமறைத்து வீரகண்டாமணிகட்டிவிருதுத்துவஜம்காட்டி, வாளாயுதத்தை மகாதேவி சன்னிதியில் வைத்துப் பூசிக்கும்படியாய் ஏவினர். அந்தப்படியே இராவானும் தீர்க்கதண்டமாகப் பணிந்து தூபதீபம் கொடுத்து நீர்மாற்றி, வாளாயுதத்தை வலது கரத்தாலெடுத்து, மண்டியிட்டு ஓங்காரங்கொண்டு, தனது முப்பத்திரண்டு உறுப்புக்களிலும் தூண்டறுத்துப் பராசக்தியின் முன்வைத்து மனங்கோணுமல், உடல்வாடாமல், பிராணபயம் காடாமல், வாய் பேசாமல் தேகந்துடியாமல், உதிரம்வடியாமல் கண்ணீர்சோராமல், தண்ணீர் பாராமல், வாழ்நாள் தேடாமல், மண்ணைசைபோடாமல் சாஷ்டாங்கமாக விழுந்தான். உடனே பாண்டவர்களும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியும் ஜலங்கொண்டு தெளித்து உபசாரஞ்செய்து தாகவிடாய் தீர்த்து நீறும்பத்திரியும் நிறையப்பூசி அந்தப் பராசக்தியின் சாலையிற்ரூனை வளர்த்திவைத்தார்கள். அப்பால் மூர்ச்சை நீங்கி எழுந்த இராவானனவன் முன்பலத்திற்கு மூன்றுபங்கு பலங்குன்றிப் போய்ச் சுவாமியின் அருளினாற் கொஞ்சம் பலமுடையவனாக இருந்தான். பாண்டவர்களும் கல்லவேளையில் ஆயுதமெடுத்துக்கொண்டு மிகுந்த சந்தோஷமுடையவர்களாய்ப் பொழுதெப்போது விடியும்? பொழுதெப்போதுவிடியுமென்று சகலசேனைகளுடன் ராத்திரி முழுவதும் நித்திரையில்லாமல் மிகுந்த ஆத்திரத்துடன் சூரியோதயத்தை எதிர் பார்த்திருந்தார்கள்.

பீஷ்மருக்கும் கர்ணனுக்கும் வாது

இப்பால் துரியோதனமகாராஜன் உபபிலாவியத்தில் நடந்த சங்கதியையும் பகவான் அமாவாசையைப் புரட்டியதையும், இராவா

னைக்களப்பலி யூட்டியதையுந் தெரிந்துகொண்டு மிகவும் விசனமுடையவனுய், தான்போய் நாள் வைத்துக்கொண்டு களப்பலிக்கு இராவானை உடன்படுத்தி வந்ததையும் அதைக் கிருஷ்ணன் புரட்டிவிட்டதையும் பீஷ்மர் முதலிய பெரியவர்களுக்குத்தெரியப்படுத்திக் தங்களுடைய பட்டத்து யானையைப் பலிகொடுக்கும்படி அன்றைய தினமே சித்தஞ்செய்து கொண்டான்; பாட்டனுகிய பீஷ்மருக்குச் சாஷ்டாங்கமாகக் தண்டஞ்செய்து, "நமது சேனுசைனியங்களுடன் குருபூமிக்குப் பிரயாணப்படவேண்டும்" என்று மிகுந்தைரியத்துடன் சொன்னன். துரியோதனனுடைய பேச்சைக் கேட்டுப் பீஷ்மர் அணிவகுத்துத் தாமேமற்படித்தினர். அத்தத் தரத்தின் விவரம் யாதெனில்— துரோணுச்சாரியார்-அசுவத்தாமர்-பீஷ்மர்-மூவரும் அதிரதத்தலைவர்; பூரிசிரன்-சோமதத்தன்-துன்மருடன்-பகதத்தன் இக்கான்குபேரும் மகாரதத்தலைவர்; கிருதவன்மன்-துரியோதனன் சகுனி-சல்லியன்-சயித்திரதன் திரிகர்த்தன்-இவர்கள் சமரதத்தலைவர்; அங்கதேசாதிபதியாகிய கர்ணன்-விடசேனன்-துச்சாசனன்-முதலாகிய தொண்ணூற்றெண்பது தம்பிமார்கள்-இவர்கள் அர்த்தரதர்.

இவ்வாறு பீஷ்மர் சேனைகளை அணிவகுத்து வணங்காமுடியையுடைய மன்னவனிடத்திற் சொல்ல, அதைக்கேட்ட அரசனவன் 'அதிரதரிற் சிறந்த அங்கதேசாதிபதியை அர்த்தரதரிலேன்போட்டார், நமது ஐயா' என்று யோசிப்பதற்குமுன்னமே கர்ணனவன் இந்தச் சங்கதியைக் கேள்விப்பட்டு, காச்சிய செம்பைப்போற் கண் சிவந்து கோபங்கொண்டு முகங்கறுத்து மீசை துடிக்க வியர்வை பொடிக்கத் தோள் துடிக்க வாளையுருவிக்கொண்டு மண்ணும்விண்ணும் நடுங்கும்படி துரியோதனன் முதலிய சகல ராஜர்களுக் கெதிரில் வந்து பீஷ்மரைப் பார்த்து "விற்பிடிக்கத் தெரியாத நீ அதிரதத்தலைவனுகிய என்னை அர்த்தரதரிலேற்படுத்தினையல்லவா? பளா!பளா! வெகுநேர்த்தி! ஐயா! பெரியவனென்றும் உரியவனென்றுந் துரியோதனமகாராஜன் உனக்குச் சேனுதிபதிபட்டங் கட்டஅந்தப் பெரியதனத்தைச் சீர்படுத்திச் சிறப்பாக்கிக்கொள்ள வகைதெரியாமற் சிறியதனமாக்கிக் கொண்டாயே சீமானே! நீ தனுர் வேதத்தில் என்னென்ன சாஸ்திரங் கற்றிருக்கிறுய்? எந்தெந்த வீரத்திறந் தெரிந்திருக்கிறுய்? என்னசாகசமறிவாய்? என்ன தன்மை என்னிடத்திற் குறைவுண்டென்று அர்த்தரதரிற் போட்டாய்? நீ என்ன

அறிவாய்? கெடுகினைப்பினையுடைய பீஷ்மனே! இதோ உன்தலையை வாளினால் மாட்டிக் களப்பலியூட்டித் துரியோதனனுக்கு ஜயஞ் சூட்டி வைக்கிறேன்" என்று வாளையோங்கி வீசிவரவும், அந்தவேளையில் பீஷ்மாச்சாரியரும் வாளையுருவிக் கொண்டு தேவர்கள் நடுங்கும்படி கடுங்கோபத்துடன் சீறி 'துப்பற்ற தோழனுக்கு செட்டைப் பங்கு' என்னுந்தன்மையைப்போல் உன் சுத்தவீரத்திற்கு அதிரதத் தலைவனென்னும் ஆண்மையும் வேண்டுமோ? அடா கர்ணு இப்போதே உன் தலையை வெட்டித் தொலைப்பேனுகில் புகழினையுடைய இக்கக்குருகுலம் விளங்கி இருதிறப் பிள்ளைகளுஞ் சுகப்பட்டுப் போவார்கள். அடா பாவி! இதோ வெட்டினேன், வெட்டினேன்" என்று பலவாறுகத் திட்டிக்கொண்டு கிட்டினர். இதைக்கண்ட அரசர்களெல்லாரும் அஞ்சி நடுங்கியெட்டிப்போயினர். வீரர்களெல்லாரும் வெருண்டொடுங்கினர். இரண்டு பேரு மெதிர்த்துக்கொண்டார்கள். இவ்விருவருங் கொண்ட பெருங்குரோதத்தைத் துரியோதனன் கண்டு திகில் கொண்டான்; இரண்டு பேருக்கும் நடுவில் வந்து நின்று 'பகைவர் நகைக்கும்படியாய் நீங்களிருவரு மெதிர்க்கலாகுமோ? ஐயா! அண்ணு! எங்களை இவ்விதி அவமானம் பண்ணுவதைப் பார்க்கிலும், எங்களைக் கொன்று போட்டு உங்களெண்ணத்தைச் சரிபடுத்திக் கொள்வது உத்தமம்" என்று கூறி விலக்கினன். அப்பொழுது காற்றினற் கலங்கி யடிபட்டு விலகிய காளமேகத்தைப் போலக் கண்கறுத்து இருவரும் விலகி நின்றார்கள்.

அப்போதந்தச் சேனைகளிலிருந்த மன்னவரியாவரும் மனஸ்தாப மடைந்து, "பீஷ்மாச்சாரியர் தன்னை, அர்த்தரதத்தலைவரிற் போட்டதற்குக் காரணங் கேட்காமலும், அதைத் தெரிந்துகொள்ளாமலும் அவமரியாதையாகப் பேசி வாளையுருவி வெட்டுகிறேனென்று வந்த கர்ணனை ஏனிவ்வாறு நடத்தினையென்று விசாரியாமலும், இருவரையும் சமாதானம் பண்ணும் முறைமையறியாத துரியோதனனைக் குறித்துப்பேச வேண்டிய தென்னவிருக்கின்றது? இனி ஒன்றுங் காரியமில்லை. ஓம் பிரதானமென்று ஆயுதமெடுத்த போதே என்னை வெட்டி உன்னை வெட்டென்று விளக்கபடியால் இதுபோலவே போதுவிடியும் வரையிலுங் கலகம் விளையும்" என்று பேசிக்கொண்டிருந்தார்கள். இப்பால் கர்ணனவன் நெடுநேரம் வரையிலும் விசனத்துடனின்று, "ஆ! ஆ! இந்தத் துரியோதனன் நமது பேரில் வைத்திருந்த பட்சமெல்லாம் பாழாகப் போய்

விட்டன! ஐயோ! இந்த பீஷ்மனை நோக்கி ஏனையா இப்படி செய்தீ ரென்று ஒருவார்த்தையுங் கேளாமற் பாட்டனென்னும் பட்ச மற வாமலிருந்தானே யன்றித் தனக்கிஷ்டமாயிருந்த என்னை மறந்தா னல்லவா? அடடா! துஷ்டசாவகாசமாய் விட்டது" என்று துடி துடிப்புட னிருந்தான். அதுகாலையில் துரோணாச்சாரியார் முதலி யோர்கள் பீஷ்மரையடுத்து, "ஐயா சேனாதிபதியே! அதிரதத் தலைவ ரான இந்தக் கர்ணமகாராஜனை அர்த்தரதத் தலைவரிற் போட்டதற் குக் காரணமென்ன சொல்லுமையா" என்று கேட்க, பீஷ்மர் "அர சர்களே! கேளுங்கள்! இவ்விடத்திலிருக்கிற மகாவீரர்களில் நானுங் கர்ணனும் அடங்கலுக்குப் புறம்பாகி இருக்கின்றோம். ஆதலால் நான் முதற்படையி லிருக்கின்றபடி கடைட்படையில் கர்ணனைப் போட்டேன்! இதேகாரணமன்றிவேறொன்றுமில்லை" என்று சொல்ல, அதைக்கேட்டுத் துரியோதனன் முதலிய யாவருங் கர்ணனைக்கட்டித் தழுவிக்கொண்டு "அங்கதேசாதிபதியே! கேளும்! பீஷ்மர் செய்த காரியம் வஞ்சகமல்ல! சேனைகளை ரட்சித்துக் காக்கும்படி இப்படி செய்திருக்கிறார். ஆகையால், நீங்களிருவரும் கலந்து வார்த்தையாடி யோசித்து ஒரு காரியத்தைச் செய்தால் மாத்திரம் பெருமையாயிருக் கும் ஜயமுங்கிடைக்கும். இல்லாவிட்டால் காரியமாகாது" என்று துரியோதனன் சொல்ல, கர்ணன் கலீரென நகைத்து, "இவருடைய சூது உங்களுக்குத் தெரியாது. 'பாம்பின்கால் பாம்புக்குத் தெரியும், என்பதுபோல் இவருடையவஞ்சகத்தையும் சதுரருவைப்புகழ்ந்து பேசும் தன்மையையும் என்னிடத்திலிவர் வைத்திருக்கும் இஷ் டத்தையும் நானறிவேன். இவரோ நல்லபாம்பின் விஷப்பையிலுங் கொடிய துவேஷக் கொடுமையை யுடையவர். எப்போதும் மனதிற் சந்தேகந் தோன்றுமற் சகல காரியங்களும் நடக்கவேண்டும். சந் தேகந் தோன்றினாலோ ஒருகாரியமும் நடவாது. மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்பதுபோல், அவருக்கும் மெனக்கும் அநுமானம் பிறந்து கொண்டே யிருக்கும். ஆகையால், இந்த பீஷ்மர் என்றைக்குச் சாகின்றாரோ அன் றைக்கு நான் மனப்பூர்வமாய் ஆயுதமெடித்து யுத்தம் பண்ணுவதே யன்றி, இதற்கு மத்தியில் யுத்தக்களத்திற்கு வரமாட்டேன். வந் தாலும் மனக்களிப்பாய்ப் போர்புரிய ஆயுதமெடுக்க மாட்டேன். இந்தப்பட்சபாதி சாகவேண்டும். நான் பாண்டவர்களைக் கொல்ல வேண்டும். துரியோதன ராஜனிந்தப் பாராளவேண்டும். இவையல் லது வேறொன்றில்லை" என்று சொல்லி அப்பாற்போய் விட்டான்.

கௌரவர் குருக்ஷேத்திர மடைதல்.

இப்பால் பீஷ்மரானவர் சேனைகளைக் கூட்டிப், பிரயாணபேரி-வீரபேரி-ஜெயபேரி-முதலியவாத்தியம் முழங்கும்படியாகச் செய்து பயணப்படுத்தினர். அந்தவேளையில் துரியோதனன்-சகுனி-துர்ச்சாசனன் இவர்கள் மூவரும் கர்ணனுக்கு வேண்டிய தேறுதல் சொல்லி, "மனவுறுதியை விட்டுவிடாதீர். அந்த பீஷ்மருடைய மனது எங்களுக்குத் தெரிந்தே யிருக்கின்றது. காங்கள றிந்து கொள்ளாம லிருக்கவில்லை. பாண்டவர்களிடத்திற் பட்சம் வைத்து அவர்களே ஜெயிக்கவேண்டும் என்று பாடுபடுகிறார். தீர் ஒரு பிராணி எங்களுக்காக உண்மையாய்ப் பாடுபடுகிறபடியால் உம்மை அர்த்தரதரிற்போட்டு அவமானஞ் செய்ய வேண்டுமென்றே செய்தார். கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டியதில்லை. பட்டப்பகற் போலெங்களுக்குத்தெரிகிறது. ஆகிலும் 'பந்திக்கு முந்தவேணும் படைக்குப் பிந்தவேணும்' என்னும் பழமொழிப்பிரகாரம் எங்களுடைய அதிர்ஷ்டமும் உம்முடைய கல்லகாலமும் அந்தப்பீஷ்மருக்குப் பொல்லாதகாலம் பிறப்பித்து உம்மை அர்த்தரதரிற்போடும்படியாகச் செய்தன. மெத்த கல்லகாரியம். முந்திமடியத்தக்க பேரெல்லாரும் மடிந்துபோகட்டும். வீரர், சூரர் முதலிய பேர்களெல்லாருங் கைகால் அயரட்டும். பிற்பாடு காமிருக்கிறும்; பாண்டவர்களிருக்கின்றார்கள்; பார்த்துக் கொள்வோம். தீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டிய தில்லை" யென்று கர்ணனைத்தேற்றி அழைத்துக் கொண்டுபோயினர். திருதராஷ்டிர மகாராஜனுடைய காலில் யாவரும் விழுந்து, குருக்ஷேத்திரத்திற்குப் படைகளைக் கூட்டிக்கொண்டு போவதற்கு விடை கேட்டார்கள். அதற்குத் திருதராஷ்டிரன் சந்தோஷமடைந்து, நமஸ்காரஞ்செய்த பிள்ளைகளையெல்லாம் வாரி மார்போடணைத்து ஆசீர்வதித்து, "எனது மைந்தர்களே! இதுவரையிலும் இந்தச் சந்திரவம்சத்தி லில்லாத பகையை நீங்கள் தேடிக் கொண்டீர்கள். பாண்டவர்களோ கல்ல நயமுடையவர்கள். அதற்குத் தக்கபடி வரங்கள்முதலிய பலமுந் தவமும் தெய்வகடாட்சமும் பெற்றிருக்கின்றார்கள். ஆகையினல் காலம்-இடம்-சமயம்-பலம்-படைத்துணைகளின் வீரம் முதலிய யாவையும் அறிந்துகொண்டு சந்தர்ப்ப மெப்படியிருக்குமோ அந்தப்படி வழிவிட்டுப் பெரியோர்கள் சொல்லும் வார்த்தையைக்கேட்டு உரியோர்களைக் கைவிடாமல், தைரியம் விடா

மல் காரியத்தாழ்ச்சி வராமல் ஜயம் பெறக்கடவீர்கள்" என்று சொல்லிக் கர்ணன் சகுனி முதலிய பேர்களைப் பார்த்து "குழந்தைகளே! என்பிள்ளைகளோ அறியாதவர்கள். இதுவரையிலும் யுத்தஞ் செய்ததுமில்லை. பெரும்பேர்ர் கடந்ததைப் பார்த்ததுமில்லை. ஏதோ ஆத்திரத்தால் க்ஷாத்திரங்கொண்டு போர்த்துணையாகிய உங்களை நம்பியுத்தத்திற்கு வருகின்றார்கள். இவர்களைக் காப்பாற்றி என்னிடத்திலொப்புவிக்க வேண்டியகடமை உங்களுடையது" என்று கையைப் பிடித்துக்கொண்டு வெகுவாகச் சொல்லி, இளைய பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பார்த்து, "இளங்கன்று பயமறியாது" என்னுந் தன்மையாய்ப் போர்முகத்திற் போய் விழாதீர்கள். அணிவரிசையினின்று சத்துருக்களை வென்று அண்ணன் தம்பிகள் பெரியோர்கள் பந்துக்கள் இவர்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டு அடங்கியிருந்து காரியசாதனம் பண்ணிக் கொண்டு வரக்கடவீர்கள்" என்று ஆசீர்வதித்து, "அப்பா துரியோதனு! தம்பிமார்களையுந் தமையன்மார்களையும் பத்திரமாய்ப் பார்த்துக்கொண்டு படை முகத்தில் நின்று ஜயங்கொண்டு வரும்படியாகச் சுகமாய்ப் போய்வா" என்று விடை கொடுத்தான். அப்பால் யாவரும் காந்தாரியாகிய தாயிடத்திற் சென்று காலில் விழுந்து, "அம்மா யுத்தகளத்திற்குப் போய் வருகிறோம்" என்று செலவு கேட்க, உடனே அந்த அம்மாள் பிள்ளைகளையும் மற்றப் பேர்களையும் உபசரித்து, "மைந்தரே! உங்களுக்கு நான் விசேஷித்துச் சொல்லவேண்டியதில்லை. எல்லாக்காரியங்களும் உங்களுக்குத்தெரியும். ஆகையால் சத்துருநாசஞ்செய்து வாருங்கள்" என்று விடை கொடுத்தனுப்ப, அவரவர்கள் யுத்த கோலங்கொண்ட திறத்துடன் ஆயுத பாணிகளாய் ராஜஸ்திரீகள் முதலிய பேர்களுடன் புறப்பட்டு அஸ்தினபுரத்தின் சாலை வீதியில் வருவதானார்கள்.

அப்போது அறுதலிகளும், மயிரை விரித்தமங்கையரும்-புகையுகெருப்பேற்றிய நங்கையரும்- விறகுசுமந்ததலையரும்-வீழ்ந்துவருந்துகிலையரும் எதிர்வந்தனர். மின்னல் இடியுடன் பிண்டித்தூறலுண்டாயிற்று; பின்னியேவிழும் பெருங்காக்கையிடமாறியது. நாய்கள் குரைத்தன. பேய்கள் சிரித்தன. பருந்துங்கழுகும் பறந்து விழுந்தன. குதிரையும் யானையுங் குன்றியழுதன. ஆயுதம் புகைந்தன. மாலை கருகியது. குறைக்கொள்ளிகள் விழுந்தன. சுமங்கலிப்பெண்கள் சூழ்ந்து அழுதனர். சங்யாசி தட்டான் தயிர் எதிராயினர். முன்னுடிப்பார்ப்பான் முடிவிரித்தேகினான். இத்தன்மையவாகிய பற்பல துர்ச்சகுனங்களை

முன்னேடிச் சகுனம் பார்ப்போர்கள் கண்டு மன்னவருடன் சொல்ல நல்லதென்று திரும்பிக் கொலுவிற் போயிருந்து இராஜ வீதியில் ஒருவரும் வராமற் கதவுமூடும்படி திட்டப்படுத்திச் சதுர்வேதசம் பன்னுளா யிருப்போர்க்குச் சாஸ்திரப்படி கோடிப்பசுக்கள், கோடா கோடிப்பொன்கள், அளவற்ற வஸ்திரங்கள், அநேக ஆபரணங்கள் முத லிய ஷோடசதானங்களுங் கொடுத்துச் சந்தோஷத்துடன் தாகம் அருந்தித் தாம்பூலமணிந்து சகல சம்பிரமத்துடன் யுத்தபூமிக்கு நடக்கையில் மறுபடியுந் துர்ச்சகுனங்காண அவைகளைப்பாராட்டா மல் இரதகஜதுரக பதாதிகளாகிய நால்வகைச் சேனைகளும் வாட்படை, விற்படை, கதைப்படை, வேற்படை, சக்கரப்படை, சூலப்படை, என்னும் இந்த ஆறுவித ஆயுதங்களையுடைய படைகளும், பேரி பாங்கா முதலிய தோற்கருவி-துளைக்கருவி-நரம்புக்கருவி - கஞ்சக்கருவி - மிடற்றுக் கருவிகளாகிய வாத்தியங் களும், தேரோசையும்-பதாதிகளுடைய பேரோசையும் மனிதர் களைப்பிரியும் ஊரோசையும்-யானை குதிரை முதலியவைகளர வுண்டாகும் பேரோசையும் - சமுத்திர கோஷ்டமும் அடங் கிப் போகும்படியாய் முழங்கிக்கொண்டு வரவும், துரியோ தனன் - அவனுடைய தம்பிமார்கள் - சகுனி - சல்லியன்-மற்று முள்ள ராஜர்கள்-சேனைகள்-புத்திரர்கள் - மித்திரர்கள் - முதலாயி னோர் சுற்றிக் கொண்டு வரவும், அரண்மனைப் பெண்களாடும் பரத நாட்டியத்துடன் பட்டணம் விட்டுப் புறப்பட்டுக் குருக்ஷேத்திரம் போய்ச் சேர்ந்தான். பாசறை முதலிய யாவும் ஏற்படுத்திய இடத்திற் பாராக்காரருடன் சைனியங்களை நிறுத்திப் பலபலவாகிய கொடிகள், வகைவகையாகிய குடைகள், ஆலவட்டங்கள், தாலவட்டங்கள், பீலிக்குஞ்சங்கள், மயிற்பீலிகள், வெண்சாமரைகள், மேற்கட்டிகள், முதலிய விதரணை யலங்காரங்கள் அமைத்திருக்கும் சாலையில் துரி யோதனனுதிய நிறங்கினர். சேனாநாயகர் சேனைகளை அணி அணி யாய் நிறுத்திப் பிரிதமைத்தனர். உலகம் பொறுமல் தத்தளித்தது. உரகருடைய பலமும் உடலும் தலையும் ஒடுங்கின.

அப்போது துரியோதனன் பீஷ்மாசாரியரை நோக்கி "இனி மேல் தேவரீருடைய வேலையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்" என்று சொல்லவே, அவர் எந்தெந்தச் சேனைகளை எங் கெங்கே அமைக்கவேண்டியதோ அங்கங்கே அமைத்துக் கோட்டை மதில்போற் சூழ நிறுத்தி, வீரமாகாளி பூசையை விதிப்படி நிறை

வேற்றிப் பட்டத்து யானையைப் பக்தியுடன் பலிகொடுத்துப் பாச றைக்குக் காவல்வைத்துப் பெரிய ஜண்டா முதலிய பாவட்டாக் களும் காட்டி எதிரிகளுக்குப் பயங்காட்டிப் பக்குவப்படுத்தினர். இவ்வாறு இருதிரத்தாருடைய சைனியங்கள் பெரும்புறக் கடல் போற் பெருகி, காகஸுரம் புள்ளாங்குழல், முகவீணை, சங்கநாதம் சிங்கநாதம் முதலிய சீரோசைகளும், கால்வகைச் சேனைகளால் ஓயாதொலித்து முழங்கும் பேரோசைகளும், விற்குணத் தொனியும், வின்மணித் தொனியும்- வேலாயுதம் சூலாயுதம் - சக்கராயுதம் குந் தாயுதம்-வாளாயுதம் - ஈட்டி - முதலிய ஆயுதங்க ளினழியுமோசை யும், அவைகளிலிருந்து புறப்படும் நெருப்புப் பொறிகளும், அப்பொறி களோடு கொண்டற் கொண்டலாயெழும்புங் கறுத்த புகைகளும், அண்டமுகடும் பிண்டவகடுந் தத்தளித்து வெடிபடும்படியாய் இருந் தன. இவையன்றியும் அங்கு கருந்தூள் செந்தூளெழும்பிய தன்மை எப்படி யிருந்ததென்றால் - இதுவரையிலும் பாவியாகிய துரியோ தனன்பால் நாம் இருந்தோமே அந்தப்பாபந்தீர ஆகாயகங்கையில் ஸ்நானஞ் செய்து தருமராஜனுடைய கீர்த்திப் பிரதாபக்குடை நீழலிற் போய்ச் சேருவோமென்று பூமிதேவியார் புழுதிவடிவா யெழுந்து பறந்துபோனதுபோ லிருந்தது. இதல்லாமலும் - அக் குருக்ஷேத்திர பூமியில் வந்திறங்கிய கௌரவர் பாண்டவர்களுடைய இருவகைச் சேனை சமுத்திரங்களில் காட்டிய துரியோதனனுடைய அரவக்கொடியும் பீஷ்மருடைய பனைமரக் கொடியும், இன்னும் பல பேர்களின் கொடிகளும், தருமராஜனுடைய முரசக்கொடியும், சுவே தனனுடைய சிங்கக்கொடியும், மற்றப் பேர்களின் கொடிகளும் ஆகா யத்தில் நிறைந்திருப்பது எப்படி யிருந்ததென்றால் - காலபுருஷனை வன் ஜயம் யாருடையதென்று நுனிக்காலி லூன்றி ஆங்காங்கு எக்கிப்பார்க்குந் தன்மை போலிருந்தது.

பலராமரும் விதுரரும் தீர்த்த யாத்திரை போதல்.

இப்படியாகப் பதினெட்டு அக்குரோணி யென்னும் இருதிறப் படைகளும் குருக்ஷேத்திர பூமியில் நெருங்கி நிற்க இருதிற அரசர் களும் பாசறையில் கொலுக்கொண்டிருந்தார்கள். அஃதெப்படி யென்றால்- பட்டவர்த்தனர்-மகுடவர்த்தனர் -மன்னர்- மண்டலீகர்- முதல் மந்திரிசாமாந்தர்களுடைய மத்தியில், கனகரசித உசித கவரத் தினச் சிங்காதனத்தின்மீது திடவீரகாத்திரத் தம்பிமார்களும் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியுஞ் சூழ்ந்திருக்க, முரசகேதனனுகிய தருமராஜன்

கொலுக்கொண்டிருந்தார். அதிரதர் முதலிய சகல அரசர்களும் அடிவணங்க, கட்டியர் பட்டுவான்கள் புகழ, வந்திப்போர் துதித்து மகிழத் தம்பிமார்கள் சூழ, இந்திரலோகம் போன்ற மகாசபையில் இராஜகண்டூவத்தைப் போற் சகல ஜெயவீரப் பிரதாபத்துடன் சாம்பூனத மிழைத்த மாணிக்கச் சிங்காதனத்தில் வீற்றிருந்தான் துரியோதனமகாராஜன். அச்சமயத்தில் ரேவதிதேவிக்கு நாயகரா கிய பலராமர் தனித்துவரக் கண்டு, தருமபூபதியும்- தம்பிமார்களும்- கோபால கிருஷ்ணரும் கொலுக்கூடியிருந்த பற்ற அரசர்களும்-எழுந்து எதிர்கொண்டு சென்று வந்தனை மரியாதைகள் செய்தனர். பலராமர் அவரவர்களுக்குத் தக்கபடி பதில் மரியாதைசெய்து, தருமராஜனைத்தழுவி ஆலிங்கனம் பண்ணிக்கொண்டு, 'ஓதருமநந்தனு! நீங்களும் துரியோதனதியரும் பகைத்துப் போர்புரியப் போகிறீர்களே, அந்த யுத்தத்திற் சகலஜயம் பெற்று அவனியை ஆளப்போகிறது நீங்களே, சகலசேனைகளுஞ் செத்துப் புத்ரமித்ராதியரைத் துறந்து பூமியையு மிழந்து நாளை மாளப்போவது துரியோதனதியர்களே. இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆனால் வெற்றிபெறப் போகிறது உங்களுடையதாய் இருந்தாலும், யுத்தகளத்தில் அநேகம் விந்தைகள் நடக்கும். அந்தவிந்தைகளையும் துரியோதனன் மாளுகிற நிந்தைகளையும் என் கண்ணினாற்பார்த்து நான் சகிக்கமாட்டேன். ஆகையால் - துரியோதன னிக்கிறவரைக்கும் நான் தீர்த்த யாத்திரை பண்ணிக்கொண்டு, இதற்குப் பதினெட்டாநாளிவ்விடம் வந்து சேருகிறேன். நீரெனக்குச் செலவு கொடும்" என்று பலராமர் கேட்க. அதற்குத் தருமராஜன் சற்றுநேரம் யோசித்து, "உங்களைப் போலொத்தவர்க ளிருந்தால் இவ்விடத்தில் நடக்கும் நியாயம் அநியாயம் அறிந்து சொல்வீர்களென்று நான் மெத்த ஆசையாய் இருந்தேன். தேவரீர் இப்படிச் சொல்லுகிறபடியால் நான் செய்யலாவ தென்ன?" என்று சொல்ல, அதைக்கேட்டுப் பலராமர் "தருமநந்தனரே! எல்லா விஷயத்திற்கும் ஸ்ரீகிருஷ்ண னிருக்கின்றான். நியாயம் அநியாயம் அறிந்துசொல்வான். அவனறியாத காரியம் அவனியிலில்லை. இவனைக்கொண்டு எல்லா வேலைகளும் நடத்திக்கொள்ளும்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு, தம்பியைநோக்கி "நான்போய் வருகிறேன்" என்று புறப்பட்டபோது, விதுரராஜனும் வந்துபலபத்திரைக்கண்டு, ஒருவருக்கொருவர் முறைமை பாராட்டிக் கொண்டார்கள். அந்தவேளையில் விதுரராஜனைப் பலராமர்நோக்கி, "ஏது நீர்

யுத்தகோலங்கொள்ளாமல் என்னைப்போல் யாத்திரை வேடங்கொண்டிருக்கிறீர்?" என்று கேட்க, அந்த வார்த்தையைக்கேட்டு விதுரராஜன் 'யார்கெட்டாலென்ன? யார் செத்தாலென்ன? நீர் வாரும் யாத்திரைபோவோம்" என்று சொல்ல "ஹரி! ஹரி! இஃதென்ன ஆச்சரியம்? உமக்கேனிவ்வளவு மனவெறுப்பு?" என்று பலராமர் கேட்க, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி "அண்ணா! முன்னம் யான் பாண்டவருக்காக அஸ்தினபுரத்திற்குத் தூதுபோய் இவர்வீட்டிலிறங்கினேன். அதற்குத் துரியோதனன் கோபித்துக் கொண்டு, 'தூது வந்த பகையாளிக்கு நீ யெப்படி விருந்து செய்வாய்? ஏன் வீட்டிலழைத்தாய்? ஓ வேசைமகனே' என்று பேசினன். அதற்கு இந்த விதுரராஜன் கையிலிருந்தவில்லை வெட்டி யெறிந்து விட்டு, 'என்னுயிருள்ளவரைக்கும் உனக்குத் துணைப்படுவதில்லை' என்று சபதம் பண்ணிக் கொண்டார். அந்தக்கோபம்போலிருக்கிறது இன்று இவர் சொல்லுங் கருத்து" என்று ஸ்ரீகிருஷ்ணன்சொல்ல, அதைக் கேட்டுப் பலராமர் நகைத்து, "அடா தம்பீ! நீ நல்லதற்கா விதுரன் வீட்டிற் போயிறங்கினை" என்றுசொல்லி, மனதில் மகிழ்ச்சி யில்லாமல் விசனம் வைத்துக்கொண்டு, வாரும் விதுராராஜனே யென்று விதுரரை அழைத்து கொண்டு குருபூமியைச் சூழ்ந்த தீர்த்தங்களாடும் படியாகப் போய் விட்டார். இந்தச்சேதி துரியோதனனறிந்து, "நமக்குப் படைத்துணை வந்த பலராமரையுங் கலைத்து அழைத்துக்கொண்டு போய் விட்டான் இந்த விதுரன். பார்த்தீர்களா" என்று பீஷ்மர் முதலிய பேர்களிடத்திற் சொல்லி நல்லதாகட்டு மென்று கறுவிக் கொண்டு கடுகடுத்திருந்தான்.

துரியோதனன் பாண்டவர்களுக்குத் தூதனுப்புதல்

அப்பால் அளவிறந்ததூரம் சேனைகளை நிலைபெறச்செய்த பீஷ்மரும் துரியோதனனும் பாசறைவிட்டு வெளியேபுறப்பட்டு, ஏழு கடலும்-ஏழுமேகமும்-ஏழுதீவும்-ஈரேழுலகும்-ஏககாலத்திற் கூடியதைப்போல் இரைந்துகொண்டு, கண்ணுக் கெட்டியதூரந் தெரியாமல் நெருங்கிநின்ற இருதரப் படைகளையும் பார்த்தனர். துரியோதனன் பிரமைகொண்டு, மயங்கி, சேனாதிபதியாகிய பீஷ்மரை நோக்கி, "ஐயா! இத்தனை சேனைகளை ஒரு சுத்தவீரன் எத்தனை நாளையிற் கொல்லுவான்! சற்று யோசித்துச் சொல்லும்' என்று கேட்க, பீஷ்மாசாரியார் "கேளுந் துரியோதனராஜனே! இந்தச் சேனைகளையெல்லாம் ஓரேபகலில் நான் வெல்லுவேன். வேத

புராண உபகிடதந் தெரிந்த தனுர்வேத பண்டிதராகிய துரோணச் சாரியர் மூன்றுபகலில் வெல்லுவார். சூரியகுமாரனாகிய கர்ணன் ஐந்து பகலில் முடிப்பான். அசுவத்தாமா ஒருநாழிகையிற் போக்குவான்" என்று பீஷ்மர் சொல்லவே, துரியோதனன் சந்தோஷக்கண்ட சமுத்திரம்போற் பொங்கிப் பூரித்து, "இனி எனக்கென்ன தாழ்ச்சி, இதை விட வேறென்ன சாட்சி? எவர்க்குண்டிந்தக் கண்காட்சி? இப்பேர்ப் பட்ட பலவான்களை எனக்குக் கூட்டிவைத்த என்பாக்கியமே பாக்கியந்தான்" என்று புகழ்ந்து, பாண்டவர்கள் தலையெடுக்கமாட்டார்களென்று மகிழ்ந்தான். எதிரிகளை இவ்வாறு இகழ்ந்த தன்மையை பீஷ்மரானவர் அறிந்து, துரியோதனனைப்பார்த்து "அப்பா துரியோதனா! நமது பலத்தை நாமே கண்டு சந்தோஷிப்பது காரியமல்ல. அதுவீரியம் பெறாது. எதிரிகளின் பலத்தை நிதானித்துக்கொண்டு அப்பால் நமது பலங்களைப்பார்த்துச் சந்தோஷப்பட வேண்டும். ஆகையால், நமது சேனைகளிலிருக்கும் தலைவர்களாகிய பலவான்களுடைய பலபராக்கிரமத்தைக் கேட்டாயே, அவர்களுடைய பல பராக்கிரமத்தையுங்கொஞ்சங்கேட்டறிந்துகொள்ளடா. இந்தப்படைகள் முழுமையும்-இவ்வுலகமுழுமையும்-தேவலோகமுழுமையும்-நாகலோக முழுமையும்-திக்குகளெட்டுந் திடுக்கிட்டுப் பயந்துபோகும்படியாய்க் காண்டீபங்கொண்டு முனைந்து, ஒருக்ஷணத்திற்குள்ளே பஸ்மீகரப் படலமாகும்படி போர்புரிந்து போக்கிவிடுவான், திசைகள் மகிழ இசையும் புகழுங்கொண்ட விஜயபராக்கிரமன்" என்றார். அந்த வார்த்தையைத் துரியோதனன் கேட்டு, முன்கொண்ட சந்தோடத்தி னின்றுமாறி, உடனே தனது துஷ்டசதுஷ்டாள் தேற்றத் தேறி, கர்ணன்-சகுனி-துர்ச்சாதனன்-முதலானவரோடு ஆலோசித்துக்கொண்டு, உலூகியென்னு மொருதூதனை யழைத்து, அவனுடன் சொல்லத்தக்க பேச்சுகளெல்லாஞ் சொல்லி, "நீ பாண்டவர்களிடத்திற் சென்று இந்த வசனங்களைத் தெரியப்படுத்தி, இதற்கு அவர்களென்ன சொல்லுகிறார்களோ அதை யறிந்துகொண்டு அதிசீக்கிரத்தில் வா" என்று அனுப்பி வைத்தான்.

அத்தப்படி உலூகியானவன் தருமராஜனுடைய சபைக்குப்போய் "ஐயா! என்னைத் தங்களிடத்தில் துரியோதனராஜன் அனுப்பிவைத்தார்" என்று சொல்ல, "என்ன காரியத்திற்கு" என்று தருமராஜன் கேட்க, உலூகி, "தருமபூபதியே! கேளும்! இராஜசபையில் சொக்கட்டாஞ்டித் தோற்றபோதும், திரௌபதியைத் துகிலுரிந்தகாலத்திலும்

பன்னிரண்டு வருடம் வனவாசஞ் செய்தபோதும், ஒருவருடம் அக்ஞாதவாசஞ்செய்த போதும், உங்கட்குச் சிறிதும் இல்லாதவீரமும்-தீரமும்-இப்போது எங்கிருந்து வந்தன என்றும், நல்லது-அந்தராஜசபையில் துரியோதனனுதியர் நூறுபேரையும் நானே கொல்லுகிறேனென்று பீமசேனன் சொல்லியிருந்த சபதமும், கர்ணமகாராஜனைக் காண்டீபன் கொல்லுகிறேனென்று சொன்னதும், நகுலன் சௌபலனைக் கொல்லுகிறேனென்றதும், சகாதேவன் சகுனியைக் கொல்லுகிறேனென்றதும், இவைகளெல்லாம் 'காட்கொண்டது ஆட்கொண்டது' என்று வராமல் நழுவிப் போனதைப்போ லிருப்பானேன் என்றும், பதின்மூன்று வருடங் காடு திரிந்து வந்த நீங்கள் முன்பேசிய சபதப்படி காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளாமற் கண் கலங்கி, அப்பா! பேபோய் சொல்லு-ஐயா! பேர்போய்ச் சொல்லுமென்று அவரவர்களைக் கும்பிட்டு, உலூகமாமுனிவரையும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியையுந் தூதனுப்பி நாடிரக்கவேண்டிய காரியமென்ன என்றும், அதற்கு நாங்கள் உடனே சஞ்சயனையனுப்பி, இராஜ முறைமைப்படி போரில் யுத்தஞ்செய்து புகழுடன் வெற்றி பெற்றவர்களுக்குப் பூமியுண்டென்று சொல்லியிருக்க அந்த வசனத்தைக் கேட்டும் இன்னும் சண்டைக்குவரப் பயந்திருப்பானேன் என்றும், இப்போதுஞ் சரியான தைரியமிருக்குமாகில், தாமசமில்லாமற் சண்டைக்கு வரச் சொல்லும் என்றும், இருதிறவர்க்கும் வம்சகாயகனுகிய பீஷ்மரும் - துரோணுசாரியாரும் - அசுவத்தாமாவும் - கர்ணராஜனும்-ஒரு கை பார்த்து விடுகிறேரு மென்று முகம் வியர்த்துக் கரத்தில் வில்லேந்திக் கொண்டு, உங்களெவரையும் உங்களுக்குத் துணை வந்திருக்கும் அரசர்களையும் மண்ணுலகத்தை விட்டு நீக்கி விண்ணுலகத்திற் கனுப்பி விடுகிறேரு மென்று வந்திருக்கின்ரூர்கள். உங்களுடைய வாயுருட்டும் கைப்புரட்டும் அவர்களறிந்தே இருக்கின்ரூர்கள். இனி உங்களுடைய பேச்சு இவ்விடம்செல்லாது. உங்களைக் கொல்லாது விடப் போகிறதில்லை. ஏதாகிலுங் கொஞ்சம் வீரங்களுண்டானுல் இப்போதே வரலாம் என்றும், அப்படி யுத்தத்திற்கு வரச் சம்மதமில்லாவிட்டாற் பூர்வத்தில் மச்சராஜனுகிய விராடன்வீட்டிற் புரோகிதனுயும் - சோறு சமைக்குஞ் . சுயம்பாக மடையனுயும் - பரதநாட்டியங் கற்பிக்கும் பேடியாயும் - குதிரைச் சேவகஞ் செய்யும் தாமக்கிரந்தியாயும் - மாடுமேய்க்கும் தந்திர பாலனுயும், சொற்ப ஜீவனஞ் செய்து காலங்கழிக்கும்படியா யிருந்ததுபோல்,

இப்போதே திரும்பிப் போய் விடலாம் என்றும், இராஜ தருமங்களிருந்தால் தடை சொல்லாமற் சந்திபேசாமற் சண்டைக்கு வரலாமென்றும், தெரிவித்தார்கள் என்றும், அருச்சுனனைக் கொல்கிறேனென்று வெகு நாளாய் உருச்செபிப்பதைப்போற் சபதங் கூறிக் கொண்டிருந்த ஜயவீர கர்ணமகாராஜனுனவர் வில்லைக் கையிலேந்தி, சபதச் சொல்லை நிறைவேற்ற குருக்ஷேத்திர எல்லையில் எப்போது விஜயன் வருவானென்று வழிபார்த்துக் கொண்டிருக்கின்றார் என்றும், சொல்லிச்செய்வது பெரியார்கடமை யாதலாற் சொன்னேனும், இப்போது கிரீடிக்குத் தைரிய மிருக்குமானால் விறைவிற் புறப்படச் சொல்லும் என்றும் சொன்னர். என்னைப் பகைத்த சத்துருக்களை யெல்லாம் எரியுந் தணல்முன் சருகாய்க்கருக்கி எம லோகஞ் சேர்ப்பேனென்று இறுமாந்து சிங்கம்போற் கர்ச்சித்திருக்கும் எங்கள் தம்பியாகிய துச்சாசனன், உங்கள் குலத்திற்குக் கோடாலியும், உங்கள் கூட்டத்திற்குச் சூறுவளியும் போலிருந்து சொல்லச் சொன்ன தென்னவென்றால், 'முன்னாலே மன்னர் கூடியிருந்த சபையில் உங்களுக்குரிய கன்னிகையாகிய திரௌபதியை மயிரைப் பிடித்திழுத்து வந்து, மானபங்கமாகப் பேசி வஸ்திரபங்கமுஞ் செய்த காளில், என்னைக் கொன்று உதிரபானம் பண்ணுகிறவரையிலுங் கையினால் தீர்த்தபானம் பண்ணுகிறதில்லை யென்று சபதம் பண்ணிக் காட்டுக்குப் போய் நாட்டுக்கு வந்த கேட்டையுடைய பீமசேனன், ஒட்டமெடுப்பானு அல்லது யுத்தத்திற்கு வருவானு' என்றும் தெரிவித்தான் என்றும் சொன்னர்; அன்றியும் இங்காட்டின் கண் ஓரிடத்தில் ஒரு தாய் தந்தைக்குப் பிறந்து, மற்றோரிடத்தில் மற்றொரு தாய் தந்தைகளாகிய இடையர் வீட்டில் வளர்ந்து, திருட்டுப் பிழைப்பினால் மாறடியும் மத்தடியும்பட்டு, வயிறு வளர்த்துக்கொண்டு பிழைக்கும் கிருஷ்ணன் என்னும் இடப்பயலை ஒரு சினேகனுகச் சேரப் பிடித்து வைத்துக்கொண்டு பயங் காட்டுவதினால், நானவனுக்குப் பயந்து உங்களுக்கு நாடு கொடுப்பேனு என்றும் அவனுக்கும் அவனுடைய வஞ்சனையான மாயமிரட்டுக்கும்-உங்களுக்கும்-பலகேடும் ஒரு ஓடுங்கொடுப்பேனே யல்லது, ஒரு வீடுங் கொடுக்க மாட்டேன் என்றும், மேலும் 'சப்பாணிக்கு நொண்டி சண்டப் பிரசண்டன். ஊமைக்குத் தெற்றுவாயன் உற்பாத பிண்டம்' என்னும் பழமொழிபோல், இந்தக் கிருஷ்ணனுக்குச் சரியாய்ச் சண்டனுக்கு மிண்டனை எங்களம்மான் சகுனி

ராஜனே யேற்படித்தி வைத்திருக்கிறேன் என்றும் இவையன்றியும்-எங்களம்மானுகிய சகுனியையும் சௌபலனேயுங் கொல்லுகிறதாய்ச் சபதஞ் செய்த நகுல சகாதேவ ரென்னும் பயல்களைக் கொல்ல அவர்களே காத்திருக்கிறார்கள்; ஆகையால் அவர்களையுஞ் சீக்கிரம் ஓடிவரச் சொல்லவும் என்றும், மேலும் - நகரத்திலும் - காட்டிலும் கொலுக்கூடத்திலும் - நல்ல ரத்தங்களூறி ஸ்திரம்பெற்றிருந்த அரசர்களாகிய அப் பாண்டவர்களைச் சூதினால் தோற்கச் செய்து, அவர்கள் பெண்சாதியையும் அவமானப்படுத்திக் காட்டிற் பன்னிரண்டு வருடம் வாசஞ் செய்யுங்களென்று ஓட்டிவிட்ட காலத்திலில்லாத வீரம், காட்டிற்சென்று காய் கனி கிழங்குகளைத் தின்று கற்பாறையிற் படுத்துக் கண்ணுறக்கம் விடுத்து நல்ல ரத்தங்களினுடைய சத்துப் போயிருக்கும் இக்கக் காலத்தில் உண்டாகி, பற்பல பெளரிஷங்களும் கோபமுங் கொண்டு பகித்தவன் பழங்கணக்கைப் பார்ப்பதுபோற் பழைய பகையை நினைத்து, அதற்காகக்கூறிய சபதங்களையு முடிக்கவேண்டுமென்று ஓடிவந்தார்களோ? இல்லை! நான் நாடு கொடுப்பேன் அதைப் பெற்றுக் கொண்டு வாழலாமென்று நாடி வந்தார்களோ? அந்நாண மற்றவர்களுடைய செய்தியை யறிந்து வா என்றும் சொன்னர். அவர்கள் எப்போது சண்டை செய்ய எண்ணங் கொண்டிருக்கின்றார்களோ அந்தக் காலத்தையும் அவர்கள் சொல்லுகின்ற இந்திர ஜாலத்தையும் அறிந்து கொண்டு, சீக்கிரம் வரக் கடவை யென்றும்—தெரிவிக்க என்னை அனுப்பினர்" என்றான்.

இவைகளை யெல்லாங் கேட்ட பாண்டவர்கள் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியினுடைய திருமுக மண்டலத்தைப் பார்த்து, "இவைகளுக்கெல்லாம் உத்தரந் தேவரீரே திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று சொல்ல, மகாசந்தோஷத்துடன் நகைத்து "ஐயா! நான் என்ன சொல்லப் போகிறேன்? என்ன சொல்லியும் என் வயிறு வளர்ப்பதற்கான ஏது ஒன்றையுங் காணும்" என்று உலகையைப் பார்த்து, "நான் சொல்லுகிற வண்ணம் உங்கள் ராஜனுக்கு நீ பயப்படாமற் சொல்லக் கடவை" என்று ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி சொல்லுவதானர்:—

கிருஷ்ணன் துரியோதனனுக்குச் சொல்லியனுப்புதல்

அப்பா உலூகியே! இதைக் கேள்:—பாண்டவர்கள் வனத்திலிருக்கும்போது அவர்களை அவமானப்படுத்த வேண்டுமென்று நினைத்து, உன்னுடைய தம்பிமார் முதலானவரோடு கர்ணனையுஞ் சகுனியையும் உங்களுடைய பத்தினிமார்களையும் அழைத்துக் கொண்டு வந்து வழியிற் ஜலக்கிரீடை பண்ண யத்தனித்தபோது, கந்தர்வராஜனுகிய சித்திரசேனன் கையிலகப்பட்டு, அவன் தாமனிப் பிணையலாய்ச் சேர்க்கத் தம்பிமாரெல்லாரும் ஓரு வரிசை, பெண்டுகளெல்லாருந் தலைமயிருடன் நிலங்குலையும்படியா யொரு வரிசை, மாமா முதலிய பேரோடு நீயும் மடலிறுகும்படியா யொரு வரிசை- இப்படியாகக் கட்டுப்பட்டுத் தவிக்கையில் உன்னுடைய சேனைகள் முதலிய வீரர்களெல்லாருந் தருமராஜனிடத்தில் வந்து முறையிட்டழ ஜீவகாருண்யமுடைய தருமராஜன் இரக்கங் கொண்டு 'தொடைப்புண்ணை வெளிக்குக் காட்டலாகாது' என்னும் பழமொழிப்படி தங்களுக்குள் என்ன விரோதமிருந்தாலும் பிறருக்கிடங்கொடுக்க லாகாதென்று தம் தம்பிமாராகிய பீமார்ச்சுனரையழைத்து, தமது மரபிற்குக் குறைவு வராமலிருக்கும்படி உன்னையும் உன்னுடைய புத்திரர் மித்திரர் பெண்டுகள் முதலிய பேர்களையும் மீட்டுக் கொண்டு வரக் கட்டளையிட்டார்: தம்பிமார்களுடைய கோபந் தணியும்படியாகவும், உன் பேரிலன்பு தழைக்கவுஞ் சொல்லி அனுப்பிவைத்ததின்மேல், அவர்கள் உன்னைச் சித்திரசேனனிடமிருந்து தருமராஜனுக்கெதிரில் கொண்டு வந்துவிட, அவர் வேண்டிய புத்திமதிகளைச் சொல்லி அனுப்பினர். ஏனென்றால், சித்திரசேனனிடத்திற் சிறைபுகுந் துயிர் விடுவீர்களானால், இராஜசபையில் தாங்கள் கூறிய சபதந் தப்பிப் போகுமென்று யோசித்தே யொழிய வேறல்ல. இதனாற் பாண்டவர்களிலவரும் சபதம் முடிப்பார்களென்று உங்களுக்குத் தெரிய வில்லையா? அந்தச் சித்திரசேனனை வென்ற பாணத்தோடு உங்கள் சிறையைமீட்ட பீமார்ச்சுனரிருவரு மிருக்கின்றார்கள் என்றும், மேற்று விராடபுரத்தில் உருமாறியிருந்த பாண்டவர்களை அறியும்படியாக வந்து உத்தர கிறைகொண்ட காலத்திற் பேடியாகிய விஜயன் அறியாத பிள்ளையாகிய உத்தரனைச்

சாரதியாக வைத்துக்கொண்டு, தானுருவுகை ஒரே வில் - ஒரே தேர் - ஒரே அம்பறாத்தூணி - இவைகளைக்கொண்டு பீஷ்மர் முதலிய ஆசாரியரைப் பாணங்களினால் வணங்கி, ஓர் அக்குரோணி சேனைகளையும் இளைத்தோட வென்று, கர்ணனைப் புறமுதுகிட்டோடக்கண்டு கொடி தேராளிகளை மழிந்து போகப் போர்புரிந்து, பீஷ்மர் துரோணராதிய பேரும் புறமுதுகிட்டோடச் செய்து, ஊரைநோக்கி ஓடிக்கொண்டிருந்த வணங்கா முடியோனுகிய உன்னைத் துதித்து வணங்கச் செய்து, உன்னுடைய குதிரை முதலிய சாரதியையுமாட்டி, அங்கமழியும்படியாகவும் எல்லோரும் நகைக்கும்படியாகவும் பேசி, சீச்சீயென்று ஏசி, பாணங்களை வீசி 'என் தமையன் பீமராஜன் கூறிய சபதத்திற்காக உன் தலையைவிட்டு வைத்தே' னென்று சொல்லி, உன் தலையிலிருந்த கிரீடத்தையும் அத்தினகிரியென்னும் பட்டத்து யானையையும் வீழ்த்தி, மோகனுஸ்திரத்தை விடுத்து யாவரும் நிலத்தில் மயங்கி விழச் செய்து, தன் சாரதியை விட்டு எல்லோருடைய தலைத்துணிகளைப் பிடுங்கிக் கொண்டுவரப் புரிந்து, பசுக் கூட்டங்களை யெல்லாம் உடனே கொண்டு போன விஜயனிருக்கும்போது சபத நிறைவேறுமற் போகுமா? இது தெரியாதா? அறியாத சிறுபிள்ளைக்கும் நேற்று அடித்தவனை இன்றைக்குத் தெரியுமே: நமது ஐயாவாகிய கண்ணில்லான் குழந்தைக்கு இவைகளென் தெரிய வில்லை என்றும், அன்று தங்கள் பாட்டனுராகிய பீஷ்மரானவர் இது அர்ச்சுனன் கொடுத்த உயிர்ப்பிச்சை யென்று எல்லோரும் வாழ்த்துங்களென்று சொல்ல, யாவரும் அப்படியே சொல்லி வாழ்த்திக் கொண்டு அஸ்தினபுரத்திற்குப் பகலிற்போக வெட்கப்பட்டு, ராத்திரியிற் போய் நுழைந்த அவ்வரசன் முதலாகிய பேர்களுக்கு அன்று அடிபட்ட அந்தப் புண்கள் இன்று மிருக்குமே! காயாமற் பச்சை யுதிரம் வடியுமே! உடம்பிற் சிறிதுமிலச்சையில்லையே! ஐயோ சொப்பனத்தில் பீமார்ச்சுனர்களைக் கண்டாலும் துரியோதன னிறந்து போவானென்று உலகஞ் சொல்லுமே! இவனெங்கே யுத்தம் பண்ணி யிருக்கிறான்? எந்த யுத்தங்களைப் பார்த்திருக்கிறான்? அப்படியே இவன் சுத்த வீரனுனால் தநுர்வேதங் கற்பிக்க வந்த துரோணுச்சாரியாகிய பிராமணரையும், வைதிக சாந்தமுடைய கிருபாச்சாரி முதலிய பேர்களையும், சுக போகங்களை நீக்கிய பிரமசாரியாகிய பீஷ்மரையும் திரிதண்ட சந்யாசியாகிய அசுவத்தாமனையும் வணங்கித்

தழுவிக் கொண்டு! பாண்டவர்களை வென்று எனக்குப் பட்டங் கட்டி வையுங்களென்று' காலில் விழுந்து கிடக்குந் துரியோதனனுக்கு யுத்தத்திற்கு வரச் சொல்லென்னுங் தூணிவு எங்கிருந்து வந்தது என்றும், நாளைய வுதயத்திற்கே யுத்தஞ் செய்யச் சித்தங் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்லிய சபதங்களிலொன்றுகிலுங் குறையாது என்றும் உங்கள் ராஜனுக்கு நீயேபோய்ச்சொல்லும்! ஓ உலூகனே! திரிலோகமும் திரிமூர்த்தியும் சேர்ந்துவந்து துரியோதனனுக்குத் துணையானாலும், 'பீமார்ச்சுனர் கையிலுல் மடிந்து போகிறது நிஜம் நிஜம் நிஜமென்று நாம் சொல்லியதாய்ச்சொல்லும்'' என்றுங்கூறி யனுப்பினர். தருமராஜன் தூதுவந்த உலூகனுக்கு வேண்டிய ஆடையாபரணங்களெல்லாங் கொடுத்து, "ஸ்வாமி சொல்லிய வசனத்தையும் துரியோதனனிடத்திற் பயப்படாமற் சொல்லும்'' என்று விடைகொடுத்தனுப்பிய பின்பு, ஸ்ரீ கிருஷ்ண தேவரும் பாண்டவர்களும் சபையிற் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ருக்மிணி தேவிக்குத் தமையனுகிய ருக்மியென்னும் ராஜன் இரதத்திலேறி, அதிவேகத்துட னோடிவந்து அர்ச்சுனனை நோக்கி, "துரியோதனுதியர் முதலாகிய பேர்களை ஜயிக்கத் திறமும் தைரியமும் உமக்கில்லாவிட்டால், என்னை வேண்டிக் கொண்டு பக்கத் துணை விரும்புவீரேயானுல், ஒரு கொடிப்போதில் துரியோதனனுதியர் யாவரையுஞ் ஜயித்து, உங்களுடைய சபதங்களும் நிறைவேறச்செய்து, தருமராஜனுக்குப் பட்டமுங் கட்டி வைத்து என் கண்ணுற் பார்த்து மகிழ்ந்து போகிறேன்; சீக்கிரஞ் சொல்லும்'' என்று, சபையிலிருக்கும் யாவருந் திடுக்கிடும்படியாகப் பேசினன். அந்த ருக்மியை அர்ச்சுனன் பார்த்து, கலகலகலீ ரென்று நகைத்து "எங்கள் காலில் விழுந்து வேண்டிக் கேட்டாலும் எங்களுக்கு மற்றொரு வீரர்களுதவி வேண்டியதில்லை. ஆனுல் இப்போர்ப்பட்ட சூரனைத் துரியோதனராஜன் வேண்டியழைக்கிறார்; அவரிடத்திற் போய்ச் சேருவீரானுல் மெத்தவு முக்கியமாய் வைத்துக்கொள்ளுவர். இது நல்லசமயம். கோடைகாலத்தில் விடாய்ப்பட்டு வருபவனுக்குக் குளிர்ந்த தீர்த்த மகப்பட்டதைப்போல் நீர் கிடைத்ததென்று குலுங்குவார். உமது பலுக்குக்கும் அவருடைய பிலுக்குக்கும் சரிப்பட்டிருக்கும். இப்போதே போம்'' என்று சொல்ல, மறுபேச்சுப் பேசாமல் ருக்மி தனது பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

இப்பாற் பாண்டவர்கள் சேனாதிபதியாகிய சுவேதனனை யழைத்துத் திட்டப்படுத்தி, நாளை உதயத்தில் முதல்நாள் யுத்த மென்றுசர்வ ஜாக்கிரதையுடனே சந்தோஷங் கொண்டிருந்தார்கள். அப்பால் இந்த உலாகனுவன் துரியோதன னிடத்திற் சென்று, இவிடத்தில் நடந்த சங்கதிகளை யெல்லாம் அங்குள்ள சகலமான பேருங் கேட்கச் சொன்னன். அதைக்கேட்டுத் துரியோதனன் உற்ரு ருடன் மகிழ்ந்து, நாளை யுதயத்திற்கு யுத்தமென்று சேனாதிபதிக் குச்சொல்லித் தானும் மற்றவர்களும் யுத்தகோலங் கொண்டிருந் தார்கள். இருதிறப் படைகளிலும் பேரி முதலிய வாத்தியங்களெல் லாஞ் சப்திக்கும் பெருங்கூச்சல் கடலிரைச்ச லொடுங்கும்படியாய் முழங்கியது. சூரியன் எப்போது வருவான்? எப்போது உதிப்பான்? எப்போது உதயமாவான்? என்று இருதிறப்படைகளும் நித்திரை யற்று வெற்றிபெற நினைத்துச் சுத்தவீர பராக்கிரம தளத்தை வரிசை வரிசையாக நிறுத்திச் சப்த சமுத்திரம்போல் நிறைந் திருந்தார்கள்.

கேட்டீரோ ஜனமே ஜய மகாராஜனே ! இவ்வுலகத்திற் செங் கோல் செலுத்தும் வெண்குடை வேந்தற்கு உயிரும் - உடலுமா யிருப்பது, நட்பும் - படையுமாம். நட்பென்பது, அரசனுக்கு வினை யிடத் துதவுவது. அரசன் கேட்டினைத்தரும் தீநெறிகளிற் செல் லுங்கால் விலக்கி, ஏனைய நன்னெறிக்கண் செல்லாக்காற் செலுத்தி, தெய்வத்தாற் கேடுவந்த விடத்து அது விலக்கப்படாமையால் அத் துன்பத்தை உடனிருந்தனுபவித்து, யாக்கையொன்றே வேறன்றி உயிர் உடனே நீங்கும் உரிமையராய், ஒரு நூலின் பொருளைக் கற் குந்தோறும் கற்றூர்க்கின்பஞ் செய்தலைப்போல, தம்மூட்செய்த நட்பு பயிலுந்தோறும் மகிழ்ச்சி யுண்டாகக் கலந்திருப்பதையாம். படையென்பது, அரசனுக்கு ஆவதும் வெல்வதுமாய் நன்மைக்கு உதவுவது. யானைமுதலிய நால்வகையுறுப்பாலு நிறைந்து தன்னரச னுக்குத் தாழ்வுவாராமற் காக்கும் மானமும், போரின்கண் விஞ்சி னாரை எதிர்த்துக்கொல்லும் ஆண்மையும், பகைவராற் கீழறுக்கப் படாத தேற்றமும், தமக்கெதிரிற் பல படை வருங்காலத்தும் விழித்தகண்ணை இமையாதிருக்கின்ற வீராப்பும், தமது மெய்யின் கண் ஊறுபடாத நாள்களை யெல்லாம் தன்னரசனுக்குப் பயன் படாது கழித்தநாளாகச் சினக்கும் செருக்கும், யான் அவரைக் கொல்லேனாயின் இன்னுயிரை விடுவனென்று கூறிய ஒரு வஞ்சினத்தைத்

தப்பாது முடிக்கவல்ல திறமும், தம்மை யாண்ட அரசன் தனக்குச் செய்த நன்றிகளை நினைந்து கண்களில் நீர் மல்கும்வகை போரிடை மடியப்பெறும் பெருமையும், ஆகிய இவையனைத்தும் உண்டாயிருப் பதேயாம்.

இவ்வகைத்தான நட்பையும் படையையும் அரசன் தனது உயிர்க்குயிராகவும்-உடற் குடலாகவுங்கருதி ஆதரித்து, ஒருவினைக் கண் முயலல்வேண்டும். இவையின்றி, நட்பில் நீநட்பும் - கூடாநட் பும் -பேதையர்நட்பும் - புல்லறிவாளர் நட்பும்-பெறுதலிற் பயனென் னும் ? இவற்றுள் நீநட்பென்பது, நீக்குணத்தாரோடு உளதாய நட்பு. அன்னர் கொடுப்பாரைக் கொள்ளாது விலையைக் கொள்ளும் பொதுமகளிரைப் போலவும், பிறர்கேடு நோக்காது தன்சோர்வு நோக்கும் கள்வரைப்போலவு மிருப்பர்; நட்பளவு பாராது அதனால் வரும் பயனளவு பார்ப்பர்; அமர் வராத போதெல்லாந் தாங்குவது போலிருந்து குலாவி அமர்வந்தபோது விட்டோடுவர்; தம்மால்முடி யுங் கருமத்தை முடியாதாக்கிக் கொள்வர்; உளமுஞ் சொல்லு மொவ்வாது வேறுவேறுயிருப்பர்; தனியே மனைக்கணிருந்தவிடத்து நட்பாடிப் பலரோடு மன்றின்கண் இருந்தபோது பழிகூறுவர். ஆகிய இவர்கள் காதல்மிகுதியாற் பருகுவர் போன்றாராயினும் அவரைச் சிறிதாயினும் நணுகுதலைப் பரிகரிக்க வேண்டும். கூடாநட்பென்பது பகைமையால் அகத்தாற் கூடாதிருந்தே தமக்கு வாய்க்கும் இடம் பெறுந்தூணையும் புறத்தாற்கூடி யொழுகுவார்நட்பாம். கல்லனவாகிய பலநூல்களைக் கற்றவிடத்தும் அதனால் மனந்திருந்தி நட்பாத லில் லாது, கண்டபொழுது முகத்தாலினியவாகச்சிரித்து, எப்பொழு தும் மனத்தால் இன்னாதனசெய்யும் வஞ்சகருடைய சொல் வணக்கமும் - அவரதுதொழுகையும் - அவரழுதகண்ணீரும்- சொல் லாலும் கையாலும் கண்ணாலுந் தேற்றிப் பின்னர் தப்பாது கொல் கின்றவன் படையாகும். அவ்வஞ்சகர் தனக்கு நட்டாராயொழுக வேண்டுங் காலம் வந்தால், தானும் அவரோடு முகத்தால் நட்பு செய்து, அகத்தால் அதனைவிட்டுப், பின்; அதுவுந் தவிர்தல்வேண் டும். உள்ளொன்று புறமொன்றுதல் ஒருவருக்குத் தகாத தாயினும், தீயார்மாட்டானால் தகு மென்பது நீதிநூலினது துணிபாதலாற் குற்றமன்று. பேதையர் நட்பென்பது, யாது மறியாதார் நட்பு; பழி - பாவம் - வறுமை - என்பனவற்றிற்கு காணமையும், செய் வன தவிர்வன அறியாமையும், குடிப்பிறப்பு - ஒழுக்கம் - கல்வி

மூதலானவைகளைப் பேணுமையும், யாவரிடத்தும் முறிந்தசொல் லாடுஞ் செய்லுடைமையும், ஆகாத ஒழுக்கத்தின்கண் காதன்மை யும், கேடுபயப்பனவற்றைக் கொண்டு ஆக்கம் பயப்பனவற்றைக் கைவிடுக்குந் தன்மையும், மனமொழி மெய்கள் அடங்குதற் கேது வாய நூல்களை யோதியும் - அவ்வடக்கத்தால் வரும் பயன்களை யுணர்ந்தும் - அதனை அறியலறப் பிறர்க்குரைத்தும் - தான் அவை யடங்கி யொழுகாமையும் ஆகிய இப்பெற்றிகளை யுடையோர் நட்பே பேதையர் நட்பென்று சொல்லப்படும். புல்லறிவாளர் நட் பென்பது, அற்ப அறிவினையுடையார் நட்பு. என்றுல் தாம் சிற்றறிவி னராயிருந்தே தம்மைப் பேரறிவினராக மதிக்கும் புல்லிய அறிவினை யுடையார். அவர் தமக்குறுதியாயவற்றை அறிவுடையார் கூறினும் கேளார். தாம் கல்லாத நூல்களையும் கற்றாராக வுரைத்துத் தம்புன் மையை வெளிப்படுத்துவர்; தமக்கு நல்லுணர்ச்சியை யறிவிக்கப் புகும் ஆன்றோரை, அறிவிலாராக நாட்டுவர். ஆதலால்-இத்தன்மை யரோடு சிறிதும் நண்ணுதிருத்தல் வேண்டும். இவைபோலவே படை யில், தீப்படையும் - கூடாப்படையும் - பேதையர்படையும் - புல்லறி வாளர் படையும்-இவ்வவனியகலம் அமைந்திருப்பினும் யாது பயன்? அரசனுக்கு ஒரு வினைக்கண் முன்னுறுதுணையாய இக்கட்பொன்றே இவ்வாறுயின், பின்னுறு துணையாய மற்றைப் படையினியல்பு அதி னும் பெருங்கேடாம். ஆனதால்-அதனை விரித்துரைக்க வேண்டா வாயிற்று. இவ்வித நட்பையும் படையையு முடைய அரசனுக்குப் பகையென்பது பக்கத்திற்றானே படர்ந்தோங்கி நிற்குமென்பதற் கையமென்னை? அற்றோ! இருவர் தம்முட் பொருது வலியும் உயிருந் தொலைத்தற் கேதுவாகிய இப்பகை ஊழின்வயத்தாய் ஒரு கால் தனக்குண்டாகி, மற்றொருவன் தனக்கு வெறுப்பனவற்றைச் செய்தானுயினும், அவனோடு மாறுபடுதலைக் குறித்துத் தான் அவ னுக்கு இன்னுதவற்றைச் செய்யாதிருப்பனுயின், அனுக்குப் பகை வரும் உறவாவர். எல்லாச் செல்வமும் பலிக்கும். கொடைமுதலிய காரணங்களாற் புகழும் பெறுவன். பிறரோடு மாறுபடுதற் கண் மிகுதல் எனக்கு இனிதென்று இன்னுதன செய்வனுயின், உடனே தமரும் எதிராவர்; பகைமை வளரும்; வலிதொலையும்; பொருட் கேடும் உயிர்க்கேடும் அப்பொழுதே உண்டாகும். ஆதலால்-ஓ அர சனே! இருநிலம் புரக்கும் வேந்தர்க்கு மேற்கூறிய இருவகைத் துணையும் இனிதினெய்தாக் காலத்தும், பெருமை-அறிவு-முயற்சி

என்னு மூவகையாற்றல்களு முளனாகி, தவத்திற்சிறந்த முனிவோரையும்- தமரிற்சிறந்த முதியோரையும்-தழுவிப்போற்றி யொழுக வல்லானுயின் அவன் ஈட்டிவைத்த எல்லாப் பொருள்களும் விருத்தியடையும். அவனுக்குப் பகை யாண்டு மில்லை. எல்லாவலியுஞ் சிறக்கும். அவர்களை அவமதித்துப் பகைப்பானுக்கு, அந்த நட்பும்-படையும்-நயக்கக்கூடி, அரணும்-பொருளும்-ஆர அமையினும், அழிந்துவிடுவன். இப்பகை இரண்டற்கும் சான்று இத்துரியோதனனே சாலும். இது காலகதி யென்றுணர்க.

அணிவகுப்புச்சருக்கத்தோடி

உத்தியோகபர்வம் - முற்றிற்று.

உ

கடவுள் துணை

ஸ்ரீ மஹா பாரதம்

6—பீஷ்ம பர்வம்

கண்ணன் துதி

மற்கொண்டு வகுத்தனைய சிகரத் திண்டோள்
வாளரக்கன் குலத்தோடு மடிய முன்னம்
விற்கொண்டு சரந்தொடுத்துப் புரையில் கேள்வி
விண்ணவர்தங் துயர்தீர்த்த வீர ராமன்
கற்கொண்ட வகலிகைதன் னுருவ மீளக்
கவின்கொள்ளக் கொடுத்ததிருக் கமல பாதஞ்
சொற்கொண்டு துதித்தெழுந்து துள்ளி நாளுந்
தொழுமவரே யெழுபிறவித் துவக்கற் றாரே

சூதபுராணிகர் வாக்கியம்

ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு ஆதிபஞ்சகத்தில் ஐந்தாம் பாகமாகிய உத்தியோக பர்வத்தைக் கூறிய வைசம்பாயன முனிவரை ஜனமேஜய மகாராஜன் பணிக்தெழுந்து, "ஸ்வாமி! பாண்டவர்கள் ஜகப்பிரசித்தமாய் உபபிலாவியத்தி லிருந்து, தமது பாகத்திற்காகக் கௌரவ ரிடத்திற்கு உலூகரைத் தூதனுப்பியதும் கிருஷ்ணதேவரைப் படைத் துணைக்கழைக்க அருச்சுனன் சென்றதும் அக்கால் துரியோதனனும் வந்தழைக்கத் தவறியதும் வழியிற் பாண்டவர்களைக் கருதிச் சென்ற சல்லியனை மறைவிலிருந்து விருந்திட்டுக்கண்டு தனக்குப் படைத் துணையாக ஸ்திரப்படுத்திக் கொண்டதும், மீண்டுங் காடுசென்று தவம் செய்வதே கன்மை என்று மறுதூதனுப்பியதும் பின்பு ஐவர் வேண்டுகோளின்படி சந்திபேசச் சென்ற கிருஷ்ணதேவர் விதுரன் செய்த விருந்துண்டு போய்த் துரியோதனஞதியரோடு கலந்துபேசிக் கையேந்தி இரக்க,

அதற்குத் துரியன் ஒவ்வாது பகவானையும் அவரைத் தரிசிக்கவந்து பற்பல நீதிகளை ஓதித்தெருட்டியமுனிவர் மூவரையுந் தூறிவிடுத்து விருந்து செய்வித்த விதுரனை வில்லொடிக்கப் பேசியதும், ஒரு படுகுழி சமைத்து மீண்டுங் கிருஷ்ணதேவரை யழைத்ததும், அக்கால் குந்திதேவியைக் கண்டு கர்ணன் வரலாற்றைக் கூறியதும், பின்பவர் அப்படுகுழியி னின்று விச்வரூபங்கொண்டு யாவரும் ஓலமிட்டுத் துதி செய்யும்படியாக விக்ரமித்து, மீண்டுந் தம் சுயரூபங் கொண்டதும், தம்மை வழிவிட வந்த விதுரன் மனக் குறையை மாற்றி, அச்வத்தாமனுக்குச் சேனாதிபதிப் பட்ட மாகாத படி அவனோடு சம்பாஷித்து உபபிலாவியஞ் சேர்ந்ததும் பின்பு இரு வரும் படைத்துணை கூட்டியதும் துரியன் சகாதேவனால் நாள் வைத்துக்கொண்டு, இராவானைக்களப்பலிக்குடன்படுத்தியதும் அவன் கருத்து மாற அமாவாசையைக் கண்ணன் புரட்டியதும், குருக்ஷேத் திரத்தில் வீரமாகாளி பூசையை விதிப்படி நிறைவேற்றிச் சுவேதன னுஞ் சேனைகளை அணிவகுத்ததும் அப்போது கர்ணனுக்குத் தன்னை அர்த்தரதரிற் சேர்த்த பீஷ்மர் மேல் உண்டான துவேஷத்தை ஒருவாறு மாற்றிய துரியோதனனுதியரும் அப் பூசை யனைத்து முடித்து, பீஷ்மராற் சேனைகளை அணிவகுத்துத் துரியோதனன் பாண்டவர்கள் பாசறைக்கு உலூகியைத் தூதுவிடுத்து யுத்த வாரம் பங் கேட்டனுப்பியதும் கிருஷ்ணமூர்த்தி அதற்கு அவனிடத் திற்றானே நாளை உதயத்திற்கே யுத்த வாரம்பம் என்று விடை கூறிவிட்டதும், கேட்டு அளவிடற்கரிய ஆனந்த மடைந்தேன். இப்பால் யுத்த பஞ்சகத்தின் முதற் பாகமாகிய பீஷ்ம பர்வத்தையும் கிருபை செய்து திருவாய் மலர்ந்தருள வேண்டும்'' என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்—

முதற்போர்ச் சருக்கம்

துதி

அஞ்சன மேம மளித்திடு மாபோற்
பஞ்சவர் தேறல் பகிர்ந்திட வோதி
அஞ்சன மேனியு மைம்படை யுங்கொண்
டஞ்சன நடைபுரி யரியடி பணிவாம்

ஓ மதிகுல நிதியாகிய அதிபதியே! கேளும்: குருக்ஷேத்திர பூமியிலே கௌரவர் படைகளும் பாண்டவர் படைகளுமாகியு

பதினெட் டக்குரோணி சேனைகளும் சர்வாயுத பாணியராய்ச் சகல சித்திகளோடு நிறைந்து சூரியோதயத்திற் கெதிர்பார்த்துக் கொண் டிருக்க, அதைக்கண்ட சூரியபகவான் இருதிறப் படைவீரர்கள் பேசிக்கொள்ளும் பிரபலங்களைக்கேட்டு நாம் உதயமாகவில்லை யென எல்லோரும் நம் பேரில் தோஷஞ் சொல்லுகிறார்க ளாதலால் நாமும் விரைவிற் போய் அவர்களைச் சந்துஷ்டி பெறச்செய்வோம் என்று எழுந்து வருவான்போலக் கடலினுச்சியி லுதய மாயினன். கலைக்ஞான முதலிய சாஸ்திரங்களைக் கற்று அவற்றின் உண்மைப் பொருளைப் பெற்று எல்லோருமதிக்கும் நல்லோராகிய வல்லவர் களும், அகப்பற்று புறப்பற்றுகளை அற்றவர்களாகிய சித்த சுத்தியை யுடைய நற்றவர்களும், நித்தியவிதி முறைகள் தப்பாமற் செபம் செய்து தொழும்படியாகிய அச்சூரிய பகவான் கிழக்குத் திசையி லுதிப்பதற்கு முன்னமே இருதிறவர்களுடைய சேனை நாயகர் களும் அரசர்கள் முதலாகிய பேரும் காலைக்கடனை முடித்துக் கொண்டு ஆயுதங்களைக் கைக்கொண்டு ஆரவாரித்து நின்றார்கள். அவர்க ளப்படி யிருக்க அஸ்தினபுரத்துக் கதிபதியாகிய திரிதராஷ் டிர மகாராஜன் தன் புத்ர மித்ர பௌத்திராதிய செல்லாரும் போர் புரியச் செலவு பெற்றுக்கொண்டு போனவுடன் அடங்காத துக்கத் துடனே மடங்கிச் சுருண்டு முடங்கி, பூரித்த தோள்கள் வாடக் கண்ணீர் ஆறாக வோட, "ஐயோ! தெய்வமே! என் பிள்ளைகள் போர் செய்யப் போனார்களே! என்ன விளையுமோ! ஏதாய் முடியுமோ! இன்பச்சொல் கேட்பேனே! துன்பச்சொல் கேட்பேனே!" என் றெண்ணங் கொண்டு வருந்தித் தன் பிதாவாகிய ஸ்ரீவேதவியாஸ முனிவரைச் சிந்தையுள் நினைத்து வந்தனை செய்தான்.

வேதவியாஸர் திருதராஷ்டிரனைக் கண்டு சில தேறுதல் சொல்லுதல்

அந்த வேளையில் திருதராஷ்டிர மகாராஜனுக் கெதிரில் ஸ்ரீ வேதவியாஸர் வந்து நின்றார். அவரைக் கண்ட சஞ்சயனும் உயிச்சனும் திருதராஷ்டிர மகாராஜனுக்கு ஜாடையினற் றெரிவித் தார்கள். உடனே மகாராஜன் அறிந்துகொண்டு பூமியில் விழுந்து புரண்டெழுந்து அவரடியிற் சுழ்ந்து, அர்க்யபாத்திய ஆசமனீய சந்தனாக்ஷதை தாம்பூல முதலாகிய உபசாரங்க ளெல்லாம் கடத்தி முத்துக்களினு லமைத்திருந்த ஆசனத்திலெழுந்தருளச் செய்து, தாரை தாரையாய்க் கண்ணீர் சோரவிட்டுத் தேம்பித் துக்கத்தினுல்

விக்கிக்கொண்டு வாயிற் கழறு மொழி குழறும்படியாய் ஸ்ரீவேதவியாஸரை நோக்கி "ஓ அருந்தவர்களுக் கரசனுகிய ஐயனே! என் பிள்ளையாகிய துரியோதனனுதியர் யுத்தஞ் செய்யும்படியாய் என்னிடத்தில் விடை பெற்றுக்கொண்டு குருக்ஷேத்திரத்திற்குப் போய் விட்டார்கள். அவர்களை விட்டு இவ்விடத்தில் நான் தனியாயிருக்கலா மென்றுலோ பெற்ற மனம் பித்தென்னு முறைமையாலும் புத்திர வாஞ்சையினுலும் பிரிந்திருக்கப் பிடிபடவில்லை. நல்லது என் பிள்ளைகள் போயிருக்குங் குருக்ஷேத்திரத்திற்கே போகலாம் என்றுலோ இரண்டு கட்டளையும் அற்றவனுகையால் அவ்விடத்திற் போய் நாம் செய்யலாவ தென்ன வென்று என் மனம் இலைக்குதே யொழியத் துணிவு பெறவில்லை. ஐயனே! என் கதி இப்படி யிருக்கின்றது" என, வேதவியாஸர், "அப்பா சர்வலோக சரண்யனுகிய சர்வேச்வரனுடைய செயல்களை ஒருவராலும் விலக்க இயலாது. ஆதலால் ஊழ்வினையாற் பறிக்கப்பட்ட மனத்தினை யுடைய உன் பிள்ளைகள் செய்யப்போகிற யுத்தத்தைக் கண்டு களிக்கும்படியா யுனக்கு இரண்டு கண்ணுந் தெரியச் செய்கின்றேன். இருதிறப் பிள்ளைகளும் போராடும் விதத்தைப் போய்ப் பாரும்" என்று வேதவியாஸர் அநுக்கிரகஞ் செய்தார்.

உடனே இரண்டு கண்களும் பிரகாசித்தன. திசாதிசைகளுங் கடந்த கீர்த்தியை யுடைய திருதராஷ்டிர மகாராஜன் மாடமாளிகை கூடகோபுர முதலிய அரண்மனைகளையும், அஸ்தினபுரத்தின் அலங்காரங்களையும் சாலைகளையும், சோலைகளையும், மலைகளையும், பலபல உயிர்களின் பேதங்களையும் மண்டலத்தையும், விண்டலத்தையும், தாரகாகணங்கள் முதலிய எல்லாவற்றையுங் கண்டான். உடனே இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு தந்தையாகிய வியாஸருடைய திருவடியிற் திருமுடி நாட்டி நின்று, "ஓ நாதனே! நான் பிறந்த நாள் முதல் இதுவரையில் யாதோர் களங்கமு மில்லாமற் பரிசுத்த இருதயத்துடன் பெருமை பெற்று என் கால மெல்லாம் கழித்து விட்டேன். இப்போ திறந்து போகும்படியா யிருக்கிற கொஞ்ச காலத்திற் கண்களைப் பெற்று நானென்ன பலனைப் பெறுவேன்? என் பிள்ளைகள் செய்யும் யுத்தத்தைக் கண்டு நான் சகியேன்; இந்த உலகத்தையும் பாரேன்; உலகிலுள்ள உயிர் வருக்கத்தையும் நோக்கேன்; மரம் மலை முதலிய மற்றெவைகளையும் பாரேன்; எதைப் பார்த்தபோதிலும் எனக்குப் பயங்கரமா யிருக்கிறது.

இன்னுஞ் சற்றுநேரம் என் கண்களிருக்குமாகில் நான் இறந்து போவேன். உடலுங் குடலும் படபடவென்று நடுங்குகின்றன! ஆகையால் - ஓ தருமந் தப்பாத தவத்தினையுடைய தந்தையே! பழையபடி குருடாகச் செய்வதே யென்பாக்கியம்" என்று திருதராஷ்டிரன் வணங்கி வருத்த முற்று வாழ்த்திக் கேட்டான்.

உடனே பெருமை தங்கிய முனிவரானவர் பழையபடி குருடாகச் செய்து, புத்திரனைப்பார்த்து, "இப்போது நடக்கப்போகிற யுத்தத்தின் முயற்சிகளை யெல்லாம் பூரணமாகத் தெரிந்து கொண்டு உனக்குச் சொல்லும்படியாகக் குற்றமற்ற இச் சஞ்சயனுக்கு ஞானக்கண் கொடுக்கிறேன். காள்தோறு நடக்கும் யுத்த முதலிய காரியங்களை யறிந்து இந்தச் சஞ்சயன் சொல்லத் தெரிந்து கொள்ளக்கடவை. மேலும் - இந்தச்சஞ்சயன் சொல்லிக்கொண்டு வரும்போது அங்கே தோற்றவர்களைப்போ லிருப்பவர்கள் வென்றவராகவும் வென்றவர்களைப்போ லிருப்பவர்கள் தோற்றவராகவும் நடத்திவைக்கும் வினையின்பயனைச் சொல்லிக்கொண்டு வருவான். அந்த வார்த்தையைக்கேட்டு நீ மெத்த விசனப்படாதே. அப்பாற் கடைசிநாளையிற் பார்க்கும்போது எது நின்றதோ அதை இன்ன தென்று சொல்லத் தெரிந்து கொள்ளலாம். அதுவரையிலுந் துன்புறுதே; இன்புறுதே; தைரியமாயிரு. உன் பிள்ளைகளை நம்பாதே. வெற்றியையும் ஆண்மையையும் பெறுவோர்கள் நீதி முறைமை தப்பாமல் சத்தியமாக நடப்பவர்க ளெவர்களோ அவர்களே. இதனை நன்றாய் அறிந்துகொள்ளக் கடவை" என்று சில உறுதி வார்த்தைகளைச் சொல்லி ஆதரணை செய்து, சஞ்சயனை யழைத்து "அப்பா சஞ்சயனே! நீ போர்முகத்திற் சென்று அவரவர்களுடைய மனக் கருத் தறிந்து வந்து சொல்லும்படியாகவும், சண்டை செய்யுமிடத்திற் செல்லும்போது இருதிறவர்களுடைய ஆயுதங்க ளொன்றுந் தேகத்திற் படாதிருக்கும்படியாகவும், உனக்கு வரங்கொடுத்தேன்" என்று சொல்லிச் செலவு பெற்றுக் கொண்டு, தமது தவச் சூழலுக் கெழுந்தருளினார்.

சஞ்சயன் திருதராஷ்டிரனுக்கு அண்ட கோசவடுக் குரைத்தல்

இந்தப் பிரகார மநுக்கிரகஞ்செய்து வேதவியாஸர் போனபிற்பாடு, திருதராஷ்டிர பூபதியானவன், சராசரங்களுந் துதிக்கும்படியாகிய தர்மகுண சீல னென்னுஞ் சஞ்சயனைப் பார்த்து "ஓ மத

யானையின் வலிமையும் மதியூகரின் நிறமையும் பெற்ற சஞ்சயனே! ராக்ஷதர்களும் தேவர்களும் யுத்தஞ் செய்ததைப்போல் என் பிள்ளைகளும் பாண்டவர்களும் போர்புரியச் சென்ற குருக்ஷேத்திர மென்னும் இடம் எவ்விடத்தி லிருக்கின்றது?" என்று கேட்கச் சஞ்சயன் "ஓ அஸ்தினபுரத்துக் கதிபருகிய திருதராஷ்டிர பூபதீ! சகல பாவங்களையும் போக்கி நன்மைகளையும் புண்ணியங் களையுங் கொடுக்கும்படியாகிய புனிததீர்த்தங்கள் நிறைந்த இந்த நாவலந்தீவில், பூப்பிரதக்ஷணஞ் செய்கின்றவர்கள் போற்றி வணங் கித் தானங் கொடுத்து ஸ்நானஞ் செய்யாநின்ற சமந்த பஞ்சக மென்னு மகா மகத்துவ முடைய பொய்கை நிறைந்த குருக்ஷேத் திரத்தில், நமது இருதிறப் புதல்வர்களும் ஆசைகொண்டு போர் புரியச் சென்றார்கள்" எனத், திருதராஷ்டிரன் "ஐயா சஞ்சயனே! நாவலந் தீவாகியது எது? அதற்கு நாவலந்தீ வென்னும் பே ரெப்படி வந்தது? இந்திரன் - குபேரன் -முதலிய தேவர் கள் வாழாநின்ற அமராவதி-அளகாபுரி முதலிய பட்டணங்கள் எங்கிருக்கின்றன? இந்தச் சமுத்திரஞ் சூழ்ந்த விசாலமாகிய உலகம் கீழேழு மேலேழுதாய் விளங்கும் விதமுப், பிரமனல் விதிக் கப்பட்ட அண்டமுதலிய வெல்லாவற்றையும் நான் தெரிந்து கொள்ளும்படியாகச் சொல்லக்கடவை" என்று கேட்கப் பொய்யிலா மனத்தோனாகிய புண்ணியன் யோசித்துத் தனக்குள் புன்னகை கொண்டு, "அனந்த கல்யாண குணனுடைய திருநாபிக் கமலத்தி லிருந்துவந்த பிரம்மாவானவர் ஆதியிற்படைத்த ஆயிரத்தெட்டண் டத்தில் இந்த ஒரு பிரம்மாண்டத்திற் குட்பட்ட யாவையும் பெரி யோர்கள் பேசியிருக்குஞ் சாஸ்திரப் பிரகாரஞ் சொல்லுகிறேன் கேளும்" என்று திருதராஷ்டிரனே நோக்கிச் சொல்லத் தொடங்கி னன்—

"இராஜாதிராஜனாகிய திருதராஷ்டிர மகாராஜனே! அண்ட மென்பது முட்டையைப்போல் விளங்கிச் சுவர்க்க மத்திய பாதாள மென்னு மூன்று பிரிவா யிருக்கின்றது. இந்த மூன்று பிரிவில் பூலோகம்-புவர்லோகம் - சுவர்லோகம் - ஜனலோகம்-தபோலோகம்- மகாலோகம் - சத்தியலோகம் - என்னும் ஏழு உலகங்கள் பொருந்தி யிருக்கின்றன. இவைகளில் இப்போது நாமிருக்கும் இந்த அண்டத் தின் மதிற்சுவர் வரைக்கும் இப்பூலோகத்தின் விருத்தி அளவு. இதற் குள் எல்லாம் வல்ல கடவுளினுடைய வலக்கண்ணாகிய சூரியபகவா

னுதயமாகு முதய கிரியும் சமுத்திரங்களும், சக்கரவாளகிரியும் பொருந்தி யிருக்கின்றன. அப்பால் நிறைந்த பெரும் புறக்கடலளவும் இருட்பூமியென்று அறிந்துகொள்ளும். அரசனே ! இப்போது சொல்லிவந்த சக்கரவாளகிரிக் குட்பட்ட இந்தப் பூமியைத் தேவ பூமியென்றுஞ் சுவர்ணபூமியென்றுஞ் சொல்லுவார்கள். இந்தப் பூமியை, சட்சதத்தீபமென்று பிரித்திருக்கின்ற தன்மையின்படி புட்கரதீபத்தை முதலிற் சொல்லுகிறேன் கேளும். புட்கரத்தீபமென் னும் அந்தப்பூமிபத்துக்கோடியோசனவிஸ்தீரணமுடையது. அந்தத் தீவில் தாமரைப் புட்பங்களே மிகுந்து மலர்ந்து சிறந்து வளர்ந்திருக் கின்றன. பலம் பொருந்திய குமுதவரை யென்னும் ஒருமலை சூழ்ந் திருக்கின்றது. அந்தமலைக் குட்புறத்தில் அறுபத்துநான்கு லக்ஷம் யோசனை யகலமும் ஆழமுமுடைய நன்னீர்க்கடல் வளைந்திருக் கின்றது. சர்வதோபத்திர மிகுந்திருப்பதால், அதற்குப் புட்கரத் தீபமென்று பெயர் சொல்லப்பட்டது.

"அதற்கிப்பால் அறுபத்துநான்கு லக்ஷம் யோசனை யகல நீள முடைய சாகத்தீவென்ப தொன்றுண்டு. அந்தத் தீவை மந்திரகிரி யென்னும் ஒரு மலை சூழ்ந்துகொண் டிருக்கின்றது. அந்தமலைக் குட் புறத்தில் மூப்பத்திரண்டு லக்ஷம் யோசனை ஆழமும் அகலமு முடைய பால் சமுத்திரம் வளைந்துகொண் டிருக்கின்றது. கோரைத் தண்டுகள் வளர்ந்திருப்பதினால் அதற்குச் சாகத்தீவென்று பேரா யிருக்கின்றது. அதற்கிப்பால் முப்பத்திரண்டு லக்ஷம் யோசனை விசா லம் பொருந்திய கிரவுஞ்சத் தீவென்ப தொன்றுண்டு. அந்தத் தீவைக் கிரவுஞ்சகிரியென்னும் ஒரு மலை சூழ்ந்துகொண் டிருக்கின் றது. அந்த மலைக்குட்புறத்திற் பதினாறு லக்ஷம் யோசனை யகலமும் ஆழமுமுடைய தயிர்க்கடல் வளைந்து கொண்டிருக்கின்றது. அவ் விடத்தில் அன்றில் முதலிய பட்சிகள் மிகுந்திருப்பதினால் அதற்குக் கிரவுஞ்சத் தீவென்று பேர் சொல்லப்பட்டது. அதற்கிப்பால் பதினாறு லக்ஷ யோசனை யகலமும் ஏழு முடைய கோமேதகத் தீபமென்ப தொன்றுண்டு. அதை நீங்குகமென்னும் ஒருமலை சூழ்ந்திருக்கின்றது. அந்த மலைக் குட்புறத்தில் எட்டுலக்ஷ யோசனை அகலமும் ஆழமு முடைய நெய்க்கடல் வளைந்துகொண் டிருக்கின்றது. அவ்விடத்திற் கோமேதக மலைகளே மிகுந் திருப்பதினாற் கோமேதகத் தீவென்று கூறப்பட்டது. அதற்கிப்பால் எட்டுலக்ஷ யோசனை யகலமும் ஏழு முடைய சான்மலித் தீவென்ப தொன்றுண்டு. அந்தத் தீவை

மேரு மந்தரவரையென்னும் ஒருமலை சூழ்ந்திருக்கின்றது. அந்த மலைக்குட்புறத்தில் நாலுலக்ஷ யோசனை யகலமும் ஆழமுமுடைய மதுக்கடல் வளைந்திருக் கின்றது. அவ்விடத்தில் இலவமரமிருந் திருப் பதினாற் சான்மலித் தீவென்று கூறப்பட்டது. அதற்கிப்பால் இரண்டு லக்ஷ யோசனை விசாலமுடைய குசத்தீப மென்ப தொன் றுண்டு. அத்தத் தீபத்தைப் பாரிசகிரி யென்னு மோர் மலைவளைந்து கொண்டிருக்கின்றது. அந்த மலைக்குட்புறத்தில் இரண்டு லக்ஷம் யோசனை விசாலமும் ஆழமு முடைய இக்ஷு சமுத்திரஞ் சூழ்ந் திருக்கின்றது. அவ்விடத்தில் தருப்பைப் புற்கள் மிகுந்திருப்பதினாற் குசத் தீபமென்று கூறப்பட்டது.

இப்பால் உள்ளது நாமிருக்கும் இந்தத் தீபம். இது லக்ஷ யோசனை விசால முடையது. இந்தத் தீபத்தில் அயவரை யென்னு மொருமலை சூழ்ந்திருக்கின்றது. அந்த மலைக்கு உட்புறத்தில் ஜம்பு விருக்ஷமொன் றிருக்கிறது. இதனை லக்ஷயோசனை அகலமும் ஆழமு முடைய உவர்க்கடல் வளைந்துகொண்டிருக்கின்றது. ஜம்பு விருக்ஷ மென்னும் நாவல் விருக்ஷமொன்று இருப்பதினால் இதனை ஜம்புத் தீபமென்றும், நாவலந் தீவென்றுஞ் சொல்லுவார்கள். தெங்குங் கமுகும் நிறைந்த இந்த நாவலந் தீவினுடைய மத்தியில் மகமேரு வென்னு மோர் பொன்மலை இருக்கின்றது. ஓ புதனுக்கொப்பாகிய புத்தியையுடைய புண்ணியனே! மகமேருவென்று சொல்லும் படியானது இந்த ஜம்புத் தீபத்திற்கு மத்தியிற் பிரம்ம பீடமா யிருப்பதினால், அந்த மகமேருவினுடைய நான்கு திக்கும் இப் போது நான் சொல்லிவந்த ஏழுதீபமும், ஏழுமலையும், ஏழு பொருளும், ஏழுகடலும் இன்னுமுண்டான அளவற்ற வஸ்துக் களோடு யாவராலுங் கொண்டாடப்பட்ட பலவித அதிசயங்களும் பொருந்தி யிருக்கும். அப்படி யிருக்கபோதிலும் ஜம்புநாவற் கனியின் தோலினால் அயப்பொடிகள் பொற் சன்னங்களாய் நதியின் கரைதோறும் வரம்பாக நிரம்பியிருக்கும் வளங்களினால், மற்றத் தீவுகளைப் பார்க்கிலும் இந்த ஜம்புத் தீபத்தை மிகவும் மேன்மை யென்று நூல்கள்தோறும் பெரியோர்கள் பேசுகின்றார்கள். மேலும் மகமேருவுக்கும் கவிந்திருக்கும் அண்டச்சுவருக்கும் மத்தியிலிரா கின்ற பூமியின் விசாலம் கிழக்கே ஐம்பதுகோடி யோசனையும், மேற்கே ஐம்பதுகோடி யோசனையும், வடக்கே ஐம்பதுகோடி யோ சனையும், தெற்கே ஐம்பதுகோடி யோசனையும், பூமியின் கீழாக

நாற்பதுகோடி யோசனை தூரம் உருவியும், ஆகாயத்தின் மீதாக ஐம்பதுகோடி யோசனை தூர முயர்ந்தும் உடையதென்று பெரியோர் சொல்லுவார்கள். இதைப் மூமது சிறந்த விவேகத்தால் தக்கபடி யோசித்து அறிந்துகொள்ளக் கடவீர்.

இம்மென்றியும் மேற்சொல்லிய மகாமேருவுக்கு வடமேற்கிலும், வடக்கிலும், வடகிழக்கிலும், நீலகிரி, சுவேதகிரி, ஸ்ருங்கிகிரி யென்று மூன்றுமலைகள் நிற்கின்றன. கீழ்த்திசையில் மாலியவான்கிரி யென்றொரு மலை நிற்கின்றது. மேற்றிசையிற் கந்தமாதனம் என்றொருமலை யிருக்கின்றது. தென்றிசையிலும், தென்மேற்கிலும், தென்கிழக்கிலும் நிடதகிரி, ஏமகூடம், இமபவரை யென்று மூன்று மலைகளுள்ளன. இந்த எட்டுமலைகளைத்தான் அஷ்டகுலகிரியென்று யாவரும் சாஸ்திரோக்தமாய்ச் சொல்லுவது. இவையல்லாமல் முன் சொல்லிய பொன் மலையாகிய மகாமேருவுக்குக் கீழ்த்திசையில் நீலபெற்ற மந்திரகிரியும், பருத்துத் தழைத்த நீலைகளையுடைய மாமரங்கணிறைந்த ஜம்பிரவனமும், பலவித புஷ்பச் செடிகள் நெருங்கியகந்தவனமும்-க்ஷீராப்திக் கொப்பாகிய பாற்சுனையும் தேவர்கள் முனிவர்கள் முதலிய சகலருங்களிக்கப் பொருந்தியிருக்கின்றன. மேருவுக்குத் தென்றிசையில் மேருமந்தர மென்னும் மலையும் இந்த ஜம்புத்தீபமென்னும் பெயரைத் தந்த ஜம்பு விருக்ஷமும், சயித்திரதவனமும் பெருமைதங்கிய மதுச்சுனையும், அழகுபெற விளங்கிக் கொண்டிருக்கின்றன. மகாமேருவுக்கு மேற்றிசையிற் பாரிசகிரியென்னும் மலையும், மலர்ந்து சிறந்த கடம்ப விருக்ஷமும், தலத்திற் கலங்காரமாகிய பிரசப்பெயர்வனமும், கருப்பஞ்சாற்றுச்சுனையும், பரிசுத்தம் பொருந்தி மாதுரியத்துட னிருக்கின்றன. மேருவுக்கு வடதிசையிற் குமுதகிரி யென்னும் மலையும், வானமளவுமுயர்ந்த வடவிருக்ஷமென்னும் ஆலமரமும், சர்வதோபத்திர மென்னும் பூந்தோட்டமும், கன்னீர்ச் சுனையும், எல்லாத் திசைளினு மேம்பாடாயிலங்கிக்கொண் டிருக்கின்றன.

மேலும் அந்தமகாமேருவானது பதினாயிரம் யோசனைதூரம் நடுமத்தியிலோங்கி, முப்பத்திரண்டு யோசனை தூரம் வானத்திலுயர்ந்து, எண்பதினாயிரம் யோசனை விசாலம் சுற்றிலும் பருத்துச் சந்திர சூரியர் முதலிய கோள்களுக்கு நடுநிலையாய் இவ்வுலகுக்கு அஞ்சூராணிபோற் பிரகாசித்துக்கொண்டு, அநேகங்கோடி சிகரங்கள்பொருந்தி மூன்று குவடாகப் பிரிந்து, அயனர்பீடம்- அரியின்

பீடம்-ஐமுகவராகிய அரனுர் பீடமாக அமைக்திருப்பதென்று அத்தியாண்மிகத்திற் சொல்லியிருக்கின்றது. மேலும் அந்த மகமேருவி னெட்டுத்திக்கிலும இந்திரன் - அக்கினி-இயமன்-நிருதி-வருணன் - வாயு - குபேரன் - ஈசானன் - என்னு மிவர்களோடு, அமரர் - சித்தர் - அசுரர் - தைத்தியர் - கருடர் - கின்னரர் - நிருதர் - கிம்புருடர் - கந்தருவர் முதலிய பேர்களும் தங்களுக்கு நிவாசஸ் தலமாய்க் கேளிர்கூட்டம்போல் வீற்றிருப்பார்கள். மேலும் முன் சொல்லிய மகமேருவுக்குக் கீழ்த்திசையில் நிலைபெற்றிருக்கும் மந்திரகிரியென்னும் மலைபின்மீது,பணைத்துத் தழைத்துத் தளிர்த்து விளங்கிய ஓர் மாமரமானது ஆயிரம்யோசனைப் பரப்பும் உயரமு முடையதாயிருக்கின்றது. அந்த மாம்பழத்தி னின்றும் இழிந்து வரும் ரசங்களைப் புசித்தபேர்களுக்கு, இடைகலை - பின்கலை, யென்னும் சுவாசமானது பத்துயோசனை தூரம் பரிமளித்துக் கொண்டிருக்கும். மேற்சொல்லிய மாம்பழச் சாறுனது வழிந்து போய்ச் சேர்ந்து நிறைந்து நின்றதைச் சோதக நதியென் றுஞ் சொல்லுவார்கள். இவையல்லாமலும் இடைகலை, பிங்கலை யென்னுஞ் சுவாசம் பரிமளித்திருப்பதி லென்ன பிரயோசன மென் ரூல், சுவாசம் பாழாகிப் போகாமல் நீடித்துப் பாய்வதினுல் அவர் களுக்குத் தீர்க்காயு ளென்றும், அவர்களே நித்தியத்துவம் பெற்ற வர்களென்றும் பெரியோர் சொல்லுவர்.

இவையன்றியும் முதலாவது கிழக்குச் சமுத்திர முதல் மேற் குச் சமுத்திரம் வரைக்கும் மத்தியிலுள்ள பூமியானது குருவருடம். இரண்டாவது குற்றமற்ற ஸ்ருங்க மலைக்குத் தெற்கு, சுவேதமலைக்கு வடக்கு, கீழ்க்கடல் மேற்கடலுக்கு நடுவிலிரானின்ற பூமி இரண்ய வருடம். மூன்ருவது சுவேதகிரிக்கும் நீலகிரிக்கும், கீழ்க்கடலுக்கும், மேற்கடலுக்கும் இடையிலிருக்கும் பூமி ரம்மிய வருடம்.நான்காவது நீலகிரிக்குத் தெற்கு, மேருவரைக்கு வடக்கு, மேற்கடல், கீழ்க்கட லின் மத்தியிலிருக்கும் பூமி அளாவிரத வருடம். ஐந்தாவது மேரு வரைக்குத் தெற்கு, மாலியவான் பர்வதத்திற்கு வடக்கு, கீழ்க்கடல் வரைக்கும் பத்திரவருடம். ஆருவது கந்தமாதனத்திற்கு மேற்கு, மேற்குச் சமுத்திரத்திற்கு கிழக்குக் கேதுமால வருடம். ஏழாவது நிடத கிரிக்குத் தெற்கு, ஏமமலைக்கு வடக்கு, மேற்கடல் கீழ்க்கடல் வரைக்கு மிருக்கும் பூமி அரி வருடம். எட்டாவது ஏமமலைக்குத் தெற்கு, இமயமலைக்கு வடக்கு, கீழ்க்கடல் மேற்கடலளவுஞ் சேவ

பூமியாகிய கிம்புருட வருடம். ஒன்பதாவது இமயமலைக்குத் தெற்கு, தென்கடலுக்கு வடக்கு, மேற்கடல் கீழ்க்கடலுக்கு நடுவாக நாமிருக்கு மிந்தப் பூமியைத்தான் பாரத வருடமென்று சொல்லுவது. ஐயா அரசனே! மூன் னெருபோது நெருப்புப் பொரி பறக்கும் வேலாயுதத்தைத் தாங்கிய தீரகரணுகிய அங்கிதீர வரசன் பெற்ற ஒன்பது பிள்ளைகள் பேராலரசு செலுத்தி வந்த இந்த ஒன்பது வருடத்தையும், நவகண்டம் என்று சொல்வார்கள். இந்த நவ கண்டத்தின் அகல விசால வளவையுஞ் சொல்லுகிறேன் கேளும். ஓ அரசர்க்கணியாயவரசே! நெருங்கி யிரானின்ற மாலியவான் மலைக்கும் கந்தமாதனகிரிக்கும் மத்தியில், தனுக்கோடி முதல் வட கோடி வரையிலும், இப்பாரத வருட முதலாயுள்ள மூன்றுவருடமும் முப்பத்து நாலாயிரம் யோசனை தூரம் அகல நீள முடையதா யிருக்கின்றது. அப்பால் நிடதகிரிக்கு வடக்கு முதல் நீலகிரி வரை யிலும் மூன்று வருட மிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஒன்பதி னாயிரம் யோசனை அகல நீளமுடையது. மேலும் நிடதகிரிக்குத் தெற்கு மூன்று வருட மிருக்கின்றன. ஒவ்வொரு வருடமும் ஒன்பதி னாயிரம் யோசனை அகல நீள முடையது.

இவையல்லாமலும் இந்தப் பாரத வருடத்திற்குச் சிறப்பாகிய ஆறு குலகிரிகள் இருக்கின்றன. ஒவ்வொரு மலைகளின் அகலம் இரண் டாயிரம் யோசனை விஸ்தீரணமும், அடிமுதற் சிகரம் வரைக்கும ப தினாயிரம் யோசனை தூரமு முயர்ந்திருக்கின்றது. ஐயா! இப்போது சொல்லிவந்த ஒன்பது வருடங்களில் எட்டு வருடத்தில் சாரணர், சித்தர், கந்தர்வர், வித்தியாதரர், கிம்புருடர், விஞ்சையர் முதலாகிய பேர்கள் ஒவ்வொரு வருடத்தில் ஒவ்வொரு குலத்தராய் வசிப் பார்கள். அப்படி யிருந்தபோதிலும், மேலாகிய தருமம், அர்ச்சனை, பூசை, அருந்தவ மிவை முதலிய யாவும் இந்தப்பாரத வருடத்தில் வந்திருந்து செய்து, தவம் நிறைவேற்றிக் கொண்டுபோய்த் தங்கள் தங்கள் பதியிலிருந்து அநுபவித்துக் கொள்ளுவார்கள். அவ்வெட்டு வருடத்திலும் சஞ்சாரஞ் செய்து கொண்டிருப்பவர்களுக்கு ஆயுசு ஒன்றேகால் ஆயுதமென்று உரைப்பார்கள். ஒன்றேகால் ஆயுதமாவது பன்னீராயிரத்தைந்நூறு வயது. ஐயனே! அப்படியிருக்க இந்தப் பாரத வருடத்தி லிருப்பவர்களுக்குச் சொற்ப ஆயுசு ஏற்படுத்தி யிருப்பானேன் என்றால் மகாவருத்தத்துடனே அவர்களைப்போல் வாயுவைக் கும்பித்து வாணாளை வளர்த்துக் கொள்ளுவதைப் பார்க்

கிலும், இங்குள்ள மாம்பழரசத்தைப் புசித்து வாழ்காலே கீடிக்கச் செய்துகொள்ளுவதே இவர்கட்கு மேன்மையாம்.

அப்பால் மேற்கூறிய மகமேருவுக்குத் தென்றிசையில் மேரு மந்திரமென்னு மலையினிடத்துப் பொருந்திய காவல் மரமானது, இரண்டாயிரம் யோசனைபரப்பும் உயரமு முடையது. அம்மரத்தின் காவற்கனியானது ஐராவதத்தின் தலையத்தனை பருமனுடைத்தா யிருக்கும். அத்தப் பழம் கைந்து விழுந்த தேன்கள்போய் நிறைந்து நின்ற நதியைத்தான் ஜம்புநதி என்று சொல்லுவார்கள். அத்தச்சிறப்பு வாய்ந்த நதியானது மேற்சொல்லிய மகமேருவின் மேற்புறமாகச் சுற்றிக்கொண்டு கீழ்த்திசையிற் புகுந்து, சமுத்திரத்தின் நடுமத்தியிற் போய்ச் சேரும்படியாய்ப் பேரோசைகொண்டோடி வரும். அந்த ஜம்புநதி தோய்ந்த இடங்கள் தோறும் ஒருவராலெடுக்கப்படாத பொற்பாறைகள் நிறைந்திருக்கும். அத்தப் பாறையாகிய பொன்களினுல் ஆபரணங்கள் செய்து தரித்துக்கொண்டாலும், அல்லது அந்தத் தீர்த்தத்தைச் சாப்பிட்டாலும், அவர்களுக்கு நரை - திரை-மூப்பு-வியாதி - முதலிய தோசங்களில்லை. மேலும் மகமேருவுக்கு மேற்றிசையிலிருக்கும் கந்தமாதனச் சாரலிற் பொருந்திய கடம்பு மரமொன்று, ஆயிரம்யோசனை யகலந் தழைத்துச் செழித்து, மலர்கணிறைந்து சொரியும்படியாகிய தேனுனது யாவரும் வணங்கும்படி கடம்பா நதி யென்னும் பேர்கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட நதியில் ஸ்நானஞ் செய்தாலும், தாகத்திற் கருந்தினுலும், நூறுயோசனை தூரம் சுவாசமணமும் தேகமணமுஞ் சூழ்ந்துகொண்டிருக்கும். மகமேருவுக்கு வடதிசையி லிருக்குஞ் சுவேதகிரிச் சாரலில் நூற்றுப் பத்து யோசனை யுயரமும் பருமனும் பரப்புமுடைய ஆலமரமொன் றிருக்கின்றது. அதினுடைய கிளைகள்தோறும் தெருங்கிய கனிரசம் புசித்தால், பால் - தயிர் - தேன் - நெய் - இவைகளை யொத்திருப்ப தல்லாமலும், அழகிய பொன்னுடை ஆத்தினு பரணங்கள் முதலிய யாவுங் கொடுத்து, ஆற்றைப்போலச் சுரக்கும் ஊற்றின் பெருக்கெடுத் தோடிக்கொண்டிருக்கும்.

இன்னமுஞ் சொல்லுகின்றேன் கேளும்— ஓ திரிதராஷ்டிர பூபதியே! சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவானவர் பூர்வத்திற் பெற்ற சுவாயம்புமநு வென்பவர், மேற்சொல்லிய புட்கரத்தீபம், சாகத்தீபம் சான்மலித்தீபம், கிரவுஞ்சத்தீபம், கோமேதகத்தீபம், குசத்தீபம், ஜம்புத்தீபம் என்னும் இத்தச்சப்த தீபத்தையும் தமது புஜபல

பராக்கிரமத்தினாலும் மிகுந்த தவத்தினாலும் ஆண்டு வந்தார். அப்படி அரசு புரிந்து வருகாலையில் அந்தச் சுவாயம்பு மநுவுக்கு நந்தன், சயித்திரதன், பிரசன், சர்வதோபத்திரன், சுதீரன், மநுதாரன், அங்கிதீரன் என்று ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் கல்வியிற் சிறந்து வளர்ந்து, கருதலரைக் காய்ந்து காரியஸ்த ராஞர்கள். அந்தக் காலத்தில் அச் சுவாயம்புமநுவானவர் இந்த ஏழு பிள்ளைகளின் திறத்தைக் கண்டு, ஏழு தீபத்தையும் ஒவ்வொரு பிள்ளைகளுக் கொன்றாகப் பகுந்துக் கொடுத்துப் பட்டங் கட்டி வைத்தார். அந்த ஏழு பிள்ளைகளில் அங்கிதீரனென்பவன் இந்த ஜம்புத் தீபத்தை செங்கோன்முறை குன்றாமலும் தருமங் குறையாமலும், மலைகளைப் பிளக்கும் வச்சிராயுத முதலிய ஆயுதங்களையுடைத்தானவனுய் இராச்சிய பரிபாலனஞ் செய்து வரு காளில் குரு, இரணியன், கிரமியன், பத்திரன், அளாவிரதன், கேதுமாலன், அரி, கிம்புருடன், பாரதன் என்று சொல்லும் ஒன்பது பிள்ளைகளைப் பெற்று வளர்த்து, இந்த ஜம்புத்தீபத்தை ஒன்பது பங்காக்கி ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு பங்காகப் பட்டங் கட்டி அந்தப் பிள்ளைகள் பேரால் நவகண்டத்திற்குப் பேரும் ஏற்படுத்தி வைத்துப் பத்தினி புத்திரர் முதலிய ஈஷணத்திரயங்களையும் வெறுத்து, ஆத்மார்த்தமாகக் கனங்குலவிய வனம்புகுந்து, மனங் குவிந்து, தவம்புரிந்து நித்தியானந்தத்தைத் தருவதாகிய மோக்ஷ மடைந்தான்.

இப்பால் இந்த ஒன்பது பிள்ளைகளும் ஒன்பது கூறுகிய கண்டத்தை ஆண்டு வந்தார்கள். ஓ அரசனே! மலைகள்போலும் அலைகளடிக்கும் வடக்கு சமுத்திரத்திற்குத் தெற்காகவும், அணியணியாய் மணிகள் கொழிக்குஞ் சுனைப்பெருக்குடைய ஸ்ருங்க மலைக்கு வடக்காகவும், இதினடுவில் இருக்கும் பல வருடங்களினும் பாரத வருடத்திலிருப்பவர்க ளெல்லோருஞ் சீக்கிரத்தில் மோட்சம் அடையும்படி ஆயுள் நீடித்திருக்கச் செய்யாமல் நூற்றிருபதென்றே விதித்திருக்கின்றது — என்று சஞ்சயன் சொன்னன். திரிதராஷ்டிர மகாராசன் கேட்டுச் சிந்தை களித்துச் சஞ்சயனைப் பார்த்து, "மற்ற எட்டு வருடத்திலு மிருப்பவர்கள் இவ்விடத்தில் வந்து தவஞ் செய்து மேன்மை பெறவும், இவ்விடத்திலி ருப்பவர்கள் சீக்கிரத்தில் கதிசேர்வதற்காக ஆயுட் குறுக்க மென்றுஞ் சொன்னீர். இந்தப் பாரத வருடத்தில் அப்போர்ப்பட்ட கலத்தைக் கொடுக்கு மகத்து

வங்கள் என்னென்ன உண்டு. அவைகளையுந் தெரிவிக்க வேண்டும்" என்று கேட்கச் சஞ்சயன் சொல்லுகின்றான்—

ஓ இந்துகுலத் திந்திரனே! தெய்வ கங்கையானது அழகிய பொற்றாமரை மலர்களுடனே ஆகாயத்தினின் றிழிந்து மகமேருவின் சிகரத்திற் பாய்ந்து மூன்று பிரிவாகி, அந்த மகமேருவுக்குச் சமீபமா யிருக்கின்ற சிகரங்களையுடைய கும்பகிரியி லிரண்டு பிரிவுகள் விழுந்து, அதின் சிகரத்தைப் பிளந்துகொண்டு நான்கு பிரிவுகளாய்ச் சமுத்திரத்திற் போய்க் கலக்குமென்று சான்றோர் கூறுவர். மகமேருவுக்குத் தென்புறத்திலிருக்கும் குலகிரியினுடைய சிகரத்தில் வீழ்ந்த ஒரு பிரிவானது அம்மலையின் நடுவாகிய வயிற்றைக் கிழித்துப் பெருமை தங்கிய நிலத்தைப் பிளந்து தென்முகமாகத் திரும்பி வருவதே, இந்தப் பாரத வருடஞ் சிறந்ததென்று சொல்லுவதற்குச் சாக்ஷியா யிருக்கின்றது.

இவையன்றியும் ஸரஸ்வதி, யமுனை, கோதாவரி, கர்மதை, கௌசிகை, துங்கபத்திரை, சரயு, பாலி, பெண்ணை, காவிரி, கிருஷ்ணை, தாம்பிரபரணி முதலாகிய நதிகளோடு, கங்கையே முதலாகிய பல தீர்த்தங்களும் பொருந்திய இந்தப் பாரதகண்டத்திற்கு ஒப்பாகிய கண்டமும் உண்டோ? உத்தமனே! இன்னும் திருக்கோயில், திருவேட்களம், திருவெல்வாயில், திருக்கழிப்பாலை திருப்பெருமணம், திருமயேந்திரப்பள்ளி, திருமுல்லைவாயில், வடமதுரை, தென்மதுரை, காசி, காஞ்சி, மாயாபுரி, துவாரகை, அவந்தி, அயோத்தி, திருக்கவிக்காமூர், திருச்சாய்க்காடு, திருபல்லவனீச்சுரம், திருவெண்காடு, கோகர்ணம், இராமேச்சுவரம், திருக்கயிலை, வடவேங்கடம், திருகாட்டுப்பள்ளி, திருக்குருகாவூர், திருக்காழி, திருக்கோலக்கா, திருவாரூர், புள்ளிருக்கும் வேளூர், திருஆவினன்குடி, திருக்கேதாரம், ஸ்ரீரங்கம், திருவானைக்கா, திருக்கண்ணூர்கோயில், திருஞாயிறு, திருநின்றையூர், திருபுன்கூர், அன்னியூர், திருவேள்விக்குடி, திருக்குடந்தை, ஜகந்நாதம், திரிசிரபுரம், தர்ப்பசயனம், குருக்ஷேத்திரம் இவைகள் முதலாகிய திவ்விய சிவஸ்தலங்கள் ஆபிரத்தெட்டும் விஷ்ணுஸ்தலங்கள் நூற்றெட்டு மிருக்கின்றன. இந்தப்பதிகட்கு ஒப்பாகிய திருப்பதிகள் எப்பாரினு மில்லை. இப்போது சொல்லி வந்தஸ்தல விசேஷங்களினாலும், நதி விசேஷங்களினாலும், கண்காட்சியாகிய சிறப்பினாலும், தவங்களினாலும், சோடச மகாதானங்களினாலும், சிவார்ச்சனை, விஷ்ணுவார்ச்சனை,

முதலிய பூஜைகளினாலும், சுசி சுத்தங்களினாலும், சகலவித வளங்கள் முதலிய நலங்களினாலும், இந்தப் பாரதகண்டம் புனித மாகிய விசேஷம் பெற்றது. இந்தப் புனித விசேஷம் பெற்ற பாரதகண்டத்திற் குருக்ஷேத்திரம் மேலாகிய பவித்ர மூடையது. அநேகங் கோடி நற்குலத்தவர் நற்குணத்தவ ரெல்லாரும் நன்மை பெறச்செய்த யாகசாலைகள் கோடா கோடிகளிருக்கின்றன.

இவையல்லாமலும், உத்தம க்ஷத்திரியகுல போஜராகிய ராஜர் களெல்லாரும், விரோதத்தாற் பகைமேற்கொண்டு வெற்றி பெறும் படியாகக் கருதி யுத்தஞ் செய்த மேலாகிய ஸ்தலம் இந்தக் குருபூமி. இவ்விடத்திற் பரசுராமரானவர் இராஜவம்சத்தைக் கருவறுத்து, அவர்கள் தேகத்தினின்றும் பெருகிய உதிரங்களினாற் சமந்த பஞ்சக மென்னும் தீர்த்தமகத்துவமுண்டாக்கி, அந்த ரக்த தீர்த்தத்தில் தன் தந்தைக்குத் திலதர்ப்பணங்களைக் கழித்தார். இன்னமும் அநேகக் தகுதியையுடைய பெரியோர்க ளெல்லாரும் தங்களுக்குரிய கரும முதலிய காரியங்களை நிறைவேற்றிக் கொண்டார்கள். இப் பேர்ப்பட்ட மகத்துவமுடைய இந்தக் குருக்ஷேத்திரம் எவ்விடத்தில் இருப்பதென்றால், கல்விவளமுஞ் செல்வ வளமுந் தருஞ் சரஸ்வதி நதிக்குத் தெற்கிலிருக்கின்றது. அவ்விடத்தில் உமது பிள்ளைகள் நூறுபேரும் பாண்டவர்களும் யுத்தஞ்செய்யப் போயிருக்கின் றார்கள்" என்றான். திரிதராஷ்டிரமகாராஜன் மகாசந்தோஷத் துடன் கேட்டுச் சஞ்சயனை நோக்கி, "சகலமுந் தெரிந்த சாதுசங்கத் திறமுடைய சஞ்சயனே! நவகண்டங்களையும் பிரித்துச் சொல்லி, அவைகளினுடைய விசேஷங்களையும், இந்தப் பரத கண்டத்தினுடைய மகத்துவங்களையும், விசால முதலிய தன்மை களையும் எனக்குச் சொல்லி வந்தனை. ஞானதைப் பூரணமாகத் தெரிந்து கொண்டேன். மேற்சொல்லிய ஏழுதீவுகளிலே இந்த நாவலந்தீவை நீக்கி, மற்ற ஆறுதீவுகளின் விவரங்களையுஞ் சொல்லக் கடவை" என்று கேட்கச் சஞ்சயன் சொல்ல தொடங்கினான்.—

கேளுமையா ராஜனே! முன் சொல்லிவந்த சப்ததீவுகளில் இந்த ஜம்புத்தீவு நீங்க மற்ற ஆறுதீவுகளையும் ஆறு பிள்ளைகள் அரசுசெய்து வந்தார்கள். அத்தத்தீபங்களில் புட்கரமென்னுந் தீபத்தைச் சர்வதோபத்திர னென்னும் ராஜன் ஆண்டு வந்தான். அவனுக்குப் பிராசீனன், சிவேதனன், பிரத்தியக்கு, உத்தரன் என்று நாலுபிள்ளைகள் பிறந்தார்கள். அப்போது தான் ஆண்டுவந்த புட்கர

தீபத்தைக் கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம் என்று நாலு கண்டமாக்கி, அத்தப் பிள்ளைகள் நால்வருக்குங் கொடுத்தான். அந்த நாலுபிள்ளைகளுந் துரைத்தனம் பண்ணிக்கொண்டு வந்தார்கள். இவ்வாறே மற்ற ஐந்து தீபங்களையும் மற்ற ஐந்து பிள்ளைகள் தங்கள் தங்கள் பாகப்பிரகாரம் புத்ர பௌத்ர பாரம்பரியமாகப் பிரித்து ஆண்டு வந்தார்கள். ஓ குருகுலசிகாமணியாகியகோவே! பிள்ளைகளின் குணங்களையுந் திறங்களையுமறிந்து பூமியைப்பங்கிட்டுக் கொடுத்து விடுகின்ற தந்தையானவன், எல்லாத்தேவனிலு முதற் றேவன். அப்படிக்குச் செய்யாம விருந்து அவத்தி லிறந்து போகும் தகப்பன், புத்திர மித்திரர் முதலியோரைக் கெடுக்கும் பகையாகிய கொடும் பாவி யென்று இராஜநீதியிலும் நீதிசாரங்களிலும் சொல்லி யிருக்கின்றபடியால், அந்தந்த அரசர்கள் பாபத்திற்குப் பயந்து உடனே பகுந்து கொடுத்து விட்டார்கள். அந்த நீதி முதலிய தருமங்கள் அப்படியிருக்க, மேற்சொல்லிய ஆறு தீவுகளில் வசித்து வாழ்கின்ற மனிதர்களுக்கு ஆயிரம் வருஷம் ஆயுள்; புட்கரத் தீபத்தோர் பிரமாவைப் பூசிப்பவர்; கிரவுஞ்சத் தீவத்தோர் வருணனைத் தொழுவோர்; கோமேதகத்தீபத்தோர் சூரியனை வணங்குகிறவர்; சாகத்தீபத்தோர் வாயுவை யாராதிப்பவர்; சான்மலித் தீவத்தோர் சந்திரனைப் போற்றுவர்; குசதீவத்தோர் அக்கினியைக் கொண்டாடுவர்; நீர்வளம் பொருந்திய இந்த ஜம்புத் தீபத்தோர் மேலாகிய விதிமுறைகளுடன் கடவுளைத் தொழுதல், பூசை, சத்தியம், சவுசம், ஆகாரம், விபகாரம், ஞானம், இரக்கம், யாகம், ஓமம், ஔபாசனம், முதலிய மேலான வளங்களுடையவர்கள்; இத்தீவத்தை தேவபூமியாகச் சொல்லுவர்— என்றான். இதினுடைய தன்மைகளைக் கேட்டுச் சந்தோஷமடைந்து, கீழுலகம் ஏழென்று கூறிய கிரமத்தையுஞ் சொல்லென்று திரிதராஷ்டிரன்கேட்கச் சஞ்சயன் மகா சந்தோஷத்தோடு அதனையுஞ் சொல்லத் தொடங்கினான்—

ஐயா! யாவரும் வணங்கும் இந்தப் பூமியின் சம்பந்தமில்லாமல் அதோமுகத்திற் றாழ்ந்து சென்றால், ஆயிரம் பணமகுட முண்டய ஆதிசேடனுடன் அஷ்டகஜங்களுஞ் சூழ்ந்திருக்கும். அப்புவனத்தை நீக்கி அப்பாற் சென்றால், ஒப்பில்லாத பிலங்களாகிய அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்னும் ஏழுலகங்களுண்டு. ஒவ்வொன்று ஒன்பது

லக்ஷயோசனை விசாலத்தை யுடையது. இவ்வேழுலகத்தின் கடை யாகிய பாதாளத்தில், விவேகத்தில் மிகுந்த காண்டவ ரென்னும் மகாநுபாவர் பொருந்தி யிருப்பார். அவ்விடம் நீங்கிச் சென்றால், அள்ளலம், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என்னும் ஏழுநிரையமாகிய நரகபூமி யுண்டு. அந்த பூமியை நீங்கினால் தேவர்கள் தொழும் உருத்திர சங்கமாகிய சிவ பெருமான் கணேசர் முதலாகிய கூட்டமும், ஆதாரமாகிய ஆமையும் உண்டு. அவ்விடம் நீங்கினால் இந்த அண்டத்தின் கீழ்ச்சுவர் தோன் றும். அரசனே! இந்தப் பூலோகமுதல் அண்டச்சுவர் வரையிலும் ஐம்பதுகோடி யோசனை தூரமென்று பெரியோர் பேசுவார்கள். ஆதலால், இந்தப் பூலோகமுதல் மேலாகிய ஏழுலகத்தின் சீருஞ் சொல்லுகிறேன் கேளும்—இந்த மண்ணுலகத்தில் வாழுகிறவர்கள் அளவிறந்த யோனிபேதமாக வாழுமாக்களென்று உணர்ந்திருக்கின் றீரல்லவோ? அரசே! இவ்வுலகின்மேற் பத்து யோசனை தூரம் வாயுமண்டலம்; பதினாயிரம் யோசனை தூரம் மேகமண்டலம். இது வரையிலும் பூலோகம். அதன் மேலாகிய புவர்லோகத்தின் சிறப் பைக் கேளும்: அது கிம்புருடர், கருடர், விஞ்சையர், இந்திரர் இயக்கர், சித்தர் முதலிய பேர்கள் பொருந்தி வாழுமுலகம்; அதன் மேல் ஆகாய கங்கை செல்லுகின்றது. அப்பால் லக்ஷயோசனை தூரம் சூரியமண்டலம். அதுவே முப்பத்து முக்கோடி தேவர்களும் வழிக் கூட்டி நடக்க மண்டல வீதியா யிருக்கும். அதற்குமேல் லக்ஷ யோ சனை தூரத்திற் சந்திரமண்டலம். அதன்மேல் இரண்டுலக்ஷ யோ சனை தூரம் புதனுடைய மண்டலம். அப்பால் இரண்டுலக்ஷ யோ சனை தூரம் அங்காரகனுகிய செவ்வாய் மண்டலம். அப்பால் இரண்டு லக்ஷயோசனை தூரம் குருமண்டலம். அப்பால் இரண்டுலக்ஷ யோ சனை தூரம் சனிமண்டலம். அதன்மேல் லக்ஷயோசனை தூரந் தவத்தையுடைய சப்தரிஷிகள் மண்டலம். அப்பால் லக்ஷயோசனை தூரம் துருவ மண்டலம். இதுவரையிலும் பதினான்குலக்ஷ யோசனை தூரம் தொகையினையுடையது புவர்லோகம். இதன் மேலாகிய சுவர் லோகமென்பது எண்பத்தைந்துலக்ஷ யோசனை தூரமுடையது. அதைத்தான் தேவேந்திரன் வாழுந் தேவலோகமென்று சொல்லு வார்கள். அவ்விடத்தில் மார்க்கண்டேயர் முதலாகிய மகாமுனிவர் களெல்லாரும் வீற்றிருப்பார்கள். அதற்குமேல் எட்டுக்கோடி யோசனை தூரமுடையது ஜனலோகம். அவ்விடத்திற் பிதிர்த் தேவ தைகள் முதலிய புண்ணியர்கள் பொருந்தி வாழ்வார்கள். அந்த

ஜனலோகத்தின்மீது பன்னிரண்டுகோடி யோசனை தூரமுடையது தவலோகம். அவ்வுலகத்தில் ஸநகர் - ஸநந்தனர் - ஸநத்குமாரர் ஸநாதனர் முதலிய பேர்கள் வாழ்வார்கள். இந்தத் தவலோகத்தின்மேல் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மதேவர் வாழும் ஸத்திய லோகம்: அஃது பதினான்குகோடி யோசனை தூரமுடையது. இந்த ஸத்திய லோகத்தின்மேல் பிரம்ம பதமென்பது மூன்றுகோடி யோசனை தூரமுடையது. பரிமளங் கொண்ட துளவணி மாயன் பொருந்திய பதம் மூன்றுகோடி யோசனை தூரமுடையது. சிவ பெருமான் பொருந்திய சிவலோகம் நான்குகோடி யோசனை தூர முடையது. அதன்மேல் ஒருகோடி யோசனை தூரத்திற் குற்றமற்ற அண்டச்சுவர் வட்டங் கவிந்திருக்கின்றது. இந்தப் பிரகாரம் வேத வியாஸருடைய அநுக்கிரகத்தால் வேதபுங்கவர்களாகிய முனீசுவரர் கள் சொல்லி யிருக்கின்ற நான்முறையின்படி, இராஜ ராஜேஸ்வர னாகிய உமக்குச் சொன்னேன்.

சஞ்சயன் குருக்ஷேத்திர பூமியடைதல்

இவையல்லாமல் நூற்றெட்டு உருத்திரர்கள்வாழும் புவனங்களும் சமுத்திரமத்தியிலிராகின்ற இலங்கை முதலிய தீவுகளும், பற்பல வாக இம்மேதினியி லிருக்கின்றன. மேலும் நெருங்கியமலையருவி பெருகிவராகின்ற ஏமகூடத்திற்குத் தெற்காகவும், இமயமலைக்கு வடக்காகவும் இருக்கின்ற கிம்புருட வருடத்தில், பரமசிவனெழுந் தருளிய கைலையங்கிரி யிருக்கின்றது. அத்தக் கைலையங்கிரியினிடத் தில் அருச்சுனன் சென்று, அரியதவத்தினின்று, உமாமஹேசுவரரு ளினாற் பாசுபதாஸ்திரம் பெற்றான். இப்போது நான் சொல்லி வந்த இந்த அண்டகூடத்தை வளைந்து கொண்டிருக்கும் சக்கரவாளாகிரியின், எட்டுத்திக்கிலும், இந்திரன், அக்நி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்று சொல்லுகின்ற திக்குப் பாலகர்கள் தங்களரசரோடு பொருந்தி யிருக்கும் பட்டணங்கள் உண்டு. ஆகை யால் இப்போது நாமிருக்கும் இந்த பூலோக முதற்கொண்டு, நான் சொல்லிக்கொண்டுவந்த அண்டகோளகையளவும், பாஞ்சாசதகோடி யோசனையளவென்று பண்ணவர் பகர்ந்திருக்கின்றார்கள்— என்று சொல்லிக்கொண்டு வந்தபோது, இருகண்ணுமற்ற இறைவன் அகமகிழ்ந்து அதிசயமுற்று, சஞ்சயனை ஆலிங்கனமாக அணைத்துக் கொண்டு "அருணிறைந்த வேதவியாஸர் அநுக்கிரகஞ்செய்த வரத் தினால் நீ இந்த அண்டத்தினியற்கை முழுமையு முணர்ந்து, ஞானக்

கண்ணுடையவர்கள் அறிந்துகொள்வதைப் போல் யான் தெரிந்துகொள்ளும்படியாய் எனக்குத் தெரிவித்தனை. ஐயனே!. இனிமேற் குருக்ஷேத்திரத்திற்குச் சென்று, அவ்விடத்தில் இருதிறவர்களும் யுத்தஞ்செய்யு முறைமைகளும், அவர்களின் நினைப்பும், அவர்களின் கலப்பும் யாவுமுணர்ந்து எனக்குச் சொல்லவேண்டும்'' என்று விடைகொடுக்க, ''அப்படியே மகா பாக்கியம்'' என்று செலவு பெற்றுக்கொண்டு, தேவர்களாலு மளவிடற்கரிய அந்த யுத்த பூமிக்குப் போவதாயினன் சஞ்சயன்.

இவ்வாறு திரிதராஷ்டிர னுத்தரவைப் பெற்றுப் பிரயாணப் பட்ட சஞ்சயன் வேதவியாஸ முனிவரை மனதில் தியானித்துக் கொண்டுபோய்க் குருக்ஷேத்திரஞ் சேர்ந்து, அங்கு இரண்டு பிரிவாக அணிவகுத்திருந்த சேனை சைனியங்களை ஆகாய வீதியிற் சுழன்று சுற்றிப் பார்த்து, திடுக்கிட்டுச் சித்தப் பிரமைகொண்டு, இந்தச் சேனைகளை யெவ்வளவென்று வகுத்துச் சொல்லுவோ மென்றெங்கி. ''சொல்லுதற்கரிய ஏழு மேகங்களும் யானைகளாக உருவெடுத்து வந்தனவோ? உலகிலுள்ள மலைகள் எல்லாந் தேர்க்கூட்டங்களாக உதித்து உருண்டு வந்தனவோ? சமுத்திரத்தின் அலைகளெல்லாங் குதிரை யினங்களாகச் சமைந்தனவோ? பிர்மசிருஷ்டியிலடங்கிய உயிர்வகைக ளெல்லாங் காலபலங்களா யுற்றனவோ? இவைகளை எவ்வகையாக அறியலாம்'' என்று பெருமூச்சுவிட்டு, இந்த நால்வகைச் சேனைகளில் யானைக்கூட்டங்க ளதிகமோ? தேரினங்கள் மிகுதியோ? குதிரைக் குளம்புக ளதிகமோ? பதாதிகள் மிகுதியோ? அந்தப் பதாதிகளில் வில்லாளிகள் மிச்சமோ? வாளாளிக ளதிகமோ? கதையாளிக ளதிகமோ? இவைகளினுடைய மிகுதியை யெப்படி வகுத்துச் சொல்லுவோம்'' என்று மனங்கூசி, ''ஐயோ! இத்தனைகோடி சேனைகளும் இந்தப் பூமியில் இறந்து போவதற்கு ஈசுவரனுடைய அமைப்பிருந்த தல்லவா?'' என்று இரங்கி, ''அப்படி யெல்லாரும் ஏக காலத்தில் மடியும்படியாக யிருக்குமா? ஆகிலும் எப்படி யேனும் அடங்கலு மடிந்து போவதற்குக் காரணமும் காரியமும் எது எது வென்று நமக்குள்ளே நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்'' என்று நிதானித்துப் பின்பு ''இதற்குக் காரணமா யிருக்கின்றவர் ஸ்ரீகண்ணனே, காரியமா யிருக்கிறவன் துரியோதனராஜனே. ஆகையால், இந்த இரண்டு பேர்களாலே இந்தத் தளங்க ளெல்லா மடிந்துபோம். இத்தனைகோடி சேனை,

களுக்கும் இவர்களே எமனுக ஏற்பட்டிருக்கின்றார்கள்'' என்று சிந்தித்துச் சிறிதுநேரம் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியை மனதிலே தியானித்து ''ஓ ஸ்வாமி! ஸ்ரீமந்நாராயண! ஹரிவாசுதேவ! பக்தவத்ஸல! பரந்தாம! பரமபத நாதனே! வேத போதனே! கமலபாதனே! கவசீத சூதனே! ஆதிமூல வதிதனே! தேவரீர் திருப்பாற் கடலே விட்டெழுந்தருளிய வேலே நிறைவேறும்படியாகிய காலம் இதுவோ?'' என்றேத்தி வந்தித்து வாழ்த்தி, ''ஓ கருணையங்கடலே!'' என்று போற்றிப் புகழ்ந்து, அவ்விருதிறப் படைகளிலேயும் நாட்டியிருக்கும் பெரிய கொடிகளும், கையிற் பிடித்து நீட்டியிருக்குஞ் சிறிய கொடிகளும், மேகங்களே யிடித்துப் படபடவென்றடித்து உட்காய்ச்சல்கொண்டு ஆகாய கங்கையில் வீழ்ந்து சலத்தை யுறிஞ்சிக் குடித்துக் காற்றினல் மழைகளைத் தூற்ற, அந்தத் தூறல்களைப் பூமியில் விழவொட்டாமல் தடுக்க விரித்திருப்பது போலிருக்கும் சிறிய குடைகளும் பெரிய குடைகளும், நிறைந்திருக்கிற நால்வகைச் சேனைகள் முழங்கும் ஓசையும், ஓதற்கரிய சர்வ வாத்யங்களினது முழக்கமும், ஆயுதங்களுடனே யுதங்களுரைபடும் பேரொலியும், அவைகளிற் சூடெழும்பிப் புறப்படும் அனற்பொறியும், சேனாதிபதிகளாகிய பீஷ்மர் சுவேதனன் முதலிய வீராதி வீரர்கள் வில்லைக்கு நாணெலியும் அவரவர்கள் ஆகர்ண பரியந்தமிழுத்துவிடும் டங்காரத் தொனியும், அவர்களின் சிங்கார வீர ஓங்காரமும், பாணரீங்காரமும் அதிரதர் ஊதும் ஆண் சங்கினோசையும், மகாரதர் ஊதும் பெண் சங்கின் முழக்கமும், சமரதர் ஒலிக்கும் ஸ்ருங்கநாத வோசையும், இவைகளெல்லாங் கூடி ஓரே முகூர்த்தத்தில் முழங்கியபோது திக்குகளெட்டும் அதிர்ந்தன. திசையானைகளெட்டும் திக்கு முக்கிட்டன. அஷ்ட நாகங்கள் அலண்டழிந்தன. அண்ட பகிரண்டமதிர்ந் திரைந்தன. இவ்வாறு சேனைகள் நெருங்கியிருந்த குருக்ஷேத்திரத்தைக் கண்டு வந்து திரிதராஷ்டிரனுக்குத் தெரிவித்து, ''இனிமேல் நடக்கும் யுத்த முதலிய அதிசயங்களையும் அறிந்து கொண்டு வருகிறேன்' என்று செலவுபெற்றுக்கொண்டு, மீண்டும் யுத்த பூமியில் வந்திருந்தான் சித்த சுத்தியை யுடைய சஞ்சயன்.

கிருஷ்ணன் அர்ச்சுனன் சோகநீக்கிப் பகவத்கீதை யுரைத்தல்.

இப்பால் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியானவர் கால்களுக்குச் சல்லடங் தொடுத்து, கச்சைகட்டி, கபாயணிந்து, சிரமுடி தரித்து, சிந்தை களித்து பார்த்தசாரதியாய் மூர்த்தண்யத்துடன் இரதத்தைக் கொண்டுவந்து நிறுத்தி, அர்ச்சுனனை யழைத்து ஏற்றிக்கொண் டார். அப்பால் இருவரும் இருதிறச் சேனைகளையும் பார்த்துக் கொண்டுவரும்போது அருச்சுனனவன் பீஷ்மாச்சாரியார், துரோணச்சாரியார், கிருபாச்சாரியார், அசுவத்தாமா, துரியோ தனுதியராகிய சகோதரர்ள், புத்திர மித்திரர்ள், படைத்துணை கூடி வந்த பார்த்திபர்கள், தம்மை நம்பிப் பிழைக்கும்படியா யிருக்கிற வீரர்கள், ஏழைகளாகிய சேவகர்கள் இவர்களெல்லாரையுங் கண்டு 'ஐயோ! இவர்களைக் கொன்று யமலோக மனுப்பிவிட்டு அப்பாற் பிணந்தின்கிற பெரும்பூச்சியைப்போல் இந்தப் பூமியை யாண்டு கடைசியிற் மாண்டுபோனார்க ளென்று வசை மொழி பெறுவதிலும், இச்சை நீங்கி லச்சை விடுத்துக் கொச்சையர் போலப் பிச்சையெடுத் துண்பதே பெருவாழ்வா யிருக்கின்றதே! ஓ என் மைத்துனராகிய அச்சுதனே! நாங்கள் ஐவரும் பிழைக்க வேண்டி அளவிறந்த பேர்களைக் கொன்று அரசு புரிந்து அன்னமும் பாலும் உண்டு சாண்வயிறு வளர்க்குந் தன்மை எத்தன்மைபோல் இருக்கின்ற தெனில், பெரியோர் முதலிய உரியோருடைய உதிரத் திற் குழைத்த அன்னங்களுண்டு வாணாள் வளர்க்கு மகா பாவி களுடைய தன்மைபோ லிருக்கின்றதே! ஐயையோ! ஆயினும் எங் களை விட மகாபாவிகள் இவ்வுலகத்தில் வேறொருவ ருண்டோ? ஓ ஈசனே! இப்படியே வாழ்நாள் வளர்த்தபோதிலும் எத்தனை நாளைக்கிருந்து வாழப்போகிறோம்? பனிப்பெருக்கிற் கப்பலை நடத்தும் பான்மைபோ லொத்த தேகத்தை நம்பி ஈண்ட புக ழினையுடைய துரோணச்சாரியார் பீஷ்மாச்சாரியா ரென்னும் ஆண்டவர்கள் எல்லாரு மாண்டு போகச் செய்தார்கள் பாண்டவர் களென்னும் பழிச்சொல்லைப் பெற்றுப் பாவிகளாவதிலும், பழைய படிக்குக் காடேகாடாகக் கருதிச்சென்று அவ்விடத்திலிருந்து, வாடா மல் வதங்காமல் காலங் கழிக்கும் இடமெதுவோ? அதுவே கடவுள் வீற்றிருக்கப் பொருந்திய வீடாகக் கருதி, அங்ஙனே போய் நம்

முடைய அருவினைப் பயன்களை யெல்லா மொழித்து ஆனந்தமுற் றிருத்தல் உத்தமம். அந்தோ! காரியா காரியந் தெரியாமலும், கால நுட்ப முணராமலும், முன் பின் எண்ணிப் பாராமலும், முதிர்ந்த புத்தி யில்லாமலும், யுத்தஞ் செய்ய வந்தோமே'' என மன நொந்து, மெத்தவுகைத்து, மனமடுங்கி, மதிமயங்கி, அவரவர் பராக்கிரமத்தை மதிக்குந்தோறு மயிர்க்கூச்செறிய, முன் செய்து கொண்ட சபதங்களை நினைத்து வெகுளுந்தோறும் வியர்வை வழிய, கரங்களுங் கால்களும் தோள்களும் வாடக், கை வில்லுஞ் சோரக், கண்ணீர் தளும்பத், தேர்மீது மூர்ச்சையாகச் சோர்ந்து வீழ்ந்து நியங்கி மயங்கிய திடகாத்திர தேக தீர வீரப்பிரதாப சூர சிலமார ணுகிய விஜயனைத் தேவகிநந்தனன் திருக்கண்களாற் பார்த்து நகைத்து, ''எப்பேர்ப்பட்டவர்களாலும் அறியக் கூடாத நமது மாயையை இன்னது என்று இந்த அர்ச்சுனன் அறியத் தக்கவனோ! ஐயோ! இதென்ன இவன் பேச்சில்லாமல் வாயொடுங்கி மூர்ச்சை போயினன்? இவனை யிப்போதே தேற்றவேண்டும்'' என்று திரு வுள்ளத்தில் நினைத்துத் தமது கரங்களினால் அர்ச்சுனனை வாரி யெடுத்து மார்போடணைத்து, ஆலவட்ட முதலிய உபசாரங்களினால் மூர்ச்சை தெளிவித்து, ''அர்ச்சுன! அர்ச்சுன'' என்றழைத்தார். அந்தக் கிருஷ்ணபகவா னுடைய வாக்கியமாகிய அமுதம் விஜயன் காதிற் புகுந்தவுடனே விடாய் நீங்கி விழிப்பவரைப்போற் கண் விழித்துப் பார்த்து, காவிற் சலமூறி கல்லுளர்வுடனே தேறி காரண னைத் தொழுது தானே காரணனென் றழுது சொல்லத் தொடங் கினன் கருணாகர பற்குணமகாராஜன்:—

''ஓ ஆபத் பாந்தவனாகிய ஐயனே! என் கண்களோ இருளு கின்றன! கருத்தோ அழிவுறுகிறது! கால் கைகளோ நடுங்குகின்றன! கண்ணீரோ கடல்போற் பெருகுகிறது! இரக்கமும் தயையும் இப் போது தோன்றுகின்றன! எண்ணுது மெண்ணுகிறது! என்மனங் குன்றுகிறது! என்னை இவ்விடத்திற் கிறுத்தி வைக்காமற் பாச றைக்குக் கொண்டுபோம் பரமனே'' என்று பரிதாபமாய்ப் பற்குனன் சொல்ல, அந்த வார்த்தையை வாசுதேவன் கேட்டுப் புன்னகை யுடையவராய் ''அப்பா அர்ச்சுன! உனக்கிப்போது கண் டிருக்கும் திகிலானது தேகத்தோ டொத்த வியாதியோ! அல்லது தேசத்தோ டொத்த பாசபந்த உபாதியோ? இதென்ன ஆச்சரியம்! காண்டீபனே! அங்க தேசாதிபதியாகிய கர்ணன் உன் தலையை

வாங்குகிறே னென்று அடி நாளிற் சபதம் பண்ணி யிருப்ப தல்லாமலும், உனக்குப் பகையாகிய அசுவசேன னென்னும் பெரும்பாம்பை ஆதரித்து வளர்த்துக்கொண்டு வருகிறான். அவனிடத்தில் ஆலகால விஷத்தையொத்த நாகாஸ்திர மிருக்கிறது. ஐயோ நம்மை அது கொல்லுமே யென்று பிராண பீதிகொண்டு பயப்பட்டாயோ பார்த்தனே! மேலும் அறுபதினாயிரம் வெண்கல ரதக்காரர் என்று வந்திருக்கிற சம்சப்தகா ளென்னும் அரக்கர்கள் மிகுந்த பலசாலிகள்; தவமுதலியவற்றிற் சிறந்தவர்கள்; அவர் களைக் கண்டு மூர்ச்சைபோயினையோ? அன்றியும் சகல கலமும், சர்வபலமும், தனக்கெதிரற்ற வரமும் பெற்ற சகஸ்திர வாகு வென்று சொல்லும்படியாகிய மகா திடவீர காத்திர பராக்கிரம முகிய தானவர் சிரேஷ்டனுடைய அடலாயிர பாகுவைக் கண்டு அடங்கி யொடுங்கினையோ? ஓ அர்ச்சுனு! சுத்திர ஜடாமண்டல தாரியாகிய சதாசிவத்தியான மோன மந்திரத்தை அநுசரித்துத் தவ மிழைத்துச் சிவபெருமானிடத்தில் வாளாயுதமும் வரமும் பெற்று வந்திருக்கிற சித்து தேசாதிபதியாகிய சயித்திரதனைக் கண்டு சண்டை செய்ய பயங்கொண்டு அண்டையிலிருக்கிற நான் உறுதி சொல்லி யுத்தம் பண்ணச்சொல்லுவே னென்று நடுங்கி நாவ றண்டு நாபி வறண்டு மூர்ச்சைபோய் விழுந்தாயோ? ஓ நரனே அல்லது தாஷ்டீகராகிய பீஷ்மாச்சாரியார் சேனாதிபத்துவத் திற்கு வந்து நிற்கின்றாரே அவரை நாம் எந்தக் காலத்தில் வெல் லுவதென்று நினைத்து ஏங்கினையோ?" என்று கேட்டார். பாராள வேண்டுமென்று இஷ்ட மில்லாமற் பரிதாபத்துடன் மனவெறுப்புக் கொண்டிருக்குஞ் சவ்பசாசிக்குக் கோபம்பிறந்தது; கண்கள் சிவந் தன; மாலைகள் கருகிச் சருகாயின; உடம்பு முழுவதும் வியர்வை யோடியது. பெருமூச் சுண்டாயது. பின் அவன் சற்று நிதானித்துக் கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து, "என் குலதெய்வமே! தேவரீ ரென்ன சொன்னீர்? என்ன சொன்னீர்? பளா! பளா! வெகு நேர்த்தி!" என்று யாவருங் திடுக்கிட கைத்து இதனைச் சொல்வ தானான்—

ஐயனே ! என்னுடைய அருமை பெருமை யாவுந் தெரிந்த அத்தனே! பரிசுத்தனே! தேவரீருடைய சித்தம் இப்படிப் பேசு வதற்கு இஷ்டங்கொண்டிருக்குமானால், நான் செய்ய லாவதென்ன? ஆகிலும் இறந்துபோவோ மென்னுங் கவலை யெனக்கு எள்ளள

வேணுமில்லே. யானைக்குச் சிங்க மினைக்குமாகில், ஆடரவுக்குக் கருடனஞ்சுமாகில், ஆட்டுக்குப் பெரும்புலி யலறுமாகில், ஆய்ந்து கன்னூலனைத்து முணர்ந்தமேலோர் அசத்தியவாக்கியக் குடியருக்கு அஞ்சுவாராகில், அழியாப் பொருள்பெற்ற ஸ்ரீமந்தர் அழிந்து போகும் அற்பமாகிய பொருளைக்கண்டு, கண்தெரியாமல் அலையுங் கடையருக்கு அஞ்சுவார்களாகில் நானு மிந்தச் சத்துருக்களைக் கண்டு பயப்படவேண்டியதா யிருக்கும்; ஓ தேவாதிதேவனுகிய மகா தேவனே! உத்தமகுல க்ஷத்திரியர்களுக்கு, ஞானம், தவம், விரதம், கருமம் ஆகிய யிவைகளைச் செய்து காலம் போக்குவது உத்தமம். அப்படிக் கில்லாமல் வெகுளிமேற்கொண்டு யுத்தக் கொடித்துப் பகைவரை வென்று பாராள நினைப்பது அஞ்ஞான மென்றறிந்தேன். ஐயனே! அதுநிற்க, இந்தக் கர்மபூமியிற் றோன்றியதெல்லாம் மாண்டு போகும் பொருளே யல்லது வேறில்லே. மேலும் தோலின் துருத்தி போலும், சூத்திரப் பொம்மைபோலும் விளங்குகின்ற தேகம் இது. எத்தனே காலைக்கிருந்தாலும் இறப்பதே யல்லது, இறவாமலிருக்குஞ் சிறப்பென்பதிதற்கில்லே. ஈசனே! இன்றையதினம் நானிந்த ரணகளத்திற்கு வரவும், வெகு ஜனங்களைப் பார்க்கவும, இவ்வளவு பேரு மடிந்த அன்றைக்கல்லவோ நமக்கு ஜயம் வருமென்றும், இவர்களைக் கொல்லாவிட்டால் நமக்கு அபஜயம் வருமென்றும் நாமே கொல்லுவோமென்பதற்குச் சாக்ஷி யென்னவென்றும், இவர் களெல்லாரையு மடித்துக் காத்திற் செங்கோற்பிடித்து மண்ணே யாளலாமென்று நம்பிவந்த நாமிறந்து போனுல் என்ன லாபமென் றும், அப்போது கானலே நீரெனக் கருதி அலையுங் கலையினத்தைப் போலாகுமே யென்றும் நாம் வெற்றி யற்றிருந்தாலும் வீரம் விட்டிருந்தாலும் பாருள்ளவரைக்கும் பழியும் பாவமும் வளருமே யென் றும் நினைத்து இந்தக் கருமவினைக் கீடாகாமல் தருமவினையை அநுசரித்துப் பெருமை தங்கிய வனத்திற் சென்று அருமையாகிய தவத் தினின்று காலங் கழிப்பதே நற்காரிய மென்றுக் கருதினேன். உடனே இரக்கமும், அதைரியமும், உறக்கமும், மனமடிவும் ஆகிய இவை கள் மேலிட்டு வருந்திச் சோர்ந்து வீழ்ந்து விட்டேன். மாதவனே! தேவரீருடைய சித்தமெப்படியோ நானறியேன்" என்று சொன்னன். அந்த வார்த்தைகளே யெல்லாம் அரிவாசுவேதன்கேட்டு அகமகிழ்ந்து தமது திருக்கரத்தால் அர்ச்சுனனைச் சேர்த்துத் தழுவி யெடுத்து அணைத்து ஆதரித்துத் தேற்றிச் சிந்தை தெளியச் செய்து "நீ கொண்ட சந்தேகநீங்கும்படியாகச் சில சொல்லுகிறேன். பயமகற்றிப் பாழுக மில்லாமற் பகலாய்க் கேள் பார்த்தனே" என்று பரா சாமன் சொல்லத் தொடங்கினர்—

"ஓ பாரமார்த்தியனகிய பற்குனனே! மித்துருவென்றும், சத்துருவென்றும், சுஜனங்களென்றும், வெகு ஜனங்க ளென்றும், பாட்டனரென்றும், பந்துக்களென்றும், ஆசாரியரென்றும், சீஷரென்றும், தமையனென்றும், தம்பிகளென்றும், புத்திரவர்க்க மென்றும், மச்சானென்றும், மாமனென்றும், சாகத்தக்க பேரென்றும், இருக்கத்தக்க பேரென்றும், கொல்லதக்க பேரென்றும், ஊழ்வினைப் பயனைத் தள்ளிப் போகத்தக்க பேரென்றும்; அதனைத் தள்ள வறியாது தவித்திருக்கும் பேரென்றும், உன் மனத்துட் கொள்ளத்தக்க தொன்றில்லை. வீணகிய ஆசாபாசங்களினல் இவர்க ளெல்லாரையும் எப்படி கொல்லத் துணிவோ மென்றும், கொன்றுற் பாவமும் பழியும் நமக்குச் சுமையாகுமே யென்றும், நீ யேன் மயங்குகிறாய் ? அர்ச்சுன! (சுமைதாங்கி ஆயந் தீர்க்கப் போகிறது மில்லை; சுவரிலெழுதிய சுந்தரச் சித்திரங் காக்கப் போகிறது மில்லை.) என்பதுபோல் உன்னுற் சிலர் சாகிறதும், நீ சிலரைக் கொல்லுகிறதும், நீ சிலரை வெல்லுகிறதுமா யிருக்குமன்று யோசிப்பையாகில் மற்ற காரியங்களெல்லாம் உன்னல் நடத்திக் கொள்ளலாமல்லவா? அப்படியெல்லாம் நடத்த வல்லவனு யிருப்பாயேனும், முன்னுல் நடந்த காரியங்களை யோசித்துப் பார்க்க வேண்டிய தல்லவா? இப்போதாகிலு முனக்குத் தெரியவில்லையா? அப்பனே! ஒரு காரியத்தை முடிப்பவனுர்? முடியத்தக்கது யாது? கொல்லுகிறவனுர்? கொல்லப்படுவது யாது? எது சாகத்தக்கது? எது சாகாமற் போகத்தக்கது? எவர் உறவினர்? எவர் பகைவர்? இஷ்டரெவர்? துஷ்டரெவர்? சவுக்கியமெது? அசவுக்கியமெது? நன்மையெது? தீமையெது? அர்ச்சுன! நான் சொல்லுவதைக் குறிப்பாகக் கேட்கக்கடவை. அஃதாவது, இவ்வுலகத்தில் நாமரூபங்களாகப் பேசப்படும் பொருள்க ளெவையோ, அவைகளுக்கெல்லாம் பழமையா யிருக்கும்படியாகிய ஆதியை, எங்கும் பரிபூரணமா யிருப்பதை, ஒப்பில்லாத் தன்மை யுடையதை, நித்தியதத்துவத்தை, நின்மலத்தை, நிர்விஷயத்தை, நீலிபெற்றிருக்கும் பேற்றை ஐம்புலன்களாலும் அறியப்படாத நுட்பமாகிய அறிவை, தனக்குத் தானுயிருக்குந் தத்துவ சொரூபத்தை, நீ இன்னதென் றுணராமற் சண்டை செய்யப் புறப்பட்டு வந்தனுல், அவை யெல்லாம் இறந்துபோமென்று நினைத்து வருந்துகின்றாய். அர்ச்சுன! எது இறக்கத் தகுந்தது என்று கிருஷ்ணன் கேட்க, அர்ச்சுனன், "ஸ்வாமி! தேவர்ர் சொல்லிவந்த வஸ்துவானது எப்போதொரு

பெயரைப் பெற்றதோ, அப்போது பலவித துன்பங்களினாலும் அதற்குக் கேடுண்டல்லவா?" என்று கேட்க, கண்ணன், "கீர்த்தி கொண்ட பார்த்தனே! நீ கேட்ட கேள்வி நியாயமேயாகிலும் நான் சொல்லப்போகிற பொருள் எப்பேர்ப்பட்ட தென்றால், யுகாந்த காலாக்கினியினாலும் வேகாதது. பிரசண்ட மாருதத்தாலுங் கலங்காதது. ஏழுகடலும் பொங்கி வழியுஞ் சலப் பிரளயத்தாலு மிறக்காதது. ஆதிசேடனுடைய பணமுடிகளிடிய இடிக்கும் பேரிடி யாலும் உடைபடாதது. ஒரு பொருளையும் விட்டு நீங்காதது. அது உருவென்பதுவும், அருவென்பதுவும், ஒளியென்பதுவும், வெளியென்பதுவும், உளதென்பதுவும், இலதென்பதுவும், அற்றுப் பேரறிவின் பெயரைத் தாங்கி, எங்குந் தன்மயமாய் எவற்றினு மழியாத வஸ்துவா யிருக்கிறது. அவ்வஸ்துவை நீ கைக் கொண்ட அல்ப ஆயுதங்களால் மடியச் செய்யுந் தன்மை, உன்னிடத்தி லுண்டோ? ஓ வாசவன் மகனே" என்று சொன்னார். அந்த வார்த்தையைக் கேட்ட விஜயன் "ஸ்வாமி! தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய ஜீவான்மாவென்னும் வஸ்துவானது அழிவில்லாதது என்றால், உயிர் போய்விட்டதென்று உலகத்தார் சொல்லுகின்றார் களே! அவ்வுயிர் நீங்கிப்போவானேன்? அழிவில்லாத ஆன்மாவைத் தாங்கிய உடலுக்கும் அழிவு வருவானேன்? இந்த ஸ்தூலதேகத்தை விட்டு நீங்கிய வுயிர் எவ்விடஞ் சேரும்? அடியேனுக்குக் கட்டளை யிடுமென்று" காண்டீபன் கேட்டான். கண்ணன் "கேளப்பா, அர்ச்சுனா! இவ்வுலகிலுற்ற மானிடர்கள் தேகாபிமான அலங்காரங்களுக்காக உடுத்துக்கொள்ளும் வஸ்திரங்கள் அழுக்கடைந்து கந்தையாகிப் போகுமாகில், பற்பல தினுசாகிய புது வஸ்திரத்தைத் தரித்து போர்த்துக் கொள்ளுவதைப்போல், இந்த ஸ்தூலதேகமானது வியாதி முதலிய சோகாதிகளால் நொந்து நீங்கிவிட்டால், புதிதாகிய இன்னொரு தேகத்திற் புகுந்து விளையாடிக்கொண்டிருந்து அந்தத் தேகமும் வேறொன்றால் நைந்துபோமானால், இன்னொரு தேகத்தினு ழைந்து கூத்தாடிக்கொண்டிருக்கும். அப்பனே! யாவருஞ் சிந்திக்கும் படியாகிய உலகினைந்த உண்மைப் பொருளுக்கு ஒருக்காலும் அழி வில்லை. உடலுக்கு மாத்திரம் அழிவுண்டு" என்று மாதவனுரைக்க, அர்ச்சுனன் கேட்டு மனமகிழ்ந்து, "நாதனே! அகப்பற்று புறப்பற்றும் நல்வினை தீவினையும் ஷட் கர்மங்களும் உயிர்க்குரியனவா? அல்லது உடற்குரியனவா?" என்று தனஞ்ஜயன் கேட்கப் பரந்தாமன் "அப் பனே! நீ யென்பதுவும் நானென்பதுவும் உன்னுடைய தென்பதுவும்

என்னுடைய தென்பதுவும் உனதுலென்பதுவும் என்னுலென்பதுவும் இரண்டு வினையும் ஆறுவிதக் கருமமும் உடலுக்கே யன்றி உயிருக் கொன்று மில்லை," என்றுரைத்து மேலுஞ் சொல்லுகின்றார்— "ஓ காண்டீபனே! இவ் வுலகத்திற் பிள்ளையை ஆர் பெற்றார்கள்? அந்தப் பிள்ளைக்குத் தானுகரணபுவன போகாதி முதலிய செயல்கள் எவரால் நேரிட்டன? எவர் பெற்றுக்கொண்டார்கள்? எவரென்னும் அவர் பிரிந்தால் அவர் எந்தயிடத்திற்போய்ப் பொருந்தி யிருப் பார்? இவைகளினுடைய காரியங்கள் முன்னுந் தெரியார். இனிப் பின்னுல் நடக்கப்போகிற செயலுந் தெளியார். ஆதியும் அந்த மும் தெரியாமல் மத்தியில் தாமுயன்ற முயற்சியின்படி, தானே தகப்பனென்றும் தனக்கவன் பிள்ளையென்றும் கினைத்துக்கொண்டே யிருந்து தாமிறந்துபோனுல், இந்தப் பூமியில் விழுந்து துக்கத்தை அநுபவித்து வருந்துவோர்கள் யார்? எங்களுக்குச் சொந்தமென்று ஏன் மயங்கவேண்டும்? ஒருவருக்கு மொன்றுமில்லை. அர்ச்சுன! பிராரத்துவ வினைப் போகத்துக் கீடாய்ப் பிறக்கும்படியானது உடல். அந்த உடலிற் கடாகாசம்போற் நேர்ன்றிக்கொண்டிருக் கின்றது உயிர். அதாவது ஆகாயத்தி லுதித்த ஒரு சூரியன் தண்ணீர்க் குடங்கள்தோறும் பல சூரியனுகக் காணப்படுமாப்போல் சொரூபமாகிய ஜீவான்மா வொன்று பல தேகங்கடோறும் பிரதி பலித்துக்கொண் டுலவுகின்றது" என்று உத்தமன்சொல்ல, வெற்றி பெற்ற விஜயன் "சுவாமி எல்லாவிஷயமும் உடலுக்கே யென்றல் ஆன்மாவுக்குச் சம்பந்த மொன்று மில்லையா— ?" என்று அர்ச்சுனன் கேட்கக், கண்ணன் சொல்லுகிறார்—

"ஓ அர்ச்சுன! ஆன்மாவுகுச் சம்பந்தமுண்டு. அதெப்படி யென்றல், தேகவாசனை விஷயத்தாற் கருமங்க ளெல்லாந் தன்னுடை யவையென்று பார்ப்பதனுல், விதித்திருக்கின்ற இரு வினையின் பிரயோசனத்தைத் தானும் அநுபவிக்கும். அதற்காகவே பெரி யோர்கள் பேசியிருக்கும் வாசக மென்ன வென்றல், எதுவுந் தனக்குச் சம்பந்த மில்லாமல் எல்லாம் அவன் செயலென் றுரைத்து இன்னெருவ னிருக்கிறு னென்று தள்ளிவிட்டால் யாவும் என்னைச் சேருமென்பதுதான். ஓ விவேகத்திற் சிறந்த விஜயனே! மகாமாயை களைத் தொலைக்க மகான்கள் அறிந்து நடக்குந் தூய்மை யென்பது இதுதான். நீயும் அப்படி நீக்கிவிடாமல் எல்லாம் உன்னுல் ஆகு மென்றுன்னி நலிந்து வருந்தினை. இந்திரன் மதலாய்! இன்னமுங் கேள்—யார் பெற்றவர்கள்? யார் வந்து பிறந்தவர்கள்? நேசமானவர்

கள் யார்? நேசமில்லாதவர்கள் யார்? நாசமானவர்கள் யார்? நாசம் இல்லாதவர்கள் யார்? உறவார்? பகையார்? உற்றுப் பார்க்குமிடத்தில் ஒன்றுமில்லையே, கற்றுணர்ந்த காவலனே! யாவும் அவன் கட்டளைச் செயலென் றுட்கொண்டால், குற்றமென்ப தொன்றும் விளையாது. கொடியவினைக் கிடாகவு மாட்டார். மேலும், மாயை யென்னும் பெண்ணினவள் மன மென்னும் பிள்ளையைப் பெற்றுள். அந்த மனமென்பவன் அறிவென்னும் சுதனை நல்கினன். இம் மூவருக்குள் தாய் தந்தைய ரென்றும், பத்னி புத்திர ரென்றும், இவர்களிடத்தில் நாட்டம்படியாகிய ஆசா பாச நேசம் அம்மாயை யென்பவளாலும் மனம் என்பதனாலும் விளையா நின்றது. அந்தச் சமயத்தில் அறிவென்னும் பிள்ளை பிரவேசிப்பானாகி வினைகளை யெல்லாம் நீக்கி விடுவான்; ஒருவரையும் சேரவொட்டான். அதனால் அந்த மாயையும், மனமென்னும் பிள்ளையும், அறிவனைத் தள்ளி ஒரு கக்ஷியா யிருக்கின்றார்கள்.

இவையல்லாமல் மெய், வாய், கண், செவி, மூக்கு என்னும் ஐம்பொறிகளி னுடனேயும், சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்த மென்னுந் தன்மாத்திரைகளி னுடனேயும், ஞானம், அருள், தவம், பொறுமை, சத்தியம், வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி யடக்கல் இவ்வெட்டு முடைய சாத்வீக குணத்தினுடனேயும், மன ஊக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி இவ்வெட்டுமுடைய இராசத குணத்தினுடனேயும், பெருந்தீனி, நெடுந்தூக்கம், கடுஞ்சோம்பல், கெடுநீதி, துட்டநடத்தை, வஞ்சகம், மறதி, பொய், கோபம், காமம்-கொலை-இப்பதினெறுமுடைய தாமத குணத்தி னுடனேயும், மற்று மறுவகைப் பண்களுட னேயும் பழகி அரசாட்சி செய்யும் இந்த மாய உலகினை வணங்கித் துதித்து நித்திரை கொள்ளும்போது, ஒளித்து நின்ற அறிவனென்னும் அவ் வரசன் தோன்றுவான். இத்தன்மையாகிய நன்மை நிறைந்த அறிவனென்னும் அரசனை அறிந்தவ ரெவரோ அவரைத்தான் அறிஞரென்று போற்றிப் புகழ்வது. அன்பனே! பிரம்மாவினால் வகுக்கப்பட்ட சராசரப் பொருள்கள்தோறும் பாலும் நெய்யும் போல் உயிர்க் குயிராகிப் பொருந்தி வாழ்வைப் பெற்றுக்கொண் டிருக்கும் இத்தப் பந்தங்களை யுணர்ந்து நாமுமனையினுநிலை நாட்டி நேரிற் பார்க்குமிடத்து நமக்கு ஆர் உறவு? ஆர் பகைவர்? அப்பனே! ஆகையால் நீயும் நானும் மற்ற நிருபர்களும் பின்னுமுள்ள சகல வுயிரும் பிறந்து இறப்பதும் இறந்து பிறப்பதும் இல்லை யென்று

யோசிக்கக் கற்றுணர்ந்தோர் ஒரு காலத்தினும் அம் மாயையினுற் கலங்க மாட்டார்கள்'' என்று கூற, அர்ச்சுனன் இந்த வசனத்தைக் கேட்டு, ''ஸ்வாமி! ஒருவரும் இறக்கமாட்டார்களென்றுல் பார்த்த போர்களே மறுபடியும் பாராதிருக்குங் காரணமென்ன? யார் நீங்காம விருந்தார்கள்? அதினுடைய நிச்சயத்தை அடியேனுக்குச் சொல்ல வேண்டும்'' என, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ''ஓ விஜயனே! இவ்வுலகத்திற் பிறந்து இறக்கும்படியானது உடலுக்குற்ற விதியேயாம் நித்திய மாய் நினது சொரூபமாகிய ஆன்மா இறந்து பிறக்கத் தக்கதில்லை'' என அர்ச்சுனன் கேட்டு, '' கர்த்தனே! என் சொரூபம் ஆத்மா வென் றுரைத்தீர். என் சொரூபமென்பது அங்கம் இந்திரிய முத லாகிய இவைகளா யிருக்குதே யல்லது நானென்பது வேறு பிரிந்து காணவில்லை. இந்த இடத்தில் நான் வேறுக யிருப்பதைச் சொல் லும்'' என்று கேட்க, ''மெய்ம்மையாகிய ஆன்மா அவயவ மாகிய அங் கமும் இந்திரியமுமே யல்லது வேறுக யில்லையே பென்று கேட்டவ னெவனோ அவனும், அவனுல் தானே அறியப் படாதவனும் நீயா யிருக்கின்றாய்'' என்று சொல்ல, அர்ச்சுனன் ''நல்லது, ஐயனே! தேகம் பிறந்து இறக்குமாகில் அதைச் சேர்ந்த அறிவனென்பது எங்கே?'' என்று கேட்க, '' தூக்கமாகிய கருமவினைத் தொடர்ச்சிப் பொருளாவன்'' என்று ஸ்வாமி சொல்ல, ''தேக வுற்பத்தியாகு முன் னமே கருமச் செயல் எப்படி வரும் விதம்'' எனக் காவலன் வினவ, ''வித்துள்ளொடுக்க மரமென்றும் மரத்துள்ளொடுக்கம் வித்தென்றும் சொல்லும் வகையாம்'' என்று கண்ணன் பேச ''நல்லது ஸ்வாமி! தேகமும் ஆன்மாவும் வேறென்றுரைத்தால் கரும வினையைச் செய்தவர்கள் யார்?'' என்று காண்டீபன் கேட்க, ''தேகமே வினைத் தது, அந்தத் தேகமே அவ்வினையின் கருமத்துக் குரியதன்றி ஆன்மாவுக்கு நிமித்தமில்லை'' என்று ஆண்டவன் சொல்ல, ''தேவரீ ருடைய வாக்கியப்படி உடலானது கருமத்தைச்செய்தால் அதனுல் வரும் பலனை ஆனுபவிப்பது'' என்று அர்ச்சுனன் கேட்க, எல்லா பலனும் உடலுக் கல்லது உபிருக் கில்லை என்று உத்தம னுரைக்க அதைக்கேட்டு ''ஸ்வாமி! வெவ்விய உடலே வினைப்போகத்திற் குரி யது என்றீர். அந்த உடலானது எல்லாவற்றையும் செய்து இந்தக் கர்ம பூமியில் மாய்ந்து வீழ்ந்து போக ஜீவாத்மா நடுநடுங்கிச் சுவர்க்க நரகத்தை அனுபவிக்க வேண்டிய காரணம் என்ன சொல் லுங் கர்த்தனே'' என்று கேட்க, ஸ்வாமி ''அர்ச்சுன! உலகத்தில் தரு கரண புவனபோகச் செயல்களைத் தனதென்று சார்ந்திருந்த

தன்மையைப்போல், நரக சுவர்க்க அநுபவமென்று சொல்வது மாத்திரமே யல்லது ஆன்மாவுக்கு நரக சுவர்க்க அநுபவமில்லை. உண்டென்று பேசுவது வீணுரோபிதம்" என்று விளம்ப, "இத்தன்மையாகிய உடலின் செய்கைக ளெல்லாம் ஆன்மாவின் பேரிலேறும் படியாகிய மயக்க மென்ன?" என்று தனஞ்ஜயன் கேட்க, "முற்று முணரும் படியாகிய கல்லறி வில்லாத மோகத்தினுல் ஏறியது" என்று கிருஷ்ணமூர்த்தி சொல்ல, "அவ்வறிவானது தேகத்திற்கோ அல்லது ஆன்மாவுக்கோ" வென்று அர்ச்சுனன் கேட்க, "நீ கேட்ட கருத்தைப் பிரித்து சொல்லுவோமாகில், உடலானது அசத்து. உயிரானது சத்து. இந்த உயிரினறிவானது தான் பிரமம்" என்று உலகளந்தோ னுரைக்க, அதை அர்ச்சுனன் கேட்டு, "ஐயா! தேகம் அசத்தாகில் இந்தச் செயலெப்படி வரும்" என்ன, "ஏகமாகிய ஜோதி உள்ளிருத்தலாற் காந்தம் ஊசியை யிழுப்பதுபோல் இழுத்தது" என்ன, "தேவரீர் சொன்ன செயல் உடலுக்காஞற் சுகதுக்க மாருக்கு" என்ன, "உடம்பினுக் கென்று" கோவிந்தன் சொல்ல, "சேதன ஆன்மாவைச் சேராத சுகதுக்கம் அசேதனமாகிய தேகத்தைச் சேருமா?" வென்ன, "புலன், பொறி, பூதம், உயிர், அந்தக்கரண மென்னும் ஸ்தூல சூக்கும மென்னும் ஈருடலாகிய மனத்துக்கேயின்ப துன்பம்" என்ன, "ஆஞல் ஸ்தூல சூக்கும மிருவகையுடலுக்கு ஏது?" என்று கேட்க, "ஜன்மாந்திர காரணத்தால் ஸ்தூல சூக்கும காரணமென்று மூன்றுடலாம்" என, "நல்லது, மனமறியுந் துக்க சுகத்தை அவா வென்றுரைத்தீர், இந்த மனம் சேதனமா அசேதனமா சொல்லுமையா" வென்று கேட்கக் கண்ணன் "அப்பா பார்த்தா! இந்த மனத்தில் ஆன்மாவானது பேதமறவிருக்குந் தன்மைபோற் றோன்றலால், சுகதுக்கத்தைச் சேதனமாகிய மனமே பெறும்" என, "இந்த மனம் பெற்ற சுகதுக்கம் இதனிடத்தினில்லாமல் ஆன்மா மருவவேண்டிய தென்ன?" என்று காண்டீபன் கேட்க, "வெப்பமும் தட்பமும் மேல்வைத்த பாண்டத்தி னுள்ளிருக்குஞ் ஜலத்திற் றோன்றுவதைப்போல்" என்று கண்ணன் உரைக்க, "சித்தாகிய பிராணனும் ஜடமாகிய சித்தமும் எப்படி ஒத்திருக்கின்றன?" என, "இரும்பும் நெருப்பும் பொருந்தியதைப் போல் விவேகத்தின் பண்புகொண்டு, ஆன்மாவும் மனமும் அனுகூலித்தது" என, "இப்படிக்குக் கூடிய ஆன்மாவும் மனமும் எப்போதாகிலும் பிரியுமோ?" என்ன, "செம்பானது நிறங் காட்டிக் களிம்பேறுவது போலும், அடித்ததைக் காட்டும் பளிங்குபோலும்,

க்ஷணத்திற்கு க்ஷணம் பிரிந்து மறைந்து கலந்துகொண் டிருக்கத் தக்கது. மேலும் படிகம்போ லொத்த சொரூபம் ஆசாமலின மனோபந்தத்தால் வந்திருக் கின்றமையால், முக்தியில்லை" என்று முகுந்தனுரைக்க, "பந்தமாவது எது? முக்தியாவதெது?" என்று பார்த்தன் கேட்க, தேசாபிமான மென்பது பந்தம், அந்த பந்த மறுப்பதே முக்தி" என்று பரமனுரைக்க, அர்ச்சுனன், "அபிமானம் வருவதும் அதை யொழிப்பதும் எவ்விதம்?" என, "அஞ்ஞானத் தால் அபிமானம் வரும். மெய்ஞ்ஞானத்தால் அபிமானம் நீங்கி முக்திபெறும், அந்த மெய்ஞ்ஞானம் துலங்குமாயின் எப்போதுமானந் தமுண்டு" என்று ஹரிசொல்ல, "அந்தப்படிக்கு விளங்குவதற்கு வேதாந்த சாஸ்திரங்களினுலும் ஆசாரியராலும் ஞானம் பெற்ற போதிலும், பொல்லாங்காகிய துக்கசுகந் தீராமலிருப்பது யாது காரணம்" என்று விஜயன் கேட்க, சாஸ்திரங்களினுலுங் குருவுப தேசத்தினுலும் வந்த பரோக்ஷ ஞானத்தாற் பற்றறமாட்டாது, அது போகமான அபரோக்ஷ ஞானத்தாற் பற்றறவேண்டும்; அதெப்படி யெனில், ஓ அர்ச்சுன! தீபமென்று வாக்கினுற் சொன்னல் இருள் நீங்குமோ? கேள்வியினுலும், மனனத்தாலும், யோகாப் பியாசத் தாலும், பிரமாநுபவத்தாலும் தீரவேண்டுமே யொழிய, மற்ற விதங்களால் அப்பற்றுத் தீராது" என்று திருமா லுரைக்க, "அஞ்ஞானத்தை நீக்கத் தெரியாத நற்கருமம் மெய்ஞ்ஞானத் தைத் தாங்கும் வித மெப்படி?" என்ன, "இந்திரஜாலம்போற் றந்திரமாகு மிவ்வுலகத்தைக் கிளிஞ்சிலிற் றோன்றும் வெள்ளி யின் கிரணம்போலும், கனவு போலும் என்னிடத்திற் காட்டி யிருக்கின்றோம். அது சத்தியமல்ல" என்று தாமரைக் கண் ணன் சாற்ற, "ஐயா உலகத்தைக் கனவு போலென்றீர். இதோ பிரத்தியக்ஷமாய் விளங்குதே" என்று அர்ச்சுனன் சொல்ல, "அஞ்ஞானமிருக்கும் வரைபிலும் இப்படியே தோன்றும். மெய்ஞ் ஞானம் வந்தால் உலகமென்னுமாயை விட்டோடிப் போம். அல்லா மலும் பிரமனென்றும் ஈசனென்றும் பெருமாளென்றும், பலகோடி ஜீவனென்றும் சொல்மயக்கமாகச் சொல்லுவதல்லது, ஆன்மா வொருவனே: இதை யுன்னிப்பார்க்குமிடத்து உலக மித்தையாம். அவாவினுல் உன்னிப் பார்க்கா திருக்குமளவும் உலக மெய்யாகும். அவ்வவா வற்றுப் பார்க்கும்போது உலகம் பொய்யாகும். அர்ச்சுன! ஆகாயத்திற் றோன்றிய சூரியன் ஜலத்திலாடுந் தன்மைபோலும் ஓர் கடலிற் பலகுமிழி யுதித்ததைப் போலும் ஒன்றுய் நிறைந்தது

ஜீவபேதம். பலவாய் விரிந்து விளங்குவது ஆன்மா. ஆகையாற் சுழுத்தி யவத்தையை நோக்குவையாகிற் றோன்றும்" என்று சொல்ல, "இவ்வுலகம் பிரமமயமென் றறிருந்தாலும், பூதமயமாய்த் தோற்றிப் போராடுதே: அறிவும் அறிபவனும், அறியும்படியாகிய பொருளும் என்று சொல்லப்பட்ட மூன்றுகிப் பேதமாகுதே: இந்தப் பேதங்களை நான் காணுதிருக்கத் திருவருளுண்டோ?" என்று காண்டீபன் கேட்க, கண்ணன் கிருபையோடு மிதனைச் சொல்லுகிறார்:—

"துரியயோகத்தால் மனம் லயப்படுமாலை, மூன்றுவகை விகற்பமும் அழிந்து போகும். மேலும் சத்து, சித்து, ஆனந்தம், என்கிற மூன்றும் தத்துவாதிகளுட னற்று ஜகமாகும். இம்மூன்றும் பிரம்மாயிருக்கையிற் றோற்றுது. ஸ்மரிக்கில் ஞானத்தால் ஆன்மாவை அறிந்துக் கொள்ளலாம்" என்று கோபாலன் கூற, "சிறந்த ஆன்மா எனக்குத் தரிசனமாமோ?" என்று தனஞ்ஜயன் கேட்க, "முதன்மையாகிய விஞ்ஞானத்தால் அஞ்ஞானம் நீங்கினால், சிற்சையுட் சுயம் பிரகாசமாயான்மா துலங்கும்" என்றுசொல்ல, "இன்பமாகிய மோக்ஷ சுகமென்பதெப்படி?" என்ன, "அநுபவத்தால் விஷயானந்த மறிந்து கொள்ளக் கடவை. மேலும் மனோலயமுள்ள ஸனகாதி முதலிய ஜீவன் முத்தர்கள் அவ்வநுபவத்தி லிருக்கின்றார்கள் பார்" என்று சொல்ல, "ஜீவன் முத்தி யடைந்தோர்களின் செயலும் குணமும் சொல்லுரையா லாகிய கல்லுரையும் சொல்லும்" என்று சுவேதவாகனன் வினவ, "உற்பவித்தல், வளர்தல், பருத்தல், குறைதல் முதலிய யாவும் உடலுக் கல்லது உயிருக்கில்லை. இறத்தால் முதலிய யாவுந் தாமரையிலையி னீர்போல் ஒத்திருப்பவர்கள் ஜீவன்முத்தர்கள், தயிரிற் கடைந் தெடுத்த வெண்ணெய் அத்தயிரிற் கிடந்தாலுங் கலக்காதிருக்குந் தன்மைபோல், மயங்காதிருப்பார்கள்" என்று சொல்லி மேலுஞ் சொல்லுகின்றார்.—

"விஜயனே! தேவர்களாலும் முனிவர்களாலும் அறியப்படாத ஆன்மா வென்னும் பொருளை, இப்போது நீ யறிந்து கொள்ளும் படியாக நான் சொல்லிக்கொண்டு வந்தேன். மேலும் யாவர்க்கும் பஞ்சபூதங்களினாலுண்டாகியது தேகம். அந்தத் தேகத்தினுள்ளே சிவனனவ னொருவன் ஞானியாக நின்று, சகல நன்மை தீமைகளையும் நடத்தி வருகின்றான். சூத்திரதாரியாகிய அந்த சிவனென்னும் ஒருவனாலேயே நடாத்து முண்மைகளை நீ உற்றுப் பார்த் தறியக் கடவை, அன்றியும் வருவதை விலக்கவும்வ ராததை வருவிக்கவும் எப்பேர்ப்பட்டவர்க ளாலும் கூடாது. ஆகையால்

போர்புரியுஞ் செய்கையை நீ மேற்கொண்டு வருந்தி, எல்லாம் உன்னுடைய தென்னும் பற்றுகளினால் வெவ்விய வினைக்குள் அகப்பட்டு வெந்து போகாதே. எல்லாம் கல்வினை தீவினை என்னு மிரண்டு மற்ற சிவபெருமானுடைய திருவிளையாடலென்று அவனுக்கர்ப்பணம் பண்ணி, நீ பரிசுத்தனாக மகிழ்ந்திருக்கக் கடவை. ஓ மைத்துனா! மேலும் ஆங்காலம் சாங்காலம் என்று சொல்லுங் காலங்களும், இடமும், கொல்லத்தக்க கருவியும், சமயமும், உடல் விழும்படியாகிய நிலமும், எவரெவர்களுக்கு எப்படி அமைந்திருக்கின்றனவோ அப்படியே நேரிடும்; அதல்லாமல் வேறாக நடவா. எவ்வளவு பலசாலிகளாய் இருந்த போதிலும் தாங்க ளெண்ணியபடிக்கு ஒருவரை முடிக்கும்படியாகிய செயலுமுண்டோ? நீ வீணை மயக்கத்தில் வீழாதே. கடைப்பிடி கருமம். ஆயுள் முடியாமல் அற்பவுடற் றுங்கிய கொசுகு முதலாகிய உயிர்களும் மடியமாட்டா. இதினுடைய உண்மை இப்படியிருக்க : பூர்வத்தில் சகல இராஜர்களும் நெருங்கிய சபையில் நீங்க ளிவருங் கையெடுத்து நீட்டி, அவரவர்களைக் காட்டி, ஆண்மையுடன் சொல்லிய கட்டுரைச் சபதந் தப்பிப் போகும்படியாக விட்டுக் காட்டுக்குப் போவோமென்று திரும்பி விடுவீர்களாகில் இம்மைப்பயன், மறுமைப்பயன், உம்மைப்பயன் என்னும் மூன்று பிரயோஜனங்களையும் இழந்து எல்லோரும் பழிக்கும்படியாகிய ஏளிதம் பூண்டு கீழ்ப்பட்டுக் கொடிய நரகிற் குளித்து மூழ்கிக், கண்ணீர் சோர வருந்தி, வெப்பமாகிய பிணியா லுழன்று சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்றுரைக்கும் ஐம்புல நுகர்ச்சியுங் கெட்டுப் போவீர்களேயல்லது பிரயோசனம் பெறும்படியாகிய காரிய மொன்றுமில்லையே; ஆகையால் நீ போர் முகத்தில் வந்தும் யுத்தஞ் செய்யாமற் போவே னென்பது புருஷதீர மன்று. கூறிய சபதங்களை நிறைவேற்றும்படியாகச் சத்துருக்களைக் கொல்லுவது தருமங்களெல்லா வற்றிலும் மிகுந்த தருமம். அப்படியே முடித்தால் உங்களுக்குப் பழிபாவ முதலிய குற்றங்களில்லை. என்னுடைய வசனத்தை இருக்கு வேதமாக நம்பு. அர்ச்சுனா! உன் பகையாளிகளை வென்று நீ ஜயம் பெறுவாயாகில், இவ்வுலக மெல்லாவற்றிற்கும் ஏகசக்காராதிபதியாக இருப்பாய். ஒருவேளை இறந்து போவாயாகில் தேவர்கள் முதலிய அரம்பாஸ்திரீகள் எதிர்கொண்டழைக்கும்படியாகப் போய் சுவர்க்க லோகத்தைத் துரைத்தனம் செய்வாய். நித்திய பதவியாகிய மோக்ஷமும் உண்டாம்.

ஓ வீபற்செனும் பெயரையுடைய வேர்தனே—" என்று இத் தன்மைய உறுதி வசனங்களைச் சொல்லவும் இவைகள் எல்லா வற்றையுங் கேட்ட வாசவன் மகனை விஜயன் மகிழ்ந்து மனத்துட் கொண்டு, மயக்க மகன்று, சிக்தை தெளிந்து திருமாலை நோக்கி, "ஓ வண்டுகள் மொய்க்கும் மதுநிறைந்த வாசத் துளபமாலை யணிந்த வானவர் கோமானே! மலர் மகள் சீமானே! பூதங்கள் தோறும் பொருந்தி யிருக்கின்றவன் சர்வக்ஞனுகிய சிவனென்று புகன்றீர். அச் சிவனுகிய தேவன் எவ்விடத்தில் இருக்கின்றார்? அந்த உண்மையை ஏழையாகிய அடியேனுக்குத் தெரிவிக்க வேண்டும்," என்று கேட்கப் பரந்தாமன் சொல்லுவதாயினன்:—

"ஓ பார்த்தனுகிய பார்த்திபனே! சத்தியலோகத்திற் ருமரை மலர்மே லிருந்து மன்னுயிர்களைச் சிருஷ்டிக்கும் பிரம னென்பவ னும், வைகுந்தத்தில் இருந்து ரக்ஷிக்கும் விஷ்ணு வானவனும், தேவர் முதலிய யாவரும் வணங்கும்படியாகக் கைலாயத்தில் உமாமஹேச்வரியுட னிருந்து ஸம்ஹாரத் தொழில் செய்யும் வெள்ளை விடை யேறிய விமலனும், வாசநிறைந்த கடப்ப மலர் மாலை யணிந்த சண்முகத்தேவும், பலம் பொருந்திய ஐராவதத் தலை வனுகிய தேவேந்திரனும், இவ்வுலகி னிறைந்த சராசரப் பொருள் களைத் தேர்ந்துணர்ந்து அவைகளிற் சஞ்சரித்துக்கொண் டிருப்ப வனுகிய சதாசிவனும், வேதபுராணங்கள் முதலிய யாவற்றையும் இந்த உலகில் விரித்துரைத் தருளிய வேத வியாஸரும், இரவிற் சந்திரனுனவனும், பகலிற் சூரியனுனவனும், உலகிற் சிறந்த உயிரான வனும், மாதவர்களிற் சிறந்த நாரதர் முதலிய முனிவரானவனும், திக்குப்பாலக ரானவனும், கவக்கிரக மானவனும், கற்பகத் தரு வானவனும், மரங்களில் அரசானவனும், மனிதர்களில் அரசான வனும், பசுக்களிற் காமதேனு வானவனும், இன்னுமுண்டான அளவற்ற மகிமையோடுங் கூடியவ னெவனே னவனே சிவன். அச்சிவனே நான்! சிவன் பிரமஸ்வரூபி! நான் அருட்சொரூபி! நாங்களே சிவமும் சத்தியுமாய் நின்று பஞ்ச கிருத்தியத்தினுல் ஆட்டி வைப்போம். இதன்றியும் எந்தத் தேசங்களில் எந்தத் திறங் களையுடைய எந்தச் சாதியார் எந்தக் காலத்தில் எந்த உருவமாகப் பாவனை செய்து எம்மைத் துதித்து வணங்குவார்களோ அந்தத் தேசங்களில் அந்தத் திறங்களுடைய அந்தச் சாதியாருக்கு அந்தக் காலத்தில் அந்த உருவத்துடன் அவரவர்களுக்குப் பிரசன்னமாய் அவர்களுக்கு வேண்டிய மநோபீஷ்டங்களை யெல்லாங் கொடுத்து ரக்ஷிப்போம்.

அர்ச்சுனன் விசுவரூபங்கண்டு தரிசித்தல்.

அன்றியும், பிரமா- விஷ்ணு-உருத்திரனுகிய மூவரும், சிருஷ்டி ஸ்திதி - சங்காரமென்னும் தொழில் மூன்றையும், சாத்விகம் - இராஜஸம்-தாமதமென்னுங்குண மூன்றுலுடைத்தாய், அவைகளுக்குள் ளாயும் அவைகளுக்குப் புறம்பாயும் வேதமுடி வென்னும் வேதாந்தத்தில் முத்திக்கு வித்தாய் முதன்மை பெறகின்ற தனிப் பரப்பிரமப் பழம்பொருளா யிருக்கின்றவன் யான். இதை நீ உண்மை யாக உட்கொள்ளக்கடவை. ஓ உத்தமனுகிய பார்த்தனே'' என்று கரிய திருமேனியையுடைய கண்ணன் சொல்லக் காண்டலும் அற் புதமடைந்து, ''ஐயனே! வசுதேவருக்குத் தேவகி தேவிக்கும் புத்திர ராகப் பிறந்து, ஆயர் வீட்டில் வளர்ந்து வெண்ணெய் பால் முதலிய யாவுமுண்டு, எங்களுக்கு மைத்துனராகி எங்களொப்பற்றமா யின்ப துன்பங்களே யநுபவித்து, அழுவாருடனழுது தொழுவாருடன் றொழுது, நகைப்பாருடன் நகைத்து, பகைப்பாருடன் பகைத்து இப்படிக்கெல்லாம் விளையாடிக்கொண் டிருந்துவிட்ட நீர் 'எல்லாம் நான்தான் : என்னைவிடப் பிரபஞ்ச மில்லை' என்று சொல்லுவது பெரிய ஆச்சரியத்தை விளைக்கிறது. எனக்காகச் சொல்லிய வார்த்தையா? அல்லது உண்மையாகிய காரியத்தாலே? அப்படி உண்மையா யிருக்குமாஞல் யாவரும் யாவும் தாமாயிருக்குந் தேவரீருடைய திருக்கோலவுருவத்தை அடியேன் கண்டு தரிசித்துய்யும் படியாகத் தெரிவிக்கவேண்டும் தெய்வகாயகனே'' என்று கேட்க, ''அப்படியே தரிசித்துக் கொள்'' என்று ஞானக்கண் கொடுத்து, அர்ச்சுனனுடைய முகத்தைத் தடவி, அப்போதே உலகத்தை ஓரடியாக அளந்த உருவம்போலுயர்ந்து, பாதாளம் வரையிலும் தாழ்ந்து, அகண்டாகண்டப் பேரண்டச் சுவர் வரையிலும் மேலுங்கீழுமாகத் திணிந்து நெருங்கும்படியாகச் சுயம்பிரகாச ஒளியாய் விராட் சொரூபமாய் நின்றார் சர்வலோக ரக்ஷகனுகிய கண்ணன்.

அந்தத் திருக்கோலத்தைத் தனது திவ்விய ஞானவிழியினல் விஜயன் கண்டு, வாய் பேசாமல் மௌனியாய், விற்பனமுடைய அற்புதகுண சீலனுக மயிர்க்கூச்செரிய ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கி, தன்னைத் தானே மறந்து அசைவற்று நின்று விட்டான். அப்போது அளவற்ற தேவர்களும் நான்கு வேத பாராயணராகிய

தவமுனிவர்களும் அந்த விராட்டினுடைய திருவுருவத்தில் ஒரு பக்கமாயிருந்து, மறை மாரியும், மலர்மாரியும் வாரி வாரிப் பொழிந் தார்கள். இதராகிய இருதிறப் படைகளின் பகுதியோர் முன்னிருந் தபடியே கிருஷ்ணார்ச்சுனரைப் பார்த்துக்கொண் டிருந்தார்களன்றி, வேறொன்றும் கண்டதில்லை. இப்பால் வாசுதேவன் தமது லீலையெல்லாம் அர்ச்சுனன் செவ்வையாய் அறிந்துக்கொண்ட தன் மையைக் கண்டு, தாம் கொண்ட விராட்டுருவத்தை மாற்றி முன் னின்ற லீலைப்படி சாரதியா யிருந்து, வாசவ குமாரனுடைய தெளி வாகிய பிரகாசம் பெற்ற முகத்தைப் பார்த்து "அர்ச்சுனு! முற்றத் துறந்த சித்தத்தவர்களும் அறியப்படாத என்னிலீலையை நீ அறிந்து கொண்டாய். உன்னைப் போல் எவருணர்ந்தார்கள்? உத்தமனே! மலை யினுயரம் மலைக்குத் தெரியவில்லை. ஆகையால் நீ கண்டுகளித்ததோற் றமாகிய வெல்லாவற்றையும் ஞானறியும்படியாகச் சொல்லக் கடவை" என்று களின காபஞ்சிய காராயணன் கேட்க, கரன் மகாசந்தோஷத் தோடு பணிந் தெழுந்து "சுவாமி! பிரமாண்டகோளகையைக் கிழித்து அதற்கு மேற்பட்டுப் பேரொளியாகத் தோன்றி, சிரம், கரம், உரம், கால், மேல், இடை, தொடை யென்பது ஒன்றுந் தெரி யாமல் உலகமெல்லாம் ஜலமயமா யுள்ள தபோலிருந்த உருவத்தை ஞானெப்படி பகுத்துச் சொல்லுவேன். ஓ மாதவனே" என்று இரண்டு பாதங்களையுந் தன் னிருகரத்தாற் றழுவி, முடித் தலையைத் திருவடிக் கடியிற் சாய்த்து இரு கண்களும் ஆற்று நீரி னூற்றுப் போற் சுரந்து பெருக்கெடுத்தோட திடகாத்திரமாகிய தேகஞ்சிலிர்க்க மொழிகுளற நா கடுங்கத் தான் கண்ட காட்சியைச் சொல்லத் துணிந்து "ஓ என் ஆண்டவனுகிய அற்புதனே சரணம்! ஓ தாண்ட வனுகிய தற்பரனே சரணம்! காண்டவமெரித்த கண்ணனே சரணம்! பாண்டவர்க்கிசைந்த பாகனே சரணம்! ஓ சுவாமி ! மாதவம் பெற்ற வேதவேதியராகிய முனிச் சிரேஷ்டர்கள் சூழ்ந்து வணங்கும்படி யாயிருந்த பிரம்ம தேவனே ஸரஸ்வதி முதலிய பேர்களுடன் உமது தேகத்தி லிருக்கக் கண்டேன்! சங்கு, சக்கரம், கதை, கடகம், கோதண்டம் என்னும் பஞ்சாயுதங்களுடன் மகா லட்சுமியும் பொருந்த கவஸ்துவாபரணத்தோடு துளபமாலையுடன் பரவாசு தேவனுகிய உம்மையும் ஒரு புறத்தில் வேறுக மருவக் கண்டேன்! சூளிர்ந்த பிறையணிந்த உருத்திர மூர்த்தியை காராயணியாகிய காயகியுடன் தேவகணங்கள், பூதகணங்கள் முதலியவைகள் சூழத் தேவர் திருமேனியிற் பொருந்தி யிருக்கக்கண்டேன்! பிரகாச

மூடைத்தாய் மேலோங்கிய வேல்தாங்கிய பெருமாளாகிய சண்முகக்கடவுளே வள்ளி தெய்வயானையுடன் தமதாகத்தில் இன்புற்ற மார்த்திருந்த இஷ்டமாகிய இடமுங் கண்டேன்.. தேவேந்திரனே முப்பத்துமுக்கோடி தேவர்களும் காற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளுஞ் சூழ்வர அவன் பத்தினியாகிய இந்திராணியுடனும் மற்ற தேவமாதருடனும் இருடிபத்தினிகளுடனுந் தேவரீருடைய திருவுருவிற் றிகழக்கண்டேன். நான்குவேதம் ஆறு சாஸ்திரம், முப்பத்திரண்டு உபனிடதம் பதினெண் புராணம், இருபத்தெட்டு ஆகம முதலாகிய எல்லாவற்றையுங் கண்ணிற் கண்டேன். பகைவராயிருந்தழிந்து மடிந்த அரக்கர் முதலிய அசுரர்களையுங் கண்டேன்; சரம், அசரம், என்னும் எல்லாப் பொருள்களையுங் கண்டேன். முத்தொழிலும் முக்குணமும், மூவுருவும், முக்காலமும், வாரம்- திதி-மதி-வருட முதலியவும், அவைகளின் தொழிற் குணங்களுங் கண்ணுற்றுத் தெளிந்தேன்.

இவையல்லாமலும் இன்னுமோர் ஆச்சரியங்கண்டேன். ஓ இறைவனே! அஃதென்ன வெனில் நாகக்கொடியோனுகிய துரியோதனன் முதலிய யாவரையும், அநேகம் அக்ரோணி சேனைகளையும், பாண்டவர்களுக்குச் சகாயமாகிப் படைத்துணைவந்த மன்னவர் முதலிய பெருஞ் சேனைகளையும், தேவரீருடைய திருவாயால் விழுங்கக்கண்டேன். இந்த ஏழுகடலையும் ஏழுகடலுக்கு முதலாகிய பெரும்புறக் கடலையும் வளைத்துகொண் டிருக்கும் அநேகங்கோடி கரங்களும், அநேகங்கோடி சிரங்களும், அனேகங்கோடி கண்களும், அநேகங்கோடி கால்களும், அநேகங்கோடி செய்கைகளும், அநேகங் கோடி திருமுக மண்டலங்களும், பிரகாசிக்கும்படியாகக் கண்டேன். தேவரீருடைய பூரணவுருவத்தைப் பார்ப்பதற்கு அனேகங்கோடி கண்களைப் பெறுமற் போயினேன். தேவரீருடைய திருவடிகளைத் தொழுவதற்கு அனேகங் கோடி கரங்களை அடையாமற் போயினேன். தேவரீருடைய திருநாமங்களைத் துதிப்பதற்கு அநேகங் கோடி நாக்களையடையாமற் போயினேன். இனி நான் சொல்லத் தக்க தொன்றுமில்லை. என்னுண்டவனே'' என்று விழுந்து பணிந்தான்.

இப்படியாகச் சொல்லிய அர்ச்சுனனைக் கண்ணன் வாரியெடுத்தணைத்துக் கிருபை யளித்து, ''நீ பிழைக்கும்படியாய் இவ்விடத்திற் கண்ணுறக்கண்ட அதிசயம் யாவற்றையும் எவர்களிடத்திலும்

சொல்லாதே. கடைசியில் தருமராஜன் முதலிய நீங்களெவரும் பிழைத்திருக்கப் போகிறவர்கள். மற்றவர்க ளெல்லாரும் அழிந்து போகிறவர்கள். இதை உன்மனதில் உறுதியாக வைத்துக்கொள். அறியாமை யாகிய இருளை நீக்கி விட்டு விடு. ஓ மேலாகிய வல்ல பத்தையுடைய விஜயனே! நாமிருவரும் இவ்வுலகிலுள்ள எல்லா ரையுங் கும்பு கூட்டி மடிப்பதற்கே பிறந்திருக்கிறோம். நீயேறுகமே எண்ணிக் கலங்குவாயாகில் நாம் வந்த காரியந் தாருமாறுகும்! ஆகையால் எந்த வேலை எப்படியிருந்தாலும் நாம் வந்த வேலையை முடித்துச் சுகந்த மாலையைத்தரித்து வெற்றி பெறும்படியாகிய விதத்தை விதியாய்த் தேடிக்கொள்ள வேண்டும். இன்னும் உனக்கு மயக்க மிருக்குமானால் இன்னும் உனது மனந் தேறித்தெளியும் படியாகச் சொல்லுகிறேன்.

ஓ அர்ச்சுனு! எல்லா இடங்களும் அவ்விடங்களி லிருக்கின்ற எல்லாப் பொருள்களும் நாமேயானதன்றி, வேதமும் அவ்வேதத் தின் அந்தமுங்கூட நாமா யிருக்கின்றோம். உன்னைவிட்டு நான் பிரிய மாட்டேன். என்னை விட்டு நீ பிரியமாட்டாய். அப்படியல்ல வென்று பிரிந்தாலும் நாம் வேறுபடோம். எப்படி யெனில் முன்னொரு முறையில் நரனும் நாராயணனுமாகப் பிறந்து பூபாரம் போக்கி னோம். இன்னொருபிறப்பில் இராமலட்சுமணரென்னும் பேர்பெற் றுச் சத்திய முதலிய நித்தியவிரத தவங்களை நிலை நிறுத்தினோம். இத்தப் பிறப்பில் கிருஷ்ணார்ச்சுனராக இவ்விடத்தில நிற்கின்றோம். ஆகையால் உன்னுடைய மயக்கத்தையும், அவர்கள்பேரிற்கொண்ட நேசத்தையும், ஆசாரியர் மீதுள்ள விசுவாசத்தையும், உன்னை மயக்கிய மோகமோசத்தையும் விட்டொழித்து விடு" என்று சொல்ல, தமது நிலைகளெல்லாவற்றையுஞ் சொல்லித் தத்துவந் தெரிவித்த சாமளவர்ணனுடைய சுவாமியாருடைய திருவாய்மொழி கேட்டுத் தெளிவுற்றுத்தேறி, "ஓ தர்மம்- அர்த்தம்-கர்மம்- என்னும் அறம்பொருளின்பத்தினது அநுபவத்தை யுணர்த்தி அப்பால் தேவ ரீருடைய திருவடியைச் சேரும் பதத்தின் பயனையும் அடியேனுக் குபதேசித்தருளிய ஆரியனே" என்று செந்தாமரைமலரையொத்த திருவடியிற்றொழுது, "அடியேன் விவேகசூனியத்தாற் றெரியாமற் சொல்லிய சொற்களிற் சொற்குற்றம்- பொருட்குற்றம்- மரியாதைக் குற்றம் - மானக்குற்றம்- குலக்குற்றம்- குணக்குற்றம் - இவை தீங்கு களேதாகிலுமிருக்குமாகில் அவைகளை யெல்லாம் க்ஷமிக்க

வேண்டும். ஓ அச்சுதனே! ஓ ஆரணனே! ஓ காரணனே!" என்று அடிமலர் வணங்கி யுத்தஞ் செய்வதற்கு வேண்டிய கருவிக ளெல்லாம் ஏற்படுத்திக் கொண்டு "இதோ யாவரையும் முடிப்பேன்" என்று வீரப்பிரதாப தீரத்துடன் நின்றான், விஜய பராக்கிரமனாகிய அர்ச்சுனனென்று வைசம்பாயனர் சொல்லிக்கொண்டு வந்தார்.

இந்தச் சங்கதியைக் கேட்ட ஜனமேஜய மகாராஜன் மிகுந்த விஞ்ஞான மூடைத்தாய்க் குரு முகூர்த்தங்கொண் டெழுந்தருளிய வைசம்பாயன முனிவரை வணங்கி "ஓ மாதவரே! இந்த பகவற் கீதை யுபதேசித்துக் கடவுள் நிச்சயங் காட்டிய சங்கதி விஜயனுக்கும் விஷ்ணுவுக்கும் கடந்த தேவரகசியம் என்று திருவாய் மலர்ந்தீர். இப்போது தேவரீர் தெரிந்து அடியேனுக்குச் சொல்லும் விதமெப்படி?" என்று கேட்க, அம்முனிவர் மிகுந்த புன்னகையுடையவராய், "ஓ புத்திசாலியாகிய புரவலனே! ஸ்ரீ வேதவியாசர் சகல தேவரகசியங்களும் அதிசயமாக விருந்து தெரிந்துகொள்ளும் படியாகச் சஞ்சயனுக்கு அநுக்கிரகஞ் செய்தருளிய வண்ணம் அந்தச் சஞ்சயன் அறிந்து திரிதராஷ்டிர மகாராஜனுக்குச் சொல்லிய படியால், ஓ சிவந்த வேல்தாங்கிய தீரனே! அதை அறிந்து உமக்கு யாம் சொன்னோம்" என்று வைசம்பாயனர் சொல்ல, மனங் களிகொண்ட ஜனமேஜய மகாராஜன் வபுஷ்டா தேவியுடன் மகிழ்ந்து, வைசம்பாயனரைப் புகழ்ந்து, பற்பல புட்பங்களால் அர்ச்சனை புரிந்து வாழ்த்திப்போற்றி "சுவாமி! மேல் கடந்த விர்த்தாந்தங்களையும் சாங்கோபாங்கமாகத் தேவரீர் விளம்ப வேண்டும்" என்று வேண்ட, வைசம்பாயனர் மனமிக மகிழ்ந்து, மேல் கடந்த காரியங்களை விளம்புவதாயினர்.—

பாண்டவர் கண்ணன் முன்னிலையில் பீஷ்மரையுந் துரோணரையுங் கண்டு பேசுதல்.

"ஓ ஜனமேஜய மகாராஜனே! தருமபுத்திர மஹாராஜன் முதலிய பாண்டவர்களும் துரியோதன மஹாராஜன் முதலிய கௌரவர்களும் சேனைகளிறைத்து நிற்கும் யுத்தபூமி மத்தியில்வந்து நின்று, தங்கள் தங்கள் தளங்களை இமையா காட்டத்தினராய் மூற்றிலுஞ் சுற்றிப் பார்த்துக்கொண் டிருக்கையில் பாண்டவராயினோர் பீஷ்மாச்சாரியார், துரோணாச்சாரியார், கிருபாச்சாரியார், அசுவத்

தாமர் முதலிய காலாற்தருத்திரரை யொத்த கைக்காரர்க ளெல்லாங் கடுங்கோபங் கொண்டு கையிலாயுதம்பிடித்துக் கண்சிவந்து தளகர்த் தர்களாகத் தூசிப்படையில் நிற்கின்ற தீரங்களைப் பார்த்து, "அந்தோ! எந்த விதத்தில் இவர்கள்பேரிற் கை யெடுப்பது? இவர்களை எந்தக் காலத்திற் செயிக்கப்போகிறோம்? நம்முடைய கடுஞ்சபதங் களையெல்லாம் எவ்வாறு நிறைவேற்ற வல்லோம்? எப்படி சத்துருக் களையெல்லாம் வெல்லுவோம்?" என்று துக்க முடையவர்களாய், மறுபடியும் ஒருவாறு மனதைத் தேற்றிக்கொண்டு "நாமனைவரும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியி னிடத்திற் சொல்லிப் பார்ப்போம். அவரி தற்குத் தகுந்த யுக்தி சொல்லுவார்" என்று நினைத்தவர்களாய்த் தேரைச் செலுத்திக் கொண்டுபோய்க் கிருஷ்ண பகவானும் அர்ச் சுனனுங் கலந்து பேசிக்கொண் டிருக்கும் சமயத்தைக் கண்டு களி கொண்டு தண்டஞ் சமர்ப்பித்தனர். மிகுந்த உபசாரத்துடனே அவரு மிவர்கட்கு வந்தனஞ் செய்து "என்ன காரியமாய் வந்தீர்கள் சொல்லுங்கள்" என்று கேட்க, 'நாங்க ளெண்ணிவந்த காரியம் இன்ன' தென்று தருமராஜன் சொல்லத் தயாரித்தி கேட்டுச் சந்தோ ஷித்து "நீங்கள் யோசித்து வந்தது நல்ல காரியம். இப்போது நமக் கென்னபயமா? நேரே பீஷ்மருந் துரோணரு மிருக்கு மிடத்திற் சென்று ருசுவினின்று கண்டுபேசி அவரவர்களுடைய மனக் கருத்தை அறிந்துகொள்ளுவோம் வாருங்கள்" என்று அனந்த சயனன் சொல்ல, நல்லதென்று பாண்டவரியாவரும் பகவானோடு துரியோதனனுடைய படையிற் புகுந்து, சேனைகளுக்குச் சிரமாய்ச் சேனாதிபதியாக ஸ்திரம் பெற்று நிற்கின்ற பீஷ்மாச்சாரியரைக் கண்டு தெண்டனிட்டு, அவர் ஆசீர்வாதங் கொண்டு சிங்கை கொந்து முகம் வாடி நிற்க, அந்தப் பாண்டவர்களை பீஷ்மர் உற்றுநோக்கி, "நீங்கள் இப்போது இவ்விடத்திற்கு வந்தகாரிய மென்ன? சொல் லுங்கள்" என்று காங்கேயன் கேட்கக் கண்ணன் சொல்லுகின்றார்—

"கெடிஸ்தலாதிபதியே! கேளும்! திரிதராஷ்டிர மகாராஜனுக் கும் பாண்டுமகா ராஜனுக்கும் சொந்தமாகிய பெரிய தந்தையாகி, தருமசுதியர்களுக்குத் துரியோதனுதியர்களுக்குங் கேட்டை நீக் கும் பாட்டனாராகும் பீஷ்மராகிய நீர் இருதிறப் புத்திரர்களையும் ஒருதிறப் புத்திரராகப் பார்த்துப் பக்ஷம் வைத்து நடத்துகின்ற கபடநிலைமையை விடுத்துத் துரியோதனுதியர் பக்ஷத்திற் சேர்ந்து அவர்களுக்குச் சேனாதிபதியாய் முன்னமுகத்தினின்று பாண்டவர்

களைக்கொன்று துரியோதனனுக்குப் பட்டங்கட்டி வைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றீர். பாண்டவர்களிடத்திலிருக்கும் நியாயம் அநியாயம் - பாவம் - புண்ணியம் - சத்தியம் - அசத்தியம் - இவைகள் யாவும் உமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கப் பதின்மூன்று வருடம் வன வாசஞ் செய்து கஷ்டப்பட்டு வந்திருக்கும் பாண்டவர்களிடத்தில் உண்மைக் குத்தாரமாகப் பக்ஷம் வைக்காமற் போவீராஞல், ஐயா! உங்களை எந்தக் காலத்தில் வெல்லுவது? துரியோதனுதியர்களை எந்தக் காலத்திற் கொல்லுவது? எந்தக் காலத்திற் சபத நிறை வேற்றிக் கொள்ளுவது? எந்தக் காலத்தில் உங்கள் வீட்டு நாட்டுப் பெண் விரித்த தலை முடிப்பது? இதனை எவ்வளவும் எண்ணிப் பார்க் காமல் எதிர்த்து யுத்தம் பண்ணும்படியாய் நீர் வந்தபோதிலும் உம் மூடனை எப்படி எதிர்த்து யுத்தஞ் செய்வது? உம்மை எப் படிக் கொல்லுவது?—என்று இப்பாண்டவர்கள் மெத்தவும் பயபக்தி யாய்ப் பக்ஷத்துடன் தாக்ஷண்யம் எண்ணிப் பார்க்கிறார்கள். நானெத்தனை சொன்னாலும் உமது பேரில் வைத்திருக்கும் அன்பி னல் என் சொல்லையுங் கள்ளித் தங்கள் வில்லையுங் கிள்ளி விசனப் படுகிறார்கள். அறியாதவர்களானாலுஞ் சொந்த பந்தம் நீங்காமலுருகுகின்றார்கள். எல்லாம் அறிந்த பெரியோராகிய நீரே மூர்த்தி வந்து போர்புரியத் துணிவுகொண்டீர். ஆகையால் இதற்கென்ன யுக்தி சொல்லுகிறீர்? பாண்டவர்களோ மறுபடியும் வனத்திற்குப்போய் விடுகிறோமென்று மனஸ்தாப மடைந்து வருந்தினார்கள். உம்மைக் கண்டு வார்த்தையாடிய பிற்பாடு உத்தரவு சொல்லுகிறேனென்று அழைத்து வந்தேன். இதோ உமதுப் பேரப் பிள்ளைகள். அவர்களுக் கென்ன சொல்ல வேண்டுமோ அதைச் சொல்லியனுப்பும்" என்று சொன்னார்.

இந்த வசனங்களையெல்லாங் கேட்ட பீஷ்மர் புன்னகையுடை யவராய், "ஓ ஜகந்நாதனுகிய ஸ்ரீ கிருஷ்ணதேவனே!, வசிஷ்டர் வாக்கினுல் பிரமரிஷியாக வேண்டுமென்னும் வாக்கியம்போல், என் வாக்கினுல் இனி எய்த வேண்டிய கடமையை நேமித்துக் கொள்ளு வதற்காக இவ்வளவு தூரம் நடந்து வந்தீர்களோ அறிகிலேன்! ஓ நாதனே! நல்ல பாக்கியம், இப்பவும் பாண்டவர் சத்தியவான்களென் பதற்குச் சந்தேக மில்லை. தர்மம் அவர்களிடத்தி விருப்பதினுல் எப் படியும் ஜெயம் பெறுகின்றார்கள். அதர்ம மழியுமென்று யாவருஞ் சொல்லுவார்கள். அந்த விவகாரம் அப்படி யிருக்க, எனக்கு இந்த இருதிறவரும் பக்ஷமுடைய பேரப்பிள்ளைகளென்று ஒரு தாமல்ல,

பத்துத் தரமாகச் சொல்ல மாட்டுவேன். ஆனுல் தீயவர் கயவர் என்று யோசிக்க வேண்டாமோ வென்று கேட்பீராஞல் அது நியாயமே; கை விரல் கண்ணிற் பட்டால் விரலைக் கொய்தெறிவார்களா? கெட்டவர்க ளாஞலும், நல்லவர்க ளாஞலும், நம் பிள்ளைகளென் கிற வாத்ஸல்லியம் விட்டுப் போகுமா? மேலும் நான் இந்த இரு திறப்பிள்ளைகளுக்குந் துணையாகாமலிருக்கவேண்டியவனே: அப்படி யிராமல் துரியோதனனுக்குச் சேனுதிபதியா யிருப்பானேனென்று கேட்டால் அதற்குக் காரணஞ் சொல்லுகின்றேன் கேளும்— ஓ கண்ணனே! எங்கள் சிறிய தாயாராகிய பரிமளகந்தியின் பிள்ளை விசித்ரவீரியனுக்குக் கலியாணஞ் செய்ய வேண்டிக் காசிராஜ னுடைய மூன்று பெண்களைச் சுயம்வரத்திற் கவர்ந்து கொண்டு வந்து விவாகம் நடத்தியபோது, மூத்த பெண்ணுகிய அம்பாளென் பவள் தான் சாலுவ ராசனிடத்தில் இஷ்டம் வைத்த தாகச் சொல்லி என்னை விட்டு நீங்கிப்போய், அவன் விலக்கி விட்டானென மறுபடியு மென்னிடத்தில் வந்து தம்பிக்கு விவாகம் பண்ணிக் கொள்ளுமென்று வேண்டிக் கொண்டாள். நானவளை மறுத்து விட் டேன். அப்போது அவள் தன்னலாகாத காரியத்தைப் பேத கத்தி ரத்தாற் சாதிக்க வேண்டும் என்னும் யுக்தியைக் கொண்டு என்னு சிரியராகிய பரசுராமரிடத்திற் போய்ச்சரண்புகுந்து அவரையழைத் துக் கொண்டு வந்து பகையாக விடுத்தாள். அவரென்னுல் இளைத் துப் போய்விடவே அவளும் இளைத்துப் போய்க் காளிகா தேவியை நோக்கித் தவமிழைத்துப் பாஞ்சால ராஜனுடைய பத்தினி கர்ப்பத் தில் என்னைக் கொல்லக்கூடிய பகையாளி யாகிய சிகண்டி யென்பவ னுய்ப் பிறந்து இந்தப் பாண்டவர்களுக்கு இப்போது படைத் துணை யாகவும் வந்திருக்கின்றமையால் நான் அவன் நிற்கும் படைக்கு எதிர்ப்படையில் வீரோதமாய் நிற்கும்படியாய் நேரிட்டது. ஆகை யால் ஓ ஐயனே! இனி நான் மெத்தநாள் இருக்க மாட்டேன். முதலுள் யுத்த முதற் பத்தாநாள் யுத்தம் வரைக்கும் நடத் துவேன். அந்தப் பத்தாநாள் எனக்குப் பகையாய் வந்து பிறந்திருக் கும் சிகண்டி என்னுந் தீரபராக்கிரமியாகிய அம்பை யென்பவளை எனக்கெதிரிற் கொண்டு வந்தால் இந்தச் ஜென்மத்தில் ஆணுயிருந்த போதிலும் முன்ஜென்மத்திற் பெண்ணுனபடியால் நானவள் பேரிற் கையெடுக்க மாட்டேன். அந்தக் காலத்தில் எனக்கு அன்புள்ள பேரனுகிய இந்த அர்ச்சுனன் பாணத்தால் மூர்ச்சையடைந்து விழு வேன். அப்பாற் சரசயனத்திலிருந்து தேவரீருடைய திருவிளை

யாட்டை யெல்லாம் பார்த்து இராஜ தர்மங்களை நிலைநிறுத்தி, ஓ சந்தாமரைக் கண்ணனே உன்னுடைய திருவடி யடைவேன்" என்று சொன்னார்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் பாண்டவருமிவைகளைக் கேட்டு, சபத நிறைவேறிப் பட்டாபிஷேகம் பெற்றவர்களைப்போல் மகிழ்ந்து வணங்கிச் செலவு பெற்றுக் கொண்டு, துரோணாச்சாரியரிடத்திற் சென்று, அவரைக் கண்டு தெண்டனிட்டுத் தொண்டரைப் போல் நிற்கவும், அவர் அவர்களை ஆசீர்வதித்து, "பாண்டவர்களே க்ஷேமமாயிருக் கின்றீர்களா? இப்போது இவ்விடத்தில் என்னை நாடி வந்ததற்குக் காரணம் என்ன சொல்லுங்கள்" என்று கேட்க, ஸ்ரீகிருஷ்ணபகவான் "ஐயா துரோணாச்சாரியரே நாடு நகர முதலிய வெல்லா வற்றையு மிழந்து நாணம் மேலிட்டுக் கானகத்திருந்து கவிந்து வந்த பாண்டவர்க ளிடத்தில் நீர் கல்லருள் காட்டாமல், துரியோதன ராஜனிடத்தில் அன்பு கொண்டு, பாண்டவர்களோடு யுத்தஞ் செய்யும்படியாய்ப் பகை மேற்கொண்டு வந்திருக்கின்றீரே: பாரமார்த்திகராகிய நீர் உபயவாதிகளுக்கும் ஆசாரியராக விருந்தும், இவ்விடத்தில் நடந்திருக்கும் நியா நியாயங்களெல்லாம் நன்றாய்த் தெரிந்திருந்தும், பாவபுண்ணிய மெண்ணிப் பாராமல் அந்த பக்ஷத்தினின்ற படியால், தநுர்வேத பாண்டித்ய முடைய உம்மை வெல்ல யாவராலு முடியாதே; அப்படி யிருந்தால் இந்தப் பாண்டவர்கள் பிழைப்ப தெப்படி? அவர்கள் கூறிய சபத மெவ்விதத்தில் நிறை வேறும்? ஓ குணமேருவாகிய குருவே! இதற்கு நடக்க வேண்டிய காரியங்களைத் தேவர் கட்டளையிட வேண்டுமென்று கேட்க வந்திருக் கின்றார்கள். அவர்களுக்கு நீர் சொல்ல வேண்டிய உத்தரஞ் சொல்லி அனுப்பும்" என்று உலக முண்டோன் உரைத்தருளினர்.

அந்த மொழியைக் கேட்டலுந் துரோணாச்சாரியர் அக மகிழ்ந்து "ஐயா அரிவாசுதேவனே! கேளும்: என்போன்ற வீரர்கள் எத்தனை கோடிபேர் சேர்ந்து வந்தாலும், இசையைக் கொண்ட விஜயனிடத்திற் பசபசவென்று விழித்து வசையைப் பெறுவார் களல்லது, திசைகள் மகிழ வெற்றிபெற மாட்டார்கள். ஒருவர் செயலால் ஒன்று நடக்க மாட்டாது. உலகளந்தோராகிய உன் செயலன்றி வேறில்லை. ஓ உத்தமனே! அவர்கள் சத்தியமே நித்திய மாயிருந்து அவர்களுக்கு வெற்றியைத் தரும். மேலும் இந்தக் குருகுலக் குமாரர்கள் இருநிறவரும் என் கண்மணி போன்றவர்கள்,

எனக்கு இவர்களென்றும் அவர்களென்றும் பேதமில்லை. இப்படியிருக்க நான் துரியோதனராஜனிடத்திற் சேர்ந்திருப்பானேனென்று தேவரீர் கேட்பீராகில், அதற்குத் தகுந்த காரணஞ் சொல்லுகிறேன் கேளும். ஓ காசாம்பூவண்ணனே! என்னை வெல்லத் திட்டத்துய்மன் என்னும் புத்திரனைப் பெற்று வைத்துக்கொண்டிருக்கின்றான் பாஞ்சாலன். அந்தத் திட்டத்துய்மன் பாண்டவர்களுக்குமைத்துனனுகியும்-உபதேசனுதிபதியாகியும்-எதிர்க்கட்சியிலிருக்கின்றமையால், நான் இவ்விடத்தினிற்கும்படியாய் நேரிட்டது. அப்படி நின்றபோதிலும் பதினேந்தாநாள் யுத்த நடந்துவரு மத்தியான காலத்தில், இம்மை மறுமைப்பய னிரண்டும் பெறவிருக்கின்ற தருமபுத்திர மகாராஜனுடைய வாக்கில் ஒரு வாக்கிய முண்டாகப் போகிறது. அவ்வாக்கினைக் கேட்பேனுகில், உடனே புத்திர சோகத்தில் மெத்த வருந்திச் சமரச யோகத்திலிருந்து தாரணை செய்து தனியன் ஆவேன். அந்தக்காலத்தில் உங்களுக்குப் பந்துவாய் வந்திருக்கின்ற திட்டத்துய்மன் தான் பிறந்திருக்குஞ் சத்துருத்தனத்தை நிறைவேற்றிக் கொள்ளுவான். காலமேறுது இப்படியிருக்கிற தாகையால் யாதுகுறித்தும் இப்போது யோசிப்பதிற் பிரயோசனமில்லை. நீங்கள் சகல சந்தோஷ சாம்பிராச்சியங்களையுந் தாழ்ச்சியில்லாமற் பெற்று வாழக்கடவீர்கள்" என்று தனது கால நிர்ணயமுஞ்சொல்லி ஆசீர்வதித் தனுப்பினர்.

யுத்தவாரம்பம்.

அப்பால் கிருஷ்ணமூர்த்தியும் பாண்டவர்களும் அத்துரோணச் சாரியிடத்தினின்றும் விடை பெற்றுக்கொண்டு தங்களுடைய சேனைக் காட்டில் வந்து கலந்தார்கள். அப்போது பாண்டவர்களும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும்வந்து பேசிப் போனார்களென்று துரியோதன மகாராஜன் கேள்விப்பட்டு தன் திஷ்டராகிய கர்ணராதியரோடுங் கூடிவந்து பீஷ்மாச்சாரியரையுந் துரோணச்சாரியரையும் வணங்கி என்ன சமாசாரமென்று கேட்டான். "அப்பா துரியோதனு! பின்னே வேறொன்றுமில்லை. பாண்டவர்கள் வந்து பரிதாபப்பட்டுச் சகல விவகாரமுந்தெரிந்த பெரியோராகிய நீங்களே முனே முகத்தில் வந்து நின்றால் நாங்களெப்படி பிழைப்போமென்று கேட்டார்கள். லோகத்தில் வாழ்வாரைப்போலச் சாவார், சாவாரைப்போல வாழ்வார். ஆகையால் எங்கள் பிராணனென்ன கல்லா? இரும்பா? ஒன்றுமில்லை. பத்துப் பதினேந்து நாளையிற் செத்துப்போகத்தக்க நாங்கள்

வெற்றி பெறுவோமென்ப தெப்படி? தெய்வசித்த மெப்படியோ அப்படி முடியுமென்றுசொல்லி யனுப்பினேம்'' என்று சொல்ல, அது கேட்ட துஷ்ட சதுஷ்டாள் கால்வரும் மற்றயாவரும் பாண்டவர்க ளுடைய பெருமையையுஞ் சிறுமையையுங் குறித்துப் பற்பலவித மாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். இவர்களிற்சில புத்திமான்கள் என்ன யோசித்தார்கள் என்றால் 'பாண்டவர்களுக்கு மிஞ்சிய பல சாலிகளில்லை; அதுவல்லாமல் ஆண்டவன் துணையு மிருக்கிறது. இருந்தபோதிலும் பாட்டன் ஆசாரியர் இவர்களெல்லாம் வேண் டிய முதியோராகையால் வந்து வணங்கித் தாங்களடங்கி, அவர்களுடைய ஆசீர்வசனமும் யுத்தஞ் செய்வதற்கு உத்தரவும் பெற்றுக்கொண்டு போக வந்தார்கள்' என்று பேசிக்கொண்டார்கள்.

இப்படியிருக்க உபய வாதிகளின் தளங்களிலும் வீரர்கள் சகல விதமான பேரோசையுடன் வீரப்பிரதாபக் கூச்சலும் போட்டு வெகுளியு மேற்கொண்டு அட்டஹாசஞ் செய்தார்கள். அவர் களுடைய விற்குணத்தொனி குமுகுமுவென்று அஷ்டதிக்குகளுஞ் செவிடு படும்படியாய் முழங்கிய விதமானது எப்படி யிருந்ததென் றால், "ஓ பிரபஞ்சத்தவர்களே! பாண்டவர்களுந் துரியோதனுதிய ரும், பதினெட்டக்குரோணி சேனைகளோடு பதினெட்டு காள் சண்டை செய்யப் போகிறார்களென்று சமாசாரந் தெரிவிப்பது போலிருந்தது. மேலும் இந்தக் குருக்ஷேத்திர நிறைந்தடங்கிய சேனைகளெல்லாம் முன்னந் திருவிக்கிரம அவதாரத்தில் திருமால் வயிற்றிற் பொருந்தி யிருந்த சராசரங்களேப்போலு மிருந்தன. அன்றியும் இவ்வுலகத்தைச் சுமக்கும் பூமிதேவி யானவள் 'ஐயோ! பூமிபாரம் பொறுக்கமாட்டே னென்று நான் முறையிட்டுக்கொண்ட தற்காக சுவாமி இந்த உபகாரஞ் செய்தார்? முதல்வராகிய இறைவர் இந்தச் சேனைகளே யெல்லாம் ஒரு தலைப்பாரமா யோரிடத்திற் சேர்த்து என்கழுத்தை யொடிக்கலாமா?' என்று வருந்தினாள். அல்லாமலும் பாதளத்திலிருக்கும் ஆதிசேடன் ஆயிரம் பணமகு டமும் வருந்திப் பரிக்கவும், சூரிய சந்திரர் முதலிய கோள்களெல் லாந் தங்கள் தங்கள் போக்கு வரவுக்கு வழியில்லாமல் நாம் நடக் குங் கதியாகிய நாள் குறையும்படி யாயிற்றே யென்று நடுங்கவும், திக்குப்பாலகரும் திசையானைகளு மொடுங்கவும், தேவர் முதலிய யாவரும் ஏங்கவும், அஷ்டகுலகிரிகள் எட்டுத் திக்கிலுந் தங்கள் தங்கள் தலையை மூட்டுக் கொடுத்துத் தாங்கவும் பாரைச் சூழ்ந்த கடல் பொங்கவும் பகைவர்கள் குடல் குலுங்கவும் இருபுயங்களும்

பூரித்துச் சேனைநாயகர் பராக்ரமிக்க இருதிறப் படைகளுங் திரண்டு சமுத்திரம் புரண்டு வந்ததைப்போல் நிறைந்து நின்று ஆர்ப்பரித்தார்கள்.

இப்பால் பாண்டவர் சேனாதிபதியாகிய சுவேதனன், தங்களுடைய ஏழக்குரோணி சேனைகளையும் பிரித்து வகைத்தர மேற்படுத்தி ஐந்துதலை நாகம்போல் வியூகம் வகுத்துச் சகல ஜெயமுந் தங்களுக்கு வரும்படியாய் வீரமாகாளி முதலிய ஜெயலக்ஷ்மிகளைப் பூசித்து வீரத்துட னெதிர்க்கவும் கௌரவர் சேனாதிபதியாகிய பிஷ்மாச்சாரியர் தமது சேனைகளைக் கருடவியூகமாகக்கட்டித் தாமுந் தூசிப்படையில் வந்து நின்றார். அந்தச் சமயத்தில் துரியோதன மகாராஜனும் தருமபுத்திர மகாராஜனுமாகிய இவ் விரண்டுபேரும் முனைமுகத்தில் வந்து நின்று ஒருவரை யொருவர் பார்த்துத் தங்களுக்குத் தாங்களே விளைத்துக்கொள்ள வந்த ஊழ்வினையை நினைத்து, தங்களுடைய கரங்களிற் பிடித்திருக்குங் கொடியைத் தூக்கித் தாழ்த்தினார்கள். அப்படி தாழ்த்திய வுடனே பிராணாபிமானம், தேகாபிமானம், லோகாபிமானம், மானாபிமானம் என்பனவற்றை யெல்லாம் விடுத்து, இரண்டு கடல் திரண்டு புரண்டு வந்து எதிர்த்ததைப்போற் கலந்து தொந்த யுத்தஞ் செய்தார்கள். ஒரு தளத்தில் முரசக்கொடியும் மற்றொரு தளத்தில் நாகக்கொடியும் படபடாத்காரங்களுடன் ஆகாயவீதி அதிரும் படியாய்ப் பறக்கவும், இருபடைகளிலும் பேரி பாங்காசமுரசு முதலிய வாத்தியங்கள் முழங்கவும், பிரமுகர்களுடைய கரங்களிற் பிடித்திருக்கும் விற்றொனியும் வீரகண்டைத் தொனியும் மேலாகி அதிரவும் சகலவித வீரர்களின் சங்கத்தொனிக ளொலிக்கவும், ஆயுதங்க ளிழையவும், எல்லாருடைய உள்ளமுங் குழையவும், தேராளிகளுடன் தேராளிகள், வில்லாளிகளுடன் வில்லாளிகள், வேலாளிகளுடன் வேலாளிகள், யானையோடு யானை, குதிரையுடன் குதிரை, வீரருடன் வீரர், வாளுடனே வாள், கதையுடனே கதை, இவ்வாறுக அரசருடனே அரசரும், பட்டவர்த்தனர்களுடன் பட்டவர்த்தனர்களும், மகுடவர்த்தனர்களுடன் மகுடவாத்தனர்களும், மந்திரிகளுடன் மந்திரிகளும், தந்திரிகளுடன் தந்திரிகளும், தளகர்த்தருடன் தளகர்த்தரும், மண்டலாதிபர்களுடன் மண்டலாதிபர்களும், சாமந்தருடன் சாமந்தரும், யானைத்தலைவருடன் யானைத்தலைவரும், குதிரை முதல்வருடன் குதிரை முதல்வரும், பதாதி நாயகருடனே பதாதி நாயகருமாய், கொடித் தலைவர், குடைத்தலைவர், அணித்தலைவர், ஆயுதத்தலைவர்

முதலிய யாவரும் ஒருவரோடொருவர் எதிர்த்துப் பற்கடித்து விற்பிடித்து இரண்டு புயமென்னும் வெற்பெடுத்து மற்றெடுத்து மண்டலங்கள் முதலிய விண்டலங்கள் அதிர நேருக்கு நேராக நின்று சண்டை புரிந்தார்கள்.

அப்போது அர்ச்சுனனும் பீஷ்மாச்சாரியரும் பீமசேனனும் துரியோதனனும் தர்மராஜனும், சல்லியராஜனும், நகுலனும், சித்துபதியும், சகாதேவனும் சகுனியும் திட்டத்துய்மனும், துரோணாச்சாரியரும் சுவேதனனும் துச்சாதனன் முதலிய தம்பி மார்களும், விராடனும் பூரியென்பவனும், கலிங்கராஜனும் யாக சேன னென்னும் பாஞ்சாலனும், அசுவத்தாமனும் குந்திபோ ஜனும், உத்தரகுமாரனும் கிருபாச்சாரியரும், கேகயனும் கிருத வன்மனும், அபிமன்னனும் இல்க்கண குமாரனும், கடோற்கசனும் பகதத்தனும், சாத்தகியும் பூரிசிரவனும், சிகண்டியும் கேசகனும், சோமதத்தனும், காம்போஜமகாராஜனும், சேரனும் சோழனும், பாண்டியனும் சகதேவனும், இராவானும் அலம்புதனும், துருபதேயனும் துண்மார்க்கனும், உத்தமோசாவும் விகர்ணனும், விடசேனனும் உதார்மனும், சுதனும், உக்கிரவேகனும் ஒருவரை யொருவர் எதிர்த்துக்கொண்டு பற்பல விதமாகிய யுத்தங்களைச் செய்தார்கள். மேலும் கொங்கர், கோசலர், சிங்களர், ஆரியர், சூரசேர், கங்கர், திராவிடர், கௌசலர், குண்டலபோசர், கலிங்கத் தவர், வங்கர், மாளுவர், மகதர், மக்கர், சோனகர், வத்தர், மராடர் முதலிய பதினெண்பாஷை மன்னர்களுங் கைகலந்து கண் சிவந்து கடுமை கொண்டு சப்த மேகங்களும் அஷ்ட கயங்களுந் திகைத்துத் திக்கு முக்கிட்டுச் சோர்ந்து செவிடு படும்படியாய்ப் போர் புரிந்தார்கள்.

இந்த யுத்தங்களைப் பார்த்திருந்த தேவர்கள் பயந்து ஆச்சரி யப்பட்டுக் கைகளை நெரித்துக் கொண்டு இனிமேல் அண்டங்களும் பிளந்து போமென்று நடுங்கினர். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மா தியங்கினர். இவ்விதமாக இருதிறப் படைகளும் ஒன்றுபட்டு யுத்தஞ் செய்யுங் காலையில், குதிரை யினங்களும் யானைக் கூட்டங்களுந் தரிபட்டு, சிற்சிலமுறிபட்டு, பற்பல நெரிபட்டுக் கால்களால் மிதி பட்டு மண்ணிற் புதைபட்டுப் போயின. தேரினங்க ளெல்லாஞ் சக்கரமுதற் சிகரம் வரைக்கும் தும்புந் தூள்களுமாய்ப் போய்க் குவிந்தன. ஒருவர்பேரி லொருவர் தத்தியும் பாணங்களினல் மொத்தியும், வேல்களினற் குத்தியும், வாள்களினல் எற்றியும், கரங்

களினும் பற்றியும், கறகறவென்று சுற்றியும், போர் புரிந்தனர். அக் காலத்தில், இறந்துபோன பதாதிகள் முதலிய வீரர்கள் இத்தனை கோடியென எவர்களாலுஞ் சொல்ல இயலாது. இந்திரன் தனது ஆயிரங் கண்களாலும் பார்த்து எண்ணமுடியாது. இத்தன்மையாகத் தங்களைத் தாங்களே மறந்து இறந்தவர்களிற் சிலருடைய தலைகள் வெட்டுண்டு ஆகாயத்தி லெழுந்து பூமியில் விழுந்தன. அவைகளி லிருந்து கொழுந்து விட்டெரியுந் தன்மைபோல் ரத்தம் பீரிட்டது. அந்தத் தலையிழந்த உடலானது தரையில் விழாமல் இடசாரி வலசாரி சுற்றிக்கொண்டு இருப்பது எப்படியிருந்த தென்றால் ஸ்ரீமந் நாராயணர், மோகினி அவதாரமாய்த் தேவர்களுக்கு அமுதம் பகுக்குங் காலத்தில், இராகு கேதென்னுங் கிரகங்கள் மாறுபாடாகிய ரூபத்துடன் அமுதத்தைக் கரத்தி லேந்தியபோது சந்திரர் சூரியர் சொல்லத் தெரிந்து கையிலிருந்த சட்டுவத்தால் அவர்களுடைய தலையை வாங்கிவிட்டபோது தலையற்று உடல் மாத்திரஞ் சுழன்றாடுங் தன்மையைப்போ லிருந்தது. இரண்டு முழங்கால்களும் முறிபட்டு ஒற்றைச் சக்கரங்களையுடைய தங்கள் தேரை நடத்தும் பாகர் எப்படி இருந்தாரெனில், சப்தமாவென்னும் பரிபூட்டிய சூரியனுடைய ரதத்தை யோட்டிய அருண னென்னுஞ் சாரதியைப்போ லிருந்தனர். மேலும் திடகாத்திர உன்னத தேகத்தினையுடைய படைத்தலைவர், பட்டவர்த்தனர் முதலிய பேர்களின் பேரில் பாணக் கும்புகள் காணற் கொம்புகளைப்போற் பாய்ந்து கேசாதி பாதம் வரையிலும் ரத்தம் பெருகியது. அப்போது அவர்கள் சுகந்த மலருடன் கூடியவிருக்ஷம் போலிருந்தனர்.

இன்னும் தங்கள் தங்களுடைய அம்பறாத்தூணியிலிருந்த பாணங்களை காணில் வைத்துச் சேணுறுவோர் தியங்கப் பிரயோகஞ் செய்து அப்பாற் பாணங்களில்லாமல் தங்களுடைய தேகத்தில் தைத்துக்கொண் டிருந்த எதிரிவிட்ட பாணங்களைப் பிடுங்கி எறிந்து, அவ்வெதிரிகளை நோக்கிச் சிரித்துக்கொண்டு அனேகர் போர்புரிந்தனர். மேலும் இடக்கை யற்றபோது வலக்கையைக் கொண்டும் வலக்கை யற்றபோது இடக்கையைக் கொண்டுஞ் சிலர் யுத்தஞ் செய்தனர். இவையன்றியும் ஒருவன் தலையை ஒருவன் வெட்ட, வெட்டுப்பட்டவன் தன் தலையைத் தன்கையில் பிடித்துக்கொண்டு தன்னை வெட்டினவன் தலைமுறிப்பட்டு விழும்படியா யெறிந்தான். உடனே யவனுந் தலையறுந் தாடினன். இவனுந் தலையறுந் தாடினன், மேலும் இரண்டு புயங்க ளறுபட்டு இரத்தவெள்ளம்பெருகும்படியா

யிருந்த வீராதிவீரர், இந்திரனுல் இறகுகளறுபட்ட மலைகள்போலிருந்தனர். சில வீரர் ஓடிவந்து தம் தலைகளால் முட்டியும், புயங்களாலிடித்தும், அதிகக் தேர்களை அழித்துக் குதிரைப் படையிலும், யானைப் படையிலும் புகுந்து, அவைகளைக் கால்களும், வால்களும், சிதைந் திறக்கும்படியாகச் செய்து ஜெயம் நம்மதென்று குதித்தாடினர். ஒருவீரனை யொருவீரன் வெட்ட, இவருள் தலை போனவனும் ஓயாம லெதிர்த்து அவனைக் கிட்ட, மற்றொருவன் ஓடிவந்து வெட்டினவனைத்திட்ட அவனு மிவனு நெருங்கித் தலையுடன் தலையை முட்ட, மேலெழுந்த தலைகள் வந்துவிழுந்து இவர்கள் மூவரும் பட்டார்கள்; உயிரையும் விட்டார்கள். இன்னொரு வீரன் பின்னொரு வீரன் பேரிற் சின்ன பின்னமாய்ப் பாதாதி கேசம் வரையிலும் பாணங்களைப் பொழிந்து வரும்போது, அடிபட்ட வீரனவன் பேய்களுடன் கூட்டுறவாகக் கூடிக்கொண்டாடித் தன் பகையை மூடித்துக் கொண்டான். மேலும் ஆயிரம் பாணங்கள் தூழைந்த துவாரங்களினின்று உதிரவெள்ளம் புறப்பட்டு வீசுங் தன்மையானது, அருணன் கடத்துக் தேரில் வராகின்ற ஆயிரங் கிரணங்களையுடைய சூரிய பகவானுடைய கிரணக்கூட்டம் போன்றிருந்தது.

இன்னுஞ் சிலரைப் பின்னும் பலர் மின்னும் வாளாயுதங் கொண்டு வெட்டினர். அந்த வெட்டைத் தன் கையிலிருக்குங் கேடயத்தால் தட்டிவிட்டுத் தலை காட்டாம லோடிப் பதுங்கியிருந்து, மீண்டுஞ் சிங்கக் குட்டிபோ லெழுந்து மேற் பாய்ந்து கட்டிப் பிடிக்க, இருவருங் காலுடன் கால், கரத்தொடுகரம், சிரத் தொடுசிரம், உரத்தோடுரம் அணைத்து, உடலொன்று உயிரொன் றென்று சொல்லும்படியாக இணைந்து கொண்டு கீழுவிழுந்து மல்யுத்தஞ் செய்தனர். இப்படியாகப் பற்பலகாலையர் விற்போர், மற்போர், வேற்போர், வாட்போர், ஆட்போர் முதலிய யாவும் புரிந்தழிந்தனர். ஓ அரசனே! இந்தப்பிரகாரம் யுத்தஞ்செய்து வரும் போது அர்ச்சுனனும் பீஷ்மாசாரியாரு மெதிர்த்துத் தேவதாஅஸ்திரப் பிரயோகஞ்செய்து போராடுங்காலையில், யாவரு நடுங்கும் படியாய் இருதிறப்படைகளும் எட்டித் திக்கிலும் வளைந்துகொண்டார்கள். பூமியிலிருந்து மேலெழுந்த தூசிகளினுல் வேடிக்கை பார்த்த தெய்வலோகத்தினராகிய மேலுலகத்திலிருக்கும் நாகருங் கண்களைப் பொத்திக்கொண்டார்கள். பளுவைச் சுமக்கமாட்டாமல் ஆதிசேடன் முதலாகிய கீழுலகத்திலிருக்கும் நாகருங் கழுத்தொடி

யச் சுமந்து இழைத்துக் கழைத்தார்கள். அந்தச்சமயத்தில் துரியோதன மகாராஜனனவன் தன் பாட்டனாராகிய பீஷ்மருக் குதவியாகச் சகுனி, சல்லியன், தம்பிமார் முதலிய பேர்களை யனுப்பினன். இதைக்கண்ட தருமராஜன் அர்ச்சுனனுக்குப் பின்பலமாக பீமசேனனையும் அபிமன்னனையும் அனுப்பினர். அவர்களை அர்ச்சுனன் கண்டு "எனக்குப் படைத்துணை யனுப்பவேண்டுமோ? இத்தப் பீஷ்மரைச் ஜெயிப்பதும் அருமையோ?" என்று கடுகடுத்துப் பாட்டன் ஏறியிருக்குந் தேரிற்கட்டிய பனைக்கொடியின்பேரிற் பன்னிரண்டு பாணமும், கவசத்தின்பேரில் ஒன்பது பாணமும், அவர்தேகத்தின் மீது ஐம்பது பாணமும், அகமும் புறமும் நடுநடுங்கி யொடுங்கும் படியாக விடுத்தான். அதனால் அந்தப் பெரியவரானவர் நிலைதளர்ந்திருக்க அந்தச் சமயத்திற் சல்லியனுஞ் சகுனியுந் துரியோதனனுடைய தம்பிமார்களுந் தலை தீட்டிக் காட்டினார்கள். அவர்களைப் பீமசேனன் கும்பாகக் கூட்டிப் பேய்போலாட்டிக் கோடிகளைகளைப் பூட்டி மாட்டி யோட்டி விட்டனன்.

பாண்டவர் சேனையில் விராடராஜ குமாரருள் உத்தரன் வதை.

இப்பால் கர்ணனுடைய பிள்ளைகளில் மூத்தவனுகிய, சூரியகேதென்பவன் இராவணனுடனெதிர்த்து, அநேக விதமான தந்திரயுத்தங்களெல்லாவற்றையுஞ் செய்து அலுத்தும், ஒருவரையொருவர் விட்டு நீங்காமல் இருந்தபடி யுத்தஞ் செய்தனர். பலம் பெறும் அரக்கராகிய அலம்புதனுங் கடோற்கஜக்காளையும் எதிர்த்து, இருளாகவும், மழையாகவும், மின்னலாகவும், வெளியாகுதல் முதலாகிய மகாமாயைக் கோலங்களும் இந்திர ஜாலங்களுங் காட்டி அமர்புரிந்தார்கள். அந்த அலம்புதனுடைய தம்பிமாராகிய அசேயசூரனும், கடோற்கஜனுடைய குமாரராகிய அஞ்சனவர்மனும் மரம், மலை முதலிய ஆயுதங்களைக் கொண்டு கடும்போர் புரிந்தார்கள். அப்போது குற்றமற்ற பல பராக்ரமசாலியாகிய வாளபி மன்னனனவன் வெகு சேனைகள் மாளும்படியாகத் துணித்துக்கொண்டு வரும்போது, தன்னுடைய தந்தை, மூதாதையாகிய பீஷ்மருடன் கலந்து போராடுஞ் சமயத்தில் தான் காலு பாணங்களைத் தொடுத்துப் பீஷ்மரு

டைய ரதத்திற் பூட்டிய நாலு குதிரைகளையும் காசப்படுத்தினன். அதைக்கண்ட காங்கேயன் சங்தோஷங் கொண்டு வேறு தேரேறி விரைந்து வந்து போர் புரிந்தார். அந்தச் சமயத்தில் உத்தரகுமாரன் தேரைச் செலுத்திக் கொண்டுவந்து மத்திர தேசாதிபனுடன் எதிர்த்துப் போராடிக் குதையினையுடைய வில்லிற் சில பாணங் தொடுத்துத் தேகங்களிற் புதையும்படி மழைபோற் பொழிந்து மேக கெற்சிதம்போல் இறைந்து விரைந்து அச்சல்லியனுடைய வில்லற்று விழவும், கவசங் கிழிபடவும், துவஜம் முறிபடவும், அழகிய ரதத்திற் கட்டித் தாவிவருங் குதிரைகள் அற்று விழவும், சாரதி செத்து விழவும், மற்றவர்கள் தலை சுற்றி விழவும், கொற்றவர்கள் சிலபற்றி யெழவும் யுத்தஞ் செய்தான். அச்சல்லிய ராஜனுடைய சரீர மெல்லாஞ் சல்லடைக் கண்ணுய்த் துளைக்கப்பட்டு உதிரம் பெருகியபடியால், அவன் ஒன்றுந் தோன்றுமல் மனந்தளர்ந்து "இப்பாவிப் பயலாகிய உத்தரனுடன் வில்லெடுத்துப் போர் புரியக் கூடாது" என்று மனங்கூசி வீர வார்த்தைபேசி இலை போன்ற வேலாயுதத்தை யெடுத்து இதயத்திற் பலவாறுகச் செபஞ் செய்து விடுத்தான்.

அப்படி விடுத்த அந்தக் கூரிய வேலானது குவலயத்தைக் குமுறச் செய்து வந்து குபீரென்று மச்சதேச குமாரனுடைய மார்பிற் பாயவே, தக்ஷணம் உத்தரகுமாரனுனவன் மருட்சிகொண்ட மான் குட்டிபோற் துள்ளி மார்புடைந்து வானுலகடைந்தான். தன் மகனுகிய உத்தரன் சல்லியனுற் கொல்லப்பட்டானென்று கேட்ட விராடன் முதற் பாண்டவச் சேனை வீரர் யாவரும் ஒன்றுகக்கூடி, உகாந்தகாலத்திற் பொங்கியெழுங் கருங்கடலைப்போற் புரண்டுவந்து போர் புரிந்தார்கள். அத்தனை பேர்களுஞ் சித்தங் கலங்கி வெற்றி பெறமாட்டாமற் சுற்றியிளைக்குந் தருணத்தில், வீரபட்டமணிந்த யானையைப்போன்ற கதாபாணியாகிய பீமசேனன் வந்து விழுந்து வீரசுவர்க்கத்திற்கு வரவு செலவு கணக்குச் சொல்பவனைப்போல் வெற்றி மாலைதரித்து, பலபல வீரங்களைப் பேசிக்கொண்டு சண்ட மாருதம்போற் சுழன்று யாவரையுஞ் சின்னபின்னப் படுத்தினன். அப்போது வேல் தாங்கிய அதிரதர் முதலாகிய அரசர்களெல்லாம் நிலைபெறமாட்டாது குலை கிழியும்படியாய் அடிபட்டு முடிபட்டு உதிரங்கள் வடிபட்டு, உள்நொந்து கெட்டனர். அவர்களில் இறந்தவராட இருந்தவரோட எதிர்ந்தவர் வாடினர். இப்படியாக பீமசேனன் ஜெயம்பெறுந் தன்மையைத் தூரியோதன மகாராஜன் கண்டு, பூமி

யிற்றரிக்கப் பொருந்தாமற் பொங்கி, நெஞ்சுழலக் கண்சுழல நெருப் புப் பொறியெழக் கோபங்கொண்டு, அஞ்சுசிரத்தினையுடைய அரன் மேற் பஞ்சபாணனுகிய மன்மதன் மலர்ப்பகழி யெடுத்து விடுத்தது போல் மறப்பகழி தொடுத்துப் பல வீரர்களையும் ஓட்டிக் கறுகறுத் தும் பின்னும் புற்கடித்து விற் பிடித்து, சொற்படித்து, இமய மலை யின் சிகரம்போன்ற தண்டங்கொண்டு மண்டலமிட்டுத் தேர் நிரை கள், சேனையணிகள், யானைக் கூட்டங்கள், அரசனுடைய மணிமகு டங்கள் முதலானவைகள் யாவற்றையுஞ் சாடிக்கொண்டுவரும் பீம சேனன் பேரில் அநேகம் பாணங்களையுந் தாக்கினன். அத்தக் கணை களையெல்லாம் பீமன் முனைமழுங்க வடித்துக் கதையுடன் தாவி, அநேகமாயிர விதங்களாக விளையாடி மோதி முனைந்து தாக்கினன். இருவருஞ் சாதிக்கத் தக்க தன்மைகளை யெல்லாங் காட்டிச் சிங்க மும் சிங்கமும் எதிர்த்துப் போர்புரிந்த தன்மையைப்போல் நெடு நேரம் சண்டை செய்தனர். திடவீர கர்த்தனுகிய பீமன் அத் துரி யோதன ராஜனுடைய வில் முறியும்படியாய் ஓங்கி அடித்து, மீண்டும் பாங்கிற் குதித்து, ஓர் கரத்தை நீட்டி அவன் ஏறிவந்த தேரைத் தூக்கி ஆகாயத்திலெறிந்தான்.

அந்தத் தேரானது பூமியிலோடுவதைப் போல் ஆகாயத்திலுங் கரகரவென்றோடி நிலத்தில் விழுந்தது. அதன் சக்கரங்கள் உடைந்து, அச்சுமுறிந்து, சிகரமுதலிய குடைகளுங் கொடிகளு மழிந்தன. சாரதியும் அழிந்து, வன்ன மாகிய அந்தத் தேர்க் குதிரை களுஞ் சின்னபின்னமாகவே துரியோதன ராஜனுந் தேரைப்போற் சிதைந்து போனுரென்று அவனுடைய சேனைகளெல்லாம் புறமுது கிட்டோடிவிட்டனர். அந்தச் சமயத்திற் படைத்தலைவர் முதலிய அரசர்களெல்லாம் ஓடிய சேனைகளை யெல்லாந் தடைப்படுத்தி இராஜனுக் கென்னவோ அபாயமென்று கூட்டங்கூடி வந்து பார்த் தார்கள். அந்த வேளையில் பீமசேனன் பாரியரதத்தி லேறிக்கொண்டு ஒரு சூரியனைப் பல சூரியர்கள் சூழுமாப்போல் அநேகம் வேலாளி கள், வாளாளிகள், வில்லாளிகள் தன் பக்கத்தில் நிறைந்து நிற்கவும், சுமேதகூத்திர நிழலைவிட்டு நீங்காத கிரீடாதிபதிகள் முன்னும் பின்னு முறைவழுவாமற் சிறந்து விளங்கவும், நடுநாயகம் போல் நின்றான். அப்படி பீமன் நிற்கும் மேன்மையைக் கண்டு மனந்தளரா மற் புகைபுமனத்தினராய்ப் பகை மேற் கொண்ட சிந்துதேசத் தலைவராகிய விந்தரன் முதலிய பேரும் சகுனி மைந்தராகிய மைத்துனரென்னு மாப்பிள்ளைத் துரைகளும் இவர்களுக் கருக

ராகிய முடிமன்னவரும் வந்து நெருங்கி அவனை வளைத்துக் கொண்டு கூர்ங்கணை பொழிந்தார்கள். துரியோதன ராஜனுக்காகப் பராக்ரமா யெதிர்த்து வந்த மைத்துனர் முதலாகிய மன்னவர்களைக் கண்ட பீமன் மரியாதை செய்வதற்குத் தேரை விட்டிழிபவனைப் போல் இறங்கி இருகரத்தையுங் குவித்துப் பிடித் திருக்குங் கதை யுடன் பூமியிற்குழ்ந்து பக்குவமாய் நுழைந்து விஷ்ணு சக்கரம் போல் வேகமாய் விரைந்து சுழன்று, மகமேருவின் கொடி முடி யானது வாயுவாற் பறிபட்டுப் போனதைப்போல் வந்தவர்களின் மணிமுடிகள் யாவும் அவன் சேயாகிய தன்னுற் றறிபட்டு மண்ணில் விழுந்துதிர, விண்ணிலெழுந்ததிர, மாறி மாறிக் கதைகொண் டடித்துத் தேவர்கள் முதலிய பேருந் திடுக்கிட்டுத் துடிக்கச் சேதித்து வந்தான். துரியோதனனுடைய படைவீரர்களும் பாண்ட வர் சேனைகளிற் புகுந்து பற்றறக் களைந்து பற்பலவிதமாய்ப் பாரி யோடி அளவற்றபேரைச் சாரிசாரியாய்ச் சாய்த்தார்கள்.

இவ்வாறு இருதிறப்படைகளும் போர் புரியும்போது பாண்ட வர் சேனாதிபதியாகிய சுவேதனன் தனது தம்பியாகிய உத்தர னிறந்தானென்று கேட்டு மெத்த விசனங்கொண்டு கர்த்தராகிய சிவ பெருமானளித்த வில்லை யெடுத்துப் பிடித்து, வெற்றி மாலையைத் தரித்து வீராவேசத்துடன் சங்கநாதம் - சிங்கநாதம் - தாரை - பூரி- முரசு - சின்னம் - காகளம் முதலிய வாத்தியங்கள் முழங்கவும் ஆல வட்டம், குடை, கொடி, மேற்கட்டி, விதானம் சுருட்டி மயிற்பீலி முதலிய இவைகள் விளங்கவும், தேர்வீரத் தலைவருக்கிறைவர், யானைவீரத் தலைவருக்கிறைவர், குதிரைவீரத் தலைவருக்கிறைவர், சேனை வீரத் தலைவருக்கிறைவர் இவர்களெல்லாந் திடமாக நாலு பக்கங்களிலே வரவும், பல்லைக் கறகறவெனக் கடித்து வில்லைப் பர பரவெனப் பிடித்து யுத்த களத்திற் புகுந்து, "மத்திர தேயனுகிய சல்லிய னெங்கே? அவன் வில்லிய லெங்கே? இப்போதே அவனைச் சல்லி வேருடன் கெல்லி விடுகிறேன்" என்று தொடர்ந்து, அவ் விடத்திற் படர்ந்து பற்பல படை வீரர்களெல்லாரும் பாறிப் போகும்படியாய்ப் பாடுபடுத்தி, அவருக்குக் கேடு நடத்தி, யாவருங் கலங்கி அலமலங்கிப் போகச்செய்து, சல்லியனுக் கெதிரிற்போய் நின்று தகைத்து, சிங்கம்போற் பேரொலியாக விரைந்து தனது வீரப் பிரதாபங்களைப் பேசி, "ஆ! ஆ! புத்திரனே! பத்திரமாயிரு! சற்று நேரத்தில் உன் தலை அற்றுவிழச் செய்கிறேன் பார்" என்று பலவித சபதங்களைப் பேசினான். சல்லியனும் நகைத்து ஈட்டுக்

கோடாகப் பேச மிகுந்த ரோஷத்துடன் இருவரும் பதைத்து இமைக்கு முன் பகைத்துப் பாரிய வில்லை வளைத்து ஒருவருக் கொருவர் நிகரில்லை யென்று சொல்லும்படி உடல்களைக் கண்டு ஊடருவும் வாளிகளை ஒன்றனந்தமாக யேவி முன்றுணிந்து தரவி மலைந்தார்கள்.

இந்தப்பிரகாரம் இவர்களிருவரும் தங்களுக்கொருவர் நிகரில்லை யென்று புருவம் நெரித்தூப் புகையும் இறைத்துப் பொறியும் பறக்க ஐம்புலனுங் குறைந்து போகும்படியாய்ப் போர் புரியும்போது சல்லிய ராஜன் இதென்ன சல்லியமென்று தளர்ந்து வருந்தும் தன்மையைக் கண்ட இந்துகுல ராஜனாகிய துரியோதன மகாராஜன் மலைபோன்ற புயத்தினையுடைய தன் தம்பிமார்களில் ஆறுபேர்களையும் அவர்களுடனே அனேகந் தீரர்களையுஞ் சேர்த்து மத்திர தேசாதிபதிக் குற்ற அணையாகும்படியாய் அனுப்பி வைத்தான். அந்த அரசனுடைய உத்தரவின்படி வந்த தம்பிமார்கள் மயிலேறும் பெருமாளாகிய சுப்பிரமண்யக் கடவுளைப்போல் மகுடமுடி மன்னவர்களுடன் வந்தெதிர்த்து மாறுமல் வாளி தொடுக்குங் காலையில், மதுமலர் மாலை யணிந்த சுவேதனனாகிய சேனாதிபதி மனக்கொதிப்புடன் மலைந்து, அவர்களுடைய அத்தக்கரணங்களெல்லாங் கெட்டழியும்படி பலகணைகளைப் பொழிந்து, பலங்கொண் டெதிர்த்த மன்னவர்களின் ஒன்றுகிய விற்களை இரண்டிரண்டாக முறித்துத் திரண்டு வந்த படைவீரர்களெல்லாம் அரண்டு புரண்டு முடித்தலை யுருண்டு மண்மேல் விழுந்தழிய வாளி மழைகளை மாறுமற் றொடுத்தான்; இவையன்றியும் அவரவர்கள் ஏறிவந்த தேர்களையும், அத்தத் தேரிற் பூட்டிய குதிரைகளையும், அக்குதிரைகளை நடாத்துஞ் சாரதிகளையும், மேகம்போன்ற யானைகளையும், வேலாயுதம், சூலாயுதம், வாளாயுதம், சக்கராயுதம், குத்தீட்டி, எறியீட்டி, பாலா, பல்லயங்கள் முதலியவைகளோடு, கவண் கற்களுங் கொண்டுவந்த காலாள் யாவரையும் இலவம்பஞ்சுபோற் பறக்கும்படியாகச் செய்து தன்னுடைய ரதமுந் தானுமாய்ப் பெருங்காற்றைப்போ லுலாவிக் கொண்டு நின்றான் சுவேதனனவன்.

இந்தச் சுவேதனன் றொடுக்கும் அம்புகளினால் இறந்தவர்கள் போக இருந்தவரியாவரும், துரியோதனனுடைய தம்பிமார்களும், நெரிபட்டு நிலைகெட்டு நெறிவிட்டுப் புறமுதுகிட்டுப் பறிபட்டு ஓடி வருந்தன்மையைப் பார்த்த வணங்காமுடிபெற்ற மன்னன் பீஷ்ம

ரைக் கண்டு, 'இன்று ஜெயங்கொண்டு பிழைத்தாற் சகல சம்பத்தும் நமக்குண்டு; இல்லாவிட்டாற் பாண்டவர்களுக்கு நாம் தொண்டு' என்று பற்பல வார்த்தைகள் சொல்ல, அந்த வசனத்தைக் கேட்ட பீஷ்மாசாரியார் பாரிய வில்லைக் கைக்கொண்டு சுழற்காற்றைப்போற் பறக்க வடிக்கிறே னென்று யாரையு முறுக்கி யடித்துக் கொண்டு வந்து எதிர்த்தார். இவரைக் கண்ட சுவேதனனெனவன் சல்லியனை ஒருபுறத்திற் றள்ளிவிட்டு "ஏழு சமுத்திரம்போ விரைந்து கொண்டு ஏழு மேகம் போல் விரைந்துவந்து எதிர்க்கும் பீஷ்மரே! நீரொரு பெரிய தலைபிருக்கிறீரென்று துரியோதனன் துள்ளிக்கொண்டிருக் கின்றான். பாண்டவர்களும் பாட்டனாராகிய பீஷ்மரை எப்படி ஜெயிப்போமென்று முன்பின் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். நீரும் மத்திராஜனுக்கு உபபலமாய் வந்தீர்! வாரும்! வாரும்! பெரிய வரே! உமாமகேசனைப் போற்றி, உம்முடைய ஒரு தலையை மாற்றி ஐவர்களுக்கும் ஆறுதலை யேற்றிப் பதினைராக்குரோணி சேனைகளை யுந் தூற்றிவிடுகிறேன் பாரும்! பாரும்!" என்று ஓர் அஸ்திரத்தை விடுத்து, பீஷ்மர் கைக்கொண்ட பலமாகிய வில்லைக் கெடுத்து, தேகத்திலும் ஆயிரங் கணைகளை நுழைத்தான். அப்போது பீஷ்ம ரானவர் சுவேதனன் அதிக வேகமாய்த் தொடுக்குங் கணைகளுக் கிளைத்து, சித்திரம்போற் நிகைத்து திகிற்கொண்ட புவிபோ லிளைத் துச் சற்று நேரந் தரித்து வேறு விற்கொண்டு விராடகுமார னுடைய சித்திரக் கிரீடம் அற்று விழும்படி தாக்கினார்.

கௌரவர் சேனையில் ஜயவிஜயா ளென்னும் பஞ்ச சேனாதிபர் வதை

உடனே அந்தச் சுவேதனன் அழற்கணை தொடுத்துப் பனைக் கொடியறுத்து அச்சுமச்சுகளுடன் தேரையு மழித்து கச்சு கச்சென வரும் தேரையு மொழித்தான். மறுபடியும் பீஷ்மரானவர் வேறு தேரேறி விரைந்து வந்து சுவேதனனுடைய வீரபட்டம் அறுந்து விழுந்து நெற்றியுந் திறந்து போகும்படியாக நூறு கணைகளைத் தொடுத்தார். சுவேதனன் அந்த நூறு கணைகளைத் தாறுமாறுக்கி வேறு வேறுகப் போக்கி அவர் கையிற் பற்றிய வில்லையும் தேர், குதிரை சாரதியையும் இடிக்கணையால் முடித்து, வடிக்கணை

தொடுத்து மார்பி லடித்தான். மறுபடியும் பீஷ்மரானவர் வேறு தேரேறி வந்து வில் வளைத்துச் சரமாரி பொழியும் போது சுவேதனனுனவன் கடகடத்துக் காலாக்கினிக் கணைகளை விடுத்துக் காங்கேயன் கையும் மெய்புங் கருகும்படியாய் உதிரம் பெருகும்படியாய் உடம்பெல்லாம் பொத்தி, உரனிற் குத்தி, உடனே யோடி, வில், ரத முதலியவைகளை யெல்லாம் ஒடிக்கும்படியாகிய உக்ரசாயியென்னும் ஒரு கணையை விடுக்க, அதைக் கண்ட பீஷ்மர் வெகுண்டு 'இவனுடனின்று இனி என்ன யுத்தஞ் செய்வது" என்று மனந் தளர்ந்திருக்கச் சுவேதனனுனவன் மற்றப் படைகளை மடக்கியடித்து அவருடைய பதினேழு அக்ரோணி சேனைகளையு மொருதரஞ் சுற்றிப் பார்த்து உலையச் செய்து வருகின்றான். இதற்குள்ளே துரியோதன ராஜனுனவன் பீஷ்மர் இளைத்த விந்தையைக் கண்டு விசனம் அடைந்து "சுவேதனனுடன் யுத்தஞ் செய்து பீஷ்ம ரிளைக்கிறார் போலிருக்கிறது. ஓ முடிமன்னவரே! ஓ கொடிமன்னவரே! நீங்கள் விரைவிற் சென்று பீஷ்மருக்குத் துணைசெய்யக்கடவீர்கள். அன்றியும் எவ்விதமா யாகிலு மிளைக்காமல் அச்சுவேதனனை வெற்றி கொள்ளுங்கள்" என்று சொல்லிக் கூட்டி விடுத்தார்.

அந்தப்படிக்கு அவரவர்களுந் துடிதுடித்து விரைந்து வந்து 'எங்கே, சுவேதனன்?" என்று வாய் திறந்தார்கள். இதோ வந்தேனென்று படையைச் சுற்றிப் பார்த்து வந்த சுவேதன னுனவன் வந்தவர்கள் வந்த வழியே கொந்து போகும்படியாகவும், அவர்கள் பிடித்த வில்லும், ஆயுதங்களும், கவசமும், தேரும் அழியும்படியாகவும் கணைகள் பூட்டி அவர்களை மாட்டி ஓட்டினன். அதனால் அவர்கள் வருந்திப் பின்னிட்டு வருவதைக் கண்ட துரியோதன ராசன் மனத்துணிவுகொண்டு ஜயவிஜயாள் என்னும் பஞ்ச சேனதிபர் ஐந்து பேரை அனுப்பி வைத்தான். அந்த ஐந்துபேரும் வந்து "ஆரவன் சுவேதனன்? ஆரவன் சுவேதனன்?" என்று அதட்டிக் கேட்கும்போது அங்குள்ள அக்ரோணிகளை யெல்லாம் ஒரு சுற்றுச் சுற்றி வருகிற சுவேதனன் இவர்களுக்கு நேரில் வந்து நின்று, "நான்தான் சுவேதனன்" என்று சொல்லி அவர்கள் மலைபோன்ற தேர்களும் அவர்கள் கைக்கொண்டு தெரிக்கும் விற்களும் பொற் பிரகாசமுற்ற முடிதாங்கிய தலைகளும் படிமேல் விழுந்துருளும் படியாய்ப் பிறைமுகக் கணைகள் விடுத்து அழித்தான். அவர்கள் மீண்டுபோய்த் துரியோதனனுக்கு வெற்றிபெற்றே மென்று சேதி சொல்லாதபடி இங்ஙனே மாண்டு போனார்கள். இவைகளைப் பார்த்

திருந்த கங்கா புத்திரன் கண் சிவந்து கமிமை கொண்டு கார்முகம் வளைத்து காணேற்றிக் தெரித்து இரதமேறிச் சிங்கம் போற் றெழித்து உறுக்கிக் கருவி எதிர் சென்று நின்று ஓர் இலைமுகப் பகழி எடுத்துத் தொடுத்து விடுத்தார்.

அதைக்கண்ட சுவேதனன் கலீரென்று நகைத்து "ஐயா! எத்தனை ரதம், எத்தனை வில்! இன்னும் எத்தனை வீரர்களுதவியுடன் எத்தனை தரம் வருவாய் பெரியோனே" என்று பேசி, கமலாஸ் திரக்கணை எடுத்துத் தொடுத்து விடுத்துப் பீஷ்மர் கையிற் பிடித்த தாஷ்டிகவில்லைப் பங்கப்பட ஒடித்து, ஒரு சுற்றுச் சுற்றி யெதிர்த்து வந்து நின்று, அவரேறி யிருக்கும் இரதத்தையும் அழித்தான். அந்த வேளையிற் சிந்தை நொந்து தியங்கி மகோத் தியானங் கொண்டிருந்தார் பீஷ்மரானவர். அப்போது ஆகாயத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்க ளெல்லாம் விராட குமாரனைப் புகழ்ந்து வெகுவாய் மகிழ்ந்து அவனுடைய விஷயங்களைப் பேசிக் கொண்டு "லலாட நேத்ரஜனிய காதபித்து கலாதீதன் என்னுஞ் சிவபெருமான் அளித்த வில்லைத் தாங்கிய இந்த வல்லவனைக் கொல்லத்தக்க பேர்கள் எவர்களுமில்லை. ஆகையால் பீஷ்மாச்சாரி யர் அநேகந்தர மிளைத்தார். அந்த வில்லை அவன் கையிற் பிடித் திருக்கும் வரையிலும் அவனை யாவராலும் ஜெயிப்ப தரிது. ஆனால் வஞ்சனை செய்து வேறு ஆயுத மெடுக்கப் பண்ணினால் அவன் அப்போ தழிந்து போவான்" என்று தங்கள் குலத்தாராகிய பீஷ்மருக்கு நலத்தைச் செய்யும் படியாகப் பேசிக்கொண்டார்கள். அந்த வார்த்தை இந்தப் பீஷ்மருக்குத் தெரிந்தது. அஃதெப்படி யென் றால் எட்டு வசுக்களிற் பிரபாசன வசுவே பீஷ்மாவதாரமானபடி யாலும், அவர்களை இவர் நெடுநாள் பிரிந்திருப்பதினாலும், இவர் சீக்கிரம் அந்த வசுபதத்திற்கு வரவேண்டு மென்னும் பக்ஷத்தினா லும், இந்தப் பீஷ்மருஞ் சற்றுநேரந் தியானத்திலிருந்த படியாலும், அவர்கள் பேசிக்கொண்ட தேவரகசியம் இவருக்குத் தெரிந்தது. உடனே வேறொருதேர் ஏறிக்கொண்டு வெறுங்கையுடனே எதிரில் வந்து நின்று "அடே உனக்கு இந்த வில்யுத்தம் ஒன்றுதான் தெரியும்போ லிருக்கிறது. 'அதை விட்டாற் கதியில்லை. அப்பாற் போனால் வழியில்லை' என்பதுபோல், வேல் வாள் கதை முதலிய யுத்தங்களில் உனக்கொன்றுந் தெரியாதல்லவா? அடா வெப்ப முடையவனே" என்று பீஷ்மர் கேட்டார்.

விராடராஜ குமாரருள் சுவேதன சேனைபதி வதை.

அப்படி கேட்கவே சுவேதனன் மிகுந்த வெட்க முற்று, மேரு வில்லாளியாகிய ஈசன் கொடுத்த வில்லைப் போட்டுவிட்டு, உடைவா ளுருவிக்கொண்டு, "பீஷ்மரே! எனக்கா வேறுவித ஆயுதப்பழக்க மில்லையென்று சொன்னீர்? கல்லது உமது நிர்வாகத்தை விற்றிற மையிற்கண்டேன். இதோ வாளின் திறமையிலும் பார்க்கும்படியாய் வந்தேன்" என்று அவரது அக்ரோணிகளைச் சுற்றி அநேகம்பேரை யேற்றி உடனே ஓடிவந்து அவர் பேரிற்ரூவி, சாரதி குதிரைகளைத் தூவிக் கீழே குதித்துச் சக்கரம்போலச் சுழன்று உக்கிரங்கொண் டெழுந்த காலத்தில், பீஷ்மர் வேறு தேரேறி வில்லெடுத்து வளைத்து அர்த்தசந்திர பாணந் தொடுத்துச் சுவேதனனுடைய ஒற்றைக்கை யற்று விழும்படியாகக் கொய்தார். அதைக்கண்ட சுவேதனன் மனமகிழ்வுகொண்டு, மற்றொருகையில் அவ்வடி வாளைத் தாங்கி பீஷ்மாச்சாரியாரைப் பார்த்து "ஐயா பெரியோரே! இப்படி வஞ்சகஞ் செய்து மடிப்பதற்காகவா இந்த யோசனை யெடுத் தீர்? ஆகிலும் நீர் நினைக்குங் காரியமல்ல: போகட்டும்! இப்போது உம்முடைய பதினேழு அக்ரோணி சேனைகளில் நாலக்ரோணி சேனைகள் மடிந்திருக்கின்றனர். உமக்குக் கணக்குத் தெரியாது. நீர் போய்ப்பாரும்: பாண்டவர்களுக்கு ஏழக்ரோணி. துரியோதனனுக் கும் ஏழக்ரோணியென்று சரிப்படித்தி வைத்தேன். இன்னும்வேண் டிய வேலைகளை யெல்லா முடிக்கவிருந்தேன். இதற்குள்ளாக நீ ரென்னை மோசஞ்செய்து முடித்துவிட்டீர்! ஆண்டவனுடைய சித்தமிப்படியிருந்தது. அப்படி யிருந்த போதிலும் உம்மைப்போ லொத்த அதிரதனினைக்குங்காரியம் இதன்று" என்று வெகுவாய்ப் பேசி இடக் கரத்திற் கொண்ட வாளேயோங்கி பீஷ்மருடைய தேர் குதிரை சாரதி முதலிய எல்லாவற்றையும் அழித்து, அவர் விடுகிற கோடானகோடி பாணங்களையுங் குறைத்து, யானைகளனேகம் பதாதிகளனேகம் அரசரனேகம் புரஜனரனேகமாய் மாளும்படி வீசி மண்டலமிட்டுப் பீஷ்மருடைய மண்டையைப் பிளக்கும்படி யாயெண்ணி அண்டையிற் பாய்ந்து வந்தான். அதைக்கண்ட பீஷ்மரானவர் சுடர்வாளி யொன்று சுறுக்கிற் றொடுத்துப் பகை யாளியுயிரைப் பற்றறப்போக்கினர். உடனே சுத்தவீரனுகிய சுவே தனன் பூமி யசையும்படியாப் பொன்மயமாகிய மேனியிற் புழுதி

தோயும்படி பூமியில் விழுந்தான். ஆகாயத்திலுள்ள தேவர்கள் எல்லாரும் வாழிகூறி மங்களம் பாடி, மகிழ்ந்து புகழ்ந்து அந்தரதுந்துமி முழக்கினார்கள்.

இப்பால் துரியோதனன் முதலிய சேனை வீரர் யாவரும், உகாந்தகால மடங்கி உலகமுதலிய திசைகள் மீண்டு முண்டாகிய காலத்தில் ஏழு சமுத்திரமும பரந்து இரைத்தா லெப்படியோ, அதுபோ விரைத்தார்கள். இப்பால் அழிந்து போன அளவிறந்த சேனைகளின் அம்புகள் பட்ட துவாரங்கள்தோறும் பெருகுகின்ற உதிர வெள்ளமானது பிரிட்டோடி வருந்தன்மை யெப்படியிருந்த தென்றால், ரணகளத்தி லிருந்த சுத்தவீரர் முதலிய சேனைகளுக்குச் சூரியமண்டலத்தின் மத்தியில் நுழைந்து போகும் வழியின் சாயல் போலிருந்தது. மேலும் ரத்த வெள்ளத்தில் வெள்ளைக் குடைகள் காம்பற்று விழுந்து கிடப்பது எப்படி யிருந்ததென்றால், வேல் போன்ற கண்களையுடைய ஸ்திரீகள் குளித்த பரிமளச் செங்குங்கும நீரில் எழுந்த சுமிழியையும் செந்தாமரை மலரையும் ஒத்திருந்தது. யானைகளின் உடலாகிய கலங்கல் வழியில் வழிந்துபோகுங் குருதி வெள்ளத்திற் கொடியாடைகள் தோய்ந்தசைந்து மிதக்குந்தோற்றம் எப்படி யிருந்ததென்றால், செம்மண் கலங்கலாகிய புது வெள்ளப் பெருக்கில் எதிரோறித் துள்ளிப்பாய்ந்து விளையாடித் திரிகின்ற வாளைமீன், மடவை முதலிய மீன் கூட்டங்களை யொத்திருந்தது. இவையன்றியும் மாலைக ளணிந்த மன்னவர்களின் மகுடத்துடனே மதிமுகம் விழுந்து கிடப்பது எப்படி யிருந்ததெனில், சிவந்த ஜலத்திற் செந்தாமரைப் புஷ்பம் விரிந்தும் பொற்றாமரைப் புஷ்பங் குவிந்தும் இருப்பதைப்போ லிருந்தது. அளவிறந்த உதிரமானது ஏரியாகவும், அதற்கு இரு புறத்திலுங் கட்டிய கரைகள் யானைப் பிணம் குதிரைப்பிணம், சேனைப்பிணம் இவைகளாகவு மிருந்தன. அன்றியுந் தோல் முதலிய வார் கிழிந்தறுந்த பறைகளும், தப்பட்டைகளும் பாதி புதைந்து பாதி தெரிந்தன. அவைகளின் வழியே செங்நீரோடுவது எப்படி யிருந்ததெனில், அந்த ஏரிக்குக் கீழ்க் கலங்கல் விட்டிருக்கும் வாய்க்காலுக்குக் கட்டிய மதகினுடைய துவாரம் போலு மிருந்தது. மேலும் பூமியிலிறந்தொழிந்த அரசர்களுடைய ஆபரணங்கள் உதிர வெள்ளத்தில் விழுந்து கிடக்குந் தோற்றமெப்படி யிருந்ததெனில், ஆகாய பரியந்தம் அளாவி யெரிந்த அக்கினிக்குழம்பில் தாரகாகணங்கள் விழுந்து கிடக்குந் தன்மையை யொத்திருந்தது.

இத் தன்மையவாகிய யுத்தக்களத்தில் நிறைந்து நின்ற பூபாலரும் சேனைகளும் மன்னவர்கள் முதலிய பேரும் மிகுந்த துன்ப முடையவர்களாய்ப் பாண்டவர்களுடைய சேனாதிபதியாகிய சுவேதனராஜன் பட்டாஞ்கையால் இனிமேல் இன்றைக்கு யுத்தம் நடப்பது கஷ்ட மென்னும் நினைப்புற்றவர்களாய், வீர கண்டைகளும், தீர தண்டைகளும் தரித்தவீரர்களும், பட்ட வர்த்தனரியரும், மகுட வர்த்தனரியரும், சுடர்வடி வாளேந்தியவரும், இன்னும் மற்ற மன்னரும், மகிபாலரும், பாசறைபோய்ச் சேர்ந்தார்கள். சூரியனுங் குடபாற் குன்றிற் சென்று மறைந்தான். இந்த இரத்தங்களினுல் மேற்றிசை சிவந்ததைப் போற் செவ்வானந் தோன்றப் பாண்டவர்கள் முதலாகிய பேரும் பாசறையிற் சென்று பரிதாபங்கொண்டு விராடனிருக்கும் பாடி வீட்டுக்குப்போய் அவனைக் கண்டு உபசரித்தபோது விராடனும், அவன் தம்பி சதானீகனும் மற்றப் பிள்ளைகள் முதலிய மச்சகுலத் தலைவரும் மிச்சமாகிய துன்பத்தி லாழ்ந்து வருந்த, அவர்களை யெல்லாம் பச்சைமாலும் பாண்டவர்களுந் தேற்றினர். பின் தருமராஜாவானவர் விராடராஜனைக் கண்டு இதனைப் பேசுவதாயினர்:—

"ஐயா விராடபூபதி! உமது பிள்ளையான சுவேதனனும், உத்தரகுமாரனும் முதலுள் யுத்தத்தில் இறந்து போனார்களென்று துன்புற வேண்டாம். உமது குமாரன் இன்று பீஷ்மரைப் பண்ணின ஆட்டமும், அதனுல் அவருக் குண்டான வாட்டமும், உடனே புறமுதுகிட்டோடிய ஓட்டமும், ரணகள முழுதுங் கோஷ்டமும் என்ன சொல்லுவோம்? இவ்வளவு அனர்த்தங்கள் உண்டாகும் படியாய் வெற்றிகொண்டு வீரத்திராகாட்டி நிற்கிற காலத்தில், சூதாக வாளெடுக்கச் செய்து தாம் மாத்திரம் வில்லை யெடுத்து வஞ்சனையாகிய நெஞ்சங் கொண்டிருக்கும் பீஷ்மர் அவனைக் கொன்று விட்டார். இல்லாவிட்டால் அவன் இறப்பானோ? ஓ ஏந்தலே! உமதிளைய குமாரன் அந்தச் சல்லியனைப் படுத்திய பாடு லேசாகியதல்ல. ஆகையால் இவர்களிருவரும் நல்ல வீரர்கள்; வீராசுவர்க்கம் பெற்றார்கள். நீர் அந்தப் பிள்ளைகளைக் குறித்து விசனப்படவேண்டாம். பேய்கள் சூழும் வனத்தில் வாசஞ்செய்து வந்த பாண்டவர்களுக்கு நேச விசுவாசத்துடன் போஜனாதி முதலிய உபசாரங்களை நடத்திப் பெற்றதாயினும் பெரிய தாயைப்போற் காத்திரக்ஷித்த பூமானன்றோ நீர்? அவ்வாறு நீர்செய்த உதவியைப் பார்க்கிலும் மேலாக, உமது பிள்ளைகள் யுத்தகளத்தில உற்றாருக்கு உயிருதவி செய்தார்கள்.

ஆகையால் ஓ சத்தியனுகிய உத்தமனே! உம்முடைய் தவமே தவம்! இப்படிக்கு உபிருதவி செய்யும்படியாகிய பேர்கள் உலகிலுண்டோர? ஐயா! தேவர்கள் முதலிய யாவரும் புகழும்படியாய் நீங்கள்செய்த உதவியைப்போல் யார்செய்தார்கள்?''—என்று சொல்லிப் புகழ்ந்து அவ்விராடராஜன் மனதைத் தேற்றினர்.

இந்த வார்த்தையைக்கேட்ட விராடராஜன் ''மெய்யே மெய்யாகக்கொண்ட ஐயா! தேவரிருடைய பிராணனைப்போற் பாதுகாத்துவந்த உத்தரகுமாரனும், தீரவீரத்திற் சிறந்து நிறைந்த சுவேதனனும், உலகமெங்குங் கொண்டாடும்படியாய்ப் போர் செய்து வெற்றியடைந்தார்கள். இனியிருக்கும் பிள்ளைகளினுபிரும், என்னுயிரும், இன்னமும் என்குலத்தோருயிரும், தேவரீருக்குச் சொந்த மேயன்றி வேறில்லை. தன்னுயிர் போல் மன்னுயிரைக் காக்குந் தயாநிதியாகிய தருமவுருவே'' எனச் சொல்லித் தாழ்ந்து வணங்கினன். இப்படிக்குச் சொல்லி வணங்கிய மாத்திரத்தில் அவனைத் தருமராஜன் வாரியெடுத்து அணைத்து உபசரித்து அவ்விடத்தில் இருக்கச்செய்து தம்பிமார்களுடனும் கண்ணனுடனும், தங்கள் பாடிவந்து சேர்ந்து போஜனாதி முதலியவற்றை முடித்துகொண்டு சயனித்திருந்து பொழுதெப்போது விடியுமென்று வீராவேசமிகக் கொண்டிருந்தார்கள்—என்று வைசம்பாயனர் சொல்ல ஜனமேஜய மகாராஜன் சந்தோஷத்துடன் வணங்கி, ''சுவாமீ இந்த முதல் நாட்போரில் நடந்த சங்கதிக ளனைத்துங் கேட்டு ஆச்சரிய மாயினேன். இனி இரண்டாம் போரின் தன்மை யெப்படியோ அதையுமெனக்குச் சொல்ல வேண்டும்'' என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

முதற்போர்ச்சருக்கம் - முற்றிற்று.

இரண்டாம்போர்ச் சருக்கம்.

கண்ணன் துதி

எந்தவெந்த யோனிபேத மெங்குமெங்கு முள்ளன
வந்தவந்த யோனிதோறு மாயியான தன்மையைச்
சிந்தையின்க ணுருகணத்தி னிகழுமாறு தேவர்கோன்
மைந்தனுந்தி டப்புகன்ற வள்ளனூள் வணங்குவாம்.

''ஓ அருணாதி மேவிய அதிபனே! கேள் மறுநாட் காலமே இவ்விருதிறப்படையில் நடந்த முதலுள் யுத்தத்தைப் பார்த்தோமே,

இனி இரண்டாம் நாள் யுத்தத்தையும் பார்ப்போமென்று வந்தவனைப் போற் கிழக்குத்திசையிலுதமாயினன்சூரியன். அப்போதுதித்த அவ்வருக்கனைக் கண்டமாத்திரத்தில் யாவருமெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு, போஜனாதி முதலியனவுங்கொண்டு, ஆயுதபாணிகளாய் யுத்த சன்னத்தராகிக் குரு பூமிக்குவர எத்தனித்துக் காலமாசு முதலிய பிரயாணபேரி முழக்கிய காலையில் தங்கட்குச் சேனாதிபதியில்லாமையாற் சேனைகள் திகைத்துக் கொண்டிருக்குஞ் சேதி கேட்ட தருமராஜனவர் திருமாலை யடுத்து, "சுவாமி! முதற் சேனாதிபதியாகிய சுவேதனனிறத்துபோன பிற்பாடு விராட ராஜன் முதலிய காமெல்லோரு மந்த விசனத்திலிருந்துவிட்டோம்! இன்றைக்குச் சேனாதிபதிப் பட்டம் யாருக்குக் கட்டலாம்" என்று கேட்க ஸ்ரீயப்பதியாகிய திருநாராயணர் "ஓ முரசகேதனனே! கேளும்— இளவரசராகிய சேனாதிபதிப்பட்டந் திட்டத்துய்மனுக்குக் கட்டியிருக்கிறபடியாலும், அவன் சோனைப்பேய்ச்சலைப் போலவும் ஊழிக் காய்ச்சலைப் போலவும் பாணங்களைப் பொழிந்து சத்துருக்களழிந்து போகும்படியாய் வெற்றி பெறத்தக்க வீரனுகையினாலும் நமது எதிர்ப் படையிலிருக்கிற வில்லாசிரியருக்கு வைரியாய்த் துரோணகண்டகனென்று உதித்திருப்பதினாலும் சகல நன்மை தீமைக் குரியவனுக விருந்து பாடுபடுந் தன்மை அவனிடத்திற் சொல்லாமலே யிருக்கிற படியாலும் உமது மைத்துனனென்னு முறையில் இந்தத் திட்டத்துய்மனுக்குச் சேனாதிபதிப்பட்டங் கட்டவேண்டுமே" என்று, சொன்னர்.

அந்தப்படியே பாண்டவர் அந்தத் திட்டத்துய்மனுக்கு மங்கள ஸ்நானஞ் செய்வித்து, மலர்ந்த மாலை முதலிய ரத்னபரணங்கள் பூட்டி, சேனைகளுக் கெல்லாந்தெரியப்படுத்தினர். அதிரதர், சமரதர், மகரதர், அர்த்தரதர் முதலிய சகல ராஜாதி ராஜாக்களும் தங்கள் தங்கள் சதுரங்க சேனைகளும் புடைசூழ, ஜெய விருதுகளுடன் புறப்பட்டார்கள். இவ்விடத்தினின்றும் பாண்டவச்சேனைகளெழுந்து பேரோசையுடன் யுத்தகளம் வந்துசேர்ந்தனர். அவ்விடத்திலிருந்து துரியோதனனுடைய சேனைகள் புறப்பட்டு மிகுந்த கோபத்துடன் இரண்டுகடலொன்றுபடுமாப்போற் வெவ்விதாகிய ரணகளத்தில் வந்து நெருங்கி நின்றனர். அந்தக்காலத்தில் ஐவர்சேனைத் தலைவனுகிய திட்டத்துய்மன் தங்களுடைய சதுரங்கச் சேனைகளையுங் கோமுக வியூகமாகச்செய்து கெடிவீரஸ்தலாதிபர் முதலாகிய பேர்களைக் கொட்டிலாக வளைத்து, அந்த வியூகத்தின் முனையில் உலை

விலா ஸ்தம்பம்போல நிலைபெற்று நின்றான். கௌரவகுல முதல் வனுடைய சேனை நாயகராகிய பீஷ்மாச்சாரியர் தங்களுடைய படைகளை யெல்லாஞ் சேர்த்து வியூக மமைத்துச் செய்து, மற்றச் சுத்த வீரர்களை யெல்லாஞ் சூரிகக் குகைபோலு மமைத்து, போர்முனையிற் றானும் ஒரு பெரும் புலி போல வந்து பராக்கிரமித்து நின்றார்.

இத்தப்பிரகாரம் தும்பெழும்பும் படியாகிய குருக்ஷேத்திரத் தில் தங்கள் படைகளை வியூகமாகச் செய்து இரண்டு சேனைபரும் எதிரெதிர் நிற்கவே, கரும்பு விற்றாங்கிய மன்மதனைக் கங்காதர னெதிர்த்துக் காய்ந்த காலத்திலெழுந்த கனலைப்போற் கண்களிலும் ஆயுதங்களிலுமிருந்து அனற் பொறி எழும்பவும் விமானத்திற் சென்று வானத்தினின்று வேடிக்கைபார்க்கும் இந்திரன் முதலாகிய தேவர்கள் நடுங்கவும், கோடைக் காலத் திடியினால் முடி பொடியா குந் தன்மைபோற் பாதாளத்தில் இருக்கும் நாகராதிபர்களும், இவ்வுல கத்தா ரேங்கவும், முரசு, காகளம், பேரி, பூரி, தாரை, கொம்பு, முதலாகிய வாத்தியங்கள் முழங்கின. மூவுலகும் நடுங்கும் படியாய் முரண்டு, முனைமுகத்திற் றிரண்டு, சேனைபதிகளின் உத்தரவு பெற்றுக்கொண்டு இரண்டு படைகளுங் கை கலந்து தொக்க யுத் தஞ் செய்புங் காலத்தில் சகாதேவ ராஜனனவன் மகா வீரர்களேறிய பன்னீராயிரந் தேர்களுடனேயும், பன்னீராயிரம் யானைகளுடனே யும் அளவிறந்த குதிரைகளுடனேயும், தொகை யிறந்த காலபலங் களுடனேயுமிடப்பக்கத்தில் வந்தெதிர்த்தான். எழுபத்தீரா யிரம் யானைகளும், எழுபத்தீராயிரந் தேர்களும், நாற்பத்து நாலா யிரங் குதிரைகளும், லக்ஷத்தெழுபத்தாறாயிரங் கால் பலங்களும் சூழ நகுலராஜன் வலப்பக்கத்தில் வந்து வளைத்துக்கொண்டான். இவ்வளவு என்று வகுத்துச் சொல்லுவதற் கரியதாகிய மிலேச்சர் முதலான வீரபடாள் பின் பக்கத்திற் பொருந்திப் போராடினார்கள். பீமன், அர்ச்சுனன், அபிமன்னு, கருமராஜன், கிருஷ்ணதேவன் முதலிய பேர்கள் கண்ணுக் கெட்டிய தூரங் கடல்போ னிறைந்த காரியஸ்தருடன் முன் பக்கத்திற் சூழ்ந்து நின்றார்கள். இப்படியாக நான்கு பக்கத்திலும் நான்கு சமுத்திரம்போல் வளைத்துக்கொண்டு முன்பு கட்டிய கோமுக வியூகத்தைக் கலைத்துக் கடக நாதனென்று சொல்லப்பட்ட வியூகங் கட்டி நின்றார்கள். கடக நாதன் என்றால் யானைகளுக் கெல்லா முதன்மை யாகிய தலையானை யென் றருத்தமாம்.

கலிங்க தேசாதிபதிகள் வதை

இப்பால் வியாக்ர வியூகமாக்கிய பீஷ்மாச்சாரிய ரானவர் அள விறந்த சேனைகளைப் பெரணி வியூகமாக்கி, அந்த வியூகத்தினது தூசி முனையினின்றூர். உடனே மாறுப்பகைவர்களாகிய உபய தள கர்த்தர் யாவரும் மறுபடியும் போர் புரிய வாரம்பித்தவர்களாய் விற் காரருடன் விற்கார ரெதிர்த்துப் பாணங்களைச் சொரிந்து அலரவும், வாட்காரருடன் வாட்காரர் முனைந்து வாள்களை வீசி மடியவும், வேற் காரருடன் வேற்காரர் சினந்து வேல்களாற் குத்தி முடியவும், வசைக் காரருடன் வசைக்கார ரெழுந்து வாய் வம்புகளைப் பேசிப்பதறவும் ஒருவரை யொருவர் அடர்ந்தும், வசை கூறியும் போராடிக்கொண் டிருக்கின்ற காலத்தில், பாண்டவச் சேனாதிபதியாகிய திட்டத்துய் மனும், தனுர்வேத ஆசாரியராகிய துரோணச்சாரியரும் எதிரெதிர் மலைந்து, ஒருவர்பேரி லொருவர் உருவும்படியாக உக்ரம் பாணங் களினல் மனம் நொந்து, அஷ்ட திக்குகளும் அதிர்ந்து போகும்படி யாய் அஸ்திரங்களை யிறைத்து, நேருக்கு நேராகத் தேரைச் செலுத் திக்கொண்டு போர் புரிந்தார்கள். அந்தச் சமயத்தில் துரோணச் சாரிய ரானவர் சுடுமுகப்பகழி, சுரிமுகப்பகழி என்னுங் கணைகளை விடுத்துத் திட்டத்துய்மனுடைய வில்லும், அவனேறிய தேரும், அவன் கட்டிய வீரபட்டமும் கெட்டு விழும்படி ஓட்டி யடித்தார். அந்த அடியினல் மெத்த வருந்திச் சித்த முறிந்த திட்டத் துய்மன் பின்னிட்டு ஓட, அவனைச் சூழ்ந்துவந்த சேனைகளெல்லாம் வெந் திட்டோட அதைப் பீமசேனராஜன் கண்டு, பற்பல சேனைகளுடனே பாரிய தேர்தனைச் செலுத்திக்கொண்டு வந்து துரோணாசாரியரை வளைத்துக்கொண்டு பாணங்களை யேற்றினன். அப்போது துரோ ணச்சாரியர் தம்மாற் கூடிய வரையிலும் யுத்தஞ் செய்து பீம சேனனை வெல்லமாட்டாமல் வெட்கத்தை வெளியிட்டுச் சொல்லவு மாட்டாமல், புறமுதுகிட்டுஞ் செல்ல மாட்டாமல் (ஆற்றிலொரு காலும் சேற்றிலொரு காலும்) என்னும் பழமொழியைப் போல், "ஓடிப்பார்க்கலாமா? இன்னமும் யுத்தத்தை நாடிப் பார்க்கலாமா?" என்று யோசித்துக் கொண்டிருக்குங் காலத்தில், வடகலிங்கதேசாதி பதியாகிய சக்ரதேவன் இரதத்தைச்செலுத்திக்கொண்டு வந்து இந் திர தநுசைப்போன்ற சுந்தர வில்லை வளைத்து இழுத்துக் களைத்து நின்று துரோணாசாரியரைப் பின்னிறுத்தித் தன்னுடைய தேரை

முன்னிறுத்திப் பீமசேனன் பேரிற் கண்ணிறுத்தி வேண்டிய அஸ்திர மாரிகளை எண்ணிறந்தனவாக இறைத்தான்.

அந்தக் கணைகளெல்லாங் கருங்கொண்டல்போற் கவிந்து வரக் கண்ட கதாயுதனனவன் கடுகெனத் தேரை விட்டிறங்கி, இரண்டு கைகளையு மீட்டிச் சக்ரதேவனிறைத்த கணைகளை யெல்லாம் பிடித்துக் கசகசவென்று கசக்கி, அவ்வரசன் கொண்டுவந்த யானைக் கூட்டத்தில் ஆண் சிங்கத்தைப்போல் நுழைந்து, கரங்களா லறைந்து, கைகளாற்பற்றி, கால்களாலெற்றி, காத்திற் பிடித்துக் குத்தி, துதிக்கையைப் பிடித்துச் சுற்றி, ஆகாய வீதியில் எறிந்து, மீண்டுந் திரும்பி வருவதற்கு முன்னமே ஐந்து, ஐம்பது, ஐந்நூறு என்று சொல்லும் படியாய் மறுபடியும் யானைகளை வாரி எறிந்தான்; பின்னே போன யானைகள் முன்னே போன யானைகள் கரகரவென்று சுழன்று கதறிச் சென்று விழுதலு மொத்தி, இதுவு மதுவும் மறுபடி எழும்பி இரண்டு தும்பிக்கையும் இரண்டு காலும், இரண்டு வாலும் ஒன்றோடொன்று பிணைத்து நிற்க, இந்த யானைகளைத் திரும்பிக் கீழே விழ வந்த யானைகள் விடாமற் பிடித்துக் கிழித்து மேலது கீழது, கீழது மேலதுவென்று சொல்லும்படியாய் வந்து பூமியில் விழுந்து தொத்து கைந்து தொறுங்கிச் சிதைந்து போயின. மேலுலகத்தி லடித்து வீசிக்கொண்டிருக்குஞ் சுழற் காற்றுகள் இந்த யானைகளை ஆகாயவீதியி லுந்திக்கொண்டு போக, அங்கிருந்து விழுந்த யானைகளால் இவ்விடத்தி லிருந்த யானைகள் சேனைகள் முதலிய யாவும் முடியழிந்து, மூளையழிந்து, உதிரம் பொழிந்து, உடலங் கிழிந்து, உயிரொழிந்து போயின. இத்தப்படியாகச் சில யானைகளை நிலத்தில் அடித்தும் சில யானைகளை எதிராளிகளின் புயத்தி லிடித்தும் சில யானைகளைப் பாரிலறைந்தும் சில யானைகளைச் சத்துருக்களின் பேரிலெறிந்தும் சில யானைகளைக் காலால் முடித்தும் சில யானைகளை மேலாலிடித்தும் சில யானைகளைக் கண்டங் கண்டமாய்த் தரித்தும் சில யானைகளைத் துண்ட துண்டமாய் முறித்தும் மண்டலங் குலுங்க எண்டிசை கலங்க அண்டர்க ளொடுங்கத் துண்டர்க ளடங்கக் கொல்லுவ தாயினன் பீமசேனன்.

இவைகளைப் பார்த்த யாவரும் பயந்து என்ன ஆச்சரிய மென்று வியந்து, பூர்வத்திற் சக்ரவர்த்தித் திருமகன் சமுத்திரத்தில் திருவணைகட்டிய காலத்தில் அனேக மலைகளைப் போட்டு அநுமா ரடைத்ததைப்போல், இந்தப் பீமசேனன் இவ்விடத்தில் ஓடும்

ரத்தக் கடலுக்கு யானைப் பிணங்களால் வாராவதி கட்டினான்; ஆகையால், ஆஞ்சனேயரிலும் சிறந்தவன் இந்த வாயு புத்திரனாகிய பீமனென்றும் சிலர் அகமகிழ்ந்தனர். இம்மதன்றியும் வாயுவினாற் கலங்கி முன்னும் பின்னுமாய்க் கலந்தகன்ற மேகங்களைப்போல் இந்த யானைகள் கலந்து தலைவிரி கோலமாய்த் தாறுமாறாய்த் தலை மாடு கால்மாடாய்ச் சிதறிப் பறக்கச்செய்த இந்தப் பீமசேனன் வாயுகுமாரனுதலால், தந்தையின் குணம் பிள்ளைக்கென்று சொல்லுந் தரும சாஸ்திரத்திற்கு இணங்கி இருக்கின்றனென்று சிலர் சந்தோஷப்பட்டார்கள். இந்தப் பீமசேனனால் எறியப்பட்ட யானைகள் விண்ணுல கெல்லாஞ் சுழன்று மண்ணில் விழும்போது முகமானது பூமியிற் புதைந்து உடலும், பின்காலும், வாலும் மேலே உயர்ந்திருப்பது எத்தன்மையை யொத்திருந்ததெனில், இந்தப் பூமியைப் பாயாகச் சுருட்டிப் பாதாளத்திற் சென்ற இரணியாக்ஷனென்பவனைச் சங்கரிப்பதற்காகத் திருவுருக் கொண்ட ஆதிவராக மானது பூமிக்குட் செல்லத் தன் முகத்தாற் பூமியைத் துளைத்தது போன்று இருந்தது. அன்றியும் சில யானைகளைப் பற்றிப் பீமனெறியும்போது மேக மண்டலம் வரைக்கும் வீறிட்டுக்கொண்டு போன யானைகள் எப்படிச் சென்ற தென்றால், பூலோகத்தி லிருக்குஞ் சில மேகங்கள் மேல் லோகத்தி லிருக்குஞ் சில மேகங்களைப் பிடித்துப் பிணை போட்டுக்கொண்டு இங்ஙனம் உருண்டு வருகிறதைப்போலு மிருந்தது.

இந்தப்படி பீமனுனவன் கலிங்கராசனுடைய யானைகளை யெல்லாங் கால்மாடு தலைமாடாக விழுந்து அழிந்து கலங்கிப்போகும் படியாய்க் கொன்று குவித்துச் சேனைகளை யெல்லாம் வென்று முடித்துக் கலக்கும்போது ஒன்றொழியாம லொழிந்ததுமன்றி நின்ற சேனைகளெல்லாம் புறமிட்டோடுவதைப் பீஷ்மாச்சாரியர் கண்டு மிகுகோபங்கொண்டு, கண்பொறிகலுவத் திண்சிலைதாங்கி மகாதவீரனை மருங்கினிற் சூழ்ந்து வரும்படியாகச் சென்றார். அந்த வேளையில் தளகர்த்தரும் சேனைக் காவலரும் கலிங்காராஜனும் கலிங்க ராஜனுடைய பிள்ளைகள் கேதுமாலன் முதலியபேரும், வெகுசேனைகளோடு சென்று பீமசேனனை வளைத்துக்கொண்டு போர் புரிந்தார்கள். அந்தப் பீமசேனன் இவர்களையெல்லாங் கண்டு பூமியில் நின்றபடி அவரவர் விட்ட கணைகள், பாணங்கள், அஸ்திரங்கள், ஆயுதங்கள் முதலியவற்றையும் அறைந்து பிடித்து ஒடித்தெறிந்த தலைமையும் அவர்களேறிவந்த தேர் நிறைகளையும் அத்தேரிற் கட்டிய குதிரை

கிரைகளையும் நேருக்கு நேராக வாரி வாரி நிலத்தின்மோதிப் பலத்திற்கொன்று, நிகரொருவருமற்று நின்றான். அவனைக் கலிங்கராஜன் முதலாகிய வீரர்களெல்லாங்கண்டு கலங்கிக் கை பிசைந்திருந்தனர். பீஷ்மாச்சாரியர் கண்டு, விஷம்போல் மனஸ்தாபங்கொண்டு தேரைச்செலுத்திவந்து வில்லை வளைத்து நாணிழுக்க அதைக் கண்ட கலிங்கராஜனும், அவன் புத்திர மித்திரர் முதலிய சகல வீரரும் இன்னுஞ் சில யானைக் கூட்டங்களோடு கடல்போற் பொங்கிவந்து பீஷ்மரைக் கலந்தார்கள்.

அந்தச் சமயத்தில் பீமசேன மகாராஜன் சீரேறும்படியாய்த் தேரேறிக்கொண்டு சிலையைக் கரத்திற் பிடித்துக் குணக்கொனி செய்து பீஷ்மருக்கெதிரில் தாஷ்டீகமாக வந்தான். அப்போது, கலிங்கராஜனும் அவன் புத்திரவர்க்கத்தாரும், அந்தப் பீமனைப் பார்த்துப் பற்கடித்துப் புருவநெறித்து, யானைக் கூட்டமும் சேனைப் பெருக்கமும், குதிரைப் பந்திகளும் தேர்க்கும்புகளும் புடைசூழ பீஷ்மர் துணை வந்தாரென்னுந் தைரியத்தில் பீமன்மேல் வந்து விழுந்து, கோபக்கொழுந்து விட்டெரியும்படியாகக் கொதித்து, "அடா பாவி! வெகுகாலமாய் நான் வைத்திருந்த யானைக்கும்புகள் யாவற்றையும் வாயிற்போட்டுக்கொண்டாயே! இதோ உன்னை காங்கள் வாயிற் போட்டுக் கொள்ளுகிறோம் பார்" என்று பற்கடித்துப் பாணந் தொடுத்துப் பலவாருகிய ஆயுதங்களையும் விடுத்தார்கள். அவர்கள் விட்ட பாணங்கள் முதலிய ஆயுதங்களையெல்லாம் பீமன்பட்டழியும்படி படுத்துக் கலிங்கனுமவன் புத்திரவர்க்கத்தார் யாவருங் கெட்டொழியும்படி கெடுத்துப் பட்டய பாணங்களை விடுத்து, மற்றொருவரும் அடுத்து யுத்தம் பண்ணமாட்டாம லோடும்படி மூடுக்கிய தன்மையைப் பீஷ்மர் கண்டு,இந்திரனுலிறகிழந்த மலைபோலேங்கி, "ஐயோ! கலிங்க தேசாதிபதிபன் முதலிய காவலரெல்லாம் இறந்து போனார்களே" என்று வடவைத்தீயைப்போற் பொங்கி, பீமசேனன்பேரில் வீரவாளிகள் தொடுத்தார்.

பீமசேனன் ஒரு வெற்றி வேலைப்பற்றி எடுத்துப் பக்குவமாகச் சுழற்றிப் பாட்டனுடைய தோளுருவிப் போகும் படியா யெறிந்தான். அந்த வேலாயுதம் வருகிற வேகத்தைப் பீஷ்மர் கண்டு, ஒரு தோமராயுத மெடுத்துச் சுழற்றி யெறிந்தார். உடனே தனது வேலாயுதமானது துண்டமாய்ப் போகக் கண்ட பீமசேனன் கொதித்து, ஒரு சூலாயுதம் தொடுத்தான். அதைப்

பீஷ்மர் ஓர் உருத்ராஸ்திரத்தாற் றடுத்து, சிங்கக் கொடியையும் பங்கப்படுத்திச் தேரையுஞ் சேனைகளையும் போக்கடித்தார். அந்தக் காலத்தில் பீமசேனனுக்குக் கோபம் பிறந்து, ஆயிரத் தெட்டண் டமும் அனல் வீசிஞ லெப்படியோ அப்போர்ப்பட்ட கோபாக்கினி யோடு கதையைக் கையிலெடுத்துக்கொண்டு, கிட்டிய சேனைகள் மூட்டிய யானைகள் யாவற்றையும் கெட்டழியும்படி ஜாடி, பீஷ்மாச் சாரியருடைய தேருக்குச் சமீபத்தில்வந்து, அவருக்கு மனதொத்த சாரதியின் தலையைத் தவிடாய் கொறுக்கினன். இப்படி ஜயபோ கமும் புயவேகமு முடையவனுக பீஷ்மரை மடக்கிக்கொண்டு, அவர் விற் பிடித்து யுத்தஞ்செய்ய இவன் கதையைக் கொண்டு போர் புரிந்தான். அவர் ரதத்தினின்று ஆரவாரிக்க, இவன் நிலத்தி னின்றும் பராக்கிரமித்தான். இவ்வாறு பாட்டனருடன் வந்திருக்கும் பார்த்திபர்களுடைய தலைகளும், மூளைகளும், மகுட ரத்னங்களும சிந்தித் தெரிக்கும்படியா யடித்து, மலைகளைப் போலொத்த தேர் நிறைகளை வாரிச் சாரதிகளுந், குதிரைகளுஞ் சாகும்படியாய்ப் மோதி ஆகாயத்திலெறிந்து, ஒரு நாழிகைக்குள்ளே இரண களத்தை யொறுத்து, ஆகாயத்தி லிடிக்கும் மேகத்தி னிரைச்சலைப்போல் யுத்த களமெங்கும் பெருங் கூச்ச லுண்டாகும்படியாய்ப் பெருங் குரலிட் டுப் போர் புரிந்து திரிவதாயினன் பீமசேனன்.

இவ்வாறு பீமசேனன் பராக்கிரமித்துத் திரிவதை பீஷ்மர் கண்டு, தமது வினையைத் தாமே வெறுத்துக்கொண்டு, மறுபடி யும் இரதத்தைச் செலுத்தி அந்தப் பீமனைத் தகைத்து, உறுத்து, எரியுங் கண்ணிலிருந்து நெருப்புப் பொறியுதிரக் காளமேகத்தோடு கலந்து யுத்தஞ் செய்வதைப்போற் போராடி யானைகளுஞ் சேனை களும் நிலத்தில் மடிந்து விழும்படிசெய்தார். பீமசேனன் கதாயுத யுத்தமும் பீஷ்மாச்சாரியர் வில் யுத்தமுஞ் செய்தனர். அப் போது பாண்டவச் சேனைகள் பட்டுப் பாழாய் விழுந் திறப்பதை அபிமன்னன் பார்த்து, "ஆ! ஆ! நம்முடைய சேனைகள் இப்படி நாச மாகின்றனவே" என்று, வெற்றிவில்லை வட்டமாய் வளைத்து, ஆகர்ண பரியந்த மிழுத்து, வடிக்கணைதொடுத்து, வில்நாணியிழுத்து வெகுவிதமான பாணம் விடுத்து யுத்தஞ் செய்தான்; தன்னை யுந் தன் பெரிய தந்தையையும் நோக்கி எதிர்த்து வரா கின்ற அவர வர்கள் நெற்றியிற் குறிவைப்பது போல் ஒவ்வொரு கூர்ங்கணையை யுருவ விடுத்து, மகமேருவை வளைத்து வாசுகியை நாணியாக மாட் டிச் சூற்கொண்ட மேகம்போற் கணைகளைச்சொரிந்து நிறைந்த நெருப்

பினல் திரிபுரம் நீறெழ நகைத்தருளிய ஆதிசிவனுக்கொப்பாக நகைத்துச் சத்துருக்களின் படையும் சேனுதிபதியாகிய பீஷ்மருடைய குடையும்; அவருடைய வில் முதலாகிய கணைகளும் தேர்களும் வீரபட்டங்களும் சாரதிகளும் குதிரைகளும் தனித்தனி யழியும்படி செய்தான்; பின் அவனும் பீமசேனனுமாக உலகமுடிவிலெழும் உவர்க் கடல்போற் பொங்கி, தியுங்காற்றுஞ் சேர்ந்து எரிப்பது போல் நுங்கி, ஆழமாகிய கிணற்றினீரும் அனலாற் பொங்கி மேலெழும்படியாகப் போர்புரிந்து நின்றார்கள்.

அப்போது அக்கிணற்றின்றவளை காட்டு வளப்பங்கொண்டு கோபிக்குந் தன்மையைப் போல் அஸ்தினபுரிக் கதிபதியாகிய அரவ கேதனன் கடுங் கோபங் கொண்டு, கையோடு கையறைந்து கண் பொறி கதுவக்கூவிக் காவலர்களை நோக்கி, "அந்தோ! அந்தோ பீஷ்மர் முதலிய படைகள் வெந்து போகின்றார்கள். மி கவு நொந்து போகின்றார்கள்! உடலயர்ந்து போகின்றார்கள், குடல் நசிந்து போகின்றார்கள். ஆகையால் நீங்களனைவரு மொன்று சேர்ந்து இந்தவேளை பிந்திப்போகாமல் முந்திப்போய், பீமன், அபிமன்ன னென்று சொல்லும் அவ்விருவரையும் மடக்கிக் கொண்டு கொல்லுங்கள். அவர்களை வெல்லுங்கள்" என்று சொல்ல, அவ்வார்த்தையைக் கேட்ட அநேகங் காவற்றலைவரும், அங்கர் முதலிய அநேகந் தேசத்தலைவரும், மராடமுதலிய பதினெண் பாஷைத் தலைவரும் ஒன்றுகக்கூடி, அவ்விரண்டு பேரையும் வளைத்துக் கொண்டு சளையாமல் யுத்தஞ் செய்தார்கள். அந்தச் சமயத்தில் காலகேய நிவாதகவசரோடு இரணிய புரவாசிகளாகிய இராக்கத ரெல்லாரையும் ஒன்றொழியாமற் கொன்று ஜெயங் கொண்டு இந்திரனுக்குப் பட்டங் கொடுத்துத் தேவர்களுக் காதார மாகித் திசைகள் முழுவதும் இசைகளெழுதும் அர்ச்சுனனவன், மன்மதனுக்குச் சமானமாகிய அபிமன்னனையும் அண்ணனுகிய பீமசேனனையும் சத்துருக்கள் வளைத்துக் கொண்டார்க ளென்று வரிபொருந்திய கணைகளைக் காண்டீபத்தில் வைத்து இறைத்துக் கொண்டு வியாக்கிரத்தைப்போல் ஆக்கிரமித்து "விடாதீர்கள்! விடாதீர்கள்! இதோ வந்தேன்! இதோ வந்தேன்!" எனத்தேரை நடத்திக் கூவிக்கொண்டு அவர்களுக்குப் பகையாகவும் இவர்களுக்குத் துணையாகவும் வந்து கூடினன்.

அந்தக்காலத்தில் இவர்கள் மூவருஞ் சேர்ந்து பாணங்களைத் தொடுக்க அந்தப் பாணங்கள் சிவபெருமான் நகைக்கத் திரிபுரா

திகளை யெரித்த தீயைப்போலும் இலங்கையழிய அநுமந்தர் கொளுத்திய நெருப்பைப்போலும் யுகமுடிவில் உலகையழிக்கவெழுந்த ஊழித்தீயைப்போலும் திகுதிகென்றெரிந்து, கால்வகைச் சேனைகள் கூடிய ராஜராஜர்களாகிய பெருங்கடலைச் சுவறச் செய்து, அப்பாற் காளமேகம்போன்ற வில்லிலிருந் தெழுங் கணைகளாகிய துளிகளைப்பொழிந்து, திரண்டசேனைகள் வெருண்டோடவும் தலையறுந் தாடவும் கரசரணாதிகள் அற்றுவிழவும் கருந்தூள் செந்தூளெழும்பும் படியாய்க் கலக்கிப் படைக்குட்புகுந்து வருங் காலையில், அருணனையுஞ் சூரியனையு மறைத்தெழுந்த பனியைப் போல் அரசர் முதலாகிய படைமன்னர் கவிந்து அர்ச்சுனன் முதலிய மூவரையுமூட இம்மூவர் விடுக்கும் பாணக் கிரணங்களினல் மூடிய பனிவிட்டோட சேனைகள்வாட, உதிரவெள்ளங்களோடப் பூதப்பிரேத பிசாசகணங்களாடப் படைகளைப் பொடியாக்கித் தேரணிகளைச் சிதறப்போக்கிக் குதிரைப் பந்திகளைக் குறைத்துக் கீக்கிப் பதாதிப் படைகளைப் பாழாக்கி விஷ்ணு சக்கரம்போற்றிரிந்து வரும் விஜயனையும் சண்டமாருதத்தை யொத்துச்சுழலும் பீமசேனனையும் செவ்வேளுக்கிணையாகிய வாளபிமன்னனையும் சேனாதிபதியாகிய பீஷ்மாச்சாரியர் கண்டு மனஸ்தாபங்கொண்டு மல்லுமெடுக்காமல் கணையுமதிகம் தொடுக்காமல் மவுனமாக விசனமேற்கொண்டிருப்பதை ரதகஜதுரகபதாதிகளோடுங் கூடிய படைமன்னர், பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர் முதலிய யாவருங் கண்டு இனி இவ்விடத்தி லிருந்தால் எல்லோரும் முடிந்து போவோமென் றேங்கிப் பின் வாங்கினவர்களாய் ஒருவர்பின் னெருவர் தங்கள் பாசறையை நோக்கிப் போய்ப் பதுங்கினர்கள்.

ஓ ஜனமேஜய மகாராஜனே ! இன்று யுத்தத்திற்கு வந்த பீஷ்மாச்சாரியரும், துரியோதனன் முதலாகிய பல அக்ரோணி சேனைகளும் தேவாமிர்தம் புசிக்கவந்த தேவர்களானர்கள். சேனைகளைச் செயித்து ஆண்மையை நிலை நிறுத்திவரும் அர்ச்சுனன் முதலிய மூவரும் அந்தப் பாற்கடலிற் பிறந்த ஆலகால விஷம்போலானர்கள். இதனுடைய தாத்பரிய மென்னவென்றால் அமுதம் புசிக்கலாமென்று ஆசை கொண்டு வந்த தேவர்கள் ஆலகால விஷத்தைக் கண்டு அவஸ்தை யடைந்து அலறிச் சென்றார்களே. அப்படிப்போல் வாடிக்கலங்கி ஓடினர்களென்பதாம். ஆகையினல் விண்மணியாகிய சூரியனும் இனிமேல் நாம் வெளியிலிருப்போமேயானல் இவர்கள் நம்மையும் கொல்லுவார்கள். ஆதலால்

துரியோதனராஜனுடைய படைகளைப்போல் காமும் ஓடிப் பிழைப் போமென்று போனவனைப்போற் சப்தமாவென்னும் புரவி பூட்டிய ரதத்தைச் செலுத்திக் கொண்டுபோய் மேற்குத் திசையில் மறைந் தான். அந்தச் சூரியன் மறைந்த திசையி லெழுந்த செவ்வானமோ வென்று சொல்லும்படியாக ரத்தவெள்ளம் ரணகள முழுமையு நிறைந்து திசா திசைகளிலும் பரந்து கருங்கடலைச் செங்கடலாக்கிக் கலந்தது.

இப்பால் திரண்டருண்ட இருளானது தங்கள் இனத்தைக் கும்பு கூட்டிக்கொண்டு ரணகளத்திற்கு வந்ததைப்போல் வந்து நிறைய, அதைக் கண்டு யுத்த பூமியில் நிறைந்திருந்த தீரவீரர்கள் முதலிய யாவரும் நாம் வந்த விடத்தில் இருள் வந்தபடியால் இனி நாம் இவ்விடத்திற் றங்குவதற்கு இடமில்லை யென்று தங்கள் தங்கள் பாடிபோய்ச் சேர்ந்தார்கள். அப்பாற் கூளிகளுங் காளிகளும், பேய் களும் பூதங்களும், நாய்களும், நரிகளுங்கூடி விளையாடிக்கொண் டிருக்கும் குருக்ஷேத்ர பூமியை விட்டுப் பாசறை சென்ற பார்த்திப ரனைய துரியோதன மஹாராஜனும், துச்சாசனன், கர்ணன், சகுனி, துரோணாச்சாரியர், பீஷ்மாச்சாரியர் முதலியபேரும் ஒருபே ரவை யிற்கூடக் கலந்த காலத்தில் வணங்காமுடியையுடைய மன்னவன் சேனாதிபதி முதலிய யாவரையும் பார்த்து, "ஐயா! நீங்களெல்லாரு மிருந்தும் அறியாச் சிறுவனாகிய அபிமன்னு வென்பவனுக்கும் அர்ச்சுனனுக்கும், பீமசேனனுக்கும் இளைத்து என்சேனைகள் புற முதுகிட்டொழியவும், பிராணன்போ யழியவும் நேரிட்டனவல்லவா? அஃதோ! தெய்வமே! இதுவுமென் காலகதி யல்லவோ?" என்று மெடுமூச்செறிந்தான். அக்குருகுல நிருபனை நோக்கிய யாவரும் தலை யிறங்கிக்கொண்டனர்.

அந்தச்சமயத்தில் சேனாதிபதியாகிய பீஷ்மாச்சாரியார் விசன முடையவராய்த் துரியோதனமகாராஜனைப்பார்த்து "அப்பா குழந் தாய் இன்றையயுத்தம் எனக்குஞ் சம்மதமாயிருக்க வில்லை. ஏதோ இப்படி நடந்துபோய் விட்டது. இதைக் குறித்து நீ விசனப் படாதே. நாளை நடக்கப்போகிற யுத்தத்திற் பாண்டவர் சேனைகளைப் பழாக்கி அர்ச்சுனன் முதலிய மூவரையும் அழச்செய்து, ஆயுத மெடுப்பதில்லையென்று சொல்லி அர்ச்சுனனுக்குச் சாரதியாக வந் திருக்கும் அவனையும் ஆயுதமெடுக்கச்செய்கிறேன். அப்போது நீ என்னுடைய வல்லபத்தைப் பார்" என்று பேரப்பிள்ளையை நோக்கிப்

பெருங்குரலாகக்கூவி, அவன்மனங் குளிரும் படியாகப் பல பவுருஷம் பேசிவிட்டுப் பாசறைக்குப் போய்விட்டார். அப்பால் அத் துரியோதனன் முதலிய பேர்கள் போஜனமுண்டு நித்திரைசெய் தார்கள்—என்று வைசம்பாயனர் சொல்ல ஜனமேஜயமஹாராஜன் கேட்டு உபசாரத்துடன் வணங்கி "சுவாமி! இரண்டாநாள் யுத்தத் தின் தன்மைகளைச் சொல்லக்கேட்டு இசைத்தற்கரிய சந்தோஷ மடைந்தேன். மூன்றுநாள் யுத்த விசேஷத்தையும் திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என்று கேட்க, வைசம்பாயனர் வேதவியாச முனிவருடைய திருவடியிணைகளைச் சிந்தித்துச் சொல்லத்தொடங்கினர்.

இரண்டாம்போர்ச் சருக்கம் - முற்றிற்று.

மூன்றும்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி.

பெய்யாத தவமுனிபின் போயருளித் தாடகைதன்
மெய்யாவ னிகரென்ன வெஞ்சமத்தா லழுத்தியபின்
மையாழி முகில்வண்ணன் வாங்கியன பூங்கமலக்
கையாலு மொருசாபங் காலாலு மொருசாபம்.

"ஜனமேஜயனெனுமராஜகாவலனே! கேளும்-இப்பாற் சூரியபகவானவன் இரண்டு படைகளையும் சேனாநாயகரையும் மற்ற மன்னர் களையும் எழுப்பிவிட வந்தவனப்போற் கிழக்குத்திசையில் உதயமாயினன். உடனே இரண்டு சேனைகளுங் காலைக்கடனைத் தீர்த்துக்கொண்டு, ஆயுதபாணிகளாய் யுத்தகோலங்கொண்டு யுத்த பூமிக்கு வந்தார்கள். அப்போது பீஷ்மர் தங்கள் சேனை களையெல்லாஞ் சேர்த்துக் கருடவியூகங்கட்டினர். கருடவியூக மென்பது கருட பக்ஷியைப்போல் மூக்கு இறக்கை வால் கால் இப்படியாக யானை சேனை பரிவாரங்களை யெல்லாங் கூட்டி அதிலே காரியஸ்தரை நிலைநாட்டிச் சேர்த்து வைப்பது. இவ்விதவியூகங்கட்டவும் பாண்டவர் சேனாதிபதியாகிய திஷ்டத்தூய்மன் பயப்படாமல், திடங்கொண்டிருக்கும் தன் சேனைகளைச்சேர்த்து க்ஷுத்திர வியூகங்கட்டினன். க்ஷுத்திர வியூகமென்பது குடைபோற் கவிந்து, காம்புமுதலிய கம்பிகளைப்போற் சேனைகளை அமைத்து, விரிக்கவுஞ் சுருக்கவும் விலாசங் கொண்டிருப்பது. இத்தப்பிரகாரம்

இரண்டு சேனாதிபதிகளும் வியூகம்வகுத்துத் தாங்களுந் தூசிப்படை முகத்தினின்றார்கள். அந்தவேளையில் ஏழுசமுத்திர முழக்கம் போல் பதினாலுலகும் பதறும்படியாகவும், அஷ்ட குலாசலங்களும்-சப்தமேகங்களும்-தலை சாய்க்கும்படியாகவும், முரசு-காகளம்-பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்கின. கங்காபுத்திர ராகிய பீஷ்மர்-துரோண - அசுவத்தாமா முதலிய அனேகம் அதிரதத்தலைவரும் நால்வகைச்சேனையும் மேகங்கவிந்து வருவதைப்போல வந்து, "இரண்டாவது நாட் சண்டையிற் சேனைகளையும் எங்களை யுஞ் ஜெயித்த வீரர் இன்றைக்கு வெளிப்படுங்கள்" என்று வீரவசனங்கள் புகன்று, அர்ச்சுனனையும் கிருஷ்ணனையும் அபிமன்னனையுந் தேடி வளைத்துக்கொண்டு, தென்றலடிக்கத் திருகித் தியங்கிய தேக்குமரம்போற் சிக்கை குழையும் படியாக ஒருவர்மே லொருவர் அம்புமாரிகளைப் பொழிந்தார்கள்.

கடோற்கஜனுல் துரியோதனன் மூர்ச்சை யடையப் பீஷ்மர் தெளிவித்தல்

அந்தச் சமயத்தில் சூரருக்கெல்லாஞ் சிறந்த தீரராகிய சுயோதனராஜனும் அவனுடைய தம்பிமார்களும், மாமா சகுனியும் சேனாநாயகரும் படைத்துணைக்குவந்த பார்த்திபரும் ஒரு கும்பாகச் சேர்ந்து, சிங்கக்கொடியினைத் தாங்கிய தேர்மேற்கொண்ட வீரசிங்க மாகிய பீமசேனராஜனை வந்து வளைத்துக்கொண்டார்கள். இந்தப் பிரகாரம் இருதிறத்து வீரர்களும் எதிர்த்துக்கொண்டு, வரத்தினு லும் மந்திரங்களினுலும் தாங்கள் தாங்கள் பெற்றிருக்கும் வலி பொருந்திய மணிகள்கட்டிய விற்களிற் கரங்களினின்று நாற்புறத்தும் இறையத் தொடுத்துவிடும் பாணங்களினுலும் கடைக்கண்களுவும் பொறிகளினுலும் ஆகாய மறைந்துபோகவும், அந்தச் சரங்களால் அறுப்புண்டுவிழுஞ் சிரங்களினுல் யுத்தபூமி மறையவும், அந்தச் சிரங்களிலிருந்து பெருகும் உதிரவெள்ளங்களிற் பள்ளம் படுகுழி நிறைந்து சேறுகி நான்குதிசைகளு மறைந்துபோகவும், பெருக்க மாகிய நால்வகைச் சேனைகளுங் குறைந்து போகவுமாயிருக்கும் போது, சிறப்பாகிய திடவீரங்கொண்ட துரியோதனனும் பீமசே னனும் பழம்பகையாகிய வைரம்பற்றிப் போர்புரியுங்காலையில், பீம சேனனுடைய குமாரராகிய கடோற்கஜனென்னுங்காளை இவர்க ளிருவருஞ் செய்யும் யுத்தத்தைக் கண்டு பேய்பூட்டிய தனது ரதத்தை வாயுபோற் செலுத்திக்கொண்டுவந்து துரியோதனனுக்

கெதிரிலே நின்று, கவசந்திர பாணத்தை யெடுத்துப் பூசித்து அபி மந்திரித்துத்தொடுத்து விடுத்தான். அந்தப் பாணமானது பார்த்த வர்களுடைய கண்களேயெல்லாம் வேற்றுருவமாக மயக்கிப் படபடா காரத்துடன் வந்து துரியோதனமகாராஜனுடைய பாம்புக்கொடியை முறித்துத் தேரிற் பூட்டிய குதிரைகளேயுமறுத்துக் கௌரவகுல முதல்வனணிந்த கவசத்தையுங் கிழித்து, அவனுடைய பலமான மார்பையுந் துளைத்து, முதுகின் புறமாய்ப் புறப்பட்டு யுத்த முகத்தில் மிகுந்த வெற்றியை யுடைய கொற்றவர்களேயுங் குறைத்து வரும்போது, கந்தியாவட்டை மாலையணிந்த ராஜாதிராஜன் தம்பிமார் முதலாகிய பேர்களுக் கெதிரிலே முடி சாய்த்து பரவச மாக ஓய்ந்து விழுந்தான்.

இவ்வாறு ஒருவருக்கு மிளைக்காத பார்த்திபனனவன் இந்தக் கடோற்கஜன் விட்ட கணைபட்டுக் களைத்துத் தேரிற் சாய்வதற்கு முன்னமே, கடவுளர்க்குத் துணையாகச் சென்று காலகேய நிவாத கவசர்களைக் கொன்று கிரீடியென்ற பேர் பூனைந்து கொண்டவந்த பலவானுகிய அர்ச்சுனனுடைய புத்திர னென்ற அபிமன்னுவான வன், மன்னர் மண்டலேச்வரர் முதலிய யாவரும் வாடியோடும்படி யாகச் சகல சேனைகளையு மாட்டி வாட்டி வரும்போது தனது பெரிய தந்தையாகிய பீமசேனனுந் துரியோதன ராஜனும் அமர் புரியும்படி யானதைக் கண்டு, சமரவே லென்பதைக் கைக் கொண்டு சங்காரருத்ரமூர்த்தியின் சூலாயுதம்போல் தேர்ச்சாரதி யின் மார்புக்கு லக்ஷியம்வைத்து விடுத்தான். அந்த வேலாயுதம் போய்ப் பாய்ந்தவுடனே, துரியோதனனுடைய ரதசாரதியானவன் கையோய்ந்து பயந்து நிலத்திற் சாய்ந்து மாய்ந்தான். இவ்விதமாகக் கடோற்கஜன் விட்ட கவரத்தினபாணத்தால் துரியோதனன் சாய்ந்து, அபிமன்னன் விட்ட வேலினுற் சாரதிமாய்ந்து விழுந்த மாத்திரத்தில், துரியோதனனுடைய தம்பிமார் முதலாகிய பேர்க ளுங் கும்பு கூடிக்கொண்டு கோவென்றழுது, பீமன், கடோற்கஜன், அபிமன்னன் இவர்கள் மூவரும் பிரயோகம் பண்ணுகின்ற வீர பாணத்திற் கிளைத்து, கிட்ட நெருங்கித் தமையனைப் பார்க்கப் பயந்து, பீஷ்மாச்சாரியர் நின்று யுத்தம்பண்ணுமிடத்திற்கு வெகு பேரையனுப்பி, "ஐயா! அபிமன்னன் விட்ட வேலாயுதத்தாற் சாரதி இறந்தான். கடோற்கஜன் விட்ட வெஞ்சாயகத்தால் இரா ஜாதி ராஜனுகிய துரியோதன மகாராஜன் உயிர்மறந்தான். சமீபத் தில் நெருங்கிப் பார்க்கமாட்டாமல் யாவருந் தத்தளிக்கின்றார்கள்.

தேவரீருக்குச் சேதி தெரிவிக்கச் சொன்னார்கள். ஆதலால் நீர் சீக்கிரத்தில் வரவேண்டும்" என்று சொல்லி மகாபரிதாபத்தோடும் அழைத்துவரச் செய்தார்கள்.

இந்தச் சேதியைக் கேட்ட மந்தாகினியின் மைந்தனுகிய காங்கேயன் வருந்தி, அப்போதுதான் வந்து தம்மோடு சண்டை போட்டுக்கொண்டிருக்கும் விஜயனையுஞ் சென்தாமரைக் கண்ணனையும் ஒருபுறமாக விடுத்துத் துரியோதனன் விழுந்துவிட்ட திசையை நோக்கிப் புறப்பட்டார். இளைத்த பேர்களுக்கு ஏழுசுற்று மதிற்சுவர் போலிருந்து இரகூடிக்கும் இறைவராகிய பீஷ்மர் வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை யணிந்த மார்பினையுடைய துரியோதனராஜன் விழுந்து கிடக்கும் இடத்தில் வந்து, அவனுடைய மார்பிற் கணைபட்டுருவி யிருக்குந் துவாரத்தைப் பார்த்து, இரு கரத்தாலும் அணைத்தெடுத்துத் தமது இரதத்தின் பேரிலேற்றிக் கொண்டு காயம்பட்டபேர்களை வைத்துக் காபாற்றுங் காவணத்துட் சென்று அங்கிருக்குங் காரியஸ்தராகிய ரணவைத்தியர்களை அழைத்துக் காட்டப் பிரேதம்போல் அசைவற்றுப் போட்டகாலும் போட்டகையுமா யிருக்கவே யாவரும் புலம்பி மீண்டும் வினையின் பயனென்று கலங்கித்தேறி ராஜனுக்குப் பிராணன் வரும்படியாகிய சஞ்ஜீவிகரணியென்னும் ஔஷதங்கொடுத்து ஒத்தடமிட்டு மருந்து வைத்துக் கட்டினார்கள். பின்பு துரியோதன மகாராஜன் சற்று நேரத்திற் கண்விழித்துப் பார்த்து, "பீமனிற்கின்றனை? ஓடிப் போனனை?" என்றெழுந்து, தாகத்தீர நீருண்டு இளைப்பாறி யுத்த முனைக்கு மறுபடியும்வர யத்தனித்தான். அந்தச் சமயத்திற் பீஷ்மர் தமது முகத்தைச் சுளித்து, "ஓ அரவகேதன! போர்புரியுந் தன்மை எப்படி யென்றுல் நாயகரானவர் பேரணியில் நிற்கவேண்டும். மற்றப் படைகளிற் சில வீரர்கள் எஜமானனைக் காத்துக்கொண்டிருக்க வேண்டும். மற்றச் சேனை முதலிய படைமன்னவர்களெல்லாம் யுத்தஞ் செய்யவேண்டும். அப்படி யுத்தஞ்செய்து எல்லோரும் அழிந்து போய்விட்டால், முதலாளியாகிய ராஜன் பிரியமுடையவனுனல் ராஜியாய்ப் போகவேண்டும். தைரியசாலியானல் தானே புறப்பட்டு எதிரிற்சென்று சளையாமனின்று யுத்தம் பண்ண வேண்டும். இப்படிக்கெல்லாம் ராஜதரும முதலிய நீதிகளிருக்க நாங்களெல்லோரும் உயிருடனிருக்க நீ யுத்தஞ்செய்யப் போவது உத்தமமல்ல! ஓ உத்தமனே! நீ மெத்த வருந்தி நொந்திருக்கின்றாய். இப்போது இந்தப் பேரணியிற்சென்று சற்றுநேர நிந்தப்பாயானல்,

உனக்குப்பதிலாக நான் போய் உன்னை யடித்தவர்களைப் பிடித்து யுத்த முடித்து வெற்றிக்கொடி பிடித்து வருகிறேன்" என்று சொல்லித் துரியோதனராஜனைப் பேரணியினிறுத்திப் பின்காவலும் அமைத்து மகமேருவென்று சொல்லும்படியாகிய வில்லெடுத்து நாணேற்றித்திரிபுரதகனனே இவனென்று சொல்லும்படி தேரேறி வீரகண்டாமணி விளங்கி யொலிக்குங் காலினையுடைய பீமசேனனை யெதிர்த்து மிகுபோர் விளைத்து, முன்னிட்டவர்களெல்லோரும் பின்னிட்டோடும்படியாகக் கூர்மைபொருந்திய வாளிகளினூற் குறைத்துச் சிதைத்து, அவ்வவர்களுடைய மார்பிலும் தோளிலும் முகத்திலும் அகத்திலும் கண்ணிலும் காதிலும் புதையும்படி யாகக் கணைமாரிகளைச் சொரிந்து, சேனைகளினுடைய சிரமுங் கரமும் உரமும் அறுபட்டுச் சிதறி விழும்படி யடித்துத் தருமராஜ னுடைய சேனைமுத்திரத்தில் தாம் ஒருவராகவே நின்று, பாற் கடலைக் குழப்பிய மந்தரகிரிபோற் கலக்கித்திரிந்து போர் புரிந்து, பீமன், அபிமன்னு, கடோற்கஜன், தர்மராஜன் முதலிய வேந்தர்கள் பலருங் காந்திப்போய்ப் பாந்திப்போகக் கண்ணுக்கெட்டிய தூரம் ரணகளத்திற் புழுதி பறக்கும்படி காற்றடியைப் போலும், குயவ னுடைய திகிரிகையைப் போலும் கரகரவென்று ரதஞ்சுழன்று வரவும், கால்மாடு தலைமாடாய்ப் பிணங்கள் குவியவும், பேய்களாட வும் உதிரவெள்ளம் பெருக்கெடுத்தோடவும், மதகிறைந்த மலை போன்ற யானைக்கூட்டமும், பத்துபோல் விசைகொண்டு பாயுங் குதிரைக் கூட்டமும், காரைக்கிழித்தோடும் ரதபந்திகளும் பாரைக் குழித்தாடும் சேனைவெள்ளமும், தேசதேசத்தரசர் ராஜராஜத் தலைவர் யாவருங் குலைகுலைந்து, நடுநடுங்கி, விடவிடத்துப் பட படத்து எண்ணங்கள் மறந்து, இச்சைகள் துறந்து, திசாதிசை களில் விழுந்தோடி இறந்து போகும்படி சுடுசரந் தொடுத்து அலை கணிறைந்த கடலிலுதித்த வடவாமுகாக்கினிபோல் எரித்து அழி த்து, யாவருந்தமக்கு எதிரில்லாமலோட்டி, அவ்விடம் விட்டு வந்து கிருஷ்ணார்ச்சுனரை மடக்கிக்கொண்டு, சுவேதவாம்புரவி அழியாத ரதம் முடியாத சாரதி இவைகட்கு நாயகனுகிய அர்ச்சுனன் பேரி லும் அவனுக்குச் சாரதியாகிய கண்ணன்பேரிலும் சோனைப்பேய்ச் சலைப்போற் கணைகளைப் பொழிந்து கருக்கிக் காய்வதாயினர்.

கிருஷ்ணன் அர்ச்சுனனை வெறுத்துக்கொண்டு சக்கர மேந்துதல்

அப்போது ஸ்ரீ கிருஷ்ணன் தமது சரங்களுங் கால்களும் ஓயும் படியாய்க் கலகலத்து வருந்த, அக்காலத்தசைவற்றுத் திக்பிரமை கொண்டவன் போலிருக்கும் அர்ச்சுனனைப் பார்த்துக் கிருஷ்ணன் சொல்லுகிறார்—"அடா பாவி அர்ச்சுனா! கடாக்கினிபோற்சேனை கள் முதலிய யாவரையுமெரித்து என்னையும் குதிரைகளையும் இப் படி கொளுத்திக் கொல்லும் பீஷ்மன் பேரில் வில்லெடுக்கா மலும் ஒரு சொல்லுரைக்காமலும், பாணம் விட்டுத் தடுக்காமலுஞ் சும்மா விருக்கின்றாயே! உனக்கிது தக்கதுதானா? அப்பா! உன்னை நம்பிவந்தேனே! நல்ல யுத்தத்தில் என்னைக் காட்டிக்கொடுத்து விட்டு அறியாதவன்போ லிருக்கின்றாயே! இதென்னமோசமோ? இதுவுமொரு நேசமோ? ஐயோ! இதுமெத்த ஆச்சரியம்! ஆகிலும் என்பேரிலுனக்கென்ன மாச்சரியம்? அர்ச்சுனா! என்னைக்காக்காமற் போனாலுந் தருமராஜன் முதலிய மன்னரைக்காக்க வேண்டுமே! தன்மானம் பிறர்மானம் என்பது இல்லாமலிருக்கின்றாயே! உனக் கென்னமானமில்லையா? ஈனமில்லையா? ஊனமில்லையா? வெட்க மில்லையா? அக்கரைக்காரனாகிய நீயே இவ்வாறு ஆலசியப்பட்டிருந் தால் மற்றை யாருக்கென்ன வந்தது? ஓ அர்ச்சுனா, உன்னுடைய பாட்டனாராகிய இந்த பீஷ்மனால் இப்போப்பட்ட அடிபடும்படி எனக்கேனிந்தத் தலைவிதி? அப்பா, என் பெண்டுபிள்ளைகளைவிட்டு உன்னை நம்பி நான் தேர்விட வந்தது என்னுடைய பொல்லாத கால மாய் விட்டதே! விஜயனே நீ கடுச்சமயத்திற் கழுத்தறுக்கமாட் டாமற் செய்த விது மகா நல்ல சதியாச்சு! அர்ச்சுனா இனி என் ஜன்மஜன்மத்திற்கும் உனக்கு நான் தேர் விடுவதில்லை. உன் மன தில் இதை நீ செவ்வையாய் மதித்துக்கொள்" என்று செவ்வாம்பலை யும் செம்முருக்கையும் சேர்த்துருக்கியதைப்போற் கண்ணுமுக முஞ்சிவக்கச் சினங்கொண்டு கரத்திற் பிடித்த கடிவாளக்கயிற்றை யுங் குதிரை தூதத்துங் கோலையுஞ் சுழற்றியெறிந்து விட்டு ரதத்தை விட்டுத் திடீரென்று பூமியிற்குதித்து, "ஒருவன் மெச்சி எனக்கு ஒன்றுங் கொடுக்கவேண்டியதில்லை. ஒருவனுறவு எனக்கென்ன உதவியைச் செய்யும்? ஒருவன்பகை என்னை என்ன பண்ணும்? எவன் எக்கேடுகெட்டாலும் எனக்கென்ன? இராம

ணுண்டாலென்ன? இராவணனுண்டாலென்ன? எவனுலும் எனக் கென்ன ஆகவேண்டியது? தன் ஆயுதமும் தன் கையிற் பொருளுந் தன்னிடத்திருந்தால், தருணத்திற்குதவும்; அன்னியரிடத் திற் கொடுத்து அவன் கையைப் பார்த்திருந்தால் அந்தப் பாவி அவசரத்திற் குதவுவானு? ஐயோ! அப்படி கொடுத்தவனுக்கு உடனே குறைவந்து சேரிடுமென்று பெரியோர் பேசிய வாசகம் நிசமாச்சே! நான் பேசியிருந்த நேசவுரிமைகளெல்லாம் வீண் போச்சே! இவனுடைய ஆயுதத்தையும் இவனையும் நம்பிவந்து எனக்கிந்தக்கதியாச்சே! இந்த வேளையில் நாமும் சும்மாவிருந்தாற் பழியாச்சே!" என்று சொல்லி மனதொந்து தமது சக்கரா யுதத்தை நினைத்தார்.

அப்படி நினைத்தமாத்திரத்திலே தகதகாய்மாய் வந்து சூழன்று நின்ற தமது சுதரிசனத்தை வலக்கரத்திலேற்றுக்கொண்டு, உகாந்தகாலாக்கினிபோற்சீறிப் பீஷ்மரைக்கொல்லும்படியாய் மீறி ஆதிசேடனுடைய பணமகுடங்கள் கடகட படபட கடகட வென்ன அமரர்முதலியபேர்கள் ஹரிஹரி ஜயஜய நமநம வென்ன கற்பகக் கையன் அயனைப் படைத்த துய்யன் தமது திருவடி பெயர்த் தருளிப் பைய நடந்த பான்மையைத் தேரிலே திகைத்திருந்த விஜயன் கண்டு, திடுக்கென்றெழுந்து, பூமியிற் குதித்துத் தனக்குப் பகவற்கீதை சொல்லித் தரிசனங்கொடுத்தருளிய பங்கயம்போன்ற அவர் திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டான். அந்தவேளையிற் கண்ணன் 'விடுவிடு காலை' என்று வீசிநடந்தார். உடனே அர்ச் சுனன் நானென்றும் அவனென்றும் உவனென்றும் சொல்லத் தக்கவையற்ற நன்னெறியை நாட்டி அவனருளாற் காட்டிய நற் குறியிட்டுப்பூட்டி இருகரத்தாலும் அவர் திருவடிகளைப் பற்றிக் கொண்டு தனது பக்தியை நீட்டி, அண்டத்தவரு மெச்சும்படியாக அளவற்ற உரிமைகளைக் காட்டி, ஸ்தவுத்தியஞ் செய்கின்றான்.—

"ஓ ஆபத்பாந்தவா! ஓ அநாதரக்ஷகா! ஓ சர்வலோக சரண்யா! ஓ சார்வபௌமா! ஓ கஜேந்திரவரதா! ஓ ஹரிகிருஷ்ணு! ஓ ஹரிவாமனு! ஓ ஆதிமத்யாந்தரகிதா! ஓ யதுகுல சிரேஷ்டா! தேவரீர் என்னை மன்னிக்கக்கடவது. தேவரீருடைய திருவடித் துணைகள் வாழக்கடவன. தேவரீருடைய திருவருட்கண்கள் செழிக்கக்கடவன. தேவரீருடைய அநுக்கிரகம் பல்லாண்டு பல்லாண்டாய் எங்கள்மீது பிரகாசிக்கக்கடவது" என்று பலவாறு

துதிசெய்து, "ஓ சுவாமி! ஓ ஆதிமூலமே! அடியேனுடைய விண்ணப்பம் ஒன்று கேட்டருளும். இந்த பீஷ்மரானவர் உமக்கொரு லக்ஷ்யமென்று நினைத்தோ இல்லை அவரைக் கொல்லுவது அருமை யென்பது குறித்தோ அல்லது இரணியன் இராவணன் கும்பகர்ணன் முதலிய எல்லாருடைய உயிரிலும் இவருடைய உயிர் வல்லுயிரென்று கருதியோ தேவரீர் சகல தேவர்களாலும் பூசிக்கத்தக்க இச்சக்ராயுதங் கொண்டது! ஓ திருமாலே! பீதாம்பரப் பெருமானுகிய உமக்கு இவரோரீடோ? தேவர் சிருஷ்டியிலுண்டாகிய அநேக பேதங்களில் இவரெந்த அணுவோ? ஹரிஹரி! இதென்ன தந்திரக்கோலம்? ஓ கோபிகா லோலனே! உம்மைநான் விட்டாற்றானே நீர் பீஷ்மரைக்கொல்லுவீர்? உம்மை விடாமற்போய் விட்டால் நீ ரெங்கே கொல்லுகிறது பார்ப்போம். என்னுயிருள்ள வரையிலும் உம்மை நான்விடேன். ஓ ஆண்டவனே! இன்னுமோர் விசேஷ வார்த்தையைச் சொல்லுகிறேன் கேளும்! நீர் ஆயுதமெடுப்பதில்லையென்று சொல்லிவிட்டு இப்போது ஆயுத மெடுத்துக் கொல்லுவீராகில் அது எனக்கு மிகுந்த குறைவைக் கொடுக்குமல்லவா? ஓ கோவிந்தனே! கையிலாகாமற் கலங்கிவிழித்த விஜயனுக்குத் தான்சொன்ன சொற்றப்பித் திருமாலுதவிசெய்தா ரென்று பழியாகிய இழிவு சொல்லுவார்கள். ஆகையால் தேவரீர் கண்காண இந்த பீஷ்மர் முதலிய படைகளையெல்லாம் இந்நிமிஷத்தில் நானே வாட்டுகிறேன். நீரேபாரும் சுவாமி" என்று பின்னு மனந்தமுறை துதித்துப் பணிந்தான்.

பீஷ்மர் சக்ராயுதத்தோ டெதிர்க்கவருங் கண்ணனை வந்தித்தல்

இந்தப்படி அர்ச்சுனன் வணங்கி வணங்கி உபசரிக்குந்தோறும் கிருஷ்ணமூர்த்திக்குக் கோபம் அதிகமாய், "ஆ! அர்ச்சுனா! ஏன் வீணனவார்த்தையெல்லாம் பேசுகிறாய்? 'முதற்கோணில் முற்றும் கோணும்' என்கிற பழமொழி உன்னிடத்தில் கண்டேன். இனி என்னுலுனக்காக வேண்டுவதொன்றுமில்லை. ஆகையால் என் காலை விடுவிடு" என்றுகூறி மாறி, பீஷ்மனெங்குள்ளா னென்று சீறி வீறிவரலும், ஆதிகேசவன் கொண்ட கோபத்தை பீஷ்மாச்சாரிய ருணர்ந்து, நமக்கு இன்று காசகாலஞ் சமீபித்ததென்று நடுநடுங்கி, மாற்றுயர்ந்த அபரஞ்சியினு லியற்றிய மகமேருவைப் போன்ற

தனது தேரை விட்டிறங்கி, இருகரத்தையுஞ் சிரத்திற் குவித்து, ஏகாங்க தண்டமாகப் பூமியில் விழுந்தெழுந்து,

" ஆரண கற்பித மாதவ வச்சுத வாழியிடைத்துயிலும்
காரணநிற்குண ரூப மலர்க்கொடி காதன் மனத்துறையும்,
காரண வற்புதவானவருக்கொரு காயக நிற்பணியும்,
வாரணமுத்தி விசால தலத்திடை வாழ்வுறை வைத்தவனே
ஆவியழித்தனை தூணிலுதித்தட லாடகனைத் தலைகாள்
மாவலியைச் சிறு மானுருவத்துடன் வார்சிறைவைத்தனையால்
ஏவிலரக்கனை வீழவடர்த்தனை யாஞ்நிலக்கெனவோ
நீ வலியிற்சின மூளுமனத்தொடு கேமியெடுத்தனையே
யானரகிற்புகு தாம லெனக்குயர் வானுலகைத் தருவான்
நீ நினைவுற்றது போனபிறப்பிலென் னீடுதவப்பயனே
யானுமினிப்பிறவாமலளித்தரு ளாதியுனைப் பலகால்,
ஞான மனத்தொடு நாடுனர் புற்பவ நாகமழிப்பவனே !"

ஓ வேத உற்பத்திக்கு முதற் காரணமாகிய வித்தகனே ! என்னை ரக்ஷியும்! ஓ மாதவனே ! ஓ அச்சுதனே ! ஓ பாற்கடலிற் பாம்பணைமிற் றுயிலும் பரந்தாமனே ! என்னை ரக்ஷியும்! ஓ நற் குணம், நற்சிந்தை, நல்லுருவாதிகளமைந்த மஹாலக்ஷ்மிக்கு நாதனே ! என்னை ரக்ஷியும்! ஓ நாராயணனே ! ஓ அற்புதனே ! ஓ தெய்வநாயகனே ! ஓ தேவர்கள் தொழுதேத்துஞ் சீதரனே ! என்னை ரக்ஷியும்! கஜேந்திர மென்னுங் காட்டானையை முத்தி வீடாகிய கொட்டாரத்தில் திருவடிக் கம்பத்திற் சேர்த்து அருட்க வளமூட்டி யாதரித்து வாழ்வுபெற வைத்த ஓ கஜேந்திர வரதனே ! என்னை ரக்ஷியும்! சகல வாழுங்கொண்டு சாகாவரமுங் கண்டு மூவுலகாண்ட இரணியாசுரனை நரசிங்க ரூபமாய்த் தூணி லுதித்துக் கைகதத்தாற் கொன்ற, ஓ காகுத்தனே ! என்னை ரக்ஷியும் ! அண்டங்களை யெல்லாம் ஆண்ட மகாபலிச்சக்ரவர்த்தியினிடத்திற் போய் வாமன ரூபங்கொண்டு மூன்றடிகேட்டு அவனைப் பாதலத்திற் சிறைவைத்த, ஓ பரந்தாமனே ! என்னை ரட்சியும்! இராமாவதாரமாய் அரைக்கோடி ஆயுள்கொண்ட இராவணன் முதலிய அரக்கரை அம்பிஞற்செற்ற, ஓ சம்புவே! என்னை ரக்ஷியும்! வரங்களிலும், உரங்களிலும், சிரங்களிலும், கரங்களிலும், புரங்களிலுங், தனங்களிலும் இனங்களிலும், ஜனங்களிலும். கனங்களிலும், சிறந்து அழியாவரம் பெற்றிருந்த தன்யர்களாகிய

தராஷ்டிரர்களையெல்லாம், தந்திரங்களால் முடித்த சர்வ சுதந்தரனுகிய சர்வேச்வரனேனும் உமக்கு என்னைக் கொல்வ தருமமையோ? ஓ சுவாமி! காயினுங் கடையேனுகிய என்னை ஒரு லக்ஷ்யமுள்ள பொருளாகப் பாவித்து, மேலாகிய கோபங்கொண்டு சக்ராயுதமெடுத்து, செந்தாமரைக் கமலம் போன்ற திருவடி பெயர்த்து வரும்படியாகவுமானதோ? ஓ ஆண்டவனே! இந்தப் பிரபஞ்சத்தில் யாவரும் முடியும்படியாகிய நிரியாண காலத்திற் கடவுளினுடைய திரு நாமங்களைச் சிந்தை செய்து வந்திப்பதில்லை. ஆனால் அப்படிக்குப் பெறத்தக்கவர் அரிய தவத்தை யுடையவராதலால், ஓ கரிய வண்ணனுகிய கண்ணனே, அடியேன் ஜனனமரண வேதனையிற்ருழாமலும், மாளாத துயரில் வருத்தும் மனிவாழ்க்கையில் வீழாமலும், மகத்தாகிய நரகத்திலாழாமலும், தேவரீருடைய திருவடி மணங்குலவும் பரமபதக் கதியை எனக்குதவி செய்யும் படியாக நினைத்துச் சக்கரதாரனுகத் தரிசனந் தந்தது, நானிந்தப் பிறப்பிற் செய்த தவப்பயனுயிருக்கில், அஃது உமது திருவருட்குத் தெரிந்திருக்கலாமேயன்றி, என்னுற்றெரிந் துணரத் தக்கதோ? ஓ தாமோதரனே! இனிமேலும் நானிந்தக் கர்ம பூமியிற் கலக்காமலிருக்கும்படி கருணை செய்தருளும்! ஓ கருணைக்கடலே!" என்று கரமுடங்கத், தோள் நடுங்க, நாநடுங்கக் கண்ணீ ரோடத் தேகஞ் சிலிர்த்து, உண்மைக் கியான முணர்ந்து, அநேக விதமாய் ஸ்தவுத்தியஞ்செய்து ஹரிஹரியென்று அவரது திவ்விய திருவுருவத்தை நோக்கித் தெண்டனிட்டார்.

இந்த வேளையிற் பக்தவற்சலனுகிய பரம தயாளுவானவர் பக்ஷமுடையவராய்க் கோபந்தணிந்து உள்ளங் குளிர்ந்து நிற்க, திடகாத்திரனுகிய ஜெயவிஜயன் திருமாலேப்பணிந்து அவரது திருக்கரம்பற்றித் திரும்பி யழைத்துக்கொண்டு வந்து, "தேவர்கள் யார் தடுத்தாலும் மூவர்கள் போர் தொடுத்தாலும் இப்போதே இந்த பீஷ்மர் முதலிய சகலரையுஞ் ஜெயிக்கிறேன் பாரும். நீர் வாரும். தேரின் மேலேறும். எளியனேனுடு உட்காரும்" என்று தானுமேறிக் கொண்டு, விஜய காண்டீபத்தை யெடுத்துப் பிடித்து நிறுத்தி வளைத்து இழுத்து நாரிமாட்டிச் சுடர்த்தலை கொண்டதாகிய கூர்ங் கணைகளை ஆயிரம் பதினுயிரம் நூருயிரம் கோடி என்னுங் கணக்கில் வாரி மாரிபோலிரைத்து வானத்தை மறைத்தான். மறுபடியுந் தேரேறிக்கொண்ட கிருஷ்ணன், அத்தேரை வாயுவேக மனுவேகமாய்ச் செலுத்தினர்; வாசவ குமாரனுகிய சவ்யசாசி மகா உக்கிரா

வேசக் களிப்போடு சர்வசம்கார கால உருத்ர மூர்த்தியைப்போல் பீஷ்மர் முதலிய சேனைப் படைகளை யெல்லாம் உகாந்த காலத்தி லழியு முயிர்போ லழித்துக் காடாக்கினியால் எரியுங் காட்டைப் போ லெரித்துக் கொண்டு வர, அதைக் காண்பதற்கு எவர்களா லுங் கூடாமையாய்க் கலங்க, தேவர்கள் கண்களை மூடிக்கொள்ள, சோம சூரியாக்கினி யென்னும் மூன்று கோள்களும் நிலை தடுமாறி யசைந்தோடத் தாரகாகணங்கள் பலபலவென்றுதிரச் சகல புவனங் களுங் கலங்கும்படியாகப் பல படைகளைத் தாங்கிப் போர் புரிந்து வந்தான் தனஞ்ஜயனவன்.

இந்தப்படி கௌரவசேனைகளெல்லாம் ஆலைக்கரும்புபோலும் வேலைத்துரும்புபோலும் நைந்து கொந்தோடும் படியாகத் தனஞ் ஜயன் வென்று வரும்போது, பீஷ்மரானவர் வீரபட்டமணிந்த அநேகந்தீரர்களை மூடிக்கிவிடுக்க, அவர்கள் திடுக்கென வந்தெதிர்த் துப் படுக்கெனப் பாணங்களைத் தொடுக்க, அவைகளை யெல்லாந் தடுத்து ஐமுகப் பகழிகள் விடுத்து, மகுடவர்த்தனராகிய படைகளை மண்ணோடு மண்ணுகக் கெடுத்து, கீரெழச்செய்து நெருப்பெழப் பெய்து, அளவற்ற திவ்யாஸ்திரங்களால் மன்னர் மண்டலீகர் பட்ட வர்த்தனராகிய படைக்கும்புகளைச் சேறுபடுத்தி, அவர்கள் தலை யுடைபட்டுப் பெருகு மூளைகளாற் றிக்குகளிற் கரை யேற்படுத்தித் திசைகள் வரைக்கும் புரண்டு வழிந்திருக்கும் உதிரங்களை ஆறு படுத்தி, நிலைபெற்றிருக்கும் யானை சேனை பரிவாரமாகிய படைக்கு மொத்தத்தில் ஆபிரம் அம்புகளேவி, அந்தக் கும்புகளை யெல்லாம் அரைநொடியில் ஈறுபடுத்தினன் வீறுபடைத்திருக்கும் விஜயன். ஓ ஜெனமேஜயமஹாராஜனே ! அந்த பீஷ்மாச்சாரியார் அனுப்பி வைத்தபேர்களில் எவர்கள் பிழைத்தார்களென்று என் வாய் குளிரச் சொல்லுவேன்? மறுபடியும் பீஷ்மரானவர் சமுத்திரதீரர்களாகிய திடவான்களையும், இராக்கதர்களையும் விரைவிற் செல்ல விடுத்தார். அவர்களும் உடனே வந்தடுத்துத் தாங்கள் கற்றிருக்கும் பற்பல வற்புத விற்றிறமை வேற்றிறமை முதலிய எல்லாத் திறமைகளையுங் காட்டினார்கள். அந்தக் கைக்காரரைத் தெரிந்து கொண்ட காண்டீபன் நகைத்துக் கூர்மையாகிய வாயுக்கணை பொறிகள் கக்கும் தேயுக்கணை நீரைச் சொரியும் வருணக்கணை காலமுடிவைச் செய்யு முருத்ர கணை கும்பாகக் கூடிக்கொல்லுந் தேவர்கணை குவலயமெல்லாங்க வரும் இந்திரக்கணை முதலாகிய பல மந்திரக்கணைகளை இணை இணை யாக இசைத்தெடுத்துத் தனது காண்டீபத்திற்றொடுத்து இழுத்து

விடுத்தான். ஆனால் முனைகொண்டு வந்த தேர் வரிசைகளெல்லாம் வெந்தழிந்து தீய்ந்தன. வாளணி வரிசைகளெல்லாம் கைதொழிந்து சாய்ந்தன. கம்பமதயானைகளெல்லாங் கால் முறிந்தறுந்தன. காவலரியாவரும் பட்டு உயிர் விட்டார்கள். கருதலரென்று வந்த பேரெல்லாங் களைப்படைந்தனர்.

அந்தச் சமயத்தில் காங்கேயரானவர் முன் வந்த பேர்களுக்குப் பின்துணையாகச் சல்லியராஜன் முதலாகிய சேனாநாயகர்களையும் சகல வயப் படைகளையும் சமரகத் தலைவர்களையும் போகவிடுத்தார். அவர்களைக்கண்ட அர்ச்சுனன் ஆசைகொண்டு பேசவேண்டுமென்று வந்தவிடத்தில் அந்தப் படைமன்னவர் ராஜகாரியத்திற்குக் குறைவு வருமென்று நாராச பாண முதலாகிய நானவித அஸ்திரங்களையெடுத்து விடுத்து வீராவேசங்கொண்டு, நட நடவென்று பற்கடித்து நானைக்காய்ந்து வந்தார்கள். அவ்வாறு வந்தவர்கள் தங்களுக்கு முன்னடி வந்தவர்கள் படுகிற பாடுங் கெடுகிற கேடும் பார்த்து முகம் வேர்த்து, "இவர்களுக்குப் பின்துணையாகத்தானே நாம் வந்தோம். ஆகையால் இவர்களுக்குப் பின்புறத்திற்றானே துணையாகப் பேசாமற் போய்விடுவது புண்ணியவசமென்று நினைத்து, அவ்வாறே சென்று போர்புரியும்போது அர்ச்சுனன் விடும் பாணங்களிஞற் பொறி கலங்கி, அறிவழிந்து, செறிவொழிந்து, நின்றனர். கீர்வள முடைய மத்திரபூபனுகிய சல்லியராதியோர் அஸ்திர முறிந்து தறிந்து குவிந்து மலைபோனிறைந்து கிடக்கும் இடத்தைக்கண்டு, மறைந்து போவதற்குச் சுற்றிலுமிருக்கிற பேரைச் சேர்த்துக் கொண்டு, உடனே திக்கிற் கொருவராய் ஓடிப்போயொளித்து உயிர் பிழைத்திருந்தார்கள். இவையல்லாமலும் பாண்டவர்கள் காட்டிலிருந்த காலத்தில் தாங்கள் காட்டிலிருந்துகொண்டு நானவிதமாகத் தங்களுடைய வல்லபங்களைத் தாங்களே புகழ்ந்து சொல்லிக்கொள்ளுநாவினையுடைய வயப்படை மன்னவரெல்லாரும் வாடிப் பாடியை நோக்கிப் போகாமல் வேறிடம் போய் நாடிப் பதுங்கிவிட்டனர். போர்முகத்திற் போர் செய்ய வந்த துரியோதனன் தம்பிமார்களெல்லாருங் கூடி, விஜயன் கணைகள் விசையாக வந்து தங்கள் தேகங்களிற் புதையப் போகுதென்று வெருண்டோடி மறைந்தனர். அப்பால் மாகதர், சாகதர், மாளுவர், சாளுவர், குச்சரர், பப்பரர், வடுகர், படகர், குடகர், கன்னடர், மராடர், தொட்டியர், ஓட்டியர், முதலாகிய பேர்களெல்லாம் பற்குனன் விட்ட பாணத்தால் அங்கம் பழுதாய் வருந்திப்போய்ப் பற்பல விடங்களைத் தேடிப் பறவைகளைப்போற் பறந்து புகுந்தார்கள்.

இந்தப்படி முடிமன்னர் முதலிய கெடிமன்னரையுந் தாறு மாறுக வீறுவீறுகச் செய்யுந் தனஞ்ஜயனென்னுந் தனிச்சிங்கத்தின் கைத்திறலைக் கண்டு ஆடும்படியாகிய அரவக்கொடி தரித்த அரசன் வியாகூலங்கொண்டு, அவன் பேரில் யுத்தஞ் செய்யப்போவோ மென்று நினைத்து, மீண்டும் அப்படி நினைத்த மனத்தை மறுத்து, 'நாம் முன்னமே போர் புரியப்போய் அச்சுமச்சு குத்துக்கால் குடை கொடி குதிரை சாரதியாவும் இழந்தோம். மார்பும் புண்ணுயிருக் கின்றது. மீண்டும் பாணத்துளைத்துருவ அதனும் நன்பப்படுவதில் என்ன லாபம்? இதைப் பார்க்கிலும் மரியாதையாய்ப் பாசறையை நோக்கிப்போய்விடுவதே நன்மை' என்றுன்னி, மறுவார்த்தைக ளொன்றுஞ் சொல்லாமல் வாய்மூடிக்கொண்டு தியங்கித் திரும்பி னன். அப்பால் இந்த ரணகளத்திற் பார்த்தன் படையினும் சத்து ருக்களின் படையாகிய சமுத்திரமுடைப்பட்டு உலர்ந்துபோகவே, கோபிகா ஸ்திரீகளுடன் குலாவி மகிழுங் கோபாலன் இனிமேற் சண்டைக்கு எதிர்த்துவருவா ரொருவருமில்லை யென்றுணர்ந்து அர்ச்சுனனே யன்பு கூர்ந்து அருட்பார்வையாக நோக்கி, "ஓ சற் குணமுள்ள பற்குணு! இப்போது சாயுங்காலமாயிற்று. இவ்விடத்தி லும் படைகள் இளைத்துப் போயிற்று. உனக்கும் புகழ்வாய்த்தது! இனி நமது வாகனியி னிடத்திற் றேரைக்கொண்டு போகலாமா?" என்று கேட்க, "திருப்பிவிடுந் தேரைத் தீனதயாளுவே" என்று சிலவல்லோ னுரைக்க, உடனே கண்ணன் ரதத்தைத் திருப்பிச் செலுத்த இருவரும் பொங்கி பிருக்குந் தங்கள் படையில் வந்து சேர்ந்தனர். இவ்விடத்திற் பனைக்கொடியோன் முதலிய பார்த்திபர் கள் பக்கங்களிற் படை தெருங்கத் தாங்களும் பாது காத்துக்கொண்டு சர்பக்கொடியோனுகிய தராதிபனைப் பாசறையிற் சேர்த்தார்கள்.

இத்தன்மையதாக யுத்த நடாத்திய போர்க்களத்தில் விஜயன் விட்ட வெவ்விய பாணங்களால் அறுபட்ட யானைத் துதிக்கைக ளெல்லாம் உதிர வெள்ளத்தி லசைந்தாடுவது எப்படி யிருந்ததென் றால், கருநிறங்கொண்ட மலைப்பாம்புகள் கவிழ்ந்தும், நிமிர்ந்தும், வளைந்தாடுவதைப் போலிருந்தது. கொள்ளை கொள்ளையாகிய இரத்த வெள்ளங்கள் பள்ளங்களில் நின்று பளபளப் பெறிவது கிரணங்களைப் பரப்பிய சூரிய வட்டம்போன்றிருந்தது. இன்னுங் காக்கை, பருந்து, கழுகு கூட்டங்கள் மொய்த்துச் சுற்றிக்கொண்டு பறக்கும் படியாக இரண்டு காதுகளும் அறுபட்டுச் செங்நீர் வடியும் யானைகள், தேவேந்திரனுடைய வச்சிராயுதத்தால் சிறகிழந் தசையும் மலைகள்

போலிருந்தன. மேலும் இறந்து வீழ்ந்த வெற்றி வீரர்களின் தலையிலே தரித்திருந்த பொற்குவளைகள் தாளமாகவும், வில்லோடுங் கூடிய நாணிகள் வீணையாகவும், யானைத்தலைகள் குடமுழா வாத்தியமாக வும், எறிசக்கர வளையம் பிரம்ம தாளமாகவுங் கொண்டு, அவ்வவ் வீரர்களுடைய கவச கேயூர கிரீட குண்டலங்களை யணிந்து, அர்ச் சுனனுடைய பெரும்புகழைப் பாடி ஆடும்படியா யிருக்கிற பேய்க ளனந்தம்! போர்க்களத்திற் கிடைத்த பிணங்களைத் தானு முண்ணு மல், தங்களினத்தாரையும் உண்ணவொட்டாமற் பொருமை கொண்டு தனித்தனி குலைத்துக்கொண் டோடும் நாயினங்க ளனந் தம்! கிடைத்த நிணத்தைத் தானே யுண்டு மற்றையருக்குக் கிஞ் சித்துங் கிட்ட வொட்டாமற் கீழே மூடிப் புதைத்து அந்த இடத் தைச் சுற்றிக்கொண்டு தன்னினத்தார் முதலாகிய யாவர் வந்தா லுங் கூவிக் கத்திக் குழிபறித்து மண்ணைத் தூற்றித் திரியும் நரி யினங்களனந்தம் உண்டு.

இவையல்லாமலும் ஜாதி பேதம், தெய்வ பேதம், தனபேதம், ஜனபேதம், இனபேதம், மனபேதம், கனபேத முதலியவைகளில் இறுமாப்படைந்து ஒரு கலத்தில் ஓர் இடத்தில் கூடிய நாமென்று உணராமல், பத்துப் பேர்களை யாதரித்துத் தாமுந் தின்னுமல், 'பறந்துபறந்து பாடு பட்டாலும் பகலுக்குச் சோறில்லை' என்னும் பழமொழியைப்போற் பாரப்பிணங்களைக் குவிக்கும் பூதமனேகம், தன் னடத்தையையும், தன் செல்வத்தையும், தன் பிறப்பையும் தானிருந்த கதியையும், தன் மோசங்களையும், தன் பசிக்கு ஒரு கவளம் கிடைத்தாற் போதுமென் றிருந்த எண்ணத்தையும் எண்ணிப் பாராமல் இந்த ரணகளத்திற் பத்துப்பிணம் அகப்படவே தன்னைத் தான் மறந்து தனக்குமிஞ்சிப் பிரபஞ்ச மில்லையென்று தலையைக்குலுக்கி யானைப்பிணங் குதிரைப் பிணங்களிலேறி, இரத்த வெள்ளத்திற் பாய்ந்து கூத்தி, ஆடல்பாடல்களுடன் அயலவர் மனை வி யர்மேல் ஆசைகொண்டு கால்வர் நகைக்க நாளைவரப்போகிற அவ மானந் தெரியாமல் அலைந்து திரிகின்ற குருட்டுக்கண் பேயினங்க ளனந்தம். தாய், தந்தை, பெண்சாதி, பிள்ளை, தமையன், தம்பி, தம்முறவினர் முதலிய யாவரையுஞ் சேர்த்துப் பிடியாமல், தான் வாழ்வதற்குத் தலைமகளறுத்தாற் போதும் என நினைக்கும் தரித்திர ரைப்போல் பேராசை கொண்டு பாவபுண்ணிய மெண்ணிப் பாராமல் திரியும் போக்கிரித் தன்மையை யுடைய முரட்டுப் பேய்க ளனந்தம். சொற் சோர்வினுற் சோம்பித் திரிந்து துன்பப்படுங் துஷ்டகணங்க

ளனந்தம். ஒன்றை ஒன்று வஞ்சித்து மாமிசங்களை வாயிற் போட்டுக் கொள்ளுந் திருட்டுக் கூளிகளனந்தம். கொலுக் கொண்டிருந்து சகல பூதப்பிரேத பைசாச கணங்களால் ஏவல் கொள்ளுங் காளிக ளனந்தம். காளிக்குப் பூசையிட வைத்த கறியைத் தொட்டு முகந்து மூக்கறுப்புண்ட மூளிப்பேய்கள் அனந்தம்.

இவையல்லாமலும் வெப்பமாகிய மனிதப் பிணம், யானைப் பிணம், குதிரைப்பிணை முதலிய பல பிணங்களை யெல்லாம் ராசி ராசியாகக் களஞ் சுத்திசெய்வோர் குவிக்க, அந்தக் குவியலி லிருந்து வழியும்படியாகிய ஊனீர், செங்கீர் முதலிய பல கீர்களெல் லாங்கூடி மலை யருவி போற் பெருகி வழிந்து வரா நின்ற வாய்க்கால் களனேகம். மேலும் அர்ச்சுனன் விட்ட பாணங்களினுல் யானை வாயிலிருந்து செங்கீரும் நிணமும் திரண்டோடி வருவது, பால சுப்பிரமண்ய சுவாமியா ரெறிந்த வேலாயுதம் புகுந்த வழியில் சிகரங்களையுடைய மலைகிழித்து வருங் கங்கையைப் போலிருந்தது. இந்திர குமாரனாகிய கேசவற்றேழுன் றெடுத்த பாணங்களினுற் றுண்டித்து விழுந்த அரசர்களுடைய மண்டைகளை நாய்கள் கவ்விக் கொண்டோடுவது எப்படியிருந்த தென்னில் மனிதத்தலையும் நாயி னுடலுங்கொண்ட மிருகங்களை யொத்திருந்தது. அன்றியும் பேய்க் கணங்கள் முதலிய யாவுங் கூடிக்கொண்டு, பெண்ணுக்குப்பிள்ளை யும் பிள்ளைக்குப் பெண்ணும்பேசிக் கலியாணம் கச்சேரி முதலிய சம்பிரமங்களையெல்லாம் அநுபவித்து விருந்துண்டு வேடிக்கை களைப் பார்த்துக்கொண்டிருந்தன. இப்பால் இந்த மூன்றாள் யுத்தத்திற் சாங்களினுல் அறுப்புண்டிறந்த சேனைகள் முதலிய வீரர்களின் மூளைகள் நிணங்கள் செங்குருதிகள் முதலியவை களெல்லாந் தேகத்திற் றெறித்ததென்று சீக்கிரத்தில் மேற்குக்கடலில் மூழ்கப்போனவனைப்போற் சூரியன் அஸ்தமனமடைந்தான். உடனே முடிமன்னர் முதலிய சகல சேனைகளும் பாசறை புகுந்தார்கள். அவ்விடத்தில் துரியோதனமகாராஜன் துரோணாசாரியார் கர்ணன் துருவாசர் இன்னுமுள்ள மன்னவர் யாவருங்கூடி யிருக்குங் காலை யில், அர்ச்சுனன் செய்த யுத்தத் திறங்களும் ஆயுதமெடுப்பதில்லை யென்று சொல்லியிருந்த கண்ணபிரான் சக்ராயுத மெடுத்துத் தம்மைக் கொல்லவந்ததும் ஆகிய இவைகளையெல்லாம் விஸ்தார மாகப் பேசிப்புகழ்ந்து மகிழ்ந்துகொண்டிருந்தார் சேனுபதியாகிய பீஷ்மாசாரியர். துரியோதனனுடைய படைவீரர் முதலியபோக ளெல்லாம் இன்றையப்போரி லிறந்துபோன உரியவர்களையும்

பெரியவர்களையுங் குறித்து அழுதிரங்கிக்கொண்டிருந்தார்கள். தருமராஜன் முதலிய தளகர்த்தர்களும் சேனைவீரர்களும் தனஞ்ஜயன் செய்த சண்டைகளையும், பீமசேனனும் அபிமன்னனும் புரிந்த போர்த்திறத்தையும் புகழ்ந்து கொண்டாடிப் பாடிக்கொண்டிருந்தார்கள். இந்தப்படி இவ்விருதிறப் படைகளும் அன்றிராத்திரி முழுமையும் நித்திரையில்லாமல் அவர்கள் பாடிக்கொண்டிருந்த பாட்டை இவ்விதமென்று நானெப்படி சொல்லுவேன்?—என்று சொல்லியதைக்கேட்ட ஜனமேஜயமகாராஜன் மிகவுஞ்சந்தோஷமடைந்து வபுஷ்டாதேவியுடனெழுந்து பூமியில் விழுந்து போற்றிப் பணிந்து புகழ்ந்து மகிழ்ந்து "ஓ புண்ணிய சொரூபனே! நான்காம் போர் நடந்த திறத்தையும் கவிலவேண்டும்" என்று கேட்க வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

மூன்றும்போர்ச் சருக்கம் முற்றிற்று.

நான்காம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

சேலாகிச் சோமுகனைச் சிதைத்தவனை மகபதிக்காய்
வேலாகி விருத்திரனை வீழ்த்தவனை மாற்றலர்பான்
மாலாகிப் பாண்டவர்க்கு வழித்தூது நடந்தவனை
காலாகிப் பழமறையு நவில்வானைப் பரவுதுமே

ஓ அழியாத்தவங்களிற் சிறந்து பழியாம் பவக்கடற்றுறந்த அரசனே! அற்றைநாட் செல்ல மற்றுநாள் மாற்றுயர்ந்த பொன்மயமாகிய மகமேருவைப்போல் உதயகிரியும் பொன்னிறமாக வேண்டுமென்று ஒளிபொருந்திய கிரணங்களை விரித்துக்கொண்டு அதி சீக்கிரத்திலோடிவந்து உதயமானன் சூரியதேவன். அந்தச் சூரியன் தளதளவென்று பளீரெனச்சிவந்து பிரகாசமாயோடிவந்து உதயமானது எப்படியிருந்ததென்றால், யாதவகுலத்தில் அவதரித்த நீலமேனியையுடைய நிமலன் நேற்றையதினத்தில் நம்மை நினைத்து அகங்கையிற்கொண்டருளினர். இன்றையதினமும் ஒருவேளை நம்மை நினைக்கும்படியாயிருக்கும்; ஆகையால் நாம் அவருடைய திருக்கண்களுக் கெதிராகப்போயிருப்போம்" என்று பரிசுத்தமுடைய சுதரிசனமானது கீட்டிசையிலுதித்தெழுந்ததை யொத்

திருந்தது. உடனே பாண்டவவீரர் யாவருமெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு சூரியனைத்தொழுது யுத்தகோலங் கொண்டு வெற்றி முரசு, வீரமுரசு, ஜயமுரசு, தீரமுரசு, கலியாணமுரசு, தியாகமுரசு, தாரை, பூரி, கொம்பு, தப்பட்டை, தவண்டை, மல்லரி, சச்சரி, பேரி, சங்கு, ஜம்பை முதலிய வாத்தியங்கள் முழங்க ரண களம் வந்து சேர்ந்து ஸ்ரீகாதனுடைய உத்தரவின் வண்ணஞ் சகல படைகளையும் கூத்திரவியூகமாக வகுத்து யுத்தத்திற் கெத்தனமாக நின்றார்கள். அவ்விடத்தில் துரியோதனன் முதலிய பேர்களும் யுத்த பூமிக்குவந்து திஷ்டத்தூய்மன் வகுத்த வியூகத்தைப்பார்த்துத் தாங் களும் கருடவியூகம் வகுத்துக் கண்சிவந்து நின்றார்கள். அந்த வேளை யில் இருதிறச் சேனாதிபதிகளும் போர்புரியும்படியாய்க் கொடியு முடியுஞ் சாய்த்தார்கள். அப்படி சாய்க்கவே இரண்டு சேனைகளும் இறைந்து இருளைக் கூச்சலிட்டேயாட்டும்படியாகிய போர்முரசத்தை முழக்கிக் கடுங்கோபங்கொண்டு கைகலந்து போர்செய்தார்கள். சக்கரதரராகிய சுவாமியையும் அவர் மைத்துனராகிய அர்ச்சுன ராஜுனையும் சாஸ்திரவிவேகத்திற் சிறந்த பீஷ்மாச்சாரியர் எதிர்த் துக்கொண்டார். பாண்டவச் சேனாதிபதியாகிய திஷ்டத்தூய்மன் தனக்குக் காரணப்பகையாகிய துரோணாச்சாரியரை வளைத்துக் கொண்டான். அப்போது ஈரேழுலகிற்கும் ஆதாரமாயிருக்கின்ற மகாமேருவை அநேகங் கோடி மலைகள் சூழ்ந்து கொண்டாலெப் படியோ அத்தன்மைபோற் பலம் பொருந்திய புயமலை தாங்கிய வாயுபுத்திரனாகிய பீமசேனனை கிர்வாகசாலிகளாகிய பலதேச மன்னவர் அநேக யானைக் கும்புகளோடுந் தேர்க்கூட்டங்களோடுஞ் சேர்ந்து எதிர்த்து வளைந்தார்கள். சிற்சில வீரர்களும், பற்பலவித மன்னவரும், பலபலவிடங்களிலும் நெருங்கி அமர் செய்தார்கள்.

பீமசேனன் யானைப்போர் விளைத்தல்

அந்த வேளையில் பீமசேன ராஜாவானவன் விற்பாண முடை யவனாய் வெகு நேரம் வரையிலும் போர்புரிந்து அப்பால் ரதத்தை விட்டிறங்கி, ஆலகால விஷம் வெளிப்பட்டு முழங்கி அவனி முதலிய அண்டங்களை யழிக்கப் புகுந்ததுபோல் வெறுங்கையுடன் யானைப்படைக்குட்புகுந்து, யானைகளைவாரி ஒன்றோடொன்றை யறைந்து எலும்புகளைக் கழற்றிவிட்டபடியால், தோலினமென்று சொல்லப்படுகிற அந்த யானைகள் தோலாகவே விழுந்திறந்தன. இன்னுஞ் சில தோலினங்களைப் பீமன் பிடித்துக் கிழிக்குமிடத்துத்

தும்பிக்கையும், மேல்வாயும், பீமசேனன் கரத்திலிருக்கக் கீழ்வாய் கீழே தொங்குவதால், கால்வாயென்னும் பெயர் மறைபாம லசைந் தாடும் வாயுடன் அழிந்திறந்தன. சந்திரவட்டக் குடைதரித்த பீமசேனன் குதித்துக் குத்திக் கொல்லுகின்ற அக்கால்வா யென் னும் யானைகள் சிந்துரப் பொடியாய்ச் சிதைந்து வீழ்ந்திறந்தன. மேலும் பீமசேனன் வெறுங்கையால் அச்சிந்துரங்களைப் பிடித்து ஒருகைமேல்வைத்து மற்றொரு கையால் குடலற்று வீழக் குத்து கின்ற குத்தால் தோல், மாமிசம், கிணம், தசை முதலிய யாவும் அழிந்து வழிந்துபோய் அத்தி யென்கிற வெற்றெலும்புகளாய் விழுந்திறந்தன. மேலுங் கந்தவகன்மைந்தனுகிய பீமசேனன் கந்தடர்க்குந் தோளினுற் கலங்குகின்ற அவ்வத்திகள் தந்தாவள மென்னும் பெயர் மறையாமல், தாங்கள் பிறந்தலவுந் தந்தாவள மாகிய மலைப்பக்கங்களிற் போய் மறைந்தன. சோகந் தீர்க்கும் வாயு புத்திரனுகிய வேகமுள்ள பீமசேனன் பலங்கொண்ட புஜத் தால் இடித்துக் கொல்லும் அத் தந்தாவளங்கள் வாரணமென்னும் பேர் மறையாமல் வாரணங் (கோழி) களைப் போற் குன்றியிறந்தன.

அன்றியும் மேகம்போன்ற நிறத்தினையுடைய பேராகிர்தியாகிய அவ்வாரணங்கள் உடல் குமுங்கிப்போய் உதிர வெள்ளங்களும் ஊன்றண்ணீருங் கடகடவென்று கடைவாய் வழியே வழிந்தோடி வரும்படி பீமசேனன் தனது உள்ளங்கையால் அமுக்கிப் பிடித் தெடுத்து ஆகாயத்தி லெறிந்தபடியால், தும்பிக ளென்னும் பெயர் குன்றுமற் றும்பிகளாகிய வண்டுகளைப்போற் பறந்திறந்து விழுந் தன. மின்னலைக்கொண்ட பொன் மலைபோன்ற கதாயுதத்தைப் பொன்னுரமணிந்த புயத்திற்கொண்டு தன் முன்னுகவந்த அத்தும்பி களை யெல்லாமோதி யடித்துக் கொல்லுவதினுல் காகமென் னும் பெயர் கொண்டதற்சற்ப நாகமென்னு மலைகளைப்போற் போர்க்கள மெங்கு மடிந்து புதைந்து சிதைந்து மிதந்து குவிந்தன. மேலுந் தந்தக் கொம்புகளுந் துதிக்கையும் பீமசேனன் கைகளாற் பிடித்துச் சுழற்றப் பிடுங்குண்ட அந்நாகங்களெல்லாஞ் சகல வீரர் களும் உதிர வெள்ளங்களால் நனைந்து உதிர வெள்ளத்தில் முழுகி யெழும்படியாக அமோகமாக உதிரத்தைத் தங்கள் தேகத்தினின் றுஞ் சுரப்பிப்பதினுற் கயங்களென்னும் யானைகள் எல்லாரும் ஸ்நானஞ் செய்து முழுகும் ஊறுகயங்களை யொத்திருந்தன. மேலும் அக்கயங்களை வாரிவாரிவீசுகின்ற பீமசேனனுடைய முகம்,

கரம், கால், உடல், மார்பு இவைகளெல்லாங் குழம்புகளாய் மூடிக் கொண்டிருப்பதினுற் களப மென்னும் பேரைக்கொண்ட யானைகள் உடலிற் பூசிக்கொள்ளுங் கலவைச் சாந்தாகிய களபமாயின. அன்றியும் மலைகளைப்போல் எதிர்த்து நெருங்கிப் போர்புரியவந்த அக்களபங்க ளெல்லாம் எட்பொறி நெற்பொறிபோல ஆகாய வீதியிற் பறக்கின்றமையால் பங்கமில்லாமற் சண்டை செய்யுஞ் சிங்கம் போன்ற பீமசேனனுடைய ஆண்மையானது தர்மத்தைத் துணையாகக்கொண்டு எவர்களாலு முடிப்பதற் கருமையாகிய சகல காரியங்களையும் வெற்றிபெறச் செய்துகொள்ளுமென்பதற்குச் சாக்ஷி இதுதானென்பதைப்போல் கரி யென்னும் யானைகளே கரியாய்க் குவிந்தன.

இந்தப்பிரகாரமாய்க் கோபங்கொண்டு பீமசேனன் கடலைப் போற் புரண்டுவந்த யானைக் கூட்டங்களை யெல்லாங் கலக்கித் தலையும், குலையும், உடலும், குடலும், காலும், வாலும் தும்பிக்கையும், கும்பிப்பையும், நிணமும், மதமும், ஊணும், உதிரமும், சிதைந்துவழிந்து கூழ்போற் குழம்பிச் சேராகும்படியாய்க்கொன்று குவித்து, அண்டையில் யாவரையு கிற்க வொட்டாமல் சண்டை செய்து கொண்டுவந்த காலத்தில், எதிராளிகள் மேலிட்டு எதிர்த்துப் போராடினர்கள். அந்த வேளையில் வாயு குமாரனுகிய பீமசேனன் கையாறுமற்புகுந்து, சுடச்சுடக் கையாலறைந்து தேரணிகள், குதிரைப் பந்திகள், படைவீரர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மற்ற மன்னவர்யாவரும் பின்னிட்டோட வடித்து, வெகு ஜனங்களை முடித்து, வானத்திலும் வாரியெறிந்து, மசகமாகிய கொசுகுகளைப்போற் கையாற் பிசைந்து கொல்லுவதாயினன். அப்போது வந்தவர்களெல்லாம் வந்தவழி யெந்தவழியென்றுணராமற் சிந்தைகொந்து வாடி முகம் வைத்தவாறே ஓடினர்கள். அப்படியோடுவதை அரவக்கொடியோன் கண்டு மனந் தாளாமல் விசனங் கொண்டு, தளர்ந்தோடிவந்த அந்தச் சேனைகளைக் கையமர்த்தித் தன்னுடைய தம்பிமார்களோடுஞ் சேர்த்துக்கொடி குடை முதலிய விருதுகளுடன் முரசு, பேரி, பூரி முதலாகிய வாத்தியங்களும் முழங்க, பகை மன்னவரி லனேகர் தன்னைப் புடைசூழவந்து பீமசேனனை வளைத்துப் போராடினன். அவனைக்கண்ட திங்கட்குடையுஞ் சிங்கக்கொடியுமுடைய பீமசேனன் தென்பு கொண்டவனுய்த் தேரின்பேரிலேறிக்கொண்டு பாரியுஷில்லை வளைத்து அச்

சத்தை விளக்கும் நச்சுக்கணை தொடுத்துத் துரியோதனராஜன் கைக்கொண்ட வில்லை முறித்து அவன் தரித்திருந்த மகாவுண்ணத மான சேமக் கவசத்தினையுஞ் சிதைத்தான்.

உடனே மறுபடியும் துரியோதனன் வேறு வில்லெடுத்து நாணிமடுத்துப் பாணந்தொடுத்து வருவதற்கு முன்னே, பீமன் ஆறம்பைத் தெரித்து அரவக்கொடியை முறித்துக் கூரம்புகளிற் கும்பு கும்புகளாய் நூறம்பு செலுத்தித் துரியோதனனுடைய மார்பு முதலிய தேகத்தி னுழைத்து வேறே அம்புகள் விடுக்காம லிருந்தான். அந்தச் சமயத்தில் துரியோதனராஜன் சுதாரித்துக் கொண்டு பீமன் விட்ட பாணங்களை யெல்லாம் விலகச்செய்து, பதிலுக்குப் பதிலாக ஆறம்பும் உடனே ஒரு நூறம்பும் பீமசேன னுடைய சிங்கக்கொடியிலுந் தேரிலுந் தேகத்திலுந் தெறித்தான். அப்போது துரியோதனன் விட்ட கணைகளினால் பீமசேனனுடைய சிங்கக் கொடி முறித்து, தேருஞ் சிதைந்து, தேகத்திலும் புகுந்து துளைக்கும்போது, வெற்றி மிகுந்த கடக கங்கண வளையமணிந்த தோளைத் தட்டிக்கொண்டு, அண்டமுகடு வெடிபடும்படியாய் முழங்கி ஆக்ரமித்தான் வாயு மைந்தனுகிய பராக்கிரம பீமன். அந்த வேளையில் மகிபதி புத்திரனுல் பீமனிளைத்தானென்று கூர்மை தங் கிய வேலாயுதத்தைத் தாங்கிய அநேகங்கோடி மன்னரும், மாலையு முடியுந்தரித்த அநேக மகுடவர்த்தனரும், சகுல சகாதேவரும், வீர குமாரர்களாகிய மற்றப் புத்திரரும், மித்திரரும், மைத்துனர் முத லாகிய பேரும், மகா அட்டகாச வீராவேசத்துடன் ஜயபேரி, ரண பேரி முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு வந்த பீமசேன னுக்குத் துணை கூடினார்கள்.

பீமசேனன் துரியோதனனை மூர்ச்சிக்கச் செய்தல்.

இப்படி விரித்த வெண்குடை தரித்த மன்னவர் முதலிய பேர் களெல்லோரும் பீமசேனனுக்குப் படைத்துணை வந்தார்களென் றறிந்து, சுந்தியாவட்டை மாலையணிந்த சராதிபனுக்குத் துணையாக ரதகஜதுரகபதாதிகளுடன் பூபாலரானேகர், சுவகோடி கோபால ரானேகர், அவன் தம்பிமார் முதலிய பேர்களோடுஞ் சேர்ந்து அடித் தார்கள். இவ்விரு பேர்கள் ஒருவரோடொருவர் இளமறிந்தெ திர்த்து, ஒருவருக்கொருவர் இளையாமல் நிலைபெற்று நின்று

அதிர்ச்சி விளைத்துத் தங்கள் தங்கள் விண்ணுண் வலியாற் பேரோசை விளைத்தார்கள். அந்த ஓசையினுல் அகிலாண்டமுற்று மதிர, மண்டலத்துடன் எண்டலத்திக்குங் கலகலக்கும்படியாய் முதிர்ந்த யுத்தஞ் செய்தார்கள். இப்படிக்கு இருதிறப் படைகளும் போர் புரியும்போது ஒருவர்பேரி லொருவர் தொடுக்கும் விஷக் கணைகளினுற் பலம் பொருந்திய ரதங்களழிந்து, சிரத்திற்றரித்த மகுடங்கள் துணிந்து பூமியிற்றேகமயரவும், பிராணன் வாளி லுயரவும், உடல் அபிமான மறந்து மடிந்தார்கள். இந்தப்படி சேனை களும், வீரர்களும், யுத்தஞ் செய்யும்போது துரியோதனனும், பீம சேனனும் இரதத்தை இடசாரி வலசாரி, வலசாரி இடசாரியாகச் சுழற்றி, எதிரெதிராய் பற்கடித்துத் திவ்வியாஸ்திரப் பிரயோகஞ் செய்து, நெடுநேரம் வரையிலுங் கடும்போர் விளைத்தார்கள். அந்த வேளையில் கந்தியாவட்டை மாலை யணிந்த நராதிபனுடைய கணை களைப் பீமசேனன் அரையாகக் குறைத்து அவனியை மறைத்துப் பிறைமுகக் கணைகளை நிறைத்துக் கைக்கொண்டிருந்த வில் முறிபட வும், வேகங்கொண்டோடுங் குதிரைகள் தறிபடவும், தேர்த்தட் டொழியவும், மேற்றட்டழியவும், சிகர முடையவும், குடைக ளிடி யவுஞ் செய்து அத் துரியோதனனுடைய மார்பு கிழிந்து குழைந்து இழைந்து உதிரம் வழிந்து தளர்ந்து விழும்படி தாக்கி எதிரே நின்று கதைத்தான். அந்தப் பிறைமுகக்கணை மார்பிற் பட்டமாத்திரத்தில் மறவட்டையைப் போல் சுருட்டிக்கொண்டு பூமியில் விழுந்தான் வணங்கா முடிபெற்ற மன்னனுகிய துரியோதனன்.

அப்படி விழுந்தவுடனே சகுனி, சல்லியராஜன் முதலிய மன்ன வருந் துரியோதனனுடைய தம்பிமார்களும் பார்த்து முகம் வியர்த்து இரக்க முற்றுத் தேக நடுங்கத் திடுக்கிட்டுத் துரியோ தனனை யெடுத் தணைத்துச் சிந்தை கலங்கி "நேற்றை யுத்தத்திற் கடோற்கஜ னென்பவன் மூனைக்கணை யுய்த்து மார்பைக் கிழித்து மூடங்கும்படி செய்தான்; இன்றைய யுத்தத்தில் அந்தக் கடோற் கஜன் தந்தையாகிய பீமசேனன் பிறைமுகக் கணையாற் பூமியிற் றள் ளினுன். ஐயோ! நமது அரசனுடைய பிராணனை அப்பனும் பிள்ளை யும் நாள்மாற்றி நாள் பங்கு போட்டுக் கொள்கிறார் போலும் என்று கண்ணீரைப் பெருக்கிச் சோர்ந்தனர். தமையனுக்குக் குபசாரம் செய்யும்படி தகுந்த பேரை அனுப்பிவிட்டுத் தம்பிமார்க ளெல்லோருங்கூடி "எங்கள் தமையனுகிய துரியோதனராஜன் தேகம்

வருந்தி யிருப்பதால் இப்போது யுத்தஞ் செய்வதற்கு வரமாட்டார். ஆகையால் ஓ அரசர்களே நீங்களெல்லோரும் ஒரே உறுதியாய்ப் புறப்பட்டு நிலத்து நிற்பீர்களானால் பீமனை வளைத்து என் தமையன் பட்டபாடு அவன் படும்படியாய்ப் பாடுபடுத்திச் சந்தோஷங்கொண்டு வரலாம்" என்று சொல்லி, அநேகம் வீரர்கள் முதலிய யுத்த வித்தகரை யெல்லாம் அழைத்துக் கொண்டு கடகட வென்று தேரைச் செலுத்தி விண்ணுணர்ணை செய்து கணமாரி பொழிந்தார்கள். அவர்களைப்பேர்ப்பட்டவர்களென்றால், கோபாலனுகிய கோவிந்தன் கோபாலனுஞ் செய்வதற்காகச் சுண்டுவிரலிற் கோவர்த்தன கிரியைக் குடையாகவெடுத்தும், அதனை ஆகவொட்டாமற் றடுக்கப் பொழிந்த காளமேகத்திற் கொப்பான பேர்கள்.

துரியோதனன் சகோதரரில் ஐவர் வதை.

இப்பால் அவர்களெல்லோரும் ஒரே முகமாகக் கூடி யுத்தஞ் செய்யும்போது பீமசேனன் வெகுண்டு, வில்லினிடத்திற் கடும் பாணங்களை விசையாகத் தொடுத்து, வந்தடித்துப் போர் கொடுத்த வீரர்களைப் பார்த்து, "இனிமே லென்ன யோசனை செய்யப் போகிறீர்கள்?" என்று அவரவர்க ளேறிவந்த இரதங்களை முறித்து, அவரவர் பிடித்திருந்த விற்களை முறித்து, உடல்களில் கணைகளை நிறைத்துத் தூளாக்கவே, ஒருவரும் எதிர் நிற்க மாட்டாம லிளைத்தனர். அந்த வேளையில் துரியோதனனுடைய தம்பிமார்களிற் சேனபிந்து, சுதைக்கண்ணன், பிங்கலசன், சலாசந்தன், பீமவாகு என்னும் ஐம்பூதம்போன்ற ஐந்து பேர்கள் வந்தெதிர்த்துப் பீமசேனனை வளைத்து அலை காற்றிலடிக்குஞ் சருகைப் போற் சூழ்ந்தலையச் செய்தார்கள். அப்போது பீமசேனன் ஆக்ரமித்துத் துரியோதனன் பேரிற் றொடுத்து விடுத்த தன்மையைப்போல் வெற்றியையுடைய ஐந்து பிறைமுகக் கணைகளை எடுத்து விடுத்தான். அந்தக் கணைகள் போய் மருமத்திற்றைக்கவே அச்சேனபிந்து, சுதைக்கண்ணன் பிங்கலசன், சலாசந்தன், பீமவாகு என்னும் பலம் பொருந்திய தம்பிமார்களைந்துபேரும் முடி துணிந்தார்கள். பீமனவர்களைக் கூவி, "தம்பிமார்களே! உங்கள் தமையனுகிய துரியோதனன் எங்களைக் காளை விடுத்துக் கசக்கினன். அவன் தெரியாமற் செய்தாலும் நாங்கள் அதைக் குற்றமாயெண்ணிப்பாராமல் அந்தக்

குறைகளை மனதில் வைக்காமல், எங்களருமை பெருமைக்குங் குறைவில்லாமல் உங்களை மேலாகிய இடத்திற் கனுப்பிவைத்தேன். நீங்கள் புத்திசாலிகளாய் வானுலகத்திற் போயிருந்து மார்க்க ஆயாசந் தீர்த்துக்கொண்டு இனிவரப்போகிற உங்கள் தமையன்தம்பிகள் முதலிய பேர்களுக்கு நல்ல வாசஸ்தலமாக இடமேற்படுத்திக் கொண்டிருங்கள்" என்று சொல்லிப் பின்னு மவர்களைப் பார்த்து சொல்லுகிறான்—

"அப்பா எனது சகோதரர்களே! நீங்கள் அறியாதவர்களாகையால் பீமசேனன் கம்மைப் பிரிந்துவிட்டானேயென்று என்பேரிற் கோபம் பண்ணுதீர்கள். அண்ணு அவர்கள் முதலாகிய பேர்களை இன்னம் பத்துப் பதினான்கு நாட்களுக்குள்ளாக அனுப்பி வைக்கிறேன். நானப்படி அருமை தெரியாதவனல்ல. நீங்கள் ஆயாசப்படாமற்போங்கள். ஐயா அவர்களுக்கும் அம்மா அவர்களுக்குஞ் சஞ்சயனுல் தெரிவிக்கிறேன்" என்று சொல்லி, அம்பாரமாகிய நூறுபேர்களில் ஐந்துபேரைக் கதாயுதமென்னும் அளவுகோற்கொண்டு இதுலாபம் என்று அளந்து, நாய் நரி கழுகுகளுக்குக் குடிவாரம் உடலாகவும் நமனுக்கு மேல்வாரம் உயிராகவும் அனுப்பிவைத்து, வளர் பிறைச் சதுர்த்திபில் விக்னேச்வரப் பிரார்த்தனைசெய்து முகூர்த்தங்கொண்டான் வீரகண்டாமணிபூண்ட தீரதண்டதரன். இந்தப் பிரகாரந் துரியோதனனுடைய தம்பிமார்களைப் போக்கிவிட்டு மற்றப் படைகளின்பேரிலே திரும்பி யுத்தஞ் செய்யும்போது, தம்பிகளிறந்தார்களென்னுஞ் சங்கதி தெரிந்துகொண்ட சர்ப்பகேது தளதளவென்று கொதிக்குந்தாறுபோற் கொதித்து, நாலுவிதச்சேனைகளும் ஆறுவிதப்படைகளுஞ் சூழும்படியாக, மற்றத் தம்பிமார்களுந் தானுஞ் சகுனியுந் தாலக்கொடியினராகிய பீஷ்மரும் மன்னர் முதலாகிய நராதிபரும் வந்து சாகரம்போல் வளைந்தார்கள்.

அந்தக் காலத்தில் தருமராஜனுடைய படையிலிருந்து சகல வீரர்களுங் கூடிக்கலந்து, ஒரு பக்கத்தில் பீமன் ஒரு பக்கத்தில் விஜயன் ஒருபக்கத்தில் அபிமன்னு ஒருபக்கத்தில் நகுலன் ஒருபக்கத்தில் சகாதேவன் ஒருபக்கத்தில் இராவான் ஒருபக்கத்தில் கடோற்கஜன் ஒருபக்கத்தில் அஞ்சனவர்மன் ஒருபக்கத்தில் இளம்பஞ்சபாண்டவர்களாகிய இவர்களும் ஒருபுறத்திற் பாஞ்சாலன் ஒருபுறத்தில் திஷ்டத்தூய்மன் ஒருபுறத்தில் உத்தமபானு ஒருபுறத்தில் விராடன் முதலாகிய இவர்களும், ஒரு பாரிசத்திற் கேசகன் பிள்ளை

யாகிய பிரிதீவன், ஒரு பாரிசத்தில் குந்திபோசன் பிள்ளையாகிய மந்தன், ஒருபாரிசத்தில் அவன் சகோதரராகிய சுமந்தன், ஒருபாரிசத்தில் ஜராசந்தன் பிள்ளையாகிய சகாதேவன், ஒருபாரிசத்திற் காசிராஜன் பிள்ளையாகிய மலயத்துவஜன், ஒரு பாரிசத்தில் அவன் அருமைப் பிள்ளையாகிய பிரீதீபன், ஒரு பாரிசத்திற் சிசுபாலன் பிள்ளையாகிய துஷ்டகேது என்னுமிவர்களும் ஒருதானத்தில் கிராதாள், அவுணர், ஆந்திராள், புண்டரீகாள் முதலியபேர்களும், ஒருதானத்திற் போஜாள், பாஞ்சாலாள், சோமுகாள், சிரஞ்சேயாள், மார்ச்சாள், மாகதாள், திரிகாலவாசுதேவாள் திரிபுண்டரவாசுதேவாள் முதலியபேர்களும் ஒரு தானத்திற் சேரர், சோழர் பாண்டியர் முதலாகிய பேர்களும் மொய்த்துக்கொண்டு போர்புரிந்தார்கள். இந்தப் பெருங்கும்புகளினுலும், இவர்கள் விடும் அம்புகளாலும், துரியோதன மகாராஜன் முதலிய பெருஞ்சேனைகளெல்லாம் முடைந்து, புறமுதுகிட்டொழிந்து ஓடி யொளித்தார்கள்.

பகதத்தனெடு கடோற்கஜன் மாயப்போர் விளைத்தல்

இப்படி வாடியோடிய சேனைகளைக்கண்ட பகதத்தனென்பவன், "அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்!" என்று அதட்டிக்கொண்டு வந்தெதிர்த்தான். அவனெப்படிப்பட்டவனென்றால், தேவர்கள் பொருட்டில் அசுராதிபர்களையெல்லாம் வென்று, மண்டலத்தரசர்களுக்கு மகுட சிகாமணி போன்ற சூரியனைப் போற்றுலங்கிப், பஞ்சகதிகொண்ட பஞ்சகல்யாணிப் பசும்புரவி பூட்டிய தேரினையுடையவன். இவன் யாருடைய குமாரனென்றால் ஆதிவராக மூர்த்திக்குப் பிறந்த நரகாசுரனுடைய குமாரன். இவன் பராக்கிரம மெப்படிப்பட்டதென்றால், கொலை புரியுங் கோபக்கண்ணினையுடைய யானைக்கும், அப்படிப்பட்ட யானையைக் கொல்லா நின்ற சிங்கத்திற்கும், மானிட தேகமாகிய மன்னுயிர்களை வருத்தும் எமனுக்கும், எமனுக இருக்கின்ற பராக்கிரம முடையவன். இப்படிப்பட்ட பெருந்திறம் வாய்ந்த பகதத்தனவன், காற்றால் அலைகளெறிந்தாடுங் கருங்கடலைப்போற் கலங்காநின்ற யுத்தகளத்தில், உலகத்திலுள்ள மலைகளெல்லாங் காலும் வாலும் பெற்று வருவதையொத்த பதினாயிரங் காட்டானைகளுடன், சுவர்க்கலோகத்து யானைகளைப்போன்ற அளவற்ற கொம்புகளைக்கொண்டு விளங்கும் ஓர் மதயானையின் மீதேறிக்கொண்டுவந்து வில்வளைத்துத் தீமுகப் பகழி, திருமுகப்

பகழி, திசைமுகப் பகழி என்பனவற்றைத் திருத்தி விடுத்துச், சத்துருக்களின் தலைகளைக் கொத்துக் கொத்தாய்த் தறித்தான். இந்தப் பகதத்தனுடைய தோள்வலிமையையும், வில்வலிமையையும் கணைவலிமையையும், வீரபட்டமும் வெற்றிமாலையும் பெற்ற பதினாயிரம் யானைப் பெருக்கத்தையும், யுத்தம் நடக்குந் திடத்தையும், அவரவர்களின் மனவுறுதியையும் பாண்டவர்களுடைய படைகள் பதர்போற் பறக்கும்படியான பாட்டையும் கடோற்கஜன் பார்த்துப் பரிதாபங் கொண்டு அப்போதே மதங்கொண்ட நூறாயிரம் யானைகளும், மகா காதகரைப்போற் கடுங்கோபமுடைய காலாட்களும், பாகராகிய மேலாட்களுந், திவ்யாஸ்திரங்களும், சிதையாத விற்களும், கதை முதலிய ஆயுதங்களும், தானேயாகி மாயவேடங்கொண்டு அப்போதுதான் மலைகாட்டிலிருந்து வருவதைப்போல் வந்து, உலகமனைத்து மிருளும்படியாய், முன்பு வந்த யானைப் படைகளெல்லாம் வெருளும்படியாய்ப் போர்மூட்டி, வலம்புரி முதலிய சங்கங்கள் முழங்க, வெற்றிமுரசமார்ப்ப, சச்சரியடிக்கத் தாரைபூரியு மூதும்படியாய்ப் போர்முகத்திற் புகுந்த போது, யானையின் கும்புகள் வருங்கரலையி லெழுந்த தும்புகள் தேவர்கள் பார்வை குறையும்படி கண்களைப் புதைக்கத் திரையாழிகள் கீர்வறளும்படி பள்ளத்தைச் சிதைக்கத் தாவியெழும் ஒரு சிங்கமானது மலைபோன்ற யானை மத்தகத்தி லேறிவருந் தன்மையைப்போல் எவ்விடத்திலுந் தானுக விருந்து, பகதத்தனுடன் தகதத்த வென்று யெதிர்த்து மலைந்தான்.

இவ்வண்ணங் கடோற்கஜக் காளையானவன் காளமேகம்போலெதிர்த்து, ஒவ்வொரு சரங்களை மும்மூன்றுதரம் மழைபோற் பொழிந்து, முஷ்டிகிலை காட்டி, ஈட்டிக்கீடாய் எதிரெதிர் நின்று பெருமூச்சுவிட்டுக் கடும்போர் செய்தான். அந்தப் பகதத்தன் விடுத்த பதினாயிரம் யானைகளும் பொய்யானைகளைப்போல் நின்று போர் புரிந்து பொடிந்து ஓடிந்து மடிந்து குறைந்தன. ஆனால் மெய்யானைகள் குறைவானேன் பொய்யானைகள் நிறைவானே னென்றால், (பொய்-பூரணசந்திரன்! மெய்-விளக்கொளிமழுக்கம்.) என்னும் பழமொழியைப்போல் குறைந்தன. இவையன்றியும் நின்றார் நின்றபடி நேருக்கு நேராக ஓடிக்கொன்றார்கள்; பதினாயிரம் யானைக்கும்பலையும் வென்றார்கள். இந்தப்படி நடத்திய யுத்தத்தில் வெற்றிபெற்ற மன்னவர்களி

லனேகர் மடிந்தார்கள், அவரவர்களுடைய யானைக்கும்புகளெல்லா மழிந்து குவிந்தன. இந்தப் பிகாரம் பகதத்தனுடைய படை வீரர்களையும் யானைக்கும்புகள் யாவற்றையுங் கொன்று வென்ற பீமசேனனுடைய குமாரனுகிய கடோற்கஜன் செய்த மாயையா லாகிய வீரர்களையும் அவர்களால் மாய்ந்த யானைகளையும், கண்டு கண்கலங்கி, கல்லது இன்றைய யுத்தத்தில் நமது யானைகளெல்லாம் நாசமாயிற்றல்லவா வென்று கடகட வென்று பற்கடித்துப் போனது போகப் பிழைத்திருக்கும் பிள்ளைகளும் போர் மன்னரும் இத்தருணம் பின்னிட்டுப்போங்களென்று இறைந்து சொல்லித் தானும் விரைந்து சென்றான் மானம், ஊனம், ஈனம் என்பவை எண்ணிப் பாராத பகதத்தன். அப்போது அந்தச் சேனைகளும், அச்சேனைகளிலுள்ள வீரர்களுந் திக்கா லொருவராய்ச் சிதறித் திரும்பி விட்டார்கள். அப்படி திரும்பிப் போகும் படைமன்னரைச் சூரியன்பார்த்துச் சரிதானே மெய்யைக்கொண் டால் வெல்லலாம் பொய்யைக்கண்டாற் செல்லலா மென்னும் பொருள்போற் கடோற்கஜனுடைய மாயைக்கு உத்தரிக்கமாட்டா மல் எல்லாரும் ஓடிப்போய் விட்டார்களே. நாமாத்திர மிவ்விடத்தி லிருக்கப் போமோவென்று ஓடினவனைப்போல் தானும் புறமுது கிட்டுக் காந்தியாகிய சிவப்பு வஸ்திரத்தால் தேகத்தை மூடிக் கொண்டோடி மலைச்சார்பிற் போய் மறைந்தான்.

இப்பால் அழகிய மலர்மாலையணிந்த பாண்டவர்கள் நமக்குத வியாகவந்த இந்த யானைக்கும்புக ளேதென்று சந்தேகங்கொண்டு நாடியிருக்குஞ் சமயத்தில் கடோற்கஜனுனவன் இந்த மாயைகளை யெல்லாம் மறைத்து வந்து, தந்தைமார்களின் காலில்விழுந்து, பகதத்தன் பதினையாயிரம் யானைகளைக் கொண்டுவந்ததும், அதிற் சொந்தப்படைகளழிந்து வருந்தியதும், தான் பார்த்த மாத்திரத்தில் மாயவேடங்கொண்டுவந்து ஜயித்ததுஞ் சொல்லித் தாழ்ந்துநிற்க அம்மைந்தனை யாவருமணைத்துப் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்தி, ஜயம்பெற்றீரென்று செங்கண்மால் முதலிய பாண்டவர்களும சேனாதிபதி முதலிய சேனைகளும் பாசறைபோய்ச் சேர்ந்தார்கள். இப்பால் யானைக்கும்புகள் வம்பாய்மடிந்த தன்மையைக்கண்டும் தம்பிமாரிறந்த துன்பத்தைக்கொண்டும் வருந்திய துரியோதனனை யும் மற்றச் சேனைகளையும் சேனாதிபதியாகிய பீஷ்மாசாரியர் அழைத்துக்கொண்டு வாத்தியமுதல் விருதுவட்டக் குடைகளு

மில்லாமற் பாசறைக்குப்போனர். அந்தப்பாசறைக்குப்போன வுடனே தம்பிமார்பட்ட களர்ச்சியை நினைத்து அம்புவியாளும் அரசனுமழுதான். பம்பியமேகம் பரவிய வாறுபோல் தம்பியர் மாமன் சகலருஞ் சூழ்ந்தனர். கதிரவன் புதல்வன் கண்ணீருகுத்து எதிர்வரக்கண்ட ஏந்தல் அண்ணலெனைக் கட்டியணைத்துக் கண்ணீர் சொரிந்து—

"நெட்டுக் குலைந்தேன்! நெஞ்சமழிந்தேன்!
இட்டமா யுங்களை யென்மனங் கொண்டேன்
கட்டமாய்த் தம்பியர் கலிந்துயிர் மாண்டனர்!
கலையாக் கட்டைக் கலகலப் பாக்கினன்
மலையாம் புயகேர் மாருதி மைந்தன் (இனி)
எவ்விடம் போவேன்! எவரை நான் நோவேன்!
கனிவுறு மன்பாங் கர்ணனே யென்று
பூமியிற் சரய்ந்து புரண்டிடும் வேந்தை
பூமனேர் கங்கா புத்திரன் தேற்றச்
செம்பின் குழம்பெனச் சேர்ந்தகண் தீயுக
அம்புய நாதன் அருள்மகன் கர்ணன்
அரசனை நோக்கி அண்ணலே கேளும்
எதிர்த்தவர் யாவரும் இறக்கச் செயிப்பேன்!
என்னை விலக்கித் தம் மிஷ்டப்படியே
மன்னனே யுன்னை வஞ்சனைசெய்யும்
அன்ன பாண்டவர்பால் அன்புள்ள பீஷ்மன்
தன்னையே சேனைத் தலைவ னுக்கினீர்.
அவரவர் திறத்தை யறியுமென் னரசே
தம்பிய ரைவரும் தானையு மழிந்தார்
எம்பெரு மானிஃ திருவினைப் பகுதி
யாரையும் விடாது அரசனே யாயினும்
தாரசை மார்பா சஞ்சல மென்னே''
எனக் கொடையாளி இயம்பக்கேட்டுச்
சித்திரப் பாவைபோற் சித்தங் கலங்கிச்
சற்று நேரத்தில் தைரிய மூணுய
வேந்தவை நிறைந்த வேந்தரைக் குருவைப்
பார்த்துளங் கொதித்துப் பார்த்திபன் பகர்வான்:—
"இஃதென்ன வீரம், இஃதென்ன தீரம்

இன்பமேன், படையேன், எழிலேன், முடியேன்
பாண்டவர்முன்போம் படையினரிலையே
மதியுளீர் வெகுவாய் மன்னர் மடிந்தார்
கதிர்பெறுஞ் சித்ரவிற் கனிஷ்டர் முடிந்தார்
அந்தோ நீங்கள் அரசரிற் பிறந்து,
சந்திர குலத்தோன் றனக்குறு துணையாய்
வந்தும் நீர் சொந்த மனிதரோடலந்து,
பிந்தி வருந்திப் போயினீர் குறையே
இறந்தது வழுவல் எதிரது தழுவல்
என்னும் விதியா லினிமே லாகிலும்
மாயன் தேர்விட வருமர்ச் சுனனை
மாயும் படிக்கு மனங்கொண் டுறுதியாய்
காளை நரனை நவித்தவர் தமக்கு
ஆளப் போமென அவனியை யளித்தேன்
என்பொரு ளவர்பொருள் என் சுகம் அவர்சுக
மென்று தரியோதனன் இயம்பக் கேட்டுப்
பீஷ்ம ரொருசொல் விளம்பினர் தெளிய
'ஐயனே அரசே அர்ச்சுனனுக் கெதிரில்
கைவில் லுடன்பொரக் கருதுன ருளரோ
கண்ணிலுங் காணேன் கதையினு மில்லை,
அண்ணலே நாங்கள் ஆதியிற் சொன்னோம்
இன்னமுஞ் சொல்வோம் இனிமே லாகிலும்
மன்ன ரைவர்பால் மனதொத்து வாழ்வாய்'
என்று காங்கேயன் இயம்பக் கேட்ட
கர்ணன் வெகுண்டு, கழறின னோர்சொல்
'விருத்தனே நின்பால் வீரமிலாவிடில்
ஒருத்தரை நிந்தித் துரையா திருப்பீர்
வீணுய்ப் பேசில் விளையுமே பாவம்
ஆணுய்ப் பிறந்தும் அவமாயி னீரே
நீர் கொண்ட சேனைத் தலைமை யான் கொண்டால்
காணுறு பாண்டவர் கால்சாய்ந் திருப்பார்
அதிபதி தம்பியர் ஐவரு மடியார்
சதிசதி யாகிச் சர்ப்பனை செய்யும்
விதிமுறை தப்பிய வேசியர் போலும்

பானைக்குங் காவல் பூனைக்குத் தோழன்
என்னும் பழமொழிபோ லிருக்கின் றீரே.

ஐயோ! பாரமார்த்திகராகிய நீர் நடத்துங் காரியம் பகவானுக்குஞ் சரியா யிருந்த தல்லவா? ஏதோ அரசனுடைய கெட்ட காலம் என்னை நீக்கிவிட்டது. ஆகட்டு மிப்பவு மென்ன? நாளைக்கே வரும் நன்மை. அர்ச்சுனனைக்கொன்று அரசனுக்குப் பட்டம் அடியேன் அளிக்கிறேன். ஆகாயவீதியிலிருக்குந் தேவர்கள் கண்டு களிக்கும்படியாய் வெற்றியும் பெறுகிறேன். நீரே அதனைப் பார்க்கப்போகிறீர். ஓ பீஷ்மரே'' என்று சொல்ல, அங்ஙனமிருந்த அரசர்கள் முதலிய யாவருந் தகுந் தகுந் தகுமென்று சாற்றினர்கள்.

அப்போது காங்கேயன் கலீரென நகைத்து, "கர்ணனே, அர்ச்சுனன் விற்பிடித்து வெளிப்பட்ட இதுவரையிலும் எத்தனைதரம் போர் கொடுத்திருக்கிறான்? நீ எத்தனைதர மவனிடத்தில் அகப்பட் டிருக்கின்றாய்? எப்பொழு தாகிலும் அவனைச் செயித்தா யென்று ஒரு வார்த்தையுண்டா? எங்கே ஒரு விரலை மடக்கு பார்ப் போம்! ஏன் வீணுகப்பேசி சோஷைபோகிறாய்? அப்பா! நாளை நடக்கப்போகிற யுத்தத்திற்கு நான் போகாமல் நின்று விடுகிறேன், எனக்குப் பதிலாக நீ போயிருந்து ஐந்தாம் போரில் ஏதாகிலுங் கொஞ்சம் நன்மை காட்டிவாயாகில், நானே உனக்கு வீரத்திரமுஞ் சேனாதிபதிப் பட்டமுங் கட்டிவைக்கிறேன். ஓ விற்றிறமுஞ் சொற்றிறமுடைய வீரனே! நான்சொல்லிய இந்தவார்த்தை உனக்குச் சம்மதமாயிருக்குமாகில் இப்போதே புறப்படு'' என்றுசொல்ல, அந்தப் பேச்சைக் கேட்டுப் பெருமூச்சிவிட்ட மிகுகொடையாளன் வேறுவசனஞ் சொல்லாதிருந்தான். அப்போது பக்கத்திலிருந்த அசுவத்தாமன் அக்கர்ணனைப்பார்த்து, இருந்தவிடத்தி லிருந்து கொண்டு வெற்றியைப் பெற்ற உத்தமர்களைப்போல் வெகுவாய் அளப்பாய்! வாக்கினற் சொல்லிய வண்ணம் வெற்றியைப் பெறுவ தற்குத் தெரியாமல் மயங்குவாய்! இவ்வளவுலகுணை முன்னிடத்தி லிருந்தும், நேற்று விராடபுரத்தில் விஜயனலடிபட்டுப் பிணமலைக் குள் ஒளிந்தது உன்னுள்ளத்திலிருந்தும் பூரணமாகக்கற்றுணர்ந்த புண்ணியராகிய பீஷ்மரைப் பற்பல விதமாய்ப் பேசுகின்றாய்! இவையெல்லாம் பொல்லாங்காகிய பாபமல்லவோ? நிழலோடு நிழல் சாய மரம் பட்டுப் போகுமோ? நீ துரியோதனமகாராஜனுக்கு எத்

தனை விதமாய்ப் போதித்தாலும், அத்துரியோதனமகாராஜன் உன் சார்பாய்ச் சாய்ந்து எத்தனை விதமாய்க் காய்ந்தாலும், பீஷ்மர் முதலிய பெரியோர்களுக்கொரு தாழ்வு வருமோ? கர்ணனே! என் றைக்கிருந்தாலும் நீவேறு நான்வேறு! அரசர்கள் ஒருகுளக்கமலம் போல் உற்றிருக்கு முரியோர்கள். அந்தக் குடும்பத்தைக் கலைத்துக் கெடுக்கும்படி நினைத்துச் சமயத்திலிப்படிக் கெல்லாம்பேசிக் குலமானம் குணமானம் பாராமற் சொல்லுகின்றனை. உன்னை யின் னுனென்று தெரிந்திருக்கும் இந்தச்சபையில் நீபேசும்போது உன் னுடம்பானது சிறிதுங் கூசாமலும் வெட்கப்படாமலு மிருக்கின் றது. இது உனக்கு முறையல்ல" என்று சொல்வினன்.

உடனே துரோணாசாரியர் சொல்லுகின்றார்—"இந்திரனுங் சூரியந்திரனும் வந்திக்குஞ் சந்திரகுலத்துதித்து, நற்குணம் நன்னடக்கை முதலியவைகளைப் படைத்த பாண்டு புத்திரர்களைத் துரியோதனனுக்குப் பகைவனென்று அநேகம் விதத்திற் சொல்லி யிருக்கின்றாய். கர்ணனே! அவர்களொருகாலும் விரோதிகளல்லர்! நல்ல குலத்திற்பிறந்த கெடிஸ்தலாதிபதியாகிய வணங்காமுடியோ னுடைய நன்மனத்தையும் நற்செய்கையையும் நற்பிறப்பையும் என்னுளு மாறுபடுத்தி, அண்ணன் தம்பிகள் ஒருவரோடொருவர் கலந்து பொருந்தி வாழவொட்டாமற் சிறுபிள்ளைகளாயிருந்த அந் நாள்முதல் இன்னுள்வரையிலுங் கலகஞ்செய்து வைத்திருக்குஞ் சகுனி மாமனும் நீயும் இந்த அரசைக்கெடுக்க ஏற்பட்ட கொடும் பகையாளிகள்! முழுவிரோதிகள்! உங்களைவிட இவர்களுக்கு விரோ திகளென்பவர்களில்லை. நீங்கள் இப்போதிறந்தாலும் இன்றுமுதல் என்றைக்குங் கலகமென்பது இந்த அரசர்களுக்குள்ளேயன்றி இந்த உலகத்தாருக்கும் விளையமாட்டாது. (மூக்குள்ள வரையிலுங் சளி யறாது. முகமுள்ளவரையிலுங் களிப்பறாது) என்பதுபோல் நீங்கள் இறக்கிறவரையிலுங் கலகமறாது. இவர்கள் சுகப்படப்போகிறது மில்லை!" என்றுசொல்லவே, அங்கிருந்த கர்ணனவன் ஆவேசம் வந்தவனைப்போல் அங்கமெல்லா நடுங்கச் சுறுக்கென்றெழுந்து, கடுக் கென்றுவாளைக் கையிலுருவிக்கொண்டு, கண்பொறி பறக்கக் கடை வாய் நுரைக்கப் பல்லைக் கடித்துப் பாக்கவிழித்து, அவனிவனென்று அவமரியாதையாய்ப்பேசி, என்னையிகழ்ந்தபேர்களின் வாக்கைக் கிழித்து நாக்கையறுக்கிறேன்" என்று ஓரடிபெயர்த்து வைத்தான். அந்த வேளையிற் சமீபத்திலிருந்த அசுவத்தாமன் காளைவாகன

னளித்த வாளாயுதங்கொண்டு, மகாருத்ர மூர்த்தியைப்போல் இரண்டடி பெயர்த்துக் கர்ணனுக் கெதிர்சென்று நின்று "குடும்பங் குலைத்துக் கலகஞ்செய்யுங் கொடிய பாவிகளின் முடியைத் தறிப்ப தன்றி இப்போது அவனிவனென்றுங் கூறியெழுந்த நாக்கையும் இங்கிமிஷத்தில் அறுக்கிறேன்" என்று புகன்று எதிர்த்துக்கொண் டான்.

அம்மாத்திரத்தில் அவ்விருவரையுந் துரியோதனராஜன் கண்டு பெருவரைபோற் போலெழுந்து, இருவருக்கு நடுவிற் போய் நின்று, தான் கொண்டிருந்த தம்பியர்களின் சஞ்சல முதலிய துக் கமும் விடுத்து, இருவரெடுத்துப் பிடித்த வாளையுந்தடுத்து, அவ் விருவரையும் இரக்கமாய்ப் பார்த்துப் பெரியோரையு நோக்கி, "இது நல்ல காரியம்! இது நல்ல காரியம்! இறைவராயுள்ளவர்களுக்கு இது வோதைரியம்? இதுவோ வீரியம்! ஆ! ஆ! நல்வர் நகைக்கும்படி யாய் கன்ருய்ச் செய்தீர். ஓ எனக்கு கண்மையை யுண்டாக்க வந்த வர்களே! நான் என் தம்பிமார்களையும் படைத்துணை வந்த தாஷ்டீ கர்களையும் இழந்து, மனந் தடுமாறிக் கவலைகொண்டு, என் துக்கம் உங்களாற்றீருமென்றெண்ணி என்மனக் குறைகளை யெல்லாஞ் சொல்லி, இறந்தவர்கள் போக இருப்பவர்க ளெல்லோருஞ் சேர்ந்து எப்படியாகிலும் நாளை யுத்தத்தில் அர்ச்சுனனைக் கொன்று முடித்து நமக்கு வெற்றிவரும்படி உபாயந் தேடுங்களென்று கேட்டுக் கொண்டதற்கு அப்படி அவ்வளவு தூரமேன்? இங்ஙனே கொல்லும் படியாகிய உபாய விதத்தை கன்ருய்ப் பாரென்று எனக்கெதிரிலே தானே விளைத்தீர்கள். இது நல்ல உபாயந்தான். இனிமேல் நான் வேறுவித சூழ்ச்சி யோசிக்க வேண்டியதில்லை. உங்களைத் துணை யாகப் படைத்த எனக்கே ஜெயம் வருமல்லாமல், எதிரிகள் ஜெய மடைவார்களென் றியம்பலாமோ? ஓ அங்கதேசாதிபதி! ஓ அசுவத் தாமா! வெகுதூர்த்தி" என்று சொல்லி நகைத்து மனங்கூசி, தன் னைத்தானே வெறுத்துக்கொண்டான்.

அந்த வேளையில் பீஷ்மாசாரிய ரெழுந்து, "அப்பா துரி யோதனு! நான் சொல்லுவதை இப்போதாகிலும் யோசிக்கக் கடவை. அஃதென்னவெனில், நீ இப்போது கொண்டிருக்கிற எண் ணப்படி அந்த விஜய காண்டீபனை மும்மூர்த்திகள் வந்தெதிர்த் தாலும் வெல்லமாட்டார்கள். இந்த மொழியை உன்னுயிருள்ள வரையிலும் ஏமாறுமற் கெட்டியாய் மனத்துட் பதித்துவிடு. அப்பால்

என்னுலான வரையிலும் மன வஞ்சக மில்லாமற் போர் விளக்கி றேன். ஒருவேளை அர்ச்சுனன் மாளும்படியாகிய ஊழ்வினையு மொத்திருந்து முடிவானுலாகட்டும். அப்பா குழந்தாய்! மனத்தைப் பற்பலவிதத்திற் சிதறவிட்டு வருந்தாதே. மற்றவர் கலக்கும் வார்த் தைக்குட் பொருந்தாதே!" என்று சொல்லித் தம்முடைய பாடி வீட் டுக்குப் போயினர்.

இவ்வாறு சொல்லி அவர் போன பிற்பாடு துரியோதன னுவன் அவ்விடத்தில் தெருங்கி யிருந்த படைமன்னர் முதலிய யாவ ருக்கும் விடை கொடுத் தனுப்பிவிட்டுப் போஜனுதி முதலிய வைக ளில்லாமல் மிகுந்த விசனமென்னும் துணைவனுடன் தனித் துக் கண் விழித்திருந்தான். இப்பால் நான்காம் போரில் கடந்த தன் மைகளையும், திருதராஷ்டிர பூபதியுங் காந்தாரியம்மனும் சஞ்சயன் வந்து சொல்லக் கேட்டு, உடனே இடி விழுந்த புற்றர வேங்குந் தன்மைபோ லேங்கி, இருகரங்களாலு முகத்தி லரைத்துகொண்டு இரைந்தேங்கிப் புலம்பி, "ஐயோ மக்களா! சர்வாபரணமும் நிறைந்த திடகாத்திர தீர சூர வீர பராக்கிரமமுள்ள உங்கள் மார்பிலே ஜெய மாலை யணிந்து, சிந்தை மகிழ்ந்து வந்து பணிந்து சிங்காசனத் திருந்து, செங்கோல் புரிந்து, சிதைவில்லாமல் நூறுபேருஞ் சீர் பெறுவீரென்று சிந்தை மகிழ்ந்திருந்தோமே! அப்பா செல்வர்களே! இப் பூமியாசையைக் கெடுத்து, எங்களைத் தெருவில் விடுத்து, தேவ பூமியை ஆளவேண்டு மென்னும் ஆசை தொடுத்துச் சென்றீர் களோ? என் செல்வர்களே" என்று இருகண்களிலும் ஜலம் பெருகும் படியாயழுது, அருகிலிருந்த தூணின் மேற்சாய்ந்து ஓய்ந்து சோர்ந் தார்கள். அவ்விடத்திலிருக்கும் உயிச்சன் முதலியபேர்கள் உபசரித் துத்தேற்ற, அதனுல் திரிதராஷ்டிரன் ஒருவாறு தேறியிருக்க, காந் தாரி யானவள் சிறிதும் தேறாது மறுபடி எழுந்து வயிற்றிலறைந்து கொண்டு, "ஓ மைந்தர்களே! குந்திபெற்ற பிள்ளைகள் கூட்டங் குலை யாதிருக்க, கடிபாவிபெற்ற பிள்ளைகள் பாழில் மறையும்படி கேரிட் டதே! ஓ தெய்வமே! அப்பா குழந்தைகளே (பந்திக்கு முந்தவேண் டும் படைக்குப் பிந்த வேண்டும்.) என்னும் பழமொழி மறந்துமான் குட்டிபோற் துள்ளி முன்னேபோய் விழுந்து ஏன் மடிந்தீர்களடா? ஓ என் மைந்தர்களே! இந்தக் காட்சியைக் காணவோ நான் பாவி இறக்கா திருந்தேன்? இந்தக் கேள்வியைக் கேட்கவோ நானுங்களை வாழ்த்தி யனுப்பி மகிழ்ந்திருந்தேன். ஐயையோ! இப்படியுமிருந்

தகா என் தலைவிதி" என்று மெய்குலைந்து, மண்மேல் வீழ்ந்தலைந்து என்ன செய்வேன் என்னசெய்வேனென்று இறைவனைக் கட்டிக் கொண்டழுது, இருகாலையு மீட்டிக்கொண்டு, இருபுறத்திலும் ஏரிக் கரை புரள்வதுபோற் கண்ணீர் பெருகும்படியா யிறைந்து இறந் தவர்கள் தேவிமார்களாகிய மருமக்களையும் மற்றச் சுற்றத்தினரை யுஞ் சேர்த்துக்கொண்டு ஒப்பனையிட்டழுவதற்கு முகூர்த்த நாள் வைத்துக் கொண்டாள்.

அவள் எப்படிப்பட்டவளென்றால் குருமரபுக்குக் கோடாரிக் காம்பனை யொத்த துரியோதனன் கெடுமதி கண்ணுக்குத் தோன் றுத காரணத்தினால் மதி குலத்தில் வந்து புகுந்த துர்மதி மிகுந்த மூதல் மருமகளை, அதிபதியாகிய ஐவர்தேவியை, பாஞ்சாலன் யாகத்தில் உற்பவமாகிய பத்தினியை, மேலாகிய கற்புக்கு வித்தா கியப் பெண்கள் பெருமாளை, தமயன் மனைவியாகிய தன் தாயை, மின்னற் கொடிபோன்ற திரௌபதியை, அநியாயமாய் அக்ரமமாய், அவமரியாதையாய் இழுத்துக் கொண்டு வந்து, ஏற்றக்கூடாத ராஜ சபையில் ஏற்றிவையடா தம்பியென்று உத்தரவு செய்தனுப்பவும், அவ்வுத்தரவைக் கேட்ட துஷ்ட சிரோமணியாகிய துச்சாதன னவன் கொண்டானடித்துக் கொண்டு சென்று அரண்மனையிற் புகுந்து சிகையைப்பற்றி யிழுக்கவும், அக்காலத்தில் 'மாமி! மாமி! என்று வந்தடைந்த மருமகளைத் தகுந் தகாதென்றெண்ணுமலும், பாவ புண்ணிய மெண்ணிப் பாராமலும, பச்சாத்தாப மில்லாமலும், நாளை விளையப்போகிற காலகதியை நாடித் தடுக்காமலும், தன்னைத் தஞ்சமென்று பிடித்த கையை யுதறிவிட்டு, அடைக்கலமாக வந்த அம மருமகளைத் திடுக்கிடப் பார்த்து "என்னடி பட்டாங் கடிக்கிறாய்! மைத்துனர் வாழுஞ் சபைக்குப் போய்வரத் தடை யென்னடி?" என்று பேசி "என்னுல் தடையில்லை இழுத்துக்கொண்டு போடா" என்று அத் துச்சாதனென்னுங் திருட்டுப் பட்டிக்கு வேலை யிட்ட மகா கொடியவள்!

கேளும் ஜனமேஜய மகாராஜனே! அந்தக் காலத்திற் பத்தி னியாகிய பாஞ்சாலியை ஒரு நாளழச் செய்த துக்கமானது, இந்தக் காந்தாரியை உயிருள்ள வரைக்கும் அழும்படியாய் வைத்து விட் டதைப் பாரும்! இந்தப் பிரகாரம் விசனம் அடைந்த இராஜனையும் ராஜபத்தினியைத் தேற்றிச் செலவு பெற்றுக் கொண்டு மறுபடியும் போர்க் களத்திற்கு வந்து விட்டான் சஞ்சயனவன். கேளும் ஜனமேஜய மகாராஜனே என்று வைசம்பாயனர் சொலல, மகிழ்ந்து கேட்ட மகாராஜனவன் எழுந்து விழுந்து வணங்கி ஐந்தாளைய யுத்தத்தையும் அருள் செய்ய வேண்டுமென்று அடி வணங்கிக் கேட்க வைசம்பாயனர் சொல்லலுற்றார்.

நான்காம்போர்ச் சருக்கம் - முற்றிற்று.

ஐந்தாம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

கருமா முகிற்கோல நெஞ்சத் திருத்துங் கருத்தெய்துமே
லருமா தவன்முனு மதன்முத்தி தருகைக்கு மவனேகுரு
தருமாலை மணகாறு தாளானை வண்டேறு தண்ணந்துழாய்
மருமாலை புனைகின்ற திருமாலை யல்லாது வல்லார்கள்யார்.

சீர்பெற்றேறுங்கிய வேலைசூழும் பாரைத்தாங்கிய மகுடா பிஷேக மன்னனே! கேளும்: இப்பால் கெடிஞ்தலாதிபதி யென்னுந் துரியோதனனுடைய தம்பிமார்களின் பத்தினிகளும் மற்றவர்களும் அன்றிராத்திரி யெல்லாம் அழுதுகொண்டிருந்த பெருங் கூச்சலைக்கேட்டு இந்தரோதனத்திலிருந்து நானெப்படி பிழைப்பேன் என்று ஓடிப்போய் விட்டதைப்போல் இருளானது விடியுமுன் ஓடியொளிக்க, அந்தக்காலத்தில் தேவர்கள் சிரத்தி லணிந்திருக்குஞ் சூடாமணியைப்போற் சூரியபகவானுதயமாயினர். உடனே யாவருமெழுந்து நித்யவிதிகளை முடித்து யுத்தகோலங் கொண்டு, மேன்மையாகிய சங்கமெங்குங் கறங்கவும், தாரை பூரி யாதிகளெங்குந் தொனிக்கவு முரசுமுதலிய வாத்தியங்கள் மூதண்ட மதிரும்படியாய் ஆர்க்கவும், முழவு முதலிய வாத்தியங்கள் மூவுல கும் நடுங்கும்படியாய் விம்மி முழங்கவும், கரைகளை யுடைக்கும் அலைகளையடைக்கும் நுரைகளில் வெடிக்குந் துளிகளிற்றெரிக்குஞ் சிறிய திவலைக் கூட்டம்போல் நால்வகைச் சேனைகளோடு ராஜாராஜர் களும் வீரபோஜர்களுஞ் சேர்ந்துவரத் தருமபூபதியுஞ் சேனாபதியும் புறப்பட்டு ரணகளத்திற்கு வந்தார்கள். இப்பால் அநேகங்கோடி விருதுகளோடு கருடடால், அநுமடால், அரவடால், சிங்கடால் முதலிய பலவகைப்பட்ட டால்களும், தோரணம் கொடி குடை ஆலவட்ட முதலிய சின்னங்களும் அநேகங்கோடி சங்க காதங் களும், அநேகங்கோடி சிங்காதங்களும், அண்டபிண்டமனைத்தும் அதிரும்படியாக முழக்கிக்கொண்டு, இப்பாரடப்போராடும் நால் வகைச் சேனைகளுடனே நேற்றுப் புறமுதுகிட்டோடிய பூபாலரனை வரும் பொங்கிப்பெருகி எங்குஞ் சேனைகளாகவந்து நிறைத்தார்கள். இந்த இரண்டுவகைச் சேனையுந் திரண்டு புரண்டெழுங் கடல்போல் நிற்கின்றபெருக்கம் எப்படியிருந்ததென்றால் தசக்ரீவனுகிய ராவண

னுடைய கொடுஞ்சேனையும் ஸ்ரீராமமூர்த்திக்குப் படைத்துணை வந்த வானரமாகிய கடுஞ்சேனையும் எதிரெதிர் நின்றதைப்போற் பெருகினின்று, அண்டர்கள் துன்றிய விண்டல மண்டல மெண் டிசை முதலிய கண்ட வகண்டமுங் கலங்கும்படியாய் அதிர்ச்சி பண்ணி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

அத்தவேளையில் அர்ச்சுனன்தேரில் அநுமக்கொடியாடியது எப்படியிருந்ததென்றால் இராவண கும்பகர்ணதிகளாகிய அரக்கரை ஜெயித்த ஸ்ரீராமமூர்த்திக்கு அடிமைத்துணையாகவிருந்து வெற்றி பெற்ற எழுபதுவெள்ளம் வானரப்படைகளும் எங்களவர்களே! நான் அந்தக் கோதண்ட மூர்த்தியின் குரைகழற்றாதனுகிய அனுமக் தனே! அந்த இலங்கைப்பெருக்காகிய அரக்கரைப்போல் உங்களையும் நாசப்படுத்தித் தொலைப்பதற்கு இங்குவந்தேன்! என்னை நீங்கள் நன்றாயறிந்து கொள்ளுங்கள்'—என்று துரியோதனன் முதலாகிய பகைவருக்குச்சொல்லித் தெரிவித்து நின்றாடியதைப்போல் அக் கினிதேவன் கொடுத்த அழியாரதத்தின்மீதேறி நின்று அந்தரமுத லிய மந்தரகந்தங்கத் தொந் தொந் தொந் தொந் தொந் தொந் தொந் தொந்தமென்று, படபடாகாரத்துவனியுடன் அசைந்தாடிக்கொண் டிருந்தது. இவ்விதமாக ஆடிக்காட்டிய அநுமக்கொடி காட்டிய இரதத்திற் சுவேதவாம் புரவிபூட்டி அதை அலங்காரஞ்செய்து, சர்வ ஜீவ தயாபரனாதனுகிய ஸ்ரீகிருஷ்ணதேவன் கலங்காமனத்தோனுகிய காண்டீபனுக் கெதிரிற்கொண்டுவந்து நிறுத்த அந்த இரதத்தில் ஐவரை இரக்ஷிப்பதற்குக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கும் ஐயனுடனே காண்டீபக்கையனும் கலந்தேறினன். இருவரும் வார்த்தையாடிக்கொண்டு யுத்தபூமிக்கு வந்தார்கள். அவ்விடத்தில் திரிபுரதகனஞ் செய்வதற்காகத் திசைமுகன்முதலிய தேவர்கள மைத்த தேரின்மேலில் வீற்றிருந்த சர்வஸம்ஹார கால சிவபெரு மானைப்போற் பேரணியிற் சிறந்த தேரணியிலுயர்ந்த ஒரு பெருஞ் சயந்தனத்திற் பொருந்தியிருந்த பீஷ்மாச்சாரியருக்கெதிரில் தேரைக்கொண்டுபோய் நிறுத்தி, தேவதத்தத்தை முழக்குவித்துத் தாமும் வலம்புரிச்சங்கைமுழக்கி, உரம்பெற்ற விஜயனை யுத்தஞ்செய் யும்படி விடுத்து, ஓயாமற்சுழலுந் திகிரியைப்போல் மகாவிரைவோ டுந் தேரை நடத்தினன் ஸ்ரீகிருஷ்ணதேவனுகிய தேர்ப்பாகன்.

இந்தப்பிரகாரம் இரதத்தை இடசாரி வலசாரி வலசாரி இட சாரி முன்னேட்டம் பின்னேட்டம் பின்னேட்டம் முன்னேட்டம்

முதலிய ரதவேகக் கதிகளெல்லாங் காட்டி விஜயன் கங்கைமைந் தனை யெதிர்ந்ததிர்த்துக் காண்டீபநாட்டிக் காலகாலாத்தகக் கணை களைக் கடுகிப் பூட்டினன். கலிங்க தேசாதிபரெல்லாம் புலிங்க சாலங் களைக் கண்களா விறைத்துக் கணைகளைத்தெறித்து அர்ச்சுனனை மறித்து யுத்தஞ்செய்தார்கள். அந்த விஜயனுந் தன்னெடு வெகு வாகிய போர்புரியுங் கலிங்கதேசரை வெறுத்து நோக்கி அவரவர் விட்ட வெங்கணைகளையெல்லாங் குங்குமமாக்கி, அவரவர்மீது சங் கரகெடுவாளிகளைத் தாக்கினன். அந்தக் கணைகள்போய்ப் பிளந்து கரகரவென்றலைந்த புண் வாய்கள்தோறுங் களகளவென்று மாமிசத் துடன் உதிரவெள்ளம் கலந்தோடிவர அந்தக் கலிங்கதேசாதிபரெல் லாந் தளர்ந்தாடிக் கலங்கலாகிவருகின்ற இரத்தங்களிற் கண்கலங்கி மூழ்கினார்கள். இந்தப்படி எதிர்த்துப் போர்புரிந்த கலிங்கதேசரெல் லாரும் அலுத்து ஓளித்து இளைத்தோடிவரும்போது, காளகண்ட ஈசனைப்போற் கண் சிவந்திருந்த காங்கேயன் கண்டு கடுங்கோபங் கொண்டு பூப்பாணம் தீப்பாணம் பொறிப்பாண முதலிய பாணங்களை மேன்மேலாகத் தொடுக்க அதைக்கண்ட அர்ச்சுனன் பீஷ்மாச்சாரி யருடைய பிராணனுக்குத்தீங்காக ஐந்து பாணங்களையெடுத்து அனலேறிய மனக்கொதிப்புடன் மந்திரஞ்சொல்லி அதட்டி விடுத் தான். அந்த ஐந்துபாணங்களும் பஞ்சாக்கினிபோற்சென்று பீஷ்மர் கைக்கொண்டிருந்த வில்லையும் அதிற்பூட்டிய நாணியையும் அவர் தொடுத்துக்கொண்டிருந்த பலம்பொருந்திய பாணங்களையும் ஒரே தரமாய் ஒடித்து அறுத்தன; பூகம்பமாகும்படியாகக் கடுகடித்துப் புகைத்தெழுந்தயாவரையும் உருவித்துளைத்தன. அதனால் சேனைகள் தத்தளித்துக் களைத்தனர். இத்தன்மையாக இவ்விருவரு மூனைந்து அளவற்ற கணைமாரிகளை அபரிமிதமாகப் பொழிந்து கடுங்கோபத் துடன் மூனைந்து சந்தோஷமா யுத்தஞ் செய்தார்கள்.

இப்படி இவரிருவருங் கடுங் கோபத்துடன் முகமாறுமற் போர் செய்துகொண்டிருக்குங் காலையில், பெருங் காற்றெழுந்து பொங்கிய கடல்போற் பலதேய மன்னரும் வந்து, சாமர்த்திய முடைய பீம சேனனை மொய்த்துக்கொண்டு, பலபல விதமாகிய தேயுக்கணை களைக் கலகல வென்றுதித்தார்கள். அவர்கள் தொடுத்த கணைகளெல் லாம் பறந்திரைத்து வருவதை அளகாபுரிக்குச் சென்று மணிமால னைக் கொன்று அம்போருக மலரைக் கைக்கொண்டு வந்த மூர்த் தண்ய தூர்த்தண்டனுகிய பீமசேனன் கண்டு, மூனெற்ற முள்

ளம்பாகிய கவ்வம்புகளைத் தொடுத்து, அடித்து வந்த மன்னவர் களுடைய மார்பில் இரத்த வெள்ளம் பெருகி யோட விடுத்தபோது, அவர்கள் யாவருங் கிட்ட கெருங்கப் பயந்து, முகஞ் சுருங்கிக் குலைந்து ரதம் முதலிய சாரதிகளும் தொலைந்து வேசாதியா னர்கள். அக்காலத்தில் துச்சாதனனும் அவனுடைய தம்பிமார்கள் முதலிய புத்திரவர்க்கமும் சகுனியும் சல்லியராஜனும் அதிரதத் தலைவர்களாகிய முடிவேந்தரும், மித்ரவர்க்கமும், கொற்றவர்களும் மற்றவர்களும் கூடிக்கொண்டு பீமனுக் கெதிரேறித்துன்னி, வன் னிக் கணைகளினுற் பின்னினார்கள். இப்படியாக அனற்கணைகளைத் தொடுத்த யாவரையும் பீமசேனன்பார்த்து மனந்தேறி, அசைவறப் பிடித்திருக்கும் வில்லில் அஸ்திரங்களைப் பூட்டி, அநேகஞ் சரங் களை அமோகமாக விடுத்து, "ஓடிப் பிழைப்பதற்கு ஒதுங்கி இடம் பார்க்கின்றீர்களோ?" என்று ஒல்லாமையாகிய பொல்லா இகழ்ச்சி யைச் சொல்லிக் கொல்லாம னிற்கும்போது பலத்துடன் வந்த படைமன்னர் யாவரும் உலைந்து வருந்தி யோடினார்கள்.

அப்படி பீமனுடன் பொருந்திப் போர்புரிந்து அடிபட்டிளைத்து அலைந் தோடிவரும் அதிவீரருடன் தன் தம்பிகளையும் பார்த்த உரககேதனனுகிய துரியோதனன் மனம்பதைத்து மாச்சரியங் கொண்டு, உடனே உடலொடுங்கி உள்ளங் கலங்கினவன்போல் கடைக்கண்களிற் கனற்பொரி பறக்கச்சீறி "ஆ தம்பிமார்களே! உங் களை வாட்டியோட்டி யுத்தஞ்செய்யும் வாயுவின் மதலையாகிய காலனை மறித்து மலைந்து இன்றைக்கே அவன் பிராணனை வாங்கு கிறேன்" என்று கோபித்து, உன்னதமாகிய ரதத்தைச்செலுத்தி உரியோர்களையுங் கூட்டிக்கொண்டு வந்தெதிர்த்தான். இப்படி சொல்லிவந்த துரியோதனனைக் கண்டமாத்திரத்தில், பீமசேனன் சந்தோஷங்கொண்டு விற்பிடித்துப் பற்கடித்து விரைந்து வந்தான். அப்படிவந்த பீமசேனனைப்பார்த்த வணங்காமுடியோனை மன்ன வன் கிலிகொண்டு நின்று, பாரியவில்லை காரியிறுக்கிச் சேர்வுபடாத பத்து வீரவாளிகளை எடுத்துப் பேரொலியுடன் விடுத்தான். துரியோ தனன் விடுத்த அந்தப் பத்து பாணங்களும் பீமசேனனுடைய மரு மத்தைத் துளைத்துக் கலக்கித் தான் தரித்த மணிக்கவசத்தைக் கிழித்து விலக்கி, ஆண்மைபடைத்த அதிதீரர்களுக்கெல்லாம் துதி வீரமணி மகுடாபிஷேகத் துங்கச்சிங்கம்போன்ற பீமசேனனுடைய அங்கத்தில் நுழைந்து உருவியது. அப்போது சற்று வருந்திய வாயு

புத்திரன் உடனே தேரியெதிர்த்து, ஏமத்திலுஞ்சாமத்திலும் ஈமத்திலாடு முருத்திரமூர்த்திக்கு நேராக நேரிட்ட பஞ்சபாணங்களைப் பஸ்மீகரம்பண்ணிய நெற்றிக்கண்ணி னெருப்பையொத்த ஓர் கங்கபத்திரத்தை அங்கத்துடனெடுத்து அபிமந்திரித்து, கங்கியா வட்டைமாலையணிந்த கேசுத்திரனுடைய மார்பிற் குளித்து உதிரந் துளித்து வருந்தும்படி பதிலுக்குப் பதிலாகக் களித்துவிடுத்து, தன் முன் நின்ற மன்னரெல்லாருஞ் சின்னபின்னமாய்ப் பின் ஞேடும்படி பலமாரிக்கணைகளை வாரிப்பொழிந்தான் அப்படியாகப் பொழிந்த மேகாஸ்திரத்தினல் யாவருமருண்டு வாட்டமுற்றார்கள்.

பூரீசிரவனுக்குஞ் சாத்தகிக்கு முண்டான போரில் இருதிறச்சேனைகளினு மிருபத்தையாயிர மன்னர் மடிதல்

அந்தத் தருணத்திற் பெரிய உலகனைத்தும் பிராகாரமாக உடைய துரியோதன மகாராஜன் மேல் பீமசேனன்விட்ட கணை யானதுபோய்ப் பட்டமாத்திரத்தி லவன் கட்டை போற் றலேகட்டு காக்கைத் துருத்திக்கொண்டு வாடினன். அந்தத் துரியோதனனுக் கெதிரிலே நாணியுங் கணையும் நலம்பெறப் பூட்டி வில்லேப்பிடித்துக் கொண்டு இன்னும் வரத்தக்கபோர்கள் வாருங்களென்று பீமசேன னின்றன். அந்த வேளையிற் பூமிக்குரிய தீரர்களும் போரன்பிற்குரிய வீரர்களும் போர்மதத்தனென்று புகழும்படியாக நீடிய சோமதத்த னீன்று மகிழும் பிள்ளையாகக்கூடிய பூரிசிரவனென்பவன் துரியோ தனனிளைத்ததைக்கண்டு, உடனே தன் மனமிளைத்து க்ஷணந்தரியா மல் தன் தேருடன் சென்று எதிர் நின்று தரணிபர் முடியைத் தக்ஷணந் தறிக்கும் லக்ஷியக்கணைகளிரண்டை யெடுத்துத் தரும னுக்கிளையோன் பேரில்விடுத்துப் பராக்கிரமித்தான். இப்படி அவன் விடுத்த கணைகளிரண்டும் ஆலகாலவிஷம்போலிருண்டு அனற்கூட்டமாகப் புரண்டு வருவதை வாயுவேகமும் மாயும்படி தேரூர்ந்து வராநின்ற வாசுதேவனுடைய தம்பி சாத்தகியா னவன் கண்டு, அவன் விட்ட இரண்டு கணைகளையும் அழித்து "அடா பாவீ! இவருடைய ஆண்மை இன்னதென்றுணராமலும் இப்பேர்ப் பட்டவரென்று தெரியாமலும் இரண்டு கணைகளை விடுத்தாயே! என்னடா துரோகி! இதோ பார் என் திராணியை! உன் பிரா ணனை வாங்குகிறேன்" என்று கலீரென நகைத்து, சிலமுகமொன்

றெடுத்துத் தொடுத்துவிட்டான். இப்படியாகப் பேசிவிட்ட கர்ண யானது விறுவிறெனச் சுழன்று வருவதை கான்குவேதபாராயணஞ் சிய பூரிசிரவனென்பவன் கண்டு இளைக்காமல் எதிர்க்கெதிராக வல்லவனுட்டிய பம்பரம்போன்ற பல்லவங்களைப் பலமுகத்திலு கிறைத்தான். இந்தப்படி பலம்பொருந்திய மலைபோன்ற புயத்தையும் மார்பையுமுடைய இவ்விருவரும் உடுபதியாகிய சந்திரனுந் தினபதி யாகிய சூரியனும் ஒருவருக்கொருவ ரெதிர்த்துப் போர்புரிவதைப் போல் யுத்தஞ்செய்வதைக்கண்ட தேவர்கள் முதலிய மூவரும், இத்தயுத்தம்போற் காண்பதினி யருமையென்று கரக்கம்பஞ் சிரக்கம்பஞ் செய்தார்கள்.

அப்போது இவர்கள் இரண்டுபேரும் கொண்டலிடிக்குங் குமு றலுக்கொப்பாய் மண்டலமுதலிய வெண்டிசையடங்கச் சண்டப்ர சண்டக் கடுங்கார்முகமாகிய வில்லைவளைத்து நாணிதொடுத்துக் கர்ணபரியந்த மிழுத்து டங்கார ஓசைகாட்டிச் சிறிதுங் கலங்காமற் கருதாமற் கணைகளை விடுத்துக் கதிர்மதி முதலிய கோள்களுமடங்க அதிபதிமுதலிய ஆள்களுமொடுங்கத் திரிபுவனங்களு நடுங்கத் திசா திசைகளுமுடங்க ஒருவரை யொருவர் வெல்லவேண்டுமென்று சத் துரு மித்துருவாகிய பின்னும் பலவான பல்லவங்களைத் தூண்ட அப்பால் ஒருவர் விட்டபாணம் ஒருவர்மேனிற் படவொட்டாமல் யுத் தத்தினுலுஞ் சத்தியினுலுந் தெய்வபக்தினுயிலும் வெற்றியினுலுந் தடுத்துக் கிட்ட அடித்துப் போர்செய்புங்காலையில் மாதவப்பேர் சிறந்த சீதரனுக்குச் சோதரனென்னுஞ் சாத்தகி மன்னனுடைய நாணியையும் வில்லையும் பூரிசிரவனென்பவன் முறித்தான். உடனே அந்தப் பூரிசிரவனுடைய வில்லையும் நாணியையும் சாத்தகிமன்ன னறுத்தான்.

இந்தப்படி. இருவரும் ஒருவருக்கொருவர் குறைவுபடாமற் போர்செய்து மீண்டும் பூமியிற் குதித்து வலக்கரத்தில் வாளா யுதமும் இடக்கரத்திற் கேடயமுங்கொண்டு, வாசனையணிந்த மாலை மார்பிருவருமண்டியிட்டுச் சக்ரகதியாய்ச் சுழன்று சாகசஞ் செய்து, இடப்பக்கம் வலப்பக்கம் வலப்பக்கம் இடப்பக்கமாகப் பதுங்கியொதுங்கி ஓட்டியிருந் தெழுந்து, ஒருவர்க்கொருவர் கிட்டி வந்து விழுந்து, வாளினல்வீசி வஞ்சினங்கள்பேசி, சந்திரனுஞ் சூரியனு மெதிர்த்துச்செய்யுஞ் சண்டையைப்போல் வாட்போர் புரிந்து, ஒருவரையொருவர் வெட்டவேண்டுமென்னும் இஷ்டத்தி

ஞல் வாளாயுதத்தை ஓங்கிவீசித்தட்டிக் கிட்டவரும்போது வட்டனை யென்னுங் கேடயத்தால் மறைத்து ஒருவரையொருவர் வெட்ட வந்த வெட்டைத் தட்டிக்கொண்டு மறுபடியுங் கோணம் வட்டம் வளைவு முதலிய குந்துச்சாரிகை முந்துச்சாரிகை உந்துச்சாரிகை குப்புறுசாரிகை ஒப்புறு சாரிகை இவைகளை யெல்லாஞ் சுற்றி உடனுக் குடனே கர்ணமிட்டுச் சுழன்று ஒருவர் தலைக்கு ஒருவர் இலக்கு வைத்து எற்றி, கஜசிங்க வியாக்ர விர்ஷபகதியாய்த் தத்தி சப்தமேகங்களுங் கத்திச் சிதற வான்மீன்களும் பலபலவென்றுதிர ஆகாயமும் படபடவென் றதிரும்படி தோற்பு கெவிப் பில்லாமல் நெடுநேரம் வரையிலுஞ்சீறி யமராடினர்கள்.

இப்பால் தேர்களுடன் தேர்கள் யானைகளுடன் யானைகள் குதிரைகளுடன் குதிரைகள் காலாட்களுடன் காலாட்கள் முடி மன்னருடன் முடிமன்னர் சேனைத் தலைவருடன் சேனைத்தலைவர் யூகத்தலைவருடன் யூகத்தலைவர் படைத்தலைவருடன் படைத் தலைவர் இப்படி கை கலந்து போர் புரிந்தார்கள். இன்றிந்த இருதிறப் படைகளிலு மிறந்த சேனைகளை இவ்வளவென்றியம்பு வதென்தரமன்று. இப்படியாக யுத்தம் செய்ததில் யானைத் துதிக் கைகள் அறுபட்டு உதிர வெள்ளப் பெருக்கத்தில் விழுந்தோடுவது, பெரிய வாளை மீனெடு கரியபனை மீனுமோடும் பான்மைபோ லிருந்தது. தலைக்குறைக் கவந்தங்களின்றாடுகின்ற ரண களத்திற் பேய்க்கூட்டங்களும் அக் கவந்தங்களுடன் எதிரெதிர் நின்றாடிக் கொண்டு ஒருசார்பிலிருந்தன. கும்பு கும்புகளாய் அம்பு பிடித்த கரங்களும் வேல் பிடித்த கரங்களும் சூலம் பிடித்த கரங்களும் பாலம் பிடித்த கரங்களும் மழுப்பிடித்த கைகளும் கொழுப்பிடித்த கைகளும் உலக்கையைப் பிடித்த வலக்கைகளும் இடக்கயம் பிடித்த இடக்கைகளும் சக்ராயுதம் தாங்கிய அத்தங்களும் உக்ராயுதமோங் கிய சித்தங்களும் வாகுவலயமணிந்த தோள்களும், வீரகண்டை பிகிந்த தாள்களும் இவைகளெல்லாம் பல பக்கங்களிலும் விழுந்து குவிந்து கிடந்தன. மேலும் உதிரவெள்ளங்களோடிப் பரவி யிருக்கும் யுத்த பூமியானது செவ்வானம்போலிருந்தது. அப் பூமியில் யானைத் தந்தங்கள் முறிபட்டுத் துண்டமாய்க் கிடப்பது மூன்றும் பிறைகள் பல விழுந்து கிடப்பது போலிருந்தன. யானை யினுடலங்க ளறுபட்டு மேடாய்க் கிடப்பது மேகசாலம் சூழ்ந்திருப் பதுபோலிருந்தது. கடலினிடத்திற் கதிர்விட்டொளிசெய்யும்

பவளங்களைப்போல் தேர்ச்சக்கரங்களனேகம் இரத்தங்களில் மூழ்கி அலைகளினுல் அசைந்துகொண்டிருந்தன. மழைபொழிந்து வரும் கல்ல ஜலப்பெருக்கத்திற்றிரண்டுவந்த நுரைகளைப்போல், உதிரப் பெருக்கத்தில் மிதந்து அலை யெறிய ஓடி வரும் மூளைகள் ஒரு புறத்திற் செறிந்தன.

இவையன்றியுங் கூர்வேல், கைவேல், எறிவேல், திருகுவேல் சொருகுவேல், கதிர்வேல் முதலிய அனேகம் வேல்களையும் முட்படை, வாட்படை, முறப்படை, விறற்படை, புட்படை, புழுப்படை முதலிய அனேகம் படைகளையும் இரும்புக்கணை சுரும்புக் கணை மருந்துக்கணை, பருந்துக்கணை, பிறைமுகக்கணை, நரைமுக் கணை முதலிய அனேகம் கணைகளையும், ஒருமுகப்பகழி இருமுகப் பகழி இலைமுகப்பகழி கொலைமுகப்பகழி தலைமுகப்பகழி வலைமுகப் பகழிமுதலிய அனேகம் பகழிகளையும், இந்திராஸ்திரம் சந்திராஸ்திரம் மந்திராஸ்திரம் பர்வதாஸ்திரம் திரிமுகாஸ்திரம் மேகாஸ்திரம், மோகாஸ்திரம் நாகாஸ்திரம் முதலிய அனேக அஸ்திரங்களையும், முள்ளம்பு முனையம்பு முரட்டம்பு தொரட்டம்பு இடியம்பு வெடி யம்பு முதலிய அனேக அம்புகளையும், அயன் கங்க பத்திரம், அரி கங்க பத்திரம், அரன்கங்க பத்திரம் சுரன்கங்க பத்திரம் முதலிய அனேகம் கங்கபத்திரங்களையும், தோமராயுதம் சக்ராயுதம் குந்தாயுதம் வாளாயுதம் எஃகாயுதம் தண்டாயுதம் தடி யாயுதம் முதலிய அனேகம் கையாயுதங்களையும் அவ்விரத்த வெள்ளம் பலவிடங்களிலும் கொண்டுபோய் ஒதுக்கியது. இவ்வித மான பற்பல வேல்களாலும், படைகளாலும், கணைகளாலும், பகழிகளாலும், அஸ்திரங்களாலும், அம்புகளாலும், கங்க பத்திரங் களாலும், கணக்கற்ற ஆயுதங்களாலுங் தூளாக்கப்பட்டிருக்கும் புண் வழியிற் கடலாகிய மூர்ச்சாபோற் சென்னீர் பெருகி வழிந்தோட, தேகங்களனேகத்தும் ஆயிரமாயிரம் விதமாகச் சிதைந்தாட, இருவர் படைகளும் இத்தன்மையாய்ப் போர்புரிந்தனர். இவ்வைந்தாநாள் யுத்தத்தில் இருபத்தையாயிர முடிவேந்தர் இவ்வுலகத்தை விடுத்து அவ்வுலகத்தை யடுத்தனர். அவர்களுக் குரித்தாகிய நான்குவிதப் படைகளிற் காலாட்கள் மேலாட்கள் பட்டவர்த்தனர் படைத் தலைவர் முதலிய பேர்களிற் பலருமிறந்தார்கள். இவ்வாறு யிரு திறச் சேனைகளும் எதிர்த்துப் போர் புரிந்திறந்து இந்திர னுலகிற் புகுந்தனர். இப்பெருங் கும்புகளுக்கு அவ்விடத்தி லிடமில்லாமல்

ஒருவர்பேரி லொருவர் விழுந்து தெருங்கி நாமிருப்பதற்கு இடம் எங்கிருக்கிறதென்று தேடிக்கொண்டு முற்றிலுஞ் சுற்றிக்கொண்டிருந் தனர்.

அந்தச் சமயத்தில் தேவர்கள் வாழும் ஆலயத்தை வலமாய்ச் சுற்றிவரும் மார்க்க முடைய சூரியன் அதுகண்டு நித்தியமும் நாம்போ யொடுங்கு மிடத்தை ஒருவேளை இவ்வீரர் கைக்கொண் டாலுங் கொள்வார்களென்று அதி சீக்கிரத்தி லோடினவனைப்போல் செவ்வானமாகிய வஸ்திரத் திரையினுல் தன்னை மறைத்து மூடிக் கொண்டு மேற்குத் திசையிலிருக்கும் அஸ்தமன கிரியின் பழைய விடத்தைப் போய்ப் பிடித்துக்கொண்டான். இத்தப்பிரகாரம் யுத்தங்கள் தோறும் மனக்களிப் படைத்துவரு மகுடமன்னர் முத லாகிய பேர்களையும், அவர்கள் கைக்கொண்ட பற்பல விதமான ஆயுதங்களையும், இரத்த வெள்ளங்கள் கால்வாயாயடித்துக்கொண்டு போய்க் கடலிற் கலந்து கலக்கின. இன்று நடந்த போரைக் குறித்து ஒப்புச் சொல்ல எப்போர்ப்பட்டவர்களாலும் இயலாது. இத்தன் மையான சங்கிராம விஷயத்தப் போர் நடந்த ரணகளத்திலிருந்து இரு திறவரும் நீங்கிச் சேனைகளுடன் பாசறைக்குப் போய்ச் சேர்ந் தார்கள். இவ்விடத்தில் யுத்தகளஞ் சுத்தி செய்யத்தக்க மனிதர்க ளெல்லாரும் உரியபேர்கள் முதலிய படை வீரர்களை அவரவர்க ளந்தஸ்துக்குத் தக்கபடி பரண்களிலேற்றி மற்றவர்களைக் குவிய லாகக் குவித்துப் புதைத்து மறுநாள் யுத்தத்திற்கு அக்குருக்ஷேத் திரத்திற்றமே வேறிட மேற்படுத்தி வைத்தார்கள். இப்பால் இராத்திரி யென்னுங் கரும்பாம்பானது இருட்குழம்பாலேற்பட்ட வாயைத் திறந்து இளம்பிறையான கோரைப்பல்லைக் காட்டிச் சூரியனைப் பிடி த்து விழுங்க வந்ததைப்போல் இருள் மேலிட்டது. கேளும் ஜனமேஜய மஹாராஜனே — என்று வைசம்பாயனர் சொல்ல, அம்மஹாராஜன் கேட்டு மகா சந்தோஷத்துடன் புகழ்ந்து தீர்க்க கண்டமாய் விழுந்து பணிந்தெழுந்து, "இந்த ஐந்தாம்நாள் யுத்தம் நடந்த விஷயதங்களைக் கேட்டு ஆச்சரியமடைந்தேன். இப் பால் ஆறும்நாள் யுத்தத்தையு மருள் செய்யவேண்டு" மென்று கேட்க, வைசம்பாயனர் மன மகிழ்ச்சியாய்ச் சொல்லத் தொடங் கினர்.

ஐந்தாம்போர்ச் சருக்கம் - முற்றிற்று.

ஆரும்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

கோயிலா ளுடையபைங் கொண்டலார் கண்டுயில்
பாயலாய் வாழுநீ பாக்கியஞ் செய்ததென்
றீயலர் துவமைவே றில்லெனத் தீயநின்
வாயெலா நஞ்சுகால் வாளெயிற் றுரகமே.

ஓ கலியோட்டிவையங் காக்கும் நவநிதி நிலைகாட்டுஞ் செங் கோனிதிக் கதிபதியாகிய கிருபரேறே! கேளும் ஐந்தாநாள் யுத்த முடிவான அந்திவேளையில் வெகுண்டு வந்த இருளென்னுங் கரும் பாம்பைக் கண்ட சூரியன் பயந்து ஓட்டமாயோடி, மேற்குச் சமுத் திரத்தி லொளித்துக்கொண்டிருந்து, பின்பு ஜலத்துக்குள்ளே மூழ்கி நீந்தி, அத்தக் கரும்பாம்பாகிய இருள் போன வுடனே கிழக்குச் சமுத்திரத்தில் வந்து தலையெடுத்துப் பார்த்துமெதுவா யெழுந்து, கரையிலுபர்ந்த உதயகிரியென்னும் மலைமீதேறி, 'நேற்றுத் துரத்திக்கொண்டு என்னைவிழுங்கவந்த இருளென்னுங் கரும்பாம்பைக் கொளுத்தி விடுகிறேன்'' என யுத்தகோலங்கொண்டு தேரேறி, ஆயிரங்கிரணக்கைகளையும் விரித்துக் கண்கள் சிவந்து எழுந்தவனைப்போல் உதயமாயினன். உடனே பாசறையிற் றுயி ன்ற பாண்டவர்களும் படைமன்னவர்களும் எழுந்து, நித்தியவிதி களைச் சற்றுநேரத்தில் முடித்துக்கொண்டு, பசுந்துளபமாலையணிந்த பரந்தாமனைப் பணிந்தெழுந்து, வாத்திய முதலாகிய விருதுகள் முழங்க, மன்னுயிரெல்லா மடிவதற்காக நஞ்சுகளிறும் றுவையவிட் டேற்படுத்திய அளவற்ற ஆயுதங்களையுந் தேவாஸ்திரங்களையுங் கைக்கொண்டு, துஷ்டஜனங்களை யெல்லா மடிப்பதற்காகத் தவஜங் கட்டிக்கொண்டிருக்கும் வீரமாகாளி வீற்றிருக்கின்ற குருக்ஷேத் திரம்போய்ச் சேர்ந்தார்கள். அவ்விடத்திற் சேர்ந்தவுடனே பாஞ் சாலன் குமாரனுகிய சேனுதிபதி ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் திருவாய்மொழி கொண்டு, மும்மதங்களைப் பொழியும் யானைப்படை களையுஞ் சேனைப்படைகளையுந் தரந்தரமாகப் பிரித்து, நிரந்தர மாகச் சத்துருக்களிறும் புறமிடாத மகரவியூகம் வகுத்தான். இத் தப்படி பாண்டவச் சேனுதிபதியாகிய திஷ்டத்தூய்மன் சேனை களைச் சேர்த்து மகரவியூகங்கட்டியிருக்கக்கண்ட பீஷ்மரானவர்

தங்களுடைய படைகளையெல்லாந் தரம்பிரித்து, நான்கு திசைகளிலும் கடற்பக்கங்களிலும் நிறுத்தி, அந்த மகரமீனுக்குச் சத்துருமீனுகிய கரிஞ்சமென்னுங் கனவியூகங் கட்டினார். இப்பால் சத்தியமும் தருமமும் தானனுபவிக்கும் போகமென்றும், அவைகளே விண்ணுலகெல்லாம் விரியும்படியான புகழென்றும், மற்றப்போக பாக்கியமெல்லா மண்ணில் மறைந்து போகும்படியான இகழென்று மனத்திற்பதித்த தர்மராஜனும் அசத்திய முதலிய பாபங்களினுற் பாக்கியமும் பெருமையும் படைக்கலாமென்றும், சத்தியத்தையும் புண்ணியத்தையுஞ் சார்ந்தால் உடனே தரித்திரமுதலிய சங்கடங்களனைத்தும் வந்து சேருமென்றும், எந்தக்காலத்திலும் இதுவே சற்புத்தியாயெண்ணி எதிரத்தைக்கொண்ட துரியோதனனும் வீரவேகம்பெற்ற வெற்றிப்படைகளுற்ற விற்படைதாங்கிய வேற்படையோங்கிய வேந்தர்களும், கால்வகைச் சேனையாகச் சேர்ந்தவர்களும், அவைகளுக்குத் தலையாகிய மாந்தர்களும் யுத்த பூமியில் நிறைந்து தாங்கள் தங்களுடைய சேனாபதிகளின் உத்தரவின் படி நின்று மேலாகிய சண்டையை விளைத்தார்கள்.

இப்படி இருதிறப் படைகளுங் கை கலந்து போர் புரியவே ஆகாயத்தில் வேடிக்கை பார்க்க வந்த தேவேந்திரன் முதலாகிய பேர்கள் அவ் வாகாயத்தில் விசாலமாகிய இடம் பெறுமல் ஒருவரோடொருவர் நெருங்கி யோடினார்கள். பூலோகத்தார் யாவரும் வருந்தி வாடினார்கள். இப்படி இருதிறப் படைஞரு மாறுபட்டுத் தேர்களைச் செலுத்தியும் குதிரைகளை நடத்தியும் யானைகளை முட்ட விட்டும் சேனைகளை ஏட்ட விட்டும் எங்கும் பரவிய தல்லாமல், அப் படை வீரர்களிற் சிலர் ஒருவரோ டொருவர் எட்டிப் பதுங்கியும் சிலர் பக்கத்தி லொதுங்கியும் பலர் பாணங்களைப் பவுருஷஞ் சொல்லியுத்தியும் யுத்தஞ் செய்தார்கள். அச் சமயத்தில் துரோணாசாரியரானவர் கால்வகைச் சேனைகள் நான்கு பக்கத்திலுஞ் சூழ நான்கு வேதங்களையும் பரியாகப் பூட்டிய தேருக்கொப்பாகிய தம்முடைய தேரை விரைவாக முடுக்கி, இருளுக்குப் பகையாகிய சூரியனைப் போல் விரைந்து வந்து, மாருதி குமாரனுங் கதாயுத பாணியுமாகிய பீமசேனன் பேரில் வந்தெதிர்த்து விற்குதை இரண்டும் ஒன்று படும் படியாய் நாணியிழுத்துப் பாணம் தொடுத்துப் பற்பல வசனங்களைச் சொல்லிச் சீறினார். அப்போது நிலைபெற்ற புகழும் மலையொத்த புயமு முடைய பீமசேனன் ஆசாரியரென்னும் மரியாதை

பற்றி நெஞ்சினில் அஞ்சிலி செய்து வணங்கி, அவரது மலையினும் பெரிய தேரும் அத்தேரை யூர்ந்து வந்தவலவனும் அவ்வலவனடத்து நின்ற குதிரைகளும் முடியற்றுப் படியில் விழும்படி கொடிபெற்ற கூர்ங்கணைகளை விடுத்து டங்காரங்காட்டி, யுத்தகளத்தில் மெத்த நெருங்கிய நால் வகைப் படைகளையும் வீட்டி, அமோகமாக பாணங்களைத் தீட்டி மாட்டி, அரசர் முதலாகிய யாவரும் அடிபட்டுப் புற முதுகிட்டோட வோட்டிச் சேனாதிபதி தொடுத்த கணைகளை யெல்லாம் காணவிதமாக அறுத்து காட்டி, அத் துரோணருடைய தேகத்தையும் துளைத்து மனஸ்தாபத்தையும் விளைத்தான்.

அச்சமயத்தில் துரோணாசாரிய ரானவர் தமது கொடி குடை தேர் குதிரை சாரதி முதலிய சகல சின்னங்களழிந்து போதலும் பீமசேனனுக் கெதிரில் நிற்க வெட்க முடையவராய்ப் பின்னிட்டுப் பதுங்கியபோது எதிரிற் சல்லியனைக் கண்டு காணமுற்று ரீரும் போய் பீமனை டெதிர்த்து அடிபட்டு எனக்குத் தோழமை கொண்டு வாருமென்னுங் கருத்தினராய் அச் சல்லியராஜனைப் பார்த்து "ஓ என் தோழனே! இந்த பீமனை வளைத்தெதிர்த்துச் சற்றுநேரம் யுத்தம் பண்ணுவாயாகில், இதோ நான் வருகின்றே" னென்று ஒரு திசையி னுழைந்து போயினர். இப்பால் உபசேனபதியாகிய துரோணாசாரியார் வெகுகாணபதியாகிய சல்லியனை பீமனுக் கெதிரில் விடுத்துச் சென்றவுடனே, இந்தச் சல்லியனனவன் துரோணாசாரியார் சொல்லிய வண்ணம் படை மன்னவர்க ளெல்லாந் தன்னைப் புடைசூழ்ந்து கடகடவென்று தேரோட்டிக்கொண்டு வரும்படியாக வாயுபுத்திரனிடத்திற் சமர்புரிந்து ஜெயம் பெறும் படி வந்தான். அப்போது தன்மேலெதிர்த்துவந்த அந்தச் சல்லியனைக் கொல்லும் வல்லிய வயப்புலி போன்ற பீமசேனன் கண்டு, "வாரும் வாரும் மாமா! என்னை டெதிர்த்துப் போர் புரிவதற்கு வல்லமையும் மனமுமிருக்குமாகிற் சீக்கிரத்தி லோடி வாரும்! மனமில்லா விட்டால் இப்போது வந்துபோன எங்க ளாசாரிய சுவாமிகளாகிய துரோணமூர்த்தியைப்போல் முதுகு காட்டி ஓடிப்பாரும்" என்று சொல்ல, அந்த வசனங்கேட்டு வெகுகடுப்பாகி வெகுண்ட சல்லியன் வில்லை யெடுத்து நிறுத்தினன். உடனே பீமசேனன் அந்த வில்லைப் புல்லாகச்செய்து போட வேண்டுமென்று கல்லாகிய தன் வில்லிற் கணைகளைத் தொடுத்து மூறித்து, மறுபடியு மச்சல்லியன் வேறு வில்லெடுப்பதற்கு முன்னே

சட்டென்று கீழேகுதித்துத் தன்னை வெல்ல வந்த சல்லியனேறி யிருந்த ரதத்தை இந்திரவிமானந்தாங்கிய ஐராவதத்தைப்போல் தோள்மே லெடுத்துக் கரத்தாற் பிடித்துச்சுழற்றி ஆகாயத்தில் வீசிவிடுத்து, அவனோடு வந்த நால்வகைச் சேனைகளையும் அவனுக்கு அங்குத்துணை கொண்டிருக்க நினைத்து, சகல பொருள்களையும் வாரி வாரியியெறியும் அலைகளைப்போல் அநேகந் தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் பதாதிகளையும் வாரி வாரி அவ்வாகாயத்தி லெறிந்தான்.

அப்படி யெறியவே முந்திப்போன சல்லியன் ஆகாயத்தின்மே லுயர்ந்துபோய் அங்கிருந்து கீழாகக் கிறுகிறென்று சுழன்று தானுந் தனது தேருமாகத் தரையில்வந்து விழுந்துவருந்திச் சல்லியமாகித் தார்காகண வீதிவரைக்குஞ் சென்று விழுந்த தனது சேனைஜனங்களுடனே கூடப்புரண்டு சஞ்சலமுற்றான். அந்தத் தன்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தானே நுகர்விற் பார்த்திருந்த துரியோதனமஹாராஜன் மன்னுயிரெல்லாந் தன்னுயிரைப்போல மதிக்க மனமுடையவனைப்போல் வருந்திச் சல்லியராஜனுக்குச்சகல உபசாரமும் நடத்தும்படியாய்த் தன் தம்பிமார்களை விடுத்து, அநேகங்கோடி வாத்திய முழங்கிவரத் திரண்டபடை மன்னரு டனெழுந்து, அகன்றவிதழ் நிறைந்த கந்தியாவட்டைமாலையணிந்த அரசர்க்கரசனுகிய தானும் வெற்றிமாலையணிந்த வீரர்களும் துச்சாசனன் முதலிய சில தம்பிமார்களும், சகுனிமாமனும், மத்திரதேசத்தலைவனும், பீமசேனனுக் கெதிரில்வந்து வில்லைவளைத்துக் கல்மாரி பொழிவதுபோல் வில்மாரிபொழிந்து, ஆயிரமாயிரமென்னுங் கொடுங்கணைகளினூற் கடும்போர் விளைத்தார்கள். அந்தச்சமயத்தில் சிங்கக்கொடிதரித்த பீமசேனன் இவர்களெல்லாம் ஒருமிக்கச் சேர்ந்துவந்து போர் கொடுப்பதைக்கண்டு உடல்பூரித்து மேலேறி நகுல சகாதேவர் முதலிய தம்பிமார்களும் பிரதிவிந்தியன் முதலாகிய புத்ரவர்க்கமும் பாஞ்சாலர் முதலிய மைத்துனர் நெருக்கமும் உடலை விட்டகலா நிழல்போல் வருங் கடோற்கஜன் முதலாகிய அரக்கருந் தன்னைநெருங்கிக் கலந்து வரும்படியாய்த் திடுதிடெனத் தேரைச் செலுத்திச்சென்று எதிர் நின்று, திசைகள் மறையும் படியாய்த் திவ்வியாஸ்திரங்களைத் தொடுத்து அவர்கள் விட்ட அநேகமாயிரங் கணைகளையும் முறித்த காலத்தில் இருவர் பிரிவிலு மிருந்த வீரர்கள் ஒருவரோடொருவர் நேருக்கு நேராகக் கைகலந்து போர் புரிந்தார்கள்.

அஃதெப்படி யென்றால், வேலாயுதங்களும், சூலாயுதங்களும், வாளாயுதங்களும், பாலாயுதங்களும், குந்தாயுதங்களும், சக்ராயுதங்களும், தோமராயுதங்களும், சோமன் கணைகளும், பூமன்கணைகளும், இந்திரப்பகழியும் சந்திரப்பகழியும் மந்திரபாணமும் தந்திரபாணமும் முள்ளம்பு முரட்டம்பு துறட்டம்பு குறட்டம்பு கவ்வம்பு கவராயம்பு வளைதடி குடைதடி குண்டாந்தடி சிலுக்குத்தடி முறுக்குத்தடி முள்தடி பாணத்தடி முதலாகிய ஆயுதங்களும் கணைகளும் பகழிகளும் பாணங்களும் அம்புகளும் தடிகளுங் கவண்களுங் கொண்டு அவரிவரென்று தெரியாமல் ஒருவர்படைக்குளொருவர் புகுந்து வருந்தப்போர்புரிந்து வரும்போது வில்லுக்குயர்ந்தவாளும் மல்லுக்கிசைந்த தோளும், வடிக்கணைமுதலிய இடிக்கணைகொண்ட பீமசேன போஜனும் துரியோதனராஜனும் விக்ரமத்துடன் உக்ரமங்கொண்டு கொக்கரித்து, ஒருவர்க்கொருவர் நேருக்குநேர் நின்று யுத்தஞ்செய்தார்கள். அஃதெத்தன்மையதெனில், மந்தரகிரியும் மாவிந்த மலையும் போன்ற தமதுதேரை எதிரெதிர் செலுத்தி, வாயுதேவனும் வடவாமுகாக்கினியும் எதிர்த்ததைப்போ லெதிர்த்து, இருவரும் வில் வளைத்து கணைகள்விடுத்து, ஒருவர் மார்பை யொருவர்கிழித்து ஒருவர் தோளின்மேல் ஒருவரடித்து ஒருவர் கொடியை ஒருவர் கிழித்து, ஒருவர் முடியை ஒருவருடைத்து, ஒருவர் தேரை யொருவர்போக்கிப் போர் நடத்திவருங்காலையில், கதைப்போர் கழுமுட்போர் வாட்போர் முதலிய பல போர்த் திறமையிற் சிறந்த பீமசேனன் தேரேறி விரைந்து வந்து கணக்கிறந்த கமலச் சரங்களைச் சொரிந்தான்.

அப்போது துரியோதனனும் வேறு தேரேறித் தொடர்ந்து வந்து சுரிமுகக்கணைகளைத் தொடுக்க, அந்தக் கணைகளை பீமசேனன் குறுமுகக் கணைகளாற் குறைத்து, அவனுடைய முன் பக்கத்தைத் துளைத்துக் கவசத்தையு மேக்கிய காலையில் சரவேகத்தினு மிஞ்சிய வேகத்தோடுந் தானேறிய தேர் நேரோட ஓடிய சர்ப்ப கேதுவைத் தூரத்திச் சென்று, பொற்பமைந்த தன்னிரதத்தினின்று அவனுடைய பின் பக்கத்திலும் அழற்கணை யனேகந் துளைக்க விடுத்து, அவன் தம்பியர் முதலிய பேர்களுக்குங் கும்பு கும்பாகக் கொலைக் கணை யேவி, அவர்களுடைய மார்பையும் தோளையும் உதிரம் வழியப் பல கண்ணுகிய குழிப் புண்ணுக்கி, இன்னும் பற்பல பகழிவிடுத்துப் பின்னுஞ் சிற்சில பேரைத் துளைத்து, எவரெவர்களை எம

லோகத்திற் கனுப்ப வேண்டுமோ அவரவர்களைப் பொறுக்கி, அப் போதே யனுப்பி, இவர்களல்லாமல் இன்னமும் பலரை இருந்த விடம் விட்டெழ வொட்டாமற் செய்து, வேகங்கொண்ட குதிரை களையும் பாகனேறிய யானைகளையும் சூதன் விடுத்த தேர்களையும் கூவி நெருங்கும் பதாதிப் பெருக்கையும் பாழ்படத்தறித்துப் பல வாறுக முறித்து அடியுடன் முடிசாய நெரித்துப், படியுடன் உதில் சாய உரித்துப் படாத பாடு படுத்தும்போது, குடரை யிழுத்து தேர ழிந்து பாகர் சிதைத்து, யானை யொழிந்து, வில்முறிந்து சொல் மறந்து வீரதீர புஜவலிமையுங் குறைந்து, ஆரவாரச் சேனைத் தலை மையு மறந்து, எவர்களும் முனைமுகத்தி னில்லாமற் பறந்து முறிந் தோட ஜெயங் கொண்டான். அத்தப் பீமசேனனைத் தேவர்க ளெல் லாரும் கண்டு ஜெய ஜெய வென்று பூமாரி பொழிந்தார்கள்.

பீமனைத் தேடிவந்த விகர்ணனுதியர் அபி மன்னரு லடிபட்டோடுதல்.

இத்தப்படி யத்தப்படை கொந்துபட விந்தைச்சமர் புரிந்த காலத்தில், அலக்கழிந்து அடிபட்டுக் கலக்கண்ணீ ருகுத்தோடிய காவலன் முதலாகிய சேனைகளைக் கண்ட கண்ணில்லா வரசன் பெற்ற காளையர்களில் விகர்ணன் முதற் சிலரும் வெற்றிவேல் தாங் கிய வேந்தரிற் பலரும் சிவந்த கண்களுடையவர்களாய் ஒன்று கூடி அதிகக் கோபங்கொண்டு முகிலெனத் திரண்டு அதி வேகத்துடனோடி வந்து பீமனெங்கே யெங்கே பென்று அதட்டினார்கள். அப்போது பீமசேனன் அவ்விடத்தி லில்லாமையால் அவ்வதட்டுதலை அபி மன்னன் கேட்டுப், பரிசுத்தமாகச் சாணைபிடித்துத் தைல தூபஞ் செய்த பாணங்களும் வரி பொருந்திய வச்சிரக் கட்டுகளுடன் திட் டஞ் செய்திருக்கிற எட்டுவிருதுகளும் சிறுமணிப் பொற் பட்டமுங் கட்டிய விஜய கோதண்டத்திற் கொப்பாகிய வில்லைக் கைக்கொண்டு விரைந் தெதிரில் நின்று, விஷச் சுவாலையாகிய பாணங்களைப் பொழிந்து உண்மைக் கியான நிலைபெற்ற விகர்ணனை திருப்பும் படியா யடித்துத் தேர் குதிரை சாரதி வில் முதலிய யாவற்றையும் ஒடித்து முடித்து விட்டான். அத்தக் காலத்தில் அவ் விகர்ணனு வன் அருகில் வந்து கொண்டிருக்கிற தன் தம்பியாகிய சித்ரசேன னேறியிருக்கும தேரிற்போ யேற, உடனே மற்ற அண்ணன் தம்பி மார்களும் சிந்து தேசாதிபராகிய மைத்துனரும், மத்தகஜங்

களுக்கு அதிபதியாகிய பகதத்தனும் இன்னு மற்றுமுள்ள ஏல்லோ ருஞ் சேர்ந்து வந்து, மறுபடியுமிந்த அபிமன்னை வளைத்துக் கொண்டு அளவில்லாப் போர் கொடுத்துச் சரங்களை மாரியாய்த் தொடுத்தார்கள்.

அப்போது அவரவர் விட்ட அஸ்திரங்களை யெல்லாம் அபி மன்ன னழித்து, அவரவர்கள் மார்பிற்போ யுருகும்படியாய் விசை யம்புகள் விடுத்து, மொய்த்து வந்தவர் யாவரும் எய்த்து கொந்தவ ராகி மயங்கித் தலைசுற்றி விழும்படியாய் மொத்தினன். இந்தப்படி யடிக்கவே அவரவர் பிடித்திருக்கும் வில்லானது அடிக்கடி நாணி யறுந்து நிமிறவும், மளுக்கென்று விற்கள் தறித்து குமறவும், மேற் கணை தொடுக்க விரைந்தும், பாற்கடலினைப்போ லிரைந்தும், மேக முழக்கென முழக்கியும், சோக மிகுத்தெழக் கலக்கியும், அண்ட முகடிடிய வதிர்ந்தும், பிண்ட நிலைகுலைய வெதிர்ந்தும், தாரகா கணங்களுதிர்ந்தும், மாரகாதிபன் வந்தடர்ந்துங் கனற்றும்படி யாய் வெவ்வேறு திண்சிலைகள் வளைத்துச் சரமாரி பொழிந்து மறு படியுங் கடுங் கோபங் கொண்டு சண்டைக்கு வந்தார்கள். இப்படி மூந்தி வந்தவர்களை அபிமன்னுவானவன் சிதறவடித்துப் பின் விடுத் துக் கொடுங்கணைகளைப் பொழிந்தெதிர்த்த கொடிய விகர்ணனென் பவனைத் தகைத்து, அவன் தேக முழுமையுஞ் சல்லடைக் கண் களாய் உதிரம் வடியத் துளைத்துக் கவசத்தையு மறுத்துக் குடல் கலங்கிக் குருதி நீராடவும் இரண்டு தோளும் ஓடியும்படியாகவும் ஒருகொடியினில் இடிமின்னலை விளைக்கும வடிக்கணை யிரண்டு வயம்பெற விடுத்தான்; மன்னர் மன்னர் வந்து வணங்கும் வீர கண்டாமணித்தாளையும் மணிவாசலையு முடைய வணங்காமுடி யோன் தம்பியான அவ்விகர்ணனை மறுபடியு மடக்கி இடியாஸ்திர மெடுத்து மார்பினுழைத்து முதுகிலுருவிப் போகும்படியாய் விடுத்து, இன்னமும் வேலையுண்டோவென்று கேட்டு, எவர்களையும் பொருட் படுத்தாமல் மகமேருவைப்போலோங்கிய வாகுவலையந் தரித்த மணிப்புயங்களைத் தட்டிப்பின்னும் வரத்தக்க பேர்கள் வாருங் களென்று யாவரும் திகைத்து நடுங்கி யொடுங்கும்படியாய் மதத்து நின்றான்.

அதைக்கண்ட விகர்ணன் முதலாகிய சத்துருக்களெல்லோரும் விசனமடைந்து, ஒற்றை இரதத்துடன் ஒருவனுகவிருந்து உலைவாய் மெழுகைப்போல் "நம்மை உருக்கிக் கருக்கிய உத்தமனுக் கொப்பாக

ஆரைச் சொல்லுவோம்? இல்லே! இனி எத்தனே நாள் யுத்தஞ் செய்தாலும் வெற்றிக்கும் நமக்கும் வெகுதூரமாயிருக்கும். அந்த வெற்றியாகிய புருஷன் அர்ச்சுனனுக்கும் அவன் பிள்ளேக்குமே மெத்தக் கூட்டாளியா யிருக்கிறுன். ஆகையாலினி நாம் யுத்தஞ் செய்து என்ன பெருமையைப் பெறப்போகிறேம்? ஒன்றுமில்லே! இத்த மட்டுஞ் செத்தவர்கள் போக மற்றவர்கள் மரியாதையாய்த் தப்பிப் பிழைத்துப் போஞற் பெரியோர் செய்த புண்ணியம். இப்போதே உயிர் பிழைத்தோமென்று ஓடிப்பிழைப்பதே உத்தமம்" என்று ஒருவரோ டொருவர் சொல்லாமல் வெருவி நாற்புறமுமோடினர்கள். அப்படி ஓடினவர்களிற் கொஞ்ச மானமுங் கொஞ்ச வீரமுமுடைய அதிரதர் முதலியோர் சற்று நின்று நிதானித்து கல்லது இன்றையப் போரில் நாமெல்லோரும் ஒன்றுய்க்கூடி நெடும்பகழி குறும்பகழி முதலிய நெட்டிலே வேல்களும், பட்டயக் கோல்களும் விடுத்துச் சண்டை செய்தோமே! அனேகங்கோடி அஸ்திரங்களிஞலே தாக்கினுமே! இந்த அபிமன்னுவினுடைய அங்கத்தில் ஏதாகிலும் கொஞ்சம் பங்கமுண்டோ அல்லதவனுடலில் எள்ளத்தனே காயங்கள் ஏற்படுத்தின துண்டோ? ஏன் வீணுய் உரலுங் கொடுத்துக் குரலும் போகவேண்டும்? ஐயையோ இம்மட்டு மவன் கொடுத்த உயிர்ப் பிச்சையாக வெண்ணி ஓடிப்பிழைப்பதே உத்தமம்" என்று முன்னேடினவர்களுக்கு முன்னுகப் பின்னேடின போர்களு மோடித்தம் பாசறை போய்ச் சேர்ந்தார்கள்.

அந்தச் சமயத்திற் கார்முனே கொண்டதைப்போல் வந்து போர்முனே வென்று போர்ப்புகழ் கொண்டு சீர்பெற நின்று தேர்விடு சென்று சாரதிக்குச் சொல்லி நின்ற அபிமன்னுவுக்கு நேரெதிர் கென்ற மேலாகிய சந்தோஷ நிறைந்த மனமும் வீரர்கட்குட் சிறந்தநேமமும் வேந்தருக்கு வேந்தாகிய பெரியதனமு முடைய தர்மராஜன் முதலிய பாண்டவ ரென்னுந் தந்தைமார் அம்மைத்தனேக் கண்டு சந்திரனேக் கண்ட சமுத்திரம் போற் களித்து இரைத்து மகிழ்ந்து இறுகத் தழுவியணைத்து முத்தமிட்டுக் கொண்டு உத்தம வித்தக பத்தியும் வித்தையு முடைய அப்புத்திரனுடன் வெற்றி வார்த்தையைப் பேசி வியந்து போர்க்களத்தின் வேடிக்கையையும் பார்த்துப் பொம்மலாகிய எக்களிப்பா லிறுமாப்படைந்து பாசறை போய்ச் சேர்ந்தனர். இப்பால் இந்த யுத்தகளத்தில் அநேகஞ் சேனைகள் அழிந்து உதிர வெள்ளம் வழிந்து ஓடியது. அவ் வெள்

ளத்தின் அலைகளில் தத்தி விழுந்த தலைகளைக் கழுகும் பருந்துங் காக்கையுங் கொத்தி யெழுந்த காலையில் கரிகள் பறித்துக் கவ்விக் கொண்டு ஆடவும் அதைக் கண்ட சிறு பட்சிகள் மனவேக்கங் கொண்டு வாடின.

இப்படியாக இருக்கின்ற யுத்த பூமியில் மலையினும் பெரிய தலை யினையுடைய யானைகளின் தந்தங்கள் பிடுங்குண்டு அங்கங் குலைந்து டொங்கு டொங்காகி மந்தரகிரி போலுயர்ந்து தாரைதாரையாய்ச் சென்னீர் பெருகச் சாய்ந்து கிடப்பதெப்படி யிருந்த தெனில் துவாரகையி விருக்கும் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியைத் தன் பட்டணத் திற் கழைப்பித்த கஞ்சனுனவன், நகரக்கோட்டை வாசலில் மதம் பொருந்திய பட்டத்து யானையை நிறுத்தி வெளியிலிருந்து வருவோர்க ளெல்லோரும் யானையின் வயிற்றில் நுழைந்து போவ தென்றேற்படுத்திக் கிருஷ்ணன் நுழைந்து வரும்போது யானை யினல் நெருக்கிக் கொன்றுபோடச் செய்யென்று தன்னுடைய கருத்தை மாவுத்தனுக்குச் சொல்லிவைக்க அக்காலத்தில் யானையை இரகஸ்யித்த ஆதிமூலமாகிய உளவறிந்த கள்வன் அநேகமாகிய இஷ்ட ருடன் யானைமுகத்துக்கு நேராக வந்தகாலை, மணங்கமழ்ந்த குணக் தழைந்த வனம் நிறைந்த தேனுறைந்த திருத்துழாய் மாலை தரித்த சுவாமியை நெருங்கிக் கொல்ல வந்த யானையின் இரண்டு தந்தங் களையும் பிடித்து அசைத்திழுத்துப் பிடுங்கியபோது சத்தங் குறைந் தந்தங் குலைந்து கந்துஞ் சிதைந்து நொந்துள் வருந்தி விந்தகிரிபோல் விழுந் திறந்த அக்குவலயாபீடமென்னும் கொம்பு போன யானை யின் கோல மெப்படியோ அத்தன்மையாக விருந்தது.

மேலுஞ் சில யானைகள் ஓடிக்கொண்டிருக்கும் உதிர வெள் ளத்திற் பாதி தேகம் மறைந்தும் மற்றப் பாதி தேகம் வெளியிற் றெரிந்தும் துதிக்கையை மேலாகத் தூக்கிக்கொண்டு வாய்விட்டலறி யும் சென்றன. கால்களிற் சக்கரமாட்டிக் கொண்டிருக்க அநேக யானைகள் பக்கத்திற் பட்டுக்கிடந்தன. இத் தன்மையாய் விழுந் திலைத்த வீரபட்ட மென்னு நுதலணிகளையுடைய யானைகள் எப்படி யிருந்ததென்றால் மலைச்சாரலிலிருந்த சுனையில் தினச்சாரி யாய் நீருண்பதற்கு அநேகம் பெண்யானைகளுடன் வந்திறங்கிய யூதநாத னென்னும் யானையை முதலை பிடித்துக்கொண்டபோது பெருங் கூச்சலிட்டுக் கரையிலிருக்கும் யானைகளின் துதிக்கையை அது பிடித்துக்கொண்டு முதலையைக் கரையிலிழுக்க, முதலை

யானையை ஜலத்திலிழுக்க அக்காலத்தில் தனக்குற்ற துணையாகிய கர்த்தனைக் கூவிப் பாதியுடல் ஜலத்தில் மூழ்கியும் பாதியுடல் மூழ் காமலுமிருந்த நீலகிரியைப்போன்ற அக்கஜேந்திரனைப் போலு மிருந்தது. இவையன்றியும் மேகத்தைப்போல மதஜலத்தைப் பொழியுங் கவுட்குழியும் சிறியவிழியும் இரண்டுசெவியும் தந்தக் கொம்பும் மத்தகத்தலையும் தும்பிக்கையும் தோலும் வாலும் நாலு காலும் இவைகள் தவிர மற்ற மாமிசங்களையெல்லாம் பேய்கள் சுரண்டித் தின்றுபோட்ட யானைத்தோல்கள்ள வ்விதமிருந்தனவென் றால், நான்குவேதங்களும் மோன மென்றும் அகல் வான மென்றும் முழு ஞான மென்றுஞ் சொல்லிய அப்பொருளையே ஞானபூதித் திருவுருவுவாய்க்கொண்டருளிய சிவபெருமானென்னும் வீரட்டேச் வரர் தாருகாவனத்து ரிஷிகளனுப்பிய யானையையுரித்து அணிந்து கொண்டாரன்றோ? அக்கரியினது உரியைப்போன் றிருந்தன.

இன்னும் அறுபட்டுக்கிடக்கும் இராக்கதர் முதலிய சேனை களின் தலைகளையும் யானைகளின் தலைகளையும் தங்கள் தலையிற் கவிழ்த்துக்கொண்டும் வாய்களிற் கவ்விக்கொண்டும் வரும்படியான கண் தெரியாப் பூதங்களை ஆகாயத்திற்சென்ற வீரருடைய தலை களைக் கைக்கொண்டு உள்ளிருக்கும் தசை நிண முதலிய வெல்லா வற்றையும் உறுமுறுமென்று உறுஞ்சிக் குடித்துவருகிற சில பூதங் கள் மடக்கி, மேல்விழுந்து சண்டைகொண்டு ஒன்றுக்கொன்று விடாமற் போர்புரிவது எப்படியிருந்தென்றால், அநேகங்காலம் அரக்கரால் அவதிப்பட்ட அமரர்க்கிறையாகிய தேவேந்திரனும் மூப்பத்துமூக்கோடி தேவர்களும் கயிலாயபதியைக்குறித்து வருந் தித் தவமிழைத்தகாலத்தில் அம்மகாதேவர் உமாமகேச்வரியுட னெழுந்தருளிச் சித்திரமணிமண்டபத்தில் ஓவியமாகத் தீட்டி யிருந்த பிரணவாகாரவடிவத்தைக்கண்டு இதுவே எப்பொருட்கு மிறையென்னும் முதற்கடவுளாகிய விநாயக மூர்த்தியாகத் திருவுளங் கொள்ளவும், உடனே அச்சிவசக்திகளினருளுருவாயமைந்த விநாயகக்கடவுளானவர் தேவர் முதலிய பேர்களின் குறைநீங்கக் கஜமுகாசுரனுடனெதிர்த்து யுத்தஞ்செய்த காட்சிபோலிருந்தது. இப்பால் இரத்தங்களைக்குடித்து வெறியேறிச் சண்டைசெய்யும் நாய்களும் நரிகளும் பிரமாணந்தப்பிய பெருங்குடியரைப்போன்று திரிந்தன. காக்கை, கழுகு, பருந்து முதலிய பக்ஷிகள் மாம்சங்களை இச்சையடங்கத்தின்று அபிமன்னனுடைய ஜெயத்தைப் படித்துக்

கொண்டு மிகுந்த மாமிசங்களை நாளைக்கு வேண்டுமென்று புதைக்கும் உலோப நாய் நரிகளைப்போல் தாங்களும் புதைத்து மீண்டுமப்புதைத்தவிடங் தெரியாமல் அநேக நாள் சஞ்சலப்பட்டன.

இப்படி போர்க்களத்தில் இமயகிரிவரைக்கும் ஜெயஸ்தம்பம் நாட்டிய விஜய குமாரனுகிய அபிமன்னுவானவன் இன்றைய யுத்தம் உங்களுக்குப் போதுமல்லவாவென்று எதிரியின் சேனையைக் கேட்டுத் தன்னுடைய சேனைகளோடு இராவான் முதலிய பேர்க ளியாவருஞ் சூழப் பலவிருது மேளதாளங்களுடன் ஜெயக்கொடி பிடித்துக் கொண்டு தந்தை முதலாயினோர் தங்கியிருக்கும் பாடி வீட்டிற்குப் போய்ப் பொருந்தியிருந்தான். அப்போது அபிமன்னுவை வழிவிடப் போன வழித்துணைபோற் சூரியன் மேற்குத் திசையிற் சென்றன். இவ்வாறு சூரியன் மேற்குத் திசையில் அஸ்தமித்தவுடனே பாண்டவர்களுந் துரியோதனுதியருஞ் சண்டை போட்டார்களே அதைப் பார்ப்போமென்று வந்ததைப்போல் இரவென்னும் பெண்ணுடு சந்திரன் இரைச்சோடிவந்து இரணகளத்தைப் பார்த்துப் பேய்க் கூத்தாக இருக்கக்கண்டு வேடிக்கை பார்த்திருந்தான்—என்று சொல்லிய வைசம்பாயனரை ஜனமேஜய ராஜன் பணிந்து இனி ஏழாம்போர் விருத்தத்தையுந் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க வைசம்பாயனர் சொல்லுவதாயினர்.

ஆறும்போர்ச் சருக்கம் - முற்றிற்று.

ஏழாம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி.

உரலும்வேதமுந் தொடராநந்தகோ ஞடனசோதைகண் டுருகவாழ்வுகூர்
தரணிமீதுசெங் கையுமாமுழக் தாளும்வைத்துவைத் தாடு மாயனூர்
விரவிநின்றமா மருதினூடுதா மெத்தெனத்தவழ்ந் தருளிமீளவும்
புரியுநீள்கடைக் கண்ணும்வண்ணமும் போற்றுவார்கண்மெய் புளகமேறுமே.

ஓ தனமேவிய மாமதி காவலனே ஜனமேஜய பூபதிகாவலனே! கேளும்—மறுநாட் காலமே நேற்று நடந்த ஆறும்போரிலும் இன்று நடத்தப்புகும் ஏழாம்போர் விசேஷித்திருக்குமல்லவாவென்று ஆவலோடும் பார்க்க வந்தவனைப்போற் சூரியபகவான் கிழக்குத் திசையிலுதயமாயினன். உடனே இருவர் படையுமெழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்டு யுத்தசன்னத்தராய் வீரம்பேசி ஆரவாரித்தனர்.

பாண்டவச்சேனையிற் பிரயாண பேரி யுத்தபேரி முதலிய வாத்தியங் களெல்லாம் பெருங் கடல்போல் முழங்கின. ஆயுதங்களுட னுயுதங் களிழைய அதிபதி முதலிய அனேக வீரர்கள் கொடி, குடை, சாமரை, பீலிக்குஞ்சம் முதலிய சின்னங்களோடு புறப்பட்டு மேற் றுப்போர் புரிந்தவிடத்திற்கு வந்தனர். மரகதமலைபோற் றிருமேனி வாய்ந்த மாதவனைப் பணிந்து இன்றைக்கு என்ன வியூகங் கட்டுவ தென்று உத்தரவு கேட்டுக்கொண்டு வச்சிராயுதம்போ லழிவற்ற தாய்ப் பாம்பைபோற் படமு முடலுமுள்ளதாய்க் கட்டுவதான வச் சிரமாசுண வியூகங் கட்டினுன் சேனுதிபதியாகிய திஷ்டத்தூய்மன். இப்பால் துரியோதனனுடைய படையிற் சேனுதிபதியாகிய பீஷ்மா சாரியரானவர் தங்களுடைய கால்வகைப் படையுங்கொண்டு வந்து அவைகளைத் தொப்பைக் கட்டை, குடம், பழு, இலை, மேல்வட்டகை, வளைவு, இருப்புக்கட்டு, சட்டம், மத்திபிற்றுளை, உளிவாய், கடை யாணி இவைகளையுடைய வண்டியின் சக்கரம்போ லமைத்து அதிரதரை முனையினிறுத்தி, கால்வகைச் சேனைகளையுஞ் சக்கரமாய மைத்து, நடுத்துளையில் நாயகனை வைத்துக் காப்பதாகிய சகட வியூகம் வகுக்கவும், யாவருஞ் சகல வாத்தியங்களு முழக்கச் சகல வரசர்களும் பெருங்கப் பல விருதுகள் பிடிக்கப் பலவிதக் கொடி களும் பிடிக்க இந்த ஏழாம்போரை யினிது முடிக்க வேண்டு மென்னு மெண்ணத்தோடு பகைமையை மேற்கொண் டிருந்தார்கள்.

இந்தப்படி இருதிறப் படைகளும் வியூகங்கட்டி வெற்றிக் கொடி நாட்டி விருது சின்ன முழக்கினர். சேனுதிபதி யிருவரும் முனையில் வந்து நின்று முடிசாய்த்துக் கொடி சாய்த்தனர். உடனே அந்த இரு படைகளுங் கை கலந்து எவர்களுக்கு எவர்கள் மீதிற் பகையோ அவர்களே அவர்கள்போய் மடக்கிக்கொண்டு, அண்டர் யாவருமொடுங்க எண்டிசைப் பாலரு நடுங்க, அவனியனைத்துங் குலுங்க, சிவனும் விழித்துக் கலங்க விரைந்தோடி யுத்தஞ் செய் தார்கள். அதிரதர், மகரதர் முதலியபேருங் கண்களிமேல தீப்பொறி யுதிர அம்புகொண்டெய்தார்கள். தேர்களோடு தேர்களும், யானை களோடு யானைகளும், குதிரைகளோடு குதிரைகளும், பதாதியரோடு பதாதியரும் இப்படி மாறிமாறிப் பகைவர்கள் சீறிசீறிப் போர்புரிந்து வருங்காலையில், சத்துருக்க ளழியவும், சகல வியாதிக ளொழியவும், பூதப் பிரேத பிர்மராக்ஷதப் பைசாசகண முதலிய கிரகங்க ளெல்லாம் வாய் திறந்து மொழிந்து கழியவும், அரைத்துப் பூசினுல்

அஸ்தி பற்றிய ஆறுப்புண்க ளெல்லாமாயவும் இன்னும் அநேக காரியங்களுக்கு உபயோகமா யிருக்கிற வாசனை பொருந்திய வேப்பமாலையை யணிந்த மீனக்கொடியோன், வழுதி, பஞ்சவன், மாறன், செழியன், தமிழ்நாடன் என்று சங்கப்புலவர்கள் காரணப் பேரிட்டழைக்கும்படி புகழ்பெற்ற பாண்டியனனவன் தனது அம்புப்படைகளும், வளைதடி கம்புப் படைகளும் கும்பு கும்பாகக்கூடிப் போராடும் படியாய் விடுத்துத் தானுஞ் சில கணை களைத் தொடுத்துத் துரோணாசாரியரை வளைத்து எல்லா அரசர் களிலும் மேலாகிய அக்கரை தனக்கிருக்கக் காட்டிக் கடும்போர் புரிந்தான். பாண்டவர்கள் பொருட்டுத் தன் பிராணனை எண்ணிப் பாராமல் அவர்கள் பகைவரை யெல்லாம் படுகளப்படுத்தினன். முடிவில் தனது வில், தேர், சாரதி, குதிரை, மீனக்கொடி முதலிய யாவும் விறுதாவிழந்து துரோணாசாரியராலழிந்து, உதிரம் வழிந்து, உடலுடனுயிருமுலர உள்ளுடைந்து நாபிவரைக்கும் வரண்டுபோய் நாத்தடுமாறிப் பயந்து வியந்து ஓடினன்.

பீஷ்மருக்கும் விஜயனுக்கும் நடந்த விபரீதப்போர்

அப்பால் நான்காம் போரில் இராக்ஷச மாயையாற் கம்ப முறிக்கும் யானைக்கும்பலாக வடிவெடுத்த பகதத்தனுடைய யானைக் கூட்டங்களை யெல்லாம் பதறக் கதறச் சிதற வுதறி மாய்த்துப் புறமுதுகிடாமல் ஜெயித்த கடோற்கசனும் நேற்றையப் போரில் மாயைபோல் வந்த யானைப்படைகளை யெல்லாம் நிமிஷத்தில் ஜெயித்துப் பின் வாங்காமல் வெற்றிகொண்ட அபிமன்னுவும் கூடி வந்து துரோணாசாரியருக் கெதிரேறிச் சீறினர்கள். இதன்றியும் நீலமேகம் போன்ற தேககாந்தியையுடைய நெடுமாலுக்குத் தம்பி யாகிய சாத்தகி போர்முகத்திற் புகுந்து நேரிட்டபேரைப் பிளந்து வருங்காலத்தில் சதாயுவென்பவ னெதிர்த்துக் கணைகளைத் தாக்க அவைகளை யெல்லாம் பொடியாக்கி அவனுடைய கிரீட முடியும், தேரின்கொடியும், பூமியிற்படிய நெடிய அம்புகளினால் அறுத்துத் தள்ளி, அவனுடைய தேகத்தையும் மோழையாக்கியபோது சற்று நேரமும் யுத்தபூமியில் நிலைத்து நிற்கமாட்டாமல் அவன் பதாதியா யோடினன். மேலும் சகுனியும் அவன் சேனைகளும் பீமசேன னுடன் எதிர்த்துப் போராடிப் பீமனலைபட்டு ஓடிப்போனார்கள். அப்போது சல்லியராஜன் ஓடிவந்து பீமன்மேற் சமர் தொடுக்க, உடனே பீமன் அவனை, வில் முதலியன விடுத்து வெறுங்

தையோடு நிலம்பாய்ந்தோடும்படி வெற்றிகொண்டு வீரமாலை யணிந்தான். இப்பால் மகமேருவை யொத்த தேரை உலைவுள்ள தாளினையுடைய சாரதி செலுத்த இந்திர குமாரனுடைய ஜயந்தனைப் போல் அந்த ரதத்திலேறிவரும் அர்ச்சுனனவன் நால்வகைச் சேனைகளுஞ் சூழும்படி சென்று திரிபுரதகனனைப் போல் நின்ற பீஷ்மரை வளைத்துக் கொண்டு சரமாரிவிடுக்க, அவருங் கணைமாரி தொடுக்க, இருவருமெதிர்த்து இருநிற விற்களும் வளைத்து ஒருவர் விட்டபாணம் ஒருவர்பேரிற் படாமற்றடுத்து ஒவ்வொரு சரத்திற்கு ஒவ்வொருசரமாக விடுத்துக் கெடுத்து, லகுவம்பு, பிருவம்பு மூதலிய சத்துரு மித்துருக் கணைகளைத்தாக்கிப் புத்திர மித்திரக் கிளைகளைப்போக்கிப் போர் புரிந்தனர். அந்தப் போர்வல்லபத்தை இன்னவாறென்று எண்ணவும் படாது. கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே, ஆயினும் ஒருவாறுகச் சொல்லி உவமிக்கலாமென்றால், எனக்கு ஒருநாவும் ஒருவாயுமே யல்லது வேறில்லை. ஆனாலும் உபாயமாய்ச் சொல்லுகிறேன்—தேவ சேனாபதியாகிய மயில்வாகனக் கடவுளும் மும்மதங் கொண்ட யானைமீதேறிவந்த தாருகனும் புரிந்த போர் போலிருந்தது. மேலும் என்னுசையடங்க இன்னுமோர் உபமானமு சொல்லுகிறேன் கேளும்—அதென்னவெனில், மேகநாதனுகிய இராவணியும் இலட்சுமணரும், சசக்கிரீவனும் ஸ்ரீ ராமரும் புரிந்த போர்போலிருந்தது. இப்படி போர்செய்கிற போது யானைப் படைகளுக்குள் யானைப்படைகள் புண்பட்டுப் பிராணன் விட்டுப்போயின. தேர்நிறைக்குள்ளே தேர் நிறைகள் சிதைந்து முறிந்து புதைந்து தாழ்ந்தன. குதிரைக் கூட்டத்துக்குள்ளே குதிரைக் கூட்டங்கள் குற்றுயிர் குறையுயிராய்ச் சுற்றிலுங்கதறிச் செத்து விழுந்தன. சாரதிக்குட் சாரதிகள் தலைபோயழிந்து தனித்து வீழ்ந்தன. பீஷ்மாச்சாரியரும் விஜயனும் இப்படி புரிந்த யுத்தத்தை விரிவாய்ச் சொல்லுவோமானால், எட்டுத்திசைகளும் பசபசவென்று விழிக்கும். சொல்லவென்றாலோ நாவெழாது. ஆனதாற் குருபூமியிலிருபக்கத்திலும் நிறைந்துநின்ற இருவர் படைகளிலும் பொருந்திய வீரர்களில் இவ்விருவருடைய பாணம்பட்டிறக்காத பேர்களில்லை. எதிர்த்துப் போர்புரியமாட்டாமலோடின பேர்களும், ஒற்றைக்கையற்ற பேர்களும், இரண்டுகையற்ற பேர்களும், மார்புகிழியப்பட்டபேர்களும், புயமறுபட்ட பேர்களும் ஆயுதமற்றபேர்களும், சிரமற்ற பேர்களும், கால் துணிந்தபேர்களும், வல்லமைகெட்டபேர்களும், வில்லழிபட்டபேர்களும், பிணமலைகளிற்

போய் பதங்கினபேர்களும், பயந்தோடினபேர்களும், அயர்ந்து வாடினபேர்களும், உயிரழிந்த பேர்களும், உடலழிந்த பேர்களு மாய்ப் போர்க்களத்திலிறந்தார் அளவிலடங்கார்.

ஆனலவர்கள் பட்ட பாட்டைப் பலவாறுகச் சொல்லுவதிலும் ஒருவாறுகச் சொல்லுகிறேன் கேளும். அஃதெப்படியெனில், ஈரம் வற்றிய சருகைப்போன்றவர்கள் அவ் விருதிறச்சேனைகள். அத்தச் சருகை யெரிக்கப்புகுந்த பெருநெருப்பை யொத்தவை இரண்டு வீரர்கள் தொடுத்த சரங்கள். ஆதலால் இனி வேறுயுத்தத்தின் பெருமையை நான் சொல்லத்தக்கதுமில்லை. நான் சொன்னபோதி லும் நீர் கேட்க வேண்டுமென்னும் ஆசையு மிராது. தேவர்முதலிய யாவரும் பார்த்துச் சலிக்கும்படியாய் விஜயதீரனும் பீஷ்மவீரரு மூனைந்து போர்புரிந்த காலத்தில் திக்குகளெல்லாமிரத்த வெள்ள மாய்ப் பாய்ந்து சிவந்து வழிந்தோடியது. அவ்விடங்களில் தலை யறுந்த கவந்தங்கள் தொகையிறந்தாடின. ஓ அரசனே ! இன்னுங் கேளும், பாரியவாளாயுதத்தாலும், கூரிய வேலாயுதத்தாலும், பக பகவென் றெரியும் பகழியின் முனையாலும் கரகரவென் றுமிழும் கதிர் வேலியினலும், அடிபட்டுமுடிபட்ட வீரர் முதலாகிய பேர்கள் வீரசொர்க்க வழிதேடந்து மேனிவருந்தி யினைத்து வேதனை மிகுந்து கனைத்து ஒன்றாய் நெருங்கிப் போனார்கள். அதுகண்ட சூரியனை வன் போனவர்கள் போக மிகுந்திருக்கின்ற ஏனைய சேனைகளைப் பார்த்து, "ஓ படைவீரர்களே ! நீங்களும் மெத்த பிரையாச மெடுத்துக்கொண்டு உடல் வருந்தி யிருக்கின்றீர்கள். ஆகையால் உங்களுடைய பாசறைக்குப் போய்ச்சேர்ந்து இளைப்பாறி, நாளைப் போருக்கு வந்துவிடுங்கள். நானும் போகிறேன்" என்று சொல்லி, இருவகைப் படைகளுக்குஞ் சாக்ஷிபூத எஜமானனுக இருக்குமோர் பெரியவன் அப்படைகட் காக்யாபித்துக் கரங்களைச் சாய்த்துக் காட் டிப் போகுமாறுபோல ஆரவாரங்கொண்ட மேற்றிசை யாழியிற்போ யடைந்தான்.

இந்தப்பிரகாரஞ் சூரியன் அஸ்தமித்தவுடனே மாலைக் காலத் தைக்காட்டச் செவ்வானம் வந்தது. அந்தச் செவ்வானத்தை யுத்த களத்திற் கொப்பாயிருந்ததென்று உவமிக்கலாம். எப்படியெனில், சமுத்திரம்போன்ற செந்நீர்ச் சிவப்பாலும், அரசரணிந்த ஆபரண காந்திக் கற்களாகிய கூந்திரங்களாலும், கறுத்த யானைப் பிணங்க

ளென்னும் மேகஜாலங்களாலும் யானைத் தந்தங்களாகிய வானப்பிறை நிலவினாலும், நெடுந்தூரப் பார்வையினாற் புகை சூழ்ந்ததுபோலத் தோன்று மாலைப்போதினாலும், யுத்தபூமி செவ்வானத்தை யொத்திருந்ததென்றுரைக்கலாம். அரசனே! இவை யன்றியும் இரணகளத்தில் நிறைந்திருக்கும் இரத்த வெள்ளங்களே பாற்கடலாகவும், இறந்துபோன அரசர்களுடைய உயர்ந்த தேகங் களே வானமளாவிய மந்தரகிரியாகவும் யானைகளின் மணிக்குடர் களே வாசுகியாகிய கயிறாகவும், வெள்ளைக் கொடி கட்டிய ஸ்தம் பமே சந்திரனுகிய தூணாகவும் தேர்ச் சக்கரங்களே மந்தரகிரியைத் தாங்கும் கூர்மமாகவும், மாமிச மூதலிய நிணங்களே ஓஷதியாகவும் பிசாசுகளும் பூதங்களும் ஆதியில் அமுதங் கடைந்த தேவாசுரர்க ளாகவும், அவ்வப் பிணங்களுடனினும் குடனிலும் பொருந்திய பிச்சு கள் நிலைபெற்று நின்ற அமுதங்கடைந்தபோது பெருகிய வாசுகியின் நச்சாகவும் அப்படிப் பச்சென்றுவந்த பிச்சாகிய நஞ்சைக் கண்டு பயந்தோடிய அமரர் பேய் பூதங்களாகவும் இருந்தன.

அப்போது பிச்சையெடுக்கப் பிரம கபாலங் கொண்டு பாம்புக் கச்சையுடுத்துப் பிச்சுப் பிடித்துத் திரியும் உருத்திர மூர்த்தியைப் போன்ற வேதாளங்க ளோடி வந்து அங்கையால் வாரி அந்த நஞ்சையுட்கொண்டு அப்பாற் சென்றன. மறுபடியும் அக்கடலை மத் திக்கும்போது மூலைகளாகிய அமுதங்களைழு, அந்த அமுதங்களை மோகினியவதார அரியைப்போலச் சில மோகினிகள் வந்து பைசாசு பூதங்களுக்குப் பகுத்துக் கொடுக்க, அவைகளிற் சில துட் டப் பேய்கள் கிட்ட நெருங்கி அமுதங்களைக் கையேந்த, அப்போது சில குட்டைப் பேய்கள் இவை துட்டப் பேய்களென்று சொல்ல, சட்டுவ அடியினால் அவைகள் சொட்டத்தலைப் பேய் களென்று பேர்கொண்டதுள்ள, அப்பால் மிகுதியாகிய அமுதமென் னும் மூலைகளைச் சிங்கவாகினியாகிய காளியிருக்கும் இந்திரலோகம் போன்ற தலத்தில் வைத்துக் கெட்டி செய்த உடனே அதைக் கண்டு சில பூதப்பிரேத பைசாசங்கள் எனக்கமுதமில்லை யுனக் கமுத மில்லையென்று போர் புரிந்து, தோலுரித்து, உடல் நெரித்து, கண் பொரித்து, கால்விரித்து ஆகவ பூமியில் விழுந்தழுந்த அக்ரமப் பேய்களனந்தமாய்த் திரிந்து நிணங்களருந்தி ஆடல் பாடலுடன் எங்கணும் பிரகாசித்துப் பேரொலி முழக்கிக் கொண்டிருந்தன. பின்னுங் குடல்சரிந்த பிணங்களிற் கூர்மையாகிய கோரப்

பற்களையுடைய நாய்கள், நரிகள் முகத்தைச் சொருகிக்கொண்டு பிடுங்கிக்கொள்ள மாட்டாமற் குரைத்துக் கூவுமுழக்கமும், அமர்க் களத்திலிழுத்துகிடக்குந் தலைகளை யெடுத்து அம்மானையாடி அதற்கிசைந்த பாட்டுகளைப் பாடிக்கொண்டிருக்கும் பெண் பேய் களினுடைய கூக்குரலும், கொலுக்கொண்டிருக்கும் பகவதியாருக் கெதிரிலே பைசாசகணங்கள் கைகோர்த்துக்கொண்டு விதம் வித மாகிய பவுரிக்கூத்தாடி வருமோசையும், துன்பத்தை விளைக்கும் நரிகளானது வீரர்களைப் புகழ்ந்து தூதிகூறிக்கூவுங் கூச்சலும், உகாந்தக் கடல் முழக்கம் போலிருந்தன.

அப்பால் கழுகுகள் கூகைகள் காகங்கள் பருந்துகள் இவைக ளெல்லாஞ் சிறைவிரித்து நெருக்கமாய்ப் பறப்பது ஆகாயமளவும் படி அமைத்த பந்தலைப் போலவும், அங்கங்கிறைந்து கிடக்கும் இரத்தினதீபரணங்களே ஒளிமிகுந்த விளக்குப் போலவும், யானைக் காதுகளே தலைவாழை யிலைபோலவும், யானைத் தும்பிக்கை களே கெண்டிகைச் சொம்புபோலவும், வில், வேல், வாள் முதலிய ஆயுதங்களால் உழுத தூளைப்புண் வழியிலிருந்துவரும் வீரர்களுடையை மாமிசங்களே ஷட்ரசி பதார்த்த போஜனம் போலவும், மூளையு ரிணங்களுமே பருப்பு நெய்போலவும், கொள்ளிவாய்ப் பிசாசுகளே குத்து விளக்கின் பிரகாசம்போலவும், அந்தக்களத்தி லுலாவிய பரிசனப் பைசாசகணங்கள் உபசாரஞ் செய்வது அர்ச் சுனராஜன் ஜெயம் பெற்றதைக் குறித்து வீரலக்ஷ்மிக்கு விருந்து செய்தது போலவுமிருந்தன. பேய்க்கணங்களுருத்திய போர்க்களம் இன்னமுமெப்படி யிருந்ததென்றால் கிழிந்த பேரிகைக்குள்ளே சிவந்த இரத்தங்களோடும் போது குமுகுமு குங்குங் கும்மென்று முழங்கியவோசை முழவுவாத்தியம் போலும், பட்சிக் கூட்டங்க ளடித்துக்கொள்ளும் இரக்கையிறைசை துருவதாளம், மட்டிய தாளம், ரூபகதாளம், ஜம்பைதாளம், திரிபுடைதாளம், அடை தாளம், அருமையாகிய ஏகதாளம் என்று சொல்லும் ஏழுதாளங் களைப்போலவும் கொள்ளிவாய்ப் பேய்கள் பந்தம் பிடிப்பவர்போலவும் சில வெள்ளைவாய்ப் பேய்கள் தொந்த யுத்தஞ் செய்த வில் வீரர் கள் முதலிய பேர்களின் ஆண்மை எடுத்துப் புகழ்வது இசைப் பாடலைப் போலவும், தலையற்ற கவந்தங்கள் கை கீட்டி யாடுவது முன்னே விருந்து சாப்பிட்ட வீரலக்ஷ்மிக்குக் கச்சேரி வைத்துக் கணிகை மாதராடும் ஆட்டம் போலவுமிருந்தது.

இவையன்றியும் தாய் தந்தையர் பிளந்து கொடுத்த தலைமூளை களைத் தின்றுகொண்டிருக்கும் பேயின் பிள்ளைகள் உதிர வெள்ளத்தி லடித்துக் கொண்டு போகா நின்ற யானைத் துதிக்கைகளை யெட்டி யிழுத்துத் தவறிப் பள்ளத்தில் விழுந்து, இரத்த வெள்ளத்தி லமுங் திச் சுழலி லகப்பட்டுக்கொண்டு வருந்தியபோது கரையி விருந்த அதன் தாய் தந்தைகள் கைகொட்டிப்பார்த்துத் தேர்த்தட்டுகளைப் படகுபோல் விடுத்துப் பாலா பல்லயம் ஆகிய கொம்புகளை ஊன்று கோலாகப் பற்றிச், சுழி யிலகப்பட்ட அப்பேய்க் குட்டிகளும் அவற் றின் தாய் தந்தைகளுங் கொஞ்சும் ஓசைகள் எல்லா முழக்கத்தி லும் ஏழு பங்கு அதிகமா யிரைத்துகொண்டிருந்தன. அல்லாமலும் சில பேய்கள் இரத்தங்களை யள்ளி வாயாற் குடித்துக் கண்ணின் வழியே பெருகச் செய்யும் விஞ்சைகளைப் போன்ற விஞ்சைகளை அளவற்றனவாகச் செய்தும், சில பேய்கள் யானைத் தோலைக் கவச மாக வணிந்து, கேடயம் வாள் முதலிய ஆயுதங்களைக் கொண்டு நீங்கள் தேவர்க ளென்றும் நாங்கள் அரக்கரென்றுஞ் சொல்லி, ஓரேற்பாடுசெய்துகொண் டொன்றுட னொன்றெதிர்த்து ஆசையா யுத்தஞ் செய்தன. சில பேய்கள் நீ துரியோதன மகாராஜன் நான் பீமசேன மகாராஜனென்று சொல்லிக் கையிற் கதாயுதமெடுத்துக் கொண்டு கதையுத்தமும், மல்யுத்தமும் புரிந்தன. சில பேய்கள் வில்லைத் தாங்கி நாரிமாட்டி வெவ்விய கணைகளைப் பூட்டி அவ்விடத் தில் நிற்கும் வெறுந் தேரி லேறிக்கொண்டு "பிதாமகனுகிய பீஷ்மன் நீ; நானுகிய அர்ச்சுனன் நான்; நாமிருவரும் போர் விளைப்போம் வருக" வென்று பொய்யாக விளையாடப் போயின. அந்த வீரர் பேரைச் சொல்லலே மெய்யாக வினை மூண்டது. இருபக்கங்களி லும் ஏராளமாய்ப் பேய்கள் சேனைகளாக கூடிக்கொண்டு யுத்தஞ் செய்தன; பேய்ப்பிணங்கள் போர் போராய்க் குவிய வெற்றி பெற் றன; அன்று முதற் கொண்டு அவைகள் இரண்டு பிரிவாகவே யிருந்து மாலை வரையிலும் பாண்டவர்களும் கௌரவர்களும் போர் புரிந்து, பாசறைக்குப் போன பிற்பாடு அவைகளும் பகைத்து யுத்தனம் புரிந்து, கட்சி யிரண்டாகவே நிலைத்திருந்தன. இவ்வாறுகிய அந்தப் பேய்களின் விநோதமான காட்சிகள் பலவா யிருந்தன.

இவையல்லாமலும் அலைகடலருந்திய அகஸ்தியராலே கர்வ மடங்கிய விந்தகிரியைப் போல் மேலோங்கி வளர்ந்து நின்ற ஒரு பெரிய டாகினியை, ஒரு சிறியடாகினி ஒரு சேதி 'சொல்லுகிறேன்

ஒருவருமறியாமற் கேள்' என்று குனியச் செய்து, அதினுடைய தலை மயிரைப் பிடித் திழுத்துத் தரையிற்றள்ள, கீழே விழுந்த பெரிய டாகினி மெள்ள வெழுந்து கொழுத்துத் துள்ள, அது ஓடி உதிரப் பள்ளத்தில் அழுந்திக்கொள்ள, அது நெருங்கி இதை மெள்ளக் கிள்ள, இருவருக்கும் உடனே சண்டை மூண்டு அவ்விரண்டும் எதிரெதிராகச் சாய்ந்து மாண்டன. வானவர், தானவர் முதலியோரும் இன்று நடந்த ஆர்ப்பைக்கண்டு மனங்கூசி வருந்தினர்கள். காலதூதர் அவரவர்களுடைய உயிர்களை யோடி யோடிப் பிடித்துக் கை சலித்தனர். இப்படி யிருந்த யுத்த களத்தில் இருவர் படைகளும் மன்னர் முதலிய பேரும் பெருங் கூச்சலுடனே போர் நிறுத்தும்படியாகிய பொம்மற் பேரிகையின் முழக்கங் கேட்டுத் தங்கள் தங்கள் சூலம் தோமரம் முதலிய படைகளை விடாமல், தேவருமிராக்கதரு மொருவரோ டொருவர் எதிர்த்து வென்று திரும்பியதைப்போற் றிரும்பி, இன்று புரிந்த இகலைப்போ லென்று மில்லை யென்று சொல்லித் தேகவிடாய் தீர்த்துக்கொள்ளும் படியாய்த் தங்கள் குலத்திலுதித்த தங்கள் மன்னவர்களோடுங் கலந்து பாசறை போய்ச் சேர்ந்தார்கள்—கேளும் ஜனமேஜய மகாராஜனே யென்று வைசம்பாயனர் சொல்ல, அரசன் வபுஷ்டாதேவியுட னெழுந்து வணங்கிச் சோடச வுபசார பூசைகள் செய்து, "எட்டா நாள் நடந்த யுத்த விவரத்தைச் சொல்ல வேண்டும் வேதவேதியனே" என்று விசுவாசித்துக் கேட்க வைசம்பாயனர் சொல்லலுற்றார்.

ஏழாம்போர்ச் சருக்கம் - முற்றிற்று.

எட்டாம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

கயம்படு மனத்த ஞய கண்ணிலா வரசன் மைந்தன்
வயம்பட நினைந்து கங்குல் வகுத்ததோர் சூழ்ச்சி தன்னுற்
பயம்படு மல்ல ரோடு பாதல மடிய ரீண்ட
சயம்படு கமலத் தாளென் றலமிசை யகல்கி லாவே.

காவலனே! கேளும்: அந்தக் குருக்ஷேத்திரத்தை அடியிட்டளந்தவர் போற்சென்று ஆகாயத்தினளவையும் பார்ப்போமென்று மேருபக்கமாய்ச் சுற்றிக்கொண்டுபோன சூரியபகவானனவர் போன காரியங்களை முடித்துக்கொண்டு விரைவிற் கிழக்குத்திசைக் கோடி

வந்து இனி நடக்கப்போகிற யுத்தத்தையும் பார்க்கவேண்டுமென்று இரவென்னுஞ் சந்தடியை விலக்கிக்கொண்டெழுந்ததைப் போலுதய மாயினர். உடனே இருதிறப் படைமன்னரு மெழுந்து காலைக் கடனை முடித்துக்கொள்ள, சேனாபதியாகிய திஷ்டத்தூய்மன் தனது சேனை மன்ன ரெல்லாரையுஞ் சேர்த்து ஜயபேரிமுழங்கச் செருநிலத்திற்கு வந்தான். செந்தூள் கருந்தூ ளெழுந்து ஆகாய கங்கையினால் வரண்டுபோயது. அண்டர் முதலிய யாவருங் கண் டேங்கினர். தருமபூபதி முனைந்து தூசி முனையில் வந்தனர். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியி னிஷ்டப்படி சகடவியூகங்கட்டிச் சர்வ வாத்தியங்களு முழங்க ஆயுதபாணிகளாய்ப் பாண்டவர்க ளிருந்தார் கள். இப்பால் பீஷ்மாச்சாரியார் ஏழாநாள்யுத்தத்தில் ஜெயித்த இறுமாப்பால் இன்றைக்கும் வெற்றி பெறுவே மென்று அளவிறந்த படைமன்னருடன் அமர்க்களத்தை யடைந்தார். இவர் அநுமதிப்படி தூசிவியூகமமைத்துத் தருகிறைந்த சுரருல கெல்லாந் தயங்கும் படியாய் அரவக்கொடி தரித்த அரசனுவன் முன்னிற்கவும் தங்கள் தங்கள் படைகளோடு அதிரதர் முதலாகிய பேர் அணியணியாய் அமரவும், அதுகண்டு சர்வாயுத பாணிகளாய் வீர சிங்கங்கள்போற் கர்ச்சித்துக்கொண்டு சகல வாத்தியங்களும் முழங்கக் கௌரவர் வந்திருந்தார்கள். அப்போது இரண்டு சேனை களும் அலையெறியுங் கடலைப்போற் புரண்டு நின்றனர். சேனாதி பதிக ளிரண்டுபேருஞ் சேனையின் வியூகத்தைப் பார்த்துச் சிந்தை களித்து, யுத்தபேரி முதலிய வாத்தியங்களை முழக்கிவைத்து, வெற்றிக் கொடியேற்றி யுத்தஞ் செய்யும்படி வீரர்களுக்கு விளம் பினர்கள்.

துரியோதனன் சகோதரரில் எண்மர்வதை

அந்த வேளையில் அரவக்கொடி பிடித்த துரியோதன மகாராஜ னும், வீரகண்டை தரித்து, தீர விற்பிடித்து விஜயம்பெறக் கருதிய புஜபலத் தம்பிமார்களும், சுஜனத்திற் சிறந்து மிருந்த துணைவரா கிய வேந்தரும், சூறுவளிபோற் சுழன்றடித்து இறைந்து கொலை செய்யும் வில்லைத் தாங்கிப் பிறைமுகக் கூர்வாளிகளைக் கொண்டு கொடிமுடித்தேரேறி மார்பிலணிந்த மணிக்கவசத்தோடு மடமட வென்று தேர் செலுத்திவந்து வாயு புத்திரனுகிய பீமசேனனை வளைத்துக்கொண்டு மலைப்பகழி, மலர்ப்பகழி, மணிப்பகழி, மதிப் பகழி, மழைப்பகழி முதலிய சரங்களால் உடலுருவ எய்தார்கள்.

அவர்கள் விட்ட அம்புகளை யெல்லாந் தோள்வலியிற் சிறந்த அந்த பீமசேனனுனவன் தும்பு தும்பாகச்செய்து எதிரில்நின்ற துரியோதனனை ஏறப்பார்த்து, "அரசே! நீ என்ன ஆசையாக வென்னைத் தேடி ஓடிவந்தாயோ? இவ்வளவு அன்பாக என்னைநாடி இத்தனை காலியில்வந்த உன்னை வெறுங்கையோ டனுப்பாமற் கொஞ்சம் பாணிபண்ணி யனுப்புகின்றேன். இதோ பார்" என்று இருமுக மாகிய எட்டுச்சாயகங்களை யெடுத்து "துரியோதனனே! நீயானபடியால் வெண்ணெயை நீக்கி மோரைக்குடித்தாய்! நாமப்படி பேதகம் நினைப்பதில்லை. மேலும் இப்போது உன் தம்பியென்றும் எம் தம் பியரென்றும் வித்தியாசம் நினைக்காமலும், உன்னிஷ்டப்படி நா மெல்லோரும் ஓரிடத்திலேயே கும்பாக இருப்பது உத்தமமல்ல வென்றும் உனது சொந்தத் தம்பிமாராய்த் தற்காலத்தி லென்னெதிரில் நிற்கு மிவ்வெட்டுப் பேர்களைச் சொர்க்கத்திற் கனுப்பி, அந்த ஊர்வளம், நீர்வளம், நிலவளம் தலவள முதலிய யாவுமறிந்து, நாளை யுனக்கும் நல்ல இடம்பார்த்து வைக்கும்படி போக்கி வைக்கிறேன்" என்று ஆக்கிரமித்து அந்த அம்புகளைத் தாக்கினான்.

இப்படியாகச் சொல்லி விடுத்த எட்டுப்பாணங்களால் துரியோ தனனுக் கருகில் நின்ற அவன் தம்பிமார் எட்டுப் பேர்களும் கழுத் தறுபட்டுத் தலைகட்டு, உயிர்விட்டு, நிலைகெட்டு விழுந்தார்கள். இப் படி பீமசேனனால் முடிந்த சுந்தரன், விசாலக்கண்ணன், வீரவாசி, வெண்டுண்டன், மகோதரன், மகாவிந்தன், அந்தணன், ஆதித்தகேது இந்த எட்டுப் பேர்களினுடைய தலைகள் உயிருடனுகாயத்தி லெழுந்து சென்றன; கைபிடித்த வில்லுடன் உடல்கள் பூமியில் விழுந்து துள்ளின; அக்காட்சிகண்டு மன்னர் மன்னனுகிய வணங்கா முடியுடையோன் தேர்விட்டிறங்கித் தம்பியருடலைத் தழுவி யழுது உள்ளுடைந்து, உரனழிந்து, உயிர்சோர்ந்து உபசாரத்தாற்றேறி, இரதமேறி, குருகுலக்கோமானுகிய பீஷ்மாச்சாரியர் நின்ற விடத் தை நோக்கிச்சென்று செங்கமலம்போன்ற அவருடைய திருவடி யிற் மனது திகழ்முடிசூடித் தேம்பித் தேம்பியழுது "என்தேவனே! தந்தையாகிய சந்தனுமகாராஜனுக்காகச் சிறிய தாயென்னுங் பரிமளகந்தியம்மாள் பெற்ற பாலனுகிய விசித்திரவீரிய மகாராஜன் என்னுந் தம்பிக்குப் பட்டாபிஷேக பாக்கியமெல்லாங் கொடுத்தரு ளிய புண்ணியரே! என்பாட்டனுரே! எனக்குத் தெய்வமும்,

தேசிகனும், செல்வமும், சீரும், தாயும், தந்தையும் நீரே என்று நிசமாக நம்பிச் சத்துருக்களை வென்று சகலவாழ்வும் பெறலாமென்றிருக்கிறேன். ஐயா! இப்படிக்கிருக்க காலாகாள் யுத்தத்திலே நாயகமணிபோலிருந்த ஐந்து தம்பிமார்களை அமரருலகிற் கனுப்பியது போதாமல் இடும்பி கொழுஞ்சியை பீமசேனனவன் இன்று என் கண்ணுக்கெதிரே எட்டுப்போர் தம்பியர்களை இவ்வுலகத்தை விட்டு அவ்வுலகத்திற்குக் குடியாக்கினனே! என்குல தெய்வமே! இந்தப் போர் முகத்தில் தேவரீர் சேனாதிபதியாயிருப்பதினால் எனக்கும் என் தம்பிமார் முதலிய கும்புகளுக்குஞ் சாவென்பதே இல்லையென்று தைரியமாய்த் திடங்கொண்டிருந்தேனே! ஐயோ! அத்தையியரும் திடமும் கண்ணீரில் விட்டதையிலம்போற் சிதறிப்போயினவே! ஓ தாஷ்டீகமாகிய பீஷ்மனென்னுந் தன்யனே!" என்றுசித்திரப்பாவைபோற் றேம்பியோலமிட்டு, மெய்யுணர் வழிந்து' விசனமேலிட்டு, கடலிடத்திருந்து முத்துக்களுதிருந் தன்மையேபோற் கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீருகுத்து மண்ணைத் துழாவி, மதிமயக்கங்கொண்டு வாடினன்.

அதைக்கண்ட பீஷ்மாச்சாரியார் அவனைத்தமது வலக்கரத்தாலணைத் தெடுத்து மண்ணைத் துடைத்தவன் மதிவாட்ட நீக்கி, "அப்பா என் பேரனுகிய குருகுல சிந்தாமணியே! நீ இதற்காகக் கொஞ்சமேனும் விசனப்படாதே! உத்தம க்ஷத்திரியகுலத்தில் பிறந்தவர்கள் பெறவேண்டிய செல்வமொன்றுண்டு. அதாவது படையெடுத்துப் பகைத்துவருஞ் சத்துருக்கள் பலங்குன்றி உதிரஞ் சுண்டி மறைவிலொன்றி, அப்பா இப்போது பிராணன் தப்பிப் பிழைத்தாற் போதுமெனப் புறமுதுகிட்டு ஓடும்படியாய் மேலாகிய அஸ்திர பாணங்களினாலும், இலையாகிய வேலாயுதங்களினாலும், முத்தலையாகிய சூலாயுதங்களினாலும் சாணைபிடித்த வாளாயுதங்களினாலும் ஜெயித்து, மிகுந்த ஜெயத்தைப் பெற்றும் புகழ் பெறத்தக்கது. அப்படி பெறுவதற்குத் தைரியம்விட்டு வாடாமல், தானையுடன் போரைவிட்டோடாமல், திடதீரனாகச் சண்டை செய்துநின்று, படைவீரர்கள் தொடுத்து விடுஞ் சரங்களால் உரம்வேறு சிரம்வேறு, கரம்வேறு, புரம்வேறு என்னும்படி உடலுங் குடலும் வேறு வேறுய்த் தானுந் தோளுந் தாறுமாறுய் முன்காயம் வாங்கிப்பின்காயம் நீங்கி, எவர்களுங்காண முனைமுகத்தில் விழுந்து கிடக்கப் பெறும் பேறுகிய செல்வம் புகழ்ச்சி குன்றப் பெருஞ்

செல்வம். மற்றைச் செல்வமெல்லாம் இகழ்ச்சி மறையாக் கொடுஞ் செல்வம்.

ஓ இறைவர்க்கிறையாகிய என்பேரனே! இன்னுங்கேள்! இல்லாத பெருமைகளை இருக்கவிளக்குந் திரவியத்தை விசேஷித்துப் பெற்ற மாந்தர் எல்லா இன்பங்களையு மநுபவிப்பதற்குப் பயப்பட மாட்டார்கள்; வழித்துணையாகி வரும் மேலாகிய தர்மத்தைச் செய்வதற்கு நயப்பட மாட்டார்கள். அன்றியும் கொலை, களவுகள், காமம், கோபம், பாவம், லோபம், மாறுபாடு, வல்லபம், போக்கிரியாட்டம், லக்ஷணமற்ற டம்பாசாரம், பெரியோர் முதலிய உரியோரை இகழ்ந்து பேசுந்தியதுணம் இவைகள் முதலிய பொல்லாங்கு செய்வதற்கு மஞ்சமாட்டார்கள். அதேனப்படி புண்ணிய வசத்தாற் பொருள் கிடைத்திருந்துந் தெளிவினல் அருளைப் பெறுமல் மருளைப்பெற்று மதி மயங்குவா ரென்றல், 'முந்திரிமேற் காணி மிகுமேற் கீழ்த்தன்னை, இந்திரனுக வெண்ணிவிடும்' என்றும், 'பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்' என்றும், 'இருந்தனம் படைத்தமாந்த ரின்பமு மறனுமஞ்சார்' என்றும், 'செல்வம்வந் துற்றகாலைத் தெய்வமும் சிறிதுபேணார்' என்றும், 'அற்பரான வர்க்குச் செல்வம் அல்லது பகைவேறுண்டோ?' என்றும், 'போன்னுலுலகக் காணியினுற் புரந்தரன் புன்கணுணுன்' என்றும், 'தான் கிடந்த கிடையும், வலியன் குத்தும், வணிகன் வீட்டில் தவிடு வாங்கித்தின்றகிலையு மறந்து, பொன்னைக்கண்டு பொங்கினோர்க்குப் போமே வாழ்வு' என்றுஞ் சொல்லுவார்கள். அதுபோற் கர்வத்திற்கு முதற்காரணமாகிய திரவியம் வரும்போது இல்லாத சிங்காதத்தைக் காட்டிக் கூடப்பிறந்தபோர்களையுமோட்டிவிட்டு மதமாகிய துணைவரையெல்லாம் இதமுடனே கூட்டிக்கொண்டு வாழ்வார்கள். இவையன்றியும் மூத்தவளாகிய மூதேவிக்குப் பஞ்சகோசனென்று ஒரு பிள்ளையுண்டு. அத்தப்பிள்ளையானவன் சின்னம்மாளாகிய இலட்சுமியினிடத்தில் வளர்ந்துகொண்டு வருவான். சின்னம்மாளானவள் ஒருவருக் கருள் செய்து செல்வந் தருங்காலத்தில், மேற்சொல்லிய பஞ்சகோசனுங் கூடப்போய் சின்னம்மாள் தயை செய்த அம்மனிதனுடைய தோளிலேறிக் கொண்டு தனது பஞ்சகோசத்தைப் பிடித்து அவனுடைய இரண்டு கண்களில் இரண்டு கோசமும், இரண்டுகாதில் இரண்டு கோசமும், வாயிலொரு கோசமும் வைத்து அடைத்து விடுவான். அதனற் செல்வம்

வந்தவர்களுக்குக் கண்ணுந்தெரியாது! காதுங்கேளாது! வாயும் பேசாம லிருப்பதென்று முன்னோரினுஞ் சொல்லி யிருப்பதினால், அந்தப் பணக்கொழுப்பைப் பற்றிப் பாவபுண்ணிய மெண்ணிப் பார்த்துப் பயப்படமாட்டார்களென்பது கருத்து. ஆனால் உலக மெல்லா மிப்படிதானே வென்றால், 'அடக்கம் அமரருளுய்க்கும்' என்னும் நீதியின்படி சக்கரச்செல்வம் பெறினும் விழுமியோ ரெக்காலுஞ் சொல்லார் மிகுதிச்சொல், என்னும் நீதிபின் படி செல்வப் பொருளுங் கல்விப் பொருளுஞ் சீர்பெறப் பெற்ற சீமா னுகிய சத்திய சன்னெறியுந் தருமமும் உடைய கர்வமில்லாத உத்தமர்களுஞ் சிலர் உண்டா யிருப்பாரென்று ஒருவாறுகச் சொல்ல வெண்டியதேயாம். ஆதலால் அவ்வகைப்பட்ட நீதிகளை எத்தனையோ விசை பெரியோர் சொல்லியுங் கேளாமற்போன காரி யத்திற்குக் காரணப்பயன் இப்போது கைகூடி வருகிறது. என்ன செய்யலாம்? க்ஷத்திரிய குலத்திற் பிறந்த உத்தமர்கள் எத்தனை அபஜெயம் வந்தபோதிலும், சாவுக்கும் பிழைப்புக்குந் தளராமல் ஒட்டி யுத்தம் பண்ணுவதற்குப் பயப்படமாட்டார்கள். அதெனெ றால், ஜெயம் பெற்றாலும் புகழுண்டு. அபஜெயம்பெற்றிறந்தாலும் வீர்சொர்க்க முண்டென்பது கருத்து.

"ஓ என் குலக்கொழுந்தாகிய இறைவனே இவைகளெல்லாம் பெரிதல்ல. இன்னொரு காரியஞ் சொல்லுகிறேன்கேள். நான் சொல்லும் வாக்கியத்தை உன்னுடைய இரண்டுகாதும் ஏற்றுக்கொள்ளாது. ஆயினும், "அறிந்ததொன் றறியானெனினு முறுதி யுழையிருந்தான் கூறல் கடன்" என்றுதான் சொல்ல வேண் டிய கடமையும், முறைமையும், தர்மமு மிருப்பதினாற் சொல்லு கிறேன். அதாவது பூர்வத்தில் அரசாட்சி செய்து கொண்டுவந்த இக்குலத்தரசர்களிலும், முற்குலத்தரசர் களிலும், எவரேனு முறைதப்பி நடந்தார்களா? அல்லது நடந்தவர்களுண்டா? அப்படி யிருக்க, விதிவிலக்குக்கு விலக்காகிய கருமங்களை நீ நடத்தி யிருக்கின்றனை. அவையாவையெனில் பல தேசத்தரசர்களும், பங்காளிகள் முதலாகிய பலபாஷை மன்னர்களும், உனக்குப் பின்னவருமாகிய தம்பியர்களும் நெருங்கி நிறைந்து நிமிடகரித்திருக்கும் ராஜசபை யில் குற்றமற்ற அருந்ததியாகிய குந்திமைந்தர் மனைவியை, தருகுல பதியாகிய கோவேந்தன் மருமகளை, குழுதகாத குல பதிபெற்ற குவலயத்து வணங்காமுடியுற்ற துரியோதன மகாராஜனென்னும்

விற்பன்ன குணவானுகிய உனக்குத் தாயைப்போன்ற அண்ணியை முன்பின் யோசியாமல் வெகு துராக்கிரதமாய்ப் பாராக்கிரமித்து இழுத்துவந்து நிறுத்தி, அலமலக்க வலித்து வஸ்திர பங்கஞ்செய்த காலத்தில் அந்தப் புண்ணிய சாலியினுடைய வயிறெரிந்து அவ ளழுத அக்கினி ஜலமானது நமது ராஜ சபையில் விழுந்ததே! அந்தக் கண்ணீர் இதுமாத்திரமா செய்யும்? அரசனே! இன்னம் எங்கே கண்டாய்? தேருக்குள்ள சிங்காரம் முன்னுபின்னுமிருக் கிறது. இப்போதென்ன முடிந்தது. ஒன்றுமில்லை! ஒருமொந்தைத் தண்ணீர் போச்சுது. இன்னு மொரு மிடாத் தண்ணீரிருக்கின் றதே! ஓ முதல்வனே! இன்னும் அநேகம் விளையப்போகின்றன. அவற்றிற்கெல்லாம் நீ என்ன செய்யப் போகின்றாய்! ஒன்றும் ஆலோசிக்க வேண்டாம்.

"மேலும் வாயுவைப்போற் பறக்குங் குதிரைபூட்டிய தேரேரி நடத்துங் கொடைக்கதிகாரியாகிய கர்ணனும், மதப்பெருக்கங் கொண்ட பட்டத்துயானை யேறிவரும் மதியூகியாகிய சகுனி மாமனும், இளவரசாகிச் சகல கேள்விகளுங் கேட்டுணர்ந்த உன் தம்பி துச்சாதனனும், எல்லா வற்றிற்கும் பெருந்தலையாய்க் கனவானுயிருக்கிற நீயும், நீங்கள் காலுபேரும் யோசித்துக்கொண் டிருக்கும் உங்களெண்ணங்களெல்லாம் காலாக்கே முடியப் போகின்றன. அவையெல்லாம் கஷ்டமில்லாமற் கைவல்யமாம். ஆனல் உனக்குச் சிறிய தந்தையாகிய விதுரன் அவனுக்கு அண் ணன் பிள்ளையாகிய நீ மரியாதையில்லாமற்சொன்ன கொடுஞ் சொல்லைக்கேட்டுச் சகிக்கமாட்டாமல் வில்லையொடித்தெறிந்து விரக்தனுகப்போய்விட்டான். அம்மதல்லாமலும் கர்ணனவன் நானிறந்துபோன பிற்பாடுதான் அதிரதத்தலைவனுகி யுத்தஞ்செய்வ தன்றி இதன்மத்தியிற் போர்புரியேனென்று சபதம் பேசி, நான் சாகிறநாளைக்கும் எதிர்பார்த்துக் கொண்டு பாசறையிலிருக்கின்றன். ஆகையால் நமக்குரியவர்கள் வேறே ஆரிருக்கின்றார்கள்? அப்படனே! மேலும் இப்போது போர்செய்யும் விஜயனும் பீமனும் வெகுண் டெழுந்துவந்த காலத்தில், எதிரிலிருக்கும் உன்னையும் என்னையும் விட்டுவிட்டு வேறு லக்ஷியம் வைக்கமாட்டார்கள். அன்றியுஞ் சத்தியமே நித்தியம் தர்மமே ஜெயமென்று வளர்த்துவரும் நீதியை யுடைய பொய்யில்லா மெய்யைப்பெற்ற தருமதேவதையும் அவர் களிடத்திலிருக்கின்றன். அந்தத் தருமத்திற்கும் சத்தியத்திற்கும்

துணைக்காரணமாகிய துளபமணி மாலையையணிந்த திருமெடுமாலும் அவ்விடத்திலிருக்கின்றார். வெற்றி பெறுவதற்கு முதன்மையாகிய பொருளிரண்டும் அவர்களிடத்திற் குடிகொண்டிருப்பதினால், இந்த யுத்தங்களிற்றப்பி உயிர்பெற்றிருந்து வாழ்பவர்கள் பாண்டவர்களென்றும், இவ்விடத்தில் வருந்தியழிந்து மாய்ந்து போகின்றவர்கள் மற்றவர்களென்றுந் தெரிந்துகொள்ளுக. ஓ மகாராஜனே! நானிப்போது உனக்குச் சொல்லிய இவ்வாக்கின் வண்ணம் ஜீவன்முத்தராகவுஞ் சிரஞ்சீவிகளாகவு மிருக்கப் போகிற புண்ணியவான்களெவர்களோ அவர்கள் அதைக் காண்பார்கள். அப்படியே! அப்படி யிருக்க உன் தம்பிமார்கள் இப்போதிறந்ததைக்குறித்து விசனப்படுகின்றாய். உன் தம்பிமாரை இறக்கச் செய்து இவ்விடத்தி லினித் தப்பிப் பிழைத்திருக்க நினைத்தவர்கள் யார்? ஐயோ! பிழைப்பாரொருவரு மில்லையே! ஆதலால் துயரத்தை விட்டுவிடு. கவலைகொள்ளாதே! உனக்குறுதியாகிய காரியங்களை யெடுத்துச் சொன்னேம். நீ தைரியம் விடாதே. சாகிறவரையிலும் பிழைப்போமென்று எண்ணுவது மக்களினியல்பு. முடுகி வந்தடிக்கும் பகைவருக்கு முன்சென்று நின்று, முனைந்துவருபவரை முனை முகத்திலே கொன்று ஜயம் பெறுவதொன்று அல்லது அவர்களால் அபஜயமடைந்து அழியப்போவதொன்று. இவ்விரண்டைவிட வேறொன்றுமில்லை. ஆகையால் அதிசீக்கிரத்தி லமர்க்கெழுந்துவா'' வென்று சொல்லிப் படை முகங் கலங்கப் பரிபூட்டிய இரதத்தைச் செலுத்திக்கொண்டு சூரியனைப் போற் றுலங்கிச்சென்றார் பீஷ்மாச்சாரியர். அந்தச் சமயத்திற் கடோற்கஜன், நிழலைப் பார்த்து தெடிமூச்செறிந்து கோபித்துக் கறுவிப் பாகனை முறித்துக் கொற்றவர் படைகளைப் பற்றிக்கிழிக்குங் கொடுமையையும் மதமாரிகளையுமுடைய யானைகளின் பேரிலேறிக்கொண்டு வரும் ஆயிரம் ராக்ஷசர்களும் அவர்களுக்கொரு தலைவனுமாக உருவமெடுத்து, துரியோதனராஜனுடைய பேரணிகளையெல்லாந் தேய்த்துரைத்த இருட்பிழம்பைப் போன்ற சோனை மேகத்தை யொப்ப வளைத்துக்கொண்டு ஆகாயத்திலிருந்து கஜேந்திரங்க ளுதிர்வதைப் போல் மணியணிமகுட மோங்கிய மன்னர் முதலிய படைகளை மாய்த்து வந்தான்.

இராவான் வதை

இந்தப்பிரகாரம் இவனொருபக்கத்தில் இராக்கதமாயையினாலாகிய யானைப் படைகளைக்கொண்டு அழித்து வரவும், இன்னொரு

பக்கத்தில் நாககன்னி குமாரனுகிய இராவானனவன் காமரூபத்தி னுல் அநேகமாயிரம் பாம்பாக வடிவெடுத்து, பாம்புக்கும் எலிக் கும்பகையாகியதைப்போல் இருதிறப்படைகளும் எலிகள்போலேங்கி மயங்கும்படியாய் ரணகளமெல்லாம் உருண்டு போகும்படி பாணப் பிரயோகஞ் செய்து ஒப்பற்ற யுத்தம் நடத்தினன். இவ்விடத்தில் அவர்களிருப்படி யுத்தஞ் செய்து கொண்டிருக்க, நந்தியாவட்டை மாலையணிந்த நரேந்திரனனவன் பிஷ்மாச்சாரியர் கூறிய வார்த்தைகளைக் கேட்டு உடல்பதறி உரங்குன்றி உதிர்ச்சுத் தியின்மேல் உரல் விழுந்த உபத்திரவம்போல் வருந்தி, ஒருவருடனு மொன்றுஞ் சொல்லாமல், பீமசேனனுக் கெதிரிற் சென்று மிகுபோர் விளைத்து, அவன் விட்ட கணையாற் கவைப்புண்டு இளைத்து அயர்ந்த காலத்தில், பீமசேனன் வெகுண்டு ஒரு புறத்தி னுழைந்து, அன்று பகற்போதுக்குள்ளாக எவரையும் வென்று முடிக்கிறேனென்று சமுத்திரத்தைக் காவிட்டுக் கலக்குந் காளாண்மை யுடையனைப் போல் தராதலங் கலங்கித் தத்தளிக்க யுத்தஞ் செய்து வருங்காலத் தில் பப்பர தேசாதிபன் பிள்ளையாகிய மகுட வேந்தன் பல பெரும் படையுடன் கூடி வந்து பீமனுடனெதிர்த்துக் கடும்போர் புரிந்து இளைத்தோடிப் போனன். அப்படி ஓடினவனைக்கண்ட பகாசுரன் தம்பியாகிய அலம்புதனனவன் நீடியபோர்புரிந்து, துரியோதன மஹாராஜனையும் மற்ற இராக்கதச் சேனைகளையு நோக்கிப் பூர்வத்தில் ஏகசக்ர புரத்திலிருந்த என் தமையனுராகிய பகாசுரனைத் தருமனுக் கிளைய இந்தப் பீமன் கொன்றிருக்கின்றனன். அந்தப் பழிக்குப்பழி இவனுடைய உடலை நான் பிளக்கிறேனென்று உறுதியாய்ச் சொல்லி, அரக்கப் படைகள் உரக்கக் கூவிக்கொண்டு வரும்படியாய் பீமசேன னுக்கெதிரில் வெருண்டோடி வந்து வளைந்த காலத்தில் மின்னலு டன் கூடிய மேகத்தைப்போல் தான் கொண்ட பல்லுருவத்துடன் வந்து தகைந்து ஜாடிஞன் இராவனனவன்.

இந்த இராவானடித்த அடியில் துரியோதனனுக்குத் துணைப் பட்டுவந்த அலம்புதன் வருந்தி அவதிப்பட்டோடினன். அவனைச் சேர்ந்த அரக்கப்படைக ளெல்லாருஞ் சிரக் கம்பஞ்செய்து இரா வானை வளைத்துப் போர் புரிந்தனர். அத்தருணத்தில் முன்னமிரா வானு லடிபட்டோடிய அலம்புதன் மறுபடியு மெதிர்த்து வந்து பழுதற்ற குலத்துதித்த பாம்பின் குமாரனெடுத்த பாம்பாகிய பல் லுருவங்களுடனு பகைத்துப் போர் புரிந்து அவ்விராவானெடுத்த

மாயாரூபத்தைவெல்ல வல்லபமில்லாமல் அஞ்சி நடுங்கி அபயமிட்டோடினான். இந்தப் பிரகாரம் பலவிதத்திலும் அடிபட்டு ஓடுங்கியோடிய அலம்புதனென்னு மிராக்கதன் தனக்குள் தானே யோசித்து இந்த இராவான் மாயையிற் பலகோடி பாம்புருவெடுத்து வந்து யுத்தம் பண்ணுகின்றானென்றுணர்ந்து, இந்தப் பாம்புகளைக் கொல்லும்படியாகிய அநேக கருடரூப மெடுத்து வெப்பமாகிய வேகத்துடன் விண்ணைலா நிறைந்து, மேக கர்ச்சனைபோ விரைந்து விரைந்து வந்து வட்ட மிட்டுப் பறந்து நிழலைப் பரப்பி, இரக்கைக் காற்றில் மோதியடித்துக் கால்களிலுராய்ந்து சிதைத்துக்கொண்டு வந்தான். அப்போது கொடிய விஷங்களைக் கக்கிக் கோரைப் பற்களிற் கடித்துச் சேனைகளைக் கொன்று திரியும் புன்றலைப்பாம்புகளெல்லாங் கிறு கிறு விறு விறு வென்று சுழன்று சுறு சுறுத்து, எரிந்து, கரித்து, பொரித்து, படம் விரித்து, விடஞ் சொரிந்து, மேனிதிரைத்து ஒன்றுக்குள் ஒன்றடங்கும் பஞ்சபூதங்களைப் போ லொடுங்கி, மாயை யடங்கி மடங்கிப் போயின. இராவணைருவன் மாத்திரம் அசைவற்று மிகுந்த பயங்கரமான நடுக்கத்துடனின்றான். அப்படி அடங்கி நிற்கும் இராவானை எதிரியான அலம்புதன் கண்டு கூர்மைகொண்ட வாளாயுதத்தைக் கைக்கொண்டு வீசிக்கொன்றான். அந்த அலம்புதன் இராவானை வெட்டியவுடனே குருகுலாதிபன் முதலிய அக்ரோணி சேனைகளெல்லாம் வென்றோம் வென்றோமென்று கும்மிகொட்டிக் கூத்தாடி தொந் தொந் தொந்தோமெனத் துள்ளிக்கொண்டோடிச் சந்திரனைக் கண்ட சமுத்திர முழக்கம்போலிரைந்தார்கள். ஓ அரசனே! இந்தத் துரியோதனன்படைகள், ஜயித்து சந்தோஷத்தை யடைந்த போதிலும் இராவானுனவன் அன்றையத் தினஞ் செய்த மாயா யுத்தம்போற் செய்ய வல்லவர் யாவர்? அந்தயுத்த வல்லபத்தை இவ்விதமென்று எம்மனோராற் சொல்லுந் தரமன்று!

அஃதிப்படியிருக்கக் கணுக்கள் வெடித்தோடிவரும் கரும்பின் ரசங்களால் நெற்பயிர் விளையும் நிலவளஞ் சேர்ந்தபாஞ்சால நாட்டார் பலரோடு துரோணாசாரியாரும் அசுவத்தாமனும் காலமே தொடங்கிய போர்முனை குலையாமற் கடுங்கோபத்துடன் போராடி, அப்பாஞ்சாலரில் வெகுபேர் பட்டழியும்படிபாய்ப் பாணப்பிரயோகஞ்செய்து மடித்து மற்றப்பேர்கள் புறமுதுகிட்டோடும்படி அடித்துக் காங்களிற் கணையும் வளைத்த வில்லையும் பிடித்துப்

போர்க்களத்திற் புலிபோற் கண்சிவந்து புகுந்து வந்தார்கள். அந்தச் சமயத்தில் அலம்புதனுல் இராவான் பட்டானென்று சேதி கேட்ட வுடனே பாண்டவர் பலரு மனஞொந்து பதைக்க, அபிமன்னு ஒரு வன் மாத்திரம் பிறப்பதும் இறப்பதும் புகழ்வதும் இகழ்வதும் பொங்குவது மங்குவதும் உடற்சுமைக்குரிய பெருமையென்று தைரி யத்துடன் தமையன்மேலிருக்கும் பக்ஷத்தைத் தான் சொல்லிக் காட்டாமல் தான் செய்புஞ் சண்டையாற் சொல்லிக்காட்டும்படி தனது மணித்தேரை விரைவாய்ச் செலுத்தச்சொல்லி வரி பொருந்திய வில்லை வளைத்துக்கொண்டு, அரக்கப்படை முதலாயுள்ள அலம்புதன் மேல் ஆயிரம் பதினாயிரம் ஐம்பதுகோடி எண்பது கோடி யென்றிசைக்கும் படிக்கு விசையுடனிருக்கும் வெகு பாணங் களை விதையைப்போல் விதைத்து விளைவைப்போற் கதித்து மெலி யச் செய்தான். அப்போது அசுரப்படைகள் பசலைபட்டழிந்தனர். அலம்புதனும் அலக்கழிந்து வாடினான். அரசர் முதலிய நால்வகைப் படைகளுங் கூடி, அபிமன்னு விடும் பாணம்பட்டு யுத்தகளத்தை விட்டுப் புறமுதுகிட்டு ஓடினார்கள்.

துரியோதனனுடைய சகோதரரில் எழுவர்வதை

அப்போது கேடில்லா வீரமபெற்ற மானுக்கு நேரான அபிமன்னு சுழற்காற்றைப்போற் சுற்றியடித்துக் கொண்டுவந்தான். அலம்புதனுல் இராவானிறந்தானென்னுஞ் செய்தியைக் கேட்டது முதலுண்டாகிய அடங்காத் துயரத்தைப் பீமசேனன் பொறுக்க மாட்டாமல் இரண்டு தந்தங்களுமிழந்து முரண்டு கோபங்கொண் டெழுந்து விழுந்து அழாகின்ற மும்மதம் பொழியுங்களிற்று யானை யைப்போல் கொந்து தேகமுழுமையும் வெந்து, மனதிற்செந்தீ யெழுந்து புளியமரப் புறணியிற் பற்றிய பொறிபோற் பொறிகளைச் சிதறிச் செங்கண் சுழலச்சீறிச் சிங்கத்தைப்போல் நிலம் புதைய வோடி அலம்புதனைத் தேடி வருகின்றான். அந்தவேளையில் துரியோ தனமகாராஜன்கண்டு மிகுந்த கோபத்துடன் யுத்தஞ்செய்ய வரு கின்றானென்றறிந்து, வேட்டையாட வந்தவர்கள் பேரிற் காட்டுப் பன்றி பலகும்பலைக் கூட்டிக்கொண்டு கோரப்பல்லைக் காட்டி யெதிர்ப்பட்டா லெப்படியோ அப்படி தனதுதம்பிகளையும் மன்னர் முதலாகிய படைக்கும்புகளையுஞ் சேர்த்துக்கொண்டு, பேரொலி யுடன் ஆர்த்துச்சென்று சீறிப்புறப்பட்டான். இந்தப்பிரகாரம் விந்தகிரிக் கொப்பாகிய தேர்களும் யானைகளும் படை வீரர்களும்

புற்றிலிருந்து ஈசற்பெரும்போக்குப் புறப்பட்டதைப்போல் முன்னதாக வந்து, பொன்மலைபோன்ற பீமசேனனை வளைத்துக்கொண்டு பெரும் போர்வினைத்துப் பேருக்கொரு பாணம்விடுத்துப் பீமசேனனுடைய உடம்பைச் சல்லடைக் கண்களாய்த் துளைத்தார்கள். அப்போது பீமசேனன் அழலெழ நகைத்துத் தழலெழ விழித்து, தலை நாணிறுக்கி எண்ணிறந்த பாணங்களை எடுத்துத்தொடுத்து விண்ணிறைந்த தேவர்கள் வியக்க விடுத்துப் போர்புரிந்து அவ்வெதிரிகளை இமைக்குமுன் கெடுத்து முடித்தான்.

அந்தப் பீமசேனனால் வெகுண்பார் விளைந்து பலபேரழிந்து ஓடும்படியானதைத் துரியோதனனுடைய தம்பிமார்களாகிய தர்மவாக்கியன், குண்டலபோஜன், ஆதியக்கன், தீபசயனன், நிம்மவாகு, குண்டலதரன், கருடத்துவஜன் என்று சொல்லு மேழுபேர்கள் பார்த்து கூரத்திரங்கொண்டு சங்கார கங்கபத்திரங்களை யெடுத்துத் தாக்கினார்கள். அந்தப் பகழிகளெல்லாம் நானவித வழியாகப் பட்டொழியும்படி பீமசேனன் அழித்துப் பம்பிய நிருதிக்கணையேழெடுத்துத் தொடுத்து அந்தத் தம்பிமார்கள் ஏழுபேரைப் படுக்க வைத்தான். இந்தப்படி பீமசேனன் விடுத்த ஏழுகணைகளினால் அவ்வேழுபேர் தலைகள் துள்ளியெழுந்து ஆகாயவீதியிற் சுழன்று சென்றபோதவ்விடத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்களைத் தேவேந்திரனுக்கி "இந்தத் தலைகளேழும் ஒன்றின்பின் ஒன்றாக வரும் தனமையைப் பார்த்தீர்களா? இதற்கு உபமானமென்ன சொல்லுவீர்கள்?" என்று கேட்க, "ஐயா அவைகளை மேன்மதங்கிய விஜயலட்சுமியானவள் கைக்கொண் டெறிந்தாடுங் கழங்கெனச் சொல்லலாம்" என்று சொல்ல; அதற்கு இந்திரன் வியந்து அந்தரருடன் கண் களித்திருந்தான். இப்பால் துரியோதனன் துயரக்கடலில் மூழ்கித் துன்பக்கரைமீதேறி மாளாவிசன மென்னு மலைமீதிருந்து மனக்கவலைகொண்டு தம்பிமாருடன் நாமுமடிந்துபோவதே சத்யமென்று சதுரங்க பலமும் திரண்டு வரும்படி தேரேறி வந்து பீமசேனனுட னெதிர்த்து வெகுண்டு போர்புரிந்தான். அப்போது வாயு குமாரனாகிய கீசகாரி யானவன் சில அஸ்திரங்களை விடுத்து அவனுடைய உடலைத் துளைத்தான். அந்த அடியினற் களைத்துக் கண் கலங்கி நின்ற துரியோதனனைப் பார்த்துப் பீமசேனன் சொல்லுகிறான்:—

"அடா துரியோதனு! ஜன்மாந்திர வினைவசத்தால் வரும் பாவ புண்ணியத்தை அநுபவிப்பதற்காக எடுத்த உன்னுடலும், தர்மமாகிய செல்வத்தைக் கூடியவரையிலும் பெற்றுவாழ்ந்த உன்னுடைய வாழ்வு மிப்போது கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வருகின்றன. ஆச்சுது! இன்னுங் கொஞ்சநாட்களில் அநுபோக முடியப்போகிறது! அப்போதுநான்காவினுல் ராஜசபையில் கூறிய கண்ட ஒளஷதத்தை உனக்குப் பலிக்கும்படியாய் என் கதையினுற் கொடுக்கிறேன். நீ உன் தம்பிமார்களுடன் துணையாகப்போய்ச் சுகப்படலாம். உன்னுல் இன்னுங் கொஞ்சம் வேலைகளிருக்கின்றன. அதனுல் உன்னை இப்போதுதானே அனுப்பப்படாதென்று அன்பினுல் கிறுத்தினேன். அடா வம்புசெய்த பாவி! நீ இப்போது நாசநைக்குப் போகலாமோ?" என்று சொல்லிச் சிங்கக் கொடியையும் தங்கஸ்தம்பம்போன்ற புயத்தையுமுடைய அந்த பீமசேனன் ஒரு மாசுணக்கணையினுல் துரியோதனனேறிய தேர் குதிரை, சாரதி முதலானவைகளைப் போக்கி, பாதசாரியாய்ப் பூமியினின்று வரும்படி யாக்கி ஓட்டினுன். அந்த மாசுணக் கணைபட்டுத் தன்தேகம் வருந்தித் தன் படைகளும் முறிந்தோடவே, தானும் புறந்தந்தோடினுன் துரியோதனன். இந்தப் பிரகாரம் யுத்தஞ்செய்ய அமர்க்களத்தில் மாட்சிமையுற்ற மந்திரிகள் முதலிய மன்னர்களும் இரதகஜ முதலிய படைகளும் முறிந்து விழும் பெருக்கத்தைக் கண்டு, மதி மயக்கங் கொண்டு சாய்ந்தவனைப்போல் ஒற்றையாழித் தேரினையுடைய அருக்கன் மேற்றிசையில் வீழ்ந்தான். சூர்யனஸ்தமனமாகவே செவ்வானமு மிருளுஞ் சேர்ந்து போர்க்களம் பார்க்கப் புகுந்ததைபோல வந்து மிகுந்தன.

இப்பால் அந்த ரணகளத்தி லழிந்த வீரமன்னர்களுடைய மகுடங்களும் இரத்தினராசிகளும் நெருங்கி நிறைந்து கிடப்பது எப்படி யிருந்ததென்றுல், தர்ம தேவதையாகிய தர்மராஜன் வீர மிகுந்த போர்வென்று விஜயமடைந்து முல்லை யரும்பைப்போன்ற பல்லையுடைய பூமி தேவியைக் கலியாணம் பண்ணிக்கொள்ளு நிமித்தமாகப் பிரியத்திற்கொடுத்துக் காட்டிய பற்பலவித ஆபரணங்களை யொத்திருந்தது. மேலும் யானைத்தந்தத்தில் நிறைந்திருந்த முத்துக்கள் முதலிய ரத்தினக் கொத்துகளெல்லாம் யுத்த பூமியில் ராசி ராசியாகக் குவிந்து சிறந்திருப்பது பாணங்களினுற் பிளப் புண்ட யானைகளினுடைய வீரபட்டமணிந்த நெற்றி யென்னும் பெட்டி

யைத்திறந்து முத்துக் கொத்துக்களைப் பத்திபத்தியாய் வைத்திருப் பதை யொத்திருந்தது. இதன்றியும் வாளாயுதங்கொண்டு வீசிய போது வயிறு கிழிந்து விழுந்த வீரர்களுடைய ஈரல்களும், மணிக் குடர்களும், நாணியறுந்து நிமிர்ந்து இரத்தவெள்ளப் பள்ளத்திற் கிடக்கும் விற்களிற் சுற்றிக்கொண்டு பிரகாசிக்குந் தோற்றமானது, பூமிதேவியாரை வதுவை செய்துகொள்ளுதற் பொருட்டு முரசப் பொற்கொடியுற்ற அரசர்க்குட் கெடிபெற்ற முதல்வன் அந்தக் கல்யாணப் பெண்ணுக்குச் சூட்டுங் குணங்கொண்ட மணமாலையை யொத்திருந்தது. பின்னும் வீராபிமானத்தாற் சிறந்த வீரர்களின் இரத்த வெள்ளம், பலவித பள்ளக்குழிகளிலே நிற்கின்ற தன்மையானது, எதிரிகளுக்குப் பயந்தோடாமல் அவ்விடத்திற் றானே நிலைத்து நின்று சத்துருக்கள் தடுமாறிப் பள்ளத்தில் விழுந் தால் உடனே பகையை முடித்துக் கொள்ளுவோமென் றிருக்குந் தகவினைப்போலு மிருந்தது.

மேலும் அந்த இரத்தப் பெருக்கங்களெல்லாம் அகேக முக மாகக்கால்விட்டோடி. அலையடிக்குங் கடலிற்போய்க் கலந்தது. அது எப்படியிருந்ததென்றால், முகூர்த்தப் பெண்ணுக்கு கலங்கிட்ட சந்தன சுகந்த களபகஸ்தூரி சாந்து சவ்வாது புனுகு முதலியவை களோடு இங்குலிகக் குழம்புகளினால் கனைந்த அந்த வஸ்திரத்தை நீக்கி ஓமத்தீ முன் வந்திருப்பதற்கு ஏவமணிபதித்த மேலப்புடவையை நாடியதைப்போலு மிருந்தது. இப்படியாகப் பூத பைசாச கணங் களுடன் நாய்நரிகளும் போராடிப் பிணங்களைத் தின்றுகொண்டு கலியாணச் சந்தடி வீட்டைப்போலிருக்கும் போர்க்களத்தை விட் டுப் பாசறைக்குப்போனான் பீமசேனனிடம் அடிப்பட்டுப் புற முதுகிட்டோடியகாந்தாரி மைந்தன். இப்பால் மின்போலிலங்கும் வீரபாணமும் பொன்போலிருக்கும் போர் வில்லுந் தாங்கிய பீம சேனனுடன் தருமராஜனுந் தம்பியரும் கோபாலனுந் தமது கொடி படைச்சேனைகளோடு பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்கள். பெரும்போரி லிறந்த மன்னர்களெல்லாருந் தென்றிசையி லிருக்கும் எமலோகப் பாடி வீடடைந்தார்கள். இருண்டு கவிந்த இருளானது குரு க்ஷேத்திரத்திற் குடிபுகுந்தது. இப்படியிருக்க ஒரு வினாடியில் இந்தப் படைகளை முடிக்கிறேனென்று விஜயங்கூறிவந்த இராவானனவன் மடிந்ததைக் குறித்துப் பாண்டவர்களும் அப்பாண்டவ ஸ்திரீஜனங் கள் யாவரும் அழுதுவருந்தி, அன்னபானாதி அருந்தாமல் அயர்ந்து

நித்திரைபிழந்து நெடுமூச் செறிந்திருக்க, அங்நிலையை முன்னங் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துக் கோபாலனஞ் செய் தருளிய கோலஞகிய கோவிந்தன் கண்டு தர்மராஜன்முதலாகிய சகோதரர்களுக்கும் திரௌபதை சுபத்திரை முதலாகிய ஸ்த்ரீ களுக்குந் தைரியஞ்சொல்லி நமதுபிள்ளை போனதைக்குறித்து நாம் விசனப்பட்டால் நமக்குத் துணைவந்தவர்கள் அவரவர் பிள்ளை களையுந் தம்பி தமயன்மார்களையும் பறிகொடுத்திருக்கிறார்களே அவர்களுக் கெவ்வளவு விசனமுண்டாகலாம்? ஆகையால் விசனத் தைக் காட்டாதீர்கள். சந்தோஷமாய் நாளை நடக்கப்போகிற காரியங் களுக்கு வேண்டிய யுத்திபுத்திகளை யோசியுங்கள்'' என்று ஒரு வார்த்தை சொல்லித் தாமுங்கூடவிருந்து சாப்பிட்டுத் தாசர் களுக்கு நேரிட்ட துன்ப பாசத்தை நீக்குந் தயாநிதியானவர் தாமுஞ் சஞ்சலப் பட்டவரைப்போற் காட்டிப் பஞ்சவருடன் பஞ்சணையிற் படுத்திருந்தார்.

துரியோதன மகாராஜனைவன் இந்த எட்டாம்போரிலிறந்த தன்னுடைய தம்பிகளை யெண்ணியெண்ணித் துக்கப்படும்போது, பீஷ்மர் துரோணர் முதலிய மேலோரெல்லாருங்கூடி அந்த இறை வனைத் தேற்றி, "நாமே துயரப்பட்டால் எதிரிகள் நகைத்துத் தனியேவந்து பகைத்து மேல் விழுவார்கள். நமக்குத் துணைவந்த ராஜர்களெல்லோருந் திகைத்து மனஞொந்துபோவார்கள். ஆதலால் (ஊக்கமது கைவிடேல்,) என்னும் வாக்கியப்பிரகாரந் தைரியத்தை விடாமலிருக்கவேண்டும் உரககேதனனே'' என்று ஒருவாறு விச னத்தையாற்றி விடுத்தார்கள். இச்சசங்கதிகளை யெல்லாஞ் சஞ் சயன் சொல்லக்கேட்ட திரிதராஷ்டிரனுங் காந்தாரியுங் காவலர் பத்தினிகளும் மற்றுமுள்ளோர்களும் முகத்திலறைந்து, நிலத்தில் விழுந்து, மூக்கைச் சிந்தியெறிந்து மோதியடித்துக்கொண்டார்கள். இங்கே மறுபடியுந் துரியோதனன் நித்திரையின்றி நெடுந்துய ருற்று, "ஐயோ! இன்றைய யுத்தத்தில் முடிமன்னர் முதலிய பேர்களும் நம்முடைய தம்பிமார்களும் புறமுதுகிட்டுப்போனது மல்லாமல், அநேகம் பேரிறந்தும் போனார்கள். நேற்றுப்பார்த் தவர்களை இன்று பார்ப்பதற்கில்லையே'' என்று விசனங் கொண்டு தன்னைப்போற் றுயரப்படுஞ் சகுனியாகிய மாமனையும், கேட்டுக்குத் துணைக்காரணமாகிய பாட்டையைக் கனிவிற்காட்டுந் துச்சாசனை யும் அழைத்து வைத்துக்கொண்டு, அநேகம் யுக்திகளை யெல்லாம்

ஆலோசித்து "அண்ணலாகிய கொடைத் தாதாவென்னுங் கர்ணன் வராமல் என் மனந்தேறுதாகையால் அவரை அழையுங்க" ளென்று சொல்ல, அப்படியே பீஷ்மர் சாகிறவரைக்கும் ஆயுதமெடுப்பதில்லை யென்று பாசறையை விட்டுப் புறப்படாமலிருக்குங் கர்ணனிடத்திற் குத் தூதர் சென்று கண்டு வணங்கி, "கருணைக்கடலாகிய இறையே! உம்மை யழைத்து வரும்படியாய் நமது காவலன் மனங்கொண்டார்" என்று சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்டவுடன் அதிசீக்கிரத்தி லோடி வந்த கொடையாளியைக் கட்டிக்கொண்டு கூகூவென்றழ அக் கொடையாளி துரியோதன மகாராஜனைத் தேற்றி, "அடடா! தெய்வமே! ஐயோ தம்பிமார்கள் இறந்தார்களா? ஆ! என்ன ஆச்சரி யம்?" என்று கேட்டுத் தானும் விசனப்பட்டான். "அண்ணா! நான் என்ன வென்று சொல்லுவேன்? இன்று பாரிய வில்லைப் பிடித்து, வீரியத்துடன் கணைதொடுத்து, பீமனெதிரிற் சென்று நின்று போர் கொடுத்தார்கள். அப்போது பீமசேனனுனவன் சிவனுக்கெதிராக முந்திச் சிலசில மலர்ப்பாணங்கள் சிந்தி அழிந்த மான்மகனுகிய மன்மதனைப்போல மண்ணிலழியும்படியாகச் செய்தான். அங்கதேசத் தலைவனே! இனி யென்ன செய்வேன்? இதுவரையிலும் என் தம்பி மார்கள் இருபது பேர்வரையிலு மிறந்து போனார்களே! அவர்களைப் பறிகொடுத்து நான் இருந்தென்ன? இறந்தென்ன? ஓ இறைவனே! என் தந்தைதாய் முதலிய பேருஞ் சிந்தை வருந்துவார்களே! நான் நிந்தனைக்காளாகி நொந்தேனே! வெகு சிந்தனைக்காளாகி வந்தேனே! ஐயையோ!" என்று சொல்லிச் சோர்ந்து விழுந்தான் துரியோதன மகாராஜன்.

அப்படி சோர்ந்த அரசனை எடுத்தணைத்து, அதிசீதளசுகந்த பரிமளமுள்ள சந்தன பன்னீர்களுடன் ஆலவட்டஞ் சாமரை முத லிய உபசாரங்களுஞ் செய்து சோபமாற்றியபோது, அவன் பெரு மூச்சுவிட்டுக் கண்ணைத் திறந்து கர்ணனைப் பார்த்து, "அண்ணா! சத்துருவை ஜயித்து வெற்றி பெறுவதற்காக யந்த உத்தமர்கள் முதலாகிய மித்திர புத்திரருடன் யுத்தஞ் செய்ய எத்தனித்த எனக்குத் துணையாகிய பேர்களில், முதன்மையாகிய எங்கள் பாட்டன் பீஷ்மாசாரியர் சேனுதிபதிப் பட்டங் கட்டிக்கொண்டு வில்லெடுத்து நிற்பதில் என்னதான் பிரயோசனம்? நான்கு வேதங் களுந் தநுர்வேதங்களும் வல்லவர்களுக்குப் பின்னு மேலுமேலுஞ் சொல்ல வல்ல குருவாகிய துரோணாசாரியர் விற்பிடித்திருப்பதி

ஞலென்னபயன்? இந்த எட்டு நாள் வரையிலும் இவர்களுடைய நிர்வாகங்களை யெல்லாம் பார்த்து விட்டேன். இனிக் காரியமில்லை. அண்ணா! நாளை முதற்கொண்டு நீர் வில்லெடுத்துப் போர் புரிவீராகில் போனவர்கள் போக இருக்கிற நாங்களெல்லோரும் பிழைப்போம். பாண்டவர்களாகிய சத்துருக்களொருகாலும் வெற்றி பெறமாட்டார்கள். அதிரதர் முதல்வராகிய உம்மை நம்பியிருந்ததற்கு உம்மாலாகும் ஆகாதென்று இப்போதுதானே சொல்லிவிடும்" என்று விளம்பினன். இவ்வாறு துரியோதனராஜன் விளம்பிய அந்தச் சொல்லானது கர்ணனுடைய காதில் நாராசம்போலேறவும், உடனே மனங்கொதிப்பேற தேகம் படபடப்பேற கண்களிற்நீயேற வாயிலீயேறச் சத்துருக்கள் மலையேற கோபந்தலைக்கேற நாத்தழும் பேறக் கதித்துப் புகையுங் கோபக்குறிப்புடன் சொல்லுகிறான்—

"அம்புவியிற் கெடியோங்கிய செம்பொன் முடியினைத்தாங்கிய துரியோதன மகாராஜனே கேளும்! உங்கள் பாட்டன் பீஷ்மாச்சாரியர் அர்ச்சுனனை ஜயிக்க மாட்டாதவனென்று என்னை அர்த்தராத்திற் போட்டதும், அதற்கு நான் சபதங் கூறியிருப்பதும் உமக்குத் தெரிந்திருந்தும் எவ்விதத்தில் என்னை யுத்தஞ் செய்யச் சொல்லுகிறீர்? கொற்றவனே! உமக்கு நான் எப்போதும் வெற்றியைத் தருவதற்குச் சித்தமாயிருக்கிறேன். இந்த மொழியை நீர் சத்தியமாய் நம்பும். திரிபுவனங்களும் ஓடித் திரியும்படியாகிய தேரும், திசைகண் முழுவதும் இசையுடன் விஜயம் பெறத்தக்க வில்லும், அண்டகூடம் வரைக்கும் உண்டுமிழும்படியாகிய கணையும் நான் வைத்திருக்கிறேன்! இப்பவும் அந்த பீஷ்மாச்சாரியார் என்னைக் கண்டு ஏக்கங்கொண்டு போகும்படியாய் ஒரு விந்தை செய்கிறேன். அதாவது இந்திரலோகம் எமலோகம் பிரமலோகம் இவ்விடங்களில் என் கணைகளை விடுத்து, இவ்வமர்க்களத்தில் இறந்துபோன உமது தம்பிகளை இப்போதே உயிர்த்து வரச் செய்கிறேன். நாளைப்போரிற் பாண்டவரை மாளச்செய்து உலக முழுமையும் நீராள உமது சொந்தமாக்குகிறேன், ஆனால் பீஷ்மன் சாகிற வரையிலும் யுத்த முனையில் ஆயுதமெடேனென்று சொல்லிய சபதம் வீணாய்ப் போமே யென்று எண்ணிப் பார்க்கிறேன். ஆகிலும் ஆபத்திற்குப் பாபமில்லை. அதற்குகொரு சாக்கியமிருக்கிறது. அந்தப்படி பீஷ்மன் செய்வானாகில் நாளை இந்த கோரத்திற்கெல்லாம் பஞ்சாசதகோடி பூமண்டல முழுமையும் நாகக்கொடி பறக்கவும்

எங்கும் நாண்மணித் தோரணம் விரித்துச் சிறக்கவும், சந்திரபிம்ப மணிமுரசந் தயங்கவும், தரியலர்தலை நெறுநெறென்று மயங்கவுஞ் செய்கிறேன்" என்றான்.

வேந்தர் வேந்தனுகிய பாந்தளங் கொடியோன் இம்மொழி கேட்ட சந்தோஷத்தால் விம்மிப் புடைத்து விசனம் நீங்கி, "ஓ என் மித்திரனுகிய அண்ணனே! அஃதெப்படி ஜயம் பெறுவீர்? அதனை எனக்கு விவரித்துச் சொல்ல வேண்டும்" என்று கேட்க, சுத்தி முதற் புத்திரனுகிய கொடையாளன் சொல்லலுற்றான்:—

"ஓ கௌரவகுல முதல்வனே! ஞாபகமாய்க் கேளும்: இந்த யுத்தகளத்திற் கடல்போலிரைந்து நிறைந்திருக்கும் நமது படை வீரர்களுக்கு எதிராகச் சேனுதிபதியாகிய பீஷ்மன் வந்து நின்று, எல்லோரையும் நோக்கி, இரண்டு கரங்களையும் மேலே தூக்கித் தன்வாக்கினுல், 'ஓ வீரர்களே! பலம் பொருந்திய பாண்டவர்களை நான் ஜயிக்க மாட்டேன். இனி என்னுல் முடியாது.' என்று சொல்லிக் குப்புறக் கவிழ்ந்து விழுந்து வில்லை ஒடித்துப் புல்லைக் கடிப்பானுகில், காளைப்பொழுது விடியமுன் எழுந்து வந்து போர் புரிந்து உமக்குத் துன்பமும் பழிச் சொல்லும் வீணுய வைத்த துஷ்டப் பாண்டவர்களையும், அவர்களுக்குத் துணை வந்திருக்கிற கிருஷ்ணன் முதலிய தோன்றல்களையுந் தேவலோக போகத்தை அநுபவிக்கும்படியாய்ச் செய்து விடுகிறேன். நான் இதுவரையிலுஞ் சொல்லிக் கொண்டுவந்த வார்த்தையைப்போ லெண்ணுதீர். இதோ நான் யுத்தத்திற்குச் சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லவே துரியோதனன் முதலிய உரியோர் காதுகளில் தேவாமிர்தஞ் சொரிந்ததைப்போலாகிச் சிந்தை மகிழ்ந்து, சகுனியையும் துச்சாதனன் முதலிய தம்பிமார்களின் முகத்தையும் பார்த்து "ஓ எனது மித்திரர்களே! அங்கதேசாதிபர் சொன்னதைக் கேட்டீர்களா? தானும் பிழைக்கான் பிழைப்பவனையும் பிழைக்கவொட்டானென்னுங் கதையாச்சுது நமது பீஷ்மர் செய்திருக்குங் காரியம். ஆனுல் கர்ணமகாராஜன் சொல்லிய நீதி ஞாயமாயிருக்கிறதல்லவா? ஓ ஜய வீரர்களே! ஓ அதி சூரர்களே! அடா தம்பி துச்சாசனு! பீஷ்மா சாரியரிடத்திற்குப்போய் அங்கதேசாதிபன் சொல்லிய சங்கதிகளைச் சொல்லி, 'ஐயா! உம்மாலாகிலுஞ் செவ்வைப்படவேண்டும். பிறராலாகிலும் கண்மை யடையவேண்டும். இந்த இரண்டு மில்லாமல் திரண்டுவந்த சேனைகளெல்லாம் இறந்து நூறுபேரென்னுங் கணக்

கில் இருபதுபேர் குறைந்து, இப்படி நாளுக்கு நாள் நொந்து போகும்படியான காலம் வந்திருக்கிறதல்லாமல் வேறொன்றில்லை.

மேலும் (முகத்துக்கஞ்சி முறைமை தப்பினுற் குலத்துக் கீனம்.) என்பதுபோல் உம்மைப் பாட்டனென்று நம்பிப் பட்டங் கட்டிவைத்து, நான் கட்டமாய்ப் போவேனோ? மேலும் எந்தப் புண்ணியவானைக் கொண்டாகிலும் வெற்றி பெறுவதில் உமக்குச் சம்மதமா? அல்லவென்றால் நீரேயிருந்து முடித்துக் கொடுக்கிறேனென்று சொல்லுகிறீரா? எந்த விதத்திலும் ஜயம் பெறுவதற்கான வேறு வில்லாமல் இரண்டாட்டி லூட்டிய குட்டி என்பதுபோல் நான் கெட்டுப்போகவா? உமது இஷ்டந்தான் எப்படி யிருக்கிறது? இப்போதென்னசொல்லுகிறீர் என்று அவருடைய எண்ணத்தை அறிந்தேதாடிவா" என்றனுப்ப, அந்தகூணமே ஒப்பில்லா ஆலகால விஷச் செந்துவுக் கொப்பாகிய துச்சாசனனுனவன் ஒருகொடிப் பொழுதிற் பாசறைக்கு வந்து, வீரவாகை விற்பிடித்து நெருங்கிய வேந்தர்கள் நடுவில் அஞ்சுராணிபோல் நடுநாயகமாக நின்று நாளைப் போருக்கு வேண்டிய யுத்தியைப் பேசிக்கொண்டிருந்த பீஷ்மாச் சாரியரைக் கண்டு, கர்ணராஜன் சொல்லிய சங்கதியாவும் துரி யோதன மகாராஜன் சொல்லச் சொன்னதாகப் புகன்றான். அந்த மொழியைத் தன் பேரப்பிள்ளையாகிய துச்சாதனன் சொல்ல உரியோனுகிய பெரியோன் கேட்டுத் தன் கையினுல் வாயை மூடிக் கொண்டு, கக்கடக் கக்கடவென நகைத்து, 'அப்பா? உப்பில்லாமல் மூக்கலக்கஞ்சி குடிக்கிறேனென்னும் என்னுடையதுப்பற்றவீரத்தை நீங்கள் மெச்சும்படியாக நான் சொல்லி வயிறு வளர்த்து வாழுள் வைத்திருக்கப் போகிறதில்லை. ஆங்காலமெல்லாம் ஆச்சுது! போங்காலம் வந்து வாச்சுது! இன்றைக்கோ நாளைக்கோ சாங்கால நேரிட்டிருக்கிறது! இனி நான் உங்களிடத்தில் என் வீரத்தை யெடுத்துப் பேசுவதில் லாபமென்ன? ஆதலாற் பாண்டவர்களில் அர்ச்சுனனை வெல்லவாவது, கொல்லவாவது, என்னலாகாது. அந்த விஜயனுக்கு நானீடல்ல. ஆனல் விந்தையாகிய யுத்தங்க ளெல்லாஞ்செய்கிறேன். நாளைப்போரில் நமது அரசரிடத்தன் பில்லாத மகுடாதிபர் நூறுபேரை முடியறுத்து முடிவைக்கிறேன். ஓ என்பேரனே! அதைவிட்டு வில்லைத் தள்ளிப் புல்லைக்கவ்வி வீர மில்லையென்று சொல்லச் சொன்ன வாக்கியம் நல்லதல்ல. நானப் படி செய்யப்படாது. இப்போது நீங்கள் நினைத்த காரியம்

இதற்கு இரண்டா நாளையில் நிறைவேறும். அதற்கொரு குறை வில்லை! இவ்விரண்டுநாள்மாத்திரம் நீங்கள் மனம் பொறுத்திருக்க வேண்டும். ஓ குழந்தைகளே! அப்பால் உங்களை நாடாளவைக்க வரப்போகிறவர்கள் வரட்டும். நான் சொன்ன உறுதிவாக்கியப்படி ஐவரை ஜயித்து வெற்றிபெறுங் கைத்திறலைக் காட்டட்டும். அப்படி வெற்றி பெற்ற உத்தமருடைய பேருதவியால் நமது குருநாடும் சுற்றிலு நிறைந்த வளநாடும் உங்களுக்குக்கிடைத்து, நீங்கள் பட்டா பிஷேகம் பண்ணிக்கொண்டு, புத்ரமித்ர களத்ர சுற்றத்தாருடன் கலந்து, அரேகாளிருந்து மிகுந்த சம்பத்துடன் நீடூழிவாழக்கட வீர்கள்" என்று துச்சாசனனுக்கு விடைகொடுத்துத் தாமும் விசனத்துடன் போய்ப்படுத்து நித்திரையில்லாம லிருந்துகொண்டு அங்கதேசாதிபனுக்குந் துரியோதனனுக்கு முண்டான துற் புத்திகளை நினைத்து வருத்தமுற்றிருந்தார்" என்று வைசம்பாயனர் சொல்லிக்கொண்டுவந்தார். இந்த விர்த்தாந்தத்தைத் தம்பதி சமேதனைகேட்டுச் சகலவித உபசாரத்துடன் தன்னுடைய கர்மம் தீரும்படியாய்த் தானந் தியாகம் ஓமமுதலாகிய சகல நற்கிரி யைகளுஞ் சாங்கோபங்கமாக நடத்தி மேனடந்த ஒன்பதாவது யுத்தத்தையுஞ் சொல்லவேண்டும் என்னுயிர்த்துணையாகிய உயர்ந் தோனே என்று ஜனமேஜயராஜன் வணங்கிக்கேட்க, வைசம்பா யன முனிவர் மனமகிழ்ந்து சொல்லலுற்றார்.

எட்டாம்போர்ச் சருக்கம் - முற்றிற்று.

ஒன்பதாம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

போறு மூழ்கி மறைநூல் பிதற்றி மிடறும் பிளந்து பிறவித்
தூறாறு மாறு நினையாம லுங்க டொழிலே புரிந்த சுமடர்
ரோராறு பேத சமயங் களுக்கு முருவாகின்ற வொருவ
னீராறு நாம முறைசெய்து மண்கொண்டிடுவார்கள் காணு
மிமையோர்.

"அரச குஞ்சரம் படைத்த ஐயா கேளும்: எட்டாநாள் யுத்தத் தில் இரவி சாய்ந்த அந்திவேளையில் வந்து கூடிய இருட்டென்னும் பெண்ணைனவள், இருகண்ணு மிலான் பிள்ளைகளிற் பதினைந்துபேர் ஒரு கண்ணராகி உம்பருலகஞ் சென்றதைக் கேட்டழுங் காந்தாரிக்

தாயின் கலக்கத்தினுலும் அவர்களின் மனைவியரின் துயரத்தினுலும் உண்டாகிய உபத்திரவம் பொறுக்க மாட்டாமல், உலகம் மெய்க்க ஒப்புக்கு அழவந்த உடம்பை வருத்தாத ஓர் உத்தமியானவள் தலைமயிரைச் சுருட்டி முடித்துக் கொண்டு சாளரக் கதவுகளைத் திறந்துவிட்டுச் சாடையாய் ழுவிப் போகுந்தன்மையைப்போற் கிழக்கு வெளுக்கப் பார்த்து அடி கெட்டே னென்று சொல்லி ஓடினுள். அந்தச் சமயத்தில் புத்திசாலியாகிய ஒரு விவேக விற்பனன் வந்து, "ஆண்டாண்டுதோறுமழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ, மானிலத்தீர், வேண்டாம்—நமக்குமதுவழியே நாம்போமளவும், எமக்கென்னென்றிட்டுண்டிரும்" என்னும் சமாதான வாக்கியத்தைக்கூறி, அழுகின்றவர்களை அடக்கி ஓயவைக்க வந்தவனைப்போற் சூரியபகவான் கிழக்குத்திசையிற் றோன்றினன். உடனே கௌரவர் எழுந்து காலைக்கடனை முடித்துக்கொண்ட பின்பு, பீஷ்மாசாரியர் தமக்குச் சமானமாகிய அதிரதத் தலைவரும், சக்கர ரக்ஷகரும், இணைக் குதிரைகளும், மன்னர் மண்டலீகர் முதலிய நால்வகைப் படைகளுஞ் சூழ்ந்துவர, பஞ்ச மேளவாத்திய முதலாகிய விருதுந்தழைக்க, பாருங்குலுங்க காருங்கலங்க, பார்வதங்க ளெல்லாம் வேரறுந்தாட, தூளிபடலங்க ளெல்லாங் கண் மறைந்தோட, திக்குகளும், அஷ்டகஜங்களுந்தியங்க, சேடன் முதலிய பேர்களுமொடுங்க, திரண்ட சேனைகள் புரண்ட கடலெனப் பரந்து மிகுந்து குரு க்ஷேத்திரத்திற் புகுந்து கலத்தலும் என்ன வியூகங் கட்டலாமெனயோசித்து, வெற்றிலையினுருவைப்போன்று சத்துருக்களை வெல்லும்படியாகிய ஜெயபத்திர வியூகங் கட்டினுர். அஃதெப்படி யென்றல் வெற்றிலையைப் போற் சேனைகளை நிறுத்தி வைத்து நாகக்கொடியோனுகிய ராஜாதிராஜனை வெற்றிலைக் காம்புக்கு மத்தியிலிருக்கும் பெருநரம்புக்கு நடுவிலிருத்தி, அந்த நடுநரம்புக்குப் பக்கத்திலிருக்கும் மற்ற நரம்புகளுக்கெல்லாம் ஒரு கோடி ராஜர்களை நிறுத்தி அந்தச் சேனைகளுக்கு முனைக்காரராகப் பகதத்தன், சோமதத்தன், வாகுலீகன் இவர்கள் முதலிய பேர்களை யமைத்து, மற்ற வீரர்முதலிய கைக்காரரை அந்த வெற்றிலையின் ஆகிர்தியாகச் செய்து, பூமிகுலுங்கும்படியாய் அலம்புதன், அலாயுதன், முதலிய அரக்கரையெல்லாம் முனையாகப் போக்கி, யானை, தேர் குதிரை இவைகளைச் சுற்றிலும் வரம்பாக விடுத்து அடிக்காம்பில் சம்சத்தகர், மாளவர், சினர், சோனகர், திராவிடர், தெலுங்கர் முதலிய பேர்களைக் கூட்டிக் கேடயம்போற் கவிப்பா

யடைத்துத் தானுந் தூசிப் படை முனையில் நின்றூர் வல்லமை யுடைய மாளுபரண னென்னும் பீஷ்மாசாரியர்.

இப்பால் பாண்டவர்களுமெழுந்து நித்திய விதிகளை முடித்துக் கொண்டு, யுத்த சன்னத்தராகிநேற்றையப் போரிற் சடா சுரனுடைய குமாரனென்னும் அலம்புதனனவன் இராவாளுகிய தங்கள் பிள்ளையைக் கொன்றுனென்கிற மனஸ்தாபத்தை அகத்தில் நிறுத்தித் தூரியோதனனுடைய தம்பிமார்கள் பதினெட்டுபேரை மடித்து, அரக்கர் படைகளை யெல்லாமுடித்துப் பலபல அரசர் களின் ஆவியையு மழித்து, ஆரூப் புத்ரசோபங்கொண்டு தேரூதடி பட்டோட ஜெயங்கொண்டு நின்ற பீமசேனனும், தேவரின் பகை களைக்களைந்த ஜெயதீர விஜயனும், நகுலசகாதேவரும், சத்தியவிரத உத்தமராகிய தருமராஜனும் மற்றப் படைமன்னர் முதலாகிய பேர் கள் முன் பக்கங்களிலும் பின் பக்கங்களிலுங் கெருங்கிவர, இடக்கை உடுக்கை, தப்பட்டை, தாரை, பூரி, மேளம், முரசு முதலிய வாத் தியங்கள் ஆகாயமதிர முழங்கிவர, கொடி, குடை, சாமரம், பீலிக் குஞ்சம், மேற்கட்டி, மகரதோரணம் விநது, டால் என்னுமிவைக ளெல்லாம் மேக மண்டலத்தை யளாவி கெருங்கிவரப் புறப்பட்டு வந்தனர். காசாம்பூ மேனியையுடைய வாசுதேவன் போஜகுல கேச விசுவாசர்களுடன் பேசிக்கொண்டு யானை; குதிரை, தேர், பதாதிகள், ஆகிய இவைகள் துள்ளியோடி நடக்கும் வேகத்தாற் கொள்ளை யா கிய தூசுகளெழுந்து மாசுகள் மறையும்படியாக வெளிக்கொண்டு யுத்தகளம் வந்து சேர்ந்தார். சிவந்த பத்மராகமணிகளாற் செய்த மகுடமும், பெரிய பதக்கமாகிய மதாணிகளும், முத்துத் தொங்கட் டங்களும், குண்டலங்களும், வாகுவலயங்களும், பொற்றுமரை வாசி யாகிய மஹாலக்ஷ்மியும் பொருந்திய திருமேனியையுடைய அந்தப் புண்டரீகாக்ஷன் சேனுதிபதியான திஷ்டத்தூய்மனை யழைத்துப் பத்மராகவரை வியூகங் கட்டச் செய்து, வஜ்ராயுதனைப்போன்ற அர்ச்சுனனேறிய தேரிற் சாரதியாயிருந்தார். சேனபதியின் உத்தர வின்பேரில் இரண்டுபடைகளுங் கைகலந்து தொந்த யுத்தஞ் செய்ய லாளுர்கள்.

அலம்புதன் வதை

அந்த வேளையில் தேவேந்திரனும் தேவர்களும், ஆகாய முத லிய அகண்டமும் எட்டுத் திக்குகளும், அஷ்ட குலாசலங்களும், எட்டு நாகங்களும், படபடவென் றதிரும்படியாய் அலம்புத னென்

னும் அரக்கனனவன் அநேகம் இராக்கதப் படைகளுடன் ஆகாய மளாவிய தேரைச் செலுத்தி ஆக்கிரமித்துக்கொண்டு, வெற்றி மாலை சுற்றிய கொற்ற வெம்புயத்தைப் பெற்ற பீமசேனனுடனே போர் புரியும்படி வந்தெதிர்த்தான். அப்படி வந்தெதிர்த்த அலம் புதனை மல்யுத்தத்தாற் கொல்லுமென்று மனங்கொண்டு பீமசேனன் வர, அதை அந்த அலம்புதன் கண்டு, இந்த பீமசேனன் மல் யுத்தத் தாற் வெகு பேரைக் கொன்றிருக்கின்றான். நமது தந்தையாகிய சகடாசுரனையுஞ் சடாய்த்து விட்டான். நம்மையும் அப்படியே வேலை முடித்துப் போடுவான். ஆகையால் இவனுடன் மற்போர் புரியலாகாது. இவனுக்கதிகப் பழக்க மில்லாத விற்போற் புரிந்து இவனை வெல்ல வேண்டுமென்று பீமசேனனைக் கண் சிமிட்டாமற் பார்த்து, மீசை முறுக்கிக் கனைத்துப் பற்கடித்து " அடா பீம! நீ மற்போரிலுங் கதைப் போரிலுங் கைதேர்ந்தவனை யல்லது விற் போரிற் சிறிதுந் தெரியாத விழலப்பனே! அப்படியல்ல, விற்போரி லும் நான் வல்லவ னென்று சொல்லுவாயானால் இப்போது என்னைப் போற்றேரேறி வில் யுத்தஞ் செய்ய வாடா அந்தப் பண்டவாளத் தையும் அறிகிறேன்" என்று சொல்லி வெகுண்டு வில்லெடுத்து நாணி பூட்டுவதற்கு முன்னமே வஜ்ரக் கல்லுக்கொப்பாகிய புயவலி மையுடைய வாயுபுத்திரன் கார்முகமெடுத்து நாணி சேர்த்துக் கர்ண பரியந்த மிழுத்து, காளகோடி விஷாக்கினிக் கணைகளைக் கல் வருஷம்போல் வருஷித்து அலம்புதன் கைக்கொண்ட கனகலிக்கு மேலாகிய வில்லை மளுக்கென்று முறித்து " அடா அரக்கனே! மல் யுத்தத்தில் இடும்பனை, பகனை, ஒப்பிலாக் கீசகனை, தப்பிலி வேலை செய்த உன்னப்பனை ஒரு கைக்குத்தினாலும், ஒருகாலுதையினாலும், உடல் சிதையச் செய்த ஒருவனென்று நினைக்காம விருந்த ஒன்னைப்போன்று வளையும் உதவியற்ற வில்லில் வெல்ல வந்தாயே! உன் கை வில்லெங்கே? அடா துன்மார்க்கனே" என்று மேலுமேலும் நாலு கணைகளை விடுத்து உடலைத் துளைத்தான். அலம்புதன் ஆகாயத்திற்சென்று மறைந்து மீண்டும் பூமியிற் சுழன்று வந்து பலங் கொண்டிருக்குங் மந்தர மலைக் கொப்பாகிய கந்தர மலையென்னும் பர்வதத்தையும் பாரிய மரங்களையும் பிடுங்கி வந்தெ திர்த்துப் பீமசேனனுடைய தோளின் பேரில் வீசி யெறிந்தான். அப்படியாக வீசிய மலையு மரங்களும் பொடிப் பொடியாய்ப் போகும் படி வடிக்கணைகளால் மாற்றிப் பால சுப்பிரமணியக் கடவுள் கிரவுஞ் சகிரியைக் கிழிக்க விடுத்த வேலாயுதமென்று மேலோர்கள் சொல்

லும்படியாகிய ஒரு வேலைத் தாங்கிப் பூசித்து வணங்கி அபிமந்திரித்து விட்டான் பீமசேனன். அந்த வேலாயுதம்போய்ப் பட்ட மாத்திரத்தில் குமார ஸ்வாமியின் வேல் பட்டழிந்த சூரன் உடனே உருக்கொண்ட மாமரத்தைப்போல் இருகூறாய்ப் பிளப்புண்டு விழுந்தான் அலம்புதன்.

அப்போது பீமசேனன் கதையைக் கையிற் கொண்டு கரகரவென்று சுழற்றி அலம்புதனுடன் படைகூடிவந்த தொண்ணூற்று நாலாயிரம் அரக்கரும் பாறுபட்ட பாஷைகளையுடைய நூறுலக்ஷம் வடதேசத்து அரசரும் தலைகிழிந்து உடல் கிழிந்து அவர்கள் செங்கீ ரெல்லாம் தாரணியிற் சேறாய்ப் பெருக்கெடுத் தோடும் படியாகச் சாடினன்; அநேக உறுப்புக்களினால் மண்மேல் மூடினன். இப்படிக்கு எதிரும்போடிய அடித்து வெருவோர்கள் முடிய முடித்துப், பூமிகெடிய கடித்து உக்ர திண்ய னிவனென் றுரைக்குஞ் சிலாக்கிய அக்ரகண்யனென் றெவரையும் போக்கிய பீமசேனனுடைய வீரப்ரதாபத்தைக் கண்ட இரவு பகலில்லாத இந்திர லோகத்தி லிருக்கும் இமையா நாட்டத்தவராகிய தேவர்கள் எல்லாரும் ஒருவரோ டொருவர் "மூன்னுட் போரில் இராவானைக் கொன்ற அலம்புதனை பின்னுட்போரிற் பிறுண்டழியக் கூர்கொண்ட வேல்கொண்டு கிழித்தான் சத்தியதெறி யுத்தமனுகிய தருமராஜனுக்கிளைய-பீமசேனன்" என்று இரைந்து மதித்து விரைந்து துதித்தார்கள்.

இவ்விடத்தி லிப்படி யிருக்கச், காசி தேசாதிபதி, போஜ தேசாதிபதி, மாளவதேசாதிபதி, கலிங்கதேசாதிபதி, புளிந்ததேசாதிபதி, அஜபதி, கஜபதி முதலிய எழுபதாயிரம் அரசர்கள் ஒன்றுகச் சேர்ந்து ரதப்படை, யானைப்படை, பரிப்படை, பதாதிப்படை முதலியவைகளோடு, விற்படை, வேற்படை முதலிய படையுடன் பொங்கி அர்ச்சுனனை யெதிர்த்து அநேகங் கணைகளைத் தொடுத்து அகிலபுவனங்கள் யாவும் நடுங்க, நிகில சராசரங்கள் யாவுமிறக்க, மட்டில்லாத யுத்தஞ்செய்து நின்ற காலத்தில், சேவகன் செலுத்துந் தேரினிற் கிளர்ந்த வாசவன் மகனுஞ் சுவேத வாசியான் பிளந்த வித்தகர் தேகம் வெதுப்பிறை சாய்ந்து கொத்தழற் கணைகள் பற்றற மாய்ந்து, மற்றொரு பக்கத்திற் சுற்றி நெருங்கிய சேனைகளெல்லாம், வெற்றி பொருந்திய அவ் வீரவாகை விஜயன் சொரியுங் கணைகளாற் பற்றி யெரிந்து சாம்பராய் மடிந்தார்கள். இன்னொரு பக்கத்தில் துரியோதனன் சேனைகள் பீமசேனனுடைய கதாயுதத்தாற் காற்றிற் சிதறிக் கலங்குஞ் சருகைப்போற் பறந்து மடிந்தார்கள்.

பீஷ்மரோ டெதிர்த்து நின்ற சிகண்டியைத் துச்சாதனன் மூடுக்கி யோட்டுதல்

இந்தப்படி பீமசேனனும், அர்ச்சுனனும் நாலு பக்கங்களில் நால்வகைச் சேனைகளையும் நலியச் செய்யுங் காலத்தில், கங்காபுத் திரனுகிய பீஷ்மாசாரியர்கண்டு கண்கள் சிவந்து, முகங் கருகிக் கடுமைகொண்டு, பாரைக் கிழித்தோடுங் தேரைச் செலுத்திப் பாணங்களை வாரியிரைத்துப் பற்கடித்து முந்தினர். அதை இராஜபூஜ்யனுகிய தருமராஜன் கண்டு, கலங்கியோடுஞ் சேனை களைக் கையமர்த்தி, தன்னைச் சூழ்ந்த சதுரங்க சேனைகளுடன் பீஷ்மரைத் தகைத்து, வெற்றிமாலை சூட்டிய வில்லை வளைத்துப் பகழி மழைகளைப் பொழிந்து, அந்த பீஷ்மருடைய குதிரைகளுஞ் சாரதியுங் குழைந்து போகும்படியாய் அழுந்த அடித்தார். இவ்வாறு தருமராஜன் தூற்றிய பகழிகளைத் தன்பேரிற் படவொட்டாமல் தடுத்து, அவர் கைப்பற்றிய வில்லையு முறித்து, வீரதோரணத்தையு மறுத்தார். அந்தவேளையில் வீரபட்டந்தாங்கி யுலாவும் யானைகளும், வாயுவேகம் பிற்படத் தாவியோடுங் குதிரைகளும், மேகஞ் சிதையக் கிழிக்குங் கொடிகாட்டிய ரதங்களும், விதவிதமாகிய வீரர்களின் பேதங்களுமுடைய பாஞ்சாலன் திஷ்டத்தூய்மன், சிகண்டி, உத்த மோகன், உதார்மன், விகர்மன் முதலாகியபேர்க ளெல்லாரும் விரைந்து, பீஷ்மருக்கெதிரில் வந்து போர்புரிந்தார்கள். அப்போது சந்திரவட்டக்குடை யோங்கிய பீஷ்மாசாரியாரும், துரியோதன னுடைய தம்பிமார்களும், இசைகள்பெற்றுத் திசைகளெட்டிலு மிருந்து வந்திருக்கும் பல காவலரும் கோரிட்டுப் போரிட்டார்கள். அந்தவேளையில் பீஷ்மாசாரியார் தாஷ்டீகமாக வடிக்கணைகளை மந் திரபலத்துடன் வாரி விடுக்க, அதனல் தேர்களும் தேராளிகளும், யானைகளும் யானைவீரரும் குதிரைகளும் குதிரை வீரரும் வேற் படை விற்படை கதைப்படை வாட்படை இவை முதலிய படைக ளைத் தாங்கிய காலாளும் பட்டார்கள். அப்போது பாஞ்சாலர்களில் பீஷ்மர் விட்ட கணைகளுக்குத் தப்பிப்போனவர்களில்லை என்று தேவர் முதலாகிய யாவருஞ் சொல்லும்படியாய்ப் பிராணன் விட் டார்கள். சிலர் காயம் பட்டுப் புறமுதுகிட்டார்கள்.

இப்படியாக பீஷ்மாசாரியார் மூன்றாம் கணமாரி பொழிந்து வருங்காலத்தில், சிகண்டியானவன் தன்தேரெதிர் வீடுத்துப் பீஷ்ம ரையடித்து, "ஓ பீஷ்மனே! உன்னுடல் பூமியில் விழவும், நீ விண்

ணுலகங் குடியேறவும் ஒருகை பார்க்கவேண்டுமென்னும் ஆசை கொண்டு வந்தேன். இப்போது பாஞ்சாலர் பேரிற்காட்டிய சேவக மெல்லாம் என்னிடத்திற் காட்டு" என்று அதேகம் வீரவார்த்தைகளை இழிவாகப்பேசி, கார்முகம்வளைத்து கோர்முகமாகக்காய்ந்த தீக்கணை களைச் சிந்தினன். அந்தவேளையில் திரிலோகமுங் கலங்க மோகம் விளைக்கும் மன்மதனுடைய ஐந்துகணைகளுக்குங் கலங்காத பீஷ் மாசாரியார் தம்பேரில் விழும் பேதையின் ப்ராணத்திற் கிலக்காகிச் சிகண்டியை நோக்கி நகைத்து, அவன்பேரிற் பாணந்தொடுக்காமல் வில்லைக் கீழே வைத்துவிட்டு வெறுங்கையாய் நின்றார். ஜன்மாந் திர வினையைச் சிந்தையினினைந்து வருந்திக் கொண்டிருந்தார். அதைக்கண்ட துச்சாசனன் துயரங்கொண்டு சுடுசரங்களைச் சோனை மேகச் சொரிதலைப்போற் செய்து கோடைக் காய்ச்சலைப் போற் காய்ந்து பாஞ்சாலர் சோமுகர் முதலாகிய பல்லோருங் கெட்டழியப் படுத்தி மேகமளாவுங் கொடியை காட்டிய சிகண்டியேறிவந்த தேரையும் அவன்கைபிடித் தெய்யும் வில்லையும் பொடிப்பொடி யாய்ச் சிதறிப்போகும்படி சிதைத்தான். அந்தத் தெப்பலினல் தேகம்வருந்திக் காலோட்டமாயோடி, உதயகிரிச்சாரியி லொடுங்கும் இருளைப்போ லொளித்தான் சிகண்டியானவன்.

இந்தப்படி துரியோதனனுடைய தம்பி துச்சாசனன் சிகண்டி யை வென்று பாஞ்சாலப்படைகளைத் துரத்தி ஒருவர் போனவழி ஒருவர் போகாமற் பறக்கவடித்து வெற்றிபெறும்போது தமது வில்லையெடுத்துப் பிடித்து நாணி பூட்டினார் பீஷ்மாசாரியர். அந் தச் சமயத்தில் பீஷ்மருக்கு ஈடல்லாத சிகண்டியைத் துச்சா சனன்வென்று மேன்மை படைத்தானென்று தேவர்முதலிய யாவ ருஞ் சந்தோஷமடைந்தார்கள். அப்போது துச்சாதனனும் பீஷ்மரானும் பாண்டவச் சேனைகளும் பாஞ்சாலன்படைகளும் படாதபாடுபட்டுக் கெடுவதைப் பார்த்தன் கண்டு முகம் வியர்த்து, கண்ணனுடைய முகத்தைநோக்கி, பவனவேகத்திலு மிஞ்சிய ரதத் தைப் படைகளுக்கு நடுவில்விடச் சொல்லிச் சரமாரிபொழிந்து சாடுங்காலையில் சத்துருக்களியாவரும் பறந்து பறந்து தலைவிரி கோலமாய்ப் போய்விட்டார்கள். அப்படி அர்ச்சுனன் தொடுத்து விட்ட கணைகளினுற் பட்டுக்கெட்ட பேரைச் சொல்லுவதற்குப் பிரமாவானவர் பலகோடி நாவைப் படைக்காமற்போனுர். என் னுரு நாவினுற் சொல்ல என்தரமன்று. ஆனல் ஒரு கணக்குச்

சொல்லுகிறேன்! சேனையும் அரசனை வெற்றிமாலையும் வீரபட்டமு மணிந்த யானைகளும், குதிரைகளும், அழிந்து, அவர்களுடலி விருந்து வழிந்து இரத்தவெள்ளமோடிச் சமுத்திரத்திற் கலக்கவே, அக்கடலானது தீக்குணமுஞ் செங்நிறமுங்கொண்ட வடவாமுகாக் கினிபோற் பிரகாசித்தது. அப்படியானால் எவ்வளவுசேனை னிறங் திருக்கவேண்டும் இறைவனே?

சதானீகன் முதலிய எண்ணாயிர ராஜகுமாரர் வதை

இப்படியாக அர்ச்சுனன் பாணங்களினால் அழியாகின்ற சேனை களைக்கண்ட பீஷ்மராணவர் மறுபடியும் வில் காணியிழுத்துப் பகழிமாரி பொழிந்து, பாண்டவச் சேனைகளைப் பலபலவென்று கெல்லி யிலைபோலுதிர அடித்துச் சிதைத்த காலத்தில் உபபஞ்ச பாண்டவர்களும், தர்மராஜன் புத்திரராகிய சர்வதேவன், கமேடாற் கஜன், இவர்களும், அர்ச்சுனன் புத்திரராகிய அபிமன்னனும், ஈசு லன் புத்திரராகிய விஜயன், நிர்மித்திரன், இவர்களும் சகாதேவன் புத்திரராகிய விரசுகோத்திரனும், பாஞ்சாலன் பிள்ளைகளாகிய திஷ்டத்தூய்மன், சிகண்டி, சுமித்திரன், பிரியதரிசனன், சித்திர கேது, சுகேது, துவசேனன், உத்தமோசன், உதார்மனு முதலியவர் களும், விராடராஜன் தம்பியாகிய சதானீகன், சங்கன், வராககேது இவர்களும், கேசகன் பிள்ளை பிரிதீபனும், குந்திபோஜன் குமார் களாகிய மந்தன், சுமந்தன், தூமகேர்த்தி இவர்களும், மலையத்துவஜ பாண்டியனும், இவன் பிள்ளை பிரிதிபாண்டியன், ஜெயசேனன் இவர்களும் ஜராசந்தன்பிள்ளை சகதேவனும், சிசுபாலன்பிள்ளை துஷ்டகேதும், இன்னுமுள்ள கிராதர், அவுணர், ஆந்திரர், வடமர், புண்டரீகர், புருமித்ரர் முதலாகிய புத்திரவர்க்கங் களும் தேகராஜபுத்திரப் பெருக்கங்களும் ஒன்றுக எதிர்த்து, தங் கள் தங்கள் கைக்கிசைந்த ஆயுதங்களால் அடித்து, பிரபலமாகிய விற்கலைவலைத்து, கற்கலைப்பொழியுங் காளமேகம்போற் கமலாஸ் திரம் நாகாஸ்திரம், கருடாஸ்திரம், பிர்மாஸ்திரம், நாராயணஸ்திரம் உருத்திராஸ்திரம் முதலாகிய கணைகளைப் பொழிந்து, சிங்கக் குட்டி களெல்லாம் கிழச்சிங்கத்தைச் சுற்றி வளைத்துக்கொண்டதைப் போல் பீஷ்மாசாரியை வளைத்துக்கொண்டு, கரம், சிரம், கால் மேல் என்று ஒன்றுந் தெரியாமல் மூடுபனியைப்போல் மூடிக் கொண்டார்கள்.

பீஷ்மாசாரியானவர் திக்குமுக்கிட்டுத் தேம்பிச் செல்லெரிப்பி லகப்பட்டுக்கொண்ட செத்தையைப்போற் சோம்பி, "அடடா!! என்ன இந்த அறியாப் பையல்கள் கையி லகப்பட்டோம்" என்று சற்று நிதானித்துச் சாரதிக்குச் சமிக்ஞை செய்து, தேரை நெடுந்தூரஞ் செலுத்திக்கொண்டு போய்த் திரும்பி வந்து சிலையை வணக்கிச் சிலீமுகம் விடுத்து இளம்பஞ்சபாண்டவர் எதிரினிற்காமல் இனத்தோட அடித்து, பாண்டவர்களின் உபபத்தினி புத்ரர்களாகிய தேவகன் முதல் யாவருங் களைத்து விழும்படி பத்துப் பாணங்களைத்தொடுத்து, பிரியதரிசனன் சுத்திரகேது இவர்களிருவரும் விண்ணுலகேற வீரவாளி தாக்கி, சங்கனென்பவன் நிலத்தோடு சாயச் சாயகம் விடுத்து, பிரிதீபன் பிராணன் போனதும் போகாததுமாகப் புங்கம் விடுத்துப் புரட்டிச் சாய்த்து, மலையத்துவஜனை மழைப்பாணம் விடுத்து மடக்கி, ஜெயசேனனைச் செயித்து சோதிக்கனை தூவி, அவுணர்களை யடித்து ராஜபுத்திரர் முதலாகிய பேர்களையெல்லாம் ஒருகொடியில் நாசப்படுத்தி, திரிகாலவாசுதேவாள் சாத்தகி முதலாகிய யதுகுலத்தாயாதிகளை யெல்லாம் புறமுதுகிட்டோடச் சாய்த்து, இரவுத்ராகார உருத்ரமூர்த்தியைப்போல் ரதத்தைக் கரகரவென்று குயவன் திகிரி போற் சுழற்றிக்கொண்டுவந்தார்.

அக்காலையில் நகுல சகாதேவர்கள் இக்கோலாகலங்களைக் கண்டு, தாஷ்டீகமாகிய பீஷ்மாசாரியரைத் தகைத்து, ஏமாஸ்திரம் பாசுபதாஸ்திரம் வருணாஸ்திரம் மூள்ளம்பு கிளையம்பு துளையம்பு திருகம்பு கவ்வம்பு குதையம்பு புதையம்பு முதலிய பாணங்களை விடுத்து, பீஷ்மருடைய மேனியைத் துளைத்து வெலவெலக்கச் செய்தார்கள்; பீஷ்மர் வெகுண்டு, நகுலசகாதேவர்களுடைய தேர் குதிரை சாரதி வில் பாணம் வீரபட்டம் முதலிய எல்லாவற்றையும் இடியாஸ்திரங்களினால் அடித்து, இடித்து, ஒடித்து, பொடித்து, பாண்டவச் சேனைகளையும் சேனாதிபதியையும் படைவீரர்களையும் பறக்க வடித்தார். அப்பொழுது இராமமூர்த்திக்கினைய இலக்ஷ்மணர்க் கொப்பாகிய சத்தியவசன நித்திய விரத புத்திமானுகிய விராடராஜன் தம்பி சதானீகனுனவன் அவதிப் படுகின்ற தங்கள் சேனைகளைக் கண்டு, தனது தேரைச் செலுத்திக்கொண்டு படைவீரர்களும் பட்டவர்த்தனரும் படர்ந்து தொடர்ந்து நெருங்கும்படியாய்ப் பாரிய வில்லேந்தி நாணிபிகிந்து, எட்டுத்திசையும்

பம்பரம்போ லாடவும், அம்பர மனைத்துங் கூராழிபோலச் சுழலவும், பீஷ்மருடைய பனைக்கொடிக்கம்பம் முறிபட்டு விழும்படி யாகக் கூர்மைதாங்கிய அம்புகளும் பாணக்கொம்புகளும் விடுத்து அலக்கழித்து, அழிந்த தன் சேனைகளுக்குக் கடைக்கண்ணருளை காட்டிக் கனைத்துணையும் உயிர்த் துணையும்போல் இருந்து ஒரு கொடியில் யாவருக்குந் தென்புண்டாகக்கூட்டி, சத்துருக்களை யெல் லாங் காற்றினுல் மூண்டெழுங் கனல்போ லழித்து, பீஷ்ம ருடைய முனை முகத்தில் வந்து நின்று, வெகுகோடி வீரர்களையும், சேனைகளையும், யானைகளையும் வெதும்பச்செய்து, தனக்கொருவரும் நிகரற்றவனுகச் சமர் பூமியிலுள்ளோ ரனைவருந் தத்திக் கெட்டுத் தடுமாறச் செய்து வந்தான். அச்செயலை பீஷ்மர் கண்டு வெருண் டோடிய தன் சேனைகளைத் தடுத்து அரவக்கணையை யெடுத்துத் தொடுத்து அதிர்த் தெதிர்ந்து வரும்படியாகிய சதானீகன்றலையை யறுத்து அந்தரத்திலோடச் செய்து அரவக்கொடியோன் முதலா கிய யாவரும் புகழ்ந்து மகிழும்படியாய் வீராவேசங் கொண்டு நின்ருர்.

அப்போது பாண்டவச் சேனைகளும் பாஞ்சாலன் சேனைகளும், விராடன் படைகளும், யாதவபோஜர்தளங்களும், சதானீகனிறந்தா னென்று மெலிந்துவருந்தி வாடியோடினர்கள். அப்படி யிறந்த சதா னீகனுடைய தலையானது மேற்குத் திசையிற் றெறித்து விழுந்த தன்மையைப் போற் சூரியன் மேற்குச் சமுத்திரத்திலே போய் நுழைந்தான். இந்தப் பிரகாரஞ் சேனைகளெல்லாம் அழிந்து சதா னீகனும் விழுந்து, பகலோனு மறைந்துச், செவ்வானம்போல் இரத்த வெள்ளமுஞ் சிவந்து, இரணகளமும் இருண்டு போனபோது இந்த அமர்க்களத்தைக் கண்ட பாண்டவர் கும்புகளும், விராடன், பாஞ்சாலன் முதலிய மாண்டவர் கும்புகளும் ஒன்ருகச் சேர்ந்து, சதானீகனிறந்ததைப் பார்த்துப் பலவாருகச் சோர்ந்து " அந்தோ ! இதென்ன காரணம் ? இந்தப் பீஷ்மனுனவன் முதலுட்போரில் விராடனுடைய மூத்த பிள்ளையாகிய சேனுதிபதி யென்னுஞ் சுவேதனுயிரை வாங்கி விட்டான். இன்று யுத்தத்தில் அந்த விராட னுடைய தம்பியாகிய சதானீகனை அழித்துவிட்டான். இந்த மச்ச குலத்தவருக்கு இவனே எமன்போ லிருந்து மாய்க்கின்ருன். இது ஜன்மாந்திரப் பழியோ? அல்லது இதென்ன வழியோ !" என்று ஏங்கி எண்ணுபிர ராஜ குமாரர்களையு மின்று போக்கினனே யென்று அய

ரோங்கி, காலனை யொடிக்குங் கதிர்வேலைத் தாங்கிய காவலரெல்லாருங் கண் கலக்கி விராடராஜனுக்கு வேண்டிய தைரியங்களைச் சொல்லித் தேற்றி நல்லது இந்த மட்டும் போரை நிறுத்துங்களென்று பேரி முழக்கி வைத்து, புருவ நெரிய வெரிக்குஞ் சிவந்த கோபக் கண்களையுடைய திஷ்டத்தூய்மன் முதலாகிய புத்திர வர்க்கத்தாரும், மித்திர வர்க்கமாகிய நிருபர்களும், போர்த்திறத்திலே க்ஷாத்திர மேற்கொண்ட ஐவரும், ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியும், சஞ்சலத்துடன் தங்களுடைய பாசறை போய்ச் சேர்ந்தார்கள்.

இப்பால் திங்கட்குடை கவிக்க, செம்பொற்கவரி வீச, விருது கின்னங்களுத, பீஷ்மாசாரியரும், துரியோதன மகாராஜனும், தம்பியர் பலரும், சேனைகளும், மற்ற வீராதிவீர வேந்தர்களுந் திரண்டு வரும்படியாகப் பாசறைக்குப் போய்ப் பலவித ஜயங்களையும் பேசிப் பாட்டனுரைப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள். இந்த ஒன்பதாநாள் யுத்தத்தில் மடிந்த ரதகஜதுரகபதாதி முதலாகிய சேனைப் பெருக்கத்தைக் கண்ட பூதப்பிரேத பிசாசகணங்களும் நாய் நரிகளுங் கும்பலாகக் கூடிக்கொண்டு, கூடியவரையிலுந் தின்று களித்து ஜயம்பாடி, நமது வயிற்றை நிரப்பவோ இந்த உயிர்களைப் படைத்தான் பிரம்மாவென்று கொஞ்சந் துயரமும் வெகுவாகிய சந்தோஷமுமுடைத்தாய்ப் புதிதாய்ச் செல்வமனுபவிக்கப் புகுந்த திருடரில் முதற்றரமாகிய குருடரைப்போல் வேதாந்தம் பேசி, வீணுகிய டம்பங் கூறிக் காணுதுகண்ட சுக வாழ்விது வென்றிருந்தன. கேளும் ஜனமேஜய மகாராஜனே—என்று வைசம்பாயனர் சொல்லிக் கொண்டுவர, அவ்வரசனும் அவன் மந்திரிகள் முதலாகிய யாவருங் கேட்டு அகமகிழ்ந்து, அமுதகிரணகுலத்துதித்த அரசரானவர் தரும பத்தினியுடனெழுந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து, மாளிகைக்குட் புகுந்திருந்து மறுநாட் காலமே எழுந்து ஸ்நான சந்தி ஜபதப முதலாகிய நித்திய நைமித்தியவிதிக் கிரியைகளெல்லாமுடித்துக்கொண்டு, யாக மண்டபம் வந்து சேர்ந்து மகான்களுக்குள் மூத்தவராகிய வைசம்பாயனரைப் புகழ்ந்து போற்றி ஆசீர்வசனங் கொண்டு இந்துமரபிலுதித்தெழுந்த தாஷ்டீகராகிய எங்கள் பாட்டன் பீஷ்மாசாரியார் வசுபதமடையப்போகின்ற காளிது. ஆகையால் சித்த சுத்தியுடன் தான தருமஞ் செய்ய வேண்டு மென்றெண்ணிப் பெரியோர்களுக்கெல்லாந் தவிசளித்தல் கைகழுவ நீர்தரல் கால்கழுவ நீர்தரல் முக்குடி நீர்தரல்

ஸ்நானஞ் செய்வித்தல் வஸ்திரஞ் சாத்தல் மூப்புரிநூல் தரல் சந்தனம் பூசல் புட்பமணிதல் அக்ஷதைசாத்தல் விளக்கேற்றல் தூபங்காட்டல் கற்பூரமேற்றல் நிவேதனம் வைத்தல் பாக்கு வெற்றிலை அமைத்தல் மந்திரமலராலர்ச்சனை செய்தல் இவ்விதமாகிய பதினாறு வித உபசாரங்களும் அன்னதானம் வஸ்திரதானம் நவரத்னதானம் பொன்பாத்திரதானம் அஜதானம் கஜதானம் ரததானம் பூதானம் கோதானம் கன்னிகாதானம் கிரகதானம் சயனதானம் க்ஷேத்ரசாமரைதானம் பாதுகைதானம் இத்தியாதிசோடச மகாதானங்களும் ஆதுலர்க்குச்சாலை ஓதுவார்க்குணவு அறுசமயத்தாருக்குண்டி பசுவுக்கு வாயுறை சிறைச்சோறு ஐயம், திண்பண்டங்கல் அறவைச் சோறு, மகப் பெறுவித்தல் மகவுவளர்த்தல் மகப்பால் வார்த்தல் அறவைப்பிணஞ் சுடுதல் அறவைத்தூரியம் சுண்ணம் நோய்க்கு மருந்து வண்ணூர் நாவிதர் கண்ணுடி காதோலை கண் மருந்து தலைக்கெண்ணெய் பிறர்துயர்காத்தல் தண்ணீர்ப்பந்தல் மடம் தடம் சோலை ஆவுரிஞ்சுதரி விலங்கிற்குணவு ஏறு விடுத்தல் விலைகொடுத்துயிர்காத்தல் தர்ம கல்யாணமென்று சொல்லப்படுகின்ற முப்பத்திரண்டறங்களுஞ் சற்பாத்திரங்களுக்குக் குறைவறச் செய்து, புண்ணிய தேக கண்ணியனுகிய அந்த ஜனமேஜய மஹாராஜன் மேனடந்த பத்தா நாள் யுத்தத்தைக் கேட்க வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

ஒன்பதாம்போர்ச் சருக்கம் - முற்றிற்று.

பத்தாம்போர்ச் சருக்கம்.

கண்ணன் துதி

வலியி லன்று தந்தை செற்ற மைந்த னுக்கு வந்தபேர்
கலிவெலா மகற்று நாம நாலிரண் டெழுத்துடன்
பொலியு நாம மறைகள் சொன்ன பொருள் விளக்கு நாமமுன்
கலிய னெங்கண் மங்கை யாதி கண்டு கொண்ட நாமமே

வாக்கினற் சக்ரவாளத்தைப் போன்ற ஆக்ஞாசக்ரவாள் கொண்டாண்ட அரசனே, போர்க்களத்திற் பொருந்திய துரியோதனமகாராஜனுடைய நினைவைப்போலிருண்ட இருட் கூட்டத்தை நீடித்து நிற்கவொட்டாமல் தர்மராஜன் சத்தியத்தைப்போன்ற சூரியஞானவன் வித்துவான்கள் வாக்கினின்றும் பிரகாசிக்குங் கற்பனையலங்காரம்போற் கிழக்குத் திசையி லுதயமானன். உடனே பஞ்சசய

னத்திற் பொருந்தி நித்திரை நீங்கியெழுந்த குந்தி புத்திரராகிய தர்மராஜரானவர் காலைக்கடன் கழித்து யுத்தகாலந்தரித்து சக்கரதாரராகிய ஜனார்த்தனனுடன் பேசவேண்டிய வசனங்களைப் பேசிப் போர்த்திறங்கொண்ட பூபாலர் சூழ யுத்தசன்னத்தராய்ப் பொங்கியெழுந்து வந்து, தன்னைப் பணிந்த தம்பிமார்களுடன் புறப்பட்டு வருதலும் அவரோடு வந்த கடலோசையையும் காரோசையையும் கலங்கச் செய்யுஞ் சேனைகளின் பேரோசையும் தேவர்கள் செவிடுபடும் படியாய் முழங்கிய வாத்தியத் தொனியும் இமையவர் கண்கள் புதைத்து மெய்பதைக்கும்படியாய் அச்சேனைக் கும்புகளினு லெழுந்த புழுதித் தும்புகளும் மன்னர் மன்னராகிய துரியோதனனை முன்னதாகச் சென்று கண்டு இதென்னமேலை இனிக்காரியமில்லை யென்று அவனுடைய காதுகளை யடைத்துக் கண்களையு மறைத்த தைப்போற் கவிந்து கலந்து பறக்கும்படியாய்த் திரண்டு புரண்டு வந்து செறிந்தன. இவ்வாறு செறிந்த சேனைகளை யெல்லாஞ் சேனாயகராகிய திஷ்டத்தூய்மன் முன்னுட்கட்டிய பத்மாகவரை வியூகமே அக்காளுங்கட்டி அந்த வியூகத்தைச் சுற்றிலும் மதிற் சுவர்போற் படைகளை அமைக்க அண்டமுகடதிரும்படியாய்ப் பாண்டவச் சேனைகள் வெற்றிபெற நின்றார்கள். கௌரவப்படையின் சேனாதிபதியாகிய பீஷ்மாசாரிய ருதயத்தி லெழுந்து அரண்ய நெருக்கம்போன்ற கிரணப் பெருக்கங்களையுடைய சூரியபகவானைக் கைதொழு திருந்தபோது, வலம்புரிமாலை யணிந்த மகாராஜனும் அவன் தம்பிமார்களும் சகுனி சல்லிய திரிகர்த்த சிந்துதேசாதிபர் முதலாகிய படைத்தலைவரும் பீஷ்மாசாரியரைக் கண்டு வணங்கி, நாள்தோறும் அழைத்துக்கொண்டுபோகும் வழக்கப்படி அன்றைக்கும் வந்து சேனாதிபதியின் பாசறை வாசலில் இருபக்கத்திலும் மொய்த்து நின்றார்கள்.

இப்படியாக வந்து நின்ற அரவகேதனன் முதலாகிய அதிரத சமரத அரசர்களைக்கண்ட பீஷ்மரானவர் அதிசிக்கிரத்திற் சல்லடந் தொடுத்து, தட்டிகட்டி குச்சுவிட்டுக் கச்சைபிடுங்கி பொற்கவசம் மற்கவசம் சித்திரக்கவசம் வஜ்ரக்கவசம் முதலிய கவசங்களிறுக்கி, அண்டர்கோன் விதிக்கும் எண்டிசை மதிக்கும் விண்டலந் துதிக்கும் பண்பட்டிருக்கு மகரகுண்டல மணிந்து முத்து வடம் ரத்ன வடம் வஜ்ரவடம் உத்தரகஞ்சம் மோகன மாலை தும்பிப் பதக்கம் சரப்பணி இவை முதலாகிய பல ஆரங்களும்

தோளணி வாகுவலயம் கடகம் கங்கணம் விரற்சாடு கரச்சாடு மோதிரங்கள் முதலிய ஆபரணங்களும் கொத்துச்சித்திர வேலை யுடைய நவரத்னகஜித கிரீடமும், வீரபட்டமும் பட்டையரை ஞாணும் வீரகண்டாமணியும் அழகுக் கலங்காரஞ் செய்வதைப்போ லணிந்துகொண்டு கத்தி கட்டாரி சுரிகை வாங்குவாள் கதை சூலம் வேல் எழு மழு முதலாகிய தனுர்ப் பாணங்களுங்கொண்டு, விபூதி ரேகையுஞ் செந்தூரத் திலகமு மணிந்து, சுகந்த பரிமள மலர்த்தார் பூணந்து, தும்பைமாலைசூடிக்கொண்டு, அம்பைவிரத நிறைவேறுங் கால மிதென்று சம்பாரியைப்போல் இம்பர் நடுங்க உம்பரொடுங்க தும்புதொடங்க வம்பர்மடங்க சிங்கமடங்கல்போற் சிறந்தினி தெழுந்து, பங்கஜமென்முகம் பளபளத்தொளிர்ந்து வெள்ளைக்குடை வெண்சாமரை யானைக்குடாரி முரசு சக்கரம் கொடி தோரணம் சங்கம் இவை முதலிய சின்னங்களோடு, மந்திரியர் கருமாதிகர் தந்திரியர் கட்டியர் பட்டுவான்கள் வந்திப்போர் புகழ்வோர் சகுன நூல் பார்ப்போர் தூதுவர் பரதகாட்டியப்பெண்கள் இவர் கள் முதலிய அரச சின்னங்களுடன் புறப்பட்டு, இன்றை யுத் தத்தை இனிதாக முடிக்கிறேனென்று வீரப்பிரதாப தீரத்வங்கள் பேசி, பனைக்கொடி நாட்டிய தேரி லேறிப் பலருஞ்சூழப் போர் முகத்திற்கு வந்து, காணிபூட்டிய வில்லும் ஆணிப் பொற்கவசம் புனைந்த அம்பரூத்தூணியும், வெற்றியைத்தரும் வடிவாளும் சத்தியாற் சித்திபெற்ற கூர்வேலுமுடையவர்ய் முரசு வாத்திய முதலியவைகள் முழங்கவைத்துத் தம்முடைய சேனைகளை நேற்று வகுத்த ஜயபத்திரவியூகமாகவே இன்றுமமைத்துத் தூசி முனை யில் மாசிலாமனத்தோடு மகிழ்ந்துவந்து நின்றனர்.

இவ்வாறு வந்து நின்ற அந்தக் கங்காபுத்திரனைக் கருணை யணைலாகிய ஸ்ரீகண்ணன் கண்டு மனமகிழ்வு கொண்டு மதித்து முகமலர்ந்த காலத்தில் அதைப் பற்குணன் பார்த்துப் பரத்தாமனைப் பணிந்து, "இந்தப் பத்தாநாட் போர் முனையில் தேவரீர் களித்து மகிழ்ந்த காரணமென்ன? அடியேனுக்குத் தெரிவிக்கவேண்டும் ஸ்ரீ நாதனே" என்று இறைஞ்சிக்கேட்க, கண்ணன் "ஓ இந்திரன்மதலாய்! வேறோரதிசயமில்லை. இதோ யுத்தமுனையில் வந்திருக்குங் கங்கா புத்திரனுகிய தேவ விரதனுக்கு வானவர் வணங்கும் பழையவசு பதத்தை இன்றைக்குக் கொடுக்க விருப்புற்றிருக்கின்றேம். ஆகை யால் நெடு நாளையமனிதன் இந்தக் கர்ம பூமியை விடவேண்டிய

காலம் இன்று நேரிட்ட தல்லவா, என்று விந்தையாக நினைத்துச் சிந்தை களித்தோம். ஓ வீரமோங்கிய விற்புயகரனே! இனி நீ நாரி வாங்குதல் நற்செயல் நரனே'' என்று உரைக்கக்கேட்ட காலகேய நிவாதகவசர்களைத் துணித்துத் தேவர்களுக்குச் சீரும் சிறப்பும் ஜெயமு மளித்த விஜயகாண்டீப விற்றுங்கிய வீரன், பலம்பொருந்திய தேரின் மீது படபடா காரத்துடன் ஜெயம் ஜெய மென்று பறந்து முன்னே செல்லும்படியாகிய அநுமக்கொடி பெற்ற மேன்மையுற்ற தீரன், சூற்கொண்ட மேகம்போன்ற சுந்தரரூப மாரன், வனவாசஞ் செய்துவந்த மன்னர் மன்னனுகிய அர்ச்சுன மகாராஜன் உடனே இந்திர விமானம்போன்ற இரதத்தி லேறிக் கொண்டு தாசரதியென்னும் ஸ்ரீராமமூர்த்திக்கு ஒப்பாக விருந்தான். அப்படியிருந்த அர்ச்சுனனை ஸ்ரீராமமூர்த்திக்கு ஒப்பாக எப்படி சொல்லலா மென்றால் ஸ்ரீராமமூர்த்தியானவர் கடலைக் கடந்து அரக்கரை யழித்து, அமரரைக் காத்தபடி, இந்த அர்ச்சுனனுங் கடலைக் கடந்து தேவமாபுரத்துக் காலகேய நிவாத கவசர்களா கிய அரக்கரைக் கொன்று அமரரைக் காத்தமையாலும் ஸ்ரீராம ருக்குச் சீதை என்னுமோர் கொடி நிமித்தமாக அநுமார் முன் னின்றபடி இந்த அர்ச்சுனன் தேரிலுங் காந்தியுடைய கொடி நிமித்தமாக அநுமார் முன்னின்றபடியாலும் ஸ்ரீராமர் மேகம் போன்ற திருமேனியுடையவராயிருந்தபடி, அர்ச்சுனராஜனும் மேகம்போன்ற திருவுருவங்கொண்டமையாலும், ஸ்ரீராமர் சிறியதா யின் வாக்கின் நிமித்தமாய்ப் பட்டத்தை விடுத்து வனம்போய் மீண்டபடி, இந்த விஜயனும் பெரியதாயின்பிள்ளை நிமித்தமாய்ப் பட்டத்தைவிட்டு வனவாசம்போய் வந்தமையாலும் ஸ்ரீராம ஜெயமே ஜெயமென்று உலகத்தினர்சொல்லு மியல்பின்படி, விஜ யன் விஜயமே விஜயமென்று யாவரும்வியக்துகூறும் விசேடத்தி னாலும் ஸ்ரீராமர் வில்லை வளைத்துப் பெண்கொண்டபடி, இந்த அர்ச்சுனனும் வில்லைவளைத்துப் பெண்கொண்டமையாலும் ஸ்ரீரா மர் சிறுபோதில் விசுவாமித்திரருடைய சபதம் நிறைவேற்றி யாகத்தை முடித்தபடி, அர்ச்சுனராஜனும் சிறுபோதில் துரோண சாரியருடைய சபதத்தை முடித்தமையாலும், அவருஞ் செங் கதிர்க்குல மாதலினாலும், இவனும் வெண்கதிர்க்குல மாதலினாலும், அவருக்கு விஜய கோதண்டம் கையில் இருப்பதினாலும், இவனுக்கும் விஜயகாண்டீப மிருப்பதினாலும், அர்ச்சுனன் ஸ்ரீராமருக் கொப்பாய் நின்றானென்று சொல்லலுற்றார்.

இப்பால் அர்ச்சுனராஜன் அகங்களிகூர்ந்து, அருந்த கல்யா ணனுடைய அருண்முகநோக்கி, "ஓ என்னையனே! மூவுலகத்தா ராலு முறியாதவில்லும், அழியாதரதமும், மாளாத அம்பறாத்தூ ணியும், அசையாத அநுமத்வஜமும், சலியாத சுவேதவாம்புரவி யும் ஆகிய இவைகளெல்லாம் அக்கினிதேவன் கொடுக்கப்பெற்றிருக் கின்றேன். இதுவுமல்லாமல் இந்த அழியாதரதத்தைச் செலுத்து வதற்கு என்னையாளவந்த தேவரீரைச் சாரதியாகவும் பெற்றேன். ஆகையால் இப்பூமியிற்பொருந்திய அரசர்கள் யாவரானபோதிலும் தேவரானபோதிலும், இராட்சதரானபோதிலும், இன்னுமற்ற எவர் களானாலும், என்னுடன்வந் தெதிர்ப்பவர்களை இன்றையப்போரில் இறக்கச் செய்யாமற் பிழைக்கச் செய்யப்போகிறதில்லை. மலை யைக் குடையாகப் பிடித்த மாதவனே! அந்த வேடிக்கையை இன்று நீர் வியக்கப்பாரும். இன்றைக்குத் தேவரீருடைய அநுக்கி ரகத்தினா லுண்டாகப்போகிற என்னுடைய பராக்கிரமம் இலே சாகியதல்ல. களங்க ரகிதமாகிய மனமும் மிகுந்த உற்சாகமும் எனக்கு மேலிட்டிருக்கின்ற படியால், அந்தக்காலத்தில் என் தந் தையரானாலும் சகோதரரானாலும் பிள்ளைகளானாலும் பேரர்களா னாலும் பாட்டனர்களானாலும் பந்துக்களானாலும் குருவானாலும் இன்னமெவர்களானபோதிலும் இன்றைக்குக்கொல்லேனென்று ஒரு காலுஞ்சொல்லேன். தேவரீர் திருவாய்மலர்ந்தருளினாற் கண்ட துண்டமிரண்டாகக் கொன்றுபோடுவேன். ஓ முதன்மையாகிய தத்வஞான வேதாந்தப் பொருளை என் சிந்தை நிரம்பச் செவி வழி புகுத்து ஜனனமாண முதலாகிய தீவினைக்கட்டறுத்த செங்கண்மாலாகி, எங்கள் பங்குத் தெய்வமா யமைந்தமர்ந்த தேசிகனே" என்று வணங்கிச்சொல்ல, அதைக்கேட்ட மாயோன் மனமுவந்து பொன்மலைபோன்ற தேரைநடத்திப் போரை நடாத்து அர்ச்சுனவென்று தேவவிரத னென்னுங் காங் கேயனின்ற யுத்தபூமியிலே தேரைக்கொண்டுபோய் நிறுத்தினார். அப்போது அர்ச்சுனனுக்குப் பின்னல் அவ்விடத்தி னிறைந்துவந்த வெற்றியையுடைய கொற்றவரெல்லாருஞ் சுற்றிலுஞ் செறிந்து ஒன்றுபட்டுக் கை கலந்து எதிரியின் சேனைகளுந் தாங்களுஞ் சேர்ந்து போர் புரிந்தார்கள். அந்த வேளையில் அர்ச்சுனனவன் அவர்களையெல்லாம் அம்பரத்திலாட்டும் பம்பரம் போலாட்டி அவ்வி டத்தில் நிலைக்கவொட்டாம லோட்டி தீரபோஜரிற் சிறந்த வீரகேசரி போலிருந்து பீஷ்மரை வளைத்துக்கொண்டு பாதாதிகேசம் வரைக்

கும் பாணங்களை நிறுத்துப் பலபல திசைகளி னிற்குஞ் சேனைகள் வெலவெல வென்றசைவற்று விழும்படி பாராடப் போராடியபோது அப்பார்த்தன் முதலிய பல வீரர் தொடுத்த பாணங்களெல்லாம் பரம்படித்த சேற்றில் விதைத்த விதைபோலும் பள்ளத்தாக்கில் நட்ட நாற்றின்மடவுபோலும் பீஷ்மாசாரியருடைய மெய்முழுதுங் துளைக்கும்போது அவர் காவுலர்த்து நாபிவரண்டு கண்புகைந்து கை யசந்து கவலைப்படாத உள்ளமுகொந்து அவலப்படாத சிந்தையும் வெந்து மிகுந்த பனியில் முகங்கருகி வருந்தி நிறமழிந்து குவிந்து வாடிய தாமரைக்கமலம் போல் மதிமுகம் வாடி நின்றார்.

அந்தவேளையில் ஆயுதமுனைகள் கருகிப் புகையவும் யானை குதிரைகள் கண்ணீர் சொரியவும், அணிந்த மாலைகள் சருகாகவும் அலகை முதலிய வெதிர்ந்தோடவும் அம்பரத்திலுலாவுங் காக்கை கழுகுகள் அடித்து மோதிக்கொண்டு தேரின்மேல் விழவும் அந்த ரத்தினின்றும் உதிரமாரி அமோகமாக விரைந்து தூற்றவும் குறைக் கொள்ளிக்கட்டைக ளுதிர்ந்து குவியவும் கூக்குரலாக நாய் கரி கூவ வும் நீப்பட்டெரிந்து சேனைகள் வேகவும் திகிற்பட்டவர்களுஞ் சிந்தை தடுமாறவும் உள்ளம் பிரமிக்கவும், யுத்தஞ்சிரமிக்கவும் இப் படியாகப் பலவித துற்சகுனங்களைக் கண்ட சகுன நூல் வல்லோர் தடுத்தார்கள். அவர்களைப் பீஷ்மர் தடுத்து இந்தச் சகுனங்க ளெல் லாம் எனக்கு நல்ல சகுனமென்று மனந்தெளிந்து தமது பூர்வோத் தர சரித்திரத்தைத் தாமெண்ணிப் பார்த்து, தம்மை நம்பிய மித் திரர்களுக்குச் சதாகாலமு முதவி செய்து வந்த தாமரைமலர் போன்ற தமது கரத்திற் பிடித்த கணைகளைத் தொடுத்துப் பகைவர் விடுத்த அஸ்திரங்களை யெல்லாந் தடுத்து, பாண்டவர்களையு முக மாற வடித்து வருங்காலையில் துருபதையர் மச்சவாடர் கலிங்கேசர் சோனகர் கிஞ்சயர், காடர் கௌசிகர் சாலுவர் சீனர் முதலிய தேச பாஷைமன்னவர் வந்தெதிர்க்க அவர்களை யெல்லாங் கலகலக்கச் செய்து ஒருவர் போலவே அனைவரும் உடல் வருந்தி இறக்கும்படி யாகவும் முதுகிட்டோடும்படியாகவும், வின்னணி யிருக்கி யுருக்கி னார்.

இவ்வாறு பீஷ்மாசாரியர் முன்னேடியடித்த அடியில் சுத்த வீரர்களின் தலை துணிந்து பின்னேடி விழவும் அவர்களுடலானது முன்னேடி நடந்து கொடும்போர் விளைக்குங் குறைத்தலைக் கவந்தங் களுடன் கூத்தாடவும் இன்னுஞ் சில சூரர் இரண்டு பாதங்களு மறு

பட்டுப் போகச் சப்பாணிகளாய்க் குந்திக்கொண்டு பூமாலை சூடிய வில்லை வணங்கிச் சரங்களைப் பொழியவும் கொடியறுபட்டுக் குடை முறிபட்டுக் கோலொடிபட்டுக் கால்தறிபட்டு வில்லொடிந்து பல் லுடைந்து சரங் கொண்ட கரங்குறைந்து கரங்கொண்ட சர முறிந்து கலகலென்றெழுகய மறைந்து வெலவெலென்றொரு பயம் பிறந்து யாவருஞ் சோரி வெள்ளத்திற் சுழன்றலைந்து சிதைந்தார்கள்.

அல்லாமலும் விஷாக்கினி கொண்டடிக்குஞ் சுழற்காற்றிலகப் பட்டுழலும் புழுதிபோல் சரந் தொடுக்க வந்தவர் சரந்தொடுத்து வந்தவர், போர் கொடுக்க வந்தவர், போர் கொடுத்து வந்தவர், இவர்க ளெல்லோரும் மடங்கிப் பறந்தார்கள். பின்னுஞ் சிலர் இடிமுழக்கங் கேட்டுப் படியில் விழுந்திறக்கும் பாம்பைப்போல் தலையுடைந்திறந்தார் கள். மேலும் ஒருவனோடுவதைக்கண்டு ஏனோடுகிறீரென்று கேட்டுக் கொண்டு இருவரோடவும், இவர்களை இன்னுஞ் சிலர் வினவிக் கொண்டு முன்னும் பின்னுமோடும் அவர்களுடனோடவும் இந்த வேடிக்கையைப் பார்த்து நகைத்துக்கொண்டு ஓடிய பலபேர்களைச் சிலர் தடுத்தோடவும், தடுத்த பேர்களைப் பிடிக்கும் படியாய்ச் சிலர் அடுத்தோடவும் சிலர் ஆவிகுன்றிய பேரைக் கூவிக்கொண்டாடவும் இந்தப்படி யுத்தமுனையில் நிற்கப் பயந்தவர்களாய் யாவரும் ஓடியாடி யொழிந்தார்கள். இவ்வாறு வீரப் பகழிவிடுத்து அடித்து முடித்து வந்த வீரராகிய இந்த பீஷ்மாசாரியர் வில்லை வலத்து இன்று புரிந்த போராண்மையானது விஜயனிடத்திலு முண்டென்று என் றைக்காகிலு நினைக்கத்தக்க துண்டோ? ஓ வெண்கதிர்க்குலத்துதித்த வேந்தனே! மேலும் பீஷ்மாசாரியர் விசரிம்பித்து விண்ணு மண் ணுங் கண்ணுக் கொன்றுந் தெரியாதென்று சொல்லும்படியா யுத் தம் பண்ணி வரும்போது, அர்ச்சுனன் பேச்சு வைச்சது வைச்சதே தாகி அச்சுப்பதித்தாற் போலாயிற்று. அந்த வேளையில் துரியோ தனன் சந்தோஷமடைந்து,"ஐயோ! என் பாட்டனுகிய ஐயாவானவர் இப்படி இரண்டுகோழிகை யுத்தஞ் செய்தால் நானீடேறிப் போவே" னென்று கண்ணும் மனமும் களித்து, இரண்டு மகமேரு எழுந்ததை யொத்த தடம்புயவீர தாஷ்டீக முள்ள பீஷ்மாசாரியர் நிலைநின்று போர்செய்யும் முனை முகத்திற்குச் சோழராஜனும், கிருபாச்சாரியும், துரோணாச்சாரியும், அசுவத்தாமனும், ஜயத்திரதனும், திரிகர்த்த னும், துச்சாதனன் முதலாகிய தம்பிமார்களும், சகுனியும், பகதத் தனும், சல்லியனும் போய்த் துணை கூடி யிருக்கும்படி யனுப்பி

விட்டுத் தானும்போய் அவர்களோடு கலந்து மேகஜாலம் பொழியு மிடத்திற் குளிரும், காற்றும், இடியுங் கூடக்கலந்து வீசி அடிக்குந் தன்மையைப்போல் வந்துகூடி, மனத்திடங் கொண்டாடி இரதகஜ துரகபதாதியருஞ் சேர்ந்து தனஞ்செய னென்னுஞ் சிங்கத்தை வளைத்துக்கொண்டு வின்னணி யேற்றிச் சரமாரி தூற்றி வெகுண்டு போர் செய்தார்கள்.

அத்தச் சமயத்தில் சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவர்ணம் என்றுரைக்குஞ் சப்த மேகமுஞ் சமுத்திர ஜலத்தை உறிஞ்சுக்கொண்டெழுந்து வருந் தன்மையைப்போல் நிறங்கொண்ட விஜயனவன் தனக் கெதிரில் வந்து போர் புரிந்த வீராதிவீரர் யாவரையுங் கண்மூடிட்ட மிட்டுத் தன் கரத்திலே தரித்திருக்கும் ஒப்பற்ற கார்முகம் வளைத்து ஓரினமாகிய சரங்களை ஒவ்வொரு தடவைக்கு நூறுநூறு சரங்க ளாக வரிசை வரிசையாய் மாலிகாயோகம் பிடிக்குந் தன்மைபோல் விடுத்து அவர்கள் தொடுத்த கொடும் பகழிகள் யாவையுந் தடியடி போல் கொடியிற் பொடியாக்கிப் படியிற் படியச் செய்து முடியினை யுடையோர் முடிவினை யடைத்து மடியும்படியாய்த் தேருடனுதய மாகிய தினகரனைப்போற்றிரிந்து சேனைகள் முதலிய யாவரையு மடைகிடக் தெழுந்து பொரிந்து சீறுங் கருநாகம் போன்ற கணை களைத் தொடுத்துப் பிளந்து வந்தான்: அப்போது அவ்வர்ச்சுன னுடன் போர் புரியவேண்டுமென்று இச்சைகொண்டு நின்ற அரசர் களாகிய சமுத்திரஞ் சுவறிச் சேனை யென்னுஞ் ஜலசரங்களெல் லாந் தீயும்படியாகவும், ஆனை முதலிய மலைகள் சாயும்படியாகவும், இரைத்து வரும் சூறைக் காற்றைப்போலும், அந்தக் காற்றின் சகாய னாகி யெரித்துவருங் காலாக்கினியைப் போலும், கடவுண் மாருதி மைந்தனாகிய பீமசேனன், சதாயுதத்தைக் குகைக்கொண்டு திக்குத் தான் ஒருவனாகவே புகுந்து முடிகளுடன் சிரங்களும், கொடிகளு டன் உரங்களும், தீரமணிகளுடன் தோள்களும், வீரமணிகளுடன் தாள்களும், கவசங்களுடன் மெய்களும், கங்கணத் துவசங்களுடன் கைகளும், சிதைபட்டு அழிந்து வாடவும், முதுகிட் டொழிந் தகன்று ஓடவும், முடிக்கி யடித்து ஒடித்து முடித்து நடித்துக் கூத் தாடித் தடுக்கி விழுந்து அழியமாட்டினான்; மண்டை யுடைந்து உதிரம் வழியச் சிலரை யோட்டினான். காமதகனனென்னுஞ் சிவனுக் கொப்பானவனல்லவா பீமசேனன்?

இவையன்றியும் அதிரதர், மகாரதர், சமரதர் முதலிய அவரவ றேறிவரும் அணிமணிக் கொடிமுடியுடைய ரதங்களே ஆகாயத்தி லெடுத்தெறிந் தாடியும், யானைப்பாகர் முதலாகிய வீரருடன் யானை களின் இரண்டு கொம்பையுந் துண்டத்தையும் பிடித்துக்கொண்டு மண்டலாகிர்தியாய்த் தும்பியைத் தும்பிசுற்றி அம்பரத்தில் வீசி யோடியும், மல்லகதி, மயூரகதி, வியாக்ரகதி, வானரகதி, விடபகதி இவ்வைந்து கதியும் பிந்திப் போகும்படியாக முந்திப் போகும் குதிரை களேக் குதிரை வீரர்களுடனெதிர்த்து வானுலகவீதி வலம் வரும்படி யாய்ச் சுழற்றி விடுத்தும், வஞ்சக மனத்தில் வெஞ்சினங் கொண்டு வஞ்சினம் பேசி அஞ்சாமல் மிஞ்சி விழும்படியாகிய வாளரசுரேறி வரும் ரத கஜ துரகங்கள் சாயும்படியாகவும் தனது இடக் காலால் சிதைத்தும், வலக் காலா லுதைத்தும், வலக்கரத்தாற் குத்தியும் இடக்கரத்தா லெற்றியும் வாட்டிய போது (முதற்பட்ட மீன் முடை கொளும்) என்னும் பழமொழிக் கிணங்க, மதப்பட்டு வந்த படை வீரரெல்லாம் பீமசேனனுக்கெதிர் நிற்கமாட்டாமல் தடைப்பட்ட பாம்பைப்போல் பின்வாங்கி முதுகிட் டோடுவதைக் கண்ட வணங் காமுடியோனுகிய துரியோதன மகாராஜன் விசனமடைந்து கொந்து மிகுந்த கோபங்கொண்டு விற்றிறமையில் அர்ச்சுனனுக்கு இணை யாகிய பலவான்க ளென்னும் யானை வீரர் முதலானவர்களில் ஐந்நூ ருபிரம் பேரை பீமசேனன்பேரில் முடுகிவிடுக்க அவர்கள் யாவரும் ஏழுமேகமும் ஊழி முடிவிற் பொழிவதைப்போல் வாளிமழை, பாணமழை, சரமழை, சாயகமழை என்னும் இவைகளைப் பொ ழிந்து அக்ரமங் கொண்ட பராக்கிரம சாலிகளாய்த் தடுத்துப் போர் கொடுத்தார்கள். அந்த வேளையில் அக்கினிதேவன் காண்டவவன தகனஞ் செய்வதற்காகச் சாரதியா யமைந்த சக்ரதரன் தேரைச் செலுத்த திடவீர வில்லாளியாகிய விஜய னெதிர்சென்று நின்று விஜய காண்டீபங் கொண்டு அவரவர்கள் தொடுத்து விடுத்த கும்பு களாய அம்புகளுக்கு கோராக அத்தந்த அம்புகளைத் தொடுத்து அழித்துப் பின்னும் அவர்களெறிய யானைகளும், யானையின்மீதம் பாரிகளும் அம்பாரிகள் மீது பாவட்டாக்களும், குதிரையின்மீது கல்லணைகளும், கல்லணையோடு கடிவாளங்களும், கலங்கிப்பறக்கக் கணக்கற்ற கூர்ங்கணைகளைக் கை யோயாமல் வரிசையாகத் தொடுத்து நின்றான்.

இவ்விடத்தி லிப்படி யிருக்க, துரியோதனன் தம்பிமார்களில் துச்சாதனன் முதலிய ஐந்து பேர்களும் பீஷ்மாசாரிய ரிடத்தில் நின்ற வீரர் தவிர மற்றப் பூபாலரும், கிருதவன்மன், கிருதவீரியன் முதலிய கோபாலருந் தேரேறிச் சென்று தருமராஜன் முதலிய ஐவரையும் இன்றே வென்றிடுவோமென்று வில் வளைத்து நின்று அர்ச்சுனனையும் பீமசேனனையும் வளைத்துப் பற்பல வார்த்தை களைக் கூறிப் போர் புரியும்போது அர்ச்சுனன் பாணங்களினாலும், பீமன் கதையினாலும் தலைவிரிகோலமாய்த் தளர்ந்து செத்தவர்கள் போக மற்றவர் பின்கொடுத் தோடினார்கள். அப்படி யோடத்தக்க சேனைகளைப் பீஷ்மாசாரியர் கண்டு உள்ளம் வெதும்பிக் கண்கள் சுழன்று நெருப்பெழ விழித்து நெடிய வில் வளைத்து ஆலகாலம் போற் சீறி வருங்காலத்தில், ஆகாயத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்களில் அனலன், அணிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன் என்னும் ஏழுவசுக்களும், எட்டாவது பிர பாசன வசுவாகிய பீஷ்மாசாரியரைக் கண்டு வருந்தி மனஸ்தாபங் கொண்டு, "எங்களுக்கு எஜமானுகி வசுபதத்தில் இருந்த நீர் பூலோ கத்தில் வந்து எத்தனை காளாய் விட்டது? ஐயா! நீர் அப்பதத்திற்கு வந்து சேரும்! உமது பூர்வோத்திரத்தை உற்று நோக்கிப் பாரும்" என்று சொல்லவே அந்த தேவரகசியத்தைப் பீஷ்மர் கேட்டுக் கண் களி கூர்ந்து முகமலர்ந்து, நமக்கு இதுதான் கடைப்படி காலமென் றுணர்ந்து வேறு கருதாமல், கவலாமற், கரையாமற், கலங்காமற், கார்முகம் வாங்கிப் போர் முகங் குறுகி, வெற்றிமாலைபூண்ட வித்த கரையும் சுற்றிலுஞ் சூழ்ந்த மற்றெவரையும் உத்தமப் பாண்டவ ராகிய கொற்றவரையுந் தகைத்துக் கொண்டு யாவரையுங் கோலா கலமாக்கிப் பலவிதமான பாணங்களைப் போக்கி ஒவ்வொருவரையுங் கூறுபடுத்தி மாமிசமழியத் தூறுபடுத்திப் பல துவாரங்களாக ஊறு படுத்தி உதிரவெள்ளத்தை ஆறுபடுத்தி முகம் விட்டோட மாறு படுத்தி, தருமன் முதலாகிய ரதத்தலைவர் யாவருந் தளர்ந்து வருந் தச் செய்து ஒருவரையும் விடாமல் தன்னுடைய பாணக்குறி யானது எல்லாருடலினு மிருக்கக் காட்டிக் கொடிமர காட்டி எவர் களையும் வீட்டினார்.

அப்போது எத்தனைகோடி முடித்தலைகள், எத்தனைகோடி தோள்மலைகள், எத்தனைகோடி கரக்கமலம், எத்தனைகோடி யுடற் சுமைகள், எத்தனைகோடி அவயவங்கள், எத்தனைகோடி குழி

ங்கிணங்கள், எத்தனைகோடி குடல்வகைகள், எத்தனை குவியல் மாமிசங்கள், எத்தனை வகைகள் ரம்பினங்கள், எத்தனைகிரிக ளெலும்புவகை, எத்தனைகோடி அடித்தொடைகள், எத்தனைகோடி மணிக்கால்கள், இத்தப் பிரகாரம் இரணகளத்தில் அன்று துண்டித்து விழுந்த உடற்சின்னங்களை எத்தனை கோடியென் றியம்புவேன்? இன்னுங் கிழிந்து பிளந்த மார்புகளும், வெருண்டு களர்ந்த மனங் களும், கரைபுரண்டோடும் இரத்த வெள்ளமும், கெரிந்து முரிந்த எலும்புகளும், அழிந்து சிதைந்த கொழுந் தசையும், நிமிர்ந்து வலிக் கும் ரம்புகளும், சரிந்துகிர்ந்த பெருங்குடலும், துண்டமிரண்டா கிய சவங்களும், கடைபுரண்டு திரண்டு தெரியும் புருவங்களும், தணல் விட்டெரியுங் கண்களையுடைய முகங்களும், இடிந்து ஒடிந்த தொடைகளும், இறந்து மறந்த வீரப்படைகளுமா யெல்லாம் அழிந்த போது, சோமகர், மச்சர், மராடர், துருபதேயர், சோழர், சேரர், பங்காளர், குலிங்கர், சிஞ்சயர், பப்பரர், மகதர், குகுதர், மகுடவர்த்தனர், பட்டவர்த்தனர், மண்டலீகர் முதலாகிய பாண்ட வச்சேனைகளெல்லாம் பீஷ்மரிடத்தில் எதிர்த்துப் போர்புரிந்து, இறந்தவரன்றி இருந்தவர்களில் வாயுவுஞ் சூரியகிரணமும் மருவாத வூருமில்லை; இவருடைய கணைக்குட்கலங்கி மயங்காதபேருமில்லை. இத்தப்படி பீஷ்மாசாரியர் பாண்டவப் படையுட்புகுந்து கொல் லுந் தன்மையைப் பார்த்தாமன்கண்டு, இரக்கமற்றுக் கோபித்து, வெண்ணெயுண்ட செம்பவளவாய் மலர்ந்து அர்ச்சுனனைநோக்கி, "என் மைத்துனு! இன்னுஞ்சற்றுநேரம் நாம் சும்மாவிருப்போ மாகிற் குருசேஷத்திரத்திற் கூடிய நமது படைகளெல்லா முடிந்து போம். நாமுங் குறைவுபடும்படியாயிருக்கும். ஆகையால் நாம் முரண்டி எதிர்சென்று இத்தக் காங்கேயனை இன்று முடித்துப்போடு வோம். அப்படி முடிப்பதற்கு இதுவே கல்லகாலமாயிருக்கிறது" என்று சுவேதவாம் புரவிபூட்டிய சயத்தனத்தைத் தடதடவென்று செலுத்திப் பீஷ்மருக் கெதிராகக் கொண்டு போகவே, பாரிய காண்டீபம் வளைத்துக் குணத்தொனிசெய்து, அழகாகிய பாணங் களை யேற்படுத்தித் தரந்தரமாக முடுக்கிவிட்டான் தனஞ்செயன். அந்தக் கணைகளையெல்லாங் காங்கேயர் தவிடுபொடியாக்கி அவனு யுதத்தையுஞ் சாரதியின் தேகத்தையுஞ் சல்லடைக் கண்ணுக்கித் தனிச்சிங்கம் போன்று திரிய அதை அர்ச்சுனனுணர்ந்து சஞ்சலப் பட அப்போது பக்தவத்சலனாகிய பகவான் சொல்லுகின்றார்—

கிருஷ்ணர்ச்சுனர் பீஷ்மருக்கெதிரிற் சிகண்டியை விடுத்துச் சமர்செய்வித்தல்

"ஓ அர்ச்சுன! தயிலமற்ற தீபம் அத்தயிலத்திலே தோய்ந் திருந்த வத்தி யெரிந்து ஒளியெழுந் தணைவதுபோல் முடிவுகாலங் கொண்ட உங்கள் பாட்டனுகிய முதியோன் பதை பதைக்கின்றான்; ஆகையால் வேறுக எண்ணவேண்டாம்" என்று சொல்லி மண்டலம் விண்டல மொன்றுபடச் சுழலவும் தொண்டர்கள் முதலிய அண் டர்க ளுழலவும் புண்டரீகன் முதற்கண்டவ ரேங்கவும் கொண்டலா கிய ஏழு மேகமும் இடித்து முழங்கியிரைத்து பின் வாங்கவும் வேலை யேழும் அலையெறிந்து மறிந்து விழுந்து எழுந்தலையவும் ஸர்வ ஸம்ஹார ஜலப்ரளய ஊழிக்காலஞ் சார்ந்ததென்று தானவர் முதலிய வானவருலையவும், திக்கெட்டும் விக்கிட்டுச் செவிடுபட்டுப் போகவும், பேரண்டங் குலுங்கவும் பிரம்மாண்டங்கலங்கவும் சக்ர வாளத்தகடு தத்தளிக்கவும் உக்ரவீரபத்ர ரெக்களிக்கவும் தனபதி யுல கஞ்சாயவும் சந்திரசூரியர் கதியோயவும் தானவரடங்கிமாய வானவ ரொடுங்கித்தேயவும் திருவிக்கிரமராகிய ஸ்ரீ அரிபரந்தாமன் பரப்பிர மன் பக்தவத்சலன் பக்தபராதீனன் பங்கஜ பாதன் பரமபதநாதன் ஜக தீசன் ஜகத்ரக்ஷகன் ஜகந்நாதன் ஜநார்த்தனன் ஸ்ரீயப்பதி ஸ்ரீதரன் ஸ்ரீநிவாசன் ஸ்ரீநாதன் மாதவன் வாசுதேவன் கேசவன் என்று சொல்லும்படியாகிய பல்லாயிரங்கோடி நாமங்களையுடைய கிருஷ்ண தேவரானவர் பீஷ்மருடைய போரைக்கருதி, இவனையின்றுகொன்று மேலுலகத்திற்கு அனுப்பவேண்டுமென்று கொண்ட கருத்தின்படி தமது திருக்கரத்திற் பாஞ்சஜன்யத்தை யெடுத்துப் பவளமாகிய திரு வாயில் வைத்து, திம்திம்திம் கிர்தக, பம்பம்பம் கிர்தக, பொம்பொம் கிர்தக, பொம்மென முழக்கினர். அக்தவேளையில் திடதீரமேரு புயகாத்திர தாஷ்டீகராகிய பீஷ்மரும், இதர சேனை வீரர் களும், சங்கத்தொனிகேட்டுத்தயங்கி, அங்கத்தைவிட்டு ஆத்மம் வெளிப்படும்படியாய் மயங்கி அல்லலுற்றார். அப்போது இரண்ட ணிப்படையிலுமிருந்த அதிரத அரசர்களுடைய சங்கநாதம், சிங்க நாதம், தோற்கருவி, தூலைக்கருவி, நாட்புக்கருவி, மிடற்றுக்கருவி, கஞ்சக்கருவி முதலிய வாத்தியங்களெல்லா முழங்கிக் குமுறும்படி யாக வீராவேசங்கொண்ட அர்ச்சுனராஜனவன் தனது தேவதத் தத்தைப்பூரித்து, நால்வகைப் படைகளுங் கலந்துவருஞ் சேனை மண்டலங்களுடன் சிகண்டியைப் பீஷ்மருடைய கண்களுக்

கெதிராய் முன்னணிமுனையிற் கூட்டிக்கொண்டுபோய், புராதன மாகிய உலகம் இன்று பொன்றுமென்று பேசிக்கொள்ளும்படி போர்புரியச்செய்தான்.

இவ்வாறு ஆண்டொழின் மைந்தனுகிய அர்ச்சுனன் செய்த ஏற்பாட்டின்படி சிகண்டியானவன் கூசாமனின்று, கொடுமரமாகிய வில்லை வளைத்து, கொடுமைகொண்ட கொலைப்பகழிகளினுற் கோமா னுகிய பீஷ்மரை யடித்தான். இப்படி அநேக அஸ்திரங்களினுல் அடித்த சிகண்டி நிற்கு நிலையை பீஷ்மர் கண்டு குளிர்ந்த நகை செய்து, அன்று அம்பையானவளுடைய பகை யின்று முடியவந்த தென்று தம் கரத்திலிருந்த பாணங்களைத் தேரின்பேரில் வைத்து விட்டு, நிஷ்டா நிஷ்டரைப்போல் வெறுங்கையோடிருந்தார். அப்போது அச்சிகண்டியானவன் கை யோயாமல் அஸ்திரங்களில் அங்கக் துளைபட அடித்தபோது, பேரப்பிள்ளையாகிய துச்சாதனன் கண்டு மனந்தளாமற் பெருங்கோபங்கொண்டு போய்ப் பற்பலவித மாகிய பாணங்களைவிடித்து, அடா பாவியென்று பல்லைக்கடித்து வில்லைமுறித்து, அவன்மெய்யையுந் துளைத்து, அவனேறிவந்த தேர் குதிரை சாரதி முதலியவையோடு குடை முதலிய யாவற்றை யும் அழித்தான். அப்போது அந்தச் சிகண்டியானவன் சாகப்பயந்து யுத்தமுகம் விடுத்துத் தான் பிறந்து வந்த பெண்மையா திருப்பதி னுல் வந்தவழியின்மேற் சிந்தைகொண்டோடினுன். அந்தவேளையிற் சந்தனு குமாரனுகிய பீஷ்மாசாரியர் ஜாக்ரதையாய் மறுபடியும் வில்லைப்பிடித்து காணியிறுக்கி, மின்னலாஸ்திரம் இடியாஸ்திரம் முதலியவைகளைத் தொடுத்து, பாண்டவர் கட்டிய வியூகத்தைப் பறக்கவடித்து, பாஞ்சாலக் கும்புகளைப் படுபாழாக்கி, விபற்சென் னும் விஜய ராஜனுடைய மேனிமுழுமையும் வேத்திரநிகைத்து மெய் வாய் கை கால் இவைக ளாடவொட்டாமற் செய்ததுமன்றி, அவன் தேர்ப்பாகனுகிய செங்கணெடுமாலுடைய கருங்கடலும் கருத்தமேகமும், காசாம்பூவும், கருமணியும், கறுத்தமையும் கருவிள மலரும் கலந்து பரந்து சிறந்திருக்கு மேனியிற் காலாக்கினி உரு முகக் கணைகளைப் பொழிந்து, கால் முதற்சிரம் வரைக்குந் துளைத்து, செம் பவளமும் செம்முருக்கின் மலரும், செங்காயும், செல்வல்லி யும் நிகராகும்படியாய்ச் சிவக்கச்செய்தார்.

அந்தச் சமயத்திற் பாண்டவச் சேனை வீரர்கள் திக்கு முக்கிட்டோட, தேவேந்திர குமாரனும் திருமாலுஞ் சற்று நேரஞ்

சித்தப்பிரமை கொண்டிருந்து, உடனே மனந்தேறித் திடங் கொண்டு, முன் வந்து நின்று அடிபட்டோடிய சிகண்டியைப் பின்னும் அழைத்துக்கொண்டுவந்து, அவனுக்கதேகம் உறுதிகளையும் உபாயங்களையுஞ் சொல்ல, அந்தச் சிகண்டிக்கு மேற்றுணையாகத் தாங்க ளெல்லோரும் அடுத்துச் சமீபத்திலிருந்து பூசல் நடத்தியபோது சிகண்டி யானவன் அவ்விடத்தில் நிற்க மாட்டாற் திரும்பியோட நினைவுகொண்டிருக்குந் தினத்தைத் திருமால் கண்டு "நீ யொன்றுக்கும் பயப்படாதே! அஞ்சாதே! ஓடாதே! வாடாதே! உனக்குப் பக்கத் துணையாக நானிருக்கின்றேனென்று உண்மைவாக்கிய உறுதிகூறி, கூர்மையாகிய கொழுங்கணைகளைக் கொண்டல் போற் பொழியச் செய்ப, அர்ச்சுனராஜன் அவனுக் கண்டையிலிருந்துகொண்டு, அக்கினிதேவ னளித்த காண்டீபத்தை வளைத்துச் சண்டமாருதம்போற் செல்லும்படியாகிய தீமுகப் பாணங்களைச் சிகண்டிதொடுக்கும் அம்புகளுடன் இதுவோ அதுவோ வென்றுன்னும்படியாகப் பேதமில்லாமற் கலந்து, வேதமந்திரம் விளம்பி விடுத்தான். அப்படி விடுத்தமாத்திரத்தில் காண்டீபத்தை விட்டுப் புறப்பட்ட அந்தப் பாணங்களெல்லாம் பஞ்சபாணத்திற்குத் தப்பிப் பிழைத்துக்கொண்டிருந்த விவேகமுள்ள பீஷ்மருடைய பொன்மலை போன்ற அருமைத் திருமேனி யெல்லாஞ் சிறுமைப் படும்படியாகத் தைத்துத் துளைக்கும்போது, மேலுமேலுஞ் சில அர்த்தசந்திர பாணங்களை விடுக்க, அந்தப் பாணங்களும் போய்க் கரகரவென்றுருவ, இவ்வாறு வந்த பாணங்களெல்லாஞ் சிரத்திலும் கரத்திலும் நெஞ்சிலும் மார்பிலும் புகுந்து பின்புறத்திலும் தடாரித்து வருத்தப்படுத்தி வாட்டிச் சாளரத் துவாரம்போற் சரீரத்தை யெல்லாஞ் சந்தாக்கின.

பீஷ்மர் பூப்பரிசமாய்ச் சயனித்து அருகிருந்த பௌத்திரருக் கறிவுறுத்தல்.

அப்படி சந்தாக்கிச் சாரைப் பாம்பைப்போற் சரசரவென்று செல்லுகின்ற பாணங்களைப் பீஷ்மர் கண்டு, "இதுவரையிலுஞ் சுத்த வீரனென்று பிழைத்த நான் பெண்பாலாகிய ஒருவன் கணையிலிறக்கும்படி சேரிட்ட தல்லவா?" என்று ஊழை நினைத்துச் சற்று நேரந்தாக்கப்பட்டு நமக்குச் சமானமானவன் கையாலிறக்கப் பாக்கியம் பண்ணுமற் போனோமே" என்றெண்ணி, "நல்லது இப்போர்ப்பட்ட பாணந் தொடுக்கும் வல்லபம் இந்தச் சிகண்டிக்கு எப்படி

யுண்டாகும்? இவன் விடும் பாணம் நமது தேகத்தை இவ்வளவு வருத்தப்படுத்தமாட்டாதே! ஆகையால் இதைப் பரிசோதிக்க வேண்டும்" என்று தம்முடைய மார்பிற்பட்ட அர்த்தசந்திர பாணத்தைப் பிடித்து, அந்தப் பாணத்தின் அடியி லெழுதியபேரைப் பார்க்கும்போது தனஞ்செய னென்றெழுதி யிருப்பதைக் கண்டு, "நாள் செய்த தவத்தின் வாழ்வே வாழ்வு" என மனகிழ்ந்து உடலபிமான மென்பதை உதறி கிரியாண வைராக்கிய தீக்ஷை வகித்துப் பரிசுத்தவான்மா பிரியும்போது பூப் பரிசமாய்த் தர்ப்பசயனஞ் சயனிக்கவேண்டு மென்று சான்ரூருரைத் திருக்குந் தன்மைப்படி தாம் ஏறி யிருந்த இரதத்தை விட்டு இறங்கி மிகுந்த இளைப்பினை யுடையவராய்ப் பூமியிற் சுந்திரகலை பொருந்தச் சயனித்துக் கொண்டார்.

இவ்வாறு சயனித்துக்கொண்ட ஆண்சிங்கம் போன்ற பீஷ்மர் அரசர்க்கரசனுகிய துரியோதனனுடைய தம்பிமார்கள் சமீபத்தில் கின்று இரங்குகின்றதைப் பார்த்துக் கையமர்த்தி "அப்பா போப் பிள்ளைகளே! நீங்கள் விசனப்படாதீர்கள்! நம்மாற் கூடியவரையிலும் போர் புரிந்து அநேகங்கோடி அரசர்களையும் படை வீரர்களையுங் கொன்று அவர்கள் தொடுத்த பாணங்களினுல் நமது படைகளும் நாமும் நொந்தோம். இவையன்றியும் எனக்குப் பகையாக ஏற்பட்ட அம்பை யென்பவளுடைய பவுருஷம் நிறைவேறுங் காலமும் நெருங்கியபடியால் இனிமேலென்னை நம்பவேண்டாம். இதுவரையிலும் இன்றைய யுத்தத்தை கிறுத்தி அதிசீக்கிரத்தில் உங்கள் தமயனுகிய துரியோதன மகாராஜனை யடுத்து, அவனுடைய பாதத்தில் வணங்கி அவனுடைய வார்த்தைக் கிரண்டு சொல்லாமல் இந்து எந்தக் காலத்தில் யுத்தஞ்செய்ய வேண்டிய தோ அந்தக் காலமும் சமயமும் பலாபல முதலியவற்றையும் அறிந்து போர் புரிந்து, பூமியிற் புகழ்படைக்கக்கடவீர்கள். மேலும் எப்பேர்ப்பட்ட தந்திர யந்திர மந்திர யுக்திகளுடன் சதுர்வித உபாயங்களையுங் கொண்டு யுத்தஞ்செய்வீர்களானலும் கைவல்யமாகுங் காரிய மொன்றுமில்லை. உங்களுடைய ஆண்மையும் பெருமையுங் கெட்டு உலகத்திற் பழிக்குடம்பெடுக்க வேண்டுமல்லது, பின்னை வேறொன்று நடவாது. காதுக்கினிமையாகச் சொல்லுவோர் வார்த்தையைக் களிப்பாய்க்கேட்டுக் கண் கலக்கப்படாதீர்கள். பூர்வத்திற் பேரிகையோசை கேட்டிறந்த பெருஞரியின் கதைபோல்

முடியும். ஆகையால் புத்தியாகப்போய்ப் பிழையுங்கள்'' என்று செலவு கொடுத்தனுப்பினார்.

அந்த வேளையிற் பரமாத்மாவாகிய கிருஷ்ணன் பாஞ்சஜன்னியத்தை யெடுத்துப் பவளம் போன்ற தமது திருவாயில் வைத்து முழக்கினார். அந்தத் தொனியானது பீஷ்மாசாரியருடைய செவிகளிற் பட்டவுடனே சிந்தை கிலேசத்து, தத்துவ சுவாநுபோக நிலையினின்று, சர்வாந்தரியாமியாகிய ஜகார்த்தனனுடைய திருவடியைத் தமதுள்ளத்திருத்தி, சஞ்சல சித்தத்திற் கேதுவாகிய பிரபஞ்ச மாயா விசித்திரத்தை மறந்து, அவர் திருநாமங்களை காத்தமூம்பேற ஸ்தவத்தியஞ் செய்துகொண்டிருந்தார். அப்போது தேகத்தி லுருவி யோடிய அம்புகள் போகத் தைத்துக் கொண்டிருக்கும் மற்றப் பாணங்களை யெல்லாம் நிர்யாண யோக சயன மாகக்கொண்டு சாய்ந்த பீஷ்மாசாரியருடைய கிடக்கையை இந்திரன் முதலாகிய தேவர்கள் கண்டு உவந்து, தேவதுந்துபி முழக்கிவைத்து, தேவவிரதனென்றும், காங்கேயனென்றும், பீஷ்மனென்றும் இன்னும் பலவான வியக்கத்தக்க பேர்பெற்ற சித்த சுத்தியையுடைய உத்தமன் தேகத்திற் செம்பொன் மலர்களைவாரி அம்புவி நிறையக் கும்பத்தாரையாய்ச் சொரிந்தார்கள். இந்தப் பிரகாரம் சமுத்திரஞ் சூழ்ந்த தரணியையாண்ட சந்திரவம்சத்தரசனுகிய சந்தனு மஹாராஜனுடைய தனயன், சரங்கள் புதைந்த அங்கத்துடன் பூமியிலிழிந்து சாய்ந்ததன்மை யெப்படி யிருந்த தென்றால் அருட்சலம் உட்கொண்டு நிறைந்த மேகம் மலை விட்டிறங்கியதைப் போலும், ஆகாயத்திலுலாவுஞ்சூரியன் ரத நீங்கி வழுவியதைப்போலும், கற்றூணைக் கிழித்துப் புறப்பட்ட உக்ர நரசிங்கத்தைப் போலுமிருந்தது.

கௌரவர் பாண்டவர் முதலாயினோர்
பீஷ்மரைக்கண்டு துக்கிக்க, அதற்கவர்
சமாதானங்கூறித் தேற்றுதல்

அந்த வேளையிற் குலகுரு புங்கவனுகிய தங்கள் குலக்குரவன் போர்முகத்தில் இளைத்துச் சரேலென்று பூமியின்மேற் சாய்ந்தா ரென்று துளபமாலையணிந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்திபும் அர்ச்சுனராஜனுந் தியங்கி மயங்கி உள்ளம் வருந்தி இரு கண்களிலும் நீர் பெரு

கும்படியாய் வாயுலர்ந்து உடனே ரதம் விட்டிறங்கிப் பீஷ்மரிடத் திற்கு வந்தார்கள். அப்போது ரணகள நிறைந்த இருவகைச் சேனை வீரர்களும் திரண்டு வந்து சேனாதிபதியாகிய பீஷ்மரைப் பார்த்து நெஞ்சழிந்து கொந்து வையகமெலாம் பேரோசை நிரையும்படியாய் வருந்தி யிரங்கி வாய் விட்டுக் கதறினார்கள்; உடல் பதறினார்கள். அந்தச் சமயத்தில் தர்மராஜன் முதலிய மன்னவர்களும் துரியோதனன் முதலாகிய அரசர்களும் பேரொலியுடன் பொங்கி உகாந்த காலாக்கினியால் உலகம் பொன்றுந் தன்மையைப்போல் தங்களைத் தாங்களே மறந்து தளர்ந்தோடிவந்து ஆண் சிங்கம் போன்ற ஐயாவுடைய பாதங்களைத் தங்கள் கரத்தாலே தடவிச் சிரமேற் கொண்டு ஆற்றற்கரிய அருந் துயரத்தோ டனைவருங் கண்ணீர் வடித்து மண்மேல் விழுந்து புரண்டு அழுதத் தொடங்கினவர்களாய் "மறமும் வாகு வலியும் வல்வின் முதலெப் படையின், நிறமுந் தேசும் வாழ்வுஞ் சீருங் கேள்விச் செலவு, நிறமுமுண்மை யறிவு நெறியும்புகழுந் திகழ்மேப, ரறமும் பொன்று கின்னைடையா வம்தோ வம்தோ! தந்தை யின்ப மெய்தத் தவமே இன்பமாகச் சிந்தை தெளியு ஞானச் செல்வா செஞ்சேவகனே! முந்தை மரபுக்கெல்லா முதல்வா! ஞால முழுது மெந்தை யாள வைப்பா ரினியா ரெங்கள் கோவே" என்று பிரலாபித்து குருகுல பிதாமகராகிய எங்கள் கோவே! இதுகாறும் உங்களால் வீரத்திறம் விஜயத்திறம் அஸ்திரச் சாகரம் திடதீரம் அழகு அஷ்டலக்ஷ்மிவாசம் சீர் சிறப்பு புகழ் மகிழ்வு நற்கேள்வி இரக்கம் தாதுர்த்வம் ஈகை ஜீவகாருண்யம் உணர்வு போறிவு நன்னெறி நன்னீதி சத்தியம் வெற்றி சித்தசுத்தி அன்பு அறம் இவைகளெல்லாம் இந்தச் சந்திரகுலத்தில் வளர்ந்து படர்ந்து கொண்டிருந்தனவே. ஐயா! அவைக ளெல்லாம் இன்றைக்கே தேவரீருடன் கூடத் திரும்பிப் போய் விட்டனவே. அம்தோ!! அம்தோ!! இதுவரையில் மூதாதையென்னும் வேலியினால் வளையப்பட்டு விருத்தியடைந்த நாங்கள் இப்போது அவ் வேலி யழிந்த பபிராளனைமே! ஓ எங்கள் வம்ச பாக்கியமே! ஓ இந்தக் குலக் கோட்டைக்கு மதிலைப்போ லிருந்தருளிய கோவே! சத்திய நெறி படருங் கற்பகக் கோவே! ஓ எங்களுக்கு இஷ்டமாகிய தேவே! ஓ தாஷ்டிகமேருவாகிய தருமதேவதையே! ஓ தாயாய்த் தந்தையாய்த் தமராய்த் தாணுவாய்ச் சகலமு மடைந்தாண்ட தரியலரோறே! தேவரீருடைய தந்தை சந்தனு மகாராஜனவர் பரிமளகந்தியை மணங்கொள்ளத் தவமே நமக் கின்ப

மென்று சிந்தை தெளிந்து விரத மேற்கொண்டு ஈகூஷணத்திரயாதி களையும் விடுத்து மன்மத பாணத்தைமாற்றிய மாதவனே! ஓ ஞானச் செல்வமே! ஓ பழைமையாகிய இந்தச் சந்திர மரபினுக்கு முதல்வ னனவனே! இவ்வுலக முழுமைக்கும் எங்களை இறையாக்கி வைத்து இருகண்களுங் களிக்க விருந்து பார்ப்பீரென் றிருந்தோமோ! ஐயோ! தெய்வமே! இனி எங்களுக்கு ஆதரவு யாரிருக்கிறார்கள்? எந்தையே! எங்கள் கோவே! இனி யெங்களைப் பாராளச் செய்யும் பாக்கிய ரெவரோ? எங்கள் பாவமே இப்படி பண்ணிற்றே?" என்று பலவாறுக முறைபிட்டழும் பிள்ளைகளைப் பார்த்துக் காங்கே யர் சொல்லுகின்றார்—

"அப்பா குழந்தைகளே! கலங்காதீர்கள்! பயப்படாதீர்கள்! எனக்கொன்றுமில்லை! இப்போது ஞானிறக்கவுமில்லை! பதாதிகேசம் வரையிலும் பட்டிருக்கும் பாணங்களிலே வருந்தி கொந்து அந்தப் பாண சயனத்தின்மீது சாய்த்திருக்கிறேன். ஆனால் (காண்டீபன் கணைக்குக் கல்லுங் கரையும்) என்னும் பழமொழியைப்போல் இந்த அர்ச்சுனனுடைய பாணங்களில் எப்போப்பட்ட உயிரு மாறிப் போம். அப்படி மாறுமல் ஞானிருப்பது யோகாப்பியாசஞ் செய்த பழக்கத்தினலும் என் தந்தையாகிய சந்தனு மகாராஜன் எப்போது உயிர்விட வேண்டுமென்று நினைக்கின்றாரோ அப்போது உயிர்விட லாம்'என்று எனக்குக் கொடுத்திருக்கின்ற வரத்தினலுமேயாம். உத் தராயண புண்யகாலத்தி லிறந்தால் மோகூஷ மென்றிருப்பதினலும் இந்தப் பூததேகத்தை விட்டுப் பிராணன் புறப்படாவண்ணம் நிறுத் திப் பூரண ஞானத்துடன் பொறிபுலன் குன்றுமற் பொருந்தி யிருக் கின்றேன் குமாரர்களே! நீங்கள் எனக்காக வருந்த வேண்டாம். கிருஷ்டி கர்த்தாவாகிய பிர்மாவினல் விதித்த தொல்லை வினையைத் தொலைப்பவ ரொருவருமில்லை. எந்தக் காலத்திலெப்படி விளைய வேண்டுமோ அப்படிக்கெல்லாம் விளைத்து முடித்து வைக்கும் அந்த ஊழ்வினை. ஆதலால் வினைக்கு மிஞ்சிய தொன்றுமில்லை. இதை வேறுகக்கருதிடிலோ மேல்வரும் பலவிதமான தொல்லை. வினைதனக்குத் தானே நிகராய்ச் சொல்லும் மற்ற சாஸ்திர புராணக மங்களையும் வெல்லும்; கணித நூலையும் வைத்திய நூலையுங் கொல் லும். திரிகாலக்கடனை உணர்த்துஞ்; சோதிடத்தைக் கொல்லும். ஆதலால் வினைக்கு மிஞ்சிய தொன்றுமில்லை. மேலும் 'ஊழிற் பெரு வலியாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந்துறும்' என்றும் 'வகுத்

தான்வகுத்தவகை யல்லாற்கோடி. தொகுத்தார்க்குந் துய்த்தலரிது' என்றும் இப்படிக்கெல்லாம் ஊழ்வினையைக் குறித்துப் பெரியோர் பேசியிருப்பதால், நாம் இனி ஒன்றுக்கும் விசனப்படலாகாது.

"குழந்தைகளே! பார்த்தீர்களா? நான் என்னுடைய இவ்வளவு வயது வரையிலும் ஒருவருடைய பாணம் என்மீது படாமலிருந்து காலங்கழித்தேன். இப்போது என் தேகத்தில் ஏறுமுழம்படியாகிய கொழுவைப்போன்ற பாணங்கள் மெத்தவந்து விழுந்து தைத்து வருத்தமுறச் செய்ததினால், உங்கள் கண்ணுக்கு எதிரே வீழ்ந்திருக்கின்றேன். நான் ஜன்மாந்திரத்திற் செய்த பாபத்திற்குத் தக்க பயனிதுவாக்கும்" என்றுரைத்துப் பின்னையும் அவர்களை நோக்கிப் பரிதாபமடைந்து, "என் பௌத்திரர்களே! நான் சொல்லும்படியாகிய வாக்கியத்தை அந்தக் காலத்திற் கேளாமற் போனாலும், இந்தக்காலத்திலாகிலும் யோக்கியமாகக் கேளுங்கள். அதனாற் சிலாக்கியப்படுவீர்கள். நீங்களிருதிறத்தவர்களும் வெகு சேனைகளைக் கூட்டிக்கொண்டு வந்து செய்த யுத்தத்தில் என்ன கதியைக் கண்டீர்? என்ன இன்பம் அறிந்தீர்கள்? என்ன பலன் பெற்றீர்கள்? இன்ன மெத்தனை கோடிகாலம் யுத்தஞ் செய்தாலும் நீங்கள் அநுபவிக்கப்போகிறது துன்பமேயன்றி, இன்பம் என்பது எப்போதுமிராது. ஆகையால் வஞ்சகங்களைப் போக்கி மனக்குறையை நீக்கி, பொய்யைக் கெடுத்து, பொறுமையை விடுத்து, நீங்கள் நூற்றைவரும் நமது பெரியோர்கள் கலந்து பொருந்தியிருந்த தன்மையைப்போல் ஒரு தன்மையாயிருந்து, நால்வரும் புகழ நாட்டைப்புரந்து, காளைக்கழித்து நலம் பெற்று வாழுங்கள். ஓ நற்குலப் புத்திரர்களே! இனிமேல் நானென்றும் விசேஷித்துச் சொல்ல வேண்டியதில்லை" என்று அநேக விதமாகிய தர்மங்களைப் போதித்தார். இப்படியாக ஒப்புர வொழுகுகென்னும் வாக்கியப்படி தருமநீதி சொல்லி உண்மைப் பொருளைத் தெரிவித்த கங்கா புத்திரருடைய வார்த்தையைக் கேட்டுப் போகவாரிப் புளர்ப்பிற் பொருந்திய தர்மராஜன் முதற் சத்தியவான்களென்னும் பாண்டவர் பீஷ்மரை வணங்கி, "ஆண்டவரே! தேவரீரிஷ்டப்படி ஒருமையாயிருக்கச் சம்மதித்தோம்" என்றார்கள்.

அர்ச்சுனன் காங்கேயருக்குச் சரசயனஞ் சமைத்தல்

அப்போது அக்கசமுத்திரத்தில் மூழ்கி யாதொன்றும் பேசாதிருந்த நாகக்கொடியோனென்னுங் தரியோதனனைப் பார்த்து,

"உன் கருத்தென்ன?" என்று பீஷ்மர் கேட்டார். அவன் "ஐயா! இந்தக் கர்மபூமியில் அநுபவிக்கும் ஆசைப்பெருக்கமாகிய மோக வாரியை விரும்பேன். பஞ்சவர்களுக்குப் பூமியைப் பகுத்துக் கொடுத்து, அவர்களுடன் கலந்து பொருந்தியிருந்து வாழ்வதற்கு எவ்வளவேனும் எனக்கு மனமில்லை. போதுமானவரைக்கும் போர் புரிந்து இந்தப் போர்முகத்தில் மடிந்துபோனலும் போவேனே யல்லது, இந்தப் பஞ்சைகளாகிய பஞ்சவர்க்குப்பயந்து இளைத்து இப்பூமியைப் பகுத்துக்கொடுத்து அவரைப் பணிந்துவாழ்ந்தான் தூரியோதன னென்று பார்த்திபர் முதலாகிய பேர்கள் நகைத்துப் பழிக்கும்படியாகிய சொற் கேட்டு உயிர் வாழமாட்டேன்" என்று சொன்னன். சாந்தமூர்த்தியாகிய சந்தனுவின் தனயரான பீஷ்ம ரென்னும் பாட்டன் கேட்டுச் சிறுநகைசெய்து சிரமசைத்து, இன்னுரின்னார் இந்தக்காலத்தில் இப்படி அநுபவிப்பதென்றும், இவ் விதமா யிறப்பதென்றும் விதித்திருக்கும் வினையின்பயனே, யாவர் மடக்கத் தக்கவர்கள்? (விதியின்வழி மதிசெல்லும்.) என்னும் மேலோர் வாக்கியப்பிரகாரம் ஊழின்வன்மை எப்படி யிருக்கின்ற தோ அப்படி முடியும். உத்தமனே! உன்னை வெறுக்கவேண்டிய தில்லை" என்று சொல்லிச் சற்றுநேரம் உன்னிப்பார்த்து, "ஏதேது? இனி நாம் சொல்வதிற் காரியமில்லை" யென்று தெரிந்துகொண்டு, குறைவில்லாத தாளாண்மை பூண்டு பூரித்த புஜபல பராக்கிரமசாலி யாகிய வணங்காமுடியோனை நோக்கி, "ஓ மன்னர்க்கு மன்னனாகிய மதிகுல வரசே? என்னுடைய முடியானது அடிக்கடி சாய்ந்து போவதினால், அந்தமுடி சாயாதிருக்க ஓர் உபாயஞ் செய்யவேண் டும்" என்று பாட்டன் சொல்ல; அந்த மொழியைக்கேட்ட தூரியோதனன் உடனே கிடைத்தற் கருமையாகிய இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி, இவைகளாற் செய்த பஞ்சணைகளும், பரியங்கமாகிய கட்டிலும் கொண்டுவரும்படி உத்தரவு செய்தான்.

அந்த வார்த்தையை விரத சீலராகிய பீஷ்மர் கேட்டு வெறுப் படைந்து, தமது உதட்டைப்பிதுக்கி, நந்தியாவட்டைத் தாமமணிந்த சுரேந்திரனைப் பார்த்து "பரிமளகந்தியென்னுஞ் சிறியதாய்க்காகத் தாசராசனுடைய கழிக்கரை நகரிற் கையெடுத்துப் பீஷ்மம் பெற்றுக் கொண்ட பதினெட்டாம் வயது முதல், இதுவரையிலும் ஒழித்துப் போட்ட பஞ்ச சயன முதலாகிய சுகபோக இன்பங்களை யெல்லாம்

இப்போது நான் பெறத்தக்க மரியாதையு முண்டோ? அப்படினே! அப்படி நான் பெறுவேனுகில் ஆதியிற்கொண்ட என்பீஷ்ம விரதத் திற்குப் பங்கம்வருமே. என் தங்கமாகிய சிங்கமே! இவைகளெல் லாம் எனக்கு வேண்டாமப்பா! நான் கொண்ட பீஷ்மத்திற்கும் கிரியாண காலத்திற்குந் தகுந்திருக்கும் படியாய்ச் சரசயனங் கிடைத்திருப்பதினுல், இந்தப் பரப்பான அது பஞ்ச சயனத்தினு மேலா கிய சுகத்தைத் தரத்தக்கது. ஆகையால் வைதிகத்திற்குரிய இந்த இனமாகவே அமைத்து என்சிரக் காழாதிருக்கச்செய்'' என்று சொன்னுர். அம்மொழிகேட்டுப்பாணங்களினுலே தலைசாயாமற்செய் வதெப்படியென்று துரியோதனன் விழித்துக்கொண்டிருக்கும்போது பீஷ்மர் வீரகண்டை தரித்து அண்டையில் நின்ற திண்டோள் விஜயனைப் பார்த்து, "ஓ என் குருகுலச் செல்வமே! என்முடியின் தாழ்வு நீக்கமாட்டுவையோ?'' என்று கேட்டார். கேட்டமாத்திரத்தில் வரப்பிரசாதத்தாலுயிரை நிறுத்தி வைத்திருக்கும் மகாநுபாவரா கிய தேவவிரதன் சிந்தை களிக்கும்படியாய் யோகதண்டம் போன்ற மூன்றுகள் பிறைக் கொப்பாகிய அர்த்த சந்திர பாணத்தை யெடுத்து விடுத்து, அவருடைய தலைசாயாமல் உயரும்படியாய்ச் செய்து, உடனே சோம பாணந்தொடுத்துத் தலையுங் கழுத்து முறுத்தா திருக்கும்படியாகப் பக்குவம் பண்ணினுன் விக்ரமனுகிய விஜயன்.

அப்போது தருமபுத்திர மகாராஜனுனவர் நான்குபக்கத்திலும் நவமணிக் கால்நாட்டி மேலாகப் பந்தல் மேற்கட்டியா லமைத்து, திரைச்சீலையும் விடுத்து, காவல் முதலிய உபசாரத்திற்கு ஆட்களும் அமைத்தார். அந்தக் காலத்தில் பீமசேனனும், நகுல சகாதேவரும், தர்ப்பாசனம் அமைத்துத் தளர்வை நீக்கினுர்கள். அப்போது பீஷ்மாசாரியானவர் துரியோதன மகாராஜனை அழைத்து "அப்பனே! நான் என்ன சொன்னுலும் உன் புத்தியிற் படவில்லை! சொல்லா திருப்போம் என்றுலோ என்மனம்கேட்கவில்லை. இப்போ தாகிலும் நீ யோசிக்கத்தக்கது! அம்திருக்கட்டும் என் முடிசாயாமற் செய்யப்பாவென்று சொன்னதற்கு என்னுடைய விரத மறிந்திருந் தும் மெத்தையுந் தலைக்கு அணையுங் கொண்டுவரச் செய்தாய்! உன்னுடைய புத்தி இவ்வளவி லிருக்கிறது. அர்ஜுனன் ஒரு பிறைமுகப் பாணத்தினுல் என் குறைகளை அகற்றி னன். இப்போது கானிருக்குஞ் சவுக்கியத்தை நீயே அறிந்து

கொள். இப்போர்ப்பட்ட வீரராகிய பாண்டவர்களை நீங்களெப்படி வெல்லப் போகிறீர்கள்? அவர்களில் ஒவ்வொருவரும் மகா பராக்கிரமசாலிகள்! அவர்கள் புருஷார்த்தமாகிய அறம், பொருள், இன்பம் வீடு, என்னும் நான்குக்கும் தாயகமாயிருப்பவர்கள். பஞ்சேந்திரியம் போல் ஐவரும் ஒரு வழிப்பட்டவர்கள். ஐயோ! புத்திர மித்திர சகோதரர்களுடன் மாய்ந்து போவீர்களே யல்லது ஒருகாலும் வெல்ல மாட்டீர்களே! மதிமயிற்றேரன்றியும் மதியற்றவரானீர்களே!" என்று இரகசியமாகச் சொல்ல வேண்டிய காரியங்களை வெகுவாகச் சொன்னார். அந்த வார்த்தையைக் காதிற் கொள்ளாமற் போன பேரனைக் கண்மலர் திறந்து ஊன்றிப் பார்த்து வினையின் பயனே பயனென்று வெறுத்துத் தருமராஜன் முதலியவர்களால் வகுக்கப்பட்ட சயனத்தில் கோயில்லாமல், கொடியில்லாமல் தேகத்திலுருவுகின்ற பாணங்களைப் பார்த்துக்கொண்டு, இந்த வேளையிலிறந்தால் முக்தியில்லை யென்று சூரியன் வடபால் வரும் உத்தராயண புண்யகாலம் வரைக்கு மிருந்தார். அவராரெனில், சிறுபோது முதற் கொண்டு கேள்வி யென்னு மந்தரகிரியால் மதித்து வராகின்ற கெள்ளமுத மாகிய முனீச்வரர்களுடைய சொல் லமுதத்தைக் காதின் வழியாய் நுகர்ந்து களங்க ரகிதமாயிருந்த காங்கேய னென்னும் பீஷ்மாசாரிய முனிவர்.

காங்கேயர் கலங்கி வந்த கர்ணனை ஆதரித்துச் சுயோதனனை அவன்கையி லொப்புவித்தல்

அந்த வேளையில் அங்கதேசாதிபனுகிய கர்ணன் ஓடிவந்து அலறிக் கதறி மோதி விழுந்து "ஐயா! ஐயா! என்னையாவே! என்று சோணமேகத் தூறலெப்போற் கண்ணீர் சொரிந்து, காலடிபிற் பணிந்து, "ஓ புரூரவ குலப்பேரோனே! ஓ சகல சாஸ்திரங்களு முணர்ந்து பேரறிவிற் சிறந்த தாஷ்டிக மேருவே! ஓ சந்திரகுலத்தோன்றலே! நாபினுங் கடையேனுகிய நான் கல்லாத விவேக சூனியத்தினுல் துன்பத்தை விளைக்குந் துஷ்ட அறிவைக்கொண்டு தேவரீரை மதிக்காமலும் துதிக்காமலும், மனதிற் பதிக்காமலும், பலவாகச் சொல்லிய அற்பச் சொற்களை யெல்லாங் குற்றமாகக் கொள்ளாமல், நான் ஸ்தவுத்தியம் பண்ணினதாய்க் கொள்ளவேண்டும். ஓ குருகுலமணியே! அன்றியும் நான் செய்த குறைவாகிய பொல்லாங்குகளை யெல்லாம் தேவரீருடைய மனதில் வைக்காமல் க்ஷமிக்க

வேண்டும். ஓ சாந்த மாணிக்கமே!" என்று மலரடியில் முடிசூடி வணங்கினன். அச்சமயம் கண்ணை விழித்துப் பார்த்த ஆராவமுதினுக் கொப்பாகிய அருள் நிறைந்த கருணைக் கடல் போன்ற பீஷ்மாசாரியார் கர்ணனைத் தேற்றி, "ஓ அங்கதேசத் தலைவராகிய என்னப்பனே! உன்னுடைய சொற்றிறமையாலும், விற்றிறமையாலும், துரியோதனனுக்குச் சொல்லா முறைமையினாலும், உன்னை அர்த்தரதனுகச் சேர்த்தேன். அப்படி நான் சேர்க்காமல் அதிரதத் தலைவனில் உத்தமனை வைத்து, நீயும் விற்பிடித்துச் சத்துருக்களுக் கெதிரில் செல்வாயானால் உன்னை வெல்லத்தக்க வல்லமை பெற்ற வர்க ளுண்டெனச் சொல்லத்தக்க பேர்களு முண்டோ? இப்பவுங் கௌரவகுல முதல்வனுகிய துரியோதனன் உன்னை வெகுவாக நம்பியிருக்கின்றான்! நீ எத்தப்பாடாகிலும் பட்டு அவனுக்கு ஏகசக்ர முடிசூட்டி அவனை இந்தப் பாராளச் செய்யுங் கடமை உன்னுடையது" என்று சொல்லித் துரியோதனனை அழைத்துக் கர்ணன் கையில் ஒப்பித்து, "அப்பா கொடையிற் சிறந்த கோமானே! இந்தத் துரியோதனன் வருவது போவதறியாத வாலிபன். ஆதலால், இவனைக் கைவிடாது காப்பது உன் கடமை" என்று உரைத்தார். அப்போது துரியோதனன் கண்ணீர் சொரிந்து கவலை கொண்டிருப்பதைப் பார்த்து பீஷ்மர் தமது கையாலவன் கண்ணீரைத் துடைத்து "அப்பா தரைமக்களிற் சிறந்த துரியோதனன் வரிவிற்றூங்கிய இந்தக் கர்ண மகாராஜன் அரசர்களுக்குத் தலைநோவச் செய்யுங் கோடைகாலத்து இடிபோன்றவன். அதிபராக்கிரம வியாக்ரமம் போன்றவன். ஆகையினாலே காலமறிந்து சேனுதிபதிப் பட்டங்கட்டி, இவனைக் கொண்டு செய்யும்படியாகிய செய்கைகளை நாளையப் போற் முதற்கொண்டு நடப்பித்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி யருளினர்.

துரோணராதிய மூவாசிரியரையும் பீஷ்மர் தேற்றுதல்

இப்படி யிருக்கும்போது துரோணாசாரியரும், கிருபாசாரியரும், அசுவத்தாமாவும் வந்து பீஷ்மாசாரியரைக் கண்டு, மனங்கொந்து கண்ணீர் வடித்து, அவருடைய கருணைப் பிரவாக இயல்பைப் பலவாறு படித்து, "ஐயா! வனத்திலே தவஞ் செய்து வைதிகனுகியிருந்த என்னை உங்களினத்தி லொருவனுக்கிப் பேரும் பெருமையும் பிரக்யாதியுங் கொடுத்து, துருபதேயனைக் கட்டுகிறேனெனைக் கூறிய என் சபதத்தையு முடித்து, என்னருமை பாராட்டி அருள

ளித் தாண்ட சத்திய விரத அரசனே! இனி என்னை ஆசிர்ப்பவ ரெவரோ? இனி யார்முகம் பார்ப்பேனே! ஓ சாந்தமூர்த்தி! இனி நான் அவனியிலிரேன். இதோ அடியேனும் வந்தேன் வந்தேன்'' என்று தரையிலறைந்து முறையிட்டு விழுந்து குறை மொழிந்தார். கிருபாசாரியரும் கிட்டி நிலத்திலே தலையை மூட்டிக்கொண்டு ''ஓ நீதியையுடைய நிருபரேறே! உம்முடைய தந்தையாகிய சந்தனு மகாராஜன் என்னை எடுத்து, வளர்க்க, அவருடைய நினைவறிந்து என்னைக் காத்தருளிய நேயத்தை என்னென்று சொல்லுவேன். ஐயனே, நான் இப்போது உம்மைப் பிரிந்து பேயனாகிப் போனேனே! ஓ பூசிக்கும் பூமானே! ஓ பொங்கு மருளே! ஓ பொறுமைக்கனியே! ஓ மலர்ந்த வதனனே! ஓ மணிப்பிரவாளனே! ஓ மதிகுலதிலகனே! ஓ மான பூஷணனே! ஓ வைராக்கிய மலையே! ஓ சத்திய நெறியே! ஓ தரும சொரூபியே! ஓ உத்தமகுணனே! உம்முடைய உடலும் வருந்தியதோ? உம்மூடன் வராமல் இன்னுமிவ்வுலகி லுற்றிருக்கின்றேனே பாவியேனுகிய நான்'' என்று கலங்கி ஏங்கிச் சோர்ந்தார். அப்பால் அசுவத்தாமாவும் ஆலைக் கரும்பென வுடைந்து, வேலைத் தரும்பென வளைந்து, சோலைச் சுரும்பென விரைந்து, சோபித் தரும்பெனக் கரிந்து துயரங் கொண்டார்.

இந்தப் பிரகாரஞ் சிந்தை நொந்த இவர்களைப் பார்த்து விசனமகற்றிக் காரண காரிய கால நுட்பங்களைச் சொல்லி, ''எல்லாந் தெரிந்த நீங்களே இப்படி விசனப்படலாமா?'' என்று அவர்களைத் தேற்றி, வணங்கா முடிபெற்ற மன்னனைக் காட்டி., ''உங்களாலான வரைக்கும் யுத்தம் செய்து வெற்றி பெற்று அரசனுக்கு முடி சூட்டக் கடவீர்கள்'' என்று உரைத்து இன்னும் பற்பல தேசாதிபதிகளாகிய இராஜர்களையும், மன்னர் மண்டலீகர்களையும் மந்திர தந்திரத் தலைவரையும், பட்டுவான்கள் கட்டியர் முதலிய அரண்மனை வேலைக்காரரையுங் கண்டு விசனப்படாதீர்களென்று அன்புடன் ஆதரவுகள் கூறி, ''ஐயோ! நீங்களனைவரும் போர்முகத்தில் வருந்திய தன்றியும் என்னாலும் விசனப்பட்டிருக்கின்றீர்கள். ஆகையால், அவரவர் கட்கு நிலைபெற்றிருக்கும்படியான பாடி வீடு போய்ச் சேருங்கள்'' என்று யாவருக்கும் விடை கொடித்து அருளினார்.

இப்பால் சந்தனுவாகப் பிறந்திருந்த மேற்றிசைத் தலைவரான வருணனைக் கண்டு இன்று உன் மைத்தராகிய தேவவிரதன் பட்டானென்று சொல்வதற்காக விரைவிற் சென்றவனைப்போல் சூரியன் மேற்றிசை அடைந்தான். அந்தச் சூரியனால் மகனிறந்த துயரத்

தைக்கேட்ட வருணதேவன் பூமி முழுதும் நிறைய இரத்தக் கண்ணீர் விடுத்து அழுந்தன்மைபோல், செவ்வானம் பறந்தது. பீஷ்மர் இறந்த விசனம் எல்லாருக்கும் நிறைந்ததுபோல், இரணகள மெங்கும் இருள்கலந்துற்றது. கங்காதேவியானவள் களத்திற் சாய்ந்த தன் மகனைப் பார்க்க வந்ததைப்போல், சந்திர னுதய மாயினன். தாயாரான கங்கை தன் கரங்களாலே தன் குமாரன் தேகத்தைத் தடவிப் பார்த்ததைப்போல், சந்திரகிரணங்கள் பர வின. அந்தப் பிள்ளையினது தேகத்திற்பட்ட பாணங்களைப் பார்த்துப் பெற்ற வயிறெரிந்து தேகமுழுமையும் பொங்கிக் கொப்புளங் கொண்டதைப்போல் நக்ஷத்திரங்கள் பிரகாசித் தரும்பின. சந் திரனை வெள்ளைமேக மறைத்த தன்மையானது, பாகீரதியானவள் கண்கள் வழியிலும், மூக்கின் வழியிலும், பெருகும்படியான ஜலங் களைத் துவட்டிக் கொள்ளுமாறு முகத்தில்வைத்த வெள்ளவஸ் திரத்தை ஒத்திருந்தது. அந்தச்சந்திரனிடத்திற் களங்கந் தோன்றிய தன்மையானது கண்ணுக்கிட்ட மை கலந்த களங்கம் போலிருந்தது. அன்றியும் கட்சத்திரங்கள் உதிர்வது கங்காதேவியானவள் புத்திர சோகத்தால் மார்பிலறைந்து கொண்டபோது மணிவட மறுந்து உதிர்ந்தவாறு போலிருந்தது. சமுத்திர இரைச்சலானது கங்கா தேவி கூச்சலிட்டழுந் தன்மைபோ லிருந்தது. இரதங்களில் சிறந்த ரணபூமியானது பாகீரதியான தாயார் மார்பிலறைந்து கொள்ளவு மந்த அறையினுற் சிவந்த அங்கம்போலு மிருந்தது. இத்தன்மை யாக அன்றிராத்திரியில் வெகுநேரம் வரையிலும் யுத்தபூமியை விட்டு ஒருவரும் போகாமலிருக்க, அதைக்கண்ட பீஷ்மர் விசனப் பட்டு, "என்னை, என்னை, மன்னர்களே! முன்னேபோய் இளைப் பாருங்கள்" என்று விடைகொடுக்க, அது பெற்ற பாண்டு புத்திர ரும், அவர்களைச் சேர்ந்த படைமன்னரும், பாசறைபோய்ச் சேர்ந் தார்கள். துரியோதன மகாராஜனும் அவனைச்சேர்ந்த படை மன் னரும் பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

திரிதராட்டிரனும் காந்தாரியும் பீஷ்மர் பட்டதைக் கேட்டுப் பிரலாபித்தல்

அச்சமயத்தில் சஞ்சயன்வந்து பீஷ்மரைக்கண் டழும்போது அவனையவர் தேற்றி "அப்பா சஞ்சயனே! கண்ணில்லாத காவலனு கிய திரிதராஷ்டிர னென்னு மைந்தனுக்கு என் முடிவையுரைத்து, விசனம் வரவொட்டாமற் றேற்றி, அவத்திற் காலம் போக்காமல் தவத்தைச் செய்யச் சொன்னேர் பீஷ்மரென்று சொல்லு. இப்போது

நான் மரணத்திற்கேதுவானதைப் பற்றியும், இனி மேலாகப் போகின்றவைகளைப் பற்றியும், தான் கவலைப்படவேண்டுவ தொன்று மில்லை. அவரவர்களுடைய பிராரத்வ கன்மங்களாலுண்டாகிய ஆட்டமனைத்து மாடியே தீரவேண்டும். நாம் வேண்டாமென்றாலும் அவைகள் விடா. பலபசுக்களில் ஓர் இளங்கன்றைக் கொண்டுபோய் விடுவோமாயின், அது தன் தாயையே நாடிச் செல்லும். அதுபோல ஊழ்வினையும் அதனையுடையோர் எத்தனைபேர் கடுவிற் சென்றிருந் தாலும், தன் செயலுக்குரியவனையே நாடிச்செல்லும். தபோ தனராயுள்ள போக்கும் உறும்பகுதியவான தீவினைகளை நீக்கிக் கொள்ளவும், பெறும்பகுதியவான நல்வினைகளைத் தாமே பெற்றுக் கொள்ளவும் இயலா. பனையளவு பெருமையைவகித்த பார்த்திபரும் வினைவசத்தால் தினையளவு பெருமையு மில்லாதவராய்ப் பதுங்கி யொதுங்கிற்பர். மிருத்யுவும் நல்லோரை யெல்லாஞ் சாரமாகவுந் தீயோரை யெல்லாஞ் சக்கையாகவுங் கொள்ளும்; ஒருவரையுந் தனது கால பாசத்தினின்றுந் தப்பிவிடப்போகிறதில்லை. மேலும் இவ்வுலகத்திற் செல்வத்தை வேண்டாதார் யார்? நல்குரவை வெறுக்காதார் யார்? ஒருவருமில்லை. அவரவர்செய்த வினையால் அவரவர்களுக்குள்ள அநுபோகங்கள் ஆதிகாலத்திற்றானே கற்பிக்கப் பட்டிருக்கின்றன. விளாங்கனியை யார் திரட்டினார்கள்? களாக்கனி யை யார் கறுக்கச்செய்தார்கள்? சாதாரணமாய் யாவரும் நல்வினை யொன்றின் கண்ணே விருப்பம் வைத்துத் தீவினையைச் சிறிதும் பேணுரன்றே? ஆயினும் இத்தகல்வினையுந் தீவினையும் வேண்டி னும் வேண்டா விடினும் வந்தே தீரும். 'ஒன்றை நினைக்கிலது வொழிந்திட் டொன்றுகும், அன்றியது வரினும் வந்தெய்தும் ஒன்றை நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும், எனையாளுமீசன்-செயல்' என்பதுபோல யாமெல்லாம் பரதந்திரமே யன்றிச் சுதந்திரரல்லோம், மேற்சொன்ன ஈசனொருவனே சுதந்திரன். ஆகவே இவ்வுலகத்திலே சுதந்திரங்கொண்டுவாழ்ந்தார் யார்? இப்படி யாதொரு சுதந்திரமுமற்ற ஜீவர்களைக் கூற்றுவன் கைக்கொண்டு ஓடும்பொழுது அவரவர் செய்திருக்கு நல்வினை தீவினைகளே அவரவர்கட்குத் துணையாகப் போவதல்லாமல், பிறிதொன்றுமில்லை.

"அப்பா சஞ்சயனே! அஷ்டமா சித்திகளை அங்கை நெல்லிக் கனிபோ லடைந்திருக்கும் மகதாதிபர்களாயினோரும் அண்டகோடி களையெல்லாந் தமதருட்குடை யொன்றின் கீழாளத்தக்க மண்டை

லேச்வரர்க ளாயினேரும், முடிவில் இறந்தார்களென்று சொல்லப் பட்டார்களே யல்லாமல் உயிரோடிருந்தார்களென்று சொல்லப்பட் டவரெவர்களு மில்லே. நம்முடைய வாழ்நாட்கு காழிகை வட்டிலா யிருக்கின்றன் சூரியன். பெய்கின்ற மழையினது குமிழியைப் போலப் பலகாலமும் உண்டாகி யழிவதாகிய இந்தமெய்யென்னும் பேர்கொண்ட உடலைப் பொய்யென்று நினைத்து, இனிப்பிறவா நிலையைப் பெறத்தகுங் காரியத்தில் முயலுவதைவிட, நற்கதி யடையவேண்டு மான்மாக்களுக்கு நாடுஞ்செயல் வேறென்றில்லே. தீபம்பிரவேசித்த விடத்தில் முன்னங் குடிகொண்டிருந்த இருட் டானது சிறிது நில்லாது கெடும். அதுபோலத் தவத்திற்குமுன் எப்போர்ப்பட்ட பாவமுஞ் சிறிதும் நிற்காது. பெரியோர்களாயினேர் செல்வமும் பருவமும் சரீரமும் நிலையாமை என்றும் வியாதியும் விர் த்தாப்பியமும் மரணமும் நிலையுடைமை யென்றுங் கருதி, தாமடைய வேண்டுங் காரணமாகிய கதிக்குக் காரியமாகிய தவத்தைச் செய்து கருமங்களைத் தொலேப்பார்கள். அறிவுடையவர்கள் தங்களுக்கு நல் லொழுக்கமாகக் கொண்ட தவங்களைப் பல துயரங்களாலழுங்க நேரிடுங்காலத்து மனஞ் சலியாது தழுவி நிற்பர். மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் இவ்வைம்பொறிகளையும் சத்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னு மிந்த ஐம்புலன்களிற் செல்லாமற் காக்கும் வல்லமையை யுடையவ னெவனே, அவனே சகல ஆயாச முமற்று நின்மல சித்தனுய் மேலாகிய மோக்ஷ வீடடைவான். அறி வில்லாதவர்கள் அநித்தியமாகிய இகலோகவின்பத்தால் தமக்கு இடைவிடாது பல துன்பங்கள் எதிர்கொண்டுவரப் பார்த்துக் கொண்டிருந்தும் அவ்வற்ப இன்பத்தையே மேலுமேலு மிச்சித்துக் கொண்டிருப்பர். அறிவுள்ளவர்கள் நித்தியமாகிய பரலோகவின்பத் தைச் சதாகாலமு மிச்சித்து அவ்வகைப்பட்ட யாதொருவின்ப துன்பங்களுமின்றிச் சுகித்திருப்பர். ஆதலால் அச்சுகத்தையே துணேயாக நம்பி அதுகிடைத்தற்கேதுவாகிய காரியத்தில் முயலச் சொல்; இனிப் புத்திராதியர்களேயும் பூவுலக வாழ்க்கையையும் நினேக்கவேண்டாம். அறுசுவைப்பொருள்களேயு மாய்ந்து கூட்டி உள்ளுறப்புகட்டிச் சமைக்கினும் பேய்ச்சுரை கைப்பறாது. அதுபோல அறிவில்லார்க்கெத்தனே கோடி உண்மை நியாயங்களே எடுத்தோதினும், "ஊழிற்பெருவலியாவுள மற்றென்று சூழினுந் தான்முந் துறும்" என்றற்போல அவர்கட்கு அவர்கள் ஊழே வந்துமுன்னின்று அவ்வுண்மை நியாயங்களேக் கேட்கவொட்டாது. அதற்கு நமது துரியோதனனே சான்றுவான்.

ஓ சஞ்சயனே! இகபரனியாயங்கள் இப்படி யிருப்பதால் இனி அவரவர்கள் அவரவரான்ம லாபத்திற்குரிய காரியங்களி லிச்சை வைத்து முயலவேண்டுவதே யல்லாமல் வேறொரு லாபத்தி லிச்சை வைத்து முயலுவதிற் சிறிதும் பிரயோசனமில்லை. இதனை யெல்லாம் நன்றாகச்சொல். மிஞ்சி நிற்பவர்கள் அடையவேண்டிய லாபத்தைத் தடையின்றி அடையட்டும். நீயும் இவைகளை யோசித்து இன்னு முனக்குள்ள நாள் வரையிற் பிரியாவிடையாய்க் கூடவே யிருந்து, அவரவர்களுடைய கருத்துக் கிணங்க நடந்து கொண்டு எக்காலத்துஞ் சுகஜீவியாய் வாழக் கடவாய்" என்று சொல்லி விடை கொடுத்தனுப்பினர். அப்போது சஞ்சயன் துரியோ தன மகாராஜனிடத்தில் வந்து கண்டான். அந்தச் சஞ்சயமுனியைக் கண்ட உடனே நாகக்கொடியோன் கண்கலங்கி, "ஓ சஞ்சயனே! எமது வம்ச முதல்வனை பாட்டன் இறந்த மார்க்கத்தை எத்தை யாகிய திரிதராஷ்டிர மகாராஜனுக்குச் சீக்கிரம் போய்ச் சொல்லக் கடவை" என்று சொல்லி அஸ்தினபுரத்திற்கு அனுப்பிவைத் தான். வழக்கப்படி சஞ்சயன் போய்ச் சொல்லத் தக்கவனாயிருந் தாலும், இது பெருஞ்சாவாகையால் அதிசீக்கிரம் போய்ச் சொல் லும்படி அனுப்பினன். ஓ அரசனே இந்தப் பிரகாரந் துரியோதனன் சொல்லி அனுப்பிவைத்த சங்கதிகளைத் தார்வேந்தராகிய திரித ராஷ்டிரனுக்குச் சஞ்சயன் தனிமையிற் போய்ச் சொல்லினன். இதைக் கேட்டவுடனே ஆதிநாயகனுடைய அடியார்களுக்கு அன் பிற்பெருகும் கருணை வெள்ளக் கண்ணீரானது ஆறுகப் பெருகி ஓடுவதைப் போல் அழுதலறி வீழ்ந்து, கட கடவென்று புரண்டு, "ஓ என் ஐயா! ஓ என் ஐயா! தேவரீருடைய துணை பற்றி என் பிள்ளைகளை அனுப்பினேனே! கடுத்தெரு விளக்கும், நட்டாற்றுக் கோரையுமாய் விட்டிறந்தீரே? இனி என் பிள்ளைகளுக்கு உற்ற துணை எவரிருக்கின்றார்கள்? ஓ என்னப்பனே! ஓ என்னையனே" என்றேங்கிக் குளிர்ச்சி கொண்ட சந்திரனைக் கண்ட தாமரைக் கமலம் எப்படி முகங்கூசிக் குவியுமோ அப்படி முகங்கருகி, மொழிகுளறி அடிக்கடி மண்மேலடித்துமோதி விழுந்து, மறு படியு மெழுந்து, "ஐயையோ, குலமானம், குடிமானம், குணமானம் முதலிய மானங்களெல்லாம் போய்விட்டனவே: என் வயிற்றிற் கொடிய நெருப்பிட்டதே என் பாழாகியவினை" என்று இருகண் களிலும், முகத்திலும் வயிற்றிலும், மார்பிலும் மளமள வென்று அறைந்து கொண்டு, "இன்றுதான் என்னிருகண்ணு மிழந்தேன். இது முதற்கொண்டே கண்ணற்ற பாவியானேன். அந்தோ அந்தோ எங்களையாவைக் கண்டவுடன் ஆகாயத்திலிருக்குந் தேவர்க ளெல்லாருஞ் செல்வமோங்கி வீடுபெற்று மகிழ்ச்சி யடைந்தி ருப்பார்களே" என்று அளித்த புண்ணினிடத்தில் அக்கினியிற்காய்ச் சிய வேலாயுதத்தைச் சொருகியதைப் போலப் பதை பதைத்து

துடி துடித்து, கைகொரித்து, நாவுலர்ந்து, நாபிவரண்டு நானிலத்திற் சோர்ந்தான் மேதினிக் கரசளுகிய திரிதராஷ்டிரன்.

இப்படியாகச் சோர்ந்த வேந்தனை அருகிலிருந்தோர்கள் எடுத்தணைத்து உபசரித்துத் தேற்றினர்கள். சஞ்சயனும் பீஷ்மர் கூறிய கருத்துகளை யெல்லாம் விளங்கும்படியாக உரைத்துத் தேற்றினன். அப்போது பக்கத்திலிருந்த சவுபலராஜ குமாரியாகிய காந்தாரி "ஓ மாமா! மாமா!" வென்று மண்மேல் விழுந்து "ஐயையோ! தேவரீரை நம்பியிருந்த எங்களையும் எங்கள் சிறுவர்களையுந் தெருவில் விடுத்துச் சேணுலகஞ் சென்றீரோ? ஓ தெய்வசிகாமணியே! ஓ எங்கள் குலதெய்வமே! ஓ திங்கட்குல விளக்கே! ஐயா! இவ்வுலகாள வேண்டுமென்று ஆசைகொண்ட பாண்டவ ரென்னும் பாவிகள் என் பிள்ளைகளிற் சிலரைக் கொன்று, மற்றப் பிள்ளைகளையும் வருத்தச் செய்து வென்று, எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆதாரபூதராயிருந்த பரிசுத்தமான உம்மையுங் கொன்று போட்டார்களே? மகா பாதகியான குந்தி மக்கள் என்ன சந்தோஷத்தில் இருக்கின்றார்களோ? அடி அம்மா அவர்களுந்தா னென்னவோ? வரந்தா னென்னவோ? கரந்தா னென்னமோ? சிரந்தா னென்னமோ? தெய்வமே அவர்கள் என் மக்களைப்போல் அழியார்களா? ஒழியார்களா? அறுபடார்களா? தறிபடார்களா? முறிபடார்களா? என் பிள்ளைகளெல்லோரும் பேதைகளாச்சே! இனியேது நாங்கள் பிழைப்போமென்பது வீண்பேச்சே: உலகத்திற்குப் பழிப் பாச்சே! பிள்ளைகளால் உற்றுரிமைக்கடன் பெறுமல் ஒண்டியாய் நிற்கலாச்சே! என் வயிற்றெரிச்சல் அந்தக்குந்திக் கிடாதோ? என்பாவம் அவளுக் கிடிக்காதோ? என் பெண்பாவங் கொண்டு பெருக்கத்தவிக்கார்களோ?" என்று பற்பல விதமான தூற்பாஷைகளைப் பேசித் தொண்டை வரண்டு, கண்டங்கம்மி காக்கை போற்கூவி, வெந்துயரால் வெம்பிச் சோர்ந்து வீழ்ந்தாள். அரசனையும் அரசியையும் உயிர்சன் சஞ்சயன் முதலியோர் தேற்றி விசனத்தை மாற்றினர்கள். அப்பாற் சஞ்சயன் அவர்களிடத்திற் செலவைப்பெற்றுக் கொண்டு பொன்னூர மணிந்த மன்னர் பொருந்திப் போராடும் போர்க்களத்தில் அரசர்கள் வாசஞ்செய்யக் கட்டிய பாசறை போய்ச் சேர்ந்து துரியோதன மகாராஜனுக்குச் சங்கதி தெரிவித்திருந்தான்.

பத்தாம்போர்ச் சருக்கம் முற்றிற்று

ஸ்ரீ மஹாபாரத வசனம்

துரோண பர்வம்

கண்ணன் துதி

பேர்படைத்த விஜயனுடன் மும்மைநெடும் பிறவியினும் பிரியாஞுகிச்
சீர்படைத்த கேண்மையினுற் றேரூர்தற் கிசைந்தருளுஞ் செங்கண்மாலைப்
பார்படைத்த சுயோதனற்குப் படையெலே னமரிலெனப் பணித்த கோவைக்
கார்படைத்த நிறத்தோனைக் கைதொழுவார் பிறவாழிக் கரைகண்டாரே.

சூதபுராணிகர் வாக்கியம்

ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு யுத்த பஞ்சகத்தின் முதற்பாகமாகிய பீஷ்ம பர்வத்தைக்கூறிய வைசம்பாயன முனிவரை ஜனமேஜயமகாராஜன் பணிந்தெழுந்து, "சுவாமி! கௌரவரும் பாண்டவரும் அணிவகுத்து அமர்க்களம் புகுந்தபின் அஸ்தினபுரத்திற் சோகங்கொண்டிருந்த திரிதராஷ்டிரன் வேதவியாச முனிவராலே தேறுதல் செய்யப்பட்டுச் சஞ்சயன் அண்டகோசவடுக் குரைக்கக் கேட்டதும், குருக்ஷேத்திரத்தில் இருதிறப் படைகளையுங்கண்டு சோகங்கொண்ட அர்ச்சுனன் வாசுதேவன் பகவற்கீதை யுரைக்கக்கேட்டு அவரது விசுவரூபமும் தரிசித்து மனந் தேறியதும், பின்பு பாண்டவர் கண்ணன் முன்னிலையில் பீஷ்மரையும் வில்லாசிரியரையுங்கண்டு அநுமதிபெற்று யுத்தவாரம்பஞ் செய்து இருதிறப்படைகளும் பகலில் உதயாஸ்தமனங்கொண்டு பத்துநாள்வரையிற் போராடியதும், பத்துநாட்போரிற் குருகுல பிதாமகராகிய பீஷ்மாசாரியர் தம்மைப் பகைகொண்டிறந்த அம்பையின் சபதத்தை அவளம்சமாய்ப் பிறந்த சிகண்டியென்பவன் முன்னிலையில் நிறைவேற்றிக்கொண்டதும், ஆதிய சரித்திரங்களோடு மற்றுமுள்ள சகல விநோதங்களையுஞ் சாங்கோபாங்கமாகக் கேட்டுச் சந்தோஷமாயினேன். இப்பால் இரண்டாம் பாகமாகிய துரோணபர்வத்தையுந் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று கேட்க வைசம்பாயனமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

பதினோராம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

கலிகற்ற வர்க்குமது கல்லா தவர்க்கு
நிலைபெற்ற வர்க்குநிலை நில்லா தவர்க்குங்
கொலைமுற்று வோர்க்குமுயிர் கெல்லா தவர்க்குந்
துலைவுற்ற சான்ரு னவன்ரூள் துதிப்பாம்

ஓ பற்றற்ரூரைப் பணிந்து, சுற்றத்தாரைக் கனிந்து, கொற்றத் தால் தெவ்வகன்று, வெற்றித்தாரை புனைந்த குருகுலக்கோமானே! கேளும். இப்படி பத்தாநாட் போரிற்பட்ட பீஷ்மாசாரியருடைய தன்மையைச் சந்தனுவாகிய வருணனுக்குச் சொல்லப்போன சூரியனனவன், அர்ச்சுனனுடைய செய்கையைத் தேவேந்திரனுக் குச் சொல்லவேண்டுமென்று வந்தவனைப்போல் இந்திர திசைக்கு வந்து, சந்தேகமறப்புகன்று, இருளைவென்று இரைந்து விரைந்து தேர் தூண்டிக்கொண்டு, அதிகமாயிரங் கிரணகரஞ்சொலிக்கும் படியாய்க் கிழக்குத்திசையி லுதயமாயினன். உடனே பாசறையி லுள்ள பாடிவீடுகளிலிருந்துகொண்டு பீஷ்மர் சாய்ந்த விசனத் தினால் இராத்திரிமுழுமையும் நித்திரையற்றிருந்த வீரப்பிரமுகர் யாவரும் அக்கதிரவனுக்கு முன்னெழுந்து, காலைக்கடன்களை முடித்துச் சதுரங்க சேனைத்தலைவர் முதலிய யாவருஞ்சூழ யுத்தகோலத் துடன் வெற்றிபெறும்படி யுத்தகளம்வந்து சேர்ந்தார்கள். அத்தரு ணத்தில் இருளைக்கெடுத் தெழுந்த சூரியனளித்த கர்ணமகாராஜன் சமுத்திரஞ் சூழ்ந்த உலகமதிக்குஞ் சாமர்த்திய முடையவனும், மன்னர் மண்டலீகர், மகுடவர்த்தனர், பட்டவர்த்தனர் முதலிய அரசர்களின் மத்தியில் மகமேருவைப்போன்ற இரதமேறிவந்து நடுநாயகமாக நின்றபோது, அங்கிருந்த அரசர்கள் சிலர் பேசிக் கொண்டார்கள்: அஃதென்னவெனில், வெற்றி பொருந்திய யுத்த முறையைக்கற்ற விக்கிரமாகிய அர்ச்சுனனுக்கெதிரில் நிலைபெற்று நிற்கும் வல்லமையுடைய அதிரதத்தலைவர், பீஷ்மாசாரியர் துரோணாசாரியர், அசுவத்தாமா என்னும் இவர் மூவர். இவர் களிற் பிரதாப வில்லைத்தாங்கிச் சத்துருக்களென்னும் யானைகளைச் சாடும்படியாகிய உக்ர நரசிங்கம்போன்ற பீஷ்மாசாரிய ரோய்ந்து

விட்டாரே, இனிமேல் நமக்குத் திக்காரென்று வெற்றிபெற்ற வேந்தர்களெல்லாரும் ஒடுக்கத்துடன் நடுக்கங்கொண்டு, கர்ண மகாராஜனையடுத்து, "அங்கதேசத் தலைவராகிய அரசே எங்களுக்கு உம்மைவிட வேறொருவருமில்லை. ஆதலால் நீரே சேனாதிபதியாயிருந்து ஜெயம்பெறவேண்டும்" என்று செப்பினார்கள். அப்போது அஷ்ட குலாசலம்போன்ற புஜபல பராக்கிரமக் கர்ணனவன் அந்த அரசர்களைப் பார்த்து "நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள். இன்றுமுதல் பீஷ்மருக்கு ஒப்பாகச்சென்று விஜயனைக் கொன்று அசைவறகின்று வீரவெற்றி பெறும்படி இஷ்டங் கொண்டிருக்கிற என்னிச்சைக்கு மாறுபாடாய் என்னை வென்று இலக்கச்செய்கிறவனெவனோ அவனை நானறிகிறேன்" என்று வீரங்கள்பேசி பீஷ்மாசாரியரிருக்கும் இடத்தையணுகித் தீர்க்க தண்டமாய்த்தொழுது அவருடைய திருவடியை அர்ச்சித்துத் துதித்து "ஓ பரதகுல மணியாகிய விரதநியமது நாடிய பரமகுரு முனியாகிய பார்த்திபனே, தேவரீரை வதைத்த மகாபாவிகளைத் திரிபுராந்தகராகிய சிவபெருமானுக் கெதிரிலெரிந்த அசுரர்களைப் போல் மணிமுடி சிதறிப் பணிமுடிபாரில் உருளச்செய்கிறேன். சத்தியமாகச்சொல்லுகிறேன். உத்தமராகிய தேவரீர் எனக்கு விடைகொடும்" என்று விரத சீலராகிய வரதனுடைய பாதத்தில் வணங்கியபோது அந்த பீஷ்மாசாரியார் குலுங்க நகைத்துக் கர்ணன் சந்தோஷிக்கும்படியாய் ஒரு வசனஞ் சொல்லுகின்றார்:—

"ஓ அங்கதேசாதிபதி, நாகத்துவஜனுகிய நராதிபன் உன்னை அதிரதத்தலைவர்களிற் சிறந்தவனென்று தனது மனத்திலே மதித்திருக்கின்றான். இப்படி முழுமனதுடன் நம்பியிருக்கிற இராஜனுக்கு அநுகூலமாகும் படிபனிலையப்போன்ற அர்ஜுனனை வளைத்துச் சனியைப் போன்ற பாணம் விடுத்து சூரிய கிரணம்போற் காய்ந்து முடித்துத் தேசராஜர்கள் எல்லோரும் புகழ தேவர் மாதவர் யாவரு மகிழ மகிபதியாகிய துரியோதனமகாராஜனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து வைப்பது உன்னுடைய சாமர்த்தியம். அப்படியிருக்க அதை விடுத்து என்னைக் கொன்றவர்களை யெரித்து விடுகிறேனென்று எனக்கிதமாகப் பேச வந்தது போர்வீரர்கள் சொல்லுகிற வார்த்தை யல்ல. புகழ்பெறுங் குலத்தோர் புகலுஞ் சொல்லல்ல. இது வச்சையர் பேசுகின்ற லச்சைகெட்ட இச்சக வார்த்தை யாகையால் இந்த வார்த்தையைக் கேட்பவனும் பதராயிருப்பனுகிற

சொல்லவந்த பதர்போன்றவனுடன் கூடிக்கொண்டு பழிக்குடன்படுவான். நான் அத்தன்மை போன்றவனென்று நீ நினையாதே. என் கர்மானுபவம் நான் அனுபவித்தேன். ஒன்றிரண்டு நாட்களில் உன் கருமத்தை நீ தொலைத்து விடு. மேலும் படை முனையில் அடிபட்ட வருத்தத்தாற் பூலோகத் தரசர்கள் முதலாகிய படை வீரர்களெல்லாரும் பழுத்த மரத்திற் பறவைகள் சேருமாப்போற் பலம் பொருந்திய உன் வில்லினுடைய நிழலில் வந்து சேர்வார்கள். நீ அப்போது வாடியபயிருக்கு மழை பெய்வதுபோல் அவர்களை ஆதரித்து மூங்கில் ஒன்றோடொன்று உரைத்து பற்றிக் கொள்ளும் நெருப்பினால் ஆரண்யமெரித்து பொரிந்து கரியாகுந் தன்மைபோற் போர்செய்து வித்வான்கள் உன் பேரிற் பொரணி பாடும்படி செய்யாமற் புகழத்தக்க பரணி பாடும்படியாய்ச் சமுத்திரத்தை ஆடையாகவுடுத்த தரணியைச் சந்திரகுலாதிபனுகிய இந்திரவோலக்கங் கொண்ட என் போனுக்குச் சுதந்திரமாக்கி வைக்கக் கடவை" என்று பலவாறுகிய நீதிமொழிகளைச் சொன்னர்.

கர்ணமகாராஜன் தனக்குத்தானே சேனைபதிக் கோலங் கொள்ளுதல்

இவ்வாறு அவர் சொல்லிய வார்த்தைகளையெல்லாம் இருசெவிகுளிரக் கேட்டு, அவ்வார்த்தையின் பெருமை சிறுமையை மனத்திலுன்னுமல், இரண்டு புயமுந் திரண்டோங்கித், (தூட்டுவந்து பெட்டியில் விழுகிறதோ? திட்டுவந்து பெட்டியில் விழுகிறதோ?) என்றுரைக்கும் மானமில்லாத ஈனரைப் போல் மனமகிழ்ந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டு, தனது பாடிவீடாகிய மாளிகைக்குப் போய்க் கேயூரமணி முதலிய சூண்டல கிரீட புஜகீர்த்தியோடு வாகுவலயம், தோளணிமாலை, பாஜிபந்து, கடகங்கணம், கொடிக் கொலுசு, தோடா, மோதிரம், தும்பிப் பதக்கம் முதலிய சுந்தர அணிமணிகளும், வீரகண்டாமணி, வஜ்ரகவசம், வீரகச்சை, வீரபட்டம், வீரத்துவசம், வெற்றிமாலை, மணிகட்டியவில், அம்பறாத்தூணி, வாள், வேல், கத்தி முதலாகிய ஆயுதங்களும் விளங்க, (முழுமூடரை மூடர்கொண்டாடியமுறைமை) என்னும்வாக்கியத்திற் கிணங்கத் தங்களைத் தாங்களே பெருமைப்படுத்திக்கொள்ளுஞ் சடையரைப் போல் தானே சேனைபதிக் கோலங் கொண்டு பார்த்தவர்களெல்லாரும் "இன்றைக்கே யுத்த முடிந்து போம். காளைக்கு நமனுக்கும் நமக்கும் வேலையில்லை" என்று மேகம்போலிரைத்து விரைந்து

எதிரோடி வந்து கண்டு கைதொழுது புகழும்படியாய், சர்வ வாத்தியங்களும் முழங்கக் குடை, கொடி, மீலிக்குஞ்சம் சாமரை முதலாகிய விருதுகளுடனே துதிக்கும்படியான ராஜ கூட்டங்களும், ரதகஜ துரக பதாதிமுதலான பேர்களும், பொன் மலையை வளைந்த கடல்போல் தன்னுடைய சேனைச் சூழ்ந்து கொண்டுவர, தாமரைக் கமலம்போன்ற கண்களில் நெருப்புப்பொரி பறக்க, நெற்றியில் வியர்வு பொடிக்க, குணத்தொனியுஞ் சங்கத் தொனியுங்கூடி எழும்பும்படி முழக்கிக்கொண்டு, ஆலகால விஷம் போற் கோபமூண்டெரியும்படியாய் வேகமாக மேகமளாவிய பூர்சே ரேறிப் போர்முனைக்கு வந்தான் கர்ணன்.

அப்படி வந்ததைப் பூமி முழுமையுஞ் சந்திரவட்டக் குடை நிழற்படுத்திய சுத்தியாவட்டைத் தாமவேந்தன் கேட்டு அரசனிடத் திற்கு வந்து, "அண்ணு இப்போது தாம் கொண்டிருக்கும் யுத்த கோலம் மெத்த நன்றாயிருக்கின்றது. இன்றைக்கே எனக்கு வெற்றி வருமென்பதற்குச் சந்தேகம் இல்லை. ஆனால் தேவர்களுக்கு வருத்தங் கொடுக்க எனக்குச் சம்மதமில்லை. அதெதினு லென்றால் காடுதிரிந்து வேடரைப் போல் கசங்கி வந்த குடிகேடராகிய பாண்டவரென்னும் பஞ்சைப் பசங்களையோ நீர் ஜெயிக்க நினைப்பது? எஜமானனை தேவ ரீரே சுதாவில் ஆயுதங் கொண்டிந்தப் பஞ்சவரைக் கொன்று விஜயம் பெறுவீராகில் மிகவு நன்றாம். அப்படிக்கில்லாமல் தெய்வீகத் தால் உமக்குயிர் நஷ்டம் வருமானால் இந்தப் பஞ்சாசதகோடி ராஜ் யங்களையும் பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு அரசு செய்பவர்கள் யாரண்ணு? நமது கையின் கீழிருக்கின்ற மனிதர்களைக் கொண்டு வென்று விஜயம் பெற வேண்டுமே அல்லது, நாமே யுத்தஞ் செய்து பெறுவது நலமன்று. அப்படி யுத்தஞ் செய்வதற்கு நாமெப்போது ஆயுத மெடுத்துத் தலைவராகப் புறப்பட வேண்டுமென்றால், நமது வீரர் முதலிய யாவரும் போய்விட்ட பிறகு இனி எவருமில்லையென் றுணர்ந்து அப்பால் நாம் புறப்பட வேண்டும். ஆதலால் அற்பர்கள் நிமித்தம் நீர் வெளிப்பட வேண்டாம். இன்னும் அநேக யுக்திகளும், நடக்க வேண்டிய முக்கியமான அனேக காரியங்களும் பலவாறாக இருக்கின்றன. அவைகளனைத்தையும் நான் தெரிவிக்கிறேன். தேவரீர் இப்போது கொண்ட சேனாபதிப் போர்க்கோலத்தை நிறுத்தும்" என்று கர்ணனைத் தழுவிக்கொண்டான்.

அந்த வேளையில் தன் உள்ளத்திலுண்டாகிய கொதிப்பை வெளியிற்காட்டாமல், தானேறி வந்த இரதத்தை விட்டிழிந்து, சூரியன் போனபிற்பாடு முகங்குவிந்து முடிசாய்ந்து ஜலத்திற் மூழ்ந்து தேன்பராக மண முதலியவற்றை அகத்திலடக்கிக் கொண்டிருக்கும் தாமரைப் புட்பம்போலானான், மிகுகொடையாளனென்னும் அங்கதேசத் தலைவனுகிய கர்ணமகாராஜன்.

இந்தப்படி வாட்டங்கொண்ட கர்ணனுடைய காட்டத்தைத் தங்கள் கண்ணேட்டத்தாலறிந்த துச்சாதனன் முதலாகிய தம்பிமார்களும், புத்திமானுகிய மத்திரராஜனும், மனதொத்த சகுனிமாமனுங் கூடிப்போய்த் துரியோதன மஹாராஜனிடத்தில் ஆலோசித்து, "இந்தக் கர்ணமகாராஜனே விலக்கி வைப்பீராகில் பீஷ்மருக்குப் பதிலாக நின்று போர்புரியும்படியாகிய விக்கிரமர்கள் யாரிருக்கின்றூர்கள் ? வேந்தனே ! இவரைவிட வேறெருவரையுங் காணேமே" என்று சொல்லினூர்கள். அப்போது துரியோதனன் அவர்களைப் பார்த்து "மித்திரர்களே ஏன் அப்படி ஒருவருமில்லை யென்று சொல்ல வேண்டும்? முன்னமே இளவரசு பெற்று யுத்த முனையில் வெற்றி பெறும்படியாகிய சமர்த்தர் விற்குருவாகிய துரோணசாரியரிருக்கின்றூர். அவரைச் சேனுதிபதியாகக் கொண்டு ஜெயம் பெறுவோம்" என்று சொல்ல, யாவரும அந்த வார்த்தைக்குடன்பட, கர்ணராஜனேயும் அழைத்துக்கொண்டு துரோணசாரியாரிருக்கும் பாசறைக்குச் சென்று, அவரைப் பணிந்தெழுந்து, "ஓ எங்கள் தேசிகராகிய தேவனே, இறந்துபோன எங்கள் பாட்டனேப்போற் சேனுதிபதிப் பட்டம் பெற்றுச் சத்துருக்களே வென்று நாங்கள் வெற்றி பெறும்படியாகிய விதத்தைத்தேடும். ஒப்பொருவரில்லாத உம்மைவிட வெற்றி பெறுவா ரொருவருமில்லை. உத்தமனே, மேலுந் தாங்கள் தநுர்வேத சதுர்வேத சாம்பிரதாயமுணர்ந்த சகல கலை நிபுணராகையால், தேவரீருடனெதிர்த்து விற்பிடித்து மற்கொடுத்து வெற்றிபுனேயும் வல்லமைசாலிகள் வேறெருவரையுங் காணேம். மநுவிக்ஞான முணர்ந்த ராஜராஜர்கள் மகிழும்படியாய்க் கண்ணிமைக்குமுன் வில்லே வளைத்து, கணைகள் விடுத்து, கருதலரைக் கால்சாய்ந் தோட வடித்து, காசினி முழுது மெனக்களித்து, கருணைப் பிரவாக வருளளித்துக் கைகொடுத்துக் காக்குந்திறம் உமக்குத் தகுமல்லது, மற்றெருவருக்குந் தகாது. ஓ உண்மைப் பொருளோதுங் குருவே" என்றுரைக்க, துரோணசாரியர் அந்த வார்த்தையைக்

கேட்டுப் புன்னகையுடையவராய் அங்கங்களித்துப் பொங்கி, ஆகமப் பதுவலியுடைய தேவாதி தேவர்களும் பூவுலகப் பூபாலர்களாகிய ராஜராஜாக்களுஞ் சந்தோஷிக்கும்படியாய் ஒருவாக்கியஞ் சொல்லுகின்றார்—

சேனாதிபதித்வங்கொண்ட துரோணாசாரியரைத் துரியோதனன் வரங்கேட்டல்

ஓ மதிமரபுதித்த மாசிலாமணியே! ஓ வணங்காமுடிபெற்ற மகுடசூடாமணியே! ஓ ஜகமெலாம் புகழுந் தெய்வ சிகாமணியே! சேர்ந்தோரைக் காக்குஞ் செல்வ சிந்தாமணியே! கேளும்-கறுத்த மேகத்தைப் போலிடித்து முழங்கிப் பாண வருஷங்களைச் சொரியா நின்ற எனது வில்லினுல், ஏழுபுவியு மெரியக் கன முடைபட்டுச் சரிய திக்கஜங்கள் கலங்கி முகங்கரிய தேவர்கள் பூமாரிசொரிய சேடன் முதலிய பாம்புகளினுடலுரிய பகையாளிகளின் மண்டைகள் நெரிய ஒருதொடியிற் போர் புரிந்து இப்படியை உமக்கு முடிசூட்டிவைக்கும் பராக்கிரம முடையவனுயிருக்கிறேன். எதிரியின் படைகளை மாய்ப்பது எனக்குப் பெரிதல்ல. ஆகையால் உன்னிஷ்டப்படி சராதிபர்களும் கால்வகைச் சேனைகளும் அறியும்படி சேனைக் கதிபதி யென்னும் நெறிமுறையைச் செய்" என்று தேசிகன் சொல்ல, உடனே காசினியாளுங் காவலன் பூசுரர்களை யனுப்பிப் புனிதமாகிய கங்கை யமுனைமுதலாகிய புண்ணிய தீர்த்தங்களும், பால், தயிர், நெய், தேன், இளநீர் முதலாகிய அபிஷேக திரவியங்களும்; பலநிறமுங்குணமும் மணமுமுடைய புஷ்பம், அக்ஷதை, தாம்பூலம், கர்ப்பூரம், சாம்பிராணி, தேங்காய் வாழைப்பழம் முதலான வஸ்துக்களும் கொண்டுவரச் செய்து, மந்திரலோபங் கிரியைலோபமில்லாமற் கலசங்களமைத்து, வேத வேதியர் வேத கோஷஞ் செய்யத் துரோணாசாரியருக்குத் திருமஞ்சனமாட்டி, உபசாரத்துடன் வழிபடுகடவுளையும் வீரமாகாளியையும் வழிபட்டுப் பூசித்து, காதகீதவோசையும் காதன் வேதபூசையு முழங்க நவரத்தினகசித பட்டங்கட்டி, அவரைச் சகல ராஜாக்களும், சகல தேசர்களும், சதுரங்கசேனைகளுஞ் சரண கமலத்திற் சிரமுறப் பணிந்து நெருங்கி நிற்கத் துரியோதன மகாராஜனும் வணங்கியபோது, அவனைத் தமதிருகரத்தாலும் அணைத்தெடுத்து ஆசீர்வதித்து மகிழ்ந்து, "ஐயோ வணங்காமுடி பெற்ற மன்னனுடைய மனம் என்னபாடுபடுகிறது பார்த்தாயா?" என்று

துரோணாசாரியரின் மனமானது அனலைக் கண்ட மெழுகைப் போலுருகியது. அவருக்கு அரசன்பேரிலிரக்கம் பிறந்தது. அவர் அரசனை அருட்பார்வையாகப் பார்த்து, "ஓகௌரவகுல முதல்வனே உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்; தடையில்லாமல் தருகிறேன்" என, தரணீசனனவன் குருசுவாமியைப் பார்த்து, "ஐயனே எனக்கு வரமருளும்படியாய்க் கடாக்ஷம் வருமாகில் சண்டைமுனையில் தருமராஜனை இலக்கச் செய்து கைப்பிடியாய்ப் பிடித்துக்கட்டி என்னிடத்தி லொப்புவிக்குங்கடமை தேவரீருடையது. ஈனிரு கரத்தையுமேந்தி விரும்பி வரமாகக் கேட்டுக் கொள்வது இது!" என்று ஈகக்கொடியோ னுரைக்க, அந்தவசனத்தைக் கேட்ட தபோவேத முனிவர் பலமுறைகளாலும் பலதுறைகளாலும் பண்பாக யோசித்து 'இது வீணுசையே யொழிய முடியத் தக்கதல்லவே' என மனகொந்து சிந்தித்து மன்னர் பெருமானை நோக்கிச் சிலவார்த்தைகள் சொல்லத் தொடங்கினர்—

"பலகலையுணர்ந்தும் பலனறியாப் பதர்போன்ற பார்த்திபனே—, அளவிலாப் பகை மேற்கொண்ட பலவான்களான பாண்டவரின் முடிகள் பொடிபட அமர் முடித்துச் சந்திரவட்டக் குடை நிழலில் இந்திரனைப் போல் என்னையிருத்தி அரசு நடத்த வரங்கொடுத்தருளுமென்று ஒரு சொல்லைக் கேளாது பிரகாசம் பெற்ற மூரசக் கொடியுற்ற தருமபூபதியை உயிருடன் பிடித்துக் கொடுக்கும்படி வரங்கேட்டாயே. அப்பனே கமலசம்பவனனை பிரமதேவர் சிருஷ்டித்தருளிய இவ்வுலகத்திலே சாதமொழி விரதசீலத் தயாளுவான தருமராஜனுக்கு மகாவிஷ்ணுவையும் ஒப்பாகச் சொல்லப்படாதே! அப்பேர்ப்பட்டமேன்மைகொண்ட அருளாளனை எப்படிப் பிடித்துத்தரக் கேட்டனை! இறைவனே ஈன்குவேதம், ஆறுசாஸ்திரம் பதினெண்புராணம், மூப்பத்திரண்டு உபநிடத முதலான சாஸ்திரக் கேள்விகளினுலேயும், அந்தச் சாஸ்திரக் கருத்துணர்வினுலேயும், அவருக்குப் பிரமனும் நிகராகமாட்டார். ஜீவகாருண்ய முதலான நிருபைகளில் ரக்ஷகனை விஷ்ணுவும் நிகராகமாட்டார். வில்லைப் பிடித்து யுத்தஞ்செய்து சத்துருக்களைக்கொல்லுஞ் சங்காரகிருத்தியத்திற் சிறந்தவரான உருத்திரமூர்த்தியும் நிகராகமாட்டார். இப்படியிருக்கப் பகைவரான ஈம் அவ்வெற்றி பெறுவோமென்பது லேசான வார்த்தை அல்லவே! அதை ஒருகாலும் ஈம் நினைக்க வேண்டுவதில்லை. ஓ செல்வப்பெருக்குடைய சீமானே, மக

மேருமலைக் நிகரானயான புயத்துணை கொண்ட தர்மராஜன் 'விதியை அநுசரிக்கும் மதி' என்னும் வினைச் செயலால் ஒரு வேளை என் கைவசப்படுவானுனால், உன்னிஷ்டப்படி அவனைக் கொண்டு வந்து உன்னிடத்தில் விடுகிறேன். அவனை என்ன செய்ய நினைவு கொண்டிருக்கிறாய்?' அந்தக் கொடுமையை இன்னதென்றெனக்குச் சொல்லக் கடவை. ஓ கொலைத் தொழிலைக் குடியாகக் கொண்டு கூர்மை பொருந்தின அழற்கணையால் லசுரரைக் காய்ந்த அயிலேந்தியகரனே'' என்று ஆசாரியர்கேட்க, அடங்காப்பேராசை கொண்ட மனத்தோனை துரியோதன மகாராஜன் '' ஓ ஆசாரிய புருஷனே கேளும். அழகிய முரசக்கொடியோனைப் பிடித்துக் கொண்டு வந்தால் அவனுயிரைப் போக்கிவிட வேண்டுமென்றும், அதனால் மற்றத் தம்பியர் நால்வரு மடிந்து போவார்களென்றும், அப்பால் நமக்கெப்போதுஞ் சல்லியமில்லை யென்றும் முதலில் நினைத்தேன். அங்ஙனப்பை நிதானிக்கும்போது, தலைமாட்டுக்குக் கொள்ளியைத் தானே தேடிக் கொள்வதைப்போல் வந்து முடியும். அதென்ன வென்றால் தர்மராஜனைக் கொன்று போட்டால் தம்பிமார்களுஞ் சாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படிச் சாகத்தக்கவர் கள் சும்மா சாகமாட்டார்கள். (போகிறபடி போகின்றோமென்று ஒரு புதுமை விளையாடினன்) என்பதுபோலும் (சாகிறபேர்க்குச் சமுத்திரங் கால்வாய்) என்னுந் தன்மைபோலும், (அதிசூரனுக்கு அரும் பிராணன் துரும்பு) என்பதைப்போலும் எண்ணங்கொண்டு, அர்ச் சுனன் அடங்காத கோபமூண்டெரியும்படியாய்த் தானே யுகாந்த காலாக்கினிபோல் ஓங்கிப் போர்புரிந்து, நமது சேனைகள் முழுமை யுங் கால் பெயர்க்க வொட்டாமற் காய்ந்து தீய்ந்து, சாய்ந்து மாய்ந்து போகத் தொலைப்பான். அப்போது நாம் சும்மாவிராமல் எதிர்த்துப் பிறைமுகக் கணையால் அர்ச்சுனனைக் கொல்லுவோ மானால், அவனைக் கொன்ற மாத்திரத்தில் குறைவில்லாத பிரகாசம் பொருந்திய சக்கரந் தரித்த மாயோன் ஏற்பட்டு, நமது புத்திர மித்திர களத்திராதிகளுடன் ஒன்றொழியாமற் நம்மையு முடித்து நமது ராஜ்யத்தை யெல்லாம் பெண் காணியாகக் குந்திதேவி துரைத்தனஞ் செய்யும் படியாய் ஏகச்சக்ர பட்டாபிஷேகங் கட்டி வைப்பான். ஓ மாசற்ற மறைக் குருவாகிய துரோணாசாரியாரே ! ஆகையால் தர்மராஜனைக் கொல்லப் படாதென்று விலக்கி வேறு யோசனை ஒன்று செய்திருக்கிறேன். அதாவது, தர்மராஜனைத் தேவரீர் கட்டிக்கொண்டு வந்தால், எங்களம்மானுகிய சகுனியைப்

விட்டுச் சூதாடச் சொல்லி உரிமை முதலிய எல்லாவற்றையுங் கெலித்து முன்போல் பயித்தியக்காரத்தனமாய்ப் பன்னிரண்டு வருஷம் வனவாசமும், ஒரு வருஷம் அக்ஞாத வாசமும் செய்து வாருங்களென்று சொல்லாமல், இன்று முதலுங்களையே வருக்கும் உங்கள் புத்ர மித்ர சந்ததியாருக்குங் காடே கதியென்று ஓட்டிவிட்டால் மறுவார்த்தை ஒன்றும் பேசாமல் தம்பிமார்களுடன் வனம் போய்ச் சேருவான். நமது தம்பியரும் நாமும் நமக்கிஷ்டமாகிய பேர்களுடன் இவ்வுலகத்தைச் சஞ்சல மில்லாமல் ஆண்டநுபவிக்கலாம். ஆனிப்படி நீதியாக உலகம் புரக்கும்படி நீர் தயைசெய்ய வேண்டுமென்று எனது சிரத்திற் கரத்தைக் குவித்து வணங்கிக் கொண்டேன். உரம்பொருந்திய சாத்தின் திறத்தைப்பெற்ற துரோணாசாரியரே! நாயினுங் கடையனாகிய அடியேனுடைய எண்ணமிது" என்றனன்.

அதைக்கேட்டு பரிசுத்தமாகிய ஆரணந் தெரிந்த பூரணனாகிய துரோணாசாரியர் நகைத்து, இராஜாதிராஜனுடைய பேதைமைப் புத்தியைச் சகிக்கமாட்டாமல் விசன மடைந்து, வேண்டிய வரத்தைக் கேளுந் தருகிறேனென்று தான் கொடுத்த வாக்குக்குப் பழுது வராமல், காரண காரியங்களையும் வேறொரு தேவரகசிய வாக்கிய சத்தியத்தையும் நினைத்து, "ஓ வணங்கா முடியோனாகிய மன்னவனே! எது எப்படியிருந்தாலும் நான் தருகிறேன்! நீ ஒரு காரியம் செய். அதாவது, இந்திரனுக்குப் பூந்தோட்டமாகிய காண்டவ வனத்தில் கட்டழித்தகாளை, இளாவிர்த கண்ட முதலாகிய நவ கண்டங்களிலுஞ் சென்று திக்விஜயஞ் செய்து வென்று வந்தவேளை, நாரணனுல் வெல்லுதற்கரிய காலகேய நிவாதகவசாளை நமனூரிற் குடியேற்றிய தோளையுடைய அவ்விஜயனே சத்துருக்களுக் கெல்லாமாரணன். இப்பேர்ப்பட்ட தம்பியானவன் தருமராஜனுக்குச் சமீபத்திலே துணையாயிருக்கிற வரையிலும், நீ கேட்டுக்கொண்ட வரம் நிறைவேறு மென்றும் நானப்பேர்ப்பட்ட விற்றிறமையுடையவனென்றுஞ்சொல்லமாட்டேன். இதை நன்றாக உன்னுள்ளத்தில் வைக்க வேண்டியது. உத்தமனே! மேலும் தென்றல் தேரும், இருட்டாகிய யானையையும், ஸ்திரீகளின் படையும், தாழைமலர் வாளும் கரும்பு வில்லும், சமுத்திர பேரியும், சந்திரவட்டக் குடையு முடைய மன்மதன் அவனுடைய மலர்ப் பகழியோடு மகாதேவருக் கெதிர்ப்பட்டு எரிந்து மண்ணானதுபோல், தவ சம்பன்னர்களாய்

தருமவான்களுக்கு எத்தனை விதமாகிய வஞ்சகத்தைச்செய்யநினைத்தாலும், அத்தனையும் பருத்திப்பொதிக்கு நெருப்பாகி நினைத்தவர்களைப் பாழாக்கிப் போடும். இந்த தர்மங்களை யெல்லாம் நீ சற்றும் யோசிக்காமல் தர்ம விருத்தமாகிய மார்க்க மில்லாத வஞ்சகயை நினைத்தாய். ஆகிலும் உன்னெண்ணப்படி யுத்த முனையில் என்னும் கூடியவரையிலும் பாடு பட்டுச் சத்தியநெறி உத்தமனாகிய தர்மராஜனைக் கட்டிக்கொண்டு வருகிறேன். ஆதலால் பூர்வத்தில் புராரியாகிய கைலாசபதியுடன் விற்போரிலேறி மற்போரும் புரிந்து பாசுபதாஸ்திரம் பெற்ற அஞ்சாத பஞ்சானனம் போன்ற அர்ச்சுனனனவன் தருமராஜனுக் கருகாமையில் நில்லாமலும், எனக்கெதிராகாமலும் அகன்றுபோகச் செய்வாயானால், நான் சொன்ன வாக்கியம் ஸ்திரமென்று நீ தெளிர்ந்துணர்ந்து கொள்ளலாம்" என்றார்.

அந்த வார்த்தையைத் துரியோதன மகாராஜனும் அவன் தம்பிமார்களுங் கேட்டுச் சந்தோஷங் கொண்டு தாங்க ளெண்ணிய கருத்து நிறைவேறித் தருமராஜன் கையகப்பட்டதைப்போற் களித்து, துரோணசாரிக்குக் கரங்குவித் திறைஞ்சி, கர்ணமகாராஜன் முதலாகிய பலவான்களெல்லாரும் பக்கத்தில் நெருங்கி, முரசு முதலிய வாத்தியங்களுடன் ஏழுகட லார்ப்பென்ன முழங்கியுக முடிவாகிய கால மிதுவென் றுரைக்கும்படியாய்த் துரோணரென்னுஞ் சேனாபதியுடன் ரணகளம் வந்து சேர்ந்தார்கள்.

இவ்விடத்தில் நடந்த சங்கதிகளெல்லாம் வணங்கி யுரைத்த தேவராலே தெரிந்துகொண்ட பலம் பொருந்திய முரசக்கொடி படைத்த தருமர் பீமசேனன் முதலாகிய தம்பிமார்களையும், மித்துருவாகிய புத்திமான்களையும், ஸ்ரீகிருஷ்ண தேவரையுஞ் சேர்த்து வைத்து, இச்செய்திகளை யெல்லாம் அவர்களுக்குத் தெரிவித்து, அருச்சுனனை நோக்கி, "அப்பா துரியோதனமகாராஜனுக்கு வரங்கொடுத்திருக்கிற சேனாதிபதியான துரோணசாரியார் போர் புரிந்து என்னைப்பிடிக்க வரும்போது சோமசூரியாக்கினியான முச்சுடருஞ் சுழலும்படி நீ முனைந்து யுத்தம் செய்தால் மாத்திரம் நாம் பிழைப்போம்; சபதமு முடிக்கலாம். நீ முனையாவிட்டால் நமக்கு எதுவுமுடியாது. ஆகையால் அந்தத் துரோணசாரியார் எதிர்த்து வந்த காலத்தில், ஆசாரியரென்னு மரியாதையும், முறைமையும் எண்ணிப் பார்த்து அச்சப்படாதே. என்னை

விட்டு நீங்கி எங்கும்போகாதே! தர்மசாஸ்திரந் தெரிந்த தேவர்களுந் தன்னைக் கொல்லவந்த பசுவைக் கொல்லுவார்கள். என் சமீகாதரனே! இதை நீ யோசிக்க வேண்டும்" என்று கூறினர். ஞானி லம் புகழும் நான் "அறநெறி வழுவாத என்னண்ணனே! தரித்திரன் குபேரசம்பத்தை அநுபவிக்க நினைப்பதுபோல, இராஜாதி ராஜனை துரியோதனன் தனக்குத் தானே நினைத்துக் கொண்ட காரிய மல்லாமல் இது முடியுங் கருமமல்லவே. இத்தனூர்வேத ஸம்பன்னரான துரோணசாரியராலும் ஆகாது. முத்தொழில் கடாத்தும் முக்கடவுளாலு முடியாது. என் வார்த்தையைத் தேவரீர் கம்பும். அண்ணா! என் பிராணனை நான் வைத்துக்கொண் டிருக்க உம்மை ஒருவர் கைக்கொள்ள வசமாமோ? நிர்மலனே! தேவரீரைக் கைவிடுவேனுகில், குருத்துரோகஞ் செய்து ஆசாரியனுயிரை வாங்குந் தோஷமும், உம்மைக் கை விட்டுப் பிரிவதினுல் கேரிடுந் தோஷமும், ஆகிய இவ்விரண்டு மெனக் கொன்றுய் முடியும். எமது கர்த்தனை இந்தத் துரோணு சாரியார் மாத்திரமல்ல, பாதலத்தி லிருப்பவரெவராணுலும், பூதலத்தி லிருப்பவரெவராணுலும், இவர்களனைவரும் ஒன்றுகச் சேர்ந்தாணுலும், தனித்தாணுலுந் தேவரீரைக் கவர்ந்துகொண்டு போகும்படியாய் வருவாராகில், அப்போதே இந்த மண்ணுலக மனைத்தும் பொடிப் பொடியாகிய மண்ணுய், வார்கடலேழும் வற்றி வரண்டு திடராய் வடவாமுகாக்கினியும் அவிந்து சிதைந்து நீருய், விண்ணுலகமும் நிலைகெட்டுத் தடுமாறித் தலைகீழாய், சந்திர சூரியர்களுங் கதி யோய்ந்து கால் சாய்ந்து வேருய், மகமேருவுங் குயவன் திகிரிபோற் சுழன்று தளர்வதாய் இவ்வுலகைச் சுமக்கும் ஆதிசேடனும் உடல் நெரிந்து மெலிவடைந்து ஒன்றுமில்லாது வெட்டவெளியாய்ப் போய்விடும். தேவரீர் மனத்தில் இதைக் குறித்து எண்ணவே வேண்டாம். உமதிஷ்டப்படி குறைவில்லாம விரும்" என்று சொன்னன்.

இப்படியாக அர்ச்சுனன் நீருண்டெழுந்த மேகம்போ லிரைத்து கூறிய வாய்மையை வெற்றிபெற்ற மூரசக்கொடிக் கதிபனை வீரன் கேட்டு, மகிழ்ச்சியினுல் இரண்டு தோளும் வலுவேறி வீங்கி மதத்து விண்ணில் ஓங்க, சகல ஜெயமும்பெற்ற மூரசங்களுடன் தப்பட்டை, தாரை, பூரி முதலிய வாத்தியங்களும் எங்கும் ஆர்ப்பரிக்க, பிரகாசியா நின்ற ரதகஜதுரகபதாதிகளென்னும் பெருங்கடற்

புரண்டுசூழ, வெற்றி பொருந்திய வெண்சாமரை, விருதுக் கொடி, வெள்ளைக்குடை, மயிற்பீலி, ஆலவட்ட முதலாகிய யாவுநெருங்க, இவ்வித ஆரவாரங்களோடு விசித்திரமான தேரேறித் தம்பிமார்களுந் தானைகளும் புடைகவிந்துவர தாம்தாமென்று புறப்பட்டார். அப்போது, மைவண்ணம் போன்ற மேகத்திற் கொப்பாகிய வடிவமைந்த மாதவன் யுதிஷ்டிரனைப் பார்த்து, மெய்விரதனான தருமநந்தனரே கங்கா புத்திரரான பீஷ்மா சாரியர்க்குப் பின் தனக்குச் சேனாதிபதிப் பட்டம் வருமென்று சந்தோஷித்திருந்த கர்ணன் யுத்தஞ் செய்வதற்கு ஏறினதாறினவென் றிகழ்ந்துப்போய் விட்டான். அசுவத்தாமாவானவன் நெடு நேரம் வரைக்கும் நிலைத்து முனிந்து முனைந்துப் போர்புரிய மாட்டான். ஆகையால் இனிமேல் நாமே வென்று ஜெயம் பெற்றோமென்று நினையும்'' என்று திருவாய்மலர்ந்தருளக் கேட்ட மலையைப் போற் குவிந்தோளினையுடைய தருமனும் மற்றத் தம்பிமார்களும் மனமகிழ்ந்து, போர் மலைவதற்கு ரணகளம்போய்க் குறுகினர். இப்பால் நவநிதி நிறைந்த மாதனக் களஞ்சியம் அளகாபுரிக் கிறைவனான குபேரனென்றும், ஐந்தருநிறைந்த அருநிழலுறைந்த அமராவதி தலைவனான போகதேவேந்திரனென்றுஞ் சொல்லத்தக்க அவனிபர்க் கதிபதியாகிய துரியோதனமகாராஜன் விவேகத்திற் சிறந்த படை மன்னவர்களுடனும் வேதவிற் குரிசிலாகிய சேனாதிபதியென்னுந் துரோணாசாரியருடனும் வெம்போர்க் களத்தில் வந்து மிகமகிழ்ந்து நின்றான்.

இக்கப்படி இருதிறவீரரும் பொருத்திய பீஷ்மரொருவரில்லாமல் நிறைந்திருந்த அமர்க்களம் எப்படி யிருந்ததென்றால் சந்திரசூரியர் மறைந்த வானம்போலும், அழகிய குணமும் மணமுங் கெட்டு கலங்கிய மலர்போலும், தெளிந்த நன்னீர் நிறைந்த ஆறில்லாத ஊர்போலும், அழகிய தந்தியற்ற நாதயாழ்போலும், திரவியமில்லாதார் செல்வம்போலும் சத்தியந் தப்பினோர் தளர்ச்சி போலும் இரக்கமற்றவர் இல்வாழ்க்கை போலும் நன்னினைப்பில்லார் நவிவுபோலும் வேதமந்திரமில்லா வேள்விபோலும் ஞானமற்ற தேகம்போலும் கண்கள் கெட்ட முகம்போலும் தீபம் அவிந்த மனைபோலும் பாதனைப் போன்ற தம்பியைப் படைக்காத தமயன் போலும் குருவாக்கியங் கொள்ளா வித்தை போலும் பொறுமை மறைந்த தவம்போலும், நற்குண நற்செய்கைகெட்ட பெண்ணுடன்

கூடிவாழும் இல்லற தருமம் போலும் நீதியற்ற அரசுபோலும் யானையில்லாச் சேனைபோலும் தியானமில்லா நிஷ்டை போலும் புத்திரன் கிட்டாப் பாக்கியம் போலும் மேகமீங்கிய பூமி போலும் வித்வான்கள் பொருந்தாத சபைபோலும் ஆசார பூசாவிதி பெறுத குலம்போலும் லவணங் குறைந்த ருசிபோலும் காணிதளர்ந்த விற் போலும் காதனிழந்த படைபோலுமிருந்தது. இப்படியாக விருந்த ரதகஜதுரகபதாதி முதலாகிய கால்வகைச் சேனைகளையும் வண்டிச் சக்கரம்போற் சகடவியூகமாக வகுத்துச் சகலவித வாத்தியங்களுடன் தானுந் தூசிப் படையில் நின்றூர் கவுரவ சேனுபதியாகிய துரோணசாரியர். இங்கே பஞ்சவர் படைகளாகிய சதுரங்கச் சேனைகளையுஞ் சேர்த்து எதிரிகளேற்படுத்திய வியூகத்திற்கு மாறுகக் கிரவுஞ்சவியூக மொன்று பிரம்மாண்ட மலையைப் போல் ஏற்படுத்திப் பெரும்போர் முகத்தினின்றூன் பாண்டவச் சேனுபதியாகிய திஷ்டத்தூய்மன்.

இவ்வகையாக இருவகைப் படைகளுங் களித்துக் கொண்டு கிற்க குளிர்ச்சி பொருந்திய சந்திர வட்டக் குடையினையுடைய அரசர்கள் தங்கள் தங்கள் சேனுதிபதிகளின் புடையிற் சூழ்ந்துவர அங்கே உலகமதிக்குந் துரோணசாரியார் யாவரினுமேற்பட்ட பல முடையவராய்த் தடதடபடபட மடமடவென்று தாவிவருங்குதிரை பூட்டிய தடந்தேர் செலுத்திவந்து தேவர்கள் தியங்கி நடுங்கி மயங் கும்படியாய்ப் பத்திர புஷ்பாதிமாலைகளணிந்த வரிசை பெற்ற வாளி களைச் சோனுமேகத்தைப் போற் சொரிந்து செவ்வரக்கைப் போற் கட்கடைசிவந்து பற்பலகோடி சிலீமுகக்கணைகளினுற் குற்றமற்ற பாண்டுவின் புத்திரருடைய வாகினியைப் பிளந்து சிதறவடித்து முடித்து மத்தியானச் சூரியனைப் போல் யாவரும் தமக்கு நிகரில் லாமல் நின்றூர். இங்கே பார்த்தசாரதியாகிய வலவன் படபடா காரத்துடன் தேரைச் செலுத்தப் பிரதாப உருத்திரனைப் போல் வந்த பற்குணன் துரோணசாரியார் நடத்தும் பராக்கிரமத்தைக் கண்டு, மழுப்போற் காய்ந்து அனற்பொறி பறக்குங் கணைகளை அமோகமாக இறைத்தான். அந்தக்கணைகளைக் கர்ணன் கண்டு அர்ச்சுனனைத் தகைந்து, தனது வில்லில் மோகாஸ்திரம், மோகாஸ் திரம், பிரம்மாஸ்திரம் என்னு மிவைகளை விடுத்துப் போர்புரியுங் காலையில், எண்டிசை முதலிய யாவும் நடுங்கின. இமையா நாட்டத் தவருமொடுங்கி, இருகரங்களாலுங் கண்களை மூடிக்கொண்டனர். இன்னெரு பக்கத்திற் சகாதேவனும் மாயச் சூதாடிய வஞ்சக

முடைய சகுனிமாமனும் நேர் நேராகப் புகுந்து கலந்து, ஒருவரை யொருவர் வெல்லுவ தரிதென்றுரைக்கும் படியாய்ப் போராடி, வேகமுங் கூர்மையுங் கொண்ட சரங்களேவி, ஒன்றே டொன்று மூனைந்து, தேய்ந்து, சாய்ந்து, ஓய்ந்து போகும்படி வில்லே வளைத் தெதிர்த்தார்கள்.

இவ்விருவரும் நெடுநேரம் போர்செய்யும்போது சகாதேவன் ஒரு கணை விடுத்துச் சகுனிபினுடைய சாரதியைப் போக்கி, இரு கணை தொடுத்துக் கொடியை அறுத்து, நான்கு பாணம் விடுத்துக் குதிரைகளையுங் கெடுத்து, வஞ்சகனுடைய மார்பு கிழியவடிக் கணை யினுற் றுளைத்துக் காயப்படுத்தியபோது, இளைத்து நின்ற சகுனி யானவன் நிணச் சேற்றில் விழுந்து ஓடுவதற்கு எண்ணினவனைப் போல் தன் தேர் விட்டிறங்கி, வெற்றி கொண்ட வஞ்சமில்லா நெஞ்சினனுகிய சகாதேவனே எதிர்த்துக் கைத்தண்டங் கொண்டு மதத்து வந்தான். அப்போது குலனுக் கிளைய சகாதேவன் நகைத்து, பிரகாசிக்கும் வாகுவலய மணிந்த தன் றேளின் பேரில் யாவரும் பார்க்கும்படியாகத் தாங்கிய பலம்பொருந்திய கதையைக் கையிற் கொண்டெதிர்த்து, சகுனிமாமனைத் தாக்கிப் புறமுதுகிட் டோடப் புரட்டி யடித்தான். மற்றொரு புறத்தில் மும்மதங்களைப் பொழியும் யானைகளும், குதிரைகள் கட்டிக் கவசங்களைப் போர்த்த தேர்களும், மனவேகத்தினுஞ் சிறந்த புரவிகளும், வெற்றி பெற்ற வீரவெள்ளப் படைகளும், நாலு புறமுஞ் சூழ்ந்துவர, இராஜவீர மகுடாதிப ரெல்லாருந் தன்னிழலைப் போற் றொடர்ந்துவர, பாட்ட னுகிய பீஷ்மரிறந்த துன்பத்தி லாழ்ந்திருக்குந் துரியோதனன் வேங்கைப் புலி பொருந்திய மலைபோன்ற இரதத்தை விட்டுக் கொண்டு, கொடிய காலாக்கினிக் கொப்பாகக் கொதித் தெழுந்து, வாயுகுமாரனுகிய பீமசேனனை வளைத் தெதிர்த்துத் தாக்கினன்.

அப்போது சிங்கக்கொடி தாங்கிய தேரினையுடைய பீமசேனன் அச்சிங்கம்போற் சினந்தெழுந்து, சரிக்குச் சரியாய் சாயகம்விடுத்துக் கருக்கி, தீமுகாஸ்திரங்களை யேவி, அவனரவக் கொடியும் இடிக்குப் பயந்த பெரும் பாம்பைப் போன்ற வில்லுமுறிந்து போகச் செய்தது மல்லாமல், அரசனடுங்கிப் பயப்படவும், அமர்பொரத் துணிந்து அவனுடன் வந்த படைமன்னர், யானைகள், குதிரைகள், தேர் நிரைகள், பதாதியர் முதலிய யாவும் அடியோ டொழியவும், வெவ் விய பாணங்களை மேலுமேலு முடிக்கி விடுத்தான்.

இப்படியாக பீமசேனன் தொட்ட கணைகளினால் வாத்தியங்கள் முழங்கும்படி மகிழ்ந்து வந்த பட்டவர்த்தனரும், மகுடவர்த்தனரும், பரிபூட்டிய தேராளிகளும், வில்லாளிகளும், வாளாளிகளும், வேந்தர் வேந்தராகிய துரியோதனனும் வெங்கிட்டோடும் விரைவைக் கண்டு, யாவருந் துதியாகின்ற வெள்ளைக் குடைவிரித்த பீமசேனன் பேரிற்கோடை யிடியைப் போலிரைந்து விரைந்து முனைந்து சல்லிய ராஜன் வந்து வளைந்து, வீரசாயகங்களை மாரியாய்ப் பொழிந்தான். அந்தச் சல்லியன் விடுத்த பாணங்களை யெல்லாம் கெடுத்துப் பீபார் புரியும் பீமசேனனை நகுலன் அடித்து, "தேவரீர் யுத்தம் பண்ண வேண்டா" மென்று தடுத்து, தன் தமயனுடனெதிர்த்த சல்லியனைத் தானே தகைத்து, என்னுடன் போர்செய்யக் கடவை என்று இமைக்குமுன் எண்ணிறந்த கொடுங்கணைகளைச் செலுத்தி, இரண களமுழுவதுந் தலையறுத்த முண்டங்க ளாடும்படியாய், சல்லியன் மனமுந் தடுமாறி வாடும்படியாய் வெம்முனைவென்ற வீரப்பிர தாப வெஞ்சிலைதாங்கி மிகுபோர் விளைத்து முனைந்து, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, இப்படியாக அம்புகளைப் பிரயோகஞ் செய்து, சாரதியின் தலையை வீழ்த்தி' நாணியை அறுத்து, வில்லுமுறித்து, இரதத்தையுங் கொடியையும் அழித்து, நான்கு குதிரைகளையும் போக்கி, பாதாதிகேசமளவும் இலைத் தரப் பணம்போல துளைக்கும்படியா யெய்தான். அப்போது மத்திர ராஜன் மனங்கூசி, "அப்பா! இவன் அர்ச்சுனராஜனுக்குத் தம்பி யல்லவா" என்று புறங் கொடுத்துப் போய்விட்டான்.

இன்னொரு பக்கத்தில் திரண்ட இரண்டு மலைகள் முரண் டெதிர்ந்ததைப் போற்சூரிய குமாரனாகிய கர்ணராஜனும் வீரதீர பராக்கிரமனாகிய விராடராஜனும் வெகுளியுடனேரிட்டுப் போரிட் டார்கள். அப்போது பூமியும் பூமியைத் தாங்கிய ஆதிசேடனும் நடுநடுங்கிப் போகும்படியாய் மிதமில்லாமலெய்யுங் கணைகளி னால் ஆகாசமெங்கு மறைந்து அனேகஞ் சேனைகளுங் துறைந்தன. இப்பால் துருபதராஜனும் யாகசேனனும் ஒன்றுகச்சேர்ந்து வெற்றி மாலை பூண்டு மேலிட்டுவராகின்ற சிங்கமனைய பகதத்தனை மடக்கி, ஒருபகல் முழுவதுந் தங்கள் தங்களுடைய தைரியமும், பலமும், பிரகாசமும் பெற்ற ஆயுதங்களின் வன்மையும், சிலத்திறமும், கணத்திறமுங் காட்டி யானைச்சண்டையிட்டார்கள். இதல்லாமலும் வீரகண்டாமணி கட்டிய சோமதத்தனுடு மேலாகிய வலிமை

பெற்ற பல வேந்தர்களெல்லாம் வாளாயுதம் வேலாயுதம் குந்தாயுதம் தோம்ராயுதம் சக்ராயுதமுதலிய ஆயுதங்களைக்கொண்டு யுத்தங்கள் செய்து புறந்தந் தோடினார்கள். அப்பால் பீஷ்மாசாரியரை வென்ற சிகண்டிராஜன் இன்றையதினத்திற் செய்த போரின் திறத்தை எம்போலியராற் சொல்லத் தரமல்ல. இப்படி ஒருவர்க்கொருவர் கைகலந்து போர்புரிந்ததில், அனேகர் இளைத்துங் களைத்தும் ஜெயித்தும் அபஜெயமடைந்தும் போயினர். எங்குங் கணமயமாயது.

அபிமன்னன் இலக்கணகுமாரனை வளைத்துச் சிகையைப் பிடித்துக் கொள்ளுதல்.

அக்காலத்தில் தேர்க்கூட்டங்களும், யானைக்கூட்டங்களும், சேனைகளினெருக்கமும், குதிரைக்கும்புகளின் பெருக்கமும், ராஜக் கூட்டங்களும், அம்புவி யசைதர அம்புகள் தெறித்துத் தும்புக ளெழமிகுவம்புகள் விளைத்துவந்து கொடி, குடை முதலியவைக ளோடு வாத்தியங்களு முழங்கும்படியாய் நெருங்கி, அர்ச்சுன ராஜனுடைய குமாரன் அபிமன்னனும் துரியோதன ராஜனுடைய குமாரன் இலக்கணகுமாரனும் எதிர்த்துத் தொடுத்த பாணங்கள் மண்ணைப்பறித்து விண்ணைமறைக்கவுஞ் சரவேகத்திலுஞ் சர்ப்ப வேகத்திலு மிஞ்சிப்போகும் ரதவேகமுடையவர்களாய்ச் சென்று விடுத்த மேலாகிய கணைகளுடன் கணை மின்னிப் பின்னிக்கொண்டு இவர்களுக்கெதிரிலே தானே வீழ்ந்தழியவும். கார்முகமாகிய வில் லைக் கரகரவென்று வளைத்து, பல்லை நெற நெறவென்று கடித்து, இடசாரி வலசாரியாய்ச் சாகசஞ்செய்து சண்டை யிட்டார்கள். இவ்வாறு அவ்விரண்டு ராஜகுமாரர்களும், அண்டிய அரசர் மண்டைகள் கிழிபட, எண்டிசையதிபரும் கின்றதிசயமுற, மண் டலம் விண்டலமொன்றி வெம்பொடியெழக், கண்டவர் கண்கள் கலங்கிப் பொறிவிழப் போர் விளைத்த காலையில், கருப்புச்சிலைபிடித்த மன்மதனுக் கொப்பாகிய இலக்கண குமாரனும், சிலவீரத்திறம் பெற்ற அர்ச்சுனன் மகிழும்படியாகிய அபிமன்னனும் நெடுநேரம் வரையிலும் பூசல்விளைத்தார்கள். ஒருவரை யொருவர் வெல்ல வேண்டு மென்னும் ஆசை கொண்டு ஆரவாரித்தார்கள். இலக்கண குமாரன் கைக்கொண்ட வின்னாணியைப் படுக்கென்றறுத்து, மீட்டும் வேறு ஞாணி பூட்டுமுன்னே மளுக்கென்று வில்லையு மொடித்தான் அபிமன்னன்.

இப்படி அபிமன்னன் மேன்மையாகிய பாணங்களை விட்ட போது அந்த இலக்கண குமாரன் மறுவில் லெடுத்து காணி பூட்ட நாட்டங் கொள்ளுவதற்கு முன்னே, சகல பகையும் வெல்ல வல்லவ னென்றுஞ் சகல கலையுஞ்சொல்ல வல்லவ னென்றும் பேர் கொண்ட தந்தை யாகிய தனஞ்செயனைப் போலத் தனது தேரைச் சமீபத்தி னெருக்கி, ஜலத்தி லசைந்து தத்தளிக்குங் கப்பலி லகப்பட்ட இளஞ் சிங்கக்குட்டி போன்ற தீரனே, துரியோதனுதியர் நூற்றுவர்க்குரிய இலக்கணகுமாரனே, மலர்ப்பகழி தாங்கிய மாரனே, வாளாயுத மோங்கிய வீரனே, மகாதிடங் கொண்ட சூரனே, திரிதராஷ்டிர மகா ராஜன் பேரனே, தனதொரு கரத்தால் மார்போடு அணைத்து உயிருடன் பிடித்தான் பாண்டவர்க்குத் திருமகனுகியும் பரந்தாம னென்னும் என்னுண்டவர்க்கு மருமகனுகியும் விளங்கிய அபிமன் னன். மேலும் மலர்க் கணையினுல் வெல்ல வல்லபங் கொண்டு எதிர்சென்ற மன்மதனை நெற்றிக் கண்ணுலெரித் தருளிய சிவபெரு மானைச் சிக்தையு ளிருத்தும் திறங் கொண்ட சிவனடியார்க் கடிமை யாகிய ஜெய விஜயனுக்குச் சிறுவனுனவன் இலக்கண குமார னுடைய நீண்ட தலைமயிரைக் கையிற் சுற்றிக்கொண்டு, பொன் மய மாகிய தன் தேரைச் செலுத்திப் போகும்போது, சிந்து தேசாதி பதியாகிய ஜயித்திரதன் தனது தேரை விரைவாகச் செலுத்தி வந்து விருது பூட்டிய வில்லை வளைத்து, இறகு கட்டிய வாளிகள் விடுத்து, யானையைக் கைக் கொண்டு ஆண்மையுடன் செல்லும் ஆண் சிங்கத்தை ஒரு சிலந்திப் பூச்சி நூல் வலையில் மடக்குமாப் போல் அபிமன்னுவைத் தடுத்து வளைத்த காலத்தில், அபிமன்னன் அயன் கணை, அரிக்கணை, அரன்கணை முதலிய அனற்கணைகளை விடித்து, அவனுடைய தோளும் தாளும் மார்பும் துளைத்த போது உளைப் பெடுத் தோடிக் களைப்புடன் வீழ்ந்தான் சிந்து தேசாதிபனுனவன். அந்த வேளையிற் புயவலிமை கொண்ட கர்ணன் முதலாகிய போர் வீரர்கள் யாவருந் திரண்டு வந்து அபிமன்னு வென்னு மொருவனைத் தகைந்து அண்டமுகடதிரும்படி அமர்புரிந்தார்கள். அப்படி அமர் புரிய வந்தவர்கள் யாவரும் உடனே கொந்து வெந்து சிந்தை வருந்தித் தாங்கள் விட்ட பல கணைகளுங் கெட்டுத்தங்கள் தங்கள் நெற்றியிற் சிந்தூரத் திலகமும் உண்டென்று சொல்லும்படி இரத்தப் பொட்டிட்டு அவரவரும் வெட்டாகிய கட்டுகள் விட்டுப் பட்டுக் கெட் டொழியும்படியாய் அட்டமா சித்திகளும் வல்ல வீராதி வீரனுகிய விஜயன் குமாரனென்னும் அபிமன்னனுனவன் அவர்கள்மேலள

வற்ற பட்டயக் கணைகளைப் பாயவிடித்து அவரவர்கள் நெற்றி களில் ரத்தங்கள் பாயும்படியாய்ச் செய்தது மல்லாமல் வேறு வேறு பாணத்தா லடித்துப் புறமுதுகிட் டோடும்படியாய்ப் பாடு படுத் தினன்.

இவ்விதமாகத் தன்னை எதிர்த்துத் தடுத்த தேராளிகளை யெல் லாம் அபிமன்னன் தனக் கொருவர் சகாயமில்லாமல் தானேறி யிருந்த ஒரு தேரினால் வென்று தாணீசனுடையகுமாரனைக் கைக் கொண்டு போய்விட்டான். அத்தாஷ்டகத்தைக் கண்ட சிலர் காபி யினுகாவிலும் தீர் வரண்டு வாடச்சிலர் பின்னுமுன்னுங் கூவிக்கொண் டோட, சொந்தத்துள்ள சேனைகள் ஜயம் ஜயமென்று பாட, துரியோதனன் சேனைகளபயமபயமென்று ஓட, அந்தச் சமயத்தில் வல்லியம் போன்ற சல்லியனுவன் ஆக்ரமித்து, "அடடா!! குடி முழு கிப் போயிற்று" என்று ஓடிவந்து அபிமன்னனையுந் தன் வில்லையும் வளைத்துப் பாண வருஷங்களைப் பொழிந்தான். இப்படியாகச் சிகை விரிந்து, புகைமலித்து, அனலெழுந்து பொறியிறைக்குத் தீயைப் போலெரிந்து சீறி மலைந்து வரும் மத்ர ராஜனை விஜயன் புத்திரன் கண்டு, "வாரும் வாரும் என் தாத்தாவே" என்று தலையசைத்து, (வாய் வாழைப்பழம் கை கருணைக்கிழங்கு) என்னும் பழமொழிப் படி, (தேனெழுகப் பேசித் தெருக்கடக்க விட்டான்) என்னு மூது ரையின்படி இனிய வார்த்தைகள்பேசி, இந்திரக்கணை யிரண்டு சந்திரக்கணை யிரண்டு, ஏமக்கணை யிரண்டு, சேமக்கணை யிரண்டு, ஆகக்கணைக ளெட்டையு மெடுத்துச் சல்லியன் மீதிற்ருக்கினன்: அப்போது தேளிரண்டி விரண்டுபாணந் துளைக்க, மார்பிலூன்றி யிரண்டுபாணம் வருத்த, முகத்தின்மீது காலுபாணமொய்க்க அத னுற் சல்லியன் கலைத்த போது, மீண்டுந் தேரின் பேரிற் சில கோலும் சாரதியின் பேரிற் சிலவேலுந் தாக்கினன் அபிமன்னுவா னவன். அம்மாத்திரத்திற் சல்லியன் தேருமழிந்து சாரதியு மொழிந்து, உயர்ந்த மலைக் குகையை விட்டிழிந்து வரும் யாளி போல் ரதத்தை விட்டிழிந்து, தரையில் விழுந்து ஏழு ஜிரும்புக் கட்டுகளை யுடைய கதையைக் கையிலெடுத்துக் கொண்டு, இந்திரக் கொலுவிலேறி வாழ்ந்த கோமானுடைய குமாரனுகிய அபிமன்னன் பேரிற் பாய்ந்து வந்தான்.

அபிமன்னன் தன் போர் நடுவிற் புகுந்த பீமசேனனைச் சினந்து கொள்ளுதல்

அப்படி வருவதைப் படை முகத்தில் தேர் நிறைகளை யெல்லாம் பொடியாக்கித் துவைத்துக் கொண்டு வரும் பீமசேனன் பார்த்து உடல்பதறி "ஐயோ! அறியாத பிள்ளையின் பேரிற் சல்லியன் கதை கொண்டு தாவுகின்றனே" என்று காற்றினினுங் கடிய வேகமாய்ப் பாய்ந்து சல்லியனுடைய எலும்பும் புயமும் கவசமணி பதித்த மகுட. மும் நெரிந்து நொறுங்கிச் சாயும் படியாய்த் தன் கதையினால் வீசித் தாக்கினான். அந்த அடிபட்ட மாத்திரத்திற் சாவுக்குச் சரியான மூர்ச்சை யடைந்து பூமியில் விழுந்தான் சல்லிய ராஜன். அப்படி விழும்படி அடித்த தன் பெரிய தகப்பனாகிய பீமனைப் பார்த்து முகம் வியர்த்து அடங்கா விசனமும் ஆறாத் துன்பமுங் கொண்டு "ஐயா மகாராஜனே! சல்லியனும் நானும் யுத்தஞ் செய்யும் போது நீர் குறுக்கே வந்து விழுந்து கதையினை லடித்துத் தள்ளி விட்டீரே! இது தருமந்தானா? ஒருவனும் ஒருவனும் போர் புரியும்போது இன்னொருவன் வந்து யுத்தம் பண்ணலாமா? ஒருவன் பேரில் இரண்டு பேர் கூடிதொடுத் தெய்யலாமா? கூடாது அப்படி செய்தீரே ஐயா! நானென்ன கையிலாகாதவனா? அவனால் நானிளைத்த போது நீர் வந்து எனக்கு உதவி செய்தீரென்று பேரோ? அல்ல வென்று எனக்கு ஏதாகிலும் ஒரு பெருமையை உண்டாக்க வேண்டு மென்று நினைத்தோ? அல்லது நானிறந்து போவேனென்று கருதியோ? அப்படி யிருந்தால்தா னென்ன? வீர சொர்க்கங் கிடைக்கு மல்லவா? அத்தனே! இப்போது நீர் என்னைப் போன்றவர்களும் கைக்க எனக்குக் கிடைக்கும் வீர சுவர்க்கமும் பகைக்க, என்னுண்மையுங் குன்ற அடியேனுக்கு அவமானந் தேடி வைத்தீரே என்னையனே" என்று கண்ணும், மனமும், மார்பும், கையும், முகமுஞ் சிவந்து உடல் கருகருத்து, இரதத்தின் பேரில் அயர்ந்துசாய்ந்தான் அபிமன்னன்.

இப்படியாக அந்தப் பிள்ளை கூறிய வார்த்தையைக் கேட்டுப் பீமசேனன் விசனமேற் கொண்டு, "ஐயோ! புத்ரவாத்சல்லியத்தாற் போய்ப் புகுந்தேனேயன்றி வேறொன்றும் நினைக்க வில்லையே! செவ் வேளைப் போன்ற குமாரன் சித்தை வருந்தி கொந்தானே! காமென்ன காரியஞ் செய்தோம்?" என்று இருகண்ணு மிருண்டு இருந்த விடம்

விட்டுப் பெயராம லிருந்தான். அந்தச் சமயத்தில் அபிமன்னு வினுடைய கரத்திற் சுற்றிப்பிடித்திருந்த தன் தலைமயிரின் தளர் வும், அவனுடைய மனத்தளர்வுங் கண்டு, இது நல்லசமயமென்று இலக்கணகுமாரன் இழிந்து இரைந்தோடிச் சென்று, தன்னிமித்த மாய்த் தரையிற் சாய்ந்து கிடக்குஞ் சல்லியனைத் தூக்கிப் பின் வந்துகொண்டிருந்த தன் தேரின்பேரிற் போட்டுத் தானுமேறிக் கொண்டு திரும்பினான்: அப்போது கிரீடாதிபதியாகிய கிருதவன்ம னவன் அரசனுடைய குமாரனை உபசாரமாய் அநேகங் காவ லுடன் அழைத்துக்கொண்டுபோய், "நமன்கொண்ட உயிரும் நல்ல பாம்பின் விடமுந் திரும்புந் தன்மைபோற் றிரும்பினன் தேவரீ ருடைய செல்வன்" என்று துரியோதன ராஜனிடத்திற் சொல்லி அவன் சமுகத்திற் பிள்ளையை விட்டான். அந்தப் பிள்ளையைக் கண்ட துரியோதனன் வெள்ளமாகக் கண்ணீர்விடத்து, "வள்ளலே! இன்று உன்னை நான் உயிருடன் கொள்ளை கொடுக்கும்படியாய் நேரிட்டதல்லவா? அநேகம் பேரைக் கட்டிவிடத்தக்க அதிபதியாகிய நீ ஒரு அறியாதவன் கையிலகப்பட்டனையே! ஓ என்னப்பனே!" என்று விசனப்பட்டு, அப்பவும் போர்செய்து அவனைப்பிடிப்போ மென்று தானேமுனையும்போது, போர்புரியு மிடங்கடோறும் புண்யசீலனுகிய தருமராஜனுடைய சேனைகளிற்சில பேர் பெற்ற அரசர்முதலிய படைகள் வெற்றிபெற்று ஜெயம்பேசி வீரப்பாடலைப் பாடியாடிக்கொண்டு மதோன்மத்தராய்த் திரியும் வேடிக்கை பார்த்து, இன்று நாம் வெற்றிபெறத் தக்கதில்லையென்று மனத்துட் கொண்டு, அரவக்கொடிக்கதிபனுகிய அரசன் பலவிதச் சேனை களுடன் திரும்பிப் பாசறைபோய்ச் சேர்ந்தான்.

இப்பால் அபிமன்னுவுக்குஞ் சல்லியனுக்கும் யுத்தம்நடக்கும் போது மேல்விழுந்து வந்த பீமசேனன் அசுவத்தாமனுடனே யுத்தஞ்செய்து, தானேறிய ரதமுங் கைப்பிடித்த வில்லும்போய்க் கதையைக் கையிலெடுத்து, அசுவத்தாமனுடைய தேர், குதிரை, சாரதி முதலியவைகளை யழித்துப் புறமுதுகிட்டோடக் கண்டு படைஞர்போரிற்புகுந்து பிரசண்டமாருதம்போற் ருக்கிக்கொண்டு வருவதினுற் பலம் பொருந்திய துரியோதனன் படையிலிருக்குந் தேர்களெல்லாம் படபட மடமடவென்று சிதைந்து பொடியாக்கிச் சின்ன பின்னமாக்க அப்பான்மையைச் சூரியன் பார்த்து மனகடுக்கங் கொண்டு, "ஐயோ முன்னமே நமக்கிருப்பது ஒரே சக்கரத்தை

யுடைய தேர். அதிற் சப்தமாவென்னும் புரவிகளைப் பூட்டிக் காலங் கழித்து வருகிறோம். ஏதோ கோபம்பாவமென்னுந் தன்மையின் பேரில் ரதங்களை யழித்துவரும் பீமசேனராஜன் நம்மையும் வெகுண்டு மேற்கொண்டு, இவனோடா மேலாக ரதத்தைச்செலுத் திக்கொண்டோடுகிறவனென்று கதையினால் மாட்டினாலு மாட்டு வான்! அப்பா! அப்போது நாமென்ன செய்யப்போகிறோம்? (முனை முகத்து நில்லேல்.) என்று நீதிவாக்கிய மிருப்பதினால் நாம் தீங்கிப் போவது உத்தமம்" என்று, தான் போனவழியை யாவருங் கண் டுணர்ந்து கொள்ளாதிருக்கும்படி இருளென்னுந் திரையில் உல கத்தை மறைக்க விடுத்து மேற்குச் சமுத்திரத்திற் குதித்து மூழ் கினன்.

இப்பால் எதிர்த்துவந்த அரசர்களெல்லாரும் புறந்தந் தோட ஜெயித்த பூரித்த புஜத்தோடுங் கூடிய அபிமன்னுவானவன் பொங்கித் தணிந்த கடல்போல் தனக்குத்தானே கோபமாறித் தன்கரத்திற் பிடித்திருந்த இலக்கணகுமாரனைக் காணுமல், "அடா! தப்பித்துக்கொண்டு போய்விட்டானல்லவா? உத்தம க்ஷத்திரிய குலத்திற் பிறந்த அரசன் பிள்ளை" என்று அலக்ஷியமாக நினைத்து, வெற்றிபெற்றுவரும் வீரப்ரதாபர்களுடன் கூடிக்கொண்டு, பெருமை கொண்ட சேனைத்தலைவர் படைத்தலைவர் பாண்டவர் திருத்துழாய் புனைந்த கிருஷ்ணமூர்த்தி மற்றுமுள்ள அரசர்கள் அனேகரும் பொருந்திய இடத்தை யணுகிப் பாடிவீடு போய்ச் சேர்ந்தான். இப்படியாக வந்த அபிமன்னனுடைய வெற்றிபெற்ற யுத்தத்திற முதலிய யாவற்றையுங்கேட்ட இணையில்லாத் துணிவினையுடைய பாண்டவர் மன மகிழ்ந்து, மங்களகரமாய் அறுசுவையோடுங் கூடிய உணவுகளையும் பானங்களையும் அன்பினோடுண்டு, சந்தன புஷ்பாதிகளைத் தரித்து அபிமன்னனையணைத்து முத்தமிட்டுப் பேரின்பத்துடன் நித்திரை செய்தனர்.

தருமராஜனைப்பிடிக்க எண்ணிய துரியோதனனைத் திரிகர்த்தரும், சஞ்சத்தகரும் சபதங்கூறித் தேற்றுதல்

இவ்விடத்தில் இப்படியிருக்க அவ்விடத்தில் துரியோதன மஹாராஜன் பாதிராத்திரிவரைக்கும் நித்திரையில்லாமல் வருந்திக் கொண்டிருந்ததைக்கேட்ட உயிர்த்துணைவராகிய கர்ணன் முதலிய பேரும் நீதிமான்களாகிய தேசராஜர் பலரும் அவனுடைய தம்பி

மாரும் சேனாதிபதியாகிய துரோணாசாரியரும் சபையாகக்கூடி யிருந்து அரசனைத் தேற்றியபோது, "ஐயா தனுர்வேதியராகிய துரோணாசாரியரே! தர்மராஜனைப் பிடித்துத்தாருமென்று நான் வரங்கேட்டிருக்க, இன்றையதினத்தில் என் பிள்ளையாகிய இலக்கண குமாரன் அபிமன்னனிடத்தில் அகப்பட்டு வருந்தி வந்தானே! நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்ததே! நானென்ன செய்வேன்" என்று இரக்கமுற்று நொந்து, மறுபடியுந்தேறி ஆசாரிய னைப் பார்த்துக் கண்ணீர் சொரிந்து "ஐயோ! என் கண்ணிருக்கும் போதே என் பிள்ளை கட்டுப்படும்படியா யிருந்ததே! ஓ காலமே! ஓ அவகாலமே! என்குருவாகிய தெய்வமே! தனுர்வேதத்தின் கேள்விக்கும் சதுர்வேதத்திற் செய்யும் வேள்விக்கும் சொந்தமாகப் பிறந்திருக்கும் எத்தையே! எண்ணிய கருமம் நிறைவேற்றுவதற்கு வில்லெத்தாங்கிய தேவரீரைவிட வேறுகிய வல்லவன் ஒருவரும் இல்லையே! ஆகையால் நான் கேட்டுக்கொண்ட வரத்தின் பிரகாரமும் என் பிள்ளையைப் பிடித்துக்கட்டிய ஈடுக்கீடாகவும் காளையுத்தத்தில் எவ்விதத்திலாகிலும் மறுதேக்கொப்பாகிய தர்மராஜனைப் பிடித்துக் கொடுத்தாலொழிய, என் மனதில் விளைந்த மானமென்னும் வயிரம் நீங்காது" என்று துரியோதனன் வேண்டிக்கொண்டான்.

இத்தவசனங்களை யெல்லாங்கேட்ட துரோணாசாரியர் "அப்பா துரியோதனராஜனே! தர்மராஜனைப்பெற்ற எமதர்மராஜனைப்போல் ஏழுபங்கு வலிமைகொண்ட பீமசேனன் பின்காவலாகநிற்க, விஜயம் பெற்ற புஜவழுகுற்ற அர்ச்சுனன் முன் காவலாக நிற்க, இதன் மத்தியில் ஒருவர் உதவியில்லாமற் சுதாவாக இருக்கின்ற அம் முரசக்கொடியோன் போர்முகத்தில் சேர்புகுந்து வில்லெடுப்பா னுனல், உடனே காரைக்கருக்கிப் பாரைத்துளைத்து வேரைக் களையத்தக்க வலுவேறிய சிலைவீரனை நிலைமாறிட மலைவேனென்று வாக்கினல் வதறுஞ் சில ஈனர்களைப்போல் நானும்பிதற்றி, அவனுக் கெதிரில் வில்லைவளைத்துப் போர்கொடுத்து, என்கையிற்பிடித் துன் கையிற்கொடுக்க என்னல் இத்தப்பிறப்பில் முடியாது. இன்னெரு பிறப்பிலாவது நடக்குமோ? நடவாதோ? அது எனக்குத் தெரி யாது. அதேனெனில், பவளம்போன்ற திருவாயில்வைத்து ஊதும் பாஞ்சஜன்னியக் கரமும், அழகிய சக்கரமும், அஷ்டாக்ஷரமு முடைய ஸ்ரீ கிருஷ்ணனவன் ரதசாரதியிருக்க, கொள்ளிவாய்ப் பாணங்களையுடைய வில்விஜயனும், பீமசேனனும் சத்தியவானுகிய

மருதராஜனை முன்னும் பின்னுமாய்க் காத்துக்கொண்டு எவர்களை யும் கிட்டநெருங்க வொட்டாம லிருக்கின்றமையால், என்னு லாகாதென் றுரைத்தேன். அந்த அர்ச்சுனனையும் பீமசேனனையும் ஓர் இமைப்போது மாத்திரந் தருமராஜனை விட்டுப் பிரியும்படி யாய்ச் செய்து நெடுந்தூரங் கொண்டுபோய் மடக்குஞ் சேவகர் நமது படையிற் சிலரிருப்பாராகில், இன்றைக்காகிலும் காளைக்கா கிலுங் கைப்பிடியாகப் பிடித்துத் தரவல்லேன். அந்த அர்ச்சுன ராஜனும் பீமராஜனுந் தருமராஜனை விட்டுப் பிரியாதிருக்கும் வரைக்கும் அவனைப்பிடித்துத் தரலாமென்பது அசாத்தியமே யல்லது, சாத்தியமல்ல" என்று துரோணாசாரியர் சொன்னார். அந்த வார்த்தையைக்கேட்ட திரிகர்த்த தேசாதிபரும், சஞ்சத்தகர் முத லாகிய சிலராஜர்களும் கடையுகத்தி லெரிக்தெழுங் கனல்போ லெழுந்து, நான் முந்துவன் நான் முந்துவனென்று ஒருவருக்கொரு வர் விக்தைவார்த்தை யுரைத்து, "ஓ துரியோதன மகாராஜனே! உமது சிந்தைவருத்தம் நீங்க இவ்வுலகமெல்லாம் புகழும்படியாகிய வாயுபுத்திரனையும், ஒப்பற்ற விஜயனையும் மக ரட்சத்திரத்திற் சனி பிரவேசிப்பதுபோற் பிரவேசித்து வளைத்துக்கொண்டு, தர்மராஜ னுக்கு உதவியாக வொட்டாமல் சாடிவிடுகிறோம். பாரு மெங்க ளுடைய சாமர்த்தியத்தை" என்று சபதங்கூறிப் பின்னுஞ் சொல்லுகிறார்கள். "ஐயா அருளேவடிவாகிய முரசக்கொடி பெற்ற தருமராஜனை அநுமக்கொடி நாட்டிய தேராளியான தனஞ்செய னும் பீமனும் அணுகாமல் ஒருநாள் முழுதுமடக்கிப் போர்புரி கிறோம். அப்படி செய்யாமற் போவோமாகிற் போராசை என்னு மயக்கமேறிப் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசைகளைக் கொண்டு குடிபடைகள் வருந்தவும், மதுவிச்ஞானங் குன்றவும், வழக்கழிவுபேசிக் கொடுங்கோல் செலுத்தும் அரசர்கள் எவ்வித நரகத்திற் புகுவார்களோ அந்தத் தீயகதியில் நாங்களும் போகக் கடவோம். இன்னமும் வீரத்திற் சிறந்த தோள் வலிமையடைய மலைபோன்ற பீமசேனனையும் அர்ச்சுனனையுந் தர்மராஜனுக்குத் துணையாக வொட்டாமற் றடுக்கிறோம். அப்படி தடுக்காமல் விடுப் போமாகில், உரியகுலத்திற் பிறந்த பெண்ணைக் குலதர்மப் பிரகாரம் அக்கினி சாக்ஷியாய், வேதசாக்ஷியாய் வேதியர்சாக்ஷியாய், சாலி லுங் கரத்திலுறைந்த கங்காதேவி சாக்ஷியாய், கிராமப்புரோகிதன் முதலாகிய தொழிலாளிகள் சாக்ஷியாய்ப் பத்து ஜனங்கள் சாக்ஷி யாய், ஆகாயவாணி பூமிதேவி சாக்ஷியாய், பச்சைப் பந்தலில்

தானியத்தின்பேரி லிருந்து கொண்டு, இந்தப்பெண்ணைக் கைவிடா மற் காக்கின்றேனென்று தாராதத்தம் வாங்கிப் பின்பு தன்பெண் சாதியானவள் தனிமை படுக்கையிலிருந்து, திடுக்கெனவெழுந்து, வெடுக்கென அரவு, கடுக்கெனக் கடித்த பயம்போல் ஏங்கி, அழுது இரங்கி வயிறெரிந்திருக்கத் தான் அன்னியஸ்திரீ யுடன் படுத்து அவளையே கவனம்பண்ணி அலைந்து திரியும் பெரும் பாவிகளுக்கு அமைந்திருக்குங் கொடிய நரகத்தில் நாங்களும் அமிழக்கடவோம். இவையன்றியும், அந்த பீமசேனனைத் தர்மராஜனிடம்விட்டு விலக்காமற் போவோமாகில், விதவைகள் முதலிய ஸ்திரீகள் மோகத்தினால் தாய்தந்தையரை விடுத்துப் பிரஷ்டத்துவ மடைந்து பொய்பேசி, தன் சகோதரர் முதலாகிய பந்துக்களையுந் துன்பப்படுத்துங் கொடிய துஷ்டர்கள் அநுபவிக்கும் எமதண்ட னையை நாங்களும் அநுபவிக்கக்கடவோம். மேலும் நம்பினவர்க ளொப்புப்படியாய்த் தப்புவார்த்தையைச்சொல்லி நெடுநாள் வரைக் கும் அவர்களை அலக்கழித்து, முடிவில் ஒருகாசு முதலா உலுத்தப் பிசாசுகளும், தர்ம சரித்திர முதலியவைகளைக் கேட்டிருந்தும் கடவுள் ஸந்நிதானத்திலே தபமுஞ் செபமுஞ் செய்துகொண்டு சந்தடியாயிருக்கும் ஜனசமூகத்திற் சாராயம், கள், அபின் கஞ்சா முதலிய வஸ்துக்களை உட்கொண்டு மயக்க மேறித் திரிகின்ற தறி தலைப் பேய்களும், வெகுபேர் நிந்திக்கும்படியாய் மாடுமுதலிய விலங்குகளைப்பத்தயம் விட்டு, கவண்கல் லெறிதல் முதலாகிய கலகங் களை விளைத்து, செல்வமுஞ் சீருங்கெட்டுப், புண்பட்டு கண்கெட்டு கலங்கிய கடையரும் வீழா நின்ற நரகத்தில் நாங்களும் மூழ்க்கக்கட வோம். மேலும் பசுவின் கன்றால் விளாங்கனி யெறிந்த பார்த்த சாரதி விடுக்குந் தேரி லடித்த பார்த்தனையும் ஆஜானுபாகுவாகிய பீமசேனனையும் தருமநந்தனனிடத்தி னின்றும் பிரித்துச் சண்டை யிட்டு மறிக்காமற் போவோமாகில் ஆபத்துக்காலத்தில் தைரியஞ் சொல்லி ஆதரித்தபேர்களையும் ஆபத்தில் விடுக்கத் துணியும் அற் பருக்கு விதித்திருக்கும் அழுநரகமே நாங்களும் பெறக்கடவோம்" என்று சபதஞ்சொல்லினர். அந்த இறைவர்களுக்குத் தீயமனத்தின னாகிய துரியோதனன் சன்மானமுதலிய உபசாரச் சிறப்புகளைச் செய்து, "எவ்விதத்திலாகிலும் எனக்கு வெற்றியைக் கொடுக்க வேண்டும்" என்று பிரியவசனங்களைச்சொல்லி விடைகொடுத் தனுப் பினன். அப்படியே நல்லதென்று ததுர்வேதியராகிய துரோணசாரி யரின் வீரகண்டாமணி பூட்டிய பாதத்தில் வணங்கி விடைபெற்றுக்

கொண்டு, வீராவேசத்துடன் பொழுது எப்போது விடியுமென்று பொங்கிப் புகைந்து அவர்கள் சென்றார்கள். இந்தப்பிரகாரம் இவர்களுக்குச் செலவு கொடுத்துவிட்ட மானத்திலும், வல்லபத்திலும் மனோதிடத்திலும், வாழ்விலும், வைராக்கியத்திலும், உலகத்திலொருவரு மொவ்வாத வணங்காமுடிபொறுத்த துரியோதனராஜன், தேவபோகசம்பிரமராஜ சின்னங்களுடன் மகாசந்தோஷத்தோடு தனது பாசறைபோய்ச்சேர்ந்தான்—என்று வைசம்பாயனர்சொல்ல ஜனமேஜயராஜன் பணிந்தெழுந்து, "சுவாமி! இப்பதினொன்றும் போரினும் பன்னிரண்டாம் போர் விசேஷித்திருக்கு மல்லவா? அதனைத் திருவாய்மலர்ந்தருள வேண்டு" மென வைசம்பாயன முனிவர் மன மகிழ்ந்து, தமது பரமகுருவாகிய வியாஸபகவானைத் தியானித்துச் சொல்லத் தொடங்கினர்.

பதினொராம்போர்ச் சருக்கம்-முற்றிற்று

பன்னிரண்டாம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

பூத்தகாபியக் தாமரைப் பூவில்வர்துபல் பூதமுஞ்
சேர்த்தகான்முகப் புனிதனு முனிவர்யாவரும் தேவரு
மேத்தகாலுவே தங்களுக் தேடகின்றதா ளெம்பிரான்
பார்த்தன்மாமணித் தேர்விடும் பாகனைதெப் பான்மையே.

ஓ புவிமன்னர் புகழப் புரக்குந்தீரனே! அபிமன்னன் மகிழ அணைக்கும் பேரனே! கேளும் பதினொராம் காளிரவிற் சேனாதிபதியாகிய சிலைக்குருவினிடம் தருமராஜனைப் பிடிக்க வேண்டுமென்று துரியோதன மகாராஜன் சொல்லியதும், அதற்குத் துரோணாசாரியார் பீமார்ச்சுனரைத் தருமராஜனிடத்தினின்றும் பிரிப்போருண்டாகில் ஒருகை பார்ப்போமென்று சொன்னதும், அப்படியே பீமார்ச்சுனரை மடக்குகிறோமென்று சில வீரர்கள் ஏற்பட்டுச் சபதங்கள் கூறித் துரியோதனனிடத்தில் தாம்பூலம் வாங்கி வெகுமதி பெற்றதும், இவைகளை யெல்லாம் அறிந்த சூரிய பகவான் மெத்தவும் விசனப்பட்டுத் தன்னொளி மழுங்கி, முகமுதலிய உடலுங் கறுத்து, சத்தியவிரத லோகோபகாரி யென்னும்

அருட்குடிகொண்ட முரசக்கொடியோன் துரோணர் கையில் ஒரு வேளை அகப்படுவானென்று மனந்தளராமல் மேற்குத் திசையிற் போனவன் அவ்விடத்திலுந் தரியாமற் கிழக்குத் திசையில் ஓட்டமு டையுமா யோடி வந்து பாண்டவப் படையிற் புகுந்து நித்திரை செய்யாநின்ற கிருபர்களை யெல்லாங் கிரணக் கரங்களா லெழுப்பி வெப்பமான வார்த்தையைச் சுடச்சுடக் காதிற்போட வந்தவனைப் போற்காய்ந்து ஆறு குளம் ஏரிகளிலிருக்குஞ் சங்கு முழக்கங்க ளால் இருபாலையத்தாரும் நித்திரை மயக்கம் நீங்கி யெழுந்திருக்க வும், பக்ஷிகளெல்லாங் கதறிக்கதறிச் சப்திக்கவும் சாவற் கோழி களெல்லாம் வயிற்றி லடித்துக்கொண்டு கூவவும் வண்டினங்களெல் லாம் கையை விரித்து என்ன செய்வோம் தரும ராஜனுக்கும் அபாயம் வருமோ வென்று கண்ணீர் சோரவும், குமுத முதலிய மலர்க ளெல்லாங் கொடும்பாவி யாகிய துரியோதனனுடைய நினைப்பை யறிந்து இனிக்குடி கெடுமென்று முகஞ் சோம்பி வாட வும், கிளைகளசைந்து இலைகளுதிருந் தன்மைகளிலுல் சோலியினி றைந்த மரங்கள் வருந்துங்காலத்தில் கிழக்குத்திசையி லுதய மாயினன். உடனே இருதிறச் சேனைகளுஞ் சேனைத்தலைவர்களு மெழுந்து காலைக்கடனை முடித்துக் கொண்டவர்களா யிருக்க நேற் றிரவில் துரோணாசாரியார் முதலிய அரசர்களுடன் துரியோதன மகாராஜன் ஆலோசித்த சங்கதிகள்யாவுந் தூதர்களால் தருமராஜன் தெரிந்துகொண்டு அரவணை துறந்துவந் தவதரித்திருக்கும் ஆபத் பாந்தவனையும் அர்ச்சுன ராஜனையும் பார்த்து "வண்டுகள் மொய்க்கு மதுமாலை தரித்து, விளங்குந் தோளினையுடைய தோழர்களே! இத்தினம் என்னை எத்தவிதத்திலேனும் பாதுகாத்துக்கொள்ளுங்கள்" என்று பின்னுஞ் சொல்ல வேண்டுவன வற்றையெல்லாஞ் சொல்லி வாழ்த்தினர். நல்லதென்று கறுத்த களாப்பழ வண்ணனாகிய கண்ணன் சொல்ல மற்ற சேனைத் தலைவனும் சேனைகளும் வீர கண்டை தரித்த வேந்தர்களுடன் போர்க்களம் புகுந்து, சத்துருக் கள் புறமிடும்படியாய்க் களிகொண்டு வராநின்ற நால்வகைச் சேனை யைக் கொண்டுபோய் மண்டல வியூகமாக வகுத்து, பீமசேனனைப் பின்னணியில் நிறுத்தி, பற்பல மன்னரையும் பேரணியாக அமைத்து, இருபக்கங்களிலும் நகுல சகாதேவரை யேற்படுத்தி மின் னொளி செய்யும் நெடுவாளினையுடைய விஜயனையும் அபிமன்னுவை யும் முனைமுகத்திலமைத்து, முதன்மையாகிய தருமராஜனை நடுவிலி ருத்திக் கொடி குடை முதலிய சின்னங்கள் நெருங்கிக்காள முதலிய

வாத்தியங்களை முழங்கும்படியாய் மமதை யடைந்து தருமராஜனைப் பிடித்துக்கொண்டு போகத்தக்க பேர் தேவர்களானாலுஞ் சரி, அத் தேவர்கட்கெல்லாந் தலைமையாகிய பிரமன் திருமால் உருத்திரன் என்று சொல்லும்படியான மூவர்களானாலுஞ் சரி, மற்றவர்களாகி லுஞ் சரி, வரத்தக்கபேர் வரட்டும்" என்று வலிமை பேசிக்கொண் டிருந்தார்கள்.

திரிகர்த்த சஞ்சத்தகர் முதலாயினோர் அர்ச்சுனனை வளைத்துக்கொள்ளுதல்

இவர்களிப்படி பிருக்க, நேற்றிரவிற் சொல்லிய சபதந்தப்பாமல் திரிகர்த்தராஜகுலத் தலைவரும், சஞ்சத்தகரும், துரோணாசாரியர் முதலியசேனைகளும், வீரவிருது சின்னங்களுடன் வந்து மகரவியூகம் வகுத்தார்கள். அப்பாற் சகல மேளங்களு முழங்க இருபுறச்சேனைகளு மிரைத்து மனமகிழ்ந்திருக்குங் காலையில், மேகக் கூட்டம் போன்ற யானைக் கூட்டமும், மலைகெருக்கம்போன்ற தேர் கெருக்கமும், வாயுவேகம் போன்ற குதிரை வேகமும், இவைகட்கு மன்னுயிர் போன்ற திரிகர்த்த தேசாதிபரும், சஞ்சத்தகரும், நாரணகோபால ரும், அர்ச்சுனராஜனுக் கெதிராக வந்து, " அர்ச்சுனராஜனே ! எங்களை வெல்வதற்கு உனக்கு வல்லபமும், புருஷத்தனமும் உண்டாயிருக்குமானாற் புறப்படடா" மென்று அறைகூவியழைத்துத் திறமாகிய வில்லில் அக்கினி கிறமாகிய பாணங்களைத் தொடுத்து அதிர்த்து ஆர்த்து வருவதானார்கள். அவர்களுடைய தலை தெரியா நிலையை அர்ச்சுனன் கண்டு சாத்தகி முதலாகிய பிள்ளைகளை நோக் கித் "தர்மராஜனை இமைப்பொழுது காத்துக் கொண்டிருங்கள். இதோ வந்தே" னென்று காவலர்களுக்குக் கட்டுரை வகுத்துத் தர்ம ராஜனைப் பணிந்து உத்தரம் பெற்றுக் கொண்டு சங்கத் தொனி செய்து விஜயகாண்டீபன் வில்நாணி யிறுக்கிப் பற்கடித்துறக்கி அவர் களுக்கு மேர் சென்று நின்று பற்பல பாண வருஷங்களைப் பொழிந் தான். இத்தன்மையாகக் கைகலந்த காலையில் மண்டலத்திலிருந் தெழுந்த தும்புகளானது அண்டத்தை மறைக்க இருதிறவரும் பொழி யும் வாளிகளானது அவைகளைக் கரைக்க மலையைக் குழையச்செய் யும் வில்லை வளையவாங்கி ஆண் சிங்கம்போன்ற அர்ச்சுனனும், சஞ்சத்தகர் முதலாகிய அரசர்களும், கவந்தங்களாட, காளிகள் பாட, ஞாளிகள்மீதட, கூளிகள் கூவ வீரமாகாளி நடனமாடப் போர் புரியுங் காலையில் படர்கொடியிலைபோன்ற மூனைத்தலையினையுடைய

வேலாயுதத்தைக் கைக்கொண்ட ஜயத்திரதன், குண்டலன், சௌபலன் முதலாகிய முடிமன்னருடன், படையரசர் முப்பதினாயிரம் பேர் சூழும்படியாய் மேக கர்ச்சனை போலிரைந்துகொண்டு, யானை, குதிரை முதலிய பரிவாரங்கள் நெருங்கிவரக் குதிரைபூட்டிய பெருந்தேரேறி, கொடுமர மென்னும் வில்லை வளைத்து காணைதிட்டு, குருகுல சிகாமணியாகிய தர்மராஜனுடன் போர்புரியும்படி துரோணாசாரியர் துடுக்காய், சுருக்காய், கருக்காய், வெகு மூடுக்காய் வருவதைப் பாஞ்சாலரும் பதினாயிரம் படைமன்னருஞ் சேனாபதியாகிய திஷ்டத்தூய்மனுங்கண்டு எதிர்வளைத்து ஈரேழுலகமும் அதிரும்படி பேரிகை முதலிய வாத்திய முழக்கி, சமுத்திரங் கொதிக்குந் தன்மைபோற் கதித்துச் சண்டை செய்தார்கள்.

இவ்வாறு இருவருடைய சேனைகளும் எதிர்த்துப் பலபல ஆயுதங்களுங்கொண்டு ஓருவரையொருவர் கொன்று உன்மத்தராய் ஒன்றுக்தோன்றுமல் யுத்தஞ் செய்ய அந்தச் சமயத்தில் போர்ப் புலிபோன்ற திஷ்டத்தூய்மன் பெருங்கோபங்கொண்டு கொலவாளிகளைப் பலவாறாக வில்லிலிருந்து பொழிந்தான். அப்போது துரோணருடன் கூடிவந்து போர்புரிந்த ஜெயசிங்கவீரர் பலபேர் மடிந்தனர். மேலும் துன்முகன் புறமுதுகிட்டோடப் பாய்ந்து துன்மருடன் யுத்தமுனை விட்டோடக் காய்ந்து கற்போன்ற மனதிடங்கொண்டு காந்தாரர் கலிங்கர் கௌசலர் விடதர் முதலாகிய தேசாதிபரெல்லாம் புன்முகமாகக்களைத்து இளைத்தோடப் பிளந்து பொருந்தியழித்த காலையில் துரியோதனனுடைய பெருஞ்சேனைகள் துரோணாசாரியரிடத்திற் போய் விழுந்து துடிக்க அவைகளைக் கண்ட வேத பண்டிதராகிய வில்லாசிரியர் தமது படைகள் நிறைவழிந்து குறைவாய் அவதிப்பட்டு அபயமென்றோடிவந்ததைக்கண்டு உதட்டைக் கடிக்க இவ்வாறு அடங்காக் கோபங் கொண்டு அழகியவில்லை ஆகர்ணபரியந்தமிழுத்துப் பிறைமுகாஸ்திரத்தைத் தொடுத்து பெருநெருப்பைப்போலடித்துக் கடிகடித்து திஷ்டத்தூய்மனுடைய வில்லை நடுவறப் பிளந்து கெடித்துப் பிறையணிந்த கறைமிடற்றண்ணலைப்போல் நின்று ஒரு பெருங்கணை போக்கித் தர்மராஜனுடைய வில்லை முறித்துச் சித்திர விற்றிறங்கொண்ட சிகண்டியினுடைய தேரையுமழித்து உத்தமோசன் உதார்மன் முதலிய வெற்றியையுடைய வேந்தரெல்லாருந் தங்கள் தங்களுயிரைக் காப்பாற்றிக் கொண்டு போர்த் தொழிலை விட்டுப் புறமிட்டோட விடுத்துச்

சேனைகளை யெல்லாஞ் சிதைத்து நகுல சகாதேவர் காணியறுத்து காணியோட வடித்துப் பாண்டியராஜன் ஆண்டியாய் வாடவிடுத்துப் பாஞ்சால ரோய்ந்து மாய்ந்தாற்போல் வெங்கிட்மோடடக்காய்ந்து தேரேறி யுந்தி யெதிரேறிவந்த வியாக்ரதுண்டனும் அவனைச்சார்ந்த உள்ளிட்டாரும் அநேகமாயிரம் அரசர்களும் போர்க்களத்தில் மடியும்படியாய்ப் போக்கி எதிர்த்துவரும் பேர்களைத் தாக்கிக்கொண்டிருக்குந் துரோணருக் கெதிரில் வில்லுக் கொருவனென்னுஞ் சோழராஜன் ஆண்மையுடன் வந்து காவேரிப் பெருக்கம்போற் கணைகளைப் பொழிந்து துரோணர் தொடுத்த கணைகளால் தன் கணைகள் காற்று மழையுங் கலந்தடிக்கக் கலந்து கரைந்தோடிய மண்ணுங்கட்டியும் வற்றியுலர்ந்த செத்தையும்போலாகி மனங்கறைந்து மதிகுலைந்துவாடித் தன் மனம் போனவாறே நாடி ஆத்திமாலையணிந்த அச்சோழன் போர்முகம் விட்டு வேற்றுமுகமாய் ஓடிவிட்டான்.

அத்தவேளையிலே குற்றமற்ற மச்சதேசாதிபன் வந்தெதிர்த்து வெட்கங்கெட்டவனாய் ஒன்றுந் தோன்றுமல் மயங்கிக் குன்றிப்போன வனைப்போற் றியங்கி, பயங்கொண்டு வாடிப் பறந் தோடினான். அப்போது மாயமாகிய யானைப் படையுடன் வந்தெதிர்த்த கடோற்கஜன் பிள்ளையாகிய அஞ்சனவன்மனுங் கலக் கண்ணீருகுத்து அலக்கழிந்தகன்றான். இன்னமுள்ள காவலரையுங் கைப்படை வீரரையுங் கடுங்கோபத்துடன் காய்ந்து, கணமழைகளைப் பேய்ந்து, அவர்கள் கண்கலங்கி மாய்ந்து ரணகளத்திற் சாய்ந்துபோகச் செய்தார் துரோணரானவர். அவரால் தங்கள் படைகள் தளருந் தாழ்ச்சியைக் கண்ட ;தருமராஜன் தநுவாசிரியரை யெதிர்த்தார். பின் இருவருந் தளர்வில்லா லெதிர்த்து, விடுவில்லாத வில்வளைத்து அளவில்லாத பாணங்களைத் தொடுத்து மலைந்தனர்; இருவர் மனதிலுங் கோபமெழுந்து எங்கும் அக்கினிப் பொறி விழுந்து எவர்களாலும் ஓர் ஆயுதங்களை இடையிற் போடக்கூடாமல் தேவர்கள் முதலிய யாவரும் நடுங்க மூவர் முதலிய மோனரு மொடுங்க, அங்கம் பனிப்ப, சங்கந் தொனிப்ப, காகளமறைந்து, வாகொடு மிறைந்து அண்டகோளகையதிரும்படி இமைப்போதுந் தளராமல் முறைப்படி இருவரும் எதிர்த்தனர். யானைகள், குதிரைகள் இரதங்கள் முதலியன கும்பு கும்பாய் இரைந்து விரைந்துவர, வாளாயுதம், வேலாயுதம், சக்ராயுதம், குந்தாயுதம், தோமராயுதம் முதலியவைகளைக் கைக்கொண்டு

சுழற்றிக் கண்கள் விழித்துக் கனற்பொறி யுகுத்துத் தங்கள் தங்கள் சேனைகளுடன் ராஜபுத்திரர்களு மெதிர்த்துப் போர் புரிந்தார்கள்.

இவையன்றியும் கஜங்களுடன் கஜங்கள் ஒன்றையொன்று மதித்துக் கர்ணமதம் கபோல மதம் பீஜமதம் கோஜமத முதலாகிய மதங்களைப்பொழிந்து காளமேகத்தை யொத்து உயர்ந்து பருத்த இருப்புலக்கை இருப்புச் சங்கலிகொண்ட ரீண்ட துதிக்கையைச் சுழற்றின. கஜூத்திரங்களை யுதிர்த்து வானகடுங்க அதிர்த்து வாரிதி கலங்கக் குழப்பி ஆதிசேடனுடைய பணமகுட மடமடவென்று நெரிய மிதித்துக், கோபங்கொண்டு கால்விலங்கைத் தரித்து கட்டுத் தறியை முறித்துக் கடைக் கண்களிற் கனலை யுதிர்த்து கறுவிப் பகைத்துச்சந்திரனைக் கவளமென்று பிடித்துக், கோபத்திற் செழித்த சோபத்தைக் கழிக்க, மேகத்தைப் பிழிந்து தாகத்திற்குக் குடித்து, எட்டுத் திசைகளு முலாவி அஷ்டகஜங்களைச் சுலாவி மத்தகத் துடன் மத்தகந் தாக்கி எதிர்த்து மலைந்தன. அனேகங்கோடி ரதங் கள் ஒன்றோடொன்று எதிரெதிர் மலைந்தன. அந்த ரதங்களை மலை களுக் கொப்பாகச் சொல்லுவோ மென்றால் அந்த மலைகளுக்குப் பிரகாசிக்குஞ் சக்கரங்களும் இரிசுகளு மில்லை. வரிசைகளாக நாட்டுங் கொடிகளு மில்லை. அழகிய கொடிஞ்சிலாகிய தேர்மொட் டில்லை. முன்னும் பின்னும் மண்டலவளைவாக விரைந்தோடுதலு மில்லை. அதைச் செலுத்தும்படியாகிய சாரதியு மில்லை. அந்தப் பாகர் கைக்கிசைந்த பரியாகிய குதிரைகளு மில்லை. அலங்காரஞ் செய்யுந் தேர்ச் சீலைகளு மில்லை. இன்னமுந் தேர்களுக்கு வேண்டிய உறுப்புகள் பலவும் அம்மலைகளுக் கில்லாததாலும் இடம் விட்டுப் பெயராதிருப்பதாலும் புற்பூடுகள் கற்காடுகள் நெருங்கி யிருப்பதா லும், தேருக்குநேராக மலையைச் சொல்லப்படாது. வேறொரு உப மானமு மில்லாமையால் தனக்குத்தானே ஒப்பாகிய அதிரதரேறிய ரதங்கள் அனேகம் பொருந்திப் போர் புரிந்தன. இவையன்றி உகாந்த காலத்திற் பொங்கும் பெரும்புறக் கடல்போலிரைந்து அலைபோற் பாய்ந்து பந்துபோற்றுள்ளிக் கரும்புகை யெழுந்து ககனம் வெடித் திடக் கனைத்தலைக்காட்டி கமரி விரிந்தெழும் நெருப்பைப்போற் கோபங்கொண்டு, சிகர மலைகள் சாயும்படியாய் எதிரேறி கடந்து, பிரசண்ட வாயுவைப்போற் கதிகொண்டுலாவி எதிரிகளைப் பகைத்து இறுமாப்படைந்து கருந்தூள் செந்தூ ளெழும்பப் போர் புரிந்து வெற்றி பெற்ற குதிரைக ளனேகம் யுத்தஞ் செய்தன. அப்பால்

வீரர் முதலிய சேனைகள் தொந்தயுத்தம் விளைத்துத் தங்கள் தங்க ளுடைய கரங்களை மேலாகக் காட்டி, ஒருவரையொருவர் சண்டைக்கு வாருங்களென்று அறைகூவி யழைத்துச் சரபசார்த் தூல சிங்கம் போலுறுமி ஆ! ஆ! ஆ! வென்று கருவி, எதிர்சென்று மேவிட்டு முடிக்கிச் சாணைபிடித்த சரங்களால் அங்கத்தைப் பங்கப் படுத்தி ஒவ்வொருவரும் வெற்றி பெறும்படியாய் வீராவேசங் கொண்டு நின்று யாவரையு மிளைக்கச் செய்து அமராடினர்.

தருமராஜனுல் துரோணசாரியார் முறிபட் டோடுதல்

இப்படி ரணகளமெல்லாம் தொந்தயுத்தம் நடந்து கொண் டிருக்க இந்திரன் முதலிய யாவரும் கொந்தளித்துப் பிந்தி வெளி வாங்கத் துரோணசாரியருந் தருமராஜனும் வீரமேற்கொண்டு அதி கரித்து வெற்றிமாலை தரித்த விஜயபட்டங் தரித்த முடியணிந்த சிரந்துளக்கிப் பற்கடித்துக் கோபச் சிரிப்பாகச் சிரித்து சண்டமாரு தம்போல் ஒருவர் தேருக் கெதிர் ஒருவர் தேரைச் சுழற்றி நடத்திப் பிரபலமான சண்டை செய்து விஷங்களைக் கக்கிக்கொண்டுவரும் பாணங்களை தேகமுழுமையுந்தைக்கவிடத்து இன்றையயுத்தம்போது மென்று கண்டவர் நடுங்கிச் சொல்லும்படி இடம் வலம் வலம் இட மென்று மாறி மாறிப் போர் புரிந்தனர். அக்காலையில் சிலைக்குரு வின் மறைக்கொடி மளுக்கென் றொடிந்தது. மழுவேகத்திலு மிஞ்சிய வேகங் கொண்டோடிய குதிரைகள் நான்குந் துணிபட்டு வீழ்ந்தன. விரைந்து செலுத்துஞ் சாரதி தலைகுறைந்து மடிந்தான். சக்கரம், குத்துக்கால், அச்சு, மச்சு, கொடுங்கை, சிகரம், சூடை, கொடி, சட்டம், ஆப்பாணி, சுள்ளாணி, கடையாணி, இரிசாணி, அஞ்சூராணியுடன் தேருடைந்தது ஐன்மாந்திர வினைகளிற் றீவினை வருந் தன்மைபோற் றுன்பப் படுத்தும்படியாகிய தருமர் ஐந்துகணை களை ஐம்பூதம்போற் றொடுத்து, உடல் முழுமையுந் தூளித்து, அகர்த்தம் விளைத்து நாணி தறித்து வில்லை முறித்தார். அதனால் வெதும்பி நிற்குந் துரோணரைப் பார்த்து "ஐயா! நீர் பிராமண குலத்தினர். முதன்மையாகிய நதுர்வேத குருவென்றும் பெரியோர் களால் மேன்மை பெற்றிருப்பவர். பின்னும் தேவரீர் மெத்தவும் இளைத்திருப்பதனல் உமதுமேலில் ஒரு பாணமேனும் இனித்தொடுக்க மாட்டேன். நீர் பயப்படாமற் போய் இளைப்பாறிக்கொள்ளும்" என்று யூபதியாகிய தருமராஜன் சொன்னர். விற்குரு தருமராஜ

னுடைய ஆண்மையை யழித்து உயிருடன் பிடித்துப் பேரிகையடித்து வீரப் பிரதாபத்துடன் கொண்டுபோக வேண்டுமென்று மனத்துள் மதித்து மறுபடியு மெதிர்த்தார். அப்போது சத்தியவிரதன் றொடுத்த பாணங்களால் தமது நெற்றியிலணிந்த வீரப்பட்டமும் போய் உதிரப் பிரவாகமு முண்டாகவே, தருமரது நெறித்த உரத்தையும் அவருடைய கைத்திறத்தையுங் கண்டு காணத்துடன் வெட்கமடைந்து, மெலிந்து வருந்தித் தளர்ந்து மனமிளைத்து, இது உயிர்பொருந்திய தேகமல்ல ஊன்சுமந்திடு மூடலேயென் றுணரக் கும்படியாய் ஓடினர் துரோணாசாரியர்.

ஓ மகாராஜனே! இப்படி தருமராஜனுடன் தானினைத்த காரியம் பலிக்கும் படியாய்ப் போர் புரிந்திளைத்து அஞ்சியோடிய துரோணாசாரியர், பின்னும் யுத்தம் பண்ணித் தருமராஜனை வென்று கைப்பிடியாய்ப்பிடித்துப் போவதற்கோ, அல்லது இன்னொருதரம் அடிபட்டு எல்லாரைப் பார்க்கிலுந்தான் மூத்தியோடு வதற்கோ, எனக் கொன்றுந் தெரியவில்லை மறுபடியும் அதிவேகத்துடன் கோபங் கொண்டு வேறு தேரேறி விரைந்து வந்தார். அந்த வேளையில் தர்மராஜன் போர் முகத்தில் துரோணாசாரியரை வென்ற திறமையும், தருவாசிரியர் வெற்றி பெறுமல் அழிந்தோடிய முறைமையும், அப்பால் துரோணருள்ளங் கொதித்து மறுபடியுந் தம தழகிய தேரேறி தருமராஜனுடன் யுத்தம் பண்ண வந்ததும் இவைகளே யெல்லாஞ் சிங்கக் குட்டி போன்ற அபிமன்னு முதலாகிய சிறுவர் பார்த்து முகம் வியர்த்துச் சீறி யுத்த முனையிலேறி நான் மூத்துவேன் நீ பிந்திவா நீ பிந்திவா நான் மூத்துவேன் என்று ஒருவரை யொருவர் விளவி எச்சரித்துக்கொண்டு, மச்சதேச ராஜரோடு சேனபதியாகிய திஷ்டத்தூய்மனும், குந்தி போஜர் முதலாகிய மற்ற ராஜக் கூட்டங்களும், கும்பு கும்பாய்ப் பந்தி பந்தியாய், நிறை நிறையாய், அணி யணியாய் நெருங்கி நிறைந்து, மதயானைகளின்மீது ஆண் சிங்கங்கள் ஆர்ப்பரித்து வருந்தன்மை போல் வந்து மறை முனியாகிய துரோணரை வளைத்தார்கள். அப்போது கர்ணராஜன், சகுனி, சௌபாலன், கலிங்க தேசராஜன், துரியோதன மகாராஜன், அவர் தம்பிமார்கள் முதலாகிய எல்லாரும் பெரும் படையாகக் கூடிச் சேனாதிபதியாகிய துரோணாசாரியருக்குத் துணையாயினர்கள். பாண்டியராஜன், நகுல சகாதேவர், பாஞ்சாலர், திஷ்டத்தூய்மன் முதலாகிய பேர்கள் சேர்ந்து தருமராஜ

னுடைய முனைப்படை முகத்தினின்றார்கள். இப்படியாக நிலைத்து நின்ற மன்னர் முதலாகிய படைத் தலைவரும் அவரவர்களுடைய சேனைகளும் நின்ற விடத்திற்றானே நின்று கெடும்போர் விளைக்க இவர்களுடன் கூடிச் சென்ற உதவிச்சேனை மன்னவர் முதலாகிய பேர்களும் ரணகள மெல்லாம் ஓடியாடி யுத்தஞ் செய்தார்கள். ஆனால் அவ்விடத்தில் அன்று நடந்த யுத்தத்தை இவ்வித மென்று நேருக்கு நேராகச் சொல்லுவதற்கு யாவராலு முடியாது. ஆகிலும் ஒரு தேர் பதினாயிரங் கூறாகவும், ஒருடல் நூறு கோடி துண்டமாகவும் உடைந்தொழிந்தகன்றன. மற்றவைகளும் பட்டுக்கலங்கின.

இவையன்றியும், வேலாயுதங்களினாலும் வாளாயுதங்களினாலும், விற்களினாலும், கவண் கற்களினாலும், வீண்ட பாணங்களினாலும், மூடியறுந்திறந்த வெற்றியை யுடைய மன்னர்கள் வெகு கோடி யென்று சொல்லலாம். மேலுந் தநுர்வேதங்களினாலுந் தகுதியாகிய கேள்விகளினாலும் மேம்பாடுடைய விற்கரத்தர் வேகமாயிழுத்து விடுக்கும் பாணங்கள் விடுவிடென்று புறப்பட்டு மொய்த்து வந்து, ரதகஜதுரகபதாதியர் முதலாகிய பேர்களைக் காயந்தழிக்க, அதனால் மாய்ந்தொழிந்தவர் போக மிகுதியாகிய பேர்கள் துரோணரால் விடும் பாணங்கள் ஓயாமல் தங்கள்மேல் விழுந்தும் வெறுப்பில்லாமல், ஈட்டி, எறிபீட்டி, பாங்கு, சாங்கு, பல்லயம், பாலா, கட்டாரி, மழு, கொழு, எழு, சூலம், வேல் முதலாகிய ஆயுதங்களினால் ஒருவரை யொருவர் எற்றினார்கள்; படைக்கல முதலிய பாணங்களைக் கொண்டு மொத்தினார்கள்; முஷ்டி முதலியவற்றைப் பிடித்துக் கைகளை மடக்கிக்கொண்டு குத்தினார்கள்; தேருடன் தேர் தாக்க முட்ட விடுவார்கள்; மதத்த யானைமீதிருப்பவர்கள் ஆகாயத்திற் பாய்ந்து மார்புடன் மார்பையுந் தோளுடன் தோளையு மொத்தி யிடித்து, மற்றொரு யானையின் முதுகுகெளியக் குத்துவார்கள்; குதிரையின் மேலிருக்கும் வீரர்கள் ஒருநூறு குதிரை, ஐந்நூறு குதிரை, ஆயிரங் குதிரை வரைக்குந் தாரைபோல் தவறுமல் வரிசையாய்த் தாண்டுவார்கள். இவையன்றியும் வீரருடைய வெற்றி வாளினாலே தலையிழந்தகுறைத்தலை முண்டங்களானபேர்கள் வாளாயுதத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு தாங்கள் கற்றிருக்கும் நெடுநாட்பழக்கமுள்ள இடசாரிவலசாரிமுதலாகியவைகளெல்லாஞ்சுழன்றாடுவார்கள். அப்படி ஆடும்படியாகிய முண்டங்களை அறுபட்டுப் போகுந் தலைகள் புகழ்ந்து பாடிப் பறந்து விழுவதைக் கண்டு சிலர்

மகிழ்ந்து பாடுவார்கள். ஆயுதமற்று வெறுங்கையோடிருக்கும் வீரர்கள் தறிபட்டுக் கிடக்குங் கால்களையும் கரங்களையும் சிரங்களையும் தொடைகளையும் தங்கள் கைக்கு ஆதாரமாகிய ஆயுதங்களாக எடுத்து எதிரிகளின் பேரி லெறிவார்கள்.

பின்னும் தரும ராஜனுடைய படை மன்னர் முதலாகிய வீரர்கள் சேனாதிபதி யென்னுந் துரோணாசாரியரை நோக்கி உங்கள் சேனையு நீங்களுங் கெட்டீர்களென்று கலகல வென்று சிரித்து இகழுவார்கள். அப்போது அந்தத் துரோணருடைய சேனைகள் "நிஜந்தான் ஒருக்காலுங் கெடாத எங்கள் சேனையும் நாங்களும் உங்களிறை வராகிய தருமராஜனுடைய வில்லாண்மையாற் கெட்டோம்! அனேக பாடுபட்டோம்! உயிரையும் விட்டோம்" என்று கூவிச் சொலலித் தங்கள் சேனாபதியாகிய துரோணாசாரியர் தரும ராஜனுக் கிளைத் தோடி வந்த தன்மையைக் குறித்துத் தங்களுக்குள் தாங்களே இரக்கப்படுவார்கள்.

இந்தப்படி இவர்கள் வாக்கிற் சொல்லிய வார்த்தையின் படி பொறிவைத்துக் குறிதட்டியதைப் போற் குதிரையுடன் குதிரை வீரர்களும், கன்னமதங்களைப் பொழிந்து உலாவிய யானையுடன் யானை வீரர்களும், அறுபட்டு, முறிபட்டு, தறிபட்டு, நெறிபட்டு வீழ்ந்தார்கள். இவ்வாறே ரதங்களும், பதாதிகளும் ஒன்றின்மே லொன்றாய் விழுந்தழிந்து சின்னபின்னப்பட்ட செய்கையை இன்னவிதமாக இருந்ததென்று நிதானித்து மன்னர் முதலிய எவர்களாலும் சொல்லப்படாது. போர்க்களத்தில் இரண்டு பிரிவாகின்ற இருதிறச்சேனைகளும் நான்கு பிரிவாகப் பிரிந்து, இவையித் திறவர் சேனையோ அத்திறவர் சேனையோ வென்றையுற்று உம்பர் முதலிய யாவரும் உரைக்கும்படியாகக் கைகலந்து, அசரிலும் இவர்களென்றும் அவர்களென்றுங் கண்டுணரக் கூடாமல் மெய்மறந்து தொந்தயுத்தஞ் செய்தார்கள். அந்தவேளையிற் பாண்டவச் சேனைகள் அடிபட்டு மெலிந்தோடும்படியாய்த் தம் சேனைகளைத் துரோணர் முடுக்கி விடுப்பதைக் கடோற்கஜன் கண்டு விரைந்தோடி வந்து வாடியோடிய தங்கள் சேனைக்குத் துணையாகியபோது அபிமன்னனுங் கலந்து கொள்ள அவ்வேளை பிலடிபட்டு மனம் வருந்தி நெஞ்சுழன்று தஞ்சமென்றோடிவந்த காவல் மன்னர்களும் ஒன்று சேர்ந்து பரிசுத்த வேதபாராயணரென்னுந் துரோணாசாரியரை மடக்கியபோது சூரியனைக்கண்ட பனியைப்போல் எதிரியினுடையு

சேனைத் தளங்களெல்லாம் பறந்து மறைந்தோடி அரவக்கொடிக் கிறைவனுகிய துரியோதன மகாராஜனுடைய பக்கலிற்போய்ச் சேர்ந்தார்கள்.

அந்தவேளையில் ரதகஜதுரகபதாதிகளுடன் விதுரன் வில்லைப் போல் முறிபட்டிறந்த அரசர்போக நிலைத்துகின்ற மன்னவர்களும் சரத்துவந்த மகாரிஷியின் பிள்ளையாகிய கிருபாசாரியரும், வசிஷ்ட மகரிஷி மதிக்கத்தக்க சத்திவாய்ந்த நித்திய விரத தத்வசீலராகிய துரோணாசாரியரும் பெருங்கும்பாகக் கூடிக்கொண்டு போர் புரிந்தபோது, தருமராஜன் எதிர்த்து, சர சர சர வென்று கணைகளைப் பொழிந்து சண்டைசெய்ய, அதனல் தளர்ச்சி கொண்ட தளங்களெல்லாம் துரியோதனன் அண்டையிற் சென்று, "அரசனே! பாண்டவர்கள் மிஞ்சிப் பதறி விட்டார்கள்! இன்று அவர்களுக்கு கல்லகாலம்! அகண்ட சாம்பிராச்சியமும் ஐவரே பெறுவார் கள் போலிருக்கிறது?" என்று சொல்ல, அந்த மொழியைக் கேட்டும் அதிர்ஷ்டங்கெட்ட துரியோதனன் முன்பின் யோசனை செய்யாமல் "கையிலாகாதவர்களே! இவ்வளவுதானு உங்கள் கைரியம்" என்று கொடிய நெருப்பினுங் கடியவேகங்கொண்டு, முன்னேபோயிருக்கிற சதுரங்கச்சேனைகளும் முடிமன்னர்களும், அவர்கள் கைக்கொண்டவில்லும், பாணமும், தருமராஜனல் முறி பட்டுத் தறிபட்டு ரணகளத்தில் விழுந்தழிந்து கிடப்பதல்லாமலும், இன்னுமிருக்கும்படியாகிய பேர்கள் யாவரும் இறந்துபோகப் பார்க்க வேண்டு மென்னும் இச்சைகொண்டவனைப்போல் "விடாதீர்கள், விடாதீர்கள்! முடுக்குங்கள்! முடுக்குங்கள்! போமின்கள்! போமின் கள்!" என்று கொஞ்ச மிஞ்சி யிருந்த சேனைகளையு முட்டவிட்டுத் தானும் தன்படைக்கு முந்திச்சென்று, வெற்றிமாலை பெற்ற வீரர் களுடன் சுத்த வீரர்களையுஞ் சேனைகளையும் அநேக முகங்களிலும் அணியணியாக வகுத்து விடுத்து, மகாபராக்கிரமத்தோடு முனைவ தாயினன்.

அக்காலத்தில் அந்தந்த முனைமுகத்தோறும் வீரப்பிரதாப விற் ருங்கிய அபிமன்னுவானவன் தானொருவனுக நின்று வந்த வீரர் களெல்லாம் வாகுடைத்து உடல் சிதைந்து, படையழிந்து, உயிர் மடிந்து, உதிரம் வழிந்து ஓடும்படியாய் வில்லைத்து வீசியடிக்கும் பெருங்காற்றுடன் கூடிப் பொழியும் பிரசண்ட மேக ஜாலங்களைப் போலப் பாணமழைகளைப் பொழிந்து போர்புரியும் சமயத்தில்,

யானை சேனை பரிவார முதலாகிய படைவீரர்களும் புறமுதுகிட்டு ஓடினார்கள். அந்த ரணகளமானது உதிரப் பெருக்கத்தால் அந்தி வான மென்னுஞ் செவ்வானம் போலிருந்தது. கால்வேறு, தலை வேறு, உடல்வேறு, குடல்வேறு, கொம்புகள்வேறு, தும்பிகள் வேறுய் விழுந்து கிடக்கிற யானைகளெல்லாம் கருமேக வெண்மேக ஜாலங்களை யொத்திருந்தன. கெடிமன்னர்க ளணிந்துதிர்ந்த முடி முதலிய ஆபரணங்க ளெல்லாந் தாராகணம்போ லிருந்தன.

பகதத்தன் பீமசேனனைத்தேடி வலைத்துக்கொள்ளுதல்

இந்தப் பிரகாரம் இவ்விடத்தில் அபிமன்னுவானவன் யுத்தம் பண்ணிக் கொண்டிருக்க, தருமராஜனுட னெதிர்த்துப் போர்செய்த துரோணாசாரியர் தேரழிந்து, வில்முறிந்து, தேகமெலிந்து, வேறு தேரில்லாமற் பாதசாரியாய் நிலத்தினின்று துரியோதனனுகிய அதிபதியை நிந்தித்துத் தன் தலைவிதியைச் சிந்தித்து, தருமராஜ னுடைய கணைகளுக்குடைந்து புறங்கொடுத் தோடுங்காலையில், அநேக மாயிரங்கோடி தேராளிகள் துரோணாசாரியருக்குத் துணை யாக வந்து காத்துக்கொண்டார்கள். அந்த வேளையில் துரோணா சாரியார் திடங்கொண்டு மறுபடியுந் தர்மராஜன் பேரில் யுத்தஞ் செய்யத் திரும்பிக் கோபங்கொண்டு முனைந்த காலத்தில், வீரப்பிர தாப விற்முரங்கிய அபிமன்னுவானவன் வேகத்துடன் முடுக்கிவந்த துரோணரையும், வேந்தரையும், பதாதிகளாகிய மாந்தரையும், யானை, சேனை, தேர் முதலிய எல்லாவற்றையும், முகமாறும்படி யாய் மார்பொடிய அடித்து வாட்டினான். அக்காலையில் மார்பு கொடாமல் முதுகு கொடுத்து வாடியோடிவரும் துரோணாசாரிய ரென்னுஞ் சேனாதிபதியையும் மன்னர் முதலாகிய சேனைகளையும், இந்திரனுக்குச் சுதந்தரத் தோழனாகிய பகதத்தன்கண்டு, இனி நமக்கு கல்லகாலமென்று சீறி, அநேக தீர வசனங்களைக்கூறி, சமுத்திரப் பெருக்கம்போல் யானைப் படைகளைக் கொண்டு போர் புரியும்படியாய் இரணகளத்தில் எதிரேறி வருவதாயினன். ஓ அரசனே! அந்த பகதத்தன் ஏறிவந்த மதம் பொருந்திய தாவள்யமான யானையானது க்ஷீராப்தியிற்பிறந்த ஐராவதத்திற் கொப்பாயிருந்தது. இவன் கைபிடித்த வில்லானது இந்திர தனுசுக் கொப்பாயிருந்தது. அவன் தேவேந்திரனைப்போல் வந்தான். அதைத் தேவர் முதலிய யாவருங்கண்டு, இவனுட னெதிர்த்துப்

போர் செய்யும் பேர்களுமுண்டோ வென்று சொல்லிவியந்தனர். இப்படி பதினாயிரம் யானைக் கொப்பாகிய புஜபலங்கள் பெற்ற அப்பகதத்தராஜன் பலவகை விருதுகளுடன் பற்பல வாத்தியங்களும் முழங்கப் புறப்பட்டு, இவனிலுஞ் சிறந்த வீரர்கள் இருபதினாயிரம் யானைகளைச் செலுத்திக்கொண்டு வரும்படியாய் அசுரகுலகாலனாகிய சுப்பிரமணியக்கடவுளைப்போலும், ராக்ஷஸவைரியாகிய சக்ரதரனைப் போலும் வருவதானன். மேலும் இவனைப்போற்பட்டவ னெனில், தெய்வலோகத்தின் பேரில் பகைத்து வந்த அரக்கர்களையெல்லாம் பறக்க அடித்து அவ்வரக்கர்களுக்குப் பயந்து ஓடி யொளித்துப் போன தேவேந்திரனுக்குச் சகாயமாக விருந்து தெய்வலோகத்தை அவ்விந்திரனுக்கு கிலி கிறுத்திக் கொடுத்து அவனுக்குத்தோழ னென்று தேவர்கள் முதலிய யாவர்களாலும் பேர்பெற்ற திடவான்.

இத்தன்மையனாகிய பகதத்தன் அழகிய மகமேருவை யொத்த தனது யானையானது தலை யசைத்துக் காதின்காற்றினால் கடல்களை அலையச்செய்யவும், கோடையிடி முழக்கம்போல் முழக்குந் துதிக்கையை நிலத்திலடித்து இரையவும், பூமிகுலுங்கக் கால்களாற்று வைத்து மலைகள், மரங்கள் பொடியாகும்படி விரைந்து வேகமாக நடக்கவும், கோபாக்கினியினால் மனம் புழுங்கிப் புகைந்து பிரகாசிக்கும் வீரபட்டஞ் சிறந்த நெற்றியில் வியர்வை வழியவும், நெருப்புங் காற்றும் கோரிட்ட தன்மைபோற் சிறியகண்களி விருந்து பெரிய நெருப்புப்பொறிவீசவுமாக அம்மத்த கஜத்தின்மேலேறிக்கொண்டு, ஹாகேயூர கடக குண்டல வாகு வலயமுதலிய பணிகளிலங்க வீர கேசரிபோற் போர்முகத்திற்கு வந்தான். இப்படியாக வந்த பகதத்தனைக் கண்டவுடனே அபிமன்னுவினுற் புறங்கொடுத்தோடிய சேனைகளெல்லாந் திரும்பித் திரண்டுவந்து பகதத்தனுடன் கூடிக் கொண்டார்கள். அந்தச் சமயத்தில் காகக்கொடியினையுடைய சுரேந்திரனும் அவனுடைய தம்பிமார்களும் தேசபாலஷத் தலைவர் முதலாகிய கால்வகைச் சேனைகளும் போர் முகத்திற்சென்று, இரண்டு கைகளையுங்கொட்டிக் கொண்டானடித்துக்கொண்டு ஜயம் ஜயமென்று கூத்தாடி எதிர்க்க, இருதிறப் படைகளுங் கைகலந்து யுத்தஞ்செய்தார்கள். இத்தன்மையாக யுத்தஞ் செய்யுங்காலத்தில் ராவணேசுவர னெடுத்த ஆதி கைலையங்கிரியும் இதற் கொப்பல்ல வென்று சொல்லும்படியாகிய வெள்ளை யானையை வேகத்துட

னடத்திக்கொண்டுவந்த பகதத்தனனவன், "பீமசேனனென்பவ னெவன்? அவனெங்கிருக்கிறான்? அவனெங்கே? அவனெங்கே? கொடிமுடிபோன்ற அவனுடைய பெருமுடியைவெட்டி வெற்றி யுடன் திரும்புகின்றேன். அவனைப்பாருங்கள்! அவனைத் தேடுங்கள்! அவனை விடாதீர்கள்!" என்று பலவிதமாகிய வசைச்சொற்களைப் பிதற்றிப் பற்கடித்துக் கறுவிக் கொருவங்கொண்டு வந்தான். அப்படி வராநின்ற கிர்வாகசாலியாகிய பகதத்தனைக் பீமசேனன் கண்டு, அவனிரைந்து வருகிற சொல்லையு மூட்கொண்டு தன்னுடைய ரதத்திலிருந்து கதாயுதபாணியாகக்கிளம்பி, அவன் சொற்களுக்குப் பதிலுக்குப்பதில் விளம்பி, கரகரவென்று அந்தரத்திற் சுழன்று, சர சரவென்று சிந்தை மெத்தத்தழன்று, "நீ தானோ பகதத்தன்?" என்று அவன் யானை மத்தகத்திற் பாய்ந்து, "ஏன்தானடா பீமன்" என்று நமன் அஞ்சக் காய்ந்து, அவனுடைய இரண்டு தோளு நெரிய ஒரு கையால் இறுக்கிப் பிடித்து, மற்றொரு கையால் மார்பு கிழியக் குத்தி "அடாமதத்தா! பகதத்தா! என்னைத் தேடிவந்ததற்கு என்ன லியன்ற மாத்திரம் உனக்கு உதவி செய்தேன்!" என்று சொல்லி, அவனை முன்னுக் கிழுத்துப் பின்னுக்குத் தள்ளித் திருப்பி, இருப் புலக்கையைக் கொண்ட நீளத்துதிக்கையாற் படைகள் மாண்டுவிழ வீசி வராநின்ற அவனேறிய வெள்ளையானையின் வீரப்பட்டம் பதித்த நெற்றியிற் குழிபடவுதைத்து, மத்தகங் கிழியக் கதையினால் அடித்து விரைவி லோடாநின்ற புரவி பூட்டிய தன் ரதத்திலே திரும்பிக் குதித்துத் தனிச் சிங்கம்போலிருந்த காலையில், பகதத்த னேறியயானை வெலவெலவென் றுதைத்துக்கொண்டு கலகலவென்று கண்ணீருருக்க, அந்த வேளையில், திக்பிரமை கொண்டு களகள வென்று சேஷ்மங் கட்டிக்கொண்டு இழுக்கச் சாய்ந்த பகதத்த னவன் நமக்கிது ஒரு தத்தென்று தேறியெழுந்து, வீரர் முதலிய யாவரும் அஞ்சும்படியாய் நெஞ்சில் நெடுங்கோப மெறிய மடமட வென்று வில்நாணியிறுக்கி, பல பாணங்களைப்பலபலவென்று வரிசை வரிசையாய் வசிபோல் விடுத்தான்.

அந்தப் பகதத்தன் விடுத்த பாணங்களையெல்லாம் பீமசேனன் பாரிய கதையினாலடித்து முறித்து, பலபல விதத்திலுங் கோபங் கொண்டு வில்லை யெடுத்து நிறுத்திவளைத்துக் கிண்ணெனும்படி நாரி பூட்டிக் கெடிவீரரெல்லாம் நடுங்க இழுத்து, நாகாஸ்திர மேகாஸ்திர முதலிய பாணங்களை நானிலமேழுமதிர விடுக்க, இந்தப் பிரகாரம்

இவர்களிருவரும் பர பர கர கர வென்று ஒரு நிலத்திற் றனித்து ஒரு யுகம் போர்புரிந்தாலும் ஒருவரை யொருவர் வெல்லுவது அருமை யென்று தேவர்கள் சொல்லிக்கொள்ளும்படி இவர்கள் பிடித்த வில்லானது மளமள வென்று ஓசையுடன் வளையவும் இவர்கள் செய்த டங்கார காரணுசையால் நான்கு திசையும் செவிடுபடவும், இவர்கள் பெரு மழைகளைப்போல் ஒருவர்பேரி லொருவர் விட்ட பாணங்கள் அவர்களுடைய தேகத்தைத் துளைத்து உருவமாட்டாமல் முனைமழுங்கி நுனி முறிந்து போகவும் இவர்க ளொருவருக் கொருவர் விடும் பாணங்களைத் தடுர்வேத முறைமையின்படி சத்துரு மித்திராஸ்திரத்தை விட்டு விலக்கிக் கொள்ளவும், ஆகாய மறையும்படி அம்புகள் நிறையவும், இப்படியாகத் தப்பில்லாமல் நெடு நேரம் வரையில் தங்களுக்கெவரும் ஒப்பென்ப திலாமற் போர் புரிந்துகொண் டிருப்பதானார்கள்.

இவர்கள் போரில்வாறிருக்க, பகதத்தனேறிவந்த யானைசெய்த கொடும் போரைக் கொஞ்சஞ் சொல்லுகிறேன் கேளும்—அரசனே! அவனேறிவந்த யானைக்குப் பட்டுக்குச்சு முதலிய பூண்கட்டிய நான்கு கொம்பு இருக்குமாகில் கீழ்த்திசை யானையாகிய ஐராவதம் இதற்கு நிகரல்ல வென்று சொல்ல வேண்டியது. இந்த யானையின் பேரென்ன வென்றால், பற்பலருங் கொண்டாடா நின்ற சுப்பிரதீபம். அதனுடைய பலபராக்ரமத்தைச் சொல்லுமிடத்துத் திக்கு யானைகள் எட்டித் திக்கென்று திகில்கொண்டு நாணிப்போம். இஃதன்றியும் போர்முகத்தில் எதிரிகள் விடுக்கும் பாண முதலிய ஆயுதங்களை யெல்லாந் தெரிந்து கொண்டு எந்த வேளைக்கு எவ்விதம் பதுங்கி, ஓதுங்கி, அடங்கி, ஒடுங்கித் தன்னையுந் தன் எஜமானனையுங் காத்துக்கொள்ள வேண்டுமோ, அந்த வேளையில் அவ்விதம்பதுங்கி, ஓதுங்கி, அடங்கி, ஒடுங்கிக்கொண்டு பகைவர்மேற் கடிந்து சுற்றிலும் பத்துகமுடைய காலும், இருப்புச் சங்கிலி, இருப்புலக்கை, இருப்புக்குண்டு முதலியவற்றைக்கொண்ட துதிக்கரத் தாலும், கருப்பின் இலையைப்போல் வரிசையாகக் கத்தி கட்டிய வாலாலும், கவசத்துடன் வீர பட்டங்கட்டிய மத்தகத்தாலும், மதத்துப் போர் புரிந்த யானையின் வல்லமையைச் சொல்லத் தக்கதோ? மதிகுல நிதியே! அதெப்படி யென்னில், பகதத்தனேறி வந்த அச் சுப்பிரதீப மென்னும் யானையானது தனது அதிக்கை யினுல் தருமராஜனுடைய படையினின்ற யானைகளையெல்லாம்பிடித்

துக் குயவன் திகிரிபோல் விறுவிறெனச் சுழற்றி ஆகாயத்தில் எறிந்தும், பிறைபோன் றிருக்குந் தந்தங்களினுல் அவரவரேறிய ரதங்களே யெல்லா முடைத்தும், குதிரைக் கும்புகளெல்லாந் தும்பாய்க் கதறிக் கனைக்கும்படி வாலினு லடித்துச் சாய்த்தும், வீரர் முதலாகிய பதாதிப்படைகளெல்லாம் அலறிக் கதறி அபய மபயமெனச்சாய்ந்து மாய்ந்துபோகக் கூத்தாடியும் குட்டையைக் கலக்குந் தன்மையைப் போற் குரு கேஷத்திரத்திற் கூடிய பாண்டவர் சேனைகளைக் கொன்று குவித்தது.

தருமராஜன் ஸ்ரீகிருஷ்ண பகவானை நினைத்து வந்தித்தல்

இந்தப்படி யுத்தஞ் செய்யா கின்ற பகதத்தனுலும், அவனேறி வந்த மதமலையான யானையினுலும், அவனுடனே கூடிவந்த யானைப் படைகளினுலும், அணிபொருந்திய தமது சேனைகள் கொந்து கைந்து அழிந்தனவென்று தருமராஜனுணர்ந்து, அந்தப் பகதத்தனை மடக்க வகை யொன்றுந் தோன்றுதவராய் வருந்தி, சஞ்சத்தகர், திரிகர்த்தர் பேரிற் சண்டைக்குப் போயிருக்குந் தம்பியாகிய தனஞ் செயனுக்குச் சாரதியா யமர்ந்தருளிய ஜகார்த்தனனை, மலரகிதனு கிய பரிசுத்தனை, பக்தவத்சலனை, பரந்தாமனைச் சிந்தையுள் கினைத்துத் திருவடியைச் சிந்தித்து "சுவாமி! என் அண்ணு! இந்தவேளை வந்து காக்க வேண்டும். என் படைகள் கொந்த அலங்கோலத்தைப் பார்க்க வேண்டும். ஓ ஈசனே! துவாரகாபுரிவாசனே! அன்பர்க்கருள் நேசனே! அகிலமுழுதும் விளங்கும் பிரகாசனே!" என்று துதித்துப் பேசாதிருந்தார். ஓ ஜனமேஜய மகாராஜனே! அந்த வேளையில் ஒப்பில்லா விற்பனனுகிய பற்குணன் ஓரு மூலையிற்செய்த யுத்தத்தினிர்வாகத்தையும் ஓருவாருகக் கொஞ்சஞ் சொல்லுகிறன் கேளும்; அர்ச்சுனனையும், பீமசேனனையுந் தருமராஜனுக்குத் துணையாக வொட்டாமல் ஜெயிக்கிறேறு மென்று துரியோதனனிடத்திற் சபதஞ் சொல்லித் தாம்பூலம் வாங்கி வந்த சஞ்சத்தகரும், திரிகர்த்தரும் நாராயண கோபாலருங்கூடி, தாரணியுந் தடங்கடலுங் குலுங்கிக் கலங்கும்படியா யுத்தஞ்செய்தனர். தனஞ்செயன் விடுத்த பாணங்களினுல் எலும்புகளெல்லா நெரிந்து, மாமிசங்களெல்லா முதிர்ந்து, மார்புகள் கிழிந்து, உதிரம் வழிந்து அளவற்றபேர் தலை களுமறுந்து விழுந்து ஒழிந்த கல்லாமலும், அவர்கள் படைவீரர் களின் தேரிற்கட்டிய குதிரைகளெல்லாந் தலையறுபட்டு, மலைக்

கொப்பாகிய, தேர்களெல்லாம் பொடிப்பொடியாக உடைபட்டுச் சாரதிகளெல்லா மடிபட்டு, கெருப்பினைக் கருகிய சருகைப் போலும், இடியினை லேங்கிய பாம்பைப்போலும் ஒடுங்கிச், சூரியனுக்கு முன்னுகிய பனியைப்போற் றிரிலோக்து, பலதிசைகளிலும் புகுந்து ஓடி யொதுங்கிப் போயினர்.

இவ்விதமாக முனைபுகுந்த திரிகர்த்தரும் அவர் சேனைகளும் யுத்தஞ்செய்யச் சத்துவமில்லாமல் திக்காலொருவரா யோடவும் மேகக் கூட்டம்போன்ற சஞ்சத்தகரு மவர் சேனைகளும் எஞ்சி யிலைத்துப் பஞ்சுகளைப் போற் பஞ்சைகளாகி வாடவும், காராயண கோபாலர்க ளெல்லாம் ஆபரணங்களறுந்து அநமையாகிய கவசங் கள் கிழிந்து, தலைதறிந்து, வில் முறிந்து, இரைந்து சாகவும், இன் னும் பலர் புறமுதுகிட்டுப் பறந்துபோகவும் உயர்ந்த மரத்தின் கிளைகள் சுழன்று மளமளவென்று முறியப் பலங்கொண் டெழும்பி வீசியடிக்கும் பெருங் காற்றைப்போல் சுற்றித் திரிந்து உக்ரமாகிய பாணங்களைப் படபடாகாரத்துடன் தொடுத்து வெற்றி பெறும்படி யாகிய யுத்தத்தைச் செய்த அர்ச்சுனன்மேரில் எதிர்த்து வந்தவர் களுடைய கீர்த்தியெல்லா மழித்து, குதிரைகளெல்லா மொழித்து, இரதங்களெல்லாம் பொடிபடுத்தி, வேகமோங்கிய பாணங்களெல்லா முறைத்து, ஆயுதங்களுடனே கரங்களற்றுவிழ, அதிக இடங்களிலும் அம்புகள் உருவியெழ, கெக்குவிட்டுத் திக்குக்கெட்டு அழிந்தவரும், உயிர் அற்று ஒழிந்தவரும், ஓடிய இரத்த வெள்ள பள்ளத்தில் விழுந்து உட்கி மங்கினரேரும், மாம்சாதிகள்-ஊன்-தினங்கள் முத லியவற்றைக் கெடுத்து எலும்பைப்பற்றி உருவுகிற பாணங்களால் உயிர் போகாமல் நிலைத்து நின்றவரும், இதுவரையில் வெகுதூரத் திற் சென்று திரிகர்த்தர், சஞ்சத்தகர், காராயண கோபாலர் முத லான பேர்களில் அளவிடற்கரிதான பேரைப் பஞ்சு பஞ்சாகப் பறக் கவடித்து இறக்கச்செய்ததும் போதாமல் எஞ்சிநின்ற சமக்கும் எம னுய் வந்து விட்டானே யென்றழுபவரும், இப்படி பற்பல விதமாய் அர்ச்சுனனுக் கெதிர்ப்பட்ட வீராதிவீரத் தலைவர்களெல்லாரும் வெந்து வெதும்பிப் போகும்படியாய்க் கொடும்போர் விளைத்திருந்த னன் விஜய காண்டீபதரன்.

திரிகர்த்தராதியரிற் பதினெண்ணூயிரவரை வதைத்த அர்ச்சுனன் தருமராஜனிடம் வருதல்

• அந்த வேளையில் முரசக்கொடியினையுடைய மூன்ஞன் செங்கண் மாலைச் சிந்தித்தவுடனே தேவகி நந்தனன் தெரிந்து கொண்டவராய்த் திரிகர்த்தர், சஞ்சத்தகர் முதலிய எல்லாரும் மூனை முகத்தி லொழியும்படியாக யுத்தஞ்செய்து ஜெயங் கொண்டு மகா வீரசுந்தோஷமடைந்த நீல நிறமேகத் தேகவடிவினை யுடைய அர்ச்சுனன், இன்னமுந் தன்கையில் மின்னல்போற் பிரகாசிக்கும் விஜய காண்டீபத்தி லிருந்து மேலுமேலும் புறப்படும்படியாகிய இந்திராஸ்திரம், வருணஸ்திரம், வாயுவாஸ்திரம், குபேராஸ்திரம் என்று சொல்லப்படும் இப்பேர்ப்பட்ட பாணங்களில் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரமாக வெளிப்பட்டுக் கொண்டு எதிரிகளெங் கே? எதிரிகளெங்கே யென்று இரைச்சலிட்டு வரும்படியாக எட்டுத் திக்கு மறையும்படி விட்டுக்கொண்டு வராநிற்க, அவனது முகத்தை நயமாகப் பார்த்து, அவன் கொண்டிருக்கும் மனக்களிப்பையுமறிந்து கொண்டு, "அசைவற்ற மனத்தையுடைய விஜயனே! நாம் நெடுந் தூரம் வந்து விட்டோம். நமது சேனைகளை அணிவகுத்து இருக்கு மிடத்தில் உத்தமனுகிய தர்மராஜனைப் பகதத்தன் வளைத்துக் கொண்டு விளைமுற்றிய அரிய யுத்தத்தைச் செய்கிறுன்போலு மிருக்கிறது. இவ்விடத்திற் சஞ்சத்தகர் சேனையிலும், திரிகர்த்தர் சேனையிலும் பதினெண்ணூயிரம் படைவீரர் இறக்கும்படியாய் ஓரே வைராக்கியமாக நின்று பகழி விடுத்து யுத்தஞ் செய்துவெற்றி பெற்றுப் பகைவருடைய பலமடங்கச் செய்தாய். இனிமேல் உன்னு யிருக்குயிராகிய தர்மராஜனைப் பிடிக்க துரோணர் சபதஞ் செய்தி ருந்த சங்கதியை ஸ்ரீ கிருஷ்ணனுந் தம்பியாகிய அர்ச்சுனனுந் தெ ரிந்திருந்தும் நம்மை விட்டுப் பிரிந்து போனுர்களேயென விசனப் படுவார். ஆகையால், அதிசீக்கிரத்தில் உன் தமையனிடம் போய்ச் சேர்ந்து மலைபோன்ற யானையேறிவந்து நமது படைகளை வருத்தும் பகதத்தனுடைய பிராணனை ஒரு கொடிப்போதில் வாங்குவோம். விரைவில் வா" என்று வேண்டி, காற்றிலுங் கடுவேக முடையதாய்த் தாண்டிச் செல்லுஞ் சுவேதவாம் புரவியைத் தூண்டி, தன்மனம் போன்ற அழியா ரதத்தில் இருக்கும் அவ்விந்திர குமாரனுடனே தாமும் நெருப்புங் காற்றும் கோரிட்டதைப்போல் நெடுநில நடுங்கக்

கடல் புடை கலங்கத் தேரைச் செலுத்தி, நாங்கள் வருவதைத் தர்மராஜன் அறியும்படியாகிய சங்கத்தொனி செய்து, க்ஷணப்போதில் மலைகளின் சிறகை யறுக்கப் புறப்படும் வஜ்ராயுதம் போலவும், உதயகிரியி லுதித்த சூரியனைப் போலவும், விகட தட கரடகைமலை யாகிய சுப்பிரதீபமென்னும் யானையின் மேலேறிவந்து சேனைகளின் பேரிற் பாணங்களைப் பொழிந்து போர்புரியும் விக்கிரமனுகிய பகதத்தனை உக்கிரத்துடன் வந்து வளைத்தார்கள்.

இப்படியாக வந்து வளைத்த அர்ச்சுனனுடைய தேரிற்கட்டிய அநுமக் கொடியானது ஆகாயத்தை யளாவி அங்குள்ள மேகத்தை நிலை குலையச் செய்யும்படி படபடாகாரத் தொனியுடன் பறக்க, சமுத்திரத்தி லோடுங் கப்பலைப்போல் தரையைப் பிளந்தோடிவரு மவ்விரதத்தின் ஓசையைக்கேட்ட மாத்திரத்திற் போர் முகத்தி லுள்ள யாவரும் "விஜயன் வந்தான்! விஜயன் வந்தான்!" என்று ஒரு பெருங் கூச்சலிட, அந்தக் கூச்சலை அக்கிரகண்யராயிருந்த தருமராஜன் முதலான பேர்களறிந்து, ஜானகி காயகனுகிய தாசரதியின் வில்லுக்கு மேற்பட்ட வில்லையுடைய தனஞ்செயன் வந்து விட்டபடியால் நமக்கொருபயமு மில்லை. இனிமேல் யுத்தமு முடிந்து பகதத்தனு மடிவானென்று இன்ப முற்றதல்லாமல், இளைத்துப் பயந்தோடிய பாண்டவப் படைவீரர்க ளெல்லாருங் கூட்டமாகக் கூடி வந்து காண்டீபனைச் சேர்ந்து கொண்டார்கள். அந்த வேளையில் பீமசேனன் பேரில் வயிரங்கொண்டு யுத்தஞ் செய்து வராநின்ற பகதத்தனுவன் பீமசேனனுடைய போர் முனையை விட்டு விஜயனை நோக்கி நகைத்து, "அடா அர்ச்சுன! நீ எவ்விதமாக ஓட்டிக்கிட்டி யுத்தஞ் செய்தாலும் இன்றையப் போரில் என்னை ஜெயிக்க உன்னு வில்லை. என்னை வெல்வது உனக்கு மெத்த அருமையா யிருக்கும். உன்னை வெல்வது எனக்கு மெத்தச் சுருக்கமா யிருக்கும்" என்று சொல்லித் தானேறிய மும்மதக்களிற்றை நடத்தி வந்து அழல் நெருங்கிய மனமும், பொறி பறக்கும் விழியும், புகை புறப்படு மூக்கும், அனல்கள் வீசிய காதும், மேக முழக்கம் போல வெடித்த சொல்லும் கடித்த பல்லுமுடையவனுய் வில்லை வளைத்துக் குணத் தொனிகாட்டி, விதவிதமாகிய மின்னற் போன்ற பற்பல கணைகளை அற்புத-திற்புத-புற்புத மென்னும்படியாக வகையிலாப் புகழினையுடைய விஜயன்மீது விடுத்தான். விஜயன் தனது வில்லை வளைத்து டங்காரஞ் செய்து, சந்திராஸ்திரம், கருடாஸ்திர

முதலியவைகளுக் கொப்பாகிய கொடிய பகழிகளை யெல்லாங் தொடுத்து, வரமும் உரமும் பெற்ற தாவள்யமாகிய மதவெற்பை கடத்திவரும் பகதத்தனுடைய வில்லையும், கவசத்தையும், துவசத் தையும் அறுத்து, மேலும் மேலும் பற்பல விஷக்கணைகளையும் விட்டான். அந்த பகதத்தனவன் சரிக்குச்சரியாய் சரம்விட் டழித்து ஒப்பற்ற வேலாயுதத்தை யெடுத்து விஜயனுடைய தேர்ச் சாரதியின்மேல் வெகுண்டு விடுத்தான். அவ்வேலாயுதமானது ராக்ஷஸக் கூட்டங்களை யெல்லாம் வென்று கொன்று மென்று தின்று மாமிச முதலிய உதிரத்தின் ருசியைக் கண்டிருப்பதாகையால், அதிவேகங்கொண்டு அண்ட முகடு நடுங்க வருவதை அர்ச்சுனன் கண்டு, வச்சிரக் கணையால் முட்டவிட்டுத் தறித்துத் திரிபுர தகன னுகிய சிவ பெருமானைப்போல் நகைத்து, பகைத்துப் போர்புரியும் படி பகதத்தனுடன் வந்த விகடதடகரட திடகாத்திர குஞ்சரங்க ளெல்லாம் பஞ்சாகப் பறந்திறக்கப் பகழிமழை பொழிந்தான். குடு குடு குடுகுடு கும்கும் கும்மென, படபட படபட பம்பம் பம்மென வந்து விழுந்த அந்தப் பகழிகளினுல் யானைக் கும்புக ளெல்லாம் வம்பாயழிந்து, துதிக்கை தறிந்து, காதறுந்து, கால் முறிந்து, வாலொடிந்து, உடல்கிழிந்து, தொடை யொடிந்து, நாவ ழிந்து வாயுங்கிழிந்து, கழுத்தறுந்து, மாலைகள் கரிந்து, மணிகளு டைந்து, கொத்துச் சித்திர வேலை பெற்ற தங்கத்தாற்செய்த கிம்பு ரிப் பூண்கள் கட்டிய கொம்புகள் முறிந்து, மலைக்குகை போன்ற வபிறு பீறுண்டு, மண்மேலார்ந்து மாவாய்ப் பொடிந்தன. இந்தப்பிர காரம் போர்முகத்திற் பேர்பெற்ற யானைத்தலைவராகிய சேனைத்தலை வர்களும், வெற்றி வயவர்களும், பிணக்காடாய்க் குவிகிற ரணகளத் தில் நிற்க மாட்டாமல் முனைகெட்டுப் புறமுதுகிட் டோடினர்கள்.

அர்ச்சுனன் தன்மேலெதிரிவிடுத்த வேலைத் தடுத்துத் தாங்கிய கண்ணனை வெறுத்துக் கொள்ளுதல்

அப்போது பூர்வத்தில் அரக்கரைவெல்லவேண்டு மென்று தே வேந்திரன் வந்து தன்னைப் படைத்துணை யிரந்தபோது அவனிஷ் டப்படியே ராக்ஷஸரைக் கொன்று ஜெயஞ்செய்து அரசு கொடுத்த காலத்தில் அத்தேவேந்திரனவன் சந்தோஷித்துத் தனக்குக் கொ டுத்திருந்த உக்ராக்கினி வேலாயுதத்தை யெடுத்து உபசரித்துப் பற் குணனுக்கு மக்கனம் வரும்படியாய் விக்ரமனுகிய பகதத்தன் விடுத்

தான். அப்படி விடுத்த வேலாயுதம் காலாவித காலாகோலமாய் அர்ச்சுனன் மார்புக்குமேலே லக்ஷ்யம்வைத்து வருவதை ராக்ஷஸன நின்று, அதிசீக்கிரத்தில் எழுந்து நின்று அதைத்தமதுவக்ஷஸ்தலத்திற் ரூங்கினர். அவரானெனில், ஒரு வேளை அடியார்களுக்கு ஆபத்து வந்து அழிவுற்ற காலத்தில் அந்த அறிவுக் கணியாகிய நுண்ணறிவா யிருந்து ஆண்டருளும் ஆபத்பாந்துவும் அழியாத முத்தி முதல்வனு மாகி அர்ச்சுன னருகில் பார்த்தசாரதியா யமைந்த அரவணைச் செல்வன். இப்பாற் சத்துருக்களைச் சிரமப் படுத்துஞ் சுப்ரதீப மென்னும் யானையை நடத்தி வந்த பகதத்தன் கரகரவென்று திரிந்து எறிந்த கொடும் பகைகளைத் தீர்க்குங் கொடிய வேலாயுதமா னது கோபாலனுடைய மார்பிற் குபீரெனப் பாய்ந்தவுடன் எல்லாம் வல்ல கண்ணன் எண்ணியபடி புதிதாகிய ரத்தின ராசிகளைப் பதித்த புஷ்பஹாரம்போற் பொன்மலைபோன்ற பூரித்த திருப்புயத்தின்மீது பிரகாசிக்கும்படி வீழ்ந்தது. இப்படியாகிய ஒப்பிலாக் கருணையுருவத் தை, காரியா காரியங்களுக்குத் துணையாகி நின்று கைகொடுக்குங் கருமத்தின் முதலை, ஆரியர் போற்றும் அறிவை, தேவர்கள் முதலிய யாவருஞ் சித்த சுத்தியுடன் பூரணமாய்த்தொழுது, அர்ச்சுனனுக் குத் தாழ்ச்சியு முண்டோ வென்று அளவிறந்த புகழைப்பாடித் துதித்தார்கள். அப்போது அநந்த கல்யாணகுணமுடைய அநாத ரக்ஷகன் அந்த வேலாயுதத்தைத் தடுத்துத் தாங்கியபோது, அர்ச்சு னன் தன்னுடல் கெட்டதைப்போலுந் தன்னுயிர் விட்டதைப்போ லும் பதைபதைத்து, வடவாமுகாக்கினியாற் காய்ந்து சிவந்த வாள் போ லிருந்த கடுங்கோபக் கண்களிரண்டிலுங் கனற்பொறி பறக்க, ஹா! ஹா! வென்று உடல் பதறி, அன்பு முதலாகிய யாவு மறந்தவ னுய்க் கடுகடுத்து, "பகதத்தன் என்பேரில் விடுத்த வேலாயுதத்தை நீர் எப்படி தடுப்பீர்? ஞானவ்வளவு கையிலாகாதவனு? என்னை நான் மறந்துபோன போதல்லவோ நீரேற்பட்டுத் தடுக்கவேண்டும்? இவ் விடத்தில் நாலுபேரும் என்னை நகைக்கும்படியாய்ச் செய்தீரே! கல்ல காரியம்! ஓ சொல்லற்கரிய சுகானந்தமூர்த்தியாகிய இறையோ னே! ஆ! ஆ! என்ன காரியம் நடத்தினீர்?" என்று தான் கோபித்தெ ழுந்த காலையில், கருணை மேகம் போன்ற நெடுமா லானவர் காண்டீ பனைப் பார்த்து "மைத்துனு! உனக்குக் கவலை வேண்டாம். இந்த உக் ரவேலாயுதம் மேகத்திலிருந்து, பிரகாசிக்கு மின்னலைப் போன்றது. எப்பேர்பட்டவர்களானாலும் அவர்களுடைய பிராணனை வாங்காமற் போகாது. இப்பேர்ப்பட்டவேலை இந்தப் பகதத்தனுக்குத் தேவைக்

திரன் கொடுக்கும் போது, நிராயுதர்போரில் விடுவையானல் மலர்ந்த புட்பமுங் குளிர்ந்த தண்ணீரும் போலாகுமென்று வரங்கொடுத் திருக்கிறன். அந்த உளவறிந்தவன் நாணுகையால், குதிரை நடத்திய உளுவுகோலையும் போட்டுவிட்டு அதனை என் மார்பிற் முங்கினேன். மற்றபடி வேறொரு சூதுவாதில்லை. இந்தப்பூமி யுள்ளவரைக்கும் உன்னுடைய புகழுக்கும் உன்னுடைய வெற்றிக்கும் யாதொரு கேடு மில்லை. இதனால் உனக்கொரு குறைவு மில்லை. இதனைக் குறித்து நீ விசனப்படவேண்டாம்" என்று பின்னுஞ் சொல்லு கிறார்.

பகதத்தன் வதை

"அப்பா கிரீடி! இப்போது வருத்தப்படுத்தும் இயமனைப் போன்ற இந்தப் பகதத்தனைக் கொல்வதற்கு இது பக்குவமாகிய நல்ல காலம். ஆகையால் இந்தப் போரைச் சீராகப் பாரென்று உலக முதலிய உயிர்ப்பேதங்களைக் கருப்பத்திற் குடியாகவைத்துக் காத்த ருளிய கார்வண்ணன் காண்டீபமேந்துரைத்து, "நீ இப்போது அப் பகதத்தன் பேரில் விடுவதற்குப் பக்குவமாகிய உக்குக்கணை யிது என்று ஒரு தூணியை யெடுத்துக் கொடுக்க, அர்ச்சுனன் சிந்தை மகிழ்ந்து, சந்தோஷத்துடன் பிரதக்ஷணஞ் செய்து வணங்கி, இரு கரத்தாலும் அந்தக் கணையைப் பெற்றுக்கொண்டு, பூமியதிரும் படியாய் மதயானையைச் செலுத்தித் தனக்கெதிரிற் போர் பொரு தும்படிவந்த அந்தப் பகதத்தனுடைய மார்பில் உருவும்படியாய் ஒரு தொடியில் விடுத்தான். அப்போது அந்தக்கணையானது சிட சிட சிடகாரத்துடன் விற்றென்று புறப்பட்டுக்கூவி, தத்திவரும் பரிபூட் டித் தரியலர்விடு ரதத்தின்மீது தாவி, மண்டியிட்டுச் சண்டைசெய் யும் மன்னர் மண்டலீகரைக் கூட்டிக்கொண்டு வந்த பகதத்தனுடல் முழுவது மிருந்த நெருப்பு பற்றியபொறி யுதிர்வதைப்போல் ரத்தந் துளித்துத் துள்ளித் தாழவும், பலம் பொருந்திய மந்தரமலைக் கொப்பாகிய அவன் தோள்களறுபட்டுத் தாள்கள் தடுமாறி வீழ வும், கிரீடத்துடனே அவன் தலையறுபட்டுச்சுழன்று சுற்றும்போது உதிரமானது செவ்வானம்போற் றெறித்துச் சூழவும், வெள்ளிமலை யானது சாய்ந்து வீழ்வதைப்போல் அவனேறிவந்த சுப்பிரதீப மென்னும் வெள்ளையானையானது கால்சாய்ந்து வீழ்ந்து உதிரவெள் ளத்தி லாழவும் செய்து, ஆகாயகங்கையில் மூழ்கி அர்ச்சுனனுடைய அம்புறுத்தூணியில் வந்தடங்கியது. பிசாசு கூட்டங்களானவை

யானைப் பிணங்களைக் கண்டு சந்தோஷங் கொண்டு நடம் புரிந்து கொண்டானடித்து, விஜயன் விட்ட கணையை வாழ்த்தி மகிழ்ச்சி கொண்டன. இப்பாற் பகதத்தனுமிறங்கு, அவனேறிவந்த யானையு மடிந்து அவனுடன் கூடிவந்த ரதகஜதுரக பதாதிகளும் அழிந் தொ ழிந்ததைப் பூபாலராகிய போர் மன்னர் கண்டு, வெற்றிக் கணையை விடுத்துச் ஜெயித்த இந்திரகுமாரனையும் அந்த விஜயனுக்குத் தேர் செலுத்துஞ் சாரதியையும் புகழ்ந்தார்கள். அந்தக் காலத்தில் கிருஷ் ணர்ச்சுன ரிருவரையும் புகழ்ந்து துதித்து மகிழாதபோக்க ளொரு வருமில்லை. அப்போது துரியோதனனுடைய படை முறிந்து வாடி வருவதையும், பகதத்தன் முடி துணிந்து உதிரக் தாரை தாரையாய் ஓடிவருவதையும், அவன் சேனைகளிறந்ததையுஞ் சகுனி முதலிய காந்தார் கேட்டுப் பயந்து பதைபதைத்து, விருது களும், வெற்றிக் கொடியும், வெள்ளைக் குடையும் பிடிக்க, வெண்சா மரை வீச, சங்கு-பேரி-தாரை-பூரி முதலிய வாத்தியங்க ளெல் லாம் வெகு விநோதமாய் முழங்க, இரதகஜதுரகபதாதிகளென்னும் நால்வகைச் சேனைகளையுங் கூட்டிக்கொண்டு, நட நட வென்று பற் கடித்து விற்பிடித்தெதிர்த்து, இன்றைபப்போரில் நாங்கள் யுத்தஞ் செய்து இந்த அர்ச்சுனனைக் கொல்லாமற் போகமாட்டோமென்று நாலாபக்கங்களிலுங் கருங்கூடல் போல் வளைத்துக்கொண்டு, மருத மரமுஞ் சகடாசுரனுமாயும்படியா யுதைத்தருளிய மாயவனுகிய வலவன் வாயுவேகம் போற் செலுத்தா கின்ற சுவேதவாம் புரவிபூட் டிய இரதத்தின்மீது இருக்கும் வீரகண்டாமணி தரித்த விஜயன் மேல் மினற்பகழி, அனற்பகழி மேகப்பகழி நாகப்பகழி முதலாகிய வீரசாயகங்களை அமோகமாகத் தொடுத்தார்கள்.

சகுனியின் பிள்ளைகளி லிருவர் சஞ்சத்தகரிற் பலர் வதை

இக்தப் பிரகாரங் காந்தாரத் தலைவர் யுத்தஞ் செய்யும்போது, சகுனியின் பிள்ளைகளில் விடன், சேயன் என்று சொல்லு மிருவ ரும், அக்காந்தார தேசத்தாருக்குக் காந்துகின்ற தங்கள் கோபக்கண் களி னின்றும் உதிரும்படியாகிய அக்கினிப் பொறியைப்போற் ரூங் களுஞ் சினப்பொறி சிந்தி, கண்கள் சிவந்து சுழலக் கடுகடுத்துப் பார்த்து, முகம் வியர்த்தெதிர்த்து வில்லை வளைத்து மேக கெற்சிதம் போல் வில் காணி யிழுத்து, விந்தையாய் பற்பல பாணங்களைப் பூட்டி விட்டார்கள். அந்தப் பாணங்கள் வெளிப்பட்ட மாத்திரத்

தில் ஆகாய வீதியிலுலாவி, அண்ட கடாகத்தைச் சுறுசுறு வென்று துருவித் துளைத்துத் திரும்பி விடாமழைபோற் சடசட வெனறு விஷத்தைப் பொழிந்த காலையில் அதைக்கண்ட விஜயன் நகைத்து மெதுவா யெதிர் சென்று நின்று விஷக்கணை தொடுத்து, சந்தன குங்கும கந்த கதம்பங்கள் மணக்குந் தோளினையுடைய சகுனியின் பிள்ளைகளாகிய போரிற் புலிபோன்ற அவ்விருவரையும் போக்கி, சஞ்சத்தகரிடிந்து விண்ணுலகங் குடியேறத்தாக்கி, மண்ணை விண்ணுக்கி விண்ணை மண்ணுக்கி வராநின்ற அர்ச்சுனனை இறந்த வர்களுடைய சதுரங்க சேனைத் தலைவர்கண்டு திகில் கொண்டு "ஐயோ! பகதத்தனையு மாய்த்தான், சகுனி மைத்தரையு மாற்றினன் சஞ்சத்தகரையும் விண்ணிலேற்றினன். இத்தன்மை வாய்ந்த கூர்ங்கணை கொண்ட விஜயனுக்கு இளைத்தோடத்தக்க நாமெல்லா ரும் ஒரு லக்ஷியமோ?" என்று படைமன்னர் பலருமேங்கி இரைந்து கரையருந்த ஆற்றைப்போலோடினார்கள். அந்த வேளையில் வஞ்ச கச் சகுனியானவன் புத்திரரிறந்த செய்தி கேட்டு உள்ளமுருகி, கண்ணீர் பெருகி, உலைவாய் மெழுகென உடலுருகி, குடல் கருகி, மந்தரகிரி போன்ற தேரைச்செலுத்தி, வில் வளைத்து நாணேசை செய்து, சரனயழைத்து, கரதூஷணன் யுத்தம்போற் கணைகளைப் பொழிந்து, கண்ட துண்டமாக எதிரி பாணந்தறிந்து குவியும் படி யாய்ப் போர்புரியும் போது, தேவராஜ குமாரனாகிய தனஞ்செய னனவன் சில கணைகளைத் தொடுத்து அவன் விட்ட பல கணைகளை யுமறுத் தவன்றேரையுமழித்து, வில்லையுமொடித்து, சாரதி குதிரை யும்சாய்த்து கவசத்துடன் வீரபட்டத்தையும் போக்கி மற்றொரு கணையைத்தாக்கி அவனுடைய மார்புருவ விடித்தான். இப்படியாக அர்ச்சுனன் விடித்த பாணங்கள் தைத்த துவாரத்திலிருந்து பெரு கிச்சொரியும் உதிரவெள்ளத்தினுல் அந்தச் சகுனியினுடைய தேக மறையவும், நீங்காத வெட்கத்தினுற் கண்களை மூடிக்கொண்டு கலங் கிக் காலெழாம னிற்கின்ற மாமனாகிய சகுனியைக் காண்டபினுக்கி "அடடா! மாமா! ஏனிப்படி நொந்தீர். புகழும் பலிஷ்டங் கெட்டு இருந்தீர்! ஐயோ! ராஜசபையில் தருமராஜன் முதலாகிய தம்பி மார்களுந் தழலிற் பிறந்த துரௌபதையும் மனம் புழுங்கி வருந்தும் படியாய், மன்னுயிரெல்லாந் துன்புறும்படியாய், தேவரீர் செய்த மோகச் சூதைப்போல் இதுவுஞ் சூதுவென்று யோசித்து விடலா மென்று வந்தீரோ? ஓ சௌபலராஜனே! இது ஒருவரை யொருவர் வஞ்சித்துக் கெடுக்குஞ் சூதல்ல! உயிர் நிலை கெட்டு, உற்றூர் உற

வின் முறையாரை விட்டு, உடல் துளையப்பட்டு, உதிரம் வடியும் படியாய்த் தலை கட்டு, பாண முகத்தினின்று போர் செய்பா நின்ற யுத்தமாக்கும்! ஊரார் குடியைக் கெடுக்கும் வஞ்சகச் சூதில் நீர் சமர்த்தர்; உமது தலையையும் உம்மைச் சார்ந்தவ ருயிரையுங் கெடுத்து யமலோகத்தில் விடிக்க முடிக்கும்படியாகிய வாதில் நான் தான் சமர்த்தன். ஆகையால், இன்றே உம்மை முடிக்கவேண்டிய தாயிருந்தாலும், (சுவரை வைத்துக்கொண்டு சித்திர மெழுத வேண்டும்,) என்னும் பழமொழியைப் போலும், (பெருமா ளில்லாமல் திருநாள் கடவாது) என்னுந் தன்மையைப் போலும், உம்மை வைத்துக் கொண்டு, எல்லா மன்னரையுங் கொல்லவேண்டி யிருப்பதினால், உம்முடலையும், உயிரையும் இத்தவேளை காத்துக் கொள்ளும்படியா யோசித்து மன்னித்தேன். நீர் ஓடிப்பிழைக்கும் விதத்தை யுன்னிப் போம்" என்று அர்ச்சுனன் சொல்ல, அந்த வார்த்தையைக் கேட்டுப் போர்புரிந்திளைத்த சகுனியானவன் பார்த்தனுற் பங்கப்பட்டு, மறுபேச்சுப் பேசாமல் மௌனமாய்த் திரும்பி, மடியாத பேர்களுடன் மனஸ்தாப மடைந்து ஒப்பற்ற ஆண் சிங்கம்போற் செம்பொற்றேரேறி நின்ற தருமராஜனுக் கெதிரில் மதத்த புலிபோற் சென்று நின்று, வாசாமகோசரமாய்ப் பாணங்களை வாரிப் பொழிந்து போர் புரிந்தான். அந்த வேளையில் முரசக்கொடி முதல்வன் கண்டு நகைத்து, "ஓ சகுனி! கும்பலிற் கோவிந்தம் போடுவதைப் போல் அரசர்கள் சந்தடியிற் சேர்ந்து திருட்டுத்தனமாய்ச் சண்டைசெய்ய வந்தனையோ? அற்தோ! இது சூதல்ல! சூதல்ல! ஓ சூதனே! வீரப் பகழிகளினல் தேகந்துளைபட்டு வேகச் செய்யும் போரென்றறிந்து கொள்! ஓ மேகனே! இதோ எனது வெற்றி வில்லேந்திய கையைப் பார்! அதோ உனது உதிரங் குழப்பிய மெய்யைப் பார்! அப்போது சபையில் கடத்திய சூதாகிய பொய்யையும் இப்போது யோசிதது பார்!" என்று கையிலே யுடைய தருமராஜன் சொல்லி, "ஓ வடு வில்லாத சந்திரகுலத்திற்கு வடுவேற்றி வைத்த மாபாவீ!" என்று வச்சிரக் கணைகளை மாட்டி அவன் வயிற்றிலுள்ள பிச்சுப் பிடுங்க விடித்தார். அத்தக் கணைக்கு அஞ்சி வித்தையாலாடுஞ் சூதிலே தப்பித்துக்கொண்டு இத்தெப்பல் முந்தி வரத்தக்கவர்களுக் காகட்டு மென்று பிந்திவந்தவர்களோடு தேரைச் செலுத்தி, தனக்கு முன்னிட் டோடும்படியானவர்களைப் பார்த்து வெங்கிட்டோடுபவரில் யானே கெட்டிக்கார னென்று சொல்லிக்கொண்டு, எல்லோருக்கும் முன்னிட்டோடினன் சகுனி. அந்த வேளையில் தருமராஜன் வந்த

வர்களே யெல்லாம் விடாமற் றொடர்ந்து தமது கணைகளாற் சேதிக் கும்போது வாதைகள் பட்டு அழிந்தவர் போக ஒழிந்தவரெல்லாரும் இனி யுத்தத்திற்கும் நமக்கும் வெகுதூரமென்று தர்மராஜன் புக ழைப் பாடிக்கொண்டு பாடி வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

துரியோதனன் துரோணராதியரோடு பீமனு லபஜயப்பட்டு முறிந்தோடுதல்

அப்போது அந்த யுத்தகளம் எப்படி யிருந்தென்றால், உதய காலத்திற் செந்தாமரைப் புட்பமலர்ந்த தடாகம்போலிருந்தது. இவைகளைக்கண்ட சேனாதிபதியாகிய துரோணாசாரியரும் அசுவத் தாமனும் பலம் பொருந்திய கர்ணராஜனும் காகக்கொடி காட்டிய தேரேறி வந்த கிராதிபனும் துச்சாதனன் முதலிய தம்பிமார்களும் ஒன்றுகச் சேர்ந்து பூமி நடுங்க அடிக்கும் பெருங்காற்றைப்போல் வேகங்கொண்டு, எழுந்துவந்து பீமசேனனை வளைத்துக்கொண்டு, கூசாமற் கொடும்பகழிகளைக் கோத்து ஆகாயம் பூமிமுதலிய யாவற் றையுந் தூர்த்தார்கள். பீமசேனனும் ஆ! ஆ! கல்வாவு கண்டே னென்றெழுந்து கடுங்கோபங்கொண்டு கைகலந்து போர் செய்யும் போது, "ஜனமேஜய மகாராஜனென்னுந் தீரவீர பராக்கிரமனே பாம்புகளிஞ்சற்கருடனிரைக்குமோ? யானைக்குச் சிங்கம் தளருமோ? ராக்ஷதர்களுக்குச் சக்ரதரனுகிய நாரணன் இளைப்பரோ? அதுபோல் மகமேருவின் முச்சிகரத்தையு முறித்த உச்சித முற்ற வாயுதேவனுடைய குமாரன் பீமசேனன் இந்தப் பஞ்சை களுக்குப் பயப்படுவானே? ஆகையாலவர்கள் தொடுத்த அனேகங் கோடி பாணங்களெல்லாம் மலையின்பேரில் விழுந்த மழைத்துளி தெறிப்பதுபோல் பீமன்பேரிற் பட்டுத் தெறித்து விழ, இந்த பீமன் அளவற்ற கணைகளைத் தன் வில்லிற் றொடுத்து, திரிபுரஸம்ஹாரஞ் செய்வதற்காகச் சிவபெருமான் வளைத்த வில்லைப்போன்ற அவ்விஜய வில்லினிடத்திலிருந்து மீட்டும் பல வீரசாயகங்களை விதவிதமாகத் தகதகவென்று விடித்து அவ்வரசர்களேறிவந்த எல்லா ரதங்களையும் வல்லவனட்டிய பம்பரம்போல் வானத்திற் சுழலும்படி யாட்டினன். இதுவுமன்றி, ஒருமுகப்பகழி, இருமுகப்பகழி, மும்முகப்பகழி நான் முகப்பகழி, ஐம்முகப்பகழி, அறுமுகப்பகழி, எழுமுகப்பகழி, எண் முகப்பகழி, நவமுகப்பகழி, தசமுகப்பகழி, சகஸ்திரமுகப்பகழி, தசசகஸ்திரமுகப்பகழி, சதசகஸ்திரமுகப்பகழி, அயுதசகஸ்திர முகப்பகழி முதலாகிய கணைகளை ஒவ்வொருதரமாய்த் தனித்தனி

தொடுத்து, முதன்மையாக விருந்து யுத்தஞ்செய்த படை மன்னரின் உடல்கள் தோறும் தீப்பற்றி யெரியுந் திறம்போல் அரவிந்தக் கணை, புரம்வெந்தக்கணை, கரம்வந்தக்கணை, கதிர்தந்தக்கணை இவைகளால் மூட்டித் தீய்க்கும்போது, அவர்களெல்லாம் இனியெங்கள் பிராணனுள்ளவரைக்கும் முனைமுகத்தில் முந்தோமென்று ஆணையிட்டுக்கொண்டோடும்படி யோசித்தவர்களாக, அதுகண்ட பீமன் அர்வக்கொடி மன்னனுகிய துரியோதனனை மடக்கி, அக்கினிக் கணைகளாலே பாதாதிகேச பரியந்தந் துளையிடுவதுபோல் துடிதுடிக்கச் காய்ச்சி, அவனுடைய மனமுங்கொதிக்கச் செய்தான்.

அந்தச் சமயத்தில் துரியோதனன் மனந்தடுமாறி, மாற்றுருக்கிடம்விட்டு மிகைபடச் செய்த வேதனையால் இந்தத் தீவினை விளைந்ததென்று மீதூணருந்துவதுபோல் மிக்க விசனமருந்தி, முனைமுகத்தில் நில்லாமல் தன்னோடுவந்த மூர்க்கரை விட்டு, எல்லா வல்லமையு மொடுங்கி மதிமயங்கத் தனிமையில் நின்றான். இவ்வாறு "மாற்றானுக்கிடங்கொடேல் மிகைபடச் சொல்லேல்" என்னும் விதிகளை ஆராயாது, "மீதூண் விரும்பேல்" என்னும் விதிக்குப் பதிலாகவும் மாறுகவும் மீதூண் விரும்பி, "முனைமுகத்து நில்லேல், மூர்க்கரோ டிணங்கேல்" என்னும் விதிகளை ஆராயுங்கால மடைந்தவனுய் அளவற்ற துக்கசாகாதிலழுந்திய வணங்காமுடி பொறுத்த துரியோதனனைத் துச்சாதனன் முதலாகிய தம்பிமார்கள் கண்டு, "அண்ணு! என்ன ஒருவிதமா யிருக்கிறீர்? அஞ்சவேண்டாம். விஜயலட்சுமியாகிய மெல்லியாடோள் சேர்ந்து மேன்மக்களாமோம் புறப்படும்" என்று சொல்ல, உடனே அவர்களெல்லோரும் இனிப்பீமனை விடுகிறதில்லை யென்று வரிகள் பொருந்திய வில்லை வளைத்து அவ்வாயு புத்திரன்பேரிற் காயுங்கணைகளைத் தொடுக்க, அக்கணைகளைக்கண்ட பீமசேனன் ஆர்ப்பரித்து அதிர்த்துத் தன் காத்திலிருந்து விடும்படியாகிய சரத்தினுல் அவர்கள் பிடித்த வில்லையும் காணியையும் அறுத்து, கொல்லத் தகுந்த பல்லவங்களையுங் கோடி கோடியாய் விடுக்க, துரியோதனன் தம்பிமார்களெல்லோரும் ஐயோ! ஐயோ! அநியாயமே அநியாயமே" என்று அலறி ஒருவருக் கொருவர் அளவற்ற துயர் மொழிகளைப் பேசிக் கொண்டார்கள். அதைக்கண்ட துரியோதனன், "அப்பா தம்பிமார்களே! சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் நமக்குத் துணையாக

வந்தாலும் இந்த பீமனுடன் வில் யுத்தஞ்செய்து, வெல்லுவது மெத்த அருமை'' என்று சொல்ல, அதுகேட்ட தம்பியரனைவருங் கமபீனுடு பீமசேனனையு நிதானித்து நினைத்து மதித்து, "அடடா பீமனென்றாலும் அவனுக்கே செல்லும். அப்பெய ரிவனுக்கே தகும்'' என்றுவாடி ஓடும் வழிதேடி நின்றார்கள். அவர்கள் எப்பேர்ப் பட்டவர்கள் என்றால், தங்கள் தமையனுகிய துரியோதன மகா ராஜன் எந்தக்காரிய முடிக்க வேண்டுமென்று நினைக்கிறானே அந்தக் காரியத்தை அப்போதே முடித்தத்தக்க சமர்த்தர்களாகிய வீரவிற்றுங்கிய தாஷ்டீகர்கள். அப்பேர்ப்பட்டவர்கள் பீமனால் மெத்தவும் வருத்தமுற்று வெற்றி நஷ்ட மடைந்தார்கள்.

இவ்விதமாக நின்றவர் நின்றபடி நிலை கலங்கிவாட, கண்டவர் கண்டபடி கால்விட்டோட, துரியோதன மகாராஜனையும் அவன் தம்பிமார்களையும், வீரகண்டாமணி தரித்த விற்குருவாகிய துரோ ணரையும், அசுவத்தாமனையும், அங்க தேசாதிபனையும், பொன்னு மணிந்த மார்பினராகிய மன்னரையும், பலடமன்னரையும், கொடை மன்னரையும், நால்வகைச் சேனைகளையும் கோலாகல வெங்கொடுங் கணைகளாற் கொல்லாமற் கொன்றுன் வாயுகுமாரன். இனி நமக்குப் பிழைப்பு இவ்விடத்திலில்லை. நாமொன்றுக்கும் ஈடாகோமென்று சென்றவர்போக நின்றசேனைகள் முழுவதுமிளைத்து, இந்தப் புரத் தில் பீமசேனன் வில்லை வளைத்துக்கொண்டு யமனைப்போலிருக் கின்றுன், அந்தப் புரத்தில் மாயவனுகிய வல்லவனோடு அர்ச்சுன னிற்கின்றுன். சேனுதிபதியாகிய துரோணுசாரியின் தேகத்தைத் துளைத்த கணைதரித்த தர்மராஜனிதோ இருக்கின்றுர். நகுல சகா தேவர்கள் அதோ உலாவுகின்றுர்கள். ஆதலால் எவ்விதங்களிலும் இவர்களை வெல்லப்படாதென அமர்க்களத்தை நீங்கிச் சென்றுர்கள். அப்போது பேரறத்தின் குமாரனுகிய தருமராஜனைப் பிடிக்கிறே னென்ற சொற்சோர்வுபடாமற் சோம்பித்திரியாமற் சாதிப்பவரைப் போன்று கூடிய தன்யர்களாகிய போரரசருடன் சேனுதிபதியாகிய துரோணரும் புறமிட்டோடினர். பின் நந்தியாவட்டை மாலையணிந்த நரேந்திரனும் பீமசேனனுற் பரிபவமாகிப் படாத பாடும் பட்டா னென்று பாண்டவச் சேனைகளு மன்னர்முதலிய யாவரும் போர்க் களத்தினின்று பராக்கிரமத்துடன் ஜெயங் கூறி யாடினர்கள். துரியோதனனும் அவனுடைய சேனைகளுந் துக்கப் போர்வையால் மூடுண்டு வாடிப் பாசறைபோய்ச் சேர்ந்தார்கள்.

இப்பால் மேகம் பொழிந்த மழைகளினுலேகக காடுகளெல்லாங் குளிர்ந்து தளிராகிய கொழுந்துகள் விட்டுச் செழுமையுடன் அரும்பிப் பலவிதமாகிய புஷ்பங்கள் புஷ்பித்து உதிர்வதைப்போல் அனேகவித நிறங்களையுடைய சிறந்த குதிரைக ளெல்லாம் போர் முகத்திற் புகுந்து மடிந்து போர்போராய்க் குவிந்து போனதைச் சூரியபகவான் கண்டு, தன்னிரதத்திற் பூட்டிய சப்தமா வென்னும் குதிரைகளுக்கும் ஒருவேளை அபாயம் வரப்போகுதென்று அஞ்சிப் பயந்து தேரைச் செலுத்திக்கொண்டு புறந்தந்து போனவனைப் போல் மேற்குத் திசையிலோடி யொளித்தான். இவ்விதமாகச் சூரியன் மேற்றிசையில் மறைந்து பொழுது போனவுடனே, தரும ராஜனும், பீமனும், விஜயனும், அபிமன்னுவினுலும் அடி பட்டுப் பயந்து புறங்காட்டி யோடிய புயவீரர்க ளெல்லாருந் துரி யோதன மகாராஜனுடைய பக்கத்திலிருந்து, ரணகளத்தி லிறந்து போய் விட்ட படை மன்னர் முதலிய வீரர்களைக் குறித்து இறங்கி விம்மி அழுது, ஏக்கங்கொண்டு தூக்கமில்லாமல், கொலைத்தொழி லில் நிலைத்த மலைத்திறங்கொண்ட மலைக்குயர்ந்த மதயானையுட னிறந்த பகதத்தனைக் குறித்துத் துக்கப்பட்டு அவனுடைய பெருமை யையும், சாமர்த்தியத்தையு மெடுத்து விசேஷித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அக்காலத்தில் துரியோதனன் தன்னிடத்தில் வந்து சேர்ந்த துரோணுசாரியரைப் பார்த்து, "ஐயா! சேனுதிபதியே! யானைக் கூட்டங்களைக் கண்டு ஆண்மையுடைய சிங்கம் பயப்படுமோ? பயப் படாதல்லவா? அதுபோல் எங்களைப்போல் தாங்களும் பாண்டவர் களுக்குப் பயப்படலாமோ? தேவரீர் கைப்பிடித்திருக்கும் வில்லுக் குச் சரியான வில் உலகத்தில் உண்டென்று சொல்லக் கூடுமோ? அப்படியிருக்க நீர் வேண்டுமெனச் சண்டை செய்வீராகிற் பாண்டவ ரென்னும் பூண்டு கிற்குமோ? என்னுண்டவனே! உமக்கு அண்டை யில் வேறுருதவியும் வேண்டுமோ? தாங்கள் பாண்டவர்மீது கொண்ட அன்பு நீங்காமையால் தொண்டனுகிய என்பேரில் தயவில் லாமல் கிம்புரிக் கோட்டினையுடைய பட்டத்து யானைபெற்ற தர்ம ராஜனை வென்று பிடித்துக் கட்டிக்கொண்டு வராமல் என் சேனை களையுஞ் சாகக் கொடுத்து, என்னையுஞ் சிக்தை கலங்கச்செய்து, சகல கலையில் வல்லவரும், சமர்செய்வதில் வல்லவருமாகிய தாங்க ளும் அவராலடிப்பட்டுப் புறமுதுகிட்டு ஓடி வந்து விட்டீரே!'

என்று கோபாக்கினி அதிகரிக்கக் கண்சிவந்து துரோணாசாரியரை வெறுத்துக் கொண்டான்.

அப்போது வணங்கா முடியோனுடைய பக்கத்திலிருந்த கர்ண மகாராஜனவன் கலீரென நகைத்து, "துரோணரே! நேற்றையதினம் இராஜாதி ராஜனுடைய துரியோதன மகாராஜனுக்கு முன்னிருந்து முன் பின் யோசிக்காமல், யாதொரு கலக்கமுமில்லாமல், உமது மனமார, உமது வாயாரத் தருமனைப் பிடித்துத் தருகிறேனென்ற வாக்கை இன்று நிலைக்கச் செய்தீரோ? ஆ! ஆ! சபாஷ்" என்று உல்லங்கனஞ் செய்து, துரியோதனனை நோக்கிச் சொல்லுகிறான்—

"ஓ சந்திரகுலத்தார்கள் இந்திரனென்று வணங்குந் தார்வேந்தே கேளும்! உலகத்தில் கிளிப்பிள்ளையானது எத்தனைவித வார்த்தை கற்றிருந்தாலும் பூனைவாய்ப் படுகிறபோது கீ கீ கீ என்று கூவத்தக்க அதனுடைய இயல்பே வரும். அதுபோல் எத்தனை விதமாகிய வித்தைகளைக் கற்றிருந்தாலும் உத்தமகுல க்ஷத்திரியன்மாத்திரம் உறுதியுடன் வெற்றிபெறுவான் அல்லது வீரதீரகதியென்று ஓதிக்கொண்டிருக்கும் பார்ப்பாருக்குக் காட்டாண்மை என்பது எவ்விதத்தில் வரும்? திடதீர முதலிய மனவலிமை எப்படியுண்டாகும்? வெறும் வாயை மெல்லுகிறவனை வெற்றிலை தாவென்று கேட்ட சம்பந்தமாச்சுது இந்த வேதியராகிய துரோணரை நீர் நம்பியது!" என்று கூறிச்சிரித்தான்.

இப்படி சொன்ன மாத்திரத்தில் தெளிந்த விவேகத்திற் சிறந்த சேனாதிபதியாகிய சிலையாசிரியருடைய சிந்தை கொந்து வருந்தி, செவ்வரக்கைப்போல் இரு கண்களுஞ் சிவந்து, தேகம் படபடப்புடன் துடிதுடிக்க எழுந்து, மேக முழக்கமும் வேரோக இரைந்து கொதிப்பேறி, அங்கதேசத் தலைவனைப் பார்த்து ஆக்ரமித்துச் சீறி, "கர்ணா! நீ உத்தம க்ஷத்திரியன்தான்! நீ வெற்றி பெற்றது வேணதுண்டு. அதுநிற்க, இந்த மன்னவன் பொருட்டில் அதிக பக்ஷத்துடன் கருணை தப்பாதவனுக்குக் கலந்து பேசவந்த நீயானாலும், அல்லது இன்னமும் வீரகண்டாமணியும், வீரபட்டமுங்கட்டிய விறல் வேந்தர்களில் யாவரானாலும், அத் தருமனுக் கெதிர் நின்று சண்டைகொடுத்து நிலைநின்ற வெற்றி பெறக் கூடாதோ? நீயல்ல, உன்னைப் படைத்த பிர்மாவல்ல, அப்பிர்மாவைப் படைத்த நாராயண

னல்ல, அங்காராயணனைப் படைத்த காரிபாகனல்ல. இன்னு மெப் பேர்ப்பட்டபேர் இம்முச்சகத்தினு முளரோ அப்பேர்ப்பட்டவர் களில் எவனுவதாகட்டும் அத் தருமனைக் கையினுற் றீண்டவுஞ் சவுக் கியப்படுமோ? நீ எப்போதும் இருந்த இடத்திலிருந்து கொண்டு சட் டமுந் திட்டமும் பேசத்தெரிந்தவனே யல்லது சமர்முகத்தில் நின்று சாதிக்கத் தக்கவனல்லன். உன்னுடு வீண்பேச்சென்ன?" என்று கூறித் துரியோதனனைப் பார்த்து " ஓ துரியோதன மகா ராஜனே ! போனது போகட்டும்! இப்போது ஒன்றும் முழுகிப் போகவில்லை. இன்றைக்கு நான் தப்பிப்போனது போக, நாளை யுத்தத்தில் உன் சபையிலிருக்கும் உனக்குரிய திறவான் களைப் போகச்சொல்லி, தங்கள் வில்லாண்மையினுல் வேந்த னுகிய தருமராசனைத் துன்புறும் படியாக ஜயித்துப் பிடித் துக்கொண்டு வரச்செய். . அப்படி ஜயம்பெற்று லொழியத் திரும்பிப் புறமுதுகிட்டு வாடி யோடிப் பதுங்கி வராத வீரர்க்கு விடை கொடுத்தனுப்பு. ஓ வெற்றியையுடைய வேந்தனே! பாண் டவரிடத்தில் நான் பட்சம்வைத் திருக்கிறே னென்று கோரமாகிய இந்த யுத்தமுகத்தில் ஒரு வார்த்தை சொன்னுய். அது உனக்கு நன் மையல்ல. (வஞ்சகம் பேசேல்) என்னும் நீதியை மறந்து பேசு கிறுய். மன்னவரெதிரில் (வாது முற்கூறேல்) என்னும் வாக்கியத் தை நான் துறந்து பேசுகிறேன். மனஸ்தாபம் வேண்டாம் ! மேலும், கெலித்தவரிற் பாதியென்னுஞ் சில துஷ்டருடைய வார்த் தைகளைப்போல் நான் பேசமாட்டேன். சேனுதிபதிப் பட்டங்கட்டிய காலத்தில் நீ யென்னைக் கேட்டபோது தருமராஜனைப் பிடிக்க என்ன லாகாது. இன்னெரு ஜென்மத்தி லென்னவோ? இந்தச்சென்மத்திற் கூடாதென்று ஆதியில் ஸ்திரமாயுனக்கு நான் சொல்லியிருக்க நீயிப் படி பேசத்தகாது. மேலும் அத்தருமராஜன் பக்கத்தில் பீமார்ச்சு னரைச் சேரவொட்டாமல் அகலவைப்பா ருண்டானுல், அப்போது ஒரு கை பார்க்கலாமென்றுஞ் சொன்னேன். அதற்குச் சம்மதித்துச் சபதங்கூறிப் புறப்பட்ட திரிகர்த்தர்களுஞ் சஞ்சகத்தகர்களும் பட்ட பாடுங் கெட்ட கேடுந் திரிலோகங்களு மறிந்து விட்டன! அவருள் ஏககாலத்தில் பதினெண்ணுயிரம் வெண்கலரதக்காரர் கங்கணங் கட்டி மாண்டார்கள். திரிலோக சக்ரேச்வரனுகிய தேவராஜனுக்குச் சகாயஞ்செய்த பகதத்தனே போய்த் தகதத்தவென பீமனுடை தர்த்துத்தாலுந்தானேறிவந்தசுப்ரதீபயானையுமாக தகதகத்தவெனக் கூத்தாடி மாண்டான். இப்படி யெல்லாமிருக்க, என் வீணை வார்த்

தையாடுகிறாய்?'! என்று மிகவும் கோபமாகச் சொல்லிப் பின்னும் அவனை நோக்கி " அரவகேதனனே! எனக்கு மாத்திரம் வில்லாண்மை யுண்டென்று என்னைப்போற் சபதங் கூறிச் சொல்லாமல், தங்களிஷ்டப்படி சென்று போர் முகத்தில் வென்று தங்கள் புகழ் பெற்ற புயவலிமையால் தருமநந்தனனைக் கைப்பிடியாகப் பிடித்துக் கொண்டுவரத்தக்க வல்லபமுடையபோர்களிருந்தால் புறப்படலாம்? இதற்கு யாதொரு தடையுமில்லை. அப்படிப்பட்டவர் இவ்வுலகத்திற்கு மாத்திரமல்ல, ஈரேழு பதினான்கு லோகத்திற்கும் அவர்களே வீரர். அவர்களே சூரர்! அநேக வரிசை முதலிய பாக்கியங்களும் அவர்களுக்கேயுண்டாம்.

" அரசனே! இன்னுங் கேள். எனக்கு மிஞ்சினபே ரொருவருமில்லை. நானே வில்லாளியாகிய வல்லவனென்று சொல்லாகின்ற வீரனெவனோ அவன் வெவ்விய போர் புரியுமிடத்தில் வந்தால் ஓரணுவுக்கு முதலாமற் புறம்பிலோடித் தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளுவானே யன்றிப் போர் புரியப்போகிறதில்லை. காய்ந்த ஓலை கலகல வென்று சப்திக்கும். பச்சோலை அப்படிச் சப்திக்காது. வெண்கலத்தில் ஓசை மிகுந்து காட்டும். பொன்கலம் ஓசைப்படாது. இதுபோல் வம்பாகிய பேச்சுகளை வம்பர் பேசுவார்களல்லது நம்பத் தகுந்த பேச்சைப் பேசார்கள். அதைக் குறித்து நான் பேசுவதில் வருகிற லாபமென்ன? அந்தத் தர்மராஜனுடைய திறம் யாருக்குத் தெரியும்? அக்கரைக் கிக்கிரை பச்சென் றிருக்குதென்று திரிகின்ற பசுவைப்போல் வயிறு வளர்க்க, நாவு ருசி பார்த்துக் கொண்டு திரிபவர்களுக்கோ தெரியும்? (கூடிப்பார் கூட்டுப்பயிரிட்டுப்பார்) என்றுரைக்கும் பழமொழி போல், அந்த முரசக் கொடியினையுடைய முதல்வன் கைக்கொண்ட வில்லாண்மையையும், அவன் தொடுக்கும் அம்பின் திறத்தையும், இராமனுடைய வில்லுக்கும் பாணத்திற்கும் மேற்பட்டதாகச்சொல்ல வேண்டுமேயன்றி, அதற்கு ஒப்பாகவுஞ் சொல்லப்படாது. அந்த ராமமூர்த்தியின் வில்லுக்கும் பாணத்திற்கும் ஒப்பாகச்சொல்லுவோ மானால், அதிகப் பாவம்வந்து சம்பவிக்குமே யல்லது வேறில்லை. பார்த்திபனே? அப்போர்ப்பட்ட கைக்காரனாகிய தர்மராஜனை லேசாக நினைக்கக் கூடுமோ? அந்தத் தர்மராஜனுடைய பாணப் பிரயோகத்தை நூறு விதமாகச் சொல்ல வேண்டியதில்லை. ஒரு விதமாகிய சூழ்ச்சியாய் உனது மனத்திற்குப் புலப்படும்படி சொல்லுகிறேன் கேள்—

"இறைவனே! நான்போய்த் தருமராஜனை மடக்கிக் கொண்டு யுத்தஞ் செய்யும்போது அவன் சில அஸ்திரங்களை விடுத்தான். அந்த அஸ்திரங்கள் எப்படி வந்தன வென்றால் கொத்துக் கொத்தாகவும், பத்துப் பத்தாகவும், குத்துக் குத்தாகவும், வரிசை வரிசையாகவும், கும்பு கும்பாகவும், கூட்டங் கூட்டமாகவும், கிரை கிரையாகவும், நெருக்க நெருக்கமாகவும், கறைகுறை தெரியாமல், கொத்து மாலை, கோத்தமாலை, தொடுத்தமாலை, தொத்தமாலை, முதலிய மாலைகளைப்போலப் பல வரிசையாய்ப் பலம்பெற்று உரங்கொண்டு இறகுகளை யுடைத்தாய்க் குணத்தொனி கொண்ட வில்நாணியை உந்தி விடுக்கவந்து, ஒன்றை டொன்றைக்க நான்விடும் பாணங்களின் முனையைக்கவ்விப் பொறிமுகம்புகைமுக முதலாகிய பலமுகங்களைக் காட்டிப் போராடின. இன்றையதினம் என்னுடு யுத்தஞ்செய்து சாதித்த திறத்தை நானென்னவென்று சொல்லுவேன்? (சொன்னால் துக்கம் அழுதால் வெட்கம்) என்னுந் தன்மையிலும் பேசாமலிருக்கிறேன். ஆகிலும் ஒரு வாக்கியங் கேள்! நான் விட்ட கணைகளெல்லாம் ஒரு விதைக்கு ஒரு முதல் முளைக்கு மென்பதைப்போல் ஒன்றுக் கொன்றுகமே இருந்தன. அத்தத் தர்ம சொரூபிவிட்ட பாணங்களானவை ஒரு விதைக்கு ஒரு முதல் முளைத்துப் பலவிதமாக விளைந்து ஒன்றுக்குப் பதினாயிர மென்பது போல் அபரிமிதமாகப் பெருகி வந்தன. ஆதலால் நான்றெடுத்த வாளி விதையாகவும், அவன் றெடுத்த வாளி விளைவாகவு மிருப்ப தெனக் கூறலாயிற்று.

'வன்மைக்கு வயவீமன் வின்மைக்கு முகிலூர்தி மகனன்றிவே
றின்மைக்கு மாவிந்தை கிரிகன்னி கரியென்ப ரெம்மன்னரும்
வின்மைக்கும் வன்மைக்கு மிளையோரை யினையாரை மிகவெண்ணலாந்
தன்மைக்கு நிலையான தருமற்கு நிகர்யார் தனித் தெண்ணவே'

"கேள் நற்குல கோமானே! நயவலிமைக்கு பீமசேன ராஜனென்றும், வில்வலிமைக்கு விஜய ராஜனென்றும், இவர்களுக்கு மேலாகிபபேர் இவ்வுலகத்திலில்லை யென்றும் எல்லா அரசர்களிலுஞ் சொல்லுவார்கள். அப்பேர்ப்பட்ட விற்புயத் திறமைக்கும் வெகு பேரை ஒப்பாகச் சொல்லலாம். ஆனால் சாந்தமும், பொறுமையும். தயையு முடைய தர்மராஜனது நன்னெறி நிலைக்கு நிகராகிய பேர் யோசிக்கு மிடத்தி லெங்குமிராக்கள். ஆதலால் வீணுகக் கூவத்தக்க பேர்கள் தீயிற் குதித்தார்கள். இப்பேர்ப்பட்ட வீணவாய்ப் பேச்சிற் காரியமில்லை. உலகங் குலையப் போர் புரியுந் தருமராஜனுடன்

எதிர்த்து யுத்தம் பண்ணத் தக்கபோர்க ளுண்டாயிருக்கு மானால் அவர்களை காளைமுதல் கடக்கும் யுத்தத்தில் நான் பார்க்க வேண்டும், வஞ்சனை யில்லாமற் புறப்படுங்கள். உப்புச் சப்பு ஒப்புவமை யில் லாமற் பேசும் பேச்சுகளில் என்ன பயன்? இவையெல்லாம் விறுதா வாகிய காரியம்" என்று வெகு நியாயங்களைச் சொல்லி, வெவ்விய சிலைக்குருவானவர் தம்முடைய பாடி வீட்டுக்குப் போனார். கிரீ டாதிபதியாகிய கௌரவகுல முதல்வனும் அங்கதேசாதிபன் முதலிய அரசர்களுக்கு விடைகொடுத் தனுப்பிவிட்டுச் சயனத்திற் குப் போயினான். அப்படியே விடைபெற்றுக் கொண்டு மகததேசாதி பரும், சூரசேசாதிபரும், சஞ்சத்தகரும், திரிகர்த்தரும், பகதத் தனைச் சார்ந்த பார்த்திபரும், காந்தாரத் தலைவனைச் சேர்ந்த காவல ரும், அவரவர் புத்திர மித்திரர் மாண்ட ரணகளத்திற் சென்று, உயிரற்று வீழ்ந்து கிடக்கிற சரீரங்களை யெடுத்துப் பதனம் பண்ணித் தங்கள் தங்கள் பாடி வீடு போய்ச் சேர்ந்தார்கள். துரோணாசாரி யரும், கிருபாசாரியரும், மற்றுமுள்ள பேர்களுஞ் சவரியத்துடன் தாங்கள் பட்ட பாட்டுக்குப் பதிலாகப் பாண்டவச் சேனைகளைப் பாடு படுத்த வேண்டு மென்னும் பவுரிஷமடங்காமல் வெகுநேரங் கண் விழித்திருந்து அப்பால் நித்திரை செய்தார்கள்"—என்று சொல் லிய வைசம்பாயனரை ஜனமேஜய மகாராஜன் பணிந்தெழுந்து, "சுவாமி! அர்ச்சுனனுக்காக நம்பெருமானுகிய ஆதிமூலப் பெருமான் அன்பு வைத்து நடத்தும் பகுதிகளைக் கேட்க இச்சையுண்டா யிருக் கின்றமையால், மேல் நடந்த பதின்மூன்று நாட்போரையுந் திருவாய் மலர்ந்தருள வேண்டும்" என்ன, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

பதின்மூன்றும்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

சங்கை யிலாவகை யமபட ராலயிர் தளர்பொழு தத்தருமே
மங்கையர் சூழ விருந்தழு தள்ள மயக்கினுப் யான்மறவேன்
கங்கையு நான்மறை யுந்துள வுங்கமழ் கழலிணை யுந்திருமா
லங்கையின் மீதொளிர் சங்கமு நேமியு மஞ்சன மேனியுமே.

"ஓ ஆவிதத்தி யெழுத்தரியலர் சீறிய-தாவித்தத்திவரும் பரிமிசை யேறிய அண்ணலே! கேளும்: பன்னிரண்டாநாள் யுத்தத்தில் கிலே பெற்ற வயவீரர்களெல்லாருந் தேவர்களாய் வீரசொர்க்க மடைகின்ற

நிலையைக்கண்டு, நாம் அவர்களுக்கு அமுதம் பகுக்க வேண்டுமே யென்று பூரணமாகிய கலைநிறைந்த சந்திரன் மறைந்து போக, அந்த ராத்திரியாகிய சமுத்திரத்தில் நீலமணிபோல் ஒளி மழுங்கிப்போன சூரியனைவன் நெருங்கிப் பிடித்திருந்த இருளை நீக்கிக்கொண்டு, மாணிக்கவடம் போன்ற கதிராயிரத்தையும் மலியக் கர்ட்டிவார் கடல சூழ்ந்த கீட்டிசையி லுதயமாயினன். உடனே அன்றிராத்திரி முழுவதும் விசனங் கொண்டிருந்த நாகக்கொடியோனுகிய நாராதிபன் பதின்மூன்றுநாட் காலமே நித்தியவிதி முதலாகிய கடன்களை முடித்துக்கொண்டு, தனது படைகள் பிரயாண மாகும்படி பேரிகை முழக்கி வைத்தான். அப்போதே அரசனுடைய ஏவலின்படி அளவிறந்த சேனு சைன்யங்களும், படைத்தலைவர்களும், மகுடமன்னவர்களும், அர்ச்சுனனைத் தகைத்துப் போர் புரியும்படியாய்த் திரண்டு வந்தார்கள். அந்த வேளையில் நேற்றையப் போரில் நெஞ்சழிந்து வருந்திய விற்குருவானவர் நடந்துபோன முன்னை நாளைப்பார்க்கிலும் பின்னை நாளாகிய இன்றையதினம் அதிவேகமுங் கடுங்கோபமு முடையவராய், பஞ்சவரில் முதல்வனுகிய தருமராஜனை எப்படியுங் கைப்பற்ற வேண்டுமென்று மனத்துணிவு கொண்டவராகி, சிலைக் கணமனைத்துஞ் செங்கையிற்றாங்கிய தூரியோதன மகாராஜன் குமாரனுகிய இலக்கண குமாரனும், அத்தூரியோதனனுடைய இச்சாசத்தியின் வடிவமாயுள்ள துச்சாதனன் முதலாகிய தம்பிமார்களும், கோபக்கண்களிலிருந்து புலிங்கஜாலம் புறப்படச் சத்துருக்களைக் கலங்கச் செய்புங் கலிங்கதேசாதிபரும், வெற்றி வேலையும் வீரவில்லையுந் தாங்கி ஜெயப் பிரதாபங் கொண்ட சிந்துதேசத் தலைவரும், நயத்திரதனுஞ் சொல்லையுடைய ஜயத்திரதனும், இன்னும் பற்பலராகிய மற்புயக்காவலரும் முதன்மையாய்ப் போரணியில் நின்று, பூமியிலிருந்து பொடி யெழுந்து ஆகாயத்தை மறைக்கும்படியாய்ப் போர் பொரக் கருதினர்கள்.

அந்தச் சமயத்தில் சேனுதிபதியாகிய துரோணுசாரியர் பத்மவியூகங் கட்டவேண்டுமென்றெண்ணி, யாவருங் கொண்டாடும்படியாகிய கர்ணன், அலம்பன் சல்லியன், அசுவத்தாமன், அடலாயிரவாகு, அகம்பன் முதலாகிய போர்களைத் தாமரைப் புட்பத்திற்கு நடுவிலிருக்குங் கருணிகையாயமைத்து, திசாதிசைகளிலுமிருந்து வந்த பதினெண்பாஷை மன்னவர்களையும், கிருபாச்சாரி முதலாகிய வயவீரர்களையும், மேற்சொல்லிய கருணிகையின் சுற்றிலுமிருக்கும் அக

விதழாய் நிறுத்திப் போர்த் திறத்தில், வல்லவராகிய சுதாயு சதாயு, நயுதாயு முதலிய மகாரதர்களே யெல்லாம் புறத்திலிருக்கும் புறவித ழாய்ப் பொருத்தி, ஒவ்வொரு இதழினுடைய உருவத்தைப்போல யானை யொருவரிசை, தேர் ஒரு வரிசை, குதிரை யொரு வரிசை, பதாதி யொருவரிசை இந்தப்படி நால்வகைச் சேனை களா லமைத்து, ஒவ்வொரு இதழுக்கு மேற்கூறிய அதிரத மகாரத சமரதர் முதலிய வீரர்களைக் காரியத்தலைவராக நிறுத்தி, இவ்வுறுப்புக ளனைத்து மமைந்த ஆயிரமிதழையுடைய தாம ரைமலர் போற் செய்து, அளவில்லாத தேர்கள், யானைகள், குதிரை கள், காலாட்கள் இவைகளே யெல்லாம் பத்ம வியூகங் கட்டுவதற்கு ஏற்படுத்திக் காட்டி யிருக்கிற சாஸ்திரத்தில் எப்படிச் சொல்லி யிருக்கின்றதோ அப்பிரகாரம் இடைக்கிடை சேர்த்து, வெல்லுந் திறத்திற் செல்லுதற்குரிய உயிர்ச்சேவக வீரருடன் பலம்பொருந்திய நாயகனுகிய துரியோதன மகாராஜனை நடுமத்தியி லிருக்கும் தாம மரைப் பொகுட்டிலிருத்தி, வாசனைதிணிந்த கற்பகமாலை யணிந்த தேவர்களெல்லாருந் தியங்கித் திடுக்கிடும்படியாய்ப் பத்மவியூகங் கட்டி, அந்த வியூகத்தைச் சுற்றிலும் ஒரு பிதவிசித்திர மாகிய சூசி காவியூகமொன்று ஏற்படுத்தினன். அதாவது தவாரமும் கீளமும் கூர்மையுமுடைய ஊசியைப் போன்றது. அப்படிப்பட்ட வியூகத்தை நால்வகைச் சேனைகளாலும் அமைத்து, இருகரங்களிலும் ஆயுதங் களைக் கொண்டு உலவாகின்ற மற்றைச்சேனை வீரர்களே யெல்லாம் அந்தச் சூசிகா வியூகத்தைச் சுற்றிலும் மதிற்சுவர்போல் விருத்த மாக்கிச் சக்ரவட்ட வியூகமியற்றி, பிரணவாக்ஷர வேத சாஸ்திரங் கள் யாவும் பூரணமாகத் தேர்ந்த சிலையரசரென்னுஞ் சேனாதிபதியா னவர் இராக்ஷசர்களுக்கு மத்தியில் சுக்ராசாரி நிற்கும் தன்மை போல் இரதமேறி நின்றார்.

அப்பால் பன்னிரண்டாம் போரில் வெற்றிவாகை யணிந்த தருமராஜனனவர் பதின்மூன்றுநாட் காலையிலெழுந்து காலைக்கடனை முடித்துக் கொண்டு, சேனைகளெழுந்து பிரயாணப் படும்படியாகிய பேரிகையை முழக்கிவைத்து, தாம் தமது தம்பிமார்களோடுஞ் சர்வாயுதபாணியராகி யுத்தகோலங் கொண்டார். அப்போதவர் பன் னிரண்டாநாள் யுத்தமுடிவில் துரியோதன ராஜனனவன் இராத்திரி முழுவதும் விசனப்பட்டதும், பாண்டவரிடத்திற் பக்ஷமாயிருக்கிறா யென்று துரோணாசாரியரை கோபித்துக்கொண்டதும், அதன்

பேரில் இன்றைய யுத்தத்தில் எப்படியுந் தருமனைவென்று தருகின்றேமென்று சஞ்சத்தகர் முதலிய பேருந் துரோணரும் நெஞ்சில் நினைத் திருக்கின்றதுந் தூதராலுணர்ந்து, தனஞ்செயனையுஞ் சாமளவர்ணனுகிய கிருஷ்ணனையும் பார்த்து, "ஓ மித்திரர்களே! துரியோதனர் முதலாயினோர் நேற்று ராத்திரி இப்போர்ப்பட்ட சங்கதிகளெல்லாம்பேசிக் கெட்டிசெய்து வந்திருக்கின்றார்களாம்" என்று சொல்லிக் கோடையிடியுடன் கலந்தெழுந்த கொடுங் கதிரோனென் றுரைக்கும்படி கடுங்கோபமெழத் தமது சேனை சைனியங்களை கடத்திக்கொண்டு போர்க் களத்திற்கு வந்தார். அப் போது பாண்டவச் சேனாதிபதியாகிய திர்ஷ்டத்தூய்மனனவன் அஷ்டதிக்குகளு மஞ்ச வெளிப்பட்டு, அதிரதர், மகரதர், ஸமரதர், அர்த்தரதர் என்னும் நால்வகைத் தேரினரும், கிரிசரம், வனசரர், நதிசரம் என்னும் மூவகை யானை வீரர்களும், காந்தருவ தேசத் தாரு மதிக்கும்படியாகிய குதிரைத் தலைவரும், பதினெண் பூமியி லுள்ள பார்த்திபரும், மற்றுமுள்ள பதாதிகளும் ஒன்றுகச் சேர்ந்து எட்டுத்திக்குந் திக்குமுக்காடிப் போகும்படியாய் அளவிட்டுச் சொல்லப்படாமற் கடற்பெருக்கம்போல் அவ்வரசர்களும் அளவற்ற ஆயுதங்களுடன் பரவிவர, அச்சேனைகளை யெல்லாம் அச்சேனாதிபதி மகாவியூகமாக நிறுத்த, அதுகண்ட அறக்குமாரனுகிய குருகுல பூபதியும், திருவிக்கிரமனுகிய நிருமாலும், நமது சேனாதிபதி கட்டிய மகாவியூகமாகிய மீனனது ஒருதரம் புரண்டடிக்குமாகில் எதிரி கட்டிய தாமரை போன்ற பத்மவியூகம் இதழிதழாய்ப் பெயர்ந்து அலக்கழிந்து போய்விடு மாதலால் இதுவரையிலுங் கட்டியவியூகம் இதற் கொப்பல்லவென்று மகிழ்ந்து சந்தோஷிக்க, அந்தவேளையில் சேனாதிபதி துருபதேய குமாரனுகிய திர்ஷ்டத்தூய்மன் இரதத் தைச் செலுத்திக்கொண்டு வந்து நின்றான். தேவதுந்துமி முதலா கிய வாத்தியங்க ளெல்லாந் திசாதிசைகளும் போர்த்தன.

இவ்விதமாக இருபடைகளும் பொருந்திச் சமுத்திரம் புரள்வ தூபோ லெதிரெதிர் மலையும்படியா யிருந்தன. அவ்வேளையிற் சந்திர வட்ட முத்துக்குடைநீழலி லிருக்குந் தராபதியாகிய துரியோதனன் "ஏன் இன்னுங் காலதாமதஞ் செய்கிறீர்க" ளென்று சொல்லிச் சண்டை செய்ய ஆக்யாபிக்க, அப்பொழுதே நேற்றைய விதம்போ லேற்பட்டு யானை, தேர், முதலாகிய நால்வகைச் சேனைகளுடன் சஞ்சத்தகரில் மடிந்தவர் போக மிகுந்திருந்தவர் வந்து அர்ச்சுன

னைப் பார்த்து, "ஆ! ஆ! அர்ச்சுனனு! நாங்கள் நேற்றையதினம்போ லல்ல! இன்றைக்கு உன்னை வென்று ஜெயங்கொண்டு போகும்படி வந்திருக்கின்றோம். உனக்குத் தைரியமும் வீரமு மிருக்குமாகில் ஓடாமல் ஒளியாமற் புறப்படலாம்" என்று அறைகூவி அழைத்தார் கள். அவர்களுடைய வீரவார்த்தையைக் கேட்ட அர்ச்சுனனுக்கும் கோபம் பிறந்து இப்படி முன்பின் தோன்றுமல் வீர வசனஞ் சொல்லிய அவர்கள்மேபிரிற் சண்டை செய்யச் சென்றான்.

இந்தப்பிரகாரம் போர் புரியும்படியாய் மாமன் செலுத்துந் தேரில்வந்த அர்ச்சுனன் பேரில், இந்திரதநுவுட னெழுந்த காளமேகம் போல்வந்து வளைந்து தாரை தாரையாகப் பாண வருஷங் களைப் பொழிந்து போராடிய தேராள்களையும், வில்லாட்களையும் யானைவீரர்களையும், குதிரை வீரர்களையும், அவ்வர்ச்சுனன்கண்டு தனது வீரகாண்டீபம் வளைத்து மல்லிகைக் கிளைகள் மலர்ந்ததைப் போல் வாயுக்கணை, வருணக்கணை, முதலிய பாணங்களை விடுத்து, வந்தெதிர்த்த சஞ்சத்தகருடைய மெய்யும் இருகையுந் துளைத் துருவும்படியாய்ச் செய்துவாடைக்காற்றுடன் கூடிய மழைத்தாரை யிலகப்பட்ட சருகைப்போல் மதிகலங்கிப் பறக்கும்படியாய் மாட்டி னான். அந்த மாட்டலினால் துரியோதனனுடைய படையுடைந்து யாதொரு செய்கையில்லாமலிரைத் தேடினார்கள். இப்படியாக வாடியோடிய பேர்களிற் கிடிதொடுத்த கொடுங்கணைகளினால் உயிரொழிந்து பட்டவ ரெத்தனையாயிரம்? உயிரொழியானின்று முதுகிட்டவ ரெத்தனையாயிரம்? அர்ச்சுன ராஜனே! உமக்கபய மென்று யுத்தத்தை விட்டவ ரெத்தனை யாயிரம்? தங்களுடைய குலத்தின் மேம்பாடும், வீரத்திறமும், மிகுந்த கீர்த்தியுங் கெட்டவ ரெத்தனை யாயிரம்? பின்னு மளவற்றபேர் துரியோதனனைக்கூவி 'ஐயோ! மூலையிலிருந்த எங்களை முனையுங்கள் முனையுங்களென் றேவினையே! நாங்கள் பற்குனனுற் படும்பாடு பட்டப்பகல்போற் றெரியுதே! விஜயன் பாணங்களினால் உடல் எரியுதே!' என்று மூறை யிடுவோர் எத்தனையாயிர மெனச் சொல்லுவேன்! ஓ அரசனே! ஒவ்வொருவருடைய உடம்பிற் செங்குவளை போன்ற பாணங்கள் ஆயிர மாயிரமாகத் தைத்துத் துளைப்பதினால், இரத்த வருஷங் களைப் பொழியு மெத்தையொத்தார் சிலபேர். அவ்விரத்தங் களினால் தேகம் பாதிமறைபடவே மன்மதனையெரித்த மஹாதேவ ருடைய வடிவம்போ லிருந்தார் பலபேர். இப்படி அவர்களடைந்த கேட்டை என்னாற் சொல்லத் தரமல்ல.

திர்ஷ்டத்தூய்மன் துரோணசாரியரால் முறிபட் டோடுதல்

இவ்விதமாக இந்திரகுமாரனுகிய பற்குனன் மூன்று யோசனை தூரத்திற்கப்பாற் சண்டைசெய்து கொண்டிருக்க, இவ்விடத்தில் அணிவகுத்துச் சந்திர சூரியர் மண்டலம் வரைக்குங் குடை, கொடி, படை முதலியனதாவும்படி யிருந்த இருவகைக் சேனைகளுஞ் சேனாதிபதிகளின் உத்தரவின்பேரிற் கை கலந்து போர்புரியுங் காலையில், சேனாதிபதியாகிய திர்ஷ்டத்தூய்மன் நாலுசக்கரம் பூட்டிய ரதத்தை நடத்திக் கொண்டுபோய்த் துரோணசாரியரை எதிர்த்து, தனதுவரி பொருந்திய மணியணிந்த வில்லைவளைத்து அஸ்திரப்பிரயோகஞ் செய்தான். அப்போது தநுர்வேத முணர்ந்த துரோணசாரியர் தமது வில்லை எடுத்து நாணேற்றி உக்ரமாகிய அக்கினியாஸ்திரத்தைத் தொடுத்து அவசரமில்லாமல் விடுத்தார். அப்படிவிட்ட அக்கினியாஸ்திரஞ் சிவன் விடுத்த நாராயணஸ்திரம்போல் நிமிடிகரித்துக்கொண்டு வந்து எதிரி விடுத்த பாணத்தில் மோதிற்று. பின்பு ஒன்றொடொன்று எதிர்த்துப் பகைத்து, அவன் தொடுத்த கணையும் இவர் விடுத்த கணையுங் கூர்மை கொண்ட முனையோடு முனை கொத்தித் தத்தி முனையற்று விழும் போது, வெற்றி பெற்ற உத்தமராகிய பரிசுத்தரென்னுந் துரோணரானவர் சித்தியாகிய சில அஸ்திரங்களை விடுத்துத் திர்ஷ்டத்தூய்மனுடைய வின்னணியை யறுத்தார். உடனே இருவரும் நெருப்பிடியுரீடியுஞ் சேர்ந்த இரண்டு மேகங்கள் நெருங்கி எதிர்த்தாற்போல் தங்கள் தங்களுடைய தேரை எதிருக்கெதிர் விடுத்து, சக்கரங்களுடன் சக்கரங்கள் மூஷ்கரமாகத் தாக்க மகா உக்ரத்துடன் விக்ரமித்து, காற்றடியைப்போற் கரகரவென்று இடம்வலமாகச் சுழன்று செல்லச் செலுத்தி நெடுநேரம் வரைக்கும் அமர் புரிந்தபோது, கௌரவசேனை நாயகர் பாண்டவச்சேனை நாயகனுடைய கவசத்தையும் துவஜத்தையும் அழித்துத் தேகத்தையுந் துளைத்துத் தேரை நேருக்கு நேராக முட்ட விட்டனர். கேட்டீரோ ஜனமேஜயமகாராஜனே! ஆதிவசிஷ்டரென்னும் அருமுனிக் கொப்பாகிய பீஷ்மரும், அர்ச்சுனனும், துரோணசாரியாரும், ஓரேயினமாக யுத்தஞ் செய்யத் தக்கவர்கள். அப்போர்ப் பட்டவர்கள் செய்துவந்த யுத்தத்திற்கீடாக முற்காலத்திலும் இக்காலத்திலும் யுத்தஞ் செய்யத் தக்கபோர்கள் எக்காலத்திலுங் கொஞ்சமேனு மிரார்.

இவர்கள் மூவரும் ஒரே கைக்காரர்கள். ஆகையால் போனபீஷ்மர் போக, இருக்கும் இவர்களுடனெதிர்த்து எவர்கள் முன்னுக்கு வருபவர்கள்? இதுவுமல்லாமற் பூர்வத்தில் ஒப்பற்ற முனிவராகிய அகஸ்தியர் உருத்திர ஜபத்தால் ஏழு சமுத்திரத்தையும் உள்ளங் கையி லடக்கி உண்டு விட்டாரென்று உலகத்தோர் கூறுவார்கள். இவர்கள் நினைத்தால் ஒருகணையால் உலகிலுள்ள நீரெல்லாம் உறிஞ்சச் செய்வார்கள். மேலும் இந்தத் துரோணாசாரிய ரென்னு முனிவரானவர் தமக்குச் சத்துருவாகிய துருபதேய குமாரனையும் வென்று விட்டார். ஆதலால் முனீச்வரர்களுக்கு தபம், ஜபம், முதலாகிய மகத்துவ மேலாயிருப்பதினால், அவர்களைச் சாப முதலிய பகைகள் ஒன்றுஞ் செய்யமாட்டா. முனீச்வரர்களுட னெதிர்த்துப் போர் புரிந்து வெல்லும் வல்லமை யுடையபேர்கள் தொல்லுலகிலில்லை. ஆதலால் இங்கே பாண்டவச் சேனாதிபதி இவருட னெதிர்த்து ஒருக்காலும் வெல்லமாட்டோ மென்று தன் னுடைய தேரைத் திருப்பிக்கொண்டு, மானபிமான முதலிய வீரத்தையுந் தீரத்தையும் விட்டு, வேறொரு செய்கையு மில்லாமற் புறமிட்டோடினன். இப்படி பாண்டவர்களுக்குத் தந்திர காத னாகிய பாஞ்சால குமாரன் போரழிந்து புறமுதுகிட்டு ஓடும்படி யானதை இருவகைச்சேனை மன்னவருங் கண்டு கையைக்கொட்டிக் கலீரென நகைத்து, வண்மையில் மிகுந்த துரோணாசாரியருடைய ஆண்மையையும் விற்றிறமையையும் வெகுவாய்க் கொண்டாடித் துதித்தார்கள்.

தருமராஜன் அபிமன்னனை யுத்தத்திற்குச் செல்லும்படி ஆசீர்வதித்தல்

அப்போது தனுர்வேதியன் விட்ட சரங்களினுற் சரீரம் கொந்து தைரியங் குன்றிப்பயந்து ஓடிவராநின்ற திர்ஷ்டத்தூய்மனுகிய சேனு திபதியைப் புட்பாகந் திணித்த மதுமாலையணிந்த மார்பினையுடைய தர்மராஜன் கண்டு, கட்டியணைத்துக் கலக்கமகற்றி "ஓ எனது மைத்து னனுகிய காவலனே! ஓ முனைமுகத்திற் கதிகாரியாகிய சேனுதிபதியே! நிருபர் சிகாமணியாகிய நீயே நீதியும், நிலையும் வீரமுங்கவறி ஓடிவ ருவாயானுல், பின்னை யார்நின்று யுத்தம்பண்ணும்படியானவர்கள்? ஐயோ! பாவம்! மெத்தவும் போர்புரிந்து வருந்தி இளைத்தனை போலும்! சற்றுநேரம் இவணிருந்து தேகவருத்த மாற்றிக் கொள்ளக் கடவை!" என்று தயவாக உபசாரஞ்சொல்லி, நிறுத்தி, தன்படை

கள் தத்தளிக்குந் தன்மைதன்னை யுறுத்த மனக்கொதிப்புடனே தமக்கு நேரில் மயில்வாகனனைப்போல் நின்ற தனஞ்செயன் குமாரனுகிய அபிமன்னுவைப் பொன்னெளிபோற் பிரகாசிக்கும் அருள் வடிவாகிய அத்தருமராஜன் கண்டு, பூரிப்புடன் மகிழ்ந்து "அடா குழந்தாய்! இங்குவாடா என்னப்பனே!" என்றழைத்து மகிழ்ந்து, ஆசையுடன் புகழ்ந்து "அப்பா அபிமன்னு இந்த யுத்தத்தில் உனக் கெதிர்நிற்பவ ரொருவருமில்லை. நீ மூனேந்தெதிர்த்துப் போர்புரிந்தா லொழிய துரோணுசாரியர் கட்டியிருக்கும் பத்மவியூகத்தின் பலங் குறையாது. மேலும் நேற்றையதினம் என்னிடத்திற் சண்டை செய்து இளைத்து வெக்கிட்டோடிய விற்குருவானவர் இன்றைய தினம் என்னைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டு போகவேண்டு மென்று கல்ல பலவான்களாகிய அரசர்களை யெல்லாஞ் சேர்த்துச் சக்ரவியூகமாக வகுத்து மிகுந்த சண்டை செய்வதற்கு என்னெதிர் வந்து நிற்கின்றார். ஆகையினுல் அவராலேற்படுத்திய பத்மவியூகம், சூசிகாவியூகம், சக்ரவியூகம் இந்த மூன்று வியூகத்தையும் உடைத்து காசப்படுத்தத் தக்கபேர்கள் உன்றந்தையாகிய அர்ச்சுனராஜனொரு வனும், உன்பெரிய தந்தையாகிய பீமசேனனொருவனும், குழந்தை யாகிய நீ யொருவனுமாம். உங்கள் மூவராலும் ஒழிய வேண்டியதே யல்லது, விற்பிடித்து யுத்தஞ்செய்து சேதித்து வெல்லத்தக்க வல்ல வர்கள் பின்னேவெறொருவருமில்லை! அடா கல்வித்திறங் கொண்ட என் காதலனே! உன் மாமனுகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் புயங்கள் பூரிக்கவும், உன் தந்தையாகிய அர்ச்சுனனுடைய மனங்களித்து முகமலர்ந்து தோள்கள் பூரிக்கவும், உன்பெரிய தகப்பனுகிய பீமசே னனுடைய மெய்புளகாங்கித முறவும், வெல்லுகிறேனென்று சபதங் கூறிக் கொல்லும்படியாகிய உன்சிறிய தந்தையரிருவருஞ் சிந்தை மகிழவும், திசாதிசையிலிருந்துவந்த காவலர் யாவருந் தங்களைத் தாங்கள் மறந்து உன் தாளாண்மையைப் புகழவும், சத்துருக்களு டைய கூட்டங்களெல்லாம் வாட்ட மடைந்து வாணுளிகறவும், என்னி ருகண் கண்டு களிக்கவும், நீ வெற்றி பெறவேண்டு மென்று விரும்பி னேன்! ஓ அரும்பை விரித்துச் சுரும்பு தேனருந்தும் மலர்மாலை யணிந்த தோளினையுடைய மதனசிங்காரனே! உசித ஓங்காரத் தோன்றலே!" என்றார்.

அந்த வார்த்தை அபிலேஷஞ் செவ்வேளுக் கொப்பாகிய அபி மன்னன் செவியில் இந்திரலோகத் தமுதுபோல் வந்து விழு முன் னமே, வாட்படை, விற்படை, வேற்படை, கதைப்படை முதலிய

யாவுங்கற்ற சித்தசனுக் கொப்பாகிய உத்தமகுணமைந்தன் மகிழ்ந்து, பெரிய தந்தையைப்பணிந்து, "எந்தையே! பகைவர் கூட்டமாகிய படைகளெல்லாம் இடியிற் பொடிபடும் பாம்பைப்போலடித்து முடித்துகொடிப்போதிற் கெடிஸ்தலாதிபதியாகிய துரியோதனன் இடிந்து பொடிந்து போம்படி வெற்றி கொண்டு வெற்றிமாலை தரிக்கிறேன். தேவரீர் சீக்கிரத்தில் விடை கொடுத்தருளும்" என்று இந்திரனுக்குப் பேரனுகிய சுந்தரன் பெரியதந்தையின் சந்திர பிம்பமுகத்தைப் பார்த்து, இருகரத்தையுங் குவித்து, இரண்டுமலை திரண்டதைப் போன்ற புயம்பூமியிற் பொருந்த வணங்க, அடக்க ஒடுக்கத்துடன் வணங்கி வாய்புதைத்து நின்றான். கீர்த்திப் பிரதாபனுகிய அந்தப் புத்திரனைப் பார்த்து "என்னப்பா! கதாபாணியாகிய பீமசேனன் உனக்குப் படைத் துணையாகி அமர்புரிந்து முன்னே நடக்க, நீ பின்னே தொடர்ந்து, சக்ரவியூக முதலாகிய வியூகங்களை யுடைப் பதற்கு முன்னே திடசாமர்த்தியமுள்ள தீர வீர மன்னர்களுடன் இதோ உன் பின்னுக நான் வருகிறேன். நீ முன்னதாகச் சென்று முதலிற் சக்ரவியூக வட்டவியூகத்தைச் சேதிக்கக் கடவை" யென்று மேக முழக்கம் போலார்த்து, "என் கண்மணியே! என்னை யிறுகக் கட்டித் தழுவடா! என் தவப்பேறே" யென்று தானுந்தழுவி மார்புற வணைத்து, கண்ணிமை கொட்டாமற் கால்முதற் சிரசுவரைக்குமப் புத்திரனைப் பார்த்து, தாமதமில்லாமல் க்ஷணப்பொழுதிற் செல்லென்றும், வலிமை பற்றிய யுத்தத்திற்சென்று நமது பகைவரைக் கொல்லென்றும் அப்படியே கொன்று என்புயத்திற் குடிகொண்ட கொற்றவையாகிய வீரலட்சுமியி னருளால் விஜயத்துடன் வெல்லென்றும் வாழ்த்தி விடை கொடுத்தனர். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இவ்வுலகத்தினர் சாதாரணமாய்த் தம்மினத்தினருளொருவன் யாத்திரை முதலிய யாதுகாரணத்தாலேனும் பிரிய வேண்டிப் பெரியோராயினோரைப் பணிந்து விடை கேட்கும்போது அப்பெரியோர் அவனுக்குச் சொல்லவேண்டிய புத்திகளைச்சொல்லி, க்ஷேமமாய்ப் போய்வருக வென்று ஆசீர்வதித் தனுப்புதல் வழக்கம். அப்படிக்கிருக்க வில்லரசிரியராகிய துரோணாசாரியரை வென்ற பெருந்தகையாகிய இத்தருமநந்தனர் தமது செல்வக் குமாரனைத் தழுவி, "நீபோய் விஜயத்துடன் வெல்" என்று வாழ்த்தி விடை கொடுத்து விட்டாரேயன்றி நீபோய் விஜயத்துடன் வென்று வருகவென்னும் வாக்கியத்தைத் தீவினையின் வசத்தாற் சொல்லாமற் போயினர். இத்தப்படி நான் வருகின்றே னென்றும் பீமசேனன்

முன்னடிப் போகட்டு மென்றும், சொல்லிய தனது பெரிய தந்தையின் வாக்கியத்தைத் கேட்டு அபிமன்பு, மனந்தளராமல், நமது திற முதலியவைகளைத் தீர்வுணர்ந்த அறக்கடவுளாகிய ஐயாவானவர் நம்மைப் படைத்துணை பற்றிப் போகும்படி சொன்னரல்லவா வென்று சற்று நிதானித்து அப்பால் அந்த வார்த்தைக்குத் தன் மனத்தி லிடங்கொடாம லகற்றிச் சிந்தை களித்து, சூரசம்மாரக் கடவுளாகிய கந்தஸ்வாமி தனிமையிற் சென்று சூருகன் முதலிய சூரரை வென்றுவந்த தன்மையைப்போல், ஒருதவியுமில்லாமலே தான்போய் ஜெயம்பெற்று வரவேண்டுமென்று மனங்கொண்டு நின்றான். அப்படி நின்ற மைந்தன் குறிப்பைத் தருமபூபதி கண்டு, ஓ! ஓ! நாம் சொன்ன உத்தரம் புத்திரன் மனத்தை வருயத்தியது போலு மென்றுணர்ந்து, சுந்தரனுகிய குழந்தை உற்சாகந்தப்பி யுத்தத்திற்குச் செல்லலாகா தென்று உடனே பலவித நன்மைகளைப் பகர்ந்து சத்தியநெறி உத்தமனுகிய தர்மராஜன் பகைவர் மேற் சென்று வெல்லும் வெற்றிமாலையைப் புத்திரன் கழுத்திலணிந்து புகழ்ந்து, போர்புரியுந் திறங்களும் பாணங்கள் தொடுக்கவேண்டிய விதங்களும் பகைவரை முடிக்கத்தக்க திறமும் விற்பனமூள்ள புத்திரனுக்குப் பற்பல விதமாகப் பகர்ந்து விடை கொடுத்தார்.

அபிமன்னன் தேரூர்ந்து சாரதியை எச்சரித்தலும், அப்போதச்சாரதி கொண்ட கவலையை அபிமன்னன் தேற்றியாற்றுதலும்

இப்படி அவருடைய செலவு பெற்ற புத்திசாலியான புத்திரன் பெரிய தந்தையாகிய தர்மராஜன், பீமசேனன் இவர்களின் திரு வடித்தாமரையிற் பணிந்து, தட்டி ஜல்லடம் பிகிந்து, வீரகண்டா மணி பிறுக்கிக் கவசந்தொடுத்து, கொத்தாகிய மாலை யணிந்த வீர மார்பில் முத்தாரமணிந்து நாகரத்தினங்களினுற் செய்த வாகுவல யம் அழகுடன் பிரகாசிக்கத் தரித்து, இரண்டு சந்திரர், இரண்டு சூரியர், திரண்டு உருண்டதைப் போன்ற ஜீவரத்தினங்களினுற் செய்த மகாகுண்டலங்களைக் காதிற்றொடுத்து, நவரத்தினகசித வுசிதமாகிய முடியணிந்து, அதில் வீரபட்டங் கட்டி, பலம் பொருந் திய நாணியுடன் விற்பிடித்து, தேர்ந்து தெளிந்த வீரவாளி நிறைந்த அம்பரைத் தூணியைத் தோட்புறத்திற் சேர்த்து, வாளாயுதம் கதா யுதம், வேலாயுதம் சூலாயுதம் சக்ராயுத முதலிய ஆயுதங்களுங் கொண்டு, முப்புரிநூல் பிரகாசிக்கு மார்பில் தும்பிப் பதக்க முத

லாகிய ஆபரணங்களை யணிந்து, அலங்கரித்துக்கொண்டு, யாவரு மதிக்கும்படியாகிய சுமித்திரனென்னுஞ் சாரதியைப் பார்த்து, "ஓ எனக்குரிய தேர்வலவனே! தநுர்வேத வன்மைபெற்ற துரோணசாரியர், அசுவத்தாமா முதலியோர்கள் யாவரும் பொருந்தி முனைந்து நிற்கின்ற போர்முகம் நீறுபட்டுப் பொடியாகும்படி திருந்திய நமது தேரை விரைந்து விடக் கடவை" யென்று அண்டகடாக நடுங்க மண்டியிட்டிரைத்து சொல்ல, அப்படி சொல்லிய அபிமன்னு ராஜனை நோக்கித் தேர்ப்பாகன் வாய்ப்பாகப் பணிந்து "ஐயோ அடியேன் தேவரீருடைய வசனத்தைச் சிரமேற்கொண்டு நடப்பவனே யானபோதிலும் தங்களுடன் வந்து சிலசங்கதிகளைத் தடுத்துப்பேசுஞ் சுதந்தரத்தை யெனக்குத் தாங்கள் தந்திருப்பதால், எந்தன் மனதிற் றோன்றிய சிலவற்றைச் சொல்லுகிறேன்! அதனைத் தாங்கள் சிந்தையிற் கொள்ளவேண்டும்" என்று மந்திரிக் கொப்பாகிய வலவன் சொல்லுகிறான் "சகலும் என்னுண்டவனே! சொர்க்க மத்திய பாதலமென்னு மூன்று லோகத்தையுங் கைகாட்டிய இடத்தில் நிற்கும் படியாகச் செய்து வெல்லும் வல்லமை பெற்ற உமது தந்தையாகிய அர்ச்சுனராஜன் வீறி நிற்கும் இவர்களுடைய சேனா முனை புகுந்து வீரவாளி தொடுப்பாராகில், அளவில்லாத வல்லமை கொண்ட அதிரத வீரர்முதலாகிய கால்வகைச் சேனை வீரர்களுடைய தேகமுழுமையுங் கிழித்தழித்து விழும்படி வென்று ஜெயங்கொண்டு திரும்புவார். அவருக்கிவர்கள் லக்ஷ்யமில்லை! ஆகையால் ஐயா பற்பல விதமாகிய சாஸ்திரங்களைக் கரை கண்ட விற்பன்னவிவேகியாகிய துரோணரும், கிருபர், அசுவத்தாமர், கர்ணமகாராஜன், முதலிய எண்ணிறந்த கிருபர்களும் கிலே பெற்றிருக்கும் யுத்தமுகத்திற்கு, நீர் தனிமையிற் சென்று வென்று வருவேனென்பது லேசாகிய காரியமல்ல! ஓ கிருபர் சிகாமணியே! அவர்கள் இன்று ஏற்படுத்தி யிருக்கும் வியூகமோ பேதா பேதங்களாக வகுத்திருக்கின்றது. அந்த வியூகத்தைப் பேதித்து நுழைவதற்குத் தேவர்களாலுங் கூடாது! அன்றியும் இப்படியாக வியூகம் வகுத்த சேனு காயகராகிய தேசிகரும் மற்றபிரதாப வீரர்களும் உம்முடைய பாணங்களிஞற் சாகமாட்டார்கள்! அவர்களை வென்றுலல்லவோ உமக்கு வெற்றி யுண்டாகும்? ஓ வீராதிவீரனே! நீர் கொல்லாமற் போனாலுஞ் செல்லாமல் நின்று விடுவதே சிலாக்கியம்!" என்று தெரிவித்தான்.

அந்த வார்த்தையைப் பற்குனன் புத்திரனாகிய விக்கிரம பராக்கிரமன் கேட்டுச் சிறு நகைபுரிந்து, சாரதியைப் பரிந்து நோக்கி,

"அப்பா சுமித்திரா! என்னுடைய வில்லை எடுத்து நிறுத்தி அசைத்து இணக்கி இழுத்து வலுத்துக் குணத்தொனி செய்வேனுனல், அந்தப் பேரோசையினுல் நில முதலாகிய தலமெல்லாங் கல கல வென்று பயந்து, ஏழு சமுத்திரமும் வரண்டு, உகாந்த காலமு மடங்கி, முக்குணத் தேவராகிய மூவரும் காணுசையால் முதுகு காட்டி யோடுந்தன்மையைப் பெறுவார்களென்றுல் போர்முகத்திற்கு கேர்முகமாக காணு புகுவனுகில் அப்போது என்னுல் கடத்தப்படும் யுத்த அலங்கார மிவ்வகைத்தென ஒருவராற் சொல்லுந் தரமாமோ? நீயே சொல்லுஞ் சாரதி! இந்திரன் முதலாகிய அந்தரோடு எம னும் மற்றவனும் எனக்கு கேரோவரோ? அல்லது நிகரோவரோ? ஓ விந்தையாகிய வார்த்தை சொல்லவந்த எந்தன் வலவனுகிய வல்லவனே! ஆதிகாலத்திற் பாற்கடல் கடையும் காலில் வாசுகி கக்கிய ஆலகால விஷமானது, அண்டமுகடு முதலாகிய எல்லா வற்றையும் எரித்தழிக்குங் காலையில் சகல தேவர்களும் சங்கர மூர்த்தியைச் சிந்திக்க, அந்த க்ஷணத்தில் அவர்களை ரக்ஷிக்கும் படியாய்ச் சூலபாணி யெதிர்ந்தபோது அந்த விஷாக்கினி தொலைந்து போகவில்லையோ! சாரதி! எதிரிகள் மிகுந்த திறத்தினையுடைய வில்லாளிகளென்றும், அவர்களை வெல்லுவ தரிதென்றும், நீ யுரைத்த அவ்வாசான் முதலிய வாசாகைங்கிரிய ரெல்லா மிங்கி மிடத்தில் நிலைகெட்டுத் தலைகட்டுக்கொண்டு பலம் விட்டோடு வதை நீ கண்டு நகைக்கும்படியாய்க் கூர்ங்கணைவிடுத்துக் குலைகுலை யக் கொல்லுகிறேன். ஆதலால் நம்மைப்போன்ற வீரர் நம்மை யேசாமல், உன் மனங் கூசாமல் என்னுடன் றடுத்துப் பேசாமல் தேரைச்செலுத்து!" என்று பற்பல விதமாகிய பராக்கிரமங்களைச் சொன்னுன். அந்த வார்த்தையைச் சாரதிகேட்டுத் தன்னைமறந்து மகிழ்ந்து, பலம் பொருந்திய விற்றிறத்தில் வல்லமை பெற்ற விர்ஷப விராட்டைப் போன்ற மலர்மாலை யணிந்த புயத்தினை யுடைய அபிமன்ன ராஜனைப் பணிந்து அன்பு மேற்கொண்டு, முருக்கம்பூ அலர்ந்ததெனச் சிவந்த முகத்தினையுடைய அதுமக் கொடி யணிந்த தேரிற் கட்டிய குதிரைகளின் கடிவாளமாகிய குசைக் கயிறுகளைப்பிடித்து, முனைமுகத்தில் வினைபற்றி நின்ற வீரர்க ளெல்லாரும் விடவிடத்துப் படபடத்துக் கடகடத் தோடும் படியாய் உல்லாசத்துடன் தடதடவெனத் தேரைச் செலுத்தினுன்.

அபிமன்னன் யுத்தகளம்புகுந்து துரோணாசாரியர் வகுத்த வியூகங்களை உடைத்து அவரை மடித்துத் துரத்துதல்

அந்த வேளையில் தனக்குரிய உறவினராகிய துருபதேயக் கூட்டத்தாரும், அளவில்லாத கோடாகோடி அரசர்களும், கருமேக முழக்கம் போலும், கோபங்கொண் டிரைந்து, நெருப்புக்காற்றைப் போற் பெருமூச்சு விட்டுக்கொண்டு அபிமன்னனுடைய ரதத்திற்கு இருபக்கத்திலு நெருங்கிவரவும், பேரிமுதலிய வாத்தியங்க ளெல்லா முழங்கவும், தேவதுந்துபி கறங்கவும், தேவமந்திரங்களுணர்ந்த தேவர்களெல்லாரும் அரண்டு வெருண்டு பயந்திளைக்கவும், நெருப்பு மூண்டபெற்ற காராயணாஸ்திரம்பொருந்திய திரிபுர ஸம்ஹாரியா கிய சிவபெருமான் கைக்கொண்ட மேருமலை யென்னும் வில்லுக் கிணையான தன் வில்லை நிறுத்தி வளைத்து நாணியேற்றி டங்காரஞ் செய்து, அவ்வோசையால் திசாதிசைகளு நடுங்க ஓங்காரமுஞ் செய்தான், தனஞ்செயன் பூர்வத்திற்செய்த புண்ய பலமே உரு வாகித் தோன்றிய தன்மையைப் போன்ற அபிமன்னு வானவன்; இப்படி யுத்தமுனைக்கு வந்து காரொலியுங் கடலொலியும் அடங்கும்படியாகப் பேரொலி கொண்டு நின்று, கௌரவ சேனாதி பதி வகுத்த சக்ர வியூகத்தளர்ந்து வருந்திக் கடுமாறும்படியாய், மணிகளினாலும், மலர்களினாலும், அணிபெற்றிராநின்ற கூர்மை தங் கிய பாணங்களினாற் கூட்டமாகிய மன்னர்களின் மார்புகளிலுருவும் படி பற்பல பாணங்களைப் பிரயோகஞ்செய்து, மாமனாகிய சகாபி ராமனுக்குஞ் சத்துருக்களின் பிராணனைத் தென்றிசைக் கனுப்புந் தன் தந்தையாகிய அர்ச்சுன ராஜனுக்குஞ் சரியாகிய வீரனென்று சொல்லும்படி இமைக்கு முன் எட்டுத்திக்குஞ் சுழன்றுவருந் தேரைச் செலுத்தி, அச்சுதனென்னுந் தன்னம்மா னனவர் பூர்வத் தில் தனக்கு உபதேசித்திருந்த அருமையாகிய உச்சாடன மந் திரத்தை உச்சரித்து, ஒரு நொடியிற் பலகோடி பாணங்களைத் தொடுத்து நாணுபக்கங்களிலும் அடித்து முடுக்கி, எதிர் நின்றவர் களின் சிரங்களையும் புயங்களையுங் கரகர வென்றறுத்துக் கால்மாடு தலைமாடாகச் சாய்த்தான். அந்தவேளையில் தேவேந்திரன் மெச்சும் படியாகச் சிறந்து நின்ற சக்ரவியூகம் அழிந்து முகமாறிப் பின்னிட் டோடுவதைச் சேனாநாயகராகிய துரோணாசாரியர் கண்டு சீற்றங்

கொண்டு, மல்யுத்தத்திலும் வில் யுத்தத்திலும் சிறந்த புயத்தினை யுடைய அபிமன்னுவானவன் விடுத்த மழைபோன்ற சரங்களை யெல்லாம் பெருங்காற்றைப்போன்ற பல்லவங்களை விடுத்து விலக்கிப் பின்னும்போரில் முனைந்துவந்து அபிமன்னனை வளைத்துக்கொண்டு அருஞ்சமர் விளைத்தனர். அப்போது அபிமன்னுவானவன் (அடிமேலடி யடித்தால் அம்மியு நகரும்) என்னும் வாக்கியப்படி விடுத்த அர்த்த சந்திர பாணங்களினால் துரோணாசாரியருடைய பல மழிந்து, கலமழிந்து, வெல்லுமெனென்று வந்த சொல்லழிந்து, கைக் கொண்டிருந்த வில்லழிந்து, குருவென்னும் பேரழிந்து, ஏறிவந்த தேரழிந்து, கொடி யழிந்து, முடி கிழிந்து, மிகுந்த விசனத்துடன் படியில் விழித்தோடினர்.

இவ்விதமாக சேனாதிபதியாகிய விற்குருவானவர் துன்பப்படுங் காலையிற் பக்கத்திலிருந்த நால்வகைச்சேனை முதலாகிய வீராதிவீரர் களெல்லாம் நிலைதளர்ந்து, தலைகுலைந்து, தலையிரி கோலமாய்த் தடுமாறிச் சக்ரவியூகமுக் தத்களிக்கும்போது, மிஞ்சு வேகத்திலு மிஞ்சிய தனது தேரை விடுத்து அந்நகமி வியூகத்துக் குட்புகுந்து, வளைத்த வில் நிமிராமற் பொழியும் அம்பு மாரிகளால் அநேக முகந் தோறும் பிணங்களாய்விழ நால்வகைச் சேனைகளையு நாசப்படுத்தி, பலதிசைகளிலுங் காவலிருக்கும் மன்னர்களை யெல்லாங் கடுங்கணை யால் உடல் கிழிந்து சோருமும்படி கலக்கி, கடலைக் கிழித்தோடுங் கப்பலைப்போல் தேர்ச்சக்கரஞ் செல்லுகின்ற வேகத்தால் யாவருஞ் சிதைத்து உயிரழியும்படியாய், உடல் சிதையும்படியாய், ரதத்தை நடத்தி, பின்னுமந்த ரதத்தைக் காற்றடியைப்போல் இடசாரி வல சாரி வலசாரி இடசாரியாகச் சுழன்று சாரிகைவரவிடுத்து, உயிர் பொருந்திய உடல்கள் தோறும் விபரீதமாகச் சாயகம் போக்கி, அவரவர்களுடைய பலாபலங்களெல்லாவற்றையும் பாழாக்கி, மாம்ச முதலிய குடல்களைக் கூழாக்கி, உதிரவெள்ளப் பள்ளங்களைழாக்கி, யாவரும் கொந்து மனம் வருந்தி வெந்து சிந்திப்போகும் படியாகிய சூரர்களுக் கெதிரில் ஜெயம்பெற்றுகின்ற ஷண்முகக்கடவுளைப்போல் தனியனாக கின்றான் திடதபிரிய காத்திர ஜயசீரிய மூர்த்தண்ய அபிமன்னுவானவன். ஓ ஜனமேஜய மஹா ராஜனே! கொலை புரியாகின்ற கொடுங்கணைகொண்ட கிரீடியின் குமாரனாகிய அபிமன்னன் ரௌத்ர கூர்ங்கணைகளானவை திறவான்க ளென்னும் வெற்றி வீரர்களுடைய தலைகளை யறுத்துச் சாய்க்குதல் எத்தன்மை யொத்திருந்த தென்னில், வாயு தேவனுக்கும் ஆதிசேடனுக்கும் நாதர்

கலகஞ் செய்துவைக்க, ஆதிசேடன் தன் படத்தால் மகமேருவை மறைக்க அந்த மகமேருவின் சிரங்களை வாயுதேவன் முறித்துத் தள்ளியதைப் போன்றிருந்தது. மேலும், அச்சுதனென்னும் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியின் மருமகனாகிய அபிமன்னன் வீரவிற்றொங்கிய மஹா வீரர்களுடைய இரண்டு தோள்களையும் அறுத்துத் தள்ளுதல் எப்படியிருந்த தென்றால், பூர்வத்தில் வானமளாவிய மலைகளெல்லாம் பறந்துபோய் விழுந்து பதிகள் முதலாகிய பட்டினங்களைப் பாழ்படுத்திய காட்களில், தேவேந்திரனுனவன் அந்த மலைகளின் இரக்கைகளை வச்சிராயுதத்தால் அறுத்தகற்றிய பான்மை யொத்திருந்தது.

அன்றியும் உத்தரை யென்னும் இராஜகுமாரத்திக்கு நாயகனாகிய அபிமன்னு வானவன் பத்மவியூகத்திற் செறிந்து நிறைந்து நிற்கின்ற மன்னவர்களின் தேர்களையும், அத்தேரிற் பூட்டிய குதிரைகளையும், சாரதிகளையும், நிலத்திற் புதையும்படியாகத் தகர்த்து வீழ்த்துதல் எது போன்றிருந்த தெனில், ஒருநாள் நாரதர்செய்த கலகத்தால் விந்தகிரியானது மகமேருவின்பேரிற் கோபங்கொண்டு அந்தரமுழுது நிறைந்து அண்டமுகடுவரையிலு முயர்ந்து சூரியசந்திரர் செல்லும் வீதியை அடைத்து நின்ற காலத்தில், சுப்ரமண்யக் கடவுளின் அடியார்களி லொருவராகிய சகலகலாவல்ல அகஸ்தியரானவர் தமக்கு வழிவிடச் சொல்ல, அந்த விந்தகிரி சிறிதுதாழ்ந்த போது உச்சியிற் கைவைத்து ஒரேயிருத்தாகப் பாதலத்திற் படியும்படி அழுத்தியதைப் போன்றிருந்தது. பின்னுஞ் சுபத்திரையின் கர்ப்பத்திற் றோன்றிய மாசற்றமணிக் கொப்பாகிய அபிமன்னுவானவன் உந்தி விடுக்குங் கூர்மை கொண்ட பிரகாசம் பெற்ற சந்திரபாணங்கள், இந்திர பாணங்கள், அக்னி பாணங்கள் முதலாகிய ஆயுதங்கள் கூட்டமாகிய யானைகளின் உடல்களைத் துளைத்து ஊடுருவியோடுதல் எத்தன்மை யொத்திருந்தனெனில், வானமளவு முயர்ந்து யாவருக்கும் பயத்தைக் கொடுத்துத் தவத்தைக் கெடுத்துப் பாவத்தை விளைத்துக்கொண்டிருந்த கிரவுஞ்ச கிரியைத் துண்டாகத் துளைத்த பால சுப்பிரமண்யருடைய கொடிய வேலாயுதம் போலிருந்தது. இன்னமும் தேவேந்திரனுக்குப் பேரனாகிய அபிமன்னுவானவன் கூர்மையாகத் தொடுத்த வச்சிரக்கணைகளானவை துரியோதனனுடைய படையினிறைந்த குதிரைக் கும்புகளை யெல்லாம் வெம்பஎரித்துக் கரித்துத் தும்பாகப் பறக்கும்படிசெய்தலை யோசிக்குமிடத்து, இமயமலையைப் போன்ற புயவீரனாகிய அர்ச்சுன ராஜன் பிரயோகஞ் செய்த அக்கினியாஸ்திரங்களினால் இந்திரனுடைய

காண்டவவனம் எரிந்த தன்மையை ஒத்திருந்தது. இவையல்லாமலும், மண்டல வில்லாளி யென்னும் அபிமன்னுவானவன் விடுக்குங் கொடுகணைகளானவை அரசர்களுடைய சந்திரவட்டக் குடைகளைத் தகர்த்துச் சாய்க்குதல் எதுபோல்வ தென்றாயப் புகின், இராவணனுடைய சிரங்களிற் கவிந்திருந்த சுவேதகிறக் குடைகளை ஸ்ரீராமர் பாணங்களினால் துண்டித்ததை யொத்திருந்தது. புஜபல பராக்கிரமசாலியாகிய இணையில்லா அபிமன்னுவானவன் சங்கோபசங்கபுங்கானுபுங்கமாய்ப் பிரயோகஞ்செய்யுங் கங்கபக திரங்களால் பதகஜதுரக பதாதிகளெனுங் கருங்கடற் றீய்ந்துபோகாகின்றது எப்படி யிருந்த தென்றால், தர்ப்பசயனத்திலிருந்த சக்கரவர்த்தித் திருமகனுவர் வெகுளி மேற்கொண்டு தொடுத்த அக்கினியாஸ்திரத்தால் மகர முதலிய ஜலசர உயிர்களுடன் சமுத்திரமுந் தீய்ந்து காய்ந்த தன்மை போன்றிருந்தது. பின்னுந்தேவர் முதலியயாவருந் துதிக்கும் திசாபதி யென்னுஞ் சந்திர மரபிலுதித்த வாளபிமன்னுவானவன் சகடவியூகத்தையுஞ் சூசிகா வியூகத்தையு முடைத்துச் சேனைகளை மாய்த்துப் பத்மவியூகத்தையு மூனெகெடச் சாய்த்துத் தேருடன் உல்லாசமாயுலாவிக் கொண்டிருந்த பராக்கிரமத்தை யென்னென்று சொல்லுவேன்? க்ஷீராப்தியைக் கடைந்த காலத்தில் மத்தாகிச் சுழன்ற மந்தரகிரியைப் போன்றிருந்தது. தன்னைச் சரணடைந்தவர்க்குப் பிராணதாரனுகிய அபிமன்னுவானவன் தன் சாணைபிடித்துத் தைலதாரஞ்செய்த சதமுகக் கணைகளால் அணிவகுத்திருந்த சேனைவீரர்கள் யாவருமழிந்து யாவுமுடைந்து, பிராணனழிந்து, உதிரத்தில் விழுந்து, குழைந்து, அழுந்தி, சிதைந்து, புதைந்து, வதைந்து, போகுதல், யானை விழுந்து கலக்கிய குளத்தில் அழிந்த நீலோற்பலம் போன்றிருந்தது.

இவையன்றியும், அப்பத்மவியூகம், சக்டவியூகம் சூசிகாவியூகம், என்னு மிம்மூவகை வியூகங்களினுமுள்ள அரசர்களின் சின்னங்களாகிய முரசு, பேரி, காகளம், டமா, பூரி, தாரை, சின்னம், கொம்பு, குடை, கொடி, முடி, கவசம், பதக்கம், ஆரம், மாலை, வில், வாள், கேடயம் வேல், கதை, வாங்கு, ஈட்டி இவைமுதலாகிய எல்லாவற்றையும் அபிமன்னன் சேதிக்கும்போது, அவைகள் ஒன்றனைத்தமாகப் பொடிந்து திக்குகள் தோறுஞ் சிதறி வீழ்வதை போன்றிருந்ததெனில், அந்தரத்திலுலாவி முழங்குகின்ற சப்தமேகங்களும் சந்திர சூரியர் முதலாகிய கிரகங்களும் நக்ஷத்திரங்களும், ஆகாயகங்கையிலுலாவிய மச்சங்களும் விண்டலத்தை விட்டுவழுவி மண்

டலத்திலுதிர்ந்து விழுந்தன்மை போன்றிருந்தது. இந்தப் பிரகாரக் தொந்தமாகிய பெரும்போர் செய்து எதிரிகளுடைய சேனையணி களைக் கெடுத்து, ஆறுகள், குளங்கள், ஏரிகள், மடுக்கள், கயங்கள், தடாகங்களைப் போல் பற்பல விதங்களாக இரத்த வெள்ளங்கள் பெருகியோடுங் காலையில், மத்தியானச் சூரியனைப் போன்று எவர்க்கும் வருத்த முண்டாக்கிக் குயவன் திகிரியைப்போல் விறு விறெனச் சுழன்று வாகின்ற அபிமன்னனை வண்டிகள் மொய்த்துச் சுற்றிக்கொண்டிருக்கும் கத்தியாவட்டை மாலையையும் மின்னலை ஷிரட்டும் கன்னிலவைப் போன்ற வேலாயுதத்தையு முடைய துரி யோதன மஹாராஜனுக்கண்டு, சோர்வற்று மனமெரிந்து, கண்பொறி சிதற நெருங்கிய பற்களை நறநறவென்று கடித்து, இருகரத்தையும் ஓங்கியறைந்து, நெற்றியிற் புருவநெரிய விழித்து, விபரீதமான முகங்கருகி, கலகல வென்று சிரித்துக் கொதித்து வெறுத்து 'ஐயோ! சிறப்பினையுடைய பற்குனனுக்குப் பிறந்த ஒரு சிறுபையனுடைய பாணங்களின் வீரங்களினால் அளவிறந்த என்னுடைய சேனைசென் யங்கள் கெடாதகேடும் படாதபாடும் பட்டு அதாகதமாயிறந்துபோவ தென்றால், தர்மத்தப்பாத பேர்களும், வல்லமை பெற்ற கும்மைப் போன்ற அரசர்களும், பாண்டவர்களாகிய பகைவரும் வன்மைபேசு வார்களே! மகாபாவியென்று என்னை யேசுவார்களே! அம்மம்மா! அகண்ட சாம்பிராஜ்யன்; திடகாத்திர தைரியதனகுபேரன்; வணங் காமுடியோன் என்னும் என்பெயர் இன்றோடிறக்கவாச்சுதே: இனி நானென்ன செய்வேன்? (தான் போகா வேலைக்கோ ராள்போனாற் சொட்டு) என்னும் பழமொழி மெய்யாச்சுதே! காரியவாதிக ளல்லாத விறுதாவாகிய பேர்களை நம்பி என்காரியம் வீணுய்ப் போச் சுதே: இதென்ன கர்மம்?' என்று அரவக்கொடியையுடைய அரசன் கோபங்கொண்டெழுந்து, கொலைபுரியா கின்ற பேரணியை விட்டுக் கூவிக்கொண்டோடுங் கொற்றவர்களை யெல்லாங் கூவி, உலக் களத்தி லெழுஞ் சுவாலையைப்போற் பெருமூச்சு விட்டுக் கையெடுத் தழைத்தான். அப்படி அழைத்த போது படைமுகத்தி லடிபட் டிளைத்தோடிய சேனை வீரர்கள் வந்தது மல்லாமல், எக்காலுமிளைக் காத தீரவீரர்களாகிய கர்ணனும், கிருபாச்சாரியும், அசுவத்தாமா வும், ரத்தமாமிசந் தோய்ந்த வேலைத்தாங்கிய ஜயத்திரதனும், சல் லிய ராஜனும் போராடுந்திரத்தையுடைய கிருதவன்மனும், பூரிசி ராவும், யாருமெச்சா கின்ற துச்சாதனன் முதலாகிய தம்பிமார் களும், சோமதத்தனும், நாமதத்தனும், ஏமதத்தனும், மாமன் சகு

னியும், சுதாயுவும், சதாயுவும், அலம்பனும், அலம்புதனும், புவிமுக னும் அசுவசேனனும் இன்னுமுள்ள தாமசகுணத்தராகிய பல அர சர்களுங் களையாமல் துரியோதன மகாராஜனுக்குத் துணைவந்தார் கள். உடனே அத்துணைவர்களை யெல்லாம் வணங்காமுடிபொறுத்த மன்னன் அளவற்ற தைரியங்களால் ஆதாரங் கூறி விடுத்தான்.

சகுனி குமாரனுகிய உலூகன் வதை.

இப்படியாகத் திரண்டுவந்த வெப்பமான படை மன்னரைப் புத்திர சிகாமணியாகிய அபிமன்னு பார்த்து, நான் பிரவேசித்த இந்த யுத்த முனையில் வெல்லும் வல்லபம் இவர்களுக்கில்லை யெனச் சொல்லத் தகுந்த தென்று பெருமை பொருந்திய தேரை கடத்தி விரைந் தணுகிவந்தான். அப்படி இறுமாந்துவந்த அந்தச் சுபத் திரையின் சிங்கக் குட்டியை மதம் பொழியும் யானைகளைப் போன்ற இவர்களெல்லோருங் கூடிச் சிந்தையில் நெருப்பெழச் சினந்து முனைந்து வளைந்து சப்தமேகத்தி லிடிக்கும் பேரிடியைப்போல் காணுலிகாட்டி, சிறப்புப் பொருந்திய விற்கள் தோறும் பாண வருஷங்களைப் பொழிந்து, பெறுங்காற்றுடன் கூடிய தீயைப்போற் சிதறக்கலக்கி யெரித்து, தங்களாற் கூடியமட்டும் பார்த்துக் கடன் வாங்கியும் பார்த்தார்கள். இவர்கள் தொடுக்குங் கணைகளெல்லாம் கற்பாறைமேல் விழுந்து தெறிக்குங் கடுமழையைப் போல் அபிமன் னன்பேரிற் பட்டுத் தெரித்துப் போயின வல்லாமல், அவனுடம்பிற் சிறிது மழுந்தவில்லை. அதேனெனில், சுமித்திரனென்னுஞ் சாரதி ரதத்தைச் சுழற்றுஞ் சாகசத்தினுலும், அபிமன்னுவினுடைய விற்றி றங் கைத்திறங்களினுலும், இப்போது காமெல்லோரும் இந்த வீரனை விசேஷித்துப் பேசிக்கொள்ளவேண்டி யிருப்பதினுலும், அந்த மஹாவீரர்கள் தொடுத்த பாணங்கள் பிரயோசன மில்லாமல் தெறித்துப் போய்விட்டன. இந்த அபிமன்னன் ஒருவன்பேரில் எத்தனைகோடி மன்ன ரெதிர்த்தார்கள்? அவர்கள் தொடுத்த பல்ல வங்கள் எத்தனை ஆயிரங் கோடி யென்று சொல்லலாம்? அவர்கள் கற்றிருக்கும் வித்தைக ளெல்லாவற்றையும் காட்டி எத்தனை வித மாகிய சேவகங் காட்டினுர்கள்? இவைகள் இன்னவிதமாய் நடந் தனவென்று எவர்களுணர்ந்து சொல்லத் தக்கவர்கள்? இறைவனே! இப்படிக்குப் போராடும்போது சத்தியவாதியாகிய அபிமன்னுவா னவன் எந்தெந்த அஸ்திரங்கள் எவரெவர் தொட்டார்களோ அந் தந்த அஸ்திரங்களுக்குத் தகுந்த அஸ்திரங்களை அவரவர் பேரில் மிகுந்த கோபத்துடன் பிரயோகஞ் செய்து தீர்மேலெழுத்தென்ன

நீலகெடச் செய்ததுமல்லாமல், வந்தவர்களில் ஒருவரையும் வஞ்சிக்காமல் ஒவ்வொருவருக்கு மும்மூன்று பாணம் உடலில் புதையும் படியாய்ப் பெரியோர் சிறியோரென்னு முறைமைபாராமல் மாட்டினன். அப்படி விடுத்த பாணங்கள் அவர்களுடைய இரண்டு புஜத்திலும் மார்பிலும் பாய்ந்து, அதனல் இரத்த வெள்ளம் பாயவே யாவருங் கூட்டங்குலைந்து ஓட்ட மெடுத்தார்கள். அந்த அலங்கோலத்தைத் துரோணுச்சாரியர் கண்டு துயரங்கொண்டு, அபிமன்னேயடுத்து மட்டில்லாத தேவாஸ்திரங்களே யெல்லாம் பொழிந்தார். அதைக் கண்ட அந்த அபிமன்னு வானவன், ஒன்று, பத்து, நூறு, ஆயிர மென்னும் அம்புகளைப் போக்கி, அவர் விடுத்த பாணக் கொம்புகளைத் தாக்கி நீக்கியது மல்லாமல், தீக்கணைகளே யெடுத்துக் கனல்மாரிபோற்றெரிக்கும்போது புறங்கொடாத தூயோனுகிய துரோணுசாரியானவர் மனங் கொதித்து தந்தையும், பிள்ளேயும் இந்த வேலேக்கென்று வந்தவர்களோ வென்று ஓடுகிறவர்களுக்கு மூந்தியோடினர். அந்த வேளையில் திரிபுர ஸம்ஹாரிக்கு மைந்தனுகிய கந்தஸ்வாமியைப் போன்ற அசுவத்தாமன் தந்தையாகிய துரோணுசாரியர் வந்த வழிநோக்கிப் பிந்துவதைப் பார்த்துச் சிந்தை வருந்திக் கோபங்கொண்டு, தன் தேரைச் செலுத்தித் திடுதிடெனவந்துவில்லே வளைத்துப் பலபக்கங்களிலும் உருவும்படியாய்ப் பாணங்களே விடுத்தான். அப்போது அபிமன்னன் அவன் றெடுத்த அம்புக்கிணையாக விடுத்த சரமாரியாற் பதாதிகேசவரையிலும் மூழுகி உதிரம் பெருகப் பரதவித்துப் பின்னிட்டான் அசுவத்தாமன்.

உடனே உலகமெல்லாம் உன்னுங் கொடையாளியுங் கர்ணனென்னும் பலசாலியுமாகிய வீரன் விஜயமன்னவன் பிள்ளேயாகிய அபிமன்னுவை யெதிர்த்து, மேகத்தி லிருந்தெழும் மின்னலினுழுங்கைப்போல் உருப்பேதமாகிய பாணங்களே ஒரு நூறு கோடியென்னத்தொடுத்து, அபிமன்னுவின் தேகங் துளேபடவிடுத்தான். அப்போதந்த அபிமன்னுவானவன் பற்பல விதமாகிய பாணக் கூட்டங்களே அமோகமாகத் தொடுத்ததினுல் கர்ணனவன் தான் றெடுத்த அஸ்திர சஸ்திரங்கள் யாவுமழிந்து, தேகங்கிழிந்து உதிரம் வழிந்து, மதியழிந்து, மன மடிந்து, 'இனி நாம் என்ன யுத்தஞ் செய்யப் போகிறே' மென்று இளேத்து, ஏறிய தேருடன் ஓடிய பேருடன் மாறுமுகமா யோடினன். அது காலேயிற் கிருபாசாரியரும், கிருதவன்மனும் எதிரேறிச்சென்று இறுமாந்து நின்று, இருவருடைய ஆண்மையும் நீலேபெறும்படியாய் ஒரு புறத்தில்வரும் அபி

மன்னுவை இருபுறத்திலும் வளைத்துக்கொண்டு, பனித்தூறல் போற் பகழியைத் தூற்றினர்கள். அந்தச் சமயத்தில் ஒப்பற்ற அபிமன்னு வாகிய ஒருவன் வில்லிடத்திருந் தூந்திய ஒவ்வொருகணைகளால் மேற்கூறிய இருவரும் தேர், குதிரை, சாரதி முதலாகிய யாவும் போய், பற்களுந் திறந்து விற்களுமுறிந்து, வெறுங்கை வீணரா யோடிப்பிழைத்தார்கள். அவர்களைக்கண்ட மாமனுகிய சகுனி வெகுண்டு அவனுடைய சிரேஷ்ட புத்திரன் உலூகனும் இன்னு மூள்ள காந்தாரதேசத் தலைவரனேகரும் நால்வகைச் சேனைகளோடு பெருங்கடல்போ லிரைத்து வந்து இன்றையப்போரில் ஜெயம் எங் களுடைய தென்று மங்களம் பாடிச் சொல்லும்படியாக வெல்லு கிறேமென்று வீரவார்த்தையைப் பேசினவர்களாய் அறியாப் பய லுக்கு யாவருமிளைக்கிறதா வென யேசிக்கொண்டு, அபிமன்னுக் கெதிரில் வந்தணுகினர்கள். வந்தவடனே சகுனிகுமாரனுகிய உலூ கன்றலை பந்துபோல் விற்றென்று ஆகாயத்திற் கதறிக்கொண்டு போவதைக் கருவிக்கொண்டு வந்தவர்கள் கண்டு "ஐயையோ! கையில் வில்லெடுத்தேந்துமுன் உலூகன்றலை உம்பருலகிற் பறந்து போகின்றதே!" என் றேங்க, அதைச் சகுனி நோக்கி, "அடாமகனே! என்னருகில் வந்தாயே! உனக்கு எமன் எங்கிருந்து காத்துவந்தான்? அப்பா என் கண்மணியே! கைச விக்க மெய்சலிக்க யுத்தஞ் செய்துதான் காலங் கழித்தாயா? அடா கண்ணே! எனது எண்ணை முன்னுக்கு வராமற் போயிற்றே!" என்று ஏங்கி வில்லெடுத் தோங்கினன். உடனே அபிமன்னுவின் கணை கள் வந்து இதுதான் சமயமென்று மாமனுடைய மருமஸ்தானத் தைக் கிழிக்கவே, கெட்டவர்கள் கெடட்டும் கட்டமக்கே னென்று போரை விட்டுவிட்டு மிகவும் நடுக்கமுற்று, "பிள்ளை வாய்ப்பது புண் ணியவானுக்கல்லவோ? நாம் பேராசை கொள்ளுவது விறுதா வல் லவோ?" என்று பேசிக்கொண்டோடினன். இவனே யேசிக்கொண் டோடி வெகு மன்னர்க ளொடிந்து மடிந்தார்கள்.

சல்லியராஜனுடைய சகோதரன் வதை

அவ்விடத்திலிருந்த ராஜாதி ராஜனுகிய துரியோதனன் தம்பி விகர்ணனென்னு நீதிமான் வின்னுணி ஏற்றி, அபிமன்னன் விடுக் கும் பாணங்களை மாற்றி, தங்கள் சேனைகளின் துன்பத்தையாற்றி; தன்னையுங் காப்பாற்றிக்கொண்டு வரும்போது, துன்முகன் முதலா கிய தம்பிமார்களும் வந்து கலந்து மலைந்து மிகுந்த சமர் தொடுத் தார்கள். அவர்களை விஜய குமாரனுகிய அபிமன்னு நன்முகமாகப்

பார்த்து, "ஓ ஐயன்மீர்! நானுங்களுக்கு எதிரல்ல! உங்களுக்கெதிரி எங்கள் பெரியதந்தை யிருக்கின்றார். ஆகையால் என்மேரில் நீங்கள் வந்ததும் போனதுந் தெரியாமற் புறமுதுகிட்டோடிப் பிழையுங்கள்" என்று பூர்ணசந்திரோதய வாளிகளாற் ருக்கிப் போக்கினன். அதனல் அடியுண்டு இடியுண்டோடும்படியாகிய தம்பிமார்களின் பாங்கிலிருந்தச் சல்லியராஜனும், அவன் தம்பியும் வில்லை வளைத்துக், கொல்லவரும் வேங்கையைப்போலச்சாவித் தேருடன் மேவிப் போர் செய்யும்போது, கார்நிறக் கண்ணன் மருமகனுடைய கணைகளினற் சல்லியன்றம்பி தலையறுந்தொழிந்தான். மலைபோன்று தன் மருங்கிருந்தமராடிய தம்பி மண்ணில் மாய்ந்தது கோக்கிய சல்லியனெந்து, சவ்வியசாசியின் பிள்ளையைக் கடுங்கோபத்துடன் வளைத்துத் தாக்கும்போது துள்ளு காளையாகிய அபிமன்னுவான வன் மழைக்கால வருஷங்களைப்போன்ற கணைகளைத் தொடுத்துச் சல்லியனுடைய வில்லையும், கவசத்தையும், வீரபட்டத்தையும் நொடியிற் பொடியாக்கினன். அப்போதே சத்துருக்களுக்கு இளையாத கோடையிடிபோன்ற சல்லியனனவன் இந்த வில்லாளி யாகிய வாளபிமன்னனை வாழ்த்தி, பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டுமென்று மரியாதையுடன் திரும்பிப் போய்விட்டான். இத்தப்படி பின்னணி முன்னணி, முன்னணி பின்னணியாக முனைந்துவந்து போராடும்படியாகிய வாளாயுதம், வேலாயுதம் சூலாயுதம், கதாயுத முதலியவைகளை யுடைய வெற்றி வேந்தர் களின் தேக முழுமையும் அந்த அபிமன்னுவின் தலை தூபம் பண்ணின வாளிகளானவை இலைத் துரப்பணம்போற் துளைத்து உருவி யோடின. அதனல் ஆயுதங்களெல்லாம் ஒடிந்து, பதாகைகளு மழிந்து, ரணகளமுழுவதும் நிறைந்து, செத்தவர்கள்போக மற்ற வர்களுக்கெல்லாந் தேகம்வேறு, முகம்வேறு சிந்தைவேறு, செய லும் வேருகக் கலங்கி வந்த வழிபார்த்து ஙைந்தோடினர்கள். இவை களை யெல்லாஞ் சேனுநாயகராகிய துரோணுசாரியர் கண்டு ஆச் சரியங்கொண்டு, நெருங்கி யுத்தஞ்செய்ய விரும்பிய மைத்துன னென்னுங் கிருபாச்சாரியர் முதலாகிய பேர்களுக்கு நேரே முகத் தைத் திருப்பிக்கொண்டு பூமண்டலாதிபனுகிய துரியோதன மகா ராஜனுடைய நவரத்தின கசித குண்டலங்களாடாநின்ற காது களிற் கேட்கும்படியாகவும் மனத்தில் அன்புருகும்படியாகவும், மேக முழக்கம் போலிரைந்து சில வசனங்களைச் சொல்லத் தொடங்கினர்.

அபிமன்னனுக்குப் புறந்தந்துவந்த துரோணரைத் துரியோதனன் வெறுத்து மற்றயரைத் தேற்றி மீட்டும் போர்க்கனுப்புதல்

ஓ பூமியாளும் நேமிதாங்கிய சாமியே! கேளும்! ஒருதவியு மில்லாமல் ஒருவில்லும், ஒரு தேரும், ஒரு சாரதியுங் கொண்டு வந்து, அநேகம்பேர்க ளுதவியைப் பெற்ற பலவில்லும், பலதேரும் பலபல சாரதியுமுடைய நமது படைகளையெல்லாம் பாழாக்கி, பல வான்களாகிய வீரர்க ளெல்லாரும் திடுக்கிடும்படி செய்து நடுக்க மில்லாமற் றிரியும் முனைவீரனை அர்ச்சுன குமாரனைக் கந்தர்வ வாமியென்று சொல்லத்தக்கதோ? அல்லது முருகனென்று பேரிட்டழைக்க வேண்டியதோ? உமாபதியென் றுரைப்பதோ? எனக்கு ஒன்றுந் தோன்றவில்லை. மேலும் இன்னொருவன் வந்து யுத்தஞ் செய்யும்போதே நாம் ஊடுதாக்காம லலைகின்றோமே: இந்தப் பிள்ளையின் தந்தைமார்களும், சகோதர வர்க்கமும் மாமன் கும் பும், படைத்துணைவந்த மன்னரனேகரும், இவனுக்குதவியாய் வருவார்களாகில், திரிபுவனங்களு மென்னபாடுதான்படுமோ தெரியா தென்று தேசிகன் சொல்ல, இந்த வார்த்தை இராஜாதிராஜனுடைய இரண்டு செவிகளுக்கு மேற்காமல், கர்ணகடோமுங் கடுங்கோப முடையவனுய் விற்றிறமுணர்ந்த வேந்தரிற் சிறந்த விற்குருவாகிய வேதியரைப் பார்த்து, "ஆ ஆ ஐயரே! கொசுப்போன்ற சிறிய பையனை ஒரு பாணத்தாற் கொலைசெய்து போடாமல், அவனொரு வீரனென்று அதிரதவீர வருக்கத்திற் சேர்த்து உம்மைப் போன்ற உத்தமர் துதித்துக் கொண்டாடுவது எல்லா நன்மைகளிலும் மேலாயிருக்கிறதே" என்று நகைத்து, தனது சமீபத்தில் வெகு வீரர்களோடு வீற்றிருக்குங் கர்ணனை நோக்கி, 'அண்ணு! தநுர் ஆசிரியர் சொன்ன வார்த்தையைக் கேட்டீரா? மெத்த நன்ரு யிருக்கின்றது! கலங்கி எண்ணமிட்டுக் கொண்டிருக்கும் மனதைப் புண்ணுகச் செய்யும் பெரியோர்கள் இவர்களைவிட இனி வேறொரு வரைச் சம்பாதிக்க வேண்டியதில்லை. தலைமாட்டுக்குக் கொள்ளி தானே தேடிவைத்துக்கொண்ட தன்மையைப்போல் நாமிவர்களைச் சேர்த்து வைத்துக்கொண் டிருக்கிறோம்"மென்று துரியோதன னுரைத்து, மற்ற நீரவீர திடவான்களையும் பார்த்து மறுபடியுஞ் சொல்லுகின்றன்; "ஓ வேந்தர்களே! இப்போது நமது வியூகமத்

தியில் வந்து புகுந்த அந்த மைந்தனுனவன் தனது தாய் தந்தையர் முகத்தில் மறுபடியும்போய் விழிக்கவொட்டாமல் உங்களுடைய கூர்மையுஞ் சுடருங் கூட்டுறவாகிய ஆயுதங்களைக்கொண்டு சாய்த்துச் சீக்கிரத்தி லுயிர்மாய்த்து விண்ணுல கேற்றி விடுங்கள். விஷக்கணைகளுடைய வில்வேதியனை நம்பி மயங்கிக் கெடாதீர்கள். மன்னவர்களே! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!" என்று தன்னுளடங் காக் கோபங்கொண்டு சொல்ல, அந்தச்சொல் சொல்லி ஓயு முன்னமே ஒப்பற்ற சாமர்த்தியமுள்ள தீரர்கள் பெருங்காற் றடிக் கப் புரண்டெழுங் கடலைப்போற்பொங்கி யெழுந்து புறப்பட்டார்கள்.

அப்போது பார்க்கக் கண்கூசும் பத்தினியாகிய உத்தமியுடைத் திய வஸ்திரத்தைத் தொட்டுரிந்த துஷ்டக் காளையென்னும் துச்சாதனனுனவன் அவர்களை மடக்கி நிறுத்தித் தன் தமையனுகிய வணங்காமுடி மன்னனை நோக்கி, "ஏனண்ணு! பத்மவியூகங் கட்டிய நம் பராக்கிரம இராஜ சேனைக்குட்புகுந்து ஜெயித்துத் திரும்பிவர வேண்டுமென்று எண்ணங்கொண்டு வந்திருக்கிற அபத்தக்காரன் தங்கையாகிய சுபத்திரையின் பிள்ளையை, தேவரீர் சிந்தையில் நினைக்கு முன்னமே கொன்தானென்று ஒரு கணையால் தின்று விடு கிறேன். எனக் கொருவருடைய உதவியும் வேண்டியதில்லை! அதி விதக் கூச்சலுங் கருமாரப் பாச்சலும்போல் அபிமன்னன் இறந்தா னென்று ஈரனும் காரணனும் கேட்டுப் புத்திரசோகத் துயரால் உடனே செத்துப் போவார்கள். அப்பால் யுத்தமென்கிறதில்லை. நமக்கொருசத்துருக்களும் இல்லை. நம்மைத் தொடர்ந்த எல்லாச் சனியும் இன்றைக்கு முடிந்துபோம்" எனப் பிதற்றிப் கோபாக்னி யுடன் யுத்தமுனைக்குச் சென்று வெற்றிவில்வளைத்து, அநேக மாயிரம் அஸ்திரங்களைத் தொடுத்து, இடியும், மழையும், மின்னலும் காற்றும் ஏககாலத்தில் கோடுந் தன்மையைப்போலும், வடவானலம் வந்து வளைந்த வாறுபோலும், மாறுமாறுக நூறு நூறுகப்பொழிந்து ஆக்ரமித்தான். அப்படி ஆக்ரமித்துப் பொழிந்தவைகளாகிய அவ்வடிக்கணைகள் தாறுமாறுக வருவதை மாயன் மருமகனுகிய அபிமன்னு உணர்ந்து, அகோரம்பொருந்திய பாணங்களினுல் துச்சாதனன் றொடுத்த பாணங்களை இரண்டிரண்டு துண்டாக்கி அவன் கைக்கொண்ட வில்லைக் கண்டங்கண்டமா யறுத்து இரண் டாக்கி, அவன் தேகத்திலும் ஆயிரங் கணைகளைப்பாய விடுத்தான். அப்போது சல்லடைக் கண்போலுஞ் சாளரம்போலுஞ் சரீர

மெல்லாந் துளைபடவே, துச்சாதனன் மாய்ந்தவனைப்போ லவச மாய்த் தேரின்மேற்றி சாய்ந்தான். அந்தவேளையில் அபிமன்னு வானவன் துச்சாதனனைப் பார்த்து, "அப்பா சிற்றப்பா! நிறை வாகிய தர்ம முதலிய சத்தியங்களுடைய தருமராஜனே இராஜ சபையில் வரை, நிறை, முறை, துறை இவைகளில்லாத கொடிய வாக்கியங்களினால் மனம் வருந்தச் செய்தாயென்று மதிமருண்டு கேட்டிருக்கின்ற யான் ஆ! ஆ! உன்னுயிரை எமலோகத்திற்கு இப்போதே அனுபவிக்க எத்தனித்தேன். ஆனற் பழுதில்லாத என் பெரிய தந்தையின் சபதத்திற்குக் குறைவு வருமேயென் றெண்ணிக் கொஞ்சங் கிருபையைவத்து உனக்குயிருதவி செய்தேன். ஓ விவேகமற்ற மிருகமே! விரைவாக ஓடிப்பிழை" என்று கோபித்து அக்கிரமமாகிய விக்கிரமமுடைய அப்பாதகன் பக்கமெரி யும்படி அக்கினிச் சிலீமுகங்களை வீசினான். அந்த கணையடியாற் பிடிபட்டவில்லு மொடிபட்டு உடலுங்கிழிந்து, உதிரம் வழிந்து, வெல்லுகிறேனென்று விளம்பி யெழுந்த சொல்லுமிழந்து, உண்டோ இல்லையோ வென்னும் பிராணனுடன் ஓடுங்கி, அடங்கி, மடங்கி வீழ்ந்தான். அவனைத் தேருடன் சாரதி கொண்டுபோய்த் தேற்றினான்.

இப்பால் மலைகளைப் பொடியாக இடிக்கு மத்தகத்தினையு மருப்பினையுங் கொண்ட பருத்த உடலையுடைய மதயானையினும் வெல்லப்படாத வீர சிங்கத்தைப்போன் றிருந்தனன் அபிமன்ன னெனும் அதிசூரன். அவ்வேளையில் துச்சாதனன் அபிமன்னுவினல் அடிபட்டு அயர்ந்து வீழ்ந்தானென் றுணர்ந்து சிந்தை தளர்ந்து தேம்பி வாடித்துயராலுடைந்து துன்பமடைந்து தளர்ந்த துரி யோதனராஜனைக் கர்ணனெடுத்து, பற்பல வசனங்களினலே தேற்றி, உருக்கிய செம்பும் முருக்கம் பூவினுஞ்சிறந்து சிவந்த கோபக் கண்ணை யுடையவனாகி, "ஆ! ஆ! இத்தன்மையாக யுத்தஞ்செய்த அபிமன்னுவென்னும் புத்திரனை ஒரு கணைக்கு இரையாக்குகிறேன். அவனுடனே வந்தோர் உயிரையும் போக்குகிறேன்" என்று தேரேறி வில்லெடுத்து அபிமன்னுவென்னும் ஒரு சிங்கக் குட்டி யைக் கோபமுடைய கர்ணனென்னும் யானை கொல்லப் புறப் பட்டதைப்போல் வந்து கடுமையாகக் கொடுமைகொண்ட கணை களை நூறு நூறாக தொடுக்குட் பிரயோகஞ் செய்தான். அவைகளை அந்த அபிமன்னுவானவன் வேறுவேறாகத் துண்டித்து வீழ்த்தி

இலைமுகப்பகழி, எரிமுகப்பகழி என்னும் இரண்டு பாணத்தை யெடுத்து அங்க தேசாதிபனுடைய மார்பு கிழியும்படி பிர யோகஞ் செய்தான். அப்பாணமானது செங்கார்த்தம்போல் வந்து விழுந்த விசையினுல் மார்பு துளைபட்டு ஆற்றின் பெருக்கம்போல் இரத்தங்களோட, அதனுற் களைபட்டு அயர்ந்து பயந்து தேரின்மீது வீழ்ந்த கர்ணனை அவனேறிவந்த தேருடன் சாரதி கொண்டு போயினன். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! அக்காலையில் கன்னிப்பருவத்திற் குந்தி தேவியினுல் விடப்பட்ட பெட்டியானது ஆற்றில் மிதந்து வரக்கண்டெடுத்து அதிற்குழந்தையா யிருந்த கர்ணனைப் பிள்ளையாக வளர்த்த தேர்ச்சாரதிக்கும், அவனுடைய பெண்சாதி இராதையென்பவளுக்கும் பிற்பாடு சில பிள்ளைகள் பிறந்து வளர்ந்துவருகையில் அப்பிள்ளைகள் கர்ணனென்னும் அண்ணனுடன் சேர்ந்து திரிதராஷ்டிரனுடைய அரண்மனையில் உத்தியோகம் பெற்றிருந்தார்கள். அவர்களில் மூத்தவனுகிய ராத னென்பவன் மற்றோர் முகத்திற் போர்புரிந்து நின்றபோது, அண்ண னை கர்ணன் அபிமன்னனுல் அடிபட்டுச் சோர்ந்ததைக் கண்டு உடலு மனமும் உருகிச்சகியாமல், அதிவேகமாகக் கோபங்கொண்டு வெவ்விய போர்முகத்திற் சென்று மேகம்போன்ற வில்லை வணக்கி நாணி யிணக்கிக் கூர்வாளிகளைக் கார் வருஷம்போற் பொழிந் தான். அதுகண்ட ஒப்பிலாச் சுப்ரதீபம்போன்ற அபிமன்னன் கொதித்தெதிர்த்து, ஒருமுகப்பகழி பென்னும் ஒரு கணை தொடுத்து அவனுடைய அழகிய முடித்தலையை யறுத்துத் தள்ளினன். அப் போது மானுபரணனுய தரியோதன மன்னனும், அவனுக்கிசைந்த கர்ணனும் மற்றப் பேர்களுங் கும்பாகக்கூடி வம்பாகப்பாடி போர் புரிந்து, அபிமன்னனுடைய அம்புராத்தூணியிலிருக்கும் பாணங்க ளெல்லாந் தங்களம்பினுல் அழியும்படி விடுக்க, அக்கால் அர்ச்சுன குமாரனிடத்தினின்றுஞ் சற்றுக்காமற் பொன்வாளி யொன்று புறப்பட்டு வந்து எதிராளிகள் மானமும் வெட்கமுமாற்றி உடலெல் லாம் பீறி உலர்த்த அப்போது பிதற்றிவந்த கர்ணன் புறமுதுகிட் டோடும் பெரும் வீரருக்கு முன்னிட்டோடினன். மற்றையரும் வாடினர்கள்.

பீமசேனன் தருமராஜனிடத்தில் நின்றும் விடைபெற்று அபிமன்னனுக்குத் துணைபோதல்

இப்படி கர்ணன் தாவரிக்க மாட்டாதோடும் பேதைமை யைச் சாம-பேத-தான-தண்ட முதலிய யாவுமுணர்ந்த தனுர்

வேதியராய துரோணாசாரியர் கண்டு பின் நெடுர்ந்து "ஐயோ! அப்பா! அரசனுக்குபிர்த் தோழனுய கர்ண! அறியாதபையன் அபிமன்னனே ஜெயிக்கமாட்டாமல் அவனுலடிபட்டிளைத்தோடுதல் உங்களுக்குத் தக்கதா? உலகம் பழிக்கும்படியாகிய ஈனமல்லவோ? மானமுள்ளவர்களே! க்ஷத்திரியகுலத்திற் பிறந்த க்ஷாத்திரமே" என்று சொல்லி நிந்தித்தார். அப்போது, வெட்கமும் கோணமு மேலிட்டபடியால் அவரைத் திரும்பிப் பார்க்கக் கூடாமல் துரியோதனராஜன் இருந்து பிரிந்தோடி நின்ற இடத்திற் ருணமணுகி அங்கு பெரும் போர்முனையி லெதிர்த்துக் காயும்படி யாகிய தீப்பொறிக் கணைகளைத் தொடுக்குஞ் சில மன்னர்களோடு ரதகஜதுரகபதாதிகளும் காற்றிசையுஞ்சூழச் சென்று, யாவருமீட்டு மேலிட்டார்கள். அப்போது (கனப்படவெண்ணுது உயருங் குடியரைத் தலையெடுக்கவொட்டாமற் ருழ்த்துங் கடலும் பொய் யும் போல) இந்த வீரர்களை மேலிட வொட்டாமல் இவர்களெல் லாரும் வற்றியுலர்ந்த சருகாகவும், அபிமன்னன் தீயாகவுமிருந்து காய்ந்து கருக்கினுன். அதனு லனேகம்பேர்கள் மாய்ந்தார்கள். அக்காலையில் இதழ்விரிந்த பரிமளமிகுந்த மலர்மாலையணிந்த பீம சேன மகாராஜன் தன் தம்பி புத்திரனுகிய அபிமன்னன் இப்படிச் சத்துருக்கள் இளைத்துச் சாகும்படியாய் வெற்றிமிகுந்த யுத்தங்கள் செய்துவருதல் கேட்டு, வளர்ந்த விற்ருங்கி அசத்தியத்தால் இளையாச் சொற்ருங்கியிருந்த தர்மராஜனிடத்தில் திடுதிடுவென்று ஓடிப் பாதகமலத்தில் வணங்கிக் கண்கலங்கி, சத்துருக்க ளெல்லா ரும் வருந்தி இளைத்து மாயும்படி புகுந்து அமர் செய்யா நின்ற அபிமன்னுவின் பேரிற் பிரமையை யுடையவனுகிச் சோபங் கொண்டிதனை யுரைக்கலானுன்—

"அண்ணு! யானைகளனேகம், தேர்களனேகம், குதிரைகளனே கம், பதாதியனேகம் வேல்களனேகம், வாள்களனேகம், விற்க ளனேகமாய்க் கொண்டு சப்தமேகமும் பிரசண்ட மாருதமுங்கூடி விளையாடுந் தன்மைபோற் கொதித்து அமர்செய்கின்ற இத்தப் பத்ம வியூகத்தில், அறியாத சிறிய பாலகனை வலிமையுடன் சென்று யுத்தஞ்செய்யத் தக்கவன்? அவனுலாகுமோ? ஐயோ! இது மஹா பாவம்! மஹாபாவம்! நாமெல்லாம் இருக்க ஏனண்ணு அந்த அறியாத குழந்தையை அமரில்விட்டுப் பார்க்க வேண்டும்? இப் போதே தேவரீரெனக்கு விடைகொடுத் தருளும்! கானவனுக்குத்

துணையாகப் போகிறேனென்று சொல்லி, அந்தத் தர்மராஜனுடைய இருபாத பத்மங்களையும்பற்றி நெற்றியிலுங் கண்களிலு மொத்திக் கொண்டு ஸ்தவத்தியமாகப்பேசி, " அண்ணா எனக்கொப்பானவர்க ளெவர்களு மில்லையென்று தங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும். ஆதலால் எனக்குத் தடையற விடைகொடும் " என்று அண்டர்புக ழுந் தண்டாயுதத்தைக் கைக்கொண்டு செலவு கேட்க, உடனே பீமசேனன்பேரில் தயைபிறந்து தர்மகுத்தனர் உத்தரவு கொடுக்க, தன்மனதில் நினைத்தபடி முடிக்குங் காரியவாதியாகிய கதாபாணி யென்னும் பீமசேனன் மனோவேகம் போன்ற தேரைச் செலுத்திப் பற்பல மண்டலீகரும் மன்னவர்களும் பதாதிமுதலாகிய சேனை களுந் தன்னைச் சூழ்ந்து வரும்படியாய்ச் சகலவித வாத்தியங்க ளுடன் புறப்பட்டு, தன்னுருவின் சாயை போலச் சேனைவீரர் முத லிய பேர்களுந் தொடர்ந்து வர நேரில் நேரிட்ட வீரர்களை யெல் லாந் தலையுருட்டிக் கொண்டு சத்துருவின் சேனைகளென்னுங் காட் டுக்கு வாய்ந்த பெருந்தீ பீமசேனனெனப் புகுந்து நிறைந்து திசாதிசைகளெல்லாங் கொளுத்தி மாய்த்தான். அக்காலே யில் மாயையில் மயங்கிய அறிஞரைப்போல் வேறொரு சிந்தையு மில்லாமல் நினைவற்று மயங்கித் தங்களைத் தாங்களே மறந்து நின்ற சக்ரவியூகச் சேனைகளும் ஈயையொத்து இறக்கும்படியாயது. ஆண் சிங்கமனைய பீமசேனன் கருடனைப்போன்று நின்று சத்துருக்கள் வரவுக் கெதிர்பார்த்து இருந்தனன்.

அந்த வேளையில் கலிங்கர், சோனகர், மகதர், கன்னடர், கங் கர், கொங்கணர், கௌசலர், தெலுங்கர், ஆரியர், பப்பரர், துளுவர், சீனகர், சாவகர், சிங்களர், குலிங்கர், மாளவர், களபர் ஒட்டியர், குகுதர், கொப்பளர், கூபகர் இவர்கள் முதலாகிய தேசபாஷை ராஜர்களெல்லாரும் நெருப்புப் பொறிபோற் சீறி யெழுந்து, வாயு குமாரனுகிய பீமசேனனை வளைத்து உறுத்துப் போர் செய்தார்கள். இப்படியாகப் போர்புரிந்த பற்பல பாஷை மன்னர்களெல்லாரும் வீரசொர்க்கஞ் சேரும்படியாய் விருது வித்தகனுகிய பீமசேனனு டன் வந்த பல பாஷையைக்கற்ற வீராவேச வேட்கையைப் பெற்ற மன்னவரெல்லாரும் பின்னிடாமற் றுணிந்து புகுந்து வெட்டினர் கள். அதனல் சேமி வியூகங்கெட்டு, பெரிய சேனையெல்லாந் தறி பட்டு, உயிர்விட்டு, அழிபட்டன. அப்படி யிறந்த படை வீரர்கள் எப்படி யிறந்தாரென்றல், இந்த பீமசேனன் வனவாசஞ்செய்த

காலத்தில் மந்தார மலருக்காக அளகாபுரியிற் சென்று கோபமுகங் கொண்டு உறுக்கிப் போர்புரிந்து முறுக்கிய காளில், யக்ஷ ராக்ஷஸர் முதலாகிய அசுரப் படைகளெல்லாரும் எப்படி யழிந்தார்களோ அப்படி யொழிந்தார்கள். உடனே மருத்து மைக்கனவன் கெருங்கிய காளமேகத்தைப் போன்று முழங்கிக் கோபங்கொண்டெழுந்து எஃகினுற் செய்த தண்டாயுதத்தைக் கைக்கொண்டு சக்ரவியூக மத்தியிற் புகுந்து கரகரவெனச் சுழற்றிச் சாடும்போது, அங்குள்ள கௌரவப்படை வீரர் யாவரு ஸ்ரீராமராகிய விஷ்ணுவைச் சுமந்த ராக்ஷதப்படைகளைப் பக்ஷணஞ் செய்தருளிய ஆஞ்சநேயர் இத்தப் போரையும் ஒரு கை பார்ப்போமென்று இவ்விடம்வந்தாரோ! அல்லது மற்றியாதோ! ஒன்றுந் தெரியவில்லையே!" என்று அச்சங் கொண்டவர்களாய் மறுபடியும் அதுமாரல்ல இவன் பீமசேனனே யென்று அவரவர்கள் தேறி, வெவ்விய கோபாக்கினி விரியும்படி ஒரு வாறு நிலைத்து நின்றபோது எரிக்கும்படியாகிய பொறிகள் சிதறக் காயுங் கண்களையுடைய இராஜாதிராஜன் நெஞ்சு மனங்கொந்து, ஆகாயத்தி லுலவா நின்ற மேகம் நீருண்டிடித்து விழுங் கோடையிடியால் நடுநடுங்கித் தலைசுங்கி மாயும் பாம்புகளைப் போலும் ஆக்ரமித் தெழுகின்ற சிங்கம் அசைந் தெதிர்வரக்கண்டு அழிந்து இடம் விட்டொழிந்து ஓடுகிற யானைக் கூட்டங்கள்போலும் சமது சேனைகளெல்லாம் அபிமன்னு விடுங் கைப்படையினுல் அழிந்து, ஒழிந்து, கெளிந்து, தெறிந்து, முறிந்து தாமரையிலைச் சலம் போல் தத்களித்துக்கொண் டிருக்குஞ் சமயத்தில் இத்தப் பீம சேனனும் வந்து சேர்ந்து அவ்வபிமன்னனுடன் கலந்திருவரு மொன்றுய்க்கூடிப் புகுவார்களாமாலுல் " ஐயோ! ஐயோ! பெருங் காட்டை யெரிக்குங் காடாக்கினியுடன் பிரசண்டக் காற்றுங் கலந்து வீசுவதைப்போ லாகுமல்லவா? ஆகையால் என் மாமா சகுனியும், சிந்துராஜனும் பூரிமுதலாகிய அரசரடங்கலும் ஒரே முகமாகச் சென்று பீமசேனன் அபிமன்னனுடன் வந்து கலக்காதவித மெப்படியோ அப்படிக்கெல்லாம் வளைத்து உயிருக்கோட்டி யுத்தஞ் செய்யுங்கள். மேலும் மற்றப்படை வீரர்களாகிய போர்களும், ஆண் சிங்கம் போன்ற விகர்ணன் முதலாகிய தம்பிமார்களும், அடல்வீர பராக்கிரமனுகிய அசுவத்தாமாவும், எதிர்த்துப் பலமாகிய யுத்தஞ் செய்வீர்களாகில் இவ்விருவரையும் இப்போதே வென்று எளிதிற் கொன்று விடலாம்" என்று அரவக்கொடியோன் சொல்லினுன். அத்த மொழிகேட்ட வீரர் யாவரும் அப்போதே அவனிடத்திற் செலவு

பெற்றுக்கொண்டு, கார்கால மேகம்போல் முரசவார்த்திய முதலி யவை முழங்க முனையாகச்சென் றெதிர்த்துக் கோபங்கொண்டு; இரதகஜதுரக பதாதி முதலிய பலபல சேனைகளுந் தீப்பட்டெரியுஞ் செங்கனலைப்போற் றிரண்டு, பீமசேன னுடனேயும் பீமசேனனுடன் வந்த படை மன்னர்களுடனேயும் கைகலந்துபோர் மூடுக்கினார்கள். அப்போது வாயுகுமாரனனவன் கண்கள் சிவந்து அழகிய திரு முகம் வியர்த்து, இருதோளும் பூரித்துக் கலீரென ஙகைத்து, மணி மகர குண்டலங்கள் பிரகாசிக்க வசைத்து முழவு முதலிய வாத்தியங் களுஞ் சிங்காதமு முழங்கிவர, விரைவிற் சென்று பாணப் பிரயோ கங்கள் பண்ணித் துரியோதனன் சேனைகள் வருந்தி வாடும்படியாக அடித்து அவரவர்களுடைய தங்கம் போன்ற அங்க மெல்லாந் துளைத்து, ரத்னமுடியுடன் தலைகளற்று விழும்படி யறுத்து, வாகு வலயங்களுடன் தோள்கள் துணிபடமுறித்து, ஆபரணங்களுடன் மார்பு கிழிபட உதைத்து, வீரகண்டாமணியுடன் கால்கள் முறிபடச் சிதைத்து, வேலாயுத முதலிய ஆயுதங்களைக்கொண்ட கை ஒடிய அடித்து, உயர்ந்த ரதங்களுடைபட வொடித்து, குதிரைகள் தறிந்து நடுவர வறுத்து, வளைந்த விற்கள் முதலாகிய பாணங்களுந் துண்டந் துண்டமா யழிந்து பொடியாகச் செய்து முடித்துப் பராக் கிரமித்து நின்றனன்.

அபிமன்னனோடு பீமசேனனைச் சேரவொட்டாதபடி துரியோதனன் சயிந்தவனை அனுப்புதல்

அப்போது உடலெ யெல்லாங் கீறிப் பீறித் தாறுமாறுகச் செய் யும் பாணங்களுக்கு எட்டாமல் உதிரம்வழிய யுத்தபூமியை விட்டுத் தளர்ந்தோடா நின்ற இராஜர்களை வணங்காமுடியோன் கண்டு, பற் பல வகைகள் புகன்று கலகலவென்று நகைத்து, முகங்கருகி, மனதிற் கோபாக்கினி யுடையவனுய்த் தினைந்த மனத்துடன் நிமிஷமேனும் ஓரிடத்தினிற்காமல் ஓடிவரும்போது, படைத் துணையாக வேண்டி நாடிவராநின்ற தன் மைத்துனனுகிய சிந்துதேசத் திலகனைக்கண்டு, இரக்க வார்த்தைகளை அநேகமாகச் சொல்லி, பலவாறுகக் கொண் டாடி, "ஓ வீராதி வீரனே!

'மறனுடையை செம்பொன் மேருகிரி நிகர் வலியுடையை வென்றிகூருமரசிய லறனுடையை பஞ்சபாணனென வடிவழகுடையை நின்றி சேனையரசரி னிறனுடையை திங்கள் சூடிவியனதி நிறைபுனல் பரந்துலாவு மவுலியர் திறனுடையை மன்றலுறு மலரடி தெளிவொடுபெணிந்த ஞானமுடியினை

வயஷிசயனின்றதேர் கடவிவரும் வலவன்மரு கன்றனுடு வரைபுரை,
புயமுடைய தண்டவீம னுறிலிரு பொருநரையு மின்று பூசல் பொரவரி
தயவிவ ரகன்று போகிலமர் பொரவரவு மெளிதுண்டு பாயதுதலெரி,
நயனனருள் கொன்றைமாலை தனேயிவர் நடுவிடி லிரண்டுபொலு மகல்வரே
'அரன்முடியணிந்த தாமமிதுவென வடிகொடு கடந்துபோக வெருவுவர்
பரவைநிகர் நம்பதாதிய வனிபர் பலருடன் வளைந்து கோலியமரிடை
வரமுற வணங்குநாளி லருள்செய்து மனமகிழ மங்கைபாக னுதவிய
வுரனுடைய தண்டினு லிவ்வபிமனே யுயிர்கவர்த லின்று சாலவுறுதியே,

என்றுசொல்லி "ஓ மைத்துனனே! இது கல்லசமயம்: புஜபல பராக்கிரம வீரமும், மகமேருவைப் போன்ற பலமும், எவரிலுமே லான வெற்றியும், அன்போடாசு செய்யுநீதியும், தரமறிந்து செய்யுந் தர்மமும், மன்மதாகார வடிவமும், மாறுபடாத சத்தியமும், சதுர்வித சமயோசிதமும், சாதுசங்கப் பழக்கமும், காராளமாகிய கொடையும், இவ்விடத்தினிற்குஞ் சேனமன்னர் முதலாகிய பட்ட வர்த்தனரைப் பார்க்கிலுஞ் சிறந்த திடவீரகாத்திரத் தோற்றமும், யாவராலு மெண்ணப்படுந் தோறுஞ் சிரக்கம்பிதஞ் செய்து சபாஷென்று மெச்சத்தகுந்த மதிப்பும் பெற்றிருப்பதன்றித் துண்டமாகிய பிறையும், கண்ட நிரம்பிய கறையும், வண்டலோடிய நதியுந்தரித் தருளிய சிவபெருமானது பாதாம்புயத்தைத் தெளிந்த மனத்தாற் சிந்தித்துப்பணிந்த திவ்விய ஞானமுடியும் பெற்ற எமதருமைத் துணைவனே! நீர் எங்களுக்கோருதவி செய்யவேண்டும். அஃதியாதெனிலோ, வெற்றிபெறும் விஜயனுடைய தேர்ச்சாரதியின் மருமகனுகிய அபிமன்னனுடன் மலைக் கொப்பாகுங் கதை தாங்கிய தோளினையுடைய பீமசேனன் வந்து கலந்து கொள்ளுவானுனில், அவ்விருவரையும் ஜெயிப்போமென்று உன்னுவது அருமை. ஆதலால் ஒருயுக்தி தோன்றுகிறது. ஒருவரோ டொருவர் சேராமற் பிரித்து விட்டால் யுத்தஞ்செய்து வெல்லுவதற்குரமக்குமெத்தச் சுலுவா யிருக்கும். அதற்கு ஒரு தந்திர மிருக்கின்றது. அஃதியாதெனில், மன்மதனை யெரித்த நெற்றிக் கண்ணினையுடைய மகாதேவரின் அறுக்கிரகத்தினுல் நீ பெற்றிருக்கிற பொற்கொன்றை மாலையை இருவர் நடுவினும் போட்டால் அதுகண்டு சாம்பவ மூர்த்தியின் சடாபாரத்தி லணிந்த தாம மிதுவென்று அஞ்சி இருவரு மப்பாற்கடந்து போவார்; அதனைத்தாண்டி வருவதற்கஞ்சுவார். அப்படி செய்து ஒருவரை யொருவர் நெருங்க விடாமல் யுத்த முயற்சியை நடத்த வேண்டிய கடமை உம்முடையதா யிருப்பதினுல், ஆதிபக

வாணுகிய அவ்வடியார்க் கெளியவன் உமக்குக் கொடுத்த வரப்பிர சாதத்தைக் கொண்டு முனேமுகத்தில் வீர முதலாளியாக நின்று உம்மெதிரில் வராநின்ற பீமனேப்புரளுஞ் சமுத்திரம் போன்ற நமது பதாதிகளோடும் படையரசர்களோடுங் கூடிவலேத்து மடக்கிப்போர் புரிந்து கொண்டு, நீர் இவ்விடத்திலிரும். நான் பலம் பொருந்திய பராக்கிரமத்துடன் மலர்மாலே யணிந்த பல கைக்காரர்களேச் சேர்த் துக்கொண்டு, சரவணேற்பவனேப்போற் பிரகாசத்துடன் வந்து சமர்செய்யும் பிரதாப அபிமன்னுவி னுயிரைச் சத்தியமாக இன்று வாங்கி விடுகிறேன். என் சொல்லுறுதியைப் பாரும் வல்லவரே"— என்று வணங்காமுடி மன்னன் சொல்லினன்.

அப்போது ஜயத்திரதன் அவனுடைய பாதங்களிலே பணிந்து, "தேவரீர் திருவாய்மலர்ந்த வண்ணம் நானேபோய் ஜயம் பெறும் படியாய் பீமனேயும் அவனுடன் பொருந்தி ஒரேயினமாக வராநின்ற துஜராஜர்களேயும் வலேத்துப் போர்புரிந்து மாய்ப்பது மல்லாமல், தப்பிப் பிழைத்தோரையும் மேற்பட்டு வருந்தானேகளேயும் சூரி யாஸ்தமனமாகிற வரையிலும் உள்ளே விடாமற்றடுக்கிறேன். ஆனல் தேவரீர் மாத்திரஞ் சபலசித்தமாகாமலுஞ் சொன்ன சொற்சோர்வு படாமலும் எவ்விதத்திலாகிலும் அபிமன்னனேக்கொல்ல வேண்டும்" என்று துரியோதனனுக்கு உறுதி வார்த்தை சொல்லி, குளிர்ந்த சந்திரனே யணிந்த முடிபொறுத்த பரமசிவனேச் சிந்தித்து மிகவும் உருகித் தொழுது, வெற்றிமாலே பூட்டிய வில்லே யெடுத்து நாணி மாட்டி, சரங்க ணெருங்கிய அம்பறாத் தூணியுங் காட்டி, பன்றிக் கொடி காட்டி, நாகரத்தினப் பணியணியாலமைந்த இரதத்திலேறி, தீரத்துவமாக வயிரங் கொண்டெழுந்து முனேந்த தேசராஜர்களும் பிரகாசிக்கும் படைகளேயுடைய சதுரங்கச் சேனேத்தலேவரும், குடங்கொண்டு சொரியும் மெய்பினல் வானமளவும்படி தீ யெழுந்து வீசுங் கொடுஞ் சுவாலேயைப்போல் இருபக்கங்களிலுஞ் சூழ்ந்து வலேந்தெதிர்த்துப் போர்புரியும்படியாக வெளிப்பட்டு வருவதாயி னன். இப்படியாகப் பராக்கிரமித்துப் பக்கத்துணேயுங் கொண்டு சயித்தவன் புறப்பட்டு வருவதைத் தர்மராஜ னுணர்ந்து இந்த வேளேயில் நாம் சும்மாவிருக்க லாகாதென்று தமக்குக் காவலாகச் சூழ்ந்திருந்த சதுரங்கச் சேனேயுடன்போய் எதிர்த்த காலத் தில், திறம்பெற்ற சித்து தேசாதிபனுனவன் ஈசனர் கொடுத்த கொன்றைமாலேயைக் குறுக்கேவீசி எவ்விடத்திலும் உருத்திர

மூர்த்திபோற் பிரகாசித்து, ஈகாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்து வில்லிற்பொருதித்து, முன்னொரு ஈகாஸ்திரத்தாற் குண்டிக்கட்டாய்க் கட்டும்படி லட்சுமணன் பேரில் இந்திரஜித்து விட்ட தன்மை பைப்போல் விடித்தான். அந்த ஈகாஸ்திரமானது சக்ரவாளம்போல் தங்கள் சேனைகளைக் கோட்டைக் கட்டாக வளைத்து எதிராளியின் படையை வருத்தியபோது, திறமும் திறமும், சிலர் கெட்டார்கள். திரமும் உரமும் பலர் விட்டார்கள். தானுந் தோளுஞ் சிலர் தரித்தார்கள். வாளும் வேலும் பலர் முறித்தார்கள். இவ்வாறு தேகமுழுமையும் பாணங்களுருவ, செங்கீரூருக வழியத் தியங்கினரானேகர்; மூர்ச்சை போயொழிய மயங்கினரானேகர். அபஜெய மென்பதை அறியாத வீரரெல்லாம் பயந்து வேசாரி யானார்கள். அந்த வேளையில் ஈகாஸ்திரக் கட்டுக்குப்படாத வாயுகுமாரன் வியூகங்கட்டியிருக்குஞ் சேனையைச் சுற்றிச்சுற்றி, எங்கே யாகிலுங் கொஞ்சஞ் சந்தேகப் படுமாகில் உள்ளே நுழைந்து மைத்தனுக்கு உதவியாகலா மென்று வளைந்து வளைந்து ஓடிவந்து மகாசேனை யெல்லாம் மாய்த்து மாய்த்துப் பொடியாக்கி விருதுபெற்ற வில்லிலிருந்து வேண்டிய மட்டும் பாணங்களைச் சொரிய, அப்போது ஒப்பற்ற தருமபுத்திரனுடைய தேரும், பீமசேனனுடைய இரதமும், மற்றப் பிரமுகர்களுடைய வாகனங்களுஞ் சேர்ந்து நாலா பக்கங்களிலுஞ் சுழலும்போது, சித்து தேசாதிப ஞனவன் இவர்களெந்த இடத்திற்றிரிகிறார்களோ அந்த இடத்தில அவர்களுக்கு நேராக முன் வந்திருந்து, அவரவர் விடுத்த கணைகளையெல்லாம் வெட்டி, தருமராஜனுடைய வில், தேர், குதிரை, சாரதி முதலிய யாவையும் அழித்து, கருடனிழல்போற் பொருந்தித் தன் படைகளைக் காத்திருந்தான்.

இப்பால் பீமசேனன் கதையைக் கைப்பிடித்து விறுவிறென்று சுழன்று படையின் பக்கங்களிலாவது நுழைந்து உள்ளே போவோமென்று ஒதுங்கிப் பதுங்கிப் பார்த்தான். கொன்றைமாலை குறுக்கே விழுந்திருப்பதன்றி, ஈசல் போன்ற எண்ணிறந்த பாணங்கள் தேடிவந்து விழுந்து வளைத்து வருத்தியதனால் பீமசேனன் திரும்பி வந்து, மண்டலமிட்டோடினான். அதுகண்ட சாத்தகி கூடிய வரையிலும் போர்புரிந்து வில்லம்பு முதலியயாவும் போய் ஏறிய தேருடன் திரும்பிவர, அவருடன் தானும் போய்ச் சேர்ந்து தனது தேரிலேறிக் கொண்டான் பீமசேனன். அப்போது தர்மநந்தனரும் இந்தச்சமாரி தாளாமல் திரும்பி விட்டார்.

இடும்பி குமாரனுகிய கடோற்கஜனும் அவன் பிள்ளைகளும் நாலுபக்கத்திலும் பயந்தோடினர்கள். இந்தப்பிரகாரம் பாண்டவர் முதலாகிய சேனைகளெல்லாம் பஞ்சாகப் பறக்கும்படியாய் மூனேந்து சரமாரி பொழிந்தான் சயத்திரதனனவன். அந்தச் சிந்து தேசாதிபன் செய்த போரை விசேஷித்துச் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. அப்படி சொல்வதானுலும் பாண்டவர்கள் விட்டபாணம் விதை விதைத்ததைப்போலும் அவன்விடுத்த பாணங்களெல்லாம் அதினுடைய விளைவைப்போலு மிருந்தன. அந்தச்சமயத்தில் துருபதேய ராஜனும் அவனுடைய பிள்ளைகளும் வந்து கலந்து அஸ்திரங்களைத் தொடுத்தபோது, அவைகளை யெல்லாம் கொடியிற் பொடியாக்கி ஐந்து கணைகளில் துருபதேயனை கொந்துபோகச் செய்து அவன் குமாரனுகிய திஷ்டத்துய்மனை இரண்டு சரங்களினுல் உதிரம் புரண்டுபோகத் தாக்கி, மற்ற ராஜர்களுடைய சாமர்த்தியங்களும் ஆயுதங்களும், ரதங்களும், சாரதிகளும், குதிரைகளும், விற்களும் நிலைகெடச்செய்து, சாத்தகியின்பேரிற் பத்துக் கணைகளையெவி மார்புந் தோளும் புதையும்படியாக மாட்டி யோட்டினன். அவனு ரெனில், பூர்வத்தில் முகுந்தனென்னுந் திருநாமத்தையுடைய விஷ்ணுவானவர் ஆதிவராகமாகத் தேடி அறியப்படாத இரண்டு பாதங்களையுடைய சோமகிதி யென்னுஞ் சிவபெருமானைச் சிந்தையுட்கொண்ட பலம் பொருந்திய சிந்துராஜ புத்திரனுகிய செயத்திரதன். கைலாசபதி யென்னும் அரவாபரண னருளிய வரப்பிரசாதமானது தன்னுண்மையை நிலைபெறச் செய்யவும் தேவர்முதலிய யாவருமயங்கித் தியங்கவும், திக்குப்பாலர்களும், அஷ்டகஜங்களும், நடுங்கச் செவிடுபடும்படியாகவும், தீரத்துடன் போர்புரிந்த செயத்திரதனென்னுங் காளை தொடுக்குந் தீக்கணைகளினுல் அவனை யெதிர்த்த யாவரும் இடி முழக்கத்திற் கெதிர்ப்பட்டழிந்த பாம்புகளைப்போலடங்கிச் சென்றார்கள். ஐயோ ! இந்தவேளையில் அதிசயமாகிய நமது பிள்ளை அபிமன்னுவானவன் வியூகமத்தியிற் புகுந்து புரியும்படியாகிய போரின் திறத்தைப் பார்ப்பதற்கில்லையே யென்னுங் கவலையும், அவனுக்குத் துணையாவதற் கில்லையேயென் றேக்கங்கொள்ளுந் துயரமும், ஸ்திரமாகிய தனதுள்ளத்தைப் பிளக்க வருந்தி, "இந்தமது மாலையிடை, தந்தபிமனுருபிரை, யுந்திவிடவோ வெளிது, சிந்துபதி சேவகமே, விரகுபட வெப்பொழுது முரணமர் தொடக்கும்வலி, யுரகதுவசற்கொழிய, வரசரிலெவர்க்குளதோ?" "தன்மகனை யுஞ்சமரில், வன்மையொடு கொன்றொழிய, மன்முனை

திரண்டிடினு, மென்மகன் மடிந்திடுமோ'' என்று சொல்லி ஒருவாறு தேறி, இன்றிந்த யுத்தத்தில் யாவரும் நம்மால் மடிவதா யிருக்கினும், பரமனணியும் இப்பொற் கொன்றையைத் தாண்டே னென்று கூறி அதனைத் தொழுது சென்றான் இடும்பியை மணந்த பீமசேனன்.

தனித்துநின்ற அபிமன்னனுடன் துரியோதனனாதியர் ஒன்றுபடச் சென்றெதிர்த்தல்

இத்தன்மையாக முனைந்து யுத்தஞ் செய்யச் சொல்லித் சிந்து தேசாதிபனை இவ்விடத்தில் நிறுத்திவிட்டுத் திரும்பிவருந் துரியோதன மகாராஜனும், கர்ணனும் தங்களிஷ்ட ஜனங்களும், தம்பிமார்களும், வாயுவேகத்திலு மிஞ்சிய தேரணிகளும், பற்பல படைகளும் தங்களுடைய சேனாபதியாக ரென்னுந் துரோணாசாரியரும் சூழ ஒரே முகமாகத் திரண்டு, உலகமழிய வெழுந்த ஊழித் தீயைப் போல்வந்து திரிபுராந்தகனைப்போல் நின்றமர்புரியும் அபிமன்னனுகிய வீரனை நெருங்கி, காற்றிசையினு மேகம்போல் வளைந்து சோனைப் பேய்ச்சலைப்போற் கரிமுகக்கணைகளைத் தொடுத்துத் துன்பப்படுத்துவதானார்கள். அப்போது இன்பமேற் கொண்ட அபிமன்னன் சம்பிரமமாகிய அம்புகளைப் போக்கி, அவரவரணிந்து வந்த விருதுக்கொடி வீர பட்டங்கள் முதலிய யாவையு முறித்து, விற்களைத் தரித்து, கவசங்களைக்கிழித்து, தோள்களைச் சிதைத்து துணைக்கரமறுத்து மணிமுடியுடைத்து, சிரத்தை யுருட்டி, திசாதிசைகளிற் போய்ப் பொடியாகிவிழத் தேர்களை யழித்து, அங்கமெல்லாம் வேகப் புங்கவங்கள் புதையவிடித்து, அவரவர்களுடைய கத்தி, கட்டாரி, கதை, சூலாயுதம், வேலாயுத முதலிய ஆயுதங்களெல்லாஞ் சிதையக் கெடுத்து, வீராதிவீரர்கள் துண்டந் துண்டமா யிறக்கத் துண்டித்து, போர்த் தொழில்தெரிந்த தேசதேசத் தரசர்களுடைய புகழ்கெட வடித்து ஆளியைப் போல் நின்றான். அப்படி நின்ற வெற்றி வீர அபிமன்னன் பேரில் அனேகம் வாளிகளை அவர்களும் பொழிந்தார்கள். அப்போது ஆச்சுது அபிமன்ன னிறக்கப்போகிறான் அவனுடலைப் பிடுங்கித்தின்னலா மென்று ஆவென வாயைத் திறந்து அநேகங்கூளிகள் நடனம்புரியும்படியாய் சிற்சில சேனைகளும் பற்பல ராஜர்களும் மத்திரதேசாதிபரும் வில்லை மண்டலாகிர்தியாக வளைத்துக் கொல்லத்தக்க வயம்பெற்ற பகழிகளைப் பலவிதமாகத்

தொடக்க, அவைகளெல்லாம் இடையில் முடங்கிப்போகும்படியாய்த் தடைபடாத கூர்மையாகிய பலபடைகளால் விலக்கி, நெருங்கி மாய்க்கும்படியாகிய சில பாணங்களை அவர்களுடைய தேகத்திற் சென்று தைக்கும்படி உந்தினன் அபிமன்னன். அந்தப் பாணங்கள் இந்தலோகம் அந்தலோகமென்று பாராமல் தொந்தப்பட்டுச் சுருசுருப்புடன் கொடிய காலாக்கினி விஷத்தைக் கக்கிக் காலாகோலமாய் வராகின்றன. அந்தவேளையில், அங்கதேசத் தலைவனுகிய அதரித்தான் வந்து, மலைக்கொப்பாகிய புயமுஞ் சிலையுமுடைய அபிமன்னுவை யெதிர்த்து முகஞ் சுளித்துப் போர்மூளையில் களித்து, வலமிடமாக ரதத்தைச் செலுத்தி, வானமும் பூமியும் மதியும் கதிருடுங்க கிலிபெற்று நின்று போர்புரிந்த காலையில், அபிமன்னுவானவன் வெங்கணைகளில் கான்கெடுத்து அங்கதேசாதிபனுடைய தேரிற்கட்டி யிருக்கும் கான்கு குதிரைகளும் மேகம்போலற்று விழவிடித்து, அவன்றொடுத்த அஸ்திரங்களையெல்லாம் அகற்றி, எத்தனை வில்லெடுக்கினும் அத்தனைவில்லையு முறித்துக் கச்சைக் கொடியையு மறுத்து, அதேகக்தரம் லக்ஷை கெட்டோடும்படியாய்ச் செய்தான். அதனல் இரவிகுமாரன் வருந்தி இளைத்தோடுவதைக் கண்டு இரக்கங்கொண்ட அரவக் கொடிக் கதிபனுடைய தம்பிமார்கள் மிகுந்த வேகத்துடன் தகுந்த புரவிகள் பூட்டிய தேரைச் செலுத்திக் வந்து வில்லெடுத்தார்கள். உடனே அவர்களேறி வந்த தேரையும வட்டமாகவளைத்துக் கையிற் பிடித்த வில்லையும் அட்டத்தனைக்கு முதவியில்லாமற் போகும்படி வெட்டி முறித்து, வேறே எட்டுக் கணைகளெடுத்து அவர்கள் மட்டு மடியத் தொடுத்தபோது யாவருமுடனே கெட்டுப் புறமுதுகிட்டோடினர்கள்.

துன்முகன் ஆதிபராசன் இவர்கள் வதை.

அப்போது சுகப்பிரமத்திற் கொப்பாகிய துரோணுசாரியரும் அவருடைய குமாரன் அசுவத்தாமனும், தேரை நடத்திச்சென்று, விஜயகுமாரனுகிய அபிமன்னுக் கெதிரில் இரண்டு திரிபுரதகனரெனத் தெழித்து நின்று, வரிபொருந்திய மணிகள் கட்டிய வில்லை வளைத்துத் தாரகாகணம் போன்ற பிரகாசம்பெற்ற நூறுகணைகளை அபிமன்னனிற்கு கிலிகலோறும் தொடுத்தார்கள். அத்தக் கணைகளை

யெல்லாந் திரணமாக விலக்கி, ஒண்டியாய் நின்று யுத்தஞ் செய்யும் விஜயன் குமாரன் இரண்டு சரோரூகப் பகழிகளை யெடுத்து இமைப் பொழுதிற் ரூடுத்தபோது, அவர்களிருவருந் தேரழிந்து, வில் முறிந்து, போர் முகமொழிந்து அபிமன்னனுக்கு நேரே அகமழிந் தோடினார்கள். அவர்களைப் பார்த்த துன்முகனென்பவன் துடி துடித்துக் கோபங்கொண்டு துரோணரை நோக்கி, "ஓ சேனாதிபதி யாகிய ஐயா! இதோ நானே யெதிர்த்துச் சண்டைசெய்து அப் பையலை முடிக்கிறேன்! என் தீரத்தைப்பாரும்!" என்று சபதங்கூறி, மடமடவென்று பூமிகுலுங்கக் கடகடவென்று தேரை நடத்திச் சென்று, வில்லை நிறுத்தி நாணேற்றி இடிக்கணைகளை அனேக மாயிரமாகத் தொடுத்து கொடிக்குள் விடுத்தான். அத்தனை இடிக் கணைகளும் அபிமன்னன் ரூடுத்த இரண்டொரு இடிக்கணைகளாற் பொடிபட்டுப் போயின. மளுக்கென்று வில்லுமுறிய வேறுவில் லெடுக்கு முன்னமே யாவருந்திடுக்கிடத் தலைதறிந்து செத்தான் அத் துன்முகனெனவன்.

அவ்வேளையில் இதென்ன விபரீத காலமென்று விசித்திர வில்லைப்பெற்ற வீரனென்னும் மத்திரதேசாதிபனும், அவனுடைய பிள்ளைகளில் ஆதிபராசனும், அவனுக்குரிய அநேக மித்திரரும் வந்து பாணங்களைக் கொண்டு சாடினபோது, அவரவரெடுத்த விற்களும் விருதுகளும் ஆயுதங்களுங் கண்டதுண்டமாகக் கணைகளைப்போக்கி அண்டையில் வந்து சண்டை புரிந்த ஆதி பராசனை ஒருவாளியால் அந்தரம்புக அனுப்பி விட்டு நீரென்ன சொல்லுகிறீரென்று சல்லியனுக்கு சேர் திரும்பியது. தன் புத்திரனிறந்த விசனத்தால் விஜய உத்தமனுடைய குமாரனை வளைத்து, ஒன்று, பத்து, நூறு, ஆயிரமென்னும் பாணங்களை அமோகமாக விடுத்து, அவனுடைய யாக்கையிற் ரூக்கியபோது அதை அர்ச்சுனனுடைய குழந்தை கண்டு, குழந்தைவேற் கடவுள் கைக்கொண்ட கூரியவேல் போன்ற பலவாளிகளாற் படுகுழியாகிய புண்படுத்த, அப்போது மத்திராராஜன் மெத்தவு நொந்து புறந்தந் தோடினான். அப்பால் மகாரதத்தலைவர்களெல்லாரும் வாளபி மன்னனை மனங்கூசாமல் வலுவிற்போய் வளைத்தார்கள். அப் படி வளைத்த அத்தனை பேரும் மாயன்மருகன் ரூடுத்த கணைகளாற் றேரழிந்து, போரழிந்து, பேரழிந்து, காரிழிந்தெனச் செங்கீரிழிந் தோட உள்ளுடைந்தார்கள். அரசனே! இந்தப் போரின் சிறப்

பைப் புகழ்ந்து சொல்லுவதற்கு என்னுலே தரமாமோ? இந்தப் பாண்டவின் பௌத்திரன் விட்ட படைகளாற் கெட்டழிந்தவர்கள் இன்னுரென்று கேட்டறியக் கூடாதபடி, இன்னுங்கொஞ்ச மிஞ்சி யிருக்குஞ் சேனைகளை முழுமையுங் கெடுத்துவிடென்று வலுவிற் செலுத்தி வல்லுயி ரிளைக்கச் செய்யும் வளம்போல், வந்தவர்களை யெல்லாம் வடிக்கணைகளை விட்டு மடித்தான் அபிமன்னன்.

இந்தப் பிரகாரம் முதலிற் கட்டிய சக்ரவியூகத்தைப் பிளந்து கொண்டு, பலம்பொருந்திய விஷ்ணு சக்ரம்போலிருக்கும் பத்ம வியூகத்தையும் பேதிக்கச்செய்து, பலதிசைகளிலு நின்ற சேனைகளைப் பசையறக்கொன்று, பொன்னுரை மணியணிப்பணி வாசனை பெற்ற மாலைகள் முதலியனபிரகாசிக்க இந்திர தநுசைப்போன்ற வில்லைத்தாங்கி, விந்தையாகிய நவமணிகளாற் செய்த தேரின்மீது உல்லாசமாயிருக்கும்படி அபிமன்னுவானவன் அந்தப் பத்மவியூக மத்தியினிற்பது எப்படி யிருந்ததென்றால், இப்பேரண்டச் சுவர்க்குப் பெருமதில்போற் சூழ்ந்திருக்குஞ் சக்ரவாள மத்தியிற் றேரூர்ந்து செலலுஞ் செங்கதிர்ச் செல்வனைப்போன் றிருந்தது. அன்றியும், அப்பத்மவியூகத்து நாற்றிசைகளினு முள்ள நான்கு கோணத்திலுந் தனது இரதத்தை கூணப்போதாகிலும் ஓயவிடாமற் செலுத்தி இங்கும் அபிமன்னன், அங்கும் அபிமன்னன், எங்கும் அபிமன்ன னென்று சொல்லும்படியாய்ப் பூர்ணமாக நிறைந்து நின்ற காரண னுடைய மருகன், நதிமதி தங்கிய சடா மகுடம் பெற்ற திரிபுரஸம் ஹாரியைப் போன்று மிருந்தான். அப்போது விஜயகாண்டீபத்தின் திடத்தைக் கொண்டு காலதேய நிவாதகவசர்களை வென்ற விஜய வீரப் பிரதாபனுடைய மைத்தனுக்குச் சகல வீரர்களும் புறமிட்டார் களென்று துரியோதனன் வெட்கங்கொண்டு, இராஜகுமாரரென் னும் இளவரசரிற் பதினுயிரவருடன் தன் பிள்ளையாகிய இலக் கண குமாரனையுங் கூட்டியனுப்பி வைத்தான். அவர்களெல்லோ ரும் இன்னும் பல வேந்தர்களுடன் கூடி, ஊழிக்காலத்திலடிக்குஞ் சண்டமாருதமானது விசாலமான கடலைக் கலக்குமாப்போல் தநுர்வேதத்திலே பழகிய காஷ்டகத்துடன் வில்லைவளைத்து நாணேற்றி, மதமேறிய யானைபோன்ற அபிமன்னனை வந்து வளைத் துக்கொண்டு, சோலை மின்னலைப்போல் இடியாஸ்திரங்கள், மின்ன லாஸ்திரங்கள், வருணாஸ்திரங்கள், வாயுவாஸ்திரங்கள், குபேராஸ் திரங்கள், இந்திராஸ்திரங்கள், சந்திராஸ்திரங்கள், சூரியாஸ்திரங்

கள், ஏமாஸ்திரங்கள், அனலாஸ்திரங்கள், கமலாஸ்திரங்கள், கருடாஸ்திரங்கள், பிர்மாஸ்திரங்கள், நாராயணாஸ்திரங்கள், உருத்திராஸ்திரங்கள், நாகாஸ்திரங்கள், மேகாஸ்திரங்கள், விருக்ஷாஸ்திரங்கள், பர்வதாஸ்திரங்கள் முதலாகிய பகழிமாரிகளை, நான் முந்தித் தொடுத்தேன், நான் முந்தி விடுத்தேன், நான் முந்தி விட்டே னென்று வீரபாஷைகள் பேசிக்கொண்டு சொரிய, பலம் பெற்ற அந்த பாணவருஷங்களெல்லாம் மன்மதன் ரெடித்த மலர்ப்பகழி யானது ஈசனுக்கெதிரில் இறைஞ்சிச்சிதைந்த தன்மைபோல் இவ்வபி மன்னுவின் பாதங்களிலே சிதறிவிழுந்தன.

அப்பால் அல்லோலகல்லோலஞ் செய்யும் அபிமன்னுவினு டைய வில்லிலிருந்து உந்தும்படியாகிய உரகக் கணைகளால், முன் வந்தவர்பின்னும் பின்வந்தவர் முன்னுமாகப் புரட்டிப் புரட்டிக் காய்வதினுல் அநேக கோடி சேனைகளுடன் இராஜ குமாரர்களும் பல பாடுபட்டுப் புறமுதுகிட்டோட அப்படி யோடிப்பிழைத்தவர் கள் போக இருப்பவர்களில் ஒருவரையும் விடாமற் பார்த்து விட வேண்டுமென்று நாலாபக்கங்களிலுந் தேடி, ஒருவருமில்லை யென்று தெரிந்து, கொய்யுளை பெற்ற குதிரை பூட்டிய தேரைச் செலுத்துஞ் சாரதியை அபிமன்னனேக்கி, 'ஓ சுமித்திரனே! என்பேரி லெதிர்த்து வந்த இராஜ குமாரர்களும், சொல்லுக் கடங்காப் பிரக்யாதியும் பேரும் பெற்ற வேந்தர்களும், வாடித்திகைத்து நிலைகெட்டு மயங்கி மடங்கி உய்ந்தோம் உயர்தோ மென்றோடுவதைப் பார்த்தாயா?" என்று உத்தரை நாயகனுரைக்க, அவ்வசனத்தைக் கேட்ட சாரதி சந்தோஷமடைந்து "ஐயா இளஞ்சிங்கமே! தேவரீர் வியூ கத்தை யுடைக்க வரும்போது அடியேன் அவசர புத்தியால் யோசிக்காமல் அனேகம் வார்த்தைகள் சொன்னேன்! அவைகளை ரீர் மன்னிக்கவேண்டும்: இவ்விடத்தில் உம்முடைய கையோயாமல் யுத்தஞ் செய்து வெகு சுத்தவீரர்களைப் போக்கி வெற்றிபெற்றமை யால் சூசிகாவியூகம், சக்ரவியூகம் பத்மவியூக முதலிய யாவு முடைந்து போய்விட்டன. இதுவரையிலுஞ் சாகாதிருக்கும் சேனை களுக் குயிர்ப்பிச்சை கொடுத்து இந்த மட்டும் யுத்தத்தை நிறுத்தி விட்டுத் தங்கள் தந்தையிருக்கு மிடத்தை நோக்கித் திரும்பிப் போவது உத்தமமா யிருக்கிறது. ஓ குறைவு படாத ஆண்மைக்கு ஒருவரு மொவ்வாத ஜெயசிங்கமே! இவையன்றியும் உமக்குத் துணை யாகவந்த தர்மராஜன், பீமசேனன், நகுல சகாதேவன் முத

லிய பேர்களையும், மற்ற பந்துவர்க்க வீரர்களையும், படைக்குதவி யாகிய பராராஜர்களையும், உமக்குதவியா யுட்புகவொட்டாமல் திரண்டு புரண்ட வெள்ளத்தை அணைகட்டித் தடுத்த தன்மைபோல் உங்களத்தை புருஷஞகிய சயிந்தவன் ஈசுவராதுக்கிரகத்தாற் சப தங்கூறி, குறிவைத்து அடிப்பவருக் கொப்பாகத் தும்சப் படுத்திக் கொண்டிருக்கிறான். அவன் றெடுக்கும் பாணங்கள் எல்லாருடைய மார்புகளிலும் உருவிப் போகுப்படியாய் இடங் கொடுத்துக் கொண் டிருக்கிறார்களே யல்லது, அக்கணைகளுடனே சயத்திரதனையு மழித்து, உள்ளே புகும்படியாகிய திடம் நமக்குதவியாக வந்த வர்களில் ஒருவருக்குமில்லை. அவர்களுக்குத் துணைவரத்தக்க பேர்களுமில்லை. உமது தந்தையாகிய அர்ச்சுனராஜனும் இங்கில்லை. ஆகையால் நீ ரிவ்விடத்திலிருந்து ஜெயஞ்செய்து என்ன பிர யோசனம்? ஒப்பாகிய வீரர்களைத் தப்பாமற் கொல்லுந் தோளாண்மையை யுடைய எங்களரசே! உமக்குத் துணையாகவந்த உமது தந்தையர் முதலிய பேர்களுக்கு நீர் துணையாகச்சென்று நின்று வெற்றி பெறுவது வீரதர்மம் ராஜதர்மம் முதலிய எல்லாவிதங்களுக் கும் உத்தமமாயிருக்கின்றது. மேலும் இந்த மூனையை ஜெயித்த நீர் அந்த மூனையையும் ஜயித்து, எதிரிட்டோரை எமலோகத்திற் குடியேற்றி வெவ்விய வீரப்பிரதாப சூரதீரதிடதைரிய ஜெயங் காட்டும். உமது தந்தையர் பேரானந்தத்துடன் இன்புற்றேறுங்கி உடல் புளகாங்கிதமுற, மகன் போனானே என்னவோ ஏதோ வென் றிருக்கும் அவர்களது கவலை தீரப்போக வேண்டியதே முக்கியமென மேகமளாவிய சிகரத்தேரை விடுஞ் சாரதி சொல்ல, அர்ச்சுனகுமா ரன் சேருடன் திரும்பிப்போகச் சம்மதமில்லாதிருந்தாலும், அவ் விடத்திலும் வீரரிருக்கின்றார்களாதலால், அவர்களையும் நீ ஜெயிக்க வேண்டு மென்று சாரதி சொல்லிய யுத்தமென்னும் ருசியினால், ஹ! ஹ! ஹ! வென்று ஆர்ப்பரித்து, "விரைவிற்றேரைச் செலுத் துக" வென விளம்பினான்.

விடசேனன் பதாதிமன்னன் அவன் குமாரன் இவர்கள் வதை

உடனே தோழனாகிய சாரதி மஹா சந்தோஷமடைந்து, மண்டலம், விண்டலம் எண்டிசை முதலிய அண்டகடாகமனைத்தும் அரண்டு புரண்டு உருண்டிட ஓட்டுந் தேரானது அங்கிறைந்து

குவித்து கிடக்கும் பிணமலைகளி லுச்சியிலேறி, அருணனுடைய பச்சைக் குதிரைகளோடுவதைக் கண்டு வீராவேசங் கொண்டு வீறி, வெள்ளம்போற் பெருக் கெடுத்துச் செல்லும் இரத்த வாரிகளை நீந்திச்சென்று தேறி, கிணச்சேறு கெடுத்துகளாகக் கண்டுபாறி, எதிரிகள் தொடுக்கும் பாணக் காட்டுக்குள் நுழைந்து சீறி வருவதாயிற்று. அப்படி வருவதைத் தருமராஜன் முதலிய யாவருங்கண்டு சந்தோஷங் கொண்டு, படைகளை வென்று தனயன் வந்தானெனக் களிப்படைந்தார்கள். அவ்வாறவர்கள் கொண்டிருக்கின்ற களிப்பைச் சந்திரவட்டக் குடைதரித்த துரியோதன மகாராஜன் கண்டு "ஐயையோ! அரசர்களை படுகுழியிலும் பெருவலையிலுஞ் சிக்கிய சிங்கத் திரும்பிப்போய் விடுகிறதே! விடாதீர்கள்! விடாதீர்கள்" என்று வல்லவர்களுடன் பின்னுகக் கூவிக் கொண்டுவந்ததை அபிமன்னன் பார்த்து, பின்புறத்தில் வந்த வீரர்கள் யாவரும் பேசாமற் போகும்படியாய் முட்களைகளை வாசாமகோசரமாகத் தொடுத்தான். அந்தக் கணைகளால் தாசானு தாசனென்று சொல்விக்கொண்டு போர்முனையிற் கெட்டழிந்தோடிய அரசர்களும் கல்வினையில்லாத கர்தியாவட்டைத் தாரோனும், அவனுடைய குமாரனும், ஒரு சிங்கக் குட்டியானது அந்தமானை விட்டுவிட்டு மதம் பெற்ற காட்டானைக்கூட்டத்தின் பேரிற்திரும்பிய தன்மைபோற்றுவிவராகின்ற அபிமன்னனை விடசேனனென்னும் விடங்கதேசத்து ராஜகுமாரன் பார்த்து, தனது தேரைச் செலுத்தி ஆர்த்து, நேரே புகுந்து, தகுந்த பகழிகளைச் சொரிந்து போர் புரிந்தான். அப்போது இணையில்லாத அழகு படைத்த உத்தரை கணவனுகிய திணிவான் ஒருமுகம், இருமுகம் என்னும் பகழிகளை ஒவ்வொருகை வாரி வாரி விடுக்க, அதனால் ஆகாயத்தை விட்டு மேகம் வழுவிவிழுந் தன்மைபோ லவ்விடசேனன் பிடித்திருந்த வில்லுடன் இருதோளு மறுத்து, தேருமழித்து, குதிரையுமொழித்து, கொடியு முறிபட்டு, முடியும் தறிபட்டு, வானேறிங்கி மறந்து விழுந்த குரு சுக்கிரர்களைப்போல் மண்ணில் வீழ்ந்து மடிந்தான். அப்பாலபிமன்னனவன் தன்னை கெருங்கிகின்ற வீரவேந்தரை லக்ஷியஞ்செய்யாதபடி முன்பின் பாராமல் அஸ்திரங்களைத் தொடுத்தபோது அந்த அரசர்களெல்லாருந் தலைவிரி கோலமாய்த் தத்தளித் தோடுங்காலையில், அளவிறந்த சேனைக்கதிபதியாகிய பதாதிமன்னனென்னும் ஒருராஜன் அபிமன்னனை வந்து வளைத்து அநேக யுத்தஞ்செய்தான். அப்போது கெருங்கிய மாலையணிந்த அபிமன்னுவானவன் ஒரு இடியாஸ்திரத்தைப்

பிரயோகஞ்செய்து, பேரிடியினற் பிளப்புண்ட கருங்கல்லைப்போல் அவன் தலையை யுடைத்தழித்தான். அப்போது அவனுடைய குமாரன்கண்டு மனந்தாளாமல், தந்தையைக் குறித்துச் சற்றே சிந்தித்துத் தனஞ்சயன் குமாரன்மீது சண்டைக்கு வந்தான். அவனைக் கண்டமாத்திரத்தில் வச்சிரக்கணை யொன்றினால் தலை முண்டமாக வடித்துத் தள்ளி, மின்னல்வாளி யென்னுங் கூர்மை பொருந்திய அஸ்திரங்களைப் பலகோடி விடுத்து, மற்றுமுள்ள பேர்களை யெல்லாஞ் சுற்றிச் சுற்றி வெதுப்பினன். அப்போது முனையேறி வந்த வேந்தர் முதலாகிய சேனைகளெல்லாம் புறந்தந் தோடினார்கள்.

இலக்கண குமாரன் வதை

அப்படி யோடுவதைத் துரியோதனன் கண்டு சகியாமலெங்கி முன்னே போயுத்தஞ்செய்து இளைத்து வந்திருக்கும் ராஜகுமாரர்களையுந் தன் குமாரனையுந் தட்டிக் கொடுத்துத் தைரியஞ் சொல்லிவிடுத்தபோது, இளங்கன்று பயமுணரா தென்பதுபோல் துடிதுடித்துச்சென்று ஆர்ப்பரித்தார்கள். சத்தியப் பொருளை நித்தியமாய்க் கொண்ட சித்தவிர்த்தியை யுடைய பாண்டவர்களுக்குப் பிராணனுகிய அபிமன்னன் அதுகண்டு தன் வில்லை வளைத்து அம்புகளைச் சரமாரியாக அவர்கள் மீது விடுத்தபோது, கால்கள றுந்தும், கைகள் முறிந்தும், இப்படியாகச் சிலரழிந்தார்கள். துரியோதனனுடைய குமாரனும், பலம் பொருந்திய சில ராஜகுமாரரும் சூரிய கிரணங்களைப்போற் சிறிய கண்களிற் பெரிய பொறிபறக்கப் பயந்து, திக்குத் திசைகளிலோடி யொதுங்கும் யானைகள் போற் கலங்கி யோடினார்கள்: அவ்வேளையில் மத்தளம்போன்ற திணிந்த புயத்தை யுடைய அபிமன்ன னென்னுஞ் சமர்த்தனொருவனும் ஒப்பற்ற ஒரு தேரும் ஒரு வில்லுடனெருங்கி, யுத்தஞ் செய்யும் ரணகளத்திற்கு அழகுண்டாகும் படியாய் வெற்றிபெற்ற வெறிப்புலியைப்போல் வீரா வேசங் கொண்டு, சேரிட்ட பேர்களெல்லாரும் வீறிட்டுப் போகமூடுக்கி, குதைகணெருங்க ணாணியிருக்கும் போதெல்லாங் கணுக்களிலிருந்து முத்துதிரும்படியாகிய வரி பொருந்திய மூங்கில் வில்லைக் கரும்பு வில்லையுடைய மன்மதனுக்கு மைத்துனனுகிய அவ்வபிமன்னன் வளைத்துப் படை கூடிவந்த பார்த்திபரெவரையும் இளைத்தோ மென்று புறங்கொடுத் தோடும்படியா யடித்து, அசேக இராஜ குமாரர்களையும் வளைத்து அமர்புரியுங் காலையில், துரியோதனனுடைய குமாரன் தீரங்கொண்டு எதிரூன்றிவந்து அபிமன்னனை மறித்

தத் தேரைச் செலுத்தவும், அபிமன்னுவானவன் கூர்மை தங்கிய முருந்துபோன்ற தந்தங்கள் பிரகாசிக்கும்படி அண்ட முகடுடைபட நகைத்து, கழுத்துமயிரையுங் கடுங்காற்றின் வேகத்தையுஞ் செயத் தையு முடைய பரிபூட்டிய ரதத்தை நேராகச்செலுத்தி இரதத்து டனிரதந் தாக்கிச் சக்கரங்களுடன் சக்கரங்கள் மோதி உடைபடும்படி யாய்விடுக்க இலக்ஷ்மணப் பெருமாளும், இந்திரஜித்தும், ஒப்பென் றுரைக்கும்படி இருவருங் கண்கள் சுழல விழித்து, புருவ நிமிர நெரித்து நெற்றி சுளிக்கப் பற்கடித்து, மேகமுழக்கம் போலிரைத்து, எழுகடலு மொரு மொகெனக் கலங்கும்படி கூவி, வாயுவோடுவாயு வெனும்படி தாவிச் சமர் செய்து, ஒருவருக்கொருவர் பற்பல வீர வார்த்தைகளைப் பேசிப்பகைமேற் கொண்டு, இழைத்தமரத்தி லிருந் தெழுநெருப்பைப்போல் இருவர் முகத்திலும் நெருப்புப்பொறி வீசும் படியாய்க் காட்டி, போர்கொடுக்க வந்த ரதகஜதுரகங்களும் மெலிந்து வருந்திப் புறங்கொடுத்தோடப் புழுதி படித்தி அமராடுங் காலையில் அவ்விருவருள் இலக்கணகுமாரனைப் பார்த்து அபிமன்னு சொல்லுகின்றான்.

"அப்பா இலக்கணகுமாரா! ஒப்பற்ற என் வில்லாண்மையைத் தெரிந்த நீயும் என்னை வெல்ல வேண்டுமென்று ரதஞ்செலுத்தி வந்தாயோ? அந்தோ! ஓசை யுண்டாகும்படியாய் இதோ நான் விடப்போகிற அக்கினிக் கணையின் முனையிலிருந் தெழுஞ் சுடர்களி னால் இவ்வுலகம்விட்டு அவ்வுலகத்திற் குன்னையனுப்பி விடுகிறேன். போச்சுது உன் பிராணன்" என்று தன்னுடைய வல்லமையை உறுத் திச் சொன்னான் வஜ்ரபாணி போலுகிய அபிமன்னன். அப் பொழுது துரியோதனனுடைய குமாரனும் வரையான தெதிரொ லிக்கு மாறுபோலவும், கோவில், மண்டபம், மலை முதலிய விடங் களில் ஓவென்று கூவினாற்கூடக் கூவுகிற்து போலவும் உலக நடுங் கக்கூவி அர்ச்சுன குமாரனைப் பார்த்து, "ஆ! ஆ! இந்த அரச செல்லாருங் கண்டு கண்களிக்க ஒரு கொடிப்பொழுதில் உன்னுயிரை வாங்கிப் பொன் னுலகத்திற்கனுப்புகிறேன்! ஓ முன்னவனுகிய அபி மன்னனே" என்று சீறிச் சிவபெருமான் வளைத்த பொன்மலையைப் போன்ற வில்லை யெடுத்து நிறுத்தி இழுத்து வளைத்து நாணியேற்றி, கலகலவென்றசைத்து வட்டமாகக் கையிற் பிடித்து, காதுபரியந்த மிழுத்து குணத்தொனிசெய்து, இருவரும் அண்டம் நடுங்க ஓங்கி யடிக்குஞ் சண்டமாருதமானது சமுத்திரத்தி லிருக்கும் வடவா

முகாக்கினியைக் கோபித்துக் கலக்கும் பக்குவமொத்துப் படுகள முழுவதும் பறவைபோற் பறந்து உதிர வெள்ளங்க ளுவரிபோற் புரண்டோடும்படி அளவற்றனவாம் பாணப் பிரயோகஞ் செய்யுங் காலையில், குதிரைகள் தேகத்திற் சொருகிய சில கணை கொடிகளை முறித்துக் குவித்தன, பலகணை முன்பட்டுப் பின்னுருவி யோடின. சிலகணை பின்பட்டு முன்னுருவி ஏறின: பலகணை அழலின் பொறி யுடன் அழன்றன. சில கணைகள் ஆகாயகங்கையையும் உறுஞ்சின. பலகணைகள் அம்பரவெளியை மறைத்தன. அஷ்டதிக்கெங்கும் அதிர்ந்தன பலகணைகள். இத்தப்படியாக அபிமன்னுவும் இலக்கண குமாரனும் முடுகி அமரர் முதலிய யாவரும் நடுங்க நெடுநேரம் வரையிலுங் கொடுமையாகிய அமர்புரிந்தார்கள்.

இப்படிச் சிலநேர மானபின்பு அவ்விருவருள் சூற்கொண்ட மேகத்தின் வடிவம் பெற்ற சுந்தரக் கிருஷ்ணமூர்த்திக்கு மருமக னென்னும் அபிமன்னன் பாணமுஷ்டி நிலையும், கரவேக சரவேக மும், மெய் வலிமையும் கைவலிமையும், மந்திர சக்தியும் பெற்றவ ஞகையால், இந்திராஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்து விட்டான். அப்போது அவ்வஸ்திரங் குருகுலக்கோமான் குமாரனுகிய இலக் கண குமாரனுடைய சரீர மாத்யந்தமுஞ் சொல்ல யிடமில்லாமற் சல்லடைக்கண்களாய்த் துளைத்து, வீரகண்டை கட்டியகாலைத் தறித்து, அவனங்கத்தி லணிந்த தங்கக் கவசத்தையுங் கிழித்து, மலர்போன்ற புயத்தையு மறுத்து, சுவரத்தின கசித முடிதறித்த சிரத்தையும் வெட்டித் தள்ளியது. அப்போது செந்தாமரை மலரெனச் சிறந்த நகை முகத்துடன் பூமியிற் சாய்ந்தான் இலக்கண குமாரன். இப்படிக்குக் காண்டவ வனமெரித்த காண்டீபன் குமா ரன் றொடுத்த கூர்ங்கணையால் காகினி முழுவதும் ஆண்டான் குமாரன் அமர்புரிந்து போர்க்களத்தில் துன்புற்றிரந்தானென்று துரியோதன மகாராஜன் கேட்டு, அம்மாத்திரத்திற் கலக் கண்ணீர் சொரிந்தழுது கசிந்து விம்மி, தனக்கு வலக்கண் போன்ற துரோ ணாச்சாரியருடனேயும், மித்துருவாய மன்னருடனேயுஞ் சொல்லி, "ஓ தெய்வமே! தெய்வமே!; என்றேங்கி, இதென்ன அகியாயமென்று சோங்கி, முடிவில்லாத துக்க சாகரத்தில் மூழ்கி மாழ்கினன். அப் போது அவனருகிலிருந்த சில அரசர் பற்பலவான உபசாரத்தாற் றேற்றி ராஜ நீதிகளைத் தெரிவித்தபோது அவர்களைப் பார்த்து வணங்காமுடியோன் சொல்லுகிறன்.

துரியோதனனோடு சபதஞ்செய்து வந்தெதிர்த்த அனேக அரசர்களும் அரச குமாரர்களும் அபிமன்னுவினால் நாசமடைதல்

" மன்னவர் மைத்தரோடென் மைந்தனைக் கொன்ற மைந்தன்,
றன்னையு மிமைப்பிற் கொன்று சயமுறச் செருத்தி லீரேற்,
பின்னையிவ் வரசும் வேண்டேன் பெருமித வாழ்வும் வேண்டேன்,
என்னுயிர் தானும் வேண்டேன் இகபர மிரண்டும் வேண்டேன்.

" ஓ சேனாதிபதியே ! ஓ என்னுயிர்க்குயிராகிய அரசர்களே ஓ மற்றுமுண்டான வீரர்களே ! அநேகம் இராஜ குமாரர்களையும், என் குமாரனையுந் துடிமிடியாய்க் கொன்ற அபிமன்ன னென்பவனை இமைக்குமுன் கொன்று பழிக்குப்பழி முடித்து இன்று நமக்கு ஜய மென்று வெல்லாமற் போவீர்களாகில், இனிமேல் ஆளவேண்டு மென்று ஆசைகொண்டு இருக்கும் இந்த அரசும் வேண்டேன்! யாவ ரும் வணங்கும்படியாகிய பெருமித வாழ்வும் வேண்டேன், இகபர மிரண்டுமற்று இறக்கத் துணிந்தேன்!" என்று இராஜாதிராஜன் வெறுப்பாகச் சொல்லிய வசனத்தைக் கேட்டு அரசர்களெல்லாருங் தனித்தனியாகத் துரியோதனனுடைய பாதங்களில் வணங்கி, கண் ணீர் துளித்துக் கை கெரித்துக் கண்கலக்க முற்று " காவலனே ! கேளும். உமது குமாரனையும் மற்ற ராஜகுமாரர்களையும் யுத்த முகத் திற் சென்று வெற்றியடைந்த பார்த்தன் குமாரனைச் சேர்த்து வளைத்து க்ஷாத்திரத்துடன் நாங்களெடுத்து வளைத்தவில் நிமிர்வதன் முன்னமே அவனைக் கொன்று உமக்கு ஜயபேரி முழக்கி வைக்கின் றோம். அப்படி அவனை இன்றைக்குக் கொல்லாமற் போவோமாகில் எங்களாயுள்ள வரைக்கும் போர்முகத்தில் வில்லெடுத்துப் போர் புரிவதே யில்லை ! இஃதுண்மையாகிய சபதம்!" என்று சொல்லிக் குன்றை வில்லாக உடைய சிவபெருமானுக் கொப்பென்னும் அசுவத் தாமனும், காமக் குரோத லோப மோக மதமாச்சாரியமென்னும் ஆறு பகையையும் வென்ற சதுர்வேத முனிவரும், இன்னமும் பக் கத்திலிருந்த வீரசூரர்களாகிய வேந்தரும், மற்றுமுள்ள வீரவிற் பிர முகர்களுஞ் சேர்ந்து, துரியோதன ராஜனுடைய குமாரனென்னும் இலக்கண குமாரனைக் கொன்ற அபிமன்னன் பேரிற் பெரும்புலி யைப்போற் பாய்ந்து வளைத்துக் கொண்டு யுத்தஞ்செய்யப் புகுந்தார்

கள். இப்படி புகுந்தவர்கள் ஒரு முகமா யிராமற் பல முகத்திலும் வளையம்போல் வளைந்து, ஏழு சமுத்திரத்தையும் ஏழு மேகங்கள் உறிஞ்சித் தொகைவகையில்லாமற் பொழியுமாறுபோல் வில்லை வளைத்து ஒவ்வொரு வீரருங் கோடிகோடி கோடாகோடி யென்னும் பாணங்களைத் தொடுத்து யாவருந் திக்குமுக்காடச் செய்து, சென்று ளெழுப்பி, ஸ்ரீ ராமரை மாரீசன் என்னும் மாயமான் கொண்டுபோ னதைப் போல பழைய இடமாகிய பத்மவியூக நடுவு வரையிலுங் கொண்டு போனார்கள். இத்தனைக்கும் அசைவற நின்ற அபிமன்னு வானவன் பின்பு அரிப்பிரமாதியரும் நடுங்கும்படியாக வில்லிறுக்கி, ஜெயம்பெற்ற அக்ஷய பாணங்களைத் தொடுத்து, அவ்வரசர்கள் விடுத்த அம்புகளை யெல்லாந் துகள்போற்றுணித்து. விலக்கி, பலம் பொருந்திய பருப்பதப் பகழிகளை விடுத்து வந்தவர்களுடைய பாத முதற் றலைவரைக்கு நிறைத்து அந்தக்காணமும் ஐம்புலனும் அங்க முங் கலங்கி நமக்கு மரணகாலம் வந்து சம்பவித்ததென்று நினைத்து மருட்பார்வை கொண்டு மயங்கி மடியும்படி மாட்டிக்கொண்டு வாட் டினன். அப்போது போர் முனையில் வந்தகப்பட்டுக் கொண்ட அநுகுலராசன் தலையறுந் தழிந்தான். கேகயராஜ குமாரன் மாய்ந் தான். கிருபாச்சாரியார் வில்லொடிந்து சொல்லழிந்து புறமிட்டார். மகதமேதசாதிபன் மாண்டான். கோடி மகுடவர்த்தனர் கொலையுண் டார்கள். இராஜ புத்திரர் கோடி பேர் வீரசொர்க்கஞ் சேர்ந்தனர்; இவையல்லாமலும் வில்லழிந்தவ ரநேகர். பல்லுடைந்தவரநேகர். தலைகெரிந்தவரநேகர். புயமுறிந்தவரநேகர். தாளொடிந்தவரநேகர். வாளொடிந்தவரநேகர். நிலை கெட்டவ ரநேகர். கொலைபட்டவ ரநே கர். நெஞ்சழிந்தவ ரநேகர். பிஞ்சிபோனவ ரநேகர். தூரத் தொலை விலோடியவரநேகர். நேரிற்றரையினின் றுடினவ ரநேகர். தேரள றுந்துத் துடைமுறிந்தவ ரநேகர். மாளகின்று மதியழிந்தவ ரநேகர். இப்படி யானதல்லாமலுந் துரியோதனன் மனதிற்கிசைந்த சகுனி யினுடைய பிள்ளைகளில் முற்போர்களில் போனவர்போக நின்ற மற்றையரும் அச்சகுனியினுடைய தாயாதி தம்பிமார்களும் பந்து வர்க்க முதலாகிய பேர்களும், அடிவேரைப் பிடுங்கினால் படர்ந் திருக்கும் பல கொடியும் வாடியழியுந் தன்மைபோல் ஒட்டொழிய அழிந்தார்கள். எல்லோரு மிறந்ததைக்கண்டு சகுனி மனந்துறந்து அபிமன்னனுக் கெதிரேபோய்ப் போராடி, மடியும்படியான முடிவு காலத்திற்கு நேராகிய வருத்தப்பட்டு அப்பா தப்பிப் பிழைத்தே னென்று செப்பரம லோடிப்போயினன்.

கர்ணன் அபிமன்னனுற் பலமுறை முறிபட்டு துரோணசாரியரோடுங் கூடி மோசப் போர் விளைத்தல்

இப்படி துரியோதனனுடைய தம்பிமார்களும் சகுனி முதலாகிய தங்களுக்கிச்சையான மைத்துன வர்க்கத்தாருங் குதிரை பூட்டிய தேரைச் செலுத்திச் சென்று கோபாக்கினியுடன் போர் புரிந்து கிலேபெற மாட்டாமல் அபிமன்னுவினுடைய முனையாகிய வெகுபாணங்கள் துளைத்து மூலாதாரம்வரைக்கும் பேதிப்பதினல் யுத்தத்திற்குப் பயந்து புறமுதுகிட்டோடுவதையும், இந்தப் பிரகாரமே அரசர்கள் முதலிய யாவருந் தலைகாட்டாமற் போரி லிடைந்தோடுவதையுந் திரிதராஷ்டிர குமாரன் கண்டு மனக்கொதிப்புக் கொண்டு கர்ணனைப் பார்த்து " அண்ணு ! அறியாதபையன் செய்கின்ற அற்ப யுத்தமென்று அலக்ஷியமாக நினைக்காதீர் (சின்னப் பாம்பானலும் பெருந்தடி கொண்டு அடிக்கவேண்டும்.) என்று பழமொழியொன்றுண்டல்லவா ? அதென்னவென்றல், பாம்பு சின்னதானலும் விஷஞ் சின்னதல்ல, இப்பையலோ! ஆலகால விஷப்பாம்பின் வயிற்றிற் பிறந்த குட்டியாக்கும் ! சம்மட்டி கொண்டு அடித்தாலும் உடைபடாக் கருங்கல், சிற்றுளியாலுடையும். ஆதலால் இன்றைய யுத்தங் கேவலமானதல்ல. அன்றியும், இதுவரையிலும் அர்ச்சுனனுக்குச் சமாசாரம் போயிருக்குமென்று நினைக்கிறேன். ஒருவேளை அந்தக் கிரீடிவந்து தன் பிள்ளையுடனே சேர்ந்து கொள்ளுவானலல், திரிபுவனங்களும் நிலைக்கமாட்டா ! அப்பொழுதும் உனக்கு வல்லமை யிருக்குமாகில் நீயேதான் பிரயாசை யெடுத்துக் கொண்டு அவ்விருவருடனும் போராடி ஜெயம்பெற வேண்டிவரும் ! இப்போதாகில் வெறுங் கட்டென்று சொல்லலாம். அர்ச்சுனன் வந்து கலந்து விட்டானலல் நினைந்து சுமக்குங்கட்டாகும் ! ஆகையால் அண்ணு ! யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே நேரிற் சென்று மலைந்துக்கொள்ளக் கடவை " என்று குருகுலக்கோமான் கூற, கொடையாளியாகிய கர்ணன் அப்படியே நல்லதென்று கோபாலன் மருமகனுகிய அபிமன்னனைக் குறுகி, பரசுராமரிடத்தில் தான் கற்ற வித்தைகளில் ஒன்றிரண்டியாமல் உம்பர் மதிக்கவும், இம்பர் துதிக்கவும், அம்பரமறையப் பம்பரம்போற் சுழன்று அரிதாகிய யுத்தங்களைச் செய்யும்போது இவன்விடுக்கும் பாணங்களை யெல்

லாம் அபிமன்னன் எவ்வளவும் ஒரு பொருளா யெண்ணுமல் இறு மாந்து, வச்சிரக்கணை முதலிய மறப் பகழிகளைப் பூட்டி மாட்டி னன். அந்தப்பாணங்கள் தூறிய வனற்றூறலினுல் அவனேறிய தேரானது மேகஞ்சிதைந்ததைப்போல் முறிந்து விழவும், கைப்பற் றிய வெற்றி வில்லொடிந்து வீரபட்டந் தரியவும் இதனுல் உள்ள முடைந்து ஒரு புறமாய் ஓட்டமெடுத்தான் வள்ளலாகிய கர்ணன்.

இவ்விதமாகப் போரழிந்தோடி வராநின்ற கர்ணனைத் துச்சா தனன் கண்டு தேற்றிச் செம்பொற்றேர் கொடுக்க, அந்தத் தேரின் பேரி லேறிக்கொண்டு மறுபடியும் அபிமன்னன் பேரிற்றிரும்பி, பற் பலவாகிய திவ்வியாஸ்திரங்கள் தேவாஸ்திரங்களை யெல்லாமிறைத்து ஜயிக்க வேண்டுமென்று பேராசைகொண்டு திரியும்போது, அளக் கரிய ஆற்றலைப்பெற்ற அபிமன்னனுடைய செங்கரத்திலிருந்து புறப் படும் வெங்கனற் றொடைகளினுல் அந்தப் படைகளெல்லா மொழிந்தன. அவனுடைய தேர்-வில் முதலியயாவுமழிந்தன. தேகத் திலும் உதிரம் வழிந்து பெருக் கெடுத்தது. அக்காலையில் அபிமன்ன னுடன் எதிர்த்துப் போர்புரிவதற்கு அஞ்சிமுகமாறியோடிய கர்ணன் துரோணசாரி முதலிய பேர்களைப் பார்த்து " இதோ நான் வருகி றேன் நீங்களெல்லாரும் போய் மடக்குங்கள் " என்று அவர்களை அனுப்பிவிட்டு இரண்டு குதிரை பூட்டிய மற்றொரு தடந்தேரேறிச் சென்று, மீட்டும் இந்திரக்கணை, சந்திரக்கணை முதலிய் பாணங்களைப் பந்தி பந்தியாய் விடுத்துப் போராடினன். அப்போது அந்த அபிமன் னனுல் மனமொந்து, தேரழிந்து வில் முறிந்து, கொடியும் வீரபட்ட மும்போய் காலாளைப்போல் ஓடி மூர்ச்சையாய் விழுந்தான் கர்ணனு னவன். அவனைக் கண்ட காவலரும் தேவர்களுங் கலகல வென்று நகைக்க உடனே மானத்திற் காற்ற மாட்டாமல் மறுபடி தேறி யெழுந்து வேறொரு தேரேறி நடந்து, துரோணர் முதலாகிய பேர்களி டத்தில் ஒரு சூசனையாகிய யோசனை செய்து, இவனை மோசத்தி னுல் வெல்ல வேண்டுமே யல்லது சாகசஞ்செய்து கொல்லுவதரி தென்று நிச்சயஞ்செய்து கொண்டவனுய், " ஓ சேனுதிபதியாகிய தேவே! இப்போது நானே போய் யுத்தஞ்செய்து நாகாஸ்திரம் போல் வெளிந்து பின் பக்கமாகப் போகிறேன். அவ்வபிமன்னு என் பக்கந் திரும்பிப் பாராமல் உங்கள் பக்கம் யுத்தஞ் செய்யும்படியாப் ஒருகணப்போது மடக்கு வீராகில், இவனை அடக்கி முடித்து விடுகி றேன் " என்று சொல்லி எல்லாரையுஞ் சேர்த்துக் கொண்டு வந்து

அபிமன்னனுக்கு முன்னே விடுத்துத் தானும் போர்செய்து, பின்பு அபிமன்யுடுத்த நாகாஸ்திரத்தால் அடிபட்டுப் புறங்கொடுத் தோடுகின்றவனைப் போல் அர்ச்சுன குமாரனுடைய தேருக்குப்பின் பக்கமாய்வந்து ஒதுங்கி, வில்லைக் கையிற் பிடித்து வீரசாயகந் தொடுத்துக் காது பரியந்த மிழுத்துப் பிடித்துக் கொண்டிருக்க, முன்னே யிருக்குஞ் சேனுதிபதியாகிய துரோணசாரி, அசுவத்தா மன் முதலாகிய பேர்கள் அபிமன்னனுடைய ரதமும், மனமும் அப் பாலிப்பால் திரும்ப வொட்டாமல் முப்பத்து முக்கோடி தேவரும், இந்திரனும் பிரமிக்கும்படியாய் வீராவேசமும் ரோஷமும் கொண்டு யுத்தம் பண்ணிக் கொண்டிருக்கக் காலகதியினல் ஓயாமற்றிருப்பிச் சுழற்றிக் கொண்டிருக்கும் ரதத்தைச் சாரதி திருப்பாமல் தன்னை மறந்து நின்று விட்டான்.

அந்தச்சமயத்தில் கள்வனைப்போற் களிப்பாய் ஒளிப்பாயிருந்த கர்ணன் பாண மழைகளைச் சுமை சுமையாகப் பெய்யும் மேகம் போன்ற அபிமன்னனுடைய வில்லைக் கருங்கல்லை முறிக்கும் தன் மையைப்போல் மூல்லைக் கணையைத் தொடுத்து முறித்தான். இந்தப் பிரகாரங் கர்ணனவன் பின் பக்கத்திலிருந்து அபிமன்னனு டைய கெடாத பெரிய வில்லை முறிக்க, அவனுக் கெதிரிலே நின்ற சேனுதிபதியும் பேர்பெற்ற ஆபிரம் ரதக்காரரும் அந்த அபிமன்னனு டைய தேரும், அச்சும், சக்கரமும், குதிரைகளும், சுமந்திரனை னுமனமொத்த சாரதியும், அழியும்படியாய்ச் சரங்களை விடுத்து வீழ்த்தினர்கள். இப்படியாக வில்லுத் தேரு முறிந்த மாத்திரத்தில் மேகமண்டலங் கிழியும்படியாக இரைந்து, இருகாதிலுங் குண்டலங் கள் பிரகாசிக்க இருபுயங்களும் மலையினும் பெரியதெனவோங்க, உதய பானுவைப்போற் கிரீடம் ஜொலிக்க, நெற்றியிற்றிரிபுண்டர மும் அட்சதைப் பொட்டும் ஒளிசெய்ய, குளிர்ந்த சந்திரபிம்ப முக மானது குறு நகையுடனிலங்க, அறுகுபோன்ற மீசை அனற்போற் றுடிக்கப் பெருமூச்சுவிட்டு, அரையிற் கட்டிய வாளாயுதத்தை உறைவிட்டெடுத்து காத்திற் பிடித்து, செண்டெழும்புந் தன்மை போல் விண்டலத் தெழும்பி, சிங்கக் குட்டிபோற் பூமியிற் பாய்ந்து, மானங்கெடப் பேசினுலும் ஏசினுலும் பிராணனிருந்தாற் போது மென்று வாளுள் வளர்த்துவருங் கர்ணனவன் பின்னிருந்து தன் வில்லை முறித்தா னென்று தெரிந்து கொண்ட வல்லமைசாலி யான வன் ஆலகால விஷம்போலும் வடவாமுகாக்கினி போலும் சீறி,

வட்டமிட்டுத் தத்திக் கேடயத்தைப் பற்றி மண்டலாகிர்தியாய்ச் சுழன்று, இன்றைப் போரில் நாம் சொர்க்கமடையத் தக்கதே யென்று மனமகிழ்ந்து மண்டியிட்டு, தன் புயத்திற் கொப்பாகாத மகமேருவைச் சுற்றிவருஞ் சூரியனைத் தொடர்ந்து செல்லுங் கேது வாகிய பாம்பைப்போலத் தன்னுடைய தோள்களே வாளுங் கேடய மும் வலமுமிடமும் வரும்படியாகச் சுழற்றினன். இளவரசர் களென்னும் யானைகளைக் கொல்லும் ஆண்சிங்கம்போன்ற அபிமன் னன். இவ்விதமாக அபிமன்னனவன் பூமியில் நிற்கக்கண்ட மாத் திரத்தில் முன்னம் அமர்புரிந்து அடிபட்டுப் பயந்தோடிய அர சர்களெல்லாரும் ஒன்றுகூடி, "ஓ! ஓ! வீராதிவீரர்களே! நம் பகைவனுகிய அபிமன்னனுக்குத் தேர் போய்விட்டது. குதிரை, சாரதி, வில் இவைகளும் போய்விட்டன! நமது நல்லகாலம் இந்தச் சிறியவன் செய்த போரும் போய்விட்டது. இவனுடைய சிலம்பம் இனி நடவாது! இப்போது நாம் பின்னிடுவோமாகில் குடிகெட்டது! இனிமேல் நமக்குப் பயமில்லை. ஆதலால் யாவரும் ஒன்றுய்ச் சென் றெதிர்த்து யுத்தம் பண்ணுவோம்! வாருங்கள்! வாருங்கள்!!" என்று மேகமுழக்கம்போல் ஹே ஹே யென்று இரைந்து நகைத்து, உதடு மடித்து, அங்குள்ள அரசர்களனைவருங் கடற் பெருக்கம்போல் வந்து ஒரு களைத்த சிங்கத்தைப் பல கஜக்கூட்டங்கள் செறிந் தனவென்று சொல்லும்படியாய் நாற்புறத்து மொய்த்தார்கள்.

அபிமன்னன் வாள்யுத்தம் புரிதல்.

அப்போது விரிந்த சமுத்திரம்போல் மூன்று விதமாகக் கட்டி வைத்த வீரர்கள் முதலாகிய சேனைகளெல்லாரும் மண்ணை விட்டு விண்ணிற் குடியேறும்படியாகிய ஒருகொடிப் போதில் யுத்தஞ் செய்து வென்ற வெற்றிவீரனுகிய அபிமன்னனை ஒப்பற்ற துரோணுசாரியர் கண்டு கனைத்து நினைத்துத் தலைகுடுக்குற்று, "அப்பா! இவனை யெப்படி ஜெயிப்போ" மென்றேங்கி, பின்பு சிறிது தேறினவராயோங்கி, ஹரிஓமென்னும் பிரணவமாகிய மந்திரங்களு டன் ஆயிரந் தேவதாஸ்திரங்களை எடுத்துத் தொடுத்து விடுத்தார். அந்தக் கணைகளை யெல்லாம் பருக்கைக் கற்கள் கலகல வென்றுரை யிடுஞ் சிலம்பணிந்த பாதங்களையுடைய அபிமன்னுவானவன் தன் மேற் படவொட்டாமற் கரத்திற்பிடித்த வாள் வீச்சினுற் கண்ட கண்ட துண்ட துண்டமாகக் கரணையாடி எழுந்து, பூமியிற் பதுங்கி ஒதுங்கி யிருந்து, தன்மீது சோனுமேகத்தைப்போல் அம்புகளைச்

சொரியுந் துரோணசாரியருடைய தேரிற் பாய்ந்து, அவருடைய வில்லையும், சாரதியையும், நான்கு குதிரைகளையும், ஏறிய தேரையுஞ் சில சில துண்டமாகப் பல பல வென்று உதிரும்படியாய் வடிவாள்கொண்டு மோதி, உடனே வானில் உயர்ந்து பூமியிற் பாய்ந்து, மன்னர் மண்டலீகர் முதலாயுள்ள வயவீரர்களைக் கால்மாடு தலைமாடாக விழும்படி ஓட்டிவீசி வெட்டி யெறிந்தான். இப்படி யாவரையும் வீசி வெட்டி யெறிந்து மத்தியானச் சூரியனைப் போல் வடிவமெல்லாம் உதிரந் தோய்ந் தொளிரும்படி நின்ற விஜயகுமாரன் மீது மறுடியுந் தேரேறிச் சேனாதிபதியாகிய ஆசான் வந்து பூசாவிதிபெற்ற புரதகனஸ்திரம் விடுக்க, அது வாசாமகோசரமாய் வந்து நாசப்படுத்த, வந்தடுத்த அந்தக் கணையையுங் கிழித்து அவருடைய, தேர், குதிரை, சாரதி, வில் முதலாகிய வீரபட்டத்தையுந் தட்டி வெட்டியபோது மறுபடியும் வேறு தேரேறி வந்தார். இப்படி ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம், நான்குதரம், ஐந்துதரம் இப்படி அனேகந்தரம் வந்தார். அவரெத்தனைதரம் வந்தாலும் அத்தனை தரமும் வாளாயுதத்தா லழித்து, அவருடைய வடிவத்தையுங்கீறி, அக்கீறல்களினின்றும் பெருகிய உதிரங்கள் ஆறுபோ லோடும்படி அழகு செய்து, இளம்பிறை போன்ற அபிமன்னன் செருக்கடைந்து சிலைக்குருவை நோக்கி "ஐயா! சேனாதிபதியே! வெட்கமில்லாமல் இன்னும் எத்தனைதரம் வருவீர்? உமக்கு இன்னும் ஒன்றும் அரையுமாயுள்ள தேர்களையுங் கொண்டுவந்து ஒழித்து விடவோ? ஐயோ! உடம்பு சாகவில்லையா? இதுவொரு வீரமா? உம்மைத்தானே விற்குருவென் றுரைப்பது? உம்மிடத்திலேயா அர்ச்சுனராஜனுக் கநுர்வேதங் கற்றது? ஆ! ஆ! போதும்! போதும்!" என்று சிரக்கம்பங் காக்கம்பஞ் செய்து நகைத்தான். அப்போது இனி எப்படி இவனைக்கொல்லு முபாயமென்று வேத புங்கவனாகிய துரோணச்சாரியர் சிந்தித்திருக்கும் போது அவர் வெறுங்கையுட னேறும்படி அபிமன்னன் வாள் கொண்டுவீச, அக்காலையில் மறுபடியுஞ் சிலைக்குருவானவர் இமயமலைபோன்ற தேரேறி வந்து, நிலைபெற்ற வில்லை வளைத்துக் கதிரவன் கணையையும் பிறைமுகக் கணையையும் பூட்டி, அபிமன்னன் கைக் கொண்ட வாளாயுதத்தைப் பொடிப் பொடியாகப் போகும்படி ஓடித்தனர். சத்துருக்களுடைய பிராணவாயுவைப் புசிக்கும் பசியினையும் பிளப்பாகிய வாயையுமுடைய ராகு வென்னும் சர்ப்பம் போன்ற அபிமன்னுவின் வடிவாளானது கொய்யுந் தவிடும்போல்

கொறுங்கிப் பூமியில் விழுவதற்கு முன்னே, சூரிய குமாரனுகிய கர்ணனவன் மாட்சிமை தங்கிய வாயுக்கணைகளை விடுத்து, நவ ரத்ன கசித குமிழ் கட்டிய அவன் கேடயத்தை நட நடவென்று பொடிசெய்துதிர்த்தான்.

அபிமன்னன் எரிச்சக்கிர மந்திர முச்சரித்துப் போர் விளைத்தல்

அப்போது வாளாயுதமும் கேடயமும் பொடியாய் மண்ணில் விழுந்தவுடனே, மருதமரமா யிருந்த களகூபரன் மணிக்கிரீவ னென்னுங் குபேரனுடைய பிள்ளைகள் நற்கதி பெறவேண்டி அம் மருதமரம் அடியுடனே சாய உரலுடன் தவழ்ந்துதிய மாயவ னுக்கு மருமகனுகிய அபிமன்னனவன் தன்னுடு விருதுபெற்று அமர் செய்யும்படியாகிய வீர வேந்தர்க ளெல்லாரும் வாசனை பொருந்திய தாமரைமலர் நிறைந்த ஒரு மடுவாகவும், இரண்டு துதிக் கையுடன் புகுந்து அம்மடுவைக் கலக்கும் பலம்பொருந்திய யானை தானுகவும் இருந்து கொண்டு, வெறுங்கையுடன் அம்மடுவில் நுழைந்து குழப்பும்போது எட்டுத்திக்கிலுமிருந்து மட்டற்ற பாணங்களைச் சொரிந்திடை விடாமற் போர்புரிந்தார்கள் அவனுடு நேர் நின்று யுத்தவிதிப்படி போரினைச் செய்ய சக்தியற்ற புல்லான் மையினையுடைய அனேக வரசர்கள். அப்போது அபிமன்னுவான வன் இராஜ வீரர்கள்பேரிற் கேசரிபோ லெதிர்த்து, தன் மாமனுகிய மாயனனவர் பூர்வத்தில் தனக்கு உபதேசித்தருளிய எரிச்சக்கிர மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு, உடைந்த ரதங்களின் சக்க ரத்தை யெடுத்து உச்சாடனஞ்செய்து விடுத்து, இந்திரனுற் பொழியப்பட்ட கல் மாரியைக் கோவர்த்தன கிரியினுலே தடுத்த கோபாலனைப் போலச் சத்துருக்கள் தன்பேரிற் பொழியும்படி யாகிய வில்மாரி யென்னுங் கணைகளை விருதாவிலொழிய விலக்கி, அந்த வீரர்களையும் முடிதறிந்து விழும்படி முடித்தான். இந்தப் படி ஒரு கையால் தேர்ச்சக்கரத்தை யெடுத்துத் திக்குகள் தோறு மோடித் துரத்தித் திரிந்து தன்னுடு யுத்தம் பண்ணுஞ் சத்துருக் கள்பேரி லெறிந்து நாசப்படுத்துந் தன்மையில், முன்பு இராக்ஷசாள் பேரிற் சக்கரத்தை விடுத்துக் கொல்லும் ஸ்ரீமந் நாராயண மூர்த் தியை ஒத்திருந்தான். அக்காலையிற் சிரத்தானுங் கரத்தானும் ஒரு வரை வணங்காமுடி பெற்ற துரியோதனமகாராஜன் மதிமயங்கி, "ஐயோ! இந்த அபிமன்னன் தேருடனும் வில்லுடனும் போர்புரிந்த

போது கொஞ்சஞ் சுமாராயிருந்தது. இப்போது தேரும் வில்லும் போன பிற்பாடு நமது படைகள் தாறுமாறுகக் கெட்டழிகின்ற னவே! இதற்கு காணென்ன செய்வேன்" என்று தன்னருகிலிருக் கும் படைகளை முடுக்கி விடுக்க, அவர்களையு மவன் தலைகாட்ட வொட்டாமற் சக்கரத்தாற் சதைக்கின்ற போது, அதேகம் யானை களழிந்தன. கோடாகோடி குதிரைக ளிறந்தன. மலைபோன்ற கிரண மணித்தேர்களொடிந்தன. வல்லமைபெற்ற வீரர்களின் தேகந் தோறும் உதிரங்களுடன் அக்கினிப் பொறிகள் சிந்தின. பூமியிற் சோரிவெள்ளந் தோய்ந்தோடிக் காய்ந்தன. அப்படி தோய்ந்து புரண்ட இரத்த வெள்ளங்களிற் குருபதி சேனையி லுள்ள கோவேந் தர் பலபேர் மூழ்கிப் பிராண னிழந்தார்கள். சிலரோடி யொழிந் தார்கள். இப்படியாக இந்த அபிமன்னனல் அல்லோல கல்லோல மாய் அவதிப்படுவதைக்கண்ட சேனாதிபதியாகிய துரோணாசாரி யரும், அவருடைய குமாரன் அசுவத்தாமனும், சூரிய குமாரனை கர்ணனும், இலையாகிர்தியாகிய வேலாயுதம் பிடித்த பலகோடி மன் னரும், முன்னம் படாதபாடும்பட்டு இனி நாங்கள் தாளமாட்டோ மென்று எய்த்திளைத்து வாடி யோடிய பேர்களும், மதங்கொண்ட யானையைக் கொலை செய்யக் குறுகுஞ் சிங்கங்கள்போற் றெழித்து உரப்பிச் சேர்ந்து, மலைமீது பொழியும் மழையைப்போலும், மரச் செறிவில் வீசும் பெருங்காற்றைப்போலும், அஸ்திரங்களைப் பொழிந்து, அபிமன்னன் கைக்கொண்ட சக்கரத்தையும் அழித்தார் கள்.

அபிமன்னன் கதாயுதங்கொண்டு போர் புரிதல்

இவ்வாறு அபிமன்னனுடைய கையிலிருந்த தேர்ச்சக்கரத்தை அழித்தொழித்த காலத்தும் அவன் சிறிது முகவாட்டமில்லாமற் பிரகாசத்துடனே நகைத்துத் திரும்பி உலகமதிக்கப் பெருமை யடைந்த கதையைக் கைக்கொண்டு, மேக கர்ஜிதப் பேரிடியின் முழக் கமாக முழங்கிப் போர் புரிந்து, ஆட்டுக் கூட்டங்களிற் புகுந்த தனி வேங்கையைப்போற்றாவி, திசாதிசைகளிலுமுலாவி, மண்டலம் கோணம், வட்டம், ஒதுங்கல், பதுங்கல், தாவல், மேவல் முதலாகிய சாகசங்களால் முனை வீரர்களை யெல்லாம் முடித்து வருங்காலையில், அசுவத்தாமன் வந்து தகைந்து, ஆயிரம் ஐயாயிரம், ஐம்பதனாயிர மென்று சொல்லும் அஸ்திரங்களைத் தொடுத்து மூடிக்கினன். அப் போது அபிமன்னன் வெகுண்டு கதையைக்கொண்டு உயரத்தூக்கி

ஞர் சப்தமேகங்களு மஞ்சியோடவும், பூமியிலடித்தாற் பிலத்து வாரங்க ளெல்லாம் அதிர்ந்து மூடவும், சுழற்றினுல் எதிர்த்தவர்கள் சிதைந்திறக்கவும், எறித்தால் அண்டகடாக முடையும்படி யாகவு மிருக்கிற அபிமன்னுவின் கதையின்றிறத்தை யறிந்து சொல்லத் தக்க அதிசூரர்கள் யாரிருக்கின்றூர்கள்? அப்போர்ப்பட்ட கதையினுல் தன்னையடித்துப் போர்செய்யும் அசுவத்தாமனைத் தேர், குதிரை, சாரதி முதலிய சார்புகளுடன் பூமியிற் றடித்துவிழ அந்த அடியினுல் மெத்தவும் வருந்தி உடல் நொறுங்கி உயிர் பிழைத்தாற் போது மென்று அவ்வசுவத்தாமன் காலோட்டமாக ஓடும்படியாய் விடுத்து, நாலுபக்கங்களிலும் நெருங்கிய நரபாலரும், கவிந்து போர் செய்யும் கால்வகைச் சேனையும், நாடியவாறே ஓடும்படியாய்ச் சாடி, தேவேந் திரனுக்குப் பௌத்திரனும் அர்ச்சுனனுக்குப் புத்திரனுமாகிய அவ் வபிமன்னன் முன்தாவுதல், பின்தாவுதல், பாடுதாவுதல், ஊடுதாவு தல், பாய்ச்சல், பதுங்கல், இருத்தல், எழுதல் முதலாகிய கைபழகி யிருக்குங் கதைப்போரின் சூழ்ச்சியைக்காட்டித் தன்னுடைய அகால சமயத்தைத் தன் தந்தையாகிய தனஞ்செயனுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று உரமாகக்கற்ற வரமாகப் பெற்ற பால்போன்ற வெண்சங்கத்தை வாயிதழில வைத்துப் பம் பம் பம்மென்று ஊதி னன். அப்போது ஈரேழுபதினன்கு லோகங்களுஞ் செவிடுபட்டுப் பட படவென்றும், விட விடவென்றுங் கடகட வென்றுங் கலங்கிப் பதறும்படிக் காயின. அந்தவேளையில் சஞ்சத்தகர் பேரில் யுத்தஞ் செய்யும் அர்ச்சுனனுடைய ரதத்திதிலிருக்குஞ் சாரதியாகிய மாயன் என்னுஞ் சந்தாமரைக் கண்ணன் இவ்வபிமன்னன் குறித்த சங்கத் தொனியானது அர்ச்சுனன் காதில் விழுவொட்டாமல் தன் னுடைய பாஞ்ச ஜன்னியத்தை யெடுத்துப் பொம் பொம் பொம் மென்று பேரொலி யுண்டாகும்படியாய் முழக்கி, லோகாலோ கங்க ளதிரும்படி அபிமன்னன் குறித்த சங்கத்தொனியை மறைத்தார். அப்போது அர்ச்சுனன் முகுந்தனுடைய முகத் தைப் பார்த்து, "ஓ சுவாமி! இவ்விடத்தில் இப்போது யாதோ ரதிசயமும், யாதொரு விந்தையும் இல்லாதிருக்குங் காலையில் தேவரீர் சங்கு முழக்கிய சந்தோஷ காற்பரிய மென்ன?" என்று கேட்க, "அப்பா அர்ச்சுனு! உன்னைப் போல் யுத்தஞ் செய்யு முத்தம னில்லையெனப் பார்த்த எனக்கே என்னை மறக்கத்தக்க சந்தோஷம் வந்திறுலும், உன்னுடன் சண்டை போடானின்ற இந்தத் துஷ்டர்களாகிய சஞ்சத்தகரும் திரிகர்த்த

ரும் மயங்கித் தியங்கிப் போனதை என்னவோ ஏதோவென் றிருக் குந் தர்மராஜன் முதலிய பேர்களுக்குத் தயிரியமுண்டாகவுஞ் சங்கத்தொனி செய்தேனேயன்றி வேறு காரண மன்று!" என்று அந்த அர்ச்சுனனுக்குச் சமாதானஞ்சொல்லி, சுவேதவாம் புரவி பூட்டிய தேரைத் தடதடவென்று சத்துருக்கள்பேரில் விடுவதைப் போல் இன்னுஞ் சற்று தூரத்திற் கொண்டுபோனார். அம்மாதிரப்படியிருக்க இவ்விடத்தில் அபிமன்னன் சுவாமியினுடைய பாஞ்ச ஜன்னியத்தின் ஓசையைக் கேட்டு மகா தைரிய முடையவனுய், காமுழக்கிய சங்கத் தொனிக்கு எதிர்முழக்க முழக்கினபடியால் சுமது தந்தையும், மாமனுகிய மாயனும் வருகின்றாரென்று மன மகிழ்ந்து, எண்காற் புள்ளினுல் பதை பதைத் திறங்கும் கொடும்புலி முதலிய யானைக்கூட்டங்கள் போலுஞ், சண்டமாருதத்தாற் பறக் குஞ் சருகைப்போலுந் தீயும்படியாய்த் துரியோதனனுடைய படை யடங்கலையுஞ் சாய்த்து மாய்த்தான். இதைக்கண்ட துரியோ தனராஜனும் ஏதேது நாம் தலையெடுக்கிறதா யில்லை என்று வயிற் றில் வாள் கட்டிக் கொண்டவர்களைப்போல் உறக்கங்கொண்டு வாடிவருந்த, அசுவத்தாமன், துரோணசாரியர், கர்ணன் முதலா கிய பேர்களெல்லாரும், கடுப்பென்னும் வயிற்றிற் கடுகெருப்பை மூட்டிக் கொண்டவர்களைப்போல் ஓட்டத்துடன் வாட்டங்கொண்டு தலை நட்டுக்கொள்ள, அபிமன்னனுனவன் கொஞ்சமெஞ்சி யஞ்சி யிருக்கின்ற வீரர்களுடைய தேர் முதலிய அங்கங்களை யெல்லாம் மளமளவென்று முறித்தேறிச்சென்று பளபளவென்று பாழாக்குங் காலையில் கௌரவர் படைகள் வயித்தியன் கைவிட்டதைப் போலா யின்.

துச்சாதனன் குமாரனுகிய துச்சனிவதை

அந்தச் சமயத்திற் காலாந்தகனிவனென்று சகல தேசராஜர் களுந் தொழும்படியா யிருக்கிற துச்சாதனனுடைய குமாரனென் னுங் காலாக்கினி விடங்கொண்ட கடும் பல்லினையுடைய கடும் பாம் பைப்போன்ற துச்சனியென்பவன், உங்களை யெல்லாம் பங்கப்பட வென்ற சிங்கம்போன்ற இவ்வபிமன்னனை நானே கொல்லுகிறே னென்று பிரமசா முதலிய பேதக்கணைகளை விடுத்துத் தேரைச் செலுத்தி யடித்தான். அந்தத் துச்சனையைக்கண்ட அபிமன்னனு வன் கடுகடுத்துப் படபடத்துக் குடுகுடு வென்றோடி, அவனேறி வந்த தேரினுடைய அச்சாணி, ஆப்பாணி, அஞ்சூராணி, குத்துக் கால், தொடங்கை, சிகரம், கொடி, குடை, குதிரை, சாரதி முதலிய

யாவுங் குப்புற்று விழுந்தழியும்படி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கதை கொண்டடித்தான். அவ்வடியினுல் அத்துச்சனியினுடைய ரத்தினமுடி முதலியன பொடியாய்ப்போய் பாதசாரியாய்ப் பூமியென்னும்படியிற் பாதம்படிய நின்று, தனது தேர், குதிரை, சாரதி, வில் முதலிய வெல்லாந் தனக்கு உதவாமல் ஒருகொடியிற் போனதைக் குறித்து விசனப்பட்டுத் தலைக்கு மொட்டைக்குல்லா தரித்து முச்சகம்புகழும் வச்சிரக்கட்டணிந்த உச்சித கதையைக் கைக்கொண்டு, அவ்வபிமன்னனுக்கு நேரில்வந்து, "அடா அபிமன்னு! உன் சாமார்த்தியத்தை இப்போது காட்டடா!" என்று கதையாற்றட்டிக் கிட்டிவந்து கைகொட்டி கடகடவென்று பற்கடித்துச் சொற்படித்துத் தடிக்க, அபிமன்னனும் உகாந்த காலாக்கினிபோலாங்கினன். கொலைத் தொழிலைக் குறைவில்லாமற் செய்யுங் கொடுங்கூற்றனும் பயப்படும்படியா யிருவருங் கதைப்போர் புரிந்தார்கள். அதெப்படியெனில், அபிமன்னனின் இடக்காலுங் துச்சனியினுடைய வலக்காலும் காட்டி, ஒருவர் காலின் புறவடியை ஒருவர் மிதித்து, கணுக்காலுடன் கணுக்கால், தொடையுடன் தொடை இடையுடன் இடை, கரத்துடன் கரம், சிரத்துடன் சிரம், ஒன்றுபட நெருங்கி, இடசாரி வலசாரி, வலசாரி இடசாரியாகச் சுழன்று, பின் பக்கமும் முன்பக்கமுங் குத்தியெழுந்து, குனிந்து, நிமிர்ந்து, பாய்ந்து, பதுங்கி, பறந்து வளைந்து கோபங்கொண்டு குமாளமிட்டெழுந்து ஆ ஆ வென்று மாறி மாறித் தோள்தட்டி மதத்து விழுந்து ஒருவரையொருவர் விட்டுத் திரும்பி, மீட்டுங்கிட்டி நெருங்கி, காலுடன் கால் மாற்றி முறையாக அடித்து ஒருவர் அடிக்கும்போது மற்றொருவர் தடுத்து, தலையிலும் உடலிலும் தரணி நடுங்கத்தாக்கி, விலாப்பக்கங்களில்மோதி, இவ்வாறு நீதியாகிய செருச் செய்வதினுலுண்டாகிய பேரொலியானது காரொலியால் விழுந்த அக்கினி வளைந்து பற்றிக் கொள்ளுங் காலையில் வாயுவுங் கூடிக்கலந்து குபீரென வீசியார்க்குந்தன்மையைப்போல் சமுத்திரங் கலங்கி, ககனமும் நடுங்கி, பளீர் பளீரென மின்னலெழும்பித் திக்குகளொடுங்கி, திக்குப்பாலகர்கள் டங்கி, திக்குக் கஜங்கள் மடங்கி, அண்டச்சுவர் படபட படீரென வெடிக்கத் தக்கதாய்த் திடமுடைய இருவரு மனமழன்று விறுவிறெனச்சுழன்று, பொன்மலைக் கொப்பாகிய புயவலிமை காட்டி, புரத கனரிவர்களெனக் கதையுடன் கதைமாட்டி, ஒருவரை யொருவர் வென்று, வெற்றிபெற வேண்டி மென்னும் வீராவேசங்கொண்டு, பின்னும் பின்னும் பலம்திகரிக்கும்படியாகப் போராடுந் தருணத்தில்,

அருமையற்ற பெருமைபெற்ற துச்சாதனனுடைய உரிமை மைந்தனுக்கு இரண்டு புயமொடியவும், எலும்புகள் நெடுநெட வென்று முறியவும், வயிற்றிலிருக்கும் பெருங்குடல் வாய்க்கு வரவும் மணிக்குடல் முதலாகிய கொடிவளையங்களெல்லாம் கொலை மார்பில் வந்திடிக்கவும் இருதொடையும் கட கட படபடவென்று நடுங்கவும், கால்கள் தடுமாறி முடங்கவும், கண்கள் சிவந்து கரும்புகையுடன் கனற்பொறி பறக்கவும் தலையிலணிந்த மொட்டை முடிவிருந்து விலையில்லா மணிகளுதிரவும், பெருமூச்செறிந்து பெதும்படியாகவும், நெருப்புப் பறக்குங் கோபத்துடன் இருகையிற் பிடித்த கதையை ஒரு கையிற்பிடித்துச் சுழற்றி ஓங்கி அடித்தான் வீங்கிய புயத்தில் வெற்றிமாலையணிந்த அபிமன்னனவன். அந்த அடியினால் துச்சனி இளைத்துத் துடிதுடித்து அவதிப்பட்டுப் பிராணன் போனதைப்போல் மூர்ச்சித்து உடனே பிழைத்து ஆறித்தேறி யெழுந்து வசையற்ற இசைபெற்ற குருகுல மணியை, மாசற்ற வம்சத்திற்குத் திலகமானவனை இணையாகிய மருத மரத்தை யுந்திய மாயன்மருமகனை, கணைபொழியுங் காண்டீவக் கரவிஜயன் புத்திரனை, நான்முருப்பியானை யூர்தியாகிய தேவேந்திரனுக்குப் பேரனை, அசைவில்லாத் திடதீரத திறலினையுடைய கிருபர்களையெல்லாங் கருவறுத்த அழிவில்லாத அழகினையுடைய அபிமன்னனை, கீர்த்திகொண்ட வல்லாண்மை பெற்ற வில்லாளியாகிய துச்சனியானவன் எதிர்த்து, தன்னுடைய ஒரு கணையை இருகரத்தாலுந் தூக்கி ஓங்கியடித்தான்.

இப்படி இவனை அவனடித்து, அவனை இவனடித்து, காலிற் கட்டிய வீரகண்டாமணி கணகணவென்று சப்திக்கும்படி காலுடன் கால் பிணைத்துத் தைத்து, வாகுவலயஞ் சிதறும்படியாய்ப் புயத்துடன் புயம் இறுகக்கட்டிப் பிடித்திடித்து, தலையிலணிந்த மகுடங் கலகலவென்றுதிர்ந்து உடைபடும்படி தலையுடன் மலைமோதுந் தன்மைபோன்மோதி, அண்டங்கலங்கக் கண்டங் குலுங்க அதட்டிக் கூவி, அஷ்டகஜங்கள் தங்களுக் கிஷ்டமாகிய பெண்ணானைகளுடன் சொக்கி விக்கி முக்கி இரத்தங்கள்கக்கி மலைத்துவாரத்துக்குட் புக்கிப் போகும்படியாய்க் கதையுடன் கதையிடித்து நெருக்கி, கீழுலகமேழுங் குலுங்கி, ஆதிசேடன் தோள்மாற்றும்படியாய்க் கதித்துக் குதித்து, வேகமாக ஓடிவந்து வேர்த்து, சித்திரப் பாவை போற் கண் சிமிட்டாமல் உறுக்கிப் பார்த்து, கண்களிற் பீரிட்டுத்

தாரை தாரையாய் இரத்தம் வரும்படி நட நட நட நட வென்று பல்லைக் கடித்து, கிரமமாகக் கலந்து, நெருங்கி யடித்து, யாவரும் அதிசயங்கொள்ள ஒரு முகூர்த்தகாலம் வரைக்கும் கதாயுதத்திற்கு உறவாகிய துச்சனியும, வில்லுக் கருச்சுன னென்னுஞ் சொல்லைப் பெற்ற வல்லவனுடைய குமாரன் அபிமன்னனும் யுத்தஞ் செய்தார் கள். அப்போது, ஒருவரையொருவர் இகழ்ந்து, ஒருவரை யொருவர் புகழ்ந்து, இருவரும் யுத்தமுறையில் மகிழ்ந்து, எனக்கிணை நீயல்ல வென்றும், உன்னை நானே கொல்லுவேனென்றும், எதிரொருவ ரில்லாத இருவரும் இணையொருவ ரில்லாமல் தங்களுக்குத் தாமே யொப்பாய போர்மலையாய் நின்றார்கள். அக்காலத்தில் இந்தத் துச்சனியிலும் நூறுபங்கு அதிகமாகிய கூரத்திரமுங் கோபமுங் கொண்டு சமயம் பார்த்துச் சாடிவரும்படியாகிய அபிமன்னுவின் புயவலிமையைக்கண்ட கடல் சூழ்ந்த நாட்டையாளும் அரசர்களும், தேவர்களும். மற்றயாவரும் அண்டமுக டதிரும்படி புகழ்ந்து துதித்தார்கள். இவையல்லாமல் தங்களுக்குவயிறு நிறைய மாமிசங் கொடுத்த இவ்வபிமன்னனை ஏத்தி வாழ்த்தி ரணகள முழுமையுங் கழுகுகள் பந்தரிட்டன. பைசாசுக் கூட்டங்களெல்லாங் கைகொட் டிப் பாடிக்கொண்டு பலவிதக் கூத்தாடின. தலையறுந்த கவந்தங்க ளெல்லாஞ் சிலவித நடனம்புரிந்து வீழ்ந்தன. ஆயுத முதலிய பாணங்க ளெல்லாம் வேக மடங்காமற் றிரிந்தன. பெருகியோடுங் உதிர வெள்ளங்களினுற் கருங்கடலுஞ் சிவந்தன. அந்த இரத்தப் பெருக்கத்தில் மூழ்கி அநேகம் வீரர்முதலாகிய சேனைகளு மிறந்தன. அச்செங்கீர்ப் பெருக்கச்சுழியில் மேகம்போ லிரைந்து யானைகளுங் குதிரைகளும் அழிந்தன. தேர்களெல்லா முறிந்து முழுகிப்போ யின. பதாதிகளுஞ் செத்தார்கள். இப்படியாக அமர்க்களங் கொண்டி ருக்கிற சமர்க்களத்தில் அரவக்கொடிபெற்ற துரியோதனனுடைய தம்பி புத்திரனும், முரசக்கொடிபெற்ற தருமராஜனுடைய தம்பி புத்திரனும் கதாயுதத்திற் கேற்பட்டிருக்குஞ் சாஸ்திரப்பிரகாரங் கதைப்போர் நடத்திப் பலம்பொருந்திய இரும்புக்கட்டுகள் கட்டிய கதையால் இருவர் தேகமுங் கொட்டிய பஞ்சுபோற் கூளமாய் நொந்து, மல்லிகை மலர்போல் வாடிக் கசங்கப் போர் புரியுங்காலத் தில் அபிமன்னுவினுடைய கதையடியால் துச்சனியானவன் தேகா பிமானம் விட்டுத் தன்னைத்தான் மறந்து, உயிரானது விண்ணுல கஞ் சேர உடலானது மண்ணுலகஞ் சேர விழுந்துவிட்டான்.

அபிமன்னன் நிரியாணச் சிறப்பு

இப்படி துச்சனியானவன் விழுந்தவுடனே அவனைவிடாமல் விற்போர், மற்போர் கதைப்போர் முதலிய பல போர்களைச் செய்த திறமேல அபிமன்னுவானவன் சற்று சிந்தை மயங்கி மெய்த்தளர் வுடன் சோர்ந்து நிற்குஞ் சமயத்தில், அவ்விடத்திற் பதுங்கி யிருந்த சயத்திரதனுனவன் சிகரதண்டமென்கிற ஒரு கதாயுதத்தினு லபி மன்னுவைக் கொன்றான். பின்னும் இராஜ நீதிக்குந் தர்மத்திற்குந் குறைவாகத் தக்கதாய் முறைமை யில்லாமற் பதினுயிரம் அரசர் தூரநின்று கதாயுதங்களினுலும், வேலாயுதங்களினுலும், பாலா முதலிய பல்லயங்களினுலும் ஈட்டி எறி ஈட்டி முதலிய குத்துப் படைகளினுலும் அபிமன்னுவை வதை செய்தார்கள். அஃதெப்படி யெனில் தாகவிடாயால் தண்ணீர் குடிக்கச் சுனையிலிறங்கி வகை மோசத்தால் முழுகிய யானையைக் கிராதகராகிய பல வேடர்கள் கூடிக் கொலைசெய்து தூணிக்கும் நிலையைப்போல் அங்கவனுக் கஞ்சிப் பதுங்கி யிருந்த அரசர்களெல்லோருங் கும்பு கும்பாகக் கூட்டங் கூடிக் கொன்றார்கள். ஐயா மகாராஜனே ! இத்தனை பேர்க ளாலும் இப்போர்ப்பட்ட அடிபட்டிறந்த அபிமன்னுவானவன், மறங் குடிகொண்டிருக்குஞ் சிவந்த விழிகளும், சிறிய முத்தைப் பதித்ததை யொத்த புன்னகையும் காந்தியையுடைய சுந்தரச் சந்திரமுக மும், கமல குண்டலந்தாங்கிய இருகாதும், பலதிசையும் ஜொலிக்கும் விலையில்லா நவமணியழுத்திய மகுடமும், பகைத்த பார்த்திபரை ஜெயிக்கிறேனென்று பருதிபோற் கட்டிய வீரபட்டமும் ஆகிய இவைகளெல்லாம் பிரகாசிக்கும்படி. பூமி பிராட்டியின் மடி மீது நித்திரை செய்கின்ற தன்மையைப்போ லிருந்தான். அவ னிறந்து இரண்டு நாழிகை வரைக்கும் அரியோதனன், துச்சா தனன் முதலிய திறம்பெற்ற அரசரெவருங் கிட்ட நெருங்கப் பயந்து, துச்சனியிறந்த துக்கத்தையும் பாராட்டாமல் தூரத்தொலைவி லிருந்தார்கள். அதேனெனில், மாயன் மருகனுகையால் வாயுவைப் பந்தித்துக்கொண்டிருந்து நாம் கிட்டவரக் கண்டு மறுபடியும் பிழைத்தெழுந்து நம்மைப் பிழைக்கவொட்டாமற் கொல்லுவா னென்னுங்கலவரம் அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. அந்த அபிமன்னன் அடங்கி விட்டது எப்படி யிருந்தென்றால், உதயகிரியிலுதித்துக் கிரணங்களை விரித்துக் காலவளவைக் காட்ட

வந்த சூரியதேவன் மாலைப்போதில் தன்னுடைய குண வீரூண்யங்களை யெல்லாம் அடக்கிக் கொண்டு மேற்றிசையிலிருக்கும் அஸ்தமன கிரிக்கப்பால் ஓடுங்கியதைப் போலும், விசாலமாகிய அநேக வனங்களைக் காரியா யெரித்த அக்கினிதேவன் புகை முதலிய பொறிகளும் கொதிப்பும் ஆறி அடங்கியதைப்போலு மிருந்தது. ஐயோ! பாவம் கணக்கில்லாத சேனைகளைக் காய்ந்து, அதிரதத்தலைவர்கள் தேய்ந்து, அனேக வீரர்கள் மாய்ந்து, எவர்களுந் தலைகாட்டாமற் புறங்காட்டி ஓடும்படியாய் விட்ட ஆண்சிங்கமாகிய அபிமன்னன், நிலவுவளரும் இளம்பிறையானது வானத்தை விட்டு வழுவி விழுந்த தன்மையைப்போல் நிலத்தில் விழுந்து விட்டான்.

ஓ ஜனமேஜய மகாராஜனே!

"மாயனுந் திருமாமன் றனஞ்சயனுந் திருத்தாதை வானோர்க்கெல்லா
ராயனும் பிதாமகன் மற்றெருகோடி நராதிபரா நண்பாய் வந்தோர்
சேயனு மபிவனுவாஞ் சயத்திரதன் கைப்படுவான் செயற்கைவெவ்வே
றுயரா ளவனிதலத் தவ்விதியை வெல்லும்வகை யார்வல்லாரே"

இவ்வுலகத்தை யெல்லாங் கர்ப்பத்தில் வைத்து ரக்ஷிக்கும் ரக்ஷககர்த்தாவாகிய மகாவிஷ்ணுவானவர் அம்மானுக விருந்தும் காலகேய நிவாத கவசர்களைச் சங்கரித்து இந்திரனுக்குப் பட்டங் கட்டித் தானுந் தெய்வலோகச் சேனுதிபதியா யரசுபுரிந்து சிவசக்தியுடன் சோமசுந்தரக் கடவுளைக் காட்சியாகக்கண்டு தாழ்ச்சியில்லா அருட்கொண்டு பாசுபதம்பெற்றுத் திசைகளில் வசையற்ற இசை பெற்ற விஜயனைச் சிறந்த தந்தையாகப் பெற்றிருந்தும், முப்பத்து மூக்கோடி தேவர்களுக்கு நாயகருகிக் காமதேனு, கற்பகத்தரு முதலிய நிதிகளைப்படைத்து, இந்திராணி சமேத இந்திரவிமான வைபோகங்களைப் பெற்ற தேவேந்திரன் பாட்டனுராகக் கிடைத்தும், தருமமே ஜெயஞ் சத்தியமே நித்தியமென்னுந் தருமராஜனும் திரிபுவனதீரனுகிய பீமசேனனும் பெரியதந்தையாக விருந்தும், நகுல சகாதேவர்கள் சிறிய தந்தையராகியும், வெற்றிவேல் தாங்கிய ஒருகோடி ராஜகுமாரர்கள் உயிர்த் தோழமையாக வந்து பிரியா விடையா யிருந்தும், இளஞ்சிங்கக் கன்றுகிய அபிமன்னுவானவன் இந்த ரணகளத்தில் மடியலாமா? இது ஞாயமோ? ஐயோ! (தாந்தாமுன் செய்த வினை தாமே யனுபவிப்பார்) என்னும் வாக்கியப்படி எத்தனைபேர் நிருந்தாலும், அவருடைய கர்மானுபவத்தை யவரவரே அனுபவிக்கவேண்டுமல்லது அதைத் தடுப்பதற்கு

எவர்களாலுமில்லை. மேலும் ஒருவருக்கொருவர், உயிர்த்துணை யென்பது ஒருகாலுமில்லை. ஆகையால், ஆரிருந்தாலும் ஆவ தொன்றில்லை. ஊழ்வினையே பெரிதென்பது கருத்து. இப்பால் புத்திரனை அபிமன்னன் பூமியில் விழுந்ததைப் பார்த்த அக்குரு க்ஷேத்திரத்திலிருந்த பற்பல ராஜாக்களுஞ் சேனைகளுங் கண்ணீர் விட்டழுது "ஐயையோ!! அநியாயமே! யாவராலுந் துதிக்கும் படியாகிய பிரமகுலத்திற் பிறந்து விற்குருவாகி மேலாகிய மனுமறை தெரிந்து மேன்மையான புத்தியை யுடைத்தா யிருக்கின்ற புகழ் பெற்ற துரோணாசாரியும், மிகு கொடையாளனாகிய கர்ணனும், அநேகங்கோடி யேமத்தேராகிய சேமத்தேரேறிய வீரர்களும், பூலோகத்திற்கு ஏற்படுத்தி வைத்த புண்ய முதலிய நீதிமுறை தப்பி அறியாத ஒரு சிறுவனுடைய உயிரை மாய்த்தார்களே! ஐயோ! இவர்கள் பழிக்கொலைக் கஞ்சாத பாவிகள்! இப்போதுதான் அவனியாளும் அரசர்க்குரிய குளிர்ந்த முகமும், கோணாத வார்த்தையும், சத்தியமும், தருமமும், கிருபையும், பெருமையும் செங்கோலும் மநுநீதியும், கெட்டுப்போய்விட்டன. இனிமேல் நாம் இவ்விடத்தி லிருந்து வாழ்வதிலுங் காடேகுதியாய்ச் செல்லுவது நன்மை. அல்லது இறப்பதுமேன்மை!" என்று ஏங்கி யுருகி விசனப் பட்டுப் பின்னுஞ் சொல்லுகின்றார்கள்—

"சேடன்முடி நெளியவரு செம்பொற்றே ரழிவதோ வந்தோ வந்தோ,
கேடகவா ளணிவலயக் கிளர்புயத்தோ ளறுவதோ வந்தோ வந்தோ,
கூடகவெங் கதையொன்றும் சிந்துபதி கொல்வதோ வந்தோ வந்தோ,
வாடமரி லருகொருவர் வாராம லிருப்பதோ வந்தோ வந்தோ,

கன்னனையுந் தேரழித்தான் கந்தனிலும் வலியனே யந்தோ வந்தோ
மன்னவரை வருமிருக்க மைந்தனுயி ரழிவதோ வந்தோ வந்தோ,
பொன்னுலகோர் வியந்துருகிப் புந்தியினன் மலர்ப்பொழிந்தா ரந்தோ வந்தோ
வன்னெடுத் துவசனிவற் காயுமிகக் கொடுத்திலனே யந்தோ வந்தோ,

சரமறுத்தான் வில்லறுத்தான் தேரறுத்தான் கொடியறுத்தான் சமரபூமி,
யுரமறுத்தான் முதற்பொருத வுதயதின கரன் மைந்த னுடன்றுசீறிக்
கரமறுத்தா னடுப்பொருத கார்முகத்தின் குருவிசயன் காளை தன்னைச்,
சிரமறுத்தான் பின்பொருத சயத்ரத னிவன்வீரஞ் செப்பலாமோ."?

"ஆ! ஆ! ஆதிசேடனுடைய பணமகுடம் நெட நெட மட மட வென்று ஓடியும்படி செலுத்திக் கொண்டுவந்த அபிமன்னனுடைய சேமத்தேரழிந்ததன்றி, அவனுடைய புஜபல பராக்கிரம முதலிய

வைகளும் ஒரு சிந்துபதியா லழியத்தக்கதோ? ஐயையோ!! சர்வஸம்ஹாரகால முருத்திர மூர்த்தியைப்போல் அமராடிச் சத்து ருக்களை அழித்துவரும் பிள்ளைக்கு ஒருவருதவியில்லாமற் போச் சுதே! கந்தஸ்வாமியைப் பார்க்கிலும் வலிமையுடைய அபிமன்னுவா னவன் அங்கதேசாதிபனுகிய கர்ணனை, அனேகந் தடவைத் தேரழித் தானே! இரேழுலகத்தையு மெரித்து, ஏழுகடலையும் வறளச்செய்து, ஏழுமேகத்தையும் கருக்கி இசை பெறுஞ் சாமார்த்தியராகிய தந்தை மாரைக்காட்டிலும் பொன்மலைபோலிருந்தும், அருமையான மைந்த னுயிரழியத்தக்கதோ? ஆ! ஆ! என்ன பாவம்? இந்த மகாசூர னுடைய வீரத்தைப் பார்த்திருந்த தேவர்களெல்லாரும் தாளாமல் மனமுருகி, அன்புடன் புஷ்பமாரி பொழிந்தார்களே! ஐயையோ!! இளமைப் பருவமும், சுந்தர உருவமும், இருகண்களில் மறமும், மின்னென ஒளிருங்கிறமும், எதிர்த்தோரைக் கொல்லுங் திறமும், ஈகையாகிய அறமும், ஐயந்திரிபில்லாமற் கசடறக் கற்ற கலவியும், விசனமில்லாமற் பெற்ற செல்வமும், இன்னும் வேண்டிய நன்மை களை யெல்லாம் இவனுக்குப் படைத்தருளிய அன்னக்கொடியோ னுகிய பிரமதேவன், அதிர்ஷ்ட மெழுதும்போது அதிகமாக ஆயு ளெழுத மறந்தானே? ஆ! பாவி! அடடா!! எத்தனை பேர் எத்தனை முகத்திலிருந்து, எத்தனைவிதமாகிய, எத்தனைகோடி பாணந்தொடுத் தாலும், அத்தனையும் பொறுத்து, அத்தனையும் அறுத்து, அத்தனை பேரையும் அழித்தானே! ஐயையோ!! எத்தனைகோடி வில்லை முறித்தான்? எத்தனை விதமாகிய கொடியை வெட்டினான்? எத்தனை கோடி குடைகளைத் தள்ளினான்? எத்தனையாயிரந் தேர் களை யழித்தான்? ஆ! தெய்வமே! இந்த குருக்ஷேத்திரமானது பதி னெட் டக்ரோணிப் படைகளைச் சுமக்கமாட்டாமற் பாரங்கொண் டிருந்த பளுவைத் தீர்த்தானே! சேனுபதியான துரோணுச்சாரி யரை அடித்துத் துரத்தியது ஒருதரமா? அம்மம்மா!! காற்றி லோடு நூலோட்டம்போற் பலதரமுங் காலோட்டமாக ஓடவிட் டடித்தானே! அநேகம் இராஜ குமாரர்களுடன் போராடிப் பிள்ளை களென்கிற பேரில்லாமற் றலைகளை யறுத்துத் தள்ளிய ஆரபார அதிகாதீர வீரப்பிரதாப சூரனுகிய விஜயன் குமார னென்னும் இவ்வபிமன்னனுக்குத் திரிபுர ஸம்ஹாரியாகிய சிவனெருவனே ஒப் புச் சொன்னற் சொல்லலாமே யொழிய, ஆயுதம் பிடித்து யுத்தஞ் செய்து வெற்றிபெற்று அவனியையாண்ட அரசர்களில் இந்த அபி மன்னுராஜனுக்கொப்பாகிய பேர்கள் எவர்களு மில்லையே: தெய்

வமே! ஒருவருக்கொருவர் ஈடாக இரண்டுபேர் மூன்றுநின்று யுத்தஞ் செய்வது மநுமுறமை. அதை யநுசரித்து நடப்பது உலகியற்கை. அப்படி யிருக்க, அதைவிட்டு நான்கு புறத்திலும் கோடாகோடி ராஜர்கள் வளைந்து கொண்டு போராடி ஒருவனைக் கொன்றார்களே! ஐயையோ!! இவனேறிய தேர் அழிந்தவுடன் இன்னொரு தேரிருக்குமாகில், ஒருக்காலும் இந்தப் பிள்ளை இறக்கமாட்டானே; சேமச்தே ரொன்றில்லாத குறையல்லவா இந்தச் சிறுவன் ரணகளத்தி லிறந்ததற்குக் காரணமென்று துஷ்ட சதுஷ்டராகிய நான்குபேர் தவிர மற்ற அங்குள்ள பேர்களெல்லாரும் அழுதிரங்கிப் பட்ட பாட்டை என்னென்று சொல்லுவேன்? ஜயாஜனமேஜய மகாராஜனே! அதை நான் வாக்கினற் சொல்ல என் தரமன்றென்று வைசம்பாயனர் வருந்திச் சொன்னார்.

தருமராஜன் புலம்பல்

இப்பால் அஷ்டகுலாசலங்களுடன் ஜெயஸ்தம்பம் நாட்டிய புஜபல பராக்கிரமத்தையுடைய அர்ச்சுன குமாரன் பட்டானென்று கேட்டலும், முன்னே முதுகிட்டோடிய வீரர்களெல்லாரும் பறந்தோடி வந்து பார்த்து, இவன் பொருது பொருத்திய போரையும், தங்கள் தேகத்தை வருத்திய சீரையும் நினைத்து மனம் புண்ணுகி, கண்ணுக்குக் கலத்தண்ணீர் விட்டழுதார்கள். துரியோதனனுக் தம்பிமார் முதலிய வெல்லோரும் அபிமன்னன் இறந்தானென்று கேட்டவுடனே ஜெயித்தோம் என்று சிந்தை களித்து, யமனுடைய கைக்குள் ளடங்கியிருந்த உயிர் வந்து மீண்டும் புந்தியினுழைத்ததைப் போற் பூரித்துத் தேகம் பாரித்து, தங்கள் பிள்ளைகளாகிய இலக்கண குமாரன், துச்சனி முதலாகிய பேர்களிறந்த புத்ர சோகத்தையு மறந்து, அபிமன்ன னென்னும் ஒரு பிள்ளை யிறந்தது தங்களுக்குக் கோடி பிள்ளைகள் பிறந்த சந்தோஷம்போற் கொண்டாடிச் சிறந்து, 'அப்பா! இனி ஊர் சென்று தலை வைத்துப் படுத்து நித்திரை பண்ணலாமே' என்று முகமலர்ந்து, வேதை தீர்ந்து வாதையடங்கிற்றென்றிருந்தார்கள்.

இவ்விடத்தில் இவர்கள் இப்படி மகிழ்ந்திருக்க, தாளாண்மை கொண்டு மூன்றுகலாந்து, சக்ரவியூகம் பத்மவியூகம் முதலிய யாவற்றையும் வளைந்து பிளந்து, தானொருவனுக நின்று சேனைக் கடலைக் கலக்கித் திரும்பிய மகரமச்சம்போன்ற பிள்ளையை, எப்போதும் இடைவிடாமற் கண்டு மனங்களித்திருக்குந் தந்தை

யருக் கெதிரில் வரவொட்டாமல் சயித்தவன் மறிக்க, மற்ற வீராதி வீர வேந்தர்களெல்லாருந் தடுத்துப் பிரிக்க, ஓடுகிறான் ஓடுகிறான் என்று அவமானப்படுத்தி மீண்டும் பத்மவியூகம் வரையில் மடக்கிக்கொண்டு போய்ப் போர் புரிந்தனரன்றோ ? அப்படி போர் புரிந்த மன்னவரெவரையும் விண்ணுலகேற்றித் தேவர் முதலிய யாவரும் புகழ்ந்து கொண்டாடும்படியாய்ப் பேர்பெற்ற அபிமன்னன், காமிவ்விடத்தில் வெட்டி மாட்டி அனுப்பிவைத்த வீரர்கள் வீரசொர்க்கம் போய்ச் சேர்ந்தார்களோ ? இல்லையோ ? காம்போய்ருசுவிற் பார்த்து வருவோமென்று ஆயப்போனவனைப் போல் மாய்ந்து விண்ணுல கேறினதை, வேள்வியிலும், கேள்வியிலும், வின்மையிலும், நன்மையிலும், தன்மையிலும், உண்மையிலும், திண்மையிலும், அருமையிலும், பெருமையிலும், வீரத்திலும், தீரத்திலுஞ் சிறந்து மிகுந்து மன்னுயிர்க் கெல்லாம் உறவாகிய உத்தமகுண புத்திமானுகிய தர்மபுத்திர மகாராஜன் காதில் காராசஞ் சொருகியதைப்போல் கேட்டு,"அடா செல்வனே!"என்று சோர்ந்து, வயிற்றி லறைந்துகொண்டு வாடிப்புலம்புவ தாயினர்—

" பிறந்தினை முதலாகப் பெற்றெடுத்த விடலையினும் பீடுந் தேசுஞ்
சிறந்தனை யென்றனைக்கொண்டே தெவ்வரைவென்று லகாளச் சிந்தித் தேனே;
மறந்தனையோ வெங்களையு மாலையுஞ்சூ வீளைப்புண்டு மருவார்போரி
லிறந்தனையோ என் கண்ணே வென்னுயிரே யபிமாவின் றென்செய்தாயே

தேனிருக்கு நறுமலர்த்தார்ச் சிலைவிசயனிருக்கவரைத் திண்டோள் வீமன்
ரூனிருக்க மாநகுல சகாதேவர் தாமிருக்கத் தமராய்வந்து
வானிருக்கின் முடிவான மரகதமா மலையிருக்க வாழ்வானெண்ணி
யானிருக்க வினையறியா விளஞ்சிங்க மிறப்பதோ யென்னே யென்னே

நின்றனையே யெனைக்காத்து நீயே கென் றியானுரைப்ப நெடுந்தேரூர்ந்து
சென்றனையே யிமைப்பொழுதிற் றிகிரியையு முடைத்தனையே தெவ்வரோட
வென்றனையே சுயோதனன்றன் மகவுடனே மகவனைத்தும் விடங்காலம்பிற்
கொன்றனையே நின்னுண்மை மீண்டுரைக்கக் கூடினையோ குமரரேறே

உனக்குதவி யொருவர்வர வொருதனிநின் றமருடற்றி யொழிந்தமாற்றந்
தனக்குநிகர் தானுன தனுஞ்சயனுங் கேட்கினுயிர் தரிக்குமோதா
னெனக்கவனி தரவிருந்த தித்தனையோ மகனேமற் றினிமேலிந்தச்
சனக்குவைகொள் தரணிமிசை தனக்குவை கொண் டிருப்பதென்னே தமிய
னேனே

"அடா என் செல்வமே ! நீ பிறந்த நாள் முதற்கொண்டு நமது குலத்துக் குரித்தாகப் பிறந்திருந்த பிள்ளைகளைப் பார்க்கிலும் சிறந்த

பெருமையும், தகுந்த அழகும், மிகுந்த கல்வியும், வளர்ந்த வீரமு முடையதாய், நாளுக்கு நாள் அபிவிர்த்தியாய் உலகமதிக்க நமது உரியார் துதிக்க ஓங்கி வருகின்ற உன்னைக்கண்டு கண்ணேறுபடப் போகுதென்று உள்ளங்களித்து, 'கல்லெல்லாமாணிக்கக் கல்லாமோ?' என்பதுபோல் நமது பற்பல பிள்ளைகளிலும் இந்த ஒரு பிள்ளையி னுலேதான் நாம் சவுக்கியப் படவேண்டுமென்றும், இவனைக்கொண்டு சத்துருக்களை வென்று உலகாள வேண்டுமென்றும், எண்ணங்கொண் டிருந்தேன்! என்னைய னே! என்னெண்ணத்தின் வாயில் மண்ணைப் போட்டு எங்களை மறந்தனையோ? அப்பா! பத்மவியூகத்தை ஜெயஞ் செய்துவந்த உன்னை ஒரு கணப்பொழுதில் வளைத்துக் கொண்டுபோன சத்துருக்களுடனே சமர்புரிந்து இறந்து விட் டாயோ என்ன மோசஞ்செய்தாய்! என் கண்ணே! என்னுயிரே? அபிமன்னுவென்னும் அரசே! ஆ! ஆ! தெய்வமே! தேனும் வண் டுஞ் செறிந்திருக்குந் திவ்விய மலர்மாலையணிந்த உன் தந்தையாகிய சிலை விஜயனிருக்க, மலைபோன்ற திண்டோளினையுடைய பீமசேன னிருக்க, பெருமை பொருந்திய நகுல சகாதேவர்களிருக்க, இருக்கு வேதத்தின் முடிவில் அடிவைத்திருக்கும் பசுமைதங்கிய கதிர்களை வீசும் மரகத மாலைபோன்ற மாயன், கோபால குலத்துதித்த ஆயன், நமக்குப் பந்துவாக வந்தமைந்திருக்க, உன்னுலே வாழ்வுபெற்று முன்னுக்கு வரலாமென்னும் பேராசை கொண்ட நானிருக்க, முதி யமாமிருக்க இளமர முறிந்ததைப்போல் விளைவது இன்னதென்றறி யாத என்னிளஞ்சிங்கம் இறப்பதோ? இதென்ன விபரீதம்? அறந் தப்பிப் போச்சோ? அநியாயமிகலாச்சோ? ஈதென்ன காலம் ஈசனே? அடா குழந்தாய்! உன்றந்தை செய்த உத்தரவின்படி என்னைக் காத்து நின்றனையே! நீபோய் வெற்றிகொள்ளென்று நாணுரைக்க, என் வார்த்தையைத் தள்ளாமல் நெடிய தேரூர்ந்து சென்றனையே! இமைகொட்டுமுன் போய்ச் சூசிகாவியூகம், சக்ரவியூகம், பத்ம வியூகம் இவைகளை யெல்லாம் உடைத்துச் சத்துருக்கள் வாடி யோட வென்றனையே! துரியோதனனுடைய பிள்ளைகளுடன் ராஜ புத்திரர்களை யெல்லாம் விஷாக்கினி பாணத்தாற் கொன்றனையே! துரோணசாரி கர்ணன் இவர்கள் முதலாகிய பேர்களையெல்லாங் குன்றச் செய்தனையே! இப்பேர்ப்பட்ட சுத்தவீரன் தன்னுடைய ஜெயத்தைத் தானே சொல்லிக்கொள்ளக் கூடாதென்னுந் தர்மத் தைக்கருதி, மர்மத்தை வெளிவிடாத உன்னுண்மையைத் திரும்பி வந்து உள்ளங்கனிந்து எனக்குச் சொல்லக் கூசினையோ தங்கமாகிய

குமாரசிங்கமே! உனக்குதவியாக ஒருவருதவாமல் நீயே தனிமையாய் நின்று அமர்புரிந் திறந்த வசனத்தைத் தனக்குத் தானே நிகராகிய தனஞ்செயனுங் கேட்கத் துணிவாளே! கேட்டுஞ் சகிப்பாளே? உயிர் பொறுத்திருப்பாளே? என்னுள்ளக்கனிவே! நான் போய் யாவரையுமுடித்து இவ்வகண்ட ராஜ்யத்தையெல்லாம் உமக்குப் பட்டங் கட்டுகிறேனேயா வென்று எனக்கு உறுதி வார்த்தையைச் சொல்லிப்போன அருமைமகனே, எனக்கு அரசாட்சி கொடுக்கிறே னென்று சொன்னது இவ்வளவுதானே? இனி யிக்கோடி ஜனங்களோடுங்கூடிய இவ்வுலகைச் சகல சம்பத்தோடு மாள்வதில் தமியேனுக்கென்ன சந்தோஷம்? ஓ என்னிரு கண்மணியே!" என்று யேங்கி மயங்கி, மனக் கவலையுடன் சுவாசமடங்கி, அழகிய தேரின்பேரில் மன்னர்க்கு மன்னராகிய தருமராஜன் தம்மை மறந்து வீழ்ந்துவிட்டார்.

பீமன் நகுலன் சகாதேவன் இவர்கள் புலம்பல்

இவ்வாறே பீமசேனனும், நகுலனும், சகாதேவனும் பூமியில் வீழ்ந்து புரண்டு பதறி, விண்ணுலகமும் விம்மும்படியாய்க் கதறிப் புலம்புவதானார்கள்.

"சங்கலா ரிடைவளைத்த சக்கரத்தை யுடைப்பதற்குத் தமியேனெய்தி,
யங்குலா வருமிரதத் தரசரையுந் தொலைத் துன்னை யடுப்பான் வந்தேன்,
பங்கெலா மரகதமாம் பவளநிறப் பொருப்புதவு பைம்பொற் கொன்றைத்
தொங்கலார் கோறுவித்த சூழ்ச்சியையின் றறிந்திலனே தோன்றலனே நான்,

மின்னும லிடித்ததென வீழ்த்தபொலந் தொடையாலும் விடையோனீந்த
பொன்னுர்வெங் கதையாலு மல்லதபி மீனயமரிற் பொரவல்லார் யார்?
தன்னுண்மை நிலை நிறுத்திச் சங்கமுழக் கியவீர சிங்கசாப
வென்னுனே யிறந்து பட வின்னமுநா னிவ்வுயிர்கொண் டிருக்கின்றேனே.

எடுத்தப்படை யனைத்தினுக்கு மெதிரில்லை யெனக்கலக லெல்லா முன்னை,
யடுத்ததுகண் டையா நின் னருயிர்க்குக் கரைந்து கரைந் தையுற்றேன்யான்
விடுத்தபெருந் திருத்தாதை விழிகளிப்பப் பகைவென்று மீளாதென்னைக்
கெடுத்தனையே பிழைத்தனையென் றினியொருவர் வந்துரைக்கக் கேளேன்
கொல்லோ"

அப்பா என்தோன்றலே! உன் பெரிய தந்தையின் வசனத்தைக்கேட்டு நீ போர்செய்யப் புறப்பட்டு வியூகத்தை யுடைத்துச் செல்லும்போது, இடைக்கிடை வளைத்துக்கொண்டு சக்ரவியூகத்தை யுடைத்து உனக்குச் சகாயஞ் செய்வதற்காக நான்வந்து

அங்கு உலாவிக்கொண்டிருந்த தேர்மன்னரை யெல்லாம் போக்கி உனக்குத் துணையாய் நெருங்கினேன். அப்போது இடப் பாகத்தில் மரகதக்கொடி படர்ந்திருக்கும் பவளமலை யெனுஞ் சிவபிரானருளிய வரத்தாற் பெற்ற 'மாலேயாற் சிந்து தேசாதி பன் உரத்தாற் செய்த சூட்சி யின்னதென் றறியாமல் மயங்கி யிருந்து போர்புரிந்தேனே! மதியற்றேனே! மின்னும விடித்தாற் போல் விடையூர்தியாகிய சிவபிரானளித்த மாலேயா லுனக்குத் துணைவந்த பிதாவையு முன்னையுஞ் சேரவொட்டாமல் மோசஞ் செய்து பத்மவியூகத்தி னடுவிற் பதுங்கியிருந்து கதையினால் வென் றேனென்று போர்கொண்ட தல்லது, உன்னெதிரில் நீதியின்படி நின்று போர்செய்து வெல்பவருமுண்டோ? ஓ தரியலரேறே! சூசிகா வியூகம், சக்ரவியூக மென்னுமிவைகளை யிமைக்குமு னுடைத்துச் சென்று, அதிரதர் முதலிய வீராதிவீரர்களையெல்லா மதமாக்கி ஜய சங்கத்தினை முழக்கிய வீர சிங்கம்போன்ற நீ பட்டனையென்று கேட்டும், இன்னு மென்னுயிரை வைத்திருக்கின்றேனெ: ஐயையோ தெய்வமே! ஓ என்னிளஞ்சிங்கமே! என்னுடைய குலக்கொழுந் தாகிய தோன்றலே! நீ யெடுத்துத் தொடுக்கும் ஆயுதங்கள் எல்லாவற்றிற்கும் உனக் கொருவ ரெதிரில்லை யென்று அத்தத்த ஆயுதங்களுக்குரிய சாஸ்திரங்களெல்லாம் உன்னையடுத்து, எனக் கென்னவேலை? எனக்கென்னவேலை? சொல்லீரென்று விட்டுப் பிரியாதிருக்கும் விதத்தைக்கண்ட யான், ஐயனே! உன்னுயிர் போய்விட்டதென்று கேட்டுங் கரைந்து கரைந்து சந்தேகங்கொண் டேன். நான்கொண்ட சந்தேகம் பொய்யோ? அல்லது மெய்யோ? நல்லது உன் பெரிய தந்தையானவர் யுத்தஞ்செய்ய உன்னை விடுத் திருக்க நீபோய் பகைவரைவென்று பலவிதஜெயமுங் கொண்ட பிள்ளையாகிய நீ அவருடைய கண்கள் களிக்கத் திரும்பிவராமற் போன காரியமென்ன? இருந்தால் வருவையே, என்மகனே! நீ இறந்துதான் போயினையோ? இறந்தானென்று கேட்கப்பெற்ற என் காதானது, அபிமன்னன் மறுபடியும் பிழைத்தானென்று, இன் னொருவர் வந்து சொல்லக்கேட்கும் பாக்கியம் பெறுதோ? என் னிறையே இறையே!" என்று பீமசேனனும்—நகுல சகாதேவரும் முறையிட் டழுதார்கள்.

"ஓ மகாராஜனே! அப்போது அபிமன்னனுடைய வீரமே வீர மென்று இருதிறப் படையினருஞ் சேர்ந்து பலவிதமாகப் பேசிக்

கொண்டு பசி முதலியனவுந் தோன்றுமற் கண்ணீருகுத்து நின்றார்கள். அந்த ரணகளத்தில் வீழ்ந்துகிடந்த அபிமன்னுவின் புயமலையைக்கண்ட சூரியன் அஸ்தமனகிரி இதனை சமீபத்தில்வந்ததேதென்று திர்மைகொண்டு மனமருண்டு தடுமாறி அபிமன்னனுடைய புயமென்றுதேறித் தெரிந்துகொண்டு, தானும் அவனைக் குறித்து வருந்தித் தனதிடமாகிய மேற்றிசையேறி அஸ்தமனகிரியைச் சார்ந்தான். பின்பு தருமராஜன் நமது மைந்தனிறப்பதற்குச் சிந்துபதி காரணமாயிருந்தானென்று சிந்தைவருந்தி, சூரியனஸ்தமனமாகியதும் பார்த்து, தம் சேனைசனியங்களுடன் திரும்பினர். பலவான்களாகிய பந்துமித்ரர் யாவரும் மூன்றும் பிறைமுடித்த முக்கண்ணன் வரத்தால் செயித்திரத னென்னும் யானையானது பாண்டவரென்னுஞ் சிங்கங்களை ஜயித்ததல்லவா? தெய்வமே! தெய்வமே! காலந்தலைகீழாய் விட்டது. "குப்பை யுயர்ந்தது! கோபுரந்தாழ்ந்தது" இனிநாமென்ன செய்யலாம்! தெய்வச்செய லிப்படி யிருந்ததென்று சிந்தைநொந்து, போர்க்களத்திற்கு வந்து உயிரை யொழித்துவிட்டுப் பிரேதமாகிய உடல் திரும்பிப்போகுந் தன்மையைப்போல் அபிமன்னனுகிய பிராணனை ரணகளத்தில் உகுத்துவிட்டு வெறுங் கூடாகிய தேகத்துடன் தாங்கள் மருவும்படியாகிய பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்கள். இப்பால், வலம்புரிமாலையணிந்த துரியோதன மகாராஜனுனவன் மைத்துனனுகிய சயிந்தவனை எதிர்கொண்டு தழுவி முகத்துடன் முகம் வைத்து, "இன்று உம்மாற் பிழைத்தோம். நீரெங்களுக்குப் பிராணபிச்சை கொடுத்தீர்." என்று சொல்லித் தன் பிள்ளைகள், தம்பிமார் பிள்ளைகள் முதலாகிய பதினுயிரம் ராஜபுத்திரர் அபிமன்னனுல் இறந்துபோன தன்பத்தை எவ்வளவும் மனதில் வைக்காதவனுய், போர்மன்னனுகிய வாளபிமனிறந்துவிட்ட மகிழ்ச்சியினுற் புயங்கள் பூரித்து, விதரணையுடைய விற்குருவும் நன்னயமுள்ள கர்ணனும்— ஆமாம் என்னுமாமனும் - மற்றையருந் தன்னைச்சூழ்ந்துவர, புள்ளாங்குழல் - முதலாகிய வாத்தியங்களுடன் மேல் நடக்கப் போகிற காரியங்க ளின்னதென்று சீர்தூக்காமல், அதிரீக்கிரமாகத் தன் பாசறை அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தான்.

வேதவியாச முனிவ ரெழுந்தருளிவந்து தருமராஜனைத் தேற்றுதல்

இஃதிப்படி யிருக்க-தருமராஜனும் தம்பிமார்களும் பாசறைக் குப்போய்ப் பலவித வருத்த முடையவர்களாய்ப் பரிதாபப்படும் போது விராடராஜனும்-துருபதேய ராஜனும்- அவனுடைய குமாரர்கள் திஷ்டத்துய்மன் முதலாகியபேர்களும்-ஏனையராஜரும் சாத்தகியும்-குந்திபோஜன் முதலிய பந்துவர்க்கத்தாரும்-வெற்றிவீரப் படைஞர் முதலிய பேரும்-சந்திரனைச் சூழ்ந்த தாரகாகணங்களைப் போல் தருமராஜனைச் சுற்றிக்கொண்டு, அவருடைய துயரத்தை அதிகவித பரிகாரத்தால் ஆற்றி அவரைத்தேற்றுவதானார்கள். அப்படி தேற்றியும் அவரடைந்திருக்குஞ் சிந்தாகுலமானது சிறிதுஞ் சிதையாமல், "ஐயோ! நாங்களொரு அகியாயமுஞ் செய்ய வில்லையே! அதர்மம் விர்த்தியாகித் தருமங்குறையுமாகில், இனி இவ்வுலகத்தில் எந்தெறி நிலைகிற்கும்? ஓ தெய்வமே" என்று முரசக்கொடியினை யுடைய யுதிஷ்டிரர் நினைந்து நினைந்து இரங்கிக் கொண்டிருக்குங் காலையில், சிவந்தசடைமுடியும் காவியுடையும்-கதிர்மறைக்குங் குடையும் - மரவுரியும் - தண்டு கமண்டலமும் - மிதியடியும் விபூதிசிரகையும் - முப்புரிநூலும் - ஒப்பிலாக் குண்டலங்களு முடையவராய், ஈசரழுலகும் புகழ்ந்தேத்தும் ஸ்ரீவேதவியாசர் வந்தார். அவரைக்கண்டவுடன் பொய்யில்லா மெய்யினையுடைய புண்ணியனும் பீமசேனன் முதலிய மற்றுள் ளோரும் எழுந்தெதிர்கொண்டு போய்ப்பணிந்து போற்றி, குற்ற மற்ற ஆசனத்திலிருத்தி, அர்க்கியபாத்திய ஆசமனிய முதலிய உபசாரக் கடன்களெல்லாஞ் செய்து விக்கிய விசனத்தால் அவருடைய பக்கத்தினின்றார்கள்; அதித்துச் சூழ்ந்திருந்த அவ்வரசர் களுக்கு ஆசிபுகன்று தருமராஜனைக் கிருபையுடனோக்கி, "ஓ தருமகுணனே! என்ன ஓர்விதமாயிருக்கிறாய! உனது மனதில விளைந்த துன்பமென்ன" எனலு வியாசர் கேட்க யுதிஷ்டிரர் "ஓ என்குல முதல்வனே! என்னுடைய அபமன்னை உயர்ச்சார்ந்தான்" என்று சொல்லி அசையால முடியுமுனமம் சோவுற்றவராய் பூமியில் வீழ்ந்தார். உடனே சமீபத்திலிருந்தவர்கள் எடுத்தணைத்து உபசரித்துச் சாந்திசெய்து சோபந் தீர்த்தார்கள். மறுபடியும் அவர் படுங் கவலையை வேதவியாசர் பார்த்து, " தருமகுணனே!

எல்லாம் பூர்வ விதியின் செயலின் புணர்ப்பின்படி நடப்பதல்லாமல், அஃதின்றி யாரிறக்கத் தக்கவர்கள்? யார்கொல்லத்தக்கவர்கள்? ஓ! எவர்களாலுங் தடுத்தற்கரிய புலன்களை நல்லறிவின்வழியில் நடத்திக்கொண்டிருக்குந் தருமபூபதியே! உனக்குத் தெரியாத காரியமொன் றுண்டோ? ஆயினுஞ் சொல்லுகிறன் கேள்; சிருஷ்டிகர்த்தாவாகிய முதற்கடவுளினால் ஏற்படுத்திய ஆத்துமாகோடிகள் முழுமைக்கும் அமைத்திருக்கும் ஆயுளென்னும் ஓர்கணக்கின்படியிருந்து நல்வினை தீவினைப்பயனை அநுபவித்து இறக்கத் தக்கதல்லது அந்த ஆயுள் முடிவதற்கு முன்னும் பின்னும் மாயுமென்று நினைக்கத்தக்கது முண்டோ? அப்படி கிடையாது. போர்முகத்திலே தீயைப்போற் காயும்படியாகிய அபிமன்னனென்னும் உனது புத்திரன் சகலவீரர்களையும் வென்று வீட்டி, தனது கலத்தையும் பலத்தையும் நிலைநாட்டி, வீராவேசக் கோபாக்கினியுடன் வீரலட்சுமியைப் புணர்ந்து வீரசொர்க்க மடைந்தான்.

இப்போர்ப்பட்டபேறு கடல்புடைசூழ்ந்த உலகின்கண் எவர்களும் பெறமாட்டார்கள், என்போலுகிய இறைவனே, பலபலயாகங்களைச்செய்தும், வெகுவித அருந்தவமிருந்தும், அநேகங் கோதானம் பூதானமுதலிய சோடசமகா தானங்கள் கொடுத்தும், யானெனதென்னுஞ் செருக்கறுத்தும், தருமந் தப்பாமற் சத்தியனெறியிலிருந்தும், நெடுங்கால நிலத்திருந்த மகான்களாலும் பெறுதற் கருமையாகிய நற்கதியை உனது சிறுவனுனவன் வெகுசுலுவிற் பெற்றான். ஆதலால்-அநேகயுகங்களழிந்தாலும் உங்கள் புத்திரனடைந்த உயர்ந்தகதிக்கு ஓரழிவில்லை! உனகு இதைவிட வேறுநன்மையு முண்டோ? ஓ மல்லையைப் புயமாகயுடைய மன்னனே! மேலும உத்தம க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவர்களுக்கு உரித்தாகிய குணம் யாதெனில்-இறந்தவர்களுக்கு மனம் வருந்தாமல், போர்முகத்தில் வாட்டங்கொள்ளாமல புறங்காட்டாமல், சத்துருவின்மேற்பிற் பிறந்தகோபந் தளராமல், உடலவருத்தம பாராமல், உயிராசை வையாமலிருக்க வேண்டும். இதுதான குலத்துக் குணமென்று இராஜர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. பின்னை முணர்ந்த நீயும் இவ்வாறு சோகபரவசமடைவது நியாயமா?" என்று சொல்ல, அதனுற் சோபமென்னும் அக்கினி சிறிது அவிந்து, சகல கலத்துக்கு முரித்தாகிய தருமராஜனுனவர், "ஓ வேதமுதல்வனே! பதினுன்கு லோகத்தை யாண்டவர்களும், திரிலோகத்தை

யாண்டவர்களும், பூலோகத்தை யாண்டவர்களும், யாகாதிவிரதங் களைச் செய்த பேர்களும், அரசாக்ஷியாகிய மேலான செல்வத்தைப் பெற்றவர்களும், சாதாரணமான மானிடரைப்போல் மடிந்து போனார்களே! ஐயா! அப்பேர்ப்பட்ட புண்ணியவான்கள் தங்க ளுயிரை விர்த்தி பண்ணிக்கொண்டும், ஊழ்வினையானது தங்களைத் தொடராமற் பண்ணிக் கொண்டும், நீடுழியிருக்கும்படியாய்ச் செய்து கொள்ளலாமே! அவர்களுக்கு அது ஓர் அருமையல்லவே! அவர்களேனப்படி செய்து கொள்ளவில்லை! அவர்க ளெண்ணிய எண்ணம் இன்னதென்று எனக்குக் கட்டளையிட்டருளும் எந்தை யே!" என்று தருமகந்தனன் கேட்க, வேத முனிவராகிய வியாசர் சொல்லுகின்றார்.

யுதிஷ்டிரருக்கு வேதவியாசர் மிர்த்தியு தேவதையின் வரலாறுரைத்தல்

"தருமகந்தனே! கருங்கடல் சூழ்ந்த உலகமெல்லாம் ஒரு கவிகை நீழலிலாண்ட மது மாந்தாதா முதலிய பேர்களினுலும் மாற்றுவதற்கரிதாகிய மிருத்து வென்று ஒருமாயையுண்டு. அதைக் கடக்க ஹரிபிர்மாதிகளாலு மாகாதென்றால் இவர்களா லாகத்தக்க தோ? ஆகையால்-மாயும்படியாகிய காரணத்தைக்குறித்து நானொரு கதை சொல்லுகிறேன். உனது பூரண கல்லறிவிற் பொருந்தக் கேள்!" என்று முக்குற்றங்களைந்த மேலோராகிய வேதவியாசர் சொல்லத் தொடங்கினார்—"ஓ தர்மமேஜெய மென்னுந் தர்ம நந்தனனே! மேகம் போன்ற கூந்தலும் பவளம்போன்ற வாயிதழும், வெண்டாமரை போன்ற மேனியும், செந்தாமரைபோன்ற சீரடியு முடைய வெள்ளைக் கலைமாதை, வேதரசம் பெருகிய தமது நாவிற் சுமந்த வேதா வென்னுந் தூயோனவர், கடங்கொண்ட அஷ்ட கஜங்கள் தாங்குந் காசினியைப் படைத்து, இவ்வுலகில் மருவும் படியாகிய சராசரங்கள் யாவையும் முறைப்படி சிருஷ்டித்தருளினார். ஆத்மகோடிக ளெலலாம் நாள்மீதாறும் மிகுந்து உலகெல்லாநெருங் கிச் சாவில்லாமலிருந்தபோது, துவணம் வளர்ந்து ஓசிந்த இடை யினையுடைய பூமிதவி இதென்ன காரணமென்று நினைத்து, எப்பேர்ப்பட்ட துயரங்களையும் மாற்றும பாதங்களையுடைய பிர மாவை யடைந்து! 'சுமப்பவர்க்குத் தலையெரிச்சல் தோன்றுமல்லது சுமையேற்றி வைப்பவர்களுக்குத் தெரியுமோ? நிறைந்த ஆத்மகோடி களைச் சுமப்பதுசொற்பமல்லவே; அப்பனே! உன் கற்பனையால் மன்

ணுயிர்களைச் சிருஷ்டிக்குந் திறத்துடன் கூட லயமாகும்படியான காரியத்தையும் யோசிக்கவேண்டும். இல்லாவிட்டல் நான்தான மாட்டேன்!' என்று சொல்ல, உற்பவகர்த்தாவாகிய பிரமன் அதனை யாய்ந்து மனந்தடுமாறி நிற்கும்போது, அதிக ஆலோசனையாலுருகிய அவருடைய இந்திரியம் பூமியில் வீழ்ந்து, ஆலகால விஷம்போலெரிந்தெழுந்து உயிர்களை யெல்லாம் கொல்லாநின்ற காலத்தில் ஆத்மகோடிகளெல்லாம் வருந்தி, "ஓ பசுபதி! பசுபதி!" என்று ஓலமிட்டார்கள். அப்போது மறைகளுணர்ந்த வேதகாயகியின் மணாளன் சூலம்போன்ற மூன்று விழியுடன் அன்னவாகனனுக் கெதிரிற்றுன்னி மன்னினர். அப்படி மன்னிய பூதநாதனை அயன்கண்டு, ஆசார உபசாரத்துடன் எதிரெழுந்து வந்து வணக்கமாகநிற்க, பிர்ம்மாவைக் கிருபா முகத்தோடுஞ் சிவபெருமானைக்கிச் சொல்லுகின்றார்—

'ஓ சதுர்முகனே! இவ்வுலகத்தையும் உயிரையும் படைத்த தந்தையாகிய நீயே அவற்றை யழிக்கத் தொடங்குவாயாகில், பழியாரைச் சேருமோ அதை நீ யோசித்துப் பார்த்தாயா? இத்தப்பழிச் சொல் உனக்கு வேண்டாம்! கொல்லுங் காரியத்தை நிறுத்திவிடு!" என்று கூற, பிர்மதேவர் கைலாசபதியை நோக்கி, "தேவரீர் நிறுத்தென்று சொன்னல் நிறுத்திவிடுகிறேன். ஆனல் வருத்தம் பொறுமல் வருந்திவாடி யழுதுவந்த பூதேவியின் பாரமெப்படி நீங்கும்? ஓ விடையேறிய சிவமே! இதற்கோருபாயஞ் சொல்லவேண்டும்' என்று வேண்டிக் கேட்குங்காலையில், கங்காதரன் 'ஓ பங்கேருக வாசனே! உன்னிடத்திருந்து நிலத்திற் சிந்திய வீரியத்தை ஒரு பெண்ணுக ஏற்படுத்தி அழைத்து, அவளால் ஸம்ஹார கிர்த்தியம் நடக்கும்படி செய்வாயானல் அவள் நடத்துவாள். அது தகுதியுடையது!' என்று சொல்ல, அந்த வாக்கியத்தின் சூட்சியைத் தெரிந்து கொண்ட மண்பொதுத்ததந்தையானவர் உயிர்ப்பிராணிகளைக் கொல்லாநின்ற வீரியக்கனலை ஒருமாத்திரைப் போதிலழைத்துப் பெண்ணுருவாக்கி, அவ்வுருவாக்கிய லக்கினத்திற் கிசைந்தபடி மிருத்தியு தேவதையென்னும் பேர்கொடுத்துப் பரமேஷ்டியின் பக்கத்திலிருத்தினர். அந்தப் பெண்ணைச் சாம்பவமூர்த்தி பார்த்து, 'ஓ பெண்பாவாய்! நீ இவ்வுலகத்திலிருக்கும் உயிர்களை வகைத்து ஸம்ஹாரத்தொழில் செய்துகொண்டிரு" என்றுசொல்ல, அதைக் கேட்டு அவள் உடல்நடுங்கி, "என்னுண்டவனே! நான் அப்போப்பட்ட

தொழிலிலிருக்க மாட்டேன். என்னைக்காத்து ரட்சிக்கவேண்டுங் கண்ணுதலே" என்று கைதொழுதாள். மறுபடியும் அவளுக்கினி மையான சிற்சில வசனங்களை இருவரும் போதித்துப்போவென் றனுப்ப அந்தப்பெண்ணினவள் அவர்களை நமஸ்கரித்து விடைபெற் றுக்கொண்டு, பூலோகத்தில்வந்து, உயிர்கள் வதைபடுவதை உன் னிப் பார்த்துக் குலோடுக்குற்று, மனங்கூசி, சிருஷ்டி கர்த்தாவைக் குறித்து அருமையாகிய தவஞ் செய்தாள். குளிர்ச்சி பொருந்திய கமலாசனக் கடவுள் அந்தப் பெண்ணுக்குப் பிரத்தியக்ஷமாகி, 'ஓ பெண்ணே வேண்டிய பெருமைகளெல்லாமுனக் கின்பமா யுண்டா குக! பூமியிற் பிறக்கும் உயிர்களை ஸம்ஹரிக்குந் தொழிலை உனக்குக் கொடுத்தேன்! ஆதலால் நீ சந்தோஷமாய் நடத்து" என்று, சொல் லிப்போட்டு, பிற்பாடு "என்ன காரியமாய் என்னை நினைத்து இத் தனைநாள் தவமிழைத்தாய் சொல்!" என்று கேட்டார். அப்படி கேட்ட வாசம்பெற்ற தாமரை மலருளானை அவள் வணங்கிப் பணிந்து 'எந்தையே! ஆசாபாசங்களிலாழ்ந்த ஆத்மகோடிகள் பதை பதைத்து உயிரிறக்கும்படியாய் நாசப்படுத்துந் தொழிலைச் செய்வ தற்கு நான் துணியமாட்டேன்! நாதனே! பெற்ற தாயேங்கியழ, பேணியதந்தை புலம்பிவிழ, மக்கள் கதறியழ, ஒக்கல் மெலிந்து தொழ, பெண்சாதி பெண்டு முறையிட, வளர்த்தோர் வாடிக்குறை பட, கொண்டாரழ, கொடுத்தாரழ, சகோதரரழ, மற்றுமுள்ள பந்து ஜனங்களெல்லோரும் மார்பிலும் முகத்திலும் அறைந்துகொண்டு இறந்தவரைப்போற் பறந்தழத்தக்கதாய் என் கண்களிற்நீயெழ முனிந்து, என் மனத்தைக் கல்லாக்கி, எல்லாருயிரும் வருந்த நானெ ருத்தியிருந்து உயிர் வதை செய்து என்னுயிர் வாழ்வதிலும், அக் கினிக்குழியில் விழுந்து என்னுவியை விடுப்பதுமேல்" என்றாள்.

அப்படி சொல்லிய வல்லிக்கொடிபோன்ற மகளைநோக்கி மகாசந் தோஷத்துடன் மகிழ்ந்த பிர்ம்மாவானவர் ஒருவாக்கியம் சொல்லு கின்றார்" அம்மா! ஸம்ஹாரத் தொழில் மகாபாபமென்று சொல்லிய வுனக்கு யாதொரு சம்பந்தமுமில்லை. உடலிற் சம்பந்தப்பட்டு உலகிலிருக்கு முயிர்கள் அகலுமார்க்கத்தை புத்திமான்களாகிய பெரியோர்கள் கொண்டாடித் துதிக்கும்படியாகச் சில ஏற்பாடு செய்துவைத் திருக்கின்றேன். அதென்னவென்றால், ஆத்மகோடி களுக்கு விதித்த ஆயுட் பிரமாண மென்பதும், தாயின் கர்ப்பத்தில் உடலெடுக்கும்போதே உற்பத்தி யாக்கிவைத்த அநேகம் வியாதி

களும், தேகத்திற் குரித்தாய் அமைத்திருக்கின்றமையால், அவை களின் பேரிற் பழிவைத்து, இன்ன வியாதியால் இன்ன காரணத் தால் இறந்தார்க ளென்றுலகத்தார் சொல்லிக்கொள்ளும்படியாகிய வழியை வழக்கமா யுண்டாக்கி வைத்திருக்கிறேன். இதனு லுனக் கொரு தீமையுமில்லை. ஆனதால் இந்த ஸம்மாரத் தொழிலை நீ செய்யலாம்!'' என்று சொல்ல, அன்று முதற்கொண்டு எல்லோ ருடைய பிடரியிலிருந்து அவரவர்களுக் கமைந்த ஆயுட் பிரமா ணத்தைப் பார்த்துக்கொண்டு, தொடக்காகிய வியாதிக ளென்னுஞ் சத்துருக்களைச் சமயம் பார்த்துக் காலைத் தட்டிவிடத்தக்க தூத ராகக்கொண்டு வாயிற் போட்டுக்கொள்ளும் வல்லமை யுடையவளா யிருக்கின்றாள்: நீதிக்கு வழுவாக ஒருயிரிருக்க மற்றோ ருயிரை முடிக்கப் போகிறதில்லை. ஆளுக்குக் கொஞ்சம் ஆள்பார மென்பது போல், அந்த மிர்த்துதேவதையானவள் தன்பேரிற் பழிவைத்துக் கொள்ளாமல் இந்தத் தொழிலை நடத்தி வந்தாள். சிவந்த நிறம் பெற்ற அயனனவர் சிருஷ்டித் தொழிலை நடத்தினர். அது முதல் பூமிதேவியார் பூமிபாரந் தீர்ந்து சமனுக இருக்கக்கண்டு சந்தோஷங் கொண்டாள். ஓ தரும சொரூபியே! எப்பேர்ப்பட்ட உயிர்களானு லும் தோன்றி யழிவதே யன்றி அழியாம லிருக்கும்படியாகிய தொன்றுமில்லை. அந்தர வாசிகளாகிய தேவர்களும் அளவிறந்த மநுமாந்தாதா முதலிய சக்ரவர்த்திகளும் உலகில் நிலைபெற்ற ஆத்ம கோடிகளும் அழிந்துபோவது ஞாயமே. ஆயுள் முடிந்தால் தாமரை வாசியாகிய சிருஷ்டி கர்த்தாவும் உடல்விட்டுயிர் மாய்வாரென்று உமக்குத் தெரியாதோ? குந்திக்கு முதற் புத்திரனுகிய கோனே! சொர்க்க மத்திய பாதாளத்தி லிருக்கும் யாவரிலும் ஆயுளை வர்த்தி பண்ணிக்கொண்டு நீடுழி நிலைகொண்டு வாழ்ந்தவர்களில்லையே; ஆகையால், நீ யேன் துக்கசாகரத்தில் மூழ்கி வருந்துகின்றாய்? தர்ம நந்தனு! உனது சோகத்தை நீக்கி விடு. உன் புத்திரனுகிய அபிமன்ன னுனவன் தன் சாரதியுடன் எவரும் விரும்பிய திரும்பாக்கதி புகுந்தான். நீ சிந்தை நையவேண்டாம்.' என்று வேதவியாசர் தேற்ற, அந்த வேத வாக்கியங்களைப் பரிசுத்த வானுகிய பாண்டவர் முதல்வன் தேர்ந்து, வியாச முனிவரை நோக்கி, "ஓ என்னகத்துணையே! ஆயுள் முடிவினுலும் வியாதி சம் பந்தத்தாலும் மிருத்து வென்பவள் முடிப்பாளென்றும், இறந்த வொருக்காலும் பிழைக்க மாட்டார்களென்றும், ஒருவரும் நீடித் திருப்பதில்லை யென்றுந் தேவரீர் திருவாய் மலர்ந்தீர்! சுவாமி இரத்தந்

தோய்ந்த கூர்மை பொருந்திய வேலாயுதந் தாங்கிய சுவர்ணடீ வென்னும் ஒரு ராஜபுத்திரன் இறந்துபோய்ப் பிழைத்தானென்று மேலோர் பேசுகின்றார்களே: அஃதென்ன?" என்று இரு கரத்தையுங் குவித்து வணங்கிக் கேட்ட தர்மராஜனைப் பார்த்துத் திரிகால முந் தேர்ந்த வாதராயண முனிவர் சொல்லுகின்றார்—

யுதிஷ்டிரருக்கு வேதவியாசர் சுவர்ணடீ யெனும் இராஜகுமாரன் சரித்திர முரைத்தல்

அப்பனே! முன்னம் யான்சொன்ன மிர்த்துதேவதை முடிவு காலம் பார்த்திருந்து என்போன்றவனைப் பிடித்தாலுந் தப்பமாட்டாது. அப்படியிருக்க, ஆயுள் முடியாமல் அவமிர்த்துச் சாயையென்னும் வேதையினால் ஒருவனை பிராணன் போமானால், மணி மந்திரம், ஔஷதம், தவம் பெரியோராசீர்வசனம் நவக்கிரக சாந்தி, ஓமம், தானம், பாலக்கிரகதோஷ நிவாரணம், குழையடித்தல், நீரோதல், நீறுபிடித்தல், கிராமதேவதை பூசை, பலி இவை முதலிய காரியங்களெல்லாம் எந்தெந்த விதத்துக் கெப்படி செய்ய வேண்டுமோ அப்படி செய்து யாவற்றையும் ஈச்வ ரார்ப்பணம் பண்ணினால், அந்த அவமிர்த்து சாயை நீங்கிப் பிழைப்பார்கள். இதற்காகவே ஆயுள்வேத முதலாகிய சாத்திரங்களும் மந்திரங்களு மேற்பட்டிருக்கின்றன. மேலும் அந்தச் சுவர்ணடீவினுடைய கதையைச் சொல்லுகிறேன் கேளும். தர்ம சொரூபியாகிய தோன்றலே! திடதீர பராக்கிரமமும் இராஜ முறைமையுந் தர்மமுங் குறையாமல் அரசு செய்துவந்த சிஞ்சயனென்றொரு அரசன் தனக்குத்தரும புத்திரனில்லா வருத்தத்தால் மெத்தவும் நொந்து சித்தப் பிரமை-கொண்டு, யாகம், ஓமம், ஜெபம், கோவில், குளம், சாலை, சோலை, தண்ணீர்ப் பந்தல், அன்னமே முதலிய தானம், தர்மம், பரோபகாரம், விரதம், நோன்பு இவை முதலிய வெல்லாஞ்செய்து வந்தான். அங்நாட்களில் ஒருநாள் நாரதமுனிவர் வந்து இராஜனுற் சகல உபகாரங்களும் பெற்று அவனையாசீர்வதித்து, உமாமகேச்வர ராகிய திகம்பரக் கடவுளைச் சிந்தையிலிருத்திச் சிவபூசை செய்து வரும்படி உபதேசித்தருளினார். அத்தப்படி அவ்வரசன் சிவப் பிரதிஷ்டைசெய்து அநேக நாள் வழிபட்டு வருநாளில், மறுபடி யொருநாள் தனக்கன்பராகிய வேத முணர்ந்த நாரதர் வரக்கண்டு, அவருடைய சீர்பாதங்களைச் சிரத்தால் வணங்கி,"என்காலமெல்லாம்

தாங்கள் கூறிய நிலைமையில் நின்று கழித்தும் ஒரு காதலன் இன்னும் வரக்காணேமே" யென்று கவலைகொண்டு பெருமூச்சு விட்டான். அப்படிப் பெருமூச்சுவிட்டுப் பெருக்கத் தவிக்கு மன்னனை நோக்கி, மருதிடந்த செந்தாமரைப் பாதனுக் கொப்பாகிய நாரத முனிவர் " சிஞ்சய மன்னனே! உமக்கு எப்போர்ப்பட்ட பிள்ளை வேண்டும்? உமது கருத்திலுள்ள மார்க்கத்தைச் சொல்லும். அதற்குத் தகுந்த புத்திரனுதிக்கும்படியாய்ச் செய்வோம்" என்று கேட்க, அவரைத் தொழுதெழுந்து அரசன் " ஐயா! நல்ல சுந்தர வடிவமும், ஆயுளும், நோயில்லாமையும், பொன்பொன்னுகப் பெறுகிற பிள்ளை யொருவனை அதுக்கிரகஞ்செய்யும்" என்று இரந்து கேட்க, "அப்படியே உமதிஷ்டப்படி ஈசுவரானுக் கிரகத்தில் உமக்குப் புத்திர னுதிப்பா" னென்று சொல்லி மகதியாழையுடைய அம் முனிவர் யதாஸ்தானத்திற் கெழுந்தருளினர்.

அன்று முதற்கொண்டு இந்த ராசனுடைய கர்ப்பத்தில் ஜனித்து, இவனது பத்தினியின் கர்ப்பத்துக் கேறி, கரும்பில் முத்துப் பிறப்பதுபோல் ஒருபுத்திரன் பிறந்தான். அப்பிள்ளைக்குப் புத்ரோற்சவம் சாதகன்ம முதலிய சடங்குகளைச்செய்து மனங்களித்து வருங்காலத்தில், பிள்ளையினுடைய மலமும் அந்தமலம் ஒட்டிக் கொண்ட புட்டமும், பொன்மயமாக இருக்கக்கண்டு, கடலைக் கடைந்து அமுதங்கண்ட தேவர்களைப்போற் சந்தோஷங்கொண்டு, அந்த மலங்களைச் சேதமாகாதபடி காள்தோறும் வாரி மந்தரகிரி போற் குவித்து, பேராசையிற் சிறந்த அவ்விராஜனுனவன் அந்தக் குழந்தைக்குச் சுவர்ணடீ யென்னும் பேர்வைத்து, அன்னப்பிராசனம், சவளம், உபநயன முதலிய கடன்களெலலாஞ்செய்து அகங்களித்திருந்தான். பொய்யில்லாப் பெருங்குதலை மொழியினையுடைய அரசிளங் குமாரன் குற்றமற்ற பிறைவளரும் தன்மைபோல் வளர்ந்து, அரிய வேதங்களும், சாஸ்திரங்களும், கலைக்கியானங்களும், படித்துவருங் காலங்களில், இந்தப் பிள்ளையினுடைய மல மெல்லாம் பொன்னுயிருப்பதினுல் எல்லோரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும்போது, சில கள்வர் அவனைக் கொண்டுபோக வேண்டுமென்று கூடி நினைத்து, ஒருநாள் அவன் தனித்திருக்கும் இரவில் அவர்கள் வந்து களவிற்கொண்டுபோய், கித்தியமும் பொன்காய்க்கு மரமென்று அந்தப் பிள்ளையை வதைத்து வயிற்றைப் பீறி, மலராத அரும்பை மணங்காண மலர்த்திய மதியீனரைப்

போற் குடல்களைப் புரட்டிப் புரட்டிப்பார்த்து, திரவியங் காணுமல் வீணுய்க் கொன்றோமே யென்று அவ்வறிவீனராகிய திருடர்கள் குளக்கரையிலே பிள்ளையை வீசி எறிந்துபோட்டுப் போய்விட்டார் கள். இங்கே சிஞ்சயனென்னும் ராஜன் மைத்தனைக் காணுமற் சிந்தைவாடித் தூதுவரைக்கொண்டு தேடவிடுத்து மனங்கூசி வருந்தி யிருக்கும்போது, பாசி நிறைந்த குளக்கரையிற் கிடந்த பிரே தேத்தைப் பரிசனர்கண்டு கொண்டுவந்தார்கள். இறந்த இளைய தனை வேந்தன் முதலிய யாவருங்கண்டு நெடுமூச்செறிந்து துக்க சாகரத்தில்மூழ்கி, பிள்ளைக்குச் செய்யுங் கருமவிதிகளுடன் ஈமவிதிக் கடன்களு முடித்து, புத்ரசோபத்தால் வைதிக நெறியேற்று ஸந்தி யாசம் வாங்கிக்கொள்ள மனந்துணிந்தான். அப்படி துணிந்த மன்ன னவனை மந்திரி முதலிய பலருந்தேற்றச் சிறிது மனந்தேறி, மாளி கைக்கு வந்து தேவியுந் தானுமாய்த் தேம்பியழுது, குலத்திற்குப் பழுதுவந்ததே யென்று வியாகூலப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்நாளில் விழுதுபோற் சடையினையுடைய நாரதமாமுனிவர் வந்தார். அவரைக்கண்ட மாத்திரத்திலவர் பாதங்களில் ஓடிவிழுந் தெழுந்து தொழுது அழுது, தங்கள் பிள்ளைக்கு நேரிட்ட அகாயாச மரண சங்கதியைச் சொன்னர்கள். அதைக்கேட்ட ஞானபண்டித ராகிய நாரதர் அந்த ராஜனுடைய கண்ணீர் துடைத்து, "ஓ அரசனே! கண்கலக்கப் படவேண்டாம். போனவுயிர் மீளப்போகிற தில்லை. புலம்பியழுவதாலொன்று மாகிறதில்லை. நீங்களுன் விம்மிப் பொருமுகிறீர்கள்" என்று அநேக ஞாய உறுதிகளைச் சொன்னர். அப் படி சொல்லியுமவர்கள் ஆறுப்பெருந்துயரில் ஆழ்ந்தவர்களாதலால் விசனசாகரத்தை விட்டுக் கரையேற மாட்டாமலுருக, அப்படி உரு குகின்றவர்கள் உளந்தேறும்படியாகக் கருதிய மோனமுனியாகிய நாரதர் பெரும் பான்மையாய்ப் பூர்வம் நடந்த சில தன்மைகளைச் சொல்லுகின்றார்.

நீலோற்பல நிறமும் வாள்போன்ற வடிவுங்கொண்ட கண்களை யுடைய பரமேச்வரிக்குப் பர்த்தாவான பரமசிவ னெழுந்தருளி உபதிர்ஷ்டியாய்ப் பார்க்க, சந்திர சூரியர் முதலிய தேவர்களுக் கெல் லாந் திருப்தியாகும்படி பால், தயிர், நெய், தேன், முதலிய யாவும் ஏழுகடலைப்போற் பெய்து அவிர்ப்பாகங் கொடுத்து, அநேகம் யாகங் களைச்செய்து, ஒன்பதுவகை இரத்தினங்களுந் திரவியங்களும் பொன்மலை யேழனைக்குவித்துப் பிராமணருக்கீய்ந்து, விரதசீல நற்

பரம ஞானியாய்த் தன்னுயிர்போல் மன்னுயிரைக்காத்து உல கத்தை யாண்டுவந்த மருத்து மகாராஜனும் இறந்து போனன்.

இவையன்றியும், மாதமும்மாரி வருணன் பொழியப் பூசை முத லியன நடத்தியும், பொன்னுசையுடைய வறியர்களுக்குச் சொர்ணு பிஷேகம்செய்து மறுபடியும் பொன்னென்னுங் ஞாபகம் வரவொட் டாமற் கொடுத்தும், அளவில்லாத அசுவமேதயாகஞ்செய்தும், அருட் பார்வையாக உலகமெல்லாம் ரக்ஷித்தும், தர்மந்தப்பாமற் சத்தியங் குறையாமல் தேவரும் பிராமணரும் புருஷசிலாக்கிய னென்று கொண்டாடித் துதிக்கும்படியாய் நின்ற சுகேத்திர ராஜனென்னும் நரபதியும் இறந்து போனன்.

கரும்பைக்கடித்துப் பிடுங்கி முறித்துத்தின்று கட்டுத்தறியைப் பெயர்த்து மதங்கொண்டு பூண்கட்டிய கொம்புகளை யுடைத்தா யிருக்கும் பதினுயிரம் யானைகளும், நல்ல புத்தியும், குற்றமில்லாத நிறமும், குணமும், ஜாதியுமுடைய குதிரைகளும், பொற்பணி பூட் டியகோடி கறவைப்பசுக்களும், நற்குணமும், நற்செய்கையும், பெண்மையுங் குன்றாத பெண்களனந்தமும் நித்தியதானமாகக் கொடுத்து, தேவர்களெல்லாரும் மிகுந்த ஆவலாக அங்கீகரிக்கும் படியாய் யாகங்கள் செய்து ஆகுதிகொடுத்து, வேதியர்க்கும் ஆதலர்முதலிய யாசகர்க்கும் மேன்மேலாகிய திரவியங்களையும் முத்துக்களையும், ரத்தினங்களையும் மாரிபோல் வாரிப்பொழிந்து மேன்மை யடைந்த நங்கனென்னும் ராஜனும் இறந்துபோனன்.

பெய்யு மழைத்துளியை யெண்ணினுலு மெண்ணலாம், தான மாகக் கொடுக்கும் பசுக்கூட்டங்களை யெண்ணமுடியாது—அப்படி அளவிறந்த கோதானங்கள் கொடுத்து, அந்தத் தானங்களுக்கு விடுக்கும் தாராதத்த ஜலமானது சமுத்திரம்போலிரைந்து தடாக மாக நிற்க, ஏழுலகுந் தன் தேரைச்செலுத்தி, வீரத் துவஜநாட்டி, சத்துருக்களை வாட்டி, மற்ற மன்னுயிர்களைக் கூட்டி, வாழ்வினிலே நீட்டி, அசுவமேத முதலாகிய யாகங்களெல்லாம் நூறு நூறுகச் செய்து, புறுவுக்காகத் தன் தேகத்தை அறுத்து நிறுத்து மனம் பொறுத்துப் பரமசிவனுடைய அருள்பெற்று, இவனுக்கு நிகராகிய போக ளெங்குமில்லையென்று யாவருங் கொண்டாடப் பேர் பெற்றுச் சிறப்புடன் உலகாண்ட சிபிச்சக்கிரவர்த்தியும் இறந்து போனன்.

மாதுர்வாக்கிய பரிபாலனஞ் செய்வதற்காக இராஜ்யத்தைத் தம்பிக் களித்துப் பத்தினியுடன் வனவாசஞ் சென்று, அசுரர்களைக் கொல்லுகிறேனென்று உத்தமர்களுக்கு அபயங் கொடுத்து, தர்ம பத்தினியைப் பிரிந்து, சுக்ரீவனுக்குப் பரிந்து, வாலியின்மேற் பாணந்தொடுத்து, சீதையிருக்கு நிலையை அறிந்து, சேதுபந்தன மெடுத்து, இராவண கும்பகர்ணன் முதலிய அரக்க ரழிம்புபடி இராமபாணம் விடுத்து, அவர்களைக் கெடுத்துப் பதினொருவருஷந் தொலைத்து, அயோத்தியாபுரிக்கு வந்து பட்டங் கட்டிக்கொண்டு சகல உயிர்களையுந் தனது கர்ப்பத்திலிருந்து பெற்றதைப்போல ரட்சித்து, நீதிமுறை தப்பாமல் திக்குவிஜயஞ் செய்து, யாகங்க ளெல்லாமுடித்து, ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் பணிய அர சாட்சி செய்து வாழ்ந்த சக்ரவர்த்தித் திருமகனும் இத் தரணிபர் காண இறந்துபோனன்.

சகராளராகிய அறுபதினாயிரம் மூதாதைகளும் மோக்ஷமடைய வேண்டும் என்று கருதிச் செங்கோலும் முடியுஞ் சந்திரவட்டக் குடையுந் துறந்து, வெகுகாலம் வரைக்குந் தவமிருந்து, பூமிதேவி யாகிய தாயார் சவுக்கியம் பெறும்படியாய்த் தன் போர்பெற்ற பகீரதி யைக் கொண்டுவந்து, பாட்டன்மா ரெரிந்த பள்ளத்தில் விடுத்து, யாகம், ஓமம், ஜபம் முதலியவைகளினால் மேலோராகிய தேவர் களுக் கெல்லாம் அவிர்ப்பாக நடத்தி, பிதுர்க்கடன்களுஞ் செய்து, யானைகள் குதிரைகள், தேர்கள், ஸ்திரீகள், பசுக்கள், பூமி முதலா கிய தானங்களும் பண்ணி, முப்பத்திரண்டு தர்மமும் நடத்தி, கீர்த்தியுடன் துரைத்தனம் செய்த பகீரதனும் இறந்துபோனன்.

காந்தருவராஜர் முதலிய பேர்கள் தேவகாணம்பாட, ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை என்னும் ஐம்பது கோடி ரம் பாஸ்திரீகள் நடனஞ் செய்ய, தேவர் முதலாகியபேருங் கற்பக மலரைக் கொண்டுவந்து தந்துகண்டு அண்டையி னெருங்கிபிருக்க மூனீசுவரர்க ளெல்லாரும் ஆசி வழங்கி அருமையாகத் துதிசெய்ய, அசுவமேதம் தொண்ணூற் றொன்பதுசெய்து, நூறுவது யாகஞ் செய்யும்போது தேவேந்திரன் பயந்து, நமது இந்திர பட்டம் போய்விடுமேயென் றேங்கி ஓடிவந்து, "ஓ மஹாப் பிரபு! எனக்கு இந்த யாகபலனை யெல்லாங் கொடுக்கவேண்டும்" என்று யாசித்த காலத்துத் தடைசொல்லாமல் மனக்களிப்புடன் தத்தஞ்செய்து, பூரணகுதிகொடுத்துப் பூசித்துப் பல பொருளும் மறையவர்களுக்

களித்து, தேசராஜர்க ளெல்லோரும் மலர்போன்ற பாதத்தில் வணங்கப் பரராஜபயங்கரனென்று புகழ்கொண்டு பாராண்ட திலீப ராஜனெங்கே? அவனு மிறந்தான்.

தருமத்தி லுயர்ந்த தகப்பன் வயிற்றிற் பிறந்த பன்னிரண்டு வயதிற்குள் சகலகலை சம்பன்னனுகிப் பட்டங் கட்டிக்கொண்டு கிரணங்களை வீசுஞ் சூரியன்றிரியும் உலகமெல்லாம் தன்னுடைய சுவேத கூத்திரத்தை விரித்து நிழற்படித்தி உலகத்திலுற்ற வெகு ஜனங்களுக்கும் தாழ்ச்சியில்லா திருக்கும்படி அன்னஞ்சொர்ண முதலாகிய சகல பாக்கியங்களையும் உயர்ந்த பொன்மலைபோல் ராசிகட்டி அம்பார மாக்கிவைத்து, ஒரு காழிகையும் ஓயாமற் றுனங்கொடுத்து, அயமேதம் இராஜசூயம், கருடபர்த்தம், பௌண்ட ரிய மிவை முதலாகிய மகங்க ளெல்லாம் தர்மத்துடன் புரிந்து, மநுநீதிக்குத் தலைநீதியாய் வாழ்ந்த மாந்தாதா எங்கிருக்கின்றன்? அவனு மடிந்தான்.

அசுரர்களும் தேவர்களுஞ் சண்டை போடுங் காலத்தில் இளைத்த தேவர்களுக்குப் படைத் துணையாய்ச் சென்று, அசுரரை யழித்து, அமரருக்கு வெற்றி கொடுத்துத் தானும் ஜெயம் பெற்று பூலோகத்தில் வாழுஞ் சராசரங்கள் தழைத்தோங்கும்படியாய் மநு நீதிப் பிரகாரம் மக்களை ஆறிலொரு கடமைகொண்டு, வருணச் சிரமம் வழுவாமற் காத்து, அக்கினிட்டோமம், வாசபேயம், அசுவ மேதம், இராஜசூயம், திரிதராத்திரம், பவுண்டரியம், நிரூடபசுபந் தம் சௌத்திராமணி பார்வணம் ஆக்கிரசாயணி முதலிய யாகங் களெல்லாம் பற்பல தேசத் தரசர்களும் மெச்சும்படியாய்ப்புரிந்து, அவனுக்கதிபதியென ஆண்ட அயோத்தி மகாராஜ னெங்கே? எனக் குத் தெரியச் சொல்லும் அரசனே! அவனுங் காலங் கழித்தான்.

பல தேசங்களையும் புரக்கும் வேந்தர்கள் யாவரும் எதிர்த்து ஆயுத மெடுத்து யுத்தஞ் செய்யமாட்டார்கள். அப்படி யொருவேளை போருக்கு வந்தால், உபிரை, பொருளை, தேகத்தை, ஒரு பொருளாகப் பாராமல் யுத்தஞ் செய்து வென்று, மன்ன ரெல் லாம் தன்னை வணங்க ஜெயமாலை சூடி, பூமித் தேவராகிய பிராம ணர் முதலிய பெரியோர் மனங்களிக்க தவமணிகளுந் கொடுத்து, சிவ பூஜை புரிந்து, தேவர்களுக் கவிர்ப்பாக மளித்து, கீழ்மூலகி லிருக்கும் யாவரும் பூமி தேவியாருஞ் சந்தோஷிக்

கும்படியாய் அரசு செலுத்திய பிரான் அம்பரிஷ மகாராஜ னெங் கே ? பேசுமையா அரசனே அவனும் மாண்டு போனான்.

இலக்ஷம் ஸ்திரீகளை விவாகஞ் செய்து கொண்டு குதூகலத் துடனிருந்து கணக்கு இல்லாத பிள்ளைகளைப் பெற்று, தன்னை மறந்த சந்தோஷத்தாற் குறைவில்லாச் செல்வம் பெற்றுச் செங் கோல் செலுத்துகாளில், தன்னுடைய பிள்ளைகளெல்லாந் தனித் தனியே லட்சயமில்லாமல் அசுவமேத யாகஞ் செய்ய, தானும் பிரா மணர் முதலிய பேர்களுக்குத் திரவியங்களைக் குப்பை குவியும்படி யாய்க் கொடுத்து, சத்துருக்க ளுண்டென்னுஞ் சப்தங்கேளாமல் அம் புவி புரந்த விந்தமகாராஜனெங்கே சொல்லும்? அவனுமிறந்தான்.

அக்கினிதேவனுடைய திருவடியைப் பூசித்துச் சிந்தை செய் ததினால் அந்த அக்கினிதேவன் வந்து பிரசன்னமாக, அவரைத் தொழுது வணங்கி, ஸ்திரீபோக விருப்பமில்லாமல், திடம், உறுதி, சத்தியம், இரக்கம், ஈகை, முதலிய நற்குணங்கள் எனக்குண்டாக வேண்டுமென்று வரம் பெற்றுக் கொண்டு கங்கா தேவியைத் தொழுது, கங்கைக்கரையில் முப்பத்தாறுகாதம் யாகசாலை கேமித் துத் தருமம்புரிந்து, வடவாலவிருட்சங்களை வைத்துச் சாலையேற் படுத்தி, அவ்விடத்திற் கங்கை கயமென்று தன் பேருண்டாக்கிக் கனதை பெற்ற கயனெங்க ? அவனுமிறந்து போனான்.

ஒரு காளொன்றுக்கு இருபத்தையாயிரம் பிராம்மணர் புசிக்க, அன்னதானஞ் செய்து முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்திரன் முதலிய சந்திரசூரியருஞ் சேர்ந்து காள்தோறும் அக்கினி தேவனுல் அவிர்ப்பாகம் பெறவும், அரசர்கள் பணிந்து மணிமுடி வணங்கி ஏவல்கேட்டு நிற்கவும், யாசகர் முதலிய பேர்கள் ஆசை யுடன் பெற விசுவாசமாகத் திரவியமளித்து, எவர்களாலுஞ் செய் யப்படாத சத்திரியாகமுடித்துப் பகழ் கைக்கொண்ட புண்ணியசீல னுகிய மஞ்ஞிடங்கொண்ட வாய்மையை யுடைய அந்தித்தேவ னெனும் அரசனெங்கே ? அரசனே ! அவனுமிப்புவிக்கிரையா யிறந் தான்.

கண்ணுவருடைய ஆசிரமத்தில் வளரும்போது புலி, சிங்கம், சர்பம், சார்த்தூலம், யானை, மான், கரடி, வேங்கை, முதலிய மிரு கங்களெல்லாம் பிடித்து, அவைகளின் முதுகிலேறி வையாளியிட்

டுப் பழகி, அம்முனிவராற் சகல சாஸ்திர பண்டிதனுகி, பின்பு தந்தையை வணங்கித் தான் வந்தவழி யுணர்ந்து, ஞாலமெல்லாங் கைக்கொண்டு, காளிந்தி, கங்கை, சரஸ்வதி, இந்த நதிகளின் கரைகளில் தினந்தோறுஞ் சதமகம்புரிந்து, மண்டலமும் விண்டலமும் புகழும்படியாய்ப் பரதனென்று பேர்கொண்ட பாக்யவானெங் கிருக்கின்றுன்? பார்த்திபனே! அவனுமிறந்துபோனுன்.

தான் அரசுசெய்யும் பூமியில் மலை முதலாகிய கற்களினுல், அல்லது மண்களினுல், மேடுபள்ள மிருக்குமாகில் தன்னுடைய தேரேறிக்கொண்டு விரைவாகவிடித்து, அந்தத் தேருருளாழியினற் பூமியைச் சமமாக்கி, காடுகளையெல்லாம் காடாக்கி, கரம்பு திருத்திப் பரம்படிப்பதுபோற் காட்டி, மலைகளெல்லாவற்றையுங் கோமுகமாகச் செய்து, இதழ்விரிந்த மலரணிந்த தேவர்களுக்கும், பிதிர்த் தேவர்களுக்கும் நடத்த வேண்டிய யாகமுதலிய உபசாரங்களை நடத்தி, இரப்போர்க் கில்லையென்னும லித்துக் கடல்வளைந்த உலகத்தையெல்லாம் பிரிதீவென்று தன் பெயரிட்டனழைக்கச் சீர்பெற்ற பிரிதீ வென்னும் ராஜனுமிறந்தான்.

சிவந்த இரண்டாயிரங் கண்கள்பெற்ற கார்த்தவீரியார்ச் சுனன் தன் தந்தையாகிய ஜமதக்கினி மகரிஷியைக் கொன்று னென்று க்ஷாத்திரங்கொண்டு; இனிமேல் க்ஷத்திரியர்களுக்குத் தநுர்வேதஞ் சொல்லுவதில்லையென்றும், ராஜவம்சங்களை இருபத் தோரு தலைமுறை கருவறுத்துப் பிதிர்க்கடன் செய்வே னென்றும், சபதம் பண்ணிக்கொண்டு, இராஜவம்சங்களை அழித்து, அந்த அரசர்களுடைய உதிரங்களினுற் குருக்ஷேத்திரத்திற் சிமந்தபஞ்சக தீர்த்தமென் றேற்படுத்தி, கசியப பிரமாவைக்கொண்டு பிதிர்க் கடனுற்றி, அந்தப் பிதிர்க்கடன்செய்த அக்காசிப மகரிஷிக்குத் தன் வசப்பட்டிருந்த பூமியைத் தட்சணையாகக் கொடுத்து, காசிபர் சம்பந்தம், காசினியென்று பேரிட்டு, பலம் பொருந்திய யாகங்களைச் செய்து, அனந்த பத்மநாப ஸ்தலஞ்சேர்ந்து மும்மல மகற்றிய செம்மலமாகிய அவதார புருஷன் பரசுராமனெங்கே?

இதுகாறுஞ் சொல்லிவந்த அரசர்களை யன்றி, இன்னு மெத்தனையோ அரசர்கள் அஷ்ட சித்திகளோடும், அஷ்ட ஐசுவரியத்தோடும் இவ்வுலகத்தையாண்டு மண்ணுக் கிரையாஞர்களே யொழிய, இறந்த பேர்களில் மறுபடியும் பிழைத்தெழுந்து வந்தவ

ரார்? நீரே சொல்லும். ஓ மன்னனே! பற்பலவார்த்தை பேச வேண்டியதில்லை! நானொன்று சொல்லுகிறேன் கேளும் இவ்வுலகத்தில் நாமரூபத் தோற்றமாகிய வெல்லாம் அழியும். இன்றிறந்தவனுக்கு நாளை பிறக்கப் போகிறவன் அழும்படியாகிய காரியம் ஒன்றுமில்லை. அதனால் என்ன பிரயோசனம்?—என்று நாரதர் சொல்லித் தேற்றினர்.

இந்த வார்த்தைகளை யெல்லாங்கேட்ட அரசன் இருகரத்தையுஞ் சிரத்திற் குவித்திறைஞ்சி "சுவாமீ! தேவரீர் இப்போது சொல்லிவந்த சக்ரவர்த்திகள் முதலாகிய அரசர்களுக்கு நிகர் சொல்லமாட்டேன். அவர்கள் மகா புண்ணியவான்கள்; ஓ குணமேருவாகிய நாரதமகாமுனிவரே! என் பிள்ளை பிழைக்கவேண்டுமென்பதைத் குறித்து நான் விசனப்படவில்லை! ஐயோ! என்விதியினுதித்த சித்தசனுக்கொப்பாகிய மைந்தன் நியாயமாய்ப் புகழ்பெற்றிறக்காமல், திருடர்களால் உயிரிழந்து எனக்குப் பழியும் அபரோதனையும் வைத்தானே! மேலும் அவமிர்த்துச் சாயையாவிறந்தவர்களுக்கு விதித்திருக்குங் கொடுநரகிற் புகுவானே: கொடியேனுகிய அடியேன் நெடுநாள் வரைக்கும் புத்திரனில்லாமல் வருந்த, அப்படி வருந்திய எனக்கு என்மனோபீஷ்டப்படி ஆயுசுள்ளபிள்ளை வருவானென்று ஆசீர்வதித்த உமது வார்த்தையும் ஈசுவர பூஜாவிதேயனுக நானிருந்ததும், நன்னீதி செலுத்தியதும், தேவரீரைத் தரிசித்ததும், இப்போது தேவரீர் சொல்லிய உத்தமர்களின் சரித்திரத்தைக் கேட்டதும் இவையனைத்தும் விறுதாவாய்ப் போய்விடுகின்றனவே; அப்படி போவது மல்லாமல் தந்தையே பிள்ளையென்னும் வேதவிதிப்பிரகாரம், அச்சிறுவன் இறந்ததும், அவன் புகுந்த நரகமும், முடிவில் என்னுடையவையாயிருக்குமே யென்று மனம்வருந்திக் குலைகிறேன். ஓ என்னிஷ்டதெய்வமே!" என்று புலம்பியழுதான். அப்பொழுது, ஈச்வரானுக்கிரகம் பெற்ற மகதியாழ் முனிவராகிய நாரதரானவர் அந்த இராஜனைப்பார்த்து, "ஓ அரசனே! நீரேன் மெத்த வருந்துகிறீர்? இதோ உமது கான்முளையைக்கொண்டு வருகிறேன்" என்றுசொல்லி ஒரு கடிகைக்குள் எமலோகஞ் சென்று, எமதர்மராஜனுடன் வார்த்தையாடி, விவகாரப்படி அந்தப் புத்திரனைக் கொண்டுவந்து தன்னுசீர்வசனத்துக்குக் குறைவில்லாமற் கொடுத்தார். அப்போது சிஞ்சயராஜனும் அவனுடைய தேவியும் உள்ளங்களிந்து, நாரதமாமுனிவருக்கு நானுவித உபசார மரியாதைகள் நடாத்தி வணங்கி

வாழ்த்திப்போற்றி, உலகமெல்லா மதிக்கவாழ்ந்து, நல்ல கதியடைந்தனர். அவர்கள் பிள்ளையாகிய சொர்ணடீவென்பவன் கணக்கில்லாத யாகங்கள் செய்து அகண்ட ஐசுவரிய முடையவனுய்க் காசினியாண்டு மாண்டு மோட்சமடைந்தான்.

"ஆகையினுல், ஓ தர்ம ஸ்வரூபியே! எத்தனைகோடி காலம் இக் கர்மபூமியில் வாசம் பண்ணி இந்திர போகத்தைப்போல் போகம் அநுபவித்தாலும், துன்பம் மேலிட்டிருக்குமே யல்லது இன்ப மென்பது எத்தனையு மணுகாது. குற்றஞ் செய்தபேரை அரசன் தண்டித்துக் காவலில் வைத்துப் பரிசுத்தப் படுத்தி விடுக்குமாறு போல், எப்படிப்பட்டவர்களும் இக் கர்மபூமியில் வந்து, செபதபயோகவிர்த்தியால் வரும் இன்ப மென்னும் ருசியையும், சமுசார முதலியவற்றினுல் வரும் துன்ப மென்னுங் கசப்பையும், ஒரு நாவினுல் ருசியறிந்து இதுவும் அதுவும் பிசரிக்கொண்டு கீழது மேலதாய் மேலது கீழதாய்ப் புரட்ட, வினையால் விளையும் நோய் முதலியவெல்லா மருட்ட, சகலபாடும்பட்டு, சமஸ்த கேடுங்கெட்டு, மற்றெல்லாக் கொடுமைகளையும் இக் கர்ம பூமியில்விட்டு மேலாகிய பதத்தைப் பெறக் கருதுவார்கள். ஆனுல் எல்லோருக்கும் அப்படியே நினைத்த வண்ணங் கிடைக்குமோ வென்றுல் கிடைக்கமாட்டாது. அது மெத்த அருமை. அப்போற்பட்ட அருமையாகிய பேரின்பக் கதியை உலகத்திற் கீர்த்தி நிலைநிறுத்திய உங்களபிமன்னன் மெத்தவும் இலேசாகப் பெற்றுன். அவனுக்காக சந்தோஷப்படவேண்டுமே யல்லாமல் விசனப்படுவது காரியமன்று! இத்தமட்டும் விசனமும் புத்திரவாஞ்சையும் விட்டிருப்பதுவே மேலான நன்மை" என்று, இல்லறத்தைவிட்டு நல்லறத்தைத்தொட்டு இருவினையுமற்ற சுகப்பிரமத்தை ஒருதவமாகப் பெற்ற கிருபைக் கண்ணினையுடைய வேதவியாசர்சொல்ல, வேதமந்திரம் போன்ற அவருடைய வாக்கியத்தைத் தருமராஜன் மனதுட்கொண்டு, அருமறையின் அந்தமாகிய விதிமுறை இதுதானென்று ஆசைப்பேயை அலறவோடவிட்டு, ஓடம்விட்டுக் கரையேறினவரைப்போ விருந்து, அந்த மகாநுபாவருக்குத் தீர்க்கதண்டஞ் செய்தார்: உடனே வேதவியாசர் ஆசீர்வாதங் கொடுத்து விடை பெற்றுக்கொண்டு, கந்த மூலங்களிறைந்த சோலைபோய்ச் சேர்ந்தார். அவ்வேத வியாசர் போனவுடனே சொல்லுதற்கரிய பெருமையினை வாய்ந்த தர்மராஜாவானவர் "தம்பியாகிய விஜயனும் மைத்துனனுகிய மாயனும் வருவார்களே: அவர்களுக்கு நாமென்ன உத்தரவு சொல்லுவோம்

என்று முன்னிருந்ததற்கு நூறுபங் கதிகமாகிய சஞ்சலத்துடன் பாசி மூடிய நீர்போற் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தார்.

அருச்சுனன் பாசறைக்குத் திரும்பும்போது கண்ணன் சூழலால் அக்கினிப்பிரவேச மாகவிருந்த ஆகண்டலனை அவன்றேற்றி விடுத்தல்.

ஓ ஜனமேஜய மகாராஜனே, இப்பாற் சஞ்சத்தகராதியர் பேரிற் சண்டைபோடச்சென்ற கிருஷ்ணார்ச்சுனருடைய செய்கையைச் சொல்லுகிறேம் கேளும்—இவ்வுலகெல்லாம் தன்னை வணங்கத் தானொருவரை வணங்காமுடிபெற்ற வாழ்வைப் பூண்ட துரியோதன னேவலினால் அர்ச்சுனன் பேரிற் சண்டைக்குச் சென்ற திரிகர்த்த தேசராசரும் சஞ்சத்தகரும் தென்றிசையினின்று சண்டப் பிரசண்ட உத்தண்ட தோர்த்தண்ட மூர்த்தண்ட மாய் விஜயனுடன் யுத்தஞ்செய்ய, அப்படி யுத்தஞ் செய்தவர்களை யெல்லாந் தன்னிலமாகிய எமலோகத்தில் குடியேற்றி, எல்லா உலகத்தினும் தன்ஞண்மையை நிலையிட்ட இணையில்லாவிஜயன் போர்முகத்தில் நடந்திருக்குங் காரியம் இன்னதென் றறியாதவனாய், அவ்விடத்தை விட்டுத் தர்மராஜன் முதலிய பேர்க ளிருக்கும் இடத்தை நோக்கி வருவதற்கு ரதத்தைத் திருப்பச்சொன்னன். அப்போது பூத பௌஷிய வர்த்தமானப் புணர்ப்பெல்லா மறிந்த சர்வ ஞானியாகிய துவாரகாபுரி வாசனென்னுஞ் சாரதியான வருக்குத் தன் மருமகனாகிய அபிமன்னன் பத்மவியூகத்தை உடைத்துச் சென்றதும், சிந்து தேசாதிபன் அபிமன்னனுக்கு ஒருவரும் துணைபோக வொட்டாமல் தடுத்துப் போர்புரிந்து நின்றதும் இராஜ புத்திரர் முதலிய அநேககோடி படைகளை அபிமன்னன் வென்று வீரசொர்க்க மடைந்ததும் இவைகளெல்லாந் தமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் ஒன்றுந் தெரியாதவரைப் போலிருந்து, அர்ச்சுனனிஷ்டப்படி தேரைச்செலுத்த எத்தனித்தவர் மெதுவாக நடத்திக்கொண்டு வரும்போது இதனை நினைப்பதாயினர்—"ஐயோ! எல்லாச்சோகங்களிலேயும் புத்திரசோகம் பெரிதாகையினாலும், அர்ச்சுனனுக்கு இந்தப்பிள்ளையின்பேரில் அதிக பட்சமிருப்பதினாலும், அபிமன்னனிறந்ததை இவன் கேட்பானாஞல் தன்னுடைய பிராணனைத் திரணமாக நினைத்து மரணமடைந்து விடு

வானே! அப்படி கேரிடவொட்டாமல் ஒருபாயஞ்செய்ய வேண்டு மென்று நினைத்து, அக்காசாம்பூவண்ணனுனவர் அதற்கு வேண் டிய கருவிகளெல்லாந் தன் மனத்துளமைத்துத் தேவேந்திரனை நினைத்தார்.

இவருடைய எண்ணப்படி பஞ்சபூத முதலிய எல்லா பூதங் களும் ஆடத்தக்கனவாகையால், இந்திரனும் மிகுந்த விர்த்தப் பிராம ணனுக வடிவங்கொண்டு, இவர்கள் வருகிறவழிக் கருகாமையில் எரி யத்தக்க பெரிய அக்கினிகுண்டம் ஏற்படுத்தி, மஞ்சள் வஸ்திர மூடுத்து, மெலிந்த தேகத்துடன் வாய்விட்டழுது கண்ணீர்வடி த்து, "ஓ தெய்வமே!" என்று கூவி, தீக்குழியைச்சுற்றி வலம் வந்து கொண்டிருந்தான். அப்போது தேரைச் செலுத்தி, வராகின்ற திரு மாலதைத் தனஞ்செயனுக்குக் காட்டி, "இதென்ன இவ்விடத்திற் பெருத்தீ எரிந்துக் கொண்டிருக்கிறது? ஆரோ ஒரு பிராமணன் அலறி அழுது அந்தக்குழியை வலம்வருகிறான். ஓ விஜயப்பிரதாபா! இதனைச்சற்று நின்று பார்!" என்று மாயனுரைக்க, அதைப்பார்த்த அர்ச்சுனன் மெத்தவும் ஆச்சரியங்கொண்டு அவ்விடத்திற் குப் போய்த் தீயில் விழப்போகிற அப்பிராமணனுடைய கையைப் பிடித்துக்கொண்டு, மிகுந்த வணக்கத்துடன் பணிந்து, "ஓ பிரம சிரேஷ்டரே தேவரீரெங்கிருக்கிறது? உமது பேரென்ன? இத் தீயில் விழப்போகிற காரணமென்ன? எங்களுக்கு இதனைத் தெரி யப்படுத்தும்!" என்று வேண்டிக் கொண்டான். அப்பிராமணன் தேம்பித் தேம்பியழுது, "ஐயன்மீர்! அழுவாரழுவது தன் துக்கத்திற் கல்லது பிறர் துக்கத்துக்கல்ல. ஆகையால் தெய்வம் என்னைச் சோதித்ததற்காக என்விதியை நானனுபவிக்கிறேன். நான் செய்து கொண்ட வினை என்னை மோசஞ் செய்தது. தளர்ந்த வயதில் ஆதர வில்லாப் பாவியானேன். உங்கள் வேலையைப் பார்த்துக்கொண்டு நீங் கள் போங்கள்! என்கையை விடுங்கள்! மகா ராஜாக்களாகிய உங்க ளுக்கே னிக்கர்மம்?" என்று சொல்லிக்கண்ணீர் சொரிந்து, கடகட வென்று புரண்டு, வாயிலறைந்துகொண்டு வயிற்றைப் பிசைந்து, கையைநெரித்துக் கதறுவதானுன். கண்ணனுங் காண்டீபனும் அப்பிராமணனைத் தேற்றிச் சங்கதியைச் சொல்லுமென்று பிடித் துக் கேட்டார்கள். அப்போது அந்தப்பிராமணன் இதனைப் பேசுவதாயினன்—

"ஓ புண்ணியர்களே! என் வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? நீங்கள் கேட்டதினாலென்ன லாபம்? என் குறையைத் தீர்க்க உங்களாலாகுமா? பொன் பொருளானைக் கொடுத்துக் காப்பாற்றுவார்கள். உயிர் கொடுத்துக் காக்க ஒருவராலுமில்லை. நான் மகாபாவியாயிருப்பதுமல்லாமல் உங்கள் காதிலேயும் இக்கொடுமையான சங்கதியைச் சொல்லி நீங்களும் விசனப்படச் செய்வதில் ஒரு பிரயோசனமுமில்லையே! ஓ உத்தமர்களே! என்றைக்கிருந்தாலும் இறந்துபோகிற பிராணன் இன்றைக்கிறந்தால் அதனாலே என்ன தாழ்ச்சி? நீங்களேன் இப்பாவியைத் தடுக்கிறீர்கள்? ஒருவருஞ் செய்யாக் கொடுமையைச்செய்த கொடியேனுக்குத் துணைவருவாரு முண்டோ? கோவேந்தரே! என்னை விட்டுவிடுங்கள்!" என்று சொல்லி ஓரே கெட்டாகத் தீயில்விழுத் தாவினன்.

அப்படி தாவத்துணிந்த காணித் தேவனைப் பிடித்து நிறுத்தி, "ஓ சுவாமீ! நீர் சொல்லுவதெல்லாம் நியாயந்தான். ஆகிலும் இன்னசங்கதி யென்று எங்களுக்குச் சொன்னால் எங்களாற் கூடுமான வரைக்கும் சகாயஞ் செய்கிறோம்! நீர் சந்தேகப்படவேண்டாம். உற்ற காரணத்தை உள்ளபடி சொல்லும்!" என்று நல்ல வசனமாக வினவியபோது, அந்தப் பிராமணன் இவர்கள் முகத்தை உற்றுப்பார்த்து, "உங்களைப் பார்த்தாற் சத்துருக்கள் இடத்தில் மெத்தவும் அலைச்சற்பட்டு அவதிப்பட்டு வேசாரி வருகிற அரசர்கள் போலிருக்கிறது. அந்த அவதியுடன் என்னவதியையுங் கேட்கிறீர்கள். சொல்லாமற் போனாலும் கல்லதல்ல; சொன்னாலும் என் துயர்போவதல்ல. ஆனாலுஞ் சொல்லுகிறேன்; நானிருப்பது இந்திரபுரி. என்பேர் ஆகண்டலர்; நானிந்தப் பூலோகத்திற் பிறந்து வளர்ந்து சகல கலைகளுந்தேர்ந்து விவாகம் பண்ணிக்கொண்டு மேன்மையாக வாழ்ந்து வருநாளில், புத்திரனில்லாமல் மெத்த வருந்திச் சித்தகொந்து, தேவதார்ச்சனைசெய்து, ஈசுவராநுக்கிரகத்தினால் ஒருசற் புத்திரன் பிறந்தான். அவனை மெத்தவும் பாதுகார்த்து வளர்த்து விவாகமுடித்து வேடிக்கையாக இருந்தேன். உத்தமர்களே! இருபத்தைந்து வயதுவரைக்கு மிருந்து என்னை மறந்து இறந்தான். அவனுடனே கூட இந்தத் தேகத்தையும் மாய்த்துவிட வேண்டுமென்று தீயிற்குதிக்கத் துணிந்தேன்! இனித்தேறேன்! தேறேன்!"—என்று திடுக்கிட்டயர்ந்தான்.

அப்படி அயர்ந்த பிராமணனை அணைத்தெடுத்து "ஐயையோ! இட்டதெல்லாம் பயிராமா? இகத்திற் பிறந்ததெல்லாம் அழியாம லிருக்கக்கூடுமா? இலை பழுக்காமற் போகுமா? எமனுக்கு வேலை யில்லாம லிருக்கலாகுமா? ஹரி ஹரி ராமா! காய்க்கு மரங்காய்க்கும்! பூக்குமரம் பூக்கும்! அத்தன்மைபோ லுமதுபத்தினியும் ஈரும் இன் னுமனேகம் புத்திரர்களைப் பெற்றுக் கொள்ளலாம். இறந்தோருடன் மடிந்தோர்களை இதுவரையிலுங் கண்டதுமில்லை கேட்டதுமில்லை போம்! போம்! பயித்தியம்பிடித்தவரே" என்று பலவிதமாகிய தர்மங் களுஞ் சாந்திகளுஞ் சொல்ல, அதைக்கேட்ட ஆகண்டலன் "ஓ அருள்வடிவாகிய அரசர்களே! தர்மமுந் தைரியமும் பிறருக்குச் சொல்லுமிடத்து யாவரும் லேசாய்ச் சொல்லுவர். தங்கள் தங்க ளுக் கிருக்கமாட்டாது. வயிற்றுநோயின் வருத்தம் வந்தவர்களுக்குத் தெரியுமல்லது மற்றவர்களுக்குத் தெரியுமோ? நீங்களெப்போதும் மகா ராஜாக்கள்; செல்வஞ் சொல்லுக்கஞ்சா தென்பதுபோற் சொல் லுகிறீர்கள். இப்பேர்ப்பட்ட துயரம் உங்களுக்கு வந்ததானால், அப் போது தெரியும் இப்போது நான்படும் அருமை" என்று பிராமணன் துக்கத்தினால் விக்கிக்கொண்டு சொல்ல, அதைக்கேட்ட கிருஷ்ணார்ச் சுனர்களில் அர்ச்சுனன் நகைத்து, "அல்லகாணும் ஐயரே! தான் சாவ மருந்துண்பார்களா? எங்களுக்கு இப்பேர்ப்பட்ட துன்பம் வந் தாலும், உம்மைப்போல் இளைக்கவுமாட்டோம். இறக்க நினைக்கவு மாட்டோம். நானுமக்கு உண்மையாய்ச் சொல்லுகிறேன்!" என்று சொல்ல, "நல்லது நீர் சொன்னபடியே உண்மையாய் நிற்பவராகில் நானொன்று கேட்கிறேன்! அதற்கு வயணஞ் சொல்லும். ஒரு காலத் தில் உமக்குரிய புத்திரர்களில் யாராவது இறந்துபோனால், நீர் விசன மில்லாதிருப்பீரா?" என்று கேட்டான்.

அதற்கு அர்ச்சுனன் சிரித்து, "ஐயா பிராமணோத்தமரே நான் ஒருகாலும் விசனப்படேன்!" என்று சொல்லினன். "இந்தச்சொல் யதார்த்தமானால் எனக்குக் கைபோடும்" என்று ஐயர்கேட்க, இதுவே சத்தியம்" என்று கையறையப் போகும்போது காசாம்பூவண்ணனு கிய கண்ணன் "என்னத்திற்கு வீணான காரியம்? அர்ச்சுனா! இலையும் பழுப்பும் எல்லார்க்கு முண்டு! இப்போது நாம் செய்துவருவது யுத்தம். இதிற் சாவாராரோ? பிழைப்பாராரோ? காமெதைக் கண் டோம். நீ ஆத்திரப்பட்டுக் கையடிக்கவேண்டாம்!" என்று தடுக்க, அந்த வார்த்தையைக் கிரீடி கேளாமல், "அப்படி என்னவந்தாலுஞ்

சரிதான். சொன்னசொற் றப்புவதில்லை'' என்று கையையறைந்து அக்கினிக்குழியை அவித்து, ஐயருக்கு நமஸ்காரஞ்செய்து விடை கொடுத்தனுப்பிவிட்டு, கிருஷ்ணமூர்த்தியை அழைத்துக்கொண்டு தனது தேரேறினன். குற்றமற்ற விஜயகாண்டீபன் தேரேறிய மாத்திரத்தில் தன்னுயிர்போன்ற ஆயுதங்களை யெல்லாந் தேரில் அவிழ்த்து வைத்து இளைப்பாறிக்கொண்டு வருகையில், மாசறவிளங்குந் துளபமாலை கழுத்தினிலணிந்த திருமேனியையுடைய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அந்த ஆயுதங்களை யெல்லாம் எடுத்து ஒளித்துவைத்து, அவனுக்குத் துன்பம் வராதிருக்கும்படி அதற்கு வேண்டிய யோசனைகளைச்செய்து விஜயனைப் பார்த்து, "பிராமணனுடைய பிராணனைக் காப்பாற்றி நல்ல பலன் கைக்கொண்டாய் பார்த்திபனே!" என்று வார்த்தையாடிக்கொண்டு, பொற்பிரகாசம் பொருந்திய தேரைப் பூமியதிரும்படியாய்ச் செலுத்தி வந்தார்.

அர்ச்சுனன் தனது ராஜமண்டபத்திற்கு வரும்போது தீயசகுனங் கண்டையுறல்

கண்ணபிரான் அப்படித் தேரைச் செலுத்திக்கொண்டு விரைந்து வருகிற வழியில் இதுவரையிலுங் குற்றங்களில்லாத சகுனங்கள் கண்டது போய், உடலும் உயிரும் நடுங்கும்படியாகிய தீய சகுனங்களைக் கண்டு, எந்தக் காரியத்திலும் அசையா மனத்தினையுடைய இந்திர குமாரனாகிய வில்விஜயன் மயங்கி மனமருண்டு வாடினன். அதை ஸ்ரீ நாதன் கண்டு, சூரியன் மேற்றிசை யடைந்தபடியால் மாலைக்கடனாகிய சந்தியாவந்தனஞ் செய்து கொள்ளலா மென்று சொல்ல, உடனே இருவரும் ஒரு குளக்கரையி லிறங்கிச் செபதபகித்தியவிதி முடித்துக்கொண்டெழுந்தார்கள்: அந்த வேளையிற் சுவேதவாகன னனவன் மைத்துனராகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானை நோக்கி, "என்னிதயத்தெளிவே! ஓ என் விழித்துணையே! வெண்ணூலுந் தோற்றூலுஞ் சமுத்திர கோஷம்போ லிரைத்து மூனிச்வரர்களுடைய ஆசிரமம்போ லிருக்கும் நமது பாசறையானது சந்தடியில்லாமல், மாணிக்க தீபமுதலிய மற்றத் தீபங்களு மில்லாமல், பிராம்மணர், மகா முனிவர் முதலியவர்களின் வேதாகம தர்க்க மீமாம்ச முதலிய ஓசையுமில்லாமல், இராஜசபைக் கூட்டமுமில்லாமல், குடிப்போன வீடுபோல் ஓசையடங்கி உற்சாக மில்லாமலிருக்க வேண்டிய காரண மென்னவோ? இன்னதென்று தெரிய

வில்லையே! சுவாமீ! இதனையெனக் கியம்பும்!" என்று செந்தாமரைக் கண்ணனைக் காண்டீபன் கேட்டான்.

வெண்ணெயுண்ட கள்வனுஞ் சற்று யோசித்து "எனக்குஞ் சந்தேகமாகத்தான் தோன்றுகிறது. என்ன நடந்திருக்கிறதோ அறியேன். காலமே முதல் இதுவரையிலும் உன்னை விட்டுப் பிரியாதிருக்கும் எனக்கு எப்படி தெரியும்? எல்லாம் போய்ப் பார்ப்போம் வா!" என்று பாசறையை நோக்கி வரும் போது அர்ச்சுனனுக்கு இடத்தோள் துடித்தது. இடக்கண் துடித்தது. மார்படித்துக்கொண்டது. கோட்டுவாய் வந்தது. சோம்பலாயிற்று. வரும்போதே நித்திரை, மயக்கமுண்டாயது. கண்ணை மூடுதலும், புலால் நாற்றம் நாறுதலும், மாலைசருகாதலும், உண்டாயின. இவைகளைக் கண்டு "ஏதோ வகை மோசம் வந்திருக்கிறது. அரசர்களுக்கு ஏதாகிலும் துன்ப முண்டோ? பெருமையையுடைய பிள்ளைகளுக் கென்னவோ? பலம் பொருந்திய மூசகக் கொடி பெற்ற தமையனுக்கியாதோ? மற்ற சகோதரர்களுக் கென்ன துன்பமோ? அலைபோ லசையும் என் காதிற் கேட்கப் போகிறது என்ன வார்த்தையோ? ஓ தெய்வமே!"—என்று ஏக்கங்கொண்டு "சீக்கிரந் தேரைச் செலுத்துமையா சீமானே!" யென்று இருள்செருங்கிய நீண்ட பாசறைக்குச் சமீபத்திற் போய்த் தேரை விட்டிறங்கி, வாசனைகளும், மலர்களும், மன்னவர்களும், கவிவாணர்களும் எப்போதும் வாசமாய்ப் பொருந்திய தனது இராஜ மண்டபத்திற்கு வந்து யுத்தமுகத்தில் தனது புத்திரனுகிய அபிமன்னனிறந்து போனனென் றுணர்ந்து, ஒரு பாரிய மரம் அடிவேர், ஆணிவேர், சல்லிவேர், முதலிய எல்லா வேறுமற்றுப் பூமியிற் சாயாதிருக்குந் தன்மைப்போல் தன்னை மறந்து மரம்போல் நின்று, அசைவற்ற கடல்போல் ஒடுங்கி உயிர்ப்படங்கிப்பசையற்ற பால்போலாகி, 'வசையற்ற மைந்தனே!' என நவின்று, ஒருகடிகை சென்ற பிற்பாடு சுவாசவந்துறக் கண்மலர்திறந்து, சில வார்த்தை சொல்லுவதானுன் விஜய காண்டீபன் என்று வைசம்பாயனர் சொல்லிவர, ஜனமேஜய ராஜன் சிரமேற் கை குவித்துச் சிந்தைவருந்தி, "என் சுவாமீ! எங்கள் மூதாதையாகிய காண்டீபருக்கு எங்கள் பாட்டன் அபிமன்னனிறந்த சங்கதியை ஒருவருஞ் சொல்லாதிருக்க, சபாமண்டபத்தில் வந்தவுடனே எங்கள் மூதாதை தெரிந்து கொண்டாரென்று தேவரீர் சொல்லி வந்தமையால் அவருக்கெப்படி தெரிந்தது? அதைவிளங்க

அடியேனுக் குணர்த்த வேண்டும்" என்று, கேட்க வைசம்பாயனர் சொல்லுகின்றார்—

ஓ நிதிசேர், திரைசார், மதிசேரரசே! கேளும்! இந்த யுத்தம் தொடங்கிய நாள்முத லிதுவரையிலும் யுத்தகோலங் கொள்ளும் போது, பிள்ளையுந், தந்தையுந், ஒருவருக்கொருவர் அலங்காரம் பண்ணிக் கொள்ளுகிறது வழக்கம். பின்பு விஜயகாண்டீபம், விற்றூணி, வீரகண்டாமணி, முதலிய யாவும் விஜயனுடைய தந்தைக்கு அபிமன்னன் தன் கையாலணிந்து தேரிலேற்றிவிட்டுத் தானுந் தேரேறிச் செல்வான்; சாயுங்காலந் தந்தை வருவதற்கு முன்னமே தான் வந்து தேர் விட்டிறங்கிக் கவசமுதலிய ஆயுதங்களைக் கழற்றிப்போட்டு நித்தியவிதிகளை முடித்துக் கொண்டிருந்து, சுவேதவாம் புரவி பூட்டிய தேர்வந்தவுடனே எதிர்கொண்டோடி, கருதினைர்க்குப் பெம்மானுகிய தன்னம்மானைப் பணிந்து அர்ச்சுனராஜனுடைய திருவடியைப் பிடித்துத் தனது முடியில் வைத்துக் கொண்டு வீரகண்டாமணியை அவிழ்த்துத் தந்தைக்குக் கைகொடுத்துத் தேர்விட்டிறக்கி, தந்தை தனக்கு முத்தமிட்டவுடனே வில், பாணக்கூடு முதலிய ஆயுதங்களையும் ஆயுதச் சாலையில் வைத்து, கரங்கால் சுத்திசெய்துகொள்ளஜலந்தருவித்துக்கொடுத்து, பின்பு தந்தை சுத்திசெய்துகொண்டு இளைப்பாறியபோது தன்னுடைய யுத்தப்பிரதாபங்களைச்சொல்லித் தந்தையினுடைய சாதுரிய விநோத வீரப்பிரதாபச் சண்டைகளைக் கேட்டுச் சதாகாலமும் அண்டையிலிருந்து ஆனந்தங் கொள்ளும்படியாகிய விசித்திரன், எப்போப்பட்ட காலங்களிலும் இந்த மரியாதை தப்பாதிருக்கும் படியான ஒப்பில்லாப்புத்திரன், தேரைவிட்டுத் தானிறங்கும் போது வழக்கத்திற்கு முழு விரோதமாய் வராமற் போனதால், "இருந்தால் வருவானே! இல்லையாதலால் வரவில்லை!" யென்று முறைமையினுலும் புத்திசூக்ஷமத் திறமையினுலுந் தெரிந்து கொண்டான். அல்லாமலும் சில கேள்விகளாலும் நிச்சயம் அறிந்து கொள்ளத் தொடங்கினன்.

அபிமன்னனிறந்த தறிந்துகொண்ட அர்ச்சுனன் இராஜ மண்டபத்துள்ள அரசரைச் சினத்தல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இப்பால் அவ்விராஜ மண்டபத்திலிருந்த பிரமுகர்களை யெல்லாம் அர்ச்சுனன் பார்த்து,

"எல்லாத் திறங்களுந் தெரிந்த அரசர் முதலாகிய யாவரும் வந்து நெருங்கியிருக்க என்னுயிரினுஞ் சிறந்த புத்திரனுகிய அபிமன்னனை ருவ னில்லாம லிருக்கவேண்டிய குறைவென்ன சொல்லுங்கள்?" என்று கேட்டான். அதற்கு எவர்களும் உத்தரஞ் சொல்லாமல் அசைவில்லாச் சித்திரப் பாவையைப்போல் திகைத்து நின்றனர். அதுகண்டு சத்தியமாக மைந்தனிறந்து போனனென்று வித்தகனு கிய விஜயன் சந்தேகமில்லாமல் தெளிந்து, "அடாமகனே! மகனே!" என்றலறி மண்மேல் விழுந்து, மடமட கடகடவென்று புரண்டு, மதியழிந்து, நிரைகுறைந்து, சுகஞானம்விட்டு அபிமானங்கெட்டு, மரண மூர்ச்சையடைந்து மறுபடியுமெழுந்து, கூர்மையாகிய வேலா யுதத்தாற் கிழிபட்ட உடல்போற் பதைபதைத்து, நமது குமார னுக்கும் ஆபத்து நேர்ந்ததல்லவாவென்று துடிதுடித்து, வடவாமு காக்கினியும் சாடராக்கினியும் திரிபுராக்கினியும் தினகராக்கினியும், பெரியோர்களின் சாபாக்கினியும், உரியோர்களின் கோபாக்கினியும், தவத்தினர் தாபாக்கினியும், பதிவிரதைகளின் கோபாக்கினியும், ஒன் ருகச் சேர்ந்து வந்து பற்றிக்கொண்ட தன்மையைப்போல் வயிறெ ரிந்து வயிற்றை பிசைந்தடித்துக் கொண்டு மார்பில்மோதி வாயி ரைந்து, மண்ணைத் துழாவி, கண்ணீர்பெருகுங் கண்ணிலறைந்து, தாழ்ந்து, வீழ்ந்து, இருந்து, சொற்றடுமாறி, சுபாவமறந்து, துயர்க் கடலில் மூழ்கி, பள பள பள பள வென்று கரத்தால் முகத்தில் மோதிக்கொண்டு, "அப்பா என்காதலனே! அடா என்கண்மணியே! எனக்குப் பிள்ளையாகப்பிறந்து பெருநூலெல்லா முணர்ந்து கலி யாணம் பண்ணிக்கொண்டு காரியஸ்தனுகத்திரிந்து இந்தப்பூமியில் வாழ்ந்த வாழ்க்கை இம்மட்டோ? இதற்கோ இந்தப்பாடு? இவ்வள வுக்குத்தானே இந்தப்பீடு? நீ எந்தவிதமாய் மாய்ந்து போயினையோ? ஐயையோ!! மகனே! மகனே!" என்றேங்கிவாடி ஏதுந் தோன்ரு மல் நின்ரூன்.

அப்படி நின்றவன் மறுபடியுந் தன்பக்கத்தினெருங்கிநிற்கும் வேந்தர்களைத் திகு திகுவென் றெரியும் வெகு கோபப்பார்வையுடன் தெழித்துப் பார்த்து, சுவாலா மாலிகையாகிய ஆலகால விஷம் போற் சீறி, கண்களில் இரத்த நீர் வழியும்படியாக அழுது "என் கால்வழித் தோன்றலாகிய அபிமன்னனைப் போர்க்களத்தி லிறக்க விட்டு நீங்கள் உங்கள் உயிருக் குறுதிதடிக்கொண்டு உரம் பெற்றுவந்து விட்டீர்களா? ஆ! ஆ! யோக்கியர்களே! இந்த

உலகத்தில் உங்களுக்கொப்பாய பேர்களுமுண்டோ? இது மகா உத்தமம்! மகா உத்தமம்!" என்றுரைத்துப் பின்னும் நோக்கி, "வீர, கோர, சூர, தீர ஆர, பார, விற்றிறம், வாள்திறம் கதைத்திறம், வேற்றிறமுதலாகிய இத்தியாதி திறங்களையும், மறங்களையும், அறங்களையுமுடைத்தாய்ப் புறங்களையும் போர்த்தொழிலிற் சிறந்து, சகல விருதும் வில்லும் பாணமுங்கொண்ட தாஷ்டீகராகிய நீங்களெல்லாரு மிருந்தும், என்னுயிர்க் கிசைந்த குமாரனுகிய அபிமன்னனைக் காவாமற் போனீர்களே! நீங்கள்தானு தருமராஜனுக்குப் படைத்துணையாகச் சாதிக்கிறே மென்று வந்தவர்கள்? நீங்களென்ன போர்புரியப் போகிறீர்கள் ? ஐயையோ !! உங்களுக்கு ஆயுதமேன் ? வில்லேன் ? கணைகளேன் ? தேரேன் ? சீரேன் ? முழ நீளப் பேரேன் ? வீரக் கொடியேன் ? மணியணிப்பணியேன் ? வீர கண்டாமணி யேன் ? முத்தணிக் குடை யேன் ? ரத்தின முடியேன் ? நான் கெட்டிக்கார னென்னுஞ் சாமார்த்திய மொழியேன் ? முனையேன் ? என்முன் நிற்காதீர்கள் ! அப்பாற் போங்கள்!" என்று இப்படி பற்பல விதத்தாலும் பன்னிப் பன்னிப்பேசி, "சீ ! சீ ! உங்களுக்கு இது வொரு வீரமோ!" வென்று ஏசி, தீப்பொறி பறக்குஞ் சிவந்த கண்களைத் திரண்ட வெள்ளமெனப் பெருகுங் கலுழி யதிகரித்து மறைக்கத்துக்கித்து, தனக்கெதிரில் நின்ற பீமன் முதலாகிய சகோதரர்களையும் மற்றுமுள்ள பரிசன மன்னர்களையும் அண்டக் கூடாத அருந்துய ரத்தோடும் பார்த்து "என் சந்ததியை முடித்தவனுர்?" என்று அந்தரம் படபடவென் றதிரும்படி அதட்டிக் கேட்டான்.

தருமராஜன் அருச்சுனனுக்கு நடந்த வாறுகூறி நலிவுறல்

அப்படி கேட்ட இந்திரன் குமாரனுகிய அர்ச்சுனனுக்கு எவரும் மறுமொழி சொல்ல காவெழாமல் வாயில்லா ஊமைபோற் பயந்து அயர்ந்து அடங்கி ஒடுங்கி நின்றார்கள். அந்தச் சமயத்தில் தம்பி கேட்குங் கேள்விக்கு உத்தரஞ் சொல்லாமற் போனுற் புத்திர சோபக் கோபத்திலு மேலாகிய வேகமுண்டாமே யென்றெண்ணி, தர்மமே ஜெயஞ் சத்தியமே நித்தியமென்னுங் கடைப்பாட்டினையுடைய தருமராஜன் "கேளப்பா வெண்ணுயிருக்கு உற்ற துணையாகிய சகோதரனே ! இன்று காலமே நாமெல்லோரும் படைமுகத்தில் நிற்கும்போது சஞ்சத்தகருந் திரிகர்த்தருஞ் சண்டைக்கு வந்தழைக்கத் தென்திசை நோக்கி யேம் ஸ்ரீகிருஷ்ணமூர்த்

தியுஞ் சென்ற பிற்பாடு, துரோணுச்சாரியர் வகுத்திருந்த பத்ம வியூகத்தை உடைத்து உள் நுழைவதற்கு எவர்களாலுங் கூடாத நிர்வாகத்தினுல் நமது படைகள் தயங்கினர்கள். அந்தவேளையில் மன்னர் யாவரையும் உன்னைப்போல் வெல்லத் தக்கவனுகிப் பொன் னைப் போலிலங்கிநின்ற மைந்தனுடைய வல்லபங்களை யுணர்ந்த நான் அவனைப் பார்த்து, 'அப்பா! என்னிளஞ் சிங்கமே! உன்றந் தையு மிவ்விடத்திலில்லாமையால் நீயேபோய் ஜெயிக்க வேண்டும்' என்று சொல்லி விடுத்தேன். பாவியாகிய என்வார்த்தையைக் கேட்ட வுடனே சற்றுந் தரியாமற் சென்று, இன்று அவன்செய்த வீரத்தை நானென்ன வென்று சொல்லப்போகிறேன்? என்னையனே! போர்க் கோலங்க ளெல்லா மமைந்து தீர்க்க தண்டம் பண்ணிக்கொண்ட புத்திர பாக்கியனைத்தூக்கி யெடுத்தணைத்து 'ஜெயம் பெறக்கடவை' யென்று என்வாக்கினுற்சொல்ல, அம்மாத்திரத்தில் ஆக்ஞாச்சக்கரம் போற் புகுந்து எதிரிகள் சேனைகளையுங் கரியஸ்தர்களையுந் தாக்கி, ஒருவரையும் உள்ளே நுழைய வொட்டாமல் இருப்புச் சுவரென அமைத்திருந்த சக்ரவியூகத்தைப் பிளந்து, சூசிகா வியூகத்தைச் சிதறச்செய்து, துரோணுச்சாரியர், கர்ணன், கிருபாச்சாரியர், துரி யோதனன், அசுவத்தாமன் முதலாகிய பல கோடி வீரர்கள் வந் தெதிர்த்துத் தடுக்க அவர்களை யெல்லாம் ஒருதரமல்ல பலதரமும் கையக்கொட்டிப் பையப்பையப் பயந்து புறமிட்டோட முடுக்கி யடித்து, மேலாகிய கால்வகைச் சேனைகளையுந் தரையிலரைத்து, இரத்த வெள்ளத்திற் கரைத்து, இலக்கண குமாரன், பதாதி வேந் தன், சல்லிய குமாரன், மகத ராஜ மைந்தன் முதலாகிய அநேகம் ராஜ புத்திரர்களை யெல்லாங் கொன்று, கர்ணனும் துரோணரா லும் வில்லுந் தேரும் அழியப் பெற்றனன்.

அந்த க்ஷணம் உக்ரத்துடன் அந்தத் தேர்ச் சக்கரங்களைக் கையிற்கொண்டு பூமியில் நின்று, யாவருந் துன்பப்பட்டஞ்சி எஞ்சி யிளைத்துத் துஞ்சும்படியாய் முடித்து, துச்சனியுடன் கதாயுத்தஞ் செய்து, அவனையும் முடிசிதற அடித்துத் தள்ளி, தான் சிந்தை மயங்கி மெய்த்தளர்வுடன் சோர்ந்து நிற்குஞ் சமயத்தில் அங்குப் பதுங்கிக் கொண்டிருந்த சயத்திரதனனவன் சிகரதண்ட மென்கிற கதாயுதத்தால் அடிக்கவே, என்னருஞ் செல்வச் சிங்கம் வீழ்ந்து விட்டானடா என்னப்பனே! இந்த அநியாயத்தை என்னென்று சொல்லுவேன்! நான் ஆருடனே சொல்லி ஆறுவேன்? என்னெய்ப்

பில் வைப்பாயிருந்த ஏக்கலுக்கும் ஒருகுறை வருமோவென் றெண்ணி யிருந்தேன்! அவ்வெண்ணம் மண்ணுய் விட்டதே! ஐயையோ!! இனி நானென்ன செய்யப்போகிறேன். ஒப்பில்லாத என் கண்ணுளன் சக்ரவியூகத்தை உடைக்கப் போகும்போது நாங் கள் யாவரும் உடற்சாயை நிழலைப்போலத் தொடர்ந்து, நாலுபக்கத் திலும் படர்ந்து, விடாமலடர்ந்து புகுந்து அமர் புரிந்தோம். அந்த வேளையிலுங் கயிலாசபதியின் வரம்பெற்ற உரத்தினுற் சயித்தவன் வந்து வளைந்து, கரஞ்சுற்றிய சரந்துற்றிடச் சிரந்தத்திடு பரம்பற்றிய நெருப்பைப்போல் திகைக்கச்செய்து, அபிமன்னனுக்கு எங்களைத் துணையாக வொட்டாமற் குறுக்கே கொன்றை மாலையினை வீசி இது வரையிலும் நாங்கள் பிழைத்த பிழைப்பெல்லாம் வீண் பிழைப் பென்று எம்போன்ற ராஜ தீரர்கள் பேசி நகைக்கும்படியா யேசி, எங்களைச் செய்யவேண்டிய அவமான மெல்லாம் பொழுது போமட் டுஞ் செய்து மடக்கினன். ஆனபடியினலே போர்ச் சிங்கமாகிய அபிமன்னனுக்கு உதவி செய்யக்கூடாமற் போயிற்று. அதனல் நமது புத்திரன் வீரசொர்க்க மடைந்தான். சயத்திரத னென்னும் பாவியினுடைய உபத்திரவ மில்லாவிட்டால் நாங்களும் அவனைத் தனிமையில் விடமாட்டோம்; அவனும் எங்களைவிட்டு ஒண்டியாய்ப் பிரிந்து இறக்கவு மாட்டான். என்ன செய்வோம்! ஓ இந்திரசுதனே! வினைப் பகுதியினல் தெய்வஞ் சோதித்த சோதனை யல்லது வேறல்ல. அப்படி யிருக்க, ஏதோ நாம் முகத்தில் விழித்த கல்ல வேளையினல் நமது பேரில் இரக்கமும் அன்பும் வைத்து, தங்களு டைய ராஜ்ய முதலிய புத்ர பௌத்ர களத்ராதிகளையும் விட்டு நமக்குப் படைத்துணை வந்து நமது பக்ஷத்திற் பிராணனையும் அலக்ஷியமாக எண்ணிக்கொண்டு போர்புரிய நின்ற இந்த அரசர் களை வெறுக்க வேண்டியதில்லையே! ஐயையோ!! பாவம்! பாவம்: அவர்களென்ன செய்வார்கள்? தம்பி அர்ச்சுன! நமக்கு வரவேண் டியதாக வந்த ஆபத்தைக் குறித்து அயலாரை நோவதிற் பிரயோ சன மில்லை!" என்று தருமராஜன் சொல்லினர். அதைக் கேட்ட நரனனவன் புத்ர வாஞ்சையாகிய கடலில் மூழ்கி, புத்ரசோக மென்னும் நெருப்புமலை மேலேறி, புத்ரவின்ப நீங்கிய பூமியிற் பாய்ந்திறக்கத் துணிந்தவனைப்போல், "அடா என்னருமைத் திரும கனே!" யென்று பிராணவாயு வடங்கி பூமியிற் சோர்ந்து வீழ்ந்தான்.

அர்ச்சுனனைக் கண்ணனுந் தருமராஜனுந் தேற்றி யாற்றுதல்

இவ்விதமாய் மூர்ச்சையாகி விழுந்த தனஞ்செயன் சற்று நேரம் பொறுத்துக் கொஞ்ச மூர்ச்சை தெளிந்து, மறுபடியுந் தலையெடுத்துப் பார்த்து, "அண்ணா! சிந்து தேசாதிபனு நமது மைத்தனைக் கொல்லுவதற்கு வந்திசைந்தான்?" என்று கேட்டு விதரணையுடைய தர்மராஜன் முன்சொன்ன வார்த்தைகளெல்லாம் உருகக் காச்சிய இரும்பு நாராசம்போல் அர்ச்சுனனுடைய செவியேறத் துடி துடித்துப் பதை பதைத்து உள்ளும் புறமுஞ் சுடச்சுட வேகும்போது, புத்திரசோப மென்னும் விஷமானது தலைக்கேறி, அதை ஆற்றுவதற்குப் போதுமான மருந்து அற்றத் தருணத்தில்லாமையால் தலைமயக்குற்றிறந்தவனைப்போல் விசாலமாகிய தன்னறிவு சோர்ந்து மீண்டும் பூமியில் மூர்ச்சித்து வீழ்ந்தான். இப்படி அயர்ந்து வீழ்ந்தது ஒருதரமல்ல. அநேகந் தரமாக வீழ்ந்து புரண்டு, உருண்டு, அரண்டு மிரண்டு, கதறி அலறும் படியாகிய சமயத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவானனவர் தேரைவிட்டுக் குதிரைகளை அவிழ்த்துக் குதிரைச் சாலையிற் கட்டிப் போடச் சொல்லி, அர்ச்சுனனுடைய ஆயுதங்கள் முதலிய வெல்லாவற்றையும் ஆயுதச்சாலை சேர்ப்பித்து, ராஜமண்டபத்திற்கு வந்து விஜயனுக்குப் பின்புறத்தினின்றார். அவ்விடத்தில் தருமராஜன் முதலிய சகோதரர்களெல்லாந் தலையை யுடைத்துக்கொண்டும், மார்பிலறைந்து கொண்டும், முகத்தில் மோதிக்கொண்டும் மண்மேற் புரண்டுகொண்டும், இப்படி பலபலவிதமாய்க் கூவும்படியாகிய பான்மையைக் கண்டு, தாமும் அவர்களுக்குமே லெண்மடங்கதிகமாக மட்டில்லாத் துன்பத்தைக் காட்டிக் கண்ணீர் குளமாகும்படியா யோட்டினர். ஓ ஜனமேஜய மகாராஜனே! ஒருவன் மெய் நித்திரை கொண்டா லெழுப்பலாம். பொய் நித்திரைகொண்டா லவனை யெழுப்ப யாராற் கூடும்? இவ்வாறு துயரப்பட்ட பரமாத்மனைத் தேற்றுவா ரொருவரு மில்லாமையால் தமக்குத்தாமே கொதிப்பாறிய வெந்நீர் போலாறித் தம்மூள்ளே தானேதேறி உறுதிகொண்டு, தருமராஜன் முதலிய பேர்களுக்குத் தைரியஞ் சொல்லி, "சண்டையென்று ஏற்படும்போதே சாவு பிழைப்பு இரண்டு முண்டென்று சொல்லி யிருக்தேனே! ஓ தருமநந்தனரே! எல்லாந் தெரிந்த நீர்

தானே இப்படி விசனப்பட்டால் இன்னமிருப்பவர்கள் என்னபாடு படமாட்டார்கள் ? ஏதோ தெய்வச் செயல் இப்படியாயிற்று. போனது போயிற்று. மிஞ்சிப்போன காரியத்திற்கு காமென்ன செய்யலாம் ? இந்தமட்டும் போதும். இனி விசனத்தை நிறுத்தும்" என்று சொல்லிச் சோர்ந்து தரையில் வீழ்ந்துகிடக்கிற அர்ச்சுனனிடத்திற்குத் தருமராஜனுடன் சென்று கிரீடியின் புயத்தைத் தழுவி பெடுத்து மார்போடணைத்து, பன்னீர் முதலிய வாசனைகளை முகத்திலேதெளித்து, ஆலவட்டங்களால் உபசரித்துக் களையாற்றித் தேற்றினர்.

அருச்சுனன் புலம்பல்

அப்போது ஒரு குளத்தில் அனேகம் யானைகள் போயிறங்க அதனாற் கலங்கிக் குழம்பிய சேறுபோல் மனமறுக்கத்தாற் கலங்கிக் குழம்பி வாடிய அர்ச்சுனன், அந்த யானைகள் நீங்கியவுடனே குழம்பிக்கலங்கிய ஜலமானது தெளிவானு லெப்படியோ, அப்படி தெளிந்து கண் திறந்து பார்த்து, தமையனையும் மைத்துனரையுங் கட்டிக்கொண்டிறங்கி, முகத்துடன் முகம் வைத்து, தோளுடன் தோளணைத்து, அவர்கள் கரமலரைத் தன் கண்மலரி லொற்றிக் கொண்டு வாய்விட்டழத் தொடங்கினன்.

"போரினிற் றுணைவ ரோடும் புயங்களே தனனை வென்று,
பாரெனக் களித்தி நீயே யென்றுளம் பரிவு கூர்ந்தே
னேருனச் கொருவ ரில்லாய் நீகளம் பட்டா யாகி
லாரினிச் செகுக்க வல்லா ரைவருக் குரிய கோவே

சக்கரம் பிளந்த வாறுந் தரியல ருடைந்த வாறுந்
துக்கர மான கொன்றைத் தொடையலால் வளைத்த வாறு
மெய்க்கரந் துணிந்த வாறு மீண்டுறுத் தடர்த்த வாறு
முக்கர முடனென் முன்னே யோடிவந் துரை செய் யாயோ

பன்னக வரசன் பெற்ற பாவையா மதலை தன்னை
முன்னுற முனையிற் றேற்றேன் மூர்க்கனேன் முடியா துண்டோ
வுன்னையு மின்று தோற்றே னுன்னுடன் றொடர்ந்து வாரா,
தின்னமு மிருந்த தையா வென்னுயிர்க் குறுதி யுண்டோ,

கதிரவ னுதிக்கு முன்னே கண்டியி லுணர்த்தி யென்னை
யதிரமாய்க் கோலங் கொள்வா னறிவுறுத் துரைக்க வல்லாய்
முதிரமர் முருக்கி மீண்டே னித்தனைப் போது முன்போ,
லெதிர்வரக் காண்கிலேனிங் கில்லையோ வென் செய்தாயோ

தந்திர மியாவு மின்றித் தனித்து நீ தானே போர்செய்
தந்தர மமையு மென்றிவ் வகலிடந் துறந்த வையா
மைந்துட னம்மைக் காண மகன் மகன் வருகின்றனென்
றிந்திர னேவ வுன்னை யிமையவ ரெதிர்கொண்டாரோ,

தேரழிந் தெடுத்த வில்லுஞ் செங்கதிர் வாளு மின்றி
யோருத வியும்பெ ருமை லொழிந்துயி ரழிந்த மைந்தா
போரம ருடற்றி நீயப் பொன்னக ரடைந்த போதுன்
பேரம ராண்மை கேட்டுப் பிதாமக னென்சொன் னனனே

மற்புயக் குன்றி லொன்று வாளுடன் வீழப் பின்னும்
பொற்புறப் பொருத நீயப் பொன்னுல கடைந்த காலை
யற்புதப் படைகள் வல்லா யபிமனே யமர ரூருங்
கற்பகக் காவும் வானிற் கண்கையுக் காட்டி னரோ

வளைத்தவின் னிமிரா வண்ணம் வாளியான் மாவுந் தேரும்
துளைத்துமுன் காலா ளாகத் துரோணரைத் துரந்த வீரா
திளைத்த வெஞ்சமரி லெந்து தனஞ்சயன் சிறுவன் மேனி
யிளைத்ததென் றிந்தி ராணி யின்னமு மூட்டி னளோ''

ஐயோ என் காதலனே! இந்த மஹா பாரதப் போரில் துரியோதனனையும் அவனுடைய தம்பிமார்களையும் ஜெயித்து, இந்தப் பூமியை எங்களுக்குப் பட்டங்கட்டி ஆளச்செய்யும் ஆண் சிங்கம் நீயென்று என் னுள்ளத்தில் ஆசைகொண்டிருந்தேன்! ஒப்பில்லாத் தீரமேருவாகிய சுப்ரதீபமே! நீ இவைகளை மறந்து போர்க்களத்தில் இறந்துபோ யிருப்பாயாகிற் சகுனருக்களை ஜெயித்து எங்களுக்குத் துணைசெய்யா நின்ற வல்லவர்கள் உன்னைவிட ஆருமில்லையே! ஓ பாண்டவர்களுக்குரிய பாக்கியமே! உன்பெரிய தந்தையார் சொல்ல, அந்த மொழிக்குப் பின்வாங்காமற் செல்ல வல்லவனுகிய நல்லவனே! நீ சென்று சக்ரவியூகத்தைப் பிளந்த சாதுரியமும், பத்மவியூகப் படைஞரெல்லாரும் பயந்து பறக்கக் காட்டிய பராக்ரமும், கொன்றை மாலையால் உனக்கொருவரு முதவியாகாதபடி சயத்திரதன் செய்த வஞ்சமும், வேதபுங்கவராகிய சேனுதிபதி துரோணுச்சாரியும், அங்க தேசாதிபனுகிய அதிரதன் கர்ணனும், அலக்கழித்து கலக்கமுற்றுப் புறங்கொடுத்தோட ஆட்டிய விக்ரமும், இன்னும் பொருந்திப் பொரக்கருதிய வாளாயுதமுதற் பல ஆயுதங்களைக்கொண்ட வயவேந்தர்களெவரும் மரணமடைந்து வானிலேற வாட்டி மாட்டித் தொலைத்த வல்லமையும், வீர முஷ்டிக் காத்துடன் என்னெதிரோடிவந்து நின்று, என் முகமலர, என் காதுகுளிர, என் மனமகிழ,

என் புயம்வீங்க, புளகாங்கமுற, உன் ஜெயத்தைச் சொல்லமாட்டாயோ? சிறுவனே! என்னத்தனை பாவி இவ்வுலகத்தி லொருவருமிரார்களடா ஏந்தலே!

"ஐயோ என்மகனே! நாக கன்னிகையின் பிள்ளையாகிய அரவானை முதற்பலியாக எட்டாநாள் யுத்தத்திலிழந்து, இரும்பைப் போன்ற வன்மனத்தனுகிய யான் இறக்காமலிருந்தேன். இன்றையப் போரில் உன்னையுந் தோற்றேன்: உன்னுடன்கூட மடியாமலின்னமும் இருக்கின்றேன். என்னையனே! கல் நெஞ்சமாகிய எனக்குஞ் சாவுவருமோ? நானுனக்கு உரிய தந்தையல்லவா உத்தமனே! அடா செம்மலே! சூரியோதய மாகுமுன்னமே என் பக்கத்தில் வந்து வெகுபக்குவமாய் சித்திரையி லெழுப்பி, என்னுடன்கூட சித்தியவிதியை முடித்துக்கொண்டு, அதிரதக்கோலங் கொண்டு அமருக் கெழும்படியாய் என்னைத் துரிதப்படுத்தி, அறிவுறுத்தி ஜெயப்பிரதான நயங்களெல்லாஞ் சொல்லி என்னைத்தேரேற்றிவிடுத்து, நீயும் யுத்தகோலங்கொண்டு தேரேறி எனக்குச் சமதையாய்ப் புறப்பட்டுப் போர்முகம் புகுந்து, வீரர்களையெல்லாம் அதோகதியாக்கிச் சாயுங்காலம் பாசறைக்கு முன்னதாகவந்து ரதம் விட்டுக் கீழேயிறங்கி, எனக்கெதிரோடி வந்து வணங்கி எனக்குக் கைகொடுத்திறக்கி, என்னுயுதமுதலிய கவசகீரீடங்களையும் வாங்கி வைத்து, ஜெயவிஜயங்களைப் பேசிக்கொண்டிருக்கும் நல்லவனே! அடாவல்லவனே! நான் சஞ்சத்தகர் திரிகர்த்தர் முதலானவர்களையெல்லாம் வென்று ஜெயத்துடன்வந்து இத்தனைப் போதாகியும், வழக்கப்படி இன்னும் உன்னை யெதிர்வரக் காண்கிலேன்! நீ இவ்விடத்திலில்லையோ? அல்லது நான் வந்தது உனக்குத்தெரியாதோ? வேறு வேலையா யிருக்கின்றயோ? அடா என்வழித்தோன்றலே! இன்னும் என்னசெய்கிறாய்? ஐயோ என்செல்வனே! நமக்கு அளவிறந்த சேனைகளிருந்தும், அன்புடன் படைத்துணைவந்த அரசர்களிருந்தும் நீ தனிமையாகச்சென்று போர்வென்று இந்தப் பூலோக வாழ்க்கையை வெறுத்து மேலோகவாழ்க்கையை விரும்பிப் போய் விடவோ? என்புதல்வனே! நீ அந்தப்பொன்னுலகை நாடிப் போகும்போது நமதுபேரப்பிள்ளை வருகிறானென்று தேவேந்திரன் மகிழ்ந்து, தேவர்களையனுப்பி உன்னை யெதிர்கொண்டு அழைத்து வரும்படி உத்தரவு செய்தாரோ? அத்தப்பிரகாரந் தேவர்கள் வந்து உன்னைக்கண்டு புகழ்ந்து, வரிசை முதலிய மரியாதைகளுடன்

உபசாரஞ் செய்தார்களோ? இல்லையோ? எனக்குத் தெரியப்படுத்தடா என்தனயனே! பத்மவியூகமத்தியில் தேரழிந்து, கையிற்பிடித்த வில்லுமுறிந்து, வாளுங்கையு மொடிந்து, மனிதர்முதலிய ஓருதவியு மில்லாமல் உயிரொழிந்த நந்தனனே! பெரும்போர்பொருது யாவரையும் புறங்காட்டவாட்டி நீ அந்தப் பொன்னுலகத்திற்குப் போனபோது உன்னுடைய பேராண்மையைக் கேட்டு உன்பாட்டனாகிய தேவேந்திரன் என்னசொன்னார்? அடா என்சேயே! அடா மாலையோங்கிய மற்புய மைந்தனே! சத்துருக்களை யெல்லா மொருங்கே முடித்து அழகாகிய புகழைக்கொண்டு சொர்க்கலோகஞ் சேர்ந்ததோன்றலே! உன்பாட்டனாகிய தேவேந்திரன் தேவர்களைவிடுத்து, என் பேரனுக்கு இந்த இந்திரபுரியின் சிறந்த வளத்தைக்காட்டி வாருங்களென்று சொல்லியனுப்ப, அந்தப்படியே அமரர் உன்னை அழைத்துக்கொண்டுபோய்த் தேவர் கோவிலும், இந்திரபுரியும், அரம்பா ஸ்திரீகளின் வீதியும், கற்பகக்காவும், ஆகாயகங்கையும், தேவசிங்காசனமும், நிதிக்ஷேபமும் ஐராவதமும், உச்சைசிரவ முதலாகிய இந்திர போகங்களை யெல்லாங் காட்டினார்களா? நீ பார்த்தாயா? என்னையனே? எங்கள் தந்தை வந்திருந்தபோது அவருக்கு விடுதி எங்கிருந்தது? காலகேய நிவாத கவசர்களை வென்றது எவ்விடம்? அவர்கள் பதியெங்கே யென்றுவிசாரித்தாயா? வெள்ளையானையின் பிடரியிலேற்றி இந்திர லோகங் காட்டினார்களா?

"ஐயோ என்மதலாய்! சக்ரவட்டவியூக மத்தியினின்று வளைந்தவில் நிமிராமல் ஓயாமாரிபோல் வாளிகளெய்தித் தேர்களையும், குதிரைகளையும், யானைகளையும், போர் வீரர்களையும் பொடிப்பொடியாகப் போக்கி, சேனாபதியாய் மேலாளாகிவந்து நின்ற துரோணரைக் காலாளாகத் துரத்தித் துரத்தித் துறத்தசூரா! திரைசெறிந்த கடல் நிறைந்த திடர்போற்கூடிய சேனைச்சமரில் நிர்வாகசாலியாயுத்தஞ்செய்து வெற்றிபெற்று, உடல்வருந்தி கொந்து இளைத்து வந்தான் கிரீடிகுமாரனாகிய நமதுபேரனென்று இந்திராணியான உன்பாட்டியார் மிகுந்த உபசாரத்துடன் தேவாமிர்தங் கொண்டு வந்து உனக்கு ஊட்டி உன்னுடைய ஆயாசத்தை நீக்கினாளா? அடா சிறுவனே! அல்லது நீ வருவது தெரியாமல் அஜாக்கிரதையாயிருந்தார்களா? அல்லது நீ வருவதுதெரிந்தும் அலக்ஷ்யமாயிருந்தார்களா? இல்லை லக்ஷ்யம் வைத்தார்களா? ஓருவாக்கியம் எனக்

குத் தெரியச்செய்யடா என்சேயே!"—என்று பற்பலவாறு வாயில் வந்த வண்ணமெல்லாஞ் சொல்லிச் சொல்லிக் கதறிக் கதறிப் பதறிப் பதறிக் குரலோசையுடன் முறைகூறி ஓப்பணியிட்டழவும், தர்மராஜன், பீமசேனன், நகுலசகாதேவர் முதலிய சமஸ்தமான பேருந் தனித்தனியே மண்ணைத்துழாவிப் புலம்பித் தலைமேற் கைவைத்துத் தடதடவென்று அறைந்துகொண்டு கண்ணீர்வடித்துக் கலக்கங்கொண்டயர்ந்தார்கள். அந்தக்காலத்தில் தானுங் கூடிய வரையிலும் விசனப் பட்டவர்போற் பட்டுப் பின்பு ஒரு விதத்தில் தேறினவர்போல் தேறினர் கறுத்த திருமேனியையுடைய திருமாலானவர்.

வியாஸபகவான் மீண்டும்வந்து பாண்ட வரைத் தேற்றல்

அப்போது முன்னங் தருமனுதியரைத் தேற்றிச்சென்ற வேதவியாசமுனிவர் அர்ச்சுனன் படுந்துயருக் கிரங்கினவராய் மீண்டுங் தற்செயலா யங்கெழுந்தருளி, "பாண்டவர்களே!

தாயொடு தந்தையர்க டாரமொடு தனேயோர்
நாயதனே வோர்களொடு சுற்றமென நின்றேர்
மாயையெனும் வல்லப மயக்குறு மயக்கா
லாயவுற வல்லதவ ராரி முடிவில் யார்யார்

வந்துபிற வாதமனே யில்லைமுலே மாறித்
தந்துபரி யாமலொழி தாயார்களு மில்லே
புந்தியுணர் வற்றவர் புலம்புவுவ தல்லா
லிந்தவுல கத்தறிஞர் யாதினு மயங்கார்

உம்மையினும் யாருற வுணர்ந்தில மினிப்போ
மம்மையினும் யாவருற வாவரென வறியே
மிம்மையி னிகழ்ந்தவுற வித்தனே யிரங்கேன்
மும்மையு முணர்ந்துவரு மூதறிவி னீரே

ஓ அறிஞர்களே! தெரிந்தவர்களென்றுங் தெரியாதவர்களென்றுஞ் சொல்லுவது எதனுலென்றால், நல்லறிவுள்ள பெரியோர்—, நன்மை வந்தாலும், தீமைவந்தாலும், இரண்டினிடத்திலும் ஒரே நிதானமாக இருந்து பலனே அநுபவிப்பர். புல்லறிவுள்ளவர் துன்பம்வந்தாற் புரண்டு புரண்டு இரங்கியும், இன்பம்வந்தால் திரண்டு திரண்டு நெருங்கியு மகிழ்வார்கள். ஆதலாற் கற்றவர்களென்றும் நற்றவர்களென்றும் பேர்பெற்ற விக்ஞானவான்கள்

எது காரியத்திலுங் கண்ணீருகுத்துக் கவலைப்படார்கள். மேலும், தாய், தந்தை. தாரம், தனயர், சகோதரர், சார்ந்த சுற்றத்தார், சினேகிதர், இன்னுமிப்படி பலவிதமாகிய பந்துக்க ளென்பதெல்லாம் வல்லமையுடைய மாயா சம்பந்தம்வந்து மயக்கிவைக்கு மயக்க மல்லது, யோசிக்குமிடத்தில் ஆருக்கார் துணை ? ஒருவருக்கொருவ ரென்ன சம்பந்தம் ? அழியாம லிருந்தவர்கள் யார்? இது வீணுகிய பழியே, எல்லாம் அழியத்தக்க வழியே. அன்றியும், நாம் வந்து பிறக்காத இடங்களில்லை. விசுவாசமாய் நம்மையெடுத் தணைத்து மாறிமாறிப் பால்கொடுத்து வளர்க்காத தாய்களுமில்லை. பிறத் தலும், இறத்தலும, உடலுக்குச் சகஜமாதலால், இதைத் தெரிந்து கொள்ளாமல் விவேகமில்லாதவர்கள் புலம்பி வாடிப் புத்திகெடுவார்கள். விவேகவான்களாகிய அறிஞர்கள் இதக் கர்மபூமியின் கல்வினை தீவினை யென்னும் அநுபவத்தைக் குறித்து நேரிடுஞ் சுகதுக்க முதலான விதங்கள் யாவற்றிலும் மயங்க மாட்டார்கள். அல்லவென்று மயங்கினாலும் என்ன லாபம்? இனி வரப்போகிற பிறப்பில் நமக்கு ஆர் உறவாகத் தக்கவரோ ? அதை யறிய மாட்டோமே ! போனபிறப்பில் நமக்கு யார் உறவா யிருந்தனரோ அதுவும் அறியோம். இப்படியிருக்க, இப்போது இவ்விடத்தில் நமக்குறவென் றிருந்த இவர்களுக்காக இவ்வளவு இரக்கப்பட வேண்டுமோ? இரங்கவேண்டாம் (கன்றும் பசுவுங் காடேறிமேய்ந்தால், கன்றுவழி கன்றுதான், பசுவழிப் பசுதான்.) என்று பழமொழி சொல்லுவ தறியீர்களா? ஓ இம்மை, அம்மை, உம்மை, என்னு மும்மையும் உணர்ந்திருக்கின்ற முதிர்ந்த அறிவினை யுடையவர்களே ! உங்கள் பிள்ளையானவன் வெற்றி பெறும்படி யாகிய பலவித வல்லபங்களுடன் தேவர்களுக் கெதிர்சென்று வென்று ஜயங்கொண்டான். இப்படி பூமியில் இன்பதுன்பங்களை அநுபவிக்க வேண்டிச் சிலகாளிருந்து, அநுபவிக்க வேண்டிய தெல் லாம் அநுபவித்து விட்டான். இன்னமெத்தனை காலைக்கிருந்தாலுங் கடைசியிற் கிடைக்குமோ கிடைக்காதோ வென்று சந்தேகாஸ் பதமாய்க் காணப்படுகிற நற்கதியை, இன்றுபகலிற்றானே கண்டான். நல்ல ஆண்மையையும் புகழினையும் படைத்த மைந்தனைக்குறித்துக் கல்யாணம்போல் மனமகிழ்ச்சியடைய வேண்டியதைவிட்டு, குடிப் பேர், குலப்பேர், கோத்திரப்பேரைக் கெடுக்குங் கொச்சைப் பிள்ளைக் கழுகின்றதைப்போ லழுகிறீர்கள். ஐயோ !" என்று சில வேதாகசிய வார்த்தைகளை மொழிந்து, அவர்களுடைய துன்

பத்தையும் இரக்கத்தையும் ஒரு வாறுக நீக்கி ஆசீர்வதித் தெழுந் தருளினர்.

அருச்சுனன் அக்னிமூழ்க எத்தனித்தபோது இந்திரனுகிய அந்தணன் தடுக்கப் பின்பவன் சபதஞ்செய்தல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே "புத்திரரில்லாவிடர் பொறுத்திடலுமாமோ?" என்றபடி எத்தனேபேர் வந்து தேற்றியும் அர்ச்சுனனுக்குப் புத்திரசோகம்விடாமல் மேலுமேலும் பெருகியது. என்னசெய்வான்? தன் துயரத்தைத் தணித்துக்கொள்ள வேறொரு முகாந்திர மில்லாதவனுகித் தன் தம்பியரோடு விரைவில் அழல் மூட்டுங்களென்று ஆக்யாபித்தான். அதுகேட்ட மாத்திரைகுமாரர் கள் தமைபன் சொல்லைத் தடுக்கக் கூடாதவராகி உடனே அக்கினி மூட்டுவிக்க, அதுகண்ட அர்ச்சுனன் எத்தனே மித்திரர் எத்தனே விதமாய்த் தணிவுகூறித் தடுத்துங் கேளாது, இந்தவில்லோடு என் னுயிரையு மாய்ப்பேனென்று ஓரேவுறுதியாய் நின்றான். அப்போது துழாய் மாலையணிந்த தூயோனுகிய மாயோன் இந்திரனே நினைத் தார். உடனே அவ்விந்திரன் முன்பு அழலின் கண்மூழ்க அந்தணன் வடிவமாய் நின்ற அக்காலத்தோடு தற்செயலாய் அவ்வர்ச்சுனனெ திரில்வந்து நின்று, "ஓ மகாராஜனே! எனது புத்திரனிறந்த சோபத் தால்யான் அக்கினியில் மூழ்கி இறக்கத் துணிந்தபோது எனக்கு எவ்வளவோ நீதிவசனங்களைக் கூறி என்னிறத்தலைத் தவிர்த்த நீ, இப்போது உன் புத்திரனுக்காக அக்கினியில் மூழ்கத் துணிந்து நிற் பது முறைமையோ? ஆயினும் என்னைத் தடுத்ததற்குநியாயம் முன்னதாகச் சொல்லிவிட்டுப் பின்பு உன்னிஷ்டம்போல் நடந்து கொள்" என்று சொல்லலும், அர்ச்சுனன் பதிலுத்தரமொன்றுஞ் சொல்ல மாட்டாதவனுகி அசைவற்ற மரம்போல் நின்று, தான் கொண்ட அவ்வெண்ணத்தினின்றுமாறி, இருகண்களிலும் நெருப்புப் பொறிகட்டி கட்டியாய்க் குபீர் குபீரென்று குங்கிலியம்போட்ட அக்கினியைப்போற் பறக்கவெழுங் கோபாக்கினியால் தேவர்கள் முத லிய யாவருந் திடுக்கிட்டுத் தியங்கி உரத்துக் கூவி, "இந்தச்சபையி லிருக்கும் மேலோராகிய முனீச்வரர்கள் ராஜராஜர்கள் முதலாகிய எல்லோரும் அறியும்படியாய் நான் சத்தியமாகச் சொல்லுகின்ற சபதத்தை யாவருமிருந்து கேளுங்கள்"— என்று சொல்லுகிறான்.

" சிந்துபதி யாகிய செயத்திரத னேத்தேர்
உந்தமரி ஞளையுரு மேறென வுடற்ரு
அந்திபடு மவ்வளவி ஞவிகவ சேனேல்
வெந்தழலின் வீழ்வினிது வேதமொழி கண்டீர்

இன்றபிமன் வாளமரி லின்னுயி ரிழக்கக்
கொன்றவனே நாளையுயிர் கோறல்புரி யேனேல்
மன்றிலொரு சார்புற வழக்கழி வுரைக்கும்
புன்றொழிலர் வீழ்நரகு புக்குழலு வேனே

மோதமரி லென்மகன் முடித்தலை துணித்த
பாதகனே நானெதிர் படப்பொருதி லேனேற்
ரூதையுட னேமொழி தகாதன பிதற்றும்
பேதைமக னெய்துநெறி பெற்றுடைய ஞவேன்

சேயனைய வென்மதலை பொன்றவமர் செய்தோன்
மாயமுடி சிந்திவய வாகைபுனை யேனேற்
ரூயர்பசி கண்டுநனி தன்பசி தணிக்கு
நாயனைய புல்லனுறு நரகிலுறு வேனே

வஞ்சனையி லென்மகனை யெஞ்சமுன் மலங்தோ
னெஞ்சமெரி யுண்ணவமர் கோபொருதி லேனேல்
தஞ்சமென வடைந்தவர் தமக்கிடர் நினைக்கு
நஞ்சனையர் பாதகர் நடக்குநெறி சேர்வேன்

வினையிலென் மகன்றனுடல் வேறுசெய்வித் தோனைக்
குனிசிலையு ஞளையுயிர் கோறல்புரி யேனேல்
மனைவியய லான்மருவல் கண்டுமவள் கையாற்
றினையளவு மோர்பொழுது சீவித்த ஞவேன்

மித்திரர்களே! இக்கப் பதின்மூன்றுநாட் போரிற் என்மகனுகிய அபிமன்னனுக்கு உதவித் துணையாக நின்ற பேரைத் துணைபோக வொட்டாமல் தடுத்தும், அவர்களுடைய வல்லபத்தை யழித்தும், எனது கண்மணியான அபிமன்னுவைக் கதையி லடித்துக்கொன்ற சிலவீரனுகிய சிந்துராஜகுமாரன் சயிந்தவனே நாளையப்போரில் நானே முனைந்து பொழுது போவதற்கு முன்னே அவன் தலையை வெட்டித் தள்ளுகிறேன். இது சத்தியம்! இது சத்தியம்! நாளையப் பொழுதுக்குள் அவனுயிரை வாங்காமற் போவேனுகிற் கொடுமை யாகிய இத்தீயில் விழுந்திறப்பேன்! இதுவே வேதவாக்கியம்!

மேலும் இன்றுபுரிந்த சண்டையில் என் மகனுகிய அபிமன்னனுடைய பிராணனிறக்கும்படியாய்ப் பத்மவியூகமத்தியில்விடுத்து, அவனுக்கு உதவி போனவர்களைத் தடுத்து, வஞ்சனையாற் போர் கொடுத்து நின்ற அச்சிந்துதேசனுடைய தலையை காலைய தினத்திற்குள்ளே றுபட வாக்காமற் போவேனுகில், கியாயஸ்தானமான இடங்களிற் பக்ஷபாதமாய் லஞ்சம் பரிதானத்திற் கிச்சை வைத்து ஒரு சார்பாக வழக்குத் தீர்க்கும் அற்பஜீவனஸ்தர்களாகிய அயோக்கியர் விழும் படியான நரகத்தில் நானும் புகுந்தழுந்தக்கடவேன்! சுப்பிரமண்யக் கடவுளுக்கொப்பாகிய என் குழந்தை அபிமன்யு பத்ம வியூகத்தை ஜெபித்துத் திரும்பி வரும்போது விடாமல் மடக்கி, விரும்பி வந்த படைத்துணைகளை மீறவொட்டாம லடக்கி, என் மகன் உயிரழியும் படியாய் அடலமர் செய்த துரியோதனனுடைய மைத்துனனை காலை யமரில் மாய்த்து வெற்றிமாலையணியாமற் போவேனுகில், பெற்றதாய் தந்தையர் பசியால் வருந்தி வாதைப்பட பத்தினி முதலிய பரஸ்திரீ களுடன் சந்தோஷமநுபவித்து, உலகமெய்க்கத் தான தர்ம பர வுபகாரங்களைச் செய்து புகழ் பெற்று, அவர்களிறந்த பிற்பாடு கோடியாந்தானஞ் செலவழித்துக் கரும முதலிய காரியங்களைச் சம்பிரமாய் நடத்தி மகிழும் நாய்க்கொப்பாகிய அற்பர்கள் நடந்து கிடந்த நரகத்தில் நானும் விழக்கடவேன்!

அன்றியும் ஆயுதங்கொண்டு மோதிச் சோதிக்காகின்ற அமர்க் களத்தில் என் மகனுகிய அபிமன்னு முடியும்படி செய்த சபிந்தவ னென்னும் பாதகனை காலையப் பொழுதில் நானெதிர்த்துக் கொல் லாமல் போவேனுகில், தாய் தந்தையரையும், ஆசாரியரையும் அண்ணனையும், எதிர்த்துப் பேசி, அவர்கள் சொல்லிய வார்த்தை யைத் தள்ளித் தகாத மொழிகளைப் பிதற்றிய பேதை மக்கள் எந்த தூர்க்கதி பெறுவார்களோ அந்தக் கதியில் நானும் போகக் கடவேன். விந்தை தங்கும் புயத்தோனுகிய எனது மைந்தனைச் சிந்தை வருந் தச் செய்தது மல்லாமல், துணை வந்தவர்களையும் கொன்றுபோகச் செய்த துச்சலை கணவனுகிய துஷ்டனை காலையப் போரில் நஷ் டப்படுத்தாமற் போவேனுகில் அண்ணன் தம்பிகளில் ஒருவரை யொருவர் வஞ்சித்துக் கஞ்சிக்கலைய விடுத்துப் பெரியவர்கள் வைத்த சொத்துக்களைப் போக்கி அசத்திய வாதிகளாய்த் தூறிச் சத்துருவினிடத்திற் சேர்ந்து மித்ரபேதஞ் செய்து ஜாதிமான சமய மான மில்லாமல் தனிமையில் இருக்க நினைத்துக் குடும்பத்தைக்

கலெக்குங் கற்பனைக்காரர்கள் விழும் நரகத்தில் நானும் போகக் கட வேன். போர் வஞ்சத்தால் என்மக னிறக்கும்படியாய்ச் செய்த சயத்திரதனும் அவன் தந்தையாகிய சிந்து ராஜனும் சொந்தழியும் படி நாளை தினம் அமர்புரிந்து கொல்லுகின்றேன்! அப்படி கொல் லாமற் போவேனுகில், அடைக்கல மென்று பொன்னைப் பொருளை வைத்தவர்களையும், அபய மென்றுவந் தடுத்தபேர்களையும், ஆதர வற்ற ஏழைகளையும் மோசஞ் செய்து அகியாயங் கண்டு அவர்களை எதிரிட்டுக் கொண்டு அவர்களுக்குத் துயர் விளைத்துப் பிறர் பொரு ளுக்கு இச்சை வைத்துக்கொண் டிருக்கும் விஷத்திற் கொப்பாகிய அற்பர்கள் போகாகின்ற அருநரகில் நானும் சேரக்கடவேன்!

"பருத்த கதை கொண்டடித்து என் சுதனை வதை செய்த படு பாவியை நாளை நானே முடிக்கிறேன். அப்படி துடி துடிக்க முடிக்கா விட்டால், கூலி முதலியவற்றைக் கொடாதவரும், குளம், ஏரியிற் றண்ணீர் விடாதவரும், கோயிற் குளங்களை இடித்தவரும், நந்த வனச் சோலையை யழித்தவரும், நன்னீர்த் துறையைக் கெடுத்த வரும், நாவலர் சொல்லைத் தடுத்தவரும், நயவஞ்சகமா யடுத்தவரும், உணவில் நஞ்சைக் கலந்தவரும், உற்றூரைக் கெடுக்கப் புகுந்தவரும், குமரிமேற்றூஷஞ் சொன்னவரும், பொய் சொல்லி வாழ்வை இழந்தவரும், புணர்ச்சியைச் சொல்லி மகிழ்ந்தவரும் தர்மமில்லாத் தறுகண்ணரும், கோபமுள்ள கொடியோரும் கொடுப்பதை விலக் குங் குருடரும், கொடுக்கிறேனென்று கொடாமற்போன திருடரும், கூத்திக் கிட்டுக் குரங்காகிய குடியரும்; நல்லோர் பெரியோரை வணங்காத் தடியரும், பல்லோர் புகழுந் தர்மத்திற்கு இடையூறு செய்யும் பதரான மிடியரும்; கைம்பெண்ணைக் கருதிய கடையரும், தன் பெண்ணை நாடிய சடையரும், மாமிவீட்டிற் சென்றிருந்த மடையரும், தெய்வமிகழ்ந்த சேதனரும், வையகம்பழிக்க வாழ்ந்த மாதனரும், குழவியைக்கொன்ற கோபியரும், பழகி விடுத்த பாபி யரும், தன்னை விட்டுப் பிறர்மனை நாடிய சழக்கரும், பொய்ச் சாட்சி முதலியன சொல்லி விலைகொடுத்து வாங்கும் வழக்கரும், பிச்சை யிடாத லோபியரும், வைத்துக் கொண்டிரக்கும் ஆவியரும், இன்னும் பற்பல விதமாகிய நீதிக்கு வழுவாக நடந்த பதிதர்கள் அடையுங் கதியை நானுமடைவேன்" என்று அந்தச் சபையிலிருந் தோர் யாவரும் நடுநடுங்கக் கூறினன்!

இவ்வண்ணமாக அர்ச்சுனன் சபதங் கூறித் தன் பக்கத்தி லிருந்த ஒருவருடைய வில்லைப் பிடுங்கி, மடமடவென்று அவ்வில்லை

வளைத்து, நறநறவென்று பல்லைக்கடித்து கிடுகிடுவென்று லோகா லோகமுங் காலா கோலமாய்ப் பிதிரும்படியாய், இந்திரலோகம் எம லோக முதலிய அண்டங்களு மதிரும்படியாய் டங்காரஞ் செய்து, சப்த மேகமும், சப்த சமுத்திரமும், சப்தத் தீவும், அஷ்டகுலாசல மும், தாழ்ந்து பாதலத்தில் வீழ்ந்துபோமென்று சொல்லத்தக்க தாய் வீரியம் பெற்ற பாரிய தேவதத்த மெடுத்துப் பூரித்தான். இவன் முழக்கிய தேவதத்த ஓசைக்கு முன்னே பத்துப்பங்கதிகமாய் மேலிடி விழுந்து பார்முத லிடிந்து போனதைப் போற் பச்சைமேனிப் பரந் தாமனுடைய செம்பவள வாயில் நின்று அவர் பாஞ்சஜன்யமும் முழங்கிற்று. அப்போது பீமன் முதலிய சகோதரர்களும் உற்றதுணை வந்த நரபாலர்களும், தங்கள் தங்களுடைய சங்கத் தொனியுங் கூடக் கலந்து முழக்கினர்கள். திரிபுவனங்களுஞ் சிதைந்ததென்று தேவர்கள் செவிடுபட்டுத் தியங்க, துரியோதனனுடைய படை முதலிய யாவருந் திடுக்கிட்டுப் பூமியில் விழுந்து மயங்க ஏக காலத் தில் எல்லாருடைய சங்கமும் எண்ணற்ற பேரோசை போல் முழங் கியபோது, விளையப்போகிற காரியங்களின்னதென்று தெரிந்து கொள்ளும் விதரணை யுடைய தருமராஜன், ஆபத்பந்துவாகியும் தீன தயாளுவாகியு மிரா நின்ற முகுந்தனைப் பணிந்து சொல்லுகிறார்—

"ஐயனே! உமக்கு இது மெத்த பெருமையாயிருக்கிறது! எடுப் பார் கைக்குழந்தையானீர். இதென்ன காரணமோ? இதென்ன கண் காட்சியோ? நான் பட்ட பாடெல்லாம் போதாவா? எரியுங் கொள்ளியை ஏறத் தள்ளுமாறுபோல் இப்போர்ப்பட்ட கேள்வியுங் கேட்க இருந்தேனல்லவா? இருக்கட்டும்: இங்கே வாரும்" என்று தனிமையில் அழைத்துக்கொண்டு போய்க் கண்ணீர் விட்டு, "ஓ என்னையனே! நாளுக்கு நாள் துன்பங் குறைவில்லாமல் ஒன்று போலு லொன்று மேலிட்டு வருகிறதேயன்றி வேறில்லை! நான் பிறந்த வேளையோ என் பொல்லா வினையோ தெய்வமே நானென்று மறியேன். ஈதெல்லாமிருக்கட்டும்; கூர்ங்கணைகொண்ட தம்பியான விஜயன், முன்பு ராஜசபையிற் கூறிய சபதங்களெல்லா முடியாமல் உனக்கோ எனக்கோ என்றிருக்க எங்களை ரட்சிக்கவந்த திரௌபதை இன்னுந் தலையை விரித்துக்கொண்டு முடியாதிருக்க, இவைகளையெல் லாம் யோசிக்காமல் இப்போது இந்தச்சபதங்களை மொழிந்தானே! இவன் சொல்லிய சபதப்படி நாளை மூப்பது நாழிகைக்குள் சயத்திர தனை முடிக்கக் கூடுமோ? ஓ எங்களுக்குரிய இஷ்டமே! ஓ நாங்கள்

பட்ட கஷ்டமெல்லாந் தீரும்படியாய்ச் சகாயஞ்செய்த கருணைக்கட லே! காலையப்போரிற் சபதம் நிறைவேறுமல் அர்ச்சுனன் அக்கினிக் குழியில் விழுவானுகில், அப்பால் நாங்களுயிர் பொருந்தி வாழுத் தக்கதோ? ஏதேது! இடி விழுந்திறந்த பாம்பைப்போல் நாங்கள் நாலு பேரும் அர்ச்சுனனுடனிறப்பது நிச்சயம்! ஓ பச்சைவண்ண ஞகிய பரனே! அந்தச் சயத்திரதனைக் கொல்லுகிறே னென்று மொத்தமாக ஒருவார்த்தை சொல்லாமல், காலைய முப்பது நாழி கைக்குட் பலசாலியாகிய சிந்துதேசனைத் தப்பாமற் கொல்லுகிறே னென்று சபதஞ் சொன்னனே ஐயா! இந்தச் சேதியைக் கேட்ட துரியோதனன் தன்னுடைய அளவிறந்த சேனையை வியூகமாக நிறுத்தி, அந்த வியூகமத்தியில் இந்தச் சிந்துராஜனை இருத்தி, அதி ரதத்தலைவர்களைக் காவலாக அமைத்துப் பத்திரஞ் செய்து போட் டால், திரிமூர்த்திகளுங்கிட்டி நெருக்க இயலாதே. அப்போது இவன் சபதம் எப்படியாம்? ஓ ஆதியே!" என்று புகன்று, கோபாலனுடைய அடிமலர்மேல் விழுந்து, "ஹரிஹரி! முர ஹரி! நர ஹரி! அஞ்சினேனும்! அஞ்சினேனும்!" என்று இருகரத்தையும் விரித் தழக்கெஞ்சினர். அப்போது கஞ்சமலர் மடுவில் முகலேவாய்ப்பட்ட குஞ்சரத்திற் கருள்செய்த கொண்டல்வண்ணன் தஞ்சமென்ற தருமராஜனை மார்போடணைத்து,

"இந்திரன் காக்கினு மீசன் காக்கினுஞ்
சிந்துவின் றலைவனைத் தேவர் காக்கினுங்
கந்தனிற் சிறந்தனின் கனிட்ட னுலையே
மைந்துறப் பொருதவன் மகுடங் கொள்ளுமே"

என்று சொல்லி, "தருமபூபதி! நீர் ஒன்றுக்கும் அஞ்சாதீர்!" என்று அவருடைய மனவருத்தத்தைத் திருத்தினர்.

இப்படியிருக்க, முன்பெல்லோருஞ் சங்கத் தொனிசெய்து டங்காரம் பண்ணிய பேரொலியானது, ஆகாயத்தில் நிறைந்ததேவர் களுடைய செவிகளிற் புகுந்தமையால், கும்மென்று செவிடுபட்டுப் பயந்து, இந்திரப் பிரளயம் வந்ததோ அல்லது ஊழிமடங்க லென் னும் உகாந்தகால நேரிட்டதோ என்று நடுநடுங்கிச் சற்றுநேரஞ் சந் தேகப்பட்டு, மறுபடி நிதானித்து, இந்திரகுமாரனுகிய அர்ச்சுனன் தன்னுடைய பிள்ளை நிமித்தமாய்ச் சபதஞ்செய்து முழக்குகின்ற சங்கொலி யென்று மனந்தேறிச் சஞ்சலத்தை விட்டார்கள்.

அக்காலத்திற் பணப் பாம்பைப் பதாகையிலெழுதிப் படைத்த துரியோதன ராஜனிருந்த பாசறையில் போர்த்திறங்களைப் பேசிக்

கொண்டிருந்த பல பல வீரர்களெல்லாம், பாண்டவரிருக்கும் பாசறையிலிருந் தெழுந்த மீசுரமாகிய பேரொலியைக் கேட்டு பூமியிற் றலைகட்டு, "தீமை விளைந்தது தீமை!" என்று திடுக்கிட்டு, "சரிதான்! சரிதான்! பலம்பெற்ற ஆதி வராகமூர்த்தியைப் போன்ற அபிமன்னனுடைய சாதலைக் கேட்டு யாவரையும் அடங்க முடிக்கிறே னென்று அர்ச்சுனன் புறப்பட்டான். இனிக்கெஞ்சினாலும் விடான். அவனைத் தப்பி மிஞ்சினாலும் விடான்!" என்று பலர் அஞ்சினார்கள். மீண்டும் துரியோதனனுடைய முகக் குறிப்பையும் மனோ பீஷ்டத்தையும் அறிந்த கால்வகைச் சேனாசபினியங்களையுடைய சில வயவீரர் ஒன்றுகூடி, "இப்படி சபதங் கூறிவருகிற அர்ச்சுனன் முதலிய பாண்டு புத்திரர் பேரில் எதிர்த்து ஒருகை பார்ப்போம். அடடா!! அவன்தானு ஆண்பிள்ளை? காமெல்லாருஞ் சாண் பிள்ளையோ? போங்காணும் போம். நீங்களெல்லாரும் வீண் பிள்ளைகளே!" என்று சொல்லியெழுந்தனர். அவர்களுடனே வேறு சில ரெழுந்து ஒரு கூச்சலிட்டு, உற்சாக முள்ளவராய் அப்போதே யுத்தஞ்செய்யப் புறப்பட்டார்கள். அவர்களைச் சிலர் இச்சென்று பொய்த்தும்மல் காட்டித் தடுத்து, இப்பேர்ப்பட்ட வீரங்களை யெல்லாம் நாளைக்குக் காட்டுங்களப்பா வென்று பரிஹாசம் பேசினார்கள். இப்படி அநேகவித சவுரிய பராக்கிரமங்களைப் பேசியும், பேசுவோரை யேசியும், ஏசுவோரைத் தடுத்தும், தடுப்போரை யடுத்தும், பலவிதமாய் யாவருந் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள்.

அர்ச்சுனன் சபதத்திற்கஞ்சிய சயிந்தவனைத் துரியோதனன் தேற்றுதல்

அன்றிராத்திரி அயிராவதத் தலைவனுடைய பிள்ளையாகிய அர்ச்சுனன்கூறிய சபதச் சங்கதிகளை யெல்லாஞ் சிந்துதேசாதிபன் தூதர் சொல்லக்கேட்டு மனதொந்து, "ஐயோ! (உண்ணுமற்றின்னுமல் உடலுப்பிசங்கொண்டு ஊரம்பல மானேன்) என்னும் பழமொழிக் கொப்பாகவும், (காக்கையேறப் பனம்பழம் விழுந்தது.) என்னுங் காகதாளீய ந்யாயம்போலவும் வீணுயென்றலையில் வந்து விளைந்தமை: நானந்த அபிமன்னனுடன் எதிர்த்து யுத்தம்பண்ணியிருப்பேனே? நானெங்கு நின்றேன்? அவனெங்கிருந்தான்? (பண்டமொரு பக்கம் பழியொரு பக்கம்.) என்பதுபோற் கடைசியில் நான் விட்ட கதையினால் அவன் கீழே விழுந்தான். நான் பழிக்குடன்பட்டேன், ஐயோ என்பாவமே!" என்று பரதவித்துக்

கொண்டு, மகரதோரண முதலிய வாழைகள் கட்டிய துரியோதன மகாராஜன் பொருந்திய ராஜசபைக்கு வந்து சில சொல்லத் தொடங்கினன். "ஓ சம்பத்தைப் பொருந்தியோரும் ஐம்பத்தாறு தேசத்தாரும் வணங்கும் பதத்தினையுடைய மைத்துனரே! அபி மன்னனுக்குத் துணைவந்தாரையுந் தடித்து, அவனையுங் கெடுத்தே னென்று அர்ச்சுனன் வெகுண்டு, நாளை முப்பது நாழிகைக்குள் என் னைக் கொல்லுகிறேனென்று சபதம் பண்ணினனும். அப்படி அவன் சபதம் பண்ணினபடியால் இனி நானிவ்விடத்தி லிருப்பதி லென்ன பெருமை. ஒரு லாபமுமில்லை. நீர் செலவு கொடுப்பீராகில் இவ்வி டம்விட்டு அவன் கண்ணுக் கெட்டாத தூரத்திற் போயிருந்து நாளையப் பொழுதைக் கழிக்கிறேன்! வெள்ளம் வருவதற்கு முன் னமே அணை கோலிக்கொள்ள வேண்டு மென்னும் முயற்சியைச் செய்துகொள்ளாம விருப்பேனுகில், எனக்காக மும்மூர்த்திகளுந் துணைவந்து மாமிசங்களும் உதிரங்களும் நிறைந்த பகழிகளை விடுத் துக்காக்கினும், இந்திர குமாரனுகிய விஜயன் வாக்கினுற் சொல்லிய சபத முடியாமல் விடாது. எப்படியு முடியும். முதல்வனே! ஈரேழு லகத்தில் சென்றாலும், இரையுங் கடலுள் மூழ்கினுலும், மலைக் குகையில் மறைந்தாலும், தாயின் கர்ப்பத்துட் சார்ந்தாலும் தனஞ் செயன் கணை எப்படியுந் தேடிவந்து ஜாடிச் சாதிக்கும்! அப்படி யிருந்தாலும் ஆசை வெட்கமறியா தென்பதுபோல் ஒரு யோசனை யிருக்கின்றது: அதனைச் சொல்லுகிறேன் கேளும்—

ஓ மகாராஜனே! உமக்கு நல்லகாலமிருந்து நாளை யொரு பொழுது கான் தப்பிப் பிழைத்தால், அர்ச்சுனன் அக்கினியில் விழுந்து இறந்து போவான். அவனைப் பறிகொடுத்தபின் மற்றநாலு பேரும் பூமியிலிரார். அவர்களும் உடனே மடிந்து போவார்கள். அப்பால் திரௌபதையும், மற்றுமுள்ள இஷ்டர்களும், நீரும் நாமு மிருந்து சுகப்படலாம். ஆகையால் எனக்கிப்பொழுதே விடை கொடுத்தருளும்!" என்று காவறண்டு வாய்புலர்ந்து, கண்கலங்கிச் சொல்ல, அந்த வசனத்தைத் துரியோதனன் கேட்டுக் கலகலவென நகைத்து, "ஓய் மைத்துனரே! (வெங்நீரென்பதற்குள் வீடு வெந்துப் போச்சுது.) என்னும் பழமொழிபோற் காச்சு மூச்சென்று பேச்சுமி யாமற் பேசி, பீச்சிப் பீச்சென்று பெரும்பேதி கொள்ளுகிறீர்! சீச்சீ!! இது நெடுநாளைக்கும் பெரிய யேச்சல்லவோ? இராஜ்யாதி பதியாகிய நீர் இப்படி நடுங்கவேண்டாம். உம்முடைய உயிருக்

கொரு சேதமுமில்லாமல் வெற்றிபெற்ற என் தம்பிமார்களுடன் நானும் புறப்பட்டு உம்மைக் காக்கின்றேன். நீரெதற்கும் அஞ்ச வேண்டாம்'' என்று விளம்பி மேலும் சொல்லுகின்றான்—"கேளும்! சிந்துதேசாதிபனே! நம்முடைய சேனாதிபதியாகிய துரோணச் சாரியர், கிருபாச்சாரியர், சல்லியராஜன், அங்க தேசாதிபன் அசுவத் தாமன், சீர்பெற்ற பூரிசிரா முதலாகிய அதிரதத் தலைவர்கள் மூன்று, அதிவீர பராக்கிரம புருஷத்தனமாக இருந்து காப்பாற் றும்போது, இச்சபதத்தை முடிக்க அர்ச்சுனனாலாகுமா? அல்லது ஸர்வஸம்ஹாரியாகிய உருத்ர மூர்த்தியால்தானாகுமா? சயிந்த வனே! இது வீண்பேச்சு. அந்த அர்ச்சுனனானவன் சொன்ன சொற் படி உன் தலையை வாங்கப் போகிறதில்லை. ஆனால் அவனுடைய வாக் கியம் கெடாமல் கெருப்பில் விழுந்திறப்பது உண்மையே: நான் சொன்னேன். நீர் நன்றாக யோசியும்! உமக்குப் பயம் வேண்டாம். சுகமாக என்னிடத்திலிரும்.!'' என்று சொல்லித் தேற்றினான்.

துரியோதனன் துரோணராதியரோடு தனித்துத் தன் குறைகூறி வணங்க அவர்களவனை யெடுத்து ஆதரங் கூறுதல்

இப்படியாக ராஜாதி ராஜனாகிய துரியோதனன் சயிந்தவனு டைய மனக்கொதிப்படங்கச் சொல்லி, செவ்வரக்கைப்போன்ற சிவந்த கண்களையுடைய கர்ணனையும், சத்துருக்களை யோட்ட வலைக்கும் தனுவைத் தாங்கிய துரோணாச்சாரியரையும், மற்றப் படை மன்னரையும் பார்த்து, "ஓ எங்கள் சுகத்தைத் தங்கள் சுக மாகப் பார்க்கின்ற இஷ்டர்களே! விஸ்தாரமாகிய நமது சேனைகளை இருபிரிவாகப் பிரித்து, முன்னும் பின்னுமாகக் காவல் வைத்து, நாளை மூப்பதுந் தனஞ்செயனைத் தலை காட்ட வொட்டாம லடித்து, என் மைத்துன னென்னுஞ் சிந்து தேசாதிபனைக் காப் பாற்றும் வல்லமை யுங்களுக் குண்டாயிருக்குமாகில், அவனும் பிழைப்பான். திவ்யமான புகையுடன் பயத்தை யுண்டாக்கும் அக் கினியில் அர்ச்சுனனும் விழுந்திறப்பான். நாம் பலநாளும் பாடுபட் டது பெரிதல்ல. நாளை யொருநாள் கொடிய போர் புரிய வேண் டும். ஆதலால் நான் பலவாறாகச் சொல்லவேண்டிய தில்லை. வேளுக்கொப்பாகிய காளைப் பருவத்தையுடைய வீரர்களெல்லாரும் என் மைத்துனனைக் காப்பாற்றுங்கள்; பகைவரை ஒருகை பாருங் கள்! பாருங்கள்!'' என்று ஆபத்து வந்து அவதிப்படுவோரைப் பார்க்

கிலுங் கோடிப்பங்கு அதிகமாய்க் குன்றித் தீர்க்கதண்டமாகப் பூமியில் வீழ்ந்து, எல்லோரையும் படைகள் பல்லோரையும் வேண்டினன். ஐயோ! குலத்திற்கும், குணத்திற்கும், தனத்திற்கும், ஜனத்திற்கும், கனத்திற்கும், மனத்திற்கும், மிக்கவாகிய தக்க காரியங்களைப் பக்குவமாகச் செய்யாமல், (அக்கிரமங்களால் தலைதெரியாச் சன்னதங்கொண்டு, தனக்கேடாகிய மூழுப்பாய் சுருட்டிகளையுஞ் சேர்த்துவைத்து, தானடங்கத் தன் குலம்விளங்க வென்றிராமல் தன்னைமறந்து நிலைகெட்ட சடையர் சார்வபூமராக விருந்தும், யாவரையும் பணிந்து அவதிப்படுங் கடையராவார்கள்.) என்று சொல்லிய நீதிக்குச் சரியாய் நிலைகெட்ட துரியோதனன் நிலத்தில் வீழ்ந்து வணங்கினன்.

அப்போது துரோணாசாரியார் துரியோதன ராஜனை அணைத்தெடுத்து, "ஓ செந்தாமரைவாழ் திருமார்புயனே! பைந்தாரணியம் பாதாம்புயனே! திசைமகிழப் புகழ்பெற்ற விஜயனும் நீருந் தனுர் வேத முதலிய சாஸ்திரங்களைப் பேதமில்லாமற் சொல்லி வந்த என்னிடத்திற் கற்றுக்கொண்டீர்கள். ஆசானுக்கு வழிபட்டு ஒரு சாலை மாணாக்கராயிருந்து கற்ற வித்தைகள் எல்லாருக்குஞ் சரியாயிருக்க வேண்டும். அந்த அர்ச்சுனனை அசஞ்சலனாக அசைவற்றிருக்கும் அறிவிற் சிறந்தவனாகையால், உலகமெல்லாம் அவனைப் புகழும்படியாக இருக்கின்றது! நீர் செல்வச் செருக்கினுற் சுதாவிற் பிரயாசமெடுத்துக்கொள்ளாமல், ஆட்களைக்கொண்டு ஆகவேண்டிய வேலைகளை முடித்துக் கொள்ளுகிறதினுல் முன் கற்றுக்கொண்ட தனுர் வேதத்தைப் பாராட்டுதலில்லாமற் போயிற்று. இப்பவுமென்ன? (சித்திரமுங் கைப்பழக்கம்) என்னுந் தன்மைக்கொப்பாகவும், (ஆடிய காலும் பாடிய நாவு மவைக்கஞ்சாது) என்பதுபோலும், இனியாவது நீர் சாரதி, குதிரை, சர்ப்பக்கொடி பூட்டிய தேருடன், வில், நாண், ஆயுத முதலிய கணைகளுங் கைக்கொண்டு திடசித்தத்துடனின்று போர் செய்யும் வல்லமைகொண்டு வருவீராகில் ஆனைக் கண்டவுடனே ஐவர் சேனைகளெல்லாம் வியாகூலமடையும். ராஜகூட்டங்களெல்லாம் தேசவிசுவாசத்துடன் உம்மைப் புகழ்வார்கள். என் சொல்லை நீர் உண்மையாய் நம்பும். இவ்வுலகம் மெத்தப் பேதைமையுடையது. அஃதெதினு லென்றால் எப்போர்ப்பட்ட கடையுனாலும் படாடம்பத்துடன் கொஞ்ச முறுக்காக நின்றால், யாவரும் அவனைக் கண்டு பயந்து மதிப்பார்கள் நயந்து துதிப்பார்கள். ஆகையால் இன்று நீர் முனையவேண்டும்.

"முடிவணங்கா மூர்த்தண்ய முதல்வனே! இவையன்றியும், பார்த்தனும் பரந்தாமனும் வெற்றி பெறுவதற்கு வெகு பாடுபட்டு வந்தாலுஞ் சேதிக்கக்கூடாத ஒரு வியூக மிருக்கிறது. அந்த வியூகத்தை வகுத்து நாளைப் போரில் துர்ச்சலை நாயகனை நான் பாதுகாக்கிறேன். இப்போது நான் சொன்ன வியூகத்தை என்னவோவென்றெண்ணுதீர்! பெருக்கமுள்ள நமது சேனையைப் பிரித்து அந்த வியூகத்தை அமைத்து, இடியு நெருப்புங் குடிகொண்டிருக்கும் நெடிய வில்லைப் பிடித்து வருகிற நரனுக்கெதிர் நானிற்பேனுகில், மூப்பத்து மூக்கோடி தேவர்களாலும் அவர்களுக்கரசாகிய தேவேந்திரனுலும், மும்மூர்த்திகளாலும் அந்த வியூகத்தை முடிப்பதற்கும் உடைப்பதற்கும் முடியாது. இப்பேர்ப்பட்ட வியூகத்தின் பேரில் வாயு, தேயு இவ்விரண்டு மருவக் கலந்து தொடுக்குங் கணைகளையுடைய சவ்யசாசி என்னுஞ் சாமார்த்தியன் வந்து சண்டை தொடுக்கும் வில் முனைக்கெதிரில் நின்று போர் புரிய நிர்வாசமில்லா விட்டாலும் இறந்துபோகா நின்ற நமது படையணியைப் பொருந்தித் திடஞ் சொல்லிக்கொண்டு இருக்கத் தக்கதே யல்லது, இந்த இடத்தைவிட்டு ஓடிப்பிழைக்கிறேனென்று உம்முடைய மைத்துனனுகிய சிந்து ராஜபுத்திரன் சொல்லத்தக்க வாக்கியம் அவருக்கு யோக்கிய மல்ல. செத்தாலும் பிழைத்தாலும் சேனைகளுடன் செருமுகத் திருப்பதே தீரலக்ஷணம். திரும்பியோடிப் போவதே அவலக்ஷணம். இதல்லாமலும் தநுர்வேத முணர்ந்து, வில்லும் பிடித்து, உத்தம க்ஷத்திரியகுல முறைமையின்படி மனுவிக்ஞானத்தையும் அநுசரித்திருக்கும் வண்மையாளர், துணிவுகொண்டு கோபத்துடன் சத்துருக்களைக் கொல்லுகிறதொன்று அல்லது அவர்களால் தாங்கள் நிறப்பதொன்று இவ்விரண்டு மல்லாமல் வேறு நினைப்புக்கொண்டு யுத்தகளத்திற் புகுந்து, ஐயோ! அப்பா! தெய்வமே! என்று பெண்டு பிள்ளைகளுக்காகவும், தன்னுடைய பிராணனுக்காகவும், இரக்கப்படுவது இராஜ குலத்திற் பிறந்த எவர்களுக்கும் இல்லை.

"ஓ இறையே! அழகிய கோட்டைக்கு அரணுகிய மதிற்சுவர் போலும், இந்த அவனியை வளைந்த ஆழ்கடல்போலும், அந்தக்கடலுக்கு முகத்துவாரமாகிய ஆறுகள்போலும் நிலைபெற்ற நம் சேனையை அணியாக நிறுத்தி, என்னுற்கூடிய வரையிலுங் கொஞ்சமேனும் வஞ்சகமில்லாமல் உண்மையாகக் காக்கிறேன். ஒருகை பார்க்கிறேன். எமது காவலனே! ஆனுல், அவர்களுடைய பாவ

புண்யமெப்படி யிருக்கின்றதோ அதை நானறியமாட்டேன். ஓ வெற்றிமாலை தரித்த வீரசிங்கமே! நாளை முப்பது நாழிகையில் அர்ச்சுனன் சொல்லிய சபதங் கெடும்படியாய்ச் செய்வது நமது வேலையாயிருக்க, ஒருவேளை அவன் கூறிய வஞ்சினச் தப்பாமற் பெரியோர்களிடஞ் சாபம்போல் வந்து வளைத்துக்கொள்வாஞகில், விஜயன் வில்லுக்கு மேலாகிய வில்லையுடைய வல்லவர்களில்லை. சபிந்தவனுக்குத் துணையாகச் சிருஷ்டி கர்த்தா வந்து தடுத்தாலும் அவன் சொல்லிய சபதப்படி முடியத்தக்கதே யன்றி வேறில்லை. ஆகிலும் வினையின் பயனைப்படியோ அதனை இன்னவித மென்று அறியேன். குவலயா பீடமென்னும் யானைக் கொம்பைக் கைக் கொண்டு, மல்யுத்தம் செய்வதற்குக் கம்சனேற்படுத்திவிட்ட மல்ல ரைக் கொன்றருளிய தந்திரமாயன் நகமும் சதையும்போல் அவர் களைக் கலந்து கொண்டிருக்கின்றன். அவன் இருந்தபோதிலும், இன்னும் ஆரிருந்தபோதிலும், அச்சிந்து தேசாதிபனை வில்லினுல் வெல்லும்படியானது அரிது அரிது. வீரெதற்கும் யோசிக்க வேண் டாம்!" என்று துரோணாச்சாரியர் சொல்ல, பக்கத்திலிருந்த கர்ண மகாராஜன் பாய்ப் புலியாகிய தாய்ப் புலிபோல் எழுந்து, "நாளை வினையப்போகிறது இன்னதென் றுணராமல், அநேகம் அரசர்கள் கூடிய சமுகத்திற் சபிந்தவனைக் குறித்துப் பலவித சபதங்களைப் புகன்ற அர்ச்சுனனுடைய வாழ்நாளை நாளையப்போரில் முடித்துச் சிந்துதேசாதிபனுடைய ஜீவனை நானே ரகூஷிக்கிறேன்!" என்று சொன்னன். உடனே துரியோதன ராஜனுடைய தம்பியாகிய துன் வருடனனவன் துடி துடித்து, "நாளையுத்தத்திற் சூரியன் மறைந்து இருள்வருகிற வரைக்குங் கொந்தலர் மாலை பூண்ட சிந்துராஜனைக் கல்வருஷத்தைக் கோவர்த்தனத்தாற் காத்த கமலக் கண்ணனைப் போல் நான் காக்கக்கடவேன்!" என்றன்.

இப்பாற் சேனாதிபதியென்னுந் துரோணாச்சாரியின் பிள்ளை யாகிய அசுவத்தாமனெழுந்து,

"விரற்புனை கோதைவல் வில்லின் வல்லவர், குரற்படச் சேவகங் கூறுந்பரோ வுரற்புரை நீட்டி யோடை யானையாய், சரற்புய லானது தனிதஞ் செய்யுமோ பொருதொழில் விதம்படப் புரிந்த காலையில், விருதர்க ளிருவரும் வேறல்

[கூடுமோ

வொருதலை நின்றவ ணுடற்றும் வின்மையுங், கருதலன வின்மையும் காண்டி

[காவலா"

உரலுக் கொப்பாகிய அடியையும் வீரபட்டத்தையு முடைய பட்டத்துயானேயேறி பவனிவரா நின்ற பார்த்திபனே! இக்குவலய மெல்லாஞ் சென்று திக்குவிஜயமாக வென்று வீரமாலேதரித்த வில்வல்லபமுடைய வீரவேந்தர் வாய்விட்டிரைந்து தங்களுடைய சேவகவல்லமையைச் சொல்லுவரோ? கல்லவீரர் எக்காலுங் கூரூர். சரருதுவென்னும் மழைக்காலத்து மேகமானது, யாதொரு முழக்கத்தையுங் காட்டாமலே, ஆறு, குளம், ஏரி முதலியவெல் லாம் பெருகிப் புரண்டோடும்படியாய் மழை பொழிவதுண்டு, அதுபோல் எப்பேர்ப்பட்ட வீரர்களானலுந் தங்களுடைய வல்ல பத்தைச் செய்கைகளாற் காட்டி, வெல்லுவோமென்னுந் திறத்தைக் குறிப்பாலுணர்த்த வேண்டியதே யன்றி வாக்கினுற் சொல்லப் படாது. மேலும் போராடும்படியாகிய வல்லபம் ஒருவிதமல்ல; அநேகங் கோடியாய் விதம்விதமாயுள்ளது. அப்பேர்ப்பட்ட அருமை யான யுத்தத்தை இரண்டுபடை வீரர்களும் யுக்தியோசனைகளி லொன்றுமில்லாமற் சபதஞ் செய்துகொண்டு, வயிறுவளர்க்க வாழ் நாள் காக்குஞ் சேனைகளுடன் திரண்டு மூரண்டு சண்டை பண்ணி னுல், ஒருவரை யொருவர் வெல்லக்கூடுமோ? ஒருபோதும் நடவாது! ஆனதால், இப்போது தங்களுடைய ஆண்மையினுல் ஜெயிக்கிறே னென்று சொல்லிய உண்மைத் திறமையையும் பகைவருடைய விற்றிறமையையும், காளைப் போரில் நீரே பார்க்கப்போகிறீர்"— என்று அசுவத்தாமன்சொல்ல, அண்டையிலிருந்த காவலர்களெல் லாருந் துரியோதன ராஜனைப்பணிந்து, "எங்களரசே! தேவரீர் ஒன்றுக்கும் யோசிக்கவேண்டாம். போதுவிடியுமளவு மனம் பொருத் துக்கொண்டிரும், போது விடிந்த உடனே பலமுகத்திலும் பற்பல விதமாகிய சமர்புரிந்து, பாண்டவர்முதலாகிய யாவரையும் வென்று, சயித்தவனைக் காத்து நின்று ஜெயங்கொண்டு மீளுகிறோம். தேவரீ ருக்குத் தேசகாலமாய்விட்ட படியால் விடைகொடுத் தருளும்"— என்று செலவுபெற்றுக்கொண்டு, யாவருஞ் சள்ளைவிட்டதென் றெழுந்து தங்கள் தங்கள் பாசறைக்குச் சென்றார்கள்.

கண்ணன் துரியோதனனுதிய ராலோசனையைக் கேட்டு வருந்திய தருமன் கருத்தைத் தனஞ்செயனுலே தேற்றுதல்

இவ்விடத்தில் நடந்த இச்சச் சங்கதிகளை யெல்லாம் இறவா நெறிபெற்ற தருமபுத்திர மகாராஜன் தூதராலறிந்து, தமது விசாலமாகிய புத்தியில் தீர்க்காலோசனை செய்து, மணிவண்ணத் திருமேனிவாய்ந்த மாயன் முதலாகிய வல்லவர்களின் செவிகளிற் பொருந்தச் சொன்னுர். அதனை நீலகிரிபோன்ற நீலமேனியான் கேட்டு, அங்ஙனநிறைந்த அருட்கடல் போன்ற அரசர்களெல்லாரும் இது எவ்விதம்போய் எப்படி முடியுமோவென்று கவலைப்படாகின்ற கருத்தையுந் தெரிந்துகொண்டு, எல்லோருங் கொண்டிருக்குங் கலகந் தீரும்படி ஓருவார்த்தை நிதானித்து, விஜயனுஞ் செவிதாழ்த்திக் கேட்கும்படி சொல்லத்தொடங்கினர்—"என்னுயிர்த் தோழமை கொண்ட இந்திரன் மதலாய்! காளைபுதயமுதற் சாயங்காலத்திற்குள்ளாகச் சிந்துபதியைக் கொல்லுகிறேனென அதிதீவிரத்தாற் கூறிய சபதங்களைக்கேட்டுத் துரியோதனன் முதலாகிய எதிரிகள் சயிந்தவனை காளைமுப்பதுங் காக்கும்படியாயோசித்துக் கொண்டார்களாம். எப்படியும் அவர்கள் காக்கவேண்டியது கடமையாயாம். ஆதலால் துரோணசாரியும், அசுவத்தாமனும் அங்கதேசாதிபனுகிய கர்ணனும், வெல்லும் வல்லமையுடைய சல்லியனும் சகுனியும், துரியோதனனும், கிருபாச்சாரியும், கிருதவன்மனும் இன்னும் பலவான்களாகிய பல வேந்தர்களும் பிராணனுக் கொட்டிச் சயிந்தவனை எப்படியுங் காப்பாற்றுவார்கள். இது உண்மைதான். இப்போது நான்சொல்லிய பெருந்திறற்படை வீரர்களெல்லாரும் காளை ஒருபொழுதானே யென்று கட்டுக் கோப்பாயிருந்து காத்துக் கொண்டிருப்பார்களாகில், இவர்களை ஜெயித்த பிற்பாடல்லவோ நீ சிந்து தேசனுடைய முடிச் சிரத்தைத் தள்ளவேண்டியது. அப்பனே! இவர்களை யெல்லாம் வெல்லுவதற்குக் காலதாமசமாகிச் சயித்திரதன்முடி வீழ்வதற்கு முன்னே சூரியன் மேற்றிசையில் வீழ்ந்து விட்டால், நீ சொல்லிய சபத முடிவதெவ்வண்ணம்? தெய்வசகாய மிருந்தால் மாத்திரம் உன் சொற்படி சித்தியாமேயல்லது, தெய்வசகாய மில்லாமற் போனுல் மற்றெவர்களாலுஞ் சொன்ன சொற்படியே சேர்வதமுடியுமோ? அப்படி முடிப்பதற்குத் தமதுவல்லமையா லாவதுமுண்டோ? அர்ச்சுன! மனுஷ்யத்

தனம் என்ன பிரயோசனப்படும்?" என்று கேசவன் கிளர்த்தியதை அங்கிருந்த அரசர்கள் யாவருங்கேட்டு, "சர்வக்ஞனே! கிருபாகிதியாகிய, தேவரீர் கிருபை செய்வீராகில் மலையாகிய புயத்தையுடைய எங்கள் விஜயனுக்கிது எம்மாத்திரம்? சந்தேகமில்லாமல் விஜயன் திரிலோகத்தையும் ஜெயித்து வாழ்வா" னென்று ஜெயங் கூறினார்கள். அந்தவேளையில் அர்ச்சுனனைப் பார்த்து "நீ என்ன சொல்லுகிறாயப்பா?" என்று காளமேகத்திற்கொப்பாகிய கருணாநிதி கடாக்ஷ வீக்ஷணியமாய்க் கேட்க, வில்லாளியாகிய விஜயகாகுபன் சொல்லுகிறான்—

"மெய்த் தெய்வமே! மன்மத ஸம்ஹாரியாகிய மகாதேவருடைய அருளும் எங்களை யாண்டு காப்பாற்றும் தேவரீருடைய கிருபையும் பூரணமாக இருக்கும்போது, யாம் நினைத்த காரியம் முடிவதற்குஞ் சந்தேகமா? ஓ தீனதயாளுவே! காளையப் போரில் அந்தச் சயிந்தவனைத் தேவேந்திரனே வந்து காத்தாலும், அக்கினிதேவன் படைத் துணையாக வந்து காத்தாலும், எமன் உதவியாக ரக்ஷித்தாலும், சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மா காத்தாலும், பரிசுத்தவான்களாகிய மகா முனிவர் துணைசெய்யினும், இவர்களைத் தடுத்துவிட்டு மிகுந்த தேசிற்சிறந்த திவ்யதன்மாணிக்கமமைத்த கிரீடந்தரித்த அச்சிந்து பூபதியானவனை காளையப் பொழுதில் காசப் படுத்துகிறேன். இவ்விதஞ் சொல்லிய என்னுடைய காவினுக்கு எவ்வள வேனும் கடுக்கமில்லை. உள்ளபடி சொன்னேன். வள்ளமேல அடியேன் விள்ளுமொழியைக் கள்ளமில்லாமற் கேளும். கணகண வென்று மணிகள் கட்டி குணகுணவென்று குணத்தொனிசெய்து ஜெணஜெண ஜெணவென அக்ஷய பாணங்களைத் தொடுக்கும் அழியா விஜயகாண்டீபத்தைக் கைப்பிடித் திருக்கின்றேன். எப்பொருட்கு மிறைவராகிய எல்லா வல்லமையுமுடைய செந்தாமரைக் கண்ணனை திருமாலாகிய உம்மைச் சாரதியாகவும் பெற்றிருக்கின்றேன்! பாண்டவர்களில் கடுப்பிறந்தோ னென்னும் பலங்கொண்டிருக்கின்றேன். அமரர் முதலிய யாவரும் புகழச் சமர்புரியுந் தனஞ்செய னென்று தயிரியப்பேர் பூண்டிருக்கின்றேன். இத்தன்மை வாய்ந்த மேன்மையைப் பெற்ற எனக்கு இந்தச் சபத முடியாமலெப்படி தப்பிப்போம்? ஒருகாலுந் தப்பாது. அப்படியே நான் சொல்லிய சபதவாக்குத் தப்பிப்போய் கடுந்தீயில் விழுந்திறக்குங் காலத்தில், சந்திர சூரியர் முதலாகிய நவகோள்

களும், மன்னுயிர்கட்கு நிலைத்து வாழும் வாழ்நாட்களும், அண்ட ரண்ட பிர்மாண்ட பகிரண்ட லோகங்களும், எனக்குப் பிற்பாடு மிருக்கத் தக்கனவோ? ஓ என்னிருதயமே! துரியோதனனிடத்தி லிருந்து நாளைப் போரிற் சிந்துதேசனைக் காப்பாற்றும். போர் வீரர் களாகிய வில்லாசிரியன், அசுவத்தாமன், கர்ணன், இவர்கள் முத லானவர்களின் வில்திறம் வேல்திறமுதலிய போர்த்திறத்தை நானறி வேன். பகையினால் அவர்களுக்கு என் பேரிலிருக்கும், அன்பை மறந்து ஏதேது சொன்னாலும், இவன் சொன்ன சொல்லைத் தப் பாது முடிப்பான், முடிக்கா னென்றும், சாமர்த்தியச் சமர்த்தேறிய என்னுடைய புயவெற்றியின் திறத்தை இவ்வள வென்றும் அவர்களறி வார்கள்"—என்று சில வார்த்தைகளை விஜயன் சொல்லினன்.

பாண்டவர்கள் கண்ணனோடு யுத்தகளஞ்சென்று அபிமன்னனைப் பார்த்துத் திரும்புதல்

இவைகளை யெல்லாஞ் சோகந்தீர்த்த மேகமேனியன் விரும் பிக்கேட்டு ஒப்பற்ற விற்பெற்ற வில்லாளி என்பதற்குத் தகுந்த ரு னிவனே என்று மகிழ்ந்து, அகத்தில் அன்புடையவரா யிருந்தும் முகத்தில் அன்பில்லாதவராய் அர்ச்சுனனைப் பார்த்து, "தோன்றலே! அந்தமட்டும் போதும் நீ கெட்டிக்காரன் தான். வீணனகாரியத்தை விளைவித்துக் கொண்டாய். சும்மா விருப்பவர்க் கெல்லாந் துயர முண்டாக்கினை" என்று கடுகடுப்பாய்ச் சில வார்த்தைகளைச் சொல்ல அண்ணலாகிய அர்ச்சுனன் கேட்டுக் கோபமாறி, "ஓ கோபாலா! காபாலி யருளினால் வந்த மாபாலனை யொத்த பூபாலனுகிய என் புத்திரனை யுத்தகளத்திற் சென்று பார்த்து வருவேனென்று மூர்த்தண்யமா யெழுந்தார்த்த கார்த்த வீரியார்ச்சுனனைப் போன்ற பார்த்தனைப் பரந்தாமன் பார்த்துப் போதுபோனால் ரணகளத்தில் இருவகைத் தலைவரும் போகப்படாதென்று நம்மிருதிறவருக்குள் கட்டுப்பாடும் ராஜதர்மமு மிருக்க, அதற்கு விரோதமாய் நீ போக நினைப்பது தப்பாகிற முறைமை" என்று கிருஷ்ணசுவாமி தடுக்க, அப்போது அர்ச்சுனன் வணங்கி, "எங்கள் இறையே! என் குழந் தையின் முகத்தைப் பார்த்தாலொழியே என் மனக்குறை தீராது. இன்னொருவேளை பார்ப்போமென்னும் ஆசை எனக்கில்லை: இது கடைசிப் பார்வை யாகையால் ரகசியமாய்ப் போய் வரலாம்" என்று புறப்பட்ட அர்ச்சுனனுடனே முரசக்கொடி படைத்த முதல்வனு கியபேரும், மற்றத்துணையரசர்களோடு முகுந்தனும், தகுந்த தீவர்த்

திகளுடன் வெளிவந்து மகனுகிய அபிமன்னு தேரேறிச் சென்று, சேனைக்கெதிரில் நின்று, அடத்துடன் ஜெயித்து, திடத்துடன் போன இடத்தையெல்லாம் பார்த்துப் புலம்பிக் கொண்டுபோய்ப் பிள்ளையை நோக்கும்போது, இருதிறவர்களிலும் ரணகளஞ் சுத்தி செய்யுங் காரியஸ்தர் ராஜ குமாரர்களை எடுத்துத் தயிலமாட்டிப் பரணேற்றிவைக்கும் வழக்கம்போல் வைப்பதற்குப் பக்குவஞ் செய்கின்றார்கள். அவர்களின் கைக்குள்ளிருக்குங் குழந்தையை விக்ரமனுகிய விஜயன்கண்டு ஆக்ரமப்படும்போது, அவனுடன் கூடி யாவரும் விசனப்பட்டு அவனைத் தேற்றி, அவன் குறையையாற்றி, அவசரமாய் அவ்விடம் விட்டுத் திரும்பிப் பாசறைக்குச் சமீபத்தில் வர, அக்காலரசர் முதலிய யாவரையும் அஞ்சனவண்ணன் பார்த்து, "நீங்களென் நித்திரை பங்கமா யிருக்கிறீர்கள் ? நாளை முழுவதும் கையிருக்கின்றதுவேலை. ஆதலால், யாவரும் போடி வீட்டி லிளைப் பாறப் போங்கள்"—என்று செலவு கொடுத்து விட்டு, தருமராஜன், பீமன், நகுலன், சகாதேவன், அர்ச்சுனன் இவர்களைத் தனித் தழைத்துப்போய்ச் சொல்லுகின்றார்—

சுபத்திரை புலம்பல்

ஓ பாண்டவர்களே ! உங்களுக்கு நேரிட்டிருக்குஞ் சங்கடங்கள் தலைக்குமேல் வெள்ளமாயிருக்க, அவைக ளெந்தக்காலத்தில் நீங்குமென்று நான் இரவும் பகலும் நித்திரையில்லாமலிருக்க, அருமையுணராத அவசரக்காரரைப்போல் ஆத்திரப்பட்டுச் சபதங் கூறினன் இந்த அர்ச்சுனனுனவன். இதற்கு வேண்டிய முயற்சியை ஈசுவராநுக்ரகத்தாற் பெறவேண்டியிருக்கிறது. தெய்வச்செய லெப்படியோ அறியேன். ஆதலால் நீங்களும் பாசறைக்குப் போங்கள்! " என்று அனுப்பிவிட்டு, யோசனைதூரங் கமழுங் களப வாசனையாரந் திகழுந் துளப வாசுதேவனுனவர் தமது மைத்துனனுகிய விஜயனை அழைத்துக்கொண்டு "உன் பத்தினி முதலிய பேர்களின் விசனத்தையும் ஆற்றுவோம் வா" என்று கந்தங் கமழும் அந்தப் புரமாகிய பாசறையை நோக்கிப் பிரயாணமாகி, சுபத்திரையும் திரௌபதாதேவியும், அபிமன்னன் பாரியாளாகிய உத்தரையும் இன்னும் மற்று முள்ள பேர்களும் பெருமூச்சுவிட்டு, காரோசைக்கு நிகராகிய பேரோசையுடன் பதறிப் பதறிக் கதறிக்கொண்டு, சித்திரப்பாவை போன்று மற்றொரு செயலுமில்லாமற் சிந்தை வருந்தி மைத்துனன் கைத்து பொருந்தி, ஒன்றுந் தோன்றுமல் தொந்திருப்பவர்கட் கெதி

ரில் அந்தோவென்று அங்காகாரணர் வந்தார்கள். அவர்களைக் கண்ட வுடனே அக்கினியில் வீழ்ந்த புழுப்போற் பதைபதைத்துத் துடி துடித்து, விரைந்து, தளர்ந்து, விழுந்து, புரண்டு, எழுந்து, இருந்து, கரைந்து, திரைந்து, இரைந்து, பரிந்து, கண்டங் கம்மி, கண்ணும் விம்மி, கருமழை பொழிவதைப்போற் கண்ணீர்விட்டுக் கதறினார்கள். இப்படி நேசமாய்வரு மாசனருடனே ஓசைகளிட்டுப் பாசறையில் வேசாறும்படி ரோதனஞ் செய்யும் அனேகம் போர்களிற் சுபத் திரை துக்கப்படுவதி யாதெனில், "என்னெஞ்சமதியும், என்னிரு செவி யும், என்னரு பதியும், மகிழப் பிறந்த மைந்தனே! இந்திரச் செல் வம் பெற்ற ஜயந்தனே! உன் பெரிய தந்தையானவர் தன்னைப் பிடிக்க மீறி, சதுர்விதச் சேனைகளோ டெதிரேறி, தாறுமாறுக மாறி, வீறிப் போர் புரியுஞ் சத்துருக்கள்பேரில் உன்னையனுப்ப, எதிரியின் படை வீரர்களை நீ எள்ளத்தனையு மதிக்காமற் சென்று, சேனைகளைக் கொன்று, கணக்கிறந்த மேவலர் புயமலைகளைப் புரட்டி, காவலர் முடித்தலைகளை யுருட்டி, இரத்த வெள்ளம் ஆறுக ஓடக்காட்டிச் செயித்த உன்னுடைய வல்லபத்தை அருமை தெரிந்த பலசாலிகளாகிய உன்றந்தையர்க்குச் சொல்லவும், அவர்கள் கேட்டு, விந்தை புல்லவும், கல்ல வாழை கமுகு முதலியவைக ளின் குலைகளால் அலங்கரித்த உன் தேரை நடத்திக்கொண்டு வந்து சேதி சொல்லாமல், இதுவரைக்கும் நீ தாமசமாய் இருக்க வேண்டிய காரணமென்ன? நீ எங்கு இருக்கின்றாய்? அடா என் மகனே! அர்ச்சுனற்குரிய சுதனே! அழகிய மன்மதனே ஹரி! ஹரி! நான்முகனுக்கு நற்பிதாவாகிய நாராயணர்க்கு மருமகனுகியும், பான்முகனுகிய அக்கினி தேவனுற் பல வரிசையும் பெற்ற பார்த்திபனுகிய பார்த்தனுக்குத் திருமகனுகியும், ஒப்பில் லாத வேத மந்திர சாஸ்திரங்களைப் பாராயணஞ் செய்து கற்றுப் படைத்திறம் பெற்றவனுகியும் விளங்கா நின்ற விற்பத்தியுடைய பாலனே! சிங்காரவேலனே! சம்பிரமலோலனே! போர் நிறைந்த யுத்தகளத்திற் புகுந்த உன்னைத் தேவர்களாலும் ஜெயிக்கப்படாதே! திடகாத்திர தீர வீரச் செல்வனே! திகழ்பராக்கிரமசூரத் துய்யனே! என் சிந்தையி லூறுந்தேனே! தெவிட்டற்கரிய குணவானே! போர்க் களத்தில் மானிடராகிய பஞ்சைகள் உன்னுடன் சண்டை செய்து உன்னுயிரைப் போக்கும்படிக்குக் காலம் நேரிட்டதல்லவா? மாற் றுயர்ந்த தங்கமே! மகா குணமலையேறிய சிங்கமே! தயிரிய மென் னுஞ் சரக்கு நிறைந்த வங்கமே! என் மனப் பொங்கமே! நானது

பஷிக்கக் கூடாத இப்பேர்ப்பட்ட துன்பத்தை என் தீவினையே முதன்மையாக இருந்து விளைக்குமாகில், காணுரை கோவேனடா? என் கண்மணியே! என் குலக்கொழுந்தே! நீ கொண்ட கோபமும், உன்னுடையவல்லபமும், இளைத்துவந்த அரசர்களைப்பயப்படாதீர் களென்று தாங்கும் உன்னுடைய திறமும், எதிர்த்து வந்தவர்களை இமைக்கு முன் இடியேற்றைப்போலத் தாக்கிக் கொல்லவல்ல மறமும், மற்றுந் தயிரியங்குறையாமலும் மலை கலங்கினுங் கலங்காமலும் இராநின்ற உன் சிந்தையின் வலிவும் தீர்க்காலோசனை விவேகத் தெளிவும் எக்காலத்திலுங் குறைவுபடாவே என்னுசைக் கண்ணே! என்னுவக்கினிய, அமுதமே! பாபியினுடைய கர்ப்பஞ் செய்த பாவத் தால் இவைகளெல்லாங் கெட்டுப்போன போதிலும், சந்ததியிற் பிறந்தோரும் நினைக்கும்படியாகிய அளவில்லாப் புகழையும், பெரு மையையும், ஆபரணமாகக்கொண்ட தருமபூபதியினுடைய தர்மத் தலைகாக்க வேண்டுமே! அந்தத் தர்மமும் பிசகிப்போச்சுதே! அடா என்னப்பனே! அடா கணுவில்லாக் கரும்பே! கல்வி ரசம்பாடுஞ் சுரும்பே! இப்பேர்ப்பட்ட தர்மமுஞ் சத்தியமுந் தப்பிப் போன போது இத்தப்பூமியில் என்னத்தினை கொடிய பாவி எவர்களுமில்லை யடா! என்னுயிர்க் குயிராகிய இன்பமே! ஆ ஆ என் சுதனே! வருந் தாமல், வாடாமல், பிரயாசையில்லாமல், யக்ஷர் வாசமாகிய அள காபுரிக்குச் சென்று, காவல் முதலிய பேரைக் கட்டழித்து வென்று, ஈச்வரத் தோழனுடைய சேனாபதி யென்னும் மணிமாலினைக் கொன்று, மந்தார மலர்கொண்டு வந்து, உங்கள் பெரிய தாயாகிய திரௌபதைக்குக் கொடுத்த உன் பெரிய தந்தை பீமசேன மஹா ராஜனிருக்க, ஒருகோடி வேந்தர்கள் புகழுடன் புடை சூழ்ந்திருக்க, உன்னை ஓண்டியாய் விட்டுப் பிரிந்துபோன உன் தந்தையைக் குறித்து நொந்து நோவது தர்மமல்லவடா என் சாமீ! பூர்வஞ் செய்த தீவினைப் புணர்ப்பைப்போல் அநேகம் பேர்களெதிர்த்துக் குருத்துக் குழந்தையாகிய உன்னுயிரைக் கொள்ளைகொண்டு போன கொடிய தீய பாவிகளைக் குறித்தே நோவ வேண்டுவது தர்மமடா! எனது குலமணித் தீபமே! சூரியனுற் பனி தீயுமென்று உலகஞ் சொல் லும். அப்படியிருக்க, பனிகளெல்லாஞ் சேர்ந்து ஒரு சூரியனை வெல்ல வந்த பான்மையைப்போல் உன்னைச் செயிக்க வந்தார் களே! அப்படிப்பட்ட மன்னர்களுஞ் சின்னப்படும்படியாய் வென்று திரும்பி வந்தசேயே! ஆரிட்ட சாபமோ? என்னண்ணலாகிய கண் ணனுக் கென்ன கோபமோ? நானறியேனடா மைந்தா! கல்லது:

இவைக ளிப்படியிருக்க, உன்னுடைய உரிமை எப்போர்ப்பட்டது மகனே ! நமது தாய்க்கு நாமொரு பிள்ளை. மேலும் அவளுடலும் அந்த உடலுக்கு நாம் உயிருமாக இருக்கின்றோம். உயிராகிய நாம் பிரிந்தால் உடலாகிய தாய் இறப்பாளே யென்று உன்னுள்ளத்தில் எள்ளத்தனையு நினைக்காமல், கள்ளத்தனமாய் வானுலகடைந்தாயே என் வள்ளலே ! பேதையாகிய என்னை நீ யறிந்திருந்தும் எனக்கொரு மொழி விள்ளாமல் மோசஞ்செய்து போனபடியால், இனிமேல் எங்களுக்கு உன்னை யல்லது வேறென்ன செல்வமுண்டு ? மெய்யனே ! அடா என்னையனே ! இனி யென்ன இன்பம் ? இனியென்ன வீரம் ? உன்னைப் பறிகொடுத்து இனியுத் தஞ்செய்து பெறப்போகிறது என்ன வெற்றி ? உன்னைக்கண்டு களிக்காத உற்சாகம் என்ன உற்சாகம் ? உன்னுடன் கலந்து வாழாத வாழ்வு இனி யெனக்குத் தாழ்வையடா மகனே ! எனக்கோருறுதி ஓடிவந்து சொல்லடா! என்னெதிர்வந்து சற்று நில்லடா! என்னை யுன்னுடன் கூட அழைத்துச் செல்லடா! பெற்ற நான் இங்கிருக்கச் சற்று நினைக்காமல் என்னைப் பிரிந்த உன்மனமெத்தக் கல்லடா! முதிர்ந்த மரமெல்லாமிருக்க இளமரம் பட்டது முறைமை தப்பாகிய பிழையடா! என்போன்றவர் என்ன யேசுவார்களே! வலக்காரம் பேசுவார்களே! ஐயோ மகனே ! வல்லாண்மை பெற்ற வசுதேவர் வாழ்ந்த கல்லகுலத்திற் பிறந்து, எல்லா அரசும் வந்து பணியும் வில்லாண்மை, வேந்தரின் கல்லகுடியிற் புகுந்து, சககளத்தி நாத்தி, ஓரகத்தி முதலாகிய பத்துக்களுடைய கும்புகளிலும், பிரியாமல் மரியாதையா யுலாவி யிருந்து, யாவரும்புகழ நானுமகிழ்ந்து, ஏதொரு குறையு மில்லாமல் சொல்லாண்மை பேசி, இன்பமகிழ்ச்சியில் எனக்கீடாக ஒருவருமில்லை யென்று இறுமாந்து, மணம்புரிந்து கொண்ட புருஷகாதலன் வரும்போதும் குணஞ்சிறந்து கண்ட தூய காதல னுறும்போதும் அகமகிழ்ந்து, முகமலர்ந்து அருள் சுரந்து, விழிசிறந்து, ஆனந்தத்துடன் ஆலிங்கனஞ்செய்து முத்தமிட்டுக் கொண்ட மகாபாவியாகிய வஞ்சிக்கு நெஞ்சுக்கிசைந்த துணையாகிய நீயொருவன் இல்லாமையால், எல்லாமிருந்தும் இல்லாத்தனியாயினேன். ஏ ! வித்வ சிலாக்ய விஜயன் மகனே ! இனியேனும் இதோ வந்தேன் அம்மணி ! இதோ வந்தேன் அம்மணி ! என்றோடிவந்து அங்க லாயத்திரங்கும் என்னெதிர் வாராயோ ? ஓ என்னிஷ்ட பாக்கியமே ! என் சிலாக்யமே ! குணபூஷணமே ! கோதற்றகனியே ! இப்பூவிற் பெருமையாய்ப் பிறந்த யென்னைக் காவிற் கொடிபோற்

காத்த கண்ணனே! அண்ணன் அலாயுதன் கருத்தை அகற்றி உன் னெண்ணம்போல் அர்ச்சுனற்கீந்த வள்ளலே! மாணிக்கமான மகனை யான் பெற்றேன்! காணிக்கிவனே காவலென்றுற்றேன். பாவியே னெண்ணம் பாழாய் விடினும், ஆவியே அண்ணு அருளுனக் கில்லையோ? முதலை வாய்ப்பட்ட சுதனை கல்கினையே! மூலமே யென்ற கரிபுரத்தனையே! ஆபத்தால் வந்த அரசபுத்திரனை மேவித் துருவம் வீறவைத்தனையே! எவரிருந்தாலும் என்னினக்கினையோ? மகனை யான் இழந்தேதன்! மகாபாவி வீழ்ந்தேதன்!" என்று மலர்விழியி லறைந்துகொண்டு மண்மேற் சாய்ந்தாள் சுபத்திரையானவள்.

திரௌபதி புலம்பல்

இப்பால் அக்கினியிற் பிறந்த பாஞ்சாலியானவள் அடித்து மோதி வீழ்ந்து, "ஆருமற்ற பாவிக்கு அருந்துணை யென்றிருந்த ஆதர வாகிய சேயனைப் பிரிந்தேதன். என்கூந்தலை முடிக்க ஏந்தலாயமைந்த மாந்தரிற் சிறந்த மைந்தனை இழந்தேதன். கடலைக்கடந்து கரையே றுங் காலத்திற் படகுடைந் திறந்த பாவியானேனே. அழகுஞ் சிறப்பும், ஆண்மையும் வீரமும், புகழும் பெருமையும் புண்ணிய நெறியும், சத்திய சவுசமும் தானமுந் தர்மமும், எய்த்தபோர்க்குத வும், இரக்கமும் அன்பும், மெய்த்தவக் குணமும், மேன்மையும், பக்தியும், தந்தை தாய்க்குகந்த, தகுந்த நன்னடையும், அறிவும் சிறப்பும், ஆண்மையுங் குறிப்பும், பொறுமையுந், திறமையும், பூத தயையும், கர்த்தனைப் பூசிக்கும், வித்தகப் பத்தியும், இத்தனை யிருந் தும் இறந்தையோ மகனே! அப்பா சுதனே! அங்காடிக் கூடையை அதிர விலை இட்டறியோம், பங்கில்லாப் பங்கைப் பதறி யெடுத்தறி யோம், வரியிறையாற் குடிகளை வதைத் தென்றுமறியோம், கொடுங் கோன்மை செய்து குதித் தென்றுமறியோம், தாலிகட்டுங் கல்யா ணத்தைத் தடுத்தறியோம், வேலியிட்ட பயிரை மிதித்தறியோம், ஏழைகள் பொருளை யெடுத்தறியோம், வாழ்குரிற் பொறுமை வைத்தறியோம். கோவிற் குளங்களைக் குலைத்தறியோம், காவிற்பூஞ் செடிகளைக் கலைத்தறியோம், பசுவைப் பட்டினி போட்டறியோம், சிசுவைப் பட்டினி செய்தறியோம், பாவமென்றும் பரிதறியோம். கோபமென்றுங் குறித்தறியோம், பெரியோர் தம்மை யிகழ்ந்தறி யோம், பேதையர் வாழ்வை அகழ்ந்தறியோம். சோயினர் தம்மை நொடித்தறியோம், போயினர் துன்பம் பெறவறியோம், பாவாணர் தங்களைப் பகைத்தறியோம், பார்ப்பார் தம்மைக் குறைத்தறியோம்,

மதுவேதத்தை மறந்தறியோம், வஞ்சமனத்திற் கொண்டறியோம், தஞ்சமென்றோரை விடுத்தறியோம், அஞ்சலென்றோரை யடித் தறியோம், கடனுளியைவாசல் காக்கவைத்தறியோம், உடன் பிறந் தோரை யோட்டி யுலாவி யறியோம், இனத்தைச் சனத்தை எதிர்த் தறியோம், ஈசனேமாலைப் பழித்தறியோம், பசித்தோர்க் கன்னங் கொடாதறியோம், பாதையை வெட்டிப் பிரித்தறியோம், தண்ணீர்த் தடாகந் தடுத்தறியோம், சமயங் கெடுத்துச் சார்ந்தறியோம், பொய் கோள் சொல்லிப் பிழைத்தறியோம், பெண்களை சோரக் கண்டறி யோம், தீயோர் திருடரைச் சேர்ந்தறியோம், தீயிட்டு மோசஞ்செய் தறியோம், கூலி குறைத்துக் கொடுத்தறியோம், குறைய மரக்கால் நிறைத்தறியோம், சொல்லிற் சோர்வு பட்டறியோம், துஷ்ட மந்திரியை வைத்தறியோம், தாய்தந்தையரை யிகழ்ந்தறியோம், சண் டாளர் தம்மைப் புகழ்ந்தறியோம், கடையருறவைக் கண்டறியோம், கற்றோர் தன்மை விண்டறியோம், ஜீவஹிம்சைகள் செய்தறியோம், செய்தோரைச் சினவாமல் விடுத்தறியோம், குடும்பதோஷங் குறித் தறியோம், குடியரைக் கனவில் நினைத்தறியோம், கடியாற் பசுவை யடித்தறியோம், தருவோமென்றலக் கழித்தறியோம், கம்பவைத்து மோசஞ் செய்தறியோம், காய்போற் குரைத்துப் பகைத்தறியோம், வம்பு வழக்குத் தொடுத்தறியோம், வாங்கின கடனைக் கொடாதறி யோம், மாதவம் யாகம் விடுத்தறியோம், வழக்கிற்பட்சபாதஞ் செய் தறியோம், கணவற்குத் துன்ப மிழைத்தறியோம், கழறியசொல்லைத் தடுத்தறியோம், பச்சைமரத்தைப் பறித்தறியோம், அச்சம்லச்சை விட்டுப் பிழைத்தறியோம், இச்சகம் பழிக்க வாழ்ந்தறியோம், இச்ச கம் பேசித் தாழ்ந்தறியோம், அநாதைரக்ஷகனைப் பழுதுரையோம், அரியரனல்லாற்றொழுதறியோம்-இப்போர்பட்ட பொல்லாங்குகளைஎப் போதுஞ் செய்தறியாத எங்களுக்கு இக்கக்கொள்ளை எப்படி வந்து முடிந்ததோ? என்னிஷ்ட தெய்வமான கர்த்தனே! அண்ணு கண் ணனே! கண்ணுப்புத்திரன் கிடைத்தும் போரினில் முடிந்தானே: உன் சித்த மிப்படியுஞ் செய்யத்தறினதோ? ஐயோ! என் கண்ணே அபி மன்னு! பெற்றோர் வயிற்றிற் பெருநெருப்பிட்டையே," என்றிரைந் தழுது ஏங்கிக் கலங்கி, தரைமேற் சோர்ந்து சாய்ந்துடல் மறந்து, ஒன்றுந் தோன்று தோய்ந்தயர்ந் துயிர்த்தாள் பாஞ்சாலியானவள்.

உத்தரை புலம்பல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இத்திரௌபதி பக்கத்தில் ஆறுமாச கர்ப்பத்தோடிருந்த முச்சவளநாடன் பாவையாகிய உத்

தரையானவள் சூத்திரமிழந்த மரப்பாவைபோலும், இரக்கையிழந்த பறவை போலும் விழுந்து, தீயில்விழுந்த செந்தாமரை மலர்போல் தேகமும் முகமும் க்ஷணத்திற்கருகி முத்துப்போற் கண்ணீர் முகமறைத்தோட, அத்தா! அத்தா! அண்ணையே என்று அர்ச்சுனன் பாதத்தில் அலறியே வீழ்ந்து, மாமாவெனவே வயிற்றைப் பிசைந்து, வாய்மேலறைந்து வாடியகொடிபோல், கையெரித்துக் கண்மேலறைந்து 'தெய்வமேயென்று தியங்கிப்புலம்பினாள்; "வீட்டில் வந்தெனக்கு காட்டியம் பழக்கிய மாமா! எந்தன் வேந்தனை யிழந்து நான் காந்திப்புலம்பவோ மாமா! வதுவையென்று யாரும் வாழ்த்தச் சிறந்தேனே மாமா! இப்போது விதவையென்றுசொல்ல வெட்கி மறைந்தேனே மாமா! தந்தையைக்கொல்ல வெந்தன் வயிற்றிலிந்தக் கருவே, வந்துசார்ந்தமே ஆறுமாதமாய்ப் பூதவுருவே: சகல ராஜர் களுந் தாழ்ந்து வணங்குமலர்ப் பாதா! சரசசல்லாபமாய்த் தழுவிக் களித்த பிராண நாதா! சந்தோஷ வானந்த இன்பமெனக் களித்த தேனே! நான் தந்தை தாயார்சொந்த பந்துக்களையும் பிரிந்தேனே: மருகிமருகியென்று வாய்குளிர்ந் தழைத்த வென் மாமா! நான் உருகியுருகிச் சோர்ந்து உயிரை இழந்திருக்கப்போமா?! ஹரி ஹரி! ராமா சின்னஞ்சிறுவயதிற் கன்னிகழியச்செய்த தேவனே! எந்தத் தீவினையாற் கணவனிறந்தனனே சகதேவனே! ஆருக்கு மகியாயம் நாங்கள் யாருஞ் செய்யவில்லையே: இந்த அவதி இடித்தாற்போல் வந்ததேவினைத்தொல்லையே: காய்த்துப் பழுக்கு மாயிரங்காலப்பயிர் காய்துபோச்சுதே: நான் கண்கலங்கி வயிறெரிய இப்பருவத்தில் வாய்ச்சுதே: தேடிவந்து என்னைத் திருமணஞ் செய்த வின்னுயகன் இப்போது தேடவிட்டுப் பரலோகஞ்சேர்ந்தாரிது ஞாயமோ?" என்று வானமும் மண்ணும் மாமும் மலையும், கல்லுங் கடலும் புல்லும் பூடும், உருகும்படியாய் உருகியழுங்காலையில், அர்ச்சுனன் வேரற்ற பச்சைமாம்போல் அசைவற்று நிற்க, மாகதமேனி மாயன் அவர் களை யெடுத்து உபசரித்துத் தேற்றி, அவர்களுடைய சோபந்தீரத் தமது திருவாய்மலர்ந்து சிலதேறுதலான வார்த்தைகளைச் சொல்லுவதாயினார்—

கிருஷ்ணபகவான் திரௌபதை, சுபத்திரை, உத்தரை இவர்களைத் தேற்றுதல்

என்னருமைச் சகோதரிகளே! "நிலத்தியல்பானீர் திரிந் தற்றாகு மாந்தர்க் கினத்தியல்ப தாகுமறிவு" என்றால் நிலத்தி

னுடைய குணம் நிலத்திற்கேறுந் தன்மைபோற் குலத்தினுடைய குணம் அறிவுக்கேறுமென்று நீதியிருப்பதினால், க்ஷத்திரியகுலத்திற் பிறந்த ஸ்திரீகள் க்ஷாத்திரங்கெடப் பேசமாட்டார்கள். அதென்ன வெனில் சண்டைக்குப் போயிருந்த புருஷன் அபஜெயப் பட்டானும் மார்புகாட்டி நின்றானென்று கேட்டால், மனமகிழ்ந்து தன்னுயகீனை எதிர்கொண்டு தழுவுவார்கள். ஜெயஞ்செய்துவந்த தீரனானும் புறமுதுகிட்டா னென்று கேட்டால், அந்தப் புருடன் முகத்தில் விழிக்காமற் பிராணனை விட்டுவிடுவார்கள்: ஆனதால் நீங்கள் விசனப்படுவதைப் பார்த்தால், நமதுகுலத்தின் பெருமையைக் குன்றச்செய்வது போலுமிருக்கின்றது! புத்தியறிந்த நீங்களே இப்படி இரங்குவது நன்மையல்ல. குலத்தின் குணத்தை அநுசரித்துக் கொள்ளவேண்டும். உங்கள் புத்திரனைவதைத்த கொடியோர்களின் பலவிதவளங்களு மாளும்படி மாய்த்து, வெற்றிகொண்டு சாய்த்து, காலை முப்பது நாழிகைக்குள் தப்பில்லாமல் வருவோம். தீர்க்கபுத்தியை யுடைய நீங்கள் ஏக்கங்கொள்ளுவது தர்மமல்ல, அம்மா சுபத்திரா! உன் மகனை கினைத்து மனைதுக்கப்படுவானேன்? இப்போர்ப்பட்ட வல்லமைசாலியாகிய பிள்ளையைப்பெற்ற உன் மாதவத்திற்குச் சந்தோஷப்படவேண்டுமே: உனக்குமாத்திரந்தானு துக்கம்? எங்களுக்கில்லையா? பத்தபாசமுள்ள யாவரையுஞ் சொந்தமாக்கிக் கொள்ளும் இந்தவுடலை வந்தவழி தெரியாமற் போக்கும்படியாகிய வாணாள், அவத்திற்குப் பாடுபடுவதைப் பார்க்கிலுந் தவத்திற்குப் பாடுபடுவது தகுதியல்லவோ? என் தங்கையே! வீணிலிறந்து மறைந்துபோகும் இந்தத் தேகத்தை, அழியாத காணியாகிய கீர்த்திபொருந்திப் பெருமையிற்சிறக்கும்படி செய்தான் உன் கண்மணியாகிய விண்மணி. அம்மணி! அதெப்படி யென்னில், எதிரிகளாகவந்த சுத்தவீரரெல்லோரும் உன்புத்திரனை மெத்தவுந் துதிக்க, தேவர்க ளெல்லோருங் களித்து மதிக்க; ராஜபுத்திரர்களுடைய ரத்னகிரீடம்பெற்ற தலைகள் யாவும் பூமிதேவியார் அம்மானை யாடுமாறுபோல் ஆகாயத்திலெழுந்து பூமியில் விழுந்து மாயும்படி பந்து விளையாடி, எவர்களும் பெறுதற் கருமையாகிய வீரசொர்க்க மடைந்தான், உன் மைந்தனை அபிமன்யு! அவனைக் குறித்து நீ கெஞ்சு தடுமாறி கொந்தாலும், அக்கினியில்வீழ்ந்து வெந்தாலும், மீண்டும் பிழைத்து வருவானோ! காக்கைபோற் கத்திக் கருகி மனம்வருந்தி ஆக்கையழிவதே யன்றி நோக்குங்கா லொரு பயனுமில்லை. அம்மா! உன் பாக்கியமே பாக்கியம். கல்லகுடியிற்

பிறந்து தகுதியாகிய இளம் பருவத்திற் கண்ணுக்கு ரம்யமான் மண்ணுக்குட் பெருமைபெற்ற விஜய வீரனைக் கைப்பிடித்து, காணத் தக்க சுகங்களைக் கண்டு ஒரு பிள்ளையைப் பெற்றாய்! ஆ ஆ அவனது ஆண்மைத் திறத்தை எவர்களாற் சொல்லிமுடியும்?

" ஓ சுபத்திரா! ஓ திரௌபதா! உலகத்திற் பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கு வேண்டிய நன்மைகளென்னவெனில், மனதுக் கிசைந்த நல்ல புருஷனைக்கூடி வாழ்வதும் உலகமதிக்கும் புதல்வனைப் பெறுவதும், இவ்விரண்டைவிட மேலான நன்மையும், இனிமேல் அநுபவிக்கப்போகிற போகபாக்கியமும் வேறெயுண்டென்பது ஒன்றுமில்லை: நீங்களெல்லா மநுபவித்து விட்டீர்கள். மேலும் இன்னுமோரு பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு வாழும்படி தாழ்வில்லாத காயகனென்னும் முதலும் வித்தும் வைத்துக்கொண்டிருந்தும், ஏனோமனவருத்தி வாடுவீர்கள்? ஐயோ! உங்கள் மருமகளாகிய உத்தரை யாதொரு சுகபோகத்தையும் பின்னுமுன்னும் அறியாத சின்னஞ்சிறிய குழந்தை. அந்தப் பெண்ணின் காயகனாகிய முதலும் வித்தும் முழுகிப்போய் விட்டபடியால், அந்த உத்தரையாகிய பெண் கொடி முதலிழந்த பேர்களைப்போல் மாறுத ஆறுத் துயர்கொண்டழுவது ஞாயம். நீங்களுருகி அழுவதெல்லாம் மாயம். இனிப் புலம்பி அழுவீராகில் அபாயம். நீங்களிருவரும் உங்கள் மருமகளுடைய துக்கத்தை நீக்கி, தைரியமும் தெளிவு முண்டாகும்படி தேறுதல் செய்யுங்கள்" என்று இவர்களைத் தேற்றி, உத்தரை குமாரத்தியின் விசனத்தையு மாற்றி, இங்குலிக நீர் கரைத்து ஆறு, எள்ளுப்பூவை அதில் விடுத்து, பக்குக்கள் முதலிய பேர்களும் வந்து காணும்படியாய் உலக ஈமக்கடத்தை யடுத்துத் தாங்களும் அவ்விடத்தி லிருக்கும்போது குந்தி போஜத்தலைவர், போஜ குலத்தார், யது குலத்தார், மச்ச தேசாதிபர், பாஞ்சாலர் சோமுகாள், துருபதேயாள் இவர்கள் முதலிய யாவரும் அப்பாசறை அரண்மனையில் வந்து திரௌபதை, சுபத்திரை, உத்தரை முதலிய யாவர்களையுங் கண்டு, துக்கங்கொண்டு துயரத்தை நீக்கி, சொல்ல வேண்டிய சொறக்காயும் பேச வேண்டிய காரியங்களையும் பேசி ஸ்நான முதலிய தன்மைகளுஞ் செய்வித்து, தாங்கள் தங்களிருக்குமிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

இங்குலிக நீர்விதி

என்று வைசம்பாயனர் சொல்ல ஜனமேஜய மகாராஜன் வணங்கி, "சுவாமீ! இங்குலிக நீரில் ஆறு எள்பூ இட்டு நோக்கினுர்களென்று திருவாய் மலர்ந்தருளிய வாக்கியத்தைச் சங்கேத மறத் தயவு செய்யும்" என்று இரங்கிக் கேட்க, "அரசனே! இங்குலிக நீ ரென்பது ஸ்ரோணிதம். எள்பூ வென்பது சூட்சமாகிய சுக்கிலம். இவ்விரண்டுஞ் சம்பந்தப்பட்டு ஆறு மாசமாய் நிலைத்துக் கருவாய் உருக்கொண்டு நின்றதென்று எவர்களுங் குறிப்பினுற் சுளுவிலே தெரிந்துகொள்ளும்படி, லோகோபகாரமாய் என்னுண்டவராகிய வேதவியாசர் யாவருக்கும் ஏற்படித்தி வைத்த விபரமாக்கும். அதேனெனில், இந்தக் கர்ப்பம் இறந்துபோன எசமானிருக்கும் போதே அவனுக்குத் தரித்ததென்றும், அவனிறந்து போன பிற்பாடு இடைக்கொள்ளைக்காரனுக்குத் தரித்ததென்றுஞ் சங்கேதப் பட வொட்டாமலும், குடும்ப தோஷஞ் சொல்லுஞ் சண்டாள ருடைய வாயடைக்கும்படியாகவுஞ் செய்யவேண்டிய முறைமை. இந்தக் கர்ப்பந்தான் உன் தந்தையாகிய பரீக்ஷித்து மகாராஜன்—" என்று வைசம்பாயனர் சொல்லுங்கால் விருப்பத்தினுல் இதைக் கேட்ட ஜனமேஜய மகாராஜன் வெறுப்புடையவனுய்த் தயிரிய நீங்கித் தன்னைமறந்து மூர்ச்சைபோய், மறுபடியும் மன்னர் குலத் திற்குரிய தயிரியத்தை வாவழைத்துக்கொண்டு வபுஷ்டாதேவி யுடன் வைசம்பாயனரை வணங்கிப் பணிந்து, "பொன்னூலணி மார்பனுகிய பூசுரனே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்தரு ளும். எங்களிஷ்ட தெய்வமாகிய கிருஷ்ணமூர்த்தியும், என்சிரேஷ்ட மூதாதையாகிய அர்ச்சுன ராஜனும், அப்பால் என்னுயிர்கள்? அதனைத் தேவரீர் திருவுளம் பற்ற வேண்டும்" என்று கேட்க வைசம் பாயனர் சொல்லுகின்றார்—

அருச்சுனனைக் கண்ணன் ஓராரண்யத்தி லழைத்துப் போய்த் தன்னைச் சிவமாகப் பாவித்துப் பூசை செய்யும்படி செய்தல்

எத்திசையும்பணி சீமானே! புத்தியில் விண்ணிகர் கோமானே! கேளும்! இப்பால் அந்த இராத்திரியில் ஹரிவாசு தேவனுகிய தேவகி நந்தனன் அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு, ஊழிகாலத்திருள் குடி

கொண்டு குதிகொண்டிரா நின்ற ஓர் ஆரண்யத்தை நோக்கி, அதில் அரசு, ஆல், வேல், ஆத்தி, அத்தி, அனிச்சம், ஆச்சா, இலவம், இலுப்பை, ஈந்து, எட்டி, எலுமிச்சை, உசில், ஓமை, கடம்பு, கடவு, கடிக்கை, கமுகு, கருக்கு, வாளி, கருங்காலி, கள்ளி, காயா, குங்குமம் கோரை, குருந்து, கூந்தற்பனை, கொன்றை, கோங்கு, சந்தனம், ஜாதி, சிவந்தி, செண்பகம், செருந்தி, தணக்கு, தேங்கு, தேக்கு, நறுவிலி, நாரத்தை, நாவல், நெல்லி, நொச்சி, பச்சிலை, பலா, பனை, பாதிரி, பாலை, பிராய், புளி, புன்முருக்கு, கன்முருக்கு; பேயத்தி, புன்முருங்கை, புன்னை, பூவரசு, மகிழ், மஞ்சாடி மருதம், மாதுளை, மலைப்பச்சை, மல்லிகை, தேமா, புளிமா, முருக்கு, முருங்கை மூங்கில், முன்னை, வன்னி, வாகை, வில்வம், விளா, வெட்பாலை, வேங்கை, வேம்பு, தாழை, வாழை, முதலாகிய ஈசுவர சிருஷ்டி பேதங்களான சகல விருக்ஷங்களோடு, வெகுவாகிய படர் கொடிகளும், குத்துச் செடிகளும், அநேகத் தீர்த்தங்களும், மிருகங்களும் பொருந்திச் செறிந்திருக்கக்கண்டு, அவ்வாரண்யத்துட் புகுந்து போகும்போது அர்ச்சுனனுக்கு இன்று காலமே புசித்த அன்னமாதலினாலும், சஞ்சத்தகர் முதலிய பேர்களிடத்திற் கொடிய சண்டைபோட்டுத் தேகம்வருந்தி மெலிந்திருப்பதினாலும், புத்திரனிறந்த சோகத்தினாலும் தன் பெண்சாதி மருமகள் முதலியோர் முழுத வியாகூலந் தன்னை வருத்துவதினாலும் காலையப்போரிற் சயத்தவனைக் கொல்லுகிறேன் இல்லாவிட்டால் அக்கினியில் வீழ்வேனென்றுகூறிய சபதத்தினாலும் மனம் ஒருவழி நிற்காமற் சஞ்சலமாயிருக்க, அந்தத் துன்பத்தினால் இன்பமில்லாமற் கைகாலோய்ந்து, காலுடன்கால் தட்டுப்பட்டுக் கண்ணீர் சொரிந்து உற்சாகந் தப்பி ஓடுங்கிவராநின்ற வில்லுக் கிவனே வல்லவனென்னும் அர்ச்சுனனது நல்ல முகத்தை காரணன் நோக்கிச்சொல்லுகிறார்—

"விஜயனே! தேகமே மனமுந் தேய்ந்து இளைத்தாய்! வாட்டமில்லாத உன் முகம்வாடிக் கண்ணுக்குக் கையரிசி கொட்டலாம்போலிருக்கின்றது. நாம்போகிற காரியமோ பெரியகாரியம். அக் காரியத்தைப் பெற்றால் மாத்திரந்தான் நீ சூரனென்றும், நான் காரணனென்றும், நீ பாண்டவரில் கடைப்பிறந்தானென்றும், நான் பாண்டவர் சகாயனென்றும், இதுவரையிலும் பெற்றபேர் இன்னுங் கொஞ்சகாலைக்கிருக்கும். இல்லாவிட்டால் நாம் இல்லாமற்போன தன்மையா

யிருக்கும். ஆகையினால் என் மைத்துனனே! நான் உற்ற வார்த்தை யொன்று சொல்லுகிறேன். அதைச் சற்று நிதானித்துக் கேள். அதாவது, இவ்விடத்தில் அநேகம் பண்டு பலாதிகளிருப்பதினால் உனது இளைப்பாறும்படியாகக் கொஞ்சம் புசித்துப் புறப்பட்டால், நாம் நினைத்துவந்த வேலையுமுடியும். சபதங்கூறிய வேலையும் நாளைக்காலையில் விடியும். ஆலஸ்யம் பண்ணுமற் செய்!" என்று சொன்னார்.

அப்போது மாதவி காதலன் நகைத்து, "மாதவா! எந்தக் காலம் எப்படி போனாலும் இராக்காலத்தில் மகாதேவருடைய பூஜாவிதி முடித்துக் கொள்ளாமல் ஜலபானஞ் செய்யேனென்று நான் கொண்டிருக்கு மநோதிடமும், என்னுள்ளத்தி லிருக்கும் விரதவுறுதியும், தேவரீருக்குத் தெரிந்திருக்கும், பண்டுபலாதிகள் புசித்து இளைப்பாறிக் கொள்ளென்று ஏனனமா பண்ணுகின்றீர்? இச்சா சுதந்தரனாகிய மச்சானே" என்று காண்டீபன் கேட்க "அப்பா அர்ச்சுன! என்னுடைய அருமை மருமகனைப் பறிகொடுத்து ஆவியும் உடலும் அலக்கலக்கா யிருக்கின்ற நான், என்ன சந்தோ ஷத்தைக் கண்டு உன்னை ஏளனம் பண்ணப்போகிறேன்? (சிரிப்பு கெலிப்பின்பேரிலும் அழுகை ஆங்காரத்தின் பேரிலும் வரும்) என்று வையகஞ் சொல்லுமே! ஐயனே! அதையறியாயா? இப்போது உன்னைப் போஜனஞ் செய்யும்படி ஏன்சொன்னேனென்றால், தேக மானது சேற்றாலெடுத்த சுவரைப்போன்ற சோற்றாலடுத்த சுவர். மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவமுயர்ச்சி, தாளாண்மை, மேன்மை, நிகிவந்தசொல்லியர்மேற் காமுறுதல், என்று சொல்லும்படியான இப்பத்தும் பசிவந்தாற் பறந்துபோ மென்று பழையோர் சொல்லியிருப்பதினால், உன்னை அப்பசியானது வருத்தஞ் செய்யுமே யென்றும், மேலும், வீட்டிற் செய்யும் பூஜையைப்பார்க்கிலும் வனத்திற் பூசிப்பது கண்ணுதலுக்கு உகந்த தாமென்றும், நீ எப்போதும் இராக்காலத்திற் பூஜைசெய்பவ னாகையால் இது கல்ல இராக்காலமென்றுஞ் சொன்னேனல்லது வேறில்லை!" என்று சொல்லக் கேசவற்கிறைஞ்சிக்கேட்டு, "வாசவற் கிறையே! தேவரீர் பேசியவாசகம் நேசமாயுறுவதோடு, ஆசார பூசைக்கு இது உரிய தலந்தான். ஆனால் ஈசன் திருவாராதனைப் பூசைவீடு பாசறையிலிருக்கின்றதே: நானென்ன செய்வேன்? தேவரீர் இவ்விடத்தில் அழைத்துக்கொண்டு வருவீரென்றும்,

இப்போர்ப்பட்ட வனங்கள் இவ்வனத்தி லிருப்பதென்றும், எனக்கு முன்னமே தெரிந்தால் சிவ பூஜையை எடுப்பித்துக்கொண்டு வருவேன். எனக்குத் தெரியாமற் போனபடியினல் இப்போது நானென்ன செய்வேன்?" என்று சொல்லக்கேட்டு சமயங்கள் தோறு நிறைந்துநிற்கும் ஜகார்த்தனன் சொல்லுகின்றார்—

"ஓ சுருதி குரு சுயானுபவ மெனுந் தூய்மையினுற் கடவுள் பேதமினையாக் கருத்தினையுடைய காண்டீபனே! எல்லாச் செய்கைக்கு மனங்காரண மாதலினுற் கவலை யொழித்து, உந்தனது மனத்தை ஒருவழிப்படுத்தி, நன்மைக்கு நாயகனை நம்பின வன்மையான உன்மனத்துட்பதித்து, க்ஷணப்போதேனும் வழுவாமல், மாறுபடாமல், பேதமில்லாமல் துணிவோடிருந்து, சிவலிங்கத்தின் மூர்த்தமாக என்னை ஏற்படுத்திச் சிந்தித்து, என்தலையினுந் தேகத்திலும் பத்திரபுட்பங்களைச் சாற்றி, உருத்ர மந்திரத்தை உருவேற்றிச் சகஸ்த்ர நாமார்ச்சனை செய்வாயாகில் ஈசுவரனுடைய திருவுளங்களிக்கும். உன் மனோபீஷ்டங்களெல்லாம் நிறைவேறும்" என்றுரைக்க, அதைச் சுரேந்திரன் மைந்தன் கேட்டு, "ஓ யதுகுலத்தோன்றலே! தேவரீரைச் சிவலிங்கத்தின் மூர்த்தமாக நான் சிந்திப்ப தெவ்வண்ணம்?" என்று பணிந்து விஞ்ஞபிக்கையில், பரந்தாமன் தம்முடைய இரண்டுகாலையுங் குத்துக்காலிட்டு அந்தக்காலை இரண்டுகரத்தாலும் யோகப்பட்டைபோற் கட்டி, இரண்டு கரங்களின் பத்து விரல்களையுங் கும்பிடுந் தன்மைபோற் குவித்து நீட்டி, சத்துச்சித்தானந்த சொரூபமாகிய சிவலிங்கத்தின் மூர்த்தங்கொண்டார். பிரம்மா, விஷ்ணு, உருத்திரனென்னும் மூன்றுருவுஞ் சேர்ந்த சிவலிங்க உருவத்தை மாறுபடாச் சித்தையையுடைய வில்வல்லவன்கண்டு மனதொருமித்து, தருப்பைகள் நிறைந்த சுனையில் ஸ்நானம்பண்ணி, மாவிலை, தருப்பை, பத்திரம், புஷ்பம், வில்வம், அறுகு, பஞ்சாமிர்தம், பஞ்சகாவியம், முப்பழம் பால் தயிர், நெய், தேன், இளநீர், சந்தனம், சாம்பிராணி, கர்ப்பூரம் இவைமுதலிய பூஜா திரவியங்களைச் சேகரித்து மலர்ந்த மலரை மாலையாய்க்கட்டி, ஜலந்தன்னில் அபிஷேஞ்செய்து வைத்து, காட்டிற்பட்ட சந்தனக் கட்டையைக் கூட்டியுரைத்ததைக் கூத்தனுக் கணிந்து, மாலையுமலரும் மகதேவர்க்கிட்டு, தூபதீபந் துன்பறக்காட்டி, நேயமாய்க்கனிகள் நிவேதனம் பண்ணி, ஆயிர நாமத்தால் அருச்சனைபுரிந்து, தன் பிராணனுகிய ஹரியின்திரு

மேனி யென்று மனத்தில் நினைக்காமற் சிவபெருமானுடைய திரு மேனியாகச் சிந்தித்து, அளவிறந்த வேதாகமங்களைச் சொல்லிப் பிரதக்ஷணஞ் செய்து, ஏகாங்க, திரியாங்க, பஞ்சாங்க, சப்தாங்க, அஷ்டாங்க, நவாங்க, தசாங்க சாஷ்டாங்க நமஸ்காரங்களும் புரிந்து, ஹரஹர சம்போ ஆதியேபோற்றி, புரமதையழித்த புண்ணி யாபோற்றி, பிறவிநோய் தீர்க்கும் பிஞ்ஞகாபோற்றி, அறமிலா வினையே னடைக்கலம் போற்றி,—என்று இவ்விதமாகப் பலவித தோத்திரங்களாற் பாடித் துதித்தான்.

கண்ணன் அருச்சுனனோடு உண்டு அவனுக்கு நித்திரை செய்வித்தல்

அப்படி துதித்து நிற்கும் பார்த்தனுடைய பக்தியைப் பரந் தாமன் கண்டு மனமகிழ்வுகொண்டு "பத்தியினற் சித்திபெற்ற உத்தம னுகிய என் மைத்துனனே! அரன் அரியென் றுரைக்கும் இரண்டு பொருளும் ஒன்றன்றி வேறில்லை. வேறுகக் கருதினோர்க்கு வேறு கும். இந்த வுண்மை ஒன்றென உண்டென்று உன்னுடைய அன்பில் ஸ்திரப்படும்படியாய்த் தெரிவிக்கின்றேன். அஃதெப்படியென்றால், என் சிரமுதற் கால்வரையிலும் நீ சாற்றிய புஷ்பங்களே யெல்லாம் மாறுமல் உன் சிந்தையிற் குறித்து வைப்பாயாகில், அந்தச் சிவலிங்க மூர்த்தமாகிய கைலாசபதியினுடைய அவயவங்களிலிருக்க உனக் குக் காட்டுகிறேன். நீ அர்ச்சித்த பத்திர புஷ்பங்களுடனே இலிங்க மூர்த்தியைக் கண்டு தரிசிக்கலாம்" என்று வாழ்த்தி நைவேதனஞ் செய்த கனி, தேன் முதலிய எல்லாவற்றையும் அர்ச்சுனனுடன் தானும் பங்கிட்டுப் புசித்து, கைகாற் சுத்தி பண்ணிக்கொண்டு, அப்பாற் சற்று தூரம் நடந்து, வாசனைநிறைந்த அம்மலர்த் தடத் தினின்றும் வரிவிற்றுங்கிய அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு சென்று, உண்ட இளைப்பு தொண்டருக்கு மூண்டென்பதி னுற் சற்றுநேரம் படுத்து ஆயாசந் தீர்ந்து இன்னுஞ் சிறிது நேர மிங்கு தானே யிருந்து அப்பாற் போகலாமென்று சொல்லி, தர்ப் பைப் புற்களைப் பூமியிற் பரப்பித் அர்ச்சுனனுடன் அந்தத் தர்ப்பைப் பாயலின் மீது உட்கார்ந்தார். அப்போது தினதயாளு வின் தொடையின்மேரில் அதிக இளைப்போடுங் கூடிய அர்ச்சுனன் தலை வைத்துப் படுத்துத் தன்னை மறந்து நித்திரை போக, அவ் வேளையிலே இந்திரன் முதலிய சில பேர் வந்து நந்த நந்தனனை வந்தித்து நிற்க, அக்கால் அருளாளராகிய சுவாமி யானவர் தம்

தொடைக்குப் பதிலாக மணலைக் குவித்து நித்திரை செய்யுந் தனஞ் சயனுடைய தலைக் குயரமாக வைத்து, அங்குள்ள வாசனை பொருந் திய பல புஷ்பங்களை விஜயனுக்கு காற்புறத்திலுந் தூவி, விற்படை, வேற்படை, கதைப்படை, வாட்படை யென்னும் நான்குவித ஆயு தங்களையும் நான்கு பக்கங்களிலுங் காவலாக நட்டு, வனதேவதை, ஆகாயவாணி, பூமிதேவி என்னு மிவர்களைக் கைதொழுது காண்டீப னைப் பிராண பயமில்லாமற் காப்பாற்றுங்களென்று வேண்டிக் கொண்டு அநேகம் வீரருடைய காவலிற் படுத்து நித்திரை செய்யுந் தன்மையிலும் பத்துப் பங்கதிகமாகிய பல மென் றுட்கொண்டு, இனிப்பயமில்லை என்று கண்டு, தமக்குள் தாமே சந்தோஷ மடைந்து, அவ்விடம்விட்டு நீங்கிச் சற்று அப்புறம்போய் மல்லிகை மலர், இருவாட்சிமலர் சண்பகமலர், கடம்புமலர், கொன்றைமலர், கோங்குமலர், செருந்திமலர், குருந்தமலர், பாதிரிமலர், புன்முருக்கு மலர், பூவரசு மலர், மகிழ மலர், மருத மலர், பாரிஜாத மலர், இவை முதலிய தேனுறைந்த மலர் நிறைந்த அளவற்ற மரங்கள் முதலான வைகளு முள்ளதாய், வெண்டாமரை, செந்தாமரை முதலாகிய நீர்ப் பூக்கள் மலர்ந்த தாடாக நிறைந்ததாய் உள்ள ஒரு மேட்டின் பேரில் வந்திருந்தார்.

கண்ணன் இந்திராதி தேவர்கட் கினிமைகூறித் தாருகனென்னும் தமது சாரதிக்குத் திட்டஞ்சொல்லி யனுப்புதல்

அங்கே இவ்விந்திரன் முதலாயினோர் வந்துபணிய அவர்களுக் குத் தகுந்த மந்திரமாகிய சில ஆலோசனைகளைக் கண்ணன் சொன்னார். மந்திர மென்னும் ஆலோசனை என்னவெனில், "நமக்கும் நமக்கும் பயமில்லை. நாரிபாகனிடத்துக்குப் பாசுபதம் பெறப் போகிறோம். குறைவில்லாமற் பூபாரமுடியும். உங்கள் குறையுந் தீரும். ஆதலால் நீங்கள் போங்கள்!" என்று அவர்களை அனுப்பிவிட்டு, பரமபதத்தி லிருக்குந் தம் சாரதியாகிய தாருகன் வரும்படிக்கு ஸர்வஜீவ தயாபர மூர்த்தி நினைத்தார். உடனே தாருகன் வந்து அடிமலரின் முடிசூடி வணங்கி நிற்க, அவனை அம்மூர்த்தி கண்டு, "ஓ வலவ னகிய தாருகனே! இப்பூபாரந் தீர்க்கும்படியாய்ப் பரமபதம் விட்டுப் பாண்டவர்க் குதவிசெய்யப் பூலோகத்தில் வந்து, பாண்டவர் சகாய னென்று அவர்களுடன் பொருந்தி, அவர்கள் வருந்திய துயரங்களை யெல்லாம் திருந்தச் செய்து வரும்போது, காண்டவ வன தகனஞ்

செய்த காண்டீப னென்னுங்காளை தன் பிள்ளையாகிய அபிமன்ன னிறந்த ஆயாசத்தால் காளைப் பொழுதுக்குள் ஒந்துராஜனைக் கொல்லுகிறேனென்றும், அவனைக் கொல்லா விட்டால் அக்கினியில் வீழ்ந்திறப்பேனென்றுஞ் சபதங் கூறி யிருக்கிறான். இந்தச் சேதி கேட்டு எதிரிகளும் பலங்கொண்டிருக்கின்றார்கள். காளைப் போரில் அந்தச் சபதம் நிறைவேறுவது எளிதல்ல. ஆகையால் அர்ச்சுனன் கூறிய சபதப் பிரகாரம் வெற்றி பெறுவாரகில் மெத்தவு கல்லது. அந்தச் சபதம் முடிவதற்குக் கொஞ்சம் வருத்தம் நேரிடுமாகில், ஆயுதமெடுப்பதில்லை யென்றுரைத்த அச்சுதன் ஆயுதமெடுத்துப் போர் புரிந்தா னென்று உலகத்தா ரெல்லோரும் என்னைத் தூஷித்து வசைவார்த்தைகள் பொழிந்தாலும், மொழியட்டுமென்று துணிந்து தேரேறிச் சக்ராயுதங் கைக்கொண்டு யாவரையு முடித்து அர்ச் சுனன் சொல்லை நிலைநிறுத்தி அவனையுங் காப்பாற்றவேண்டி யிருப் பதால், இப்போது எங்களுக்கு இவ்விடத்தி லாகவேண்டிய காரியங் களை முடித்துக்கொண்டு, காளைக் காலமே நானும் நரனும் போர்க் களம்வந்து, ஆலைவாய்க் கரும்பைப்போலும், வேலைவாய்த் தரும் பைப்போலும், அணிகளைலேந்து கைந்து அழியா நின்றதை வீரமாகாளி கண்டு கண்களிக்கும்படி யுத்தஞ் செய்ய வேண்டியதாயிருக்கும்! ஓ நற்குணஞ் செறிந்த சாரதி! காளைப்போரிற் காளைப்பருவ நரன் ஒரு வேளை இளைப்பானுகில், தக்ஷணம் பாஞ்சஜன்னியத்தை ழுழக்கு வேன். அந்த ஓசையைக் கேட்ட கொடிக்குள்ளாகச் சக்கரம், சங்கு, தண்டு, வாள், வில் என்னும் நம் பஞ்சாயுதங்களையும் தேர் மேற் கொண்டு இமைக்கு முன் வந்து என்னெதிர் நிற்கவேண்டும்"—என்று ஒருதரஞ் சொன்னதல்லாமலும் பலதரமாகச் சொல்லி வற்புறத்தி வல்லமையுடைய சாரதியிடம் சகலசுப சுந்தோஷங்களுடன் க்ஷேமாதிசயங்களைப் பேசிக்கொண்டு கள்ளிருள்வரும் வேளையை நாடிக்கொண்டு அவ்விடத்திலிருந்தார்.

அர்ச்சுனன் சொப்பனத்திலே கண்ணனெழுந்தருளி ஆதரங் கூறுதல்

இப்பால் இவ்விடத்திற் புத்திரசோபாக் கினியாலுஞ் சபதாக் கினியாலும் உள்ளுடைந்து, காற்றிலு நெருப்பிலுங் கசங்கிய மலர் போற் காய்ந்து, தர்ப்பசயனத்திற் சோர்ந்து துன்பமே இன்பமாக மனமயங்கி, சந்திரகலை தாவியோட ஜாக்ரத்திலிருந்து "நானென் சபதத்தை யெப்படி முடிக்கப் போகிறேன்? ஓ சம்புவே! ஓ சங்கு

சக்ரதரா!" என்று நினைத்து அயர்ந்து சொப்பனவஸ்தையால் நித்திரை போயினன் அர்ச்சுனராஜன். இந்தப்பிரகாரம் நினைவுகொண்டு நித்திரை செய்யாமல் நின்ற சுபத்திரை நாயகனுடைய கனவில் வந்து கருதியவண்ணங் கைகூட்டி வைத்தார் கருங்கடல் வண்ணருகிய கமலக்கண்ணன் என்று வைசம்பாயனர் சொல்லி வரும்போது ஜனமேஜய ராஜன் திடுக்கிட்டெழுந்து, வைசம்பாயனரைப் பணிந்து, "என் கருவேக வந்த குருவே! கமல நாயகன் திடர்மேட்டின்பேரிற் சாரதியாகிய தாருகனுடன் பேசிக்கொண்டிருந்தாரென்று திருவாய் மலர்ந்த தேவரீர் எங்கள் மூதாதையாகிய அர்ச்சுனனுடைய கனவிலும் வந்து பிரவேசித்தாரென்றீர். எனக்கிது மிகுந்த ஆச்சர்யத்தை விளைக்கிறது. அதனுடைய விதத்தைத் தேவரீர் விரித்துச் சொல்ல வேண்டும்!" என்று கேட்க, சாந்தருகிய வைசம்பாயனர் சந்தோஷங்கொண்டு, "மாந்தரிற் சிறந்த மன்னனே! கேளும்! இந்த இரண்டிடத்திலும் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி யிருந்தாரென்பது ஆச்சரியமல்ல. அவருக்கு இது ஒரு பெரிதா? அவரெப்போப் பட்டவரெனில் கடல்சூழ்ந்த இவ்வுலகமெல்லாந் தம்முடைய கர்ப்பத்தினின்றும் புஷ்பிக்கச்செய்து அவ்வுலகினிறைந்த ஆத்மகோடிகள் தோறும் ஜீவாத்மாவுக்குப் பரமாத்மாவாய்த் தவழ்ந்து கொண்டிருக்குந் தனிமையாகிய பெருமை யுடையவராய், பிரமானந்த ஸ்வரூபராய், சிரேஷ்டமான சுகத்தைச் சீவர்களுக்குக் கொடுப்பவராய், நிர்விகாரராய்; ஞான வடிவினராய், பிரபஞ்சாதீதராய், மகா வாக்கியங்களுக்கு லக்ஷியார்த்தரா யுள்ளவராதலால், அவர் எங்கும் இருப்பார்" என்று அப்பாற் சொல்லத் தொடங்கினர்—

கண்ணனும் அர்ச்சுனனும் கருடவாகன மூர்ந்து கைலாயத்திற்குச் செல்லுதல்

ஓ அரசனே! உங்கள் முப்பாட்டனருகிய விஸ்விஜயன் சொப்பனவஸ்தையிற் பூரணவுருவாகிய புண்ணியனைக் கண்டு, தான் கொண்டிருந்த சோக மெல்லாம் விண்டு, அண்டர் நாயகனுடைய புண்டரீகத்தாளைச் சிரமேற்கொண்டு, கண்ணீர் சோரவிடித் தழுத காலையில், வணங்கிய விஜயனை யெடுத்து, மார்போடணைத்து, "ஐயனே! ஏன் விசனப் படுகிறாய்? உனக்கு ஏதாகிலுங் குறைவுண்டானாற் சொல்: நான் அந்தக் குறையைக் குறையுடன் குறையச் செய்கிறேன்"—என்று கமல நாபியன் கேட்க, விஜயகாண்டீபன் "மனத்துயர் மாற்று மாதவனே! விண்ணிற் சிறந்த வேதவேதிய

ஞகிய பிரமாவானவன் காளை யுத்தத்தில் நெருங்கி வருஞ் சயந்தவ னுக்குத் துணையாயிருந்து என் சபதம் நிறைவேற வொட்டாமற் றடித்துப் போர்செய்யத் தலைபிட்டுக்கொண்டு புகுவானாகிலும், சிந்து தேசாதிபனைச் செயித்து நான் கூறிய சபதத்தை ஸ்திரப்படுத்தி ஜெயத்துடன் வரும்படியாய் என் சிந்தையிற் றுணிவு கொண்டிருக் கிறேன். இதற்குத் தேவரீர் சகாயம் பண்ணவேண்டும்" என்று சொன்னான். இந்தச் சங்கதிகளை யெல்லாங் கமலக்கண்ணன் காது குளிரக்கேட்டுக் காண்டீபனை நோக்கி, "அப்பா மகனே! நீ குறித் துச்சொன்ன சொற்படி முடிவது மெத்த அருமை. ஆனாலும் நா னுனக்கு வஞ்சமில்லாமல் மனம்விட்டுச் சொல்லுகிறேன் கேள். மெய் வருத்தம், இளைப்பு, நித்திரை, மயக்கம் முதலிய யாவற்றையும் விட்டுவிட்டு விரைந்தெழுந்து என்னுடன்கூட வருவாயானால் உனக் கொரு நன்மையுண்டாம். அதாவது, புராதனனாகிய புராந்தகன் பொருந்திய கயிலையங்கிரியைக் கண்டு தரிசித்துக்கொண்டு சூரியோ தயத்திற்கு முன்னே யுத்தகளம் போய்ச் சேரவேண்டி யிருப்பதால், சீக்கிரம் புறப்பட்டு வா" என்று சொல்லினார். அதுகேட்ட மாத்தி ரத்தில் அர்ச்சுனன் கண்விழித்தெழுந்து, தன் கனவிற்கேட்ட வார்த் தையை நனவிற் கேட்டதுபோல் மகிழ்ந்து அதற்குடன்பட்டு, வாசு தேவனுக் கருகில்வந்து சாஷ்டாங்கமாய் வணங்கி நின்றான். அப்படி நின்றதைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியானவர் புள்ளூர்ந்தனாகிய கருடபகவானை நினைக்க, அம்மாத்திரத்தில் அவன் வந்து மாயவனைத் தோளிலும் வலாரிமைந்தனைக் கரத்திலுமா யேந்திக்கொண்டு, தனது வெஞ்சிறைக் காற்றினால் அக்கைலாய கிரியைக் கவிந்த யெழு வகை மேகங்களுங் கலங்கி விலகும்படியாய் விசைபெறச் சென்று வெள்ளியங் கிரியிற் கொண்டுபோய் இரண்டுபேரையும் இறக்கினான். அப்போது அவ்வெள்ளியங் கிரியில் இருக்கு மரம்பையர் வயின தேயனென்னுங் கருடபகவானை நோக்கி, குலமலைகளின் சிறகினை யெல்லாங் குன்றவரிந்த வஜ்ரபாணி இம்மலையின் சிறகை யறியாத காரணமென்ன வென்று சந்தேகித்தார்கள். அப்படி சந்தேகிக்கும் படியாய் மலைபோல் நின்ற கருடபகவானை அங்ஙனே நிறுத்தி, நர நாராயணர்களாகிய இருவரும் இமாசல ராஜபுத்திரி சமேதரா யெழுந்தருளி யிருக்குந் திருவோலக்கத்தை நோக்கிச் சொல்லுவ தாயினர்—இவ்விரண்டு பேருங் கூடிக் கைலாயகிரிக்குப் போனது எப்படி யிருந்த தெனில், பாற்கடலிலெழுந்த அமுதம் போலும், களங்கமறப் பிரகாசிக்கும் நிலவைப் போலும், ஒளிபெற்றிரா நின்ற

சுத்தமாகிய வெண்மலையை இரண்டு நீலகிரியானது தேடிப் போகுந் தன்மைபோலு மிருந்தது. இவ்விதமாக இருவரும் நடந்து ஆல காலம் நிறைந்த கண்டத்தினை யுடைய ஐமுகன் வாழாநின்ற அழகிய திருவோலக்க மண்டபத்தின் வாயிலை ஆவலாய்க் கண்டார்கள்.

கைலாயகிரிச் சிறப்பு

ஜனமே ஜய மகாராஜனே! அந்த வெள்ளி மலையின் சிறப்பை யானென்னென்று சொல்லுவேன்? சராசரங்கள் யாவுக் குந் தாயாகும் பசுபதியாருடைய பாத பதுமங்களைச் சுமந்த நுளிய கயிலையின் சிறப்பைக் கடையேன் சொல்லுந்தர மன்றுயினும், உடையானிட மாதலால் தடையில்லாமற் கூடியவரையிலுஞ் சொல் லுகிறேன் கேளும். ஓ அரசனே! சோடசகலை நிறைந்த சந்திரனுக் கொப்பாகிய நிறங்கொண்ட வெள்ளியங்கிரியில் திசா திசைகள் தோறும் வெண்மை தங்கிய பிரகாசத்தைப் பொழிந்து, ஜொலித்துக் கொண்டிருக்கும் நிலாத் தோற்றமானது, தேனிறைந்த கொன்றை யைச் சூடிய சிவபெருமானுடைய கீண்ட சடாமௌலியிற் பிரகா சித்துக் கொண்டிருக்கும் மூன்றாம் பிறையினும் மேலாகிய ஒளி யைச்செய்து கிரணங்களை வீசிக் கொண்டிருந்தது. மேலும், அவ் விடத்தி லிருக்கும் வெட்டார வெளிகள், காடுகள், கமர்கள், வெடிப்புகள் முதலிய இடங்கள் தோறும் அநேகமாயிரம் அக்கினிப் பொறிகளைனச் சிறுங் கண்களையுடைய பாம்புகளின் காகரத்தினங்க ளானவை எங்கும் இருளில்லாமற் சூரியகிரணம்போற் சிவந்து ஜொலித்துக் கொண்டிருப்பதினால், இவர்கள் செல்லுகின்ற இருட் காலமும் பகற் காலம்போ லிருந்தது. கொடி, செடி முதலிய விரு க்ஷங்களும், உளுத்த எலும்புகளும், தளிர்த்துத் தழைத்து உயிர் பெறும்படியாய் நாதர், தும்புரு முதலாயினோர் பாடும்படியான நாத யாழி னோசையானது, பாரதவமர் புரியவந்த பசுமையாகிய நரநார ணர் நடந்து வரும் மார்க்காயாச மென்னும் வழி விடாயையும் ஆற் றியது. இவையுமல்லாமல், சிவ சங்கரருடைய புயமான மலைச்சார லில், நவமணியா லலங்கரித்த தன்மைபோல் அணிந்திருக்கும் பாம் பாபரணத்தின் சுவாசமாகிய காற்றானது, அவர் சிரமேலிருக்கும் இளம்பிறைபினுடைய நிலவின் குளிர்ச்சியையும், செஞ்சடாமகுட மாகிய செவ்வானத்திற் பூத்தது சொரியக் கட்டவிழ்ந்து மலருங் கொன்றைப் புஷ்பத்தின் வாசத்தையும், அச்சடாடவிச்செவ் வானத்தி லிராநின்ற கங்கையின் சிறிய துளித் திவலையையுங் கலந்து மந்த மாருதம்போல் வீசிக் கொண்டிருந்தது.

ஓ அரசனே! மீதிழிவாழா கின்ற வெள்ளிமலையின் பக்கங்க ளெல்லாம் மலையருவிகள் வழிந்தோடுந் தன்மைகள் எப்படி யிருந்த தென்னில், விக்ஞானத்திலாழ்ந்த மாதவர்கள் அக்கயிலாசபதியி னுடைய கருணைவாரிதியின் கடாக்ஷவீக்ஷண்யத்தைத் தெவிட்டும் படியாகப் புசித்து, தங்களுக்குள்ளே அடங்காமற் பெருகி வெளியி லோடும் பேராநந்த வெள்ளத்தை ஒத்திருந்தது. பின்னும் வேதாதி களிஞெலியும், மகான்கள் துதிக்கும்படியாகிய பேரோசையும், உடுக்கை, டமாரகம், தவளச் சங்கு முதலிய வாத்தியங்களின் முழக்க மும், எப்போது மிடைவிடாமற் சப்திக்கும்படியாகவுஞ் சந்திர சூரி யர்கள் வலம்வந்து தொழும்படியாகவு மிருக்கின்ற அக்கயிலையங்கிரி யானது, பூமியிலவதரித்து மருதமருத்தை யுந்திய மாதவன் யோக நித்திரை செய்யும் பாற்கடலைப் போன்றிருந்தது. பிர்மா, விஷ்ணு, உருத்திர னென்னும் மூன்றுருவு மோருருவா யமைந்த அழகிய பரமசிவன் வாழாகின்ற வெள்ளியங்கிரியைத் திரிகாலமுந் தொழு தேத்துதற்குத் தேவர்கள் கும்பு கும்பாய்க் கூடிவருவது எத் தன்மையை யொத்திருந்த தென்னில், முக்குண நீங்கிய முளரித் தேனோடி மூன்று லோகத்திலு நிறைந்த அன்பென்னும் வண்டினங் கள் அருந்திக் களிக்க வந்ததை யொத்திருந்தது. தாயினுமினிய சாம் பவ மூர்த்தி சங்கரியுடன் தங்கிய வெள்ளி மலையில் உடுக்கை முதலிய வாத்தியங்கள் அநேகமாயிரமாக அதிரும் பேரோசையானது, பூர்வத் தில் ஆதிசேடன் மகமேருவை மறைக்க வாயுபகவான் வீசியடித்த வலுவின் முழக்கத்தை யொத்திருந்தது. நிறைந்து நிலைத்து ஆத்ம கோடிகள் தோறும் நடனஞ் செய்திரா கின்ற பசுபதியாருக் கெதிரில் கணிகைக் கன்னியர் அசைந்து கைகாட்டி யாடுங் காட்சிகள், மின் னலைப்போல் அழகாகப் பிரகாசிக்கும் வல்லிக்கொடிகள் காற்றினால சையுந் தகைமைக் கொப்பா யிருந்தது கற்பனைக் கெட்டாக் கண்ணு தல் நாராயணியுடன் களித்திருக்கும் அக்கயிலையி னூற்புறத்திலும், கோடிசூரிய சந்திரப் பிரகாசம் விளங்கும்படி ஆலயம் நிறைந்திருப் பது எப்படி யிருந்ததெனில் முதலேற்பாடாகிய நான்கு வேதத் தின் மூடிவை யுணர்ந்த வேதாந்தச் சிற்பாருடைய மலமாசற்ற இருதயத்துக் கொப்பா யிருந்தது. இன்னும், ஓ மென்னும் பிரண வத்துடன் சிவபஞ்சாக்ஷரத்தையுஞ் சேர்த்து ஆறெழுத்தாக உச் சரித்துத் தேவர் முனிவர் முதலியபேர் எப்பொருட்கு மிறைவரா கிய ஈச்வருடைய சகஸ்ர நாமங்களை எவ்விடத்தும் துதித்துக் கூவிப் புகழா கின்ற ஆரவாரமானது, பெருமை பொருந்திய க்ஷீராப்

திசையைக் கடைந்த காலத்தில் அமரரும், அசுரரும், வாசுகியும் மந்தர மாகிய மத்துங் கூச்சலிட்ட பேரொலிக்கு மேலிட்டிருந்தது. இத்தன்மையாக அளவில்லா மகிழ்ச்சியையுடைவர்களாய் யாவரும்வந்து சூழ்ந்திருக்கும் ஆலயங்களையும், அவ்வாலயங்களிலவர்கள் செய்யுஞ் ஜபதப முதலிய சிவபூஜாதி காரியங்களையுங் கண்ட நாராயணரிரண்டாம்பேரும், மிகுந்த பிரகாசத்துடன் விளங்கும் நந்தவன முதலிய சூழல்களையும் நோக்கிக் காந்தமிழுக்கும் இரும்பைப் போலுருகி நயக்குஞ் சித்தையராய்ச் சென்றார்கள்.

கண்ணன் அருச்சுனனுக்குப் பீமசேனனுடைய மானத சிவார்ச்சனைத் திறங்காட்டுதல்

அந்த வேளையிற் சிவபூசையில் நம்மைவிட ஸ்திரமான பக்திமான்களில்லையென்றும், திருமாலைச் சிவனுகச் சிந்தை கலங்காமலிருந்து சிந்தித்தோமேயென்றும், தனக்குள்ள தானேமகிழ்ந்தும் புகழ்ந்தும் கர்வமடைந்தும் வருகிற தனஞ்சயனுடைய தன்மையைச் சர்வஜீவ தயாநிதியாகிய சகாயனுணர்ந்து இவ்விடத்தில் இவனைக் கொஞ்ச கர்வபங்கம்பண்ண வேண்டுமென்று கருதினர். அப்போது அநேகஞ் சிவகணங்களும் பூதகணங்களுமாகிய பேர்கள் கோடா கோடியென்று சொல்லும்படியாகிய பெரிய கூடைகளில் தினுசுவாரிபாக நிர்மால்ய புஷ்பங்களை வாரிக்கொண்டு, நெக்குவிட்டுத் திக்குமுக்காடும் படியாய் வந்து வெள்ளிமலைச் சாரலிற் கொட்டும்போது அநேக புஷ்பங்கள் மலைபோற் குவிந்திருக்கும். இன்னும் ஒச்சலொழிவில்லாமல் வரிசைவரிசையாய் வாரிக்கொண்டுவந்து வாசனைத் திரவிய முதலிய வஸ்துக்களுடன் மலர்களைக் கொட்டிப்போட்டு வருந்திப்போகிறபேர்கள், "ஆகிலும் அப்பா! இப்படியுஞ் சிவபூசை செய்யுமனித ஜென்மனிருப்பானு?" என்று வேர்த்து விதிர்விதிர்த்துப் பெருமூச்சுவிட்டுப் பெருங்கூச்சலிட்டுப் பேசிக்கொண்டு போயினர். அப்போது வாசவன் மகனுகிய அர்ச்சுனராஜன் நேசமாகிய வாசுதேவனென்னும் மைத்துனரைப் பார்த்து "காசாம்பூ வண்ணனுகிய ஈசனே" என்று கண்கலங்கிக் கட்டுவிட்டுப்போய் "ஓ சுவாமீ! இதென்ன விபரீதமாயிருக்கின்றது இவ்வளவு புஷ்பம் எந்தலோகங்களிலுண்டு? ஈச்வரச்சிருஷ்டியிலேயும் இல்லாத புஷ்பங்களெல்லாம் இப்போது கண்டோம்: இவைகளெந்த இடத்திலடங்கியிருந்தனவோ? சிவார்ச்சனை செய்வதற்கு இந்தப் புஷ்பங்களைக் கூடை கூடையாய்க் கொண்டு வாரிச் சொரிந்

தாலும் எத்தனைகோடி காலஞ்செல்லும்? எத்தனை யுகம்பிடிக்கும்? எந்த மனிதன் இப்படி பூசிப்பான்? இவ்வளவு புஷ்பங்களை எந்த ஸ்வாமி மூச்சுவிடாமல் மனம் பொறுத்திருந்து ஏற்றுக்கொள்ளும்? என்னப்பனே! இதனுடைய விபரத்தைச் சொல்லும்" என்று இறைஞ்சிக் கேட்க, என்னுண்டவனுகிய செந்தாமரைக் கண்ணன் ஒன்றும் தெரியாதவரைப்போல் அர்ச்சுனன் பட்ட ஆச்சரியத்திலும் நூறுபங்கு அதிகமாக ஆச்சரிய மடைந்து "நான் இதுவரையிலு மிப்பேர்ப்பட்ட சிவார்ச்சனைசெய்த பேர்களுண்டென்று என் கினவிலுங் குறியேன். என் கனவிலு மறியேன். இத்தியாதி புஷ்பங்க ளுடைய பரிமளங்களைக் காட்டினிடத்திலு மறியேன். எந்தக் காற்றி னிடத்திலுமறியேன்" என்றுரைத்து, அக்காண்டீபனை யழைத்துக் கொண்டு அங்கயற் கண்ணியுடன் ஆண்டைகை யமர்ந்த வெண் பொன் மலையேறிப் போவதாயினர்.

இவ்வாறு யாதொன்றும் தெரியாமற் போகாகின்ற அவரெதிரிற் சில சிவ கணங்கள் வர, அவர்களைக் கண்ணன் பார்த்து, "சிவ கணமாகிய தம்பிமார்களே! ஐயோ! மெத்தவும் வருத்தப்படுகிறீர் களே: இப்பேர்ப்பட்ட சிவபூஜை செய்யும் அடியார்களாகிய அன்பர் களுமுண்டோ? இல்லை நீங்களை கொண்டுவந்து அர்ச்சிக்கிறதோ?" என்று உபசாரத்துடன் கேட்டார். கணங்களிற் சிலர் 'ஆம்: ஆம்: ஐயா! பூமியில் அவதரித் திருக்கின்ற பாண்டவர்களில் மாருதி மைந்தனுகிய பீமசேன னென்பவன் மானத பூஜையாகப் பூஜிக்கும் வேலையும், அவன் மனம் நிறைந்த அம்மணம் செறிந்த மலர்களை நாங்கள் வாரிக்கொட்டும் வேலையும், உள்ளதாளுள்ள மட்டும் எங்கள் தலையிலேறிய சுமைகளாகும்: ஆண்டவனே! ஒரு காளாகி லும் ஏமாறுனு? நாலு கூடை இரண்டு கூடையேனுங் குறைக் காது? ஓ பகவானே!" என்று சொல்லிக்கொண்டு அவர்கள் போய் விட்டார்கள்.

இவ்விடத்தில் காணவன் நாராயணனைப் பணிந்து, கண்ணீர் சோரவிட் டழுது, "ஓ ஸ்வாமி! எங்கள் அண்ணனுகிய பீமசேன னுடைய அன்பு இப்பேர்ப்பட்டதோ? அடியேன் மெத்த அருமையாகச் சிவபூஜை பண்ணுகிறேனென்று கொஞ்சமமதை யடைந்திருந்தேனே! ஓ மாயவனே! இந்த உத்தமனுடைய மானஸ பூஜையின் மகத்துவத்தைக் கேட்டவுடனே என்னுனவ முதலிய யாவுங்குன்றி மாய்ந்தனவே!" என்று மிகுந்த பயங்கொண்டு வருந்தி

ஞன். அப்படி வருந்திய அர்ச்சுனனைப் அரிவாசுதேவன் தேற்றி "அப்பா! இந்தப் பூலோகத்தில் தவம், அன்பு முதலிய சத்தியங் களில் இன்னுன் சிறந்தவனென்று எவனைச் சொல்லலாம்? இந்த ஈசனுடைய திருவிளையாட லெப்படியோ நாமறியோம். அவரவர்க ளிருதயத்தி லிருந்து சிந்திப்பவனும், பூசிப்பவனும், சித்திக்கத்தக்க வனும், அவனு யிருப்பானுகில், நாம் இன்னவிதமென்று எவரைச் சொல்லலாம்? எல்லாஞ் சிவன் செயல்" என்று பேசிக்கொண்டு, அண்ணலாகிய நுதற்கண்ண ரெழுந்தருளிய வேதக்கொடி, விரு ஷபக்கொடி பொருந்திய பெரிய சபையினிடத்தில் ஸ்ரீ கந்திதேவ ருடைய அநுக்ஞை பெற்று உள்ளே புகுந்தபோது, மிகுந்த பெருமை பொருந்திய சூரிய சந்திராதிகளி னொளியும், மாணிக்கங்களினழகும், மரகதமணியி னழகும், முத்துச் சரங்களும், பவளக்கால்களும் கோமேதகக் கொடுங்கையுமுடைய திருவோலக்க மண்டபத்தில், திரிநேத்திர தாரியாகிய சிவபெருமான் வீற்றிருந்து பிரகாசிக்குந் திருக்கோலத்தைக் கண்டனர்.

நரநாராயணர் கைலாசபதியைத் துதித்தல்

இமய வல்லியாகிய ஈசுவரியார் வாமபாகத்தி லெழுந்தருளி யிருக்க, இந்திரன் முதலாகிய மந்திர தேவர்கள் சமயம் பார்த்து அடிக்கடி வீழ்ந்து தாழ்ந்து போற்றி செய்ய, சத்துவ முதலிய சத்திய கெதிகளையுடைய முனீச்வரர்களின் கூட்டமத்தியி லிரா நின்ற தற்பரனை, நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண் பத்து நான்கு லக்ஷ ஜீவராசிகளையும் ஆக்கியளித்து அதுக்கிரகஞ் செய்தருளுந் தாணுவை ஆயிரம் பணமகுட முடைய பாம்பின் பட நிழலிற் செஞ்சடா மகுடக் திகழப் பொருந்திய திரியம்பகனை, செவியிலணிந்த கட்செவிக் குண்டலமானது நிலவைத்தரா நின்ற மூன்றும்பிறையுடன் நகைத்து நயந்து மருவும்படியா யிருக்கிற மஹேச்வரனை, முத்தாசனத்தி லோர்பாதமும் குறுகிய தேகமுயல கன் முதுகிலோர் பாதமும் பொருந்திய மூர்த்தியை, மரகதக்கொடி படர்ந்த பவளமலை போன்ற மங்கைபாகனை, காண்போர்க்கு இனிப் பாகிய தேவாமிர்தத்தினு மினிக்கும் எண்டோளினையுடைய மானிடமேந்தியை, புலித்தோலாடையும், யானையுரிப்போர்வையும், சிர மாலையும், நகுவெண்டலையும் ஆகிய பராக்கிரம சின்னங் களெல்லாம் பரித்தருளிய சங்கரப் பிரபுவை, தினமும் காலையு மாலையும் நான்கு வேதங்களினலும், அறியப்படாத ஆலமர்

கடவுளே, பாலரசூகாலாந்தகனே, காமத்வம்சியை, வாடிய பயிர் வானின்றிழியு மழையைக் கண்டதைப்போற் பலமுற்றுயர்ந்த தவத் தைப் பெற்ற இங்ஙனாரண நிருவரும் வந்து கண்டு அவருடைய சரணபங்கயத்திற் பலதரம் வீழ்ந்து, இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி நின்று,

"பொங்கார வெயின்மணிப் பூணும் பூணிஞாய்
அங்கரா கமுமுவக் தனியு மேனியாய்,
சங்கரா மேருவெஞ் சாபம் வாங்கிய
செங்கரா சிவசிவ தேவதேவனே

விண்ணிடைத் திரிபுரம் வெந்து வீறெழப்
பண்ணுடைச் செந்தழல் பரப்பு மூலா
யெண்ணுடைக் காமனை யெரித்த போழற்
கண்ணுடைக் கடவுளே கால காலனே

தருவது முயிரெலாங் காக்குந் தன்மையு
முருவற வொழித்தலு முன்ற னுடலே
கருவரா தொழிந்தவர் கருத்திற் கண்டுதே
ரொருவனே யெம்மனோர்க் குரைக்கற் பாலையோ
நித்தனே நிமலனே நிகழ் நின் னுமனே
யத்தனே யடியவர்க் கெளிய வண்ணலே
பித்தனே யாதியந் தங்கள் பேசொணு
முத்தனே யுயிர்தொறு முலாய முன்பனே.

ஓ விஷச்சுவாலையுடன் பொங்கியெழும் பாம்புகளின் சிரோ ரத்தினப் பணியுஞ் சுகந்த பரிமளமிகுந்த சகல வாசத் திரவியங் களுஞ் சந்தோஷித் தணிந்து கொள்ளுஞ் சடாமகுடத்தாணுவே ! ஓ சம்போ ! ஓ சங்கரனே ! ஓ மகமேருவை வில்லாக வளைத்த சங்கரனே ! ஓ சிவசம்புவே ! ஓ தேவர் தேவனுகிய தெய்வமே ! ஓ விண்ணுலகிற் பராக்ரமித்திருந்து வீறுற்றுத் திரிந்த திரிபுர மானது வெந்து வீழுகத் திருதிருவென் றெரியத்தக்க நெருப்பழலைப் பரப்பும் புன்னகையுடைய ஆதிபாண்ட ரங்கனே ! ஓ கபாலகங் காளனே ஓ திரிபுவனத்தையு மயக்கி அரசு செலுத்திவந்த காமனைப் பொடியெழ யெரித்தருளிய பேரழற் கண்ணனே ! ஓ கடவுளே ! ஓ எல்லாவுயிரையுங் கொல்லாநின்ற வல்லவனுகிய எமனையுதைத் தருளிய காலகாலனே ! ஆக்மகோடிகளைச் சிருஷ்டிப்பதும், அவைகளை ரக்ஷிப்பதும் அவைகட்குக் கன்மவொழிவில் தேக மில்லாம லழிப்பதும் இம்மூன்று தொழிலுந் தேவரீருடைய திரு

விளையாடலே யன்றோ? ஓ ஜனமரண மில்லாமல் நீக்கிக்கொண்ட மெய்யடியாராகிய ஜீவன் முத்தரென்னும் பாக்கியவான்களுடைய உள்ளக் கமலத்தில் வள்ளலாயுறைந் தருளிய ஒப்பற்றவனே! உமது மகத்துவத்தை எம்போலியரார் சொல்லித் துதிக்கத்தக்கதோ? ஓ நித்யமாயுள்ள நித்தனே! ஓ மலர்கிழங்கிய நிமலனே! ஓ எங்குந் துதிக்கும்படியான காமங்களெல்லாவற்றையு முடையவனே! ஓ ஆதார மற்றோர் முதலிய யாவருக்கும் அத்தனே! ஓ அண்ணலே! ஓ பித்தனே! ஓ பிஞ்சகனே! ஓ ஆதிபிஞ்ஞனும் அந்தத்திஞ்ஞனும் பேச வடங்காத பெம்மானே! ஓ மோக்ஷ காரணனே! ஓ உயிருக்குயிரா யுலாவிய பசுபதி! ஓ மூலமென்று சொல்லப்பட்ட வஸ்துக்களுக் கெல்லா முதன்மையா யிருக்கின்ற ஆதிமூலமே!" என்று பற்பல விதமாகிய விற்பன ஸ்துதியை யெடுத்துப் பாடிநின்று உள்ளம் நெக்கு நெக்குருகி உடல் முழுவதுமுரோமாஞ்சிதம் பூத்து நேயமும் அன் பும் நெருங்கிய தன்மையாற் கண்களினின்று சலங்களைத் தாரை தாரையா யுருத்துத் தாழ்ந்து வணங்கி நோக்கினர். அப்போது அவ் விடத்தில் உமாபதியானவர் அவர்களைப் பார்த்துக் கிருபைசெய்து திருவாய் மலர்ந்தருளுவதாயினர்.

கைலாசபதி நரநாராயணர்க்கு அநுக்கிரகம் புரிதல்

ஓ ஜனமேஜய மகாராஜனே! பிரம்மா விஷ்ணுக்களிஞ்ஞனும் அறிதற் கருமையாகிய சிவபெருமான் தம்முடைய ஸன்னிதானத் திலே துதித்து நின்ற நரநாராயணர்களைப் பார்த்து இதுவரையிலும் நடந்த சுபம் நன்மையோ வென்று குமுதம்போன்ற தமது மெல்லி தழ்திறந்து கேட்டருளினர். அதற்கு நரநாராயணர். "ஓ மோக்ஷ முதலாகிய முதல்வனே! தேவரீருடைய திருக்கண் ணருளிஞல் எங்கள் புத்திக்குப் போதுமான க்ஷேமத்தையடைந்திருக்கின்றோம்" என்றார்கள். "இப்போது நீங்களிருவரும் இவ்விருட்டில் இளைப்பாகிய இவ்வளவு வருத்தத்துடன் இவ்விடத்திற்கு வந்த காரணத்தைச் சொன்ஞல் நீங்கள் விரும்பிய வரத்தை யாம்கொடுப்போம்" என்று விடையோன்விளம்ப, கறுத்தமலைபோன்ற காயமுடைய நரநாராயண ரிருவரும் புளகாங்கித முற்றச் செந்தாமரைக் கமலம்போன்ற திருக் கரங்களைக் குவித்து வணங்கி, "யாஞ்யுரித்த அரனுக்கு முன்னின்று ஓ சத்துச் சித்தானந்தமாய் விளங்கிய சாம்பசிவமே! தேவரீர் முன் ஞல் அநுக்கிரகஞ் செய்தருளிய பாசுபதாஸ்திரத்தாற் காலமேய

நிவாதகவசரைக் காய்ந்து தேவர்கள் குறையைத் தீர்த்தோம். இப் போது தானவர்கட் டோகிய அப்படையை மானவர்கள்மேல் விடுப் பது மரபன்று. ஆதலால் வேறே தகுதியான ஒரு வில்லும் பாணமும் தேவரீரதுக்கிரகஞ் செய்தால், பாரத யுத்தத்தில் துரியோதனன் முத லாகிய மன்னர்களின் படையை வென்று பூபாரந் தீர்ப்போம்!" என்று சொல்ல, கொன்றைமாலை புனைந்த கௌரிபாகன்கேட்டு, "ஓ அப் படியே அருள் செய்வோம்" என்று கிருபை கூர்ந்து, "ஓ அன்பர்களே! நமது கைலைக்கு வாயுமூலையி லிருக்குந் தீர்த்தத் தடாகத்திற்போய் மூழ்குங்கள். நீங்கள் சத்திப சவுச ஆசாரமுள்ள உத்தமர்க ளாகையால் அங்கவை யுங்கட்குக் கிடைக்கும் அவற்றை யெடுத்துக்கொண்டு இங்ஙனம் விரைவில் வாருங்கள்!" என்று அனுப்பி வைத்தார்.

அந்த உத்தரவின்படி தடாகத்தை நாடி அதிவேகமாய்ச்சென்று நோக்கினர். சொல்லுதற்கரிய சிரோ ரத்தினக் கொண்டை தாங்கி, அநேகமாயிரம் படங்களை விரித்தோங்கி, ஒரு காகசர்ப்பம் வாடைக் காற்றைப்போற் சீறி, வடவா முகாக்கினியைக் குளத்திற்கக்கி, வாலடித்துப் புரண்டு வந்தவர்களைக் கிட்ட நெருங்க வொட்டாமல் மருட்டும்போது நாநாரண நிரண்டுபேரும் நடுங்கி, "இப்பவே இப்படி பிருந்தால் இது நமக்கு அடங்கி வசப்படுவ தெப்படி?" என்று தியங் கித் திரும்பும்போது; அச்சர்ப்பத்தி னிடமாய் ஒரு முனிவர் வெளிப் பட்டு, "இது நாகசர்ப்பமல்ல! ஆதிமூர்த்தியாகிய எமது அண்ண லாற் போடப்பட்ட போர்வில் இதுதான்!" என்று புகன்று, "நீங்கள் சுசி முதலிய ஆசாரங்கள் குறைந்திருப்பதினால் இது இப்போர்ப்பட்ட விபரீதமாய்த் தோன்றுகிறது. உங்களுடைய நித்திய விதிகளை முடித் துக்கொண்டு அத்தனூருளை நினைத்துப் பத்தியால் விரும்புவீர்" என்று சொன்னர். உடனே சிவபெருமானுடைய ஸந்நிதானத்துக்கு இரண்டு விழிபோன்ற நாநாரணரிரு வரும் அவர்கூறிய மொழிவழி தேறி, ஸ்நான முதலிய நியமங்களைக் குற்றமில்லாமல் முடித்துக் கொண்டு நின்றார்கள். அப்போது பாம்பாகத் தோன்றிய வில்லும், பாணமும் யதாரூபமாய்ப் பலம் பொருந்திப் பிரகாசித்திருந்தன. உடனே நாநாராயணர் கண்டு வேகமாகச் சென்று, சம்போ சங்கர வென்ற கூச்சலுடன் தூக்கிக்கொண்டு, தங்களுக்கு உத்தரவு செய்த சதாசிவ மூர்த்தியின் ஸந்நிதானத்திற்கு முன்பு கொண்டு வந்தார்கள்.

பவித்திரமாகிய கங்காதேவியைச் சடையிலணிந்த பரமசிவன் அவைகளைப் பூமியில் வைக்கும்படியாய் அருள்செய்தனர். அவர்கள்

அவருடைய திருவாக்கின்படி ஸன்னிதியில் வைத்தார்கள். அக்காலையில் அரவின்வாய் நின்றெழுந்த முனியை யழைத்து, "காம் திரிபுராதிகளை யெரித்த காலத்திற்கொண்ட இவ்வில்லினுடைய முஷ்டி நிலை முதலிய யாவையும் இக்காரணர்க்கு முடித்துக்காட்டு" என்று முக்கண்ணனுரைக்க அப்படியே பலம் பொருந்திய வில்லையெடுத்து, நிறுத்தி, வணங்கி, இழுத்து, வளைத்து, நானிலமடுங்க நாணிபூட்டி, பொன்னெளியு மின்னும் புறமிடும்படியாகிய பேரொளிபெற்ற முனைவாளியை நாட்டி, கரவேக சரவேக சாகசங்களும் காட்டிய காலையில், முஷ்டி, நிலை முழுவதும் காரணருணர்ந்து, அக்கினி வடிவாகிய ஆதி பகவானை வணங்கி, "இதனுடைய மந்திரத்தையும் அருள்செய்ய வேண்டும் ஐயனே!" என்று கேட்க, பச்சைக்கொடி படர்ந்த பவளரூபமாகிய பரமசிவன் கிருபை பாலித்து, பாசுபதம் தொடுக்கும் பிரணவத்தைப் பூபாரம் தீர்க்கச் செல்லும் நாராயணர் பிழைக்கும்படியாய் அர்ச்சுனனுடைய செவியிலுபதேசித்தருள, அதனைக் களித்து மகிழ்ந்து வணங்கிய கிருஷ்ணர்ச்சுனரைப் பரமமூர்த்தி பார்த்து, "நீங்கள் பூலோகத்துக்குப் போய் பாவிகளாகிய சத்துருக்களை முடித்துப் பலம் பொருந்திய பாரதத்தை நிறை வேற்றி வெற்றிபெற்று மேன்மை யடையக் கடவீர்கள்! மேலும், இந்தத் தநுசையும் பாணத்தையும் முன்னிருந்த குளத்தில் விட்டுப் போவீராகில், இவை உங்களிடத்திற்கு வரும்" என்று உரகபூஷணன் அருள்செய்தனர்.

அர்ச்சுனன் ஹரியை அநுகப் பாவித்துப் பூசித்த அடையாளங்களைக் கண்டு விடை பெற்றுப் கண்ணனோடு கருடாரூடனாய்ப் பாசறை யடைதல்

அம்மொழியைச் சிரமேற் சூடிக்கொண்ட காரணர் அவ்வாறே அந்த வில்லையும் பாணத்தையும் முன்னெடுத்து வந்த குளத்திற் கொண்டுபோய் விட்டுவிட்டு, மீட்டும் பிறப்பிலியாகிய பற்றற்ற திரிபுரஸம்மாரிக் கெதிரில்வந்து பணிந்து, அநேகங்கோடி சிவந்த சூரியர் ஒருதிசையி லெழுந்து உதயமாகிய தன்மையைப்போற் பிரகாசிக்கும் அந்திவண்ணனுடைய திருவுருவழகும், பவளவிதழும், செந்தாமரையனைய திருவடிகளும், அங்கயற் கண்ணம்மை அமர்ந்த அலங்காரமும், ஆகுமிவைகளை யெல்லாந் தேவராஜ குமாரனாகிய தனஞ்செயன் தனது அகத்திற்குடியாக நிலைக்கவைத்து, நீலமேகத் திருவுரு

வாய்ந்த பெருமாலைச் சிவலிங்க மூர்த்தமாகக்கொண்டு வனத்திற் பூசித்தகாலத் தர்ச்சித்த புட்பங்களில் எந்தெந்தப் புட்பங்கள் எந் தெந்த அவயவங்களில் வைக்கப்பட்டனவோ அந்தந்தப் புஷ்பங்கள் அந்தந்த அவயவங்களில் இருக்கக்கண்டு, வேதங்கள் துதித்துக் கூவும் படியாகிய விடையேறி யென்னும் புராரியும் மூராரியும், தீங்கினராகிய தீயோருக்கும், கல்விக்கியான மில்லாத விவேக சூனியருக்கும், ஈருருவாக இருப்பான்றி, மாசறக்கற்ற மகானுக்குப் பேதமில்லாத ஓருருவென்று தனது புத்திபிற் பூரணமா யுணர்ந்து தெளிந்து மகிழ்ந்தான். கேளும் ஜனமேஜய மஹாராஜனே! முன்னே நரன் தவஞ்செய்தபோது கம்பன் ஜகன்மாதா வுடனே வேடரூபங் கொண்டுவரக் கண்டான். பிற்பாடு ரிஷபவாகன ரூடராய்த் தேவர்கள் பூமாரி பொழியுங் காட்சியாக வரக்கண்டான். இப்போது சகல உயிருக்குந் தாய் தந்தைபராகிய அவ்வுமா மஹேச்வரரைக் கயிலையிலுங் கண்டு பணிந்தான். ஆதலால் நற்றவத்தோ னென்று உங்கள் பாட்டனுகிய அர்ச்சுன னொருவனைச் சொல்ல வேண்டுமே யல்லது மற்றொருவரையுஞ் சொல்லப்படாது—என்று வைசம்பாயனர் சொல்லி மேலுஞ் சொல்லுகிறார்—நீருண்ட காளமேகம் போன்ற திருமேனியையுடைய நாராயணரைச் சங்கரன் மனத்துள் மதித்து, நீங்கள் போயிருக்குங் காரியத்தை முடித்துவரக் கடவீர் போங்கள்" என்று விடைகொடுத் தருளச் சக்ரனைக்கண்டு சலசல வென்றெழுந்து, பொங்குங் கடலைப்போ விரைந்து மகிழ்ந்து களித்து வணங்கி, பசுவைப் பிரிந்துபோங் கன்றுபோல் நீங்கி, கடந்து, மேகங்க ளுலாவிக் கொண்டிருக்கும் ஆலயங்களையும், ஆகாயத்தை அளக்கும் தன்மைபோல் அளாவும், நிலைகளையுடைய கோபுரங்களையும், அன்பாகக் கண்டு பிரதக்ஷணஞ் செய்துகொண்டு, போதுமான வரைக்கும் தொழுது கயிலையங்கிரியை விட்டு நீங்கி, முன்பு வெளியில் நிறுத்திவைத்த வயினதேவனது தோளிலுங் கரத்திலு மாரோகணித்து, சூரியனுதயமாகும் திசையிற் சுக்ர னுதயமாகும்போது பாசறையை நோக்கி வருவதானார்கள் நாராயணர்கள்.

தருமராஜன் கடோற்கஜனை, அர்ச்சுனன் சபதம்செய்து கைலாசபதியைத் தரிசிக்கச் சென்றமையைத் துரியோதனாதியர்க் கறிவித்தல்

ஓ ஜனமேஜய மகாராஜனே! இங்கு இவர்கள் செயலிவ்வாறாக, அங்கே தருமனந்தனரானவர் தம்மிடத்தி னின்றும் ஸ்ரீ கிருஷ்ண

தேவர் விடைபெற்று அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு கயிலைக்குப் போன பின்பு தாம் நடத்திய காரியத்தைச் சொல்லு மிடத்து யாருக்கு வியப்புண்டாக மாட்டாது? பற்குனன் சபதஞ் செய்து கொண்ட விதங்கள் பண்ணவர் மண்ணவர் முதலியோருக்குப் பகிரங்கமாய்த் தெரிந் திருக்கினும், பகவானவனைப் பசுபதியிடங் கொண்டு போனதைப் பகைகொண் டிருக்கும் பார்த்திபருக் குணர்த் தாது வஞ்சகப் போர்வினைத்தல் வரைகடந்த பாவ மென்று எண்ணினவராய், உடனே கடோற்கஜனைக்கூவி, "அடா குழந்தாய்! உன் சிறிய தந்தையாகிய அர்ச்சுனன் வாசுதேவனோடு கயிலைக்குச் சென்று, நாளை அந்திபடுமுன் சயத்திரதனைத் தலைசாய்க்குமாறு ஸ்ரீசாம்பவமூர்த்தியால் வரமும், உரமும், சரமும், பெற்றுவர இருக்கின்றதைத் தூரியாதனாதியர்க் குணர்த்தி வருக" என்று ஆக்ஞாபித்தார். அதுகேட்ட கடோற்கஜன் 'நகைமுகனுய் அப் பெரியதந்தையை வணங்கி யெழுந்து "ஓ கொற்றவர் முடிகள் குலாவுங் குரைகழற் கோவே! நமக்குச் செற்றலரா யுள்ளாரோடு உற்றதைக் கூறுதலுமோர் சேவகமோ? அந்தோ! இவ்வாறு தேவரீருக்குத் தோன்றியது யாது காரணமோ ? அவர்களைப்போல் நாமும் வினையின் திறத்தையும் விளைவின் செயலையும் வெகுவாகக்கூறி வியத்த லழகோ" என்று மனமழன்று கூறினன். அம்மைத்தனை மன்னர்பிரானுக்கு "அப்பா நீ உன் சிறுபிள்ளைத் தன்மைக்கொப்பத் திறனறியா துரைத்தனை. இஃதறநெறியன்று. அவர்கள் வயிரங் கொண்டு வழங்கும்சொல் வஞ்சனையோ அல்லது வாய்மையோ நமக்கதுவேண்டாம். மைத்தனே ! அறத்தினெறியேசென் றமர் செய்தலொழித்து, அஃதல்லாத நெறியேசென் றருஞ்சமராடி வெற்றி பெறுதலும் வீரமோ? ஆதலால், சத்திய நெறியாலடையும் ஜெயமேஜெயம். ஏனையவெல்லா மிருமைக்கும் பயமென்றறிக" என்று உண்மை நெறியை யுணர்ந்த உத்தமனுரைத்தான். அது கேட்டகடோற்கஜன் புன்னகையோடும் அவர்பொன்னடியில் வீழ்ந்து வணங்கி விடைபெற்று, சத்துருக்களுடைய நிணங்களிற் ரோய்ந்து கமழுந் தனது நெட்டிலை வேலோடு நேலருற்ற பாசறைவீட்டை நிமைப்போதிலடைந்து, அங்குத் தன்னிளவரசுக்குரிய இலக்கண குமாரனிறத்தனனென்றழுங்கி யுள்ளுடைந்துருகுங் கள்ளவிழ் மாலை புனைந்த கருகுலன் கடைவாய்தலை கண்ணி, அங்குள்ளாரி லொருவனை விளித்தனன்: உடனே அவனெய்தி நீயாரென்று வினவ, " வெற்றியில்தனக்கு நிகரற்ற வீரக்கொடியினையுடைய பீமராஜன்

புதல்வன்யான். அஷ்டதிக்கு மதிரு மூரசக்கொடியோனுல், அகில மனைத்தும் புரக்கு மரவக்கொடி யோனுக் குணர்த்தற்பாலதாய், என்னுடைரைத் தனுப்பிய மொழியொன் றுளது" என்றுன். அம் மொழியை யுகாந்த காலாக்கினிபோற் றன் செவியிலேற்ற அவ்வாயில் காப்பாளன் உடனே செம்மொழியென்பது சிறிதுமற்ற வணங்கா முடியோனுக் கறிவிக்க, அவனிவனைத் தருவிக்க, இவனவனைக் கண்டஞ் சலித்து, "ஐயா! யானிங்குவந்த காரியத்தைச் சிறிது மதித்தருளி, தற்காலத்து நீங்கள் வசனித்திருப்ப தெம்மொழியாயினு மதனை நிறுத்தி, என் பெரியதந்தை கூறியனுப்பிய மெய்மொழியைச் சிறிது வினவல்வேண்டும்" என்றனன்.

அதுகேட்ட நராதிபனவனை நோக்கி, "உன்பெரிய தந்தையின் மெய்ம்மொழி யென்பதுயாது?" என்று கேட்டான். "ஐயனே! என் தந்தைக் கிளவலாகிய விஜய மகாராஜன் தனது மைந்தனுகிய அபிமன்னுவின் முடியைத்துணித்த சயத்திரதனை, நீர் வெற்றி வாள் கொண்ட வெகுவீரர்களுடைய காவலின் கீழ் வைத்துக் காப்பினும், நாளை அந்திபடுமுன் அவனையான் கொல்லுவது சிச்சய மென்றும், இது தப்புமாயின் என்னுடலை அக்கினிக்கு ஆகாரமாக்குத லுண்மை யென்றும் கூறிச் சபதமேற்றனர்; உடனே திண்மை யோடு திருமாலுடன் கூடிச் சிவபிரா னெழுந்தருளிய கயிலாய கிரிக்கு வாழுஞ் சரமும் பெற்றுவரச் சென்றிருக்கின்றனர். ஆதலால் உன்பெரியதந்தை பகைவருக் கிதனையுணர்த்தாது வஞ்சனையாற் போர்வினைத்து வெல்வது மகாபாதகமென் றஞ்சினவராய், இதனை யுமக்குணர்த்துமா றென்னை யேவினர். எனென்றால், நாளையுமது மைத்துனனுகிய சிந்துபதி சிந்துபதியே யென்றுணரக் கடவீர்!" என்று சொன்னன்.

அதுகேட்ட துரியோதனமகாராஜன்—

"மன்மைந்தர் பலரொடும்போய் மறித்தொருவர் மீளாமன் மலைந்து வீழ,
வென்மைந்த னிறந்திடவும் யாதொன்றும் புகலாம லிருக்கின்றேனுன்.
தன்மைந்த னிறந்தனனுந் தான்றழலின் மூழ்குவனுஞ் சபதங் கூறி,
வின்மைந்தின் மிகுந்தவருக் கழுதிரங்கி யாற்றுவது வீரந் தானே?

பயத்திரவி னடுங்கியரன் பருப்பதம்புக் கவன்கொடுத்த படையும் வாங்கி
வயத்திரத மால்கடவ வந்தெதிர்த்தோன் றுவனுகின் மகர மோதுங்
கயத்திரவி வீழுவதன்முன் கையறுதன் புதல்வனைப்போற் களத்தின் மாளச்
சயத்திரதன் கொடுங்கணையாற் றுன்படுதல் லுறுதியெனச் சாற்று வாயே,

என்னினும்பார் தனக்குரியன் சிலேத்தொழிலிற் சிலேக்குருவா யெவரும் போற்று
மன்னினுந்தான் மிகவலியன் றண்டெடுத்தா லுந்தையினும் வலியன் சால
வுன்னினுந்தோ ளுரனுடையன் மதியாம லிப்படி நீ யுரைக்க லாமோ,
தன்னினும்போர்க் கெளியனெனே சயத்திரதன் றனென்று சாற்றுவாயே.

என்று சொல்லி, "ஓ கதாயுதன் காளாய்! ஆள்கிலே ஆளறியவேண்டு
மல்லது மற்றறியத்தக்கபேர் யார்? எல்லாருடைய சேவகமும் நாளை
யறியப்போகின்றோம். இதற்குளென்ன வீணலோசனை?" என்
றுரைத்து நகைத்தனன். அவனை அங்கர் கோனுக்கி,

தாருறுகின் மகன்துச்சா தனன்மகன்சல்லியன் மகன்வேற் சகுனி யென்னும்,
பேரரசன் மகன்முதலாவெத்தனைபேர் பட்டாலும் பெரிய தன்றே
பாரரசா ளுதற்கிருந்த பார்த்தன்மா மகனொருவன் பட்டா னுகி
லாரரசக் கினியுரியா ரார்தோமற் றினியழிந்த தகில வாழ்வே
அங்கிருந்து சயத்திரத னுவிகவர்ச் திடுவலென ஆண்மை கூறிப்
பங்கிருந்த வுமாபதிபாற் பணிந்துவரம் பெறச்சென்றான் பார்த்த னுகிற்
கொங்கிருந்த தாராய்கின் குடைநிழற்கீ ழிதுகாலங் கூட்டங்கூடி
யிங்கிருந்த வேழையரே பென்செயமற் றிருக்கின்றே மெங்கள் கோவே"

என்று பரிகாசமாகப் பேசினன்.

இவ்வாறு பரிகாசமாய்க் கர்ணனிகழ்ந் துரைத்ததைக் கேட்ட கடோற்கஜனுளம் வெகுண்டு, "ஓ அறிவிலீகாள்! என்சொல்லினும் இதயத்தெண்ணுது, இனிமேலு மிவ்வுலகத்திருந் தரசாள்வோ மென்னு மெண்ணத்தையே வகித்திருக்கின்றீர்கள்! ஆ! ஆ! வெகு கோர்த்தி! இக்கணமுங்க ளனைவரையும் தொலைக்க வேறொருவீரனும் வேண்டுமோ! இவ்வண்ட மாருதிமகன் சண்டமாருத னென்று சொல்லும்படி திரிபுரங்களினு மழலூட்டிய சிவபிரானைப்போல் நீங்கள் வசித்திருக்கும் இப்பாடி வீடுகளி லழலூட்டி உங்களையு முங்கள் சேனைகள் முதலிய வங்கங்களையு நானே எரித்து நீறுக்குவேன். பெரியோராக்கினை என்னுங் கயிற்றுலன்றே பிணி பட்டிருக்கின்றேன்?" என்று கூறிப் பின்னுஞ் சொல்லுகின்றான்—

"தசை குறுகி மிசையொழுகத் தனித்தனியே யெதிர்த்தவரைத் தலைகள் சிந்த
விசையன்வர வேண்டுமோ மற்றுள்ளார் திரண்டுவர வேண்டு மோதான்
இசைபுலரு முன்முனைந்து நீறுக்கி விடுகுவனெங் நிருபன் சொன்ன,
வசைவின்மொழி மறுத்துடற்ற லாகாதென் றிருக்கின்றே னதிகி லீரே

இருவரெதி ரெதிர்தம்மி லிகல்பொருத லுலகியற்கை யாருங் கூடிப்
பருவமுறுத் தனிக்குதலைப் பாலகனுக் காற்றுமற் பறந்து போனீர்
ஒருவனெடுங் தேரழிக்க வொருவன் மலர்க் கைதுணிக்க வொருவன்பின்னைப்
பொருவனென வறைகூவிப் பொன்றுவித்தா னிதுகொண்டோ
புகல்கின் றீரே"—

என்றான்.

இப்படி வரையைப் பொருவும் வயப்புயத்தினை யுடைய கேசகாரி குமார னெருவரையு மதியாமற்கூறிய உரத்த மொழிகளைக் கேட்ட உகமணிக் கொடியோனவனை யுருத்து நோக்கி, "இங்கிருக்கு மரசரவைக்கேற்றபடி ஆய்ந்து பேசாது ஆணவத்தாற் பேசுகின் றனை யன்றே ? ஓ அரசர்களே ! இவ்வரக்கி மைந்தனை டொன்றும் பேசாதீர்" என்று கட்டளை யிட்டனன். அதுகேட்ட கடோற்கஜன் அங்கங்குலுங்க நகைத்து,

அந்தண்மலர்த் தவிசிருக்கு மயன்படைத்த விவ்வுலகத் தரக்க ரேனுஞ்,
சிந்தனையில் விரகெண்ணுர் செருமுகத்தில் வஞ்சசமுஞ் செய்யா ரையா,
வெந்திறல்கூர் தூணைவருக்கு விடமருத்தார் நிரைகழுவில் வீழச் சொல்லார்
உந்துபுன லிடைப்புதையா ரோரூரி லிருப்பகற்றே ருரையுந் தப்பார்,

செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார் செய்ங்கன்றி கொன்றறியார் தீங்கு பூணர்,
அழுந்துமனத் தழுக்குறு ரச்சமுமற் றருளின்றிப் பொய்ச் சூதாடார்,
கொழிந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான மடைவித்துக் கொல்ல வெண்ணர்
எழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா மடிகளுக்கே யேற்ப தன்றே

தேனிடறிப் பான்முரலுஞ் செழுந்தாம வீசயனுடன் செருவில் வந்தான்,
மானிடரிற் பொரவல்லார் சிலருண்டோ தெரியாது வானு ளோரிற்,
கோனிடையுற் றருகிருந்த திறல்வேந்தர் காத்திடினுங் குறித்த வீரன்,
தானிடருற் றுயிரழிகை தப்பாது தப்பாது தப்பா தையா !"

என்று சொல்லி மீண்டு, பெரிய தந்தையின் பாடிவீடு சேர்ந்து, கானங்குச் சென்ற வண்ணமும், அங்கவர்கள் கொண்ட எண்ணமுங் கூறி ஒருபுடை யிருந்தனன். அப்போது துயிலுணர்த்த வருவோமென்று சொல்லி விடை கொண்டேகிய துழாய்முடி நாதனும் சுரேந்திரன் மைந்தனும் வந்து, தங்கள் பாசறை வீட்டடைந் திளைப்பாறி இருந்தனர்.

பதின்மூன்றும் போர்ச்சருக்கம் முற்றிற்று.

பதினான்காம்போர்ச் சருக்கம்.

கண்ணன் துதி

ஈரொரு பிறப்பி லொருசிறு குறளா யாவரும் தேவரும் வியப்பக்
காரொரு வடிவு கொண்டெனச் சென்று காவல்கூர் மாவலி யளித்த
நீரொரு கரத்தில் வீழுமுன் தரங்க நீணிற மகாநீ ருடுத்த
பாரொரு கணத்தி லளவிடுங் கமல பாதனூர் நாதனூர் நமக்கே.

ஓ சிந்தைதங்கு நெறி செல்வக் குணுளனே! விந்தைபொங்குபுய மேன்மைக் கணுளனே ! கேளும்: பதின்மூன்றும் போரில் அபிமன்

னனிறத்தலை அருச்சுனனுக்கு அறிவிப்பான்போற் சென்ற செங் கதிர்ச் செல்வனுகிய சூரியன் அன்றிரவு கழிந்தபின்பு, "அர்ச்சுனனே சபதஞ் செய்திருக்கின்றான். தூரியோதனனுதிகளோ சயிந்தவனைப் பாதாலத்தி லாகிலும் வைத்துக் காப்பாற்றவேண்டு மென்றிருக்கின் றார்கள். கிருஷ்ணர்ச்சுனரைக் குறித்துத் தர்மராஜன் விசனப்பட் டுக்கொண்டிருக்கிறார். நாரதாரணர் பாசுபதம் பெற்று வருகிறார்கள். இக்காரியங்க ளெப்படி முடியுமோ தெரியவில்லை. நமது பேரிலே தோஷமில்லாமல் நம்வேலையை நாம் செய்து காலைக் கழித்து விடு வோம்" என்று சபதமா வெனும் புராணபூட்டிய தேரேறி இந்திரதிக் கில் வந்துதயஞ் செய்தான். உடனே தருமபுத்திர மகாராஜ னெழுந்து ஸ்நானசந்தி செபதப முதலிய வெல்லா முடித்து, சூரிய நமஸ்காரஞ்செய்து யாகசாலையினிடத்தில் கவக்கிரக ஜெபம், ஓமம், யாக முதலியனவும் நடத்திவரா நின்ற தவுமியாச்சாரியர் முதலிய வேதவேதியர்கட்கெல்லாங் கற்பகத் தருவைப்போற் சோடச மகா தானங்களுங் கொடுத்து, நேற்றிராத்திரி தம் தம்பியாகிய தனஞ்செய னுரைத்த சபதத்தை வழுவில்லாமல் முடிக்கும் மார்க்கம் எவ்வித மென்று மனத்துட்கொண்டு, சகல சேனுசயின்யங்களு நெருங்க, சமுத்திர முழக்கம்போற் பலவித வாத்தியங்களு முழங்க, திருத்திய ராஜசபையிற் பொருத்தி யிருந்தார். அந்தவேளையில் குணபூஷண அலங்கிர்தராகிய தம்பிமார் மூவரும், இடும்பி புத்திரனுகிய கடோற் கஜனும், அவன் பிள்ளை அஞ்சனவர்மனும், இளம்பஞ்ச பாண்டவர் களும் ஆபரண, அலங்காரம் பெற்றவீராதிவீர அரசர்களும், சேனுதி பதியாகிய திஷ்டத்துய்மனும் துருபதேயன், சோமுகர், பாஞ்சாலர் முதலிய படைத்துணை வேந்தரும் யுத்தகோலத்துடனிணங்கி, தர்ம புத்திர மஹாராஜனை வணங்கி, சோடசகலைக ளிறைந்த சுத்திரச் சந்திரனை நகூத்திரஞ் சூழ்ந்திருக்குந் தன்மைபோ லுறைந்து சிறந்திருந்தார்கள்.

கிருஷ்ணர்ச்சுனர் கவலையுற்றிருக்குந் தருமராஜனைக் கண்டு இராத்திரிநடந்த வர்த்தமானங்கள் அனைத்துஞ் சொல்லித் தேற்றுதல்

இதன்றியும், பரிசுத்தம்பெற்ற தவுமியர் முதலாகிய வேதவேதி யர் அக்ஷதை கொடுத்துச் சொல்லும்படியாகிய மங்களாசனத்தை யும், வீரப்பிரதாப ராஜர்களெல்லாரும் இன்றையத் தினஞ் சயத்திர தனை முடித்து ஜெயபத்திரம் விடுக்கிறே மென்று சொல்லா நின்ற

போர்ண்மையையுங் காதுகொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்த முர சக்கொடிக் கதிபரானவர், சபைகிறைந்த தன்யர்களைப் பார்த்து, "ஓ எம்மிடத்தி விஷ்டம்வைத்த அரசர்களே! நீங்கள் சொல்லிய ராஜ வீரங்க ளெல்லாஞ் சரிதான். கைலாயகிரிக்குப்போய்க் சிவ பெருமானருள் பெற்று வருகிறோமென்று நேற்றிரவு சென்ற கிருஷ் ணனும் அர்ச்சுனனும் விடிந்து இதுவரையிலும் வரவில்லை! எங்கு போயலைகின்றார்களோ? என்ன வருத்தப் படுகின்றார்களோ? அது கெட்டது என்ன யுத்தமென்று மனம்வெறுத் திருந்து விட்டார் களோ? எங்கேயாகிலும் வாடினார்களோ? இப்பேர்ப்பட்ட மைந்த னிறந்து போனானே யென்று மனம் வருந்தி வீடினார்களோ? இவ் வுலகத்திற் கோபமோ பொல்லாதது. அதிலும் புத்திரசோகம் மிகப் பொல்லாதது. அது வந்தவர்க்கு உயிர் நில்லாது. எல்லாத்திற் கும் தெய்வமேகதி" என்று சொல்லி இடிந்த மனத்தினை யுடையவ ராய் இளைத்திருக்குஞ் சமயத்தில், துவாரகாபுரி வரசன் மாத்திரங் கனித்து வருவதை மாசற்ற திறலினையுடைய வாசற்காவலோர் கண்டு, தர்மராஜனிடத்துக்கு ஓடிச் சென்று, இருகாத்தையுங் குவித்து வணங்கி, "காயாம்பூப் போலும், காளமேகம் போலும் கருவி ளமலர் போலும், கருநீல மணிபோலும் உருப்பெற்ற களங்கரகிதனு கிய மாதவன் இதோ வருகின்றார்" என்று சொன்னார்கள். அம் மொழிகேட்ட உடனே கிரண சூரியனைக் கண்டு மலருந் தாமரை போலும், சந்திரனைக் கண்டு களிக்கும் சமுத்திரம் போலும், அகமு முகமும் அலர்ந்து மகிழ்ந்து, எதிரெழுந்து சென்று இன்பத்துடன் தழுவிக்கொண்டு, உடற்சாயைபோற் பொருந்தி பிரியாமல் வந்து, தருமராஜனும், சாத்தகியும், ஜார்த்தனனும், சிங்காதனத்தில் வீற் றிருந்த போது, காளிங்கமென்னும் பாம்பின் படத்திற் கூத்தாடிய கமலநாபனைப் பார்த்து முரசக்கொடி படைத்த தருமராஜன் சொல் லுகின்றார்.—

"ஓ எங்களிருமைக்கு முரிய மூர்த்தியே! அரவக்கொடி தரித்த அரசன் முதலான பகைவர்கள் நேற்றிராத்திரி பாடி வீட்டிற் பேசிக் கொண்ட விற்றிறமையும், சொற்றிறமையும், மிகுந்த களிப்பும், தகுந்த செழிப்பும், வீராவேசமும், தீராவேகமும், இன்னவித மென்று கானிபம்பமாட்டேன். ஓ பொன்னைத் தரித்த புண்ணிய மார்பனே! அனற்கணையாற் காண்டவவனத்தை எரித்த அர்ச்சுனன் சொன்ன சபதத்தைச் சோராமல் முடிக்க என்னாலு மில்லை. அவ

ஞலு மில்லை. இதுவும் உமது கடமை ! எழைகள்மீது இரக்கம் வைப்பாய் என்னப்பா" என்று குந்திக்கு முதற்குமாரன் கூற, கோபாலன் இவ் வசனத்தைக் கேட்டுக் கீழ்க்கண்ணால் நோக்கிப் புன்னகை கொண்டிருக்கும்போது, தன்னெண்ணத்திற் கிசைந்த காண்டீப னனவன் காலைக்கடன் முடித்து, ஆரிய னென்னுஞ் சூரிய னைத் தொழுது, மையணிந்த மடமானேக்கியாகிய மாகத வல்லியையும் மகாதேவரையுஞ் சிந்தித்து, வேதாகமங்களால் வாயார வாழ்த்தி வணங்கி, 'ஹரி ! ஹரி ! கிருஷ்ண !' என்று மாதவனுடைய திருநாமங்களையும் போற்றிப் புகழ்ந்து, திரிவிக்கிரன், திரிபுரை காயகன், திரிபுர ஸம்ஹாரி, திரிபுவன பாதனளித்த தித்தித்தா திக் தோமென நடனமிடும் பாசுபத நிறைந்த அம்பறாத் தூணியையும் அரனருள் வில்லையுங் கிரமப்பிரகாரம் வணங்கி எடுத்துக்கொண்டு பாடி வீட்டையடுத்து ராஜ சபைக்குட் புகுந்து, தம்பியைக் காணுமேயென்று மிகுந்த துக்கத்துடன் உழன்றுகொண் டிராகின்ற தன் தமையனுகிய தர்மராஜன் முதலான பெரியோர்களை வணங்கிச் சந்தோஷ முகத்துட னின்றான். இப்படியாகச் சிறப்புடன் வந்து நின்ற தன் தம்பியாகிய அர்ச்சுனனை அகம்புறமிரண்டும் ஒன்றெனத்திகழும் அறன் மகன் கண்டு, "என்னப்பா பற்குணா ! அருமையான குழந்தையைப் பறிகொடுத்து இனிப் பிழைப்பது அருமை யென்று சொல்லும்படியாய் அழுத கண்ணீருஞ் சிந்தையுமாகச் சென்ற என்னுடைய இளவரசே ! உன் துயரங்களை எங்கே கொண்டு போய்க் கொட்டி விட்டாய் ? எவ்விதத்தில் தேறுத லடைந்தாய் ? உன்னுடைய முகத்தில் அமுதகிரணஞ் சொலிக்கிறதே ! மிகுந்த தேஜஸு மூன்று பங்கு அதிகமா யிருக்கிறதே ! மலைக்கொப்பாகிய தோளையுடைய வாசவன் குமாரா ! இவ்வதிசயத்தை இன்னவித மென்றெனக்குச் சொல்ல வேண்டும் என்னுயிர்க்குயிராகிய தம்பியே !" என்று இரக்கமாய்க் கேட்டார்.

அப்போது விஜயன் சிறுநகை புரிந்து எல்லாம் விளைத்த மாயசக்கரா னென்னும் வேயிசைக் காரனுகிய கண்ணன் முகத்தைப் பார்க்க, கபடநாடக சூஸ்திராவதாரியாகிய அக்கண்ணன் ஜாடை செய்து கடைக்கண்ணால் நோக்க, அந்தக் கருத்தைத் தெரிந்து கொண்ட காண்டீபனனவன் வெண்குடை நிழற்படுத்திக் காசினியெல்லாம் புரக்குங் கருணைவள்ளலாகிய தருமநந்தனருக்குக் கட்டுரையை விட்டுரைக்கத் தொடங்கி, "என் அண்ணலே ! அநாத

ரக்ஷகனுகிய ஆபத்பந்துவானவர் என்னை அழைத்துக்கொண்டு, ஒரு பெரிய வனத்திற்குப் போய் இளைப்பா றென்று தேற்றினர். சிவ பூசை செய்துகொள்ள வேண்டுமே யென்று நான் சொன்னேன். அதற்குத் தன்னையே இலிங்கமூர்த்தமாகப் பூசிக்கச்சொல்லி, கனிந்த கனிகளும் திணிந்த தேன்களுங் கிழங்குங் காய்களும் உண்பித்து, அப்பால் ஒரு திடர்நிலத்திற் படுத்து நித்திரை போகச் செய்தார். நானித்திரை போனேன். பின்னுஞ் சற்று நேரந்தரித்து என்னிடத் திற்கு வந்து, என்னை எழுப்பி அழைத்துக்கொண்டு கயிலையங்கிரிக் குச் சென்று, கண்ணுதலாகிய அண்ணலாருடைய அருள்கைக் கொண்டு, பாசுபதாஸ்திரமும், வில்லும், முஷ்டிநிலை முதலிய மந்தி ரங்களும் பெற்றுக் கொடுத்த கல்லாமலும் இந்தப் பெருமான்மீது நான் அர்ச்சித்துச் சூடிய மலர்கள் யாவும் அந்தப் பரமசிவனது அவயவங்களின்மே லிருக்கக் காட்டினர். அப்போது என் கண் குளிரப் பார்த்து, உமா மஹேச்வரரையும் மற்ற சிவகணங்களையும் வணங்கிக்கொண்டு வந்தோம்!''—என்று பாண்டவ மன்னவ னெல்லோ ருங் கேட்கச் சொல்லவும் தருமர் முதல் யாவருஞ் சந்திர பிம்பம் போன்ற முக கமல மலர்ந்து, அழகிற்சிறந்த மணிகளழுத்திய ஆபர ணங்களணியுந் திண்புயங்களெல்லாம் மேலாகப் பூரித்துப் புளகாங்க முற்று, நாமெல்லோரும் பிழைப்பதற்குச்சிவனருள்கிடைத்ததென்று சிவநாமங்களைச் சொல்லிச் சிவஸ்மரணை செய்து, அண்டமதிர ஆர்ப் பரித்துச் சந்தோஷங் கொண்டார்கள். அப்போது மலைக்கொப்பான ஆஜானுபாகுவையுடைய அர்ச்சுனராஜன் தருமராஜனைப் பார்த்து மறுபடியுஞ் சொல்லுகின்றான்—

''அண்ணா! தேவரீர் எனக்குச் ஜேஷ்ட பிராதாவா யிருந்து செய்யவேண்டிய நன்மைக ளெவ்வளவோ அவ்வளவுக்கு ஆயிரக் கோடி பங்கு அதிகமாக இந்த மாதவன் செய்த முதற் காரணமான சமுத்திரம் போன்ற சகாயப் பொருளுக்கு வரையறையத்தக்க கணக்கு முண்டோ? ஐயா! தெளிவில்லாத நாம் என்னத்தை அறிந்து சொல்லுவோம்! ஆகாயத்தி லிருக்கும் தூணைக்காரணமான மேகங்களினால் உலகத்திற் பொருந்திய உயிரெலாம் சுகம்பெறும்படி யிருக்க இந்த உயிர்களினால் மேகத்துக் கேதாகிலுங் கைம்மாறுகிய ஒருதவியுண்டோ? அதுபோல் நமது இஷ்ட தெய்வம்போன்ற இந்த ஆண்டவனுக்கு நாமென்னத்தைச் செய்வது?'' என்று பற்பலவிதங் களாற் பார்த்தன் துதிக்கும்போது, விற்பன விவேகியாகிய தரும

ராஜன் மேலாகிய சந்தாஷமுடையவராய், ஸ்ரீ தாஞன மாதவனை நோக்கி, "ஓ தாமோதரனே! எங்களுக்காக வருத்த மெடுத்துக் கொண்டு, நீங்களே முடித்த செஞ்சடைப் பொம்மானமர்ந்த கயிலையங் கிரிக்குச்சென்று பாசுபதாஸ்திரம் வாங்கிக்கொடுத்த பக்ஷத்தைச் சொல்லுவதோ? அல்லது எங்கள் தந்தையையிழந்து அறியாதவர்க ளாய்க் காட்டைவிட்டு நாட்டில்வந்த காள்முதல், காளதுவரைக்கும் வணங்காமுடியோன் செய்த வஞ்சகத்தால் நாங்களெஞ்சி யிறக்காமல் எங்களுக்குப் பக்கத்துணையாயிருந்து காத்திரக்ஷித்த அன்பைச் சொல்லுவதோ? அன்றியும், அர்ச்சுனன்பேரிற் பகதத்தன், சுதாயு முதலிய சத்துருக்கள் தொடுத்த ஆயுதங்களைத் தேவரீர் திருமார்பி லேற்றுக் காத்தருளிய அருமையைச் சொல்லுவதோ? கான் எத்தனை யென்று சொல்லப்போகிறேன்? ஓ என்னிறைவனே!" என்று புகழ்ந்து துதிமொழிந்து, அர்ச்சுனன் கையைப்பிடித்து அருளாளன் கையிற் கையடையாகக் கொடுத்து, "ஓ ஆபத்பாந்தவா! ஓ அகாதரக்ஷகா! அன்று குந்திதேவியின் கர்ப்பத்திற் பிறந்திருந்தோம்! இன்று தேவரீ ரது கர்ப்பத்திற் பிறந்திருந்தோம்! காக்கக் கடனுனக்குக் கண்ணனே! நீலமேக வண்ணனே! முன்னம் ஆதிமூலமென் றழைத்த யானையைக் காத்தவனே!" என்று கைகுவித்திருக்குங் காவலனை நோக்கிக் கண்ணன் சொல்லுகின்றார்.—

"ஓ தர்மநந்தனரே! நீ ரேதொன்றுக்கும் பயப்படவேண்டாம். இந்த அர்ச்சுனனைக் குறித்து மனக்கவலையுமக்கு வேண்டியதில்லை. அந்த பாரம் நானெடுத்துக்கொண்டேன். சுவாமி சகாயத்தாற் சூரிய னஸ்தமிக்கு முன்னே துரோணர் முதலான காரியஸ்தரால் அணி வகுத்துப் பந்திக்கப்பட்ட சயித்திரதனை அடி வேருடன் முடிதறிய முடித்துச் சபத நிறைவேற்றி உமதிடத்திற்கு வருவோம். அதை நீர் பாரும்!" என்று தாய்போற் பரிந்த அன்புடன் தகுதியான வசனங் களைச் சொல்லித் தண்டே னிறைந்து வண்டுலவு மாலை யணிந்த தார்வேந்தருடனெழுந்து, நகர்புகுந்து கார்நிறைந்த நீர்த்துறை யெல்லாம் வேர் நிறைந்ததைப்போற் கருந்தாள் செந்தூளெழுந்து மறைக்க, கடவுளர் முதலானபேருங்கண்டு கலங்கிப் பயங்கொண்டு மலங்க, ஆரபார தாரைபூரி வீரசின்ன முதலியவைகள் மாரகாள சூரபூத பேரியென்ன மேலு மேலும் விம்ம, அண்டகடாகமு மெண் டிசை முதலாய் டுண்டுண் டுடுடுடு டுண்டென வதிர, ஆகாயமும் பூமியுமிட மில்லாமற் சுருங்க வாகாயவண்ணக் குடைகள் நெருங்க,

வசவச வென்னத் துவசங்கடின்ன, பசபசவென்னப் பகைவர்களுன்ன மயிற்பீலிக் குஞ்சங்கள், மேற்கட்டிகள், மகரதோரணங்கள், சிகர பூஷணங்கள், விருதுக் கொடிகள் இவை முதலாகிய சகல சின்னங் களுடனே, பிரகாசமுற்ற வேலாயுதம்பெற்ற பீமசேனனும், நகுல சகாதேவர்களும், சேகிஞபதி முதலாகிய ராஜவீரர்களும் நால்வகைப் படைகளும், இரு பக்கத்திலு நெருங்கி, இறுமாந்து வர, தன்னை யடுத்த தேவர்களுக் கமுதமளித்த கருணைக் கடலாகிய அத் திரு மால் செலுத்தும் அழியாரதத்தின் மீதேறிய அர்ச்சுனன் நடுநாயக மாய் வந்து அமர்க்களஞ் சேர்ந்து அணிவகுக்கும்படியாய்ச் சொல்ல, அப்போதே சோனை மேகம்போற் கரிமுகக் கணைகளைத் தொடுக்கும் வீரப்ரதாப பதாதிவேந்தரையும், யானை, தேர், குதிரை முதலிய அளவற்ற சேனைகளையுஞ் சேர்த்து, ராஜமண்டலங்களையும் நிலைக்கச் செய்து, பலம்பெற்ற பல உறுப்புக்களோடும் வியூக மேற்படுத்தி, நிறணிந்த தேவர்களுஞ் சத்துருக்களும் ஆச்சரியப் படும்படியாய்ப் பேரணி மூனையிலே தோரணியுடன் காரணிபோல் வீறணிந்து, தாரணிந்த மார்பனென்னுஞ் சேனாதிபதியான திஷ்டத்துய்மன் நின்றான்.

அச் சமயத்திற் பூரணனாகிய காரணன்போன்ற வெள்ளை வாரணனின்ற மதலையான அர்ச்சுனன் அணிந்திருக்கு மகுட மானது பொன்னொளி மின்னொளி விண்ணொளி கண்ணொளியாகிய பிரகா சத்தைச்செய்யவும், இரு செவியிலும் தரித்த இந்திர குண்டலம் பாதலத்துள்ளிருக்கும் இருளைத் பறக்கத் துரத்தவும், ஒடிபடாமலும் ஒருவர் கைக்குப் பிடிபடாமலும் புகழ்தற்கு முடிபடாமலும் திணிந்தமைந்த காண்டீபமானது மகமேருவை இகழ்ந்து விஜயன் தோளைப் புகழ்ந்து களித்துக்கொண் டிருக்கவும் தேரானது கோரோடி மலைகளை யுடைக்கவும், தேரிற் பூட்டிய சுவேதவாம் புரவிகள் காற் றின் வேகத்தை மாற்றி நகைக்கவும், ஒப்பில்லாச் சாரதியானவர் சப்த மேகங்களையும் பார்த்து என்னுடைய அருள்வாரிக்கும் அழகுக்கும் ஈடாக மாட்டீர்க ளென்று அலக்ஷ்யமாய் மருட்டி வெருட்டவும், இவ்விதமாகப் பேரணி கொண்டு, ஸர்வ ஸம்ஹார காரணன்போல் வந்து, பகைவருடைய சேனை சமுத்திரத்துக்குத் தாணுரு வடவா முகாக்கினிபோற் பிரகாசித்துக்கொண்டு, திசா திசைகளு நடுக்கமெடுத்து ஓடுக்கமுறும்படியாய் அமர் முடிப்போ மென்று நாநாரண ரிருவரும் நின்றார்கள். இவ்விடத்திலிவர்களிப்படி

யிருக்க, இராத்திரி யெல்லாம் நித்திரை யில்லாமற் சித்தப்ரமை கொண்டு மெத்தவும் ஆலோசனையிலிருந்த துரோணாசாரியர் சூரிய னுதிக்குமுன்னெழுந்து, காலைக்கடன் முடித்து, யுத்த பூமிக்குப் படைகளெழும்படியாய்ப் பேரிகை முழக்கி வைத்து, தாமுஞ் சேனாதி பதிக் கோலங்கொண்டு எல்லாப் பெருகுமையும் பெற்ற வல்லாள ரெல் லாந் தம்மைச் சூழ்ந்து வரும்படியாய் யுத்த பூமிக்குச் சென்று சப்த சமுத்திரம்போல் எழுந்து, பரந்து, சப்த மேகம்போலிரைந்து, விரைந்து, நெருங்கிய படைகளைப் பற்பலவிதமாகப் பிரித்து, அற் புதமற்புதமாக வியூகங்கள் கட்டினார்.

துரோணாசாரியர் வகுத்த வியூகச்சிறப்பு

அஃதெப்படி யென்றால், மூன்று யோசனை முப்பது காதிகை வழிதூரம் வட்டமாக வளைத்துச் சூசிகாவியூக மென்பதை விதி முறைப்படி வகுத்தார். அத்தச் சூசிகா வியூகத்திற்குநிறைந்த கடலைப் போ லேற்படுத்திய யானை சேனைபரிவாரங்க ளெவ்வளவென்றால், கார்மதத்தைச் சொரிந்து போர் முகத்துக்குரிய நாற்பதினாயிரம் யானைகள், அறுபதினாயிரந் தேர்கள், ஒரு நூறாயிரம் குதிரைகள், பத்து நூறாயிரம் பதாதிகள், இவைகளைச் சூசிகா வியூகமாக அமைத்து, இதனுடைய நடுவிற் சிந்து தேசாதிபனாகிய சயிந்தவனை நிறுத்தி, சூரியகுமாரனாகிய கர்ணன், துரோணாசாரியர் குமார னாகிய அசுவத்தாமன், வில் முனைபெற்ற கிருபாசாரியர், ஒப்பில் லாத மத்திர தேசாதிபனாகிய சல்லிய ராஜன், வீரிய ராஜனாகிய பூரிசிரசு, திடங்கொண்ட விடசேனன் இவர்கள் முதலிய அதிரதத் தலைவர்களை யெல்லாம் பார்த்து, "இந்தச் சைத்திரத ராஜனையும், சூசிகா வியூகத்தையும், காக்கத் தக்கவர்கள் நீங்களே" என்று அவர் களை அவ்விடத்தினிறுத்தி, துரியோதனன் முதலிய ராஜாக்களை நோக்கி, "ஓ அரசர்களே! சித்து தேசனைப் புரக்கும்படியாய் இப் போதமைத்த சூசிகா வியூகத்தையும் இந்த அதிரதத் தலைவர் களையும் பார்த்தீர்களா? இப்பேர்ப்பட்டவர்களுக்கு அந்தப் பஞ்சை யாகிய அர்ச்சுனனெம்மாத்திரம்? அவனை விட்டுத் தள்ளும். தென் றிசைக்கதிபனாகிய எமனைப் போன்றவனுக்கும் இந்தத் திசையை நோக்கி, எதிர்த்துவரச் சக்தியுமுண்டோ? அவனல்லாமல் இன்னும் எப்பேர்ப்பட்டவர்களாலுஞ் செயிப்பதற்கருமையாகிய வியூகமாகும்' இதுவென்று சொல்ல, வியூகமமைந்த திறமையைக் குறித்துத் துரியோதனனுந் தம்பிமார்களும் மற்ற அரசர்களுஞ் சந்தோஷ மடைந்தார்கள்.

பின்பு துரோணாசாரியர் அச்சுதிகாவியூகக் காவலென்றமைத்த அதிரதத் தலைவர்களுக்கு நான்குதிக்கிலும் நான்குவிதப் படைகளைப் பத்மவியூகமாக நிறுத்தி, பலம் பொருந்திய கிருதவன்மன், கிருத வீரியன், காம்போஜன், கன்னடராஜன், கலிங்கேசன், முதலாகிய எண்ணிறந்த காவலர்களை யெல்லாம் மேற்குத் திசையிற் கட்டிய பத்மவியூகத்துக்கு ஆட்சியா யிருந்து தாழ்ச்சியில்லாமற் காத்திடும் படி தனுர்வேத முறைப்படி யமைத்து, அந்தப் பத்மவியூகப் பக்திப் பென்று நின்ற அங்க தேசாதிபன் முதலிய மகாரதத் தலைவர் களுக்கு மேற்காவலாக அம்மேற்குத் திசையிற் சகடதண்டம் வளைத்து, மேற்கூறிய பத்மவியூகத்துக்குத் தென்கிழக்குத் திக்கில் சர்ப்பக்கொடி தரித்த துரியோதனனையும், அவனுடைய தம்பிமார் களையும், நால்வகைப் படையாகிய அரண்மனைச் சேவகரையுங் காவ லாக்கி, அவர்களுக்கு மேற்றுணைக் காவலாய் அக்கினிக் கோட்டை அமைத்திருப்பதுபோற் சமரதத் தலைவராகும் விராதன், அதுவிந்தன் முதலாகிய தேச ராஜர்களைத் திருத்தி, வடகீழ்த்திசையிலமைத்த பத்மவியூகத்துக்குப் பங்காளம், யுகந்தரம், மராடம் மிலேச்ச முத லிய தேசத்தினராகிய மகாரதத் தலைவ ரென்னும் வல்லமைசாலிகளை நிறுத்தி, தென்மேற்றிசையி லமைத்தபத்மவியூகத்துக்கு மலையாளம், சோரம், சோழம், பாண்டியம், சீனம் முதலிய மன்னரையும் அர்த்த ரதத் தலைவரையும் முன்னுறவமைத்து, இவையல்லாமலும் அழகு பொருந்திக் குவிந்திருக்குந் தேர், யானை, குதிரை, காலாள் இவை களுடன் கலந்த கைத்திறனுடைய வித்தகரை யெல்லாங் கொடுமுக வியாக்ரதுண்ட மென்னும் வியூகசாஸ்திரத்தின் வண்ணம் பிரித்து, கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கென்று சொல்லிய எண்டிசையிலுங் காவலாக நெருக்கி, தங்களிடத்திலிருந்த அதிரதர், மகாரதர், மந்திரி, சாமந்தர் பட்டவர்த்தனர் முதலாகிய சேனைகளை யெல்லாஞ் சூசிகா வியூ கத்தின் முன்னே நிறுத்தினர்.

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே ! இவற்றுள் முதலாவது சூசிகாவியூக மென்பது துவாரமும், ஈளமும், கூர்மையு முடைய ஊசியைப்போன் றிருப்பது; இரண்டாவது சக்ரவியூக மென்பது, உருளையைப்போன் றிருப்பது, மூன்றாவது, பத்மவியூக மென்பது, தாமரைமலர்போன் றிருப்பது. நான்காவது சகடதண்ட வியூக மென்பது, வண்டிற் சக்கரத்துக்குத் தண்டாகிய வட்டைபோன்

நிருப்பது, ஐந்தாவது, கொடுமுக வியாக்ரதுண்ட வியூக மென்பது, எட்டுத்திக்கினு நிறைத்து வைத்த கட்டுக்கோப்பினை யுடையதாய்ப் புலிமுகம்போன் நிருப்பது. இந்தப்படியாகச் சேர்த்து ஐந்துவகை வியூகமாக அமைத்து, அச்சேனைகளின் சிரசுக்கு சுவரத்ன கிரீடந் தரித்ததைப்போல் சுந்தியாவட்டை மாலையணிந்த சுரேந்திரனைவன் அக்கினி மூலக் கதிபதியாய் நின்று பிரகாசிக்க, அத். தென்கீழ்த் திசையிற் பாண்டவப் படைகள் சீறிக்கொண்டிருக்குந் தன்மையைச் சேனு நாயகனுகிய சிலைக் குருவானவர் அறிந்து, ராக்ஷசப்படையை வகுத்தமைக்குந் திறத்தைக் கொண்ட சுக்கிராச்சாரி இவர்தா னென்று சொல்லும்படியாய்ப் பதினுயிரந் தேராளிகள் தம்மைச் சூழ்ந்து நிற்க அர்ச்சுனன் வருகிற வழிக்கு தோய்ச் சகடதுண்ட வியூகமுனையிற் சர்வ சம்ஹாரிபோல நின்ருர். இவ்விதமாகத் துரோ ணுசாரிய நிருக்குங் காலையில், துன்மருட னெனும் வன்மனத் தோன்ற லானவன் குதிரைகளிலேயும் யானைகளிலேயும் ரதங்களி லேயும் கணக்கில்லா மன்னர்களிலேயு மேலாகச் சிறந்துள்ளவன், வில், வேல், வாள், கதை, கணைமுதலிய ஆயுதங்களைக்கொண்டு ஊசி நுழைய இடமில்லை யென்று சொல்லும்படியாக நெருக்கங்கொண்ட இரண்டு லக்ஷம் சேனைகளைச் சொந்தமாக வுடையவன். அவன் திரண்டு புரண்டு வரும்படியாகிய அச்சேனைகளுடன் வந்தான். அவனைத் துரோணுச்சாரியர் கண்டு சந்தோஷங்கொண்டு அத்தத்துன் மருடனுடைய சேனைகளை அணியிற் சேர்த்து வகுக்க எத்தனித்த போது அவன் கூடாதென்று தடுத்து, "ஓ சேனுதிபதியே! கும்பலிற் கோவிந்தம் போடுவதற்காகவா என்சேனைகளை அணியோடு சேர்த்து வகுக்கப் போகிறீர்! இஷ்டனுகிய துரியோதன ராஜனுக்குப் படைத் துணையாய்வந்த துன்மருடன் துரோணுசாரியருடைய ஒட்டி யிருந்து ஜெயித்தா னென்னும் பேர் பெறுவதைப் பார்க்கிலும் (விழுந்தாலு மெழுந்தாலும் வேறு தொடக்காகாது) என்பது போலும், (கொள்ளைக்குப்போனுலும் கூட்டாகாது) என்பதுபோலும் உம்முடன் கலக்காமல், என் சேனைகளும் நானும் பாண்டவர்களை வென்று மூனைமுகத்தினின்று சயித்தவனைக் காக்கிறேரும். எங்கள் தாணியைப் பாரும் துரோணரே" என்று வெகு அலக்ஷியமாகப் பேசிச் சேனுபதி யேற்படுத்திய வியூகத்தருகிற் போகாமல் அத் துரோணுசாரியரையும் பின்னுகச் செய்து, அவர் கட்டிய சகட துண்ட வியூகத்திற்கு முன்னே போய்த் தூசிப்படையாய்நின்று "சண் டைக்கு வருபவரெவரோ அவர்களெல்லாம் வாருங்கள், என்னிடத்

திலே தப்பிப் பிழைத்துப் போனபோதல்லவோ துரோணாசாரி முதலிய பேரிடத்தில் யுத்தஞ் செய்யப் போகிறீர்கள். இன்றைக்கு ஒருவருக்கும் வேலையில்லாமற் செய்து போடுகிறேன்" என்று வீரா வேசத்துடன் கோரிய சபதங்கள்கூறி எல்லாரும் பின்னுகத் தான் மாத்திரம்முன்னுகி முனைமுகத்தினின்றான்.

அந்தத் துன்மருடன் இப்படி நிற்கவே கிருதவன்மனும், துச் சாதனனும் மிகுந்த கோபமுடையவர்களாய் கமக்கென்ன பல மில்லையா? கரனை வெல்ல வல்லபமில்லையா? சத்துருவாகிய அர்ச் சுனன் வருவானுகிற் சூரியனஸ்தமிக்கிற வரையில் முனைந்து பாணப் பிரயோகங்களை விடுத்து இந்த வியூகங்களுக்குள் அவனை நுழைய வொட்டாமற் றடுத்து நிறுத்துவது எங்களுடைய பெரிதாகிய கடமை யென்று வெற்றிபெற்ற கைக்காரராய வீரர்களுடன் தேவர்களும் வெருவும்படி வந்து, துன்மருடனுடைய தூசிப்படையைப் பின்னுக் கித் தங்கள் படையை முன்னுக்கிக் கொடிப்படையாய்க்கூடியிருந்தார் கள். இவையல்லாமலும் சிலம்பத்திற் பலம்பற்றி கலம்பெற்றிருக்குந் தீரர்களிற் சிலர் சக்கரம், முசுண்டி, கப்பணம், கவண், கதை, கத்தி, தோமரம், எழு, கொழு, மழு, கழு, தண்டு இவைகளை இருகரத்திலுங் கொண்டு எறியும்படியாகிய குண்டம் ஒவ்வொருவருக்கு முண்டான வர்களாய்க் கொலை புரியும் வாள் குணத்தொனியுடன் கூடிய வில், கத்தி, கட்டாரி, குத்தீட்டி, எறிபீட்டி, வாங்கு, சாங்கு, பல்லய முதலிய ஆயுதங்களை யெல்லாமுங் கரத்திற் பிடித்துப் பாய்ந்து, விக்கிரமத்துடன் கொக்கரித்துக் கூவி, விதிவிதிர்த்து நம்மோடு பயமில்லாமல் வந்து எதிர்ப்பவர்கள் இனி யெவர்க ளிருக்கின்றார்களென்று தெழித்துப் பழித்து இறுமாந்து சிறந்து, தங்களைத் தாங்கள் மறந்து கெருவித்திருந்தார்கள். அக்காலையில் நேற்றிராத்திரி 'இன்று முப்பது காழிகையும் எவ்விதத்திலாவது சயித்திரனை நான் காக்கிறேன்' என்று துரியோதன மகாராஜ னுடன் சொல்லியபடி துரோணரானவர் அவ்விடத்தில் அருமையாக வமைத்த வியூகத் திறத்தைக்கண்ட ஆகாய வாசிகளாகிய தேவர்க ளெல்லோரும் ஆச்சரியம் அடைந்து, "சந்தன குங்கும பாளித கடக கங்கண அலங்கிர்த சிகர மலைபோன்ற புயத்தினையுடைய சிந்து ராஜனை நெருப்பைபோற் சிவந்து கொத்துக் கொத்தாகிய எதிர் ரோமம் வாய்ந்த தனஞ்செயன் கூறிய சபதப்படி யுத்தஞ் செய்து வெற்றியடைவது மெத்தவருத்தம்; இவனால் முடியத்தக்க தல்ல" என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அர்ச்சுனன் தருமராஜனுக்குச் சாத்தகியைக் காவலாய் வைத்துத் தான் யுத்தகளம் புகுதல்

அந்த வேளையில் யுத்தத்திற்குப் புறப்படும்படியாக எத்தனித்து யுத்த கோலங்கொண்ட அர்ச்சுனராஜன், ஆழமு மகலமு முடைய சமுத்திரவோசை அடங்கிப் போகும்படியாய் ஆரவாரித்துப் பெருக்க நெருக்கத்துடன் அணிவகுத்திருக்கின்ற எதிரிகளின் சேனைகளைக்கண்டு இருதயங் கலங்காது பல்லாண்டு பல்லாண்டாகிய வாழ்வைப்பெற்ற பரந்தாமனுடைய தம்பியென்னுஞ் சாத்தகியைத் தன்னுடைய தேர்மேலேற்றி வைத்துக்கொண்டு "தநுர்வேதிய ரென்னுந் துரோணாசாரியருடைய வில்லின் டங்காரத்தொனியையும், ஐவித வியூகபந்திப்பையும், அவர்களின் சிந்திப்பையும், அந்தச் சேனைகளின் சிறப்பையும், அவைகளின் முறப்பையும் பார்த்தீரா? அதாவது என்னெண்ண மெவ்வண்ண மவ்வண்ணமாக அமைந்திருக்குஞ் சாத்தகியான மன்னனேகேளும்—ராஜாதிராஜனுகிய துரியோதன மஹாராஜன் துரோணாசாரியருக்குச் சேனாதிபதிபட்டங் கட்டியபோது நமது தர்மரைப் பிடித்துக் கொடுக்கும்படியாய்க் கேட்க, அப்படியே கைப்பிடியாய்ப் பிடித்துத் தருகிறேனென்று வாங்கொடுத்திருக்கின்ற வாக்கியம் அவர் சேனாதிபதியாகி வந்த இம் மூன்றுநாளிலுந் தப்பிப் போய்விட்டது. ஒருவேளை இன்றைக்கு நானில்லாத வேளையிற் போர்செய்யப் புகுந்து தருமராஜனைப் பிடித்துத் தன்னுடைய சொற்றிறத்தை விற்றிறத்தால் எத்திறத்தினும் நிறைவேற்றுவார்போலு மிருக்கின்றது. ஆதலால், கொந்தலர் மாலையுஞ் சந்தனக்குழம்பு மணிந்து குவிந்த தோளினை யுடைய சாத்தகி! நான் இன்றையதினங் கூறிய சபத முடிப்பதற்காக வீறிய சேனைகளைக் கூறுபடுத்தும்படி தேறிய விற்பிடித்து மீறிய ரதமேறிச் செல்லுகின்றேன். இவ்விடத்தில் தருமராஜன் பேரில் வராகின்ற தநுர்வேதியனை ஒய்ந் தொடுங்கச் செய்யும். வில்வல்லமையில் ஆய்ந்துணர்ந்த அறிஞராகிய உமக்கொப்பாக எவர்களிருக்கின்றார்கள்? ஓ எனக்குரிய உத்தமரே! இப்பொழுது சிந்துதேசாதிபனுகிய சயித்திரதனைக் கொல்லுதலும், தருமராஜனைக் காத்தலுமாகிய இவ்விரண்டு காரியங்களில் நம் நாயகனுகிய தருமபூபதியைக் காப்பாற்றுதல், உம்முடைய கடனும். அந்தச் சயித்தவனை இன்றை

யப் போரில் முடிப்பது என்கடனும்" என்று சொல்ல, சாத்தகி மகிழ்ந்து, கட்டுத் தறியைப் பிடுங்கி மதம் பொழியும் யானைபோ லெழுந்து விஜயனைப்பார்த்து, "ஐயா! தேவரீர் தருமராஜனைக் குறித்து யாதொன்றும் கினைக்கவேண்டாம். அவர்கள் வருத்திருக் குஞ் சேனையணிக்குள் அதிசீக்கிரமாகப் புகுந்து, தகுந்த போர் புரிந்து, சிந்து ராஜன்தலையைக் களைந்து, சபதமொழியிற் சிறந்து, சந்தோஷமாக வாரும்!" என்று இன்னும் பலவித வீரப் பிரதாபங் களைச் சொல்லி, விடை பெற்றுக்கொண்டு, தன்னுடைய தேரின் பேரிற் புலிபோற் ரூவி யேறிச்சென்று தருமநந்தனருடைய நிழற் சாயைபோல் அவரைவிட்டுப் பிரியாமற் காத்திருந்தான்.

இப்பால் அர்ச்சுனராஜனவன் வெற்றி பொருந்திய கொற்றவ னுகிய தருமராஜனுக்கும், உத்தமனுகிய பீமசேனனுக்கும் நமஸ் காரஞ் செய்து, தம்பிமார்களை கட்டித் தழுவிக்கொண்டு, பந்துமித்தி ரர் மந்திரி முதலிய மன்னவர்களுக்கும், சேனுதிபதியாகிய மைத் துனர்க்கும், மெத்தவும் உபசாரஞ் சொல்லி, தமையனைக் காக்குங் காரிய வுண்மைகளைத் தெரியச் செய்து, அவர்கள் கையில் விடை கொண்டு, தன் கையிற் படைகொண்டு, சகஸ்திரதள கமலம்போல் முகமலர்ந்து மகிழ்ந்து உத்தமோசா உதார்மன் என்னும் மைத்துன ரிருவருந் தன்னுடைய தேருக்குச் சக்ரரக்ஷகராய் இருபுறத்தி லோடவும், அறுமத்துவசம் ஆடவும் ஜகத்காரண வித்தகனுகிய சாரதி தடந்தேர் செலுத்தவும், கழனிகளிற் சேற்கெண்டைகளும் வாளைகளுங் கலந்து பிணங்கும் நீர்வள நிறைந்த சிந்துதேசத் தலை வனைக் கைக்குள்ளடங்கும் பொருளேப்போற் பாதுகாத்துக் கொண் டிருக்குங் காவலரென்னுஞ் சத்துருக்கள் பேராணியாய் நிற்கும் அத்திசையை நோக்கி, திரிலோகங்களையுந் தாவித்தத்திவரா நின்ற சுவேதவாம் புரவிபூட்டிய இரதத்தைச்செலுத்திவந்து, துரியோதன மகா ராஜனுடைய சேனைகள் காதவழிக்கப்பாற் கலங்கிக் கருகிப் போகும்படியா யெரிக்குங் காடாக்கினியைப் போற் கண் சிவந்து கடுங்கோபங்கொண்டு, விஜயகாண்டீப வில் நாணிதெறித்து, திசை கள் மயங்கத் தேவதத்த முழக்கினன். அப்போது ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியானவர் உலகத்தை அழிக்கும்படியா யெழுந்த ஊழித் தீயைப் பின்னும் ஓங்கி வளர்ந் தெரியச் செய்யும் உகாந்த வாடைக் காற்றின் பேரோசையைப்போல் அண்டர்களெல்லாந் துதிக்கும்படி யான தமது பாஞ்ச ஜன்யத்தை முழக்கினர்.

அர்ச்சுனனுல் துரோணர்கட்டிய வியூகங்கட்குமுன் தூசிப்படைகொண்டிருந்த துன்மருடனுந் துச்சாதனனு முறிபட்டோடுதல்

ஓ மகாராஜனே ! இவர்களிருவரு முழக்கிய சங்கத்தொனி யிஞல் திசையானைகள் பொறுத்த திக்குகளிடிந்து வெருத்து, தேவர்களொடுங்கிக் குறு குறுத்து, குருகுலாதிபர் முதலாகிய சேனை களெல்லாங் குப்புற்று வீழ்ந்து வியாகூலங்கொண்டு தாழ்ந்தார்கள். அந்த வேளையிற் பூமிதேவியின் பாரநீங்கப் பிறந்த பேரொளிபோன்ற அர்ச்சுனன் அநுமக்கொடி காட்டிய தேரைச் செலுத்துஞ் சாரதி யாகிய ஆபத்பாந்தவனைப் பார்த்து, " சுவாமீ ! துரோணுசாரியர் கட்டிய வியூகத்தின் கொடிப்படையை நான் காக்கிறேனென்று இறு மாப்படைந்து வெற்றிக்கொடி பிடித்து வந்திருக்கின்ற துன்மருட னுடைய யானைப்படையின்மீது, விடுந்தேரை " என்று விரைந்து கோபித்து விளம்பினன். அந்த க்ஷணமே பெருமை பொருந்திய ஆப்தனுகிய மாதவன் " அப்படியே ரதத்தைச் செலுத்துகிறேன் அர்ச்சுன ! " என்று சற்று நிதானித்து, பூமி கிடுகிடென்றசைய இடங்கொண்ட தேரைக் கடகடவென்று செலுத்தினர். உடனே தனஞ்செயனனவன் விகடதட கடகரிகளெல்லாம் படபடவென் றலையக் கடுங்காற்று மின்னலு மடங்காமற் காட்டி, ஏழுமேகமும் ஊழியிற் பொழிவதுபோல் தேவாஸ்திரங்களைத் தீப்பொறி பறக்க விடுத்துச் சிதறவடிக்கும்போது, அந்தத் துன்மருடனுடைய கால் வகைச் சேனைகளும் அலைகாற்றிலலைந்து முறிந்த மரம்போல் ஆவி யழிந்தார்கள். இவ்விதமாகத் தன்னுடைய சேனைகள் கலைவிரிகோல மா யழிவதைத் துன்மருடன் பார்த்துச் சகியாதவனுய்த் தன் தேரைச் செலுத்தி, தனஞ்செயனை மறித்து, சந்திரக்கணை, இந்திரக் கணை, மந்திரக்கணை முதலிய அனேக பாணங்களைத் தொடுத்து, அர்ச்சுனனுகமும் சாரதிதேகமும், குதிரைகளினங்கமும் நிறைத்து மறைத்து அவன் றொடுக்குங் கணைகளையுங் குறைத்து முறித்தான். அதுகாலையில் இதழ் விரிந்த மலர் நிறைந்த மணமாலையணிந்த பற் குணனனவன் அழல் சொரிந்துவரும் அக்கினியாஸ்திரத்தை வீசி, முன்பின் பாராமல் பக்கத்துக்காயிரம் பகழிகளை யேற்றித் தாறு மாறுகத் தூறுசெய்தபோது ஆறுபோலுதிரஞ் சேறுடியோடச் சக் கரம், இருசு, குத்துக்கால், கொடுங்கை முதலிய ரதமுமெரிய, சாரதிகளுங் குதிரைகளுஞ் சாய்ந்துமடிய, பன்முகத்திலும் வாடிய

துன்மருடன் தன்னுடைய வில் முறித்து யுத்தமுகம் விட்டுத் தன் முகத்துக்கு நேராய்ப் புறமுதுகிட் டோடிப் பதுங்கினன்.

உலகுக்கொரு சுடரா யுதித்தருளிய சூரியபகவானை மூடிமறைக் கும் பனிபோல் வந்தடுத்துப் போர்கொடுத்த துன்மருடனைவன் புறத்தந் தோடுவதைத் துச்சாதன னெஞ்து கண்டு, அச்சாணி போல்வந்து நின்று அர்ச்சுனனைத் தகைத்து யாவருமிப்போர்ப்பட்ட அஸ்திரங்களைத் தொடுக்க மாட்டார்களெனத் தேவருங் கலங்கத் திக்குகளொடுங்கத் திருகம்பு, சொருகம்பு, உருகம்பு முதலிய தீக் கணைகளைப் பொழிந்தான். இப்படியாக துச்சாசனன் தொடுத்த இணையற்ற பாணங்களையும், அவன் கைப்பிடித்த வில்லையும், எரியில் வீழ்ந்து தீய்ந்த சருகைப்போற் கருக்கி, அவனுடன் கூடிவந்த சேனை களின் மீபரில் மலையருவிபோல் இரத்த வெள்ளம் பெருக்கி அவ னுடைய தலைமுதற் காலளவுஞ் சல்லடைக் கண்களாக்கி, வீரபட் டத்தைப் போக்கி, வில்லையு முறித்து, தேரையுமழித்து, சாரதி குதிரைகளையு மொழித்து, கவசத்தைக் கிழித்து கலங்கச் செய்யும் போது, காண்டீபனுக்கு முன்னிற்க மாட்டாமல் கலங்கிப் பயந்து காலோட்டங் கொண்டான். இந்தப் பிரகாரந் துரியோதன மகாராஜ னுடைய தம்பியானவன் மானம்போனற் போகட்டும் பிராணனிருந் தாற் போதுமென்று உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிப்போன பிற்பாடு, செந்தாமரைக் கண்ணனுகிய திருமால் சமயமறிந்து அர்ச்சுனனுடைய தேரைச் செலுத்தவே மழைசொரியு மேகம் போன்ற கீர்டியானவன் வாசாமகோசரமாய் வரிபெற்ற கூர்ங்கணை களை வாரிச்சொரிந்து வாகினியைச் சேதிக்கத் தொடங்கினன். அப் போது கரங்களைத்தனை சிரங்களைத்தனை உரங்களைத்தனை கொடு மரங்களைத்தனை ? நெடு நரம்புகளைத்தனை ? எலும்புகளைத்தனை? கால்களைத்தனை? தோள்களைத்தனை ? உடல்களைத்தனை ? குடல்களைத்தனை ? ஐயா மகாராஜனே ! நான் செய்யும் யுத்தத்திற் சரங்கள் கொய்தறுத்ததை இவ்வளவென்று அளவிட்டுச் சொல்ல முடியுமோ ? ஒருக்காலு முடியாது. மேலும் வீரப்பட்டங்களை யுடைய யானைகளெல்லாங் கெட்டழிந்து பட்டன: அட்டதிசையும் அரைநொடியில் வலம்வருங் குதிரைக ளெல்லாம் எரிந்து கரிந்து போய் விட்டன. வட்டமான சக்கரங்களையுடைய நவமணி யிழைத்த ரீளமாகிய ரதங்களெல்லாங் பரிகளோட்டுஞ் சாரதிகளுடன் நெரி பட்டழிந்தன. விஸ்தாரமாகிய தசைகளும் நரம்புகளும் நிணங்க

ளுடன் பிசறிக்கொண்டு கால் கொண்டோடும் இரத்த வெள்ளங் களிற் கலந்து களகளவெனவோசையுடன் காலாட்களெல்லாம் சுழி சுழித்துச் சரிந்தன.

இவ்விதமாகத் துரிப்படையை நாசப்படுத்திய கீரீடியானவன் மனமழன்று யுத்த முனையினின்றெழுந்து ஓடாகின்ற துச்சாசனைத் துரத்தித் தொடர்ந்து அடர்ந்து மூடுக்கி, "ஓ சகல தருமமுந்தெரிந்த சத்தியவானே, தாணீசனுகிய துரியோதனனுக்குத் தம்பியான வனே! போர்முகத்தில் நேராக நின்று போர் புரியாமல் புறங்கொடுத் தோடலாமோ, இதென்ன புண்ணியமா அல்லது புருஷார்த்தமா? கல்லது உலகத்திலுள்ளோர் யாவரும் உங்களை நிந்திக்கும்படியாய் நீ ஓடுகின்றாயே! இதனு லேதாகிலும் உனக்கு லாபமுண்டா? நீ ஓடு கிறதினுல் உன்னுயிர் தப்புமா? நீ பிழைக்கும்படியாகிய விதங்களு முண்டா? அப்படி யுண்டானுற் சொல்லும். சும்மாவிருந்த எங்களை யழைத்து வம்புவிலைத்துச் சூதாடிய நாளையில், இரும்பைப் பார்க்கி லுஞ் சிறந்த எங்களைத் துரும்பைப் பார்க்கிலுந் துரும்பென்று அவ மதித்துச் சொன்ன கொடிய குற்றமாகிய கோடாகோடி வார்த்தை களையு மறந்து வில்லாயுதங்களாற் கொல்லும்படியாகிய போர்முகத் தில் வல்லமை யழிந்து சொல்லாமற் கலங்கிப் புறமுதுகிட்டு ஓடுதல் உன் பெருமைக்கடுத்ததோ? ஐயோ! அப்பா இராஜசபையிற் கொள்ளி போற்றுள்ளிய உன் புஜபல ப்ராக்கிரமத்தை எங்கே கொட்டிப் போட்டாய்? எவ்விதத்தி லொழித்து விட்டாய்? சொல் லும் ஏந்தலே! ஒருகுலத்திற் பிறந்த சகோதரனென்னும் அன்பு கெட்டு உலகத்தினிறைந்த உயிரனைத்தையும் அழிக்கும்படியாய் உனக்கு முன் பிறந்த துரியோதனன் முன்னுக முடிந்து, நீயும் அவனுக்குப் பின்னுக மடிந்து, குலத்திற் பிறந்த அரசர் முதலிய யாவரையும் போரறக்களையப் பிறந்த பெரும் பாவியாகிய உன் பிராணனுக்கு என்ன சவுக்கியங் கிடைக்கு மென்று ஓடுகிறாய்? நீ எவ்வளவு தூரமோடினுலும் தப்பிப் பிழைப்பாயா? அடா பேயா! ஓடாதே! ஓடாதே!" என்று இரண்டு வச்சிரக்கணை யெடுத்துத் துச்சாசனனுடைய முதுகைத் துளைத்தோடும்படியாய்த் தொடுத் துக் கடுகடுத்து நின்றான். அதுசமயம் துச்சாசனனுனவன் அர்ச்சு னன் கொல்லுவா னென்னும் பயத்தினுல் திரும்பிக்கூடப் பாராமல் தியக்கமும் மயக்கமுங்கொண்டு சேனுபதியாகிய தேசிகனிடம் போய்ச் சேர்ந்து, துரிப்படையினின்ற தன்மருடன் அடிபட்

டோடியதும், அவனுக்குச் சகாயமாகத் தான்போயெதிர்த்துத் தன்னுடையகதி இப்படி யாயதும், சொல்லிக் கொண்டிருக்கும் போது நீலமேகச் சாமளவர்ணஞகிய நெடுமாலானவர் தங்களுக்கு நேராகத் தேர்மீதிருந்த துரோணாசாரியருடைய பக்கத்தில் தம் தேரைக் கொண்டுபோய் விட்டார்!

அர்ச்சுனன் தனக்கு வழிவிடமாட்டே னென்ற துரோணரை வஞ்சித்துப் போர்ச்செய்து மீண்டும் விடைத்ரப்பெற்றுக் கொடிப் படைக்குட் புகுதல்

அந்தவேளையில் அர்ச்சுனராஜன் ஆசாரியரைப் பார்த்து, இருகரத்தையுஞ் சிரத்திற் குவித்து வணங்கி "ஓ எங்கட்கிறையாகிய திங்கட்பிறை போன்ற தேசிகனே! எனக்குத் தாயும், தந்தையும், குருவும், தெய்வமும், என்றமையஞகிய தருமராஜனும், தேவரீருஞ் சரியென்று ஒரே தன்மையாய் என்னுள்ளத்திற் கொண்டிருக்கின்றேன். ஓ தகுதியையுடைய தயாளுவே! சர்வஜீவ தயாபரனளித்த சுப்பிரமணியக் கடவுளுக் கொப்பாகும் வல்லமையிற் சிறந்த தீரஞகிய அசுவத்தாமாவும் யானும் ஒன்றென்று வேற்றுமையில்லாமல் தேவரீர் மனதுட் கொள்ளவேண்டு மென் சற்குருவே!" என்று சொல்லித் துதித்து, "சுவாமீ! தேவரீருட னெதிர்த்து யுத்தஞ்செய்யுந் திறத்தினையுடையவனல்லேன். மேலும், சிந்துராஜனைக் கொல்லவேண்டி யிருப்பதினுற் காலதாமச மாகாதபடி தேவரீர் செலவுகொடுத்து விடவேண்டும்" என்று வணங்கிக் கேட்க, துரோணாசாரியர் வெகு சீக்கிரத்திற் புன்னகை நகைத்து "ஓ திடவானஞகிய விஜயனே! ராக்ஷசப் படைக்குட்புகுந்து நாசப் படுத்துவதற்குச் சந்தேகமறச் செல்லுஞ் சக்ரதரனைப்போல், இப்போது நான் அணிவகுத்திருக்குஞ் சேனைகளெல்லா மிறக்கும் படியாக அடித்துப் படைமுகம் புகுந்து போவதற்கு என்னைச் செயித்துப் போனுற் போகலா மல்லது என்னை இரக்கமாகக் கேட்டுக்கொண்டு நீ போகவுங்கூடாது! உள்ளே நுழைவதற்கு நானுன்னை உயிருடன் விடவுமாட்டேன்!" என்று வரமும், ஸ்திரமும், பலமும், நலமும் பெற்ற கல்லுக் கொப்பாகிய வில்லைவளைத்து, கனபடலங்கருகிப் பெருகும்படியாய்க் கணைகளைத் தொடுத்தார் துரோணாசாரியர்.

அதுகாலையிலவரை அர்ச்சுனன் பார்த்து, "ஐயா! இத்தனை சொல்லியும் ஆசாரியராகிய தேவரீர்பேரிற் கையெடுக்கச் செய்கின்றீரா காரணனே!" என்று காண்டீபத்தைக் கலகல வென்றசைத்து, கருக்காகிய கடுங்கணைகளைத் தொடுத்து விடுத்து, நெடுநேரம் வரையிலவ்விற்குரு வியக்கும்படியாய்ப் போர் செய்தான். அப்போது சேனைகளெல்லாம் அர்ச்சுனனுக் கெதிர் நிற்கமாட்டாமல் முனை குலைந்தலைந் தழிந்து பறக்க, அந்தச் சேனைகளின் மத்தியில் நின்ற துரோணாசாரியருக்கும் விஜயனுக்கும் விஸ்தாரமாகிய யுத்தம் நெருங்கி நடந்தது. இவர்களுடைய தேரிற்கட்டிய குதிரைகளொன்றோடொன்று மேக கர்ச்சனைபோல் இரைந்து கனைக்கவும், மலையுடன் மலைகூடி மலையுந் தன்மைபோற் கொடிகள் கட்டியதேர் குலுங்கிச் சுழலவும், முஷ்டி நிலையாலும், கைப்புஷ்டி நிலையாலும், மொய்ம்பாகிய பலத்தினாலும், அன்பாகிய கலத்தினாலும், வளைத்த வில் நிமிராமல், தொடுத்த பாணங் குறையாமல், மனமிளைக்காமல் வாட்டமாய்க் களைக்காமல், ஒருவருக் கொருவர் கிட்ட நெருங்கித் தொட்ட பகழியாலும், முட்டவிட்ட கணைகளாலும், ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு அஷ்டதிசைகளும் கெட்டியுறும்படியாகிய தல்லாமல், இவ்விருவர் பேரிலும் பாணம் படாமற்றட்டிக் கொண்டார்கள். இவையன்றியும், இவர்களுடைய இரண்டு தேரும் இடசாரி வலசாரி வலசாரி இடசாரியாகத் திரிந்து, மூன்றுட்டம் பின்னுட்டமாக முடுகி, இருவர் கரத்திலும் பிடித்த வில்லிலிருந்து புறப்படும் வாளிகள் ஒருகோடி, இருகோடி, முக்கோடி, நாற்கோடி, ஐங்கோடி, அறுகோடி என்று வரவும், இரண்டு மேக மெதிர்த்துச் சமமாய்ப் பொழியு மழையைப்போல் அஸ்திரங்களைப் பொழிந்து ஆக்ரமித்துப் பராக்கிரமங்காட்டி, ஒருவருக் கொருவ ரொப்பாக நின்று யுத்தம் பண்ணினார்கள்.

ஏகன் முதலிய தேவர் மூவருமயங்க, நாகம் முதலியலோக மூன்றுங் கலங்க, சாகரமுதலிய எழுந்தயங்க, சக்ரவாளகிரியுங் குலுங்க, தடதட படபடவென்னுஞ் சப்தத்துடன் சண்டைசெய்து வரும்போது; சாக்ஷாத்கார சாரதியானவர் தனஞ்செயனை நோக்கி, "ஓ போர்புரியும் பெரியவில்லைத் தாங்கிய புகழ்வீரா! திரிபுரதகனரருள்பெற்ற ஐயரூரா! இப்போது நாமிருக்கு மிடத்துக்குஞ் சயிந்தவனிருக்கு மிடத்துக்கும் இருபது யோசனை தூர மிருப்பதால், நீ யெந்தக் காலத்திற்போய்ச் செயிக்கப்போகிறாய்? இங்கே

தானே வீண்பொழுது போகுமே " என்று மனந்தளராமல், சுவேதவாம்புரவியைத் தட்டி மூடுக்கி, துரோணாசாரியருடைய தேர் குலைகுலைந்து போகும்படி கிட்ட நெருங்கி, கொடிப்படைக் குள்ளாகத் தேரைச்செலுத்தி, கண்மூடிக் கண் திறப்பதற்கு முன்னே இந்திரஜாலமாயம் இதுவென்னும்படியாய் எதிரில் நின்ற விஜய னுடைய ரதத்தை வாயுகதிகொண்ட வேகத்துடன் விண்ணவரு மயங்கக் கண்ணுக்கெட்டாத தூரம் கொண்டுபோனார். அப்போது துரோணாசாரியர் பார்த்து ஆர்ப்பரித் தெதிர்த்து, தமது தேரைச் செலுத்திப் பின்தொடர்ந்து வளைத்து, "ஆ! ஆ! கல்ல காரியஞ் செய்தனை அர்ச்சுன! திருடனைப் போலோடி வந்து விட்டாய்! இதென்ன தீரம்" என்று மண் கொதிக்க விண்கொதிக்கக் கண் கொதித்து மனமழன்று மந்திரவாளிகள், சந்திரவாளிகள், இந்திர வாளிகள் முதலியவைகளைத் தந்திரமாக விடுத்தெதிர்த்தனர். அவ்வாறெதிர்த்த ஆசாரியரைத் திரும்பிப் பார்த்து விரும்பிப் பணிந்து " என்னையனே ! தேவரீருடனெதிர்த்து யுத்தம் செய்யும் பக்குவம் தேவர்களாலு மாகாதென்றுல் நானெம் மாத்திரம் ? சுவாமி ! தேவரீருடைய செந்தாமரை மலரைப் போன்ற திருவடிகளைச் சிரத்திற் றரித்துச் சீர்பெறும்படியாய்க் காத்திருக் கின்ற அறியாதவன். ஆகையால் என்னுண்டவனே! இன்று மூப்பது நாழிகைக் குள்ளாகச் சயித்திரதனை வென்று வருவேனென்று நான் கூறிய சபதமொழிக்குப் பழுதுவராமல் ஆசீர்வதித்து அனுப்ப வேண்டும். ஓ அருட்குருவே !" என்று அருச்சுனன் துதிக்க ஆசாரி யனவர் குலுங்க நகைத்து ஐன்மாந்திரக் குறையையு நினைந்து, பாணப் பிரயோகஞ் செய்யவந்த கோபமாறி, பார்த்திப னென்னும் பக்குவ முகிய விக்கிரமனுக்குப் போய்வாவென்று விடைகொடுத்து விட்டுப் போனார்.

அர்ச்சுனன் கொடிப்படையின் முன்னணியில் நின்ற கிருதவன்மனை முறிய அடித்தோட்டுதல்

அப்போது பரமேச்வரனுல் பாசுபதாஸ்திரமுஞ் சத்துருக் களைச் செயிக்கும் படியாகிய வரங்களும்பெற்ற பற்குணன் படபடா காரத்துடன் தேரைச் செலுத்திப் படைகளைச் சேதித்துக்கொண்டு புகும்போது காம்போஜன் முதலாகிய காவலர்வந்து தடுத்துக்

கணைகளை விடுத்துச் சண்டை செய்தனர். அக்காலையிற் காண்டீபனும் அவர்களை வளைத்துக் காலாக்கினிக்கு ஒப்பாகிய கணைகளாற் கருக்கி நிறங்குலைத்து இறக்கும்படியாய்க் கசக்கினன். அப்படி கடும் போர்புரிந்த காண்டீபனுடைய கணைக்குத் தாளமாட்டாமற் பயந் தொடுங்கி உள்ளங்கூசிப் போனார்கள். அப்பால் நான்கு புறத்திலும் கெருங்கி நின்ற கால்வகைச் சேனைகளையுங்கொன்று, நானுவீரரும் கடுகடுங்கும்படியாக வென்று, ஆங்காங்கு பேரணியாக நின்ற பிரபலவீரரை மடக்கிப் போர்புரிந்து தனது தேருக்கு நேராகவந்து யுத்தமுனைகடோறு முந்திப் போர்செய்யா நின்ற மன்னர் மன்னர் களுடைய வில்லும், வேலும், வாளும், சூலமும் சின்னபின்னப் படும்படி சிலீமுகங்களாற் சேதித்து அப்பால் நடக்குந் தனஞ்செயன் இன்ன தன்மையை யுடையவனென்று சொல்லவல்லவ ரெவர்களு மில்லை யென்றுரைக்கும் படியாய் வெற்றிகொண்டு வந்தான். அப்படி வரும் விஜயனைக் கண்ட கிருதவன்மனுங் கிரீடப்பிரகாசமுடைய மன்னரும் அவனெடுதிர்த்துப் போராடும்போது பன்னக சயன னுகிய பார்த்தசாரதியானவர் பற்குணனைக் கோபித்து "இவ்விடத்தி லொருதாழிகையாய் விட்டது. இன்ன மென்ன தாமசமாக இருக் கின்றாய்? அர்ச்சுன! வேறுயோசனை செய்யாமற் பின்னமாகும்படி கொல்" என்று பெருமானுரைக்க, அவர் சொன்ன சொல் வாய் விட்டு வெளிப்படுவதற்கு முன்னமே சுடுசரந் தொடுத்துக் கிருத வன்மனுடைய மார்பைக் கிழித்தான்.

அந்தச் சுடுசரம்பட் டயர்ந்து துடிதுடித்துச் சோபித்துத் தேரின்மேல் வீழ்ந்து மூர்ச்சைபோன கிருதவன்மனைக் கண்ட பச்சைமாலாகிய பரந்தாமன் உச்சைஸ்ரவத்துக்கு ஒப்பாகிய சுவேதவாம்புரவி பூட்டிய தேரை மூடுக்கி விடுக்கவும், அத்தேருருள் களினல் வெகு சேனைகள் கெட்டழிந்து துடித்தன. அப்போது அர்ச்சுனன் அனேக பாணங்களைத் தொடுக்க, அதனல் எண்ணில் லாத வெள்ள சேனைகளழிந்து இரத்தவெள்ளம் வழிந்தது. எந்தெந் தப் பாணங்களை எவரெவர்கள் விடுத்தார்களோ அந்தந்தப் பாணங் களை அவரவர்களுக்குத் தொடுத்து, மார்பு சிதையவும் தோள்கள் குழையவும், வயிறுகிழியவும், கரங்களழியவும், சிரங்களொழியவும், ஈரல் குலுங்கவும், இருதயங் கலங்கவும், எலும்புகளொடிந்து சிந்த வும், கரம்புகளறுந்து தொங்கவும், வாய் துளைபடவும், பேய் நிணஞ் சுடவும், இருபதங்கள் முறியவும், பொருமதங்கள் பறியவும், மேலு

மேலு மிலக்கணக் கணைகளைச் சொல்லக் கணக்கில்லாமல் கலக்க மூற்றழிதர அலக்கழித் தகற்றினன் அர்ச்சுனராஜன். அதனாலந்தச் சேனை வீரர்க ளெல்லாருங் கண் கலக்கங்கொண்டு கால்சாய்ந்து, வேக முற்ற குதிரையிறந்து அளவில்லாத யானை குறைந்து கொடிகள் முறிந்து குடைகள் தறிந்து தேரொடிந்து சாரதிமுடிந்து தனுவு மொடிந்து சகலருமிறந்து போகும்படியா யிருந்தன. இவ்வாறு கொடிப்படையின் முன்னணியில் நின்ற சேனைகளையுஞ் சேனை நாயகர்களையும் சாடிக்கொண்டு சமுத்திர ஜலத்தைக் கிழித்து ஓடும் புகைக் கப்பலைப்போற் சதுரங்க சேனைக்கடலைக் கிழித்துக்கொண்டு வராநின்ற தனஞ்செயனைக் கண்ட தேவர்களெல்லாரும் ஜயங்கூறித் துதித்தார்கள். அந்த வேளையில் அர்ச்சுனன் சரத்தால் அடிபட்டு வீழ்ந்த கிருதவன்மனுவன் மறுபடியுந்தேறி யெழுந்து தெழித்துச் செழித்துத் தேரேறிவந்து அர்ச்சுனனுக்குச் சக்ர ரக்ஷகராகிய திவ்விய மணமாலை யணிந்த உத்தமோசன், உதார்மன் என்னும் இருவரையும் வளைத்துக்கொண்டு பெருவரைபோன்ற தேருடன் தேர்தாக்கிக் கொடிய வேகங்கொண்ட அக்கினியாஸ்திரத்தினால் மலைந்து, இரண்டு நாழிகை வரைக்குந் தகுதியாகிய யுத்தஞ்செய் தான். இப்படியாக யுத்தம் பண்ணிய கிருதவன்மனைப் பார்த்துக் கிரீடி முனைந்து எண்டிசை மண்டலம் வீண்டழிதர இவ்வண்ட மகண்ட மலைந்ததிரும்படி கொண்டல் நிறன்கணை ஆகண்டலன்கணை புண்டரீகன்கணை புராந்தகன்கணை முதலிய போரம்புகள் தொடுக்க அந்தக் கூரம்புகள் வந்து விழுந்து கிருதவன்மனுடலைக் கெல்லிக் கொல்லத்தக்க தன்மைபோல் தைத்தன. அப்போது கிருதவன்மன் மனமடிந்து மாழ்கி வருந்தி இளைத்தோடினன்.

அர்ச்சுனனோடு போர்செய்து சுதாயு விடுத்த கதையைக் கண்ணன் தமது மார்பிற்றாங்கி வதைத்து அச்சூழ்ச்சியை அவனுக்கறிவித்தல்

இவ்வாறிளைத்தோடும் கிருதவன்மனைக் கண்ட வருணராஜ குமாரனென்னுஞ் சுதாயுவானவன் மனந்தாளாமற் கோபித் தெழுந்து, குவிந்த சேனைக்கூட்டத்துடன் வந்து வில்வளைத்து காணைறிட்டுக் குணத்தொனி பண்ணி, விகங்காஸ்திரம், விடங் காஸ்திரம், மோகாஸ்திரம், விருக்ஷாஸ்திரம், வாயுவாஸ்திரம், தெய் வாஸ்திரம், வருணாஸ்திரம், அருணாஸ்திர முதலிய வாளிகளை விடுத்து, யாளியென வடுத்து, கொற்றவை மகிழ, மற்றவர் புகழ,

கற்றவர் களிக்க, கற்றவர் கடிக்க மாதங்க மாவைப்போற் சித்தங் கலங்காமல் யுத்தம் பண்ணினான். இந்தப் பிரகாரம் யுத்தத்திலழி வில்லா வரம்பெற்ற வீரன் வந்தெதிர்த்துப் போர்செய்யுங் காலையில், வீராதிவீரரிற் சிறந்த விஜயன் பாராதியண்ட முகமிவரைக்கும் நிரம் பப் பாணங்களைத் தூவினான். இவ்விதமாக அர்ச்சுனன் ரௌத்த வேதமந்திர பலங்கொண்ட வெவ்விய பாணங்களை யெல்லாம் முனை முறிய அடித்துப் பூமியிலே தள்ளி உழுது சேறுகாத ஏரிப்பள்ளங் களில் நாற்றுவிட விதைத்த செங்கெல் விதையைப்போற் சங்கோப சங்கப் புங்கானுபுங்கமாய் அம்புகளைப் பிரயோகஞ்செய்து தனஞ் செயன் தனை தன்பேரிற் படவொட்டாமல் தடுத்து பிரமாஸ்திர முத லிய அஸ்திரங்களைத் தொடுத்து அர்ச்சுனனைக் கலங்கவடித்தான் சுதாயுவானவன். அப்போது தான் விடுத்த பாணங்களெல்லாம் தலை யழிந்து விழுந்த தன்மையைத் தனஞ்செயன் நோக்கித் தாஷ்டீகத் துடன் கணகண வென்று காண்டீபத்தைத் தெரித்துக் கூர்மையுங் கொடுமையுங் கடுமையுங் கொல்லுதலையுங் குடியாய்க்கொண்ட நெடியோன் கணைகளை நேமித்துப் பூஜித்து, உபசரித்து வணங்கி யெடுத்து, ஒன்று, பத்து, நூறு, ஆயிரமென்னும்படி அப்பாணங் களைச் சுதாயுவின் தேகத்தின் நிழலைப்போற் பொருந்தும்படி விடுத்தான்.

இப்படி தனஞ்செயன் தொடுத்த சகல அஸ்திரங்களையுஞ் சுதாயு வானவன் தன்னுடைய பாணத்தினால் வீழவொட்டாமற் றரித்து விலக்கும்போது, வீபற்சு வெறித்துக் கண்விழித்து முகஞ் சுளித்து வெகுளி மேற்கொண்டு, இடிக்கணை, எரிக்கணை, இலைக்கணை, எழுக் கணை, கொடிக்கணை முதலிய அளவற்ற கணைகளையும் அஸ்திரங் களையும் போக்கி, அச்சுதாயு பிடித்திருந்த பலம் பொருந்திய வில்லை யொடித்தான். சுதாயு வானவன் ஒடிந்தவில்லை விட்டெறிந்து, தன் னுடைய முகஞ்சுருங்க, தேகங் கலங்க, ஸ்திரம்பெற்ற மார்பு குமுங்க, மனந்தடுமாற உதட்டை மடித்துப் பற்கடித்து மகா கோபங்கொண்டு, ஒரு தண்டாயுதத்தை யெடுத்துப் பூசித்துத் தனஞ்செயன்மேலெறிந்தான். அத் தண்டமானது மலைகளெல்லாங் குலுங்க, மண்டல மெல்லாங் கலங்க, உகாந்தகாலப் பேரிடிபோ விரைந்து விரைந்து வருதலும், அத்தண்டாயுதத்தைச் சர்வலோக சரண்யனுகிய சாரதியானவர் கண்டு எழுந்து நின்று லோகா லோகங்க ளெல்லாங் கலங்கும்படியாய் ஸ்ரீ தேவியும் திருமணிப்

பணியும் திருத்துழாயு மணிந்த தம் திருமார்பிலே தாங்கி யருளினர். இப்பெரிதாகிய போர் முகத்தில் விஜயன் பிழைக்கும்படியாய் அருள் சுரந்து தம்முடைய மார்பிற்றுங்கிய வுடனே, அர்ச்சுனன் அழிந்து போவானென்று ஆசைகொண் டெறிந்த சுதாயுவின் மணி முடி துணிந்து, தன்னைத்தான் மறந்து, தலைமுறிந்து மண்மிசை வீழ்ந்து, விண்மிசை வாழ்ந்தான். இந்த ஆச்சரியத்தைக் கண்ட தேவர்கள் முனிவர்களெல்லாரும் பூபாரம் தீர்க்கவந்த போர் விஜயப் புண்ணியன்பேரிற் சிவந்த கற்பகப் பொன்மலர் சொரிந்து, "வாழி வாழி குந்திமைந்தன் வலவன் வாழிவாழியே, வாழிவாழி யவனியுய்யவந்த நாதன் வாழியே, வாழிவாழி காளமேக வண்ணன் வாழி வாழியே, வாழிவாழி வாசுதேவன் வாழிவாழி வாழியே" என்னும் படியாக இக்குந்தி மைந்தனும் இவனுக்குச் சாரதியாகிய கோவிந்தனும் பல்லாண்டு பல்லாண்டாய் வாழக் கடவது. எம்முடன்கூட இவ்வுலகம் பிழைக்கும்படியாய் அவதரித்தருளிய நாரணனென்னும் நாதன் வாழக்கடவது: நீருண்ட காளமேகம் போன்ற நெய்மாலாகிய நீலமேனியான் வாழக் கடவது. வசுதேவ மைந்தனாகிய பரவாசுதேவன் வாழக்கடவது"—என்று பலவாறு வாழ்த்திப் போற்றியேத்தி மகிழ்ந்து புகழ்ந்து துதித்தார்கள்.

இவ்விதமாகத் தேவர் முதலாகிய யாவரும் தொழுது தோத்திரஞ் செய்யு முபாயத்தை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினுடைய பிராணனுக்குப் பிராணனான தனஞ்செயன் கண்டு அதிசயங்கொண்டு, கொண்டல் வண்ணனென்னுங் கோபாலனைப் போற்றி, "ஓ எங்கள் குலதெய்வமாகிய மாதவனே! என்னுட னெதிர்த்து யுத்தஞ்செய்த சுதாயு வானவன் என்பேரி லெறிந்த தொடுங் கதையைத் தேவரீர் தம்முடைய திருமார்பிற்றுங்கவும், அக்கதையைப் பிரயோகஞ் செய்த சுதாயு கெட்டழிந்து சாகவுகேரிட்ட அபாயமாகிய இவ்வுபாயத்தை அடியே னறிந்தகொள்ளும்படி திருவுள் புரியவேண்டும் திருமாலே!" என்று கேசவற்றோழன் கேட்க, கருடகேதனன் "அர்ச்சுன! யாவருங் கொண்டாடா நின்ற வாதை யென்னும் தாய்க்கும், சமுத்திர ராஜனாகிய வருணனென்னும் தந்தைக்கும் பிள்ளையாகப் பிறந்த இச்சுதாயு வென்பவன், தன் தந்தையாகிய வருணனைக் குறித்துத் தவஞ்செய்து சகல வரமும் பற்பல ஆயுதங்களும் பெற்றான். அவ்வாயுதங்களைக் கொண்டு அமர்செய்ய வருவானாகில், அகில்லா பலத்துடன் யாவரையும் வெல்வான். ஒருவ

ராலும் உயிராழியாத கிலேமையையும் வரமாய்ப் பெற்றிருக்கிறான். ஆனலிவன் அழிவதெவ்வண்ண மெனிலோ போர்புரியும்போது இவன்விட்ட ஆயுதம் நிராயுதன்பேரிற் படுமேயாகில், தனக்குத் தானே அழிந்து போகும்படியாகிய பிரதிவரமும் பெற்றிருந்தான். அக்கதை உன்பேரிற் பட்டால் நீ எப்படியு மிறந்துபோவா யென்கிற இரகஸ்ய உளவு தெரிந்தான், எதிர் நின்று என் மார்பிற்றாங்கினன். உடனே அவனுயிராழிந்து அந்தக னுலகடைந்தான்" என்று அநேகமாகிய ஆத்மகோடிகளாய் அவைகளுக்கு ஆதிமூலமாய் அகப்பற்று புறப்பற்று முதலிய மமகாரங்களை விடுத்து அமித்த தாசர்களுக்கு நேசமாகிய விசுவாசமா யிருந்து அருந்துயர்போக்கி ஆண்டிரக்ஷிக்கும் பாண்டவசகாயனுகிய ஐயனுரைக்க, அப்பால் ஆகாயமளாவிய வாகாகிய ஒரு மலையானது சிகரமுறிந்து அடிவேர் கறித்துப் பறிந்து விழுந்தா லெப்படியோ அப்படிபோற் சுதாயு வென்பவன் உடல் தறிந்து தலைமுறிந்து பூமியில் விழுந்தான். அவனைப் பார்த்த யாவரும் மனங்கலங்கி வியாகூலப் பட்டு வருத்த மடைந்து, சுவாமிசெய்த தந்திரத்துக்கு ஆச்சரியப் பட்டார்கள்.

சுதக்கணராஜன், சதாயு, நயுதாயு, நிதாயு, தீர்க்காயு இவர்கள் வதை

அந்த வேளையிலே காம்போஜனென்னுஞ் சுதக்கணராஜன் முகம்புழுங்கி அகங்கலங்கி, ஜகங்குலுங்கும்படியாய்க் கையுடன் கையறைந்து, அர்ச்சுனன் செல்லுகின்ற முனையிற் புகுந்து வழி மடக்கி அழற்கணை, அரன்கணை, அயன்கணை, அரிக்கணை, அரவக் கணை, அக்கினிக்கணை, முதலாகிய அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்து அருமையாகிய அமர் புரிந்தான். இப்படி அவன்றொடுத்த கணைகளெல்லாங் அர்ச்சுனன் பேரிலுஞ் சாரதிமுதலிய தேரின் பேரிலும் வந்து விழுந்து, அந்தரமெழுந்து பந்தம்போற் கொழுந்து விட்டெரிவதை விந்தைதங்கிய தோளுந் தெளிவாகிய திடசிந்தை யுங் கொண்ட சுவேதவாகனன் கண்டு மனங்கொதித்துச் சீறி, வாயுக்கணை நூறு, தேயுக்கணை நூறு மாரிக்கணை நூறு வாரிக்கணை நூறு வயிரக்கணை நூறு வனசக்கணை நூறு இவ்விதமான பற்பல அம்புகளை வகைதொகையின்றி மாரிமற் றொடுத்து அவன்றொட்ட வாளிகளை யெல்லாம் ஒன்றொழியாமல் சிதைத்துவிடுத்து அவனு டைய தேர் குதிரை சாரதி முதலியவெல்லாம் மருட்சி யடைந்து மாயும்படியாய்ச் செய்து திருமூர்த்தி சொரூபமாகிய மூன்று பாணங்

களை யெடுத்துத் தொடுத்து அவன் மார்பிற் றுளைக்கும்படி விடுத்தது மல்லாமல் அவனுயிரை வாங்குவதற்கு ஒரு பிறைமுகக்கணையையும் பூசித்துவிட்டான். அந்த அஸ்திரம்பட்டு அலக்கழிந்து கெட்டு வெருண்டுருண்டு மருண்டு உயிர்விட்டு விண்ணளாவிய ஒரு மலையானது மண் ணுலாவிய வாயுவால் வீழ்ந்ததைப்போல் மண்மீது வீழ்ந்து மாய்ந்தான்.

இந்தச்சுதக்கணனைப் பார்க்கிலும் நூறுபங் கதிகமாகிய வலியுள்ள சதாயு வென்பவனும் வெற்றிவீரங் குறையாத கயுதாயுவென்பவனும் சுதக்கண ராஜனைக்கொன்று செல்கின்ற அர்ச்சுனனை மடக்கிக்கொண்டு மூனைந்து பேர்புரிந்தனர். அவ்வேளையில் இந்திரகுமாரனுகிய கிரீடி பிறைமுகாஸ்திரத்தைப் போக்கி ஒருவர்போன வழி யொருவர் போகவெட்டாமலடித்து, உடல் வேறு தலை வேறு யுடைத்துத் தள்ளினன். அவர்களிருவரு மிறந்ததைக்கண்ட துரியோதனனுடைய சேனைகள் பெருமூச்சு விட்டுப் பெதறித்தியங்கி, முன்னிட்ட வண்ணமே பின்னிட்டார்கள். உடனே முன்னிறந்துபோன சுதாயுவின் குமாரனுகிய கியுதாயு வென்பவனும் கயுதாயுவின் பிள்ளையாகிய தீர்க்காயு வென்பவனும் இருண்டகாரு மருண்டு போகும்படியாய் எதிர்த்துப் பற்பல வாளிகளைச் செலுத்தினர்கள். அப்போது பேரறிவினையுடைய அர்ச்சுனன் அப் பிள்ளைகள் விடுத்த பாணங்களைக் கொள்ளை கொள்ளும் படியாய் முள்ளுக்கணைகளை வெள்ளமாகப் போக்கி, இரண்டு கமலாஸ்திரமெடுத்து இதயத்தில் வணங்கி உபசரித்துப் பிரணவமந்திர உச்சாடனஞ் செய்து, "ஓ! ஓ! வீரர்களே! உங்கள் தந்தையர் போனவழியே நீங்களும் போய்ச் சேருங்கள்" என்று தொடுத்துக் கழித்தான். அக்காலையில் அவர்களிருவரும் ஒரு க்ஷணத்தில் இரணகளத்திற் பட்டார்கள்.

கலிங்கர் முதலிய பலதேசாதிபர்க்கும் அருச்சுனனுக்கும் யுத்தம்

இவையெல்லாம் ராஜாதிராஜனை துரியோதன மகாராஜன் நோக்கிக் கலிங்கதேசாதி பதியை யழைத்து "இந்தவேளை உங்கள் விற்படைவிறற்படையுடன் போய்ப் போர்புரியவேண்டும்" என்று சொல்லி யனுப்ப, அப்படியே கலிங்கதேசத்தலைவராகிய அளவிறந்த மன்னர்களுங் கட்டுத்தறியை முறித்து எட்டிசையும் வெறுத்து, காந்

துங் கண்ணீர் கனலே நிறைத்துக் கடுங்கோபங்கொண்டிராநின்ற மும்மதக் கரடதட யானைப் படைகளை அசுவ மலைகள் பெயர்த்து வரும் தன்மையைப்போற் கூட்டிக்கொண்டு, அவனிமாது மாதி சேடனு நடுங்கும்படி வந்து எதிரொருவரு மில்லாமற் செல்லும் இராஜ சிங்கம்போன்ற அர்ச்சுனனே வளைத்துச்சண்டை தந்தார்கள். இஃதன்றியும் யவனதேசாதிபர், புவனதேசாதிபர், சோனகதேசாதிபர், கானகதேசாதிபர், பப்பரதேசாதிபர், உப்பரதேசாதிபர், மிலேச்சதேசாதிபர், துளுவதேசாதிபர், சீனதேசாதிபர் ஆதியோரும் தூரியோதனனுடைய வேணவேகாளின்படி வந்து, ஆகாயத்திற் செல்லுகின்ற சூரியனுந் தடுமாறிப் போகும்படியாய் வில்லை வளைத்து டங்காரம் பண்ணி நாணுவிதக்கணைகளை சோனை மேகம் போற் சொரிந்தார்கள். அவ்வேளையில் மேகம் பொருந்திய சுவேத வாம புரவி பூட்டிய வேணுகோபால னெனுட்டிய அநுமக்கொடி நாட்டிய தேரிலமர்ந்து வாட்டிய அர்ச்சுனன் கண்டு புன்னகை கொண்டு பிரசண்ட வாயுவாஸ்திரந் தொடுத்துப் பூசித்து விட்டான்.

அந்த அஸ்திரமானது சமுத்திர ஜலத்தை வாரியிறைத்துச் சந்தனத்தருவை வேருடன் பறித்து, ஸர்வஸம்ஹார காலச் சூறாவளிபோ லிரைத்து வந்து சுழற்காற்றி லகப்பட்ட இலவம் பஞ்சுபடும் பாட்டைப்போல் அந்தப் பரிவார முதலிய சேனைகளை யெல்லாம் பறக்கடித்துப் பாழ் படுத்தியது. அதனாற் கொம்புகள் முறிந்து, துதிக்கையறுந்து, மத்தகம் பிளந்து, கால் துணிந்து, காதறுந்து, உடல்கிழிந்து குடல் சரிந்து, சிரங்களற்றுச் சில சிந்துரங்க ளிறந்தன. மார்பொடிந்து, தலைதறிந்து, கையிற்கொண்டிருந்தவிற்படை, வேற்படை, வாட்படை, கதைப்படை முதலிய ஆயுதங்களெல்லாம் போய்ப் பெருங் காற்றினு லிலையுதிர்ந்து தலை முறிந்த மரங்களைப்போல் மிலேச்சர் முதலிய சேனைகளெல்லாரு முடிந்தார்கள். இவையன்றியும் எண்ணிறந்த பேர்கள் பொடிப்பொடி யாகும்படியாய்க் கொடிபெற்ற முடியினையுடைய இந்திராஸ்திரத் தொடுத்த காலையில் நாற்படைகளும், வேற்படைகளும் காற்படைகளும் போர்பட்டழிந்து ஏற்பட்ட வீரர் முதலிய பேரும் பேர்பட் டொழிந்தார்கள். இறந்தவர்போக இருந்தவ ரெல்லாரும் கரையழிந்த ஏரி நீரைப்போல் அச்சமுற்றோடும்படியானதைக் கண்டு ஆகாயத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்க ளெல்லாரும் கைகொத்தார்கள். இச்சமயத்தில் இன்று மூப்பது நாழிகையுஞ் சிந்துதேசத்தலைவனை காக்கின்றோமென்று சபதங்

கூறி, கோடையிடி இடிப்பதைப்போற் குடமுழாப் பேரிகை யுத்த பேரிகை, ரணபேரிகை, ஜெய பேரிகை, முதலிய வாத்திய முழங்க அவ்வோசையானது ஏழு கடல்போற் புரண்டு வரும்படியாகிய சேனை சயின்னங்களுடன் கூடுவதினும் பூமி குலுங்க, இந்திரதிசை முதலிய எண்டிசைகணடுங்க, ஆதிசேடன் முதலாகிய பாம்பு, களெல்லாம் நெளித்தொடுங்க, அண்டகடாகமு மதிரும்படி டுண்டுண்டென்று வீரப்பறை தொனித்து முழங்க, பட்டவர்த்தனர். மகுடவர்த்தனர், மன்னர், மண்டலீகர் இவர்கள் முதலான பேர் களெல்லாந் திரண்டு ஒருமுனையாக எதிர்வந்து நின்று, சூரியனைச் சூழ்ந்து தோன்றும் ஊர்கோள் வட்டம்போற் பற்குணனை வளைத்துப் பங்கயக்கணை, பரந்தாமன்கணை, அறுமுகக்கணை முதலாகிய சகல பாணங்களையு மிறைத்தார்கள்.

அப்போது அர்ச்சுனன் தனது காண்டீபத்தை யெடுத்து நிறுத்தி இழுத்து வளைத்துக் குணத்தொனி செய்து, தேர்ந்து தெரிந்து தெளிந்த திசைமுகனஸ்திரங்களை யெடுத்துச் சந்தனகூஷதை பத்ர புஷ்ப தூப தீப நைவேத்தியங்கள் கொடுத்து, ஒவ்வொருவருக் காயிரம் ஆயிரங் கணைகளாகச் சிரமுதற்காலளவும் விடுத்து, கொடி, குடை, சிகரம், குதிரைகள், சக்கரங்கள், குத்துக்கால்கள், சாரதி, அஞ்சுராணிகள், ஆப்புகள், முதலிய தேருறுப்புகளை யழித்து யானைக்கூட்டமும் குதிரையினங்களியாவும், பதாதிபடை யடங்கலும் ஒரு காழிகையிற் கண்ட துண்டமாய்ப் பிணிபட்டுத் துணிபட் டொழிந்து போகும்படிபோக்கி மண்ணோடு மண்ணுக்கித் தேவர்களிலும் குதிரைகளிலும் யானைகளிலும் ஏறிவந்த தீர வீரர் களுடைய வாகனங்களையும் போக்கினன். அதனாலவர்கள் இரண்டு பாதங்களுஞ் சிவப்பேறும்படியாய் வாடி ஓடி அயர்ந்து அலைந்து சோர்ந்து வியர்த்து வியாகூலங்கொண்டு கையிற் பிடித்த ஆயுதங் களைபு மிழந்து போர்புரிந்த ஆயாசத்தினால் தாகவிடாயும் தேகவிடா யுங் கொண்டு சிரமந்தாளமாட்டாமற் காள மேகம்போன்ற யானைக் கூட்ட மறைப்பில் மறைந்து தட்டுக்கெட்டுத் தடுமாறி வீழ்ந்தோடி இரத்த வெள்ளமடிக்களிற் குழ்ந்து பற்பலமுறை அதிலாழ்ந்து மூழ்கி யெழுந்து தாங்கள் வாழ்ந்த வாழ்வை எண்ணி வருந்திக் கழுகுகள், பருந்துகள், கூளிகள், ஆளிகள், இவைகள் சூழ்ந்து பறக்கா கின்ற இரக்கை நிழற் பந்தலி லொதுங்கி இளைப்பாறிப் பதுங்கித் திசாதிசை யிற் சென்று வதங்கினர்கள்.

இன்னுஞ் சிலர் பயந்து புறங்கொடுத் தோடாமல் மனமிளைத்து வாடாமல் நின்ற இடத்தில் நிலைத்து நின்று மானம் பெரிதல்லது பிராணன் பெரிதல்லவென்று யுத்தஞ் செய்யா நின்ற வீரதீரர் களெல்லோரும் அமர்களத்து குலைகுலைத்து உடல்வருந்தி மடிந்த னர். மன்னர் மண்டலீகர் முதலிய சேனைகளெல்லாம் தங்கள் தங்க ளெசமான்களுக்கெதிரில் வீர வசனங்களைப் பேசி, விருதுகளும் வெகுமதிகளும் பெற்று, அர்ச்சுனனுக் கெதிரில் ஓடிவந்து அவசர மாய் முடிந்து இடிந்து போனார்கள். வெஞ்சினப் பொறி பறக்குங் கோபக் கண்களையுடைய யானைக் குன்றுகளெல்லாங் குடல் தீய்ந் திறந்தன. ஒன்பதுவித தாளகதிகளையுடைய குதிரைகளெல்லாம் ஐம்பது விதமாய் ஒருங்கே பிறந்தன. இன்றையத்தின மிறந்த சேனைப் பெருக்கத்தை இவ்வள வென்று யானைப்படி சொல்லு வேன்? ஆகிலும் ஒருவிதக் குறிப்பாகச் சொல்லுகிறேன் கேளு மரசனே! முதல் நாள் யுத்த முதல் நேற்றுப் பதின்மூன்று நாள் வரையிலுஞ் செய்துவந்த யுத்தத்தில் இறந்த பேர்களெல்லாரும் இன்றையத் தினம் இறந்தவர்களுக்கு உறையிட முடியாரென்றால், தேர், கரி, பரி, பதாதி இவைகளில் நூற்றுக்கு ஒன்று உறையென்று இலக்கக்குறிப்பு வைத்தாலும், இதுவரையிலு மிறந்த சேனைகள் இன்றிறந்த சேனைகளுக்குக் குறையு மென்பது கருத்து.

விந்தரன் விந்தன் இவர்கள் வதை

இந்தப்பிரகாரங் கோபந் தணிந்து கொடுங்கணையாற் றுணிந்து வீழ்ந்த யானையினங்கள், குதிரை யினங்கள், பதாதி யினங்கள், இரத்த வெள்ளத்தில் மிதக்கவும், அவைகளின்பேரில் தேர்ச் சக்க ரங்க ளோடவும், சத்ருக்களைக் கொல்லும் வயவர்களுடைய உயி ரிழந்த உடலானது தலைகுலைத்து கலைகுலைத்து அலையிலசைத்து சுழல மிட்டு வேகங்கொண்டாடவும், இவைகளை அடித்துக்கொண்டோடிய இரத்த ஆறுகளானவை சமுத்திரத் தோடெதிர்த்துச் சண்டை செய்யப் போனதைப்போற் கூடிக்கலந்தன. அனேகங்கோடி தலை யறுந்த முண்டங்களாடின. கழுகுக் கூட்டங்களிரையும் ஓசை சப்த மேக முழக்கம் போலிருந்தது. அலகை சோகு முதலிய பசாச கணங்கள் இரண்டு கைகளையும் குவித்துக் கும்மியடித்தார்ப்பரித்தன. செக்கச் சேவலென்று பூமி சிவந்த தன்மையானது யுத்தகள மென்னும் பெண்ணானவள் சிவப்பு வஸ்திரம் தரித்ததைப்போ லிருந்தது. அதிகாலையிற் போர்த்திறங்கொண்ட அனேகம் வல்லவர்

முனைந்து வந்து போர் செய்து ஆவிதீர்த் தழியும்படியாய்ப் பலம் பொருந்திய பாணப் பிரயோகஞ் செய்யா நின்ற பற்குணனை, வீர கண்டைதரித்த விந்தான் விந்தன் என்னும் பேருடைய விஜயதீர வீராளியிருவர் விரைந் தெதிர்வந்து வளைத்துச் சினந்து சண்டை செய்தனர். அவர்களைக்கண்ட அர்ச்சுனன் நெடுநேரம் வைக்காமல் ஒருநிமிஷமாத்திரத்தில் முன்னுறுகிய விந்தரனை மூன்று வடிக் கணையால் முடித்து, "அப்பா நீ மூத்தவ னுகையால் முன்னே போ" என்று முறையா யனுப்பினன். அதைக் கண்ட பின்னுறுகிய விந்த னென்பவன் பெருமிதப் போர் விளைத்து, தன்னுடைய இரதமுதலிய சகல அங்கங்களுமிழந்து, தன் பாணங்களும் போய்ப் பூமியில் நின்று பெருங்கதைகொண்டு புருஷதீரனுகிய அர்ச்சுனன்பேரி லெறிந்தான்.

அக்கதையானது நெருப்புப் பொறிகளை நேராகக் கக்கி உருக் குக் கட்டிகள் பொருந்தி இருப்புக் கட்டிகளுடன் எதிர்த்து வரும் போது, விஜயன் கண்டு, பட்டுக் குச்சுகள் கட்டுக்களித்த உச்சித புரந்தரன் மெச்சியளித்த வச்சிரக் கணையையும் இடியாஸ்திரத் தையும் எடுத்து விடுத்தான். விட்ட மாத்திரத்தில் அந்த அஸ் திரங்கள் நெருங்கி வருங் கதையை மடக்கிப் பொடிப்பொடியா யுடைத்து, அவனுடலத்தையுஞ் சின்னு பின்னப்படுத்தி அவன் தமையன் இருக்கு மிடத்திற் கொண்டுபோய் அவனையும் சேர்த்தன. அப்போது தேவதத்தத்தை யெடுத்து பம், பம், பம் என்று முழக்கிச் சுவேதவாம்பரி பூட்டிய தேர் மீதில் மண்டியிட் டிருந்த வீபற்சு வானவன் வளைந்த தலை நிமிராத வரிவிற் பிடித்து, ஓயாமாரி போற் சரம் தொடுத்துப் போர் செய்து வந்தான். அப்போது எங்குஞ் சேனை வெள்ளங்களிளின்றும் எங்கும் பொங்கிப் பெருக்கங்கொண் டோடுஞ் செங்குருதி வெள்ளங்களில் அரவக்கொடி படைத்த அரசனுடைய அழியாச் சேனைகளெல்லாம் வீழ்ந்து வீழ்ந்து முழுகி யெழுவதிஞல், மாலைப்போதிற் சூரியனை வளைக்குஞ் செவ்வானம் போற் கிரீடியை வளைந்து வளைந்து திரிந்தார்கள். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே!

"முருகாரிரு சிறைவண்டின முளரிப்பது மலர்விட்,
டருகார்பொழி னிழலூடனி யலர்நாண்மல ருறவே
யிருகாலமு முக்கால்விடு கைம்மாரி யிருக்கா,
லொருகாலரு மறையோர்விடு பதநண்ணின னுதயன்."

அத்தருணத்தில் தாமரை மலர் நிறைந்த தேனைப் புசித்துப் பராகங்களிற்புருந்து சிங்காரமாகப் பாடிக்கொண்டிருக்குஞ் சுகந்த பரிமள மிகுந்த சிறைவண்டினங்கள் பக்கங்களி னிறைந்த கிழ லுறைந்த சோலைகளிற்சென்று அன்றலர்ந்த அழகிய மலரிற் பொருந்தி மது வுண்ணும்படியாகச் செல்லவும், அக்காற் காலையு மாலையும் வேதமந்திரங்களினுல் மூன்றுகை ஜலமள்ளி அர்க்கியங் கொடுத்து வராநின்ற அந்தணராயினோர் இருக்கு வேத மந்திரங் களினுல் ஒருகை ஜலத்தை யள்ளிக் கொடுக்காநின்ற காலம்வரவும், அவ்வர்க்கியத்துக் காசைகொண்டு அந்த ஸ்தானத்திற்குச் சூரியன் வந்து சேர்ந்தான். என்றால், வண்டுகள் காலையிலும் மாலையிலும் தீர்ப்பூவி லிருக்கும். மத்தியானத்துக்கு வனங்களிற் போய் கோட்டுப் பூவிலிருக்கும். பிராமணர் மும்மூன்று அர்க்கியங் காலையிலும், மாலையிலும் விடுவார்கள். ஒருகை ஜல மத்தியானத்தில் விடுவார்கள். ஆகையால் சூரியன் மத்தியில் வந்தான் பதினைந்து நாழிகையாயிற் றென்னுங் கருத்து.

கண்ணன் அசுவங்கள் களைத்தன வென்று அர்ச்சுனனுக் கறிவிக்க அவன் உடனே தடாக முண்டாக்குதல்

இந்தப்படி சூரியன் உச்சிக்குவந்து வெவ்விய வெப்பத்தைத் தராநின்ற மத்தியானத்தில் வேத முதல்வனுகிய விசித்தகன் விஜயனை நோக்கி, "ஓ வேந்தனே நாம் ஜயிக்கவேண்டிய சயித்தவ னிருப்பதற்கும் நாமிருப்பதற்கும் அதிதூரமிருக்கின்றது. ஒரு பங்கு கடந்துவந்தோம் இன்னு மிரண்டுபங்கு கடக்கவேண்டி யிருக் கின்றன. பாதிப்பொழுதாயிற்று, உனக்கோ முகங்கருகிப் போயிற்று. எனக்கோ வேர்வையும் களைப்பும் வாய்த்தன. வெள்ளைக் குதிரைகள் நான்கும் வெதும்பிப்போயின. ஆதலால் கொஞ்சம் தண்ணீர்பருகி இளைப்பாறினு லல்லது குதிரைகளெடுத்தடி வைக்கமாட்டா. அர்ச்சுன! இவ்விடத்திலொரு தடாக முண்டாக் குவாயாகில் எல்லாக் காரியங்களுக்கு மநுகூலமா யிருக்கும்" என்று சொல்ல, அருள்பெற்றவனுக்கு எப்பொருளும் பெரி தல்ல வென்னும் தன்மைபோல் அக்ஷணமே அர்ச்சுனன் தேரைவிட் டிறங்கி, ஆதிசக்தியும் ஆதிசிவனும் ஆதியிற் கொடுத்திருந்த பகபேதி, பாதாளபேதி, என்னும் பாணங்களை யெடுத்து, ஆகர்ஷணமாகிய வருண மந்திரத்தை யுச்சரித்துப்

பூமியைநோக்கி விடுத்தான். அப்படி விடுத்த ஒரு நாழிகைக் குள்ளாக அவ்விடத்திற் பிரபலமாகிய பெரிய தடாக முண்டாயது. அத்தடாகம் சமுத்திரத்தைப் பார்க்கிலும் பேராழமும், கட்புலனுக் கெட்டாக் கரைபொருந்திய அகலமும், உடையதாயிருந்தது. அதில் அனேக தளங்களோடுங்கூடிய வெண்டாமரை, செந்தாமரைகளும், ஏறவு மிறங்கவு மூள்ள துறைகளும் அவ்விடங்களி லெல்லாம் நீலோற்பலம், செங்கழுநீர், குமுத முதலிய மலர்களும் மலர்ந் திருந்தன.

மேலும் அம்மலர்களின் நிழலில் நீரிலுலாவானின்ற வாளை, குறவை, வரால், கயல் சேற்கண்டை, மயறை, தேளி, உருவை, சென்னல், கெளிறு, ஆரால், விலாங்கு, அலவன், சங்கு, நத்தை, முதலாகிய ஜலசரங்களும், நாற்புறக் கரையோரங்களிற் கின்ன ரமிதுனப் பக்ஷிகளும், ஒருபுறத்தில் நாரைகளும், ஒரு பக்கத்தில் தாராக்களும், ஒருசார்பிற் சக்ரவாகங்களும், ஓரிடத்தில் உள்ளான் முதலிய சிறு பக்ஷிகளும், "ஓர்பாலில் அன்னப்பக்ஷிகளும் ஓர் துறை யில் அரம்பா ஸ்திரீகளும், சிற்சில இடங்களில் மணல் மேடாகிய புளினங்களும், புளினங்களில் அன்றில் அன்னம், ஆந்தை, ஊர்க் குருவி, உள்ளான் தூக்கணங்குருவி, எண்காற்பட்சி, கருடன், காக்கை, காடை, கவுதாரி, கழுகு, அண்டங்காக்கை, நீர்க்காக்கை, மணிக்காக்கை, மயில், கிளி, குயில், கூகை குருகு, கேகயம், கொக்கு மடையான், கோழி, கானங்கோழி, சம்பங்கோழி, சக்கிரவாகம், சாதகப்புள், கிச்சிலி, சிவல், செம்போத்து, நாகணவாய்ப்புள், ராமனுத்தி, நாரை, கருநாரை, பெருநாரை, வெண்ணாரை, பொன் னாரை, நிலாமுகி, பருந்து, புறு, கரும்புறு, மாடப்புறு, தவிட்டுப் புறு, ஆட்டப்புறு, பச்சைப்புறு, பொய்யாப்புள், மீன்கொத்தி வானம்பாடி, பாரத்வாஜ முதலாகிய பட்சிகளும் அமர்ந்திருக்க குளிர்ந்த சோலைகளைச்சுற்றிலு முடையதாய்ப் பூமி தேவியாருக்குத் திருநாபிபோலும் விளங்கிய அப்பெரிய தடாகத்தை மலையுடன் மலைமாறு கொள்ளும் வலிமை பெற்றுத் திரண்ட இரண்டு புயத்தையுடைய விஜயன் கண்டு சந்தோஷங்கொண்டு "என் னுள்ளத்தில் வள்ளலாயெழுந்தருளிய உரகசயனு! இதோ வெள் ளப் பெருக்கமான தடாக மேற்படுத்தினேன்; இத்தடாகத்திற் குதிரைகளை இளைப்பாறிக் கொள்ளும்" என்று உரைத்தான். அந்த வசனத்தைக் கேட்ட கூலமணியாகிய நீலமணிபோன்ற

கோவிந்தனனவர் தேரைவிட்டுக் குதித்து, பலம் பொருந்திய நான்கு தவளகிரிபோன்ற குதிரைகளை அவிழ்த்துக் குவளையாதி மலர்வாசம் நிறைந்த தெளிந்த தடாகத்திற் கொண்டுபோய்க் குளிப் பாட்டித் தண்ணீர் குடிப்பித்துக் குர முதலிய யாவற்றையுந் துலக்கினர். அப்பால் இருவரும் கைகால் சுத்தி பண்ணிக்கொண்டு சோக தாகவிடாய் தீர்ந்து இளைப்பாறி யிருந்தனர்.

அர்ச்சுனன் வலிமைகண்ட துரியோதனன் துரோணரிடஞ்சென்று முறையிடுதல்

இப்பால் இந்த அர்ச்சுனனுடனே எதிர்த்துப் போர்புரிந்து அக்கினிக்கெதிர்ப்பட்ட சருகைப்போல் உடல்கருகி, உதிரம் பெருகி, உள்ளமூடைக் தொடிய வீராதி வீரர்களும் அவர்க ளணிவகுத் திருந்த கரி பரி காலாளாதிச் சேனைகளும் சூரிய வெப்பத்தாற் பாலை வனத்தி லகப்பட்டு வெதும்பிய விதம்போல் வெதும்பி, கிலேகிற்க மாட்டாமற் கலங்கு, காணுமற் கண்டபொருளை கல்ல காலத்திற் கண்டு களித்த வாறுபோல் அத்தடாகத்தில் வந்து விழுந்து தாக விடாயாறிய தன்மைகளையும் சிலர் அக்காண்டீபனுடைய கையி னின்று வெளிப்பட்ட கணைகளாற் கலங்கி நொந்து கண்ணுக் கெட்டிய தூரங் கலங்கு ஓடிய காரணத்தையும், இவ்விடத்தில் பூரணமான தடாக மேற்படுத்திய புனிதத்தையும் வீரக்கழல் தாங்கிய வேந்தனிடத்திற் சில சோர்ந்த வீரர்களோடிச் சேர்ந்து சொன்னார்கள். இத்தவார்த்தையை அரவக்கொடியோன் கேட்ட மாத் திரத்தில் இரும்பு காராசங்காய்ச்சிச் செவியிலேற்றிய தன்மைபோ லேக்கங் கொண்டு, சிங்கத்தை னெதிர்த்துப்போர் செய்யப் பயந்த யானையைப்போல் திரும்பி யோடியும், தீயினுலெரிந்த பட்டணத் தைப்போற் றியங்கி இளைத்துக் களைத்தும் சகலகலை புராண நிபுணனு யிவணுற்று இருக்கின்ற துரோணு சாரியரென்னும் பேர்பெற்ற பெரியோரிடம் போய்ச் சேர்ந்து, அவருடைய பாதத் தில் வீழ்ந்து, "ஓ பொறுமையுடைய புண்ணியனே! என் சிறு மையைக் கேளும்" என்று சொல்லத் தொடங்கினன்—

வேதியரே! கேளும்: யாவரும் ஆச்சரியப் படும்படியாகிய சாமர்த்தியம் பெற்ற தனஞ்செயன் சத்துருக்கள் தொடுக்கு மம்புக் கெதிரம்புவிடுத்து, தனக்கெதிர் வந்துகின்ற தாஷ்டீகரை யெல்லாஞ் சாய்த்து மாய்த்தான். அவனுக் கெதிர்சென்று அமர்புரிந்த அரசர்

களில் யார் பிழைத்தவர்கள்? ஐயோ! வெகுபேர் அகியாயமா யழிந்துபோய் விட்டார்களே! ஐயா! சூரிய னஸ்தமனமாவதற்கு முன் எனக்குரிய மைத்துனன் றலேபோய் நமக்குப் பழிச்சொல் வருவதா யிருக்கிற தல்லாமல் அவனைப் பிழைப்பிப்பவர்க ளில்லையே! எனக் குப் பெருமை தருவோர்களு மில்லையே! ஓ பெரியவனே! எதிரி களைக் காணுதபோது தங்கள் தங்களுடைய ஆண்மையை யெடுத் துப் பேசுகிறார்கள். எதிரியைக் கண்டால் அவரெதிர் நின்று க்ஷணப் போது யுத்தம் பண்ணமாட்டாமலும், வெட்கம், மானம், ஈனம், காணம் இவைமுதலிய வில்லாமலும் புறமுதுகிட் டோடுகிறார்கள். ஆதலால் நம் சேனைகள் முழுவதும் செத்துச் சேண் ஆளும் போலிருக்கின்றது. காமகேக முயற்சி செய்தும் வேறொரு செயலுங் காணுமற்போனும். ஓ வேத வேதியனுகிய தேசிகனே! என் மைத்துனனுகிய சிந்துராஜன் தேவரீருடைய திருவடியிற் றுழ்ந்து நானெங்கே யாகிலும் ஓடிப் பிழைக்கிறேனென்று சொன்னபோது, 'நீ பயப்படாமலிரு; உன்னுயிரைப் போக்குகிறவர்க ளொருவருமில்லை. அப்படிக்கு உன்னுயிர் போமாகில் அதற்குப் பதி லாக என்னுயிரைக் கொடுக்கிறேன். நீ ஏதொன்றுக்கும் அஞ்சாதே.' என்ற தேவரீருடைய விற்றிறத்திற்குக் குறைவில்லாமற் சொற் றிறஞ் சொன்னீரே! உம்முடைய உண்மை வசனத்தை நம்பி என் றங்கை புருஷனனவன் நீர் அணிவகுத்துப் போராடும் சேனைகளின் மத்தியிற் போயிருக்கிறனே!" என்று வருந்திப் பின்னுஞ் சொல்லு கிறன்—

"ஓ எங்கள் குலதெய்வமாய்வந்த குருவே, இப்போது பகல்பதி னைந்து நாழிகை யாகின்றது. இந்தப் பகற் பதினைந்து நாழிகைக்குள் பாதி சேனைகளை அழித்துப் போரணிக்குள்ளே பார்த்தன் வந்து விட்டான். ஐயோ! தேவரீர் இனிமேலென்னை எவ்விதம் ரட்சிக்கப் போகிறீர்? ஓ ஆரியனே! சத்துருக்களெண்ணப்படி நிறைவேறும் படியாக தேவரீர் இஷ்டங் கொண்டிருப்பதாய் எனக்குத் தோன்று கிறதே; பெரியோராகிய நீர் சொற்பிசக மாட்டீரென்று உண்மை யாய் நம்பி என் மைத்துனனை இவ்விடத்தி னிறுத்தி, அவனுக்குங் கேட்டை விளைத்து நானு மிந்தப் பாட்டை யடைந்தேன். எனக் குரிய பெரியோர்கள் என் சத்துருக்களிடத்தி லன்புவையார்க ளென்று சத்தியமாய் நம்பினேன். தேவரீர் மனவஞ்சகம் வைத்துச் சொல்லிய கைதவப் பொய்யைக் கருதாமற் போனேன். அதற்குச்

சாட்சியாக எனது பகைவர் வந்து புகுந்து இப்போது சாடும்படியாகிய மூனை முகத்திற் சிறிதுக் கலைகாட்டா திருக்கின்றீர். ஓ சந்தோஷக் கருத்தினையுடைய சுவாமிகளே! உம்மைவிட எமக்குரியோர் யாரிருக்கின்றார்கள்? அல்லது அந்த அர்ச்சுனனுடனெதிர்த்து யுத்தஞ் செய்ய என்னலாகாம லிலைத்தேனென்று ஒரு வேளை நீர் சொல்லுவீராகி லுமக்கீடாகிய வல்லவர்கள் யாராகிலும் உலகத்தி லிருக்கின்றார்க ளென் றுண்மையாய்ச் சொல்லும். இனி நான் யாரையும் நோவத் தக்கதில்லை. அக்கரைக்காரனெவனோ அவன் பாடுபடவேண்டிய முறைமையாகையினல் வரிபொருந்தி மணிகள் கட்டி வலுவேறி யிராகின்ற வில்லை யெடுத்து நிறுத்தி வளைத்து நாணிபூட்டி, விஜயனுக்கெதிரே சென்று நின்று போர் புரிந்து, அவன் பிராணனைக் கைக்கொள்ளுவதொன்று அல்லது என்னுயிரை அவனுக் கொப்புவிப்பதொன்று. இவ் விரண்டு காரிய மல்லாமல் வேறோர் சூட்சியுமில்லை. ஓ முனிசிரேஷ்டனுகிய முதல்வனே! தேவரீருடைய கண் காணும்படி நான் விரைவாகச் சென்று என் சேனைக ளெல்லாம் நிலைக்கக் கண்டு அர்ச்சனன் முதலிய பாண்டவச் சேனைகளைக் கொல்லும்படியான என் போர்த் திறத்தை யாகிலும் விரைந்து வந்து பாருமையா வேதியர்க்கரசே!" என்று வணங்கா முடியோன் வணங்கி மனமுருகி மனஸ்தாபமாய்ச் சொல்ல, இந்த மன்னவன் சொல்லிய சொற்களை யெல்லாம் மறையவனுகிய சேனுதிபதி கேட்டு மனமகிழ்ந்து, மன்னனைப் புகழ்ந்து சொல்லுகிறார்—

துரோணர் தம்மிடம் முறையிட்ட துரியோதனனைப் பலவாற்றலும் வெறுத்துக் கொள்ளுதல்

"ஓ நந்தியாவட்டை மாலை யணிந்த நராதிபனே! துன்பம்வந்த காலத்திற் சோர்வடையாமலும், இன்பம் வந்த காலத்தில் எழுந்து மகிழாமலும் எப்போதும் ஒரே சீராயிருந்து இப்போது சொன்ன சொல் தப்பாமல் இனிமேலும் எண்ணி யிலைக்காமல், நீ கொண்ட துணிவு தணியாமற் சென்று, எதிரிகளை நாசப்படுத்தி உன் மைத்துனனைக் காப்பாற்ற வேண்டும். உன் சேனுசயினியங்க ளெல்லாம் அழிந்து தொழிந்து போனலும், உன்னுண்மைக்கு ஒருக்காலும் அழிவில்லை. ஓ அரசனே! நீ கொண்ட கருத்து நன்மையானதுதான். ஆகிலும் நானென்று சொல்லுகிறேன் கேள். ஒப்பற்ற ஒரு தேரில் வரா நின்ற பலம்பெற்ற அவ் விருவரையும் நர

நாராயண ரென்று ஞானவான்களாகிய ஸ்ரீமத்தோர் சொல்லியிருக்கின்றார்கள். மேலும் அவர்களைப்போல்பட்டவர்களென்றால் எப்பொருட்கு மிறைவனாகிய ஈசுவராநுக்ரகத்தாற் சத்துருக்களை வெல்லும் பாணங்களும் அவற்றிற்குத் தகுந்த மந்திரங்களும், சகல வரமும் பெற்றிருக்கின்றவர்கள். இவர்களைப்போல் எவரும் இப்படிப்பட்ட வரம்பெற்றதில்லை. இவர்கள் திரிலோக ரக்ஷகரென்னும் மகாபுருஷர்கள். வீரகாண்டீபத்தைக் கைக்கொண்டு போர்முகத்துக்கு நேர்முகமாக நிற்பாராகில் சிருஷ்டிகர்த்தாவாகிய பிரம்மாவும் இவர்க்கு ஈடல்ல. அத்தன்மை வாய்ந்த வில்லாளருடன் கெதிரில் யுத்தஞ் செய்யத்தக்க இருதோள் வலியினையுடைய வல்லாளர் எவரிருக்கின்றார்கள்? இந்துகுலத் தோன்றலே! அது நிற்க, கடல் நிறம்போன்ற காயாம்பூ வண்ணன் கருணையுடன் தேர்ச்சாரதியாக அமைந்து இரதத்தைச் செலுத்திக்கொண்டு இருக்கிறார். அதனாலே சர்வ சம்ஹாரகால ஈசன் முதலிய எவராலும் இவர்களோடு எதிர்த்துப் போர்புரியும் படியானது இலேசானதன்று; அருமையான காரியம். ஓ அரவக்கொடி காட்டிய அழகா! இன்னும் சொல்லுகிறேன் கேள்—

இராஜகுலத்திலே பிறந்தவர்கள் பராஜருடன் பகைவைத்துக் கொள்ளுவது ஞாயம். அதைவிட்டுச் சொந்த பந்துக்கள் முதலான தாயாதிகளுடன் விருதாப்பகை வைத்துக்கொள்ள லாகாதென்று ராஜராஜர் நிறைந்தபேரவையிடத்து அநேகவிதமான திருஷ்டாந்தங்களோடு ஆதியிலே போதித்தேன். யான் சொல்லிய இஷ்டநீதி வார்த்தையை இகழ்ந்து, உமக்குரிய துஷ்டர்கள் உரைத்த சேதியைப் புகழ்ந்து இந்தப் பாண்டவர்களை ஒரு தரும்பாகமதித்து எடுத்தெறிந்து ஏதோபேசிய வசைமொழியை நானென்ன வென்றுரைப்பேன்? இறையே! உங்கள் சிறியதந்தையாகிய விதுரராஜன் வேண்டுமென்று பாடுபட்டு அநேகதர்மங்களை விளம்பினன். அப்படிப்பட்ட உத்தமனுடைய மனம் நோவப் பேசிய உன்னைப்போன்ற பாவிக்கு உதவியாகக் கூடாதென்று மண்ணுக்கும் விண்ணுக்குங் கண்ணுகி ஒன்றுக விருந்த தன்னுடைய வில்லை இரண்டு துண்டாக வெட்டி யெறிந்துவிட்டு யாத்திரை போனன். ஞானவிவேகத் திறமுணர்ந்த நுண்ணறிவாள ருரைத்த பழிவழிக் கிடந்தேடி, கற்புக்கு ஓர் அணியாகிய மடமங்கை யென்னும் திரௌபதா தேவியானவள் மதிகலங்கி மனங் கலங்கிக் கண்

ணுங் கலங்கி வாடும்படியாய் இராஜ சபையிலேற்றி வஸ்திரபங்கம் பண்ணி வைத்து அன்புடமைக்காதார பூதராகிய பாண்டவர்களை அரசருக் கெதிரில் அநேகமாக வரிசையில்லாம லிகழ்ந்தாய், மலைக் கிணையாகும் புயத்தினையுடைய ஐவரை லேசாக நினைத்து. வட வாக்கினிபோலும் விஷ தீட்சண்யமாகிய மின்னலைப்போல் சுடச்சுட நிந்தித்துச் சொல்லிய கொடுஞ் சொல்லானது இப்போது பிராணனை வாங்குகின்றது. அதற்கு நீ துயரப்பட வேண்டிய தென்ன ?

ஓ மன்னனே ! இவையன்றியும், பாண்டவர்களை ஜயித்து நானே பாராளுகிறே னென்று நீ சொல்லுங் காலங்கள் தோறும், அவர்களை வென்று ஜயம் பெறுவது அருமை அருமையென்று அடிக்கடி தடுத்து எவ்வளவு சொல்லியும், எள்ளத்தனையும், உன் செவி பொருந்தக் கேட்டனையோ? என்னையனே ! அப்படி பல வாறுகச் சொல்லிய என் வார்த்தையைத் தள்ளி, உனக்குரியோர் கூறிய புத்தியைக் கேட்டு உன்னிஷ்டப்படி நடந்தாய். நீ அப்படி நடந்ததில் இதுவரையிலும் என்ன பலனைக் கண்டாய்? உன் தந்தையாகிய திருதராஷ்டிரன் தலையில் அடித்துக்கொண்டு சகல விதத்திலுஞ் சொன்ன சங்கதியையுங் கேளாம லிகழ்ந்தாய். பீஷ்ம ராகிய பாட்டன் விளம்பிய மேலான முறைமையும் விடுத்தாய். எங்க ளெல்லாரையுங் கூட்டிவந்து இந்தக் குருக்ஷேத்திரத்தில் மாயக் கொடுத்தாய். ஆகிலும் உன்னை வெறுக்க வேண்டியதில்லை. நீ என்ன செய்வாய் பாவம். விதியை யநுசரிக்கு மதி என்பதுபோல் வினைவசப்பட்டாய். அப்படி யிருக்க, இச்சமயத்தில் எங்கள் பேரில் விழுந்து ஏன் மோதிக்கொள்கிறாய் ? எங்களை இகழ்வதிலுனக்கு ஒரு புகழும் இல்லையே: நாங்கள் அன்றும் வேண்டாமென்று சொன்னோம். இன்றும் வேண்டா மென்று சொல்லுகின்றோம். இன்னமுங் கேள் கர்ணன் சகுனி, துச்சாதனன் முதலான பலவான்களுடைய போர்த்திறத்தைக் கண்டு களித்தாய்! தன் பலமும் எதிரியின் பல மும் யோசிக்காமல் வீண் பகையை விலைத்துப் பாண்டவரோடு சண்டை வைத்துக் கொண்டாய். வெல்ல வல்லவரென்று சொல் லும்படியான சூராதி சூரரென்னும் திறவான்களாகிய பலகோடி படையைப் படைத்திருக்கிறாய். அப்பேர்ப்பட்டவர்களைத் துணை யாகக் கொண்டு ஜயங் கொள்ளாமல், விறுதாவாய் எங்களை வெறுத் துக்கொண்டு நிந்தை சொல்லு முறைமை உனக்கு இன்னும் என்ன பழி பாவத்தைக் கொண்டுவந்து வைக்குமோ நாமறியோம்.

அப்பனே! எனக்குச் சேனாதிபதிப் பட்டங் கட்டியபோது முரசக் கொடி தரித்த தருமராஜனே எவ்விதத்திலாகிலுங் கைப் பிடியாகப் பிடித்துத் தரவேண்டு மென்று நீ கேட்டுக் கொண்டபடி நிறைவேற்றும்படியாய் ரத முதலாகிய பற்பல சேனைகளுடன் இவ்விடத்திலிருக்கின்றேன். அதெனென்றால், சத்தியவான்களாகிய உத்தமருடன் சண்டை செய்யத் தக்கபேர் இந்த மண்டலத்திலில்லாமையால், அர்ச்சுனன் முதலிய பேர்கள் சயந்தவனைக் கொல்ல வேண்டு மென்னும் ஆசையுடன் தருமராஜனே விட்டுப் பிரிந்து நமது வியூகத்தில் வந்து நுழைவர். அத் தருணத்தில் தருமராஜனைப் பிடிக்கலாமென்னும் சமயம் பார்த்துக்கொண்டு வெகு ஜாக்கிரதையாய் இங்கு நிற்கிறேன். இது தெரியாமல் உன் மனம் போன வழி வீணுகப் பேசுகிறாய். ஓ ஆணிப்பொன்னே இரத்தினமோ வெனச் சந்தேகப்பட்டுச் சூரியகிரணச் சோதியென்று சொல்ல நிற்கு மாணிக்க மழுத்திய மகுடந்தரித்த மகாராஜனே! உங்களிலொருவரையு நான் நம்பமாட்டே னென்று நீ முன்னமே சொல்லியிருக்கின்றாய். அதுவுமன்றி நானே யுத்தஞ் செய்யப் புறப்படுகிறேனென்று இப்போது என்னுடன் சொல்லிய உன்னுடைய வீராவேசத்தை விட்டுவிடாமல், அது கெட்டுதுபோவென்று மனமுமிளக்காமல், புத்தியை ஸ்திரப் படுத்திக்கொண்டு, தைரியமும் பலமுந் தழைக்கச் சென்று அமர் புரிவாயாகில் உன்னை வெல்லத்தக்க வல்லமைசாலிகளு முண்டோ?

துரோணர் துரியோதனனுக்குச் சாலிகவசமளித்து அருச்சுனனோடு போர் செய்யச் செல்லும்படி விடுத்துத் தாம் தருமனை வளைத்தல்

இது நிற்க, இன்றைய தினத்தில் நானேற்படுத்தி யிராநின்ற நிலைபெற்ற பேரணி வியூகத்தை மதிக்காமலதின் மத்தியி லிராநின்ற வெற்றியை யுடைய சிந்துதேச வேந்தனை இன்றையப்பகற்குட் பிராணனை வாங்க அர்ச்சுனனுற் கூடுமோ? ஆகிலும் ஓ ஒளிபெற்ற வடிவேல் தாங்கிய உரக துவஜனே! விதியின் செய லெப்படியோ? அதை நானறியேன். ஆனாலும் என்னுற் கூடிய உதவியுஞ் செய்கிறேனென்று தன்னிடத்திலிருந்த ஒரு கவசத்தை ஆசீர்வதித்துத் துரியோதன ராஜனுடைய தேகத்தி லணிந்து, "ஓ நந்தியாவட்டை மாலையணிந்த நராதிபனே! உன்னுடைய அவசரத்தை விடுத்து இக்கவசத்தினுடைய பெருமையைக் கேளும். இக் கவசம் சிருஷ்டி

கர்த்தாவாகிய பிரம்ம தேவனிடத்திலிருந்தது. அப்போது ராக்ஷசர்களால் அடிபட்டு வருந்திய தேவேந்திரன் பிரமதேவரை வணங்கிப் பணிந்து அக் கவசத்தைத் தனக்குக் கேட்டான். பிரம்மதேவர் அப்படியே கொடுத்தார். அவ்விந்திரனிடத்திலிருந்து அங்கீரச மகரிஷி பெற்றார். அவரிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன். நானுனக்குக் கொடுத்தேன். நீ இக்கவச மணிந்துகொண்டால், எட்டு மலைகள் உன்மேற் பொட்டென விழுந்தபோதிலும், ஏழு மேகங்கள் இடிக்குமிடியெல்லாம் ஒன்றாகக் கூடி விழுந்தபோதிலும், இக்கவச மிளைக்காமற் றாங்கும். இது சிவந்த நிறத்துடன் வலுவேறிய சாலிகை எனும் பெயர்பெற்ற கவசம்'' என்று தெளியச் சொல்லி, அறிவில்லாமைக் கொருவரு நிகரில்லாத துரியோதன மகாராஜனை அர்ச்சுனனுடன் யுத்தம் செய்யும்படியாய்த் துரோணாசாரியர் அனுப்பிவைக்க, துரியோதனன் கறுத்த காளகூட விஷாக்கினியைப்போற் கனன்று புயம் பூரித்துச் சென்றான்.

இவனை யிப்படி அனுப்பிவிட்டுத் தருமராஜனை யுத்தஞ் செய்து பிடித்துத் தாம் சொல்லிய கடமையை முடிப்பதற்குத் திடங்கொண்ட மேகத்துக் கொப்பாகிய வில்லைத் தாங்கிச் சென்ற துரோணாசாரியர் அப்பாரிய வில்லைப் படபடவென வளைத்து, கூரிய பாணங்களைக் குமுகுமுவென்று தொடுத்து, விரைவாகத் தேரை நடத்திக்கொண்டு அளவிறந்த வீரப்பிரதாப மன்னரும் படைகளு மகிழ்ந்து சூழ்ந்து, வரும்படியாய் உகாந்த காலக் கினியைப்போற் சென்று எதிர்த்த காலத்தில், தருமராஜனனைவர் சதுரங்கச் சேனைகளையும் ஆஜானுபாகுவை யுடைய அரசரையுஞ் சேர்த்து, துரோணாசாரியரை வெல்லுவோம் வாருங்க ளென்று வெப்பமாகிய கோபத்துடன் உற்சாகங்கொண் டழைத்துவந்து தம்மைப் பிடிப்பதற்காகச் சபதங் கூறி எதிர்த்து வராகின்ற தனுர் வேதியன் பேரிற் சண்டை செய்யத் தொடங்கினர். அப்போது திக்குகளெல்லாம் அஞ்சி நடுங்கி ஓடுங்கும்படி சேனைகளார்ப்பரித்து, அண்டகடாகமும் குமுறும்படியாய் வாத்தியங்களை முழக்கி வந்தார்கள். அப்போது ஆகாயத்தில் வேடிக்கை பார்த்திருந்த தேவர்களெல்லோரும் பயக்கேதாம் பயக்கேதாம் என்று தங்களிற் றாங்களே தாவரிக்க மாட்டாமல் மயக்கங்கொண் டயர்ந்தார்கள்.

இப்பால் யானைகளுடன் யானைகளெதிர்த்துமோத, வேகமாகிய குதிரைகளுடன் குதிரைகள் போர் கொடுக்க, பொற்பிரகாசமாகிய

தேருடன் தேரிடித்துச் சண்டை தொடுக்கக் கிணறுபோற் சுரக்கும் வேதச் சிறப்பினையுடைய துரோணாசாரியருடன் பாண்டவச் சேனாதிபதியாகிய திருஷ்டத் துய்மன் வந்து எதிர்த்தான். இதன்றி யும், வெம்பிய கோபக்கும்பினையுடைய பீமசேனனை விகர்னன் முதலாகிய துரியோதனன் தம்பிமார்கள் வந்து வளைத்தார்கள். வாசனை தங்கிய மலர்மாலையணிந்த வாகுவிக னென்பவன் இளம் பஞ்சபாண்டவர்களை யெதிர்த்துக் கொண்டான். துச்சாசனனுனவன் திருநாபிக் கமலமுடைய் ஸ்ரீமான் தம்பியாகிய சாத்தகியை வளைத்துச் சண்டை கொடுத்தான். நகுலனுடன் சகுனியும் சகாதேவனுடன் துன்மதி யரசனுமாய் வந்தெதிர்த்தார்கள். புத்திமானுகிய அலம்புத னென்னும் ராக்ஷசன் கடோற்கஜனுடன் கலந்து போர்புரிந்தான். திருந்தியசோமதத்த னென்பவன் விற்றிறம் வேற்றிறங் கொண்ட ஒப்பற்ற சிகண்டியுடன் அமரியற்றினான். விண்ணில் நிறைந்து வேடிக்கை பார்த்திருந்த பண்ணவருங் கண்ணை மூடிக் கொண்டார்கள். இவ்விதமாகச் சமுத்திரஞ் சூழ்ந்த மண்சுழல விண் சுழலக் கண்சுழலச் சண்டை பண்ணும்போ திருதிறவர்களிலு மிருந்து எழும்பிய தும்புகளினுலும் அம்புகளினுலும், இட்கிறைந்து கின்ற சேனைகளெல்லா மடங்கி, அகேக காதவழிக் கப்பாலோடி ஆவியிழந் தழிந்து விழுந்தார்கள். சிலர் யுத்தமறந்து பறந்தார்கள்.

சேனுதிபதிகள் யுத்தம்

இப்படியாகச் செய்துவரும் யுத்தத்திற் பாண்டவப் படைகள் மேலிட்டுப் பஸ்மீகரப் படலம் பண்ணும்போ தெதிர்த்து யுத்தஞ் செய்த எதிரிகளின் சேனைவீரர்க ளெல்லாம் பெரிதாகிய இகல் விளைத்து இளைத்துத் துன்பமடைந்து கோபமும் உற்சாகமும், ஆண்மையும், வீரத்தன்மையும் விட்டு, மதிமயங்கிக் கெட்டு வாயு வேகத்திலு மிஞ்சிய வேகமாய் வலுக்கொண்டோடி, கைத்திறல் கணைத்திறலையுடைய துரோணாசாரியரின் காலிற்போய் விழுந்து "ஐயா! நம் படைகளெல்லாமழிந்து நாங்களுமொழிந்து உயிர்தப்பி ஓடிவந்தோம்: பாண்டவர் படை ஜயிக்க மிகவாடி நொக்தோம்" என்று குறைசொல்லிக் கொள்ளும்போது துரோணச்சாரியர் மிக்க கோபமுடையவராய்ச் சேனைகளைத் தேற்றி நிறுத்தித் தேரைச் செலுத்தி வந்து, ஜயம் ஜய மென்று சொல்லிக் கொண்டு பாண்டவச் சேனைகளைத் தீய்க்கும்போது, பாண்டவச் சேனைகளு மவ்வாறே இளைத்தோடிச் சேனுதிபதியினிடத்திற் சொல்லித்

தியங்க, அத்தீனதிசையைக்கேட்ட திருஷ்டத்துய்மனனவன் மனக் கொதிப்புடன் முன்சென்று நின்று மறலியும் நடுங்கி யொடுங்கும் வடிவேலேத்தாங்கிய துரோணாசாரியரை வளைத்துக்கொண்டு மாரி காலத்து மேகம் பொழிவதுபோல் பாணவருஷங்களைப் பெய்யா கின்ற பாரிய வில்லேப்பிடித்து நிறுத்தி யெதிர்த்தான். அப்பால் இரண்டு சேனுதிபதிகளுஞ் சோனுமேகஞ் சொரிவதற் கொப்பாகக் கரிமுகக்கணை, துரிதகற்கணை, சுடுசரக்கணை, சுடர்விடக்கணை, அரி முகக்கணை அனிலகற்கணை, அரனுருக்கணை, அயனருட்கணை முத லாகிய அஸ்திரங்களைத் தொடுத்து அமர் செய்தார்கள்.

அவ்விருவருஞ் செய்த யுத்தத்திறங்களை இவ்வித மென்று சொல்ல வல்லவரொருவருமில்லே. ஆயினும் இவர்க ளெடுத்து விட்டபாணங்கள் ஆகாயத்தை மறைத்து விட்டன. அப்பாணங் களினு லிறந்த நால்வகைச் சேனைகள் யுத்தகளத்தி லிடமில்லாமல் நிறைந்து விட்டனவென்று ஆச்சரியமாகச் சொல்ல வேண்டுமே யல்லாது வேறில்லே. ஆதலினுல் தநுர்வேதத்திற் செவ்வையாகக் கைதேர்ந்த இருவருஞ் செம்பவளம்போலும், செங்கதிர்போலும், செம்பினுருக்குப்போலும், செம்முருக்கின் மலர்போலும் சிவந்த கண்களிலிருந்து தீப்பொறி சிதறித் திருதிருவென் றுதிர்க்க, ஆவியுடன் புகையெழச் சிரித்து, உதடுமடித்து, புருவம் நெரித்து, உடல்வியர்த்து, உலேமெழுகொத்து உருகருங்கதற, உவரியுஞ்சிதற, உம்பருங்கதற, அம்பருஞ்சிதற, திக்குக்கஜங்கள் விக்கிமுக்கி ரத்தக் கட்டிகள் கக்கி யெக்கி, திக்கெட்டுந் திடுக்கிட்டுப்போகப் பொற்கட்டுப் பாணங்களும் வேக, போர்புரியும்போது, இவர்கள் விடுக்கும் பாணங்களினுல் மயங்கி மாளாதவரில்லே; ஜயங்கொண்டெவருஞ் சொன்னவரில்லே. இந்தப்பிரகாரம் கடலுமலேயுங் காரும் பாரு மதிர்த்த தன்மைபோல் இடம் வலமாகத் தேரைச்சுழற்றி ஒருவரை யொருவர் கொல்ல நினேத்துக் கிட்டுங்காலேயில், குற்றமில்லாத திருஷ்டத்துய்மனுடைய தகடுகட்டிப் பெயர்பதித்து வளைவு கொண்டு பளபளென்று விளங்கா நின்ற வரிபொருந்திய மணிகட்டிய வில்லே மளமளவென்று முறித்து வானிற் பறக்கும் பொடியாகத் தூற்றினுர் மறைவல்லாளரான துரோணாசாரியர்.

அப்போது திருஷ்டத்துய்மன் தன்னுடைய விற் போய்விட்ட தென்று விசனப் படாமல் க்ஷணப்போதிலே ஜெயந்தராகின்ற கத்தி கேடயந்தாங்கி, கண்மூடிக் கண்திறப்பதற்கு முன்னே காலடி

சேர்த்து காலடிபேர்த்து ஓட்டிப் பதுங்கி யொடுங்கி யெழுந்து, துரோணாசாரியரின் தேரின்பேரிற் பிடுக்கிடப் பாய்ந்து, நான்கு குதிரைகளையும் ஒரே வீச்சாகவெட்டி, மலைமேல் விழுந்த இடியைப் போல் முழக்கிக் கிட்டித் தட்டிப் பூமியில் நிற்குந் தன்மையாக நின்றான். அப்படி நிற்கும் திருஷ்டத்துய்மனை ஆசான்கண்டு அவசாங்கொண்டு, கோபித் தெதிர்சென்று, குவலயமெல்லாங் குலைகுலையும்படியாகக் கொடுந்தணற் கொலைக்கணை யொன்றை விடுத்து அவன் கைக்கொண்டிருக்கும் வாளுங் கேடயமு மாப்பொடிபோ லுதிரச்செய்தனர். அப்படிச்செய்த மறை வல்லாளனைப் பாஞ்சால குமாரன் பார்த்து, மடமடவென்று பற்கடித்துச் சற்றுநேரம் நிதானித்து வெற்றிபெற நெருங்கிய போர்த்திறங்களுடன் மேலான சத்தியும் யுக்தியும் சித்தியும் பூர்வ தவத்தாற் பெற்றதைப் போற் பழகிய துரோணாசாரியானவர் பெருங்கிளிகாட்டிக் கருப்புவிலைபோனிற்குங் கம்பீரத்தையுங்கண்டு கலங்கி நிற்குங்காலையில் அக்காரணத்தைக் கண்ணன் தம்பியாகிய சாத்தகி கண்டு, கருதற்கரிய படையுட னிடைபுகுந்து அச்சேனாதிபதியைத் தன் தேரிலேற்றிக்கொண்டு, தீரத்துவமாய்த் தங்கள் சேனையைநோக்கிச் சிங்கம்போற் செல்லுங்காலையில், துரோணாசாரியர் தனக்குப் பங்கந்தந்ததாக அடங்காக் கடுங்கோபங் கொண்டழன்று, எல்லா வீரருடைய கைக்கு மேலாகிய வில்லையெடுத்து நாணியிறுக்கி, உறுக்கிவிட நின்ற பாணவருஷங்களுடனெதிர்த்து நூறு மலைகளுக் கொப்பாகத் தேறி மீறி வீறி சீறிய புஜபல பராக்கிரமக் கொற்ற வயம்பெற்ற மதமுற்ற விற்றுங்கிய சாத்தகியென்னும் பெயர் கொண்ட சிங்கத்தை மறித்து மடக்கினர்.

சாத்தகிக்கும் துரோணருக்கும் யுத்தம்

அந்த வேளையில் சாத்தகி தன் தேரிலிருக்குந் திருஷ்டத்துய்மனைநோக்கிய சேனாதிபதியை வேறொரு சேமத்தேறி லேற்றி வைத்து, சில படைஞரைக் கூட்டிச் சேனைகளிருக்குமிடத்துக்குப் போகும்படியா யனுப்பிவிட்டுத் தன்னுடைய ஒப்பற்ற தேரைத் திருப்பி, பலம்பொருந்தி கலஞ்சிறந்த வில்லை வளைத்து நாணி பூட்டிக் குணத்தொனி காட்டி மேதினி யெல்லாங் கூட்டி, வெங்கனலைமூட்டி வேகச் செய்யுஞ் சாயகங்களை மின்னற் பிரகாசம்போல் மிதமில்லாமல் வீசவும், பின் பிருவருந் தங்களிரதங்களுடன் நேருக்கு நேர் நின்று சாரதிகளுடன் சாரதி, குதிரைகளுடன் குதிரை, கொடியுடன்

கொடி, இருசுடனிருசு, சக்கரங்களுடன் சக்கரம் ஊடுதாக்கி, இணையில்லாத பாணமாரிகளை யெங்கும் பொழியு மினிமையினுல் விண்டலத்தில் வேடிக்கை பார்க்கும் விபுதர் முதலாகிய பேரும் வெருவி நடுங்கினுர்கள். இருவரும் இப்படியாகத் தப்பிதமில்லாமற் கைப்படுகணைகளினுல் வெப்பஞ் செய்யுங் காலையில், சாத்தகி ஆயிரம் பிறைமுகாஸ்திரத்தை யெடுத்து அநுசந்தித்து, ஆசார உபசார பூசை முதலிய மந்திரங்களும் புரிந்து, துரோணசாரியர் மேலே தூவிடத் தொடுத்தான். அந்தக் கணைகள் தொந்தோ மென்று தூறிச் சிறிச் சென்தழலைப் போல் வருவதைத் துரோ ணச்சாரி கண்டு, உலக்களத்திற் காய்த்துராவிய உஷ்ணங்கொண்ட ஆயிரம் பிறைக்கணைகளை எடுத்து, அந்தக் கணைகளுக்கீடாக வந்த வழியே மடங்கிப்போகும்படி உந்தியபோது வந்த கணைகளுடன் இந்தக் கணைகளுஞ் சொந்தமாகப் பற்றப்பட்டு இந்திரனுலகும், சந்திர னுலகும், யக்ஷனுலகும், ஈசானனுலகும், யமனுலகும், எரியோ னுலகும், வருணனுலகும், வாயுவினுலகும், கிருதியினுலகும், பரிதி யினுலகும், நெடுநிலமுழுதும் படபடெனச் சுழன்று, சாத்தகிவிடுத்த சரங்களெல்லாவற்றையுஞ் சருகு முமியுமெனச் சாய்த்துச் சது மறையவன்வாழ் சத்தியலோகத் துற்றுத் திரும்பித் தன்னுடைய சரக்கூட்டில் வந்து அடங்கியது.

அத்தன்மையைக் கண்ட துரோணசாரியர் தமக்குத் தாமே சந்தோஷங்கொண்டு, பலம் பொருந்திய குமுத முகாஸ் திரத்தை உலகங்குமுற வெடித்துச் சாத்தகி மார்பிலே தைக்கும் படிக்குப் பின்னும் விடுத்தார். அந்தக் கணைவரும் வேகத்தையும், சோகத்தையும், பயத்தையும், தொடர விளைக்கும் வடிவேலைத் தாங்கிய சாத்தகி நோக்கி, கலம்பொருந்திய சூரியாஸ்திரத்தைத் தொடுத்துத் துரோணச்சாரியர் விடுத்த அக்குமுகமுகாஸ்திரத் தைக் குறைத்து, மூன்று வாயுவாஸ்திரம் விடுத்துத் துரோணச்சாரி யினுடைய தேரையும், குதிரைகளையும், சாரதியையுமழித்து, நிலக் கிடையாக்கினுன். உடனே தனுவாசிரியர் வேறு ரதமேறிக்கொண்டு, துளப மணிந்த முகுந்தனுக்குகந்த தம்பியாகிய சாத்தகியின்மேலில் மூர்த்தண்யமாகிய முத்தலைக் கணையை யேவி, அவர் கைப்பற்றிய வில்லை முறித்து அந்த வில் முறியுமுன்னமே அரிக்கணையைப் பிரயோகஞ் செய்து ரதம், சாரதி, குதிரை இவை முதலிய யாவை யும் போக்கினுர். அக்காலையிற் சாத்தகி வேறு தேரேறி, பிரகாசத்தையும் பெருமையுமுடைய வேறொரு பாரிய விற்கொண்டு

கவக்கிரகாதி மூதலிய நக்ஷத்திரங்களும் அஞ்சி யதிர்ந்து அடங்கி யுதிரும்படியாய் ஆலகால விஷத்துக்கொப்பாகிய கடுங்கணைகளைக் கோடி கோடி யென்று சொல்லும்படி வில்லிற் றொடுத்து விட்டார். அந்தக் கடுங்கணைகள் அமேககாலாந்தகரைப்போலக் கருநிறம், வெண்ணிறம், செந்நிற முதலிய பல நிறங்களைக்கொண்டு காந்தி வந்த போது, திசைகளும் அத்திசைகள்தோறு முள்ள தீவாந்தரங்களுங் நிறுநிறுவிறுவெனச்சுழன்று தத்தளித்தன. இப்படியாகப் பற்பல பாணங்களை விற்பன விவேகிகளாகிய இருவரும் தொடுத்துப் போர் செய்யுங் காலையில், இடம் வலமாகத் தேர்கள் சுழன்றன. நடுநல மாகக் குதிரைகள் சுழன்றன. தீப்பொறி பிறைத்துக் கண்கள் சுழன் றன. மார்களை தொடுத்து விற்கள் சுழன்றன. கதிர் சுழன்றது. மதி சுழன்றது, மனஞ் சுழன்றது, நிலஞ் சுழன்றது, இவ்விரண்டு படை வீரருஞ் செய்த யுத்தத்தில் துரோணாசாரியருடைய வில்லாண் மையையும், சாத்தகியுடைய வில்லாண்மையையும் பூங்கொத்த ணிந்த தேவர்கள் கொண்டாடிப் புகழ்ந்தார்கள். போரின் திறத் தைப் பூரணமாக உணர்ந்த போர் வீராரனவரும் இக்கப் பலவான் கள் புரிந்த யுத்தமுனையைச் செவ்வையாகப் பார்த்து அதிசய விரக்கமாக அமேகஞ் சொற்கள் சொல்லி மகிழ்ந்தார்கள்.

இவ்விதமாக யாவரும் துதித்த இயற்கையினால் துரோணாச் சாரியர் திடங்கொண்டு சீறி, தம் மனத்தி லெழுந்தெரிந்த கோபாக் கினியைப் பார்க்கிலுங் கோடிப் பங்கதிகமாக அக்கினி யாஸ்திரத்தை யெடுத்து அமேக உபசாரமாகப் பூசித்து, வஞ்சினங்கொண்டு எதிர்த் துப் போர்புரியா நின்ற சாத்தகியின் பேரிலே தைத்து உயிரொழிக் கும்படியாய்த் தொடுத்தார். அத்தக் கணையானது கடலிற்றங்கிய வட வாமுகாக்கினியைப்போற் படபடப்பாய்ப் புகுந்து, விண்டலத்திற் பாய்ந்து, மண்டலத்தைக் காய்ந்து, நால்வகைச் சேனைகளும் நாச மாகும்படியாய் உருக்கிக் கருக்கித் தீய்த்து வரா நின்ற வலிமையை, ஆய்ந்துணர்ந்த சாத்தகி கண்டி, ஓரு வருணாஸ் திரத்தைத் தொடுத்து மந்திரங்களைப் படித்துச் சுத்தரமாக விடுத் தார். அப்படி விடுத்த வருணாஸ்திரமானது துரோணர் விட்ட அக் கினியாஸ்திரத்தை அவித்துக் கும்பத் தாரையாய்ப் மழை பொழிந் தந்த யுத்தக்களத்திற் பறந்த வெவ்வழற் றீச்சுடர்களையும் வெண்தூள், கருந்தூள், செந்தூள், பசுந்தூள், இவைகளையும் தணித்து நீக்கி இரண்டு பாணமும் ஒன்றோடொன்று பற்றித் தாழ்ந் ததைச் சிவந்த கண்களையுடைய அவ்விருவரும் கண்டு கோபங்

கொண்டு மேலுமேலுஞ் சில கணைகளே எண்ணற்றனவா யேவி ரணகளத்திலே தலையறுத்து கவந்தங்கள் ஆடும்படியாய் நிலைகிவந்து போர் செய்து கொல்வதானார்கள். அப்போது சாத்தகி விடுத்த கணைத்திறத்தையும், நாணேற்றி வில் வளைத்த கரத்திறத்தையும் குற்றமற்ற புஜபல பராக்ரமத்தையும் நற்றவப் பயனுலமைந்த ஸ்திர மாகிய புத்தி விசாலத்தையும் துரோணரறிந்து தலையசைத்துச் சந் தோஷப்பட்டுத் தம் ஹிருதயங்கிய அர்ச்சுனனிடத்தில் வில்வித்தை கற்ற பிள்ளை யல்லவா இவனென்று மெச்சினார். அச்சமயத்தில் அநேக அரசர்களுடன் நகுல சகாதேவரிருவரும் நாடிவந்து முக் கண்ணனுக் கொப்பாகிய துரோணாசாரியை யடுத்துக் கணைகள் தொடுத்து விடுத்தார்கள். அப்போது துரோணர் சாத்தகியை விட் டுத் திரும்பி நகுல சகாதேவரைக்கிட்டி எட்டிப் பழம்போற் கண் சிவந்து மட்டிலாக் கணைகளைத் தொடுத்து இவ்விருவருடன் வந்த அணிப் படைகளெல்லாம் அலக்கழிந்து போகும்படி யடித் ததிர்க் கும்போது நகுலசகாதேவர் முதலாகிய நால்வகைப் படைஞரும் புறமுதுகிட்டோடினார்கள்.

தருமராஜனுக்கும் துரோணாசாரியருக்கும் யுத்தம்

அந்த வேளையில் தருமராஜனெதிர்த்துத் தனுர் வேதியனை வளைந்து காய்ச்சித் தேய்ச்சுக் கடைச்சற் பிடித்து விஷத்திலும் வசனுபித் திராவகத்திலுந் துவயற் செய்து தங்கக்கட்டு, பொற் கட்டு, வச்சிரக்கட்டு, எழுகுக்கட்டு, பட்டுக்குச்சு முதலியவுங் கட்டிய பாணங்களைப் பிரயோகஞ் செய்து, எங்குமடுங்கி, மங்குலொடுங்கி, அங்கி மடங்கி, அருக்கனிடுங்கி, உலக மடங்கிச் சலிக்கும்படியாய் உக்ரத்துடனின்று விக்ரமமாகக் கொன்று ஜாடியகாலியில் வேத விதியாகிய யாகங்களும், தர்மமும், வீரப்பிரதாபமும், நான்கு வேதங்களிற் சொல்லிய நன்னெறிகளும். வித்தியாக வளர்த்து வரா கின்ற சிறந்த துரோணரானவர் தேவாஸ்திரங்களைத் தொடுத்து, தர்மராஜன் பிடித்த பாரிய வில்லைப் படீரென்று ஒடித் தார். உடனே தர்மநந்தனர் வேறொரு வில்லை யெடுத்துப் பிடித்து நிறுத்தி இழுத்து நாணிபூட்டி டங்காரஞ் செய்து காணுசைகாட்டி இடியாஸ்திரப் பிரயோகஞ் செய்து எதிர் நின்ற குருவினுடைய வெள்ளை நிறங்கொண்ட வேதக்கொடியையும், சிகரக்குடை தாங்கிய தேரையும், வாயுவேகமுடைய குதிரைகளையும், வண்மை நிறைந்த சாரதியையும், கூறுகூறுகப்போக்கி, வெற்றிப்போரில் வீறிச் சிறந்து

விசையுடனடிக்கும் இசைமணி கட்டிய வீர வில்லையுந் துண்டித்து, தீரப்படைகளையுந் தண்டித்து எதிரேறிச் சென்று சேதிக்கும் போது சிலையரசனுகிய துரோணாசாரியானவர் துயரங் கொண்டு சேமத் தேரிற் பாய்ந் தேறி நின்று மலையை நிகர்க்கும் வேறொரு சிலையை வளைத்து உலையை நிகர்க்குந் தலையினையுடைய உச்சித மான வச்சிரக்கணைக்குத் தூப தீப நைவேத்தியம் கொடுத்து விடுத்து முரசக்கொடிக் கதிபனேறிய தேரையும் கைப்பிடித்த வில் லையும் போக்கினர்.

அக்காலையில் எக்காலத்தும் உலகத்தில் நீதியை நிறுத்திய யோக்கிய சிலாக்கியரான தர்மராஜனவர் மற்றொருதேரில் விற் பிடித்தேறி, பற்றலருயிரைப் பாழ்படச் சிதைக்கும் சத்திவேலை எடுத்துப் போற்றிக் கரத்திற்பற்றி துரோணாசாரியி னுயிரை வாங்குகவென்று அபிமந்திரித்து ஆகாயத்தி னிறைந்து பரந்த விண்ணவர்களும் பூலோகத்தி லுறைந்து சிறந்த மன்னவர்களும், வேலாயுதத்தின் வெப்பத்தைப் பார்க்கமாட்டாமற் கண்களை மூடிக் கொண்டு துரோணர் பிழைப்பாரோ சாவாரோ வென்று சந்தேகப் பட்டுத் தளர்வுறும்படியாய், தம்மை ரட்சிக்கும் வழிபடு கடவுளி னுடைய திருவடியைச் சிந்தித்து வந்தித்துப் போற்றி நாசி சுளித்து வீசி யெறிந்தார். அந்தச் சத்தி வேலானது தத்திச்சுற்றிக் கத்திச் சிரித்துப் புறப்படும்போது, மண்டல மெல்லாங் கரிந்து, விண்டல மெல்லா மெரிந்து, திக்குகள் விரிந்து, செந்தீ சொரிந்து, விஷ நிறைந்த புகை யெழுந்து, மின்னல்மலிந்த பொறிவிழுந்து கனலில் வந்த புனல்வழிந்து, கலகல வெனச் சிகைவிரிந்து, காரொடு கடல் மலை நேரொடு சரியப் பாரொடு பரிகரி தேரொடுவிரியப் பட பட கடகட தடதட மடமட படீரென வந்து விழுந்தது. அப் பராக்கிர மச் சத்தியைத் துரோணாசாரியர் கண்டு கவலைகொண்டு பிர்மாஸ் திரமெடுத்து வேண்டிய பூசை கொடுத்து வேதமந்திரத்தை யுச் சரித்து விடுத்தார். பிர்மாஸ்திரமானது பூதலபாதல மாதல மீதல முதலிய யாவும் வாதனை வலியச் சேதனப்படுத்தி, அஷ்டதிக்கு களும் அஷ்ட கஜங்களும், அஷ்டகிரிகளும், அஷ்டமா காகங்களும் கஷ்டப்பட்டுக் கலங்க, நஷ்டப்பட்டு நலங்க, வட்டமாய்ச் சுழன்று சுழன்று, தர்மராஜன் விட்ட சத்தியின்மேல் விழுந்து, கொழுந்து விட்டெரியும் நெருப்பனைக் கொளுத்திக் காய்ந்து, எங்கும் பாய்ந்து, ஆரியனிடம் வந்து சேர்ந்தது.

அப்போது சேனாதிபதியாகிய சிலேக் குருவானவர் தர்மராஜ னேவிய சத்தியழிந்த சங்தோஷத்தினால் மெய்த்திறம், கைத்திறம், விற்றிறம், மற்றிறம், மதித்திறம், யாவுங் காட்டி, எவர்களு மிவருக் கீடல்ல வென்று சொல்லும்படியாய்த் தன் பேர் சிலேகாட்டி, மீள வுங் கமலாஸ்திரம், கருடாஸ்திரம், குமுதாஸ்திரம் விருக்ஷாஸ்திரம், பர்வதாஸ்திரம் என்னும் ஐந்தஸ்திரங்களே அபிமந்திரித்து அறக் குமாரனுடைய அங்கத்தில் விடுத்தார். ஆசிரியன் ரெடுத்த அக் கணைகளைந்தும் அனற்புகை மலிந்து தருமராஜன் மீது தாவிவரும் போது, தர்மந்தவறாப் பெரியோர் முதற் றேவர்க ளெல்லாருஞ் சஞ் சல மடைந்து, ஏதேது, இப்பாணங்கள் தப்பா! தப்பா! இந்தப் பூட்டுக்குத் தருமராஜன் தப்பிப் பிழைப்பது அருமை: அருமை! எப்படியு மிறந்து போவார் சந்தேகமில்லை. ஒருவேளை கல்வினைப் பயனுற் பிழைப்பாராகிற் சிறந்த சேனாதிபதியாகிய துரோணாசாரியின் கையிற் சிக்கிக் கொள்வா ரென்று தியங்கி, மயங் கிப் பெருமூச்சு விட்டு, சந்தேகிக்கும்போது, குந்தியின் முதற் புத்திரனாகிய கோமான், நந்த நந்தனுக் கந்தரங்க பக்தனாகிய சீமான், நிந்தைவருந்தி, இந்திரக்கணை, சந்திரக்கணை, இரண்டையும் அநுசந்தித்துப் பிரயோகஞ் செய்தார். அக்கணைகளால் துரோணா சாரியர் தொடுத்த கணைகள் ஐந்தும் மூனை முறிந்து, இற கறுந்து, உடல் சிழிந்து, மளமள வென்று பொடிப்பொடியா யுதிர்ந்தழிந்தன.

அந்தக்ஷணமே தருமநந்தனர் மனங் கொதித்து, முகங்கடுத்து, பற்கடித்து, சில சொற்படித்து, வலுவிற் பிடித்து வயிரங்கொண்ட எழுவாளிகளையுந்தி, அருமறையவர் கொண்ட வில்லையும் அவ ரேறிய தேரையும் அழித்து, யாவரும் துதிக்கா நின்ற சூரியனைப் போல் துலங்கி நின்றார். அப்படி நிற்கவுஞ் சேனாதிபதியாகிய துரோணாசாரியர் தேரும் வில்லுஞ் சீருங்குலைத்து, ஓட்டமும் நடையு மொன்று மில்லாமல் அசைவற்றவராய்ப் பூமியினிற்கும்படி யாயதைப் புண்ணிய சொரூபியாகிய தருமராஜன் கண்டு, அவர் பேரிற்கையெடுத்து யுத்தம் பண்ணக் கருதாதவராய் செவ்வரக்கைப் போற் சிவந்து தீப்பொறி சிதறுங் கோபக் கண்ணிற் கிருபைசொரியும் படியாய்ப் புன்சிரிப்புடன் அவரை யுற்றுப் பார்த்து, "இப்போ தும் மைக் கைப்பிடியாகப் பிடித்துக் கட்டுவதை மாப்பாக விட்டேன்" என்று தேரைத் திருப்பி, அவருடன்கூட வந்த ஆலகால விஷத்துக் கொப்பாகிய படைவீரர்மேற் பாய்ந்து சீறி பாணங்களை யாய்ந்து தூறியபோது, சேனைகள் மெலிந்து தியங்கியதைக் கண்டு மனந்

தாளாமல் மாற்சரியங் கொண்ட இருக்குவேத ஸம்பன்ன ராகிய துரோணாசாரியர் அந்தப் பாண்டவ முதல்வனை விட்டுக் கால் கடையாய் மீண்டு போனார்.

அக்காலையில் தமையனுடைய கருத்துணர்ந்த தம்பியாகிய பீமசேனன் களங்க ரகிதனாகிய சூரியனைப்போற் பொன் மயமான தேரைச் செலுத்தி, அண்ணலாகிய தருமராஜன் செய்யும் யுத்த மூனைக் கணுகினான். அந்தத் தம்பியைக் கண்ட தரும பூபதியானவர் யுத்தமுனையை விட்டு வெற்றிபெற்ற பிரகாசத்துடன் திரும்பினார். ஜயா ஜனமேஜய மகாராஜனே! எப்போதும் தருமந் தவறுத புண்ணியவான்களுக்குப் பொல்லாங்காகிய பகைவந்து தொடராது. ஒருவேளை தீவினைவசத்தால் ஆரபாரப் பகைவந்த போதிலும், அவர்கள் செய்த தர்மம் வீரங் குறையாமனின்று வெற்றிபெறச் செய்யு மென்று மேலோர் சொல்லிய வாசகமானது சத்தியம். ஆதலால், தர்மகர்த்தனைப் பிடித்துத் தருகிறேனென்று சபதங் கூறிவந்த துரோணாசாரியர் தாம் சொல்லிய சபதத்திறமை தப்பாமலொப்பாகும்படியாய் வந்து போர்புரிந் திளைத்தபோது, ஆசாரிய னென்னும் அன்பு வைத்து அவருக்கொரு வருத்தமு மில்லாமற் போகும்படியாய்த் தருமராஜன் செய்த பெருங் கிருபையானது எல்லோராலும் கொண்டாடும்படி சிறந்த தென்று, தேவர்களெல்லாருந் தருமராஜனுடைய புகழை யெடுத்துப் பாடினார்கள்.

நகுலசகாதேவர் பீமசேனன் கடோற்கஜன் இவர்கள் யுத்தம், இதில் திரிகர்த்தராஜன் புத்திரன் வதை

இப்பால் நகுலராஜனும், அழகிய விகர்னராஜனும், பெருமை பொருந்திய பேரமர் விளைத்த காலையில், வீரப்ரதாப பரிசுத்தவான்களெல்லோரும் ஆச்சரிய மடைந்தார்கள். புராதன பூமியினிறைந்த ஆத்மகோடிகளெல்லாஞ் சலித்தன இம்மென்றியும் யானைப்படை குதிரைப் படையில் மிகுந்த துன்முகனும் சகாதேவனு மெதிர்த்து அருமையான போர்புரிந்தார்கள். அந்த யுத்த முனையினின்ற வித்தக வீரரெல்லாரும் வெருவிப் பயந்து கலக்கங் கொள்ளும்படியா யுத்தஞ் செய்து வருகையில், துன்முகனது தேரையும், வில்லையும், பாணங்களையும், சகாதேவன் பொடியாகச் செய்தான். தேகம் வருந்திப் பூமியி லிழிந்து புறமுதுகிட் டோடினான் துன்முகன். அவனோடியதைக்கண்ட சகாதேவன் திரும்பிவருங் காலையில், வில்முனை வீர

னென்னுந் திரிகர்த்தனுடைய புத்திரன் வந்து வளைத்து யுத்தம் பண்ணினான். அப்போது சற்றுநேரமவனோடு போராடி, மற்றவர் நேரோடிப்போகும்படியாய்ச் சாடி, வலிமையேறிய முனைவாளியால் திரிகர்த்தன் மைந்தனை மடித்து வானிலேற்றினான்; அவனுரனில், போர்செய்யா நின்ற ராஜர்களுடைய வீரமுனைக்கு இவனொரு எம னென்று சொல்லும்படியான வீர தீர விஜய பராக்ரமங் கொண்ட சகாதேவன்.

இப்பால் ஒரு பக்கத்தில் கதாயுதனாகிய பீமசேனன் புகுந்து, மிகுந்த வேகத்துடன் வெகுண்டு வீசிவரா நின்ற தந்தையாகிய வாயுதேவனைப் பார்க்கிலும் விக்தையாகிய பலத்தை மேற்கொண்டு, அந்தர மென்னு மேலுலகளாவிய நீல மலையானது கால் முளைத்துப் பூமியிலுலாவுவதைப்போல் உலாவி, தனக்கெதிரி இன்னனென் றில் லாமல் எதிர்ப் பட்டவர்களை யெல்லாங் கதாயுதத்தால் மோதி யடித் துத் துவைத்து ஓயாமல் யுத்தஞ் செய்து திரிந்தான்; திக்குக் கஜங் களாற் சுமக்கப்பட்ட இக்குவலயம் திக்கு முக்காடி வருந்தியது. இத் தன்மைய வாகிய போர்க்கோலங் கொண்ட பீமசேனனுடைய புத் திரன் கடோற்கஜனவன் மற்றொரு பால் அலம்பாசுரனை வளைத் துக்கொண்டு, இரண்டு மகமேரு திரண்ட தோளினுடன் விரிந்த நிலத்தினின்று அமர் செய்ய கிற்பனபோல் நின்று அமர் செய்யும் ஆரவாரமானது, என்னைப் போன்றவர் காவினுற் சொல்லத் தொடங் கினாலும் அருமையினும் அருமை ஓ ஜயா ஜனமேஜய மகா ராஜனே! இவ்வண்ணமாக அனேக யுத்தம் நடந்த விதத்தையும், துரோணரானவர் வடவாக்கினிபோற் சீறிவந்து நேர் புகுந்து போர் புரிந்தகன்ற திறத்தையும் சொன்னோம். இனிமேல் மாதவன் செலுத்துந் தேரின்பேரில் ஆதவன்போ லிருந்து, குறைவற்ற நிறையுற்ற, முறைபெற்ற, முனை வெற்றிகொள்ளும் அர்ச்சுனனது வீரத் திறத்தைச் சொல்லுவோங் கேட்பீராக.

தடாகக்கரையில் அருச்சுனன்செய்த கால்நடைச் சண்டை.

சேனுபதியாகிய துரோணாசாரியரால் ஆசீர்வதித்திடப்பட்ட சாலி கவசத்தை யணிந்துகொண்ட ராஜாதி ராஜனும், அவனுக் குடன்பட்ட பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மன்னர், மண்டலீ கர் முதலாகிய பலவிதப் படைஞருஞ் சேர்ந்து, திக்குக்கஜங்கள் செவிடு பட்டுப் போகும்படியாய் ஜெயபேரி முதலாகிய வாத்தியங்

கள் முழங்க, குடை, கொடி, பீலிக்குஞ்சம், இவைகளைப் பிடித்துக் கூக்குரலிட்டார்த்து, தனஞ்செய னின்ற யுத்தமுனைக் கெதிரில் வந்து, முந்தித் தங்கள் சேனைகளை முட்டவிட்டார்கள். அவ்வேளையில் யுத்தம் பண்ணும்படியாகத் துரியோதனனுடையரால் விடப்பட்ட இச்சேனைகளும், அணிவகுத்திருந்த யானைகளும், குதிரைகளும், தங்கள் தங்களுடைய இளைப்பு தீரும்படியாய் தேவதத்தனால் யேற்படுத்தப்பட்ட மணங்குலாவுமலர் நிறைந்த பொய்கையிற் சென்று; பூரணமாகிய புனலைப் பருகி தாகவிடாய் தீர்ந்து, தடாகத்தின் வளப் பங்களைப் பார்த்து, "ஆ ஆ! எம்முடைய நாவானது எந்தக் காலத்திலும் புசியாத ஜலமிது; இதைச் ஜலமென்று சொல்லப் படாது. அப்படிச் சொல்லிய பெயர்களுக்குச் சஞ்சலம் வந்து சம்பவிக்கும். அம்மம்மா! இதைத் தேவர்களுக்குப் போக்கியமாகிய இன்னமுதென்று சொல்ல வேண்டுமே யல்லது வேறல்ல" என்று சொல்லித் துதித்துத் தென்றற்காற்று வாசமாகிய அத் தடாகத்தைச் சூழ்ந்திரா நின்ற சோலையின் கரைதோறும் போய்ப் பொருந்திப் படுத்து, தங்களுடைய விடாய் தீர்த்துக் கொண்டார்கள். மேலும், சில பேர்கள் கன்னமதம், கபோலமதம், கரடமதம் என்னு மும்மதங்களையுள்ள யானைகளைச் சேர்த்துக்கொண்டு வந்து செந்தாமரைமலர்ந்த அத்தடாக ஜலத்தில் நீந்தலடித்து விளையாடினார்கள், சிலர் தத்திப் பாயுங் குதிரைகளைக் கொண்டுவந்து சலங்குடிப்பித்து அவைகளைக் குளிப்பாட்டி நீரில் நீஞ்சவிட்டு ஆழமாகிய ஜலத்தில் தாங்களும் மூழ்கினார்கள், சிலபேர் புட்பங்களிற் பொருந்தி மொய்த்து நீங்காரம் பாடா நின்ற வண்டினங்களைக்கண்டு சந்தோஷங்கொண்டு இருகையைக் கொட்டி யெழுப்பினார்கள்; சிலபேர் நீலோற்பலம், செங்காவி, தண்டாமரை செந்தாமரை முதலாகிய அன்றலர்ந்த புட்பங்களைப் பறித்துக் குணங்கொண்ட மணங்கண்டனர். சிலபேர் இந்தக் குளத்திலிருக்கும் புட்பத்தின் பரிமளங்கள் எவ்வுலகினுங் கிடையா தென்றனர். சில பேர்கள் கடலின் ஆழத்தை அளவிட்டாலும் இந்தக் கயத்தினாழத்தை அளவிட முடியாது என்றார்கள்.

இப்படியாகப் பற்பல விதமாகிய பெருமைகளைப் பேசிக் கொண்டு சமுத்திரத்தைச் சூழ்ந்த சக்கரவாளத்தைப்போல் அளவில்லாத யானை குதிரைகளுடன் சூழ்ந்திரா நின்ற சேனைப் பெருக்கை இந்திரகுமாரனை காண்டவ தகனன் கண்டு, அழியாரதத்தினின்றிழிந்து, சுவேதவாம் புரவிக்குச் சலமூட்டிவைக்கா நின்ற துளவணிந்த கோபாலனைப் பார்த்து, "ஓ சுவாமி! குதிரை

களைக் கொண்டுவந்து தேருடன் கட்டிவையும். இந்த தெய்வீக வாவிபிலே தண்ணீர் குடித்து நிறைந்து நிற்கின்ற சேனைகளையெல்லாம் ஒரு நொடிப்பொழுதிலே தெய்வலோகத்திற் கனுப்பி விட்டுவந்த பிற்பாடு தேரின்பேரி லேறிச் செல்லலாம்'' என்று சொல்லிக் கன்றிய மனத்தினை யுடையவனுய்ப் பாதசாரியாய்ச் சென்று ரதங்களின் பேரிலும், யானைகளின் பேரிலும், குதிரைகளின் பேரிலும், அலைகள்போல் வரிசைவரிசையாய் நிற்கின்ற வீரர்கள்பேரிலும் தனித்தனி பலகோடி கணைகளைப் பொழிந்து, குன்றுபோற் கொன்று குவித்து, மரகத மலைபிற்குத் தன்மைபோல் நின்ருன். அந்தச்சமயத்தில் அதிரதத்தலைவராகிய சில வீரரெதிர்த்து அக்கினிக்கணை முதலிய எல்லாக்கணைகளையும் விடுத்துப் போர் புரிந்தார்கள். அப்போது சித்ராங்கத பாண்டியன் குமாரத்திக்கு நாயகனுகிய கிரீடியானவன் ஒரு கணைக்குக் கோடி கணை தொடுத்து, அவர்கள் விட்ட சரங்களைக் கெடுத்து அதமாக்கிச் சில அஸ்திரப் பிரயோகஞ்செய்து அவ்விடத்தி விராகின்ற அரசர்களையும், அச்சு, மச்சு, குத்துக்கால், கொடி, கொடிஞ்சில் முதலிய சக்கரங்களையுடைய தேர்களையும், சாரதி குதிரைகளையும், அவர்கள் கைக்கொண்ட வில்லையும் துகள்பட்டொழிய வழித்து, அசேகந்தரம் அந்தக் குளத்தைச் சுற்றிச்சுற்றி ஸம்மாரகால உருத்திரமூர்த்தியைப்போல் வந்தான். தேர்மீதிருந்த வீரர் பார்மீதிருந்த அர்ச்சுனன்மேல் விட்ட பாணங்கள் பாதாளத்தி லிருக்கும் பாம்புகளின் பேரில் மேகத்தில் இருந்து விழுந்த மின்னல்களை யொத்திருந்தன. பூமியினின்ற விஜயனுனவன் தேர்மீதிருந்த வீரர்பேரிற் செலுத்திய கணைகள் ஆகாயத்திலிருக்குஞ் சூரியனை விழுங்குவதற்குப் பாதாளத்திலிருந் தெழுந்த விஷச் சுவாலையை யுடைய பாம்புகளை ஒத்திருந்தன. இதன்றியும், இந்த அர்ச்சுனனு லடிப்பட்டு அவதிப்பட்டோடிய அதிரதத் தலைவர்களெல்லாரும் ஒரு முகமாகத் திரும்பி அமர்புரிந்தபோது, விஜயன் தொடுத்த கணைகளினுல் தேர்கள் உடைந்து, கொடிகள் முறிந்து, நாணிகளறுந்து, வில்லுகளொடிந்து, தாங்களும் நாசமடைந்து மேலுல கடைந்தார்கள். அழியாதிருந்தவர்கள் அலக்கழிந்து ஓடி இடைந்தார்கள்.

துரியோதனுதியர்க்கும் அர்ச்சுனனுக்கும் யுத்தம்

இவர்களை யெல்லாம் அந்தக் குளத்தின் மேட்டில் முடித்து விஜயங்கொண்ட அர்ச்சுனனுனவன் வச்சிரச் சிகரக் கொடிஞ்சில்

வட்டமும், அநுமத் துவஜமும், சக்கரமும் அமைந்த தேரில் மாயனைச் சுவேதவாம் புரவியைப் பூட்டச்செய்து, அச்சாரதி யுடனே தானும் ஆரோகணித்துக்கொண்டு, சந்தோஷகரமாகச் சேனைமுகத்திற் செலுத்தி வியூகத்துக்குட் புகுந்து போகாநின்றான், அப்படி போகாநின்ற அர்ச்சுனனைக்கண்டு முன் யுத்தமுனை கழிந் தோடிய வீரரும், சகுனியும், துரியோதனனுடைய தம்பிமார்களும் விசனங்கொண்டு, அதிக வாத்திய முழக்கத்துடன் திரும்பி யெதிர் கொண்டு அவனை வளைத்தார்கள். அக்காலையில் தனுர்வேதியர் ஏற்ப படுத்திய சகடவியூகச் சேனைக்கடலை அடியோடழித்து அலக்கழித் தொழித்து, அப்பாற் கட்டிய வியூகத்தின்மேற் செல்லாநின்ற பாரிய வில்லுக் கொருவனென்னும் வீரிய பார்த்தனவன் போர்வில்லைத் தாங்கி, தன்னெதிர் வருகின்ற சகுனி, துரியோதனன், தம்பிமாரி லறுவர் இவர்கள் முதலிய பல பேர்களையும் கீறுசெய்யு நெருப்பைப் போற் சீறி, நேர்முகஞ்சென்று கூர்ங்கணை விடுத்துப் போர்மலைந் தெதிர்க்க நெருங்குவதானன். அதற்கு முன்னமே வலம்புரி அலங்க லணிந்து தலம்புரக்குந் தராபதியாகிய துரியோதன மகாராஜன் துரோணாசாரியரிடத்தில் பெற்ற சாலி கவசமும், பன்னிரண்டு ரதமும், பன்னிரண்டு குதிரையும், பன்னிரண்டு யானையும், பன்னி ரண்டு சக்ர ஜெய வீரரும் தன்னைச் சேர்ந்து வரும்படியாய்த் தான் முன்வந்தெதிர்த்து, நீண்டமகாமேருவை நெடுங்கடல் வளைந் தாற்போல அர்ச்சுனனை மறித்து, மலைக்கொப்பாகிய வில்லை வளைத்து, கண் விழித்துக் கடும்புகை யெழுப்பிக் கனற்பொறி காட்டி, விஜய காண்டீபத்துக்கு நேராகிய வில்லும், அவ்வில்லையேந் தும் வீரனுக்கு நிகருமில்லை யென்று சொல்லும்படியான மேன்மை பெற்ற அவ்விஜயன் பேரிலே பாணப் பிரயோகம் செய்தான்.

இவ்விதமாகச் சேனைகளுடன் வந்தெதிர்த்து எண்டிசை மண் டலம் விண்டலம் யாவு நடுங்குப்படி கொடிய போர் புரியா நின்ற வணங்காமுடி வேந்தனை வாசவன் மைந்தன் கண்டு, திப்பிரமைக் கொண்டு ஆச்சரியமுடையவனாய், "ஆ! ஆ! தீதிலாத வேணுகீத நாதப்பிரிய மதுசூத நாதனே" யென்று வணங்கி, இந்தத் துரியோ தனன் யுத்தஞ் செய்ய ஆரம்பித்த நாள் முதலின்னுள்வரைக்கும் ஒரு யோசனை தூரத்துக்கப்பால் நிற்கிறதேயன்றி, எனக்கெதிர்வந்து நின்று யுத்தஞ் செய்த தில்லையே! சத்துருக்களைக் கொன்று வெற்றி பெற வேண்டுமென்னு நல்ல நினைப்பு இவனுக்குண்டென்று இது

வரையிலும் நான் கண்டறிந்த தில்லையே! இப்போது இவ்வளவு ஊக்கமாய் எல்லாவுலகும் அதிரும்படி வந்து போர்செய்யாகின்ற மந்திர திறத்தைக் குறித்து இன்னவித மென்று யான் சொல்லமாட்டேன். அப்பப்பா! என்ன வலுப்பெற்றனை? சக்தியோ? அஷ்டமாசித்தியோ? "அநுக்கிரக வில்லோ அழியாக் கவசமோ ஒழிபாத்துவசமோ? மற்றென்னவோ ஒன்றுந் தோன்ற வில்லை. ஓ உலவாப் பெருங்குணத்துத்தமனே இதென்ன விந்தை யென் றுணர்ந்து கானறியும்படி சொல்லவேண்டும்" என்று கேசவனைத் தொழுது கேட்க, சகதீச னென்னும் ஜகார்த்தனன் "ஓ சிங்கம்போலெங்கும் பிரக்பாதிபெற்ற தங்கம்போன்ற பற் குணனே உலகத்தைச் சூழ்ந்த சக்ரவாள கிரியைப்போலுடலையு முயிரையுங் காக்கா கின்ற சாலி யென்னுங் கவசம் பிரமாவி னிடத் தில் இருந்தது. அந்தக் கவசத்தை இப்போதிருக்கின்ற இந்திரனுக்கு முன்னிருந்த இந்திரன் பிரமாவினிடத்திற் பெற்றுக் கொண்டான். அவ்விந்திரன் அங்கிரச மகாரிஷிக்குக் கொடுத்தான். அவர் துரோணாசாரியருக்குக் கொடுத்தார். அந்தத் துரோணாசாரியர் அரவக்கொடிக்கதிபனாகிய இந்த அரசனுக்குத் தரித்தனுப்பி யிருக் கிறார். இந்தக் கவசம் வெற்றிமுனைபெற்ற சித்திமுதலுற்ற எந்த ஆயுதங்களினுலேயும் அழியத்தக்கதன்று. ஆனாலும் உன்னற் கூடிய சக்திவரையிலும் இந்தக் கவசத்தை ஒழிக்கும்படியாகிய விதத்தைத் தேடலாம்" என்றுரைத்துத் துரியோதனனுக்கெதி ரில் தடதடவென்று சுவேதவாம் புரவி பூட்டிய ரதத்தைச் செலுத் திஞர்.

அப்போது பூர்வத்திற் கர்ண்டவவன மூண்டெரியும்படியாக விரதம் பூண்டெழுந்த காலத்தில் தீண்டாச்சுடரோனுகிய அக்கினி தேவன் கொடுத்த விஜய காண்டீபத்தின் மெய் வலிமையைக் கொண்டு விஜயனெதிர்த்து, மனக்கோப முதிர்த்து, குணத்தொனி காட்டிக் கொடிய சரங்களைப்பூட்டி, யுத்தத்திற் கெதிர்த்து வரா கின்ற வீராதி வீரருடைய மகுடங்களிலுந் துரியோதனனுடைய கிரீடத் திலும், மகமேருவை யொத்துயர்ந்த புயங்களிலும், உந்தியிலும், முகத்திலும், மார்பிலும், இருதய ஸ்தானத்திலும் பிரயோகஞ் செய்தான். அந்த பாணங்கள் அந்தந்த ஸ்தானங்களிற் புதைத்துப் பின்புறமாக உருவிச் சூரியனுடைய ஆயிரங்கிரணங்களும் விரிந்து புடை பரந்தைப்போல் இரத்தங்களைப் பீறிடச்செய்து ஆகாயத் தின் வெளி தெரியவொட்டாமல் ஒளியை மறைத்துப் பரந்திட்ட

தைப்போல் நெருங்கியது. இரதத்திற் பூட்டிய குதிரைகளின் நாக் கெல்லாந் துண்டித்துவிழ, விற்களுடைய நாணி யெல்லாந் தறிபட் டற, தேர்ச்சக்கரங்களெல்லாம் பொடியாய்ச் சிதைந்துதிர, யானைக் காலெல்லா முறிபட்டொடிய, சாரதிகளெல்லாந் தலையறுந்தோட, கொடிக ளனைத்தும் பலகூறாய் முறிந்தாட, குடை முதலிய சிகரங் கள் தறிந்துவிழ, அடித்துக் கொல்லுதற் கெதிர்முனைந்த ராஜவீர ருடைய தலைகளுடைபட்டு மூளைகள் செறிந்தழிய, படைவீர ரென்று படர்ந்துவந்த அடல்வீரர்களி னுயிர்களொழிய, உதிர வெள்ளங்களுடன் நிணங்கள்வழிய, சுவேத சூத்திர முதலாகிய பற்பல குடைகளெல்லாம் விழுந்து குழிய, இத்தப்பிரகாரம் அர்ச் சுனனுடன் யுத்தஞ் செய்ய ஆசை கொண்டெதிர்ந்த வீரர் யாவரும் ரணகளத்தில் வாடி வீடிஞர்போக, மீதியாயிருப்போர்க ளெல் லோரும் புறங் கொடுத்தோடினர்கள். அந்தச் சமயத்தில் அங்கதேச மன்ன னென்பவன் கர்ணனவன் துரியோதன மகாராஜனுக்குப் பரிந்து நிறைந்தபோர் முகத்திற் செறிந்து, சிறந்த தீ முகக்கணைகளைச் சொரிந்தான்; அர்ச்சுனன் லடிப்பட்டு முறிந்து, முகங்கரிந்து, பொறிந்து, உதிரஞ்சொரிந்து, வெந்து, சோர்ந்து, நொந்து விஸ்தாரமாகிய வியாகூலத்துட னோடினன். ரவரத்தின கசித வீர கண்டை தரித்த மாமன் சகுனியும், துரியோதனனுடைய தம்பி மார்களும், புவனத்தை யழிப்போமென்று எதிர்த்து, அர்ச்சுனன் தொடுத்த புங்கவங்களால் அதிர்ந்து, உடல் பிதிர்ந்து முகமாறினர் கள். கலிங்க தேசாதிபர் முதலிய காவலரனேகரும் புலிங்க சாலம் போற் சீறி யெழுந்து, கலை கலங்கி, புயமலை குலுங்கி, துலங்கி வாடி னர்கள். கிருதவன்மனும், கிருபாச்சாரியும், சேதி தேசாதிபனும் சண்டை செய்திளைத்து, அஞ்சியகன்றொடுங்கினர்கள். பூரிசிரவன் முதலிய பேர் புகுந்து உடல் கிழிந்து பிராணனைக் காப்பாற்றிக் கொண்டு போயினர். அணிவகுத்திருந்த பூபதிகளெல்லாரும் உயிர் விடப்பட்டார்கள்; மற்றவர் யாவரும் புறமுதுகிட்டார்கள்.

உடனே மண்டல துரந்தரனென்னுந் துரியோதன மகாராஜ னேறிய குதிரைகள் பந்தித்த இந்திர விமானத்துக் கொப்பாகிய தேரைச் சாமார்த்தியத்துடன் சாரதி செலுத்த, அரவக்கொடி பட படென்றாட, அமர்க்களமெங்கும் அநேகஞ் சூரியர்களைப்போல் மகுடம் பிரகாசிக்க, வீரபட்டங்துலங்க, வெண்ணீறிலங்க, உடற் காப்பாக அணிந்த கவச பலத்தினுல் அர்ச்சுனனுக்கு முன் வந்து வில்லினை நாட்டி, நாணிமாட்டி, அர்த்த சந்திரப் பிறைமுகக் கணை

களைப் பூட்டி, மந்திரங்கூட்டி, வெகுதாட்டியாய் மேகநிறம்போன்ற பார்த்தசாரதி தேகத்திலும், சுவேதவாம்புரவிபேரிலும், இந்திரகுமாரன் உடலினும், அநுமத்துவஜத்தின் பேரிலும், கடல் முழக்கம்போற் கடகடவென் றோடிவராநின்ற சக்கரங்களையுடைய அழியா ரதத்தின்பேரிலும் விடுத்து, பின்னுஞ் சில கமலாஸ்திரங்களை யிறைத்து விஜயன்றொடுத்த பாணங்களை யெல்லாங் கெடுத்து, எழுவைப்போன்ற புஜத்தையுடைய அத்துரியோதன மஹாராஜன் முன்னும் பின்னும் மேன் மேலாகிய முழுக்கணைகளையுந் தொடுத்தான். அக்காலையில் ஒன்றக்ஷயமாகிய தன் அம்புக்கூண்டிலிருந்தெடுத்து இசைத்து இழுத்துவிட்ட அஸ்திரங்களை யெல்லாம் அரவக்கொடியோன் அறுத்து விட்டதும், சாரதிபேரிலும், தன்பேரிலும், மற்ற ரத முதலியவைகளின் பேரிலும், வாசாமகோசரமாய் வருண சரங்களைப் பொழிவதும், ஆகிய இவைகளை யெல்லாம் விஜயன் பார்த்து அநேகந் தீமுகக்கணைகளைத் தெரித்து எண்டிசையும் ஒன்றோடொன்று முட்டிக்கொண்டு போர்புரியும்படி யாக்கி, அந்தத் துரியோதனன் தொடுக்கின்ற அம்புகளை யெல்லாம் போக்கி, அவன் தேகத்திலும் முகத்திலும், மகுடத்திலும், இடியாஸ்திரங்களைத் தன்னுலியன்ற மட்டும் வாரி யிறைத்தான். அப்போது வணங்காமுடி பொறுத்த அரசனணிந்த கவசதத்தின்பேரில் அந்த இடியாஸ்திரங்கள் பட்டுக் கற்பாறையின் மீது மழைத்துளி விழுந்து தெறிக்குந் தன்மைபோல் தெறித்துப்போய் அவனுடைய தேகத்தில் எள்ளத்தனையேனும் காயம் படாமையால், துரியோதனன் மேலிட்டு வெகு கணைகளைத் தொடுத்து விஜயனுடைய சரீர மெல்லா மெலியச் செய்ததுமல்லாமல், பார்த்தசாரதி தத்தளித்துத் தடுமாறவும், குதிரைகள் துடிதுடித்து குன்றிப்போகவும் அநுமத்துவசம் அலைவு கூரவும், அச்சு மச்சு குத்துக்கா லசைந்தாடவும் செய்தான். அருச்சுனனும் அசைவற்றிருந்து, தான் பிரயோகஞ்செய்த சரங்களெல்லாம் அந்தத் துரியோதன னணிந்த கவசத்தின்பேரிற் பட்டவுடனே அப்பாற் றெரித்துவிழு கிலையை ஒரு கொடிப் பொழுதிற் கண்டறிந்து, பிரகாசமாகிய ரதத்தில் மண்டியிட்டு, சூரியாஸ்திரமெடுத்துச் சுருதி மந்திரம் படித்து எல்லாவுபசாரங்களு முடித்து, வில்லிற் றொடுத்து, துரியோதனனுடைய தேகத்தைப் பீறும்படியாய் மிகவுஞ்சீறி விடுத்தான். அக்காலையில் துரோணசாரியருடைய குமாரன் அசுவத்தாமனனவன் கண்டு, அந்தச் சூரியாஸ்திரத்தை நாராயணாஸ்திரத்தாலே துண்டித்துப் பாய்ந்து, தானுஞ் சில நேரம்

எதிர்த்துப் போர்புரிந்து ஓய்ந்து அப்பாற் கூடாமல் புறமுதுகிட்டுச் சாய்ந்தான்.

அந்த வேளையில் வெற்றி பெற்ற அருச்சுனன் விடுத்த இலேயா கிர்தியாகிய முனைச்சரமானது அசுவத்தாமனு லழிந்துப்போகவே, போர்முகத்தில் நேர்புகாம லழிந்தோடிய பகைவீரர்க ளடங்கலும் வேகமுற்ற குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்திக்கொண்டு ஓரேமுகமாய் மோகரித்து மூர்த்தண்யத்துடன் வரா நிற்க, அதை தூர்த்தண்ணிய விக்கிரம விஜயன் பார்த்து முகம் வியர்த்து மூவ ருக்கும் தேவரிருக்குமரிய முதல்வனென்னும் முகுந்தனுடைய பாதத்தில் வீழ்ந்து, இரக்கமுடையவனுக இயங்கி, மயங்கி, யுத்தஞ் செய்வதை எப்போதோ மறந்தவனேப்போல் அப்போது அசைவற் றிருந்தான். அக்காலேயில் முல்லேநில மக்களாகிய கோபாலருடைய குலந் தழைத்தோங்க வளர்ந்தருளியும், புள்ளாங்குழ லோசைக் குரு கிக் கன்றும்பசுவுங் கலந்தோடிவரும்படியாய் நின்றருளியும், காமனேப் பெற்ற தந்தையாக எழுந்தருளியும் இராநின்ற கரியமுகிலேப்போன்ற கண்ணனுனவர் கலங்காச் சமர்புரியுங் காதல் மைத்துனனுகிய காண் டீபன் கலங்கிநிற்கு நிலேயைக் கண்டு, அநேகந் தாமரையிதழ் மத் தியில் ஒரு சந்திர னுதித்தெழுந்ததற் கொப்பாகிய தமது திருக் கரத்தின் விரல்களாற் பாஞ்ச ஜன்னியத்தை யெடுத்து மணங் குலாவிய பவளம்போன்ற திருவாயில் வைத்து, வலம்புரிச் சங்கு அலம்புரிந்தேங்கும்படியாய்ப் பம் பம் பம் மென்று ஊதினர். அக் கரத்துயர்ந்த இந்திரத் தருவைச் சத்தியபாமைக்காகப் பூமியிற் கொண்டு வந்து காட்டியருளிய புண்டரீகாக்ஷனவர் முழக்கிய அப்பாஞ்ச ஜன்ய ஓசையானது, சப்த மேகத்தின் முழக்கம் போலும், எண்டிசையிலும் அலேயெறியா நின்ற சப்த சமுத்திரத்தி னுசைபோலும், ஈரேழுலகமு நடு நடுங்கும்படி பேரொலியெடுத்த காலேயில், யுத்தகளமுழுமையு மெலிந்து, சத்துருக்க ளெல்லோரு நலிந்து வெற்றிபெற வேண்டுமென் றெழுந்த கடுஞ்சினவேகமும் அடங்கி அவிந்து, மோகங்கொண் டெதிர்ந்த மன்னர் மண்டலீகரும் அதிர்ந்து, அண்டமுகடுடைந்து சிதறி விட்டதோவென்று தேவர்கள் முதலிய யாவரு நடுங்கும்படியாயது. அப்போது பால் போன்ற நிறத்தினே யுடையச் சுவேதவாம் புரவிபூட்டிய தேரைச் செலுத்தும் பரமன் பார்த்தனே நோக்கி, "அர்ச்சுன ! என்ன கலங்கிப்போய் விட்டாய்? இளேக்காதே ! பயப்படாதே" என்று சில பாணங்களேத் தம். திருக்கரத்தால் தொட்டுக் கொடுத்

அத் துரியோதனனுடைய நகக் கண்களில் தொடுக்கும்படியாய்ச் சொல்லி, "இந்தக் கவசம் தரிபடும்படியாய்ப் பூர்வத்தில் தேவராஜன் ஒரு வேலாயுதங் கொடுத்திருக்கின்றானே அதை மறந்து விட்டாயோ அப்பனே" என்று ஞாபகப் படுத்தினர். அப்போது வஜ்ராயுதன் மகனுகிய அர்ச்சுனனுனவன் விரைவாக மகிழ்ந்து மேலாகிய வாழ்வைப் பெற்றேனென்று மிகுந்த பரிவினை யுடைய வனுய் விவேகஞான பக்தியோடெழுந்து நாரணனை வலம்வந்து, செந்தாமரைபோன்ற திருவடியில் விழுந்து, அவருடைய திருக் கரத்தால் ஆசிகூறிக் கொடுத்த அஸ்திரங்களை யேந்தி வணங்கி, நாணியிற் பூட்டி இழுத்தோங்கி, இந்த துரியோதனன் அழிந்து போகும்படியாய் வேறே மந்திரக் கணையைப் பிரயோகித்து விடு வோமாகில் வாயுகுமாரனுகிய பீமசேனனுடைய சபதங் கெட்டுப் போமல்லவா வென்றுணர்ந்து தன்னுடைய கோபாக்கினியை யடக்கி, இந்தத் துரியோதனனணிந்த கவசமழித்து அவன் தேகமுங் கிழித்து, அமர்விட் டொழித்து புறமிட்டோடும்படி செய்விப்பது பெருமை யென்று உட்கொண்டு, நூறுபேரிற் றலைவனுகிய துரியோதனனுக்கு மனநோவு வரும்படியாய்க் கண்ணன் கொடுத்த கணைகளையும் இந்திரன் கொடுத்த வேலாயுதத்தையு மெறிந்தான். அவ்வளவில் அந்த துரியோதனன் அணிந்துவந்த கவசமானது நீறு பட்டழிந்து அவனும் யுத்தமுனைவிட் டொழிந்து நகக்கண் கிழிந்து உதிரம் வழிந்து புறங் கொடுத் தோடினன்.

அப்போது எட்டுத் திக்கையும் வென்று மட்டில்லாப் புகழ் கொண்ட கிரீடியானவன் அதிவேகமாய் ஐயாயிரம் பெரும் பகழி களை ஓய்யாரமாக எடுத்துவிடுத்து, சீர்பொருந்திய வில்லையும், தேர்பூட்டிய குதிரைகளையும், அரவத் துவஜத்தையும், பத்தரை மாற்றுப் பசும்பொன் மணிகளாற் புத்தம் புதிதாகச் செய்த ஏழு தட்டிரதத்தையும் நாசப் படுத்திப் பொடியாயழித்து அந்தத் துரியாதேனனுக்கு உதவியாகப் பக்கத்திலிருந்து சீறிவாகின்ற சிலைக் குருவின் மைந்தனும், தியாகியாகிய கர்ணனும், மாமனுகிய சகுனியும், வெற்றிவீர வேந்தர் பலரும் தங்கள் தங்களுடைய பெருமையின் வீறுகெட்டுப் படபடவென்று பாதசாரியாய்ப் பூமியி லோடும்படி விரட்டி யடித்து முடுக்கியது மன்றி "ஓ அரசனே! கண்களிற் கனன்றுற்றெழுந்து விண்களிற் சினந்துட் புகுந்து, மேகத்திற் கலங்குஞ் சலத்தைத் தாகத்திற் குறிஞ்சிக்குடித்து, மாகத் திற் படுந்தூள் கலக்கி, வேதத்திற் செழும்போர் விலக்கி, அவ்

விஜயன் விட்ட கோபா வேசத்துடன் மோகரித்தெழுந்த கொடுங் கணைகளினால், அந்த ரணகளத்தில் ஆரவாரித் தெதிர்வந்த பேர் களில் யார்தான் பிழைத்தனர் ? இவையன்றியும், யாவராலும் துதிக்கப்பட்ட பதினெண் பூமி அரசர்களில் பலவாருகப் பற்பல வாயிரம் பேர் பட்டார்கள். துச்சாதனன் முதலாகிய தம்பிமார்களும் அர்ச்சுனன்விட்ட அம்பிலழிந்து, உதிரம் வழிந்து, ஆருயிராசை கொண்டு அமர்விட்டுக் கெட்டார்கள். பின்னும் மட்டுப்படாத அக் கினியாஸ்திரங்களே அமோகமாய்த் தொடுத்ததினால் அவைகள் அம்பரமெல்லாம் பம்பரம்போலாடிச் சுழன்று, அலமரும்படி ஓடிப் பறந்தபோது, அதிரதர், மகரதர், சமரதர், முதலிய சாரதிகளும் தாங்களுமாய்த் தலைகளிழந்தார்கள். ரதாதி முனிவர் களும் இந்திராதி தேவர்களும் மடிந்தவரைப் பார்த்து நடுநடுங்கி, இன்றைக்கே பாரதம் பற்றறமுடிந்துபோ மென்று கண்ணீரிறைத்து மண்ணிற் படிந்தவரைப்போல் வருந்தி, திருந்திய அரசருடன் பொருந்தி, பரிந்து வார்த்தையாடா நின்றார்கள். அதாவது நீண்ட காண்டீபதாரியாகிய நரனுக் கெதிர் நின்று வெல்ல கல்ல வல்லப முடைய பேர்கள் உலகமெல்லாந் தேடினும் ஒருவரு மிரார்க ளென்றார்கள். ஓ! ஓ! கோடாகோடி பேர் நின்று யுத்தம் பண்ணுகின்ற வெற்றி முனையிடத்து நிற்பதற்கு முன்னே ஒரு பொய்கையழைத்தானே இது என்ன விந்தை ? இது எவரால்முடியு மென்றார்கள். போகட்டும், இந்த அர்ச்சுன னுண்டாக்கிய தடாகத் தில் அளவிலாக் குதிரைகளும், எண்ணிறந்த யானைகளும், கண்ண டங்காச் சேனைகளும் தாகவிடாய் தீர்ந்து களையாறி சவுக்கியம் பெற்றும், நன்றியற்றவர்களாய்த் தண்ணீர்த் தடாக மேற்படுத்திய தர்மவானுடனே எதிர்த்துப் போர்புரிய நினைப்பது கல்லறி வுடை யோர் செய்யும் நலமல்லவே: இது புல்லறிவாளர் செய்கை யென் றார்கள். நல்ல தேவர்கட் கண்ணலாகிய மேகவண்ண னென்னுங் கண்ணன் இவ்வண்ணமாய்ப் பாரத யுத்தத்திற் சார்த்தசாரதியாய் அமைந்து தேர் செலுத்தக் கிடத்ததற்கு இங்ஙன் பூர்வஞ்செய்த புண்ணியம் யாதோ சொல்லுங்க ளென்றார்கள். இவை யன்றியும் அர்ச்சுனன் விடுத்த ஒரு முகவாளி, இருமுகவாளி, மும்முகவாளி, முதலிய எல்லாவாளியும் படையினுழைந்து, எல்லோருடைய பிராணனையுமுண்டு அந்தரத்திற் றிரிந்துகொண் டிருக்கிறதே யல்லாது, பூமியிலிறங்கவில்லையே! ஆகையால் என்றைக் கிருந் தாலும் இது பொல்லாத பொல்லாங்காகிய பழுதை விளைக்கும்; எச்சரிக்கையாக இருக்கவேண்டு மென்றார்கள். இன்று முப்பது நாழி

கையுஞ் சிந்து தேசாதிபனுடைய பிராணனைக் காக்கிறேமென்று வந் திருக்கு மன்னவர் யாவரும் இந்த கன்னய குஞ்சரனைத் தடுப்பார் களோ? தங்கள் வீரத்தை விடுப்பார்களோ? இந்திர குமாரனுகிய அர்ச்சுனன் இன்னுஞ் சற்று நேரத்திற்குள்ளாகச் சயிந்தவன் தலையைத் தள்ளிச் சபதமுடிப்பானே? அல்லது யாதாய் முடியுமோ வென்று இவ்விதமாக யாவரும் மனதிற் கிலேசந்தவண்ணம் சிற்சில வசனஞ் சொல்லிக்கொண் டிருந்தார்கள்.

கண்ணன்செய்த பாஞ்சஜன்ய முழக்கங்கேட்ட தரும ராஜன் மதிகலங்கிச் சாத்தகியை அருச்சுனனிடஞ் செலுத்தச் செல்லும்போது வழிமடக்கிய துரோணுதியரை வென்று நடத்தல்

இப்பால் பசுமை தங்கிய துளபமணிந்த பரந்தாமனும் பார்த்த னுஞ் சிந்து ராஜனைத் தேடித் தேரூர்ந்து போனர்கள். ஓ தார் வேந்தனே! அக்காலத்தில் தர்மராஜன் செய்தவைகளைச் சொல்லு கின்றேம் கேளும். தாசர்களின் கள்ளமில்லா உள்ளத்தி லுறையும் வள்ளலானவர் வெள்ளைநிறச் சங்கைப் பூரித்த நாதத்தின் தெள் ளமுதமானது பேரணிமத்தியி லிருந்த தருமராஜனுடைய செவியிற் சென்று பட்டவுடனே, தளர்ச்சியில்லா மனதிற் சந்தேகங்கொண்டு, தம் மருகி லிருந்த சாத்தகியை யழைத்து, "என்னையனே! இன்று முப்பது நாழிகைக்குள் சயிந்தவனை முடிக்கிறே னென்று சபதங் கூறிப்போன சதுரனுகிய தனஞ்செயன் சண்டைமுகத்தி லிளைத் தான்போலு மிருக்கின்றது. இல்லாவிட்டால் ஜனார்த்தன னனவர் பாஞ்சஜன்ய முழக்கந் தனிமையாய்க் காட்ட மாட்டார். ஆகையால் சங்கத்தொனி கேட்டது முதல் என்னங்கத்தில் உயிரோட்ட மானது. அப்பனே! நான்கொண்ட சங்கை தீரும்படி நீ அங்கே போய் அறிந்துவாக் கடவை" என்றுரைக்க, சாத்தகி கேட்டு, "ஓ, தரும சொரூபியாகிய தார்வேந்தே! உமது சகோதரராகிய தனஞ் செய ராஜன் போர்முகத்தில் முனிந்து, முனைந்து புறப்பட்டால், தேவர்கள் கந்தருவர், யக்ஷர் முதலாகிய விண்டலத்தவரும் அவர் கண்ணெதிர் நிற்கமாட்டார்களே: விஜய காண்டீபனுக் கெதிரில் மண்டலத்தவர் நின்று வெல்வதெப்படி? தேவராதிக்கமட்டும் விண் டலத்தவரில், மண்டலத்தவரில், இவருடனெதிர்க்கு மன்னவர் யாரிருக்கின்றர்கள்? ஐயா தருமமுங் கிருபையும் தழைக்கு மனத் தோ! இங்கு தேவரீரைத் துரோணசாரி கட்டக் கிட்ட வொட்டா

மல் உமதணிப் படைக்குக் காவலாக என்னை நிறுத்தி, அங்கு மேற் பட்ட யூகபந்திப் பணியின்மீது சயிந்தவ ஸம்ஹாரஞ்செய்யப் பெயர்த்துப் போனார் தேவரீருடைய தம்பியானவர். ஈனிவ்விடம் விட்டுப்போய் மன்னர் துன்னி முன்னம் நிறைந்த பேரணியிற் புகுவேனுகில், என்னைக் கண்டவுடனே விஜயனுகிய மன்னன் வெறுப்பார், அது என்க்கென்னுலும் ஒறுப்பாம். ஓ அழகிய மணிப் பொன் மௌலி புனைந்த ஆண் சிங்கம்போன்ற அரசர்க்கரசே!" என்று சொல்லவுங் குற்றமற்ற குலவரைக் கொப்பாகிய புஜபல வன்மைபெற்ற கோவேர்கதன். "அப்பா சாத்தகி! நீ சொன்னது ஞாயம்; ஆகிலும் கேரிட்டது அபாயம். ஆபத்தாகியது காயம். மேலுஞ் சேனுநாயகனுகிய திர்ஷ்டத்துய்மன் இவ்விடத்தி லிருந்து என்னணியைக் காப்பான். உனக்கிந்த சிந்தனை வேண்டாம். நீபோய் அறிந்துவாக் கடவை" என்றுமொழிய அந்த வார்த்தையைக்கேட்ட சாத்தகி சிறிது நிதானித்து, வலியபலம்பெற்ற தேரரசர் அனேக ரிருக்க அவர்களுக்குச் சொல்லாமல் எனக்கிதக் கட்டளை யிட்டாரே யென்று அவருடைய வார்த்தையைச் சிரமேற்கொண்டு, மட்டார்ந்த மலரை வரிசையாய்க்கட்டிய மாலையணிந்த தருமராஜனுடைய மலரடியில் வீழ்ந்து விடைபெற்றவராய், கிருஷ்ணமூர்த்தியை யொத்த சாத்தகியானவர் அழியாச் சேமரதத்திலூர்ந்து, அதிரதர் முதலாகிய வீரதளங்களோடுஞ் சென்று, சத்துருக்க ணெருங்கிய தூசிப்படையைப் பிளந்து தடதட வென்றேறி, விருதணியிலிருந்து விளங்கிய கிருதவீரியன், கிருதவன்மன், கிருபாச்சாரி இவர்கள் முதலிய பேர்களையும், எதிர்ந்து, மதயானையைப்போல் அதிர்ந்து, பாரியவில்லைத் திருத்த வளைத்து, பகலவன் பாணப் பிரயோகங்கள் முதலியவற்றை விடுத்து, பரியுங், கரியும், தேரும், பேரும், பறக்க வடித்து, தில்லும் பில்லுஞ் சொல்லும்பேரை இமையிலழித்துக் குமியவொழித்து, நில்லு நில்லுமென்று வல்லபம்பேசி, அப்பால் நடந்து போகும்போது பன்முகத்திலு மிருந்து குதிரை பூட்டிய நூறுயிரத் தேராளிகள் உகாந்தகால இருட்டைப்போல் வந்து வளைத்து மறைக்க, அவர்களையும் அவர்கள் தொடுத்த கணைகளையுஞ் சந்திராஸ்திரம், சூரியாஸ்திரம் முதலிய அஸ்திரங்களினுற் போக்கி, பாக்கி யில்லாமற்றுக்கிவருங் காலையில், ஜெயமாலை யணிந்த சல சயிந்தனுவன் நிலைபெற்ற மதத்தையுந் துதிக்கையையு முடைய மலைபோன்ற யானைமேலேறிவந்து சாத்தகியை வளைந்து மலைந் தான். அப்போது இருதிறவரும் அருமையாகிய கணைகளை யெங்

கும் பரவவிடித்து, மங்குலுங் கங்குலுங் கருகும்படி போர்புரிந்து, வாயுவஸ்திரங்களே யெடுத்து மழைபோற் றூவித்து, புள்ளி பொருந்திய முகத்தினே யுடைய மதயானேயையும், அதன்மேலேறி வந்த சலசந்தனேயும், தீய்த்துக் கரிக்கித் திடர்நிலமாக்கி அவன் சேனைகளேயும் போக்கினர். இப்படி தடையறவருஞ் சாத்தகியைத் திரிதராஷ்டிரன் பிள்ளைகளிற் சிலர் கூட்டமாய்வந்து மடக்கி காலு பக்கங்களில் காலுபோ் நெருங்கி காலுவித பாணங்களேத் தொடுக்க அந்தப் பாணங்களே யெல்லாம் பஞ்சுபோற் பறக்கச்செய்து, அந்தக் கொடிய தீயர்களே மடக்கிக்கொண்டு வேட்டம் போன வேந்தர் களுடன் வேடுவர் கையிலகப்பட்ட யானைகள் படும்பாடெப்படியோ அப்பாடு படும்படியாக்கி, ஒப்பாரு மில்லாமலே தாக்கி, இப்போரில் எவரும் எதிர்ப்பதற் கில்லாமற் போக்கி, வீரவபிர வில்லேயுந் தாங்கி, ரேமித்தேரை ஹோட்டிடச் செலுத்தி, சுடுசரங்களேச் சுற்றிலும் விடுத் துப் படபடத்துத் துரிதமுடன் செல்லுகின்றூர். அப்படி செல்லு கின்ற சாத்தகியைத் தடுவாகிரியராகிய துரோணுசாரியர் கண்டு, "போகாதே! போகாதே! நில்லு! நில்லு! என்னுடன் யுத்தஞ் செய்யாமற் போவது ஞாயமன்று!" என்று ரதத்தைச் செலுத்தி வந்து, சாத்தகிக்குச் சஞ்சல முண்டாகும்படியாய்த் தமது வில் வளேக்கவும், மேகவண்ணனுக் கிளவலாகிய சாத்தகியானவர் கலீரென நகைத்து, "ஓ ஐயரே! பாணங்கொண்டு பிராமணருட னெதிர்த்து யுத்தஞ்செய்வது எம்போன்றவர்களுக்குத் தகுதி யன்றென்று ராஜதர்ம மிருப்பதினுல், உம்மைவிட்டு அப்பாற் போனேன். அப்போர்ப்பட்ட தர்மமில்லா விட்டால் இப்போது எதிர் நின்று பேசும்படியாய் உம்மை இன்னமும் வைப்பேனே?" என்று சொல்லிக் கன்னமதமுடைய சுப்ரதீபம்போல் தேருடன் சுழன்று திரும்பியபோது, துரோணரும் மெதிர்ந்து மதித்துத் துரித மாகப் பேசி, அவ்வளேத்த வில்லிற் சுடுவடிக் கணேகளேத் தொடுத்து வீசி விடுத்தார்.

இந்தப்படி இருவருந் தங்கள் தங்களுடைய வில்லே வளேத்துக் கடுமையாகிய பகழிகளே முறை முறைகோத்து, கடுமையாகிய பகடுகளுடன் துணேயாகவந்த சேனைகளே யழித்து, நெடுநேரம் வரையிலும் ஒருவரை யொருவர் விடாமல் அமர்புரிந்து, களேத்து இளேப்பாறி யெழுந்து, ஒருவரை யொருவர் உறுத்திப் பார்த்து நின்றனர். அப்போது துரோணுசாரியர் மிகுந்த வருத்த முற்றிளேத் திருப்பதைச் சாத்தகி கண்டு மனேதிடங்கொண்டு,

கழுத்துமயிர் கத்தரித்துக் கவினமாட்டிய புரவிபூட்டிய தடந் தேரைச் சாரதி செலுத்த, மாருதிவேகத்திலு மீறிய வேகத்துடன் ஓடிவரா கின்ற அத்தேரின்மீது மண்டியிட்டிருந்து, பாரியவில்லை வளைத்து நாணிதெறித்து வின்மணிகுலுக்கி மன்னணிப் படைகளைப் பின்னிடக் கலக்கி, யாவரையுஞ் சீறி வீறிவரும் அச்சாத்தகி வேந்த னனவன் அநேகங்கோடி கிரணங்களோடு உதயகிரியினின்று மெழுந்து அந்தகாரமான இருட்டைக் கரித்துவரும் மந்தஹாச மாகிய சூரியனைப்போற் பிரகாசித்தான். அப்படி பிரகாசித்து வரும் போது, அர்ச்சுனனு லடிபட்டுக் கவசமழிந்து, துவசமொழிந்து, அவசமடைந்து, சேனுகாயகனுகிய துரோணுசாரிய நிடத்திற் போய்ச் சொல்லிக் கொள்ளுவோ மென்று போர் முனையை நோக்கி வராநின்ற துரியோதன மகாராஜனனவன் சக்ராயுதம்போற் சாத்தகி வரும் உக்ரதிடத்தைப் பார்த்து "ஐயையோ! இவனெருவன் இடைக்கொள்ளையாய்ப் புகுந்து அணிகளை யழித்து ஒழித்து வருகிறப்போ விருக்கிறதே, இதற்கென்ன செய்யலாம்?" என்று ஏங்கி, இவனை விலக்கி வெல்ல வேண்டு மென்னும் விணையை கினைத்து, வீரப்பட்டங் கட்டிய கெட்டிக்காரராய் ஓட்டிய வேந்த ருடன்கூடி, சாத்தகிக் கெதிரோடித் தடுத்தான். அப்போது தேரில் வராநின்ற சாத்தகி கோபங்கொண்டு சீறி யடித்து, ஆயிர மாயிரங் கணைகளை அடுக்கடுக்காய்த் தொடுத்து விடுத்து, கால் வகைச் சேனைகளை நாசப்படுத்தி, நெற்றிப் பட்டங்களையுடைய அவ்வரசர்களையும் வேகச்செய்தான். அதுகாலையில் வீரகண்டை கட்டிய துரியோதன ராஜன் மெத்தமருண்டு, இவனுடனே யுத்தஞ்செய்ய வல்லவராரென்று பயந்து பயந்து பாணங்களைத் தொடுத்தான். அவைகளை யெல்லாம் சாத்தகி அணுவணு வாகப் பறக்கச்செய்து, அரசனுடைய அரவக்கொடியைத் தறித்து, தேர்ச்சக்கரங்களை யுடைத்து, நெருங்கிய வில்லை முறித்து, சாரதி தலையைப் போக்கி, மோச கினைப்பினை யுடைய அத்துரியோதன னுடலெல்லாங் கணைகளாற்றூக்கி, யாவருஞ் சந்தோஷிக்கும்படி யாய் இன்னமு மெவராகிலு மெதிர்ப்பவ ருண்டோ வென்று இறு மாந்து, படைவகியோடு எதிர் பார்த்து கின்றான். அப்போது துரியோதன ராஜன் தேரழிந்து போகவே ஜலத்தை விட்டு நீங்கிய தாமரைமலர்போல் இரண்டு பாதமுங் கருகிச் சிவக்கத் தக்கதாய்ப் பூமியினின்று போர் நிலத்தை விட்டு வெட்டார வெளி நிலத்தில் விழுந்தோடினான். அவன் ஓடுவதைக்கண்ட

தேவர்க ளெல்லாரு மாரூமற் சிரித்தார்கள். சாத்தகி பார்த்துக் கைகொட்டி நகைத்தான். இப்படியாகத் துரியோதனராஜனே அவ மதிப்பாய் நகைத்த சாத்தகியைக் கிருதவன்மன் கண்டு, மனக் தாளாமல்உள்ளக்கொதிப்போ டெழுந்து, சாத்தகிக் கெதிரிற் புகுந்து உயர்ந்தவில்லை வளைத்து நெருங்கித் திருந்திப் பொருந்தியதா யுள்ளக் கணைகளை வரம்பில்லாமல் நிரம்பவிடித்து நாணி யிழுத்து டங்காரஞ் செய்தபோது, தாஷ்டீகமுள்ள சாத்தகியானவர் வெகு சொற் பத்தில் அவைகளைமாற்றி, அவன் பேரிற் கொழுமுனைப் பாணங்களை யேற்றினர். அப்பாணங்கள் தாக்கியவுடனே கிருதவன்மன் தேரின் பேரில் சாய்ந்து அயர்ந்தான். அத்தன்மையைத் துச்சாசனன் பார்த்துப் பெருமூச்சுவிட்டு, ரதகஜ துரகபதாதியாகிய நால்வகைச் சேனை வீரருடன் அணிவகுத்திருந்த அளவில்லாத யானைப் படை களுடனும் சேர்ந்து போய்ச் சாத்தகியை அடித்துத் தடுத்துச் சோனை மாரியைப்போல் சுடுசரங்களைத் தொடுத்தனன். அவைகளை யெல்லாஞ் சாத்தகிகெடுத்து தன்னுடைய வில்லிலிருந்து விடா மழைபோற் பொழிந்த கூர்ந்தொடைகளால் எதிரிகள் கலங்கி அலமலங்கிச் சேனைகள் விலங்கிப்போயின. அதுகண்ட துச்சாதன னவன் தான் யானையைப்போ லொதுங்கிப் பூமியிலிழிந்து இருபதஞ்சிவக்க இளைத்தோடிப்போய் சேனாதிபதியாகிய துரோண சாரியர் நின்ற இடத்திற் சென்று அவரைக்கண்டு, தான்பட்ட குறை யையும், சேனைகள் கெட்டகிறையையும் தன் மனமிறையையும், சாத்தகி சொல்லுமுறையையுஞ் சொன்னன். அவன் சொல்லிய வசனத்தைத் துரோணசாரியர் கேட்டு, கந்தியாவட்டை மர்லி யணிந்த நரேந்திரனுடைய தம்பியைக்கண்டு உள்ளம்வருந்தி, மணி செறிந்த தேரும், அணிகிறைந்த வில்லுங்கொடுத்து, "அப்பா துச்சாசனராஜனே! இதுவரையிலும் உனது மைத்துனராகிய சயிந்தவன் க்ஷேமமா? இனிமேலும் இன்றையப் பொழுதைச் சாதிக்கலாமா?" என்று பற்பல வார்த்தைகளைக் கேட்டிருந்து அப் பால் அவனைப்பார்த்து, "அப்பா! குலமுங் குணமுமுள்ள அரசர் கூட்டங்களுக் கெல்லாம் எமனென உதித்தெழுந்த துச்சாதன னென்னும் இறையே! என்ன இவ்வேளை சற்றிளைத்தாற்போ லிருக் கிறாய்? அநேகராஜர்கள் பெரும் கூட்டமாகக் கூடிப்புகுந்த பாரவைப் புறத்தில் அருந்திக் கதிகமான கற்பினையுடைய திரௌபதை யென்னுந் தெய்வப் பெண்ணை அலமலங்க இழுத்துவந்த அந்தநாளி லிருந்த ஆத்திரமும், க்ஷாத்திரமும், உன் தோள்வலியும் இருதாள்

வலியும், உன்னுரவலியும், இருகரவலியும், இந்த யுத்தகளத்திற் கண்டிலேம். அப்போது கண்ட அதிசயத்தை இப்போது பார்க்க வேண்டும் மென்னும் பக்ஷங் கொண்டாலுங் காணுமே: ஐயையோ! இதென்ன தப்பாகிய மப்பாயிருக்கிறதே! அப்பா! அல்பமும் அதி சொல்பமுமாகிய வில் வல்லமை தெரிந்த சாத்தகியுடன் போய் போர்புரிந் திலீலத்து, யாவரும் நகைக்கும் படியாய்த் துன்ப மென்பவை யாவும் பட்டீர்களே! இனிமேல் வாயு புத்திரனாகிய பீமசேனனுந் தனஞ்செயனும் வரப்போகிறார்களே? அவர்களுக் கெதிரில் என்னசெய்ய இருக்கின்றீர்கள்? வேலாயுதக் தரித்த இளவரசனாகிய வேந்தனே! சொல்லு; இவ்வளவு நிர்வாகமுடைய நீங்கள் விரதபூஷண பீஷ்மரென்னும் மூத்தோர் வார்த்தையைக் கேளாமல் தடுத்துவிட்ட பாவத்தால் உயிர்விடத்து மாண்டுபோவது சத்தியம்: சத்தியம்: நீங்கள் இன்னுஞ் சில காலைக்குப் பிழைத் திருக்க வேண்டுமானால் குந்திதேவியின் புத்திரருக்குப் பாதிராஜ் யத்தைக் கொடுத்து, உங்கள் வம்சநாயகனாகிய பீஷ்மாசாரியா ரென்னும் வரதனுடைய செந்தாமரைக்கமலம்போன்ற திருவடியில் வணங்கி அவருடைய கடைக் கண்ணனருள் பெறுவீர்களாகில், நிந்தனை யில்லாமல் ஜீவதிசையாய் உயிர்த்திருப்பீர்கள்!" என்று சுடச்சுடப் பற்பல வார்த்தைகளைச் சொன்னார்.

அதைக்கேட்ட துச்சாதனனுனவன் நாணமென்னுந் துன்ப மேட்டின்மேல் விழுந்து, திடதயிரிய பராக்கிரமுந் தாழ்ந்து, மறுமொழி யொன்றுஞ் சொல்லாமல், அந்த இடத்திலும் நிலைத்து நில்லாமல், மீண்டுவந்த வழியே திரும்பிப்போனான். அந்த வேளை யிற் பாரதி யருள்பெற்ற சாரதியானவர் தேர் செலுத்த வீரவில்லைத் தாங்கி, போர்முகம் வேக நேர்முகமாகச் செம்பொன் மலைபோன்ற தேரேறி அம்புவி நடுங்கும்படியாய் யதுகுலசாத்தகி வரும்போது, துரியோதனன் தம்பியாகிய துன்முகனனவன் அனேக அரசர் களையும் கால்வகைச் சேனைகளையுங் கூட்டிக்கொண்டு சாத்தகிக் கெதிர்சென்று நின்று தடுத்து, ஆயிரமாயிரமென்னும் அனேக முகங்களை யுடைய அஸ்திரங்களை யெடுத்து, விஸ்தாரமாகத் தொடுத்து, அண்டமுகடுந் தெரியாமனிறைத்து, மண்டலங்களின் வழியாவு மறைத்துப் பரப்பினான். அதைக்கண்ட கொண்டல் வண்ண னுடைய தம்பியாகிய சாத்தகி விண்டலங் குலுங்க விண் ணுணி விட்டெழும் பொன்னை கணைகளால் அந்த துன்முகன் தொடுத்த தொடைகளைப்போக்கி வீரமீளிபோற் சீறி மேலாகத்

தாக்கி, தேர் குதிரை சாரதி முதலிய யாவையு நீக்கி, சல்லடைக் கண்களாய்த் தேகமெல்லாம் துளையாக்கினன். அதனால் களைத்துச் சோர்ந்த துன்முகனைப் பார்த்து "நானொரு வாக்கியஞ் சொல்லுகின்றேன் கேள்" என்று எச்சரித்து மேகம் கடுங்கும்படி வின்னை யடித்து, மின்ன லொடுங்கும்படி கணைமழை பொழிந்து, சத்துருக்க ளெதிர் உக்ர சரசிங்கம்போல் எதிர்த்தழிக்குந் திறலினைக் காட்டிய சிங்கக்கொடி காட்டிய தேரினையுடைய பங்கமில்லாச் சாத்தகி பொங்கத்துடன் "அடா துன்முகனே! மின்னற் கொடிபோல் ஓடிந்த இடையும், வண்ணபணியால் இசைந்த உடையும் அன்னப் பெடைபோ லசைந்த நடையும், சொர்னத் தூண்போற் பரந்த தொடையும், வன்னக்காவி வரிகட்டிடையு முடைய திரௌபதியை ராஜ சபைக் கிழுத்துவந்த காளில், மகமேருவின் சிகரத்தை முறித்த தன் தந்தையாகிய வாயுவின் பலத்தைப் பொறுத்த பீமசேனன் உங்கள் நூறுபேரையுங் கொல்லுகிறேனென்று சொல்லிய சபதம் ஒருக்காலுங் குறையாதல்லவா! அப்பா! ஆகையால் நானுன்னைக் கொல்லப்படாது. துடிதுடிக்கக் கொல்லும் பெருந் தெய்வமாகிய பீமசேனனுக்கு வேண்டிக்கொண்டு தண்ணீர் தெளித்து விட்ட சண்டைக் கடாவைப் போன்ற நீங்கள், கேடுகாலம் வருகிற வரைக்கும் பீடுகோல லோபியர் பொன்னைக் காக்கும் தன்மைபோல் உங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொண்டு ஓடிப் பிழையுங்கள்" என்றுரைத்து, உடனே அவனை உரகபாணங்களை விடுத்து விரைந் தோட்டினன்.

அப்போது துன்முகனவன் அச்சாத்தகியின் பாணங்களினு லடிப்பட்டு மெலிந்தோடு கின்றதை அண்ணலாகிய அரவக்கொடிக் கதிபன் கண்டு ஆச்சரியங்கொண்டு, "ஐயோ! என் தம்பியாகிய துன்முகன் சாத்தகிக் கிளைத்துத் தடுமாறி வருகின்றானே! இதைப் பார்த்திருக்கின்றீர்களே? ஓ பப்பரர் முதலிய பார்த்திபர் களே! இவ்வேளை அச்சாத்தகியை வளைத்து யுத்தம் பண்ணுங் கள்!" என்று வேண்டிக்கொண்டனுப்பினன். அவ்வரசனுடைய ஏவலினாற் பாரித்துப் பூரித்த தோள் வலிபெற்ற பப்பரர், யவனர், சீனர், ஆரியர், வீரியர், மிலேச்சர் முதலாகிய பேர் களெல்லாஞ் சக்ரவாளத்தைச் சமுத்திரம் வளைந்ததைப் போற் போர்த் திறத்துடன் வந்து சாத்தகியைத் தகைத்து, காலாக்கினி உருத்ர கோலாகலமாலையாய்க் கடுஞ்சரங்களைத் தொடுத்து, கண்சிவந்து எண்சிவந்து, விண்கலங்க, மண்குலுங்கப் போர் புரிந்

தார்கள். அப்படி போர்வினைத்த அவர்களையும் அவர்கள் விட்ட அம்புகளையும் கண்ட சாத்தகியானவர் நிறமும் பலமும் திறமும் பெற்ற நெடுஞ்சிலை வளைத்து, நெறநெறவென ஆயிரம் பதினாயிரங் கோடி நெருப்புக் கணைகளை வாரியிறைத்து அவர்கள் தொடுக்குங் கணைமாரிகளைக் குறைத்து கிட்டிமுட்டிய போகளையெல்லாம் வெட்டி மடித்துக் கீழ்மேலாகப் புரட்டினார். இப்படி புரட்டிய போது சமுத்திரம்போ லோடும் இரத்த வெள்ளத்திற்குப் பிணங்களினூற் சேதுபந்தனஞ் செய்துகொண்டு, போர்த்திறம் விட்டுக் குணங்கெட்டோடிய பூபதிகளை யெல்லாம் நினைச்சேற்றிற் குளிக்கப் படுத்தி, அழகிய பூமி முழுவதும் உதிரச் சிவப்பேறும்படியாய் நிதானமாகிய அமர்வினைத்து வரா நின்ற நெடுமாலுக்கினைய அச் சாத்தகியின் நிர்வாகத்தை எவ்விடங்களிலும் நின்ற எரிபடை வீரரும் இருநிலத் தரசர்களும் பார்த்து, அவரை யெதிர்த்துப் போர்புரிந்து யானைக்குமுன் னெதிர்த்த பன்றி படும்பாடு பட்டினைத்தும், இடைக்கிடை கும்புகும்பாக வந்து வளைத்தார்கள். அவர்களைத் தொடைபடும் அம்பாலடிக்க, அதனாலவர்கள் களைக்க, மறுபடியும் வெட்கமில்லாமல் மேலிட்டுவருவோர் பக்கத்து நிழல் போற் பட்டழிந்தொதுங்கப் பகைகளைக்து கடந்து, தடையிலாமனைடந்து, தருக்கிச் செருக்கி மும்மதம் பொழியு மூனைவேழம் போல் தனக்குத் தமையனாகிய காரணனும் கரனும் இருக்கும் இடத்தை நோக்கித் தாராளமாய் வந்துகொண் டிருந்தான் ஜயசீரப் பிரதாப சாத்தகி.

தருமராஜன் சாத்தகி வராமையால் வருந்திப் பீமனை யேவ, அவன் பலவாய்மைகள் கூறித்தடுக்க, அதற்குச் சமாதானங்கூறவும் பீமன் செல்லுதல்

இவர்சரித மிப்படியிருக்க, மறுபடியும் முரசக்கொடிக் கதிபனாகிய தருமராஜன் மனம் வருந்தி, தனக்கெதிர் நின்ற தம்பியான வாயுகுமாரனது மதிமுகத்தைப் பார்த்து "அப்பா! துரியோதனன் கட்டிய அணிமுகத்தி னிறைந்த மன்னவரென்று சொல்லா நின்ற சேனாசமுத்திர கடிவிற்சென்ற உன் தம்பியாகிய அர்ச்சுனனும், எம் பெருமானாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் எப்படியானார்களோ? ஒன்றுந் தெரியவில்லை. ஓ உத்தமனே! சாற்றுதற்கரிய சற்புத்திரனாகிய சாத்தகியை யனுப்பிப் பார்த்துவரச் சொன்னேன். அவன்போய் அவர்களைச் சேர்ந்து கண்டதும், காணுததும், கடுமத்தியிலே தியங்

கியதும் இன்னவிதமென்று தெரியவில்லை. இன்று சாயங்காலத்துக் குள்ளாகச் சயிந்தவனைக் கொல்லுகிறே னென்று சபதங்கூறிய அர்ச் சுனனுடைய உறுதிமொழி நிறைவேறும் படியா யிருக்கவில்லையே : சூரியபகவான் மேற்றிசையிற் சாய்ந்தானே ! இதுவரையிலும் ஜயம்பெற் றிருப்பார்களாகில், கிருஷ்ணார்ச்சுனருடைய ஜெயசங்க மிரண்டும் முழங்கவேண்டுமே : அப்படிக்கில்லாமல் நம்பெருமா னுகிய கிருஷ்ணமூர்த்தியின் பாஞ்சஜன்ய மாத்திரம் ஏகதிசத் தில் முழங்கிற்றே ! அவ்விடத்தில் அர்ச்சுனனுக் கென்ன அபாய மோ தெரியவில்லை ! ஆகையால் என் மனதிற்கொண்ட சந்தேக நிவாரண மாகும்படி மேலிட்ட பகைகளை வெல்லும் பலத்துடன் நீயுஞ்சென்று, சங்கதியறிந்து எனக்குத் தெரிவிக்கக் கடவை தம்பீ பீமசேனனே !" என்றுரைக்கவும், அந்த வசனத்தைக் கேட்ட பீமனுனவன் உடல் பதறிப் பெருமூச்சு விட்டு, பிரக்ஞை தப்பிப் பெருங் கோபங்கொண்டு, ஒரு கொதிப்பெழுந்து, உடனே குளிர்ந்த சலம் போலாறி, மனந்தேறித் தமையனை நோக்கி, " அண்ணனே! பிராமணராகிய துரோணாசாரியர் அளவிறந்த சேனைகளைக்கொண்டு தேவரீருடனெதிர்த்து நெருங்கிய ஜெயபேரி வாத்தியத்துடன் போர் புரிந்து வம்பாக உம்மைக் கட்டிக்கொண்டு போவாரென்று தம்பியானவன் என்னை நம்பித் தமக்குக் காவலாக வைத்துப் போயிருக்க, எனக்கிளையவனுடைய வார்த்தையைத் தள்ளி உமக்கு ஆபத்துவரும்படியாய் நான் இவ்விடம் விட்டுப் போவது வீரமோ ? அல்லது தர்மமோ ? நானப்படி போகப்படாது. மேலும், நீர் ஏதொன்றுக்கும் விசனப்பட வேண்டாம். நமது தம்பி யாகிய வில்விஜயன் வல்லபம் உமக்கு நன்றாய்த் தெரிந்திருக்கும் நேரன் சிந்திக்கின்றீர் ? ஓ தருமசொரூபியே ! நமது தம்பியாகிய காண்டீபனுட னெதிர்த்துப் போர்புரியும் இயல்பினையுடையபேர் கள் ஈரேழு பதினைந்து லோகத்திலு முண்டோ ? இறைவனே ! அப்படி யல்லவென்றாலும், நமக்கிஷ்ட தெய்வம் போன்ற கிருஷ்ண மூர்த்தி இருக்கிற வரைக்கும் ஒரு பொல்லாங்கு நடக்குமென்று சொல்லச் சொப்பனஸ்வதையிலும் நினைக்கக் கூடுமோ ? ஓ தேவன் றலே ! மேலுஞ் சர்வலோக கண்டகனுகிய சாத்தகியை லேசாக மதிக்கப் போமோ ? ஓ சர்வபூமா ! வேறு சிந்தனை வேண்டாம். நமது தம்பிக்கு ஒரு குறைவுமில்லை. தேவரீரைவிட்டுப் பிரிவேனையாகில் ஏதோ ஒரு குறைவு வரும்போ லிருக்கிறது ! அக்குறைவோ உம்மை விட்டுப் பிரிவதனுலுண்டாகியதால் வாலாமை யல்லது வேறொன்றி

ஞலும் வரமாட்டாது. ஓ விஞ்ஞான வேந்தனே! ஓ வேதனெறி யுணர்ந்த சாந்தனே!" என்று இன்னுமோர் திருஷ்டாந்தமுஞ் சொல்லுகிறுன்—

"அண்ணு! பஞ்சவடி தீரத்திலிருந்த ஸ்ரீராம மூர்த்தியானவர் மாயமானைத் தூத்திக்கொண்டு போகும்போது இளைய பெருமாள் தடுக்க, அவரதைக் கேளாமற் சென்று அந்த மானையடிக்க, அம் மானுனது லட்சுமணனுக் கபயமென்றுகூவிய சொல்லினுல் அண் டம் வெடிக்க, அதைக்கேட்ட சீதாபிராட்டியாருடைய மனந்துடிக்க, அவ்வம்மன் இளையபெருமாளைப் போய்ப் பார்க்கச் சொல்லிச் சில வார்த்தை படிக்க, அவர் சக்ரவர்த்தி திருமகனுக்கு ஒரு குறைவும் வராது என்று தாயார் வார்த்தையைத் தடுக்க, இதனுற் கோபித்துக் கொடுமையாகிய பழிச் சொல்லினுல் முடுக்க, அதுகேட்டு இளைய பெருமாளுக்கு இடதுதோள் துடிக்க, அப்போது 'ஹரி! ஹரி!' என்று எழுந்து கண்ணீர் விட்டழுது 'என் தாயே! இது வரையிலுங் குறை வில்லே. தேவரீரைவிட்டு நான் பிரிவதினுல் இனிமேல் வரப்போ கிறதுதான் குறைவு' என்று சொல்லி நடந்தபோது, இராவணனுல் நேரிட்டதன்மை தங்களுக்குத் தெரியுமல்லவா? ஓ திங்கள் குலக் கொழுந்தே! அப்படியாக ஒருவேளை விளைந்தாலும் விளையும். அப்படி நேரிடுமாகில் தம்பியாகிய அர்ச்சுனனுனவன் என் முகத் தைப் பார்த்து, 'அண்ணு! என்னுடைய சாமார்த்தியத்தை நீ ரறியமாட்டீரா! செவ்வையா யறிந்திருந்தும் பெரிய அண்ணு அவர் கள் ஏதோ பச்சாதாபத்தாற் சொன்னபோதிலும், நான் சொல்லி வந்த வார்த்தையின் வண்ணம் பாதுகார்த்திராமல் வந்து விட்டீரே: இப்போது இப்பேர்ப்பட்ட மோசம் வந்து விட்டதே' என்று கேட் பானுகில் நான் அவனுக்கெதிரில் தலைகவிழ்ந்து தயிரியங் குறைந்து, சகலமுமிழந்து, காவெழுந்து உத்தரவு சொல்வதற்கும் வகையில் லாமல், மற்றவரு நகைக்கும்படியாய் நேரிடு மல்லவா? ஓ புத்தி யிலுயர்ந்த உத்தமனே! எனக்குக் கட்டளையிட்ட உத்தரவை மன் னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறே" னென்று அவருடைய திருவடி யில் தன்னுடைய மணிமுடி படியும்படியாய் வைத்து வணங்கினுன்.

அப்படி வணங்கிய பீமசேனனை யெடுத்தணைத்து "அப்பா நீ சொன்ன தனைத்துஞ் சரியே; ஆயினும், தமையன் வாக் கியத்தைக் கேட்டு நடக்கும்படி தர்மமிருக்கின்றதே யொழியத் தம்பி வார்த்தையைக்கேட்டு நடக்கும்படி தர்மமிருக்கின்றதா? இதல் லாமலும், துரோணுசாரியர் வந்து என்னைப் பிடிக்கும்போது இத்

தியாதி சேனைகளுக்கும், துரியோதனனுக்கும், சேனாதிபதியாகிய அவருக்கும் அஷ்டமத்துச்சனி பிடித்ததென்று நீ நிச்சயமாய் நினைக்கக்கடவை. ஐயனே! இன்னமுங்கேள்! நமது மைத்துனனாகிய சேனாதிபதி திர்ஷ்டத்துய்மன் முதலாகிய பேரும், இளையவர்களாகிய நகுல சகாதேவர்களும், எனக்குக் காவலாக இருக்கிறார்கள். இவர்கள் புரியும் போர்த்திறம் இலேசாகியதல்ல. ஆதலால் எனக்கொரு தாழ்ச்சியும் வராது. நீ ஆட்சியாகச் சென்று, சர்வசாட்சியாகிய கிருஷ்ண மூர்த்தியையும், மாட்சிமை பெற்ற கிரீடியையும், தாழ்ச்சியில்லாமல் உன் கண்காட்சியாகக் கண்டு சந்தோஷமாக, என் மனதிற்குச் சாட்சியாகும்படியாய்ச் சங்கநாத கோஷமாவது செய்து என்னிரு செவிக்கமுதூட்டு வாயாகில் அப்போது என் மனம் தெளியும். என் சிந்தைக்கினைந்த சிலாக்கியனே! நான் சொல்லும் பேச்சுக்கு ஆக்ஷேபனை சொல்லாதே!" என்று சொன்னார்.

அந்த மொழியைப் பீமசேனன் சிரமேற் கொண்டு, ஜன்மாந்திர வினைவழியெதுவோ அந்த வழியேவரும் பழியென்று நினைத்தவனாய், களங்கமில்லா மனத்தினையுடைய பலம் பொருந்திய வீராதி வீர அரசர்களுக்கெல்லாந் தருமராஜன் பத்திரம்: பத்திரம்: என்று பக்குவமாக வற்புறுத்திச் சொல்லி, மனந்திடங்கொண்ட சேனாதிபதியென்னு மைத்துனனுடைய சத்தியவசன உறுதியையுங் கேட்டுக்கொண்டு, தம்பிகளாகிய நகுல சகாதேவ திருவரையுந் தமையனைச் சூழ்ந்து நீங்காதிருக்கும்படியாய்த் திட்டப்படுத்தி, தமையனுரைத்த வாக்கியம் பின்னிட்டுத் தள்ளத் தான் முன்னிட்டுப் பணிந்து பிரயாண விடை பெற்றுக் கொண்டு, தனக்கொப்பாகிய தோள்வலி பெற்ற தாணிபரனேகரும், நிலைபெறப் பொருந்திய ரதகஜதுரக பதாதிகள் முதலிய நால்வகைப் படைஞரும் ஒன்றுபத்திரண்டு நெருங்கி இருபக்கங்களிலும் பின்னுமுன்னுஞ் சாயைபோற் றொடர்ந்து அடர்ந்துவரும்படியாய் கொக்குத்தளத்தில், ராஜாளி புகுந்ததைப்போலும், யானைக்கூட்டத்தில் ஆண்சிங்கம் பிரவேசித்ததைப் போலும், ஆட்டுமந்தையிற் காட்டுப் புலி கலந்ததைப் போலும், ராக்ஷசப் படையில் ராமபாணம் நுழைந்ததைப்போலும், துரியோதனனுடைய சேனைமுகத்திற் பெரியோனாகிய பீமசேனன் புகுந்தான்.

துரியோதனன் சகோதரரில் எழுவர் வதை

கேட்டீரோ ஜனமேஜய மகா ராஜனே இப்படி பீமசேன மகாராஜன் மகா விக்ரமத்தோடு புகுதலும், அப்போது தகுந்த வீராதி வீரரெல்லா மெதிர்ந்து, திகாந்தமதிர்ந்து போகும்படி யுத்தஞ் செய்தார்கள். அச்சமயத்தில் கலிங்கர், குலிங்கர், தெலுங்கர், புலிங்கர், கன்னடர், கௌசலர், கராடர், கர்ஞடர், யவனர், ஆரியர், சோனகர், சீனர், குகுதர், பப்பரர், மாகதர், மாளவர், மராடர், மலையாளர் முதலிய பற்பல பாஷைப் பார்த்திபரும், ஆர்த்து வேர்த்து விதிர் விதிர்த்துப் போர்த்துப் போர்புரிந்தார்கள். அக்காலையிற் காற்றின் மகனாகிய பீமசேனன் முனைந்து, அவர்களைக் காலமாடு தலைமாடாகப் பிளந்து மண்ணுலகில் தீக்கி, விண்ணுல கிற் போக்கி, வட்டமாமகிதலம் படீரென வெடிக்க, அட்டநாகமுந் திடீரெனத் துடிக்க, திக்கெட்டும் உளகரி தபாலெனக் கக்கிவிக்கிட்டு, மீன்கடல் குபீரெனக் கொதிக்க, கடகட தடதட படபட வென்று தேரைச் செலுத்தி, வயவீரரைத் துரத்தி, மேலாக விரைந்து, காலாளைக்களைந்து, கடுவேகங் கொண்ட காற்றைப்போற் கலக்கி ஆர்ப்பரித்து வந்தான். அப்படி வரும் பீமசேனனைக் கண்ட துரி யோதனனுடைய தம்பிமார்களில் விந்தன், விந்தரன், சுசருமன், சுதர்சனன் என்னு நால்வரும் ரதகஜதுரக பதாதி முதலிய நால் வகைச் சேனைகள் சூழும்படியாக வந்து யுகமுடிவிலே ஓங்கி இரை யும் பெருங்கடல்போ விரைந்து இடையிடையே தனித்தனி தகைந்து, முல்லைப் பகழி, குல்லைப் பகழி, மல்லிகைப் பகழி, சில்லி கைப் பகழி, ஈற்பலப் பகழி, உற்பலப் பகழி, குமுதப் பகழி, அமு தப் பகழி, கூரிலைப் பகழி, ஈரிலைப் பகழி முதலியவையும், சூலா யுதம், வேலாயுதம், வாளாயுதம், தோளாயுத முதலாகிய ஆயுதங் களைப் பூசித்து வணங்கி யெடுத்து, வல்லமையில் வல்லவராகப் பழகியவரைப்போல் தங்கள் வல்லமையுடனே மல்லலந் தோளினை யுடைய வாயுகுமாரனை யடுத்து, எல்லையில்லாமற் றொடுத்து அமர் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்தபோது குமர குருபரனுக் கொப்பாகிய கோமான் குந்திபுத்திரனாகிய பீமசேனனென்னுஞ் சீமான் குமாளமிட்டுக் கோபித்து, கொடுவிடப் பகழியைப் பூசித் துக் குறைவில்லாமற்றொடுத்தான். உடனே தன்னேரில் வந்த பாண மும், அவர்கள் கைபிடித்த வில்லும், அவர்களேறிய ரதமும், அதிற் பூட்டிய குதிரையும்; அக்குதிரையை யோட்டிய சாரதியும், தாங்

களுமழிந்து, அவர்களுடைய தலைகள் சென்று மேகங்களைக் கீறித் தலைக்கவும், தேகங்களிலிருந்து வழியும் இரத்த வெள்ளம் பெருகியோடிப் பெருங்கடலை மலைத்தலைக்கவும் உலகங்கொழிந்தார்கள். இப்பாலிவர்களின் சகோதரராகிய குண்டலபோகி, தீர்க்காலோசனன், சித்திரசேனன் என்னுமிவர்கள் மகாபலசாலிகள். படையென்றால் முந்தி இடையா திருக்கும் பராக்ரம வீரர்கள். எமதர்ம ராஜனும் இவர்களுக்கெதிரில் என்றைக்கும் வரக்கூடாது. ஒரு வேளை வழிதப்பி வந்தாலுகில் அந்த எமனுக்கெமனு யேற்பட்டுத் தோற் றில்லாமல் ஜெயம் பெறுகின்ற சுத்தவீரர். தங்கள் தமையனுர் நால்வருங் காலமகனுகிய பீமனுலிறந்ததைக் காண்டு மிகவும் வெகுண்டு, வெற்றிமாலைபூண்டு, விரைவாகத் தூண்டும் விதவிதமாகிய பாணங்களைக் கொண்டு வேண்டிய போர்மூண்டு, பாண்டு மகன் மீறுடித்த கணையால் தேகங்கீண்டு புரண்டு அரண்டு மருண்டு வறண்டு தோன்றிய மூன்று பேரும் ஈண்டு மாண்டு போனுர்கள்.

பீமசேனன் தன்னைத் தடுத்தெதிர்த்த துரோணுசாரியரைத் தேரோடு தூக்கி ஆகாயத்திலெறிதல்

இப்படி துரியோதனன் தம்பிமாரெழுவராயுள் முடிந்து வாயுபுத்திரன் விடுத்த வாளியால் மடிந்தபோது தாணீசர்முதலிய சேனை வீரருடன் கட்டுப்பாடாய்க் கட்டிய வியூகங்கள் சட்டெனக் கலைந்து புறமிட்டோடிச் சாய்ந்தார்கள். இப்பாற் பெருங் காற்றுடன் கலந்த செழுந் தீயைப்போல் பீமசேனன் அப்பாற் செல்லும்போது, மறங்குலாவிய திறங்களையுடைய வயவீரர்கள் வந்து வளைத்து, பீமனுவிளைத்து, மண்ணும் விண்ணும் மதிர்த்து, கண்ணு மெண்ணுங் கலங்கி, ஒண்ணுந்தெரியாமல் கன்றியிருந்த தேகம் புண்ணுகி, மண்ணோடு மண்ணுய் மடிந்தார்கள். இவ்வாறிவர்களை வென்று வாள் விழி சிவந்து வாகுவு முயர்ந்து வாளரிபோ லெழுந்து செல்லாகின்ற ஆளரியைக் கௌரியாகத் துரோணுசாரியர் பார்த்து, "ஐயோ! இன்று நாம் கட்டிய வியூகங்களைப் பிளந்து முன்னேபோன அர்ச்சுனனைத் தேடிப் பின்னேபோன சாத்தகியையும் நாடி இவனும் ஓடிப் பக்கத்திற் சேர்ந்து கொண்டானுகில், காற்று நெருப்புங் கலந்தைப்போல் மூவருங்கூடி நமது படைமுழுமையும் நாசப்பட்டுப் போகும்படி கலித்து, விடுவார்களே யென்று விசாலமாகிய வில்லை வணங்கி, சமர்முகத்தில் முந்திப் பீமசேனனை வளைத்துச் சப்த சமுத்

திரத்தையுங் குடித்திடித் தெழுந்த சப்த மேகமும் பொழியுஞ் சலதாரையைப் போற் சரதாரை சொரிந்து, எங்கணும் விரைந்து அங்கமர் புரிந்து வருந்துகின்ற தங்கள் படைவீரரைக் கண்டு; நீங்கள் துடியாய் வாருங்கள் வந்து நம் படையைக் காத்திடுங்கள், என்றிரைந்து பறந்து பறந்து பாடிபட்டார். அவரைப் பீமன் கண்டு "நமக்குமிவருக்கும் யாதொரு பகையுமில்லை. மேலும் இவர் நம்முடைய விற்குரு. ஆதலாலிவருட னெதிர்த்துப் போர்புரிவது ஞாயமல்ல" என்று கோபமடங்கி, ஆசாரியரை வணங்கி, "ஐயனே! தேவரீரைப் பகைத்துச் சமர் கொடுப்பது அரீதியே யல்லாமல் கன்னீதியல்ல. எங்களுக்கு நீர் முதற் குருவானவர். உமது பாதத்தை உள்ளத்தினுஞ் சிரத்திலுங் கொண்டிருக்கிறோம். ஓ உத்தமனே!" என்று அவர் பதாம்புயத்திற்கதாயுதன் வணங்க தநுர் வேதியர் நகைத்து, "இன்றையதினம் எவர்களாகிலும் ஏமாறக் கூடுமோ? ஒருகாலுங் கூடாது. நீ எனக்கு இதமாகிய உபகாரஞ் சொல்லவேண்டாம். வஞ்சனை யில்லாமல் நெஞ்சுறுதியாய் மிஞ்சி ஒருகை பார்த்துவிட்டுப் போகலாம். ஓ அஞ்சனைக்கினிய மகனே!" என்று கொஞ்சமேனு மிரக்கமில்லாமல் வெஞ்சிலையைவளைத்து, செஞ்சுடர் மாருதம்போல் அஞ்சரீக மென்னும் அடலாஸ்திரங்களை விடுத்து, அந்தப் பீமனுடைய தேகத்தைத் துளைத்துக் கெடுத்துப் படாதபாடுபடுத்தினார். அப்போது பீமசேனனுடைய வீரதீரன் இவருடன் அமர்புரிந்தால் காலதாமசமாய்ப் போகுமென்று கருதி, பதிலுக்குப் பாணங்களைத் தொடுக்காமல் வாய்திறந்தொரு மொழியுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்து தன்மீது வந்து விழும் பாணங்களை யெல்லாம் இருகரத்தாலும் அடித்து, விலக்கிப் பிடித்து நெறித்து கசக்கி முறித்து, நசைக்கு ளெறிந்து, கண் சிவந்து கொதித்து, மீசைமுறுக்கி யுருக்கி நெறித்துப் பார்த்து, திடுக்கென்று தேரைவிட்டிழிந்து, திடுதிடென நடந்து செழுஞ் சிலைக்குரு ஏறிநடத்திய தேருக்கருகாமையில் வந்து, தனதிரண்டு கையால் உருளையை வாரிக்கொண்டு, கதிர்மதியுடுக்கள் கதியழிந்தாடக், காரினமனைத்துங் கலங்கதன் மேடக், கரகரவென்று ஆகாயவெளியில் வீசி யெறிந்தான். அப்போது அவ்வாகாயத்தில் வேடிக்கைப் பார்த்திருந்த தேவர்கள் அஞ்சிப் பயந்து அப்பாலொதுங்கி யோடவும், முற்காலம்போல் அத்தரமளாவிய விந்தகிரி வளர்ந்தமேதாவென்று நவக்கிரகங்களுஞ் சிந்தை கையும்படியாகவும் அத்தேரானது விண்டலம் வரைக்கும் புகுந்து, கீழதுமேலதாய்க்

கவிழ்ந்து, மண்டலத்தில் விழுந்து, சாரதியங்கநெறிந்து, சக்கரங்க ளுடைந்துதிர்ந்து, அச்சுடன் கடையாணியதிர்ந்து, ஆலவட்டங் களும் பறிந்து, குதிரைகளின் குடல்களுஞ்சரிந்து, குற்றுக்கால்களு முறிந்து, கொடியுங் குடையுந் தறித்து, கொம்மையும் பொம்மையு மழிந்து, வில்லும் நாணமு மறந்து, வேதியனெலும்பு மொடிந்தது.

பீமசேனன் சாத்தகியை வழியிற் கலந்து கூடிக்கொண்டுபோய்க் கிருஷ்ணர்ச்சுனரைக் காணுதல்

இவ்விதமாக வீழ்ந்த துரோணாசாரியர் மெத்தென வெழுந்து, இத்தருணம் பின்னிட வேண்டுமென்று தன்னுடைய வேறு ரதத்தி லேறி நின்று, குன்றுபோற்கட்டிய தமது படைவீடு தேடிக்கொண்டு போவதாயினர். அதை எமதூதர்களினு மேழுபங் கதிகமாகிய பெரு வஞ்சக நெஞ்சினையுடைய போர் வீரர் கண்டு, துரோணாசாரிய ருக்கு உபரூளாய் எண்டிசையிலும் புடைசூழ்ந்து, ஈரேழுமண்டல மும் புதைந்து தத்தளிக்கச் சலப்பெருக்கமுடைய தரங்க நெடுங் கடலானது ஸர்வ ஸம்ஹார காலத்தில் எங்கும் பொங்கும் ஓசை யைப் போலிரைத்து, உள்ளும் புறமும் வெதும்பக் கொதித்ததி கரித்த சினங்கொண்டு பீமனை வளைந்து போர் புரிந்தார்கள். அவர் களையெல்லாஞ் சுழற்காற்றிற் சுழலுங் தூரும்புபோற் போக்கித் திரும்பியபோது, ஆரபார வீரகாகளம், சுரிமுகச்சங்கு, கோணக் கொம்பு, தாறை, பேரி, பூரி, வீரகின்னம், பம்பை முதலாகிய வாத் தியங்களெல்லாம் மேககர்ச்சனையினுமைத்துபங் கதிகமாக முழங் கும்படியாய், பூரிசனும், புகழ்ப்பிரதாப ராஜனும், போர் மல்லரும் வந்து, மாரிபோற் கூரியவெங்கணைகளை வாரிச் சொரிந்து, விஷாக் கினிசெறிந்து வேகும்படியாய் உலகஞ் சாகும்படியாய், கிலிபெற்று அமர் தொடுத்தார்கள். அந்த மலை யொத்த புயத்தினரை வாயு குமாரனுகிய பீமசேனராஜன் கண்டு, ஆயுங் கணமழைகளைத் தேயுவெனத் தொடுத்து, அவரவர்களு முகமாறி அகமாறி யொடுங்கி யோடி யிளைக்க, ரதகஜதுரகமு மிழக்க, காணியிற் பாண முமிருக்க, யாவருங் கோகோவென்னு மிரைச்சலுடன் கூட்டங் கூடி ஓட்டங்கொள்ளும்படி மாட்டி விடுத்து, கடுங் கோபத்தாற் கடி கடுத்து, நீண்ட புயங்க ணிமிரச்சிரித்து நீலவண்ண நிறங்கொண்ட நாராயண நிருவரையும், நோக்கிடி வரா நின்றனன். அப்படி வரா நின்ற பீமசேன மகாராஜனுடைய ரதமு மிவனுக்கு முன்னடி வந்த சாத்தகி மகாராஜனுடைய ரதமும், ஆகிய இவ்விரண்டுந்

திரண்ட மலைபெயர்ந்து வருவதைப்போற் சக்கரம் புரண்டிருண்டு முன்னும் பின்னுமா யோடிவருவதை, நச்சரவக் கொடியாடிய உச்சிதமாமுடிசூடிய ராஜராஜேஸ்வரனுகிய துரியோதனனுடி, மனக் தளர்ந்துவாடி, பற்கடித்து விற்பிடித்துப் பரதவித்து அஞ்சி யிளைத் தான். அந்தவேளையில் அஷ்டமகா நாகங்களினுடைய விஷாக்கினி லெப்பமுஞ் சூரியனுடைய தீட்சண்யமுஞ் சாந்தமாகும்படியாய்க் குளிர்ச்சியுடன் உலகத்தி லுலாவிக்கொண்டிரா நின்ற வாயுவின் வேகந் தலை சாய்ந்து போகவும், திசைகளுக் காதாரமாக வமைந்த திக்கஜங்களெட்டுந் தேகாபிமானத்தை விட்டு மெத்த மெலிந்து நலிந்து வாடவும், அதிராமல் எதிரேறிய பதினெண் பாஷை மன்ன ரும் ஆங்காலங்கித்தேகம் விளங்கவும் குருக்ஷேத்திரத்தி லிராநின்ற யாவரும் விகாரங்கொண்டு தலைமயக்கேறவும், அளவிடற்கரிய ஆழ மான கடலைக் கிழித்தோடுங் கப்பலுக்கொப்பாகிய கடிய வேகத் தேரைக் கதாயுதனுஞ் சாத்தகியுஞ் செலுத்திக்கொண்டு கார்போற் கறுத்த கடனிற வண்ணனுகியக் கண்ணனுங் காண்டீபனும் உலவிச் செல்லுமிடத்தை நாடி யோடிவந்தார்கள். அப்பொழுது உலக மயங் கும்படியா யோடி வரா நின்ற இரண்டு தேரையும் நர நாராயண ரிருவரு சமீபத்திற் கண்டு, தேவசங்க முழக்கித் தேகம் பரவசத் தராய் மகிழ்ந்து, திணிந்த மலர்த்தார்ணிந்த தீரவீரபுய புங்கவ னுகிய தருமராஜனுனவர் தமது சேஷமத்தை யறிந்துவரும்படி ஆஞ்ஞாபித்தனுப்பி வைத்தனென்று உணர்ந்து ஆனந்தங் கொண் டார்கள். அப்போது கதாயுத பீமனுனவன் சூற்கொண்ட மேகம் போன்ற வடிவினரான கிருஷ்ணார்ச்சுனரைத் தன்னிரு கண்ணுங் களிக்கக் கண்டு, தன் தமையனுகிய தருமராஜ னுடைய காது களுக்கு இவர்களின் க்ஷேமத்தைத் தெரிவிக்கும்படியாய்ப் பாரிய சங்கத்தை வீரியமுடன் இருகரத்தாலும் பிடித்து, பம் பம் பம் மென முழக்கினன்.

கர்ணனும் விடசேனனும் பீமனுல் முறிபட்டுப் புறங்கொடுத்தோடித் துரியோதன னிடத்து முறையிடுதல்

இப்பால் சோமன், சூரியன், அக்கினி, என்னு மூன்று சுட ரும், உயிர்த்தி, உதாத்தி, கோபத்தி என்னு மூன்று தியும், காருக பத்தியம், தக்கணாக்கினியம், ஆகவனீயம் என்னு மூன்றக்கினியும் ஓரிடத்திற் சேர்ந்ததைப்போல், இவர்கள் மூவருங்கூடி மகிழ்ந்து

விளங்கி, அர்ச்சுன னொருபக்கம், பீமசேன னொருபக்கம், சாத்தகி யொரு பக்கமுமாய் முனைந்து சென்று, குதிரை செலுத்துஞ்சாரதித் தொழில்பூண்ட கந்த கந்தனுடைய திருவடியைச் சிரத்திலும், உள்ளத்திலுந் தரித்துத் துதித்து, ஜயிப்பதற் கரிதாகிய படைமேற் சுவி கொருங்கிச் சூழ்ந்து வளைத்து வீரசங்கம், ஜெயபூரி, சிங்க நாதம் இவைமுதலிய வாத்தியங்களை முழக்கி, ஆகாயத்தில் வேடிக்கை பார்க்குந் தேவர்களுடைய உள்ள மபங்கித் தியங்கி கலிக்குறும்படியாகி திவாங்களும் தெரிந்துகொண்டு மண்ணும் விண் ணும் ஒன்றுகும்படியும் மனம்போன வழியே கலக்கிச் சேனை கொருக்கத்தை விலக்கி வரும்போது, இத்தப் பாரைத் தாங்கும் ஆயி ரம் பணமுடிச் சேடன் போரைத் தாங்கமாட்டாமல தலைகொக்து வலம் வந்து சுழன்றான். இவ்வுலகிற்கு எட்டாக ஏற்பட்ட திக்குக ளனைத்து மருண்டு வெருண்டு கலங்கின. வடவாக்கினியின் வெப்பத் தணியும்படியாக ஓயாமல் அலையடித்துக் கொண்டிருக்கின்ற நதிபதி யாகிய கடல் தளதளவென்று கொதித்து வெதும்பின. அப்போது மேலாகிய அண்டமும் பிறண்டு திசைப்பாலர் முதலிய பேரும் பச பசவென்று விழிக்கும்படியாய்ப் போர்புரிந்து வராநின்ற சாத்தகி பீமன் இவ்விருவரையும் அர்ச்சுனனுடன் சண்டை செய்து இளைத் தோடிய யாவருங் கண்டு சேர்ந்து, இவர்களுடன் போர் கொடுக்க கினைத்துவந்து வில்லெடுப்பதற்கு முன் தங்கள்மே லோயாமற் பொழியும்படியாகிய சரமாரிபினுற் களைத்துத் திக்குக் கொருவராய் ஓடத் தலைப்பட்டார்கள். அக்காற் பிரதாப ருத்திரனைப்போல் கொருங்கிவந்த பேர்களையெல்லாம் கொலுங்க வடித்துத் தூளிப்போகா கிற்கும் வாயுகுமார னென்னும் பீமசேனனைக் கண்ட சூரிய குமார னுகிய கர்ணன் மனந்தாளாமல், முந்தி வந்து சமர்கொடுத்தான். பீம சேனனும் அவனுடனெதிர்த்துப் போர் புரிந்தான். இவ்விருவருங் கொடுமையுடையவர்களாய்ப் பகைத்து, கோபமதிகரித்து, வரி பொருந்திய வில்லை மளமளவென்று வளைத்து, வரத்தினுலுற்ற ஜெயமுற்ற, உரம்பெற்ற, அரம்வைத்த, கூர்மையாகிய பாணங்களைப் பரிந்து தெரிந்தெடுத்து, ஒருவருக்கொருவர் சமீபித்தடுத்து விஷாக் கினி வெகுளியுடனெதிர்த்து, தேரோடுந் தேரும், தேரிற் பூட்டிய குதிரைகளும், அக்குதிரைகளை ஓட்டுஞ் சாரதியும், செங்கடப்ப மலர் சிவந்து மலர்ந்ததைப்போல் நெருங்கிய இரத்த வெள்ளம் நிரம்பிப் பாயும்படியாய் மெத்த மூனைந்து அஸ்திரப் பிரயோகஞ் செய்து, வருத்தியபோது, போர்மூனைந்த போர்வீர பூபாலருடைய

உடம்புஞ் சிவந்து, உதிரம்வழிந்து யுத்தபூமியில் இரத்தவாறுகளாய் அலைத்து மலைந்து காடு, கரம்பு, மேடு பள்ளங்களிலும் வெள்ளமாய்ப் புரண்டோடின. இப்படிக்குப் பலவிதமாகிய யுத்தங்களைச் செய்படிப் பவர்போற் செய்து வரும்போது ஒப்புவமையில்லாத பீமசேனன் காமகாதன்போல் நின்று தொடுத்த கடிவேக அம்பினற் சம்பிராம னென்னுங் கர்ணனுடைய ரதத்திற்கட்டிய குதிரையிரண்டுந் துண்டித்துப் புரண்டுவிழுந்தன. கச்சைக்கொடி முறியுண்டது. சாரதி தலைதறிந்தது. தேருங் குலைந்து தெருப்பொடி யாயது. சேமக் கவசமுங் சிதைந்தது. தேகமுஞ் துளையுண்டது. முழுமதி போன்ற வெள்ளைக்குடை மூன்றும்பிறைபோர்க் குறைந்தது. எத்தப் போருக்கும் அஞ்சாத அசஞ்சல னென்னுங் கர்ணனுடைய நெஞ்ச மழிந்து, போரொழிந்து, சீரிழந்து, தார்குழைந்து காலோட்ட மாகவோடி, மிகவும் வாடி, பீமசேனனுடைய பாண வேகத்திற் கெட்டாமற் புறங்கொடுத்துப் போவதானன். அதுகண்ட பலம் பொருந்திய விடசேனன் உள்ளங்கொதித்து, வள்ளலாகிய கர்ணனுக் கெதிர்சென்றழைத்து, மன வருத்தத்துடன் தழுவி, நவமணியால் அலங்கரித்த விசாலமான தன்னுடைய தேரிலேற்றிக் கொண்டு, பீமசேனனு லடிபட்டழிந்த விதங்களைக் கேட்டு மேனிநடுங்கி, மிகக் கோபங்கொண்டு, "ஆ! ஆ! விட்டேனு அந்த பீமனை" யென்று மிகுந்த திடங்கூறி, அணைகடந்த வெள்ளத்திற்குக் கரைகட்ட வந்தவனைப்போல் அந்த பீமசேனனுக் கெதிர்சென்று நின்று, மீளவும் வெரித்து வெஞ்சிலை வளைத்து இருவரும் அவ் வொருவன் மீது அமர்புரிவதாயினர். அப்போது பெருவயிர முடைய பீமசேனன் அருவருப்புடனகைத்து, மலைபோன்ற தனது வில்லிலிருந்து உக்ரம்படியாகிய பாணங்களினால் அவர்களேறிவந்த குன்றனைய தேருந் துண்டுகளாயுதிர்த்து, உடலதிர்த்து, விழிபிதிர்த்து குடர்குலைத்து, தலைநடுங்கி, காலிலுள்ள கடிவேகங்காட்டி வெண் கொடித் தோடம்படியாய் முடுக்கினன். அம்முடுக்கலுக் காற்றா தோடிய கர்ணனும் விடசேனனுந் துரியோதன ராஜனைக்கண்டு, "அரசே! பெருமோசம் வந்தது" என்று தாங்கள் பட்டபாட்டையும், தங்கள் சேனைகள் கெட்டகேட்டையும், பீமார்ச்சுன சாத்தகிகள் மூவரும் கூடிய பாட்டையுஞ் சொல்லி வருந்தினார்கள்.

துரியோதனன் துரோணரிடஞ்சென்று முறையிட, அவர் சில சமாதானங் கூறியனுப்புதல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே இவ்வாறு அவ்விருவரும் வந்து வருந்தி யுரைத்ததை நாகக்கொடியோனுகிய துரியோதனன் கேட்டு, மனங்கன்றிக் கண்சிவந்து, கைத்திறலாசானென்னுந் துரோணாசாரியருக் கெதிர்சென்று பெருமூச்சுவிட்டு, விழிக்குழியி லிருந்து அனற்பொறி பறக்கும்படி பற்கடித்து, "ஐயா தனுர்வேதி யரே! இப்போதென்னைச் சதிசெய்யுந் தன்மையோ? இதென்ன வன்மையோ? உனாத்தகாலாக்கினி உருத்தெழுந்து அழகிய கான கத்தை யெரித் தழிக்குஞ் சமயம்பார்த்து, அந்த அக்கினிக்கு வலுவேறும்படியாய் நெய்சொரிந்து, வாடைக்காற்றுஞ் சகாயமாய் வீசி யடிக்கச் செய்து, தீயை அதிகரித்து வளரச்செய்யு நற் றுணைபோல், தனஞ்செய னெருவனெதிர்த்து நமது சேனைக் காட்டைத் தகிக்குங் காலத்தில், தண்டதரனென்னுங் காற்றும், சாத்தகி யென்னும் நெய்யும், அந்தத் தனஞ்செயாக்கினியுடன் கலந்து கொண்டார்களே! ஐயோ அவர்களிருவருட னெருவர் சேராமற் றடுக்கவில்லையே: ஓ தனுர்வேதியனே! இனியென்ன காரியம்? முனைமுகத்துற்றவன் என் மைத்துனனுகிய சிந்துராஜன் இறப்பதற்குச் சந்தேகமில்லை; சுவாமி! தேவரை நம்பினதற்காக இந்த வம்பு விளைத்து விட்டீர். என் மைத்துனன் அப்போதே எங்கேயாகிலும் ஓடிப்பிழைத்தாலும் பிழைப்பானே! அவனையும் போகவொட்டாமற் பத்மவியூகமத்தியி னிறுத்தி, சாகாமற் செய்கிறே னென்று சொல்லி, விலங்கைவிட்டுத் தொழுவில் மாட்டி வைத்த தன்மைபோல் வற்புறுத்தி வைத்தீரல்லாமல், இந்தச் சம யத்தில் அந்த யுத்தமுனையை நீரெட்டிப் பார்க்கவில்லையே! நீரிங் கிருந்து செய்யுங் காரியம் யாதோ? இதுவரையிலு நடத்திய வீரா பிரதாப மெதோ? என்னுண்டவனே! இனியாகிலும் அந்த அமர்த் தலைக்கு வந்து என் மைத்துன னுயிரைக் காத்தருளும்!" என்று சொல்ல, அந்த வசனத்தைத் துரோணாசாரியர் கேட்டு, சிந்தையில் நெருப்பெழச் சிரித்து, இருகண்களிலும் பொறியெழ வுருத்து, பெருங் கோபத்தைப் பொருளாகக்கொண்டு பேதிக்கா நின்ற வேலா யுதத்தை புடைய வீராதிவீரருந் திடுக்கிட்டுச் சிந்தை கலங்கிக்

கேட்கும்படியாகத் துரியோதனனைப் பார்த்து, "ஓ புவனியோங்கும் விற்பூவார் தாருவே! அவனிதாங்கு மற்புயமார் மேருவே! கேள் உனக்குப் பிராணபதமாகிய கர்ணமகாராஜன் அவ்விடத்தி லிருக்கின் றான்; சேமநிதிபோன்ற மாமா சகுனி ராஜன் அவ்விடத்தி லிருக்கின் றார். மஹா பதிவிரதையின் வஸ்திரத்தை யுரித்த இளவரசாகிய துச் சாசனன் அங்கிருக்கின்றான். இதற்கெல்லாங் காரணமாகிய யேம் அவ் விடத்தி லிருக்கின்றாய். நீங்களெல்லோருஞ் சூழ்ந்து கொண்டிருக் கும்போது, உனது மைத்துனனுகிய சிந்துராஜனுயிரை யாவர் கைக் கொள்ளத் தக்கவர்? அரசே! இவையல்லாமலும், நானிவ்விடத்திற் காவலிராவிடில் ஏழுகடலு மொன்றுவதுபோற் பாண்டவப் படை யாவும்வந்து கலந்து, பாரிய போர் புரிவார்கள். ஒருவருட னிருவர் வந்து கலந்ததற்கே உலகங் கலங்குமாயின் அவர்களெல்லாரும் வந்து விட்டால் அப்பா லெப்படி காப்பது? அப்பனே! அப்போது அதிகப் பிரயாசையைக் கொடுக்குமல்லவா? ஆகையாற் சமுத்திரம் புரளாம லிருக்குந் தடையைப்போல் நானிவ்விடத்திலே தடுத்துக்கொண் டிருக்கின்றேன். இவையன்றியும், இன்னமொன்று சொல்லுகிறேன்; நானிவ்விடத்தி லேதோ சில சவுக்கிய மடைந்திருக்கிறே னென்றும் யுத்தஞ் செய்யப் பயந்து ஒதுங்கி யிருக்கிறேனென்றும், எண்ணவேண்டாம். ஹரி! ஹரி! இவ்விடத்தில் எனக்கு அநேக வருத்தங்கள் நேரிடவும், உடனுக்குடனே அவைகள் நிவாரணமாக வும், பாம்பின் வாய்ப்பட்ட தேரையைப் போலப் பரதவித்துக் கொண் டிருக்கின்றேன். இத்தியாதி வருத்தத்துடன் இவ்விடத் தில் இருப்பானே னென்று கேட்பாயானால், நீ யென்னை வரமாகக் கேட்டுக்கொண்ட வண்ணஞ் சத்துருவாகிய தருமராஜனைச் சமயம் பார்த்துப் பிடித்து வரவேண்டுமென்று சகல சிறுமையும் அநுபவித் துக்கொண்டு இவ்விடத்திலிருக்கிறேன். மேலும் நான் அவ்விடத் தில் வந்தாலும் என்ன பிரயோசனம்? சிருஷ்டி கர்த்தாவா கிய பிரமதேவன் நமக்குப் படைத்துணையாக வந்து நின்றாலும், விதி யின் வழியே நமது வினையினெறி முடியுமல்லாமல், வேறுக கடப்ப தொன்றில்லை. அப்படியிருக்க, சிந்து தேசத்திறைவன் அர்ச்சுனன் கையிலிறக்கும்படி விதி நேரிட்டிருக்குமாகில் அதை விலக்குவதற்கு உன்னாலு மென்னாலுங் கூடுமோ? இன்னு மற்றொருவராலுந் தடுக்க நாடுமோ உத்தமனே! ஆதலாலுன்னுடைய கருத்தும், சாமார்த்திய மும், திடதயிரிய வயிராக்கிய உறுதியுங் கெடாமல் ஓரே நிலையாக நின்று, உன்னாற்கூடிய வரையிலும் யுத்தஞ் செய்து ஒரு கை பார்;

போ; ஓ உரகேதனனே! அப்பால் வினைச் செயலெப்படியோ பார்ப்போம்'' என்றுரைத்தார். அவராரெனில் நல்ல கான்கு வேதத்தையும், வில் வாங்கு வேகத்தையும் குற்றமற கற்ற வெற்றியையுடைய துரோணாச்சாரியர்.

அருச்சுனனுக்குச் சக்கர ரக்ஷகராய்ச்சென்ற உத்தமோசா, உதார்மன் இவர்களுக்குந் துரியோதனனுக்கும் யுத்தம்

இப்பால் ஆசானுரைத்த வசனத்தைக் கேட்டுப் பூசாவிதியுடன் தாசானு தாசனுகப் பணிந்து வாய் பேசாமல் ராஜாதிராஜன் திரும்பி வாசாமகோசரமாய் வழியில் வருகிறபோது, அர்ச்சுனனுடன் கூட வந்த சக்கர ரக்ஷகராகிய உத்தமோசா, உதார்மன் என்னுமிரு வரும் பக்கத்திற் பரிசவேதியைப் போலப் பாரிச வேதைகளில் லாமல் தங்கள் தங்கள் தேரைச் செலுத்திக்கொண்டு வருங் காலையில், அர்ச்சுனனுடைய ரதம் முந்திப்போய் விட்டது. தாங்களிரு வரும் அரை நாழிகை வழிதூரம் பிந்திப்போய், தங்களெஜமானனை விஜயனிடத்திற் சேர வேண்டுமென்னும் விருப்பத்துடன் வாயு வேக மனோவேகமாய்த் தேர் நடத்தி, பிரதாப வில்லை டங்காரம் பண்ணி, காயும்படியாகிய வாயுக்கணை, தேயுக்கணை முதலியவைகளைச் சொரிந்து, காண்டவ வன தகனக் கினிபோல் மூண்டெரியுங் கோபமுடையவர்களாய், தங்களிரண்டு தேர்களின் சக்கரங்கள் ஓடிய தாரிகளெல்லாஞ் சேறும் நீரும் பீறிட்டு ரத்த ஆறுகளோடும்படி ராமபாணம் போல வராகின்றார்கள். அவர் களைத் துரியோதன மகாராஜன் கண்டு பெருமைகொண்ட வில்லை வளைத்து, நாணியிறுக்கி, மீசை முறுக்கி அவர்களைப் பார்த்து, உறுக்கி, தலையை யசைத்துப் பாணமுகைத்தான். அப்போது (வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு வற்றலகப்பட்டது) என் பதுபோல் அவ்விருவருமவனை யெதிர்த்து வளைத்து இரைந்து போர் புரிந்தார்கள். இந்தப்பிரகாரம் உத்தமோசாவும், உதார்மனும் துரியோதனராஜனோடு யுத்தஞ் செய்யும்போது, வணங்காமுடி பெற்ற மன்னனவன். அவர்கள் தொடுத்த அஸ்திரசஸ்திரங்களை யெல்லாம் அறுத்துக் குவித்து, அவர்களெதிர்வந்த தேர், குதிரை, சாரதி முதலிய யாவுங் கெட்டழியும்படியாய் நிலத்திற் படுத்தி, அவர்களுடைய தேகத்திலுஞ் சில கணைகளைச் சேர்த்துத் தொடுத்தான். அப்போதவ்விருவரும் பூமியிற் பாய்ந்து, ஏழு கட்டைகள்

கட்டிய பாரிய கதையைக் கைக்கொண்டு, கந்தியாவட்டை மாலை யணிந்த திணிந்த தோளினையுடைய துரியோதனனேறிய தேர், கொடி, குடை, குற்றுக்கால், சக்கரங்கள், சாரதி, குதிரை முதலிய யாவுந் தரையுடன் தரையாகும்படி ஓடினர்கள். அதனைக் கொடுங் கோளுடைய துரியோதன மகாராஜன் மிகவுங் கூன்வளைந்து, தேதோட்டம்போற் காலோட்டங் கொண் டோடினன். அப்படி யோடும்படியாகிய ராஜனை இவ்விருவருங் கண்டு குலுங்க நகைத்து, இப்பாற் றிரும்பி, அத்துரியமேறி வந்த சேனைகளை யெல்லாம் அலமலங்கச் செய்து, தாங்கள் வரும் வழியிலெதிர்ப்பட்ட வயவீர ரிருவரை இருவரு மெதிர்த்துப் போர்விளைத்து, அவர்கள் கைக்கொண்ட வில்லை யொடித்து, அவர்களங்கத்தைப் பங்கப்படுத்தி முடித்து, அவர்களேறி வந்த இரண்டு தேரிலுந் தாங்களேறிக் கொண்டு, இருள் நீங்கப் பிரகாசித்தெழுஞ் சூரியனைப்போல் காஞ் பக்கமுந் தகித்துக் காய்ந்து ஆர்ந்த அறிவினையுடைய அர்ச்சுனன் பக்கத்திற்போய்ச் சேர்ந்து, வழியிற் பிரிந்தது முதல் வயம்பெற்று வந்தது வரைக்கு முரைத்து மருங்கிற் பொருந்தி யிருந்தார்கள். இவர்களிடத்தில் அடிபட்டோடிய துரியோதன மகாராஜன் கால் நடையாக வருவதை மத்திர தேசாதிபதியாகிய சல்லியன் கண்டு, கதிர்மணிக் கிரணத்தேரைக் கொடுத்தான். அந்த ரதத்தில் அரவக் கொடிக் கதிபனாகிய அரசனேறிக்கொண்டு, மைத்துன னென்னுஞ் சிந்தாதசத் தலைவனிருக்கு மிடத்தை நாடிச் சென்றான்.

கர்ணனுக்கும் பீமனுக்கும் நடந்த கடும்போரில் துரியோதனன் சகோதரரில் இருபதின்மர் வதை

இவ்விதப்படி யிருக்க, முன்னே பீமனிடத்தில் யுத்தஞ்செய்து தேர் முதலிய யாவுமிழந்து இளைத்தோடிய கர்ணனவன் கூர்மை தங்கிய நகமோங்கிய பெரும்புலி யெனச்சீறி, வேறொரு தேரிலேறி, அநேக வண்டுகள் பாடு மாலை யணிந்த புயமீறி, பீமசேனனுடைய சிலையுற்ற பாணங்களா லழியும் நிலைபெற்ற தங்கள் சேனைகளின் பேரிற் பெருங் கிருபை யுடையவனுய் நேரிட்டவர் வீறிட்டுப் போகும்படி ஜெயித்துவரா நின்ற கோபாக்கினிக் கணைகளை யுடைய பீமசேனனுக் கெதிரிற் சென்று, செவ்வரக்கைப்போற் சிவந்த கண்களை விழித்து உருட்டிக்காட்டி, ஒப்பில்லாத முப்பது கூர்ங்கணைகளைப் பூட்டி, அவன்பேரில் மாட்டி, அவனைப்

பேய்போலாட்டி, ஆர்த் ததட்டினன். அப்படி யதட்டிய கர்ணனை பீமசேனன் தனதொரு கைவிரலாற் கோட்டி, அவனியிலுள்ளோர் யாவரும் புகழும்படியாய் அவன் கைப்பிடித்த வில்லையும், அவனேறிவந்த தேரையும், அத்தேரை விடுக்கும், பாகனையும், அப்பாகன் செலுத்துங் குதிரைகளையும் வாட்டி மாட்டினன். அப்போது கூக்குரலிட்டெழுந்த கர்ணனவன் நிலத்தினின்று பலத்த வேலாயுதத்தை யெடுத்து, வீராதி வீர வேந்தரெல்லோருந் திடுக்கிடும்படியாய் பீமன்மே லெறிந்தான். அந்தக் கர்ணன் வீசிய வேலாயுதமானது கோலாகலமாய் வருந்திறத்தை வாயுகுமாரன் கண்டு அது எட்டுத் துண்டாகும்படி சூலாயுதம் விடுத்து, உடனே வேறொரு தேவாஸ்திர மொன்று தொடுத்து, இதன் மத்தியில் மறுபடியுங் கர்ணனேறி வந்த தேர் குதிரை முதலிய யாவுமடித்து, மேலுமொரு கூர்வாளி தொடுத்துத் திரிபுண்டர மணிந்த நெற்றியிற் பெரும்புண்டர விடுத்தான். அதனாற் குபீரென ரத்தவெள்ளம் பெருகியோடவும், பரிசுத்தமுகம் வியர்த்து வாடவும், அக்கர்ணன் முதுகுகாட்டி யோடவுங் கண்ட கதாயுதனுகிய பீமசேனன் கக்கடக் கக்கடக்குலுங்கிக் கலீரென நகைத்து, அவனோடு வந்த மற்றப்பேர்களு மெத்த மனஞ்சலித்தாட விரட்டி அகைத்துத் துரத்தினன். அக்கால் பீமசேனனுக் கிளைத்துப் பின்னிட்டோடி வராநின்ற மிகுகொடையாளனுகிய கர்ணனை வேந்தனுகிய துரியோதனன் கண்டு சகிக்காமல், மனஸ்தாபமும் மிகுந்த கோபமுங் கொண்டு, வில்லாண்மை முதலிய வல்லாண்மையுடைய துற்செயனென்னுந் தம்பியை அழைத்து, "அடா தம்பி! நிர்மூடனுகிய பீமனுற் கர்ணமகாராஜன் இளைத்தோடி வருவதைப் பார்த்தாயா? ஐயோ! நீயாகிலும்போய் அந்தப் பீமனை நாசப்படுத்திவரலாகாதா?" என்று உசுப்பேற்றி யனுப்பினன். தமையன் சொற்படியே துற்செயனென்னுந் தம்பியானவன் சென்று பீமனுக்கெதிரில் நின்று, அனந்த விதமாய் வெற்றி கொள்ளும் போர்புரிந்தான். அப்போது பீமசேனனவன் பாம்பைக்கண்ட கருடனைப்போற் பகைத்து, ஒரு பெருங் காலாக்கினிக் கணையைத் தொடுத்து, வந்தவரைக்குங் கணக்காக்கு வதே தமது மகிமை யென்று அவனை மறுபடியுந் திரும்பிப்போக விடாமல் மடித்தான்.

அவனிறந்த செய்கையைக் கர்ணன்கண்டு, காவலனுடன் சொன்னன். இருவரு மனநொந்தனர். கர்ணன் துரியோதனனைத் தேற்றி, "இதோ பாரும் ஒரு நொடிப்போதில் அந்தப் பீமனைத் தேரு

டன் சாய்த்து வருகிறேன்'' னென்று சபதங்கூறி, மறுபடியுமொரு தேர்மிசை யேறி, வெற்பென்றிரைக்கும் வில்லை வளைத்து, பற்பம் படப் பல்லைக் கடித்து, புகைந்தெழுந்த விஷாக்கினி பொருந்திய கடைக் கண்களிற் கடுங்கோபங் காட்டி, இவற்றால் உன்னுயிரழிய வேண்டு மென்று பதினைன்கு பாணங்களை யெய்ய, இனி நீ தப்பித் துக் கொள்ளும் விதத்தைத் தேடடா வென்று சில சொற்களினால் வைதான். அப்போது பீமசேனன் அந்தக் கர்ணன் பேச்சைக் கேட்டுப் பெருமூச்சுவிட்டு, மிகுந்த பராக்கிரமத்துடன் முனிந்து, பங்கஜ நாயகன் மைந்தனென்னும் கர்ணன்பேரிற் கமலாஸ்திரம் மூன்று விடுத்து, அவன்றொடுத்த பதினைன்கு பாணங்களையுங் கொய்து கெடுத்து, உரமாகிய மார்பிலுந் துளைத்து வருத்தினான். அப்போது சுரத்திற்குப் புளிதுணை யென்பதுபோல் உரத்திற் பாணமுறுத்தி வருத்த, உடல் துடிதுடித்து, உயிர்நிலை குலைந்து, உதடுகாய்ந்து, உறுதியுந் தேய்ந்து ஓடுங்கினான் கர்ணன். அந் நிலையை அவன் தேர்ச்சாரதி யாய்ந்து, விசாலமாகிய ரதத்தைத் திருப்பிக்கொண்டு வருவதை ராஜாதி ராஜனைக்கி, கர்ணனை யுபசரித்துத் தேற்றி, கையோடு கையறைந்து கூவி, தன் பக்கத்தி நின்ற துன்முகனென்னுந் தம்பியைத் தட்டிக் கொடுத்து, ''பீம சேனனை மறித்துச் சற்றுநேரம் வழிவிடாமற் போராடிக்கொண் டிருப்பாயாகில், இதோ கர்ணமகாராஜன் ஆயாச மாற்றிக்கொண்டு வருவானென்'' றனுப்பினான். அவன் சொற்படியே துன்முகனவன் சென்று எதிர் நின்று வில்லை யிழுத்து வளைத்தான். வெற்றியை யுடைய பீமனவன் இவனைக்கண்டு முல்லைக்கணை யொன்றை யெடுத்து முடுக்கினான். அக்காலையில் அத்துன்முகன் தலையானது பல்லையிளித்துக்கொண்டு ஆகாயத்திலெழுந்து போவதைக் கர்ண னுந் துரியோதனனும் பார்த்து நமது துன்முகன் தலையா வென்று சோர்ந்து வீழ்ந்தெழுந்தனர். மன்னர் மன்னனவன் மறுபடியுந் துன்மருடன், துன்மதன், விஜயன், ஜெயன்மாலி என்னுந் தம்பிமா ரைவரை வாயுகுமாரன் பேரிலனுப்பினான். அவர்களைப் பீமசேனன் கண்டு மனவருத்த மில்லாமல் அவர்களுடன் யுத்தஞ் செய் வதற்கும் ஆயாசப் படாமல், முனைந்து சினந்து நின்று, ''ஓ தம்பி மார்களே! நம்மவர்கள் அதோ முன்னும் பின்னும் போய்க் கொண்டிருக்கிறார்கள். நீங்களும் முந்திப் போங்கள்'' என்று மந்திரித் துக் கடவுளாஸ்திரக்கணைகளை யுந்தி, அவ்வைவரையும் ஏகதே மாக இம்மண்ணுட்டின் வாழ்வை நீக்கி விண்ணுட்டுக் கனுப்பினான்.

அந்தப் பீமசேனனுல் மன்னிளங் தம்பிமார்கள் ஐவர் மாய்ந்ததை ஆதவன் திருக்குமாரனுகிய அதரித்திரன் கேட்டு, கைபழகிய கார் முகம் வளைத்து நாணிமாட்டி., ஜெயமணி பூட்டிக் குணத்தொனி காட்டி, பொற்பிரகாசமுடைய தேரைப் பீமனுக் கெதிரில் செலுத் திப் பிரதாபம் பேசி நின்ருன். அப்படி நின்ற கச்சைக் கொடி யோனைக் கழனிகளிடத்து வரான்மீன்களுலவும் நீர்வள நாட்டுக் கதிபதி யென்னும் பாண்டு பூபதியின் பாலனுகிய காலகாலன் கழ லிணைமாறுத பீமசேனன் கண்டு, பெரும் புலிபோற் சீறி, " ஐயோ ! அப்பா ! இப்படியும் போர் புரிவாருண்டோ ? இதுவுமொரு வீரமா ?" என்று பற்பலவாகிய உண்மை வார்த்தைகளைப் பேசி, சீ ! சீ ! என்றேசி, மாசிலா வில்லையிறுக்கி, வாய்மடித் துறுக்கிக் கூசாமற் போர் கொடுத்தான்.

இவ்விதமாக யிருவரும் ஒருவரை யொருவர் வெல்லவேண்டும், அல்லது கொல்லவேண்டும், என்று பல்லவங்களை யுற்றினவர்களாய், வல்லவர்களுஞ் சொல்லப் படாத வயிரத்துடன் அமராடி வருவ தானுர்கள். அக்காலையில் இசைபெற்ற துரியோதனனுடைய கால் வகைச் சேனைகளுஞ் சேர்ந்து, பேரொளி போன்ற பீமசேன னென் னுந் தேராளியைச் சூழ்ந்து வீராவேசத்துடன் போர்கொடுக்க, அப்போது அந்த பீமசேனனுடைய கொடுமரத்தினின்றுங் கடு கடுத்து விடுஞ்சரத்தால் மிகுதியாகிய படைகளெல்லாங் குறைத்து, மெலித்து, கலித்து, உயிரழித்து, கணக்கில்லாத பிணக்குவியலாகிக் கால்மாடு தலைமாடாய்விழ அவர்களுடைய சரீரத்தினின்றெழும் உதிரவெள்ள மானது சமுத்திரத்துடன் பகைத் தெழுந்ததைப் போற் புரண்டோடும்படி யாயது. அப்படி யெவரையும் முன் பின் பாராமல் தொம்சம் பண்ணிக்கொண்டு வருங்கடோற்கஜன் தந்தையுங் கர்ணனும் எதிர்த்து உயர்ந்த வில்லை பிசிந்து, ஆகர்ணபரியந்தம் அதிரவிழுத்து முனையாகிய வாளிகளை முகிற்கூட்டம் பொழிவது போற் சொரிந்து, ஒருவரை யொருவர் பழித்து, ஒருவர்விட்ட பாணங்களை யொருவரழித்து, ஒருவருடைய தேரை ஒருவர் சுழற்றி, ஒருவர் சாரதியை யொருவரடித்து ஒருவர் குதிரைகளை யொருவ ரொழித்து, இளையாமல், சளையாமல், களையாமனின்று சமர்செய்யும் வேளையில், ஆகாயம் பூமி முதலியவெங்கும் பாண மய மாய்க் குவிந்து நிறைந்து போயிற்று இரத்தங்க ளுறைந்து காய்ந் தது. இத்தப் பிரகாரஞ் செய்த யுத்தத் திறங்களை இவ்வித மென்று யார்சொல்ல வல்லவர்கள் ? ஐயா ஜனமேஜய மகாராஜனே ! சுத்த

சாமர்த்திய ராகிய இருவரும் நெடுநேரம் வரையிலுஞ் சோராமற் போர்புரிந்து, ஊழ்வினை வசத்தால் விபாகரன் மைந்தனுகிய கர்ண னுனவன் வாயு மைந்தனுகிய பீமசேனனுல் அடிப்பட்டு உடல் வெதும்பி விழுந்து, தோழிந்து இழிந்து ஓடினுன். இப்படி யவதிப் பட்டோடிவரும் ஆதித்த குலத்தோன்றலை அம்புலிகுலத் தோன்ற லாகிய அரவக்கொடியோன் பார்த்து முகம்வேர்த்து, அக்கர்ணனை இறுகச் சேர்த்தணைத்து, " அண்ணு! நன்முய்ச் சமர்புரிந்து வந்தீர்! சற்றிருந் தினைப்பாறும்!" என்று சொல்லினவனுய், மன்னர் முதலிய அன்னியர் பழிப்பார்களே, நகைப்பார்களே யென்னுந் தாழ்வு தன்னுள்ளத்தில் எள்ளத்தனையும் நினைக்காதவனுய், மீண்டும் அம்மன்னர் மன்னன் தனக்கெதிர் நின்ற சித்திர விசித்திரன், சித்தி ராக்கதன், சித்திரசாருகன், சித்திரச்சரன், சித்திராயுதன், சித்திர வன்மன், சித்திரதான் என்னும் தம்பிமா ரேழுபேரை இடும்பி காயகனுகிய கடம்பனை அடக்கும்படி யேவினுன். உடனே யாவரு மேவி, யுத்தத்திறங்களாற் கூவி அடா பாவி யென்று கோபித் தெதிர்த்து, எட்டுத் திக்கும் பட்டுதிரும்படி மட்டில்லாப் போர் புரிந்து, கூரம்புகள் தொட்டு, அந்தப் பீமன்விட்ட கணைகளாற் பட் டுயிர்விட்டு, விளைபயிர்ச்சாவிபோல் ஒரேமுகமாக ஆவிபோயினர்கள்.

இப்படி துரியோதன மகாராஜன் ஏழு பேர் தம்பிகளை உய்த்த தும், அவர்கள் வீராவேசத்துடன் போய்ப் பீமனை மொய்த்ததும், அவர்களைக் கண்டு அந்தப் பீமன் நகைத்ததும், இவர்கள் கணைமாரி பொழிந்து பதைத்ததும், அவனுஞ் சரமாரி பொழிந்து அவர்களைத் தகைத்ததும், கோமாரிகொண்ட கொட்டியம்போல அவர்கள் செத்ததும், இவைகளை யெல்லாம் பீமனுலடிபட்டுப் பாதசாரியா யோடி இளைப்பாரிய கர்ணனவன் கேட்டு, அண்டமுகடதிர ஆர்த்து, குடுகுடு வென்றோடி வந்து, சுப்ரமணியக் கடவுளானவர் வேலை மேற்றொடுத்த வேலாயுதம்போற் பீமசேனன் தோள் முறி யும்படியாய் ஒரு தோமராயுதத்தை வீசினுன். அத்தத் தோமர மானது சந்திர சூரியரை விழுங்குவதற்கெழுந்துவந்த ஆலகால மென்னுங் காலகோடி விஷமுடைய ராகு கேதுக்கள் உருக்கொண் டெழுந்து வருவதைப்போல் பீமனை நாடியோடி வரும்போது, சமயம் வாய்ந்தபொழுது தேடிய பொருளைச் சிக்கெனப்படித்தாமற் செலவழிக்குந் தீரைப்போற் பகாசுர வயிரியாகிய பீமசேனன் தேவதார்ச்சனை செய்து சிந்தித்துப்பாதித்து அநுசந்தித்து விட்ட கடல் மடையனைய படைவகுப்புடைக்கும் பாணத்தினுல், கர்ணன்

விட்ட தோமரஞ் சாமரம்போல் துகளாயொடிந் துதிர்ந்து, அவ னேறிவந்த இரதமுந் தகர்ந்து, விண்ணிலும், மண்ணிலும் வேடிக்கை பார்ப்பவர் கண்ணிலும் படிந்தழிந்தது. பின்பு தானேறிந்த தோமரா யுதமுந் தானேறிவந்த ரதமுந் துகளாயழிந்து போனதைக் கண்ட சூரிய குமாரன் வேறு தேரேறி, சுவேத சூத்திரம், உபயசாமரம், அச்சமகற்றும் கச்சைக்கொடி, வெற்றிமாலை, வீரபட்டம், வச்சிரக் கவசம், முரசு, பேரி, காகளம், கொம்பு, கர்ணு, தாரை, பூரி வீர சின்னம் இவை முதலிய ஆரபாரத்துடன் பாரிய வில்லேத்தாங்கிக் காளகூடம்போலுங் கறுத்த மேகமானது மின்னலிடி முழக்கத்து டன் விடாமழை பொழியுந் தன்மைபோல் அனேக விசிகங்களைத் தொடுத்து, பீமசேனனுடைய கரசரணுதிகளை ஓரே பற்றுகப்பற் றிக்கொள்ளப் பிரயோகித்த தல்லாமல், அவனுடைய தேர், குதிரை, சாரதி இவை முதலியவைகளையும் அசைய வொட்டாமல் ஸ்தம் பிக்கும்படி செய்தான். அத்தருணத்தில் பீமசேனன் சற்றேதிக்கு முக்கிட்டு, மீட்டுந் தீரங் குன்றாமல் தேறித் தெளிந்து கர்ணன் தொடுத்த கணைமழைகளைக் களைந்து, தன் தேரைச் செலுத்தி யெதிர்த்து, மறுபடி யிருவரு மலைவதானார்கள். அப்போது இருவ ருடைய தேரும் இடசாரி வலசாரியாய்க் குயவன் திகிரிபோற் கூசாமற்சுழல, இரண்டு மேகம் எழுந்திடித்த பேரொலிக்கு நேரொலியாக வில்லை வணக்கிக் குணத்தொனி செய்து கட லோசை யடங்கும்படியாய்ப் போர் வீரத்திரங்களைப்பேசி, நேருக்கு நேராகப் பொழியும் பாணங்களால் நில முதலிய தலமெல்லாங் கடாக்கினியைக் கக்கிக்கொண்டெரியத் தக்கதாய், இரண்டு காழிகை வரைக்கும் இமைகொட்டாமல், சிறுமை தட்டாமல், பகைவருக் கெட்டாமற் சமர்புரிந்தார்கள். இவ்வதிசயங்களை மதித்திருந்த புல வரி யாவரும் அற்புதமற்புத மென்றார்கள்.

இப்பாற் கர்ணராஜன் கடுமைகொண்டு, "என்னடாவிது விந் தையா யிருக்கிறது? நமக்கீடானவனு இவன்?" என்று வெறுத்து வெகுளிமேற்கொண்டு, பீமசேனனுடைய தோளின்மேல் ஐம்பதும், தேரின்மீது இருபதும் குதிரைகளின்பேரில் நான்கும் பற்றிய வில் லின்பேரிற் பத்தும், சுற்றிய கொடி யாடையின்மே லெட்டும், ஆகட்டுமென்று கருவி, கட்டில்லாப் பாணங்களைக் கைக்கெட்டிய மட்டும் விட்டான். அப்போது பீமசேனனவன் துஷ்ட மிருகத் தைச் சிட்டை செய்யுஞ் சிங்கத்தைப்போல் திடங்கொண்டு, எப்படி யப்பா வென்று சிந்தனைக் கிடஞ் செய்யாமல் தானெருவனல் அடி

பட்டானென்னும் நிந்தனைக்கிடம்வையாமல் அங்கர்கோன் தொடுத்த புங்கவங்கள் யாவும் பங்கப்பட்டு மங்கிப்போகும்படியாய் அச்சிங்கக் கொடிக் கதிபனனவன் சேதித்துப் போட்டுச் சங்கையில்லாமல் தலையசைத்து நமடுகடித்து, நாக்கை மடித்து, நானவித ரோஷமாகிய வசனங்களைப் படித்துப் படபடத்து, துடிதுடித்து, இன்னல் விளைக்கும் மின்னலுக் கொப்பாகிய அன்னமுயர்த்தோன் கணைகள் முதலிய ஐம்பது பாணங்களை யெடுத்து, கர்ணன் மார்பு கலங்கவிடுத்தான். அவ்வலம்பது பாணங்களுஞ் சம்புவின் நுதற்கனல் போல் வெளிப்படத்தலைப்பட்டு, அங்கர்கோமான் மார்பில் தாக்கியதுபோது, அயர்ந்து பயந்து திரத்துடன் தேறிய அக்கர்ண மகாராஜன் பீமனை வியந்து புகழ்ந்து மகிழ்ந்தான். அம்மெப்படி யென்னில் மற்போர் முதலிய கதாயுதத்திற்கும், வலுமைக்கும், இவனையல்லாது வல்லவ ரொருவரு மில்லையென்னும் வாக்கியம், இவ்வுலகெல்லாம் வசனித்துக்கொண்டிருப்பதுமுண்டு; நானுங்கேட்டதுண்டு; பார்த்ததுண்டு. அப்படியிருக்க இந்த விற்போருக்கும் இவனைவிட வேறொருவரு மில்லையென்று சொல்லும்படியா யிருக்கின்றனே! ஆ! ஆ! இவன் சமர்த்தனே'' என்று சொற்பல உரைத்தான். அதைக்கேட்டு மற்புய வீரராகிய பற்பல வேந்தரும், சிற்சில மாந்தரும், ஆச்சரியப்பட்டார்கள். 'அப்பால் மலையொத்த புயத்தினையுடைய மாற்சரியக் கர்ணனவன் பீமசேனனுட னெதிர்த்துப் போர்புரிவதற்கு ஈடில்லாத வலுவய், மேலு மேலும் பீமன் தொடுக்கும் பாணங்களினால் தேகங் கிழிந்து பிளப்புண்டு, மல்லவிமேவு மார்புடைந்து, சொல்வலியாவுஞ் சோர்வடைந்து, தடந்தேர், குதிரை, சாரதி வில், முதலிய சகலமுமிழந்து, தாரணிந்த புயமு மெலிந்து, நீரணிந்த முகமும் வதங்கிக் காரணமானது இன்னதென்று கண்டுணராமல் வாரண மானது முதலிலவாய்ப்பட்டதுபோல் வாடிநின்று, இவனுக் கிளைத்து எத்தனை தரமோடுவதென்று மானத்துடன் மனந்தேறி, மீண்டு மெதிர்சென்று தானத்தடமாகிய பூமித்தேரினின்று, வேறு வில் லெடுத்து நிறுத்தி வளைத்து, பாறுகளடித்த களத்தில் பீமனைத் தடுத்து, மூர்த்தண்யமாகிய வெங்கணைகளைத் தொடுத்து, சீற்ற மாயஸ்திரந் திறம்படவிடுத் தமர்கொடுத்து வருவதானுன். அப்போது ராஜ கெம்பீரனுகிய துரியோதனராஜன் கண்டு மிகுசீகாரபங் கொண்டோடி, வாகுவலயமணிந்த திணிந்த புயமிரண்டும் வாடி, துணிந்த தம்பிமார்களை நாடி, அவர்களை அனேகவிதமாய்க் கொண்டாடி "ஓ! ஓ! தம்பிமார்களே! காரியத் தாழ்ச்சி வந்தது. நீங்க

ளேழுபேருங்கூடி, இத்தக்ஷணத்தில் கர்ணனுக்குச் சகாயமாயோடி, காற்றின் மகனைச்சாடி, கண்ணுக்குத் தெரியாமற் கணைகளால் மூடி, வெற்றிப் பாடல் பாடி, அவன் சமரை வேறு வேறாக்கி, அவன் படையை நீறு நீறாக்கி, அவனுபிரைத் தாறுமாறாக்கி, அவனுடலைக் கூறுகூறாக்கி, ச் சதைத்து, சிதைத்து, உதைத்து, வதைத்து சீக்கிரத்திற் பிராணனை வாங்கி வாருங்கள்" என்று அனுப்பினன். அம்மாத்திரத்தில் அந்தத் தமையன் மொழி தவறாத தம்பிமார்களாகிய அச்சத்துரு ஜெயன், சத்துரஞ்சயன், சுதேகன், மாமதனன், கற்றுரு வன், சித்திரபானு விகர்ணன், என்னும்பேர்பெற்ற ஏழு பேரும் பீமன்மேல் அமர்செய்யச் சென்று, வெற்றிமாலை பூண்ட தங்கள் விதம்விதமாகிய வில்லை வளைத்து, பற்றி யெறியாகின்ற பாவகன் கணைகளைப் பெரு மழைபோற்பொழிய நிறைத்து, புழுதி யெழும்ப இரைத்து, பூமிரம்ப மறைத்துப்பாண்டுபுத்திரனுடலைத்துளைத்துப் போர்த்திறங் காட்டினார்கள். அதுகாலையில் வாயுகுமாரன் மகிழ்ந்து வந்த தம்பிமார்களைப் புகழ்ந்து, வரிவில்லை வளைத்து அகமகிழ்ந்து, சில வாக்கியஞ் சொல்லி யிகழ்ந்து, அவர்கள் விடுத்த, அக்கினிக் கணைகளுக்கு மாறுக வருணக் கணைகளைமாட்டி, வந்த கணைகளின் தீட்சண்யங்களை யோட்டி, ஆறு வாயு வாஸ்திரங்களையுந்தி அவர்க ளூர்ந்துவந்த தேர்களைச் சிந்தி, குதிரைகளை மாய்த்து, சாரதி முதலிய கொடிகளைச் சாய்த்து, சிகர முடிகளைப்போக்கி, கவசங் களைப் பொடியாக்கி, வில்லை முறித்து வீக்கி, விழுதாக்குறுந்தடி யாக்கி, மாறு வேறில்லாமல் வீறிய பீமசேனன் மிகவுந்தேறிய, ஆறு பர்வதாஸ்திரங்களை யெடுத்து அபிமந்திரித்து விடுத்து, வட்டமா யெதிர்த்துவந்த ஏழுபேர்களில் இட்டமாகிய விகர்ணனை மாத்திரம் வீக்கி, மற்ற ஆறு பேரும் நட்டமாகும்படியாய்த் தாக்கி, பட்டமாகிய முடிபோக்கிச் சட்டமாகப் போகாதுபவஞ் செய்யுங்களென்று திட்டமாகத் தேவலோகக் குடியாக்கினன்.

பீமசேனன் தன்னெடு பொரவந்த விகர்ணனை இரக்கத்தினாலே தடுக்க, அவன் அறத்தாறன் றென்றுகூறி எதிர்த்திறத்தல்

இவ்விதம் கஷ்டமாகப் போர் செய்த தீரபட்டமுடைய தண் டாயுதனை வீரக்கழற்கால் விகர்ணன் பார்த்து, தன்னுடன்கூட வந்த தமையன்மா ராறுபேரும் பாண்டு மகன் கணையால் மாண்டு போன தற்கு வெகுண்டு, தீரங்கொண்டு சிலையை வளைத்துக் கலகலென

நகைத்து, தெழித்துப் பகைத்து, மதித்துக் குதித்து, வேண்டிய மட்டும் பாணங்களை எடுத்து விடுத்து, அப்பீமசேனனை யடித்துக் கடிகடித்து வந்தான். அக்காட்சியைப் பீமசேனன் பார்த்து மிகுந்த இரக்கமுடையவனாய், "அம்புவிமரபிலுதித்த என் தம்பியாகிய விகர்னனே! நான் சொல்வதைக் கேள்.

"சுடுவுரைக்கனலன்ன துச்சாதனன், வடுவுரைக்கவு மன்னுரைமன்றிடை
நடுவுரைக்கு நன்னுவுடையாயுனக், கொடுவுரைக்கணை யேவினுங் கொல்லுமோ
பாரறிந்து பழிக்குட்படாததின், னேரறிந்தும் பொரநெஞ்சியையுமோ
போரறிந்து பொருகவென்றனெடுஞ், சீரறிந்தவர் செய்ந்நன்றி கொல்வரோ?"

சகல ராஜர்களும், சகல சேதசர்களும், நெருங்கி யிருந்த ராஜ சபையினிடத்தில் உகாத காலாக்கினியை யொத்த துச்சாதன னுனவன் எங்களை யிகழ்ந்து சுடச்சுட வடுப்படும் வார்த்தைகளை வாய்க்கு நேர்ந்த வண்ணஞ் சொல்லவும்: அந்தச் சபையினிறைந்த உரிமையார் பெரியோர் முதலாகிய மன்னர் மண்டலிகரெலாம் மறு வார்த்தை சொல்ல மாட்டாமல் வாயை மெல்லவும், இருடிய ரெல் லாரும் எங்கள் முகத்தை நோக்கி இரங்கிப் பேசவும், யாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவும், எங்களுக்கு ஒருதவியு மில்லா மல் முகம் வியர்க்கவும், இவ்வாறு உயிரொழியும்படியான நிலையில் உள்ளம் வெதும்பி யிருக்குஞ் சமயத்தில், (வார்த்தை பதினயிரத் தொருவன்) என்னுந் தன்மை குறையாமல ஆர்த்தெழுந்து கொடுங் கோல் மன்னனென்னும் உன்தமையன் முதலிய ஒருவருக்கும் பயப் படாமல், நடுவு நிலைமையை எடுத்துச் சொல்லிய நல்ல நாவை யுடையவன் நீயாயிருக்க, நானுன்னைப் பகைத்தாலும், உரம்பெற்ற கொடுங்கணைகளை விடுத்தாலும், அந்தப் பாணங்களினுடைய அதி தீவவதையானது அதர்மமாக உன்னைக் கொல்லுமோ! தர்மமாக உனை வெல்லுமோ? சொல்லுந் தம்பீ! இவ்வுலகமுள்ள மட்டுக் கும் பேசிக்கொள்ளும்படியாய் நீடித்த பழியை வழியாகத் தேடிக் கொண்ட துஷ்ட சதுஷ்டர்களைப்போற் பழிக் குடன்படாத உன் னுடைய நேர்ப்பதிற் திருந்தும் இப்போது யுத்தஞ் செய்வதற்கு என்னெஞ்சு உடன்படுமோ? ஓ நன்னெஞ்சுடைய நல்ல தம்பி! இப்போது நீ எனக்குக் கோபம்வரும்படி பற்பல வாசகம்பேசி யுத்த மதிந்து யுத்தஞ்செய்யடா பீமாவென்று ஏசி, என்முன் னெதிர்த்து பிதிர்ந்து போதும்படியாய்ப் பாணப்பிரயோகஞ் செய்து, சண்டைக்கு வாவென் றழைக்கிறாயே! ஐயோ! நீயப்படி அறை கூவி யழைத்தபோதிலும், (ஒருநன்றி செய்தாரை யுள்ளத்தே

வைத்துப் பிழைதூறும் சான்றோர் பொறுப்பர்.) என்று சீரறிந்த மேலோ ருரைத்த நீதி வாக்கியத்தை அநுசரித்து நடத்தாமல், செய்ந்நன்றி குன்றிய தீயரைப்போல் நீ நரகடைவேனே? ஓ என் சிந்தைக் கிசைந்த இளைய செல்வமே! நானிப்போதொரு உறுதி வாக்கியஞ் சொல்லுகிறேன் கேள். முன்னர் மன்னர் சபையினில் உங்கள் நூறு பேரையுங் கொன்று துச்சாதனனுடைய உதிரத்தைக் கைகிறைய வாரிக் குடித்த பிற்பாடு தாகத்திற்கு ஜலமள்ளிக் குடிப்பே னென்று நான் சொன்ன சபதந் தப்பிப் பொய்யனாகி உல கம் நிந்திக்கப் பேரெடுத்தாலும் எடுப்பேனேயல்லது, உன்னுடனெ திர்த்து யுத்தஞ்செய்து என் சீர் கெடுக்க மாட்டேன். தம்பி விகர்ணா! உன்னை இப்பாராளச் செய்து என் கண்ணுற் பார்க்க வேண்டு மென்கிற பட்சங்கொண் டிருக்கிறேனல்லாமல், உன் பேர் மாளச் செய்து உன்னைப் போக்குவது அறமன்று. ஹரி! ஹரி! மஹாபாபம்! மஹாபாபம்! ஆதலால், நீ திரும்பிப் போவதே புண் ணியம். போ! போ!" என்றுஇப்படிப் பலவாறாக மிகுந்த தயையு டன் பீமசேனன் சொல்ல, விசாலமான வெற்றி மாலையணிந்த உத்தமதீர விகர்ணனவன் அவ்வசனங்களைக் காது கொடுத்துக் கேட்டுங் கேளாதவனைப்போலும் துஷ்டர்களோடும் பிறந்த கடனைத் தொலைக்க வெண்ணினவனாய், நவமணி பொருந்திய வில்லை நாணியி றுக்கி, திக்குகளனைத்து மெரியும்படியாய் அக்கினி முனைக் கணை களைத் தண்டதரன் பேரிற் கண்டா வருஷம்போ லுந்தினன்.

அந்தக் கணைகள் முந்திவருவதை விந்தமன்னபுயத்திலே னகிய பீமசேனன் கண்டு கொந்து, அந்தி வண்ணன் கணைகளினால் அவைகளைச்சிந்தி, விகர்ணனுக் கெதிர்வந்து, "அபபா விபீவகத்திற் பிறந்த விகர்ணா! குந்திக்கு முதற்புத்திரன் முதலிய நாம் ஆறு பேரும் இந்தத் தேசத்திலிருந்து செந்திருமார்ப னருளால் விந்தை யாகிய நற்பேறு பெறலாம். எங்களுடன் வந்துசேர்! இனி கடக்கப் போகிற புகழைப்பார்! தமையனாகிய என் சொல்லைக் காப்பாற்று! இப்போது கொண்ட கோபந்தீர்த்து என்னருகில் வந்து உட்காரு!" என்று பரிவுடனழைத்து "தம்பி! நான் உனக்கு உரிமைகூறி யிருக்க, அந்தப் பெருமையை வகிக்காமல் எனக்குச் சிறுமை யுண் டாகும்படி சுரிமுக பாணங்களைத் தொடுத்தாயே! என்னிளவலாகிய இன்பமே! என்பேரிலிஷ்டம் வைத்து, எனக்குப் பழிச்சொல் முதலிய கஷ்டம் வைக்காமல் திரும்பிப் போய்விடு" என்று வேண்டி வேண்டி வேண்டிய விதத்தில் இதஞ் சொல்லினன். அதற்கு

மானம்பூண்ட மதிவல்லோனுகிய விகர்ணனுனவன் வாயுகுமாரனைப் பார்த்து, "அண்ணு! தேவரீர் சொன்ன தெல்லாந் தேர்ந்த மொழியாயிருந்தாலும், என்னுடைய கர்மானுபவத்தால் நூறு பேருடன் பிறந்து, (இரும்புக்குப் படவேண்டிய சம்மட்டியானது நெருப்புக்கும் பட்டது) என்னு நீதிம்பால் எங்கள் தமையன் தேடிக் கொண்ட பழிபாவமெல்லாம் இத்தமிலாக முள்ளவரைக்கும் எங்கள் நூறுபேரையும் பீடிக்குமேயல்லது, ஒருவரை விட்டொருவரைத் தொடராது. மேலும் ஆவின் வாய்ப்பட்ட அறுகம்புற் சுமைபோல் என் சகோதரர் பலபேர் உம்மிடத்திலகப்பட்டு, ஆவியிழந்து அழிந்திறந்தார்கள். அதுவுமன்றி இப்போது நாங்களேழுபேர் வந்தோம். வெப்பமாகிய உமது கைக்கணையால் கொல்லோம். வந்த எழுவரில் அறுவர் ஆவியொழிந்திருக்க, நானொருவன் உயிர் கொண்டோடிப் பிழைப்பது உத்தமமோ? உத்தமமன்ன! யுத்த பூமியிற் போய்த் தம்பி தமையன்மாரைச் சாவக் கொடுத்துத் தான் மாத்திரம் தப்பித்துக்கொண்டு வந்தான் சண்டாளனென்று கண்டாருரைப்பது தருமமோ? எங்கள் ஜ்ஞஷ்ட தமையன் உங்களளவில் தேடிக் கொண்ட பழியில், கனிஷ்டர்களாகிய நாங்களனைவரும் மூழ்கிப் போயிருக்க, இன்னு மெங்கள் கால்வழிக்கு நீடுழி ஆழிபோற் பழி தேடிக்கொள்வது நியாயமோ? வாழி! வாழி! அண்ணு! உம்மா லெனக்கு இழிவாகிய ஒரு குறைவு வந்தென்னு முறைச்சொல் லவேண்டாம். சொன்ன சபதந் தப்பினுன் பீமசேனனென்று என் னுல் உமக்கொரு கறைச்சொல்லும் வேண்டாம். ஆசாபாசமாய் என் பேரில் உமக்கு விசுவாச மிருக்குமாகில், வார்சிலை வளைத்துப் பூசலை விளைத்து, என்னை காசப்படுத்துவதே எனக்கு நேசம். ஆதலினுற் போர்கொடுக்க வாரும்!" என்று தேர் மூடுக்கிச் சாடினுன். அப் போது பீமசேனன் தன் மனத்தில் கர்ம தேவதையை நினைந்து, சற்றுநேர மிருந்து, எலலாமீசுவரச் செயலேயன்றி நம்மாலாவ தொன்றுமில்லை யெனத்தேறித் தலையை யசைத்து ஊழ்வினையை வெறுத்து, உரக்க நகைத்து, உடலெல்லாஞ் சிலிர்த்து, விகர்ணனுக் கெதிர் சென்று நின்று, பலம்பொருந்திய வில்லை யிழுத்து, பூதேவக் கணை, மாதேவக்கணை முதலிய பாணங்களை விடுத்தான். உடனே பரபரவெனப் பகழிகள் ஒன்றோடொன்று இடிக்க, இடம் வலமாகத் தேரைக் கரகரவென்று களத்தில் முடுக்கி, ஒருவர்பேரி லொருவர் விடுத்த பாணங்கள் இருவர் பேரிலும் படாமற் றடுத்து, விட்டேனு உன்னை யென்று வீராவேசங் கொண்டு, விவட்டி மடிக்கிறேன் சீக்

கிரம் வா யுத்தத்திற்கென்று அறைகூவி யழைத்து, அண்டங் குலுங்க வதிர்த்து, தங்களுக்குத் தாங்களே நிகர்த்து, மறுபடியுங் கிளைத்து, ஒருவரையொருவர் வளைத்து, முகஞ்சுளித்து, எக்களித்து, பற்கடித்து, விற்பிடித்து, உக்கிரமித்து, மற்கொடுத்து யுத்தம் புரிந்தார்கள். அப்போது விறற்படை தாங்கிய திறக்கர மாருதி அண்டமுகடு வெடிபட வெடித்து, மின்னலெச் செய்யு மேகம்போன்ற பிறை முகாஸ்திரத்தை எடுத்துப் பிரயோகஞ் செய்யப் புகுந்த வேளையில், "பெற்றவள் வயிறு மெத்தவும் வருந்தி வாடுமே, மற்றப் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிள்ளையை அருமையாகத் தேடுமே? அப்பா மகனே யென்றழும்போது ஆவி போய் விடுமே!" என்று பீமசேனன் வருந்தி, தன்னுடைய கண் களிமேல தண்ணீர்தழும்ப, தர்மத்தை நினைத்துத் தன்மனம் வெதும்ப, "ஓ என் வசனத்தைக் கேளாத தம்பீ! நானென்ன செய் வேன்? வினையின் பயனே பயனை முடிந்தது" என்று மேற் கூறிய பிறைமுகக் கணையை மந்திரித்து, விடுக்க, அந்தக் கடுங்கணை அந்த ரத்துலாவியதர்ந்து, அவனிமீமற் சுலாவியிவர்ந்து, விகர்ணனுடைய வெற்றி மகுடமுடியை வெட்டி யெறிந்து, மறுபடியும் பீமனிடத் திற் கிட்டி யுறைத்தது.

கர்ணனுக்கும் பீமசேனனுக்கும் நடந்த கடும்போர்

அக்காலையில் ஆறுபேர் தம்பிமார்களுடன் மீதறி, விகர்ண னிறந்துவீறி, தெய்வலோக மேறிய விந்தையைத் துரியோதனனுங் கர்ணனுங் கண்டு வெகுளி மேற்கொண்டு, வெகு படையுடன் சென்று பீமனை மடக்கினார்கள். அக்காலையிற் போர் புரிவதற்குப் பொருந்திக் திருந்திய புயாசலப் பிரகாசம் பெற்ற பீமசேனன் பொங்கு யெழுந்து, பற்பலர் ஆவியிழந்து, சிற்சிலர் கூவி விழுந்து, மறந்து மாய்ந்து போகும்படி மந்திரக்கணைகளை ஆய்ந்தெறிந்தான். அந்த வேளையிற் காய்ந்துவீசுங் கோபியாகிய கர்ணன் வந்தெதிர்த் துக் கொலைவாளிகளைத் தொடுத்த காலையில் அவன் பதைத்தோடும் படி பருந்துக்கணை முதலியவற்றைத் தொடுத்துக் கலகம் விளைத்தான் சாதுரியனான பீமசேனன். அப்போது ஒரு கர்ப்பத்தில் ஓர் உதிர சம்பந்தமா யுதித்த தம்பிமார்களிற் பலபேர் பலமுகத்தா லிவ்வொரு பீமசேனனுமேலேயே பட்டழிந்ததைக் குறித்துப் பரிதவித்திரங்கும் துரியோதனன் மனஞ் சகியாமல் தானுமெதிரிட்டுச் சரத்தடி பட்

நித் தன்னை மறந்து, பிரபஞ்ச வாழ்க்கையைத் துறந்து, தன்னுடைய எண்ணமும் பறந்து, உரியாரிற் சிறந்த சிறிய தந்தையாகிய விதுர மகாராஜன் ரகசியமில்லாமல் ராஜசபையில் யாவருங் கேட்க விளம்பிய மதுர வாக்கியத்தை மனத்துள் நினைத்து மதித்து, மனமுருகி வதங்கி, ஊற்றமடங்கி, சூக்திர மிழந்த பாவைபோல் அசைவற்று நின்றான். அந்தச் சமயத்தில் தன் கண்ணுக்கு நேராகத் துரியோதனன் வருந்திப் பறந்ததையும் அவனுடைய தம்பிமார்களிறந்ததையும் அங்கதேசத்திபதியாகிய கர்ணன் கண்டு, மனம் வருந்தி நொந்து, மேகமேகமாகப் போருங் குதிரை பூட்டிய தேரேறி வந்து, சோகதாகமாக நிற்குந் துரியோதனனுடைய முகத்தைப் பார்த்து, யுத்தசன்னகமாக பாகித்துவந்த மோகத் தம்பிமார்களைச் சாகக் கொன்ற பீமசேனனது முடித்தலையை "இதோ ஒரு கொடிப் பொழுதில் ஒடித்தெறிகிறேன். அப்படி அவன் தலையை ஒடித்து முடிக்காமல் போவேனுகில் இப்போதே என்னுடைய அற்பமான தலையை அவன் கையிற் கொடுத்து விடுகிறேன். நீர் அது வரையிலும் விசனப்படாமலிரும்!" என்று உறுதி வசனஞ் சொல்லிப் பெரும் புகழ் தாங்கிய இரும்புக் கொப்பாகிய வில்லை வளைத்து, வல்லவர்கள் மதிக்கும்படி நாணி பிறுக்கி, எடுத்தகை சாயாமல், தொடுத்த பாணமோயாமல், லீலைபோல் நெருங்கிய தோளும், வீரகண்டை பூண்டதாளும், சினங்கொண்ட மனமும், நெற்றியிற் சுருக்கி நெருக்கிய புருவமும், கற்றைகற்றையாய்க் கனலெழுங் கண்களுங் காட்டி, கடுங்கணைகளைப் பூட்டி, தேரோடிப் பாராடப் போராடிப் பேர்சூட வேர்வாடிப் போர் செய்து வ்ராகின்ற பீமன்மேற் சூவி இனி இவ்வுலக மெல்லாந் துரியோதனனுக்குச் சுதேசகமறச் சொந்தமென்று தேவர் முதலாகிய யாவரும் பேசிக்கொள்ளும்படி யுத்தஞ் செய்தான். அவ்வேளையில் பாரிய ஆற்றைப்போன்ற கால்வாயினீற்றில் அளருகப் படிந்த சேற்றில் அமுங்கிப் பதுங்கி யொதுங்கிக் கிடக்கும் ஆமையைப் பலம்பொருந்திய மல்லர்கள் மொய்த்திருக்கு முத்துக்களுடன் இருகையாலுஞ் சேறென்று வாரி யெறியும்படியாகிய நீர்வள நிறைந்த செல்வக் குரு நாட்டுக் கதிபதியாகிய பீமன் தன் தந்தையாகிய வாயுதேவனுக்கொப்பான வல்லமை கொண்டெழுந்தான். அப்படி எழும்பிய பீமனை இவ்வுலகத்துக்குப் பகலை விளக்கி இருளைக் காய்ந்தெரிக்குக் கிரணந் தரித்த கதிரவன் திருமைந்தனுகிய கர்ணனவன் கண்டு எமனுக் கொப்பாகிய பலங்கொண் டெழுந்தான். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இவ்விதக வல்லமை

விசேடத்தைச் சொல்லவேண்டிய கருத்தென்னவெனில், இவ்விரு வரும் பிறக்கும்போதே ஒரு கருப்பத்திலுறி யுதித்த சம்பந்த முடையவராகையால், அதற்குத் தகுதியாகிய குணங்களுங் கொண் டிருப்பார்க ளன்றி வேறில்லை யென்பது கருத்து. இரீங்காரம்பாடி யெழும் வண்டுகணிறைந்த பங்கஜமாலை யணிந்த பரதிக்குரிய சூமார னுகிய கர்ணராஜன் முகத்தைக் கதாயுதன் பார்த்து, "கர்ணராஜனே! வலி மிகுந்த சேனைகணிறைந்த இந்த யுத்த பூமியில் என்னுட னெதிர்த்து யுத்தஞ் செய்யத் தொடங்கியது முதல் இது வரையி லும் எத்தனைதரம் இளைத்தோடி யிருப்பாய்? கணக்குப் பார்த் தாயா? இன்னமும் உன்னை வெல்லுவதற்கு நான் பின்னிடவில்லை! உன்னை வெல்வது எனக்குக் கடனு யிருந்தபோதிலும், உன்னை வெல் வதில் எனக்கொரு புகழ்ச்சொல்லும் வரப்போகிறதில்லை. எத்தனை தரம் நீ என்னுடன் வந்து யுத்தம் பண்ணினலும், நானுன்னைக் கொல்லப் போகிறதுமில்லை. நீ என் கையாற் சாகப்போகிறதுமில்லை. அதெனனில், மன்னர் கூடிய மகா சபைதனில், சொன்ன சபதஞ் சேர்வுரு வண்ணம் உன் முடித்தலையை முடிப்பதற்கு என் தம்பி யாகிய அர்ச்சுனனுடைய கணை காத்துக்கொண்டிருப்பதினுல் உன்னை வெல்லத்தக்க கிடனெனக்கல்லது கொல்லத்தக்க கடனெ னக்கில்லை" என்று கூறி, வரிபொருந்திய மணிக்கள் கட்டி மல ரணிந்து மகிமைகொண்ட வில்லை மளமள வென்று வணக்கி நாணி யிணக்கித் தூணி நிறைந்த பல்லவங் தொடுத்தான். அப்பால் வல்ல வரிருவருங் கொல்லுங் குரோதமுடையவர்களாய் ஒருவரை யொரு வர் வெல்லும்படியாக மலைந்தார்கள்.

இவ்விதமாக அளவிறந்த அம்புகளைப் பிரயோகஞ்செய்து இரு வரும் எதிரெதிராக அமர்புரிந்து ஒருவர் கணைகளால் ஒருவர் கலங்கி, ஒருவரை யொருவர் விட்டு விலங்கி, மறுபடியுங் கடுகடித்து, பட படத்து அடித்தடித்துப் பாணங்கள் தொடுத்துப் போர்கொடுத்த காலையில், சூரிய சூமாரனுகிய கர்ணன்மேலிட்டு, காற்றின் மைந்த னுகிய பீமசேனன் துன்பங்கொண்டு அலக்கழிந்து கண்கலங்கிப் போகும்படியாய்ச் சீறி, இலக்கமற்ற பெருங் கணைகளாற் கலக்கி, பீமன் றொடுத்த விஷக்கணையாவும் விலக்கி, அவனேறி வந்த வச்சிரத் தேரையும், சிங்கக் கொடியையும், தங்க மயமாகிய வில்லை யும் அழித்தான். இந்தப் பிரகாரம் அங்க தேசாதிபனுல் தன் னுடைய ரத முதலிய யாவும் அழிந்துபோவதறிந்த பீமசேனன் ஆக்ரமித்து எழுந்து, பராக்ரமத்துடன் பாய்ந்து, சேமத்தேரிற்

புகுந்து, திடங்கொண்ட வில்லை வளைத்து, தினகரன் மைந்த னென்னுங் கர்ணனுடைய தேகத்தைத் துளைத்துத் தீரத்துடனெதிர் நின்றான். அப்படி நின்ற பீமனைக் கனகக்கொடியோனுகிய கர்ணன் கண்டு கவலைகொண்டு, ரதத்துடன்மீண்டு, கல்லகக்கணை, கார் முகக்கணை, காலகாலக்கணை முதலிய பாணங்களை ஆலகாலம்போல் விடுத்து, பீமனைறிவந்த சேமத்தேரையுங் கெடுத்து, அவனுடைய மேனியெல்லாம் இந்திரன் கண்களைப்போல் வடுப்படுத்தினான். அப்போது பீமசேனன் ஏறுவதற்கு வேறு தேரில்லாமையால் நிலத்தினின்று, பலத்திற் சிறந்த தண்டினைக் கைக்கொண்டு சாகசஞ் செய்து, சடசட சடாத்காரமாகச் சுழற்றி யெறிந்தான். அந்த பீம னெறிந்த தண்டாயுதமானது ஆகாயபரியந்த முயர்ந்த விசால மாகிய மலை பெயர்த்து வருவதைப்போலும், ஊழ்வினையோடிவருந் தன்மைபோலும், உரத்துவந்து, கர்ணனேறிய களகரதத்தைப் பொடிப்பொடியா யுடைத்து, சாரதி குதிரைகளையுஞ் சாய்த்து, கர்ணனையுங் கடுகடுத்து நோக்கிவரத் தலைப்பட்டது. இப்படி பீமன் கதையானது தன்னை நோக்கிக் கடுகடுத்துவருந் தன்மையைக் கண்ட கர்ணனவன் இனிச்காரியமில்லை யென்று தன்புகழ் முதலிய பெருமையுங் கெட்டுப் போர்புரிந்த பூமியையும் விட்டு, புறமுதுகிட்டோடிப் போனான். அப்படி யோடிய கவசகுண்டல வீரன் பின்னும் வேறு தேரேறி, இன்னும் பீமனைவிடாமற் சின்னப் படுத்த வேண்டுமென்று மன்னன் முதலிய யாவரு மதிக்கும்படி யாய் வன்னமாகிய சிலையை வளைத்து, "இதோ வந்தேன் பீமா!" வென்று கூவி ஆரவாரித்து அவனெதிரில் வந்தான். அப்படி எதிரில் வந்த கர்ணனை பீமன்கண்டு, வாள்விழி சிவந்து, வாய்மடித் துறுக்கி, வாளுங்கேடயமுங் கைக்கொண்டு மண்டியிட்டு, சக்ராகிர் தியாகச் சுழன்று, தாவிவரும் பெரும்புலி யெனப் பாய்ந்து, மட்டில் லாக் கொடையாளனுகிய கர்ணன் கைக்கொண்ட வில்லை பட் டென்று வெட்டினான். உடனே கர்ணனவன் மோசம் வந்த தென்று கருதி, கச்சைக்கொடி கட்டிய தேரின் கம்பத்தடிவாரத்தில் ஒரு சமயாசமயங்களுக்கு மறைந்து போகும்படியாய் ஏற்படுத்தி வைத்திருக்கிற சுரங்கவேதிகைத் துவாரத்தி லொளித்துக் கொண் டான்.

அப்போது வாசமிகுந்த மாலையணிந்த வாயுவின் குமாரனை வன் சூரிய குமாரனுகிய கர்ணனைக் காணுமல் தேடிக்கொண்டு

திரும்பும்போது, மறைத்திருந்த கர்ணன் வெளிப்பட்டு மந்திராஸ்திர மிந்திராஸ்திர முதலிய பாணங்களினால் பீமசேனனுடைய மெய் யெல்லாந்தைக்கச் செய்து, அருவிபெருகி ஓடிவராகின்ற மலையைப் போல் உதிரம் பெருகி யோடிவரும்படியாய் மாட்டி, மேலுமேலுஞ் சொரியுங் கணைகளினால் பீமசேனன் தன்னுடைய கையிற் பிடித் திருந்த கேடயமும் வாளுங் கேடறும்படியாய்க் கெடுத்து, முனை முகத்தி னிலையாமல் நின்று போர்புரியு மக்கொடுஞ் சேவகனுடைய தேகமெல்லாஞ் சல்லடைக் கண்கள் போற்றுளைபடும்படியாய்த் தாக்கினான். அப்போது பீமன் சிறிதுஞ் சகியாதவனாய்த் தள்ளாடிச் சஞ்சலத்தா னிலைத்து, யுத்தபூமியிற் செத்துக்கிடக்கும் பரிகளையும், யானைகளையும் வாரியெடுத்துத் தேகத்தை மூடிக்கொண்டு, கர்ணன் ரூடுக்கும் பாணங்கள் தன்பேரிற் படவொட்டாமற் சிக்கையிற் கோபாக்கினி வெக்கழும்படியாய்ச் சினங்கொண்ட மனத்துட னிலத்தினின்றான். இவ்வாறு ஊகநம்படியாகிய ரதமில்லாமலும், வில் முதலிய ஆயுதங்களில்லாமலும், ஆதரமற்ற தனியனாய் நிலத்தில் மறைந்து நின்ற பீமசேனனைத் தேரின்பேரி லிருக்குங் கர்ண னெருங்கி, தன் கையிற்பிடித்த விற்றுணையால் அவனுடைய வயிற் றிற் குத்திக் கொல்லும்படியாகிய கோபந் தனக்கிருந்த போதிலுங் குந்திதேவிக்குத் தான்கொடுத்த வரத்தை நினைத்து, கயந்தடாக முதலியவைகளி லிருக்குஞ் சலமானது வெப்பகாலத்தில் மேலே சூடு காட்டி உள்ளே குளிர்ச்சியா யிருக்கும் தன்மைபோல் அகத் திற் குளிர்ச்சி காட்டி, முகத்தில் தளர்ச்சி காட்டிச் சுடுசுடுப்பாகிய வசனங்களைச் சொல்லி, "அடா வீரமில்லாத பீமா! எருமைக் கிடாவைவப்போற் காட்டிற் றிரிந்து கிடைத்த பல பண்டத்தையும் பிரயோசனப் படும்படியாய் உறுதிபாகத் தின்று பெருவயிற்றை நிரப் பிக்கொண்டு வெடுப்பாகிய பேச்சைப்பேசிக் காலங்கழித்துத் திரிய உனக்குத் தெரியுமல்லாமல், விற்பிடித்து மரியாதையாகிய சொற் படித்து யுத்தஞ் செய்வதற்கு உணர்வுண்டோ? எப்போதும் படி யாத மூடனுக்கும், படித்த விசேடனுக்கும் அநேக பேதாபேதங் களுண்டு. அதை நீ யறிவாயோ? முரட்டுத்தனமா யுத்தஞ்செய்து எத்தனை தடவை வென்றாலுஞ் சாஸ்திர சாம்பிரதாயப் பிரகாரம் ஜெயம்பெறுகிற சம்பிரமத்திற் கீடல்லவே, அடா சபலனே! உன் னுடைய கதியை இப்போது நீ யோசித்துப்பார். அப்பா! இப்படி மென்ன? மேலாகிய சொர்க்க பூமியைச் சேரவேண்டு மென்னும் இச்சையுனக் கிருக்குமாகில், என்னுடனெதிர்த்து நின்று அமர்

மலையத் தக்கது அல்லவென்று இந்தக் கர்மபூமியி லிருந்து இன்னுஞ் சிலகாள் கழிக்க வேண்டு மென்னும் இச்சையுடன் லக்ஷையம் நிருக்கத் துணிவாயாகில், கரகரத் தொனியுடன் சக்கரங்களுருளும்படியாகிய தேரிற் பொருந்திய நாராயணர் அதோ செல்லுகின்றூர்கள் அவர்களிடத்திற் போய்ச் சேரக்கடவை!" என்று ஆய்ந்து தேர்ந்த அறிவாளனுகிய ஆதவன் குமாரன் சொல்லி அப்பாற் போனன். இப்பால் பீமசேனன் கவசமாகப் போர்த்துக் கொண்டிருந்த கஜகேளபரச் சருமங்களை யுரித்துத் தேய்பிறையைப்போல் புயவலிசிந்தி, சிந்தை வருந்தி, கதையைக் கரத்திலேந்தி, மாய்ந்து கிடக்கும் பிணமலைகளைக்கடந்து, ரத்தவெள்ளங்களை நீந்திநிணச்சேறுகளைத் தாண்டி, கிருஷ்ணமூர்த்தியும் அருச்சுனனும் செல்லும்படியாகிய வியூகபந்தியிடத்தை நாடி வந்து சேர்ந்தான். ஓ தராதிபரையாளும் நராதிபனே! யாம் இதுவரையிலும் பீமசேனனுக்கும் கர்ணனுக்கும் விளைந்த போரைச்சொல்லி வந்தோம். இனிமேற் சாத்தகி செய்து வந்த சண்டையிற் சிலவற்றைச் சொல்லுகிறும் கேட்பீராக—

சாத்தகி அலம்புதனைப்புறங்கண்டு பூரிசிரவனை யெதிர்த்தல்

தேவர்களும் மற்றி யாவரும் புகழுஞ் சாமர்த்தியமுடைய சாத்தகியானவர் விற்றிற வேகமும் மற்றிறக் கோபமுங்கொண்டு, கடதடக் களிற்றினங்களின்பேரில் தாவிவரும் ஆண்சிங்கத்தைப் போற் சத்துருக்களைக் குடியோட்டிய, கெடிகாட்டிய, முடிசூட்டிய, கொடிநாட்டிய தன் தேரை யோட்டிக்கொண்டு வருங்காலையில், தந்திரப் படைகளை முந்திச் செயித்து முடுக்கி முடக்கிவிட்டு மூர்த்தண்யமாகச் செல்லுகின்ற அர்ச்சுனனுல் அடிபட்டிளைத்து அழகிய வியூகமுடைந்து புறங்கொடுத் தோடிவரா நின்ற வீராதி வீரருடன் வேந்தர் யாவரும் பந்திபந்தியாய் வந்து, தனித்தனி யெதிர்த்துச் சண்டைசெய்தார்கள். அப்போது சாத்தகி வெகுண்டு, விடையேறியபிரான் திரிபுரதகனஞ் செய்ததின மெனச் சென்று, எதிர்த்தேரை மறித்து, சிலையைக் கோலித் திசாதிசைகள்தோறுஞ் சரங்களிறைத்து, தீப்பொறிமழைய வெரித்து, நாற்படைகளும் இறந்தவியும்படி நெரித்து, யாவரும் நாவிற்சொல்லி யடங்காத வீரங் காட்டினுர். இவ்வாறு குற்றமில்லாத அச்சாத்தகி வெற்றிபெறமாட்டும்போது எதிரிட்ட படைஞரெல்லாரும் மார்புகிழிந்து, எலும்பொடிந்து, நரம்பறுந்து, நிண முதலிய மாமிச மிழந்து, கரங்கள்

நெரிந்து, கால்கள் துணிந்து, குடல்கள் சரிந்து, தலைகள் பிளந்து, மூளை நெரிந்து, உதிரம் வழிந்து, உலர்ந்திறந்தார்கள். இவ்விதமாகக் கரியும் பரியுந் தேருங் கால்பலப் பந்தியுங் கால்சாய்ந்தழியும் படியாய் வென்று வராநின்ற உண்மைக்கொருவனுகிய சாத்தகியைக் கடோற்கஜனுடன் போராடிக் கையிளைத்துக் கண்கலங்கி யோடி வருகின்ற அலம்புதன் கண்டு, குற்றமாகிய மனங் குறுகுறுத்துக் கறுத்து, கோபமாகிய விழி சிவந்து, மலையை நிலை குலையச்சாடுந் தோளினையுடைய வாசுதேவன் தம்பியாகிய சாத்தகியை மார்புந் தோளு முருவும்படியாய் வாளிகளேவி மதிமயங்கக் கலக்கினன். அதுகாலையிற் சாத்தகி அமோகமாக அக்கினிக் கணைகளைத் தொடுத்து, அந்த அலம்புதன் விடுத்த அஸ்திரங்களை யெல்லாம் அழித்துப் போக்கி, அவன் கைப்பிடித்த வில்லையும் நீறு நீறாக்கி, அவனுடம்பிலுந் தாக்கி உதிரம்வழிய உடல் கிழியச்செய்த போது, கார்முகமிழந்து, போர்முக மழிந்து, நேர்முகமொழிந்து, ஓர்முகமாய் விழுந்தோடினுன் அலம்புதனுனவன். அப்பாலொரு வருஞ் சாத்தகியைத் தடுப்பதற் கிடமில்லாமையால் துரோண சாரியர் கட்டிய பற்பல வியூகபந்தியிற் கலந்து, தனிப்புலிபோலெதிர்த்து, பகைவரை கோக்கிப் பற்கடித்து நின்றனர். அத்தன்மையைப் பூரிசிரவென்னும் பிரக்யாதிபெற்ற போர் வீரன் பார்த்து, அச்சாத்தகிக்கு நேர்முகமாக வந்து "அடா கார்முகம் பிடித்த காளையே! இந்த க்ஷணத்தில் உன் பிராணனை வாங்குகிறேன்! ஓடாமல் நில்லடா!" என்று சொல்லித் தடுத்து, பூமி யதிரும் படியாய்த் தனது தடந்தேரைச் செலுத்தி முனைந்தெதிர்த்தான். அப்படி யெதிர்ந்த பூரிசிரவசை முருகனுடைய தம்பி கண்டு, "வாரும், வாரும், பூரிசிரவனே! இதுவரையில் ஒருவரிடத்திலுஞ் சாகாமல் தப்பித்துக் கொண்டிருந்த உன்னை இப்போது மிரட்டு தேவதை உன்பிடரியிலிருந்து தள்ளிக்கொண்டு வந்ததல்லவா? அந்த தேவதையே உன்னை யுந்திக்கொண்டுவந்து என்முன்விடுமாகில், உன்னைச் சிந்துசிந்தாய்ச் சேதிக்காமல் விடுவேனே?" என்று தீர வார்த்தைகள் சொல்லிப் பூரிசிரவனைத் தாக்கினன்

சாத்தகியோடு பூரிசிரவனெதிர்த்து மிஞ்சியதைக்கண்ட கண்ணன் அருச்சுனனை எச்சரித்தல்

இந்தப்படி சாத்தகியும், பூரிசிரவனும், வெவ்விய வில்லை வளைத்து, வீரவாளிகளைத் தொடுத்து, தேருக்தேருங்கிட்டி, ஒன் றோடொன்று முட்டி, இடிபடும் படியாகச் செலுத்தி, விண்ணுலகும் மண்ணுலகும் அதிரும்படியாய் மலைந்தனர். அப்போது, இருவரு டைய பாணங்களி னடியால், இருவருடைய தேரும், இருவரு டைய பரியும், இருவருடைய பாகும், இருவருடைய வில்லும், அழிந்து பூமியில் விழுந்தன. உடனே இருவரும் நிலத்திற் பாய்ந்து வாளுங் கேடயமுங் கைக்கொண்டு மூனையொட்டிப் பதுங்கி, யொதுங்கியிருந்து, அதிர்ந்து, கிளம்பி, விளம்பி, எழுந்து, மிகுந்த லகுவுடன் ஈரடி, மூவடி, காலடியிற் சுழன்று, இடியுடனிடி ஆர்த் திடிக்குந் தன்மைபோல் இருவரு மறைந்து, விரைந்து கிட்டிக் கட் டிக் கீழுமேலுமாய் விழுந்து, மறுபடி யெழுந்து, ஒருவரையொருவர் புரட்டி மகிழ்ந்து ஓங்கரித்து யுத்தமேலிட்டு ஆங்கரித்தார்கள். அப் போது புண்டரீகாக்ஷனுகிய பெருமான் அருச்சுனனைத் தூண்டி, சாத்தகியும் பூரிசிரவனுஞ் செய்கின்ற செருமூனையைப் பார்த்தாயா வென்று காட்டி, காரிய மிஞ்சிப்போவதற்கு முன்னே உன் சீஷ னுகிய சாத்தகியைக் காத்து கொள்ளென்று கருணுநிதியாகிய அக் கண்ணன் தருமோணிதமாய்ச் சொல்லினர். அந்த வார்த்தையை அருச்சுனன் கேட்டு, "சுவாமீ! இரண்டுபேரு மூனைந்து ஒருவரை யொருவர் வெல்லவேண்டுமென்று சமமாகச் செய்துவரும் போரில் இளைத்தவனுக்குத் துணையாகி நடுவிலொருவன் புகுந்து யுத்தஞ் செய்வது ராஜவீர தர்மமல்லவே ஓ நந்தநாதனே! மேலும், இவன் பேரி லவனும் அவன்பேரி லிவனும் வாளெறிந்து விட்டார்கள். படைக்கல மேலிட்டுவிட்டது. அப்படி மேலிட்ட ஆயுதங்களை மாற் றும்படியான பெரிய சாமார்த்தியத் தன்மை இப்போர்ப்பட்டதென்று யோசிக்காமல், வாய்ச் சுளுவாய்ச் சொல்லிவிட்டீர்! நல்லது: நீர் சொன்னபடி செய்யலாமென்றாலும், யாவருக்கு மிருக்குந் தன்மை போல் எனக்கும் இரண்டுகர மிருப்பதல்லாமல், அதிகமாகிய கரங் கள் பெற்றிருக்கின்றேனு? சொல்லும்; ஓ திருமார்பனுகிய திரு

மாலே! ஒரு காத்தில் விற் பிடித்து மற்றொருகரத்திற் பாணத் தொடுத்து எனக்கு முன்னிட்டு அவ்விடத்திற் பொருந்திய போர் வீரர் பேரிற் போர்கொடுத்து வருகிறவன். பேரிற் பாணந்தொடுப்ப தெவ்வண்ணம் ? இதுகூடாப் பட்சமாயிருக்கின்றதே கோவிந்தா !" என்று கிரீடி சொல்ல, அந்தச் சொல்லை ஸ்ரீ கிருஷ்ணன் கேட்டுச் சொல்லுகின்றார்—

ஓ அர்ச்சுனா! தன்னுடைய பிராணன்பேரில் ஆசைவையாமற் பெண்சாதி பிள்ளைகளை விட்டுப் பெருங் கூட்டமாகிய போரிற்றலைப் பட்டு உனக்குத் துணையாக வந்தவரைச் சத்துருக்கள் மடக்கிக் கொண்டு கொல்லும்போது நீ அவர்களுக்குதவி செய்து காக்காமற் பார்த்திருப்பதுவோ காவலர் தருமம் ? ஆ! ஆ! இந்த நன்மையாகிய தர்மத்தை எத்தனை காளாய்க் கற்றுக் கொண்டாய் ? விற்றிறலானே! ஒருவேளை என்னை யொருவன் மடக்கி யடித்தாலும் நீ எனக்குதவி செய்யமாட்டாயல்லவா ? இப்பேர்ப்பட்ட தர்ம விசாரணையை யுடைய உனக்கு நான் சாரத்தியஞ் செய்வதைப் பார்க்கிலும், இப் போதே உயிர் பிழைத்துப் போய்விடுவது உத்தமமா யிருக்கின்றது இவையல்லாமலும் எட்டுத் திக்குப் பதினாறு கோணத்திலு மிருந்து எதிரிகள் வந்தடித்துத் போர் கொடுத்தாலும், அப்பேர்ப்பட்ட யுத் தத்தில் வலுக் குறையாமல், மனமிளையாமல், வாழ்நாள்பேரில் வாஞ்சை கொள்ளாமல், மனவி மைந்தர்பால் ஆசைவையாமல், பின்பலந் தேடாமல், தன்னைக்காத்து, தேர், குதிரை, சாரதி முதலிய வில்லைக்காத்து, சத்துருக்களை ஜெயித்து வெற்றியடை யும்படியானவ னெவனோ அவனையல்லவோ அதிரத விஜய னென்று பேரிட்டழைப்பது ! அந்த விஜயனென்னும் பேரை உரித் தாகப் பெற்றிருக்கின்ற நீ, எனக்கிரண்டு கையேயொழிய அநேகங் கைகளிருக்க இல்லையே யென்று சொல்லத் தக்கதோ ? ஓ சுக் கரனே ! இருவர் சேரிட்டுப் போர்புரியும்போது அவருள் செயிக்குந் திறம் யாருடையதென்று யோசிக்காமல், வாய் சுளுவாய்ச் சொல்லி விட்டீ ரென்றாய்! ஐயா ! ஜெயிக்குந்திறம் உன்னிடத்திலிருக்கிற தென்று உணர்ந்துதான் நான் சொன்னேன். அர்ச்சுனா! அந்த மட்டும் கல்ல காரியம். நீ மகா புத்திசாலிதான். இப்படியுங் கால தாம தஞ் செய்யாமல் அப் பூசிரவனை ஒரு கணையாற்றடிந்திடு" என்று அகில சராசரங்களெல்லாம் அடக்கமா யடங்கும்படிக்கு வயிற்றில் வைத்தருளிய மாயோ னுரைக்க, வாசவன் மகன் மந்தகாசத்துடன் விசுவாசமாக மனத்துட்கொண்டு, மணிவடங்க ளணிந்து அரத்தாலி

ராவிக் கூர்மையிற்றிணிந்து அதிதீக்ஷ்ணியமாக முனிந்திருக்கும் பயிரவவாளியை விஜய காண்டீபத்திற்பொருத்தி, தேவர்கள் கொண்டாடும் போர்வலித் திறத்தையுடைய சாத்தகியும் பூரிசிரவனும் வாளமர்தொடங்கிய வரிசை வகையை அப்பக்கமாகத் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான் மாதவி கணவன்.

பூரிசிரவன் அருச்சுனனுற் றோளறுந்து சாத்தகியா லிறத்தல்

அந்தச்சமயத்தில் வலிமையும் வளமையும் நிறைந்த கடகத் தோளுடைய பாயன் சகோதரனுகிய சாத்தகியைப் பூரிசிரவன் வில் யுத்தத்தில் வென்ற தன்மையைப் போல் மல் யுத்தத்திலும் வென்று ஆளைப் பூமியில் வீழ்த்தி, கல்லென்றுவமிக்கும் புயத்தின் மீது தன்னுடைய காலழுந்த மிதித்துக் கொண்டு, கடக கங்கணத் தொடிவலய மணிந்த கரத்திற் றரித்த வாளாயுதத்தை யோங்கி அந்தச் சாத்தகி யிறக்கும்படி தலைமீதில் வீசுவதானன். இதற்குள்ளாக எதிர்ப் பார்வையிலிருந்த விஜயனவன் வில்லிற் றொடுத்திருந்த பயிரவக் கணையை இமைகொட்டு முன் விடுத்து, பூரிசிரவனுடைய தோளானது வாளுடன் விழும்படியாகத் துண்டித்தான். உடனே வேத மந்திரத்தை உருச் செபித்து விஷவிளை வேற்றும் வாளினையுடைய பூரிசிரவனவன் அர்ச்சுனன் கணையால் தனது தோளும் வாளுந் துணிக்கதென் றுணர்ந்து, அர்ச்சுனனின்ற திக்கை நோக்கி, "ஓ! ஓ! சவ்வியசாசி! நான் உன்னுடனெதிர்த்து யுத்தம் பண்ணவில்லையே? வேறொருவனுடன் போர் புரிந்து, ஒருவருடனொருவர் பிராணன் வரைக்கும் ஒட்டி, வாள் யுத்தமென்னும் வாரிதியை நீந்திக் கரையேறப்போகிற சமயத்திலுன்னுடைய வாளியால் என்றோளைத் துணித்தனை. நல்ல காரியஞ் செய்தாய் ஓ தர்மந் தப்பாமல் நீதியை நடத்துஞ் சூரியனுக் கொப்பான வீரியனே! அதர்மமாகிய அநீதிக் குடன்பட்டாயே; ஐயோ! ஒருவரோடொருவர் க்ஷாத்திர மேலிட்டுச் சத்தியந் தப்பாத சமர்பூமியில் நின்று போராடும்போது, கடலில் நீ வந்து செய்த நியாயம் உனக்கு வில் வித்தை கற்பித்தருளிய துரோணாசாரியரிடம் கற்றுக்கொண்டதோ? அல்லது நீ இந்திரலோகத்திற் போயிருந்தபோது உன்னுடைய தகப்பனாகிய தேவேந்திரனிடம் தெரிந்து வந்தனையோ? அல்லாமல் அளவில்லாத ஆத்மகோடிகளைச் சிருஷ்டிக்குங் காரணகர்த்தாவாகிய பிரமாவின் கால் வழியில்வந்த காரியத் தலைவர்களாகிய பிரா

மணர்களிடம் பயின்றதோ? அல்லது உன்னுடைய ரதத்திலிருந்து சாரத்தியஞ் செய்யுங் கமலநாயகனுடைய சிறந்த போதனையைக் கொண்டு செய்ததோ? ஆ! ஆ! அர்ச்சுனு? அளாவிர்தகண்ட முதலிய திக்குகளெல்லாம் ஜெயஸ்தம்ப நாட்டிய உன் வீரம் மாசடையும்படியாய், அறிவிலா விவேகசூனியரைப்போல் தர்ம விருத்தமாகிய காரியத்தை மேற்கொண்டு, நாணமில்லாமல், மான மில்லாமல் என்னகாரியஞ் செய்தாய்? ஓ விஜயனே!" என்று ஓப் பற்ற சிலேயாண்மை பெற்ற பூரிசிரவாஞனவன் சொல்ல, மிக்கோராற் புகழுந் தக்கோனுகிய பற்குணன் கேட்டு, இதனைப் பேசுவதாயினன்.

"புத்தியிற் சிறந்த பூரிசிரவனே! நீ கேட்ட கேள்விகளுக்குப் பற்பல விதமாகிய நியாயம் உனக்குச் சொல்லவேண்டிய அவசர மில்லே. ஆகிலும் நீயே யோசித்துப் பார்க்கலாம். எனக்கு உயிர்த் துணையாக வந்தபோர்கள் பகைவர்கள் கையிலகப்பட்டு நடுங்கி உயி ரிழக்குந் தன்மையைப் பார்த்த யான், அவர்களுக்குதவி செய்யாம விருக்கலாமோ? நீயே சொல். ஆதலால் அவர்களுக்குச் சகாயஞ் செய்து என்னுடன் சேர்த்துக்கொண்டேன். இதைக் குறித்து நீ பழிக்கத் தக்கதோ? இது பழிப்புக்கிடமோ? நீ வெறுத்துக் கொள்ளவேண்டிய போர்கள் வேறிருக்கின்றர்கள். அவர்களா ரெனில், துரியோதனனுக்குப் படைத்துணையாக வந்து சுகதுக்கங் களுக் குடன்பட்டுப் போர்கொடுத்து வராகின்ற உன்னை, இந்தச் சமயத்தில் என் மனிதனுக் குதவியாகிக் காத்த என்னைப்போல் விற் படை வேற்படையுடன் வந்து உனக்கு உதவிசெய்யாத போர்கள் தான். ஆதலால், அப்படிக் குதவிசெய்யாத உங்கள் முதல்வராகிய துரியோதனுதியருக்கு முன்போய் வெறுத்துக்கொள்ள வேண்டும். ஓ பூரிசிரவனே! இந்த நியாயம் இப்படியிருக்க, நேற்றுப் பதின் மூன்றுநாள் யுத்தத்தில் மழலைவார்த்தைமாறாச் சிறு குழந்தை யாகிய அபிமன்னன் அதுலசங்கிராம விஜயனுகப் பொங்கிப்போர் புரிந்தபோது, பின்னலொருவன் வந்து காணியறுத்ததும், முன்னே யொருவனின்று வில்லே முறித்ததும், பக்கத்திற் பல பேரிருந்து தேரை யழித்ததும், நீ பார்க்க வில்லையோ? நீ அவ்விடத்திலிருக்க வில்லையோ? இப்போதறிந்து சொல்லிய பாவபுண்ணியம் நேற்று நடத்திய அநியாயத்தின்மீது மாறுசொல்லத் தெரியாமற் போச்சோ? அப்போது மறந்து விட்டாயோ! அந்தமட்டும் நீ மகாயோக்கியன்றன். அப்பா பூரிசிரவனே! உன் சொந்தத்துக்

காரணபடியால் இப்போதாகிலும் பாவபுண்ணியம் பார்த்துச் சொன்னாய்! இதுவுமெத்த மேன்மையான காரியந்தான் என்று பலபல தருமவாக்கியங்களை யெடுத்துச்சொல்லி அவனுக்கருகிற் சென்று நின்று, ஒருபுஜ மறுந்திருக்கிற அப்பூரிசிரவ னென்னுஞ் சிறுவனை அறிவாளியாகிய அர்ச்சுனன் பார்த்து, "நம் குலங்களுக் கெல்லாம் நமனுக ஏற்பட்ட துரியோதனராஜன் காலையே யழிந்து நரகத்தில் மூழ்கப் போகிறான். அவனுக்காகத் துணைப்பட்டு வந்த நீ துர்க்கதி புகாமல் நற்கதி சேரக்கடவாய்!" என்று இரக்கத்துடன் நயமாக வார்த்தை சொன்னான். அர்ச்சுனனுடைய அன்பைப் பூரிசிரவன் அகத்துட்கொண்டு, அறுபட்ட தோளுடன் சாய்ந்து கிடக்கும் வாள்மேல் வீழ்ந்து, வெற்றிபெற்ற பிராணனை விடும் தன்மையனாகியிருந்தான். அவ்வேளையிற் சாத்தகி கண்டு, தன் பிராணன் போய் விடுமென்று கொந்திருந்த கிலிவிடுத்து, புயவலியடித்து, கோபங் கொண்டு சீறி யெழுந்து தனது கையிற் பிடித்திருந்த வாளாயுதத்தால் ஓங்கிப் பூரிசிரவனை வெட்டத் துணிந்தார். அப்போது மதமூன்றுடைய மால்யானைபோன்ற நரநாரணரிருவரும் 'ஆ! ஆ! ஆ!' என்றதட்டிக் கையமர்த்தவும் நில்லாதவராய், தமது கோப மடங்க ஒரே வீச்சில் தலைவேறு உடல் வேறாக வெட்டித் தள்ளினார்.

கர்ணனிழித்துரைக்கக் கேட்டுவந்த பீமசேனனை அர்ச்சுனனடக்கி ஆதரித்தல்

இந்தப் பிரகாரம் பூரிசிரவனுடைய சிரத்தைவெட்டி வீழ்த்திவிட்ட சாத்தகி கால் நடையாக நடந்து சென்று, செத்துக் கிடக்கின்ற பிணமலைக் கணவாய்களெல்லாம் தாண்டி, செத்தவெள்ளங்களெல்லாம் நீந்தி, முடியாத காரியங்களை அதிசொற்பத்தில் முடிக்கும் படியாகிய கிருஷ்ணார்ச்சுன ரென்னும் முதல்வரிருக்குமிடத்திற் போய்க் கலந்தார். இவருடைய சங்கதியிப்படியிருக்க, கர்ணனாலடிபட்டு மரண மூர்ச்சையடைந்து, தீப்பொறி யெழ விழித்து, வசன மாற்றமொன்று மில்லாமல், விசன ஆற்றலுடன் காலோட்டமாய்த் திரும்பி வருகின்ற வாயு குமாரனாகிய பீமசேனனை நரநாரண ரிருவரும் கண்டு விசனங்கொண்டு, "ஓ! ஓ! ஈதென்ன அதிசயம்? இப்படியாக நீர் வருவதற்கேது வென்ன?" என்று கேட்க, இடும்பி நாயகன் மனமிடிந்து மாயனைப் பார்த்து "ஐயா! தேவரீர் முழக்கிய சங்கத்தொனி கேட்டவுடனே, தேவதத்தத் தொனியைக் காணுமையினால், அர்ச்சுனனுக் கென்னவோ

வென்று தருமராஜன் சங்கேதப்பட்டு சாத்தகியை யனுப்பினர். பின்னுஞ் சற்றுநேரம் தரித்து என்னையு மனுப்பிவைத்தார். அவருத்தரவின்படி புறப்பட்டுப் பற்றூர் முதலிய படையைப் பற்றச் செய்து, பத்மவியூகமுனைக்கு வந்து உங்களிருவரையும் க்ஷேமமாகக் கண்டு, இந்த க்ஷேமத்தை எனது ஸிங்கநாதத் தொனி சென்று தருமநந்தனருக்குத் தெரிவிக்கும்படியாய் முழக்கஞ்செய்து உங்களைநோக்கி வரும்போது காவலன் தம்பிமாருங் கர்ணனும் வந்தெதிர்த்து மடக்கினர்கள். அவர்கள் மதத்தையடக்கி, ரதத்தை யழித்துப் பதத்தை யளித்து, அதத்தை விளைத்துவந்த என்னை மறுபடியுங் கர்ணன்வந் தெதிர்த்து, என் பாணங்களா லதிர்ந்து மடக்கி விசைகொண் டோடினன். இப்படி யொருதடவை யல்ல பலதடவையாய் அவமானப்பட் டோடினது மல்லாமல், துரியோதனன் தம்பிமார்கள் இருபத்தெட்டுப் பேர் இறக்கும்படி செய்து விடுத்து, அவர்கள் சேனைகளையும் பறக்கும்படி கெடுத்தான். இப்படியிருக்க ஒருதடவை ரதமேறிவந்து என்னுடைய ரதமுதலிய வில்லை முறித்து, நான் றொடுத்த பாணங்களினால் தன்னுடையு தேரும், சீரும், பேருமழிந்து ஓடிப்போனன். அப்படி ஓடினவன் மறுபடியும் தேரேறிவந்து, நான் கைக்கொண்டிருந்த கதையை முறித்து, என்தேகம் சிதைய வடித்து, யானைச் சருமங்களாற் புதைத்திருந்த என்னை விற்குதையா லிடித்திடித்து, கங்க பங்க மாய்ப் பேசாத பேச்சும் பேசினன்!" என்று சொல்லவே, அவ்வார்த்தையை விஜயன் கேட்டு வெதும்பித் துடித்து, பீமனைப் பார்த்து, "அண்ணு, தான் உம்மாலே மானமழியப் பட்டபாடுங் கெட்டகேடு மறந்து, இப்படிப் பேசுவோமாகிற் பிற்படிக் கிப்படி விளையுமே யென்றெண்ணிப் பாராமல், அக்கர்ண னவன் உம்மை இழிவாகப் பேசினனல்லவா? ஆகட்டும். அவனும்மைப் பேசிய தல்ல. அவைகளெல்லாம் என்னைப் பேசிய வார்த்தை யாக்கும். நீரிதைக் குறித்து விசனப்படவேண்டாம். இதற்காகப் பரிந்து கோபங்கொள்ளவும் வேண்டாம்!" என்று தமையனின் கவலையைத் தணித்து, வனமாலை யணிந்த திருமாலை வணங்கி, அவரருள் முகநோக்கி இதனைச் சொல்லுகின்றான்.

சாத்தகி பூரிசிரவனுக் கிளைத்த காரணத்தை அருச்சுனன் கேட்க ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அறிவித்தல்

"ஓ அநந்தகல்யாண குணங்கணிறைந்த கோபாலா! என்னண்ணு வாகிய பீமசேன மகாராஜன் சொன்ன தெல்லாங் கேட்டீரா? நல்லது, அம்ஃதப்படி யிருக்கட்டும். சோமதத்தன் பிள்ளையாகிய பூரிசிரவனுற் சாத்தகியின் சாமார்த்தியங் குறைந்து போகும்படி யாகிய தன்மை யென்ன?" என்று வரிமூனை விரிந்த இந்திரதநுவைப் பெற்ற இந்திரன் மைந்தனுகிய சுந்தரவிஜயன் கேட்க, செந்தாமரைக் கண்ணன் கூறுகிறுன்—

"கம்ஸனுடைய தந்தை உக்ரசேனனும், அவனுடைய தம்பி தேவகனும், நாடாண்டு வருகாலையில் தேவகனுக்குக் குமாரத்தியும் எனக்குத் தாயுமாகிய தேவகி தேவிக்குச் சுயம்வர நாட்டவேண்டு மென்று கல்யாண ஓலையுடன் தூதனுப்பி வைத்தார்கள். அக்கால் சகல ராஜர்களும் வந்தார்கள். அப்போது எங்கள் பாட்டன்மா ராகிய சூரசேனனும் சினி என்பவரும் அச் சுயம்வரத்துக்குப் போயிருந்தபோது எல்லா ராஜர்களையும் வஞ்சித்து, அந்தத் தேவகி யம்மனைத் தூக்கிக்கொண்டு வந்து, தங்களுக்குப் பிள்ளை யாகியும் எனக்குத் தந்தையுமாகிய வசுதேவருக்குக் கலியாணம் பண்ணிவைக்க வேண்டுமென் றெண்ணி எனக்குச் சின்ன பாட்ட னும் இச் சாத்தகிக்குச் சொந்தப் பாட்டனுமாகிய சினியென்பவ ரெழுந்து, சபைமேல் நடந்து, தாவி விழுந்து, தேவகியைக் கைக் கொண்டு திரும்பினர். அப்போது தேசராஜ போஜரெல்லாஞ் சேர்ந்து பகைத்துச் செருவிளைத்து, சினியென்பவரால் அடியுண்டு சிதைந்து போனர்கள். அக்கால் வாகுலீக குமாரனுகிய சோம தத்தன் மாத்திரம் மனம் வருந்தாமல், முடிவளையாமல், அஸ்திரங் களின் அடியாலிளையாமல், வாடிக்களையாமல் மெத்த வலுவேறிச் சினியுடனெதிர்த்துக் கலகமுதிர்த்து ககனம்விதிர்த்து உலகமதிர்த்து உடலம் பிதிர்த்து போகும்படியாய் அமர் புரிந்தான். அப்பால் இரு வருமம்புகள் விட்டு வம்பு புரிந்தார்கள். இப்படி நெடுநேரம் வரையி லும் ஒருவரோ டொருவரோயாமல் யுத்தஞ் செய்தனர். எங்கள் பாட்டனுராகிய சினியென்பவர் சோமதத்தனைப் பூமியிற்றள்ளிப் புரட்டிப் புரட்டிக் காலாலுதைத்து 'உன்னுடைய பொல்லாதகாலம்

இவ்விதமாயிற்று. நானுன்னைக் கொல்லாமல் விட்டேன்; நீ ஓடிப் பிழை' என்று உதைத்தோட்டி விட்டு, நமது குலமுறைப்படிக்கு வேதவிதியை யனுசரித்து தேவகி தேவிக்கும், வசுதேவருக்குந் திருக்கலியாணங் கண்டருளி, பந்து ஜனங்களுடன் சம்பிரமங் கொண்டாடி மகா சந்தோஷங் கொண்டிருந்தார்.

இப்பால் முன்னுலடிப்பட்டோடிய அரசர்க ளெல்லாரும் முடி கெட்டோடிய சோமதத்தனைக் கண்டு 'ஐயோ! முன்னமே எங்களைப் போல் ஓடிவந்து விடாமல் வீணே வீரங்கெட்டுக் கொஞ்ச மெஞ்சி யிருந்த சேனைக்கும்புக ளெல்லாவற்றையுங் கூட்டியோட்டி எதிர்த்த தில் என்ன பலன்" என்றுசொல்ல, அவர்கள் பேசிய வாசகத்தால் வெட்கமடைந்து வெகுளியுற்று, அதுவே பயணமாய் காட்டைத் துறந்து காட்டுக்குப்போய், விபூதிதூளித சடைமுடி மரவுரியுடன் அடயோகத்திலிருந்து எப்பொருட்கு மிறைவனுகிய கைலாச பதியைக் கருத்திலிருத்தி, வருத்தமாகிய தவத்தைப் புரிந்தான். இப்படி நெடுநாட்சென்ற பிற்பாடு அவனுடைய தவசுக்கிரங்கி சாம்பவ மூர்த்தியானவர் பிரசன்னமானார். அப்போது தவம்விட் டெழுந்து வலம் வந்து சாஷ்டாங்கமாக விழுந்து தொழுது' கண்ணீரைப் பெருகவிடுத்து அழுது போற்றிய காலையில், 'உனக்கு வேண்டிய வரமென்ன' என்று உமாமஹேசன் கேட்டார். சோமதத்தன் வணங்கி, 'என்னுண்டவனே! என் பகைவனுகிய சினியென்பவனே நான் வெல்லும்படியாய் அருள்புரிய வேண்டும், என்றிரக்க, அந்த வாக்கியத்தைக்கேட்ட பரமசிவனுனவர், 'அப்பா சோமதத்தா! நீ கேட்ட வரத்தைக் கொடுப்பதற்கு உன்ற வம் பயன் படாமற் காலாதீதமாய்ப் போய்விட்டபடியால், உன் பகைவனுகிய சினியும், அவன் பிள்ளையாகிய விருஷ்டியும் இறந்து போய் விட்டார்கள். ஆதலால் உனக்கும் அவனுக்கும் பகைபோய் விட்டது. அப்படியல்லவென்று நீ ஜெயம்பெற வேண்டுமாகில் உன் கால் வழியிற் பிறக்கும் பிள்ளையானவன் சினி என்பவனுடைய பேரப்பிள்ளையை வெல்வான்! ஆதலால் நீ போ" என்று சொல்லிக் கண்ணுதலானவர் கைலாசத்திற் கெழுந்தருளினார். இவ்விதமாகப் பரமசிவனிடம் வரத்தைப் பெற்றுவந்த தன்மையால் இந்தச் சாத்த கியை அந்தச் சோமதத்தனுடைய கால்வழியில் வந்த இந்தப் பூரி சிரவன் வெல்லும்படியாய் சேரிட்டது. இல்லாவிட்டால் வெல்லக் கூடுமோ? அர்ச்சுன! காரணமில்லாமல் ஒன்றும் நடவாது." என்று பூர்வீக கதையை யெடுத்துச் சொல்ல, பீமன்-அர்ச்சுனன்-சாத்தகி

இவர்கள் மூவருங்கேட்டு மனங்களித்து, முராரியாகிய முதல்வனை வாழ்த்தி, நானிலங் குலுங்க நாகருங்கலங்க, நாற்றிசை நடுங்க நால் வரும் ஏககாலத்திற் சங்கத்தொனி செய்தார்கள்.

பீமன், அர்ச்சுனன், சாத்தகி இம்மூவருஞ் சயிந்தவனை நாடிச்செல்லும்போது, வழியிற்கண்ட கர்ணனை அர்ச்சுனன் வாயாலும் கையாலும் வாட்டியோட்டுதல்

இவ்விடத்தி லிப்படியிருக்க, முன்னே தருமராஜனுக்குச் சங்கேதம் விளையும்படியாக ஜநார்த்தனன் சங்கத்தொனி செய்தா ரென்று சொன்னேம். அந்தச் சங்கத் தொனியாற் பதின்மூன்று நாள் ராத்திரி கிருஷ்ணமூர்த்தி தாரகனிடத்திற் சொல்லிய சொற் படி அத்தாரகனுடைய சாரதியானவன் சங்கு சக்ர கதாகட்க கோதண்டத்துடன் சுவாமியினுடைய கனகரதத்தைப் பரமபதத்தி லிருந்து கொண்டுவந்து, ஆகாயத்தில் வட்டமிட் டுலாவிக் காட்டி னன். அதை அஞ்சனவண்ணனுடைய அமலவானந்த ஆதிகேசவனு நிங்து கையமர்த்தி, அர்ச்சுனனுடைய தேரைச் செலுத்திக்கொண் டிருந்தார். அப்போது தருமராஜர் பெருங்தும்புகளிற் சண்டை செய்யப் போயிருக்கிற நமது தம்பிமார் முதலிய பேர்களுக்கு ஒருவேளை ரதம், நாணி, அம்பறாத்தூணி, வில், வேள், வாள் முதலிய ஆயுதங்கள் வேண்டியிருக்கு மென்று நினைத்து, இரண்டு சேமரதமும் அதினிறைய ஆயுதங்களும் அனுப்பி வைத்திருந்தார். அவை இந்தக் காலத்தில் வந்து சேர்வது மாப்போல் கல்ல சமயத்தில்வந் துதவியபோது, அதைக்கண்ட பீமனுஞ் சாத்தகியும் அந்தத் தேரிலேறிக் கொண்டு, அர்ச்சுனனோடு கலந்து முத்தொழிற் கிறைவராகிய பிர்மா, விஷ்ணு, உருத்திரன் இந்த மூன்றுபேரும் உலகத்தின்மேல் விரோதித்தெழுந் தெதிர்த்ததைப்போற் சீற்ற மேலிட்டு. கண்ணுற் செங்கனலுமிழ்ந்துகொண்டு தங்கள் தேர்களைச் செலுத்தி, தங்கள் தங்களுடைய திறங்களைக்காட்டி, எட்டுத்திசை யுந் திடுக்கிடக் கலக்கி, எதிரொருவரு மில்லாமல் இடித்துப் பொடி யாக்கி வரும்போது, சூரிய புத்திரனுகிய கர்ணனைக் கண்டவர்க ளாய்ச் சூழ்கொண்ட மேகங்கவியுந் தன்மையைப்போல் அவனைக் கவிந்து சூழ்ந்து சுடுசரங்களைப் பொழிந்தார்கள்.

அந்தக் கர்ணனும் பொற்பிரகாசம் பொருந்திய விசாலமான தேரினின்று போராடும்படியாகப் புரியிறுக்கிய வில்லைத் தாங்கி,

அவர்களுக்கெதிர்வந்து நின்று, இணைக்கிணையாகத் தானும் அளவற்ற கணைகளைப் பொழிந்தான். அக்காலையிற் சத்துருக்களுக்கு இடிபோன்ற அர்ச்சுனனவன் அக்கர்ணனை நோக்கி, மனஞ்சகியாமற் பற்கடித்து பக்கத்தில் நின்ற பலபேருக்குங் கேட்கும்படியாய் ஒரு வசனஞ் சொல்லத் தொடங்கினன், "அடா கர்ண நல்வினைப் பயனல் நலத்தைப்பெற் றேங்குதலும், தீவினைப்பயனற் சிந்தை நொந்துருகுதலும்; ஆத்மகோடிகளுக்கு இயல்பாக நேரிடுந் தன்மைபோல், ஒருவேளையில் ஜெயம்பெற வெல்லுவதும், ஒரு சமயத்தில் அபஜெயமடையத் தோற்பதும் ஆக நேரிடுவது சுத்த வீரர்களுக்கும் உத்தமத் தன்மையாகும். அதை நீ எவ்வள வேனும் யோசிக்காமல், தீரமற்ற தீனரைப்போல வீணுரிய வார்த் தைகளைப் பேசி, என் தமையனுரிய பீமசேனராஜனை ஏசினுயாம். நல்ல குடிப்பிறப்பில்லாத கோமானே! உன்னுடைய சுபாவமான கெட்ட குணத்தைக் காட்டினுயல்லவா? நீ ஏறிவந்த தேர், குதிரை, சாரதி, வில் இவை முதலியன இழந்து, பாணங்களு முறிந்து எத் தனைதரம் புறமுதுகிட்டுக் காலோட்டமா யோடினுய்? நீ ஓடிய போது இந்த உத்தம குலத்திற் பிறந்த பீமசேனன் உன்னை ஏதாகி லும் எள்ளத்தனை வசை வார்த்தையுரைத்து ஏளனம் பண்ணிய துண்டோ? அநேகந் தடவை உன்னை ஜெயித்து யானைக்கும் அடி சறுக்கு மென்பதுபோற் சற்றிளைத்த காலையில் நீ வெட்கங்கெட்டு எதிரியாகிய பீமசேனனின் மனஞ் சுளுக்கும்படியாய் இப்படிக்கெல் லாம் பேசப்போமோ? நல்லது, நேற்று நடந்த பதின்மூன்றும்நாள் போரில் மஹா பாவியாகிய நீ வஞ்சகமாக என் பிள்ளைக்குப் பின் புறம் வந்து பதுங்கி, யொதுங்கி, அவனுடைய வில்லை ஒடித்துப்பல முங் குறையும்படியாய்ப் பாணந்தொடுத்த தன்மையினல் என் குழந்தை அநியாயமாக இறந்துபோய் விட்டான். அந்தப் பழிக்குத் தகுந்த வழியாக இனி நடக்கும் போர்முகத்தில் உன் தவத்திற் பிறந்த சிரேஷ்ட புத்திரனுகிய விடசேனன் தலையை நீ பார்க்கும் படியாய் உன் கண்ணுக்கெதிரில் நானே அறுத்துத் தள்ளுகிறேன். நான் சொல்லிய இந்தப் பேச்சை உன்னுள்ளத்தில் கெட்டியாகக் கொள்ளக்கடவை. இத்துடன் போய்விட்டதென்று நினைக்காதே. இன்னும் எவரெவர் என் பிள்ளையைப்பதித்து வாதித்துச் சேதித் தார்களோ அவரவர்களும் அவரவர் புத்திரமித்திரருஞ் சின்ன பின்ன ப் படும்படியாகச் செய்வேனல்லாமல் ஒருவரையுஞ் சும்மாவிடப் போகிறதில்லை. உன்மனத்தை உறுதியாய்த் தேற்றிக்கொள்!" என்று அருச்சுனன் சொல்லி, இருவிழியும் நெருப்புப்போற் சிவந்து, மண்

ணும் விண்ணுஞ் சரிந்து ஒன்றுய்ப் பிதிரும்படியாக அதிர்ந்து, விஜய காண்டீபத்தை விரீலென்றிழுத்து நாணேசைகாட்டி, வில்லாளியான கர்ணனுடைய உடம்பு முழுவதும் புதைந்து அழுந்தி உருவிப் போகும்படியாகக் கங்கபத்திர மென்னும் புங்கவங்களைச் செலுத்தினன். அப்போது அங்கதேசாதிபனுகிய கர்ணன் பல பாணங்களினுல் அர்ச்சுனன் விடுத்தப் பாணங்கள் மடியும்படியாய்ச் சங்கரித்து மறுபடியும் அளவில்லாத வாளிகள் தொடுத்துக் கிருஷ்ணுர்ச்சுனரைத் தடுத்துப் போர்கொடுத்தபோது, அந்தக் கர்ணன் விடுத்த கணைகளை யெல்லாம் திரணமாகிய புழுதியாய்ப் போக்கி கச்சைக் கொடியைத் தாக்கி, கைப்பிடித்த வில்லையும் இரண்டு துண்டாய்த் தூக்கி, அவனைப் புறங்கொடுத்தோடவாக்கி, அந்த இடத்தை விட்டுத் திரும்பிப் பாராடப் போராடுங் காண்டீப புருஷனுகிய அவ்விஜயன், சிந்துவுக்கராசனுகிய செயத்திரதனிருக்கும் இடத்தைத் தேடி சாத்தகியும், பீமனும், உத்தமோசாவும், உதார்மனும் தனது சாயையின் கீழ்லப்போல் தன்னை நெருங்கி வரும்படியாய் முந்திச் சென்று, வழியிற்கண்ட தானைப்படைகளை யெல்லாந் தவிடுபொடியாக்கிப் போகா கின்றுன். அப்போது துரோணுசாரியர் கல்வித் திறத்தாற் கட்டிய பத்மவியூகப்பேரணி சிதைந்து பறந்தோடுந் தன்மையை வாசங்குலாவிய நந்தியாவட்டை மாலையணிந்த துரியோதன ராஜன் கண்டு, கர்ணனின்ற இடத்தில் வந்து சொல்லுகின்றுன்.—

துரியோதனன் கர்ணனைத்தேற்றி அளவற்ற படையோடும் விடுக்க, அவையனைத்தையும் அருச்சுனனழித்தல்

ஓ என் ஐயனே! என் அண்ணு! இன்றையதினம் நீர் மனம் விண்டு இளைத்தீராகில் ஒரு கூணத்தில் சிந்துராஜ புத்திரனுன சயத்திரதனுனவன் செத்துப்போயிருப்பான். இதற்கு யாதொரு தடையுமில்லை. ஆதலால் இதுவரையிலும் நீர் காத்தது பெரிதல்ல. என்னைப் புரப்பதற்கு இது நல்ல சமயம். கொஞ்சம் பிரயாசையெடுத்துக்கொண்டு எதிர்சென்று நின்று போர்கொடுத்துத் தடுப்பீராகில், இன்னுஞ் சற்று நேரத்திற் சூரியனஸ்தமித்துப் போவான். இன்றையப்பொழுது போய்விட்டாற் சொல்லிய சபதப்படிக்குப் பற்குணனுகிய அர்ச்சுனன் அக்கினியில் வீழ்ந்திறந்து போவான். இந்தச் சேதி கேட்டவுடனே பாண்டுநந்தன ரெல்லோரும் மாண்டு போவார்கள். ஏதொரு வருத்தமுமில்லாமல் நாம் வெற்றியடைய

லாம் உத்தமனே! இவ்வளவு சுளுவாய் எனக்குச் செயங்கொடுக்கத் தக்கவர்களில் நீயொருவனே யல்லாமல் எனக்குரித்தாகிய துணை வேறொருவருமில்லை! உம்மை நான் நம்பினேன். உமக்கு உற்ற துணையாய்த் துரோண புத்திரனாகிய அசுவத்தாமனும், சத்துருக்கு மித்துருவாகிய மித்ர தேவதையை யொத்த கிருபனும், மந்திரத் தலைவனுஞ் சேர்ந்து வரும்படியாய்ச் சேகரித்துக்கொண்டு, அமர்த் தலை சென்று, அர்ச்சுனனுதியரை வளைத்துக்கொண்டுபோர்மலைக்கு, சிந்துராஜ குமாரன் ஈண்டு மாண்டு போகாமல் ஆண்டு ரட்சிப்பீ ராகில், பேர் பெற்றிருக்கிற இப்பூமியும், கீர்த்தியும், பிரதாப வல்லமையும், உமக்குச் சொந்தமாகு மல்லாமல், மற்றெவருக்குச் சொந்தமாகும்? ஓ என்னுயிர்க்குயிராகிய துணையே!" என்று துரியோதனன் சொல்ல, அந்த வார்த்தையைக் கர்ணன் கேட்டு, "ஓ புரந்தர பூபாலனுகிய காவலனே! கேளும். வெற்றிபெற்ற பீமனெடுத்து, விறல்காட்டி, அவனுல் என்னுடலம் மெத்த மெலிந்திருக்கின்றது. இல்லாவிட்டால் நானென்னும் பெயரும், அவ னுடைய உயிரும், இதுவரையிலும் நிலைபெற்றிருக்குமோ? ஆனு லும், (கடுகு சிறுக்கினுங் காரம் போகாது) என்பதுபோல், நான் நிலைபெற்று நிற்கும் போர்முகத்திற் சிந்துதேச நாயகனுகிய சயிந்தவ னுடைய பிராணனை வாங்குவதற்கு ஸம்ஹாரகால உருத்திரன் சிந் தித்து வந்தாலு மிலேசில் முடியுமோ? ஒருக்காலு முடியாது முடி யாது! தியைப் பார்க்கிலுஞ் சிவந்து சிதறும் பொறிகளையுடைய செங்கண் தாங்கிய எங்களையனே! என்னுடைய வீரதிறத்தை நீர் பாரும்" என்று சொல்லி, எண்ணற்ற துணைப்படைகள் தனக்கெண் டிசையும் புடை சூழ்ந்துவரச் சென்று, வீரபட்டங் கட்டிய நெற்றி யில் வெயர்வை யெழ, அட்டமா கிரியைச் சூழ்ந்த வட்டமாகிய மலை களெல்லாங் குட்டமாக நாணுற, வில்லைக் கோணுறவளைத்து, குணத்தொனி விளைத்து, சூலெடுத்துக் கனைத்து, யாவரும் வியக் கும்படியாகிய வலிபடைத்து, தனது மகாரதத்தை வாயுவேகமு மனுவேகமும் பிற்படத் தக்கதாய்க் காகரவென்று நடத்திக் கொண்டு வந்தான்.

இதற்குள்ளே பீமார்ச்சுன சாத்தகி முதலாகிய பேரும் வெகுண்டெழுந்து, விசையுடன் தங்கள் தேரைவிடுத்து, கொழுந்து விட்டெரியுங்கணை மாரியுட னெதிர்த்துப் போர்புரிந்தபோது, அக்கர்ணன் படைகளிலும் இவர்கள் படைகளிலும் யானைக ளெத்தனை! தேர்களெத்தனை! குதிரைகளெத்தனை! படைக

ளைத்தனை ! பாசமைத்தனை! மலைகளைத்தனை! தண்டுகளைத்தனை ; உலக்கை எத்தனை! வச்சிராயுதமைத்தனை! வில்லைத்தனை! வாளைத் தனை ! வேலைத்தனை ! கணையைத்தனை ! காலாயுதமைத்தனை ! சூலாயுதமைத்தனை ! கவணைத்தனை ! சவளமைத்தனை! பாணமுனை களில் கலந்தெரியும் நெருப்பைத்தனை! இவ்வளவுங் கலந்து நெருங்கி இருக்கும்படியானதை அர்ச்சுனன் விடுத்த கணைமாரியானது விலக்கி நடுவிற்புகுந்து, ஒரு கொடியில் எதிரியின் படைகளையும் பாணங்களையுந் தொம்சப் படுத்திய தல்லாமலும், அவ்வெதிரியின் மேரில் எரியும்படியாகச் சக்கரம், முஷ்கரம், கதை, தோமரம், பிண்டி, பாலம், முசலம், அங்குசம், வேலாயுதங்கள், சூலாயுதங்கள், கலப்பைகள், உலக்கைகள் முதலாகிய ஆயுதங்களை மூவருங்கைக் கொண்டு எட்டுத்திக்கிலு நின்று விடாமழைபோல் எரிந்து பொழிந் தார்கள். அந்த ஆயுதங்களின் நடுவிற்புகுந்த விஜயனுடைய அஸ்திர மானது ஒன்றுக்கு மூன்றுகப் பிரகாசித்து, எதிரிவிடு படைகளை ஒன்றெழியாமற்றுக்கிப் போக்கியது. அஃதன்றியும், தனஞ்சயன் விசாரத்தால் எதிரியினுடைய சேனைசனியங்களில் அனந்தம் மேர்களுக்குக் காங்களற்றன. தோள்களற்றன. கால்கள் வீழ்ந்தன. கிரீடசிரங்கள் தாழ்ந்தன. குடர்கள் கழிந்தன. மார்புகள் கிழிந்தன. நரம்புகள் அறுந்தன. பற்கள் நெறிந்தன. எலும்பு முறிந்தன. இடைகளொடிந்தன. தலைகள் பிளந்தன. மூளைகள் சிதறின. உதிர மோடியது. இல்லாமலும் துரியோதனனுடைய வியூகபந்தியை இழந்து நிறைந்த யானைப் படைத்தொகுதி யெல்லாம் பல திசை களிலும் வீறிட்டுச் சிதைந்து சிந்தி வீழ்ந்தன. அந்தமாகச் சிந்து தேசத்திற் பிறந்து சொந்தமாகச் சயித்தவன் வீட்டில் வளர்ந்து கடை பழகிவந்து மந்த மாருதம்போன்ற கந்துகங்களெல்லாம் கால் முறிந்து மறிந்து பின் பறிந்து தாழ்ந்தன. அச்சு, மச்சு, குத்துக் கால், கொடுங்கை முடி கொடி, குடை, படி, அடி, இரிசி, ஆணி, அஞ் சூராணி, குதிரை, சாரதி முதலியவைகளையுடைய தேர்களானவை, அந்தகபத்தி லெரிந்து பந்து சுழல்வதுபோல் அலைந்துலைந் துருண்ட ழிந்தொழிந்தன. இன்னமும் வீரலட்சுமி நின்று ஜயம் ஜயமென்று கடம்புரிந்து விளையாடுந் தேதேறிய வீரசிம்மம் போன்ற அர்ச்சுனன் கணைகளினுல், துரோணசாரியர் கட்டிய வியூகபந்தியினின்றுங் கர்ணன் படைகளினின்று மழிந்த கொடிகளைத்தனை? குடைக ளைத்தனை? முடிகளைத்தனை? தொடிகளைத்தனை? துடிகளைத்தனை? படைகளைத்தனை? வாத்தியங்களைத்தனை? வெற்றி மாலைகளைத்

தனை? மற்ற மாலைகளைத்தனை? குணத்தொனிக ளைத்தனை? சாமரைகளைத்தனை? கவசங்களைத்தனை? துவஜமெத்தனை? தோரணமெத்தனை? வாரணமெத்தனை? இவ்விதமாக அநேகங் கோடாகோடி சின்னங்களைப் பொடிகளாகப்படுத்தி அவனியிற் சாய்த்தும் வேகமடங்காமல், பூமியையுந் துளைத்துப் போய்க் கொண்டிருக்கின்றனவாம் அப்புறந்தர குமாரன் விட்ட பொற் பாணங்கள்.

பீமார்ச்சுனர்க்குந் துரியோதனுதியர்க்கும் பத்மவியூகத்தில் மூண்டுகொண்ட விபரீதப்போர்

ஓ துரந்தர சுகுமாரனகிய தேவன்றலே! இப்படியாயிருக்கிற வேளையில் கெடிஸ்தலங்களுக்கதிபதியாகிய துரியோதனனும், மத்திரதேசாதிபதியும், விடசேனனும், சுகுணசீலமுடைய குருபுத்திரனும், போராடுந்திறந்தெரிந்த கிருபாச்சாரியும், அழகாக இருபுறமும் நெருங்கித் தொடர்வும், அநேகம் வீரத்திறமுடைய மன்னர்கள் ஆலகால விஷாக்கினிபோற் கொதித்தெழுந்து அடரவும், நமனை வசப்படுத்தும்படியாகிய உறுதி நெஞ்சமும், ஒப்பில்லா வீரமும், உலவாத தயிரிய முமுடைய கர்ணனவன் வந்து முன்னின்று, "வின்னலமுள்ள வல்லவனென்னும் விஜயனே! இப்போது என்ன சொல்லுகிறாய்?" என்று சொன்னலஞ் சொல்லி, மின்னலைப் போன்ற வன்னலப் பகழியை மாறுமல் விடுத்து எதிர்த்தான். அன்னவனைக் கண்டவுடனே முக்குணங்களு மூர்த்தீகரித் தெழுப் பதைப்போன்ற பீமார்ச்சுன சாத்தகி இவர்கள் மூவருந் தேவருகடுங்கும்படியாய் வில்லை வளைத்து, கடகடவென்று பல்லைக் கடித்து காணலி செய்து, மேகாஸ்திரங்களை விஷம்போற் றொடுத்தார்கள். அந்தக் கணைகளின் கொடிய வேகத்தால் திசையெட்டும் பொரிந்து, திக்கஜங்களெட்டுஞ்சரித்து, புணரியுந் தளதளவென்று பொங்கிக் கரிந்துபோயின. அல்லாமலும், அக்கணைகள் பூசபந்தியிலிருந்த வல்லவர்கள் விடுத்த கணைகளை யெல்லாம் வாரிக்குடித்து, மாரி போல் இடித்து நுங்கி, சிலநேரந் தங்கி, அம்பரத்தின்மேல் எழுந்து வேடிக்கை பார்க்கும் தேவர்களின் மகுடக் கொடிகளின்மீது நெருப்புப்பொறிகளை ராசியாய்ச் சொரிந்து எங்குந் திரிந்தது. அக்காலையில் இரவிகாதலனென்னுங் கர்ணன் பார்த்தசாரதி மார்பையும், மூர்த்தண்ய போரங்கப் பார்த்தனுடைய தேகத்தையுந் துளைக்கும்படி

சன்னபின்னலாய் வலை வீசியதைப்போல் அருணகிறக் கிரணங்கள் பெற்ற ஐம்பத்தோரம்பைப் பிரயோகஞ் செய்தான். அந்தக் கணை களை அர்ச்சுனனென்னுந் தனிச் சிங்கங் கண்டு, ஒப்பில்லாத பிறை முகாஸ்திரமொன்றை யெடுத்து விடுத்து அவன் தொடுத்த கணை களெல்லாவற்றையுங் கெடுத்து, அவனையும் மார்பு கிழிய அடித்துப் போர்முகமழிந்து அயர்வெய்தும்படியாகப் போர் புரிந்தான். அப் போது கர்ணன் தன் மார்பில் மூழ்கிய வாளியை லட்சியம் பண் ணுமல் நிற்க, பின்பு இருவருமெதிர்ந்து வில்லை மண்டலமாக வளைத் திழுத்து, இருவர் மார்பிலும் ஒருவருக்கொருவர் எண்ணிறந்த கணை கள் தூளைத்தேதறும்படியாய்ச் செலுத்திச் சமர் புரிந்தனர். அச்சம யத்தில் கீர்த்திப் பிரதாபம் பெற்ற கிரீடியானவன் வஞ்சகத்துடன் சதபத்திரக் கணையை யெடுத்து இது கர்ணனுயிரைக் கைவிடாமல் மாய்க்குமென விசாலமாகிய வில்லினிடத்து மேன்மையாகப் பூசித்து வைத்துத் தாராளமாக ஏவினன். அவ்வாளி அந்தர மெழுந்து, பற்தெனச்சுழன்று செண்டெனப் பறந்து, கொந்தெனச் சிறந்து சிங்தைகள் வருந்த வந்தவாறதனைக் கர்ணனுக்கொப்பான அந்தண குமாரனுகிய அசுவத்தாமன் கண்டு, அதற்குத் தகுந்த விண்டுவின், கணைகொண்டு துண்டுகளாக இரண்டு செய்திட்டான். அதைக் கண்ட சண்டன் குமாரனென்னுங் கர்ணன் வீரியமுடன் ஆரிய குமாரனைத்தொழுது, சூரியாஸ்திரங்களை உந்தி, காரி மைந்த னுகிய காண்டீபனுடைய புயமென்கு மூழ்குவித்துப் புதிய ரத்தஞ் சிந்தி அவனுடைய புத்தி கைந்து கொந்து எஞ்சி வாடும்படிக்குப் போர் செய்து வந்தான்.

இவ்விதமாக இரவி குமாரன் விட்ட கணைகளும், இவனுடன் வந்த இதர மன்னர் முதலிய வீரர் பீம சாத்தகி முதலானேர் பேரில் தொட்டிவிட்ட சரங்களும், இவைகளை மாற்றும்படியாக மாஞபரணனென்னும் அந்த பீம சாத்தகி முதலிய யாவருந்தொடுத்த படைக்கலமாரியும், துரியோதனனுடைய நால்வகைத்தானையும், ஒப்பற்ற ஒருவனுகிய திவ்ய சவ்வியசாசி கண்டுவிட்ட சில வெவ் விய கணைகளினுற் சாய்ந்து, மாய்ந்து, தேய்ந்து ஓய்ந்து, குறைந்து, மறைந்துபோன மாந்தர்களும் மதித்துத் துதித்தார்கள். அவர்க ளிப்படி துதிக்கும்படியாகிய துதியை நிதியாகக்கொண்ட மகபதி குமாரனும் மாதவி கொழுகனுமாகிய அநுமக்கொடிதரித்த அர்ச் சுனராஜன், பூஜாவிதி முதலிய மந்திரவுபகரணங்களுடனே கூடிய மேகாஸ்திரங்களை மோகாஸ்திரங்களைப் போல மூடுக்கி விடுத்து குரு

புத்திரனென்னும் அசுவத்தாமனுடைய கேசரிக்கொடியையும் கிருபாசாரியினுடைய ரிஷபக் கொடியையும், பச்சைப் புரவியோன் மகனென்னுங் கர்ணனுடைய கச்சைக்கொடியையும், அவனுக்குத் துணையாகக் காக்கவந்த கர்ண புத்திர னென்னும் விடசேனனுடைய மயிற்கொடியையும், பயமற்ற ஜெயமுற்ற மத்திர தேசாதிபனுடைய வெற்றி பெற்ற மதயானைக் கொடியையும், இராஜாதிராஜன் துரியோதன மகாராஜனுடைய பாம்புக் கொடியையும், மற்ற மூனைக் காரர்களுடைய கொடி குடை முதலிய வெல்லாவற்றையும் ஒரு கொடியிற் றுணித்துத் துண்டமாக்கி, அவரவர் கையிலிருந்த வில்லை முறித்து, அவரவர்களுடைய தேகமுழுமையுஞ் சிறு கண்ணைச் சூலத்துத் தன்னை எதிர்த்து அப்பு தொடுத்த யாவரையும் உடலங் கிழித்து, உதிரஞ்சரித்து வழித்து போகும்படியாகப் பின்னுஞ் சில முனையம்பு முதலிய பின்னற்கணைகளை வாசாமகோசரமாய் விடுத்துக் கெடுத்துத் தனது வெற்றியைத் தளர்வில்லாமல் தாலெத்தி லெழுதி காட்டினன். இப்படி வெற்றி காட்டிய தனஞ்செயன் பேரில் அங்க தேசாதிபனவன் முனைந்து கனன்று வேறொரு வில்லை வளைத்து, மின்னலென்னுவமிக்கும் வன்னக் கணைகளைச் சன்னல் பின்னலாய் வாரிவாரி மாரிகாலத்திற் பொழியவந்த பெருந்தாரை யைப்போற் சலசல வென்று அர்ஜுனனுடைய தேகமுழுமையு மழை யாகப் பொழிந்து தகைந்தான். இந்தக் கர்ணன் தொடுத்த பாணங் களையெல்லாம் கற்கொண் டெறிவாரைப்போல விற்கொண்டு பற் குனன் கெடுத்து, அங்கதேசனைப் பார்த்து, "அடா! கர்ணனே! நீ பொழிந்த அம்புக் கும்புகளெல்லாம் வம்புத் தும்புமாய் மடிந்து போனதைப் பார்த்தாயா? இனி நான் எய்யப்போகின்ற வெய்ய கணைகளின் திறத்தை நீ சற்றே கண்டுகொள்" என்று கயமுகக்கணை, அயமுகக்கணை, கதிரவன்கணை, உதிரவெங்கணை, கனல்மினற்கணை, மினலனற்கணை முதலிய கணைகளைக் கலகல வென்று மூடுகினன்.

அதைக்கண்ட கர்ணன் "அப்படியா? அடா அர்ச்சுன! இன்னும் என் கைத்திறமும், மெய்த்திறமும், கணைத்திறமும், புயத் திறமும், அறியமாட்டாயா? இதோ நான் தொடுக்கின்ற கணையின் கடுமையைக் கண்டறிந்துகொள்!" என்று, புகையுடன் கனலும் கனலுடன் புனலும், புனலுடன் மணலும், மணலுடன் காற்றும், கலந்த கணைகளைச் சொரிந்து, பின்னும் பரிந்து நாணுபக்கங்களிலும இருந்து பகழிமாரி நறநற வென்று தூறினன். இவைகளை யெல்லாம் பார்த்தன் கரகர வென நூறிமீறி, துரோணரேற்படுத்திய பத்ம

வியூகப் பொருட்டைக் கெடுக்க அடுத்து, விற்பிடித்து சொற்படித்து, பற்கடித்து, முகங்கடுகடுத்து, அவ்விடத்தில் அதிவீரப்பிரதாப சூர தீர கோர ஆரபார பரிவார முதலிய சேனைகளையும் மூடுக்கினன். அப்போது காவலாகிய காவலரணிப் படைகள் கலந்து, கொல்லுவதற்கெளிதாகிய சமரம் விளைத்து, சொல்லுவதற் கரிதாகிய சொல்லை விளைத்து, அர்ச்சுனன் முதலிய பேர்களை உள்ளே புக வொட்டாமல் வளைத்துத் தடுத்து, இப்புவன முதலிய எப்புவனங் களும் கிலேதளர்ந்து, தலைகுலுங்கி, படபடென்று, விறுவிறென்று, மாதிரங் கலங்கிப் பருதிசுழன்று மேற்றிசையி லோடும்படியாய்ப் போர்விளக்கும்போது, பத்மவியூகப் பொருட்டின் மத்தியிற் பதனம் பண்ணி வைத்திருக்கிற சித்துபதிபெற்ற சயத்திரதனவன் சங்கதி தெரிந்து, "இனிக்காரியமில்லை, ஆரிய உதாரன் பேச்சும், சூரிய குமாரன் வீச்சும், இனியோசிக்கு மிடத்தில் அவலம் அவலமே; அநுமக் கொடியோனும், சிங்கக் கொடியோனும் இத்தனை தூரஞ் ஜெயித்து வந்து காமிருக்கும் கிலையைக் கண்டு ஜாடும்போது இனி மேல் நாம் மூலையிற் பதுங்கி ஒதுங்கி முனையற்றிருப்பது ராஜ முறைமை யல்ல. இனி நம்மை யவர்கள் பிராணனோடு விடப் போகிறதுமில்லை, விறுதாவில் நாம் மறைந்திருப்பது குறைவாகிய தொல்லை" என்று கினைத்தவனுப் நற்கிலையைப் பிடித்துச் சிற்சில கணையைத் தொடுத்து, வேலிபோல் கோலிகின்ற காவலரணிப் படைக்குப் பின்புறத்தினின்று, வாலி சுமாலிபோற் ரூவிவந்த பீமார்ச்சுனர் பேரிலும், பார்த்தசாரதி யுடம்பிலுஞ் சரமாரியைத் தனல்மாரி மணல்மாரிபோற் ரூவினன். அப்போது பீமார்ச்சுனர் முதலியோர் இது கல்ல சமயமென்று ஒருவரும் இளையாமல், வருந் திச் சளையாமல், மனஞொந் திளையாமல், வாடிக் களையாமல், வலு வுடன் சில பல கணைகளேயெவி, செலவொரு இடமிலையென வடல் தாவி, குலவிய பயிரினில் மனியறுசாவி, குணமெனவழிதர நூறி யெண்மேவி, ஜெயஞ் ஜெயமென்று தீரருடன் போர்ப்பயன் பெற்று வீரப்பாடல் பாடினர். அவ்வேளையில் கயரததுரங்கக் காலா ளுடனே, வயம்பெறு கர்ணன் வந்தெதிர்துன்னி, வாட்டமும் நாட்டமும் ஓட்டமுமாகக் கூட்டமாங் கணையால் வாட்டியகாலை, சுரேந்திரன் மகனுகிய சுவேதவாகனன் சூன்றக்குன்றக் கொன்று, அக்கணைகளையும் படைகளையும் வென்று, ஒரு நாழிகைவரையிலும் அந்தக் கர்ணன் செய்யும் உபத்திரவத்தால் மதிமயங்கி ஓய்ந்து சாய்ந்து நின்று, பின்பு ஆய்ந்து உற்சாகங்கொண்டு, உடல் கொதித்

தெழுந்து, உரங்கதித்ததிர்ந்து, யுத்தமுனையை மெத்த வருத்திச் செத்தபிணமாக்குந் திரங்கொண்ட வச்சிரக்கணையால் வள்ளலாகிய அக்கர்ணனுள்ளம் வெதும்ப, வாசமாலையை யணிந்த புயத்திற் கூட்டி மாட்டினன். அப்படி மாட்டியபோது உடல் வருந்தி அயர்ந்து திருந்திய தேரிற் பொருந்திச் சாய்ந்தனன் கர்ணன்.

அதுகண்டு மருண்ட எவர்களுக்கு மேலாகிய வில்லைக் கைக் கொண்ட தநுர்வேத புத்திரனாகிய அசுவத்தாமன் முனிந்து, கனிந்த காலாக்கினியைப்போற் காண்டீபனுக்கு எதிர் வந்து தகைந்து, அழகிய மாகிலமும், குலவிய வானுலகும், சுலவிய வாரிதியும், உலவிய மாருதமும், கிலுகிலென எஞ்சி அஞ்சும்படி பலம் பொருந்திய பங்கஜ பாணங்களைப் பலவாறுகத் தொடுத்து, வெவ்விய முனைகளைத் தீட்டி, வில்லிற் கணைகளைப் பூட்டி, விருது கிலுகாட்டி, மிகுபடைகளை வாட்டி யுத்தஞ் செய்யாகின்ற விஜயனுடைய மேனி முழுவதும் வெற்றிச் சரப்பணிகள்போற் துளைத்துச் சாத்தகி, பீமன் இவர்களிருவருடைய கேசாதிபாத அங்கத்திலும் புங்கவங்களைப் பொருத்திச் செங்குருதி பாயச்செய்து எப்புவனங்களுக்கு மிறையாகி முப்புரங்களை யெரித்தருளிய சதாசிவ மூர்த்தியின் மைந்தனாகிய சுப்பிரமணியக் கடவுளைப்போற் துலங்கி, அற்புத குணமேருவாகிய அர்ச்சுனனுடைய ரதசாரதி யென்றுஞ் சென்றாமரைக் கண்ணன் கைப்பற்றிய உழவுகோலை முறித்துத் தளர்வில்லாமல் வெறித்துப் பார்த்து நெறித்து கிலத்துகின்றனன். அப்படி கின்ற அசுவத்தாமனுடைய வில் திறத்தினைக் கண்டு மற்புயங்கள் மீறி, விண்மேற் சென்று தேறி, வெகு கோபங்கொண்ட விஜயன் : ஜயமுகக் கொடுங்கணைகளேவி, அவனுடைய வில்லை முறித்து, கவசமழித்து மார்பைக் கிழித்தான். அக்காலையிற் சோர்ந்து, அயர்ந்து, மாய்ந்தவர்போற் பெயர்ந்து போயினன் சிலநூலாய்ந்த வேதியன் மைந்தனாகிய அசுவத்தாமன். அவ்வேளையில் தன் தந்தையைப்போற் சிந்து தேசாதிபனைக் காக்கவேண்டு மென்னும் திடத்துடன் விட சேனன் வந்து மடமடவென்று தேர்செலுத்தித் தேர் நிறுத்திச் சிலையை வளைத்துத் தினபதி, உடுபதி, தனபதி கனபதி முதலியோர் சிந்தை கலங்க, வெகுவித விந்தைதலங்க, பலவாகிய இந்திரக்கணைகளை உந்திச் சொரிந்து, மந்திரக்கணைகளை வாரிப்பொழிந்து பேரமரியற்றி கின்றனன். அப்படி கின்ற பெருங்கொடையாளன் மைந்தனைப் பிரதாப ஜெயவிஜயன் பார்த்து தேவவாளிகளிரண்டு சேர்த்து, அவன் கோர்த்த நெட்டிலைச் சரங்கள் அனைத்தையும் எட்டுணை

யேனு மில்லாமல் துட்டத்தனமாய்க் கெட்டழியும்படியாக கட்டப் படுத்தி, வின்னுணிக்கட்டையு மழித்து, வீரபட்டமு மிரதமு மொழித்து, பாகனைச் சாகப்படுத்தி, காலோடு களத்திற் கிடத்தி, எட்டுப் பக்கங்களு நடுக்கங்கொண்டு கொட்டாவி கொள்ளும்படியாய் அந்த விடசேனனுடைய மார்பில் மின்னலாஸ்திரத்தை விடுத்தான் விஜய வீரனனவன். அப்போதந்த அஸ்திரமானது துஸ்தரமாக வந்து மெத்த வருத்தி, உரத்தைச் சிதைத்தபோது, விடசேனன் உறக்கங்கொண்டு யுத்தமுனை நீங்கி ஓடாமலும், யுத்தஞ் செய் வதற்கு வாடாமலும், யுத்தவீரருதவியைத் தேடாமலும், அமர் விலங்கி மயங்கி ஒரு புறத்தில் அசைவற்று நின்றான். அக்கால் புயவலிமை பெற்ற கிருபாசாரியும் துரியோதன மகாராஜனும் காளையிடபங்கள்போன்ற இளைய தம்பிமார் அநேகரும் மத்திர தேசத்தாருக்குத் தலைவனுகிய சல்லியனுமவனைச் சுற்றிச் சூழுங் கொற்றவராகிய உத்தமவீரரும் அர்ச்சுனனைத் தடுத்து வளைத்துக் கொண்டு கொடுஞ்சமர் விளைத்து, கோபாலன் விடுக்குங் குதிரைகளு மிளைத்துக் குறு குறுக்கும்படியாய் மலைத்து வரும்போது, அந்த அர்ச்சுன ராஜனனவன் இணைக்கிணையாகத் தொடுத்த கோலாகலக் கோல்விசையினுல் தங்கள் தேர் மூதலாகிய சிலைகளுமுறிந்து, மார் பைத் துளைக்கவிட்ட வடிக்கணைகளினுல் மனம்வாடி, கண்மூடி, உதிரமோடி, வாரிபிற்கூடி, யுத்தபூமியைமூடி மெத்தவருந்தி யோடினர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் துணைவந்த மற்றவருந் தாழ்ந்து, வீழ்ந்து, அழிந்து, ஒழிந்து, வாடும்படியாய் அஸ்திரங்கள் பலவாகக்கொண்டு மொத்தினன் அர்ச்சுனன்.

சயிந்தவனிருக்கு நிலையறிந்து புகுந்த அர்ச்சுனனை யாவரு மொன்முகக்கூடி மடக்குதல்

ஓ ஜனமேஜய மகாராஜனே! இந்த மொத்தலிற் செத்தவர் மற்றவர் நின்று யுத்தம்பண்ணச் சத்துவமில்லாத காஷ்டியை எத் திசைகளையு மூடிமறைத்த பெரும்பனியைவென்ற கிரண சூரியனைப் போற் குதிரை பூட்டிய தேரில் வராகின்ற பராக்கிரமனுகிய பார்த் தன் பார்த்து, சயிந்தவனைச் சாயங்காலத்திற்குள் வெல்லும்படியாக மூனிவுகொண்டு மிகுந்த வேகமாய் வரும்பொழுது இன்னும் எவ் வளவு தூரத்திலிருக்கின்றன் சிந்துபதி யென்று பூனைபோற்ற தன் தேரிலெழுந்து நின்று தலையை நீட்டிப் பார்த்தான். இப்படிக்குப் பார்த்தன் பார்த்தபோது ஆகாயத்திற் பிரகாசித்து அசைந்தாடிக்

கொண்டிரா நின்ற சயித்தவனுடைய பன்றிக் கொடியைக் கண்டு, விண்டுக்கணை ஒன்றிரண்டு கைக்கொண்டு, அண்டர் முதலிய மண்டலமடுங்க அழிந்தான்! அழிந்தான்!! சிந்துபதி யென்று கூவி, அகமகிழ்ந்து, முகமலர்ந்து, அடித்த மன்னவர் யாவருந் தியங்க, வடுத்தவிர் சிந்துமன்னனு நடுங்க, அத்தப் பன்றிக்கொடியைத் துண்டாக முறித்துக் கெடுத்து அவனுக்கண்டையிற் பாபரவென்று நெருங்குவதானன். அப்போது சூரிய குமாரனுகிய கர்ணனும் அவனுடைய மைந்தனுகிய விடசேனனும், கிருபாசாரியும், குற்றமற்ற மத்திரதேசத் தலைவனும், அசுவத்தாமனும், விஷாக்கினிபுள்ள சர்ப்பக் கொடி தரித்த துரியோதனனும், அவனுடைய தம்பிமார்களும், நெருங்கி நிற்கிற நெடுஞ்சிலை வீரரும், அர்ச்சுனனுல் அடிபட்டோடிய அரசர்கள் யாவரும், சிங்கர், பப்பரர், சீனர், மராடர், கிராடர், கர்ணடர், கேகயர், ஆரியர், வீரியர், பூரியர் முதலாகிய அனைவரும், ஏககாலத்திற் பெரும்புறக் கடல் பொங்கி எழுந்ததுபோல் ஓ வென்னு மிரைச்சலிட்டு நெருங்கித் தங்கள் தங்கள் பிராணனுக் கொட்டிச் சயித்திரத னிடத்திற்கு அர்ச்சுனனைப் போகவொட்டாது தகைக்தார்கள். இப்படித் தகைக்த விஸ்தாரமான பெருங்கும்பு களைப்பார்த்த விஜயனனவன் இவர்களைக்கொன்று சிந்துராஜனிடத்திற் சென்று அவனை வென்று வருகிறவரைக்கும் பொழுது நின்றிருக்குமாவென்று புத்தியில் மதித்து, மேற்றிசைசென்ற சூரியனைப் பார்த்து, "ஏதத, பொழுதிருப்பதாய்த் தோன்றவில்லை" என்று சொல்லி முகம் வியர்த்துப் பசுமைதங்கிய துளபமாலை யணிந்த மேகநிறங் கொண்டவனுகிய பக்தவத்சலனைப் பார்த்தான்.

அர்ச்சுன னயர்வுற்றகருத்தைக் கண்ணனறிந்து தேறித் தமது சக்ராயுதத்தாற் சூரியனை மறைத்தல்

இவ்விதமாக மனுஷ்யகாரமான எண்ணமிட்டு மயங்கித் தன்னைப் பார்த்த சவ்யசாசியின் நினைவைத் தெரிந்துகொண்ட தீனதயாளுவானவர் அவனைப் பார்த்து, "அர்ச்சுன! தளராதே! தளராதே," "என்று தைரியப்படுத்தி, நீ எண்ணின எண்ணஞ் சரிதான். வண்ணமாகிய ஏழு பச்சைப்புரவி பூட்டித் தன் தேரைச் செலுத்திக் காலங் கணித்துவருகிற சூரியன் மறையும்படியாய் அந்தி யென்னும் மாலைப்பொழுது வந்து சூழ்ந்தது. இப்போது வந்து வளைத்த இவர்களுடன் அருஞ்சமர் விளைத்து வெல்லுவதற்

குச் சாவகாசமில்லை. இனி காம வேறுவித மெண்ணிப் பார்ப்பதினுற் காரியமுமில்லை. ஆனல் ஒரு தந்திரஞ் செய்யவேண்டி யிருக்கிறது. அதாவது, போதுபோமுன்னே சூரியகிரணத்தை என்னுடைய மாயையினுல் மறைத்துப் போடுகிறேன். அவர்களெல்லாருஞ் சூரியன் அஸ்மித்தா னென்று மகிழ்ந்து மமதையடைவார்கள். அந்தச் சமயத்தில் வெல்லும்படியாகிய யுத்தத்திற் கொல்லும்படி யாக விரைந்து முன்னேந்து, யாவரையுங் களைந்து, விண்ணவரும் திடுக்கிடும்படியாய்த் திவ்வியாஸ்திரம் தொடுத்து, அந்தச் சிந்துபதி தலையை வந்தவேலை நிறைவேறியதெனச் சிந்திவிடக் கடவாய்!" என்று ஸ்ரீயப்பதியானவர் சமயோசிதமான புத்திசொல்ல, அவ் வாசகத்தைத் தனஞ்செயன் கேட்டு அளவிறந்த சந்தோஷமுற்றுச் சரிதான் சரிதானென்று உறுதியா யுட்கொண்டு, மனோவேகத்திலு மேலான வேகமாகிய பலவாளிகளால், பக்கின்றவர், யுத்தமுனையிற் புக்கின்றவர், தொக்கிக்கணைகளைத் தொடுத்து வந்தவர், கைக்கார ராய் நின்ற மிக்கோர் இவர்கள் முதலிய யாவரையுஞ் சக்கை சக்கை யாய்ப் பெயர்த்துத் திரிலோகத்திரதாரியாகிய முதல்வன் ஸர்வ ஸம் மாரகாலத்தில் ருத்திராபிசங்கொண் டெழுந்து பஸ்மீகரப்படுத்து முறைமைக் கொப்பாகப் பாரெல்லாம் படபடத்து நடுங்கும்படியாய் எந்தெந்த வேளையில் எவரெவர்களை எந்தெந்தப்படி செய்ய வேண்டுமோ அந்தந்தப்படி அந்த வேளையில் அவரவர்களை யடித்து அல்லோல கல்லோலஞ் செய்து அலங்கழித்து வருங் காலையில், "ஓ மகாராஜனே! ஆபத்பாந்துவாகிய அரிவாசு தேவன் அருச்சுனன் பொருட்டிற் செய்த தண்ணளியாகிய கிருபை யைச் சொல்லுகிறேன் கேளுமென்று வைசம்பாயனர் சொல்லு கிறார்— ஓ அரசர்க்கரசாகிய அபிமன்னுவின் பௌத்திரனே! சமுத் திரத்தை ஆடையாக வுடுத்த பூதேவியாருடையவருத்த நீங்கும்படி யாகவும், தெய்வத்தன்மையாய் அவதரித்த பாண்டவர்களின் இட ராகிய துன்ப நீங்கும்படியாகவும், சாயங் காலத்துக்குள் சயிந்தவனை ஸம்ஹரிக்கிறேனென்று சபதங்கூறி அந்தச் சபதக் தப்பிப்போய்த் தழலில் வீழ்ந்திறக்குஞ் விஜயன் சாகாமல் வாழும்படியாகவும், திருப்பாற் கடலையும் சேஷசயனத்தையும் ஸ்ரீதேவி முதலிய பெரு மிதத்தையுந் துறந்து வசுதேவருக்கும் தேவகி தேவியாருக்கும் புத்திரனுகப் பிறந்த மாயோன், ஒற்றைச் சக்கரத்தையுஞ் சப்த மாவையுங் கொண்ட ரதம் பெற்ற சூரியனை மாயையினுல் மறைக் கும்படியாகத் தமது கைக்கிசைந்த சக்கரத்தை அனுப்பினர்.

உடனே அந்தச் சுதரிசனமானது சுவாமியினுத்தரவின்படி சென்று சூரியனை மறைத்து, அந்த ரணகளத்தின் உதிரச் சிவப்பைப் போல் மேற்றிசை யெல்லாஞ் செவ்வானம் பரவத் திகழ்ந்தது.

அருச்சுனன் கண்ணனுற் சில முறைமை கூறக் கேட்டுச் சயத்திரதனையும் அவன் தந்தையாகிய சிந்துராஜனையுஞ் சங்கரித்தல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! கரும் பொன்னுகிய அயத்தில் ரசத்தைப் பொருத்தப் பசும் பொன்னுகும் பான்மை போல் அருச்சுன னிமித்தமாக உலகத்திலுள்ளோர் பலரும் விக்ஞான வந்தராகும்படி பகவத்கீதையைத் திருவாய்மலர்ந்தருளிய காரணன் இக்காரணஞ் செய்ததியாதவர்களாய், நாட்செய்யுந் தினகாதனுகிய சூரியன் ரதத்துடன் மேற்றிசையில் மறைந்து போனுனென்று வலம்புரி மாலையணிந்த மன்னனும், அவனைச் சார்ந்த மன்னரும், படைவகுத்திருந்த கால்வலைச் சேனைமல்லரும் மகிழ்ச்சி கொண்டு ஆர்ப்பரித்தார்கள். சயத்திரதனவன் இறந்து போவோமென்றிருந்த பிராணபய மொழிந்துபோய் விட்டதென்று பூரித்து, இரதத்துடன் வெளிப்பட்டுத் தலைகீட்டி, செவ்வான மிருந்த குடதிசையாகிய மேற்குத் திசையைப் பார்த்தான். அந்தக் காலத்தில் திருமாலானவர் செயங் கொள்ளுக் தேவதத்தனைப் பார்த்து, "உன் பகைவனுகிய சிந்துதேசனைக் கண்டாயா?" என்று எச்சரித்து, "அதோ தலை கீட்டி வெளி வந்திருக்கின்றன் பார்" என்று காட்டி, "இது நல்ல காலம் அர்ச்சுன! இதல்லாமல் இன்னெரு பொல்லாத பிரமாத மிருக்கின்றது. அஃதென்னவெனில், இந்தச் சயத்திரதன் தந்தையாகிய சிந்துபதியானவன் மதிப்பிற் சிறந்த தன் மகன் தலையை வெட்டி எவனெருவன் கையால் நிலத்திற் றள்ளுகிறனே அவனுடைய தலை அதேகஞ் சுக்கலாய்ப் போகக்கடவதென்று சத்தருரோசமாகிய சூரிய மந்திரத்தை உச்சரித்து மனவுறுதி கொண்டு, தன்னெண்ணை நிறைவேறும்படியாய்ச் சிமந்தபஞ்சக மடுவில் தர்ப்பணஞ் செய்கின்றன். ஆதலால், பொழுது போச்சுதென்னும் பூரிப்புடன் உல்லாசமாய் வெளிப்பட்ட இந்தச் சயிந்தவன் தலையை நீ வாங்குவது பெரிதல்ல. அறுபட்ட இவன் தலையானது சிமந்தபஞ்ச தீரத்தில் இருக்கின்ற இவன் தந்தையாகிய சிந்துராஜன் கைபிற்போய் விழும்படியாய் உன் காதத்திற்கிலைசந்த கணையைக்கொண்டு ஓடக் கடவை" என்று சொன்னர்.

இவ்வாறு கிருஷ்ணமூர்த்தி சொல்லிய வர்த்தையை கரேணவன் கேட்டு, நமது சபதம் பலித்ததென்று நானுவித மகிழ்ச்சி கொண்டு, வரத்தினும் பெற்ற விஜய காண்டீபத்தை உரத்தினும் பிடித்து, ஆகர்ண பரியந்தம் வாங்கி யிழுத்து டங்காரம் பண்ணி ஆதிபரனருளிய பாசுபதாஸ்திரத்தைப் பணிந்தெடுத்து, பற்பல வாகிய பத்திர புஷ்ப சந்தனக்ஷதையுங் கொண்டு பூசித்து யோசித்துத் தூபதீபங் கொடுத்து, சிந்துபதி தலைக்கு இலக்காகப் பிடித்துத் தொடுத்து விட்டான். உடனேயப் பாசுபதாஸ்திரமானது உலகங்குலுங்க, உரகருடுங்க, உவரி யொடுங்க, உம்பரடங்க, உம்பலடங்க, ஓதிமமென்னு மலைகள் குலுங்க, உடுபதி கலங்க, உலகுள்ளோர் கண் பிதுங்கும்படியா யெழுந்து, கணித்தவன் தலையைத் துணித்துவந்தது. இவ்விதமாகத் பாசுபதாஸ்திரத் துண்டித்த தலையைப் பூமியில்விழ வொட்டாமற் பிடுங்கித் தூக்கிக்கொண்டு போகும்படியாக வாயுக்கணை முதலாகிய சிலசரங்களை மேலுமேலுந் தொடுத்து, சிமந்த பஞ்சக மடிவிலிருந்து ஜலத்தை யள்ளித் தர்ப்பணம் விடுகின்ற சிந்துராஜனுடைய இருகரத்திலும் விழும்படியாகச் செய்தான். அப்படியே விழுந்தபோது அந்த சிந்துராஜன் திடுக்கிட்டு, தன் மகனுடைய தலையென் றுணராமல், ஐயமாய்க் கையை விரித்து நிலத்தில் மிகுந்த ஜலத்தில் விடுத்தான். அந்தத் தலையை நிலத்திற்போட்ட தக்ஷணத்திற் சிந்துதேசாதிபனவன் தலைவெடித்துச் சாய்ந்து மாய்ந்தான். இந்தச் சமாசாரத்தை இங்கும் அங்கு நடக்கும் சங்கதிகள் தெரிவித்துக் கொண்டிருக்குந் தூதர்களோடிவந்து, சயிந்தவன் தலையானது அவன் தந்தை கையில் வந்து விழுந்து அந்தச் சிந்துபூபதியு மிறந்தானெனா வென்று துரியோதனன் முதலிய அரசரிடத்திற் சொன்னார்கள். அவர்களம் மொழியைக் கேட்டு, பெருமை தங்கிய மாயோனுடைய மகாமாயமென்று தெரிந்து கொள்ளாமல், சூரியனஸ்தமித்தபின் பாதலாற் சபத நிறைவேறியதிற் சேர்க்கையல்ல வென்று முகமலர்ந்து, அகமகிழ்ந்து, உடல் பாரித்து, உள்ளம் பூரித்து, ஆர்ப்பரித்தார்கள். அப்போது முகத்தெளிவும் அழகுங்கொண்ட துரியோதனன் "ஐயோ! அர்ச்சுனன் அக்கினியில் வீழ்ந்திறப்பான். அதைக் கேட்ட மற்றகால்வரு முடிவார்கள். இனிநமக்கொரு பகையுமில்லை." என்று எண்ணினவனுய் ஆ! ஆ! என்று சந்தோஷப் பட்டான்; துள்ளினன். அந்தந்தோ!! அவன்பட்ட சந்தோஷத்தை என்னெரு நாவினும் சொல்லி முடியாது.

கண்ணன் சக்கரத்தைத் மீட்டுக்கொள்ளச் சூரியன் பிரகாசிக்க, துரியோதனன் மருண்டு வினவுங் கேள்விக்கு அங்கிருப்பவர் விடைதரல்

இம்மிதிப்படி யிருக்க, கர்ண ராஜன் சவுபல ராஜன், துச்சாசன ராஜன், துரியோதன ராஜன் முதலாகிய பலருங் கலந்து, "சூரிய னஸ்தமித்தால் தீயில் விழுந்திறப்பேனென்று சொல்லிய மொழி தப்பிச் சிந்துராஜன் சிரத்தைத் தரித்துவிட்டான் சுவேதவாகன னுகிய அர்ச்சுனன்! பார்த்தீர்களோ? இந்த மொழி லேசாகப்போவ தல்ல!" என்று ஆர்ப்பரித்துத் துள்ளினார்கள். அந்த வேளையில் எமது பெருமானுகிய அரவணைச் செல்வன், மாயமாகிய இருட்டுடன் கலந்து மறைக்கும்படியாய் ஆக்ஞாபித்த சக்கரத்தை நீக்கிவிட, உடனே பளிச்சென்று பிரகாசிக்குங் கிரண சூரியனை யாவருங் கண்டு, "அடடா! இம்மென்ன விந்தையாயிருக்கிறது? சப்தபுரவி பூட்டிய சயந்தனமுடைய இணையில்லாத தபனனுனவன் இன்ன மொரு பணிப்பொழுதுண்டென் றிருக்கின்றனே; ஐயையோ!! அப்பா! இது பெரு மோசமா யிருக்கின்றதே?" என்று துரியோ தனன் முதல் யாவருங் கலங்கி ஒன்றுந் தோன்றுமல் மாண்டார் போலிருந்து மீண்டாற்போற் றெளிந்தார்கள். துரியோதன ராஜன் மாத்திரம் மதிகலங்கி, தலைகுலுங்கி, அதிபதியாகிய நிலை விலங்கிச் சம்மதகாஸ்பதமாய்ச் சில மொழிகள் கேட்கத் தொடங்கினன்.—"ஓ விவேகவேதியர்களே! மன்னவர்களே! இந்தச் சூரியன் மறைந்து பிரகாசித்ததற்குக் காரணஞ் சொல்லுங் கள். அல்லது நான் கேட்பதற்கு ஞாயம் விள்ளுங்கள். மிகுந்த விசாலமும் ஆழமும், அகலமும், ஓசையுமுடைய மேற் கடலில் இந்தச் சூரியன் அஸ்தமித்து வீழ்வதற்கு முன்னே கேதுவென்னுஞ் செம்பாம்பானது வெகுண்டெழுந்து விழுங்கி இருக்குமா?" என்று மிகுந்த வேகமாய்க் கேட்டான். அவ்விடத்தில் இருந்த நூலாய்ந்த மேலோர் அவனைப் பார்த்து, "ஓ மஹாராஜனே! தேவரீரெண்ணிய படி சூரிய கிரணமாயிருந்தால் கேது தொடருவான். மற்றக்காலத்தில் தொடர மாட்டான். அப்படியே சூரிய கிரணமென்று யோசிப்போ மாகில் இந்துவும் இரவியுங்கூடிய அமாவாசையா யிருக்க வேண்டுமே அப்படி யிருந்தால் உமது இஷ்டப்படி நினைக்கலாம். அப்படிக்கில் லாமல் இன்று சதுர்த்தசியும் காலை வரப்போகிறது பௌர்ணமியு மாதலால் சூரிய கிரணமென்று சொல்லப்படாது" என்றார்கள்.

அந்த வார்த்தையைத் துரியோதனன் கேட்டு "நல்லது அப்படியல்லவென்றால், தேவேந்திரனவன் தன் மகனுகிய அருச்சுனன் சபதம் தப்பி அக்கினியில் விழுந்து இறந்து போகப் போகிறனென்று புத்திர வாஞ்சையினுற் சப்த மேகங்களையு மனுப்பி, 'நீங்கள் போய்ச் சூரியனை மறைத்துப் பொழுது போனதாகச் சமயங் காட்டுங்கள்" என்று சொல்ல, அவனுத்தரவின்படி மேகங்கள் வந்து மறைந்திருக்குமா?" என்று கேட்டான். அதற்கவர்கள் "ஓ கின்னர பிராணியொத்த மன்னர்பிரானே! மேகங்கள் சூரியனை மறைத்த போதிலும் சூரியவெப்பமுங் கிரணமும் அடங்கி இருட்டுக் காட்டு மேயல்லது போது போய் விட்டதாகச் செவ்வானமிட்டுச் சூரிய பிம்ப மறைய மாட்டாது" என்றார்கள். "அப்படியானுல் நமக்கு வஞ்சமாகியும் பாண்டவர்களுக்குத் தஞ்சமாகியும் இராகின்ற கரியோன் அக்கரையாகச் சக்கரத்தினுல் மறைந்திருப்பானு? ஒரு வேளை உண்டென நினைக்கிறேன்" என்று வணங்கா முடிபெற்ற துரியோதனன் கேட்க, அதற்கவர்கள் "ஐயா! கோடி சூரியப் பிரகாசமுள்ள சக்கரத்தை இந்தச் சூரியன் மறையும்படி விட்டிருந்தால், இவ்வுலகமெல்லாம் கண்கூசும்படி இன்னுமேலான பிரகாசத்தோடு ஜொலித்துக்கொண்டிருக்கவேண்டுமே. ஆகலாற் சூரிய கிரணத்தைக் குன்றச் செய்து மாலைப்போது வந்து மறைக்க, அச்சூரியன் மலை வாயில் விழுந்தன்மையைப்போற் சரியாகக் காட்டிய செவ்வானத்தின் வண்மையை யோசிக்குமிடத்தில் சக்கரத்தினுல் மறைந்ததாக நினைக்கக்கூடவில்லை!" என்றார்கள். அவர்கள் சொல்லிய வசனத்தைக் கேட்ட துரியோதனன் மனங்கொதித்து, "நல்லது நான் கேட்ட கேள்விகளை யெல்லாம் நியாயஞ் சொல்லித் தடுத்து விட்டீர்கள்! அப்படியானுற் சூரியன் ஒரு பனைப்போதாக இருக்கும்போதே மாலைப்போதுகவியச் செவ்வானமிட்டு இருள் வந்து சூழ்ந்ததற்குக் காரணம் என்ன சொல்லுகின்றீர்கள்? சொல்லுங்கள்?" என்று கண் கறுத்து உள்ளம் வெறுத்துக் கேட்டான். அக்கேள்விக்கு வெள்ளமாகிய வேதியர் முதல் சில வேந்தர்கள் கூடி "ஓ மகாராஜனே! உள்ளதை உள்ளபடி சொல்லுகிறோம். எங்கள் பேரில் எள்ளத்தனை வெறுப்புமில்லாமற் கேளும் ஓ வள்ளலே!" என்று சொல்லத் தொடங்கினர்கள்.

கதிரவன் மறைந்தது கண்ணன் செயலென்றுரைக்கக் கேட்ட துரியோதனன் அவரைத் தூஷித்தல்

ஓ துரியோதன மகாராஜனே!

"விரியோத நெடுங்கடலில் வீழ்வதன்முன் விரைந்தரகன் விழுங் கினனே,
வெரியோடி மகனிறக்கு மெனமகவான் மறைக்கமுகி லெவி னனனே,
கரியோன் கைத் திகிரியினன் மறைத்தனனே விருள்பரந்த கணக்கீ
[தென்னே ?"

என்று தேவரீர் கேட்டதும், அதற்கு நாங்கள் விடை கொடுத்ததுஞ் சரியே; ஆனல், "பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தா லெப்பொரு ளும் பேதியாதோ?" என்னு முதியோர் வாக்கியப்படி, ஒருவன் கல் லோர் பெரியோர்களைத் திடுக்கிடச் செய்து அதனல் அவர்க ளுள்ளம் வேறுபட்டுப் பேதிக்குமாகில், எல்லாப் பொருள்களுந் தாறு மாறுபட்டுப் போவது மல்லாமல், இரவு பகலாகும்; பகல் இரவா கும். இதைக்குறித்து வேறே தருமம விசாரிக்க வேண்டியதில்லை!" என்று சொல்லி மேலுஞ் சொல்லுகிறார்கள்—"ஐயா நாமெத்தனை மெய்மையாகப் பாடுபட்டாலுங் காரியமில்லை. ஏனெனில்,

'உந்திரதத் தனிவலவனுபாயத்தால் வருணன்மக னுயிரைமாய்த்தான்,
மந்திரமொன் றறிவித்து வயப்புயமாயிரத்தோனை மடிவித்திட்டான்,
தந்திரமெய்ம் மயங்கிவிழத் தன் சங்க முழக்கினன் றபனன் மாய,
விந்திரசா லமுஞ் செய்தா னிந்திரன்சேய் வெல்லாமல் யார்வெல் வாரே'

ஓ மகாராஜனே! அர்ச்சுனனுக்குத் தேரோட்டுஞ் சாரதியான வன் முன்னம் தன் மார்பில் ஆயுதத்தைத் தாங்கி உபாயத்தால் வருணகுமாரனுடைய பிராணனை மாய்ப்பித்தான்; ஒரு மந்திரத்தை உபதேசித்துத் துரோணசாரியரால் நீர் பெற்றணிந்து வந்த சாலி கவசத்தைப் பொடியாகமாற்றி வைத்தான். பதமவியூகப்பந்திப்பாகிய சேனைகளெல்லாம் மயங்கித்தியங்கி விழும்படியாய்ப் பாஞ்சஜன்னி யத்தை முழக்கினன். பனைப்பொழு திருக்கும்போதே சூரியன் மறையும்படியாய் இப்போதிவ் விந்திரஜாலஞ் செய்திருக்கின்றன். இப்பேர்ப்பட்டவன் பக்கத் துணையும் உதவியும் கிடைத்திருக்கும் போது இந்திர குமாரனுகிய சுந்தான் ஜெயம் பெறுமல், இன்னு மெவர்கள் ஜெயம் பெறப் போகின்றார்கள்? ஓ இக்குலத் தோன்ற லாகிய ஏந்தலே!" என்று எல்லோரும் கின்று ஏக்கங் கொண்டுரைத் தார்கள். அச்சமயத்தில் இவ் வார்த்தைகளை யெல்லாம் மனங்

கொண்ட மன்னர்க்கிறையாகிய துரியோதன ராஜன் மனமழன்று வயிறெரிந்து, வாள்விழி சிவந்து, மகத்தாகிய துக்கத்துடன் பெருமூச்செறிந்து, வாய் விட்டிதனைச் சொல்லுகின்றான்—

கேளுங்கள் என்னியதம்போன்ற இஷ்டர்களே!

" மூடை யெடுத்த கவரீதந் தெரிட்டுண்டுங் கட்டுண்டு மூதலுணுகக்,
சூடை யெடுத்து மழைதடுத்தும் வஞ்சனைக்கோர் கொள்கலமாங் கொடிய பாவி,
படை யெடுத்து வினை செய்யேனெனப் புகன்ற மொழிதப்பிப் பகைத்தபோரி,
னிடையெடுத்த நேமியினுல் வெயின் மறைத்தா னின்னமிவ னென் செய்
யானே "

இந்த மஹாமாயக் கிருஷ்ணனவன் கஞ்சனுடைய காராக்கிரகத்திற் பிறந்து கானவாகிய இடையர் வீட்டில் வளர்ந்து, கன்று மேய்த்து, ஆயர்மனை தோறும் பாலும் தயிரும் வெண்ணெயும் திருடியுண்டு, ஆச்சிமார் எல்லாம் அசோதையினிடத்திற் சென்று, என்னடி அம்மா இங்கே வந்தால் இந்தக் கிருஷ்ணன் பாச்சிசோச்சி யென்றான். அங்கே வந்தால் பானைபானையாய்ப் பால்தயிர் வெண்ணெய்களைக் கொள்ளை இடுகிறான்" என்று பிராது சொல்லிக் கொண்டபோது, அந்த அசோதை யென்னும் இடைச்சி பிடித்து அணைக்கயிற்றுலணைக்கக் கட்டுப்பட்டு அடியும் பட்டான். இதல்லாமல் பூர்வத்தில் அந்த முல்லை நிலத்தாரெல்லோரும் முல்லை நிலத்தலைவனுகிய இந்திரனுக்கு வருஷந்தோறும் ரைவதக சயிலத்தினிடத்திற் பொங்கலிட்டுப் படைப்பதை மாற்றி, கோவர்த்தன கிரியினிடத்திற் பொங்கலிடச் செய்து, தானுங்கூட இருந்து சட்டமாய்ச் சாப்பிட்டான். இந்தச் சேதியைத் தெரிந்து கொண்ட தேவேந்திரன் கல்வருஷம் வருஷிக்கும்படி மேகங்களுக்குக் கட்டளையிட்டபோது அவ்வருஷத்தைக் காற்று மழையாற் கலக்கி அவ்வண்ட ரெல்லோரும் விசனங்கொண்டு பெண்டு பிள்ளைகளுடன் கோவென் றலறி என்னடா அப்பா கிருஷ்ணு வென்று கேட்ட காலத்தில், " உங்களிடத்திற் பொங்கற் பூஜை வாங்கிக்கொண்ட தெய்வம் எப்படி உங்களை ரக்ஷிக்காமற் போகும்? பார்ப்போம் வாருங்கள்" என்று அழைத்துப்போய் நிறுத்தி, கோவர்த்தன கிரியைக் குடையா யெடுத்து மழையைத் தடுத்து, இன்னும் பல விந்தைகளெல்லாஞ் செய்தான். உலகிலுள்ள வஞ்சனை யென்னுஞ் சரக்குகளெல்லாம் நிரைந்த கப்பலை யொத்த இப்பாவியானவன் நான் படைத்துணை கேட்கப் போயிருந்த காலத்தில் என்னை மோசஞ் செய்து, அர்ச்சுனனுக்குச் சாரதியாய் ஓப்புக்

கொண்டான். ஆயுதமெடுத்து அமர் செய்யேன் என்று எனக்கு உறுதிசொல்லி, இப்போ தவ்வார்த்தை தப்பி, உமக்கோ எனக்கோ வென்று பகைத்துப் போர் புரியும் நடுச்சமயத்திற் சக்கரத்தை விடுத்துச் சூரியனை மறைத்து, என் மைத்துனனைக் கெடுத்து அர்ச்சுனனைத் தப்பி விடுத்தானே! இனிமேலும் இவனென்ன செய்ய மாட்டான்? இவன் சொல்லை நானெப்படி நம்புவேன்? தெய்வமே! இப்பேர்ப்பட்ட வஞ்சகத் தீயனுக்கு நீ என்ன கதி அமைப்பாயோ நான் அறியேன்" என்று இரைந்தெழுந்து விரைந்து சொல் கிறான்—

துரியோதனதியர் பாண்டவரைக் கொல்வது அவராற் கொல்லப்படுவது என்று சபதங்கூறி வந்து அர்ச்சுனனுல் முறிபட்டோடுதல்

ஓ மித்திரர்களே! ஓராழித் தேருடைய சூரியனுனவன் அஸ்தமனமாகு முன்னே போர் விளைத்துப் பாண்டவரைக் கொல் வது இல்லாவிட்டால் அவர்கள் கையால் நானு மிறந்துபோகிறேன். இது நிச்சயம்— என்று சகோதரர்கள் முதலாகிய சேனைகளுடன் சென்று பாண்டவரை வளைத்துக் கொண்டான். இவ்விதமாகச் சொல்லி யெழுந்த துரியோதன மகாராஜனுடைய வாக்கியத்தைக் கேட்ட கொடித்தடந் தேரேறிய கோவேந்தரெல்லோருந் தங்கள் தங்கள் மட்டிலும் ஒவ்வொரு சபதங் கூறிக்கொண்டு, மற்றத் தேச பாஷை மன்னவராகிய ஜெய வீரருடன் சேனைகளையும் அழைத்துக் கொண்டு, ஒரு க்ஷணப்போதிற்சென்று தனித்தனியே சண்டை செய்தார்கள். அப்போதந்த யுத்தகளத்தில் ஆற்றப் பெருக்கம் போல் அலையெறிந்தோடுகின்ற ரத்த வெள்ளமானது ஒரு நிமிஷத் தில் சேறாகி வரண்டு திரண்டு உருண்டு பொடியாகும்படியாய்த் தேர் செலுத்தி வந்த பீமார்ச்சுன சாத்தகி மூவரும், தங்கள் சேனையை வளைத்துச் சண்டைக்கு வந்து தடுக்கும் சண்டைக் கண்டு, தேரு டன் தேர் நெருக்கி, செந்தழல் கக்கிய கொந்தளர்க் கணைகளைத் திசையெங்கு நிறைய இறைத்தார்கள். இவர்களுட னெதிர்த்து மாறுடிப் போராட வந்த வயவீரர்களை யெல்லாம் வானகஞ் சேர்ந்து வாழும்படி அனுப்பி வைத்தான் பவள மலைமேல் பாற்கடல் வழிந்த பான்மைபோல் திருநீற்றின் தூளிதத் திருமேனிச் செல்வனுகிய ஒப்பற்ற சிவபெருமானுடன் வில் யுத்தமும் மல்யுத்தமுஞ் செய்து

வென்று பாசுபத முதலாகிய பாக்கியங்களைப் பெற்ற பற்குண னென்னும் பராக்கிரமன். மறுபடியும் பின்னு முன்னும் பாணங் களைப் பொழிவதினுற் கிருபாச்சாரியருடைய மார்பில் மூன்று கணை சென்று ஊன்றிப் பிராண வருத்தம் விளைத்ததின்பேரில், கிரி யாணம் நமக்கென்று முடி சோர்ந்தயர்ந்து தேரின்பேரில் வீழ்ந்தார். மாமனிளைத்ததைக் கண்டு பரிந்து வந்த அசுவத்தாமன் ஒரு கணைக்கு ஆற்றமாட்டாமல் வில்லை நிலத்திலூன்றி யுத்தஞ் செய் யுந் தலத்தைத் தாண்டிப் புறங்காட்டி ஓடினான். அரவக்கொடி தரித்த துரியோதன மகாராஜனவன் தன்னுடன் வந்த நரபால ருடன் தேரிழந்து, வில்லிழந்து, சபதஞ் சொல்லிவந்த சொல் லிழந்து, கல்லுறுத்தும் பூமியிற் கால் ஓட்டமாகத் தோற்றுப் போனான். கதிரவன் புத்திரனுகிய கர்ணன் எதிர்த்துச் சண்டை செய்யவாராமல், இருந்த இடத்திற்றானே யிருந்து நடந்த காரியங் களைத் தெரிந்து கொண்டோடினான்.

இப்படிக்குச் சத்துருக்க ளெல்லோரும் புறமுதுகிட்டோடச் சாடியும், அருச்சுனன் சந்தோஷ மில்லாமல், முகம் வாடி, தன்னு டைய கணைபட்டுப் பொன்மலைபோற் சாய்ந்து அயர்ந்து தேரின் மேல் வீழ்ந்த கிருபாசாரியாருக்கு என்னமோ ஏதோவென்று உள் ளந்தளர்ந்துவாடிக் கண்ணீர் வெள்ளமாயோடக் கலங்கினான். அப் படி கலங்கிய நிலையைப் பச்சைவண்ணப் பரந்தாமன் பார்த்து "ஓ என் மைத்துனனுகிய அர்ச்சுன! அந்த கிருபாச்சாரியாருக்கு யாதொரு கெடுதியுமில்லை. அவர் சிரஞ்சீவி," என்று காண்டீபனைத் தெளிவித்துத் தம்முடைய கையால் மார்புடன் அணைத்துத் தழுவி, "ஓ கோதிலாப் பாக்கியக் கோமள மணியே! ஓ அநேக நாள் எண் ணிச் சொல்லினும் அளவிப்படாத குருசேனைகளைக் குறைத்துக் குறித்த சபதத்தை முடித்துவென்ற கோவே! உனக்கு நிகரார்" என்று உந்திபூத்தோனென்னும் உவணமுயர்த்தோன் சந்தோஷ சித்தனுய்ச் சொல்லி, அர்ச்சுனன் அந்த வாசகத்தைக் கேட்டு நாப் புலர்ந்து, "ஓ காரண ஆரண பரிபூரண காரணனென்னுந் திருநாமம் வாய்ந்த எங்களுதனே! தேவரீருடைய கிருபையினல் ஜெயங் கொண்டதல்லது என்னல் வென்றே னென்னும் இறுமாப்பு சிறிது மில்லை. ஓ என்னுயிர்க்குயிராகிய இறைவனே!" என்று, இறைஞ்சிக் கூறலுங் கிருஷ்ணமூர்த்தி மகிழ்ந்து, "அப்பா கிரீடி! காலமேமுதல் இதுவரையிலும் என்னமோ ஏதோவென்று கலங்கியிருக்கும் உனது தமையனுகிய தருமராஜ னிடத்திற்குப் போகலாம் வா" என்று

சொல்ல, நல்லதென்று வண்டணி மாலையான் உடன்பட்டு, நராதிபர் புகழுஞ் சாத்தகியும் வாயுபுத்திரனும் இருபக்கத்தில் நிறைமணிப் பதக்கம்போல் வரவும், தன் மனதுக்கிசைந்த உத்தமோசா உதார்ம னென்னும் மைத்துனராகிய சக்காரூஷகர் மேற்சொல்லிய பதக்கத் துக்கு முத்துத் தொங்கட்டம்போல் அருகோடி நடக்கவும், அனந்த கல்யாணகுண பூஷண அலங்கார ஆனந்த சந்தோஷச்செருக்குடன் தான் நடுநாயகமாயிருக்கவும், ஆதிமூலக்கடவுள் முன்னணிமணியாய்த் தேரை நடத்திவரவுமாகப் பிரயாணமாயினன் அர்ச்சுனராஜன்.

தருமராஜன் வெற்றி பெற்றுவந்த கிருஷ்ணார்ச்சுனராதி யோரைத் தழுவிச் சன்மானித்தல்

அப்போது வழியிற் குறைந்த போரங்க முண்டத்துடன் சிறந்த கவந் தங்களோடு மிடமும், அரிதாகிய பிணங்கள் குவிந்த மேடும், மிகுதியாய்க் கூடிய பைசாசக் கும்புகள் பேராசையுடன் பாடியாடிய தடமும், காக்கை, பருந்து, கழுகு முதலிய பல பறவை கள் கத்திப் பறந்து சுற்றிப் பிணங்களைக் கொத்தித் தத்தித்திரியும் தானமும், சலசலப் பேரோசையுடன் சமுத்திரம்போ லோடுகின்ற உதிரப் பள்ளங்களின் சார்பும், ஆகிய இவைகளை யெல்லாம் நாடி நாடிச் சத்துருக்களுண்டோ வெனத் தேடித்தேடி, கிழக்கு முதலிய எண் திக்குகளையும் பார்த்துப் பார்த்து, அகப்பட்ட பேரைக் கரணை யாடிவந்து துரோணருடன் மிக்க யுத்தம் விளைத்து அவரிடத்திற் போர்செய்த ஜெயமாகிய பூரிப்போசையுடன் புயமிரண்டிலும் லட்சுமியைக்கொண்டு நிற்கிற தருமராஜனுக் கெதிர்சென்று ரதம் விட்டிறங்கித் தீர்க்கதண்டமாகப் பணிந்து நின்றார்கள். தனஞ்செயன் சொல்லிய சபதப்பிரகாரம் சிந்துபதி யழிந்த செய்தியை இவர் களுக்கு முன்னமே வந்து தூதுசொல்லத் தக்கவர் சொல்ல அவ் வார்த்தையை இருசெவியிலும் அமுது சுரப்பதைப்போற் கேட்டு மகிழ்ந்திருந்த தருமராஜர் இவர்களைக் கண்டவுடன் சூரியனைக் கண்ட தாமரைபோல் அழகிய முகமலர்ந்து, கிருஷ்ணார்ச் சுனர் இருவரையும் மார்போடிறுக அணைத்துத் தழுவிப் புகழ்ந்து, தேகமுழுமையும் நிணச்சேறும் இரத்தமும் திவலை திவலையாய்த் தூளித்திருக்குஞ் செருக்காந்தியையுடைய பெருமானுக்கு அள வில்லாப் பிரியவசனங்களைச் சொல்லி, "ஓ! என்னனுஜனைக் காத் துக்கொணர்ந்த என்னப்பா" என்று கூறி வாயு புத்திரனை பீமசேனனை வாரிச்சேர்த்து மாயனிளவ லென்னுஞ் சாத்தகியை

வயிற்றிலணைத்துப் பக்கத்திற்காயும் தன்மையும் கனற் பொறியும் கக்காகின்ற கடுங்கட் கணையராய் நிற்கின்ற உத்தமோசா உதார்மன் இவ்விருவருக்கும் இங்கிதமாகிய இனிமை யுரைத்துச் சிந்தாகுலம் தீரும்படியாய்ச் செந்தாமரைக் கண்ணனுடனே சிற்சில வார்த்தைகளே நேச விசுவாசமாகப்பேசி "இன்றைப் போரில் வெற்றிவயம் பெற்றுவரா நின்ற உம்மைப் பார்ப்பதற்கு என் கண் பரிசுத்தமான தவங்கள் செய்திருந்தன" என்று சொல்லி இன்னும் பலவாறுகிய இங்கித வார்த்தைகளே இதயங்களிக்கப் பேசிக்கொண்டின்பத்துடனிருந்தார்.

துரியோதனன் துரோணாசாரியரிடஞ் சென்று முறையிட்ட, அவரவனைத் தேற்றி மீண்டுஞ் சண்டைக் காயத்தப் படுத்தல்

இம்மாதிப்படியிருக்க, அருச்சுனனால் அடிபட்டு கிலேகெட்டு முதுகிட்டோடிய அரசர்க்கரசாகும் துரியோதன ராஜன் மெத்த பலங்கெட்டு, யுத்த நிலம்விட்டு ஓடிய படைஞருடன் திரும்பித் தனக்கு ஜெயம் வரவேண்டுமென்று சாலிகவசந்தரித்தனுப்பிய தனுவாசிரியரிருந்து சண்டை செய்யா நின்ற சதுரங்கப் படையின் பந்திப்பையுடைய சமர்முனைக்கு வந்து மனம் நொந்து, "ஓ! சேனாதிபதியாகிய ஐயா! மின்னொளி போலும் பொன்னொளி காலும் விதரண முடிசிறந்த சிந்துவேந்த னிறந்த விதத்தைக் கேளும்" என்று விளம்பி மதத்த யானைபோல் மனநொந்து நின்றான்—ஓ ஜனமேஜய மகாராஜனே அவனுரைனில், நாடு முதலியவை கொடுத்தாலும் தங்கட்கீடல்ல வென்னும் பெருமையிற் சிறந்த பாண்டவர்கள் தாங்களிருப்பதற்கு ஐந்து வீடாகிலும் கேளுமென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியைத் தூதனுப்பியபோது, ஈயிருக்கு மிடமும் இல்லை யென்றுரைத்த பெரும்பாவியானவன். இப்பாற் சிந்துபூபதி தலைவெடித்திறந்தானென்றுரைத்த செயல்களெல்லாம் ஆசானுகிய அந்தணன் கேட்டு, அரவக்கொடிக் கதிபனுகிய அரசனை நோக்கி, "அரசே! உனக் கொரு மர்மஞ் சொல்லுகிறேன் கேள். எப்போதும் தர்மம் வெல்லும் பாவம் தோற்கும்; எத்தனை விதபத்திரம் பண்ணினுலுங் காரியமில்லை யென்று உன்மனதுக்கு நேராய்த் தெரிந்துகொண்டாயல்லவா? உங்கள் பாட்டனுகிய பீஷ்மரும் துரோணரும் கர்ணன் முதலிய பேர்களுஞ் சொல்லிய நன்மொழிகளையெல்லாம் இகழ்ந்து, உன்னைப் பணிந்து தாழ்ந்து தன்மைபெற்ற தாழ்ந்த போர்

களைச் சேர்ந்து, அவர்களுரைத்த உரைவழிநாடி, இவ்விதமாகிய பழிதேடிக் கொண்டாய் ஓ உத்தமனே! ஆகிலும் உன்னை வெறுப்பதுக் தகுதியான காரியமல்ல. எதுவும் ஊழ்வினை முறையென்றுணர்ந்தக்கது. அப்படி யிருக்க, நீ அதைச் சற்றேனும் யோசிக்காமல் என்னை வெறுத்துப் பேசுகிறாய். இதனால் உனக்கென்ன லாபமுண்டு. ஓ இமையவர் புகழும் ஏக்தலே! இப்பவும் நன்மைவென்று சென்ற நரன் முதலாகிய பேர்களை நாம்போய் வளைத்துப் பலத்துடன் மோதி, பாண்டவரில் ஒருவரையேனு மடித்து, அல்லது கைப்பிடியாகப் பிடித்து, நமக்கு நேரிட்டிருக்கிற வெறுப்பைத் தவிர்த்துக்கொண்டு அப்பால் நாம் வெற்றி பெறுவோம். ஆதலாற் புறப்படுங்கள்" என்று சொல்லினர்.

துரியோதனன் கர்ணனிடஞ் சென்று துரோணர் கூறியவற்றை வெறுத்துரைக்க, அவனவனைச் சிலவற்றால் தேற்றி யுத்தசன்னத்தனுதல்

இதனைக் கொஞ்சங் தைரியமேலிட்ட துரியோதனன் மனமெலிவு நீங்கி, தனக்குச் சமானமான கல்வியிற் சிறந்த கதிரவன் குமாரனிடத்திற் சென்று "அண்ணா! வில்வேதியனை யடுத்து என் கதி இப்படியாய் விட்டதே" என்று விளம்பினேன். அதற்கு அவர் சொன்னதாவது, "மறுபடியும் அணிவகுத்துப் படையோடுசென்று ஐவரை வளைத்துக் காரணப்படி விற்போர் விளைத்து ஒரு கை பார்த்து விடுவோம்" என்று உறுதியாய்ச் சொல்லுகின்றார். "இவையெல்லாஞ் சரிதான். இந்தச் சொல்லை நானெப்படி நம்புவது? இன்று காலைப்போதில் கெடுங்கடல் போல் கெருங்கிய பூரணச் சேனைகளைப் பிரித்துப் பிரித்து, ஐந்துவித வியூகபந்தியமைத்து, 'அர்ச்சுனனை உள்ளே புகவொட்டாமல் அமர் புரிந்து சிந்து ராஜனைத் தேறச் செய்கின்றேன்' என்றார். இதோ ஜீவனுடன் தேற்றி விட்டாரல்லவோ? இது பிரத்தியக்ஷமாயிருக்க, காட்டில் கர்தமூல பலங்களைத்தின்று காலங் கழித்துக்கொண்டிருக்கும் அவ்வைதிக சாந்தஸ்த தேசிகன் வாய்மையை எவ்விதத்திற் தெளிந்து நம்புவது?" என்று சொல்ல, அங்கதேச ராஜனென்னும் ஈகையாளன் "திங்களின் குலக்கொழுந்தாகிய மங்களாகரனே! கேளும்—நெட்டராயமாகிய வரிவில்லை வட்டகாரமாய் வளைக்குங் குருவாகிய துரோணரால் ஏதொரு வஞ்சனையுமில்லை. அவர் நம் சேனையைப் பலம் பண்

ணியதற்கு யாதொரு கலனுமில்லை. அந்த அர்ச்சுனன் தான் கற்ற சாஸ்திர நுட்பங்களினாலும், அவன் பெற்றிருந்த மேலாகிய வரங்களினாலும், நமது கிரகசார காலத்தினாலும், வெப்பமாகிய போரிலொட்டி முனைந்து பூர்வ வினையின் வல்லமையால் யாவரையும் அசைவற்று நிற்கக்கண்டு ஜெயம் ஜெயமென்று தன்னெண்ணம் நிறைவேற்றிக்கொண்டு போனான். மேலும் எங்கேரமு மெரிந்து மூடிக்கொண்டிருக்கும் அக்கினிக் சிருப்பிடமாகிய ஆரணியத்திற் பன்னிரண்டு வருஷம் ஓட்டி வைத்தோம். வளப்பமாகிய நல்ல காட்டில் சவுக்கியமாக நலம் பெற்றிருந்த பாக்கியவான்களிலெத்தனபேரோ செத்தார்கள். காட்டிற் கலங்கி வருந்தியிருந்த பாண்டவர்களில் ஒருவராவது சாகலாகாதா? முன்னம் அன்னத்தில் விஷங்கலந்து ஊட்டி வைத்தோம், ஆற்றிற் கட்டிப் போட்டோம். வசி காட்டி வைத்தோம், அரக்குமாளிகை கட்டிக் குடியேற்றி அவ்வீட்டை கொருப்பிட வைத்தோம், பூதத்தை விட்டோம், நம்மாற் கூடியவரையிலுஞ் செய்து வஞ்சனை யில்லாமற் பார்த்து விட்டோம். இவைகளினாற் பாண்டவருக்கு ஏதாகிலும் ஒரு தீங்குண்டா! சாவுண்டா! கேடுண்டா! இப்படியிருக்க, நாம் கையிலாகாதவரைப்போல் ஒருவரை வெறுத்துக்கொள்ளலாமா? அது உலகத்தில் பழிப்பான காரியமல்லவா? ஓ உரகத்துவஜ அதிபதியரசே! ஆசாரியன் சொன்ன வாசகப்படி அவர்மேல் பொறுப்பை வைத்து உம்மையே நம்பினேனென்று சொல்லி, இன்னுஞ் சண்டை செய்து பார்ப்போம். விதிவழி தப்பினேனொருவருமில்லை" என்று துரியோதனன் வெப்பமாறும்படி சொல்லி, கதுர்வேதியரோடு கலக்கு வேந்தர் யாவரும் விரைந்துவர நாலு படையுடன் நடந்து, இனி எவ்வுலக நிற்குமென்று எல்லோருமேங்க, இங்கித சங்கீத மங்கள ஜயபேரிபறை முதலிய வாத்தியங்களு முழங்க, திரிலோகத்திலுந் தனது திருநாமப்புகழை முறைபெற நிறுவிய கிரணைக்கதிர் விடும் அருணன் மைந்தனுகிய மிகுகொடையாளன் அலங்காரத்துடன் ஆர்த்தெழுந்து தேர் நடத்திச் சூழ்ந்தான். உடனே அரவக்கொடி படைத்த துரியோதன மகாராஜனும் இனி நமக்குப் பயமில்லை யென்று ஒருவாறு தேறித் தனது தம்பிமாரோடுஞ் சில தாணிபரோடும் வந்து சேர்ந்தான்.

துரியோதனுதியரோடு துரோணாசாரியர் சபதங்கூறி மீண்டும் யுத்தஞ் செய்யப் புகுதல்

அந்த வேளையில் தன்பேரிற் சிந்தை கொண்டு வந்து துரியோதனனுடைய பந்தமுணர்ந்த சொந்தமாகிய துரோணாசாரியர் மனத்திற் கோபாக்கினி குடிகொண்டெழ, அவ்வக்கினியானது கொழுந்து முனையிற் சிந்திய பொறியைக் குபுகுபு திகுதிகு வென்று இருவிழிகாட்ட, அவ்வக்கினியின் புகையை மூக்கிலிருந்து வரா நின்ற பெருமூச்சாக விட்டும் பெருங்கோபங் கொண்டு, துரியோதனன் முதலாகிய தார்வேந்தருக் கெதிர்வந்து நின்று, "இவ்விடத்திலிருக்கும் பல்லோருமறியச் சொல்லுகிறேன் கேண்மின்கள்! நானெடுத்துப் பிடித்த என் வில்லுடனும் இப்போது ஏறிய தேருடனுஞ் சத்துருக்களாகிய பாண்டவரைக் கொன்று, சமர வென்று, நாகக் கொடி கதிபனுகிய சுவமணிமுடித்தராதிபனுடன் இந்தத் தரணியை ஆளுகிறேன். இல்லாவிட்டால், அந்தப் பாண்டவர்கள் கையால் மாளுகிறேன். இம்மிரண்டி லொன்று தெரிகிறவரைக்கும் இந்த ரணகளத்தி லிருப்பேனே யல்லது, ஆதரவாகிய பாசறை வீட்டுக்குப் போகேன்!" என்று யாவரு நடுங்க அருஞ் சபதம் புகன்று, 'சுப்ரமண்யக் கடவுளென்று சொல்லும் அற்புதப் பிள்ளையாகிய அசுவத்தாமனை யழைத்து, அழகிய ஒளிமிகுந்த அவனுடைய முகத்தைப் பார்த்து, "அப்பனே! நான் பேசிய சபதத்திறத்தைத் தெரிந்து கொண்டாயல்லவா? எனக்கு முதற் சத்துருவாயமைந்துள்ள விற்றிறப் பாஞ்சாலர்களுடைய முடித்தலைகளையெல்லாம் அடியோடு கெடுத்துச் சிதைத்து விடுகிறேன். ஒருவேளை கான்செய்த யுத்தமுனையிற் பாஞ்சாலப் பூண்டுகளிற் சிலவற்றைப் பிராணனுடன் பிழைத்திருக்கும்படி மறந்து உயிரழிந்துப் போவேனுகில், அவர்களை வேரறக்களைந்து முடிப்பது எனக்குப் பிள்ளை யென்று வந்த உனக்கு அருங்கடனுக மனங் கொள்ளுவாய்!" என்று சொன்னுர். அசுவத்தாமன் வேறு சிந்தையில்லாமல், தந்தை தந்தமொழியைத் தலைமேற் கொண்டான். ஓ மகாராஜனே! தகப்பனிறப்பா னென்பதை அவன் நினைக்க வில்லையோ வென்று கேட்குமிடத்தில், தானிருக்கிற வரையிலுந் தனது தந்தையின் பிராணனுக்கு அழிவு வருமென்று எள்ளத்தனையுஞ் சிந்தையி னினையாத செல்வனவன். இந்தப் பிரகாரந் துரோணாசாரியராகிய சேனுதிபதி சபதங்கூறித் திரண்ட சேனை

களுடன் புரண்ட கடற்போற் பொங்கிவரும்போது, வில்லாளர் முதலிய வல்லாளர் செவிகளெல்லாஞ் செவிடுபடும்படியாய்ப் பேய்கள் கைகொட்டிக் கொண்டானடிக்கும் ஓசையும், அப்பேய்கள் உறிஞ்சிக் குடிக்குங் கொழுப்பாகிய உதிரக்கூழி னோசையும், இரத்த நதிபெருகி மடமடவென ஓடிவிழும் ஒலியும், கவந்தங்களாகி நெருங்கிவிழும் பிணவொலியும், பேயின்பிள்ளைகள் பேசிக்கொண்டாடும் பேச்சொலியும் பற்றுபோல் அந்தரத்திலெழுந்த தலைகள் வந்து விழுகின்ற வீச்சொலியும் அடங்க, யாவருமாசையுடன் வில் வளைக்க அவ்வில்லி னிருகுதைகளும் பொருந்தும்படி நாணிழுட்டிய குணத்தொனியும், கர்கரத்தொனியுடன் தேர்க்ளோடுஞ் சக்கரத் தொனியும், குதிரைகள் அணுமானிக்கின்ற ஓசையும், துதிக்கை பெற்ற தும்பிகள் வீறிடுமோசையும், படைமள்ளரின் ஆரவார அதிர்ச்சியும், பாண்டவர்களின் செவியடைக்கப் பரவின. இத்தப் பேரொலியைக் கேட்டவுடனே பொழுதிருக்கிற வரைக்கும் யுத்தஞ் செய்வதற்கு மறுபடியும் வந்தார்களென்று பாண்டவர்கள் இருதோளும் புளகமுற்று எழுந்து பார்த்து, முந்தி விரைந்து தாங்களுந் தங்களுக்குப் படைத்துணைவந்த வீரவேந்தர்களும் வாத்தியங்களுடன் இரத முதலிய படைகணுன்குந் தங்களைச் சூழும்படியாய் நெருங்கியெதிர்த்து நின்றார்கள். பூர்வத்திற் காண்டவ வனத்தைக் கனலுக்களித்த காளையாகிய காண்டீபன் கண்ணன் விடுக்குந் தேர் ஏறிச் சென்று காண்டீபத்துடன் முன்னின்றான். இந்த இருவருடைய படைகளு மெதிரெதிராகக் குழுகியிரைந்து போர்புரியுஞ் சிங்தையராய்ப் பொங்கிச் சினந்து நின்றனர்.

தருமராஜனுல் துரியோதனனுங் கர்ணனுதியோரு முறிபட்டு, இவர்கட்குத் துணைவந்த சிபிராஜகுமாரன், மத்திரராஜ குமாரன் இவர்கள் வதை

அச்சமயத்தில் அரவுயர்த்த கொடிதரித்த துரியோதனராஜன் மைத்துன னிறந்த மனஸ்தாபத்தால் இனிப் பிராணபயம் வைக்க வேண்டியதில்லை யென்றும், ஒருகைபார்த்து இவ்விடத்தில் என்னுயிரை யொழித்து விடுகிறேனென்றும் வீரமாகிய துணிவைக் கொண்டு, விடவிடவென்று வந்து, யாவருந்துதிக்கும் மூரசக்கொடி தாங்கிய தருமராஜனை எதிர்த்து மதர்த்த வயவரிப்புலிபோலதிர்ந்து மலைந்தான். இவர்களிருவரும் புரிகின்ற சண்டையில், இருட்பிரகாசத்தால் பகலிரவாவதையும், ஒளிப்பிரகாசத்தால் இரவு பகலாவ

தையும் பார்த்து ஆகாயத்தி லொன்றி நின்ற அண்டரெல்லாருங் கண்டவண்ணம் உபமானஞ் சொல்லும்படியாய்த் திண்டிறற் சாரதி யானவர்கள் குதிரைகளை மூடுக்க, அக்குதிரைகள் ஒன்றி மேலொன்று காலெடுத் தடுக்க எதிரெதிர் அலங்கரித்த ரதங்கள் ஒன்மேருடொன்று இடிக்க, அந்தரதத்தி லிருக்கும் சுந்தரவில் வீரர் ஒருவரையொருவர் பகைத்துச் சினந்து விற்பிடித்து நாணேசை யடிக்க, அந்த நாணிலிருந்து நடஞ்செய்து புறப்படும் விபரீதமாகிய அளவற்ற அம்புகள் ஆகாயத்தை மறைக்க, அவ்வாகாயமும் உலக மும், உவர்க்கடலும் உயர்ந்த ஓங்கல்களும் வருந்திக் கலங்கும் படியாய்த் தருமனந்தனனும் துரியோதனராஜனும் யுத்தம் பண்ணி னார்கள். அந்தச் சமயத்தில் இரவிகுலபதியாகிய ஸ்ரீராமன் சவிகுல விய சதகண்டனுடன் செய்த சண்டை சற்றேறக்குறைய இத் தன்மையா யிருந்த தல்லவா வென்று தேவர்களெல்லாரும் வியந்து நயந்தார்கள். இப்படி போராடி வரும்பொழுது தருமராஜனவர் அக்கினிவிலேயும் அனல்முகக் கணைகொண்டு அமர்புரிந்து, விருது பெற்ற அரசனுடைய அரவத்துவஜமும், அவன் கைப்பிடித்த வில் லும், ஏறிவந்த ரதமும், இரதத்திற் பூட்டிய இவுளியும், அவ்விவு ளியை யோட்டும் வலவனும், குடை சிகாமுதலியயாவும் பொடி படும்படியாகச் செய்து கமலமுகக்கணையொன்று கொண்டு பொன் மலையைப் போன்ற அவன்புயத்திற் உதிரம்பொழிய விடுத்துப் புரட்டியபோது, துரியோதனராஜன் அயர்ந்து பூமிமேற் சாய்ந்தான்.

அவன் சாய்ந்தவுடனே அவனைச்சேர்ந்த வீரர்கள் பார்த்து, "ஏதேது அரசன் மாய்ந்தவன் தான். இனித் தலையெடுக்கப் போகிறதில்லை!" என்று கலங்கி யுத்தபூமிவிட்டு விலங்கிப் பின் ஓட்டங் கொள்ளும்படி யிருக்கின்ற சமயத்தில், துரியோதன னுடைய தம்பிமார் முதலியசேர் சஞ்சலங்கொண்டு சமீபத்தில் வந்து சமித்தியோபசாரஞ் செய்தனர். அதனாலவன் சிறிது களைதீர்ந்து சுவாசந் திரும்பிக் கண்விழித்துச் சுற்றுகடற்றீரத் தலை யெடுத்துப் பார்த்தான். இதற்குள்ளே முதன்மையாகிய ராஜர்களும் அங்கதேசாதிபதியு முனைந்து, அறக்குமாரனைச் சினந்து வளைந்து, அளவிறந்த அம்புகளைப் பொழிந்து, கொடி, குடை, முதலியவை களைக் களைந்தார்கள். அப்போது தருமராஜன் தமது வில்லைக் கணகணவென் றசைத்துத் தூண்போற் றிரண்ட கணைபலவெடுத்து, வீண்போகாமற் கொல்லென்று விடுத்து, சமர் கிலேத் திறமையை அமரர் கொண்டாடும்படியாய்த் தகைத்துச் சிறந்திருந்தார். அவர்

தொடுத்த அஸ்திரங்களினால் மிகவும் கஷ்டப்பட்டு, இனி நாம் செய்வதேதென்று அஞ்சி, கர்ணன் முதலிய காவலரும் எஞ்சியிலைத்துத் திரும்பி ஓடினார்கள். அப்படி யோடிவருவதைச் சிலைக் குருவான சேனாபதிகண்டு கோபங்கொண்டு இருவிழியுஞ் செவேலெனச் சிவந்து, திகுதிகுவென்று பொரிகளெழுந்து தீயடர்ந்து எரியும்படி வந்து தருமராஜனுக் கெதிராகுஞ் சமயத்தில், சிப்பியென்னும் ஒருதேச ராஜகுமாரனைவன் தேர் செலுத்திக்கொண்டு ஓடிவந்து, சித்திர விசித்திரமாகிய அஸ்திரங்களால் அவர் தேகத்தை மெத்தவருத்திக் குற்றமில்லாத உத்தமனென்னும் வித்தகனுகிய அத்தருமபுத்திரன் கணையாற் செத்துப்புத்தேளாகிய புரந்தரனுலகிற்புகுந்தான். அவனிறந்து போனதைக்கண்ட மத்திரதேயனுடைய தவத்திற்சுபுத்திரனுகப்பிறந்தமாத்திரயன்சினந்து, மலர்ப்பகழி கொண்ட மன்மதனுக்கொப்பாக வடிவிற் சிறந்த மூரசக்கொடி படைத்த முதல்வனையடைந்து மூனைவாளிகளைப் பலங்கொண்டு விடுத்து, அநேக விதமாகிய அமரைக் கொடுத்து, அரன்மகன் சேனையை அலக்கழித்துக் கெடுத்து, அந்தயுத்த பூமிக்கு இவனொருவனே சுதந்தர மானவனென்று வானவர் சொல்லும்படியாக நின்று, அவ்வானவரு மயங்கத் தானவருந் தயங்க முடுக்கினான். அதை மானபரணமன்னனுகிய பாண்டுமைந்தன் கண்டு, மூண்டெரியு முளரிக்கணை கொண்டு, பாண்டவர் சகாயனைப் பரிந்துவேண்டி, ரதத்தை விடுத்துப் பாணந் தொடுத்தனர். அப்போது நீண்டதாண்டவமாடிய சல்லியன் மைந்தன் மாண்டு விழுந்து வானுலகடைந்தான்.

தருமராஜனெடுத்த துரோணரைப் பீமன் பாஞ்சால ராஜனெடுத்துப் புறங்கண்டதில், துரியோதனன் சகோதரரிருவர் வதை

இவைகளை யெல்லாம் அசைவற்றுப் பார்த்துக்கொண்டிருந்த ஆசானைவர் அறக்கடவுள் மைந்தனுக் கெதிரடுத்து, அநேக மந்திரங்களை யுச்சரித்து, விருஷ்ணாஸ்திரம், விகங்காஸ்திரம், வெற்பாஸ்திர முதலாகிய விசிகங்களை விடுத்து, மதங்களினால் அளவிடப்படாத யானைகள், குதிரைகள், தேர்கள், உயர்ந்த விருதுக்கொடிகள், விரிந்த சுவேதக் குடைகள், ஆகவப் படைகள் இவை யாவும் பொடிபடும் படியாய் முடுக்கி வருவதாயினர். அப்படி வருகின்ற துரோணரைப் பார்த்த வல்லமை மிகுந்த வாயுகுமாரனுகிய பீமசேனன் செங்கிரணக்கதிரவன்போல் ஒருபக்கம் புகுந்து தாக்கி, துரோணருடைய

ரதகஜதுரகபதாதிகளைச் சூரிய கிரணத்தாற் காரியமில்லாமற் போகின்ற பனியைப்போற் போக்கி, ஏமாஸ்திரத்தை யெடுத்து வர்த்தித்து விடுத்துச் சேனாதிபதியாகிய சிலைக்குரு சண்டை செய்யும் போர்முனை கெட்டுப் போகும்படியாகப் பிரளயகால ஓசையைப் போற் பெருங்கூச்சலிட்டுக்கொண்டு திரியும்போது, துருபதேயனும், அவனுடைய பிள்ளைகள் திருஷ்டத்தூய்மன், சிகண்டி, சுமித்திரன், பிரியதரிசனன், சித்திரகேது, சுகேது, தவசேனன், உத்தமோசா, உதார்மன் இவர் முதலிய பேருஞ் சாத்தகியுஞ் சேர்ந்து, வரங்களாகப் பெற்ற உரங்களுற்ற அரங்களைப்போன்ற தங்கள் சரங்களை விடுத்து மரங்களைப்போன்று கணைகளை வரிசை வரிசையாய்த் தொடுக்குங் குருவுடனெதிர்த்து, குவலயங் குலுங்கப் போர்கொடுத்தார்கள். துரியோதன ராஜனும் அவன் தம்பிமார்களும் வெற்றி பெற்ற வேந்தர் பதினாயிரம் பேரும் ஒன்றுகக்கூடி வென்றோ மென்று பீமனை வளைத்து அவனுடன் அமர்புரிந்து, அவனுடைய தேரும் பாகும், குதிரையும், வரிமணி பூட்டிய வில்லும் அழிந்து போகச் செய்து, அவனங்கத்திலும் உதிரம் வடியும்படியாகப் புங்க வங்களை அங்கையாற் றொடுத்தார்கள். அங்கவனும் இவர்கள் விடுத்த பாணங்களினலடிபட்டு, வில் முதலிய யாவும் ஒடிபட்டுப் பங்க மில்லாச் சிங்கம்போற் சங்கையில்லாமல் வெறுங் கையுடன் பூமியிற் றாவிப் புகுந்து, குதிரைகளின் காலைக் குறுக்கிப் பிடித்துத் குதிரைகளின் பேரில் முறுக்கியடித்துத் தேர்களை வாரி நேருக்கு நேராகிய தேர்களில் மோதி, நாயகன் முடியுஞ் சாரதிமுடியும் நாகலோகத்தை யெட்டிப் பார்க்கும்படியாய் வேகமாக எடுத்தெறிந்து விடுத்து, கொம்புகளையுடைய யானைகளைப் பிடித்து அம்பரத்திற் பம்பரம் போலாட்டி, மற்ற யானைகளின்பேரில் வீசிமோட்டிக் காலாள்கள் காலாள்கள்பேரில் கடகடவெனவிழுந்துருளும்படி தன் காலாலெற்றி, இவ்விதமாக நால்வகையாகிய படைக்கடலைக் கலக்கி, மந்திரகிரியாற் பாற்கடல் கடைந்த கேசவனுகிய மாயவனைப்போற் சிங்கக் கொடி காட்டிய அந்தஜெய பீமன் தோள்வலித்துணைகொண்டு கலக்கிச் சிங்காதனஞ்செய்து யாவரு மதிக்கும்படியாகச் செழித்திருந்தான்.

அந்தச் சமயத்தில் தேவராஜர் பணியும் வீரகண்டாமணியணியுங் காலினையுடைய திறங்கொண்ட ராஜராஜேஸ்வர னென்னுந் துரியோதன மகாராஜனுடைய தம்பிமார் சிலர்சேர்ந்து பலமாகப் பலவிதமான படைகளாற் போர்புரிந்து வாயுகுமாரனும் செந்

நீர்சொரிந்து வாடி யோடிப் போனார்கள். அவர்களில் நிர்வாகசாலி களாகிய விருதனென்பவனும் சூசி என்பவனும் புறங்கொடாமல் நிலைத்து நின்று, நெடுநேரம் வரைக்கும் தோள்வலி, வாள்வலி, தேர்வலி, போர்வலி இவைகளின் வீரத்திறங்காட்டி, தங்களுடைய சொல்லுறுதி, வில்லுறுதியாகிய மறநிலைகாட்டி தொடுத்தகணை மழை ஓயாமல் விடுத்து, அடுத்த பீமனை அயர்வுற அடித்து அலைத்த காலையில் கலையெல்லாங் கற்ற கதாயுத பீமன் மலைபோன்ற மற்புய மோங்கிச் சரருத்ரனைப்போல் தானொருவனுகச் சமர் புரிந்து சீறி ஒருவர்போன வழி ஒருவருக்குத் தெரியாமல் ஒழிந்து போகும்படியாய் உலைவாய்மழுப் போன்ற எழுவாயுதம்போக்கித் தம்பிமா ரிருவரையும் அம்பரக்கணத்திற் ரூக்கலாக்கி விட்டான். இப்படி எல்லோரும் பார்த்துக்கொண் டிருக்கக் கல்லென்று மிகப்புய வலிமையை யுடைய பீமனுற் காக்தாரி மைந்தரிருவர் யுத்த களத்தில் மடிந்து ககனஞ்சேர்ந்தா ரென்னும் நிந்தையையும் பீமன் பூர்தேரேறிப் போராடி வென்றுவரா நின்ற விந்தையையும் போர்முக வீரர் யாவரும் பார்த்துக் கலக்கங்கொண்டு "ஐயோ! தெய்வமே! ஆத்மகோடிகளைத்தேடி அழிக்கும் தொழில்பூண்ட யமனுனவன் பீமனென்னும் உருக்கொண்டு பாண்டவருக்குத் துணையாக வந்திருக்கிறானே யொழிய வேறல்ல. இவனுட னெதிர்த்து எவர்கள் போர் விளைப்பார்கள்?" என்று மனங்குறுகி நொந்து வில் வல்லவரும் மற்றெல்லவரும் யுத்தமழிந்து புறந்தந் தோடினார்கள்.

சாத்தகி தன்னுடனெதிர்க்கவந்த சோமதத்தனை மூர்ச்சிக்கச்செய்து, இவனுக்குத் துணைவந்த சகுனி முதலானோரையும் புறங்கண் டோட்டுதல்

இவ்விடத்தி லிப்படியிருக்க இன்னொருதிசையில் வாகுலீகன் மைந்தன் சோமதத்தனனவன் சாத்தகியென்னுந் தோள்வலி பெற்ற சரபத்தினெதிர் நெருங்கித் தன் பிள்ளையாகிய பூரிசிரவ னுடைய பிராணனைப் போக்கி விட்டதைக் குறித்துப் பெருங் கோபங் கொண்டு மனந்தாளாமல் "அடாபாவி! நீயும் இந்த அர்ச் சுனனுங் கூடிக்கொண்டு என் குழந்தையை விறுதாவிலே மடித்து விட்டீர்களே! இது நற்குலத்திற் பிறந்தார்செய்யு நடத்தையோ? ஆதிப்பகை முடிப்பதற்கு நான் சமயம் பார்த்திருக்கும்போது நீ

முந்திக் குலப்பகை முடித்து விட்டாயே! ஆகட்டும் அந்தப் பழிக்குப் பழி தீர்க்கும்படியாய் இப்போது வழிதேடி யிருக்கிறேன். ஆதலால் வாடாவெளியில்!" என்று வாய்மதத்தாற் சிலமொழி மொழிந்து மலையாகிய வில்லை வளைத்து நிலையாகிய நாணிதொடுத்துக் கண்களில் நெருப்புப்பொறி மிகுத்து, வாயில் விடத்துளிதுளித்து முகங் கறுகறுத்துத் திசைபொறுத்த கஜதிசைப் பாலர்களுங் கலங்கப்புரி, ஜயங்கைப்பெறு, கடுங்கட்கணை, தொடுங்கைத்திறல் காலா கோலமாகிய ஓர் யானையானது வேலாவலயம்போல் மதம்பொழிந்து, கண்டூரவத்தின்மேற் சண்டைசெய்யப் போனதைப்போற் புகுந்து அமர் புரிந்தான். இவனைப் பரிந்து கண்ட சாத்தகியாளவர் "அடா சோமதத்தா! அப்போதுன் பிள்ளையைக் கொன்றது பொய் இப்போது உன்னைக் கொல்லுவதுமெய். அதை இதோபார்" என்று எழிலோங்கிய வில்லைவளைத்து மின்னல்தாங்கிய நாணிதொடித்து நெற்றியார்ந்த புருவநெரித்துப் பற்றியார்ந்த பொறிக்கண் விழித்து எட்டுத் திக்குங் கெட்டழிவாகக் கட்டழல் கொளுத்திக் கிட்டக் கிட்டக் கட்டுப்படாத வாளிகள் செலுத்தி அம்பரம் பம்பரம்போலசைந்தாட உம்பர்கள் கம்பமா யொழிந்தோட இருவருஞ் சினந்து சமரினில் முனைந்து சோமதத்த னிளைத்த குறையும் வாமசாத்தகி வலுத்தமுறையும் வழிக்கு வழியாய்ப் பழியைச் சுமந்த வணங்கா முடியோன் கண்டு, மாமனுகிய சகுனியையும் கால்வகைச் சேனையையுஞ் சேர்த்துத் தமக்கினிமையாகிய சோமதத்தனுக்குத் துணைச்சார்பா யனுப்பிவைத்தான். அவர்களும் அவன் பக்கத்துக்குத் துணையாய் வந்து சேர்ந்தார்கள். அந்தக் காலத் திற்குறை படாப் பேராண்மைபெற்ற சேனாதிபதியாகிய திர்ஷ்டத்துய்மனும், மட்டில்லாப் பலங்கொண்ட மன்னரனைகருஞ் சேர்ந்து காய்ந்து வருந்தாமற் கொல்லுங் கொடுங் கணையைப் பொழியும் விற்றுங்கிய சாத்தகிக்குத் துணையானார்கள். இருதிறவரும் துணைகூடிய பேர்களுடன் ஒருவரை யொருவர் மறித்து, ஒருவரை யொருவர் பகைத்து ஆகாயமெங்கும் வாகாகப்பொங்கு நெருப்பானது ஓயாமல் நிரம்பும்படி யுத்தம் பண்ணும் போது, காயாமலர் வண்ணனுடைய தம்பி தனக்கிசைந்த கடுங்கணைகொண்டு ஓயாமற் சாடினான். அக்காற் சாயாத முடி சாய்த்து அயர்ந்து தேரில் வீழ்ந்தான் சோமதத்தனவன். அவன் தேகஞ் சோர்ந்து தேரில்விழுந்த உடனே யுத்தத்தின் சூழ்ச்சிதெரிந்த சாரதி ஒரு கூணத்தில் தன் தேரைச் செலுத்தி மன்னர் மன்னனிருந்த இடத்திற் கொணர்ந்

போய்ச் சோமதத்தனுக்கு வந்த ஆபத்தைச் சொன்னன். இவ் விடத்திற் போர்கொடுத்த சகுனிமுதலிய சேனைகள் அழகிய மலைபோல் வளைத்துத் தகைத்து கைசோர்ந்து மழைபோற் பொழியு முதிரம்வழிந்து, மலைபோற்செழியு முடலஞ்சாய்ந்து விஷத்திராவ கத்திற் றோய்த்து வைத்திருந்த படைகளும் தீர்ந்து விருஷப குஞ்சர வியாக்கிராதிகளி னடைபோன்ற இறுமாந்த நடைகளுஞ் சோர்ந்து வில்லாகிய கார்முகங்கள் தாறுமாறாய் உல்லாசச் சீர் முகங்கள் வேறுவேறாய் முன்னெடுத்தகாலைப் பின்னிழுத்துக் கொண்டோடினார்கள்.

அசுவத்தாமனை யெதிர்த்துநின்ற சாத்தகியைக் கடோற்கசனும் அஞ்சனவர்மனுந் தடுத்துக் கடும்போர்விளைத்து அஞ்சனவர்மனிறத்தல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இவ்விதமாக யாவரையும் இளைத் தோடச் செய்து ஆர்ப்பரித்து வருகின்ற பாற்கடல் வண்ணக் கண்ணன் தம்பியை அசுவத்தாமன் கண்டு சினங்கொண்டு போர்ப் புலிபோற் பாய்ந்து "அட, சாத்தகி! உன் புஜபல பராக்கிரமத்தை இன்றைக்கே போக்குகின்றேன். பார்" என்று கூர்புகுந்த அளவில் தோற்பதைப் படிக்காமல் மறந்த சீர்ப்பெனும் வலிமேலிடச் சிறந்த வாயுதேவனுக்குப் புத்திரனாகிய கடோற்கசன் இரைந்து பரிந்து விரைந்து நெருங்கி "ஐயா சாத்தகியாரசே! இந்த அசுவத்தாம னுடனே நானெதிர்க்கின்றேன் சற்றுநேரம் வேடிக்கை பாரும்" என்று சண்டைக்குப்போன சாத்தகியைத் தடுத்து "ஓ அசுவத் தாமனே! இதோ உன்மண்டைக்கு ஓலை வந்தது!" என்றுரைத்து நான்கு படையும் கலங்குமெலிய ஈங்கு வந்தெதிர்த்துப் போர்புரியா கிற்கும் இடும்பன் மருமகனே விளக்குதற்கரிய புயவலிமைபெற்ற பீமன் திருமகனே அளவற்ற போர்த்திறங்கண்ட மேலாகிய வீரனே மலைக்குயரமாக வளர்ந்த புயவாகனே கந்தியாவட்டை மாலையணிந்த நராதிபனும், களங்கமில்லாத தோள்வலிதினைத்த காளையரும் பல காவலரோடுங் கலந்து சமுத்திர கோஷ்டம்போ லிரைந்து வந்து சூழ்ந்தார்கள். அவர்களைக்கண்ட இடும்பி மகனவன் "அசுவத் தாமனுக்கு உபபலாளாய் வந்தீர்களோ? வாருங்கள்" என்று கடை வாயைக் கசகசவென்று மென்று, மந்தரகிரியாற் பாற்கடலை மதித்தத வண்மையைப்போற் பூதவேதாள பிசாசகணங்கள் கட்டிய புவன மாய தேரைப் படபடவென்று காற்றடி போற் சுழற்றிப் போக்கி,

யாவரையுந்தாக்கி, எல்லோரையு மீக்கித் தன்னுடைய கோபக் கொதிப்பை மேலாக்கிக் குறுக்கு நெடுக்கும் பாழாக்கி வருவதைக் கொடிப்படைச் சூரர் பார்த்து வீரப்போரில் விலங்காத கொடித் தேரையுடைய கொடிவீரரும் முதுகுகாட்டி ஓட்டத்தில் வாட்ட மில்லாமல் முன்னிட்டார்கள். அசுவத்தாமன் மாத்திரம் தனியே நின்றான்.

அந்த அசுவத்தாமனைப் பலம்பொருந்திய இடும்பன் மருமக னுங் கடோற்கசனுக்கு ஒரு மகனுமாகிய அஞ்சனவர்மன் தேவர் களுடன் ராக்ஷதர்க ளெதிர்க்குந் தன்மைபோலெதிர்த்து அந்தரமும் பூமியும் அனேகந்தரம் நிணச்சேறும் இரத்தவெள்ளமும் ஆகும படியாக யுத்தம்பண்ணி வாளிகள்கோடி, வடிக்கணைகோடி, வச்சிரங் கோடி, மலைகள்கோடி, மரங்கள்கோடி என்னும்படி வர்துவிழு இக்கணை, அக்கணை என்பதொன்றும் தெரியாமல், இகல்புரிந்து வருங்காலையில் அசுவத்தாமன் மனமெரிந்து பகலவன் பாணத் தைப் பார்த்தெடுத்துப் பூசித்துப் பிரயோகஞ் செய்து அஞ்சன வர்மனுக்கு அடைக்கலஸ்தானம் அமரர் லோகமென்றும் அரை கொடிப்போதில் அனுப்பி விட்டான். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! சதுருசங்கார மூர்த்தியாகிய சரவணபவனுக் கொப்பான அசுவத்தாமனுடன் கடோற்கசன் குமாரனாகிய அஞ்சனவர்மன் என்னதான போர்புரிந்தபோதிலு மவனைத்தான் வெல்லத்தக்கவனோ? சூரியனுடனே இருள்பகைத்தாற் கெலிக்கு மோ? அசுவத்தாமனுல் தன் பிள்ளையழிந்ததைக் கண்ட மலையைப் போன்ற பராக்கிரமசாலியான கடோற்கசன் அதிக விசனகரத்தாற் கோபங்கொண்டு ஆகாயபரியந்த முலாவிய மலைகளையும் மரங்கள யும் அடிவேருடன் பிடுங்கிவந்து விசாலமான வீரப்பட்டங்கட்டிய யானைபோன்ற அசுவத்தாமன்மேல் வீசியெறிந்து அண்டபகி ரண்டமு நடுங்க ஆர்ப்பரித்தலங்கோலங்கள்செய்ய அப்போது சுப்ரமண்யக்கடவுளின் வெற்றிப்பதம்பெற்ற துரோணாசாரியார் மைந்தன் மிகுந்த தூரிதக் கணைகளை விட்டு பீமசேனன் கையிற் பகாசுரன் பட்டபாடெவ்வளவோ அவ்வளவு பாடுபடுத்தி, ஒரு கதாயுதங்கொண் டடித்து, தேர் முதலிய பூதங்களையுமடித்து, அக்கடோற்கசனைப் படிமேல் வீழ்த்தினான். உடனே அரக்கன் தேறி எழுந்து, சேனாதிபதியாகிய திர்ஷ்டத் தூய்மனுடைய தேர் மேலேறிக்கொண்டு, மாயாவல்லபத்தினுல் மாறிமாறி அருஞ்சமர் புரிந்து, ராக்ஷசமயமாய் வல்லமை நாட்டி, துரியோதனன் படைகள்

திடுக்கிட்டுத் திசைகெட்டோடும்படியாய் ஜெயங்காட்டி வருகின்றான். அப்படி அவன் ஜெயங்காட்டி வருகின்ற போர்மூள தோறும் அசுவத்தாமனைத்து, கோடையிடிபோன்ற அமுகாஸ்திரம் தொடுத்துத் தாங்கி, கடோற்கஜனும் பாண்டவவீரரும் விடுத்த கணைகளையெல்லாம் பொறுக்கி அணுப்பொடியாக்கி, காற்றில் தூற்றிப்போக்கி, தீமை சுரந்த தேகம் வாய்ந்த அரக்கரையெல்லாம் ஒரு கொடிப்பொழுதில் ஆவிபறித்து ஆகாயஞ் சேர்ந்தான்.

சாத்தகியோடு மீண்டுமெதிர்க்கவந்த சோமதத்தன் பீமனால் மூர்ச்சிக்க அதுகண்டுவந்த வாகுலீகனு மவனுற்சாக, அடுத்துவந்த துரியோதனன் சகோதரருள் பதின்மர் வதை

இம்மிதப்படி யிருக்க, முன்னே சாத்தகியுடன் சண்டைசெய்து சாய்ந்தோய்ந்த சோமதத்தன் ஆயாசம் தீர்த்து, தேறி எழுந்து தேர்மேற் சிறந்து, மிகுந்த படைகளுடன் திரும்பி, "சாத்தகி எங்கே? எங்கே" என்று அவன்மேற் சண்டைக்குவந்தான். அப்போ தவனைப் பீமனெதிர்த்து, நெருப்பைக் கக்காநின்ற கூர்மூன பொருந்திய வஜ்ராஸ்திரத்தை அவனுடலிற் றைத்துருவும்படி விடுத்தான். அதுவந்துவிழுந்து கொழுத்தெழுந் தெரிந்து துளைத்து வருந்த மறுபடியு மாய்ந்தவனைப்போற் குதிரை பூண்ட தேர்மேல் சாய்ந்தான். அந்த பீமன் விட்ட வச்சிரக்கணை செய்த வலுமையைக் கண்டு தாணிபராயுள்ள வேந்தரெல்லோரும் தலை சாய்ந்தார்கள். அவ்வேளையில் தந்தையாகிய வாகுலீகன் சோகமுற்று வீழ்ந்த சோமதத்தனென்னும் தன் மைந்தனைப் பார்த்து, முகம் வேர்த்து, மனம் தாளாமல் உடனே அடங்காக் கோபத்தோடும் தனது வரிவில்லை வளைத்து, செந்தழல் கக்கும் தீமுகப்பாணங்களைச் செலுத்தினான். அவன்றொடுத்த அம்புகளையெல்லாம் அதஞ்செய்து ஆவேசங்கொண்டுவந்த பீமசேனன் அவ்வாகுலீகனுடன் அநேக நேரம் போராடி, ஒரு தேவாஸ்திரத்தை யெடுத்துப் பிரயோகஞ் செய்து அவன் சிரத்தைத் துண்டித்தான். தக்ஷணம் தலையிழந்த வாகுலீகனைக் கண்ட படைஞரெல்லாரும் அஞ்சி, எஞ்சி, அடங்கி, ஒடுங்கி, ஒதுங்கி, அவ்விடத்தை விட்டுத் திசைகளிலகன்றார்கள். அப்படி அகன்றவர்களை அரவக்கொடிக் கதிபதியாகிய முடியரசன் தம்பிகள் கண்டு, "ஐயோ! நீங்களோடுவதற்கு இதுகால மல்லவே"

என்று அவர்களைத் தடுத்து, சந்திரனைக் கண்ட தாமரையைப் போல் விளங்கிய அவர்கள் முகங்களைப் பார்த்து மனம் தாளாமல், தங்கள் முகங்களிற் குறுவெயர் வரும்பக் கூட்டிப்போய்த் தேன் றுளிக்கு மாலையணிந்த திண்ணிய புய பீமனை வளைத்து, மண்ணெல் லாங் கணமாரியாக வுதிர்த்து, விண்ணெல்லாம் தலைத்தலையாய்க் குவித்து, கண்ணெல்லாம் மிகுந்த விந்தைகாணக் கதித்து, அண்ண லாகிய பீமன் அகமெலிந்து நலிந்து போகும்படியாய் அஸ்திரக் கூட்டங்களை அணியணியா யிறைத்தார்கள். அது காலையில் வாயு குமாரன் தன் ஆர்ப்பினால் அவர்கள்விட்ட பாணங்களை யெல்லாம் போக்கி, அரவிந்தக்கணை, அனல் பிந்துக்கணை, அருமந்தக்கணை என்பவைகளைத் தொடுத்து, தன்னை யெதிர்த்த அத்தம்பிமாராகிய நாகநந்தன், உக்ரசாயி, வேகதரிசி, அத்திரிலோசனன், விப்பிர தெரிசி, தண்டுலசாயி, உலூகநாதன், பீமபிந்து, மக்குவாசி தூர்த் தன் இவர்கள் பத்துப்பேரும் ஆவி யிழக்க அவித்தான். அப்போது மாய்ந்த அரசன் தம்பிகள் அலறிக்கொண்டு விண்போனது எப்படி யிருந்ததென்றால், "இதுவரையிலும் போர் விளைத்துப் பார்த்தீர் களே? இனிமேலாகிலும் போனவர்கள் போக இருந்தோர்கள் இந்தமட்டுஞ் சண்டையை விட்டுச் சமாதானமாய்ப் போங்கள்!" என்று சொல்லிப் போகின்றவர்களை யொத்திருந்தது.

குந்திபோஜன் மைந்தருள் இருவர் வதை

இப்படி ஒரு மூலையில் வாயுபுத்திரனாகிய பீமசேனன் வென்று வரும்போது, மற்றொரு பக்கத்திற் குருபுத்திரனாகிய அசுவத்தாம னெனவன் வெகுசேனைகளைக் கொன்று யுத்தஞ் செய்துகொண் டிருந்தான். அப்போது குந்திபோஜனுடைய மைந்தரிருவர் வந்து அவனெதிரில் எதிர்த்து, இந்துக்கணை முதலிய கொந்தழற்கணை யாவும் உந்தி, அந்தணன் குமாரனாகிய அவ்வசுவத்தாமன் அடித்த வடிக்கணையால் கூவி அரைகொடியில் ஆவி போக்கடித்தார்கள். இப்பால் வந்தவர் போனவரெல்லாரும் அவ்வவ்விடங்களில் விந்தை யாகிய சமரம் விளைத்துவரும் வேளையில், மூன்பு உந்தி பூத்தோனு கிய மாயன் அந்திப்போது செய்யவேண்டு மென்று தன் சென்தி கிரியை உந்தியபோது, அதற்குள் தன் கிரணமடங்கி முடங்கிய சிறுமையை எண்ணி யெண்ணி, ஜகதீசனுக்கொரு கண்ணுய் இவ் வுலகில் நின்று பிரகாசிக்கின்ற நாம் ஒரு சக்கரத்தால் மறைந்தோமே யென்று நான மடைந்து அந்த நாணமே தன்னைக் குறையச் செய்ததைப்போலும், பெருமை யடைந்தவன் சிறுமையடையில்

உயிர்வைத் திராமல் உடனே ஒழிவது உத்தம மென்பது போலும், ஒளி மழுங்கி, ஓராழித்தேரோனுகிய சூரியன் அலைகளை மீசு மேற்கடலில் ஒளிந்திட்டான். உடனே இயற்கைக் குணத்தால் அபகீர்த்தியான வசையை ஆவிபோல் வளர்த்து வருகின்ற துரியோதன மகாராஜனைச் சூழ்ந்த இழிவாகிய பாவத்தைப் பார்க்கினும் மேலாகக் கவிந்த இருட்பொழுதை நோக்கிய விருதர் முதலிய சகலரும், பொருட்படையடங்க இருபடையிலும் கடலுடைபடும் தன்மைபோல் தடதடவென்று பேரிகைமுழக்கினர்கள். அப்போது தீபம்போன்ற கேண்ட வாளியையுடைய துரியோதனன் வெகுண்டு இன்றி ராத்திரியும் யுத்தஞ் செய்கிறேனென்று எதிரிகளிடத்தில் தூதனுப்பி வைத்து, சேனாதிபதி முதலிய யாவரையுஞ் சேர்த்துக்கொண்டு சத்துருக்களாகிய அப் பாண்டவர்களுக்கு நேர் கொடுத்து நின்றான்.

பதினொன்காம்நாள் இராப்போர்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இப்பால் துரியோதன மகாராஜன் தனது தொழிலாளிகளை நோக்கி, அண்டகூடம்வரை பரந்து நிறைந்த இருள் நீங்கும்படியாய் அநேகங் கோடாகோடி சூரியப் பிரகாச வெளிச்சம்போல் ஒளி யுண்டாக்கும் விளக்கின மெடுங்களென்று விரைவாக ஆக்ஞாபித்தான். அவ்வுத்தரவின்படி யானைத் தீபம், குதிரைத்தீபம், தேர்த்தீபம், ஏணித்தீபம், கம்பத் தீபம், மலைத்தீபம், அகண்டதீபம், கைத்தீபம், மணித்தீபம், சரத் தீபம் அநேகமுக தீபவத்திகள், பகல்வத்திகள் காடாவிளக்குகள் சந்திரபிம்பச்சோதி, சூரியபிம்பச்சோதி முதலிய தீபங்க ளேற்றினர் கள். இச் சேதியைக் கண்ட தேவர் முதலிய யாவரும் தியக்கங் கொண்டு, "இத் துரியோதனன் தன் பகைவர்களுக்குச் சகாயமாய் தேர்த் தொழில் செய்யும் ஆண்டவன் பகற் காலத்தில் ராத்திரியை வரவழைத்தானென்று சூரியன் சினந்து மறைய, அதற்குப் பதிலாக இருள் வந்த ராத்திரியைப் பகற்கால மாக்கும் தன்மையைப்போ லாக்கினன் பார்த்தீர்களா?" என்று பற்பல விந்தையாய்ப் பேசிக் கொண் டிருந்தார்கள். இதல்லாமலும், இப்பூமிக் காதாரமாய்ப் பொருந்தி விரிந்த படத்துடன் பாதலத்திலிருக்கும் ஆதிசேடன் முதலிய ஆடரவங்களெல்லாம் பொங்கி யெழுந்து, சிரோமணிக் குவைகளால் அநேகவிதமாகிய தீப வெளிச்சங்களைச் செய்த தென்று வீரப்பிரதாப வேந்தரும், மாந்தருஞ் சொல்லிக்கொண்டார் கள். இப்படி சொல்லிக்கொள்ளும்படியாய்த் தீப ஜாலங்கள் ஏற்படுத் திய நாகக்கொடிபடைத்த நாதிப னுடைய நினைவை நாரண னும் பாண்டவரும் கண்ணு யறிந்துகொண்டு, தாங்களும் இராச் சண்டைக்குப் பிள்ளிடாமல் முன்னிட்டவர்களாய், யுத்தபூமி முழுவதுஞ் சொல்லுதற் கரிதாகிய யானைப்பந்தம், குதிரைப்பந்தம், தேர்ப்பந்தம், ஏணிப்பந்த முதலியவைகளும், ஒருமுகம் பத்துமுகம் சதமுகம், சகஸ்திரமுகம் என்று சொல்லும்படியான பலமுகங்கள் வாய்ந்த தீவத்திகளும், கீல்வத்திகளும், பகல்வத்திகளும், பிரகாசிக் கும்படியாய்ச் செய்துகொண்டு, மேள தாள காள காகள எக்காளங் களுடன், சங்கு தாரை பேரி பூரி சிங்கநாத ஆரபாசம் எங்கு முழங் கும்படிக் கெழுந்து, சேனு சைனியங்கள் யாவும் வெம்பிக் குதித்து மகிழ, தம்பிமார் முதலிய யாவரும் துதித்துக் களிக்க, தருமராஜன் சண்டைமுகத்திற் கெதிர் நின்றார்.

அச்சமயத்தில் எண்ணத்தின் வண்ணம் இசையைப்பெறும் விஜயன்மேல் கர்ணன்முன்வந்து பந்திபந்தியாய்ப் பலகணைகளைத் தொடுத்துப் போர்செய்தான். படைத்திறம் பெற்ற விருதனென்னுங் கிருதவன்மனுனவன் மூசசக்கொடிதரித்த தருமராஜனோடு மூடிகினன். ததுர்வேதஸம்பன்னராகிய துரோணாசாரியர் பழைய வஞ்சகப் பகைவனுகிய திர்ஷ்டத் தூய்மனுடன் தன்னிஞர். யுத்தஞ்செய்து இரண்டிலொன்று கண்டு உயிர் விடுகிறே னென்று சொல்லித் துரியோதனனென்னும் உலக துரந்தரனுகிய உரககேது பீமனோடெதிர்த்து மிகு போர் விளைத்தான். சல்லியராஜன் மிகு சல்லியத்துடன் சதானீகனை வளைத்துக்கொண்டு சமர்தந்தனன். வலிகொண்ட புலிபோன்ற கடோற்கஜனுடன் முனிமைந்தனுகிய அசுவத்தாமன் முனைந் தமர்புரிந்தான். தரணி பாலராகிய தார்வேந்தர் தங்கள் தங்களுக்குரிய பகைவருடன் சண்டை செய்தார்கள். பந்த ஜோதிகளெல்லாம் பகலி லெழுந்து ஒளிவிடுஞ் சூரியனைப் பார்க்கிலும் ஏழுபங் கதிகமாய் எங்கும் பிரகாசிக்கவும், வாத்தியங்களெல்லாம் முழங்கவும், தேருடன் தேரும், யானையுடன் யானையும், குதிரையுடன் குதிரையும், காலாளுடன் காலாளும், வில்லுடன் வில்லும், வேலுடன் வேலுங்கொண்டு பகைத்துப் போர் புரிந்தார்கள். ஒருவர்பேரி லொருவர் விட்ட கணைகள் உடலிலுருவி வேகமடங்காம லோடுகின்ற ஓசையும், வில்லிலவளைப்பதினு லுண்டாகிய அதிர்ச்சியும், அவ்வில்லிற் கட்டிய மணிகள் சப்திக்கும் அமலியும், வாளாயுதங்களைத் துலவவீசும் ஆர்வமும், வேலாயுதம் எரிந்து வரும் ஆவாரமும், சூலாயுதஞ் சுழன்றுவரும் சும்மையும், சக்கரம் போற் சுழலும் படைவீரருடைய சத்தமும், ரதசக்கரங்களினுதமும், குதிரைகளின் கோஷ்டமும், யானைகளின் ஆர்ப்பும். வீரசேசரிகளின் வீரகண்டைத் தொனியும், உபகரணமமைந்த வாத்தியங்களினுசையும், இருதிறப்படைஞரு மெதிர்த்து விளைத்திடும் போர்த்துழனியும், அசுரரும் அமரருஞ்செய்த அமரைப்பார்க்கிலும் ஆயிரமடங்கதிகமாக முழங்கின, அம்முழக்கமானது எட்டுத்திக்கும் நிறைந்து முட்டிக்கொண்டு மூடியது.

அருச்சுனனுற் கர்ணனுந் தருமராஜனுற் கிருதவன்மனு முறிபட்டோடுதல்

இவ்விதமாக அவரவர் புஜபலத்துக்குத் தக்கபடி போர்புரிந்து வருங்காலையில், அர்ச்சுனனுங் கர்ணனும் அமோகமான யுத்தங்கள்

விளைத்தார்கள். அப்போது காலகேய நிவாதகவசரென்னு மசுரரைக் கடந்து வெற்றிபெற்ற அருச்சுனன் கர்ணனேநோக்கி "கர்ணு! நீ பிறப்பதற்குக் காரணமாயிருந்த சூரியன் மலைவாயிற் போய் விட்டான். நான் காண்டவ வனதகனஞ் செய்தபோது எனக்குச் சுவேதவாம் புரவியும், தேரும் கொடியும், வில்லும், அட்சயத் தூணியுங்கொடுத்த அக்கினிதேவன் அமோகரித்து அநேகஞ்சோதி யாய் அமர்ந்திருக்கின்றான். ஆகையால் உனக்குப் பலமொடுங்கிப் போயது. எனக்குப் பலம் விசேஷித்தது" என்று அங்கதேசாதிப னுடைய வல்லமை குறையும்படியாகப் பேசி, தனது பொன்னிற மின்னலைத் துன்னிய செங்கிறத்திச்சிகை மன்னிய சிலீமுகங்களாற் கர்ணன்பற்றிய வில்லும், நாணியும், கணையும், தேரும், சாரதியும், குதிரையும், அற்று வீழச்செய்து அக்கர்ணன் புறங்கொடுத்து வெகு வேகத்துடன் ஓடும்படி மாட்டினான். இவ்விதப்படியிருக்க, தரும ராஜனுங் கிருதவன்மனுந் தளர்வில்லாமற் சண்டைசெய்தனர். ஒப் பற்றமுரசக் கொடியினன் தன் திருத்தேரள் வலிமையினாலும், நீண்ட வில்லிலிருந்து தூண்டிய கெரிமுகக்கணைகளின் நிர்வாகநேர்ப் பினாலும், கால்முதற் கழுத்தளவும் உருவக் கொய்து, மேல்முகத்து திரவெள்ளம் பெருகச்செய்து புரட்டியபோது கிருதவன்ம னென்று கீர்த்திப் பிரதாபமாய் வந்த கேடில்லான் கேட்டு, குதிரை, சாரதி, இரதம், வில், பாணம் முதலிய யாவுங் கைவிட்டு, முதனாட் போரிற் சக்கரவர்த்தித் திருமகனே டெதிர்த்த தசக்ரீவனை யொத்து, சண்டைசெய்த நிலத்தில் எதிர்நிற்கத் தைரியமில்லாமல், அர்ச்சுனனுற் சூரியகுமாரனை கர்ணன் எந்தக் கதியானுமீனு அந்தக் கதியாயினன். அவன் முதுகுகாட்டி யோடுவதை அரவெழு திய உரககேதனன் கண்டு, சரசர வென்று தேரைச் செலுத்திச் சென்று, சேனாதிபதியாகிய ஆசாரியருக் கெதிர்போய் நின்று, "ஐயா! அப்பக்கத்தில் அர்ச்சுனனுட னெதிர்த்த கர்ணனு மிளைத் தான். இப்பக்கத்தில் தருமராஜனுடன் பகைத்த கிருதவன்மனும் இதோ கிலேசத்துடன் ஓடுகிறான். அதைச்சற்று நீரேபாரும்!" என்று சொல்லினன்.

துரோணாசாரியர் சுயோதனன் வேண்டுகோளால் தருமராஜனெடுதிர்த்து அபஜயமடைதல்

அவ்வார்த்தையை ஆசாரியர் கேட்டு அரசன் சொல்லி யடங்குவதற்கு முன்னே தாமெதிர்த்து நின்ற திஷ்டத்தூய்மனை

விட்டுவந்து தருமராஜனை யெதிர்த்தனர். அப்போது மறங்குலாவிய தங்கள் மலைச்சிலையை இருவரும்வளைத்து, வாளிகள்பலவிடுத்து இடம் வலஞ்சுழன்று, எதிரெதிர்மலைந்து ஒருவரையொருவர் புகழ்ந்து, உடனே யிருவரு மிகழ்ந்து தேர்களுங் குதிரைகளுஞ் சிதைந்து, தங்களுக்குடன் வருஞ் சேனைகளுமழிந்து, உகாந்தகால மிதுவென்று சொல்லும்படி ஒருபக்கத்திற் யுத்தம் பண்ணி இருவருங் கையிளைத்து மறுபடியுந் தேறினார்கள். அப்போது துரோணசாரியர் மேலிட்டு, தமது வில்லில் இந்திராஸ்திரம், சக்திராஸ்திரம், சூரியாஸ்திரம், அக்கினியாஸ்திரம், வாயுவாஸ்திரம் நிருதியாஸ்திர, வருணஸ்திரம், எமாஸ்திரம், குபேராஸ்திரம், ஈசனஸ்திரம், கந்தருவாஸ்திரம், யக்ஷாஸ்திரம், வசுவாஸ்திரம், குருவாஸ்திரம் இவைமுதலிய தேவாஸ்திரங்களைத் தொடுத்து குபுகுபு வென்னும் புகையும், திகுதிகுவென்னுஞ் சிகையும், செகமெலாம் நிரம்பப் பிரயோகஞ் செய்தார். அவருடன்கூட வந்தவர்களுங் கோடிகோடியாய்க் கூரம்புகளை யிறைத்தார்கள். அக்காற் குவளைமலர் மாலையணிந்த தருமராஜனவர் அவர்கள் விடுத்த சரங்களையெல்லாம் தன்பேரிற் படவொட்டாமற் செய்துகொண்டு, செந்தழற் கதுவும்படி எவ்வெக்கணைகளை எவரெவர் தொட்டார்களோ அக்கணைகளை அவரவர் பேரிலுந்தி யழிகவென்று நின்றனர். அப்படி நின்ற சத்தியவானுடைய மேன்மையைத் துரோணசாரியர் கண்டு அம்புயத்திறை கொடுத்த பிர்மாஸ்திரத்தை யெடுத்து, ஆசாரவுபசார பூசாவிதி முடித்து, அத்தருமபூபதிக்கு மேலாகத் தொடுத்தார். அந்தப் பிரம்மாஸ்திரமானது கான் முகத்துடன் நாதமொலித்து, வடவாக்கினியைப்பக்கத்துணையாகக் கொண்டு காலனெலாங் கொளுத்தி வானெல்லாந் தகித்து வருவதாயது. அப்படி வருவதைக் கருணையும் பொறுமையுங்கொண்ட தருமராஜனென்னும் புண்ணியன்கண்டு, அக்கமலவூர்தியின் கணைக்கிணையாகிய சிநேந்திராஸ்திரம் எடுத்து வந்தித்து, தூபதீப மேற்றி வாழ்த்திப்போற்றி, எதிர்வருமிரண்ய கர்ப்பன் கணையைத்துண்டமெட்டாகக்கண்டு நாஸ்தியாக்குகவென்று யாவருந் துதித்து மதிக்கச் சூடங்காட்டி விடுத்து, பின்னுஞ் சிற்சில அஸ்திரங்களைச் செலுத்தி நின்றார். அச் சிநேந்திராஸ்திரத்தாற் சிருஷ்டி கர்த்தாவாகிய வேதகாருண்யனளித்த பிர்மாஸ்திரம் விபூதிபோலழிந்து போயது. அதைத் தனுர்வேத பாரகராகிய விற்குரு கணடு மகராஜசிரேஷ்டனுகிய மெய்விரதனுடனே பின்னுஞ்சில வல்லமையான வாளிகளைக் கொண்டமராடி, தருமமூர்த்தியை யெதிரிலும் வெல்லாமல் ஒருவ

ரோடுஞ் சொல்லாமல், முதுகிட்டோடுபவரைப் பார்க்கிலும் காமே திரும்பிப்போவது நலமென்று போனார்.

துரியோதனன் பீமசேனனால் முறிபட்டோடிவந்து கர்ணனிடத்தில் முறையிட, அவன் பிரதாபத்தைக் கூறித் தேற்றுதல்

இப்பால் பீமசேனனுட னெதிர்த்துப் போர் விலக்கப்போன வேந்தர் வேந்தனுகிய துரியோதனன் பேரிழந்து, சீரிழந்து, தேரழிந்து, தாரொழிந்து, வில் முறிந்து, கணை தறிந்து, கவச மறுந்து வீரபட்டம் துறந்து ஸ்திரமும் வரமுங் குறைந்து, சரீரம் யாவும் உதிரக்காற் பொழிந்து, வருந்தி வாடிப் புறங்கொடுத் தோடி, திறங்கொண்ட தன் தோழனுகிய கர்ணனைத்தேடி, அவனைக் கண்டு அவனெதிர் நின்று அதிக ஆசையுடன் தொடுத்த பூச்சரபம்போற் சோர்வில்லாமற் சொல்லத் தொடங்கினன். அஃதியாதெனில் "ஓ அங்கதேசத் தரசே! கேளும்! அதிக ஜெய முழக்கத்துடன் சஞ்சரிக்கின்ற பலம் பொருந்திய பாண்டவர் கள் நாலுபக்கத்திலும் ஏவும்படியாகிய அதிக உற்சாகம் பெற்ற பாண பலத்தினால் நமது படைகளெல்லாம் வலுவற்று அடங்கிப் போய் விட்டன. ஆனதால், மேலு மென்று நிலையாகச் சொல்லுகின்ற புஜவிர்ணதமுடைய வள்ளலே! என்னைக் காக்கவேண்டு மென்று நீர் கொஞ்சம் வலிமைகொண்டு மனவுறுதியோடு நின்று, போர் புரியும் இடங்கள் தோறும் உம் விற்றிறஞ், சொற்றிறம், வீரத்திற முதலிய போர்த்திற வல்லபத்தை முனையாக நாட்டவேண்டும். அதற்குத் தருணம் இதுதான்: இதைவிட வேறு சமயமுங் கால மும் இல்லை. ஆகையினால் என் முகத்தைப் பார்த்துக் கோபித்து நின்று, சத்துருக்களைக் கொன்று விண்ணிற் குடியாக்குக" என்று வணங்காமுடி வேந்தனுரைக்கவும், அம்மொழியைச் சாந்தமாய்க் கேட்ட பூங்கமல நண்பன் மகனுகிய புண்ணியன் ஆய்ந்து சொல்லு கின்றான். "ஓ நல்ல குலக்கொழுந்தாகிய செல்வத் துரியோதன னென்னும வல்லவனே கேளும்! வின்னலஞ் சொன்னலங்கொண்டு என்னுட னெதிர்ப்பவரும் தப்பி யெதிர்த்துவிட்டால் உயிரொழி யாதவரும், உயிர்பிழைத்தாற் புறங்காட்டியோடாதபேருமுண்டோ? உமதிஷ்டப்படி பகைவர் நஷ்டப்படும்படியாய்ப் போராடவும் வல்லேன்! அம்மட்டில் விட்டுவிடாமல், பலம்பொருந்திய பாண்டவர் களுடைய பிராணனையும் வாங்கி, இப்பஞ்சாசதகோடி இராஜ்யங்

களும் உமக்குப் பட்டங்கட்டவும் வல்லேன். ஆகையால் நான் ஒருவனே உமக்கு மெத்த வல்லவன். நானிருக்கும்போது நீர் யாதொரு சஞ்சலமும் கொள்ளவேண்டியதில்லை!" என்று சொல்லினன்.

தன்னைத்தான் புகழ்ந்துகொண்ட கர்ணனைக் கிருபாசாரி பழிக்க, அவனவரைக் கடிதல்

அப்போது யாவரும் துதிக்கும்படியாய் அவர்கள் பக்கத்திலிருந்த கிருபாசாரியார் கர்ணன் கூறிய வார்த்தைக்கு மனந்தாளாமல் "ஓ சூதகுமாரனே! நீ பலவாறுகிய சிங்காரப் பேச்சு பேசுதற்கு மெத்த வல்லவனேயல்லது, சத்துருக்களை ஜயித்துச் சாதிப்பதற்கு வல்லவனல்லன் அடா தம்பி! வெட்சிமாலை தரித்த பீஷ்மராகிய சாந்தரும், சில வீராதிவீர காந்தரும், ஆயுதங்கைக்கொண்ட மாந்தரும், இத்துரியோதன வேந்தரும், இவருடைய தம்பிமார்களும், கூட்டமாகிய புத்திர பௌத்திராதியரும் துரோணரும் அசுவத்தாமனும், நானும், நீயும், முன்பு விராடபுரத்தெல்லையை மிதித்தபோது, இந்த நானுனவன் ஒரு தேருக்குமேல் வேறு தேரு மில்லாமல், தன் பக்கம் ஒரு படைகளுந் துணையாய் வராமல் ஒரு வில்லுடன் வந்து யுத்தம்புரிந்து புடைத்தகாளில், முல்லைமாலையணிந்த ஆயர்களையும் பசுக்கூட்டங்களையுங் கைவிட்டு முதுகு காட்டி யோடிய முதன்மைத் திறத்தையோ இப்போது நீ யிவ்விடத்திற் சொல்லியது" என்று சொல்லவும், உடனே அங்கபூபதியானவன் அவரை மென்று தின்றுவிடத்தக்க சினங்கொண்டவனுய்க் கண்பொறி கலங்கக் கனைத்து, இதழ்மடித்து, சிவ்வென்று சினத்தையுறிஞ்சிப் பெருமூச்சு விட்டு, "அடடா! ஓ கிருபரே! எனக்கீடானவனே அந்த நான்? இம்மொழி இன்னொருவன் சொல்லிருப்பானுகில் இக்நேரம் அவனுடைய நாக்கை இரண்டாய்த் துண்டித்து விடுவேன். நீ புராதனனுகியும் பிராமணனுகியு மிருந்ததினுல் இந்தப் பிழை பொறுத்தேன். இன்னொருக்கால் இப்பேர்ப்பட்ட தப்பு வார்த்தை இசைப்பாயாகில், ஓ! வெற்றி பெற்ற வேதியனே! பழைய விற்குரு வென்றும் பார்க்கமாட்டேன். இன்னும் எவர்கள் தடுத்தாலுங் கேட்கமாட்டேன். ஒரு விசைக்குப் பத்து விசையாகச் சொன்னேன்!" என்று பின்னுஞ் சொல்லுகின்றன். "ஓ கெடிவீரத்தன்மை யுணராத கிருபனே! என்னுடைய விற்றிறமையைத் தேவாதி தேவர்களும் புகழ்வார்கள். இவ்வுலகத்தில் என்னைக்

குறித்து உள்ளங் களிக்காதபே ரெவர்கள்? அப்படி யிருக்க, உன் மனம் பாண்டவர் பக்ஷத்தி லிருந்தபடியால் என்னைக் குறைவாகச் சொன்னாய்! நீ சொல்ல வேண்டிய பெருமைதான், நான் கேட்க வேண்டிய சிறுமைதான் என்று தனது மனத்தின் படபடப்படங்கா மல் முகஞ் சிவந்து நின்று கர்ணன் சொல்லவும், இவ்வசனத்தை அண் டையிற் பொருமையாய்க் கேட்டுக்கொண்டிருந்த பரிசுத்தம்பெற்ற மலைக் குருவின் பிரதாப மைந்தனுகிய அசுவத்தாமன் மனக்காளா சில் சொல்லுகின்றான்.

கிருபாசாரியரோடு வாதித்த கர்ணனை அசுவத்தாமன் எதிர்த்துக்கொள்ள, அது கண்ட துரியோதனன் அவர்களை உபசரித்தடக்குதல்

அடா சூதனே! அடா தன்னைவிட வல்லவர் ஒருவரு மில்லை யென்று தன்னைத் தான் புகழ்ந்து மெச்சிக் கொள்ளுஞ் சவுங்கலே! அடா அற்ப சந்தோஷி! உன்னிடத்தில் வீரமிருக்குமாகில் உன் மட்டி லிருக்கவேண்டுமே யல்லாமல், எவராகிலும் உள்ளதைச் சொன்னால் அவர்கள் காக்கைத் துண்டிப்பேனென்று புறப்பட்ட வல்லமை உனக்கெங்கிருந்துண்டாயது? என்ன பலத்தைக்கொண்டு சொன்னாய்? அடா இளந்தையே! யோசிக்கு மிடத்திற் சவ்விய சாசியை எவ்வளவேனும் நீ வெல்ல வல்லவனல்லவென்று பத்துத் தரஞ் சொல்லி யிருக்கிறேன். இப்பவுங் கோடியனந்தம் அந்த விஜ யனை நீ அசைக்கமாட்டாயென்று இதோ உன் முகவிற் சொன்னேன். அடா! இசை கெட்டவனே! அடா பசையற்றவனே! அடா வசை பெற்றவனே! நீ இப்போது சொன்ன சொல் வழுவாமல் என்னு டைய காக்கைத் துண்டித்து விட்டு மறுகாரியம் பார்!" என்று கண் டித்துப் பேசி, அக்கர்ணனுக் கண்டையிற் சென்று நின்றான். அப் படி நின்றவனை காந்தாரியின் மகனுகிய காவலன் கண்டு அதிவேக மாய்ப் போய் இருவருக்கு மத்தியிலிருந்து, அவர்கள் முகத்தை நோக்கி, "ஓ எனதருமை மித்திரர்களே! சகல கலைக்கியானம், ஆகமம், புராணசாரம், ராஜ தருமம், வீர தருமம், கன்னெறி, கநூர் வேதம் முதலிய சாஸ்திரங்களெல்லாம் பார்த்து ஓர்ந்து தேர்ந் திருப்பவராகிய நீங்கள் ஒருவருக்கொருவர் உள்ளங் கொதித்துப் பதைத்து இஷ்டமாயுள்ள எந்தனுக்காகப் பாடுபடுவதை விட்டு, துஷ்டத்தனமாகப் பேசி எதிர்க்கத் தக்கதோ? நீங்களொருவரி லொரு வர் மாறுபட்ட கொள்கையால் யுத்த முனையை வென்று எனக்குக்

கொடுக்க வேண்டுமென் றிருந்த அரசும் ஆண்மையும் போய்விட்டன. ஓ என்னரிஷ்டர்களே! காமெல்லோருங் கூடி இக் குருக்ஷேத்திரத்திற்கு வந்தது, நம்மை மதிக்காமல் துதிக்காமற் பதைத்து நம் மூட னெதிர்த்துச் சத்துருக்களை வென்று கொய்ய்வா? அல்லது நாமொருவர்க் கொருவர் கோபமேற் கொண்டு சண்டை செய்யவா? இழிவாக ஒருவரை யொருவர் வையவா? நாம் என்ன காரியத்திற்கு வந்தோம்? சொல்லுங்கள்! ஓ எனக்குரியவராகிய பெரியோர்களே! நானே இத்துரோணாசாரியரும் கிருபாச்சாரியரும் மத்திரபுரி ராஜனுகிய சல்லியனும், மித்திரனுக்குரிய புத்திரனுகிய கர்ணனும் நீரும், என்னுயிருக்குயிராகி என்னுடன் பொருந்திய பஞ்சபூதமென்று கருதி, கொஞ்சமேனும் நெஞ்சில் வித்யாசமில்லாமல் உண்மையாய் உறுதியுடன் ஆசை கொண்டிருக்கின்றேன். அப்படியிருக்கப் போர்க்களத்தில் நீங்களொருவருக் கொருவர் பம்பல பேதமாகிய வார்த்தைகளைப் பேசிக்கொள்வது நீதியோ! இது என்னை விறகாவில் விடுக்கிற சேதியோ! ஐயையோ!! ஓ மகா பெருமையுடைய வர்களே! இன்றிரவு விடிவதற் குள்ளே நீங்களெல்லோருஞ் சேர்ந்து, எப்படியாகிலும் ஒப்பற்ற வில்லாளியாகிய அர்ச்சுனன் பிராணனை ஓரு வினாடிப்பொழுதில் வாங்கி, உத்தம கூஷமாபரணத்தை என் காதில் போடுங்கள். ஓ என்னுரியவர்களே!' என்று மகா உபசாரத் தோடும் வேண்டிக் கொண்டான் துரியோதன ராஜன்.

அருச்சுனனுக்குக் கர்ணன் அநந்தமுறை புறந்தரக்கண்டு முனையவெழுஞ் சுயோதனனைக் கிருபர் சம்மதப்படி அசுவத்தாமன் தடுத்து அமருக்கெழல்

இவ்வாறு உபசாரமாகச் சொல்லிய புவன சக்ரேச்வரனுடைய மொழியைக் கேட்ட இரவி குமாரனுகிய கர்ணன் "இதோ உமதிஷ்டப்படி முடிக்கிறேன் பயப்படாதீர்" என்று தேரேறிச் சென்று, இந்திர குமாரனுகிய காண்டீபன் பேரிலெதிர்த்தான். இவனைக் கண்ட அர்ச்சுனன் அதிக சந்தோஷங் கொண்டு ஆழிமால் வரைபோன்ற காண்டீபத்தை இறுக்கி, அழகிய நாணிமுறுக்கி, அம்பரக்கணைகளை நெருக்கி, அங்கர் பூபதியை உருக்கி, அம்புலிக் குடையும், அம்பரச் சிலையும் ஆணிப்பொற் றேரும், சரவேகக் குதிரையும், சாரதி தலையும், உச்சிதச் சிகரமும் கச்சையங்கொடியும், ஒன்றொழியாமற் போக்கி,

வீரபட்டத்தையுங் கவசத்தையும் பொடிப்பொடியாய் அழியத்தாக்கிப் போர் புரிந்தான். அப்போது அளவற்ற சௌரியங்களோடும் வந்த அங்கர் கோமான் புறங்கொடுத்தோடி, மறுபடியும் நாடி, மேலும் மேலும் ஓடி, மீளவுங் கூடி, மெய்குலுக்து வாடினன். இப்படி அனேகவிசை அழிந்தோடிய அங்கதேசனவன் அதி உக்ரவேலாயுதத்தை எடுத்து ஆழாழி முதலிய மாலாழிகளும் அலையக் குலைய அர்ச்சுனன்பேரி லெறிந்தான். அவ்வேல்வரும் விக்தையைக் கண்ட விஜயன் மிகவு மாச்சரியப்பட்டு, அவ்வேலை மால்தரும் வடிக்கணையால் தூளாக மடித்து, கால்தரும் இடியாஸ்திரத்தால் தேரையுமொடித்து, மணிக்கவச மார்பையும் துளைத்து, வசைக்கணையாற் போர் விளைத்துத் தருவும்போது, வள்ளலாகிய கர்ணன் வெள்ளமாகிய சொர்ணமேனி கசங்கிப் புறமிட்டோடினன். அவ்வண்மையை வணங்காமுடியையும் வாளரவக்கொடியையு முடைய மன்னவன் கண்டு மனஸ்தாபங் கொண்டு, "ஐயோ! பாவம் நமக்குரிய தோழன்; எத்தனையோதரம் பாடுபட்டும் நிறக்காமற் போகின்றனே" என்று நெடுமூச்செறிந்து இவரைப்போல் அக்கரையாய்ப் பாடுபடத் தக்கவர் யாருமில்லையென் றறிந்து, இனி நாம் சும்மாவிருக்கலாகாது. இந்த அர்ச்சுனனுடன் எதிர்த்துப் போர் புரிந்து கூடிய வரையிலும் பார்த்துப் பிராணனை விட்டுவிடுவோம்!" என்று மனத் துணிவு கொண்டவனாய் மண்டலாகிர்தியாக வில்லை வளைத்து, குண்டலாகிர்தியாகத் தேரைச் செலுத்தித் திரும்பினன்.

அப்போது வேதக்கடலாகிய கிருபரானவர் நிதானித்து, இந்தத் துரியோதனனுடைய கருத்து இவ்விதமென் றுணர்ந்து அவனுடைய ஏழ்மையைக் குறித்து அதிக இரக்கமுங் கிருபையு முடைய வராய்த் தர்ம சகாயனென்னும் தமது மருமகனுகிய அசுவத்தாமனை நோக்கி, "ஓ என்னருமை மருமகனே! சமுத்திர ஜலத்தை மீற வொட்டாம லடக்கி மேம்பாடாக வீறிப் பிரகாசிக்கும் வடவாமுகாக்கினி போல் விட்டிற் பூச்சி வந்து விழுகின்ற மேன்மைபோல், நன்மார்க்கமில்லா மனத்தினனுகிய துரியோதனனென்னும் துன்மார்க்கராதிபன் அர்ச்சுனனே டெதிர்த்து அமர்செய்ய எத்தனித்தான். நாமெல்லோருஞ் சமீபத்தி லிருந்தும் அவன் போய்ப் போர் புரியப் பார்த்திருப்பது அழகல்லவே; ஆதலால் யுத்தஞ்செய்யப் போகாகின்ற துரியோதனனைத் தர்மமாக நாம் தடுத்து, விஜயவீர கண்டூரவமாகிய சவ்யசாசியை யடுத்துச் சண்டை பண்ணுவோம் வா" என்று சொல்லவே, விபூதி தூளிதத்தினற் பிரகாசித்து

விளங்கும் அந்திவண்ணத் திருமேனியி னழகு வாய்ந்த அரனடியை நோக்கித் தவமிருந்து அவரருட்டரிசனங்கண் டடல்கொண்ட அசுவத்தாமன் அதற்குச் சம்மதித்து, "மாமா! தேவரீர் சொல்லிய யுக்தி நல்ல காரியந்தான்." என்று சொல்லி வல்லமையுடன் ரதத் தைச் செலுத்திப்போய், தனக்கு முன்னதாகச் சென்ற மன்னர் மன்னனுகிய கார்வேந்தன் முகத்தைப் பார்த்து, "அரசனே! நாங்களெல்லோரும் இருக்க நீர் அந்த விஜயன்பேரிற் போர்புரியப் போகவேண்டுமோ? நீரவ்வளவு பிரயாசை யெடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. அந்த காரியத்தைச் சொல்லுதற் கரிதாகிய யுத் தத்திறத்தை நாங்கள் விளைத்து முடிக்குகின்றோம். எங்களுக்குச் சொல்லவேண்டிய காரியங்களைச் சொல்லி நீர் படைக்குப் பின்னு கின்று வேடிக்கை பாரும்" என்று புரவித்தாமன் புகன்று துரியோ தனன் தேருக்கு முன்னே தன் தேரைச் செலுத்திச் சென்ற காலை யில், பின்னுகின்ற மன்னர் மன்னன் அவனுக்குச் சில மிருதுவான இனிமைச் சொற்களைச் சொல்லுகின்றான்—

ஐயா அசுவத்தாமனே! உன் தந்தையாகிய துரோணாசாரி யரை என் தந்தையாகிய திருதராஷ்டிரனைப் பார்க்கிலும் எண் மடங்காய் எண்ணி நம்பினேன். அந்த மகாராஜன் அருச்சுனன்பேரிற் பூரணமாகிய பக்ஷத்தை வைத்திருக்கிறபடியால், நீயுந் தந்தை கொண்டிருக்கும் தாக்ஷண்யத்தைப் பார்ப்பாயே யல்லது என் சிந்தை கொண்டிருக்கும் தீனத்தைக்கண்டு தனஞ்செயன்பேரிற் கோபஞ் சற்றும் கொள்ள மாட்டாயே. இப்பேச்சை நானுறுதியாய்ச் சொல்ல மாட்டுவேன். அதே னென்றால், விஜய சங்கிராமமீளியாகிய நீ கோபவீரங்கொண்டு யுத்த மூனையிற் பிரவேசித்து வில்லைப் பிடித்து நாணியடித்து விசிகந்தொடுத்து கிற்பாயாகில், என் சத்துருக்களாகிய பாண்டவர்கள் பழையபடி வனவாசம் தழையவேண்டும்; அல்லது மண்ணுலகம்விட்டு, விண்ணுலகடைய வேண்டும். ஓ புண்ணியவானே! உன்னெதிர் நின்று யுத்தஞ் செய் யும் பெருமை வாய்ந்த பேர்களுளரோ? மேகவாகனனுகிய இந்திர குமாரனை வெல்வதுங் கொல்வதும் உனக்கொரு கணக்கோ? ஓ விந்தை தங்கு ஜெயவீரப்பிரதாப வித்தகனே! சந்திரபிம்ப குடிலாதரனருளிய வரமுள்ள நின்னை இம்மூவுலகத்துள்ளு மறியாத வருளரோ? ஐயனே! ஏதோ சில காரியத்தால் என் மனதை வாதித்துக் கொண்டிருந்த நினைவை வஞ்சனையில்லாமற் சொன்

னேன். இப்பவும் நீங்களே தஞ்சமென்று நம்பினேன்" என்று கெஞ்சிரக்கமாய்ச் சஞ்சலத்துடன் உரைத்தான்.

இவ்வசனத்தைக் கேட்ட அசுவத்தாமன் இந்துகுலத் தோன்றலைப் பார்த்து, "அரசனே! என் தந்தையின்பேரில் மெத்தவும் நிந்தனை நினைத்துச் சொன்னீர். அது உமக்குத் தகாது. பெரியோர்களும் வீரர்களுமாயுள்ள பேர்களின் செய்கை எப்படி யென்றால், அன்பும், பக்ஷமும், மனத்திற் கொண்டிருந்த போதிலும், பகை நேரிட்டு அமர்புரியும் போர்க்களத்தில் முன் வைத்திருந்த நேசபாச பக்ஷ விசுவாச முதலியவைகளில் லக்ஷயம் வைக்காமற் சரியாகிய சண்டைசெய்து எதிரியைக் கொன்று ஜெயம் பெற்றாலும் பெறுவார்கள்; ஒருவேளை அபஜெய முற்றிறந்தாலு மிறப்பர். எப்பேர்ப்பட்ட பகை நேரிட்டிருந்தபோதிலும், எதிரிகள் பூரண பல முடையவரா யிருப்பார்களாகில், அவர்களையும் புகழ்ந்து மகிழ்ந்து கொண்டாடுவார்கள்; அப்படி புகழ்ந்தபோதிலுங் காரியமே கண்ணாயிருப்பார்கள். வித்திறமும் போர்த்திறமும் தெரிந்த நாங்கள் வேதியராகையாலும் வேள்வி நாயகன் மைந்தனென்னும் விஜயனுடைய வில் வித்தையையும் வீரசிங்தையையுங் கூடியவரையிலும் தெரிந்திருக்கின்ற விவேகமுடைய பேர்களாதலாலும், அவனுடனெதிர்த்த எல்லாருயிரும் நாசமடையு மென்று என் தந்தையானவர் அவன்கற்றிருக்கும் வித்தைத் திறத்தைக்கண்டு பெரிய கிருபைகொண்டு, மதிய மடைந்து, மலர்விழி சிறந்து, மகிழ்ந்து மேல்மேலாகச் சொல்லி யிருப்பார். ஒருவருடைய கல்வியின் அருமைதெரிந்து பெருமைப்படுத்திச் சொல்வது கல்ல நூல்களே யெல்லாம் ஆராய்ந்து வல்லவர்க்கேற்றச் செய்கையுற்றிருக்கும் பரிசுத்தவான்களினது கற்கடமையாகும். ஓ விக்கிரம வேந்தனே, அப்படி அவர்கள்பேரிற் பக்ஷமாய்ச் சொன்னதென்று நீர் நினைக்காதீர். கல்வித்திறத்தைப் புகழ்வதே யன்றிக் கற்றவனைப் புகழ்வ தல்ல. கல்லது அதிருக்கட்டும். நானிப்போது விரைந்து சென்று எனக்குள்ள வல்லபமெல்லாங் காட்டுவ தன்றி, கடன் வாங்கிப் போர்புரிந்தாலுஞ் சாகாமலிருக்கும் தலை யெழுத்துடையவர்கள் சாவார்களோ? நமது சமார்த்தியத்தால் அவர்களைக் கொல்லக் கூடுமோ? இதற்கு முன்னே உமது கையிலானவரைக்கும் பார்த்து விட்ட காரியந்தானே! இது உமது தெளிவாகிய சிந்தையில் தோன்றவில்லையோ! ஆகிலும் இதோ நான் போர்புரியப் போகின்

றேன். இந்த யுத்தமுனையை யுமது கண்ணுறக் கண்டுமனமாறத் தெரிந்துகொள்ளுங் காவலனே'' என்று புகன்றனன்.

இவ்வாறு அசுவத்தாமன் பலவித முறையாலுந் துறையாலுந் துரியோதனனுடைய மனதைத் தேற்றி, தனது சாரதியை எச்சரித்தான். அந்தச் சாரதியுந் தேரைக் கரகர பறபற விறுவிறு கிறுகிறு வென்று முந்தி ரதத்தைச் செலுத்த, அசுவத்தாமன் அழகிய பொன்மயமான வில்லை வளைத்து நாணொலிகாட்டி, திக்குகளெட்டுந் திடீரெனக்குமுங்க, உகாந்தகாலத் திடியென வோங்கி, கடல்சுவறக் குமுறுங் கதிமேவிய அடல்தாவிய புகையாஸ்திரங்களைப் புங்காது புங்கமாகப் பொழிந்து, சேமத்தில் வைத்திருந்த செம்பொன்னேப்போன்ற அம்புயன்கணை, ஆதிசேஷன்கணை, அரிபரந்தாமன்கணை முதலிய பற்பல அஸ்திரங்களைக் கார்கால மழை சொரிதலைப்போல் மூட்டி, சந்திரகுலேசன இந்திரபோக சுந்தரவதன நந்தியாவட்டை மாலையை அணிந்த விந்தகிரிப் புயனுகிய துரியோதன ராதிபனும், அவனுடனிருந்த வீரபூபாலரும் ஆச்சரியங் கொண்டு மதிக்கும்படியாய், பாண்டவப் படைகளை யெல்லாம் பஞ்சாய்ப் பறந்து எஞ்சிச் சிதைந்து, இறக்கும்படி போர் செய்தான். அப்போது பல பல யானைகள் விலவில வென்று உதைத்துக் கொண்டு ஓய்ந்தழியவும், கலகல வென்று சிறந்த வேகமுந் தீரமுங்கொண்டு பாய்ந்த புரவிகள் தலையறுந்தும் சிதைந்தும் இறந்து மடிந்தொழியவும் சாரதியுந்தேர்வரிசைக் ளெல்லாம் மாருதி சிந்திய மலைபோற் றகர்ந்து, வீழவும், திரண்டுவந்த பதாதியர் யாவரும் உருண்டு மாய்ந்து ஒழிந்தனர். பல தேசத்தரசர்களும் வந்து வந்து, அசுவத்தாமனுட னெதிர்ந்து முதிர்ந்து அமர் தொடுத்து ஆற்றமாட்டாது அழிந்து போனர்கள். போனவர்போக சிலர் பதுங்கி, நீர் நிறைந்த ஏரிகளை யுடைந்து சாரிபோகின்ற ஜலம்போல் வேசாறி போனர்கள். இவ்விதமாக ஒப்பற்ற அசுவத்தாமனுடைய கொடுங்கணைகள் எவ்வெவ் விடங்களிலும் நுழைந்து நுழைந்து, எல்லாவுயிர்களையும் பயிர்களைக் களைவதுபோலக் களைந்து பறிக்கின்ற தன்மையை, அவ்விடத்தில் அமர்புரிந்து கொண்டிருந்த பாண்டவராகிய ஐவரும், ஐவருக்குரிய அரசரும், அவ்வரசரைச் சேர்ந்த சேனைகளுங் கண்டு ஆச்சரியங் கொண்டார்கள்.

அசுவத்தாமன் திஷ்டத்தூய்மனைக் கொல்லவிட்டு, நகுல சகாதேவரையு நலித்தோட்டி அருச்சுன னோடு அரும்போர் விளைத்தல்

அந்தச் சமயத்தில் சேனாநாயகனாகிய திஷ்டத்தூய்மன் பார்த்து, தன்னுடைய தேரைத்திருப்பி, உகாந்த காலாக்கினியிலும் உயர்ந்த உரகக்கனை முதலிய திரிபுரதகனக்கனைக் கொப்பாகிய புங்கவங்களை ஒன்றின்மே லொன்றாய் எங்கும் நெருங்கச் செலுத்தி, மதம் பொருந்திய ஒரு யானையைக் கொல்லவேண்டு மென்று வந்த ரகக் திருந்திய கொடும் புலியைப்போல் வந்தெதிர்த்து, அசுவத்தாம னுடன் கைகலந்து, மண்ணில் நிறைந்த மன்னுயி ரெல்லாமு மயங்க, விண்ணிலு நிறைந்த விண்ணவ ரெல்லாருந் தியங்க, அஷ்ட கிரிகளுங் கதறிக்கலங்க, புஷ்டியாய் நெய்கலந்த நெருப்பைப்போல் நெஞ்சில் கோபமூண்டெரிய, நெடுமூச்செறிந்து, நீண்ட மழுவைத் தாங்கிய கரதூஷண திரிசிரரென்னு மூவரும் மூதண்டமுங் குலுங்க கோதண்டமேந்திய கோசலை மகனோடு பஞ்சவடி தீரத்திற் பகைத்துச் சண்டைசெய்த தன்மையைப்போல் இருவரும் வெகு நேரஞ் சமர்புரிந்து வரும்போது, தான் செய்யும் போர்முகத்துக் கெதிராகிய நேர்முகமில்லை யென்னும் பூரிப்பும் இறுமாப்புமுடைய அசுவத்தாமன் திஷ்டத்தூய்மனைச் சினந்து பார்த்து, தீப்பறக்க உருட்டி விழித்து வேர்த்து, "அடா பாண்டவச் சேனாதிபதியாகிய பழிகாரா! எங்கள் குலப்பகை நிமிஷத்தில் முடியும்படியா யுங்கள் குலத்தை யொழித்து, நினைக்கு முன்னமே உன்னுயிரையும் நீக்கி விடுகிறேன் பாரடா!" என்று பற்கடித்து, விற்பிடித்துப் பல வாறுகிய போர்த்திற வீரங்களைப் பேசினான். அந்த மொழியை அக்கினியிற் பிறந்த திஷ்டத்தூய்மன் கேட்டு, "ஆ! ஆ! அசுவத் தாமனே! இதோ உறுதியாய்ச் சொல்லுகிறேன்! இந்த க்ஷணத்தில் என் கைக்கணையால் உன்னை விண்ணிலேற்றி, அப்பால் உன்னப்ப னுகிய துரோணனை ஆவிமாற்றுகிறேன் பார்" என்று காரிடிபோற் கலங்கச் சில வார்த்தைகள் இசைத்தான்.

அவ்வேளையில் துரோணரென்னு முனி மைந்தனுக்கும், பாஞ் சனுடைய தனிமைந்தனுக்கும், உற்ற துணையாய் உதவியாகும்படி அநேகம் வெற்றி வீரர்வந்து, யுத்தமுனையிற் கலந்து சற்று நேரமலைந்தனர். இவர்களிருவருங் கடுகடுத்துத் தொடுக்குங்

தொடைகளால், படபடத்து அடிக்குமடிகளால் அவர்களெல் லோரும் படிமிசை நிற்கமாட்டாமல் முடிசாய்த்து முகமாறித் துடி துடித்து ஓடிப் போனார்கள். அப்பாற் கலீரென்றசையும் வீரகண்டா மணி கட்டிய அழகிய அசுவத்தாமனும், திஷ்டத்தூய்மனும், ஒரு வரை யொருவர் கிட்டிக்குறித்து ரீண்ட வில்லை வளைத்து, நாணி மாட்டித் தெறித்து, கனைக்கும்படியான ஓசையுடன் பலங்கொண்ட தேவாஸ்திரங்களைக் கலங்கலமாகக்கொண்டு தானியங்களைச் சொரி வதைப்போற் சொரிந்தபோது அந்தக்கணைத்திறங்களால் இருதிறப் படைகளுங் கால்மாடு தலைமாடாகக் கவிழ்ந்து வீழ்ந்து அழிந்தார் கள். இவ்விதமாக இளைக்காமற் போர்புரிந்த யுத்த முகத்தில் செவ்வியோனகிய அசுவத்தாமன் முனைந்து, திவ்வியாஸ்திரங்களை யுகைந்து, திஷ்டத்தூய்மன் ஏறிய தேரும், குதிரைகளும், சாரதி யும், எடுத்த கொடியும், பிடித்த வில்லும் நடுத்தறியும்படியாகக் கெடுத்து அகற்றினன். அதனல் வெற்றிபெற்ற வீரர்க்குக் கோடாலி யாகிய ஐவர் சேனநாயகன் அங்கந்தங்கும் புங்கவங்களால் எங் குங் காயம்பட்டு மலையருவியைப்போல் உதிரம்பெருகி யோடா நின்ற உடலோடோடி வாடி, சற்றுநேரம் வேறு யோசனைகூடி, உடனே வருத்தமொழிந்து, விடமாகிய கணைகளைச் செலுத்துந் திடமாகிய வரிவிற்கொண்டு, இடமாகிய வேறு தேரேறிச் சென்று, அசுவத்தாமனுக் கெதிரே நின்று, அவன் தேரிற் கட்டிய சிங்கக் கொடியைப் பங்கப்படுத்தினன்.

அப்போது அசுவத்தாமன் அகங்கரித்து அச்சத்தை விளைக் கும் அரியாஸ்திரம் அனலாஸ்திர முதலியவைகளை மேலும் மேலும் விடுத்து, அந்தத் திஷ்டத்தூய்மனுடைய வில்லைத் துண் டித்து, வெற்றிமாலையைக் கருக்கி, வீரபட்டத்தை யுருக்கி, கவினம் பூட்டிய குதிரையையும், கதலிகாட்டிய தேரினையும், அந்தத் தேரை யோட்டிய சாரதியையும், பக்கத்துணையாகச் சார்ந்த பார்த்திபரை யுஞ் சதைத்துச் சிதைத்து உயிரழித்து, சங்கர சுயம்புவானவர் அங்கஜராஜனகிய சம்பராரியை முனிந்து தகித்தகாலத்திற் பொறி யெழவிழித்த நெற்றிக்கண்ணுக் கொப்பாகிய புகையும் அனலும் விரிந்த புங்கவங்களைப் பூசித்து நேசித்துப் பாஞ்சால புத்திரனுடைய அங்கமுழுவதையு மனலாய்க் கொளுத்தினன். அவ்வெப்பத்தால் மேனியெல்லாம் வெந்து கொந்து, சாய்ந்து, வீழ்ந்த திண்ணியனை ஐவர்படை நாயகனைச் சேமத்தேர் வைத்திருந்த சாரதிகள் வேறு

தேரிலேற்றி, யுத்தமுனைவிட்டு அப்பாற் கொண்டுபோய் உபசரித்தார்கள். அத்திஷ்டத்துய்மனனவன் சவுக்கியமடைந்து மறுபடியுஞ் சண்டைக்குவரு முன்னே மதமோகமு மதிவேகமுங்கொண்டு நெற்றிப்பட்ட மணிந்துவந்த யானைகள், குதிரைகள், ரதங்கள், கால்பலங்கள் இவை முதலிய வீரர்களை யெல்லாஞ் சேர்த்துக் கொண்டு, அந்திவானம்போல் ரத்தச் சிவப்பேறிய யுத்தபூமிக்கு நகுல சகாதேவர் வந்து அசுவத்தாமனை யெதிர்த்தமர் தந்தார்கள். அவர்களுடைய திறத்தைக்கண்ட ஆசாரிய குமாரனுகிய அசுவத்தாமன் கணைகள் பல எறிந்து அவர்கள் தொடுத்த செவ்வம்புகளைத் தடுத்தது மல்லாமல், சூரியனைப் பகைத்து உலகத்தை மறைத்தெழுந்த பனியைச் சூரியகிரண வெப்பங் கெடுக்குந் தன்மைபோல் அருமேனுதய அஸ்திரங்களை யுந்தி, யானை சேனை பரிவாரங்களைக் கொந்தி, தேர் குதிரை, சாரதி, வில் முதலியவற்றைச் சிந்தி அவர்களிருவரும் பிந்திக் காலோட்டங் கொள்ளும்படியாய் முந்தி முனைந்து முடுக்கிவிட்டான்.

இப்பால் அந்த அசுவத்தான் மரகத நிறங்கொண்ட மாயன் செலுத்துந் தேரிற் பொருந்திய வாசவன் மைந்தனிடம்போய், அவனைச் சிறிதுமதியாதெதிர்த்தான். அப்போது தனஞ்செயனு மவனுடனெதிர்க்க வந்த அவ்வசுவத்தாமனுஞ் சமனுக வில் வளைத்து டங்காரஞ்செய்து சரவருஷம் வருவித்தார்கள். அசுவத்தாமனடைந்திருக்கும் மமதையையும், அவர்களிருவருஞ் செய்யும் சண்டையின் சமதையையும், தேவர் முதலிய யாவருங்கண்டு பயங்கொண்டு, சிரோமாணிக்கத்தையும் ஜீவரத்தினத்தையு முடைய நாகத்தைக் கொடியாய்ப் படைத்த நராதிபனுக்குச் சர்வதேகமில்லாம லிவ்வுலகம் பட்டாபிஷேகமாய் விடுமென்று கெட்டியாய்ச் சொல்லி, ஓரடி மேலே பெயர்த் தொதுங்கிப் போகும்படியா யுன்னினார்கள். வாடைக் காற்றுடன் வடவாமுகாக்கினியுஞ் சேர்ந்து, புகைந்து, பொரிந்து, சொரிந்து, உகாந்தகாலப் பேரிடியைப்போல் முழங்கா நின்ற மூர்த்தண்ய முதன்மையாகிய வேதனை விளக்கும் அஸ்திரங்களை அவ்விருவருஞ் செலுத்துகின்ற காலவேகத்தையும், வச்சிரக்கட்டுகளுடன் மயிற்பீலி இறகுகள் பொருந்திய வடிக்கணைகளைக் குறிச்சு விடுகின்ற நெருப்பிற் கொப்பாகிய சரவேகத்தையும் வலமுமிடஞ் சுழலுகின்ற மகாரத வேகத்தையுங் கண்ணுரக்கண்டு சகிக்கமாட்டாமல், விண்ணுடர் முதலிய மன்னுயிரெல்லாரும் மனமிளைத்து வாதையடைந்து வருந்தினர்; பலம்பொருந்திய இராஜராஜர்

களெல்லாருஞ் சிக்தை கலங்கித் தியங்கித் திடுக்கிட் டகன்றனர்; இவர்களைப்பெற்ற தந்தைகளின் பட்டம் இவர்களுக்கே தருமென்று யாவருமியம்பினர்.

அவ்வேளையில் ஞாலமுழுமைக்கும் காபதியாகிய துரி யோதன ராஜனும், துரோணாசாரியாகிய மெய்க்குருவும், இவர் கள் விளைக்குஞ் சண்டையைக் கண்டு, அற்புதம் அற்புதமென்று ஆச்சரியங்கொண்டு, அகங்காரமாக அர்ச்சுனனுக் கருகிற்போனர் கள். அப்போது சர்வசங்காரகால ருத்திரனுக் கொப்பாகிய அசுவத் தாமன் அர்ச்சுனனுடைய யுத்தமுனையைவிட்டு அப்பாற் புரிகின்ற போர்முனையிற் புகுந்து அலங்கோலங் கண்டான்.

சோமதத்தன் பூரி இவர்கள் வதை

அவ்வசுவத்தாமன் விஜயனை விட்டகன்று போகவே அழகிய மேகம்போன்ற தேகங்கொண்ட அர்ச்சுனனுனவன் பரிசுத்தமாகிய ஆசாரியரைக் கண்டு, அவர்பக்கத்தில் தன் தேரைநடத்தி, அவ ருடன் பகைத்து, அழலெழச் சிரித்து, ஆசானிடத்திற் கற்ற வித்தையை அப்போதே போக்கடித்துக் கொள்ளாமல் எப்போதும் வித்தியாக்கி இசைபெற நிலையிட்டு வைத்திருக்கும் விதத்தை அவருக் கறிவிப்பான்போலத் தளர்ச்சி யில்லாமல் நினைத்தற் கரி தாகிய பெருமையுடன் அமரியற்றினன். இவ்விதமாக இருவரும் இவ்விடத்திற் சண்டைபுரிந்து கொண்டிருக்கும் வேளையில் வாகுலீ கராச குமாரன் சோமதத்தனவன் பொன் மலையிலும் பெரிய மலைபோன்ற தேரைச் செலுத்தி, சாமர்த்தியமுள்ள தரணிபால செல்லோரும் தன்னைச் சூழ்ந்து வரும்படியாய்ச் சண்டைக் கெதிர்த்து, தழற்பொறி கொதித்துத் தழைத்துச் சிதறும்படி மன்னி, மேலாகிய வெற்றிபெற்ற சாத்தகியை வளைத்து அமர் விளைத்தான். அப்போது மாலினுக்கினைய சாத்தகியானவர் வேலி னுங்கொடிய கடுங்கணை விடுத்து, அவனை நிவந்த பவளக்காற் றேரும், அத்தேரிற் பூட்டிய நான்கு குதிரைகளும், பக்குவ சாரதியும், வெள்ளிக்கொடியும், வீரபட்டங்கட்டிய வில்லும், பாழாகும்படி விலக்கி, அவனுடன் மேவிவந்த படைஞரையுங் கலக்கி, ஐந்நூற்றுவர்ப் படையைத் தொடுத்து, அச்சோமதத்த னுயிரைக் கெடுத்து விட்டார். இதற்குள்ளே வாயுகுமாரனுகிய பீமன்மேலிட்டு, தேயுக்கணைகளைத் தீட்டி விடுத்து, துரியோதன னுடைய சேனைக்கடலை யெல்லாங் கலக்கி வரும்போது, அரச

னுடைய சேனைவெள்ளமானது சண்முகக் கடவுள் தொட்ட சத்துரு சங்கார வடிவேலினுற் சமுத்திரம் பட்டபாடெப்படியோ அப்பாடு பட்டது.

அதுகாலையிற் பூரீசன் தம்பியாகிய பூரியென்று பெயர்கொண்ட பூபதியொருவன் பெருந்தேர் செலுத்திவந்து, போர்புரிந்த சாத்தகியின் பேரிலெதிர்த்து, விண்டலமும், மண்டலமும், எண்டிசையும், அண்டபித்தாதிர்ந்துபோகும்படி சண்டைவிளைத்து, சாத்தகி தொடுத்த சங்கிராமக் கணையால் தன்னுயிரொழிந்தான். இப்பாற் பூலோக புரந்தரனுகிய தருமராஜனுடன் போர்புரிந்து, பொங்கு கடல்போலெங்கு நெருங்கிக் கங்குல் பகல்தோன்றுமல் நிறைந்து நின்ற பூபாலரெல்லாரும் புயவலியிழந்து,தேரழிந்து, வில் முதலிய வீரபட்டமும் ஒழிந்து, உதிரம் வழிந்து, உடலங் கிழிந்து உயிரிழந்தோடினார்கள். இவையல்லாமல் சதானீக னென்பவன் ஆதிகாலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் க்ஷாத்திரநேரிட்டு மகமேருவின் முடியைப் படீலென நொடியிலொடித்த வாயுவின் தன்மைபோன்ற வலிமைகொண்டு வில்லை வளைத்து, பலம்பொருந்திய சண்டைசெய்து, படைமன்னர்களுடைய மண்டை பிளக்கும் படியாய்ப் பல கணைக்கூட்டங்களைத் தொடுத்து வந்தான். அக்கணைகளுக்கு மத்திர ராஜனுகிய சல்லியன் சகிக்கமாட்டாமல் மனமடிந்து உயிர்வாடி, அறிவழிந்து உடலாடி, இதுவரையிலுந் தனது குலத்துக்கில்லாத பழியைத்தேடி, இருட்டில் வழியை காடி ஓடினான். இம்மிப்படியிருக்க, அசுவத்தாமன் அல்லோல கல்லோலஞ் செய்து வராகின்ற அவதியினுல் ஐவர் படைக்கலம் படுகின்ற அலங்கோலத்தை இடும்பி குமாரனுகிய பலம்பெற்ற கடோற்கஜன்கண்டு, சன்னபின்னலாகிய மின்னலையுடைய வன்னவேலை யெடுத்து அன்னேன் மார்புக்கு நேராக எறிந்தான். அந்த வேலாயுதம் வந்து அசுவத்தாமனுடைய மார்பில் தாக்கியபோது, அவன் பெருந்துக்கங்கொண்டவரைப்போற் பேச்சில்லாமல் மூச்சில்லாமல் தேர்மேற் சாய்ந்து விட்டான். அப்படி மாய்ந்தவனைப்போல் வீழ்ந்த அசுவத்தாமனை ஆய்ந்துணர்ந்த சாரதியானவன் உடனே நெடுந்தூரங் கொண்டுபோய் உபசரித்துத் தேற்றிக்கொண்டிருந்தான்.

கர்ணனுக்குஞ் சகாதேவனுக்கும் யுத்தம்

இப்பாற் செங்கதிர்க்கினிய குமாரனுகிய அங்கதேசாதிபனுடன் சங்கையில்லாமற் சகாதேவ னெதிர்த்து உரம்பெற்ற பிரபல

பாணங்களைத் தொடுத்து, இருதிறப் படைகளிலுள்ள வீராதி வீரர்களெல்லாஞ் சபாஷ் என்று மெச்சிக்களிக்கும்படியாக அளவற்ற யுத்தஞ்செய்து, ஸ்திரமாகிய பலம்பெற்ற வில்லுந் தேரும் வீணுய் முறியவிட்டு, பின்பு மண்மேற்குதித்து மண்டியிட்டு, சாணைபிடித்துத் தயிலந்தோய்த்தெடுத்த கத்தி கேடயத்தைக் கைக்கொண்டு, காற்றுழிபோற் காகரவென்று திரிந்து, மீட்டுஞ்சுழன்றெறிந்து பரிந்துவந்து, சற்றுக் குந்தியிருந்து பந்துபோலெழுந்து, கர்ணனுடைய தேரின்பேரிற் போய்த்தாவினுன். அதைக்கண்ட கர்ணனுனவன் கமலாஸ்திரத்தை எடுத்து, சகாதேவன் கைப்பற்றிய கத்தி கேடயத்தைத் துண்டு துண்டாக்கினுன். அப்போது சகாதேவன் விண்ணிலெழுந்து மண்ணிற்பாய்ந்து, கண்கறுத்துக் கடுங்கோபங் கொண்டு, ஓர் கதாயுதத்தை வீசியெறிந்தான். அக்கக் கதாயுதம் வந்த காத்திரத்தைக் கர்ணன் கண்டு, காலாக்கினிக் கணையைத் தொடுத்துப் பொடியா யுதிர்த்தான். உடனே சகாதேவன் கனத்த வேலாயுதத்தை யெடுத்து வேண்டிய பூஜை கொடுத்து விடுத்தான். அவ்வேலாயுதமானது நாலாவித கோலாகலமாய் மேலாக ஓங்கி வருவதை மிகுகொடை யாளன் பார்த்து, சூலாயுதத்தைத் திரித்து விடுத்து, அவ்வேலாயுதத்தை இருபிளவாக வெட்டியெறிந்தான். அவ்வேலாயுதம் அழிந்து போனதைச் சகாதேவன் கண்டு வெகுண்டு, மாலாகிய சக்காயுதத்தை விறுவிறென்று சுழற்றிவிடுத்தான். அச் சக்காயுதமானது உக்ரமான தழலைச்சொரிந்து, மின்னலும் இடியும் இளைக்க வேகங்கொண்டு வருவதைக் கர்ணன் கண்டு கலீரென நகைத்து அது பின்னமாகும்படியாய்ப் பிறைக்கணையொன்று தொடுத்து, அன்னவனைப் பார்த்து, "அடா சகாதேவா! இன்னும் பற்பலவிதமாகிய ஆயுதங்களை எத்தனைவகையாக எறிந்தாலும் அத்தனையையுந் தூளாகும்படியா யழிக்கிறேன். உன் கையாலானதைப் பார்" என்று கூரம்புகளைக் கும்புகும்பாய் விடுத்து, சகாதேவனுடைய அங்கத்தைப் பங்கப்படுத்தினுன். அப்போது தங்கமிழந்த தரித்திரரைப்போற் சகாதேவனுனவன் சங்கடப்பட்டலைந்து ஆடிப்பாடி யடங்கி மெலிந்து வாடி வருந்தி நின்றுன்.

இப்படியாக ஓடுங்கிநின்ற சகாதேவனுக்குச் சமீபத்திற் கர்ணனுனவன் தன்னுடைய வில்நாணியை மாட்டி முறுக்கி, இவனை வெட்டவேண்டுமென்று கிட்டியிழுத்தபோது தன் தாயாகிய குந்திதேவியாருக்கு முன் கொடுத்திருக்கும் வரத்தை நினைத்து அவனைக் கொல்லாமல் விடுத்து, "அடாசகாதேவா! நீ இதற்குள் தனிமையிற்

சென்று சண்டைசெய்யும்படியாகிய கொண்டைக் காரனானோ? அதற்காகவும் உனக்குத் தகுந்தவர்களுடன் யுத்தம்பண்ண வேண்டுமே யல்லது மலையுடன் மண்ணுங்கட்டி யெதிர்ப்பதுபோலும், மகாராஜனுட னேழை மடிசூதாடுவதுபோலும், என்னுட னெதிர்த்து, இனி யில்லாத தலையறுந்த ஆட்டமெல்லாம் ஆடினையே; இதுவரையிலும் நீ என்ன பலன் கண்டாய்? ஆகிலும் இப்போது மெத்த சுளுவாக உன்னை நான் கொல்லலாமல்லவா? அப்படியே உன்னைக் கொன்றாலு மதனால் எனக்கொரு லாபமுமில்லை. உன்னைக் கொல்லாமல் விட்டுவிடுவதினால் எனக்கொரு லாபமு மில்லை. நீயகப்பட்டதைப்போல் அர்ச்சுனனகப்படுவானுகில், ஆ! ஆ! அவனை இக்கோமே கொன்று கசகசவென்று மென்றுதின்று ஏப்பமிடுவேன்!" என்று தன் காவானது தடிப்பேறும்படியாய் துடிப்பமாகிய பலபலவார்த்தைகளைச் சொல்லி இகழ்ந்து "ஓ சகாதேவா! அதோயிருக்கிறான் அர்ச்சுனன்; அவனிடத்திற்போய்ச் சேர்ந்து, நீபட்ட தொல்லையும் நான் உன்னை உயிருடன் விட்ட சொல்லையுஞ் சொல்லுபோ" என்று சொல்லிவிடுத்தான். அவனு மதேபோக்காய்த் திரும்பப் போய்விட்டான்.

இராப்போரிற் கர்ணன் பராக்கிரமங்கண்டஞ்சிய தருமர் கருத்துணர்ந்தெழுந்த பற்குனனைக் கிருஷ்ணதேவ ரடக்குதல்

இப்பாற் பாண்டவச் சேனாதிபதியாகிய திஷ்டத்தூய்மனும் அவனுடன் சேர்ந்து யுத்தஞ் செய்துவந்த அநேகமாகிய ராஜராஜர் களுங்கூடித் தெய்வ வாளிக்கள் தொடுத்து, அர்ச்சுனன்பேரில் எதிர்த்துவந்த துரோணசாரியை மாட்டி ஓடவிட்டடித்தார்கள். அச்சமயத்தி லவருடன் சென்ற யானைகளும், தேர்களும், குதிரை காலாட்களும், எதிரணியாகத் துணிந்துகின்ற படைவீரர் முதலாகிய மன்னவர்களும் பாண்டவப் படைகளுக்குடைந்து, புறமுதுகிட்டுத் துக்கத்தி லாழ்ந்து, துரியோதனன் நிற்கின்ற பக்கத்தை நாடி ஓடி வந்து வீழ்ந்தார்கள். அந்தவேளையிற் சகாதேவனை அர்ச்சுனனிடத் திற்கனுப்பிய கர்ணனவன் துரியோதன மகாராஜனிடத்திற்கு வந்து, தேர்விட்டிழிந்து சில வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருந் தான். அக்காற் பயந்தோடி வருகின்ற படைகளைக் கண்டு பயப் படாதீர்க ளென்று கையமர்த்தி, இருவிழியிலும் புலிங்கசாலப் பொறி யெழும்பும்படியா யுருட்டி விழித்து, போர்புரியும் வெஞ்சின

மிகுந்தெழச் சிரித்து, புரிமுறுக்கு வின்னெணியைப் புயமுற விழுத்து, அபயமிட் டோடிவந்த சேனைகளை அணிபெற நிறுத்தி, தன் பிள்ளையும், துரியோதனனுடைய தம்பிமாரும், துணையாகிய மன்னரும், புடைபெயர்ந்து வரும்படியாய் எதிரிகளினுயிரை ஒரு க்ஷணத்தில் வாங்கி வருகிறேனென்று மீண்டுந் தேரேறி முனைமுகத் திற் புகுந்து, வெப்பமேற்கொண்ட வில்லைத் தாங்கி, ஒப்புவமை யில்லாத தன்னுள்ளத்திற் கொப்பாகுந் துரியோதனனை பார்த்து, "ஓ புஜபலபராக்கிரம பூபதியே! ஒன்று பலவாக விளையும் விதை யைப்போன்ற பாணங்களைக்கொண்டு உமது சத்துருக்கள்பேரில் இன்று கோபித் தெதிர்த்தேன். இன்னமொரு விஞ்டிப்போதில் இச் சத்துருக்க ளெல்லாம் அழுத நிறைந்துள்ள அகன்ற அந்தரத்திற் போகச் செய்கின்றேன்! என்னுடைய துணிவை நீர் பாரும்" என்று சொன்னன்.

இப்படியாகச் சொல்லிய கர்ணனுடைய வார்த்தையைக் கேட்ட துரியோதன மகாராஜனும் பலவான்களாகிய அநேக மன்ன வரும் கர்ணராஜனுடன் கலந்துகொண்டுவரக் கோடைகாலத்துக் காளமேக கர்ச்சிதம்போல் மேளவாத்தியங்கள் முழங்க, விருது பெற்ற வீரரெல்லாரும் வெற்றிச்சங்கூத, காகளம், பூரி, தாரை, வீரசின்னம், பேரி, ஆரமணி முதலிய அளவிறந்த வாத்தியங்கள் முழங்க, கணக்கில்லாத விருதுகளெடுக்கத் தகுதியையுடைய காட்சி கண்டு இனிமேல் யுத்தமென்னமேவா வென்று ஏங்கித்தளர, தன் வில்லைக் கையிலேந்தி நாணிபூட்டி, குணத்தொனி காட்டி, குறித் தெதிர் நாட்டி, கிரித்தோமாட்டி, படைமுனையிலே திரிந்து, கடை முனைகூடிய கணைகள் கைக்கொண்டு காலாந்தகனே இக்கர்ண னென்று சொல்லும்படியாய் எதிர்ப்பதாயினன். அக்காலையில் இவ னுக்கெதிர்ப்பட்ட வீரவேந்த ரெல்லோரும் நெருங்கிச் சுருங்கி மடிந்தார்கள். இன்னும் பல வீரர் இவனுக்கு முன்னதாகச் சென்று, பின்னம்பலபூண்டு வெக்கிட்டோடினார்கள். இவைகளை யெல்லா மடைகொண் டெழுந்த தேனிறைந்த மலர்த்தொடை புனைந்த புய வள்ளலாகிய தருமராஜன் கண்டு மனத்துள் மதித்து "அந்தோ! இதென்ன அகியாயம்? ஒரு வில்லாளியாகிய அங்கதேசராஜன் விடுக்கும் அம்புகளினால் நமது படைக்காவலருடையவும், பாணங் களும், விற்களும், பலங்களும், பதாதிக் குப்புகளும் பங்கப்பட்டுப் போகவும் நேரிடுமாகில் இனிமேல் நாம் செய்யவேண்டிய திற

மென்ன? இப்போப்பட்ட வேளையில் எதிர்கின்று யுத்தம் பண்ணு மல் விஷப்பரிக்ஷை பார்ப்பவரைப்போல் இடைந்து கிற்பது முறையோ? இஃதென் தவக்குறையோ? ஓ ஈசனே!" என்றி ரக்கங்கொண்டு இந்திரை நாயகனுகிய சுந்தரமாயனுடைய இரு செவி கேட்கும்படி சொல்லினர்.

அவ்வார்த்தையினுடைய நுட்பத்தை இளவலாகிய அர்ச்சுன னறிந்து, ஸ்ரீகிருஷ்ணனுடைய முகத்தைப்பார்த்து முகம்வியர்த்து, "ஓ நாதனே! அக்கர்ணன்பேரில் ரதத்தைவிடும்! இந்நிமிடத்திற்போ யவனுயிரை வாங்கிவிடுகிறேன்!" என்று ஆத்திரப்பட்டு ஆக்கிர மித்த சிங்கம்போ லதட்டிச் சொல்ல, அத்தோழன் சொல்லை அலர் நாயகி நாயகனுகிய அருளாழிவேந்தன் தடுத்து அவன் முகத்தைக் கிருபையோடு நோக்கி, "அப்பா! அர்ச்சுன அவசரப்படக்கூடாது. நெருங்கிய ராத்திரியில் யுத்தஞ் செய்வதற்கு ராட்சஸர் தூணிவார் களல்லாமல் மற்றவர்கள் தூணியமாட்டார்கள். இவ்விராக்காலம் மேற் சொன்ன ராட்சஸர்களுக்கு உரியகாலம். இக்காலத்தில் தேவர்கள் யுத்தஞ் செய்வதற்குப் புறப்படமாட்டார்கள். ஒருவேளை புறப்பட்டா லும் ஜெயம் பெறமாட்டார்கள். ஆதலினுல் இக்கர்ணன் ராக்ஷசாம் சம். நாம் எல்லோரும் தேவாம்சம். இதை உனது புத்தியில் ஸ்திரமாகவை. ஓ புயவலிமைபெற்ற புண்ணியனே! இவ்விராக் கால பலத்தால் மூர்த்தண்ய தசைகொண்டிருக்குங் கர்ணனுடன் நாமெதிர்த்துப் போர்புரிவது முறைமையல்ல. ஆனுலும் நான் சும்மாவிருக்கிறே னென்று நினைக்காதே! இவ்விராத்திரியில் இவ னுக்கு ஈடாக யுத்தஞ் செய்யும்படியாகிய வேறைத் தேடிக்கொண் டிருக்கிறேன். இவ்வேளையில் இவனுக்குத் தகுதியாகிய யுத்தத் திறங்களில் வெற்றியுணர்ந்த பலவானும், கைப்பற்றிய விற்றிறங்களி லே திறவானும், வேலாயுதம், சூலாயுதம், சக்காயுதம், குந்தா யுதம், தண்டாயுத முதலிய ஆயுதங்களிலே தலைவனும், இவ் விருட்டை மருட்டும்படியான தேகமித்திரனும், பீமசேனனுடைய மோகபுத்திரனுகிய கடோற்கஜன்தான். இம்மகாநுபாவன் பிர வேசிப்பானுகில் எள்ளுக்காய் முள்ளுதெரிப்பதுபோற் கொள்ளை யாடி விடுவானென்பதாய் உள்ளபடி நான் யோசிக்கிறேன்!" என்று சொல்லினர்.

கர்ணனுக்கும் கடோற்கஜனுக்கும் போர்

அவ்வாக்கியத்தை யண்டையி விருந்து கேட்ட கடோற்கஜ னனவன் விண்டலம் வரைக்குங் கிளம்பி, மண்டலங் கிழியக் குதித்து சண்டைக்கு முன்னணியில் முனைந்துநின்ற சதகோடி வேந்தர்களைப் பார்த்து, "ஓ! ஓ! வீரர்களே! உங்களை நோக்கி இவ் வார்த்தையைச் சொல்லாமல் என்னை மதித்துத் துதித்துச் சொன்னர் எப்பொருட்கு மிறையாகிய ஜனர்த்தனர்" என்று விருதேறிய இருதோளையும் தட்டி, புயவலிமை காட்டி, மின்னற் பிரகாசிக்கு மேகம்போன்ற திருமேனியையுடைய கிருஷ்ணர்ச் சுனரை வணங்கி, தருமபுத்திருடைய தாள்மேற் பணிந்து, பேய் கள்பூட்டிய கழுகுக்கொடி காட்டிய பெருந்தேரிலேறி விருஷப விராட்டைப்போல் அநேக அரசர்கள் படைகொண்டு புடைசூழ்ந்து வரும்படியாய் விடைகொண்டு விரைவாகச் சென்று கடையுகக் காலாக்கினிபோற் கருதலர் படையிற் கலந்து, கடுஞ்சிலை வளைத்து, காய்ச்சித் துவைச்சுக் கடைச்சற் பிடித்துத் தைலதாப மேற்றிய சரங்களைக் கோடாகோடிகளாக எங்குமிறைத்து, அம்பர நிறைத்து, உக்கிரமாகப் பக்கத்தில் யுத்தஞ்செய்து வராகின்ற சூரியகுமாரனுகிய வீரிய கர்ணனை வளைத்து, மாரிபோற் பொழியும் வேரியங்கணை களாற் றுளைத்து, அணிபடக்கூடிய மணிமுடிசூடிய மன்னவரெல் லாருஞ் சின்னபின்ன முறக்கொன்று பின்னும் பலவாகிய வன்னப் பகழிகளைச் சன்னப் பின்னலாய்த் தாக்கி வராகின்றனன். இப்படி வராகின்ற கடோற்கஜனைத் திணிதோளினையுடைய செங்கதிர்ச் செல்வன் பார்த்து, சீறிப்பாய்ந்து, சிலையை வளைத்துத் தேவாஸ் திரங்களைச் செலுத்தி, அக்கடோற்கஜன் கைப்பற்றிய வில்லைப் புல்லெனமதித் திரண்டு துண்டாக்கினன். அப்போது கடோற் கஜன் கனைத்து, இரண்டாய் முறிந்த தன் வில்லை வீரகண்டாமணி கட்டிய கர்ணன்மேல் சுழற்றி யெறிந்து, மிகு துணிவினையுடைய வனுய்க் கதாயுதங் கைக்கொண்டு அரவக்கொடி காட்டிய துரியோ தனனும் மற்ற அரசர்களுமனமடிய மயங்கித் திகைக்கும்படியாய்த் தாழாவலிகொண்டு தானெருவனுகவே யெதிர்த்து ஓடினன்.

அலம்புதன் வதை

அப்போது சகடாசுரன் பிள்ளையாகிய அலம்புதன் கண்டு, பீமன் காளையாற் புலம்பிக்கலங்கும் போர்முகத் தெதிர்த்து, தனது

பெருமைபெற்ற சாமார்த்தியத்துடனே பெயர்ந்து கடோற்கஜனைத் தகைத்து நகைத்து, மிகத்திறமாகிய ஊழ்வினையைப்போற் பகைத்து, வைரம்பற்றிய கதாயுதத்தைக்கொண்டும் வாகைபெற்ற வாளாயுதத்தைக் கொண்டும், வலுவேறிய யுத்தஞ் செய்தான். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இம்பர் முதலாகிய அம்பரமூடக இவ்விருவரும் போராடிய காலையில், பெருங்கோபத்தையும், போர்த்திறத்தையும் பொருளாகவுடைய அலம்புதனனவன் பூமியில் மண்டியிட்டுச் சூழன்று, கடோற்கஜனுடைய ஒரு காலைப்பிடித்தான். அப்போது கடோற்கஜன் அலம்புதன் பிடித்தகாலைப் பூமியிலழுந்த வூன்றி, மற்றொரு காலைத்தூக்கி அவ்வலம்புதனுடைய மூளை சிதறும்படியாக முடிமீது வைத்து, அவனுடலைத் தரைமீது சாய்த்து, ஒருகாலைத் தனது காலினால் மிதித்து மற்றொரு காலைக் கையாற் பிடித்து, இருபிளவாய்க் கிழித்து, முறுகுறு கலையை முடிசிதறமோதி, அதனைத் தனது கைபிலெடுத்துக் கொண்டோடி, குருகுலராயக னென்னும் துரியோதன னேறிய தேரின்மேல் வீசி, "ஆ! ஆ! அரவக்கொடியோனே! உனக்குரிய அலம்புதனைப் பார்த்தாயா? சூரியகுமாரனுகிய கர்ணன் கலையையும் இப்பிரகாரமே முறித்துக்கொண்டு இப்போதே வருகின்றேன்! இவ்விரண்டு பேருடைய முகத்தையும் ஏககாலத்தில் பார்க்கலாம். எங்கும் போகாமல் இங்கேதானே யிரு!" என்று சொல்லி, அவ்வரசனுடைய விருதணிப்படைகளெல்லாம் பிரசண்டமாருதத்திற் பறக்குஞ் சருகைப்போல் வெருண்டு புறமிட்டோடும்படியாய்க் கலக்கினன். அப்போது படைவீர ரெல்லாரும் பறந்து பதைபதைப் பதைப் பாராளுந் துரியோதனன் பார்த்துப் பரதவித்துத் தன் சேனைகளைக் கலங்காமல் நிலைக்கச்செய்து தபிரிய சாமார்த்தியத்துடன் வில்வளைத்து டங்காரம் பண்ணி மின்னற்கணையை விடுத்தான். அவன் ரெடித்த மின்னற் கணையாகிய மூன்று பாணமுந் தாண்டவமாடி வருகின்ற தன்மையைத் தருமராஜனுடைய படைகளுக்குத் தலைமையாகத் தோன்றிய கடோற்கஜ னென்னுங் காளை கண்டு தன் கார்முகத்தை வளைத்து ஒரு கடுங்கணை செலுத்தி அவைகளைக் கத்தரித் தெறிந்தான்.

அலாயுதனுக்கும் பீமனுக்கும் போர்

இவ்விதமாகப் போர்புரியும் இடும்பி குமாரனுக் கிளைத்தெங்கிய ராஜேந்திரனும் வீரப்பிரதாப வேந்தர் யாவரும் ஒன்றுகக்

கலந்து இக்கடோற்கஜனைக் கைப்பிடியாகப் பிடிக்கவேண்டு மென்றுகவிந்து சூழுங்காலையில் அமுதங் கடைந்தகாலிற் பாற் கடலிலுதித்த ஆலகால விஷம்போலக் கலந்து அரவக்கொடியோன் முதலாகிய அரசர்களெல்லாரு மலக்கழித்து மருண்டு அவரவர்கள் பாட்டில் ஓடும்படி கலக்காகின்ற அக்கடோற்கஜனுடைய பகைமேவிட்ட புஜபல பராக்கிரமத்தைச் சொல்லுதற்கரிதாய்த் தேவர்களெல்லோரும் பூமலர் தூவிக் களித்தனர். காவலர் பல் லோருங் கருத்திலே துதித்து மதித்தார்கள். அப்போ தரசனுடைய சேனைசையினியங்களெல்லா மந்தரத்திலாடும் பம்பரம்போற் சுழன் றவதிப்பட அக்காலத்தி லதேகங்கோடி அரக்கருடன் இவ்விதமென் றுரைக்கொணாத ஆண்மை பெற்றவனும், கர்ணனுக்கும் சௌபல னுக்கும் உயிர்த்துணைவனுனவனுமாகிய அலாயுத னென்பவன் உலகிலுள்ள இருட்டெல்லாங்கூடி ஓர் வடிவாக நாடிவந்த தன்மை யைப்போல்வந்து பாண்டவர் முதலாகிய படைமன்னவரெல்லா ரும் பயப்படும்படியாய்த் துரியோதனனுடைய பாதத்தில் வீழ்ந் தெழுந்து " ஓ பரராஜபயங்கரனே! பராக்! தேவரீர் என்ன வொரு விதமாக இருக்கிறீர்? யாதொன்றுக்கும் பயப்படவேண்டாம். இதோ நானிருக்கின்றேன்! இன்றிராத்திரி விடியுமுன்னே நஞ்சங் கலந்தது போல் வெஞ்சமர் நடத்தி, பஞ்சவரை எஞ்சும்படி பாழாக்கி வென்று, அவர்களுக்குத் தெய்வலோக பதவி கொடுத்துப் பணி முடி பொறுத்த பார்முழுதும் நீராளும்படி உமக்குப் பட்டமுங் கட்டிவைத்து என் கண்களிக்கப் பார்க்கிறேன்!" என்று பலவாகிய சபதங்கள் கூறி, ஏற்றிய தீபங்களெல்லாம் இருண்டு மண்ணும் விண்ணு மொன்றுகித் தும்பெழும்படியாக வந்து அர்ச்சுனனுடன் மூனைந்தெதிர்த்து, அவனுலடிப்பட் டழிந்து, வலிமை கழிந்து, புறமிட்டொழிந்து, பீமசேனனுடனும் போர்செய்து சீறி, வேண் டிய யுத்தங்களே விதவிதமாகச்செய்து வீறினன்.

இவ்வாறு அலாயுத னென்னும் இராக்கதன் பூரித்தமலை போன்ற புயங்கள் வளரவும், போராடு மெதிரிகள் பயப்பட்டுத் தளரவும் ஜெயம்பெறும் லாப நீங்கிய துரியோதனுதியர் திடங் கொண்டெழுந்து மூடுக்கவும், தன் கடைவாயை நக்கிச் சுழற்று கின்ற நாக்கிலிருந்து பொறி நெருப்பு பறக்கவும், தூர் மாமிச நாற்ற முடைய கோரப் பற்களினுடைய பிரகாசத்தினுல் நெருங்கிய இருளானது அகன்று ஓடவும், செம்பட்டை மயிரினுல் திசைகளெரி யவுமாகப் பகைத்திறங்கொண்டு, பகைவர்மேற் செல்லு முன்னமே,

இருபுறத்திலும் இவனைச் சூழ்ந்துவந்த இராக்கதச் சேனைகள் எக்களிப்புடன் பக்கங்களிற் பிரிந்தோலமிட்டு, மக்கள் முதலாகிய ஓக்கலுடன் பரிந்து மேலிட்டு, இருண்ட மலைக்கீடாகக் கறுத்த உடம்பும், இளகிய தசைகள் புகுந்து காட்டும் பற்சந்துகளும், வரிசையாய் ஓட்டிக்கொண்டிருக்கின்ற மிருக மாமிசங்களின் கொடிய நாற்றமும், முருக்கம்பூவைக் கருக்கிப் பிறக்கிடச் செய்யுஞ் செந்தீக்கண்களும், மேக கர்ஜிதம் மெலிந்து போம்படி கூவுகின்ற வெடித்த குரலோசையும் வஞ்சகப் பொலிவை யுடைய மனத்திற் கொதித்தெழுங் கோபமு முடையவர்களாய் மதம்பெற்ற யானைமுகங்களும், பூனைமுகங்களுங்கொண்டு பாண்ட வப்படைமேல் விழுந்து அதிர்ந்து ஆர்ப்பரித்து, அவ்வரவர்களையும், பிடித்துக் கலக்கி அலைக்கக்கண்டு, தங்கள் தங்கள் வில்லை வளைத்துக் கூரம்புகளைத் தொடுத்தெதிரிட்ட படைகளை யெல்லா நெருக்கி ஒருவரையும் லட்சியஞ்செய்யாமல் இறுமாந்து யுத்த செய்வதா னார்கள். அக்காலத்திற் சூரியனை மறைத்த துளவணிமாயன் செலுத் தும் தேரிற் பொருந்திய அர்ச்சுனன் முதலாகிய சகோதரரும் சாத்தகியும், சேனாபதி யென்னுந் திஷ்டத்தூய்மன் முதலாகிய மைத்தனன்மார்களும் ராஜபுத்திர வர்க்கங்களும் காவலாகக் காத் திருக்கின்ற யுத்தகளத் தலைவர்களு மெத்தவும் வருந்தி, சித்தப் பிரமைகொண்டு வெருக்கொண் டோடுவதானார்கள். அச்சமயத்தில் வாயுகுமாரனுகிய பீமசேனன் மனந்துடித்து வில்லை குணத்தொனி செய்து வடிக்கணைகளை வாரிவாரி அரக்கர் படைமேற்றூவி மாட்டும் போது, இரதத்தின் மீதிருந்த தூர்த்தனுகிய அலாயுதனுந் தூரத் தொலை நீண்ட மேருத்தலைபோன்ற பாரவில்லை வளைத்து வீரமாகிய அந்தகாரக்கணைகளை அநேக மாயிரம் தொடுத்தான்.

இப்படியாக அவன்விடுத்த அம்புக் கும்புகளை யெல்லாம் வாயு புத்திரன்விட்ட வயிரக்கணைகள் மடக்கி யொடித்து மடித்துத் தடித்து வாட்டியது மல்லாமல், அவ்வரக்கனுல் வந்து கவிந்த இருட்டைக் கெடுத்தவன் தேரிற்கட்டிய கொடியை முறித்து அத் தேர்க் குதிரைகளெல்லாந் திண்டாடி யுருளத்துணித்து, பைசாசங் களைத் துண்டு துண்டாகத் தறித்து, திடத்துடன் தேர் செலுத்திய சாரதி தலையை யுந்திப் பந்துபோலாடித் தாஷ்டீக வில்லைச் சடை போல் முறித்து, இருளாகிய உடலில் எண்ணிறந்த தொண்டிகள் ஆக்கி, இமைகொட்டுவதன்முன் அவனுடைய திறத்தையு மழித் தனர். அப்போதந்த அலாயுதனுனவன் சரேலெனப் பூமியிற்

பாய்ந்து, வடவைக்கனல்போற் பெருந்தியெழ விழித்துப் பெரு மூச்சுவிட்டு, அலப்படை யெடுத்து, அனற்படச் சிரித்து ஆர்ப் பரித்து வலத்திலுயர்ந்த கலப்பையை எடுத்தெறிந்து, வல்லிரும் பனைய மலைப்படையை யெடுத்ததிர்த்து, வட்டமாய் வளைந்து மூடுக்கி மலைந்த காலையில், இலக்கமற்ற தேவர்களுக் கிருப்பிட மாகிய மகமேருவின் முடியை யொடித்த வாயுகுமார னென்னும் மறவியானவன் மனக்கொதிப்புடன் திரண்ட மலைபோன்ற புய நிமிர்ந்தோங்கி, தீரத்துவமாகிய வீரத்திறங் காட்டி, ஒப்பற்ற கதை யைச் சுழற்றி யடித்து, அரக்கனெறிந்த மலையை ஒருதொடியிற் படியிற்படியப் பொடி பொடியாக்கி உக்கிரமித் தெழுந்தான். அப்போது பின்னெரு திக்கில் யுத்தஞ் செய்கின்ற கடோற்கஜ னனவன் பீமனுகிய தன் தந்தைபின்மீது அலாயுத னெதிர்த்துச் சண்டைக்கு வந்ததைக் கேட்டு, பரத்துவாச பௌத்திரனுகியுங் துரோணசாரியர் புத்திரனுகியும் விளங்காகின்ற அசுவத்தாம னென்னும் அவ்வந்தண சிரேஷ்டாற்புதனுடன் அநேகம் போர் புரிந்து, அவ னிறந்தா னென்று சொல்லும்படியாய் வேலாயுத முதலாகிய பிறைக்கணைகளை விடுத்துக் கலக்கி, அவனை விட்டுத் திரும்பும்போது சிறுமலைபோ லடித்துச் சண்டை செய்யவந்த பராக்கிரமச் சூரிய புத்திரனுகிய கர்ணனைத் தடுத்து, அவன் அன்னிமிடத்திற் சோம்பி யிளைத்துப் புறமிடச் சாய்ந்து, தூர்த் தண்ய் மூர்த்தண்யமாகப் புகுந்து பீமசேனனிடத்திற் போய்ச் சேர்ந்து பணிந்து. "ஐயா! யான் வரத்தினுற் பெற்ற உரத்துடன் புகுந்து மலைந்து இந்த அலாயுதனுயிரை அரைநொடியில் மாற்று கிறேன். நீர் சற்றிளைப்பாறிப் பார்த்திரும்" என்று கோடையிடி கோபித் தெழுந்ததைப்போற் படைமேற் புகுந்து, பலவிதத்தாலு மீறியதன் னுறுதியானது தன் தந்தைக்குத் தெரியும்படியாகச் சண்டை செய்தான். இவனைக்கண்ட அலாயுதனுந் தொண்டை கிழியக் கொண்டல்போற் கூவிக் கறுவிக் குதித்தோடிவந் தெதிர்த்து, குலத்துக்குக் குலம் பலத்துக்குப் பலமென்று கூடிப் போர்புரிந்தார்கள்.

கடோற்கஜனுல் அலாயுதன் வதை

இவ்விதமாக அரக்கனும் உரக்கக்கூவி அதிரப் போர்புரியுங் காலையில், இவரிருவரும் இடிமுழக்கம்போல் இரையும் பேரொலி யால் ஈரகலோகத்திலிருக்கும் பாம்புகளெல்லாந் தலை நசுங்கி வாட

வும், இவர்கள் கூவுங் கூச்சலுக்கு எதிரொலியாக மலைகளெல்லாங் கூவவும், மலைகளின் பேரிலுலவுகின்ற மத்தகஜங்களெல்லாம் மண்டைகள் கிழிந்திறக்கவும், மண்டல மனைத்தும் படபடென வெடித்து மண்பறக்கவும், அண்டமுகடு மடமடெனச் சரிந்து, வெடி வெடிக்கவும் என்னமோ ஆபத்தென்று எண்டிசை யானைகளெல்லாந் தியங்கி மயங்கவும், இவ்வரக்கருடன் போர்புரிய நம்மாலாகுமா வென்று அமரர்கள் துணுக்கிட்டேங்கி அடிக்கடி கண்ணிமை கொட்டவும், திக்குப்பாலர்கள் திக்குமுக்காடிட்டுத் திணறித் தேங்கி யொடுங்கவும், இருவர் போரடியிலும் எழும்புகின்ற செந்தூள் கருந்தூள்களினால் திரையாழிகள் வற்றவும். ஆர்த்து முகம் வியர்த்து, இருவரு கைகத்து, அப்போதைக் கப்போது கோபித்து உருத்து, அணுவுடலெடுத்து, மலையெனப் பருத்து, அதர்சியாய் மறைந்து, அந்தர மெல்லாம் பறந்து, மீட்டுமவரவருருக்கொண்டெதிர்த்து, ஆங்கார ஓங்காரமிட்டெழுந்து, சூரிவளிபோல் வாயினலூதி, அக்கினிக் கொழுந்துகளா யெரித்து, அடுத்தபடைகளை யுதிர்த்து, ஆகாயத்திற் கையெடுத்து, அரக்கன்மேற் படும்படியான் அனேகமரங்களை ஆணிவேருடன் பறித்தெடுத்துப் பூமியிற் சுழற்றியடித்து, நேமிபோற் குமியமுதித்து, படிமிசை குலவிய கொடிமுடிகளமுறித்து,இடியது நிகரெனக் கடலொலிதரச் சிரித்து, வில் முதலிய பாணங்களை முறித்து, விருதனைத்தையுந் துண்டாகத் தறித்து; துதிக்கைபற்றிய யானைகளை யெல்லாந் துணிபோலுரித்துத் துரங்கமென்றுரைக்குங் குதிரைகளையெல்லாம் இலையோற் பறித்து, சக்கரவாளமும் நெக்குவிடத் தக்கதா யொருவரை யொருவர் தாண்டி, விரைவில் முடுகியுத்தத்துக்கு வாவென் றிருவரும் வேண்டி, ரூபம் வேறு வேறுகப் பூண்டு, நுதல்வியர்க்கக் கடுங்கோபங் கொண்டு, சிலைப்படையாலும், சிகைப்படையாலும், அயிற்படையாலும், அரப்படையாலும், வாட்படையாலும், தோட்படையாலும், வல்லபங்களென்ன வெல்லாவற்றையுங் காட்டி, வினைவளைத்தபோது, கடோற்கஜனவன் தனது இருகரமென்னும் வலையைக்கட்டி நீட்டி, அலாயுதனென்னும் ஆண் சிங்கத்தை அடித்து வளைத்து, வில்யுத்தம், சொல்யுத்தம், மல்யுத்தங்களெல்லாம் புரிந்து, தன் புயத்துடனணைந்து தரையிற்றள்ளித் தாக்கி, அலாயுதனுடைய உயிரை அந்தகனூரிற் போக்க, விந்தையாகிய மனக்கடுமையின் வலியினை காட்டி, சினப்பொறிகொளத் தீயெழுவிழியினைக் காட்டி, உலக்கள நெருப்டென, ஓங்குஞ் செருக்களத் துதிரப்பெருக்கெழ,

உலகந்தரத் தெழ ஒருவர்போற் பல அரக்கரை மடித்து, புகழ்ப் பிரதாபம் படித்து, பேய்களோடு நடித்துத் திரியும் கடோற்கஜனைத் தேவர் முதலிய யாவருங் கொண்டாடினுர்கள். அஃதெப்படி கொண்டாடினுர்க ளென்றுல், திரிபுர ஸம்ஹாரியாகிய சிவபெருமா னெழுந்தருளிய கயிலையங்கிரியைத் திறண்ட புயத்திற் றூக்கிய திசை யெட்டு மிசைபெற்ற தசக்கிரீவ னென்னும் பராக்கிரமன் தன்னுட னெதிர்ப்பவர்கள் யாராகிலு முண்டோவென்று தனிவனத்திற் றிரிந்தாளில், இந்த அலாயுதன் முதலாகிய சிலபேருடன் எதிர்த்துப் போர்புரிய மாட்டாதவனுய் இளைத்துப்போய் விட்டான். அப்பேர்ப்பட்ட இராவணனுலுங் கொல்லப்படாத வல்லபமுடைய அலாயுதனை, வாயுபுத்திரனுக்கு மைந்தனுகிய கடோற்கஜனைவன் எதிர்த்து துரத்திக்கொன்ற தல்லாமல், அவனேடுவந்த அரக்கர் பற் பலருடனெதிர்த்து அவர்களையும் பற்றறமுடித்துப் பொடித்தா னென்று அதிசயித்துத் துதித்து வாழ்த்தினுர்கள்.

கடோற்கஜன் மாயப்போர் விளைக்கக்கண்ட கர்ணன் துரியோதனன் வேண்டுகோளாற்றனக்கு இந்திரனளித்த சத்திவேலை யேவிக் கொல்லுதல்

இப்படி கடோற்கஜன் பதினுன்காவது நாள் இராத்திரியிற் பற் பல கூட்டத்தினராகிய பதினுயிரம் அரக்கருடன் அலாயுதனையுங் கொன்று அரவக்கொடிபடைத்த அரசனுடைய சேனைகளையெல் லாங் குரங்கின்கையிலகப்பட்ட பூமாலையைப்போற் கசக்கி, ராக்ஷச மாயையினுற் பத்துலட்சமாக உருக்கொண்டு, கீழ் இமையுடன் மேல் இமை மூடித் திறப்பதற்கு முன்னமே ரதகஜதுரகபதாதி முதலாகிய நால்வகைப்படைகளையும் நாசப்படுத்தி நமனுலகிற் குடிபுகச்செய்து, பின்னுந் தனக்குரித்தாகிய பலராக்ஷசமாயைக ளனைத்துங் காட்டினுன். அந்தமாயை யெத்தன்மையுடைய தென்றுல், பிரசண்டமாக வீசியடிக்கும் பெருங்காற்றைப்போற் புற் பூண்டுகள்முதலிய கற்காடுடன் கூடிய பூலோக புவலோக மெல்லாம் புரண்டு, மருண்டு, பூவுதிர்த்து, வேர்பரிந்து, கிளைமுறிந்து, வீழும் படியாக ஒருதர மெதிர்ந்தான். பின்னெருதடவை சப்தசமுத்திர மும் அலையுடனெழுந்து, அதிர்ச்சியாயிரைந்து, அவனிமேற்புரண்டு வருவதைப்போல் வந்தான். இன்னெருக்கால், பதினுயிர மேகங் களைப்போற் பளிச்சுப்பளிச்சென்று மின்னி, படபடகடகடபடீ ரென் றிடித்து, பஸ்பமாய்ப் பொடித்து, கால்மழை, கனல்மழை

களைப் பொழிந்துகாட்டினன். மற்றொருதரம் நின்றெழுந்து வான மளாவிய அநேகமாயிரமலைகளைப்போல் வந்து, யுத்தகளத்தில் இட மில்லாமல் நிறைந்து, திமிர்ந்து நிமிர்ந்து நின்றான். மறுபடியும் வடவா முகாக்கினி, சடராக்கினி, தாபாக்கினி, கோபாக்கினி முதலிய வெல்லா மொன்றுய்க் கூடியதுபோல் நெருங்கி, கனன்று பொரிந்து புகைந்து, மிகுந்து பரந்து தீய்க்குங் கொடிய சிகையுட னெழுந் தான். மேலும், மேலுலகத்தவரும் பூவுலகத்தவரும் வெருக் கொளும்படியாய் ஊழிக்காலத்தில் உண்டாகும் இருளைப்போல, எவர்க்கு மொன்றுந் தோன்றுமல் இருண்டுபோகும்படி மறைத் தான். இந்தன்றிய மிகப்போர்க்களத்தில் இவ்விதமாக அநேக மாயைகளை விளைத்து, ஒருவருமெதிரில்லாமற் கிளைத்து, உலகமதி ரச் சஞ்சரித்துத் திரிபுரத்தை நகைத்தெரித்த சிவமெருமானைப் போல் நின்ற வாளரக்கனுகிய கடோற்கசன், விசாலமாகிய தன் வாயினுயிற் பேய்களைப்போல அந்த இரணகளத்தில் வீழ்ந்த பிணங் களையும், அப்பிணங்களின் நிணங்களையும், குதிரை வெள்ளக் கணங் களையும், உதிர வெள்ளக் குளங்களையும், வாரிவாரிக் குடித்து வயிறுர விழுங்கினன்.

இப்பிரகாரம் அந்தயுத்தத்தில் இறந்த யானைகளையும், குதிரை களையும், வீரர்களையும் இரத்தங்களையும் இக்கடோற்கசனவன் வாரி விழுங்காமற் போவானுகில், உண்மையாக நாம் சொல்லு மிடத்து இரத்த வெள்ள ஓட்டங்களினுற் கருங்கடலு நிறைந்து கிழிந்து பிணமேடிட்ட கூட்டங்களினுல் அண்டகோளமும் நெளிந்து பிளந்து உம்பர்வாரியைக்கலக்கி உலரச்செய்யாமல் விடாது. இவ்விதமாகப் போர்புரிந்த அந்தகனுகிய கடோற்கசனுல் அள விறந்திறந்த சேனைகள்போக, மெலிவடையக் குறைந்த சேனை களெல்லாம் வேஷ்டையடைந்து மேனிவெதும்பி முதுகிட்டோடிய காலையில், பாம்புக்கொடியைப் பாங்குறப்பிடித்த பலமணி முடி பொறுத்த துரியோதனனுகிய கொடியோன் துடிதுடித்து, கண் கலங்கி, மருண்டிருண்ட அக்கடைக்கண்ணுற் கர்ணனைப் பார்த்து "ஓ அண்ணு! அத்தரவாகியாகிய தேவேந்திரன் உமக்குக் கொடுத்த வேலாயுதத்தை யெடுத்து விடுத்து பீமன் பிள்ளையாகிய கடோற் கசனுடைய வல்லபத்தையும், மனநிறைந்த கோபத்தையும், மாளாத உயிரையுமழித்து, வேலைமுடித்து, பூலோகம் விட்டு மேலோகஞ் சேரும்படியாய்க் கொல்லுவதைவிட நான் சொல்லுவதொன்றில்லை. ஓ வண்டுமொய்க்கு மாலை யணிந்த மன்னனே! அதிசீக்கிரத்திற்

கொல்லும் கொல்லும்" என்று வாக்கிற் சுடரும் மனத்திற் சிகையும், காக்கிற் பொறியும், மூக்கில் வியர்வும், விழிகளிற்புகையு மெழும்பும் படியாகக் கவுரவகுல முதல்வன் விளம்பினன். இவ்விதமாகிய சொல்லைச் சூரியகுமாரனன கர்ணனுணவன் கேட்டுச் சோர்ந்து, மறுபடியும் கேர்ந்து, "ஐயா துரியோதனமகாராஜனே! இப்பஞ்சை யாகிய கடோற்கஜன் செய்புஞ் சண்டையைக்குறித்து நீ செவ்வள வேனுங் கலங்கவேண்டாம். இப்போதிராக்கதற் குரிய இருட் காலமாதலால், அவனிஷ்டப்படி மாயப்போர் விளைக்கின்றன். இன்னுஞ் சற்றுநேரத்திற் பொழுது விடியப்போகின்றது. உடனே வரும் பகற்போதிற் கூர்தங்கிய ஓரம்பினால் அவன் தலையைத் தப்பாம லுருட்டிவிடுகிறேன். இதைக்குறித்து நீர் வேறு யோசிக்க வேண்டாம். மேலும் காளை கடக்கப்போகின்ற நரனுடைய யுத்தத்தில் ஒருவேளை சமயந்தப்பிச் சங்கடங்கள் நேரிடு மாகில் அப்போது இக்கூர்மையாகிய வேலாயுதத்தை நேர்மையாகப் பூசித்து, இந்திரகுமாரனன அர்ச்சுனன் கொந்தழியும்படியாய் விடுத்து, இப்பூமிழுவதையும் உண்மையாக உமக்குப் பட்டங்கட்டி, உமது குடைநிழலில் உலகத்தைவைக்கிறேன். ஓ உத்தமனே! என்பிராணபதமாய்க் காப்பாற்றி வைத்திருக்கிற இவ்விந்திரவேலை இப்போது விடுதாவில் விட எனக்கு மனமில்லை" என்று சொல்ல, வணங்காமுடி மன்னன் மனங்கொள்ளாதவனுய், மணிமுடியசைத்து வாய்விட்டு நகைத்து, "ஓ அண்ணு! நீர் சொன்னது சுகமாயிருந்த போதிலும், இன்றையதினம் இராத்திரி நானும் என்னுடைய கால்வகைப் படையும் பிழைத்திருந்தாலல்லவோ காளையப்பகலில் அர்ச்சுனனை வென்று எனக்குப் பட்டங்கட்டப் போகின்றீர். அது வரையிலும் இங்கார் பிழைப்பவர்கள்? 'பசிக்குப் பனம்பழம் தின்ருல் பின்பு பட்டபாடு படலாம்' என்பதுபோல், உயிரழியாகின்ற இவ்வேளைக்குத் தப்பினுல் காளைக்குப் பார்த்துக்கொள்ளுவோம். நீரிவனைக் கொல்லுவீராகில் பிற்பாடு வில்விஜயனை மிகு லேசாக விரைவிற் கொல்லலாம். எனக்கு நீர் பட்டங்கட்டியது போலாம்" என்று மனங்கன்றிக்கொதித்து, கமலமுகங்கறுத்து, தன்னைத்தானே வெறுத்துக்கூறித் தலைகுனிந்தான். அவனுடைய நிலையைக்கோடைக் குத்தென்றலும், குலவிய இருளுக்கு நிலவும், குவலயத்திற்கு மேகமும் துணையானதைப்போல தன்னை யடுத்தவர்களுக்குத் துன்பமுதலான பயங்களைத் தீர்த்து இன்பமுதலாகிய இனிமை யைத் தந்து இரட்சிக்கும் இரவிகுமாரனுகிய சவுரியன்கண்டு தரி

யாமல், காலகாலனுடைய சூலம்போன்ற ஆலகால வேலாயுதத்தை அக்கணத்தெடுத்து, அதிக பூசைகொடுத்து விற்களிற்றொடுத்து வெல்லவேண்டுமென்று கோபங்கொண்டு எறிந்தான்.

அப்போது அவ்வேலாயுதம் அண்டமுகடு முதலாகிய மண்டலமும் எண்டிசையு மண்டி யெரிந்து, புகைந்து, விரைந்து பரிந்து வந்து, பகையாகிய கடோற்கஜன் மார்பைப் பிளந்து, பழையபடி பாகசாதனனிடத்திற் போய்ச் சேர்ந்தது. இப்பாற் கடோற்கஜனுனவன் பொறியழிந்து, உரமழிந்து, உடல்சிதைந்து, உயிரிழந்து, உதிரம்வழிந்து, உணர்ச்சியொழிந்து, வாயினுல் மண்ணைக்கவ்வி, முகம் பூமியிற் கவிழ்ந்து மோதி, மலைசாய்ந்ததைப்போல் வீழ்ந்து மடிந்தான். அவன் மடிந்த ஒரு கடிகைவரைக்குஞ் சத்துருக்களெல்லாங் கடோற்கஜனைக்கிட்டிவந்து பார்ப்பதற்குப் பயந்து, எட்டியிருந்து பின்பு கெட்டிகெட்டியெனத் தெளிந்து சிந்தை கலக்கம் தீர்ந்தார்கள். அவ்வேளையிற் சொந்தமாகிய பாண்டுநந்தனர் முதலியபேர்கள் அவ்விடம் வந்து அவனைக்கிட்டி, கண்ணீர் பெருகவிட்டுருகி, கரைந்துரைந்து நொந்து, தங்களுடலம் வருந்திக் கங்குலுங்கலங்கப் பொங்கினர்கள். அப்போது சங்கு சக்கரதரனுர்த்தனனுகி, சங்கைகள் தீரச் சாஸ்திரமுணர்ந்த புங்கவர்க்கல்லது புலப்படாப் பெருமான், அங்கவர்துயரம் அகலுமாறுக பங்கஜமலர்த்தும் பான்மைபோலுரைப்பதாயினர்—"கேளும் பாண்டவர்களே! தேவேந்திரன் கர்ணனிடத்திற் கவசகுண்டலங் கவர்ந்த அந்த நாளில், இவ்வேலாயுதத்தை அவனுக்குக் கொடுத்திருந்தான். இவ்வேல் எவர்கள்பேரில் விட்டாலும் தப்பாமற் கொல்லத்தக்க தரமும், உயர்ந்தசிரமும், பல பராக்கிரமங்கொண்ட உரமும் திறமுமுடையது. இவ்வாயுதத்தைப் பெரிய பொருளாக நம்பி, போதுமான ஆற்றல்நிறைந்த கூற்றினுங் கொடியகர்ணன் பூரித்து, தேகம்பாரித்து, தேருந்திச்செல்லுகின்ற போர்முகத்தில் நாம் தப்பாமல் நரனைக் கொல்லுவதற்கு நாகாஸ்திரமிருக்கிறது. எப்படியு மவனை முடிக்கலாம். ஒருவேளை நாகாஸ்திரந் தப்புமாகில் இவ்வேலாயுதத்தால் அவனுயிரைச் சிந்தி முடித்து அந்தரலோகத்துக்கனுப்பலாமென்று சிந்தைகொண்டிருந்தான், இப்படியிருக்க, அலப்படையுடைய அலாயுதனும், அலம்புதனும், அதிகமாயிசம் அரக்கரும், அரை கொடியி லழியும்படி அமர்புரிந்தொழித்த அரக்கர் மாயத்திற் சிறந்த கடோற்கஜனுடைய உபத்திரவம் பொறுக்கமாட்டாமல், போதுவிடியு முன்னமே யாவரும் இறக்கும்படி யாயிருக்கிறதென்று மனங்குன்றி வருந்திய துரியோதனன் தான்

பிழைக்கவும் கடோற்கஜ னிறக்கவும் தயவுசெய்யென்று அக்கர்ணனை வணங்கி, இவ்வேலாயுதத்தை விடுக்கும்படியாகச் செய்தான். அத்துரியோதனனுடையவார்த்தைக்குப் பழுதில்லாமல் இவ்வேலாயுதத்தை இவன்மே லேற்றவும் அது இவனை முடித்துப்போட்டுத் தன் ஞண்டவனுகிய இந்திரனிடத்திற்குப் போய்விட்டது இனி உங்களுக்குக் கவலையில்லை. நான் கொண்டிருந்த கவலையுமொழிந்தது. இன்றையப் போரில் மண்டலமுழுவதும் பாண்டவராகிய உங்களுக்குக் கவசகுண்டலன் கொடுத்தான்" என்று சாற்றியபோது மறலிமைந்தனுகிய தருமராஜனும், மருத்து புத்திரனுகிய வாயுபுத்திரனும், மருத்துவர்மைந்தராகிய நகுல சகாதேவரும், மருதகிலத்திறை மைந்தனுகிய அருச்சுனனைத் தழுவிக்கொண்டு, பெருமையும், வலிமையும், பிரதாபமும், கல்வினைப்பயனல் இன்று பெற்றனமென்று, கன்று கொண்டு விளவெறிந்த கண்ணனைப்புகழ்ந்து, அருமையும் பெருமையுமாக அழுதளித்து வளர்த்த கடோற்கஜனை நினைந்துருகாகின்ற தங்கள் பெருஞ்சோகத்தையும் அருந்துயரத்தையு மாற்றி, அருச்சுனன் பிழைத்தானென்னுஞ் சந்தோஷத்தால் மகிழ்ந்திருந்தார்கள். ஓ ஜனமேஜய மகாராஜனே! புத்திரசோகம் இவ்வளவு லேசாய் நீங்கிவிடுமோ வென்றால், உலகத்தியற்கையுங் காலகருமமும் தெரிந்த கனவான்கள் எப்போர்ப்பட்ட காரியங்களுக்குங் கலங்கமாட்டார்கள்.

மச்சதேயராஜன் ருதுபதேயராஜன் இவர்கள் வதை

இப்பால் சக்கரவர்த்திதிருமகனுல் இராவணனிறந்த படுகளம் போலிருந்த இப்போர்க்களத்தில் மீண்டும் அரவக்கொடியோன் ஆக்ஞாபித்தபடியே ஆசாரியரும், வரிசிற்றுங்குஞ் சேனபதியுமானவர் நால்வகைச்சேனைகளுடன் நடந்து, பாண்டவப் படைகளுடன் கலந்திருந்த விராடன், துருபதேயன் முதலிய வேந்தர்களுடனெதிர்த்துப் போர் புரிந்து காந்திக்கமறுகின்ற கருங்கணைகளைத் தூண்டி, அநேகம் அரசர்களை யொறுத்து, விராடன் துருபதேயன் இவர்களுடைய சிரங்களையறுத்து, கடுங்கோபத்துடன் வருவதாயினர். அக்காலையில் துரோணுச்சாரியரால் துருபதேயன் மடிந்தானென்பதைத் திஷ்டத்தூய்மனதிருந்து, உள்ளஞ் சுடச்சுடவெகுண்டு, உலவாப் பெருங்கடல்போ விரைந்து, தடதடவென்று அரசர்கள் மூடிகள் இடிபடப்படியும் அடியினையுடைய கடிகமழ்முனியைக் கண்சிவக்கக் கருவிப்பார்த்து "ஓ துரோணரே! என் தந்தையாகிய துருபதேயராஜனை என் சண்

மூன்னுகச் சிரச்சேதம் செய்தாயல்லவா? நல்ல தாகட்டும். காளையப் போரில் இப்போது பார்த்திருந்த சகலராஜர்களும் பார்க்கும்படியாய் உன்மகனை அச்வத்தாமனுக்கெதிரிலே உன் தலையை வாங்கு கிறேன்" என்று கொடுஞ்சபதங்கூறிச் சலசல வென்று சரமாரி பொழிந்தான். அத்தருணத்தில் மன்மதனிற் சிறந்த அழகும், சுப்பிர மணியக்கடவுள் மதிக்கும் உரமும், காலகேய நிவாதகவசர்களைப் பாலலோசனப் பரமன்கணையாற் பாழாகும்படி வென்ற திறமுமறமு மூடைய விஜயகாண்டீபகர அருச்சுனன் யாவரும் வணங்கும் தருவா கிரியரைப் பார்த்து நமது மாமனுடைய தலையை வாங்கினரல்லவா வென ஆரூக்கோபங்கொண்டு அவரெதிரிற் சென்று நின்று வெவ்வி தாகிய பிறைமுகக் கணைகளை விடுவிறென்று தொடுத்து அத்துரோ ணச்சாரி கைகாலசைக்காமல் ஸ்தம்பப் பிரமைகொண்டு தியங்கி மயங்கிப் புறமுதுகிட்டோடும்படி தாக்கினன். இங்கு இவனிப்படி போர்புரியவும், இன்னொருதிக்கில் தானுற்பவமாகிய குந்திபோஜ குலமும், அஷ்டகுலாசலமும், திக்கஜங்களின்பலமுங் கொண்டா டும்படியாய்ப் பூமியைப் புகழ்பெறக் காத்துத் தன் பெயர் நிறுத்திய மிருகொடையாள னென்னுங் கர்ணன்பெற்ற விடசேனனுனவன், அகிலும் சந்தனமும், புனுகும் புஷ்பமுதலிய யாவும் பரிமளிக்க அணியுங் கொடும்புயமும் வெற்றிமாலையுமுடைய சாத்தகியின்பேரி லெதிர்த்துச் சண்டைபுரிந்தடிபட்டலுத்து, சிங்கத்தின்முன் னெதிர்த்துப் பங்கப்பட்டோடிய யானையைப்போல் நங்கப்பட் டோடினன். இப்பால் உலகு உலாவிவருங் குதிரையையும், அதிரும்படியான வில்லையும், அரியவல்லமையையும், யாவரும் நிகரில்லா ஆண்மையையுமுடைய நகுலராஜனுடன் சகுனி வந்தெ திர்த்து அரும்போர் புரிந்து, அதிகதடவை தளர்ந்ததிர்த்து, தன் னுடைய நால்வகைச் சேனைகளும், உயர்ந்த வில்லும், வெற்றிக் கொடியும், சுழன்றிபதேரும் துணையாகத்தேறிய வேந்தரும், ஓய்ந்து சாய்ந்து மாய்ந்து போகும்படியாய் ஒழித்து விட்டு, தானொருவனு மீண்டு உடல்வருந்தி, கால் சிவக்கும்படி ஓட்டமாயோடி, எவ்விடத் திற்போய்ச் சேருவோம் தெய்வமே! இனி நாம் சேரப்போகின்ற இடம் மேலுலகமல்லது வேறுலகமில்லையே என்று பூர்வஞ்செய்த வஞ்சனைகளெல்லாஞ் செஞ்சா மாருதம் போல் வந்து சஞ்சாரப் பிசாசதம்போ லோடும் தனது நெஞ்சைப் பிளக்கும்படியாய்த் தொஞ் சித்தொஞ்சித் துவண்டு, அஞ்சியஞ்சி அகன்றுபோனன்.

அருச்சுனன் யுத்தசமார்ப்பணஞ் செய்தல்.

அக்காலத்தில் இரண்டுஜாமம் கீங்கி மூன்றுவது ஜாமத்திலும் மோகரித்துப் போர் புரியும்போது, இருதிறப் படையினு மோங்கிய கேபாளரும், பொருதிறப்படை தாங்கிய பூபாலரும், நித்திரை மயக்கத்தால் மெத்தவருந்தி, தத்திவிழுந்து, றெத்தத் தழுந்தி, அலுத்துக் கண்திறக்கமாட்டாமல் விழிசொருகிக்கொண்டு மூடுவதினுலும், தங்களுக்கு உடற்காவலாகிய ஆயுதங்கள் கைகுழுவிப் போவதினுலும், நித்திரை மப்பாற் சத்துருவைப்போல் தங்கள் படைகளைத் தாங்களே வெட்டிக் கொள்வதினுலும், நினவுமறந்து தங்களிற்றுங்களே மாறுபட்டு இறக்கப்போர் செய்வதினுலும், இவ்விதமாகிய சண்டையின் ஏளிதத்தைச் செவ்விதமாகிய சில விஜயன்கண்டு, மேகமுழக்கம் போன்ற பெருங்குரலிட்டுக் கூவி, "ஐயையோ!! நமது மன்னர் முதலாகிய சேனைகளெல்லாம் நித்திரை மயக்கத்தால் ஒருவரா லொருவர் பின்னமாய்ப் போகின்றார்களே: இன்றிராவிடிந்து சூரியோதய மாகிறவரைக்குந் துன்னிப்புரிகின்ற தொந்தயுத்தத்தை நிறுத்துங்கள்"என்று இருவகைப் பிரமுகர்களுங் கேட்கும்படியாக இரைந்து சொன்னன். இச்சொல் சொல்லி வாய் மூடுவதற்கு முன்னே எப்போதெப்போதென்று காத்திருந்த இருதிறப் படைகளும் முராரி மைத்துனனுகிய நரனைச் சிரமேற் கரமெடுத்து வாழ்த்தி, உரமாக நடத்திய யுத்தம் விட்டு ஓய்ந்திருந்தார்கள். அப்போது துரோணாச்சாரியர் வெல்லுவது தோற்பதென்னும் இரண்டிலொன்று தெரிந்து கொள்ளாமற் பாசறைக்குப் போகேனென்று சபதம்பண்ணிய பாண்மையினல் பொழுது விடிந்தபின்பு போர் தொடுக்கவேண்டுமென்று பூரண வயிராக்யத்துடன் போர்க்களப் பூமியிலிருந்தார். வெற்றியையுடைய சேனுபதி யுத்த பூமியில் இருக்கும்போது, மற்ற அரசதிறவான்களெல்லாரும் ஆசாரியரைவிட்டுப் போக மனமில்லாதவர்களாய்ப் போர்க்களத்திலிருந்து, குடைச்சிகரங்களையுடைய இரதத்திலும், வீரபட்ட முடைய யானையின் பேரிலும், மாசற்ற குதிரையின் மணியிழைத்த கல்லணையாகிய சீனியின்மீதிலும் நித்திரை செய்தார்கள். பதாதிய ரெல்லாரும் நிலத்திற்படுத்து உறங்கினர்கள். அமர்க்களத்தில் எதிரிகளிருப்பதினுற் பாண்டவர் திலகனுகிய தரும ராஜன் தம்பிமார்களுடன் பதாதியரும் தம்மைச் சூழும்படியாய்ச் சமர் நிலத்திலிருந்து, தங்கள் படையில் இறந்து போனவர்களுக்

கிரங்கித் துயரமுற்று, எதிரிபடையிலிருப்பவர்கள் இறக்கும்படியான விதத்தை நாடிக்கொண்டு நித்திரையற்றிருந்தார். இப்படி சத்திய சந்தனுடைய தருமராஜனே விசனப்படவும், அங்கே துரியோதனராஜனுக் தன்படையி லிறந்து போனவர்களைக் குறித்து விசனப் பட்டு, இனி யிருப்பவர்களும் இறக்கும்படியான காலம் சேரிட்டிருக்கின்றதே யென்று ஏக்கங்கொண்டு, பாடிவீட்டுக்குப் போகாமல் நித்திரைநீங்கி, பருந்துகளுங் கழுகுகளும் பறந்தலையாகின்ற ரணகளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியினுடைய சக்கரம் பிரகாசிப்பதைவிட்டு இருளானதற்குக் காரணமுரைத்தல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இப்படிப்பதினொன்காநாட்பகல்யுத்தத்தில் ஒரு சூரியனொளியைக் கோடிசூரியப்பிரகாசமுடையசக்கரம் எப்படி இருள்காட்டி மறைத்ததென்று சிலர் ஆட்சேபிப்பார்கள். அதற்குப் பலர் ஒருவித சமாதானஞ் சொல்லுவார்கள். அஃதியாதெனில், சூரியவம்ஸ சிரேஷ்டனுகிய ருக்மாங்கத மஹாராஜனுனவர் மிகுந்த பக்தியாய் ஏகாதசி விரதமிருந்து வருநாளில், ஒருவாள் துருவாச மஹரிஷிவந்து, ருக்மாங்கத மஹாராஜ சிரேஷ்டனைக்கண்டு, துவாதசி பாரணைக்கு நான் வருகிறேனென்று சொல்லி, ஸ்நானசந்தியுபாசனமுடித்துக்கொண்டு வரப்போனவர் காலங்கழித்து வருவதானுர். இவ்விடத்தில் ருக்மாங்கத மஹாராஜன் பாரணைகாலந் தப்பிப் போகிறபடியால், அந்தக்காலாதீதமாக வொட்டாமல், துளஸியும் தீர்த்தமும், அருந்தி, துருவாசர் வருகிறவழியைப் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது பொழுதுவிடிந்து ஐந்துகாழிகையாய் விட்டது. அதற்குமேற் பாரணைகாலந்தப்பி வருகிற மஹரிஷியை உருக்மாங்கதன் கண்டு எதிர்கொண்டு வணங்கி அழைக்க, அக்காலம் முனிவர் அரசனைப் பார்த்து, "அப்பா! நீ இன்னும் பாரணைபண்ணுதிருக்கின்றுயா?" என்று கேட்டனர். அதற்கரசன் "சுவாமி! திருத்துழாயும் தீர்த்தமும் வாங்கிக்கொண்டு தேவரீருக்கெதிர் பார்த்திருக்கின்றேன்" என்று சொல்ல, அந்தச்சொல்லைக் கேட்டவுடனே தீப்பொறி பறக்க விழித்து, திடுக்கிடப்பற்கடித்து, "அடாபாவி! பாரணை உச்சிஷ்டம் பண்ணிப்போட்டு எனக்கு அன்னங் படைக்கப்போகின்றுயோ? மகா

காதகனுகிய நீ செல்வகர்வத்தால் இப்படி செய்தாயல்லவா?" என்று வெகுண்டு பிடிசாபமென்றூர். அப்போது அரசன் கலங்கி, "ஓ ஆபத் பாந்துவாகிய ஐயா! ஓ அநாதரக்ஷகனுகிய தய்யா! ஓ அதிமூலப் பொருளாகிய மெய்யா! ஓ ஐந்தாயுதந் தரித்தகையா! ஸ்ரீஹரி! ஓம் நமோ நாராயணு" என்று அலறிவிழுந்தான். அப்போது அண்ட ரண்ட சராசரங்களுமொடுங்க, மண்டல விண்டல பிரமாண்டமு நடுங்க, அநேகபாநுகோடிப் பிரகாசத்துடன் சக்ராயுதம் புறப்பட்டு, துருவாசமாமுனியைத் துரத்துவதாயது. அப்போது பிராணபயங் கொண்டு காடுமேடுநாடு வீடுமுதலிய இடங்கள்தோறும் வாடியோடும் படியாகிய மஹாரிஷியானவர் சுதரிசனத்தைக்கண்டுத் திகிலடைந்து, 'ஐயோ! உன்மீசாதிகுன்றூதா? உன் சுடரவியாதா? உன் ஒளி மழுங் காதா? உன்னூரமொடுங்காதா? நீ கறுத்துப்போகாயா? உன்காந்தி சிந்தி மாயாதா!" என்று பற்பலவிதமாகச் சபித்துக் கொண்டு இந்திரனிடத்திற்சென்று அபயமபயம்: அடைக்கல மடைக்கலம் என்றுஅலறினர். அப்போது ஆருக்காக அடைக்கல மென்றுஇந்திரன் கேட்க, ஸ்ரீமந்நாராயணனுடைய சுதரிசனத்துக்காக வென்று துரு வாசர்சொல்ல, "அப்பப்பா!! நான்மாட்டேன்"என்று அவன்நீக்கிவிட, உடனே அம்முனிவர் குபேரனிடத்திற்சொல்ல, அவனு மிப்படியே சொல்ல, அப்பாற்சகல தேவரிடத்தினும் விரும்பி, அடைக்கலக்காப் பில்லாமற்றிரும்பி, ஆதிபகவானுகிய கயிலாசபதியினிடத்திற்சென்று சொல்லியடுக்க, அவரு நம்மாலாகாதென்று விளம்பிவிடுக்க அதைக் கேட்டுஸ்ரீவைகுந்த நாதனுகிய பரவாசு தேவனிடத்தில் வந்து, நான் பண்ணிய அபராதத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று கேட்ட னர். "ஓமுனியே! அதற்கதிகாரி நாமல்ல உமக்கும் நமக்கும் பொறு மைகொடுப்பவன் பரமபாகவதனுகிய ருக்மாங்கதன். ஆகையாற் போட்டவிடத்திற் போய்த்தேடும் போம்போம்:" என்று விடுக்கவும், அம்மகாரிஷி சாகேதிக்காரன் காலில் விழுவதிலுஞ் சண்டைக் காரன்காலில் வீழ்வது மேலென்று நினைத்து, ருக்மாங்கனிடத்தில் வந்து அடக்கலம புகுந்தார். அப்போது அரசன்பார்த்து, "மகரிஷி வெகு வருத்தப்பட்டனர் போலும" என்று மனமிரங்கி, "ஓமாதவா! ஓ கேசவா! ஓ வைகுந்தவாசா! ஓ வாமனர்க்கீசா! ஓ மலர்மங்கை நேசா! ஓ மணியாழிதுயின்றோய்! ஓ மண்ணுலகளந்தாய்! ஓஜகார்த்தனு!" என்று விழிநீர்சொரிந்து இருகரத்தையுஞ்சிரத்திற் குவித்து இறைஞ்சியபோது சக்கரத்தாழ்வான் துருவாசரை விடுத்து அரி நாராயணருடைய ஸன்னிதானத்திற் போய் நின்று சங்கது

கனைத் தெரிவித்துத் தொழ, இச்சக்கரத் தாழ்வானுக்குப் பின்னுக் ஓரிருளானது கருமலைபோற் கலந்து திரண்டுவந் திருப்பதைக் கமலக் கண்ணன் பார்த்து இதென்ன வென்றுகேட்க, அந்தத் துருவாச ரிட்ட சாபமென்று திகிரிகாதன் சொல்ல, ஸ்ரீ காதன்மகிழ்ந்து; அத் துருவாசனும் தமது தாசஞுகையால், அவன்கூறிய சாபத்தை காமே தள்ளிப்போட்டால் உலகத்தில் யாவரும் பெரியோரை மதிக்க மாட்டார்கள். ஆதலால் காமே ஏற்றுக்கொள்ள வேண்டும். இச்சாபம் உன்னிடத்தி லிருக்கட்டும். ஒருசமயத்தில் உன்பேரிலேற்றி, உடனே அதை மாற்றி விடுவோம்" என்று பூர்வஞ்சொல்லி வைத்திருந்த அச் சாபக் கறுப்பை இச்சக்கரத்துக்கேற்றி, பதினுன்காம்காள் யுத்தத்திற் சூரியனை மறைப்பித்தா ரென்று சமாதானஞ் சொல்லுவார்கள். மேலும் சர்வவல்லமையுங், சர்வசுதந்தரமும் சர்வலோகசரண்யமு முடைய சலசலோசன ஜகார்த்தனஞகிய மாதவமுகுந்த வைகுந்த வாசனுனவர், எக்காலத்தில் எப்பொருளை எப்படியாக வேண்டு மென்று எண்ணங் கொள்ளுகின்றாரோ அக்காலத்தில் அப்பொருள் அவரெண்ணப் படி அமையும்" என்று வைசம்பாயனர், சொல்ல ஜனமேஜயராஜன் பணிந்தெழுந்து, "சுவாமி! மேல்நடந்த சரிதையைச் சொல்லவேண்டும்" என்று கேட்க வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

பதினுன்காம்போர்ச் சருக்கம்-முற்றிற்று.

பதினந்தாம்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

உருவென் றருவென் றுளதென் றிலதென்
றிருளென் றொளியென் றிகல்வார் முனிவோர்
மருதன் றிடரும் வரதா வுனைநின்
னருளொன் றிலவே லறிவோ ரெவரே

ஐயா நகத்தன் அடியிணைக் கடிமை, செய்யா நந்த ஜனமே ஜயனே! கேளும் பதினன்காட் பகற்போதிற் சக்கரத்தினல் மறை பட்ட காழ்வு நீங்கும்படியாய்ச் சூரியனைவன் தனதாயிரஞ் சுடரும் அநேக மாயிரஞ்சுடராய்ப் பிரகாசமாகி, இதுகல்ல பொழுதென்று யாவருங் கொண்டாடும்படியாய் நாகராலயத்தை வலமாக வந்து, நேற்றையதினத்தில் நம்மை மறைத்த சக்கரத்தை இன்றைக்குக் கைப்பற்ற வேண்டுமென்னும் இச்சையுடையவஞ்ய லக்ஷம் யோசனை தூரத்தில் அருணகிரணக் கொடிநாட்டி விண்ணுட்டவரு மண்ணுட்ட வருஞ் சந்தோஷிக்கும்படியாய் அண்டத்திற்கு உரைபோட்டது போல அடர்ந்து மூடிக்கொண்டிருந்த இருள்களைக் குகையுற ஓட்டி, மூகங்கவிந்திருந்த முண்டகமலர்கள் முகமலர்த் தனது கிரணக் கரங் களைக் காட்டி, இருதிறவரு மிராச்சண்டைக் கேற்படுத்திய தீப வரிசைகளா லுண்டான பெரும் பிரகாசங்களும், சூன்யமாக மூடிக் கொண்டிருந்த பனிமாசுகளும், ஒழுங்கில்லாமல் மழுங்கிப் போகும் படியாய், ஒற்றையாழியுஞ் சப்தமாவுமுடைய தனது ரதத்தை மூடுக்கிக்கொண்டு கிழக்குத்திசையிலுள்ள உதயகிரியி லுதித்தான். அதுகண்ட இருவகைச் சேனைகளும் இராஜவர்க்கமுங் காலைக்கடனை முடித்து நமஸ்காரஞ் செய்து, ஜயஞ்ஜயமென்று யுத்தகோலம் பூண்டு உள்ளத்திற் கோபமூண்டெரியும்படி கடுகடுத்து, வெப்ப மாகிய கண்கள் சிவந்து கறுகறுத்து யுத்தபூமியால் மூடுகிக் கடுகி வந்து நிறைந்தார்கள். அப்போது விற்றலைமைக்கு, கற்றலைமை பூண்டு கற்ற சுத்தவீரனுகிய சுயவல்லபம் பெற்ற நரனும் பீமனும், நகுலனும், சகாதேவனும் சதுரங்கச் சேனைகட்கு காயகனுகிய

திஷ்டதுய்மனும் முதன்மையாக நின்று, தங்கள் சேனைகளை [illegible]ச் சதுர்த்தவார வியூகங்கட்டி, நான்குவேத முடிவிற்கும் ஆதியாகிய நாரணன் தோரணகாட்டிய இரதஞ் செலுத்தப் பூரணவிவேக புண்யார்ச்சுனன் போர்செய்யப் புகுந்தான். அந்த வேளையிலே பார்மதிக்கும் ஆண்மையையுடைய ஜயபாலபீமனென்னு மன்னனேறி, சூலபாணியாகிய சுந்தரேசரையொத்த புராதன ராஜர்கள் ஆலகாலம்போலுருத்து, எரித்து அடர்த்துப் போர்கொடுத்தார்கள். அக்காலையில் அர்ச்சுனனெருங்கி இந்திராஸ்திரந்தொடுக்க, அப்போது எதிராளிகளின் சேனைமுதலிய வீரர்கள் எமலோகங் குடியாஞர்கள். இன்னுஞ் சில மன்னர்கள் முன் துள்ளிவந்து, "என்முன்வா" என்று வீரபாஷைகள் பேசி, தீரத்துடன் வில்வளைத்துத் திரளாகிய கணைபோக்கினர்கள். அவர்களுக்கு முன்னின்ற அர்ச்சுனன் பலம் பொருந்திய காண்டீபத்தைக் குணத்தொனிசெய்து தலம்புதையப் பலகணைகளைத் தூண்டினன். அப்போது இவ்வர்ச்சுனனுடைய வில்லுக்குமிஞ்சிய வில்லு மில்லை வெஞ்சமரில் மிஞ்சியடிக்கும் வீரத் திற்கிணை சொல்லத்தக்க வீரருமில்லை என்று யாவரும் மிகவும் புகழ்ந்தார்கள்.

இவ்வாறு கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்னும் நான்கு திக்கினுமிருந்து பாண்டவச்சேனைகள் பராக்கிரமித்து வளைந்து கவிந்து எதிர்க்கவே வேதம், வேதாங்கம், மீமாம்சம், தர்க்கம், கலை, ஞானம், புராணம், இதிகாசம் இத்தியாதி விஞ்சைகளுங்கற்று விவேகம் விளைந்த துரோணாசாரியரானவர் அப்பாண்டவர்களுடைய நால்வகைச் சேனைகளும் அச்சேனை வீரர்களும் நாலுபக்கங்களில் முகம் விட்டவாறே முதுகிட்டோடும்படியா யடித்து, தமதுவின் ணையில் ஐந்து பாணங்களைப்பூட்டி விதம் விதமாய்விடுத்து யுத்தம் விளைத்தார். அத்துரோணருக்கீடாக எதிர் நின்று யுத்தஞ்செய்ய மாட்டாமல் யாவரும் புறங்கொடுத் தோடுவதைக் குந்திபோஜ மகாராஜன் அறிந்து, ஆயிரக் தேர்முதலிய யானைகளுடன் எதிர்த்துமூடுகிப்போர்புரிந்தான். அக்காலையில் உதிரவெள்ளம்பெருகிய யுத்தகளமானது செவ்வானம் போலச் சிவந்திருந்தது. இப்பிரகாரம் விற்குருவும் குந்திபோஜனும் வில்லைக் குனித்து வேண்டிய சரங்களைத் தொடுத்து வெஞ்சமர்விளைக்க, மற்றொருபால் மகத்தாகியசாமர்த்தியமுள்ள மாத்திரதேசாதிப னவன் மருமகனை நகுலனுடனெதிர்த்து மலைந்தான். பலம் பொருந்திய கோபாச்னி பற்றியெரி

யும்படி வந்த மாளவபதியானவன், கருகிறமுள்ள அனந்த சாயிக்குக் கனிஷ்டனுகிய சாத்தகியுடன் சமர்செய்தான். குருபுத்ரனுகிய அசுவத்தாமன் அர்ச்சுனனுடனே அமர்புரிந்தான். கர்ணனுவன் பீம சேனனுடன் வெகுண்டு சீறி விளைபுரிந்தான். வில்வல்லபத்தின் மேற் பட்ட பாண்டியனைச் சகுனி மடக்கிக்கொண்டு சண்டை செய்தான். இப்படி ஒருவருக்கொருவர் கைகலந்து போர்புரியும்போது அண்ட ரண்டபுவன சராசரங்களோடு எண்டிசை முதலிய மண்டலமனைத் துங் குன்றும்படியாகிய ஊழிக்காலமென்றுரைக்கும்படியா யுத்தம் விளைத்து, எவரெவர்கள் எவ்வெவர்களைப் பகைத்து நின்று யுத்தஞ் செய்தார்களோ அவரவர்களுடைய ஆண்மையின் நிலையைச் சொல்லி முடிவதன்று. மேலும், முதன்மையாக வந்து யுத்தஞ்செய்து வெற்றி யடைந்து அமோகரிப்புடனிருந்த பகைவர்கள் வந்த வழிமடங்கி யோடும்படியாக, அக்னியாஸ்திரம், வாயுவாஸ்திரம், வருணுஸ்திரம், சூபராஸ்திரம் முதலாகிய அஸ்திரங்களைக்கொண்டு துரோணுசாரி யார் ஜாடுகின்றபோது, சிடசிட படபட மடமட கடகடவென்று வரு கின்ற அத்தீக்ஷண்ய பாணங்களினுற் சிந்தைகைந்து, தந்தை தாயைப் போல் அரசு செய்கின்ற தருமராஜனுடைய தானைகள் உருமாறி, உடல்சீறி, உயிர்பீறி, உரைமீறி, ஓ! ஓ! ஓ! என்னும் ஓசையுடன் ஓய்ந்தழிந்தார்கள்.

துரோணுசாரிக்குச் சப்தரிஷிகள் வந்து பூர்வக்யான முணர்த்திச் செல்லுதல்

இவ்விதமாக துரோணுசாரியும் துரியோதனனுடைய சேனை வீரர்களும் போர்க்களத்தினின்று இன்னும் வாதத்தக்க பேர்கள் யாராகிலு முண்டாயிருப்பின் வரட்டுமென்று ஜயமாலைபுனைந்து தருக்கிச் செருக்கித் தாரணியெல்லாங் கருக்கிப் பெருக்கி யிருக்குஞ் சமயத்தில், ஒருவருக்கொருவர் ஒப்புவமையில்லாத அகஸ்தியர், ஆங்கீரசர், அத்திரி, கௌதமர், காசிபர், புலஸ்தியர், மரீசி யென்னு முனிசிரேஷ்டர்கள் எழுவரும் துருவனுக்கொப்பாகிய துரோணு சாரியைக் கண்டு, சுதரிசனம்போல் வந்து சூழ்ந்தார்கள். அவர்களைக் கண்ட வுடனே மகத்துவமிருந்த ஜகத்திலுதித்து வலுத்த தவத்தை வகித்த உரத்தினராகிய தநுவாசிரியர் எதிர்சென்றேற்றி, தீர்க்க தண்டமாகச் சொன்னியாலிறைஞ்சி, "தேவரீர்களைப்பார்க்க என்ன பாக்கியம் பணணினேன்" என்று அணிபெறத்துதித்து, அழகுறப்

பணிந்து நின்றனர். அப்போது சகலகலைகளிலும்வல்ல சப்தரிஷிகளாகிய தபோதனர்கள்,

'மறைகெழு நூலுந் தேசு மாசிலாத் தவமு ஞான
முறைவரு முணர்வு மல்லான் முனிவரர்க் குறுதி யுண்டோ
துறைகெழு கலைகள் வல்லாய் துன்னலர்ச் செருக்கும் போரு
நிறைதரு வலியும் வாழ்வு நிருபர்தம் மியற்கை யன்றே.'

"ஓ துரோணாசாரியாரே! வேதபராயணம், சாஸ்திரவிசாரம், ஔபாசனம், பிர்மதேஜசு, மாசற்றதவம், கோதற்ற ஞானம், வழுவற்றவாய்மை, அழிவற்றயாக மிவைமுதலிய நற்செய்கைகள் வேதியர்க்குரியவைகள். இவைகளே முனிவர்க் குறுதியல்லாமல் வேறு துணையுண்டோ சொல்லும்? ஓ கல்வழியாகிய கலைக்கியானங்களே நலமுறத்தெளிந்த வில் வல்லவனே! சத்துருக்களே வெற்றிகொள்ளும் வீரப்பிரதாபமும், மிகுஜயப்போரும், அழிவில்லாச் சாமார்த்தியமும், மதுமுறை நிலையாகிய நீதியும், நிதானமும், யோக போகதியாகமோக சம்பத்கரமாகிய வாழ்வும் இவைகளெல்லாம் க்ஷத்திரியருக்குரிய இயற்கை யல்லவோ? ஆகையால், நமக்கேனிந்தப் பக்தம்? உம்மை நீர் மறந்திருக்கின்றீர். உத்தமனே! நீர் கைப்பிடித்திருக்கின்ற வில்லும், வேலும், வாளும், கணைகள் நிறைந்த அம்புராத்தூணியும், யானை குதிரை முதலாகிய சேனையும் வீரகண்டை கேயூர மணிமகுட கிரீட புஜகீர்த்தி முதலிய வீரபட்டமும், வெவ்விய கோப க்ஷாத்திரமும் வேண்டாம்! விட்டுவிடும்! இந்திரன்முதலிய தேவர்கள் யாகாதி கருமங்களில்லாமல் இதயம் வருந்தியிருக்கின்றார்கள். ஆதலால், அதிசீக்கிரத்தில் விண்ணுலகம் வாவேண்டும். ஓ பூசுரர் பிரானே! இப்போது நீர் மூழ்கியிருக்கின்ற பாசபந்தக் கலக்கமான இருளைவிடுத்து, உமது புத்திபூர்வமாய் பழமையை உன்னிப் பார்க்க பூர்வக்ஞானம் பிறக்கும்" என்று கூட்டமாகிய தங்களின் உரிமைதோன்றும்படியாய்ச் சொல்லிச் செலவுபெற்றுக் கொண்டார்கள்.

தருமனுக்குக்கண்ணன் துரோணர்நிலையுணர்த்தி அசுவத்தாமனைப்பற்றி யோர்பொய் சொல்லும்படி வற்புறுத்துதல்

இப்படி சொல்லிச் செல்லவே துரோணாசாரியருடைய மனதில் வேதாந்த சாரத்தாலாகும் வெறுப்பும் பூர்வக்ஞான விருப்பும் பிறந்து, பலவிதத்தில் வெற்றிபெற நடத்தும் பேராசையும் உலகத்தி

லநுபவிக்க உன்னும்போராசையு மறந்து, பரிசுத்தமாகப் பிரகாசிக்குஞ் சௌரியகுண மடைந்து தேவவமானமும் பல்லக்கும் எப்போது வருமென்னும் இஷ்டமுடையவராய் எதிர் பார்த்துக் கொண்டு, அப்போது ஏறியிருக்கும் ரதமுதலாகிய வாகனங்களின் மீது விருப்பமில்லாதவராய், கோடைகாலத்தால் வறண்டு மறுபடியும் மாரிகாலத்துக் கொண்டல் பொழிய அதனால் நிறைந்து தெளிந்த நீரோடையைப்போல நின்றார். அப்படிநின்ற துரோணாசாரியருடைய நிலையையும், சப்த முனிவர் வந்துரைத்த தன்மையையும், முதனாள் யுத்தந்தொடங்கு முன்னமே பாண்டவர் கேட்டுக் கொண்டபோது இத்துரோணர் சொல்லிய சொல்லையும், இவரை வெற்றி கொள்வதற்கு இதுதான் நல்ல காலமென்பதையும், இந்திர நீல மணி மாலைமேற் பொற்கொடி படர்ந்ததைப்போல் பொன்னுடை தரித்தருளிய புருஷோத்தமன் தெரிந்து கொண்டு, சித்திராங்கதை புருஷனுகிய செஞ்சிலைவிஜயனுக்குச் சங்கதிதெரிவித்து, "ஓ சவ்வியசாசி! இதுவே நல்லகாலம். நீ மெத்த ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்!" என்று சொல்லித்துரோணருக்கு ஜென்மப்பகையாக யாகாக்கினியிற் பிறந்த திஷ்டத்தூய்மனே யழைத்து, துரோணாசாரியார்பேரி லேவிவிட்டு, குற்றமாகிய கோள்மொழிகளைச் சித்தமறந்துஞ் செப்பமாட்டாத உத்தமகுண மேருவாகிய சத்திய சம்பன்ன னான தருமராஜனைக் கண்டு, அடியவரிடுக்கண் தீர்க்கும் அருளாழிவேந்தன், "ஓ முரசகேதன மூர்த்தண்யனே! கேளும்! நமது ஆச்சனனுகிய விஜயகாண்டீபனும் நானும் மந்திரமலே போன்ற பிரகாசம் பொருந்திய தேர்ள் பெற்றமாளவத் தலைவன்மேற் சண்டைபோடச் சென்று அக்னியாஸ்திரப் பிரயோகஞ் செய்தபடியால், அவ்வரசனேறிய அசுவத்தாமாவென்னும் பெயரினையுடையபட்டத்து யானையான துகட்டமடைந்து நமனுல கடைந்தது. அவ்வானையைக் கொன்றது மெத்த அருமையாதலால், உம் வாக்கினுல் அதனைச்சொல்லி ஐயங்கூற வேண்டும்" என்று உரைத்தனர்.

இவ்வாறு செங்கண்மா லுரைத்ததை அங்கண்மா ஞாலம் அனைத்தும் புரக்கும் அறன்மகன் கேட்டு "ஆ! ஹரி கிருஷ்ண! அதிக துஷ்டத்தனமுள்ள மாளவத் தலைவனுடைய பட்டத்து யானையைவென்று விட்டால், நான் அந்தயானையின் பெயரையெடுத்துச் சொல்லவேண்டிய பிரகாண மொன்று மில்லையே? இஃதென்ன விந்தை!" என்று திடுக்கவும் அவர்களுக்குரிய கரியோன் மீட்டுமெடுத்து,

"நீரென்ன மறந்து போனீரோ? ஓ தருமராஜனே! முதல்முதல் யுத்தத்துக்கு ஆரம்பிக்கும்போது நாமெல்லோரும் பீஷ்மரிடத்திலும்போய் நமது குறைகளைச் சொல்லிக் கேட்டகாலையில், அம்முனிவரன் சொன்னவாக்கியம் ஞாபகமில்லையோ? 'தர்மராஜன் வாக்கினால் என் மகனாகிய அசுவத்தாமா இறந்தானென்று சொல்லக்கேட்பேனாகில், நான்புத்திரசோகத்தால் உயிர்விடுவேன்' என்று சொல்லிய அந்தக் காலம் இப்போது சமீபித்திருக்கின்றது. ஆனபடியால், நீரும் பொய் சொல்லவேண்டியதில்லை. இந்தப்போரில் அவர் பிள்ளையின்பேர் கொண்ட யானையிறந்ததென்று பேசுவீராகில், இந்தச்சொல் அந்த அந்தணன் செவியில் வீழ்ந்தவுடனே தம்மை மறந்து, வில்முதலாகிய பாணங்களைத்துறந்து உயிர்குறைந்து இறந்துபோவார். ஆதலால் நீர் அவருக்கு முன்சென்று நின்று சுறுக்கிச்சொல்லுமென்று துரோணசாரி இறப்பதற்கு உபாயம்பேசிய காலையில், மெய்யினாலேற்பட்ட மெய்யாகிய மெய்யையுடைய வேந்தன்கேட்டு, "ஹரி! ஹரி!" என்று இருசெவியுமூடி "ஐயா!

'அண்ணிய கிளையு மில்லு மரும்பெரு மகவு மன்புந்
திண்ணிய சீரு மிக்க செல்வமுந் திறலுந் தேசு
மெண்ணிய பொருள்களாவு மியற்றிய தவமு மேனைப்
புண்ணிய மனைத்துஞ் சேரப்பொய்மையாற் பொன்று மன்றே'

என்றால் இப்போது நான்பொய்சொல்லி வாரிக்கொள்ளுவது இந்தப் பூமியாகிய மண்ணை?" என்று நகைத்தவராய் "அப்பா உரகசயனே! ஒரு பொய் சொல்வார்களாகில், அவர்களுக்கு நெருங்கிய சுற்றமும், பொருந்திய வீடும், வருந்திப்பெற்ற புத்திரபாக்கியமும், திருத்திய சீருஞ் சிறப்பும், திணிந்த மனமும், அணிந்த புகழும் கேள்விச்செல்வமும், தீரத்துவத்திறனும், மாசிலாத்தேசும், எண்ணிய பொருளும், புண்ணியப் பொலிவும், இயற்றிய தவமும், அவமாயழிந்து பவமாக முடியுமே ஓ பங்கசலோசனா!" என்று சொல்ல, இந்திரனுற் பொழியவைத்த கல்வருஷ மாறுபடியாய்க் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துக் கோவினங்களையுங் கோபாலர்களையுங் காத்தருளிய கோவிந்தன் பற்பலவிதத்திலும் புகன்றுதேற்ற, அவைகளையும் தடுத்துப்பேசிய பார்த்திபனைப் பார்த்து, "என்ன நீர் சாந்தஸ்மாயிருக்கின்றீர்? ஓ தருமரே! இப்படி பேசினால் எப்படி போர் முடியும்? எவ்விதத்திற் சபத நிறைவேறும்? வீணாகிய அபராதனை யாரைச் சார்ந்தும்?

'உம்மையின் மறுமை தன்னி லுறுபய னிரண்டும் பார்க்கி
னிம்மையில் விளங்கும் யார்க்கு மவரவ ரியற்கை யாலே
மெய்மையே யொருவர்க்குற்ற விபத்தினை மீட்கு மாகிற்
பொய்மையுமெய்மைபோலப் புண்ணியம் பயக்கு மாதோ'

என்றபடி, கழிபிறப்பில் நின்ற பயனும், மறுபிறப்பிற்குரிய பய னும் யோசித்துப்பார்க்கில், அவரவர்களுடைய இயற்கையாய் இம்மையில் விளங்கும். அல்லாமலும் வெப்பமாகிய பொய்யைச் சொல்லவேண்டிய இடத்தில் அவசியஞ் சொல்லலாம். அஃது ஒருவ ருக்கு நேரிட்ட ஆபத்தை மீட்டுவிடுமாகில், அப்பொய்யானது மெய் யாகி மெய்யானது பெறுகின்ற புண்ணிய பலனைத் தானே பெறும். மேலும், 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்த்த, நன்மைபயக்கு மெனில்' என்றிருப்பதால் தீங்கைத்தராத நடந்ததைச் சொல்லு தலும், நன்மையைத்தரும் நடவாததைச் சொல்லுதலும் மெய்மை யாம், தீங்கைத்தரும் நடந்ததைச் சொல்லுதலும் நன்மையைத் தராத நடவாததைச் சொல்லுதலும் பொய்மையாம். நீர்நினைத்த வண்ணம் பொய்யானால்தா னென்ன ? வல்லவராகிய மகான்கள் அசுவத்தாமனது கதை ஆய்ந்து மிகமேலாபகாரமாய்ச் சொல்லியிருக்கின்ற வெகுவாகிய சாஸ்திரதருமங்க ளெல்லாம் உமதுள்ளத்திலே ஊறி அறமே மய மாயிருக்கும் போது, ஒரு பொய் சொன்னால் என்ன முழுகிப்போ யிற்று? பெரு நெருப்புக்கு ஈரமுண்டோ ? ஓ பெரியோனே! நீரொன் றும் யோசிக்கவேண்டாம். இது அப்படிக்குப பொய்யாகிய காரியமு மல்ல. உமக்கு இதனால் பழிபாவ முதலியன சமபவியா ! இது கலல சமயம! தாமதிக்காமல் விரைவிற் சென்றுசொல்லும!" என்று சொன் னார். தருமபுத்திரர் அப்படி சொல்வதற்கு மனங்கொள்ளாதவராய் வருத்தமுற்று மாதவனே நோக்கி, "ஓ மிகமகிமைபொன்ற மெய்யா ! ஓ கன்று கொண்டு விளங்கனி யெறிந்தகையா!! அசுவத்தாமாவென்னும் யானையிறந்ததென்பதாய்ச் சொல்லுகிறன். இது உமக்குச் சம்மதந் தானா?" என்று சொல்ல, காளிங்கனடனே நாயகனுகிய கண்ணன் கேட்டுக் கலகலவென்று நகைத்து, "நீர் சொல்லுகிற வாக்கியமுன் பின்னுகப் புரண்டிருக்கிறது. சொல்லழகா யிருக்கவிலலே. இபபடி தானா சொல்லுவர் ? இபபடி சொன்னால் அமிமாணைருக்குக கர்ண கடூரமாயிருக்கும" என்று சொல்லவும், 'பின்னேயெப்படி சொல்வது?' என்று தர்மக்கியானபூரணன் கேட்டனர். அதற்குக் கிருஷ்ண மூர்த்தி " ஐயா! நீர்சொன்னது சரிதான். ஆனால் இனப்படித்தி முன்

பின்னுக்கி, (அஸ்வத்தாமா அதா குஞ்சரஹா) என்று சொல்லுவீராகில், தனுர்வேதியருங் கோபங்கொள்ளார். ஸத்தியமும் குறைபடாது நமது எண்ணமுந் திண்ணமாம்' என்று சொல்ல நல்லதென்று அண்ணலுட்கொண்டார்.

கண்ணன் கருத்தின்படி தருமனுரைக்க
துரோணர் திஷ்டத்தூய்மன் பகையேற்றுச்
சொர்க்காரோகணமாக, அசுவத்தாம னரற்றல்.

இஃதிப்படி யிருக்க, துரோணாசாரியர் இனிமேல் இப்போர்ப் பட்ட யுத்தம் செய்பவர்கள் இவ்வுலகத்தி லில்லையென்று சொல்லும் படியாய் யுத்தஞ் செய்து வெற்றியடைந்து, தத்வக்ஞான சித்தத்தால் தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்று சொல்லும்படியான இவை முதலிய ஜனன சாகரங்களிளைழையும் வேரறக் களையத்தக்க மேதகுநிலையில் யோக மூர்ச்சையாய் நின்றார். அப்படி நின்ற தனுர்வேதியனுக் கெதிரில் தருமராஜன் சகல வீரரையும வென்று தடந்தேர் செலுத்திச்சென்று சமீபத்தினின்று, குற்ற மில்லாத தன்னுவினும் கோபாலன் குறித்தபடி பேசத் தொடங்கினார்.

" அத்தனே யச்ச வத்தா மன்னதா யடுவல் லாண்மை
மத்தவா ரணத்துக் கையோ மாருதி சிங்க மானு
னெத்தனே கோடி சேனை யிக்களத் திறந்த திந்த
வித்தகன் மலைந்து செற்ற வீரகையென் சொல்வ தையா."

இவ்வாறு தீதில்லா மொழியையுடைய தருமராஜனனவர் (அசுவத்தாமா அதா குஞ்சரஹா) என்று சொல்லவேண்டிய சொல்வில், அசுவத்தாமா அதா வென்றுசொல்லி மற்ற குஞ்சர மென்னும் மொழி வெளிப்படும்போது இது துரோணாசாரியருடைய காதில் விழாதபடி ஸ்ரீகிருஷ்ணதேவர் தம் பாஞ்ச ஜன்யத்தை யெடுத்து பம பம பம் என்று முழுகங்கி மறைத்தார். அதனால் அசுவத்தாமா அதாவென்பது வரைக்குந் தருமராஜன் வாக்கால்கேட்ட துரோணாசாரியர் வில்லுங்கணையும் வீரமும்விடுத்து, எவர்களிடத்தும் பாசபந்தம் வைக்காமலறுத்து, அசைவற்ற நிலையில் மனத்தை நிறுத்தி, ஊத்தைத் துருத்தியிற் காற்றைக் கூட்டி, ஊர்த்தமுகத்தில் மூலாக்கினிமூட்டி, ஒளியெழ இரண்டு திட்டியும் பூட்டி, உலகத்தாரிறக்கும்

உண்மையைக்காட்டி, உலவாப் பெருங்கணத் துத்தமநாதன், மலை வாய்த்தேனை மாந்தவிரும்பி, பிரமசொரூபியாகிப் பிணிபடு முக்குறும்பகற்றி, மூலசத்தியால் இரேசபூரக வியல்பிரட்டித்து, கூர்நடுநிலை யிற் கும்பிக்குங்கால், சிற்றம்பலத்திற் ஜெயநிர்த்தன மென்னும், சுத்த பவித்திரச் சுடர்பரந்தோங்கி, மெத்தப்பிரகாசம் விளங்கிய சோதி, மத்தக வுச்சி வழிவந்தெழுந்து, சிற்றுருவாகி சேட்செலும் ஒளியை, சித்தர்முதலாஞ் சிவகணத்தலைவரும், மெத்தப்புகழ்ந்து வேண்டித் துதிக்க, கருமலைக்கொப்பாங் கண்ணனுண்டவனும், பருமலைக்கொப்பாம் பஞ்சபாண்டவரும், மறுவற்ற இருதய மாதவத்தோரும், கண்டுகண் களித்துக் கைதொழுதார்களே.

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! வேதவித்தகராகிய துரோணாசாரியர் அவ்வாறிருக்கின்ற அவ்வேளையில், முள்ளறையுற்ற தாமரைப் புட்பக்கோவிலைப்பெற்ற பிரம்மாவினுடைய நடுத்தலையைப் பூர்வங் கிள்ளிய பிஞ்சுகபாணியும் பிறப்பிலியுமாகிய கிரீசனுக்கொப்பாகிய திஷ்டத்தூய்மனன வீரன் துள்ளிச் செல்லும் பரித்தேரினைத் துரிதமாயோட்டி வின்னாணிமாட்டி, நாணேசை காட்டி, வீரவாளிபூட்டி, ஆரவாரம் பகைபாராட்டி, துரோணர்பேரிற் பாணம் விடப் போயினன். அச்சமயத்தில் அர்ச்சுனன் "ஆ! ஆ! ஆ! ஆ" வென்று அதட்டி அமட்டி மறித்து, "ஐயோ! ஓ திஷ்டத் தூய்மனுகிய மைத்துனனே! இந்த மகானுபாவன் சுகானுபவத்திருக்கின்றார். இச் சமயத்தில் நீர் பாணம் தொடுக்கவேண்டாம். என் சொல்லைத் தள்ளி விடுப்பீராகில், உலகத்தில் உமக் குண்டாகிய புகழும், தேஜசும், நேசமும், வீரப்பிரகாசமும், குன்றிப்போம்! குறைந்துபோம்!!" என்று தடுத்தும், திஷ்டத்தூய்மன் அச்சுவார்த்தையைச் சிந்தையிற் கொள்ளாமல் அப்பாணத்தை உந்திவிட்டான். அந்தக்கணைசென்று புந்தியிற் சிறந்த தவமுனிப்பெருமான் கந்தரமறுத்து அந்தரத்தெழுந்து பூமியிற்சிந்தியது. தனுவாசாரியன் தலையறுந்ததைத் தனஞ்செயன்கண்டு, "அந்தோ! அந்தோ!" என்று கண்ணீர்விட்டழுது, உண்ணீருலர்ந்து, இருகண்ணும் செவ்வரக்கைப் போற் சிவத்தக் கோபங்கொண்டு, "இதோ சிதைக்கிறேன் உன் தலையை!" யென்று சில வல்லாளச் சேனாதிபதியாகிய திஷ்டத்தூய் மனைச் சீறி நெருங்கினன். இப்படி யிருக்கத் தனுர்வேத பாண்டித்ய முடைய துரோணாசாரியரென்னுஞ் சேனாதிபதியானவர் இறந்தாரென்று கெடிபெற்ற வீரங்கிளர்ந்த நாகக்கொடியோ னுடைய ரதகஜ

துரக பதாதிகளோடுங்கூடிய வீரர் முதலிய யாவரும் புறங் கொடுத் தோடினார்கள். இப்பால், வில்லாண்மையிற் சிறந்த அசுவத்தாமா வானவன் பொல்லாத விசனங்கொண்டு போர்க்களத்திலோடி, வேத மந்திர வேள்விகளின் விதிமுறை தவறாத தன் தந்தை யிறந்த களம் போய்ப்பார்த்து, கடாலென்று பூமியில் வீழ்ந்து, அவருடைய பாதத்தைத் தலைமேல் வைத்து, மறுபடியும் தரைமேல்வீழ்ந்து, பளபள வென்று முகத்தி லறைந்து கொண்டு, துடிதுடித்து, சண்ணீ ராறாகப் பெருக அழுது, வாய்சோர மாலைசோர உடல்சோர மண் மேற் புரண்டு, நெஞ்சமழன்று, நஞ்சை யுண்டவன்போல் மதிமயங்கி, எண்ணமழிந்து, கண்ணொளிகுறைந்து உள்ளநொந் துருகி, "என் ஐயா! ஐயா! என் அத்தா! அத்தா! என் அப்பா! அப்பா!" என்று தாயிழந்த தனிக் கன்றைப்போற் கதறிப் பதறி, "ஓ தெய்வமே! ஓ எந்தையே!

"வன்பின் மிக்க வீடுமனுன்னை மன்னுகென்
றன்பி னிப்பா ராளவு மன்றே யருள்செய்தான்
முன்பி னெண்ண வுவமையிலாதாய் முடிவாயோ
வுன்பின்வந் தேனுன்னை யொழிந்து முய்வேனே.
"வில்லாய் நீவெம் போர்முனை வெல்லும் விறலாய்நீ
சொல்லாய் நீதொல் வேதியருட்சூர் தொழிலாய் நீ
வல்லார் வல்ல கலைகளனைத்தும் வல்லானே
யெல்லா மின்றே பொன்றின வுன்னை டெந்தாயே"

ஓ எனதருமைத் தந்தையே! வல்லமை மிகுந்த பீஷ்மாச்சாரி யானவர் பேரன் புடனே தேவரீரையழைத்து, 'சிங்கம்போன்ற எங் களிப்போல் நீருமொரு நீதியையுடைய இராஜகை இரு' என்று கேயூரமணிமகுட குண்டல புஜகீர்த்தியோடு, வீரகண்டைசுவேத சூத்திர முதலாகிய எல்லாவரிசையுமீந்து காடாளும்படி கன்மையே செய்தார். அந்த கலத்தைப்பெற்று, அஸ்தினபுர மென்னுங் கலத்தி லுற்று, விற்குருவாகி மேன்மைகொண்டிருந்த வேதியர்க்கரசே! முன்பிறந்தோரிலும் பின் பிறப்போரிலும் ஒப்புச்சொல்லுவதற்கு உவமையில்லாத உத்தமனே! நீர் செத்ததெவ்விதமோ? தேவரீர் முடியும்படியான காலமும் நேரிட்டதோ? தந்தையே! உம்மைப் பிரிந்து ஞானிவ்விடத்திலிருந்து உய்வனோ? இதோ உம்முடன் வந்தேன், உம்மைப்பிரிந்துகொன்தேன், உரைமறந்தொழிந்தேன், உயிரிழந்தழிந்தேன்" என்று உலகாய் மெழுகைப்போலுருகி வீழ்ந்

தோய்ந்து, பின்னும் தேறியெழுந்து, " ஓ வில்வேத புருஷனே! வெம்போர்வெல்லும் வெற்றிதீரனே! சொல் நிலையாகிய சுத்தனே! துய்ய வேதியர்க்கெல்லாங் கர்த்தனே! வல்லவர்செய்த சாஸ்திரங் களுக்கெல்லாந் தலைவனே! எல்லாத் தலைமையும் நீரிருந்த வரை யிலுமிருந்து, நீரிறந்த இன்றைக்கே உம்முடனே கூட இறந்து மறைந்துபோய் விட்டனவே! ஓ என்தாதையே!" என்று சோகமூற் றுச் சோர்வடைந்து துக்கித்தான்.

அசுவத்தாமன் தன் தந்தை படச்
செய்தோரையெல்லாந் தறிபடச்செய்வே
னென்றெழுக் கண்ட தருமனுதியர்
தர்க்கத்தைக் கண்ணன் விலக்கிப்
போர்க் கெழுவித்தல்

அது காலைபிற் சத்துருஷின்மேற் பகைகொண்ட தாணீசனு கிய துரியோதனனேடிவந்து, அவ்வசுவத்தாமனுக்குச் சோப மாற்றிக் கண்ணீர் துடைத்து, மார்புடனணைத்து, பயப்படாதீரென்று தயவாகச் சொல்லினன். உடனே கிருபாசாரியுங்கிட்டிவந்து நஷ்ட மாகிய மைத்துனனுக்காகச் சற்றுநேரம் கைத்துருகினின்று, மறுபடி யுந் தாமே தேறினவராய் அம்மருமகனையும் தேற்றினர். அப்போது அசுவத்தாமன் "மகமேருபோன்ற என் தந்தையைக் கொன்றவனுர்?" என்று தன் மாமனைக்கேட்க, நடந்த காரியங்களே யெல்லாம் அம் மாதுகிய கிருபாசாரியார் சொல்லுகின்றார்.-"அப்பனே! கல்மலையைத் தூக்கி கல்வருஷங்காத்த கண்ணனுனவர் ரதசாரத்தியந்தவிர மற் றொன்றும் செய்வதில்லை என்றவிதத்தை மறந்து சொந்த அக்கரை யாய்க் கல்லெக்கடித்துப் பல்லை முறித்துக்கொள்வாரைப்போல் மெத்த வருத்த மெடுத்துக் கொண்டு, சத்தியவானுகிய தருமராஜன் புத்தியை மயக்கித் தன்வழியிற் கொண்டுவந்து விட்டார். அவர் தந்திரத்துக் குடன்பட்ட மூசுயர்த்தோனுவனர் சகலருங்கேட்க, அசுவத்தாமா ஹதாவென்று பொய்சொன்னர். அச்சொல்லைக்கேட்ட உன் தந்தை யானவர் வில்லும் பாணமும்விட்டு வெறுங்கையுடன் கிருபாதிக நிஷ்டையிலிருக்கும்போது, திஷ்டத்தூய்மனென்னுங் குருத்து ரோகி கொன்றான். மேன்மையாகிய என் மருமகனே! இப்படிக் கெல்லா மில்லாமல் விற்கொண்டு யுத்தம்பண்ணி வெல்லுவதற் குன்னுவராகில் பிரம்மா முதலிய தேவர்களாலும் உன் தந்தையை வெல்லக்கூடுமோ? எவ்வளவுங்கூடாது" என்று சொல்ல, நான்கு

வேதங்களுமுணர்ந்த சிலைக்குருவின் மைந்தனவன் மனமுருகிக் கேட்டு துன்பம்விட்டெழுந்து, கோபக்கொழுந் தெழுந்தோங்கக் கோபித்துக் துரியோதனமகாராஜனைப் பார்த்து "ஓ உரககேதனனே! இக்கொடுமையைக் கேட்டீரல்லவோ? ஆதலால் மேகம்போற் பொழியுங் கிருபைக் கண்களையுடைய என் தந்தையானவர் வில்லையெறிந்து வெறுங்கையாய் நின்ற சௌமிய காலமறிந்து சிரத்தைத்தறித்த திஷ்டத்துய்மனையும், அவனையொரு சேனாபதியாய் நியமித்தனுப்பிய பாண்டவரையும் சேர்த்து, ஒருகணையால் உயிரைமாய்க்கிறேன் பாரும்" என்று மீசார்முகமாகிய வனத்திலிறுமாந்து திரியும் சிங்கம் போற்சீறி, கஜாதகானை துரங்கமுதலிய படைமன்னர் யாவருங் கடல்போலிரைத்து விரைந்து துரியோதன மகாராஜனுடன் சூழ்ந்து வரவும், திண்டிண்டென்று பேரி முதலிய வாத்தியங்கள் எண்டிசை கலங்க முழங்கவும், வெற்றித்துவஜம், வீரக்குடை, வெண்சாமரை, முதலிய விருதுக ளோங்கவும், இந்திரதனுபோன்ற வின்னுமிழ்ணசையால் திசையானைகளெட்டுங் திடுக்கிட்டேங்கவும், திரிபுவனமும் நடுங்கிப் பின்வாங்கவும், சேமத்தேர் முதலிய உதவிகளெல்லாஞ் சேகரித்துக் கொண்டு திடுதிடெனப் புறப்பட்டு வருவதாஞன். இப்படி பொருந்திய உலகெல்லாம் பொன்றிப் போங்காலம் கேரிட்ட தென்று தேவர் முதலிய யாவருஞ் சிந்தைகைந்து நடுங்கி ஓடுங்கும் படிவந்த அசுவத்தாமனைத் தருமராஜன் நோக்கி, மனத்தளர்வுடனே பசுந்துளபத் தாமனுகிய பரந்தாமனுடைய பங்கஜமுகத்தைச் சங்கையாய்ப்பார்த்து, "ஓ எங்கள் சகாயனே! இவ்வளவு ஆரவாரத்துடன் இங்குவருகிற அசுவத்தாமனால் ஏதாகிலுந்துன்பம் விளையுமோ?" என்று கேட்க, சங்கு சக்கரந்தாங்கிய ஜயன் அவர் சங்கை தீரும்படி இதனைச் சொல்லுகின்றார்.—

ஓ தர்மசொரூபரே! கேளும்! இவ்வசுவத்தாமனைப்படிப் பட்டவனென்றால், கொன்றை, அறுகு, தும்பை, கூவிளம் இவை முதலியன முடித்த செஞ்சடை முதல்வன் திருவருளால், மிஞ்சிய வரமும் மேன்மையும் புகழும் பெற்றோன்; தேவாஸ்திரங்கள் யாவும் தெரிந்தோன்; உரித்தாகிய தகப்பனிறந்த பிரிவாற்றுமையால் யுத்தஞ்செய்ய வருகிறான். உள்ளபடி முடியும் தெய்வச்செயல் எப்படியோ? ஒப்பற்ற உத்தமனே! நீர் ஒன்றுக்கும் அஞ்சாதீர்!" என்று உறுதி சொல்லிக் கொண்டிருக்கும்போது அர்ச்சுனனவன் ஆயாசங் கொண்டு, "ஐயையே!" னேடவில்லும் மூண்ட அழற்கணை

யுங் கைவிட்டுப் பழையபடி தேவர்களுடன் மருவிப் பழகும்படிக்கு விரும்பி, பொறி புலனடக்கிப் பூரணத்திற் கலந்து ஆகாயத்திற் சோதிகாட்டி அமர்ந்தருளிய என்ஞண்டவனுகிய துரோணருடைய சபச்சடலத்தை, நான் தடுக்கத்தடுக்க இத்திஷ்டத்தூய்மன் என்னைத் தடுத்துத் தறித்து மாளாவலைசக்கு எங்களை ஆளாக்கிவைத் தான். இதனுலிந்தப்பாவியென்ன லாபம் பெற்றான்? அந்தோ! கொடிய வில்லாண்மை கொண்ட அசுவத்தாமன் ஆலகாலங்கொதித் தெழுந்து மேலுமேலும் வருவதைப்போல் வருகின்றானே! கொலைத் தொழிலுக்குரிய எமனும் மற்ற எவனு மிவனுக்கு எதிர்நிற்க மாட் டார்களே! யாவருடைய பிராணனையும் கைக்கொள்ளுவானே! இனி இதற்கு நாமென்ன செய்யலாம்?" என்று சொல்ல, சேனுதிபதி யாகிய திஷ்டத்தூய்மன் சென்தழலேபோற் சினந்து சொல்லுகின் றான்.—" ஓ மைத்துனனுகிய மெய்த்தவனே! இதழ்விரிந்தாமரை மலர்மாலையணிந்த துரோணுசாரியைக் கொல்லுவதற்கென்று என் தந்தை பாஞ்சாலராஜன் செய்த புத்திரகாமேஷ்டியாகத்தில் நான் பிறந்திருந்தபடியால் இவன் தலையை வாங்கினேன். அப்படியிருக்க உனக்குக் குருவென்று நீமெத்த உருகிப்போகிறாய். படுகளத்திலொப் பாரி வைப்பவர்களுண்டா? கல்லது! உன்னிஷ்டப்படியே ஆகட்டும். வேதியர் குலத்திற் பிறந்து வில்லாசிரியனு யிருக்கின்றவர் மூன் யேறிய கணையால் அளவிறந்தவர்களுடைய பிராணனைப் போக்கி யது தர்மமா? அநேகம்பேருடைய ஆவியைக் கொள்ளைகொண்ட அழிம்புக்கார வம்சோதய ஐயனை உயிரழிக்கப் போகாதா? அழித்தால் அதனுலேதாகிலும் வசையுண்டா! நீ இதைக்குறித்தேன் இவ்வளவு தூரம் பேசுகிறாய்? உன் யோக்கியமென்ன? ஒருவருக்குந் தெரி யாதா? வம்சநாயகராகிய பீஷ்மருயிரை நீவாங்கவில்லையா? அதுமாத் திரந் தருமமா? இப்போது நீ யெனனைக் கடினமாய்ப் பேசியது கண விரோத மல்லவா?" என்று கண்ணிரண்டுஞ் சிவந்து கொதிப்பேறும் படியாய் நின்று " ஓ அர்ச்சுனராஜனே! எங்களுடைய பாஞ்சாலகுல மனைத்தும் பற்றறக் களைந்து பாபமூட்டை கட்டிக்கொண்ட அத் துரோணரென்னும் பாவியைத் தலைவாங்கின தன்மையைக்கேட்டு, கரையேற மாட்டாத துயர்க்கடலி லாழ்ந்து கலங்கிப் போர்புரிய வராகின்ற அசுவத்தாமனின் யுத்தமுனையில் நான் புகுந்து போராடி அவனை வெல்லுகிறேன். அல்லவென்றால் அவனுடைய கையால் நான் சாகிறேன். நீங்கள் உங்கள் பிராணனைக் காத்துக்கொண்டிருங் கள்! இப்போது நான் கூறிய பேச்சுக்கு யாதொரு திருகுமில்லை.

இனி நடக்கப்போகிற யுத்தங்களை மாம்பழச்சாற்றால் செஞ்சாலிவள ரும் வயல் சூழ்ந்த வளநாட்ட ரெல்லோருங் காண்பார்கள்'' என்று சொல்லி யடங்கினான்.

இப்படி சொல்லவே வனசரபாபன் தம்பியாகிய சாத்தகி முனிந்து, தழலெனக்கனிந்து, ''ஓ திஷ்டத்தூய்மா! என்ன சொன் னாய்? இன்னமொருகாற் சொல்லு ஐயோ! தன்னை மறந்து பேசுஞ் சர்வமூடரைப்போல் நீ உன்னை மறந்து பேசுகிறாய் அஃதென்ன வெனில், கங்காபுத்திரனாகிய பீஷ்மாச்சாரியரை உன்தமையனாகிய சிகண்டி வென்றான். வில்லாசிரியனான துரோணாசாரியரை நீ கொன் றாய்! நீங்களிருவரும் குருவைச்சுட்டுத் தின்னவந்த பெரும்பாவிக ளாய்ப் பழிக்குடன்பட்டிருக்க, இந்திரகுமாரனாகிய அர்ச்சுனராஜன் கொன்றானென்பது நீதியோ? பராகப்பொடிதினிந்த பசுங்கேனிறைந்த பூமாலை யணிந்த அரசர்களுக்கெதிரில் நீ சொன்னபடியால், உன் னைப் பொறுமையுடன் மன்னித்தேன். இன்னொருவன் பேசியிருப்பா னாகில், அவனுடையநாக்கு இதுவரையிலு மிருக்குமா? ஆ! ஆ! இக் கோரம் என்னபாடு பட்டுப்போமா?'' என்று உருத்துப் பெருமூச்சு விட்டிளைத்து சொன்னான். அச் சாத்தகி வார்த்தையைப் பீமன் கேட்டு மனஸ்தாபமடைந்து, ஒருபக்கத்திலிருந்த அர்ச்சுனன் முகத்தைப்பார்த்து '' அடாதம்பி பற்குனா! நீ இச் சாத்தகியும் பூரி சிரவனும் போராடியபோது சாத்தகிக்காகப் பரிந்து பூரிசிரவனுடைய வலக்காத்தை வாங்கிய வல்லபமும், உன் தந்தையாகிய இந்திர னுக்கு இனிய நண்பனான விலாண்மை பெற்ற பகதத்தனைக் கொன்றதும், மேலும் அதிகமான தருமமல்லவோ? நீர் செய்த காரிய மிப்படியிருக்க, கமல மாலையணிந்த துரோணாசாரியரைத் திஷ்டத் தூய்மன் வதைத்ததுவோ கொடும் பாவமாச்சுதா?'' என்று குவடு கள் பொடிபடச் செய்யுங் குவவுத் தோளினையுடைய வாயு குமா ரன் செல்லவும், புராதனப் பொருளாகிய தருமராஜன் மிகுந்த பொறுமையுடையவராய், ''அப்பா! ஒருவரையும் நொந்துகொள்ளா தீர்கள்? இந்த மண்ணுலகத்தில் நல்வினையைச் செய்தபேர்கள் நன்மையை யநுபவிப்பார்கள். தீவினையைச் செய்தபோர்கள் தீமையை யநுபவிப்பார்கள். ஜகதீசனாகிய கடவுளை நினைத்து எல் லாம் உனது செயலென்று பற்றற விடுத்த பாக்கியவான்கள், வேத விதிப் பிரகாரம் வினை யிரண்டையும் வென்று மேலாகிய மேன்மை யடைவார்கள். ஓதம்பிமார்களே! சொல்லப்படுவதெல்லாம் தீவினையா

யிருந்த போதிலும், ஸ்ரீகிருஷ்ணனுடைய திருமொழி கொண்டு செய் வோமாகில் ஒரு தீங்குமில்லே. நாம் செய்வதெல்லாம் பரிசுத்தம் அது முடிவில் வேதமந்திரத்தை நம்பி வேள்வியில் உயிரைப் போக் குந் தன்மைபோலாகும்" என்று சொல்ல, அவ்வாய்மையை முத்தி வித்தாகிய முகுந்தன்கேட்டுப் பருந்துங் கழுகும் பந்தலிடாநின்ற படு களத்தில் முன் பின் பாராமல் பலபேரைக் கொன்ற பலவானுக் கல்ல வோ வீரசொர்க்கம் விதித்திருப்பது? இவைகள் அர்ச்சுனனுக்குத் தெரிந்திருந்தும், தெரியாதவரைப்போல் சொன்ன தெல்லாம் ஆசாரி யர் இறந்தாரென்னுமாறுமையால் அவசரப்பட்டுச் சொன்ன சொல் லேயொழிய, வேறன்று. அதுபோகட்டும்! உலகத்தார் தூறி நிந்தித்து ஏசும்படியாகவோ அல்லது மேதினிச் சிரிக்கும்படியாகவோ எவ் விதத்திலேயோ ஒருவிதந்தீர்த்து முடிந்துபோன செய்கைக்கு இனி யோசிக்கவேண்டிய தென்ன விருக்கின்றது? தன் தகப்பனிறந்த துக் கஞ் சகியாமற் சர்வசம்ஹாரகால சதாசிவனுடைய மகன்போல் வருகின்றான் அசுவத்தாமனவன். அவனே வெல்லும் வல்லமை யைக் குறித்து யோசிக்காமல் தலைக்குமேல் வந்திருக்குஞ் சங்கடத் தைவிட்டு, விஞ்ஞை காரியத்தை யேன் யோசிக்கிறீர்கள்?" என்று மேகவண்ணனுரைக்கக்கேட்ட, சுகபோக அண்ணலாகிய தருமராஜன் சொல்லுகிறார்—"ஓ கவலைக அவதார நாராயணனே! கேளும். அவ யவங்களுடன் அழகாகிய உடலே யெய்யென் றெடுத்தோம்! இது வெறும் பொய்யே! இவ்வுடலால் நாம் ஒன்றும் உணர்ந்திலோம். இனிமேலுங் தேறத்தக்கதொன்றில்லே! இஞ்ஞைசொல்லுவதற் கிடமில் லாமல் எல்லாந் தெரிந்த தேவரீருடைய திவ்யகடாக்ஷமே எங்களுக் குத் தீரத்துவ மாகிய திறமென்று ஸ்திரமாக நம்பி யிருக்கின்றோம்! இஃது உண்மை யாகிய சத்தியமொழி" என்று அகமும் முகமும் அலர்ந்து ஆனந்த மயமாய்ச் சொல்லிய தருமபுத்திரனுடைய முகத்தை ஜனார்த்தனன் பார்த்துச் சிறுகைகை விளைத்து, "நல்லது யாவரும் படையெடுத்து வாருங்கள்" என்று சொல்லி, நால்வகைப் படையுங் கடலெனச்சூழ, விண்டல மெழுந்த கொடிகுடை முதலி யனவுங் கொண்டலேமறைக்க, முன்னும் பின்னுமாய் முடிமன்னர் நெருங்க அவ்வண்ணக் காசா மலர்மேனிமாலும் மன்னும் வில்லாளி யாம் வாசவ மைந்தனும் போர்புரியப் போனார்கள்.

அசுவத்தாமன் உக்ர நாராயணாஸ்திரம் விடுக்கக் கண்ணன் யாவரையுந்தேர் விட்டிறக்கி நிராயுதராய்ப் பணிவித்தல்

அப்போது சரற்காலத்துமேகம் பொன்னிறம்போல் மின்னி யிடித்து மழைபொழியுங் தன்மைபோற் புங்கவங்களேற்றி, கண்கள் சிவந்து காந்தி மலிந்து, கனற்பொறி பறந்து, கடுங்கோபங்கொண்டு, நுதற்கண் ணுருத்திரன்போல் விண்ணதிரச் செய்து மண்ணதிரவந்த வேதபரித்தாமன் வணங்காமுடி மன்னனைக் கூடி, அவன்பேரில் மிகுந்த பக்ஷபாடி, "ஓ அரசனே.! அரிய தவஞ்செய்து என் தந்தை பெற்ற ஆலகால விஷத்துக் கொப்பாகிய உலகழிக்கும் உக்ர நாராய ணாஸ்திரத்தை எனக்குக் கொடுத்தார். மகத்தாகிய பரிசுத்தமுள்ள அந்த அஸ்திரத்தைத் தொடுத்து, சத்ருக்களைக்கெடுத்து, என் தந்தை மடிந்த விசனத்தை விடுப்பேன்." என்று பற்பல சபத வாக்கியங்களைச் சொல்ல, இராஜாதிராஜன் கேட்டு, "உன் தகப் பனைக் கொன்றவர்களைக் கொல்ல உனக்குக் கோப மிருக்குமாகில், அவர்கள் முடியும் வகையைத் தேடக்வேண்டியதே கல்லது. இவ்வஸ்திரத்தை விடுப்பாயாகில் திரிபுவனமும் கிலிபெற்று நிற்பது அரிதரிது!" என்று அரவக்கொடியோனெடுத்துத் தடுத்துச்சொல்ல, "ஓ அரசனே! யான் கொண்டசபதத்தைத் திரிமூர்த்திகள் வந்து தடுக்கினுங் கேளேன். இக் கிமிடத்தில் எனதிரண்டு புஜமும் திரண் டோங்கப் பாண்டவர்களுக்கெதிர்சென்று, பலம் பொருந்திய அக்குந் திமைந்தர் ஐந்துபேரையும்,அவர்புத்ரமித்ர வருக்கத்தையும்,பாழாக் கித் தலைதுணித்து, என் தகப்பன் தலையை வாங்கின யாகசேனன் மைந்தன் திஷ்டத்துய்ம னுடைய சிரத்தையும் துண்டித்து காசப் படுத்துகிறேன்" என்று சொல்லித் தன்தேரைத் திசாதிசைகளும் திடுதிடு கடகட படபடவென் றதிரச்செலுத்திக்கொண்டு சென்று, வரிகள் பொருந்தி மணிகள் கட்டி மாலைபூண்ட வீரியபயங்கர வில்லை வளைத்து காணிதொடுத்துச் சொல்லுதற் கரிதாகிய வேதமந்திரங்க ளை விளம்பி, பூசை முதலிய நைமித்தியங்க ளெல்லாம் புரிந்து, உலக ழிக்கும் உக்ர நாராயணாஸ்திரத்தைக் கர்ணபரியந்தம் இழுத்துத் தொடுத்து விட்டான்! அவனது கரத்தை விட்டுப் புறப்பட்ட அக் கணையானது சந்திரமண்டலம் வரைக்கும் உந்திப் பந்துபோ லெழுந்து, ஊழிக்காற்றும்,உகாந்த காலாக்கினியும், ஒன்றுபட்டெழுந்

தைப்போல் இரைந்து,கனன்று பொங்கி, காருஞ்சூழல, பாருஞ்சூழல, மகமேருவின்வேருங்கழல, மன்னவர்களுடைய போருமுழலப் போர்க்களம்புகுந்து, தீர்க்கமாகிய ஐவரையும் வாயிற் போட்டுக்கொள்ளும்படி வந்து திமிர்தண்டங் கொண்டு அண்டரண்ட முதலிய பிர்ம்மாண்டமும், அகிலபுவன கர்ப்பாண்டமும், எண்டிசாதி சயிலங் கொள்ளும் எண்ணில் சாசரங்களும் மண்டலாதி திகழண்டமும், கொண்டலாதி யுறுபிண்டமும், பிண்டு பிளந்து திரிந்து போகும்படியாய்ப் புதுமைகாட்டிவந்தது. அப்படிவந்த புருஷோத்தமன் கணையைப் புண்டரீகாக்ஷன் கண்டு, அண்டையில் நிற்கின்ற யாவரையும் அழைத்து, அவரவர்கள் ஆயுதங்களுடன் வாகனம் விட்டிறங்கி அடக்கவணக்கமாய்க் கைகுவித்து நில்லுங்கள்" என்று கூறினர். அவ்வார்த்தையைக் கேட்ட அர்ச்சுனன் மறுபொழி யொன்று மாடாமல் தேர் விட்டிழிந்து,செங்கரத்தைச் சிரத்தின்மேற்கூப்பி ஸ்ரீகாதனைச் சிந்தை செய் திருந்தான். இவ்வாறு பாகசாதனன் பிள்ளையாகிய பார்த்தன் பாகன் சொல்லிய பாகப்படி ஆயுதப்படைகளை நீக்கி, தங்கள் சேனைகளிறைத்த திசையெல்லாமுஞ் சென்று, தீரவீர வேந்தரைக்கண்டு, வாகனங்களும், ஆயுதங்களும் விட்டிழிந்து விரைந்து வணங்குங்களென்று மேகம்போ விரைந்து விளம்பினன். அந்தவார்த்தைக்குடன்படாத பீமசேன னொருவன் தவிர மற்றப்போர்களெல்லோரும், வில் வாள், வேல் முதலாகிய ஆயுதங்களை யெல்லாம் விட்டு மண்மீதிறங்கி, தலைமேற் கையெடுத்துத் தத்வக்ஞான யோகிகளைப்போல் நின்று, இரசம், இரத்தம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்னும் தாதுக்களைழுந்தன் மயமற்று ஒடுங்கியிருந்தார்கள்.

உக்ர நாராயணாஸ்திரத்தோ டெதிர்த்து நின்ற பீமனைக் கிருஷ்ணர்ச் சுனர் விலக்கித் தாழ்மைகூற அதுகண் டதுவிலகுதல்

அப்போது அசுவத்தாம னெடுத்துத் தொடுத்த பெரும்வாளியானது சுடரொளிபோலெங்கிப் புறப்பட்டு, சக்ரவாளச் சலநிதி நேமியைக் கிழித்து, சமுத்திராஞ்சூழ்ந்த பூமியைத்துளைத்துத் தங்கிளமைந்த திசைகளைப்பீறி, சகலமுமடங்கிய அண்டகூடத்தைப் பிளந்து, சர்ப்பங்கள் பொருந்திய பாதாளத்தைப் பெயர்த்து,சத்திய லோகத்தைத் தாங்கித் தணலாகிய வடவாமுகாக்கினியைத் தூக்கிச்

சகல மலைகளையுந் தவிடுபொடியாக்கி, ஜகமெல்லாம் பிறைந்து ப்ரந்து சீறிவீறி ஒவ்வொருவருடைய மயிர்க்காலுக்கு ஒவ்வொரு கணையாகவந்து யுத்தகளம் புகுந்து போக்கியகாலையில், ஒருவருக் கனக்கு சேர்வந்தெதிர்த்து யுத்தஞ்செய்யாமல் நிராயுத பாணிக ளாய்நிற்கா கின்ற தருமராஜனுடைய சேனைகளைக்கண்டு, வெறுங்கை வீணாபேரில் தம்மை விதித்தானென்று கடுகடுத்துத் துடிதுடித்துக் கவலைபுற்றுப் படபடத்து அசுவத்தாமனிருக்குந் திசையையேநோக்கி ஆலகாலவிஷம்போற் பிரும்பி, வழியில் வாகனமடித்து ஆயுதமெடுத்து அஞ்சாமல் நிற்கின்ற பீமசேனனைக்கண்டு அவன்மேற் பாய்வதாயது. அவ்வாளியைக் கண்ட வாயுகுமாரன் மனத்தளர்வில்லாமல் கோரகத் தேர்செலுத்தி, கண்கள் சிவந்து, மனங்கருகி, முகஞ்சுளித்து, புருவநெரித்து, உருவமானவில்லை வளைத்து உலைவிலா வீரச் சொல் விளைத்து, எமதர்ம ராஜனைப்போ லெதிர் சென்று நின்று, கொடுங்கோபக் கண்ணுளருகிய அசுவத்தாமனுடைய நெடுங்கணை பைபதிக்காது மற்றவர்களைப்போல் துதிக்காது, எந்தெந்தக் காலத்தில் எந்தெந்த ரூபமாய் வருகின்றனவோ அந்தந்தக்காலத்தில் அந்தந்த ரூபமாகிய மேற்றுரு அமைத்த அக்னியாஸ்திரம், வாயுவாஸ்திரம், இந்திராஸ்திர முதலாகிய திவ்விய தேவதாஸ்திரங்களால் மாற்றி ஒன்றுக்கொன்று பின்வாங்காதபடி மண்டியிட்டடித்தான். இதுவு மல்லாமல் பீமசேனன் விடுகின்ற பெருஞ்சிலைகள் அடியுண்டும் கடுங் கோபாக்னியிலை எரியுண்டும், கடுமையாகிய பாணங்களிலை ஒடி யுண்டும், விற்றுதையால் உதையுண்டும் போனதல்லாமல், காண் ஓசையால் அறையுண்டலைந்து, கடக கங்கணமணிந்த திணிந்தபுய தினு விடியுண்டலைந்தும், தூறிக் கூறிய வீரமாகியபேச்சினுல் வெருண்டு குலைந்தும், மாறிமாறித் தேரைமுடுக்கி விடுக்கும் விசையினுற் பொடியுண்டிரிந்தும், மிகுந்த வருத்தத்துடன் படாதபாடும் பட்டது அசுவத்தாமனுல் விடப்பட்ட உலகழிக்கும் உக்கிர நாராயணாஸ்திரம். ஐயா ஜனமேஜய மகாராஜனே! பீமசேனனுடைய திடதைரிய வீரபராக்கிரமச் செயலை யென் னென்று சொல்லுவேன்? அப்பால் ஒருவன் எவ்வளவு பலசாலியா யிருந்து தன் வல்லமையால் இதம்பெறவடுத்தாலுந் தப்பாமற்றாக்கும் ஊழ்வினையைப்போல் பீமசேனனவன் தன்னுடைய புஜபலத்தி னுல் அசுவத்தாமன் தொடுத்த அஸ்திரத்தை விலக்கியும் அது விலங்காமல் கலங்காமல் வந்து, அவ்வூழ்வினையைப் போல் வீரசமாலையணிந்த பீமசேனனுடைய மார்பைத் தாக்கும்படியாய்

மேற்கொண்டு நோக்கி வருவாதாயது. அப்படிவருகின்ற அஸ்திர தீக்ஷண்யத்தை எமது கர்த்தனுகிய அறிதுயிலமர்ந்தோ னறிந்து, ஆ! ஆ! மோசம் வந்ததென்று அர்ச்சுனனுடன் பீமசேனன்முன் ஓடிவந்து தோவிட் டிழியும்படிக்குப் பலதரஞ் சொல்லியும், அதைக் கேளாமல் அழியாத் திடங்கொண்டு போர்புரிந்திருந்த பீமனுக் கருகிலே சென்று, அவன் கைபிடித்த வில்லையும் வாளியையும் பிடுங்கியெறிந்து, தேரைவிட்டிழித்து பூமியிற்கவிழ்த்து விடும்படியா யிழுத்துத் தள்ளி, "ஓம் அரிநாராயணஸ்திரமே! இதோ உம்மைப் பணிந்தான் பீமசேனன்" என்று சொல்லினர்.

உடனே அதிக வெட்கத்துடன் நாணமுற்று நாராயணஸ்திரந் திரும்பிப்போய்விட்டது. ஓ மகாராஜனே! தீர்க் காயுசுட னிருக்கத் திறம்பெற்றவர்களை இடையிலழிக்க எவர்களாற் கூடும்? ஒருவராலுங் கூடாது. மேலும் கால்வகைத்தோற்றம் எழுவகைப்பிறப்பு எண் பத்துகான்கு நூறுயிரம்யோனி பேதங்களாயுள்ள சகலவுயிர்களையுஞ் சம்ரக்ஷணை செய்யும் பகவானை முன்னின்றுல், அவர்பெயர் கொண்ட அஸ்திர மென்செய்ய வல்லது?

அசுவத்தாமன் அக்னியாஸ்திரம் விடுக்க,
அதுவும் பயன்படாது போகவே சமர்க்
களம்விட்டுத் தவக்களமேக நின்ற
வனை வியாஸர்தேற்றிப் பாண்டவ
ரையும் வாழ்த்திப் போதல்

அப்பால் லட்சுமி நாராயணனுடைய அஸ்திரமானது முகமாறி வாக்கண்ட அசுவத்தாமன் மிகுந்த கோபங்கொண்டு, இதழ்துடித்து முகம்வியர்த்து, அனலெனச்சீறி ஆக்ரம பராக்கிரமத்துடன் அக்னி யாஸ்திரத்தையெடுத்து ஆரோகணஞ்செய்து விட்டான். ஒப்பில் லாத அசுவத்தாமன் விட்ட அவ்வக்கினிக் கணையானது ஆகாயத்திலு யர்ந்துபொங்கி,வடவா முகாக்கினிபோலெழுந்துவந்து,சந்திரமண்டல மும், சூரியமண்டலமும், அந்தரபதியும், மந்திரபதியும், தொந்தமாம் புவியும், விந்தமார்கவியும் எட்டுத்திசையும், எட்டுப்பாலரும், எட்டு வசுக்களும் எட்டுக்கரியும், எட்டுக்கிரியும், எட்டுநாதமும், ஏழுமேக மும், ஏழுமண்டலங்களும் வெதும்பித் ததும்பி வெந்தருகும்படி யாய் புஷ்கராவர்த்தகாலப்பொழிந்து, செழுஞ்சோதிகொண்டு வரா கின்றது. அப்படி வருகின்றதைச் சிவபெருமானுக்குத் தொண்ட ஞப்ப பாசுபதாஸ்திரங் கொண்டசெஞ்சிலை விஜயன்கண்டு, ஜெபதப

முதலிய உபசாரங்களுடன் சிருஷ்டி கர்த்தாவின் பேர்கொண்ட பிரம்மாஸ்திரத்தைச் சிந்தித்து விடுத்து, தன்னை யடுத்துவந்த தீக் கணையைக்கெடித்தான். இப்படி வில்வேதமுணர்ந்த குருபுத்திரன் விடுத்த வெம்பகழிக் கும்புகளெல்லாவற்றையும் வம்புப்படுத்தி முனை சாய்ந்து போகும்படியாய்ச் செய்த நரனுடைய திறத்தை அசுவத்தாமனுணர்ந்து மகாவாட்டமாய் மனமெலிந்து, தன் கையிலிருந்த வில் அம்பறுத்தூணி முதலானவைகளைப் போட்டுவிட்டு, தேர்விட்டிழிந்து, "பற்றில்லாத வேதங்களையும் தனுர்வேத முதலிய மந்திரதெறிகளையும் உண்மையென்று நம்பப்படாது. இவைகள் பொய்யான மந்திரமேயல்லது மெய்யான மந்திரங்கள் அல்ல. இம்மந்திரங்களுக்குரிய மூவர்களும், தேவர்களும் ஆளைப்பார் முகத்தைப்பார் என்று பட்சபாதமா யிருக்கின்றார்கள். அதுகெட்டது" என்று மனதொந்து மூனிந்து, பட்டத்துயானை மதமேறித் துட்டத்தனமாய்த் தூறிச் செல்லும் தன்மையைப்போல் போர்கொடுத்த யுத்தபூமியை வெறுத்து, முத்திக்குரிய தவத்தைக்குறித்து, காடேகுதியாய்ச் செல்லுவதாயினன். அக்காரணத்தைக் கண்டு தடுப்பவரில்லாத காலத்தில், தண்டு கமண்டலம், முப்புரிநூல், மிதியடி, விபூதி ருத்ராக்ஷமாலிகா பரணம், காவியுடை, கனத்த சடை மின்னற்ப் பிரகாசம், வேதமந்திரம் விளம்பிய நாவு-இவைகளையுடைய வேதவியாசர் சுப்ரமண்யக் கடவுளைப்போன்ற அசுவத்தாமனுக் கெதிர்வந்து நின்றார். பரமசிவனுக்கொப்பாகிய வேதவியாசரைக் கண்டவுடனே அசுவத்தாமனின்று, சிந்தைமெலிவோடு தீர்க்கதண்டமாக விழுந்து நமஸ்கரித்தெழுந்தான். இப்படி சிந்தைமெலிந்து வருந்தியெழுந்த மைந்தனுக்கு ஆசீர்வதித்து "இக்கோலத்துடன் எவ்விடம் போகிறாய்?" என்று வேதவியாசர் கேட்டார். அதற்கவன் "என் தந்தையிறந்த விசனத்தால் தவஞ்செய்யப் போகிறேன்" என்று சொல்லினன். அதை வேதவியாசர் கேட்டு, "அப்பனே! யாகசேனன் செய்த யாகத்தில் வரப்ரசாதமாகப் பிறந்த திஷ்டத்தூய்மனுல் உன்தகப்பனிறக்கும் படிக்கு அந்திவண்ணத்திறைவன் அநுக்கிரகஞ் செய்திருக்க, அவ்வழலேந்தியினுடைய ஆக்ஞையின்படி வெற்றியடைந்ததல்லாமல், மற்றொரு விதத்தினுல் விற்பாண முதலிய ஆயுதங்களைக் கொண்டு உன் தந்தையைவெல்ல வல்லவர்கள் தொல்லுலகில் இல்லையென்று சொல்லவல்ல கல்லவர்கள் பலருண்டு. ஆகையால் இதைக்குறித்து நீ விசனப்படலாகாது! ஓ மயில்வாகனனை யொத்தவல்லமை பெற்ற மாசிலாமணியே! உன்னுடைய உள்ளங்கொள்ளாக் கோபத்துடன்

யுத்தத்தை விடுத்து, மெத்தப் படபடத்து, சித்தப் பிரமை கொண்டு வந்த சேதியைச்சொல்!" என்று காளிங்கன்மீது நடித்த கருணைக் கடலே நிகர்த்த கண்ணனைப்போற் சாந்த மொழியாற் கேட்ட சடை முடி தரித்த வியாசரை, மங்கைபாக னெண்ணுஞ் சங்கர புத்திரனே நிகர்த்த அசுவத்தாமன் பார்த்து "ஓ! எமது கர்த்தாவாகிய ஈசனே! கேளும். என்போன்ற பிள்ளையிருக்க, எனக் கெதிரில் இறக்கப் போகாத என்னையன் இறந்ததைக் குறித்து மறந்து போகா விசனத்தில் மாழ்கி யிருக்கின்றேன். அது ஒருபுறத்தி லிருக்க, மேலுமேலும் வேடிக்கையாக நேரிட்ட குறை என் சிந்தை நிறைந் திருக்கின்றது. அது செப்பத் தரமல்ல. ஓ எங்கள் தேவனே! அஃதாவது யாவருக்கும் பொதுவாகியது வேதம். அதனுளாகியது மந்திரம். அம்மந்திரத்திற் குரியவர்கள் தேவர்கள் முதலிய மூவர்கள். அவர்கள் கொடுக்கும் திவ்வியாஸ்திர முதலியவைகளை யெடுத்துத் தொடுக்குங் கைத்தந்திரமாகிய சகாயம், குறிப்பு, தியானம் இவைகளெல்லாம் எல்லாருக்கும் ஒன்றேயொழிய, இரண்டில்லை. எங்களையாவாகிய துரோணர் தனுவாசாரியரா யிருந்து, எங்களிருவருக்கும் ஒரேவிதமாய் அவைகளை யெல்லாம் அநுக்கிரகஞ் செய்திருக்க, அம்மந்திரமுதலிய வல்லமைகள் அர்ச்சுனனுக்குத் துணைப்பட்டு உரிமை செய்வதுபோல எனக்குச் செய்யாமற் பாழாய்ப்போய், நல்ல போர்முகத்தில் மூன்று மடங்கி என்னை மோசஞ் செய்தபடியால், வில் முதலாகிய யாவையும் எறிந்து விட்டு, வேதமுதலிய மந்திரங்களும் தேவர்களும் பொய்யாய்ப் போனார்க ளென்று வெறுத்து, இனிமேற் சொப்பனத்திலும் நினைப்பதில்லை யென்கிற மன்ச் சலிப்போடுஞ் சமர்விடுத்துத் தவமடுத்து வந்தேன்!" என்று மெத்த வருத்தத்துடன் சொல்லவே அம்மொழியைக் கேட்ட வேதவியாசர் சொல்லுகின்றார்—

"அசுவத்தாமனே! திரிநேத்திரமும் மகமேருவில்லையுங் கொண்ட சிவபெருமான் இவ்வுலகமுதலிய சராசரங்களைப் படைத்தருளிய காலத்தில், மாதவனுகிய மாயன் மகாதேவனைக் குறித்து, அவர் சந்தாமரைப் பதத்தை நினைந்து சிந்தைசெய்யும் தன்மையனுய் வந்தித்து, வாட்டமில்லாத தவமுற்றிருந்தார். அம்மாதவனுக் கெதிரிற் கங்காதரன் பிரசன்னமாய்வந்து, 'நீர் என்ன வரந்தியாது விரும்பித் தவஞ்செய்கிறீர்?' சொல்லுமென்று கேட்க, அப்படி கேட்ட ஈசனைக் கேசவன் வணங்கி, "ஓ மகாதேவ! பிரம சிருஷ்டியினு லேற்பட்ட ஆத்மகோடிகளுக்கெல்லாங் குறைவில்லாமல்

நிறைவாகிய திதியைச் செய்யுமென்று எனக்கு ராட்சகத் தொழி லைக் கட்டளையிட்டிருக்கின்றீர். காணப்படி நடத்திவரும்போது, பூலோகத்திற் பலம்பெருந்திய துன்மார்க்கர் சிலரிருந்து, சாபாநுக் கிரக சாமர்த்தியமும், ராட்சகத்தொழிலும், தங்களால் நடத்தப்படு மெனத் தர்மவிரோதமாய்த் தாறுமாறு செய்கின்றார்கள். அப் பேர்ப்பட்ட தீயருடைய தலையைத்தறித்து, உடலைமுறித்து, தர் மத்தை நிலைநிறுத்தும்படி கருணைசெய்ய வேண்டும்" எனக் கண்ணன்கேட்க, கபிலரதர் "நாராயணனே! உமதிஷ்டப்படி நீர் ஜெயங்கொள்ளும்படியாய் வரங் கொடுத்தோம். இதுவுமல்லாமல், யாவரிடத்தில் அநியாயமும், கொடுமையும், அகங்காரமும் அமைந் திருக்கின்றனவோ அவர்களுக்கு வில்லின் வல்லபமும் மேலாகிய ஆயுதமும், மந்திர பலம் பெற்ற வாளிகளும், பிரயோசனப் படமாட்டா. உம்மைப் பகைத்து எதிர்ப்பவர்களின் வரங்களும், உரங்களும், மற்ற வல்லபம் யாவும் உம்மை யடையக்கடவன. நீர் முறைமையாக வுறைந்து தரும பரிபாலனம் புரிந்து, திதித் தொழிலைச் செய்யக்கடவீர்' என்று சொல்லித் திருக்கயிலைக் கெழுந்தருளினர். இப்பாற் பச்சைவண்ணப் பரந்தாமனுகிய அச்சுதன் தம திச்சையின்படி நரநாரண ரூபமெடுத்து, இவ்வுலகம் துதிக்கவந்து பாவத்தொழிலையுடைய அரக்கரையோட்டி, தேவர் களைத் தர்மத்துடன் நிலைக்க நாட்டி, சத்திய கருமங்களை நித்தியமா யோங்கும்படி ரக்ஷிக்க வெழுந்தருளினர். இப்படி யெழுந்தருளிய இந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும், இந்திரகுமாரனுகிய நரனும், நர நாரா யண சொரூபமாக்கும். ஓ நான்குவேதமும் முணர்ந்த நாவலனே! ஒளியுமொலியு மணமுங் கலந்த கங்கையும், திங்களும் பொங்கரவு முடித்தருளிய செஞ்சடை விகோத னென்னுஞ் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளிய வரத்தின்படி வஞ்சகமாகக் குரு குலத்தில் விளைந்த வெஞ்சமரை முடிப்பதற்கு இப்போதும் வந்து அவர்கள் உதயமானர்கள். அவர்கள் எந்தப் பிறப்பிலுஞ் சந்திர சேகரசடாதாரி யாகிய ஒப்பில்லாத உமாபதியை வணங்கி ஆராதனை செய்து வரு கின்ற அன்பினை யுடையவர்களாதலால், மதங்கொண்ட சத்துருக் களைச் சிங்கம்போலெதிர்த்துப் பங்கப்படுத்தி, மெத்தவேசில யுத்தமுனை வென்று மேன்மை பெறுகின்றார்கள். ஆகையால் எதிரி கள் பிரயோகஞ் செய்யாநின்ற அஸ்திரசஸ்திரங்கள் யாவுமடங்கி, இந்த நாராயணர்களுடைய எண்ணப்படி மேம்பாடாகவே நிறை வேறும்" என்று உலகிலுள்ளோர் பலருந் தம்பேரிலும் ஆசை

லையாமல் நிராசைகொண்டிருப்பவராகிய வேதவியாசர் சொல்ல, அவ்வார்த்தையை அசுவத்தாமன் கேட்டுக் கும்பிட்டு வணங்கி, "ஓ வேதமுனிவனுகிய நாதனே! துஷ்டராகிய பேர்களை நஷ்டப்படுத்தி இஷ்டமாகிய பலத்தை நாராயணர் பெறுவார்களென்று தேவரீர் சொன்ன வாக்கியம் போக்கியமே! சிவபூஜாவிசேஷமாகிய சிஷ்டர் களைக் கஷ்டப்படுத்தி ஜெயம் பெறுவார்களென்பது எப்படி! பிரம்ம குலத்திற்பிறந்த அடியேன் மைப்படியுங் கண்ணிமையுளனுகிய வேத வேதாந்தநாதமூர்த்தியைப் போற்றி, அவருடைய கிருபையினுலே நலம்பெறப் பெற்ற நல்லபடைகளெல்லாம் இந்த நாராயணருடைய வில்லின் வல்லபத் திறங்களினுல் வீரமழிந்து போகவேண்டிய தென்ன?" என்று கேட்க வேதவியாஸர் சொல்லுகின்றார்—

"அசுவத்தாமனே கேள்! மேற்சொல்லிய நாராயணரிருவருந் தோகை பாகனுகிய சுந்தரேசனைப் பாணலிங்கமாகிய பேருருமய மாயேற்றிப் போற்றி இறைஞ்சிப் பணிந்து சிந்தித்து வருகிறார்கள். நீயோவென்றால் உன்னுடைய நாத்தால் கல்லுருவொன்றுண்டாக்கி ஆகமமுறைப்படி பூசிப்பாய். இவ்விரண்டு திறங்களில் உத்தம மெது வென்று உன்சித்தத்திலே யோசித்து உணரவில்லையோ? சிவபெருமானே உருவாகச்செய்துபூசிப்பதிலும் பாணலிங்க வடிவாகச் செய்து பூசிப்பது ஆயிரம்பங் நதிகமாதலால், அவர்கள் நினைத்த படியே முடியும்" என்று விளங்க உரைத்தனர். இப்படி தன் மேனு பாவங்களை அறிந்து சொல்லிய வேத வியாசருடைய பாதத்தில் அசுவத்தாமன் வீழ்ந்து, "சுவாமி! தேவரீர் சொல்லிய லிங்க பூஜா விதியை அடியேற்கு உபதேசித் தருளினுல் அவ்விதியின் படி இன்று முதல் அநுஷ்டிக்கிறேன்" என்று அன்புடன் சொன்னன். அம்மொழியைக் கேட்டு வேதவியாஸர் அநுக்கிரகஞ் செய்கின்றார்— "ஓ செந்தழல் வாணனே! நீ திரும்பி யுத்த பூமிக்குப்போய் வெற்றி பெறும்படியாய்ப் பாடுபட்டு அரவக்கொடியோன் அழிந்த பிற்பாடு என்னுடைய தபோவனத்திற்கு வருவாயாகில் அப்போது உனக்குத் தெரிவிக்கின்றேன்" என்று சொல்லவும் அப்படியே வருகிறேனென உறுதியாகச் சொன்ன அசுவத்தாமனே வியாஸர் ராஜாதி ராஜனுகிய துரியோதனனுடைய பலம்பொருந்திய சேனையினிடத்திற் போய்க் கலக்கும் படியாய் அனுப்பிவிட்டு, பாண்டுபுத்திர ரிடத்திற்குச் சென்றார். இவரைக்கண்ட பாண்டவர்கள் தாழ்ந்தெழுந்து பூசனை செய்து, புகழ்ந்து மகிழ்ந்து நின்றார்கள். அவர்களுக்கவர் ஆசீர்வ

தித்து, குருபுத்திரனாகிய அசுவத்தாமனுடைய சங்கதிகளெ யெல்லாம் அர்ச்சுனனுக்கு ரகசாரதியாகிய அருளாளனிடத்தி லுரைத்து, அவருக்கருகாமையில் நின்றனர். அப்போது அர்ச்சுனன் வணங்கி, "என்னுண்டவனே, இத்தப்போர்க்களத்தில் நான் எப்பாணங்களைத் தொடுத்தாலும் திரிசூலத்திரதாரியாய் ஒரு மகாபுருஷன் சூலப்படையுடன் தோன்றிச் சத்துருக்களைக் கொல்லும்படியா யிருக்கின்றன். இத்தப்பிரகாரம் என்பாணங்கள் தோறும் விளையாடிக் கொண்டிருக்கிற காட்சியைக் கண்டு யான் களிகொண்டிருக்கின்றேன். இதென்ன காரணம்?" என்று கேட்க, வியாஸர் "அப்பா அர்ச்சுன! நீ மகாதேவனைப் பாணலிங்கமூர்த்தமாய் மகாபத்தியுடன் பூசை செய்கிற அன்பிற் சிறந்தவனுகையால், அச் சிவபெருமானவர் உன்னிடத்தில் அன்புகொண்டு திருவியமாய் விளங்குகின்றார். இன்னமும் உன்சித்தையி னிடத்தில் வத்திப்புடன் அவரை விடாமற் பத்திக்கக்கடவை" என்று அருள்புரிந்து ஆசீர்வதித்து, தம் தவச்சூழலுக்குப் போனார். அசுவத்தாமன் துரியோதனனுடைய சேனைகளிற்பாய்க்கலக்க, அதுகண்ட அதிரதர்முதலாகிய சிலைப் படை வீரரெல்லாருஞ் சேர்ந்து மறுபடி யுத்தஞ் செய்ய, அப்போது இருபடைகளும் நெருங்கி கால்வகைச் சேனையு மிறந்து, மற்றைய ரங்கு நிலைத்து நிற்காமற் கலைந்து பறந்துபோனார்கள். முதனாள் யுத்தமுதல் பதின்மூன்றுநாள் வரைக்கும் இறந்தபேரைப் பார்க்கிலும், பதினன்காநாள் கடந்த பகலிராச் சண்டையிலும், இப்பதினைந்தாம் நாள் சண்டையிலும் இறந்தபேர்கள் பதின்மடங்கு அதிகமாயிருந்தபடியாலும், ரத்தவெள்ளம் பூர்த்தியாயோடிய துடியாலும், நிலைபெற்றசூரியன் நிற்கப்பயந்து, மேகமண்டல மளாவிய சோலையில் மறைந்து மேல் நிறங்கொண்ட வேலையில் மூழ்கினன். உடனே இருள் மூடியது. ஒருவர் முகம் ஒருவருக்குத் தெரியாதபடி வந்து கவிந்த இரவைக்கண்ட தருமராஜன் அக்ஞானத்தைக் கண்டு பயந்த விக் ஞானவந்தரைப்போல் இளைத்து, இன்றையப் போர் இதுவரையி லும் போதுமென்று நிறுத்தி, மெலிந்துபோன நால்வகைச் சேனை வீரருடன் வீரசண்டை தரித்த தம்பிமாரையும் அழைத்துக்கொண்டு வேசாறலுடன் பாசறையையடைந்தார். இவ்விடத்தில் மதிமயக்கங்

கொண்ட மனத்தனுகிய துரியோதனன் ரதகஜதுரக பதாதிகள் முத லாகிய யானை வீரருஞ் சேனை வீரருஞ் சூழ்ந்து வரும்படியாக, சஞ் சல சித்தனுய் வாடிப் பாடி வீட்டிற்குள் புகுந்தான். இந்த ரணகளத்தி னில் நாய், நரி முதலியவை தின்று கொழுத்து ஜயம் பாடிக்கொண்டு இருந்தன. பூத வேதாளங்கள் முதலாகிய அனைத்தும் பொங்கி யார்த்தன.

பதினைந்தாம்போர்ச் சருக்கத்தோடு

துரோண பர்வம் - முற்றிற்று.

ஸ்ரீ மஹா பாரத வசனம்

8 கர்ணபர்வம்

கண்ணன் துதி

மாதுல ஞகியு மேதில ஞகியும் வஞ்சன் கஞ்சன் வரவிட்ட
பூதனை தன்னுயிர் முலைபொழி பாலோடு போதர வுண்ட பயல்வண்ணை
மாதவ யாதவ வாசவ கேசவ மாயா வாயா மதுசூதா
ஆதியு மந்தமு மாகிய நின்புக ழல்லா துரையே னடியேனே

சூதபுராணிகர் வாக்கியம்

[ஓ சவுனகாதி முனிவர்களே! இவ்வாறு யுத்தபஞ்சகத்தின் இரண்டாம்பாகமாகிய துரோணபர்வத்தைக் கூறிய வைசம்பாயன முனிவரை ஜனமேஜய மகாராஜன் பணிந்தெழுந்து, "சுவாமி! துரோணாச்சாரியார் சேனாதிபதித்வங்கொண்டு செய்த ஐந்நாள் யுத்தத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் பகதத்தன் விடுத்த உக்கிர வேலாயுதத்தையுஞ் சுதாயுவிடுத்த மகாகதாயுதத்தையுந் தமது மார்பிற்றாங்கி அர்ச்சுனனைக் காத்ததும், அவ்வர்ச்சுன குமாரனுகிய அபிமன்னுசெய்த அலங்கார யுத்தமும், அவனைப்பகைவர் சயந்தவனுல் மோசப்போர்விளைவித்து நாசப்படுத்தியதும், அது பற்றிப் பற்குணன்செய்துகொண்ட சபதமும், அச்சபதநிறைவேறநாராயணர் கைலங்கிரிசென்று பாசுபதாஸ்திரம் பெற்றுவந்ததும், அர்ச்சுனன் யுத்த பூமியிலேதடாகமுண்டாக்கிய விநோதமும், துரியோதனனுக்குத் துரோணரளித்த சாலிகவசத்தை விஜயன் பொடிபடுத்தியதும், கிருஷ்ணமூர்த்தி தமது சக்கராயுதத்தால் சூரியனை மறைப்பித்து அருச்சுனன் சபதத்தை நிறைவேற்றியதும், அன்று இராப்போர்விளைத்ததும், துரோணாச்சாரி சப்தரிஷிகள் தரிசனங்கண்டு

திருபாதி நிஷ்டையிலிருந்ததும், அப்போது நாரணன் தருமனையோர் மடிவார்த்தைக் குடம்படுத்தியதும், அச்சமயமறிந்து திஷ்டத்தூய் மன் தனது குடிப்பகை தீக்கிக்கொண்டதும், அசுவத்தாமன் தந்தை யின் மரணத்திற்குக் காரணமாயிருந்த யாவரையுஞ் சங்கரிப்பதாய்ச் சபதங்கொண்டு உக்ர நாராயணாஸ்திரம்விடுத்ததும், அஃதறிந்த கண்ணன் பாண்டவராதியரைத் தேரினின்றிழித்து நிராயுதராக்கி அவ்வஸ்திரத்தின் வேகத்தை யடக்கியதும், அசுவத்தாமன்கொண்ட யுத்தவிரக்தியை வியாசர் விலக்கி விடுத்ததும், ஆகியவிச் சரித்திரங் களை உபசரிதங்களோடுங் கேட்டு மகிழ்ந்தேன். இப்பால் முன்றும் பாகமாகிய கர்ணபர்வத்தையுந் திருவாய் மலர்ந்தருள வேண்டு மென்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

பதினேழாம்போர்ச் சருக்கம்

துதி

காராய் மணியாய்க் கடலாய்க் களிருய்த்
தாரா யுரைசெய் தகுமே னியினுய்
வாரா யெனதுண் மருவும் படியாய்
காரா யணவோ கமவே கமவே.

ஓ படமுறுஞ்சேடன் பரித்தபாராளும் அடலுறும் விசேஷ அரசனே! கேளும்: இதுகாறும் பீஷ்மாசாரியருந் துரோணாசாரிய ருஞ் சேனாதிபத்துவம்பெற்று நடத்தியபோரின் திறத்தை யெல் லாம்பார்த்தோமல்லவா? இன்று நமதுகுமார்ன் சேனாதிபதியாகி யுத்த நடத்தப்போகின்றமையால், அந்தவிசித்திரப் போருக்கு நாம் துணை யாயிருந்து வெற்றி பெறச்செய்வோமென்று சூரியபகவான் கிழக்குத் திசையிலுதயமாயினன். உடனே துரியோதன மகாராஜன் முதலாகிய பேர்க ளெழுந்து காலைக்கடன் முடித்துச் சூரியநமஸ்காரஞ்செய்து, வீரியமுடன் கொலுக் கொண்டிருந்து சீரியயோசனை செய்யத் தொடங்கினர்கள். அஃதென்னவெனில், பீஷ்மாச்சாரியருந் துரோ

ஞசாரியருஞ் சேனாதிபதியாயிருந்து தங்களாலே கூடியமட்டும் போர்புரிந்து நம்மைக் கைவிட்டிறந்தார்கள். இப்போது என் பிராண நேசனாகிய கர்ணமகாராஜனே யல்லதுவெல்ல நல்ல வல்லமையுள்ளோர் எவர்களுமில்லை" என்று துரியோதனனுட்கொண்டு, அங்கதேசாதிபனையழைத்து, "அண்ணா! இனி என்னை யாதரிப்ப தும்மது கடனேயல்லது வேறில்லை. நீரே சேனாதிபதியாக வேண்டும்" என்றுரைத்துப் புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகஞ் செய்வித்து, பொன்னாடை முதலிய வன்னப்பணிகளணிந்து, மானாபரணராகிய தானாபதிகளுஞ் சந்தோஷிக்கும் படியாய்ச் சேனாதிபதிப்பட்டங் கட்டி, வெற்றிமாலைசூட்டி, சிங்கார விருதுகளும் டங்காமுதலிய பாங்காவாத்தியங்களும் பொங்காரமாகிய ஓங்காரச் சங்குநாதங்களும் எங்கும் நிறையச்செய்து, அக்கர்ண மகாராஜனுடைய கச்சைக்கொடியுந் தனது விஷபுயங்கக்கொடியும் வானைமுத் தோங்கிப் பறக்கும்படியாகச் சகலபூபாலர்களுடனேயும் விருது சின்ன வாத்தியங்களுடனேயும் வெளிப்பட்டு யுத்தகளம்வந்து சேர்ந்தான். வெற்றிபெற்ற கொற்றவராகிய பாண்டவர்களுங் காலைக்கடன் முடித்து யுத்தகோலங்கொண்டு, வாகனாதிகளுடன் மோகனாதிகரான பாஞ்சாலர், பப்பரர், சோமகர், போஜர், திராவிடர், மராடர், கர்னாடர், சாளுவர், சாலுவர், கோளர், விராடர் முதலாகிய, வீராதிவீரச் சேனை மன்னவரும், சாத்தகியுடன் கருடக்கொடிக் கதிபனாகிய கண்ணனும், ரதகஜதுரக பதாதிகளோடு யுத்தகளம் புகுந்தார்கள். அந்தவேளையில் துரோணவயிரியாகிய திஷ்டத்தூய்மன் முன்னங்து எதிர்சென்று நின்று, "இன்றைய யுத்தம்ஜயிப்பது எனதுகடன்" என்று இரைந்து சபதங்கூறி எதிர்த்தான். அவனைக்கண்ட கர்ணனவன் வண்டு மொய்க்க மதமொழுகின்ற யானைகளையும், செண்டுபோ லெழுந்து திசைதிரிகின்ற குதிரைகளையும் அண்டமளாவி அசைந்தாடுந் தேர்களையும், மண்டலமதிர மதத்துவருகின்ற காலாட்களையும் வெற்றிமாலையணிந்தமுடி, கொடி, கொடை, படை, தொடை முதலியனவாய்ந்த அடலுடைய பூபாலர்களையும், அவரவர்கள் நின்றநின்ற நிலை பெயராமல் நின்று போர்புரியும் படியாய்ப் பாரிய மகர மீனப்பம்போல் வியூகம்வகுத்தான். அந்த வியூகத்தைப் பார்த்துச் சந்தோஷித்த பன்னிரண்டு திருகாமமுடைய பரந்தாமனும், அர்ச்சுனனும் சேனாதனாகிய திஷ்டத்தூய்மனும், ஜெயிக்குந் திறங்கொண்டவர்களாய், திரைகடல்போன்ற தங்கள் சேனைகளைப்பிரித்து, பகைவர் பயப்படும்

படியாக நேமிவியூகம் வகுத்து, அவர்களைப்பார்த்து, "ஓ வீராதி வீரர்களே! கேளுங்கள்: பாரு புத்திரனுகிய கர்ணன் திரிதராஷ்டிர குமாரனுக்குச் சேனுபதியாயிருன். ஆதலால்:- போனவர்போக இருக்கின்ற எல்லோரும் ஒருமுகமாயிருந்து அந்தக்கர்ணனைக் கொல்லவேண்டும்" என்று யாவருக்கும் உறுதியாகச் சொல்லவே, குதிரையின்மீதும், யானையின்மீதும், ரதத்தின்மீதும், பூமியின் மீதும், இருந்தவர்களெல்லாரும் அப்படி அப்படியே குபீரெனப் பாய்ந்து, கோபப்பொறிபறக்கக் காய்ந்து, சர்ப்பக்கொடியேனுஞ் சஷிதாசுதனும், எங்குளார்? எங்குளார்? என்று ஆய்ந்து எதிரிகளுடன் வாய்ந்து போர்விளைத்தார்கள்.

பீமசேனனுற் காசிராஜனுகிய மேகதூர்த்தியென்பவன் வதை

"அந்தச்சமயத்தில் வெற்றிபெறுக் தேரேறிவந்தபீமன் தேரை விட்டிழிந்து, போர்த்திற வேழமாகிய யானைமேலேறிப் புகுந்து போர்செய்தான்" என்று வைசம்பாயனர் சொல்ல ஜனமேஜயன் கேட்டு, "ஓசுவாமி! பதினுயிரம் புயத்தையுடைய பீமனென்னும் எங்கள் பாட்டனை ஒருயானை சுமந்ததென்று திருவாய் மலர்ந்தருளினீர். அந்தயானை எப்போப்பட்டதோவென்று சந்தேகிக்கிறேன்." என்று சந்திரகுலாத்துங்கன் வினவ, வைசம்பாயனர் சொல்லுகின்றூர். "ஓ மகாராஜனே! அந்தயானையானது பனைமரம்போற் பருத்து நீண்டதுதிக்கையும், மலைச்சுனைபோற் பொழியு மதத்தையும், கடலின் அலைபோலசைத்துப் பலதிசைக் காற்றையும் வீசுகின்ற ஆலவட்டச் செவியையும், மந்திரகிரிபோலுபர்ந்த அளவையும், புள்ளிகிறைந்த அழகிய முகத்தையும் சிவந்த நிறங்கொண்டு தொங்கிய சிறுவாலையும, முழுமதியைப் பிளந்து சுவரத்தினகசிதப் பூண்கட்டிப் பட்டுக் குச்சுத் தொங்கவிட்டு இரண்டு கடைவாயிலும் வைத்ததை யொத்த தந்தத்தையும், நெருங்கிப் பகைவரை கொற்றுங்கயிடிக்கும் மத்தகத்தையும், புன்னைமலரின் பூவிதழ்போற்சிறந்த இருகண்ணையும், நெற்றித்திலகத்தையும், வீரபட்டத்தையும், விதண்டைத் தொழிலையும், உலகஞ்சுமக்கும் ஆதிசேடனே இதுவென்று உவமிக்கத்தக்க உரத்தையும், வாயுவுக்கூட்டங்களினது வல்லபமுடைய மூச்சையும், சுருங்கியகழுத்தோடியைந்த பொன்மலையை யொத்த கும்பத்தையும், மார்பில் மூன்றுவலம்புரிச் சுழியையும், கனத்தகற்றூணுக்கொப்பாகிய

க்கான்குகாலையும்,உருட்டிவைத்த வெண்ணெய்மொத்தைபோன்ற நகங்களையும், குளிர்ந்த திருத்துளவ மணிந்த மாயோனுடைய நிலையையொத்த உறுதியையும், உக்கிரத்துடன் கிடந்த ஆமையைப்போன்ற புறவடியையும், திணிந்தமிதகத்தையும், கனிந்தகோபத்தையும், மிகுந்த ஊக்கத்தையும் புகைந்த மோக்கத்தையும், பருத்த வயிற்றையும், இளங்கமுகுபோல் தழைந்த வாலையுமுடையது. மேலும், கட்டுத்தறியையுங் கால்விலங்கையு முறிப்பது; பாகனையும் அங்குசத்தைபுந் தூரத்திற்காணும்போதே, துடிதுடித்து நின்று கோபத்துடன் கொதிப்பது; குலுங்கிநடப்பது; தன்னிழலைக்கண்டு தானேசீறித்தனக்கு எதிரியென்று மலைவது; வளைபு, வட்டம், அசைதல், ஆடல், ஓடல், என்னும் வேககதியினையுடையது. அன்றியும், அந்தரம் வரைக்குங் கைநீட்டிச் சந்திரனைப் பிடித்துக் கவளமென்று உண்டு, மேகத்தைச் சேர்த்து முறுக்கிப்பிழிந்து தாகத்திற்குச் சலமென்று குடிக்குஞ் சத்துருசங்காரச் சினமேவழும் அது. இப்போர்ப்பட்ட பலம்பொருந்திய குற்றமற்ற யானையின்மேல் வாயுபுத்திரனேறிக்கொண்டு சேனைகளுடன் வந்தான். அவனைக்கண்டு ஆண்மைக்கொருவீரனாகிய காசிராஜனென்னும் மகமதூர்த்தியானவன் நவவித உறுப்பக்களோடு சப்தமேகம்போன்ற மதமாரியுமுடைய ராஜகுஞ்சரத்தி லேறிக்கொண்டு, தூசிப்படைமுனையில் வந்து பீமனுடன் மூனைந்தான். இவர்களேறிய இரண்டு யானைகளையும் ஒன்றோடொன்று போர்செய்யும்படியாய்விடுத்து, இரண்டு தேவேந்திரர் சிகரங்களுடன் திரண்ட மலைமேலேறிவந்து யுத்தஞ்செய்வதைப்போல் மலைந்தார்கள். அஃதெப்படியென்றால், அங்குசக் கொத்தினாலும் - அல்லோ அல்லோவென்று அதட்டிய பேச்சினாலும் வலியகால்களை மடக்கவும் நடக்கவுஞ்செய்து, வேறுவிதமாகிய வேகமும், நடையும், ஓட்டமும்,வெகுண்டு வராநின்ற குதிப்பும், வெவ்விய கோபக் கொதிப்பும், அங்கசாரிமுதலிய யாவற்றையும் விதவிதமாகக் காட்டி, யானையேற்ற முதலாகிய அனேகதுங்கற்ற நன்னூலறிஞர்கள் கொண்டாடும் படியாய் அந்த யானைகளைச் செலுத்தி, சிவந்தகரத்தால் வில்வளைத்துச் சிறுகாணெலிதெறித்து, சிலீமுகங்களைத் தொடுத்துச் சீறியெதிர்த்தார்கள்.

அப்போது கொம்பிரண்டு, துதிக்கையொன்று, கால் நான்கு, வாலொன்று, கோசமொன்று என்னும் ஒன்பது உறுப்புக்களினாலும்

பகைவரை வெல்லத்தக்க ஈண்டியர்ந்த கேம னேறியயானையும் பீம னேறிய யானையும்நெருப்பெழ மூன்ஈந்து நெடுமூச்செறிந்து, பெருங் கோபங்கொண்டு இருப்புலக்கை, நெருப்புக்குண்டு, சுருக்குச்சங்கிலி, இவைகளால் அடித்துப்போர்செய்தன. இந்தயானையின்மேலேறிய இருதிறவீரரும் அளவற்ற பாணங்களைத் தொடுத்து, ஆதிசேடனுந் தேவர்கள் முதலாகிய இந்திரனும் பயந்து அயர்ந்து வருந்தி நடுங்கும் படியாக யுத்தஞ் செய்தார்கள். இவ்விதமாக இருவரும் பிரபல யுத்தஞ்செய்து வருங்காலையில், பீமசேனன்விடுத்த விக்கிரமக்கணை களுக்கு அஞ்சிப் பயந்து அலக்கழிவாகிய கேமதூர்த்தியென்னுங் காசிராஜன் வேலாயுதங்கொண்டு பீமன்மேலெறிய, அந்த வேலா யுதம் வந்த வேகத்துக்குத் தப்பிய் பீமன் காலாகோலமாகச் செய் யுஞ் சூலாயுதமெறிந்து அந்தக் காசிராஜனேறிய யானையையும் அவன்விட்ட வேலாயுதத்தையும் விரலிறைப்போதில் அழித்தான். அப்போது காசிராஜன் மலைவிட்டிறங்கிய யாளிபோற் பூமியிற் பாய்ந்து, தண்டாயுதங்கொண்டு பீமசேனனேறி வந்த யானையைப் புடைத்து வீழ்த்தினன். அதுகாலையில் வாசனைபொருந்திய மலர் மாலை யணிந்த பீமன் வண்டைப்போ லெழுந்து, விண்டலத்தைக் காய்ந்து, பூமிமேற் பாய்ந்து கதாயுதத்தைக் கொண்டுவந்தான். கேம னுங் கதாயுதங்கொண்டுநின்றான். யானைப்போருக்கு வல்லவரென் னும் இவ்விருவரும் பூமிமேல் நின்று, கதாயுதப்போரிற்சிறந்த பற்பல காவலர்களுங்கண்டு களிக்கும்படியாய் மலையுடன் மலையெதிர்த்து மாறுவதுபோல் மாறிமாறிப் போர் புரிந்தார்கள். இவ்விரண்டு வீர ரும்புரிந்த கதாயுத யுத்தத்தைப்போற் கடினப்போர் விளைக்கும் வல்லமையுள்ள காவலர்கள் காணினியில் எவர்களும் இல்லையென்று சொல்லும்படியாக, தண்டொடு தண்டொதித்தி, இடசாரி வலசாரி யாகச் சுழன்றுசுற்றி, கடலோசை யென்றுங்காரிடியென்றுங் கேட்ட வர்கள் கண்டவர்களெல்லாம் ஓடுங்கி, வாய்விட்டுச் சொல்ல நடுங்கி, ஆமையைபோல் ஐம்பொறிகளுமடங்கி, அசைவற்றுப் போகும்படி யுத்தம்விளைத்து, தத்திக்குதித்துத் தளரும்படி மெத்த அடித்து, கரகரவென்று காற்றுடிபோற் சுழன்று இடித்து, பரபரவென்று பற் றிப்பிடித்து, பலங்கொண்ட பீமனுனவன் காசிராஜனுகிய கேமனை கலத்திலடித்து முடித்தான். இத்தன்மையாகக் கதாயுத்தம் விளைத்துக் காசிராஜனிறந்தானென்றவுடனே, கெடிஸ்தலாதிபதியான துரியோ தனனுடைய சேனவீரர்களெல்லாருங் கலங்கி, அலமலங்கிப் படை

முறிந்தோடத் தலைப்பட்டார்கள். அப்போது வெற்றியாகூவிபெற்ற கர்ணன்கண்டு பற்றுக்காட்சியாய் எதிர்சென்று நின்று வெள்ளச்சீலை விசிறி முகம்விட்டவாறே யோடிய சேனைகளையெல்லாங்கையமர்த்தி ஒன்றுகக்கூட்டிப் பேரணியாக நிறுத்தி, தானே அப்போணித் தலைவனாகி, திக்செட்டும் பிரகாசிக்கும் ஆபரணங்களுடன் கடலைப் பார்த்திலுஞ் சப்திக்கா நின்ற சேனைக்கடல் மத்தியிற் பிரதாப உருத்திரனைப்போல் நின்றான்.

இருதிறவர்களின் படைச் செருக்கு

அப்படியாக நின்ற கர்ணனை வெற்றிமாலைதரித்த தருமராஜன் முதலியபேர்கள் பார்த்து, தாங்களுந் தங்களுடைய சேனைகளும் போணியாகச்சேர்ந்து அவனோடு யுத்தம்பண்ணும்படி மெத்தவுங் கிட்டநெருங்கிப் போனார்கள். அப்போது இருதிறவர் படைகளில் திலதமணிந்த நெற்றியும், தங்கப்பூண்கள் கட்டிய கொம்புகளும், மின்னற்போற் பிரகாசிக்கும் வீரபட்டமும், ஆபரணங்கள் விளங்கிய மத்தகமும், வண்டுகள் மொய்க்கும்படியாய் மழைகளைப்போற் குமிழிகளெழுந்து வழியாநின்ற கர்ணமதமும், விசாலமான மார்பும், பெருமுதுகினுடைய இருபக்கங்களிலுங் கணகண வென்று ஆடுறுமணியும், காளமேகம்போன்ற உருவமும், பெருங்காற்றை விசைக்குஞ் செவிகளும், மலைக்கரும் பாம்பைப்போன்ற துதிக்கையும், கருமானுடைய உலைகளக்கனல் வீசுங்கடைக்கண்ணும், காற்றினுங் கடுகிய வேகமும், கண்டத்தினின்றுங் கடைவால்வரையிற் கட்டியதோரணங்களுமுடைய வாரணங்களுடன் வாரணங்களெதிர்த்துப் பாரணங்கு நடுங்கி வானமுந்தானமுமாறிக் கலங்கும்படியாய்ப் போராடவும், சரிகை வேலையிட்ட பட்டுகளினுல் அலங்கரித்த அலங்காரமும், ஒன்பதுநிற இரத்தினங்களும் இழைத்தகெடிய கொடிமுடிபோன்ற மகுடமும், மலையருவி பரவியதைப்போன்ற கவசமும், நெருங்கிய மேகங்களையொத்த துவஜமும், தேனும் பாராகமுந் திகழ்ந்துகமழும் பூமாலையின் அழகும், சமயாசமயத்தில் அரசர்கள் மறையும்படியாய் இருக்கின்ற சொரங்கத்தட்டுகளும், சூரியகாந்திப் பட்டுகளும், சுழலுஞ் சக்கரக்கட்டுகளும், ஆப்பாணி முதலாகிய அச்சுகளும், அடுக்காகிய மச்சுகளும், தொங்கவிட்டிருக்குங் குச்சுகளுமுடைய தேர்கள் அநேக மலைகள் இரக்கையுடன் பறந்து திரியுந்

தன்மைபோற் றிரிந்து சுழன்று ஒன்றேடொன்றுமோதிச் சண்டை செய்யவும்; வெற்றியிலும், யுத்தியிலும், வல்லமையிலும், வேகத்திலும், சிறந்து, சிந்து தேசத்திற்பிறந்து, தேகாபிமான மறந்து, ஒரு நொடியில் உலகை வலந்திரிந்து, பொடிபறப்ப உடனடந்து, இடி பிறக்க எதிரடர்ந்து, பரம அணுவினிற் பறந்து, பரவியசமுத்திர அலையுடன் சண்டைபுரிந்து, எதிரிகள் விடுக்கும் ஆயுதங்களெல்லாம் இடிந்துபோகும்படி நிமிர்ந்து, பூமியிற் கால்வைக்காமல் வாயுகதியெனத் திரிந்து, திவ்விய மலர்வாசனையைப் போற் சுவாசம்விரிந்து, சுழிசுத்தம் பொருந்தித் தோகைவால் விரிந்தகுதிரைகள் ஒன்றேடொன்று கலந்து யுத்தம்பண்ணவும்; நிலையிலா விலைபெற்ற ஆபரணங்களும், உலகிலாவரம்பெற்ற கவசங்களும், சாணைபிடித்த கவபணியாரமும், மணிகட்டிய வரிவில்லும், முனைதீட்டிய பாணங்களும், உரங்கொண்ட உடல்வலியும், தாமரைக்காடுபோற்றழைத்த படைகளும், நெரியத்திரியு நடைகளும், வீராபரணமும் மானபரணமும் வகித்த திறங்களுடையவர்களாய் விரிந்த அலை சிறந்த விசாலமாகிய கடலைப்போல் வெகுகூட்டங்கூடி வேகங்கொண்டு வராநின்ற படைமன்னர் முதலிய வீரர் கைகலந்து போராடவும்; முரசு, கரடி, கைக்கணை, துடி, பெருமரம், முருடு, படுபறை, இடக்கை, உடுக்கை, உறுமி, பம்பை, கொம்பு, சங்கு, பேரி, மத்தளம், தாரைபூரி, வீரசின்னம் இவை முதலாகிய வாத்தியங்களும், அரசர் அமர்க்கெழும்போதுமுழக்கா நின்ற வரிவளை, சுரிவளை, பெருநாதக்குழல், பெருங்கோடணை, என்னு மிவைகளும், அரவக்கொடி, முரசக்கொடி, ஆலவட்டம், தால்வட்டம், மகரதோரணம், நகரதோரணம், இந்திர வட்டக்குடை, சந்திரவட்டக்குடை, இவை முதலாகிய சின்னங்கள் முழுவதும், அதிர்ந்து ஆர்ப்பரித்து விலங்குவதிலுண்டான ஓசையானது உலகமுடிவிலெழும் அலைகளையுடைய ஏழுகடலைப்போலும், பிரசண்டமாருதம்போலும் மேககர்சிதம் போலும், ஒளிவெளியுடைய காலாக்கினிபோலும், பிரகாசித்ததிர்ந்தன. முரசக்கொடிபடைத்த முன்னவன் சேனையும் அரவக்கொடிதரித்த அரசன் சேனையும், யானைத்தலைவருடன் யானைத்தலைவரும், தேர்த்தலைவருடன் தேர்த்தலைவரும், குதிரைத்தலைவருடன் குதிரைத்தலைவரும், படைத்தலைவருடன் படத்தலைவரும், அரக்கரைப்போன்ற காலாட்களுடன்காலாளும், அமரரைப்போன்ற மேலாட்களுடன் மேலாளும், வீரருடன் வீரரும், நிருபருடன் நிருபரும்,

அதிரதருடன் அதிரதரும், மகரதருடன் மகரதரும், சமரதருடன் சமரதரும், அர்த்தரதருடன் அர்த்தரதரும், குற்றம்விளைத்து, மெத்தப் பகைத்து, விதிர்விதிர்த்து, பதைபதைத்துப் போர் செய்வதானார்கள்.

கர்ணராஜனுக்கும் நகுலராஜனுக்கும் யுத்தம் இதில் மகாராஜன்-விடதரன் இவர்கள் வதை

இப்பாற் பத்துத்திசையிலுங் கீர்த்தி நாட்டுஞ் சூரியகுமாரனுகிய கர்ணனும், தருமனுக்கினிய நகுலனும், குதிரைமேற்கொண்டு எதிரெதிர் முனைந்து, வேகமாகிய தங்கள் குதிரையை மச்சகதி, மயூரகதி, மாசுணகதி, என்னும் பலகதிகளோடு மனவேக, சரவேக, வாயுவேகமாக இடசாரி வலசாரியாய்விட்டுச் சுழற்றித்திரியுந்துரிதத்தினுற் பூமிபிளக்க, அதனுலாதிசேஷனுடைய பணமகுடமணிப்பிரகாசமானது பூதலத்திலிருக்கும் இருளைப்போக்கிப் பிரகாசிக்க, உடனே கும்பல் கும்பலாய் எழும்புந் தும்புகளால் சூரியகிரணத்தை மறைத்துப்பழையபடி இருளையழைத்துப் படிமிசை நிறைக்க, கோணம், வட்டம், வளவு, முதலாகிய கதிகளைக்காட்டிப் போர்செய்யாகின்றார்கள். அப்படி நின்ற இவ்விருவர் குதிரைகளும் அசைவில்லாத தொடையும், உடலதிர்ச்சியில்லாத நடையும், தினிந்ததசையும், நிமிர்ந்தகழுத்து மயிரும், உயிர்விடும்வரைக்கும் ஓடுங்காத பலமும், உத்தமம், மத்திமம், அதமம், இவை யறியத்தக்க சித்தமும், உயர்ந்த விவேகமும், நினைப்பதற்குக் கேட்பதற்குத் தகுதியாகிய வளமையும், குற்றமில்லாத சுழியும் பழுதற்ற வருணவடிவின் வழியும், இன்குரலோசையும், மனோதிடமுமிருந்து, பலகதி விசையிலுஞ் சிறந்து, திசாதிசைகளையும் அளந்து, உச்சை ஸ்ரவமென்னும் இந்திரன் குதிரையிலுஞ் சிறந்து கீர்த்திபெற்றிருந்தன. இத்தன்மை வாய்ந்த குதிரை மேற்கொண்ட முரசக்கொடியோன் தம்பியாகிய நகுலனும், அரவக்கொடியோன் அண்ணனுகிய சேனுதிபதிகர்ணனும் எதிர்த்து, கிரீடமுதற் சுவேதகூத்திரமும் உபயசாமரங்களு மூடையவர்களாய்த் தடையற நெடியவில்லைவளைத்து, நிரைநிரையாகப் பாணங்களை மூடுக்கி இரைத்து, கோடையிடியைப் பார்க்கிலும் ஏழுபங்கதிகமாக வாய்விட்டுக்கூவி, ரோஷத்துடன் கனைத்து, மனஸ்தாபத்துடன் பகைத்துப் போர்விளைத்த காலையில், நகுலன்விட்ட காராசக்கணை கர்ணனேறிய குதிரைக் குரத்தையும், அவன்கையில் வீறிய

வில்லின் திறத்தையும், காணியையும், கவசத்தையும், வீரபட்டத்தை யும், அழித்து, இரண்டுதோளையுந்தூளாத்து, நெற்றியில் திலகப் புள்ளிபோல் காட்டி, கிலேதளரமலங்து வாட்டியது. அப்போது நகுலனுடைய வல்லமைக்குச் சந்தோஷலாபமும், காம் இவன்கை யால் அடிபட்டோ மென்னும் காணத்தினுல் நேரிட்ட லோபமும், இவ்விரண்டு குணமுமுடைய கர்ணனவன் மனமறுகி, தீரத்துவங் குன்றுத் திறத்துடன் குதிரைவிட்டுப் பூமியிலிழிந்தான். அப்போதே அவன் சாரதிவேகத்துடன் ஒருதேர்கொண்டு வந்து நிறுத்தினன். அந்தரதத்தின்பேரில் இரவிகுமாரனேறிக்கொண்டு நகுலனுக்குநேர் புகும்போது, நகுலனுங் குதிரை விட்டிறங்கித்தேர்மேலேறி, அந்தர வாசிகளைப்போல் ஆக்கிரமித்தடுத்தான். அவ்வேளையிற் சண்டனுக் குச் சமானமாகிய அவர்கள் சாரதியுஞ் சாரதியுந் தங்கள் தங்கள் திறங்களைக்காட்டி, தேரைச் சக்ராகிர்தியாக ஓட்டி, யானைகளைத் தவிடுபொடிகளாக மாட்டி, தேருடன் தேர்கூட்டி, திருகுங்குயவன் திகிரிபோலாட்டி, கடுங்கோபக் கதிமூட்டினுர்கள். அச்சமயத்தில் நாயகரிருவரும் எயிறுமடித்துக்கடித்து, நாரிக்கயிறு தொடுத்துப் பிடித்து, கொடியினிற்சிலையை யெடுத்து வளைத்து, கூர்மைதங்கிய கும்புக்கோல்களை வாசாமகோசரமாகத் தொடுத்து, பூமிமுதல் ஆகாயம் வரைக்கும் இடித்து ஏழுமேகமும் பொழியுந்தன்மைபோற் சரதாரை விடித்து, உடல்களைத் துளைத்து, உதிரவெள்ளத்தால் நனைத்து, உதவியாக வந்த தாணிபர் அனைவரும் உருண்டுபோகக் கெடுத்து மறுபடியும் யுத்தஞ்செய்ய அடுத்துக் கணைசொரியுங்காலை யில், இருவருடைய குதிரைகளுந் தத்தமார்பு கிழிந்துவழிந்த இரத் தங்களில் மூழகிப்போகவும், இருவருடைய சாரதிகளுந் தங்கள் தங்களுக்கு எதிர் விழுந்தழியவும், இருவருடைய தேரும் அரும் பொடியாயுடைபட்டழியவும் இருவருடைய கொடிகள் முறியவும், இருவருடைய கவசமிடைக்கிடை கிழியவும் இருவருடைய குடையும் மளுக்கென்று முறிபட்டுலையவும், இருவருடலிலும் பாதாதிகேசம் வரைக்குங் கணைகளுருவவும், அதனுல் வருந்திய அரியளிக்குங் கர்ண னும் பரிவிடுக்கு நகுலனும் பதாதியாய்ப் பூமியில் நின்றனர். அப் போது இருவருடைய வேறு சாரதிகள் போய்ச் சேமத்தேர்கொண்டு வந்தார்கள். அந்தத்தேரி லிவர்களேறி, தங்களுடன் வந்த மன்னர் மன்னரும் எவ்வெவ்விடங்களிலும் நிறைத்து நிலத்து மலங்து போராடும்படியாய்ப் பாரியவிற்கொண்டு சீறி, அகவிதழுடைய அர விந்தங்களை அலர்த்தும் ஆதபன்குமாரனும், சுகமொழிச் சொற்

களைப் பயிற்றும் ஆயுள்வேதியர் சுதனும், முன்செய்த யுத்தத்திலும் பத்தத்தனைபங் கதிகமாகத் தொலையாத அமர்புரிந்து, தெறித்தகாணி யும், வெறித்தபார்வையும், வியர்த்தமுகமும், அயர்ந்த சிந்தையு மாக ஆக்கிரமித்தார்கள். அப்போது நகுலன் கையிளைத்துக் கர்ணன் கை மேலிடுங்காலையில், "இப்போது இவனைக்கொல்லுவது நல்லதல்ல; கொன்றால் அப்போது நாம் அன்னைக்குச் சொல்லிய வாக்கு பின்னப் படும். எப்போதும் காக்கைக் காப்பதே நலம்" என்றெண்ணினவ னுப்த் துப்போதும் பெரியோர் மூப்போதும் வணங்குஞ் சூரியாஸ்தி ரத்தைத் தொடுத்து, அந்த நகுலனுடைய தேர், சாரதி, குதிரை, வில், இவைமுதலிய எல்லாவற்றையும் அழித்து விற்குதையைக் கழுத்தில்மாட்டி யிழுத்து, கடகடவென்று ஆட்டிநகைத்து, "அடா நகுல! உன்னையிப்போது ஓட்டிவிடுகிறேன். நீ ஓடிப்போ," என்று உரத்துக் கூவித்துரத்திவிட்டு, அந்த நகுலனுக்குத் துணையாய்வந்த மகதராஜனையும், செவ்வேலுக் கொப்பாகிய விடதரனையும், திடவி கடக்கணையினல் ஜெயம்பெறக்கொன்று சாய்த்தான்.

கௌரவாதிகட்கும் பாண்டவாதிகட்குந் தொந்தயுத்தம்

அப்பாற் கர்ணமகாராஜன் அர்ச்சுனனிற்கின்ற அமர்முனை நோக்கி, ஆண்சிங்கத்தைப் பகைத்து ஆணவத்துடன் சினத்தெ ழுந்து எதிர்த்த யானையைப்போல் வேறொருவிற்கொண்டு, விஷம் பூசிய காணிமாட்டி நேர்வந்து நின்றான். அதை நல்லோர்முதலிய வில் லாளிகள் மெச்ச விஜயன் கண்டு, உடனே மின்னற்கணை யிரண்டு ஏட்டிவிடுத்தான். அந்தக்கணையைக் கர்ணன் தறித்து, வேறுசில பகழிகொண்டு குறித்து, பார்த்தசாரதி மார்பிற் படீரெனச் செ றித்து, பெயரும் நிறமும் பேதமில்லாமற் பிரியாவிடையாய் நிலத் திருக்கின்றார்களே இந்த நாகாரணனென்று அதிசயமாயுட்கொண்டு, தனக்குத்தானே சங்தோஷித்து நகைத்து உரைத்துப்போயினன். அப்படி போகின்ற சேனாதிபதியாகிய கர்ண னென்னும் வீரனை இராக்ஷசகுலவைரியாகிய ஸ்ரீராமரைப் போன்ற நாணனவன் கூவி யழைத்து, இன்றைக்குப்போய் இளைப்பாறி நாளைக்கு யுத்தஞ் செய்பவா போவென்றான். இப்பாற் சாத்தகியுஞ் சல்லியனுஞ் சேனை களுடன் அநேக வாத்தியங்கள் முழங்கும்படியாய் மதத்தயானையுடன் புலியெதிர்த்துப் போராடுந் தன்மைபோல் வேறோரிடத்தில் மாறு

படாமல் மலைத்தார்கள். மன்மதனை வென்ற பீஷ்மாச்சாரியரை மின் முகக்கணையாற் கொன்றசிகண்டியுங் திருதபன்மனும் ஓரிடத்திற்போர் வினைத்தார்கள். அகஸ்திய ரருளிச்செய்த அருந்தமிழும் அறிஞரும் பொருந்தும்படி சங்கப்பலகை ஸ்தாபித்துவைத்த பாண்டியனும், சந்திரவட்டக்குடைதரித்த துரியோதனனுடைய மாமன் சகுனியும், பொழுது போகிறவரைக்கும் பழுதில்லாமற் சண்டைசெய்தார்கள். பெரியோர் சொல்லைக்கேளாமற் பூமியையாளுந் துரியோதனனுக்கு உகந்ததம்பியாகிய துச்சாசனனும், மாகிலா மனத்தோனுகிய சகாதேவனும் அமர்புரிந்தார்கள். மறைவேதமும் மறுவேதமும் தநுர் வேதமுங் கற்ற அசுவத்தாமனும் பீமசேனனும், இதை விடவேறு வேலை யில்லையென்று வில்லைக்கொண்டு சிறந்து, அதிக வாத்தியங்களும் அறைந்து கலந்து தேவர்கள் மகிழும்படி அமர்மோதினர்கள். அப்போது தன்னையளித்த திரிபுராந்தகனுக்கொப்பாகிய அசுவத்தாமன் செட்டிலைவேல்போன்ற எட்டிவாளிகள் தொடுத்து, பீமனுடைய தேரினிருசு, சக்கரம், நான்கு குதிரை, சாரதி முதலியனவும் அழிந்து விழப்பொருது ஆக்ரமித்துச் சீறினன். அதுகாலையில் பீமசேனன் வேறுதேரேறி, மேலுமேலுங் கோபமீறி, புயவலியுடன்சீறி, பலம் விளைத்த வில்வளைத்து, முனைவிரித்த கோல்தொடுத்து, அசுவத்தாமன் புறங்கொடுத்தோடத் தேர், கொடி, குடை, வேகப்புரவி இவை முதலிய யாவையுந் தூள்படப் போக்கினன். இப்பாற் கேகயராஜனும், இளம்பஞ்ச பாண்டவரிற் சுரதகீர்த்தியும், உடன் மூண்டு உரஞ்சிறந்து யுத்தந் தொடங்கினர்கள். சிகண்டியும், திருதபன்மனும், சிலைத்திறங்கணைத்திறங்காட்டிச் செருச்செய்து, இருவருங் கொடிமுறித்து ரதமழித்து, ஒருவர்க்கொருவர் முதுகு தந்து பிராணனை நாடி ஓடிவாடினர்கள். தருமராஜனுக்குச் சேனபதியாகிய திஷ்டத்தூய்மனும், திருபாச்சாரியரும், எட்டுத்திசையும் வசையற் றிசையுறும்படியாய்க் கொடும் போர்புரிந்தபோது, யாகாதி கருமங்களை யுடைய திருபாச்சாரியர் முனையழித்து, ரதம், குதிரை, சாரதி, பாரியவில், முதலியன பஞ்சுபோற் பறக்கவிட்டு, கொஞ்ச மேனும் தைரியமில்லாமல் கெஞ்சுலர்ந்து உயிர்பிழைத்தோடினர். இத்தப்படிக்குச் சந்திரகுலத் தோன்றல்களாகிய கௌரவர்களும் பாண்டவர்களும், இவர்களைச் சேர்ந்தசேனை மன்னருஞ் சினைக மன்னரும், ஒருவருக்கொருவர் எதிர்த்து, அகண்ட சாம்பிராச்சிய பட்டாபிஷேகம் உங்களுக்கோ, எங்களுக்கோ, என்றுபுகைந்து அதிர்த்துக் கூவி, தேவர்களும் ராக்ஷதர்களும் பகைத்துச் செய்யுஞ் சண்

டைக்கு ஏழுபங்கதிகமாகப் போர் விளைத்துப் புகழ்படைத்தார்கள். அப்போதிருந்த ரணகளப்பெருமையை என்னெருவனு லெப்படி சந்தோஷித்துச் சொல்லத்தக்கது?

ஓ இறைவனுகிய ஜனமேஜயனே! ஆகிலும் அப்படியாக யுத்தம்விளைத்த மீபார்க்களம் எப்படியிருந்ததெனில், குருக்ஷேத்திர முழுதும் பருந்தும், கழுகும், பச்தர்மீபாற் பரவிப் பறந்தன. அலகைக் கூட்டங்களெல்லாம் ஆர்ப்பரித்திருந்தன. மன்னர்களுடைய உடல்கள் திரைந்து, குடல்கள் சரிந்து வழியும் உதிரங்களின் அலையிலுற் சாமரம்மீபால அலைப்புண்டிருந்தன. தெற்றிப்பறை முதலாகிய மேளங்களும், விருதுகளும், விற்பாணங்களும், ஓசையழிந்து உலைந்து கிடந்தன. மீகத்தைக் கிழித்துப் பிரகாசிக்கும் மின்னலீப்மீபால் விளங்கு நுதலணியாகிய வீரபட்டங்களையுடைய யானைகள், தமது மததாரைகள் பெருக்கங்கொண்டு மீமீராடைகள்மீபால் ஓடவும், இரு புறத்திலும் வீசிக்கொள்ளும் வால்களுடன் புள்ளிபொருந்திய முகங்கள் இரத்தவெள்ளத்தில் மூழ்கவும், உயர்ந்த மலையானது அடிமேல் பதிந்து சாய்ந்த தன்மைபோற் கும்பு கும்பாகவந்து வீழ்விட்டு வீழவும் பட்டமணிந்த தெற்றியில் பாணம்பட்டு வட்டமாகத்துளைக்கவுமாயிருந்தன. ஒட்டியுத்தம் பண்ணும்படி கிட்டி மத்தகத்தால் முட்டிப் போர்முனையிற் கீறிய அத்துமபிகளின் பொங்காரமும், தருமராஜராஜனுடைய சேனைகள் வெட்டிச் செபித்துக் களிக்குஞ் சிங்காரமும், துரியோதனனுடைய படைகள் மண்டை கிழிந்து மடியும் பிணமிகுதியின் ஓங்காரமும், மந்திரங்களினு லுந்திய வடிக்கணைகளின் றீங்காரமும், மைக்கண்ணிழந்து கிழித்தொழிந்த முழவுவாத்தியங்களின் குங்காரமும் வெற்றிமீரிட்டாலுங் கொலைசெய்வது மிகுபாதகமென்று சொல்லுஞ் சிங்காரமும், வீரர்களுடைய வாக்கியப் பொங்காரமும், மல்யுத்தம் வளர்ந்த மலைபோற் சிரளினையுடைய வயவர்கள் கைப்பிடித்தவாள் முனையில் வயவர்களுடைய தலைகள் வாய்விட்டரற்றும் ஹுங்காரமும், யானை, சேனை, தேர், குதிரை, இவைகள் மாய்வுற்றிறக்கும் மாட்சியும், பழுதற்று வீழ்ந்தபடை மன்னருடலிற் பாய்ந்த பற்பல பாணங்களின் மீதாற்றமும், பொழியாகின்றபெருங் குருதியில் மூழ்கிய மீர்களின் மீபருடல் நாற்றமும், வலுமீவறிய வீரர் தலையையும், தழலை விழிவழி பொழியாகின மத்தக மலையையும், சக்ராயுதத்திற்று மீதடித்மீதடி அறைக்கும் வேகமும், அக்கினியைக் கக்கிய அஸ்திரங்கள் அமர்க்களத்தைச் சுற்றிவராகின்ற

அவசரமும், வீரர்முகத்தில் அழுந்தியவாளிகளால் வெண்ணிலவைப் போல விளங்கு காட்டமும், கண்களிற் காலாக்கினிபொங்கக் கசங்கிக் கலிரென்று நகைக்குங் காவலர் கூட்டமும், மழைபொழிவதுபோற் சலசலவென, குலவிய படைகள் குழு குழு குழுவென, நொடியிற் புகுந்துபடிப்பறத்து உருவிப்பிரகாசிக்கும் வெய்யிலும், அழியாத வரூதினியை அழிக்குங்கை அயிலும், அமோகமாகநிறைந்த அஸ்திரக் காடுகள் விஸ்தாரநிறைந்த வனமென்று கரி, காய் முதலியவைகள் வந்து சேர்ந்து கூவுகின்றஓசையும், காக்கைகழுகு முதலிய பட்சிகள் பிணங்களைத்தின்று பசியாறி ஒன்றோடொன்று உறவாடும் ஆசையும், பறந்து இறகற்றுவீழும் பெருமலைகளைப்போல் உயிர்துறந்து இறந்து வீழும், பூதங்களுமாட்டமும், பேய்கள்பெறும் பாட்டமும், ஜோகினி, டாகினி, யோகினி இவைகள் கூடி அழுகிறகாதமும், மோகினி, டோகினி, வாகினி இவைகளாதுகின்ற கீதகாத யாமள வேதமும், உதிரவெள்ளம்பரந்து நிறைந்து பள்ளமபள்ளமாயுறைந்து அதனுற் சிவந்த யுத்த பூமியின் பேதாபேதமும், தங்கள் வயிற்றைச் சுனையாகக்கொண்டு இரத்தவெள்ளங்களை மடித்துறிஞ்சும் பூதவேதாளகணங்களும், வாளினுலும் வேலினுலும் தறிபட்டு அந்தரத்தில் எழுந்தாடிய அநேகத் தலைகளாகிய கந்தரங்களும், அதிரத, மகாரத, சமரத அர்த்தரதர்களுடைய அறுந்த புயமந்திரங்களும், ஜெயசந்திரக்கச்சைபூட்டிய யானைக்கழுத்துப, அம்புக்கூடுபோல் விழைந்து அநேகபாணங்கள் நுழைந்துபொருந்திப் பூமாலையுடன் புயமலைவ்மும் பொலிவுகளும், புறுவைப்போன்று பிராணன் சாகின்ற உபாயமும், உடனே பொன்னுடலைத்தடிப் போகின்ற ஞாயமும், வீரர் முதலியோர் பாய்பரிகளின் தலைகளைத்தி நாய், நரி, பேய், ஓரி இவைமுதலியவைகளருந்த விருந்தாக அமைந்தமாயமும், பரணர்பாடும் பாவாணர்க்குப் பரிசுகிடைத்தாற்போலிருந்தன.

மேலும், மூன்றும் பிறைபோன்ற கொம்பொடிந்து முன்படிந்த யானைகள் அநேகமும், படைமுடிந்து ஓட்டமாயோடிய யானைகள் அநேகமும், உதிரக்கடலுக்குத் திருவணைகட்ட அடுக்கிய ஒங்கல்கள் அநேகம்போல் உயிரிழந்த உம்பல்கள் அநேகமும், யானைத்துதிக்கை யாலும், வாளாயுதங்களாலும், வல்லிருப்புதடியாலும், அடியுண்டழிந்த அரசவீரர் அநேகமும், புயமலையொடிந்த போர்வீரர் அநேகமும், வீரந்தாழ்ந்த பலசாலிகளின் தலையை அறுக்குஞ்சரங்கள் அநேகமும், அந்தவீரர் சொந்து வீழ்ந்திறந்த இரத்தக்கடகம்

அநேகமும், சப்தபேகங்களைப்போல் ஆகாயத்தை மறைத்து உலகத்தில் இருளைக்காட்டி ஒளியை மறைக்கும்படியாய் எங்குமெழுந்த தும்புக்கும்புகளும், மிகுந்தபசியினால் வருந்திய குள்ளப்பேயும் பூதங்களுங்கூடியுண்ணும் விருந்துகளும், கடல்போற் புரண்டோடிய இரத்த வெள்ளத்தில் அலைந்துகொண்டிருக்குங் கவந்தங்களும், கர சரணுகிகளைக் கொண்டு போர் புரிந்துமுறிந்த கையும், தெரிந்தழிந்த மெய்யும், குறைந்தொடிந்த காலும், அறுந்தொழிந்த நாடிநரம்பும், தறித்துடைந்த தவள எலும்பும், உடையவர்களாய் மனம்வருந்தி வெகுண்டு மலைந்த வீரர்களும், நான்குவிதமாகிய குரலிலும் ஐந்து கதியாகிய வேகத்திலும் மிஞ்சியபுரவிகள் அநேகம் ஆவியிழந்தொழிந்த அதிசயமும், எண்ணற்றவீரர் தேகமெலிந்து சோகமிகுந்து தாகமலிந்து தாபமுழன்று தழற்கணை தொடுத்துத்தாமும் அடித்துப் பூமியிற்படித்து இறந்த தன்மைகளும், தாரைகள், கிடுகுகள், ஒற்றைகள், கோணக்கொம்புகள், நீள்வயிரங்கள் இவைகளோடு பொங்குஞ் சங்கும், எங்கும் பம்பும் கொம்பும், பம்பை, பேரி, முரசு, காளம், பூரி வீரசின்னமுதலிய வாத்தியங்களும் முழங்கிக் கொண்டிருந்தன. இவையல்லாமலும் ஓரிமைப்போதில் யானைமுதற் குதிரைக்கூட்டங்களுஞ் சாக்குரலோசை முழக்கின. இருதிறவரும் வளைத்த வில்லிலிருந்து எழும்படியாகிய பாணங்கள் கோடாகோடி கோடிகோடியாய்ப் புறப்பட்டன. உயிர்விட்டிறந்த வீரருடைய முகமானது செந்தாமரை போற்சிறந்திருந்தன. திடர்போன்ற இரத்தக்கடலில் திமிங்கலம் போன்ற யானைகள் துதிக்கையுடன் மிகவுமிரைந்தன. ஆகாயமெங்கும் வேடிக்கை பார்க்கின்ற தேவர்களுடைய விமானங்கள் நிறைந்து நின்றன. பாணத்தாலழிந்திறந்த பூமியில் வீழ்ந்த வீரருடைய கண்களிலிருந்து கருமேகம்போற் புகை புறப்பட்டது. அரிவாளுடன் அறுபட்டு வீழ்ந்த தோளினையுடைய வல்லவர்களின் கையானது மீளவும், வாளோடு, விற்கணை பிடித்து எய்யாநின்றன. துதிக்கையிழந்து இறந்துவீழ்ந்த யானைகள் மதத்த சீஞப்பன்றி போலிருந்தன. ஆங்காங்கு முறிந்து வீழ்ந்த வெள்ளைக் குடைகளெல்லாம் பூரண சந்திரனைப்போல் விளங்கின. இறந்தவீரருடைய கருவிழி மணியைக் காக்கைகள் கொத்தின. உயிரிழந்தயானைகளினுடைய குடல்களைக் குள்ளநரிகள் இழுத்தன. பேய்க்கூட்டங்கள் உதிரங்களைத் தடுத்துக்குடித்தன. வீரரணிந்த அழகிய பூமாலைகளில் நிறைந்ததேன் கரைபுரண்டோடியது. புவியைச் சுமக்கும் ஆதிசேடன் முதலிய பாம்புகளெல்லாம் பதறிக்கதறின. அநேக பாணங்கள் வீரருடைய

புஜங்களை அறுத்துத்தள்ளின. நிணங்களையும் மூளைகளையும் நெடிய குடர்களையும் பூதக்கூட்டங்கள் புசித்தன. கழுகுகளும் பருந்துகளும் குதிரைகளின் மணிக்குடர்களை இழுத்து ஒன்றோடொன்று மாட்டி ஆகாயத்திற் பறக்கும்போது, பெரிய பாக்கியவான்களுடைய பிள்ளைகள் சண்டைக்காற்றடிவிட்டது போற்சட்டமாயிருந்தது. கொட்ட மடக்கும்படியாய் வெவ்விய யுத்தம் விளைத்த வீராதிவீரருடை முடித்தலைகளெல்லாம் வீரத்துடன் அறுந்து வீழ்ந்தன. கோடையிடி போன்று முழக்கும் பதாதியர்களுங் குறைந்துமாகிலத்தில் மடிந்தார்கள். வீரசூரர் பற்றிய வாள்களும், வாள்பிடித்த கரங்களும், மேக முலாவிய தெய்வலோகத்தை முட்டி மறித்து வீழ்ந்தன.

அர்ச்சுனன் கண்ணனை வருத்திய சஞ்சத்தகர் நாராயணகோபாலர்களை முறியவடித் தோட்டுதல்.

இவ்விதமாகிய யுத்தபூமியிற் பேராண்மைசெய்துபோர்விளைத்த பாண்டவச் சேனாதிபதியானவன் ஜெயம்பெற்றுத் திரும்புவதற்கு முன்னே, தேர்த்திறமும் விற்றிறமுங்கொண்ட ஜெயவிஜயன் சத்துருக்களை எதிர் கோக்கிச் சென்றான். அத்தவேளையில் வீரமாலையணிந்த விசாலமார்பினராகிய சஞ்சத்தகரும் நவகோடி நாராயண கோபாலர்களும், யுத்தஞ் செய்யும்படியாகச் சேர்ந்து சென்று, காளமேக மண்டலத்தை அளாவிய தேரேறிவருகின்ற சத்தியசேனனுகிய தனஞ்செயன் பேரிலும் கருடக்கொடியினுற் சிறப்புற்ற பார்த்த சாரதியின் பேரிலும் தோமராயுத மெடுத்தெறிந்து, குதிரை யோட்டுகின்ற முட்கோலும் குதிரை பூட்டிய ஏர்க்காலும் குதிரைமாட்டிய தோல்வாரும் சிதைந்து அறும்படிக்கு முரண்கொண்டு மோதினார்கள். அவர்கள் அடிச்ச அடிபட்டு மனமுருகிய நீலமேகவண்ணனுகிய நெடுமாலானவர் நகைத்து, வெற்றிமாலைதரித்த புயத்தினை யுடைய சஞ்சத்தகர் முதலியபேர்கள் கரைகண்டு உடைந்து புரண்ட கடலைப்போல் தலைவிரி கோலமாயோடும்படிக்குத் தடையற கிற்கின்ற விசாலமாகிய விஜயனுடைய தேரை அவர்கள்பேரிற் செலுத்தி முனைபெற்றார். அப்போது குறையாத காளைப்பருவத்தினையுடைய அறுமக்கொடிதரித்த அர்ச்சுனனுடன் தாளாண்மைபெற்ற சித்திரசேனனும் மத்திரபாலனும் மற்றப் படைகளுங்கலந்து மிகுந்த போர் விளைத்திருக்க, அர்ச்சுனனுனவன் தன் தந்தையாகிய இந்திரனளித்த

பலம்பெற்ற பலவித பாணங்களினால் எதிரிட்ட வீரர்களை யெல்லாம் வெகு விநோதமாக மோதிக்கொன்றது மல்லாமல், முதலுள் யுத்த முதல் நாளதுவரைக்கும் நாள்தோறும் நடக்கின்ற யுத்தமுனை தோறும் போர்புரிந்து தன்னுயிரத்தவர்கள் போக, உயிர்பெற்றிருந்த இச்சஞ்சத்தகரையும் நாராயண கோபாலரையும் விண்ணுலக மேற் றும்படியாகப் பொன்னணி பூட்டிய வில்லெடுத்து, எங்காளு மிப் படை முகத்தைக் கண்மேறிட்டுப் பார்க்காது அவர்கள் கொண்ட எண்ணமும் பற்றமுடியும்படியாய் முன் பின் பாராமற் பருத்த பாணங்களைக் கொண்டு ஜாடினுன் புண்டரீகாக்ஷனுக்குப் பிராண பதம்போன்ற காண்டீபதரப் பார்த்தனவன். அவன்றொடுத்த கணை களின் மாட்டுதலினால் எதிர்த்துவந்த அச்சஞ்சத்தகர் முதலியோர் மிகவும் அஞ்சி, யுத்தபூமிமுழுதுங் குறைத்தலை முண்டங்களும் கழுகுகளுங் கூடிக்கொண்டு கூத்தாடும்படியாகவும், வயவீரருடைய சின்னங்களாகிய பீலிக்குஞ்சமுங் குடைகளும் அற்று வீழும்படியாக வும் அளவற்ற பராக்கிரமங்களைக் கொண்டு நடத்திய அர்ச்சுனன் போரைக்கண்டு பயங்கொண்டு, தேகம்விண்டு, சமர்த்தலம் விட்டு முதுகிட்டோடித் துரியோதன மகாராஜனுக்கு முன்பாகப்போய் அடித்து மோதி வீழ்ந்து முறையிட்டார்கள்.

துரியோதனனுக்குந் தருமராஜனுக்கும் யுத்தம்.

அப்போது தனக்கொருவரு நிகரில்லாத சாமர்த்தியமுள்ள தர ணீசனுகிய துரியோதன மகாராஜனவன் இவ்விதமாக முறை யிட்ட போர்களைப்பார்த்துப் பயப்படாதீர்களென்று திடஞ் சொல்லி, ஐயாயிரங் குதிரையும், நாலாயிரம் யானையும் அழிவில்லாத ஆயிரந் தேரும் அநேகம் பாதாதிகளுங்கொண்டு, மிகுத்த கோபவார்த்தை களைப்பேசி எதிரேறி வந்தான். இத்தப்பிரகாரம் வருகின்ற துரியோ தனனை வளைத்துக்கொண்டு கொடுங்காரிடிபோற் சீறி யுத்தம்பண் ணுவோமென்று மன உறுதியுட னிச்சயித்து முனைந்துபுகுந்தார், மனுநீதிக்கொரு நிலையென்றுந் தருமத்தினுக்கு உயிரென்றுந் தக் கோர் கொண்டாடும் மிக்கோனுகிய தருமராஜன். இந்தத் தருமராஜ னும் துரியோதனராஜனும் எதிர்த்து யுத்தஞ் செய்யத் தொடங்கிய போது, வெப்பமாகிய மதக்கவுட் குழியினையுடைய யானைகள் வேகம் பெற்றகுதிரைகள் வானமளாவியதேர்கள் சோனைத் தளிபோன்ற சேனைகள் இவைகளெல்லா முடுகி, வேலாயுதம் சூலாயுதம் காலை

கோலமாகியவிற்கள், கவண்கற்கள், வடிவாள் இவைமுதலிய ஆயுதங்களைக்கொண்டு பகைத்து, புள்ளாங்குழல்கள் போர்ச் சங்குகள் ஜெயதாரைகள் ஊதுகொம்புகள் பெரும்பறைகள் இவை முதலாகிய வாத்தியங்களெல்லாஞ் சப்தமேகங்களின் முழக்கம்போலுஞ் சலசலப்புற்ற சமுத்திரக்கோஷ்டம்போலுமதிர்ந்தன. இப்படி வேகம்கொண்ட சேனைகளை அவ்விருவரு கடாத்தியபோது கருங்தூள் செந்தூளை மூடி ஆகாயத்தைமறைக்க, பிரசண்ட சூரியகிரணமுமிருள் மூடிக்கொள்ள, வாயுவேகத்தினால் மேகங்களலைய, பஞ்சபூத வடிவாகிய பாரசைந்தாட, பெருக்கமாகிய ஆகாயகங்கை வறண்டு வண்டலாக, தேவர்களுறையுந்தெய்வலோகவீதி புழுதி நிறைந்துபடிய, பூரணச்சந்திரன் பொறிப்பொடியாய்க் கழிய, வரிசை வரிசையா யடுக்கிய அண்டமுகடும் இடிய, இவ்வாறு யாவுமல்லோல கல்லோலப்பட்டொழியும்படியாய்க் குதிகொண்ட குதிரைவீரர்களுடன். குதிகொண்ட குதிரை வீரர் குறுகிமலைந்தார்கள். குதிக்கையுற்ற யானைமறவர்களுடன், குதிக்கைபெற்ற யானை மறவர்கள் முனைந்தார்கள். அதிர்ச்சிகொண்ட பிரசண்ட வேகரதிகருடன், அதிர்ச்சிகொண்ட பிரசண்ட வேகாதிகர் அடித்துப் போர்கொடுத்தார்கள். நெருங்கியபதாதி வீருடன் நெருங்கிய பதாதிவீரர் பொருதினார்கள்.

அந்தவேளையிற் செம்பொன்னிலுற் செய்த சக்கரங்களின் கர்க்கரத்தொனி உக்ரத்துடன் முஷ்காஞ்செய்ய வராகின்ற விக்கிரம பராக்கிரமாகிய தருமராஜனுந் துரியோதனராஜனும் பொன்மலை யிரண்டு போர்செய்யப் பொருந்தியதைப்போல் இருவர் தேரையுஞ் செலுத்தியபோது, அந்தத்தேர்களிற் பதித்திருக்கும் நவமணிகளி ஞெளிவிரிந்த சோதிப்படல மேலாகப்பிரகாசிக்கவும், அத்தேரைச் செலுத்தும் வலவர்கள் கறுவிச்சினந்து கசந்து கண்சிவந்து கரும் புகை புகைந்து கனற்பொறிமலிந்து ரதத்தை மூடுக்கி விடுக்கவும், படாகாகக் கொடியும் படுமுரசக்கொடியும் படபடவென்று பரிந்து பறக்கவும், பயங்கிய வயவீரரிருவரும் பலம்பொருந்திய வில்லிலிருந்து உந்தும் பற்பல பகழிகள் மேகமுறையும் வானமுழுவதையும் மூடிவிடும்படியாகவும் போர்புரிந்தார்கள். இவ்வாறு தருமராஜனுந் துரியோதனராஜனும் ஒருவருடன் ஒருவரெதிர்த்து மாறுகப் பகைத்துச் சின்ன பின்னலாய் வன்ன வன்னமாகிய கணைகளை மின்னலிடியுடன் கலந்த மேகம்போற் பொழிந்து, சேனைகள் மனஸ்தாபமாய் அழிந்து போகும்படியாய் நெடுநேரஞ் சண்டைசெய்து

வரும்போது, தருமராஜன் கொடுத்த சாயகங்கள் துரியோதனன் விடுத்த கணைகளைத் தாக்கிப் பொடியாகப்போக்கி விலகச்செய்தன. உடனே துரியோதனன் கொதித்துத் துரிதமாய் விடுத்தடித்த வடிக் கணைகள் தொந்த மிட்டுச்சென்று, தருமராஜனேவிய அம்புக் கும்பு களை யெல்லாஞ் சாடின. இந்தப்படி முறைமுறையாய் ஒருவருக் கொருவர் இளையாமல், சளையாமல், உளையாமல், களையாமல், வளை யாமல் எதிர்த்து, சமனுக நின்று யுத்தம்பண்ணி, வீர கூரத்திரமும், மிகுந்த ஆத்திரமும், அடங்காக் கோபமும், மேலாகிய புயவலிமை யுங் கெடாமல், மேதவர்முதலிய யாவருங்கண்டு அரிதரிதென்று ஆச் சரியங் கொள்ளும்படியாய் அமர் புரிந்து, மாச்சரிய தீக்ஷண்யமுள்ள ஏழுவாளிகளைத் தருமராஜனெடுத்துப் பூசைகொடுத்துத் துரியோ தனனுடைய மார்புகிழிந்து, மாமிசங் கழித்து ஊன்வந்து, உதிரம் பொழிந்து சிதறும்படிக்கு விடுத்தார். அந்தக்கணைகளேழும் அந்த கன் அனுப்பிய சூலம்போற் பந்தெனச் சுழன்று வந்து, முந்திய துரியோதனன் மார்பிற்றைக்கத் துளைத்தது. அப்போது விரிந்து உயர்ந்த நீலமலையினின்று மெழுந்த இளஞ்சூரியனுடைய கிரண தாரைகளைப்போல அழகாய்ச் சொரிகின்ற இரத்த தாரைகளை யுடைய வணங்கா முடியோன் முகஞ்சுளிக்காமல் அலங்கரித்து, அகங்களித்து, நெற்றியிற் புருவநெரித்து, பற்கடித்து, ஸ்தானங் குறித்து, வில்லைவளைய விழுத்து, நொடிப்பொழுதில் மின்னற்கணை களை மேலாக விடுத்து, தருமராஜனுடைய வாகுவலய மணிந்த தோளைத் துளைத்து மார்பைக்கிழித்துத் தன்பப்படுத்தினன்.

இந்தப்பிரகாரம் இருவரும் எதிர்த்து, புயங்கள் அதிர்ந்து, உரங்கள்கிழிந்து, உதிரம்வழிந்து, தங்களுடலைத் தாங்கள் மறந்து பொங்கிய கோபப் பொருமலுடன் போர்புரியும்போது, வலிகிலை பெற்ற தருமராஜன் கலகலவென்று நகைத்து நான்கு கணைகளைச் செலுத்தினர். அந்தக் கணைகள் நான்கும் இடியஞ்சும்படியாய்ப் படீரென்றிடித்து, எங்கும் மின்னற்பிரகாசமாய்ப் பொங்கியெழுந்து, நான்கு பாணமும் நான்கு பிரிவாகப் பிரிந்து நாராசம்போ லெரிந்து, ஒருபாணமானது துரியோதனனுடைய பாம்புக்கொடியைப் பாழாக முறித்து, மற்றொருபாணம் ஓங்கியதேரை உதிர ஓடித்து, இன்னெ ருபாணம் சாரதிதலையைச் சட்டென்றறுத்து, வேறொரு சதுர்முக வெங்கணையானது குதிரை நான்கையுங் கொன்று சுவித்து, மாறு படா வேகத்துடன் கூறுபாடு செய்தன. அப்போது துரியோதன

ராஜன் தேரழிந்து, உடனே பூமியிலிழிந்து வேறுதேரேறி, தரும ராஜனுக்கு எதிர்வந்து நின்று வீராவேசம் விளம்பி, இதோ உன் னுடைய வீரப்பிரதாபம் யாவும் ஒழிந்து நீயும் அழிந்து போகப்போ கிறாய்பார்'' என்று சூரசம்மார வேலுக்கொப்பாகிய கைவேல் கொண்டு, கடுங்கோபத்துடன் கைப்பலங்காட்டி ஓங்கியெறிந்தான். அந்தவேலானது செந்தழற் கதுவித் தீப்புகைமலிந்து கொந்தணம் பொழிந்து பந்தெனச்சூழன்று வந்தவாறதனைத் தர்மசிந்தையான் கண்டு, தாம் கைக்கொண்டவாகை சிறந்தவரிவில்லிருந்து வச்சிரக் கணை முச்சிரக்கணை உட்சிதக்கணை முதலிய பாணங்களை ஒவ்வொன் றாய் விடுத்துத் தம்பேரிலது வரவொட்டாமல் தடுத்துப் போர் கொடுத்துச் சீரெடுத்துப் பார்படுத்துக் கடுகடுத்துவந்த காலையில், துரியோதனன் வேலானது தருமராஜன் விட்ட பாணங்களுடன் மோதி அண்டங்கலங்கப் போராடி, முனைமுறிந்து மோழையாய் முதல்தறிந்து கூழையாய் தரையில்வீழ்ந்த தாழையாய் குலைகழிந்த வாழையாய்ப் போய்விட்டது. தான்விடுத்த வேல்பிளந்து வீழ்ந்த விதத்தைக் கண்ட கந்தியாவட்டை மாலை யணிந்த ராதிபன் யுத்தம் விட்டொழிந்து, வடுப்பட்ட யானையைப்போல் மெலிந்து, உள்ள கொங்கு ராணமுற்ற காலையில், மறுபடியும் தருமராஜன் சினமுதிர்ந்து பத்து அஸ்திரங்களைத் தொடுத்து, அவருடைய தேர் குதிரை சாரதி முதலியவும் பொடியாய்ப் போக அடித்து, பத்துமலைகளுக்கு மத்தியிற் சிகரமற்றிருந்த சிறுமலையைப்போல் தலைகுனிந்து நின்ற துரியோதனனை நெருங்கிப் பார்த்து, ஆகாயத்தில் நிறைந்த தேவர் கள் ஆனந்தப்படும்படியாய் ஒருவார்த்தை சொல்லத் தொடங்கினார்.

" அளியதந்தமாலை யரசரவையிலு
னதிவஞ்சமா மனவனிகவர்வுற
வெளிவந்தசூதுபொருதவிரகரி
தெளிதின்று பூசலென முன்விரவினை
யொளிவிஞ்சு தேருமுடைய படைகளு
முடையுண்டு நீயு முறுதி தவறினை
தெளிவென்பதாசு மிலதுன்மனமுறு
செரு வென்றவீர மமையுமமையுமே "

" அனிலன் குமாரனரசசனி
யெனதுசன் சொல்வாய்மை பழுதுபடுமென
வுனையின்று கோறலொழி வதலது
நிணுரமென் கொலாகுமெனதுகணையெதிர்
புனை தும்பைமாலை சருகுபடவெழு
பொடிமண்டவோடி மறைக விரைவுட
னினியெங்களாண்மையுரைசெய்
தெதுபயனெதிர்வந்து காளையணிக விகலியே"

அப்பா தம்பி துரியோதனராஜனே! இப்போதுநாம், கடத்திவந்த செய்கை எப்பேர்ப்பட்ட தென்றால், வஞ்ச நெஞ்சுடைய உன் மாமன் எங்கள் செல்வத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று, வண்டு மொய்த்த மாலையணிந்த மன்னவர் கூடியிருந்த மகாசபையில் மண்டி போட்டு வாதாடிஜயித்த சூதல்ல. வில்லும்பாணமுங்கைக் கொண்டு யுத்தஞ்செய்து வெல்லும்படியாகிய சூட்சுமம். இதுயாவருக்கும் அரிது: அரிது. சூதுபோராடிச் செயித்த சகுனியின் தந்திரத்தை இந்தப் பாணப்போரில் வந்த விசனத்துக்குச் சரிப்படுத்தி நிரவிக்கொள்ளுங்கள். அன்னையதினம் ஜயித்த அம்மானெங்கே? தம்பி யெங்கே? ஐயோ! சுளுவாய் ஜயிக்கலாமென்று எண்ணிவந்தாயோ? ஐயா! உன்னுடைய பிரகாசம்பெற்ற தேருமு, பிரபலமாகிய சீருமு, கால் வகைப் படைகளும் நாசமடைந்து போயினவே; நீயும் யுத்தஞ்செய்ய வந்த உறுதிதப்பிக் கலகலத்துப் போனாயே! உன்னுள்ளத்தில் தெளிவாகிய தீரமென்பது எள்ளளத்தனையுமில்லையே! முதிர்ந்த போரில் ஜயம் பெறும்படியாக வந்த உன்னுடைய திறம்போதும் போதும். ஓடுமானே! ஆணிடிபோன்ற அனிலகுமாரனுகிய என்தமபி பீமசேனன் உங்கள் நூறுபேரையுங் கொல்லுகிறேனென்று கூறிய சபதவாக்கியம் பழுதாய்க் குறைவு படுமென்றெண்ணி இப்போது உன்னைக்கொல்லாமல் விட்டேனே யல்லது, உன்னுடைய உரத்தினுக்குந் திறத்தினுக்கும் பயந்து விட்டவனல்லன். உன்னுவென்ன செய்யலாகும்; இதோ நான் தொடுக்கப் போகின்ற கணையிலுள் நீ அணிந்திருக்கிற தும்பைமாலையானது சருகு பட்டெரிந்த சாம்பராய்ப்பொடிந்து போய்விடப் போகின்றது. நீ மெத்தவருத்த மடைந்திருக்கிறாய். ஆகையால், இன்றைக்கு ஓடிமறைந்து, காளைக்கு வந்து பகைபாராட்டி யுத்தம்பண்ணலாம். அப்பா! இப்போது எங்களுடைய

ஆண்மையை உன்னுடன் சொல்லி என்ன பிரயோசனம்? என்றுகுந்தி போசனுக்குப் பௌத்திரனும் குந்தி தேவிக்குப் புத்திரனுமாகிய மூரசம்கதனன் சொல்ல அந்த மொழியைக் கேட்ட துரியோதனன் அண்டம் அதிரும்படியாய்க் கரத்தைக்கொட்டி உரக்கச் சிரித்து, பருத்த கதையை எடுத்து, சத்தியவிரதத் தருமராஜனுடைய மார் புக்கு லட்சியம் வைத்துப் பலங்கொண்டெறிந்தான். அந்த கதை பணதபதைத்துச் சுழன்று வருவதைப் பாண்டுவின் முதற்புத்திரனு கிய நீதிமான் கண்டு, பதறுமல் மேன்மைபெற ஒரு வடிவேலை பெடுத்து, அந்தக் கதாயுதந் துறிந்து விழும்படியாயெறிந்தார். இப்படி தருமராஜனென்னுஞ் சத்திய விரத மெய்த்தவனெறிந்த வேலானது உடனே ஊழ்வினை சூழ்ந்துபாய்ந்ததைப்போற் பாய்ந்து, சாரதி குதிரைமுதலிய தேரையு மழித்து, அவனுடைய மார்பையுங் கிழித்து வாயில் உதிரம் வழிய வீழ்த்தியது.

இப்பால் அவனெறி வந்த நால்வகைச் சேனை வீரருந் தங்கள் நாயகனுக்கு நேர்ந்த விபத்தை நோக்கி, இவ்விடத்தில் மெய்த்தவ விரதனுகிய தருமராஜன் விட்ட வேலாயுதத்தினால் நமதுவேந்தனுகிய துரியோதனன் மாய்ந்தாற்போல் வீழ்ந்தான். இனி மேல் நமக்கு வெற்றியில்லை என்று யுத்தபூமிவிட்டுத் தங்கள் தங்கள் நால்வகைச் சேனைகளுடன் கிலையாய் கிற்பதற்கு தெரிகாடர் தோடினார்கள். இந்தச்சேதிகேட்ட ஆழமாகிய கடல்போன்ற அன்பினையுடைய அங்கதேசாதிபன் மோசம் வந்ததென்று விரைந்து, கீழது மேல தாய்க் கலங்கி ஓடிவந்தான். இப்பால் தென்னற்போரில் தந்தையைப் பறிகொடுத்துத் தளர்ந்து மெய்வருத்தத்துடன் வேசாறி யிருந்த அசுவத்தாமனனவன் கல்லடிபட்ட புண்ணில் கடியடிபட்டதன்மை போல் இச்சங்கதிகேட்டு, மலைகளைப் பொடியாக்கு மல்லுக்கிசைந்த விசாலமான உரம்பெற்ற தோள்களையுடைய துரியோதன மகாரா ஜன் தருமராஜன் வேலினால் வீழ்ததற்காக மெத்தவருந்தி, விரை விற்றேர் செலுத்தி இரவிலுதித்த சூரியனைப்போல் வந்தான். வேட்டையாடுங் காட்டில் வெருண்டோடுங்களிற்றினை போன்ற கெடி ஸ்தலாதிபனனவன் தருமராஜன் கைவேலால் தேர், குதிரை, சாரதி முதலாகிய சகலமும் அழிந்து, பொறிமறந்து, புலனிறந்து, பொடி மலிந்து, உரங்கிழிந்து, சிரம்வளைந்து உலைந்து வீழ்ந்தானென்று கேட்டுங்கேளாததற்கு முன்னே, வாட்டங்கொண்டு ஓட்டமாயோடி வந்தார் கிருபாசாரியானவர். மேலும், ஏகசக்ராதிபதியாய் உலகத்

தைக்காக்கும் ஆக்ஞாச் சக்கிரம் பெற்ற அரவத்துவஜாதிபனுடைய நந்தியாவட்டை மாலையணிந்தமார்பிற் சத்தியவிரதனேவிய கூர்மை வேலானது தாக்கியதென்று கேட்ட முன்னே, தானீன்ற சேய்ப் புலிக்கு இடையூறு வராமற் பாதுகாக்குந் தாய்ப்புலியைப்போற் பாய்ந்து,சாய்ந்து கிடக்குந் துரியோதனனுக்கு அருகிற்சல்லியராஜன் வந்தான். இன்னுமுள்ள தம்பிமார் முதலிய பேர்களும், பக்குவமாகிய எப்பெருஞ்சேனையும், எக்குலவேந்தரும், ஏகமாய்க் கூடி, ஒப்புவமை இல்லாத தருமராஜனை வளைத்துக்கொண்டு சரமாரிபொழிந்தார்கள். அந்தவேளையில் அர்ச்சுனராஜன், பீமராஜன்,நகுலராஜன், சகாதேவ ராஜன் ஒப்பற்ற தாணிபாலராகிய ராஜவீரச் சேனைகள் யாவரும் மூசாசக்கொடி அரசனுக்குத் துணையாஞர்கள். இருபடைச் சேனை நாயகரும் இருதிறச் சேனைவீரரும் இருபாலாகப்பிரிந்து, அழற் படை முதலிய அஸ்திராசஸ்திர ஆயுதங்களைக் கொண்டு சொரிந்து, ஒருவரோடொருவர் கலந்து, போராடிப் பார்த்து, வாடியிளைத்து, காகக்கொடிபடைத்த நராதிபனை இழுத்துக்கொண்டு, ஓங்கிய சேனைப்படை முதலாய்த் தாங்கள் கைக்கொண்ட ஆயுதங்களெல் லாம் அவ்விடத்திற்பறிகொடுத்து, மிகுந்த துக்கத்துடன் புறங்கொடு த்து உடைந்து பாடி வீட்டுக்குப் போனார்கள். இவ்விடத்தில் பீமனும், இந்திரகுமாரனுகிய அர்ச்சுனனும், ஆயுள் வேதியர் புத்திரன் நகுல சகாதேவர்களும், தர்மநீதி பதியாகிய தருமராஜனும், தங்களுக்குரிய சேனபதியுடன் சேர்ந்தசேனைகளும், யானை, குதிரை, தேர் முதலிய னவும் அமர்க்களம் விட்டுச் செருக்கடைந்து பாசறைக்குத் திரும்பி னர்கள். அப்பாற் சத்தியமேவயம், தருமமே ஜெயம், நித்தியமே நயம், நிஷ்டூரமே பயம், என்னுந்தரும ராஜனுடைய ஆண்மையையும் சவுரியபராக்ரமத்தையும் நன்னிலையையுங்கண்டு வெருண்டு பயந்து புறங்கொடுத்தோடிய போர்வேந்தரைப்போல் ஓராழித்தேரோனுகிய சூரியன் பின்னிட்டுப் போன தன் குமாரனை நினைத்து வருந்தி, அலைகள் பொருந்திய மேற்குச்சமுத்திரத்தில் அவலமனத்தினனுய்ப் புகுந்து மறைந்தான்.

பதினேழும் போர்ச் சருக்கம் - முற்றிற்று.

பதினேழாம்போர்ச் சருக்கம்



கண்ணன் துதி

அகமமதை கொண்டொருமூன் றுலகினையு
மொருகுடையி லரசுசெய்து
நிகழுமா வலிபாலோர் வாமனமாய்ச் சென்று நிரப்
புற்ருன் போல
இகழுமொரு மூவடிமண் கொண்டவனெஞ் சகமடக்கி
யிமையோர் போற்றச்
சகமதனிற் பூமாதும் புலிமாதும் போற்றவெழு
தாணு போற்றி

ஓ கனமேவிய சுகபோஜனே! ஜனமேஜய மகாராஜனே! கேளும்: நமதுகுமாரன் சேனபதித்துவங் கொண்ட பதினேழாவது நாள் யுத்தம் பயன் படாமற் பாழாகியதே யென்று வருந்தி மறைந்த சூரியனுவன் இராக்கால முழுதும் இளைப்பாறி யிருந்தும், விடியற் காலத்திலெழுந்து, இன்றைக்கும் யுத்தம்நடத்தப் போகின்ற தன் பிள்ளையாகிய கர்ணன் மேலுண்டாகும் புத்திரவாஞ்சையினுலும், ஆசைப் பெருக்கத்தினுலும், சாமர்த்திய சந்தோஷம் அநுபவிக்கும் படி வந்தவனைப்போற் கிழக்குத்திசைக்கடல் முகட்டினுதித்து, தன் குமாரனைக் கண்ணுகிய கிரணங்களினும் பார்த்து, தன்னைக் கைதொழும்படியாய் நேர்புகுந்தான். இவ்விதமாக யாவருந் தொழுதற்குரியவனுகச் சூரியன் கிழக்குத்திசையில் உதயகிரிமே லுதயமான உடனே, நேற்று நடந்த நெடும்போர் முனையில் யுத்தஞ்செய்து நிர்வகிக்க மாட்டாமல் அமர் விட்டு அகன்றுபோன அரவக்கொடி யோனைச் சார்ந்த அவனிப ரெல்லோருங் கமர்வெடிப்பான கடுஞ்சுரம்போற் கொதித்து, கடுங்கோபங்கொண்டு குதித்து, பதினேழாநாட் காலமே தங்கள் தங்களுடைய நித்தியகர்மங்களை முடித்துக்கொண்டு, அகில புவனமும் இன்றைக்கு அடியோடே அழியுமென்று அயன் முதலாகிய தேவரும் மற்றியாவரும் மயங்கித் தியங்கும்படியாய், ஒருமுகச்சங்கு, இருமுகச்சங்கு, வலம் புரிச்சங்கு, இடம்புரிச்சங்கு, தவளச்சங்கு,

குவளைச்சங்கு, நத்தைச்சங்கு, குடமுழைச்சங்கு, வெற்றிச்சங்கு, வீரச்சங்கு, மங்களச்சங்கு, இடக்கை, உடுக்கை, தப்பட்டை, உறுமி, பேரிகை, பம்பை, மத்தளம், முரசு, முருடு, முழவு, பெருந்துடி, தண்ணுமை, திண்டிமம் சல்லரி மல்லரி சச்சரி தக்கை தடாரி திமிலை தூரியம் குடமுழா நெய்தற்பறை தாரை பூரி வீரகாளம் மாரகாளம் கோணக்கொம்பு இவை முதலாகிய பலவகைத் தோற்கருவி துளைக் கருவி ரம்புக்கருவி கஞ்சக்கருவி மிடற்றுக்கருவிகளினு லுண்டான வாத்தியங்கள் கடல் முழக்கம்போல் அதிர, பாற் கடலிலெழுந்து விழுந்த கொழுந்தலைபோன்ற கற்றையாகிய வெண்கவரிகள் வீச, ஆலவட்டம், தாலவட்டம் தொங்கட்டம் அரசிலைவட்டமுதலியன வும் அசைந்தாட, மகரதோரணம் மேற்கட்டி புட்பவிதானம் இவை கள் பிரகாசிக்க, பெரியஜண்டா சிறியஜண்டா வெள்ளைக்குடை விருதுக்குடை முதலிய பலவகைச்சின்னங்களிக்க, பலவகைக் கொடிக ளும் பிடிக்க, காகத்வஜம் வாகைத்வஜம் மேகத்வஜம் தேர்த்வஜம் போர்த்வஜம் யானைத்வஜம் சேனைத்வஜம் குதிரைத்வஜம் சதுரத் வஜம் கம்பத்வஜம் சம்பத்வஜம் கச்சைத்வஜம் பச்சைத்வஜம் வீணைத்வஜம் இவை முதலாகிய துவஜங்கள் தழைக்க, பஞ்சமேள வாத்தியங்கள் தொனிக்க, பற்பல ஆயுதங்களுடன் யுத்தகளம் வந்து சேர்ந்து சத்துருக்களை அழைக்கும்படியாகிய சமர் பூமிக்கு வந்தார்கள்.

இதுகாறு கடந்திருக்கின்ற பதினறுநாள் யுத்தத்திலும் இறந்து நீங்கிய பற்பல சேனைகளெல்லாம் இன்றைக்கு உயிர் பிழைத்து எழுந்துவந்த தென்று சொல்லும்படியாய், அளவற்ற வர்ணங்களை யுடைய அசேகங் குதிரைப்பந்திகளும், பலவகையாகிய பெரிய தேர் நிரைகளும், கோடாகோடி மலைகள் போன்ற மதயானைகளும், ஈடாக யெவைகளையுஞ் சொல்லப்படாத பதாதிகளுஞ் சேர்ந்து, விண்டல மும் மண்டலமும் எண்டிசையும் ஒன்றுந்தெரியாமல் மேகஜாலம் போற் கவிந்து, காகமுதலிய கழுகுகளார்ந்த வெங்களமுழுதும் நிறைந்து நின்றார்கள். அந்த வேளையில் ஆஜானுபாகு வெண்ணுந் தாதாவாகிய கர்ணனவன் பூஜாவிதி முதலியன முடித்துக்கொண்டு சூரியநமஸ்காரஞ் செய்து, பெரியோர்களை வணங்கி, அசேகதான தர்ம பரவுபகாரங்களைச்செய்து, மகாமகிமையுற்ற புவன சக் ரேஸ்வரனுக முடிபெற்ற துரியோதன மகாராஜனுடன் தேரேறி, போரேறுபோல் யுத்தகளத்திற்கு வந்தான். யுத்தகோலசிங்காரஞ்

கொண்டுவந்த அந்தக்கர்ணனுடைய அழகு எத்தன்மையாயிருந்த தென்னில் சிரத்திலணிந்த சுவரத்ன கஜித மகுடமானது எட்டுத்திக்கும் ஒளிவிட்டுப் பிரகாசிக்க, இரண்டுகாதிலும் அணிந்திரா நின்ற மணிக்குண்டலங்கள் இரவிபோற் சோதிகாட்டி அசைந்தாட, புஜகீர்த்தி கடகசுங்கணம் தோளணிமாலை வாகுமாலை பாஜிபந்து விரலாழிகள் விரற்சாடிமுதலாகிய ஆபரணங்கள் மின்னிக்காட்ட, முத்தாரம் ரத்னாரம் மோகனமாலை தும்பிப்பதக்கம் மகரகண்டிகை முகதாளிப்பதக்கம் உத்திரசஞ்சம் தும்பைப்பூமாலை தாமரைப்பூமாலை அரைப்பட்டிகை உருக்குக் கவசம் எழுகுகவசம் வஜ்ஜிரக்கவசம் சரிகை வேலையிட்டு ரவைகள் பதித்த நடுக்கட்டுப்பட்டிகை இவை முதலியனவும் ஜொலிக்க, பொன்னுலாகிய மணிகள் பதித்த வீரகண்டாமணி வெயில் வீசிச் சப்திக்க, தலைகிறைந்த கருங்குழல் பின்புறத்திற் பின்னலிட்டுச் சுருண்டு மெருகுகாட்ட, புஷ்டியாகியமீசைகளும் கன்னப்பரிசையும் செவிக்கறலும் ராஜபயங்கரத்தை விளைக்க, நெற்றியில் விபூதிரேகையும் ஜவாது திலகப்பட்டையும் செந்தூரப் பொட்டும் காந்தி செய்து சிறக்க, அணிந்திருக்கும் உத்தரீய முதலிய வஸ்திரங்கள் இந்திரப்பட்டென்று இலங்க, தன்னைப்பெற்ற தந்தையாகிய சூரியனைப்பார்க்கிலும் விந்தையாகிய செந்துகிர்வடிவம் விளங்கிச் சுடர் வெயிலெரிப்ப இன்னும் பற்பலவிதமாகிய போர்க்கோல அலங்காரத்துடன் கர்ணன் இருந்த அழகைக்கண்டு கண்களி கொள்ளாதபோர்களுயார்? அந்தரத்திலருஞ்சமர் வேடிக்கை பார்க்க வழக்கப்படிவந்த அமரர்களுங் கண்டு கண் களிகூர்ந்தார்கள். அவ்வவ் வமரர்களுந் தனித்தனி யூர்ந்துவந்த விமானங்கள் ஆகாயவெளி யெங்கு நிறைந்து பரவியிருந்தன. சுத்தவீரர்களை யெல்லாம் இன்றுகாணலா மெனக் களித்திருந்தார்கள்.

அங்கராஜனுமரவக்கொடியோனு மமர்க்களத்
துற்றகெம்பீரங்கண் டையுற்ற தருமராஜன்
கண்ணனைத் துதிக்க, அவர் மேல்நடக்கு
நிச்சயங்கூறித் தேற்றுதல்

இப்பால் இவ்வளவு தொகையென்று சொல்லுதற்கரிதாகிய பாண்டவர்களின் பதாகினிக் கூட்டமும் உயிர்க்குயிராகிய பீமார்ச்சுன சகுலசகாதேவ ரென்னுந் தம்பிமார்களும் காசாம்பூவின்நிறம்

பெற்றுக் களாப்பழத்தினழகுவாய்ந்த திருமேனியையுடைய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும்தர்மசொரூபியாகிய தர்மராஜனும் சகலவாத்திய விருதணி விசேஷங்களுடனே பெருங்களப் பரப்பில்வந்து பெரிய கொடிகள் நாட்டி, படைகள் முதலிய மன்னரை அணிபெற நிறுத்திக் கூட்டி, மகாபராக்ரமத்தோடு நின்றார்கள். அப்போது தர்மராஜன் தேர்விட்டிழிந்து, திரு நீற்றின் ஒளியுஞ் செந்தூரத்திலகமும் பிரகாசிக்கும்படியாய்விளங்கி, முன்னந் தேவர்கள் முதலிய பெரியோர்களுஞ் சகலஆத்ம கோடிகளும் பிழைக்கும் படியாய்க் கடலிற்பிறந்த ஆலகாலவிடத்தை அமுதாகவிழுங்கி அதனுற்கறுத்த கண்டராகிய கறை மிடற் றண்ணலைக் கருத்திலிருத்தி, துரியோதனின்ற பெருக்கத்தையுங் கர்ணனிருந்த கெம்பீரத்தையு நோக்கி, பலாஷ்டகனுகிய அர்ச்சுனன் தேர்மேற்சாரதித்தொழில் கொண்டிருந்த தண்ணிய நீலமேனிச் சாமளவண்ணனை, சாத்தகிக்கு அண்ணனை வாசனை புதைந்த மதுகிறைந்த திருத்துளவ மணிந்த மாதவனை கொத்தடிமை குடியடிமையாய் வழிப்பட்டு, தாசத்துவம் புகுந்த பேர்களுக்கு உற்றதுணையாகிய அப்பக்தவத்சலனைப் பார்த்து, விசாலமாகிய இருதயமுங் கண்களும் முத்து முத்தாய் ஆனந்த பாஷ்பந்துளிக்கச் சுவாமிகள் திருவடிகளை மனதினுல் வணங்கி, எங்களுக்கினங்கிய பேரின்பமே! இன்றையப்போரில் இரவிகுமாரனுகிய கர்ணன் வாணுலகஞ் சேர்வானு? எங்களைவாட்டி வெற்றிபெறுவானு? அதனை யெனக்குத் தெரியச்சொல்லும்" என்று முரசகேதனன் கேட்க, ஓ தருமஸ்வரூபியே! ஒளதாரியனுகிய சூரியபுத்திரன் இன்றையதினம் அர்ச்சுனன் பாணத்தால் இறந்துபோவான். நாளையதினம் வாயுபுத்திரனுகிய நமது தம்பீமசேனனுல் துரியோதனன் வெம்பிச்சாவான். அஸ்திரபுரியும் நாற்கடல் சூழ்ந்த எண்டிசை அவனியும் உமக்குச் சொந்தமாம்." என்று சிறியவணுவும் பெரிய அகண்டமுந் தானுகின்ற அருள் நிறைந்த செந்தாமரைக் கண்ணனுகிய திருமால் திருவாய் மலர்ந்தருளிய இனிய சொல்லென்னும் அமுதம் தர்மராஜனுடைய காதினூறவே, மனந்தெளிந்து, மதிநிறைந்து, கவலை நீங்கி, கருணையோங்கிய சாசாம்பூவண்ணனைக் கண்களிக்கப் பார்த்துச் சொல்லுவதாயினர்.

கொடிய சர்ப்பக்கொடி பிடித்த துரியோதனன்செய்த வஞ்சனையாகிய கடலில் வீழ்ந்து ஆழ்ந்து மாய்ந்துபோகாமற் கருணையளித்து எடுத்து எங்களைக் கரையேற்றி அழகிய பூமிமுழுது

மாளும்படியான அகண்ட ஐஸ்வரியமும் அணிமணிப் பணியோடு குடைமுதலிய கதிர்முடியுந் தந்த அத்தனே! எங்கள் தந்தையர்கிய கர்த்தனே! எங்களுடைய அழியாமானமும், பழியா ஆண்மையும், அளவில்லாத பெருங் கீர்த்தியும், நிலைபெறச்செய்யுந் தெய்வம் தேவரீ ரேயல்லது வேறில்லை. நாங்கள் அநாதையாயிருக்கின்றோம்" என்று சொல்ல அதைக்கேட்ட அருளாழி முகுந்தன் புன்னகைகொண்டு, "ஓ மன்னனே! கேளும், என்னுலென்னமாளும்? நானென்ன செய்தேனுளும்? எல்லாம் உம்மாலாகிய சத்தியமேயன்றி வேறில்லை என்று சொல்ல, அந்தச் சொல்லைக்கேட்ட மூசகேதனன் மெத்த வருந்திச் சித்தம் பரிந்து, "ஓ உத்தமனுகிய உரகசயனு! செய்து எழுபிறப்புப் பிறந்தாலும் உம்முடைய நற்றுணையைநாங்கள் மறக்க மாட்டோம். ஹரி! ஹரி! என்னப்பனே என்னையனே! நாங்கள் பால்யரா யிருக்கும்போது தீக்காய்ந்த சிந்தைவாய்ந்த துரியோதனன் கங்காநதியிற் புனல்பாய்ந்து விளையாடும்படிவிட அப்போதவன் பீமனைக்கொல்லும்படியாகக் கலத்துக்குட்புதைத்து வைத்த வசிமுனையில் ஒருவண்டுபோற்சுழன்று அந்த பீமன்சாகாமல் ஆருயிர் பிழைக்க அருளளித்தைக் காத்தீர். ஓ எங்களுயிர்க்குயிராகிய உத்தமனே வீரகண்டை ஆர்ந்த அரசர் திருந்திய இராஜசபையில் நாலு பேரைப்போல் நாங்களும் பார்த்திருக்கத திரௌபதையை வஸ்திரபங்கம் பண்ணியபோது, துன்பத்தால் மெலிந்து துயர்கூர்ந்து இரைந்து மானமும் மனமுமறந்து, தேவரீருடைய திருவடிக் கடிமையாய்த் தேகாபிமானமும் நீத்துத் தியானம் பொருந்திச் சிந்தித்த கர்ப்பூர தீபம்போன்ற பாஞ்சாலிக்கு, நாணமூந்துகிலும் கலம்பெற அளித்துத் திருவருணோக்கினுல் அருள்செய்து காத்தருளினீர்."ஓ தேவாதி தேவனே! நாங்கள் பன்னிரண்டு வருஷம் வனவாசந் தொலைக்குங் காலத்தில், சத்துருவாகிய துரியோதனனுடைய உத்தரவினுல் கடும் பசிவருத்துகிறதெனக் கவலைகொண்டு வந்த துருவாசரென்னுங் கடவுண் முனிவனுடையகோபமும் அதிதாபமும் பசியுந்தணித்து, எங்களுக்கு வருத்தமாகிய சாபமும் வாராமல் தடுத்து மநோபயத்தை நீக்கியாண்டீர்.

"ஓ பரமாத்மனே! எம்மை ஒருபொருளாக யெண்ணிச் செம்மையற்ற துரியோதனனிடத்தில் தூதாக நண்ணி, விதுராராஜனுடைய நிகரற்றவில்லை முறிப்பித்து, சந்தேகத்தால், அஸ்வத்தாம

னுக்குச் சேனுபதிபட்டம் ஆகவெட்டாமற் கெடுத்து, தேனலர்ந்த நந்தியாவட்டை மாலையணிந்த துரியோதனனுக்குத் துணையாகிய பலங்களையெல்லாம் அபலப்படுத்தி, அவன் நடத்தப்போகின்ற ரகசியங்களெல்லாவற்றையும் அறிந்து, அந்தக்காரியங்களுக்குத் தகுந்த சுள்ளாணிவைத்து, அநுகூலமாகிய சகல வினைகளும் பயந்தீர். "ஓ ஞானஜோதியே! முதல் முதல் யுத்தத்திற்கு வரும்போது பதினெரு அக்ரோணிசேனைகளையும் பெரியோராகிய பிரமுகர்களையுங் கண்ட பயத்தினுலேயோ, அல்லது இவர்களை எப்படிக் கொல்லுவது என்கிற ஜீவகாருண்ய இரக்கத்தினுலேயோ, அஃதெப்படியோ எனக்குத்தெரியாது மெத்தவருந்தி ஆயுத முதலாகிய தனுர்ப்பாணங்களைப் போட்டு விட்டு இரங்கிய வர்ஜுனனுக்குத்தவறியான போதகைகளை உபதேசித்து, யுத்தஞ்செய்யமாட்டேனென்று சொன்னவிஜயன் மறுபடியுந் திடங்கொண்டு தீரத்துடன் எல்லோரும் நாசப்படும்படியாய் நானே கொல்லுகிறேனென்று சொல்லிப் புறப்படும்படியாய்ப் போதனை செய்தவிட்டீர்! ஓ இந்திரஜாலகந்தரனே! ஆயுதம் பெடுப்பதில்லையென்று அரசனுக்குச் சொல்லிய ஆணை பலிதமாழிதாகி, ஐயா அவர்களாகிய பிஷ்மருடன் எதிர்ந்து எங்களுக்காசப்படாடேட்டு, பார்த்தசாரதியாகத் தேரூர்ந்து, சண்டிசெய்த தவம் வீணாமல் கிறைவேறும்படியாய் முன்னிறுத்தி, பூதாதை மூடிசாயும்படி முடித்தீர். ஓ நித்ய சத்தியனே! ஒருநாள் யுத்தத்தில் ஏழுமணிபோழ்ந்து ஏழுறுப்புயர்ந்தயானைமேல் வந்த பகதத்தனுனவன் அர்ச்சுனனுடைய மார்புகிழிந்து அதனுல் அவன் இறக்கும்படிக்கு எறிந்த வேலாயுதத்தை, திருத்துளவார்ந்த தேவரீருடைய மார்பிற்றாங்கிக் கிராயுதன் நானென்று ஞாயபெண்பித்து நிர்விணமாக்கி வைத்தீர்! ஓநேசனே! போராடும் படைகளெல்லாம் பொர்ந்து, களைந்து, பொடிந்து, மடிந்து போகும்படி பொருபடையுடைய அரசரெல்லோரும் பொன்றிக்குன்றிச்சாகும்படி யுத்தஞ்செய்து, வகைமோசத்தால் இறந்த வாளபிமன்னனைக் குறித்துப் புத்திரசோபத்தால் ஆத்திரப்பட்டு அர்ச்சுனன்கூறிய சபதமானது அரசர்களுக்கு முன்பழுதுபட்டு அபஜயமுறுதல் அதற்கு வேண்டிய படங்கட்டும்படியாய் அர்த்தராத்திரியில் அர்ச்சுனனை அழைத்துக்கொண்டு சயிலயங்கிரிக்குச்சென்று, அளவற்றபராக்கிரமத்தோடுகூடிய பாசுபதம் பெற்று, அகிலமனைத்துங் கொண்டாடும்படியாய் எங்கள் பாக்கியம்போலுற்றீர்.

ஓ சங்கரநாராயணமூர்த்தி! வருணன்மகனுகிய வல்லவன் அர்ச் சுனன்பேரி லெறிந்த வெவ்விதாகிய உக்குக்கதையைக் கிருபையாகத் தேவரீருடையமார்பிற் புதையும்படியா யேற்றபோது, அந்தக் கதை யானது கல்லின்மேல் வீழ்ந்த பந்தென எழுந்துபல பொடியாய்த் தெறித்து திரும்பித் தன்னையெறிந்தகாடாளன் பேரிலேயே விழுந்து தாக்கி, அதனுல் அவன் அழிந்து சொர்க்கலோகம் புகும்படியாகச் செய்தீர். ஓ நிர்மலானந்தனே! கல்ல தருணமாகிய பதிகாலாகாள் யுத்தத்தில்மத்தியான வேளையில் தடாகமேற்படுத்தி, அந்தத் தடா கத்தில் தண்ணீர் குடிக்கவந்த சத்துருக்களின் சயின்ய முதலிய சகல ருஞ் சந்தைக்கூட்டமாகக் கூடியிருக்குஞ் சமயத்திற் சங்கமுழக்கி, வாளாயுதம் பிடித்த கிருபர் முதலிய பேர்களெல்லாரும் பங்கப்படும் படி செய்தீர்! ஓ காளிங்கநடன பாதனே! அபிமனைக் கொன்றபழிக் குப்பழி வழியாய் முடிக்கும் படியாய்ப் பதிகாலா காள் யுத்தத்திற் சூரியனை மறைத்து, இருளை அழைத்து, எதிரியைக்கெடுத்து, சபத முடித்து, தனிப்பழியைத்தீர்த்தீர். ஓ சந்திர சூரியரென்னுஞ் சங்கு சக்rயுதனே! இதோ நேற்றுப் பதினைந்தா காள் யுத்தத்தில் யாவ ரும்எஞ்சித், துஞ்சிச், கெஞ்சிப் பஞ்சாகும்படி செஞ்சா மாருதம் போல் அஞ்சாமற் றொடுத்த அஸ்வத்தாமனுடைய ஓர் உக்ர அஸ்தி ரத்தினுல் காங்களைந்துபேரும் எங்களைச்சேர்ந்த உறவினரியாரும் அழியாம லிருக்கும்படியாய் யோசித்து எங்களை வாகனங்களில்விட் டிறக்கி,கையிலிருந்தவிற்படைவேற்படைவிட்டு இருகரத்தையுஞ்சிரத் திற்குவித்து நிற்கும்படி செய்து, அந்த அஸ்வத்தாமன் விட்ட அஸ்திரத்தை அபலமாக்கி நீக்கிவைத்தீர். ஓ அமலவாகந்தனே! போர் தொடங்கிய முதல் காள் யுத்தத்தில் பீஷ்மர், துரோணர் இவர்க ளிடத்திற்கு எங்களை அழைத்துப் போய்க் குறைசொல்லி அவர்கள் இறக்கும்படியாகிய நிரியாண நிச்சயங் கேட்டு, பீஷ்மரைப்பத்தா காளிலும், துரோணரைப் பதினைந்தா காளிலும், முடித்துவைத்தீர். ஓ மும்மூர்த்தியும் ஒன்றுகிய மூர்த்தியே! ஓகாலாதீதமானவனே! ஓவேதமுணர்ந்த வேதியனே! பாரிற்பொருந்திய மாந்தர் முதலான வேந்தரும், நற்றவத்தோராகிய உத்தமத் தேவரும் அறியக்கூடாத உமதுசெயல் அற்பமாகிய எம்போலியரால் அறியத்தக்கதோ? ஓ ஆதியநாதியே!" என்று அறன் குமாரனுகிய தருமராஜன் அன்பு நிறைந்த அநேகவிதஸ்துதிகளைச் சொன்னுர். அந்த வேளையில் ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திக்குக் கருணை பிறந்து, கடாக்ஷ வீக்ஷணியக் கண்ண னுகிய தருமராஜனைப் பணிந்து, இருகரத்தினுலுந்தழுவி, "வந்தலே

நீங்களேவரும் இப்போது நடக்கிறயுத்தத்தில் இறக்கமாட்டீர்கள். உங்களுக்கொரு சிந்தனையுமில்லை! பயப்படாதீர்கள்" என்று ஆசீர்வசனம் பலவாகச் சொல்லி, நடனமமைந்த குதிரைகள்பூட்டிய தேரையுடைய சேனாதிபதியென்னுந் திஷ்டத்தூய்மனைப் பார்த்து, "எமது படைகளையெல்லாம் அணிவகுத்து வையு" மென்று உத்தரவு செய்தார். அண்ணலாகிய திஷ்டத்தூய்மன் அந்த அரளாளனுடைய அருள்வாக்கின்படி சத்துருக்கள்பயப்படும்படியாய்ப் பேரணிவகுத்து நின்றான்.

சல்லியராஜனைத் தனக்குச் சாரதியாக்குவிக்கும்படி கர்ணராஜன் துரியோதனராஜனைக் கேட்டுக்கொள்ளுதல்

இவ்விதமாகப் பாண்டவர்களுடைய பதாகினி வெள்ளம் பேரணியாக ஏற்படுத்திய பெருமிதத்தை, சொல்லவல்ல திறத்தையுடைய வில்லையும் வெள்ளைக் கொடி முடித்தேரையுமுடைய அங்கதேசத்தலைவன் கண்டு படபடப்புக்கொண்டு, படம்பொருந்திய பாம்புக்கொடிபடைத்த துரியோதனனைப்பார்த்து, "ஓ குருகுல நாயகமே கேளும்!" என்று குதிரை பூட்டிய தடந்தேரினையுடைய கோவேந்தர் பலருங்கேட்டுக்கொண்டாடும்படி "ஓ கைதேர்ந்த பலவித ஆயுத வல்லபங்களில் வேறெந்த வீரருக் கொப் பொதிருக்குங் கட்டாண்மை பெற்ற துரியோதனனென்னுங் காவலனே! வாசமாலை யணிந்த புஜபலவீரருடைய தலைகளெல்லாம் உருண்டு போய்த் தரையில் உடலாகிய கவந்தங்கள் கூத்தாடும்படியாய் இத்தக்ஷணத்தில் இப்போதே பாண்டவரை வென்று ஜயம் பெறுகிறேன் பாரும். அல்லாமலும்,

"கார்ப்பாக சாதனன்றன் மகனுக்கெல்லாக்
கலகமுஞ்செய் வஞ்சனையே கற்றகள்வன்
தேர்ப்பாகனாய் நின்ற னவனுக் கொப்பார்
தேவருலகினு மில்லை திசைகளெல்லா
மார்ப்பாக மோதிவருங் கவனமாநெஞ்
சறிவானும் போரில்விர கறிவிப்பானும்
போர்ப்பாகாய்த் தேர்கட்வு செயல் வல்லானும்
பூனைதாம சல்லியனே புவியிலன்றே."

"அவனின்றென் மணிநெடுந்தேர் கடவுமாகி
லருச்சுனனுக் கடலாழி யவனேயன்றிச்
சிவன்வந்து தேர்விடினுங் கொல்வேனந்தத்
தேர்கின்ரு ரிருவரையுஞ் செங்கோல்வேந்தே
பவனன்சேய் முதலான தூணவரோரோர்
பகழிமூனை தனக்காற்ரூர் பரவையாடைப்
புவனங்க ளனைத்தையுகின் குடைக்கீழாக்கிப்
புரிதிறல்வா கையுகினக்கே புனைவிப்பேனே"

கேளுந் தூரியோதன மகாராஜனே! மேகவாகனனுகிய இந்திர குமார னென்னும் அர்ச்சுனனுக்குத் தூணைசெய்யும்படியாய் எல்லாக்கலக ழும் விளைப்பதற்குவஞ்சங்களை நெஞ்சுறக்கற்று உருவாகிவந்த மாய னுகியகன்வன், அப்பார்த்தனுக்குச் சாரதியாய் அமைந்திருக்கின் ரூன். அதனலே அந்த அர்ச்சுனனுக்கு ஒப்பாகியபோர்கள் மண்டல முதலாகிய விண்டலத்திலுமில்லை. அவனுடன் சண்டையிட்டு வென்று வரத்தக்கவருமில்லை. ஆகையால் அத்தப்பார்த்தனுக்குச் சமைந்த சாரதியைப்போல் எனக்கும் ஒரு சாரதி கிடைப்பானுகில், உமக்குநான் அணிமுடி சூட்டி ஆசையாய்ப் பார்ப்பேன். ஆனதால், தஞ்சமென்றடைந்த அப்பஞ்சபாண்டவருக்கு அஞ்சலென்றருளித் தேர்ப்பாகனுகப்பொருந்திய அஞ்சனமேனி வஞ்சகனைப்போல் தேர் விடுவதற்கு நம்மிடத்தில் ஆரிருக்கின்ரூர்களென்று கேட்பீராகில், ஓ அரசர்க்கரசாகிய அணியாய்ப் புரசைக்களிறேறிய மணியே! கேளும் திசாதிசைகளு நடுங்கி ஓடுங்கும்படியாக ஆர்ப்பரித்து வேக மாய் அரைகொடியில் வலம்வருகின்ற அஸ்வங்களுடைய மனத்தை அறியத்தக்கவனும், எதிராளிகள் செய்யும்போர்த்திறத்தை அறிந்து சமயோசித சூக்ஷியை எனக்குத் தெரிவிக்கத் தக்கவனும், குவிந்த சேனைகள்பேரிற்சுவிந்து தேர்விடுந் தொழிலிற் றிறவானும், மலர்ந்த மாலைபணிந்த புயத்தோனுகிய சல்லியராஜனைவிட இத்தாரணியில் வேரொருவருமில்லை. அந்த மகாராஜனுகிய சல்லியன் என்னுடைய மணிநெடுந்தேர் ஊர்வதற்கு உடன்படுவானுகில், இன்றையப்போரிற் சக்ரதரனுகிய திருமாலுஞ் ஸர்வசம்ஹார உருத்ரனுகிய பெருமா னும் வந்து இந்த அர்ச்சுனனுக்குத்தூணைப்பட்டாலும், அல்லது தேர்விட்டாலும், மூந்திவந்த நராகாரண ரிருவரையுந்தப்பாமற் கொல்லுவேன். ஓ செங்கோல் ஆட்சிபெற்ற தூரியோதனராஜனே! அப்பால் வாயுபுத்திரனென்னும் பீமன் முதலாகிய நால்வரும் ஓவ்

வொரு பாணமுனைக்கு நிற்கமாட்டாமல் மடிவார்கள். சமுத்திரத்தை ஆடையாயுடுத்த அவனிமுழுவதும் உம்முடைய சந்திரவட்டக்குடை நிழற்குள்ளாக்கி, போர்த்திற மாலையும் பூஷணமாலையும் நீர்பூணும் படியாகச் செய்கின்றேன்" என்று சொல்லிப் பின்னுஞ் சொல்லுகிறான்.—

" நஞ்சோற்றம் பெறநுகர்வும் நிருண்ட கண்டர்
நற்றிருண்டர் வடிவமென நண்ணும் வெண்ணீற்
றஞ்சோற்று மடற்கைதை கமழுங் கான
லகன் குருநாட்டரியேறே யானின் றீம்பால்
வெஞ்சோற்றே டினிதருந்தி யமுத ருந்தும்
விண்ணவர்போ லிந்நெடுநாள் விழைந்து வாழ்ந்தேன்
செஞ்சோற்றுக் கடனின்றே கழியே னுகிற்
றிண்டோள்கள் வளர்த்ததனுற் செயல்வே றுண்டோ ?"

" ஓரூரு மொருகுலமு மில்லா வென்னை
யுங்கள்குலத் துள்ளோரி லொருவ னுக்கித்
தேரூரு மவர்மனைக்கே வளர்ந்த வென்னைச்
செம்பொன்மணி முடிசூட்டி யம்பு ராசி
நீரூரும் புவிபாலர் பலரும் போற்ற
நின்னினுஞ்சீர் பெறவைத்தாய் நினக்கேயன்றி
யேரூருங் கதிர்முடியா யுற்ற போரில்
யார்க்கினியென் னுயிரளிப்ப தியம்பு வாயே,"

ஓ புரவலனே ! திருப்பாற் கடலிற் பிறந்த ஆலஹாலவிஷத்தை யாவரும்பிழைக்கும்படியாய்ப் புசித்து அதனுற்கறுத்த கண்டத்தை யுடைய சிவபெருமானுக்குத் தொண்டராகிய சிவனடியார்களின் திருமேனியிற் றரித்தருளிய திருவெண்ணீற்றின் வடிவத்தைப்போற் சிறந்த சோறுநிறைந்த மடலையும் பூப்பொடி மிடைந்த புஷ்பத்தையு முடைய தாழைகள் எங்கும் பரிமளித்துக் கொண்டிரா நின்ற கழிக் கரைக் கானகம் பொருந்திய நெய்த நிலமானது செழிப்பினையுடைய மருதநிலமாகி, திருந்திய கார்வளம், நீர்வளம், நிலவளம், நெல்வளம், போர்வளம் பேர்வளங்கொண்ட பொங்கமுடைய குருநாட்டுக் கதிபதி யாகிய சிங்கமே ! உம்முடைய அன்னமும், புத்தூருக்கு நெய்யும், ஆய்ந்த பருப்பும், தோய்ந்த தயிரும், காய்ந்த பாலும், வாய்ந்த வெண்ணெயும், நாவுக்கு இனிய அறுசுவைவாய்ந்த அமுதும்:

தேவாமிர்தமுண்ட தேவர்களைப்போல் இன்று இதுவரையிலும் உயிர்வளர்த்து வாழ்ந்துவந்தான், இப்போப்பட்ட யுத்தகாலத்திற் செஞ்சோற்றுக் கடன் கழிக்காமற் போவேனுகில் என்னுடைய திணிந்த தோள்களை வளர்த்துவந்ததற்குப் பயனென்ன? ஓ துரியோதன மன்னனென்னும் அண்ணலே! இதல்லாமலும், இன்ன ஊரானென்றும், இன்னகுலத்தானென்றும், இன்ன தலத்தானென்றும், ஏதொன்றுமில்லாமல், உங்களுக்குத்தேர் செலுத்துஞ்சாரதியாகிய சூதனுடைய வீட்டில் தளர்ந்து வளர்ந்து வந்த என்னை உங்கள் குலத்துள்ளவர்களில் ஒருவனுகக் காட்டி, அங்கதேசத் அதிபதியாக அணிமுடிசூட்டி அழகிய குலக்கொடியை அணிமன்றல்கூட்டி, உம்மை வணங்குஞ் சமுத்திரஞ்சூழ்ந்த தேச தேசராஜர் பலரும் என்னை வணங்கும்படியாய்வைத்து, உம்மைப் பார்க்கிலும் என்னைச் சீர்பெறும்பதத்தில் உயர்வுசெய்துவைத்த என்னுத்தமன் நீரன்றே? ஓ அழகு செறிந்த கிரணக்கதிர் முடியாய்! இப்போது நேரிட்டிருக்கும் யுத்தத்தில் உமக்காகப் பாடுபட்டு என்னுயிரைக் கொடுக்காமல், இன்னும் யாருக்கு என்னுயிரை வளர்க்கப் போகிறேன்—சொல்லும் ஓ என்னுயிர்க்குயிராகிய இறைவனே'' என்று கர்ணமகாராஜன் கண்களுழ்ந்து கரைந்து பரிந்து கருத்து வந்து சொன்னன்.

கர்ணன்வேண்டுகோளின்படி துரியோதனன் சல்லியனைவேண்ட அவன்மறுத்துப் பின்னருடம்படல்

இப்படிக் கர்ணமகாராஜன்சொல்லிய வார்த்தையைக் காந்தார குலக் கன்னியீன்ற மன்னர்பிரானுகிய அரவக்கொடியோன் கேட்டு, அகமகிழ்ந்து முகமலர்ந்து அருணிறைந்து, ஓரிமைப்பொழுதிற்குற்ற மற்றமத்திரதேசவாச ராஜபோஜ விசுவாச நேசனுகிய சல்லியனை அழைத்து, அவனுடைய கையைப்பிடித்துக்கொண்டு, "ஓ வண்டு நெருங்கிக்தென்னவென்று பாடுஞ் செவ்விய மாலையணிந்திருந்தேவரீனையுடைய நிலைகளை! நான் உம்மைக்குறித்து ஒரு கல்ல காரியஞ் சொல்லப்போகின்றேன். நான் சொல்லப் போகின்ற வார்த்தை நல்லதாயிருந்தாலும், கெட்டதாயிருந்தாலும், அதை நீரின்பமாகக்கேட்டு, உடன்படுகிறேனென்று எனக்கொருவரம் ஆணையிட்டுத் தரவேண்டும். என்பேரில் ஆணையிருக்கிறது. நான் சொல்லும்பேச்சை நீர்

தள்ளக்கூடாது. ஆனதால், எங்கே ஆணையிடும்"என்று தன்னுடைய இருகரத்தையுங் குவித்துச் சல்லியராஜனை வணங்கினன். சல்லிய ராஜன் சந்தோகத்துடன் தாழ்ந்து, "ஓ எதிர்த்துப் பகைத்த சத்து ருக்களுடைய உயிரையுங்கெடித்து, அடுத்துப் பிழைக்கவந்த பேர்கள் செய்த பெருங்கொடுமைக் குற்றங்களை யெல்லாம்பொறுத்து அன் பாக ஆதரித்து ஆசைவைத்து ஆண்மையுற்று உலகமுழுதும் ஆக் ஞா சக்கரஞ்செலுத்தும், பாக்கியவானாகிய வணங்காமுடிபெற்ற அரசனே! என்னை ஒருபொருளாக நினைத்து, உம்முடைய இருகரத் தையும் விரித்து, வரமாகக்கேட்கும் வாய்மையைத் தடுத்து, ஒரு போதும் மறுத்துச் சொல்லமாட்டேன். ஆனதால் உம்முடைய மனக்கருத்தைச் சொல்லும்" என்று மந்திரபூபதி மெத்த இளைத்துக் கேட்க, துரியோதனன் "ஐயா சல்லியராஜனே! நீருண்ட காளமேக நிறத்தை வெளுப்பென்று சொல்லும்படியாகக் கருத்த திருமேனி பொறுத்த திருத்தகு கண்ணன் என்னுடைய சத்துருக்களாகிய பாண்டவர்களை எப்படிக்காத்து இரட்சிக்கின்றானே அப்படிநீரும்எங் களைக்காத்து ரட்சிக்கவேண்டிய பொறுப்பு உம்முடையது"என்றான்.

இந்தமொழியைச் சல்லியன்கேட்ட மாத்திரத்தில் மிகவும் மனம்பிரமித்து வணங்காமுடிமன்னனை நோக்கி,"ஓ வையகம்புரக்கும் மகாராஜனே! வேகத்துடன் தாவிஓடக்குங் குதிரைபூண்ட தெடுந் தேர்களுடைய ராஜாதி ராஜர்க்கெல்லாஞ் சிரேஷ்டத்துவமா யிருக் கின்ற தேவரீர் எம்போல்வாரை ரட்சிக்க வேண்டியது; நாங்கள் உம் முடையதயவுக்குக் காத்திருக்கத் தக்கது; அப்படியிருக்க உமதேவ லின்படி உமது சந்திரவட்டக்குடை நிழலுக்குள் அடங்கி ஜீவனஞ் செய்து காலங்கழித்து வருகின்ற என்னைப்போன்ற தீனனைபார்த்து, கர்ப்ப ஸ்ரீமந்தனாகிய நீர் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டது இயற் கையோ? இல்லை. எங்களுடைய மனத்தைச் சோதிக்கும்படியாகச் சொன்னதோ? இதென்ன காரணமோ? இதனைக்குறித்து எனக்கு யாதொன்றுந்தெரியவில்லை. மேலும் கண்ணனைப்போற் காக்கவேண்டு மென்று கட்டுரைகூறினீர். ஓ எதிரொருவரும் இல்லாத காவலனே! அந்தக்கருணைக் கண்ணன், எப்போர்ப்பட்டவரென்றால், தேவர்களுக் குட் சிறந்ததேவுமாய், மானிடர்களுக்குள் உயர்ந்த மானிட வுருவ மாய், இன்னுஞ்சொல்லுகின்ற பற்பலகோடி சராசரங்கள் யாவுமாய், அண்டரண்ட பிர்மாண்டமுமாய் நின்றருளிய ஆதிமூர்த்தியாகியவர்; அப்படிப்பட்ட யாதவ குமாரனுக்கு நான் ஈடாவனோ? அவருடைய

வல்லமை எனக்குண்டாமோ? ஓ அதைரியமில்லாத அரவத்துஜனே! எங்குநேரின்றி நடத்தும் தனிச்செங்கோலை யுடைய நீர் இப்போது சொல்லவந்த காரியந்தானென்ன? அது இன்னதென்று உமது நினைப்பை வெளிப்படுத்தும்" என்று சல்லியராஜன் விஞவினன். அப்போதுபெருஞ்சேனைகளின் சமூகத்தில்நிற்கின்ற அம்மத்திர தேசாதிபனுடைய முகத்தை நோக்கித் துரியோதனன் சொல்லுகின்றான். "ஓ தாணிந்த புயஞ்கிய சல்லியராஜனே! அர்ச்சுனனுக்குத் தேர் செலுத்துகின்ற அரிவாசுதேவனைப்போற் சூரியபுத்திரனுகிய கர்ணனுக்கு நீர் தேர்செலுத்த வேண்டும். அப்படிச் செலுத்தாமற் போவீராகில் இன்றையப்போரில் ஐவரையும் வென்று வெற்றியடைவது நமக்குத்திஸ்தரமாயிருக்கும்; நம்மால்யுத்தநிறைவேறி யாவருமகிழப் புகழ்பெறமாட்டோம். நீர் என்சொல்லைத் தடுக்காமல் ஒப்புக்கொள்ள வேண்டும்" என்று புகழ்ந்து வணங்கினன். இவ்விதமாகத் துரியோதனன் சொல்லிய அற்பச்சொல்லை ஒருபொருளாய் மதிக்காமல் மனம் புழுங்கி, வாட்டமுற்று வருத்தமடைந்து, அவ்வணங்காமுடி மன்னனைநோக்கிச் சொல்லுகின்றான்.—

"சதுர்விதத்தேர் வீரருக்குந் தடந்தே ரூருஞ்
சாரதிதன் தனயனுக்குத் தடந்தேரூர்தன்
மதுமலர்த்தார் வலம்புரியா யிழிவன் றேரீ
மதித்தவிறற் கர்ணனுக்கு மெனக்கு மிப்போ
தெதிர்மலைக்குஞ் சேனைதன்னை யிருகூ றாக்கி
யிகல்புரிந்தா லென்கூற்றை யிரியவென்றக்
கதிரளித்தோன் கூற்றினையு மழித்திலேனேற்
கடவுவன்றே ரவற்கிதுநீ காண்டி மன்ஞ."

ஓ வடிவேற்றுங்கிய மதிகுலபதியே! முன்பின்பாராமல் என்னைப் பார்த்து இப்போப்பட்ட சொல் சொன்னீரல்லவா? அப்படியாகிறதாயிருந்தாலும், வனத்திற் புல்லைத்தின்று உலாவுகின்ற புள்ளிமானுக்கு வேங்கைப்புலியானது தாழ்ந்து ஏவற்றொழில் செய்யும்படியான பொல்லாதகாலம் நேரிடுமாகில், அப்போ தல்லவோ சல்லியராஜனுகிய நான் கர்ணனுக்குச் சாரதியாகத் தக்கது. ஆ! ஆ! இப்போர்ப்பட்டவசனம் இன்னொருவர் சொல்லியிருப்பார்களாகில், அவர்களுடையதாக்கு இந்நேரம் என்னபாடுபட்டிருக்குமோ? அஃது சைக்க வல்லேன். சுயோதனனுகிய நீர்சொன்னபடியால் மனம்பொறுத்

தேன்' என்று மிகக்கொதித்துச்சொல்லி, மழுவைப்போல் மனம றுக்கங்கொண்டு, புருவநெரித்துப், புகையெழச் சிரித்து, பொறிவர விழித்து, இருகண்ணுஞ்சிவந்து ஏறநோக்கி, சவுரியபராக்ரமக்கோ பமுடைய அச்சல்லியராஜன் வல்லியம்போற் குமுறிப் பின்னுஞ் சொல்லுகிறான். "ஓ மதுகிறைந்த வலம்புரிமாலையணிந்த மன்னனே! நான்குவருணத்தாருக்கும் ரதஞ்செலுத்தாநின்ற தேர்ப்பாகனுடைய வளப்புப் பிள்ளைக்குத்தேரோட்டுவது இழிவாகியவேலையல்லவோ? அது உமக்கு எவ்வளவுந்தோன்றவில்லையே! மேலும் வீரமுதலிய தீரத்தில் அவனுக்கு நான் இளைத்தவனல்லன். அதைப்பரிட்சிக்க வேண்டுமாகில், இப்போது எதிர்த்துவந்திருக்கின்ற பாண்டவச் சேனைகளை இரண்டு பங்காகப்பிரித்து, எனக்கொருகூறுங் கர்ணனுக் கொரு கூறுமாகவிடுத்து வெற்றிபெறச் செய்வீராகில், எனக்குப் பங்காகவிட்ட சேனைகளை முன்னதாகவென்று, கர்ணன் பங்குக்கு விட்ட சேனைகளையுங் கொன்று முதன்மையாகிய ஜெயம்பெறுகி றேன். அப்படி ஜெயம்பெறுமற் போவேனாகில், உமது சொற்படியே அவனுக்குத் தேர்செலுத்துகிறேன்." என்று நெருப்பெழக்கனன்று சொன்னான். இப்படிச் சல்லியன் உரைத்த வார்த்தையைக் கேட்ட அரவக்கொடிக்கதிபனானவன் மனஞ்சலித்து, முகம்வியர்த்து, உடல் மெலிந்து, மனமுறிந்து, சல்லியராஜனைப் புல்லியனைத்து,

"செங்கோல மலரிலிருந் தனைத்து மீன்ற
திசைமுகன்ரு னறம்வளர்க்குஞ் செல்வப் பாவை
பங்கோனுக் காதிமறைப் புரவி பூண்ட
பரித்தடந்தேர் கடவுதனிப் பாக னானான்
பொங்கோதப் பாற்கடலா னிவனென் றியாரும்
புகல்கின்ற வசுதேவன் புதல்வன் வந்து
வெங்கோப விசயனுக்குச் சூத னானான்
விசயனுமன் றுத்தரன்றேர் விசையி னூர்ந்தான்."

"ஆனதால், ஓ அழகிய பூலோகமுழுமையுந் துதித்து மதிக்கும் ஆண்மையையுடைய மத்திரராஜனென்னும் போர்வேந்தே! உம்மைப்போல் மிகுந்த கீர்த்திவாய்ந்து அமர்முனையில் ஜெயித்து அணிமாலைசூடிய வேந்தர்தொழும் வேந்தராயுள்ள வீராதி வீரர்க ளுக்குத் தேர் விடும்படியாகிய தொழில் மேன்மையல்லவோ? இந்தச் சாரதித்தொழிலானது குறைவற்ற தவத்தையெடுத்து நிறைவுற்ற

பவத்தைக்கெடுத்து மானிடஜனனமெடுத்து எவரிலுஞ் சிறந்து எல்லாக்கலைகளையுங் கற்ற வல்லவர்களுக்கு வருமேயல்லது, மற்ற லேசாகிய பேருக்கு வரத்தக்கதோ? இதுதுறைவாகிய வேலையல்ல வே? மது நிறைவாகிய மாலையணிந்த சல்லியராஜனே!" என்று பணிந்து கரத்தைப்பிடித்து வேண்டிக்கொண்டான். அப்போது சல்லியன் என்ன செய்வான்? பாவம் (இப்படி பெரியவன் கைபிடித் தால் எப்படிச்சிறியவன் மாட்டேனென்பான்.) என்னும் பழமொழி போல் ஒன்றும்பேசக்கூடாதவனாய் ராஜாதிராஜன் வரமாகக் கேட் டுக்கொண்டசொல்லை மறுத்து வேறொருவிதமாக வெறுத்துச் சொல்லுவதுக் கருமமல்லவே யென்று யோசித்து, "ஆகிலுமிந்த யுத்தத்திற் சுதவிசெய்ய உடம்பட்டோம். அவ்வுதவி யெவ்வகைத் தாகிலு நிறைவேற்ற வேண்டுவதே" என்று துணிந்து, துரியோத னன் கேட்டுக்கொண்ட காரியத்தைப்பற்றி ஒன்றுந்தடுக்காமல் உடம் பட்டான்.

துரியோதனன் சல்லியனுக்குத் திரிபுர தகனசரித்திரங்கூறி அவன்மனத்தளர்வை மாற்றுதல்

ஓ ஜனமேஜய மகாராஜனே! இப்படிக்கு உடம்பட்ட சல்லிய ராஜனுடைய மனமானது அடிதடிப்படங்கிப்பூரணமாக இசையாமல் தளர்ச்சிகொண் டிருக்கின்றதென்னும் உண்மையைத் துரியோதனன் அறிந்து, அவனுடைய விசனம்நீங்கும்படியாய் மெத்தவுஷாடி, பூர்வத் தில் நமது பெருமாளுனவர் புரம்பொடி செய்த கதையைச்சொன் னன். அஃது யாதெனில்—ஐயா சல்லியராஜனே! தாருகாசுரன் பெற்றபிள்ளைகள் வித்துவமாலி, தாருகாக்ஷன், கமலாக்ஷன் இம்மூவ ருங் கேயூர, மணிகுண்டலகிரீட கவச மணிமலர்மாலை களைதரித்து, சண்ட முண்டி மரவுரி காவிகாம்பர விபூதி முதலிய காப்பைத்தரித்து, தாருகா வனச் சார்பிலிருந்து, பிரமாவைக் குறித்து வெகுநாள் தவம் புரிந் தார்கள். எண்ணிறந்தநாள் தவஞ்செய்த இவர்களுக்கெதிரில் கோடி சூரியப் பிரகாசம்போற் பிரமதேவன் பிரசன்னமானார். அத்தத் தேவனைக் கண்ணிழந்தவர்கள் கண்பெற்ற தன்மையைப்போற் கண்டு, யாவரும் எதிர்கொண்டு சென்று தீர்க்கதண்டஞ்செய்தார் கள். அவர்களைச்சதுர்முகன் பார்த்து, "நீங்கள் என்னை வேண்டி ஏன் தவஞ்செய்தீர்கள்? உங்களுடைய எண்ணமென்ன சொல்லுங்கள்?"

என்று கேட்க, "ஐயா! நாங்கள் கால்வழி கால்வழியாக அழியாதிருக்கும்படிபாய் வரந்தாரும்" என்று அசுரர் உரைக்க, அவர்கள் கேட்ட வரத்தை அவர்தடுத்து, "நீங்கள் முறைமை தப்பித் தீதாகிய வரங் கேட்பது ஞாயமல்ல. இவ்வுலகத்திற்பிறந்த பேர்களிலும், மேலுலகத்திற் சிறந்த பேர்களிலும், சாவில்லாமற் பிழைத்திருந்த பேர்கள் யார்? காமரூபம் ஏற்பட்டபோதே அழிவென்பது உடற்பிறப்பென்று அறியமாட்டீர்களா? அந்த ஒருவரந்தவிர மற்றெது கேட்டாலுந் தருகின்றேன் சொல்லுங்கள்" என்றார். அசுரர்கள் அம்மொழியைக் கேட்டு, சுவாமி! திரிலோகத்திலுஞ் சிறப்புப் பொருந்திச் சீர்வளந் திருந்திய செம்பொன் வெண்பொன் கரும்பொன்னுலாகிய மூன்று மதில்களையுடைய புரமூன்றும் நினைத்தவிடத்திற் சிறக்கப் பறக்கத் தக்கனவாய் அருள்செய்யவேண்டும்" என்று கேட்டனர். "அப்படியே திரிபுரமென்னும் பெயரை உடையதாகிய புரமூன்று தருகிறோம். அவைகளுக்கு அழிவெப்படி"யென்று அயன் கேட்டனர். அதற்கந்நிசாசரர், "ஐயா! எவர்களாலுஞ் ஜெயிப்பதற்கரிதாகிய அப்புரங்களைக்கொடுப்பீராகில், தன்னையொப்பாரு மிக்காருமற்றவொருவன் அம்மூன்று மதிலினுடைய குணத்தைக்கூட்டி, விற்குணத்தைப் பூட்டி, கண்ணிமைகொட்டுமுன் ஓரேபாணந்தொடுத்து அடிக்க, அடுத்த காலத்தில் இம்மூன்று புரமும் அழிந்துபோகக்கடவன என்று அநுக்கிரகஞ் செய்யு" மென்று தொழுது வாழ்த்தினர்கள். அதனைக்கேட்ட வாசனை நிறைந்தமலரோன் அவர்களுடைய கட்டுரையின்படி வரங்கொடுத்து, வந்தவழியே மறைந்து போயினர்.

பின்பந்த மூவரும் அத்தப் பிர்மாவை வாழ்த்தி வணங்கி, மயனை யழைத்து மால்மகன் சொன்னவாக்கியத்தைக் கூறினர்கள். அம்மயனுகிய ராக்ஷசகமமியனவன் அத்தப்படியே குற்றமற்ற மூன்றுமதில்களைப் பெற்ற நகரமூன்று படைத்து, கல்லவளங்களெல்லாஞ் சமைத்து, திரிபுரமென்று பேரிட்டு, அரியதவம்புரிந்த அவ்வரக்கர்மூவருக்குங் கொடுத்தான். அவர்களந்த இடத்திற் குடிபுகுந்து, நல்ல சம்பத்துடையவர்களாய், பெரியோர்களும் அந்தவ முனிவர்களுந் தலைகுனிந்து தாழும்படியாகவும் தேவர்களும் மற்றயாவர்களும் வணங்கி நடுங்கி ஓடும்படியாகவும், அத்திரிபுரத்துடன் திரிலோகத்தையும் புரந்து, சூரியனுந் தோற்கும்படி மேற்குத்திசையில் ஓட்டி மானிக்க முடியினையுடையவர்களாய் பலப்பட்டுப்போய், பலவகை இன்பங்களும் அனுபவித்து, தங்களுக்கொருகுறைவுமில்லாமல்,

ஒ நவநந் தமக்கு எதிரில்லாமற் சம்பிரமமாக இருந்தார்கள். அச் சமயத்தில் இந்த மூவருக்கும் பிறந்த பிள்ளைகள் உயர்ந்த நான்முகக் கடவுளோடி, கோடிகாலத்தவம் புரிந்து தவங்கைகூடி, ஏழுலகங்களை யும் வெல்லவும், சத்துருக்களைத் தாங்கள் செயித்துக் கொல்லவும், எதிரிகள் தொட்ட வாளிகளினால் தாங்கள் சாகாதிருக்கவும் தங்கள வர்களில் ஆராகிலும் ஒருவேளை மடிந்தால் ஒன்று பத்தாகப் பெரு கிப் பிழைத்துவரும்படியாகவும் வரங்கள் பெற்று, ஆணவம், மாயை, காமியம், என்னு மும்மலத்தையுந் தீவினைக்கூட்டத்தை விளைவிக் குந் தன்மைபோன்று தங்களுக்குத் தாங்களே விளைத்து, மேலாய் விளங்கி, உரம்பொருந்திய மல்லாண்மையாலும், கரந்திருந்திய வில்லாண்மையாலும், வீரகண்டைதரித்த தாளாண்மையாலும், பாரதண்டுபொறுத்த தோளாண்மையாலும், கமலமலர் மாலையணிந்த பிரமதேவன் கொடுத்த வரத்தின் ஸ்திரத்தினாலும், சிறந்த ரதகஜ துரக பதாதிகள் முதலிய ராக்ஷசப்படைகள் மிகுந்து, கடல்போ லிரைத்து, விரிந்த திரைசூழ்ந்த பூமண்டல முதலிய எண்டிசை யெல்லாம் மிண்டுசெய் கண்டகதண்டர்களாகி,சண்டனும் இவர்க்குத் தொண்டு செய்பும்படியாய் மாலையிலங்கிய மார்பினரா யிருந்தார்கள். இவர்கள் பலத்தால் எங்கும் மாயைநிறைந்த வாளரக்கர்மய மானார் கள். இவ்விதப் பெருக்கமுடைய ராக்ஷசர்களையும், அவர்கள் செய்யா நின்ற கொடிய தீங்குகளையும், முனிவர்களுந் தேவர்களுங்கண்டு, நடுங்கிப் பயங்கொண்டு, நெஞ்சு கலங்கி, அஞ்சிவிலங்கி, தேவேந்தி ரனைக் கூட்டிக் கொண்டு சத்தியலோகவாசியாகிய சரஸ்வதிநாயக னென்னுஞ் சதுர்முகனிடத்திற்போய்ச்சாஷ்டாங்கமாகப் பணிந்து, தாங்களவர்களால் தங்களுக்கு நேரிட்டசங்கதியைச் சொல்லி அபயஸ் தங் கேட்டார்கள்.

அந்த மொழியைக்கேட்ட தக்ஷணமே பிரமதேவன் அவர்களை அழைத்துக்கொண்டு, க்ஷீராப்தியில் யோக நித்திரையி லிருக்கின்ற திருமாலிடத்திற்குப்போய், அவரைத் தரிசித்து வணங்கிச் சமீபத்தி லிணங்கி, குறையைப் பகர்ந்தார். அவைகளைக் கேட்டுணர்ந்த மலரகித ஞுகிய கேசவன் அரக்கரால் விளைந்த பொல்லாங்கை யெல்லாந் தம் முட்கொண்டு,அந்த ராக்ஷசரை வென்றழியவேறொருவன்மையு மில்லையென்றார். அப்பால் திருமாலுடன் எல்லோருங் கூடிக் கயிலா சபதியினிடத்திற்குமுன் போகச் சமயம் வாய்க்காமல் அஞ்சி அஞ்சி ஓதுங்கி, அக்கயிலையிலிருந்து, ஆலால முண்ட அரனைக்குறித்து ஆயிரந் தேவவருஷம் அருந்தவம் புரிந்தார்கள். அப்

போதும் அந்திவண்ணன் பிரசன்னமாகாததினுற் சிந்தை மெலிந்து கொந்து வருந்தி, யாவருந் தவம்விட்டெழுந்து, உமாமகேசன் உறைந்து வாழ்கின்ற மாசுமறுவற்ற திருவோலக்க மண்டபத்தின் தலைவாசலில் நின்று, அங்கு காவல் பூண்டிருக்கும் ஸ்ரீநந்திதேவருடைய அருள்கொண்டு, பரமசிவம் எழுந்தருளியிராநின்ற பவளக்கால் மண்டபத்தின் பக்கத்திற்போயிருந்து, பராபரைதழுவிய பராபரத்தை வாடியபயிர் மழைகண்ட வாறுபோற் கண்டு, தேடிய பொருள் சிக்கிய வீறுபோற்கொண்டு, தெண்டனிட்டுத் தொழுது ஏற்றிப்போற்றினர். அப்போதொப்பற்ற அன்புகளிற் தொழுக ஆநந்த மயமாகிய அயனைவர் தமது நான்கு காவினுலும் இநந்து, எஜமர், சாமம், அதர்வணம் என்னு நான்கு வேதத்தை அந்தந்த முறையார் எடுத்தெடுத்துப்பாடி, சிவபிரானுடைய பெருங்கீர்த்தியென்னுமலர்களை அலக்கலக்காய் ஆய்ந்து அவர் திருமேனியிற் சூடி, தமக்குமோட்ச வீடு கூடியதென்று மேலாகிய இன்பம் விளங்க நின்று அடிபணிந்து தோற்றி ஆடி, "ஓ ஐந்தொழிற்செய்யும் ஆனனமமைந்த அமலானந்த மூர்த்தி! தேவரீர் ஜீவன் முக்தர்களாகிய மெய்யர்களின் மெய்யில் மெய்யாகிய சத்தியமாக விளங்கி நின்றீர். வேதவேதாங்கத்திற்கூறிய நன்னெறி முறையின் வழியிற் செல்லாத பொய்யர்களின் பொய் மொழி வழியிற்பொய்த்திருக்கின்றீர். பொய்மையென்றும் மெய்மையென்றுஞ் சம்பந்தப் புணர்ப்பில்லாமல் மாநிலத்தோர்களுடையசந் தேகநீக்கி, பசுபதியென்னும் பான்மை குன்றுமல் யாவரையுந் தேவரீருடைய உயிராக ரக்ஷித்தீர். இனிவேறென்ன சொல்லத்தக்கது? என்னைப்போன்ற அற்பர்களாகிய கொய்யர்கள் தேவரீரை மதித்தலும் மதித்துத்துதித்தலும், நிந்தித்தலும், சிந்தித்தலும், பிரபஞ்ச சுபாவமாயிருக்கின்றன. பிரம்மாகிய தேவரீரோ ஏழுவிதமாகிய காலமாயினீர். சூரியசந்திராயினீர். யாவர்க்குங் கடவுளாயினீர். முற்றுந் துறந்தமுனிவராயினீர். வேதாகமங்களாயினீர். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், இவைகளான பூதகோல மாயினீர். பசுவாகிய உயிர்களாயினீர். அவ்வுயிர்களுக்கு மோக்ஷத்தையருளும் பசுபதியுமாயினீர். சாத்விகம், இராசதம், தாமதம் என்னு முக்குணங்களாயினீர். இம்முக்குணங்களைக்கொண்டுசெய்யு முத்தொழில்வல்லோர்களுக்கு முதன்மூலமாயினீர்; பேதமாயினீர்; அபேதமாயினீர், பேதாபேதமாயினீர், சித்தியாயினீர்; பத்தியாயினீர். முத்தியாயினீர். ஓ அத்தனே! ஓ கர்த்தனே! தேவரீரைக் கண்டவர் சிலபேர்; கண்டுவிட்டவர் சிலபேர்; காணுதவர் பலபேர்; போணுதவர் பலபேர்

யாவருங் கருதுகின்ற வேதவிதியின் வழிப்படியே கைக்கொண்டுள்ளார் சிலபேர். அவ்விதியை அநுசரிக்காமற் கைவிட்டவர் பலபேர் பொருந்திய அன்புள்ளார் சிலபேர். அன்பில்லார் பலபேர். புராதனமாகிய குறிகளையும் செம்கைகளையுங்கண்டு உண்மை யோர்ந்து நெடுநாளிருந்தவர் சிலபேர். அவ்வாறில்லாதவர் பலபேர். பாசபந்தமாகிய கல்வினை தீவினைகளை நீக்கினோர் சிலபேர். நீங்காதவர் பலபேர். இவைகளெல்லாந் தேவரீர் நடத்தும் விதங்களல்லாமல் வேறொன்றில்லை. எல்லாம் உமது செயல்'' என்று பற்பல விதங்களாய்ப்பாடிப் படித்து, இறைஞ்சி ஏத்தி, எட்டுக்கண்களிலும் ஆனந்தபாஷ்பஞ் சொட்டிட்டோடும் படியாய்த் துதித்து, வாய்புதைத்து வணங்கி நின்றார். அப்படி வணங்கிய மலையன்மால் முதலாகிய பேர்களின் முகத்தைமகாதேவர் நோக்கி, '' நீங்களெல்லோரும் இவிடம் வந்த காரணம் யாது? சொல்லுங்கள். பயப்படாதீர்கள்'' என்று யாதொரு பயமும் அற்றவராகிய அச்சுந்தரேசர் கேட்கவும், அவர்களெல்லோருங் கூடிப் பேரானந்தக்கூத்தாடி, மனமகிழ்ச்சியாகி, '' இனி நமக்கு நல்லகாலம்'' என்று சந்தோஷங்கொண்டாடினார்கள். அப்போது அம்சவாகனனுகிய பிரமதேவன் '' ஓ பிரம்மமாக விளங்காகின்ற பரமசிவனே! பாப அரக்கர் குலத்திற் பிறந்தும் அழியாது தப்பிய தாருகன் பெற்ற முதன்மூவர்களும், இவர்கள் பெற்றபிள்ளைகளும் என்னை நோக்கி அருந்தவமிருந்தார்கள். அந்தத் தவத்திற் கிரங்கிய தேவரீருடைய அருட்செயலானது என்னைச் செலுத்துதலினாலே, நான் அவர்களுக்குப் பிரசன்னமாகி, அவர்களுடைய கருத்தறிந்து, சிறப்பாகிய என்மனது உவந்து எல்லாவரமுங் கொடுத்தேன். ஆனால், திரிபுரமும் அந்தத் தீயருஞ் சக்கிரத்தில் அழியும்படியாகச் செப்பியிருக்கின்றேன். உலவாப்பெருங்குணத்து உத்தமனே! இது உண்மையான காரியம்'' என்று உரைத்து மறுபடியும் '' ஓ சச்சிதானந்தப் பொருளே! அவர்கள் என்னைவேண்டி வினையமாகத் தவம் இழைத்து, தங்களுக்குவேண்டிய வரமெல்லாம் பெற்றுக்கொண்டு, திரிலோகத்தையும் அடக்கி, தேவர்களை வணங்கத்தக்கவிதம் மடக்கி, தேவதா பூஜை ஆசாரியபக்தியை ஒடுக்கி, பாபத் தொழிலிற் குடன்பட்டு மேம்பாடாயிருக்கின்றார்கள். ஓ வேதமுதல்வனுகிய வெள்விடையாளனே! அப்பாவிகளால் தேவர்களுக்கு உணவில்லாமல் யாகாதி தொழில்களுந் தவமுதலாகிய தர்மங்களும் பொய்த்துப்போய் விட்டன. அவர்களைக்கொல்ல நல்லவல்லபமுடையவர் தேவரீரையல்லது வேறொருவர் மற்றெந்தப் புவனத்தினுமில்லை. ஆகையால், தேவரீருடைய

திருவடிக் கடிமையாகிய அடியேங்களெல்லாருஞ் சிறுமை நீங்கிப் பெருமை பெறும்படியாய் அந்த அசுரரைக் கொன்று, அறத்தை நிலைநிறுத்தி எங்களைக் காக்கவேண்டியது'' என்று துதித்தார். அஞ் சனகூஷிபங்களாகிய அந்திவண்ணன் கிருபை பூரித்து, அவரையுந் தேவேந்திரன் முதலான பேர்களையும் பார்த்து, '' அமரர்களே! சுரர்களாகிய நீங்களெப்படியோ அப்படியே அசுரர்களும் நமது அடியார்கள்தான். சகல உயிரும் நம்பும்படியாகப் பொதுமையா யிருக்கின்ற பசுபதியென்னும் நாமமுடையவன் நான். தேவர்களுக் காக இரங்கி அசுரர்களை ஒறுத்துக்கெடுப்பது இயற்கையல்ல. உங்களுக்குள்ளே நீங்கள் பகைத்துச் சண்டைசெய்வீராகில், வஞ்சகராகிய அசுரர் தாழ்ந்து அபஜெயம் அடையவும், நீங்களெல் லாம் மிகுஜெயம் பேறும்படியாகவும் உங்களுக்குப் புஜவலிமையுண் டாகும்'' என்று கூற, அந்தவசனங்கேட்ட அமரரெல்லாரும் அரவா பரணனுடைய அடிமலர் வீழ்ந்து, அடைக்கலமென் றிரைந்து, அஞ்சலிசெய்து தாழ்ந்து, ''சுவாமி! உமது அருள்கிடைத்தபோதி லும் அவர்களை வெல்லமாட்டோம், எங்களாலில்லை. மெத்தப் பயந் திருக்கின்றோம். நாங்கள் செய்த தவவலிமைப்பலனெல்லாந் தங்க ளுக்கே தந்தோம். எங்களை அடிமைகொண்டு ரக்ஷியும். தேவரீர் கிருபாநிதியாகிய பசுபதியா யிருக்கின்றமையால், வஞ்சகராகிய துஷ் டர்களைக் கண்டித்து நிக்ரகித்து, சிஷ்டர்களைப்பட்சம்வைத்து அநுக் கிரகிக்கவேண்டும். இப்படி செய்வதனால் தேவரீருக்குப் பெருமையே யல்லது, சிறுமையாகிய வசையில்லை. ஓ தேவாதி தேவனே! நாங்கள் யாவருந் தஞ்சமென்று அடைந்தோம். எங்களைக்காப்பது உமது கடன். அப்படிகாக்க மனமில்லாவிட்டால, தேவரீருடைய கண்டத்தில் வைத்தருளிய நஞ்சத்தை விட்டாகிலும் எங்களை நாசப் படுத்திவிடும்'' என்று நாரிபாகனுடைய திருவடியைச் சென்னியிற் சூடி, நெடுநேரம் வரையிலும் கைதுருகினார்கள். பிரம்மவிஷ்ணுக் களை முதன்மையாகவந்து இரந்து துதித்தலால், அவர்கள்பேரில் அன்புவைத்து ரக்ஷிக்கவேண்டுமென்னும் இச்சையுடையவராகி, அலைகடலிற்பிறந்த ஆலகாலவிடம்போன்ற அசுரை நாசஞ்செய்வ தற்கு யோசனைசெய்து, மீட்டும் அத்தவிஷயத்தில் விருப்பமில்லாத வராகி, தமதெதிரிற்பொருந்தி நிறைந்த பூசுரன்முதலாயினோரைப் பார்த்து, '' ஓ தீனர்களே! நல்லது இன்னுஞ் சிலநாள்வரைக்கும் நீவிர் யாவரும் பாசுபதவிரதங் கருதுங்கள்'' என்று சொல்லி, அந்தமந்திரத்தை அவர்களுக்கு உபதேசித் தருளினார். அந்த

மந்திரத்தை அமரர் முதலிய யாவரும் உபதேசக் கிரமமாகப்பெற்று, கபிலயங்கிரிச்சாரலை யுற்று, அரிகமாயிரவருடம் அருந்தவமிருந்தார்கள். அவர்கள் விரும்பிச்செய்த பாசுபத விரதத்திற்குப் பவநாசன்மெச்சி, உச்சிதமாகிய விடைமேலெழுந்து பிரசன்னமாயினர்.

அப்போது வரந்தரவந்த அரனை எதிர்கொண்டு வணங்கி வாழ்த்தித் தோத்திரிக்கின்ற போகளை அக்கிருபாநிதி நோக்கி, "ஓ தேவர்களே! அந்தத்திரிபுரமானது அழிந்து நீறெழும்படியாய் எரித்துப் போடுகிறேன். நீங்கள் இதைக்குறித்து வருந்திச் சிந்தனைசெய்ய வேண்டியதில்லை. ஆனால் அந்த அசுரர்கள் ஈரில் யாம் சண்டைக்குப் புறப்பட வேண்டியிருப்பதால், அதற்குமவ்வண்டிய தேர், குதிரை, சாரதி, வில், பாணம் இவைமுதலியன கொண்டு வாருங்கள்" என்று கூற, விண்முதலியயாவரும பண்டுசெய்ததவப்பலன் கண்டோமென்று களியுட்கொண்டு, கங்கைவேணிநாதன் வாக்கியமாகிய வேதவிதிப்படி ரதஞ்சமைத்தார்கள். அஃதெப்படியெனில், அழகிய சக்கரவாளகிரி அச்சாகவும், சூரியசந்திரர் சக்கரமாகவும், குழுமியபூமி தேர்த்தட்டாகவும், அஷ்ட குலாசலங் குத்துக்கல்லாகவும, கொடுங்கை முதலாகிய உறுப்புகளும், சித்திரப் பதுமைகளும், தேவர்களாகவும், ஜெகதல பிம்பங் கலசமாகவும், அண்டகடாகங்குடையாகவும், பற்பல நிறம்பெற்ற சமுத்திரங்களெல்லாந் தேர்ச்சீலை யாகவும், நீருண்ட சப்தசமுகங்கள் கழுதும் பசுமையாகத் தாழ்விட்ட வாழையுமாகவும், நிலைபெற்ற ஆறுசமயங்களும் அசுவங்களாகவும், மாறிலாத வேதங்கான்குங் குதிரைபூட்டுதற்கு வடமாகவும், கெடுதிபடாதகுடி என்னும் மந்திரமானது குதிரைமேயாட்டு முட்கோலாகவும், விவேகத்தேர் சிறந்த விதியாகிய பிரமாவைச் சாரதியாகவும் அமைத்து, அலங்காரமாகத்தேரொன்று சமைத்து, மகாமேருவினுடைய வலுமைகளெல்லாம் வில்லாகத்திரட்டி, இந்தப் பூபாரந்தாங்கிய ஆதிசேடனை நாணியாகப்பிணித்து, அண்டத்தை அளந்தருளிய விண்டுவாகிய மேகவண்ணனை காராயணாஸ்திர வடிவாக்கி அந்த அஸ்திரத்துக்குத் தீக்ஷ்ணியமாகிய அக்கினிதேவனைக் கூர்முனையாகக்கூட்டி, பிரசண்டமாக வீசுகின்ற பலம்பொருந்திய வாயுதேவனை அந்த காராயணபாணத்துக்கு இரக்கையாகக்கட்டி நிறைத்து, இரதவடிவாயமைந்திருக்கின்ற நெடியோன் முதலியதேர்கள் சந்திரசடாமுடியோனிடத்திற்சென்று, "ஓ சம்போ! ஓ சங்கரா! ஓ மகாதேவா! ஓ மகாப்பிரபு! தேவரீர் கட்டளைப்படி தங்களுக்குத் தேர் சமைத்து அதில்

வில்பாண முதலியன அமைத்துக்கொண்டுவந்தோம்" என்று காமென்னும் ஒரு மமதைகொண்டு சொல்லினர்கள். அப்போது மஹேசன் அத்தேரைத் தலைசாய்த்துப் பார்த்து, சடைமுடியசைத்து, இத்தத்தருக்குச் சாரதியாக அமைந்த பெருமைபெற்ற வர்கள் எவ்வளவு சாஸ்திரங்களை ஆய்ந்துணர்ந்தோராலும், விவேகஞ்சிறந்த மேலானவர்களாயிருந்தால் மாத்திரஞ் சாரதித் தனஞ் செய்யமுடியுமே யல்லது, சாமானியர்களால் முடியாது. அதற்குரிய காரியச் சொற்களைக் கேளுங்கள்" என்று, அத்தேவர் களைப்பார்த்துக் கண்ணுதல் விளம்பியருளுகின்றார்—

ஓ தேவர்களே! தேர்ப்பாகன் நேர்ப்பாகவிருக்கவேண்டிய திறங் கள் யாதெனில், சூழ்ந்துவரும் வேகம்பொருந்திய குதிரைகளின் இருதயமும், நாயகனுடைய சாமர்த்தியமும், தங்களுக்குரிய கால மும், தாங்கள் போகின்ற இடமும், தங்களுக்கு நேரிட்ட தூணைவலி யும தங்களுடைய சேதாள்வலியுப, கடக்துங்காரிபங்களும், கடக்கப் போகின்றகாரியங்களுப, இவைகளுக்குக் காரணங்களும் எதிராளி யின்பலமும், நமக்கும அவனுக்கும் நேரிட்டிருக்கின்ற பகைத்திறமும் நூல்திறமும, விவகத்தறமும், ஆகியவிவையெல்லாம அறிந்திருக் கின்ற பாரமார்த்தியன் எவனோ அவனைத்தான் வலலவனென் றுரைப் பது. அப்போர்ப்பட்டவன் கிடைப்பது அருமை. மேலும் தேர்ப்பாக னனவன் இப்போது நாம் சொல்லிய இயல்புகளிற் பழக்கமும், புத் தியும், திறமும், உடையவனாக இருப்பானால், அப்போர்ப்பட்ட சார தியையுடைய எஜமானனுக்குப் பிராணனும் மனமும் அழகும் கீர்த்தி யும் வாக்கின் வலிமையும் புயவலிமையும வெறறியும் இனனுமுள்ள யாவும் பூரணமாக உண்டாகும். இத்திறங்களில்லாத சாரதியை உடைய எஜமானனுக்கு மேற்கூறிய திறங்கள் கொஞ்சமிருந்தாலும், உபயோகப்படாமற்கெட்டுப்போவது மல்லாமல், அபஜெயத்தையும் விளைக்கும். இந்தமொழியின்படி யோசிப்பதற்கு எனக்கிப்போது சாரதித்தொழில் செய்யும்படியாய் ஏற்பட்டவர்கள் யாரென்று தங்க ளுக்கிசைந்த சந்திரசேகர நாயனிடக்க, சத்தியலோகவாசியாகிய சதுர்முகத்தேவனென்று இயம்ப, அதைக்கேட்டு உத்தமனென்று ரைத்து, காமக்கோடியுடன் விடைமீயறிக்கொண்டு கயிலையங்கிரிவிட்டு நீங்கி ரதத்தண்டை வந்தார். அவ்விடத்திலிருந்த சிவகணங்க ளெல் லாரும் ஆர்ப்பரித்து, ஹரஹர சம்போவென்று அவர்மலரடியை வணங்கினார்கள்.

அப்போது எப்பொருட்குமுரித்தாய் எல்லாருடைய அன்பிலும் நிறைந்த அம்பிகைபாகன் ரிஷபவாகனம் விட்டிறங்கி, தேரின்பேரில் ஒரு திருவடியை ஊன்றினர். ஊன்று முன்னமே உரம்பெற அலங்கரித்தரதமானது மளமளவென்றுமுறிந்தது "உடனே தேவர்கள் புத்தியற்றீரும் புத்தியற்றீரும்" என்று தங்களுடைய கர்வத்தைத் தாங்களே அடக்கிக்கொண்டு தொழுது அழுதார்கள்.

அப்போது அஸ்திரவடிவாயிருந்த திருமாலானவர் தமதுதலைவற்கு யாதுகுறை நேர்வோதா வென்றஞ்சி விடைபாய்ந்தோடித் தாங்கினர். அதுகண்ட அண்ணலருள்சுரந்து, அம்மால்விடை இவர்ந்து, தமது திருவருட் பார்வைதாங்கிய திருநீற்றினால் அத்தேரை ஸ்திரம் பெறச்செய்து, தேன்கமழ்ந்த கொன்றைப் பூமாலையுடன் அதிலே திருவடிபொருத்தி விற்றிருந்து, துடிகறங்க, துந்துமி ஆர்ப்ப, தவளச்சங்கு முதலிய திருச்சின்னங்கள் ஒங்கி முழங்க, தேவகணங்களும் பூதகணங்களும் பூமியிடங் கொள்ளாமல் நெருங்க, விக்கினவிநாயகர், பாலசுப்பிரமண்யர், வீரபத்திரர், வைரவர், இவர்களாகிய பிள்ளைகள் இருமருங்கினுஞ்சூழ, அரிப்பிர்மமேந்திராதி தேவர்கள் தங்கள் சுயரூபத்தோடு தத்தம் வாகனங்களிற் பக்கத்தில் நெருங்கிவர, பாம்புகளுக்கு எதிரிற்பரிடியிடித்துச்செல்லுந் தன்மைபோல் மகாவீர ஆரவாரத்துடன் ஒருநாழிகைக்குள் திரிபுரமாகிய மூவெயிலிருக்கும இடம் நாடிச்சென்று, எதிர்நோக்கி நின்று "திரிலோகத்தினுஞ் சிறந்த திரிபுரங்கள் ஓரிடத்திற் சேர்ந்திருக்குமாகில் ஒருமிக்க வெல்லலாம்; அப்படி இராமல் வேறுபட்டுத் தனித்தனியிருப்பதினால் ஏககாலத்தில் ஜயிப்பது அருமை" என்றுன்னினவராய், கலகம் விளைத்தாற் காரியமுண்டென்னும் பழமொழியைப்போல் மகமேருவென்னும் வில்லைவளைத்துப் பிடித்து நாராயணாஸ்திரத்தைப்பூட்டி விடுத்தார். உடனே மூன்றெயிலு மொன்றுகூடிவந்து அவர்க்கெதிராயின. அப்போது தமது பக்கத்தில் வளர்ந்த நுண்ணிடையோடிருந்த இமவான்புத்திரியைப் பார்த்து, "பெண்ணே! இவர்களுடைய மமகாரச்சேட்டையைப் பார்த்தாயா?" என்று இளநகைப்பாகநகைத்தருளினர். அந்நகையினால் க்ஷணத்திற் குள்ளாகத் தீப்பொறிமலிந்து திகீரெனவெரிந்து, திரிபுரம் பொறிந்து, தீயாராகிய அசுரருங்கரிந்து சாம்பராய்க்கழிந்தார்கள். இப்பால் தேவர்கள் குறைதீர்த்த திரிபுராந்தகன் திரும்பிக் கயிலைபங்கிரிக்கு வந்து, தம்மை அடிதொழுதேற்றிய அரி, அயன், அமராவதியோன் முதலாகிய அமரர்களுக்கு அரு

ளளித்து, இனிமேல் உங்களுக்குத் துன்பமில்லை. உங்கள் பதமாகிய ஏதஸ்தானத்திற்குப் போங்கள்'' என்று விடைகொடுத்து, சாமும் விடைவிடுத்து உமையுடன் கயிலாயபத்தில் உவந்திருந்தருளினார். அவராரெனில் தம்மை வேண்டி வந்த பேர்களுக்கு விழைந்தவை யனைத்தும் வெறுப்பவளித் தாட்கொள்ளு விமலன்.

துரியோதனன் கர்ணன்பெருமையுஞ் சாரதித் தொழிற் சிறப்பையுங்கூறிச் சல்லியனைச் சம்மதஞ் செய்வித்தல்

கேட்டீரோ சல்லியராஜனே! வாசமுற்ற மலர்மாலைபெற்ற என்தந்தையாகிய திரிதராஷ்டிரனுக்கு இத்தச்சரித்திரத்தை மார்க் கண்டேயர் சொன்னார். நான் பக்கத்திலிருந்து கேட்டுணர்ந்த வண் ணம் உமக்குச்சொன்னேன். ஓ கொக்கினங்கள் பொருந்திக் குலாவுங் கமுகஞ்சோலைகள் சூழ்ந்த மத்திரதேசத் தலைவனே! சாரதித்தொ ழில் செய்யாகின்ற சாமார்த்தியத் தன்மையானது அதேகங்காலந் தவமிருந்த பேர்களுக்குக் கிடைக்குமேயல்லாது மற்ற சாமானியர் களுக்குக் கிடைக்கத் தக்கதோ? ஆதலால் தேர் செலுத்துந் தொழி லானது மெத்தவுஞ் சின்னத்தொழிலென்றும் அசலுல் மிகவுஞ் சின்னத்தனமென்றும் உமது சிந்தையில் எண்ணுதீர். இது யார் செய்கிறவேலை? இது யாருக்குத் தெரியும்? இந்தத்தொழில் முறை தெரிந்தவர்யார்? என்றுல் வல்லவராயனகிய கிருஷ்ணனுதவ ரீருமே கீர்த்திபெறும்படியாய்க் கற்றிருக்கின்றீர்கள். உங்களையல்லாது வேறொருவரைச் சொல்ல எனக்குத் தெரியாது. இப்படிக்கு அருமைபெறக் கற்றவித்தையை அர்ச்சுனனுக்குக் கிருஷ்ணன் உப காரப் படுத்துவதுபோல், என்பொருட்டில் நீர் உபயோகப்படச் செய் யாமல் தடுப்பது என்ன காரணம்?'' என்று பற்பலவிதங்களாகப் பேசி மேகத்துளியைப்போன்ற மின்னற்கணைகளை விடுக்கும் துரியோ தனமகாராஜனனவன் மறுபடியுஞ் சொல்லலுற்றான்—'' ஓ பத்திர பூபதியாகிய மன்னனே! அங்கதேசாதிபனகிய கர்ணனுக்குத் தேர் விடுஞ் சாரதியாக ஏற்பவேது நமது தீவினைப்பயன் என்று உமது மனத்தில் வருத்தங்கொள்ளாதீர். அத்தக்கர்ணன் எப்பேர்ப்பட்டவ னென்றுல் ஒப்பில்லாத உரம்பெற்றவன். தப்பில்லாத கருமறை கற்றவன், அடல்புரிபாகின்ற தடக்கைபையுடையவன்; மிகுகொடை யாளன்; கவசகுண்டலத்தோடு பிறந்தவன்; சுடர்மேனியுடையவன்;

சொற்சோர்வுபடாத கிலேயுள்ளவன்; ஒருகாரணத்தினுல் சவ்வீய சாசிலைப் கொல்லும்படியாய் வந்து பிறந்திருக்கின்றவன்; நாரண னுக்கு இணேயானவன்; கல்விப் பயிற்சியிற் பூரணக்ஞான புண்ணி யன்; புகழ்பிரதாபனுகிய கண்ணியன். போர்மழுவாளியென்னும் பரசுராமர் தமக்குற்ற துணேயாகிய ஆரணமந்திரங்களுடன் திவ்வி யாஸ்திரங்களெல்லாம் இவனுக்களித்திருக்கின்ருர். இதுவே போது மாகிய சாட்சியாயிருக்கிறது.

" ஐயா சல்லியராஜனே ! அஃதெப்படியென்ருற் சொல்லு கின்றேன் கேளும். பரந்தபுகழிற் சிறந்த ஜமதக்கினி முனிவருடைய தவத்தாலுதித்த சிரேஷ்டபுத்திரனுகிய அந்த ராமர் கயிலாசபதி யைக் குறித்துச் சிலநாள் தவமிழைத்தபோது, பார்வதி பங்கனுகிய பரமன் சீரணிமலரணிந்த செஞ்சடையிலங்க வீரியவிடைமேற் காட்சி யாய்வந்து, உனக்குவேண்டியவரங்கள் சொல்லென்று கேட்டனர். உடனே இராமனெழுந்து, தொழுந்தன்மையிற்சிறந்த துதியெல்லா மோதி, திங்கள், கூவிளம், எருக்கு, தும்பை, கங்கை, அறுகு, இவை முதலிய மணமாலே தரித்தருளிய சடைமுடிப்பரனே ! ஆகாயத்தி லிருக்குந் தேவர்களும், சூரிய சந்திரர் கால்வழிதோன்றியராஜாக்க ளும், சாமர்த்தியம்பெற்ற என்தந்தையைச் சிந்தைநோவச்செய்து சேதித்துப் போட்டார்கள். அந்த அவனிபர்பாவரையும் நான்வென்று தந்தையின்கடனே முடிப்பதற்கு நிர்வாகமில்லாதவனுயிருக்கின்றேன். தேவரீருடைய திருமையினுலே வெல்வதற்குத் திவ்வியாஸ்திரங்க ளோடு வில்லும் ஒப்பில்லாத வல்லமையும் அருள் செய்யவேண்டும்." என்று பலவிசைதாழ்ந்து வீழ்ந்து, வாழ்ந்தேனென்று மகிழ்ந்து அம் மானிட மேந்தியின் மலரடிமைபத்தனது முடிமேலே தரித்து வந்திக் தான். அப்போது அந்திவண்ணன் தந்தைபோல் மகிழ்ந்து தருவோ மென்று,செந்துவர்வாயாள் சுந்தர உமையொடு கந்திமேலேறி கடந்து விண்போனர்.

வந்தான் மறைந்த வாறறி யாமல்
அன்புமேற் கொண்டு அகேகநாள் நின்று

அருந்தவ மாற்றி அலந்தலே யுறுநாள்
அடியா ரின்புரு வாகிய நாதன்

கடிசேர் பச்சைக் கொடியுடன் வரவும்
படிமேல் வீழ்ந்து பாடித் துதித்து

உருகிக் கண்ணீர் பெருகிக் கரைய
வேதியன் றவத்தை வியந்து வியந்து

பாதி யாளுடனே பகுமா யணைத்துத்
துன்பங்கள் தீர்த்துச் சுடர்மழு வளித்து

இன்பமார் படைகள் இருக்குடன் கொடுத்து
உத்தமன் பேறு ஒருவர் பெறுமையால்

கற்றவர் நற்றவர் ககன வாணரும்
மெத்தப் புகழ்ந்து மிகுஜெயங் கூற

ராமனைப் பரசி ராமனென் றுரைத்து
வாமாங் கதன்வெண் மலைக்கெழுந் தருளினர்

கொற்றமார் பரசி ராமனு மிப்பால்
பற்றலர் தம்மைப் பாழ்படக் களைந்து

அத்தனுக் குரிய அருங்கடன் முடித்து
வெற்றிசேர் படையும் வில்லும் அகற்றி

மறுமைப் பயனே மனந்தனில் நாட்டி
சிறுமைப் பயனைச் செறுத்திய லோட்டி

நற்றவம் புரியு நாளையி லோர்நாள்
கொற்றமார் கன்னன் குறுகிப் பணிந்தான்

அத்தனும் அணைத்து ஆதவ குமார
தத்துவக் ஞான சம்பன் ஞவென

அடைவுடன் படையெல்லாம் அளித்தருள் புரிந்து
விடைகொடுத் தனுப்ப மீண்டனன் கர்ணன்.

ஓ சல்லியபூபதி இந்த அங்கமீதசனுகிய கர்ணமகாராஜன்---

சாரதி பெற்ற தநயனு மெனில்
அரண முனிவன் அருள்செய் யானையா !

உற்பவத் துண்மை ஒருவரும் அறியார்
கற்பனை யாணவக் கர்மிகள் தூறுவார்

விற்பன விவேக வேந்தசல் லியனே
அற்பமா யிழிவாய் அகத்தினில் நினையேல்

நமக்கெலாம் மேலாம் நற்குலப் பாலன்
உமக்குநா னினிமேல் உரைப்ப தொன்றில்லை

கர்ணன் புகழுங் கருதுமென் வாழ்வும்
உம்மா லின்று உயர்வுற வேண்டும்

கர்ணனல் விஜயன் கால்சாய்ந்து மாளவும்
மன்னனுய் முடிகொடி வையகம் ஆளவும்

உம்மை நானடுத்தேன் உரிமையுங் கொடுத்தேன்
வன்னமாஞ் சல்லிய மாவீர ரேறே !
ஆர்க்கிது கிடைக்கும் அசுவமூர் நற்றெருழில்
பார்க்குள் முன்வெருபோர் பாக்கியம் பெற்றார்
மூப்பா னிரண்டுடன் மூதறம் வளர்க்கும்
அப்பாவை பாகற் கருமறை யினமாம்
புரவித் தேரினைப் பொற்புடன் செலுத்த
பரவுநான் முகன்முனம் பாக னலனென்
பாற்கடற் றுயின்றோன் படிமேற் பிறந்து
கார்க்கடல் வண்ணன் கண்ண னென்னும்
வசுதேவன் மைந்தனுய் மாதவிக் கிசைந்த
விஜயன்தேர் தூண்ட மிகுசூத னலனென்
மாடு பிடிக்க மச்சகா டேற்றாள்
பேடியாய்த் தனஞ்செயன் பிள்ளாதே ரூர்ந்தான்
சுபத்திரை யாளைச் சோரமாய்க் கொணர்ந்த
விபத்தில் விசயற்கம் மெல்லிதேர் விட்டாள்
உயர்வாசித் தேரை உம்பரு ருய்த்த
கைகேசி தன்னுற் களித்தான் தசரதன்
நளன் ருதுபர்ணன் நற்றே ரூர
அளவிலாப் புகழோ டவன் மகிழ்வுற்றான்
ஆதலாற் றேர்விடும் அலுவல் இகழ்ச்சியாய்
ஓதுறே லையா உயர்ந்தோர் செய்கை
இஃதென் றுந்தன் இதயத்தில் வைப்பீர்
சுகமதி மத்திரத் தோன்றலே இன்னும்
கார்தொட்ட தேரை நீர்விட்ட வேளை
நீர்பெற்ற கர்ணன் சிலவிஜ யன்றனை
வென்றுயிர் அழித்தால் விண்ணோர் மண்ணோர்
நின்றுமைத் துதித்து நிறைமலர் தூற்றுவர்
இசையுமக் கல்லது எவர்க்குறும் ஐயா !
என்னரும் வாழ்வும் இருகிலப் பரப்பும்
மன்னுமென் னுயிரும் மானிட யாக்கையும்
உம்மதே யும்மதே உரைத்தேன் முக்காலும்
மன்னனே போற்றி மகிழ்ந்தென்னை யாளும்
என்று வணங்கிய இறைமேற் றயவாய்

நன்று நன்றென்று நன்மனம் இரங்கி
மணிமுடி வாகு வலயமு நீக்கி
தினிவுறு குல்லாச் சிறுசட்டை அணிந்து
பார்த்த சாரதிபோற் பாக னுனன்
போர்த்தனன் பீதாம் பரம்புவிக் கிறைவன்
அப்போ தந்த அருஞ்சமர்க் களத்தில்
உற்றம ராட உதவியாய் வந்த
மன்னரு நால்வகை மருவிய சேனையும்
தன்னிக ரில்லாச் சயவீரர் தாமும்
அந்தரத் திறைமகன் அர்ச்சுனன் றனக்கு
மந்திர புயத்தோன் வசுதேவ கிருஷ்ணன்
தேர்ப்பாகனுகிச் செலுத்தும் நிறம்போல்
மார்த் தாண்ட னீன்ற மகன்கர்ண னுக்கு
வல்லியப் பேரான் மத்திரத் தலைவன்
சல்லிய பூபதி சாரதி யானுனன்
சொல்லுதற் கரிய தும்பையும் வெற்றியும்
வில்லுறும் வாகையும் வீரமும் புனைந்து
வலம்புரி மாலை வணங்கா முடியோன்
புலம்புறு கடல்சூழ் புவியெலாம் ஆள்வான்
அவனதே முடியும் அவனதே கொடியும்
அவனதே செல்வமென் றறைந்தார்த் தனரே.

கர்ணன் சல்லியனேடு தன்னைத்தான் புகழ்ந்துபேச, அவனதைமறுக்க, இருவரும் வாதிடல்

இத்தப்பிரகாரம் துரியோதனனுடைய சைன்யங்களெல்லாஞ் சிந்தைகளித்து மகிழ்ச்சியிற் சிறந்திருந்தார்கள். அந்தவேளையில் அருக்கன்பெற்ற பிள்ளையாகிய கர்ணன் தேவேந்திரனுக்குத்தான மாகக் கொடுத்த கவசகுண்டலமானது மீட்டுந் தன்னுடன் கூடப் பிறந்து தனக்கு உற்றதுணையான தன்மைபோற் சந்தோஷமடைந்து, சுத்தவீரர்களில் முதன்மைபாகிய மத்திரராஜசல்லியனைக்கண்டு மார்போடணைத்துத் தழுவி, தனக்குரிய மணித்தேர் கொண்டு வரும்படி சொல்லினன். அந்தச் சல்லியனுனவன் கர்ணன் சொல் லியபடியே போருக்குத் தகுந்த வீரப்பரிபூட்டிக் கடிவாளமுங் குதிரையோட்டும் உளுவுகோலுங் கைக்கொணர்ந்து, ஆதபன் சாரதி யாகிய அருணனுக்கு ஒப்பாகும்படியாய்த் தேர்கொண்டுவந்து

நிறுத்தினன். அந்தத்தேரின்மீது சேனாதிபதியாகிய கர்ணன் ஏறிக் கொண்டு, படைமுகத்திற்சென்று நின்று, அரவக்கொடி காட்டி அழகு பெறுந் துரியோதன மகாராஜனையும், அவன் தம்பிமார்களில் இறந்த வர்போக இறவாதிருக்கும் பேர்களையும், சிலசேனைகளுடனே பேர ணியாக நிறுத்தி, அடிபோர்புரியும் அரசர்களையும், கிருபாசாரியையும் இருபக்கத்திலும் அணியாய் அமைத்து, சகுனிமுதலாகிய வல்ல வர்களெல்லாம் முனையில் இருத்திச் சொல்லுதற்கரிய பூரணையில் நக்ஷத்திரங்களுக்கு நடுவில் வான்மணியாகிய சந்திரனை காட்டிவைத் ததுபோற் சேனைமுத்திர மத்தியில் தன்றேரைச்செலுத்தி வாயு வின் வேகத்தைத் தாங்கி உலகெங்கும் ஓங்கியுயர்ந்த மகமேருவைப் போல் வண்மையிற்சிறந்த அக்கர்ணன் வாகையோடு நின்று வேதப் பிராமணர், வித்துவான்கள், இரப்போர், மிடியர், வினையர், இளைத்த ராஜாக்கள், அதிதிகள் முதலாகிய பேர்களுக்கும், தேவாலயங்களுக் கும் தானமும், தியாகமும், சிறப்புஞ்செய்து சிங்கைகளித்து ஆறுமுகத்தெய்வமே ஓர்முகமாய் வந்து அவதரித்ததென்று சொல் லும்படியாக அருள்சுரந்த முகத்தினழகுச் சந்தனபாளித குங்கும மணிந்த விரிந்த மலர்மாலை புனைந்த குவிந்த தோள் பறந்தவாள் சிறந்த சல்லியராஜனை நோக்கிச் சிலவசனங்களைச் சொல்லத் தொடங்கினன்.—

சல்லியமதிச் சல்லியனே! தேவேந்திரன் பிடித்திருந்த இந்திர தனுவென்னும் வில்லைச் சூரியன் பெற்றான். அதைச்சூரியன் இடத்தி லிருந்து மதங்கமாமுனிவர் பெற்றார். அவரிடத்திலிருந்து பரசுராமர் பெற்றார். அந்த மகாபுருஷராயனவர் எனக்குக் கொடுத்தார். இத் தன்மைவாய்ந்த அரியவில்லையும், அதற்குத்தக்க பகழிகளையும் பெற்றி ருக்கின்றேன். ஆரணகாரண பூரணனுகிய நாரணனுக்கு ஒப்பான உன்னைத் தேர்ப்பாகனாகவும் பெற்றேன். நான் ஜன்மாந்திரத்திற் செய்த நல்வினைப்பயனுற் பெரும்பே றுடையவனானேன். உரிய மித்திர நேசனுகிய மத்திராராஜனே! எனக்குப்பகை அர்ச்சுனன் அல்லாமல் வேறொருவரும் இல்லை. அந்த அர்ச்சுனனுக்கு எதிர் என்னை அல்லாமல் இக்கிலத்தையாளும் அவனிபாலரில் ஒருவரும் இல்லை. ஆகையால் என்மனத்துக்கிசைந்த தோழனுகிய துரியோதன மன்னன் மண்டலமுழுதும் ஆளும்படியாய்ச் செய்யப்போகிற என் ஆண்மைபைப்பாரும்" என்று கர்ணராஜன்சொல்ல, இவன் சொன்ன வார்த்தைகளையெல்லாம் மத்திராராஜன்கேட்டு, இளகையாக நகை

த்து, "கர்ணனே! உன்னுடைய வெற்றியும், சாமார்த்திய சக்தியும், வலிமையும், நீ கற்ற வித்தைமையும் சொற்றிறமையும் நீ எனக்குச் சொல்லவேண்டாம். உங்களிருவருடைய தேரும் ஒன்றோடொன்று கிட்டிநோக்கி, உருள்களுடன் உருள்கள் முட்டித் தாக்கி, எதிர்க் கெதிர்சென்று யுத்தம்பண்ணும்போது உங்களுடைய சேவகத்திறம் தெரியும்!" என்று சொல்லிப்பின்னும் "அங்கதேசாதிபனே! கர்ணர்ச் சுனர் என்னும் நீங்களிருவரும் ஒருவருக்கொருவர் ஈடு தாழ்த்தியில்லாத வரமும், உரமும், திரமாய்பெற்ற வீரர்தாம. இதுவரையிலும் நீங்கள் இரண்டுபேரும் யுத்தம்பண்ணிய இடங்கள் தோறும் நாங்களும் பக்கத்திலிருந்து பார்த்திருக்கிறோம். போர்முகத்தில் மறந்தும் பயப்படாத மகாவீரவிஜயனே ஓ நூகாலத்திலாவது, நீ ஜயிக்க நாங்கள் கண்டறிதபாம் ஓ செல்வக்கொடையாளியாகிய தீரனே! நீங்களிருவருங் கூறிக்கொண்ட சபத முடிக்கும்படியாய் மனம் இளைக்காதவயிரங்கொண்டு யுத்தஞ்செய்யுங்கள். அப்படி அமர் விளைத்தால் யார் ஜெயிபபார்களோ? யார் தோற்பார்களோ? அறிந்தபோ தெனக்கொன்றுந் தெரிபவராது. இன்னர் வெல்லுவார்களென்றும், இன்னர் தோற்பார்களென்றுபு, யார்தான்எப்படி சொல்லலாம்? அப்படி துணிந்து சொல்லுவதற்கு நாங்கள் சக்தைகப்படுகிறோம்." என்று இயம்ப, அதைக்கேட்டு அங்கதேசாதிபன் பெருமூச்சுவிட்டுப் பற்கடித்து, மனம்பதைத்து, "ஓ சல்லியராஜனே! ஆகண்டலன் மகனுகிய காண்டீபனுக்கு நானே எதிராளியல்லது வேறொருவரும் இல்லை யென்று நிச்சயமாக எண்ணிக் கொண்டிருக்கின்ற வில்லின் வல்லபம்பெற்ற தந்திரபால ராகிய தாதிபர்களுக்கு முன்னே, என்னை நீ இகழச்சியாய்ப் பேசவேண்டாம்! குதிரைபூட்டிய தேரைத் தந்திரமாகச் செலுத்தும் வல்லபம் உனக்குண்டா யிருக்குமாகில், உன்சொந்தமாகிய அந்தத் தொழிலை மாத்திரஞ் செய்வாயல்லது, மிகுந்த சாமார்த்தியத்துடன் செய்கின்ற யுத்ததிறங்களுக்கும் உனக்கும் என்னசம்பந்தம்? தோற்பதும் வெல்வதும் நீயா யெடுத்துச்சொல்லுகின்றவன்? இதற்கு நீ அருகனல்லன், உன்வேலையெதுவோ அந்தவேலையை ஜாக்கிரதையாகப் பார்க்காமல், மற்ற வீரத்திறங்களையும், ராஜதந்திரங்களையும் நீ எடுத்துப் பேசவேண்டிய நிமித்தமில்லை! உன்வேலையைப்பார்!" என்று புல்லிய மனிதனைச் சொல்லியவாறுபோல் அலக்ஷியமாகச் சொன்னன். இப்படி பெரும்புலி போன்ற கர்ணனவன் லேசாகச் சொல்லிய வசனமானது சல்லியனுடையகாதிற்கேட்டுங்கேட்காததன் முன் அவன்

கெய்சொரிந்து விறகுபோட்டு மூட்டுந்தீப்போலெரிந்து முனிந்து கொதித்து, முறுகிப்பொங்கி, கடுங்கோபத்துடன் கர்ணனைப்பார்த்து, "தகுதிபெறக்கற்ற சாமர்த்திய முற்றவர்களே அல்ப பலம் பற்ற அறிவீனர்கள் வெற்றிபெறுவார்களா? அப்படியிருக்க, நான் ஜெயிப்பேன் நான் ஜெயிப்பேன் என்று வாய்மதமாகச் சொல்லும் வார்த்தை யாருக்கொப்பும்? அந்த அர்ச்சுனனைப் புகழ்ந்து நான்மாத்திரஞ் சொல்லுவதல்ல. இந்த உலகத்தில் லோகிறவண்டுகள் மொயத்த வெற்றி மாலை பெற்றவிஜயனைத் துதிசெய்யாதபேர்கள் யார்? கால கேயனிவாதகவசர் முதலிய மூன்று கோடி அறுபதினாயிரம் பேர்களைத் தேர்க்கால் ஊன்று முன்னமே ஓர் கணைபால் மாண்டு போகுமபடி யழித்த அப்பாண்டு குமாரனை, பனைமரக்கொடி காட்டிய பீஷ்மர் முதலான பண்ணவர்களும், விண்ணவர்களும் மற்றமன்னவர்களும், தங்களுக்குள் தாங்களேமகிழ்ந்து, தனித்தனிப் புகழ்ந்து, பாலகேசரி பென்று பேரிட்டழைத்து, மங்களகரமாய் ஆசீர்வதித்து, மிகவும் அவன்புகழைக் கொண்டாடிய செயலை நீ அறிந்திலையோ? ஓ அங்க தேசராஜனே! மாட்சிமைபெற்ற நாற்பத்தெண்ணாயிர முனிவரும், மூப்பத்து முக்கோடிதேவரும், அமர சித்தர் முதலாகிய தேவகணங் களும், அஷ்டவசுக்களும், திக்குப் பாலரும் ஏகாதச ருத்திரரும், துவாதச ஆதித்தரும், தேவேந்திரனுடன்சென்று முனிந்து, செருச் செய்ய எதிர்த்து, விண்ணும் மண்ணும், அதிர்த்து, அண்டகூடம் பிதிர்ந்து, நக்ஷத்திரங்க ளுதிர்ந்துபோகும்படியாய்ப் பார்த்தனை வளைத்தநாளில், அவனிவாக லெல்லோரையும் பஞ்சாய்ப்பறக்க அடித்து, அகினிதேவனுக்கு அஸ்திரக்குடைகொடுத்து, சகல உயிர்க ளோடு காண்டவவனத்தை அழித்து ஜெயங்கொண்டு திரும்பிய கதையை நீகேட்டறியாயோ? அஸ்திரசாஸ்திர ஜாலங்களில் வல்ல மன்னனுகிய கர்ணனே! இவைகளெல்லாம் நீ அறியாமலும், நீகேளா மலும் போனும்போகட்டும். ஒருநாள் வனவேடிக்கைபார்க்கப் போன விடத்தில் நீ அருகிலிருக்கும்போதே உனக்கு உரிய சிநேகமித்திர னுகிய துரியோதனனையும், அவன் தம்பிமார்களையும் பெண்டுகளெல் லாரையும், ஒருமிக்கப் பிடித்துப் புயமொடித்து மடலொடிய இறுக்கித் தாமனிப் பிணையலாகக்கட்டிச் சிறை கொண்டுபோன கந்தர்வ ராஜ னுகிய சித்திரசேனனை ஒருவனேனும் வெல்லமாட்டாமல், சிலர்வீரர் களோடிவந்து பாண்டவர்களிருந்த வனத்திற் புகுந்து மெல்லவு மாட் டாமல், விழுங்கவுமாட்டாமல, சொல்லவுமாட்டாமல் நின்ற சேனை தருமராஜன் அறிந்து, சங்கதிதெரிந்து, தம்பியென்று பரிந்து,

பீமார்ச்சுனரை நோக்கி, "விரைவில் துரியோதனுடையரைக் கொண்டு வாருங்க" ளென்று உத்தரஞ்சொல்ல; அப்போதே பத்தரைமாற்றுப் பசும்பொன் போன்ற தம்பிகள்சென்று கந்தர்வன் போரை வென்று மீட்டுக்கொண்டுவந்து அத்தருமராஜனுக்கு நேரில் நிறுத்திக் கட்ட விழ்த்துவிட்ட காரியத்தை நீயோசிக்க வில்லையோ? இதோநேற்றுப் பெரியமேகர்கள் அநந்தம், குதிரைகள் அநந்தம், யானைகள் அநந்தம் போராடும் போர்த்திற வீரர் அநந்தம் இப்படி சூழும்படியாகப் பெரு முழக்கப் பேரிவாத்தியத்துடன்போய் விராடராஜனுடைய பசுக்களை மடக்கிய காலத்தில், வீரவிற்கொண்ட விஜயக்காளை ஒற்றைத்தேரு டன் தோன்றி ஒரு பெருங்கணத்தின் முன்னேவென்று மச்சகாட்டில் லச்சையாக அச்சத்தை விளைத்துத் தலைத்துணிகளைக் கைக்கொண்டு பிராணதாரை வார்த்து அனுப்பியதும், நீ காலோட்டமாய் ஓடும் போது அசுவத்தாமன் உனக்கெதிர்வந்து நின்று தடுத்துக்கேட்டதும், நீ அவனை அடித்துச் சொன்னதும் மறந்து போனையோ? உள்ளத்தில் இல்லையோ? ஓ உதாரனே! பற்பலகாரியங்களிலேயும் சிற்சில யுத்தங் களிலேயும், இந்திரகுமாரனுகிய சந்திரமுகவிம்ப தனஞ்செயன்ஜெயம் பெறும் புகழ்ச்சியும், உன்னுடைய புபவஜி இகழ்ச்சியும், கேட்பதும் பார்ப்பதும் எங்கள்மேலையா யிருப்பதன்றி,வேறுமாறிச் சொல்லு வதற்கு இடத்தைக் காணும். ஓ கச்சைக்கொடி படைத்த கர்ண னெனுந்தான்றலே! இன்றைக்கு நடந்துவருகின்ற யுத்தத்திலும் நீ பெறப்போகிறது அதுதான். ஆகிலும், பலம்பொருந்திய மேருமலை யானுலும், வஜ்ராயுதத்துக்கு முன்னே அந்தமலையின் நிலைப்பம் என்னநடக்கும்? அதுபோல் இந்த விஜபனுக்கு முன்னே எவர்க ளுடைய சமர்த்தும் தலைகாட்டாது. மேலும் வேந்தர் பெருமானுகிய துரியோதனமகாராஜன் என்னிடத்தில் உற்றுப்பொருந்திய கண்பி னல் அவர் சொல்லைத்தள்ளாமல் உனக்குத்தேர்செலுத்தி, சமயோ சிதமான காரியங்களைக் குறித்தும் தன்பலம் மாற்றர்பலமுதலிய தன்மைகளைக்குறித்தும், உறுதிவார்த்தை சொல்லவந்தேனேயல்லா மல், விறுதாவில் நான் உனக்குச் சொல்லவேண்டியது ஒன்றுமில்லை! இப்பவு மென்ன? துள்ளிக்குதித்துச் சண்டை தொடக்கச் சென்று யாகில் நீ பட்டுப்போவாய் என்னுஞ் சொல்லுக்கு யாதொரு கஷ்ட மில்லை. தீர்க்காலோசனை செய்து உன்னிஷ்டப்படி செய்துகொள்ளக் கடவை! விதிதப்பிப் பிழைத்து வாழ்ந்தோர் மேதினியிலில்லை. விதியை அனுசரிக்கும் மதியென்பது மேலோர் வாக்கியம். இதை நீ அறிந்துகொள்!" என்று சொன்னன்.

கர்ணன்கேட்டுக் கடையுகம்போற்கமறி, படைபடையாய்ப் பொறிபெழவிழித்து,மத்திரராஜனைக் குத்திரகொடூரமாய்ப் பார்த்து, "ஆ! ஆ! நீ சொன்ன உத்தரம் மெத்தநன்றாயிருக்கின்றது! எனக்கு நல்லுறுதிகாட்டி நாட்டினை. ஓ சல்லியராஜனே! நான் அந்த அர்ச்சுனன் முன்னே சென்று வெற்றிகொண்டு வரும்படியாகிய வல்லபம் எனக்கொரு அதிசயமல்ல! அப்படியிருக்க அவனைக்கொல்லுவதற்கு உன்னுல்லுமாகாது! மல்றெவர்களாலு முடியாதென்று நீ செல்லுகிறாய்! போகட்டும் என்னுலேயே ஜெயம்பெறக்கூடாதென்று சொல்லும்போது, உன்னைப்போன்றவனல் - அல்லது, உன்னுல் அக்கிரீடியை ஜெயிக்கக்கூடுமென்று எந்த வீரன் சொல்லுவான்? நல்லது: இச்சொல்லை உன்னைப்போல் என்னெதிரிற் சாமான்யராவது மனந்துணிந்துவாயெடுத்துச் சொல்லுவார்களா? ஓ மத்திரனே! நான் வெகு ஜனங்களும் அறியும்படி விஜயகாண்டீபம் பிடித்த விஜயனுடைய பிராணனை வாங்குதற்கு நெருப்புப்பொறிகளைச் சொருக்கும் பிரகாசக் கண்களைப்பெற்ற நாகாஸ்திரம் படைத்திருக்கின்றேன். ஓநாவேளை யாதவபுத்திரனுகிய மாதவன் அந்த நாகாஸ்திரத்தைக் கெடித்து அர்ச்சுனனைப் பிழைக்கச்செய்வானுகில், வேறெருவிதத் தாலேனும் அத்துட்டத்தனப் பகைவரின் கொட்டம் அடக்கி, பட்டத்தையானைகட்டி எட்டுதிசையும் புரக்கும் விருஷப விராட்டாகிய துரியோதன மகாராஜனது பிராணனுக்குத் துன்பமில்லாமற் காக்க வேண்டு மேன்னும் எண்ணமே என்னெஞ்சிற் குடிகொண் டிருக்கிறது. ஆனதால் அர்ச்சுனனை வெல்லுகிற தொன்று, அல்லது அரவ கேதனனைக் காக்கிறதொன்று. இந்த இரண்டில் ஒன்றுகிலும் என்னுல் முடியாமற்போகாது. இந்த உலகமெல்லாம் ஒன்றுகச்சேர்ந்து பற்குணனுக்கு உதவிவந்தாலும், எப்பொருட்கும் இறையாகிய ஈசன் துணைப்பட்டு இவனுக்குத் தேர்செலுத்திஞலும் பலகலைத்திறன் களையுடைய இந்திரன்முதல் தேவர்களெல்லாருஞ் சகாயமாய்த் தாங்கள் கற்ற மந்திர தந்திர எந்திரங்களால் என்னைத் தடுத்து எதிர்த்தாலும், குலமலைபோன்ற அழியாத்தேருடைய அர்ச்சுனன் பிராணனை நான்வாங்குவே னென்பதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. இவையன்றியும் காலம், இடம், வலி இவைகளை நோக்கி யிராகின்ற கருத்தினர் கோபித்துப் பகைத்து ஜெயம்பெறுகிற வரையிலும், தங்களுடைய வீரகுணத்தையும் வல்லபங்களையும் வெளிவிடார். அதுபோல், சமயம் வருகிறவரைக்கும் எதிர்பார்த்துக்கொண்டு கொஞ்சம் மாறுபட்டிருக்கின்றேன். இப்படியாயிருக்கிற என்னுடைய

குணத்தையும், நான்கொண்டிருக்குங் கோலத்தையும், நீ நிதானித்து உட்கொள்ளாமல், ஞாலமும் விசும்பும் நகைக்கும்படியாய்ப் படியாத கொடியவர்களோப்போற் குறைவாகிய காரியங்களையெடுத்து மனம் விடவிடப்பேசினாய்! ஓ குற்றமற்ற மத்திரத்தலைவனே! இஃதுனக்குத் தக்கதா?" என்றான்.

அந்தவார்த்தையைக் கேட்டுத் தீர்க்கபுத்திமானாகிய சல்லியன் "ஓ கர்ணனே! நானுன்னைத்திறத்தை அறியாதவன்றான். நேற்றுப் பதினொன்காநாட்சண்டையில் ஓங்கிய புயந்தாங்கிய ஜெயத்துராஜனை உயிர்போகாமல் நீ ரக்ஷித்ததைக்குறித்து அழகியகிரணங்கள் பொருந்திய திரிலோகத்திலும் கொண்டாடினார்களே! அந்தக் கொண்டாட்டம் உன்னைத்தான்போலு மிருக்கிறது! அப்பா! எக்காலத்திலும் வெற்றிமானைபெற்ற சுமேதகவாகியும் அநுமக்கொடியுமுடைய அர்ச்சுனன் தேருந்திக் கணைசிந்திப்போர்முந்திவரும் போர்முகத்தில், சளையாமற்சென்று நின்று வஞ்சமில்லாமல் நீயுங்கூடியவரையில் யுத்தஞ்செய்கிறாய்! அப்படி யுத்தஞ்செய்தபோதிலும், ஒருகாளாகிலும் நீ வெற்றிபெற்றதில்லையல்லவா? விஜயனை நான் வெற்றிகொண்டே னென்று விளம்புவாயாகில், காலத்தலைநீளாய்க் கத்திரி பத்திரியாகும். களிற்றானையை முயல்வெல்லும். சிங்கத்தை யானைகொல்லும், வேங்கைப்புலியை மான்புல்லும். வெவ்விய கருடனைப் பாம்பு கொல்லும் அல்லவா? அதற்கு ஒருகதைசொல்லுகிறேன் கேள்.

கர்ணனுக்குச் சல்லியன் வாயசக்கதைகூறிப் பழிக்க, உடனே யொருவர்மீதொருவர் வாள்கொண்டோங்கிநிற்றல்

ஓ கொடையாள னென்னுங்கோவே! உத்தரதேசத்தில், மித்திரதேசத்திற்பெருந்தியது ஒருசிற்றூர். அவ்விடத்திலிருக்கும்வாணியர் எல்லோரும் கலலமகாராஜர்கள். அவர்களிருக்கும் காட்டிற் கருங்காக்கை யொன்று தவிர, பசுபட்சிமுதலாகிய ஈஸ்வரசிருஷ்டியில் உண்டானஜெந்துக்களெல்லாம் உண்டு. இவ்வுலகத்தில் அன்னப்பட்சியைக் காணுமல் காமெப்படி ஆசைகொண்டு அவதிப்படுகின்றோமோ அதுபோற் பல்லோரும் புகழும்பாக்கியவான்கள், காக்கையைக்காணக் கவலைகொண்டவர்களாய். எங்கேயோ ஒரு தேசத்தில் இருக்கின்ற தாமே, மெத்தச் சுக்காரவடிவுபெற்றதாமே! ஆ! ஆ! அதைகாம்

பார்க்கக்கிடைக்குமா? அவ்வளவு பாக்கியம் பண்ணியிருப்போமா?' என ஏக்கங்கொண்டு இருந்தார்கள். அப்படியிருக்கும் காளில் ஒரு நாள் வாடைக்காற்று வாகாய் அடித்து மரங்களைசைத்து தென்றற் காற்று செடிகளை முறித்துத் திரும்பியபோது அந்தக்காற்றின் வேகத் தில் அகப்பட்ட ஒரு காக்கையானது மேற்சொன்ன சிற்றூரிற்போய் விழுந்தது. அதைக்கண்ட அந்த ஊரார் யாவரும் வந்து கவிந்து, மேளதாளத்துடன் பல்லக்கின்மேரில் அந்தக் காக்கையை ஏடுத்துப் போய்ப் பக்குவமாக இரக்கையை உருவியுலர்த்தி, பால்புகட்டி நெய் யருத்தி, குங்குமச்சப்பாரிசி குத்தி கொழியவில்லாமற் குழையப் பொங்கி, கற்கண்டுகூட்டிக் கவளமூட்டி, காலுக்கு கவரத்தினத் தண்டை, கொலுசு கிண்கிணியாரமுதலிய ஆபரணங்கள் பூட்டி, தங்கள் தங்களின் பணப்பை நிறைத்த கோட்டிவீட்டைக்காட்டி, பஞ்சகணமெத்தைகூட்டி, மிகுந்த பக்ஷமாய்த் தங்களுடைய பணங் களை லக்ஷம் லக்ஷமாய்ச் செலவழித்துப்பாராட்டி, விடியற்காலத்தி லெழுந்து, அதனுடைய காலில் எல்லோரும் வந்து விழுந்து கட்டி யணைத்து, பட்டுமெத்தையிலுற் கைபிலேத்தி முத்தமிட்டு, முகத் துடன்முகம்வைத்து முதுகைத்தடவி, மகாநேசத்தோடு உபசரித்து வந்தார்கள். அக்கால் மிகநேர்த்தியாய் வீட்டுக்கொருநாள் விருந்து செய்யப் பொருந்தி இருந்து அருந்தி, பறந்துபோக மாட்டாமல் எச்சிற்சோற்றுக்கு ஏக்குற்றிருந்த காக்கைக்கு யோகம்பிடித்து, மாமிசபர்வத மானுக்களைப்போல் ஊதிப்போயது. அந்த ஊரிலிருக் கும் அன்னப் பட்சிகளெல்லாம் வறுமை யடைந்து, நம்முடைய ஊரில் இந்தக் காக்கைகளென்ன கதியடையுமோ அந்தக்கதியை அடைந்து அடங்கி இதுவும் வினைவசந்தானென்று பிரமாவை யெண்ணிக் கொண்டிருந்தன.

இப்படியிருக்குங் காலத்தில் தின்று மதத்த அக்காகமானது தெருவெல்லாந் தாவி, அன்னம்போலுலாவி, இறகுகளை வீவி, இறுமாந்துமேவி, புதுவாழ்வு பெற்றவரைப்போற் கண்மறைந்து, குனியமாட்டாமல் மேற்பார்வையாய்ப் பார்த்து நிமிர்ந்து, பெரு மூச்சுவிட்டு, காதடைபட்டு, கணையும் ஆயாசமும் உடைத்தாய் வேறுவேறு ஓழுங்குகள் ஏற்பட்டு, பெரிய அந்தஸ்துடன் பொருந்தி, தானிருந்த பழையகதியையும், தன்ஜாதியையும், தன் குலத்தையும் தன் கோத்திரத்தையும், தான்வந்த வழியையும் முன்விதியையும், பின்மதியையும், தான் உண்டிருந்த இலையையும்

நினையாமல், ஆகாயத்திலிருந்து இறங்கிய போக தேவேந்திர சம்பத்தை அனுபவித்த புராதனத் தன்மைபோல் ஒன்றுந் தோன்றாமல், எதிரிலிருக்கும்பேரை இன்னாரென்று உணராமல் இறுமாப்படைந்து, கொழுத்துக் கர்வம் பிடித்துக் கவலையற்றிருந்தது. அப்படியிருக்குங் காக்கையானது அன்ன பட்சிகளைப் பார்த்து, "ஓ வெண்குட்டம்பிடித்த ஜாதியே! உங்களுக்கு ஜீவனம் எப்படி? நீங்கள் நெடுந்தூரம் பறக்கமாட்டுவீர்களா? மெத்த மீட்டுஞ் சொகுசுமாயிருக்கின்றீர்களே: தர்மரைபிலையைச் சாப்பிடுகிறீர்களே!" என்று இப்படிக்கெல்லாம் ஏளனமாய் வாய்மதம் பேசும்போது, அந்த அன்னங்கள் கொஞ்சு மெத்தவும் மனவருத்தப்பட்டு, புல்லோருக்கு நல்லகாலமும் நல்லோர்க்குத் தீயகாலமுமா யிருக்கின்றதே யென்று ஏங்கி; காக்கையின் சொல்லெவாங்கி "ஐயா! நாங்களென்ன பஞ்சைகள். உங்களுக்குச் சரியாய் நாங்கள் பறப்போமா? எங்களால் முடியாது!" என்று அன்னங்கள் தீனத்துவமாகத் திடுக்கிட்டுச் சொல்ல, "அப்படியல்ல, நீங்களும் நாமும் பறந்து பார்ப்போம்" என்று காக்கை கூப்பிட, "எங்களுக்குச் சோமேறது? தண்ணீரேது?" என்று அன்னங்கள் சொல்ல, "இவ்வளவுதானு உங்கள் பவுஷு" என்று காக்கைபேச, அதன்பேரில் நல்லதுபார்ப்போமென்று அம்சங்கள் உடன்பட்டு, காடு, கரை, நாடு, மேடு இவைமுதலாகிய இடங்களை நோக்காமற் கடல் நடுவை நாடிப்பறந்து போயின. அப்போது கூடப்பறந்த காக்கையானது இளைப்பாகி, உட்காரவேறோர் ஆதரவில்லாமல் நிராதரவாய்க் கடலின்பேரிற் விசுக்கு விசுக்கென்று முன்னதாகப் பறந்துபோய் மறுபடியுந் திரும்பிவந்து, பறக்கும்போதே நித்திரை, இளைப்பு, ஆயாசம், முதலியவைகளைத் தீர்த்துக்கொண்டு மெதுவாய் வட்டமிடும் படியாகிய அன்னத்தினிடங்கிட்டி, "ஐயையோ!! இம்மட்டா நீங்கள் பறப்பதென்று பேசி உங்களுக்கும் ஒருபட்சியென்று பெயரா? மானமில்லையா? ரோஷமல்லவா?" என்று யேசி, மீட்டுமுன்னுடிப் பறந்து போய்ப் பின்னுடித் திரும்பிவந்து இப்படி இரண்டுமூன்று விசை போகவுந் திரும்பிவரவுமா யிருந்தபோது விசையொடுங்கி, உடலிலுற்ற பசையடங்கி, அசைவற்று, சிறகைச் சுருக்கிக்கொண்டு தலை கீழாய்க் கடலில்விழுந்திறக்கும்படியாகிய கதி நேரிட்டது! அப்போதக் காக்கையானது அன்னத்தைக் கூவி, "அன்னப்பட்சிகளே! அயனுக்கு வாகனமாகிய அறிஞரே! நல்லோர் பெரியோருடைய நலந் தெரியாமல், நயமுணராமல், வாய்மமதைபேசி வழிகெட்டழிந்தவன் நான்தான். நல்லகுணவான்களே! வீதிதோறும் மலந்தின்கிற ஜாதி

யாகிய எனக்குப் பலமாகிய அழுதங்கிடைத்தும், அதைப் போற்றிக் காத்துக்கொள்ளாமல், உங்களைப்போன்ற பெரியோருடன் வீம்பு பேசிப் பிராணனை இழந்தேன்!" என்று சொல்லிக் கடலில்வீழ்ந்து இறந்துபோயது. இந்தப்படி ஒருகதை சொல்லுவார்கள்.

ஆதலால், ஓ கர்ணமகாராஜனே! இளைக்காத பலம்பெற்ற அர்ச்சுனனுடனே எதிர்த்து வெல்லுகிறேனென்று நீ சொல்லும்படியான வெல்லப் பேச்சானது, இப்போது நான் சொன்னகதைக்கு ஒப்பாயிருக்கிறது. சிற்றாமர் துரியோதனன். காக்கை கர்ணனுகிய நீ, துரியோதனன் வீட்டுச்சோறுதின்று வயிறு வளர்த்துக் கொழுத்திருந்த நீ, அன்னப்பட்சிபோன்ற அர்ச்சுனன் பேரில் யுத்தத்துக்குப் போகிறேனென்று சொல்லுவதிஞல், காக்கை அடைந்தகதி உனக்கும் உண்டாமென்பதைக்கருதுக. இதனை நன்முயோசித்துக்கொள்" என்று இவ்விதமாகப் பற்பல வசனங்களைச் சொல்ல, கர்ணன் சற்றுயோசித்து, நீர்வளம் நிதிலவளஞ் சிறந்த இந்த மத்திரதேசத்தஞனவன் நமது ராஜனிடத்தில் அன்புடைவனைப்போல் நடித்துக் காட்டி, இவனுக்கு மருமக்களாகியும் நமக்குச் சத்துருக்களாகியும் இராகின்ற பாண்டவர்களுக்குப் பலமாகவேண்டிய உறுதிசெய்கின்ருனென்று அறிந்து, ஆத்திரத்துடன் வாளாயுதத்தைக் கையிலுருவிக் கொண்டு, "புல்லியசல்லியனே! இப்போப்பட்ட அற்பச்சொற்களை இனிமேலுஞ்சொல்லுவாயாகில் ஒரேவெட்டாகவெட்டி வீசிப்போடுவேன். விரைவில் என்தேரைச் செலுத்துங் காரியத்தைப்பார்" என்று தெழித்தான். இப்படியாக வலிமையுடன் கர்ணன்சொன்னவசனத்தைச் சாரதியான சல்லியன்கேட்டு, தழலினுங்கொடிய அழலெழக் கொதித்து, சடாலென்று தேர்விட்டுக்குதித்து, கர்ணனுக்கெதிர் குறித்து, கத்தியை உறைநீக்கிப் பிடித்து "அடா சூதன்மகனே! அறுமானிக்குங்குதிரை பூட்டிய தேரை உனக்கு நான்விடத்தக்கதோ? எலியானது சண்டைசெய்வதற்கு இருந்த இடத்தில் நடிக்குமேயொழிய, பூனைமேலெதிர்த்துப் புறப்படுமாகில் என்னபாடுபட்டுப் போம்! எவ்வளவும் நினையாமற்போனயல்லவா?" என்று கீரிடி கெருப்பிடி பேரிடிபோ விரைந்து, விரைந்து சீறி எதிர்த்தான். அக்காலத்தில் சூரிய புத்திரனுகிய வீரியனுக் தேர்விட்டிழந்து, வாளாயுதத்துடன் மண்ணிற்குதித்தார். பின் ஒருவரையொருவர் துண்டிக்கும்படி நிச்சயித்து இருவரும் வாளாயுதங்களை ஓங்கினர்கள்.

துரியோதனன் கர்ணனுக்குஞ் சல்லியனுக்கும் நேர்ந்தவாட்போர்விலக்கி, மீட்டும் அவ்விருவரையும் புகழ்த்து சமாதானஞ் செய்வித்தல்

இப்படியிவர்க ளொருவரையொருவ ரெதிர்த்து இவர்களுடைய தேகத்திற்காயம்படுவதற்கு முன்னே, அல்லதவர்கள் காயம்பட்டு ஆகாயம் அடைவதற்குமுன்னே, சர்ப்பக்கொடி தரித்த கார்வேந்தன் கண்டு பயங்கரங்கொண்டு சிந்தை கலங்கச்சீக்கிரஞ்சென்று, இருவ ருக்கு மத்தியிலன்று, "என்னை முன்னதாய்கொன்றுபோட்டு அப்பால் நீங்கள் எப்படியாகிலும் போங்கள்" என்று விலக்கினன். இவ்வாறு ராஜாதிராஜனுடைய துரியோதனன் வெருண்டோடிவந்து விலக்கவும் இருவரும் விலக, பின்பு அரவக்கொடியோன் அவர்க ளுடைய வாய்மொழி கேட்டு, மனமூண்ட வெஞ்சினத்தை மாற்றி, உடனே பலமாகிய சிநேகசமபந்தம் உண்டாகும்படியாய் இருவரை யுங் கலக்கப்பார்த்து, மதுபடியும் ரதத்திலேற்றி, "எப்படியாகிலும், யுத்தம்விலக்கி வெற்றிபெற்று வாருங்கள்" என்று விடைகொடுத்து அனுப்பினன். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! பாண்டு மைந்தர் ஐவரும் மாலவும் வையகமுழுவதுந் தானே ஐயனுக வேற்று ஆளவுங் கருத்துக்கொண்டு, எலலா அசுரர்களையுங் அழிப்ப தற்கு ஏற்படிருக்கும் ஊழ்வினைக்குரிய குணத்தையுடைய துரியோ தன மகாராஜன் இவ்வாறு விடைகொடுத்து அனுப்பவும்; அந்த வேளை யில் அழகிய வீரகண்டை பூட்டிய கிருதவன்மன், வரிவிற்றூங்கிய கிருபன், தனக்குத்தானே ஒப்பாகிய சகுனி, வாசமாலையணிந்த சாலு வராஜன், தேசமெங்கும் புகழ்பெற்ற திரிகர்த்தராஜன், இவர் முத லாகிய பொற்றடந் தேர்வேந்தர்களும், அளவிறந்த சேனை மாந்தர்களும் அதிர்ச்சிகொண்ட பெருங்கடல்போல் நெருங்கிச் சூழ்ந்து கர்ணனைக் காத்து நின்றார்கள். இவ்விதம் உபபலத்துடனின்ற கர்ணனைத் துரியோதனமகாராஜன் மனப்பூர்வமாய்க்கனகளிக்கக் கருணை கூர்ந்து மகிழ்ந்து நோக்கி, 'இன்றையயுத்தம் நாமேவென்றோம் இதற்கு யாதொரு தடையுமில்லை, பிரபலஸ்தனென்று போற்கொண்டிருக் கின்ற விஜயனும், தன்தந்தையாகிய இந்திரனிடத்திற்கு இன்று போய்ச் சேருவான். ஆச்சுது. அவனுக்குப் போங்காலஞ் சமீபத்தில் வாய்ச்சுது!' என்றுமனந்தேறினவனுய்ப் படைமன்னர்களைப்பார்த்து,

"கேட்டீர்களா! எனக்குரிய இஷ்டர்களே! தேவேந்திரகுமாரனுக்குத் தேர்ச்சாரதியாகிய ஸ்ரீ கிருஷ்ணனிடத்தில் வைத்திருந்த நட்பாகிய உறவுக்குக் குறைவுவரப் போகுதென்று அஞ்சி, என்னிடத்தில் அன்னபாலுதி முதலியவைகளைத் தின்று வளர்ந்த விதுரனுவன் இந்தத் தருணத்தில் எனக்குதவியாக நின்று யுத்தஞ்செய்யாமல், தன்கையிலிருந்த வெஞ்சிலையை வெட்டி யெறிந்து போட்டு, எனக்குத்துணைவந்த யதுகுலமுதல்வனுகிய பலராமனையுங் கலைத்து, அவரைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு உலகிலுள்ள தீர்த்தங்கள் முழுமையும் ஒருங்கே ஸ்நானஞ்செய்யும்படி போய்விட்டான். அம்மதிருக்கட்டும்: எங்கள் பாட்டனாகிய பீஷ்மாச்சாரியர் கங்காதேவியாருடைய கர்ப்பத்திலுதித்து, தம் தந்தையாகிய சந்தனு மகாராஜனுக்குக் காதல்தீரும்படியாய்ப் பரிமளகந்தியைக் கலியாணஞ் செய்துவைத்து, அந்தக் கால்வழிபிற்பிறந்த எங்கள் நிமித்தத்தில் அரசும் வாழ்வும் இருநிலப்பரப்பு முழுமையுங் கொடுத்துவிட்டு, விவாகமென்ப தில்லாமல் பீஷ்மமபெற்ற விஞானதீர். இப்படிப் படவர் வெவ்விய போர்க்களத்தில் எனக்குச் சேனாபதியாயிருந்து சண்டைசெய்து வெங்களத்தை யெல்லாம் உதிரம் வழிந்தோடுகின்ற செங்களமாக்கி, மங்களமாகவந்த பகைவருடைய வீராதிவீரர்களை யெல்லாம் அமங்களமாக்கி, தாமுந்தேவரில் ஒருவராகச் சேர்ந்து போனர். மேலும், யாஜனமுகக் கடவுளுக்கொப்பாகிய அசுவத்தாமனென்னுஞ் சார்க்கிய சிலாக்கிய வாக்கிய பாக்கிய வீரகண்டாமணி வீக்கிய தாள்களையுடைய சிங்கக்குட்டியைப் பெற்ற தந்தையென்னுந் துரோணச்சாரியர் வேதபாராயணத்திற் பிரகஸ்பதி குமாரனுகிய கபனுக்கொப்பானவர்; பலம்பொருந்திய வில்வல்லபத்தில் நலந்திருந்திய நந்தீச்சுரனை ஒத்தவர். சிறந்த கிருபைக்கு ஜைகாஷ்ணுகிய விஷ்ணுவைப் போன்றவர். இப்படிப்பட்டவர் எனக்காகச் சேனாதிபதியாயிருந்து, அடியேனுக்கு மகுடாபிஷேகப்பட்டங்கட்டச் சித்தங்கொண்டு ஐந்துநாள்வரைக்கும் யுத்தஞ்செய்து, அந்த யுத்தத்திற் பகைவர் முதலாகிய வீரர்களையெல்லாம் பிணக்காடாகமொத்தஞ் செய்து, அழகியபோரில் தமது பிராணனைத் தத்தஞ்செய்து, அவனி வாழ்க்கையை விரும்பாமல் விடுத்து, இரும்புண்ட நீர்போல் திரும்பாதிருக்கும் பான்மையையொத்த நிருபாதிக நிஷ்டையை அடுத்து மோக்ஷவீடுசேர்ந்தார். ஓ என் அண்ணுவாகிய ஔதார்ய கர்ணமகார்ஜனே! பசுங்கல்லாபச் சாயலாற்சிறந்த தேகையிலேறி ரதாதனஞ் சேயாகிய சிவசுப்ரமண்யக் கடவுளான்வர் போரங்கராய்ச்சூரசம்

மாரஞ்செய்து தேவர்களுக்குத் தீங்கில்லாமல் வாழ்வைக்கொடுத்தாரல்லாமல், மற்றெந்தத் தேவர்களாகிலும் வாழ்வு தந்ததுண்டோ! அதுபோல் இப்போது சமர்கோரிட்டிருக்கின்ற இந்த வேளையில் உம்மைபல்லாமல் என்னை கிலேபெறச்செய்வதற்கு வேறே உரியவர்கள் ஒருவரில்லை.

ஓ மறையாய்ந்து தோய்ந்த நயத்தாற் பயந்த தக்கையாகிய கிரணசூரியனைப் போன்ற சூர், இந்த மத்திரதேசாதிபதியாகிய வில்லியற் சல்லியராஜன். தம்சகோதரி புத்திரராய்ப் பந்துக்களிற் சிறந்த மருகர்களாகிய பாண்டவர்கள் தமக்குரியர்களென்றும் பாராமல் தம்முடைய சத்தியவாக்குச் சோராமல், என்னுடன் கலந்த கிரேக தர்மத்திஞல் எனக்குதவிசெய்யுப்படியாய்ப் படைத்துணையானூர்; வஞ்சநெஞ்சுடையவரல்லர்; செவ்வையாகிய தீரத்துவமும் வீரத்துவமும் பெருமையும் உடையவர். சரஜாலங் கரஜாலங்களில் தாஷ்டியான வல்லவர்; போரின் கண் முனைவராகில் அவருடன் எதிர்த்து யார் சண்டை செய்பவர்? ஓ இணையில்லாவீரத் திறம்வாய்ந்த அண்ணு கர்ணராஜனே! இந்தச் சல்லியபூபன் என்வார்த்தையைத் தள்ளாமல் உமக்குச் சாரதியானூர். காலமறிந்து கமக்கு அநுகூலமாகிய தாறுமாருகிய பொல்லாமொழிகளை காவில் காறும்படிவைத்துப் பேசமாட்டார். கமதுலாபலோபந் தனதென்றெண்ணிப் பாடும்படியாகிய தனுட்டியர். இவர்சொல்லுகின்ற உறுதிப்பேச்சுகளெல்லாம் கபக்குச் சுகத்தையும் கலத்தையும் பலத்தையுந் தருமென்று உண்மையாக நினைத்து, கசமுஞ்சதையும்; பூவும் மணமும்போலும் சொல்லும் பொருளும்போலும்,உடலும்உயிரும்போலும் பாலும நீரும்போலும், கலந்து கைக்கொண்டு காரியங்களை நடத்தாமல், விரோதமாகப்புன் மொழிபேசி வீரியங்காட்டி விடுதாவில் உங்களுக்குள் நீங்களே பகைவைத்துக்கொண்ட விவேகசிலாக்கியமும், அநேக சாஸ்திரங்களை ஆராய்ந்த அன்பராகிய உங்கள் வாக்கியமும், என்னுடைய தவர்ப் பாக்கியமும் யோசிக்குமிடத்தில் மெத்தப் புதுமையும் பூர்ப்பியமுமான யோக்கியமாய் இருக்கின்றது. இஃதல்லாமலும், குதிரைகளின் மனமும், பலமும், தேசமும், இயற்கைக்குணமும், பற்பலவேககதியும், சுழிசுத்தமும், ஆகியவிந்த கலங்களை யுணர்ந்து, இன்னகாலத்தில் இன்னதேருக்கு இன்னகுதிரை பூட்டலாமென்று தெரிந்து கூட்டவும், ஓட்டவும், எதிராளிகளின் வீரங்கள் மிகுதிபற்றி யிருக்குமாயின் அவர்களுடைய புஜபலதிடத்தை எடுத்து எஜமானுக்குத் தடித்துச்

சொல்லவும், சிலவிஷயங்களைச் சொல்லுங்காலையில் எஜமானனவன் அந்த விஷயத்தைக் கேளாமல் தடுப்பானுகிற் சொல்லுகிறதற்கு உரிமையை வகிக்கவும், யுக்தங்களின் குறைவு, மலிவு, காலம், இடம், தன்வலி, எதிரிவலி, இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டிய கடமையுஞ் சாரதிகளுக்கு இயல்பாகிய முறைமையாகும். ஓ அண்ணு கர்ணராஜனே! இனிமேலுஞ் சல்லியபூமான் சொல்லத் தகுந்த சொற்களையெல்லாம் நமக்குத் தவறுதலை விளைப்பிக்குமென்று எவ்வளவு நினையாமல், அவருடைய மனங்கலக்கு அன்புபூண்டு, நாமெடுத்த காரியத்தை முடித்து என்னை நிலைநிறுத்திவைப்பீர்களாகில், சமுத்திரத்தை யுடுத்த இத்தாரணியிற் சகலசெல்வத்துடன் யானும், என்தம்பிமார்களும், என் புத்திர மித்திர களத்திராதிகளும், உங்கள் கைக்குளடங்கி யிருக்குங் குற்றமில்லாத நெல்லியங்கனியென்று நீங்கள் நிச்சயமாய் நினைக்கக்கடவது!" என்று இருவருக்கும் மனங்களிக்து களிக்கும்படி சொல்லி உபசரித்து, யுக்தத்துக்குப் போகும்படியாய்ச் செலவுகொடுத்து விடுத்தான்.

கர்ணன் சல்லியனோடு தனக்குத் தேர்ந்தசாபக் குறைகள்கூறி ஆகுலித்துப்பின் னிருவருந் தேறி மனமொத்துப் போருக்கெழல்

அப்போது சல்லிய சாரதியுங் கர்ணராயகனுந் தேரேறிக் கொண்டவர்களாய், மலை இலைக்கக் கிளைத்த திணிந்த புயத்தினையுடைய சாரதியாகிய மத்திரதேயராஜனே, மணமாலையணிந்த வாகுவலி நிறைந்த மார்த்தாண்டன் தந்த மகனுகிய கர்ணன் அருட்பார்வையுடன் பார்த்து, "ஓ சல்லியராஜனே! நீர் என்னை இவ்வளவு அவமதிப்பாகப் பேசலாமா? இது உமக்குத் தர்மமா?" என்று உலகமதிக்கப் பலவித நன்மொழிகளைப்பேசி, மறுபடியுந் தன்வரலாறு சொல்லத் தொடங்கி "ஐயா சல்லியர்க்கிறையே! கேளும்: பூர்வத்தில் மகேந்திரமலைச் சாரலிற் பொருத்திய அருந்தவத் தொருவனை பரசுராம ரிடத்திற்குப்போய், அத்திருத்தூல வமுடியினனுடைய வீரமணியணிந்த திருவடிமிசை தாழ்ந்தேன். அவர் எனக்கு ஆசீர்வதித்து அருளுதவிசெய்தார். அவருடைய கிருபைகொண்டு அவரைப் பூசித்திருக்கும் காலில், அவர் என்னை நீ எந்தக்குலத்தானென்று வினவினர். அப்போது ஏழையாகிய யான் உயர்ந்த மறையவர்குலமென்று

புகன்று நின்றேன். என்ன விரும்பி என்னிடத்திற்கு வந்தாயென்று கேட்டார். விலவித்தை கற்கவந்தேனென்று விளம்பினேன். சூதகி யாகிய காரியத்தா னென்று தெளிவுபுரிந்தார். தநுர்வேதமுதலிய யாவும் பூர்ணமாகக் கற்றேன். மதிக்கப்படாத பேரருளுடையவராய்ப் பிர்ம மாஸ்திர முதலிய சம்மோகாஸ்திரங்களுந் தந்து, வேண்டிய வேத மந்திரங்களும் அநுக்கிரகஞ் செய்தருளினர். இப்படி கடந்தகாலில் தேவர்களுந் தேவேந்திரனும் பொறுமைகொண்டு, மனம்பொறுமல் மாச்சரியப்பட்டு, என்னைக்கெடுக்க நினைத்து ஒருசூது பண்ணினார் கள். அந்த அநியாயச்சூது என்னவெனில், ஒருநாள் மந்திரவடிவு தாங்கிய பரசுராமர் என் மடிமீது முடிவைத்து நித்திரை பண்ணிக் கொண்டிருக்கும்போது தேவேந்திரனும் அவனுடன் சேர்ந்தவர்களு மொன்றுய்க்கூடி, வண்டுகளாய் உருக்கொண்டு பறந்து, அந்தரம் விட்டுப் புறப்பட்டுவந்து என்னுடைய தொடையைத்துளைத்து, விஸ்தாரமாக இரத்தவெள்ளம் பெருகிப் பூமியில் தோயும்படியாகச் செய்து, இந்தப்பக்கத்திலிருந்து அந்தப்பக்கம் வரையில் உருவிப் போயினர். இப்படி துளைத்தபோது எனக்கு மெத்தவும் பிராண வருத்தமாய் இருந்தது. அந்தப்படியிருந்தபோதிலும் தேகத்தையாகி லும் தொடையையாகிலும் அசைத்து ஆட்டுவேனில் ஆசாரியர் கொண்ட நித்திரைக்குப் பங்கம்வருமே எனறு அசையாமல் மனம் பொறுத்துக் கொண்டிருந்தேன்.

" அந்தவேளையில் என் தொடைவழி வந்த உதிரமானது படுத் திருந்த பரசுராமருடைய தேகத்திற் சில்லென்று பரிசப்பட்டு, அத னல் அவர் திடுக்கிட்டெழுந்து, இளஞ்சூரியனைப்போன்ற அவர் என் முகத்தை ஏறிட்டுநோக்கினர். நான்பயந்து நடந்த காரியங்களை பெல்லாம் நடுங்கி வணங்கிச்சொன்னேன். அவையாவுமுணர்ந்துசற்றுநேரம் நினைத்து, " அப்பா! நீ பிராமணனென்று சொன்னயே; பிராம ணர்களாலல் இப்பேர்ப்பட்ட காரியங்களுக்கு மனத்துணிவுகொண் டிருக்கமாட்டார்களே! ஆதலால் நீ பிராமணனல்லன். பின்னே யென்ன குலத்தான் உள்ளபடி உரை" என்று கேட்டார். நான்மிகவும் அச்சப் பட்டு, கைகால்நடுங்கி, உத்தமனுடையமெல்லடிமேல் வீழ்ந்து, சூத நாயகனென்பவன் என்னை யெடுத்து வளர்த்தவரலாறு சொன்னேன். அதைக்கேட்ட மழுவாளியானவர் தம்முடைய ஞானத்தால் அறிந்து என்மேல் முனிந்து, 'அடாகர்ணு! நான் உணர்ந்ததநுர்வேதத்தைப் பிராமணருக்கு உபயோகமாகும்படி செய்வதல்லாமல், மற்றப்பேருக்

குச் சொல்லுகிறதில்லையென்று ஒருகாரணத்தால் பிரமாணம் வைத்துக்கொண்டீடன் அப்படியிருக்க நீ என்னை ஏமாற்றி என் விரதத்தைக் கெடுத்தாய்! வேதியர் அறியத்தக்க பிரம்மந்திர முதலியதும் பிர்மசாஸ்திரங்களும் உனக்குக்கொடுத்திருக்கிறேன். மானமான பொய்பேசிய உனக்குக் கொடுத்தபடியால் எனக்கு ஆசுசமாகிய இடர்வந்து சேரிட்டது. அதனால் நான் மெத்தவும் துன்பம் அடையலானேன். ஆகையால் நீ என்னிடத்திற் பெற்ற மந்திரமும் கீணைகளும் யுத்தமுகத்தில் உனக்கு உதவாமற் போகக்கடவன' என்று சபித்து, 'பொய்வார்த்தை கூறியபுண்மையால் நீ எந்த யுத்தஞ்செய்வதற்கு எதிர்த்தாலும், கல்ல கல்ல சமயங்களாகிய அந்தப்போர்முனையில் உனக்கு மறதிவரும்'என்று சத்தியவாக்கினையுடைய உத்தம னுரைத்து விடுத்தார். இதனால் நான்குபேரும் என்னை இழிவாகப் பேசும்படி இலேக்கலாயது. ஓ செய்தவத் தொருவனுகிய சல்லியனே! உமக்கு உண்மையாய்ச் சொன்னேன். இம்மந்தன்றியும் இன்னுமொரு சாபம் வந்திருக்கின்றது. அன்னவரலாறையுஞ் சொல்லுகிறேன் கேளும்—

மத்திரபதீ! நிங்கள் மரபினனுகிய துரியோதனமகாராஜனுல் துங்கமுடிசூடி அங்கத்தசத்தைநான் பொங்கமாய் ஆண்டுவந்தநாளில், ஒருநாள் ஊர்வலஞ் செய்யவேண்டுமென்று உவகையும் உற்சாகமுங் கொண்டு, சகல வாத்திய சம்பிரம ராணுவத்துடன் சீர்திருந்திய தேர்மேலிருந்து கார்பொருந்திய மதில் சூழ்ந்த வீதியில்வரும்போது, இராஜாதிராஜனுகிய துரியோதனமகாராஜன் தடிக்கொண்ட கொடுமையோ, இந்த வுலகம் புகழ்கின்ற சத்துருக்களாகிய பாண்டவர்களுள் நற்றவ நன்மையோ, அல்லது என்னுடைய முற்பவத் துண்மையோ எந்தப்பாவமோ நான் என்னவென்று சொல்லுவேன்? ஊர்வலம்வரும்படியாய் ஏறிச்செல்லுகின்ற தேர்ச்சக்கரத்தில் சிவந்த நிறத்தினையுடைய ஒருபசுவின் கன்முனது ஓடிவந்து விழுந்து, உடல் சிதைந்து உயிரொழிந்து விட்டது. அந்தவேளையிற் பாபிகளுடைய கிரியாணகாலத்தைக் குறித்துக் கோபாவேசங்கொண்டுவரும் கூற்றம் போல் ஆலகாலத் தீயெனப்பொருந்தி நிறைந்த அழற்கண்ணராகிய ஒருமுனிவர் சிவந்ததமது திருமேனியின் தோற்றம்போற் சினங் கொண்டு, என்தேருக்கு நேர்வந்து நின்று, என்முகத்தைப்பார்த்து, 'அடாபாவி! நான் மெத்த அநுமையாகவும் ஆசையாகவும் வளர்த்த என்னுடைய இளமையாகிய பசுவின்கன்றைக் கொன்முயே: இன்று

இந்தக்கன்றைச்சிதைத்துக்கொன்ற உன்னுடையதேரும், விருதும், படையும், தேகமும், சத்துருக்கள் விடுக்கும், வெவ்வியபாணங்களினால் அடிபட்டு அழிந்துசிதைந்து போவது மல்லாமல்; கல்ல யுத்த சமயத்தில் நீ ஏறிய தேர்ச்சக்கரங்களும் பூமியிற் புதைத்துபோகக் கடவன!'என்று சபித்தார். இவ்விதமாக உரைத்தசாபச்சொல்லானது கடுந்தழற் கம்பிபோல் என்காதில் நுழைந்தவுடனே, நான்வேகமாக ஏறிச்சென்றதேர்விட்டிழிந்து, விரைந்து தாழ்ந்து வேதியன்திருவடியில்வீழ்ந்து, 'காவென்று இரைந்து, காவென்று கரைந்து, 'ஆடைவனே ! இது எனக்குத்தெரியாமல் விளைந்த குற்றம். ஆகையால்,இதை நீர் மன்னிக்கவேண்டியது. தேவரீர் கூறிய சாபாக்கினியைத்தவிர்த்துத் தீனனைக்காத்தருளும். ஓ தீனரக்ஷகனே ஓ செந்தாமரை மாலையணிந்த தேவனே' என்று பலவிதமாகிய இனியசொற்களைச்சொல்லிப்பணிந்து "ஓ சுவாமி! பாற்குடம்போல் மடிசுரந்து உயர்ந்து பருத்தபசுக்கள் ஆயிரமும், பூமியைக்கிழித்து ஓடுகின்ற பொன்னுருள் பொருந்திய தேர்கள் ஆயிரமும், மான்குதிக்குந் தன்மைபோல் திருந்திய நான்கு கதியிலுஞ்சிறந்து நான்குதிக்கும் ஓங்கிக் குதிக்குங்குதிரைகள் ஆயிரமும், சுபலக்ஷணகுணமுடையயானைகளாயிரமும், மிகுந்தகொழிலாளரும், கடலசூழ்ந்தகாசினிமுழுவதும் ஆளுகின்ற என்னிறைவனுகிய துரியோதன மகாராஜனுடைய கையிலுற் கொடுக்கச் செய்கிறேன். ஓமேகா முனியே ! என்குறையைத்தீர்த்தருளும்" என்று கூறித்தொழுதேன்.

இப்படி நான் இரங்கித்தொழுது அழுத இரக்கத்துக்கு எவ்வளவும் என்னை ஏறெடுத்துப் பாராமல், நான் சொல்லியதையும் ஓராமல், எள்ளளவேனும் இரக்கமில்லாமல், அவ்விருபிறப்பாளராகிய மேற்குலத்தோர் உரக்கக்கூவி, கண்டித மாகிய மேகாபத்துடன் என்னைப் பார்த்து, 'அடா அரசனே ! கொடுப்பிக்கிறேனென்றுசொல்லிய பாற்பசுக்கள், நால்வகைச்சேனைகள், அணிபணி மனி முதலாகிய அகேகம்பொருள்கள் இவைகளினால் இறந்துபோன பசுவின்கன்று உயிர்பெற்று வருமா ? நீ கொடுக்கும்பாக்கியம் என்பசுவின் கன்றைப் போல் எனக்குச்சந்தோஷந்தருமா? இதனால் எனக்கொரு ஆனந்தம் வருமா ? ஆகையினால் நான்கொடுத்த சாபம் நீங்கமாட்டாது. உன்னைச்சூழ்ந்த தீவினைவசத்தால் நீ அநுபவித்தேதீரவேண்டும்' என்று சொல்லிப் போய்விட்டார். இப்படி நான்பெற்ற இந்தச்சாபமும், ஆசாரியராகிய பரசுராமர்கொடுத்த அந்தச்சாபமும்,ஒருவேளை கேரிடு

மாகில், நல்ல தவத்தையுடைய பாண்டுபுத்திரர் வெற்றிபெறுவார்கள். அவர்களுக்கு நல்லகாலம்! ஓமத்திரபூபதி! இது மாத்திரந்தான் என்னை வாதித்துக்கொண்டிருக்கின்றது. இல்லாவிட்டால் எனக்கு நேர்கின்று போர் புரிந்து ஜெயிக்கத்தக்கபோர்கள் திரிலோகத்திலும் உண்டோ? கிடையாது. ஆகிலும், தேவர்களிற்சிறந்த திருமாலும், தேவர்பகையை வென்றவிஜயனும், என்னுடன் பகைத்து எதிர்த்து மூட்டப்போகின்றயுத்தங்களை நீரும் இருந்து பார்க்கப்போகின்றீர்!" என்று மிகுந்த ஆசையாய்ப் பூரணமானமனத்துடன் பொருந்தி நல்ல வார்த்தைகள் சொன்னபிற்பாடு, காயுங் கண்ணினையுடைய கடும்பரி பூண்ட கயிறுபிடித்து, எக்காரியங்களிலுங் கலங்கா மனத்தினையுடைய காவல ரெல்லாங் கலங்கித் திடுக்கும்படியாய்ச் சாரதித் தொழில்செய்தான் சல்லியராஜன். வாள்போற் சிவந்த கோபக்கண்களையுடைய வயவீரர் முதலியபேரும் புடைசூழ்ந்துவர, புரசையானை முதுகின்மீது முரசவாத்திய முழங்க, குற்றமில்லாத வெண்சங்குகள் பொங்கியார்க்க, சகலவித்வான்களுஞ்சூழும்படியாய்ச் சூரிய குமாரனுகிய சர்ணமகாராஜனனவன் பாரிய விற்பிடித்துப் படைமுகம்வந்து, இராஜாதிராஜனுடனே கலந்து, ஒருவரையொருவர் தழுவிப்புகழ்ந்து, சத்துருக்களைப்பகைத்து யுதஞ்செய்யாகின்ற கோபக்கண் கொண்டு குருக்ஷேத்திர பூமியிலே கின்றான்.

இவனைக்கண்ட உடனே தருமராஜனுடைய படைக்கதிபனுகிய திஷ்டத்தூய்மன் திணிந்தபலங்கொண்ட துருபதேயன், சோம தேசன், குந்திபோஜன் முதலாகிய சூரரும், தேதியதீரரும், கர்ணனின்ற யுத்தமுனையைக் கலக்கும்படியாய்த் தங்கள் தங்கள் மனவேகத்திலுமிஞ்சிய வேகமானதேரைக் கடவிவந்து வில்லாசை, நாணாசை விசிக ஓசை முதலியவைகளைக்காட்டி, உரங்கொண்ட சரங்களை உருத்துத் தொடுத்துவிடுத்தார்கள். அவ்விடத்தில் நிலைத்துகின்ற தூரியோதனனுடைய சேனைக்காவலர்கள் வில்வளைத்து நாணிழுட்டி, விஸ்தாரமாக நீண்டபாணங்களை நிமிரவிடுத்து அமர் கொடுத்தார்கள். அப்போது திசைகளிலிருந்து ஓசைபிறந்து பிரளைகள்பெயர்ந்து பிரமித்தோடும்படியாக மேலே எழுந்து வட்டமிட்டுச் சுழலும் பெருங்காற்றைப்போல்வருகின்ற பேராண்மைக் கணைகளைக் கண்ட தேவர்கள் திடுக்கிட்டுத் தியங்கிப்போனார்கள். ஓ ஜனமேஜய மகாராஜனே! இன்றைய தினம் நடந்த போர்த்திறத்தைச் சொல்லுமிடத்தில் யாரையார்வென்றார்கள்? யாரை யார்கொன்றார்கள்? இத்

னுடைய விவாதத்தை எப்படிச்சொல்லி நாம் அதிசயிக்கத் தக்கது? இறைவனே ! இன்று நடந்தயுத்தம் அறிதற்கருமையா யிருந்தது. அஃதெப்படியென்றால் அதிரதராதியர் தேர்கள் முறிந்தும், வீரிய குதிரைகள் அழிந்தும், சாரதிகள்சாய்ந்தும், ஒவ்வொரு வீரர்கள் மீது கணக்கற்றகணைகள் உடம்பெல்லாம் தூளைந்தும், அதனால் மெய் வருந்தியும், நொந்தும், புறந்தந்தும், இப்படிக்கெல்லா மிருவர்படை களிலும் வருந்தினர்கள். மூன்றிப்பொருந்தி யுத்தஞ்செய்யவந்த வீரர் கைந்த அந்தவேளையில், பிந்திச் சிறந்துவந்த வேறுவேறுகிய பல கோடி வீரர்பேரிற் சூரியகுமாரனுனவன் மகமேருபோன்ற வில்லை வளைத்துச் சுழற்காற்றுகிய சூறாவளிபோல் தன்தேரைச் சுழற்றி வந்து முனைமுகத்தில் முட்டவிட,திஷ்டத்தூய்மனும் பின்கொடாமற் பற்பலமுகமாக விற்போர்நடாத்தி, மேலெழுந்துவிழுந்த கணைகளினால் வெகுகோடிபடைகளும் அடிபட்டு உயிரழிந்து ஒழிந்து பதைபதைத் துப் பறக்கும்படிபாக, இவ்விரண்டு சேனாதிபதிகளு முரண்டு ஜெயம் பெறக்கருதிச் சண்டையிட்டார்கள். இருவர்விட்ட பாணங்களும் இரைந்தெழுந்து ஆகாயத்தில் இடமில்லாமல் அடைந்தன. இவ்வா றிவர்கள் தேகங்கள்சிதைந்து உடைந்து துடைத்தப்பும்படியாய் வின்னுணியிறுக்கி முறுக்கிப் போர்புரிந்தகாலையில், திஷ்டத்தூய் மனுனவன் கர்ணனுக்கு முன்னிற்கமாட்டாமல் அமரழிந்து, இடம் விட்டொழிந்து, ஏறுதேருடன் மாறி ஓடினன்.

விடசேனனுக்கும் விஜயகூத்திரனுக்கும் இவர்கள் பிதாக்களாகிய கர்ணனுக்கும் பீமசேனனுக்கும் யுத்தம்

இப்பாற் சோமதேசத் தலைவராகிய பாஞ்சாலர் வருக்கத்தில் அழிந்து ஒழிந்தசூரர்போக இன்னும் இருப்பவர்பேரிற் பகைகொண்ட அசுவத்தாமனுனவன் காமபாணத்துக்கு மேற்பட்டுச்சுருத்தை வாட் டும்படியாகிய எண்ணிலாக் கணையெடுத்து, தீமுகத்துடன் தேகத் தைக் கருக்கத்தெறித்துவிடுத்துச் சிலசில அஸ்திரங்களைப் பலபல வென்று செலவுசெய்தான். அந்தவேளையில் தர்மராஜன் ஆவேசங் கொண்டவரைப்போற் பரவசங்கொண்டு, "ஐயோ! இதென்னவிபரீத காலம்? அப்பா பீமசேனனே ! நீயாகிலும் அசுவத்தாமனுக் கெதிரிற் போய் நிற்கமாட்டாயா?" என்று மிகவும் மனஸ்தாபம் அடைந்து விளம்ப,மணங்குலாவும் மலர்மாலையணிந்தமுடிபொருந்திய அத்தன்மை

யனது உத்தரவின்பேரிலும், தனக்குச் சரியான கையுடன் சண்டை செய்யக்கொண்ட சந்தோஷத்தினாலும் உடனே பீமசேனன் புறப் பட்டு, அசுவத்தாமனுடன் எதிர்த்து, அந்த ஆசாரியகுமாரனையும் மற்றப்போர்களையும் யுத்தத்தில்வென்ற ஆரவாரத்தை நானெவ்விதமாகச்சொல்லுவேன்? இவன்போய் நுழைந்த மாத்திரத்திற் பகைவர் படைகளை ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் ஓடிவாடியிறக்க உலை வாய்மெழுகாய் உருகச்செய்யுங்காலையில், அத்துரியோதனனுடைய படைகள் சாய்வதையும் அசுவத்தாமன் இடையதையும் கர்ணனுடைய குமாரனுகிய விடசேனன்பார்த்து மனந்தாளாமல், கடகட வென்று மிகுந்த விரைவாகத் தேர்செலுத்திப் போர்கொடுக்கும் படியா யெதிர்த்துவந்தான். அப்போது வாயுகுமாரனுகிய பீமசேன னுக்கும் இவன்மனைவி விஜயாளுக்கும் பிறந்த மைத்தனுகிய விஜய க்ஷத்திரனுக்கும் சூரியகுமாரனுகிய கர்ணனுக்கும் இவன்மனைவி பொன்மாலைக்கும் பிறந்தமைத்தனுகிய அவ்விடசேனனும் முனைந்து, பெருமையுடன் கலந்த யானை சேனை, ரதம், குதிரை இவைகளோடு ஆயுதப்படைகளும் திவ்வியவாகனங்களு முடையவர்களாய், வில்லை வளைத்து, சொல்லைவிளைத்து, மிகுபாணங்களை விடுத்து, வேல் கொண்டெறிந்து, வாள்கொண்டுவீசி, விற்பிடித்தடித்து, விற்பனங் கள் படித்து, விருதுக்களாகிய குடைகொடிகள்பிடித்து, விதம் விதமாக விநோதத் தேர்விடுத்து, விறுவிறெனச் சுழன்று வெம் போர்விளைத்தார்கள். இவ்வாறு மைந்தர்கள்செய்த யுத்தங்களைத் தந்தையராகிய பீமசேனனும் கர்ணனுங்கண்டுகளித்து, பஞ்ச பூதப்புஞ்சமாகிய உடல்பாரித்து, வாசமாலை பொருந்திய தோள் கள் பூரித்து, தங்களுடைய ரத்தத்தை வேகமாக விடுத்து, மனோ வேகத்திலும் மிஞ்சியவேகமாய் வலப்இடம் சுழன்று குதிரைக் காலடியினாலும் தேர்ச்சக்கரங்களினாலும் எழும்படியாகிய தும்புகளது அம்பரத்தைமூடி மறைத்து இம்பராகிய மண்ணுலகாக்கவும் உலக மெல்லாம் அஞ்சிப்பயந்து மிஞ்சிப்போயிற்றென்று விவேகம்விடுத்து அவிவேக மயக்கமடித்துச் சிந்தைகொந்து தியங்கும்படியாகவும் எட்டுத்திக்கும் அண்டரண்டமுஞ் செவிடுபட்டுப் போகும்படியாக வில்வளைத்தார்கள்.

இவ்வாறு இரண்டு திசைகளிலுந்திரண்டு உயர்ந்த இந்திர வில்லைப் போன்ற தங்கள் வில்லை இடிமுழக்கத்துடன் வணக்கிய இருதிறவரும் கரசரணுதிகள் தெரியாமற் கடுஞ்சமர்புரிந்தகாலையில்,

பொன்மலையாகிய கல்லே வில்லாகவணக்கி எப்புவனத்துக்கும் இடை யூறுசெய்துவந்த முப்புரத்தை எரித்தருளியதற்பரனை முக்கண்ண னுடைய வலக்கண்ணை சூரியன் அருளியதுமாரனவன் பீமசேன னுடைய மார்பிலும் மாலை நிறைந்த தோளிலும் அளவிறந்த அம்புகளேவிடித்து முன்னும்பின்னும் உருவும்படியாய்த் துளைபடுத்தி னன். அப்போது பீமசேனன் செஞ்சுடர்ப் பொறிபறக்குங் கண் ணேடுமிஞ்சிய வீரபாகுவும் படபடவென்று துடிக்கும்படியாய் ஆகு லப்பட்டு, கலக்கண்ணீர்பொழிந்து மெத்தவருந்தினன். அச்சால் ஒளதாரியாகிய கர்ணன் கல்லடிபட்ட புண்ணில் தடியடி படுந் தன்மைபோல், மேலுமேலும் இலக்கமற்ற கணைகளைக் கலக்கமற் றெறியவும், அதன் பேரில் பீமன் ஈரிரண்டு நாலிரண்டு எண்ணி ரண்டு என்று சொல்லாகின்ற அஸ்திரங்களைத் தனது வில்லிற்பூட்டி அக்கர்ணனுடைய மார்புந் தோள்களுஞ் சின்னபின்னமாய்க் கலங் கும்படி விடித்து, தநுர்வேத உருவாகிய அங்கதேயனைப்பார்த்துப் பகைத்து நகைத்து, "அடாகர்ணா! இப்பவும் நீ நல்லவில்லாளி அல்ல. உன்னை நாசமாக்குவதும் எனக்கொரு பெரிதல்ல" என்று பொல்லாத வார்த்தையைச் சொல்லாமற் சொல்லி, அவனுக்குத் தேர்ச்சாரதி யாகிய சல்லியனைநோக்கி 'ஓ மாமா பார்த்தீரா? இந்தக்கர்ணனை ஓருகொடியில் முடிசாய முடித்துப்போடுவேன். அப்படிமுடித்துப் போட்டால் என்தம்பியாகிய அர்ச்சுனன் சபையிற்கூறிய சபதம் மாறப்பட்டு வீணாய்ப் போகுமென்று எண்ணி, பெரிய மனது பண்ணி, இப்போது பிராண பிச்சை கொடுத்தேன்! இப்பேர்ப்பட்ட சூதனு கிய சூதன்பிள்ளைக்கு நீர் சூதனுகிவந்து தேரைச்செலுத்திக்கொண் டிருக்கிற உம்முடைய சூதைக்குறித்தும் தொலையாத தோல்வியை கூடிய போர்வலியைக் குறித்தும், நானும் என்போன்றவர்களும் என்னசொல்லவேண்டியது? ஐயோ! உம்முடைய வில்வன்மை சொல் வன்மையெல்லாம் நிஷ்பிரயோசனமாயினவே. உமது முகத்தில் இனி யாங்கள் விழித்தற்கில்லாமற் போயதே' என்று நிஷ்டூரமாக நிந்தித்து, நிமிஷத்தில் அப்பாற்போய் மறுபடியுந் திரும்பி, அந்தபீமசேனனும் சில ராஜபுத்திரவர்க்கமும் நால்வகைப்படையும் நான்குபுறத்திலும் வளைத்து, ஊழிக்காலத்து இருளாஸ்திரங்களை எடுத்துத் தொடுத்து ஏகமாய்விடித்து அமர்மலைந்தார்கள். அப்போது அங்கதேசாதிபக் கர்ணனும் அங்கதேசத்தலைவரும் ஐச்வரியமுள்ள அங்கதரும் முனை சாய்ந்து, மனமோய்ந்து, வாய்காய்ந்து, வலிதேய்ந்து, வாகனுதி முதலிய படைகளுமாய்ந்து, வாகான பலசின்னங்களுந்தீய்ந்து,

வீய்த்து போனார்கள். அத்தேவலையில் யாரினுமேலாகிய வீரத்திலே மிஞ்சிய விடசேனன் விருதுபெறப் பிடித்த வரி வில்லையிருகால்வளைய நாணியேற்றித் தன்தந்தையவந்தியபீமன்முதலியோர்களேறிற் கொக்கணற் கணைகளைத் தூற்றி விந்தகிரிக் கொப்பாகிய தேரை மேலாகப்போக்கி, சிந்திக்தும் அன்பர்க்குமுன் வக்ரகாக்குஞ் செங்கண்பாலுக்கிளைய சாத்தகியுடன் சீறி எதிர்த்துச் செருப்புரிந்தான்.

காவிரிநாடனுகிய சோழனுக்கும் மகதநாடனுகிய சகாதேவனுக்கும் யுத்தம்

இப்பால் இன்றைக்குப் புதுவெள்ளம் வரும் நீங்கள் வயலே உழுங்களென்று ஆற்றுமணல் குறிப்புக்காட்ட அந்தக் குறிப்பின் பிரகாரம் அப்போதேவெள்ளம் புரண்டு வாகின்ற காவிரிநாடனுகிய சோழனும், அழகியபொன்முடி பொருத்த மகததேசனுகிய சகாதேவனும் பகைத்துயானையேறினார்கள். அத்தயானைகள் எப்போர்ப்பட்டனவெனில், மலைபருகிகள்போல் மததாரைகளைப் பொழிந்து, வானமும் மண்ணும் ஒன்றுக எழுந்து, வாரிதி நீரிற்றளைந்து, வலியபகைகளைக் களைந்து, மேகங்களைப் பிடித்துப்பிழிந்து, வேறுவழிபுகுந்து, தாறுமாறுகத்திரிந்து, உதிரச்சேறுபட யுத்தம்புரிந்து, ஒன்றும் நிகரில்லாமல் திரிபுங் குன்றுபோன்றவைகள். இவைகளின் மீது அவ்விருமகாதீரர்களும் ஏறி, இணையற்றதிடங்கொண்டு அடல்மதறி, சிற்சிலகணைகளைவிடுத்துச் சீறி, இரண்டு கருங்கடல் முகட்டில் உதித்த சூரியர்களைபோற் பிரகாசித்து வீறி, பலம்பொருந்திய வில்லைவளைத்து நாட்டி, பலதிசைகளுஞ் செவிடுபட நாணைசைகாட்டி, இந்த ஓசையுடனேகூடப் பாணங்களும் ஓடும்படிபாய் உந்தி, உற்றுவந்த சேனைகளின் உயிரையெல்லாஞ் சிந்தி, ஒருவர்க்கொருவர் முந்தி, உடல் வருந்திப் பிந்தி, ஓபாது யுத்தஞ்செய்து வரும்போது, மாவினையாளனுகிய சோழராஜன் பிறைமுகக்கணைகளாகிய ஒன்பது பிரபலவாளிகளைப் பலமாகப் பூசித்துவிடித்தான். அந்தவாளிகள் சென்று அம்மகதனுடைய மலர்மாலைகள் நிறைந்த மார்பமும், வாகாகிய திண்ணிய புயமு மறைந்துபோகும்படியாய்த் துளைத்தபோது சரீரமெல்லாங் காயநிறைந்து, இரத்தங்கள் உறைந்து, உயிர்நிலைகுறைந்து, தானேறிய யானை முறிந்து, வெற்றிக்குடையும், விருதுக்கொடியும் யானைப் பாகன் முதலிய படையும் அழிந்து, பின்பறிந்து வீழ்ந்தொழிந்தன. அப்போது மக்தராஜனனவன் தானேறிய யானையைத்

திடப்படுத்தித் திரும்பிவந்து சோழராஜனைவளைத்தான். அந்தச் சோழன் எப்பேர்ப்பட்டவனென்றால் கங்காநதியில் மூழ்கி ஆழம் அறிந்து, கட்டுத்தறியையும் - மூங்கிற்காட்டையும், பாகனையும் உரலடிபோன்ற காலால் முறித்து, விலங்கையும்-தொழுவையும், விலங்க எரித்து, மும்மதம்பொழிந்து, எழுறப்புயர்ந்து, காவிரியைக் கலக்கிக் குடித்து, கடலிலக்காவிட் டளந்து, திடரைக்கிணறுய்ப்பறித்து, திருகுதலில்லாமல் இறுமாந்து திரியும் பட்டத்து யானையையுடையவன்; மேலும் கப்பலோடும்படியான கடல்சூழ்ந்த காசினியெல்லாஞ் சிவப் பிரதிஷ்டைசெய்து, பாணிப்பிரபந்தங் கொண்டு பாரெல்லாம் ஜெயித்துப் பவனி வலம்வந்த மனுகுலச்சோழன். அந்தராஜனை வளைந்தமகதனனவன் கட்கனல் உதிர்த்து அதிர்த்து, மேலுமேலும் விர்த்திக்கும்படியாகிய மின்னலாஸ்திரம், இடியாஸ்திரம், மேகாஸ்திரம், மோகாஸ்திரம் இவைமுதலியவைகளைத் தொடுத்து, புயத்திலும் மார்பிலும் ஊடுருவும்படிக்கு விடுத்து, அந்திவெயிலைப்போன்ற சோரியில் மூழ்கப்படுத்தான்.

அதுகாலத்தில், கருவூர், மதுரை, காவேரிப்பூம்பட்டினமுதலிய கடிஸ்தலங்களையுடைய செம்பியன்; வடதேசத்திலிராநின்ற மன்னர் மண்டலீகர் திறையிட வாரிப்போர்கட்டிய சேரியன்; தேவர்குலபதியாகிய ரிஷபவாகன மூர்த்தருளும் பரமசிவனது அழகிய பொன்மலரடியை நிலவிய மின்மணிமுடியிற் பதித்த சென்னியன்; எட்டுத்திக்கும் மநுநீதிச் செங்கோல்செலுத்தி எல்லா வுலகையுஞ் சுவேதசத்திர நீழலில் அடக்கியாளும் வளவன்;நெருங்கிய கிரணமணிமுடியோங்கியவண்டுமொய்த்த ஆத்திமாலை தாங்கிய அபயன்; மதங்கொண்டு லாவிய ஆண் புலிக்கொடி பொறுத்து அன்னவளம் பெற்ற மன்னவ ரேறுகிய சோழமகாராஜன்— ஒருகாலத்தில் இந்திரனுக்குத் துணையாயிருந்து அவ் விந்திரன்பேரிலெதிர்த்த இராக்கதரைப் போர்முனை வென்று தேவர்களுக்குப் பயமொழித்தபொழுதில், தேவேந்திரன் மகிழ்ந்து களிசுக்கும் முனைவிஞ்சிய அஞ்சரீகமென்கிறபாணத்தைக் கொடுத்தான். அந்தப்பாணத்தையெடுத்து மரியாதையுடன்பூஜித்து, விரிதலையினிடத்து எரிகுலவும்படியாய் நீண்டவில்லைவளைத்து அவ் வெங்கணை விடுத்து, மகதனேறிய மகமேருபோன்ற மதயானையானது மடிந்து சாகவும், அம்மாகதன் முடிசாய்ந்து போகவும் மாட்டினான். அவனுடைய கைவில்லிலிருந்து உந்திய அவ்வஞ்சரீகக்கணையினால் மோதப்பட்டமகதர்கோமானாகிய அச்சதாதேவன் நிலத்தை முகம்

பார்த்த வண்ணந் தலைகவிழ்ந்து வீழ்ந்தான். அதைக்கண்ட அவன் சேனைகளுந் துரியோதன ராஜனுடைய தானைவெள்ளங்களும் புறங் கொடுத்தோடினர்கள். இவ்விதமாகப் படைகள் புறந்தந்தோடிய நிலையை ஜோதிவிற்பிடித்த துரோணாசாரியர் குமாரனுகிய அசுவத் தாமன் கண்டு மனங்கன்றி, மகிழ்ச்சிகுன்றி, மேன்மேலும் வீரவாளி களைப் பலவாறுகவிடுத்து வெகுண்டு போர்வினைத்தான். அத்தன் மையைத் தருமராஜனுடைய தம்பிமார்களில் இன்றையப் போர் வினையைவென்று மூடிப்பேனென்று சீற்றங்கொண்டு ஒரு பொற்குன் றில் இரண்டு இந்திர நீலக்குன்று பொருந்தியதை யொத்த திருமா லுந் தானுமாகிய ஜெயவிஜயனைவன்கண்டு, தேர்செலுத்தி சேர் புகுந்து அஷ்டதிக்கும் அதிர்ச்சிவினைத்து, அங்குலீக மென்னுங் கணையைச் செங்கையா லுந்தி, அசுவத்தாமனை வென்று முதுகு கண்டு வெறுங்காலுடன் ஓட்டிவிட்டான்.

தருமராஜனுக்குங் கர்ணராஜனுக்கும் யுத்தம்

அப்போது துரியோதனன் தம்பியாகிய சுதர்க்கண்ணனைவன் பெரியோனுகிய குருபுத்திரன் புறங்கொடுத் தோடியதைக்கண்டு, பரிதேர் பதாதிகளுடன் யானைகளும் கெருங்கவந்து முறிந்தோடிய சேனைகளுக்குப் பின்புபோய்நின்று, கொடுந் தீக்ஷண்யமாகிய அக்கினி யைக் கக்குங் கண்களையுடையவனுய்க் கனன்றுகோபித்து, மேகம் போன்ற வில்லைவளைத்து, கூர்மைபொருந்திய அஸ்திரங்களை விஸ் தாரமாகவிடுத்துப் போர்கொடுத்தான். இப்படி போர்கொடுத்த சுதக் கண்ணனென்னுங் காளையை நகுலன்பார்த்து நகைத்து, இறுமாந்து கோபித்துப் பகைத்து, பிரகாசிக்கும் பாணங்களை அமோகமாக ஏவி, அவன் ஆவி முடிக்கும்படியாய் அலட்டி அஞ்சச்செய்தான். அந்த வேளையில் அளவிடக்கூடாமல் வருகின்ற தருமராஜனுடைய தானை கள் அஷ்டதிசைகளிலுமபரவி அலைந்தன. யுத்தமுகத்தில் தட்டுப் படாமல் திரியுந் துரியோதனராஜனுடைய சேனைகளிலுஞ் சேனை வீரர்களிலும் இறந்தவர்போக இறவாதிருந்த வடிவேற்முருங்கிய வீராதிவீரர் பலருந் தன்னைச்சூழும்படியாகப் போர்முகப் புலிபோன்ற பலசாலியாகிய கர்ணன்முனைந்துவந்து எதிர்த்தான். அதுகண்ட வாசமாலையணிந்த தோள்திருந்திய தருமராஜன் தங்கள் சேனைக ளாகிய பாஞ்சாலர்களிலும் பற்பலதேசத்துப் பாஷைமன்னர்களிலும் அன்றையப்போரில் மாய்ந்தவர் நீங்க, மற்றமன்னர்களுஞ் சுற்றத்தார்

முதலிய மாப்பெரும் படைகளுந் தம்மைச் சூழும்படியாய்வந்து எதிர்த்து மலைந்தார். அக்காலத்தில் கர்ணராஜனுடைய சேனைகள் தர்ம ராஜனுடைய சேனைகளின் தாஷ்டிகத்தைக்கண்டு, எதிரேசென்று, சேனைகளுஞ் சேனைகளுங் கைகலந்து உதிரச்சேறுடும்படி போரா டினார்கள். அப்போது தருமராஜனும் கர்ணனும் எதிர்த்து, பொன்மலை யிரண்டும் பொருதப் புகுந்ததைப்போல் தேருந் தேருந் திருகவித்து, தங்களுக்குத் தாங்களே நிகரென்றடித்து வெம்போர்விளைத்தார்கள். அந்தயுத்தத்தில் யுதிஷ்டிரர் கைக்குதை அம்பினால் கர்ணனுடைய பெருஞ்சேனைகளிற் கால்மாண்டழிந்தபோகளை இன்னார் இன்னா ரென்று சொல்லுவதற்குக் கூடாமையாயிருந்தது. மாசற்றமனத்தோ னாகிய தருமராஜனுடைபசேனைகளிற் கர்ணன் கையம்பால் உதை பட்டு இறந்தபோர்களைச் சொல்லத்தொடங்கினாலும் சொல்லிமுடி யாது, இதுதான் நல்லயுத்தமென்று சொல்லத்தக்கதாய் யுத்தம் பண்ணி, அழிந்தும், ஒழிந்தும், மறுபடியுந் தேறியெழுந்து, மல்யுத்தம் கவண்கல்யுத்தம் முதலிய கனசண்டைகளைவிளைத்து, பிரகாசிக்கும் மகுடமணிந்த அத்தத்த அரசர்கள் தங்களுக்குள் தாங்கள்முனைந்து பலமுகத்தினும் பாராக்கிரமிக்க, முதன்மையாகிய இவர்களிருவரும் அண்டருமதிரக் கோதண்டங்கொண்டு அமோக அஸ்திரங்களைச் சண்டப்பிரசண்ட வேகமாக விடித்து, அண்டமுகடு விள்ளும்படி அமோகமான சண்டை விளைத்தார்கள்.

அப்போது மண்டலமுழுதும் வில்லவித வல்லவனென்னும் பேர்கொண்ட கர்ணனும் மந்முறைபனைத்தினு மனங்தேர்ந்த புண் ணியனென்னும் பேர்கொண்ட தருமராஜனும் கொலைபுரியும் பாணங் கள் நிறைந்த அம்பறாத்தூணியும் வில்லுந் திகழ்ந்த இரண்டு மலை போன்ற திரண்ட தோளோடு நிலைத்து நிற்கும் நிலைப்பும், குழிப்பும சிறுநாணெலிப்பும், செங்கணைவீசுஞ் சிறப்பும், இருவரும் எதிர்த்துச் சண்டைசெய்யும்படியாகிய அறமும், இடைக்கிடை பவுரிஷங்கொண் டாடிச் சீறும் மறமும், இவர்களைவிட்டு நீங்காதிருப்பது கண்டு, தேவர்க ளெல்லோரும் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்தினார்கள். அக்காற் கர்ண னனவன் மிஞ்சி, பாதாளம்வரைக்கும் ஆழந்து அலையுயர்ந்து வீசுஞ் சமுத்திரம் வளைந்த ஏழுலகத்தையுந் தனிச்செங்கோல்செலுத்தி ஆளுதற்கிருக்கின்ற தருமராஜனுடைய மார்பில் ஏழுபாணமும், அம் பொன்மாலைபூண்ட விம்பமாகிய கும்பமபோன்ற இருதோள்களிலும் எட்டுப் பாணமும் எய்தான். இப்படிதம்தோள்களிலையும் மார்பிலே

யும் கர்ணன் தொடுத்த கணைகள் வந்துமூழ்கியவுடனே வாய்மைகிலை கின்ற மன்னவரேறென்னுங் கலங்காமனமுடைய காம்பீரன் வேகம் பெற்ற வில்லேவணக்கி, வீரவாளி இரண்டுமுடுக்கிக் கர்ணனுடைய புயமும் மார்புங்கலங்கச்செய்தது மல்லாமல், அவனுடைய வில்லையு முறித்து வீழ்த்தினர். அப்போது கர்ணன் வேறொரு வரிபெற்ற வில்லேத்தாங்கி இருகுதைகளும் வளையவாங்கி, முனைபெற்ற முள்ளம் புகளை நூறுநூறுகத்தொடுத்தான். அவையனைத்தையுந் தருமபூபதி கூறுகூறுகும்படி வேறுவேறம்புகளை இறைத்தார். இப்படி இருவருங் கைகலந்து ஒவ்வோருடலும் இருகூறுகும்படிக்கு ஒருவர் படைகளை யொருவரோங்கிச் சினந்து கொன்ற காலத்தில், இவ்விருவருடைய சேனைகளின் தேகத்திலிருந்து பெருகியோடிய இரத்தம் ஆறுபோ லோடி, அங்கங்கே குளங்குளமாய் நிறைந்து உறைந்திருந்தது.

இருதிறச்சேனைகட்குங் கைகலந்தயுத்தம்.

இதில் துரியோதனன் சகோதரரில்

எழுவர் வதை

இவ்விதமாகத் தருமராஜனுக்குங் கர்ணனுக்கும் போர்நடந்து வரும்போது, இன்னொருபக்கத்தில் பீமசேனன் பகைத்து, மேற் கொள்போற் சினத்து, துரியோதனன் சேனைகளைத் தகித்து, திகிரி வட்டம்போற் சுழன்று திரிவதானான். அப்போது துரியோதன னுடைய தம்பிமார்களிற் சாதேவன், சண்டகன், சித்திரசேவன், சாத்தகி, சித்திரகேர்த்தி, சண்டஹாதன், சண்டதான் என்று சொல்லு கின்ற தாதேதிய மாலேபுனைந்த மார்பினர் ஏழுபேர் தங்களுடைய தேரைச்செலுத்தி, பீமனைச்சுற்றித் தீமுகக் கணைகளைத் தெழித்து விடுத்து, தீப்பொறிபறக்கக் கண்விழித்தார்கள். அவர்கள்தொட்ட அம்புகள் முதலிய யாவற்றையுங்கண்ட பீமன் சினங்கொண்டு கொந்து ளதிர்சென்று நின்று அவர்கள் ஏறிவந்த தேரும் ராஜசெல்வச் சீருங் கெட்டு போகும்படியாய்த் தாக்கி, உயிரையும் போக்கி, சேனைகளையும் மண்ணுக்கி வருவதானான். அப்போது துரியோதனனுடைய சேனு நாயகன் முதன்மையாகிய தன்படையுடன் கவிந்து, வல்லபமிகுந்து, மூர்த்தண்யமாக ஆர்த்து, அரிவாளிகளை மேகம்போற் சொரிந்து, பாண்டவப்படைகளை மூடுபனிபோல் மூடுங்காலையில், இப்படைகட் குச் சேனாபதியாகிய திஷ்டத்தூய்மனும் மற்றத்தேசராஜர்களும்

நால்வகைச் சேனைமுதலிய யாவுந் தளர்ச்சிகொள்ளுந் தன்மையைப் போராடுந் தோள்வலிபொறுத்த தண்டதரன் கண்டு, தாளாமற் கோபங்கொண்டு, தன்னுடைய நால்வகைச் சேனைகளும் உடன் சூழ்ந்துவரச் சென்று, கர்ணனுக் கெதிராகவந்தான். இப்படி பீம சேனன் எதிராக வந்ததை அங்கர்பெருமான் கண்டு பொங்கிப் பொரிந்து போர்செய்யப் புகுந்தபோது, துரியோதனன்பார்த்து முகம்வியர்த்து, "ஐயோ! கர்மராஜனைக் கர்ணன் மடக்கி விடுவான் என்றல்லவோ யிருந்தேன். இந்த வேளையில் பீமனுகிய கண்டகன் வந்து நேரிட்டானே! இன்று என்தம்பிமார் ஏழுபேரை எமலோகஞ் சேர்த்துவிட்டானே" என்று துடிதுடித்து, கிருபாசாரியர், கிருத வன்மன், இன்னும் உறவினராகிய வேந்தர் பலரோடுன் அசுவத் தாமனையுஞ்சேர்த்துக் கர்ணனுக்குத் துணையாகக்கூட்டி அனுப்பி வைத்தான். அவர்களுங் கடுங்கோபத்துடனும் மிகுவேகத்துடனும் வந்து, பீமனைவளைத்துச் சிற்றெறும்புபோற் சுற்றிக்கொண்டார்கள்.

அந்த வேளையிற் பகாசுரனுக்கு எமனெனத்தோன்றிய பங்கஜ முகன்போன்ற பீமசேனனுக்குப் படைத்துணையாகக் காண்டீபதர னுகிய நரனும் நகுலசகாதேவரும் சாத்தகியும் பற்பலதசத்துப் பார்த்திபரும்,பக்கபலங்கொண்டுபடைசேர்த்து,உறுதியாகவந்து அமர் மூண்டு நின்றார்கள்; சத்துருவாகிய துரியோதனன்படை அடங்கலும் பலகோடி பாணங்களை உய்த்தார்கள். பாண்டவப்படைவீரர் யாவரும் ஈடுக்கீடாகிய கணைகளெவி, அவர்கள் விட்டபாணங்களையெல்லாம் அழித்து, அவர்கள்மேலில் அதிகமாக அஸ்திரங்களைப் பிரயோகஞ் செய்து, திரிபுரம் எரித்த காளைப்போற்பொங்கித் தெழித்துக் கொக் கரித்துப் பேரோசை செய்து நின்றார்கள். இவ்வுலகம் எப்படிப் போமோ? இன்று பிறந்தது உகாந்தகாலமாகும் என்று தேவர்களெல் லாரும் உட்கிமக்கிக் குகைகண்ட இடங்களிற் புக்கியொளிந்திருந் தார்கள். இப்பாற் படைமுனையில் வீரர்செய்த போர்த்திறங்களாற் குதிரைகளிறந்தன. யானைகள் பூமியில் வீழ்ந்து மிதிபட்டுநெரிபட் டன. வீரர்களெல்லாரும் பட்டொழிந்து பொடியானார்கள். இரத்த வெள்ளஞ்சொரிந்து தோய்ந்துகாய்ந்து, காடுபற்றியெரியுங் கருநிறச் சிவப்பினைப்போல் இருந்தது. சூரருடைய கைகளைத்தின்ன? வீர ருடைய மெய்களைத்தின்ன? மணிமகுடச்சிரங்களைத்தின்ன? அணி மணிப்பணி உரங்களைத்தின்ன? வாகுவலயத் தோள்களைத்தின்ன? வீரமணியுந்தாள்களைத்தின்ன? தீரமேற்கொண்ட தீரரெத்தின்ன?

காரமேற் கொண்ட காரெத்தனை? இவ்விதமாக ரணகளமுழுதும் நிரம்பிக்கிடக்குமாகில், ஒவ்வொருவில்லினிடத்திலிருந்து புறப்படுஞ் சரங்களெத்தனை யென்று சொல்லலாம்? இவ்வாறு இருபடைச் சேனைமன்னரும் பகைத்து முனைத்து உக்கிரமுகக்கணைகளைச் சொரிந்தும், வெவ்வேறுகைப்படை கொண்டுமோதியும், பற்பலவித மாகச்சேதிக்கும்பொழுது; உதிரக்கடல்பெருகி, சூரியன் அஸ்தமித்த போது தோன்றுகின்ற செவ்வானச் சிவப்புப்போற் பூமிமுழுதுஞ் சிவந்துவிட்டது. சுழன்றுடங் கொடிகளையுடைய தேர்களும், மத யானைகளும், குதிரைகளும், கீழ்மேலாகிக்கலந்து கிடந்தன. வயவர்க ளுடைய உடல்களையுங் குடல்களையும் இரத்தவெள்ளங்களினுடைய அலைகள் அடித்துக்கொண்டோடி, காடுமுதலிய காடுமேடெல்லாங் கடந்து, பலநதிகளின்முகத்துவாரம்போல் ஒருமுகமாகச்சென்று கடலூடுகலந்து, கப்பல்முதலாகிய படகுகளுஞ் சமுத்திரமும் புலால் நாறும்படியாக்கின.

தருமனையும் பீமனையும் புறங்கண்டு பாஞ்சாலரில் எழுவரைவதைத்த கர்ணனையு மவனுக்குத் துணைவந்த அசுவத்தாமனையும் அர்ச் சுனன் அயரவடித்து அடக்குதல்

அந்தச்சமயத்திற் பொய்யே மெய்யாதவுடைய துரியோதன னும் அவன் தம்பிமார்களும், அவர்களுக்குரிய வாகினியுஞ் சூழப் போய் பீமனவளைத்து, அவனுடைய உடல்முழுதும் பீதம்படியாக அநேகங்கோடி அஸ்திரங்களைப் பிரயோகஞ்செய்தார்கள். அந்த வேளையில் அருச்சுனன்கையில் அகப்பட்டு அடிபட்டு ஓடிவரா நின்ற சஞ்சத்தகர் துரியோதனனுக்குத்துணையும்பீமனுக்குப் பகையு மாக வந்துவளைத்து, வலுதவறிய கணைகளை வாயுவேகமாக விடுத் தார்கள். இன்னுமுள்ள வீராதிவீரரும் எவரெவர்களுடன் எவரெவர் கள் எதிர்க்கவேண்டுமோ அவரவர்கள் அவரவர்களுடன் திறங் கொண்டு எதிர்த்து, தாங்கள் தாங்கள் ஜெயம்பெறவும், வீரமாலை புனையவும், புகழ்நாட்டவும், தங்களாற் கூடியவரையிலும் போர் பொருந்தினார்கள். இம்மிப்படியிருக்க, நால்வகைத்தானை சூழ,படைத் துணைவந்த பார்த்திபர் தெருங்க, வரிபொருந்திய வில்லைக்கைக் கொண்டு, மலைவாளி, மழைவாளி முதலியவாளிகளைப் பூட்டி அமரர் முதலாகிய யாவருங்கலங்க ரதஞ்செலுத்திவந்தார் சத்தியவாக்கியா

கிய தருமராஜன். அதுகண்ட இசைபெற்ற முனிவராகிய கிருபரும், கிருதவர்மனும், விரகுடைய சகுனியும், இன்னுஞ் சில அங்க மாகிய சிங்கம்போன்ற நிருபநம், அங்கங்குக் நிரை நிரையாய்நின்று, எட்டுத்திசையும் மட்டுப்படாத விற்பிடித்து, இலைத் துறை பணம் போல்துளைக்கும்படியாகிய இத்துமுகப்பாணங்களை இறைஞ்சி ஏத்தி வாழ்த்தியெடுத்து, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது, என்னுங் கணக்கிற் கும்பல் கும்பலாய் முடுக்கிவிடுத்தனர். இவ்வாறு தரும சொரூபியாகிய முராசக்கொடி நாட்டிய முதல்வனை வளைத்து இந்திரனை யெதிர்த்துப் போர்புரியும் இராகூதரைப்போல் வளைந்து சண்டை விளைக்கவும், அத்தனை பேரையும் அறத்தின் மைந்தனை தருமராஜனைவர் அடித்து, அவர்களெண்ணத்தையும் அவமாக்கித் தமது ரதத்தைத் தூரத்திப் பருதிமைந்தனை பார்த்திபன் கர்ணனைக் குறித்துப் பகைத்துப் பாண்மிடத் தொடங்கினர்.

அஃதெப்படி யென்றால், முராசக்கொடியினை கச்சைக்கொடியினைக்குறித்து இடியோங்கிய இரு கணைகளையெடி, கர்ணன் கைப் பிடித்த கட்டுகளார்த்தவில்லையும் பாணங்களையுந் துணித்தார். அது கண்டு அருளுடைய கர்ணனவன் தருமன்விட்ட இரண்டு கணைகளைத்தடுத்து, தானிரண்டுகணைகளை உந்திமுராசக்கொடியை முறித்து, மேலும், இருகணைதெறித்துத் தர்மராஜனுடைய தேர்ச்சி கரத்தைப்போக்கி, மற்றொரு கணைவிடுத்துச் சாரதி அங்கத்தைப் பங் கப்படுத்தி, வேறொரு சராம்பூட்டி வேகமாகிய குதிரைகளைமாட்டி யழித்து, வரம் பெற்ற வலுவேறிய சில சரங்களைக்கொண்டு தர்மராஜ னுடைய தோளிரண்டுந் துளைபட்டுரு வத்தொடுத்தான். அதுகாலை யில் தர்மநந்தனன் சாணைபிடித்துத் தயிலதாரஞ்செய்த சரங்களைச் சரமாரியாகத்தாக்கி, சர்ணனுடைய இருபுயத்திலுங் கரகரவென் றேறவிட்டு வடகலிங்கர், தென்கலிங்கர், மேற்கலிங்கர், நடுநாட்டுக் கலிங்கர், குருதர், எட்டியா, பராடர், கர்ணாடர், சௌராஷ்டகர், பப்பரர், சுப்பிரதீபர், ஒப்புவமையில்லாத களமர்முதலாகிய காவல ரும், வெள்ளைக்குடை நீழலில் மேதினியை ஆள்கின்ற மகுடமுடி வேந்தரும், உலகம்நிறைந்த பாந்தரும், பைம்பொன்முடி மகுடவர்த் தனருடன் வீரபட்டத்தலைவரும்; இடிமுழக்கங்கெட்டுக் கிலிகொண்டு தலைசுங்கிப் பிலத்துவாரத்தில் இறங்கி ஒளிந்துகொள்ளும் விஷ ஜந்துவாகிய பாம்புகளைப்போல் ஒடுங்கிப்படபடப்படங்கி, ஒருவருக் கொருவர்தடை தளர்ந்து அடியோய்ந்து அஞ்சலிசெய்து முதுகிட்டு

அவதிப்பட்டோடவும், அசேகம்பேர் உயிர்மாறவும், தெய்வலோகங் குடியேறவும், அணிகொண்டபடைகள் அடியோடே அழிந்து போகவும், அழகியசங்கத்தைப் பவளம்போன்ற மணிவாயில்வைத்து, பம், பம், பம் என்று ஊதினர். அக்காலத்திற் கர்ணமகாராஜனுமீறி அண்டங்களெல்லாம் உடைந்து போகவும், திசாதிசைகள் செவி பட்டுமாறவும், தெய்வலோகங்குன்றித் தத்தளிக்கவும், ஆதிசேடன் முதலாகிய அரவினங்கள் மடிந்ததைப்போல் மண்டலாகிர்தியால் மண்மேற்படிந்து பாதாளத்தில் மறைந்துபோகவும், பூமி குலுங்கிக் குமுங்கவும், உலகிலிருக்கும் மனிதரெல்லாரும் படிந்துபோவார்க ளென்று வார்த்தைபிறக்கவும், கறுத்தகடலானது கடையுகக் கலகம் போற் பொங்கி வடவைக்கனலோடு கலந்தெரிந்தெழுந்து பிரசண்ட வேகக்காற்றினுடன் பேரோசைகொண்டு கலக்கும்படியாய் பொம், பொம், பொம் என்று சங்கநாதத் தொனிகாட்டிச் சதுரங்கப்படைக ளுடன்கூடிச் சண்டையாடினர்.

இப்படியாகப் பொருந்தி நெருங்கிய உகாந்தகாலக் காற்றைப் போல் வீசிபடித்து, அடுத்துப் போர்கொடுக்காநின்ற கவசகுண்டல தாரணரகிபகர்ணன் தனதுகாண்டீவிதப்பொற்கலசம்பெற்ற தேரும் நான்குகதிபெற்ற ஓங்குகுதிரைகள் காண்கும், தர்மராஜனுடைய கணைகளினால் இலேத்துக்களேக்க, மதுமாலைபணிந்த சாரதியாகிய மத்திரத்தலைவனேடு தானும் மெத்தவருந்தினன். அப்போது அந்த வாசிகளனைவரும், தும், தும், தும் எனப்பம்பைமுதலிய வாத்தியங்க ளாற் கம்பலைசெய்தார்கள். இப்பாலிருந்த யாவரும் இதென்ன வம்பாய் முடிந்ததென்று அம்பு முதலியனவுந் தொடாமற் கும்ப லாய்க்கூடி வார்த்தையாடினர்கள். அப்போது செம்மலாகிய சல்லி யன் தேறி, சபதங்கள்கூறி, கோபமேறி, சோல்கொண்டுவீறி, குதிரை களேத் தட்டிக்கொடுத்துத் தேர்செலுத்தினன். அப்போது கர்ண னனவன் தைரியத்துடன் அவனியெல்லாங் குலுங்கி அவற்றிலுள்ள ஜீவராசிபடங்களுங் கலங்கும்படியாய்த் தனது மேருவையொத்த வில்லேவளேத்துக் குணஞ்தொனிகாட்டி, சமர்முகமாகிய முனைமுகத் தில் தர்மராஜனுக் கெதிரில்வந்து, சிகைவிரிந்த சரோருகாஸ்திரங்களே விடுத்து, முரசக்கொடியோனுடைய மார்பும், திண்ணியபுயமும் அவர்தொடுத்த கூர்மையாகிய பல சுடர்ப்பகழிகளும் தேர்த்தட்டும், கலசச்சிகரமும், குச்சிக்குடையும், குவிந்த தொடங்கையும், கவிந்த தேருருளேகளும், குற்றுக்கால்களும, அச்சும், மச்சும், நடுநாயகப்பீட

மும், குதிரைகளும், கைபிடித்தவில்லும், நாணியும், அழியும்படி யாகச்செய்து, சாரதி உடலைச் சங்கடப்படுத்தி அவனை முகமாற விடுத்து, முரசமெழுதிய பொற்கொடியைச் சின்னபின்னமாக்கி, தர்மநந்தருடைய தேகத்தையுஞ் சல்லடைக்கண்ணுக்கி, மனத்தைப் புண்ணுக்கி, விண்ணைமண்ணுக்கி, படைகளை ஒன்றுக்கி வருத்தினன். இத்யாதி உபத்திரவங்களுக்குங் குருகுலவேந்தர் கோமானும் குந்தி தேவி முதற்புத்திர சீமானுமாகிய தர்மராஜ னென்னும் பூமான் இளைக்காமல், வேறுவில்லெடுத்து நாணேற்றிவளைத்து, சண்டை விளைத்துத்தாக்கி, மூண்டகக்களை முதலாகியகண்டகக் கணைகளைப் போக்கி, கர்ணனுடையகவசத்தையும், நவமாகிய தேரிற்பூட்டிய நான்கு அயத்தையும், உரத்தையும், விற்பிடித்தகரத்தையும், மணிக் கலசமுடியையும், அணித்தேர்த் தட்டாகிய அடியையும், அவ்வடிமே லிட்ட நிலையையும் எதிரேறியபேரையும், இகலேறிய சீரையும், அவ னுடலையும், சேனைக்கடலையும், சல்லியசாரதியினுடைய அடலையுங் கொன்று வில்லை நடுவறவெட்டி, இப்படி பலவாறுகவருத்தப் படுத்தி னர்.

உடனே கர்ணனும் வேறுதேரேறி விற்கொண்டு, தர்மராஜனைச் சரமாரி பொழிந்து தவிக்கவிடுத்து, அவருடைய தேரையுஞ் சின்ன பின்னப்படுத்தினன். இப்படியாகக் கர்ணனுந் தர்மராஜனுங் கைகலந்து பலம்பொருந்தியபோர்க்களத்தில் செய்தகலகத்தை இவ்விதமென்று எவர்களும் உரைக்கமுடியாது. இவர்களுடைய திறத்தையும், மறத் தையும் உபகிடத சிரேஷ்டர்களான பெரியோர்முதல் அவனிபரான அகேகராஜருங் கண்டு, இவர்கள் இருவருங்கற்ற தநுர்சாஸ்திரமுதலிய சகலசாஸ்திர வலுமையையும் மேலாகிய விவேகத்தையுஞ்சொல்லிக் கொண்டாடினர்கள். அப்போது தருமபூபதி மனவுறுதியுடன் மற்றை ருதேரேறி, ஓருகரத்தில்வில்லும் இன்னெருகரத்தில் வடிக்கணையுங் கொண்டு வருஷகாலம்போற்றூரி, சடந்தேர் ஊர்ந்துசென்று, தாரு பரனை ஓர்ந்துநின்று எதிர்த்த காலையில் கிருபையும், அருள்மொழி யும், விதரணகுணமும் நிறைந்த கொடையாளனுகிய கர்ணன் திற னுங்கிப் பிரகாசிக்குஞ் செங்கதிர்க் கணைகளைத்திடுக்கிட விடுத்து, அங்கவர்தொடுத்தபாணங்கள் அனத்தையுங்கெடுத்து, பொடிபொடி யாய்ப்போக்கி, பிடிபிடியாயாக்கி, தேனிறைந்த பூமாலையணிந்த அவர்மார்பையுந்தோளையுங் குழிகுழியாய்க் சாணும்படி துளைத்து வருத்தினன். அக்காலையில் தருமகந்தனர் சக்ராயுதம், குந்தாயுதம்,

தோமரா யுதம், சூலா யுதம், வேலா யுதம், மாலா யுதமுதலாகிய எறி படைகளையெடுத்து எறிந்து, தனதிரதத்தின்மீது களைத்துப் புறமுது கிடும்படியாகிய தருணம் பிளைத்துச் சாய்ந்திருக்கவும், அதனைக் கர்ணன்கண்டு "ஏன் ஓட நினைக்கிறீர்? நில்லும்" என்று சிற்சிலசொல் லெச்சொல்ல தொடங்கினன்.

"உரையுடையை கற்றகலை யுணர்வுடையை தக்கமதி
யுளமுடையை மிக்கநினை யுறவுடையைச் சத்யசுண
வரையுடையை யெத்திசையும் வழுவற வளர்த்தபுகழ்
வரிசைகொ ளறத்தினளர் வழிபடு மதிப்புடையை
தரைமுழுது முத்தநில வுமிழ்குடை நிழற்றவொரு
தனிநனி புரக்குமுயர்தலைமைபெறு கிற்றிபகை
கரையழிய வுற்றபொழு துயிர்கொடு புறக்கிடுதல்
கடனல வுனக்குநிலை கருதியணி கிற்றிதியே"

ஓ! ஓ! தருமராஜனே! தருமத்துக்கு மிகுமேசனே! யுத்தத் தில் மிகுந்த விசுவாசனே! வீரோ! சத்தியவாக்கினை யுடையவர்; அநேகஞ் சாஸ்திரங்களைக் கற்றவர்; கற்றதெறியின் படிக்கே கல்லு ணர்வுற்றவர்; அந்த கல்லுணர்வுக் கிணங்க கன்னடத்தை படைத்த வர்; கல்ல விவேகமுள்ளவர்; தகுதியாகிய பிள்ளைகளையும் பெற்றவர்; தர்மத்தைக் கைப்பிடித்தவர் குணமேருபோன்றவர்; கருணைக்கட லானவர்; ஜீவகாருண்யமுடையவர்; எல்லாத்திசைகளிலும் வழு வில்லாமல் வளர்ந்த புகழையுடையவர்; யாவராலும் வரிசைபெற்ற வர்; பூமியைப் போன்ற பொறுமை பூண்டவர்; தருமவிதிப்பிரகாரந் தம்பிமார் வணங்கி வழிபடும்படியாகிய வரிசையையும் மதிப்பினையு முடையவர்; பூமிமுழுதும் முத்தின்குடை கீழற்படுத்தி ஆளும்படி யாகிய புண்ணியதேகர்; புஜபலயோகர்; எல்லா அர்சருக்குள்ளுந் தலைமைபெற்றவர்; இப்போற்பட்ட நற்குணமுற்று காவலராற் புகழப் பாடல் பெற்றிருக்கின்ற நீர் யுத்தஞ்செய்து, சமுத்திரங்கரைபுரண் டழியுந் தன்மைபோற் பிரமுகர் முதலாகிய வீராதிவீர சேனையின் யங்க ளெல்லாம் ஒழிந்து, உலகம் உனக்கோ எனக்கோ என்றிருக் கின்ற நல்லசமயத்தில், மஹாகேவலமாய் உமது பிராணனைக் காப் பாற்றிக்கொண்டு புறங்கொடுத்தோடுதல் பெருமையோ? உமது மகிமைக்கு இது கடமையல்ல. உம்மைப்போன்ற சாந்தமூர்த்தி யானவர் யார்தெட்டாலும் யார்செத்தாலும் நாம்பிழைத்தாற்போது

மென்று போவது, நீருணர்த்தகல்விக்குத் தவறுகிய் காரியமேயாம், ஆகையால் இதுவரையிலும் பிழைத்த பிழப்புக்குக் குற்றமேரிடாம லும் ஒருவர்குறைசொல்லாமலும் ஓரே நிதானமா யிருக்கும்படியா யோசித்து, யுத்தத்தின் அணிமுனையில் நிலைபெற்று நின்று, இனி மேலும் நடக்குங்கதியைக் கண்டுணர்வது காரியம் என்று கவின்று எதிரில் நில்லுமென்று அவரை வழிமறுத்துத் தடுத்து, முகமலரப் பார்த்து மகிழ்வு பூத்துப் போர்கொடுத்தான்; மிகுந்த கருணையாள ராகிய தருமராஜன் அந்தக்கர்ணனுடைய முகத்தைப்பார்த்து, அவ னுடையவல்லபத்தை மதித்துக்கவலைகொண்டிருந்தார்.

அக்காலத்தில் விருதுகட்டிய விருதர் தலைகளெல்லாம் அறு பட்டு மேலுங் கீழுமாக உருளவும் வீரபட்டங்கட்டிய மதயானைக ளெல்லாம் வாதுமலைந்து காதுடன்தலையறுபட்டுத் தீதாகியுருளவும், பலம்பெற்ற குதிரைகள் பாதமறுபட்டு மேனிதுணிந்து தலையறுப் புண்டு தாலத்திலே கிடக்கவும், தேர்களெல்லாம் அச்சொடிந்து சிகர முங் குடையுமுறிந்துசாயவும் குற்றுக்கால்கள் கொடுங்கைசரிந்து சக் கரங்களெல்லாம் உக்ரமாயோடவும், தலையிழந்த கவந்தங்கள் நின்று கூத்தாடவும், உதிரப்பெருக்கம் ஓடவும் பறந்துவரும் அஸ்திரங்களெல் லாம் பஞ்சுபஞ்சாய்ப்பறக்கவும், மிகுந்த பலத்தோடு கதாயுதங்கைக் கொண்டு அடித்து, எதிரேறி வெகுபேரைமுடித்து, யானைமத்தகத் தோடிடித்து, வீரப்பாடல்கள் படித்துவராகின்ற குற்றமற்ற பீமசேன னவன், ஓரிமைப்பொழுதில் ஓடிவந்து தம்முதல்வனுகிய தரும ராஜனுக்கு உற்றதுணையாய் அடுத்தான். இந்தப் பீமசேனன் வருவ தற்குமுன்னே வெங்கிட்ட தருமராஜனைப் பின்னிட்டுத்துரத்தி யுத்தஞ்செய்யவந்த முடிவேந்தர் முதலாகிய அதிரதர்களும் மற்றும் யாவரும் நடுக்கமில்லா வைரமனத்தானுகிய வாயுவின் புத்திரனைக் கண்டு நடுங்கி, நமக்குச் சத்துருவாகிய நமன்வந்தானென்று கலங்கி, எத்தனைகாள் போர்புரிந்தாலுமிவனை வெல்வது அருமையென்று பின்னுக்கிடைத்தார்கள். அதுகாலையிற் பாகனுகிய சல்லியராஜனு வன் அழகிய தேரில்வாய்ந்த ஆதபன்குமரனென்னும் அங்கதேச னைப்பார்த்து, "அப்பனே! இப்போது நான்சொல்வதைக்கேள். நமது படையே முறிவாயிருக்கின்றது. என்னால் அடிபட்டு இளைத்த தரும ராஜன்தேறிக்கொண்டார். அவருக்குப் பின்பலமாக பீமசேனனும் வந்து ஒத்துக்கொண்டானிப்போது. நாம் வெற்றிபெறுவது கொஞ் சம் அருமைபோலு மிருக்கிறது. ஆகையால் தேரைத் திருப்பிவிட்டு

ஒருசுற்று சமர்க்களத்தைச் சூழ்ந்துவருவது உத்தமமாக நினைக்கிறேன்'' என்று சல்லியசாரதிசொல்ல, மன்மதாகிரியாய் நின்ற வடிவமைந்த கர்ணன்கேட்டு, பொன்மலைபோன்ற வில்லைவணக்கி நாணியிணக்கி, வாகைமாலைபுனைந்தசல்லியன் முகத்தைச் சரசமாய்ப் பார்த்துச் சொல்லுகிறான்—

> ''காமனை வென்ற முக்கட் கடவுளே யாக வன்றிப்
> பீமனே யாக வென்றி விசயனே யாக வெற்றித்
> தாமனே காண்டி யிற்றைச் சமரிலென் றழல்வா யொற்றைத்
> தூமநேர் பகழிக் காற்றூர் தூண்டுதி யிரத மின்னே''

''ஆ! ஆ! சல்லியராஜனே! காமனையெரித்த முக்கண்படைத்த சோமனுலும், இந்தப் பீமனுலும், வெற்றியிற் சிறந்தோனென்று சொல்லும் விஜயனுலும் ஆகுக. என்னைப் பாணத்தால் இன்றையப் போரில் இவர்கள் படப்போகின்ற பாட்டை நீர் பார்க்கப்போகின்றீர். புகையும் நெருப்பும் பொறியும் புறப்படாநிற்க நான்விடப் போகின்ற ஓரேகணைக்கு ஆற்றமாட்டாமற் காற்றுய்ப் பறக்கப்போகின்றார்கள். நீரிருந்து காணலாம். ஆதலால் இப்பொழுதே தேரை அவர்கள் பேரில்விடும்: விடும்'' என்றான்.

இப்படி கர்ணன்சொல்லுவதற்கு முன்னே மருத்தின் குமாரனுகிய பீமசேனன் உருத்து கோபச்சிரிப்பாகச்சிரித்து, இரதத்தை முடுக்கித் துரத்தி வரிவில்லைவளைத்து, அரியம்புதொடுத்து, அங்கசேசன் சொல்லிய சொல்லும், அவன் கைபிடித்த வில்லும், ஒருகூற்றத்திற் சிதைந்து போகும்படியாய் அடித்து, பின்னுங் கர்ணன்பேரில் மின்னற் றுன்னிய சென்னிறக்கணையை வீசினான். அதைக் கர்ணன்கண்டு, பீமன்தொட்டகணைகளை வெறுங்கணையாக்கிப் பன்னிரண்டு சூரியாஸ்திரத்தை அபிமந்திரித்து பீமன்மார்பிலும் தோளிலும் பரப்பினான். அந்தப்பாணம் பன்னிரண்டும் துவாதசக்ஷாமத்திற்காயுங் காய்ச்சலைப் போலவும், சரநிதுக்காலத்திற்பேயும் பேய்ச்சலைப்போலவும், மழையும், இடியும், வெயிலும், நிலவும், இருளுங்காட்டிக்கொண்டு, மூதண்டம் அதிரும்படியாய்ப் பாய்ந்து காய்ந்துவராநின்றன. அப்படி வராநின்ற பாணங்களைப் பீமன்பார்த்து, ஐயப்படாமல் தன்கையால் அறைந்து, முறித்து போகும்படியாய்க் கசக்கியெறிந்து, தீக்காயும் படியாகிய கடுங்கொடும்பகழி யென்னுங் காளவாளியை எடுத்து மந்திரித்து வணங்கி, சூரியன் குமாரனுகிய வீரியன்மார்புவிரியும்படி விடுத்

தான். அம்மாத்திரத்தில் தடதடவென்று காய்ந்துவந்த அந்தப்பாண மானது ஆய்ந்த மலர்மாலைவாய்ந்த கர்ணன்மார்பில் தட்டுருவிப் பாய்ந்தவுடனே, ரதத்தின்மீதுசாய்ந்து, பிணத்தைப்போல் வீழ்ந்து மாய்ந்து, அசைவற்று ஓய்ந்தான் சேனாதிபதியானகர்ணன். வானூர் பதிமீபானதுபோற் சேனாதிபதி வீழவும் மானாதிபதியாகிய ராஜாதி ராஜனென்னுந் துரியோதனனுடைய படைமன்னர்க ளெல்லோரும வெங்கிட்டோடினார்கள்.

அப்போது பிழைக்குந்தன்மையாகப் பிராணசாஷேபாய் வாடிய கர்ணன் சோதிக்க மீதர்விடுக்குஞ் சாரதியென்னும் மத்திரத் தலைவன் நேரறிந்துமீதறி, நான் சொன்னதுப்போது தெரிந்ததா வென்று நடந்தகூறறிந்து செபபினன். அப்போதும அந்தச்சொல் லைக் கேளாமற் சபதமாபூட்டிய மீதரோன் மைந்தனுகிய விற்பனக் கர்ணனென்னுஞ் சதுரன் கனைதெளிர்கெழுது, பலம்பொருதிய சாபமவளைத்து, நலந்திருந்திய நாண்பிறுக்கி, அலங்கல்தங்கிய மீதாள் புடைத்தார்த்துத் தலங்களுங் கடலும் பொங்கி எங்குமங்கவிம்மும் அக்கினிச்சுவாலையையுடைய மீமலாகிய விஷக்கணைகளைச் செலுத்தி, பீமனைச் சார்ந்த படைவீரர் யாவரையுந் துண்டித்து, சோமகசர னுடைய நெற்றிக்கண்ணுற் சாம்பராகிய காமனைப்போற் பஸ்மீகரப் படலமாக்கினன். இந்தப் பிரகாரங் கைத்தலவன்மையுடைய கர் ணன்வில்லிலிருந்து பொழிந்த பற்பலவகையாகிய பாணங்களினால் எத்தனை அரசர்களிறந்தார்கள்? எத்தனை பட்டவர்த்தனர் அறுதார் கள்? எத்தனை அதிரதத்தலைவர் மாய்ந்தார்கள்? எத்தனை மகுடவர்த் தனர் சாய்ந்தார்கள்? எத்தனை மந்திரிகள்மடிந்தார்கள்? எத்தனை தந்திரிகள் மூடிந்தார்கள்? எவ்வளவுவீரர் அற்றூர்கள்? எவ்வளவு சதுரங்கசேனகள் செத்தார்கள்? பாஞ்சாலவம்சர்களிற் சிங்கசனன் முதலாகிய உள்ளிட்டார்கள் எழுபேரும் அவர்களுடன் கூடிய அமிசகரும் இந்திரலோகஞ் சேர்ந்தார்கள். இவைபல்லாமலும், பீம சேனனும் தன்னுடன்கூடவந்த நாலவகைச்சேனகள் தளர்ந்து முறிந்து வீழ்ந்திடக்கண்டு முதுகிட்டோடினன். கர்ணனால் அடி பட்டோடிய காற்றின் மகனைக் கருந்திளவண்ணத் காயம்பூவண்ணன் கண்டு, கம்மைகொண்ட வேகமபெற்ற குதிரைபூட்டிய நெடுமீதர் தூண்டி, யானைமேல் ஆர்பரிதுச் செலலுகின்ற ஆண்சிங்கம் போல் அர்ச்சுனனைக்கிட்டிணவிவந்து அங்கமீதசராஜனுக்கெதிரில் நிறுத்தினர். அப்போது வானவர்க்கரசனுடைய மைந்தன் கர்ணனைக்

கனன்றுமேநோக்கி, பலம்பொருந்திய வரிவிற்றூங்கி, ஆகர்ணபரியந்தம் நாணிழுத்து அமர் விளைத்தான். அப்போது இருதிறவர்களின் சேனைப்படைகளும் தீரரிருபரும் காரியத்தலைவரும் காலணிப்படை ஞரும் கைகலந்து செருச்செய்தார்கள். சூரியனுடைய மைந்தனும் நேர்ந்து தேவாஸ்திரங்கள் பலவாக விடுத்துத் தடிதடிக்கப் போர் புரியுங்காலையில், விஜயனுமூன்று ஈட்டுக் கீடாகவிட்ட விசிகங்கள், யுகங்கள் முடிவிலெழுந்த ஊழித்தீப்பா லுறுத்து வந்து விழுந்து கலந்து, அண்ட்முதலிய மண்டலங்களிலும் நெருங்கிப் பரவின.

இந்தச்சமயத்தில் இமைகொட்டுவதன் முன்னே கர்ணனுக் குபகாரமாக அசுவத்தாமன் தேர்செலுத்திவந்து, சுடுசரங்களை அரவணைச் செல்வனுகிய பார்த்தசாரதியினுடையமெய்யும் அர்ச்சுன னுடையமெய்யும் துளைப்பட்டுருவத் தொந்தமாகச் செலுத்தினன். இரத்தங்களினுல் திருமேனி வருந்திய திருமாலுஞ் சிலவிஜயனும் தியங்கிமயங்கினர், பின்பார்த்தன் ஸ்திரம் பெற்று கோபமேற் பூண்டு, கொடிமுடித்தேர்செலுத்தி எதிர்சென்று நின்று, அசுவத் தாமனுடைய வில்லும், அவனேறிய தேரும், அயர்த்துலையும்படி அம்புகளை மூடிக்கிவிடுத்தான். அந்த அம்புகளினுல் தேரழிந்து சிலமுறிந்து தீனத்துவமாகிய அசுவத்தாமனவன் குதிரை பூட்டிய வேறுதேரேறி, கொடுஞ்சிலை கைக்கொண்டுவளைத்து, குருந் துக்கணை, மருந்துக்கணை, பருந்துக்கணை முதலிய கோல்கொண்டு மாட்டி இருளைப்போக்குஞ் சூரியனெளியைப்போல் தான்தொட்டு விட்ட அஸ்திரங்களைப் பொறுக்கமாட்டாமல் அர்ச்சுனனும் அரிபரந் தாமனும் நிலைதளர்ந்து நெடுமூச்செறிந்து புயகிலை பிளந்து பிராண நிலைதளரச் செய்தான். அதனுலே தளர்ந்து வருந்திய தனஞ்செயனை ஜனர்த்தனன்கண்டு அதிகவித தயிரியஞ்சொல்லித் தேற்றி, "அர்ச் சுன! பிரகாசத்துடன் எதிர்த்துப் போராடுகின்ற அசுவத்தாமனை லேசாக நினைக்காதே. அவன்செய்கிற யுத்தமானது கேவலமல்ல! ஆகி லும் நீ அஞ்சவேண்டாம். உடனே அவனுடலைக் கிழித்துப் பிளந்து விடு" என்று சொல்ல, அத்தச்சொல் சொல்லி முடியுமுன்னே சுவே தவாகனன் தேறித் திடங்கொண்டு, பிறைமுகக் கணையொன்றெடுத் துப் பிடித்துப் பெரும்பூசைகொடுத்து, அசுவத்தாமனுடைய நெஞ் சுக்கு நேராய்த் தொடுத்தான். அத்தப்பகழியானது அகிலமெல்லாங் கிழிய ஓடி," "அசுவத்தாமன் எங்கே? எங்கே?" என்று தேடி, அவன் நின்ற நிலையை நாடி, ஆங்கார ஓங்காரமாய்க்கூடி, அவனுடைய

மார்பிற் றூறிக் காகரவென்றருவிப்போயது. அதனுல் அவ்வசுவத் தாமன் உதிரவெள்ளத்தில் மூழ்கி, உரங்குலைந்து மாழ்கி, உரக்கக்கூவி, உடலைவிட்டு ஆவிபோனதன்மைபோற் சுவாசமேலிட்டுச் சோர்ந்து தேர்மீமற் சாய்ந்தான்

அசுவத்தாமனைடு பாண்டியன் அமோகப் போர்விளைத்திறத்தல்

இப்படியாகவீழ்ந்த அசுவத்தாமனை மகாபாவமாகிய செய்கை யிற் பயங்கொள்ளாதவனுன துச்சாசனன்கண்டு, தர்மந் தலைகாக்கு மென்னுந் தன்மை குறையாமற் பூர்வஞ்செய்த தவப்பயன் ஆபத் காலத்தில் வந்தாதரிக்கும் வாறுபோல் அருகில்வந்து, அந்த அசுவத் தாமனை அயர்ந்துவீழ்ந்த தேருடனே கொண்டுபோய்த் தேற்றினுன். இப்படி இளவரசாகிய துச்சாசனன் தேற்றத் தேறிய அசுவத்தாம னுனவன் வேறுதேரேறி, வீரவிற்கொண்டு மறுபடியும்வந்து போர் தொடங்கினுன். அக்காலையில் நால்வகைச் சேனைகளுடன் சேற்கொடி யசைந்தாட நின்றவனுய், மீனவன், வழுதிமாறன், கௌரியன், உசி தன், கூடற்கோமான், தென்னவன், பஞ்சவன் என்னும் பலநாமங் களையுடையவனுய், வளைதடியினுல் இந்திரன் தலைமேலடித்தும் மகமேருமுடியைச் செண்டாலெறிந்தும் ஜெயம்பெற்றுமீண்டானு மாய் விளங்குபாண்டியகுலத்தான்றலாகிய சித்திரவாகனென்னும் பாண்டியன் சுப்ரமண்யக் கடவுளைப்போன்ற அசுவத்தாமனுக்கு நேர் சென்று நின்று, அம்பனந்தம் வளைதடிக்கொம்பனந்தம் விடுத்து, அசுவத்தாமனுடைய தேரை அழித்து, சாரதிபைப்புடைத்து, குதிரைகளையறுத்து, வில்லையுமுறித்து, அவன் மேனியையுந் துளைத்து, வேந்தன் தம்பிமார் முதலிய யாவரையும்வருத்தி, போரா டும் பூமியைத்திருத்திச் சமப்படுத்தினுன். இதுவரையிலும் யுத்தம் செய்துவந்த அரசர்களில் இவனைப் போற் செய்யத்தக்கவல்லவர்கள் யாவரென்று சொல்லலாம்? தேவர்களு மாச்சரியப்படும்படி செருவி ளைத்தான். அப்போது பிரமன் மரபில்வந்த அசுவத்தாமன் வேறொரு தேர்மீறி பாரியவில்லைப்பிடித்து வளைத்து, சீறிய தேவாஸ்திரங்களை நூறுநூறுகத் தொடுத்து, திருமந்திரங்களினுல் உபசரித்து மூடுக்கித் தாக்கி, வைகையாறுடைய மன்னனை மதி மரபில்வந்த தென்னனை, வம்படங்கவாட்டிப் பம்பரம்போலாட்டி, மிகவும் பயப்படும்படியாய்ப் பயங்காட்டிச் சண்டைவிளைத்தான். இப்படி அசுவத்தாமனுன ஆகா

சிபகுமாரன் கொடுத்த அநேகவிதமாகிய அம்புகளையெல்லாம் பாண்டியன் பார்த்து, எந்தெந்தக்கணைகளை யேவவேண்டுமோ அந்தக்கணைகளை அறிந்தெடுத்து, அதிதேவதைகளைப் பூசித்துத்தொடுத்து, அசுவத்தாமன் சிந்திய கணைகளை யெல்லாஞ் சிந்தி, மும்மூர்த்திகள் சொரூபம்போன்ற வேறு மூன்றுபாணங்களைப்பூட்டி, மோகன மந்திரங்களையுச்சரித்து, தங்களுடைய மூவகைக் தமிழைப்போல் அசுவத்தாமனுடைய சிந்தையில் சூழ்கும்படியாய் உந்தினன்.

ஆனல் அசுவத்தாமனுடைய கைத்திறலுக்குப் பாண்டியனுடையகை மேலிட்டதோ வென்று சேட்குமிடத்தில், ஓ ஜனமேஜய மகாராஜனே! தக்தையாகிய துரோணசாரியைப் புறங்கொடுத்தோட அடித்த ஒருவன் பிள்ளையாகிய அசுவத்தாமனுக்கு இளைப்பாறுமோ? இளைக்கான். இப்படியிருக்க இப்பால் வீரகண்டை கட்டிய காலினற் கடல்சுவறச்செய்தவன், பூர்வத்தில் வேலாயுதத்தை விடுத்து ஏழுகடலையும் வறளச்செய்தவன், வெற்றிபெற்ற மீனக்கொடியுற்ற பாண்டியன்— ஆகிய இவ்வீரன் மாயாஸ்திரமென்னும் ஒருகணையைத் தொடுத்து, துரியோதனனுடைய நால்வகைச் சேனை வெள்ளங்களை ஒருநிமிஷத்தில் வறளப்படுத்தினன். அப்போது சங்கரபத்திரனுகிய சதுர்வேத சம்பன்னனென்னும் அசுவத்தாமனுவன் பாண்டியன் புரிந்த படுகளத்தைப் பார்த்துத் தாளமாட்டாமல், முகம்வியர்த்து, போராடஞ்சிலைபவளத்து, பூரித்த நாணிபை இழுத்தெறிந்து, பொங்கழற் கடவுளைப்போன்ற அங்கனற்கணைகளை அபிமந்திரித்து, மேகம்போற் பொழியாகின்றன். அக்கணைவாளி மழையினற் பாண்டியராஜனுடைய சேனைகள்மடிந்து செம்பொற்றேர் ஒடிந்து சேற்கொடியுமுறிந்து வீழ்ந்தது. உடனே ஆண்சிங்கம்போன்ற பாண்டியன் முறிபட்ட தேர்விட்டிழிந்து, பட்டத்துயானைமேல் ஆரோகணித்து உயர்ந்தான். அந்தயானை எப்போர்ப்பட்ட தென்றல், கடமழைபொழிந்து திடமலை அழித்துப் பொங்கி, தங்களுடைய பொதிகையிலிருக்குந் தமிழ் முனியாகிய அகஸ்தியரைப்போல் அலையெறியுங் கடலேயுழையுங் கையால் அள்ளிக்கொள்ளும் வெற்றிபெற்ற மதயானையாம். இவ்வித பல லட்சணமுடைய யானையின்பேரில், பொதிகையிற்பிறந்த வாசனை செறிந்த பூஞ்சந்தனக்திமிர்த்து தங்களுடைய அலைகடலிற்பிறந்த முத்துமாலைகளை மெத்த அணிந்து, அதனல் அழகுசெறிந்த தோளினையுடைய பாண்டியனுவை னேறிக்கொண்டு, சத்துருக்களைக் கொல்லுங்

கொலைத்தொழில்வாய்ந்த கொம்புகளையுடைய தானேறிய அந்த யானையை நடத்திவந்து, திருவின் மகனுகிய பஞ்சபாணன்போன்ற இப்பஞ்சவன் வில்யுத்தத்திற் போர்கொடுக்கவும், அசுவத்தாமன் தன்னுடைய தேரைச் செலுத்தித் தானும் போர்புரிந்தான்.

இப்படி இருவரும் அமராடியபோது, அசுவத்தாமனென்னும் வித்தகன் விடுக்கும் அஸ்திரங்களை யெல்லாம் பாண்டியன் ஏறிவந்த யானை தன்னுடைய மத்தகத்தால் மோதி மததாரையை மாரிமற் சொரிந்து, கண்சிவந்து செவ்வானச் சோதிகாட்டி, செம்பொறி சிதறிச் சீறினகளைமாட்டி, தழைத்து வரிந்தகாதுகளைத் தடாம் தடாம் என்று ஆட்டி, காதினிடத்திலிருந்து உண்டாகுங் காற்றினது உயர்ந்த பொதிகையிலிருந்துவரும் பெருங்காற்றைப்போல் ஓசைபடமோதி, தநுவாரியன் மைந்தனுகிய அசுவத்தாமனுடைய தேரிற்கட்டியிருந்த அம்சக்கொடியை மளமளவென்று முறித்து அறுத்து, அசுவத்தாமனைத் தேருக்கு உட்புறத்திற்றானே விழச் செய்து, மேலுஞ் சும்மாவிராமல் திரிந்து, எமனைப்போலுஞ் சப்த மேகம்போலும் பெருங்குரலிட்டு காலுபுறத்திலு முழங்கி, சப்த சமுத்திர முழக்கம்போலும் பெருங்காற்றைப்போலுங் கொடிய வேகத்தையுங் கோபக்கடுமையையுங் காட்டி ஊற்றெழாநின்ற வெள்ளக்கரட மதங்களைழையும் பெருகவிடித்து, அதனுல் மண்குழைந்து கலந்தசேற்றிடை அசுவத்தாமனுடைய தேர்ச்சக்கரங்களைப் புதையச்செய்துவிட்டது. அப்போது அசுவத்தாமனுடைய தேர் அப்பால் இப்பால் ஓடமாட்டாமலசைவற்று நின்றுபோயது. அந்தவேளையிற் பாண்டியனெனவன் வில்வேதியனுடைய செம்பொற்றேரை வளைத்து ஓட்டி, மண்டலாகிர்தியாகச் சுழற்றி, பிறைமுகக் கணைகளினும் பூரித்து அடித்தான். அக்கால் நிறைந்த மதியினையுடைய அசுவத்தாமன் கொஞ்சங் கலங்கி, நெஞ்சந்துலங்கி, உடனே பல சதுர்முகாஸ்திரங்களை விடுத்து, பாண்டியன்தொட்ட பிறைமுகாஸ்திரங்களை விலக்கிப் பொடியாயகற்றி, தன்கையிலிருந்த இரக்கைகட்டியவச்சிரக்கணை யொன்றை யெடுத்து வாழ்த்திப் போற்றி விடுத்து மீனவன் ஏறிய யானையைக் கருமலிவீழ்ந் தன்மைபோல் வீழக் காட்டினன். யானை வீழ்ந்தவுடனே பாண்டியராஜன் பதாதியாய்க் கையில்லுடன்நின்று கடுங்கோபங்கொண்டு, ஆலகாலப்பகழி முதலாகிய அநேகங் கணைகளைச் செலுத்தி, நெருங்கிய அசுவத்தாமனுடைய இருதடந்தோளும் மாலையுற்ற விசாலமார்பும் வேண்டியபடி கிழித்து

மலையருவிக் கால்போல் உதிரம்வழிந்து போகும்படி செய்தான். அப்போது அசுவத்தாமன் அயர்ந்துதேறி, தென்னனுடன் ஈரடியைப் போற் சிலநேரம் போராடி ஒரு அக்கினியாஸ்திரத்தை யெடுத்து அபிமந்திரித்துத் தூண்டினான். அந்த அஸ்திரம்புறப்பட்டு ஜோதி காட்டி, அகண்டாகாரமா யெரித்து அநேகம் பொறிகளையிறைத்து, அனற்சுவாலைகளைச் செறித்து, பாண்டியன்பிராணனைப் பறித்துப் போட்டுப் பாற்கடலிற்செறிந்தது. "ஆசாரிய குமாரனும் பாண்டியன் அழிந்தான்! அழிந்தான்!" என்று கேட்டவுடனே தர்மராஜனுடைய படைவீரரும் வீரவேந்தரும் ஓட்டமாயோடிப்போனார்கள்.

அசுவத்தாமனுக்கும் சோழனுக்கும் யுத்தம். இதில் துன்மருடன்குமாரர் கவாகு, துன்முகன், கர்ணன் குமாரன் சங்கன் இவர்களோடு அளவற்ற படைவீரர் வதை

அந்த வேளையில் இராஜாதிராஜனுகிய துரியோதனனுடைய சேனை வீரர் இதுதான் சமயமென்று மேலேறி, வரிபொருந்திய வில்லேயும் வேலையுங்கொண்டு, வேண்டியவரைக்குங் கிட்டிக்கிட்டி அடுத்தடுத்துத்தொடுத்து மேலிட்டார்கள். விற்குருவின்மகனுகிய அசுவத்தாமன்விட்ட ஓழுங்காகிய அனல்வாளியினுல் ஆகாயத்திலிருந்து எரிந்துவீழ்ந்த கொற்கையானென்னும் பாண்டியன் மாண்டதைச் சத்தியநெறியுற்ற மொழியைப்பெற்ற கோழியானென்னும் மநுகுலத்தோன்றலாகிய சோழராஜன்கேட்டு, மிகுந்த ஆரபாரவீரமேளங்களுடன்வந்து அசுவத்தாமனைத் தகைந்து, ஆ! ஆ! ஆ!

"தேரின்மே னின்றுநீ சிறுகட் செம்புகர்க்
காரின்மேல் வீரனைக் கணையிற் காய்வதோ
பாரின்மே லார்கொலிப் பாதகஞ் செய்தார்
நீரின்மே லெழுத்தென நிலையி லாண்மையாய்."

"ஆர்ப்பன மறைமொழிந் தனைவர் பாவமும்
தீர்ப்பன வேள்விகள் செய்வ தன்றியே
கூர்ப்பன படை பல கொண்டு போர்செயப்
பார்ப்பன மாக்களும் பாரின் வல்லரோ."

"தாதையைக் கொன்றவெஞ் சாப வீரனைக்
கோதைவிற் கணைகளாற் கொன்றி லாதநீ

யூதைமுற் சருகுபோ லோட லல்லதை
மோதயிற் படைகொடு முனைய வல்லையோ''

ஓ பின்புத்திபெற்ற பூசுரா! நீ தேர்மேல் நின்றுகொண்டு, திரண்ட தந்தத்தையும் சிறுத்தகண்ணையும் புள்ளிபொருந்திய செம்முகத்தை யுமுடைய கறுத்தயானை மேலிருந்த பாண்டியனுகிய வீரனைக் காயுங்கணைசெலுத்தி மாயச்செய்தனை! இவ்வுலகத்தில் யாவரேனும் இப்போப்பட்ட பாதகஞ் செய்தவர்களுண்டோ? நீ ஆசாரிய புத்திர னுயிருந்தும், தேர்மேலிருந்தவனுக்கும், யானைமே லிருந்தவனுக்கும், ஒடுசரிதாளை வென்றுய்ந்து யோசிக்காமற் போயினையே? ஓ நீர்மே லெழுத்தென்று சொல்லும் நிச்சயமுடைய நிலையில்லாத வாழ்க்கை யும் ஆக்கையும்பெற்ற நிஷ்டூரனே! ஓரான் ஓர்வழியாய் ஓசையிட் டுக் கற்பிக்கும்படியாகிய வேதங்களைக்கற்றும், ஒருவருக்குக் கற்பித் தும், காயத்திரிசொல்லித் திரிகாலமும் அர்க்கியங்கொடுத்தும், மகா மந்திரங்களை யெல்லாஞ் செபித்தும், பாபங்களைப் பரிகரிக்கும்படி யாய் வேள்விகளைச்செய்தும், தேவர்களுக்கு அவிர்ப்பாகங்கொடுத் தும், ஆசார பூசாவிதேயங்கள் தப்பாமலிருக்கும் பார்ப்பனர் தநுர்வேதங்களைக்கற்று, கூர்மைபெற்ற ஆயுதங்களைப் பலமாகப் பலவாறுகக்கொண்டு தநுர்வேதத்துள்ள தர்மாதர்மமும் புண்ணியா புண்ணியமும் பாராமல், பழிக்கஞ்சாமற் சண்டைசெய்யச் சொல்லி எந்த நீதியிலிருக்கிறது? க்ஷத்திரகுலவீரமானது பிராமணருக்கு வருமோ? (உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி கருடனுமோ?) ஓ உபயோகமற்ற அசுவத்தாமனே! உன் தந்தையாகிய துரோண சாரியரை வெகு விந்தையாகக்கொன்ற பாஞ்சாலன் மைந்தனுகிய திஷ்டத் தூய்மனென்னும் வில்வீரனை விற்பிடித்த உன்விசாலக்கை யாற்கொன்று அப்பனைக்கொன்ற அரும்பழியைமுடித்துக்கொள்ளாத நீ, ஊதைக்காற்றில் ஓடுஞ் சருகுபோல் ஓட வேண்டியதே யல்லது, ஆயுதமுதலாகிய சேனைகளைக் கொண்டுவந் தெதிர்த்து யுத்தம் விளைத்து வெற்றிபெறவல்லையோ? ஓ சத்திசெத்தவனே! ஓ புத்தி யற்றவனே!'' என்று சிற்சில மொழிகள்புகன்றுகனன்று, அவ்வசுவத் தாமன் மேற்சென்று, தான்கைக்கொண்டிருந்த வில்லைக் கொண் டல்முழக்கம்போல் அண்டர்நடுங்குறும்படியாக வளைத்துக் கணைகளை விடுப்பக் குறித்தான்.

அப்போது அசுவத்தாமன் ஆலகால விஷம்போல் ஆர்ப்பரித்து எழுந்துவந்து எதிர்வளைத்தான். இவ்வாறிவ்விருவரும் குன்றுங்குன்

றுங் குறுகியவாறுபோல் நெருங்கி, தேருந்தேரும் எதிரெதிர் செல்லச்சூழன்று, இருவர் செங்கரங்களிலும் ஒவ்வொரு விற்கொண்டு வளைத்து, இரண்டுமேகம் இரண்டுபுறத்தில் இடிக்குமாறுபோல் காணியிறுக்கிமுறுக்கி, தங்கள் தோள்பரியந்தம் இழுத்தடித்து வில்லும் வில்லுங்கிட்டி, விரைவுடன் கணைகளைகாட்டி, வெகு விநோதமாகமாட்டிப் போர்புரிந்தார்கள். அந்தவேளையில் அசுவத்தாமன் சர்வசம்ஹார கால உருத்திராஸ்திரம், நாராயணாஸ்திரம், சூரியாஸ்திரம் முதலாகிய தேவாஸ்திரங்களை யெல்லாம் எந்தெந்த தேவர்கள் எந்தெந்தக் கட்டுப்பாட்டின்படி கொடுத்தார்களோ அந்தந்தப்படியே அபிமந்திரித்துப் பகைவனுடைய முன்னமுகத்தில் முடுக்கினான். இதற்குள்ளே சோழராஜனவன் சரபாஸ்திரம், சரோருகாஸ்திரம், சங்கராஸ்திரம் முதலாகியவற்றைப் பூசித்துவிடுத்தான். இந்த இருவருடைய அம்புகளும் ஒன்றையொன்று ஒடித்துமுடித்து எள்ளித்தள்ளி அம்பரமாகிய ஆகாயவெளியைப் புதைத்துவிட்டன. இவ்விதமாகிய அமர்புரிந்துவரும்போது, தெய்வலோகம்போகிற தூரோணபுத்திரனுகிய அசுவத்தாமனுடைய இருபுயத்தில் இருகணைகளையும் மார்பில் இரண்டுகணைகளையும் வில்லில் ஒருகணையும் உருவும்படியாக விடுத்தான், வாசம்பெற்ற ஆத்திமாலையைபணிந்த சோழராஜனவன். அதுகாலையிற் பிறைமுடிச் சடையவன்பிள்ளையாகிய அசுவத்தாமன் பலமுகப் பகழிதெறித்து, அரிவாள்போன்ற நகம்பெற்ற புலிக்கொடிபடைத்த சோழராஜனுடைய தேகமுழுமையும் புரைவுக்காகச் சரீரத்தை அறிந்த சிபிச்சக்கரவர்த்தியின் தேகம்போல் அறிந்து, உதிரம் வடியும்படியாகச்செய்தான். அப்போது சோழராஜனவன் துடித்து, ஒருவேலாயுதத்தை எடுத்துப்பிடித்து, விளாமரத்திற் பசுங்கன்று கொண்டெறிந்த துளவணிச் சுருள்முடியோனுகிய ஸ்ரீகிருஷ்ணனைப்போல் எவரு மிஞ்சிஇலைக்கும்படி மயூரவாகனனுக்கு இளவலாகிய அசுவத்தாமன்பேரில் வீசியெறிந்தான். அந்த வேலாயுதமானது எல்லாவற்றையுங் கோலாகலப்படுத்தி காலாவிதமாகிய காலாகோலமாய் வந்து, லீலாவிபூதியாகிய உருத்திரமூர்த்தியின் சுக்கிலத்தால் தற்பவமாக உற்பவித்த விவேகவீரனுகிய அசுவத்தாமனை மெய்கலங்கச்செய்து, மேனியிற் புகுந்து உழக்கிப் பொறிபெழவீழ்த்தியது.

அந்தவேளையிற் சினந்த சகுனியுஞ் சிற்சிலவேந்தரும் மிகுந்த வருத்தமடைந்து, அசுவத்தாமனை எடுத்துக்கொண்டுபோய் ஒளஷ

காதிமுதலியனகொடுத்து அவன் தன்னை மறந்து அடைந்த ஆயாச வருத்தங்களை ஆற்றினர்கள். உடனே அசுவத்தாமன் தேறித் தேரேறிப்புறப்படும்போது, அவனுடன் கர்ணன்முதலாகிய காவலருஞ் சேர்ந்து, சிவனுடன்சென்று போராடவெழுஞ் சிற்சிலதேவர்களைப் போல் முரசவாத்தியமுதலியன முழங்கச்செய்து, முடுகிவந்து நெருங்கிப் போர்விளைத்தார்கள். அவர்களைக்கண்டு அதிகமோகம் கொண்டு ஆக்ரமித்த பராக்ரமசாலியாகிய சோழராஜன் அநேகம் ஆனைக்கும்புகளில் ஓர் ஆண்சிங்கம் புகுந்ததைப்போற் புகுந்து, தகுந்தகணைகளிஞ்ல் உடல்களைவகுந்து, உயிர்வதைபுரிந்து, குயவன் திகிரிபோற்றிரிந்து வருவதாயினன். அக்காலையில் துன்மருட னுடைய குமாரர் சுவாகு, துன்முகன் என்னுமிவர்கள் சோழனை வளைத்து, காழகிற்கணைதொடுத்துக் கலகம்விளைத்தார்கள். அவர் கள்விட்ட அம்புங்கெட்டு, உருளையுடைய தேர்க்கட்டும்விட்டு, வில்லுமுறிந்து, அவ்விருவரில் துன்முகனென்பவன் உயிரழிந் தொழிந்தான். அப்பால் வில்லாளியாகிய சுவாகுவென் பவன் பின்னும் பலருடன்சேர்ந்துவந்து பகைத்து, ரதம், குதிரை, சாரதி முதலியவைகளுமுறிந்து, அவனும் ஆவிபறிந்துமேபாயினன். உடனே சூரிபனுக்குப் பிறனும் கர்ணனுக்குக் குமாரனுமாகிய சங்கனும் அங்கதேசாதிபர் அனைவரும் வெகுவாகியராஜகுமாரர் களும் இன்னுமபலரும் எதிர்த்துப்போர்விளைத்து, ஐகத்திற் பேர் தழைத்து, அவத்தில் உயிர்விடத்து அந்தரம் அடைந்தார்கள். பண் ணுடன்பாடும் வண்ண வண்டுகள் காடுங் கண்ணைகன்ற சோலைசூழ்ந்த காவிரிநாடனாகிய சோழராஜன் தொடுக்குங்கணைகள், மண்ணுலகத்தி னிடர் நீங்கமலைந்து, மன்னர் மன்னரை அவர்களுடைய மைந்தரை அவர்களுக்குரிய கால்வகைப்படைகளை விண்ணுலகத்தி லிடமில்லை மிகநெருக்கமென்று உரைக்கும்படியாய் மிதமில்லாமல் ஏற்றிவைத் தன. இந்த வெற்றிப்போரைப்பார்த்து மெத்தவும் யோசித்திருந்த வேதியன் சுதனாகிய அசுவத்தாமனும், தன்னிகரில்லாத சகுனிமாம னும், பொன்மாரிபொழியும் புண்ணியக்கர்ணனும் இன்னும் அனேகம் நிருபர் முதலாகிய நெடும்படைவீரரும் சோழராஜனைப் பார்த்து, 'ஓசுத்தகித்திய உத்தமகுணம்வாய்ந்த நற்றவச் சிவபக்தனே! பராக் கிரமப் போர்புரியுந்திறத்தில் நீயே சென்னியாயிருப்பதால், உனக்கு சென்னியென்னும் பேர்தகும்! தகும்!" என்று அவனைப்புகழ்ந்து போனார்கள்.

அருச்சுனனும் சஞ்சத்தகரிற் பதினாயிரவர் வதை

கேட்டீரோ ஜனமேஜயமகாராஜனே! மேற்சொல்லிய வீரரெல்லாருஞ் சோழராஜனைவிட்டு முனைமடங்கி இன்னொரு திசையிற் போய்ச் சத்துருக்களாகிய தோராளிகளுடன் போராடி, ஆற்றமாட்டாதவர்களாய் ஓடி மீட்டுந்தறிவந்து பொற்றம்பெற்ற வெற்றிவில்லைப் பிடித்த விஜயனைச்சூழ்ந்து கொழுங்கணையேவினார்கள். அந்த வேளையிலவர்களிற் சம்சத்தகர் முந்தியோங்கி வளைந்தவில்லைத் தாங்கி, தினிந்தாணிவாங்கி, தகுந்த பாணந்தெங்கி நிறையப் போர் விளைத்தார்கள். அப்போது கொல்லவந்த யானைகளுக்கெதிரில் மெல்ல வந்த ஆண்சிங்கம்போன்ற அர்ச்சுனன், பலபல்லவக்கணைகளை விடுத்துச்சாடி, அவர்கள்விட்ட கல்லகக்கணைகளையெல்லாம் விலக்கி, அவர்களுடையசிரமும் உரமும் கரமும் கழலும் தோளும் தாளும் மேலும் காலும் வெவ்வேறுறுத்துவிழப் போக்கினான். அந்த அர்ச்சுனன்தொடுத்த அம்புகளினால், சிலர்காலற்றார்கள்; சிலர்முடியற்றார்கள்; சிலர் அடியற்றார்கள்; சிலர்வேலற்றார்கள்; சிலர்கரமற்றார்கள்; சிலர்மாலற்றார்கள்; சிலர்வில்லற்றார்கள்; சிலர்விரலற்றார்கள்; சிலர் முப்புரியாகிய முந்நூலற்றார்கள்; சிலர் முழுவீரங்கொண்ட முகமற்றார்கள். சிலர் கடகம், கங்கணம், தோள்வளை, புஜாகீர்த்தி, வாகுவலயம் இவை முதலாகிய ஆபரணங்களற்றார்கள். சிலர், கொடி, குடை ஆலவட்டம், சாமரை இவை முதலாகிய சின்னங்களற்றார்கள். சிலர் சாரதியற்றார்கள். சிலர் குதிரைகளற்றார்கள். சிலர் யானைகளற்றார்கள். சிலர்சேனைகளற்றார்கள். இப்படி அதிரதத் தலைவராகிய மிகுந்த பலவான்களெல்லாரும் அற்றுச் செத்தார்கள். இவையன்றியும் மதயானைகளெல்லாந் தங்கள் முதுகிருந்த தாணிபர்களோடு துதிக்கரமிழந்தன. வேகமாகிய குதிரைகளெல்லாந் தங்கள் எஜமானனையுங் குரங்களையும் இழந்தன. வெற்றிவீரப் படைஞர் முதலாகிய பேர்களெல்லாரும் பலமற்றார்கள். வயவீரர் சிரமுதலிய உறுப்புகளைற்றனர். வானுலகம் இடமற்றது. அங்குள்ள தேவர்கள் வேறிடந் தேடினார்கள். அந்த இடங்களையும் பகைத்து அர்ச்சுனன் புரிந்த யுத்தத்திடங்களை என்னென்று சொல்லுவேன்? ஐயா மகாராஜனே! வஞ்சகமாகிய சாமார்த்தியவான்க ளென்னுஞ் சஞ்சத்தகர் பதினாயிரம்பேர் பலவாறுக இறக்கும்படியாய், அவர்கள் ஏறிவந்த வெண்கலத் தேர்கள் அநேகந் தூளாய்ப் பொடிந்து போகும்படியாய்,

அவர்கள் தொட்ட அஸ்திரங்களெல்லாம் மண்ணுய்மடிந்து பொடிந்து படிந்து போகும்படியாய், அழித்து அடர்த்துப் படபடத்து நின்ருன் மேகநிறத்தான் விடுந்தேரினையுடைய அர்ச்சுனனவன்.

கர்ணன் தன்னெடெதிர்த்த நகுலசகாதேவரைப் புறங்கண்டு பாண்டவப் படையைப் பாழ்ப் படுத்திநிற்க, அருச்சுனன் கௌரவப் படையை அலக்கழித்தல்

அந்தவேளையிற்சஞ்சத்தகர்களிலும் மற்றவர்களிலும்இறந்தவர் போக இருந்தவர்களாகிய சகல வீரரும் அர்ச்சுனனுக்குப் பயந்தோடித்து, இரணகளத்தில் நிற்கமாட்டாமல் வாட்டமுற்று ஓட்டமிட்டார்கள். இப்படியோடவே, ஓடாதூரத்து நின்ற துரியோதனனுடைய தம்பிமார்களிற் சிலரைக் கண்டு அவர்களையுமாட்டி வாட்டி மிகுந்த தாட்டியாய் வராநின்ற விஜய காண்டீப வீரன் கதிர்மகனுகிய கர்ணனைக்கண்டு, அக்கினி சொரியும் அருங்கணை பலவாகக் கொண்டு, திசாதிசைகளுங் கலங்கிச் செவிபடும்படியாகச் கைக்கிசைந்த காண்டீபத்தில் நாணேறுசை செய்து, ஆதிசேடனுகிய பாதலவாசிகள் நடுங்கத் தேரைமுடுக்கி, அங்கு தனக்கெதிர்ப்பட்ட துரியோதனனுடைய சீரைக்கருக்கி, அவனைப்புடைசூழ்ந்த வீராதிவீரர் முதலிய யாவரையும் உருக்கி, உதிரம்பெருக்கி, கர்ணனைக் காலோட்டங் காணவேண்டுமென்று கருதி அவனுடைய போர்முகத்துக்குத் தாவுவதாயினன். அதற்கு முன்னே மாத்திராதேவி புத்திராகிய நகுல சகாதேவர் இருவரும் இந்தக்கர்ணனை வெல்லாமல் மீளமாட்டோமென்று தடதடெனச்சென்று, தாதாவாகிய கர்ணனுக்கெதிரிற் புகுந்து கணைமாரி சொரிந்து, யுத்தமுனையைப்பிளந்து, வல்லாடல் செய்யும் வில்லாளியாகிய அக்கர்ணன் வடுப்படவும், மனந்திடுக்கிடவும், அவனுடைய வாகினிகளெல்லாம் மடிந்து முடியவும் பூதப்பிரேதபைசாசகணங்கள்கூடி அருந்தவும் போர்புரிந்து குதிரைக்கும்புகளை வீழ்த்தி, யானைக்கூட்டங்களைச் சாய்த்து,வாத்தியங்களைத்தாக்கி விசாலமாகிய தேர்களைத் தூளாகநெரித்துத் தேர்க்கொடிகளை முறித்து, விற்கழிகளைத்தறித்து, புதுமதிக்குடைகளைப் போக்கி, ஆயுதப்படைகளைத்தாக்கி, அடர்ந்த வீரர்களைச் சின்னபின்னஞ்செய்து உயிர்போக்கி, இவ்வாறு அச்சமர் நிலத்தில் வீரப்பயிரேற்றித்தூற்றி, எவரையுந் தெய்வலோகத்திற் குடியேற்றி வாதிக்கா நின்றனர். இவ்விரண்டு சிங்

கங்களாற் கர்ணனுடனேவந்த கடுங்கோபக் களிறொத்த காவலர்களி லனேகர், கால்சாய்ந்து ஓய்ந்து மாய்ந்து போனார்கள். இவ்வாறு நகுல சகாதேவர்களினால் அடிபட்டுமடிவதை ஆயிரங்கிரணக் கதிரவன்றந்த அங்கதேசாதிபன் கண்டு கோபங்கொண்டு, இருகண்களுஞ்சிவந்து கனற்பொறி கொட்டும்படிக்கு முனைந்து வண்டுமொய்த்த வாசமாலை யணிந்தமார்பினராகிய பாண்டவச்சேனைகளையெல்லா மாய்த்து, நகுலசகாதேவருடைய திணிந்த தேகமெல்லாம் அவிந்த புண்களாகி மோழை மோழையாய் விளங்க வழிகாட்டித் தாரைதாரையாய் உதி ரஞ்சொரியும்படியாக மேலுமேலுங் கணைகளைப்பொழிந்து, அவர்க ளுடைய தோளும் ஒப்பற்றமார்புந் தூளைபடவும் வளைத்துப்பிடித்த வில்லானது தறிபடவும் ஈண்டகொடிகள் முறிபடவும், உன்னதத்தே தார்கள் உடைபடவுமாக கிமிராத விற்கொண்டு ஜாடி, அவர்களோடு வந்த நால்வகைச் சேனைகளும் வாடி ஓடிப்போகும்படியாய் அழித்து வருவதானான். இவ்வாறு காலாந்தகன்போலழித்து வருகின்ற கர்ணன் செயலை நகுலசகாதேவர் பார்த்து, "இவனை ஜயிக்குந் திறம் நம்மிடத் தில் இல்லை. திரும்பி ஓடிப்போவதேதிறம்" என்றுன்னி இருவரும் யுத்தத்தைவிட்டுப் புறங்கொடுத் தோடினார்கள்.

இப்படி அவர்கள் ஓடுங்காலையில் ஒருவருநிகரில்லா வலிமை பெற்ற கர்ணனவன் அவர்களோடு மறுபடியும் யுத்தஞ்செய்யும்படி யாகிய எண்ணங்கொண்டு, சின்னபின்னமாகத்தூளித்து ஊடுருவா நின்ற கொடுங்கணைகள் ஐந்துகண்டு, முந்திநொந்துபோகாநின்ற நகுல சகாதேவரைப் பின்றொடர்ந்துபோக எத்தனப்பட்டான். அவனை மிகுந்த கலத்திலும், உயர்ந்த குலத்திலும், பிறந்த தலத்திலுஞ் சிறந்த சல்லியனுகிய சாரதிதடுத்து, "ஐயாகர்ணனே! குதிரைகட்டும் எனக்கும் ஏன் வீணுகிய பிரையாசங் கொடுக்கின்றாய்? முன்னே தருமராஜன் வந்து எதிர்த்தார்! அவரை வென்றாய்! இரண்டாவது பீமசேனன்வந்து போர்தந்தான். அவனைமுதிர்ந்தபோரினில் வென் றாய்.சிறுவராகிய நகுலசகாதேவர்களை இதுவரையிலும்ஜெயிக்காமல் விட்டுவிட்டீர், இப்போது ஜெயிக்க எத்தனிக்கிறாய். இத்தருணம் நீ யவர்களை ஜெயிக்கபோகின்றதில்லை! அப்படி அல்லவென்று ஜெயித்த போதிலும், அதனால் உனக்கொரு புகழுமில்லை. தெருங்கிய பிரகாசம் பெற்ற கிரீடியுடன் போர்புரிந்துவெல்லுவாயாகில் உன் வில்வல்ல பத்தையும் போர்த்திறப் புகழையும், யாவருஞ் சொல்லித் துதிப்பார் கள். இவர்கள் மெத்தவும் அறியாதவர்கள். இவர்களுடன் எதிர்த்து

ஜெயம் அடைந்தாலும், அபஜெயமடைந்தாலும், உனக்கு யாதொரு பெருமையும் இல்லை. ஆகையால், நகுலசகாதேவர்கள்பேரிற் போர் செய்யப்போகிற கோபவேகத்தை அடக்கித் திரும்பிவிடு!" என்று விளம்பினன். அப்போது கர்ணனவன் குந்திதேவிக்குத் தான் கொடுத்த வரமாகிய வாக்கியநெறியுஞ் சாரதி சொல்லிய குறியும் யோசித்து, அந்த நகுலசகாதேவரைவிட்டுத் திரும்பி கல்ல மத்தியானத்திற் காயுங்கதிரி காலச் சூரியனைப்போல் ஆர்ப்பரித்து,முற்றிப் பகைத்து வந்த பல முடிமன்னரையும் அடிமுடி அறச்சாய்த்து, அகோரஸ்திரங்களை அநேகமாகப் பொழிந்தான். அவன்தொடுத்த கணைகளில் திசாதிசை முழுமையும் வளைந்து அளவிட்டு அறியச் சென்றனவாஞ் சிலகணைகள். ஆகாய முதலிய அண்டத்தை யளந்து அளவிடுகின்றனவாம் பலகணைகள். ஆசைகொண்டு நாகலோகத்திற் புகுந்து நாலுபக்கத்திலுந் திரிந்துதாடிவருகின்றனவாஞ் சிலகணைகள். ஆகாயத்தில் தேரே உருவிப்போகின்றனவாம் பலகணைகள். இவையல்லாமல், உடலை நெருக்கிப் புகுந்து மாமிசம், தோல், குடல் நரம்பு, தாரைகள், முதலிய இடங்கள்தோறு நுழைந்து தீச்சிகை கொளுத்துகின்றனவாம் பல காண்டவங்கள். பகைவருடையதேகத்திற் கண்ட இடங்களிற் பாய்ந்து சக்கையாகப் பிளக்கின்றனவாஞ் சிலபாணங்கள். வசையற்று இசைபெற்றுக் காற்றுடன் கூடி அசைவற்றுத் திரிகின்றனவாம் பல அஸ்திரங்கள். வகையேறிச் சிகைமீறி வன்னியுடன்கூடி யுலாவுகின்றனவாஞ் சில வேத்திரங்கள். இடிபட்டனபலமலைகள். பொடிபட்டன சிலதலைகள். எரிபட்டன பலவனங்கள். மூழ்பட்டன சிலஜனங்கள். கொதிபட்டன கடல்நீர்கள்! மிதிப்பட்டன அடல்மேதகள். இடிபட்டன மஞ்சினங்கள். பொடிபட்டன குஞ்சரங்கள். தூசிகளெழுந்தன பூமியினுல். வாசிகளழிந்தன நேமியினுல். விண்ணூடெழுந்தனகரும் புகைகள்.மண்ணூடெழுந்தன செம்புகைகள்.அப்போது பாதலவாசியாகிய ஆதிசேஷனுற்றுங்கும் அகிலம் பிளப்புண்டு, அவனுடைய ஆயிரந்தலைகளும் வலிப்புண்டு, அதனுல்மிக இளைப்புண்டு போனனென்று சொல்லும்படி யிருந்ததாயின் சாயத்திற் காயம்படாதிருந்தவர்கள் இன்னுரென்று ஸ்திரமாக எவர்சொல்லமாட்டுவார்கள்? உடல் கெட்டவர் பலபேர். உயிர்விட்டவர் சிலபேர். வில்லைக்கொண்டு பதறியெய்தவர் பலபேர். பல்லைக்காட்டிக் கதறிவைதவர் சிலபேர்; தங்கள்கீர்த்தியுடன் மானத்தையுங் கைவிட்டுக் கலங்கினுர் பலபேர். தங்கள் விரதத்துடன் யுத்தகளத்தையும் விட்டு விலங்கினுர் சிலபேர். ஆச்சரியமாச்சரியமென்று அகன்றார் பலபேர். ஆகட்டுமாகட்டு

மென்று கறுவி வெகுண்டார் சிலபேர். இப்படியாகப் பற்பலவிதத்திலும் வருத்தப்பட்டார்கள். அவர்களாரெனில், தருமராஜன்விடுத்த சதுர்வித புருஷார்த்தமும் மடுத்த சேனைவேந்தர்கள். இவ்வாறுகக் கோலாகலமாய் அமர்மோதிவரா நின்ற கர்ணனுக்கு எதிர்நின்று போர் கொடுக்கும் வீரமுள்ளபேர்கள் ஒருவருமில்லாமையால், யாவரும் பிராணபயங்கொண்டு, கீலமலிபோல் நிற்கின்ற அர்ச்சுனனிடத்தில் வந்து, மிகநொந்து, மனம்வெந்து வருந்தினார்கள். அதைத்திருந்திய மனத்தோனுகிய சிலவிஜயன்கண்டு, கல்லென்று நகைத்து, சில்லென்று வியர்த்து, " ஓ பையாடரவணை விட்டெழுந்த மெய்யா ! ஓ பொற்சிகரத் தேர்க்கிசைந்தகையா! நமது சுவேதவாம்புரவியினை முந்தச்செய்ஜயா! " எனக் கனல்படுகண்ணனுய்க் கடுகித்தாட்டியாய்ப் புகன்றான். அவன் புகன்றவசனப் பிரகாரம் வாசுதேவனுகிய வலவனுனவர் உச்சிதரதத்தை உயர்விலோட்டி, கர்ணனுக்கெதிர் காட்டி, கணகணவென மணிகளாட்டி, அண்டமுக டதிரும்படியாய் காட்டினர். உடனே செந்தீப்பொறி செறிந்துபறக்குங் கண்ணையுடைய வில்விஜயனுனவன் கடுங்கோபாக்கினிக் கணைகளையெடுத்து, கார் பொழிவதுபோற் றொடுத்து, காகரவென்று தேரினைவிடுத்து, யாவரையுங் கால்மாடுதலைமாடாகத் துடித்திடப்படுத்து, வலசாரி இடசாரியாகச்சுழன்று, உகாந்தகாலாந்தகனைப்போன்று திரிந்தான். அப்படி திரியுங் காண்டீபனைக்கண்ட கௌரவச்சேனைக்காவலர்க ளெல்லோருங் காலுன்றிப்பூமியில் நிற்கப்பயந்து, ஓட்டங்கொள்ளநயந்து, ஓடமாட்டாமல் அயர்ந்து, ஒருவருந்தப்பாமல் அழிவதற்குக் காண்டவவனம் போலசைவற்று நின்றார்கள். அப்போது ஒருவரையும்விடாமல் ஒழிப்பதற்கு அர்ச்சுனன் ஒருவனுக ஒப்பற்று நின்றான்.

கர்ணனே டருச்சுனன் கடும்போர்வினைக்குங்கால்
அவனைத் தருமனென்றையுற்றமர்விடுக்க,
அதுகண்ட கண்ணன் நகுல சகா
தேவரால் தருமநந்தனர்செயல்
கேட்டவர்பாசறைக் கேகல்

அதுகாலையிற் கௌரவப் படைகளும் அப்படைவீரர்களும் இளைத்து அழிந்துவருஞ் செய்கையைத் தெரிந்த கர்ணன் அர்ச்சுனனுடன் எதிர்க்க, உடனே இருவரும் அமர் திளைத்தார்கள். இருவரும் எதிர்புகுந்தார்கள். இவரும் எதிர்முனைந்தார்கள். இருவரும் வில்லை

வளைத்தார்கள்; இருவரும் நாணி யிழுத்தார்கள். இருவரும் டங்காரங் தெறித்தார்கள். இருவருஞ் சங்குகுறித்தார்கள். இருவ ருங்தெழித்துச் சினத்தார்கள். இருவரும்மீசை துடித்தார்கள். இருவரும் புருவநெரித்தார்கள். இருவருஞ்சரங்க ளெடுத்தார்கள்; இருவரும் கெடுத்தார்கள்; இருவரும் மந்திரம் உச்சரித்தார்கள். ஒருவருக்கொருவர் எச்சரித்தார்கள். ஒருவர்மீதொருவர் பெருங் கணைவிடித்தார்கள். ஒருவரைபொருவர் புகழ்ந்தார்கள். ஒரு வரைபொருவர் மகிழ்ந்தார்கள். இவ்வாறிவ்விரண்டு பேர் களும் அகிலபுவன சராசரங்களெல்லாம் அசையும்படி போர் புரிந்து வருங்காலையில், அர்ச்சுனனவன் அருணக்கணை, வருணக் கணை முதலிய அஸ்திரங்களை அங்கமேதச ராஜன்மேற்றொடுத்தான். கர்ணனவன் அந்தக்கணைகளை இடையிற்றடுத்து, சமோருகப்பகழி சதுர்முகப்பகழி முதலியபாணங்களைத் தநுவிற்கோத்துச் சரமெனவிடித்துப் பகைத்தான். இத்தப்பிரகாரம் வெற்றிவீரிருவரும் ஒருவ ருக்கொருவர் போராடவிட்ட கணைமாரியினால் உலகெல்லாம் அலற வும், அதிகமாயிரம் புஜவிரதீரர் பிரமலோகங் குடியேறவும், அழகிய சமுத்திரங்களேழும், நீலகிரி முதலிய மலைகளேழும், கொந்தளைந் தாடவும், வானஞ்சலிப்பெய்தவும், குதிரைகள், யானைகள், தேர்கள், காலாட்கள் இவைகளெல்லாஞ் சிந்திச்சிதையும்படிக்காயின. பின்னுங் கல்லைப்போன்ற வில்லைவளைத்துக் கணைத்துக் கணக்கற்ற கணைதெறித் தார்கள். இப்படி ஒருவர்மேலிலொருவர் ஓயாமல் ஆயிரமாகப் பலம் பொருந்திய வாளிகளேவித்து, பின்னுமுன்னும பாராமல் ஒரு க்ஷணத்துக்குக் கோடாகோடியாய் அடுத்து அடிக்குங் கடுங் குரோ தத்தையும், கன்றிபவிரோதத்தையும், மற்றமுடிவேகரும் முனை வீரருங்கண்டு, முதற்றேவராகிய மூவரும் புகழாநின்ற பாணசுரன் முதலாகிய பேர்களுடன் சண்டைசெய்யத்தக்க சமானஸ்கந்தரென்று கர்ணர்ச்சுனராகிய இவ்விருவரின் புகழைக்கொண்டாடினர்கள்.

இப்படிதேவர்கள் முதலியயாவருங் கொண்டாடும்படியாய் அண் டமு மண்டர் அகண்டித விண்டல மண்டலமெண்டிசை பிண்டரு ண்டெழு,கண்டலே கொண்டல்கள் செண்டென விசைகொடு நின்றடு நின்றடு டுணடடு வெனவெழு, சிறுபறை அறைதர முரசொலி நிறை பெற, அரசர்கள்குறைவுற அமரர்கள் கிடியுற, திறவர்கள் முடிவுற தின கரர் திகிலுற, ககனர்கள் கவலுற கருதலர்மிகையுற, இருவிழிகனலுற எவர்களுமனலுற, பொருவருமிமையவர் புனல்விழியுருகுதர, சர சர

சரவெனப்பர பர்பரவென,விறுவிறு விறுவென வெழுகணையெதிர்படு, கதித்தபொன்முடி காவலரோடிட, பதித்தகன்மணி வார்சிலை கீடிட, விதித்தகீள்கணை மேலவர்தூவிட,எதிர்த்தபோர் அபயச்சொல்விசைத்திட, எட்டுத்திக்குட் பட்டகிரிகளும், வட்டத்திட்டுட் பட்டகரிகளும், விட்டத்துட்பட் டிட்டபுரிகளும், பட்டுக்கட்டிட்ட அட்டபரிகளும்,பதறிக்கதறிச் சிதறிக்கதலுற, அதறிப்பதறி மெய்யுதறிச் சிதைவுற, பாரொடுபுவனம் படீரென வாட, ஆறுபோலுதிரம் அலைபுரண்டோட அமராடியகாலையில், அர்ச்சுனன் கர்ணன் இவர்களிருவரும் ஒருவருக்கொருவரிளையாமற்களையாமற் சளையாமல் மேலிட்டு மாயக்கணையவினர்கள். அத்தக் கணைகள் பத்தெனச் சுழன்றெழுந்து, கொந்தழற் சொரிந்துவந்து, அத்தனைப்புகுந்து கொந்து, தத்தெனக் குழைந்து வெந்து அதிவீரபராக்கிரமாசாலிகளாகிய இருவருடைய தேகத்திலுந் தைத்திட்டதனால் வலிக்குளகப்பட்ட வீரசிங்கம்போல் மடங்கி, சாயாபதிமைந்தனுகிய கர்ணன் சலித்து நின்றான். அவனுக் கெதிர்நின்ற தனஞ்சயனுந் தேகக்களர்ந்து அகமெலிந்து தன்னைத் தானே மறந்திருந்தான். பின்பு கர்ணன் ஒருவாறு தேறித்திரும்பி, தருமராஜன்படைக்குட் புகுந்து சரவருஷம்பொழிவதானான். இங்கே தன்னைமறந்திருந்த அர்ச்சுனனைக் காயாம்பூவண்ணனுகிய கண்ணன் கண்டு, "ஆ! ஆ! ஓ போர்தறவிபாக்கிர பராகிரமசாலியாகிய அர்ச்சுன! கூர்செறிந்த, மிகல்பொழிந்து, போர்முனைந்து, நேரடர்ந்து, கார்சொரிந்த, நேர்மொழிந்து, போர்புரிந்து, சீர்பொருந்திவந்த நீ, இப்போது ஜெயம்பெறுமல இப்படிக்கு இளைப்பானேன்? மெத்தக் களைப்பானேன்? ஐயோ! அப்பா! சம்பளஞ்சாடியென்பதில்லாமல் என் பெண்சாதி பிள்ளைகளையுமறந்து வாக்கை விற்றுவிட்டோமே யென்னு மேக்கத்தால் வலவனுக வந்திருக்கின்ற என்னை இங்கே தொண்டிவந்து, கர்ணனுக்கு எதிர்சென்று போர்தந்து, இப்போது யாதுகாரணத்தினுலையோ மனம் நொந்து, வன்னமேறிய சித்திரம் போல் வாய்பேசாமல் அமர்ந்து அசைவற்றிருக்கின்றீயே? இதென்ன மிகுசேசமோ? அல்லது பெருமோசமோ? கர்ணனிடத்தில்வைத்த ஆவேசமோ? கணபட்டிருவும் ஆயாசமோ? அதனல் நேரிட்டபிரையாசமோ? தானுனக்குச் சாரதியாயமைந்தவிசுவாசமோ? என் றலையிலிட்டிருக்கும் விதிவசமோ? அடா ஐயனே! கண்டீபக் கையனே! மரகதமணிபோன்ற மெய்யனே! உன்னுள்ளக்கருத்தை மெய்யாகச் சொல்!" என்று (செய்யாள் பதியாகிய துய்யன், என்னையடிமையாகக் கொண்ட ஐயன்) கேட்டருளினர்.

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இவ்வாறு மாயன் கூறிய மாயவாசகங்களனைத்தும் கேட்ட அநுமக்கொடி தரித்த அர்ச்சுனனவன் கண்ணீர்சோரவிட்டு, இரு கரத்தையும் உச்சியிற் குவித்து, "ஓ ஆபத்பந்துவாகிய அண்ணலே! என்னுடன் போர்புரிகின்ற வெங்கணைதரித்த அங்கர்பிரானுகிய கர்ணராஜனவர் சாயலில் தருமராஜனைப்போல் விளங்குகின்றார். இதனால் என்னுடைய எண்ணம் வேறுபட்டது. துக்கமேலிட்டது. துயரம் சேரிட்டது. கலவரமாய்விட்டது. கடுமைமீறாய்விட்டது. கண்கள் மறைகின்றன. கவனங்குறைகிறது. கதம்பகஸ்தூரி முதலிய மாலைகளெல்லாம் புலால்நாற்ற நாறுகின்றன. காண்டீபமோ வசையில்லை. கான்றெதாடுத்த பாணங்களோ அவர்பேரிற் செல்லாமல் முகங்கூசி முகமாறிவிடுகின்றன. என்னுடைய மனம் மெத்தவும் இரக்கங்கொள்ளுகிறது. இனிகான் இவரோடு யுத்தஞ்செய்வது அரிது. ஐயோ! நானென்ன செய்யப் போகிறேன்" என்று வேளைகிகர்த்த பார்த்தன் வெய்துயிர்த்து வெறிபிடித்து, வேறு மேதான்றுமற பரதவித்தான். இப்படித் தருமராஜன்போ விருக்கிறதென்னுஞ் சொல் செவியிலறிணமாத்திரத்தில் தாமு மவனை பொப்பச் சக்தேதகித்தவர்போல் அக்கேசவ காமக் கிருஷ்ணன் முகஞ்சுளித்து, கமுதுக்கி, வாசவன் மகனை அர்ச்சுனமீஞ்டு தேரைத்திருப்பி வேகமாகமுடுக்கி, தடதட படபட மடமட கடகடவென்று புரவி தெரியச்சென்று, தங்களுடைய போரணிப் படைக்குட்புகுந்து முரசக்கொடி மன்னனுகிய தருமராஜனைத் தேடி, நாலுபுறத்திலு காடி முகம் வாடினர். அப்போது சகுலசகாதேவர் இரண்டுபேரும் வந்துகூடி, "ஐயா! நமது அண்ணுவாகிய தருமராஜன் கர்ணனுடன் எதிர்த்து, நெடுநேரம் போர்விளைத்து, அவனை வய கணையால் மெத்தவருந்தி, சித்தமழன்று, சத்துவங்குறைந்து துன்பமடைந்து சோர்ந்து, கிருஷ்ணர்ச்சுனருக்கு என்சங்கதி சொல்லுங்களென்று சொல்லி, சணடை முகத்தைவிட்டு நீங்கிப் பாசறைக்குப் போகவேண்டுமென்றார். காங்களோ கொண்டுபோய்விட்டு இதோ வருதோம்" என்று சொல்ல, அத்தச் சொல்லைக் கேட்டவுடனே ஒப்பில்லாத புஜவலிமைபெற்ற அர்ச்சுனன், "என்தமையனுகிய தருமராஜன் சத்துருவினிடத்தில்அகப்பட்டுப பயப்பட்டுப் பரிதாபப்பட்டு வருந்தியிருக்க, நான்மாத்திரம் அசைவர இன்று பகைவரை வென்று, இசைபெற நின்று எதிர்மூனை சென்று, பூபாலரைக் கொன்று புகழ் கைக்கொண்டேன். தமைபன் வருத்தத்தம்பி ஜெயம்பெறுவது மிகவும் நன்றாயிருக்கிறது. ஆ! ஆ! நானி

ருக்கும் என் தமையன் இப்படிவருத்தப்பட்டாரல்லவா?" என்று வருந்தி, "இப்போதே அவரை நான் காணவேண்டும். அப்பா தம்பிமார்களே! அண்ணன் பீமராஜனே! மைத்துனர் முதலாகிய மற்ற மன்னர் மண்டலீகரே! கால்தலை தெரியாமற் கர்ணன் யுத்தம் நடத்து கின்றான். நீங்க ளெல்லோருஞ் சற்றுநேரம் அவனெதிர் நடந்து, அவனையும் அவனுடன் வந்த சத்துருக்களையு மடக்கிப்போர் புரிவீர்க ளாகில் இதோ வந்துவிடுகிறேன்" என்று ஒருவருக்கொருவர் துணை யாகச் சேர்த்தனுப்பி, துவாரகாபுரிவாசனுடன் மனக்குறைவோடு துறைபாகத் தேர்விடுத்து, தருமராஜனிருந்த பாசறைக்குத்தாமரை யிலே தண்ணீரொப்பத் தவித்துக் களைத்து வந்தான்.

தருமன் விஜயன் வரவை வெற்றிவர வென்றேற் றதைக் கண்ணன் மறுத்துற்றதுரைக்க அது கேட்டவன் அநுஜனைச்சினக்க, அவரை யவன் தன் சபதங்கூறி எதிர்த்தல்

அப்போது இவர்கள் வரவைக்கண்ட வாசற்காவலாளிகள் சென்று, முரசக்கொடி யோனை வணங்கி எதிர்கின்று, "சுவாமி! பாரத் தேவரீருடைய திருவாயிலின் முன்பு நாராயணர் வந்தார்கள்" என்று சொல்லவும், அந்தச் சொற் கேட்டபோதே அகண்ட சாம்பிராச்சியம் பெற்றதைப்போல் அகமகிழ்ந்து, முகங்குளிர்ந்து அதிசீக்கிரமாக வெழுந்து எதிர்போடி இரவிகுமாரனை முடித்துவிட்டு இங்கு ஜெயம் படித்துவிட்டுப் போகுபடியாய் வந்தார்களல்லது, இப்போது காமி ருக்கும் பாசறையைத்தேடி வரும்படியாகிய காரியம் ஏவறுன்று மில்லையென்று மிகமகிழ்ச்சி கொண்டுவந்து, வாயில வந்திருக்கின்ற வரதன் மீதும் வாள்விஜயன் மீதும் அருட்கண்ணோட்டிக் கிருபை பூண டிருந்தனர். அக்காலையில் நாராயண ரிருவருந் தேர்விட்டிழிந்து, கிரேஷ்டனைப் புகழ்ந்து தீர்க்கமாய் வணங்கினார்கள். அப்போது தருமராஜன் சீக்கிரத்தில் இருவரையுமெடுத்து,சந்தனமணிந்த கொங் தலர்பூணந்த தனது திணிந்த புயத்திற் பொருந்தத்தழுவி, தம்பி முகத்தைப் பார்த்து, "ஓ எனது அன்பிற்குரிய அநுஜனே! முன்பு அக்கினிதேவனுக்குக் காண்டவவனத்தைப் பரிபடங்கக் கொடுத்த பலனல், ஆகாயவாசிகளாகிய காலகேயரென்னும் அறுபதினாயிரம் அரக்கரை ஜயித்து அழகுடைத்தாகிய புகழ் படைத்தனை. அல்லா மலும் கடல்மத்தியிலிருந்த நிவாதகவசர் மூன்றுகோடிபேரை வென்று

இந்திர பட்டத்தை நிலைநிறுத்தினாய். இந்தப்பலனை அசுரகண்டகனென்னும் பேரைக் கொடுத்துச் சீரும் அடுத்தது. இன்று சூரியகுமாரனாகிய கர்ணனைக் கொன்றமையால், ஈரேழுலகத்தையும் வென்ற இறைவனென்றும் ஏந்தலென்றும் இயம்பப்பட்டனை. என்னப்பனே! உன்னுடைய திறத்தை உன்னப்பனாகிய உம்பர்பிரானேயறிவார்'' என்று சொன்ன மன்னப்பனை பொன்னப்பனாகிய புயல்வண்ணன் நோக்கி "ஓ சாத்தமூர்த்தியாகிய தருமகந்தனே! சூரியபுத்ரனாகிய வீரியனுடனே ஆரியர் முதலிய சீரியகாரியநம் அகமகிழும்படியாகிய போர்புரிந்து அவன்றொடுத்த அம்புகளினால் இந்தவிஜயன் நொந்து சிந்தை பிரமித்து யுத்தமுனைவிட்டு விலங்கி, தேவரீரைக் கண்டு வார்த்தை பேசித் தரிசித்து மறுபடி போகலாமென்று நமது சேனைப்படைக்குள் வந்து தேவரீரை நாடியபோது, நாங்களுந் கர்ணனுந் தருமந்தப்பாமற் சண்டைபுரிந்து அச்சண்டையிற் ரூங்கள் உதிரம் வழிந்து, ஊற்றமொழிந்து தேகமெலிந்து திரும்பிவந்து பாசறைக்குப் போனீரென்றும், நாங்கள்கொண்டுபோய் விட்டு வந்தோமென்றும் நகுலசகாதேவர் சொன்னார்கள். அந்தச்சொல்லைக் கேட்கவே எனக்குக்கூடமெத்தமனவருத்தம் உண்டாயது. அந்தப் பாதகத்தால் தேவரீரைப் பார்த்துவிட்டுப்போகுமட்டியாய் இவ்வளவுதூரம் இவ்விடம்வரவேண்டியதாயது. இல்லாவிட்டால் இதுவரையிலுங் கர்ணன் மாண்டிருப்பான். ஆகிலும், இப்போதென்ன முழுகிப்போயது? நமக்கு நல்லகாலம்வாய்த்தது'' என்று திருத்துளவமணிந்த செங்கண்மால் சொல்லினார்.

இவ்விதச் சொல்லானது தருமராஜன் செவியிற்பட்டமாத்திரத்திற் பதறிச்சினந்து பற்கடித்து, அக்கினிதேவன் அழலைக் கக்கி ஏழுநாக்குடனெழுந்த தன்மைபோலெழுந்து, கண்களிற பொறிபறக்கக் கனைத்து, கவலைகொண்டு பதைத்து, கையைத்தேய்த்து, கனக்க அதிர்ந்து, கலீரெனகூவித்து, "ஆ! ஆ! கிருஷ்ணா! கர்ணன் இன்னும் உயிர்பெற்றிருக்கின்றானா? இஃதென்னவாச்சரியம்? ஓ கண்ணா! இது மெய்யா? அல்லது பொய்யா? எனக்குற்றது சொல்லையா வெற்றிவிற்கையா?'' என்று முகங்கடித்து, முனிவடித்து, உடல்படபடத்து, மனம் விடவிடத்து, முன்னின்ற விஜயன் முகத்தை வெறித்துப் பார்த்து, "பூர்வந்தொடங்கி இன்னுள்வரையிலும் அங்கர்கோமானாகிய கர்ணனை ஓரகணையால மாளச்செய்து வாளாளச்செய்வே னென்று மெத்த வலுவாகச்சொன்ன வாக்கியம் அபாக்கியமாகி, சொற்சோர்வு

பட வந்தாயே: இந்தச் சோர்வைக்குறித்து நம்போன்ற அரசர்கள் என்ன நினைப்பார்கள்? அவர்கள்மனம் என்னவாய்வருந்தும்? ஆகாய வாசிகளாகிய தேவர்கள் என்னயோசிப்பார்கள்? எவ்விதமாகிய ஏளனம்விளைப்பார்கள்? கானகவாசிகளாகிய கலிகற்றமுனிவோர்க ளுடையமனம் என்னபாடுபடும்? இக்கடல்சூழ்ந்த புவிக்கிறையாகிய கலிநெறிபெற்ற காவலனே! துரோணாசாரியரிடத்தில் ஓடி ஓடி தநுர்வேதமெல்லாஞ் சம்பூரணமாய்க் கற்றனையே! அக்கினிதேவன் கொடுத்த அழியாதவில்லும், அறாதநாணியும், அக்ஷயத்தூணியும், களையாதகவசமும்பரவியும், இளையாததேரும் பெற்றனையே! தேர் செலுத்துவதில் மிகுதிறவானென்று சிகைதெரியாச் சன்னதங் கொண்டு இம்மண்ணைத்தின்னு மாயவனைத் தெர்வலவனுகக்கொண் டனையே: பிறமுடிச்சடைபெற்றுப்பிறவாநெறியுற்ற பெம்மான், திற முடனளித்த சிவாஸ்திரமென்னும் பாசுபதப்பெயர்கொண்ட தழற் கணையொன்று தாங்கியிருக்கின்றனையே: ஜெபமாகிய தீரவீர அநுமக் கொடிகாட்டினையே: பத்துப்பேரும்புகழப் பத்துவிதப்பேரைப்பரிவு பெறப் பூண்டனையே: ஓ வந்தேல! இவைகளெல்லாமிருந்தும் என்ன பயன்? போர்முனைக்கு அஞ்சும்படியாகிய நெருஞ்சுள்ளபேருக்கு ஒருவன்சொல்லி, அதனால் வருவதொன்றில்லை. இவைகளெல்லாம் அவரவர் வினைப்பகுதியினுலுண்டாகிய பிறவியின் குணமாக்கும். அப்பனே! சூதாடக்கூறிய ஆண்மைப்பயிரேறிய அரசர்கள் நிறைந்த சபையிற் பஞ்சையாகிய மனத்தையுடைய நாம், மானத்திற்கஞ்சா மற் சபதமாகிய வஞ்சினங்கூறியது ஏன்னலாபம் அடையவோ தெரியவில்லை. உன்னைவிடத்திறத்தையுடையவர்கள் எவ்வுலகத்திலு மில்லையென்று மெத்தவும் புகழ்ந்தேன். என்சித்தமுமகிழ்ந்தேன், ஓ செழுந்தேனிறைந்த செந்தாமரை மாலையணிந்ததீரனே! இப்படி மானமிழந்து போவதற்காகவா நான்புகழ்ந்ததும் மகிழ்ந்ததும்? ஐயோ! நானிக்கண்ணனைத் தூதனுப்ப நிச்சயித்தபோது, 'அவர்க ளுக்கொருதூதா? நானொருவனுமே பிள்ந்துவிடுகிறேன். நானொருவ னைகளைந்துவிடுகிறேன்' என்று தளர்ந்திருக்கும் என்னுடன் போரா டினீர்கள். உங்களைநம்பித்தானை பதினெட்டுநாளைப் போரென்று வைத்துக்கொண்டேன். அப்பா பற்குனு! இப்போது வேடிக்கை பார்க்கின்ற தேவர்களுக்கு முன்னே கர்ணனைக்கொல்லாமல் இன்னும் பொழுதைப் போக்கிக்கொண்டிருப்பாயாகில் எந்தநாளையிற் போர் முடிவது? எந்தக்காலத்திற் சீர்பெறுவது? எந்தவருஷத்திற் சபதமுடி வது? எந்தயுகத்தில் நமக்குவந்தவள் கூந்தல்முடிப்பது? நீபிடித்த

வில்லும் ஒருவில்லா? இந்த வில்லுக்கும் உனக்கும் ஒரு பெருமை யுண்டா?" என்று பலவாறும் நிந்தித்தனர்.

இப்படிப்பட்ட தமையன்சொல்லானது அருச்சுனனுக்கு ஆல காலவிடம்போற் சுடீரென்று செவிபிலேறவே, ஒருதரம் உயிர்போய் உயிர்ப்படங்கி, மீட்டு முயிர்த்தெழுந்தாரக்கக்கூவி, ஆ! ஆ! ஆ! என் றேங்கிப் பெருமூச்செறிந்து, அனல்காய்ச்சிய வேலாயுதத்தை அளிந்த புண்ணிற்சொருகினால் எப்படியோ அப்படிபோல் அலன்று, அதிர்ந்து, மிகுவேகமாய் வெகுகோபங்கொண்டு, முரசக்கொடி படைத்த முன்னோனை முறுக்காய்முறுக்கி முனிந்துபார்த்து, முகங் கடுகடித்து "ஐயா! நீரும்பீமனும் நகுலசகாதேவருங்கர்ணனை எதிர்த்துக் கனயுத்தம் விளைத்தும், அந்தக் கர்ணனை ஜயிக்காமல் உங்கள் பிராணனை நீங்கள் காப்பாற்றிக்கொண்டு ஓடிவந்து விட்டது உமதுமனதுக்கே தெரியும். அப்படி தெரிந்திருந்தும், யுத்தத்தின் பெருமை உணர்ந்திருந்தும், எதிரியின்பலாபலம் அறிந்திருந்தும் இரக்கமில்லாமல், கிருபையில்லாமல், யோசிக்காமல் ஒரு கீழ்மக்களைப்போசும் பேச்சைப்போல் என்னையிகழ்ந்து பேசி யது உம்மைப்போன்றவர்களுக்கு இயல்பல்ல. காரியமல்ல. வீரிய மல்ல. நான்பிரவேசித்தபோர்முகத்தில் என்பாணங்களினால் எதிரா ளிகளுடைய விருதுமுதலியன அறையுண்டு சிதைந்தகாலத்திலும், அவர்களுயிர்போய்விட்ட காலத்திலும், இன்னும் எப்போர்ப்பட்ட பொல்லாங்குகள் நேரிட்டபோதும், என்வில்லைக்குறித்து நிந்தித்த சத்துருக்கள் ஒருவருமில்லை. என்னைத்தவிர்த்துப் பேசினபேரு மில்லை. ஆ! ஆ! கோமானே! கூர்மையாகிய பாணங்களைக் கொண்ட என்னுடைய விஜயகாண்டீபத்தைக் குறைவாக எனக்கெதிர்கூறிய பேர்கள் எவரானபோதிலும், அவர்களுடைய ஆவியைத் தாவி வாங்குவேனென்று சபதங்கூறி இருப்பது தமக்குத்தெரியுமல்லவா? அப்படியிருந்தும், நீரிப்போது என்னையும், என்வில்லையும், இழிவாகத் தூறிப் பேசினபடியால், நான்சொல்லியிருக்கின்ற சபதப்படிக்குத் தாக்ஷண்யம்பாராமல் உமது தலையை வாங்குவேன்" என்று மாதண் டஞ்சென்று வேதண்டங்கண்டுதீதண்டாத் தவங்கொண்ட காண்டீ பன், மூதண்டங் கலங்குங் கோதண்டம்போன்ற தீர காண்டீபச் சிலையைவளைத்து நாணிமாட்டிப் பாணம்பூட்டி ஆகர்ணபரியந்தம் இழுப்பதானான்.

கிருஷ்ணனர்ச்சுனனுக்குக் கௌசிகமுனிவரின்சரிதமுங் கடுஞ் சபதநிவாரணமுங்கூறி, தம்பியரைவெறுத்த தருமனை யுந்தேற்றி, பீமனைநீங்கலந்து விளாகமடைதல்

அந்தவேளையிற் சொந்தமான பந்துவாகிய கந்தகந்தனன் சிந்தைவருந்தி, பெருங்கோபங்கொண்ட இந்திரன்மைந்தனை இருகையாலு மணைத்து இறுகத்தழுவி, சற்றப்பாலழைத்துப்போய், "ஓ சராசனனே! இது கல்லதெறி, மெத்தகல்லகாரியம். நீ கூறியிருக்கின்ற சபதம் வழுவாமற்காக்கவேண்டியதே; ஆகிலும் அன்னியரிடத்தில் மாத்திரம் நீசெப்பியசபதஞ்சொல்லுமல்லது, தாய், தந்தை, தமையன், ஆசாரியன், இவர்முதலாகிய பெரியோர் உரியோர்களிடத்திற் செல்லுமோ? ஒருக்காலுஞ்செல்லாது. மேலும் அது தருமமுமல்ல. ஓ குணசேகரனே! இதை நீ அறிந்துகொள்ளக்கடவை. அதைக்குறித்து ஒருகதை சொல்லுகிறேன்கேள்— "ஓ கற்பகக் காவுக்கிறையின்ற காண்டீபதரனே! வேதவேதாந்தந்தெரிந்த விப்பிரர்; மெய்த்தவர்; கௌசிகமகாமுனிவரென்னும் பேர்பெற்றவர். இவர் சித்தசுத்தியாய் நற்றவமிருந்து, கற்றவருடன் மெத்தநாள்கலந்து, உத்தமத்தலங்களெல்லாந் திரிந்து, ஜீவன் முத்தர் முதலியபேரெல்லோரையு முணர்ந்து, 'இத்தனைநாள் பூப்பிரதக்ஷணஞ்செய்தோம்! இனிமேல் ஓரிடத்தில் நிலைத்திருக்கவேண்டும்' என்று நினைத்து ஒருநகரத்துக்கு அருகாமையில் மடமொன்று கட்டிக்கொண்டு பொன்றுதலில்லாப்புண்ணியத்திற் கேதுவான பொய்சொல்லாமை ஒன்று, கோபத்தினைக் கொல்லு நிலைமையாங் குணமான மௌனம் ஒன்று, இந்த இரண்டையும் விரதமாக மேற்பூண்டு, பாபத்தினைத்தொடராமல். பரிசுத்த இருதயத்துடன் தவம்புரிந்துவந்தார். அவருடைய நற்செய்கைகளைக்குறித்து உலகமெல்லாங்கொண்டாடிப் புகழ்ந்துவாய்மையில் இவருக்குமிஞ்சி எவர்களுமில்லையென்று மகிழ்ந்துவணங்கித் தொண்டுபட்டிருந்தார்கள். இந்தப் பெரியவருக்குந் தவம் நிறைவேறி மீடித்துவந்தது. இப்படியிருக்கு நாளில் ஒருநாள் சிலதிருடர்கள்சேர்ந்து, இவருடைய மடத்துக்கருகாமையிலிருக்கும் ஒருபதியிலிருந்த வர்த்தகனுடைய வீட்டிற் கன்னம்வைத்து, திரண்ட பொருள்களையுங் கைகளையுங் கொள்ளைகொண்டு அவர்கள் வருந்தி

அழும்படி விட்டுப்போனார்கள். அப்போது தலையாரிகளுக்குச் சங்கதி தெரிந்து, அந்தத்திருடர்கள் போயிருக்கின்ற காலடியைப்பிடித்துப் பின்னோடர்ந்து வர, அதை அந்தச் சோரர்கள் தெரிந்து, மிகவும் பயந்து, ஓட்டமும் நடையுமாயோடி ஒளிந்து கொள்வதற்கு வேறிடமில்லாமையால் அந்தக்கௌசிகமுனியை வணங்கப்போகிற விரதிகளைப்போல் மடத்துக்குள்ளே நுழைந்து பதுங்கினார்கள். அப்போது அடியை மிதித்தாற்போலவந்த காவலாளிகள் பார்த்து எங்குங்காணுமையால் மெத்தவும் யோசித்து ஏங்கி, ஆயுத பாணிகளாய் அந்த மடத்துக்குள்ளே நுழைந்து, அவ்விடத்தில் மௌனியாயிருந்த கௌசிகமுனியைக்கேட்டார்கள். அதற்குப் பாபந்தொடராமற் பொய்பேசா விரதம்பூண்ட புண்ணியன் சற்று நிதானித்துத் 'திருடர் இங்குவரவில்லையென்று சொன்னால் முழுப் பொய்பாகிறது, வந்தார்களென்று சொன்னால் மகாபாவமாகிறது. இதற்கென்னசெய்வோம்?' என்று யோசித்து வாக்கினற்சொல்லாமல், அந்தத்திருடர் ஒளிந்த இடத்தைக் கையினற் குறிப்பிட்டுக் காட்டினார். அந்தக்குறிப் பின்வழியே காவலர் சென்று திருடரைக் கண்டு, மடலொடித்துக்கட்டி வவ்விய பொருளையுங் கைக்கொண்டு போய் அரசனால் அவர்களைக்கண்டித்துத் தண்டித்தார்கள். அப்பாற் சிலகாலஞ்சென்று இந்தக் கௌசிகமுனிக்குக் காலமாகி நிரியாணம் நேர, அவருக்கு மீளாநரகங் கிடைத்ததென்று மேலோர் சொல்லியிருக்கின்றார்கள். இவ்விதிகாசத்தை நீ கேட்டதில்லை போலும். ஓ விஜயராஜனே! அதென் மீளாநரகங் கிட்டியதென்றால் பொய்யுஞ் சொல்லலாம். அந்தப் பொய்பானது அநேகம் பேருக்குத் துன்பத்தை விளைக்காதிருக்குமாகில், அதுசத்தியமொழியிலும் மெத்த முக்கியமாம். மெய்ச்சொல்லானது ஒருவருக்குப் பொல்லாங்கை விளைக்குமாகில், அதுமகாபாவமாகிய பொய்மையிலும் பொய்மையாம். ஆகையால் உன்னுடையசபதம் உத்தமனாகிய தருமராஜன் பொருட்டில் தப்பிப்போனாலும் போகலாம். அதனற் பாதகமில்லை. நீ இப்படி செய்யத்தகாது. மேலும் நீகூறிய சபதங்களெல்லாஞ் சத்துருக்கள் நேர்ந்தயுத்தகளத்திலல்லது, மற்றோரிடத்திலுங் கொலைகாட்டப்படா. அப்படியிருக்க, தமையனாகிய தருமராஜன்பேரிற் கோபங்கொண்டாய். அக்கோபத்தினாலே பாபம் விளைத்துவிட்டது. கைப்பிடித்த காண்டீபத்தை வலத்துக் கணைதொடுக்கிறேனென்று கடுமொழிபுகன்று மூனிந்தாய். இதனால் நீபாய்த் தேடிக்கொள்ளாமல் தனக்குத்தானே விளைவந்து மூண்டது" என்று சொன்னார்.

அதைக்கேட்ட விஜயன் மெத்தவுமெலிந்து சுவாமியைநோக்கி, 'ஓ எமதுபெருமானே! நான்என்னசெய்வேன்? இப்போப்பட்ட சபதம் முன்னமே சொல்லியிருக்கின்றேன். தேவரீர் அந்தச்சபதமுந் தப்பாமல், தமையனு நோகாமல் நிறைவேற்றவேண்டும். அண்ணு அவர்களை எதிர்த்துப் பேசியவார்த்தையால் வந்தபாவமும் நீங்க வேண்டும். இதற்கெப்படி?" என்று கிலேசப்படும்போது ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி அக்கிரீடியைப்பார்த்து, "அப்பா அர்ச்சுனு! நானொரு மர்ம மாகிய தர்மஞ்சொல்லுகிறேன். அந்தப்படி நீகடத்துவாயாகிற் சபத மும் நிறைவேறியதைப்போலாம்; பழிபாவமு நீங்கும்" என்று புகல, அஃதென்ன என்னையனேயென்று தொழுது அருச்சுனன் கேட்க, சுவாமி, "சவ்வியசாசியே! கேள்—இவ்விதமான பாவங்கட்குப் பிராயச்சித்தம் சாஸ்திரத்திற் சொலியிருப்ப தென்னவென்றால், கொலை செய்வதற்குப் பதிலாய் அவர்கள் மனங் குன்றப் பேசினாலே போது மென் றிருக்கிறது. தருமசாஸ்திரத்தில் என்ன சொல்லுகிற தென்றால், பெரியோர்களை மரியாதைக் குறைவாய் ஒன்று சொன்னால் கொலை செய்வதைப் பார்க்கிலும் மிகக் கொடியதென்று சொல்லி யிருக்கின்றது. இதுவே உயர்ந்த கேள்வி நூல் வல்லவர்களுடைய கருத்துமாகும். ஆகையால் நீ இழிவாகிய சிலப்பேச்சைப் பேசுவாயா கில், அது இந்தத் தருமராஜனுகிய உன் தமையனை உன்சபதப்படிக் குத் தலைவாங்கியதற்கு ஒப்பாயிருக்கும், இதுஉண்மை" என்றார்.

அந்தச் சொல்லுக்கிணங்கி அர்ச்சுனன் பயந்து, இளைத்து, இரு கரத்தையுஞ் சிரத்திற்குவித்து, இப்படியுரைட்டதல்லவா இறையே யென்று வணங்கி, நராதிபனுகிய தர்மராஜனெதிரிற்சென்று நோக்கி, தன்னுடையநாவானது இதுவரையிலும் யாரையும் பேசியறியாத பேச்சுகளைத்துச்சனமாகப்பேசி, தேவர்கள் முதலிய யாவருங்கைகள் கும்படியாக வார்த்தை ஏசி, தனது காரணங்கள் மூன்றுந் தடுமாறத் தளர்ச்சி கொண்டு நின்றான். அப்போது பேரறன் குமாரனுகிய பெரி யோன் யாதுசெய்வார் பாவம்: இதனந்தரங்கந் தெரியாதவராய் ஒன்றுக்தோன்றுமல், ஓர் உத்தரமுஞ்சொல்லாமல், சோர்வடைந்து, மனந்துறந்து, எனக்கு நாடு நகரம், பட்டாபிஷேகம், பெண்டுபிள்ளை இவை யொன்றும் வேண்டாமென்று கூறித் துறவடைந்து, வனத்திற் போய்த் தவஞ்செய்வே னென்று ஆடையாபரண மணிகுண்டல கிரீடாதிகளைமாற்றிக், கானகநோக்கி நடந்தார்.

அவர்துறந்துபோவதைக்கண்ட கர காரணரிருவரும் பறந்து போவதுபோற் சென்று, சிறந்த தர்மராஜனுடைய செந்தாமரைத் தாளில் வீழ்ந்து, "காங்கள் விசனத்திலாழ்ந்தோம். தேவரீர் எங்கள் பேரிற் கிருபைவையும்" என்று இரக்கமாகவேண்டி, கடுகாயகம் போன்ற சத்தியவாசனைச் சமாதானஞ்செய்து, அழைத்துவந்து ஆசனத்திலிருத்தி, அவருடைய மனதுக்க மாறும்படியாய் மிகுந்த ஏழ்மையுந் தாழ்மையுமான அர்த்தகம் வார்த்தைகள் படித்து, "ஓதருமசொரூபியாகிய ஐயா! நீர் திரிபுரஸம்ஹாரியான சிவனைப்போல இவ்விடத்தில் நின்று எங்களை விடுவிப்பீராகில், நாங்கள் அக்கினிக்கணைபோல அரைநொடியிற் சென்று, திரிபுராதியர்களாகிய தயித்தியரை அழித்தவாறுபோற் கர்ணனைக் கடுகப்போக்கி, அவனுயிரைக் கைக்கொண்டு வருவோம்" என்று பலவாய்மை விளம்பினார்கள். அப்போது பொங்குங் கிருதைக் கண்ணுடைய புண்ணியத் தருமராஜன் கோபம்விடுத்து, புயம்பூரித்து, கர காரணர் இருவரையும் நோக்கி, "நீங்கள் சென்று படைமுகம் வென்று ஜெயங்கொண்டு வாருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். முரசகேதனனுடைய அருள் கொண்ட இருவரும் அவருடைபசரணங்களில் தலை சாய்த்து வணங்கி, ஆசீர்வசனம் பெற்று, விடைகொண்டு சென்று ரதமேறி, பட்டப்பகலிற் சந்திரனுதய மானதென்னும்படியாய் விளங்கும் வெள்ளைக்குடைவிரித்துப் பிடிக்க, இருபுறங்களிலும் வெண்சாமரை குளிர்ச்சிபாய் வீச, மயில்விசிறி முதலானவைகளா லுண்டாகுங் காற்றுகள் திருமார்பிற்றாக்க, ஜெயபேரி, பூரி முதலிய சின்னங்கள் கடலோசைபோல் முழங்க, வண்ணக்கொடிகள், விருதுகள், டால்கள் வகைவகையா பெடுத்துவர, புகழ்வோர், வந்திப்போர், கட்டியர், பட்டுவான்கள், இவர்கள் துதித்துக் கீர்த்திபடிக்க, விசேஷ அரசர்கள் பக்கங்களில் எக்களிப்புடன் கைகொட்டி ஆர்ப்பரித்துவர, அழகிய யானைகள், குதிரைகள், தேர்கள், பதாதிகள், இவை முதலிபசேனைகளைக்கொண்டு, திர்ஷ்டத்தூய்மனுந் தம்பிமார்களும் நின்று சண்டை செய்யும் போர்முகத்துக்குவந்து, அப்போதுதடந்துவருகிற போர் வீரத் திறங்களைப் பார்த்து, புணணியனனை புண்டரீகாக்ஷன் கண்ணிய மான திறத்தை அர்ச்சுனனுக்குச் சொல்லுகிறார்.—

கரனே! இன்றைய யுத்தத்தில் நம்மெல்லோரையும் வென்று ஜெயம்பெறவேண்டுமென்று எண்ணிவந்திருக்கின்றான் கர்ணனவன். அவன் இன்றைக்கு வென்று வெற்றிகொடுக்கவும் அதைப்

பெற்று அவனிமுற்றும் தன்குடை நிழற்படுத்தி ஆளவேண்டு மென்னும் ஆசையினால், ஆபத்தமாய்க்காத்திருக்கின்றான் விவேக மில்லாத துரியோதனன். இது அவர்கள் எண்ணி வந்திருக்கிற கருத்து. இன்றையப்போது வெற்றியை நாம் கொள்ளுவோமாகில், தப்பாது கர்ணன் போய்விடுகிறான். அப்பால் இந்தத் துரியோதன னுக்கு உற்றதுணை ஒருவருமில்லை. இப்பால் இருப்பவரெல்லாரும் பதினாழு நாளினுங் கழிபட்ட கொண்டி, மூடம், சப்பாணி, கூன், குருடு, ஆகிய இவர்களே. ஆகையால், ஓ சத்துருக்கள் புகழும்படி யாகிய தோள்வலிமை பெற்ற தோன்றலே! இதுகாறும் நமது சிந்தை யெல்லாம் நையும்படியாகச் செய்துவந்த பலவித பாசங்களுஞ் சில விதமோசங்களுந் துரியோதனனால் விளைந்தனவென்று தேறுதே. இக்கப் பாவமாகிய கைதவங்களெல்லாங் விளைவித்தவன் கர்ண னென்று நீ தாராளமாய் நினை. இவையன்றியும், அரசர்களுக்கு முன் பாகப் பெருஞ் சூதினில் உங்களைவென்று திரௌபதியைச் சபை யேற்றிப் பிழைசெய்த காளில், இந்தக் கர்ணன் அந்த வேளையிற் சொன்னசொல் மிகவுங் கொடுமை யுடையதென்று உன் மனதிற் றோன்றவில்லையோ? அர்ச்சுன! அதை மறந்துபோனையோ? மறக்காதே. வேண்டுமானால் நான் உனக்குஞாபக மூட்டுகின்றேன் கேள். நமது திரௌபதியானவள் பல அரசர்கள் கூடியிருந்த மகாசபையிற் கோவென்று அழுது கின்றபோது, இக்கர்ணன் அந்த மாது சிரோ மணியைப்பார்த்து, "உனக்குரிய பாண்டவர்கள் துரியோதனமகா ராஜனுக்கு அடிமைவேலை செய்யும்படிக்குச் சொக்கட்டானில் தோற் றுப்போனார்கள்; இனிமேல் உனக்குக் கிடைக்கமாட்டார்கள். நீ அவர் கள்மேரில் ஆசைவைக்காதே. ஆகையினால் இந்தச் சபைநிறைந்த பேர்களில் ஆராகிலும் உன் கண்ணுக்கிசைந்த ஒரு புருஷனைப் பார்த் துக் கைகோர்த்துக்கொண்டு போடி, வாடி, அடி குடிகேடி, என்று புகன்றானே. ஓ புயவலிவாய்ந்த புருஷவீரனே! அப்போர்ப்பட்ட மகா பாவியாகிய கர்ணனைத் துரியோதனனுக் கெதிரிற் புரட்டிப் புரட்டி, அடித்து, இந்தத் துரியோதனன் கண்கலங்கி அழுது எஞ்சி இளைக் கும்படியாய் முன்னதாகச் சென்று கொல்லுவது தகுதி. மாறு பாண்ணுகிய நீ, தானுகானன அக்கர்ணனை இன்று வாட்டி வதைத்தொ ழிக்கவேண்டுவது உனக்குக் கடமையாம்" என்று சொல்லியருளினர்.

இப்படி அர்ச்சுனனுக்கு அரிபரக்காமன் கோபமுண்டாகும்படி கூர்வித்துச் சொல்லவும், அத்தனஞ்செயனுக்கு எரியுங் கொள்ளியை

ஏறத் தள்ளியதைப்போல் இருகண்களும் எரிமூண்டு தீப்போற் சிவந்து,மனமழன்று, இப்போதே பகையொழித்து வெற்றிபெறுகிறே னென்று முனைந்து, படைமுகத்திற்குட் புகுந்து தடைபடாமற் சொல்லுவதானான். அப்போது வாயு குமாரனுகிய பீமசேனன் கண்டு தருமராஜனுடைய கேஷமத்தை விசாரித்தான். அதற் கர்ச்சுனன் பீமனுக்குச் சமிபத்தில் வந்து, அவன் சந்தோஷிக்கும் படியாய் மூத்தானுடைய சௌக்கியங்களைச் சொல்லி, கர்ணனைக் கொல்லாமல் வந்ததைக் குறித்துத் தன்னை நிந்தித்த தன்மைகளை யுஞ் சொன்னன். அதைக்கேட்டவுடனே பீமனுஞ்சினந்து, மறுபடி தேறி, அவரைத்தியானித்து அமர்க்களம் புகுந்தான். பின்பு அவ் விடத்திலுள்ள மன்னர் முதலாகிய பேர்கள் முனைந்து முன்னே சென்றனர். பின்னே அர்ச்சுனன், அவன் பின்னுக நகுல சகாதேவர், மேற்புறஞ் சாத்தகி, வடபுறம் உத்தமோசன், இடபுறம் உதார்க னும் சென்றனர். இப்படியாக வருமிவர்களோடு துரோண வியூகியாகிய திஷ்டத்தூய்மன் இடமும் வலமும் நெருங்கி இடைவிடாமல் வர, அசுரேசரை ஜயிப்பதற்குச் சிவபெருமானெழுந்த திரிபுர ஸம்ஹார காலம்போல் வந்த அர்ச்சுனன் கர்ணனுக் கெதிரிற் போய்க் கலந்து திடங்கொண்டிருந்தான். இவனுக்கு முந்திச் சென்ற பீமசேனன் கதாயுதங்கொண்டு, மதாசலமுதலிய பதாதிகளைக் கலக்கும்போது, கர்ணன் பெரிய விற்கொண்டு உயர்ந்த கணைகளை அளவறவிடுக்க, பீமன் அக்கர்ணன் விடுக்குங் கணைகளையும், அவன் சேனைகளில் இருக்கும் ரதகஜ நரர் முதலிய யாவற்றையும், வடவா முகாக்கி னிபோல் எரித்துத் தின்றது, கொற்றவர்களுடைய மொய்த்த மெய்புதைய உருத்து, சாரிகைகொண்டு திரிந்து, சரபஜாலமெனப் படர்ந்து, தனக்கெதிரொருவருமில்லாமல் உலகம் அதிர்ந்து போகும் படி உக்ராவேசங் கொண்டுலாவினான். அப்படியுலாவும் வாயுகுமா ரனை நாணிமாட்டிய விற்பிடித்த நராதிபரெல்லா மதித்து, மனம் பொறாமல் நடுங்கி,அங்கதேசராஜனுடைய படைக்கும் நமது பிராண னுக்கும் புதிதாய் ஏற்பட்டு வந்த அந்தகன் இவனே! இவனே!" என்று குலைகுலைந்தார்கள்.

பீமனுக்கும் துச்சாதனனுக்கும் யுத்தம். இதில் துரியோதனன் சகோதரரிற் பதின்மர் வதை

இப்போர்ப்பட்ட சமயத்தில் துச்சாதனனும் அவனுடைய தம்பிமார்களும் உச்சிதமாகிய வில்லேவலைத்து காணிதொடுத்து, சோணமேகம் பொழிவதைப் போன்றுவாளிசொரிந்து, வானுலகம் போவதற்குவழிதேடிவருபவர்களைப்போல் வந்து, பூர்வத்தில் ராஜசபையில் மொழிந்த சபதங்களை முடிக்கும்படியாய்க் கங்கணங் கட்டி ஜயப்படப் பயப்படாமல் அமர்க்களத்தில் ஆர்ப்பரித்துத் தேர்மேற் கொண்டிருக்கும் பீமசேனனுக்கு நேராக நின்றடித்து, இன்றைக்கே பாண்டவர் ஐவரையும் படைகளுடனே முடிக்கின்றோமென்று பலவாறாக உருத்து நினைத்துக்கோபித்து, மனோவேகத்திலும் மிஞ்சியோடுகின்ற துரிதப்புரவி பூட்டிய தேராளிகள் புடைசூழவும், வீரபேரி, யுத்தபேரி, ரணபேரி, நரபேரி, முதலாகிய வாத்தியங்கள் அண்டங்களதிரமுழங்கவும் வந்தார்கள். நேர்த்தியாகச் செங்கோற்றுங்கிய துரியோதனன் தம்பிகளாகிய துச்சாசனன் முதலாகிய தம்பிமார்களை வாயுபுத்திரனாகிய பீமன்கண்டு, மழைமேகம்போல் இடித்து இரைந்து அதிர்ந்து, அண்டம் பிளிர்ந்து எண்டிசையுமொழிந்து போகும்படியாய்ச் சில வசனங்களைப் பேசுகிறான்.

"துச்சாதனனே யுனைப்போலுஞ் சூரருளரோ சூரரெலா
மெச்சாகின்றார் வேத்தவையின் மேலுணீசெய் விறலாண்மை
யச்சாரிரதப் போர்க்குமுன்னக் கார்வேறெதிருண் டம்மவிரைத்
திச்சா போக மாக விருந் தின்றே மறலிக் கிடுநாளே.
இன்றே வுன்றன் சென்னிதுணித் திழிசெம் புனலிற் குளித்திடுநோ
ளின்றே வழலி னுற்பவித்தா ளிருளாரளக முடித்திடுநா
ளின்றே தாகங் கெடநாவுக் கிசைந்ததண்ணீர் பருகிடுநா
ளின்றேவுரைத்த வஞ்சினங்க ளெல்லாம் பயன்பெற் றிடுநாளே.
வென்றே யவனி முழுதாளும் வீரோ தயனின் றம்முனையுங்
கொன்றேநாளை யமரெதிர் கொள்ளக் கடிதின் வரவிடுவ
னின்றே நீபோ யிடப்பிடிப்பா யெண்ணுவெண்ண மெண்ணிமன்றி
லன்றே கலகம் விளைத்தென்று மழியா வரசை யழித்தோனே"

ஓ துச்சாதனனே! உன்னைப்போன்ற சூரருமுண்டோ? உலகிலுள்ள சூரர்களெல்லாம் உன்னை மெத்தவும் மெச்சுகின்றார்களே? பூர்வம்

ராஜசபையி னிடத்தில் நீசெய்த ஆண்மை யுக்திக்கும், நீ நடத்திய வெற்றி மேன்மைக்கும், நீ பேசிய கெருவப்பேச்சுக்கும், நீ ஏசிய அற்பப்பேச்சுக்கும், ரதகஜங்களுடன் சேர்ந்துவந்து இப்போது நீ கொடுக்கப்போகிற கொடும்போருக்கும் எதிரி என்னைவிட வேறே யாரிருக்கிறார்கள்? அம்மம்மா! உன்னை இச்சாபமோசனமாக எம னுக்கு விருந்திடப் போகிறநாள் இன்றுதானே? அப்பா! உன் தலையை அறுத்து, அதனிடத்திலிருந்து பெருகி வராகின்ற இரத்தவெள்ளத் தில்வீழ்ந்து, என்னுள்ளச் சூடற அதில் மூழ்கிக் குளித்து, என்னு பாசக் தீரப்போகிற காலம் இன்றுதானே? துருபதேயன் செய்த யாகாக்கினியிற் பிறந்த திரௌபதாதேவியினுடைய இருள்போன்ற கூர்தல் முடிக்கப்போகிற சுபதினமாகிய நல்லகாலம் இன்றுதானே? உன்னுதிரத்தைவாரி என்னுவுக்கு நிசியாகிய தண்ணீர்போலக்குடித் தத் தாகந்தணியுங்காலம் இதுதானே? ராஜசபையில் காங்களை வருஞ் சொல்லிய சபதங்களெல்லாம் பிரயோசனப்பட்டுப் பலிக்குங்காலம் இன்றைக்கு கேரிட்டதோ? ஆ! ஆ! இதுமெத்த நல்ல காளாகும். ஓ வீரோதயமுள்ள வேந்தனே! எங்களை ஜயித்து ஏகச் சக்ராதிபதி யாய் உலகத்தையாளவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்கிற உன் தமையனுகியதுரியோதனராஜனை காளை யுத்தத்தில் காசப்படுத்தி, அரம்பாஸ்திரீகள் முதலாகிய அமரரும் எதிர்கொண்டு அழைத்து உபசரிக்கும்படியாய் அனுப்பிவைக்கிறேன். இன்றையப் போரில் உன்னைக்கொன்று முன்னடி அனுப்புகிறேன். நீ முந்திமுன்னதாக விரைந்துபோய், செவ்வையாகப்பிழைத்த உன் அண்ணனுக்கும், அவனுடன்கூடக் கூட்டமாக வரப்போகின்ற மன்னருக்கும், மற்ற தம்பிமார்களுக்குஞ் சீராகிய இடந்தேடிவைக்கக் கடவாய்! ஓசீமானே! ஓ சஞ்சிதபாவத்தாற் எண்ணுத எண்ணையெல்லாம் எண்ணிக் கிஞ் சித்துபோகத்திற் சந்தோஷம் அடைந்து மகிழ்ந்து அப்போதே கலக மும் விளைத்து என்றைக்கும் அழிவில்லாதசக்திகுல அரசாட்சியை அநியாயமாய் அழித்தபாபி! ஓ குலமுறை உணராத கோபி! ஓகுருத் துரோகி!" என்று இப்படிப்பலவாருகப் பேசினன். இப்படிபேசிய பீமசேனனைப் பார்த்து மறுவார்த்தை ஒன்றும் பேசாமற் சுரமடங்கி, ஊமைபோல் நின்ருன் துரியோதனன். அந்தச்சமயத்தி லவனைப் பீமன் ஏசிய சொல்லெல்லாங் கேட்டிருந்த விசித்திரவீரன், விசித்திரபாகு, விசித்திரன், விநோதன், அகண்டதரன், விஷயன், ஆகண்டிதன், சுசிரோ தன், சுகிர்தன், போரங்கன், என்னுமிந்தப் பத்துப்பேர் தம்பிமார்களும் மனந்தாளாமற்புறப்பட்டு, பயம்விளைக்கும் வில்லுங் கணையுந் தேரினை

யு முடையவர்களாய் ரணமுகத்திலும் பரவி, தேர்ச்சக்கரம் போன வழியெல்லாஞ் செந்தீப் பொறியும் பெருங்கரும்புகையுங் குவிந்தோங் குபடி ஓடிவந்து, செழுங்கணைகளைத்தொடுத்து எதிர்வந்தடுத்தார் கள். அவரவர்களுக்கு இச்சையானபடி கணைகளனேகத்தையும், சுத்த வீரனுகிய பீமசேனன் தன்கணைபாற் றடித்து, மறுபடியும் ஆளொன் றுக்கு ஒவ்வொரு அஸ்திரத்தை எடுத்து அபிமந்திரித்து வில்லிற் பூட்டி விரைவில் விடித்தான். அத்தப் பீமன் தொட்டகணைகள் பத்தும் மொத்தத் துற்றுப்பற்றி, தத்திக் கத்திச் சுற்றி, கொத்துச் சித்திர மொத்து, திக்கும் பக்கென் றுக்கத்தாக்கி, ஒருகணத்திற் றலையைப் போக்கி அவர்கள் பிராணனையும் நீக்கிபொழிந்தன. ஐயோ! தம்பிமார் பத்துப்பேருந் தங்கள் தங்களிரதத்திற்றனேமாய்ந்து சாய்ந்தார்கள். இவ்விதமாகச் செத்தப் பத்துப்பேரையும் ஆகாயத்திலிருக்கும் அழகார்ந்த அரம்பாஸ்திரீகளும், மற்றத்தேவர்களும், ஆசையுடன் வேகமாகவந்து, தேவ துந்துபியோடு மூந்திப்புகுந்து, புட்பசந்தனுதி களைக் கையிற்றந்து, விமானத்தேற்றி வீரசொர்க்கங் கொண்டுபோனர் கள். ஓரகாலத்தில் உயிருக்குயிராகிய தம்பிமார் பத்துப்பேர் பீமன் கணைபாற் சிரந்துணிந் திறந்ததைக்கண்ட துச்சாதனனுக்குண்டாகிய கோபவழலானது பாரெல்லாம் நிறைந்து, ஊரெல்லாமுறைந்து, பரிக்கமாட்டாமற் படபடத்து, உடல்பதை பதைத்து, பயிரின் பருவ காலம் அறிந்துபொழிந்துவரும் மேகங்களைப்போல், பீமசேனனுடைய மயிர்க்கால்தோறும் உருவும்படியாய் வச்சிரக்கணைகளைப்பொழிந்து, முகமாரிமல் மலைந்தான். அப்போது துச்சாதனன்விட்ட சரங்க ளெல்லாங் கல்லின்மேல்வீழ்ந்தமழைத்துளிசிதறுமாப்போற் சித றும்படியாய் பீமசேனன் பலகடுங்கணை செலுத்திக்காய்ந்து, வாய்ந்த நூல் ஆய்ந்த வலிமைகொண்டு, தோள்வரைக்கும் ராணியிழுத்து, பின்னு மேன்மேலாக வேண்டியசரங்களை உரம்பெற விடித்துக் கொடும்போர்வினைத்தான்.

கேட்டீரோ ஜனமேஜயமகாராஜனே! இத்தத்துச்சாதனன் எப்போது நமதகையில் அகப்படுவானென்று காத்துக்கொண்டிருந்த பீமனுக்கெதிரில் வலுவில்வந்து அகப்பட்டபோது, சும்மாவிடுவானு? பெரும் பிரக்பாதிபடைத்த பீமசேனன் இத்தப்பிரகாரம் போர்புரி யுங் காலத்தில், இவ்வீரன் தொடுத்த பாணங்களையெல்லாம் ஒன் றுழியாமல் முறித்து, ஓயாமல் கணைகளைவிடித்து தன் தேகத்திற் படுவொட்டாமல் தடுத்து, ஏழு அக்கினியாஸ்திரம் எடுத்துமந்தி

ரித்து எய்தான் துச்சாதனனனவன். அந்த ஏழுகணைகளும் எரிந்து, ஈரேழுலகத்தையும் ஏங்கச்செய்துவந்து விழுந்து பீமனுடைய தேரிற்பூட்டியகுதிரை நான்கையும், சிங்கக் கொடியையும், மணியுற்ற தேரையும், அணிபெற்றவில்லையும், துண்டந் துண்டமாகத்துணித் துவீழ்த்தின. தேர் அழிந்தவுடனே பீமசேனன் வேறொருசேமத் தேரிற்பாய்ந்து, க்ஷீராப்தியில் மத்தாகச் சுழன்ற மந்தரகிரிபோன்ற வேறொரு வில்லைவளைத்துத் துச்சாதனன்தொடுத்த பாணங்களுக் கொப்பாகிய பத்துப்பாணங்களைப் பூட்டி, ஆராதித்துத்தொழுது, அதட்டி ஆக்கிரமித்து, அவனுடைய தேரழியவும், கொடி துணிய வும், வலவன் மாயவும், குதிரை நான்குங்குறைந்துருளவு மெய்து, அவனது இருபுயத்திலுந் தூளெக்கும்படி பின்னுஞ்சில இடிபாணங் களை விடுத்தான். அதுகாலையில் திரௌபதாதேவியின்கறுத்த அளகத்தைத் தீண்டி இழுத்துவந்து வஸ்திரபங்கஞ்செய்த மகா பாதகனுகிய அக்காலையானவன் தேர், சாரதி, முதலியவைகள் சிந்திவுடனே பூமியிற்பாய்ந்து, தோற்படையாத கதைப்படை கொண்டு, காற்றுடிபோற் சுழன்று மேலெழுந்து, பீமனுடைய தேர் மேற்றுவி மோதினன். அந்தக் கதையடியால் பீமனுடைய ரதமொ டிந்து, சாரதிமடிந்து, குதிரைகளும் பொடிந்து, வேலைமுடிந்து போகவே, ஆ! சபாஷ்! என்று பீமன்பூமியிலிழிந்து, சற்றுநேரம் நின்று நிதானித்து, "ஆ தம்பி! இனிமேலும் உன்னுடைய சிலம் பஞ் சாயுமா? ஒருக்காலும் நினைக்காதே" என்று சிலமொழிகள் மொழிந்து, கைபிடித்தவில்லை நாணிதளர்த்தி வைத்துவிட்டு, தேருக்குள்ளிருந்த போருக்குச் சிறந்த வீரக்கதைகொண்டு; காதுதெறித்து வாலைமுறுக் கித் தண்டடித் தெதிறுந் தனிப்புலிபோ லெழும்பி, துச்சாசன னுக்கு எதிரிற்குதித்து மண்டலமிட்டான்.பின்பு,இருவரும் எதிர்த்து, இடக்கால் முன்னும் வலக்கால்பின்னும் வலக்கால் முன்னும் இடக் கால் பின்னுமாக வைத்து, இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் முனைகாட்டி முனைந்து, இருந்து, பதுங்கி, ஒதுங்கி, ஒளிந்து கரமாட்டி, தலைமீட்டி, கதைபுடன்கதைபூட்டி, மிகுந்த காட்டியான புஜங்களைத்தட்டி, மீசைமுறுக்கி, புருவநெரித்து,புயல்போலிரைத்து, ஒருவர்தோளில் ஒருவர் அடித்து, ஒருவரை யொருவர் இறுகப் பிடித்து, அண்டம்அதிரச் சிரித்துக்கனைத்து, பிண்டங்கலங்கப் பிரித் துப்பகைத்து, கதையைக் கெட்டியாய்ப் பிடித்துமடித்து, அக்கினிப் பொறியெழ அடுத்துத்துடித்து, மண்டலாகிர்திகொண்டு வளைவுவட் டமாகச்சென்று, மறுபடியுங் கிட்டிநின்று, ஒருவரடியை ஒருவர்

மிதித்து ஒருவரையொருவர் உதைத்து, உதிரம்வடியச் சிதைத்து காயத்தைக் காயத்தால்மறைத்து, தூரத்தொலையில் ஓடிப்போய் நின்று, இமைகொட்டுவதன்முன் எப்போதும்போல நெருங்கிக்கிட்டி, தலையினல்முட்டி, கையினற்குட்டி, கோபம்வரப்புடைத்து,கொதித்துக்கிடகிடத்து, விதவிதமான விசித்திரங்களாகிய யுத்தம்புரிந்து, ஒருவரையொருவர் பலவிதமாக வருத்தப்படுத்தி, வெவ்விய விஷம்போல் வெகுளிகொண்டெதிர்ந்து கண்பொறி கதுவக் கரும்புகைபுகைத்து, பலிச்சட்டி எடுத்து இரையும் பக்குவர்போல் எக்களிப்புடன் கொக்கரித்து, விசைபுடன் ஓடிக்குதித்து, மேற்பாய்ந்து கூடிமதித்து, ஓப்புவமையில்லாமற் கிறுகிறெனச் சுழன்று, கைமாறிக் கைமாறி விறுவிறெனக்கதையைச் சுழற்றி மேலெறிந்து, அதனீமீட்டும் ஒரு கையாற்பிடித்து முகமலர்ந்து, அகமகிழ்ந்து, சற்றுநேரம் இளைப்பாறி நின்று, போர்க்களவீரர் அறிந்து பின்னு முன்னு நின்றுகைக்க முதிர்ந்த சபதங்களைப் பலவாறுக உரைத்து, வேடிக்கைபார்க்கும் தேவர்களும் வீராகிய பூபர்களுங் கண்ணுரக்கண்டு, உயிர்விண்டு, சித்தமடங்கித், தீமொடுங்கித், திபங்கிமயங்கி, வாடும்படியாய் மலையுடன் மலைமலைந்து மல்யுத்தங் கற்பதுபோல் இடமாறிப் பகைத்து, கொடுங்கதைபெடுத்துப் புபங்களிலுன்றமொத்தி, கோடைகாலத்திடிபோற் குமுவென்று ஓசைபுண்டாகும்படி மோதி, "அடாதுச்சாதனு! அடாபீமா! இனிபென்னசொல்லுகிறுய்? சேதியென்று ஒருவரையொருவர் உரக்கக்கூவி உடன்று, மாதலம்பிளந்து பாதலங்கிழிந்து, அஷ்டநாகமும் வயிறழன்று நெஞ்சினில் விக்கிநஞ்சினைக்கக்கி, எஞ்சியிளைக் குப்புடியாகவும், சக்ரவாளகிரி பக், பக், என்று நெக்குவிடவும், திசைபெட்டுஞ் செவிபெட்டுக்கெடவும், திக்குக் கஜங்கள் தியக்கப்படவும், அண்டமுகடு விண்டு நவகண்டமுருங்கவும், சப்தமேகங்களும் பறந்தோடிச்சென்றுபரிய குகைபுகுந்தொளியவுமாகப் பகைபாராட்டி இருவருங்கொதித்து, செம்புருக்கின செபல்போலும், செம்முறுக்கை மலர்போலும் செம்பவளகிறம்போலும், செம்பாத்தம் பூப்போலும் செங்காந்தள்இணர்போலும் செம்பாறைக் கற்போலும் தீப்பறக்கும் படியாய் இருவர்கண்களுஞ்சிவந்து, இப்பி முத்தினைப்போல் நெற்றியிற் பொடிவியர்வரும்ப இறுமாந்து ஆகாயகடுவிலிடிக்கும் இடியைப் போலதிர்த்து, அண்டகோளகையதிர எதிர்த்து, பொரிபொரிந்து, முரிமுரிந்து, கரிகரிந்து, விரிவிருந்து, புருவச்சிலைவளைய, அழலிய புயமலை உளைய, நெடுகெடித்து, உதடுமடித்து இமயம், மந்தரம், என்னும் இருபருமலைபோன்ற இருவருந் தங்கள் புயங்களைக்கொண்

டொருவரையொருவர் இடித்து,மெலியக்கொட்டிய பஞ்சுபோல்நெஞ்சு போயும் அஞ்சாமல், எஞ்சாமல், இளைக்காமல், களைக்காமல், கதை கொண்டடித்து, கதாயுத்த சாஸ்திரப்படிக்கு எதிர்மலைந்து, தலமதிர்ந்து, போகும்படி வலமும்வந்து, மேலுமேலும் நெஞ்சுரமும் வஞ்சினமு முதிரத்தேகத்திலும், கழுத்திலும், மார்பிலும், தோளிலும் தாளிலும்: அங்கங்களெங்கினும் பங்கமாகும்படியாய், மாமிசஞ்சிதைந்து உதிரம்பெருகி ஆறுகளோடும்படியாய் அதிரப் போராடியகாலையில் இருவருடைய கதைகள் பிளந்து, முறிந்து, தறிந்து, பொடிந்து, தூசியாய்ப் போகிறவரைக்குஞ் சாடி, இருவர் கரங்களுங் கன்றிப் போய்க் கருகிச்சிவந்து, இரத்தப்பசைபால்நெட்டிடங்கின்று, மூண்டெரியும் முதிர்ந்தகோபத்தால்முறிந்த கதையைத் தரையிலெறிந்து, பிராணமுள்ள பரியந்தமும் விடுவதில்லையென்று காரங்கொண்டு, திரண்டபுயத்தில் முரண்டுபற்ற வெறுங்கை அறைந்து, விரல்களை முடக்கிக் குத்துச்சண்டைபோகிய முஷ்டியுத்தஞ் செய்வதானார்கள்.

பீமசேனன் துச்சாதனனைப்பிடித்து அவனை விடுவித்துக்கொள்ளத் துரியோதனனியரை யழைத்தல்

இவ்வாறு பீமசேனன், துச்சாதனன், இருவரும் யொருவரை யொருவர் கங்குவைத்து காலடிபிசகாமல்காட்டி, விரல்கள் ஐந்தையும் முடக்கி நெருக்கிக் குவித்துக் குத்தினார்கள், மேலும் வெண்மையாய்ப் பிரகாசிக்கு நகங்கள் இருவர்தேகத்திலும் புதையும்படியாக அங்கையுடன் அங்கை அறைந்தபோது, மலைச்சிகரத்திலே நிறைந்த கறுத்தமேகம் நெருங்கிவிலங்கவும் பொறுத்த பூமிபிளந்து கலங்கவும் பேரிடி இடிக்குந்தன்மையாயிடித்துக் காலுடன்கால், கணுவுடன்கணு, முழந்தாளுடன் முழந்தாள், தொடையுடன் தொடை, இடையுடன் இடை, கரத்துடன் கரம், சிரத்துடன் சிரம், மார்புடன் மார்பு, தோளுடன்தோள், இவ்விதமாக முட்டி மாட்டி, மட மட வென்று இழுத்துக் காட்டி, குஸ்தி முதலிய பிடிகளும்பயிட்டு, டிங்கடித்து, பலாஷ்டிகஞ் செய்து டங்கொடித்து, எலும்புநரம்புமுதலிய யாவுங் கலகலத்துப் போகும்படியாய் மல்யுத்தஞ் செய்துவந்தார்கள். அந்தவேளையில் தருமராஜனுக்குச் சகோதரனுகிய பீமசேனன் அடித்த அடிகளினாலும், உதைத்த உதைகளினாலும், பூர்வவிரோதத்தினாலும், துரியோதனனுடைய

தம்பி துச்சாதனன் அழன்று, அலன்று, அளர்த்து, பயந்து, மயங்கி, அவதிகொண்டு நின்றான். அப்போதவனைக் கொன்று விடும்படியாயிருந்த பீமசேனன் அத்துச்சாதனனைக் கைப்பிடியாகப்பிடித்து, அவனுடைய இரண்டுகாலையும் திரண்ட மலைபோன்ற இரண்டுகையுடன் சேர்த்துப்பிடித்து, பன்றிக்குட்டிபோல் வாரித் தூக்கிக்கொண்டு, சூரியகுமாரனுகிய கர்ணனையும், பாம்புக்கொடியோங்கிய துரியோதனனையும், அவனுக்குரியதோழரையும், அவனுடைய மற்றத் தம்பிமார்களையும், விற்குருவின் பிள்ளையென்னும் அசுவத்தாமனையும், கரவிடமனத்தராகிய பட்டவர்த்தனர்களையும், கதிர்வாளேந்திய மகாவர்த்தனர்களையும், போர்மிகுந்த யுத்தகளமும் வாய்பேசாமல் அடங்கிப் போகும்படியாய்க் கூவிச்சூதாடும் வலிமை பெற்ற சகுனியையும், இன்னுமுள்ள வெற்றிவீரர்களையும், கொற்றப் புயம்படைத்த கொற்றவர்களையும், உற்றுற்று உறுக்கிப்பார்த்து, அவர்களுக்கு அருகாமையிற் சென்று, 'இதோபார்த்தீர்களா! இளவரசாகிய துச்சாசனனை" என்று தூக்கி, கையால் ஓர் அறைதாக்கி, அவர்களுக்கெதிரில் வீட்டி, குண்டுக்கட்டாகக் கட்டிமாட்டி, அவர்களுடைய காதுகேட்கும்படியாகக் கிட்டநெருங்கி, ஆகாயங்குறுகியதைப்போற் சுருங்கி, ஆ! ஆ! ஹா! வென்று ஆங்காரங்கொண்டு இரைந்து, ஓ! ஓ! ஹோ! வென்று ஓங்கர்ரமிட்டு விரைந்து, யாவரும் வெருண்டு, திரண்டு, புரண்டு, அரண்டு போகும்படியாய் வெற்றி மூற்றிய வீரப்பிரதாபவார்த்தைகளைப் பேசுகிறான்.—

"ஓ வீராதி வீரர்களே! ஓ சூராதி சூரர்களே! காலனென்று சொல்கிறேன் கன்றாய்க்கேளுங்கள். இந்தத் துச்சாதனனை இப்போது கொல்லுகிறேன். எமலோகத்துக்கு அனுப்பிவைக்கப் போகின்றேன். இவனுக்கு நேரிட்டிருக்கிற இடையூறுகளை நீக்கி, என் அடலையும் போக்கி, கடலையாகப்போர்செய்து உடலை மதித்துக்காக்கும் வல்லமை கற்றவர் உங்களில் யாரேனும் உண்டானால் வெளிப்படுங்கள். இது நல்ல சமயம். இதைவிட வேறு புகழில்லை. இக்கக்காலத் தப்பினால் துச்சாதனனைக் காணமாட்டீர்கள். விறுதாக்காலத்தில் வீண் பேச்சுப் பேசுவதினால் இலாபமென்ன? சமயம் வந்தபோதல்லவோ சமர்த்தைக் காண்பிக்கவேண்டும்? நான் உங்களைப்போல் வஞ்சகமுள்ளவனய் நெஞ்சிலொன்று வாக்கிலொன்றாகப் பேசவில்லை. இரகசியமாகக் குசுகுசு வென்றுபேசி மொசஞ் செய்யவாவில்லை. எல்லோருக்குங் கண்ணுக்கெதிரில் தெரியும்படியாய்க் காட்டி, உங்க

ளுங்களுடைய செவிகளும் புதைபும்படியாய் உரக்கக்கூவிச் சொன் னேன் ஒருவேளை நான்பார்க்கவில்லே: நீபார்க்கவில்லே: பார்த்தாலல்ல வோ பீமனைப்பாழாக்கித் துச்சாதனனை மீட்டுக்கொள்ளுவோம். என்று ஒப்பற்ற துப்பில்லாப்பேச்சுப் பேசப்போகின்றீர்கள். இதோ கால்வருக்குந்தெரிய நண்ருய்க் காட்டுகிறேன்." என்று அதிகங் கோபவார்த்தைகள் கூறி, எட்டுத்திக்கிலுந்தூறி, அவரவர்களுக்கு எதிரிற் கொண்டுபோய்ப் போட்டு, காலாலுங்கையாலும் உதைத்து அறைந்து, "வாருங்கள்: வாருங்கள்: பாருங்கள்: பாருங்கள்" என்று அதிகம் யானைகளுக்கெதிரில் ஒருசிங்கங்கற்சித்துவருந் தன்மைபோற் களமுழுதுஞ்சுழன்று சுற்றிவந்தான்.

அந்தவேளையில் அங்கதேசாதிபனும், அதிரதத் தலைவர்களாகிய விக்கிரம பராக்கிரமமுடைய வீராதிவீரரும், துரியோதனனுங் கண்டு நெஞ்சழிந்து, தாராளமாய்க் கண்களிற் சலம்பெருக நின்று, வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, பீமசேனனுக்கு எதிர்வந்து போ ராடி இசைபெறமாட்டாமல் அசைவற நின்றுவிட்டார்கள். அப் போது பீமசேனன் அவர்களேநோக்கி "ஏனையா சுத்தவீரர்களே! என்னசொல்லுகின்றீர்கள்? இந்தப் பதிதனை மீட்டுவிட உங்களுக்குப் பலமில்லையா? இவன் பிழைக்கவேண்டுமென்னு கலம்மில்லையா? பலிரு ஷமாகிய மானமில்லையா? பழியாகிய ஈனமில்லையா? உள்ளத்திற்பாச மில்லையா? உடலில்ரோஷமில்லையா? இந்தப்பலிஷுக்கு வாயொரு கேடா? ஓ பந்தபாசமில்லாத பேய்களே! ஆளில்லாத இடத்திற் பிதற்றுகிற அண்ணு! அடா கர்ணு! துச்சாதனன் அநியாபமாய்ப் போகின்ருனே!" என்று சொல்லிக் கையிற் கலங்கியிருக்குந் துச்சாச னனைப்பார்த்து, "அடாதுரோகி! அடாபாவி! உனக்குத் துணைவரு வார் ஒருவரு மில்லையே" என்று பல்லைக்கடித்தான். உடனே காலைச் சேர்த்துக் கொல்லப்பிடித்தான்.

பீமசேனன் துரியோதனுதியருக் கெதிரில் துச்சாதனனைச் சித்திரவதைசெய்து, தன்சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளுதல்

கேளும் ஜனமேஜயமகாராஜனே! இப்படி துரியோதன மகாராஜனுடைய சிரேஷ்டத் தம்பியாகிய துச்சாதனனைத் தொல்லப்

பிடித்த பீமசேனன் ஒரேவிசையிற் கொல்லாமல், அவனைத் தனது இடக்கையில் தாங்கி, வலக்கையை ஓங்கி, குபீலென்று அக்கினி எழும்படிக்கு அவன் தலைமேல் ஓருகுத்துவைத்தான். அந்தச் செங்குத்தானது ஈயப்பாத்திரத்தில் இரும்புக்குண்டு விழுந்தாற்போற் சப்பென்று இருத்தியது. அக்கக்குத்திலுல் இரண்டு தவடைகளும் கெரிந்து நெருங்கி, ஆமைக்தலைபோல் உள்ளடங்கின. இரண்டு காதும் உள்ளேபுகுந்து என்னசேதியென்றுகேட்டன. வீரியமுனை நிதைந்து மார்புடைந்தது. பல்லெல்லாங் கல்லெனத் தெறித்தன. சல்லென வியர்த்தது! சில்லெனக் குளிர்ந்தது. வாய்வறண்டது. வார்த்தையுந் தளர்ந்தது. அழகுங் குலைந்தது. ஆண்மையுந் தொலைந்தது. செவ்வரக்கினுந் தீக்கனலினுஞ்சிறந்து சிவந்து பரந்து நிறைந்த பருத்தகண்களானது வாழைப்பூவினேப்போற் பிதுங்கின. இருகாத்திலும் அணைத்துப்பிசைந்து கசக்கிப்போது கவத்துவாரங்களுந் திறந்து, முகத்துவாரம்போல் மலமூத்திராதிகளும், உதிரங்களும் நிணங்களும், கொழுப்புகளும், சீதங்களும், கபமுதலிய வளும்புகளும் கசிந்தோடின. இவையன்றியும், அந்தத் துச்சாதனனேப் பூமியின் மேற் போட்டு மேலேறிக்கொண்டு இரண்டு காலினுலுந் துவைத்து மிதித்தான்; கால்விரல்கள் கைவிரல்களைப் பிடித்து நெரித்தான். கரம்புகளின் விசைபார்த்துப் பொம்மைக் கூத்தைப்போல் உடலெல்லாம் அசைய ஆட்டினுன்; எல்லோருக்குங் காட்டினுன்; எலும்பு வேறு மாம்சமேவருக்குக் குத்தினுன்; உதறிஉதறியெடுத்தான். கதறிக் கதறிப்பிடித்தான்; விக்கைவிக்கையாய் அடித்தான். வெடிக்கை வெடிக்கையாய் இடித்தான்; புரட்டிப்புரட்டி உதைத்தான்; விரட்டி விரட்டிச் சிதைத்தான். வீணையினிசை கரம்புகளைப்போலுள்ள சிலவிசை கரம்புகளைமுறுக்கி அறுத்தான். குதிகால்கரம்பையும் பிடரிகரம்பையுஞ் சேர்த்துப் பிடித்துக்கொண்டு, கனனு, கனனு, என்றுகின்னரி கொட்டினுன். மடங்கல்போல் மமதையடைந்திருந்த அவன் தடம்புயமலைகளிற் பலமலைகளுடன் மோதுவதுபோல் மோதி, உரமிழய தலைசிறிய கழுத்தானது அடங்கித்தாழ்ந்து வாயுந் தாளும் இருந்திக்கொண்டு போகுப்படிபாய்ந்தாக்கி, மூக்கினுள் கரம்புகளைப் போக்கி, சீர்த்தாரை கரம்புகளோடு வீக்கி, எல்லா கரம்புகளையும் இறுக்கிமுறுக்கிப் பிடித்துக்கொண்டு, முன்பக்கமுகமிருப்பவரைப் போலாது இவன் பின்பக்க முகமுடைய பின்புத்திக்காரன் பாருங்க ளென்று இருவிரலால் தலையைப் பிடித்துக் குயவன் திகிரிபோல் முதுகின்புறத்தில் திருப்பி, அத்திருப்புதலுக்கேற்ற அழகுவைத்து,

தலைநிறைந்த மயிரையும் வலிமிகுந்த கையையுஞ் சேர்த்து இறுகப் பிடித்துக்கொண்டு, அச்சாணியுடையதேரின்மேல் இருந்துச்சாதனனை விட்டெறிவான். அப்போது சேனைகளெல்லாம் ஒருதரம்புரண்டு, பெருமருள் மருண்டு, உகாந்த ஓசைபோற் கூச்சல் இடுவார்கள், மறுபடியுந் தன்கையில் வந்திருக்கும்படியாய்ப் பிடித்தகரம்பை இழுத்துக் கொள்ளுவான். அக்காற் பிழைத்தோம்! பிழைத்தோம்! என் றெழுவார்கள். அந்தத் தேகத்தைப் பூமிமேற் போட்டுத் தும்புதும்பாகும்படி இரண்டுகாலையுஞ் சேர்த்துத் துவைத்து மிதிப்பான் பீமன்; கோபத்துடன் காவி, ஆ! ஆ! ஹா! என்று இறைந்துகூவி, துடையைப்பிடித்து இழுப்பான்; இன்னும் இப்படி பற்பல விளையாட்டெல்லாம் புரிந்து, இரணியனுடைய பிராணனை வாங்கிய விக்கிரமநரசிங்கத்தைப்போல மண்டியிட்டுக் கடித்து, மகா உக்கிராவேசத்தோடும் மருமத்தைப் பிடித்து, புவனுபுவனங்கள் குலுங்கச் சிங்காதம் புரிந்து ஆர்ப்பரித்து, அவனைப் புரட்டித்தூக்கித்தன்மடிமீது போட்டுக்கொண்டு நெட்டிட்டு, தங்கக்கட்டிட்டு, செந்தூரப்பொட்டிட்டு உறையாகியபட்டிட்டு, சானைபிடித்த சொட்டைபோன்றிருக்குந் தன் கைநகத்தினால் அவனுடைய அங்கத்தை அச்சிங்கத்தைப்போற் பங்கப்படுத்தி, அந்தகமவன் சிங்காரமார்பில் உருவும்படியாய் ஏற்றிக் களைந்து, மாங்காய்க் கீற்றைப்போற்பிளந்து, ரீண்டவட்டமாய்ப் பிதுங்கிவந்தகுடல் தொங்கவும், உதிரம் பொங்கவும், அவனைத் தூக்கித் தன் தோளின்மேற்போட்டுக்கொண்டு, வஸ்திரமுதலிய மேனியெல்லாம் உதிரஞ்சொரிய வாழ்முனிபோன்று நின்றான். அப்படிநின்ற பீமசேனனைப் பார்க்குமிடத்தில்; பகீரதன் கொண்டுவந்த கடவுள்தீர்த்தத்தில் மூழ்கியெழுந்த அசைவற்ற இதயமுங் காவிகம்பரமுமுடைய மேலோர்களின் தன்மையைப்போன் றிருந்தது. அதைக்கண்டவீராதிவீரப் பெருஞ்சேனைகளெல்லாங் கர்ணன்முதலாகிய காவலர் தடுத்தும் அவர்களால்தடைபடாமல், நெடுங்கடலுடைபட்டு மடைவிட்டோடுந் தன்மைபோற் புறமிட்டோடினார்கள். வண்டாரவாரம் நீங்காத துளவத்தண்டாரமணிந்தசாரதியும், காண்டீபக்கரத்தோனுகிய தனஞ்செயனும், இக்காலாகலங்களை யெல்லாம் பார்த்தார்கள். இன்னுமுள்ளகாவலருங் கண்மலர்ந்து கைகலந்தார்கள். வெண்மையாகிய சுகூத்திரங்கள் பரவிய ஆகாயத்தை ஒத்திருந்த யுத்தபூமியில் எங்குந் தன்மயமாயிருந்த பீமன் துச்சாதனனுடைய பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு, அவரவர்களுக்குங்காட்டி "பாஞ்சாலராஜன் வளர்த்த செந்தீயில் அவதரித்த பாக்கியவதியாகிய திரௌபதையினுடைய

அளகத்தையும் வஸ்திரத்தையுந் தொட்டிழுத்த தோளும், கையும், விரல்களும் இவையல்லவா?" என்று அவைகளைக்கொத்தித் தறித்து, எங்களைத் தூஷணித்த வாயல்லவா இது வென்று அவ்வாய்மேலறைந்து அவனுடலைப்பிளந்து இடித்து நெரித்து, அவன் தலையை அடிக்கடி திருப்பி இன்னுங்கோபம் ஒழியாமற் கோவென் றிரைந்துகுதித்து, அதிக உக்ரத்துடன் ஆவென்று வாயைத்திறந்து, தான்சொல்லிய சபதப்படி துச்சாதனனுடைய தேகத்தில் ஓடிவருகின்ற செங்நீரைக் கையிலேந்தி, பாவருக்குண்ணென்று கண்ணீர்விட்டழும்படியாய்த் தண்ணீர்விடாய்தீரச் சாப்பிடப்போனன். அச்சமயத்திற் கறுத்த காளமேகம்போன்ற கண்ணபிரான் வெகு பக்குவமாய்ப்பீமனிடத்திற் குப்போய் அவ்வுதிரத்தைக் குடிக்கவொட்டாமல் கிழுத்திஞர். அவர் எல்லாம்வல்ல ஈசனுனதினால் அச்சமயத்தில் அந்த பீமனிடத்திற் போய்ச் சமாதானமாகப்பேசி மீண்டுவந்தார். இவரல்லாது இன்னெ ருவர்சனால் மாண்டு வருவானென்பதற்கு மடங்குதலிரா து. அவனுக்கு இரத்தத்தைக் குடிக்கப்படாதென்று இவர்சொல்ல, "நான் சபையிற் கூறிய சபதம் எப்படிப்போகிற"தென்று அவன்கேட்க! "அந்த இரத் தத்தை வாயிலவிட்டுக் கொப்பளித்து அவன்மேற்றூனே துப்பு" என்று இவர்சொல்ல, அந்தச்சொல்லை ஒப்பென்று உட்கொண்டு குடிக்காமற் கொப்பளித்துமிழ்ந்து என்னெண்ணமுடிந்ததென்று அவ்விடத்தி லிருந்த அரசர்களுக்கெல்லாம் நடுக்கமுண்டாகும்படி தன்கொடியிற்பொருந்திய சிங்கம்போற் கூத்தாடி நின்று, உருத்திராம் சங் கொண்டு ஆர்த்து, இக்குவலயத்தையெல்லாம் இன்று கொள்ளை கொள்ளுகிறேனென்று கொதித்திருந்தான் பீமன்.

கர்ணனுக்குச் சல்லியன் பீமன்செயலை யோதிப் பரிகசிக்க, அவனதற்கலட்சியங்கூறிச் சென்று பீமனை வலைத்தல்

கேட்டீரோ ஜனமேஜயமகாராஜனே! துன்பம்விளைக்குந் துர்க் குணத்தையுந் துர்நடத்தையையுமுடைய துச்சாதனன் முன்னந்து யுத்தம் பண்ணித் தன்னுடைய தம்பிமார் பதின்மர்களுடன் தானும் உயிரிழந்து போனதைக்கண்டு இன்பமுற்றிருக்கும் பீமசேனனுக் கெதிரில் வந்து யுத்தஞ்செய்யுந் திறத்தையுடையவர்கள் ஒருவரு மில்லாதிருப்பதைக்கண்ட சல்லியன்.—"ஓகர்ணனே! தாளாண்மை பெற்ற ஒப்பற்ற பீமசேனன் இவனை மீட்டுக்கொள்ளுங்களென்று

கேரிற்காட்டிச் சொல்லியும், அவனுக்குநேரிற்சென்று வெற்றி கொண்டு துச்சாதனனை மீட்பதற்குச் சாமர்த்தியமில்லாமல் வெறுங்கைவீணனைப்போல் ஒதுங்கிநின்றாய்! உன்னுடைய ஆண்மையையும் வீரத்திற மேன்மையையும், இதுவரையிலும் கண்டறிந்ததுபோதாமல், இவ்விடத்தில் இப்போதும் நான் கண்டுகொண்டேன். இந்தப்பீமனை வெல்லமாட்டாதவீ, இந்திரகுமாரனுகிய அர்ச்சுனனை எப்படி ஜயிக்கப்போகிறாய்? இந்தப் பாம்புக்கொடி படைத்த துரியோதனனுகிய பரித்தியக்காரன் பெரியோராகிய மூத்தோர் மொழிந்த எதார்த்தமொழிகளை உள்ளத்திற் கொண்டு செவ்வைப்படாமல், உன்னைநம்பி, உன் புயத்தைப்புகழ்ந்து உன்வல்லமையை வியந்து, தன்தனையர் தம்பியர் சுற்றத்தினர் முதலானவர்களோடு தன் பிராணனையும் போக்கடித்துக்கொள்ளுகிறான். இனிக்காரியமில்லை. இனிமேலும் படைகொண்டு நெருங்கி யுத்தஞ்செய்ய எத்தனிப்பதில் என்ன பிரயோசனம்? எல்லாரு மடிந்தார்கள். கண்ணுகிய தம்பியும் போய்விட்டான். இனியென்ன யுத்தம்?இனி யென்னவெற்றி? இனிமேற்சண்டைசெய்து வெற்றி பெறுவதைப் பார்க்கிலும், தங்கள் தங்கள் கையிலிருக்கும் வாளாயுதத்தினல் தாங்களே தங்கள் கழுத்தை அறுத்துக்கொண்டு இறந்துபோகிறது எல்லாவிதத்திலும் மிகவுமேலாகிய வெற்றி! அதனல் ஒரு தாழ்ச்சியுமில்லை! கீர்த்தியும் ஆட்சியாயிருக்கும்! ஓ! மாட்சிமைபெற்றவனே! காற்றின் மகனுகிய பீமசேனன் துச்சாதனனைப் பிடித்துக்கொண்டு அதிரதர்களாகிய தேரசருக்கெதிரில்வந்து அவரவர் பேரைச் சொல்லி அழைத்து இதோஇவனைக்கொல்லப்போகிறேன்!உங்களுக்கு வல்லபமிருந்தால்வாருங்களென்று வலுவில்வந்துகாரிடிபோலிரைந்து அவன் அழைத்தும், திரண்டதோளும் வீரகண்டைத்தாளுமுடைய அரசவீரர்களெல்லோரும் அவனுக்கெதிர்புகுந்து போர்கொடுக்கமாட்டாமல், போற்றி போற்றியென்று வணங்கி அஞ்சிக்கெஞ்சி ஒதுங்கிப் போனர்கள். இவ்வுலகத்தார் நிந்திக்கும்படி இப்போதுபரவிய இந்த மொழியானது அழியத்தக்கதோ? இன்னும் வீரம்வேண்டுமோ? மானுஷியம் வேண்டுமோ? கேயூரமணிமகுட குண்டலாதிகள் பூட்டிக்கொண்டு வெட்கமில்லாமல் வெளிப்புறப்படலாமோ? சொல்லுகர்ணனே? நமதுசேனைகள் பதறிச்சிதறிநிற்க, கைக்காரராகிய நீங்களெல்லோரும் கருங்கற்சுவர் போற்காத்திருக்க, அநியாயமாய்மடக்கந்தலைக்கேறினவனைப்போற் சென்று யாவராலும் ஈண்டுமீண்டு மீட்டுவராமல் மாண்டுபோனனே: ஆ! ஆண்டவனே!" என்றுசலித்து,

காற்றுக்கோல்கொண்டு தமனியச்சக்கரங்களுடைய தேரைச் செலுத்தினன். இந்தப்படி அந்தச் சல்லியனுரைத்த சொல்லைக்கேட்ட கர்ணன் "ஓ சல்லியராஜனே! கேளும். கெடிஸ்தலாதிபதியாகிய துரியோதன மகாராஜனுடைய மனதுக்கொத்த தம்பியாயும் இளவரசராகிய இறைவனுயுமிருந்தும், அத்துச்சாதனராஜன் பீமன்கையில் மாய்ந்த கிலையைக்கண்டு ஒன்றுக்கீதான்றுமல் மனத்தளர்வடைந்து இருந்தேனேயல்லது, பீமனுக்குப்பயந்து இருந்தவனல்லன். ஓ அன்பினையுடைய மத்திரர்கோவே! பாம்பு படமெடுத்தாடினுல் அதற்கு கேர்செல்லக் கருடன் பயப்படுமோ? யானை மதங்கொண்டெழுந்தால் அதைக்கண்டு சிங்கம்பயந்து தியங்குமோ?" என்று கர்ணன்சொல்லியது மத்திரனுக்குத் திருப்தியில்லாவிட்டாலும், ஒருவிதமாய் மனம் பொறுத்து, மலையற்று மயிர்க்காலிற் றெறுங்குகிறபோது காமேன் வயிற் றெரிச்சலை விலக்கவேண்டுமென்று சும்மாவிருந்துவிட்டான்.

இப்பால் கர்ணராஜன் யுத்தமுனைவிட்டுப் புறங்காட்டி யோடிய மன்னர்களையும் ராஜாதி ராஜாவையுங்கூட்டிப் பேரணியாகக் காட்டி, பொற்கொடியாடிய பொன்னெடுமலைபோன்ற தேரைச்செலுத்தி, பாரிபவில்லைப் பிடித்து, காயுங்கனல்போற் கனன்று, பகைவருடைய படைமுகத்தின் முன்னேவந்துகின்றன். அக்கர்ணனைக் கண்டவுடனே பீமசேனனுனவன் பாண்டவ சேனுதிபதியாகிய திஷ்டத்தூய்மனும், கூஷத்திரங்கள்போல் கிறைந்திருந்த போர்வேந்தரும், தன்னையொத்தவர்களும், சிகண்டிமுதலிய மைத்துனன் மார்களும், ரதகஜதுரகமுதலிய நாற்படையுஞ் சூழ்ந்துவர, மாகில முதலிய மேனிலமடுங்க வாத்தியமுழங்க எதிர்நோக்கி நடந்தான். அப்போது பாண்டவர்களுடைய படைஞர்கள் பூரணச் சந்திரோதயங்கண்ட சமுத்திரம்போற் பொங்காரங்கொண்டு பூரித்து, மகிழ்வாகிய அலைகொழித்து ஆர்ப்பரித்து, காண்டவவனத்தை எரித்த கனல்போற் செருக்கி, காமாந்தகனைப்போல் கின்றார்கள். இத்தன்மையாகிய பாண்டவச்சேனைகள் மூண்டகிலையைக் கர்ணன் கண்டு, முன்பு முதுகிட்டோடிய தன்சேனைகளோடும் முன்னணிகூட்டிய தானைகளோடுந் திரும்பியுத்தஞ்செய்யவிரும்பி, எதிரேறிய பீமனை வளைத்தான். இப்படியாக வளைந்த கர்ணனை வாயுகுமாரனுகிய பீமசேனன்கண்டு மன்னர்களின் பொன்னுருள்களுற்ற தேர்களெல்லாம் உடைபடும்படியாய்த் தன்னுடையதேரைச் செலுத்திக்கொண்டுவந்து, வில்லைவளைத்து நாணைலிதெறித்து, நாகர்கோன்

கணை, நான்முகன்கணை, காரணன்கணை முதலிய ஞாலவித பாணங் களைத்தொடுத்தான். அந்தப்பாணங்களாற் கொடையாளியாகிய கர்ணன் கொடுத்துயரடைந்து, புறந்திரும்பி முகமாறி, மறபடியும் வேறுதேரேறி, சிம்ம ஏறுபோற்சீறி வீரவசனங்களைக்கூறி, மனக் தேறி, பீமசேனனுடனே கடும்போர் செய்வதற்குக் கோபிததெழுந் தான். அப்போது அஸ்வத்தாமனுஞ் சஞ்சத்தகருஞ்சேர்ந்து அக் கர்ணனுக்குத் துணைவந்து, பீமனை வளைத்து அமர்வினைத்தார்கள். கற்பகக்காவுக்கு மன்னனுகிய இந்திரனுடனே கண்டவவனப்போரா டிய காளபென்னும்அர்ச்சுனனும், காவலர்களும், ஏமத்தேராளிக ளும், பீமனுக்குத்துணைவந்து, அக்கர்ணனை டெதிரெதிர்போய் வளைத்துப் போராடினர்கள். பொன்மயமாகிய முரசவாத்தியங்களு டன் பேரிமுதலிய வாத்தியங்கள் முழங்குகிற பேரோசையாலும், வில்லினுடைய நாணோசையாலும், தேர்களினுடைய கர்க்கரத் தொனியினாலும் கையிலிருந்து விடும்படியாகிய முஷ்கரத்தொனியி னாலும், அதிகம்போர்பெற்ற அதிவேக அஸ்திரங்கள் முழங்கும் ஆர்ப்பரிப்பாலும்,ஆகாயவாசிகளாகிய தேவர்கள் அருணடி வெருண்டு செவிடுபட்டார்கள். படைவீரர் முதலியபோர்கள் ஆயுதப்பிரகாசங் களினாலும், வீராவேசங்களினாலும், தங்கள் தேகத்தைத் தாங்க ளேமறந்து, மனங்கல்லாய்ச் செறிந்து, விழித்தகண் விழித்தபடியே வெறியேறிவிட்டார்கள்.

அர்ச்சுனனால் நகுலனைடெதிர்த் தடல் பெற்று நின்ற விடசேனன்வதை

இவ்விதப்படியிருக்க, சூரியனுக்குப் பேரனும் கர்ணனுக்குக் குமாரனுமாகிய விடசேனனுனவன் நவமணிபதித்த நவரதமேறிக் குசலராஜனை வளைத்து, மதலை மாலையணிந்த மகாதேவன் மழுப் போன்றவயவாளிகளைத் தழற்பொறிபோல் தாக்கும்படியாய்த் தெறித்தான். அப்போது சுவேதவாம்பரிபூட்டியதேரேறிய அருச் சுனனுக்கு. நேரிலையவனுகிய நகுலராஜன் செந்தாமரைமலருக் கொப்பாகிய தனதங்கையினால் வில்லைவளைத்து நாணிபூட்டி, சிறுகா ணைசைகாட்டி, கம்பரும்பகளிற்றுனையையுடைய கர்ண குமாரன் தொட்ட கடுங்கூரம்புகளை யெல்லாந் தான்விட்ட பாணங்களினால் அறுத்தறுத்துத் தரையில் வீழ்த்தினன். அந்தவேளையில் தேவேந் திரனுக்குக் கவசகுண்டலங் கொடுத்த மாவேந்தனுகிய கர்ண

குமாரன் கடிவிடக் கொடுங்கணைகளைத் தெறித்து, நெருங்கிய நெருப்பெழ விழித்து, நகுலராஜனேறிய தேர்ச்சக்கரங்களை அழித்தான். உடனே நகுலராஜன் வேறொரு தேரேறி வீரசாயங்களை விட்டு, கச்சைக்கொடி யோனுடையகாதலன் லச்சைப்படும்படியாய் அவர் கைபிடித்த வில்லையும் வெற்றிக்கொடியையும் வெட்டினான். இந்த நகுலராஜனுடைய ஆண்மைக்கு யாரெதிராவார்கள்? மறுபடியும் அந்த விடசேனனவன் மகமேருவைப் போன்றவில்லெடுத்து நாணிதொடுத்து, காராசக்கணைகளைவிடுத்து, நகுலராஜன் மூடி சாய்ந்து விழும்படியாய் அடித்தான். அத்தக்கணைகள் செந்தழற்கணை யெனக் கொந்தாகவந்து நகுலனுடைய மார்பிற் பாய்ந்தவுடனே, தேர்மேற்சாய்ந்து வீழ்ந்தான். வீழ்ந்தநகுலனை மூண்டெரியுங் கோபக்கண்களையுடைய பீமசேனன்கண்டு சமீபத்தில்வந்துஉபசரித்துக்கொண்டுபோயினன். அந்தவேளையில் நகுலனும் விடசேனனுஞ் செய்த போர்த்திறத்தைக் காண்டவவனத்தை நீறுபடுத்திய அருச்சுனன் கண்டு மிகக்கோபங்கொண்டு, சந்திரனைத்தரியாய்க்கட்டி, மந்தரகிரியை மத்தாகநாட்டி வாசுகியைக் கயிறுகப்பூட்டி, சுராசுரர்கள் இடம், வலமாக ஆட்டிக்கடைந்தெடுத்த அமுதத்தைத் தேவர்களுக்கு அளித்தருளிய திருமாலானவர் சாரதியாகவிருந்து செலுத்தாகின்ற தேர்மேற்சென்று, மின்னற்கணையாகிய தூண்டிலிட்டுவிட சேனனென்னும் மீனைப் பிடிப்பதற்குவந்த மீன்படுப்போனைப்போற் பலவன்னக்கணைகளை வலைபோலும் வீசினான். அதைக்கண்ட விடசேனன் கலிரென நகைத்து, "உன்தம்பி என்னுற்பட்ட தளர்ச்சியை நீ வரும் வழியிற் பார்க்கவில்லையோ? ஆனால் உன்தம்பிபட்டபாடு நீயும்படியாய்த் தெரிவிக்கிறேன். நீபென்னோடு போராடவல்லையோ? இதோ அரிக்கணையவிடுகிறேன் பார்" என்று வில்லைவளைத்து, நெருங்கிவந்த பார்த்தனையும் காசாம்பூமேனிப் பாகனையும் அம்புக்கும்பினால் மூழ்கவைத்து, கரசரணாதிகள் ஆடவொட்டாமற் சமர் செய்தான். அப்போ திவனுக்கொப்பானவர் யாருமில்லையென்று அமரர் புகழ்ந்தார்கள். அக்காற்பாண்டுகுல மைந்தனாகிய பார்த்தன் கருமேகபானது போலிடிகளை யிடித்துப்பொழியுங் கணக்கைப்போற் சரமாரிபொழிந்து போர்த்தபோது, அவ்விடசேனனுடைய மலை போன்ற தேரும், குதிரையும், சிலையும் அழிந்து, அவன்மேகத்திலும் உதிரம்வழிந்தது. அப்போதும் அவ்விடசேனன் தியங்காமல், மறுபடியுந்திறமாகி வேறுதேரேறி, வெகுண்டெழுந்து சீறி, வண்ணச்சிலைதாங்கி, வின்னாணிவாங்கி, எரிபற்றி, புகைசெறிந்து, பொறி

யுதிர்த்து, புனல்வறண்டு, புடைபெயர்ந்து, புகழ்நிறைந்து, புகை மலிந்து, விறுவிறென்று வரும் பகழிமழை சிந்தினன்.

இவ்வாறு விடசேனன் விடுத்த அஸ்திரங்கள் கடித்துவருகின்ற திடத்தைப் பகைவரைவென்ற காண்டீபன்கண்டு கண்கலக்கங் கொண்டு, புற்றிலிருந்து புறப்படுங் கிருஷ்ணசர்ப்பம்போல் அக்கினி யாஸ்திரங்களை அதேகமாகச்செலுத்தி, அந்தவிடசேனன் உந்தியசர மாரியைத் தடுத்து, மத்தியில் முறியக்கெடுத்து, மேலும் பிறைமுக மாகத் தேறிய மாறுகோல்களை நூறு நூறுகவெடுத்துத்தொடுத்து, விடசேனன் பிடித்திருந்தவில்லை நடுவில ஒடித்து, வின்ஞாணியைப் படீலெனத் தறித்து, விற்பிடித்த ஐந்துவிரல்களையு முறித்து, முதன்மையாகிய வெற்றிமாலை பூண்ட அவ்விடசேனனுடைய முடித் தலையையும் இடியிடித்துவிழுந்ததைப்போல் ஒருதொடிப் பொழுதில் மற்றோர் பெருவடிக்கணையால் அறுத்துத்தள்ளினன். விடசேனன் விழுந்தவுடனே சிலவேந்தர்கள்பதறி, தத்தளித்து, கொஞ்சமேனும் தைரியமில்லாமல் வெஞ்சமரைவிட்டு எஞ்சியிளைத்து, பஞ்சையாய்ப் பஞ்சுபோற் பறந்து புறந்தந்தோடிப்போய் விடசேனன் தந்தையாகிய கர்ணமகாராஜனுடைய தேர்க்காலைச் சூழ்ந்து தியங்கி அழுதார்கள். சிலவேந்தர்கள் இளைக்காமல் தைரியத்துடன் எதிர் நடந்து, என்னைக் கிருந்தாலும் இறப்பேபொழிய இருப்பதில்லையென்று மனோதிடங் கொண்டு, இந்த விடசேனன் சாவானென்று காம்யாராகிலும் கினைத் தோமா? யாருக்காகிலுந் தெரியுமா? அவன் அழியத்தக்கவன்தானே? அப்போர்ப்பட்ட அழகன் அழிந்தபோது காமெல்லாரும் எம்மாத் திரமென்று அர்ச்சுனன்மேலில எதிர்ந்து உலகம் அதிர்ந்து போகும்படி அமர்புரிந்து அர்ச்சுனன்விடுத்த அந்தக்கணைபால் அழிந்து, அரம் பாஸ்திரீகளின் ஆகத்திற்கலந்து, அமரர்புகழமகிழ்ந்து அந்தரம்புகுந் தார்கள். இவ்விதமாக விஜயன் எறிந்தஅக்கினிக்கணை, அந்தகன்களை பிறைமுகக்கணை, பிரமனற்கணை முதலியகணைகள் விடசேனன் முத லாகிய வேந்தர்களை இறந்துபோகும் படிமுடித்தும் வேகம் அடங் காமல், வெங்கொள்கரிகள் கோடி, பொங்குபரிகள்கோடி, தங்க ரதங்கள்கோடி, தங்குபடைகள்கோடி, என்று சொல்லும் படியா யுள்ள பலகோடி சதுரங்கப் படைகளும்வாடி மடியும் படியாகச் சாடின. அதுவுமல்லாமற் பார்த்தனுடைய பாணக் கனலாற் பல படைப் பூடுகளெல்லாங் காட்டுத்தீயா லெரிபடுஞ்சருகைப் போலப் போர்க்களமெங்கும் எரிந்துகொண்டிருந்தன. அந்தவேளையில் அர்ச்

சனன் கையினல் அடிபட்டிறந்தான் உன்மைத்தனை விடசேன னென்று வேந்தர் முதலாகிய வீரர்சொல்லக்கேட்ட கர்ணனவன் காதடைபட்டு, கண்பிதுங்கிட்டு, கண்ணீருண்டிட்டு, கருத்தழிந் திட்டு, தலைகட்டிட்டு, "ஆ! ஆ! ஆவிபோன்ற குமாரனே!" என்று கூவி, சாவிபோனவன்போற் சப்பிட்டுப் பூமியைத்தாவினன். அப் போது தேர்ச்சாரதியென்னும் ஆய்ந்த சல்லியராஜன்புல்லியெடுத்து, புத்திரசோகத் தீரும்படி பற்பல வாக்கியங்களினல்தேற்றினன்.

துரியோதனன் தனக்கறிவுறுத்திய அஸ்
வத்தாமனுக்குத் தன்கொள்கைகூறிக்
கர்ணனிடஞ்சென்று, தேற்ற
அவன் சபதங்கூறுதல்

அத்தவேளையில் அஸ்வத்தாமன் எத்தெத்த இடங்களிலுந்திரிந்து, கொந்துறும்படியாய் அமர்புரிந்து, சிந்தைவருந்திய கொந்தலர் மாலை யணிந்த துரியோதன வேந்தனின்ற இடத்தைநோக்கிவந்தான். அந்த அஸ்வத்தாமனை நாகக்கொடியோனேக்கி, "எப்படியிருக்கிறது யுத்த மும்வெற்றெறியும்" என்று கேட்க, அஸ்வத்தாமன் "ஓ அரசர்க்கரசே! உத்தம க்ஷத்திரிய குலத்துக்கு உரித்தாகிய தப்பில்லாத யுத்தம் விளைத்தீர். சகலயுத்திகளுந் தெரிந்தீர். பற்பலகாரியங்களும் புரிந்தீர். பாரெல்லாங் கொண்டாடும்படியான கீர்த்தியிற் சிறந்தீர். அப்படி யிருந்தும், இப்போதுதர்மராஜன் புகழ்பெறும்படியா யிருக்கிற இந்தக் குருக்ஷேத்திரத்தில், பீஷ்மர் துரோணர்முதலாகிய பெரியோர்களும், வீராதிவீரதாஷ்டிகரும், மற்ற உரியோர்களும், படைத்துணைவந்த பந்துக்களாகிய கிளைஞரும் இளைஞரும், இன்னும் இதரமன்னரும், மைத்தரும், தம்பிமார்களும், ஒப்பற்ற சதுரங்கப் படைகளும் போர் கொடுத்துப் புகழுடுத்துப்பிராணனை விடுத்தார்கள். இப்போது சொல் லியபேர்களுடைய பலங்களெல்லாம் போய்விட்டன. ஐயா! பெரி யோர்கள்சொல்லிய தருமவாக்கியங்களைப் பலமுறை கேட்டிருக் கின்றீர். இனியேனு நமக்கு நற்காலம் வருதற்கான ஏதுவை ஆயகி லீர். இருப்பவர்களேனும் பிழைப்பதற்கான வகையையெண்ணுகி லீர். பூர்வாசாரியர்சொல்லிய நீதிவாக்கியங்களையுந் தருமவாக்கியங் களையும் உட்கொள்ளீர். சங்குமுழக்காமல் தாலி கட்டுதலும் கட்டுப் பாடில்லாத குடிமரபும், நன்செய் புன்செய் விளையாதநிலமும், திரியாக்கினி யில்லாத பிராமணர்களின்மனையும், துவார மில்லாத

முத்தும், ஆற்றுக்கால் பாய்ச்சலில்லாத வளநாடும், ஞானமில்லாத உள்ளமும், பந்துஜனக்கிளையில்லாத அரசியற்கையும், பெருமை அடையுமென்று இதுவரையிலும் நீர் கேட்டதுண்டா? ஓ! மதிகுலபதியே! பிரையோசன மிலையே: ஐயா! நமக்குண்டாயிருந்த துதிக்கைமாவாகிய யானைகள், பரிமாவாகிய குதிரைகள், தேர்கள், சேனைகள், இவைகளனைத்துங் குறுகின. சம்பிரமமாகிய உமதுதம்பி மார் கும்புகளில் வெகுபேர் இம்பர்பதமாறி உம்பர்பதம் பெற்றனர். பேர்சொல்லும் புத்திர பௌத்திராதி வர்க்கங்கள் கால்மாறிச் சாய்ந்தன. உலகத்திற் பெரும்பழிவாய்ந்தது. இன்னுங்கொஞ்ச மிஞ்சியிருக்கின்றபேருக்குங் காலங்குறுகிப்போயது. ஆகையால் போனவர்போக இன்னுமிருக்கு மும்முதசகோதரர்களோடு சொல்லுதற்கரிய பல கேள்விகளுஞ் சாஸ்திரங்களுந்தேர்ந்த பீமார்ச்சுனர் முதலாகிய தம்பி மார்களுடனும், உமதுதமையனுகிய சத்தியதெறிபெற்ற உத்தம ஆசாரமுள்ள தருமராஜனுடனுங் கலந்து பரிந்து உபசாரம்புரிந்து, கன்னெறி தெரிந்து அரசுபுரிந்துவாழ்வதேகடன்'' என்று சொல்லினன்.

இவ்வாறு அசுவத்தாமன் சொல்லியவார்த்தையை அரசன் கேட்டு, ''இப்போது நீர்சொல்லிய காரியங்களெல்லாஞ் சரிதான். ஆனல், இது யாருக்கு வேண்டியதென்றல், பூமியை ஆளவேண்டுமென்னுங் கருத்தைஆட்சியாக உடையவர்கள் யாரோ அவர்களுக்கு வேண்டியது. எனக்குவேண்டிய தென்னவென்றல், வீரமுரசுவாத்திய முழங்காகின்ற போர்க்களத்தில் என்தேகமானது விழவும், உயிரானது வீரசொர்க்கம் அடையவும், பகைவரோடு போராடிவென்று வீரியம் பெறவும் நான்விரும்புவன. இவற்றைவிட வேறென்றுமில்லை'' என்று சொன்னன். இந்தமொழியை முனிமகனுகிய அசுவத்தாமன்கேட்டு, ''நாம்புகன்ற கட்டுரையைநாடாமலும் இதற்குவேண்டிய யுக்திகளைத் தேடாமலுஞ், வீணைமறுத்தானே மன்ன னென்று கோபங்கொள்ளாமல், துரியோதனனுடைய மனதின்படி கலந்துகொண்டு,யுத்தஞ்செய்வதற்குத்தகுந்த இனிய வார்த்தைகளைப் பலவாறுகப்பேசி நயந்திருந்தனன். அதன்பேரில் நந்தியாவட்டை மாலையணிந்த நராதிபனனவன் அசுவத்தாமனைப் புகழ்ந்து, கொண்டாடிமகிழ்ந்தான். பின் இருவரும் இரப்பவர்க்கில்லை பென்றளிப்பதில் உள்ளங்கை நெல்லிக்கனிபோன்ற சந்திரவட்டக் குடைபெற்ற கர்ணனிடஞ்சென்று, அவனைக் கட்டியணைத்து, அவனதுகண்ணீர் துடைத்து, புத்திரசோபத்தைப் பிரித்

தார்கள். குளிர்ந்த கடல்சூழ்ந்த குவலயத்தை ஆளுங் கோமான் சிற் சிலவிவகாரங்களினுலவன் மனதைத்தேற்றி, விடசேனனே முடித்த அர்ச்சுனன் உயிரைக் கொல்வதற்கு வேண்டிய யுத்திசொல்லுகிறான். "ஓ அண்ணு கர்ணராஜனே! உம்முடைய வல்லபம் உமக்குத் தெரிய வில்லை. நீர் ஒருகணை தொடுப்பீராகில், அந்தக்கணையின் உரத்தாற் சப்தமலையும், சப்தசமுத்திரமும், சப்தபூமியும், தடுமாறிப் பயந்து சாய்ந்துபோம். அப்போப்பட்ட சாமர்த்தியமுடைய நீர், எதிர்த்த சத்துருக்களின்வெற்றியைப்பறித்துக் கைத்தனுவு மெய்த்தனுவுந் தகர்ந்து தாரணியில் வீழ்ந்திறந்த துச்சாசனென்னுந் தாரணிந்த என்தம்பியைக்குறித்தும், குழந்தையாகிய விடசேனனைக்குறித்துங் கண்கலங்கவேண்டாம்! எண்விலங்கவேண்டாம்! நம்மைவிட்டு நீங்கா தவர்கள் நீங்கினுல் அதற்காக நாம் ஏங்கலாமா? துயரப்படலாமா?" என்று ஆறுதல்சொல்லி, புத்திரவிசுவாசத் துயரத்தை மாற்றினன். அந்த அரசனுடைய வார்த்தையைக்கேட்ட கர்ணனவன் கண்களை விழித்து உருட்டிப்பார்த்து,

> 'மலைகலங்கினு மாதிரங்கலங்கினு மாதிரங்களில் விண்ணேர்
> நிலைகலங்கினு நெடுங்கடல் கலங்கினு நிலங்கலங்கினுஞ் சேடன்
> றலைகலங்கினும் பேரவைமூன்றினுந் தளர்விலாத வர்கற்ற
> கலைகலங்கினும் போர்முகத்தென் மனங்கலங் குமோ கலங்காதே'

ஓ தூரியோதனமகாராஜனே, மலைகலங்கினுலும், திசாதிசைகலங்கி னுலும், திக்குப்பாலகர் கலங்கினுலும், தேவர்கள் கலங்கினுலும், நீண்டசமுத்திரங் கலங்கினுலும், நெடியபூமி கலங்கினுலும், ஆதி சேடனுடைய பணமகுடங் கலங்கினுலும், அளவிடற்கரிய மும் மூர்த்திகளின் பேரவையில் தளரவில்லாமற் கற்றபல கலைகலங்கினு லும் போர்முகத்தில் என்மனங்கலங்குமோ? ஒருக்காலுங் கலங்காது. ஆதலால், ஓ அரவக்கொடிபடைத்த அண்ணலே! என் குமாரனுகிய விடசேனனுடைய தலையானது என்கண்ணெதிர் துணியும்படிக்கு அம்புப் பிரயோகஞ்செய்த இந்திரன் மகனுகிய அருச்சுனன்தலையை இப்போ தொருகணத்தில் ஒரேபாணத்தில் துணிப்பேன். அதை நீர் பாரும்" என்று சபதவார்த்தைபேசி, தனது ரதத்தைச்செலுத்து கின்ற சாரதியாகிய சல்லியராஜன் முகத்தை நோக்கி, தன்மன மகிழ்ந்து ஒரு சொல் சாற்றினன்

கர்ணன் சல்லியன்கூறிய துர்ச்சகுனங்களை யுங் கருதாது சென்று அருச்சுனனை வளைக்க, அவனுமெதிர்த்தல்

ஓ மத்திரர்க்கரசனே! கேளும் இன்றையதினம் உதயமாகியசூரியன் அஸ்தமிப்பதற்குள்ளே சாமார்த்தியமுள்ள அருச்சுனன்தலையை அருமையாகிய எனதுவிஷாக்கினி வெங்கணையாற் விண்ணுலகிற் சேர்க்கிறேன். இந்தவேளையில் உன்கைவல்லமையை காண்பார்க்க வேண்டியதா யிருப்பதால், பகைமேலிட்ட பார்த்திபரெல்லாரும் புகழ்ந்து கொண்டாடும்படியாய் விரைவில் விசாலமாகிய வீரரதத்தை விடும் பார்ப்போம்" என்று கர்ணன் கூறலும், அந்தக்கர்ணனைப்பார்த்து மத்திரதேசாதிபனுகிய சல்லியராஜன், "ஐயா அங்கராஜனே! நீ இப்போதுசபதங்கொண்டு புறப்பட்ட வீரியத்திற்கும், உன்மனதின்படி தேர்செலுத்த விருக்குங் காரியத்திற்கும் யாதொருதாழ்ச்சியுமில்லை! ஆனல் நீபுறப்பட்ட இத்தருணம்பூமி அதிர்கின்றது! இரத்தமழை பொழிகின்றது! கச்சைக்கொடிமேற் காக்கைகள் அடித்து மோதி விழுகின்றன! மேகமில்லாமல் ஆகாயத்தில் இடியுண்டாகின்றது! ஆயுதங்களின் மூனைகள்தோறுங் கரும்புகை புகைகின்றது! வாசனை பொருந்தியமாலைகளெல்லாம் வாடிச் சருகாய்க்கரிந்து புலால்நாற்றம் நாறுகின்றது! இடதுதோளும் இடதுகண்ணும் துடிக்கின்றன! யானைகளுங்குதிரைகளுங் கண்ணீர்விட்டழுகின்றன. பைசாசுக்கள் எதிரெதிர்கூத்தாடுகின்றன. ஓரி ஊளையிடுகிறது. ஓங்கல் உடல் நடுங்குகிறது. கவர்த்தினகலித ஆபரணங்களெல்லாஞ் செம்பைப் போலும், இரும்பைப்போலும், பித்தளையைப்போலும் ஒளிமழுங்கி அழகழிந்து காண்கின்றன. ஓங்கிய இரதம் புதைந்து ஒலியெழாதிருக்கின்றது. ஓடங்களையுடைய கடல் ஒலிமிகுந்து கரைபுரண்டுவருந்தன்மை போலிருக்கின்றன. பகலில் நக்ஷத்திரங்கள் பலபலவென்று திரத்தோன்றுகின்றன. இவைகளெல்லாம் நீ காணவில்லையோ? இப்போது இதோநேராகப்பார். இப்போர்ப்பட்ட துர்ச்சகுன விபரீதந் தோன்று வதினுல், இன்றையப்பொழுதை உபாயமாய்ப்போக்கி விட்டு நீ உயிர் பிழைத்துப்போய் நாளையதினத்தில் வந்து போர்புரிவாயாகில், உன்சபதப்படி இந்த அர்ச்சுனனை ஜயித்துக்கொல்லுவாய். மற்றப்பேரையும் எதிர்த்து வெல்லுவாய். துரியோதன மகாராஜனுக்கு அகண்டமண்டலாதிபத்தியப் பட்டாபிஷேகம் பண்ணிவைப்

பாய்! உண்மையாக இன்றையதினம் நீ சண்டைக்குப் போகவேண்டாம். என்பேச்சைத்தள்ளி வெஞ்சிலைவிஜயனுடன் வீண்சண்டை செய்யப் போவாயாகில், அவன்தன்னுடைய அம்பிலுல் உன்னை மாய்த்துச் சாய்ப்பது சத்தியம். இன்றைக்கு நீ எப்படியும் அவனுற் பட்டுப்போவாய்!'' என்று எதிர் நின்று புகன்ருன்.

இந்தவார்த்தைகளைத் தனக்குத்தானே ஒப்பாகிய கொடையாளன்கேட்டு,கலீரென நகைத்து,''ஓசல்லியராஜனே! என்னிடத்தில் வளர்ந்துவரா நின்ற நாகாஸ்திரத்தை விடுப்பேனுகில் தனஞ்செயனுடைய தலைதப்புமோ? நான்விடுக்கும்பாணம் அவனுக்கு அமுதமும் உறவுமாவதும்! அவன் தொடுக்கும் அஸ்திரம் எனக்கு விஷமும் விரோதமுமா? அப்படியா ? நல்லது: அதைப்பார்த்துக்கொள்ளுவோம். யானையினுடைய தவவலிமையைச் சிங்கம் வியந்து சந்தோஷப்பட்டு அந்தயானைமேற்செல்லாமல் திரும்பிவிடுமாகில் உன்சொற்படிக்கு நானுந் திரும்பிவிடுவேன். யானையைக்கண்டு சிங்கமுந்திரும்பப் போகிறதில்லை. உன்சொல்லைக்கொண்டு நானுந் திரும்பப்போகிறதில்லை: ஆகையால் உபயோகமில்லாத பேச்சை ஏன்பேச வேண்டும்? அதனுற்பிரயோசனமில்லை. உமது உத்தியோகப்படிக்கு அந்தவிஜயனுக்கு நேரில் என் ரதத்தைச்செலுத்தும்'' என்ருன். அதைக்கேட்ட தடர்ந்தேர்ச்சூதனுகிய சல்லியன் மனஞ்சலித்து, ''நமது சொல்லுறுதியைக் கேளாமற்றள்ளி இவனெண்ணப்படியே பேசுகிருனே. வீணுகச்சாகிருனே'' என்று சற்றுநேரம், நிதானித்து நின்று, விசனங்கொண்டு வியர்த்துக் கண்ணீர்பெருகக்கலங்கி, மனமறுகி வெறுத்து, ''சரிதான், இவ்வுலகத்தைத் தருமராஜன் ஏகசக்ராதிபதியாய் ஆளுகிறதற்கு நாள் சமீபித்தது'' என்று தன் மனதில் நினைத்து, விசனப்பயன்படி முடியுமென்று கனைத்துச் சத்துருக்களின்மனம் உடையும்படியாய் முட்கோல்கொண்டு குதிரைகளை உந்தி, நீயே வெற்றிகொள்ளென்று கர்ணனுடையமனவேகம் பின்னுகவுந் தேர்வேகமுன்னுகவும் போகும்படியாய் ரதஞ்செலுத்தினுன்.

அப்போது அங்கதேசாதிபன் சிங்கம்போற்றெழித்து, தன்கை வில்லை வட்டமாகவளைத்து, மழைகளைப்போற் பலகோடி பாணவருஷங்களை வருஷித்து, பாண்டவச் சேனைகளை முனைசாய அடித்து மடித்தான். அநேகவாத்தியங்களின் முழக்கமும், அம்பிலைசைப் பெருக்கமும், யானைசேனை பரிவாரங்களினுடைய ஆர்ப்பும் ஆகிய

இவ்வோசைகளினால் திக்கு யானைகளினுடைய கர்ணமதச்சுவடு அடைந்து போயதென்று சொல்லுவோமாகில் ஓ ஜெனமேஜய மகாராஜனே ! அப்போர்வீரத்தை யெடுத்துப் பேசும்படியானவனெவனேனுமுளனோ யான். கர்ணராஜனுனவன் காலாக்கினி உருத்திரனைப் போல் தான்முன் சிந்தித்தபடி முந்திவந்து அமர்புரியும் அந்தவேளையில், தேனிறைந்த மதுமாலைபணிந்த புயவீரனுகிய அர்ச்சுனன் மாயனூர்ந்த தேர்மிசைவந்து, பாரிய காண்டீபத்தில்நாணிபூட்டி, சக்ரரக்ஷகராகிய உத்தமோசா உகார்மனுடனும் கரிபரிமுதலியவாகினிகளுடனும் மெய்மையாகிய தம்பிமாரிருவர், பீமசேனன் அளவற்ற அரசர்கள், இவர்களுடனும் நின்று, கதிரவன் குமாரனுகிய கர்ணன்மேற்கடுமைபாயிருந்தான். இருவரும் போராடத்தொடங்கியபோது, கருங்கடலிரண்டுங்கலந்து அலைமோதுவதுபோலும், உகாந்தகாலாக்கினி இருபக்காய்ப் பிரிந்தெழுந்து ஓடுவதுபோலும், சண்டமாருதமானது அண்டபிண்டசராசரங்களடங்க அடிப்பது போலும், பகைத்து முனைந்து, பலத்தெழுந்துவரும் பெருஞ் சேனையை இருதிறமேவுதரும் அணிபெற அமைத்து, கர்க்கடகச் சக்கிரோதயம்போற் கணைமழைதூற்றி, விண்ணுமண்ணுங் கலங்கக் குதித்து விலகுவதற்கருமையா யுத்தந்தந்து மெத்தச்சலித்தனர்.

ஆகாயத்திற் பிரமாதி தேவர்கள் பரமேஸ்வரனைக் கர்ணச்சுனர்போரிற் ஜெயாபஜெயம் யாருடையதென்று விஞ்தல்

இவ்வாறு போர்வினையிற் சிறந்தபுஜபலகர்ணராஜனும், கார்முகஞ் செறிந்தகாதல் விஜயபோஜனும் கைகலந்து செய்கின்ற சண்டையின் திறத்தைக் காண்பதற்கு, சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மாவும், தேவர்களும், தேவேந்திரனும், வசுக்களும், பூதகணங்களும், தேவகணங்களும், சந்திரசேகர மூர்த்தியாகிய கைலாசபதியும் உயர்ந்த ஆகாயத்தில் விமான நிரைகள் நிறையும்படிக்கு அதிசீக்கிரத்தில் வந்துநிறைந்தார்கள். அப்போது பரிசுத்தமாகியகமலசம்பவரென்னும் பிரம்மாவானவர் செஞ்சுடர்க்கண்களையுடைய சிவபெருமானது சிவந்த திருவடியில் விழுந்து, "ஓதிரிபுராந்தகனே! இவ்விடத்தில் இப்போதுநடக்கின்ற யுத்தத்தை நிறுத்திக் கௌரவரையும் பாண்டவரையுஞ் சமநேசமாக்கிப் பகையில்லாமற் கலந்துவாழச்செய்வதற்குக் கருணையுண்டாயிருக்கின்றதோ?" என்று கேட்டார். அதுகாலே

யில் முகந்திரும்பிய மான்மழுதாங்கிச் சகந்தழைத்துள சகல உயிர்கள் தோறும் நிறைந்து, அவரவர்களிழைத்த நல்வினை தீவினைகளின் பயன்படி அநுபவிக்கச்செய்யுந் திருவடிகளையுடைய வேதமுதல்வனுகிய வெள்ளிவிடையோன் கிருபைசுரந்து, சிறுநகைகாட்டி, "ஓ சதுர்முகனே! ஆகாயத்திலெறிந்த கல் பூமியில் விழாமலும் பூமியினின்று மெறிந்த கல் ஆகாயத்தி லெழாமலும் இருக்குங்காலமெந்தக் காலமோ! அப்போதும் இந்தயுத்தத்தை நிறுத்திச் சமாதானப்படுத்துவதரிது. நாமெல்லாருஞ்சென்று நிறுத்தமுயலினும், அப்போது மேதாமோ? அல்லதுதீதாமோ? யாமறியோம்: எல்லாந் தெரிந்த நீ பொல்லாத சமரத்தை ஒழிக்கலாமாவென்று கேட்டது பெரிய ஆச்சரியமாயிருக்கிறது: இது உன்னலாகுஞ் செயலல்ல. மற்றெவர்களாலு நடக்கும்பயனல்ல. நாமெல்லோருமறிய கம்மிலொருவனேபோய் நடத்தப்போயிருக்க, இந்தப் போர்நடவாமல் முடியுமோ?" என்று கூற உடனேதேவேந்திரன் அவ்வீசனைப்பணிந்து நோக்கி "ஓ சர்வக்ஞமூர்த்தி! பாற்கடற்பள்ளியான் நாற்கடற்றிசையு நடுங்கச் செலுத்துகின்ற தேரிலிருக்குந் தனஞ்செயனும், பிரகாசிக்கும் விசால மார்பினையுடைய சூரியகுமாரனுகிய கர்ணனும், ஒருவருக்கொருவர் பகைத்தெதிர்த்துத் தொடக்குஞ் சரதாரைப் போரில் யார்ஜெயம்பெறுவார்கள்? யார் அபஜெயம் பெறுவார்கள்? புத்திரபாசநேச விசுவாசமாகிய என்மனம் சந்தேகமாயிருக்கிறது? நான் கொண்டசந்தேகம் நிவாரணமாகும்படியாய்த்திருவாய் மலரவேண்டும் நிமலனே" என்றான். அந்தமொழிகேட்ட சுந்தரேச்வரர் இந்திரனைப்பார்த்து, "ஓ புரந்தரா! வில்லெடுத்த போர்வலிக்கொருவனுகிய விஜயனுக்கு யாதொரு இடருந் துன்பமும் கிட்டாதிருக்கும்படியாய்ப் பூர்வம் நாம் கல்ல வரங்கொடுத்திருக்கின்றோம். மேலும், நாரணன் காப்பாயிருக்கின்றான். அதனல் அந்த அர்ச்சுனனே ஜெயம் பெறுவான். இதன்றியும், பராக்கிரம விதரண குணசீலனுகிய கர்ணன் ஆவிதீங்கி அகன்று, அரிவாசுதேவனுடைய அருட்பார்வையினல் நற்கதி புகுவான்" என்று அருள்சுரந் துரைத்தார். அப்போது சதாஸ்து: சதாஸ்து: என்று இந்திரன் முதலாகிய தேவர்களெல்லோரும் அர்ச்சுனனே ஆசீர்வதித்து, அவனறிய அழகியஅழியாத் தேரின் மீது பொற்பூமாரி பொழிந்தார்கள். தேவேந்திரன் தன்மகன் ஜெயம் பெறுவானென்று கேட்ட சந்தோஷத்தால் விந்தகிரிபோற் புயம் பூரித்து, உடல்பூரித்து, உரோமாஞ்சிதம் பூத்தான்.

அருச்சுனராஜனுக்கும் கர்ணராஜனுக்கும் யுத்தம்

இப்பாற் கர்ணராஜனும் அருச்சுனராஜனும் சேர்ந்து யுத்தபூமி மெத்தவு நொந்து வருந்தும்படியாய் அடுபோர் புரிந்தார்கள். அந்தத் காலத்தில் எழுந்தபேரோசையை இவ்விதமென்று இசைக்கும் காவலர்கள் எவர்களுமில்லை. அப்போதெழுந்த சங்கு, பம்பை, தப்பட்டை, பேரி, பூரி, காகளம், தரை, சின்னம் இவையாகிய வாத்தியங்களின் ஓசையைக் கேட்ட அயன் "அண்டபகிரண்டம் நெரிந்து சரிந்து போமே! அவைகள் சரிந்துபோனால் மறுபடியும் படைக்கவேண்டுமே!" என்று திடுக்கிட்டு அஞ்சினன். "சேனசமுத்திரங்களின் நெருக்கத்தினால் மலைகளெல்லாம் நொறுங்கிப் போமே: அவைகளுடன்கூட நமது கயிலையங்கிரியும் நொறுங்கிப் போனால் நாமிருக்க இடமெங்கே?" என்று கயிலாசபதியுங் கலங்கினார். "இந்தச்சேனைக்கும் பலிலிருந்து எழுந்ததும்புகளினாற் சமுத்திரமெல்லாத் துற்துபோமே: அப்படித்துற்துபோய் நாம் பள்ளிகொண்ட பாற்கடலுப்வறண்டிடராய்ப்போமாகில், நாமப்பாலெங்ஙனஞ் சென்று துயில்கூடுவோம்?" என்று சக்ரதரனாகிய திருமாலுந்தியங்கினார். இம்மூவரும் ஏக்கங்கொள்ளும்படியாகக் குதிரைகளுடன் குதிரைகள் கலந்து நெருங்கின. ஆயுதங்களுடன் ஆயுதங்களிழைந்து புகைந்து உராய்ந்தன. மதவாரணத்துடன் மதவாரணமதர்த்து அதிர்த்துப்பகைத்தன. ஓடுந்தேர்களுடன் ஓடுந்தேர்கள் ஊடுதாக்கின. விரிந்தகுடையுடன் பரந்தகுடைகள் மிக்கலந்தன. பலதினுசுக் கொடிகளுடன் பலவகைக்கொடிகள் காற்றினால் வலம்வந்துழன்று பின்னித்துன்னின. குதிரைவீரருங் குதிரைவீரரும் வயப்படை கொண்டெறிந்து மாறிமாறிப் போர்புரிந்தார்கள். வெற்றிபெற்ற யானைவீரரும் மதமுற்றயானைவீரரும் மேன்மேற் கடுகி அமர்முடிகினர்கள். சாளரங்களையுடைய மலைபோன்ற தேர்வீரருந் தேர்வீரரும் தெழித்துக் கிட்டினர்கள். வெற்றிமாலையணிந்த சுத்தசாரிவந்த பாதசாரியாகிய பதாதிவீரரும் பதாதிவீரரும் விதியாகிய செருவிளைத்து முட்டினர்கள். எடுத்த வேலினரும் பிடித்தவேலினரும் அடித்துக்கடித்து முனைந்தார்கள். சிலர் லக்ஷ்யமாய் விடுக்குங் கொடும் பகழிகளைத் தொடுக்கும்வில்லைத் திடும்பிரவேசமாய் வளைத்தார்கள். சிலர் கடகமணித் தொடிகளை அணிந்த கரங்களிலெடுத்த வாளழும்

வாளமும் மாட்டிப் பொருதார்கள். சிலர் விரல்களிற்றுங்கிச்சுழற்றி விடுத்த சக்கரங்களுஞ் சக்கரங்களும், முஷ்கரங்களும், முஷ்கரங்களும் உக்கிரத்துடன் பக்கென் றெரிந்திடவிட்டு, வீரருடைய தலைகள்வீழத் தண்டித்தார்கள்; வெகுபேரைக் கண்டித்தார்கள்.

இவ்வாறு அறன்மகனுகிய தருமராஜனுடைய பெருஞ்சேனை நிருபர்களும், திறன்மகனுகிய துரியோதனராஜனது பெருஞ்சேனை நிருபர்களும், ஒருவர்க்கொருவர் மிஞ்சிவஞ்சினம்பேசி,திறமிருந்ததங்கள் தங்கள் சேனைகளுடன் எதிரெதிர் சென்று, போனபோனஇடங்களோறும் புகுந்து பொருந்தி, ஒருவருக்கொருவர் தோள்பலமும், தாள்பலமும், வாள்பலமும், ஆள்பலமும், வீராவேசமும்மோகாபாவேசமு முடையவர்களாய் மலைந்தார்கள். நகுலசகாதேவராதி தம்பிமார்களும் பெருஞ்சேனைகளும் இரண்டுபுறத்திலுங் திரண்டுவர, பந்துக்களும் படைத்துணைவந்த பார்த்திபர்களும் இன்னுமுள்ளயாவருஞ் சக்ரவாளகிரிபோற் சூழ்ந்துவர, வெவ்விதாகிய வெஞ்சினச்சபத நீர்பாய்ந்து கோபப்பயிர் விளைவேறித் தழல்மூளும் மனத்தோனுகிய பீமசேனன் முன்னேபோக, இவ்வித ஆடம்பரத்துடனே நெருங்கி நடுமத்தியில் அருச்சுனராஜன் விஜயகாண்டீபத்தைநிறுத்தி வலத்துக்குணத்தொனிபண்ணி ஜெணஜெணுத்காரச் சிலிமுகங்களை மாரிபோல்வாரிப் பொழிந்துவந்தான். அஸ்வத்தாமனும் கிருபனும் கிருதவன்மனும், மாமன் சகுனியும், இன்னுமுள்ள மற்றவர் முதலாகிய பேர்களும்,எரிந்து பொறிபறந்து விழுப்படியான கோபக்கணைகளை யுடையவர்களாய் மதில்சூழ்ந்த கன்மைபோல் வளைந்துவர, யாவருமெச்சும்படியாகிய உச்சிதவில்தாங்கி, இன்றைப்போரில் இந்திரகுமாரனை இமைபவருலகத் தேற்றுகிறேனென்று மனோநிச்சயங்கொண்டு சமாரிபொழிந்து நின்றனன். இவ்வாறு அர்ச்சுனனுங் கர்ணனும் எதிர்த்து, மல்யுத்தங்களைப் புறம்போகவொட்டாமல் வல்லமையுடன் குடிவைத்துக்கொண்ட தங்கள் தங்கள் புஜபலத்துக்குத் தகுந்ததாகிய வில்லைவளைத்துக் குணத்தொனி தெறித்து, வெல்ல அடுத்துக்கொல்லத்துடித்து, கல்ல சிலிமுகங்களை மெள்ளத் தொடுத்துவிடுத்துவிறுவிறென் றேற்றுவதானார்கள். அப்போது சக்ரவாளமுஞ் சமுத்திரமும் வளைந்த இந்தப்பூமிக்குப் பத்தலமைத்து நிழல்காக்கச் செய்யுந்தன்மைபோற் பாணங்களை இறைத்துப் பாரிடத்தை நிறைத்து,அந்தரத்தை மறைத்து, ஆக்ரஹித்துரைத்துக்கொண்ட தங்கள் தங்கள் சொல்லுக்கிளைக்காமல் ஆவேசங்கொண்டு போர்புரிந்தார்கள்;

இத்தப்படிக்குப்போர்வெற்றி மாலைபுனைந்த புயத்தாரிருவரும் மருவிச் செபமாறி உருவேறிய மந்திரங்களைச்சொல்லிப் பூசிக்கும்படியாகிய நிலைமையாலும், இருவருஞ் சமமாக வில்லைத் தாக்ரமிக்கும் விரகினாலும், தகுந்தபாணங்களைச் சமயமறிந்து எய்துவருஞ் சாமர்த்தியத்தினாலும் யாவருமிகழ்ந்து, இவர்களுடைபசூழ்ச்சி இப்பேர்ப்பட்டதென்று சிறிதேனும் அறியாமற்போனார்கள். தேவர்கள் முதலிய யாவருந்திகிலடைந்து, உகாந்தகாலம் இன்று குறுகிபதோவென்று வெருவிப் பின்னு மேலாகச்சென்று விசனமேற்கொண்டார்கள்.

இப்படியாகக் கர்ணர்ச்சுனர்செய்த யுத்தத்திறங்களைச் சொல்லுமிடத்து இவர்களிருவரும் எதிரெதிர்மீறி வாய்மடித்து மண்டியிட்டு, வாள்விழிசிவந்து, வாய்ப்புகைமலிந்து, வாயுக்கணை, தேயுக்கணை, வருணக்கணை, அருணக்கணை, நாகக்கணை, மேகக்கணை, இந்திரக்கணை, சந்திரக்கணை, மந்திரக்கணை, அந்தரக்கணை, மோகனக்கணை, பாகனற்கணை, மருத்துக்கணை,பருத்துக்கணை,உருத்ரக்கணை, உபத்திரவக்கணை, சஞ்சரிக்கணை, அஞ்சரிக்கணை, அரிக்கணை, கஜக்கணை, அலைக்கணை, கலைக்கணைமுதலாகிய ஆலாலக்கணைகளைவிடுத்து ஆர்ப்பரித்துப் போர்புரிந்தார்கள்.இவர்கள் இருவரும்விடுத்த பாணங்கள் ஒன்றோடொன்று எதிர்த்து, முனையுடன்முனை உராய்ந்து, ஒன்றையொன்று விழுங்கி, ஒன்றையொன்றுகக்கி, ஒன்றையொன்று உமிழ்ந்து,ஒன்றையொன்று இமிழ்ந்து ஒன்றையொன்று துரத்தி, ஒன்றையொன்று விரட்டி நெடுந்தூரம் பின்னுலோடி, விசைகொண்டு அந்தரத்திலாடி, ஒன்றனந்தமாகப் பிளந்து, ஒன்றிலொன்று அழிந்து, ஒன்றுடனொன்று மோதி, ஒன்றுடனொன்றுகாதி, கும்பலில்வீழ்ந்து புதைந்து, பாதிபாதியாய்த் துணிபட்டு, வீதிவீதியாய்ப் பிணைபட்டு, துண்டந்துண்டமாய்க் கிழிபட்டு கண்டங்கண்டமாய் அழிபட்டு, குமுகுமுவென்று கூவி இரைந்து, கமகமவென்று கமழ்ந்து, சடசடவென்றுதாவி விழுந்து, மடமடவென்று மாறிவிரைந்து, ஒன்றையொன்றுகட்டிகளை அழித்து, கூர்மையையெழித்து இறகுகளைப்பொடித்து, எழுதிய வீரப்பேரைக் கலைத்து, எந்த உலகிலும் புகுந்து, எதிர்வந்தவர்களின் சித்தையைப் பிளந்து,எதிரெதிர் ஓடிக்கூடி,பகைவரிருக்கும் இடத்தை நாடியோடி ஒருகணை இடம்புரிவந்தால் பலகணை வலம்புரிதிரிந்து, பலகணை வலம்புரிவந்தால் சிலகணை இடம்புரிவந்து மண்டலமாகவளைந்தோடி வெந்து, விண்டலமளாவி விரைந்தாடி நொந்து அளவிறந்த மூறைமையாய், பளபளென்ற நிறமையாய், கொண்டல்கள்

குழைந்தொதுங்கவும், எண்டிசை இழைத்து நடுங்கவும், தத்தத்திமி யென நடம்புரிந்தும், திகிதித்திமியென திடஞ்செறிந்தும், பவுரிசுத் திப் பறந்து திரிந்தும், பகைவரற்றுப் பதுங்கவிரிந்தும் போராடின. இவையன்றியும் இடசாரி வலசாரியாகக் குயவன் திகிரிபோற் சுழலுந் தேர்கள், மண்டலம், கோணம், வட்டம், வளவு, என்று சொல்லும் படியாகி ஒன்றோடொன்று கர்க்கசத்துவனியுடன் இரைந்து கலகல வென்று மணியசையவோடி, ஒன்றையொன் றெதிரெதிர்முட்டி, சிங்க முகத்துடன் சிங்கமுகந்தாக்கி, ஏர்க்கால் நுகத்துடன் ஏர்க்கால் நுகம்பாக்கி, சக்கரங்களுடன் சக்கரங்கள் இடிபட்டுடைந்து, குற்றுக் கால் கொடுங்கை அலண்று, குதிரைகளனைத்தும் கூச்சலிட்டயர்ந்து போகும்படியாய், மொய்த்திருக்கும் யுத்தகளத்திற்குச் சாரதியுஞ்சார தியும் வீரவேஷத்துடன் சமர்த்துக்கூறி, ஒருவருக்கொருவர் தேரை மாறி, நான்முன்னே நீ முன்னே நான் பின்னேயென்றுப் பாராக்கிர மித்தனர். இச்சாரதிகளிருவரில் தங்கள் தேறத்திலுலும் கிறத்திலு லும் வாசுதேவன் இன்னன் மத்திரதேசன் இன்னனென்று தெவர்க ளாலுங் கண்டறியக் கூடாமையால், எல்லாருடைய கண்களுஞ் சுழன்றுகலங்கி மனமு மயங்கிப்போய்விட்டன. இத்தேர் வலவர்கள் திறமுதலிய செய்கைகளில் வேறுபடாமலிருத்த லெப்படியோ அப்படியே இவர்களுடைய ரதத்திற்பூட்டிய குதிரைகள் பேத மில்லாதவீரமும், அபேதமான சுழியும், அனேக பரசசாமர்த்திய மும், கல்ல குரலோசையும், பற்பலவித வேககதியும், பால்போன்ற நிறமும் உடைத்தாய், உயரமும், பருமனும், நிகளமும், தேகவலிமை யுங்கூடி ஒன்றையொன்றொத்திருந்தன. வல்லவராகிய கர்ணார்ச்சுன ருடைய தேரைச்சூழ்ந்த சிலமன்னவரெல்லாரும் இருபிரிவாகப் பிரிந்து, இரண்டு நிலையாக நின்று, ஈடிதாழ்த்தியில்லாமற் போர் புரிந்தார்கள்.

அப்போது ஸர்வஸம்ஹாரகால உருத்திரனுக்கொப்பானகர்ணார்ச் சுனர் திரண்ட இரண்டுமலைகள் எதிரெதிர் எதிர்ந்து வளைந்ததைப் போலும் வளைந்து, நிறைந்த இலைகளைப்போலும் நறியதளிர்களைப் போலு மிராகின்ற பாணங்களைத்தொடுத்து, அண்டமுகடனைத்தும் அதிரும்படியாய்ப் போராடி, தங்கள் கைபிடித்த விற்களிரண்டு நிமிரா மல், அற்பகலின்னதெனத் தெரியாமல் விற்பனவிவேக வினமொழிக ளோடு, கற்பனைலங்கார உற்பனக்கணைகளை மேலுமேலுங் கலகல வென்று சிந்தினார்கள். இப்படி போராடுங்காலையில் அருச்சுனராஜன்

தேவதத்தத்தை யெடுத்து உலகந்திடுக்கிட முழக்கி, மேலாகிய நூலாய்ந்த வெகுபேர்களாலு மதிக்கும்படியாய்ப் பாரதப் போருக் கென்று பற்பலவாக முன்னமே பெற்றிருந்த மும்மூர்த்திகளின்வடிவ மும் பண்பும் பெற்ற நற்பழிகளை நாடி யெடுத்து, பூசைகொடுத்து, முதல்வனுகிய சூரியனது மெய்ப்புத்திரனென்னுங் கர்ணன் பேரிற் கள் ளுண்ட வண்டினங்கள்மொய்க்குந் தன்மைபோல் நிரைநிரையாய், திரைதிரையாய் பர,பர, சர,சர, கர, கரவென்று போதுமானமட்டுந் தீதுசெய்ய விட்டான். அதைக்கண்ட அங்கதேசாதிபன் தன் தந்தை யாகிய சூரியபகவான் விந்தையாகிய அன்புடன் சிந்தைமகிழ்ந்து மைத்தனுகிய தனக்குக் கொடுத்திருந்த பராபரமென்னும் பாரிய வலம்புரிச் சங்கத்தையெடுத்து ப்பையவாயில்வைத்து, வையக மெல் லாநடையவு மேகங்கள் மழைகளைப் பெய்யவுமாக முழக்கி, வரிநெடுஞ் சிலை தாங்கிய வலாரிமகனுகிய அருச்சுனனுல் மழைபோற்பொழிந்த வடிக்கணைகளையெல்லாம் பதினுக்குப்பதில் மந்திராஸ்திரங்களைத தொடுத்து முறித்துத்தறித்துக்கொய்தான். இவ்வாறிவ்வதிரத வீர ரிருவரும் வெற்றிமாலைதரித்த ரீண்ட வில்வலக்கும் ஓசையும், அவ் வில்லில் மாட்டிய சிறுநாணோசையும், அவரவர்களின் கொடிமுதலா கிய விருதுகளின் ஓசையும், தேவதத்தம் பராபர மென்னும் இவ ருடைய சங்கோசையும், அண்டம் பிதிர்ந்து போகும்படியாக முழங் கும் வாத்திய ஓசையும், நால்வகைச்சேனை சமுத்திரங்களின் பொங் கோசையும், தேர்ச்சாரதிகளின் திடவோசையும், ஒன்முகச் சேர்ந்து அண்டமுடைத்திட் டப்புறமும்போய் வீணுகாமல் மீண்டுவந்து, ரண்டிருக்கும் பாவர்களுடைய செவிகளுஞ் செவிடுபடவடைத்து, கண்விழி பிதுங்கக் கலக்கி, இன்னுமுள்ள பேரிடி முதலாகிய ஓசை களைப்பெருக்கச் சேர்த்துக் கொண்டு திரிலோகத்தையுங் கலக்கிக் கருக்கப் புறப்பட்டன. அப்போது இமையாவிழியோராகிய தேவர்க ளுந் தேவேந்திரனும்பயந்து அயர்ந்துபோயினர்கள்.

அக்காலையில் அக்கினிதேவன் கொடுத்த காண்டீபத்தைப்பிடித்த அருச்சுனனவன் அதனைக்குனித்தெனிபண்ணி, பலம்பொருந்திய அக்கினியாஸ்திரத்தையெடுத்து அடல்பெறப்பூசித்து, கர்ணன் அஞ் சும்படியாகத்தொடுத்து ஓரே நிலையாக நின்று ஏவினன். அத்தக்கணை வெளிப்பட்டமாத்திரத்திற் கடுவேகங்கொண்டுபொங்கி, அனலெ முந்து, அழல்தழைந்து, புகைமிகுந்து, பொறிபறந்து புனல்வாண்டு, புழுதிமண்டும்படியாய்த் தாவி, ஆகாயகங்கையைவறட்டி, இருள் நீங்

குஞ்சந்திரனைப்போல் எங்கும்பிரகாசமாகி,ஈகூத்திரங்களின் கூட்டம் போல் எரிந்து, பலபலபலவென்றுமீட்டும் பூமியிற்பாய்ந்து, இணையில்லாமல் எழுந்து, விசோதரதங்களும் வேகக் குதிரைகளும், மும்மதயானைகளும், வீரப்பதாதிகளும், இவர்கள்விடுங் கூர்மையாகிய சூலாயுதம்வேலாயுதமுதலாகிய எல்லா ஆயுதங்களும் வெங்கணைகளும், வீரவிற்களும், கரிகியாய்க்கரிந்து பொறிபொறியாய்ப்பொறிந்து போகும்படி மடித்து, சிலவற்றை ஒடித்துப் போர்முடித்து வருவதாயது. இவ்வாறு அருச்சுனன் தொடுத்த அக்கினிக்கணையை யமனுக்குச்சகோதரனுகிய கர்ணன்கண்டு, இரண்டுபுஜங்களும்வளர்த்து மேற்கொளகின்று நெற்றிசுளித்து, ரீண்டபுருவங்கள் துடித்திடச்சென்று, வாத்திபங்களிரனைசை மகாயுகம்போல்முழங்கக் கோபமேற்கொண்டு, சமுத்திராராஜன்கொடுத்த வருணஸ்திரத்தைபெடுத்து வந்தித்து மந்திரஞ்சிந்தித்து, ராணியிற்பதித்து,அநுசந்தித்து விட்டான். அதுவுடனே கணகணவென்று புறப்பட்டு ஆகாயத்திலெழுந்து சமுத்திரஜலத்தை வறளக்குடித்து வலுவேறிய மேகங்களைக் கருக்கிக்கலக்கி விலக்கி மலைக்குப்போகும்படிமாட்டி,மாதிரங்குடிபோக ஓட்டி,வானத்தில்நின்று சிரங்காட்டி, தனக்குச்சப்தமேகத்தின்பேரை நிலைநாட்டி, இடி, மின்னல், இருள், இரைச்சல் இவைகளைக்கூட்டி, நற, நற, நற, நறவென்று வெள்ளஞ் சொரிந்து, பள்ளம்படுதழிகிறைத்து, சயின்னியங்களைச்சிதைத்து, இரத்தவாரிபோடும்படி பாய்க் கதித்து, செவ்வானம்போன்ற யுத்தகளத்திற் புகுந்து, தருமராஜனுடைய தம்பிஅருச்சுனன்தொட்டுவிட்ட அக்கினிக்கணையை அடக்கி அவித்து அறுத்துத்தள்ளியது. உடனே அர்ச்சுனன் படபடெனத்தேறி, தடபுடலாகச்சீறி, சபதங்கள்பலவாறுகக்கூறி, வாயுக்கணைபைக்கோறி, மந்திர உபசாரத்துடன் பூசித்து அங்கர்கோன்பேரில் ஏவினன். அந்தக்கணையானது சூரியனுடைய ஒளியைப்போற்சிவந்து, வெப்பமாகிய நிறத்துடன் முகமலர்ந்து, வெவ்வேறு கணைகளைவிளைத்துத் திகழ்ந்து பிரகாசமிருந்து, பேரோசைமலிந்து வருவதாயது. அப்போது வான்மணி மகனுகிய கர்ணன் அர்ச்சுனன் பிராணனை அகற்றவேண்டு மென்னும் எண்ணங்கொண்டு,நாகேந்திரன் கொடுத்திருந்த திணிந்த பலநிறைந்த அரவக்கணையெடுத்துப் பிரயோகஞ் செய்தான். அந்த நாகக்கணையானது புறப்பட்டு அர்ச்சுனன் விடுத்த கணைகள் யாவற்றையுங் கொன்று, முதன்மையான வாயுக்கணையையும் வாய்ப்பேச்சில் வென்று விழுங்கியது. தக்ஷணமே விஜயன் பார்த்து வெகுண்டு வியர்த்து, இதோவிடப்போகிற என்னம்புக்கு எதிரம்பு எங்குமில்லை

யென்று சொல்லி, ஒரு மேகாஸ்திரத்தை யெடுத்துத் தூபதீபங் கொடுத்துப் பலமாக விடுத்தான். அதைக் கர்ணன்கண்டு கலீரென நகைத்து,கடுமைகொண்ட காற்றின் கணையை ஏவினான். அத்தக்கணை யானது கடலுந்திடலுங் கடும்போரடலுங் கலங்கக் கெடுத்துவந்து, விஜயன் உந்திபமகக்கணையைச் சிந்து சிந்தாய்ச் சிதைத்துச் சிந்தி யது. அதைக்கண்ட அர்ச்சுனன் கண்மூடிக் கண்திறப்பதற்கு முன் னே விண்மூடும்படியாய் மேலுமேலுங் கோலாகல நாலாவிதமேலா கியஜ்வாலாமாலினைகளென்ற லீலாவிநோதக்கோல்களை ஆலாலமொ த்துப் பாபத்தெதாடித்தான். அவைகளையுங் கர்ணனவன் அரை கொடியிற் பிலத்துவாரத்தில் நுழைந்த பெரும்பாம்புபோற் பின் னிட்டகன்று போகக் கெடுத்தான். இப்பாற் சுரேந்திரன்மைந்தன் தன்தந்தையாகிய தேவேந்திரன் கொடுத்த இந்திராஸ்திரத்தைச் சிந்தித்து வந்தித்து அபிமந்திரித்துப் பிடித்து அடித்தான். அந்த அஸ்திரமானது புறப்பட்டு அம்பரத்திற் பம்பரம் போற்சுழன்று வரு வதைச் சப்தமாவென்னும் பச்சைப்புரவி பூட்டுந் தேரினையுடைய சூரிபபகவான் மகனாகிய தியாக பாராபணக்கர்ணன்கண்டு, தன்பிதா வாகிய அச்சூரியன் தந்திருந்த சூரியாஸ்திரத்தை யெடுத்துகாட்டி, ஆரியர் காட்டிய மந்திர அவிர்ப்பாகமூட்டிவிடுத்தான். அக்கால் தகுதி பெற்ற இருவர்வாளிகளும் ஒன்றுடனொன்று மூண்டெருங்கி, ஒன்றுக் கொன்று தாழாமல், அடிபட்டு வீழாமல், உதிரவெள்ளத்தில் ஆழா மல், ஒன்றையொன்று கீறிப்போழாமல், ஒன்றுக்கொன்று உபராமல், அயராமல், பெயராமல், சமமாகச்சமர் பொருந்தித் தாரணி சலிக் கும்படியாய்த் தழல் காட்டித் தாக்கும்போது, கர்ணன் வேறொரு கடும்வாளிவிடுத்து அர்ச்சுனன் தொடுத்த இந்திராஸ்திரத்தை அழித் துச் செழித்திருந்தான். அர்ச்சுனன் வேறொரு அடல்வாளி விடுத்துக் கர்ணனேவிய சூரியாஸ்திரத்தையொழித்துத் தழைத்திருந் தான். கேட்டீரோஜனமேஜய மகாராஜனே! இவர்களிருவரும் ஒரு தாய்க்கு ஒருகருப்பத்தில்ஓரினமாயிருந்த சசிதேவிமணாளனுக்குஞ் சாயாதேவிமணாளனுக்கும் பிறந்த புத்திரசிகாமணிகளாதலால், ஒரு வருக்கொருவரிளைப்பார்களோ? இலையார்கள்.

கர்ணன் பராக்கிரமித்து நிற்கக்கண்ட பீமன் அருச்சுனனைத் தூண்டிப் பிரம்மாஸ்திரப் பிரயோகஞ் செய்வித்தல்

இவ்வா றிவர்கள் செய்யும் போர்முனையில் இன்னும் இப்படி எத்தனைகோடி அஸ்திரங்கள் வந்தபோதிலும், அத்தனையும் இவ்விதமாகவே எதிரெதிர் மோதப்பட்டழிந்தன. காகக்கொடி படைத்த காரதிபனும் அவன் தம்பிமார் முதலிய படைஞரும் உள்ளங்களித்துத் தங்கள் வலிமையை யாவருங்கொண்டாடும் படியாய் நின்றார்கள். அப்போதவர்கள் நிற்கின்ற ஜெயநிலையையும், பகலோன் பெற்றகாளையாகிய கர்ணன் செய்துவருகின்ற போர்த்திறத்தையும், சிகண்டிவிஜயன் விடுக்கின்ற தேவகாஸ்திரங்களெல்லாம் பயன்படாமல் முனைதுணித்து, முதலொழித்து, முடிசிதைத்து மூன்றாயழித்து, வேகங் குறைத்து வீழ்வதையும், அதனைப்பாண்டவச்சேனைகள் கண்டு விசனத்தில் ஆழ்வதையும் வாயுகுமாரனாகிய பீமன்பார்த்து மனஸ்தாபமடைந்து, தனது தேரைச்செலுத்திச் சிக்கிரமாயோடி, அர்ச்சுனனுக் கருகினிற் சென்று, அவனுக் கெதிர் நின்று, ஆத்திரத்துடன் நோக்கி, "ஆ! ஆ! தம்பி அர்ச்சுன! மும்மூர்த்திகளாலுஞ் ஜெயிக்கப்படாத காலகேய நிவாதகவசரென்னும் அசுரேசரை வென்று மூன்றுலோகமும் புகழும்படியாக விஜயனென்னும் பேர் படைத்த நீ இந்தக் கர்ணன்பேரில்தகுந்த வாளியைத் தொடுத்து அவனை வெல்ல நினைக்காமல் உனக்கு ஈடாக அவனை எதிரில் நிறுத்திக்கொண்டிருக்கின்றாயே: இன்றுகான் கதையைக்கைக் கொண்டு ஒருக்ஷணத்தில் இந்தக் கர்ணனைக்கொன்று பிராணனைநீக்கி அவன் தலையைப் போக்கிவிடுவேன். ஐயோ! அப்படிசெய்தால் நீ சொல்லியிருக்கிற உன்னுடைய சபதங் கெட்டுப்போமே யென்று நினைத்திருக்கிறேன். அடாதம்பி! நீ என்னசொல்லுகிறாய்? ஆலந்தளிரின் மேல்அருந்துயில் கொள்ளும் ஆயன், உனக்குச் சாரதியாயமைந்த இந்தமாயன், அந்தக்கர்ணனுக்கு மெத்தவு மச்சப்பட்டிருக்குந்தகைமையுடையவர்போல் ஒடுங்கியிருக்கின்றாரே யல்லது ரதத்தைச்செலுத்தி உனக்குத் திடஞ்சொல்லி யுத்தஞ்செய்யவிடுக்கும் அக்கரை இவருக்கில்லைபோலுமிருக்கிறது. ஆயினுங் கூலிப்படைகளைக்குறித்துப் பேசவேண்டியகாரிய மில்லை. எவன் அக்கரைக்காரனை அவனேபாடுபட்டுத் தன்னுடைய காரியத்தைத் தக்கபடி நிறை

வேற்றிக் கொள்ளவேண்டுமே யல்லது, ஒருவர் சொல்லவேண்டு மென்னுங் காரியமென்ன? நீயோ போதுமானவரைக்கும் புகழும் பெருமையும்பெற்று, ஒருவரும் நிகரற்று வில்வேதங்கற்று மேன்மை யுற் றிருக்கின்றாய். நமதுதமையன் மனவருத்தமடைந்து பாசறை யிலிருப்பதைத் தெரிந்திருந்தும் இப்போர்ப் பட்டசண்டைமுகத்திற் சத்துருவைக் கொல்லாமல் எனைதானேனென் றிருப்பது காரியமல்ல. நம்போலிய காவலருங்கண்டு மகிழத்தக்கதல்ல. ஆகையால், இப்போ தேமுனைந்து, சூரசங்காரவெற்றி வேலாயுதத்திற் கொப்பாகிய பிர்ம மாஸ்திரத்தைக்கொண்டு இத்தக்கர்ணனை வீழ்த்தி விட்டு மறுவேலை பார்" என்று மிகவொருமைபாகவும் அர்சுனனுக்குப் பெருமையாக வும் விளம்பினன்.

இவ்விதமாக பீமசேனன் சொல்லியவார்த்தையை வெற்றிபெற் ற வில்வீர சிகாமணியாகிய விஜயன்கேட்டு, கொவ்வைப் பழம்போன் ற வாய்மலர்ந்து முகைத்து,"அண்ணா! தாங்கள்சொல்லியது நிஜந்தான். இனியரைக்கணப்போதிலாகுங்காரியத்தை நீரேபாரும்"என்றுசொல் லிக்கர்ணனைக் கொல்லவேண்டுமென்று கடுங்கோபங்கொண்டு, தீர்க்க வயிரமனவுறுதிபெற்று, சத்தியலோக சித்தியவாசியாகிய சதுர்முகன் கணைதாங்கி, உயர்ந்த பூஜைமுதலிய உபசாரங்களெல்லாஞ்செய்து அபிமந்திரித்து, கர்ணனைக்கொன்று இன்றையப்போரை இனிதின் முடிக்கவேண்டுமென்று மேதவதாஸ்தோத்திரமாசாரியவணக்க முதலி யனவற்றைப் புரிந்து பிரயோகஞ்செய்தான். அந்த பிரம்மாஸ்திர மானது தான்குமுகத்துடன் தானுவிதக்கோலமாய் வெளிப்பட்டு, முகிலேழையுங்கருக்கி, கடலேழையுஞ்சுருக்கி, புவியேழையுமுருக்கி தீவேழையுதியக்கி, மண்டலமேழையும் வாட்டி, மருத்தெழு வரையுமோட்டி, உலகமொடுங்குங்காலத்தில் உரத்தெழும் வடவா முகாக்கினிபோல் அனல்வீசி, சிடசிடவென்றெரிந்துவந்து கர்ணனைக் காய அடுத்தது. அதனை உரமாகிய மந்திரகிரியினுமுயர்ந்த புயமார்க் தமார்பினையுடைய கர்ணராஜன்கண்டு கடிந்து, அப்பிரமாஸ்திரம் பெருங்கோபத்துடன் வருவதையுணர்ந்து, மிகவிரைந்து, உடனே தானுரு பிரமன்கணையெடுத்து வந்தித்துச்சிந்தித்து வாழ்த்தி முறைமையாக விடுத்தான். இந்தக்கணை அந்தக்கணை மேல்விழுந்து அண்டங்களெல்லாம் பிதறவிட்டு முனைந்து எதிர்ந்து, இதனை அது விடாமல் அதனை இது விடாமற் கட்டிப்புரண்டுவிழுந்து, முனையோடு முனைமுட்டித்திரண்டு எழுந்து, தீவு தீவாந்தரங்களிற் பாய்ந்து

சாய்ந்து அகன்று, அகோரமுற்றிருந்தன. அப்போது இந்தப் பிரம்மாஸ்திரங்களைத் தொடுத்துத் தடி தடித்து கொடிப்பொழுதில் ஒருவரையொருவர் கொல்லவேண்டுமென்றிருந்த போர்த்திறம்பெற்ற கொற்றவிருவருந் தேர்தூண்டி, மூண்டெழும் போர்செய்யாமல் வேறுபாணங்களுந் தொடாமல் கைபிற்பிடித்தவில்லையும் வளையச் செய்பாமலிருந்தார்கள். இப்பால் மணஞாறிய மலரேறிய மணிமகுட முடியோராகிய கர்ணச்சுனர் இருவருந் தேவர்கள்தந்த வரங்களினால் உருச்செபித்திருந்த மந்திரங்களை உச்சரித்து விடுத்த பிரம்மாஸ்திரமாகிய வெவ்வாளிகளிரண்டும் எங்கும் ஓடி ஓடி, யாவுஞநுழைந்து, நுழைந்து, பெருங்கோபங்காட்டிப் போராடின. அதனால் இருவர்படைஞரும் இருதிறச் சேனையும் நடுங்கி அடங்கி மடங்கி முடங்கி ஓடுங்கினர்கள். அப்போது கறுத்த யுத்தகளமூர்திக்குகளும் இரத்தம் மடுவாயெழுந்து வழிந்தோடிப் பூமிதேவியாருக்கு வெள்ளைப்புடவையாகிய ஏழுசமுத்திரமும் சிவப்புச்சாயந் தோய்த்ததுபோலாயது.

கர்ணன் காண்டீபன் கழுத்துக்கிலக்காய்
நாகாஸ்திரம் விடுக்க, அதுகண்ணன்
செயலாலவன் முடியையிடறிச் செல்ல,
பின்னதைக் கருடப்படையாற்
கிரீடி யழித்தல்

கேட்டீரோ ஜனமேஜயமகாராஜனே! மறுபடியுந் தினகரன் மைந்தனாகிய அங்கதேசத்தலைவன் தெழித்து, மகபதிமைந்தனாகிய கிரீடியைக்கொல்ல வேண்டுமென்று மதித்து, கதித்த கோபம் மிகமிக விளைய, காணிமாட்டி, டங்காரங்காட்டி, இதனை போசிப்பதாயினன். அஃதென்ன வென்றால், இவ்வர்ச்சுனனேனு எத்தனை அஸ்திரங்களைக் கொண்டு அமராடினாலும் ஒன்றினுமிளைத்து இவன் இறக்கத்தக்கவனல்லன். ஆதலால், வெகுவாகிய கிளைகள்செறிந்த பழங்களுடன் அடர்ந்த இலைகள் நிறைந்த மரங்களையுடைய காண்டவவனத்தை இவன் எரிபடுத்தியபோது, புகையும், சிகையும், பொறியும், நெருங்கியெழுந்து சீறித் தழல்மண்டியகாலத்தில், அந்தவெப்பஞ்சகிக்கமாட்டாமற்கூரிய அம்புவேகம்போல் அம்பாதித்தில் எழுந்து, இவனுல் அடிபட்டுவிழுந்து, இந்திரனுற் பிழைத்தெழுந்து, நம்மிடத்தில் அடைக்கலம்வந்து, விஜயனைக்குறித்துப் பகைமேற்கொண்டு வெம்பகுவாய்கள் ஐந்தினையுடைய நாகாஸ்திரத்தை விடவேண்டும்." என்று யோசித்

தவனுய் அதற்குத் திருமஞ்சனமாட்டி நீர்த்துவட்டிப் பரிமளத் திரவியம் சந்தனபாளிதம், குங்குமாகூதை, இவைகளேச்சாத்தி, தூபதீபங்கொடுத்து, தேன்றுளிக்குங் குளிர்ந்த புட்பமாலே களுஞ்சூட்டி, ஆசாரவிதியாய்ப் பூசைபுரிந்து, ஆகமவிதிப்படி அர்ச்சனை செய்து, அநேகங்கலப்பா லூட்டி அருந்தமுறை பிரதக்ஷணம்வந்து, அன்புடன் மிகுபக்தியாய் அடங்கி ஒடுங்கித் தீர்க்கதண்டமாக வணங்கி, வழிபடுகடவுளேத்தொழுது, ஆசாரியரைப்பணிந்து, கரத்தா லெடுத்து, நாணியிற்றொடுத்து, கலங்காதிழுத்து, கழுத்தைக்குறித்து, நீ இன்னிடத்திற் கணன்று வெறித்துக் காண்டீபனுயிரைப்பிரித்து விடம்வண்டியதென் றுரைத்து நெறித்து, பற்கடித்து, இதழ்மடித்து, வியர்வெழவிழித்து, மார்புரளத்தாங்கி காதுபரியந்தங்கைசேர்த்து வாங்கி, ஓங்கி மண்டியிட்டுவிடுவதாயினுன். அச்சமயத்திற் பலம் பொருந்திய சாரதியெனுஞ் சல்லியராஜன் தடுத்து "ஓஅங்கராஜ னே! அவசரப்படாதே: இப்போதிப்பாணத்தை அர்ச்சுனனுக்கு எங்கே குறிவைத்துவிடப்போகிறுய்?" என்று கேட்கவும், அர்ச்சுன னுடைய கழுத்துக்குக் குறிவைத்து விடப்போகிறேனென்று கர்ணன் சொல்ல, "ஐயோ! இப்போர்ப்பட்ட அஸ்திரத்தை விருதாவிற் கெடுத்து விடாதே. நான் சொல்லுவதைக்கேள். நேசவிசுவாச பாசப்பரிவினை யுடைய நறைவிரிதுளவணிந்த ஜகன்மோகன மாபஞ்சிய கபட நாடக சூத்திரதாரி மகாவஞ்சகநெஞ்சன். அவனர்ச்சுனனுடைய தேரின்முன்னே அமர்ந்திருக்கின்றன். அவன் ஏதாகிலும் ஒருதந்திர எந்திரம் பண்ணுவான். ஆதலால் விஜயனுடைய கழுத்துக்கு லக்ஷ்யம்பிடிப்பதை விசாலமாகிய மார்புக்கு நேராகப் பிடிப்பாயாகில், அந்தமதுசூதனன் செய்யும் பித்தலாட்டத்திற்குத் தப்பிப்பட்டால் அம்மார்பிலே படட்டும். அல்லவென்றற் கழுத்திலேபிடிக்கட்டும். அதுவுந்தப்பினுல் மண்டையில் தாங்கட்டும். இந்தமூன்றுந் தப்பிப் போகமாட்டாது. எப்போதும் எதிரியிருக்கும் நிலைபரிந்து ஒருகாரியஞ் செய்யவேண்டும். ஆகையால் பார்த்தனுடையமார்பு புதையும்படியாய்ப் பாம்புக்கணையைப் பிரயோகஞ்செய்" என்று சொல்ல, இந்த உறுதிவார்த்தையை வினவசத்தினுல் உணராமலும், யோசிக்காமலும் போனன் ஆதபன் குமாரனுகிய கர்ணனவன். இப்பால் மழுவாயுதந்தாங்கிய செங்கையோங்கிய பரசுராமனென் னுந் தருவாசிரியன் மனப்பூர்வமாய்த் தனக்குக் கொடுத்திருந்த வரிபெற்று மணிகட்டி வயிரங்கொண்டிரா நின்ற வீரவில்லானது மண்டலமாய்வளைய, அதிற்பூட்டிய நாணேணை மிகுந்தமலிய,

கர்ணபரியந்தம் இழுத்துமுனைந்து, தறுகணெடுங்கோபமூண்டு, எதிர் வந்தெடுங்கணையை அதஞ்செய்யும் இடிக்கொடியையும் அதஞ்செய் யும் மேகவாகனத்தைமுடைய தேவேந்திரன் மைந்தனுகிய சிலை விஜயனது அழகுபெற விளங்குங் கழுத்து அறுந்துவிழும்படியாய் பிகமொழிந்து, அழல் புழுங்கி, மகிழடைந்து, எதிர்செறிந்து நின்று பிரயோகஞ்செய்துவிட்டான் வண்டுசென்று நின்றமதுவுண்டு உள் ளத்திற்களிகொண்டுபாடுங் களினநாயகன் மகனுகிய கர்ணன்.

அப்போது வெளிப்பட்ட அந்த நாகாஸ்திரமானது பம்பரம் போற சுழன்று, அம்பாத்திலுயர்ந்து, விம்பமெனச் செறிந்து, கம்ப மெனவளர்ந்து ககனவாணருங் கண்புதைத் தொதுங்க, அகனிலத்த வர்கண்களும் பிதுங்க, மூழைகொள் பாதலத்தவரும்பதுங்க, விழை கொள் போர்முகத்தவரும் வதங்க, அழலெழுந்து தாவிட, விஷமு மிழ்ந்து மேலிட, அலைகடல்பொங்கிப் புரண்டிட, மலைகள்குலுங்கிச் சுருண்டிட, ஆதபன் சுடர்மறைய, சேடனன் முயிர் குறைய, ஆரியர் துயர்நிறைய, அம்புலிக்கலைமறைய, தாராகணங்கள்விழ, கோரார் பிணங்களெழ, தாராதிபுத்திரர் அழ, பாரோர்தெய்வங்கள்தொழ, தருதிகளெட்டுஞ் சிந்திச்சிதற, புந்திகலங்கிப் போரிற்பதற, பந்தித் தெட்டுப் பாலர்கள்பிதற, தொகுதிப்பாகிய தொடுகடல்கதற, வாள் விழிவழிமே வண்பொறிபறக்க,வைபகமெல்லாம் வாடியிறக்க,வாயைத் திறந்துவரும் விஷஞ்சிறக்க வளரும்பது நாகீட்டிக்கதறக்க,மறுக்கமுண் டாம்படி படபட கடகட படரென்றுவெடித்து, நெருக்கமுண்டாம் படி திடதிட கடகட திடரென்று தெறித்து, அண்டச்சுவர் விண்டு பிண்டு போகும்படியாய் வடவா முகாக்கினிபோல் வளர்ந்தெரிந்து, ஆலகாலவிஷம்போல் அழலெழுந்து, அகண்டமாருதம்போல் தழல் சொரிந்து, வருவதாயது. அப்படிவராநின்ற நாகாஸ்திரத்தைக்கண்ட காவலர், பூவலர், நாவலரெல்லோருங் கலங்கி, அலமலங்கி, கலை நழுவுங்கி, விலங்கிநைந்து நொந்தார்கள். துரியோதனனுடைய சேனை யிலுள்ளார் சிரித்துக்கலித்து, காண்டீபன் இன்று ஆவிபொன்றினு னென்று நாகாஸ்திரத்தைப் புகழ்ந்து அசமகிழ்ந்து, கெலித்தோ மென்று முகமலர்ந்தார்கள். வஞ்சமற்ற தருமராஜன் முதலாகியபடை மன்னரெல்லாருங் கண்ணீரும் விசனமுங் கலந்துபெருகி, உண்ணீ ரும் உடலும் உலர்ந்து உருகி,மனமு முகமும்வாடிக்கருகி,வேறுவகை யில்லாமல் விதியேகதி யென்றிருந்தார்கள். இவ்விதமாகப் பாண்ட வராதியர் கலங்கிப் பிரபாதங்கொண்டு ஏக்கமுற்றிருக்குங்காலத்தில்,

சாரதியென்னுந் திருமாலாகிய பெருமான் யாவருடைய உள்ளமும் மையும்படிக்கு கரன்கழுத்தை காடிவரா கின்ற காகாஸ்திரத்தைக் கண்டு, தாமேற்கொண்டிரா கின்ற தேரிற்பொருந்திய சக்கரங்களானது சரசரவென்றுபூமியிற் புதையும் படியாகத் தம்முடைய திருவடிப்பெருவிரலினால் அத்தேரையுறுத்தி ஊன்றினர். அப்போது அக்கினிதேவன் கொடுத்த அழிபாத தேர்ச்சக்கரங்கள் கண்ணன் எண்ணிய வண்ணப்படிக்குப் பன்னிரண்டங்குலம் பாரிற்புதைந்தது. அக்காற் கர்ணராஜன் விடுத்த காம்புபோன்ற பாம்பாஸ்திரமானது ராமபாணம்போல் ஓரேழுங்காக வரும்போது ரதந் தாழ்ந்தமையால் தனஞ்செயனுடைய மார்பையுங் கழுத்தையும் விட்டுக் குறிதப்பி, அவன் தெய்வலோகத்திற்குப் போயிருந்தபோது அவன் தந்தையாகிய தேவேந்திரனுற்சூடிய ஜோதிமயமான மகுடத்தின் மேல்வந்துவிழுந்தமாதி இடமிப்பின்புறத்தோடியது.

இப்படி கிரீடியின் கிரீடத்தை இடமியராகமானது தனது வேகமடங்காமற்பின்பறிந்தோடவும், அந்த காகாஸ்திரத்தைத் தான்நேருக்கு நேர்போர்புரிந்தழிக்கும்படியாய் விஜயகாண்டீபத்தை வலீத்து,வச்சிரக்கருடபாணத்தைப் பூட்டிக்கொண்டு,தேவர் முதலியயாவரும் இந்த அர்ச்சுனனுக்குப்பிடரியிலுங் கண்களுண்டோவென்று மிகமகிழ்ந்து கொண்டாடிப் புகழும்படியாய், வலிமைபெறும்நிலைமையுற கின்று இருமீகாளும் பரிவுறநாணியிற்பூட்டிப் பிடித்திருந்த அவ்வச்சிரக்கருடபாணத்தைப் பின்புறமாக இழுத்து விசையாகவிட்டான். அப்படிப் பின்புறமாகத்தொடுத்த அவ்வச்சிரக்கருட அபின்முகாஸ்திரமானது பூர்வங்காண்டவவன தகனத்தில் இந்தப்பாம்பினுடைய தாயையும் மகாலத்து இதன்வாலையுங் குறைத்த பெரும்பழக்க வழக்கத்தினாற் பின்றொடர்ந்துபோய், அந்த நாகத்தின் பருத்ததேகத்தை இரண்டு கூறுகக்கிழித்து அலமரச்செய்தது. உம்பர்பிரானீன்ற குரிசிலாகிய தனஞ்செயன் முதுகின்புறமாய் அபிமந்திரித்துவிட்ட அபின்முகப் பிறை வெங்கணைபால் இருகூறுய்க் கிழிந்த தகூகன்பிள்ளையாகிய அச்சுவசேனனென்னும் நாகமானது திடதைரியத்திறத்துடன் கிழிபட்ட உடலோடும் பழிபட்ட ஐந்தலையோடுந் திரும்பி கர்ணனிடத்தில்வந்து, "ஓ என்னுண்டவனே! இந்தத்தடவை நீர் வைத்தனுப்பியகுறி தப்பிப்போயது. இன்னொருவிசை என்னை விடுப்பீராகில், தப்பாமல் அவன்தலையை வாங்குகிறன்" என்று கூவிக்கூவிச் சொல்லியது. அப்படிசொன்னபோது தன் தாயாகிய குந்திதேவியாருக்குத்

தான்கொடுத்த வரத்தையும்தன்னுடைய வலுமைமிகுந்த உரத்தை யும் நினைத்து, நாகத்தைப்பார்த்து, "ஓ நாகேந்திரனே! எனக்கு எப் போர்ப்பட்ட இடர்கள் வந்தாலும் நீங்காத வியாகூலம் சேரிட்டாலும் நான் அதிரதத் தலைவனென்பதற்குப் பழுது வராதபடி ஒருகணை தொடுப்பதையொழிய,மறுகணை தொடேன்.இஃதென்னுடைய மதம். ஆனதால்,இன்னொருதரம் முனைந்துன்னை விடுக்கமாட்டேன்"என்று வீரகண்டையார்ந்த அங்கர்குலாதிபன்சொல்லவே,அத்தமொழிகேட்ட அச்சுவசேனனென்னும் நாகம் மெத்தவருந்தி,ஔதாரியாகிய அங்கர் பிரானை நோக்கி, "அரசனே ! காண்டவவனதகனத்தில் அகப்பட்டு உடல்வெந்து வால் தறிந்து என்தாயையுமிழந்து இனியில்லா இடர் பொருந்திய நானே,அந்த இடரையும் என்மநோதுக்கத்தொடர்வை யும் நீக்கிக்கொண்டு பிழைக்கவேண்டுமென்று பேராசைகொண்டு உம க்கே அடைக்கலமென்று விரைவுடன் ஓடித்தேடிவந்து என்னைப் பாணமாக எடுத்துக்கொள்ளுமென்று உம்மையடுத்தேன். நீரென்னை ஆகரித்துத் தினத்துக்கு ஆயிரங்கலப்பாலூட்டிவளர்த்துவந்தீர்.உம்மி டத்திற் பூரணமாகப்புசித்து வளர்ந்த என் பகையும் உமதுபகையு முடியும்படிக்கு விஜயனை வெல்லலாமென்றிருந்தேன். நான் எண்ணி ய எண்ணத்திற்குப்பழுதுவந்தது. ஐயோ! உம்முடைய வில்லானது சமயுக வலியாமல் ஒருமுனைக்கொருமுனை நின்தாழ்த்தியாக உதறி யதோ? குறிபார்க்குமுன்னை உமதுகை பதறியதோ ? நாணிக்குமெரு கில்லாமற் குதறிபதோ? நேராகச்சென்ற எனக்குப் புத்திசிதறியதோ? மற்றியாதோ ? அதைபறிபன். ஒருவிசைபிழை போனேன். இன் னொரு விசைதப்பாமற் பார்த்துவிடுகிறனென்று நானெத்தனையோ வேண்டிக்கொண்டும், என்னை மறுபடியும் விடுவதற்குச் சம்மதியாமல் நீர் தடுத்துச்சொன்னமையால், இவ்வுலகத்தில் மலையையுங் கோபு ரத்தையுமேந்தித் தூக்குகிறனென்று அநேககாலம்பூரணமாயுண்ட ஒருவன் எல்லோருங்கூடித் தூக்கிவையுங்களென்ற கதைபோலும், நிகாலமிடுகிறனென்று நாலுவருஷகாலமாய்ச் சாப்பிட்டு அவசரக் கோலம் அள்ளித்தெளித்த அம்மையார் அகந்தைபோலும் பழிச் சொல்விளைத்து, நானுமிளைத்துத் துயராற்களைத்து, இத்தப்பூமியில் உயிர் பிழைத்து இருக்க மாட்டேன்" என்று அங்கர்பிரானுடன் சொல்லி மிகவு மெலிந்து, மெத்தவுநொந்து, அத்தகனிடஞ்சேர்ந்தது அருச்சுனனுற்பிளக்கப்பட்ட அச்சுவசேன னென்னும் நாகாஸ்திரம்.

சல்லியன் கர்ணனை வெறுத்துச் சாரதித் தொழிலை விட்டபின், அவன் வேறு சாரதி கொண்டு அருச்சுனனோடு போர்வினைத்தல்

இப்பால் உதயகிரியி னுச்சிலெழுந்த சூரியனது ஒளிபோற் பிர காசித்து வெற்றி பெற்றிருந்த கிரீடமானது நாகாஸ்திரத்தால், நீங்க வே, குந்திதேவிதருங் கோவாகிய அர்ச்சுனன் இதயம்வெதும்பி, சிறந்த நிலைக்களாபுரஞ் சிகரம் போயிருந்தால் எப்படியோ அப்படி முடியிழந்து, சக்கரங்கள் புதைந்த தேரின்மீது வெற்றிபெற்ற வெம்புலி போலிருந்தான். அப்போது செஞ்சுடராகியசூரியன் மேற் குக்கடலில் மூழ்குவதற்குமுன்னமே கிழக்குக்கடலினிருந்து வெண்சு டராகிய சந்திரன் சோடசகலைகளோடு உதித்தாலெப்படியோ அப்படி போலும், (புழைக்கடைவாசலாலொருத்திபோனாள் தெருவாசலா லொருத்திவந்தாள்) என்றுகூறும் பழமொழிபோலும் கறுத்த கள மேகம் போன்ற கண்ணனைவர் வைரமணிகளினுலாகிய ஒருவச்சிர முடியைத்தமதுமைத்துனனுக்காக மதுமலர்க் கரத்திற்கொண்டு, முன்னிருந்தமுடி பின்னே தாழப் பின்னிருந்தமுடி முன்னேவாழ, கிரீடியானவன் சுவாமிபவணங்கி இணங்க, இந்த அகண்டசாம் பிராஜ்ய முழுதும் நீயே ஆண்டு அரசுசெய்யக் கடவதென்று ஆசீர் வதித்து, அவன்முடிமேல் முடிவிசேஷமாய்த் தருத்தருளினார் அத்தலட்சுமிபதியாகிய முகுந்தன். கேட்டீரோ ஜனமேஜயமகாரா ஜனே!

> "நாகா யுதந்தப்பி நரனுய்ந்த பொழுதத்து நாகக்கொடிச்
> சேகான நெஞ்சத்த வன்சேனை யிற்றன் செருச்சேனையிற்
> பாகார்க டாயானை நரபாலர் மகிழ்வோடு பரிவெய்திஞ
> சேகா தசந்தன்னி லெக்கோளு நிகரென்ன விகலின்றியே."

இப்படி நாகஸ்திரந் தப்பிப்போய் நரனுகிய அர்ச்சுனன் பிழைத்த போது, நாகக்கொடியோன் முதல் அவனைச்சார்ந்த வயிரமனத்தோ ராகிய சேனைகளும், மன்னர்களும், வாடிய கமலம்போல்முகமூடித் திகைத்திருந்தார்கள். வானுறுபோற்பொழிகின்ற மதமுற்ற பட்டத்து யானைபெற்றபாண்டவர்களும், அவர்களுக்கு வேண்டியவர்களும், மற் றைச் சேனைமன்னர் முதலாகியபேர்களும், ஏகாதசஸ்தானத்திற் குரு விருக்குந்தன்மைபோற் பரிவுடன் மகிழ்வற்றுச் சண்டையற்று நின் றூர்கள். இவர்கள் சரிதமிவ்வாறுக, மத்திரதேசாதிபதியனுகிய சல்லி

திரபூபதியென்னுஞ் சல்லியன் அங்கதேசனை நோக்கி, தனக்குள் தர்மனிலகருதி விசனப்பட்டான். அஃதென்னையெனில் "காமிவனுக்கு அங்கேகமாயனிருக்கின்றன், வகைமோசஞ் செய்வான், நீ மார்புக்குநேராய் லக்ஷ்யம்வைத்து விடு என்றும், அப்படிவிட்டால் ஓரிடந்தப்பிவிட்டாலும் மற்றோரிடத்து மாட்டிக்கொள்ளுமென்றுஞ் சொல்லியும், நமதுசொல்லை அலக்ஷ்யஞ்செய்து அங்கீகரியாமற் போனான். இவனுடைய ஆங்காரத்தை என்னென்று சொல்லலாம்? மறுபடியும் நாகாஸ்திரம்வந்து எத்தனையோவித உபசாரம்புரிந்து, 'ஐயா! ஒருதரந்தப்பிப்போயினேன். இன்னொருதரம்விடுவீராகில் தப்பாதபடி படுவேன்' என்று வேண்டியும், அதைமீட்டும் விடாமல்மறுத்தான். இதுஎன்னகர்வம்? யுத்தஞ்செய்யுங்காலத்திற் சமயோசிதமான யுத்தியை நான்சொன்னலுங் கேளாமல், தானும் அப்பாதகக் கபோதமதந்து நினைவற்றுவிடுகின்றன். இவைகளையெல்லாம் யோசிக்குமிடத்தில் இவனுக்கு சாரத்தியஞ் செய்வதில் சமக்கிழமையன்றி, சிறப்பில்லை" என்று திருமாலுக்கொப்பாகிய சல்லியராஜன்மனதொந்து, அர்ச்சுனனுக்கெப்போதும் ஒப்பான போர்ச்சிங்கமாகிய அக்கர்ணனைப் பார்த்துச்சிலவாக்கியஞ் சொல்லுகின்றன்.

"என்னலு மரிதித் தடந்தேர் விரைந்தார்த லினியென்றுமற்
றுன்னலு மரிதந்த விசயன்ற னுயிர்கொள்ள வுன்னித்தபோர்
பன்னகதுவசற்கு மரிதா னுனைக்கொண்டு பாராளுதல்
மின்னுக புங்கத்தை வீணே படுத்திட்ட விறல்வேந்தனே."

"ஓ நாகாஸ்திரத்தை வீணாகச்படுத்திய கல்வெற்றியோனே! உனக்கிஷ்டமானபடிக்கு உன்னுடைய தடந்தேரைச் சல்லியாய்ச் செலுத்துவதான சக்தி என்னிடத்திலில்லை. இனி என்றைக்கும் இந்த அருச்சுனனுடைய பிராணனைவாங்கப்போகிறவல்லமை உன்னிடத்திலுமில்லை. இது உன்னாலாகாது. அது என்னாலாகாது. அப்போது நேரிட்டிருக்கின்ற இந்தப்போரை உன்னாலேயென்றுதான் பாராளற்கநேகமான ஆவல்கொண்டிருக்கும் நாகத்துவஜனுகிய துரியோதனமகாராஜனுக்கு அந்த எண்ணம் ஒருக்காலும்மறைவேறப் போகிறதுமில்லை. இதுகெட்டியாயிருக்கட்டும்" என்று சொல்லி, அழகியபருத்தி தேவிலையிற்றில் முதற்பிள்ளையாகப்பிறந்த ஒப்பற்ற யாளிபோன்ற கர்ணனுடைய தேரைக் கண்ணனைப்போலச்செலுத்தவும், பெரும் போரைப் புகழ்பெறமுடித்துப் பெருமையைவளர்த்துத் துரியோதனனைச் சுடர்முடிபெறவைக்க வேண்டுமென்னவும், எண்ணங்

கொண்டிருந்தமேலாகிய கீர்த்தியையுடைய சல்லியராஜன்காரியமில்லாத கர்ணனுடையதேரிற் ருன்கைக்கொண்டிருந்த சாரதித்தொழிலையும், அதற்குத் தகுந்த வேடத்தையும்விட்டு, தேரைழுகிப்போன மலரைவிட்டு நீங்கிய சிறைவண்டைப்போல் தடாலென்றிறங்கி, ராஜவீர அலங்காரம்பூண்டு, நீண்டதன்னுடையவில்லை மறுபடியுங்கைக்கொண்டு, அந்தரமாகத் தன்சொந்தரதமேறி, யாவருக்கு முந்திவந்து இருந்தான். இப்பால்வெற்றி வீரமிருந்த கர்ணமகாராஜன் சல்லியனுகியசாரதிபோய் விட்டவுடனே பழயசாரதியை அழைத்துத்தனது தேரைவிடும்படியாய் அமைத்து, வேங்கைப்புலியானது மேகம்போன்ற தும்பிக்கை யானையுடன் வெம்போர் பொருந்தப் புறப்பட்டதுபோல் தேர்செலுத்திநின்று ஆர்ப்பரித்து அருமையாகிய வில்லைவளைத்து, அண்டங்குலுங்கஞாணிதெறித்து, ஆகாயத்திலிருந்த தேவர்கள் ஆச்சரியப்படும்படி தேகமுழுவதுந் தீபம்போல் எரியும் படியான கோபங்கொண்டு, அனல்வீசுகின்ற அஸ்திரங்களைவாரிவாரி மாரிக்காலமாரிபோல்தூவினன். அதுகாலையில் வெற்றிப்பெண்ணுகிய வீரலட்சுமியின் திருக்கண்ணேக்கத்தைத் தனதிருதோளிலும் பொருந்தும்படியாய்ப் புனைந்திருக்கின்றவிஜயன் தனதுவிஜயகாண்டீபத்தைப் பிடித்து, அளவில்லாத பகழிக்கூட்டங்களை எய்து, பருந்துங் கழுகும்பறக்கும் படியாகிய போர்முகத்தை வெற்றிகொண்டு, சூரிய புத்திரனுகிய கர்ணன் தொடுத்தகணைகளின் முனைமுகங்களெல்லாம் பிளந்து கட்டுகள் தளர்ந்து போகும்படி முனைகாட்டி அவனுத்குத் துணைவந்த பகைவரையெல்லாஞ்சிதைத்து உதிரமுழுகக் காட்டினன்.

கர்ணன் தனதுதேர்புதைபட் டெடுக்கும்போது கணையேவிய அருச்சுனனையுந்தருமத் தையுநிந்திக்க, கண்ணன் சில நியாயங்கூறித்தேற்ற, மீட்டு மவனேடமர்விளைத்தல்

ஓ ஜனமேஜய ராஜனே! இந்த அர்ச்சுனன்புரிந்தவீரவெற்றிப் போரைவிட இன்னெருவர்யுத்தம் பண்ணினரென்றுஎவர்களைக் குறித்து எவர்கள் சொல்லுவார்கள்? செப்புதற்கரிய ஒப்புவமையில்லாத இப்பேர்ப்பட்ட சண்டையை இருவரும்விளைத்து வரும்போது, சகல உலகும் அதிரும்படியாய் நடத்துவருகிற பெரும்போரின்மத்தி

யில் அருச்சுனன்நின்று, மேகமுழக்கம்போல்யாவருக்குங் கேட்கும் படியாய் முதிர்ந்தகோபத்துடன் கர்ணனைப்பார்த்து, "ஓ அங்கராஜனே! உனக்கு ஆசாரியனுகிய ஒருபிராமணனிட்ட சாபமானது வந்து இப்போது உன் ரதத்தைமூழ்த்தப்போகின்றதே! உன் கழுத்தை அறுக்கப்போகின்றதே" என்று ஆக்ரமித்துச்சொல்லி, பராக்கிரம பாணங்களைச்செலுத்தி எதிர்வந்தான். இந்தவார்த்தை சொல்லி வாய்மூடு முன்னே எதிர்த்துவந்த கர்ணராஜனேறிய தேர்ச் சக்கரங்கள் புதைந்தவுடனே குதிரைகள் நடையற்று நின்றுவிட்டன. அப்படிநின்றகுதிரைகளை ஓட்டி ஓட்டிச் சாரதியுங்கைசலித்து, ஜல் தியாய்ப் பூமியிற் குதித்து, "ஐயா! சக்கரங்கள் நிலத்திற் புதைந்தன" என்றுசொன்னன். அந்தச்சொல் சொல்லிமுடியுமுன்னே கர்ணன் வில்லையும் பாணத்தையும் நிலத்திலெறிந்து, கலத்திலிறங்கி, காளை றிய தேரைப்போல் தனது மனமேறிய சீரு மெலிவடைந்தவனுய், "ஐயோ! நமக்குமனப்பூர்வமாய்ச் சகலவித்தைகளையுங் கற்பித்தருளி ய பரசுராமர் யுத்தசமயத்தில் மந்திரங்கள் உதவாமல் மறந்து போகச் சாபமிட்டார். அதனுடன் கூடத் தேர் புதையும்படியாய் ஒருபிரா மணனிட்ட இந்தச்சாபமும் இப்போதுநேரிட்டதே" என்று பழமை பாராட்டி நினைத்தான். இந்தப் பொல்லாத சாபக்கொடுமை யில்லா விட்டால், அங்கராஜனுகிய கர்ணன் எப்போர்பட்ட பலம்பெற்ற யுத் தத்திற்கும் பின்னடைந்து நின்று பயப்படுவனே? அப்பால் தனது நெற்றியும் முகமும்வியர்க்க, இருகண்ணுஞ் செவ்வரக்கைப்போற் சிவப்பேற, மனதுவெம்பிக்கும்பியெரிய மயக்கமடைந்து தேர்புதை யச் சபித்த சீரியோனைவாழ்த்தித் தக்குநோக்கிப்பணிந்து எழுந்தி ருந்து, பூமியைச்சுளித்து பறித்து, அடிசசட்டத்தில் தன்தோளைக் கொடுத்து நெக்கி முக்கி, பூமியும் பெயர்ந்து கிளம்புப்படியாய்த் தூக் குவதானன். அவனுரெனில், தான் ஒருதவியுமில்லாமல் தன்னி யற்கையால் வெற்றிகொற்றம்படைத்த வில்வல்லமையைக் காட்டு வதே யல்லது, ஒருவருதவியாகிய செயற்கைப் பலன்களினுல் திறம் பெறநினையாத செல்வன்; செங்கதிர்ப்புதல்வனுகியகர்ணன்.

அந்தத்தருணத்தில் அர்ச்சுனனவன் கரவேக சரவேகங்களைக் கொண்டு, தனது வில்லாகிய விஜயகாண்டீபத்தைச் சரகாண்டீனை கொடுத்து, எண்ணிறந்த கணைமாரிகளை ஏகமாகப் பொழிந்தான். இந் தக்கணைகளெல்லாம் வெறுங்கையோடு நின்ற கர்ணனுடையமே னியைத் தவிட்டுச் சல்லடைக்கண்களாய்த்துளைத்துச் சல்லியாக்கி,

இத்தப்புறத்திலிருந்து அத்தப்புறத்திலும், அத்தப்புறத்திலிருந்து இத்தப்புறத்திலும் உருவியோடவும், உதிரங்கள் வழித்து நிலமீது சொரியுந்தாரைகள், ஆகாயத்திற் செல்லுகிற இவன்தந்தையாகிய சூரியபனது கிரணங்கள்கடலூடுபாய்ந்து தாக்குந் தன்மைபோன்றிருந்தன. இத்தன்மையாகிய வருத்தம் அடைந்த கர்ணன்தனது ரதத்தைத் தோள்கொடுத்துத் தூக்கியதைவிடுத்து, அர்ச்சுனனுடைய தயையற்ற முகத்தைப் பார்த்து, "அப்பா அர்ச்சுனா! அடா அதிசூரா! ஆ! ஆ! புகழ்வீரா! ஐயோ எழில்மாரா, அந்தோ திகழ்தீரா! ஓ! ஓ! மலர்த்தாரா! இம்மனக்குறத்தக்கசீரா! எப்போர்ப்பட்ட இகல்வீரராலும் யுத்தகளத்தில் ஆனைக்கும் அடிசறுக்குமென்பது போல் அபாயம்வந்து தோர்விட்டிழிந்து ஆயுதமுதலியவையில்லாமல் அவதிப்படுங்காலத்தில், நிராயுதர்பேரிலும், அபாயம்அடைந்தவர்மீதிலும், பாணங்களைப் பிரயோகஞ்செய்வது உத்தமந்தானா? இப்படி செய்யச்சொல்லி எந்தநூலிற் பேசியிருந்ததோ? எந்த ஆசாரியர் உனக்கு உபதேசித்தாரோ? இதுதானோ உன்னுடைய சிறந்த ஆண்மை?" என்று சிலவார்த்தைகள்பேசி வேறொருசேமத்தேரேறி, பத்துத்திக்குஞ் சப்திக்குப்படியாய் வில்லைவளைத்து, வெற்றிவிற் கொண்ட விஜயனுக்கு முன்வந்து நின்று விசாலமாகிய கண்கள் நிமிரவிழித்து, புகைந்தெரிந்துபொரிந்து, புலிங்கஜாலப் பொறிபறந்து, அஸ்தமனகாலத்துச் செவ்வானம்போற் சிவந்து ஆக்கிரமத்துடன் வியாக்கிரம்போற் சீறி, பெருங்கும்பாகிய வீரவேந்தர்களைப்பார்த்து ஓருவாக்கியம் பேசத்தொடங்கினன்.—"ஓ நிறமாகிய நீதிநெறி நிறைந்து நின்ற தோர்வேந்தர்களே! வாழ்ந்தாலுந் தாழ்ந்தாலும் மனமடியாமல் ஓருநிலையாகிய உண்மைபாராட்டி வீரத்திறத்தைக் கைக்கொண்டிருந்தவர்கள் எவ்விதத்திலும் வெற்றிபெற்று வெகுமானம் பெறுவார்களேயல்லது, சத்தியற்று அவமானம் அடையமாட்டார்கள். இத்தப்படிக்கு ஆதிநூலோர் சொல்லியிருக்கின்ற தர்மநீதியை உண்மையென்று என்னுயிருக்குள் உயிராகநம்பி, நிலைபிசகாமல் நின்று, என்னுற்கூடியபமட்டும் பாடுபட்டுவிட்டேன். பெரியோர்கள் பேசிய அவ்வாக்கியம் என்னபிரயோசனத்தைத் தந்தது? அந்தோ! அதை நம்புவதில்இனியென்னகாரியம்? இவ்வளவு உறுதியாக மாறுமனதுடன் நான்பெற்றபேறும், நானடைந்த காட்சியும், யாவருங்கண்ணுறமனமாரக் கண்டீர்கள். என்னைப்போல் தர்மத்தைநம்பி ஏமாறினபோகாதீர்கள். பிரத்தியக்ஷமாய்த் தர்மத்தை நம்பிச்சமயத்தில் மோசமபோனேன் பார்த்தீர்களா? ஓ பால்மாறுதபக்குவசாலிகளாகிய பெரி

யோர்களே! இப்போது நான்சொன்னதைச் சித்தையிலேதெளிந்து தேறுங்கள், சேரிட்டவரைக்கும் அநுபவித்துக்! கரையேறுங்கள்" என்று மகா மனோதுக்கத்துடன் கூவிக் கூறிய காலையில், பசுவின் கன்றுகொண்டு விளாங்கனி பெறிந்த கருங்கடல் மேனியையுடைய கண்ணன் கெடாதவெற்றி பெற்ற கர்ணனுடைய இருசெவியிலும் நுழையும்படிக்கு ஓருவசனம் பேசினார்.—

"ஓ மங்களவாசம்பெற்ற அங்கதேச ராஜனே! நீ நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்துநான்குகலைக்கியானம், அந்தணர்தருமம் அரசர்தருமம், ஆச்சிரமதருமம், இவைகளையறிந்திருந்தும், இப்படியாதுந்தெரியாத வர்போற் பேசுகலமுகன்று. தருமத்துக்கு ஓருக்காலுங்குறைவில்லை. தருமந் தலைகாக்குமென்பது சத்தியமே. அப்படியிருக்க,நீயிவ்விடத்தில் தருமத்தை ஏன் நிந்திக்கிறாய்? அதருமம் ஆறுபங்குத் தருமம் ஓருபங்குமாயிருக்குமாகில், இங்ஙனந் தருமமென்ன செய்யமாட்டும்? நீசத்துருக்களையெல்லாம் வெல்ல வல்லவனேயன்றி அல்லாதவனன்று. உன்தருமத்துக்கொருக்காலுங் குறைவில்லை. நீஎப்படியும் வெல்லுவாய். அப்படியே வென்றுபாகில் வெற்றிமுடிசூடிக்கொண்டு பலன் அனுபவிக்கப்போகின்றதுரியோதனன் எப்போதென்றுகாத்துக்கொண்டிருக்கின்றான். வெற்றி பெற்றலாபத்தை அவன் அநுபவிக்கப்போகிறவனுகையால், அவன் தேடிக்கொண்ட பாவமானது அவனையுங்கெடுத்து, அவனுக்கு உதவிசெய்வதற்கு அடுத்த உன்னைப்போன்றவனையுங் கெடுத்தது. இதற்குபாரென்ன செய்யலாம்? அப்பனே! தருமஞ்செய்தவன் தருமத்தை அனுபவிப்பான். தருமஞ்செய்தவன் தருமத்தை அனுபவிப்பான். இதற்குயாதொருதிருகுமில்லை. திருகுண்டானால் நீ ஞாயஞ்சொல்லு; விறுதாவாய்த் தருமத்தை நிந்தித்துக் குறைவாகஏசி, வெகுபேருடையமனம் நோகும்படி பேசுகிறாய். அப்படி உலகவிரோதஞ்செல்லாதே. அதுமிகப்பொல்லாதே" என்று சொல்ல, வீரனுகிய கர்ணன் இது உண்மையென்று உட்கொண்டு, தருமத்தின்பேரில் தான்கொண்டிருந்த ஆத்திரந்தணிந்து, அநேகங்கோடி கூர்மையாகிய கடுஞ்சாயகங்களைமனோவேகத்திலுமிஞ்சிய வேகமாய்த் தன்னெதிர்நின்று போராடும் வீரர் முதலியசேனைகளின்மேலில் எய்தான். அவன்விட்டகணைகளினுலே எதிர்த்தசேனைகளும். எழில்பெறும் யானைகளும், வேகக்குதிரைகளும்,வெகுவிதாதங்களும், சிந்திச்சிதைந்து உயிர்மாய்ந்தன. உடனே தனதுதடந்தேரைச் செலுத்தி அருச்சுனனை மறித்து

இடக்கையில்லும் வலக்கைகாணியும் ஈர்த்துச்சீறி, கோடிகோடியாய், கும்புகும்பலாய், நிரை நிரையாய், வரை வரையாய், திரைமேலலை யாய், அலைமேற்றிரையாய், மலைமேற்சுனையாய், சுனைமேற்பனியாய் வரிசைவரிசையாய், பந்திபந்தியாய், கூட்டங்கூட்டமாய், நாட்ட நாட்டமாய், சுமைசுமையாய், முகிலூர்தியின் மகனுகிய பார்த்தன் மேனி மூடும்படிக்குக் கடுங்கணைகளை முடுக்கினன்.

தருமங் கர்ணனைத் தலைகாத்தல் கண்ட கண்ணன் ஓர்தணனுய்ச் சென்று அத்தருமப்பயனைத் தானம் வாங்குதல்

அந்தப்பாணங்களினல் அர்ச்சுனன் காரியம் வைத்தது வைத்த படியாயது. சாரதிக்கு மயிர்க்கூச்சுற்றது. பாண்டவச்சேனைகள் பரு மூச்செய்தினர். மற்ற வீரர்களெல்லாரும் அர்ச்சுனன்பேச்சு ஓய்ந்து போயதென்று சொலலிக்காச்சுமூச்சென்று கதறுங்காலையில், பார்த்த சாரதிபார்த்து அவர்களைக் கைபமர்த்தி, "ஆ! அர்ச்சுனனே!" என்று கனைத்து, அருட்கினைத்தாடுங் கனன்று, கருளமிடு கடும்பரிகள் தூண்டி, கணைகள் மேல்விழிவொட்டாமற்றூண்டி, கருணைக்கட லாகிய அக்கண்ணன் ஈண்டி, அருச்சுனன் கையிலிலபிடித்திருந்த கணை களைத்தீண்டி, வழிபடுகடவுளை மிகவும்வேண்டி, கர்ணனுக் கெதிர் தூண்டித் தாக்கென்றுகொடுத்தனர். உடனே அருச்சுனனிணங்கி, சீக்கிரம் எழுந்து அவரைவணங்கி, குறைவற்றஉபர்வுற்ற நிலைபெற்ற மலைபொத்த காண்டீபத்தைவலத்து, கிருஷ்ணமூர்த்தி ஆசீர்வதித் துத் தமதுகரத்தாற் றொட்டளித்த சரத்தைக் களங்கமற்ற சந்திர னைப்போற் பிரகாசிதலங்கும் முத்துமாலையணிந்த வீரகண்டை தரித்த அருச்சுனன் வாங்கி வின்ணணியிற் றொடுத்து, சிறகற்றமலை போல் நிறகின்ற தினகரதன் குமாரனுகிய கர்ணனுடைய தேகமெல் லாம் நிறைத்து, அவன் மனங்கொண்டிருந்த திறமெல்லாங்குறைத்து, மயிர்க்கால்களோறும் உதிர நிறைத்து, மாமிசமனைத்து மிறைந்து வழியும்படிக்குத் தொடுத்தான். இவன்தொடுத்த எண்ணிறந்த பாணங் களுந் தப்பாமல் கர்ணன்மேற்பட்டுப் புண்ணுக்கி, அவன்சரீரத்தைச் சென்னீரொழுகும் ஜலதாரை பொப்பச்செய்தன. அவன் எண்ணிய எண்ணத்தையு மண்ணுக்கி இளைக்கப்பண்ணினை. கேட்டீரோ ஜென மேஜெயமகாராஜனே! எந்த ஸ்தலங்களிலும் இவனுக்கொப்பாகிய பேர் எவர்களுமில்லைபென்னும் ஈகையும், ஓகையும், சுகதோஷ வர்கையும், ஜெயமும், எதிரொருவரில்லாத சுபமுமுடைய அங்கமீச்

சராஜன் அர்ச்சுனன்விட்ட அம்புக்கும்புகளினுற் சரீரமெல்லாங் கிழித்து வாய்திறந்து, பெருகிச்சுரந்து ஓடிவரா நின்ற குருதியாகிய இரத்தவெள்ளஞ் சூரியகிரணங்களைப்போற் கம்பிகம்பியாய்ப் பிரிட் டொழுகி, கொத்துக்கொத்தாகிய புஷ்பங்களைக் கோத்துத் தொடுத் தும் பிணைத்துமிரா நின்ற மாலைகளும், மகுடமும், கவசமும், குண்ட லங்களும், மற்ற ஆபரணங்களும், இடமாறி உருமாறித்தம்மாறி ஒன்றின்மே லொன்றேறி, உம்பருலகிற்கு வழிதேடி உன்னதத்தேர் மேற்சாய்ந்து உடலோய்ந்து கிடக்குந்திசைபற்றிருந்தும் கார்முகம் வளைப்பதும், கடுங்கணை தொடுப்பதும், நாணிதெறிப்பதுமாகிய வேலைகளைத் தான்மறந்தாலும், தன் கரங்களிரண்டும் அவ்வேலை களைத் தங்கள்வேலைகளாக இடைவிடாமற் செய்துகொண்டிருந்தன. அக்காரியத்தை அருச்சுனன்பார்த்து, கர்ணன் இன்னுஞ் சண்டை செய்கிறானென்று கடுங்கோபங்கொண்டு, கனற்பாணமுதலிய கணைகளைக் கடையுகமாரிபோல்விடாது பொழிந்து பாய்ச்சிக்கொண் டிருக்கின்றான். பிரக்ஞைதப்பித் தேர்மேல் விழுந்தகர்ணனுடைய தேகத்தில் அருச்சுனன்விடுகிற கணைகள் ஒன்றாகிலும் படவெரட் டாமல் தருமதேவதை பிரசன்னமாய் நின்று, வாசாமகோசரச் செஞ்சாமாருதம்போல் வருகின்ற பாணங்களையெல்லாந் தான் கவளீ கரித்துக்கொண்டிருந்தது.

அத்தக்காட்சியைச் சர்வசாட்சியா யிராநின்ற தற்பரன் அறிந்து, அஸ்தமனகிரியைச் சூரியனடைவதற்கு இன்னும் இரண்டுவிரற் கடைப்பொழுதிருப்பதையுங் கண்டருளி, ஜீவன்முத்தர்களுக்கெல் லாம் ஆதிமூலமாய் வேதங்களுக்கெல்லாம் முதற்கொழுந்தாய், லோகவிரோதிகளைக் காயுந்தோறுங் காயாய், தாசாளுக்குப் போக வீடருளுந்தோறுங் கனியாய், பிரசங்கத்தில் உன்னிப் பன்னுந் தோறும் இன்சுவையா யெழுந்தருளிய அம்முகுந்தன், விசித்திர வில்லைத்தாங்கி வியன் பேரோங்கி விறற்போர்தாங்கி விளைத்துவரா நின்ற விஜயனைப்பார்த்து, "அப்பா அர்ச்சுன! நீ எத்தனைகாலம் நின்று எத்தனைகோடி பாணங்களைப் போட்டாலும், அவைகள் அந்தக் கர்ணனொன்றுஞ் செய்யமாட்டா. அதெனென்றால் இந்தக் கர்ண னுக்காகத் தருமதேவதை கண்ணருள் சுரந்து எதிர்வந்துநின்று, நீ விடுக்கின்ற கணைகளைக் கவளீகரிக்கின்றது. ஆகையால், பாணங்களை யெல்லாம் ஏன்வீணாக நஷ்டப்படுத்துகிறாய்? சற்றுநேரஞ் சண்டை விட்டிருப் பாயாகில், நான்போய்க் கண்டறிந்து வருகிறேன்" என்று

ரதத்தின்பேரிற் பார்த்தனையிருக்கச் செய்து, குதிரைகளையோட்டுங் கோலையுங் கடிவாளக்கயிற்றையுந் தேர்க்காலுடன் மாட்டிவிட்டு, மெய்ம்மையாகிய பிரமமேதஜஸ் நிறைந்த தவவடிவமைந்த வேதியனுருபமெடுத்து, அசைவற்றுக்கிடக்குஞ் சூரியகுமாரனாகிய கர்ணனிடத்திற்குவந்து, "ஓ அங்கதேசாதிபதி!

"தாண்டிய தரங்கக் கருங்கட லுதித்த தரணியிற் புளர்ந்தவர் தமக்கு
வேண்டிய தருதி யீயெனக் கேட்டேன் மேருவி னிடைத்தவம் புரிவே
னீண்டிய வறுமைப் பெருந்துய ருழந்தே னியைந்ததொன் றிக்கணத் தளிப்பாய்
தூண்டிய கவனத் துரகதத் தடந்தேர்ச் சுடர்தரத் தோன்றிய தோன்றலே"

அலைகள் தாவியடிக்கின்றகருங்கடல் வளைந்த பூமியில் தளர்வாகிய ஏழைகளுக்கு இஷ்டப்பட்டவைகளை யெல்லாந் தடையறக் கொடுப்பதுமல்லாமல், இன்னும் வேண்டியவைகள் ஏதாகிலு முண்டோவென்று உபசரித்துக் கேட்டு அளிக்கின்றதாதா வீயென்று கேள்விப்பட்டேன். நானோ மகாமருவினிடத்தில் தவஞ்செய்துகொண்டிருப்பேன். நெருங்கி வருத்திய தரித்திரமென்னும் வியாதியால் உழன்று கொண்டேன். உன்கீர்த்திகேட்டு இங்கேகாடிவந்தேன். (ஐங்ஞாதம்போலுஞ் தன்பாவந் தன்னுடை) என்பதைப்போல் நானுவந்த தற்கும், நீ கொண்டதற்குஞ் சரியாயிருக்கிறது. இது நான் செய்தபாவம்! போகட்டும்: எப்படியும் உன்னைவந்து கண்டுவிட்டேன். இனி எவ்விதத்தாகிலுஞ் சரிதான்; இப்போது என்சிறுமை நீங்கும்படியாய் நானே பின்னை, என்று சொல்லாமல், இந்த வேளையில் உன்னுயிரன்ற பொருள் ஏதாகிலும் ஒன்று இப்போதைதந்தனுப்புவாய்! ஓ ஒப்பற்ற உயர்வேகக்குதிரைபூட்டிய ஒற்றைபாழித்தேர் ஒளியாளனித்த உலகமூன்று மதிக்குந் தேனன்றலே! எப்படியுங்கிடைக்கு மென்கிற மகிழ்ச்சி கொண்டுவந்தேன். என்னைக் கைவிடவேண்டாம்" என்றார். இபபடியாக அந்தணன் சொன்னமொழியைக் கர்ணமகாராஜன் தனதிரண்டுசெவிகளிலும் அமிர்தரசம் பிழிந்ததைப்போலக்கேட்டு, தான் வெற்றிகொண்ட விஜயன் விசைகொண்டு தொடுத்த விஷக்கணைகளிலுல் மெய்தளர்ந்து தேரின்மீது யாதொரு செயலுமற்றுச் சாய்ந்திரானின்ற மெலிவையுங்கருதாது, "ஆ! ஆ! இதுவுமொரு சோதனைதான்! கல்லது" என்று கைகத்தவனுய் விருத்தபிராமணனைப்பார்த்து, "ஐயரே! மெலிவாகிய இந்தத்தசையிலிருக்கின்றநான் இப்போது உமக்குத்தாத்தக்க பொருள் யாதோ? அதைச்சொல்லும்" என்று கேட்டான். அதற்கக்கான்மறையவனுகிய நாரணன்

மனங்களித்து, "அப்பா கர்ணமகாராஜனே! இப்போதுன்கைக் காவலாயிருக்கும் உன்புண்ணிய மெல்லாங் கொடு"என்று கேட்டார்.

அந்தச்சொல்லைக் கேட்டவுடனே உள்ளமகிழ்ந்து, ஆநந்த வெள்ளத்தழுந்தி, "ஐயோ! என்னுடைய பாக்கியமே பாக்கியம்: என்கையிலில்லாத வஸ்துவைக்கேட்டு எனக்கு லோபத்துவம்காட்டி நீரும் பிரயோசன மடையாமல் எங்கேகவ்ஞுய்ப் போகின்றீர்? இப்போது என்கையிலில்லாத பாதைக்கேட்கிறீர்? என்று எண்ணங் கொண்டிருந்த எனக்கு இச்சையிலையும்படியாய் என்னிடத்திற் பெரும்பொருளாயிருந்த பேரறத்தைக் கேட்டீரே: இதுவேபோதும் ஓ சுவாமீ!

'ஆவியோ நிலையிற் கலங்கிய தாக்கை யகத்ததோ புறத்ததோ வறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலா நயக்கும் பக்குவந் தன்னில்வந் திலையா
லோவிலா தியான்செய் புண்ணிய மனைத்து முதவினேன் கொள்கவே யுனக்குப்
பூவில்வா ழயனு நிகரல வென்றுற் புண்ணிய மதனினும் பெரிதோ'

ஆ! ஆ! என் பிராணனே நிலைவிட்டு மேலேக்கிபெழுந்து கலங்கிப் பிரிந்துபோயிருக்கிறது. அது உடலுக்குள்ளே இருக்கின்றதோ, அல்லது வெளிப்பட்டு விட்டதோ, நானறியமாட்டேன். ஆனால், வேண்டின வர்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்துக்கொண் டிருந்த அந்தப்பக்குவகாலத்தில் நீர் வராமற்போனீர்! அப்போப்பட்ட காலத்தில் உமக்குக்கொடுத்து கன்மையைப் பெறுவதற்குப் பாக்கி யம் பண்ணுத பாவியாயிருந்தேன். சுவாமி! உம்முடைய சுந்தரத் தையும் பிரம்மசொரூபத்தையும் பார்க்கும்போது சத்திபமிலாத வாசியாகிய சதுர்முகனும் உமக்குநிகராகமாட்டானென்றால், திருவடி வருந்தவந்த தேவரீருக்கு நான்கொடுக்கப்போகின்ற சொற்பமாகிய இந்தப்புண்ணியம் உமக்கொருவிஷயமோ? ஆகிலும் உமதிஷ்டப்படி தாமசஞ்செய்யாமல் நான்செய்த புண்ணியமனைத்தும் இதோ கொடுக்கிறேன் பெற்றுக்கொள்ளும்." என்று சொல்லி இருகரங்கு விக்கு இறைஞ்சினன். அப்படியிறைஞ்சிய கர்ணனே மேகம்போன் ற திருவுருப்பொலிந்த பிராமணன் உவகைக்கருத்துடன் நோக்கி, "அப்பா கர்ணராஜனே! நீ நிதானமாயிருந்து கொடுப்பராயாகில் நான் பெற்றுக்கொள்ளலாம். உலகம் என்னை ஒன்றுஞ்சொல்ல மாட்டாது. நீ உடல் வருந்தியிருக்கின்ற இத்தச்சமயத்தில் நான்பெறுவனேயாகில் சுபாவந்தப்பியகாலத்தில் என்னவோ ஏமாற்றிக்கொண்டு போய்விட்

டானென்று என்னை இழிவாகப் பேசுவார்கள். ஆகையால் நீ எனக்குக் கொடுக்கப்போகின்றதை, நல்லஞாபகத்துடன் உன்னுடைய திரிகரண சுத்தியாய்த் தத்தஞ்செய்து கொடுப்பாயாகில், உனக்கும் பலனுண்டு எனக்குஞ் சொந்தமுண்டு. எவர்களாலும் யாதொரு நிந்தையுமில்லை''என்று அரவணைச்செல்வன் கேட்க, ''ஆ! சுவாமிகளே! மஹாபாக்கியம் மஹாபாக்கியம் : தங்கள்சித்த மெப்படியோ அப்படியே'' என்று தாரைவார்ப்பதற்கு உடன்பட்டவனுக, கண்ணீர்வர வழைத்துத்தத்தம்பண்ணிக்கொடுப்பதற்கு முன்னே அநாதரமாகிய மனதும் அசித்தியமாகிய பிராணனும் பிரிந்துபோமோ அல்லது எப்படியாமோ என்று அவநம்பிக்கைபடைத்து, உடனே அருச்சுனனுலடித்த அம்புகளுள் தன்னிருதயஸ்தானத்திற்பாய்ந்து துளைத்துப் புதைந்திருப்பவைகளில் ஓர் அம்பைப்பிடுங்கி, அந்த அம்பு நுழைந்தவழியால் வழிந்துவராகின்ற உதிரத்தைப் பிடித்து, ''நான் செய்தபுண்ணிய மெல்லாம் மனப்பூர்வமாய்த் தத்தம்பண்ணினேன்'' என்று தாரைநீர் வார்த்தான். தானுமந்த உதிரத்தைத்தாரைநீராக உள்ளங்கையில் ஏற்றார். கேட்டீரோ ஜனமேஜயமகாராஜனே! இப்படி ஒருவன் சாகும்போது அவனிடம் போய்த் தருமங்களையெல்லாந் தானங் கேட்கிறவனும், அத்தருமத்தை இரத்தத்தைக் கொண்டு தாரைவார்த்தால் மனங்கூசாமல் தாரைவாங்குகிறவனும், ஆகிய இப்படிப்பட்ட ஒருபிராமணன் இருப்பானு? அவனைப்போற்பட்ட பிராமணனையா வென்று கேட்பீராகில், பூர்வத்தில் மகாபலியென்னும் ராக்ஷசனிடத்தில் மெள்ளச்சென்று, குள்ளமாகநின்று, மூன்றடிமண் தானமாக வேண்டுமென்று தாரைபேற்றுக்கொண்டு, அந்த மகாபலியினுடைய பெரியவர்கள் தன்னை வெகுவாய்ப் பூசித்திருந்த நன்மையையும் போசிக்காமல், மூன்றுலோகத்தையும் மூன்றடியாக அளந்து வாயிற் போட்டுக்கொண்டு, முன்பின் கொஞ்சமேனும் உன்னிப் பாராமல், தனக்குத்தானங் கொடுத்தவனையுங்கலபெடுக்க ஒட்டாமல், ஒரேமிதியாக மிதித்துப் பாதாளத்திலொடுக்கிவிட்ட திருவிக்கிரமனென்னும் பிராமணனல்லவா?

இப்பால் புண்ணியப் பொருளை தானமாகப் பெற்ற முனிவன் கர்ணராஜனைநோக்கி, மகிழ்ந்து புகழ்ந்து,''அப்பா கர்ணமகாராஜனே! உனக்கு ஏதாகிலும் வரங்கள் வேண்டியதிருக்காற்கேள். தடையின்றித் தருகிறேன்'' என்று சொல்லவும் சூரியகுமாரனுகிய கர்ணன் ''ஓ வேதவேதியனுகிய சுவாமி! எனக்கொரு குறைவுமில்லை. நான்

இனிமேற் பிறக்கப்போகிறது மில்லை. ஒருவேளை அல்லல் படுத்தும் வெவ்வினையின் பயனால் உற்பவம் உண்டாகிறதாக இருந்தாலும், அவ்வாறுபிறப்பிலும், இல்லையென்று என்னிடம் வந்து இரப்போர்க்கு, நானும் இல்லை யென்று சொல்லாமல் இரக்கத்துடன் ஈயும் படியாகிய மனம் எனக்குண்டாகும்படியாக அளித்தருளல் வேண்டும். இதுவே யான்கருதியவரம்" என்று இரந்து கேட்டான். இப்படிமைத்தனனாகிய கர்ணன் சொன்ன வாய்மையை மெய்த்தூணையாகிய கண்ணன் கேட்டு, மேலாகிய சந்தோஷத்தினால் இருதயகமலம் மலர்ந்து புளகாங்கிதமுற்று, கமலமலராகிய இருகரங்களினாலவனைத் தழுவி, மார்போடணைத்து, செந்தாமரைமலர்போன்ற கண்களாற் கருணை நீர்பொழிந்து, அந்நீரினாற் கர்ணனுடைய தேகத்தை நனைத்து முழுமையும் முழுக்காட்டி, "ஓ உத்தமக்கொடையாளனே! நீ எத்தனை பிறவிபெடுத்தாலும் அந்தப்பிறவிகள் தோறும் உன்னை அடுத்துக்கேட்டவர்களுக்கு இல்லை யென்னாமற்கொடுக்கும்படியாகிய மனமும், அதற்குத்தகுந்த கனமும், மஹாபெரிய தனமுமுண்டாய், பெண்டுபிள்ளைகளுடன் மண்டலத்திற் பெரும்போகம் அனுபவித்து, முடிவில்முத்தியும் பெறுவாய்" என்று அநுக்கிரகஞ்செய்தருளி,

"போற்றிய கர்ணன் கண்டுகண் களிப்பப் புணரிமொண் டெழுந்தகார் முகிலே
மாற்றிய வடிவும் பஞ்சவா யுதங்கள் வாங்குகைத் தலங்களு மாகிக்
கூற்றுறழ் படலிற் கராப்பொரு புழைக்கைக் குஞ்சர ராஜன்முன் முன்னந்
தோற்றிய படியே தோன்றினன் முடிவுந் தோற்றமு மிலாதபைந் துளவோன்."

ஓ ஜனமேஜயராஜனே! தன்னைப்போற்றிப் புகழ்ந்து நிற்கின்ற கர்ணன் தனதிருவிழியாலுங்கண்டு களிக்கும்படியாய்க் கடல் நீரை உண்டெழுந்த காளமேகத்தின் வடிவத்தைக்குறைவென்று இகழ்ந்துமாற்றிய கறுத்தவடிவும், சக்கரம், சங்கம், தனுசு, வாள், தண்டம், என்னும் பஞ்சாயுதங்கள் பிரசாசிக்குங் கரதலகமலங்களுமாகி, கொல்லுந் தொழில் பெற்ற எமன் குடியாகிய தாமரைமடுவில் முதலைபிடித்துப் போராடுகின்ற தூவாரம்பொருந்திய துதிக்கைபெற்ற கஜேந்திரனுக்கெதிரில் முன்னம் பிரசன்னமாகிய வாறுபோலத் தோன்றினார். அவராரெனில் ஆதியும் அந்தமும் இல்லாதபைந்துளவணிந்த பரந்தாமன். அப்போது தேவர்களும் தேவயோகிகளும் தேவர்களுக்கிறையாகிய தேவேந்திரனும், கமலோற்பவனாகிய நான்முகனும், முனிவர்களும், தேவகணம் பூதகணமுதலிய சகலமானபேரும் ஜெயாவிஜயீபவா வென்று கண்டு, கற்பகக்காவின் கனகரண்மலர்கொண்டு அர்ச்சித்துப்பணிந்து பூமாரிபொழிந்தார்கள். அதுகண்ட கர்ணமகாராஜனை

வன் ஆனந்தபரவசமுற்றவனாய், வாளாயுதம், வேலாயுதம், சூலாயுத முதலிய கணைகளைக்கொண்டு. யுத்தஞ்செய்கின்ற போர்முனையில் தனஞ்சயனுகிய தன்னியன்பாணத்தால் என்னுயிர் மாய்ந்து போகவும், சந்தாமரைத்தாளனுகிய நிமலநாரணனே என்கண்ணாரக்கண்டு தரிசிக்கவும்பெற்றேன்' என்று அகக்களிப்பும் முகக்களிப்புமுடையவனாய் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, உளம்பரிந்து, உரையாற் புகழ்ந்து இதனைச் சொல்லுகின்றான்.—

ஸ்ரீகிருஷ்ணபகவானைக் கர்ணன் துதிசெய்தல்

"அருந்தழன்மா மகம்புரிந்துங் கடவுட் கங்கை
யாதியாம் புனல்படிந்து மனில யோகத்
திருந்துமணி மலர்தூவிப் பூசை நேர்ந்து
மெங்குமா கியவுன்னை யிதயத் துள்ளே
திருந்தநிலை பெறக்கண்டும் போக மெல்லாஞ்
சிறுகியனைத் துயிருக்குஞ் செய்ய வொண்ணுப்
பெருந்தவங்கண் மிகப்பயின்றும் பெறுதற் கெட்டாப்
பெரும்பயனின் றிருவருளாற் பெறப்பெற் றேனே.
நீலநெடுங் கிரியுமழை முகிலும் பவ்வ
நெடுநீருங் காயாவு நிகர்க்கு மிந்தக்
கோலமுங் வெங் கதைவாளுஞ் சங்குநேமி
கோதண்ட மெனும்படையுங் குழைத்தவாச
மாலைறுந் துழாய்மார்புந் திரண்ட தோளு
மணிக்கழுத்துஞ் செவ்விதழும் வாரி சாதக்
காலமல ரெனமலர்ந்த முகமுஞ் சோதிக்
கதிர்முடியு மிம்மையிலே கண்ணுற் றேனே.
தருமன் மகன் முதலான வரிய காதற்
றம்பிய ரோடமர்மலைந்து தறுகணண்மைச்
செருவிலென துயிரனைய தோழற் காகச்
செஞ் சோற்றுக் கடன்கழித்தேன் றேவர் கோவுக்
குரைபெறுநற் கவசமுங்குண் டலமு மீந்தே
னுற்றபெரு நல்வினைப்பே றுனக்கே தந்தேன்
மருதிடைமுன் றவழ்ந்தருளுஞ் செங்கண் மாலே
மாதவத்தா லொருதமியன் வாழ்ந்தவாறே
வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தான் மதிக்கப் பெற்றேன்
றேன்பெற்ற துழாயலங்கற் களப மார்புந்
திருப்புயமுந் தைவந்து தீண்டப் பெற்றே

ஞான்பெற்ற பதழியினு றழிந்து வீழ்ந்து
மூணர்வுடன் றிருநாம முரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னே யன்றி
யிருநிலத்திற் பிறந்தோரில் யார்பெற் றாரே.'

ஓ கருணாநிறவுருவாய் கருணைவாருதியே! அருமையாகிய அக்கினி வேஷாத்திரமுதலாகிய மகங்களைப்புரிந்தும், தெய்வீகம்பெற்ற சிரேஷ்டமாகிய கங்கைமுதலாகிய புண்ணியதீர்த்தங்களெல்லா மூழ்கியும், வாசியோகத்திருந்தும், மணிமுதலிய ரத்தினங்களாலும், மலர்களினாலும், அர்ச்சித்துப் பூசைபுரிந்தும், எங்குநிறைந்த உன்னை இருதய கமலத்தில் திருத்திப் பொருந்தும்படிக்கு கிலேபெறச்செய்து மோன திருஷ்டியினால் அறிந்தும் போகபாக்கியங்களையெல்லாம் வெறுத்து, ஈஷணத்திரயாதிகளை அகற்றி, அநேக ஆத்மகோடிகளாலுஞ் செய்தற்கரிய வான்பெரிய தவங்களில் மிகவும்பயின்றும், விரதம், நோன்பு, அனுஷ்டானம் இவைமுதலியவைக ளிருந்தும் பெரும்பயனுகப் பெறுதற்கருமையாகிய ஓரும் பயனைத் தேவரீருடையதிருவருளாற் பெறப் பெற்றேன். ஓ கண்ணனுகியபுண்ணியனே! நீண்டநீலகிரியும், மழைபொழியுமேகமும், சமுத்திரஜலமும், காசாம்பூவும், நீலமேனியும், கருவிளமலருநிகராகிய உமது திருமேனிக்கோலமும், வெங்கதை, வடிவாள், சங்கம், சக்கரம், கோதண்டம், என்னும் ஐம்படையும், வாசங்கலந்த நறுந்துளவணிந்த திருமார்பும் நிரண்டதோளும் அழகிய கவஸ்துவாபரணமுடைய சங்கமணிபோன்றகழுத்தும், பவளத்துண்டம்போன்ற சிவந்த இதழும், அபிராமங்குலாவிய பாரிஜாத மலரைப் போற் சிறந்த திருமுகமண்டலமும், சோதிபைவீசுங் கதிர்மணிமுடியும், பிறவித்தோற்றமகற்றுந் திருவடியும், இம்மையிலேயேசெம்மையான ஞானத்துடன் நான் நன்மையாகக் காணப்பெற்றேன். ஓ மருதமரத்தினடியில் உரலுடன் தவழ்ந்தருளிய செங்கண்மாலே! அருமையான தருமன்முதலாகிய என் தம்பியாருடன் எதிர்மலைந்து, கோபக்கண்ணுகிய ஆண்மையுடன் சண்டைசெய்து, என்னுயிர்க்குயிராகிய துரியோதன மகாராஜனென்னுந் தோழனுக்காகச் செஞ்சோற்றுக்கடன் கழித்தேன். தேகியென்றுகேட்ட தேவராஜனுக்கு மதிக்கத்தக்க கவசகுண்டலமும் ஈய்ந்தேன். ஆத்மலாபமாக இருந்த நல்வினைப் பேரான புண்ணியத்தை உமக்குத்தந்தேன். ஓ சுவாமி! ஆருமற்ற தனியேன் மாதவத்தால் வாழ்ந்தவாழ்வுக்குமீந்தமிகுதி இஃதே. அன்றியும், எது ஏப்படிப் போனாலும் பிரமாவினால் திரு

மஞ்சனம் ஆட்டிவைக்கும் ஆகாயகங்கைபொருந்திக் கமழ்ந்தமது திருவடிகளை வணங்கப்பெற்றேன். காயினுங்கடையனுகிய சிறியனைத் தாயினு மிகுதியாகிய கருணைசுரந்து மேன்மைசிறந்த தமதுதிருவுளத்தால் மதிக்கப்பெற்றேன். தேனிறைந்த துளபமாலையணிந்த களபமார்பினுலுந் திருப்புயங்களினுலும் ஆலிங்கனஞ்செய்து, அழகிய கமலம்போன்ற கைகீட்டி என்னைத் தீண்டவும் பெற்றேன். அருச்சுனன் விடுத்த ஊனுகிய மாமிசந்தின்ற பகழிகளினுல் அடிபட்டழிந்து ஆன்மா ஒழிய வீழ்ந்த இக்காலத்திலும், நல்லஞானத்துடன் உமது திருநாமங்களாகிய திருமந்திரத்தைச் சொல்லவும், தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய வாக்கியத்தை உட்கொள்ளவும் பெற்றேன். நான்பெற்றபெருந்தவப்பேற்றைப்போல் இத்தப் பெருமை தங்கிய கர்மபூமியிற் பிறந்தோரிலும் இறந்தோரிலும் யார்பெற்றார்கள்? ஓ இறைவனே! பேறுபெற்ற பேர்களில் என்னைவிட ஒருவருமில்லை'' என்று மகிழ்ந்துவணங்கினன். அப்போதவன் இன்பமடையும்படிக்கு காளிங்கநர்த்தனஞ்செய்து கன்று கொண்டு விளாங்கனியெறிந்து விளையாடிய கண்ணன் சில கட்டுரைகளை விட்டுரைக்கின்றார்.—

கண்ணன் அர்ச்சுனனிடம்வந்து எச்சரித்துக் கர்ணனைப்பரமபத மடைவித்தல்

''ஓ நன்னயமிதுவசன மன்னனுகியகர்ணனே! நான் சொல்லுவதைச்சற்றுன்னிக்கேள். தேவேந்திரனைவிடுத்து உன்னுடைய கவசகுண்டலத்தை வாங்கச்செய்தவனும், சுத்தியைவிடுத்து உன் உற்பவத்தின் தன்மையை உனக்கு உணர்த்திவைத்தவனும், நாகாஸ்திரம ஒருதடவையொழிய இரண்டாந்தரம் விடாமற்சுத்தியைக் கொண்டுவரங்கொள்ளச் சொன்னவனும், தக்ஷகன் பிள்ளையாகிய அச்சுவசேனனும் நாகாஸ்திரந் தனஞ்செயனைக் கொல்லாமல் தப்பிப்போகச் செய்தவனும் நான்தான். அதெனென்றால், உன்னிடத்தில் விசுவாசமாகிய எனக்கு எல்லாரிலும் எந்தக்காலத்திலும் அன்பு மிகுந்த பரிபூரணமான கருணையிருப்பதினுல், உன்னைச் சீக்கிரம் என்னிடத்திற்கு வருவித்துக்கொள்ளவேண்டுமென்று உன்பொருட்டில் நான் இவ்வளவு பிரயாசையெடுத்துக்கொண்டு வெகுவேலைகள் செய்தேன். இல்லாவிட்டால் உனக்கு இவ்வளவுகாரியங்கிட்டாது'' என்று கூறி அந்தர்த்தானமாகி, முன்போல் விஜயனுடைய தேரிலேறித் தேர்ச்சாரதியாயினுர். அவரானால், எலலாக்கடலும், எலலகா

கிரியும், எல்லாவுலகும், எல்லாத்தேவரும், எல்லாமானிடரும், எல்லா வுயிரும், யாவுந்தானுகி, மைதீட்டிய கருங்கண்களையுடைய இளங் கோவியர்களின் வஸ்திரங்களையும், வரிவளைபல்களையும், நாணத்தை யும், அவர்களுடைய மடநெஞ்சையும் வாங்கும்படியாகிய மாமாயன். இப்படி பழையபடி பார்த்தனுடைய தேரிற் சாரதியாயிருந்து அப்பார்த்தனைபபார்த்து, "அப்பாகிரீடி ! சூரியன் மேறகுச்சமுத்தி ரத்தில் வீழுமுன்னமே கர்ணனைக் கொல்லுக" என்று சொல்லினர். அதனைக்கேட்ட பார்த்தன் சுவாமியின் வார்த்தையை உறுதியாகக் கொண்டு, அஞ்சாகமென்னும் அஸ்திரத்தையெடுத்து, அகோக உபசார ஆசாரவிதியாவுமுடித்து, வழிபடுகடவுளைத் துதித்து, ஆசாரியரை மனதில்மதித்துக் கர்ணனுடைய இதயத்துக்கு லக்ஷியம் வைத்து, விசாலமாகிய உலகிலுள்ள அரசர்களெல்லாரும் அதிச யித்து மதிக்கும்படியாக எய்தான். அந்தக்கணையானது வந்து, தக வுடைய பெரியோர்களின் சாபச்சொல்லைப்போல் அங்கதேசாதிப னுடைய இதயத்திலுருவிப் புகுந்து, தீயருக்குரைத்த நல்லோர் மொழிபோல் அப்பாலோடிப் பூமியைத்துளைத்து, பாற்கடலிற் குளித்து, பின்னுந் தன்வேகமடங்காமல் வீபற்சுவினிடத்திற்போய் அடங்கியது. இப்பாற் கர்ணமகாராஜன் பூமிமேற்சாய்ந்தவனுய், கருடபகவானுடைய திருத்தோளின்மீது காயாம்பூவண்ணனுகிய கரியமாலைச் சற்றுநேரத்துக்கு முன்னே காசினியிற்கண்ட கண் காட்சிபோல ஆகாயத்திலுங்கண்டு தரிசித்து, அவரைப்போற் கிருபை செய்யும்படியாய் அவ்வானத்திலெழுந்தருளி இருந்த ரிஷபவாகன ரூடராகிய உமாபதியையும் இந்திரன்முதலாகிய அந்தரவாணரையும், தந்திமுகனையும், சண்முகக்கடவுளையும், தேவகணங்களையும், முந்திய மகாமுனிவரையும் நெருங்கிப்பார்த்து, ஆருமபெறுதற்கரிதாகிய அன்புடன் போற்றி வாழ்த்தி, அடிவணங்கியேத்தி, புருஷ சிலாக் கியனுகிய அக்கர்ணமகாராஜன் இரும்புண்ட திரும்பா ரீர்போல் வீர சொர்க்கம் அடைந்தான். மானுபரணனுகிய சேனுபதிசாயவே, ஜெயம் பெறக்கருதிப் போர்க்களத்திலிருந்த புரவலர்களும் நால் வகைப் பொருகர்களுங் தாவரிக்கமாட்டாமற் பயந்து, உடலுலகத்து உயிர்க்லகத்து நானுவிடங்களிலும் புறங்கொடுத் தோடினர்கள்.

துரியோதனதியர் கலுழ்ச்சி

இத்தச்சேதியை வேவுகாரராற் கேள்விப்பட்ட குருடன்மகனுகிய குருகுலவேந்தன் வாடி ஓடிவந்து, "அண்ணுவோ! அண்ணுவோ!" என்று தாயிழந்த சேய்போற்கதறி, பெருமூச்சுவிட்டு, உயிர் சோர்ந்து, உடல்தாழ்ந்து, மலைமேல் மலைவிழுந்த தன்மைபோற் கர்ணன்பேரில் அடித்துமோதிவீழ்ந்து, முகத்திலும் மார்பிலும் மோதிக்கொண்டு, அரண்டுபுரண்டு மருண்டு, தெருண்டு எழுந்து விழுந்து, ஆ! ஆ! என்றுவாய்விட்டரற்றி ஆவிசோர்ந்தான். அப்போதுபக்கத்திலிருந்த உரியோர் பெரியோர் முதலியபோர்கள் வணங்காமுடியோனைத்தேற்றி, விசனமாற்றி, அடிபணிந்துபோற்றி, "ஐயா! தேவரீர் இப்படியிளைக்கலாமா? மனங்களைக்கலாமா? வணங்காமுடிவளைக்கலாமா? இது கடைசியாகிய காலம். இந்த வேளையிற்களையாதீர்" என்றுவேண்டிய உறுதிகளைக்கூறித் தேறச்செய்தார்கள். அதுகாலையிற் சோபம் ஆறி, விசனமாறினவனைப்போல் தேறி, கர்ணனுடைய திருமுகத்தையும், அவனது தேகத்தையும், தனது இருகரங்களால் தடவித் தடவிப் பார்த்து, விசனப்படத் தொடங்கினன். —

"அணையார்தம் படைக்கடலி னருகிலேக்குக் கரையேற லான கோலப்
புணையாயெத் திறங்களினும் பகிராம லுற்றதெலாம் புகலத் தக்க
துணையா யென்னுயிர்க் குயிராந் தோழனுமா கியவுன்னைத் தோற்றே னுகி
லிணையாரு மிலாவரசே யாரைக்கொண் டாசாள விருக்கின் றேனே

சூழ்வேலை யுலகாளுஞ் சூழ்ச்சியுமிப் பெருஞ் செல்வத் துவக்கு நெஞ்சால்
வீழ்வேனே வமராட வீமனெறி தலைநாள்வி வீளைந்த செற்றத்
தாழ்வேனே வுனையொழிந்து தம்பியரை யொழிந்துமினித் தனித்தானே
வாழ்வேனே வாழ்வேயென் மனவலியே வருகின்றேன் வருகின்றேனே"

ஓ அண்ணு! சத்துருக்களுடைய சைனியமென்னும் ஆழமாகிய கடலில் அகப்பட்டு ஆழ்ந்து நிலையில்லாமல் நீர்த்தலில் நின்று ஆதரவற்று அவதிப்பட்டுக் கொண்டு ஆயாசம் அடைந்து அழுந்திப் போக நின்ற என்னை, அப்படி போகவொட்டாமற் கைகொடுத்துக் கரையேற்றிவைப்பதற்கு அழகிய தெப்பமாயடித்து எல்லாத்திறங்களிலும் வல்லபமாயிருந்ததல்லாமல், எதையும் நான் வாய்விட்டுச்

சொல்லுமுன்னே என்மனக்கருத்தறிந்து வண்மைப்படித்தியும், வளம்பெறச்செய்தும், உண்மையுரைத்தும் உற்றது அற்றது சொல்லிக்கொள்ளுவதற்கு உகந்ததுணையாயும், உயிர்க்குயிராயும், உடற்குடலாகியுமிருந்த உன்னை இன்று தோற்றுவிடுவேனுகில்; ஓ எங்குமினையில்லாத அங்கராஜனே! உன்னைவிட்டு இனியாரைக் கொண்டு அரசாள இருக்கின்றேன். ஐயோ! அம்மே! அச்சோ! அன்னே! ஆ! ஆ! ஆ! ஓ! ஓ! ஓ! இது பெரிய ஆச்சரியம்: அண்ணு! இந்தச் சமுத்திரம் வளைந்த உலகத்தை ஆளும்படியாகிய சூக்ஷமும், இந்தப் பெருஞ்சேனைகளினுடைய சம்பந்தமும், மற்ற உபாயங்களும், ஆகிய இவைகளை யெல்லாம் இது இன்னினன படிக்கென்று என்னெஞ்சிலடைக்கிவைத்த மன்னனே! உன்னை நினைந்து நினைந்து, வருந்தி வருந்தி, வாடிவாடி, துணையற்றவர்போல் மாய்ந்து வீழ்வேனோ? அல்லது அமராடமேவ புகுந்து தலை நாளில்விளங்க க்ஷாத்திரங்கொணரு போர்புரியவரா நின்ற பீமசேனனுக்கியான் தாழ்வேனோ? உன்னை பொழிதும், என தம்பிமார்களைப் பிரிதும், புதல்வர்க்காதிகளை இழத்தும், உரியோர் முதலிய பெரியோர்கள் அழிந்தும், நான் தனித்திருந்து இனிவாழ்வேனோ? ஓ என்வாழ்வே! ஓ என்மனவலியே! ஓ என்மதியே! ஓகர்ணு! இதோ உன்பின்னேதானே நானுமவர்பின்; வந்தேன்: வந்தேன்: என்று ஏங்கித்தளர்ந்து, பேரிரக்கமுடையவனுய்ப் புரண்டு வீழ்ந்து அழுதான்; இக்கக்கடல் சூழ்ந்த நெடிய உலகைக் காணுலாளமேணகமென்று எவரையும் மதிக்காரம விணையற்றிருந்த வணங்காமுடியாணுகிய துரியோதன மகாராஜன் அக்காலத்தற் பக்கத்திலிருந்த பார்த்திபரெல்லாருமனங் கொள்ளாது வருந்தி "ஐயோ! எங்கள்வலினை இன்றிழந்தோம், இனி நாங்களிருந்தென்னகாரியம்? இஃதென்னவியம்?" என்று இரைந்து கண்களுழ்ந்தார்கள். அவ்வீரவளையல் மிகுந்த துயரப்பட்டுத்தறிய மத்ரராஜாதிபனுகிய சல்லியராஜன் அக்காணராஜனுடையவில வீரங்களையும், சொல் வீரங்களையும், வெகுவாயெடுத்துப் பற்பல வாகப் பேசி, மிகமும் பேரினைந்தழா நின்ற துரியோதன மகாராஜனுடைய துயரத்தையும் போக்கினன். என்னசொல்லித் தேற்றினலும் துரியோதனன் மீதருது ஆர்த்து, முகமேவாத்து, கர்ணனருகுவிற்பார்த்து, விசனமும், துக்கமும், விம்மலும், முகதலும், சக்கலும், பெருமூச்சும் உடையவனு யிருந்தான், அதைச் சகுனியாகிய மாமனுணர்ந்து, எதிரில இருக்கஇருக்கத்துக்கமிலிம்பி, துயரம அகலாது என்று போசித்தவனுய் மருமகனுகிய வணங்காமுடி அரசை

மிகவுந்தேற்றி, அங்குள்ள பேரோடு அவனையுமழைத்துக் கொண்டு போய்ப். பாடிவீடு சேர்ந்தான்.

தருமனுதியர் மகிழ்ச்சி

அக்கால் ஆகாயத்தில் நிறைந்து சகல ஆட்டங்களையும் வேடிக்கைபாய்ப் பார்த்திருந்த கங்கை வேணியனும், பிர்ம்மாவும், தந்திமுகனும், சண்முகனும், தேவேந்திரனுமிருபரும், தனஞ் செயனுக்கும் கர்ணனுக்கும் நடந்தேறிய யுத்தத்திறங்களைக்கண்டு மன மகிழ்ந்து, தங்கள் தங்களுடைய சார்புக் கெழுந்தருளினார்கள். அங்கதேசாதிபனுகிய கர்ணமகாராஜன் தனஞ்செயன் கைக்கணை யால் தரையில் வீழ்ந்தமாத்திரத்தில், ஓரேராகியான மேகமுழக்கங் களைப்போல் அந்தர துந்துமி துந் துந் துந்தும் என்று முழங் கியது. இமையோர் எண்ணிறந்த புகழ்பாடி ஆர்த்தனர். இருதிறப் படைஞருந் தத்தளித்துக் கொண்டிருந்தனர். இப்படியாகிய சமயத்தில் மிகக் கொடையாளனென்னும் அக்கர்ணனைப் புத்திர னுகப்பெற்ற மித்திரனென்னுஞ் சூரியபகவானுனவன் தேகமெல்லாம் அக்கினிச் சுவாலையாக பெரிந்து, உள்ளும்புறமும் ஓரே நிலையாய்க் காய்ந்துகரிந்து, புத்திரசோபத்தால் திருந்தி, பிராமணர் முதலிய பேர்கள் அள்ளிக்கொடுக்குஞ் ஜலத்தை இளைப்பாற அருந்தி, அழகிய கிரணக்கரங்கள் ஆட்டமில்லாமற் சுருங்கி ஆழியிற்பொருந்தி ஆ! என்னுயிரழியுதே யென்று மனம் வருந்தி மேற்கடலூடு மூழ்கினன். இப்பால் முதன்மையாக எதிர்த்துப் போர்புரிந்த விஜயனுனவன் தனது வெற்றிலபக்கண்டு மற்றையரெல்லாரும் மெத்தப்புகழ்ந்து மகிழ்ந்துவரவும், முனிவீரர் முதலியபேர்களெல் லாரும் புடைசூழ்ந்து சர்வாயுதபாணியராய் மொய்த்து நெருங்கவும், பலம் பொருந்தியமலைபோன்ற புஜபலசாலியாகிய பீமனுனவன் பல படைமன்னருடன் தனக்குச் சேமமாகச் சூழ்ந்து நடக்கவும், நகுல சகாதேவராகிய இளையவர்கள் நாற்புறத்தும் வளைந்து வளைந் துலாவி மகிழ்வு கூரவும், ஒக்கல்முதலாகிய பந்துக்கள் பக்கங்களிற் பரிந்து போகவும், திருமால் தேர்செலுத்தவும் ஆகிய இவ்விதவாடம்பரத் தோடு இருள்சூழ்முன்னமே புறப்பட்டு, அசுரகவாத்திய முழக்கத்து டன் ஜெயபேரி முழங்கும்படியாய்த் தருமராஜனிருக்கும் பாசறை யைப்போய்ச் சேர்ந்தான். உடனே கிருஷ்ணார்ச்சுன ரிருவரும் இரதம் விட்டிறங்கி, தருமநந்தனனுக் கெதிரோடி, அவருடைய திரு வடியில் திருமுடிசூடிவீழ்ந்து, அவரது மங்களாசனம்பெற்று, அம்மு

ரசக்கொடியோனுடைய மன மகிழும்படியாய்த் தாங்கள் போராடிய போராட்டையுங் கர்ணன் உயிர்விட்ட பாட்டையுஞ் சொன்னார்கள். இதைக்கேட்டவுடனே பொறுமையையுடைய புண்ணியனுகிய தருமகுத்தனன் புளகாங்கிதமுற்று, தம்பியாகிய தனஞ்செயனுடைய மலை போன்ற தோளைநோக்குவர்; அக்தோளிலறிய விஜயகாண்டீபத்தை நோக்குவர்; இதழலர்ந்த செந்தாமரைக்கண்ணனுடைய திருமுகமண்டலத்தை நோக்குவர், தமது தம்பிமுன்னம் வெம்பிக்கர்ணனை முடிக்கிறேனென்று சொல்லியிருந்த வஞ்சினங்களை நோக்குவர்; சூரியதமாரனுகுங் கர்ணனுடைய வல்லமையை நோக்குவர்; அவனது மறத்தின திறத்தைநோக்குவர்; இவ்விதமாக விளைத்தவினைச் செயலைநோக்குவர்; செம்பைக்காய்ச்சி யுருக்கியதைப்போல் தீப்பொறிமலிந்து சிவந்திருக்குந் தம்பியினுடைய கோபக்கண்களை நோக்குவர்; தங்கள் ஐன்மாந்திரத்தின் தபோபலனை நோக்குவர். பலம் பொருந்திய ராஜ ராஜேந்திரனுகிய துரியோதன மகாராஜனுடைய வஞ்சனை, பொய், இவைமுதலாகிய தீவினைகளை நோக்குவர்: தனஞ்செயனைத் தாம்கோபித்த சமயத்தைநோக்குவர், இப்படிக்கெல்லாம் எண்ணியெண்ணிப்பார்த்து, இந்திரஜித்தை ஜெயித்துவந்த இளையபெருமாளைக்கண்டு மிகமகிழ்ச்சிகொண்ட இராமனைப் பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமாகிய களிப்புற்று ஆனந்தங் கொண்டார் தருமராஜன்.

குந்திமாதேவி புலம்பல்

இவ்விடத்திலிப்படியிருக்க முன்னங்கர்ணனிடத்திற் புண்ணிய தானம் வாங்கிக்கொண்ட புருஷோத்தமன் அர்ச்சுனனிடம் வந்து சேர்ந்து இனிமேற்கர்ணனைக் கொல்லுப்படியாகிய உன்வேலையை நீபோரென்று சொல்லி அவ்வேலையை முடித்தவுடனே குந்திதேவி முதலாகியபேர்களிருக்கும் பாசறையினிடத்து அசரீரியாகப்போய், "சபதங்கூறியபடி முதன்மையாசப்பசைத்து எதிர்த்துப்போர்புரியும் விஜயபராக்கிரமன் தொடுத்த அஞ்சரீக மென்னும் அஸ்திரத்தால் ஐவருக்குமுன்னேனுகிய அங்கதேசாதிபன் இன்றுநெஞ்சங்கிழிந்து முடிசாய்த்துவீழ்ந்தான். சூரியன் அஸ்தமனமாய் அந்திப்போது வருவதற்குமுன்னே பிராணன் போய்விடும்" என்று ஆகாயத்தில் நின்று உரத்துச்சொன்னர். இத்தவாக்கியங் கேட்டவுடனே மயில்போல் ஒயிலும், குயில்போற் குரலும், வெயில்போற் சுடரும், அயில்போல் விழியுமுடைய ஐவர்களுக்கும் அன்னை குந்திதேவியானவள்

மனமுருகிக் கண்ணீர்பெருகிக் குழல்சரிய ஆடையாபரண முதலா கிய அங்கங்களுங்குலைய, வயிற்றிலுமுகத்திலும் அறைந்துகொண்டு, கைகெரித்து, என்செய்வே னென்று முடிமே லடித்துக்கொண்டு, தலைமேற் கைவைத்து, கோகோவென்றழுது போர்க்களத்துக்கு வந்து, முதற்பிள்ளையாகிய கர்ணன்மேல் மோதிவிழுந்து, ஓ மகனே! மகனே! என்றலறி,

"என்றேயென் ருதையுழைக் கன்னி மாடத்
தெழிலிரவி திருவருளா லீன்றே னீன்ற
வன்றேபொற் பெட்டகத்திற் கங்கை யாற்றி
லாமுறையா லுனைவிடுத்தே னருளி லாதேன்
வென்றேமண் கவர்தருமன் மதலைக் காவி
மித்திரனு னதுகேட்டுன் வீரங்கேட்டு
நன்றேயென் றவப்பயனென் றுன்னி வாழ்ந்தே
னகமுரி யரசாள நடக்கின் றாயோ"

"ஓரைஞ்சு பேருளரா லறந் தவாத
வுதிட்டிரனு தியருராகக் கொடியோ னுதி
யீரைஞ்சு பதின்மருளர் தம்பி மார்க
ளிங்கிதங்க ளறிந்தடைவே யேவல் செய்யப்
பாரஞ்சு மொருகுடைக்கீழ் நீயே யாளும்
பதமடைந்தும் விதிவலியாற் பயன்பெ றாமற்
காரஞ்சு காதலித்தா யந்தோ வந்தோ
கடவுளர்தம் மாயையினுற் கழிவுற் றாயே"

அப்பா மகனே! குந்தி போஜ குலத்திற்பிறந்து, என் தந்தையாகிய சூரசேனனிடத்தில் வளர்ந்து, கன்னிமாடத்திற் கன்னிகையாயி ருந்து, சூரியபகவானைப்பரிந்து, அவருடைய திருவருளால் உன்னைப் பெற்றேன். அடா என்னைப்பெற்றவனே! நீதிசெலுத்தி உலகத்தை யாளும் அரசனுடையை பெண்ணைனவள் கன்னிகழிவதற்கு முன்னே பிள்ளையைப் பெற்றாளென்று உலகங்நிந்திப்பாகிய பழிச்சொல் வரப் போகிறதென்றஞ்சி, எள்ளத்தனையும் இரக்கமில்லாத பாவியாகிய நான் உன்னைப்பெற்ற அப்போதே ஓர் பொற்பெட்டகத்தில் வைத்துக் கங்கையாற்றில் விட்டுவிட்டேனடாகாதலனே! அப்பால் நீ திருதராஷ் டிரபூபதியின் குமாரனுகிய துரியோதனனிடத்திற் சேர்ந்து, அவ னுக்கு உகந்த மித்திரனுயிருந்து, சத்துருக்களாகிய பாண்டவரை

வென்று பூமியைக்கவர்ந்து அகண்டசாம்பிராச்சிய பட்டாபிஷேகங் கொண்டு அன்புகூர்ந்திருக்கப் போகிறயென்று நான்கேள்விப்பட்டும், உன்னுடைய வீரத்திறங்களை விசாரித்தும், உனதுகாமப்பெருக்கினை கன்றுய்த்தும், மெத்தவும் மேலாகியகன்மை பொருந்திய கமதுதவப் பயனென்று நினைத்து, எங்கிருந்தாலுஞ் சுகமாயிருக்கட்டுமென்று மனமகிழ்ச்சியாய் வாழ்ந்தேன். ஆ! ஆ! இதுவென்னமகிழ்ச்சியோ? அடா என்னப்பனே! இவ்வுலகத்தை ஏகசக்ராதிபதியாய் ஆண்டு வந்து மனம் வெறுத்து, இவ்விடத்திலிருக்கும் பொருளில் எல்லாப் பொருள்களின்பேரிலும் இச்சை நீக்கி, அம்பரத்தை ஆளவேண்டு மென்னும் ஆசைகொண்டு, எங்களையெல்லாம் விண்டு அமரரைக் கண்டு அவ்விடத்தில் அரசாளச்சென்றனையோ? ஆ! என்னருந்தவமே! சத்தியப்பொருளாற்சிறந்த தருமராஜன் முதலாகிய தம்பிமார் ஐவர், துரியோதனன் முதலாகிய தம்பிமார் நூறுபேர், ஆக இந்நூற்றைந்து பேரும் உன்னுடைய இங்கிதகுணங்களை யறிந்து குற்றேவல் செய்யும்படியாய் இந்தவார் கடல்சூழ்ந்த வையகமெல்லாம் ஓருகுடை நீழலில் நீ ஆளப்பதம்படைத்தும், நல்வினைவழியாய்ப் பயன்பெறுமற் போய்விட்டனையே; மேகமும் அஞ்சும்படியாய்க் கொடுக்காநின்ற கரதலனே! அப்பா கர்ணனே! தேவர்கள் உன்னை ஏமாற்றிய மாயையிலுல் மதிமயங்கிக் கலங்கிப் போய்விட்டனையோ! அர்ச்சுனன் உறுக்கி உறுத்திவிட்ட அஞ்சாகமென்னுங் கணையினுல் நீமாண்டுபோவதை அறியாமல், அருச்சுனன்பேரில் நீவிடுக்கப்போகிற நாகாஸ்திரம் ஒருதாமொழிய மறுதாம்விடாதொழியும்படியாய்க் கடியமனத்தையுடைய தொடியேன் உன்னிடத்தில் உறுதியாய் வரம்பெற்றேன். அடா மகனே! உன்னுயிருக்கு நானே உலைவைத்தேனடா! உன் தம்பிமார்களின் பிராணனை ரக்ஷிக்கும்படியாயும் வரம் பெற்றேன். இத்தப்பாவிபானவள் பெற்றும் பெறுக்கொடும்பாவியென்று எண்ணுமல், என்சொல்லைத் தள்ளாமல் பெற்றதாயென்று என்னைப் பூரணமாய் நினைத்தேதா கோடிகோடி கோடாகோடியாய்ச் சேதிக்குங் கணைகளைச் செலுத்திப் போர்முகத்தில் வீராதிவீர ரெல்லாரும் மதிக்கும்படியாய்ப் பகைவரைவென்று ஜெயங்கொண்டு, பின்பு அமரர்களுந் துதிக்கும்படியாய்ச் சிதைந்து சிந்திமாளுகிற வரைக்கும், பிராணன் போகிறவரைக்கும், எனக்குக்கொடுத்த வரமும் வாக்கும் பிசகாமல் நிலைகின்று, உடல்கின்று உயிரோடும் வரைக்குஞ் சத்தியந்தப்பாமல் தருமத்தைக்காத்தனையே: அடாதயனே! தேவர் முதலிய யாவருந் துதிக்கப்பெற்ற தேவேந்திரனுக்கு உன்னுடன்

பிறந்து உன்னுயிர்க்குத் துணையா யிருந்த கவசகுண்டலத்தைக் கழற்றி மனமடியாமற்கொடுத்து, இப்போது மீமடிந்தனையே: இப்படி உயிரையுங்கொடுக்க வுவந்த உன்னுளச் செயலையும் வள்ளற்றன்மை யையும் என்னென்றுரைப்பேனடா என்னப்பணே!—

" அடாஎன்மதலீயே! பூர்வத்தில் உன்னைப்பிள்ளையாகப்பெறும் படி விதிபெற்றேனல்லாமல், உன்னைவளர்க்கவும், இருக்கவும், எடுக்க வும், அணைக்கவும், முத்தமிடவும், கொஞ்சவும், குலாவவும், தொட்டி லேற்றவும், காலாட்டவும், பாராட்டவும், சீராட்டவும், செந்தூரத் திலகமிடவும், திருமஞ்சனமாட்டவும, சிற்றுடை கட்டவும், மீ தெரு வில்விளையாடி அம்மாவென்று அழைத்தோடிவந்து அணைக்கவும் என்னருகிற்படுக்கவும் அமுதுண்ணவும் அன்னம் ஊட்டிவைக்கவும், கண்ணுக்கலங்காரமாய்ப் பார்க்கவும், பாக்கியம்பண்ணுத மகாபாவியா யினேன். தவம்பெறுத தரித்திரியாயினேன். மேதறித்தெளித்த மாதவரு மடைதற்கரிதாகிய மோக்ஷம்பெற்ற பாண்டுபூபதியுடன்கூட நானு முடிந்துபோகாமல் இக்காலங்களைக் கண்டிருந்தேன். உயிர்வைத் திருந்தேன். அடா என் கான்முளையே! நாபகனுடன் சொல்லும்படி யாகிய மீபறு எண்மேன்ற பாவிக்குக் கிடைக்குமோ? கிடைக்காதடா! அப்பாகர்ணு! கல்லினுங் கொடிய கெட்டிமனம் பெற்றகாதகிக்கு உன் கையினுல் மீரும் நெருப்புங்கிடைக்குமென்று மேசம்வைத்திருந் தேனே: அதை மோசம்பண்ணிப்போய்விட்டையே. ஐயா மகனே! மீ என் பிள்ளையென்றும், நானுன்தாயென்றும், பலருமபுகழப்பெறுத பாவி யை, மீ ஆவி விடுமபோது சிந்தனைசெய்தனையா? அல்லது நிந்தனை செய்தனையோ? அடா ஐயா! என்னையும் உன்னுடன் அழைக்க எண் ணுயோ? இதற்குத் தகுதியோசன பண்ணுயோ? அண்ணுய் துயரப் படிவானெனென்று ஓடிவந்து ஒரு ஆறுதலைச் சொல்லாயோ? அடா மீதிபரமே! நான்விசனப்பட மீ மறைந்திருப்பது ஞாயமோ? இல்லை: நானுல்மேரிட்ட அபாபமோ? உடலிற் பாணங்கள் தைத்தகாயமோ? பக்ஷம்பறந்தோடிப்போன மாயமோ? அல்லது என்மேரில் மீவைத்த மேயமோ? மீ எங்கே யிருக்கின்றுயடா! நானெப்படி மனந்தேறிவாழ் வேனடா! ஐயையோ! அந்த சங்குசக்கரக்கையன் உன்னைச் சந்தித தாரோ? எனக்கு மூத்தபிள்ளையென்று உன்னைக்கொஞ்சமு மதித் தாரோ? பஞ்சணையிலேபட்டுபரப்பித் துயின்றனையே: இதப்பாரிற புழுதிமேற் புரண்டனையே: உன் பொன்னுனமேனி கறுத்தமேத: மீ செய்த புண்ணியமெல்லாம் இதைப்பொறுத்தமேத:" என்று கண்ணையு

ழுந்து கீனைந்து கீனைந்துமறுக்கங்கொண்டழும் பசுவைப்போற் கதறிக் கதறி, கனத்தபாடுபட்டுக் கலங்கினாள்.

பாண்டவர் கர்ணன் வரலாற்றைக் கண்ண னுற்கேட்டுக் குந்திதேவியைக்கண்டு வெறுந்துக்கொள்ளுதல்

இப்படி பலவாறுகப் புலம்பிக் கண்ணீராற் கையலம்பிக் கவலைப் பட்டழுகின்ற குந்திதேவியை அமர்க்களத்தில் கிறைந்து கின்ற அரசர் கள் பாவருங்கண்டு, மதிமயங்கி அதிசயித்து, ஏங்கி ஏங்கிச் சென்று இருடாலையங்களிலுஞ் சொன்னார்கள். இச்சொற் கேட்டவுடனே பாரதத்தின் புத்திரனுகிய தருமராஜன், பீமசேனன், அருச்சுனன், நகுலன், சகாதேவன், இவ் வைந்து பிள்ளைகளுந் தங்களைப்பெற்ற தாயானவள் கண்ணீர் சொரிந்துவந்து கர்ணன்பேரில் வீழ்ந்து அழ வேண்டிய காரணமென்னவென்று மனமறுக்கங்கொண்டு, சமீபத்தி விருந்த மாயவனைப்பார்த்து, "ஐயா! இதென்ன ஆச்சரியம்! இதென்ன விக்கை? இமைப்போதிற் சொல்லும்"என்று இறைஞ்சிக் கேட்டார் கள். அப்போது கண்ணன் அவர்களை நோக்கி,"அடடா!!எனக்கென்ன தெரியும்? நான் உங்களை விட்டுப் பிரியாதிருக்க என்னைக் கேட்டால், உங்களுக்குத்தெரிந்த அவ்வளவுதான் எனக்குந் தெரியும்" என்று சொல்லவும் பீமனுக்குக் கோபம்வந்து, கதைகொண்ட கையுடன் ஓடி வந்து, "ஓ லேமேனியாய்! நீ றியாத ரகசியமுண்டோ? உள்ளபடி சொலலுகின்றீரா? அல்லது எங்களையெல்லாம் ஒருங்கே கொல்லு கின்றீரா? வந்தபாவம் வரட்டுமென்று உம்மை ஓரேயடியாய் அடிக் கட்டுமா?" என்று கதையைத்தூக்கினான். அவனையக் கண்ணன் பார்த்து, "அப்பா பீமா! இதோ நான் அறிந்தமாத்திரஞ்சொல்லுகி றேன்" என்று உண்மையாகிய காரியத்திற் சில முக்கியமானவற்றைச் சொல்லினர். அதைக்கேட்ட பாண்டவரைவரும் பசபசவென்று விழி த்து, கோடையிடி விழுந்த காகப்பாம்புபோற் குலுங்குலுங்கு கோபித் துப் பூமிமேற் சாய்ந்தார்கள். இப்படி நூலாய்ந்தகேள்வியி னூற்றமுங் கொற்றமாகிய வெற்றியின் மேற்றமு முடையோர் வீழ்ந்து புரண்டு அலறி,கண்களிலிருந்து ஓழுகிவரா கின்ற வெள்ளத்துடன் கள்ளாடி வெற்றிமுற்றுந் தாழ்ந்து, உயிர் தளர்ந்து,உடல்வருந்தி, உறக்கமாகிப் பொங்கியபோது சில மகாவாக்கியங்கள் உரைத்துமாயோன்தேற்றி னர். அந்தச் சக்கரதாரனுடனே சமுத்திரம் வருவதுபோல் அநேகம்

இராஜர்கள் சூழ்ந்துவர, அஸ்தமனமாகிய சூரியன் மறுபடியும் உதயமாய் வந்தாலே வென்று பிரமித்துச் சொல்லுந் தன்மைபோல் ஆயிரமாயிரந் தீபங்கள் அயலார் ஏந்திவர, பகல்வத்தி முதலாகிய வெளிச்சங்களுடனே பாண்டவரைவரும் புறப்பட்டு, உயிரோடி ருந்த காலத்திற் பெற்றிடாத பெருமையை இறந்த இப்போதுபெற்ற வண்மைமேற்கொண்ட திண்மைபாளுகிய கர்ணராஜன் உடல் கலங்கி உயிரொடுங்கிக்கிடந்த இடத்தைச்சேர்ந்து, கொடிபோன்ற இடையினையுடைய சங்கள் தாயாகிய குந்திதேவியார் வேடரால் விடப்பட்ட கணைபட்ட மாண்பாற் பரதவித்துத் தனக்குஞ் சூரிய னுக்கும் பிறந்த புத்திரன்மேல் வீழ்ந்து புரண்டு கதறி யழுதுகொண் டிருக்குஞ் செயலை நோக்கி, அந்தப் பிரதையினுடைய கால்மேற் பணிந்து நின்றனர். அப்போது, சத்திய கீர்த்தியாகிய தாயின் முகத் தைப் பார்த்துத் தருமராஜன் சொல்லுகின்றார்.—

அம்மணி! இஃதென்னகோலம்? இஃதென்னஜாலம்? இஃதென் னகாலம்? ஆலகாலம் போல் எங்கள் செவியை உருக்குமே: சங்கதி பென்ன தாயே! என்று கேட்க, குந்தி அப்பிள்ளைக்கு ஒளிக்காமல் ஆதிநாள் நடந்த வெல்லாம் உண்மையாகச் சொன்னள். அதைக் கேட்டு வியாகுலமடைந்து தாயைப்பார்த்து,

"கன்னியிளம் பருவத்தி லரியமா
வெனுங்கடவுள் காதல் கூர
மன்னியமந் திரமெமக்கு மின்றளவு
முரைத்திலையான் மறந்தாய் கொல்லோ
பின்னியசெஞ் சடைக்குழலா
யீதென்ன பேரறிவு பெற்ற தாயி
னன்னியர்கள் முயிருண்ண திப்படியே
பிழைப்பிப்ப தறிந்தி லேமே"

அன்னையே நீர் கன்னிகையாயிருந்த இளம்பருவத்திற் சூரிய பகவான் காதல்கொண்டு வரும்படியாய்க் கற்றிருந்த மந்திரத்தையும், அந்த மந்திரத்தினாலாகிய பயனையும், எங்களுக்குத் தெரிவிக்காமலும், சொல் லாமலும், வன்மனத்துடனிருந்தீர். அப்படி யிருந்தது சொல்லப் படாதென்னும் நியாயத்தினாலேயோ, அல்லது மறந்துபோய் விட்ட தினாலேயோ, ஏதொன்றுந் தெரிகிலேம். ஓ பின்னலாகிய செஞ்சடைக் குழலாய்! இதென்ன விவேகம்? உமக்கு இருக்கவேண்டிய பெரிய

அறிவு இது தானே? உம்மைப் பெற்றதாயென்றும் பேசவேண்டியது தானே? அன்னியர்களைத் தாயென்று உரைபிடித்தால் அவர்கள் மகனென்னும் விசுவாசத்தை மாறுமல் வைப்பார்களே: பெற்ற தாயாகிய உம்மைவிட ஒப்பாரித்தாய் மேலென்று நினைக்கின்றேன். பிள்ளைகளுக்குத் தாயே சத்துருவாயிருந்து சதிசெய்யக் கேட்டதுமில்லை. நான் கண்டதுமில்லை. தேவரீரைக் கண்டேன். அம்மா! எங்களை அநியாயஞ் செய்துகெடுத்தீரே'' என்று அலறிக்கதறி அறைந்துமோதி, தரையின்மேலே தடாலென்று வீழ்ந்து, ஊறுகயம் போற் ஜலம்பெருகுங் கண்ணினை யுடையவராய் அழுவதாயினர்.

தருமன், பீமன், இவர்கள் புலம்பல்

"ஊற்றிருந்த விழியனளா யுனைப்பயந்
தாண் மனமழுக வுயிராய் நின்ற
காற்றிருந்த விடந்தேடிக் கணபலவு
முடல்குளிப்பக் கர்ணு வின்று
கூற்றிருந்த பதிதேடிக் குடியிருக்க
கடந்தனையோ கொற்ற வேந்தாய்
வீற்றிருந்திங் கைவேழு மடிவருடப்
புவியாள விதியி லாதாய்."

ஓ அண்ணு கர்ணமகாராஜனே! குந்திதேவி யென்னும் உம்மைப் பெற்றதாயார் ஓ கோவென்று இங்குழுது அரற்ற, நீருமது பிராண வாயுபொருந்தி பிருந்தவிடத்தைப் பூராயமாய்த் தேடிக் குடியிருக்கப் போனீரோ?வெற்றிமுற்றும் பெற்ற வேந்தனே! ஓ மிகவும் பொறுமை வகித்த சாந்தனே! நீர் சிங்காசனத்தில் வீற்றிருந்து புவியாளவும், நாங்களேவரும் உமது திருவடிக்கு ஊழியம்பண்ணவும் விதிப்பயன் பெறுமற்போயினேரும். ஓ வீரசேனை! மாமிசத்தையும் உதிரத்தை யும் மாறுமற் கவ்விய நீண்ட பாணங்களை எத்தனையாயிரமோ தொடுத் தேன். நீர்தொடுத்த பாணத்துக் கெல்லாந் தப்பினேன். எப்படியுஞ் வெல்லலாமென்று சந்தோஷித்தேன். ஓ தேனிறைந்த மலர்மாலை யணிந்த திணிந்த தோளா! ஓ சிலம்பணிந்த வீரகண்டைத்தாளா! தினகரன் குமாரனுகிய செல்வமே! தேவரீருக்குத் தொண்டுசெய்து சீருஞ் செல்வமும் பெறுத நீங்கினாரேனுமே'' என்று தருமராஜன் தலைதெரியாமல் தம்மைமறந்து, தாரணியில் வீழ்ந்தார். அப்போது

பீமசேனனு மேனிமெலிந்து, முகச்சுளிப்படைந்து, "ஓ அங்கதேச ராஜதிலகனே! ஆ அண்ணா! தேவரீர்க்கிபாண் கண்ணுக்குண்மணி போல் அடிமைசெய்து காத்திருப்பேன், ஐயா! கைதவப்போரில் வீணுகிப கணைகளைவிட்டேனே: கலகம் விளைத்தேனே: காரியமுணரேனே: கசங்கிப்போனேனே: எந்தப்பாவியும், என்னண்ணனைத் தெரிவிக்காமற் போனார்களே; ஓ எங்களிறையே! ஒருவருக்கும் உண்மைசொல்ல வேண்டாமென்று கட்டுச் செய்துவைத்தீரோ? அல்லது உமக்குத் தெரியாதோ; எங்களுடைய தீவினைபானது தாயென்றருள்கொண்டு வந்து சமையனைச் சந்திப்பதற்குச் சகாயமாயிருந்ததோ; ஓ அண்ணா! சந்தோஷம் அநுபவிக்கவிருந்த நாங்கள் சங்கடம் அநுபவிக்கும்படி நேரிட்டதே; ஐயா! ஓ வினையால் விளைந்த சஞ்சலமே" என்று பீமசேனன்புலம்பி, மெத்த வெறி கொண்டவர்போற் கர்ணனுடைய தேகக்குறியிற் கண்வைத்தபடி நின்றான். அப்போது அருச்சுனன் அக்கர்ணன்மேல் வீழ்ந்து கதறி நெடுமூச்செறிந்து பிரலாபிப்பதாயினன்.

அருச்சுனன் புலம்பல்

"ஊன்றொடுத்த வயவாளி யெத்தனேயா
யிரந்தொடுத்தே னுரகத் தாணீ
தான்றொடுத்த கடுங்கணைக்குத் தப்பினே
னெனமகிழ்ந்தேன் சஞ்ச லீகந்
தேன்றொடுத்த மலரலங்கற் றின நாதன்
சேயேகின் றிருமார் பத்தில்
யான்றொடுத்த வெடும்பகழி யெனைக் கெடுப்ப
தறிந்திலே னென்செய் தேனே"
"யாயுரைத்த தல்லாது வேறுரைத்த
தசரீரி யென்னுந் தேவின்
வாயுரைத்த தின்றளவுங் கேட்டிலேங்
கேட்டன மேல் வாட்ட முண்டோ
பேயுரைத்துத் தாலாட்ட முலைப் பாலோ
டெயிருண்ட பித்தா வீண்டை
நீயுரைத்த பிறகறிந்தோ மெம்மூனையின்
றெமைக்கொண்டே நேர்செய் தாயே,"

ஓ சிரேஷ்ட ப்ராதாவாகிய என்தேவே! தேவரீர்மீது நானுவித மாகிய முனைக்கணைகளை நான் தொடுத்தும், நீர்தொடுத்த நாகாஸ்தி ரத்திற்குத் தப்பிப்பிழைத்தோமென்று சந்தோஷம் அடைந்தேன். ஓ தேன்வண்டுமொய்த்த செண்டாகிய வெண்டாமரை மலர் மாலை யணிந்த திண்டோளுடைய தினகரன்சேயே! உம்முடைய தீரமார் பகத்தில் யான்விடுத்த பாணங்கள் எண்ணைக்கெடுப்பதை அறியாமல், உம்மைக்கெடுத்த தாயெண்ணி உடல்பூரித்தேன். ஓ உலவாப் பெருந் திற லுத்தமனே! இனி நான் என்ன செய்வேன்? ஐயோ! பூமியில் ரதம்புதைந்த போதும், இத்தப்பூமி பன்னிரண்டுகுலம் மேலெழும் படியாய் தோலே தூக்கிய தோன்றலாகிய உமக்கிணையாரிருக் கின்றார்கள் என்னையனே! உம்முடைய வாழ்நாளை மடியச் செய்யு மென்று அஞ்சரீகத்திலுல் மிகவறியேனுகிய சிறியேன் அறியாமை கொண்டு குறியாமற்கொன்றேன்! கொன்றேன்! கொன்றேன்! கொடும் பாவியாகிய நான் கொலை செய்தேன்! சகோதரத்துரோகி யானேன்! ஐயையோ! இவ்விடத்தில் இந்த அம்மாளாகிய தாய்சொல்லவல்லவோ தெரியவந்தது. இதன்றியும், இந்த அசரீரியென்னுந்தேவும் இப்போ தல்லவோ தெரிவித்தது. இன்றையவரைக்கும் நாங்கள் கேட்டறிந்த தில்லையே; தெய்வமே! கொஞ்சமேனும் அறிந்திருப்போமாகில் எங் களுக்கு வாட்டமுண்டோ? வதக்கமுண்டோ? ஒருநஷ்டமுமில்லையே: பூதகிபென்னும் பேபானவள் மடிமீதுவைத்துக்கொண்டு தாலாட்டி முலையூட்ட, அம்முலைப்பாலுடன் அவளுயிரையும் உண்டருளிய பித்தா! ஓ வஞ்சக நெஞ்சுடைய அஞ்சனமேனிச் சித்தா! ஆ பாவி! இப்போது நீர்சொல்லவந்த இந்த ரகசியத்தை நானுநாழிகைக்கு முன்னே சொல்லப்படாதா? ஓ கபடநாடகமுடையவனே! இதனுல் உமக்கென்னலாபம்? நீர் என்னவாரிக்கொள்ளப் போகின்றீர்? பாவ புண்ணியம் பார்க்கவில்லையே: தன்கையைக்கொண்டு தன்கண்ணைக் குத்திக்கொள்ளச் செய்ததுபோல், எங்கள் கமையனை எங்களைக் கொண்டே முடித்துப்போட்டீரே" என்று அருச்சுனன் புலம்பினன். அப்போது நகுலசகாதேவர்கள் நடுங்கி பொடுங்கி நாவுலர்ந்து, வாய் விட்டலறி, கண்ணனைக் கண்கலங்கப் பார்த்து இதனைப் பேசுவ தானுர்கள்.

நகுல சகாதேவர்கள் புலம்பல்

"ஆடகனேப்புதல்வனைக்கொண்
டழிப்பித்தா யிலங்கை நகர்க் காசையன்று
வீடணனைப் பகையாக்கிக்கிளையுடனே
வீழ்வித்தாய் வேலுசூழ்ந்த
நாடறியப்புகுந்தெமக்கு நாயகமான்
கன்னனையு நரன்கையாலே
யீடழியப் பொருவித்தா யிமையவ ரீ
வல்லவிரகி யார்வல்லாரே"

"ஓ கிருஷ்ணமூர்த்தி! பூர்வம் இரணியாசுரன் என்பவனை அவன் பிள்ளையைக்கொண்டு கழித்துவிட்டீர். இலங்கைக்கிறையாகிய இராவணனுக்கு அவன் தம்பியாகிய விபீஷணனைப் பகைப்படுத்திவைத்து அவனை நீர் உளவாக்கிக்கொண்டு புத்திரமித்திரகளத்திராதிகளுடன் போக்கிவிட்டீர். இந்த லோகப்பிரசித்தியாய்க் குருகுலனுயக்கோமானுகிய கர்ணனை, நரனுகிய அருச்சுனன் கையினல் ஈடழியப்பொருதிவைத்து பிறப்பித்தீர். பெரியோனென்று நம்பும்படியாக இமையோனுகிய நீர் செய்யுஞ் சூதாகிய விரகைப்போற் செய்வதற்கு யார்வல்லவர்கள்?" என்று நகுல சகாதேவர்களும், மற்றபந்துவர்க்கங்களும் திரௌபதையும் விசனமடைந்து, கோபாலகிருஷ்ணனை நோக்கி ஆளுக்கொருபேச்சுப்பேசி, கர்ணனுடைய அடிமலர்மேல் வீழ்ந்து அழுது அரற்றித் துன்புற்றார்கள்.

அமர்ப்புறத்தில் துரியோதனுதியரும் அவ்
நிளுபுரத்தில் நிரிதராட்டிரனுதியரும்
வருந்தல்

இவ்வாறு குந்திதேவியும் பாண்டவர்களுங் கர்ணனைக் குறித்துத் துயரப்பட்ட சங்கதிகளை யெல்லாம் பாம்புக்கொடி படைத்த துரியோதனன்கேட்டு, அநேகம் மத்தாப்பு வெளிச்சத்துடன் வந்து, யுத்தகளத்தைப் பார்த்து, மரம்போல்நின்று, வாயைத்திறவாமல், மறுவார்த்தை பேசாமல், "ஐயையோ !! ஆ! தெய்வமே! இதென்ன சூது? நாடாண்டவனுங் கர்ணன். காடாண்டவனுங் கர்ணன். அடடா!! எங்கும் அவர்களாகவே முடிந்ததே" என்று "அதிசயமடைந்து,

நாமேன் உலகத்துக்கு விருதாவாப் பழிசுமந்தோம்? கர்ணனுடன் பாரதஞ்சரியாய்விட்டது. இனிமேலென்னயுத்தம்? அதுகெட்டது'' என்று மனம் நொந்து, விரைவில் மாள்வதற்கான வழியைத்தேடி, அடங்காத துர்க்முடையவனுய்ப் பாசறை போய்ச் சேர்ந்தான். மற்றதம்பிமார்களும் ;பந்துக்களும் வியந்து, அவனோடு வருந்திக் கொண்டுசென்றார்கள். இவ்விடத்திற் குந்திதேவியாகிய தாயும், பாண்டவர்களாகிய சேயும், மனந்தேறுமல், ஆகுலத்தில் மூழ்கினவர்களாய்த் திகிலடைந்து தங்கள் பாடிவீடுபோய்ச் சேர்ந்தார்கள். அந்த வேளையிற் சஞ்சயனவன் துரியோதனனைப் போய்க்கண்டான். அந்தத் துரியோதன னவனைப்பார்த்து, ''ஓ சஞ்சயனே! இனிக்காரிய மில்லை. என்னுடைய க்ஷேமத்தை ஐயா அவர்கள் திரிதராட்டிரனுக்குந் தாயாகிய காந்தாரியம்மனுக்குஞ் சொல்லிப்போடென்றுசொல்லி அனுப்பினன். அப்படி யே சஞ்சயன் அஸ்தினபுரம்போய்ச்சொல்ல, அதைக்கேட்ட பெரிய அரசன் ''இனிமேல் நமதுபுத்திரன் பிழைக்க மாட்டான். அரிது: அரிது:''என்று பெருமூச்சுவிட்டு, உயிர்ப்படங்கி, செத்துப்போனவர்கட்குச் சரியாயிருந்தான். இச்சேதிகேட்ட காந்தாரி கண்கலக்கப்பட்டுக் கதறியழுதாள். கர்ணனுடைய பத்தினியும், இன்னுமுள்ள மற்றப்பேர்களின் பத்தினிமார்களும், புத்திரவர்க்கத்தாரும் மெத்தக்கலங்கி விசனப்பட்டார்கள். இதுவரையிலும் இழிகுலத்தானுக்கு வாழ்க்கைப் பட்டாளென்று தன் தாயுந்தகப்பனுந் தள்ளிவிட்டிருக்க, தான்மாத்திரம் பதிவிரதாமகத்துவப்படிக்கு இவரே தெய்வமென்று நம்பியிருந்த கர்ணன் பெண்சாதியாகிய பொன்மாலையானவள் பாண்டவர்களுக்குத் தன் புருஷன் மூத்தவனென்றும், குந்திதேவியாருக்கு முதற்புத்திரனென்றுங் கேள்விப்படவே;''ஐயையோ!! தெய்வமே!'' என்று தியங்கிப் பெருமூச்சுவிட்டுக் கலங்கினள். அவளைத்தாதியர் தேற்றி யாற்றினர்கள். காந்தாரியும், திரிதராட்டிரனும் மற்றப்பேர்களும், கர்ணனுடைய பிறப்பு வளர்ப்பு அறிந்து, மெத்தவும் விழித்து, உத்தரஞ் சொல்லமாட்டாமல், வாயைத்திறவாமல், வயிற்றைப் பிசைந்துகொண்டிருந்தார்கள். இப்படியாக வருத்தப்பட்ட இவர்கள் துயரத்தைச் சஞ்சயன்மாற்றி, மறுபடியும் இரணகளம்வந்தான். இவையனைத்தையுங் கேட்ட ஜனமேஜய மகாராஜன் ஆசாரிய மூர்த்தங்கொண்டெழுந்த அன்புருவாகிய வைசம்பாயனமுனிவரைத் தன்பத்தினியோடு மும்முறை பிரதக்ஷணம்வந்து, அவர் திருவடியிலே தீர்க்கதண்டஞ் செய்து, விழிவழியே ஜலம் பெருகும் படியாய் விசனமடைந்து, ''என்னுடைய தீவினையைப் பொடிபடுத்த

வந்த தெய்வமே! கூட்டமாகிய குதிரைப்பலங்களும், ஓட்டமாகிய தேர்ப்பலங்களும், நாட்டமாகிய மதயானை பலங்களும், தேட்டமாகிய பதாதிபலங்களும் வாளாயுத பலங்களும், வேலாயுத பலங்களும், எல்லா பலங்களும் உண்டாயிருந்தபோதினும், எப்பொருட்கும் இறைவனாகிய தெய்வத்தின்பலம் அணுவத்தனையேனும் இல்லாமற் போகுமேயாகில் மற்ற பலங்களெல்லாம் இருந்தும் என்னபலம்? அபலமே: சபலமே: சுவாமி! மேல் நடந்த சல்லியபர்வத்தின் சரிதத்தைச் சாங்கமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

பதினேழாம் போர்ச்சருக்கத்தோடு
கர்ணபர்வம், முற்றிற்று.

ஸ்ரீ மஹா பாரத வசனம்

9 சல்லியபர்வம்



கண்ணன் துதி

தந்த முறியின் வாய்வைத்த தயிர்பால் வெண்ணெ யெட்டாமற்
குந்தி யுரலின் மீதேறி யிளங்கோவியர்முன் கூத்தாய
நந்தன்மனையி லசோதையிரு நயனங் களிக்க விளையாடும்
மைந்த னிருதா ளொருநாளு மறவாதாரே பிறவாதார்

சூதபுராணிகர் வாக்கியம்

ஓ சவுனகாதிமுனிவர்களே ! இவ்வாறு உயுத்தபஞ்சகத்தின் மூன்றும் பாகமாகிய கர்ணபர்வத்தைக் கூறிய வைசம்பாயன முனிவரை ஜனமேஜயமகாராஜன் பணிந்துஎழுந்து "சுவாமி! அங்கதேசாதிபனுகிய கர்ணமகாராஜன் சேனபதியாகி நடாத்திய இரண்டுநாள் யுத்தத்தில் அவன் பராக்கிரமங்கண்டு, ஐயுற்ற தருமராஜனைக் கண்ணன் தேற்றியதும் கர்ணன் வேண்டுகோளின்படி. சல்லியனைச் சாரதியாயமைத்த துரியோதனன் பின் படைவர்கட் குண்டான வாதைவிலக்கிச் சமாதானஞ் செய்வித்த பிரயாசமும், அருச்சுனன் கர்ணனைத் தர்மனென்றையுற்று அவர் பாசறைக்கேக, அவரின்னுங் கர்ணனைக்கொல்லாது தாழ்த்தனனென்று அவனையும் அவன்காண்டீபத்தையும் நிந்திக்க, உடனே அவன் தன்சபதத்தை யவர்பாற் சாதிக்க வெழுக்கண்ட கண்ணன் அச்சபத நிவாரணத்திற் கேதுகூறி இருவரையுஞ் சன்மானித்ததும், பீமசேனன் துச்சாதனனை வதைத்துத் தன்சபதம் நிறைவேற்றியதும், அர்ச்சுனன்கழுத்துக் கிலக்குவைத்துவிட்ட கர்ணனுடைய நாகாஸ்திரங் கண்ணன் செயலாலேதப்பியதும், உடனே அக்கர்ணனிரதம் ஓர்தணன் சாபத்தாற் பூமியிலழுந்தியதும் அருச்சுனன் கணையாலடியுண்டு அவன்களைத்ததும், அக்கால் கண்ணனவனிடஞ்சென்று தருமத்தைத்தானம்

வாங்கி மீண்டும் அருச்சுனலவனைப் பரமபத மடைவித்ததும், கர்ணபுத்திரன் கிரியாணத்தை அசரீரியாற்கேட்டு வந்தரற்றிய குந்தி தேவியின் பிரலாபத்தால் அவன் ஜனனவரலாறின்ன தென்று இருதிறத்தினருமறிந்து வருந்தியதும், ஆகிய சரித்திரங்களை யெல்லாஞ் சாங்கோபாங்கமாகக் கேட்டுச் சந்தோஷமாயினேன். இப்பால் நான் காம்பாகமாகிய சல்லியபர்வத்தையுந் திருவாய்மலர்ந்தருளவேண்டு மென்றுகேட்க, வைசம்பாயன முனிவர் சொல்லத் தொடங்கினர்.]

பதினெட்டாம்போர்ச் சருக்கம்

க வி.

ஆரா வமுதா யருளாய் மருளாய்த், தீரா நிலையாய்ச் சென்னக் கடறன்
பேராம் புணையாற் கரையைப் பெறவே, நாராயணனுல் வருநன் மைகளே.

ஓ தினமேதகு செழுமுக வாசனே! ஜனமே ஜெய னெனு மகாராஜனே! கேளும்: நேற்றையப்போரில் தன் மைத்தனுகிய கர்ணன் நொந்துபோகும் படியாய்ப் பகைவர் செந்தழல் வாளிசெலுத்தி மாய்த்த தீங்கினைக்கண்ட சூரியபகவான் புத்திரசோபத்தாற் றியங்கி, மெத்தவு நேரிட்டவிசனமனத்தால் மபங்கி, வேறுசெய்கையொன்றுந் தோன்றுமற் சாய்ந்து, தானுந்தன் குதிரைகளும் ஓய்ந்து, தர்மசாஸ்திரங்களை ஆய்ந்து, தன் காந்திமுதலிய கதிர்களுங் குறைந்து வடமேற்குத் திசைகண் மறைந்துபோதலும், கர்ணனுடைய தகப்பன் இதோ ஓடுகிறனென்று துரத்திவந்து வளைத்துப் பகைத்து எதிர்த்த தன்மைபோல் எதிர்ந்து மறித்த மாலைப்போதென்னும் அவுணர் களெல்லாரும் அஞ்சியோடும் படிக்கு அடித்துவென்று, அருமையான தன்மேனி சிவந்து, புத்திரனைப் பறிகொடுத்தவர்கள் மனவெறுப்பினுல் பூப்பிரதக்ஷணஞ் செய்யும் பான்மைபோல் மகமேருமுதலிய வடதிசையைச் சூழ்ந்து, கிழக்குத்திசையில் வந்து, பாசபந்த விசனகரத்தால் மூடிக்கொண்டலைக்கும் அக்ஞானம்போல் உலகத்திற் புதைத்திருந்த வல்லிருளைவாட்டி, நாகலோகத்திற்குடியோட்டி, உதயகிரியானது பத்மராகக்கிரியென்று புலவர்கள் உவமிக்

கும் படியாய் அம்மலைமீதேறிப் பிரகாசித்து, கிரணங்களாகிய கரங்களை நீட்டி, கர்ணனை நினைத்து, உள்ளும்புறம்பும் ஒரே காய்ச்சலாய்ப் புழுங்கி, தன்பிள்ளையைக் கொன்றவர்களையும் அவனைக் கொல்லும் படியாய்ப் பார்த்திருந்தவர்களையும் மற்ற எல்லோரையுங் கருக்கிக் காய்த்து, முருக்கிப்பாய்த்து, எவர்களுந் தன்முகத்தைப் பார்க்கக் கூசும்படியாய்க் கடுங்கோபத்துடன் கண்சிவந்து, ககனமுகட்டையளாவி உதயமாயினன். இருகண்ணு மற்ற திரிதராஷ்டிரனுடைய பிள்ளையாகிய துரியோதனன் இராத்திரிமுழுதும் நித்திரையில்லாமல், மித்திரனுகிய கர்ணனை நினைத்து நினைத்து உருகி இனிமேல் எவரைக்கொண்டு யுத்தமுடித்து ஜெயம்பெறப் போகின்றேனென்று மாமனுகிய சகுனியுடன் நிலைசித்து யோசித்து, இரவு நீங்கிய விடியற் காலத்தில் எழுந்து, ஜாதிமல்லிகை முதலாகிய கொடிப்பூ-கோட்டுப்பூ-நீர்ப்பூ-இவைகளிலிருக்குந் தேன்களை உண்டுகளித்து ஓசையுடன்பாடாநின்ற வண்டுகளுஞ் சுரும்பினங்களும் மலர்த்தடங்களுக்கு வரும்படியாய் வரவழைத்துக்கொண்டு வராநின்ற சூரியனைக் கண்டு, நித்தியவிதியுடன் வந்தனை செய்து வணங்கினன்.

கிருபாசாரி இனியேனும் யுத்தத்தை நிறுத்திப் பாண்டவரோ டொன்றுபட்டிருத்தல் நலமென்று துரியோதனனுக்குரைக்க, அவனதை மறுத்தல்.

அந்த வேளையில் வில்லின் வல்லமைக்கு ஒருவருகிகில்லாமல் அஞ்சுராணிபோற் சிறந்த கிருபாச்சாரியர் துரியோதன மகாராஜனிடத்திற்கு வந்து கலந்துபேசி, கவலைப்படு மனத்தைத் தேற்றி, "ஓ கௌரவ முதல்வனே! இனிமேலாகிலும் யுத்தஞ்செய்து வெற்றி பெற வேண்டுமென்று திண்ணமா பெண்ணியிருக்கும் எண்ணத்தை விட்டுவிடு; சொப்பனத்திலு நினைக்காதே. அதேனிப்படி சொல்லுவதென்றால் மலைமுதலியவற்றுக்கும் மக்குப்படியாய்ச் செய்கின்ற புயவலிமைபெற்ற வீராதிவீரர் ஒருவருமில்லை. நீ படைத்திருந்த சாமர்த்திய வான்களெல்லாருந் தங்கள் காலத்தைப் போக்கிக்கொண்டு போய்விட்டார்கள். மேலாக மிருந்திருப்பவர்கள் நீயு நானுந்தான். நாமிருவருமிருந்ததினால் என்ன பிரயோசனம்? வாயுகுமாரனுக்கும் விஜயகாண்டீப வீரனுக்கும் ஒப்பாகியபேர் இவ்வுலகத்தில் எவரிருக்

கின்றார்கள்? எதுகாரியம் எப்படியானலும் அவர்கள் நிற்கின்ற யுத்தமுனையில் நான்போகமாட்டேன். ஓ சகல நலங்களுடைய சற் கீர்த்தி படைத்தவனே! உன்தகைதையாகிய திரிதராஷ்டிர மகாரா ஜனும், அருந்ததியையொத்த உன்தாயாகிய காந்தாரியம்மனும், இன்னுமுனக்குரிய பந்துக்களும் வியாகூலம்பெற்று அழும்படியாய், இன்னும் பாண்டவர்களுடன் பகைத்துச் செய்கின்ற பெரிய சண்டையால் கொந்து புறங்கொடுத்தோடி, பிராணனே யிழந்து விடு வது மேன்மையானதல்ல. இதுவரையிலும் நடத்திவந்த யுத்தத் தால் நாமடைந்த பலன் யாதொன்றுமில்லை. ஆகையால் உலகமெல் லாம் உன்னைப்புகழவும் உன் அன்னை தந்தையாகிய பேர்களுடன் நீ மகிழவும், பாண்டவர்களுக்கு முன்கொடுத்த பரிசைப்போல் இந்திரப் பிரஸ்தத்தைக்கொடுத்து, அவர்களுடன் கலந்து மருவி, முறையாக விழைவுடன் வாழ்வதுமேன்மை. இதுவே நல்ல அரசர்க ளின் திறமை.

ஒருவேளை அந்தப் பாண்டவர்கள் தாங்கள் சொல்லிய சபதங் கள் வீணுகப் போகுமேயென்று கருதி அந்தச்சபதத்தை நிறைவேற் றுமல் விடமாட்டோமென்று தீர்க்க வயிரமாகப் பேசுவார்களாகில் அவர்களையான் எவ்விதத்திலாகிலுஞ் சமாதானப்படுத்தி, அவர் களுடையசபதமும் பழுதுபடவொட்டாமல் நிறைவேற்றி, உங்களி ருதிறவர்களுக்கும் பழிபாவமில்லாமற் செய்துபோடுகிறேன். ஓ மின் னைவிபோன்ற வேல்தாங்கிய மன்னவனே! இதைக்குறித்து நீ வெட் கப்படவேண்டாம். எழுந்திரு. என்பின்னேவா'' என்று சொல்லி யருளினார். விதியின்வழி மதியைச் செலுத்துஞ் செயலே யுடைய துரியோதனமகாராஜன் அவர் சொல்லிய அந்த வார்த்தையைக் காதிலேற்றுக் கொள்ளாமல், காரெனக் கறுத்திடித்து, கனலெனப் புகைந்திரைத்து, "ஆ! ஆ! என்ன சொன்னீர்?" என்று நிலத்திற் கரத்தையோங்கிப் புடைத்து, "ஐயா! பழமையாகிய கிரு பரே! தேவர்முதலிய யாவரும் புகழும்படியாய் வெம்போரைச் செய்து யுத்தகளத்தில் விழுந்து செத்தாலுஞ் சாவதேயன்றி, அவர் களுடன்கூடி உயிர்வைத்து வாழேன். அவர்களுக்குத் தாழேன். அற்பமதியால் ஆழேன். மேலும், எல்லாந்தெரிந்த அநுபவசாலியா கிய நீர் எப்படி மனந்துணிந்து சொன்னீர்! எனக்காகத்துணைப்பட்டு என்பொருட்டிற் படைத்துணைவந்து பிராணன் கொடுத்தபேர்களை யெல்லாம் நீர்நன்றாய் அறிவீர். என்னிமித்தம் இகல்கொண்டுமடிந்த

பல பேர்களுடைய பிராணனைப்பார்க்கிலும் என் பிராணன் பெரி தோ? நூறுபேராகப் பிறந்திருந்த என்னுயிர்ச் சகோதரர்களெங்கே? இப்போதுதானு நான் உயிர்பெற்றுப் பகையற்றுச் சுகமுற்றுவாழ வேண்டியது? நல்லகாரியம். ஓ உத்தமரே! உமதுவசனத்துக்கு நான் உடன்படமாட்டேன்" என்று தடுத்தான்.

துரியோதனன் சல்லியராஜனை வேண்டிச் சேனுபதி யாக்குதல்

இப்பால் தனக்குள் இன்றையப் போர்க்குச் சேனுபதி வேண்டு மே யென்று நினைத்தவனுய், பழமையாகிய ஆண்மையிற் சிறந்து பிறந்துவளர்ந்து முதிர்ந்த நமது பாட்டனுராகிய பீஷ்மருக்கும், வில்வேதசிகாமணியாகிய துரோணுசாரியருக்கும், ஒருவரு கிகரில் லாததமையனுகிய கர்ணனுக்கும் ஈடாக எண்ணத்தக்க திறம்பெற்ற வனும், வில்லாண்மைகளிலும், வேலாண்மைகளிலும், வாளாண்மை களிலும், தோளாண்மைகளிலுஞ் சரிப்பட்டவனும் மத்திராராஜனு மாகிய சல்லியனையல்லாமல் வேறொருவருமில்லையென்று ஸ்திரமாக மனோதிடங்கொண்டு, அச்சல்லியராஜனை மிகுந்த ஆசையுடனழைப் பித்து, அவனெதிர் சென்றுநின்று தழுவிக்கொண்டு,

"நீயே யெனக்குயிரு நீயேயெனக்
குளமு நீயே யெனக்குநிதியு
நீயே துணைப்புயமு நீயே விழித்துணையு
நீயேவழித்துணையு நீயேயனைத்து நிலையு
நீயே முனைச்செருவி லதிரதரின்
மாரதரி னிகரற்ற கோவுமதனு
னீய முடித்தியென தெண்ணத்தை
யின்னுனது நினைவின்படிக் கிலகியே.

ஓ மகாராஜனே! என்மனதுக்கிசைந்த இஷ்டனும் என்னுயிருநீ. என்னுளமுநீ. என்னுள்ளத்துணர்ச்சியுநீ. என்செல்வப்பெருக்குநீ. இவ்வுலகிற்கதிபதியு நீ! என்னிருதோளுநீ. என்னிருதோட்டுணையுநீ: அதிரதர், மாரதர், முதலாகிபபேர்களில் ஒப்பில்லாத சுப்பிர தீபம் போன்ற விஜயபராக்கிரமக் கோவேந்தனு நீ! மூவேந்தனு நீ! தேவேந் திரனுநீ. ஆகையினுல், நீயேதுணிந்து முனைந்து இத்தினப்போரை என்னெண்ணப்படி நிறைவேற்றி, என்னெண்ணத்தை முடித்து என்னைக்காக்கக்கடவாய்" என்று புகன்று புகழ்ந்து மகிழ்ந்து, நிலையா

கிய பட்டவர்த்தனரும், தலையாகிய மகுடவர்த்தனரும், முறைமையாக வணங்கும் வேதவீதி விதிப்பிரகாரம் கவரத்தினகஜிதபட்டங் தன் கரத்தாற்றரித்து, நான்குபடைகளுக்கும் இவனேநாயகனென்று கூறி, மின்னலைப்போற் பிரகாசிக்கும் வீரபட்டமணிந்த இரதகுஞ்சரமென்றிருந்த பட்டத்துயானையின் பிடரியிலேற்றி, சகலமேளவாத்திய சம்பிரம சந்தடியுடன் படைக்கோலங்காட்டி, வீரவாகுபூட்டி, சேனபதியாய் விடுத்தான்.

இவ்விதமாகச்செய்த துரியோதன மகாராஜனென்னுந் தோழனுடைய வார்த்தைக்கு அம்மத்திராஜன் இரண்டுபேசாமற் படைக்கோலங்கொண்டு வருதலும், அந்தச்சேனபதியாகிய சல்லியராஜனைக் குரு குலாதிபனுடைய சேனைகள்கண்டு மெய்ப்புளகமேறி, கண்களிலிருந்து முத்துமுத்தாய் ஆநந்தபாஷ்பஞ்சொரிந்து, இனிப்பாண்டவர்களை ஜயிப்போமென்று களிப்படைந்தார்கள். இந்தப்பிரகாரஞ் சேனபதிப்பட்டங்கட்டிய சல்லியமகாராசனுக்கு வரிசைகளெல்லாங் கொடுத்து, தெய்வீகமாகிய புண்ணியதீர்த்தங்களினால் ஸ்நானஞ் செய்வித்து, மறைவாணராகிய பார்ப்பாருக்கெல்லாம் சோடசமகாதானங்களுஞ்செய்து, அவனைப் படைமுகத்துக்கு அனுப்பிவைத்துத் தானும் நல்ல வஸ்திராபரணங் களெல்லாந் தரித்துவரிந்து, தேனிறைந்தமாலைகளும் அணிந்து, செந்தூரத்திலகந்தரித்து, திகழும் பிரகாசமகிழ்வுடனேங்கிப் போராடுந்தேரிற் புகுந்து, வரிசையாகிய மன்னரசேகர் பின்னுமுன்னுஞ்சூழ, வானுடர்முதலாகிய மண்ணுடருங் கண்டுகண்களிக்க, மேக கொச்சிதம்போல் மேளவாத்தியங்களை முழக்கிக்கொண்டு போர்முனைக்குவந்தான் துரியோதனமகாராஜன். அந்தவேளையிற் கிருபாசாரி, அசுவத்தாமன், திரிகர்த்தசேசாதிபன், சாலுவராஜன், கிருதவீரியன், கிருதவன்மன், இவர்கள்முதலாகிய அரசர்களெல்லாரும் வலம்இடமாகிய இருபுறத்திலும் மொய்த்துவர, முன்னும்பின்னும் நெருங்கிய பெருஞ்சேனைகள் எங்கணுங் கவிந்துவர, ராஜாதிராஜனுகிய துரியோதனமகாராஜன் தன் சேனபதியாகிய சல்லியராஜனுடன் கலந்து, கண்ட இரணகளத்தில் இன்றோடு பாரதயுத்த முடிக்கின்றோ மென்றுயாவரும் விருதுமுதலிய சபதங்களைக் கூறிக்கொண்டு பிரவேசித்தார்கள். இவர்களைக்கண்ட தேவர்கள் முதலிய யாவருங் குடிகெட்ட தென்று கூவி ஆவிகுன்றினார்கள். சேனபதியானவன் சகலமன்னர்களையுஞ் சதுரங்கப்படைகளையுஞ் சலிப்பில்லாமல் அணிவகுக்கும்படியெத்தனித்து, சாமர்த்

தியவான்களாகிய சகலரையுங் கூட்டி, துரியோதனனையும் நடுமத்தியில்நாட்டி, சர்வதோபத்திரமென்னும் வியூகம்வகுத்து, மந்திரி சாந்தர், மண்டலீகர், முடிமன்னர், இவர்கள் முதலானபேரைத் துரியோதனனுக்குக் காவலாய்ப் பின்னுமுன்னு நிற்கும்படி செய்து நின்றான்.

தருமராஜன் தன் படைக்குறைவைக் கண்ணனுக்குணர்த்த, அவரதற்குத்தக்க விடைகூறக் கேட்டு யுத்தமுகஞ் சென்று அமர் தொடங்கல்

இங்கே கௌரவாதியர்செயல் இவ்வாறாக, அங்கே பாசறை சேர்ந்த பாண்டவ ரைவருஞ் சஞ்சலசித்தராகி,சிவந்த கிரணக்கனவானென்னுஞ் சூரியகுமாரனாகிய பாலகனை, ஜெகராக்ஷகனாகிய காவலனை, இரப்போர்க்கு இல்லாமைபென்னும் இருள்விடியச் செய்த இரண்டு கரங்களையுடைய வள்ளலை, குருகுலத்துக் கிறையாகிய கோமானை இழந்தோமே யென்று புட்பகிறைத்த பூமாலையணிந்த தருமன் முதலிய யாவருங் கண்ணீர்சொரிந்து, அன்றிராத்திரிமுழுதும் இமையுடன் இமைபடாமல் ஏங்கிவிழித்திருந்து, அலறி அழுது அமர்ந்தார்கள். சூரியனும் அவனுடைய பத்தினியாகிய சாயாதேவியும் புத்திரனைக் குறித்து மெத்தவெறுத்துப் புத்திமயங்கினார்கள்; அத்தச் சாயாதேவியின் துயரத்தைப் பார்க்கிலும் நூறுமடங்கதிகமாய் இத்தப்பூமிதேவிபுலம்பி மெலிந்தாள். மற்றத்தேவர் முதலியாரும் புலம்பி வாடினார்கள். தருமராஜனவர் தம்மைத்தாமே வெறுத்துக்கொண்டு, "ஐயோ! சூரியகுமாரனை நம்து தமையனென்றறியாமல் மெத்தவுங் கிருத்துப் பிரார்ணனைவாங்கும் படியாய்த் தீமுகமாய் நின்றோமே"என்று தமதுசிந்தை நொந்துவருந்தி,சம்பந்தமாகிய உறவுதெரியாமல் ராக்ஷசர்களைப்போல் முடித்துவிட்டானே இத்தச் சூரச்சுனனென்று உலகமாயையிற் பொருந்தி மயங்கினார். பீமசேனனவன் மனங்குன்றி, எல்லாந் தெரிந்திருந்தும், பார்வமறிந்திருந்தும், இப்பேர்ப்பட்ட கொடியதுன்ப வேலையைமுடித்து வைத்தானல்லவா இத்தக் கபடநாடகனென்று மாயோனைப்பார்த்து, "ஓ மாதவா! உமது மனக்கல் திட்டென்று வீழ்ந்ததா! இனி நீர் கடலில் வீழ்ந்து கண்ணுறக்கங் கொள்ளுவீரா?" என்று திணித்த கஞ்சனை முனிந்த அஞ்சனவண்ணனாகிய அவ்வஞ்சகனை வெறுத்தான்;

வலிமைபெற்ற கல்மனமாகிய குந்தியென்னுந் தாயை வெறுத்தான்; இனியாரை வெறுத்தும் எவரை பொறுத்தும் ஆவதொன்றில்லை யென்று ஜன்மாந்திர விதியையெறுத்தான். அன்றிரவு விடியுமளவும் அர்ச்சுனனும் சகுல சகாதேவருந் தனித்தனித் துயரங்கொண்டாடி, தங்களுக்குத் தாங்களேதேறி, விடியற்காலத்தில் தங்கள் மூத்த சகோதரர்களுந் தாங்களுமாகக் காலைக்கடனை முடித்துக்கொண்டு, மன்னர் அநேகரும் நால்வகைச் சேனைகளும் ஒருங்கே ஒழுங்காகமருங்கு சூழ்ந்துவரத் தாங்களேவரும் ரதாரூடராய்ப் புறப்பட்டு, இன்றையப் போரிற் சபதவஞ்சினைக் குறைகளை யெல்லாம் முடிக்கவேண்டு மென்னும், இருதயத்துடன் பராக்ரமித்து, எங்கும் பலவித சங்கங்களும், தாரை தப்தரி, மத்தளம், பேரி, பூரி, வீரமணி, இவைமுதலிய வாத்தியங்களு முழங்கும்படியாய் யுத்தகளம் போய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது தருமபுத்திரர் தம்பிதாவாகிய எமதர்மராஜனுடைய உத்தியோசத்தைப் பூரணமாகக்கொண்டு வீரம்பெற்று நின்றார். இருதிறப்படைகளின் முழக்கமாகிய வாத்தியங்களின் பேரோசைகளினால் அண்டமுகடு வீண்டுபோய்விட்ட தேவென்று தேவர்கள் நடுங்கி ஓடி யொதுங்கி அஞ்சும்படியாக, மதம்பெற்ற யானை முதலாகிய கடுஞ்சேனைகளுடைய பாஞ்சால புத்திரனுகிய திஷ்டத்தூய்மன், எந்தமுகங்களிலுந் தானுயிருந்து இரதஞ்செலுத்தி, அழகிய அத்திரவியூகமாகிய அணிவகுத்தான். தருமருடைய தம்பிமார் முதலியபேரும் வந்து தமையனுகிய அவர் பாதத்தில் வீழ்ந்துவணங்கி, மனஞ்சலிப்பில்லாமற் புடைசூழ்ந்திருந்தார்கள். எதிரிகளின் சேனைகள் முனைந்து முரண்டுநிற்கச் சேனுதிபதியாகிய சல்லியராஜன் மகாவல்லமையுடன் இறுமாந்து நிற்கின்ற வலியைத் தருமராஜன் நோக்கி, அதிசயித்து, கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து, "ஓ எங்கட்கின்றியமையாத் துணையாகிய இறையே! நமக்கெதிரில் எதிர்ந்து மதர்ந்து ஸ்திரமாக நிற்கின்ற தூரியோதனன் சேனைகளுடன் இன்றிருக்கு நமதுசொற்பப் படைகளைக்கொண்டு எப்படியுத்தஞ்செய்வது?" என்று கேட்க, மதுசூதனன்,

"வீடுமனேச் சேலக்குருவாம் வேதியனே நும்முனைமுன் வீடு சேர்த்த
நீடுமணிப் பொங்கழலோர் நின்னருகே நிற்கின்றூர் நிகரிலாய்கே
ளாடுதிரைக் கடனீந்தி யேறினர்க்குக் கழிகடத்த லரிய தன்றே
தோடவிழ்தார்ச் சல்லியனுக் கிளைப்பரோ விளையார் நம் றேற்றத் தின்றே"

ஓ முரசக் கொடியையுடைய முதல்வனே! பீஷ்மரையும், சிலைக்குருவையும், உமது தமையனுகிய கர்ணனையும், இன்னும் அநேகக் திடகாத்திரத் தேகமுள்ளாரை யெல்லாம் மோக்ஷவீட்டிற் சேர்த்துவிட்ட மணிப்பொற் கழலணிந்த உமது தம்பிமார்களெல்லாரும் உமது பக்கத்திலேயே நிற்கின்றார்கள். ஆழமாகிய சமுத்திரத்தை நீந்திக் கரையேறியபோர்கள் ஒருசிறியகழியைத் தாண்டப் பயப்படுவார்களோ? அவர்களுக்கு ஓர்குறுகிய கால்வாயைக் கடத்தலருமையோ? இன்று இந்த இதழ்விரிந்த மாலைபொருந்தும் புயாசலச்சல்லியனை ஜயிப்பதற்கும் இளைப்பார்களோ? ஒருபோதும் இளைக்கமாட்டார்கள். விந்தகிரிக் கொப்பாகத் திணிந்தமேதாலிங்கையுடைய தர்மநந்தனரே! மிகச்சுளுவில் சல்லியனை ஜயித்து முடிக்கிறதாயிருந்த போதிலும், வில்லாள்களிலும், வேலாள்களிலும், மேலாகிய வேற்தர்களிலும், யானை வீரர்களிலும், குதிரை வீரர்களிலும், தேர்வீரர்களிலும், சிறந்த சல்லியனை டெதிர்க்கத்தக்க வீரர்கள் உமதுதம்பிமார்களிலும், மற்றப் பேர்களிலும, ஒருவருமில்லை. அவனுக் கொப்பாகவு மாட்டார்கள். ஆகையால், அரிய பெரியமலைகள் திரண்டு இரண்டுபக்கத்திலும் அமைந்ததற் கொப்பாகிய தடத்தோளிங்கைக் கண்டு அரசர் முதலிய யாவரும் வெருண்டு மருண்டு ஓடும்படிக்குப் போர்புரியா நின்ற அம்மத்திர தேசாதிபனுகிய விந்தகன் யுத்தஞ் செய்வதற்கு, உம்மைவிட்டு இன்னொருவர் போகிலும்போகான். அவனை நீங்களனைவருமுன்னுத்து, கீழ்க்கடல் முகட்டில்வந்த சூரியன் மேற்கடல் முகட்டில் விழுந்து போமளவும் ஓயாமற் சண்டைசெய்யினும், இன்றையப்போரில் ஒருவரை யொருவர்வெல்ல வல்லமைப்படுவது அசாத்தியமாகும். ஆனாலும், அர்ச்சுனன் ஒன்றியாய்ச் சென்று அசுவத்தாமனுடன் மல்லவான். மாத்திரை மைந்தரிற் சகாதேவனனை வன் படைஞருடன் சென்று சௌபலனை வெல்வான். நகுலராஜனனைவன் சகுனியின் தக்கைமுதலிய பலவான்களாகிய மன்னரைக் கொல்லுவான். பீமசேனன் துரியோதன மகாராஜனுக்கு நேராகி நின்று மல்லவான். ஓ இறையாகிய தருமநந்தனரே! நீர் மத்திரராஜனுடனெதிர்த்து அவனுடைய பிராணனைக் கவரக்கடவீர்" என்று அன்பினுல் அருள்மொழிகூறி அனுப்பினர்.

இந்தப்பிரகாரங் கிருபையைப் பொழியுங் கிருஷ்ணபகவான் சொல்ல, அந்தவார்த்தையைச் சரமேற்றுங்கி, நாவலர் புகழும்படியாகிய காவலரும், வர்ணங்களையுடைய மணித் தேர்களுந், மதம்

பொழிகின்ற யானைகளும், தாவிச்செல்லுகின்ற குதிரைகளும், ஜயம் பெற்றவயவீரர்களும், மற்றப்படை வீரர்களும், பற்பல பிரிவாகப் பிரிந்து கூட்டமாகக்கூடி ஓட்டமும் காட்டமுமாகச் செல்லும்படி தானும் மற்றத் தம்பியர் காலவருமாக நடத்திக் கொண்டுசென்று அமர்முனைக்க ணின்று, முரசமுதலாகிய வாத்தியங்கள் முழங்க, சமயோசிதமாகிய தருணத்திலே ஜயங்களைத்தரும் ஆயுதங்களெல்லாஞ் சுழல, கடலொலிபோ லிரைத்து, கரைபுரள விரைந்து, சாணைபிடித்துக் கூர்மையிய தழற்கொடுங் கணைகளைவாரி வாரி மாரி போற் பொழிந்தார்கள். அப்போது அங்ஙன துரியோதனனுடைய வாகினிகளும் எதிர்மலைந்து, கொடிகாட்டிய தேர்களுடன் தேர்களும் கெடி காட்டிய யானைகளுடன் யானைகளும், வெடிகூடிய குதிரைகளுடன் குதிரைகளும, முடி மீட்டிய வயவர்களுடன் வயவர்களும் எண்டிசை யதிரச்சண்டை விளைவித்தார்கள். இவ்வாறு இருதிறப் படைகளுங் கைகலந்து வில்லிலிருந்து உந்திப்பொழியுங் கணைமாரிகளினாலும், கட்டுகள் பொருந்தி வயிரம் பற்றிய கதாயுதங்களினாலும், கான்பைப்போலும் வரம்பெழுந்த இலைபாகிர்தியாகிய வேலாயுதங்களினாலும், முச்சூடையும் முத்தலைபாகவுடைய சூலாயுதங்களினாலும், இன்னமும் பற்பல ஆயுதங்களினாலும், ஒருவரை பொருவர் பகைத்து மிகுத்திச்செலுத்தி வருத்துந் தன்மைகளினால், ஒன்றையொன்றிகலியெதிர்த்தகாற்படைகளும் இறந்துகுறைந்து சிந்தித்திசாதிசைகளிற் பயந்து பறந்தோடி தொந்தழிவதினால முந்திவழியாகின்ற இரத்தவெள்ளமானது பெருகிக் கால் கொண்டோடி, கடலுடன்மலந்து அலைத்தது. எங்கணும் பிணமலைகள் மிகுந்துகிறைந்தன. கழுகுகள், காக்கைகள் கூளிகள் ஞாளிகள் இவைமுதலியவைகள் பல விடங்களினும் கூடிக்குலாவின.

சல்லியசேனபதி தருமனையும் அவர்க்குச் சக்கரரக்ஷகனுய்வந்த பீமனையு மெதிர்த்துப் புறங்காணல்.

இவ்விதமாகப் போர்புரியுங்காலையில், தருமராஜனுக்குக் கிருஷ்ணமூர்த்தி முன்சொல்லி யிருந்தபடியே அரவக்கொடியோனுடைய பெருஞ்சேனைகளுக்கு அதிபதியாகிய சல்லியராஜன், குதிபதியாகிய தருமராஜனுக்கு எதிர்வந்து கோர்த்துசார்ந்து கலகம்விளைத்தான். அந்தவேளையில் மகாரதத்தலைவ ரென்னும் அன்பர்க்கு நேய

றென்றுஞ் சொல்லத்தக்க எமதருமராசனுக்குச் சேயனுகிய மூரச கேதனனுன தருமராஜனுனவர், தம்மோடு சல்லியன் சண்டைச்குப் போய் புல்லிய தன்மையைக் கண்டுணர்ந்து, தாள்வல்லமை, தோள் வல்லமை, வாள் வல்லமைகொண்ட ஆள்வல்லபத் தம்பியாகிய பீம சேனனைத் தமக்குச்சக் காரக்ஷகத்துணை யாகக்கொண்டு, காயுங்கனற் பொறி கதுவவும், கண்கள்சிவக்கவும், கார்முகமாகிய வில்லைப்பிடித்து வளைத்து, காணெஞ்சியடித்துக் கிளைத்து, தேரிற்பரிதி யெனச்சென்று, போரிற் பெரும்புலியெனப் போய்நின்றூர். இவ்விதமாக மூனைந்த இருவருடைய கொடித்தடந் தேரிரண்டும் எதிரெதிர்நெருங்கி, இடம் வலம் ஒதுங்கி, இமைக்குமுன் பதுங்கி, இகன்றெதிர்முழங்கி, கோர் கோரமாகவும் நிரைநிரையாகவும் பார்கீழாடவும் கார்மேலோடவும் துவ சங்கள் பறக்கவும் தோகைகள் சிறக்கவுமாகிய பல ஒழுங்குகளைக் காட்டி, சாரதிகளின் வட்டம், வளைவு, கோணம், சரிகை முதலிய திறங்களைமூட்டி, ஒருவருக்கொருவர் போட்டி விளைத்து, ரதங்களை முன்னேட்டம் பின்னேட்டங்காட்டி முடுக்கினர்கள். மகாரதிகளிரு வருங் கைப்பிடித்த திண்சிலைவளைத்து, நாணேற்றித்தெரித்து, நாக லோகமிரண்டும் வெருண்டுபோகும்படி கனல்வாளி, கதிர்வாளி, கார் வாளி, கூர்வாளி, கல்லகக்கணை, பல்லவக்கணை, ஆலகாலக்கணை முத லிய அஸ்திரங்களை விடுக்கும்போது, கற்பகநிறைந்த ககனவாசிக ளெல்லாஞ் சலித்துக் கலங்கினர்கள். திசையானைகளெல்லாம் அலுத் துத் திடுக்கிட்டன. திக்குப்பாலகர் தியங்கினர். இந்தச் சண்டையைப் போன்ற சண்டை இதுவரையிலும் நாங்கள் பார்த்ததில்லை யென்று சொல்லாதவர்களில்லை. இவர்களிருவருந் தங்களுடைய பெருவில்லி னிடத்தி லிருந்து எய்யப்பட்ட பலகணைகளானவை கும்பல்கும்ப லாய், வரிசைவரிசையாய், மாலைமாலையாய் வரும்போது, சப்தசமுத் திரமும் வரண்டுபோயது. சப்த மேகங்களும் விண்டலத்தைவிட்டு நீங்கி மலைகளின்குகைக்கு ளொளித்தன. ஆகாயபரியந்தம் உயர்ந்த சிகரங்களையுடைய சப்தமலைகளுங் கிடுகிடுவென்றதிர்ந்தன. ஏழுலகங் களும் இடிபடலாயின. அமரர்களுடைய கண்களெல்லாம் அதிர்ந்து பிதுங்கின. வடவாமுகாக்கினியும் வருத்திப்புகைந்தது.

இவையல்லாமற் ஜ்வாலா மாலிகையாய் அக்கினியைப் பிரகா சிக்கச்செய்து பொறிபறக்கும் விசையோடு ஊழிக்காற்றையும் உலை யப்பண்ணிவருகின்ற உரத்த அஸ்திரங்களின் ஸ்திரத்தினுல் ஆயிரங்

கிரணங்களையுடைய சூரியனும், அவனேறியதேரும், அந்தத்தேரிற் பூட்டிய சப்தமாவென்னுங் குதிரையும், அந்தக் குதிரையைச்செலுத்துகின்ற அருணனென்னுஞ்சாரதியும், அநுபவித்த இடரை யாவர் சொல்லுவார்கள்? ஆதிசேடனுடைய ஆயிரம் வாயாலுஞ் சொல்லி முடியாது. இந்தப்படி கொடும்போர்புரிந்து வரும்போது சத்திய கீலையுத்தனுகிய தருமராஜன் அபிமந்திரித்துத் தொடுக்குங் கணைகளெல்லாஞ்சென்று சல்லியராஜன் விடுக்குஞ் சரங்களையெல்லாந் தப்பாமல் ஒடித்துமுறித்துக் கெடுக்கும் ஓசையும், சூரியபுத்திரனுகிய கர்ணனுக்குச் சாரதியாயிருந்த சல்லியன் சரங்களைவிடுத்துத் தன் கணைகளை மாய்க்குந் தருமராஜன் கணைகளைத் தவிடுபொடியாக்கும் ஓலியும் அநுக்கிரகசாலிகளாகிய இருவரும் ஒருவரை யொருவர் மெச்சாகின்ற பேரிரைச்சலும், இருவருமடிக்கடி படைமுகத்திற் பவளம்போன்ற தங்கள் வாயில்வைத்து ஊதுகின்ற சங்குகளின் அமலையும் சக்கரங்களையுடைய தேர் உக்கிரப்பட்டுக் கர்க்கரத்தொனியிட் டுற்பாத நடையுடன் கரகரவென்று சுழன்று வருகின்ற ஆர்ப்பும், வீரங்கள் மொழிகின்ற வீரர்களின் கூச்சலும், ஆகியவிம்முழக்கங்களெல்லாம் யுத்தகளத்தில் மெத்தநிறைந்து மற்ற ஓசைகளை மாயச்செய்திருந்ததல்லது, வேறுபட்ட ஓசையென்பது கிடையாது. இப்படியிருக்க மத்திரராஜன் மனங்கடுகடுத்து, மகாகோபம் அடுத்து வாளிகள் பலவாய்த்தொடுத்து, ஒரு கணையால் தருமராஜனுடைய உயர்ந்த முரசக்கொடியையும், இருகணையாற்பாயும்படியான குதிரை நான்கையும், மற்றிருகணையாற் சாரதி தலையையும், இருகணையாற் பாரியவில்லையும், மூன்றுகணையால் தேரையும், நான்குகணையால் தேகத்தையும் அழித்தான். அப்பொழுது முரசக்கொடியுடைய தருமராஜன் உதிரப்பிரவாகமாகப் பூமியில்நின்று, கண்களிற்சலமுங் கனற் பொறியும் கதுவப்பிரகாசித்து வருத்தியிருந்தனர். அப்பொழுது இவருடைய பக்கத்திற்குலகிரிக் கொப்பாகிய ரதத்தில் மேருமலைக்கொப்பாகிய வில்லைக்கொண்டு யானைகளுக்கெதிரில் ஆண்சிங்கமிருக்கின்ற ஆண்மைபோல் ஆக்ரமித்து கிலையைக்கொண்டு நிற்கின்ற வாயுபுத்திரனுகிய பீமசேனன் அந்தச்சல்லியன்பேரிற்ரூஷி, வில்லுடன்மேவி, அடாபாவியென்றுகூவி, ஒருபகழியால் அவனுடையயானைக் கொடியையுமுறித்து, ஒருபகழியால் வலவனுயிரையுமாய்த்து, சிலபகழிகளாலவன்தேரையிடித்துப் பொடியாக்கி, அவன் புயங்களையுந்துளைக்கப் பலபுங்கவங்களைத் தொடுத்தான்.

இவ்வாறு நினைத்தற்கரிய புயவலியினையுடைய வாயுகுமாரன் மாட்டிய அஸ்திரங்களால் துரியோதனனுடைய சேனைபதியாகிய சல்லியராஜன் புயமுருவி, உடலுருவி உயிர்வழுவி, போராடுகின்ற சமர்முனையிற் பொருந்த மாட்டாமற் போதொழித்து, பூமியாகிய தேர் மேல் நின்றான். சாரதிகள் உடனே வேறு தேர்கொண்டுவந்தார்கள். அத்தலைவனையிற் சல்லியன் சாரதிகள் கொண்டுவந்த சுவமணி ரதத்தி லேறி, ஒப்பற்றவில்லவனைத்து, கூர்மையாகிய முனைப்பகழிகளை மழைபோல் முடுக்கி, பீமசேனனுடைய ரதத்தையும் வில்லையும், சிங்கக்கொடியையும், தேர்வலவனையுஞ்சாடி, தேகத்திலுஞ் சிற்சில பாணங்களைத்தெறித்தான். அப்போது காற்றின்மகனாகிய கூற்றுவன், அர்ச்சுனனுக்கு மூத்தவன், குபேரலோகம்வரைக்கும் ஒருகைபார்த் தவன் கோபத்தால் முகம்வேர்த்தவனாய்க் கதாயுதங்கைக்கொண்டு, அந்தச் சல்லியன் கதி சேரும்படியாய் அவன் தரித்திருக்கு மகுடஞ் சிதறிவிழும்படியாய் ஓரேவீசாக வீசி ஓங்கியடித்து, தன்னைப்போற் பூமியில் நிற்கும்படி செய்து புகழை நிலைநிறுத்தினான். அதைக்கண்டு தேவர்களும் மற்றபாவர்களும் துதிசெய்தார்கள். இத்தப் பீமனைத் துதித்து மதிக்காதபேர்களில்லை. அதுகாலில் சிறிய அரவக்கொடி யும் அறிவைபாயுங்கொண்ட அரசர்க்கரசனுடைய சேனைபதியென் னுஞ் சல்லியராஜன் அலுத்து இளைத்து, உடம்பு உளைத்துக்களைத்து நிற்கும்போது, அவனுக்கருகாமையில் பீமசேனன்சென்று ஆ! ஆ! சல் லியராஜனே! துரியோதனனென்னும் இந்தப்பாவிக்குப் படைத்துணை யாகவந்த நீ இனியுன் பெண்டு பிள்ளைகளைக் கண்டுகளிக்கவும், பெரும் போகங்களையெல்லாந் துய்க்கவும், இந்த யுத்தத்தினின்றுந் தப்பிப் பிழைத்துப் போகவும் எண்ணியிருக்கின்றாயோ? நமன் பீடிக்கவும் நற்சேய்பிழைக்கவுமா? என் கண்ணைதிர்ப்பட்டும் பிழைப்பாயோ? ஐயோ! அநியாயமா! அப்பாவி வைத்த தண்ணீர்ப் பந்தலால் ஏமாந்த நீ இன்றுகூவி ஆவியிழக்கப்போகின்றாயே! இனித்தேறாயே!" என்று அந்தச்சல்லியன் பயந்து மருளும்படி பலவசனங்களைப்பேசித் தன் கதையைக்கொண்டு, இப்போது சண்டைசெய்வது தங்கள்கடமை யென்றுவந்த விற்சுரப்படைஞர் முதலாகிய சேனைகளையும், அசுவகம் யானைகளையும், சிந்திச்சிதைபடமாட்டி, காலுதிசையிலும் ஓட்டி, தட மகுட நிருபர்கள்சாய்ந்து மாயும்படிதாக்கி, அவ்வவர்களையும் விண் ணுலகத்திற்குடியாக்கி, இரதகஜதுரக பதாதிகளின் முடிகள்திக்குகள் தோறும் உருளச்சேர்த்து, பூமி கிடுகிடென்று நடுங்க, அண்டச்

சுவர் மடமடவென்று சரிய, குயவன் திகிரிபோற் கிறுகிறுவென்று சுழன்று உலாவினன்.

இவ்வாறு விருதுபெற்ற சிங்கத்தைக் கொடியிலெழுதிவைத்த பலம்பெற்ற பூமகனுகிய பீமன்கதைகொண்டு கொல்லுகின்ற போர் முனையில், எங்கும் வெருவி நிலைபெற மாட்டாமல் முதுகிட்டு ஓடுகின்ற பேர்களல்லாமல் எதிரிட்டு ஆயுதங்கொண்டு அமர்கொடுக்க வரும் அறிவாளிகள் யாருமில்லாமல் அநுமையாய்ப்போனதினால், "இன்னுமுள்ள சுத்த வீரர்யாருமில்லையா? இருந்தால் யாவரும்வாருங்கள். வந்தொருகை பாருங்கள்" என்று பீமசேனன் இரையுமளவில், விற்போர்புரிந்து வில்லடிபட்டுப் பூமிமேல் நின்ற சேனுபதியாகிய மத்திரதேசாதிபன் பீமன்சொல்லுஞ் சொல்லைக்கேட்டுப்பல்லை நறநற வென்று கடித்து,புயங்கள் அதிரப்புடைத்து, புருவநெறித்து, விழிப் பொறிபறக்க வெருட்டிவிழித்து, நெற்றியில்வியர்வு நிலத்தினிலோட நெரித்து, இதழ்மடித்து, இருகைபடித்து, எதிர்துடித்து, அதிவிரைவாகக் கதாயுதத்தை வந்து அடித்து, "அடாபீமா; இதோ நான்வந்து எதிர்த்தஇந்தயுத்தமுனையில் உன்னைமுன்னே எமலோகம் அனுப்பிவிட்டு மறுவேலை பார்க்கிறேன். இனி என்வல்லமையை நீயே அறியத்தக்கது" என்று வீரவிருதுவார்த்தைகளைப் பலவாறுகப்பேசி ஒருதோமராயுதமெடுத்து இடும்பிராயகனுடைய இருபுயத்திலுந் தாக்கும்படி எறிந்தான். அந்தத்தோமராயுதம்வந்து பீமசேனனுடைய தோளிற் பட்டவுடனே, ஒரு நிமிஷமாத்திரத்தில் அவசமுற்றுத் தன்னை மறந்து, தனதுநிலைதளர்ந்து, சற்றுநேரத்திலே தேறி அமரழிந்து போனன். அப்போது சல்லியராஜன் ஒருபெரிய கனகமணிவிமானத் தேறி, புரவலர் முதலாகியபேரும் புகழ்கூறிக் கொண்டாடிப்பின் றொடர்ந்து வரச்சென்று, பாண்டவச்சேனைகளிற் புகுந்து, கண்விற் கொண்டு படைஞரைத் தடுத்துப் படுத்துப் போர்கொடுத்துவந்தான். சல்லியனெறிந்த தோமராயுதத்தால் வாயுகுமாரன் அமரழிந் தோடிய போது மூடச்சிந்தைகூடிய துரியோதனராஜனுடைய சேனைவீரர் யாருந்தெழித்துச் செழித்துப் பொங்கி விடாதீர்கள்! விடாதீர்கள் என்று எதிரேறிச்சென்று, நெருப்பானது மரங்களைப்பற்றி எரிக்குந் தன்மை போற்கணைகளைச் செலுத்தித் தங்களுடைய கொடி, குடை, சாமர முதலாகிய வாத்தியங்கள் ஓங்கி முழங்க, எதிரிகளின் குடை, படை, கொடி, முடி, முதலாகிய யாவும் அழிந்து வீழப் புகுந்து தகுந்த அமராடினர்கள்.

நகுலனுற்கர்ணன் பிள்ளைகள் சித்திரசேனன் சூரியவர்மன் இவர்களும், அர்ச்சுனனுல் திரி கர்த்தர், சாலுவர் சஞ்சத்தகர் இவர்களும் வதைபடல்

இந்தவேளையிலே சூரியனுக்குப் பௌத்திரனும் கர்ணனுக்குப் புத்திரனுமாகிய சித்திரசேனன், சூரியவர்மன், என்று சொல்லாகின்ற இருவரும் அருஞ்சமர்க் கிளர்பாதவர்களாய்வந்து பெருஞ் சமர்வினைத்து, தமது தந்தையிறந்த குறை நீங்கும்படிபாய் வீராதி வீரர்களையெல்லாங் கணையாற்காய்ந்து ஆய்ந்து போராடியகாலையில் பாண்டவப்படை வீரர்களில் வெகுபேர்மாய்ந்து போனார்கள். யானை சேனைமுதலியதானைகள் வெகுவாய்ச் சாய்ந்துபோயின. அக்காலத்தில்விஜயத்திறங்கொண்ட வெம்பரிக்கதிபனுகிய நகுலராஜனவர்களைக் கண்டுவெகுண்டு அமராடி, அணிமுகங்கலக்கி, அமர்த்திறமுடுக்கி, அவர்கள் பலத்தையொடுக்கி, அஸ்திரங்களைச்செலுத்தி, அம்பரவாணர் முதலாகிய யாவருங் கலங்கி அலக்கழிந்து போகுபடியாய் இருவர்க்குங் குறிபார்த்து இரண்டு நாராசக்கணைகளை விடுத்தான். அக்கணைகள்வந்து பட்டமாத்திரத்தில் அவ்விருவருநொந்து, தங்கள் தந்தைமேபான அந்தவழியை நாடிச் சாய்ந்துபாய்ந்தார்கள். அவர்கள் மாய்ந்ததைக்கண்ட மாம்சம்வளர்ந்த தோள்களையுடைய சகுனியின் பிள்ளைகளாகிய உலூகன், சயிந்தவன், என்று சொல்லப்பட்டகீர்த்தியுடன் வளர்ந்தவீரர் இருவரும் இரதமேறி, சூரியனுகிய நெருப்புக்கெதிரில் இருளெதிர்ந்ததைப்போல் நகுலராசனைமுன்னிட்டு எதிர்த்து, நானுவிதயுத்தம்புரிந்து, ரதம், குதிரை, சாரதி, கொடி, குடை, முதலியவைகளழிந்து, தாங்களும் ஒழிந்து ஓய்ந்து பின்னிட்டபடி வெந்திட் டோடினார்கள். பெருமைப் பிரதாபம்பெற்ற திரிகர்த்தராஜனும், பிரகாசிக்குந் தோளினையுடைய சஞ்சத்தகரும், சாலுவராஜன் முதலாகிய தரணிபாலர்களும் ஓரேமுகமாகத்திரண்டு அருச்சுனன்மேற் புரண்டுமுரண்டு அடர்த்துப் போர்புரியும்போது அதுகண்ட இந்திரன் மைந்தனுகிய இசைபெற்ற அவ்விஜயன் வெகுண்டு, கோடிபாணங்களைக் குபீலென்றுவிடுத்து, அவர்களை வாடி மாயும்படிக்குப் படுத்து மற்றப்போர்களையுந் துண்டதுண்டமுங் கண்டகண்டமுமாக்கி வீழ்த்தி, குலப்பெரும் பகையாய்ப் பகைத்துக் கூசாபம் கொஞ்சமற்றிருந்து நாள்தோறும் வெகுதண்பட்டுத்தி

அயரச்செய்ததுமல்லாமல், அநேகந்தடவை விஜயகாண்டீபதரனாகிய தன்னுடன் அடப்போர்செய்த கணக்கிறந்தசஞ்சத்தகரென்னுஞ் தேராளிகள் யாவரையுந் தேடித்தேடிமுடித்து, இனிமேலுந் தனக்கெதிர்வாத் தக்கவர்கள் எவர்களுமில்லையென்று சொல்லும்படியாய் எதிரற்று நின்றான்.

தர்மராஜன் சல்லியனோடு வெற்றிப்போர் விளைக்கும்போது பீமசேனனுமவனை முனைந்துவெற்றிபெறுதல்.

இவ்விதமாக இருபெருஞ்சேனை மன்னர்கள்கைகலந்து கடிந்து அரும்போர் செய்துஅனர்த்தப் படுஞ்சமயத்தில், வல்லமைக் கொப்பில்லாத சல்லியராஜன் தனிப்புலிபோலெழுந்து, மீட்டுந்தருமராஜனைத்தகைந்து, அவருடைய்ச்சகமும் அவரரிய தேரும் பாகும் மறைந்து போகும்படிக்குக் கொடுங்கணைபால்மூடி, குவலயமெல்லாம் வாடிவருந்த ஜாடிக்கண்கலங்கித் திபங்கக்கண்டான். அந்தவேளையிற் குந்தியின் முதற்புத்திரனாகிய தருமராஜன்கதித்து, தம்மேலவரும்படியாகிய கணைகளைமதித்து, இரதத்தைச்செலுத்தி எதிர்த்துச் சல்லியனைப்பதைத்து, நூறு நூறு பாணங்களை ரிக்வேதமந்திரப்பிரகாரம் உக்கிரமாகவிடுத்து மதித்தற்கரிய ஆண்மைமிகுந்த மத்திராஜன் தொடுத்தவிதிக்கும் விதிக்கொப்பாக முடிக்குங் குத்திரமாகிய அஸ்திரங்களை பெல்லாம் நிமிஷமாத்திரத்தில் விலக்கி, வெட்டவெளிபாய்த்துலக்கி, சல்லியனையும் அலமலங்கக் கலக்கினார். அந்தச் சமயத்தில் பீமசேனன் தனக்கு வாசுகியாற் கொடுக்கப்பட்ட மஹாரௌத்திரி, எமனுயிரைசெலுத்தும்படியாகிய எழிற்கணைகொண்டுமீறி, பிரம்மாவின்விதியை கடத்தும் வில்லைவளைத்துச்சீறி, சதுரங்கத்தானையுந் தரணிமன்னரும் இருபுறமுஞ்சூழச் சபதங்கூறி, எதிரி தளத்திலுள்ள சேசமன்னர், பாஷைமன்னர், முதலியயாவரும் திசாதிசைகளிலிருந்தோடவும், பிராணன்பிரிந்து வாடவுந்தாக்கி, வெகுஜனங்களைப் போக்கி, தருமருந்தனருஞ் சல்லியராஜனுஞ் சண்டை செய்யுமுகத்தை நோக்கிவந்து மத்திராஜனைக்கண்டு மனமெலிவு கொண்டு என்தகப்பனாகிய தருமராஜனுடன் சண்டை செய்ததைப்போல் என்னுடன்சண்டை செய்வதற்கு வாருமென்று மேல்விழுந்து வலுவிற்போர்விளைக்கவந்தான். இப்பால் தனக்குத்தானே சரியாகிய சல்லியராஜன் தன்மேல் எதிர்த்துவந்த பீமனைப்பார்த்து, கோபாக்

இனி மூண்டெரியும்படியாய்க்கொதித்து, இந்திரதனுவைப் போன்ற வில்லைவளைத்து, ஏழுமேகமும் ஏகமுகமாகச்சேர்ந்து எங்குந்தலை காட்ட வொட்டாமற் பொங்குமழைகளைப் பொழியுமாறு போற் கொடுமுனைக் கோள்களைக் குபீர் குபீரென்று விடுத்து, பீமசேன னுடைய தேகமெல்லாம் மோழைபாகும்படியாய் மூழ்கச்செய் தான்.

அக்கால் வீரகண்டையார்ந்த வாயுபுத்திரனுகிய பீமசேனன் சல்லியன்விட்ட பாணங்களினுற்சலித்து, மறுபடியும் மனங்கெ லித்து, அகங்கரித்து, நூறுநூருகிய கோல்களைக்கொண்டு மாறுமாருக விடுத்தான். இப்படி யிருவரும் முறைமுறையாகப் புரிந்த போர்த் திறத்தை இன்னபடியென்று சொல்லுவதற்கு எவர் வல்லவர்கள்? இவ்விதமாகக் கடும்போராடி வருஞ்சமயத்தில் தேன்சொரிந்த தும் பைமாலை பணிந்த சகுலசகாதேவர்களும், செங்கண்மாலுக்கினியவரா கிய சாத்தகியும், திடுதிடெனத் தேரோட்டிவந்து, சல்லியனுக்கெதிர் சென்றுநின்று, வெஞ்சிலைகளைவளைத்து, ஒன்றுபோற்பலவாகிய தேவ தாஸ்திரங்களை மேன்மேலாகப்பூட்டி, தேருறுப்பு தேகஉறுப்புகள் தோறும்விடுத்து, மூவருமொருமுகமாகிப் போர்புரிந்து இச்சல்லி யனுவியை இன்று முடிக்கிறேமென்று தாங்கள் தங்களுடைய வல் லமைத்திறங்களைக்காட்டி, தேரோட்டி, காண்மாட்டி, பாணம்பூட்டி, முகமாருமற் போர்புரிந்தார்கள். அப்போதுவில்லுக்கும், சொல்லுக் கும், மல்லுக்கும், பாணத்துக்கும் ஸ்ரீராமனென்று சொல்லும்படி யாய் மேன்மைபெற்று மதங்கொண்டபானைக் கொப்பாகிய மத்திரரா ஜன் தன்போரிற்றிரண்டுஎதிர்த்துப் பலவிதமாகிய பாணங்களைவிடுத் துப் போர்புரியவந்த சகுலசகாதேவ சாத்தகிமுதலிய வீராதி வீரருடைய மேனியெல்லாந் துளைக்கும்படிக்கு நூறுநூருகப் பகழி களைத்தூண்டி, அவர்கள்கைப்பிடித்த விற்களையொடித்து, தூரியோ தனமகாராஜன் சந்தோஷிக்கும் படியாய் நகைத்து நின்றான். அது காலையிற் சல்லியராஜனுல தம்பிமார்கள் தளர்ந்ததளர்ச்சியைச்சமீர ணன் புதல்வனுகியபீமன்கண்டு,வெம்பரிபூட்டிய வேகத்தேர் தூண்டி, வில்லை வட்டமாகவளைத்துச் சம்பாசுரனுக்குப் பகைவனுகிய தேவேந் திரனைப்போன்ற சல்லியன் மேலெதிர்த்துச்சென்று, கொத்தாகிய பத்துப்பாணங்களைவிட்டு மத்திரனைமியதேரும், அவனுக்கு மித்திர னுகியயாரும் பூமியிற்புரண்டு விழுத்தாக்கினன். அந்தப்பீமனெய்த பத்துப்பாணங்களினும் பாகனுடன் தேரழிந்த சல்லியனுவன் வே

ரூருதேரேறிச் செலுத்திமீண்டு பீமனை வளைப்பதற்குமுன்னே அந்தப் பீமனுனவன் தனதுதேரைக் கிறுகிறு, விறுவிறு, என்று சுழலச்செலுத்தி, ஆகாயத்திற் பேரிடி இடிக்கு மேகங்களைப்போற் பெருங்கூச்சலிட்டு, துரியோதனனுடைய தேர்கள், யானைகள், குதிரைகள், காலாட்கள், முதலிய சேனைகளெல்லாஞ் சீர்குலைந்து, போரழிந்து, பேருலைந்து, புறங்கொடுத்தோடும்படிக்குப் போக்கி, சிலரைத்தாக்கி, சிலரை மண்ணோடு மண்ணுக்கி, சிலரைவிஷாக்கினிக்கணைகளைப்பெய்து கசக்கிப்பிழிந்து இப்படி பாசறையெல்லாம் பலவித கோலாகலமாக்கி எங்கும்பிணமலைகளாய்க் குவித்து இரத்த வெள்ளமோடச் செய்தான்.

அசுவத்தாமனருச்சுனனோடமராடிப் புறந்
தந்தோட, அதுகண்டுமூனைந்த
கிருபாச்சாரியு மவ்வாறுதல்

இவ்விதமாக வணங்காமுடிமன்னனுடைய சேனைகளை மடித்து வராநின்ற பீமசேனனுல் தனது சேதாழிந்துவருந்திய அசுவத்தாமன் சிவந்த கோபக்கண்களை யுடையவனுய்த் தெழித்து, சேமத்தேர்மீதேறிக்கொண்டு பாண்டவர்கள் படைமேற் சரமழைபொழிய வந்தான். அப்படியாகவந்த அசுவத்தாமனைப் பிரம்மாவுக்கொப்பாகிய தருமராஜன் முதலான வெற்றி வேந்தர்களெல்லாரும் வளைத்து, தீமனத்தராய்த்தெழித்து, தேர்களைமுந்த வந்திவந்து செருச்செய்தார்கள். அன்பும் அருளுந்தங்கிய மனத்தோரான துரோணுச்சாரியர் புத்திரனுகிய அசுவத்தாமன் தன்பேரில் எதிர்த்தவர்களைக்கண்டு, சமுத்திரம்போற் புரண்டு வருகின்ற தங்கள் சேனைகளுடன் பூமி குமுற ஓடிவந்து, தேருடன்சேர்புகுந்து, மாலைதாங்கிய வில்லைக் கொண்டு பாண்டவப்படைகள் அனைவரையும் இன்றுபொழுது போவதற்கு முன்னே துன்பப்படுத்தி வெற்றிகொண்டு வருவேனென்று வஞ்சினம்பேசி, தேவேந்திர குமாரனுன அர்ச்சுனனென்னுஞ் சூரியனுக்கெதிர் சந்திரன்வந்து புகுந்து மலைந்ததன்மைபோல் வந்தான். அந்த அசுவத்தாமனைக்கண்ட அர்ச்சுனராஜன் போர்விற் கொண்டு புகழ்பெற்ற காணிமாட்டி, சூர்கொண்ட மேகஞ் சுரப்பிட்டுப்பொழியுமாறுபோல் உரித்தாகிய கணைகளை உருத்தெடுத்து முனிவுந்தன் பயப்படும்படி தொடுத்தான். அந்தக்கணைகள்வேகங்கொண்டுவருகின்ற அதிர்ச்சியை அசுவத்தாமன்கண்டு, இது கன்றுகன்

றென்று கைகொண்டு, தன்வில்லில் அக்கினிதேவனுடைய ஏழு பாணங்களை இதம்பெறத் தொடுத்துவிடுத்தான். அசுவத்தாமன் விட்ட ஏழுகணைகளையும் அர்ச்சுனன்கண்டு, தானுமதற்குப்பதிலாகப் பாணம்விட்டு வெட்டொன்று துண்டு ஐம்பதாகப் பொட்டென்று பிண்டிதிரும்படிக்குக் கண்டு பின்னும் பற்பல பல்லவங்களுஞ் சிற்சில பாணங்களுந் தொடுத்துத் திடத்து இருவருமிளையாமல் அமராடினார்கள்; சிலவல்ல அர்ச்சுனனுங் கலிவல்ல அசுவத்தாமனும் இணைக்கிணைபாக முனைந்து மாறுமாறுசெய்த போர்த்திறங்களினுற் கனைந்துலைந்து கனமலைகளும்பிளந்து பூமிமுழுதுந்தளர்ந்து வன மெல்லாங் கணைகளின் கனமாபெரிந்து கடல்நீரெல்லாங்குறைந்து திசைகளிலிருக்கும் யானைகளெல்லாங் கலங்கித் திக்குப்பாலகர்களும் அலமலங்கி அயர்ந்துபோயினர்.

இப்படி அமராடுங்காலையில் முனிமைந்தனுகிய அசுவத்தாமன் எரிமுந்திய கூரம்புகளைக் கும்பாகப்போக்கி, குதிரைபூட்டியதேரின் பரிலும் விவேகம்பெற்ற சாரதிபரிலும், அடல்பெற்ற அநுமத்துவ ஜத்தின்பரிலும் வீரனுகிய விஜயன்பரிலும் அவன் கைக்கொண்ட வில்லின்பரிலும் அவ்வில்லின் மாட்டிய நாணிபின்பரிலும் வேக மாக நடக்குஞ் சுவேதவாம் புரவிபின் பரிலுந் தாக்கினன். ஜபா ஜெனமேஜெயமகாராஜனை, அந்த அருமையை யாவர்கண்டு சொல்லுதற்குரியராவர்? இத்தன்மையாகவிடுத்த அம்புகளையெல்லாம் இந்திர குமாரனுகிய சுந்தரன் தந்திரமாகவு மந்திரித்துவிடுத்த கணைகளால் செந்தூட் பொடியாக்கிச் சிதறச்செய்தன. மறுபடியும் மாதவிநாயக னுகிய காண்டீபன்கனைத்து, இதழ்மடித்து, செஞ்சிலைச்சீலிமுகம் ஐந்தினல் ஆசாரியகுமாரனுகிய அசுவத்தாமன் ஏறிய ரதமும் நான்கு வ்ரசேகசரப் பாணங்களினுல் அந்தத்தேரிற் கட்டியகுதிரைக ளுங் குழுறுங் கோடைக் கணையொன்றினுல் அவன்தரித்திருந்த பலம்பொருந்திய கவசமும், இரண்டாகிய இந்திரனைக் கணைகளாற் கைப்பிடித்த வெற்றி வில்லும் படுசூரணமாகும்படி போக்கி அவ்வசு வத்தாமனும் பயந்து இடம்விட்டகன்று போகத் தக்கதாய்த்தாக்கி அந்தரவாசிகள் முதலிய அனைவருங்கண்டு கொண்டாடும்படியாக வெற்றிகொண்டு, இணையில்லாத தேவதத்தமாகிய சங்கத்தை முழக்கி, ஒப்பொருவருமில்லாமல் அங்ஙனே நின்றனன். அப்போது வில்முதலாகிய சகலமுமுறிபட்ட அசுவத்தாமன் கண்கலங்கிக்கனற் பொறியிறைத்து, திசைகளதிரச்சினந்து நிலைபெற்ற வெற்றிமலைபோ

லாகிய வேறொரு வீரரதமேறி, மனவேகத்திலு மிஞ்சியவேகமாகவுக் துயுத்தமுனையிற் பிரவேசித்து மற்றொரு வெஞ்சிலையின் பலம்பற்றி எதிர்புகுந்து அஸ்திரங்களைப்பூட்டி இழுத்துவிடுத்து அடிக்கும்படிக் குக் கைகீட்டினன். அதற்குமுன்னே கவிக்கொடிகொண்ட காண்டீ பன் கொடியில் இடிக்கணைவிட்டு அசுவத்தாமன்புதிதாய்க் கைபி டித்த கொலைசெய்யும் வில்லையும் அவனூர்ந்துவந்த நூதனத் தேரை யும், சாரதி குதிரைகளையும் கொடிப்பொழுதிற் பொடிப்படுத்தினன்.

அத்தேவரையில் வில்லுமிரதமுஞ் சிந்தி வெறுங்கையுடன் சண்டைபொழிந்து தலைபிறக்கமாய் நிலத்தில் நிற்கின்ற அஸ்வத்தா மன் ஆபாசமடைந்து தேர்ச்சாரதியாகிய ஸ்ரீகிருஷ்ணனும் அர்ச்சுன னுஞ் சமர்முகத்திலோய்ந்து சாய்ந்துமாய்ந்து போவார்களென்று உல கமுட்கி உதிரவும் உம்பர்முதலியோர் விக்கி அதிரவும், உற்றபகைவர் கள் சிதறவும், மற்றமன்னர்கள் பதறவுமாக ஓர்மந்திரக்கதை யென் பதையெடுத்து,விறுவிறெனச்சுழற்றி விசைபாய்விடுத்தான். உடனே விஜயன் ஓர் அந்தரக்கணையைப் பூட்டித் தன்பேரில் விசைகொண்டு வருகிற மந்தரக்கதையைச் சுழற்றிக்காட்டி வில்லின்மணியை பாட்டி வேகத்துடன் விடுத்தான். அருச்சுனன் விட்ட அந்தரக்கணை சென்று அஸ்வத்தாம னெறிந்த மந்தரக்கதைமேல் விழுந்துபிளந்து நிசைசுடுக்குறத்தூளாக்கிப் பறக்கச்செய்தது. அந்தக்கதைபிளந்த ஒலி யானது தேவர்களுடைய காதுகளைச் செவிடுபடுத்தித் துரியோதனன் சேனைகளைத் துன்பப்படுத்தி தருமராஜனுடைய படைகளுக்குத் தைரியத்தைக் கொடுத்தது. அப்போது கோபமுற்றெழுந்த கொடுஞ் சாபக் குருவாகிய துரோணாசாரியார் வளர்த்த குலக்குமாரனாகிய அசுவத்தாமன் அருச்சுனனுமேல் தனது கதாயுதம் அழிபட்டதைக் கண்டு, கண்களிரண்டும் கனற் பொறிக்கக் கடுமைகொண்டு நின்று, கலீரெனகதைத்து, உயர்ந்த கதநிறைந்த வல்லமையுடன் கனகமலை போன்றிருந்த எழுவாயுதத்தை இருகையிலுந்தாங்கி நிதானித்து, விஜயனுக்கு நேராகக்காட்டி, சீராகவூட்டி, குறிப்புவைத்து நெறிப் புடனெறிந்து "ஆ அருச்சுன இதோ உன்பேரில்வருகிற எழுவாயுதத் தைத் தடுத்துக்கொள் பார்ப்போம்"என்று ஒருசங்கோஷ இரைச்ச விட்டுச் சொன்னன், இந்தமொழி சொல்லி வாய்மூடி முன்னமே வஜ்ராயுதன் மனமகிழும்பிள்ளையாகிய கீரீடி பலவித உச்சிதக்கணை களையேவி, அந்த எழுவாயுதத்தை எங்குமில்லாமல் மோதி, வெறுந் தூசியாய்ப் போகும்படிக்கு உடைத்துப் புடைத்துப் பறக்கப்பண் ணினான்.

இத்தப்பிரகாரந் தான்விட்டெறிந்த எழுவைத்தடிந்து எதிர் புகுந்து இணையில்லாக் கணைகளைவிடுத்து அடுத்துச் சண்டைபோ டும்படிக்கு வராநின்ற சல்லியசாரியை அசுவத்தாமன் பிரமித்துப் பார்த்து, "அப்பப்பா இவன் ராகூசனையிருக்கின்றான். கிருஷ்ணனுகிய துஷடன் சாரத்தியஞ் செய்யுமளவும் இந்த அர்ச்சுனனுடன் யுத்தம் புரிவது அருமை" என்று நினைத்து இவனுக்கெதிர் நிற்கமாட்டாமற், காட்டுமானுனது கடும்புலிக்கெதிர் நிற்கப் பயந்து ஓட்டங்கொள்ளு மாறுபோல் யுத்தமுனையைவிட்டுவிட்டு ஓடினான். இவ்வாறு அருச் சுனனுடன் சண்டையிட்டு அலுத்து இளைத்து ஆயுத முதலாகிய யாவும் அழிந்துபோய் அடிபட்டோடுகின்ற அசுவத்தாமனை அவ் வனுக்கு மாமனுகிய கிருபாசாரியர்கண்டு மனக் கூச்சங்கொண்டு, வழு வில்லாத வில்லினாலெத்து, பழுதில்லாத கூர்மையாகிய கொடுங்கணை களைக் கூட்டமாகிய மேகம் பொழிவதுபோற்பொழிந்து, பார்த்தனுக் கெதிர்வந்து பகைபாராட்டி இருபக்கத்திலும் பெரும்படைசூழ்கி வரும்படி நெருக்கி மூடிக்கி, பேரிசங்கமுதலிய வாத்தியமுழங்கப் பெரும்போர் புரிவதாயினர். அதுகாலையிற் கடுங்கணைகளைக் கை தேர்ந்து கண்டுகொண்ட அண்டர்பிரான் பிள்ளையாகிய காண்டவ வனதகன விக்கிரமன் மூண்டெரியுந் தனதுகாண்டீபமிழுத்து, ககன முகடனைத்துங்கணைகளென்று எதிரொலிசெய்யும் படியாய் ஷட்ங் காரங்காட்டினன். அப்போது பசுங்களபமுதலாகிய பார்த்தசாரதி யானவர் கவனவேகப் புரவிகளைத் தூண்டி, கிருபாச்சாரியாருக்கு எதிரிற்கொண்டு போய்நிறுத்தினர். அப்போது தாமரைமலர்போன்ற தடங்கண்கள்பெற்ற தனஞ்செயனனவன் தாராளமாய் ஏராளமாய்க் கார்விபாளமென்னுங் கருங்கணைகளைச்செலுத்தி, கவிந்துவந்த படை ஞர்களை இடைஞ்சல்பெறக் கலக்கி மண்டலீகரெல்லாரு மனமடிந்து பொடிந்து பூமியிற்படிந்துபயந்து புறந்தந்துபோகும்படிக்குமுடித்துக் கிருபாச்சாரியார் கைப்பற்றியவில்லையும், ஏறிய இரதத்தையும், தொடி யிற் பொடிசெய்து, அவரையும் நோகப் பண்ணினான். இவ்விதமாக இந்திரகுமாரன் விட்ட எரிமுகப்பகழிகளினுற் கிருபாசாரியரானவர் உட்கியொடுங்கி, உயங்கி மயங்கித்தியங்கி மலைகலங்கினற்போல தலை குலுங்கித் திரும்பித் தமது திறமனைத்து மழிந்து புறமுதுகிட்டு விலகிப்போயினர்.

அர்ச்சுனன் தன்னெதிர்க்கவந்த கிருதவன்மனை முறியவடித்தோட்டி, அவன்தம்பிமாரெழுவரையும் வதைத்தல்.

அதுகாலையிற் கிருதவன்மனுவன் தனதுசகோதரர்க ளெழுவரோடு யாதவகுமாரர் முதலாகிய படைகளுடன் அமோகமாய்த் திரண்டு இரதமுதலிய வாகனங்களிலேறிவந்து கடுங்கணைகளை வாரியிறைத்து அரிமைத்துனனுகிய அருச்சுனனுடைய உடலெல்லாம் மூழ்கும்படியாய்த் தூர்த்துத் திமிர்ந்து காலாக்கினி உருத்திரனைப் போற் கனன்று போர்க்களம் அதிர்ந்துபோகத் தக்கதாய்த் திரிந்து பரிந்து பொருந்திச்செறிந்து இருந்தான். இவ்வாறுயுத்தகளம் அதிரும் படியாகக் கிருதவன்மன் திரிந்து இளையாச்சமர் புரியானின்ற உக்கிரத்தை அர்சுனன் தெரிந்து அப்போதே செவ்வரக்கைப்போல் இருகண்ணுஞ்சிவந்து சீறிமுதிர்ந்த கோபங்கொண்டு தீமூட்டும் கொடும் பாணங்களைத் தடையில்லாமல்விடுத்து அவன்தொடுத்த முனையம்புகளை யெல்லாம் பிளந்து பல முடிதரித்த பார்த்திபர்முதலியமன்னமண்டலீகருடைய தேகமெல்லாங்கிழிய உதிரம்வழிய ஆவியொழிய கவசங்களுந் துவசங்களும் காலகோலமாய் அறுந்து நக்ஷத்திரங்கள் போலுதிரவெற்பாகிய விற்கள் கற்பாறைகள்போற் பிளவுறச் சுழன் றேடுங் குதிரைகளின் குரங்கள்கழலத் தேர்ச்சக்கரங்கள் சிதறிப் போயுழலச் சாடி உலாவினன். இப்படிக்கு விஜயகாண்டீபனனவன் ரணகளமெல்லாம் உலாவித் தடங்கிரிகள் போன்ற யானைகளும் கடற்றிரைபோன்ற குதிரைகளும், திடற்கரைபோன்ற தேர்களும் மணற்குவை போன்ற பதாதிப் படைகளும், அவரவர்கள் கைக் கொண்ட ஆயுதங்களுடன் மாயந்து பிணமாய்க் குன்றுபோலக் குவியவும் இரத்தங்களு மாமிசங்களு மெங்கெங்குங் கருவி அக்குன்றினின்று வீழுமருவியை யொப்பக் கிடக்கவும் காக்கை, கழு, நாய், நரி பேய், பூதகணங்கள் முழியவைகளும் ஆங்காங்கு நெருங்கவுஞ் செய்தான். இப்படியாவரும் வருத்தப்படும்படியாய் அப்பார்த்தனவனெடுக்கும் வடித்தகணைகளையும் அந்தக்கணைகளைத் தொடுக்குந்திறங்களையும் அவனது பராக்கிரமத்தையும் பாடிப்புகழ்ந்து படியாதவரில்லை. ஆகிலும் அன்றுபட்டபாட்டைச் சொல்லுமிடத்துக் கொடுமரங்

கொண்ட திடமன்னவரெல்லாருஞ் சூரியகிரணத்துக் கெதிர்ப்பட்ட பனிபோற்பறந்து குறைந்து, புலர்ந்து, உலர்ந்து, கலைந்து, குலைந்து, தொலைந்து போனார்கள்.

மேலும், தண்டுளவமணிந்த கொண்டல் வண்ணன் விடுக்குந் தேர்மேல்வருகின்ற தனஞ்செயன் தொடுத்த சரஜாலங்கள் மண்டுதீ யோடுமெழுந்து, யதுகுலச்சேனைகளோடு யானைகள்முதலிய யாவற் றையுமாய்த்து மாற்றி, கிருதவன்மனையும் அவன் ஏறிய தேரையுங் கீற்றுக்கீற்றுகக்கீற்றி வடுப்படச்செய்தன. அக்காற் கிருதவன்மனு டையதம்பிமார் ஏழுபேருந் தங்கள்தேரை விரைவில் முடுக்கிவந்து யுத்தம் விளைத்தார்கள். உடனேமற்றொருதேர் மேற்கொண்டகிருத வன்மனுங் கலந்துவந்து கொடும்போர்தந்து, கிருஷ்ணர்ச்சுனர் சிரங் கிறுகிறுக்கும்படி அருணக்கணைமுதலாகிய பலவருணக்கணைகளை வாரிவாரித்தூவினன். அத்தக்கணைகளையெல்லாம் அகக்கடுப்பும் முகக் கடுப்புங்கொண்ட அருச்சுனனவன் அரைகொடியில் அழித்து அத்தக்கிருதவன்ம னென்று பெயர்பெற்ற காளையுடன் பூர்வம்பிறந்த தம்பிமார் ஏழுபேரையும் ஆருயிர்போக்கி அம்பரத்திலாக்கி, கிருத வன்மனைமாத்திரம் அடுகளத்தைவிட்டு நீக்கினன். இப்படி தனஞ் செயன் கணைகளினுல் தம்பியரெழுவரு மிறக்கக்கண்ட கிருதவன்மன் மனந்தளராதவனுய் தன்னுடைவாணுற உயர்ந்தமலைபோன்ற தேரைச் செலுத்திவந்த தம்பிமார் ஏழுபேருந் தன்னுடொருவார்த்தையும் பேசாமல் மறைந்ததால் கும்பிவெம்பிக் கொதித்து அம்புவியதிரவ திர்த்து பம்பியமேகமும் பருவரையேறி யொளிக்கும் படியாகப் பெருவரைபோன்ற வில்லைவளைத்து மறுபடியும் அருச்சுனனுடு கோபங்கொண்டு போராடினன். இப்படியாகப் போராடவந்த முடி மன்னனுகிய கிருதவன்மனை வில்லாளியாகிய விஜயன்கண்டு வெ குண்டு, அவன்வில்லைத்துணித்து, குதிரைகளுஞ்சாரதியு மேலுங் கீழுமாக வீழ்ந்து தாழ்ந்தொழிய வழித்து, அவனூர்ந்ததேரையு மொடித்து, தேகத்தையுந்துளைத்து, அப்பாகிருதவன்மனை அரியோ தனனுக்குத் திருப்தியாகும் படியாய் ஈ ஒருவன்மாத்திரம் உயிர் கொண்டு பிழைத்துப்போ வென்று சொல்லி அனுப்பிவிட்டான்.

பாண்டவரோடு பராக்ரமித்து நின்ற சல்லிய னைப் பருங்கதையாற் புடைத்துச்சாய்த்த பீமனோடு துரியோதனனெதிர்க்க, அவ னையும் புடைத்துப் புறங்காணல்.

இவ்வாறு விஜய காண்டீபதாரணனவன் சத்துருக்கள்பலபேர் ஆவியிழந்து அவிந்துவாடவும், யுத்தகளமெல்லாம் ரத்தவெள்ளங்கள் மிகுந்து ஓடவும், ராஜாதிராஜனுகிய துரியோதனன் கண்டு திகைத் துக்கண்ணீர் சீடவும், குறைத்தலைக் கவந்தங்கள் கூத்தாடவும், பிண மலைகளைப் பூமிமூடவும், பூமியைப் பிணமலைகள்கூடவும், தான் தாக் கிய சரங்கள் ஒருபுறத்திற் ஜாடவுமாகவிருக்கும் அந்த அமர்க்களத்தில் தன்னெடுதிரேறி மலைந்து அமராடுவதற்கு ஆரும் சேரிட்டுவரக் காணதவனுய் கன்னலமாகிய ஜெயத்தைத்தரும் தேவதத்தத்தை ஊதித்து, திசைகளிற் கலகமூட்டி, சற்றுநேரங் கருப்புவிற் கொண்ட காமனைப்போல் நின்றுபார்த்து,ஒருவருநேரிடாமையால் தன் தமைய னுகிய தருமராஜன் நிற்கின்ற இடத்தைநோக்கித் தடதடவென்று தேர் செலுத்திவந்து அவ்விடத்தில் இருந்த சாத்தகி, பீமசேனன், நகுலன், சகாதேவன், உத்தமோசன், உதார்மன், திர்ஷ்டத்துய்மன், சிகண்டி, இவர்களுடன், பெரும்படைத் தலைவரும், போர்வீரரும், சதுரங்கச்சேனைகளும், தானும் ஒருங்குசேர்ந்து ஒருமுகமாகப் பெயர்ந்து உவரிமுழக்கம்போல் வாத்தியங்கள்முழங்க, ஆயுதங் களின் ஒளியும் ஒலியுங் கண்களையுங் காதுகளையுங் கலக்க, யாவருந் திரண்டெழுந்து மேலிட்டுவருவதானுர்கள். இப்படி வருபடி யானதை வீரகண்டாமணிதாங்கிய சல்லியராஜன் கண்டு, தனது பெரும் படைகளுடனும் பேரி வாத்தியங்களுடனும் முந்திப்புகுந்து வந்து எதிர்த்துப்போர்த்தான். அந்தவேளையில் யானைகள், குதிரை கள் தேர்கள், பதாதிகள், இவைகளெல்லாம் பக்கங்களிற்சார்ந்து யானை களுடன் யானைகள், குதிரைகளுடன் குதிரைகள், பட்டவர்த்தனருடன் பட்டவர்த்தனர்கள், மணிமுடித்தேருடன் மணிமுடித்தேர்கள், அணிகெடிராஜருடன் அணிகெடிராஜர்கள், பகைத்து எதிர்த்துப் போராடினுர்கள். அக்கால் விந்தகிரிக்கொப்பாகிய தோளினையுடைய சல்லியராஜன் தன்தேகத்தின் சிவப்பினும் பத்துப்பங்கு அதிக

மாகும்படியாய்க் கண்கள் சிவப்பேறச்சீறி, முனைமுகத்தில் முனைந்து நின்று வில்வளைத்து, அடுங்கொடுங்கணைகளை ஆயிரம் ஆயிரமாகத் தூற்றி, திக்குகளெல்லாம் பக்கென்றெரிய ஏற்றித் திசைகள் மறைய மூடி மாற்றினன்.

அதைக்கண்ட தண்டிளவோன் தம்பியாகிய சாத்தகிமன்னனெதிர்த்து, தேர்த்திறம் போர்த்திறம் கோற்றிறம் ஆகியபலதிறங்களைக்காட்டித் தெழித்துப் போராடிய காலையில், வில்லியற்சல்லியனுகியவேந்தன் முனைந்து பலகோடி சாயகங்களைப் பலபலவென்று பலமாகத்தொடுத்து, தேர், குதிரை, சாரதி, வில் இவை முதலானவை யெல்லாமழித்து, மெய்யையுந்துளைத்து, எங்குங்குருதி கொப்பளித்துக் குளித்திடும்படிசெய்தான். அத்தச்சல்லியன் நடத்துகின்ற யுத்தத்தைக்கண்டு எதிர்த்துவந்தடர்ந்த பரிகுல ராஜனை மருமகனென்றும் பாராமல், சிறிதும் ஓராமல், மேகத்தினிடத்தில் மின்னலெழுந்த தன்மைபோல் வாயில் நெருப்பைக்கக்கி வராகின்ற அடலாஸ்திரங்களை அநேகமாகத் தொடுத்தடித்து, எரிமுகமாகிய ஓருகணை விடுத்தான். அத்தக்கணையால் கொந்து வருந்திய நகுலனைக்கண்டு சகாதேவனெதிர்சென்று தனிக்கணையெண்ணுந் தழற்கணை ஏவினன். அவைகளையுமச்சல்லியன் அகற்றி, அயின்முகாஸ்திரம் ஒன்றையெடுத்து அபிமந்திரித்துப் போக்கினன். அவ்வயின்முகாஸ்திரத்தாற் சகாதேவன் புறந்தந்தோடினன். அப்பால் மருத்தின் மைந்தனுகிய பீமசேனன் உருத்துவந்து போராடினன். அவனையும் வெறுத்துக் கறுத்துவந்து, திரண்ட இரண்டு மருத்துக்கணைதாக்கி, இருதோளிலுந் துளைபோக்கி யுத்தபூமியை விட்டு நீக்கினன். அந்தவேளையில் அருச்சுனன் குறித்து அம்புயக்கணைகளை அநேகமாகத்தெறித்து அதிவேகமாகவந்தான். அப்போதேசல்லியன் திரிமுகமென்னும் மூன்றுபாணங்களைச் செலுத்தி, பற்குனனுடைய தோளும் மார்பும் துளைபுறப்புண்படுத்தி, அந்த அருச்சுனனுக்குச் சமீபத்தில் நின்றதருமராஜனுடைய நெற்றியின் பரிலும் மணிகளைப்பதித்த வீரபட்டத்தின்பரிலும் நான்காகிய வான்கணைகளையுந்தி உதிரஞ்சிந்த நலித்தான். அத்தசல்லியன் தொடுத்த நான்குகணைகளுந் தருமராஜனுடைய நெற்றியிலேதாக்கி உதிரம்பெருக்கி வழிந்தோடிய படியால் அவருடைய முகமானது சூரியமண்டலம் போற் சுடர்ப் பிரகாசமான நிறந்தந்த துன்பத்தைப் பக்கத்தில் நின்ற வாயுகுமாரனென்னும் பீமசேனன்கண்டு, உடனே

கதாயுதங்கொண்டு, மறமுந்திறமுஞ் சிலையுங்குலாவிய தடம்புயச் சல்லிய ராஜனுடைய மணிமுடிகழன்று பறந்தோடி விண்மே லெழுந்து மண்மேல்விழுந்து போகவும், கண்ணெளியுடன் விழி பிதுங்கவும், புண்மேற்பேரிடி விழுந்தவாறுபோல் அக்கதையைச் சுழற்றித் தலைமேலோரடி தாக்கினான். அந்த அடியாற் சல்லிய ராஜன் தேர்மேற் சாய்ந்தான்.

அவன் சாய்ந்து வீழ்ந்ததை அழகிய தராதலமுழுதும் ஒரு குடைநீழற்படுத்தி அரசரியாவரும் அடிவணங்கும்படியாகத் தானொருவரையும் வணங்காமுடி பொறுத்த நாகக்கொடிதரித்த நராதிபனுகிய துரியோதன மகாராஜன்பார்த்து முகம்மேர்த்து, செய் குருதிபோல் இருகண் ணுஞ் சிவந்து கடுங்கோபங்கொண்டு, தீரதை யிரிய திடமேற்கொண்டு தாண்டிப்பாயுங் குதிரைகள்பூண்ட தேர்மேற் சென்று பற்பல தேசாதிபர் முதலாகிய படைஞரும் விற்படை வேற்படைதாங்கிய வேந்தரும் தன்னை நாற்புறத்துஞ் சூழ்ந்து வரும் படியாகப்போய், எடுத்துப்பிடித்த வில்லைத்திடத்து இழுத்து, அதிற்றடித்த நாணிதொடுத்து, எண்ணிறந்த கணைகளை இடை விடாதேவி, தருமராஜனையு மற்றத் தம்பிமார்களையுந் தகைத்து, போர்சொல்லிக் கூவிப் பகைத்து, பேராண்மையோடும் அடுத்துஜாடு கிறுன். இப்படி அரவக் கொடியோன் ஆக்கிரமித்ததைச் சிங்கக்கொடி யினையுடைய தீரமேறு இடியேறென்று சொல்லுகின்ற பீமசேனன் கண்டு, முகங்கடுகடுத்து, அகம்படபடத்து, கண்ணிரண்டுங்கனலெழ விழித்து, கட்கடைபுரட்டி, அத்துரியோதனனுக்கு எதிர்போய் நின்று, மேகம்போன்ற வில்லைவளைத்து மிகைபடுசொல்லால் அவனைத்தடுத்து, அரிமுகக்கணைமுதலாகிய அநேகங்கணைகளைத் தொடுத்து அமராடினன். ஈடாகிய இவர்கள் இருவரும் உயிர்க்குக் கேடாகு முதன்மைதங்கி முந்தியம்புகளை ஒன்றினொடொன்று மூனைசெறியவிடுத்து, ஊழிச்செந்தீ உறுக்குமாறுபோற் பேரிரைச் சலுடன் நின்று பெரும்போர் புரியத்தொடர்ந்து, கோடையிடிபோற் கொடுஞ் சபதமுதலாகிய பற்பலபாஷைகளைப்பே ஒரு வரை யொருவர் ஏசி, எதிரெதிர் நிலைபெற்றுநின்று, எண்ணற்ற பகைமேற் கொண்டு, ஒருவரேறிய தேரையொருவர் உதைத்து உடைத்து நீறுபடுத்தி, ஒருவர்சேனைகளை யொருவரடித்துக் கெடுத்துத் தாறு மாறுபடுத்தவே இருவர்தேரும்அழிந்து, இருவர்சேனையு மொழிந்து, பொருகைவில்லும் ஓடிந்து, பொருகணைகளு மடிந்தன. அப்பால்

வீரரிருவருந்தெழித்து, வீறத்திறங்களைப்பழித்து, பூமித்தேர்மேற் பொருந்திப்போர்வாள்கொண்டிருந்தி, வட்டமாகச்சுழன்று, அட்டமாகக் கிளம்பி, கெட்டணையாகின்று, நேருக்குநேர்சென்று, ஆளுக்குள்வெட்டி, வாளுடன்வாள்கிட்டி, கருக்குமழுங்கிப் பெருக்கஞ் சுருங்கி இருவர்வாளும் உருக்கு வெட்டைபோல்ஒடிந்து உதிர்ந்து போகவே ஒப்பில்லாத அவ்விருவருந்தப்பில்லாமற் பொருதுங் கதாயுதங் கொண்டு, ஒன்றோடொன்று இடித்து, உயரவெறிந்துபிடித்து, அழுந்து மடிகள் அடித்து, அமலபார்த்துகடித்தகாலையில் இருதிறச் சேனைகளோடு சகலசராசரங்களுஞ் சங்கடப்பட்டுச் சஞ்சலப்பட்டன. ஆகாயவாசிகளாகிய புலவரெல்லாரும் இதென்ன சண்டை அப்பப்பா அம்மம்மா என்று ஆச்சரியப்பட்டு ஆர்த்தார்கள். அந்நேரத்தில் வாயுகுமாரன் மூர்ச்சைதாங்கி தன்கதையை வாங்கி, துரியோதனனை நோக்கி, ஓரடிவாங்கினான். அவன் அடித்த அடியால் தலைவீங்கி, அணிந்தமணிமுடிமகுட நீங்கி, புனைந்திருந்த தும்பை மாலையுதிர, புயங்களிரண்டும் அதிர, புயங்க கேதனனாகிய துரியோதனமகாராஜன் முன்னையழிந்து எல்லோரிலும் முன்னிட்டு வெந்நிட்டோடினான்.

சல்லியசேனாபதி வதை

இவ்வாறு பீமசேனனாலடிபட்டு ஓடுகின்றமுதல்வனாகிய வேந்தனைச் சேனாபதியாகிய சல்லியன்கண்டு சஞ்சலங்கொண்டு, மீட்டும் பாண்டவருடன் மூண்டமர்தருவதானான், அக்காலையில் ஒப்பில்லாத கிருபாச்சாரியரும், அசுவத்தாமாவும், சகுனிராஜனும், கிருதவன்மனும், ஆரபாரப்போரில் தலைமைபெற்ற தேசராஜகிருபரும் ஒன்றுய்ச்சேர்ந்து, ஊருஞ் சக்கரங்களையுடைய தேர்களைச் செலுத்தியும், பெருமலைகள் போன்றயானைகளைக்கடாவியும் அலைகள் போலத்தாவும் அசுவங்களைத்தூண்டியும் படைப்பெருக்கமுள்ள பதாதிகளை ஏத்தியும் மலைவாரிமுழங்கி வழிந்தருவிதன்மைபோல் திரண்டிவந்து, மத்திரராஜனுக்கிடாக மனது ஒத்து அவ்வேழு பொருந்தி மொய்த்துப் படைத்தலைவராக நெருங்கினார்கள். இங்கே அளகேசனுடைய சேனாபதிகளைமாட்டிய பீமசேனனும், வான்வர்குலப் பகையைக்கலைத்து முடித்த விஜயராஜனும், ஏமகூடத்துக்கிடாகிய இருதோளுடைய பரிகுலனும் அவனுக்கினியதத்துவஞானமுணர்ந்த சகாதேவனும், சகஸ்திரகாமதாகனாகிய ஜகார்த்தன

னுடைய தம்பியாகிய சாத்தகியும் கிரணசூரியனை உவமிக்குஞ் சுந்தரக்காந்திபெற்ற மற்றச் சிலைவீரவேந்தர்களுஞ்சூழ்ந்து, வட்ட மாகவளைந்த மாலிலக்தைப் பட்டமாகப் பெறக்கருதி அட்டமாக கின்று அமர்புரியச்சென்ற நீதிமானென்னும் அறன்மகனாகிய தரும ராஜனுக்கு அருந்துணையானார்கள். இப்படியாக இருதிறப்படை களுஞ்சேர்ந்து, மல்லகதி, மயூரகதி, வியாக்ரகதி முதலிய கன்னடை களையுடைய குதிரைகளும், கன்னமதம், கபோலமதம், பீஜமத முதலியவைகளைச்சொரிந்து மலைகளுக்கொப்பாயிருக்கின்ற மத யானைகளும், சக்கரங்கள்பூட்டிப் பூமியின் விசாலம்போன்ற காயகத் தட்டினையுடைய பொற்றேர்களும், தேரண்டத்தேரண்டச் சுரக்கு மணற்கணிபோற் பெருகிவராநின்ற பதாதிவீரப் படைக்கடலும் நெருங்கி அமர் விளைத்தார்கள். அதிரதர்முதலாகிய அதிவீர பரரெல்லோரும் ஓடி ஓடியெதிர்த்துப் பகைவர் பேரிற்கோப முதிர்ந்து ஒருவர்தலைகளை யொருவர் அறுத்துத்தள்ள, அந்தத் தலைகள் மெத்தரத்தவெள்ளப் பள்ளத்திற்கொள்ள, தலையிழந்த உடல்கள்தாழ விழுந்துள்ள, முகம் வியர்த்துப்பகைத்து உருத்து உறுமிக்கறுவி உலாவினார்கள். பட்டவர்த்தனர் மகுடவர்த்தனராகிய பேர்கள் கோடாகோடியாய்த்தமரகப் படைமுழங்கவும் கோடா கோடியாய்ச் சங்கினங்கள் தழங்கவும் இருபக்கமுங்குறித்து வெறித்துத் தேரைத்தேர்களும் ஆளை ஆள்களும் யானையை யானை களும் குதியைக்குதிரைகளும் மறித்துக் கொள்ளவிடுத்துக் கோணு மற் போர்புரிந்தார்கள்.

இவ்விதமானபோது இருவர்படையிலு மிகுந்த விறலாள ராகிய வல்லமைசாலிகள் தங்கள்தேகத்தில் அணிந்திருப்பது மான மென்னுங்கவசமேயல்லது மானங்கெட்ட ஈனக்கவசமல்லவென்று சொல்லும்படியாக ஒருவருக்கொருவர் வரிபொருந்திய மலைக்கோடான வில்லும், வாளும், வேலும் மற்றுமுள்ள வெற்றிப்படைகளுங் காங்க ளில் உறம்பெறக்கொண்டு ஸ்திரம்பெறநின்று, அவரவர்களுடைய மேனிகளில் ஊடுருவவிடித்தும் அடித்தும், குத்தியும், எத்தியும், குறைபடுத்தியதல்லாமல் ஒருவரையொருவர் தாவுதலும், ஏவுதலும், மூட்டுதலும் திட்டுதலும், ஆகிய போரைப் புரிந்தார்கள். இவர்கள் செய்த யுத்தமானது ராக்ஷருந்தேவருஞ் செய்கின்றதிடத்த சண்டை போலிருந்தது. அப்போது பீமசேனன், அருச்சுனன், நகுலன், சகாதேவன், மாயன் தம்பியாகிய சாத்தகி இவர்களெல்

லாரும் ஒன்றுசேர்ந்து, கிருபாச்சாரியரையும் அசுவத்தாமனையும் வளைத்துக்கொண்டு போராடினார்கள். சோம குலபதியாகிய பாஞ் சாலனுடைய மெய்ப்புதல்வனென்னுந் திஷ்டத்துய்மனும், இன்னு மூள்ள தம்பிமார் முதலாகிய சூரர்களுஞ் சேர்ந்து மத்திராசனை மடக்கிப் போர்கொடுக்கும் வேளையில் தருமராஜன் அவர்கள்யா வரையும் விலக்கி "நீங்களெல்லோருஞ் சற்றுநேர நின்று வேடிக்கை பாருங்கள், இவரோடு நான் கொஞ்சஞ் சண்டைபுரிகிறேன்" என்று உல்லாசத்துடன் சல்லாபமாய் கல்லாண்மைகூறி, வில்லாண்மைவீறி, காமனுக்குச் சரியாகியமாமனாகிய சல்லியபூபனை நேரிற்கண்டு, "ஐயா மிகைக்குப் பகைத்துவருகின்ற அம்மானை இந்தாரும், என்னுடன் சிலநேரம் போராடிப்பாரும். எனக்குஎதிர்வாரும். பேருஞ்சீரும்பிச காத வண்ணஞ்செய்யும்" என்று ஆரம்பனைந்த யாருங்கண்டஞ்சும்படி அமர்தொடங்கினார். உடனே அவனுஞ்சமர் தொடங்கினன். இப் பாலிருவரும் இமைக்குமுன் வீரவில்லவளைத்து, வீறுகாணெனி மடித்து, எரிக்கணைகளை எடுத்து, ஏகமுகத்திற்றொடுத்து, ஆரபார முறக் கடுகடுத்து அடம்பிடித்தார்கள். திசைக்கரிகளெல்லாந் தியங் கித் திடுக்கிட்டு ஆகுலமடையவும், திரைக்கடல்களெல்லா மறுகிக் கொதிப்பெழுந்து தீயவும், அவைகளினுள்ளாகிய ஜலசரங்களெல்லாம் உருகிக்காயவும், அனேகமேகமுழக்கங்கள் வாயடங்கி ஓயவும், மலை மரங்கள் முழுதும் அடிவேருடன்சாயவும், படமடென்றவனி மண்டலமனைத்தும் வீயவும், உதிரப்பிரவாகம் உறைத்துதோயவும், உரத்தகணைகள் உராய்ந்து தேயவும் ஒன்றையொன்று உறுக்கிப் பாயவும், ஒன்றையொன்று குத்திக்காயவும், இவரிருவருஞ்செய்கின்ற சண்டை எப்படியாமோவென்று அந்தரவாசிகள் சிந்தைகைந் தயரவும் இனியிவ்வுலக மெப்படியாமோவென்று ஈரேழுலகுமிரைந்து தேயவும், சூராகிய சுத்தவீரரிற் சிறந்த திறமிகுந்த தீரனுய் மத்திரனென்று யாவரு மெய்க்கும்படியாகிய மத்திராஜனும் சத்தியசவுசதர்மத்தையே உருவாகப் பெற்றவனென்று உவமிக்கும் உத்தமனாகிய தருமபுத்திராஜனும் ஆகிய இவரிருவரும் ஈடுதாழ் வில்லாமற் பலவித கோசல அஸ்திரங்களைப் பாய்ச்சினார்கள்.

அப்போது மத்திராஜன் உலகமுற்றும் அழிக்காகின்ற உருத் திரக்கணைகளை எடுத்து, பத்தும் எட்டுமாகவிடுத்து, மூரசக்கொடி யோனை அடித்தான். அக்காலையில் ஆரபாரத்துடன் அசைந்தாடு, கின்ற மூரசக்கொடிமுறிந்து, ஒப்பற்ற ஆழிபொருந்திய ரதமு

முடைத்து, மேற்சிகரமுதலாய நடுராயகத்தட்டுமழித்து, கைப் பிடித்திருந்த வில்நாணியுமுறித்து, தேகத்தில் அணிந்திருந்த சோகவிஞ்ச கவசமுங்கிழித்து, நடையுடைய குதிரைகளுந்துணித்து போய்விட்டன. உடனே கதிர்முகக்கணை யொன்றேவித் தருமராஜ னுடைய வீரபட்டத்தைவிலக்கி, நெற்றியிலுந் தைக்கச்செய்து கலக்கினன். அப்போது வீரம்பொருந்திய வில் நாணிமுறித்து பூமி மேல்நின்ற வண்டாரபாரஞ்செய்கின்ற தண்டாரணிந்த அழகிய புயத்தையுடைய அண்ணல் சற்று நேரநிதானித்து நின்று, கோபம் வராதகணங்கள் கொதிப்பேறப் புகைந்து, சிவப்பேறச் சிவந்து, உருத்துக் கோபித்துச் சிரித்துச் சீறுற்றுப், பருத்துயர்ந்த இமயமலை மேற்பாய்ந்து எக்கி எகிறி ஏறிய இளஞ்சிங்கம்போல் வெறிறுரு தேர் மேற்கொண்டு பலரும் புகழ்ந்து மகிழ்ந்து ஆச்சரியப் படும்படியாய் முடிவில்லாத திரிபுரத்தை எரித்தருளிய முக்கண்ணர் போல் முனிந்து முனைந்து, சல்லியராஜனுக் கெதிர்புகுந்து, தடைபடாத ஒரு சக்தியையெடுத்துச் சம்பிரம பூஜைகொடுத்து, வழிபாடுபட்டு வணங்கி விடுத்தார். அந்தச்சத்தியானது மகாமேருவின் முக்குவ டொடித்த் வாயுதேவனைப்போல் மத்திரராஜனுடைய முடித்தலையை எற்றியது. இப்படியாக வரிச்சிலை பிடித்து வளைத்துப் பற்பலபாணங் களைத் தொடுத்தேவிய சல்லியனுக்குத் துணைசேர்ந்திருந்த தங்களுக் குப்பகைபாகிய வேந்தர்களை யெல்லாம் உடல்பிளக்கவும், உயிரிழக்க வும் கவசமழியவும் மார்கிழியவும், தாளொடியவும், ஆள்மடியவும், இடைமுறியவும், தொடை தறியவுங், நடையோயவும், படைசாயவு மாக ஓங்கிய வாசனைதாங்கிய, மாலையணிந்த தருமராஜன்விட்ட ஒப்பற்ற அவ்வடிவேலானது, சுப்பிரமண்ணியக் கடவுளிடத்தி னின்றும் வெளிப்பட்ட சுயம்பிரகாசவேலாயுத மெவ்விதச் சுரவை யோடு சூரனைத்தேடிச்சென்று சிதைத்ததோ அவ்விதச் சுரவை யோடுஞ் சென்று வாகுவலிபெற்ற மத்திரேசனைமடித்து விட்ட தென்று பாம்புக்கொடிபடைத்த பாவியாகிய துரியோதனன் சேனை கள் அணிகுலைந்து முதுகிட்டோடி, படாதபாடும் பட்டு வருத்த முற்றன. சந்திரோதயங்கண்ட சமுத்திரங்கொண்ட சந்தோஷம் போற் குந்திமைந்தருடைய நால்வகைச்சேனைகளுங் கும்பல்கும் பலாய்க் கூட்டங்கூடிக் கொண்டானடித்து, கோவென்றிரைந்து ஆர்ப்பரித்து ஆனந்தத்தில் ஆழ்ந்தார்கள். துரியோதனனுடைய நால்வகைப்படைகளும் நெருப்புமுனைப் பாணங்கள் தங்களி தயந்

தோறு நுழைந்துதைத்து வருத்திய தன்மைபோல் தயங்கிச் சஞ் சலத் தாழ்ந்தார்கள்.

துரியோதனன் சகோதரருள் இருபத் தொருவர் வதை

இவ்விதமாக வருத்தப்படுகின்ற இளக்கரத்தை வேகங்கொண்ட குதிரைபூட்டிய விசாலத்தேரினையுடைய சல்லியராஜனென்னு மத்திரனுக்குச் சமான மித்திரராகிய எழுநூறு தேர்வீரர்பார்த்து, சத்துருக்களை வேர்களையும்படி வீரமேற்கொண்டு, பிரமப் பிரளயகாலத்தெழும் வடவாமுகாக்கினிபோற் கொதிப்போங்கி, தோள்வீங்கி, வில்வாங்கி, திரண்டுவெகுண்டு தருமராசனுக்கு எதிர வந்து தடுத்துச்சூழ்ந்தார்கள். இப்படிவந்த இவர்களைப்பார்க்கிலும் எட்டுப்பங்கு அதிகமாகிய கோபம் நாகமணித்துவஜனுகிய துரி யோதனனுக்கு மூண்டது.அவன் அநுஞ்சமர்க்களத்தில் ஆண்சிங்கம் போலஅதிர்ந்து, உபயசாமரம் இருபுறத்திலும் வீசத் தவளமாகிய சந்திரவட்டக்குடை நிழற்ற, கங்குகரைகாணுத கருங்கடல்போன்ற நெடுமபெருஞ்சேனை வெள்ளமானது எங்குநிறைந்துசூழ, உயிர்க் குயிராகிய மாமன் சகுனியும் தம்பிமார்களும் புடைபரந்து மொய்த் துக்கொள்ளப் புலவர்கள் மதிக்கப்பொங்காரங் கொண்டு போர்பொரத் தொடங்கிய புயல்போற்கவிந்து, தவசிரேஷ்டமுனிவர்கள் புகழுந் தருமராஜனுக்கு நேர்வந்துவளைத்து மலைந்தான். அதுகாலையில் பீமன்முதலாகிப் தம்பிமார்களும் இணையில்லாத் துணையாளராகிய வெம்படைத் தலைவர்களும் போர்வெற்றிபூணும் சோமத்துரை களும் தீக்கண்ணராகிய திடவீரரும் மற்றப்போர்வேந்தரும் தேர் மாந்தருஞ் சேர்ந்து, யானைக்கூட்டங்களைச் சிங்கக்கூட்டங்கள் சீறித் தொடருந் திறம்போல் தொடர்ந்து, கௌரவவீரருடைய மாலை யணிந்த மார்பும் புஜாகிர்த்திபொருந்திய தோளும் தண்டையணிந்த தாளும் வீரபட்டமணிந்த நெற்றியும் பாணப்பயிரேறிய பான்மை போல் மூழ்கும்படியாய் நற்சிலவளைத்து நாணிமாட்டிப் பாணங் களை இறைத்தார்கள். அதனல் வாரிம்பாலெழுந்த சோரியானது மலையருவிபோற் பரந்து வழிந்து பூமிமுழுதுங் குழிந்தும்பாணங்கள் பெருகிப் போகும்படியாயது. இப்போர் புரிந்த சூழ்ச்சியை இவ்வித மென்று அறிந்துசொல்லத் தக்கவல்லவர் யாவருமில்லை. இப்படி. போர் பெற்ற போர்புரிந்து வருகின்றபோது வாயுதேவனுக்குப் புத்திரனுய்ப்

பூமிதேவியாருடைய பெரும் பாரத்தை நீக்கப்பிறந்த புகழ்பெற்ற பீமசேனனுனவன் தன்தமையனுகிய தர்மராஜனே யெதிர்த்துப் போர்பொருந்தி வெல்லவந்த சேனைகளெல்லாம் தாறுமாறுக்கி றீறு நீறுக்கிப்போக்கினுன். அப்போது சரணீசனுகிய துரியோதன மகாராஜனுக்குத் தம்பிமார்களில் ஜெயசுத்தன், ஜெயவர்மன், ஜெயசேனன், சேனுவித்து, ஜயத்திறன், திறல்வித்து, ஜெயவிக்கி ரமன் என்று சொல்லும்படியான இவ்வேழுபேரும் படையுடன் கூடிவந்து, பீமனைமடக்கிப் பாணத்தைத் தொடுத்தார்கள்.

உடனே இந்தத்தம்பிமார் ஏழுபேரையும் அந்தப்பீமசேனன் ஏககாலத்தில் ஏழுவாளிகளால் அடக்கிநீக்கி, அவருடல்களை மண் மேலாக்கி, அவருயிர்களை விண்மேற்போக்கினுன். அக்கால் ஆகாயத் திலிருக்குந் தேவர்களெல்லாரு மதிசயித்தயர்ந்து, இன்றைக்கு இம் மாத்திரஞ் சண்டைபோதும், இனிமேற்சண்டை கண்டால் நமக்குப் பாவம் என்று அதிசயிக்கும்படியாய் ஏழுமதங் கொண்டயானைமேல் ஒருமதங்கொண்ட யானை கோபத்துவேஷங்கொண்டு கொன்றது போற் கொன்றபீமன் மீட்டு நிலத்திலேதெழித்துக் களித்துகின்று, வலம் புரிச்சங்கத்தை வாயிற்பொருத்தி முழக்கினுன். இப்படிமுழக்கி நிற்கும் வாயுகுமாரனை வெங்கதிர்க் குலமைந்தனுகிய வலம்புரித்தார் வேந்தன்கண்டு வயிற்றெரிச்சல்கொண்டு, தம்பிமார்களின் மேற்றுபங் கொண்டு சேர்ந்து பூமிமேற் சாய்த்தான். ஐயா ஜெனமேஜய மகா ராஜனே என்னதான் மனத்துணிவிருந்த போதிலுஞ் சகோதரர் பேரில் யாவருக்கும் அன்பிருக்குமல்லவா! (தானுடாவிட்டாலுந் தன் சரீரமாடும்) என்று பழமொழி சொல்லுகின்றார்களே! ஐயோ என்ன செய்வான் அந்தத் துரியோதன மகாராஜன். எவர்களாலும் ஆற்றப் படாத ஆயாசங்கொண்டு அருந்துயர் பூண்டான். அத்தவேளையில் தனக்குத்தானே நிகராகிய திருதவேந்தனுனவன் துரியோதன னுடைய தம்பிமார்களில் ஏழுபேரிறந்த தன்மையைக்கண்டு மனக் கவலைகொண்டு, மீட்டும் பெருஞ்சேனைக் கும்புகளைச் சேர்த்து, துரியோதனமகாராஜனுடைய தம்பிமார்களிற் சித்திரவாகு, பில் சேனன், ஜயசூரன், சித்திரவுத்தமன், விந்தன் என்று சொல்லுகின்ற ஐந்து பேர்களைக்கூட்டி யனுப்பினுன். அவர்களுந்தங்கள் சகோதர ரிறந்த பச்சாத்தாபத்தைத் தாளமாட்டாதவர்களாய்ச் சினந்து, கோபக்கதிர் வேல்தாங்கிய பீமனைக்கொல்லும்படியா யெண்ணி சூழ்ந்து, எதிர்த்துப்போய்ப் போர்புரிந்தார்கள். இவர்களைக்கண்ட

பீமசேனன் எக்களிப்புடன் உக்களித்து, ''எனக்குமெத்தவும் வேண்டியதில்லை. நான்போராசைக்காரனல்லன். ஆயினும் தம்பிமார்கள் இன்னும் ஒழியவில்லையா? இப்படி காலும் ஐந்தும் ஆறும் ஏழுமாய் வருவது நமக்குஞ்சுளுவுதான். ஒருமிக்கவந்தாற் பளுவுதானே. இஃதறிந்துதான் நம்மீதிரக்கங்கொண்டு கொஞ்சங்கொஞ்சமாயனுப்புகிறான் நமதுகுலநாசனுகிய துரியோதனமகாராஜன். எனக்கு இப்படிவருமேதபோதும்'' என்று சொல்லி அவர்களைப் பார்த்து, ''அப்பா தம்பிமார்களே புறமிடாமல் நின்று போர்புரியுங்கள்'' என்று பாணங்களைப் பூட்டினுன். அவர்களும் இந்தப் பீமன் செய்யும் யுத்தம்போல் நிலைத்து நின்று கணைகள் செலுத்திக் கடும் போர்விளைத்தார்கள். அப்போது பீமசேனனுனவன் குதை பூட்டிய வில்லைவீக்கி, நமனுஸ்திரத்திற்குச் சமனுஸ்திரங்களைத் தாக்கி, ஐவருடைய ஆவியை அகற்றி, சுத்தபவித்திரமேனி குலுங்கத் தலையசைத்து, ஒப்பில்லாத ஒருவனுகின்றுதோளாடித்து, அம், இம் என்று அலறி ஆர்த்தான். முன்போன ஏழுபேருடன் பின்போன இவ்வைவருபேரும் பொறிபுலன்கள்போற் பிரியாமற் சேர்ந்து பொன்னுலகிற் குடிபுகுந்தார்கள்.

இவைகளையெல்லாம் இறுமாந்த காகக்கொடியோன்கண்டு விசனங்கொண்டு, மறுபடியுந்தேறி, இருகண்களும் பொறியெழுந்து பறக்கச்சிறி, திண்ணிய புஜபலஞ்சேர்ந்த எண்ணிறந்த அரசவீரர் சூழச்சேர்ந்து, பீமசேனனுக்கு முன்வந்து அடர்ந்து, உலகம் அழியா நின்ற யுகமுடிவைப்போல் உரத்து நான்குதிக்கிலும் ஓடி, பெரும்புறக்கடலையும் அந்தக்கடலினுடைய கடுவிஷமிருக்கும்வடவைக் கனலையும் அவித்து மலைகளைச்சாய்க்கும் பெருங்காற்றைப்போற் பற்பலகணைகளைவீசி, பாண்டவர்களின் தேகந்தோறும் பாணமயமாக அழுத்தி, படைகளையுமுழுத்தி, வில்விஜயங்காட்டி இன்னமும் மேலாகிய கணைகளைத்தீட்டி, நாணியிற்பூட்டி நால்வகைப் படைகளையும் குடியோட்டிகின்றுன் துரியோதன மகாராஜனவன். அவன்செய்த அரும்போரைக்கண்ட சகாதேவன் வெகுண்டு, பற்பலபாணங்களைப் படபடவென்று ஏற்றி, அவன்தாடித்த பாணங்களையெல்லாம் மாற்றினுன். அக்காலையில் வீரப்பிரதாப துரியோதனவேந்தன் அந்தச்சகாதேவனுடைய திடத்தைப்பார்த்து வீரசாயகங்களைவிடுத்து, அவன்கையிலே பிடித்தவில்லை முறித்து வெறித்துக் குறித்துச் சிரித்தான். அத்தவேளையில் தன்கையில்

முறிந்தவுடனே சகாதேவன் தாளாமல் தனிச்சிங்கம்போற்சீறி, வேறொருவில்லைத் தாங்கி, துரியோதன மகாராஜனுடைய வலிய கரத்திற் கொண்டவில்லைமுறித்து, மார்பிலும்முகத்திலும் வாயுவாளி விடுத்தமாட்டி, உதிரங்களில் உடல் குளிக்கச்செய்து மேலுமேலும் ரணகளத்திலெதிர்ந்த முதன்மைப்பட்ட நிர்வாகசாலிக ளெல்லாருஞ் சிரஞ்சிந்திச் சிந்தைகலங்கி திடுக்கிட் டழியும்படியாய்க் கணைகளை மூட்டி, மூட்டி, பின்பக்கத்தில் இரத்தவெள்ளம் புரண்டோடச் செய்து, முன்பக்கத்தில் பிணமலைகளேற்படுத்தி, வானத்திலேழுந்த சூரியனும் மத்தியானத்திலிறங்கி இளைப்பாறும்படிசெய்தான். இவனிப்படி சண்டைசெய்து கொண்டிருக்க, காந்துங் கனலுமிழுங் கோமான் கதிர்மிகு வடிவேற்றுங்கிய சீபான், காந்தார தேசத்தா ருக்குக் காவலனாகிய பூமான், கனமுள சகுனி போர்கொண்டமாமன், தனக்குச்சொந்தமாகிய அளவிறந்தசேனைகளைச் சேர்த்துக்கொண்டு வேந்தர்களுடன் பலவீரருஞ்சூழ்ந்துபுறப்பட்டு, பதினாயிரம் வெம் பரிணக்கை யானைகளும் தேர்களும் குதிரைகளும் காலாட்களும் ஒரு கணத்திற்பட முனைந்துவென்று பூரித்தபுயாசலப்போர் பீமனுடன் எதிர்த்துப் பகைத்துப் போர்புரிந்தான். அந்தப் பீமன்முனைந்து செலுத்தும் வெஞ்சரங்களால் அவர்கள் பஞ்சுபறக்குந் தன்மை போற் பறந்து இறந்தனர். சகுனிமாத்திரம் ஒன்றியாய் ஒரு புறத்தில் ஒதுங்கிப்பதுங்கி, தனதுட்குழிந்த கண்கள் உதிரஞ்சிதறப் பிதுங்கிநின்றான். அச்சமயத்தில் ஊரும்பாம்புக் கொடி பெற்ற பேரும் பிரக்யாதியுற்ற துரியோதனனுடைய தம்பிமார்கள், உத்த மன், உதயன், பானுகீர்த்தி, பிலவன்மன், பலவீமன், பிரபலதானன் விக்கிரமவாகு, சுகிலன், சீலன், இந்த ஒன்பதுபேருந் தென்புடனெ ருங்கி, வம்புவிளைத்து, பீமனுக்கெதிரோடிவந்து பிரபலயுத்தம் பண் ணினார்கள். இந்த ஒன்பதுபேரையும் பீமன்கண்டு "தம்பிமார்களே, அண்ணனாகிய துரியோதன மகாராஜனைத் தனித்துவிட்டுவிட்டா போகிறீர்கள். ஐயோ அநியாயமே! ஆகிலும் நீங்கள்விசனப்படவேண் டாம்! இன்றைக்கு உங்கள் பிண்ணாலேயே கணக்குப்பார்த்து அனுப் பிவிடுகிறேன். நீங்கள் முன்னேபோய்க் கொண்டிருங்கள்" என்று வெகுவாய்ப் பகழ்ந்துகொண்டுபேசி, சிலைக்கால்வளைய இழுத்து, தீக் கொண்டிராகின்ற செங்கணைகளைத் தூண்டி, அவர்களுடல்களேழுற, உயிர்கள்வானேறத் தங்கள்சபத நிறைவேற,உலகத்திற்புகழேற அவர் கட்குத் தலைவனாய் உடன்று நிற்கின்ற ரதகஜதுரகபதாதிகளு மூடல்பீறி ஒருகணத்தில் அவியும்படியாய்க் கரகரவென்றுசுழன்று

மனமழன்றுமாட்டி மாற்றினுன்பீமசேனன். இதையோசிக்குமிடத்தில் இவனுடைய கட்டாண்மைக்கு இதுவொருபொருளையல்ல. ஆதலால் லட்சியமில்லை. பாண்டவரைவரில் பீமசேனனுடைய கைப்படைபாற் பட்டழிந்த தொண்ணூற்றொன்பது தம்பிகள்போக இன்னும்படாது உபதம்பிமார்களா யிருக்கின்றபேரும் காக்கிய வாக்கிய சிலாக்கியரும், அம்புவிபாளும் அரசர்பலரும் அதிகசாமர்த்தியங்கூறி, பார்ப்பதற்கரிய பிரளயகாலப் பஞ்சாயணம் போன்ற வெஞ்சாபஞ் கொண்ட விக்கிரமார்த்தாண்ட கதாயுத பீமனை வலைத்து, குருக்ஷேத்திர பூமியெல்லாங் குழுங்கக் குழுறக் குறையப்புதையைச் சிதையச் சிதறக் கிம்போர் விளத்தார்கள். உடனே பீமசேனனுனவன் காகக்கொடிதரித்த நாசோத்திரன்கண்டு காணும்படி அவர்களெல்லாம் பூணுப்புகழ்ப்போரில முனைந்து, சிலர்பூமி மேல்வீழ்ந்து மாயவும் சிலர்தேர்மேற்கவிழ்ந்து சாயவும் படாதபாடு படுத்தியபோது, அத்திகழ்மணிமுடிகளையுடைய தீரர்யாவரு மாய்ந்து" அரம்பாஸ்திரிகளின்மே லாசைமேலிட்டு அந்தரமடைந்தார்கள்.

சகோதரர் நட்டங்கருதிவருந்திய துரியோ
தனனைச் சகுனிதேற்றி, மிகுந்துள்ள
படையோடுங்கூட்டித் தானும்
போருக்கெழல்

இப்பால் துரியோதனமகாராஜன் தானொருவனல்லது தனக்கினையதம்பிமார் ஒருவருமில்லாமல் பீமசேனனுடைய சரங்களினுலுந் தண்டாயுதத்தினுலும் மாண்டு, விண்டலத்தில் ஆவியேறவுமண்டலத்தில் யாக்கைவீழவுமானதை எண்ணி எண்ணிக் கலைத்து, கரங்கள்தாழ, கால்கள்வீழ உரங்கள்வாட ஊக்கமோடக் கலங்கி, அலமலங்கி, உடல்மறந்து உணர்வொழிந்து, "ஐயாதெய்வமே ஆதியில் எனக்குப் படித்துப்படித்து இடித்துப் பலவிதங்களும் உறுத்திச் சொல்லிய உரியோர் பெரியோர்களின்உரையைக்கேளாமல் என்னமவலிசெய்து விட்டோம் ஆ! ஆ! ஐயோ இனிமேல் உலக அரசாக்ஷியும் இழந்தோம" என்றுமனக் கவலிகொண்டு மறுகாநின்ற வணங்காமுடிமன்னனை மாமனுகிய சகுனிநோக்கி, "ஓ என்னருமைமருமகனே! என்ன ஒருவிதமாயிருக்கின்றுய்? புரசைக்களியானையிலேறி அரசர்க்கரசாகிய வீறை உனதுசாயைபோல்

மாறுமற் படைத்திருந்த தம்பிமார் அனைவரும் மீனேறிய மாலைதிணிந்த வானேறிவிட்டார்கள். அவர்களுக்காக உள்ள முருகிக்கண்ணீர் பெருகச் சோகமடைந்தாய். இப்படிச்சோக முறினும் மாண்டவர் மீண்டுவரப் போகிறதில்லை. அவர்களைக்குறித்து நாம் வதங்கி வாடி மனம் வருந்துவது சம்பந்தவிசேடத் தொல்லையே யன்றி வேறில்லை. சென்றுபோன அவர்களைச் சிந்திக்க வேண்டிய தில்லை. ஓ என்மனமகிழு மருமகனுகிய மன்னவனே நீ நீடுழிகாலம் வாழி வாழி! என்னுடைய வசனத்தைச் சிறிது கவனித்து மன முவந்து கேள் ! போரிலே மடிந்தவர்போக, மடியாமலிருக்கும் நால்வகைச்சேனைகளும் அச்சேனைநாயகராகிய மன்னவர்களும் வேதமுதல்வராகிய கிருபாச்சாரியரும் கிருதவன்மனும் அசுவத்தாம னும் நமக்கு முன்னும்பின்னும் மொய்த்துவரும்படியாக முருகக் கடவுளைப்போற்சென்று தைரியமிடாமல் எதிர்நின்று மூனை வீரரைப்பொருது, விருதுடன் வாகை புனைவோம். மனஸ்தாபம் விட்டுவருவாய்'' என்று ஒருகோடி உறுதிவசனங்களையும் திருஷ் டாந்தங்களையும், இதிகாசங்களையும், எடுத்துச்சொல்லித் தேற்றி னன்.

இப்படிவிசனங்களை யெல்லாம் மாற்றிய சகுனிராஜனும் மருமக னுகிய துரியோதனராஜனும் உடனே மனமகிழ்ச்சியுடன் தேரேறி, தங்கள் மனதுக்கிசையும்படி வாத்தியமுழங்க வலிமைகூறிச் சகலவித சேனைசமுத்திரங்களுந் திரண்டு வரப்போய்ப் போர் முகமடித்து, பீமனைவளைத்து, புரிகாணிழுத்து, புங்கவம் விடுத்துப் புயம்பூரித்தார்கள். அப்போது முனைந்துகின்ற சிறப்பினையுடைய கதாபாணியாகிய பீமன் நிலவெனப் பிரகாசிக்கச் சிறுகைகளைத்து, மனவேகத்திலுமிஞ்சிச் செல்லுகின்ற வேகமாகிய தேரைவிட்டு ஏகமாகிய பூமிமேலிறங்கி, பெருவரத்தினுல் ஒருகரத்திற்றாங்கு நேர்சீவிய, சீர்மேவிய போர்தாவிய, தனது தண்டாயுதத்தாற் சத் துருக்களுக்குக் கண்டாதி கண்டத்தை விளவித்து அண்டத்தை அதிரச் செய்விக்கும்படி ஓயாமல் இருகைகொண்டு சாயாமல் ஒருபக்கத்துக் கொருபக்கம் ஒதுங்காமல், யுத்தத்தைக் கண்டுபதுங் காமல், தெப்பல்களினுல் வதங்காமற் போராடும் இரும்புச்சங்கிலி பிடித்த ஆதிக்கைபெற்ற யானைகள் இரதங்கள், குதிரைகள், காலாட்கள், மேலாட்கள், இவைகளெல்லா மாய்த்துபோகும்படிசேர் புருந்து ஜாடி,இவைகளினுலுண்டாகிய ஓசையானது ஈரேழுலகமும்

போய்! முட்டும்படியாய் இரைத்து விரைத்து வருகின்றான். அது கண்டு மனம்பொறுத்த மாமனாகிய சகுனி துரியோதனமகாராஜனைப் பார்த்து "ஓ வணங்காமுடி பெற்றமருகனே! கனைக்கிறந்தகடல் போன்ற சேனைகளும், இந்தச்சேனைகளுக்கு அதிபராகிய அரசர்களும் நாமெல்லோரும் ஒரேமுகமாயேகி மேன்மேலெழுந்து விழுந்துவரும் வாயுகுமாரனைக் கால்சாயவடித்து, பிரகாசிக்கும் வாள், வேல், சக்கரம், சூலம், இவை முதலிய ஆயுதங்களைக் கைக்கொண்டு, ஓயாமலொரேதரமாய் உருத்தெறிந்து ஆளைமுடித்துப் போடுவோம்" என்று சொன்னசொல்லைத் தலைவனாகிய தாதிபன்கேட்டு, இது நல்ல சூழ்ச்சிதானென்று மாமனைமெச்சி அவன் சொல்வழியே நடக்கும்படி சகலவேந்தர்களிடத்து மோடி உத்தரவுசெய்தான். அப்போ தவ் வேந்தர்கள் போனதுபோகக் கொஞ்ச மிஞ்சியிருந்த விருது பெற்ற ஒருகோடிசேனைகளோடு நாகக்கொடியோனுடன் கூடி முனைமுகத்திற்புகுந்து வாத்தினாலும் உரத்தினாலும் ஸ்திரத்தினாலும் பெற்றிரா நின்ற வேலாயுதம், சூலாயுதம், சக்ராயுதம், குந்தாயுதம், தோமராயுதம், வாளாயுதம், இவைகளையெல்லாம் பீமன்மேலெறிந்து சிறந்த வாதுபுரிந்தார்கள். அக்காலையில் அங்காகக்கொடியோனுடன் கலந்து வந்தெதிர்ந்த அவ்வுரம் பெற்ற விருதுபெற்ற வீரருடைய மேனியெல்லாம் உலர்ந்த சருகாகவும், வாயுகுமாரனாகிய பீமனடித்த தெண்டாயுதத் தெப்பலானது பொறிகிளர்ந்த தழலாகவும் புகைந்தெரிந்து விரிந்திருந்தன.

சகுனிராஜன் வதை

அந்தவேளையிற் சகாதேவன் தடந்தேரேறித் தனித்து வீர வில்லைக்குனித்து, வெங்கணைகளைத் தொடுத்து வெகுசூதகமூள காதகமிகு தோதகஜக பாதகனாகிய சகுனிமார்பிற்றுக்கினான். அதைக் கண்ட துரியோதனனாகிய மருமகன் சகுனிக்குத் துணைப்பட்டு, அந்தப் பாணத்தைத் தடுத்து, உடனே சமுத்திரத்தை யுண்டவேல் போன்ற ஒருவேலாயுதத்தை யெடுத்து மந்திரித்துச் சகாதேவனுடைய மார்பில் உருவும்படியாய் வீசினான். அந்தவேலாயுதம் வந்து சகாதேவன் மார்பிற் பாய்ந்தது. உடனே எதிரொருவரு மில்லாத தோளாண்மைபெற்ற இளவலாகிய சகாதேவன் இளைத்து, இரதத் தின்பேரிற்களைத்து வீழ்ந்தான். அவன் வீழ்ந்ததைப் பாதளத்திற் சென்று வாசுகியளித்த விஷாமிர்தம்புசித்த வாயனாகிய மாயாபீமன் பார்த்தாதரித்துத் தேற்றிச் சகுனிக்கு உதவியாகத் தலைப்பட்ட

வணங்காமுடியோனுடைய மார்பிற்றைத்து முதுகிலுருவி போடும் படி தேறிபநூறு தீக்கணைகளை மாற்றி யேற்றினன். அந்தத்தெப் பலினல் வெஞ்சமரில் விருதாவீரங்கூறிய துரியோதனமகாராஜன் தலைகுடிக்குற்றுக் குப்புறவீழ்ந்தான். எஜமான் வீழவே தேவர்கள் மெச்சாநின்ற அசுவத்தாமன் மனந்திடுக்கிட்டு ஒரு வேலாயுதத்தை யெடுத்துப் பூசைகொடுத்துத் தாங்கள் பாவருஞ் சாகாதிருக்கவும் பீம சேனன் ஒருவன் மாத்திர முடிதுணிந்து போகவுமெண்ணி வேகமாய் விடுத்தான். அந்தவேலாயுதஞ் சுழன்று மூனையுடன் வருவதைப் பீமன்கண்டு, வச்சிரவாளிகளை யேவிக் கோடி துண்டாகக் குறைத்து, மறுபடியும் அசுவத்தாமன் மார்பில் அழுந்துப்படியாய் வெவ்வேறுனை நூறுகணைகளை மூடுக்கினன். அதனல் அதேகம் அரசர்கள் ஆவி மாய்ந்தார்கள். அசுவத்தாமனும் அரைகொடியில் அறிவழிந்துதேரின் பேரில் தியங்கிவீழ்ந்தான். இப்படியாக அசுவத்தாமனென்னும் மருமகன்வீழ்ந்த இடுக்கத்தைக்கண்டு யேக்கங்கொண்ட விற்குருவா கிய கிருபாச்சாரியார் வெகுண்டு, தாமேறியதேரைச் செலுத்தி வந்து விதரணனுகிய பீமசேனனுடன்போராடி, வேதமந்திரங் களுடன்கூடி, தம்பேரில்வருகின்ற வெஞ்சரங்களால் வாடிப் புறங் கொடுத்தோடினர். அவர்பக்கத்திற் சூழ்ந்திருந்த மகாசூரர்களெல் லோரும் பறந்தோடினர்.

அந்தச்சமயத்தில் அரவத்துவஜன் தரித்த அரசனுடைய மாமன் ஆத்திரப்பட்டு மகா அவசரத்தோடும் வந்து ஓடுகிறவர்களை யெல்லாம் நிறுத்தி முன்னங் தன்னுடன் உடன்று உறுத்திப் போர் செய்யவந்த சகாதேவனிடம் போயெதிர்த்தான். அப்படிவந்த அந்தச்சகுனியைக்கண்ட சகாதேவன் சீற்றங்கொண்டு தன்மனந்தரி யாமல் அவனோடிவனுமெதிர்த்து அருஞ்சமராடி, வெகுசீக்கிரத்தில் அவனுடைய ஆவியை அகற்றிவைக்கும் படியாய்நினைத்து, தான் சபையிற் கூறிய சபதங்கெடாமல் ஒருவேலாயுதத்தை யெடுத்து மிகவும் வந்தித்துச் சிந்தித்து, மந்திரங்களைப் பந்தித்துச்சூரன் மேற் றொடுத்த சுப்பிரமணியருடைய வேலாயுதம் போற்சென்று அகிலபுவனேஸ்வரனுகிய அரவகேதனனுக்கு அம்மானுகிய சகுனி யின் ஆவியை அடர்த்தியென்று துணிந்து விடுத்தான். இவ்வித மாக சகுலனுக்கிளைய சகாதேவனென்னும் போர்மீனி போக்கிய வீரவேலானது பெரிதாகிய ஆணிடிபோல் இடித்து மலைகளையெல் லாம் பொடித்துப் பெருங்கடல் போலிரைந்து அருமையாகிய அம்மா

னுடைய, வஞ்சகம், பொய், பொறுமை, கோள், இவைமுதலிய நன் செய்பயிரழிய நெஞ்சமாகிய மார்பிற்புகுந்து கரகரவென்று உருவி உள்ளேதங்காமல் அம்மாமனுடைய மார்பை இருபிளவாய்க் கிழித் துப் புறமுதுகில் உருவிச்சென்றது. உடனேசகுனியானவன் உதிரம் வழிய உயிர்நிலைகுலைய, உடல்பூமிமேற்சாய உயிர்வானமடைய ஒழிந்தான். இவ்வாறு காவிப வெம்பரிபூண்ட இரதத்திலுற்ற சகா தேவராஜனேயிய வேலாயுதத்தினல் வெகுகாலையபாவியென்னுஞ் சௌபலராஜனுகிய சகுனி ஆவிபொழிந்தானென்று கேட்ட மாத்திரத்தில் வெஞ்சமாடுகின்ற பூமியிலுள்ளோர்யாவரும் அசை வற்று நின்றுவிட்டார்கள். சிலர்பாவி தொலைந்தானென்று பரிந்து பேசத்தொடங்கினர்கள். அந்தவேளையிற் பார்முழுதாளும் பார்த்தி பனுகிய துரியோதன மகாராஜன் பிராண நீங்கிய பிரேதமாகிய பேருடலைப்போல் வண்மையும் உண்மையும் வன்மையும் அழிந்து "ஓ எனதருமைபெருமை தெரிந்து வாழ்வித்தவந்த என்மாமா! எல்லா யுத்திக்கும் பூமானுயிருந்து அரேகம்பொருளைத் தெரிந்து என் புத்திக் கிசையப் பொருந்தி, இதுவரையிலும் என்னைவிட்டு நீங்காதிருந்து, இப்போது பிரிந்துபோவது நியாயமா? நான் தனியாயிருக்கலாமா? உங்களையெல்லாம் கலிவித்த பாவிகளுக்கு இந்தப்பழிபிடிச்சாமல் வீண்போமா?" என்று நானுவிதமாகப் புலம்பி வருந்தி வாடிப் போனன். அதுகாலையிற் பகற்போதைச் செலுத்துஞ்சூரியன் நடுவானத்தில் வந்தான் என்று வைசம்பாயனர் சொன்னதைக் கேட்ட ஜனமேஜய மகாராஜன் திகிலடைந்து, தெளிவுமாறி, "ஆ தெய்வமே! இந்தமேலான மதிமரபிலுதித்த வெகுகோடி மன் னர்களில் இத்தன்மையாகிய ஆச்சரியச்செயல்களை விளைத்தவர்கள் ஒரு காலத்து மொருவருமில்லையே. ஆகிலும் நேருக்குநேரேதெரிந் தும், உடனுக்குடனே மறந்தும்போகும்படி நேரிடுவது என்னகார ணமோ ஐயா, எப்போர்ப்பட்டசெல்வம்! எத்தன்மைவாய்ந்தபலம்! என்ன விசாலமாகிய ஸ்தலம்! எத்தகைய மேன்மைபெற்றகுலம்! எவ்வாறான மேலோர்கள் பொருந்தியகலம்! என்னென்ன புஜாபலத் தால் பெற்றவரம்! என்னென்னபுகழாகிய உரம்! ஆ! இவைகளெல் லாமிருந்தும், (ஆயிரங்குணம் ஒரு லோபகுணத்தால் அழியும்.)

என்பதுபோல அநியாயமாயவைகளைப் போக்கிக்கொண்டு தாங்களும் போய்விட்டார்களல்லவா? ஆனால் இவைகளெல்லாம் நமதுசெயல்களல்ல. ஜன்மாந்திர கல்வினை தீவினைக்கீடாய் நடத்திவைக்குந் தெய்வச்செயலேயாம்" என்று தனது மனதைத்தானே தேற்றிக் கொண்டவனானன்.

பதினெட்டாம் போர்ச்சருக்கத்தோடு

சல்லிய பர்வம் முற்றிற்று.



ஸ்ரீ மஹா பாரத வசனம்

10 சவுத்திகபர்வம்

கண்ணன் துதி

மருந்தைவா னவர்க்களித்து வையமுண்டு செய்யசெம்
பருந்திலேறி மாதவத்தர் பண்யவாயர் பாடியிற்
பொருந்துகின்ற பொதுவர்மாதர் பூந்துகிற் கவர்ந்துபூங்
குருந்திலேறு கின்றகொண்டல் குரைகழல்கள் துதிசெய்வாம்

சூதபுராணிகர் வாக்கியம்

ஓ சவுனகாதிமுனிவர்களே! இவ்வாறு யுத்தபஞ்சகத்தின் நான் காம்பாகமாகிய கர்ணபர்வத்தைக்கூறிய வைசம்பாயனமுனிவரை ஜனமேஜய மகாராஜன் பணிந்தெழுந்து, "சுவாமி! கிருபாசாரியர் இவ்வளவிலேனும் போரைநிறுத்திச் சமாதானமாதல் நன்றென்று சொல்லியும் அதைத்துரியோதனன் மறுத்து மத்திரதேசாதிபனை சல்லியராஜனைச் சேனாபதியாக்கியதும், அந்தச்சல்லியன்செய்த அரைகாட்போரில் தருமராஜன் தன்படையினது குறைவைக் கண்டு வருந்தியதைக்கேட்ட கண்ணன் அவர்க்குத் திடங்கூறித் தேற்றியதும், சல்லியன் தருமனுதியரைப் பலமுறை புறங்கண்டதும் தருமனுதியர் அச்சல்லியனைப்பலமுறை புறங்கண்டதும், அருச்சுனனுல் கிருபாசாரியும் அசுவத்தாமனும் அலக்கழிந்ததும், தருமராஜனுலே சல்லியன் விண்குடி புகுந்ததும், சகோதரர் தொண்ணூற்றொன்பதின்மரு மிறந்ததைக்கருதி வருந்திய துரியோதனனைத்தேற்றி மிகுந்துள்ள சேனைகளைக்கூட்டி அழைத்துக் கொண்டு மீட்டும் யுத்தத்திற்குவந்த சகுனியைச் சகாதேவன் சாய்த்ததும், ஆகிய இச்சரித்திரங்களை யெல்லாஞ் சாங்கோபாங்கமாகக்கேட்டு ஆனந்தித்தேன். இப்பால் ஐந்தாம்பாகமாகிய சவுத்திகபர்வத்தையுந் திருவாய்மலர்ந்தருள வேண்டும்" என்று கேட்க, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினர்.

முதலாவது.

சுயோதனன்வதைச் சருக்கம்



உயர்வற வுயர்நல முடையவ னெவனவன்
மயர்வற வதிநல மருளின னெவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யெவனவன்
துயரது சுடரடி தொழுதெழன் மனனே

ஜனமேஜய மகாராஜனே கேளும் பதினெட்டாகாள் பகல்பதி னேந்துநாழிகைக்குமேல் தனக்கு ஒருவருந்துணை யில்லாமற்போகவே மனம்வருத்திச்சென்ற வேந்தர்கள் வேந்தனுகிய வணங்காமுடி யோன் மீட்டும் ஒருவாறு தேறினவனுய், மனங்கன்றி வருந்தாத வனுய், வாடாமல், வதங்காமல், புறங்கொடுத்தோடாமல், மதியை நிலைக்கநாட்டி, விதியைநலக்கநீட்டி, மேலுமேலுங் கோபம் வீறுக வெகுண்டு, "பாண்டவரைவரையும் இன்று நானேமுடிக்கிறேன். ஈரேழு பாரையும் நானே ஆளுகிறேன். இனிநிலைபெற்று வாழுகிறேன்" என்று நினைத்துக்கொண்டு தானே சுயம்பிரபுத்துவ முடையவனுய்ப் பெயர்ந்து அப்போது தனக்கு மிகுந்திருக்கின்ற சேனைகளெவ்வள வென்று கணக்கிட்டான். யானைகளாயிரம், தேர்களாயிரம், குதிரை கள் காலாறு படைகளோடும் பதாதியர்காலாயிரம் இவ்வளவுதான் சேனைகளிருந்தன. இவைகளேயெல்லாஞ் சேகரித்துக்கொண்டு, அவர்களுக்கு வேண்டிய தயிரியங்களைச் சொல்லி, சக்ரவாளமென் னுந்தேர்மேலேறிச் சங்கு, தாரை, தப்பட்டை முதலாகியவாத்தியங் கள் கோஷிக்கச்சென்று சண்டைசெய்யும் படிக்குத் தானே சேனு பதியாய்த் தலைப்பட்டுநின்று சகல ஆடம்பரத்துடன் எதிர்த்து, கோப முதிர்த்து, மீசைதுடிக்க வெங்காம்பதைக்க புருவநெரிக்க, புகை மலிந்துகநிக்க, பொறியெழுந்திறைக்க, நமநிகடித்து, காக்கைக்குதப்பி, பல்லைக்கடித்துப், பரக்கவிழித்து, உறக்கக்கூவி, உறுமிக்குறவி, உற்ற சேனைகளைச் சுற்றிலுங்றுத்தி, வெற்றிவீரரை மேலுறச்செலுத்தி, முத்துக்குடைக்கீழ் முதல்வனிருந்து, சித்தமகிழ்ந்து தேவர்னப் புகழ்ந்து, அத்தனேபேரையும் அன்புடன்பார்த்துச், "சற்றினில் ஐவர் தலைகளைவாங்கி வெற்றியைப்பெற்று விற்றிறங்கொண்டு, முத்தலம்

பரமிய பற்றலர்யாரும் மைத்தலம் விதிர்த்தென் கால்மேற்பணிய நற்றவப்பயனல் காளுலகாள்வேன், செத்தவரெல்லாஞ் சீர்பெறச் செய்வேன்! பஞ்சைபர்தமக்கு அஞ்சிஅடங்கேன்! செஞ்சுடர்ப் படைகொளுந் தீரமே வாரும்'' என்று அமர்செய்ய எதிர்த்தான். அப்படி யெதிர்த்து வருகின்ற வேந்தர் வேந்தனுகிய துரியோதன மகாராஜனைக் கிருஷ்ணமூர்த்தியும் பாண்டவர்களும், இன்னுஞ்சில அரசர்களும் பார்த்து ஒருவருக்கொருவர் கைகளைநீட்டி இதனைச் சொல்லுகின்றார்கள்.

துரியோதனனிளைத்துங் கிளைத்துப் போருக்
கெழுதலை அருச்சுனன்கண்டு வியப்பக்
கண்ணனதற் குத்தரங்கூறுதல்

ஐபனே பூர்வந்தொடங்கி அணிவகுத்திருந்த பதினெரு அக்குரோணிபாகிய பதாகினிபாவும் பற்றற்றுப்போனது போதா தென்றே இன்னுங்கொஞ்ச நிஞ்சியிருக்கிற சேனைகளைக்கொண்டு யுத்தஞ் செய்யவந்தான் இத்துரியோதன மகாராஜன்? இவ்வளவோடு நின்றுவிடலாகாதா? மூப்பதுமுழத்தில் முடியப்படாதது மூன்று முழத்தில் முடியப்போகிறதா? இத்தவிரல் வேந்தன் இப்போது மேலிட்டுச் சண்டைசெய்வதினுல் இவனுக்கென்னலாபம்? இன்னமும் வெற்றிபெறப் போகின்றானு? —என்று பலருஞ்சொல்லிக் கொள்ளுங் காலையில் அருச்சுனனவன் கிருஷ்ணமூர்த்தியின் முகத்தை நோக்கி "ஓ ஆபத்பாந்தவாகிய ஆதிதேவ, இந்தத் துரியோதனனுக்கு என்னபுத்தியென்று இயம்புவேன்? வேலாயுதப்பிரயோகஞ் செய்யா நின்ற முருகக்கடவுளுடைய வெம்போரிற் சாகாமல் தப்பிப்பிழைத் திருந்தவர்யார்? இங்கே சகலசாஸ்திரங்களையுந் தனுர்வேதங்களையும் கற்றவீரராகிய தன்னியர்களெல்லோருங் காடாக்கினியாற் பற்றியெரி யுங் காட்டைப்போற் கனலால் மெலிந்து கணத்தில் மடிந்துபோனர் கள். அவைகளைபெல்லாம் பிரத்தியக்ஷமாய்க் கண்ணுரப் பார்த்திருந் தும் கொஞ்சமேனு மிவன் நினைக்கவில்லை. பார்த்தீரா ஆகண்ணனே! போர்புரிவதற்காகத் தனக்குத்துணைப்பட்டு வந்தவரில் இறந்தவர் போக இருந்தவர் இளைத்துப் பலங்குறைந்து எங்கேனும் போய்ப் பிழைக்கலாமென்று ஓடிஞலும் அவர்களையெல்லாந் துரியோதனன் ஓடிவழிமடக்கி வளையக்கட்டி மறித்துத்தடுத்து ஊக்கங்கொடுத்து அழைத்துவந்து மீட்டுங் குருக்ஷேத்திர பூமியிற்சேர்க்கின்றன். அப்

படியிவன்சேர்ப்பது சண்டைசெய்வதற் கென்ரு நினைக்கின்றீர்? ஐயைபோ! ஒ அனக்தசபரு! இந்தயுத்த பூமிக்கிரையாக அவர்கள் ஆவியைச்கொடுத்து அரும்பழியை முடிச்துத் தானும் படிவதற் கல்லவோ அவன் சேர்ப்பதும் ஒடிவருவதும்? ஆ ஆ என்ன அநியய யக்காரன்! அச்தோ இவ்வளவு தாழ்மையான காலங்கிட்டியுஞ் சற் றேனும் நாணமில்லாமல், வெட்கமில்லாமல், மானமில்லாமல், வந்தானே? இது என்ன துணிவென்று சொல்லலாம்?" என்று கேட்க, அந்தவார்த்தையை மாயவன்கேட்டு, "அப்பா அருச்சுன, முன்னமுங்கள் பொருட்டினால் நானெருதூதாளாகி வில்லாளிக ளாகிய பீஷ்மர், விதுரர், துரோணாச்சாரியர், கிருபாச்சாரியர், இவர்கள்முதலிய மேலோரெல்லோரும் பொருக்திய மேன்மை பெற்ற அஸ்தினபுரத்திற்குப்போய் வேந்தரைச்சேர்ந்து இது வரையிலும் நடந்திருக்கின்ற சங்கதிகளையும், இனிமேல் விளை யப்போகின்ற காரியங்களையும், வீரம்பெற்றிருக்கும் உங்களுடைய விற்றிறங்களையும், வெகுநயமாகப் பலவிதத்திலுஞ் சொன்னேன். முனிவர் மூவர்களுஞ் சொன்னார்கள், பெரியோர்முதலாகிய உரியோர்களும் பேசினார்கள். இப்படிக்கெல்லாங்கூறிய அந்தநாளை யிற் சற்றேனுமுடன்பட்டானு இந்தநாளையிற் உட்படுவதற்கு? ஒ அர்ச்சுன, இதுவல்லாமலு மவனுக்கு நானுநேரே சொன்னதாவது நீயொருகாலுஞ் ஜெயம்பெறமாட்டாய். வஞ்சகம், பொய், பொறுமை, குற்றம், இவைமுதலியவற்ற உன்மனக்கெடுதிகளே அதற்குக் கார ணங்கள். உனக்குப் படைத்துணை வரும்படியாகிய விறல்வேந்தர்களி யாவரும் உயிரிழந்து, உன்புத்திரமித்திர களத்திராதிகளும் போய் நீ தனித்துநிற்பாய்!உன்னைக்கண்ட பாண்டவர்கள் புற்றிலிருந்தெழும் பாம்பைக்கண்டது போல் அடிஅடியென்று தடியெடுத்துவரும்படி யாகும் அக்கால நீ கண்கலங்கி, நிலைத்துநிற்க இடமில்லாமலோடி துஷ்டஜெந்துக்கு ஒருவரும் உதவிசெய்யாமற் கொல்லச்சொல்லு வதுபோல் உன்னைக்கொல்லத் துரத்தும்போது நீ வாடி, ஒருவனுக ஓடி,நிலைத்துகின்று போராடி, தலைசுங்கி இறங்கிப்போவாய்! இப்படிக் கெல்லாமில்லாமல் எவ்வுலகுங் கொண்டாடும்படியாய், இந்தக்குலத் தின்பேரை நிலைநிறுத்தும்படியாய், உன்னுலே உன்குலத்தாருக்குப் பெருமைவரும்படியாய், செவ்வைப்படவேண்டுமென்று உனக்கு மனதிருக்குமாகில் இப்போது உனக்குப் புத்திசொல்லுகின்றயுத்தத் திறங்கண்டிருக்கும் நற்புத்தியையுடைய நல்லோர்களாகிய எம் போன்றவர்களின் சொல்வழிநிற்பாய். எங்கள்மார்க்கத்தில் நிற்பா

யாகில் இத்தப்பலன் உனக்கு உடனேதெரியும். அப்போதுகுற்ற மற்ற கோவேந்தனுகி கல்லவாழ்வைப் பெறுவாய்- என்று பலரையத் திலுங்கரைத்தேன்; வெகுபயத்திலு முரைத்தேன். எல்லாருடைய பேச்சையுந்தள்ளி,பாண்டவராகிய உங்களை மிகவும் எள்ளி, அந்தச் சபைபிடத்தில் இவன்துள்ளி, அன்றுபேசிய வெற்றிவீர முதலியவை களை இப்போது உள்ளி உரைப்பது அநுமையானகாரியம். அப்பா அநுச்சுனு! நானென்னசொல்லப் போகிறேன். இவன்குறித்த குறிப் பும், இவன்தம்பி துச்சாதனன் பதைத்தபதைப்பும் நான் சொல்ல மாட்டேன். இனிமேலவனுக்கென்ன சத்திருக்கின்றது. நானுமற்றப் பெரியோர்களுஞ் சொன்னவைகளையெல்லா மப்போது கேளாது விடுத்தாலும், இப்போதாவது உன்னிப்பாராமல் இன்னும் போருக் கென்றேவந் தெதிர்க்கின்றான். இன்னுமிருக்குஞ் சிலபேர்களை யும் பிழைத்துப்போக வொட்டாமல் முடித்துவிட எண்ணங் கொண்டிருக்கிறான். அவனெண்ணப்படியே முடிவாகட்டும். அப்பால் இவனைத் தனிமைப்படுத்தி, இவனுக்கு நான்முன்புசொன்ன சங்கதி களையெலாந் தெரியப்படுத்திப் பிற்பாடு இவன்பிராணனை முடிக்கு மாறுயோசிக்க வேண்டியதே, வேறுபேச்சென்ன இருக்கிறது. ஓவீபற்சுவாகிய வேந்தனே! இவன்பிறந்தபோதே வேதப்பொரு ளாய்ந்த முனிவோராகிய முதல்வோர்கள் இவனுக்குச் சாதகன்மஞ் செய்தார்கள். அந்தச்சாதகத்தில் என்னபலனிருந்த தென்றால் சொல்லுதற்கரிதாகிய இந்தப் பூமியிலுள்ள பேர்களையெல்லா முடித்து, பின்தானு மிறப்பானென்றிருந்தது. அதனுலிவனுக்கு நராந்தகனென்று பேரிட்டார்கள். (பெரியோர் வாக்குப்பிரணவம்,) என்றும் (வெகுஜனவாக்கியம் வேதவாக்கியம்,) என்று முள்ள மூதுரைக்கு, இப்போது சரிபாய் முடிந்தது. இனி நாம் பேசவேண் டிய தொன்றுமில்லை" என்று ஓதினர். இந்தவார்த்தையைக்கேட்ட அநுச்சுனன் நகைத்து, அவருடைய இஷ்டத்துக்கு ஏற்றமாக ஒத்திருந்தான்.

துரியோதனன் கொணர்ந்த சேனை களைப் பாண்டவர் பற்றறக்கொல்ல, அதுகண்டு அவனஞ்சி ஓடி ஒளித்தல்

அந்தச் சமயத்திற் புட்பங்களின் இதழினிடத்திலுறைந்த தேன்களை வண்டுகளுண்டு பாடும்படியாயிருக்கிற மாலையணிந்த மார்புமுந் தோளுங்கொண்டு விற்போரிலு மற்போரிலும் விதாண சாலியாகிய பீமசேனன் தேர்விட்டிழிந்து கதாயுதங் கைக்கொண்டு விசைந்து துரியோதனமகாராஜனுக்கு எதிர்வந்து குதித்து, ஆளைப் பார்த்து மதித்து ஆண்மையோங்கமதர்த்து, பொறிபறக்க விழித்துப் பேரோசைபடச் சிரித்து, கதையைக் கரகர வென்று சுழற்றிச் சேனைகளின்பேரில் வீசினன். அப்படி வீசியபோது வெற்றிமாலை புனைந்த வேந்தர்களும், கால்வகைச்சேனை மாந்தர்களும் ஆகாய மளாவிய தேர்களும், மலைகள்போன்று பரித்த யானைகளும், காற்றை யொத்த குதிரைகளும், பயமில்லாத வயவர்களும் பட்டார்கள் முகமாறிக் கெட்டார்கள். இவர்கள் பட்டபாட்டைப்போல் இதுவரை யிலும் எவரும்பட்டதில்லை. யாவரு மிப்படி கெட்டதில்லை. அந்தப் பீமனை மடக்கி யெதிர்ப்பவ ரொருவருமின்றி அகியாயமா யழிந்தார் கள். மலைக் குன்றுகளுக் கொப்பாகிய மதயானைகளெல்லாங் கொம்புக ளொடிந்தும், தும்பிக்கையறுந்தும், கால்கள் முறிந்தும், வால்கள் தரிந்தும், உடல்கணைறிந்தும், குடல்கள் சரிந்தும், செவிகளிழந் தும், புவிமேல் விழுந்தும் பொன்றும்படிசெய்து தனக்கொருவரும் நிகரில்லாமல் தேவர்களுக்கு நாயகனாகிய தேவேந்திரன்வானமளாவிய மலைகளின் இறகுகளை யறுத்தபோது அம்மலைகளை வீழச்செய்த வஜ் ராயுதத்தின் வல்லபத்தை ஒத்திருந்தான், வாசம்பொங்கிய மாலை தங் கிய மாவீரனென்னும் அந்தப்பீமசேனன். இவையன்றியும் தேர்கள் முழுதுஞ் சிகரமுறிந்து மொட்டையாய் நிற்கும்படி இடறி மேகமண் டலத்துக்கு மேற்பட்ட மகமேருவினுடைய முடிகளைக் கத்தரித்த பிரசண்ட வாயுவைப்போல் நின்றான், எண்டிசையும் பேர்பொறித்த பெருந்தகையாகிய அவ்வப பீமன். இவ்விதமாக பீமசேனனவன் படைகளுள் நுழைந்து பற்றறக் களைந்துவரும் வேளையில், மேக வாகனன் பிள்ளையாகிய வீரவில்விஜயன் தனது வெற்றிகொண்ட விஜயகாண்டீபத்தை வளைத்து, நூறு நூறுயிரம் அம்புகளைக்

கும்பலாய் விடுத்து தேகத்தையும் மார்பத்தையுந் துளைத்துச் சூரியன் புரவிக்கொப்பான வேகமாகிய குதிரைகளையும் மன்னர் மண்டலீகர் முதலாகிய மன்னர்களையும் மண்மேலடித்துத் தள்ளினான். சகுலசகாதேவர்கள் ஒருபக்கத்திற்புகுந்து குறுநிலமன்னர் முதலிய கோமேவந்தர்களைக் கொன்றார்கள். இப்படி பாண்டவர்கள் பலமுகத்திலும் ஏற்பட்டுப் பாழ்படுத்தி வரும்போது, துரியோதன மகாராஜனுடைய பாசறையாகிய பாளயத்திற் காவலிருந்த காவலரும், பூவலரும், மறுதேசபாஷை மன்னர்களும், மந்திரத்தலைவர், முதலிய வீரரடங்கலும் ஒரேமுகமாய்த் திரண்டு மேகங்கவியும் பரிசுபோல்வந்து வளைத்துக் குவிந்தார்கள்.

அப்போது அம்முடிமன்னர்களும், அவ்வவர்களுடைய பாயும் பரிகளும், சக்கரங்களுடைய தேர்களும் அத்தேர்க்குதிரைகளும், அக்குதிரைகளோட்டுஞ் சாரதிகளும், பலம்பொருந்திய காலாட்களும், கால்மாறி தலைமாடாகி, உரமாறி, உடல்மாறி, உயிர்மாறி, உரைமாறி, உளமாறி, சிரமாறி, கரமாறி, கால்மாறி, மேல்மாறி, தோள்மாறி, தாள்மாறி, தடுமாறிக் கெட்டழியுங் கேட்டை எட்டுத்திக்கும் அரசாக்ஷிசெலுத்திய வணங்காமுடி இறைவன் கண்டு, மனக்கிலேசங்கொண்டு, எல்லாரும் போய்விடுகின்றார்களே இனி மேல் நமது பேரில் திரும்புவார்களோ என்று ஏக்கங்கொண்டு, தனது முடிமேற்கவியப் பிடித்திருந்த சந்திரவட்டக்குடையும், சுவரத்தினசித உசிதமுடியும், பிரகாசக் கதிரொளிரச் சொலிக்கும் ஆபரணங்களும், அழகிய உபபசாமரைகளையும், மெத்தவிலையுயர்ந்த மின்னுபரணமணிந்த மலைபோலுயர்ந்த லக்ஷணங்களமைந்த பலர்தினிந்த சுத்தபவித்திரமாகிய பட்டத்துயானைகளையும், பட்டத்துக் குதிரைகளையும், பட்டத்துத்தேர்களையும் விட்டுவிட்டு இவ்வுலகத்தை ஏக சக்ரேஸ்வரனாக ஆளவிருந்த எண்ணத்தை ஒருபால்துறந்து, யாருக்குந்தெரியாமல் ரதம்விட்டிறங்கி ஆமைபோற்பதுங்கி ஒருபக்கமாயொதுங்கி உடல், உள்ளம், உயிர், இவை முதலியவும் நடுங்கி, கைக்கொண்ட கதாயுதமும், மாண்டுபோவோமென்று மனத்திற்கொண்ட பயமும் ஆகிய இவ்விரண்டோடு தானொருவனுமாய்ப் புறங்கொடுத்தோடினான். இவன் இன்ன சமயத்தில் இன்ன காலத்தில் இன்ன படிக்கு மறைந்துபோய் விட்டானென்று இவ்விடத்திலிருந்த பாண்டவர்முதலிய படைகளுக்குத் தெரியாது. துரியோதனனுடைய ரதம் யுத்தபூமியில் மெத்ததூரத்தில் நின்றிருப்பதைக்கண்டு,

அரசன் இருக்கின்ற னிருக்கின்றன் என்றே எண்ணி, யுத்தத்தின் பேரில் மனம்நண்ணி இருந்துவிட்டார்கள். இப்படியிருக்க எல்லாச் சேனைகளையுந் தீரமுடித்துத் துரியோதனனுடைய தேரைநாடித் தின்றினென்று யாவருஞ் சூழ்ந்து வளைத்து நின்றுபார்க்கும் போது, அவனது கேயூரமணிகுண்டல கிரீடகடகங்கள. மாளணி மதாணி தனுர்ப்பாண முதலிய பாவுமிருக்கக் கண்டனர், ஆளமாத் திரங் கண்டிலர். உடனே பாவரும் ஆச்சரியப்பட்டு, "ஆ! ஆ! அபாப் பதாகை வேந்தன் இராப் பெருச்சாளியைப்போல் எப்படிபோ னான்" என்று யோசித்து, சரிதான், காரணிந்த மணிமார்பனுகிய அத்தராதிபன் எல்லாப்படைகளும் இறந்துபோகவே, இனியிருந்தால் நமது பிராணனும் போய்விடுமென்று நினைத்துப் பயந்து தன் னுயிர்க்கு உதவியாகும் படியானதைத் தேடக்கருதி ஓடிப்போய் விட்டானுக்கும் என்று நானுபக்கத்திலும் நாடித் தேடினர்கள். பிணங்களையெல்லாம் புரட்டிப்புரட்டிப் பார்த்தார்கள். இரத்தவெள் ளப் பள்ளங்களெல்லாம் இறங்கிக் கலக்கினர்கள். தேர்த்தட்டுகள் நாயகத்தட்டுகள் சுரங்கத்தட்டுகள் இவைகளெல்லாஞ் சோதித்து, எங்குங் காணுமையால் ஓ! ஓ! வென்ற ஐவருடைய படைக்கலப் பாணியாராகிய சேனைகள் ஆர்ப்பரித்தார்கள்.

அப்பால் யாவரும் ஒன்றுகூடி, கொடுங்கோல்கொண்ட பாண்டவனுகிய துரியோதனனுடைய மீதியிருந்த சேனைகளை யெல்லாந் தேடித்தேடி, ஒன்றொழியாமற் கொன்றார்கள். ஒப்பற்ற வீரராகிய பாண்டவர்கள் அன்று செய்த யுத்தகளத்திற் பிராணனை ழிந்து வீழ்ந்த உடல்கள் பெரிய மலைகளைப்போற் பெருக்கமாய்க் குவிந்திருக்க, அந்தப்பிணமலைகளிலிருந்து பெருகி வரா நின்ற இரத்த வெள்ளம் மலைபருவிகளைப் போல்வழிந்து, குறைவற்ற அகோகங்கோடி ஆறுகளாய் அகோகமுகமாயோடியது. அவ்வாறோட வும் வெதுவாகிய காக்கை கழுகு முதலிய பக்ஷிகளும், கரிமுதலிய மிருகங்களும், டொங்காகிய வயிறுகளையுடைய பேய்பூத கணங்களும், குடியானவர்களைப்போற் பூமியைக்கிளறி, அபகீர்த்தியை ஆஸ்தி யாகப்பெற்ற அயோகியர்களுடைய உடலையும், குடலையும், குடிவார மாகக்கொள்ள, வெற்றியென்னு சொலலுகின்ற பயிர்களைத் தழைக்க விளைத்த பாண்டவர்கள் அந்த வெற்றியாகிய விளைவிலே சதகிய மென்னுங் காவலமைத்துக் கீர்த்தியாகிய மேல்வாரங்கொண்டு, யுத்த பூமியை அரசுசெய்யுந் தன்மைபோலிருந்தார்கள். அப்போது பாண

டவர்களிடத்திற் சாகாமல் தப்பியிருந்த சேனைகள் எவ்வளவென்றால், இரண்டாயிரந் தேர்களும், இரண்டாயிரங் குதிரைகளும், எழுநூறு யானைகளும், பதினாயிரங் காற்பலங்களும், பரதகுலம் உய்யும்படிக்குப் பிறந்த பாண்டுமகாராஜன் பூர்வஞ்செய்த நல்வினைப்பயனால் இவ்வுலகத்திற் சத்திபத்தையுந் தருமத்தையும் நிலைநிறுத்தப் பிறந்த தருமராஜனிடத்தில் தங்கியிருந்தன. இவைபல்லாமலும் துருபதேய ராஜனுடைய குமாரன் திஷ்டத்தியுமன், சிகண்டி, பாண்டவச் சேனைகளுக்கு இந்தப் பதினெட்டாளும் போஜனக் குறைவில்லாமல் நடத்திக்கொண்டுவந்த பெரும்படைக்குரிய சேநாராஜன், சாத்தகி, பாண்டவர்கள் ஐவர் இளம்பாண்டவர்கள் ஐவர் கறுத்த திருமேனி படைத்த கண்ணன் இவர்களுந் துன்னி விளக்கமாயிருந்தார்கள். ஆகாயவாசிகளாகிய தேவர்கள் இந்த அதிசயங்களையெல்லாங் கண்டு களித்து அம்பொன்மாரியும் அலர்மாரியும் பொழிந்தார்கள். வெவ்விப விஷமபெற்ற நாகர்களாகிய பாதலத்தவர்களுஞ் சந்தோஷித்து, இன்னும் என்னகடக்கப்போகிறதென்று மேல்விளையும் விளைவைப் பார்த்திருந்தார்கள். திக்கெட்டிலும்நிறைந்த மலைக்கம்பத்திற் கட்டப்பட்டிருக்கின்ற எட்டுயானைகளும் மதகஜங்களைப் பொழிந்து கலித்தன. இந்தப் பூமியின்கணுள்ள பல்லாயிர முயிர்களும் எக்களிப்புடன் இரைத்து மகிழ்ந்தார்கள். உலகத்தில், தருமம் நிலைபெற்றதே யென்று தேகநிறைந்த தருமதேவதை கையெடுத்து ஆர்த்தனள். ஓசைபெற்ற நான்குவேதங்களும் நம்மிடத்திலிருக்கிற விதி முதலிய முறைமைகள் இனித்தபபாமல் நடக்குமென்று உவகையுடன் முழங்கின. மாசற்ற பலம்பெற்ற பூமிதேவியானவள் நமதுபாரம் நீங்கிற்று என்று ஜகதீசனாகிய தற்பரனையும் பாண்டவராகிய ஐவரையுங் கொண்டாடிப் புகழ்ந்து வாழ்த்தினள். நீலமேகச்சாமள வர்ணனாகிய நெடுமாலும், ஜகமெங்குஞ் சீர்நிறைந்து பேர்சிறந்த வாகைச் சிலைத் திறத்தையுடைய பாண்டவர்களுமே ஜயபேரி முழக்கத்துடன் குருக்ஷேத்திரபூமியி லிருந்தார்கள்.

துரியோதனன் தனித்தவிடந் தேடியிருந்து தன்னைத்தானெஞ்சுகொண்டு மீண்டுந் தேறித் திடங்கொள்ளுதல்.

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! இப்பால் மாலபுனைந்த வஞ்சகனுகிய மாமன் சகுனியும்—னும் தம்பிமார் முதலாகிய கொடிய துஷ்டர்களுடனும் உலகாணவந்த உரகக்கொடியோனுகிய துரியோதன மகாராஜனுடைய தன்மையை யெடுத்துச் சொல்லுகிறேன் கேளும். அப்பார்த்தளங்கொடிசேர் பார்த்திபன் மாந்தரிற் சிறந்த மாமுடிபெற்றும் திவினவசத்தாற் சீரெலாந் தொலைத்து மேவிய சமர்நிலம்விட்டகன்று தாவிய புலிவாய் தப்பிய மான்போல், சாவியாம் பதர்கள்தான் பறப்பதுபோல், காவியங்கண்ணுர் கலனழிதரல் போல், ஆவிபுரப்பான் அறிவழிந்தேங்கிப், பூவியல்பொருந்திய பூதபை சாசுகள், கூவியகளத்திற் கூன்வளைத்தோடி, பாவியாய்க்கானிற் படர்ந்தனன்மேரு? ஐயோ, வெல்லுந்தருமம் விறலழிக்கும் பாவமெனுஞ், சொல்லுக் கலிநிறுவித் தோற்றந் தொலைவெய்தி, கல்லுங்கடறுங் களத்திற் பலகடந்து, கொல்லு மரிகைப் பிழைத்த குஞ்சரம்போலோடினன். ஆ!ஆ! என்ன ஆச்சரியம். ஐயா மகாராஜனே! நல்லோர் மகிழுந் தருமமானது பொல்லாக் கன்மங்க ளெல்லாவற்றையும் போக்குமென்றும் புல்லோர்நினைத்த எல்லாவர்மத்தையும் பாவமென்பது கூடிப் பொன்றுவிக்கு மென்றுஞ் சொல்லிய மேலோர் வாக்கியம் பழுதுபடாமல் இக்களரவகுல முதல்வனுகிய துரியோதனமகாராஜன் அதனை நிலையாக நிறுத்தினன். இதற்குச் சாக்ஷி தருமத்தையுடைய முரசக்கொடியோன் வீருத்தியடைந்ததும் அதர்மத்தையுடைய அரவக்கொடியோன் அழிந்து அடங்கிப்போனதும் போதுமல்லவா? இவன் தன்னை யாவரும் மதிக்கும்படிக்கு இருந்த பெருமைத் தோற்றத்தைத் தூரத்தோலியிலோடிப்போகச்செய்து, கல்லுங்கடறுமாயுள்ள காட்டைநோக்கி, இந்த யுத்தகளமுதல் நெடுந்தூரம்வரையிலும் பலவாறுயுள்ள மேடு பள்ளங்களிலுங் குண்டு குழிகளிலும் விழுந்தெழுந்து ஓடிக் கடந்து கொலலவந்த சிங்கத்தினது கைக்குளகப்பட்டுத் தப்பிப் பிழைத்தோடுகின்ற தனியானையைப்போல் ஓடினனே! ஐயோ இத்தத் துரியோதனன் ஓடுங்காலத்தில் எப்படியிருந்தானென்றால் இன்னும் எங்கேபாகிலும் ஒன்றியாய்ப் பிழைத்து ஆத்மகோடிகளிருக்கின்றனவோ வென்று

தேடி ஓடுகின்ற உகாந்த காலாந்தகனைப்போலிருந்தான் எமனுக்கும் இவனுக்கும் உவமானம் எப்படியென்னில், எமனுக்கு நீலவுடல் இவனுக்கும் நீலவுடல். எமனுக்குருப்புப் பொறியும் படியாயிருக்கின்ற வாள்விழி. இவனுக்கும் நெருப்பு எரியும்படியாயிருக்கிற வாள்விழி. எமன் கையிற் சூலமுந் தண்டும் எப்போதும் இருப்பன. இவன் கையிலுஞ் சூலமுந் தண்டும் எப்போது மிருக்கின்றன. எமனுக்குக் கருஞ்சுருட் கேசமானது பின்பக்கத்திற் றொங்கிக் கொண்டு இருப்பது. இவனுக்குத் தலை மயிர் பின்பக்கமாயச் சுருண்டு அலைந்துகொண்டிருக்கிறது. அந்த எமனுங் குருக்ஷேத்திர பூமி முதலிய புறம்பெல்லாம் ஓடிக்கொண்டிருக்கிறான். இவனுங் குருக்ஷேத்திர பூமியைவிட்டுப் புறம்பிலோடிக் கொண்டிருக்கிறான். எமன் வெகுபேரைக் கொல்லச் சிறந்தவன். இவனும் வெகுபேரைக் கொல்லப் பிறந்தவன். ஆகையாற் காலனே இவனுக்கு ஒப்பாகச் சொல்ல என்னதாழ்ச்சி?

ஓமகாராஜனே! இப்பால் இப்பாவி யாருக்குந் தெரியாமற் குருபூமியைவிட்டு நெடுந்தூரம் ஓடினான்; வாகன நீங்கி நடந்தறியாத இரண்டு தொடையும், குதிகாலும், உள்ளங்காலும், அயர்ந்து ஓய்ந்தான். சத்துருக்களுக்குத் தெரியாமல் தானிருப்பதற்கு ஒழிந்திருக்குந்தனித்த இடமும் சந்தடியற்ற இடமும் தருக்கணிறைந்து சூழ்ந்து மறைந்து தண்ணென்று கும்மென்றிருக்கும் படியான இடமுந் தேடினான். அப்படிப்பட்ட இடங்களில் ஒன்றும் அப்போது அவனுக்கு அகப்படாமையால் திகைத்தான், மலைத்தான், காலாகிய திக்கிலும் புகுந்து குளிர்ந்த சோலைகளெல்லாம் ஓடினான். இப்படிப் பார்த்துக்கொண்டு வரும்போது அவ்விடத்தில் அடர்ந்த காடுகளினுங் குளிர்ந்த சூழலும், ஜலநிறைந்த ஒருமடுவும், மணற்றடமும் இருக்கக்கண்டான். கொடுங்கோல்கொண்ட கோவேந்தன் உடனே அந்தமடுவின் அருகிற்சென்று நான்கு திசைகளையும் நன்றாய்ப் பார்த்துச் சத்துருக்களாகிய பாண்டவர்கள் கண்ணிற் படமாட்டோமென்றும் நாம் இங்கிருப்பதை அவர்கள் கண்டு பிடிக்கமாட்டார்களென்றும் நினைத்துக் கனைத்து ஆர்த்துத் தன் கையில் திருந்திப் பொருந்திய பெருங் கதையுடன் இருந்து வேர்த்தான்; அச்சத்தால் உடல் போர்த்தான்; பழைமை பாராட்டி நினைத்தான்; வெதும்பினான்; வெய்துயிர்த்தான்; பெருமூச்சுவிட்டான்; சத்துருக்கள்கையில் அகப்பட்டுப் போவோமோ வென்று பெரிய பயங்கொண்டான்;

மனம் புழுங்கினன். முன்னே எண்ணுத எண்ணங்களை யெல்லாம் இப்போது எண்ணியெண்ணிச் சிந்தித்தான், "எனக்குரித்தாய் உறுத்தி உறுதியாகச் சொல்லிய உத்தமர்களுடைய நற்புத்திகளைக் கேட்டு அந்தவழிகடக்காமல் அவர்களுக்குத் துக்கமுண்டாக்கி நமதுபேரில் வெறுக்கவுஞ் செய்து ஐவராகிய பாண்டவர்கள் வெகு லேசாக உயிர் அழிந்துபோவார்கள். அவர்களிறந்து மேலுலகஞ் சேர்ந்துவிட்டால் நாமும் நமதுதம்பிமார் முதலாகிய பேரும் பந்து மித்திர சொந்த மனுஷரும் இந்த மண்ணுலகத்திலிருந்து வல்ல பத்துடனே ஏகசக்ராதிபதியாய் அரசாட்சி செய்யலாம் என்று துணிந்து சும்மா விருந்த நல்ல பாண்டவர்களைத் தூண்டியிலிழுத்துக் கொடிய சூதாடி அவர்களை மனங் குன்றச்செய்தோம். அக்கைதவங் களாகிய பாபங்களே ஒன்றுகச் சேர்ந்து நம்மைக்கெடித்து இக் கோலங் கண்டதே யொழிய அந்தப் பாண்டவர்களுக்கு நாளது வரைக்கும் ஒரு கேடுமில்லை. அவர்களும் நமக்கொரு கேடுசெய்த தில்லை. நாம் தேடிக்கொண்ட வினையே நம்மைபழித்தது.

"ஆதலால்வமே ! ஈதென்ன தீவினைப்பயன் மேலும் பூர்வத்திற் புத்தியிற் பெரிய உரியறிய தக்தையாகிய விதுரராஜன் மொழிந்த மொழியும், மலாகிதராகிய மூனிசிரேஷ்டர்புகன்ற பொருள் நீதியும், மேலாகிய விவேகவான் என்னுஞ் சஞ்சயன் உபலாவியத்திற்குத் தூதுபோய்வந்து தான் உணர்ந்ததை உண்மையாய் அறைந்த அருமை வார்த்தைகளும், தேனுறைந்து தேன் பாடுந் திருத்துளவ மணிந்த திருமார்பினையுடைய செங்கண்மால் திவ்விய முனிவர் மூவ ருடன் வந்து தெரிவித்த திறலும், விறலும் சூழ்ச்சியும், என்தந்தை எனக்கிசைத்த சொந்தமாகிய பாசபந்தநீதியும் மறுத்துப் பாவத்திற் கேதுவாகிய மனங்கறுத்துப் படிறிழைத்த எனக்கும் வீரம் வருமோ, வெற்றிகிடைக்குமோ, கொடியபாவிக்குக் கோரியகோரிக்கை கூடி வருமோ, கைவல்யமாமோ; ஐயோ என்வரும், இனிப்பிராணனுக்கு இடர்வந்த தென்பதற்குச் சந்தேகமில்லை. நாம் உயிர்தப்பி இருக்கலா மென்னுந் திண்ணம் எவ்வளவுமில்லை. அநித்தியதேகத்தை யொழித்து அழியத்தக்கதே கர்ணனுடைய வல்லமையும் கொடும் பாவநிறைந்த கபடனுகிய சகுனியின் வஞ்சகத்தன்ப முதலாகிய பொய்மையையும் அனேக மன்னர்களின் படைத்துணையையும் சேனைகளின் மிகுதியையும் நம்பி ஜயிக்கலாமென்று உறுதிகொண்டு தடுமாறி யாவராலுந் துதித்தற்குரிய மதித்தற்குரிய மேலோர்களாகிய

பீஷ்மாசாரியர், சிறியதந்தையென்னும் உரிய விதுரராஜன், சிலைக் குருவாகிய துரோணாசாரியார், பூர்வாசாரியாகிய கிருபாசாரியார், அசுவத்தாமா இவர்கள் முதலாகிய பெரியோர்கள் படித்துப் படித்தும் பன்னியசொற்பயனையும் பொருட்பயனையுங் கேட்டு ஒப்புக் கொண்டு உண்மையை நாடி நடச்காமல், இந்த அகண்டசாம்பிராஜ்ய மாகிய அரசாட்சியையும் உயிரையும் பந்துமித்திர புத்திராதிக ளுடனே துறக்கலானேனே! ஓ தெய்வமே! இவையல்லாமலும் என் தந்தையான திரிதராஷ்டிர பூபதியானவர் 'அடா மைந்தனே நான் சொல்லுகின்ற இந்த மொழியைக்கேள்—இரண்டுகண்ணுமில்லாத என்னை கெடிஸ்தலாதிபதியாக்கிக் கீர்த்தி பெறச்செய்து மேல் விசாரணையெல்லாம் நடத்திக்கொண்டு பாராண்டுவந்த என் தம்பி யாகிய பாண்டுபூபதியின் பாக்கியமே யல்லது வேறில்லை. ஆகையால் என் தம்பி பிள்ளைகளாகிய பாண்டவர்களுக்குப் பேர்பாதி ராஜ்யம் பிரித்துக்கொடுத்து அவர்களுடன் பொருந்திக் கலந்திருந்து உலகத் தைப்புரந்து கொள்ளுக' என்ற நல்மொழியையுந்தட்டி விட்டு இந்தப் பாண்டவர்களைத் துன்பசாகரத்தில் மூழ்கும்படியாய்ப் பண்ணி னேனும். இவையுமல்லாமல் எனக்கு நற்புத்தியை யுரைத்த நால்வரை யும் விசனத்தில் மூழ்கி வெந்துபோகும்படியாக்கி, எனக்குரியோர் முதலிய யாவரையும்போக்கி, என்னை நம்பியிருந்த யேழைமாதர் முதலாகியபேர்களும் இரங்கிக் கரைந்தேகித் தியங்கும்படிக்கு விட்டு விட்டு ஐயோ இப்போது கவனவேகப் புரவிபூட்டிய தேர்மேற் கொண்ட பீமசேனனுடைய கதாயுதத்தால் ஆவிநீங்குவேனே? அழி யுங்கால மிதுதானே? இது ஏனே? இருவினைப்பயனெளிது தானே? ஆகிலும் அதுகெட்டது, கச்சைக்கொடி பெற்ற கர்ணன், வேதக்கொடி கட்டிய துரோணாசாரியர், யானைக்கொடிபூண்ட சல்லியன், பனை மரக்கொடிதரித்த பீஷ்மாசாரியார், இளவரசென்னுஞ் சுச்சாதன னுகிய தம்பிமார்கள், பன்றிக்கொடிதாங்கிய சயிந்தவன், இவர்கள் முதலானபேர்களல்லாமல், உச்சியில்வந்த சூரியனைப்போற் பிர காசிக்கு முடிதாங்கிய கொடியோங்கிப் குடைவீங்கிய வேந்தர் பல பேர் எனக்குத் துணையாயிருந்தவர்கள். இவர்கள் யாவரும் எமக்காக உயிர்விட்டு மடிந்துபோயிருக்க, இப்போது நமதுபிராணனைக் குறித்து நாம் வருந்துவது நன்மையான அழகல்ல. நம்துயிர்மாத்திர மென்ன வெல்லமோ? கீர்த்திபெறுகிறது பெரிதேயொழிய, அப கீர்த்தி யடைந்து பூமிக்கும், பொருளுக்கும், பிராணனுக்கு மாசைப் படுவதுபுகழல்ல. இவ்வுலகத்தில் யாவருங் கீர்த்திக்குப் பாடுபடுவாரே

யன்றி, அபகீர்த்திக்குப் பாடுபடுவோர் எவர்களுமில்லை. ஆனதால் இனிமேல் உயிருடனிருந்து வாழமாட்டேன். குந்திமைந்தருடன்கூடி அவர்களுக்குத் தாழமாட்டேன். அவர்களுக்கு நான் தளர்ந்து இளைக்கவுமாட்டேன். என்னுற் கூடியவரையிலுஞ் சண்டை செய்து பார்த்து இளைத்துவிடுவேனுகில், அப்போ துதகுதியான மேலுலகஞ் சேருவேன். என் சகோதரர்போன இடத்திற்குகானும் போய்க்கூடுவேன். இம்மொழிய அவர்களைவிட்டுப்பிரிந்து நான் தனித்திருக்கமாட்டேன். அப்படிநான் ஆவி அழிந்து போங்காலையில் ஆதியிற் கற்றிருக்கின்ற மிர்த்யு சஞ்ஜீவி மந்திரத்தைஜபித்து, படுகளத்திற் பட்டபார்த்திபர் முதலாகிய சகலமானபேர்களையும் பிழைக்கச் செய்து, இந்தப்பூமியில் மறுபடிவருவிக்கிறேன். இன்னமும் விட்டேனு இந்தப்பாண்டவர்களை ! ஒருகைபார்த்துவிட்டுத் தான் உயிர் விடுவேன். சும்மா லேசில் விட்டுவிடக்கூடாது. நாம் கற்றிருக்கின்ற அந்தமந்திரபலத்தால் இறந்தபேர்களையாவரையு மீளச்செய்து, மறுபடியும் பாண்டவர்களுடன் அபர்மலந்து, அவர்களைக்கொன்று வென்று பட்டாபிஷேகங்கொண்டு ஏகச்சக்கிராதிபத்திபம் பண்ணுகிறேன். அப்படியெனது எண்ணப்படிமுடியாமல் இந்தமந்திரத்துக்கு இடையூறுகேரிடுமாகில், யாவரும்போர்புரிந்து முடிந்தயுத்தகளத்தில் நானும்போராடி ஆவிவிடுகிறேன்—என்று கன்றிய மனந்தேறி, பூரணமாகதைரியந்த வல்லபமான துவளர்ந்தோங்கி, புயமோங்கப்பூரித்து, தடாகத்திலிறங்குவதற்கு யோசித்துக்கொண்டு எழுந்து நான்கு திக்கும் நன்றுகப்பார்த்து நின்றுன்.

துரியோதனன் சஞ்சயனைக்கண்டு தன்செய்தியைத் தாய்தந்தையர்க் கறிவிக்கச் செலுத்தி, தான் தடாகத்துண்மூழ்கி மிர்த்தியுசஞ்சீவி மந்திர முச்சரித்தல்

அந்தச்சமயத்திற் பொறுமைபா லுபர்ந்தும், பேரறிவாற் சிறந்தும், விரதத்தால் மேன்மையடைந்தும், ஒப்பற்றவுண்மைக் கொருவனுகவிளங்கிய சஞ்சயனென்பவன் திடீரென்று துரியோதனனுக்கு எதிரில்வந்துநின்றுன். தனக்கு முன்வந்து நின்றசஞ்சயனைத் துரியோதனன்கண்டு, மனத்தில் நாணங்கொண்டு மேன்மேலும் வெட்கப்பட்டு, வண்டுகெருங்கிய மாலைபொருந்திய வாகுவையுடைய

சஞ்சயன் முகத்தைப்பார்த்து, "ஓ சஞ்சயனே! இன்றுதேவர்கள் முதலிய யாவரும் எட்டிப்பார்க்கக்கூடாத அமர்க்களத்தில் தேப்பிப் பிழைத்தாயே?" என்று தரணீசன்கேட்டான். அதற்குச் சஞ்சயன் "ஐபா மகாராஜனே! ஸ்ரீவேத வியாசருடைய அநுக்கிரகத்தால் இதுவரையிலும் உயிர்பிழைத்திருந்து, தீங்கில்லாமலிங்கு வந்தேன்" என்றான். இப்படிப் பாங்காகச்சொல்லிய சஞ்சயன் வார்த்தைக்குச் சந்தோஷப்பட்டு, கொடுங்கோல் மன்னனுகிய கோமான் "ஆ! சஞ்சயனே! இந்தப்பூமியை ஆளவேண்டுமென்று பேராசைகொண்டு அவதிப்படுகிற பாண்டவர்களை இவிடத்திற் புரட்டியுருட்டி விடுகிறேன்பார். இன்னுஞ்சற்றுநேரத்திற் கேட்கப் போகின்றாய். ஆதியிலேகான் கற்றுக்கொண்ட மந்திரம் ஒன்றுண்டு. அந்தமந்திரத்தைச் செபித்து மாய்த்தபடைகளை யெழுப்பிப் பாண்டவர்களைப் பாழாக்குகிறேன். ஒருவேளை அதுதப்பிப்போகுமாகில், என்பிராணனை விட்டுவிடுகிறேன். இனிமேலிந்த உலகத்திலிருந்து உயிர் பெற்றுவாழமாட்டேன். இதை நீ உறுதியாகநம்பு. இதுவரையிலும் என்னைநம்பியிருந்த மேகம் போன்ற அளகத்தையுடைய எனது அன்னையாகிய காந்தாரியம்மனுக்கும், எங்கோமான் என்ஞாபகமுள்ள எனதுதந்தையாகிய திரிதராஷ்டிராராஜனுக்கும், மனத்துயர்வாராமலும், வாட்டமேறிடாமலும், இடர்ப்பட வொட்டாமலும், நீ கிட்டவிருந்து தகுதியான மொழிகளையும், நீதிகளையும், கருமங்களையுஞ் சொல்லித் தேற்றக்கடவை. ஓசஞ்சயனே! இனியென்னைப் பிள்ளையென்று நினைக்க வேண்டியதில்லை. என்னுசையை இன்றோடே விட்டுவிடச் சொல். களிவ்விடத்தில் உன்னுடன் பேசிக்கொண்டு நிற்பேனுகில் பகைவர் தேடிக்கொண்டு வருவார்கள். சீக்கிரம்தான் மந்திரத்தை ஜபிக்கவேண்டியிருக்கிறது. ஆதலால் நீ அஸ்தினபுரம் போய்ச்சேர்" என்றுசொல்லிச் செலவு கொடுத்து அனுப்பிவிட்டு, கதாயுதத்துடன் மேலிருந்து பாய்ந்து மடுவுக்குமத்தியிற்குதித்தான். அவனுல் அந்தமடுவானது மந்திரகிரியாகிய மத்தினுல் பார்கடல் கலங்கியவாறுபோற் கலங்கி, அலையெறிந்து கரைபுரண்டொதுங்கிக் கொதித்தது.

அப்படி குதித்த துரியோதனனுனவன் இருபதத்தையும் இரண்டு குதத்தின் கீழாக இருத்திப் பத்மாசனமிட்டு, இருகரத்தாலும் மூக்கைப்பிடித்து, உச்சியைத்தொட்டு இந்திரியஸ்தானம், மார்பு, நாபி இவைகளை யணைத்துப் பரிசித்து, அனுஷ்டிப்பு யாவு

மூடித்து, சங்கற்பஞ்சொல்லிக் காத்தைச்சிரத்திற் குவித்து, ஸ்தம்பாகிர்தியாய்ச் சாயாதிருந்து, இரண்டு திட்டிவாசலாகிய கண்களை மூடி, இரண்டு மேற்கோட்டை வழியாகிய காதுகளை அடைத்து, இரண்டு அதோமுகத்துவாரமாகிய மூக்கினுலோடுகின்ற குதிரையாகியவாசியை அடக்கி, கேசித்து, கண்டத்திற்குமேலாகிய பிரமரந்தத்திற் புகுத்திவிட்டுத் தாக்கிக் கும்பிக்கப்பண்ணி, பெருங்கோட்டை வழியாகிய வாயைமூடி மௌனத்திலிருந்து, எட்டிரண்டென்னும் அகாரத்தைகாட்டி, உண்மணியை ஊமையென்னும் ஓரெழுத்தாலாட்டி, கண்மணியைக் கபாலச்சுழிமுனையிற் கூட்டி, கண்டத்தில் ஒலியெழுத்தைக் கலகலவென்று சப்திக்கும்படியாய் அடக்கி, இதுவரையிலுந் தன்னை உலகவாழ்க்கையுள் ஆழ்த்தி ஆசாபாசங்களையற்றி அலக்கழித்துவந்த ஐம்புலன்களையும் கொந்தறும்படிகட்டி, அதனுல்விளைந்த கலக்கங்களை வெட்டிமாற்றி, வெப்பமாகத்திரிந்து வேசாறிபாய்ந்து வெகுவிதவிந்தையை விளைக்குஞ் சிந்தையையடக்கி மனமானது சித்துடன்மேவிப் பொருந்தப்படிதத்திக் கம்பித்து, மூலத்தீமூட்டி மோனஞானத் தீபங்கொளுத்தி, உதயப்பார்வை, உச்சிப்பார்வை கிலப்பாவைகள் பார்த்துப் பலநாளும் யோகஞ்செய்து பழகியபோக்களைப் பார்க்கிலும் பத்துப்பங்கு அதிகமாய்த் தனது தேகமுழுமையும் மெலிவில்லாமல் கலிவில்லாமலிருக்கும் படியாய், மூலநாளத்தை யுடைத்தாய், ஆகாயத்திற்பூத்த மூலக்கமலமுளரியை அலர்த்தி, அதிற்பெருகிய அமுதை உண்ணக்கூடா அண்ணகாவினுல் உண்டு, இன்பங்கொண்டு, உருகாமலுருகி நிரந்தரானந்தசுகத்தை அடையாமலடைந்து, அசைவற்று இருந்து மிர்த்யு சங்சீவிமந்திரத்தை ஓதி உருச்செபித்து, சிறிதுங்கலங்காமல் அம்மடுஜலத்தோடு ஜலமாய் மன்னியிருந்தான். அப்போதமர்க்களத்திற் குறைபட்டுச் சிதைபட்டு, புதைபட்டு, வதைபட்டுப்போன பிரேதங்களுக் கெல்லாந் துடிதுடிப்புண்டாயது.

பாண்டவர்க்குப் பயந்தொளிந்த கிருபர் முதலிய மூவர் துரியோதனனை நாடிச் செல்லும்போது, வழியிற் சஞ்சயனைக்கண்டு விசாரித்துணர்தல்

இவிடத்திலிவனிப்படியிருக்க, இனிமேல் நடக்கப்போகின்ற பாவனைகள் முன்னதாகத் தெரிந்த திரிகால ஞானமுள்ள சஞ்சயன் துரியோதனனிடத்திற் செலவு பெற்றுக்கொண்டு திரும்பிவரும் போது, இப்பாற் பாண்டுமைந்தராகிய பாண்டவர்கள் இந்தவண்மை யாகிய உலகத்தைத் திண்ணமாக ஆளப்போகிறதும், துரியோ தனன் விறுதாவில் மாளப் போகிறதும், நித்திய சத்தியமேயென்று நிச்சயங்கொண்டு வருகின்றான். அக்கால்முன் புறநடந்தயுத்தத்திற் போர்முகமாறிப் புறங்கொடுத்துத் திசாதிசைகளில் ஓடிப்போன ஒப்பொருவருமில்லாத கிருபாசாரியார், அஸ்வத்தாமன், கிருதவன்மன், முதலிய மூன்றுபேரும் தங்கள்தங்கள் கலைதெளிந்து இளைப்பாறி, உடலிற்பட்ட காயங்களுக்கு உபசாரஞ்செய்து கொண்டு, தனித்தனியாய்த் திரும்பி, துரியோதனன் என்னகதி யடைந்தானென்று இரக்கமாகதடி, தீரமுடையவர்களைப்போற் றிடங் கொண்டுவந்து யுத்தபூமியிற்புகுந்து, பாண்டவர்கணகளிற் படாதபடி யானைப்பிணம், குதிரைப்பிணம், தேர்க்கூட்டம், இவை களின்மறைப்புகளிலிருந்துபார்த்து, எங்குமந்த ரந்தியாவட்ட மாலை யணிந்த நரேந்திரனைக்காணுதவர்களாய்ச் சற்றுநேரம்யோசித்து, "செருக்குடனே செருக்களத்திற் பாண்டவர்கள் ஜெயம் பெற்ற தாயும், அப்பாண்டவர்களால் துரியோதன மகாராஜன் மாண்ட தாயுங் காணவில்லையே! அமர்க்களம் அசைவற்றிருக்கின்றதே" என்றுபெரு மூச்சுவிட்டு, வெண்மையாகிய நக்ஷத்திரங்களுஞ் சந்திர னுஞ் சூரியன்மேற் பகைத்தெழுந்த ஜோதிம்பாற் பல்வகைத்தினு பரணங்களினுற் பிரகாசித்துக் கொண்டிருந்த அப்போர்க்களத்தில எல்லோர்க்குந் தோற்றமாகும் படியாய் ஆகாயத்திற்சூரியன் பிரகாசித்து இருபதுநாழிகையை அளந்து விளங்கிய காட்சியைக் கண்டு, கொற்றமுற்ற வெற்றிபெற்ற அக்கிருபர்முதலாகிய மூவரும் நம்மைப்பாண்டவர்கள் எங்கே காண்கின்றார்களோ வென்றுமருண்டு, வெருண்டு, அமர்க்களத்தைவிட்டு அப்பாற் செல்கின்றார்கள். அப் போது இவர்கள்மூவரும் ஒருவரையொருவர் சந்தித்து, துரியோதன

ராஜனைக்காணுமே யென்று சங்கேதித்து, தாய்சூங்கிய சேய்போற் றளர்ந்து, தாங்கற்கரிய காணத்தினுலயர்ந்து, மானமேற் கொண்டு மயங்கி, மதிதடுமாறிநடுங்கி, "ஐயையோ! இத்தப்பாட்டுக்குத்தானு இப்பாடுபட்டது?" என்று நெடுந்தூரத்திற்சென்று, பலகோடி. எண் ணங்களெல்லாம் எண்ணி எண்ணிக்கொத்து நின்றுநின்று வெறுத்து, யுத்தபூமிக்குப் புறம்பிற் குறுகிப் பார்த்தும் அங்கேயும் ராஜனைக்காணு மற் போனுர்களை யல்லது, அவனையும் அவனைப்பேணுராகிய பாண்ட வர்களையும், அவர்களுக்கிருக்குஞ் சேனைப் பெருக்கத்தையும் பார்க்க வில்லை.

இந்தக் கிருபாச்சாரியார், அசுவத்தாமா, கிருதவன்மன், இவர் கள்மூவரும் பதுங்கிப் பதுங்கிப் போவதைப் பலம்பொருந்திய பாண்டவரைவரும் பார்த்து, இவர்களுடன் யுத்தஞ்செய்துகொல்ல வேண்டுமென்றும், அல்லது வெல்ல வேண்டுமென்றும் எண்ணங் கொள்ளவில்லை. ஆனல்சேனுதிபதியாகிய திஷ்டத்துய்மன் முத லாகியபேர்களுங் கண்டு, அதோமுகங்கூர்கள் கிருபாச்சாரியார் முதலியபேர்களென்று சொல்லி, அவர்கள்பேரிற் போராடுவதற்கு எழுந்தார்கள். அப்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் பாண்டவர்களுந் தங்கள்சேனபதி முதலிய சேனைகளைத் தடுத்து இவர்களுடன் எதிர்த்து யுத்தம்பண்ணுவதில் நமக்கென்ன பிரயோசனமுண்டு. முதல்வனுகிய ராஜனைக் காணுமே என்று வேர்த்து, இவர்களைப் பார்த்தும் பாராதவர்களைப்போற் பராக்காயிருந்தார்கள். இப்பாற் குளிர்ந்த தாமரைமாலையணிந்த மார்பினராகிய கிருபர்முதலான மூவரும் மறைந்து போனுர்கள். இத்தன்மையாக மறைந்து மதி குறைந்து வாடிவருகின்ற இவர்களுக்கு எதிரில் இருள்வழியில் மாணிக்க நிரிட்டதைபோப்ப வெற்றிபூண்ட மாசற்ற இருதயங் கொண்ட சஞ்சயனவன் வாடையா லடிபடடுவருந்திய மரம்போல் இரங்கிபதலை நிமிராமல் ஏங்கிய பெண்ணைத்துடன் வந்தான். அந்தச் சஞ்சயனை விந்தம்போன்ற தேர்மேல்வந்த இந்தமூவருங்கண்டு துயரமேற்கொண்டு துன்பமாகப் பேசி முகங்கூசி "ஓ தீதறிற்சிறந்த வனை! ஓ திரிகாலமுந் தெரிந்தவனை! ஓ சஞ்சயனை! நமது துரியோ தனமகாராஜனைக் காணுமே! ரீமரதாகிலும் அறிந்திருப்பீராகிற் சொல்லுமே! அல்லது நிகழ்காலத்தின் காரணத்தையாவது விள்ளு மே" என்று கிருபர்முதலிய மூவருங்கேட்டக் குற்றமற்ற சஞ்சய னனவன் இவர்களுடன் தானுங்கலந்து விசனப்பட்டு, "ஓ உத்தமர்

களே! இதுவரையிலும் நெருங்கி யுத்தஞ்செய்ததுபோன யாவரும் இன்றைக்கு மறுபடியும் பிழைக்கவும் பாண்டுபுத்திரர் அடியோடே மாயவும் நினைத்துத்தேவ யுத்தியாகிய ஒருசூழ்ச்சிகருதி ஜலத்துக் குள்ளிருந்து, ஸ்தம்பனத் தவம்பூண்டு மிர்த்யுசஞ்சீவிமந்திரத்தை உச்சரிக்குப்படி உத்தேசித்து, நாம் நிற்குமிலைக்கு வடகிழக்கிலிருக் கும் பொய்கையினிடத்தில் மூழ்கியிருக்கிறன். இதுவரைக்கும் நமது அரசனுக்கு யாதொரு பொல்லாங்கு மில்லை நீங்கள் மகாபுத்திமான் களும், தக்கோர்களும், மிக்கோர்களுமாகையால் அரசனைக்குறித்துச் சிந்தைதளரா திருங்கள். இப்போதே நான் அஸ்தினபுரத்திற்குப் போய், கறுத்த வயிரம் பற்றிய மனத்தோனுகிய திரிதராஷ்டிரனுக் குங் காந்தாரிக்கும் இந்தச் சங்கதிகளை யெல்லாஞ் சொல்லிவிட்டு இதோ வருகிறேன் என்று அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மனந்தளராமல் மனமகிழ்போனன்.

சஞ்சயனும் உயுச்சனுந் தருமனுத்தரம் பெற்றுத் துரியோதனியரின் வஸ்திரீகளை அஸ்தினபுரம் விடுத்துச் சேதி கூறிமீளுதல்

இவ்விதம்பேசி அஸ்தினபுரத்தை நோக்கிப்போகின்ற சஞ் சயன் துரியோதனனுடைய பாசறைக்குப்போய் அவ்விடத்திலிருந்த தேசோமயப் பிராகாசம் பெற்ற ராஜஸ்திரீகளைக்கண்டான். அவர்க ளெல்லோரும் ஓடிவந்து சஞ்சயனைப்பார்த்து மாணிக்கமுடிதரித்த துரியோதன மகாராஜனுடைய பாடும் சேனைப் பெருக்கங்களின் கேடும் வணங்காமுடி மன்னன்யுத்த பூமியைவிட்டு விலகிய விலக்கமும் அவனுக்குநேரிட்ட கலக்கமும் கேட்டு மிகவுந் தேம்பி வெம்பி விசனப்பட்டு தலைவிரிகோலமாய்த் தவித்து நின்றழு தார்கள். மேலும் திட்டமாகக்கட்டிய கரைகளு மதகுகளு முடைந்து வழிந்தோடிய ஜலம்போல் விஷத்தையும் அமுதத் தையுங் குடிவைத்துக்கொண்ட கண்களையுடைய ராஜஸ்திரீ கள் கண்ணீர்விட்டுக் கோ கோ வென்று கதறியழுது கரைந்து வருந்தி வெதும்பினார்கள். அதைச்சஞ்சயன் பார்த்துச் சஞ்சலப் பட்டு தானுஞ் சங்கடமுடைவனுகி அந்த ராஜஸ்திரீகளிடத்திற் காவலாயிருந்த வைசியமைந்தனுகிய முத்தாரம்பூண்ட உயுச்சனை அழைத்து, "ஓ உயுச்சனே மன்னர்க்கு மன்னனுகிய மகாராஜன்

மாணிக்க சிங்காசனத்திபதி வணங்காமுடி பெற்றவன் நந்தியாவர்த்த மாலையணிந்த கோந்திரன், கௌரவகுல முதல்வன் பணிக்கொடி தரித்த பார்த்திபன் என்று சொல்லும்படியான கீர்த்திவாய்ந்த துரியோதன மகாராஜன்முதலிய தம்பிமார்களுடன் கலந்தணைந்த காதலிமார்களாகிய இந்த ராஜஸ்திரீகளெல்லோரும் சத்துருக்கள் மொய்த்து யுத்தஞ்செய்யாகின்ற வெற்றிவீரக் களத்திலிருந்து மெத்தப்பயந்து சித்தப்பிரமை கொண்டு தியங்குகிறார்கள். இவர் களைப்பார்த்துவிட்டு நாமெப்படி போகலாம், அல்லது இவர்களை நகருக்கு அழைத்துக் கொண்டுபோய்ப் பெரியோர்களாகிய மாமன் மாமிஎன்னுந் திரிதராஷ்டிரன் காந்தாரியிடத்தில் ஒப்பித்துவிடலா மென்று யோசித்தால் எப்பொருட்கும் இறைவனுப் எண்சாணுடம் புக்குஞ் சிரசேபிரதான மென்பதுபோலத் தருமபுத்திர மகாராஜனி ருக்கின்றார். அவருக்கில்லாத சுதந்தரமும் சொந்தமும் அக்கரையும், தூக்கமும், நமக்கில்லை. இவ்விடத்திலிருக்கும் காரியங்களை அவருக் குத்தெரிவித்து ஒருவேலைசெய்வது உத்தமமென்று நினைக்கிறேன். ஆகையால், காவலாய்க் கோவலனுடனிருக்கிற பூவலனுகியமுடி பெற்ற தருமபுத்திர மகாராஜனிடத்திற்கு நீபோய் இங்கேயிருக்கிற சங்கதிகளை ஆவலாய்ச் சொல்லு வாயாகில் இதற்குத் தக்கபடி நடப்பதற்கு அருளளிப்பார். அவரிஷ்டப்படி அரசர்மாதரைத் திரிதராஷ்டிரனுடைய நகரத்திற்கு அனுப்பிவிடலாம்" என்று கூற உயுச்சன் அப்படியே மகாபாக்கியமென்று விடைபெற்றுத் தருமராஜனிடஞ் சென்று அவரைக்கண்டு தீர்க்கதண்டமாக வணங் கிச் சிரமேற் கரங்குவித்துக்கொண்டு ராஜஸ்திரீகளின் சங்கதிகளையும் அவர்கள் படுகின்ற கண்கலக்கங்களையும், பொங்கரவைப்போற் பொங்கியழுகின்ற பொருமலையுஞ் சொல்லிச் சஞ்சயன் அஸ்தினு புரிக்குப் போகவிருக்கின்ற செய்தியையுந் தெரிவித்துத் தேவரீர் கட்டளைப்படி நடந்து கொள்ளுகிறே னென்றான்.

அந்தச்சொல்லைக் கேட்டவுடனே கல்லபாம்பின் விஷத்தை நடுவிச்செவியி லூற்றியதைப்போல் நடுநடுங்கி "ஐயோ நம்முடைய அந்தப் புரஸ்திரீகளுக்கும் இப்பேர்ப்பட்ட அலக்கண் வந்ததல்லவா இவையெல்லாந் தெய்வச்செயல்" என்று சிந்தைவருந்தி உடனே பரிந்து அருள்புரிந்து, உயுச்சனைநோக்கி "அப்பா குணவானே நீயுஞ் சஞ்சயனுமாக அவர்கள் சமீபத்திலிருந்து முறைமை குறையாமல் சிறுமையடையாமல் பெருமைதளராமல் அருமைதொலையாமல்,

பெருஜாக்கிரதைபாப்க் கொண்டுபோய் அஸ்தினபுரஞ் சேர்த்து விடுங்க ளென்று உத்தரவு கொடுத்தனர். உடனே உபச்சணனவன் பாசறைக்குவந்து பார்த்திபனுடைய பத்தினிபோடு மற்றுள்ள ஸ்திரீகள் யாவரையுங் கூட்டமாய் அழைத்துக்கொண்டு சஞ்சயனுடன் அதிசீக்கிரத்தில் அஸ்தினபுரம் போய்ச்சேர்ந்தான். இவர்களைக் கண்டவுடன் மாமன்மாமி முதலாகியபேர்கள் மனமெலிந்து வருந்த அவர்களைப் பார்த்தபோது இந்தமருமக்கண்மார் முதலாகியபேர்கள் கட்டி முட்டிக்கொண்டு, "ஓ மாமா, மாமா" வென்றும், ஓ மாமி, மாமியென்றும் வாய்விட்டலறினார்கள். இவர்கள் செயலிவ்வாறுக, முன்புபெருக்கமும் பிரபலமும் புண்ணியமுமுடைய பெருந்தீர்த்தங்களெல்லாம் போயாடி வருவோமென்று சிலசினமடிவிஞல் மனம்வெறுத்துப் பலராமரோடுபோயிருந்த விதுரமகாராஜன் பலபலதீர்த்தங்களும் பார்த்து ஸ்நானஞ்செப்து மகான்களுடைய ஆச்சிரமங்களும் தவச்சூழல்களுஞ் சிவஸ்தலங்களுங் கண்டு தரிசித்து மீட்டுத் திரும்பிவந்து பலராமரை யுத்தகளத்திற் கனுப்பிவிட்டுத் தான்தனியே சிலதூரத்திற் கட்புறத்தில் ஒரு சிற்றூரிலிருந்து, எப்படிபிருக்கின்றது யுத்தமென்று விசாரித்தான். இவ்விடத்தில் இதுவரையிலும் நடந்துவந்த காரியத்தையும் இப்போது நடந்திருக்கிற சங்கதியையும் இனிமேல் நடக்கப்போகின்ற விவரங்களையுங் கண்டவர் விண்டார்கள். அவையனைத்தையுங் கேட்ட விதுரன் அருந்துயர்பூண்டு அங்கலாய்த்து அரவக்கொடியோன் மடிறவரைக்கும் அவன் நகரத்தில் அடிவைக்க மாட்டேனென்று அப்பாலிருக்குஞ் சில மருதநிலப்பதிகளில் வாசமாயிருந்தான். இப்பால் துரியோதனனிடத்தினின்றுஞ் சேதிகொண்டுவந்த சஞ்சயனுனவன் பெரிய அரசனுடைய அரண்மனைக்குப் போய் செம்பஞ்சுக் கொப்பாகிய சீரடிவாய்ந்த காந்தாரியுடனும், பாரான்பதியாகிய திருதராஷ்டிரனுடனும், இவ்விடத்தில் நடந்த சங்கதிக ளெல்லாவற்றோடு துரியோதனன் சொல்லியனுப்பிய சேதிகளையுஞ் சொன்னன். அவையனைத்தும் அவ்விருவருடைய காதுகளில் காராசங்காய்ச்சியேற்றியதைப்போலிருந்தமையால் காக்குநடுங்கி, மூக்குவெயர்த்து முகங்கருகி அகமெலிந்து அல்விழிபெருகி மனமயர்ந்து மதிகிடந்து சிந்தைதளர்ந்து ஜீவனமாழ்கி, இனி இன்னுமென்ன விளையப்போகின்றதோ இனி இன்னுமென்ன கேட்கலாகின்றதோ என்று விழியற்றவனுகிய வேந்தன் வெறுப்புற்றுச் சோர்ந்திருந்தான். ஏந்திழையாகிய காந்தாரியென்னும் வாள்போன்ற விசாலக்கண்ணியும்

மன்மடிந்து மாழ்கினன். இவர்களுக்கு கேரிட்டதுன்பங்களை யெல்லாம் ஒருவழியாக மாற்றி அதேகதர்மங்களைப் போதித்துத்தேற்றி இன்னமும் துரியோதன மகாராஜனுடைய சங்கதியை விசாரித்துக் கொண்டு வருகிறேனென்று சொல்லி விடைபெற்றுக்கொண்டு சஞ்சயன்மீண்டும் குருக்ஷேத்திரத்திற்குப் போயினன்.

கிருபராதியமூவருந் துரியோதனனிருக்கு மிடஞ்சென்றழைக்க அவனவர்க் குரைத்தல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! முன்பு சஞ்சயனை வழியிற்கண்டு சமாச்சாரங் கேட்டுக்கொண்டுபோன கிருபாச்சாரியரும், அஸ்வத்தாமனும், கிருதவன்மனும், துரியோதன மகாராஜன் துன்பமில்லாதிருக்குஞ் சுத்த நீர்த்தடத்தின் கரையிடனித்திலடைந்து பொருந்தியிருந்து,

"மோதுமோ காப்போர் வென்று முடித்துமோ வொன்றி லொன்றிச்
சாதுமோ விரண்டு மல்லாற் றரணிபர்க் குறுதி யுண்டோ
யாதுமோ தெளிதி னின்போ லேற்றமுள் ளவர்க் கிவ்வாறு
போதுமோ பூண்ட பூண்ட புகழெலாம் போய்வி டாதோ"

"கின்கிளை யாகி வந்த கிருபருந் தூணைவர் யாரும்
வன்களி றிவுளி பொற்றேர் வாண்முதற் படைகள் யாவும்
புன்கண மதனிற் சேரப் பொன்றின ரிம்ப ரன்றே
வென்கரு தினைகொ லையா வென்பெறற் கென்செய் தாயே"

ஓ அலகிலாப் புகழ்படைத்த அரசனே, உலகெலாம் ஓர்சுவேதக்ஷத்திரத்தின் கீழக்குட்படும் படியாகச்செய்து பற்பலதேசத்தரசரும் வணங்கும்படியான புகழினையுடைத் தாயினீர். இதுகாறுஞ் செய்துவந்த போர்முகத்திலும் மேன்மைபெற்றீர்! யாதினுந் திடதைரிய வீரத்திறமுமுற்றீர். அப்படிக்கெல்லா மிருந்தும் சத்துருக்களாகிய பாண்டவர்களை விட்டு விலகி இத்தமடுவில் மறைந்திருக்கும் படிக்கு நீர்விரும்பியது விவகார மார்க்கமோ? எங்களுக்கெல்லாம் மெத்தவும் வருத்தத்தை விளைக்குதே! உள்ளம் உலைக்குதே! ஓ உத்தமனே, வேந்

தர்குலத்தின் தன்மை எப்படியென்றால் பகைவர்மேலெதிர்த்துப் படை களம்புகுந்தால், பொங்கிய சிங்கம் புழைக்கையானைகளைக் கொல்லுவ தற்குப் பிரவேசிக்குந் தன்மைபோற் கூடிக் குறைக்க வேண்டியது. கூடாவிட்டால் நமதுயிரை விட்டுவிட வேண்டியது. இவைமுக்கிய தருமமாயிருக்க நடுமதியற்றுக் கெடுமதியினால் மடிவிற்றுலைந்து மூழ்கி, இவ்வாறுதுங்கிப் பதுங்கியிருப்பது உம்மைப்போன்ற கெடிஸ்தலாதிபருக்கு அடுத்ததல்லவே. ஓ அரசர்க்கரசராகிய அண்ணலே,உமது மதி இப்படியாகலாமோ? ஒருவேளை 'வீரங்கெடாத வில்வீரத்திறங் கொண்ட வேந்தர் முதலாகிய மேன்மேலாரிருந்தார்கள். அவர்களெல் லோரும் இப்போதிறந்து போனார்கள். சிறந்தசத்துருக்களாகிய பாண்டவர்களுடன் எதிர்த்து யுத்தம்பண்ணுவதற்கு இனிமேல்பாரி ருக்கின்றார்களென்று நினைத்து மனம்வருந்தி இளைத்தீரோ? ஓ நிறங் குன்றாத கிருபனே, நீர் அப்படி ஒருகாலத்திலும் நினைக்காதீர். எங் களுடைய ஆற்றல் நிறைந்த சுத்தசாமர்த்திய ஆண்மையை நீ ரறிந் திலீர்போலும், என்று மூவருஞ் சொல்லிவரும்போது ஆசாரிய புத்திரனுகிய அசுவத்தாமன்,

"வீரியம் விளம்பல் போதா தாயினும் விளம்பு கின்றேன்
போரிய லமரி லென்னேர் பொருசிலை யெடுத்து நின்றுற்
றோரியல் விசய னோடு கால்வருஞ் சேர வென்கை
மூரிவெங் கணைக ளாலே முடித்தலை துணிவர் கண்டாய்"

"எல்லவன் வீழு முன்னம் யாரையுந் தொலைத்து வேலைத்
தொல்லைமண் ணளித்தி லேனேற் றுரோணன்மா மதலை யல்லேன்
வில்லெனும் படையுந் தீண்டேன் விடையவன் முதலோர் தந்த
வல்லிய கணையும் பொய்த்தென் மறைகளும் பொய்க்கு மாதோ"

"பாண்டவர் மூடிய வென்றிப் பாரெலா முனக்கே தந்தான்
மாண்டவர் தமமை நின்வாய் மறைமொழி தன்னைக் கொண்டு
மீண்டவ ராக்கிப் பின்னை வேறொரு பகையு மின்றி
யாண்டவ ரிவரே யென்னத் துணைவரோ டாள லாமே."

ஓ அரசனே இப்போதுமென்ன, என்வீரியத்தை யானே சொல்லிக்கொள்ளக் கூடாதாயினும் ஒன்றுமாத்திரமுமக்குச் சொல்லுகின்றேன். இந்தயுத்தகளத்தில் நானே சேனாபதியாயிருந்து என்வில்லையெடுத்து நிறுத்துவேனுகில் அந்தஅருச்சுனனோடு மற்ற

கால்வரும் யான்விடுக்கின்ற மூரிவெங்கணையால் தலைதுணிந்து போவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. மேலும் இன்றையத் தினத்தில் இந்தச்சூரியன் மேற்றிசையில் வீழ்ந்து பொழுதுபோமுன்னமே வீரியத்துடன் சென்று சீரியமனத்தோராய்த் திடங்கொண்டிருக்கின்ற பாண்டவர்கள் முதலாயினோருடைய தலைகளை நானே கொண்டுவருகிறேன். என்சொல்லுறுதியை நல்லதென்று நம்பிச் சமர்செய்வதற்கெழுந்துவாரும். ஓநாயகனே, இப்போது சொன்ன சொற்படி கடத்தாமற் போவேனுகில் தனுர்வேதபாண்டித்ய மூடைய துரோணச்சாரிய ரென்னும் பிராமணனுக்குப் பிறந்தவனல்லேன். அப்பால் வில்லையுங் கையிலெடேன். இதுதப்புமாயின் எனக்குக் கயிலாசபதி முதலாயினோர் தந்தகணைகளும் அக்கணைகளுக்குரிய மறைகளும் பொய்க்காவோ? அன்றியும், பாண்டவர்களை அறவென்று இப்பாரினத்தையு மூமக்குத்தற்பிற்பாடு உமதிஷ்டப்படி பாண்டவர்களையெல்லாம் நீர் பயின்றிருக்கு மறையாலெழுப்பி எத்திக்கினுஞ்சத்துருக்களென்பதில்லாமல் நீரோஎகசக்ராதி பதியாய்ப் பழையபடி தம்பியர் தொண்ணூற்றொன்பது பேரோடும், மற்றத்துணைவரோடும் சகலலோகங்களையு மாளலாமே" என்று பற்பலவாக்கியங்களைச் சொல்லி எழுந்துவாருமென்று அழைத்தான். இந்தமொழியை மந்திரமோக வழியில் நிற்கின்ற துரியோதன மகாராஜன்கேட்டுச் சிந்தைநொந்து சினந்தெழுந்து மனந்தளர்ந்து கனம்பிளந்து கனங்கிழிந்து போகும் படியா யிரைந்து அந்நீரினின்று முழுங்கி எழுந்து அவன் முகங்கண்டுநின்று சிற்சிலமொழிகளைச் செப்பத்தொடங்கினன்.

ஓ அசுவத்தாமனே ஆற்றலுக்கு வேற்றொருவருந் தோற்றமாக இணைசொல்வதற்கு இடமில்லாதிருக்குஞ் சீற்றமுந் திறமுங்கொண்ட திடதீரன் நீயென்று, எனக்குச் செவ்வைபாகத்தெரியும். நீ அமர் புரிபப்புகுந்தால் அமரர்களேயானுலும் உன்னுடனெதிர்த்து யுத்தம் பண்ணி வெற்றி பெறமாட்டார்கள். உன்னெதிரிட் டெதிர்த்தவர்கள் பிராணன் பிழைக்கப் போகிறதில்லை. நீயிப்போர்ப்பட்ட உண்மையாகிய வல்லமைசாலி யென்றும் மற்ற இவர்களுடைய சாமர்த்தியத்திறம் இவ்வளவென்றும், ஸ்திரமா யெனக்குத் தெரிந்திருந்தும் கானிந்த மடிவில் மூழ்கியது என்னத்திற்கென்றுல் யுத்த பூமியிற் சத்துருக்களுடைய அடியினுல் மெத்தவருந்தி மாழ்கினன். ஆகிலும் ஐயோ அந்த அகியாயப்பேச்சை இப்போது குறித்துச் சொல்ல வேண்டியதில்லை. இன்னுங் கொஞ்சநேரம் இந்தத்தண்ணீரில் மூழ்கி

யிருந்து தேகத்திற்குண்டாகிய சிரமத்தைத் தீர்த்துக்கொண்டு உங்களுடன் கூடவந்து, பலங்கொண்ட பாண்டவரைக்கொன்று வெற்றி கொள்ளுகிறேன். நீங்கள்மூவரும் இவ்விடத்தில் வந்திருப்பதைச் சத்துருக்களறிந்தால் உடனே இங்குவருவார்கள். அப்படி வந்துவிடுவார்களேயானால் யான்கொண்டிருக்கும் அபிப்பிராயமெல்லாம் முற்றிலுங்கெடும். ஆனதால் அவர்கள் என்னிடத்திற்குவந்து என்னை வெளியிலிழுத்து என்எண்ணத்தைத் தடைசெய்யாதிருக்கும்படியாய் அதோஇருக்கின்ற சோலையிலுள்ள ஆலமரத்தினிழலிற் கொஞ்சநேரம் இளைப்பாறிக் கொண்டிருங்கள். இதோ நான்வந்து விடுகிறேன்'' என்றுசொல்லி அவர்களையனுப்பி விட்டான். அவர்கள் அப்படியேபோய் ஆலமரத்தினிழலில் ஆயாசந்தீரப் படுத்துக் கொண்டு இந்தப் பதினெட்டுகளும் பட்டசிரமங்களெல்லாந்தீர அயர்ந்து நித்திரைபோய் விட்டார்கள். இப்பால் துரியோதனராஜன் மறுபடியுஞ் ஜலத்துக்குள்ளே மூழ்கி முன்போல் மந்திரங்களைச் சேர்த்துக்கூட்டி அதில்முதிர்ந்த சிந்தையைநாட்டி மூலத்தீமூட்டித் தன்செயலிற் சிதறாமல் ஜபஞ் செய்து கொண்டிருந்தான்.

பாண்டவர் துரியோதனனைக்காணுது வருந்திப் பின்சிலவேடரா லவனிருப்புணர்ந்து பிரயாணமாகுதல்

இப்பாற் குந்திமாதேவியின் குமாரராகிய கொற்றவர்கள் சேனைக்கூட்டத்துடன் சேர்ந்து விசாலமான யுத்தநிலங்களெல்லாம் புகுந்துதேடித்தேடி ஆராய்ந்து தப்பிப் பிழைத்திருக்கும் ஜனங்களையெல்லாம் ஒன்றொழியாமற் சேணுலகிலேற்றியேற்றி வெற்றியைக் கைக்கொள்ள வேண்டுமென்று வீணுசை கொண்டிருந்த துரியோதனனென்னும் வேந்தனை காடினார்கள். பாடிவீடும் போர்க்களமும் அத்தயுத்த பூமியைச்சார்ந்த பக்கங்களும் யானைதேர் முதலாகிய யாவும் வீழ்ந்தழிந்து குவிந்துகிடக்கிற மேட்டிடங்களிலும் புறம்பாகிய காட்டிடங்களிலும் இன்னுமுள்ள எல்லாவிடங்களிலுந் தேடியுங் காணுதவர்களாய் மனங்கலங்கி மடைந்து எங்கும் ஓடித்திரிந்து உலாவிப்பார்த்து வேவுசொல்லுகின்ற தூதுவர்களால் எட்டுத்திக்கும் பார்க்கவிடுத்து எங்கணு மில்லாதது தேர்ந்து, வதங்கிய தாமரைமலர்போல் முகம்வாடிப் பிரதானமானவனை விட்டு விட்டுப் பிரிகிப்போய் விட்டோமேயென்று ஐவரும் ஆலோசிக்கத்

தொடங்கினர். வேந்தனுகிய துரியோதனராஜன் இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையைத் துறந்து போயிருப்பானே, அல்லது பவளம்போன்ற இதழினையுடைய ராஜஸ்திரீகள் பட்டினத்திற்குப் போனார்களே அவர்களுடன் சேர்ந்து வேடமாறிப் பெண் வேடம்பூண்டு அஸ்தினபுரத்திற்குப் போயிருப்பானே? ஒருவேளை எல்லோரும் இறந்து போய்விட்டார்களே இனிகாமிருந்து என்ன வாரிக்கட்டிக் கொள்ளப் போகிறோம் என்று மனம்நொந்து எதிரிகளால் இறப்பதைவிடகாமே இறப்பது மேலென்றுகருதி இறந்துபோய் விட்டானே, இவ்விடத்திற்பேசிய வீரங்களையெல்லாம் மறந்துவிட்டானே, கல்லது அருஞ் சமர் புரியமாட்டாமல் அஞ்சியோடி அமர்செய்யுந் தருமந்தப்பி ஒளித்தானே, அந்தமட்டும் முக்கியமல்லாத யாவரையுங்கொன்று முக்கியமாகிய இவனைமாத்திரம் உயிருடன் விட்டுப்போட்டோமே நாம் மேலாகிய கிருபையுள்ளவர்கள் தான்; பச்சாத்தாப மானவர்கள் தான்" என்று இப்படிக்குப் பலவாறுகதந்களுக்குத் தாங்களே வெறுத்துப் பேசியோசித்துப் பின்பு பலருங்கூடி நான்குதிக்கிலும் நாடி அச்சிரேஷ்ட நிருபனைத்தேடி எங்குந்திரிந்து கொண்டிருக்குஞ் சமயத்தில் வாயுபுத்திரனுகிய பீமசேனனுக்கு மிருகவேட்ட மாடி வந்த சில வேட்டைக்காரர்கள் வேகமாயோடிவந்து பிழைக்கு மருந்தைக் கொண்டுவந்து காதிற்பிழிந்ததுபோல் ரகசியமாக இதனை வெளிப்படுத்துவ தானார்கள்.—

"அதிவீர சுகுமார அதிகார ஜயதீர அனிலசுத பதிசரணம்யாம்
ஆயவெள் ளாடோடு குறும்பாடு வரையாடு வடல் செயமறி யாடுகணையால்
வதையுமான் புள்ளிமான் கடமைமா னெடியகலை

மான் சௌரி மானிரலைமான்

வஜ்ரதந்தப் பன்றி மூட்பன்றி மட்பன்றி வருசிஞப் பன்றிகேழல்
கதிசெய்முயல் கொக்குவான் கோழி கிளுவைகீர்க்

காக்கை புறுவொடெள்ளான்

காணுமிரு கம்பகஜி யாவுகின்பகஷனைக் காகப் பக்குவப்படுத்தி
நதிமொண்டு வரகலச மொடுகொண்டு மடுவண்டை

நண்ணினேம் நாகத்துவஜன்

நாடிநீ ருட்சிந்தை செய்திருந் தான்மூன்று ரதம்வந்த வரவத்தினுல்
நாங்களோர் புறமொளித் திற்றன மடிக்கரையில் நாடுகிரு பாரியன்முதல்
நால்வரும் கூடிக் கலந்து பாண்டவரையின் ஞலே முடித்துமென்வே

நனிவீரியங் கொண்டு மூவர்போனர் சுயோ தனனீருட் புகுந்தான்
நாள்கிழமை கோள்கணிலை நடாமல் நாடியே காதலை வெளிப்படுத்தி
நண்ணிமந்திரசெப மழித்துமது சபதமு நடத்தியரு ளெங்கள் கோவே."

இவ்விதமாகச் சொல்லிய வேடர்களைப் பீமசேனன் அழைத்துக் கொண்டு இருதயம் பூரித்தெக்களித்துத் தருமராஜனுக் கெதிர் சென்று நின்றுவணங்கி, "அண்ணை சங்கதிகேட்டீர்களா! காமிருக்கும் இடத்திற்கு ஈசான்யபாகத்தில் ஒருமடுவிருக்கின்றதாம். அந்த மடுவில் துரியோதனன்போய்ப் புகுந்து செபம்பண்ணுகின்றனும். கிருபன் அசுவத்தாமன் கிருதவன்மன் இம்மூவரும்வந்து அவனிடத்திற் சில இரகசியம் பேசிப் பாண்டவர்களை இன்றைக்கே முடித்து விடவேண்டுமென்று சொல்லி அகன்றார்களாம். அவன்மாத்திரம் மறுபடியும் மடுவிலிறங்கி விட்டானும். இதோ இவ்வேடர்வந்து சொன்னார்கள்" என்று அந்தவேடர்களைத் தருமபுத்திரர் சமீபத்திலழைத்து அவர்கள்வாக்குமூலத்தைக் கேட்டு மகாசந்தோஷமடைந்து இது தருமதேவதையும் நமது பங்குத்தெய்வமுமாகிய சுவாமி கூட்டிவைத்ததென்று மனமகிழ்ந்து "ஓபரம தயாளுவே" என்று கிருஷ்ணசுவாமியைப் புகழ்ந்து இந்த உளவுவந்து சொல்லிய வேடர்களுக்கு வேண்டிய வெகுமதியைச் சகலவளங்களு மூண்டாகக் கொடுத்துத் தாங்கள் அவ்விடத்திற்குப்போகப் பிரயாணமானார்கள்.

பாண்டவராதியர் துரியோதனன் மூழ்கிய மடுக்கரைசேர்ந்துசூழப் பீமசேனனவனை அலர்தூற்றி யழைத்தல்

இதற்குள்ளாகக் காமனைப்பெற்ற மாமனுகண்ணன் பாண்டவர்களை நோக்கி "ஓசத்திய சீலர்களே! மிர்த்யு சஞ்சீவி மந்திர மென்பது ஒன்றுண்டு. அது இந்தத் துரியோதனனுக்கு உபதேசமாயிருக்கிறது. அந்த மந்திரத்தை ஜபித்து இறந்துபோனவர்களை யெல்லாம் எழுப்பிக் கொள்ளும்படி நீரினுள்ளே ஜலத்துக்குள் நுழைந்திருக்கின்றன். அதற்குத் திருஷ்டாந்தம் ரணகளத்தில் மடிந்த பிணங்களைப் பாருங்கள்" என்று சொல்லித் தாமும்போய்ப் பார்த்தார். அக்காற் சிதைந்து சதைந்து அறுந்து முறிந்து குறைந்துபோன உடலெல்லாம் நகர்ந்துவந்து ஒன்றுடொன்று ஆடி, குற்றுயிராயசைந்து கூடும்படியிருந்தன. அதையவர்கள் கண்டு, "ஓ! ஓ! மோசம்வந்ததே

ஓழுகுத்தனே! இஃதென்ன ஆச்சரியமென்று கையறைந்து கூவித்துக் கருங்கடலுங் கலங்க இரைத்து விரைந்து தாங்களெல்லோருஞ் சேர்ந்து அரைக்கணத்தில் ஓடிவந்து மடிவைகெருங்கினார்கள். வான மளாவிய தேர்களும் வாரிமதம் பொழி யானைகளும் மேகமண்டலம் வரைக்கும் விரைந்துலவாகின்ற குதிரைகளும் மிகுந்த கூட்ட மாகிய சேனைத்திரள்களுஞ் சென்றுகோட்டைக் கட்டாக மடிவைச் சூழ்ந்துகொண்டார்கள். மேகநிறம்பெற்ற திருமாலும் மேதினி காவல ராகிய அரசர்களும் பாண்டுபுத்திரராகிய பஞ்சவரும் அப்பஞ்சவர் பெற்ற இளம்பஞ்ச பாண்டவரும் ஒன்றுகச்சேர்ந்து ஜலத்துக்குள் மூழ்கியிருக்குந் துரியோதன மகாராஜனைக் கண்டு பேசும்படிக்குத் தடாகக்கரையை முழுமையும் வளைந்து முனைந்து முரண்டு கின்றார் கள். இவர்களிப்படிவளைந்து கொண்டிருந்தது எப்படியிருந்த தென்றால், ஆதிகாலமில் தேவேந்திரனுடைதிர்த்துப் போர்புரிந்து வஜ்ராயுதத்திற்கு இலக்காகி ஓட்டமாயோடிக் கருங்கடலிற்பாய்ந்து புகுந்து மறைந்து ஒளித்த முதன்மைப் போரிற்சிறந்த விருத்திரா சுரனென்னுமுதல்வனை முப்பத்துமுக்கோடி தேவர்கள் நாற்பத் தெண்ணாயிரம் ரிஷிகள் இன்னு மற்றுமுள்ளபேர்கள் எப்படி சென்று வளைத்துக் கொண்டார்களோ அப்படிக்கிருந்தது. இப்படி எல்லோ ருஞ் சூழ்ந்து நிற்கிறசமயத்தில் அமரர்க்குபகாரியாகிய ஆயன் ஆம் பலிநிகர்த்த செவ்வாயன் அகிலங்காக்கு மாயன் அரிபரந் தாமத் தூயன் பீமனைப்பார்த்து "ஏனப்பா சும்மாவிருக்கின்றாய்? பொழுது போகுதே உன்காரியத்தை நீபார்! உன்சபதமுடியும் விதத்தை நீ தேடிக்கொள்" என்று திருவாய்மலர்ந்தருளினார். அனந்தகல்யாண குணமுடைய ஆதிகேசவனது அருள்மொழியைக் கேட்டமாத்திரத் தில் விக்கிரிக் கொப்பாகாமல் மேற்பட்ட தோள்வலிமைபெற்ற பீமசேனன் நீருண்மூழ்கியிருக்குந் துரியோதனனுக்குக் கேட்கும் படிக்கு மகா உரத்ததொனியோடு வாய்திறந்து சொல்லத் தொடங் கினன்:—

"கங்கைமகன் முதலாகக் காந்தாரர் முடிவாகக் களத்தில் வீழ்ந்த
துங்கமணி முடிவேந்தர் சொல்லிமுடிப் பதற்கடங்கார் துரக மாவுஞ்
செங்கனக மணிக்கொடிஞ்சித் திண்டேரும் பெரும்பிணக்கைச்
சிறுத்தசெங்கண்
வெங்கயமு மேருமல் வீழ்கயத்தி லேறினையோ வேந்தர் வேந்தே.

நெஞ்சறிய நீயெமக்கு நிலைநின்ற பழியாக நெடுங்காட் செய்த
வஞ்சகமும் பொய்மொழியு மனுசீ திதவறியது மறந்தாய் கொல்லோ
துஞ்சியநின் சேனை யெல்லா மீண்டுவர நீயறையுஞ் சருதி யிற்றை
வெஞ்சமர முடித்தன்றே வரைவதிவை வீரருக்கு வீர மாமோ

அடிமாறி நீரிடை புக் கருமறை நீ புகன்றனு மரவப் பைம்பொற்
கொடிமாறிக் குருகுலத்தார் கோவேனின் பேர்மாறிக் குலாவுமாலை
முடிமாறி யொருதனிமாமுத்தநெடுங் குடைநிழற்கீ ழாளு முன்னீர்ப்
படிமாறி யொழியவிடேன் புறப்படாய்மறைபடவிப் பகல்போ முன்னே

ஓதப்பைங் கடல் புடைசூ முலகாளு முடிவேந்த ருறுபோ ரஞ்சிப்
பாதத்தில் வீழ்வரோ பாரரசர் கேட்டாலும் பழியே யன்றே
மேதக்க வரமகளிர் கைப்பிடித்த விந்திரனும் விண்ணோர் தாமுங்
காதத்தி லெதிர்கொள்ளக் கற்பக நீ முலில்வைப்பன் கலங்க லம்மா

களந்தனிலெத் தனைகவந்தங் கண்களிக்கக்
கண்டனை நீ கைத்தண் டோடிக்
குளந்தனிலிக் கவந்தமுங்கண் டேகுதற்குப்
புகுந்தனையோ கொற்ற வேந்தே
வனந்தனிலிக் கோபமுமென்வஞ்சினமும் போகாது வந்துன் பரவி
யுளந்தனிலிக் கவலையைவிட் டேற்றுதலல் லதுமற்றே ருறுதி யுண்டோ

இனத்திடைநின் றெரு பதின்மே லெழுநாளு
மொருவருட னிகல்செய் யாமற்
றனத்திடைநின் றுளமகிழும் புலையரைப்போன்
மகத்துடனே தருக்கி வாழ்ந்தாய்
சினத்திடைவெம் பொறிபறக்கச் செயிர்த்
திருகண் சிவப்பேறச் செருச்செய் யாமல்
வனத்திடைசென் றெளிப்பரோ மண்முழுதுந்தனியாளு மன்ன ராலேநீர்

திரிபுவனங் களுஞ் சோச் செங்கோன்மை செலுத்தியநின் சீர்த்தி யிந்த
விரிபுவனந்தனிலொளித்தான் மிகுவசையாய்ப்போகாதோவெருவாலாமோ
புரிபுவன முண்மிழ்ந்தோன் போரிலங்கை வழிகாணப் பொருத வாளி
யெரிபுவன நுகர்ந்ததுபோ லித்தடமும் புகையாமு னெழுந்தி ராயே.''

ஓ ராஜாதி ராஜனுடைய துரியோதன மகாராஜனே! கங்காபுத்திரனுடைய பீஷ்மாசாரியார், துரோணாசாரியார் முதலிய தனவான்

களியாவரையும் யுத்தகளத்தில் அவிந்துபோன மற்றவர்களெல்லாரையும் எண்ணிப்பார்த்துக் கவலைபூண்டு கருத்தழிவுகொண்டு கம்மைப்போன்ற மாசற்ற மணிமுடிபெற்ற வேந்தரெல்லோரும் கைப்பார்களென்ற காணத்தால் தலைக் காட்டித்திரியப் பயந்தும் குதிரையின் மேலேறக் குறைந்தும் சிவந்த பொன்மயமாகிய சிகரத் தேரேறித்திரியத் தியங்கியும் ஈண்ட துதிக்கையையும் சிறுத்த கண்களையுமுடைய யானையென்னும் வெங்கயமும் புகுகாத ஆழ முடைய மடுக்கபத்திற் புகுந்து ஒளித்தனையோ?

அடாபாவி உன்னெஞ்சறிய எங்கள் மனமெரிய எங்களுக்கு கெடுகாள்வரைக்கும் கிலேயாகிற்கும் பழிவினைத்தாய். நீரிற் கட்டிப் போட்டாய்! வசிகாட்டிவைத்தாய்! விஷங்கலந்து அன்னமூட்டிவைத் தாய்! அரக்கு மாளிகைகட்டிகெருப்புமூட்ட நினைத்தாய்! காங்க ளெஞ்சும்படியாய் வஞ்சகச்சூதாடினாய்! யாவரும் அஞ்சும்படியாகிய வஞ்சனைகளுள்ளவெல்லாவற்றையுஞ் செய்துபார்த்தாய்! அஞ்சன மேனியானைத் தஞ்சமென்றிரந்து தூதுவிட்டு ஓரூராகிலும் ஒரு மனையாகிலுங் கொடுக்கவேண்டுமென்று கெஞ்சிக்கேட்ட காலத்திலுங் கீழ்வெட்டாகப் பேசினாய். அவைகளையெல்லாம் இப்போது மறந்து விட்டு இனைத்துச் சேர்ந்தாற்போலுமிருக்கிறது.நல்லது அப்படியே உண்மையாய் நீ இனைத்தது மெய்யானால் அஞ்சிப்பயந்து அமரி லிறந்த சேனைகள் முதலாகிய யாவரையும் பிழைக்கும்படியாய் ஜலத்தில்மூழ்கிமந்திரம் பண்ணுவாயோ? ஓ விஷத்துக் கொப்பான வனே! ஆகிலும் நீ பிழைத்தபிற்பாடல்லவா மற்றபேர்களைப் பிழைப் பூட்டவேண்டும். முதல்வனுகிய உன்பேச்சே காற்றடிக்கொணடிருக் கும்போது நீயெங்கே மிர்த்யுஞ்சீவமந்திரம் ஜபிக்கிறது? அடா அண்ணு! முன்னே உன்பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளும் வகை யைத்தேடிக்கொள்ளடா! மூடா! அடா குடிகேடா! இந்தமடுவின் ஜலத்தில் நீ நுழையும்போது மாறுபாடான அடிவைத்துக்குளத்தி லிருந்து கரைபேறுகிறவர்களைப் போற் பின்னிட்டு நடந்துபோயிருக் கிறாய். அந்தச்சூதும் நான்கண்டறிந்துகொண்டேன். இப்போப்பட்ட மாயபாடுகளெத்தனையாயிரஞ் செய்து அரியமந்திரங்களை நீ உருகி ஜபித்தாலும் ஏதாகிலும் ஒருகாரியம் உனக்குக் கைவல்யமாமோ? ஓ குருகுலத்தைக் கெடுக்கவந்த கோவே! நீமாறிவைத்த அடிமாறி உன்னுடைய காகக்கொடிமாறி உன்போர்மாறி உன்மாலைமாறி அம் மாலையணிந்த உன்முடிமாறி உன்னுருமாறி உன்னுயிர்மாறி முத்துக்

குடைட் நிழலில் நீயாண்ட கடல்வளைந்த உலகமாறி நீபூமிமேற் சாய்ந்து வீழ்கிறவரைக்கும் உன்னை நான்விடப்போகிறதில்லை. ஆகை யால் மரியாதையுடன் யுத்தத்திற் கெழுந்துவரவேண்டியதே. சீக்கிரம்! சீக்கிரம்! பொழுதுபோகிறதற்கு முன்னே வெளியேவா. அடா சொற்புரட்டனே! ஓசைபெற்ற உவர்க்கடல்சூழ்ந்த உலகங் களையெல்லாம் ஆளுகின்ற கெடிஸ்தலாதிபராகிய கிரீடாதிபதிகள் யுத் தஞ்செய்வதற்குப் பயப்பட்டுப் பாதாளத்தில் ஒளித்துக் கொள்ளுவார் களோ? ஐயோ இதைக்கேட்டாற் பண்ணவர் விண்ணவர் மண்ணவர் முதலியபேர்களின் பெரிய சபையினிடத்திற் பழிப்பல்லவோ உண் டாகும்? அடா பாவி! நீயாகினும் இரக்கமில்லாதவனுய் எங்களைப் பரதேசியாக்கி நாட்டைவிட்டுக் காட்டிலோட்டிவிட்டாய்! நானப் படிசெய்யமாட்டேன்! மேம்பாட்டினையுடைய ரம்பாஸ்திரீகள் உனக்கு எதிர்கொண்டுவந்து மரியாதைசெய்து கைகொடுத்துத் தழுவி யிணைக்கவும் தேவேந்திரன் முதலாகிய தேவர்களுங் காதவழிதூரம் எதிர்கொண்டுவந்து உன்னைக்கண்டு உவந்து கைக்கொண்டுபோய் கனவரிசைகளுடனே கற்பகக்காவின் நிழலில் வைக்கவுஞ்செய்வேன். நீ இவ்வுலகத்திலிருந்தசெல்வத்திலும் எட்டுப்பங்கு அதிகமாகியசெல் வத்தில் வைப்பேன். நீ கண்கலங்கவேண்டாம். பயப்படாதே திடங் கொண்டெழுந்துவா. ஓதிரமன்னனே! உன்னைச்சேர்ந்த சொந்தமாகிய இனத்தோடும் மிகுந்த பந்தமாகிய ஜனத்தோடும் உன் மாமனுகிய சகுனியானவன் உனக்கு மெத்த உரியவனுய் நின்று உயிரழிந்து இறந்துபோனபிற்பாடும் எங்களை வெல்லவேண்டுமென்று நினைத்து எண்ணுத யுக்தியெல்லாம் எண்ணினுய். ஓ பணத்தைப் புதைத்து வைத்துத் தருமம்பண்ணுமல் வீணுலோசனைபண்ணி மதங்கொண் டிருந்து மாண்டுபோகும் புல்லர்களாகிய அற்பர்களின் பிரயோசன மற்றபோக்கைப்போல் மதத்துலவுகின்ற மன்னனே! உனக்குச் சொந் தமாயிருந்தபேர்களும் மிகுந்த சேனைப்படைகளுஞ் சாய்ந்து மாய்ந்து போனபிற்பாடு உனக்கென்ன இருக்கிறது? இன்னமும் உனக்கு எண்ணமென்னத்திற்கு? அடா பயித்தியக்காரா! இப்பவும் மகா கோபங்கொண்டு நேரேவந்து போர்க்களத்தில் உன்பிராணனை விட்டு விடாமல் இன்னும் பிழைக்கலாமென்னும் எண்ணமும் பேராசை யுங்கொண்டு ஓலத்திற் புகுந்து ஒளித்திருந்தால் சாதாரணரியருள்ள மட்டுக்கும் வசைச்சொல் அல்லவோ? அடா கீர்த்தியை நினைகாத தூர்த்தனே! அடாவஞ்சநெஞ்சையுடைய வபபனே! சிறிதும் மானம் ரோஷம் வெட்கம் மரியாதை இவைகளில்லாதவர்களைப்போல் மறைந்

தாயே! வீரங்குறைந்தாயே! நீ மறைத்ததினால் கான்விட்டுவிடு வேனோ?

அடா காணமற்றவனே! இப்போது நீ செய்துகொண்டிருக்கும் இந்தமந்திரம்உனக்குச் சித்தியாகமாட்டாது. அதேனென்றால் கங்கா ஸ்நானம் பண்ணுகிறபலனும் மேகம் பொருந்திய மலைமேலிருந்து யோகஞ்செய்யும் மேன்மையும் அக்கினி சாட்சியாய் யாகங்கள் செய் வதும் மந்திரசக்தியும் இவைகளெல்லாம் மனத்தூய்மைபெற்ற பரி சுத்தவான்களுக்குக் கைவல்யமாய் நன்மையைக் கொடுக்குமல்லாமல் உன்னைப்போன்ற பெரும்பாவிகள் மூக்கைப்பிடித்துக்கொண்டு ஜலத் தினுள் மூழ்கி முக்கிக்கொண்டிருந்து வேதமந்திரங்களை அகேகம் அகேகமா பெடுத்துப்படித்து வலுப்பிடித்து உருச்செபித்தாலும் வசைமேலிட்டு கல்லசமபத்திற் பங்கப்பட்டுக் கெடுதிநேரிட்டுக் கேடு மேலிட்டுப் போமேயொழிய ஒருகாலத்திலும் பிரையோசனப் படாது. அடா பழிப்புக்குடன்பட்டுப் பருவுடலெடுத்தபதிதனே! அடா பெற்றூர் பிறந்தாரைப் பீடழிக்கவந்த பேயனே! நீ யிப்போ திருக்கும் நிலைமையை உலகைபாளுந்தசராஜபாஷைமன்னர் எல் லோரும் உன்னை வணங்கும் போஜராஜவீரரெல்லோரும் கண்டால் வந்திப்பதைவிட்டு, சுவர்க்கமத்தியபாதலமென்னும் மூன்று லோகத் தாரும் பிரசித்தமாய் அறியும்படியாகிய பெயர்பெற்றும் இன்னுட் டிற் கொடுங்கோல்செலுத்தி அரசுபுரிந்து வாழ்ந்தும் விசாலமாகிய இந்தக்குருக்ஷேத்திரத்தில் யுத்தஞ்செய்யமாட்டாமற் பயந்து ஜலத் தில் ஒளித்திருந்து உயிரிழந்தான் இத்துரியோதனனென்று நிந்திப் பார்களே! அதை நீ சிந்திக்காமற்போனதென்ன? ஐயோ அவர்கள் பழித்தாலும பெரிதல்ல. தண்டை, சிலம்பு, சதங்கை, இவைகள் கொஞ்சுந் தாளினையுடைய பதுமைபோன்ற ஸ்திரீகளெல்லோரும் பழிப்பார்களே! கோணக் கோண வலிப்பார்களே! இதைப்பார்க்கிலும் வேறுபழிப்பு வேண்டுமோ? கரி,புரவி, தேர், காலாள் என்னுஞ் சது ரங்கப்படையாகிய பதினொரு அக்குரோணியென்னுஞ் சேனைக்கடல் கொண்டு முன்செய்த தந்திரவஞ்சனை போதாமல் இப்போது மந்திர வஞ்சனை செய்யநினைத்து இம்மடிவிற் பதுங்கினையோ? அடா தியவனே! எத்தகைய மொழிகளைச்சொன்னாலும் உனது சித்தக்கல் சிதையுமா? ஒருக்காலுஞ் சிதையாது. மரியாதையாய் வெளியிற் புறப்படுவா யென்று நான் இவ்வளவுசொல்லியும் நீ யின்னும் வெளிப் படவில்லை. ஒருவேளை நான் சொன்னசொற்களெல்லாம் உன்காதிற்

கேட்டுங் கேளாதவனைப்போலிருந்தாலும் அல்லது ஜலத்தைவிட் டெழுந்துவருவதற்கு நீ அச்சப்பட்டிருந்தாலும் உன்னை வெளிப் படுத்துவதற்கான வழி தேடுகிறேன். அஃதெப்படியென்றால் பூர்வத் தில் ஸ்ரீராமமூர்த்தியானவர் சமுத்திரதீரத்தை யடுத்துச் சரசயனம் பண்ணிக்கொண்டு வருணஜபம்புரிந்து வருந்திபழைத்தும் வாராத வருணன்பேரில் கைத்திறல் காட்டமீண்டி ஒரு கடுங்கணையெவிக் காயச்செய்தபோது கடலிலழுங்கலங்கிச் ஜலம்வறண்டு வருணன் கதறிவந்த தன்மையைப்போல் விசித்திரம்பெற்ற விஜயகாண்டீப வில்லாளிபாகிய என்தம்பிபைக்கொண்டு அழற்கணைபொன்று பிரை யோகஞ்செய்வித்து அந்த தீட்சண்யாஸ்திரத்தால் நீ இப்போதிருக் கிறசுத்தமான தடம்புகைத்து தண்ணீர் சுவறிக் காய்த்துபோகும்படி செய்து உன்னை வெளிப்படுத்துவேன். ஒருவேளை நீயிப்போது பதுங்கியிருக்கிற இத்தடாகத்தினின்று மப்படியே நாகலோகஞ் சென்று பதுங்கினுயினும் அங்கேயுமுன்னை ஆராய்ச்துகொண்டு வரத்தகுந்த பாணங்களைவிடுவித்துச் செந்தூக்காய்த் தூக்கிவரச் செய்வேன். ஒருக்காலும் விடமாட்டேன். இதையுணர்ந்து சீக்கிர மெழுந்துவரக்கடவாய்! அடா தெளிவில்லாதவனே! அடா அறி வில்லாதவனே! ஒருவேளை அதுவரைக்கு நான் தாளமாட்டேன்! இதோ நடுக்குளத்திற் காலைகாட்டி உன் குடுமியைப்பிடித்துத் தூக்கு கிறேன்'' என்று கூக்குரலிட்டான்.

துரியோதனன் பீமன்கொடுமொழிக் காற்
றுதுவெளியாகி யாரோடு எப்படையா
லெங்ஙனம் பொருவதென, அதற்கப்
பீமனுங் கிருஷ்ணதேவரும்
விடைதரல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே, இப்படி பீமசேனன் பகர்ந்த பலமொழிகளெல்லாம் துரியோதனனுடைய காதில் நாராசம் போலேறவே படபடத்து மனக்தாளாதவனுய்த் தான் பெற்றிருந்த ஜீவனமந்திரஞ் சோர அதைச் செபஞ்செய்திருந்த வாய்சோர யோகபட்டைபோற் கட்டிக்கொண்டிருந்த கைசோர அசைவற்றிருந்த மெய்சோர செய்கைசோர ஆவதென்றும் அழிவதென்றும் ஆயந்தறி யாத அறியாமையாகிய அறிவுசோர இதுவரையிலும் உருவேற்றிய மந்திரபலத்தால்மேவி வந்த நன்மையுஞ்சோரக் கோபமேற்கொண்டு

அந்தக்கோபத்தின் வசப்பட்டுக் கோவென்றிரைந்த பீமசேனனுல் தான் அழியவேண்டிய விதிவிசமிருப்பதினுல் விரைந்தெழுந்து எவர் களும் பார்ப்பதற்கரிதாகிய கீளமும் அகலமும் ஆழமுமுடைய அத் தடாகத்திற்பொருந்திய ஜலத்தினின்றுஞ் சக்கரவாளகிரி சூழ்ந்த பூலோகத்தில் வாழ்கின்ற அரசர்களெல்லோரும் வாடி மனமழுகி நடுங்கி யொடுங்கும்படிபாய் ஓருகாளமேகமானது பெருங்கடலில் மூழ்கி ஜலமெல்லாங்கவர்ந்து கருநிறங்காட்டி அண்டகோளத்தி லெழுந்ததுபோல் ஆரவாரத்துடன ஆர்ப்பரித்து ஆகாயத்தில் ஆபரண மின்னலுடன் பாய்ந்து அங்கிருந்து சிதாரத்தினக் கொண் டையினை யுடைய பாம்புக்கொடிதரித்த தரியோதனமகாராஜன் விசாலமாகிய மத்தகரைமேல்வந்து நின்று புஜந்தட்டி, கரீட்டி, பற் கடித்துத் தண்டாயுதத்தை விறுவிறெனச் சுழற்றிப் பூமியிலூன்றி நெருப்பெழவிழித்து அவ்விடத்திலிருந்த யாவரையும் மதிக்காது அலக்ஷ்யமாகநோக்கி சுற்றத்தார் பத்தினிபுத்திரர் மித்திரர் முதலாயி னோர் பற்றற்றவனுய் மனேதிடங்கொண்டு மகமேருவின் மூன்று சிகரத்தை முறித்தருளிய வாயுதேவனது குமாரனுகிய பீமசேனன் முகத்தைநோக்கி "ஆ! ஆ! பீமா என்கையிலிருக்கிற ஆட்சிபெற்ற கதாயுதத்தின் அடியொன்றுல் முடிந்துபோய்விடுவாய். சீக்கிரத்தில் உன்பேச்சு அடங்கிப்போம். நீ முடிந்து போவதற்குத்தானே சலுதி யில் என்னை யழைத்தாய். உன் பொல்லாதவேளை என்னைக்கூப்பிட்ட தல்லவா? ஆனுல் இதோவந்தேன்" என்று மீசைமுறுக்கி மாதாளித்து நிதானித்து நின்றுன்.

இப்படிநின்றவன் தனக்குநேரில் நிறைந்த குளத்தைச்சூழ்ந்து நிற்கின்ற பெருஞ் சேனைகளையும் தன்னைவிடாமற் கவிந்துகொண்ட நிருபர்களையும் கெடாத வல்லமைகொண்டு தேனிறைந்த மாலை புனைந்த திணிந்த தோள்பொருந்திய பஞ்சபாண்டவரையும் செங் கண்மாலாகிய திருமாலையும் உறுத்துப்பார்த்து, "ஓ என்னை அறை கூவிநின்ற அடல்வீரர்களே! நீங்களோ யானைசேனை முதலிய பரிவா ரங்களுடனிருக்கின்றீர்கள்! விஷாக்கினியின் காந்தியாக அனலுமிழ் கின்ற ஆயுதங்களெல்லாங் கைக்கொண்டிருக்கின்றீர்கள்! காலனு தமிய னுய் வேறு ஆயுதமில்லாமற் கதாயுதமாத்திரங் கைக்கொண்டிருக்கி றேன். இவ்விதமாக நிற்கிற என்பேரில் நீங்கள் பலருமமித்துப் போர் தொடுத்துச் சண்டைகொடுத்திடுவதோ அல்லதுஒருவருக்கொருவரே யெதிர்த்து யுத்தஞ்செய்வதோ, எப்படியேற்பாடு சொல்லுங்கள்'

என்று கேட்டான். அப்போது அண்டர்கள்மகிழும் விண்டலங்கமழுந் தண்டுளவணிந்த கொண்டல்மேனியனும் மண்டலந்தழைக்க மலருகின்ற கனிகாபனுமாகிய நாதன் சிறுகைகாட்டி,

"இளம்பருவ முதலுனக்கு மிவனுக்கும் வபிர்ப்பெண்ணி லெண்ணெ ணுதா
லுளம்புகல வரசனையில் வஞ்சினமும் பலபடரின் னுரையா கின்றன்
களம்புகுது கின்னெழிந்த தூணைவரையுந் தனதுதடக் கையாற்கொன்றன்
விளம்புவதே வேறொருவர் கின்னுடன்போர் மலைவரோ வேந்தர் வேந்தே.

வில்லாலும் வாளாலும் வேலாலும் பரிதெடுந்தேர் வேழத் தாலுந்
தொல்லாண்மை தவறுமற் செருமலைந்தோர் சான்றுகச் சூழ்ந்து நிற்பப்
புல்லாரைப்புறங்காணும் போர்வேலோ யிருவருரீர் பொருது நும்மில்
வல்லார்கள் வென்றிபுனைந் தவனிதலம் பெறுமிதுவே வழக்கா மன்றே."

அப்பாதுரியோதனு இப்போதேற் பட்டிருக்கின்ற இவ்வடமுனை,பதின் மூன்றுகாட்போரில் அபிமன்ன னென்னும் அழகனை, அரன்பூசை மறவாத அருச்சுனனுக்குக் குழந்தையைத் தனியாகிய ஒருவனை அதிகம்பேராய் மடக்கிக்கொண்டு பின்னலும் முன்னலுந் திருட்டுப் பூனைபோலொளித்துவந்து மாறுபடுத்தி வில்லையுந்தேரையும் வேறு படுத்தி அந்த அபிமன்னனையுங் கூறுபடுத்திக் கொன்றுவிட்ட கொடிய துஷ்டர்கூடியிருக்கிற கொடுமனையல்லவே ! அசத்தியத்திற்குப் பாத்தியப்பட்ட உன்னுடன்யாவரும் பகைத்து எதிர்த்துப் போர்புரிய மாட்டார்கள். இதோ நிற்கின்றனே பீமசேனன் இவனொருவன்றன் உன்னுடன் அமர்செய்வதற்கு ஆயத்தப் பட்டிருப்பவன்.

ஆனல்உனக்கு இவனைஎதிராக இப்போது நாங்களேற்ப்படுத்த வில்லை. அதிபால்ய முதற்கொண்டு உனக்கும் இந்தப் பீமனுக்கும் மனவயிர மேறியிருக்கின்றது மல்லாமல் நீங்கள் கூடியாடிய வஞ்சகச் சூதினல் உள்ளம்புழுங்கி வெகுஜனங்கள் சேர்ந்திருந்த ராஜசபையில் வெகுவாகிய சபதங்களைப் பலவாறுகப் பேசியிருக் கின்றனல்லவா இவன்? அதுபோலவே இப்பவும் யுத்தகளம்புகுந்து உன்னொருவனை மாத்திரம் உயிருடன் விட்டு மற்றத் தொண்ணூற் றொன்பதுபேர் தம்பிமார்களையுந் தனதுதடக்கரத்தாற் கொன்றிருக்கின்றன். பூர் வசம்பந்தங்க ளிப்படிக் கெல்லாமிருக்க இப்போது நீகேட்கவேண்டி யதுமில்லை நாம்சொல்ல வேண்டியதுமில்லை.வேறொருவர் உன்னுடன் எதிர்த்துப்போர் செய்பவேண்டிய அவசரமுமில்லை. அக்கறையு

மில்லை. ஆத்திரமுமில்லை. க்ஷாத்திரமுமில்லை. ஓராஜாதிராஜனை வில்லாலும் வாளாலும் வேலாலும் இரதகஜதுரக பதாதிகளாலுந் தருமமாகப் போர்புரிந்து ஆண்மைதன்னுமற் கீர்த்தியுந்திறமுங் கொண்ட மூனைவீரர் முதலிய அரசர் சாக்ஷிபாக நீதிநிறையாக அமரர்முதலிய அத்தரவாசிகளும் அங்ஙன நின்று நோக்கும்படியாக சத்துருக்களைப் புறங்கொடுத்தோடச் செயிக்குந் தாஷ்டீகராகிய நீங்களிருவருந் போராடி உங்களிருவரில் வல்லவர்களாயிருக்கின்றவர்கள் வெற்றிபூண்டு இவ்வுலகத்தை அரசாக்ஷி செய்யுங்கள். சுகமாய் வாழுங்கள்! இதுவேதருமம்! இதுவேசத்தியம்" என்றார்.

இப்படிச்சொல்லவே வண்டுமொய்த்த வலம்புரி மாலையணிந்த வயவேந்தன் மனங்களித்து திணிந்த தோளினையுடைய பீமனைப் பார்த்து "ஏனப்பா என்ன சொல்லுகிறாய்? வில்முதலிய ஆயுதங்களைக்கொண்டு யுத்தம்பண்ணுகின்றாயோ அல்லது தண்டாயுதமென்னும் மால்வரை தாங்கிப் போர்புரிகின்றாயோ? சீக்கிரஞ் சொல்லு. எது உனக்குச்சம்மதம்? எந்த ஆயுதம் உனக்கு மெத்தப் பழக்கம்? உன்கருத்தை வெளிவிடு" என்று துரியோதனன் கேட்டான். ஓ மகாராஜனே இவ்வாறு கேட்டவன் எவ்வாறுனவனென்றால் போர்த்திரத்தினாலும் சகோதரப் பெருக்கத்தினாலும் தான் செய்கிறபாவ முதலாகிய வஞ்சகத்தினாலும் உலகத்தையாளுகிற ஐஸ்வரியத் தன்மைபானது தன்னைவிட்டு ஒருக்காலும் நீங்காதென்றும் இளமைச் செல்வமாகிய சம்பத்கரமும் ஆயுளாகிய வாழ்க்கையும் சாஸ்வதகல்பமாயிருக்குமென்றும் நிஜமாயெண்ணி ஏமாந்துபோன போர்வீரன்; வணங்காமுடி பொறுத்தபூபாலன். இவ்விதமாக பீமசேனனைக்கேட்கவே வாயுகுமாரன் "ஓ அறிவாளியாகிய அண்ணா, இப்போது நாமிருவருங் கதாயுதங்கொண்டு எதிர்த்து யுத்தஞ்செய்யத் தக்கதேயல்லது, மற்ற ஆயுதங்களைக் கொண்டு யுத்தஞ்செய்வதற்கு இயலமாட்டாது. மேலும் இதுகாலமல்ல. நீ அதற்குத் தகுதியுடையவனுகவுமிருக்கவில்லை" என்றான்.

இவ்வாறு பீமசேனன் சொல்லியதைத் துரியோதனமகாராஜன் கேட்டு, "நல்லது அப்படியே கதாயுதங்கொண்டு யுத்தஞ்செய்வதாலல் இந்த இடம் இரத்தமும் நிணச்சேறும் பிணக்காடுமாகப் பெருக்கங்கொண்டிருக்கின்றது. ஆனபடியால் எங்களுக்குத் தகுதியாகிய இடத்தைச் சொல்லும்" என்று பொய்மையாகிய விஷயங்களை ஒழித்

தருளிய கோபாலனைப் பார்த்துக்கேட்க அந்தச் சொல்லைக்கேட்ட புள்ளாங்குழலைப் பூரித்தருளிய செல்வத்திருமால் சிந்தைகளித் தருளி "ஓ குருகுலக்கோவே! தாவிச்செல்லுகின்ற சப்தமாப்பூட்டிய தடந்தேரைச் செலுத்திப் பகற்போதை யளந்துவருஞ் சூரியனைப் போன்ற மழுப்படையோனுகிய பரசுராமர் பூர்வத்தி லமர்தொடித்து முடிவேந்தர் யாவரையும் மூவேழுகலிமுறை முடித்து அவர்க ளுடைய உதிரங்களினுல் ஏழுகாவினையுடைய அக்கினிதேவன் சந்தோஷிக்கும்படியாய் ரமேதயாகஞ்செய்த ஸ்தலமொன் றுண்டு. அது ரேழுலோகத்தினுஞ் சிறந்த பரிசுத்தமாகிய ஸ்தலம். அங்கே அரசர்களைக் கொல்லும்போது அவர்களுடைய தேகத்தி லிருந்து பெருகிவழிந்த இரத்தம் நிறைந்து ஓர்மடுவாகிப் பிரகாசிக் கின்றது. அந்தமடுவினுடைய பெயர்சியமந்தபஞ்சக தீர்த்தமென்று செப்புவார்கள். அந்த இடமே நீங்களிருவரும் போர்புரிவதற் கான இடம். அதற்கொப்பாகிய நல்லஸ்தானம் வேறில்லை. அதுவே நல்ல ஸ்தலம். அந்த இடத்தில் உயிர்விட்டபேருக்கும் யாகாதி கிருதுக் களைச் செய்தபேருக்கும் மேன்மையாகிய சுவர்க்கங்கிடைக்கும். ஆதா லால் அந்தத் திக்கைநோக்கிப் புகுந்து சண்டைசெய்யுங்கள்" என்று சொல்லி யருளினர்.

பாண்டவருந் துரியோதனனுஞ் சியமந்த பஞ்சகம்போய்ச் சேருதல்

இவ்வாறுகிருஷ்ண மூர்த்தியும் பீமசேனனுங் கூறிய வார்த்தை யைக்கேட்ட அசைந்தாடும்படியான அரவக் கொடிவேந்தன் தன் னுடைய பிரதாபவாகனயோகப் பெருமைகளெல்லாம் இல்லாமல் கால்கடையாக நடந்தான். சேனபதியாகிய திஷ்டத்தூய்மன் முதலா யினேர் தங்கள் தங்களுடைய வாகனங்களிலேறிக் கொண்டு பரிசுத்த மாகிய திறத்துடன் நான்குபுறமுஞ் சூழ்ந்து இரதகஜதுரகபதாதி களாகிய நான்குபடையும் ஆயுதவருக்கங்களோடு ஒன்றோடொன்று இழைந்து ஒளிவிட்டுத் தழைந்து ஜொலிக்கும்படிக்கு விரைந்து பெருங்கூச்சலிட்டிரைந்துவரத் தியவனுகிய துரியோதனனை நடு மத்தியில் நடத்திக்கொண்டு அவனுக்கிருமருங்கும் எமகிங்கிலியரைப் போற் சென்றார்கள். தருமராஜனுடைய தம்பிமார்களும் பாஞ்சால ராஜனுடைய மற்றமைந்தர்களும் இளம்பஞ்ச பாண்டவர்களும் இன்னுமுள்ள வீரருங் கும்பி வெம்பிப் பம்பி ஒன்றாய் நெருங்கிப்

பரந்து புடைபெயர்ந்தார்கள். பற்பலவிதமாயுள்ள வாத்தியங்களோ அலைகடல்சோரும்படி அதிகமுழக்கத்துடன் முழக்கி அணிக்குடை கவரி இவைமுதலியயாவுந் தழங்க நடந்தார்கள். அப்போது அந்தரபதியாகிய இந்திரனுக் கொப்பாகிய பூலோக தேவேந்திரனென்னும் புண்ணியன், சகலதேவர்களுந் துதிக்கும்படியான கண்ணியன், பூமாதுகொண்டாடும் பொறையாளன், புகழ்வீர்கொண்டாடு நிறையாளன், சகலமுந்தேர்ந்த சத்தியவான், சமரசஞான முணர்ந்த நித்தியவான், தக்க மெய்யறிவுள்ளோர்க்கு மிகு நேசன், சாதுக்கள் மகிழுஞ் சுகபோசன், விரோதமாயினரிடத்தும் விசுவாசன் தருமபுத்திரனென்னு மியற்பேருடைய மகாராஜனவர், துரியோதன மகாராஜன் கால்நடையாய் நடப்பதைப்பார்த்து மனங்கசைந்து நைந்து வயிறுபொரிந்து வெந்து மனந்தாளாமல் வெம்பித் தம்பியைத்தணியப்பார்த்து வினைவழியையும் விதிவசத்தையும் நினைத்து வெறுத்து "ஐயோ! வெற்றிப்போர்முடிக்கும் வேந்தர்யாவரும் பொன்முடி திருத்தப் பொருந்தி வணங்குந்தோறும் அவர்களுடைய நீடம்பட்டுச் சிவப்பேறும்படியாயிருந்த பாதம் பூமியில் நடந்தறியாதபொன்னடி, தாயார் மேலுலாவிய சரணம், தந்தை தோள்மேலேறிய தாங்கள், கருதலர்வணங்குங் கால்கள், கற்றவர் புகழுங்கழல்கள், இத்தன்மையவாகிய என்தம்பி துரியோதன மகாராஜனுடைய தாமரைக்கமலம் போன்ற சரணம், பாவியாகிய என்கண் காணும்படியாய்ப் பூமிமேல் நடந்து வருந்திச் சிவந்து புண்ணுகத்தக்கதோ? ஆ ஆ தெய்வமே" என்று இறங்கிவாடிய அறவேந்தன் தேர்விட்டிறங்கி இராஜாதிராஜனாகிய துரியோதன மகாராஜனுக் கெதிரிற்சென்று நின்று கோவென்றிரைந்து கூச்சலிட்டழுது மேகமுழக்கம் போற் கூவிச் சிலவசனஞ் சொல்லத் தொடங்கினார்—

"அப்பா என்னுயிர்போன்றவனே! என் தம்பிமார்களும் யானும் நீயேவும்படியான உன்னேவலைச் செய்து நீகைகாட்டிய இடத்திற் காத்திருந்து உனக்கு உரியதுணையாய்ச் சூழ்ந்திருக்கின்றோம். நீ எவ்வுலகிற்கும் இறையாய் எல்லோருக்கும் மேற்பட்டவனாய் வீரசிங்காசனமேறி மேதினியெல்லாம் ஒருகுடைநீழலிற் புகுந்து குருகுலத்தார் யாவரும் மற்ற எட்டுத்திசையும் கும்மை கல்ல துணைவர்களென்று புகழும்படிக்கு இனிதாகிய வாழ்வைப்பெறுக. ஐயோ! நீகால்கொண்டு நடப்பதைப்பார்க்க என்கண்விண்டு கிழிகின்றதே! ஓ எனக்கினிய இளவலே! நான் சொன்னவாக்கியம் ஒருக்காலுந் தப்பாது.

சத்தியமாகச் சொன்னேன். மேலும் இப்போது இவ்விடத்திலிருக்கிற திருமாலாகிய ஸ்ரீகிருஷ்ணனும் செல்வ ஸம்பன்னராகிய ராஜர்களுஞ் சாக்ஷியாக இவர்கள் முன்னிலையிலுஞ் சொல்லுகிறேன். உன்சித்தத்தைச் சமாதானப்படுத்தி எனது ரதத்திலேறிக் கொள்" என்று பூரணமாகிய கிருபைமேலிட்டு மகாதையுடனே சொல்லற்கரிய பல விதவுபதேசத்திலுற் சொல்லியருளினர். அம்மொழி கேட்ட வன்னெஞ்சனுகிய துரியோதனன் அவர்கூறியமுறை களனைத்தையுங் கர்னகடோரமாகக் கேட்டுக் கசந்து நகைத்துவெறுத்து மறுத்து அகற்றி மனமுறியச் சொல்லுகின்றான்—"ஓ தருமராஜனே! மூண்டெழுந்த கோபத்தால் எங்களைமுடித்து இந்த உலகமுழுமையும் அரசாள வேண்டுமென்று நினைத்து ஆசைகொண்டுவந்தாய்! உன் னெண்ணப்படிக்கே ஆயது. ஆகிலும் நான்மண்ணை மாத்திரம்வைத் தேனையொழிய மனிதரை வைக்கவில்லை. யாருமில்லாமலிருக்கிற வெறும் பூமியாகிய மண்ணை உங்கள் தலைமேற் கட்டிக்கொண்டு நீங்கள் மயங்குங்கள். இனிநான் சொப்பனத்திலும் நினைக்கமாட்டேன். நெடு நாளுஞ் சாப்பிட்ட எச்சிலை உமிழ்ந்துவிடாமல் மறுபடியும் விரும்பு வோர் யார்? நான் நன்றுய்த்தின்று தூப்பிப்போட்ட எச்சிற்சக்கை யாகிய இந்தத் திப்பிக்கு யார் காத்திருக்கின்றார்களோ யார் எதிர்ப் பார்த்திருக்கின்றார்களோ அவர்களே தின்னட்டும். இவையன்றியும் என்னுடைய பந்துக்கள் என்சகோதரர் எங்கள்புத்திரர் எனக்குரிய மித்திரர் இவர்களெல்லாரு மென் நிமித்தத்தில் இறந்துபோயிருக்க அவர்களையெல்லாம் பறிகொடுத்து இழந்துவிட்டு இப்போது நீங்கள் தயவுசெய்து மனதிரங்கி மன்னித்துக் கொடுக்கிற நாட்டைப்பெற்று உங்கள் அருளுற்று உயிர்வைத்து வாழுகின்ற வாழ்வைப்பார்க்கிலும் என்னுடலெல்லாம் வேறுபட்டுச் சிதைந்து வதைந்து ஆறுபோ லோடிவருகிற இரத்தநிணச்சேற்றினுடன் காக்கையும் கழுகும் கொத் திக் கொத்தித் தின்னவும் நாயும்நரியும் நரம்புகளையிழுக்கவும் தேசத் தினர்முதலாகிய சிலவீரர்களெல்லோருந் துரியோதனன் ஓரேகிலே பாகவிருந்து யுத்தஞ்செய்து போர்க்களத்தில் மடிந்து முடிந்துபோனு னென்று பேசிக்கொள்ளும் புகழ்தழைக்கவும் முதலிற் கொண்ட ஏற் பாட்டின்படிக்கே முழுமையும் யுத்தஞ்செய்து உயிர்விடுவது மெத் தவும் உத்தமமாயிருக்கிறதல்லவா? ஆதலால் இனியாகவேண்டுங் காரிய மிதனையன்றி வேறில்லை" என்று பலபலவிதங்களாகப் பேசி தருமராஜன் பேச்சுக்கிணங்காமல் ஆழ்ந்ததீரத்துடன் அசைவற்ற வனுகி மேகத்தைவிட்டுப்பிரிந்த இடியானது படிமேற்படர்வதென்று

சொல்லுதற்குரிய கதாயுதத்தை தோள்மேற்கொண்டு தானுரு வனுக் திருத்தமாக நடந்த திருமால்குறித்த இடம்போய்ச்சேர்ந்தான்.

அப்போது பாண்டவர்களும் வெகுஜனஞ்சூழத் தங்களுக்கு வேண்டிய இனத்துடன் அந்த இடத்தை யடுத்தார்கள். அங்கவிண ணோர் மண்ணோர் முதலிய யாவரு மகிழ்ந்துபுகழாகின்ற தூய்மை யாகிய சியமந்தபஞ்சகமென்னு மிவ்வுக்குச் சமீபத்தி லிருக்குஞ் சிறப் பினையுடைய நல்லதலத்திற் சேர்ந்து சேனைத்திரள்களை யெல்லாங் கோட்டைமதில் போலும் சக்கரவாளகிரிபோலும் வளைத்துக்கொண் டிருக்கவைத்துத் தீவினைகளுக்கு மூலமான கண்ணற்ற திரிதராஷ் டிரனுடையமகன் துரியனும் தவத்தினுலாகும் நல்வினைகளுக்குக் காரணமாகிய வாயுதேவன் குமாரனும் கைக்கிசைந்த தண்டா யுதங்கொண்டு கடுஞ்சினம் எதிர்தூண்டப்புகுந்து இடங்குறித்து நின்று சண்டை செய்வதற்குத் தங்கள் தங்களுடைய கடப்பு யங்களைப்பார்த்துத் தட்டிக்கொட்டிக்கொண்டுநின்றார்கள்.

கண்ணன் பீமசேனனுக்கு வெகுளிமூட்டி யுத்தவன்னத்தனுக்குதல்

அத்தலைவரையிற் செழுந்துள வணிந்த திருமார்பமைந்த ஸ்ரீகிருஷ்ணபகவான் ஊழிக்கால நெருப்பைப்போல் உருத்துச் சிவந்து பொறியிறைத்துக் கொண்டிருக்குங் கண்களையுடைய திடபல சாலியாகிய பொற்பமைந்த பீமன் முகத்தைப்பார்த்து, சண்டைக் கடாவைத் தட்டிவிடுவதுபோற் பண்டைநடந்த விதண்டையை அண்டையிலிருந்து கிண்டிவிடுகின்றார்—ஐயா! பீமசேனமகாராஜ னே, நஞ்சனைக் குடிகெடுக்கும் வஞ்சனை குடியிருக்கும் மனத்தனுகிய இந்தத் துரியோதனமகாராஜன் அன்னத்திற்பின்னமாக விஷங் கலந்திட்டுப் பரம்பிணந் கடிக்கவுஞ்செய்து விஷந்தலைக்கேறிய காலத் திற் சாலுங்கையுங் கட்டிக்கங்கையிற் போட்டானன்றே? அந்தாளில் மேன்மையோங்கிய பாதாளத்திற்போய் அமுதருந்தி விடம்தெளிந்து அவ்விடத்தில் ஏழுநாளிருக்க நீ இவ்விடத்திலிறந்து போனையென்று எண்ணியிருந்த உன்பகைவர்களின் எண்ணத்திற் பெருங்கல்லைப் போட்டதைப்போல் எட்டாநாள் திரும்பி உயிர்பிழைத்துவந்த உத்தமனுகிய உனக்குச் சமமாய்ச் சொல்லத்தக்கவர்கள் யார்? தனது கொடியிலெழுதியிருக்கிற கெடியபாம்பைப் பார்க்கிலுங் கொடிய கோமகன், அரக்கினுலும் மெழுகினுலும் குங்கிலியத்தினுலும்

அழகியவீடுகட்டி அதிற்குடியேற்றிக் குடிகெடுக்கும் புரோசனனைக் கூடவைத்து நெருப்புமூட்ட நினைத்தகாளில் உடுக்கைபோன்ற இடையினையுடைய உங்கள் தாயாருடனும் உன் தமையன்முதலிய தம்பிமார்களுடனும் பிழைக்கும்படியாய்ப் பிராணனைக்காப்பாற்றி நெருப்பிடவிருந்த சேதனை நெருப்பிலிட்டு, பாண்டவர்களுந் தாயும் எரிந்து போனார்களென்று எண்ணியபேர்களின் வயிற்றில் அயிராத பெருநெருப்பாகிய வடவையை மூட்டி எங்களுமிசைபெற்ற ஏந்தலாகிய உன்னை எவர்கள்வெல்லத் தக்கவர்கள்? எவர்கள் கொல்லத் தக்கவர்கள்? ஓ எதிரற்றவனே! இடும்பாசுரனென்று எல்லோரையும் ஏமாற்றிக் கொண்டிருந்தவனை உயிர் நீங்கி யொழித்ததல்லாமல் நிதம் ஒரு பிராமணப்பிள்ளையையும் ஆயிரம் எருமைக்கடாகட்டிய வண்டிச் சோற்றையுந் தின்று தவசிகள்முதலான பேர்களையுங் கொன்று நின்ற பகாசுரனுடைய பிராணனையுமகற்றி வேத்திரகீய மென்னும் அக்கிராரத்துப் பார்ப்பார் பட்ட துன்பத்தையுமாற்றி யாவர்க்கு மின்பத்தையீற்றிய உன்குணத்தைநோக்கிய எமதருமராஜனுடைய நெஞ்சமுங் குலுகுலுங்கு கூசுமே.

ஓ சந்திரகுலக்கோமானே! நான் இருபத்தொருவிசை எதிர்த்து இளைத்து இரங்கி நின்று வெல்லமாட்டாமல் தென்மதுரையைவிட்டு வடமதுரையைநாடி வலசைவாங்கி ஓடச்செய்த மல்லக்கடாகிய ஒரு ஜராசந்தனை ஓரிமைப்போதில் இருபிளப்பாகக் கிழித்தெரிந்து என் கவலையைப் போக்கிய ஆண்சிங்கம் நீயல்லவோ? அப்பனே! கேடில்லாவரமும் பீடில்லா உரமுமுடைய கிம்மிராசுரனை, சடாசுரனை, குபேரனுகருச் சேனைபதிகளாகிய மணிமால்ன் முதலாகிய பேர்களை இன்னுமெத்தனையோ கெடிவீரர்களை யெல்லாந் துடிதுடித்து மாளப்படித்திய உன் தாள்வினையை நான் எடுத்துப்படிக்குந் திறமில்லாதவ ஞனபோதிலும் நேற்றுவிராட புரத்திலிருந்தபோது கீர்த்தியுடைய கீசகனைக் கேடுபடித்திக்கொன்ற உன் பெருமையை ஆ, ஹா, ஹா, நானென்னபேசுவேன்! இவைகளெல்லாமிப்படியிருக்க நெருநல் கடந்த பதினேழாநாட்போரில் உன்மத்தனைப்போல் மயங்கி உலகஞ்சிரிக்கும் பழிப்பெயர் பூண்டதுச்சாதனனென்னுந் துரியோதனன் தம்பியைத் துடிக்கவடித்துத் தூவளப் பிடித்து குத்திகொன்று இரத்தங்குடித்துச் சொல்லற்கரிய சித்திரவதைசெய்து அவரவர்களுக்கு முன்னேபோட்டு அலத்து இடித்து யாராகிலுங் காத்துக் கொள்ளுங்களென்று அகேகரம்

ஆட்டிக்காட்டினை. அப்படிக்குக்காட்டியும் தம்பியென்கிற விசுவாசம் வைத்து உன்கிட்ட நெருங்கித் தன்னுடைய சகோதரனை மீட்டுக் கொள்ளுஞ் சக்தியில்லாமற்போன வஞ்சக மனத்தோனை இத்தரி யோதனனைக் கொல்லுகிற விஷயம் உனக்கு மெத்தவுஞ் சுலபமாக இருக்குமென்று ஞானினைக்கிறேன். யார்க்கும் அடங்காத யார்படைக் குந் தோற்காத அஜேயன். உனக்கு ஒப்பு இன்னொன்று எவர் சொல்லத்தக்கவர்?ள? ஏந்தலே! இதன்றியும் பூர்வத்தில் ராஜசபைபிற் சிலசபதங்களும் பேசியிருக்கின்றாய். அவைகளையும் நிதானித்து ஆத்திரப்படாமல் அவசரமில்லாமல் ஆலசியஞ்செய்யாமல் இது காறும் உன்மனத்தில் அடைத்துவைத்திருக்கின்ற வேகவெப் பத்தையும் துஷ்டர்கூடிச் செய்ததுன்பம் வஞ்சனை பொய்மை இவைகளையும் நினைத்து இன்றொடு கைகழுவி விடப்படியாய்க் கருதி மண்ணும் மலையும் மாமுங்கடலும் அதிரும்படியாய் விண்ணும் எண்ணும் வெங்கதிர் தண்கதிர் உள்ளகாள்வரைக்கும் உன்கீர்த்தி நிலைக்கும்படியாய் பாபத்தையும் பழியையும் மலையாக விளைத்து நிறைத்துக்கொண்ட இந்தப்படுபாவியாகிய வஞ்சகனுயிரைமாற்றி நீங்களெல்லாம்பேரும் வெங்களக்கீர்த்திபுனைந்து இம்மேதினியாண்டு மேன்மைபெற வேண்டியதென்று புகழ்ந்தார்.

தீர்த்தயாத்திரைசென்ற பலராமர்மீட்சி

இவ்விதமாக பீமசேனனைப் பெருமையாகப் புகழ்ந்த மாத்திரத் தில் பீமனுக்கு இயற்கையிலே விளங்கியவீரமானது பின்னுமேலாகி யது, பொற்பிரகாசமாகிய நற்புயங்கள் புளகித்துப் பூரித்துப்பரிதது மேலோங்கி வீரகண்டை தரித்தக்கால்கள் பூமியிற்பொருந்தாமல் காட் டானைமேற்றூவுகின்ற மோட்டாண்மைச் சிங்கம்போலாஞன் பீமன். இப்பால் பீமசேனனுங் தரியோதனனுஞ் சகலவாபரணங்களையுந் துலங்கத்தரித்த அலங்கிர்தத்துடனே சிவந்தைகைகளிற் றூங்கிய ஒப் பில்லாக்கதாயுதத்தைப் புரட்டிப் புரட்டித் திருப்பித் திருப்பிவிண்ண திர வெண்சங்கத்தை முழக்கித் திசாதிசைகளைத் திடுக்கிடப்படித்தி மகாசிற்றமனத்தராய் ஊற்றங்கொண்டு வந்து ஒருவருக்கொருவர் நேருக்குநேர் நின்றார்கள். அந்தவேளையில் தீர்த்தயாத்திரைக்குப் போயிருந்துவந்த வெள்ளைகிறம்பெற்ற பலராமர் ஒருதேரேறிக் கொண்டு இவர்கள் நிற்கின்ற போர்க்களத்துக்குவந்தார். அவரைக் கண்டமாயனும் மன்னரும் பஞ்சவருஞ் தேர் விட்டிழிந்து மிகுந்த

வேசவிசுவாச ஆசபாசமாய் எதிர்கொண்டுசென்று கைகொடுத்து உபசரித்து அழைத்துவந்தனர். பின்பு தருமராஜன் அவரைத் தழுவிக் கொண்டார். மற்றப்பேரெல்லோருமவரைத் துதித்துப் பாதத்திற் றொழுதார்கள். அவர்களையெல்லாம் பலராமர் கிருபை யுடனேக்கி மகிழ்ந்து உவந்து ஆசீர்வதித்துப் பீமனுந்துரியோதன னுங் கதாயுத்தஞ் செய்வதற்கு எத்தனப்பட்டிருக்கு மிடத்தில் வந்து சேர்ந்து "ஆ சமாச்சாரம் முடிவில் விப்படியாகவா முடிந்தது?" என்றேங்கி விசனந்தாங்கியபோது மொய்த்துளவணிந்த முகுந்தன் தம்முடைய தமையனுகிய பலராமரைப்பார்த்து அவர்காதுகிறையும் படிக்கு ஒன்றொழியாமற் சொல்ல ஆரம்பித்து அப்பாண்டவர்களுந் துரியோதனுதியரும் பதினெட்டக்குரோணி சேனைகளுடன் பதி னெட்டு நாளாகச் சண்டைசெய்த பான்மையும் மூண்டமர்புரிந்து மாண்டுபோன முதல்வர்களுடையபாடும் புத்திரமித்திராதியர் களுக்கு நேரிட்டகேடும் கடைசியிற் றலைவன் தலைக்கீகவந்திருக்கிற கேடும் இவைகளெல்லாம் இன்னின்னபடிக்கென்று விவரமாகச்சொல்லி அவைகேட்குப் பலராமர் மறுபேச்சு கேட்காதிருக்கும் படியாய் ஒருயுக்திபண்ணி "அண்ணு வெகுசீக்கிரத்தில் தீர்த்தபலன்பெற்று வந்தீர்போலும்! இவ்விடம்விட்டுப் புறப்பட்டு விதுரமகாராஜனோடு வெளிப்பட்ட தாங்கள் இதுகாறும் எங்கெங்கேபோனீர்கள்? எத்தெத்த தீர்த்தத்தில் மூழ்கினீர்கள்? எத்தெத்த ஸ்தலங்கண்டீர்கள்? எத்தெத் தப்பெரியோரைப் பார்த்தீர்கள்? அவ்வவ்விடங்களில் நீங்கள் கண்ட அதிசயமென்ன? நீங்களாடிய தீர்த்தங்களின் பெயரென்ன? அவற்றி னுடைய சிறப்பென்ன? பரிசுத்தமென்ன? மகத்துவமென்ன? இவை களையெல்லாம்எங்களுக்குச் சாங்கோபாங்கமாய்ச் சொல்லவேண்டும். அண்ணு தேவரீர் சொல்லுவதினால் உங்களுக்கும் அத்தீர்த்தமாடிய பலன் சித்திக்கவேண்டும்" என்று நீர்பெருங்கிய மேகம்போன்ற நெடியோன்கேட்கப் பெரியோனுகிய பலராமன் தருமராஜனுடைய முகத்தைப்பார்த்துச் சொல்லத்தொடங்கினர்.—

கேளும் தருமநந்தனு! சந்தனவிருக்ஷங்களும் அகில விருக்ஷங் களும் தேக்கமரங்களும் கொன்றைமரங்களும் முத்துக்களும் இரத்தினங்களும் தேன்களும் பலமலர்களும் முதன்மையாக அலை கள்தோறும் உந்திவரா நின்ற ஸரஸ்வதிநதிதீர்த்தத்திற் பெருகி வருகிற பிரபாசமென்னுஞ்சிறந்த பெயர்படைத்த தீர்த்தமொன்றிருக் கின்றது. அதனுடைய மகத்வம் என்னுற் சொல்லுந்தரமன்று. ஆன

போதிலும் ருக்குவேதங்கள் அதனைமகாமுக்கியமாகச் சொல்லுகின்றன. அந்தத்தீர்த்தத்தில் வேதவிதியின் வண்ணம் ஸ்நானஞ் செய்து தேவர்களானபேர்களையும் முனிவரான பேர்களையும் மனத்திற்றெருத்துச் சொல்லமுடியாது. அந்தத்தடத்தில் மண்டல ஸ்நானஞ்செய்து சந்திரனவன் தனக்குநேரிட்டசாபந்தீர்ந்தானும். ஆதலால் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அக்கம்பக்கங்களில் இன்னமுமுள்ள முன்வினைகளை வேரறுக்கும் பல புனல்களிலும்விரைந்து தோய்ந்து அவ்விடம் விட்டு நீங்கி அழகிற்சிறந்து சுத்தமாகிய ஸரஸ்வதி நதியானது ஏழுபிரிவாய்ப் பிரகாசிக்கின்ற ஓசைபெற்ற மடுவோரத்திலுற்று அவ்விடத்திலிருந்த அங்கணரென்னும் ஒரு கலைமுனியைக்கண்டு அவருடைய திருவடியிற்பணிந்தேன். அவருடைய சூழலிற் சிலகாளிருந்து அவரைத்தரிசித்து, அவ்விடத்தில் விஸ்தாரமாயிருக்கின்ற வெகுதீர்த்தங்களில் மூழ்கி அப்பாற்சென்று கௌசிகமுனிவரானவர்சித்திபெறும்படியாய்ச் சத்தியத் தவம்புரிந்த கௌசிகதீர்த்தத்திற் றோய்ந்து வசிஷ்ட முனிவருடைய சூழலடைந்து அவரைத் தரிசித்து அவர்போல் மருவிய வசிஷ்ட தீர்த்தமுதலாகிய மகாநதியாவு மூழ்கிக் கரையேறிச் சோமதீர்த்தந் தன்னைந்து பூர்வத்திற் சண்முகத்தேவனைத் தேவர்கள்பலருஞ் சென்றிறைஞ்சி வழிபட்டுப் பழிவிட்டுப் பேர்பெற்ற ஸரஸ்வதியாற்றின் கரையைமுடியாக அணிந்து மலர்ந்து மணந்தருளிய சரவணப்பொய்கையில் மாசிலாப்புனல் படிந்தேன்.

ஓ தருமநந்தனரே, இன்னுமந்தவிசாகப் பெருமானுடைய ஆலயங்கள்தோறும் புகுந்து அவ்விடத்தி லிருக்குந் தீர்த்தங்களுமாடிப் பலபலஸ்தலங்களுந் தீர்த்தங்களும் ஆச்சிரமங்களுங்கண்டுவந்தேன். அக்கினிபகவான் பூர்வந் தவஞ் செய்தசாலையும் ஹரியானவர் தவம் புரிந்தசாலையும் மங்கையாகிய கௌசிகை மாநதியாய்ப் படர்ந்த இடமும் தேவேந்திரன் தவஞ்செய்தவனமும் இந்த இடங்கங்களிலெல்லாம் வாசம்பண்ணி அங்கங்குள்ள நதிகளில் மூழ்கி இந்த அஸ்தினபுரவெல்லையை யடைந்தேன். அங்கு நாரதமகாமுனிவர் வந்தார். அவரை நான் வணங்கி இருகரத்தையுஞ் சிரத்திற்குவித்து இங்கே நடந்த போர்த்திறத்தைச் சொல்லவேண்டுமென்று விரும்பிக்கேட்டேன். அப்போது நாரதர் மனமகிழ்ந்து "ஓபலராமா, இப்பதினெட்டு நாள் நடந்தயுத்த பராக்கிரமத்தை யென்னென்று சொல்லுவேன். கங்காபுத்திரனும் சிலையாரியனுகிய துரோணனும் கர்ணனும்மத்திர

ராஜனும் சகுனிபாகிய சௌபலனும் அவன்பிள்ளைகளும் ஏனை வேந்தர்களும் துரியோதனராஜனுடைய சகோதரரும் புத்திராதியரும் மித்திராதியரும் பொளத்ராதியரும் கொலைத்தார்கள். அந்த வருத்தத்தினால் மாழ்கி வருந்தி ஒங்கிப்பொங்கும் பாம்புக்கொடி படைத்த துரியோதனமகாராஜனாகிய பூமான் இப்போது சிபமந்த பஞ்சகதீர்த்தத்தருகில் பீமசேனனோடு கதாயுத்தம் புரிவதற்குப் புகுந்திருக்கின்றனனென்று சொல்லிப்போயினர். அதையும் என்னோடிருந்த விதுராஜன்கேட்டு, "மற்றக்காரியமு முடிவாகின்ற வரையில் அஸ்தினபுரமும் போகேன்; அமர்க்களத்திற்கும் வாரேன்" என்று அங்கோர் மருதநிலச் சார்பில் மருவிவிட்டார். நான்மாத்திரம் அறிந்து போகும்படியாய் இவ்விடத்திற்குவந்தேன்' என்று வெள்ளை மேனியனாகிய பலராமர்சொல்லினர்.

இப்படி பன்னாள் திரிந்தவர்களைப்போற் சின்னாளிற் பலன்பெற்று வந்த பலராமருடைய திருமொழிகளெல்லாவற்றையுங் கேட்ட பாண்டவரைவரும் பரிமளத்துழாயோனாகிய பாண்டவர் சகாயனும் அற்புதமடைந்து, பதினெட்டுநாளும் நடந்த யுத்தத்தன்மைகள் யாவையும் ஒன்றேனுஞ்சோராமற் சொல்லி, வாயுகுமாரனையும் அழகிய சௌபலன் பாவைபளித்த ராஜாதி ராஜனையும் கமலக்காசீட்டிப் புகழ்பெறக்காட்டி, அவ்விடத்தில் அவர்களப்போது யுத்தஞ் செய்யப் போகின்ற செய்கையின் துணிபையுஞ் சொன்னார்கள். அந்தமொழியைக் கேட்ட பலராமரானவர் "மன்னர்க்குரியது அன்னமே உறுதி" என்று சொல்லி, கதைகொண்டு நிற்கின்ற அவர்களுடைய முகத்தைப்பார்த்தார். அப்போது அரசர்க்கரசனாகிய அர்வக்கொடியோனும் வாயுபுத்திரனாகிய சிங்கக்கொடியோனும் ஹலாம்பரனாகிய பலராமரைப்பார்த்து, சிரத்திற்கரங்கள்குவித்து வணங்கினர்கள். அவர்களுக்கு உடனே ஆசீர்வசனம்பண்ணி, "நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள்" என்று திருவாய்மலர்ந்தார்.

துரியோதனனுக்கும் பீமனுக்கும் கதாயுத்தம்

இப்பாலவருடைய பூரணதிருஷ்டியாகிய கல்லவனைப்பெற்ற பீமசேனனுக் துரியோதனனும் ஒருவரையொருவர் பார்த்து, ஏற நோக்கி, எரியவிழித்து, வெஞ்சினமும் பெருமையும் வெற்றியும் உண்டாகத்தக்கதாய் ஒருவருடன் ஒருவர் பேசினார்கள். ஒருவரை யொருவர் ஏசினார்கள். தவளைக்குதிப்பு, குரங்குத்தாவல், ரிஷபக் குமாளம், வேங்கைநோக்கம், சிங்கப் பாய்ச்சல், யானை ஓட்டம் இப் படியாகப் பாய்ந்தார்கள்; பதறினார்கள்; கதறினார்கள்; உடலுதறினார் கள்; தெறித்தார்கள்; செழித்தார்கள்; யுத்தத்துக்கு அறைகூவியழைத் தார்கள். ஒருவருக்குள் ஒருவர் நுழைந்தனர். ஒருவரிடத்தில் ஒருவர் குழைந்தார்கள்! பூமியிற்குனிந்தார்கள்; பூரித்தெழுந்து நிமிர்ந்தார் கள்! இடக்கரம் வலக்கரஞ் சுழற்றினார்கள். வலக்கால் இடக்கால்மாறி மாறி அடிவைத்தார்கள். டிங்கடித்து மல்லாந்தார்கள். சக்கரம் பாம்பு, தவளை, அரணை, அட்டை, முன்னேக்கம், பக்கம், பாரிசம், சுழற்சி இவை முதலாகிய தண்டாலெடுத்தார்கள்—இன்னும் பலவாறுகிய சிலம்படிக ளெல்லாம் நடத்தி உடம்பின் திமிர்மாற்றி, கரண மிட்டு, பூமியும் ஆகாயமும் பிளந்து நடுங்கச்செய்தார்கள். இப்படியாக இவ் விருவருஞ் சிலம்பங்கள் புரிந்து வலமிடங்கட்டி ஒட்டிநிற்கின்ற காலை யில், வாசனைபொருந்திய நறுமலரணிந்த கூந்தலையுடைய காந்தாரி புத்திரனுகிய துரியோதனன் முகத்தைக் குந்தி தேவிபுத்திரனுகிய பீமசேனன்பார்த்து, பலவாறுகிய கொடுஞ் சொற்களைச் சொல்லு கிறான்.—

"கந்தநறு மலர்க்கூந்தற் காந்தாரி புதல்வா நீ
எந்தமதி கொண்டிங்க னெய்தினையோ வறியகிலேன்
கந்தருவ ரன்றுன்னைக் கட்டியதோள்வலிகொண்டோ
சிந்தைதனின் வலிகொண்டோ செருச்செய நீபுகுந்தாயே"

அடாதுரியோதனு! கதாயுத்தஞ் செய்யவாவந்தாய்!ஐயோ திருதராஷ் டிரனுடைய மைந்தா! உள்ளம் மெத்தவெந்தாய், இதோ என்கதை யால் சொந்தாய்!" என்று எகிறி, இந்தப்பக்கத் திலிருந்தவன் அந்தப் பக்கத்திற்குதித்து நின்று, அப்பா ஏன்னபலங்கொண்டு யுத்தஞ்

செய்யவந்தாய்? உன்னையும் தம்பிமார்களையும், உன் பெண்சாதிமார் முதலிய பெண்களையும், உனக்குரிய யாவரையும ஒன்றுசேர்த்து இறுகக்கட்டிக் கந்தருவராஜன் கடக்கக்கொண்டுபோன காலையில், அவனை ஜயித்துக் கொண்டுவந்த உன்தோள் வல்லமையைக் கொண்டோ? அல்லது நீ பிறந்தகாள் முதற்கொண்டு உன்சிந்தைவிட்டு நீங்காதிருக்கும் வஞ்சகம் பாவமுதலிய கைதவவழியைக் கொண்டோ? இப்போது இங்கே செருச்செய்வதற்குத் துணிந்துபுகுந்தாய்? அடா மகாபாதகா, வாவா இன்றையதினம் உன்னைக்கொன்று, கொடிய எமனுக்கு நீராகார போஜனமாக உண்ணும்படியாய் விருந்துசெய்து, நான்தலைகாளிற்கூறிய சபதங்களையு முடித்து, கறுப்பார்ந்த தாழலை முடிக்காமற் கண்கலக்கப்பட்டுக் கொண்டிருக்குங் கருங்கண்ணியாகிய கற்புடைய திரௌபதாதேவியின் கூந்தலும் முடித்து, என்சமீகாதரருடன் களித்து இந்தப்பூமியையும் ஆளுகிறேன். இதற்குயாதொரு சந்தேகமுமில்லை. நீமோத்திரம் இதுவரையிலும் பிழைப்போ மென்றிருந்த புத்தியெல்லாம் விட்டுவிட்டு, இப்போதாகிலுஞ் சிக்கிரமாய் வந்து இரணகளத்திற் பட்டுப்போவதற்குக் கடிகிவா — என்று அழைத்தான்.

இப்படிபீமசேனன் ஆவேசங்கொண்டு கூறியமொழிகளைத் துரியோதனன்கேட்டு, அந்தப் பீமனைஏறேரக்கி, "ஏனப்பாகுதிக்கிறாய்? இவ்வுலகத்தில் தங்கள் தங்கள் மட்டுந்தாங்கள் பிழைக்கும் படியாய் நினைப்பார்கள். ஒருவரும் தான்சாக மருந்தருந்தார்கள். அப்படித்தின்ன நினைத்தபோதிலும் அவர்களுடைய பூர்வவினையின் படி முடியுமல்லது வேறொருவிதமாய் முடியமாட்டாது. ஆகையால், மின்னற்கொடி போன்ற அந்தத் திரௌபதையின் கருத்தும் உன்னுடைய ஏண்ணமுங்கெட்டு,என்னுடைய நல்வினைப்பயனது உன்னுடைய திடத்தையுந் திறத்தையும்அழித்து, இந்தக்கதாயுதத்தினால் என்கருத்தின்படி முடித்து நிறைவேற்றுவிடுமாகில், நீ அப்போது எங்கிருப்பாய்?கூந்தல் முடிக்கப் போகிறவள் எங்கிருந்து முடிப்பாள்? இதையெனக்குச்சொல்.அடாபீமா! நீ அவலபுத்தியுள்ளவனுகையாற் சந்தோஷப்படுகிறாய். ஆனால் தெய்வச்செயல் எப்படியோ, ஊழ்வினைப்பயன் எப்படியோ, உன்பக்கத்தில் நெருங்கியிருக்குஞ் சமீகாதரருடைய உற்சாகத்தினாலும், நிலசேனைகளின் பெருக்கத்தினாலும் உன்னை நீமறந்து, உன்சிந்தை மயக்கத்தினாற் பொங்கிவழிந்து மகிழ்ந்து இம்மொழி சொன்னாய். நல்லதுபீமா உங்கள் ஐந்துபேரை

யும் என் கையிலிருக்கும் இந்தக் கதையாற்புடைத்து, உங்கள்கருத் தனைத்தும் ஒருங்கேமுடிந்து போகும்படி முடித்து இந்தப் பஞ்சா சதகோடி பூமண்டலத்தையும் காளை ஆளுகிறேன். தப்பாதாளுகி றேன். எதிர்த்துவந்து கில்லு! விரைந்துவா!" என்று புரவலர் கோமானுகிய துரியோதனனென்னும் புயங்கமேதனன் புகன்றான்.

இப்பால் ஓயாகடையோனுகிய வாயுகுமாரனென்னும் வெற்றி பெற்ற பீமசேனனும் கண்ணில்லாக் காவலனுகிய திருதராஷ்டிர னுடைய முதற்குமாரன் துரியோதனனும், ஒருவர்க் கொருவர் அடங்கொண்டு ஆகாயத்திற்பலத்துடன் மேகங்களிடிக்குமாறுபோல் அதிர்த்தமுழக்கி, நெடுக்குங்குறுக்குமாயோடி, மதங்கொண்ட யானை போலும், விருஷபம்போலும் ஆண்சிங்கம்போலும் மதர்த்து எதிர்த் துப் பிரதாபம்பேசி, விஜயம்புகழ்ந்து மிகுந்துமேலிட்டு, கடையுகத் திற்சுற்றிக்குங் காற்றின் முழக்கம்போற் கதையுடன் கதைமோதிப் போர்திகரித்து, ஒருவரையொருவர் மறித்து, பாரியமலையுடன் மலை பகைத்து எதிர்த்ததைப்போற் பதைத்து ஆகாயத்தில் வேடிக்கை பார்க்க நிறைந்ததேவர்க ளெல்லாரும் இவர்களுக்கு யாரை ஒப்புச் சொல்லுவோமென்று யோசித்து வேறே ருவமையில்லாமல் தங்க ளுக்குத் தாங்களே நிதானித்துக் கொள்ளும்படியாய் விஸ்தாரமாகிய அமர்புரிந்தார்கள். அப்பால், மனமெலிந்து கோபமாகச்சிரித்து மேலு மேலு மூலாதாரங் காந்தி வெம்பொறியெழுந்து பறக்கப் பகைத்து, இளைக்காத வீரரிருவரும் ஆகாயத்தின்மேற் பாய்ந்தார்கள். அந்தரத் திலுலாவினர்கள்; மறுபடியும் பூமியிற் குதித்தார்கள்; வெகுளிமே லிட்டார்கள்; திசாதிசைகளிற் ருவினர்கள்; விசையுடன் போரா தரித்துப் பொருதலுற்றார்கள். சந்தோஷத்தினுல் ஒருவரையொரு வர் பார்த்துக் கலகலவென்று நகைத்தார்கள். மீண்ட கோபமேற் கொண்டு உதட்டை மடித்தார்கள். வாயிலும், காதிலும், மூக்கிலும் புகையெழும்படி உருட்டிக் கண்விழித்தார்கள். அலங்கரிக்கப்பட்ட மலையைப்போல் மார்பைக்காட்டித் துடிதுடித்தார்கள். இருதோளை யுந் தட்டினர்கள். இப்படி கதாயுத்தசாஸ்திரங்கற்ற கல்விமான்களா கிய கடுஞ்சூரர் மெச்சும்படியாய்ச் சாரிகையிட்டார்கள். இடம்வலம் வலம் இடம் சுழன்றார்கள். வாயைமடித்து நறநறவென்று பல்லைக் கடித்து, ஒருவர்மீதொருவர் மேலாகத் தாண்டினர்கள். ஒருவர் மூதி கில் ஒருவர் குதித்தார்கள். பூமியிற்சுழன்று குயவன் திகிரிபோலாடி மூச்சைக் கும்பித்துக் குமாளித்தார்கள். ஒரு கையினுலே கதையைப்

பிடித்துக் கரகரவென்று சுழற்றி ஆகாயத்திலெறிந்தார்கள். அத்தக் கதாயுதமானது அண்டமுகடு உடைபடும்படியாய் மேலே சென்று அங்கிருந்து அதிர்ந்து பூமிமேல் வீழவரும்போது மற்றொருகை யாற் பிடித்து, உடனேவானத்தில் விடுத்து, அஃதம்பரவாணர்கலங் கியகலக் கெடுத்து மறுபடி திரும்பிக்கனத்த தலையைப் பூமியிலுட்டி விழும்போது பின்பக்கமாகிய சிறுத்த நுனியைக் கையிற்பிடித்துச் சிரித்தார்கள். ஒருபக்கத்துக்கு ஒருபக்கஞ்சார்பாக அடித்து வீர விருதுகளைப்பேசி நிருத்தமாடினார்கள். வேகமாகக் கிட்டநெருங்கிக் காலுடன் கால்பிணைத்து இணைத்து, மடமடவென்று சாரைப்பாம் பும் நாகப்பாம்பும் பின்வாங்குந்தன்மைபோல் இழுத்து, கொழுத்துப் பழுத்த பனைபோற் பகைத்தார்கள். பொருபடைநூலாய்ந்த மேலோர் களும் போர்ப்படைகளைக் கையிற்றுங்கிய குலக்குமாரர்களும் இவரின் மிக்காரில்லையென்று புகழும்படிக்கு நேருக்குநேர்நுழைத்து நெடுந் தூரம் உலாவிச் சுலாவினர்கள். இவ்விருவருங் குறுகிப் பதைபதைத் துக்கதையுடன் கதை இடிக்கும் ஓசையும், ஒருவர் வீரங்களைப்பொரு வர் பழித்துப் பேசிப்பகைத்து நகைக்கு மோசையும், எதிரெதிர் நெருங்கிப் போர்புரியும்போது வாதுபேசும் ஓசையும், கீர்த்தியுடன் மேலிட்டு ஒருவரையொருவர் அடிக்குமோசையும், பதயுகங்களைப் பாரில் உறுத்திவைக்குமோசையும், பலவித சங்கங்களைப் பாரித்துப் பூரிக்குமோசையும், அதலவிதலசுதல முதலிய யாவும்நுழைந்து, அண்டரண்டமுதலிய வானுலகத்துளும் பெருகி, கடல்சூழ்ந்தவை யகமெல்லாம் விபாகூலமடைந்து கலங்கும்படிக்காயது.

அந்தவேளையில் வணங்காமுடிமன்னன் பூமிமேற்புரண்டு, சுவர சமில்லாமல் அடங்கி, கண்களைத் திறவாமல்மூடி, கைகால்பதற உழன்று, வழியுங் குருதியிற்றோய்ந்து, வாடியமனத்தால் வீடிய பெருமூச்சு விட்டெழுந்து, உரங்களையும் மணல்களையுந் துடைத் துக்கொண்டிகழ்ந்து, உக்கிரமாகக்குதித்து, விக்கிரமம் பாடிக்கதித்து, இடியோசை கேட்டபாம்பைப் போல் யாவரும் எங்கிப் பின்வாங்கிப் பெருந்தூக்கந்தூங்கிப் போகும்படியாய்க் கையைத்தூக்கி, தன் தேகத்தையசைத்து உதறியாட்டி, ஒருபக்கமாய் மகோவீரமுற்று நிற்கின்ற பீமசேனனை முறைமையாக நேர்குறுகிக் கிட்டமுட்டி மோதினான். அத்தமோதலைத் தட்டி பீமசேனனும் நெட்டினான். இப்பிரகாரம் ஓமாக்கினியில் அவிர்ப்பாகங் கொள்ளவந்த அக்கினியும் வாயுதேவனும் பகைத்துச் சமராடியது போலும்

வாக்கினாலு மனத்தினாலு மதிக்கப் படாதவீரர் ஒருவரையொருவர் மதியாமற்போர்புரிந்தது போலும் பீமனுந் துரியோதனனுமனும் வேகம்பொருந்திய வீரியராய் முனைந்து, சேமமாகிய வெங்கதை யால் நீடிய அமர்கூடி, இந்தக் கதாயுதத்திற்றேறி யிருக்குந் திட வீரர்களெல் லோருங் கண்களை மூடிக்கொண்டு சலங்கும் படியாய்ப் போர்செய்தார்கள்.

இந்தப்படி சிங்கக்கொடியோனும் நாகக்கொடியோனும் வீசு கின்ற கதாயுதத்தின் ஆரபார ஓசையானது அதிகரிக்கவும், தாவிச் சொல்லுஞ் சப்தமாபூட்டி ஒற்றைச் சக்கரத்தையுடைய தேராளி யான சூரியன் கதிமாறி, விதிமாறி, இடமாறி, தடமாறிக் கொதிப் பேறி, குலையேறிக் குறைவேறி நின்றான். வானவர்களுந் தான வர்களும் நாவடங்கி, நகைபடங்கி, நலமடங்கி, வாயடங்கி, ஓடுங்கி ஒதுங்கி நின்றார்கள். மகத்தாகிய யோகர்களும் நாகர்களும் பஞ்சு போலஞ்சிப் படிந்தார்கள். பிர்ம்மா விஷ்ணு உருத்திரன் என்னுமும் மூர்த்திகளும் இனி நடக்கப்போகிறவழி யெப்படி யென்று ஞானத் தால் நாடினார்கள். மூடிக்கவிந்திருக்கும் அண்டரண்டமானது படீ ரென வெடித்துத் தொண்டியாய்ப் போகும்படியாயது. இவ்வித மாகப் போராடியகாலையில் துரியோதனன் அடிக்கிற அடியெல்லாம் பீமசேனனுடைய உயிர்நிலையான முடிமேற்சாடுகிறான். அப்படிச் சாடியும் இவனுடைய நற்றவப்பலத்தினால் அவனுடைய அடி இவ னைக் கொல்லுதற் குரித்தாகிய கொடுமைவினைக்கச் சக்தியில்லாமற் போயது. அப்படிபோயும் உயிர்நிலையானதாற் பிராணன் போகும் படியான மூர்ச்சைக்கிடாக மகாபாடுபடுகின்றான். பீமசேனன் துரியோதனனுக்கு எத்தனை அடிதலைமேலடித்தாலும் அவனுக்கு உயிர்நிலை அந்த இடமல்லாமையால், அத்தனையும் அவனை வருத்தப் படுத்தி உயிர்வாங்காமற்போனாலும், இந்தப்பீமன் அடிக்கும் உறுதி யினால் அவனுக்குப் பிராணகண்டத்துக்குவந்து அதனால் அவன் அடிக்கடி சோஷைபோய், பிழைப்பானேனை பிழையானேனை என்று சந்தேகிக்கும் படியாகின்றது. ஆனால் பிராணன் போகவில்லை.

துரியோதனனும் பீமசேனனும் ஒருவர்க் கொருவர் உயிர்நிலைகேட்டுப் போராடல்

இப்படியாகும்படியாய் இவர்களிருவரும் கேருக்குகோராய் நின்று புரியாநின்ற போரில் ஒருவரையொருவர் மாறிமாறிக் கதையினால் அடித்தபோது, மேனியும், தோள்களும், கண்ணங்களும், மார்பும், சிரமும், அடிகளும், தொடைகளும், விலாப்புறங்களும், ஆகிய அவயவங்களெல்லாம் நெரிந்து, பிதிர்ந்து, அதிர்ந்து, வழிந்து, இரத்தங்கள்பாய நரம்புகளறுந்து, அங்கங்கே நெருப்புப்பொறிபறக்க, எங்கங்கு முறித்த நிணந் தெறிக்க, இதுவரையிலு மித்தகைய கொடுமைகளைக்காணுதற்போர்கள் கண்டிலவிக்க, கண்டபோர்கள் கலித்து வேறுவிதமாய்ச் சொல்ல வல்லமையில்லாமல் வெறுக்க, இந்தச் சண்டையின் பெருமிதத்தைத் தேவர்களிலுஞ் சொல்லத்தக்கவர்களில்லாமற் பிணையல் மாலையுண்ட போர்வீரர்களெல்லோருந் திடுக்கிட்டுத் துணுக்கமாஞர்கள். சிங்கத்தைக் கொடியிலெழுதிப்படைத்த பீமனும், நாகேறு தீட்டிய நற்கொடியாட்டிய துரியோதனனும், உரித்தாகியயுத்தத்தை ஆகரித்து, ஒருவரோடொருவர் உடல்பதறியற, உயிர்குமிரியுற, யுத்தஞ்செய்து, மகாமேருவின்முடியை மேனுலொடித்த வாயுவின்மதலையை ஈரேழுலகுக்கும் ஏகசக்காதிபதியாகிய இறைவன் சற்றேயிளைத்தவனுகிச் சோர்ந்து, தனக்குள்ளே ஓர் வஞ்சகநினைவுகொண்டு பெருமூச்சுவிட்டு, தன்சொல் தடுமாறும்படியானநிலையில் பீமனைப்பார்த்து, "ஆ! பீமா! நல்லது இனிகாமிருவரும் உயிர்நிலைசொல்லிக்கொண்டு யுத்தம்பண்ணுவோம். அதுதான் சுத்தவீரருக்குள்ள லக்ஷணம். அதுதானிப்போருக்கு வீரத்திறம். இதிலேதான் தம்மிருவர் திராணியுந் தெரியவேண்டும். எங்கே நீ ஒளிக்காமல் உன்னுயிர் நிலைபைச்சொல் பார்ப்போம்" என்ருன்.

இப்படிச்சொல்லி வாய்மூடிமுன்னே இருவினையுணர்ந்த தருமகுமாரனுடைய இளவலாகிய பீமசேனன் துரியோதனனைப் பார்த்து, "அடாபாவி நாமிருவம் எதிர்த்துப் போர்புரியும் உண்மையில் நான்ஒளித்துச் சொல்லுவேனு? உயிரைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென்னும் இச்சையையுடைய நீமறைத்துசொன்னுலுஞ் சொல்லுவாய். இருந்தாலும் இறந்தாலும் சத்தியமேநித்தியம்,

அப்பா துரியோதனு என்னுடைய தலையிலுள்ளது எனக்குயிர் நிலை"என்று சொன்னன். அவன்சொல்லி வாய்ஓயுமுன்னே பெரு மாறுகிய சுயோதனன் பெருங்கதையையோங்கி பீமனுடைய மூடிமேல்மோதினன். அப்போது பிரளயகாலத்திடிபோல் ஓசை பட்டுவிழுந்த தெப்பலினால் பீமசேனன் ஆகுலமடைந்து, உடல யர்ந்து உயிர்ப்பபந்து விசாலமான பூமியின்மேல் விழுந்தான். ஆயினும் இறக்கஇல்லை. எனென்றால் விதியின் உறுதிபினாலும், வினையின் பலத்தினனும், மெய்மையின் உதவியினாலும், வாயுதேவனுடைய உபசார சகாயத்தினாலும், அடங்கலுக்கும் புறம்பாகிய ஆதிமூலப் பொருளின் அநுக்கிரகத்தினாலும் பூமியில்விழுந்த பீமன் கலக்க மாறித்தேறி, மீட்டும் வீறிமீறியெழுந்து பலவாய்மை கூறிச்சீறி, துரியோதனனை நோக்கி, "ஓ விவேகம்பெற்ற வேந்தனே, நீ கேட்ட படி என்னுடைய உயிர்நிலையைச் சொன்னேன். இப்போது நான் நிதானிக்கும்படியாய் உன்னுடைய உயிர்நிலையைச் சொல் பார்ப் போம்"என்று பீமசேனன்கேட்டான். எதிரியான துரியோதனன் உண்மையைச் சொல்லாமல் மறைத்து, "எனக்குக் தலையில்தான் உயிர்நிலையென்றான்"என்று சொன்னவுடனே பீமசேனன்முனைந்து, முதிர்ந்த கதாயுதத்தைக் கைக்கொண்டு மதித்து நிதானித்து, துரியோதனனுடைய தலைமேல் மோதினன். இவன் அடித்த அடி யானது மூடிபொறுத்த தங்கள் தலைமேல்விழுந்ததைப்போல் வானிலுள்ளோர்யாரும் திடுக்கிட்டார்கள். காகிலாகத் தார்களும் இந்த ரானிலத்தோர்களும் அவ்வாறேயெண்ணிக் கலங்கினர்கள்.

ஐயா அரசே துரியோதனனுக்கு உயிர் நிலை தலையிலில்லாமற் போனாலும், இந்த பீமனடித்த உறுதியினால் அவனுக்குப்பிராணன் போய் மறுபிராணன்வந்து, பூமிமேல்விழுந்து, கருத்துமாறிமயங்கி, அந்தக்ஷணமெழுந்து புத்திபூர்வமாய் நிதானித்து, தன் கதாயுதம் கைக்கொண்டு வேகமாகச்சென்று, பீமனுக்கு எதிர்போய்நின்று, மறுபடியும் அவன்தலைமேலோங்கி அடித்தான். அந்த அடியினால் பீமன்தலை பிளந்துபோச்சென்று சுற்றத்தினர்கள் அயிர்த்துக்களைத்து, சண்டைசெய்யும் பூமிமேற்சாய்ந்துசலித்து ஓய்ந்து மாய்ந்தவரைப் போல் நின்றான். அப்படி அயர்ந்துநிற்கின்ற பீமனைத் துரியோதனன் பார்த்து, "இப்போது நிற்கக்கூடாது. சுடச்சுடஓடிவா" என்றுபெரு மூச்சுவிட்டுக்கறுவி, உரக்கக்கூவி எதிர்புகுந்தான். அவன்வருவதைப் பார்த்த பீமசேனன் திடதைரியத்துடன் எதிர்த்து,முன்னடித்த அடி

வசந்தப்பிப் போயிற்றே, என்னவோ என்று பின்னுந் துரியோதன னுடைய தலைமேலோரடி வாங்கினன். கதாபாணிகளுக்குள்ளே இணைசொல்லுவதற்கு ஈடில்லாத பீமசேனன் அடித்தபோது துரியோதனனுடைய உயர்ந்த தலையானது பிளந்து கிழிந்து, எட்டுத்திசையினும் பெருகிப் பீரிட்டொழுகு முதிரமருவி, அருவி பெருகிய லேகிரி இதுதானென்று சொல்லும் படியாய்ப் பூமிமேல் உடல்சாய்ந்தான். அப்படி அவன் அயர்ந்து வீழ்ந்ததைப்பார்த்த பீமசேனன் மிகுந்த விசாலமான தன்னுடைய ஆண்மையை விருதர் முதலாகிய வீரர்கள் கண்டு புகழும்படியாய் ஆ ஆ வென்று ஆக்கிரமித்துக் கொக்கரித்து, மகா எக்களிப்புடையவனுய் இறுமாந்துவந்தான்.

அருச்சுனன் கண்ணன் கிருபையால் துரி யோதன னுயிர்நிலை யறிந்து பீமனுக் குணர்த்த, உடனே அவனையடித் துச் சாய்த்தல்

கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே, கந்தியாவட்டமாலை யணிந்த நாரதிபனுடன் போர்செய்துவந்த பீமசேனன் எத்தனை பல சாலியாருந்த போதிலும் உயிர்ஸ்தானத்தில் அடிவிழுமாகில் அவன் என்னபாடுபடான் ? எவனும் உயிர்நிலைகுலைந்து நடுநடுங்கிவருந்து வானல்லவா? அதனல் பீமசேனன் உறங்கி உழன்று தாழ்ந்து தளர்ந்து வாடி வதங்கிவருகின்றன். அப்படியிருந்த போதிலும் எதிரிக்கு இளைக்காமற் பிராணனைக் கையிற்பிடித்துக்கொண்டு, அத்தப் பிராணனுக்கு மானமென்னுங் கவசமணிந்து, வீரமென்னுங் கொழுமைகொடுத்து, பலவிதத்தினும் பாடுபட்டுத் தன்னுற்கூடிய மட்டும் போராடி வருகின்றன். இப்படி பீமசேனன்படுகின்ற பாட்டை விஜயன்கண்டுவெம்பி, "ஓ'ஓ அண்ணனுக்கு ஆபத்துவந்துவிட்டது. காரியம் பிசகாயிற்று" என்று சீக்கிரத்தில் தனது தேர்விடுந் திருமா லுடையதிருவடியில் திருமுடிகொண்ட சிரத்தைத்தாழ்த்தி, "ஸ்ரீநா தா! தீனரட்சகா! தீனபந்து! தீனதயாளுவே! விரைவிலே திருக்கண் ணேக்கம்வையும். ஆச்சு தமதுபேருக்குக் குறைச்சல் நேரிடுமாறு போல் வாய்ச்சுது. மிகுமோசமாயிருக்கிறது. பீமசேனனுகிய எங்கள் அண்ணுபேச்சு தளர்ந்தது. ஓ மேகவண்ணு ஓ தாமரைக் கண்ணு இனியாதோ உமதுசெயல் ? இதற்கோருபாயம் உடனே

நீர் பண்ணவேண்டும்" என்று அருச்சுனன் சொல்ல, அதைக்கேட்ட முரர்ரியும் நாரியுமாகிய முகுந்தன் அருச்சுன னுடைய காதில் உபதேசம்போற் சொல்லுகின்றார்—

ஓ ஆகண்டவனளித்த அருச்சுனு, நீமெத்தவும் நயந்து பயந்து விசனப்படுகிறாய். நான்சொல்லுகிற உறுதிபைக்கேள். இப்போது நடக்குங் கதாயுத்தம்போல் நேருக்குநேர் நின்றுபோர்புரியும் பலவீரர் களிலும் வாயுகுமாரனுகிய நமது பீமசேனன் மிகுந்தபலவான். இவ னைப்பார்க்கிலுஞ் சிறந்த பலவான் திரிதராஷ்டிரன் பிள்ளையாகிய துரியோதனன்; இவனிலைக்கமாட்டான். இவர்களிருவரும் இவ்வுலக மும் அவ்வுலகமும் புகழும்படியானவர்கள். அநேகமாயிரநாள் இவ்வித மாகிய யுத்தஞ்செய்தபோதிலும் சாகார்கள்; ஒருக்காலு மடிந்து வானகம் புகமாட்டார்கள். ஆனல் மாறுகொண்டுபகைத்து அந்தத் துரியோதன னுடைய ஆவியைச் சுவர்க்கலோகத்துக்கு அனுப்பிவிட வேண்டு மென்கிற இஷ்டம் உனக்கிருக்குமாகில், ஒருசூழ்ச்சியிருக் கிறது. அதைவாக்கினுற் சொன்னல் மகாபாவம். நான்போய்ச்சொல் வது நன்மையல்ல. இதுதான்மகா வஞ்சகமென்பது. ஆகிலும் அழகியபமாருதியாகிய பீமன் மகாபுத்திசாலிதான். ஆனபோதிலும் முன்னே தான்கூறிய சபதத்தைமறந்து, எந்தக்காரியத்திற் பிரவே சிக்கின்றானே அந்தக்காரியத்திலேயே ஞாபகமிருத்திக்கொண்டு, ஒரேபிடியாய் முரட்டுத்தனங் கொண்டிருக்கிறான். இதுவா காரியம்? அர்ச்சுனு அப்படிக்கில்லாமற் சூக்ஷுமசூக்ஷுமங்கள் கண்டுகொண்டு போர்செய்வானுகில், திரிதராஷ்டிரனுக்குப் பிறந்த நூறுபிள்ளைக ளிற் சிரேஷ்டாதிக்ய முதல்வனுகிய இந்தத் துரியோதனமகாராஜன் பிராணனை எப்போதே முடித்து விடலாம். ஓ பூணணிமார்பினை யுடைய புண்ணியனே இதனைகன்றாய் யோசித்துப்பார்" என்று கண்ணன்சொல்ல, அண்ணலே அஃதெப்படியென்று அருச்சு னன்கேட்க, "அப்பனே பின்னை வேறொன்று மில்லை. கதாயுத்தஞ் செய்யவேண்டிய விதிதப்பிச்செய்தால் அதுகுற்றமாயிற்றே யென்று பயப்படாமலும் பழைய ஞாபகத்தை மறக்காமலும், இந்தத் துரியோ தனனுடைய துடையில்மோதினுல், பெருங்கடலுடன் ஏழுகடலும்வளைந்த பூமிபாரம் ஒருகணத்தில் நீங்கும். நீங்களே வருங் குற்றமில்லாமல் ஏழுலகத்திலுங் கீர்த்திநிறுத்திப் பட்டாபி ஷேகராய்வாழும் வாழ்வைப்பெறுவீர்கள். வலியதயரங்களெல்லா மாறிப்போம்" என்று திருவாய்மலர்ந்தருளினர்,

அந்தத் திருவாய்மொழியைச் சிலேவிஜயன் கேட்டு மகிழ்ந்து, பழமையாகிய மறையிலும் பதின்மடங்கதிகமாகிய பகவானது வாய்மையின்படிக்குப் பீமசேனனுடைய வாள்விழிக்கு நேராகச் சென்றுநின்று, அவன் பார்க்கும்படியாகக் கரத்தையுஞ்சிரத்தையும் ஆட்டி, அன்றலர்ந்த அரவிந்தம்போன்ற தனது உள்ளங்கையைக் கூட்டி, துடையின்மீது அடிக்குந்தன்மையாய் நாட்டி ஞாபகமூட்டினன். கேளும்ஜெனமேஜெய மகாராஜனே இப்படி நாரணனுடைய தயவிஞல் தம்பியாகிய அருச்சுனன் மௌனக்குறியாகக்காட்டிய குறிப்பை ஞானபண்டிதனெனிய குமாரன் அறிந்து, ஆ! ஆ! வென்று ஆங்காரமிட்டெழுந்து, துரியோதனராஜனுக்கு எதிரிற்பாய்ந்து, அவனுடைய துடையின் பெரிலோங்கி ஓரடிவாங்கினன். அப்படியடித்த ஓரடியுடனிறுத்தாமல் தாண்டித்தாண்டி மீண்டுமீண்டு மாறிமாறிமோதினன். இந்த வேடிக்கையைப்பார்த்த இந்திரன் முதலிய தேவர்களெல்லோரும் ஆநந்தமடைந்து, தேவதுந்துபி முதலாகிய வாத்தியங்கள் முழக்கி, மாந்தாரம், பாரிஜாதம், தேவதாரம், அரிச்சந்தனம், கற்பகம் இவைமுதலிய புஷ்பங்களைவாரி வாரிமாரிபோற் றூவினர்கள். இப்படியிருக்க, இந்தப்பீமசேனனுலடிபட்டு முகமாறி இடமாறித் தடுமாறிப் பல்மாறி நின்ற சுயோதனன் ஒரு விதஞ்தேறி, மீளவும்பீமாசெய்ய எதிரேறி, பீமனைப்பார்த்துச் சீறி, சண்டைக்கு வாடாவென்று அடல்கூறித் தன்கதையைச்சுழற்றி முற்றிலும் வீரித்திரிந்து, பீமனுடைய விசாலமாகியதோளிலும் மார்பிலும் மீரெழும்படியாய்ச்சாடினன். அந்த அடியினுல் பீமசேனன் கிறுகிறென்றுசுழன்று, விறுவிறெனவுபறந்து, தன்னை மறந்து, உடல்சோபமுற்றுப் பூமியில்வீழ்வதான அவதியையுடைய வனுயினன். அப்படியாயுங் கீழ்விழாமல் நிதானித்து நிலைத்து நின்று, திடமுந் தைரியமுங்கொண்டு, காயம்பட்டிருக்குந்தன் காயமாகிய தேகத்துடன் எதிரில் ஓடிவந்து, மோகரித்து, துரியோதனனுடைய துடைமுறியும்படியாய் மறுபடியுஞ்சாடினன். அப்படிசாடியபோது எவர்களையுமதியாமல் இறுமாந்திருந்தபுஜபலகளிரண்டும் வாடும்படியாய், பூமியசையும்படியாய், வீராதிவீரனுகிய வணங்காமுடிபெற்ற துரியோதனமகாராஜன்மேல் வீழ்ந்தான். அப்போது சிங்கக்கொடியோங்கிய பீமசேனன் பாம்புக்கொடிபடைத்த பார்த்திபனைப்பார்த்து, அதிர்த்து மேலுற்றடர்த்து, நெடுமூச்சுவிடித்து, எவரும் அதிசயிக்கும்படியாய் அவன துடையையொடித்து நெடுகாளாய் நிலைத்திருக்கின்ற கோபத்தைச்செலுத்தினன்.

பீமன் துரியோதனன் முடியைக்காலாலுதைக்க அவனைத் தருமனும் பலராமருங் கடிய அதற்குக் கண்ணனுமவனும் சில உண்மைகள் கூறி ஆற்றுதல்

அப்போது துரியோதனராஜன் கண்களில் நெருப்புப்பொறி பறக்கவிழித்து, செவ்வாக்கிலுஞ் சிறக்கச்சிவந்து, புருவம்நெற்றியி லேற உருத்துப்பார்த்து, நான்கு கொம்பினையுந் தாழ்ந்த கையினையு முடைய அயிராவதத்தைப்போல் மதர்த்துக்கிடந்த கிடக்கைவிட்டுக் கிளம்பி, பீமனுடையமார்பு கலங்கக் குத்தினன். அந்தக்குத்தைத் தாங்கியுந் தாங்காமலுந் தடாரித்துக்கொண்டு தாவிய பீமசேனன் துரியோதனனுடைய கன்னமும்வாயும் நெரியும்படியாய்த்தனது கரத்தால்மொத்தி, அவனது புத்தியைக்கலக்கிக் கீழேவீழ்த்தி, மதர்த்து எதிர்த்தயானையை அடர்த்து அடித்த வீரகேசரியாகிய சிங்கம்போற்சீறி, அவனுடைய தலைமேலிருந்த முடியை இடித்து உடைத்து உதைத்து அழுந்தச்செய்தான். இரண்டுகாலினாலும் அவ னுடைய மேனியையுதைத்தான், மீட்டுமொருகால் அவன்மார் பில் உதைத்துக் கலக்கினன்.மற்றொருகாலால் அவனுடைய புஜத்தை யுதைத்து ஒடித்து வெறித்து முறித்தான். பூமிமேலவன் சரீர முருளும்படியாகத் தனதிருதாளால் மாறிமாறிப்புரட்டினன். இவ் வாறுகப் பற்பல விக்கிரமச்சேஷ்டைகளைப் பீமன்செய்தும் உயிரழி யாமல், உரமும்வரமுங் கொண்டதுரியோதன மகாராஜனவன் பீமசேனனுடன் மீட்டும் போர்புரியும்படிக்கு மெதுவாய்த்தலை யெடுத்துப் பார்த்து எழுந்தான். அதைக்கண்ட அக்கினிசகாயனாகிய வாயுகுமாரனும் யாருக்குமடங்காதகாலையுமாகிய பீமசேனன் ஆக்கிர மித்து, "அடாதுரியோதனா! இன்னமும் யுத்தம்பண்ணியா வெல் லப்போகிறாய்? நீபிழைப்பதற்கும் உனக்கும் வெகுதூரமாயிற்றே? இனி பிழைக்கவும்போகிறாயா?" என்று தனது பலம்பொருந்திய பாதங்களினால் மீட்டு முடித்தலை மேலுதைத்து, தலையைத்தாழக் கிடத்தி, மூளைகள் சிதறியழியத்துவைத்தான். அந்த வருத்தத் தைக்கண்ட யாவரு மனந்தளராமற் கலங்கினார்கள். தருமபுத்திரரான வர் கோபங்கொண்டு, உடல்வெயர்த்து, முகங்கருகி, மனந்தளர்ந்து, தம்பியாகிய பீமனைச்சினந்து, மெத்தவருத்தத்துடன் சிலபேசுவ தானார்.

அப்பாபீமா! இவன் கம்மட்டில் மனதில்வஞ்சம்வைத்துக் கறுத்தான்; விரிந்த இவ்வுலகத்தையாண்ட இராஜர்களெல்லோரும் வணங்கியிணங்கிப் பணியும் பாதத்தை யுடையவனுக விளங்கினன்; ஆனல் கடல்வளைந்த ஈரேழுலகமுங் கொண்டாடித் துதிக்கும்படியாகிய கீர்த்திபெற்றான்; இவன் மகதைஸ்வரியமாகிய வாழ்வில் மிகுத்தவன்; கர்ப்ப ஸ்ரீமைந்தன். களித்துமதத்த பட்டத்து யானை கட்டிய தலைவாயிலை யுடைய குருகுலத்தில அவதரித்தவன், வணங்காமுடியோன், வையகந்தாங்கும் பைபரவக்கொடியோன்; தேனிறைத்துதூங்கிய கத்தியாவட்டமாலையான்; திருமேவாங்கிய கவரிச்சாலைபான், வாமேனங்கிவளரும் வண்டருச்சாலைபான் வெண்மணியாரமுஞ் சங்கும்பொருந்திய வேலையான், மன்னர் துதிக்கு மாமதிக்குடையான், மதுவலரையதக்கும் வடிவாட் படையான்—இத்தன்மைவாய்ந்த கௌரவகுல முதல்வனுகிய துரியோதனனென்னும் இராஜச்செல்வன், பூர்வகர்மவினையினுல் உன்னுலழிய நேரிட்டிருந்தாலும், ஐயோ! ஏமாந்தா அவனைக் கொல்லும்படியாகக் கொண்ட சபதப்படிக்கு நிலத்தில் வீழ்த்தி விட்டாய். அதைக் குறித்து நான்பேசவில்லை. அது தீவினைவசமென்று சிந்தையுட் கொண்டேன். கீழே வீழ்ந்தும்பான கெடி ஸ்தலாதிபனைத் தலைமை லுதைத்தனையே, இதுதர்மமா? எந்தநூலில் இப்படிசெய்ய சொல்லியிருக்கிறது, அப்பா பீமா:! பாவபுண்ணிய மெண்ணிப்பார்க்க வேண்டாமா? தெய்வத்துக்காகிலுங் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்மே! ஓ திடவாளே! இப்படிச்செய்தாலமாத்தரதாஞ கம்மை வீரரென்று யாவருஞ் சொல்லிப்புகழ்வார்கள்? இல்லாவிட்டால் வீரமில்லாதவனென்று இகழ்ச்சி விளம்புவார்களோ? எப்படி யுமிறந்தும்பாவதற்காளாஞன் இவன். இனியிவனை இப்படிப்பார்ப்பட்ட அவமரியாதைசெய்வது அழகல்லவே. அதனல் நமக்கென்னவுண்டு? அவனுரவன்? அவனைப் பந்தித்திய அநீதமெல்லாம் நாம் நாளையனுபவிக்கவேண்டுமே! இவனை யா நாம்பார்ப்பது? இவனுக்கு மேலிருப்பவர்களைப் பார்க்கவேண்டாமோ? பாலைப்பார்ப்பதா பானையைப்பார்ப்பதா? ஆ! பீமா தெரியாப்புத்தியினல் யோசிக்காமல் இப்படி செய்துவிட்டாய். ஆகிலும் இப்படிப்பார்ப்பட்ட அகக்தை இனியெப்படாதும் எக்தக்காலத்தினும் வேண்டாம்" என்று இரக்து இருவிழிகளினுக் தாரையாய்ஜலம் பெருகியோட கின்றுவாடித் தளர்ந்தார்.

இந்தப் பூமிக்குரியவனுகிய பெரியபுண்ணியன் இவ்வண்ணஞ் சொல்லவே, நடந்த அதிசயத்தை அவிடத்திற்பார்த்திருந்த பலராமர்

மனம்பொறுமல், மதிதளராமல், உடல்தரியாமல், ஆறுக்கோபங் கொண்டு, "அடடா! கொடும்பாவியாகிய பீமா! இன்னுட்டிலும், மற்றப்பன்னுட்டிலும் சுத்தப்பொன்னுட்டிலும், கதைப்போர் விதிபைச் சாஸ்திரரீதியாய்க் கற்றுணர்ந்த வல்லவர்கள் பழித்து ஏசித் தூஷிக்கும்படிக்கு, தர்மத்தப்பி முறைபுரண்டு இடுப்பின் கீழாகிய துடையிலடித்தாயே! ஒருவேளை கைதப்பிப்பட்டமோ வென்று கிஞ்சித்தால், இல்லை: இல்லை: வேண்டுமென்றே ஒரு நாழிகை பரியந்தமோதினை, கதைசாஸ்திரத்தில் என்ன விதித்திருக்கிறதென் றால் இரண்டுபேர் கதாயுத்தம் பண்ணுங்காலையில் அரையிற்கீழ் அடிக்கலாகாதென்றும் சீசார்ந்துகின்று விட்டால் அப்போதுந் தொட லாகாதென்றும் நீதிபரிபரியிருக்கிறது. ஞாயமாக இந்நூலறிந்தவர்கள் வழிதபபிய துன்மார்க்கஞ் செய்யக் கூசுவார்கள்; செய்யவுமாட்டார் கள். நீபோ அச்சங்கூச்ச நாணமில்லாமல், குறைவில்லாதபடி வேலை முடித்தாய்! அப்போதே எனக்கு வந்த கோபத்தை அடக்கிப் பொறுமையாயிருந்தேன். இப்போது அந்தத் துரியோதனராஜன் கீழ்வீழ்ந்தபோதும், அவனுடைய சுவரத்தின கிரீடமணிந்த வணங் காமுடியை உன்தரித்திரம் பிடித்தகாலால் உதைக்கலாமோ? இப்படி யாக உனக்கு எவன்வரத்தைகற்றுக் கொடுத்தான்? என்ன பலத்தைக் கண்டு இபபடிச்செய்தாய்? அடா பீமா! இந்தா அந்தத் துரியோதன னுக்குப் பதிலாய் நானையெதிர்த்து யுத்தம்பண்ணி உன்னைக்கொல்லு கிறேன். அப்பால் துவாரகைக்குச் செல்லுகிறேன்" என்று கலப்பை யைக கையிலெடுத்துகொண்டு, வலிப்பையிலகப்பட்ட மான்கன்று துள்ளுவதுபோற் துள்ளிப்பாய்ந்து,கோபத்துடன் வாடாவெளியே யென்று வலுக்கொண்டு திடுக்கென்றுவந்தார். இந்தப் பிரமாதத்தைக் கண்டு கமழுந்திருத்துளவணிந்த கமலநாயகனுகிய கண்ணன்கண்டு, துணைனெறெதிரோடி அணைணன் முன்னின்று, மண்ணின்மேல் வீழ்ந்து வணங்கியெழுந்து, வெள்ளைவண்ணனுகிய அம்மூத்தோ னுக்கு இதனை விளம்புவதாயினர்.—

ஓ அண்ணு யான்சொல்வதைக்கேட்டருளுங்கள். (பாத்திரம் பார்த்து, அன்னமிடு, க்ஷாத்திரம்பார்த்துக் கன்னமிடு, கோத்திரம் பார்த்துப்பெண்ணெடுபெடு, சூத்திரம்பார்த்துச் சொல்லிவிடு) என்று உலகற்பொரியார் பேசுகின்றார்களே இதையோசியுங்கள். இவ்விடத் தில பீமனடித்த கதையடியால் வீழ்ந்துவிட்ட துரியோதனமகாரா ஜனை இந்தப் பாண்டவர்களுக்குச்செய்த பொல்லாங்குகளை இவ்வள

வென்று எண்ணவேமுடியா. எட்டிலெழுதவு மடங்கா. அதுவுமல்லா மல் அக்கினியிற்பிறந்த பேதையாகிய திரௌபதையைச் சபை யேற்றி, அவளுடைய துகிலையுரிந்து பங்கப்படுத்திவைத்தான். அந்தக் காலத்தில் உங்களைப்போன்றவர்களிருந்து கண்ணுற் பார்த்திருப்பீர்க களாகில், இப்போது இவ்விடத்தில் பீமன் உதைத்த உதையிலுங் கோடிபங்காக உதைத்து அன்றைக்கே உயிரையும் வதைத்து விடுவீர் கள். அப்பேர்ப்பட்ட கொடியவேலையைச் செய்தான் முடிவிலொரு கத்தை யனுபவிக்கும் இந்தக்கொடிய பாதகன். அந்தக்காலத்தில் வேறுதிக்கில்லாமல், ஆதெய்வமேயென்று இரைந்தழுத அந்த உத் தமியானவள் அங்கிருந்த ராஜகூட்டங்களெல்லோருமறியும் படியாய் பீமனுடையகதையால் உன்துடைமுறிந்து இறக்கங்கடவையென்று சபித்திருக்கின்றாள். அந்த உத்தமியாகிய பத்தினியினுடைய சாபச் சொல்லானது வீண்போமோ? அண்ணா இதுவன்றியும் பூர்வத்தில் ஒரு முனிவர் இவன் துடைமுறிந்து இறக்கும்படியாய்ச் சபித் திருக்கின்றார். இவனுக்கிச்சாபங்கள் வினைப்பயன்படி அனுபவிக்கக் கூடினது; ஆகையால் பீமசேனனைவெறுப்பதிற் காரியமில்லை. மேலும் இன்னுஞ்சொல்லுகிறேன் கேளும்; அண்ணா இப்போதுசெய்த யுத் தத்திற் பாண்டவர்களுக்கு இந்தப்பாவியாகிய துரியோதனன் செய்த கொடுமைகளை யார்சொல்லத் தக்கவர்கள்; எவர் கூறமிக்கவர்கள், ஏந்தலே இந்தப் பூமியைத்தாங்கும் ஆதிசேடனும் ஆயிரம்நாவினாற் சொல்லி ஆறமாட்டான்; ஆறித் தேறவுமாட்டான். ஓ கோபமாகக் கூறிய பால்வண்ணரே, இந்தத்துரியோதனன் மகாவஞ்சகனுகிய பஞ்சமாபாதகன். இவன்செய்த சங்கதிகளிலே கொஞ்சஞ் சொல்லு கிறேன் கேளும் —

காண்டவவன தகனனுகிய காண்டீபன் மைத்தனும் நமது மரு மகனுமாகிய அபிமன்னுவை ஒன்றியாயிருக்கும்போது வளைத்துக் கெண்டு பலமுகத்தினுங் கோடிவீரராய்க் குவிந்துநின்று, நல்ல கைக் காரராகிய கர்ணன் துரோணச்சாரி இவர்களெல்லாரு மறைந்திருந் து, மாறுபாடாகப் பின்பக்கம்வந்து, வில்லையுந்தேரையுமழித்து, ஆளைமுழுக்காட்டி உயிர்கவர்ந்து விழிகாட்டியது தர்மமோ? மேலும் இப்போது இவ்விடத்தில் மாய்ந்த துரியோதனன் விதிகிழித்து மாளா மல், பீமன் துடைமேல் அடித்ததிலேயா செத்தான்? வேறொரு விதத்திலுஞ் சாகமாட்டானே? அண்ணா பலபத்திரதேவரீர் கொண்ட கோபத்தை மாற்றிவிடும். இப்போதுகடந்த காரியங்களைப்

பற்றி யோசிக்கும்போது, (பெண்ணின் குணமும் அப்படித்தான். சம்பந்திவாயும் இப்படித்தான்) என்னும் பழமொழிக்கு இணங்க இருக்கிறது. நமக்கென்ன பள்ளமுள்ள இடத்தில் தண்ணீர்கிற்கிறது. உப்புத் தின்றவன் தண்ணீர்குடிப்பான். யாரெப்படிப்போனாலும் நம்முடையவழியை நாம் பார்ப்போம்" என்று வணங்கிப்போற்றினர். இப்படி மகா மாயனாகிய வாசுதேவனென்னுந் தம்பியொருவன் தலைப்பட்டு, இந்தவேலைக்கென்றே நின்று, சகலத்தையுந்தானே மேற் போட்டுக்கொண்டு, மூதத்தவனாகிய நமக்கும் ஆற்றல் சொல்லவே, இவையனைத்துங்கேட்ட பலராமரானவர் கொதிப்பாறிக்குளிர்ந்த ஜலம்போற் கோபமாறி, உடனே தமது பெரிய தேர்மேலேறி யுத்தபூமியைவிட்டு நீங்கித் துவாரகைக்குப் பிரயாணமாயினர். அவரைச் சற்று தூரம்போய் வழிவிட்டுவந்த பத்மநாபன் தர்மராஜன் முகத்தைப்பார்த்து இதனைச் சொல்லுகின்றார்.—

ஓ முன்னோனாகிய முரசகேதனரே, குடையுங் கொடியுங் குணமும் பணமுமோங்கிய உரம்பெற்ற தோள்தாங்கிய துரியோதனனை அனிலமைந்தனாகிய பீமசேனன் காலாலுதைத்தற்காக நீர்மெத்தவும் வெறுத்தீர்! மனங்கறுத்தீர், நம்மாவிருந்த பலராமரும் நீர்கொண்ட கோபத்தைப்பார்த்துத் தாமுங் கோபங்கொண்டார். போகட்டும்; அந்தப் பாம்புக் கொடியோன்செய்த பொல்லாங்குகளையும், பேசியபேச்சுகளையும் ஏசியஏச்சுகளையும் மனத்தில் வைக்காமல் நீக்கிமறந்தீரோ? இப்போதுதான் அவனோடு நீர்கூடப்பிறந்தீரோ? ஐயோ அரக்குமாளிகை கட்டி உங்களைக்குடியேற்றிவைத்து ஆருயிரோடுங் கொள்ளிவைப்பதற்கு அங்கோராளும் வைத்தானே! விஷத்தைப்புகட்டி ஜலத்திற்கட்டிப் போட்டானே! பொய்ச்சூதாடிப் பொருளெல்லாங்கவர்ந்து, அருளில்லாமல் அண்ணன்தேவியை அவையேற்றிவைத்து ஆடாதும்ஆடி, பாடாதும்பாடி, ஏசாதும்ஏசி, பேசாதும்பேசித் தவத்திற்பிறந்தசிறந்த பதிவிரதையென்று சற்றுமெண்ணிப் பாராமல் வஸ்திரபங்கம் பண்ணினானே! பன்னிரண்டுவருடங் காட்டிலோட்டினானே! நீங்கள் வனவாசம்பண்ணும்போது சிவந்த மயிர்ச்சடையும் விரிந்த சூலப்படையுமுடைய கரும்பூதத்தை மாரண ஓமத்தில்வரவழைத்து, உங்களைக் கொல்லத்தொடுத்து, அதர்வணவேதமுடைய காளமாமுனியைக் கெடுத்தானே! துருவாசனைச் சோறுகேட்கவிடுத்தானே! இப்போரில் வீழ்ந்து இறக்கிற வரைக்கும் பாண்டவர்களுக்கு நாடு கொடுக்கேனென்று ஓரேபிடிவாதமாகப்பிடித்து என்னிடத்தில் வாதிட்டானே!

உலகிலுள்ள பலபேரையுங் குருக்ஷேத்திரத்திற் கூட்டிவந்து கொள்ளை கொடுத்தானே இவைகளை யெல்லாம் நீர்மறந்துபோனீராக்கும்! சாந்தஸ்தருடைய மனம் அப்படியிருந்தாலும், பீமசேனன் மறப்பானோ? ஈட்டுக்கும் பாட்டுக்கும் எதிர்த்துநின்றவனெவனோ அவனுக்கல்லவோ அந்த வருத்தந்தெரியும்? இத்தியாதிபொல்லாங்கை விளைத்த துரியோதனனுகிய பாவியைப்பீமன் காலாலுதைத்ததினால் என்னமுழுகிப்போச்சு; அந்தத்துரோகியானவன்செய்த காரியத்திலும் இந்த பீமன் செய்தகாரியம் பொல்லாததோ? ஓ பெரியோனுகிய தருமராஜனே! இவற்றையெல்லாம் உமக்குள்ளே சற்றுநிதானித்துச் செல்லும்" என்று இதழ்விரித்த முல்லைமாலையுந் திருத்துளவத்தையும் அணிந்த திருமாலாகிய திருமருமார்பினன் செப்பவும் பீமசேனனுக்குங் கோபமெழிட்டு, அண்ணனுடைய அடிமலர்மேற்றொழுது, கண்ணீருதத்துக் கழறிச் சொல்லுகின்றான்.—

ஓ ஜேஷ்டப்பிராதவாகிய தருமதேவ! தருமசிந்தையையுடைய சற்சனருக்கு ஒருபொல்லாங்கு நேரிடுமாகில் எல்லாரும் இரங்கவேண்டியதே; அறக்கொடிய பெரும்பாவிக்கு யார் இரக்கப்படுகிறார்களோ அவர்களுக்குப் பாவஞ்சேருமே! அண்ணா! இவனுக்கும் இரங்கலாகுமா? இந்தப்பாவி மனத்துரோகி, இனத்துரோகி, குலத்துரோகி, குணத்துரோகி, வெகுஜனத்துரோகி இப்படியாகிய வேந்தனுக்காக இரங்கி அருள்பூண்டு, தேரிருடைய கிருபையை அவன்மீது நிலைநாட்டி, அவனைச்சிலாகித்தும் இவ்வாறுபுகழ்ந்து பேசுவீராகில், திறமிகுந்த செங்கோலின் இயற்கைபொய்த்து, ஜெகத்திலுள்ள வளங்களெல்லாந் திறம்பி நாசமடைந்துபோமே! ஐயோ இதுவரையிலுஞ் செய்த சூதெல்லாம்போகட்டும்; இவ்விடத்திற் கதாயுத்தம் பண்ணும்போது உயிர்நிலைசொல்லென்று கேட்டான். சத்தியத்தையனுசரித்து நான் உண்மையைப் பேசினேன். நான்சொல்லி வாய்மூடுமுன்னே தலைமேலடித்தான். சுவாமி தயவினாலுந் தங்களுடைய தருமத்தினாலும் அந்த அடிக்குத்தப்பிப் பிழைத்து, உன்னுடைய உயிர்நிலை சொல்லென்று நான் கேட்டேன். தன்னுடையதுடை யென்று உண்மையைச் சொல்லாமல், தலையென்று பொய்சொன்னான். அவன்வஞ்சனை அவனையே கெடுத்தது. ஓ சாணைபிடித்துத் தயிலதாபஞ்செய்த வடிவேற்றடங்கிய மூரசக்கொடியினையுடைய வள்ளலே! இப்போர்ப்பட்டகொடிய துஷ்டனைத் தலையிலுதைத்தது மாத்திரமல்ல, இன்னும் என்னசெய்தாலும் என்மனத்துளிருக்கும்

ஆறுத்தியானது நீங்காது'' என்று நெடுமூச்சுவிட்டு உரக்கச்சொன்னான்.

இவ்விதமாக அழகிய கதாயுதனுகிய பீமசேனன்சொல்லிய வார்த்தையைத் தருமராஜன்கேட்டு, குளிர்ந்தமுகமாக நகைத்து, கோவர்த்தனத்தைக் காத்திலெடுத்துக் கோபாலனம்பண்ணிய துளப மாலையணிந்த கோவிந்தனுடைய கமலவாண்முகத்தைக் கருணையுடன் பார்த்து, ''ஓ கமலக்கண்ணா! நீரும் பீமசேனனுடன் கூடிக்கொண்டு குதிக்கின்றீர். அநேகங்கோடி பாதகங்களைச்செய்த போர்களுக்கு நீங்காதெடும்பழியுண்டு. அவர்களென்றைக்கும் பாவிகளே, அவர்களை யுலகமெல்லாம் அறியும். அவர்கள்சுத்தக் கறுப்பாகிய எருமைக்கடாமாட்டைப் போன்றவர்கள். கறுப்பில் அழுக்குப்பட்டாற் கறுப்புடன் கறுப்பாய்க்கலந்து கொண்டேயிருக்கும். கறுப்பு என்றுங் கறுப்பே. அதையாவரும் ஒருபொருளாய்ப் பேசமாட்டார்கள். பாவமற்ற புண்ணியவான்களாகிய செம்மையோர் பரமவணுவிலுஞ்சிறிதாகிய குற்றத்தைக் கூடஒருக்காலுஞ் செய்யப்படாது. செய்வார்களாகிற் பரிசுத்தமாகிய வெள்ளைப்பசுவில் கறுப்புப்புள்ளி விழுந்து பைரங்கக்காட்சியாய்த் தெரிவதுபோலும் சோடசகலை கணிரம்பிய பூரணசந்திரனில் ஒருசிறியகளங்கஞ் செழுமையுறத் தோற்றுவதுபோலும், யாவருக்கும் பளிச்சென்றுதெரியும். இதையெல்லோரும் எடுத்துப் பேசுவார்கள். ஆகையால் இந்தக் கொடுமைதான் நமக்கென்னத்திற்கென்று சொல்லவந்தேன். ஓ கருத்தின் மிகுந்த கருத்தனே! நாம் என்னசெய்வோம்? இவையனைத்தும் அவரவர்களுடைய ஊழ்வினையிருந்து கடத்தும்படியான காரியம். ஊழ்வினைபக்கடந்து நடந்தவர்க ளொருவருமில்லை. இந்தப்பீமசேனனை வெறுத்துக் கொள்ளுவதிலும் பிரயோசனமில்லை. முன்செய்த தீவினைப்பயன்படியே முடிந்துவிட்டது. இப்போது மூன்றுலகமும் பாழ்பட்டுப் போகும்படியாக நாமுனைந்தபோரில், யாவும் நமதுசெயலால்முடிந்ததென்று சொல்லுஞ்சுதந்தரம் ஒருவருக்குண்டோ? ஐயா? எங்கள் மூதாதையாகிய பீஷ்மரென்ன? ஜேஷ்ட பிராதாவாகிய கர்ணமகாராஜனென்ன ? திரிலோகமுடுங்கப் போர்புரியுஞ் சல்லியமகாராஜனென்ன? இவர்களெல்லாம் திரிமூர்த்திகளே வந்துபோராடினு மிளைக்கத் தக்கவர்களோ? இதுவரையிலும் இறந்துபோனவர்களுக்கு ஈடானவர்களோ இப்போதிருப்பவர்கள்? கூனியஞ்சொண்டு தோரிக்கை நிறைவேற்றிக் கொள்ளுவதுபோற் புல்

லாடவருக்கொப்பாகிய எங்களேவைத்துக்கொண்டு, சர்வசாட்சியாகிய நீர் தாழ்ச்சியில்லாமல் உமதுவேலையை முடித்துக்கொண்டீர். ஓ ஜகமாயைக்கு முகமாகியதேவே! உமதுசித்திரவிசித்திரச் செய்கைகளே எவரறியத்தக்கவர்கள்?" என்று இவ்வுலகத்தை வரம்பு கடவாது நிலைநிறுத்திச் செங்கோற்செலுத்திச் சீர்செய்யப்பிறந்த ராஜசிங்கமாகிய தருமராஜன்சொல்லி யருளினர்.

தருமனுக் காறுதல்கூறிய கண்ணனையும் பீம னையுந் துரியோதனன் தூஷிக்க, அதற்கு உத்தரங் கூறுதல்

இப்படி யிவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது பீமன்கதை யால் அடிபட்டுச் சோர்ந்து வீழ்ந்த இராஜராஜனுகிய துரியோதனன் களேதெளிந்து கண்விழித்துநோக்கி, தருமராஜனுடைய வாக்கியத்தையும், பீமசேனன் பகர்ந்தபோக்கியத்தையும், கண்ணன் கூறியசிலாக்கியத்தையுந் தெரிந்துகொண்டு, சிந்தைதளர்ந்து "ஆம்: ஆம்: நான்ஒருவன்தான் நீதிதப்பியஅதேன். நீங்களெல்லாரும் நீதி முதலியதருமந் தப்பாதவர்களல்லவா? அந்தமட்டும்போதும்! வாயை மூடுங்கள். யாராகிலுங்கேட்டால் சிரிக்கப்போகின்றீர்கள். ஆ! ஆ! உத்தமர்களே! குலக்குரவனுகிய பீஷ்மாசாரியார் விற்குருவாகிய துரோணாசாரியார் இவர்களெல்லாருஞ் சந்தோஷமாய்ச் சாகும் படியாகத்தானே கொலைசெய்தீர்கள்? ஆனதால் நீங்கள்மகாநல்லவர் கள்தான். ஐயோ! விதரணகுணனுகிய கர்ணன்பூமியிற்புதைந்து போன தேரைத் தூக்குவதற்குத் தாழ இறங்கியபோது ஜாடித்து விட்டீர்களே! சிந்து தேசாதிபதியாகிய சயிந்தவனேமோசம்பண்ணி மாயையினும் சூரியனேமறைத்துத் தொலைத்துவிட்டீர்களே! சாத் தகியுயிரைக் கொல்லச்சமைந்த பூரிசிரவசை வாளுடன்கையும் பூமியில்விழ மாற்றிவிட்டீர்களே! துரோணரிறப்பதற்குத் தொல்லு லகம் பழிக்கும்படியாகிய பொய்பேசினீர்களே! இதோஇப்போது நடந்தயுத்தத்தில் துடையிலடிக்கக்காட்டி என்னுயிரிறக்கும்படி மூட்டினீர்களே! இறையாகிய தருமராஜன் எது எப்படிபோனலும் விதியெப்படியானலும் தருமந்தப்ப மட்டாரென்றுசகல உலகத்தா ருங் கொண்டாடும்படியாயிருந்தனர். இப்போப்பட்ட சாதுசங்க சாஸ்திரவிசாரணையுடைய சத்தியவானே அசத்தியவானுக்கி, அவ ருக்கு இல்லாததும் பொல்லாததும்போதித்து, அவர்பேரையுங்

கெடுத்து, என்சீரையுமுடித்து விட்டீர்கள். ஓ கீருண்டகாளமேகம் போன்று கறுத்தகபடநாடகனே! நீ கினைத்தகாரியம் கிறைவேறிற் றல்லவா? இனிமேலாகிலும் உன் செங்கண்ணுறங்குவையோ? இப் போதாகிலுங் தூக்கம்பிடிக்குமோ? இனி என்றைக்குங் கவலையற் றிருப்பாயோ'' என்று கனன்றுகருவி, பற்கடித்து, இதழ்மடித்து, ''ஆஹா! கிருஷ்ணு! நீ தப்பிப்போனயல்லவா?'' என்று சொல்லி அடங்கினன்.

அந்தமொழியைக்கேட்ட மூகுந்தன் அவனருகிற் சென்று கின்று, ''அப்பா துரியோதனு! எய்தவனிருக்க அம்பைநோவதுபோல் என்னைகொந்து கொள்வதில் என்னலாபம்? இன்னமும் பாவமூட்டை கட்டப்பார்க்கின்றயோ? அடாபாவி! பீமனுக்கு உயிர்கிலைசொல்லிய மாறுபாடான உன்சூதுமொழியை அருச்சுனன்கேட்டு, மோசம் பண்ணினனென்று ஆத்திரப்பட்டு, தன்தமையனுகிய பீமனுக்காக வருந்தி, சகோதரனைதால் மனந்தளராமல் அந்தப்பீமசேனனுக்கு எதிரில்வந்து வாக்கினற் சொல்லுவது தருமமல்லவென்று குறிப்பி னற்காட்டினன். உன்சூது உன்னையழித்திருக்க, என்னையேன் கிந்திக்கின்றாய்?'' என்று சொல்லி வாய்மூடுமுன்னமே துரியோ தனன் மீட்டுஞ்சீறி, ''ஆ! கிருஷ்ணு! என்கதாயுதத்தாற்குந்தி மைந்தர் ஐவரையுங்கொன்று உயிர்தொலைத்து, உன்னையுஞ் சிறை யிலடைத்து, நெடியகடல்சூழ்ந்த இவ்வுலகத்தை என்தாயின்வாக் கியப்படிக்கு நானே அரசுசெய்பவிருந்தேன். ஆனற்படுபாவியாகிய மதுசூதனு! உன் சூதால் என்னெண்ணம் கிரைவேறாமற் கெட்டழிந் துவிட்டது'' என்று தளர்ந்துசொன்னன். இப்படியாகக் கூறிய இந்து குலாதிபனுகிய துரியோதனனைத் தேவர்களும் நான்குவேதங்களுந் தேட நின்ற நெடியமாயன்கெருங்கி, அருகணைந்துநோக்கி ''அப்பா துரியோதனு! உனதெண்ணம் உன்னைக்கெடுத்ததென்று உணரக் கூடாதா? கல்லது: நான்முன்னம் உன்னிடத்திற்குத் தூதுவந்த போது இப்படிக்கெல்லாம் நடக்குமென்று தெரிவித்தேனல்லவா? அப்படிக்குத் தெரிவித்தும் அதை லக்ஷியஞ்செய்யாமல், அக்கால் மேலாக வுணர்ந்தமேதையோர் மொழியையும், விதுரராஜனுடைய சொல்லையுங் கடந்து, ஈன்றளித்த தந்தையின் வாய்மையையும் விடுத்து துர்போதனையாளர் கூறும்வார்த்தைகளை உன் துர்ப்புத்தி யிற் ருருத்து நடந்த உன்குற்றமானது உன்னை இப்போதுகெடுத்து விட்டது. இதற்கு யாரென்னசெய்யலாம்? பிஷ்மரையுக் துரோ

ணரையும் நாங்கள் கொன்றதாகச் சொன்னாய்; அவர்களிறந்ததைக் கேள்.—

ஓ கொற்றவனே! இப்போருக்கு முன்னமேதானே பாஞ்சால ராஜனுடைய அருந்தவத்தாற் சிகண்டியென்றும், திஷ்டத்தூய்ம னென்றும், உலகந்தொழும்படியாகிய அழகிய சாபலையுடைய திரு மேனியோடும் பிறந்து, அந்த பீஷ்மர்துரோணருடைய உயிர்கொள் ளும்படிக்கு வளர்ந்துவந்து, நீந்தக்கூடாத தெடுங்கடல்போன்ற சமரிற்புரிதராகிய இருவராவியும் நீங்கினர்கள். நின்மலன்கற்பித்த நிர்ணயப்படிக்கு ஆசையற்ற அவர்களுங்காலங்கழித்துப் போய்விட் டார்கள். நீபோம்பராசைபிடித்துப் பெருக்கத்தவித்து,இத்தப்பாண்ட வர்களோப்பறக்கஅடித்து, காம்பிழைத்தாற் போதுமென்னும் ஆசை யால் அந்தப்பெரியோரையும், மற்ற உரியோரையும், இன்னும பல பேர்களையும் முடித்து, நீயும்முடிந்தாய். அந்தப் பாவமும் பழியும் வசையும் உனக்கேயல்லாமல் எமக்கொன்றுமில்லை. ஓ கந்தியாவட்ட மாலையணிந்த நரேந்திரனே! பூரிசிரவசைவக்கொன்றது பிழையென் றாய். அதற்குநியாயங்கேள். தனக்குத்துணையாகவந்த ஒருவனுக்கு இடையூறுவருமாகில், அவனுக்குதவிசெய்து காக்கவேண்மோ வேண் டாமோ? நீயேசொல். நீ சும்மாயிருப்பாயா ? ஆகையால் அருச்சுன னுக்கு உறுதிப்படைத்துணையாய் வந்தவன்சாத்தகி. மேலும் தன் பிள்ளையோன்ற சீடன். அப்பிபர்ப்பட்டவனைச் சத்துருவானவன் போர்திளைத்துவளைத்து முடிக்கும்போது, காண்டீபதரனுடைய அருச் சுனன் கண்ணாரக்கண்டும் போருக்குப் பயந்தவர்களைப்போல் இருக் கலாமா ? அப்படியிருந்தால் அதுதருமமாமா ? அபகீர்த்திவராமற் போமா? ஓ மதிகுலசார்வபூமா, அதற்காக உதவிசெய்தால் அது பிழையாமா ? இதுவுமல்லாமல் கர்ணன்தேர் புதைந்தபோது அவனு யிருண்டுரென்றனை. அக்கர்ணனுக்கு ஒருமுனிவனுடைய சாபம்வந்து முன்னமே மூண்டிருக்கிறது. அந்தச்சாபத்தால் தேர்மணலிற் புதை ந்துபோயது. அப்போது முனைப்பகழியையுடைய அருச்சுனன்பாணங் கொண்டு அடிக்காமல் நிற்பானுகில், ஓமனக்கவலையுண்ட மகாராஜ னே! மாமுனிவனிட்ட சாபந்தொலைந்து மண்ணிறபுதைந்த ரதம் மறுபடி யெழுந்துவருமோ? சற்றேசொல்லு, எப்படியும் முடிவுகாலம் வந்துவிட்டது. நிலத்தில் நிற்கும்போது அடித்தால் தானென்ன, ரதத்திலிருக்கும்போது தொடுத்தால்தானென்ன. இல்லை பிழைப் பான் அதற்குள்ளே அருச்சுனன் அடித்தான் என்றுகிலும்பேசு!

போபோ பயித்தியக்காரா! இறந்துபோகிற கட்டைக்கு ஒருபேச்சா? இவையல்லாமல் பீமனுக்கு நான் உளவுசொல்லித் துடையிலடிக்கக் காண்பித்ததாகச் சொன்னாய். அதற்குரியாயங்கேள். உன்பிராணனுக்கும் முடிபோட்டுக்கொண்டு போர்புரியங்காலையில், நீயவனை உண்மையாக உயர்நிலைகேட்டபோது சத்தியமகாச்சொல்லிய மன்மதவடிவனுகிய பீமசேனனைப் பலமுறை தலைநிறையக் கதையால் அடித்தனை.ஸர்வஸம்மாரகால உருத்திரனுக்கு நிகராய்ச் சீக்கிரத்தில் பீமனை முடித்துவிடலாமென்று தெழித்தனை, உன்னுயிர்நிலையை அவன்கேட்டபோது ஒளித்துப்பேசினை. இந்தச்சோமகுலமாகிய சந்திரவம்சப் புறங்கடையிற்பிறந்த பேர்களிலும், உன்னைப்போற் சூதுரைத்தோர் ஒருவருமில்லை. இக்கவுலகத்திலுள்ள எந்தச் சாதியிலுமில்லை. உண்டானு லொருவனைச்சொல்லு. நீயும் உள்ளபடி உண்மையாகிய பேச்சைப்பேசுவாயாகில், எவரும் கடிவிற் புகுந்து மொழியார்கள். எச்சூழ்ச்சியுஞ் சொல்லமாட்டார்கள். உனதுவாய்ச்சொற் கள்ளத்தனமேபீமனுக்கு விள்ளுமாறுகக்காட்டிய தல்லவா? கல்லது, அப்படிகாட்டாமலிருந்தாலும் நீபிழைப்பாயோ, பீமனிறப்பானு? ஓகாவலனே முன்னடந்திருக்கின்ற முறைகளையெல்லாம் நீமறந்துபோயினையோ? வெள்ளப்பள்ளத்தால் அள்ளலார்ந்த குள்ளக்கயலூரும் வள்ளவயற் சூழ்ந்த குருகாட்டுக்குரிய திருகாட்டை நீ ஆண்டுவரும் காளில், அரிய தவத்துக்குரியபெரிய மயிர்ரேயர் உனது துடை யொடிந்து இறக்கும்படி கொடுத்த சாபத்தைத் தள்ளுகிறதற்கு உன்னுலாகுமோ? அக்கினியிற் பிறந்த திரௌபதா தேவியாகிய மகா பதிவிரதையானவள் வயிறெரிந்து பீமன் கதையால் உனது துடை முறியவென்று மொழிந்த சாபந்தப்புமோ? இதைச்சொல். துரியோதனு! எல்லாத்தீவினையுந் திரண்டு நின்று வந்து சேர்ந்து ஆளைப்பிடித்து அழுத்தும்போது, இனியாரால் முடியும்? உன்னுல்தான் என்னுகும்; (காலன் பகைக்கவும் பாலன் பிழைக்கவுமா?) ஏன்வீணுய் ஊரார்பேரில் தோஷம் பேசுகின்றாய்?" என்று இனைய பல மொழிகளெல்லாம் எடுத்துச் சொல்லி, மீண்டுந் திருமால் சொல்லுகின்றார்.—

ஓ வாகைசிறந்த மாலைபுனைந்த மன்னனே! நீ இந்தப் பாண்டவர்களை நாசப்படுத்திவிட்டு ஞாலமுழுதும் நாமே ஆளவேண்டும் என்று நினைத்து, அதற்காக என்னென்னயுக்திகள் கெடுதிகள் நினைத்துச் செய்தனையோ அவைகளெல்லாம் பெருமூட்டையாய்த் திரண்டு

கடைசியில் தீவினையாகி உன்னையே அழிக்கவந்துவிட்டது. இதை நாமே தேடிக்கொண்ட வினைமூட்டைபென்று நினைத்துக்கொள். எங்களையெல்லாம் ஏன் வீணுய் வெறுக்கிறுய்; நாவிற்போட்டு ஏன் வறுக்கிறுய்; கொஞ்ச நஞ்சமிருக்கும் புண்ணியத்தையுங் குறுக்கு கிறுய்;குணமுதலியவற்றைச் சுத்தமாய்வேரறுக்கிறுய்! இன்னென்று கேள்: பீமசேனனுடைய கதையடியில்லாமல் நீ செத்துப்போவா யாகில், கொடிதாகிய ரவுரவாதி நரகத்திற் குளித்துக்கொண்டு, கோத் திரத்தோர் யாவருக்கும் நலமில்லாமற் குமுங்கிப் போய்விடுவாய். அப்படிக்கில்லாமல், யாரிழைத்த தோன்போ, யார்செய்த தவமோ, அவைகளின் பலன்கள் எவ்வகைப் பட்டனவோ? நானறியேன். இந்த பீமனாலும் அவன் கதையினாலும் நீ பட்டபடியால், நீ சிறு போதுமுதல் இதுவரையிலுங் தேடிக்கொண்ட தீமைகளையெல்லாந் தொலைத்துவிட்டாய். இப்போது உனக்குப் பாபமில்லை. (கெட்டவர் களுடைய உறவைப் பார்க்கிலும் நல்லவர்கள் பகை நல்லது) என்பது மேலோர் வாக்கியம். இதையும்நன்றுக யோசித்துப்பார். இனி நீ தாராளமாய் நற்கதி யடையலாம். மகாராஜனுய்ப் போய்ச் சுகமாய் வாழ்ந்திரு'' என்று புகன்று, திரும்பினர். இப்படி கேசவனுகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி திருவாய்மலர்ந்தருளித் திரும்பு முன்னமே ஆகாயத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த இந்திரன் முத லாகிய தேவர்களெல்லாருங் களித்து, போர்புரிந்து வீழ்ந்து தாழ்ந்த துரியோதன மகாராஜன் பேரில் மிகுந்த சீக்கிரமாய்ப் பூமழை பொழிந்தார்கள்.

கண்ணன் பாண்டவரைப் பாசறைக்கணிருத் திச்சென்று, திரிதராஷ்டிரனையும் காந்தாரி யையும் வியாசராலே தேற்றி வருதல்

அப்பால் வாசனை நிறைந்த செந்தாமரைமலரை யொத்த செங் கண்ணுடைய மாதவன் பொருபடைபூட்டிய பூபாலரும், புனித ராகிய பாண்டவர்களும் இருபக்கத்திலும் பெயர்த்துவர எழுந்து பாசறையைநோக்கித் திரும்புவதற்குமுன்னமே, பருதியாகிய சூரி யன் மேற்குக் கடலில்மூழ்கினன். அக்கணம் செங்கண்ணுடைய திருமால் ஐவருடனும் தனக்கினைய சாத்தகியுடனும் துரியோதன மகாராஜனுடைய பாசறையைக் கண்டு கிட்டினர். அக்குறிப் புணர்ந்த பாண்டவர்கள் அப்பாசறைக்குட் புகுந்து, ஆங்காங்குள்ள

பலவிடங்களினுஞ் சென்றுசேர்ந்து, இறந்து போனவர்களுடைய நவமணிப்பணிகளின் குவியல்களையும் திரவியப்பொருள் களையும் ரதகஜதுரகபதாதிகளையும், ஊழியங்கள் செய்யும் உத்தமர்களாகிய தொழிலாளரையும் பாசறையில் காவலாயிருந்தபாவரையுந் தங்கள் பொருளென்று சந்தோஷமாய்க்கொண்டு காவற்படுத்தி, திருமா லுடைய கட்டளையின்பேரில் தேர்விட்டழிய வேண்டுமென்று இரதத்தின் மீதிருந்தார்கள். அந்தவேளையில் கந்தகந்தனுகிய காதன் சிந்தையிலொன்றை நினைத்து, கொந்தளர்மாலைபுனைந்த ஐவரைப் பார்த்து "கேளும்பாண்டவர்களே! திரிதராஷ்டிர மகாராஜனுடைய காந்தாரியோடுஞ் சஞ்சயன்போய் முதன்மைமகனுகிய துரியோதன மகாராஜன் இறந்தானென்று சொல்லுமுன்னமே நான்போய்ச் சொல்லி அந்த இருவருடைய வருத்தத்தையும், மனைவுக்கத்தை யும், புத்திரசோபத்தையும், அவர்களுக்குநேரிட்ட ஆபத்தையும் உங்கள்பேரில் விளையப்போகிற கோபத்தையும், தீராதகுரோதத்தை யுந் தீர்த்துமாற்றி, அவர்களைத் தெளியச்செய்து, தருமந்தப்பாமற் கிரமமாக உங்களிடத்திற்கு மறுபடியும் ஒருகொடியில் வருகிறேன். அதுவரையிலும் நீங்கள் இந்தத் தேர்விட்டிறங்காதிருங்கள்" என்று சொல்லினர்.

இப்படி சொல்லக்கேட்ட கைத்திறல்வல்லவராகிய காவலரை வரும் கருணையங்கடலாகிய கண்ணனைப்பார்த்து, "ஓ அண்ணலே! இன்றையதினந் தேவரீர் அஸ்தினபுரத்திற்குப்போய்த் திரிதராஷ் டிரமகாராஜனையுங் காந்தாரியம்மனையுங் கண்டு சங்கதிகளைவிண்டு மேல் நடக்கவேண்டிய காரியங்களையுங் கைக்கொண்டுவருவீராகில் உத்தமம். இல்லாவிட்டாற் புத்திரசோபத்தினுல் தாங்கள்வருந்துவது மல்லாமல் வீணுய் எங்களைச்சபித்துப் போடுவார்கள். ஆதலால் தேவரீர்சென்று அதற்குத்தக்கபடி தடுக்குப்போட்டு வரவேண்டும்" என்று உத்தமராகிய பஞ்சவருரைத்து வணங்கி விடைகொடுத்து, "நீர்வருகிற வரைக்கும் இப்படியே ரதத்திலிருக்கின்றோம். உத்தரம் வந்துசொன்னுற் பாசறைவீட்டி லிறங்குகின்றோம். பொல்லாமொழி வந்துசொன்னுல் இதேகதியாய்ப்போய்க் காட்டிலிறங்குகின்றோம்" என்று சொல்லினர். அதைகேட்ட ஒப்பற்ற ஒருவனுகிய உவண கேதனன் ஒருகொடியிற்சென்று திரும்புங் குதிரைபூட்டிய தேர் மேலேறிக்கொண்டு, அஸ்தினபுரத்தை நாடியோடினர். இப்படிபோ கிற ஸ்ரீகிருஷ்ணனுனவர் அவிடத்திலே வேதவியாசர் வந்திருக்கும்

படிக்கு நினைத்து, மாடமாளிகைபெற்ற நீண்டவீதிகளெல்லாம் பார்த்து, ஆங்காங்கு இலட்சுமிவிலகிப்போகிய எழிலும், குப்பை கூளநிரம்பியபொழிலும், துக்கத்தினல் அழுகிறகுரலும், அத்துக் கஸ்திரீகள் காலிலணிந்திருக்கிற தண்டைச்சிலம்புகளில் ஓசைப் படும்படியாகிய பரலும் அவரவர் வாட்டமும் அவரவர்கள் கோஷ்ட முங்கண்டு, பெரியஅரசனிருக்கும் அரண்மனைக்குட்சென்று, தேர் டலர்ந்த மாலையணிந்த தோள்திணிந்த சௌபல ராஜகுமாரியாகிய காந்தாரியுடன் தனக்கெவரு மீடில்லாதிருக்குந் திரிதராஷ்டிர பூபதி யினுடைய இருக்கைக்குப்போனர். இந்தக் கிருஷ்ணபகவான்போவ தற்குமுன் ஸ்ரீவேதவியாசபகவான் அவிடம்வந்து பொருந்தி யிருந் தார்.

அப்போது அவ்விருவருடைய துன்பத்தையும் நீக்கிவிடலா மென்று எண்ணங்கொண்டுபோன மேகவண்ணனுகிய வேதவியாசரை யும் எதிரிலிருக்கிற திரிதராஷ்டிர பூபனையுங்கண்டு வணங்கிக் கவலை கொண்டிருந்தார். அக்கால் திரிதராஷ்டிரன் தன்னை வந்துவணங்கின வன் மாயனென்றேர்ந்து, "வாயுபுத்திரனுகிய பீமனைக்கொண்டு என்மக்களாகிய நூறுபேரையுங்கொன்று வானிலேற்றி எனக்கு வயிற்றெரிச்சல்விளைத்துத் தன்வயிறுகுளிர்ந்த தய்மையாளனுகிய கிருஷ்ணனேவந்தது ? இன்னும் என்ன காரியத்திற்குவந்தானே?" என்று அந்தச்சோகத்துடன் உல்லங்கனமாகிய சொற்களைச்சொன் னன். அதுகாலையிற் கிருஷ்ணமூர்த்தியானவர் அவனருகிருந்து, "ஓ மாமா! நமஸ்காரம், நமஸ்காரம், எல்லாவற்றிற்கும் பாத்திரன் நான் தானென்று ஆத்திரமாகச் சொல்லவேண்டாம். நீங்கள் விவேகத்தி லுயர்ந்த மேலோர்கள். உங்களுக்குத்தெரியாத காரியமொன்று மில்லை. மேலும் வானுலகமும் மண்ணுலகமுந்துதித்துப் போற்றும் படியாகிய தூய்மையையுடையவர்கள் நீங்கள்; நீதிமான்கள். நீங்கள் அறியாததும் ஒன்றுண்டோ ? பரிசுத்த இருதயமுள்ள தூயவ ராயினும் விதியின்செயலைக் கடக்கொணுதென்று மேலவர் விதித் திருக்கும் வாக்கியங்களைத் தமதுமனத்திற் பதித்திருந்தும் இப்போது மறந்து பேசுகின்றீர்கள் போலும். ஓ மாண்பினையுடைய மாமா! உமது தவத்திற்பிறந்து சிறந்தபுத்திரமித்திர பௌத்திராதியர் யா வருந் தீர்க்காயுடனிருக்க வேண்டிய விதியிருக்கு மாகில், நான் தூதுவந்தபோது மேல்விழுந்து வேண்டி வேண்டிச்சொல்லிய தூய நல்லுரைகளையும், நீங்கள் எவ்வளவோ பாடுபட்டுக் கூறிய பக்ஷமான

வார்த்தைகளையும், தாய்போன்ற பெரியோர்கள் சாற்றிய வாக்கியங் களையும், உமதுபிள்ளைகள் மறுத்துத் தங்கள் கருத்தின்வண்ணம் நடப்பார்களா! நீங்களே யோசிக்கவேண்டியது. பெரியோர் உரியோர் சொல்லைக்கடந்த அவர்கள் இவ்வுலகத்தில் இருக்கவேண்டிய விதி யில்லை.

ஓ மாமா! புரசைக்கயிறேறு கிம்புரிப்பூண்கட்டிய கோட்டுமால் யானையின்மீது இராஜவீதிதோறும் அழகாகப் பவனிவந்து வாழும்படி யாகியவாழ்வு விரும்பியபோர்கள், அருந்ததிக்கொப்பாகிய கற்புடை யாளை ராஜசபையிலிழுத்துவந்து அவமானப்படுத்திப் துணியை உரிவார்களா? ஈதொன்றைமாத்திரம் நீங்கள்சொல்லுங்கள். எமலோக வாழ்வைப் பெறவேண்டினோர்கள் செய்யும்படியாகிய கொடுமை யைச் செய்தார்களே: இவர்களிருப்பவர்களா? இறப்பவர்களா? என்னத்திற்கு வீணனபேச்சு? பேசப்பேசப் பெரும்பிழைதான். அவர்களிற்றக் காரியங்கட்கெல்லாங் காரணமாய்ப் பிறந்தார்கள். வந்த வேலை தீரும்படி விளையாடினார்கள். காரணப்படி இறந்தார்கள். இனிய வர்களைப்புத்திரரென்று நீங்கள் நினைக்கப்படாது. உள்ளபிள்ளைகள் அதோ இருக்கின்றார்கள். பலம்பொருந்திய பாண்டவர்கள், குண வான்கள், கீர்த்தியுடையவர்கள்.இவர்களைப் பிள்ளையென்றெண்ணும். இவர்கள்தான் இப்போதிறந்தோர்க்கும் இனியிறப்போர்க்குங் கருமக் கிரியைக்கடனுக்குரியவர்கள். இவர்களைநம்பினால் பெருவினையகன்று பெருங்கதிசேருவீர், பெருமையாய்வாழ்வீர். உங்களுக்கொரு குறைவு மிராது. உங்கள் குழந்தையாகிய பாண்டவர்கள் உங்களைக்காணும் படியாய் வரவேண்டுமென் றிருக்கிறார்கள்; எப்படியும்வருவார்கள். அப்படியே வந்தாற் பவளம்போன்ற இதழினையுடைய மாமியுந் தாங் களுந் துயரமில்லாமல் அவர்களை வரவழைத்து, அரவணைத்து ஆசீர்வதித்து உவகையுடன் வாழ்த்துங்கள். இப்போதென்னைப் பேசியதுபோற் கொடுமொழியாகவும், கோபமாகவும், குரூரமாகவும் பேசவேண்டாம். இனி இருப்பது அவர்கள்தான். அவர்களைநாம் நமது நற்குணத்தால் கடத்திக்கொண்டு நல்வழி தேடிக்கொள்ள வேண்டியது. எல்லாம்தெரிந்த இறையவருக்கு நானென்ன சொல்லப் போகிறேன்? இதோ வியாசப்பிரம மிருக்கின்றார். இந்த உத்த மராலே தத்துவவேதங் கற்றுக்கொண்டு முத்தியங்கரையைப் புத்தி யினாற் பெறுங்கள்'' என்று சிநேகமாகப்பேசி பாண்டவரிடத்திலும் பட்சமுண்டாகச்செய்து, "ஏன் வியாசமகாமுனியே! நான்சொல்லு

இறது தங்களுக்கெப்படி யிருக்கிறது" என்றுகேட்டு அவரைத்தூண்டி னர். அந்தச்சொல்லே ஓட்டிக்கொண்டு வியாசருஞ் சொல்லத் தொடங்கினர்.

"ஓ எனதன்பிற்குரிய திரிதராஷ்டிரனே! இந்தக்கேசவனே லேசாக கினையாதீர், தாசர்வணங்கும் பூசனைக்குரியவன். முண்டகாசனனுக்கு கந்த முதல்வன். இவருடைய வாக்கியமே போக்யம். நான்கு வேதமே இவருடைய வாக்கியம். நம்போலியார்க்கெல்லாம் இதுவே சிலாக்கியம். உம்மிடத்தில்வந்து இவ்வளவு சமாதானஞ் சொல்ல வந்தது உமதுதலைமுறையார்செய்த பாக்கியம். ஆகையால் இவர் கூறிய உண்மையை வண்மையென்று கொண்டு மனந்தேறி மேன் மையைக் கொள்ளும்" என்று வியாசராகிய சாந்தசீலருஞ்சொல்ல வே, திரிதராஷ்டிரன் சொல்லியவிதியிலே மதியைச்செலுத்தி, துதியினுலவரைமதித்து, இனித்தனக்காகவேண்டுங்கதியைக் குறித்து ஆலோசித்திருந்தான். இப்பாற்கிருஷ்ணதேவர் காந்தாரியினுடைய கண்கலக்கத்தையுந் தீர்த்து, மாமனிடத்திலும், மாமியிடத்திலும், வேதவியாசரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு, பாண்டவரை வரும் இருக்கின்ற பாசறையை நோக்கிவந்தார்.

கண்ணன், அர்ச்சுனன் தேர் எரிந்துபோகக் கண்டு ஐயுற்ற ஐவர்க்கு அந்தஐயந்தீர்த்து உடனே அவர்களைக் கானகத்தழைத் துப் போதல்

அப்போது அவிடத்திருந்தஐவரும் இவருக்கெதிர்கொண்டுவந்து மிகுந்த உபசாரந்தந்து, தேவரீர்போனவிடத்தில்நடந்தகாரியமென்ன வென்று விஞவினர்கள். அவர்கட்குக்கண்ணன் அவ்விடத்தில்நடந்த காரியங்களையெல்லாம் ஆச்சரியப்படும்படியாய்ச் சொன்னர். அந்த மொழிகளைப் பாண்டவர்கேட்டு, ஜன்மாந்திரங்களிற்செய்த தபோப லன் கைகூடிவந்ததைப்போற் சஞ்சலநீங்கினர்கள். அப்போது நீண்ட மாலையணிந்த நெடுந்தோளினையுடைய முராரியானவர் அஸ்தினபுரத் துக்குத்தாம் போய்வந்த தேர்விட்டிழிந்து, இந்திரகுமாரனுகிய அருச் சுனனைநோக்கி, "அப்பாபற்குணு! உன்னுயுதங்களை யெல்லாம் எடுத் துக்கொண்டு உன்தேர்விட் டிழிந்துவிடு" என்று திருவாய்மலர்ந்தருளி னர். அவ்வண்ணம் அந்த அருச்சுனனவன் அஸ்திரசஸ்திரங்களை

யெல்லா மெடுத்துக்கொண்டு பூமியிலிறங்கினன். அப்போது மேலாகிய அழகு விரிந்துஜொலிக்கும் அருச்சுனனேறிய அழியாரதமானது குபீரென்று பற்றிக்கொண்டு, திகுதிகுவென்று எரிந்து, கரிந்து, பொரிந்து, பொடிந்து, பிடிசாம்பலாயிடிந்து, மண்ணோடு மண்ணாய்மடிந்து படிந்துபோயது. அந்த அதிசயத்தைக்கண்ட பாண்டவரைவரும் பரவாசுதேவனைப்போற்றி, "ஓ பக்தவத்ஸலனே! இதென்னமாயம்? இதென்னஉபாயம்? ஐயோ இதுமெத்தஅபாயம், எங்களைத் தப்பவைத்ததுவேசகாயம். இந்தச்சங்கதியை விவரமாய்ச் சொல்ல வேண்டும்" என்று கேட்கவே, பகவான் "ஓ பாண்டவர்களே கேளுங்கள்: இந்த அருச்சுனனுக்கு அக்கினிதேவன் தேர் கொடுத்தகாலத்தில் நான் இத்தேர் சத்துருக்களுடைய பாணங்களினால் அழியாதிருக்கும்படி வரங்கேட்டேன். அதற்கவ்வக்கினி தேவன் மகாகொடுமையையுடைய பாரதயுத்தம் தொலைகிறவரைக்கும் இத்தாதம் அழியாமலிருக்கும். அப்பாற் பஸ்மீகரமாயெரிந்து என்னிற்கலந்துபோமென்று ஒருவரங் கொடுத்திருந்தார். ஆதலால் இத்தப் பதினெட்டு நாள்யுத்தத்திலும் மகாவரப்பிரசாத மகத்துவமிகுந்த மந்திரஜெபதப உரங்கள்பெற்ற மகான்களுடைய அஸ்திரங்களும், பகைத்தராஜர்கள் தெறித்த படைக்கலங்களும், கெடாத வல்லமையுடன் இத்தத்தேரின் பேரிற் பலகோடியாகப்பொருந்தியும், சத்தியத்திற்குச் சமுத்திரம் கிற்கின்றாற்போல் நின்றிருந்தது. இப்போது பாரதப்போர்முடிந்து நமது மனத்திலிருந்த சபதத்தீயு மீண்டுபோனதால், காளமுகற் சண்டையில்லையென்று தெரிந்து கொண்டு, தான்கொடுத்திருந்த வரத்தின்படிக்கு இத்தத் தேரழியுங்காலம் இன்றைக்கென்றுணர்ந்து, தீயைக்கொண்டெரித்துத் தன்னிடத்திலே சேர்த்துக்கொண்டார் அக்கினிதேவன்" என்று கூறவும் வாகுமாலியினையுடைய தேவள்வீரம்பெற்ற பாண்டவர்கள் அற்புதமிகுந்தார்கள். மாதவனுகியமாயனைப் புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்தினர்கள். அப்போது மறுபடியும் பச்சைமாலானவர் பாண்டவர்களையழைத்து, "நீங்களெல்துபேரும் என் தம்பியாகிய சாத்தகியும் என்னுடன் கூடவாருங்கள். இவ்விடத்தில் தீவினைவிளையாகிய ஓர் தீங்கு நடக்கப்போகின்றது. மேலும் யுத்தமுடிந்தகாலமாகையால் எதிரியைச்சேர்ந்த மேற்படைகள்வந்து வீழ்ந்தாலும்விழும். மேலோருரைத்த ராஜதந்திரப்படிக்கு நாம் இருக்கிறவிடந் தெரியாமலிருந்து இன்றிராப்பொழுதைக் கழிக்கவேண்டியிருக்கிறது" என்றுரைத்து, எல்லோருக்கும் முன்னதாய்க் கால்நடையாகச் சென்றார்.

அந்தராத்திரியில் மற்ற அறுவரும் அவரைப்பின் றொடர்ந்துபோ னார்கள். இப்படி அவரைத் தொடர்ந்து போகின்றவர்கள், இருண்ட மழைக்கால் மருட்சியினாலும் தங்களுடையபுத்திதங்களுக்கு வசமில் லாத மயக்கத்தினாலும், ஒன்றுந்தோன்றுதவர்களாய், "ஓ சுவாமி! நாமாத்திரம் போவோமாகிற் பாசறையினிடத்தில் இளம் பஞ்சபாண் டவரும், மைத்தனராகிய திஷ்டத்துய்மன் முதலான காவலரும் பூவலரும் மாவலரும் கோவலரும் கிறைந்திருக்கின்றார்களே; அவர் களுக்கு ஏதாகிலும்அபாயம்வருமோ?" என்று அயர்ந்து கேட்டார்கள். அவ்வாறுகேட்ட ஐவரைக் கிருஷ்ணமூர்த்தி நோக்கி, "ஓ பாண்டவர் களே! கவலைப்படாதீர்கள். தனக்குமிஞ்சியல்லலோ தருமம்? இதுசாஸ் திரங்களிற் சொல்லிய மருமம். இவைகளைக்குறித்து யோசிக்காதீர் கள். நீங்கள் பிழைக்கும் விதத்தைத் தேடிக்கொள்ளுங்கள். நானிந்தப் பாசறையினிடத்தில் ஒரு பூதத்தைக்காவல்வைத்து, யாதொருபொல் லாங்கும் நடவாமல் நன்மையே நடக்கும்படி செய்து வருகிறேன். அப்பால் தெய்வச்செய லெப்படியோ" என்று அவர்களுக்குத் திடஞ் சொல்லி அழைத்துக்கொண்டு நெடுந்தூரம்போய், ஒருபாலையடி வாரத்திலிருக்கும் வெட்டவெளியில் இருகரையும் ஒரு கரைபாய்ப் பெருகியோடிவராகின்ற ஓர் ஆற்றின்கரைப் பள்ளத்தாக்கிலே தங்கி கினார். மாற்றையரும் அங்கனமேநின்றார்கள். பின்பெழுவரும் இராத்திரிமுழுதும் நித்திரையில்லாமற் சீவனமந்திரம் ஜெபஞ் செய்துகொண்டு பொருந்தியிருந்தார்கள்.

கிருபாசாரியர் முதலிய மூவருந் துரியோதன னைத் தேடிச்சென்று காணுதல்

ஐயா ஜனமேஜெயமகாராஜனே! இத்தமட்டும் இவர்களுடைய கதையைச் சொல்லிவந்தோம். இனிமேற் கலங்கி வீழ்ந்திருக்கின்ற இராஜாதிராஜனுடைய சங்கதிகளை விளம்புகிறோம். கேட்பீராக! பீமசேனனுடைய கதையடியால் துரியோதனன் துடைமுறிந்து பூமியின்போரிற்சாய்ந்து கிடக்கிறான். அந்தச்சமயத்திற் சப்திக்கும் வீரகண்டாமணி தரித்த ஆசாரியபுத்திரனாகிய அசுவத்தாமன், மணங்கமழ்ந்த மாலையணிந்த கிருபாசாரியர், கேடில்லாப்புய வலிமைபெற்ற கிருதவன்மன் இவர்கள்மூவரும் இந்தப்பதினெட்டு நாட்களிலும் பட்டவருத்தந்தீர ஆலமரத்தடியிற் பதித்துச் செவ்வை யாய் நித்திரைபிடித்துச் சாயுங்காலம்வரைக்குந் தடித்து நித்திரை

போயெழுந்து, துரியோதனமகாராஜன் வருவான்: வருவான் என்று கருதியிருந்து பார்த்துப் போதுபோகிறவரையிலும் வாராமையாற் பொருந்திய உயிரினைத்தையும் புரக்கும் ஈசனுடையசெயலே நினைத்து, எப்படியோ என்னவோவென்று ஏக்கங்கொண்டு துரியோதனமகாராஜனுடைய செயலை அறிவோமென்று ரதமேறி, மேகம் போன்ற வில்லைவளைத்து நிறுத்திய வண்ணமாய்த் துரியோதனன் ஜெபஞ்செய்திருந்த மடுக்கரைக்குவந்து பார்த்தார்கள். அவ்விடத்தில் அநேக ரதங்களும் யானைகளும் குதிரைகளும் கால்பலங்களும் நெருங்கிமிதித்து, மடுக்கரைபெல்லாஞ் சிதைத்துப்புதைத்துத் துர்த்துபோயிருக்கக்கண்டு, "இதென்ன பெருமோசமாயிருக்கின்றது? பாண்டவர் கண்டு வளைத்துக்கொண்டார்கள் போலுமிருக்கிறதே!" என்று அந்தச்சேனைகள் முதலானவைகளோடு தேர்கள் போயிருக்கும் வழியைப் பிடித்துக்கொண்டுபோவ தானார்கள். அப்போது சேனைகள் சூழ்ந்துசென்றதும், துரியோதனனுடைய அடி மத்தியில் நடந்ததும், அந்த அடிச்சுவட்டிற் பத்மரேகை பதிந்திருப்பதும் பார்த்துவரும்போது, சியமந்தபஞ்சகத் தீர்த்த மாடிவராகின்ற வேதநன்னூலாய்ந்தவராகிய சிலவேதியர் இந்தமூவரையும்நோக்கி, எங்கு போகின்றீர்களென்று வினவினர். அதற்கவர்கள் துரியோதனமகாராஜனைத் தேடிக்கொண்டு போகின்றோமென்றுசொல்ல, "ஐயோ! வேந்தாகிய துரியோதனன் பீமன்கதையால் துடைமுறிந்து வீழ்ந்தான். ஆனும் சரீரத்தைப் பார்த்துவரலாம்" என்று புகன்று வேதியர் அகன்றார்கள்.

அம்மொழி காதிற்சுரீரென்றுசுடக் கலைத்து,நெஞ்சயர்ந்து,இடியோசைகேட்ட பாம்புபோற்சாய்ந்து, கைகாலோய்ந்து, மாய்ந்தவர்களைப் போல் வதனம்வாடி,தேரின்பேரிலே தள்ளாடிவீழ்ந்து வேசாறி, சற்றுநேரந்தரித்து உயிருமாறி, மீட்டுஞ் சாரதிகள்செய்த உபசாரத்தாலேதேறி, உயிர்ப்போங்கி, உயிர்தாங்கி, தேரையுருட்டிக் கொண்டோடி, துரியோதனன் வீழ்ந்த இடத்தைநாடி, நிலத்திலழிந்துசிவக்கவுருக்கிவிட்ட கதிர்க்கம்பியைப்போற் செந்தொடைசிதற வடிப்பட்டுத் தரைமீதுருண்டுகிடக்கிற துரியோதனமகாராஜனுக்கு எதிரிற்போய் நின்று,தேம்பித் தேம்பிக்கரைந்து ஓங்கி ஓசைவிட்டிரைந்து, வாய்விட்டழுது, வயிற்றிலடித்து மோதி, அவன்மேல்வீழ்ந்து தளர்ந்து, உள்ளுடைந்து, புரண்டு, முகத்திலும் அகத்திலும் மோதிச்சுருண்டு, நிலத்திலே தலையை மூட்டிக்கொண்டு, நெஞ்சுபிஞ்சுபோ

கும்படி மிஞ்சிக்கதறி, கொஞ்சிக்குளறிப்பேசி, "ஓசெஞ்சுடர் மாரா! ஓ சேவகத்தீரா! ஓ கலங்காமனத்தோய், ஓ கருணையம்புயத்தோய், ஓ அருளருமதியாய்! ஓ அலகிலாநிதியாய், ஐயையோ! ஈதென்ன வீதியோ! ஓ அரசே! உம்முடன்கூடி யொருங்கு வீழ்ந்திலேம், எம்ம ஞருடனும் ஏகாதிருந்தோம், அம்மம்ம மற்றிதருவினைப்பயனே" என்றுவெய்துயிர்த்து விழிமாரிசொரிந்து,மென்மலர்போல் விளங்கிய அவன்கால்மேல் வீழ்ந்தெழுந்து அந்தோவே என்று அழுது, இம்மட்டோ விதியின் தன்மையென்று தளர்ந்து அசைவற்றவர்களா யடங்கினர்கள். அக்காலையில் உயிர்வதையால் ஓடுங்கிக்கண்ணே மூடிக்கொண்டு ஓய்வாகவிருந்து உணர்வைச் செலுத்தும் வாழ்வைப் பெற்ற துரியோதனமகாராஜன் இவர்களிட்ட கூச்சலினாலும், கண்ணீர்ப்பாய்ச்சலினாலும், மேல்விழுந்து அலட்டிய வேகத்தினாலுங் கொஞ்சந் தெளிந்து, இன்னுரென்று புத்திபாலதித்து, நல்ல ஞாபகம்வந்து, வறண்டுபோன நாக்கையுந் தொண்டையையும் கனைத்து ஈரமாக்கிக் கொண்டு, கண்ணைத்திறந்துபார்த்து, அவர்களை இறுகக்கட்டியணைத்து, முகத்தோடு முகம்வைத்து, உடலோடுடல் பொருத்தி, கனைத்துக் கிளைத்துச் சில சங்கதிகளைச் சொல்லுவ தானான்—

ஆ என்மித்திரர்களே! நீங்கள்மூவரும் மடிவிலிருந்த என்னுடன் வார்த்தை தந்து நான்சொல்லிய வசனங்கொண்டு மறைந்த அத்தகணமே, கட்டுக்கோப்புடன் பாண்டவரைவரும் பலவிதத் தானைகளோடும் வந்து மடுக்கரையை வளைத்துநின்று, வெகுவிதமாகிய வம்புரைகளுந் தீயமொழிகளும் பாடினர்கள். அது என்காதுக் கிசையாமற் கடுகெனக் கரையேறிவெகுண்டு, கதைதாங்கிய கையுடன் காலால்நடந்து, இவ்விடத்திற்குவந்து பீமனுடன் எதிர்த்து இகல்விளைத்தேன். அவனுடைய உயிரானது உள்ளுடைந்து ஊற்றமழிந்து கிடந்தப்பி அந்தோவென்றலறி அவனிமேல் வீழும்படிக்கு அடித்து, அனந்தமுறை ஜெயம்பெற்றேன். அத்தத் தருணத்தில் அரியாகிய கிருஷ்ணன் அர்ச்சுனனை விட்டுத் தன் துடையைத் தொட்டுக்காட்டச்சொல்ல, அவனவ்வாறே பீமனுக்குக் காட்டி என் துடையைமோதச் சைகை பண்ணினான். உடனே அந்தக் குறிப்பை பீமன் அறிந்துகொண்டு என் துடைமேலடித்தான்; கதாயுத சாஸ்திரத்தின்முறைமை தப்பி அடித்ததுமல்லாமல், என் னுயிரடங்கிமுடிந்து போகும்படியாய் நான்தரையில்வீழ்ந்த பின்பும்

அதிகமாகிய கோபத்துடன் என்கலை குறைய உதைத்து, தனது வாய்கிறைய சொல்லாத சொல்லெல்லாஞ்சொல்லி, அண்ணன்தம்பிகள் சந்தோஷிக்கும்படியாய் அடர்த்தான். குறைவற்ற செல்வம் பொருந்தி நிறைபெற்ற கிருபர்குழாந்தொழ வாழ்வுற்ற யான் அப்பாவிகளாற் குலைகுலைந்து, கலைகுலைந்து, என்போன்ற கொற்றவர்களும் இன்னுமுள்ள மற்றவர்களும் எழிலுடைய நற்றவர்களும் வசை பேசிக் கொள்ளும்படியாய் மாறுத பழிக்காளாய் ஆறுதகுறைக் காளாய் நிலத்திற்கிடக்கின்ற எனக்கு இனிமேற்பேச்சென்ன? பாசபந்தலைராக்கிய சம்பந்த பக்ஷம் என்ன இருக்கிறது? இனிப் பேசவாயில்லை. என் அன்பிற்குரிய ஆரியர்களே! என் ஆண்மைக் குரிய வீரியர்களே! அவர்கள் கொண்ட சபதங்களைக் குறை வற முடித்துக்கொண்டார்கள். இனிப் பேசவேண்டிய தொன்றையுங் காணேன்" என்று சொல்லவும், அந்த மொழியை வந்த மூவருங் கேட்டுச் சிந்தை இரங்கி, இருகட்புனலும் ஆறுபோலோட அழுது அவசமுற்றார்கள். அதுகாலையிற் கிருபாசாரியர் துரியோதனனைப் பார்த்து "அருளுற வழக்கழி வுறுதலோர் மாற்றமு மறனுட னழுக் காறணுகு ரு வேற்றமு, மிருநில மதித்திட வினிதுகோ லோச்சு தலியல்பு கிருபர்க்கெனு முறைமையோ பார்த்திலை, கரைகெழு முடித் தலைவில் வேதியன் மீப்படு நிமகன் முறித்தவில் விதுரனே போற்பல, குரவரு முரைத்தசொ லுறுதிநீ கேட்டிலை குருமரபி னுக்கொரு திலகமா மூர்த்தியே" என்று சொல்லிமனஸ்தாபப்பட்டார்.

துரியோதனன் அசுவத்தாமனுக்குச் சேனாபதிப் பட்டங் கொடுத்தனுப்புதல்

அப்போது அசுவத்தாமன் அவரைப்பார்த்து "ஓ மாமா! இவ்வித நீதிகளைப் பேச இது தருணமல்ல. சற்று நீர் சும்மாவிரும்," என்று கையமர்த்தி வணங்கா முடியோனைப்பார்த்து, "ஓ அரவக் கொடிக்காசே! முதனுன்யுத்தத்திற்றானே எனக்குச் சேனாபதிப் பட்டங்கட்டி யிருப்பீராதில் எனக்கொப்பாருமில்லை, எனக்கெதிர் நிற்பாருமில்லை. இந்தப் பாண்டவர்களைவென்று உமக்கு முடிசூட்டி வைப்பேன். நீர் அப்படிச்செய்யாமல் மற்றப்பேர்களை வியந்து புகழ்ந்து மகிழ்ந்து, உமக்கிஷ்டமாயி ருந்தக்கெல்லாஞ் சேனாபதிப் பட்டங் கட்டினீர். என்பேரில் வீண் சந்தேகங்கொண்டு நீக்கிவிட்டீர், இப்பவுமென்ன? இன்றிப் பகற்பொழுது போவதற்குமுன்னே

உமது சத்துருக்களாகிய பாண்டவர்களின் உயிரைவென்று உறுதி கொண்டு, இன்னுமோர் க்ஷணகாலத்திற்குள் உம்மிடத்திற்கு வருகிறேன். எனக்குச் செலவுகொடும். இப்போதே போய்ச் சத்துருக்களையடித்து, சங்கரன் கொடுத்திருக்கிற வாளாயுதத்தால் அவர்களுடைய தலைகளைவெட்டி, பாசறையையும் பாழாக்கிச் சுடுகாடாகச்செய்து வருகிறேன். அப்படிகெடுத்து வராமற் போவேனுகில், நான் உயர்ந்த பிரமகுலசிரேஷ்டனுகிய துரோணுச்சாரியருடைய புத்திரனல்ல. ஓ மல்யுத்தத்திற் கைதேர்ந்த புயங்களையுடைய மன்னர் மன்னனே! சுவர்ண மணிமகுடந்தரித்த உமதுதலையின் மீதுபீமன்கால்கொண்டுதைத்தானென்பது கேட்டும், நானும் உம்முடன்கூட உயிர்விடாமற் பிராணனை இதுவரையிலும் வைத்துக் கொண்டிருப்பது பெரிய அழகாயிருக்கிறது. ஓ பெருமானே! இப்போதாகிலும் உமது சேனுநாயகனென்று என்னைநியமித்து அனுப்பு வீராகில் பழிக்குப்பழியாகிலும் வழிக்குவழியாய் முடிக்கிறேன்" என்று அக்கறையாய்ச்சொல்லவும், அவன்சொன்னவார்த்தையாலுண்டாகும் பெருமையுஞ், சிறுமையுஞ், கன்மையும், தீமையும், முன்பின் நாடிப்பாராதவனுய் (காளை கன்றீன்றது என்றால் காளைப் பார்த்துத் தொழுவத்திற்கட்டு) என்று சொல்லுகின்ற அவசரக்கார எஜமானைப்போல் ஆசைகொண்டு,அசுவத்தாமனுக்கு மாலையணிந்து தலையின்மீது முழுமாமணிப் பட்டஞ்சூட்டி, நீயென் சேனுபதியாகப்போய்ப் பாண்டவர்களைப்பற்றற முடித்துவாவென்று முடுக்கிவிட்டான் துரியோதனமகாராஜன். இப்பாற் பொன்மலைபோன்ற வில்லைத்தாங்கிய கிருதவன்மன், கிருபாச்சாரி, அசுவத்தாமன், இவர்கள்மூவரும் பாண்டவர்களுடன் போர்புரிந்து கொல்வதற்காகத் துணிந்து விரைந்து போனுர்கள்.

அப்பாற் சஞ்சயன்வந்து தரணிமேல் விழுந்துகிடக்கின்ற தராதிபனைக்கண்டு, அவன்மேல் அலறிவீழ்ந்து, கண்ணீர்கலுழ்ந்து, கவலைகொண்டான். அக்காலையில் துரியோதனமகாராஜன் கண்திறந்து பார்த்து, "அப்பாசஞ்சயனே! எழுதாப்பொறிக்கு அழுதாற்றீருமா? விவகாரந்தெரிந்த நீதானே விசனப்படப்போமா? ஊழ்வினைவிட்டுவிடுமா? விடாது, விடாது. எனது தந்தையுந் தாயுஞ் சிந்தைநொந்து மெத்த வைவார்கள். அவர்களுக்கு இந்த பக்த நீங்கத்தக்கதாக மேலோருரைத்த சாந்தநூலெல்லாம் விரித்து அவர்களைத் திருத்து. நான் விசேஷித்துச் சொல்லவேண்டிய தொன்றுமில்லை,

கான் இவ்வுலக வாழ்க்கையைக் கைவிடுங்காலம் சேரிட்டது, நீ போய் வருக" என்று விடை கொடுத்துவிட்டான். அவனிடத்தில் விடை பெற்றுக்கொண்ட கலிக்கியான வல்லவனுகிய சஞ்சயன் காலத்தையும், விதிச்செயலையும், வினைப்பயனையு நினைத்து, கசிந்து திரும்பிக் கவலையுற்று, அதுவேபயணமாய் அஸ்தினபுரத்திற்கு வந்து, திரிதராஷ்டிரனையுங் காந்தாரிமுதலாகிய பேர்களையுங்கண்டு, மகனுரைத்த வசனங்களெல்லாஞ் சொன்னன். இந்தச் சொல்லைக் கேட்குமுன்னமே அவர்கள் ஆவென்றலறிப் பூமியில் வீழ்ந்து, பொருமி விம்மி இவ்வுலகில் ஒருவராலுந் தாங்காத பெருந்துயருற்றுத் தளர்ச்சியடைந்தார்கள். வானமுமிரங்க வாய்விட்டுப் புலம்பினர்கள். "அடா மைந்தா! சித்தாகுல மூட்டிவிட்டுச் செத்தாயோ? உந்திய விதியின் செயலால் உலந்தாயோ? ஊழின்பயனுல் ஒடுங்கிவிட்டாயோ? ஒருபேச்சாகிலும் பேசவொண்ணுதோ? உற்றூர் பெற்றூர் இருக்கின்றூர்களே யென்று உன்னப்படாதோ? உயிரழிந்தாயோ? அந்தோ! மைந்தா இந்தா சற்றேவந்தாதரியாயா? சார்ந்துன்சிந்தை பரியாயா? அடாகொந்தாரணிந்த கோவே! எங்கள் குறை தீர்க்கவந்த காவே! பாண்டவர்பகை வேண்டாமென்று பலகாலுஞ் சொன்னேமே. அப்போது பரந்தாமன் வந்து சொல்லிய பேச்சைப் பரியாலோசனை பண்ணுமற் போனேமே! கர்ணனை கம்பிக் கனல்மோசம் போனேயே, கடைசியிலவன் சார்பினர்க்கே களப்பலியானுயே, ஐயையோ!" என்று கண்ணீர்சொரிந்து கவலை கொண்டார்கள். ராஜஸ்திரீக ளெல்லாரும் உடலுடனுயிரை ஒழிப்பவர்போற் கடலெனவிரைந்து கடகடெனப்புரண்டு, கண்ணீர் பெருக்கிப் பரிந்து, உண்ணீர்வறண்டு உரிந்து, கருகிக்கரைந்து, களைமேலிட்டு, கணவருயிர் நடங்கியதைப்போற் கருத்தழிந்து சாய்ந்தார்கள். அப்படி சாய்ந்த அவர்களையெல்லாஞ் சஞ்சயன் தேற்றி, பிராமணர் முதலிய பெரியோர்களைப் பக்கங்களில் அமைத்து, அகேகதர்மகீதி களை எடுத்துச் சொல்லச்சொல்லி விடுத்து இக்கவலையுடன் வலை போன்ற பாசமாகிய கடலையுநீந்தி ஞானமலை யேறும்படியாய்ப் போதித்துக் கொண்டிருங்களென்று வைத்துவிட்டுத் தான் குருக்ஷேத்திரப் பூமிக்கு யதாப்பிரகாரம்வந்து சேர்ந்துவிட்டான்.

சுயோதனன் வதைச் சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது.

அசுவத்தாமன் பாசறைப்போர்ச் சருக்கம்

கண்ணன் துதி

தீமோக னஞ்செய்மூலை மானுர் நிதம்பவலை தேரு தழுந்து முலையும்
மாமோக மைந்தர்பொருள் வாழ்வா லயர்ந்துதடு மாறு மயங்கு மிடையுந்
தாமோ தரன்கமல மாதாள் பவன்கருதி சார்பான வன்றனது தாள்
நாமோ தவந்தொழுது னேகா ணவும்பெருகி னுமே யனந்த விழியோர்

கேளும் கிருதார்த்தனுகிய ஜனமேஜய மகாராஜனே! முனிமைந்தனுகிய அசுவத்தாமன், கிருபாச்சாரியர், கிருதவன்மன் இவர்கள் மூவரும்வந்து ஒரு மடிவைக்கண்டு, தங்கள் தேர்பூட்டிய குதிரைகளேயவிழ்த்து அந்த மடிவில் நீருண்ணவிடத்து, தாழ்ந்திலங்கு முப்புரி நூலேயுடைய தடமார்பசையச் சந்தியாவந்தன முடித்துக் கொண்டு, சந்தனமரத்தின் நிழலிலிருந்து காயத்திரி ஜெபம்ஜெபித்து, போதுபோகிற வரைக்குஞ் சமயம்பார்த்துக் காத்திருந்தார்கள். இப்படி யிருக்கும்போது குளிர்ந்தமாலேயணிந்த குருகுமாரனுகிய அஸ்வத்தாமன் அவிடத்திலிருந்த ஓர் ஆலமரத்தைக்கண்டான். அந்த ஆலமரத்திற் பொருந்தியிருந்த அநேகங் காக்கைகளேப் பெருங் கூகையானது வந்து மாறிமாறியடிக்கவும், அப்போது அக்காக்கைகள் அம்மரத்தைவிட்டு அப்பாற் பறந்துபோகக் கண் தெரியாமற் கீழ்வீழ்ந்திறக்கவுங்கண்டு சந்தோஷத்தாற் பூரித்து, பகையாளிகளேக் கொல்லவேண்டுமென்று கோபத்துடன் தேடிவந்த நாம் இராத்திரியென்றும் நித்திரைக்காலமென்றும் தருமமெண்ணிப் பார்க்கலாகாது. எப்போது சமயம் ஏற்பட்டதோ அப்போதே அடர்த்து தொடர்ந்து படர்ந்து அடல்புரிந்து, அவர்கள் தலேகளே அறுத்தெறிதல் வேண்டுமென்று மனத்தில்நினேத்து, பகற்காலத்திற் காக்கையிஞல் அடிபட்டகூகை இராக்காலத்தில் தன்னுடைய பகையை முடித்துக்கொள்ளுகிற தல்லவா? இதுவே நமக்குப் போதுமான திருஷ்டாந்தமுஞ் சகுனமுமென்று சங்கரஸ்தவுத்தியம் பண்ணி, இது நல்லசமயமென்று போராட எழுந்தான்.

அசுவத்தாமன் போர்க்கெழக்கண்ட கிருபாசாரியர் சில நீதிகளைக்கூறித் தடுக்க, அதற்கு அவன் சமாதானஞ் சொல்லுதல்

அப்போது அசுவத்தாமனுடைய கருத்தை அம்மானுகிய கிருபாசாரியர் ஓர்ந்து, "ஓ எனது மருமகனுகிய அசுவத்தாமாவே இங்கேவாரும். என்னிடத்தில் உட்காரும்" என்று பூமிமேலிருத்தி, "உமக்கு காலுெரு வசனஞ் சொல்லுகிறேன். அதை நீர் தள்ளாமல் உட்கொள்ளவேண்டும். அதேனெனில், நீர் ஆசாரிய புருஷனுடைய புத்திரனுதலாலும், உயர்ந்த பிரமகுல சிரேஷ்டராகையாலும், எனக்கு மருமகனுயிருக்கிற சுதந்தரத்தினுலும் உமக்கு நான் வற் புறுத்திச் சொல்லவேண்டிய மாற்றமுங் கடமையு மிருப்பதாலுஞ் சொல்லுகிறேன். அண்ணன் தம்பிகளிருவருஞ் சண்டைபண்ணினுர்கள். அக்கிரமம் யாரிடத்திலிருந்தேதா அவர்கள் தம்மை யடுத்தவர்களுடன் தாங்களும் அழிந்துபோனுர்கள். நமக்கென்ன வந்தது காமுங்கூடவிருந்து வஞ்சனையில்லாமற் பாடுபட்டோம். பழவினைப் படி முடிந்து போயிற்று. இனி நாம் நற்றவஞ்செய்து ஆத்மலாபத்தைத் தேடவேண்டியதேபொழிய, இன்னமும் பழிபாவத்துக் குட்பட்டுப் பிறவிக்கிடந்தேதடிக் கொள்ளலாகாதே, ஓ புகழுலாவிய அருள்குலாவிய பூசுரனே! இப்போது நீர்மேற்போட்டுக்கொண்டு ஏற்பட்டுப்போகிற காரியத்தால் எவருக்கு என்னலாபம் வரும்? உமக்குத்தா னென்னபலனுண்டு? ஓ உத்தமரே, ஓ மீதலத்தவராகிய தேவர்களும், பாதலத்தவராகிய நாகர்களும், பூதலத்தவராகிய யாவர்களும், மாதலத்தவராகிய மகான்களும் ஏத்தித்தோத்திரம் பண்ணும் நற்குலக்குணம் வாய்ந்தவரே, ஓ கன்னூலாய்ந்தவரே, ஓ பாவமுதலிய வஞ்சகங்களைக் காய்ந்தவரே, ஓ பக்குவமான ஞான மோனவழியிற் சாய்ந்தவரே, மேற்கூறிய யாவரும் பழித்து நிந்திக்கும்படியான பழியை ஏற்கலாமோ? உன்னைப்போன்றவருக்கு இந்தக் காரியம் உரியதல்லவே, ஓ உண்மையானவரே, இராத்திரியில் நித்திரைசெய்யும்போதும், கையிலாயுதமில்லாமல் நிராயுதராயிருக்குங்காலத்திலும், மடைக்கலமென்று சரணடைந்தோரையும், யுத்தத்திற்குப்பயந்து ஓடுகிறவரையும், வில்லையெடுத்துப் புல்லுக்கவ்வினுரையுங் கொல்லப்படாது. கொன்றுல் அவனுக்கும் அவன்கால் வழிக்கும் ஆறுக் கோடம்டாவஞ் சபவிக்கும். அந்தப்பாவத்தை

யனுபவித்துத் தீர்க்கவேண்டும் என்று மேலோர்கூறியிருக்க, இவ்விதி தப்பியதனால் வெகு இடரைவெகுபேர் அனுபவித்திருக்க, நீரும் அதுபோகசாலியாய் அறித்திருந்தும், இந்தராத்திரியிற் பாண்டவர்களைக் கொல்லப்போவது பாரமார்த்தியமல்லவே, பொழுது விடிந்தபிற்பாடு பிரவேசித்து உமக்கு இஷ்டமானவரைக்கும் போராடலாம். அதுபாவமில்லை; நீரிப்போதுபோவதை நிறுத்திவிடும்" என்று கூறித்தடுத்தார்.

இப்படியாகத் தடுத்தவரை அசுவத்தாமன்நோக்கி, "ஓ மாமா! தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய மொழியை அடியேன் தடுத்ததே னென்று தியங்கவேண்டாம். நானுரைப்பதைக் கேளும். வையமுழுதுஞ் செய்ய கோலோச்சும் ஐயனும், அரசர்க்கரசனுமாகிய மன்னன்முன் செய்தவினையால் முடிந்தான். அது போகட்டும்: அம்மன்னன் பூமிமேல்விழுந்துபுரண்டு உயிர் துறக்கும்போதினில், இரக்கமென்பது எள்ளளவில்லாமற் குரங்கின் சேஷ்டைபாயவனுடைய பரிசுத்தமுடி பொறுத்த தலைமேற் காலினாலுதைத்துத் துவைத்தது தருமமா? அப்படியாகவுதைத்த அத்தப்பிமானியும், அவனுக்குரியயாவரையுங் கொல்லுதற்குத்தருமஞ் சொல்லாமலிருக்கிறதோ தயை தாட்சண்யம் எண்ணிப் பார்க்கலாகுமோ சொல்லும். ஓ பரமசிவனிடத்தில் அன்புமிகுந்தபரிசுத்த இருதயமுடைய கிருபாசாரியரே! யாகாதி கிருதுக்களுக்கெல்லாந் தலைவராகிய தனுர்வேதகுருவென்னும் என்தந்தை துரோணாசாரியர் வெறுங்கையுடனின்று மேனுக்கங் கொண்டுதம்முயிரை விட்டுவிடும்படியாயிருக்கும்வேளை கண்டு உவர்க்கடல்வளைந்த உலகத்தார் பார்க்கும்படி தலையைத் தரித்துவிட்ட சண்டாளப்பாவிகளைத் தலைவாங்குவது பாவமோ சொல்லும். ஓ என் மாமா! கங்காபுத்திரனைப் பிறந்து காசினியாளும் ஆசையற்றிருந்த தகங்கள் குல முதல்வனுகிய பீஷ்மாசாரியரைப் பிராணமூர்ச்சை போதும்படியாய்ச் சாய்த்த பஞ்சமபாவிகளை என்கையிலிருக்கும் பாணங்களினுடைய நெருப்பினும் புரட்டிப் புரட்டிச்சுட்டு, வேகச்செய்யாமல் விடுவேனுகில், தவமும், மேன்மையும், குணமும், சால்பும் தருமமும் நம்மிடத்திற் பொருந்துமோ? நமக்குப் பழியும்பாவமும் உண்டாகாமற்போகுமோ? ஓமாசில்லாதவரே! என்தகப்பனை முடித்த தீயனுனவன் நாசமடையாமல் இன்னும் பூமியிலிருப்பானுகில், நானொருவீரனென்று பேர்வாங்கிப் பிராணனோங்கி புகழ்தாங்கி இப்பூமியிலிருப் பதைப்பார்க்கிலும்

இறந்துபோவது மெத்தவுமேன்மை. ஓ குற்றமில்லாத குணவாரிய னே! மேலும், என்தந்தை இறந்துபோவதன் முன்னே என்னை யழைத்து உரைத்த சொல்லுறுதியை இப்போதேனும் நினைத்து முடியாதிருப்பேனுகில், என்னைவிடத்தீயன் இவ்வுலகத்தில் யாரிருப் பார்கள்? தந்தைசொல்லைத் தடுத்துவந்த பேர்களல்லவோ சர்வசண் டாளராய்ப் பிறப்பது? ஓ கிருபாச்சாரியரே! இராக்காலமென்றும், பிராணவாயு ஓடுகிற சுழுத்தியென்றும், எவ்வளவும் எண்ணி மனங் குன்றவேண்டாம். எப்போது சமயம்கேரிட்டதோ அப்போதே போர்வினைத்துப் பொட்டெனச் சத்துருவைமுடித்து, புகழையும் வெற்றிமாலையையும் பூண்டுமகிழ்வதே புகழாய்க்கொள்ளும். ஓ புண்ணியனே! கருணைக்கடலே! பொல்லாங்குநினையாத புனிதனே! சாத்திரங்கற்ற அறிஞர்களும் அமரர்களும் இராட்சஸருடன் போரா டிக் கொல்லுந்தோறும், இரவென்றும் பகலென்றும் ஏக்கமென்றும் தூக்கமென்றும் இளைத்தலென்றும் களைத்தலென்றும் அஞ்சினே னென்றும் கெஞ்சினே னென்றும் அடைக்கலம் அடைந்தானென்றும் பிணக்கள மறைந்தானென்றும் எண்ணிப் பார்ப்பதுண்டோ? அது சற்றுமில்லை. ஐயனே! நாகங்கடிக்கவந்தால் கல்லநாள் பார்த்துக் கொல்லவேண்டு மென்பதுபோலிருக்கிறதே தேவர் சொல்லியநீதி. இதுகல்லசேதி. ஓ மாசில்லாததேசிகனே! பாண்டவர்கள் இதுவரை யிலுஞ் செய்துவந்தசண்டையில் கடந்திருக்கும் அகியாயங்களைத் தேவர் யோசிக்கவில்லையோ? ஐயோ! பலவாறுகிய மோசமேயல்லது தருமமாகச் சண்டைசெய்தார்களென்றே நினைக்கின்றீர்? அவைக ளெல்லாம் போகட்டும்: இத்தமுதல்வனுகிய துரியோதனனைத் துடையிலடித்துக் கொன்றது சுத்தந்தானே? கதாயுத சாஸ்திரத் தில் அரையின்கீழ் முடிக்கச் சொல்லியிருக்கிறதோ? இது தருமந்தா னே? இப்போர்ப்பட்டகாதகரை, கொடியபாதகரை, இத்தவேளையிற் கிட்டி அவர்களைக்கொன்று, என் கணையாலும் வாளாலும்வென்று மீண்டாலொழிய உயிர்வைத்துத் தாளமாட்டேன்; நான் வாழமாட் டேன்" என்று வேகமுங்கோபமுங் மேன்மேலுமுண்டாக விளம்பி னன்.

பாண்டவர் பாசறையை நோக்கிச் செல்லும் அசுவத்தாமன் அங்கேபரனேவலால் வந்தெதிர்த்த பூதத்தோடெதிர்த்திலைத்தல்

இவ்வாறுகூறிய மருமகனுடைய வார்த்தையைக்கேட்ட கிருபாசாரியார் மனமுருகி, "ஐயாவிவேகசிலாக்கிபனே! உம்முடைய கருத்து இவ்வண்ணமாக உறுதிப்பட்டுவிட்டது. இஃதும்முடைய செய்கையல்ல. உம்மையுமெம்மையும் உலகச்செய்திருக்கின்ற உமாமகேசனுடைய செயலென்று உறுதியாய்க்கொண்டேன். இனிவேறெண்ணமில்லை" என்றுசொல்லி மருமகன் மனதின்படி. உடன்பட்டு, குதிரைபூட்டிய இரதத்தில் ஆரோகணித்துக் கொண்டனர். அதுகண்ட கிருதவன்மனும் ரதாரூடனானன். உடனே இவ்விருவருந்தன்னிருபுறமு மருவிவரும்படி அசுவத்தாமன் அழகியதேரேறி, ஆண்சிங்கம் புறப்படுந்தன்மைபோற் பாண்டவர்களுடைய பாசறையை நோக்கிப்போனன். இந்தப்பிரகாரம் பாண்டவர்களுடைய பாசறைக்குச் சமீபத்திற்போய் மூன்றுதேராளிகளும் நின்று, தாங்கள்நாடிய செயல்களையும், நடத்தப்போகின்ற செய்கைகளையும், செவ்வையாகநினைத்து, ஸ்திரங்கொண்டுவில்லெடுத்து, வெற்றிபெற்ற அம்பரூத்தூணிகட்டி வில்நாரிபூட்டி ஏழுலகத்தை எரிக்கும்படியாயெழுந்த வடவாமுகாக்கினி, உகாந்தகாலாக்கினி ஜடராக்கினி என்னும் மூவாக்கினிபோன்று வந்துநின்றார்கள். அப்போது வரிசிலைக்கொரு மாமுனிவனுகிய துரோணசாரியருடைய வரத்தினுலவதரித்த அசுவத்தாமன் அந்தப்பெரிதாகிய பாச்றையைக் கிட்டினன். அக்கால் திரிபுரம் நீறுகச் சிரித்தருளிய தேவர்கள் தேவனென்னுஞ் சிவபெருமான் இந்த அசுவத்தாமனுடன் சில திருவிளையாடல் செய்யவேண்டுமென்னும் இச்சையுடையவராய், அழகிய பாசறையின் முன்முகப்பில் வருகின்றவர்களுக்கு நேராக மாயப்பூதமொன்று ஏற்படுத்திநிறுத்தினர். அப்பூதமோ கறுத்தமேனியும் திருத்தமாகப் பொறிந்து கருகிச் சிவந்தவாள்விழிகளும், மேற்போர்வையாகிய யானைத்தோலும் குள்ளமாகிய காலும், வெண்பிறை போன்ற கோரதந்தங்களும், நெருப்புக் கொழுந்தையொத்த செம்பட்டைமயிரும், தீ நிறவடிவும், அண்டமளாவிய உயரமும், அகண்டந்தடவிய கைகளும், ஆயுதப்படைகளு முடையதாய், ஏழு முலைகள் ஏகமாய்த்திரண்டு எதிர்நின்றதைப் போன்ற ஓர் பெருங்

காத்திர உருவமாய் கிலேபெற்று கின்றது. அந்தப்பூதத்தை அசுவத் தாமன்கண்டு, இது கண்ணுதலாகியகடவுளின் செயலென்று கருதத் துட்கொள்ளாமல், உகாந்தகாலத்திற் சீறி வெருங்கிய செந்தீபைப் பார்க்கிலும் மேலாகிய வெருப்புப்பொறிகள் திசாதிசைகளும் படியும் படிக்குக் கண்கள் சிவந்து வளைத்த வரிவில்லைக் கொண்டு, அந்தர பாணம், தக்திரபாணம், இந்திரபாணம் மந்திரபாணம் இவை முதலிய வடிக்கணைகளைக் கோடிகோடி கோடாகோடி யென்று சொல் லும்படியாக மேல்மேலாகச் செலுத்தினன்.

கேளும் ஜனமேஜயமகாராஜனே! அத்தனைபாணங்களும் அடி பட்டு உடைப்பட்டு ஓடிபட்டு அலக்கழிந்து பிளந்துதளர்ந்துபலபல வென்று உதிர்ந்து போகும்படிக்குப் புறங்கையாற் றட்டிமுறித்தது வெற்றிவிறலுடைய அப்பூதம். அதைக்கண்டமாதவத்தோனுகிய அசுவத்தாமன் ஆவேசமும் அகங்காரமும் அதிக கோபங்கொண்டு, செங்கண்ணிலிருந்து தீப்பொறிசிதறச் சினந்து, அக்கினியாஸ்திரம், இந்திராஸ்திரம், தேவாஸ்திரம், வாயுவாஸ்திரம், வருணஸ்திரம், பிர்மாஸ்திரம், நாகாஸ்திரம், மேகாஸ்திரம், மோகனஸ்திரம் இவ் விதமாகிய வானவர் படைகளையெல்லாம் ஏடுத்துப் பூஜைகொடுத்து ஆக்கிரமித்துப் பராக்கிரமத்துடன் முறைமுறையாய்த் தொடுத் தான். அந்த அஸ்திரங்களையொல்லாம் பிடித்து ஆவென்றுவாயைத் திறந்து அரைகொடியில் விழிங்கியது, மூன்றும் பிறையை முடிக் தருளிய முத்திமுதல்வன் வெற்றிபெறவிடுத்த வெம்பூதம். இந்தப் படிக்குச் சாசரவென்று சரற்காலத்து மேகம்பாற் சரங்களைப் பொழிந்து தன்னுடைய அம்பறாத்தூணியிலிருந்த அசுதிரங்கள் யாவும் அற்றுப்போகவே, வட்டமாக வில்வளைத்த அஸ்வத்தாமன் மனம்புழுங்கி மதிமயங்கி முகம்வாடிகின்றான். அப்போது அந்தப் பூதமானது அவன்கையிலிருந்த வில்லை எட்டிப்பறித்து மளமள வென்னமுறித்து தூரத்தொலையில்தூக்கியெறிந்து அந்த அசுவத்தாம னுக்குச் சமீபத்திற்கிட்டி அவனுக்குரோகக் குறுகி சங்குசக்கரம் கதைகோதண்டம் கட்கம் என்னும் பஞ்சாயுதங்களுடன் பிரகாசிக் குங் கிருஷ்ணமூர்த்தியாகிய கேசவனைப்போலத் திருவுருக்கொண்டு கின்று, உச்சியில்வருஞ் சூரியனைப்போல் உருக்தெழுந்து உருக் காட்டியிருந்தது. அப்போது இந்த அசுவத்தாமனைச் சேர்ந்துவந்த நஞ்சுறைந்த வேலினராகிய கிருபாச்சாரி கிருதவன்மன் இவர்களிரு வருமெதிர்த்து, தங்கள் வல்லமையைக் கொஞ்சங் காட்டினர்கள்.

அவர்களையும் அந்த அஸ்வத்தாமனைப்போலாட்டி அவர்களுடைய வில்லையு முறித்து அவனுடன் சேர்த்துக்கூட்டி, 'பச்சைமாலைப்போற் கொண்ட ஒருருவைப் பதினுயிரவருவாகக்கொண்டு அந்தப் பாசறை யிடங்களெல்லாம் பரந்துநின்று, அண்டமுகடியும்படியாய் அசனி யே றெனவிடித்துச் சிரித்தது. அந்தகைப்பைக் கண்டமாவலராகிய மூவரும் மனக்கருத்தழிந்து வாள்கொண்டு போர்புரிந்தார்கள். அப் போரில் அந்தவாளும் பொடியாய்ப் போய் அவர்களுடைய வாழ்நா ளும் போகும்படியாகிய காலம்வந்தது. அதையம்மூவரு முணர்ந்து, அடடா! இவ்விடத்திற் காவலாயிருந்த ஒருசிறுகுறட்பூதத்தால் இவ் வளவுகலகம் விளைந்ததே: இன்னுமிதனுலேதது சம்பவிக்குமோ என்று கண்கலங்கிக் கவலையுற்றார்கள். அப்பொழுது ரிஷபவாகன முடைய நின்மலனேவிய பூதம் மறுபடியும் ஆகாயத்தில்வளர்ந்து வாகாகிய புயம்விரியக் கைகளை நீட்டி இவர்கள் மூவரையுந் தேரோடு வாரிக் குயவன் திகிரிபோற்சுழற்றி வானத்தி லெறிந்துவிட்டது. அதுகாலையில் அவர்கள் மூவருந் தேருடன் தியங்கிப்போய் ஆகாயத் தையளந்து, மீட்டுந் தளர்ந்து வருபவர்களைப்போல்தலைகீழாக வந்து மண்மேல் வீழ்ந்தனர். குதிரைகளும் சாரதிகளும் பெரிய தேர்களும் தூள் தூளாய்க் கழிந்து பொடியாய்ப் போயின. இவர்கள் மாத்திரஞ் சிக்கைமெலிந்து பிரக்ஞை தப்பிச் சற்றுநேரம் நிலத்திற்கிடந்து, பின்னும் பிழைத்துய்ந்தெழுந்து, ஒருபுறம்போய்ச்சேர்ந்து, ஆச்சரி யமு மாச்சரியமுங் கொண்டிருந்தார்கள்.

அசுவத்தாமன் அரனைநோக்கித் தவஞ் செய்ய, அவர் கோடிபூதங்களையேவிக் குணசோதனை புரிதல்

அந்தவேளையில் கிருபாசாரியாகிய மாமனும் கிருதவன்மனும், முனிமகனுடைய முகத்தைநோக்கி, "ஓ போர்த்திறப்புலியாகிய புனி தனே! இந்த விறலுடைய பூதமானது அந்தமட்டும்நமக்குப் பிராண பிச்சைகொடுத்தது. காரியம்பெரிதேபொழிய வீரியம்பெரிதல்ல, மேலும் நாம் க்ஷாத்திரமுள்ள க்ஷத்திரியரல்ல, யுத்தமுனை வெட்டு ஓடுங்கியழிந்தோ மென்றுணர்ந்தீர். நமது உரங்கெட்டுப்போச்சு தென்று நீர் உருகாதீர். அதனுல் மனங்குன்றாதீர். திரும்பிப்போகும் படியான விதத்தைத்தேடும். நாம் உயிருடன் போய்விடுவதே உண் மையான முறைமை" என்று சொன்னார்கள். அவர்கள் மொழியைத்

கேட்ட அசுவத்தாமன் சிறிதேனுஞ் சஞ்சலமில்லாதவனுய்த் திடங் கொண்டு, "ஓ மாமா கிருபாசாரியரே! காமனை யெரித்தருளிய கண்ணுதற்கடவுளின் கருணை என்னைவிட்டு நீங்கிப்போங்காலம் நேரிடுமாகில், அப்போதொருவேளை உமது பேச்சைக்கேட்டுத் திரும்பிப்போனும் போவேனேயொழிய, இதன்மத்தியில் இளைத்துப்போவேனென்றெண்ணுதீர். இன்னமுஞ் சொல்லுகிறேன்கேளும், கந்தவேளைத் தந்தருளிய கறைமிடற்றண்ணலைச் சிந்தையுட்கருதி, அவருடைய அநுக்கிரகத்தால் என்னெண்ணப்படி நிறைவேற்றுகிறேன். நீங்கள் கவலைப்படாமல், வேறொன்றுங் கருதாமல், இந்தமரத்தடியிற்றானேயிருங்கள். இதோ நான் வருகிறேன்" என்று சொல்லி அவர்களை உயர்ந்த ஓராலவிருட்சத்தின் கீழிருக்க நிறுத்திவிட்டுப் பரமசிவனைத் துதித்துத் தொழுதற்கு அப்பாற் செல்லுவதானன். இப்பாற் கிருபாசாரியரும், கிருதவன்மனும் அம்மரத்தடியி லிருந்தார்கள். அசுவத்தாமன் அருங்காடடைந்து, பரிசுத்தமாகிய நீரில் ஸ்நானம் பண்ணிச் சகல சுபத்தையுஞ் சுகுண ஜெயத்தையுந் தரும்படியாகிய திருவெண்ணீறணிந்து, மெய்ஞ்ஞான விளக்கமா யிரா நின்ற பஞ்சாட்சரத்தை அன்புடன் பிரணவமூலமாய்ப் பற்பல முறையாக உருச்செபித்து, மாயாப்பிரபஞ்ச மாயைகள் தொடராமல் மயக்க மறுத்து, வாசனுவிஷயாதிகளை மாய்த்து, திரிகரணசுத்தியாய், சிவ பூஜைபத்தியாய், ஒன்றுகிய ஒருவழிப்படுத்தி, யானெனதென்னும் இரண்டு பற்றையும் விட்டு, மூன்று குணத்தையு மூலையிலடக்கி, நான்குகரணத்தை நலியச்செய்து, ஐந்து அவத்தையை அணுகாது ஓடுக்கி, ஆறுதாரத்தை அறிவைத்தேடி, ஏழுதானும் எங்கவிடுத்து, எட்டு விகாரமும் இறக்கக்கெடுத்து, ஒன்பதுவாயிலும் ஒருங்குடனடைத்து, பத்துவாயுவும் பாயத்தேக்கி, சதாசிவப்பெருமான் தாளினைவிரும்பி, தாயைக்கருதுந் தனிச்சேயைப்போல் சுப்பிரமண்ய சுவாமிகொப்பாகிய அசுவத்தாமன் வட்டணைப் பத்மாசனமிட்டிருந்து சிவபெருமானைச் சிந்தையில் உன்னினன்.

இவ்விதமாகிய யோகநிஷ்டையிலிருந்து தவம்புரிந்துவரும் அசுவத்தாமனுடன் திருவிளையாடல் செய்வதற்கு விரும்பிய கறுத்த கந்தரக்கடவுளென்னுஞ் சுந்தரன், என்னை யடிமைகொண்ட விடையேறிய விமலன், அந்த அசுவத்தாமனுக்கு எதிரில் ஓர் அக்கினிப் பிழம்புபோல் வந்திருந்து, கொடிய நெருப்பின் வடிவாய்க் குறுகிய கால்களையுடைய கோடி பூதங்களை இந்த அசுவத்தாமன்பேரி லேவி

ஞர். கேட்டீரோ ஜனமேஜய மகாராஜனே! அந்தப் பூதங்களெல் லாங் கன்னங் கறேலென்று கறுத்து, நெருப்புக்கட்டிகளைக்கக்கிக் கொண்டு நெருப்புமூச்சு விட்டுக்கொண்டு அண்டமதிரவந்துவளைந்து கொண்டு, ஒருமுகத்தை யுடையதும், இருமுகத்தை யுடையதும், பலமுகத்தை யுடையதும், ஒருபுயத்தை யுடையதும், இருபுயத்தை யுடையதும், பலபுயத்தை யுடையதும், பிறைபோன்ற கோரப்பல்லை யுடையதும், கோடையிடிபோலதிருங் குரலோசையை யுடையதும், மிகுதியாகிய நெருப்புப்பொறிகளைக் கக்கியதும், பலவிதமான உருவ மானதும்,பல திசையினின்றுங் கலகலவென்று வருவதுமா யிருந்தன. மேலும் அப்பூதங்கள் சிங்கமுகத்தையும், யானைமுகத்தையும், கலை மான் முகத்தையும், மரை முகத்தையும், குரங்கு முகத்தையும், குதிரை முகத்தையும், மான் முகத்தையும், கரடிமுகத்தையும், புலி முகத்தையும், பூனை முகத்தையும், நாய் முகத்தையும், நரி முகத்தை யும், பசு முகத்தையும், எருது முகத்தையும், இன்னும் பலவிதமாகிய மிருகங்கள், பட்சிகள், இவைகளின் முகத்தையும் உடையன. அன்றியும், ஆடுகின்றன சில பூதங்கள். பாடுகின்றன பலபூதங்கள். காலாலெற்றின சிலபூதங்கள். வேலாற்குத்தின பல்பூதங்கள். தேடுகின்றன சிலபூதங்கள். ஓடுகின்றன பலபூதங்கள். கையை ஆட்டுவன சிலபூதங்கள். மெய்யைக் காட்டுகின்றன பலபூதங்கள். பெருகிவந்து மூடுகின்றன சிலபூதங்கள். உலகமெல்லாஞ் சுற்றி ஓடுவன சிலபூதங்கள். ஒன்றினோடொன்று வந்து கயந்து கூடுவன பலபூதங்கள். மூளுகின்றன சில பூதங்கள். மீளுகின்றன சிலபூதங்கள். அங்குசபாசங்களை அங்கையிற் பிடித்து, ஆடாமனி தன், ஆடா புனிதன் என்று அதட்டி அதட்டி அடர்ந்து வருவன சிலபூதங்கள். சங்கிலிவெங் கதைகளைத் தடக்கையிலேந்தித் தவம் புரிபவனெங்கே? செபம்புரிபவனெங்கே? என்று தட்டிக்கொட்டித் தகைகந்துவருவன சிலபூதங்கள். இவையல்லாமலும் வாலெடுப்பன சில. கால் எடுப்பன சில. வந்துவந்து இடிபோலிடிப்பன சில. வெந்து வெந்து வெடிபோல் வெடிப்பன சில. வேலாயுத மெடுப்பன சில. சூலாயுதம் பிடிப்பன சில. வில்லெடுப்பன சில. கல்லெடுப்பன சில. அஸ்திரந்தொடுப்பன சில. சஸ்திரம் விடுப்பன சில.கொம்பு பிடிப்பன சில. அம்புஅடிப்பன சில. குணிலெடுத்தெறிவன சில. மணியெடுத் தாட்டுவன சில. குந்தம் உந்துவன சில. பந்தங் கொளுத்துவன சில. வாள்வீசுவன சில. தோள் கூசுவன சில. மழுவெறிப்பன சில. கொழு தரிப்பன சில. வட்டம் வருவன சில. கோட்டமிடுவன சில. ஆழிமடுப்

பன சில. தாழியெடுப்பன சில. வாயைத்திறப்பன் சில். பேயிற்பறப்பன சில. வலுமை பேசுவன சில. விருதுபேசுவன சில.

அசுவத்தாமனுடைய கலங்காநிலையைக் கண்டபரமன் அவனுக்கு அநுக்கிரகம்புரிதல்

இப்படியாகிய பூதங்கள் ஏழுசமுத்திரத்தையும் ஆகாயத்திலெழுச்செய்து, ஏழுலகத்தையும் வாயிலிட்டு விழுங்கி, அருஞ்சுடர்கள் மூன்றும் அஞ்ச, அமரர்யாவரு மயர்ந்துகெஞ்ச கைபோடு கைபறைந்து காலோடு கால் விரைந்து வர்வஸம்மார இருட் பிரளயம்போலெழுந்து சப்தமுனிவரும்பயப்பட வாயைத்திறந்து களகள வென்று சலப்பிரளயங்கக்கி, பளபளவென்று வடவாமுகாக்கினியை விக்கி, எட்டுத்திக்குந் திக்குமுக்கிட்டுப் போகும்படிக்குச் செய்தனவாம். இவ்வண்ணமாக நெருங்கிநெருங்கி வந்துவந்து சேர்ந்துசேர்ந்து பார்த்துப்பார்த்து வேர்த்துவேர்த்து ஆர்த்துஆர்த்துத் தொடர்ந்து தொடர்ந்து படர்ந்துபடர்ந்து அடர்ந்தபோதிலும் அசுவத்தாமன் மனங்கலங்காமல், பகிழ்வொடுங்காமல், தேசார்மதிகலையாமல், பூசாவிதிகுலையாமல், மகேசருடைய அன்பைமறவாமல் ஆநந்தத்தெளிவெய்தியிருந்தான். இவ்விதமாகவிருந்த அருந்தவக்குமாரனை ஒரு கரும்பூதம் புறப்பட்டுவந்துபிடரியிற் கைகொடுத்துந்தித்தள்ளி, ஒரு பெரியமேடையிலே தழைத்தெழுந்தெரிகின்ற அக்கினிகுண்டத்துக் கெதிரிற்கொண்டுபோய் விட்டது. அப்போதவன் திடுக்கிட்டு விழித்துச் சிந்தைவருந்தி "ஆ! ஆ! என்னையாளுமீசனுகிய வெந்தையை இடைவிடாதுன்னிய சிந்தையை அநியாயமாய் இவ்வொரு பூதம் வந்து அபரச்செய்ததே. உலவாப் பெருங்குணத்துத் தமனைக் கண்டு அவருடைய அருள்கொண்டு எண்ண நிறைவேற்றிக் கொள்ளாமற்போனேனே, உயிர் இருந்தென்ன? இறந்தென்ன" என்று ஏங்கி எழுந்து, அந்த அக்னிக்குழியில் வீழ்ந்து உயிர்மாய்த்துபோவோ மென்று வீழ்வதற்குத்தாவினன். அந்த அக்கினிகுண்டமானது உடனே மறைந்தது. பாலைபோதியாகிய பரமேச்வரரானவர் அவனுக்குக் காட்சியாக எதிர்தோன்றினர். உடனே அசுவத்தாமன் அவர்திருமேற்றழுது கண்ணீர்சொரிந்து கருத்துவந்தேற்றி, பாடிப்படித்துபகைத்துத் துடித்துத் தனது ஆறுமைபால் அன்போடுருகித் துக்கித்துத் துதிக்கின்றான்.

ஆதியே முதலே யெவர்க்கும் அநாதியே மறைகா ணெனைச்
சோதியே சுடரே யனந்த சொரூபியே மலைவல்லியோர்
பாதியேபுல னைந்தும்வென்றவர் பற்றிநின்ற பதத்தனே
னீதியேகுண மூன்று நீங்கிய நின்னை யாருணர் வார்களே

விச்சையாயினை ஞானமாயினை வேதமாயினையமுதொடும்
நச்சுமாயினை ஞாலமாயினை நால்வகைப்படும் நல்லுயிர்க்
கச்சுமாயினை வினையுமாயினை யருளுமாயினை யவரவர்க்
கிச்சையாங்கதி யாவுமாயினை யுணரவல்லவ ரியாவரே

ஓ எப்பொருட்கு மிறைவனே! ஓமுழுமுதலே! வேதங்களிலு லுங் காணப்படாத சோதியே! அந்தச்சோதியின்சுடரே! ஆநந்தமய மாகியரூபமே! மலைவளர் மரகதக்கொடியாகிய பார்வதிதேவியாரை அர்த்தசரீரமாயுடைய அங்கமே! மாசற்றதங்கமே! ஐம்புலன்களைந்த அறிஞர்கள் அன்பாற்பிடித்த அடியிணைகளையுடைய அத்தனே! உண்மையான பரிசுத்தனே! முக்குணங்கடந்த முதற்குணனே! அகனே! அதுலனே! அமலனே! அசலனே! தேவரீரை பாரறியத்தக்கவர்கள்? சகலவித்தையும் ஆயினை. அவ்வித்தையாற் பெறும் ஞானமாயினை. அந்தஞானத்தால் அறியும்படியாகிய நான்குவேதமாயினை. தேவர்கள் முதலிய யாவருக்குந் திவ்வியஅமுதமாயினை. அந்த அமுதுடன் பிறந்த விஷமுமாயினை. இல்வுலகமாயினை. இவ்வுலகிற்பிறந்த சராசர உயிருமாயினை. அந்த உயிர்களில் நால்வகை யோனியுமாயினை. அந்த நால்வகையோனிகட்கும் அச்சுமாயினை. அந்த அச்சிலுதித்த பேர்களுக்குப் பழவினையுமாயினை. அவ்வினையை அகற்றியாளுதற்கு அருளுமாயினை. அவரவர்களுக்கு இச்சையாகிய மோட்சம் யாவுமாயினை, இப்பேர்ப்பட்ட உம்மை உணரவல்லவரியாவர்? ஓ உமாபதியே யென்று பலவிதமாகத்துதி சொல்லிக்கொண்டு ஏத்திப் போற்றி இறைஞ்சிவாழ்த்தி இருகரத்தையுஞ் சிரமேற்கூப்பி வணங்கி நின்றான். அப்படியாகநின்ற அசுவத்தாமனை ஸர்வேச்வரன் பார்த்து சந்தோஷம்பூத்துக் குன்றுதோறாடிக் குன்றமெரிந்தகுமரக்கடவுளைப் போல் ஆசையோடணைத்து "அப்பா அசுவத்தாமாவே! இன்றுகாம் உன்னுடன் விளையாடிக்காட்ட வேண்டுமென்று வந்தோம் உன்னுடன் எதிர்த்துப் போராடி வெற்றிபெற்ற பூதங்கள் யாவும் நமது லீலாவிநோதியின் திருவிளையாடல் விநோதமென றறியக்கடவை. இத்தியாதி விபரீத விநோதத்தினாலும், எழுந்தெரிந்த தீப் பொறிமழையினாலும், சிந்தைவருந்தி மையலால் மயங்காமல் நிலைகொண்டுநின்ற தெறி

யோன் யோதலால், காமுவந்தனம். நல்லது: உனது கருத்தென்ன சொல்லுக'' என்று ஈசன்கேட்டலும், அசுவத்தாமன் ''சுவாமி! என் கருத்து வேறொன்றுமில்லை: பாரதப்போரில் மிகுந்தபேரை முடிக்க வேண்டினேன்'' என்றுசொல்லி அடிக்கமலந்தொழுதான். அதுகாலையில் அம்மைப்பப்பாகிவந்த என்னையன் மெத்தமகிழ்ந்து ஒருவாளாயுதமொன்றுகொடுத்து, சேனைக்கடலியாவையும் இத்தவாளினால் முடிப்பையென்று அருள்சுரந்தளித்து, ''இன்றுராத்திரியில் உனக்கெதிரில் வந்து யுத்தந்தந்து உயிர்பிழைப்பவர் ஒருவருமில்லை. எல்லோருமிறப்பார்கள். ஆனால் உன்கண்ணிற்படாமல் ஓடிப்போனவர்களுக்கு உயிருண்டு. அவர்கள்மாத்திரம் பிழைப்பார்கள். ஓ வெவ்வியவில்லைத்தரித்தவீரனே! இன்றிராப்போரில் வாகைபுனைந்த உவகையுடன் மீளக்கடவை'' யென்றுரைத்து, ''பூதங்களுடன் போர்புரிந்தபோது உங்கள் மூவரிடத்திலிருந்து பறித்த கணைப்புட்டிலும் மூறித்தெறிசவிற்களும் நிலத்தில்விழுந்து நொருங்கிப்போன தேர்குதிரைசாரதிகளும் தேவர்கள் கொடுத்தபலவித பாணங்களும் உங்களுக்குப்பின்னாலே கைகூடிவரும்''என்று அருளளித்து, தோகைபாகனுகிய அச்சுலபாணியர் தமது கயிலாயகிரிக் கெழுந்தருளினர்.

பாண்டவச் சேனைபதியாகிய திஷ்டத்தூய்மன் வதை

இப்பால் அசுவத்தாமன் அரண்போனதிக்கு நோக்கிப்பணிந்து திடீரென்றுவிழுந்து, சிரமேற்கரங்குவித்து, தேம்பித்தேம்பி யழுது, தொழுதிரும்பினன். அப்போது முன்னே பூதங்களாற்போன தேர், குதிரை, சாரதி, வில், பாணம், இவைமுதலியவெல்லாம் அசுவத்தாமனுக்குநேராக இருக்கக்கண்டு அற்புதமடைந்து, நின்மலனுடலைப் புகழ்ந்து, தேர்மேற்கொண்டு நிமிஷத்தில்வந்து, மாலையணிந்த மற்புபதத்தோராகிய கிருபாச்சாரியாரையுங் கிருதவன்மனையுங் கண்டு, அவர்களை அழைத்து, அவர்களுடைய தேரையுங் கணைகளாதிகளையுங் கொடுத்தான். அதற்கவர்கள் அதிசயித்து இஃதென்ன மாயமென்று கேட்க, கங்காதரக்கடவுளின் கிருபை இப்பேர்ப்பட்டதென்றுகூறி, தான் தவமிருந்ததும் தாணுவானவர்வந்து அருள்புரிந்ததும் மற்றெல்லாவற்றையுஞ் சொல்லி, அவர்களுடைய கண்ணும் காதும்கருத்தும் களிப்போங்கி நிறையச்செய்தான். பின்பவ்விருவரும் மலைபாகிய தோள்களிபூரித்து, மகாதேவருடைய மலரடியை மனத்தினுற் பூசித்துப்போற்றி, அவருடைய அருளைப் புகழ்ந்துவாழ்த்தி, மிகவும்வியந்து, அதிகவிதமாகயந்து, அசுவத்

தாமனுக்குப் பயந்திருந்தார்கள். அப்போது அசுவதாமனனவன் சிற்பரனுடைய திருநாமங்களை யெடுத்துத்துதித்து, திவ்விய தரிசனத்தை நினைத்துக்களித்து, திடத்தாற்றேறிச் சிந்தைதோய்மாறிச் சத்துருக்கள் நிறைந்திருக்கின்ற அலங்காரமாகிய பாசறையை நாடி நடந்து, சந்தடிசெய்யாமற்புகுந்து, அப்பாசறைவாசலிற் கிருபாசாரியரையுங் கிருதவன் மனையுங் காவல்வைத்து, "வெளியேயிருந்து உள்ளேவருகிறபேரை விட்டுவிடுங்கள். உள்ளேயிருந்து வெளியே ஓடுகிற பேரைவிடாதீர்கள். இன்று நல்லபிரயோசனம் பெறுவோம்" என்றத்துணைத் தேராளிகளைநிறுத்தித் தனதுதேரை ஓசைபட வொட்டாமல் நடத்திக்கொண்டு பாசறைக்குட்புகுந்தான். இப்படி கூடவந்த அவ்விருவருஞ் சஞ்சலம் போக்கிப் பாசறைவாசலிற் பத்திரமாகவைத்துத் தாமரைமாலைதரித்த அஸ்வத்தாமன் உள்ளே புகுந்தமாத்திரத்தில் தேர்விட்டிழிந்து, வாளாயுதத்தை வலக்கரத்தெடுத்து, கதம்பமாலையணிந்து களிப்படைந்து போராடுதற்குரிய இராஜராஜர்களுக் கெல்லாஞ் சேனைபதியென்று நின்று புறங்கொடுத்திளையாமற் பதினேழுநாளும் போர்தந்த துருபதியன் மைந்தனும், வரிசிலைக்குரிபவல்லவனும், தங்களுக்குக் குலப்பகைபானவனுமாகிய திஷ்டத்தூய்மனனவன் அயர்ந்து நித்திரை செய்யும் படியாகிய சித்திரமாளிகைக்குள்ளே போய்ப் புகுந்தான். அங்கே பள்ளியறைமத்தியில் இரத்தினத்தீபங்கள் பிரகாசிக்கும் படியாய் செப்புதற்கரிய ஒப்பில்லாத ஜெய சிங்கம்போன்று நித்திரைசெய்யா நின்ற திஷ்டத்தூய்மனை அசுவத்தாமன்கண்டு, எதிர்புகுந்து பகைத்து, இருகண்களினு மிருந்து நெருப்புப்பொறி யெரிந்து விழும்படியாய்ச் சினம்புரிந்து, அந்தணர் புகழுந் தன் தந்தையாகிய துரோணாசாரியரைப் போர்முகத்தில் கலிபோக்கிய தீயமா பாதகனல்லவா இவனென்றுதெளிந்து, இணையில்லாத தன்னுடைய வில் நாணியை திஷ்டத்தூய்மனுடைய கழுத்தில்மாட்டி முறுக்கியிழுத்தான்.

இப்படி நித்திரைவேளையில் திடுக்கிடத்தக்கதாய்க் கழுத்தில் மாட்டி யிழுத்தபோது திஷ்டத்தூய்மன் தூக்கந்தெளிந்து ஊக்கத்துடனெழுந்து, வந்தவன் தனக்குப்பழைய பகைவனாகிய அசுவத்தாமனென்றறிந்து, மகத்தாகிய திடங்கொண்ட தடஞ்சிலைதாங்கிய தோளுங்கரமுந் துடிதுடித்து, ஓவென்றுவாய்விட்டு உரக்கக்கூவிப் பெருமூச்செறிந்து, உயிர்கலங்கி, எண்ணைக்குள் அகப்பட்டஎழை

யுயிர்போற் காத்திர க்ஷாத்திரமெல்லாங் கலங்கியொடுங்கிக் கவலை படர்ந்திருந்தான். அப்படியிருந்த ஐவர் சேனைபதியை அவ்வஸ்வத்தாமன் யாகத்திற்குக் கொண்டுவரும் பசுவ்வப்போற் பரபரவென்று பாயோடிழுத்து வீதியிற் கொண்டுவந்து, பார்த்தபேர்யாவரும் பயந்து, அயர்ந்து, பதுங்கி, ஒதுங்கித் தியங்கி மயங்கி, மருளும் படிக்குப் பரமசிவன்கொடுத்த வாளினால் அவனைச்சிலிர்க்கச் சிலிர்க்க வெட்டி, தேகமுழுதுஞ்சிதைத்துச் சித்திரவதை செய்கிறான். அப்போது திஷ்டத்தூய்மன் வருத்தமடைந்து, அசுவத்தாமனுகிய அந்தணனது அம்புலிபோன்ற முகத்தைப்பார்த்து, "ஐயா, என்தலை யை ஒரேவெட்டாக வெட்டிவிடும். பலவெட்டாக வெட்டி வதைக்கவேண்டாம். தேவரீர்கையால்விறந்தால் நானிப்போதே பரகதியடைவேன்" என்று சொன்னதைக்கேட்ட மாண்டுபோன துரோணச் சாரியருடைய மைந்தன் பின்னுங்கடுகடுத்து, உடனேதனது வாள் விழி சிவந்து நீள்பொரிசாறிய, வன்னிநின்றெரிய, மதிமுகங்கரிய, வஸ்திரஞ்சரிய, மனங்கொள்ளாப் பெரிபவபிரம் யாவர்க்குந்தெரிய, மாறுக்கோபமேற்கொண்டு "அடா குருத்துரோகி! நான்குவேதங் களுணர்ந்தும், சுற்றவங்களெல்லாம் புரிந்தும், சாஸ்திரங்களிற்றிரிந் தும், கல்லமகமெல்லா நயந்தும், யாவருந்தொழச் சிறந்தும், ஆசாரியபுருஷனுகவிருந்த என்னத்தன் சிரத்தை ஊணும் உதிரமும் உறைந்துதேய்ந்து காய்ந்த வாளினால் உருட்டிவிட்ட பாதகனுகிய உனக்குப்பரகதியுமுண்டோ? அடாபாவி" என்று புகன்று முன்னிலு மிகுந்த கோபமேற்கொண்டு, திஷ்டத்தூய்மனுடைய சென்னியைத் தறித்து விண்ணினில் வீசியெறிந்தான். இப்படி கூற்றினுங் கொடிய அசுவத்தாமனவன் வாசனைபொங்கிய மாலைகள்தாங்கிய மன்ன ரோங்கிய மகுடகோடிகள்வணங்கிய மணிப்பாதங்களையுடைய திஷ்டத்தூய்மனை வதைத்து, இஷ்டமேற்கொண்டு அப்பாற்சென்று, அன்றிராத்திரிமுழுதுந் தெழித்து, பாசறை எங்குநாடிப்பாண்டவர் களைத்தேடிப் படைமன்னர் முதலியபேரைக்கலக்கி அலமலக்கிவரு கின்றான். அப்போது யமதச்சையாய்த் தூங்கிய பேர்களெல்லோரும் ஏங்கி அலக்கணுற்றெழுந்து இன்னதென்று தெரியாதவர்களாய்க் கண்ணைக்கசக்கி, யார்யார் என்று அவசரத்திலோடிவந்து பார்த்தார் கள். அக்கா லவ்வசுவத்தாமன் திங்களணிந்த சிவபெருமானளித்த வாளைக்கொண்டு வழியில்நின்று, வந்தபேர்களுடைய தலைகளைத் துணித்து, பார்த்தவரெவரும் பயப்படும்படியாய் மாற்றினான்.

உத்தமோசா, உதார்மன், சிகண்டி இவர்கள் முதலாயினோர் வதை

இந்தவேளையில் தொங்கிய வீரகண்டாமணிதங்கிய தாள்வலியுந் தோள்வலியும் வாள்வலியும்பெற்ற துரோணாசாரியராகிய தந்தை கண்ணைமூடி யோகத்திருந்து உயிரைவிண்ணி லெழுப்பிவிட்ட பதினைந்தாநாட்போரில் வீணை அவர்தலைபைவெட்டிய திஷ்டத்தூய்மனாகிய வீரன் நித்திரைசெய்யுஞ் சமயத்திற் பாளயத்திற் குள்ளே புகுந்து பழிக்குப்பழியாக உடலைச்சிதைத்துக் கொந்திமுடியைமுடித்தான் அத்துரோணாச்சாரியர் மைந்தனை அசுவத்தாமனென்று பாசறையிற் படுத்திருந்த அரசர் பலருங் கேட்டுணர்ந்தெழுந்து பயப்படாமற்சென்று, சண்டை செய்வோமென்னு மயமுங்கொண்டு உத்தமோசா, உதார்மன், சிகண்டி இவர்முதலாகிய பாஞ்சாலரும், சோமுகத்தலைவரும் வில்வீரர்பலரும், வேந்தரினவரும் படையாட்சிமுதல்வரும் பரிந்து வந்தெதிர்ந்தார்கள். அப்படிவந்த போர்களை அசுவத்தாமன் வழிமடக்கி, அருச்சுனன் காண்டவவன தகனத்தில் ஆருயிரையெல்லாம் அடக்கி மடக்கியவாறுபோல் அப்பாலிப்பாற் போகவொட்டாமல் அடக்கி அடித்துமடித் தேறுங்காலையில் உத்தமோசா, உதார்மன், இவர்கள் முதலாயினோர் எதிர்வந்து எதிர்த்துப் போர்புரிவதானார்கள். அதுகண்ட அசுவத்தாமன் கண்டுவந்து, கரத்திலிலங்கும் வாளைக் கறகறவென்று வீசி, யானை, குதிரை, தேர், காலாள் முதலாயுள்ள காவலரை யெல்லாமுடித்து, அஸ்திரவல்லபத்திற் உத்தமோசா, உதார்மன், என்னுமிவ்விருவரையுஞ் சேதித்துச் சென்னியறுத்தான். அன்னகாலையில் அசுவத்தாமனுக்குமுன் னிற்கமாட்டாமல் யாவரும் ஓடிப்போடிப்பறக்க, அவர்களையும் ஒரு தொடிப்பொழுதிற் கோடிகோடி அஸ்திரங்களையுஞ் சஸ்திரங்களையும் விடுத்து அடித்துச் சண்டை செய்யவல்ல அனேக மன்னமண்டலீகரையும் விடாதுவதைத்து, காங்கேயருடைய வீழ்தலுக்குக் காரணமாய்நின்ற சிகண்டியையுஞ் சிதறவீசிப் பார்மேல்வீழ்த்திப் படுகொலை புரிந்தான். இப்படி அசுவத்தாமன் யாவரையுந் துரத்தித்துரத்திக் காலெடுத்துவைக்கும் அதிர்ச்சியினுற் பாதலங் குலுங்கத் தூக்கியோடுங்கால் வேகத்தினுல் ஆகாயமகடுங்கக் கையிற்பிடித்து அசைக்கும் வாளாயுதத்தின் பிரகாசத்தினுல் இருள் நீங்கி ஒளிவிளங்க எட்டுத் திசையுங்கட்டி விட்டுக்கலங்க அலமலங்கி விலங்கிய அதிவீரரை யெல்லாமழித்து, அகமிக மகிழ்ந்து செழித்துப் "பாரதமுடித்த

பாண்டவரெங்கே? பார்த்தனுக்குச் சாரதியாகிய பரந்தாமனெங்கே? அந்தப்பாவி இவிடம் விட்டு அவிடன்தொட்டுக் கடல்மேலோடினானே? அல்லது காடுசேர்ந்தானே?" என்று பறந்துபறந்து கூவி "ஐயோ! அவனே யெனக்கு வசனுவி! இப்போதிருந்தால் அவனுவி— ஆ! ஆ! என்ன செய்வேனென்மிகுகோவி" என்று பாசறைவீடுகள் தோறும் புகுந்து பார்த்து, வீசியவாள்வேகத்தால் உடலெல்லாம் வேர்த்து ஆர்த்துவராகின்றன.

இளம்பஞ்சபாண்டவர் வதை

இப்படிவருகின்ற அசுவத்தாமனே இளம்பஞ்சபாண்டவருங் கண்டு அலறியெழுந்து இந்தவுலகத்தை இனியாளக் கவர்ந்த நமது தந்தையைவருந் தாண்டினார்கள். தனித்துநித்திரைசெய்து கொண்டிருந்த அம்மாதுகிய திஷ்டத்தூய்மன் முதலாகியபேரும் இவ்வசுவத்தாமனுடைய வாளால் வாளா அழிந்தார்கள்—என்று ஆய்ந்துணர்ந்து, ஆயுதபாணிகளாய் அடர்ந்து, மூனிமைந்தனைத்தொடர்ந்து அமர்புரிந்தார்கள். அவர்கள் யாரெனில், முதிர்ந்த யாகாக்கினியிற் பிறந்த திரௌபதாதேவியின் கர்ப்பத்தில் தாமரையில் முத்துப்பிறந்த தன்மைபோல் ஜனித்துவளரும் இளம்பஞ்சபாண்டவர்களாகிய ஐவர். அவர்களைத்தின்டிறலுடைய தீரர்களுக்குச்சிகாமணியாகிய அசுவத்தாமன்கண்டு, அவர்கள் கைக்கொண்டவில்லை வாளினுலழித்து, மேகம்போற் கர்ச்சித்து, மீண்டுபோனபாண்டவர் குலம் விளங்கக்கொளுத்திய தீபச்சுடர்போன்ற அவ்விளம்பாண்டவரைப் பாண்டவரென்று கருதி, கள்ளுண்டவரைப் போற்கலங்கி, மெத்தவுஞ் சித்தப் பிரமைகொண்டு, ஒருகொடியில் தனதுவடிவாளினுல் முடிதுணித்துப் படியில் வீழ்த்தினன். அதைப்பொன்னியாகிய காவேரியும், நேரிமலையும், காவேரிப்பூம்பட்டினமும் படைத்தசோழராஜனும், அவனுடையபசேனைகளுஞ் சேனைபதிகளும் கண்டு யாரும் ஒன்றுய்ச் சேர்ந்துகெருங்கி அம்முனிமகனுகிய அசுவத்தாமனுடன் எதிர்த்துபோர்புரிந்து, அவன்வாளினுல் ஒருமிக்க ஆவிமாண்டார்கள். கேட்டீரோஜனமேஜய மகாராஜனே! பின்னற்சடைப்பரமன் பிரியமுடனளித்தருளிய வாளாயுதத்தால் அத்தப்பாசறையிற் பிழைத்தவர்கள்யார்? ஒருவரும்பிழைக்கவில்லை. பதினெண்பூபாலரிற் பதினெட்டுநாள் யுத்தத்திற் போனவர்போக பாசறையினிடத்தில் மிகுந்திருந்த ஓரக்குரோணியாகிய சேனசயினியங்களையும் மற்று முள்ள காவலரையும் பகற்சண்டையைப் பார்க்கிலும் பத்துப்பங்கு

அதிகமாகப்புரிந்து பாதிராத்திரிகுள்ளே தாது பிராதில்லாமல் தீது செய்துகொன்றான் அசுவத்தாமனவன். ஒன்றெழியாமல் இத்தனை பேரை மடித்தானவென்றால், பலவிதயுத்த சாஸ்திரம் பார்த்துத் தேர்ந்த விவேகபக்குவமிருந்த குமாரனதலினாலும், மலாகிதனகிய மயேச்வரனுடைய மைந்தனதலினாலும், பாரதயுத்தத்தில் இன்னு ரின்னாரால் இவ்வளவுபேர் முடியவேண்டியதென்று முன்னமே கணகுமுடித்திருப் பதினாலும், இவனல்முடிய வேண்டியபேர்கள் எப்பேச்சும் பேசாமல் இப்போது முடிந்தார்கள்.

அப்பாலந்தப் பாசறையில் உதிரவெள்ளமானது ஆறுபோற்பெரு கித் தாறுமாறாயோடவும், சேறுபட்டுலர்ந்து நீறு நீறாய்ப்போகவும், மாறுபட்ட உடல்கள் கூறுகூறாய்க் குவியவும், வீறுபட்டபேய்கள் நூறு நூறாய்க் கவியவும், பாசறையிலிருந்த சிலமாதர்கள் அழியவும், பலமாதர்கள் தங்கள் தங்களுக்குரிய தலைவர்மேல்இழியவும், பட்சிகள் சிலம்பவும், பாரிடம்புலம்பவும், கிணங்கள்குழியவும், பிணங்கள்வழி யவும், தலை, மலையாய்த்துளங்கவும், பததத்ததிர்த்தவர்கள் பாசறை முழுதும் இடம்வலம் வலம் இடம் வரும்படியாய்ச் சுழலவும் வீட் டிப் பலவிதங்களிலும் வளைத்துமறித்துமாட்டி அவரவரைக்குறித்து நீறுபட்டழியத்தறித்து, நிருப ரொருவருமில்லாமல் உயிர் நீங்கி மாய்ந்ததைமதித்து, தேர்மேற்குதித்து, திடமுடன்சிந்தைகளித்துப் போனான் சிலையாசிரியன்மைந்தனகிய அசுவத்தாமன். இவ்வாறுசிவ பெருமானுக்கினியோனகிய அசுவத்தாமன் வெட்டிவீரங்கொண்ட அர்சர்களுடைய தலையை இழுத்துக் கொண்டோடுவதற்கு நாயக ளோடின. பேய்களாடின. நரிகள்கூடின. குட்டிப்பேய்களுக்குத் தாய்ப் பேய் உணவுகளை ஊட்டிப்பராக்குக்காட்டின. அநேக பூதபைசாசங் கள் ஆணும்பெண்ணுங் கலியாண முடித்துக்கொண்டன. சுபசோப னம் பாடின. ஆணுடன்பெண்ணும் பெண்ணுடன்ஆணும் ஊடின. உடனே சமாதானமாய்க்கூடின. ஒன்றையொன்று கொண்டாடின. ஒன்றோடொன்று கொண்டானடித்துக் கூத்தாடின. குலமுறை பேசின. போர்வீரங்கூறின. இரத்ததீர்த்ததில் மூழ்கியெழுந்தன! இறைவன்செயலே யேதியேதந்த தாழ்ந்தன. இத்தனமையாக விருந்த பாசறைச்சிறப்பையும், அசுவதாமன்வருகிற சுறுக்கையும் முறுக்கையும் பாசறைவாசலிற் காவலாகவிருந்த கிருபாசாரியரும் கிருதவன்மனும் நடுக்கத்துடன் கண்டார்கள். அவர்களை அசுவத்தாம னுங்கி நடந்திறங்களைப்பேசி, பாண்டவர்களையும் பார்த்தசார

திரையும் சாத்தகியாகிய பேர்களையுங் காணுமே: போர்கொடுக்கப் பொய்த்துப் போனர்களோ? அல்லதுபயந்து செத்துப்போனர்களோ? எவ்விடம் ஓடிப்போய்விட்டார்களோ? உமாபதியாகிய திருகடனமூர்த்தி யென்னுந்திரிபுராந்தக சிற்றம்பலருடைய அருளினாலான் பரிபூரணமாகப்பெற்று வந்துகடத்திய வாட்போருக்கு அவர்களெப்படியோ தப்பிப்போய் விட்டார்களே, கபடகாடகனுகிய கண்ணன் செய்தமாயமோ? மற்றியாதோ?" என்று சொல்லிகின்றன். பின்பு இனி கடக்குங்காரியங்களின்னவிதமென்று சிவகிருபையினாலே தெரிந்துகொண்டு அப்பால் நீங்கினர்கள்போலும் என்று வல்லவராகிய கல்லவர்மூவரு மதித்து, தோத்திரம்புரியும் விதிமுறைப்படிக்கு ஆறுதலையுடைய சிவபெருமானது திருவடியைச் சிந்தித்து வந்தித்துத் துதித்து மதித்திருந்தார்கள்.

அசுவத்தாமன்செய்த பராக்கிரமங்களைக் கேட்டதுரியோதனன் அவனைவியந்து, மற்றையரை நயந்து விண்ணுலகடைதல்

அக்கால்அசுவத்தாமனவன் பழமையாகியபகையைமுனைந்து முடித்தேனென்று ஆர்த்து, அனலாகியகோபம் ஆறித்தணிந்து தினைந்தாதோளாங்கச் சிரித்தான். அந்த அசுவத்தாமனைத் தேராளிகள் இருவருமபார்த்து, ஐராஜராஜனுகிய துரியோதனமகாராஜன் எப்படியிருக்கின்றனை சீக்கிரம்போவோம் வாருமென்றுசொல்ல, அப்படியே கல்லதென்று அருந்தவத்தோனுகிய அசுவத்தாமன் உடன்பட, உடனே அம்மூவரும் பாகனுடனுர்ந்த தேரைச்செலுத்திச்சென்று, பாரெல்லாம் புகழப்பிறந்த புரந்தரனைப்போன்ற பணிக்கொடியோனுகிய துரியோதனமகாராஜனை மகாவியாகூலத்துடன் பார்த்துத்துதித்தார்கள். இவர்கள் துக்கப்படுகிற துன்பத்தைத் துரியோதனன்கேட்டுக் கண்விழித்துப்பார்த்து நாக்கைநனைத்துக்கொண்டு, "நீங்கள்போய்வந்த காரியமென்ன பூரணமாய்ச்சொல்லுங்கள்" என்று கேட்டான். கேட்டீரோ ஜெனமேஜெயமகாராஜனே! இப்படி வினவிய அரசனை அசுவத்தாமனுக்கி, பாசறையிற்போய்ப்புகுந்து யுத்தஞ்செய்து இன்னுரின்னுரைக் கொன்றேனென்றும், இவர்களுடைய பெயர்கள் இன்னின்னவென்றும், கலகம்விளைத்தகண்ணனுகிய மாதவனும அவன்தம்பியாகிய சாத்தகியும் மன்னரைவரும் கரன்போகு முன்னமே தப்பித்துக்கொண்டு இடம்விட்டுநீங்கி ஓடி

யொளித்துப் போனார்களென்றும், மற்றவர்களெல்லோரும் பற்றில் லாமல் இறந்து போனார்களென்றும் விவரமாகச்சொல்லி, "ஓ அம் புவிக்குலத்தோனாகிய வெம்புலியே! இப்போது தேவரீரைப் பார்த்துச் சேதி சொல்லும்படியாய் மீண்டுவந்தோம்" என்று சொன் னான். அம்மொழியைக்கேட்ட வணங்காமுடிபடைத்த வள்ளலென் னும் துரியோதனமகாராஜன் புளகாங்கிதங்கொண்டு பூரித்துப் பூரணமாகிய கிருபைசுரந்து, அசுவத்தாமனைநோக்கி "ஓ ஆழ்ந்த பேரறிவையுடைய ஐயனே, உன்னுடைய உண்மையையும், உன் னுடைய திண்மையையும், உன்னுடைய அன்பையும், உன்னுடைய ஆண்மையையும் யோசிக்காமல், இந்தமண்டலத்தில் நான்வாழ்நா ளெல்லாம் மார்த்தாண்டன் மைந்தனாகிய கர்ணனையும் மத்திரராஜ னாகிய சல்லியனையும், கம்பி, அவர்களுடைய வல்லமையை விரும்பி, அவர்களால் நாம் சவுக்கியப்படுவோமென்று எண்ணி என்காலத்தை வீணைகழித்துப் போட்டேன். கடைசியில் யோசிக்கு மிடத்திற் பாண்டவர்களுக்கு அண்ணன் கர்ணனுகவும், மேற்படி யாருக்கு மாமன் சல்லியனுகவும் நேரிட்டிருந்தார்கள். இனிமேல் அதைநினைப்பதுகாரியமல்ல: ஆகிலும் அவர்கள் என்மட்டிற்கூடிய மட்டும் பாடுபட்டதற்குக் குறைவில்லை, எனக்கோ கவனிறைவில்லை. ஆகையால் என்கதி இப்படியாச்சுது. நானிளைத்துப்போனேன். இந்தவேளையில் இன்றையப்பொழுதில்நீபோய்முடித்து வென றுவந்த தன்மை, போதுமானவரைக்கும் வீரத்திறமாயிருக்கின்றது. நான் நம்பிய அவர்களால் இவ்வளவு பயனைப் பெறுமற் போய்னேன். அடிநாள்முதல் உன்னை நம்பாமற்போன அநியாயத்தால் நான் அநியாயமாயிறந்தேன், இனியென்ன செய்வேன்?" என்று வருந்திச் சொல்லிய அசுவத்தாமனுகிய மூவருங்கேட்டு, அடங்காத்துயர மேற்கொண்டு நின்றார்கள்.

அந்தச்சமயத்திற் சஞ்சயன்வந்து தராதிபனுடைய தாள்மேல் வீழ்ந்து,அடியில்முடிசூடி, அலறிப்பதறிக்கதறி, உடலுதறி யெழுந்து ஒரு புறத்திலொதுங்கிநின்றனன். அவனைத் துரியோதனன்பார்த்து, "அப்பா! இனிமேலென்ன இருக்கிறது? நீங்கள் போங்கள்"என்று சொல்லிய காலையிற் சஞ்சயன் அசுவத்தாமன் கிருபாச்சாரியார் கிருதவன்மன் இவர்கள் நால்வரும் விக்கி, துரியோதனனைப் பார்த்து துக்கித்து, "ஓ எமது அரசனே! நீர் இவ்விடத்தில் இடருறுந்து இளைத்துத் தனித்திருக்க, உமக்குமுன்னே தாங்களிறந்து முடியும்

மல் உம்மைவிட்டுப் பிரிந்து உலகத்திலிருப்பாரா? இதுதானே என்கள் முறைமை" என்று சொன்னார்கள். அவர்களைத் துரியோதனன் பார்த்து, "ஓ மித்திரர்களே! எனக்குரியோர் பெரியோரியாவரும் எனக்கு முன்னே போய்விட்டார்கள். அவர்களுடன் நான் போனேனு? அவர்களைப்பிரிந்து இன்னுளிருந்து இப்போதுதானே போகப் போகின்றேன். பிரியமானவர்களே! யாவருக்கார் துணை? ஒருவர்க் கொருவர் சம்பந்தமில்லை, வேறே ஒன்று நினையாதீர்கள். (கன்றும் பசுவுங் காட்டறி மேய்ந்தால், கன்றேர்புறமோ, பசுவோர்புறமோ) அவர்களுடைய கல்வினை தீவினைகளின் பயன்படி முடியும்" என்றுரைத்துப் பக்கத்தினின்ற சஞ்சயனைப்பார்த்து, "ஓ சற்குணனே! பாரமார்த்திபனுகிய நீயும் இவர்களுஞ் சஞ்சலப் பட்டீர்களே! அதனால் ஆவதேதாகிலுமுண்டா? அப்பனே என் தந்தைக்குந் தாய்க்குந் தேறுதல் சொல்லி, இனி அந்தப்பாண்டவர்களுடைய சொல்லுக்கெதிர் சொல்லாமலிருந்து நல்லபடியனுபவிக்கச் செய்யும். நான்மெத்தவும் இணங்கி வணங்கினேனென்றுசொல்லும். என்பிரிய தந்தையாகிய விதுராஜருக்கு என்னுடைய வணக்கஞ் சொல்லி, உங்களுடைய மொழியைமறுத்து இணங்காத நான் பிணங்குவியுங்களத்தில் அணங்குழந்தேனென்று சொல்லும். என்மீது படைத்த அபராதமெல்லாம் க்ஷமிக்கச் சொல்லும். கெடிஸ்தலாதிபனுகிய திருதராஷ்டிர மகாராஜனைக் காத்துக்கொள்ளும். இராஜஸ்திரீகளுக்கெல்லாங் குலமுறைதருமங் குன்றுமற் குதூகலப்படி நடத்திவையும். என்பாவமும் என்வினையும் இப்படி வீழ்ந்தாலும், இனிமேல் வேறொன்றும் யோசிக்க வேண்டாம். நான்சொந்தப் பிள்ளையென்றும், அவர்கள் தம்பிபிள்ளைகளென்றும் நினைக்கவேண்டாம். இனிமேல்அவர்கள்தான் பிள்ளைகள்; அவர்கள்தான்சுகதுக்கத்துக் குடையவர்கள்; நாமேமகாபாவமுடையவன். ஆனதால், மாதர்பிதிர்கருமத்துக் குரிமையில்லாமற் போகிறேன். இனிக்கூடவிருந்து சகலசுபாசுபமும் அநுபவித்து உரிமைக்கடன் செய்யப்போகின்றவர்கள் அவர்கள்தான். அவர்கள் நற்பலன் கொடுத்து வைத்தார்கள். நான் கொடுத்துவைக்கவில்லை. ஆகையால், அவர்களைத்தழுவி அவர்களுடன்கலந்து உலகமெல்லாம் புகழ உத்தமமாயிருக்கும்படிக்குச் சொல். நீ என் தாய்தந்தைக்கும் பாண்டவர்களுக்கும் உறவுமூட்டிவைக்கக்கடவை. ஓ உத்தமனே! எல்லோருக்குஞ் சரணஞ்சொல்லுக." என்றிவ்வாறு விளம்பிய துரியோதனன் அருகில்நிற்கின்ற அசுவத்தாமன், கிருபாச்சாரி இவர்களைநோக்கி, "இனிமேல் நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்?

இதுவரையிலும் அநுபவித்த சுகமேயொழியவேறில்லை. ஆதலா லினிமேலாகிலும் அருந்தவம்புரிந்து ஆத்மலாபந் தேடிக்கொள்ளுங் கள். என்னிடத்திலிருந்து என் சுகத்தை விரும்பினவர்கள் நீங்க ளாகையால் பாண்டவர்களிடத்திற் சேரவேண்டாம்" என்று இன்னும் பலவாறுகிய வார்த்தைகளெல்லாம் பேசி, "உயிருடன் உடல் வீதலாகிய சாதலென்னும் மெய்மையை நான்நாடிப்போகின்றேன். நீங்கள் நீடுழியிருப்போமென்னும் பொய்மையை நாடிப்போங்கள்" என்று விடைகொடுத்தான். இப்பால்

ஐயா ஜனமேஜய மகாராஜனே! இராஜராஜேஸ்வரன் இரா ஜப் பிரபுடகன், இராஜவல்லாசன், இராஜவீர துரந்தரன், இராஜ புரந்தரன், இராஜகிரந்தரன், இராஜ சுதந்தரன், இராஜாதிராஜன், காகத்துவஜன், வணங்காமுடியோன், நந்தியாவட்டமாலை புனைந் தோன், கௌரவகுலமுதல்வன், சந்திரகுலத்தோன்றல், மதியிற் சிறந்த மன்மரபோன் என்னும் மகாபிரக்யாதிகளனைத்தும் வாய்ந்த இத்துரியோதனமகாராஜன் வயிரம்பற்றிய மனத்தையும் வலியையு முடையவனு யிருந்தும், முடிவிலவனுடைய உயிரை விண்கொள் ளவும், உடலை மண்கொள்ளவுமானவனுய், ஜகதீசனைச் சிந்தையுளி ருத்தி வருந்தினன். ஆகாயத்திலிருந்து தேவர்முதலாகிய சகல கணங்களுஞ் சேர்ந்து பூமாரிபொழிந்தார்கள்; தேவதுந்துபிமுழக்கி னர்கள். அரம்பாஸ்திரீகள் ஆலவட்டஞ் சாமரமுதலிய உபசாரஞ் செய்ய இந்திரவிமானத்தேறி, சகலவித சம்பிரமமரியாதையுடன் ஸ்வர்க்கம்போய்ச் சேர்ந்தான். இவ்வித கோலாகலமாய் வருகிற பூபதியை இவனுடைய தம்பிமார்களெல்லோரும் உரியவீராதி வீரரும் புத்திரமித்திரர் யாவருங்கண்டு ஆனந்தித்தார்கள். முப் பத்துமூக்கோடி தேவர்களுடன் தேவேந்திரன் எதிர்கொண்டழைக்க உவந்து மகிழ்ந்து அம்பொனுடைடைந்து அருங்கதிபெற்று ஆனந்த முற்றுன்துரியோதன மகாராஜன். இப்பால் அவ்விடத்திலிருந்த கிரு பாச்சாரியர் அசுவத்தாமன் கிருதவன்மன் சஞ்சயன் இவர்கள் கால் வரும் இரங்கி ஒருவருக்கொருவர் தேற்றிக்கொண்டு மகாவியாகூல சித்தத்துடன் அவ்விடம்விட்டு நீங்கிப்போனர்கள்.

அசுவத்தாமன் பாசறைப்போர்ச் சருக்கம்
முற்றிற்று.

மூன்றுவது.

அசுவத்தாமன்

சிரோமாணிக்கங் கவர்ந்த சருக்கம்



கண்ணன் துதி

இரணிய மகனு முன்ன ரிழிபுரைக் கேதங் கண்ட
தரணியன் மகனு மற்ற யானையுஞ் சரணென் றேத்தி
முரணியே சிறியோர் வெஃக முதன்மைகொண் மாதுங் கண்ட
பிரணவப் பொருளா யின்னும் பேணுவார் காணு வாரே

ஓ நித்தியவிதியினேர்ந்த வாரிதியே! பக்தியாம் ஞானப்பரந்த பாரதியே! கேளும்— பதினெட்டாநாள் இராத்திரிநடந்த பான்மை யைக் கேட்டயாவரும் ஆறுத்துயரை யுடையவர்களாய்த் திகிலடை யும் படிக்குச்சத்துருக்களைப் பற்றறக்களைந்து அன்றிரவிற்றானே அகன்று போனல்லவா அசுவத்தாமன். இப்பேர்ப்பட்டகொடிய மனத்தோனாகிய அசுவத்தாமனைக் கண்டறியவேண்டுமென்று அநேகங் காங்களுங்காலும் அசைய அசைய ஓடிவருபவனைப்போல் அழகிய சப்தமாவெண்ணும் புரவிபூட்டிய தேரைச்செலுத்தி ஆயிரங் கதிரோனாகிய சூரியன் கிழக்குத்திசையி லுதயமாயினன்.

பாண்டவர்கள் பாசறைக்கு மீண்டு, இறந்து கிடக்கு மெல்லோரையுங் கண்டு இரங்குதல்

பத்தொன்பதாநாட் காலமே பாண்டவரைவரும் கிருஷ்ணமூர்த் தியும் சாத்தகியும் இராத்திரி முழுதும் நித்திரையற்றிருந்து, போது விடிந்தவுடனே காலக்கடனை முடித்துக்கொண்டு பாசறையைநோக்கி வருவதானார்கள். அத்தச்சமயத்தில் திஷ்டத்தூய்மனுக்குத் தேர்ச்

சாரதியானவன் சிதைந்துஞ் சிதையாதவனுய்ச் சிந்தைமெலிந்து அநந்துய நடன் ஓட்டமுடையுமா யோடுகிறுன். அவனப்படி யோடும்போது வழியில்வருகின்ற பாண்டவர்களைக்கண்டு அலறி யிரைந்து கால்மேல்வீழ்ந்து அவர்களுடையகாதில் ஆலகாலவிடத் தையும் அக்கினிக்குழம்பையுங் குலுக்கிவார்த்த கொள்கைபோல் அசுவத்தாமனுல் இராத்திரி மாண்டபேர்களுடைய செயலனைத்தும் உரைத்தான். அத்தச்சாரதி சொல்லியசொல்லானது காதுக்குள் நுழையுமுன்னமே இடிமுழக்கங் கேட்டிறந்த பாம்பினம்போல் இரைந்து ஏங்கி நடுநடுங்கி அயர்ந்து அரற்றி "வாட்டிறங் கொண்ட மைத்துனரையும் மன்னர்மன்னரையும் மக்களையும் ஒக்கலையும் நீங்கி உயிர்தாங்கி இருக்கமாட்டோம். இத்தனைபேர்களையு மாய்த்த அசுத் தனுகிய அசுவத்தாமனைக்கொன்று காங்களுமிறப்போம்" என்று ஸ்திரமாய் உறுதி விளம்பிவந்தார்கள்.

திருமாலாகிய கிருஷ்ணமூர்த்தியும் பாண்டவர்களைப்படி பகைத் துச் சொல்லுகிறூர்களோ அப்படியே தாமுஞ் சபதஞ் சொல்லி, அவர்களைவிட ஆயிரம்பங்கு அதிகமாகத் துயரங்கொண்டு, "ஐயோ! இதென்ன மகா மாயையாயிருக்கின்றதே! இப்படி வருமென்று தெரிந் தால் நாம் பாசறைவிட்டு நீங்காதிருக்கலாமே, புத்திமோசம் போ னேமே: ஓபாண்டவர்களே! நாமொன்று நினைக்கத் தெய்வந்தா னொன்று நினைத்ததே: இனிமேல் நாம்விசனப்பட்டு ஆகத்தக்க காரிய மென்ன? கவலையைவிட்டுவிடுங்கள்" என்று தேற்றியுந் தேறுதவர் களாய்க் கண்மலர்களிலிருந்து கார்மாரிசொரியக்கசங்கிக் கைத்திற லுடைய காவலர் பாசறையைச்சேர்ந்து, பூலோகத்திற் பிரகாசிக் குஞ் சூரியனைப்போற் பலகிக்கும் புகுந்து ஒளிவிளங்கப்பார்த்து, பேரழிந்து மாண்டுகிடக்கின்ற பிணமலைகளைக்கண்டு, வேரறுந்து வீழ்ந்த மராமரம்போல் மைத்துனனுகிய திஷ்டத்துய்மன்மேரில் வீழ்ந்து புரண்டுமோதி முட்டிக் கட்டிக் கொண்டழுதார்கள்.

இப்படிவீழ்ந்து அழுத ஐவரை ஆழ்ந்த அறிவினையுடைய கிருஷ்ணமூர்த்தியுஞ் சாத்தகியும் எடுத்து அணைத்து, கண்களில் வழிந்தோடிய கண்ணீர் துடைத்துத் துயர் நீக்கினர்கள். அப்பால் மற்றப்பேர்கள் செத்துக்கிடக்கிற பல இடங்களெல்லாம் போய்ப் பார்த்து, எல்லோரும் விசனப்பட்டு இறந்துகிடக்கும் இளம்பஞ்ச பாண்டவரை நோக்கி, "ஐயோமக்களே! நாங்கள் உங்களுடன்கூடி

வாழ்கிறதற்கு இதுவரையிற்பட்ட பாடும் இப்போது நாங்கள் மேன்மையடைந்ததும் பாரதயுத்தத்திலே ஜயம் பெற்றதும் போதும் போதும் என்று மனஞ்சலித்து மடிந்தவர்போற் பூமியிற்படிந்தார்கள். மறுபடியுமெழுந்து பிள்ளைகளின் தேகத்தைக் கட்டிக்கொண்டார்கள்; மேல்வீழ்ந்தார்கள்; கதறினார்கள்; உடலுடன் தலையை ஒட்டிவைத்துப் பார்த்தார்கள்; கண்ணீருகுத்தார்கள்; மார்புடனணைத்தார்கள்; சோர்ந்தார்கள்; சுவித்தார்கள்; துடித்துப் பரதவித்தார்கள்; கையைப் பிசைந்து கூட்டி "ஐயையோ! அருமையான மக்கள் இப்படி ஆருயிரற்றுக்கிடக்கின்றார்களே!" என்று காட்டினார்கள். பிராணனை விட வேண்டுமென்று நினைத்தும் பிராணன் போகாதவர்களாய்ப் பெருக்கத் தவித்தார்கள்.

திரௌபதி அசுவத்தாமன் தலைக்குச் சபதங் கொள்ள, தருமர் சலிக்க, கண்ணனெரு வாறுதேற்றிப் பீமசேனனை விடுதல்

இவ்விதமாகப்பார்த்து முகம்வியர்த்து ஆர்த்துப் பாண்டவர்கள் துயரங்கொண்டிருக்குஞ் சமயத்தில், உபப்லாவியத்திலிருந்த திரௌபதையானவள் இந்தச்சேதியைத் தூதராற்கேட்டுத் துயரில்மூழ்கி அண்ணன் தம்பிமுதலானவர்களுடும் இளம்பஞ்ச பாண்டவராகிய மைந்தர்களும் இறந்துகிடக்கும் பாசறைக்குவந்து அவர்களைக்கண்டு மார்மேலணைத்து முகத்திலடித்துக் கொண்டு நிலத்திற்புரண்டு நெடுங்கண்ணீர் சொரிந்தாள். கணவராகிய காவலரைவரையுங் கண்ணினையுங்கண்டு கசிந்துகரைந்தாள். நிலத்தில் மோதி முட்டினாள்; வணங்கித்தாழ்ந்தாள்; எழுந்தாள்; பூமிமேல்விழுந்தாள்; அயர்ந்தாள்; ஆதிமூலப்பொருளினுடைய காலைப்பிடித்தாள்; சபதங்கூறிப் படித்தாள்; பலபேரையும் பார்த்துச் சுற்றிச் சுற்றிச் சுழன்றுவந்தாள்; ஐயோ மகாராஜனே! அவள் பட்டபாட்டை நானெண்ணென்று சொல்லுவேன்? ஐயோ! இனி உயிர்மாய்ப்பேனென்று சொல்லுவாள். என்னகாரணத்தால் என்னுயிர் போகவில்லையென்று இரைவாள்; இடிவாள்; இருப்பாள்; வயிற்றில் இடிப்பாள்; வாயைமடிப்பாள்; கையை நெரித்துப்பிடிப்பாள்; ஐயோ மக்களே! மக்களே! என்று எஞ்சுவாள். ஒவ்வொரு பிள்ளையையும்நோக்கிக் கொஞ்சுவாள்; துயர்துஞ்சுவாள். இப்படிஇன்னும் வெகுவாய்ப் புலம்பி யாவர்க்கு முன்னவனாகிய முதுத்தன் பொன்னடிமேல்வீழ்ந்து நெருங்கியகுழலாளாகியதிரௌ

பதைவாடியழுதாள். இப்படி யழும்போது பாண்டவரைவரும் சாத்த கியும் சக்கரதாரனுகிய சுவாமியும் மின்னற்கொடிபோன்ற திரௌ பதையைத்தேற்றி, மேலோருரைத்த சாஸ்திரங்களையுஞ்சாற்றித் துயரை மாற்றினர்கள். அப்போதுபொய்த்த இடையாளாகிய பாஞ் சாலி பச்சைமாலின் வசனத்தினாலும் பாண்டவருடைய விசனத் தினாலும் புலம்புஞ்செய்கையைவிட்டு அச்சமில்லாமலெழுந்து "என் சகோதரரையும் ஐந்து புத்திரர்களையும் யார்கொன்றவர்கள்! நீங்களி ருக்கும் இப்படிநடக்கத்தக்கதோ? இதென்ன சூதோ?மற்றியாதோ?" என்று விசனப்படுகின்ற மெல்லியைநோக்கி வேணுகோபாலன் சொல்லுகின்றார்.

அம்மா திரௌபதா! இந்தப் பதினெட்டுநாளும் இராத்தூக்கம் பகற்றூக்கமில்லாத பாண்டவர்களை யழைத்துக்கொண்டு வனத்துக் குப்போய் அவ்விடத்தில் இவர்கள் அச்சமில்லாமல் நித்திரைசெய்யும் படிக்கு ஆவலாயமைத்து, நான் இவர்களுக்குக் காவலாயிருந்தேன். அந்தச்சமயம் பார்த்து அசுவத்தாமன் இப்படிக்கெல்லாஞ் செய் தான்—என்றுரைக்க, அதைமயிலைபோன்ற சாயலையுடைய திரௌ பதாதேவிகேட்டு, "ஓ மன்னர்பிரானுகிய தருமராஜனே! என்பிள்ளை களாவரையும் என் சகோதரர்களையுந் தூக்கத்திற்கொன்று தலை யறுத்த பாவியாகிய அசுவத்தாமனுடைய கொழுத்ததலையை தாமரைமலரென்று சொல்லுகின்ற என்னுடைய பாதத்திற்போட்டு மிதித்தபிற்பாடு இத்தத்தலைமயிரை முடிப்பேனை யல்லது இதன் மத்தியில் முடியேன்" என்று சபதங்கூறினள். அவள் கூறிய சப தத்தைக் கேட்ட தருமராஜனுனவர் திரௌபதையைப்பார்த்து, "ஓபைந்தொடியே! நீ ராஜசபையிற்கூறிய சபதமுடித்து உன் கூந்தலைமுடிப்பதற்கு உன்னைப்பிடி என்னைப்பிடி ஊர்ப்பிடாரி மயிரைப்பிடி யென்றுயது. இன்னும் உன்கூந்தல்முடிக்கதும் முடி யாததுமாயிருக்கின்றது. அப்படிக்கிருக்க இப்போது இஃதொரு சப தஞ்சொன்னுயே; ஐயோ தெய்வமே! இந்த அசுவத்தாமன் சாகர வரம்பெற்ற சிரஞ்சீவியாயிற்றே! இதற்குப்பதில் ஆர்தலையைவாங்க இந்தப்பேச்சைச் சொன்னுய்? அந்தோ! அந்தோ! அந்தப்பாதகன் தலையை எந்தவிதத்தில் வாங்கப்போகின்றுய்?" என்று இடிந்து இரைந்து சொல்லும்போது, ஸ்ரீகிருஷ்ணனுனவர் அத்தருமரா ஜனைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

"ஓ அத்தான்! என்தங்கை ஏதோ புத்திரசோக ஆத்திரத்தாற் சொல்லிவிட்டாள். ஆகிலும் எண்சாணுடம்புக்குஞ் சிரசுபிரதானம். அந்தச் சிரசைப்பார்க்கிலுஞ் சிரமேலணிந்த பொருள்பிரதானம். ஆகையால் இந்த ஓர் உபாயங் கூறுவேன்—அசுவத்தாமன் தலைமேல் மாணிக்க மொன்றிருக்கிறது. அதைவாங்கிக் கொடுத்துவிட்டால் அது அவனுடைய தலைக்கு மேலானது. சபதமும் நிரைவேறும். அவனுக்குக் சர்வமடங்கிப்போம். இப்போர்ப்பட்ட அநியாயயுத்தஞ் செய்த அவனை இவ்வளவுவேலை செய்யாவிட்டால் நமக்கும் பெருமை யிராது. நமதுபிழைப்பும் பிரயோசனமற்ற பிழைப்பாய்விடும். பேருங்கெட்டுப்போம்" என்றுரைக்க, பாண்டவருள் நால்வரும் பாஞ்சாலியும் அத்தச்சொல்லுக்கு உடன்பட்டார்கள். அப்போது முதல்வனுகிய தருமராஜனர்முகமாறி,"அவனுடைய சிரோமாணிக்க மென்ன இளப்பமானதா? அதைத்தான்வாங்க யாரால்முடியும்?" என்று சலித்துச்சொல்ல, அதைக்கேட்ட வாயுகுமாரனுகிய பெருமை பெற்ற பீமசேனன் "இதோ நான்போய் எனது கொடுங்கதையால் மோதி அவன் தலையைப்பூமியிலுருட்டிச் சிரோமாணிக்கங் கவர்ந்து வருகிறேன்; உள்ளங்கையிலே தருகிறேன்; அப்படிச் செய்யாமற் போவேனுகில் அக்கினியில் வீழ்ந்திறந்து போகிறேன்" என்று ஆர்த்து ஆயாசத்துடன்சேர்த்து விளம்பினன். அது காலையில் கிருஷ்ணன் பீமனைப் பார்த்துமந்தித்துத் துதித்து, "ஆ! ஆ! பீமா! உன்னாலாகாதகாரியமும் ஒன்றுண்டோ? இப்போதேபோய்ச் செயித்துவரக்கடவை" என்று சொல்லவும் பீமசேனன் தனக்கிசைந்த தேரேறினன். சகாதேவன் சாரதித்தொழில் செய்யமுன்வந்தான். பீமன் வீரபாணமும் வெற்றிவில்லும் விஜயத்தருங்கதையுங் கைக் கொண்டு விரைந்து சென்று ஆலகாலவிஷமானது வடவாமுகாக்கினிமேற் புகைத்துப் பாய்வதுபோற் போனன். இப்படி கைதேர்ந்த கதைக்காலையாகிய பீமசேனனவன் விண்கலங்கவும் மண் குலுங்கவு மாகப்போனபோது, கறுத்தநிருமேனியிற் பசுமையாகியதுளபமாலை மணக்கும்படியாய் அறிதுயிலமரும் ஆயிரம்பணமகுடமுடைய ஆதிசேடனென்னும் அணையைத்துறந்து ஆயர்பாடியிற்பிறந்து ஐவரை ஆளவந்தெழுந் தருளியபரந்தாமன் யுதிஷ்டிர மகாராஜனைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

கண்ணன் அசுவத்தாமன் அடைந்திருக்கின்ற அஸ்திர பலங்கூறித் தருமனுதியரை யும் பிரயாணப்படுத்தல்

கேளும் தருமகந்தனு! சண்டைசெய்யப்போன பீமசேனன் வெற்றி பெறும்படியாய் மகா கொடும்பாவியாகிய அசுவத்தாமன் அடங்கி இவனுக்கு இடங் கொடுக்கமாட்டான். அதேனென்றால், அந்த அசுவத்தாமனுடைய தந்தையென்னுந் துரோணாசாரியார் பிரமசிரமென்னும் ஒரு அஸ்திரங் கொடுத்திருக்கின்றார். அந்த அஸ்திரத்தின் வன்மையை எவர்களாலும் அளவிடப்போகாது. அதனுடைய உறுதிகொண்டு அசுவத்தாமன் கர்வந்தாங்கியிருக்கின்றான். அந்த அஸ்திரமுஞ் சிரோமாணிக்கமும் அற்றுப்போய்விட்டாற் கொட்டியவாயில் விஷமடங்கிப் போமென்னுங் கொள்கைபோலாவான். அந்தக்கணை அவனைவிட்டுப் போகிறவரைக்கும் அவன்யாருக்கும் அஞ்சான். பார்படைக்குந் தாற்கான். கெடுநிலத்தை நீறுபடுத்துவான். மேலண்டத்தை வேறுபடுத்துவான். மன்னுயிர்களைக் கூறுபடுத்துவான். மறலியின்றொழிலை மாறுபடுத்துவான். அந்தக்கணையின் பெருமையைச் சொல்ல என்னுளில்லை. ஒருவேளை அந்த அஸ்திரத்தை நமதுபீமன்பேரில் விட்டுவிடுவானுனால் அப்பால் பீமனை நாம் காணப்போகிறதில்லை. எப்படியும் உயிரை மாய்த்துவிடும். அப்பால் உலகமென்ன பாடுபடுமோ நாமறியோம். மறந்துசெத்தேன் பிராணனை வாவென்றால் வாராது. ஓ வாட்டிறம்படைத்த மன்னனே! இன்னமொன்றுமிகளும். சிலகாலைக்குமுன்னே இந்த அசுவத்தாமன் துவாரகைக்கு வந்து என்னைக்கண்டுபேசி, பிரமசிரமென்னும் அந்தக்கணையின் பிரதாபத்தையுஞ்சொல்லி, "உமக்கு இந்த அஸ்திரத்தைத் தருகிறேன். இதற்கு ஈடாக உமது சக்கரத்தைக் கொடும்" என்று தைரியமாய்க்கேட்டான்.

கேட்டீரோ தருமகந்தனு, இப்படிகேட்டவனுக்கு நான்சொன்னதென்னவென்றால், "ஐயா குருபுத்திரனே! உமதுகணை யெனக்கு வேண்டாம். எனதுசக்ராயுதம் உமக்குவேண்டுமானால் தருகிறேன். இதோ இருக்கிறது. தடையின்றி யெடுத்துக்கொண்டு போகலாம்" என்றேன். அதற்கவன் வெகு சந்தோஷமுற்று, சக்ராயுதத்தை வெகுலேசாகஎடுத்துக்கொள்ளலாமென்று நினைத்து ஒருகையினாலே

தூக்கினான். அது தூக்கக்கூடாமையால் இருகையாலுந் தூக்கினான். அப்பவும் தூக்கப்படாமையால் மிகவுங் கடுகடுத்து, தனது பலங்களையெல்லாங்கூட்டித் தூக்கினான். அப்போது மிகுந்தபளுவாக இருக்கக் கண்டு, தன்னற்கூடியவரையிலும் பார்த்து, அந்த ஆசையை விட்டுவிட்டு, சிறுகையாய் கைகத்து என்முகத்தில் விழித்தான். அப்போதுகானும் அவனைப்பார்த்துச் சிரித்து, "ஓ சிறந்த முனியாகிய துர்வாஸரால்பெற்ற குழந்தையே! இந்தச்சக்காயுதத்தை எடுப்பதற்குத்தகுந்த காரியமும் வீரியமும் இல்லாதாநீ, சத்துருக்களை எப்படிவெல்வாய்? இத்தச் சக்காயுதத்தின்திறம் இப்போப்பட்டதென்று நீபறியாமற்போனாய? தெய்வீகத்தன்மையோடு என்னிடத்திருக்கும் இச்சக்காயுதமானது திரிலோகத்திலும் பொருந்திய மனிதர்களுக்குக் கிடைக்குமோ? அவர்கள் கையிற்கிட்டுமோ? இங்கேவா, உட்காரு இதுவரையில் யாரும் இத்தச்சக்கரத்தை இச்சித்ததில்லை. மேலேநீ பார்" என்று சொல்லி அவ்வசுவத்தாமன் பார்க்கும்படியாய் கான் கையை நீட்டினேன். என்கைமேற் சக்காராயுதம் வந்து நின்றது. அதை அதிசயமாக அசுவத்தாமன்கண்டு உபசரித்துத் தெரியாமற் கேட்டேனென்று தியங்கினான்.

உடனே அவனுக்கு ஆபரணதிகளோடுங்கூடிய வரிசைகளுங் அரிசிமுதலிய சுயம்பாக உரிசைகளும் அன்பாகிய அருளுடன் கொடுத்து, அவனுடைய ஸ்தானத்துக்குப் போகச்செலவு கொடுத்தனுப்பிவிட்டேன். இதுகாரியத்தைப் புத்திமானுகிய நீர்தெரிந்துகொள்ளும். அவன்கேணக்கும் என்சக்காராயுதத்துக்கும் சரியென்று அவன் கொண்டிருந்த நினைப்பைக்கண்டீரா? ஓ தருமநந்தனரே! அவனிடத்தில் இப்போர்ப்பட்ட கேணயிருக்கிறதென்று அப்போது கான் தெரிந்து கொண்டேன். அம்மதிப்போது எனக்கு நினைவுவந்தது. அந்தக்கேணக்கு யாதொருகேணயும் எதிரில்லை" என்று விளம்பி நாம் யாவருமே இப்போதவனிடத்திற்குப் போகவேண்டியதென்று சொல்லி யருளினர். உடனே தருமராஜனும் நகுலனுந் தகுதியாகிய தேர்புகுந்தார்கள். ஒப்பொருவருமில்லாத மாதவன் வேறுதேர்செலுத்த அந்தத் தேரின்மேரில் அர்ச்சுனன் ஏறிக்கொண்டு வெற்றிவில்லைத் தாங்கிவந்தான். இவர்களிப்படி வருமுன்னமே சாகக்கிடக்கிற துரியோதனனிடத்திற் செலவு வாங்கிக்கொண்டுபோன அசுவத்தாமன் கிருபாச்சாரியரை அஸ்தினபுரத்துக்குப் போகச்சொல்லிக் கிருதவர்மனை அவனுடைய ஊருக்கனுப்பிவைத்து, தான் சதுர்மாமறை

தேர்ந்த தன் தந்தையாகிய துரோணாச்சாரியாரிருந்த பூர்வவனத்துக்குப் போய்த் தவஞ்செய்வதற்கு எத்தனங்கொண்டிருந்தான்.

பீமசேனனைறைகூவவந்த அசுவத்தாமனும் அர்ச்சுனனும் தங்கட்குத் துரோணரளித்த பிரமசிரக் கணையேவிப் போர்புரிதல்

அக்காலத்திற் கடுங்கோபங் கொண்டுசென்ற பலம்பொருந்திய வாயுகுமாரனை பீமசேனன் அசுவத்தாமனை எங்குந்தேடிப்பார்த்து, பின்பு கண்டுபிடித்து இருகண்ணுஞ்சிவந்து வண்டிலாவிய மாலைவாடி முகங்கருகிப் பெருமூச்செறிந்து "அடா எமதுபிள்ளைகள் முதலாகிய பேர்களைத் தூக்கத்திற்கொன்ற துரோகி! அடா மக்களுக்கு ஏக்கமற்ற மகாபாவி! அடாகொடும்பாவி! நீ பிழைக்கப் பார்க்கின்றாயோ? நீ தவஞ் செய்வதற்கு இந்த இடந்தகுமோ? அடா சிசுஹத்திசெய்த தீயனே! அடா அசுவத்தாமா ஒருகணப்பொதில் என்னுடைதண்டாயுதத்தால் உன்னைக்கொன்று எமலோகத்துக்கு அனுப்புகிறேன் வெளியிலேவாடா" என்றுசஞ்சலத்தாற் சலங்கொண்டழைத்தான். இவ்விதமாக பீமசேனன் பலபல வாய்மைகளைப்பகரவே, அவைகளையெல்லாஞ் சிவசுதனாகிய அசுவத்தாமன்கேட்டு, அவனுடைதிருத்தாரமொன்றும்பேசாமல், இந்த ஈரேழுலகையும் ஒருகொடியிற் பொடித்துப் பொரிந்து நொறுக்கி நாசவச் செய்கிறேனென்று இலக்கார்த்த விலலைவளைத்து, துரோணாச் சாரியார் உபதேசித்தருளியருக்குவேத மந்திரத்தை உறுதியுடன் உச்சரித்து, பிரமசிரகாமக் கணையை நாணியிற்பூட்டி, வணங்கி வாழ்த்தி, தன்னுடைய சங்கற்பத்தைச்சிந்தித்து, இப்போது தப்பியிருக்கும் பாண்டவருயிர்மாண்டுபோகும்படி பண்ணென்றுவேண்டிக் கண்ணென்று தூண்டினன். அம்மாத்திரத்தில் அத்தப்பிரமச்சிரகணையானது அநேகமுகம், அநேகங்கை, அநேகங்கால்களுடன்பெயர்ந்து,உலகெங்குமவ்வைத்து பரந்துமலர்ந்து பலம்புரிந்து நெருப்புமயமாய்ப் பொறிகள் சிதறப் பறந்து நிறைந்துசிறந்து பூமிமுழுதும்பார்த்து ஆர்த்து வேர்த்துப் பார்த்து நிமிடகரித்து நிறைந்து கருக்குவதாயது.

அக்காலையிற் சாமார்த்தியமிகுந்த வாயுதனயனை பீமசேனன் பாரியவில்லவ்வளைத்து டாங்காரம்பண்ணிப் பண்ணவன் பதத்தை மனதிலுன்னி, பிரமன்கணைகொண்டு பார்வை மாறும்பல் கின்றான்.

அத்தச்சமயத்தில் தருமராஜனும் காண்டீபனும் கண்ணனும் சாத்தகியும் நகுலனும்வந்து இவர்களில்லிலோந்த சண்டையைக்கண்டார்கள். அப்போது பச்சைத்திருமாலாகிய பரந்தாமன் அசுவத்தாமன் தொடுத்துவிட்ட பிரமச்சிரக்கணையின் வல்லபமும் அந்தக்கணையினால் உம்பர் முதலிய உலகினர்படும்பாடும் இன்னவிதமென்றுதெரிந்த அநுபவசாலியாகையால், இச்சையுடன் தேரிலிருக்கிற அருச்சுனன் முகத்தைப் பார்த்து, "ஓ உச்சிக்கதிர்போன்ற உத்தமனே! நீசும்மா இருப்பாயாகில் நம்மால் உலகழிந்ததென்று வீண்பழிவந்துவிளையும். மகாமுனிவந்தலைவனும், விருதாப்பழி நாம் சுமப்பானேன்? ஓ விஜயனே உன்னிடத்திலிருக்கும் ஆலகாலத்தைத் தலையெடுக்கவொட்டாமல் அடக்கும்படியாகிய பிரமச்சிர நாமக்கணையை வெளிப்படுத்திவிட்டு, அமரர்சித்தர் முதலாகிய எண்டிசைப்பாலரையும் மண்டலபூபரையுங் காக்கக்கடவது. ஓ காவலனே! ஓ காண்டீபக்கையனே! இல்லாவிட்டால் நாம் இதுவரையிலும் பாடுபட்டதெல்லாம் பாழாய்ப்போம். ஆதலாற் சீக்கிரம் ஜபிக்கக்கடவாய்" என்று திருவரதன் சொல்ல அதை மெய்விரதனாகிய வில்விஜயன்கேட்டு, சிலைக்குருவாகிய துரோணாசாரியர் தனக்கு அநுக்கிரகஞ்செய்த வேறொரு பிரமச்சிரநாமக்கணையை பெற்றுப்பிடித்து ஆசாரியவணக்கம் புரிந்து அரனடிபூசித்து அன்புடன் கைவேத்தியங்கொடுத்துப் பரதகுலத்தோராகிய பாண்டவரிருவரைப் பட்சமுடன் இரட்சிக்கக்கடவதென்று இரதத்தைவிட்டெழுந்து நிருக்தவேத மந்திரத்தைப் படித்து வில்லிற்றொடுத்து நாணியைபிழுத்து மூடுக்கிமுறுக்கி உறுக்கிச் சுறுக்கில் நெறிப்பிற்குறித்து விடுத்தான்.

வியாவர் கண்ணன் முன்னிலையில் அசுவத்தாமனையும் அருச்சுனனையு மோரேற்பாட்டில் நிறுத்திமுடிந்து ஒருவருக்கொருவர் சாபம் விளைத்து மீண்டு பாஞ்சாலியை மகிழ்வித்தல்

அம்மாத்திரத்தில் ஸத்தியமாகிய உத்தமமந்திரத்துடன் எழுந்த தனிவான் கணையானது சிவ்வென்று நேருக்குநேராகச்சென்று, அசுவத்தாமன் உந்தியகணையைப்போய்ப் பிடித்துக்கொண்டது, இரண்டு கணைகளும் ஒன்றோடொன்று கட்டிப்புரண்டு போராடுவதாயின. அப்போழுது நிலத்திற்பொருந்திய ஆத்தமகோடிகளெல்லாம் மிகுந்

தலுத்திளைத்து, வெங்குவெடித்துவெதும்பி, சிந்தைமிடித்து மெலிந்து யாருஞ் சிதையுங்காலமென்று பதைபதைக்கும்போது, மீதலவாசிகளாகியதேவரும், பாதலவாசிகளாகிய நாகரும், பிர்மாமுதலிய மூவரும் மற்றயாவரும் இதென்னகாலமென்று எண்ணவும், இதரமானவர்களுடைய மனங்கன்றவும் எதிர்ப்பட்டோரெல்லாருங் குன்றவும் வியாகூலம்விளைந்தது. அப்போது வேதப்பயிர்விளைத்த வேதவியாசமகாமுனிவர் நாரதாதி முனிவர்களோடு சடைமுடிமரவுரி மிதியடிதலங்க, ஸ்ரீகிருஷ்ணன் முதலாயினோரிருக்கும் இடத்திற்குவந்தனர். அவரை இவர்கள்வணங்கி உபசரிக்கும்போது அவர் இவர்களை ஆசீர்வதித்து, "ஐயா! ஒவ்வொருவருந்தங்கள் தங்களுடைய சவுக்கியத்தைக்கருதி உலகங்களையழித்துவிடலாமா? ஜீவகாருண்யம் பச்சாதாபமுதலியவைகளில்லாமற் போகலாமா? இப்போப்பட்ட கொடுஞ் சமர்புரியப்போமா! இதனால் முத்திபெறலாமா?" என்று கேட்ட காலத்தில் துரோணபுத்திரனுகிய அசுவத்தாமன்வாய் பேசாமௌனி போலும், பேச்சில்லா ஊமைபோலும், நைந்துருகிநின்றான். அவனுக்கு வியாசமுனிவர் சிந்தைகூர்ந்து சொல்லத்தொடங்கினர்—

ஓ மகத்தாகிய வேதவிதியறிந்த பரிசுத்தமாகிய விப்பிரனே! உன்னைப்போன்ற உத்தமன் இப்போப்பட்ட கொடியதொழிலுக்குப் பிரவேசிப்பானுகில், தயைதாக்ஷண்ய மில்லாதபேர்கள் தருமத்தை எண்ணிப் பார்ப்பார்களா? யேல்லவோ உலகத்துக்குத்தருமம் போதிக்கவேண்டும்? நீதானே இப்படிச்செய்யப் போமா? போனது போகட்டும்; இனியேனும் உலகம் அழிந்து போமுன்னமே நீவிட்ட கணையைமீட்டு ஆத்மகோடிகளை இரட்சித்துவிடுக" என்று கூற அசுவத்தாமன் அவரைப்பணிந்து "ஓ சுவாமி இத்தக்கணையை விடத்தெரிந்து கொண்டேனேயல்லது, மறுபடியும்மீட்க நான்கற்கவில்லை. இக்கக் கணைக்கு ஏதாகிலும் ஆபூதிகாட்டுவீராகில் இதனுடைய வேகமடங்கி ஆறிப்போம்" என்று சொன்னன். அதைக்கேட்ட முனிவர் அருச்சுனனுடைய முகத்தைப் பார்த்து "இந்திரன்மதலாய்! உத்தமகுலத்திற்பிறந்த உண்மையனுகையால் நீயாகிலும் தயவு செய்து உன்கணையை அழைத்துவிடுக" என்று உபசரித்தார். அதற்கவன் "கருணையுங் காந்தியும் பொறுமையுங் கனமுமுடைய கடவுளே! தெவ்ருடைய அநுக்கிரகத்தினலும் ஆசாரியர் அருளினலும் விடவும் அழைக்கங் கற்றிருக்கிறேன். ஆனல நான் விட்ட கணைக்கு இந்த அசுவத்தாமனுடைய சிரோமாணிக்கத்தைக்

கொடுப்பானுகில், ஒருகொடிப்போதிற் பாணங்களை அழைத்து உலகம் உய்யச்செய்வேன்''என்றான். அந்தச்சொல்லையுணர்ந்த மாதவ சிரேஷ்டராகிய வேதவியாசர் அசுவத்தாமனுடைய முகத்தைப் பார்த்து, ''அப்பா ஆசாரியபுத்திரனே! இந்த அஸ்திரத்தை விடுப்பதற்குமாத்திரம் ஆசையாய்க் கற்றுக்கொண்டாய். மறுபடி அதை யழைக்கச்சாந்தி கற்காமற்போனாய்! ஆகிலும் மகாபாதகத் தொழிலைப் பூண்டாய்! மண்ணுள்ளவரையிலும் மகா நரகத்தேடிக்கொண்டாய்— அருச்சுனன் அழைக்கிறேனென்கின்றான். அவன்தொட்டகணைக்கு ஆபூதியாக என்னலகூயங்காட்டுகிறாய்? அதை எனக்கு விரைவிற் சொல்''என்று முனிவர்கேட்க, முனிசுதனுகிய அசுவத்தாமன் ''ஓ சுவாமி! பாண்டவர்களுடைய பிராணனேவாங்கும்படி காடிவிடுத்தேன். என்னெண்ணமும் என்வாய்ச்சொல்லும் பழுதுபடாதபடி இப்பாண்டவகுல மாதர்களுடைய கர்ப்பங்களேயெனு முடிக்காமற் போகாது. அவ்வளவாகிலும் என்கணைக்கு ஆபூதி செய்யவேண்டும்'' என்று சொல்ல, அந்தமொழிகேட்டமுனிவர் தியங்கும்போதுசுத்த மாகிய தாளினுல் மூன்றுலோகத்தையுமளந் தருளிய முகுந்தன் ''ஐயா அப்படியே சம்மதியானுல் அபிமன்னுவினுடையதேவி உத்தரையின் கர்ப்பத்தில் இப்போது உற்பத்தியாயிருக்கின்ற கரு ஒன்றை மாத்திரம் இப்பூமியை யாளும்படிக்குவிட்டுவிட்டு மற்றக் கருக்களையெல்லாம் வாயிற்போட்டுக் கொள்ளும்படி தனது அஸ்திரத்தைப் பரவச்செய்யச் சொல்லும்''என்று சொன்னர். அதற்கு அவ்வசுவத்தாமன் அவரை நோக்கி, ''ஓ மாயனே! அது கூடாது. முதலில் அவளுடைய கருவைத்தான் அழிப்பேன்'' என்று புகலவுந் திருமகளுயகனுகிய சீமான்சினந்து, ''ஆ அசுவத்தாமா! நீ அப்படி சம்மதியாமற் போனுல் உன்கணையானது செய்யவேண்டிய சக்தியான காரியங்களைச் செய்யட்டும். நான் அதற்குத் தடைசொல்லவில்லை. அந்தக்கருவானது உன்பாணத்தால் வெந்து சாம்பலாய்ப்போனுலும் உருமாறினுலும் மறுபடியும் உருவாகச்செய்து காலத்திற்குப்பிறக்கும் புத்திரனுகக் காட்டி, ஸ்திரமாக நிலைக்கச்செய்து, அவனுக்கு மணிமுடிசூட்டி வைப்பேனேயல்லது ஒருகாலும் அந்தக்கருவுக்குக் குறைவருமென்று நீ எண்ணுதே. காண்பிடித்தபிடிதப்பாது. நான்வைத்தகுறி குலையாது. அடாகருவபகாரியாகிய அசுவத்தாமனென்னுஞ் சிசுஹத்தியுடையவனே! உன்னுலானகாரியத்தை நீபார். என்னுலானமட்டும் நான்பார்த்து உத்தரையின் கர்ப்பத்திலாகிய புத்திரனைக்காக்கிறேன்'' என்றார். அப்பால் கல்லதாகட்டுமென்று குற்றமற்ற தூரர்ணபுத்திர

னனவன் மந்திரத்தைமாற்றி உருவேற்றி அருங்கணைக்குப் பத்திர புஷ்பஞ்சாத்தி இலக்ஷணியமேற்றி இகழ்ச்சியில்லாத புகழ்ச்சியடைந்த பாண்டவர்களின் பதினிமாகளும் உத்தரை முதலாகிய மற்றப் பெண்களும் ஆசையாய்க் கொண்டிருக்குங் கருவையெல்லாம் நீறு நீறாகச் செய்யக்கடவதென்று சொல்லிச் செலுத்தினன்.

அப்படியே அசுவத்தாமன் விடுத்த பாணமானது ஐவர்க்குரிய மாதர்களின் கருக்குலையச்செய்யப் பெயர்ந்துவந்தது. அர்ஜுனன் அசுவத்தாமனுடைய சிரோமாணிக்கத்தைப் பெற்றான். அசுவத்தாமனுடைய பாணமானது பாண்டவகுல பத்தினிகளின் கருக்களையெல்லாங் கருக்கும்போது, பச்சைமாலானவர் பஞ்சாயுதத்துடன் உத்தரைகருப்பத்திற் பிரவேசித்து, அவ்வுத்தரைக்கு யாதொரு துன்பமில்லாமற்செய்து அவளுடைய கருப்பத்திற்பிறந்த சிசுவுக்குச் சொற்பமேனும் பிராணசங்கடம்வராமற்காத்து, அசுவத்தாமனைப் பார்த்து, "அடா குருத்துரோகிக்கு மேலாகிய கருத்துரோகி! நீ இன்றுமுதல் மூவாயிரவருஷம் பெண்சாதியில்லாமலும் அன்னந் தண்ணீர் முதலாகிய இன்பபோஜனங்கள் ஏற்றுக் கொள்ளாமலும், கருமகாண்டப்படிக்குக் கருவப்காரிகளுக்குக் காணுகிற பெருவியாதி பிடித்து, சீழ் இரத்தம்தசை நிணம்வெடிப்பு பிளப்பு கீளப்பு இளப்பு பூச்சிபுழு இவைமுதலியவைகளுடனே பிராணகண்டமாய் அநுபவிக்கக்கடவது" என்று சபித்தருளினர். அசுவத்தாமனுக்கு இப்போப்பட்ட சாபங்கொடுத்த கிருஷ்ணமூர்த்தியை வேதவியாஸர் நமஸ்கரித்து மெத்தப்புகழ்ந்து "நன்றுசெய்தீர்" என்று வாழ்த்தி, உள்ளம் அழன்று அசுவத்தாமனைப்பார்த்து, "நீ இவ்வளவுக்கு இடந்தேடிக்கொண்டாய். உனக்கு இது வேண்டும்" என்று விளம்பினர்.

அந்தமொழியைக் கேட்ட அசுவத்தாமன் சிந்தைவருந்திக் கோபங்கொண்டு, வேதவியாஸரையுங் கோபாலனையும் நோக்கி, "எனக்கு நேரிட்ட சாபத்தை நான் அநுபவிக்கும்போது நீங்களிரண்டுபேரும் என்னைவிட்டு நீங்காதிருந்து, அந்த வியாதியின் துர்க்கந்தத்தை அநுபவிக்கத்தக்கது." என்று கூறிச் சென்றான். அர்ஜுனன் தான்பெற்ற அசுவத்தாமனுடைய சிரோமாணிக்கத்தைப் பீமசேனன் கையிற் கொடுத்து, "அசுவத்தாமன் சிரஞ்சீவியாதலால் அவன்சாகமாட்டான். அவன்செத்ததைப் பார்க்கிலும் பத்தத்தினை நீங்கு இந்த மூடிமணியை வாங்கினது" என்று சொல்ல, யாவரும்

அவ்விடத்தினின்றும் திரும்பிப் பாசறையினிடத்துக்குவந்து, அக்கினியிற்பிறந்த பாஞ்சாலியின் கையிற்கொடுத்து, 'இவ்விடத்தில் நடந்த யுத்தமும் இவ்வுலகம் அழியும் படியாயிருந்த நிமித்தமும் வியாசர் நாரதாதியர் வந்த பரிசுத்தமும் கருவுகளுக்கு நேரிட்ட வருத்தமும், பகவான்காத்திருத்தமும் அசுவத்தாமன் சிரஞ்சீவி யென்னும் அருத்தமும், அவன் தலைவாங்காமல் மயிர்முடிவாகிய மணிவாங்கிய பொருத்தமுஞ் சொன்னார்கள். அதைக்கேட்டு வாசனைப்புகைதங்கிய பைங்குழலாள் சிந்தைமேற்கொண்ட துயரந் தீர்த்திருந்தாள்.

ஐவர் அசுவத்தாமனிடங்கொண்ட ஐயந் தீரக் கண்ணன்கூறிய தசரூன் சரித்திரம்

இப்பால் ஜோதியிற்பிறந்த திரௌபதையும் பாண்டவரைவரும் ஓரிடத்திற்பொருந்தி "ஐயோ! பிராமணகுமாரனுகிய அசுவத்தாமனுக்கு நமதுபேரில் இவ்வளவு அடம்வருவானேன்? இப்போர்ப்பட்ட கொலைகள் செய்வானேன்? இவனுக்கென்னவந்தது? பங்காளியா? பங்கையாளியா? இவனாரவன்? இவனுக்கிவ்வளவு கூராத்திரமென்ன? மேலும் யாவரையும் வெல்லத்தக்க வல்லபமும் பூரணமாயிருந்ததே! இவ்வளவு ஆற்றல்வந்தது எவ்விதம்?" என்று கேட்க, கட்டுத் தறியைப் பெயர்க்கும் பட்டத்துயானையையுடைய வஞ்சகக் கஞ்சமாமனுயிரை எஞ்ச அடித்துமுடித்த அஞ்சனமேனியான், "ஓ கடல் சூழ்ந்த காசினிமுழுவதும் வெண்குடை நிழற்படித்தியாளும் பூதலராகியகாவலீர்! எல்லாருடைய பலமுங்குன்ற வென்றுனென்று எண்ணுதீர்கள். அத்தவல்லமை இவனுடைய ஆண்மையால் விளைந்ததல்ல. சுடரம்பகச் சோமசுந்தரர் அருளால் இவன் வென்றதன்றி வேறில்லை. இதுவே துணிபாயுணருங்கள். அவனருள்புரிந்தால் யார்தான்திருத்தார்? ஓ ஐவர்களீர, அப்படியிருந்தபோதிலும், முடியுமட்டியாகிய ஆயுசுமுடிந்தாலொழிய ஒருவருக்கும் அனுக்கிரகம் பண்ணமாட்டார் உமிலாகாபகனுகிய உமையாள்பாகன். ஆனதால் அச்சிவபெருமானைப் போற்றிப் பூசிக்காதபோர்கள் யானையைஜயிக்குஞ் சிங்கம்போலிருந்தாலும் சிவபூஜாவிதியினையுடைய புண்ணியர்களின் கணனைதிற்கமாட்டார்கள். பெருமையாலுயர்ந்த பிரமாதிகள் முதலியபேரும் அறியப்படாத வேதமுதலவனுகிய சிவபெருமானைப்பேணிக்காஞ்சவர்கள். பொன்னகராளும் மன்னர்களெனி

னும் அவர்கள் சின்னவர்களே; நேரேகண்காட்சியாகக்கண்டு தரிசித்துப்போற்றியபேர்கள் கீழ்மையோராயினும், அவர்கள் நினைத்தகாரியமுடிக்குஞ் செயலினையுடைய இமையவர்களே.

ஆலகாலவிடத்தைக் குடிவைத்த கண்டத்தையுடைய அரன், அபிராமியை இடப்பாகத்திலுடைய ஆதிசிவன், சூலாயுதம் பிரகாசிக்குஞ் சங்காரனாகிய கங்காளன், எமனுவிதொலைத்த காலகாலன், ஆதிமத்தியந்தமற்ற தனிமுதல், முக்கண்ணன், பிரபஞ்சத்தை விளாவிக்கு மூர்த்தி, முத்தொழிலை நடத்தும்பெருமான், முடிவில்லாதவன், வடிவில்லாதவன், அதீதப் பொருளானவன், முலைக்குஞ்சுடர் போன்றவனென்றாலும் அடியார்க் கெளியவனுதலினல் அசுவத்தாமனுக்கு அநுக்கிரகஞ் செய்தார். அவருடைய திருவிளையாடல் அகந்தம் கேளுங்களென்று கோவர்த்தனகிரியால் மழைதடுத்தருளிய கோபாலன் சொல்லத்தொடங்கினர்.

ஓ என்னிருதயம்போன்ற ஜவரே! பிரமகற்பத்தோறும் ஸ்ரீமந் நாராயணனுடைய உந்தியிலிருந்து ஒரு தாமரைமலரானது புஷ்பிக்கும். அத்தக்கமலமத்தியிற் பொன்வண்டு வாசஞ்செய்யுந் தன்மை போற் பிரமதேவன் உட்புலன்களையடக்கி, சிற்பரனுகிய சிவபெருமானைச் சிந்தையுளிருத்தி, நெடுநாள் நீங்காத் தவஞ்செலுத்திக்கற்பனையாகிய இவ்வுலகசிருஷ்டியைத்தொடங்கி நடத்துவான். இப்படியேபிரமகற்பந்தோறும் நடந்துவது முறைமை. இது பழமையாயிருப்பது. இதை நீங்களறியுங்கள். அப்படியிருக்க ஓர்பிரமகற்பத்தில் அரிவாசுதேவனுடைய உந்திப்தாமரைமலர்ந்து அதிலுதித்தெழுந்த பிரமன் செந்துவர்வடிவாஞ் சிவனேமதித்து உள்ளத்தில் நினைத்து, வேதவிதிப்பிரகாரந் தவஞ்செய்துவந்தான். இவனுடைய தவத்துக்கு எந்தையாகிய ஜெகதீசன் வெளிவந்ததில்லை; அதனல் இந்தப் பிரமன் வெகுகாலந் தொழுதுஞ் சிவபெருமான் தரிசனமாகவில்லையென்று மனம்வேசாறி, தவம்விட்டெழுந்து, தனது வலக்காற்பெருவிரலில் தக்கனென்று ஒரு மகனைத்தந்து, அவனுடைய சாபினல் உயிர்த்தொகைகள் உண்டாகும்படியாய் நடாத்த, அந்த உயிர்களுக்கு உணவுமுதலியனவும் தக்கபடி ஈய்ந்து, உலகத்தைவிரித்தி செய்துகொண்டு தாமரைத்தவிசேறி யிருந்தான். அப்படிக்கிருந்த பிரமன் இவ்வுலகத்திலே பெரிய உடலெடுத்த பிராணிகளுக்கும், சின்ன உடலெடுத்த பிராணிகளுக்கும், நிறைந்து நிலைகொண்டி

இவைகளைப் புசிப்பாகப் புரிந்துவருகிறாளில், ஜெகமெல்லாங் கும்பலாக உயிர்த்தொகைகள் நிறைந்தன. அப்படி யிருக்குகாளில் தக்கனவன் குற்றமில்லாத ஒரு வேள்விசெய்பவேண்டு மென்று கருதி, சகல தேவர்களுடனுஞ்சேர்ந்து ஆலோசித்து, தக்கையாகிய பிர்மாவைப் பௌரோகிதனுக அமைத்து அந்த யாகத்தைச்செய்து வந்தான்.

அந்தயாகத்தில் எல்லாத் தேவர்களையும் வேதமந்திரங்களால் அழைத்து, அவிர்ப்பாகங்கொடுத்து, முக்கண்ணுடைய அண்ணலை நீக்கிமுடிந்தான். அக்கால் தேவர்களெல்லாரும் விரைந்து அவிர்ப் பாகம் பகுந்துகொள்ள அப்போது எல்லாக்கடலும் எல்லாமலையும் எல்லாவுயிருந் தானுயிருக்குஞ் செஞ்சடைக் கடவுளாகிய சிவபெரு மான் இந்தச்சங்கதிதெரிந்து, உள்ளம் அழுன்று, உருத்தெழுந்து, பூவுலகம் பிளக்கும்படியாய் விழுந்த ஆணிடியைப்போல் அபன்முக லாயினுரோடுந் தகூஉன்செய்யும் யாகத்திலெய்தி, மூவுலகத்தையுந் தாங்கிய கனகாசலமென்னும் மேருவை வில்லாகவளைத்து, தேவுலக முதலிபவும் அயர்ந்து மயங்கி அஞ்சும்படியாய் நாணேற்றிசெய்து, யாவரும் ஆவலுடன் சேர்ந்து இயற்றிய மகச்சாலைக்குட்புகுந்தார். தக்கனையும் எச்சனையும் இன்னுமுற்றபோர்களையும் மூனைச்சிலைப் பாணங்களினுல் அக்கணமே உயிரகற்றி, மிகுந்ததிறலுடைய தேவர்களையும் விரிஞ்சனையும் வெகுண்டு, அந்த யாகத்தில் தமது திருவடிவாகாரமாய்நின்று மூளைத்தருளிய இலிங்கத்தை ஆண்டோர் புலியி லழுந்தவெடுத்து வீசினர். அப்பால் மாண்டுபோன தக்கன் தவிர மற்ற எச்சனையும் வானவர்முதலாகியபோர்களையும் வாரிவாரி யாகாக்கினியிலெறிந்தார். "நீங்கள் என்னையல்லாது வேறு வினைசெய்ய உரியவரானீர்களல்லவா ? எனக்கு அவிர்ப்பாகங் கொடுக்காமல் யாகஞ்செய்தீர்களல்லவா?" என்று யாவரையும் உயிர்கடுங்கும் படியாய் மருட்டி, ஒட்டுபற்றில்லாமல் எவரையுமுடித்திடுவேனென் றுகையிலிருந்த வில்லைக் கணகணவென்று அசைத்து, கடுவேகத் துடன் ஒருக்ஷணத்துக்குள் நாணிபூட்டி மீட்டும் டங்காரம் செய் தார்.

இப்படி திகாந்தவரைக்குங் குப்புற்றுக் கவலைகொண்டு வெப்பு நோய் கொள்ளத்தக்கதாய்க் குணத்தொனி பண்ணியபோது, சூத் திரக்கயிறெழுந்த பொம்மைபோல் ஆத்மகோடிகளெல்லாம் அசை

வற்று அயர்ந்தன. இயற்கையாகிய உலகசக்கரங் காகரவென்று சுழன்றது. சந்திரசூரியர் தாராகணங்களாகிய இவைகளெலலாஞ் சஞ்சரித்தலில்லாமல் ஓட்டிவைத்ததைப்போற் கலங்கின. மலைகள் முதலிய சக்கரவாளமும் கெக்குவிட்டு நெரிந்தன. அலையுடன்கூடிய கடலுஞ் சுவறிப்போயது. அங்குள்ள பிரமாமுதலிய தேவர்களியாவரும் நடுநடுங்கி யொடுங்கினர்கள். அண்டகடாக மனைத்தும் வாய்விட்டன. அப்போது தேவரனைவரும் எந்த மலைகளானாலும், எந்தக்கடல்களானாலும், எந்த உலகுகளானாலும், எவ்வுயிர்த் தொகைகளானாலும் இப்பெருங் கடவுளினுடைய கோபத்தினால் அழியாது நிற்குமோவென்று எண்ணி எஞ்சி யிளைக்க, அவரனட்பெருந்தேவராகிய திருமாலும் நான்முகனும் மற்ற முனிவர்களும் இருக்குவேத முதலிய உபநிடதங்களையுஞ் சாஸ்திரங்களையுமெடுத்து மொழிந்து துதித்து வழுத்திச் சிவபெருமானுடைய திருவடியைச் சிரத்திற்சூடி, தப்பில்லாமல் ஸ்துதிபாடி, "ஓ ஆண்டவனே! ஏழைகளாகிய எங்களுடைய பிழைகளையெல்லாம் பொறுத்துத் தேவரீருடைய கண்ணளியாகிய கிருபை புரிந்தருளி ரக்ஷிக்கவேண்டும்" என்று போற்றிப் புகன்றார்கள். இப்படி திருமால் முதலிய மேலவர்கள் வீழ்ந்து இறைஞ்சுதலைக் கங்காதரன் பார்த்து, களின காபனுகிய நாரணன்மீது அருள்புரிந்து, அசரீரி வாக்கியமாக ஒன்று விளம்பும்படிக்கு எம்மையாளுடைய பெருமான் அருளிச்செய்தார்.

அதாவது "ஓ நாரணனே! ஆதிபகவானுகிய ஐமுகன் அனல் மயமா யிருக்கிறபடியால்; அதிசீக்கிரத்தில் நீ ஒரு மூஷிகத்துருவு கொண்டு, அவருடைய கையிலிருக்கும் நாணியைக் கடித்து அறுத்து விட்டு மூண்ட கினத்தைமாற்றி விடுக" என்று ஓர் வாக்குண்டாயது. இப்படி அந்தரத்தெழுந்த வார்த்தையை மந்திரம்போல் மாதவன் கேட்டு, மகா தந்திரமாய் அப்போதே மூஷிகத்துருவெடுத்து வினாணியை அறுத்தனர். உடனே பரமசிவனுக்கு அரிதாகிய கோபமகன்றது. அவர் அந்தக்கோபத்தைச் சமுத்திரப் பாங்கரில் விடுத்து, கிருபையுடன் முகமலர்ந்து அருணகைகாட்டி, தக்கனுக்குத் தலையருளி மெய்பாகிய தேகமிழந்தவர்கள் அவயவமற்றவர்கள் இவர் யாவரையும் மறுபடி உய்ந்தெழச்செய்து அருள்புரிந்து, கறுத்த கடல்சூழ்ந்த உலகத்தை முன்போற் கலங்காதிருக்கவருளி, மாலும் அயனும் மகிழ்ச்சி பெறும்படி செய்தார். அப்பாற் செம்மையுளத்தோராகிய முனிவர்களெல்லாம் நெருங்கிப் புனிதனுகியபுராதனனுக்கு

உள்ளமகிழ்ச் சிறக்கும்படியாய் வேறொரு யாகஞ்செய்து தேவாதி தேவனுகிய அப்பெருமானுக்கு அவிர்ப்பாகங் கொடுத்தார்கள். அதனற்பரமசிவன் உள்ள மகிழ்ந்து இமமைப்பயனும் மறுமைப் பயனும் அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுடைய அன்பையும் பக்தியையும் வியந்து, ஓர் ஸிம்மாசனத்தினடுவில் வீற்றிருந்தார். பக்கத்தில் நிறைந்திருந்த வானவரெல்லோரும் புளகாங்கிதங்கொண்டு போற்றிப் புகழ்ந்தார்கள். வேள்விசெய்த முனிவர்கள் யாவரும் வேதாகமங்களாலே துதித்தார்கள்.

அரிபிரமர் சரித்திரம்

அப்பால் ஆண்டகையாகிய ஆதிசிவன் ஆசனம்விட்டு எழுந்து, நான்மறை கறங்க காரணன் முதலிய நாகருருங்க அந்த யாகத்தின் றுமெடுத்து வீசிய இலிங்கமிருந்ததிசையை யடைந்தனர்; அந்த இலிங்கத்தை யாவருங்கண்டு கண்களித்துப் பார்க்கும்போது அக்கினி வடிவாய் அகண்டமூடுருவி, பாதலமெல்லாங் கடந்து அநேகங்கோடி சூரியப்பிரகாசம்போல் ஒளி திகழ்ந்திருந்தது. அத்தத்திருவுருவை நாரதர் முதலிய பேருங்கண்டு நடுங்கிப் பயந்து,துதிக்கைபெற்ற யானையுரியைத்தரித்த வீரட்டேசுவரரைப் பணிந்து, அவர் திருவடியைப் பூசித்துத் தொழுதனர். அப்போது கறுத்த முகில்வண்ணனுகிய நாராயணனும அயனும் அவ்விடத்தில் இந்தக்கொழுங்கனல் ஏதென்று காலகாலனைக்கேட்டார்கள். அதற்கு ஆதிபாண்டரங்கன் அவர்களைப் பார்த்து, "ஓ அன்பர்களே! அதனுடையவரலாற்றைப் பின்னுல் உங்களுக்குச் சொல்கிறேன். இந்த இலிங்கத்தின் அடியையும் முடியையும் அறிந்து வருபவரெவரோ அவரே தருக்க பிரமமுதன்மையுடையவராவர். ஆனதால் எங்கே பார்ப்போம். நீங்கள் அடிமுடி உணர்ந்து உரையுங்கள்" என்று திருவாய்மலர்ந்தனர். உடனனமைக் கடனிறத்தோனுகிய மாயன் காணும்படியாய்ப் பாதலம்புகுந்தார். பிரமதேவன் அன்னப்பக்ஷியாய் ரூபிகரித்து அந்த இலிங்கத்தின் முடியைக் காணும்படியாய் உயரப்பறந்தான். பொன்னுலகத்தோர் முதலிய பேர்களுடன் புராரியானவர் அவ்விடத்திற் பொருந்தியிருந்தார். ஓ பாண்டவர்களே! அடிமுடி தேடப்போன விஷ்ணுவும் பிரமாவும் அளவில்லாத நெடுந்தூரஞ்சென்று, எத்தனையோ யுகங்கள்

எத்தனை பல ஊழிமடங்கல் கழிந்தும் காணமாட்டாமல், அலுத்துக் கலகலத்து விலவிலத்து அடிமுடி அறியாதவர்களாய் வாடி வதங்கி, சோர்வுபட்டுத் திரும்பிவந்து, தியக்கங்கொண்டு சிவன் முன்னின்று மயக்கமேங்கிய மனத்தராய் இதனை யுரைத்தார்கள்.—

ஓ திரிநேத்ரதாரியாகிய தேவாதிதேவனே! தேவரீர் ஸ்வரூபத்தின் அடிமுடியும் அறியப்படவில்லை. இனிமேல் தேடிப்போகவேண்டிய இடமுமில்லை—என்றார்கள். அவர்களுடைய சொல்லை ஆதிசிவன் கேட்டு அருள்நகைபுரிந்து, அந்த இலிங்கத்தை அண்டமுடனளாவிப் பிரகாசிக்கும்படியாகிய அக்கினிமலையாக்கி, "இம்மலையை நினைக்க முத்தி" என்று பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் அருளளித்து, "இவ்விடத்தில் மலையாக முளைத்து விளங்கிய இந்த இலிங்கம் மெத்தவும் உறுதியுடையது. இந்த இலிங்கத்தைப் பூசனைபுரிந்த பேர்களுக்கு இம்மைப்பயன் மறுமைப்பயனோடு சகல நன்மைகளுமுண்டாம்" என்று அதுக்கிரகஞ் செய்தருளினார். இப்பால் இந்திரன் பிரமா விஷ்ணு திக்குப்பாலகர் சந்திரசூரியர் மற்றத்தேவர்கள் முதலாயினோர் தற்பரனுரைத்த திருவாய்மொழியைச் சதுர்வேதாந்த சித்தாந்தமொழியாகத் தலைமேற்கொண்டு, அம் மலைவடித்தை அனந்த முறை பூசித்து, தங்கள் தங்கள் அபிமானத்தால் வெவ்வேறான பல லிங்கங்கள் அமைத்துப் பூசித்து, பின்னும்வேறு வேறு ஸ்தலமும் தீர்த்தமும், ஏற்படுத்தி வைத்தார்கள். இவ்வண்ணம் அரி பிரமர்களும் மற்ற அமரர்களும் பூசித்த அத்தச் சிவமுகூர்த்தமாகிய பெருலிங்கம் எவரெவர் எத்தெத்தத்திசையை நாடினார்களோ அவரவர்களுக்கு அத்தத்தத் திசையிற் காட்சியாய்; ஐந்து வாண் முகமுஞ் செவ்வண்ண மேனியுங்கொண்டு, பிரகாசமுந் தீபச்சுடர் போலோங்குறும்படிக்குத் திரியம்பகத் தோற்றமாகி, துன்பமில்லாத சித்தையையுடைய தூயோருக்கு அவர்களிஷ்டப்படி நல்ல வழியீய்ந்து, அவ்வரிபிரமாதி அமரர்களுக்கும் மற்ற உயிர் வருக்கங்களுக்கும் காட்சியாகும்படி தாழ்ச்சியில்லாமற் சர்வசாட்சியாய் எல்லாப் பிரளயங்களிலும் ஆட்சியாய் அமர்ந்து வாழ்ந்திருக்கின்றது—என்று மகதியாழ் முனிவரனுகிய நாரதமகாமுனியும் வேதங்களை விரித்தருளிய ஸ்ரீவேதவியாசரும் மார்க்கண்டேயர் முதலாகிய மாதவத்தோருஞ் சொல்லுவார்கள்.

சந்திரன் சரித்திரம்

ஓ வீரலட்சுமி மருவுந் திரபுயத்தையுடைய பாண்டவர்களே! ஒருவராலும் அறிதற்கருமையாகிய உமாபதியின் பராக்கிரமத்தைப் பிரசங்கஞ்செய்வதற்கு என்னைப்போன்றவர்களால் மெத்த அருமையாயிருக்கும். ஆயினும் அவரருட்டிறத்திற் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளுங்கள். சிருட்டிகர்த்தாவாகிய பிரம்மதேவருடைய வலக்காற்பெருவிரலிற் பிறந்த அச் சிறுவிதியாகிய தக்ஷன் சிறந்த சம்பத்திற் சீர்பெற்று வாழ்ந்துவருநாளில் யாவரும் மெச்சும்படியான உச்சித அழகினையுடைய இன்சொற் றிருவுக்கொப்பான அசுவதி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுராதம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி—என்று சொல்லப்பட்ட இருபத்தேழு பெண்கள் பிறந்து வளர்ந்து சிறந்து குறைவற்ற நிறைவுற்ற முறையுற்ற பொறைகற்ற கற்புடைமையுள்ளவர்களாயிருந்தார்கள். அதுகண்டவிற்பன விவேகியென்னும் அற்புத சுதாகரனுகியசந்திரன் அவர்களை மணஞ்செய்துகொண்டு மருவிவாழ்ந்து இன்பம் நுகர்ந்துவருங்காலையில், அழகில் அளவிடப்படாமலடைந்த ரோகணியினிடத்தில் ஆசைவைத்து மற்றப் பெண்களினுடைய முகத்தை நோக்காமல் வாழ்ந்து வந்தான். அதை மற்ற இருபத்தாறு பெண்களுங்கண்டு மனந்தாளாமல் முகம் வாடிப்புருஷனை வெறுத்துவிடுத்துத் தங்கள் தந்தையை அடுத்து, சிந்தைகொந்து மெலிந்து முனிந்து, தங்களுக்கு நேரிட்ட முறையாகிய குறையையொழிந்தார்கள்.

அந்த வார்த்தைகேட்ட தக்ஷன் கோபங்கொண்டு அப்பெண்களை அழைத்துக்கொண்டு தட்சணம் சந்திரனிடம் வந்து, அவன் முகத்தைநோக்கி, "ஓமேலாகவுயர்ந்த நூலாய்ந்தவனே! நான் தாராதத்தம் பண்ணிக்கொடுக்க நீ அக்கினிசாட்சியாகத் தாலிகட்டிக்கொண்ட கருங்குழல்மடவார் யாவரையுஞ் சமமென்று நினைத்துப் பேதமில்லாமல் ஆண்டு அநுபவித்து வரவேண்டியதேயன்றி, ஒருத்தியின்பேரில்மாத்திரம் ஆசைவைத்து நேசமாய் இன்பம் நுகர்ந்துவருவது நீதியோ நெறியோ? சொல்லுக" என்று பலவாறுக

வெறுத்து, கோபமடங்காமற்குதித்து, பின்னும் நிதானித்து, "நல்ல தாகட்டும்: இன்று முதற்கொண்டு இருபத்தேழு பெண்களும் இன்பு றும்படியாகச் செய்து ஒருமையுடன் வாழ்வாயாகில் நன்காகிய பெருமைபாம். நான்சொல்லிய வார்த்தையைத் தள்ளிநடப்பாயாகில் நீ துன்புறும்படியாய் நான்கொடிய சாபமிடுவேன்" என்று நைத்துப் பெண்களுக்கும் புத்திமதிசொல்லி விடைத்துப்போயினன். அவனப்படி சொல்லியிருந்தும் வெற்றியையுடைய சந்திரனவன் புத்திமயங்கி, அத்தத்தட்சனுடைய பேச்சையோசித்து நிதானிக்காமலும் தன்புத் தியைக்கொண்டு தானேதெளிந்து தெரிந்துகொள்ளாமலும், பழைய படியே ரோகணியினிடத்திற் பட்சம்பாராட்டி வந்தான்.

அப்போது மூருந்தென்றும் மூத்தென்றும் மூல்லையரும் பென் றுஞ் சொல்லும்படியாகத் திருந்தியபல்லையுடைய கைகல்லாரெல் லோருஞ் சிலநாள்வரையிலும் இருந்துபார்த்துத் தங்கள்நாயகன் தங்களோடாமையால்வாடி, பழைய கலகத்தைத்தேடி, வெளுத்த கண்களிலிருந்து ஓடிவருங்கண்ணீரை முத்துமுத்தாய்க் கனத்த தனத்தில் உகுத்து உதிர்த்து, தந்தையிருக்கும் இடத்தை நாடிப் போய் முறையிட்டுச் சொன்னார்கள். இவர்களின் வசனத்தைத் தட்சன் கேட்டு மனம்புழுங்கி, கனலெனக்கனிந்து, காரெனஇடிந்து, கடலென இரைந்து கால்கடுகிவந்து கலைமதியைச் சினந்து என் பேச்சைக் கடுகத்தனையுங் கருதாமற்போனையல்லவா? நீ நாம் வடி வழகிற் சிறந்திருக்கின்றோமென்னும் ஆங்காரத்தினாலல்லவா என்னை மதிக்காமற்போனாய்? உன்னுடலில் மருவியகலையானது தேய்ந்து தேய்ந்து, நாள்தோறுங்குறைந்து உலையக்கடவதென்று சபித்தான். அத்தத் தக்ஷனிட்ட சாபத்தினாற் சந்திரன் ஓய்ந்து சாய்ந்து நிலைதளர்ந்து கலைகுறைந்து கலைவளைந்து ஆகாயமெங்கும் புகுந்து புகுந்து உலாவிவருவதானன். அதைத்தேவர்கள்கண்டு, தங்கள் பக்கியாலேதெளிந்து, சந்திரனுக்கு இதனைச் சொல்லுவதானார்கள். ஓ உடுபதீ! உன்மாமனாகிய அத்தத் தட்சன்புகன்ற சாபத்தை நீக்கும் நிர்வாகமுடையவர் சிவபிரானன்றி வேறொருவரையுங்கா ணோம். ஆதலால் தீனரட்சகனும் அன்பர்க்கெளியவனுமாகிய நீல கண்டமூர்த்தியைத் தியானித்து விரதமநுட்டிப்பாயாகில், உனக்கு வந்தசாபம் நீங்கிப்போகுமென்று சொல்லிப்போயினர். பின்னர் அந்தப்படியே வீங்கிய தோள்வாய்ந்த விதுவானவன்விரைந்து, அந்த அரன்முன் போற்றி விரதம் அநுஷ்டித்து வந்தான்.

இப்பால் அவ்விரதபலனுற் பரமசிவனனவர் பார்வதியாருடன் ரிஷபவாகனரூடராய், சகல தேவகண பூதகண சேவிதராய், சந்திரனுஞ் சூரியனுங்கூடிய அமாவாசையிற் பிரசன்னமாய் அருக் கிரகஞ்செய்தருளினர். ஒரு கலையுடனிருந்த சந்திரனனவன் அன்று முதல் உமர்பதி கருணைசெய்த உரத்தினுல் தன்னே யொறுத்து நீங் கிய கலைகளெல்லாம் ஒன்றொன்றுய் நிரம்பவும், மறுபடி ஒன்றொன் றுய்க்குறைபவும் நேரிட்டன. முழுமையுங் குறைந்தகலைகள் இப்படி வளரவுங் குறையவு நேரிட்டதே போதுமான தென்று சந்தோஷ மடைந்து வெற்றிகொண்டு மேலுலகமுதலிய ஏழுலகத்தையும் விளக் கிக்கொண்டிருந்தான் விதுவென்னும் பெயர் பூண்டவன். இந்தச் செய்தியைச் சிறுவிதியாகிய தட்சனறிந்து, "ஓ! ஓ! மோசம்வந்தது; சிவபெருமானுடைய அருளைப் பெற்றமையால் இனிநம்மைமதியான்; நாமிட்டசாபமும் பழுதாகும். சீக்கிரத்தில் நாம்போய்க் கலந்து கொள்ளுவது உத்தமம்" என்று கருதிச் சில தேவர்களையு மழைத் துக்கொண்டு தன் பெண்களுடனே திங்களிடத்திற்குவந்து, அவனை பழைத்துத் தழுவி ஆசிபுகன்று அவன் மனதில் ஒருத்தி பட்சமா யிருந்த மையலை உற்ற மற்ற இருபத்தாறு மாதர்களிடத்தும் இடை யறுதிருக்க இனியமொழியாலிசைவித்து, கன்னெறியின்படியே ஒவ்வொரு ஸ்திரீயுடன் வாழ்கவென் றிசைத்து, மறுவில்லாத மாதர் களையும் அவனிடஞ்சேர்த்து, மரியாதைமகிழ்ச்சி மகத்துவங்களை யுங்காத்துக் கொண்டு விடைபெற்று மீண்டு தன்னகரம்போய்ச் சேர்ந்தான்.

அங்கணமுனிவர் சரித்திரம்

ஓ என்மைத்துனர்களே ! அந்தச்சாம்பவமூர்த்தியினுடைய திருபையின் விருத்தத்தைப்பற்றி மற்றொருசரித்திரங் கூறுகிறேன் கேளுங்கள். அழகிற்சிறந்த ரமரஸ்வதிதீரத்தில் அங்கணரென்னும் ஓர் அருந்தவமுனிவருளர். அந்தமகாதபோவரை ஏழுமருத்துக்களென்று பெயர்பெற்றவர்களை அறிந்து ரட்சித்த முனியென்பார்கள். அப்போப் பட்ட முனிவர் இந்தக் கர்மபூமியில் தருப்பையைப் பிடித்துத் தவஞ் செய்தார். அவருடைய தபாக்கினியினுல் ஏழுலகமுந்தேவர்களும் வெதும்பி வெந்து, வெகுண்டு பயந்து வேதபுராதனனுகிய வெள்ளி

யங்கிரி விமலருடைய பாதத்தில் வீழ்ந்து தாழ்ந்து தபாக்கினியில் வருந்திய சஞ்சலத்தைச் சொல்லிமுறையிட்டார்கள். அவர்கள்கூறிய முறைக்கிரங்கிய பரமசிவன் ரிஷபவாகனரூடராய் தவச்சாலைக்கு வந்து, அங்கணராகிய வேத்முனியைநோக்கி, "தவத்தைவிட்டெழுக" என்று சாற்றினர். அதற்கத்திரிகாலக்கியானியாகிய முனிவர் மௌனமாயிருந்தார். அதைக்கண்ட மைக்காளவிஷத்தை மணிகண்டத்தடைத்த மகாதேவர் மனங்கறுத்து, அவ்விடத்திலிருந்த அழகிய ஒருகல்லைத் தமதுவிரலினுல் தட்டினர். தமதுவிரலுங் கல்லுஞ் சம்பந்தப்பட்டபோது, அங்கணமாமுனிவருடைய தேகமும்வெவ்வியகனலால் வெந்தீறுபோலாகி, வெதும்பிவீழ்ந்தது. அதனுல் அவர் மறுபடியும் எழுந்திருக்கமாட்டாதவராய்ச் கண்ணீத்திறந்து கங்காநதியும் கொன்றைமலருமணிந்தசடையானப்பாடி, அவருடைய திருவடியில் முடிபொருந்தவும் உடலம் பூமியிற் படியவுங் கண்ணீர் வடித்துருகி இதனைக்கழறுவதாயினர்—

ஓ கருணைகரக்கடவுளே! தேவரீர் சிந்திப்பீராகில் உலகுண்டாம். அநேக உயிர்களுமுண்டாம். அழகிய முத்தொழிலுமுண்டாம். அடியேன்தேவரீருடைய குழந்தை. வேதாகமாதிகளாற்சொல்லும்படியான தவமும், அத்தவத்தின்பயனும், அப்பயன்களெல்லாம் உதிக்குமிடமும் ஓடுங்குமிடமுமாகியிருக்கின்றீர். உம்மையும் உமது திருவருட்டிறத்தையும் ஒருவரால் நிதானித்தற்கெளிதோ—என்று இப்படிபலவாறுகப்புகழ்ந்து, ஏத்திவாழ்த்தி இறைஞ்சித்,"தேவரீரை இவ்விதமென்று தெரிந்துகொள்ளப்படாத தீவினைக்குச் சொந்தமாகிய விவேகமற்ற என்னைக் காருண்யத்துடன் ஆண்டருளக் கடவது" என்று அரற்றவும், அருவிபொங்கும் அணிமுடிப்பரமன் அநுக்கிரக முடையவராய்க் கருணை கூர்ந்து, சிறுகைசெய்து உன்னுதற்கரிய முன்னையதவத்தை அன்னவன் றனக்கு அருளமீண்டுரைப்பார்—ஓ அன்பனே! நீ புரியுந்தவத்தால் நிலத்தில் வாழ் உயிர்கள், காவுறைப்பதியோர் கருதுமெய்ச்சுத்தர், யாருக்தீயால் அலுத்துச்சலித்தனர். துன்றியதுன்பத் தொடக்கினை நீக்கி, இன்றவர்க்கெல்லாம் இன்பமளித்தோம்; இன்றுமுதலாய் இயற்றுகதவங்கள்; ஒன்று நூறுக ஓங்கும்விருத்தி; வாழ்தி—யெனமறைவாசகமோதி, ஊழி வாழ்பெருமான் ஊர்ந்தனன்விடையே.

ஆறுமுகக்கடவுள் சரித்திரம்

கேட்டார்களா பாண்டுகந்தனே ! அச்சிவபிரானுடைய பிரதாபத்தைப்பற்றி மற்றொரு திவ்விய சரித்திரஞ் சொல்லுகிறேன் கேளுங்கள். ஆத்திமாலையுங் கங்கையும் அம்புலியும் பூனைந்த சடா மகுடத்தினையுடைய சாம்பமூர்த்தி ஒருகால் ஆறுமுகத் திருக்கோ லங்கொண்டு உமாதேவியுடன் கையிலாயவரையி லெழுந்தருளி யிருக்கும்போது, அவரது நெற்றிக்கண்களாறினுமிருந்து எழுந்தரு ளிய வீரார்க்கதிப்பொறியாறு மீதார்ந்து உலகமுடிவாகிய ஸம்ஹா ரகிர்த்தியத்தைக்காட்டி எரிப்பதாயின. அப்போது அம்பாவாணர் முதலாகிய யாவரும் புகைந்துகரிந்து பொரிந்து எரிந்து போங்காலத் தில், புண்ணியர் முதலியயாவரும்வந்து புராரியைப்பொறுமைகேட் டார்கள். அப்போது சாம்பவமூர்த்தியாகிய அனகனுனவர் அருளுட னிரங்கி, அந்த ஆறு பொறிகளையும் அதிசீக்கிரத்திலழைத்து அவர் றின்மேகத்தை அமர்த்தி, அக்கினிதேவனுடைய சிரசிலேற்றி கிறுத்தி, ஒரு மொழியுஞ்சொல்லாதிருந்தார். அந்த ஆறு பொறிகளை யும் ஏற்றுக்கொண்ட அக்கினிதேவன் தாளாதவனுய், தானெல்லா வஸ்துக்களையுஞ் சுடுவதுபோல் தன்னைச்சுடுகின்றதற்பரன் பொறி போல் தத்தளித்து, உலகமெல்லாமோடி உய்யுமிடந்தேடி திருமலர் மேலுற்ற ஒப்பற்ற வேதியனுகிய பிரம்மாவினுடைய திருவடியில் வீழ்ந்து பெருமையுடன் பணிந்து "இச்சிவாக்கினிப்பொறிகளை என் னுற் சகிக்கமுடியாது. நீர் என்பிராணனைக் காப்பாற்றிவிடும்" என்று மெத்தவு மிரங்கிவேண்டினன். அப்போது பிரம்மா தியானத்தா லுணர்ந்து "சிவபெருமானருளிய சிறு வெம்பொறிகளாறையும் பாகீ ரதிநதியினிடத்துச் செலுத்திவை" என்று பகர்ந்தான். இப்படி அயன் சொன்னவுடனே கலக்கியானமுதலிய யாவற்றையுங் கற்றபேரறி வோர் வழிபட்டு அறியும்படியாகிய கனற்கடவுள் அப்போதேசென்று அலைமிகுத்து சிறக்நதியினிடத்து ஆறுபொறிகளையும்விட்டு இளைப் பாறி, தானிருக்கும் ஸ்தானத்துக்கு வந்துவிட்டான். யாவருக்கும் பரிசுத்தத்தைத் தரா நின்ற அந்நதி தட்சணமே நீர் வறண்டு பொசுங்கித் தளதளவென்று கொதிப்பெழுந்து சற்றுக் தாளுமாட்டா மற் சங்கடப்பட்டு, அந்த ஆறுபொறிவந்த வரலாறுணர்ந்து, தன்கால் வழியிற்கொண்டுபோய்ச் சரவணப்பொய்கையில்விட்டது. பொன் கொழிக்குஞ் சரங்கக் கைகளையுடைய பாகீரதி அழகுடன் செலுத்திய

பொறிகளாறும் பல கிரணங்களுடன்கூடிய சோதிமின்னல் உருப்பட்டதைப்போல் ஒளியிட்டு, பலவிதமுழக்கத்துடன் அந்தச் சரவணப் பொய்கையில் படர்ந்து வந்தன. அப்போது எட்டுத்திசையும் இமையவருலகமும் ஏழு மேகமும் என்னபாடு பட்டனவென்று சொல்லுவேன் ஐயோ! யாவரும் மிகவும் பயந்திருந்தார்கள்.

அப்படியிருக்க, பரிசுத்தமாகிய பரமசிவன் அநுக்ரகித்தருளிய விழிப்பொறிபாறுஞ் சிலகாட் சென்றவுடன் ஞானத்திருவுருவாகி இன்பமாகிய முகங்களாறும் ஈராறுகரமும் இரண்டுசேவடியும் விசால மார்புமுள்ள மாசற்ற முருகவேளாய்த் திருவருளுடன் அவதரித்தனர். கோடாகோடி சூரிய கிரணங்களையுடைய கோடிசூரியப் பிரகாசம்போன்ற அழகிய திருமேனியில் முப்புரிநூலும், பொன்மலைபோன்ற அழகார்ந்த புயங்கள்தோறுஞ் சொலிக்கும் நவமாமணிவடங்களும், செவிகளிற் குண்டலங்களும், பொன்னுடையும், ஜனனமரணங்களை மாற்றும் முனிவர் முதலியோர்களேற்றும் இணையடிகளிற் சாற்றும் தண்டை சதங்கை கிண்கிணிசிலம்பு இலகத் தோன்றிய அவர் பனிவரைப் பாங்கரினடைந்து, ஒரு மணியாசனத்தின் மீதமர்ந்து, முதன்மையாகிய பற்பல யோகங்களைப் பயின்று, பரிபூரணகடாட்சங்கொண்டிருந்தனர். அப்போது சப்தரிஷி பத்தினிகளில் அழகிய கச்சணிந்த குயாசலமுற்ற கார்த்திகைமாளுரென்னும் ஆறுரிஷிபத்தினிகள் அந்தமலைச்சாரிலே தவஞ்செய்திருந்தார்கள். அவர்கள் கொத்தார்ந்த குழற்காலையாகிய இந்தப் பிள்ளையைக்கண்டு பேராசைகொண்டு, உற்றுப்பார்த்துச் சமீபத்தில் வந்து, ஒருவர்க்கொருவர் உனக்கெனக்கென்று கிட்டி, ஆசைவளரும் உற்சாகத்தால் தங்கள் தங்கள் கைகளிலேயிட்டிக்கையுட்கை கைகோட்டி எங்கள் ஐயா வாடா! என்னப்பாவாடா! எங்கள் அத்தாவாடா! ஓ வேதவித்தாவாடா! என்று அழைத்தார்கள்.

அக்காலமிற் கருப்பைக்குட்புகாமலும் அயோனி சம்பந்தமாயுமிருக்கின்ற திருமேனிபடைத்த கருணையாளனாகிய கந்தன் சிறுகைகாட்டித் திருவாக்கருளி, தனதோருருவை ஆறுகூறாக வேறுபடுத்தி, அந்த மாதர் அறுவர் கையிலும் ஆறுகுழந்தைவடிவாய் அணுகினர். இப்படி அகங்கையிற்கொண்ட சுகந்தரும்பாலினை ஆசையோடணைத்துப் பாசமாபெடித்து ஓப்பற்ற அவ்வாறுமாதரும் புகழ்ந்து மகிழ்ந்து கடம்பாடவிக்குக் கொண்டுபோனார்கள். பொற்கடம் போனிறைந்த

மூலையமுதூட்டினர்கள். அன்புட னுபசரித்துப் பாதுகாத்துவந்தார் கள். இந்தப்பிள்ளைகளுஞ் சிலுகில்லாமல் வளர்ந்துமிகுந்த சிறப்புட னே அவர்களுக்கு உகந்த விளையாடல்புரிந்து சிறந்தன. இளையோன் இப்படியிருக்குகாளினில் ஒருநாள் கறுத்தமேகம்போன்ற குழலை யுடையமாதர்கள் ஆறுபேரும் இதென்னவோ காரணமென்று கலந்து பேசிக்கொண்டுபோய், முன்னிருந்த ஆசனத்தில் இந்தப்பிள்ளைக ளாறையும் வைத்தார்கள். அப்போதுமீட்டம் ஓருருவமாயினர் என்ன யாண்டிரட்சிக்கும் இளையபெருமானுகிய பாலசுப்பிரமண்யர். அக்காலையில் தேவேந்திரனும் தேவகுருவும் தேவர்களும் சப்தரிஷி கள் முதலாகிய சமஸ்தமானபேர்களும் அடுத்துவந்து அடியிணை யைத்தொழுது ஆனந்த வுருவத்தைப்பார்த்து ஆச்சரியம்பூத்து அகமுழுவதும்வோர்த்து உள்ள முருகும்படியானர்கள்.

அப்போது மேலாகிய பிரகஸ்பதியானவர் சமீபத்தடைந்து, திருவுருவின் இலக்கணங்களையோர்ந்து, இவர்தான் நம்மைக் காக்குங் கடவுளென்று மனத்துட்கொண்டு. திரிகால முந்தெரிந்த திருமுகம் ஆறுடைய சண்முகத்தேவருக்கு இவ்வுலகம் அறியும்படியாய்க் கருமவிதிகளிபற்றிக் கதிர்மகனென்றும், அருங்கங்கைபெற்ற புத்திர னென்றும், புங்கத்திறம்பூண்ட புனிதகார்த்திகைச் சுதனென்றும் உரைத்து ஆசீர்வதித்தனர். இப்படியாக அந்தமிலச்சார்பின்கண்ணே ஷண்முகத்தேவர் அருளுருவமைந்து, எந்தத்திசையோரும்வந்து சித்தித்துத் தொழும்படியாய் எழுந்தருளியிருக்கின்றார். அப்படியிருக் கின்றபோது லோக மையலகன்றமுனிவோர் யாவரும் இக்கங்குக னிடத்தில்வந்து உகந்துதொழுது, வேதாகமங்களிலுள்ள உண்மைப் பொருளை அடியேங்களுய்யும்படியாக உபதேசித்தருள வேண்டு மென்றுகேட்டுக் கொண்டார்கள். அப்படியே யவர்கட்கு நிதானிக்கப் படாத அவ்வேத வேதாகங்கத்தின் உட்பொருளை ஐயந்திரிபில்லாமல் அருளி, அக்கங்குகப்பெருமானுனவர் யாவருக்கும் ஆசானுக அமர்ந் திருந்தார். இப்படியிருக்குங் குருமூர்த்தமான து எங்கும் பிரகாச மாகியது. இதைக்கேட்ட கங்காதரச்சடிலராகிய சிவபெருமான் காசார்குழல்படைத்த பார்வதிதேவியாருடன் விடைமேலேறி, எவர் களாலும் அளவிடப்படாத அருள்பெருங்கிய ஷண்முகக்குமாரனைப் பார்க்கவேண்டுமென்னும் ஆசை மேற்கொண்டு எதிர்வந்து தோன்றி னர். அதுகாலையில் ஒருபொன் மலையின்மீது நீலமலை போன்று பிரகாசிக்கு மேன்மைபெற்று நிகரற்று விளங்கும் அழகை விளக்கிய

கொள்கையைப்போல் மகாலட்சுமியுடனே கருடன்மீதேறி கல்லருட் கடலாகிய திருமால் அவ்விடத்தில் வந்தார்.

இதல்லாமல் கவிவாணருடைய கூட்டத்திற்கலந்து அவர்களைப் பெருமைபெறச்செய்யும் அருணேக்கமுடைய ஸரஸ்வதி யென்னு மின்னைப் பக்கத்திற்கொண்டு அன்னவாகன மேலேறி, பழமா மறை மொழிபகர்ந்து துதித்துப் பாங்கரில்வந்தார் சிருஷ்டிமுதல்வனுகிய அம்புயன். அயிராணிசமேதனுய் வெவ்விய வஜ்ராயுதனுனவன் அயிராவதமென்னும் யானைமேல்வந்தான். சுவாகாதேவியுடன் ஆட்டுக்கிடாவேறி இயலார்ந்த அக்கினிதேவனும்வந்தான். மற்ற இதர திசைப்பாலர்முதலியோரும் சப்தரிஷிகளும் ஞானவான்களும் அஷ்டவசுக்களும் நவக்கிரகங்களும் அஷ்டநாகங்களும் பதினெட்டுத் தேவகணங்களும் ஏகாதசருத்திரரும் துவாதசாதித்தர்களும் தும்புரு நாரதாதியரும் அரம்பாஸ்திரீகளும் இன்னுமுள்ள வானவரியாவரும் இடங்கொள்ளாமல் அணுகி, முற்றிலுஞ் சோகநீங்கி மௌனத்திலிருந்தார்கள், வேதமுழக்கமும் மங்களவாத்தியமும் தேவதுந்துபியும் யாழ்வீணேபாசையும் சங்கத்தொனியும் பொங்கி முழங்கின. சிவபெருமானுடைய திவ்விய பராக்கிரமங்களையுங் கிருபையையும் வேதாகமங்களினுல் அனேக மூனீச்வரர் துதிக்கும் பாடலினேசையும், அக்கினிமலராகிய பரமசிவனுடைய சேயாகிய ஷண்முகத்தேவரினது புகழையும் அருளையும் பேசிக்கொண்டாடும் ஆடலினேசையும், விண்டலமுத லெண்டலத்திலும் பரவின. இப்படியாகவந்து வந்திக்துச்சிந்தித்து ஒருவருடனெருவர் நெருங்குணர்ந்தன்மையை நோக்கி மகிழ்ந்து புன்னகை கொண்டருளினர் உமாபதிதந்தருளிய ஷண்முகக்கடவுளானவர்.

அதுகாலையில் உண்ணுமுலையாளும் பரமேச்வரனும் பாயும் விடைவிட்டிழிந்து வேகமாக நடந்து பிள்ளைக்கருகே ஓடினர்கள். ஆ என் செல்வமே! என்றுகையேந்தி நின்றார்கள். மேலவரான அக்கினிதேவனும் மாசற்றகங்கையும் வந்து நேசம்பெறநின்று அருகிற் சென்று, "எங்கள் அரசே! எங்கள் அறிவே! எங்கள் அப்பா! எங்கள் சாமி! வருகவருக" என்று கரகோட்டினர்கள். இவ்விதமாகப் பார்வதிதேவியும் பரமசிவமும் அக்கினிதேவரும் கங்காதேவியும் ஆகிய இவர்கள் நால்வரும் தன்னருகில்வந்து நின்றுகொண்டு வருகவருகவென்று வருந்திக்கைகோட்டி அழைப்பதினுல், இவர் நால்வருக்கும் ஆனந்த

முண்டாகத்தக்கதாய்த்திருமால்மருகன் சிந்தைசெய்துதனதுஉருவை நால்வகையாகப்பிரித்து, அவரவர்கள் சந்தோஷிக்கும்படிகைக்கொரு குழந்தைவடிவாய் மீட்டிய கைகளில் சேர்ந்தமைந்தருளினர். அவ்வவர்களும் முகத்தோடு முகமும் காத்தோடு காலும் ஒத்தி, பதத்தில் முத்திதந்து சிரத்திற்பொருந்தப் பொருந்திப் பூரித்துமகிழ்ந்தார்கள். அதுகாலையில் வெள்ளெருக்கணிந்த சடைமுடிப்பரமனுர் காரீட்டியழைத்த தங்கள் நால்வருக்கும் மனவருத்தமில்லாமல் விரைந்து புகுந்த தன் குமாரனுடைய விரகைப்பார்த்து,உள்ளுருக்கும்பேரன்பு வெளியே பொங்கிவழிந்து பரந்ததைப்போல் மகிழ்ந்து நகைத்து, தேவர்களெல்லோரும் தரிசித்து சோக்கும்படியாய்த் தேனிறைந்த மலர்ந்த கடப்பமாலையணிந்த திணிந்த புயாஜலச்செவ்வேளைப் பேராசையுடன் தமதுமார்பிற் சேர்த்தணைத்துத்தாங்கி, தெளிந்திருக்குங் கருணைமுகத்தைத்தமது திருமுகத்தினெடொத்த சீர்பாராட்டிப் பூமிமேல் விட்டனர்.

பாலாம்பிகையுந் தன்னுடைய கரத்தில்வந்த மகவினைக் கண்ணருள்சுரந்துபார்த்து முகத்தோடணைத்துப் பொன்னெளி மணியொளி பொருந்திய சூரியபிம்பமானது நிகரில்லாத பரிசுமேகத்திற்கலந்த பரிசுகாட்டியணைத்து நெருங்கிப் தனதுகிருபையெல்லாம் பரிவுடன் கொடுத்து மீளவும் பூமிமேல்விட்டாள். இப்பாற் கங்காதேவியும் அக்கினிபகவானும் அவ்வண்ணமே உச்சிமோந்து உள்ளம்பூரித்து பூமிமேல்விட்டார்கள். இவ்வாறு நம்பன்முதலிய நால்வரும் பூமியில் விட்ட அந்தவேளையில் நான்கு உருவாகிய ஞாலுபிரிவும் ஓரேதிருஉருவாய் விளங்கி இரண்டு பதாம்புஜங்களும் பன்னிரண்டு தோள்களும் செந்தாமரைக் கமலங்கள் தோற்கும்படியாகச் சிறந்த ஆறுமுகமும், நேராகிய ஈராறுகண்மலர்களும் பொருந்த இருந்தருளினர். வாட்டிறங்கொண்ட திருமாலும் பிரமாவும் ஏனையோர்களும் அற்புதமவிந்து ஆனந்தக் கண்காட்சிபெற்றார்கள். அப்பால் முருகக்கடவுளானவர் முருக்கிதழையுஞ் செவ்வாம்பலையும் மென்மையாக்குஞ் செவ்வாயும்,முருந்துக்கும்முல்லைபரும்புக்கும் கருமைகொடுக்கும் வெண்தந்தமும், கமலமலரைக்கடிந்து குவிக்கொடுங்கவிடுக்குஞ் சக்திகொண அத்தரத்திலோட்டிய முகமலர்ச்சியும், அம்முகத்தார்ந்த அருட்கடலாகிய அருள்விழிசோக்கும் ஆகிய இவைகளால் ஈரேழுபாரையும் ஆக்கி அளித்தருளிய பராபரையினுடைய அருகிலடைந்து போற்றி தாயினது திருமுகமண்டலத்தைப் பார்த்தனர். அப்போது பராசக்தி

யார் சிறப்புப்பொருந்திய தமது ள்தனஞ்சொரிந்த செழுஞான அமுதினைவள்ளத்திற்சேர்த்து, சேயினுடைய செருங்கிய செவ்வாய் கள்தோறும் அருத்திவைத்தார்.

எப்புவனங்களிலுந் தனக்கு ஒப்புவமையில்லாத உலகீன்ற உண்ணமுலைத்தேவியார் தமது திருஞானவமுதுண்டு தெவிட்டிய பின் குழந்தை வேலவனுகிய திருமதலையை ஒப்பற்றஞான முதல்வ னுகியபுமாமஹேசனது திருவடியிற்றுழ்ந்து பணியச்செய்து, "இந்த ஷண்முகக்குழந்தைக்குத் திருநாமம் தரித்தருள்க" என்று செப்பினர். அதற்குத் திரியம்பகன் உவந்து மறைமுறைப்படியே பெயர்களெல்லா மெடுத்தியம்பி, சகலமானபேர்க்கும் நற்பேறுதரும்படியாகிய தனி யெழுத்துக்களைச்சேர்த்து ஆறுமுகத்துக்கும் ஆறு அக்ஷரமாகச் சர வணபவ வென்னும் பெயரைத் தழையச்சொல்லியருளினர். இச்சடா க்ஷரப்பெயரைச் சங்கரனுர் திருவாய் மலர்ந்த தன்மையைக்கேட்ட எழிலுடைய இமாசலையார் மிகவுமகிழ்ந்து, தம்புத்ரனை வெற்றி வேலனுக்கு அக்ஷராப்பியாசஞ்செய்து அரிய மறைப்பொருளனைத் தும் அருத்திவைக்கவேண்டு மென்று எண்ணங்கொண்டு, எல்லாம் வல்லபேராண்மைதனக்கிருந்துந் தன்னைத்தானறியாதபெண் தன்மை யினுலும் பேதைமையாகிய அறியாமையினுலும் ஓதிமமுயர்த்தபிரம் மாவை நோக்கி, இச்சரவணபவனுக்கு நீர் கல்வி கற்பித்தருளுமென்று உரைத்தார். இப்படி தனது தனயன்பேரிற் சொல்லுதற்கரிய சந் தோஷக்களிப்பினுல் உமையவள் சொல்லவும், பிரமன் சற்றேனுந் தாழாமல் உடனே எழுந்து தனது விதி தனக்குத்தெரியாமல் வினை வசப்பட்டுக் குமாரதேவனுக்குப் பக்கத்திற் போயிருந்து வேதத் துக்கு மூலமாகிய ஓம் என்னும் விதியை எடுத்துச் சொன்னன்.

அம்மொழியைச் சண்முகதேவர் தாம் அறியாதவரைப்போல் மிரளமிரள விழித்து இன்னுருகாற் சொல்லென்று உறுத்திக் கேட்டனர். அதனை மண்பொதுத் தந்தையானவன் யோசிக்காமல், தாராளமாய் மறுபடியுஞ் சொன்னன். இந்தப் பிரணவத்துக்கு யாது பயன் சொல்லுமென்று குழந்தை வடிவேலர் கேட்டனர். உடனே விஷ்ணுமுதலிய தேவர்களும் சிவகாமித்தாயும் மற்றியாவருங் கைகொட்டிநகைத்தார்கள். அப்போது பிரமனுவன் உமையைப் பார்த்து, "ஓ காதுபரியந்தாவிய கயற்கண்ணம்மே! பார்த்தீரா, உமது திருமகனுகிய பாலசுப்பிரமணியர் ஓ காதுணர்ந்து, சுருதியா

வுந் தெரிக்து, ஓ மென்னும் பொருட்பயனுட் கலந்திருக்கும் உத்தமரா யிருக்கின்றீர். அவருக்கு என்னைப்போன்றவன் ஓதிவைக்கவுந்தரமோ?'' என்று இருகரத்தையுங் குவித்து அவ் விசாகப்பெருமாளுடைய திருநாமமெல்லாம் விளம்பி, ''ஓ பஞ்சகிர்த்தியக்கடவுளா யெழுந்த பாக்கியமே! மெய்ஞ்ஞானப் பெருங்கல்வியோர் அறியத்தக்க வேதத்தின் மூலத்துக்குப் பயனுணர்ந்து யான் சொல்லுந்தரமுடையவனே? ஓ தோன்றலே! மேலும் அந்தப் பிரணவத்தின் பொருள் வாக்கினு லுரைக்கத்தக்கதோ?'' என்று அனந்தமுறை தீர்க்க தண்டஞ்செய்து துதித்தான்.

அக்காலமில் அறுமுகக்கடவுள் அவன்மீது அருள்முகமா யிருந்தனர். அப்போது முப்புவனங்களையும் புரக்கும் முகிலூர்தியான தேவேந்திரன் அந்த இடத்துக்கு வந்து, முந்திப் புகுந்து, தாழ்ந்து, எப்புவனங்களுக்கும் இறையாகிய ஈசனுர் திருவடியில் இருகரத்தையு முகிழ்த்து, ''ஓ எழைபங்காளராகிய எந்தையே! பவளநிறம்போன்ற உருவாய்ந்த கொடியசூருடைய கொடுமைக்கு ஆற்றமாட்டாமலெனது பதவி முதலிய செல்வத்தைவிட்டு வருந்தி அலைகிறேன். அத்தச்சூரர் ஸம்ஹாரமாகும்படிக்கு இத்தப் பரிசுத்தமாகியபுத்திரனை அநுக்கிரகிப்பீராகில், அச் சூர்பகைவென்று காணுந் தேவர்களுந் துயர்நீங்கித்துன்பம் ஒழிந்திருப்பாம். ஓ இன்பசாகரமாகிய ஈசனே! எனது விண்ணப்பத்தைத் தேவரீர் அங்கீகரித்தருளல் வேண்டும்'' என்றியம்பினன். இப்படியாக தேவேந்திரன் தொழுது சொல்லியதைப் புராரிகேட்டு மகிழ்ச்சியுடன்நோக்கி, ''ஓ வஜ்ராயுதனே! வருந்தாதே! தேவர்களுக்கும் உனக்குஞ் சவுக்கியமுண்டாகும்படிக்கு இதக்குழந்தை தேவசேனபதியாகி, அசுரரை யெதிர்த்துப் போர் புரிந்து வெற்றியடைந்து பலாயனஞ்செய்து உனக்குத் தேவேந்திரபட்டமுங் கட்டுவான். நீ சுகம்பெற்று வாழலாம்'' என்று சொல்லவுமிந்தச் சொல்லைக்கேட்ட விண்ணோரெல்லாருஞ் சந்திரோதயங் கண்ட பாற்கடல்போற் களித்து முழங்கி நிகரொருவரு மில்லாமல் ஆர்ப்பரித்தார்கள்.

அப்போது ஆகண்டலனவன் நீலகண்ட நிமலனைப்பணிந்து, ''ஓ ஆண்டகையே! தேவரீருரைத்தவண்ணம் அரிதாகிய பிள்ளையை எனக்கும் என் சேனைகளுக்குந் தேவசேனபதியென்று மாட்சிமை தங்கிய தேவர் ஸ்திதானத்தின்முன்னே மணிமௌலியுடன்கட்டங்

கட்டுகிறேம்" என்று வேண்ட, மங்கைபங்காளன் மனமுவந்து, உங்களின்பின்பிரகாரஞ் செய்யுங்களென்று அருள்செய்தனர். உடனே இந்திரன் அந்தஐம்முகக்கடவுளைத் தொழுதுபோற்றி, காண்பதற்கரிதாகிய பண்ணவர்கள் விண்ணவர்கள் மண்ணவர்கள் முதலியபோகட்கெல்லாந் தெரிவித்தான். உடனே யாவரும் பல உபகரணதிகளைக் கொண்டு சூழ்ந்தார்கள். அப்பால் தேவதுந்துபிபேரிஉடுக்கைபம்பைதாரை பூரி வீரசின்னம் மேளதாளம் சங்கத்தொனி இவைகள் எங்கும் பொங்கி முழங்கும்படியாய் ஆறுமுகக்கடவுளாகிய சரவணபவரை அநேக ஜீவரத்தினமாணிக்கங்களழுதகி அலங்கரித்திருக்கின்ற ஆசனத்தின் மீதிலேற்றி, வாசனைதங்கிய பாரிஜாதமலரும் இன்னும் பலவாகிய தெய்வமலரும், வெண்மையாகவிளங்கிய லரல்வதிதீர்த்தமுங் கலசங்களிற்றூங்கி, மற்றுமுள்ள ஓமத்திரவியங்களெல்லாங்குவித்து அக்கினிவளர்த்துத் திருமால் பக்கத்திலிருந்து மந்திரமியம்பப் பங்கயன்வான்புனலாட்ட, மலைகளுக்குப் பகைவனுகிய இந்திரன் கலசநீரெடுத்துக்கொடுக்க தேவர்களும் முனிவர்களும் மங்களாசனங்கூறிக்களிக்க மகத்தாகிய வேதர்தொழும்படியாயிருக்கிற வேதப்பொருளும் உமையவளும் விழிமலர்ந்து அருளுடனேஞக்க, தெய்வத்தன்மையின் மரியாதை முறைப்படி திருமஞ்சன மாட்டினர்கள்.

உடனே சிலதேவர்கள் உயர்ந்த பட்டு வஸ்திரங்களினுற் குளிர்புனல் துவட்ட, சத்திய லோகவாசியாகிய தாமரைத் தவிசான ஒப்பில்லாத இரத்தினப் பணியணியாடைகள் முதலியனவும் சாற்ற மகாவிஷ்ணுவானவர் திருமேனி முழுதுஞ் சந்தனபாளிதங் குங்குமம் புனுகு சவ்வாது பனிநீர் முதலிய கலவைகள் பூசி, எட்டுதிக்கினுபரிமளிக்கச் செய்தனர். பாதஜாலம் தண்டைச்சிலம்பு கிண்கிணி இவைமுதலியன திருவடிகளில் அமைத்து அரைப்பட்டிகைகட்டி வேதவிதிப்படிக்கு முன்னூலணிந்து அந்த முப்புரிநூலசையுமார்பில் விளங்கப் பற்பல மண்யாரங்கள்விடித்து குற்றமற்ற முத்துவடம் ரத்தினவடம் மோகனமாலை தும்பிப்பதக்கம் முகவாளிப்பதக்கம் மகரகண்டி உத்தரசஞ்சம் இவைகளெல்லாம் உதயகிரியில் உதயமான சூரியனைப்போல் விளங்கும்படியாய் அணிந்து, பன்னிரண்டு கரங்களுக்கும் மரகதக்கடையம் பாஜிபந்து ஆழி இவைகளெல்லாம் பூட்டிப் பாற்கடலில் அமுதங்கடைந்தகாளில் உயர்ந்த மகத்தாகிய மந்தரகிரியை வாசுகிபிணத்தைப்போற் சுடர் வீசிய நாகரூபத் தோள்வலியம் புனைந்து நெற்றியில் வீரபட்டங் கட்டி,

திரிபுண்டரம் அமைத்து செந்தூரத்திலகம் வைத்து, மாசற்ற மணிக்குண்டலங்கள் செவிகளிலணிந்து, மூப்பத்துமூக்கோடிதேவர் களும் காற்பத்தெண்ணாயிர முனிவர்களும் மற்று முண்டானயாவரும் ஜெயஜெயவென்று மங்களவாழ்த்துகள்கூறி வேதமொழி கோஷிக்க, ஆறுதலையோடு கூடிய அரனும் உமையும் தேசுற்ற வயிரமுடிகளைச் செங்கரத்தாலேக்கிக் களித்து, பாலசுப்பிரமணியருடைய ஆறு தலையிலும் அணிபெறத் தரித்தார்கள்.

இப்பால் இந்திரன் முதலாயினோர் சாந்தள்மாலையும் கடப்பமாலை யும் மந்தாரமாலையும் இன்னுமுள்ள வாசனையாகிய பல மலர்மாலை யும் புனைந்து, உத்தரீயஞ்சாத்தி, ஓமாக்கினிவளர்த்து, அந்தக் கனலி னிடத்தில் வேதமுறை குறையாமல் நெய்சொரிந்து, ஆகுதிகொடு த்து, நிவேதனந்தந்து, அட்சதையிரைத்து, பொன்மாரி பூமாரி தூவித் தேவசிங்காதனத்தின்மேலிருத்தி, பழுதில்லாமற் றிருத்திய தாம்பூலம் சந்தனம் புஷ்பம் பனிநீர் முதலாகிய உபசாரம் யாவையு மளித்து, திருவடியிலேதாழ்ந்தெழுந்து, இருகரத்தையுஞ் சிரத்திற் கூப்பினவர்களாய், "ஐயனே! தேவரீர் தேவசேனாபதியா யிருந்து இராக்கதர் முதலிய பேர்களின் உயிரையகற்றி யாங்கள் பிழைக்கும்படியாகச்செய்து, எங்களைக்காத்து அருள்புரிந்து ரக்ஷிக்க வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்துகொண்டார்கள். பின்பு முத்துச்சாமிதேவர் சுந்தரமாகிய திருமுகங்களிற் கருணைக்கடல் சுரந்து, தனது குரவராகிய பரமேச்வரருக்கும் பார்வதிதேவி யாருக்கும் மலர்க்கரங்குவித்து வணங்கியிருந்தனர். தேவர்கள் ஸ்படிகமணியிழையாகிய முத்துத் தொங்கட்டங்கட்டிய வட்டக் குடை பிடித்தார்கள். மாசற்ற வெண்சாமரம் இருபுறம் வீசினர்கள், ஆலவட்டம், அசைத்தார்கள்; தாலவட்டம் இசைத்தார்கள். அந்தர துந்துபி முழக்கினர்கள்; உண்மைஞான விசுவாசநேச நயமுயர்ந்த முனீச்வராகளெல்லோரும் பணிந்து, நிறைந்தமொழிகளுறைந்த வேதமந்திரங்களால் துதித்தார்கள். வித்தியாதரர் யாவருந் தான முயர்ந்த கானம் பாடினர்கள்.

இவையல்லாமலும் ஒருபக்கத்தில் தும்புருநாரதர் மகதியாழ் மீட்ட, மற்றொருபக்கத்தில் பேரிகை சங்கநாதம் உடுக்கை இடக்கை சின்னம் தாளம் பூரி தாரை இவை முதலாகிய பஞ்ச கருவிகளெல் லாம் அமரர்சேனாபதியென்னு மோசையால் முழங்க, அம்பாஸ்திரீ

கள் பாதகடனம்புரிய, இவ்விதமாகிய சகலசாம்பிரமத்துடன் சுகந்த பரிமளவாசங் கல்திருந்த இளைய செல்வக்குழந்தையை இமாசலை யாகிய ஈச்வரி கண்டி ஆனந்தம்பெருக, அருங்கண்களிகூர்ந்து, சிறந்த ரோஞ்சனஞ்சுழற்றி, கண்ணேறென்னுங் திருஷ்டிகழித்து, தீர்க்கமங்களாசனப் பொட்டிட்டு, சத்துருஸம்ஹாரஞ் செய்யக்கடவா யென்று சத்தியென்னும் வேலாயுதமுங்கொடுத்தருளினர். லலாட நேத்திரராகிய நாதன் ஆசீர்வதித்து, கணக்கில்லாத பூதகணங்களளித்து, அவையும் போதாவென அப்போதே மானதமாகச் சிருஷ்டித்து வரவழைத்து எண்ணில்லாத படைவீரர்களையுங் கொடுத்தார். புனித மாகிய ஏகாதசருத்திரர்'' ஆயுதங்களாக அமைந்து ஷண்முகத்தேவ ருடைய பதினொருகரத்திலும் பொருந்தினர்கள். இன்பமாலாகிய விஷ்ணுவானவர் வாகைமாலையளித்தார். தேவேந்திரன் விஜயக் கொடி கொடுத்தான். பட்சிகளுக்கு ராஜனை பலவானுகிய கருடன் மரகதக்கலாப மயில்வாகனம் பரிந்களித்தான். கமலசம்பவனுகிய பிர்மா பச்சையாகிய தண்டாயுதம் அளித்தான். கங்காதேவியார் பிரகாசிக்குங் கமண்டலங்கொடுத்தாள். அக்நிதேவன் மணி மாலிகை புனைந்தான். யாவரும் புகழும்படியாய் வருணன் வெண்சா மரை ஈந்தான். சூரியபகவான் விசாலமாகிய குடை கொடுத்தான். மீளவும் தேவர்கள் பலரும் கல்ல வல்லபையுள்ள திவ்விபாஸ்திரப் படைக்கலங்கள் கல்கி, எங்களையாண்டு அடிமைகொண்டருளுமென் றார்கள். அண்ணலாகிய அந்திவண்ணனுந் தேவர்களை ரட்சித்திடுக வென்றுரைத்து வடிவாள்போன்ற கண்களையுடைய மாதேவியா ருடன் கயிலைக்கெழுந்தருளினர். பிர்மாவிஷ்ணுமுதலாகிய போர்க ளும் ஷண்முகக்கடவுளிடத்தில் உத்தாரம் பெற்றுக்கொண்டு தங்கள் தங்களுடைய மாநகரம்போய்ச் சேர்ந்தார்கள். மற்றிவ்விடத்திலிருந்த தேவர்களும் மாமுனிவர்களுந் திருவடிதொழுது போற்ற, இளையவ ராகிய சுப்பிரமணியரானவர் எழுந்தருளி, கந்தமாதனவரையில் வந்து சேர்ந்து சிலகாலந் திவ்விய வைபோக சுகமாக அமர்ந்திருந் தார்.

அப்பால் ஒருகாள் தாருகாசுரனென்னும் அரக்கன் சேனைக ளுடன் எழுந்து, தேவர்களுக்கு உபகாரஞ்செய்வதற்கு யாரோ ஒரு பாலன் பிறந்திருக்கின்றனும், அவனை நாம்சற்றேபார்க்கவேண்டி யிருக்கின்றதென்று சினந்து எதிர்ந்துத்தேடிவந்து வலியச்சண்டை விளைத்தான். செவ்வேளானவர் அவன்படைகளையெல்லாங்கொன்று,

பெருமைபிற்சிறந்த வேலாயுதத்தால் அவனுயிரையும் போக்கி, தே வேந்திரன்முதலாகிய எல்லாத் தேவர்களும் உள்ள மகிழும்படியாகச் செய்தார். அப்போது இறந்தத்தாருகனுடைய சகோதரர் சமுத்திரத் துக்கு மத்தியிலிருக்கிறரென்றுகேட்டு உள்ளமழன்று தேவர்களுட னெழுந்து, அந்த இடத்துக்குப்போய்ச் சொலலுதற்கரிய சக்திவேலி னலும், இதரமாகிய ஆயுதங்களினலும் அவர்களெல்லோரையுந் தொலைத்து, தேவர்கள் புட்பமாரி பொழியும்படியாய் வந்து, இருள் தொலைத்தருளிய இளஞ் சூரியனைப்போல் வீற்றிருந்தருளினர். அச்சமபத்தில் இமயமால்வரைக்கு ஓர்சார்பினிலிருக்கின்ற கிரவுஞ்ச மென்னும் ஒருமலைபிற் பொருந்திய எண்ணிறந்த ராட்சசர் தேவர் களை வருத்தப்படுத்திவருவதை அறிந்து, தமனியமுடிதாங்கிய ஷண் முகக்கடவுள் அவ்விடஞ்சென்று சக்திவேலையுய்த்தி அங்குள்ள அசுரர் முதலாகிய யாவரையும் ஒருகணத்திற் சுடலைபொடியாக்கிப் பகை பொழித்தருளினர். அக்காலையில் தேவர்களெல்லோரும் எழுந்து களித்துப் புஷ்பமாரிபொழிந்தார்கள், அப்பால் மூன்றுலகத்திலும் பொருந்திய அசுரரை ஆராய்ந்து தேடி முடித்தபிற்பாடு, இந்திரன் முதலிய தேவர்கள் மகிழ்ந்து, தேவயானையைத்தாராதத்தஞ்செய்து திருமணமுடிக்க, பாலசுப்பிரமணியதேவர் மாமறைகள் போற்றும் படிக்குப் புகழுடன் வீற்றிருந்தார். கேட்டீரோ பஞ்சகர்த்தர்களுக் கொப்பாகிய பாண்டவர்களே! இத்தன்மையாகிய புத்திரபாக்கியத் தையும் புகழ்ப்பிரதாபத்தையுமுடைய பரமசிவனது பஞ்சாட்சர மந்திரஸ்தவத்திபத்தால் அவரது பெருவரம்பெற்று, அந்தவரதியி னல் அசுவத்தாமன் யாவரையும் ஜயித்தான்—என்று அரவணைச் செல்வனுகிய அநளாழி முகுந்தன்கூற, மருவுறுமாலை மார்பினராகிய பாண்டவர் கேட்டு மனதிற்பதித்துப்பணிந்து, அறிவுதேறி, அதி வினயத்துடன்வியந்து, அசுவத்தாமன்செய்த கொடுமைக ளனைத் தையும் ஒருவாறுமறந்து அந்தவரதரோடு இன்னும்பலவாருண காலக்ஷேபஞ்செய்துகொண்டு அங்ஙனம்பொருந்தி யிருந்தனர்.

அசுவத்தாமன்
சிரோமணிக்கங் கவர்ந்த சருக்கத்தோடு
சவுத்திகபர்வம் முற்றிற்று.

Printed by V. Ramaswamy Sastrulu & Sons at the 'Vavilla' Press, Madras.—1932.